ஸ்ரீ

பகவத் விஷயம்

ஐந்தாம் பத்து

திருவாய்மொழி மூலமும்

ஆறாயிரப்படி, ஒன்பதினாயிரப்படி, பன்னீராயிரப்படி,
இருபத்தினாலாயிரப்படி, ஈடு முப்பத்தாறாயிரப்படி வ்யாக்யாநங்களும்,
சீயர்அரும்பதவுரை, ப்ரமாணத்திரட்டு, த்ரவிடோபநிஷத்ஸங்கதி,
த்ரவிடோபநிஷத்தாத்பர்யரத்நாவலி, திருவாய்மொழிநூற்றந்தாதி இவைகளுடன்

சே. க்ருஷ்ணமாசாரியர் பதிப்பு.

சே. பார்த்த ஸாரதி ஐயங்காராலும்,
வீ. நரசிம்மாசாரியராலும்
பரிசோதிக்கப்பெற்றது.

திருவல்லிக்கேணி.
நோபில் அச்சுக்கூடம்.
அட்சய ௵] [1926.

ஸ்ரீ:

திருவாய்மொழி

ஐந்தாம் பத்து.

முதல்திருவாய்மொழி—கையார்சக்கரம் : ப்ரவேஶம்.

ஆறாயிரப்படி.

(கையார்சக்கரம்.) இப்படி "எம்பெருமானை ஆஶ்ரயியுங்கோள்" என்று பிறரைக் குறித்து அருளிச்செய்தருளி; தம்பக்கலுள்ள ப்ராதிகூல்யங்களொன்றும் பாராதே நிர்ஹேதுகமாக எம்பெருமான், ஸ்வஸர்வேஶ்வரத்வ ஜ்ஞாநத்தையும் ஸ்வகைங்கர்யப்ராப்யத்வ ஜ்ஞாநத்தையும் தமக்குக் கொடுத்தருளித் தம்மை ஸ்வாரூபவைகதாரக போஷக போக்யராக்கித் தம்பக்கல் நிரதிஶய வ்யாமுக்தனாய்க்கொண்டு தம்மோடு ஸம்ஶ்லேஷித்தபடியை ப்ரீத்யதிஶயத்தாலே அருளிச்செய்கிறார்.

ஒன்பதினாயிரப்படி.

அஞ்சாம்பத்தில் முதல் திருவாய்மொழியில், இப்படி பரப்ரதிபாதநார்ஹமாம்படி எம்பெருமான் ஸ்வவிஷயஜ்ஞாநத்தைப் பிறப்பித்த உபகாரத்தை ஸ்மரித்து அதிலே ஈடுபட்ட ஆழ்வார், விபரீதங்களை அநுஷ்டித்து, பகவத்ப்ராப்த்யுபாயமாகச் சொல்லுகிற வழிகள்களுக் கண்டும் அறியாதே "புருஷார்த்தங்கள் வேணும்" என்னும் ப்ரதிபத்தியுமின்றிக்கே ஸம்ஸார ஸாகரத்திலே அழுந்தாநின்றுவைத்து ஓடுகிற தசையை உணர்வதும் செய்யாதே அதுக்குமேலே விஷயபரனுமாய் எம்பெருமான்பக்கல் இச்சையுமின்றிக்கே யிருந்துவைத்து; அவன் ஸந்நிதியிலே அஸத்யபாஷணம் மஹாபாதக ஸமமாயிருக்க, ஸர்வஜ்ஞனானவனுக்குங்கூட 'இவன் நமக்கு ஸ்நேஹி' என்று கருதும்படி பெரும்பொய்களைச் சொல்லுவதும்செய்து, இப்படிகளாலே அத்யந்தம் உபேக்ஷ்யனாயிருந்துள்ள என்னை, இவையொன்றும் பாராதே, விதிஶப்திதையான கேவல க்ருபையாலே, "தான் ஸர்வஶேஷி" என்னுமிடத்தையும் "தன் திருவடிகளில் அடிமையே பரமபுருஷார்த்தம்" என்னுமிடத்தையும் அறிவித்து, அவ்வடிமையாலல்லது எனக்குச் செல்லாதபடி பண்ணி என்பக்கலிலே மிகவும் வ்யாமுக்தனாய் என்னோடேவந்து கலந்தருளினானென்று ப்ரீதராகிறார்.

பன்னீராயிரப்படி.

முதலிரண்டுபத்தாலே - ப்ராப்யபூதனான ஶேஷியினுடைய ரக்ஷகத்வபோக்யத்வங்களைச்சொல்லி, அநந்தரம், மூன்றும்பத்தாலும் நாலாம்பத்தாலும் - ப்ராப்தாவான பகவச்சேஷபூதனுடைய ததேகாநுபவத்வத்தையும் ததேகப்ரியத்வத்தையுஞ் சொல்லி; ஆக, நாலுபத்தாலும் - ஸித்தரூபமான பராவராத்ம யாதாத்ம்யத்தை அருளிச்செய்தாராய்; அநந்தரம், அஞ்சாம்பத்தாலும் ஆறும்பத்தாலும் - ஸித்தோபாயபூதனான ஈஶ்வரவிஷயத்தில் சேதநனுக்கு ஸாத்யமான உபாயஸ்வீகாரத்தை அருளிச்செய்கிறார். அதில், இந்த அஞ்சாம்பத்தில் - ஸித்தமான உபாயஸ்வரூபத்தினுடைய யாதாத்ம்யத்தை நிரூபிக்கிறது. எங்ஙனேயென்னில் ;— கீழ்ச்சொன்ன ததேகப்ரியத்வத்தாலே "பகவத்கைங்கர்யமே உத்தேஶ்யம்" என்று பிறர்க்கு

உபதேசிக்கும்படி தமக்கு அவ்விஷயத்தில் பிறந்த ப்ராவண்யத்தை அநுஸந்தித்து, "இதுக்கடி அவனுடைய உபாயபாவம்" என்று நிஷ்கர்ஷித்து, உபாயபூதனுடைய க்ருபாபாரவஶ்யத்தையும், அதடியாக ஆஶ்ரிதரை பாகவதரையிட்டுத் திருத்திக்கொள்ளும் ஆகாரத்தையும், திருந்தினார்க்கு நிரதிசயப்ரேமத்தை யுண்டாக்கி ப்ராப்யத்வரையை ஜநிப்பிக்கும்படியையும், ப்ராப்யாலாபதசையில் ஆர்த்திபிறந்தார்பக்கல் அவனுடைய ரக்ஷகத்வ ஸாமர்த்த்யத்தையும், அப்ராப்யவ்யஸநத்தோடே ஹார்த்தமான அநுபவம் நடக்கையாலே ப்ரீத்யப்ரீதிகளை ஸமமாக உண்டாக்கும்படியையும், ஆர்த்யதிசயத்தாலே அநுகரிக்கும்படி அவன் இவனுக்கு அஹம்பாவவிஷயமாம்படியையும், இப்படி ஆர்த்திபிறந்தால் அகிஞ்சநரானார்க்குத் தன் உபாயபாவத்தை ப்ரகாசிப்பிக்கும்படியையும், போகாகாங்க்ஷை யுடையார்க்கு அவ்வுபாயத்தில் ப்ரதிபத்திவிஶேஷகரத்வத்தையும், பரிபூர்ணாநுபவப்ராவண்யம் பிறந்தால் ப்ரதிபந்நமான உபாயத்தில் விஶ்வாஸஜநகத்வத்தையும், அதிசயிதஶக்தியான உபாயவிஷயத்தில் அபிநிவிஷ்டரானார்க்கு அந்த விஶ்வாஸத்தையாவத்ப்ராப்தி அநுவர்த்திப்பிக்கும்படியையும் அருளிச்செய்து, நிரபாயோபாயபூதனுடைய யாதாத்ம்யத்தை நிஷ்கர்ஷித்து அருளுகிறார்.

அதில், முதல் திருவாய்மொழியில் - உபாயபூதனான ஈஶ்வரனுடைய க்ருபாபாரவஶ்யத்தை ப்ரதிபாதிப்பதாக; க்ருத்ரிமாநுகூல்யவான்கள்பக்கலிலும் ஸர்வ ஸுலபனான ஈஶ்வரனுடைய க்ருபை அவ்யபிசரிதை என்னுமிடத்தையும், அந்த க்ருபாபாரவஶ்யத்தாலே அந்ருதயோக்தியே பற்றாசாக அவன் அபிநிவிஷ்டனாய் மேல்விழும்படியையும், ஆஶ்ரிதருடைய கிந்நதையையும் போக்கித் தன்னை யநுபவிப்பிக்கும்படியையும், அநுபவப்ரதிபந்தக தோஷநிவர்த்தகத்வத்தையும், தோஷரூபஶரீராதிகள் நிவர்த்தகனுக்கு விதேயமென்னுமிடத்தையும், தோஷரூப ப்ரக்ருதியோடேகூட இருக்கச்செய்தேயும் அந்ததோஷம் நெஞ்சிற்படாதபடி விலக்ஷணவிக்ரஹத்தை அநுபவிப்பிக்கும்படியையும், போக்தாவின் நிகர்ஷம்பாராதே ப்ரேமத்தை ஜநிப்பித்துத் தானும் மேல்விழுந்தநுபவிக்கும் என்னுமிடத்தையும், அநுபவிக்குமளவில் ஸர்வநிபந்தவாய் புஜிப்பிக்கும்படியையும், இப்பந்தத்தோடே அஸாதாரணாகாரசிஹ்நவிஶிஷ்டனாய் அநுபவிப்பிக்கும் ஆகாரத்தையும், அந்த ஆகாரத்தை அழியமாறியும் ஆஶ்ரிதார்த்தமாக அநேகாவதாரங்களைப் பண்ணும்படியையும் அநுஸந்தித்து, இப்படி உபாயபூதனான ஈஶ்வரனுடைய க்ருபாபாரவஶ்யத்தை அநுபவிக்கிறார்.

இருபத்திநாலாயிரப்படி.

அஞ்சாம்பத்தில், முதல் திருவாய்மொழியில், ஸம்ஸாரிகளிலே அந்யதமராயிருக்க, இவர்களையும் திருத்தும்படியாக ஸ்வவிஷயத்திலே ஜ்ஞாநத்தைப் பிறப்பித்த உபகாரத்தை அநுஸந்தித்து அதிலே ஈடுபட்டு, "இந்தநன்மை நமக்கு உண்டாகைக்கு ஹேதுவென்?" என்று பார்த்தார்; தம்மைப் பார்த்தவிடத்து, விபரீதாசரணமேயாய், பகவத்ப்ராப்திக்கு உபாயமாகச் சொல்லுகிற வழிகள் கனக்கண்டும் அறியாதே அதுக்குமேலே அம்ருதமிருக்க நஞ்சைத் தின்பாரைப்போலே விஷயங்களிலே ப்ரவணனாய், இப்படியிருக்கிற தசையையும் உணரவறியாதே உபேக்ஷ்யனான என்னை இவையொன்றும் பாராதே தன்னுடைய நிர்ஹேதுக க்ருபையாலே தன் ஶேஷித்வத்தையும் என் ஶேஷத்வத்தையும் அறிவித்துத் தன் திருவடிகளில் கைங்கர்யத்தாலல்லது செல்லாதபடி பண்ணி, இப்படி என் பக்கலிலே வ்யாமுக்தனாய் என்னோடேவந்து கலந்தருளினானென்று ப்ரீதராகிறார். "ஶ்ரீ[illegible]ஹாவேந" என்கிற ஶ்லோகத்திலே எம்பார் "ஸர்வஜ்ஞனுக்கு ஓர் அஜ்ஞாநமும் விஸ்ம்ருதியும் ஸர்வஶக்திக்கு ஓரஶக்தியு முண்டு" என்று அருளிச்செய்வர். ஒருவன் தன்னையாஶ்ரயித்தால்,

முன்பு புத்திபூர்வம்பண்ணின குற்றத்தில் விஸ்ம்ருதி, ஜ்ஞாநம்பிறந்தால் ப்ராமாதிகமாக வரு மவற்றில் அஜ்ஞாநம், இவனைவிடவேண்டுமளவில் அஶக்தி, இப்படியிருக்கைக்கு அடி ஸ்வாபாவிக மான குடல்தொடக்கு.

ஈடு முப்பத்தாறாயிரப்படி.

நண்ணாதார் முறுவலிப்பவிலே ஸம்ஸாரிகள் படுகிற க்லேசத்தை யநுஸந்தித்து, அதுக்குப் பரிஹாரமாக, "பகவத்பரத்வஜ்ஞாநத்தையுண்டாக்குவோம்" என்று பகவத்பரத்வத்தை உபதேசித்தார் - கீழ்; இரண்டுகிட்டம் தன்னிலே சேரக்கிடக்க அதிலேயொன்று போனாலிருக்குமாபோலே அவர்களிலே ஒருவராயிருக்கிற தாம், அவர்களையும் திருத்தும்படி தமக்குப்பிறந்த நன்மைக்கு "அடியேன்?" என்றுபார்த்து, தன்னுடைய நிர்ஹேதுக க்ருபையாலே செய்தானத்தனையென்கிறார். "அநாதிகாலம் ஸம்ஸரித்து, புத்திபூர்வம் விரும்புவது ஶப்தாதி விஷயங்களையேயாய், தன்பக்கல் எனக்குள்ளது அஹ்ருதயமான உக்திமாத்ரமேயாயிருக்க; நான் புத்திபூர்வம் பண்ணிப்போந்த ப்ராதிகூல்யங்களை விஸ்மரித்து, ஜ்ஞாநம்பிறந்த பின்பு ப்ராமாதிகமாக வந்தவற்றில் அஜ்ஞனாய், என்னை இவ்வளவாக விஷயீகரித்தான்; பிறரையும் நான்திருத்தவல்லேனாம்படி பண்ணினான்" என்று தாம்பெற்றபேற்றின் கனத்தைச் சொல்லி ஈடுபட்டு அநுபவிக்கிறார். பகவத்பரத்வஜ்ஞாநத்தைத் தம்நெஞ்சிலே படுத்தினபடியையும், அதுக்கு உறுப்பாயிருப்பதொரு நன்மை தமக்கின்றிக்கே யிருந்தபடியையும், அநாதிகாலம் தாம் விபரீதங்களையே அநுஷ்டித்துப் போந்தபடியையும், புருஷார்த்தோபாயமாகச் சொல்லுகிறவற்றில் தாம் ஒன்றும் கணக்கண்டறியாதேயிருக்கிறபடியையும், (இழந்து நோவுபடாநிற்கச்செய்தே) "புருஷார்த்தம்வேணும்" என்னும் ப்ரதிபத்தியுமின்றிக்கேயிருந்தபடியையும் ஸம்ஸாரத்திலே தரைகாண வொண்ணாதபடி ஆழ்ந்து நோவுபடா நிற்கச்செய்தே "நோவுபடாநின்றோம்" என்று அறிவிக்கவும்மாட்டாதே உணர்த்தி யற்றிருக்கிறபடியையும், அம்ருதமிருக்க விஷத்தை விரும்புவாரைப்போலே ஆராவமுதைவிட்டு இன்னமுதெனத்தோன்றின ஶப்தாதிவிஷயங்களை விரும்பிப்போந்தபடியையும், அதுக்குமேலே அவன்பக்கல் இச்சையின்றிக்கேயிருக்க அவனையுகந்தார் சொல்லும் வார்த்தைகளைச் சொல்லிப்போந்தபடிகளையும் அநுஸந்தித்து; இப்படி ஸர்வப்ரகாரத்தாலும் தண்ணியேனாயிருக்கிற என்னை, அவையொன்றும்பாராதே, "தான்

கையார்சக்கரம் ப்ரவேஶ - வ்ருத்தவர்த்திஷ்யமான ஸங்கதி - **நண்ணாதார்** *இத்யாதிவாக்யத்வயேந.* உபதேசித்தாரென்றது - *திருந்தினவர்களுக்குமேலே மங்களாஶாஸநம்பண்ணுகையாலே, உபதேசித்துத் திருத்தினானென்றபடி.* **கிட்டம்** *- பீச்சாங்கட்டி.* **திருத்தும்படி** *- ஒன்றாம்தவிலே.* **பார்த்து** *என்ற வநந்தரம், அதுக்குஹேது ஒன்றும் தம்பக்கல் காணாமையாலே யென்று கூட்டுவது. "வீதிவாய்க்கின்று" என்றத்தைப் பற்ற -* **நிர்ஹேதுக** *இத்யாதி. "நிர்ஹேதுகம்" என்றால் ஸர்வமுக்தி ப்ரஸங்கம்வாராதோ? ஸஹேதுகமானாலோ வென்ன -* **அநாதிகாலம்** *இத்யாதி. "பொய்யேகைம்மைசொல்லி" என்றத்தைப்பற்ற -* **தன்பக்கல் எனக்கு** *இத்யாதி. "அவனென்னாகியொழிந்தான்" என்றத்தைப்பற்ற -* **நான்புத்திபூர்வம்** *இத்யாதி.* **விஸ்மரித்து** *என்றதுக்கு ஹேது - மேலே "வ்யாமுக்தனாய்" என்றதிலே கண்டுகொள்வது. ப்ராமாதிகமாக இத்யாதிக்கு - "காப்பாரார்" என்றதின் வ்யாக்யாநத்திலே ஸ்பஷ்டம். "மெய்யேபெற்றொழிந்தேன்" என்றத்தைப்பற்ற -* **தாம்பெற்றபேற்றின்** *இத்யாதி. பாட்டில் ப்ரமேயங்களையும் உட்கொண்டு விஸ்தரிக்கிறார் -* **பகவத்பரத்வ** *இத்யாதி. "கையார்சக்கரத்து" "அம்மானாழிப்பிரான்" என்றத்தைப்பற்ற -* **பகவத்பரத்வஜ்ஞாநத்தை** *இத்யாதி. "பொய்யேகைம்மைசொல்லி" என்றத்தைப்பற்ற-* **அதுக்குறுப்பாய்** *இத்யாதி. "புறமேபுறமேயாடி" என்றத்தைப்பற்ற -* **அநாதிகாலம்** *இத்யாதி. "நின்கண் நெருங்கவைத்தே எனதாவியை நீக்ககில்லேன்" என்றத்தைப்பற்ற -* **புருஷார்த்தோபாயம்** *இத்யாதி. "காவாய்போல்" என்றத்தைப்பற்ற -* **புருஷார்த்தம் வேணும்** *இத்யாதி. "அலைநீர்க்கடலு ளழுந்தும்" என்றத்தைப்பற்ற -* **ஸம்ஸாரத்திலே** *இத்யாதி. "உள்ளன மற்றுளவா" இத்யாதியைப்பற்ற -* **அம்ருதமிருக்க** *இத்யாதி.* **இன்னமுதெனத்தோன்றின** *- இனிய அம்ருதமென்னும்படி போக்யமாய் ப்ரகாஶித்த. "போனாய்மாமருது" இத்யாதியைப்பற்ற -* **அதுக்குமேலே** *இத்யாதி.* **தான் ஸர்வஶேஷியென்றது** *- "அம்மானாழிப்பிரான்" என்றத்தைப்பற்ற. "உய்ந்தொழிந்தேன்" என்றத்தைப்*

ஸர்வமோக்ஷி'' என்னு மிடத்தையும் "தன்திருவடிகளில் கைங்கர்யமே புருஷார்த்தம்" என்னு மிடத்தையும் என்நெஞ்சிலேபடுத்தி என்பக்கலிலே வ்யாமுக்தனாய் என்னோடேவந்து கலந்தானென்று தாம்பெற்றபேற்றைச்சொல்லி ஹ்ருஷ்டராகிறார்.

முதற்பாட்டு.

கையார்சக்கரத்து என்கருமாணிக்கமேயென்றென்று
பொய்யேகைம்மைசொல்லிப் புறமேபுறமேயாடி
மெய்யேபெற்றொழிந்தேன் விதிவாய்க்கின்றுகாப்பாரார்
ஐயோகண்ணபிரான் அறையோவினிப்போனாலே.

ஆ.—ஸ்வசரணயுகள ஸ்நேஹ கந்தரஹிதனாய், ப்ராக்ருதவிஷய ப்ரவணனாயிருந்து வைத்து, ஸ்வவிஸ்லேஷத்தில் ஆத்மதாரண க்ஷமரல்லாதாரைப்போலே கையார்சக்கரத்து என் கருமாணிக்கமே யென்றென்று நான்சொல்ல, என்னுடைய இந்த அதிதுஸ்ஸஹமான ப்ராதிகூல்யத்தை ஒன்றும்பாராதே என்னை மெய்யாக ஸ்வாநுபவைக போகனாக்கி என்னோடே கலந்தருளினான். எம்பெருமானுடைய நிரவதிககாருண்ய ஸமுத்ரம் கரையுடைந்து பெருகப் புக்கால் எம்பெருமான் தன்னாலும் தடுக்கமுடியாததாகாதே. அவன் ஸர்வஶக்தனல்லனோ அவனால் முடியாததுண்டோ வென்னில்; வல்லனாகில் போவதிறே யென்கிறார்.

ஒ.—முதற்பாட்டில், நான் அத்யந்தம் அந்யபரனாயிருந்துவைத்தே தன் செளந்தர்யாதிகளில் ஈடுபட்டார் சொல்லும் சொல்லைப் பொய்யேசொல்ல, பரமபக்தர்கள் பெறும்பேற்றை ஸ்வக்ருபையாலே அவன் எனக்குத் தந்தருளினானென்று ப்ரீதராகிறார்.

[கையாரென்று தொடங்கி]-நான் பாஹ்யவிஷயங்களிலே மிகவும்ப்ரவணனாய் அதுக்கு மேலே கையிலே பூர்ணமான திருவாழியையும் வடிவழகையுங் காட்டி என்னை யகப்படுத்தினவனை என்று பலகாலும் பெரும்பொய்யைச் சொல்லி. [விதிவாய்க்கின்றுகாப்பாரார்] - உன்க்ருபை பெருகப்புக்கால் ஒருவராலும் தடுக்கமுடியாது. [ஐயோ கண்ணபிரான் அறையோவினிப்போனாலே] - எம்பெருமான் "எனக்கும் அரியதுஉண்டோ" என்று அருளிச்செய்ய, அநுக்ரஹஶீலரைப் என் பொய்யிலே யகப்பட்ட நீ இனிவல்லையாகில் போய்க்காணா யென்கிறார். ஐயோவென்றது களிப்பாலே.

ப.—முதற்பாட்டில், க்ருத்ரிமமான அநுகூலோக்திகளைப் பண்ண, ஸர்வஸ்வாமியானவனுடைய தப்பவொண்ணாத க்ருபாவைபவத்தாலே அக்ருத்ரிமப்ரேமபரர் பெறும்பேற்றைப் பெற்றேன் என்கிறார்.

கை-திருக்கையோடு, ஆர்-பொருந்தின, சக்கரம் - திருவாழியை யுடையவனாய் (அச்சேர்த்தியோடே), என் கருமாணிக்கமே - நீலரத்நம்போலே தர்ஶநீயமான வடிவை எனக்கு அநுபாவ்யமாக்கினவனே, என்றென்று - என்று என்று பாரமார்த்திக ப்ரேமயுக்தரைப்போலே பலகாலும், பொய்யே - அந்தப்ரீதியின்றி யிருக்கச்செய்தே, கைம்மை - (எதிரியும் ஸத்யபுத்தி

பற்ற - தன்திருவடிகளில் இத்யாதி. "அடியேனுடையானன்" "என்னைமுற்றவுந்தானானன்" என்றதைப் பற்ற - வ்யாமுக்தனாய் என்றது. கீழே "அநாதிகாலம்" இத்யாதி வாக்யத்திலே, ப்ராதிகூல்யங்களை விஸ்மரித்தென்றது - விஸ்மரியாவிட்டால் "அடியேனுடையானன்" என்னக்கூடாமையாலே வித்த வென்றபடி

பண்ணும்படி) க்ருத்ரிமோக்திகளை, சொல்லி-பண்ணி, (உக்திவிருத்தமாமபடி, புறமேபுறமே - பாஹ்யவிஷயங்களிலே ஒன்றைவிட்டு ஒன்றைப்பற்றி, ஆடி - ஸர்வதா ஸஞ்சரித்துவைத்து, மெய்யே - பாரமார்த்திகப்ரேமயுக்தர் பெற்றபேற்றை, பெற்றொழிந்தேன் - பெற்றுவிட்டேன்; விதி-(இதுக்கு ஹேதுவாய், பொய்யையும் மெய்யாக நீ ப்ரதிபத்திபண்ணும்படி பண்ணக்கடவதாய், நீ "அல்லேன்" என்னிலும் தவிரவொண்ணாதபடி ப்ரவர்த்திப்பிக்கையாலே விதிரூபத வாச்யையான) உன்னுடைய க்ருபை, வாய்க்கின்று - (பலோந்முகியாகிற) இது, ஆர்-ஆராலே, காப்பார் - விலக்கலாம்? (அதுக்கடியென்னென்னில்), - கண்ணன் - ஸர்வ ஸுலபனாய்க்கொண்டு, பிரான்-எனக்கு உபகரித்த நீ, (உன்ஸ்வாதந்தர்யத்தாலே ரக்தனென்று), இனி-க்ருபை பலித்த பின்பு, போனாலே - கால்வாங்கிப் போகலாமோ? ஐயோ - ஐயோ, அறையோ - வல்லையாகில் போய்க்காண். ஐயோவென்றது - அது காண்போமென்கிற ஹர்ஷோக்தி. அறையோவென்றது-அதடியான கர்வோக்தி.

இ.—முதற்பாட்டில், என்பக்கலுள்ள அஹ்ருதயமான உக்தியை ஸஹ்ருதயமாகக் கொண்டு பரபக்தி யுக்தர் பெறும் பேற்றைத் தன் க்ருபையாலே எனக்குத் தந்தருளினான் என்கிறார்.

[கையார் சக்கரத்து] - வெறும்புறத்திலே ஆலத்திவழிக்கவேண்டும் கையிலே திருவாழியைப் பிடித்தால், வேறோராபரணம் வேண்டாதிருக்கை. "ஸூஹரணஸ்யாஹரண:" [என்கருமாணிக்கமே] - நீலரத்நம்போலேயிருக்கிற வடிவை எனக்கு முற்றூட்டாகத் தந்தவனே! புறம்பு ஆத்மகுணத்திலும் போகவேண்டுவதில்லை. "ஹஸ்தாநாம்" என்கிற பொதுவையும் அழித்தது. [என்று என்று] - மெய்யே நல்லராயிருப்பார் சொல்லும் வார்த்தை இது, இது அந்யபரான நமக்குக் குற்றமாகக் கடவதிறே. ஒருகால் சொல்லி அநுஸயித்துவிட்டேனோ? இது தான் பொல்லாவார்த்தையோ, 'ஸாதுநாஸஹஸ்ரஹதம்' என்றும் 'ஸ்வதோயஞ்திஸோஹநம்' என்றும் சொல்லாநின்றதே என்ன, [பொய்யேகைம்மைசொல்லி] - நல்லவார்த்தையிறே நாமும் மெய்யாகப்பெற்றோமாகில் பொய்யென்றும், கைம்மையென்றும் - பர்யாயம்; இரட்டிப்பால் - மிகுதியாய், பெரும்பொய் என்கை. அதாகிறது - அகவாய் அறியாதாரைப் பகட்டுகை யன்றிக்கே, ஸ்வதஸ்ஸர்வஜ்ஞனானவனும் "மெய்" என்றிருக்கும்படி சொல்லுகை. அகவாயில் நினைவொழியச் சொல்லக்கூடாதென்றிருக்குமிறே அவன். [புறமே புறமேயாடி] - பொய்யும் மெய்யுமாய்த் தான் கலந்துசொன்னதோ? பாஹ்யவிஷயங்களிலே அவகாஹித்து, வீப்ஸையாலே-அவைதன்னிலும் ஒன்றிலே துவக்குண்டால், புறம்பு கால்வாங்கமாட்டாதிருக்கை. ஆடியென்று - அவற்றிலே நடையாடி யென்றுமாம். இதுதான்-ஜ்ஞாநம் பிறப்பதற்கு முன்புள்ள காலத்தைப் பற்றச்சொல்லுகிறாராதல், இவ்விஷயத்தில் தமக்குப்பிறந்த ப்ரேமம் "பெறுகிறபேற்றுக்குப் போராது" என்றிருக்கையாலே சொல்லுகிறாராதல். மயர்வறமதிநலமருளப்பெற்றபின்பு காலத்ரயவர்த்திகளும் கரதலாமலகவத் விஸதமாயிறே யிருப்பது. பரமபக்திபர்யந்தமாக உண்டானாலும். பேற்றைப் பார்த்தால், "முதலடியிட்டதில்லை" என்னும்படியாயிறே யிருப்பது. உம்முடையபடி இது வாகில் பேறு இருந்தபடி யென்? என்ன-[மெய்யேபெற்றொழிந்தேன்]-பேற்றில் ஒருபுரையில்லை; என்னால் வருமதிறே புரையுள்ளது; அவனால் வருமது புரையில்லையென்கை. [பெற்றொழிந்தேன்] - பேற்றில் இனிச்செய்யலாவதில்லை. பேறு என்னளவன்றிக்கே, ஸம்ஸாரிகளுக்கும் நிழலாம்படியாகப் பெற்றேன். [விதிவாய்க்கின்று காப்பாரார்] - விதியென்று பகவத்க்ருபை. கர்மபாரதந்த்ரனுக்குக் கர்மம் அநுபவித்தல்லது நிற்கவொண்ணாதவோபாதி; அவனுக்கும், க்ருபாபாரதந்த்ரனாகையாலே க்ருபைபண்ணியல்லது நிற்கவொண்ணாமையாலே, விதியென்கிறது. பகவத்க்ருபை கரைபுரளப் புக்கால் நிவாரகருண்டோ? காப்பதெது? என்னாதே காப்பாராரென்

கிறது - பலபோக்தாவான இவனாலும், க்ருபாஜநகையான அவளாலும் ஒண்ணுதென்கை. ஸ்வ தந்த்ரனை அவனாலும் ஒண்ணாது, ஸ்வாதந்த்ர்யத்திலும் விஞ்சியிறே க்ருபை இருப்பது. இ: றல் க்ருபையை விஞ்சக் குற்றஞ்செய்யவொண்ணாது. அவனால் ஸ்வாதந்த்ர்யத்தாலே குற்றங்: ண்டு கைவிடவொண்ணாது. நிரங்குஶமான ஸவாதந்த்ர்யத்தையுடைய நம்மால் தடுக்கத் தட்டெ ன்? என்ன, [ஐயோ] - ஸ்வாதாந்த்ர்யத்தை நினைத்தோ? க்ருபையைவிஞ்சிக் கால்வாங்கிக்காண்,)னி யென்கிறார். "ஐயோ" என்றது-ஹர்ஷத்தாலே. க்ருபையின்கீழ் குற்றங்காண ஜ்ஞாநமி ்லை; விட ஶக்தியில்லை. [கண்ணபிரான்]-ஓரிடைச்சிகையிலே கட்டுண்டதசையில் அந்த பந்தத்: தத் தப்பவிரகறியாதே ஶக்தியுமின்றிக்கே யிருந்த நீயோ போகப்புகுகிறாய்! கண்ணபிரானை ்று ஸம்புத்தி. இனிப்போனால் அறையோவறை. அநுக்ரஹஶீலனான உனக்கு, "மெய்" எ ்று பேரிடலாவதொரு பொய் என்பக்கலிலே உண்டானபின்பு போகலாமோ? மித்ரபாவம்பெ; றல் "நதஜேயம்" என்னும் உனக்குப் போகலாமோ? ஸுக்ரீவ மஹாராஜரைப்போலே ் றை கூவுகிறார்.

ஈடு.—முதற்பாட்டு. என்பக்கலுள்ளது அஹ்ருதயமான உக்தியாயிருக்க, இ; தை ஸஹ்ருதயமாகக்கொண்டு விரும்பி, "இனி இதுக்கு அவ்வருகில்லை" என்னும்படியான பற் றைப் பண்ணித்தந்தா னேன்கிறார்.

[கையார்சக்கரத்து] - வெறும்புறத்திலே ஆலத்தி வழிக்கவேண்டும்படியான கை லே திருவாழியைத் தரித்தானாயிற்று. இதுதான் ஆபரணமுமாய் வினைத்தலையில் ஆயுதமுமாயிறே ருப் பது. ஒருகைக்குப் படையா யிருக்குமிறே. "கூராராழி வெண்சங்கேந்தி-வாராய்" என்று அநுச லர் க்கு ஆசைப்படுகைக்கு உடலாய், ப்ரதிபக்ஷத்தைத் துணிக்கைக்கும் உடலாயாயிற்று இருட் து. [கையார்சக்கரத் தென்கருமாணிக்கமே] - அத்தென்பது - சாரியைச்சொல். இப்படி - வ ிட மெங்கும் கண்டுகோள்வது. [என்கருமாணிக்கமே] - கையுந்திருவாழியுமான அழகை அநுஸ தித் தால் அடைவே ஸ்ரீபாஞ்சஜந்யத்தை அநுஸந்திக்கவல்லரல்லரே, அநந்தரம் வடிவழகிலே ால் தாழ்ந்தார். படிகடந்து அவ்வருகு போமவரல்லரே. ஶ்ரமஹரமாய் நீலரத்நம்போலே பெருவி யய னை வடிவழகை எனக்கு முற்றூட்டாக்கினவனே. [என்று என்று] - இத்தை ஒருகால் சொல் லித் தான் விட்டேனோ. பகவத்விஷயத்தி லுட்புக்கதெல்லாம் குற்றமாய்த் தோற்றுகிறதாயிற்று, " பா

முதற்பாட்டு - கையார் இத்யாதி. அஹ்ருதயமான உக்தியென்றது - "பொய்யே கைம்மைசொ ல்" என்றத்தைப்பற்ற ஸஹ்ருதயமாக வென்றது - "பொய்யேகைம்மை" என்ற த்விருக்தியாலே - பெரும் ாய் யாய், ஸர்வேஶ்வரனும் மெய்யாகக் கொள்ளுகையாலே. பேற்றைப் பண்ணித்தந்தா னென்றது - 'மெ ய் பெற்றொழிந்தேன்" என்கையாலே அர்த்தாத்ஸித்தம்.

"ஆர்-கை-சக்கரத்து" என்று அந்வயித்து அர்த்தம் - வெறும்புறத்திலே இத்யாதி. "ஆர் - கை" - அழகிய கை. ஆர் - அழகு. வெறும் புறத்திலே - ஒன்றுமில்லாதவிடத்திலே. ஆயுதமான திருவா; ்கு ஆகர்ஷகத்வமுண்டோவென்ன - இதுதான் இத்யாதி. இப்போது "ஆர் - சக்கரம்" என்று அந்வயிட் து. படையென்று - ஆபரணத்துக்கும், ஸேனைக்கும், ஆயுதத்துக்கும் பேர். இது - சாடு; கை - ஹஸ்தமும், யுத்த ம். "உபயாகாரமுமுண்டு" என்னுமதுக்கு ப்ரமாணகதநமுகேந விவரணம் - கூராராழி இத்யாதி. கூர்மை க்க திருவாழியையும் வெளுத்த ஸ்ரீபாஞ்சஜந்யத்தையும் ஏந்திவாராய் இத்யர்த்தః. துணிக்கை - சேதிக்கை. சாரி யச் சொல் - நிரர்த்தகமான ஶப்தம். திருவாழியாழ்வானை அநுஸந்தித்தவநந்தரம் ஸ்ரீபாஞ்சஜந்யத்தை அநுஸந் யா தொழிவானென்? என்ன, கையுந்திருவாழியும் இத்யாதி. வல்லரல்லரோ என்றது "சக்கரத்தண்ணலே" என் த் தாழுமவராகையாலே யென்றபடி. வடிவழகிலே கால்தாழ்ந்தாரென்றது - திருவாழியில் ஔஜ்ஜ்வல்ய தா கம் கீழேபோக வீசுகையாலே யென்றபடி. சாடு - படிகடந்து இத்யாதி. படி - திருமேனியும், வாசற்படி ம். "என்கருமாணிக்கமே" என்றதுக்கு அர்த்தம் - ஶ்ரமஹரமாய் இத்யாதி. கருமையாலே - குளிர்த்தி யை லக்ஷித்து - ஶ்ரமஹரமாய் என்றது. முற்றூட்டாக்கின - பூர்ணபோஜநமாக்கின. அவனைப் பலகாலும் நு ஸந்திக்கிறது நல்லதன்றோ? என்ன - பகவத்விஷயத்தில் இத்யாதி. போராதென்று-ப்ரேமம் போராதெ று.

ராது" என்றிருக்கையாலே. இது பொல்லாதா யிருந்ததில்லையீ! என்ன; - அழகிதிறே, பாவபந்தத்தோடே சொன்னேனாகில்; [பொய்யேகைம்மைசொல்லி] - பொய்யென்றும், கைம்மையென்றும், இரண்டும் - பர்யாயமான சொல். இத்தால் சொல்லிற்றாயிற்று - பிறரைப்பகட்டுகையன்றிக்கே ஸர்வஜ்ஞனும் "இதுமெய்" என்றுப்ரமிக்கும்படி பெரும்பொய்யையன்றே சொல்லிற்றென்கை. பொய்யும் மெய்யுமாகக் கலந்தத்தையே தான் சொல்லப்பெற்றதோ? [புறமேபுறமேயாடி] - இப்போது, புறமென்கிறது - ஶப்தாதிவிஷயங்களை. "பகவத்விஷயத்தில் அவகாஹித்தது போராது" என்று இத்தை "பொய்" என்று நிற்கச்செய்தேயும், ஶப்தாதிகள் புறம்பாய்த் தோற்றுகிறதாயிற்று இவர்க்கு; "பாவியேனைப் பலநீகாட்டிப்படுப்பாயோ" என்னுமவரிறே. ஜாதி வ்யக்திதோறும் பரிஸமாப்ய வர்த்திக்குமாபோலேயாயிற்று விஷயங்கள்தோறும் தனித்தனியே கால்தாழ்ந்தபடி. இதுதான் எப்போதை நிலையைப்பற்றச் சொல்லுகிறா ரென்னில்; - காலத்ரயத்திலு முள்ளதும் ஸம காலத்திற்போலே தோற்றுகையாலே, பூர்வவ்ருத்தத்தைப்பற்றச் சொல்லுகிறா ரென்னவுமாம். மயர்வறமதிநலம் பெற்றபின்பும் தமக்கு விஷயாநுரூபமாகப் போராமையாலே சொல்லுகிறாராகவுமாம். 'இதுவாகில் உம்முடையநிலை பேசிருந்தபடியேன்'. என்ன [மெய்யே]-என்பக்கலுள்ளது பொய்யேயானாற்போலே, அவனடியாக வந்ததாகையாலே மெய்யேயாயிருக்குமிறே. பேற்றில் கண்ணழிவு சொல்லலாவதில்லை. [பெற்றொழிந்தேன்] - பரமபதத்தேறப்போனாலும் இப்பேற்றை அசையிட்டிருக்குமத்தனை. இனி இதிற்காட்டில் ஏற்றம் செய்யலாவதில்லை. "ஹேதுவில்லை" என்று நின்றீர், பேறு கனத்திருந்தது; இதுக்கு அடியென் பின்னை? என்ன. - [விதிவாய்க்கின்று]-பகவத்க்ருபை கரைபுரளப் பெருகாநின்றால் நம்மாற்செய்யலாவதுண்டோ? விதியென்கிறது - பகவத்க்ருபையை. கேசவன்தமர்க்கு இப்பாலெல்லாம் இவர், விதியென்கிறது - பகவத்க்ருபையை. அதுக்கடி - அவனால் தப்பவொண்ணாதபடி யிருக்கையாலே. [வாய்க்கின்று] - பகவத்க்ருபை ஈஶ்வரஸ்வாதந்த்ர்யமாகிற கரைபுரளப்பெருகிவந்து கிட்டாநின்றுள்ளவிடத்தில். [காப்பாரார்] - இதுக்கு நிவாரகராவாருண்டோ? காப்பதேது? என்னாதே, ஆரென்கிறது இரண்டுசேதநராலே காக்கப்போமோ? பரதந்த்ரனை இவனாலும் தகையவொண்ணாது. ஸ்வதந்த்ரனை அவனாலும் தகையவொண்ணாது;

பகட்டுகை - வஞ்சிக்கை. "பொய்யே" என்கிற அவதாரணார்த்தம் - பொய்யும்மெய்யும் இத்யாதி. "பகவத்விஷயாவகாஹநம்போராது" என்று ஸ்வதோஷாநுஸந்தாநம் பண்ணாநிற்க, "புறமேபுறமே" என்பானென்? என்ன - பகவத்விஷயத்தில் இத்யாதி. "இவர்க்கு" என்றதின் கருத்தை அருளிச்செய்கிறார் - பாவியேனை இத்யாதி. இதுக்கடி - இவர் ப்ராக்ருதியென்று கருத்து. பாவியான என்னை, அல்பஸாரமான பல விஷயங்களையுங்காட்டி நீ முடிக்க நினைக்கிறாயோ? இத்யர்த்தஃ. "புறமேபுறமே" என்கிற அவதாரணங்களோடேகூட வீப்ஸைக்கு அர்த்தம் - ஜாதி இத்யாதி. இதுதான் இப்போது இல்லையேயென்னுமத்தை ஸங்கித்து, இரண்டுவகையாக அருளிச்செய்கிறார் - இதுதான் இத்யாதி. போராமையாலே - ப்ரேமம்போராமையாலே. இத்தால் - வாஸ்தவம் அன்றென்றபடி. "மெய்யே" என்ற அவதாரணார்த்தம் - என்பக்கல் இத்யாதி பலிதம். பேற்றில் இத்யாதி. பூதநிர்த்தேசமாக - "பெற்றொழிந்தேன்" என்பானென்? பரமபதாதிகள் வேண்டாவோ? என்ன - பரமபதத்து இத்யாதி. ஹேதுவில்லையென்றது - "பொய்யேகைம்மைசொல்லி" என்கையாலே. வாய்க்கின்று - கிட்டுமிடத்தில். இப்பாலெல்லாம் என்றது - "என்றுமொன்றாகி" என்கிறபாட்டைப்பற்ற. பகவத்க்ருபையை - "விதி" என்கைக்கு ஹேதுவேது? என்ன - அதுக்கடி இத்யாதி. "காப்பாரார்" என்றதுக்கு அர்த்தத்வயம், கர்மவிஶிஷ்டனையும் ஸ்வாதந்த்ர்யவிஶிஷ்டனையுமிருக்கிற சேதநேஶ்வரர்களாலே தகையப்போகாதென்று - முந்தினது; இரண்டாவது - அதுக்கு க்ருஷிபண்ணினவர்கள் இத்தைக்காப்பரோவென்று; சேதநவந்நிர்த்தேசத்துக்கு பாவம் - காப்பதேது இத்யாதி. கர்மம் ப்ரதிபந்தகமாகையாலே - காப்பதேது என்னாதே என்றபடி. "இரண்டுசேதநர்" என்றதின் விவரணம் - பரதந்த்ரனை இத்யாதி. பரதந்த்ரனை - கர்மபரதந்த்ரனை, ஸ்வதந்த்ரனை - "கர்மாநுகுணமாகவே நிர்வஹிக்கக்கடவேன்" என்னும் ஸ்வதந்த்ரனை என்றபடி. பூர்வவாக்யவிவரணம் -

பல போக்தாவான இவனாலும் தகையவொண்ணாது. பலப்ரதாதாவான அவனாலும் தகைய வொண்ணாது. [காப்பாரார்] - க்ருபாஜநகையான அவள் காக்கவோ? க்ருபா பரதந்த்ரனான நீ காக்கவோ? க்ருபாபாத்ரமான நான் காக்கவோ? "ஸ்ரீசூஹாவெ ந" (மித்ரபாவேந) என்கிற ஶ்லோகத்திலே, எம்பார், "ஸர்வஜ்ஞனுக்கு ஒரு அஜ்ஞாநமும் விஸ்ம்ருதியும், ஸர்வஶக்திக்கு ஒரு அஶக்தியு முண்டு" என்று அருளிச்செய்வர். ஒருவன் தன்னையாஶ்ரயித்தால், முன்பு புத்திபூர்வம் பண்ணின குற்றத்திலே விஸ்ம்ருதிபண்ணி, ஜ்ஞாநம்பிறந்தால் ப்ராமாதிகமாய் வருமதில் அஜ்ஞாநம், அவனைவிடவேண்டிவருமளவிலே அஶக்தி; இப்படி இருக்கைக்கு அடி - ஸ்வாபாவிகமான குடல்தொடக்கு. "ஆர்" என்பானேன்? ஸ்வதந்த்ரனான என்னால் தகையத்தட்டேன்? என்ன- [ஐயோ] - ஆமாகில் செய்துபார்த்துக்காணாய். ஐயோ வென்கிறது - ஹர்ஷாதிஶயத்தாலே சொல்லுகிற பாசுரம். [கண்ணபிரான்] - உபகாரசீலனான க்ருஷ்ணனே! ஒருதாயுடைய மெய்க்குப் போகமாட்டாத நீயோ என்னுடைய பொய்க்குப் போகப்புகுகிறாய், ஓரிடைச்சிகையிலே கட்டுண்ட தசையிலே அந்த பந்தத்தைத் தப்ப விரகறியாதே ஶக்தியுமின்றிக்கே யிருந்த நீயோ போகப்புகுகிறாய்? (ஆர்ஜவமானகட்டவிழ்க்கமாட்டாதவன் க்ருத்ரிமமான பந்தத்தை அவிழ்க்கமாட்டானென்னும் படி.) [அறையோவினிப்போனாலே] - இனிப்போனாயாகில் அறையோவறை. என்பக்கலிலே, "மெய்"

ப்ர:—(காப்பாரார்)—[illegible Grantha text] "[illegible Grantha text] ஸ்ரீசூஹாவெ ந [illegible Grantha text]"

பலபோக்தா இத்யாதி. ஆக, இத்தால்-அவனுடைய க்ருபையை அண்டைகொண்டு சொல்லிற்று. அது நிக்கே இதுக்கு க்ருஷி பண்ணினவர்கள் தகைவர்களோ? என்று தாத்பர்யம் - க்ருபாஜநகையான இத்யாதி. "[illegible]" என்று - க்ருபா ஜநகையான அவள் காக்கவோ? "தாமரையாளாகிலும் சிதகுரைக்குமேல்" என்று - க்ருபாபாரதந்த்ரனான நீ காக்கவோ "[illegible]" என்று - க்ருபாபாத்ரமான நான் காக்கவோ? என்றபடி. இப்போது க்ருபாபரதந்த்ரனாயிருந்தானேயாகிலும், ஸர்வஜ்ஞன் ஸர்வஶக்தியன்றோ; அபராதாநுகுணமாகத் தத்கார்யமும் ஒருகால் பிறவாதோ? என்ன-மித்ரபாவேந இத்யாதி. "[illegible]" என்கையாலே - அஜ்ஞாநமும் விஸ்ம்ருதியும். "[illegible]" என்கையாலே - அஶக்தியும். "[illegible]" என்றதுக்கு அர்த்தம் - ஒருவன்தன்னை இத்யாதி. ஆஶ்ரயித்தால் - அஹ்ருதயமாக ஆஶ்ரயித்தால் என்றபடி. "[illegible]" என்றதுக்கு பாவம் - விஸ்ம்ருதியும் அஜ்ஞாநமுமாக்கி, அஜ்ஞாநத்துக்குத் தாத்பர்யம்-ஜ்ஞாநம்பிறந்தால் இத்யாதி. "[illegible]" என்றதுக்கு பாவம் - அவனைவிடவேண்டி இத்யாதி. இப்படியிருக்கைக்கடி இத்யாதி - இப்படி அர்த்தங்கொள்ளுகிறது, இப்படி யிருக்கைக்கடி ஸ்வாபாவிகமான குடற்றொடக்கென்கையாலே என்றபடி. இத்தால் - ஸ்வாபாவிகமான நாராயணத்வ ப்ரயுக்தமான ஸம்பந்தம் உண்டாகையாலே, ஸர்வஜ்ஞத்வாதிநிபந்தநமான தோஷதர்ஶநாதிகள் ஆஶ்ரிதவிஷயத்தில் ஈஶ்வரனுக்குக் கூடாதென்றதாயிற்று. "ஐயோ" என்கிற இது - விஷாதத்திலேயன்றோ? என்ன - ஐயோவென்கிறது இத்யாதி. "கண்ணபிரான்" என்றதுக்கு பாவம் - ஒருதாயுடைய இத்யாதி; ஒருதாயுடையமெய் இத்யாதிவாக்யம் - ஸாந்திக்தம். ஆனாலும், ஒருதாயினுடைய ப்ரக்ருதி ஸம்பந்தமடியான ஸ்நேஹத்துக்கு விட்டுப்போகாதநீயோ என் அஹ்ருதயோக்திக்கு விட்டுப்போகப்புகுகிறாயென்றபடி. தாயுடைய மெய்யாவது - "[illegible]" முதலானது. ஆர்ஜவமான - ருஜுவான. "இனி" என்றதுக்கு பாவம் - என்பக்கலிலே இத்யாதி. மெய்யென்று பேரிடலாவதென்றது - ஈஶ்வரன்நினைவாலேயென்றபடி.

என்று பேரிடலாவதொரு பொய்பெற்றபின்பு போனையாகில் அறையோவறை. பகவத்க்ருபையை அண்டைகொண்டு ஈஶ்வரஸ்வாதந்த்ர்யத்தை அறைகூவுகிறார். கண்ணபிரானென்று ஸம்புத்தியாகவுமாம்; அன்றிக்கே, பரோக்ஷநிர்த்தேஶமாய், கண்ணபிரானானவன் இனிப்போனானாகில் அறையோவறை யென்னுதல். (க)

இரண்டாம்பாட்டு.

போனாய்மாமருதின்நடுவே என்பொல்லாமணியே
தேனேயின்னமுதே என்றென்றேசிலகூத்துச்சொல்லத்
தானேலெம்பெருமான் அவனென்னாகியொழிந்தான்
வானேமாநிலமே மற்றுமுற்றுமென்னுள்ளனவே.

ஆ.—(போனாய்.) தன்திறத்திலே ப்ரேமகந்தரஹிதனா யிருந்துவைத்து, நிரதிஶயப்ரேமயுக்தர் சொல்லும் பாசுரங்களை நான் சொல்ல, ஸர்வேஶ்வரனான தான், அத்யந்த நிஹீநதரனான என்னுள்ளே ஸபரிகரமாக வந்து புகுந்தருளினானென்கிறார்.

ஒ.—இரண்டாம்பாட்டில், தன்பக்கல் ஸ்நேஹஹீநனாயிருந்து வைத்து அஸ்த்தாநே பயஶங்கிகள் சொல்லும் சொல்லை நான் சொல்ல, ஸர்வேஶ்வரனான தான் ஸவிபூதிகனாய்க்கொண்டு என்னுள்ளே புகுந்தருளினானென்கிறார்.

[பொல்லாமணியே] - பிறர் கண்ணெச்சில் படாமைக்குச் சொல்லுகிறது. துளையா மணி யென்றுமாம். கூத்து - பொய்.

ப.—அநந்தரம், அஹ்ருதயமான ப்ரேமோக்தியை பற்றாசாக ஸவிபூதிகனான ஸர்வேஶ்வரன் என்பக்கலிலே அபிநிவிஷ்டனானானென்கிறார்.

மா - மஹாகாயங்களாய் அஸுராவிஷ்டங்களாய்க்கொண்டு நலிகைக்குத் தன்னில்தான் செறிந்த, மருதின் - மருதுகளின், நடுவே - நடுவே, போனாய் - போனவனே! (அவற்றை நிரஸித்து அவ்வருகுபட்டபோதை ஔஜ்ஜ்வல்யத்தாலே), பொல்லா-தொளையாத, என்மணியே-(ரத்நம்போலே அவிகலதேஜஸ்ஸை யுடையையாய்க்கொண்டு), எனக்கு தர்ஶநீயனானவனே! தேனே - தேன்போலே ரஸிப்பிக்கும் வடிவில் ஸௌகுமார்யத்தை யுடையவனே! இன்அமுதே-(விரோதிபலத்தை நினைத்து ஸத்தை யழிந்த என்னை) உஜ்ஜீவிப்பிக்கும் அம்ருதமானவனே! என்றென்றே - என்றென்று தனித்தனியே, சில - (பாரமார்த்திக ப்ரேமத்தாலே) சொல்லுவன சில, கூற்று - பாசுரத்தை, சொல்ல - பாவித்துப் பலகாலுஞ் சொல்ல, எம் - எனக்கு, பெருமான் - ஸ்வாமியான, அவன் - அவன், தானேல் - தான் செய்தபடியாகில், என் - என் அபிமாநத்துக்குள்ளே, ஆகியொழிந்தான் - ஆம்படியாய் விட்டான்; வான் - ஆகாசம், மாநிலம் - பூமிமுதலான பூதபஞ்சகங்களும் தத்கார்யமான லீலாவிபூதியும், மற்றும் - அபரிச்சிந்ந மாஹாத்ம்யத்தை

அறையோவென்றது - ஜயித்தவன்சொல்லும் வார்த்தை. இந்த ஶப்தம் - நிஷேதவாசி. ஸ்வதந்த்ரனானவனை இப்படி நிஷேதிப்பது எத்தைக்கொண்டு என்ன, பகவத்க்ருபையை இத்யாதி. பரோக்ஷநிர்த்தேஶமாவது - முன்னிலையன்றிக்கே சொல்லுகை. நான் உன்னை ஜயித்தேனென்று-"அறையோவறை" என்று அறைகூறுகிறாரென்றபடி. கையார்சக்கரத்து என் கருமாணிக்கமே - கண்ணபிரானே - என்றென்று பொய்யே என்று தொடங்கி, காப்பாரார், இனிப்போனால் - ஐயோ - அறையோ என்று அந்வயம். (க)

யுடைய நித்யவிபூதியும், முற்றும் - எல்லாம், என் - எனக்கு, உள்ளன - உள்ளே யிருந்து நடத்துதும்படி யாயிற்று.

இ.—இரண்டாம்பாட்டில், அஸ்த்ரநேயஸங்கிகள் சொல்லும் வார்த்தையை நான் அஹ்ருதயமாகச்சொல்ல, ஸர்வஜ்ஞனான அவன் அத்தை மெய்யாகக்கொண்டு தன் விபூதியோடே நானிட்ட வழக்காய் ஆனானென்கிறார்.

[போனாய்] - யமளார்ஜுநங்கள் நடுவே போனபோது யசோதைப்பிராட்டி ப்ரேமத்தாலே சொன்னவார்த்தையை, ப்ரேமகந்தமின்றிக்கே யிருக்கிற நான் சொன்னேன். [போனாய்]- கைகழிந்தது, இனி ப்ரதிக்ரியையில்லை. பலாநுபவமே யென்றிருக்கிறார். பூதகாலமாயிருக்க, இவர்க்கு வர்த்தமாந காலம்போலே இருக்கிறது; ஈஶ்வரன் கொடுத்த ஜ்ஞாநவைஶத்யம் இவர்க்கு வயிறெரித்தலுக்கு உறுப்பாயிற்று. நலியவந்தவைதானே நலியப்பற்றாமை, தானே சென்று புக்கானென்கிறார். [மாமருது] - மஹாஸுரர்கள் வடிவுக்குத் தகுதியாக ஆவிர்ப்பவித்த மருதுகள். இவன் மௌக்த்யத்தை யறிந்து பணைத்தவை யென்றுமாம். அவ்வருகே சாய்ந்தவை, இப்பெரிய வடிவோடே உள்ளே சாய்ந்தனவாகில் என்னாகக்கடவதென்கிறார். [நடுவே - போனாய்] - இருவரும் க்ருதஸங்கேதர்களாயிருக்க, ஒன்றிலே துளைகண்டு போனாற்போலேயாயிற்றுப் போயிற்று. புணர் மருதமிறே. மௌக்த்யத்தாலே ஓராருது துங்க அறியானே. "யமளார்ஜுநயோர்மத்யே ஜகாம" என்று ருஷி வயிறுபிடிக்கிறான்; இவர் "மாமருதின் நடுவே - போனாய்" என்கிறார். [என் பொல்லாமணியே] - "ததஃ க்ஷடாஸப்தஸம்ரம்பஸம்ப்ராந்தஃ ஸகலோக்ஷணஃ" - இவற்றைத் தப்பிப்போய், முறிந்துவிழுகிற ஓசையைக்கேட்டு அபூர்வதர்ஶநத்தாலே சிவந்து மலர்ந்த கண்ணுந் தானுமாயிருக்கிறபடி. "புணர்மருதமிறநடந்தபொற்குன்றினை" என்னக்கடவதிறே. "அழகிது என்னில் - நாட்டில் அழகோபாதியாம்" என்று, வ்யாவ்ருத்தி தோற்ற, [பொல்லாமணியே] என்னுதல்; பொல்லாவென்று - நாட்டார் கண்டு கண்ணெச்சிற்படாமைக்குக் கரிதாகிறாரென்னுதல். "கண்ணெச்சிற் கரிதாகச்சொல்லியது" என்று வ்யாக்யாநம் பண்ணினான். துளையா மணி; அநுபபுக்தமாயிருக்கும் மணியென்றுமாம். பொல்லல் - துளைத்தல். இதுவும் யசோதைப்பிராட்டி ஸந்நிஹிதையாய்நின்று சொன்ன வார்த்தை. [தேனே] - வந்து எடுத்துக்கொண்ட போதை ஸ்பர்ஶத்தாலும் முக்தஜல்பிதத்தாலும் கொண்டாடிச் சொன்ன வார்த்தை. [இன்னமுதே] - அப்போதை போக்யதையாலே சொன்ன வார்த்தை. நிரதிஶய போக்யமாய், போன உயிரை மீட்கவற்றாயிருக்கை. [என்றென்றே] - ஒருகால் சொல்லி அநுதபித்து மீண்டுமே. [கூத்து] - சிலருடைய செயலை வேறேசிலர் அநுகரிக்கை. ப்ரேமபரவஶையானவள் சொல்லக் கேட்ட வார்த்தையை அஹ்ருதயமாக நான்சொல்ல, [தானேல்இத்யாதி] - தானாகில், இதிலேயி லுள்ளதெல்லாம் அறியவல்ல ஸாமர்த்யத்தை யுடையனாயிருக்க, அஹ்ருதயமான உக்தியையும் ஸம்பந்தத்தையுங் கொண்டு நானிட்ட வழக்கானான். என்னையுடையவன் நானிட்டவழக்கானான். உடையவன் தன்னுடைமையான எனக்கு உடைமையானான்; அதனோத்தரமாயிற்று. அவன் விபூதி செய்ததென்? என்னில், [வானேயித்யாதி] - "யதேவ்ஸ்தே தஸ்ய தஸ்ய" என்கிறபடியே, விபூதியும் நானிட்டவழக்காயிற்று. ஸவிபூதிகனாய்க்கொண்டு உள்ளே புகுந்தான். [வானே மாநிலமே] - பஞ்சபூதங்களுக்கும் உபலக்ஷணம். [மற்றும்] - அவற்றின் கார்யமான அண்டங்களும். [முற்றும்] - நித்யவிபூதியும். [என்னுள்ளனவே] - நித்யஸூரிகள் செல்லாமை பார்த்து அங்கேயிராதே, லீலாவிபூதி அழிந்தபடி பார்த்து இங்கேபுகுந்தான். உபயவிபூதியிலுமுள்ள நிர்வாஹம் என்பக்கலிலே இருந்து பண்ணுமத்தனையாய்விட்டது.

ஈடு.—அஸ்த்தாநேபயஶங்கிகள் சொல்லும் வார்த்தையை நான் அஹ்ருதயமாகச் சொல்ல, ஸர்வஜ்ஞனானவன் அத்தை மெய்யாகக் கொண்டு தன்விபூதியோடேகூட நானிட்ட வழக்காளனேன்கிறார்.

[போனாய்மாமருதின்நடுவே] - அப்போது கண்டுநின்ற யசோதைப் பிராட்டியானவள், யமளார்ஜுநங்களின் நடுவே அவன்போனபடியைக்கண்டு பாவபந்தம் தோற்றச் சொன்ன பாசுரத்தை அதில்லாத நான் சொன்னேன். 'பூதகாலத்திலே' என்று தோற்றுகிறதில்லையாயிற்று இவர்க்கு ஜ்ஞாநவைஶத்யத்தாலே. ஸர்வேஶ்வரன் பண்ணிக்கொடுத்த ஜ்ஞாநவைஶத்யம் வயிறெரிகைக்கு உடலாய்விட்டதித்தனை. [மாமருதின் நடுவே] - பெரிய வடிவுகளையுடைய அஸுரர்களிறே அவையாய் நிற்கிறார்கள். இவனுடைய மௌக்த்யத்தை யறிந்து, பெருத்துத் தடித்து தர்ஶநீயமான வேஷத்தோடேயாயிற்று இருவரும் க்ருதஸங்கேதராய் ஒருவிவரமற நின்றபடி. ஒன்றிலே வெளிக்கண்டு போனாற்போலே யாயிற்றுப் போனபடி. "யமளார்ஜுநயோர்மத்யே ஜகாம" (யமளார்ஜுநயோர்மத்யே ஜகாம) என்ற ஆபத்தையாயிற்றுச் சொல்லுகிறது. [என்பொல்லாமணியே] - "ததஃ கடகடாஶப்தஸமாகர்ணநதத்பரஃ ஜகாமகமலேக்ஷணஃ" (ததஃ கடகடாஶப்தஸமாகர்ணநதத்பரஃ-ஜகாமகமலேக்ஷணஃ) என்கிறபடியே, இவற்றைத் தப்பிப்போய், முறிந்துவிழுகிற ஓசைகேட்டு அபூர்வதர்ஶநத்தாலே சிவந்து மலர்ந்த கண்ணும் தானுமா யிருக்கிறபடி. "புணர்மருதமிறநடந்த பொற்குன்றினை" என்னக்கடவதிறே. அழகிது என்னில்-நாட்டில் அழகோபாதியாமென்று, வ்யாவ்ருத்தி தோற்ற-பொல்லாமணியே யென்கிறாராதல்; நாட்டார்கண்டு கண்ணெச்சில் படாமைக்குக் கரிபூசுகிறா ரென்னுதல். பொல்லல்-தொளைத்தல். பொல்லாமணி-

*இரண்டாம்பாட்டு - போனாய் இத்யாதி. தமக்கு ஈஶ்வரவிஷயத்தில் ப்ரேமம் போராமையாலே, பயஸ்த்தாநே பயஶங்கைபண்ணின யசோதைப்பிராட்டியை - **அஸ்தாநேபயஶங்கிகள்** என்கிறாரென்று தாத்பர்யம். "அஸ்தாநேபயஶங்கைபண்ணுவர்கள்" என்றதுக்கு ப்ரமாணம் - "ஶஶ்வத்ஸுஹ்ருதா ஶங்கிதா ... ஸ்ரீஶாரங்கஷிணாநாய ஶங்கா ... ஜா ... ஜா ... தா॥" "உறகலுறகல்" இத்யாதி. அஹ்ருதயமாகச் சொல்ல என்றது - "சிலகூத்துச்சொல்ல" என்றத்தைப்பற்ற. ஸர்வஜ்ஞனானவன் என்றது - "தானேயெம்பெருமான்" என்றத்தைப்பற்ற. விபூதியோடே என்றது - "வானேமாநிலமே" இத்யாதியைப் பற்ற. நானிட்ட வழக்காளன் என்றது - "என்னாகி" என்றத்தைப்பற்ற. நானிட்டவழக்காளன் - என் அதீநமானவன்.*

*அப்போது - மருதின் நடுவே போனபோது. சொன்னபாசுரம் - "போனாய்" இத்யாதி. அதில்லாத நான் சொன்னேன் என்றது - "சிலகூத்துச்சொல்ல" என்றத்தைப்பற்ற. யசோதைப்பிராட்டி ஸந்நிஹிதையாய்க் கண்டவளாகையாலே "போனாய்" என்னலாம், காலவ்யவதாநத்தாலே அஸந்நிஹிதரான இவர் "போனாய்" என்று அவள் சொல்லும் வார்த்தையைச் சொல்லக்கூடுமோ? என்ன - **பூதகாலத்திலே** இத்யாதி. அப்படி விஶதமானால் அநுபவிக்கலாகாதோ வென்ன - **ஸர்வேஶ்வரன்** இத்யாதி. இத்தால் - ஜ்ஞாநவைஶத்யத்தாலே ஸமகாலம் போலே தோற்றிவயிறெரிகைக்கு உடலான ஆகாரம் தமக்குஉண்டாயிருக்கவும்,ஸ்வகைசய்யத்தாலே தமக்கு ப்ரேமமில்லையாக அருளிச்செய்கிறாரென்று கருத்து. வயிறெரிகை - க்லேஶிக்கை. "போனாய்" என்று - வயிறெரிகைக்கு, அது பயஹேதுவாவான் என்? என்ன - **பெரியவடிவு** இத்யாதி. அஸுரர்கள் மருதுகளாய் நிற்கிறது எதுக்கென்ன - **இவனுடைய** இத்யாதி. அதாவது - "இவன்மேல்விழுவன்" என்னுமத்தாலே என்றபடி. பெருத்து, தடித்து - உயர்ந்து, ஸ்தூலித்து. "மருது" என்கிற ஏகவசந தாத்பர்யம் - **ஒன்றிலே** இத்யாதி. நடுவேபோகை பயஹேதுவோ? என்ன - **யமளா** இத்யாதி. "வ்ருக்ஷயோர்மத்யே தஸ்யாம் ஸக்தஷ்டூரேண உலூகலேந யமளார்ஜுநயோர்மத்யே ஜகாமகமலேக்ஷணஃ" நடுவே ஒருஶ்லோகம்விட்டு மேலே 'ததஃ கடகடாஶப்தஸமாகர்ணநதத்பரஃ। ஜகாமவ ஜஜநோத்ருஷ்டபூர்வகௌ ... ॥' இதி பஞ்சமேம்ஶே ஷஷ்டே. **என்பொல்லாமணியே** - எனக்கு லோகவிலக்ஷணமாய் தர்ஶநீயமா யிருக்கிற*

தோளேயாமணி; அநுபபுக்தமாயிருக்கும் மணி யென்றுமாம். இதுவும் - யசோதைப்பிராட்டி ஸங்
ஹிதையாய்நின்று சொன்ன வார்த்தை. [தேனே] - வந்து எடுத்துக்கொண்டபோதை ஸ்ட ஶத்
தாலும் முக்தஜல்பத்தாலும், கொண்டாடிச் சொல்லுகிற வார்த்தை. [இன்அமுதே] - அப்டே ாதை
யில் போக்யதையாலே சொன்ன வார்த்தை. நிரதிஶயபோக்யமாய், போனஉயிரை மீட்க ற்று
யிருக்கை. "அமுதென்றும் தேனென்றும் ஆழியானென்றும்" என்று சொல்லுகிறபடியே நி! வதிக
போக்யமாயிருக்கை. [என்றென்றே] - ஒருகால் சொல்லி "தப்பச்செய்தோம்" என்று ளைத்
தான்பெற்றதோ. [சிலகூத்துச்சொல்ல] - ஒருவன் நினைவையும் செயலையும் வேறொருவன் சய்யு
மது - கூத்தாவது. பரிவுடைய யசோதைப்பிராட்டி இவற்றிலே ஈடுபட்டுச்சொல்லும் பாசுரத் தைக்
கிடீர் அதில்லாத நான் சொல்லிற்று. [தானேலெம்பெருமான்] - தானாகில், ஸர்வஜ்ஞனாய் ஸர்வ
நியந்தாவா யிருப்பானொருவன். அகவாயறியாதானொருவனல்லன், அறிந்தால் உபேக்ஷிக் மாட்
டாதா னொருவனல்லன். [அவன்] - அப்படி ஸர்வஜ்ஞனாய் ஸர்வஶக்தியானவன். [எ னகி
யொழிந்தான்] - நானிட்டவழக்கானான். என்னையுடையவன் நானிட்ட வழக்கானான். டை
யவன்தான் உடைமையானான், அதரோத்தரமாயிற்று. அவன் விபூதி செய்ததேன்? என்ன ல்,—
"யஸ்யைதே தஸ்ய தத்தநம்" (யஸ்யைதேதஸ்யதத்தநம்) என்கிறபடியே விபூதி யையும்
நானிட்ட வழக்காக்கினான். ஸவிபூதிகனாய்க்கொண்டு என்னுள்ளே புகுந்தான்; [வா னமா

வனே! பொல்லாமைக்கு - வைலக்ஷண்யமும், ஆரோபிதமான மாலிந்யமும், தொளேயாமையுமாக மூன். அர்த்
தம். அப்போது தர்ஶநீயதை எதென்ன, தத இத்யாதி. "ஸஹ கணைர் நந்தஶ்ச" என்றது - 'குஜ
மாஜவ ஜநாஶ்ச" என்று வ்ரஜஜநத்துக்கு விஶேஷணமானாலும், ஶப்தஶ்ரவண கௌதூஹலம் இவ வுக்கும்
உண்டென்று கருத்து. அப்போதையில் ஸ்ப்ருஹணீயதைக்கு ப்ரமாணாந்தரம் - புணர்மருதம் இத்யாதி தன்
னிலே பொருந்தி நிற்கிற மருதுகள் முறிந்துவிழும்படிநடந்து, பொற்குன்றுபோலே ஸ்ப்ருஹணீயனா னவனை
யித்யர்த்தஃ. திருமொழி-இரண்டாம்பத்து - அஞ்சாந்திருமொழி - முதற்பாட்டு, "பாராயதுண்டு" இ த்யாதி.
கண்ணெச்சில் - த்ருஷ்டி. ஸ்பர்ஶத்தாலுமென்றது - "மணியே" என்றதுக்கு - ஶமஹரதையை ர்த்தாந்
தரதயா விவக்ஷித்து. அப்போதையில் போக்யதையாவது - அவன் வடிவை அநுபவிக்கிறபோதையில் போக்
யதை யென்றபடி. "தேனே, அமுதே" என்றதுக்கு பாவம் - நிரதிசய இத்யாதி. "இன்னமுதே' என்ற
துக்கு பாவம் - போனவுயிரை இத்யாதி. ஸப்ரமாணகமாக விவரணம் - அமுதென்றும் இத்யாதி. நித்ய போக்ய
மான அம்ருதமென்றும், ஸர்வரஸஸமவாயமான தேனென்றும், நிரதிஶயபோக்யமான திருவாழியை டையவ
னென்றும் இத்யர்த்தஃ. இரண்டாந்திருவந்தாதி-எண்பத்தஞ்சாம்பாட்டு. "கூத்து" என்றதுக்கு ஹ்ரு தயம் -
ஒருவன் இத்யாதி. நினைவையும் செயலையும் என்றது - சொலவுக்கும் உபலக்ஷணம். இவற்றிலே - பமளார்
ஜநமத்ய ப்ரவேசாதிகளிலே. தானாகிலென்றது - தானானாலென்றபடி. ஸர்வஜ்ஞத்வ ஸர்வநியந்த்ரு வங்கள்
ஸர்வஸ்வாமியானவனுக்கே யுள்ளதொன்றாகையாலே, ஸ்வாமிவாசியான "எம்பெருமான்" என்ற ஶப் த்துக்கு
அர்த்தம் - ஸர்வஜ்ஞனாய் ஸர்வநியந்தாவாயென்கிறார். இந்த இரண்டுக்கும் ப்ரயோஜநம் - அகவாய் இ த்யாதி.
"அவனென்னாகியொழிந்தான்" என்று தொடங்கி மேலுக்கெல்லாம் நாலு தாத்பர்யம், அதாவது - ந ானிட்ட
வழக்கானன் என்று தொடங்கி, விபூதியையும் நானிட்டவழக்காக்கினன் என்னுமளவும் ஒருதா த்பர்யம்.
இரண்டாவது - ஸவிபூதிகனாய் என்று தொடங்கி, என்னுள்ளனவே என்னுமளவாக. மூன்றாவது உபய
விபூதி என்று தொடங்கி. நாலாவது - அன்றிக்கே வானேயித்யாதி உபயவிபூத்யைஶ்வர்யமும் இ த்யாதி.
"வானேமாநிலமே மற்றுமுற்றுமென்னுள்ளனவே" என்றதுக்கு நாலர்த்தம். முந்தினது - ஸவிபூ தினாய்க
கொண்டு எனக்குப் பரதந்த்ரனானான் என்றது; அன்றிக்கே, ஸவிபூதிகனாய்க் கொண்டு என்னுள்ளே இருந்தா
னென்னுதல்; அன்றிக்கே, உபயவிபூதி நிர்வாஹமும் என்பக்கலிலே இருந்துபண்ணுமென்னுதல்; அ ன்றிக்கே,
உபயவிபூதியிலும் பண்ணுகிற ஆதரத்தை என்னிடத்திலே பண்ணினானென்னுதல். "எம்பெருமான்" என்
றத்தைக்கூட்டி "அவன்" என்ற பதத்துக்கு அர்த்தம் - அப்படிஸர்வஜ்ஞனாய் இத்யாதி. "எம்பெ ருமான்"
என்றத்தைக் கடாக்ஷித்து பாவம் - என்னையுடையவன் இத்யாதி. பலிதம் - உடையவன் இத்யாதி. ஸவிபூதி
கனாய் - என்ற இரண்டாமர்த்தத்திலே, "என்னாகியொழிந்தான்" என்னுள்ளே புகுந்தான்; "மற் றுமுற்று

நிலமே] - பஞ்சபூதங்களுக்கும் உபலக்ஷணம். [மற்றும் - தத்கார்யமான அண்டங்களும், முற்றும்] - நித்யவிபூதியும், [என்னுள்ளனவே] - உபயவிபூதி நிர்வாஹமும் என்பக்கலிலே யிருந்து பண்ணுமத்தனையாய்விட்டது. அன்றிக்கே, [வானேயித்யாதி] - உபயவிபூதி ஐஶ்வர்யமும் என் பக்கலிலேயாய்விட்டது என்றுமாம். விஷயப்ரவணனானவன், தானுகந்தவிஷயமே எல்லா ஐஶ்வர்யமாக நினைத்திருக்குமாபோலே. "உன்னுகமுற்று மகத்தடக்கி" என்கிறபடியே. (௨)

மூன்றும்பாட்டு.

உள்ளனமற்றுளவாப் புறமேசிலமாயஞ்சொல்லி
வள்ளல்மணிவண்ணனே யென்றென்றேயுன்னையும்வஞ்சிக்கும்
கள்ளமனந்தவிர்ந்தே யுன்னைக்கண்டுகொண்டுய்ந்தொழிந்தேன்
வெள்ளத்தணைக்கிடந்தாய் இனியுன்னைவிட்டென்கொள்வனே.

ஆ.—(உள்ளன.) அந்தக்கரணம் ப்ராக்ருதவிஷய ப்ரவணமாயிருக்கச்செய்தே, ஸர்வஜ்ஞனை நீயுங்கூட "மெய்" என்றிருக்கும்படி, வள்ளல்மணிவண்ணனே என்றென்று புறமே சிலமாயஞ்சொல்லி வஞ்சிக்க, நான் இப்போது உன்னுடைய ப்ரஸாதத்தாலே அந்தக் கள்ளம்தவிர்ந்து அக்ருத்ரிமநிரவதிபக்தியுக்தனாய் உன்னைக் கண்டுகொண்டொழிந்தேன். வெள்ளத்தணைக்கிடந்தாய், இனி நான் ஆத்மாந்தமாக, உன்னையல்லது மற்றொரு ப்ராப்யம் வேண்டேன்

ஓ.—மூன்றும்பாட்டில், ஹ்ருதயம் அந்யபரமாயிருக்க, வாங்மாத்ரத்தாலே உன்னைப் பெற்ற நான் உன்னையொழிய வேறொரு புருஷார்த்தத்தை ஆசைப்படேனென்கிறார்.

[உள்ளனவென்று தொடங்கி] - அந்தக்கரணம் ப்ராக்ருதவிஷய ப்ரவணமாயிருக்கச் செய்தே "பரமோதாரனே, நிரதிஶய போக்யனானவனே" என்றாற்போலே புறப்பூச்சாகச் சில பொய்களைச் சொல்லி ஸர்வஜ்ஞனை உன்னையும் வஞ்சிக்கும்படியான கள்ளமனம் தவிர்ந்து உன்னைக் காணப்பெற்று க்ருதார்த்தனானேன். [வெள்ளத்தணைக்கிடந்தாய்] - என்பக்கலுண்டான வ்யாமோஹத்தாலே அவஸரப்ரதீக்ஷனாய்க்கொண்டு வந்து திருப்பாற்கடலிலே கண்வளர்ந்தருளினவனே !

மென்னுள்ளன" விபூதியும் என்னுள்ளே புகுந்தது என்றபடி. ஈழையுங்கூட்டி பாவம் - உபய *நாலாமர்த்தத்துக்கு- "அந்தாமத்தன்புசெய்து" என்கிறபடியே, அவற்றிலுண்டான ஸ்நேஹத்தை என்பக்கலிலே பண்ணினானென்றபடி. உபயவிபூத்யைஶ்வர்யமும் இவருடைய திருவுள்ளமேயாயிருக்கக்கூடுமோ? என்ன, விஷயப்ரவணன் இத்யாதி. "ஸாஸ்தமும் இவரிடத்திலேயாக அவன் நினைத்திருக்கும்" என்கைக்கு நியாமகமேது? என்ன - உன்னுகமுற்றும் இத்யாதி. அதாவது - கோவைவாயாளிற்படியே கூடுமென்றபடி. உன்னுகமுற்றுமகத்தடக்கி - உன் திருமேனிக்கு வேண்டும் சாந்து, பூமாலை, பரிவட்டம், ஆபரணாதிகளெல்லாம் என்னுள்ளேயாம்படி பண்ணி இத்யர்த்த꞉. ஆகம் - உடம்பு. "த்வயஸா வாயு மாமொகெஷாய ப்ராஷா ஹயா ஸம்த꞉ । யதேவஸீமவஷி யமெவொதெ தஸ்ய ஶெஷ꞉ ॥" இதி । ப்ரஶ்நோபநிஷத். மாமருதின்நடுவே-போனாய், என்பொல்லாமணியே தேனேதொடங்கி, சொல்ல-எம்பெருமான் அவன் தானேல் - என்னுகியொழிந்தான் இத்யாரப்ய அந்வய꞉* (௨)

ப.—அநந்தரம், ஸர்வஜ்ஞனான உன்னையும் வஞ்சிக்கும்நெஞ்சில் க்ருத்ரிமஸ்வபாவம் தீர்ந்து காணப்பெற்றேன்; இப்படி உபகாரகனான உன்னையொழிய அபாஶ்ரயமுண்டோ? என்கிறார்.

உள்ளன - அந்தர்க்கதங்கள், மற்று - உன்னையொழிந்த ப்ராக்ருத விஷயங்களாய், உளவா - நடக்க, புறமே - கண்டாதுபரியாம்படி புறம்பே, வள்ளல் - உதாரனானவனே! மணிவண்ணனே - விலக்ஷணவிக்ரஹயுக்தனே! என்றென்று - என்றுஎன்று பலகாலும், சில-சில, மாயம் - மித்யோக்திகளை, சொல்லி - பண்ணி, உன்னையும் - ஸர்வஜ்ஞனான உன்னையும், வஞ்சிக்கும் - விப்ரலம்பிக்கும்படி, கள்ளம் - க்ருத்ரிமஸ்வபாவமான, மனம் - நெஞ்சு, தவிர்ந்து - தவிர்ந்து, உன்னை - (ஆநுகூல்ய பாவனையே பற்றாசாக அங்கீகரிக்கும்) உன்னை, கண்டுகொண்டு - அபரோக்ஷித்து அநுபவிக்கப்பெற்று, உய்ந்தொழிந்தேன் - அஸத்கல்பனான நான் உஜ்ஜீவித்துவிட்டேன்; (இப்படி என்னைத்திருத்துகைக்காக), வெள்ளம் - க்ஷீரார்ணவத்திலே, அணைக் கிடந்தாய் - கண்வளர்ந்தருளினவனே! இனி - உன்க்ருஷி பலித்தபின்பு, உன்னை - (நித்யாவஸரப்ரதீக்ஷனாய் நிரதிஶயபோக்யனான) உன்னை, விட்டு - விட்டு, என் - நஶ்வரமாய் துராராதமான எத்தை, கொள்வன் - கைக்கொள்ளுவேன்?

இ.—மூன்றாம்பாட்டில், "பொய்யேகைம்மைசொல்லி" என்றும், "சிலகூத்துச்சொல்ல" என்றும் சொன்ன வார்த்தையை விவரியாநின்றுகொண்டு இப்படி வாங்மாத்ரத்தாலே உன்னைப்பெற்ற நான் உன்னையொழிய வேறொன்றை ஆசைப்படேனென்கிறார்.

[உள்ளன] - உள்ளுள்ளன. [மற்றுளவா] - வேறே சிலவுளவாக. அந்தஃகரணம் ப்ராக்ருதவிஷய ப்ரவணமாயிருக்கை. [புறமேசிலமாயஞ்சொல்லி] - புறப்பூச்சாகச் சிலவார்த்தைகளைச் சொல்லி, இத்தால் - "கூத்துச்சொல்ல" என்றத்தைச் சொல்லிற்று. கீழே, கூத்தென்கிறது - பிறருடைய வ்யாபாரத்தைத் தான் அநுகரிக்கும் அளவாயிற்று; இங்கு "ஜநஸ்ருஷ்ட அவஸ்ருஷ்ட" என்கிறபடியே க்ருத்ரிமத்தைச் சொன்னேனென்கிறார். சொல்லுகிறவைதான் எவை? என்னில், [வள்ளலித்யாதி] - பரமோதாரனே! பெருவிலையனான நீலரத்நம்போலே ஶ்லாக்யமான வடிவை எனக்கு உபகரித்தவனே! [என்றென்றே] - அவ்வார்த்தைய சொல்லாநிற்கச்செய்தே, "ஸஹ்ருதயமாகச் சொல்லுகிறார்" என்று தோற்றும்படியாகப் பலகாலும் சொல்லி. [உன்னையும் வஞ்சிக்கும் கள்ளமனம்] - ஸர்வஜ்ஞனான நீயும் "மெய்" என்று ப்ரமிக்கும்படி பகட்டும் க்ருத்ரிமயுக்தமான மநஸ்ஸை. [தவிர்ந்தே] - அஹ்ருதயமாக இழிந்தாரையும் மேல் விழும்படி கொண்டு முழுகும் விஷயமிறே. [உன்னை] - மித்ரபாவமடியா "நத்யஜேயம்" என்னும் உன்னை ப்ராப்தனாய் நிரதிஶய போக்யனான உன்னை. [கண்டுகொண்டு] நிதியெடுத்தாற்போலே லபித்து; [உய்ந்தொழிந்தேன்] - "ஸஸைவ" என்னும்படியிருக்கி நான் உஜ்ஜீவிக்கப்பெற்றேன் [வெள்ளத்தணைக் கிடந்தாய்] - பரமபதத்தைவிட்டு, க்ஷீராப்தியிலே என்னுடைய ரக்ஷணார்த்தமாக அவஸர ப்ரதீக்ஷனாய்க்கொண்டு கண்வளர்ந்தருளுகிறவனே [இனி] - ஸத்ருஶமான பரமபதத்தைவிட்டு, விஸத்ருஶமான ஸம்ஸாரத்திலே என்னுடைய ரக்ஷணத்திலே அவஸரப்ரதீக்ஷனானபின்பு. [உன்னைவிட்டு] - நான் விட்டவன்றும் என்னைவிட மாட்டாத உன்னையொழிய. [என்கொள்வனே] - பச்சைகொண்டு பலவேளையிலே நிஷ்ப்ரயோஜனமான விஷயங்களைப் பற்றவோ? ஆராதிக்குமிடத்தில் துராராதரைப் பற்றவோ?

ஈடு.—பொய்யேகைம்மைசொல்லி" என்றும், "சிலகூத்துச்சொல்ல" என்றும் சொன்னவார்த்தையை விவரியாநின்றுகொண்டு, இப்படி வாங்மாத்ரத்தாலே உன்னைப்பெற்ற நான் உன்னையொழிய வேறொன்றை ஆசைப்படேனென்கிறார்.

[உள்ளன] - ஹ்ருதயத்திலுள்ளன. [மற்றுளவா] - வேறேசிலஉளவாக. அந்தஃகரணம் ப்ராக்ருதவிஷய ப்ரவணமாயிருக்க. [புறமேசிலமாயம்சொல்லி] - புறப்பூச்சாகச் சில பொய்களைச் சொல்லி. இத்தாலே "கூத்துச்சொல்ல" என்றவிடத்தைச் சொல்லிற்று. [வள்ளல்மணிவண்ணனே] - பரமோதாரனே! பெருவிலையனான ரத்நம்போலே ஶ்லாக்யமான வடிவை எனக்கு உபகரித்தவனே! [என்றென்றே] - அபுத்த்யா சொல்லாநிற்கச்செய்தேயும் "ஸஹ்ருதயமாகச் சொல்லுகிறான்" என்று தோற்றும்படியாகப் பலகாலும் - சொல்லி. [உன்னையும் வஞ்சிக்கும் கள்ளமனம்] - உள்ளுவாருள்ளத்தெல்லாம் உடனிருந்து அறியும் ஸர்வஜ்ஞனாய் ஸர்வாந்தர்யாமியான நீயும் "மெய்" என்று கருதும்படி உன்னையும் பகட்டும் க்ருத்ரிமயுக்தமான மநஸ்ஸை. [தவிர்ந்தே]- அஹ்ருதயமாக இழிந்தாரையும், மேல்விழும்படி கொண்டு முழுகும் விஷயமிறே. [உன்னை] - * மித்ரபாவமேயடியாக "ந த்யஜேயம்" (ந த்யஜேயம்) என்னும் உன்னை. ப்ராப்தனுமாய் போக்யனுமான உன்னை. *[கண்டுகொண்டு] - "ஒருபடி காணவல்லோமே!" என்ற நான், நிதியெடுத்தாற்போலே லபித்து. [உய்ந்தொழிந்தேன்] - "அஸந்நேவ" (அஸந்நேவ) என்னும்படி இருக்கிற நான் உஜ்ஜீவிக்கப்பெற்றேன். உஜ்ஜீவநத்ருஷ்டியிறே. இனி, நீர்செய்யப்பார்த்

ப்ர:—(கண்டுகொண்டுய்ந்தொழிந்தேன்)—ஸாரஸங்க்ரஹ (௩-௧௦) வ்யாக்யாநம் "அப்ரதீஶ்ருதம் தஸ்யா உபஜீவந்தி ஹ்ருஷ்ணாஸ்மைவ நந்தநவேவவா அஸ்ருதிநவீ வஜ்ஞ்யதவாஶ்ருதம் உஜ்ஜீவநத்ருஷ்டி॥"

மூன்றாம்பாட்டு - உள்ளன இத்யாதி. வாங்மாத்ரத்தாலே யென்றது - "சிலமாயஞ்சொல்லி" என்றத்தைப்பற்ற. உன்னைப்பெற்றநான் என்றது - "உன்னைக் கண்டுகொண்டுய்ந்தொழிந்தேன்" என்றத்தைப்பற்ற. உன்னையொழிய வென்றது - "உன்னைவிட்டு" என்றத்தைப்பற்ற. வேறொன்றைஆசைப் படேனென்றது - "என்கொள்வன்" என்றத்தைப்பற்ற. பொய்யேகைம்மைசொல்லியென்றும் என்றது- "புறமேபுறமேயாடி" என்றத்தை விவக்ஷித்து. இத்தைவிவரிக்கிறது - "உள்ளனமற்றுளவா" என்று. ஆக, "புறமேபுறமேயாடி" என்றத்தை விவரிக்கிறது - "உள்ளனமற்றுளவா" என்றென்றபடி. "புறமேசில மாயஞ்சொல்லி" என்றது - "கூத்துச்சொல்ல" என்றத்தை விவரிக்கிறது.

உள்ளன - உள்ளேயிருக்கின்றனவென்று விவக்ஷித்து, ஹ்ருதயத்திலுள்ளன என்கிறார். தாத்பர்யம்- அந்தஃகரணம் இத்யாதி. புறப்பூச்சு - மேற்பூச்சு. கீழ்ச்சொன்னது எத்தை அநுவதிக்கிறதென்ன - இத்தாலே இத்யாதி. "வள்ளல்" என்றதுக்கு அர்த்தம் - பரமோதாரனே என்று. பதத்வயத்தையுங்கூட்டி பாவம் - பெருவிலையனான இத்யாதி. வீப்ஸைக்கு பாவம் - அபுத்த்யா இத்யாதி. "உன்னையும்" என்கிற அபிப்ராயத்துக்கு பாவம் - உள்ளுவார் இத்யாதி. அநுஸந்திப்பார் அநுஸந்திக்குமெல்லாவற்றையும் கூடவிருந்து, அறிதி - அறியாநிற்குமவனே இத்யர்த்தஃ. திருமாலை முப்பத்துநாலாம்பாட்டு, "உள்ளத்தேயுறையும்" இத்யாதி. பகட்டும்- வஞ்சிக்கும். அஹ்ருதயோக்திமாத்ரத்தாலே நெஞ்சில் க்ருத்ரிமத்தைத் தவிரக்கூடுமோவென்ன-அஹ்ருதயமாக இத்யாதி "வெள்ளத்தணைக்கிடந்தாய்-உன்னை" என்றுகூட்டி பாவம் - மித்ரபாவம் இத்யாதி. "உன்னை" என்றதுக்கு, "எம்பெருமான்" "மணிவண்ணன்" என்றத்தைக்கடாக்ஷித்து பாவார்த்தம் - ப்ராப்தனுமாய் இத்யாதி. "உள்ளனமற்றுளவா" என்று கீழேயிருக்க, ஒருபடிகாணவல்லோமே என்ற இது கூடும்படி யென்? என்ன;—"கள்ளமனந்தவிர்ந்தே" என்று - விஷயவைலக்ஷண்யம் ஈடுபடுத்தினபின்பு அப்படியிருக்கக் குறையில்லை யென்றபடி. ஒருபடியென்றது - சாடு. கண்டால் உஜ்ஜீவநமாய் இருக்குமோ? என்ன, உஜ்ஜீ

ததுஎது ? என்ன,—[வெள்ளத்தணைக்கிடந்தாய்] - பரமபதத்தைவிட்டு க்ஷீராப்தியிலே இவ்வேளையிலே, என்னுடைய ரக்ஷணார்த்தமாக அவஸரப்ரதீக்ஷனாய்க்கொண்டு கண்வளர்ந்தருளுகிறவனே [இனி]-உனக்கு ஸத்ருஶமான பரமபதத்தைவிட்டு, விஸத்ருஶமான ஸம்ஸாரத்திலே என்னுடைய ரக்ஷணார்த்தமாகக்கொண்டு கண்வளர்ந்தருளினபின்பு. [உன்னைவிட்டு] - நான்விட்ட அன்றும் என்னைவிடமாட்டாதே யிருக்கிற உன்னையொழிய. [என்கொள்வனே] - பச்சைகொண்டு, பல வேளையிலே நிஷ்பலங்களாயிருக்கும் விஷயங்களைப் பற்றவோ; ஆராதிக்குமிடத்தில் துராராதராய் வருந்தி ஆராதித்தாலும் கிடைப்பதொன் றில்லாதவர்களைப் பற்றவோ? (ங

நான்காம்பாட்டு.

என்கொள்வனுன்னைவிட்டென்னும் வாசகங்கள்சொல்லியும்
வன்கள்வனேன்மனத்தைவலித்துக் கண்ணநீர்கரந்து
நின்கண்நெருங்கவைத்தே எனதாவியைநீக்ககில்லேன்
என்கண்மலினமறுத்து என்னைக்கூவியருளாய்கண்ணனே !

ஆ.—(என்கொள்வன்.)- த்வத்ப்ராப்த்யபேக்ஷை யுண்டாயிருக்கச்செய்தேயும், த்வ… குணாநுஸந்தாநத்தாலே சிதிலமநஶ்சக்ஷுராதி ஸர்வகரணனாகையாலே, அவற்றை நிலைநிறுத்… த்வதேகப்ரவணமாக்கிவைக்க நான் க்ஷமனாகிறிலேன். ஆனபின்பு, நீயே உன்னுடைய நிரவதி க்ருபையாலே என்னை இப்போது த்வதிதர ஸகலவிஷயவிமுக ஸர்வகரணனாய் த்வதேகதாரனாய் த்வத்விஶ்லேஷாஸஹிஷ்ணுவாம்படி பண்ணி யருளினாய். இனி இந்த ப்ரதிபந்தகத்தையு… போக்கி உன் திருவடிகளிலே என்னை வாங்கியருளா யென்கிறார்.

ஒ.—நாலாம்பாட்டில், இதுக்கு முன்பெல்லாம் உன்பக்கல் இப்படி பொய்யனாயிற்ற… ப்ரக்ருதி ஸம்பந்தத்தாலே யானபின்பு, இந்த ப்ரக்ருதிஸம்பந்தத்தைப் போக்கியருளவேணு மென்கிறார்.

[என்கொள்வ னுன்னைவிட்டென்கிறபாட்டுக்கு] - பரமைகாந்திகளைப்போலே உ… னைத்தவிர மற்றொன்றாலும் கார்யமில்லையென்று சொல்லாநின்றுவைத்தும் பகவதீயமான ஆ… மாவை அபஹரித்தவன் கள்வனாகையாலே விஷயங்களினின்றும் மநஸ்ஸை நிவர்த்திப்பித்… அத்தைப் பெருமையாலே ப்ரவ்ருத்தமான கண்ணநீரையும் மாற்றி மநஸ்ஸை உன்பக்கலிலே செறியும்படி பண்ணி என்னுடைய ப்ராக்ருதிஸம்பந்தத்தை அறுக்கமாட்டுகிறிலேன் ஆனபின்

இத்யாதி. வேலை யென்றது - சாடு; அலையும், காலமும். "வெள்ளத்தணைக்கிடந்தாய்" என்றத்தைக்கூட்… பாவம் - உனக்கு இத்யாதி. "வெள்ளத்தணைக்கிடந்தாய் - உன்னைவிட்டு" என்றுகூட்டி பாவம் - நான்விட்… வன்றும் இத்யாதி. "மணிவண்ணனே" என்றதுக்கு ப்ரதிகோடித்வேந பாவம் - பச்சைகொண்டு இத்யா… பச்சை - காணிக்கை. விஷயங்கள் - ஸ்த்ரீவிஷயங்கள். "வெள்ளத்தணைக்கிடந்தாய்" என்றதுக்கு ப்ர… கோடித்வேந பாவாந்தரம் - ஆராதிக்கும் இத்யாதி. இந்த இரண்டாலும் பலித்தது - ப்ராப்யமும் ப்ராபகமு… நீயேயாயிருக்க ப்ராப்யாந்தரங்களையும் ப்ராபகாந்தரங்களையும் பற்றவோ? என்றபடி. துராராதர்-தேவதாந்தரங்க… "[illegible]" இதிச்சாந்தோக்… மதுவித்யாயாம். உள்ளன மற்றுளவாப் புறமே - வள்ளல்மணிவண்ணனே என்றென்றே - சிலமாயம் சொல்ல… உன்னையும் வஞ்சிக்கும் கள்ளமனந்தொடங்கி, க்ரமேண அந்வயঃ. (ச)

என்னுடைய ப்ரக்ருதி ஸம்பந்தத்தை நீயே போக்கி உன்திருவடிகளிலே என்னை அழைத்தருளாய் க்ருஷ்ணனே !

அதவா, கீழ்ப்பிறந்த ஸம்ஶ்லேஷம் ஜ்ஞாநாநுஸந்தாநமாத்ரமேயாய் பாஹ்யகரண யோக்யமன்றிக்கே ஒழிந்தவாறே, 'அதுக்கடி ப்ரக்ருதிஸம்பந்தம்' என்று அநுஸந்தித்து, உன்னோட்டை ஸம்ஶ்லேஷத்துக்கு விரோதியான ப்ரக்ருதி ஸம்பந்தத்தை அறுக்கைக்கீடான உபாயாநுஷ்டாநத்தைப் பண்ண, உன்பக்கலுண்டான ப்ரேமாதிஶயத்தாலே நான் க்ஷமனல்லேன்; நீயே இத்தை அறுத்துத் தந்தருளவேணு மென்கிறார்.

[என்கொள்வனென்று தொடங்கி]-இதரவிஷய ப்ராவண்யத்தைத் தவிர்ந்து உன்னைக் கண்டல்லது தரிக்கமாட்டாதபடி அபேக்ஷைவர்த்தியாநிற்கச்செய்தேயும், வன்கள்வனேன் - நினைத்தபடி கிடையாமையாலே மஹாபாபியேனென்கிறார். [மனத்தையென்று தொடங்கி] - உன் குணங்களை நினைக்கையாலே ஶிதிலமான கரணங்களை நிலைநிறுத்தி உன்னை ஆஶ்ரயித்து என் ஆத்மாவை ப்ரக்ருதியோடு பிரிக்கமாட்டுகிறிலேன்.

ப.—அநந்தரம், இந்த விப்ரலம்போக்த்யாதிமூலமான தோஷத்தைப்போக்கி அங்கீகரிக்கவேணு மென்கிறார்.

(அநந்யப்ரயோஜநர் சொல்லுமாபோலே), உன்னை-(பரமப்ரயோஜநபூதனான) உன்னை, விட்டு - விட்டு, என்-என்னப்ரயோஜநத்தை, கொள்வன் - கொள்வேன்? என்னும் - என்கிற, வாசகங்கள் - பாசுரங்களை, சொல்லியும் - பலபடியாகச் சொல்லுவதும்செய்து, வல் - அநாதிஸித்தமாக ஆத்மாவை அபஹரித்த, கள்வனேன் - க்ருத்ரிமனான நான், மனத்தை - (விஷயாந்தரங்களிலேபோன) நெஞ்சை, வலித்து - வரவலித்து, கண்ணநீர் - (அவற்றின் இழவால் பிறக்கும்) கண்ணநீரையும், கரந்து - (வாஸநாநிவ்ருத்தியாலே) மாற்றி, மனத்தை - அந்தநெஞ்சை, நின்கண்-(நிரதிஶயபோக்யனான) உன்னிடத்திலே, நெருங்கவைத்து - நெருங்கவைத்து, எனது ஆவியை - என் ஆத்மாவை, நீக்க கில்லேன் - ஸம்ஸாரத்தில்நின்றும் விடுவிக்க மாட்டுகிறிலேன்; (இதுக்கு ஹேதுவான), என்கண் - என்னுடைய, மலினம் - அவித்யாதி தோஷத்தை, அறுத்து - போக்கி, என்னை-அபக்தனான என்னை, கண்ணனே - போகித்தாரை "ஶாஸிதா" என்னும் க்ருஷ்ணனே! கூவியருளாய் - (உன்பக்கலிலே) அழைத்துக்கொண்டருளவேணும்.

(அன்றியே),வன்-அநாதிஸித்தமாக, கள்வனேன்-க்ருத்ரிமனான நான், உன்னை-உன்னை, விட்டு-ஒழிய, என்-வேறு என்னப்ரயோஜநம்? கொள்வன் - கொள்வேன், என்னும்-என்று, வாசகங்கள் சொல்லியும் - செல்லாமைதோன்றச் சொல்வதும்செய்து, மனத்தை - உன்னைப் பெறாமையாலே ஶிதிலமாகிற நெஞ்சை, வலித்து - யோகயோக்யமாம்படி சிக்கெனப்பண்ணி, கண்ணநீர் - அநுபவ அலாபத்தாலேவந்த கண்ணநீரையும், கரந்து-மாற்றி, (தாரணாதிமுகத்தாலே), நின்கண்-உன்பக்கலிலே, நெருங்க - ஸமாதிபர்யந்தமாம்படி சிக்கென, வைத்து - வைத்து, எனது ஆவியை - என் ஆத்மாவை, நீக்க - உபாஸநமுகத்தாலே முக்தமாம்படி பண்ணிக்கொள்ள, கில்லேன் - மாட்டுகிறிலேன்; என்கண் மலினமறுத்து என்னைக்கூவியருளாய் - நீயேபண்ணித்தந்தருளவேணு மென்றுமாம்.

இ.—நாலாம்பாட்டில், "பொய்யே கைம்மைசொல்லி," "சிலகூத்துச்சொல்ல," "புறமே சிலமாயஞ்சொல்லி" என்று இவ்விஷயத்திலே பொய்சொல்லிப் போருகைக்கு நிபந்தநம் ப்ரக்ருதிஸம்பந்தத்தாலே யானபின்பு, இத்தைப்போக்கி உன்திருவடிகளிலே அழைத்துக்கொண்டருளவேணு மென்கிறார்.

[என்கொள்வன் இத்யாதி]-பரமைகாந்திகளைப்போலே, "உன்னைவிட்டு என்ன ப்ரயோஜநத்தைக்கொள்வன்?" என்றுசொல்லாநின்றுவைத்து, [வன்கள்வனேன்] - களவாவது-பரத்ரவ்யாபஹாரம். வலிய களவாவது - "சௌரேணாத்மாபஹாரிணா" என்கிறபடியே, பகவச்சேஷமான ஆத்மவஸ்துவை அபஹரிக்கை. த்ரவ்யங்களில் தலையான வஸ்து ஆத்மவஸ்து, உடையவன் ஸர்வாதிகன். அகவாய் இப்படி யிருக்கையாலே, உக்திமாத்ரமான ஆநுகூல்யங்கொண்டு என் விரோதியைப் போக்க க்ஷமனல்லேனென்கிறார் மேல்; [மனத்தைவலித்து]-விஷயங்களினின்றும் மநஸ்ஸை நிவர்த்திப்பித்து. நான் இந்த்ரிய ஜயம்பண்ண நினைக்கையாவது-அவை என்னை மேலிடுகை. "இந்த்ரியாணி ப்ரமாதீநி ஹரந்தி ப்ரஸபம் மந:". [கண்ணநீர் கரந்து] - விஷயாநுபவத்தால் வந்த கண்ணநீரை மாற்றி. விஷயப்ராவண்யம் ஶாஸ்த்ரோபதேஶத்தால் போமோ? உன் போக்யதையைக் காட்டினாலன்றோ அந்தக்கண்ணநீர் மாறுவது. [நின்கண்நெருங்கவைத்தே] - மநஸ்ஸை உன்பக்கலிலே செறியும்படிபண்ணி, இதுவும் என்னாற் செய்யலாவதொன்றன்று, உன் வடிவைக்காட்டி மநஸ்ஸைச் சேர்த்துக்கொள்ளவேணும். பும்ஸாம் த்ருஷ்டிசித்தாபஹாரியான வடிவே வேண்டாவோ விஷயங்களில் துவக்கறுக்கைக்கும் உன் பக்கல் ப்ரவணமாக்குகைக்கும். [எனதாவியை நீக்ககில்லேன்] - என் ஶரீரத்தினின்றும் என் ஆத்மாவைப் பிரிக்கமாட்டுகிறிலேன். ஆனபின்பு, நீயே செய்தருளவேணும். [என்கண் மலினமறுத்து] - மலினம்-மாலிந்யம். அதாகிறது - ப்ரக்ருதிஸம்பந்தம். என்னுடைய ப்ரக்ருதிஸம்பந்தத்தை நீயே போக்கி. [என்னைக் கூவியருளாய்] - அக்ஷமனான என்னை அழைத்துக்கொண்டருளவேணும். [கண்ணனே] - தன்பக்கல் அஶக்தியை அநுஸந்தித்து ஶோகித்தவனை, "ஶோஶூச:" என்றிலையோ!

அதவா, "கண்டுகொண்டுய்ந்தொழிந்தேன்" என்றவிடம் - ஜ்ஞாநாநுஸந்தாந மாத்ரமாய், பாஹ்யஸம்ஶ்லேஷாபேக்ஷை பிறந்து அது கைவாராமையாலே "இதுக்கடி ப்ரக்ருதிஸம்பந்தம்" என்று பார்த்து, இந்த விரோதியைப் போக்குகைக்கு ஸாதநாநுஷ்டாநம்பண்ண உன் பக்கல் ப்ரேமாதிஶயத்தாலே மாட்டுகிறிலேன்; நீயே இத்தை அறுத்துத்தந்தருளவேணுமென்கிறார்.

[என்கொள்வன் இத்யாதி] - ஸ்வரூப ப்ராப்தனான உன்னையொழிய, அநர்த்தஹேதுவான விஷயங்களை விரும்புவேனோ என்று, ஸ்வரூபாநுரூபமான அபேக்ஷையைப்பண்ணி நிற்கச்செய்தேயும், [வன்கள்வனேன்] - அபேக்ஷித்தபோதே கிடையாமையாலே, மஹாபாபியேனென்கிறார். [மனத்தைஇத்யாதி] - குணாநுஸந்தாநத்தாலே ஶிதிலமான மநஸ்ஸைத் திண்ணிதாகப்பண்ணி, இழவால்வந்த கண்ணநீரையும் மாற்றி, இப்படி நீயென்றால் உடைகுலைப்படாதபடி உன்பக்கலிலே நெருங்கும்படி சேர்த்து, ப்ராணாயத்தஸ்த்திதியான என்னுடைய ஶரீரத்தினின்றும் என் ஆத்மாவைப் பிரிக்க க்ஷமனாகிறிலேன். ஹோம விரோதியான ப்ரக்ருதிஸம்பந்தத்தை யறுத்து, உன்திருவடிகளிலே அழைத்தருளவேணும். [கண்ணனே] - உன்னையொழியச் செல்லாதார்க்கு வந்து முகங்காட்டி அவர்கள் விரோதியைப் போக்குமவனல்லையோ? "பரித்ராணாய ஸாதூநாம்". அஜ்ஞரோடு பக்திபரவஶரோடு வாசியில்லையிறே உபாயாந்தராநுஷ்டாநத்துக்கு அக்ஷமராகைக்கும், ஈஶ்வரனே கடவனாகைக்கும்.

ஈடு.—நாலாம் பாட்டு. " 'பொய்யேகைம்மைசொல்லி' என்றும், 'சிலகூத்துச்சொல்ல' என்றும், 'உள்ளனமற்றுளவாப் புறமே சிலமாயஞ்சொல்லி' என்றும்-பகவத்விஷயத்திலேயும் பொய்

நாலாம்பாட்டு - என்கொள்வன் இத்யாதி. "பெற்றொழிந்தேன்" "கண்டுகொண்டொழிந்தேன்" என்று - கீழும்மேலும் ப்ரீதியாயிருக்க, இப்பாட்டிலும் மேலிற்பாட்டிலும் - து:கமாயிருக்கைக்கு அடியென்

சொல்லிப்போந்தேனென்றார்; 'இப்படி பொய்யனாகைக்கு நிபந்தனமேது' என்று பார்த்தார்; ப்ரக்ருதி ஸம்ஸர்க்கமாயிருந்தது; 'மெய்யேபெற்றொழிந்தேன்,' 'கண்டுகொண்டுய்ந்தொழிந்தேன்' என்றவற்றை மறந்தார்; இந்த ப்ரக்ருதிஸம்பந்தத்தாலே இதரவிஷயங்களிலே ப்ரவணமான மநஸ்ஸை அவற்றில் நின்றும் மீட்டு உன்பக்கலிலே ப்ரவணமாம்படி பண்ணி, தேஹத்திற்காட்டில் ஆத்மாவைப்பிரிய அநுஸந்திக்கைக்கு க்ஷமனாகிறிலேன், நீயே என்விரோதியைப்போக்கி உன் திருவடிகளிலே அழைத்துக்கொண்டருளவேணுமென்கிறார்'' என்று பட்டர் அருளிச்செய்யும்படி.

அன்றிக்கே, '' 'கண்டுகொண்டுய்ந்தொழிந்தேன்' என்றார்; அது - ஜ்ஞாநாநுஸந்தாநமான காட்சியாயிருந்தது; காட்சிக்கு அநந்தரம் பாஹ்ய ஸம்ஶ்லேஷாபேக்ஷைபிறந்து கையைநீட்டினார், கைக்குள் அகப்படக்கண்டிலர், அத்தாலேதளர்ந்து; இதுக்குஅடி - தேஹஸம்பந்தமாயிருந்தது, இத்தைக் கழித்துக்கொள்ளுகைக்கு ஈடாயிருப்பதொரு ஸாதநாநுஷ்டாநக்ஷமனாகிறிலேன் பக்தி பாரவஶ்யத்தாலே; ஆனபின்பு நீயே என்விரோதியைப்போக்கி உன்திருவடிகளிலே அழைத்துக் கொண்டருளவேணுமென்கிறார்'' என்று நிர்வஹிப்பாருமுண்டு. க்ரமத்திலேவரும் பக்தி தமக்கு உண்டாக நினைத்திராரிறே.

[என்கொள்வனுன்னை விட்டென்னும்]-பரமைகாந்திகளைப்போலே,உன்னையொழியநான் எத்தைக்கொள்வன்? என்று இங்ஙனே வாயாலே சொல்லாநிற்கச்செய்தேயும். [வன்கள்வனேன்] - களவாவது - பரத்ரவ்யாபஹாரம். வலியகளவாவது - ''சோரேணாத்மாபஹாரிணா'' (சோரேணாத்மாபஹாரிணா) என்கிறபடியே, பகவதீயமான ஆத்மவஸ்துவையன்றோ ''நான், என்னது'' என்றிருந்தது. விறகுகளவு கண்டாரளவல்லவிறே ரத்நாபஹாரம் பண்ணினாரளவிலே தோஷம். த்ரவ்யங்களை உபாதாநம் பண்ணுகிறவிடத்திலே ஆத்மவஸ்துவை ப்ரதாநமாகச் சொன்னார்களிறே. த்ரவ்யம் விலக்ஷணமாவது, உடையவன் ஸர்வேஶ்வரனாவது, இனிச் சொல்ல

ப்ர: (வன்கள்வனேன்)—உஜ்ஜீவநோந்முகஸ்ய ஸ்வாமிநோ ஶ்ருதாநுஷ்ட்ட ப்ரதிஷந்தாஜாத:, ''யோऽந்யதா ஸந்தமாத்மாநமந்யதா ப்ரதிபத்யதே। கிம் தேந ந க்ருதம் பாபம் சோரேணாத்மாபஹாரிணா॥ ''.

என்ன, த்வேதாபரிஹரித்தார்கள் ஆசார்யர்களென்கிறார் - பொய்யே இத்யாதி. ப்ராக்ருதி ஸம்ஸர்க்கமாயிருந்ததென்றது - ''மலினம்'' என்றத்தைப்பற்ற. எப்படியாகிலும் ''பல ஸித்தியுண்டாயிற்று'' என்றாரேயென்ன, மெய்யேபெற்றொழிந்தேன் இத்யாதி. மறந்தாரென்றது - அர்த்தஸித்தம். அவற்றில்நின்றும் மீட்டென்றது- ''வலித்து'' என்றத்தைப்பற்ற. ''நின்கண்நெருங்க'' இத்யாதியைப்பற்ற - உன்பக்கலிலே இத்யாதி. என் விரோதியைப் போக்கியென்றது - ''அறுத்து'' என்றத்தைப்பற்ற. ''கூவியருளாய்'' என்றத்தைப்பற்ற - உன்திருவடிகளிலே இத்யாதி. பட்டர் நிர்வாஹத்துக்கு - அஜ்ஞாநத்தாலே ப்ரபந்நரென்ற அர்த்தம் ஸூசிதம்.

பூர்வர்கள் நிர்வாஹத்துக்கு - பக்திபாரவஶ்யத்தாலே ப்ரபந்நரென்ற அர்த்தம் ஸூசிதம். அகப்படக் கண்டிலர் என்றது - ''வன்கள்வனேன்'' என்றத்தைப்பற்ற அர்த்தஸித்தம். தளர்ந்தென்றது - ''மனத்தை வலித்துக் கண்ணநீர்கரந்து'' என்கையாலே அர்த்தஸித்தம். ''எனதாவியைநீக்ககில்லேன்'' என்றத்தைப்பற்ற- ஸாதநாநுஷ்டாந இத்யாதி. பக்திபாரவஶ்யத்தாலே யென்றது - ''மனத்தைவலித்து'' என்கையாலே அர்த்தஸித்தம். தம்முடைய இந்த பக்தி, ஸாதநமாகாதோ, ''ஸாதநாநுஷ்டாந க்ஷமனாகிறிலேன்''என்பானேன்? என்ன, க்ரமத்திலே இத்யாதி. க்ரமத்திலேவரும் பக்தி - கர்மஜ்ஞாநங்களை யநுஷ்டித்து அந்த அடைவிலேவரும் பக்தி. இங்கே - ''ஹஸ்த்யாஶ்வ ஶஸ்த்ராஹாவ:'' இத்யாத்யநுஸந்தேயம்.

''வாசகங்கள்சொல்லியும்'' என்றதுக்கு அர்த்தம் - வாயாலே இத்யாதி. ஆத்மாபஹாரம் க்ரூரமோ? என்ன, விறகு இத்யாதி. அப்படி இவ்வாத்மவஸ்து ஶ்லாக்யமோ? என்ன - த்ரவ்யங்களை இத்யாதி. ப்ரதாநமாக என்றது - ''ஶுத்தாநேஸ்ய ஜகதோ நிமேஷவஶேஷணோऽஸ்ய। விஹிதக்ஷேத்ரஸ்தஸ்மிந் ஸுவர்ணவம்ஸமவாநுஹாரி:'' என்றத்தைப்பற்ற. சொன்னார்களிறே - பராசராதிகளென்றபடி. த்ரவ்ய

வேண்டாவிறே. [மனத்தைவலித்து]-இதரவிஷயங்களிலே ப்ரவணமான மநஸ்ஸை அவற்றினின் றும் மீட்டு. மனத்தை மீட்டேனென்னாதே, வலித்தேனென்கிறது - அவற்றிலே நெஞ்சுபட்ட உறுதியை நினைத்து. நான் இந்த்ரியஜயம்பண்ண நினைக்கையாவது - அவை என்னைமேலிடுகை. "இந்த்ரியாணி ப்ரமாதீநி ஹரந்தி ப்ரஸபம் மந:" (இந்த்ரியாணிப்ரமாதீநிஹரந்திப்ரஸபம்மந:).[கண்ணநீர்கரந்து] - அவற்றினுடைய அலாபத்தாலே பாய்கிற கண்ணநீரையும் மாற்றி. [நின்கண் நெருங்க வைத்தே] - அம்மநஸ்ஸை உன்பக்கலிலே கொண்டுபோந்து மூட்டி நிரந்தரமாக அநுஸந்தித்து. [எனதாவியைநீக்ககில்லேன்] - இத்தேஹத்திற்காட்டில் ஆத்மாவைப் பிரிய அநுஸந்திக்க க்ஷமனுகிறிலேன். [என்கண்மலினமறுத்து] - இதுக்கு அடி என்னிடத்திலுண்டான மாலிந்யமிறே. மலினம் - மாலிந்யம். அதாவது - ப்ரக்ருதி ஸம்பந்தம். மெய்யனாய்க் கெட்டேனென்கிறார். † (மெய்-ஶரீரம்) அத்தையறுத்து உன் திருவடிகளிலே என்னை அழைத்துக்கொண்டருளவேணும். [கண்ணனே] - ஶோகநிவர்த்தகனன்றோ நீ, எனக்குச் செய்தருளவேண்டுவது - அழகிய வடிவைக்காட்டி "மாஶுச:" என்னுமத்தனையன்றோ. அவ்வடிவைக்கண்டால் ‡ "மற்றொன்றினைக்காணா" என்னும்படியாயிறே யிருப்பது.

அதவா, [என்கோள்வன் இத்யாதி] - ஸ்வரூபாநுரூபமான பாசுரத்தை வாயாலே சொல்லிநிற்கச்செய்தேயும். [வன்கள்வனேன்] - உத்தேஶ்யவஸ்துவைக் கடுக லபிக்கப்பெறாத

ப்ர:—(மனத்தைவலித்து)—ஸ்ரீபகவத்கீதாஸு த்விதீயே, "விஷயா விநிவர்த்தந்தே நிராஹாரஸ்ய தேஹிந: । ரஸவர்ஜம் ரஸோऽப்யஸ்ய பரம் த்ருஷ்ட்வா நிவர்த்ததே ॥ ருக ॥ யததோ ஹ்யபி கௌந்தேய புருஷஸ்ய விபஶ்சித: । இந்த்ரியாணி ப்ரமாதீநி ஹரந்தி ப்ரஸபம் மந: ॥ சுo ॥ தாநி ஸர்வாணி ஸம்யம்ய யுக்த ஆஸீத மத்பர: । வஶே ஹி யஸ்யேந்த்ரியாணி தஸ்ய ப்ரஜ்ஞா ப்ரதிஷ்டிதா ॥ சுக ॥".

ஸ்வரூப வைலக்ஷண்யத்தாலும், உடையவன் வைலக்ஷண்யத்தாலும் தோஷாதிஶயமுண்டென்கிறார் - த்ரவ்யம் இத்யாதி. இவ்விடத்திலே - "த்ருணகாஷ்டாபஹரணே யோ தோஷ: பரிகீர்த்தித: । ஸுவர்ணாபஹாரே வி தாவாந் நவஸஹஸ்ரக: ॥ ஶ்வபாகத்ரவ்யஹரணே யோ தோஷ: பரிகீர்த்தித: ॥ ஶ்ரோத்ரியஸ்வாபஹாரே வி தாவாந் நவஸஹஸ்ரக: । ஶ்ரீமத்வஸ்வாமினோ நவ ஸ்ருஷ்டேர்வஸ்துந: பர: ॥ தஸ்மாத் தத்பஹரணே தோஷஸ்யாநேகாநவிஷ்யதே" இத்யாதி ப்ரமாணங்கள் கண்டுகொள்வது. யோऽந்யதா ஸந்தமாத்மாநமந்யதா ப்ரதிபத்யதே। கிம் தேந ந க்ருதம் பாபம் சோரேணாத்மாபஹாரிணா" இத்யுத்யோகபர்வணி ஏகசத்வாரிம்ஶே த்ருதராஷ்ட்ரம் ப்ரதி ஸநத்ஸுஜாத:. வலிக்கை - இழுக்கை. "வலித்து" என்கிற பதப்ரயோகத்துக்கு பாவம் - மனத்தை இத்யாதி. உறுதி - தார்ட்யம். இந்த்ரியஜயம் பண்ணுகை அரிதோ? என்ன - நான் இந்த்ரியஜயம் இத்யாதி. உக்தார்த்தே ப்ரமாணம் - இந்த்ரியாணி இத்யாதி. கீதாஸு த்விதீயே, "யததோ ஹ்யபி கௌந்தேய புருஷஸ்ய விபஶ்சித:" இதி பூர்வார்த்தம். "கரந்து" - மாற்றி. அதாவது - "அலாபத்தால்வந்த ஶோகம் த்யாஜ்யம்" என்று விட்டென்றபடி. சாடு - மெய்யனாய் இத்யாதி. மெய்யன் - ஸத்யவான், ஶரீரவானும், உன் திருவடிகளிலே இத்யாதிக்கு ப்ரதீகம் - "கூவியருளாய்" என்கிறது. "கண்ணனே" என்றதுக்கு அர்த்தத்வயம்; கண்ணனென்று - க்ருஷ்ணனாய், சோகநிவர்த்தகன் என்று - ப்ரதமார்த்தம். இரண்டாமர்த்தம் - எனக்குச் செய்தருள இத்யாதி. இப்போது, கண்ணனென்றது - கண்ணுக்கு விஷயமானவன் என்றபடி. வடிவைக் காட்டினால் போருமோ? என்ன - அவ்வடிவை இத்யாதி. மற்றொன்றினைக்காணாவே - எனக்கு நிரதிஶயபோக்யனானவனைக் கண்டகண்கள் வேறொரு பரவ்யூஹ விபவார்ச்சைகளைக் காணாவே இத்யர்த்த:.

ஸ்வரூபாநுரூபமான என்றது - "என்கொள்வனுன்னைவிட்டு" என்றத்தைப்பற்ற. வாயாலே சொல்லி நிற்க என்றது - "வாசகங்கள்சொல்லியும்" என்றத்தைப்பற்ற. பக்திபாரவஶ்யத்தாலே ஸாதநாநுஷ்

---

† குண்டலிதக்ரந்தம் க்வாசித்கம். ‡ அமலனாதிபிரான்-கக.

இன்னுப்பாலே 'மஹாபாபி' என்பாரைப்போலே சொல்லுகிறர். [மனத்தை வலித்து இத்யாதி]- பக்திபாரவஶ்யத்தாலே ஶிதிலமாகிற மநஸ்ஸைத் திண்ணிதாக்கி "தனகேழிலொண்கண்ணநீர் கொண்டாள்" என்கிற கண்ணநீரையும் மாற்றி. [நின்கண் நெருங்கவைத்தே] - *'காலாழும் நெஞ்சழியும்" என்கிறபடியே, உன்னைக்கிட்டினவாறே உடைகுலைப்படுகிற மநஸ்ஸைத் தரித்து நின்று உன்னை அநுஸந்திக்கும்படிபண்ணி, இஶ்ஶரீரத்தினின்றும் ஆத்மாவைப் பிரிய அநுஸந்திக்க க்ஷமனுகிறிலேன். "இவன், தான் தன் விரோதியைப்போக்கி க்ரமத்திலே வந்துகிட்டுகிறன்" என்று ஆறியிராதே, நினைத்தகாரியம் தலைக்கட்டவல்ல நீயே என் விரோதியைப்போக்கி என்னை யழைத்துக்கொண்டருளவேணும். [கண்ணனே]-"பக்தி உபாயமன்று" என்று ஶோகித்தவனுக்கு நல் விரகு சொல்லிக்கொடுத்தவனன்றே நீ. (ச)

ஐந்தாம் பாட்டு.

கண்ணபிரானை விண்ணோர்கருமாணிக்கத்தையமுதை
நண்ணியும்நண்ணகில்லேன் நடுவேயோருடம்பிலிட்டுத்
திண்ணமழுந்தக்கட்டிப் பலசெய்வினைவன்கயிற்றல்
புண்ணைமறையவரிந்து என்னைப்போரவைத்தாய்புறமே.

*ஆ.—(கண்ணபிரானை.) ஸ்ரீவைகுண்டநிலயனாய் * அயர்வறுமமரர்களதிபதியாயிருந்துவைத்து ஸர்வபோக்யனும்படிவந்து வஸுதேவக்ருஹே அவதீர்ணனான உன்னைக் கண்டு வைத்தும் உன் திருவடிகளை ப்ராபிக்கப்பெறுகிறிலேன். என்றுனென்னில்; நடுவேயோருடம்பிலிட்டுப் பலசெய்வினைவன்கயிற்றல் திண்ணமழுந்தக்கட்டிப் புண்ணைமறையவரிந்து என்னைப்போரவைத்தாய் புறமே, அதினுலே யென்கிறர்.*

ஒ.—அஞ்சாம்பாட்டில், மலினமாவது ப்ரக்ருதி ஸம்பந்தமென்னுமிடத்தை ஸ்பஷ்டமாக அருளிச்செய்கிறர்.

[கண்ணபிரானையென்று தொடங்கி] - அயர்வறு மமரர்களுக்கு போக்யனுயிருந்து வைத்து க்ருஷ்ணனாய் வந்து திருவவதாரம்பண்ணி எனக்கு போக்யனான உன்னைப் பெற்று வைத்தே பெறுதார் கணக்கானேன். [நடுவேயென்று தொடங்கி] - பெறுதொழிகிறது என்?

டாகயோக்யதை இல்லாமையைச்சொல்லுகிறவர், "வன்கள்வனேன்" என்பானென்? என்ன - உத்தேஶ்யவஸ்துவை இத்யாதி. இன்னுப்பு - வெறுப்பு. சொல்லுகிறர் - "வன்கள்வனேன்" என்று என்றபடி. பக்தி பாரவஶ்யத்தாலே யென்றது - அர்த்தஸித்தம். தனகேழில் இத்யாதி - தன்னுடைய ஒப்பில்லாத அழகிய கண்களிலே நீர் கொண்டாள் இத்யர்த்தஃ. காலாழும் இத்யாதி - கால் தடுமாருநின்றது, நெஞ்சு ஶிதிலமாகாநின்றது, கண்கள் சுழலாநின்றது இத்யர்த்தஃ. உடைகுலை - ஶைதில்யம். "எனதாவியை நீக்ககில்லேன்" என்றத்தைப்பற்ற - இஶ்ஶரீரத்தில் நின்றும் இத்யாதி. "கண்ணன்" என்றதுக்கு - நிர்வாஹகன் என்று அர்த்தம் அருளிச்செய்கிறர் - நினைத்தகாரியம் இத்யாதி. "கண்ணன்" என்று - க்ருஷ்ணனைச் சொல்லுகிறதாக்கி, தாத்பர்யாந்தரம் - பக்தி இத்யாதி. இந்த த்விதீயயோஜனையில், "கண்ணன்" என்று - நிர்வாஹகனென்னுதல், க்ருஷ்ணனென்னுதல் என்று அர்த்தத்வயம். உன்னைவிட்டு - என்கொள்வன் - என்னும் வாசகங்கள் இத்யாத்யந்வயஃ க்ரமேண. (ச)

---

* *பெரிய திருவந்தாதி-௩௪.*

என்னில், - திருவடிகளில் ஸம்பந்தத்தை உணர்ந்தார்க்கு ப்ராக்ருதியோடு இருக்கைக்கு ஹேது வின்றியே இருக்கச்செய்தே ஒரு ஹேயமான ஶரீரத்திலே என்னை ப்ரவேஶிப்பித்து அவித்யா கர்மாதிகளாலே த்ருடமாகக்கட்டி ஶரீரகததோஷம் தெரியாதபடியாகப்பண்ணி உன்னைக் காண வொண்ணாத நிலத்திலே என்னைப் போரவைத்தாய்.

ப.—அநந்தரம், கீழ் தோஷரூபமாகச்சொன்ன ப்ராக்ருத்யாதிகளிலே ஹேதுநீயன்றோவென்று, நிவர்த்யம் அவனுக்கு விதேயமானபடியை அருளிச்செய்கிறார்.

கண்ணன் - க்ருஷ்ணனாய் அவதரித்து, பிரானை - ("மாமேகம்ஶரணம்வ்ரஜ" என்று) உபாயோபதேஶத்தைப்பண்ணி உபகரித்து, (ஆஶ்ரயித்தவர்களை), விண்ணோர் - நித்யஸூரிகளுக்கு தர்ஶநீயமான, கருமாணிக்கத்தை-விலக்ஷணவிக்ரஹத்தை அநுபவிப்பித்து, அமுதை - நித்யபோக்யமான உன்னை, நண்ணியும்-நீ தந்த ஜ்ஞாநமுகத்தாலே கிட்டியிருக்கச்செய்தேயும், (போஜ்ஞாலாபத்தாலே), நண்ணகில்லேன் - கிட்டாதார்கணக்கானேன்; (அதுக்கடி), நடுவே - (நிர்வாணமயனான ஆத்மாவோடும் ஸ்வதஸ்ஸம்பந்தமற்று ஹேயப்ரத்யநீகனான உன்னோடும் துவக்கற்று, இருவரையும் அகற்றுகைக்கு) நடுவேபுகுந்தது, ஓர்-ஓர், உடம்பில் - உடம்பிலே, இட்டு-ஸம்ஸர்க்கிப்பித்து, பல-பலவகையாய், செய் - காயிகபர்யந்தமாக அநுஷ்டிதமான, வினை - கர்மங்களாகிற, வல் கயிற்றால் - ப்ரபல பாஶங்களாலே, திண்ணம் - த்ருடமாம்படி, அழுந்த - துர்விவேசமாக, கட்டி-கட்டி, புண்ணை-ஆந்தரதோஷத்தை, மறைய-காணவொண்ணாதபடி, வரிந்து-நிரந்தரமாகச் சூழ்ந்து, என்னை - (இக்கட்டு அவிழ்க்கைக்கு அஶக்தனாய் அப்ராப்தனான) என்னை, புறமே-உனக்குப்புறம்பான விஷயப்ரசுர ஸம்ஸாரத்திலே, போர-போர, வைத்தாய்-இட்டுவைத்தாய். நீ நினைத்தால் விடுவிக்கலாமென்று கருத்து.

இ.—அஞ்சாம்பாட்டில், கீழ் "மலினம்" என்றது - ப்ராக்ருதியை யென்று ஸ்பஷ்டமாக அருளிச்செய்து, அதிலேயிட்டு என்னை நோவுபட விட்டிருந்தா யென்கிறார்.

[விண்ணோர்கருமாணிக்கத்தை - கண்ணபிரானை-அமுதை]-நித்யஸூரிகளுக்குப் பரம போக்யமான உடம்பு படைத்தவனை, அவர்கள் நித்யாநுபவம் பண்ணாநிற்கச்செய்தே நித்யாபூர்வமான வடிவிறே. [கண்ணபிரானை] - அவ்வடிவை க்ருஷ்ணனாய்வந்து அவதரித்து எனக்கு உபகரித்தவனை. [அமுதை] - போன உயிரை மீட்கவற்றாய் நிரதிஶயபோக்யமான வடிவை என்னை அநுபவிப்பித்தான். [நண்ணியும் நண்ணகில்லேன்] - கிட்டியும் கிட்டாதார் கணக்கானேன். பேறாகச்சொல்லுகிறது - ஜ்ஞாநலாபத்தை; பெறாமையாகிறது - ஜ்ஞாநாநுகூலமான ப்ராப்தியில்லாமை. அதின்றிக்கேயொழிகிறது என்? என்னில்;—அசித்ஸம்ஸர்க்கத்தாலே ஸம்ஸாரத்திலே நீ வைக்கையாலே யென்கிறார்;—[நடுவேயோருடம்பிலிட்டு] - ஶரீரஸம்பந்தம் அநாதியாயிருக்க, "நடுவே" என்பானென்? என்னில்;—இவ்வாத்மாவுக்கு ஸ்வரூபாநுபந்தி யல்லாமையாலும், கர்மோபாதிகமாகையாலும், பகவத்ப்ரஸாதத்தாலே விடக்காண்கையாலும். முத்துக்கு மாலிந்யம் அநாதியாயிருக்க, ஒருநாளிலே கடைந்து தெளியச்காண்கையாலே "ஸ்வரூபாதிரேகி" என்று தோற்றுமாபோலே. பகவதர்ஹமான வஸ்துவுக்கு மாம்ஸாஸ்ருங்மயமான அசித்தோடு என்ன சேர்த்தியுண்டு. பெருமாளோடே அநுபவிக்கப்பாரித்த பிராட்டி முன்பே ராவணன் தோற்றினாற்போலே யிருக்கிறதாயிற்று இவர்க்கு ஶரீரஸம்பந்தம். ஸம்ஸர்க்கமொழிய, ஆஶ்ரயத்தோடு ஒரு ஸம்பந்தமில்லை யென்கை. [திண்ணமித்யாதி] - பலவாய்ச் செய்யப்பட்டு வலிதான பாபமாகிற பாஶத்தாலே த்ருடமாக நெருங்கக்கட்டி. [புண்ணை மறையவரிந்து] - ஶரீரகததோஷம் தெரியாதபடிபண்ணி. அகவாயைப் பார்த்தால் காக்கை நோக்கும்படியாயிருக்க, தோலின் கைப்பாணிப்புறத்தால் வந்தவழூழுட்சியைப் பார்த்து

ஸ்ப்ருஹை பண்ணும்படியிறே பண்ணிவைத்தது. [என்னை] - ஸ்வரக்ஷணத்தில் அப்ராப்தனாய் அஶக்தனாயிருக்கிற என்னை. [புறமே - போரவைத்தாய்] - அநுபவத்திலே பாரித்திருக்கிற பிராட்டியை அஶோகவனிகையிலே வைத்தாற்போலே, இவர்க்கு ஸம்ஸாரிகள் நடுவேயிருக்கிற இருப்பு. ஸ்வகர்மத்தால் வந்தத்தை அவன் குற்றமாக்குவானென் ? என்னில்;—ப்ரஜை தானே கிணற்றிலே விழுந்தாலும், "மாதா நோக்கிற்றிலள்" என்னுமத்தைக்கொண்டு "அவள் தள்ளினாள்" என்னக்கடவதிறே. ஸ்வரூப பாரதந்த்ர்யத்தாலே கர்மமும் அவனைக்குறித்து "பொறுத்தோம்" என்னக் கழிகிறதிறே.

ஈடு.—அஞ்சாம்பாட்டு. நீர் "மலினம்" என்கிறது எத்தையென்ன, இன்னதென்கிறார்.

விண்ணோர்கருமாணிக்கத்தை - கண்ணபிரானை - அமுதை. [விண்ணோர் கருமாணிக்கத்தை என்று தொடங்கி] - "**தத்விப்ராஸோவிபந்யவோஜாக்ருவாம்ஸஸ்ஸமிந்ததே**" (தத்விப்ராஸோவிபந்யவோஜாக்ருவாம்ஸஸ்ஸமிந்ததே) என்கிறபடியே, நித்யஸூரிகளுக்கு அநுபாவ்யமான வடிவழகை எனக்கு உபகரிக்கைக்காக க்ருஷ்ணனாய்வந்து அவதரித்தவனை. [அமுதை]-இப்படி அவதரித்துத் தன்னுடைய போக்யதையையாயிற்று இவரை அநுபவிப்பித்தது. [நண்ணியும் இத்யாதி] - பெற்றுவைத்தே பெறாதார்கணக்கானேன். இவர் நண்ணினாராகச் சொல்லுகிறது - பிறந்த ஜ்ஞானலாபத்தை ; நண்ணப்பெறாததாகச் சொல்லுகிறது—ஶரீரஸம்பந்தத்தோடேயிருக்கிற இருப்பை. [நடுவேயோருடம்பிலிட்டு] - ஆத்மாவுக்கு அசித்ஸம்ஸர்க்கம் அநாதியாயிருக்கச்செய்தேயும், நடுவேயோருடம்பு என்கிறார்-அது ஔபாதிகமாய்த் தோற்றுகையாலே. சலகில் கிடந்தமுத்துக்கும் பொன்னுக்கும் அழுக்கேறினநாள் அறிவாரில்லை, பின்பு கழியக்காண்கையாலே "இது வந்தேறி" என்று தோற்றுகின்றதிறே; அப்படியே பகவத்ஸமாஶ்ரயணத்தாலே கழியக்காண்கையாலே " இதுவந்தேறி " என்று தோற்றுமிறே. ராஜபுத்ரன் வழிபோகாநிற்கச்செய்தே வேடர்

ப்ர:—(விண்ணோர் கருமாணிக்கத்தை)—ஶ்ருதௌ, "தத்விஷ்ணோ: பரமம்பதம் ஸதா பஶ்யந்தி ஸூரய: । திவீவசக்ஷுராததம் । தத்விப்ராஸோவிபந்யவோஜாக்ருவாம்ஸஸ்ஸமிந்ததே । விஷ்ணோர்யத்பரமம்பதம் ॥ உ ॥"

அஞ்சாம்பாட்டு - கண்ணபிரானை இத்யாதி. இன்னது என்றது - " நடுவேயோருடம்பில் " இத்யாதியைப்பற்ற.

விண்ணோர் கருமாணிக்கத்தைக் கண்ணபிரானை யமுதை-என்று அந்வயித்தது-நித்யஸூரிகளுக்கு என்று தொடங்கி, அநுபவிப்பித்தது என்னுமளவும் அருளிச்செய்கிற அர்த்தம் சேருகைக்காக பாட்டுக்கெல்லாம் அந்வயம் அருளிச்செய்கைக்காக - விண்ணோர் கருமாணிக்கத்தையென்று தொடங்கி யென்றது. கண்ணபிரானை - அமுதாயிருக்கிற உன்னை நண்ணியும் நண்ணகில்லேன், நடுவேயோருடம்பிலிட்டு - பலசெய்வினை வன்கயிற்றால் - திண்ணமழுந்தக்கட்டி - புண்ணைமறையவரிந்து என்னை - புறமே - போரவைத்தாய் இத்யந்வய இதிஶேஷ:. விப்ராஸ:-மேதாவிந:, விபந்யவ:-ஸ்துதிஶீலா:, ஜாக்ருவாம்ஸ:-ஜாகரூகா:, ஸமிந்ததே-ப்ரகாஶந்தே; ஜ்வலந்தீத்யர்த்த: இதி யாது: அமுதையென்று - புந:ப்ரதீகக்ரஹணம்-" கண்ணபிரானை " என்றபதத்தோடே கூட்டி ஸ்வாரஸ்யம் அருளிச்செய்கைக்காக. பெறாதார்கணக்கானேன் - பெறாதாரைப் போலேயானேன். இப்படி சொல்வது எத்தைப்பற்றவென்ன - இவர் இத்யாதி. ஜ்ஞானலாபத்தை - மாநஸாநுபவத்தை. ஶரீரஸம்பந்தத்தோடே என்றது - "உடம்பிலிட்டு" என்றத்தைப்பற்ற. இருக்கிற இருப்பினுடைய போகுகையை - நண்ணப்பெறாததாகச் சொல்லுகிறதென்று தாத்பர்யம். உடம்பிலிட்டு - உடம்பிலே ஸம்ஸர்க்கிப்பித்து. அசித்ஸம்ஸர்க்கம் அநாதியாயிருக்க, "நடுவே" என்பானென் ? என்ன - ஆத்மாவுக்கு இத்யாதி. அநாதியான இத்தை, " ஔபாதிகம் " என்றறியலாம்படி எங்ஙனே ? என்ன - சலகில் இத்யாதி. சலது - முத்துச்சிப்பி. வந்தேறியாகில் ஸ்வாபாவிகமாகத் தோற்றும்படி எங்ஙனே ? என்ன - ராஜபுத்ரன்

கையிலே அகப்பட்டுத் தன்னை வேடனாக ப்ரதிபத்திபண்ணுமாபோலே இருப்பதோன்றிறே, சேதநன் தேஹத்திலே அஹம்புத்திபண்ணி "தேவோஹம்" (தேவோஹம்) என்றிருக்கும் இருப்பு. [திண்ணமழுந்தக்கட்டி] - அவித்யாதிகளாலே த்ருடமாக நெருங்கக்கட்டி. [பலசெய்வினை இத்யாதி] - தான் பலவாய்ச்செய்யப்பட்டிருந்துள்ள வினையாகிற வலிய பாசங்களாலே த்ருடமாம்படி ஸந்தித்து. [புண்ணைமறையவரிந்து] - தோலைமேவிக் கைப்பாணியிட்டு மெழுக்குவாசியிலே ப்ரமிக்கும்படி பண்ணின இத்தனையொழிய, அகவாய் புறவாயாயிற்றாகில் காக்கைநோக்கப் பணிபோருமத்தனையிறே. [என்னை] - ஸ்வரக்ஷணத்திலே அஸக்தனும் அப்ராப்தனுமாயிருக்கிற என்னை. [போரவைத்தாய்புறமே] - ஏகாந்தபோகத்துக்காகப் போந்த பிராட்டி அஶோகவநிகையிலே யிருந்தாற்போலே தோற்றுநின்றதாயிற்று, ஸ்வரூபஜ்ஞாநம் பிறந்தபின்பு தேஹத்திலேயிருக்கிற இருப்பு. [புறமே] - உன்குணங்கள் நடையாடாத ஸம்ஸாரத்திலே - வைத்தாய். போரவைத்தாய் என்று - அவன்செய்தானாகச் சொல்லுகிறாரிறே, தம்முடைய ஸ்வரூபத்தோபாதி "கர்மமும் அவனைக் குறித்துப் பரதந்த்ரம்" என்றிருக்கும் பரமவைதிகராகையாலே. (ரு)

ஆறும்பாட்டு.

புறமறக்கட்டிக்கொண்டு இருவல்வினையார்குமைக்கும்
முறைமுறையாக்கைபுகலொழியக் கண்டுகொண்டொழிந்தேன்
நிறமுடைநால்தடந்தோள் செய்யவாய்செய்யதாமரைக்கண்
அறமுயலாழியங்கைக் கருமேனியம்மான்தன்னையே.

ஆ.—(புறமற.) தம்முடைய இந்த தேஹஸம்பந்த ப்ரதிபந்தகம் போயிற்றதென்று தோற்றும்படி தமக்கு எம்பெருமான் தன்னையுள்ளபடியே காட்டியருள, அப்படியேகண்டு ப்ரீதராய் அந்தப்ரீத்யதிஶயத்தாலே தாம் கண்டபடியைப் பேசுகிறார்.

ஒ.—ஆறும்பாட்டில், இவர்க்கு ப்ரக்ருத்யநுஸந்தாநத்தாலே வந்த வ்யஸநம் விஸ்ம்ருதமாம்படி எம்பெருமான் திருவழகைக்காட்டக்கண்டு ப்ரீதராகிறார்.

[புறமறவென்று தொடங்கி] - ஸந்தமறுத்துவிட வொண்ணாதபடி ஸந்தித்து புண்ய பாபகர்மங்கள் நலிகைக்கிடாக பர்யாயேணவரும் ஶரீரப்ரவேஶத்தை "தவிர்ந்தது" என்று தோற்றும்படி. [அறமுயலாழி] - ஆஶ்ரிதபரித்ராணமாகிற பரம தர்மத்திலே முயலாநின்றுள்ள திருவாழி.

இத்யாதி. கீழ்ப்பதத்தையுங்கூட்டி ஸப்தார்த்தம் - தான்பலவாய் இத்யாதி. புண்ணை - மாம்ஸாஸ்ருக்பூய கனை. இஶ்ஶரீரம் புண்ணாயிருக்குமோ? என்ன - தோலைமேவி இத்யாதி. மேவி - போர்த்து. கைப்பாணி மணியாஶகம். மெழுக்குவாஶி - பூச்சுவாஶி. காக்கைநோக்க - காக்கைகுத்தாமல்பார்க்க. காக்கைநோக் வென்கிறவிடத்திலே - "யதி நாஸ்ய ஶரீரஸ்ய ... " என்றது அநுஸந்தேயம். பணிபோரும் - க்ருஷிபோரும். ஸர்வரும் இத் யுள்ளாக விரும்பாநிற்க, புறமேயென்பானென்? என்ன - ஏகாந்தபோக இத்யாதி. ஸ்வரூபஜ்ஞாநமென்றது "நண்ணியும்" என்றத்தைப்பற்ற. தேஹத்திலேயிருக்கிற இருப்பு என்றது - "உடம்பிலிட்டு" என்றத்தை பற்ற. ஸப்தார்த்தம் - உன்குணங்கள் இத்யாதி. ஸ்வகர்மாநுகுணமாக வந்தத்தை அவன் செய்தானாக சொல்லுவானென்? என்ன - போரவைத்தாய் இத்யாதி. (ரு)

ப.—அநந்தரம், இத்தோஷத்தோடே யிருக்கச்செய்தே அது நெஞ்சிற்படாதபடி அவன் ப்ரகாஶிப்பித்த விலக்ஷணவிக்ரஹத்தை அநுபவிக்கப்பெற்றேனென்கிறார்.

புறம் - புறம்புஒருதலை, அற-தெரியாதபடி, கட்டிக்கொண்டு - ஸம்நித்துக்கொண்டு, இரு - (புண்யபாபரூபமான) இருவகையையுடைய, வல்-ப்ரபலமான, வினையார் - கர்மத்தினுர், குமைக்கும் - பீடிக்கைக்கு ஸ்த்தலமாய், முறைமுறை - தேவாதிக்ரமவிஶிஷ்டமான, ஆக்கை - ஶரீரத்திலே, புகல் - பஹுப்ரகாரமான ப்ரவேஶத்தை, ஒழிய-தவிரும்படியாக, நிறம்-தர்ஶநீயமான வேஷத்தை, உடை-உடைத்தாய், நால்-நாலுவகையாய், தடம் - சுற்றுடைத்தான, தோள்-தோள்களையும், செய்ய-சிவந்த, வாய்-திருப்பவளத்தையும், செய்ய-சிவந்த, தாமரை-தாமரைபோன்ற, கண்-கண்களையும், அறம்-ரக்ஷணதர்மத்தில், முயல் - உத்யுக்தமான, ஆழி-திருவாழியை யுடைத்தாகையாலே, அம்-பேரழகுடைய, கை-திருக்கையையுமுடைத்தாய், கரு-ஶ்யாமளமான, மேனி-வடிவையுடைய, அம்மான்தன்னை - ஶேஷியானவனை, கண்டுகொண்டொழிந்தேன்-என் இழவெல்லாம் தீரும்படி அபரோக்ஷித்து அநுபவித்துவிட்டேன். ஆந்தரமான விக்ரஹாநுபவப்ரீதி "இனி ஶரீரஸம்பந்தம் நமக்கில்லை" என்கிற ப்ரதிபத்தியைப் பிறப்பித்ததென்று கருத்து.

ஈ.—ஆறும்பாட்டில், இவர்க்கு ப்ரக்ருத்யநுஸந்தாநத்தால் வந்த வ்யஸநம் விஸ்ம்ருதமாம்படி அவன் வடிவழகைக்காட்டக் கண்டு ப்ரீதராகிறார்.

[புறமறக்கட்டிக்கொண்டு]-புச்சம் உள்ளே யகப்படும்படி பந்தித்துக்கொண்டு, சிலரால் தலைகண்டவிழ்க்க வொண்ணுதிருக்கை. "ஐஶாயாஷூஶரத்யயா" என்று-கர்மாநுகுணமாக ஸர்வஶக்தி பிணைத்த பிணையைச் சிலரால் அவிழ்க்கவொண்ணுமோ? [இரு வல் வினையார்] - பெரிதாய் வலிதான கர்மங்கள். வினையாரென்கிறது - அவற்றுலே நெருக்குண்கிறபடியைக் கண்டு சொல்லுகிறதாதல், அவைதான் பலவகையாகையாலே பஹுவசநமாதல். [குமைக்கும் முறைமுறையாக்கை புகலொழிய] - திறந்துகிடந்த வாசல்கள்தோறும் நுழையும் க்ஷுத்ர பதார்த்தம்போலே, தேவாதி ஶரீரங்கள்தோறும் புக்கு அஹம்புத்திபண்ணி நோவுபடுகிறதிறே ஜ்ஞாநாநந்தலக்ஷணமான வஸ்து. புண்யம் தேவஶரீரத்திலே புகவிட்டு நலியும், பாபம் திர்யக்ஸ்த்தாவரங்களிலே புகவிடும்; புண்யபாபங்களிரண்டும் மநுஷ்யஶரீரத்திலே புகவிடும்; இப்படி அடைவடைவே அஸ்த்திரமான ஶரீரத்திலே அஹம்புத்திபண்ணி நோவுபடுகிறதுதவிர. "தவிர்ந்தது" என்று தோற்றும்படி. [கண்டுகொண்டொழிந்தேன்]-உத்தேஶ்யனுனஉன்னைக் கண்டுஅநுபவிக்கப்பெற்றேன். ஶரீரப்ரவேஶம் தவிர்ந்தேன். அவனுடம்பைக் கண்டவாறே தம்முடம்பை மறக்கும்படியிறே அவ்வடிவில் வைலக்ஷண்ய மிருப்பது. [நிறமுடையித்யாதி] - வைத்தகண்வாங்கவொண்ணுதபடி அழகிய நிறத்தையுடைத்தாய், * ஸர்வபூஷணபூஷார்ஹங்களாய், கல்பகதருபணைத்தாற்போலே நாலாய், "ஶாகாஸஹஸ்ரஶோபிதம்" என்று ஸகல லோகாபாஶ்ரயமான தோள். [செய்யவாய்] - "ஸவிலாஸஸ்மிதாதாரம் பிப்ராணம் முகபங்கஜம்" என்று - முகமாகிறது முறுவலெடுத்துவைக்கக் கொள்கலமாயிற்று. [செய்யவாய்]-தோளை அணைகொண்டார்க்கு "ஸ்மயமாந இவேக்ஷதே" என்னும் வாய். [செய்யதாமரைக்கண்] - "ராமஃ கமலபத்ராக்ஷஃ" என்கிறபடியே இதுக்கடியான ப்ராப்தியெல்லாந் தோற்றும்படி விஶேஷகடாக்ஷம் பண்ணும் கண். [அறமுயலாழியங்கை] - "ரக்ஷணஸ்ய ச ஸ்திதஃ"என்கிறபடியே ரக்ஷகனுன ஈஶ்வரனிலுங்காட்டில் ஆஶ்ரிதரக்ஷண தர்மத்திலே உத்யுக்தமான திருவாழியைக் கையிலே யுடையவன். [கருமேனி]- அத்திருவாழிக்குப் பரபாகமாய் ஶ்ரமஹரமான திருமேனியை யுடையவன். [அம்மான்தன்னையே] - அவை யடங்க

"என்னது" என்னலாம்படியான ப்ராப்தி இருக்கிறபடி. ஆக்கைபுகலொழிய - கருமேனியம்மான் தன்னை - கண்டுகொண்டொழிந்தேன். "நீலதோயதமத்யஸ்தா" என்னும்படியிறே ஹ்ருதயத்திலே யிருக்கிறபடி. முன்பு இவ்வுடம்பு அவனுடம்பை மறப்பித்தாற்போலே, இப்போது அவனுடம்பு இவ்வுடம்பை மறப்பித்தது.

ஈடு.—ஆரும்பாட்டு. "போரவைத்தாய்புறமே" என்று - இவர் நோந்தவாறே, "இவருடைய இழவை மறப்பித்து உளராக்கி நடத்தவேணும்" என்றுபார்த்துத் தன்வடிவழகைக்காட்ட, அவ்வடிவழகைக் கண்டவாறே தம் உடம்பை மறந்து ப்ரீதராய், கண்டுகொண்டே னென்கிறார். இவரை மெய்ம்மறக்கப் பண்ணிற்று அவன்வடிவு.

[புறமறக்கட்டிக்கொண்டு] - பிணைத்தவிடமறிந்து இவனால் அவிழ்த்துக்கொள்ளவொண்ணாதபடியாக, புச்சந்தோற்றாதபடி உள்முடியாக முடிந்து. "மமமாயாதுரத்யயா" (மமமாயாதுரத்யயா) - ஸர்வஶக்தியான நான் பிணைத்தபிணை ஒருவரால் அவிழ்க்க ஒண்ணாது என்றானிறே. [இருவல்வினையார் இத்யாதி] - இருவகைப்பட்ட மஹாபாபம் தகர்க்கும். *(வினையார் என்கிறது- அவற்றால் நெருக்குண்கிறபடியைக்கண்டு சொல்லிற்றாதல்; அவைதாம் பலவகையாகையாலே - பஹுவசநமாதல்.) [குமைக்கும் முறைமுறையாக்கை] - புண்யத்துக்கென்று தேவஶரீரத்தை ப்ரவேஶியா, பாபத்துக்கென்று திர்யகாதிஶரீரத்தை ப்ரவேஶியா, உபயத்தாலுமென்று மநுஷ்ய ஶரீரத்தை ப்ரவேஶியாப் படும்பாட்டுக்கு ஒரு முடிவில்லையிறே. திறந்துகிடந்த வாசல்தோறும் நுழைந்து திரியும் பதார்த்தம்போலே, கர்மாநுகுணமாக தேவாதி ஶரீரங்கள்தோறும் ப்ரவேஶித்துத் திரியும். [புகலொழிய] - புகுகைதவிர. ஜ்ஞாநாநந்த லக்ஷணமான வஸ்துவிறே உபசயாத்மகமாய்† அஸ்த்திரமான ஶரீரத்திலே அகப்பட்டு நோவுபடுகிறது, அதுதவிர. [கண்டுகொண்டொழிந்தேன்] - உத்தேஶ்யவஸ்துவைக் கண்டு அநுபவிக்கப்பெற்றேன். ஶரீரப்ரவேஶம் தவிர்ந்தேன். [நிறமுடை இத்யாதி]-"ஸர்வபூஷணபூஷார்ஹா:" (ஸர்வபூஷணபூஷார்ஹா:) என்கிறபடியே ஆபரணத்துக்கு ஆபரணமாய், நாலாய், சுற்றுடைத்தான திருத்தோள்களை யுடையனாய்;

ப்ர:—(புறமறக்கட்டிக்கொண்டு)—பகவத்கீதாஸு ஸப்தமே, "தைவீஹ்யேஷா" இத்யாதி॥௧௪॥

ஆறும்பாட்டு - புறமற இத்யாதி. "நிறமுடைநால்தடந்தோள்" இத்யாதியாலே - வடிவழகைக் காட்டுகையாலே, இவருடைய இழவை மறப்பித்து இத்யாதி அர்த்தஸித்தம். வடிவழகை யென்றது - "நிறமுடை" இத்யாதியைப்பற்ற காட்டவென்றது - "கண்டுகொண்டு" என்கையாலே அர்த்தஸித்தம். உடம்பை மறந்து என்றது - தம்முடைய ப்ரக்ருதிஸம்பந்தத்தை அநுஸந்தித்தபடியாக வந்த து:க்கத்தை மறந்தென்றபடி. ஈடுபாடு - இவரை இத்யாதி. மெய்யென்றது - சாடு; ஶரீரமும், ஸத்யமும். மெய்ம்மறக்கப்பண்ணிற்று - ஶரீரமடியாகவந்த து:கத்தை மறக்கப்பண்ணிற்று.

ஶப்தார்த்தம் - புச்சம்தோற்றாதபடி இத்யாதி. புறம் - புச்சம். அப்படி அவிழ்த்துக்கொள்ளவொண்ணாதோ? என்ன - மமமாயா இத்யாதி. உக்தப்ரமாணத்துக்கு அர்த்தம் - ஸர்வஶக்தியான இத்யாதி. "வினையார்" என்ற பஹுவசநம் - நிந்தாயாம். "குமைக்கும்" என்றது - ஆக்கைக்கு விஶேஷணமாகையாலே, பாதிக்கைக்கு விஷயமான வென்றபடி. தகர்க்கும் - பாதிக்கும். இருவல்வினையும் தகர்க்கிறதோ? என்ன - புண்யத்துக்கென்று இத்யாதி. "முறைமுறை" என்றதுக்கு பாவம் - திறந்து இத்யாதி. பதார்த்தம் - ஶ்வா. ஆக்கை - ஶரீரம். புகலொழிய - புகுகைதவிர. தேவாதி ஶரீரபரிக்ரஹம் ஸ்வரூபமன்றோ, தவிருகிறதென்? என்ன-ஜ்ஞாநாநந்த இத்யாதி. உபசயம்-வ்ருத்தி. இது-ஷட்பாவ விகாரங்களுக்கும் உபலக்ஷணம். "கண்டுகொண்டொழிந்தேன்" என்றது-முழுச்சொல்லாய், கண்டேனென்றபடி. இவ்விடத்திலே, நிறமென்று-அழகு. ஸர்வபூஷணபூஷார்ஹா: ஸர்வபூஷணாநி பூஷயிதும் க்ஷமா: என்றபடி.

---

† குண்டலிதம் க்வாசித்கம்.

"ஸவிலாஸஸ்மிதாதாரம் பிப்ராணம் முகபங்கஜம்" (ஸவிலாஸஸ்மிதாதாரம் பிப்ராணம் முகபங்கஜம்) என்கிறபடியே - "முறுவலேடுத்தகலம்" என்னும்படி திருமுகத்தைச் சேவ்வி பெறுத்தாநின்றுள்ள ஸ்மிதத்தையும், இழவுமறக்கும்படி குளிரக்கடாக்ஷிக்கிற திருக்கண்களையு முடையனாய்; தன்னிலும் ஆஶ்ரிதரக்ஷணமாகிற பரமதர்மத்திலே முயலாநின்றுள்ள திருவாழியை யுடைய அழகியதிருக்கையையும், அதுக்குத்தப்பிலும் தப்பவொண்ணாத குளிர்ந்தவடிவழகையும், "இதெல்லாம்எனக்கு" என்று அநுபவிக்கும்படியான ப்ராப்தியையுமுடையவனை - காணப்பெற்றேன். "நீலதோயதமத்யஸ்தா" (நீலதோயதமத்யஸ்த்தா) என்கிறபடியே ஹ்ருதயத்திலே யிருக்கிறபடி. முன்பு இவ்வுடம்பு அவ்வுடம்பை மறப்பித்தாற்போலே, இப்போது அவ்வுடம்பு இவ்வுடம்பை மறப்பித்தது. (௬)

ஏழாம் பாட்டு.

அம்மானாழிப்பிரான் அவனெவ்விடத்தான்யானார்
எம்மாபாவியர்க்கும் விதிவாய்க்கின்றுவாய்க்குங்கண்டீர்
கைம்மாதுன்பொழித்தாயென்று கைதலைபூசலிட்டே
மெய்ம்மாலாயொழிந்தேன் எம்பிரானுமென்மேலானே.

ஆ.—(அம்மான்.) ஸர்வப்ரகாரத்தாலும் அத்யந்தநிஹீநனாய், கைம்மாதுன்பொழித்தாயென்று பொய்யே தொழுது அலற்றுகையாகிற ப்ராதிகூல்யயுக்தனுமா யிருக்க என்னை, ஸர்வப்ரகாரேணாபி நிரஸ்தஸமாப்யதிகனாயிருந்த தான் தன்னுடைய நிரவதிககாருண்யத்தாலே ஸ்வவிஷய நிரதிஶய அக்ருத்ரிம பக்தியுக்தனாக்கித் தானும் நிரதிஶய அபிநிவேஶயுக்தனாய்க் கொண்டு என்னுள்ளே வந்து புகுந்தருளினானென்கிறார்.

ஒ—ஏழாம்பாட்டில், தாம்பெற்ற பேற்றாலே விஸ்மிதரான ஆழ்வார், எத்தனையேனும் பாபிகளுக்கும் எம்பெருமான் க்ருபையுண்டாகக் கிடையாததில்லை யென்கிறார்.

[அம்மானென்று தொடங்கி] - திருவாழியைத் திருக்கையிலேயுடையனான ஸர்வேஶ்வரன் எத்தனையேனுமளவுடையார்க்கும் சென்று கிட்டவொண்ணாத விலக்ஷணன்; நான் அதி

ப்ர:—[illegible] ॥ ௭௧ ॥ [illegible] "[illegible] । ஸவிலாஸஸ்மிதாதாரம் பிப்ராணம் முகபங்கஜம் ॥ ௨௧ ॥"

"தடம்"-சூழ்ந்துடைமை; அதாவது- வர்த்துலதை. "ஸ்மிதாதாரம்" என்றதுக்கு அர்த்தம்-முறுவலேடுத்தகலம் என்று. "[illegible] । ஸவிலாஸஸ்மிதாதாரம் பிப்ராணம் முகபங்கஜம்" இதி பஞ்சமேம்ஶே ஸப்ததஶே. "செய்யவாய்" என்கையாலே-முறுவலை லக்ஷிக்கிறது. "ஸ்மிதாதாரம்" என்கையாலே - போக்யதையில் வந்தால் ஸ்மிதமே போக்யமாய், அதுக்கு ஆதாரமாயிருக்கிறது முகமென்றபடி. இழவு - கீழிற்பாட்டைக் கடாக்ஷித்து. அறவென்று - மிகுதிக்கும், தர்மத்துக்கும் வாசகமாகையாலே, உபயத்தையும் தந்த்ரேண அருளிச்செய்கிறார் - தன்னிலும் இத்யாதி. ஆனால் இவர் கண்டாரோ? என்ன - நீலதோயத இத்யாதி. "ஆக்கைபுகவொழிய" என்றது - ஶரீரநிவ்ருத்தியைப்பற்றவோ? என்ன - முன்பு இத்யாதி. இருவல்வினையார் - புறமறக் கட்டிக் கொண்டு - குமைக்கும் - ஆக்கையிலே - முறைமுறை - புகவொழிய - நிறமுடை என்று தொடங்கி, கண்டுகொண்டொழிந்தேன் இத்யந்வய:. (௬)

க்ஷுத்ரன். [கைம்மாவென்று தொடங்கி] - ஸ்ரீகஜேந்த்ராழ்வானுடைய ஆர்த்தியை நீக்கினாற் போலே என்துக்கத்தைப் போக்கவேணுமென்று தலையிலே கையைவைத்து அஹ்ருதயமாகக் கூப்பிட்டே அக்ருத்ரிம பக்தியுக்தனுனேன்; என்னை இப்படியாக்கின அவன்தானும் என்னையல்லது அறியானுனான். ஆனபின்பு எத்தனையேனும் பாபிகள்மேலும் எம்பெருமானுடைய க்ருபை பெருக்குப்புக்கால் தடையின்றிக்கே பெருகுங்கிடிகோள்.

ப.—அநந்தரம், தன்க்ருபாதிஶயத்தாலே, எத்தனையேனும் நிக்ருஷ்டர்க்கும் ஸ்வவிஷயத்தில் ஆசையைப்பிறப்பித்துத் தானும் விரும்புமென்று, ஸ்வலாபமுகத்தாலே அருளிச்செய்கிறார்.

ஆழி-கையுந்திருவாழியுமாய், பிரான்-ஆஶ்ரிதரை அநுபவிப்பிக்கும் மஹோபகாரகனை, அம்மான் - நிருபாதிக ஸ்வாமியான, அவன் - அவன், எவ்விடத்தான் - (அபரிச்சின்னஜ்ஞானரான ஸூரிகளும் அளவிட்டு அநுபவிக்கவொண்ணாதபடி) எந்நிலத்திலே நிற்கிறான்? யான் - (இவ்விஷயத்திலே க்ருத்ரிமோக்த்யாதிகளைப்பண்ணும் நிக்ருஷ்டனான) நான், ஆர் - எவ்வளவாயிருப்பானொருவன்? (இப்படியிருக்க), கைம்மா - (உன்திருவடிகளிலே ஆராதநத்திலே உத்யுக்தமான) ஆனையினுடைய ஜந்மாத்யபகர்ஷப்பாராதே, துன்பு-க்லேஶத்தை, ஒழித்தாய் - போக்கினவனே! என்று-என்று, கை-கை, தலை-தலையிலேயாம்படி, பூசலிட்டே-ப்ரஸித்தமாகக் கூப்பிட்டே, மெய்ம்மால் - பாரமார்த்திக ப்ரேமத்தையுடையேன், ஆயொழிந்தேன் - ஆய்விட்டேன்; எப்-என்தண்மைபாராதே இப்படி திருத்தின, பிரான் - உபகாரகனானவனும், என்மேலான் - என்பக்கலிலே அபிநிவிஷ்டனானான்; (ஆதலால்), எ-எத்தனையேனும், மா பாவியர்க்கும் - மஹா பாபிகளாயிருப்பார்க்கும், விதி - தப்பவொண்ணாத பகவத்க்ருபாரூபவிதியானது, வாய்க்கின்று - பலோந்முகமாமளவில், வாய்க்குங்கண்டீர் - பலித்தேவிடுங்கிடிகோள்.

இ.—ஏழாம்பாட்டில், அவன் க்ருபையாலே தாம்பெற்ற பேற்றைக்கண்டு விஸ்மிதரானவர், எத்தனையேனும் அயோக்யர்க்கும் க்ருபையுண்டாக இழக்கவேண்டாகிடீரென்கிறார்.

[அம்மானாழிப்பிரான்]-கையுந்திருவாழியுமான சேர்த்தியை நித்யஸூரிகளை யநுபவிப்பித்துக் கொண்டிருக்கிற ஸர்வேஶ்வரன். [அவனெவ்விடத்தான்]-அவனெவ்வளவிலுள்ளான்; நித்யாநுபவம்பண்ணுகிற நித்யஸூரிகளுக்கும் பரிச்சேதிக்க வொண்ணாதபடி அவ்வருகானவன். [யானார்] - நித்யஸம்ஸாரிகளுக்கும் இவ்வருகானவன். உபயவிபூதியும் இருவர்க்கும் நடுவே. நீர் கண்டபடி என்? என்னில்,—[எம்மா இத்யாதி]-எல்லாவகையாலும் மஹாபாபத்தைப் பண்ணினவர்கள் பக்கலிலும் பகவத்க்ருபை பெருகப்புக்கால் தகையின்றியிலே பெருகுங்கிடிகோள். பகவத்க்ருபை ஏறிப் பாயப்புக்கால் "கரையிலே நின்றோம்" என்னத் தப்பவிரகில்லை. [கைம்மா இத்யாதி] - "ஜந்மமும் வ்ருத்தமும் ஜ்ஞாநமுமின்றிக்கே பூர்வஜந்மவாஸனையேயான ஆனையினுடைய துக்கத்தைப்போக்குகைக்கு அரைகுலையத்தலைகுலைய மடுவின்கரையிலே வந்து தோன்றினாற்போலே, என் துக்கத்தைப் போக்கவேணும்" என்று கையைத் தலையிலேவைத்து அஹ்ருதயமாகக் கூப்பிட்டே அக்ருத்ரிம பக்தியுக்தனுனேன். கைதலைபூசல் - தலையிலே வைத்தகை மாறாதென்றுமாம். ஆனைக்கு உதவினதும் தங்களுக்கு உதவிற்றாக உபகார ஸ்ம்ருதியாலே அஞ்ஜலி பண்ணிச் சொல்லுமத்தை அஹ்ருதயமாகச் சொல்லியே, அந்தப்பொய்ம்மால் போய் மெய்ம்மாலாய் நின்றேன். அவன் செய்ததென்? என்னில், -[எம்பிரானுமென்மேலானே]-நான் மெய்சொன்ன அன்றோடு பொய்சொன்ன அன்றோடு வாசியற எனக்கு உபகாரகனாய்ப் போந்தவன், என்னை இப்படியாக்கின தானும் தன் பேறாக மேல்விழுந்தான். க்ருஷியும் தன்னதேயாய்விட்டது. மெய்ம்மாலாயொழிந்தேன் - எம்மாபாவியர்க்கும் விதிவாய்க்கின்று வாய்க்குங்கண்டீர்.

ஈடு.—ஏழாம்பாட்டு. அவன் க்ருபையாலே தாம் பெற்றபேற்றைக்கண்டு விஸ்மிதராய் பகவத்க்ருபை நடையாடாநிற்க, சிலர்க்கு "நான் அயோக்யன்" என்று இழக்க வேண்டாகிடிகோளென்கிறார்.

[அம்மான்] - ஸர்வேஶ்வரன். [ஆழிப்பிரான்] - கையும் திருவாழியுமான அழகை நித்யஸூரிகளுக்குக் காட்சி கொடுத்துக்கொண்டிருக்கும் அவன். [அவனெவ்விடத்தான்] - அவனெவ்வளவிலுள்ளார் பரிமாறுமவன். [யானார்] - நித்யஸம்ஸாரிகளுக்கும் இவ்வருகாயிருந்தேன் நான். பிள்ளையமுதனார், "அம்மானாழிப்பிரான்" என்றுமேலேகாட்டி, "யானார்" என்று குறையச்சொல்லிக் காட்டுவர். [எம்மாபாவியர்க்கும் இத்யாதி] - எல்லாவழியாலும் மஹாபாபத்தைப்பண்ணினவர்கள் பக்கலிலும் பகவத்க்ருபை பெருகப்புக்கால் தடையில்லைகிடிகோள். பகவத்க்ருபை பெருகப்புக்கால் "கரையிலேநின்றோம்" என்றுத் தப்பவிரகில்லை. நீர் கிட்டினபடியேன்? என்னில், - [கைம்மா இத்யாதி] - ஜந்மவ்ருத்தஜ்ஞாநங்களொன்று மின்றிக்கே யிருக்கிற ஆனையானது பூர்வஜந்மவாஸநையாலே, முட்டாய்ந்தவாறே "அம்மே" என்பாரைப்போலே, நோவுபட்டவாறே திருவடிகளை ஸ்மரிக்க, ஸர்வாதிகனான தன்மேன்மைபாராதே மடுவின்கரையிலே அரைகுலையத் தலைகுலைய வந்து ரக்ஷித்த நீர்மையை அநுஸந்தித்து, "இதொரு உபகாரமிருக்கும்படியே!" என்று அந்த உபகாரஸ்ம்ருதியாலே ஸ்நேஹிகள் சொல்லும் பாசுரத்தை பாவபந்தமில்லாத நான் சொன்னேன். [கைதலைபூசலிட்டே] - தலையிலே கையைவைத்து, வாயாலேகூப்பிட்டென்னுதல்; மாறாதே அஞ்சலிபண்ணி என்னுதல். தலையிலேவைத்த கை மாறாதே யென்றுமாம். ஆனைக்கு உதவினது தங்களுக்கு உதவிற்றென்றிருக்கும் பரஸம்ருத்த்யேகப்ரயோஜநர், அந்த

*ஏழாம்பாட்டு. **அம்மான் இத்யாதி.** க்ருபையாலே யென்றது - "விதிவாய்க்கின்று" என்றத்தைப் பற்ற. **தாம்**பெற்றபேற்றை யென்றது - "என்மேலானே" என்றத்தைப்பற்ற. கண்டு விஸ்மிதராய் என்றது - அர்த்தஸித்தம். "எம்மாபாவியர்க்கும்" இத்யாதியைப்பற்ற - **பகவத்க்ருபை** இத்யாதி.*

*கையுந்திருவாழியுமான **அழகென்றது** - "ஆழி" என்றதுக்கு லக்ஷ்யார்த்தம். "ஆழிப்பிரான்" என்றவிடத்தில், **ஸூரிஸேவ்யத்வம்** சொன்ன இது - "அவன் எவ்விடத்தான்" என்றத்தைப்பற்ற. ஸூரிவாசக ஶப்தம் இங்கில்லையேயாகிலும், "எவ்விடத்தான்" என்று - பரமபதஞ் சொல்லுகையாலே, ஸூரிகளுக்குக் காட்சி கொடுத்து என்னக் குறையில்லை. "பிரான்" என்றத்தால் சொல்லுகிற உபகாரம்— **காட்சி** இத்யாதி. "எவ்விடத்தான்" என்றதுக்கு - லக்ஷணயா, **ஸூரிகளுக்காராத்யனென்று** அர்த்தமென்று திருவுள்ளம்பற்றி அருளிச் செய்கிறார் - **எவ்வளவில்** இத்யாதி. உக்தார்த்தத்துக்கு ஸம்வாதம்-**பிள்ளையமுதனார்** இத்யாதி. **வாய்க்கின்று**- வாய்க்கப்புக்கால். பகவத்க்ருபை பள்ளமடையான அபாபிகளிடத்திலேயன்றோ ப்ரவஹிக்கிறது, மேட்டுமடையான ஸதோஷராயிருக்கிற நம்மளவும் வருமோ? என்ன— **பகவத்க்ருபை** இத்யாதி. கர்மமாகிற கரையிலே நின்றால் தப்பவிரகில்லை யென்றபடி. நீர்கிட்டினபடியென் என்றது - பகவத்க்ருபை எங்கும் பெருகுகிற படியை யறிந்தபடியென்? என்னி லென்றபடி. திர்யக்கானவன் திருவடிகளை ஸ்மரிக்கக்கூடுமோ? வென்ன **பூர்வஜந்ம** இத்யாதி. "அவனெவ்விடத்தான்" என்றத்தைப்பற்ற-**ஸர்வாதிகனான** இத்யாதி. "சுதன்றி த"† இத்யாதியைப்பற்ற—**அரைகுலைய** இத்யாதி. **ஸ்நேஹிகள்** - அநுஸந்தித்து - சொல்லும் என்று அந்வயம். "துன்பொழித்தாய்" இத்யாதியைப்பற்ற—**இதொரு உபகாரம்** இத்யாதி. "கைதலைபூசலிட்டே" என்றதுக்கு மூன்றர்த்தம். முந்தின அர்த்தத்துக்கு, **பூசலிடுகையாவது** - கூப்பிடுகை; த்விதீயார்த்தத்துக்கு-**பூசலிடுகை**-கூட்டுகையாய், தலையிலே கையுங்கையுங்கூட்டி அஞ்சலிபண்ணி யென்றபடி; த்ருதீயார்த்தத்துக்கு—"இட்டே" என்கிற அவதாரணத்துக்கு-மாறாதே யென்று அர்த்தமாய், **பூசலிடுகையாவது**-கூட்டுகையாய், நீநைதோன்றக் கையைத் தலையிலே கூட்டிவைத்தென்றபடி. இப்படி த்ரிவிதமாக அருளிச்செய்தது - முதல்கூப்பீடாய், பின்பு அதுவும் மாட்டாதே அஞ்சலியாய், அதுவும் மாட்டாதே தலையிலே கையைவைக்கையாகிற அர்த்தக்ரமத்தைப்பற்ற. இரண்டாமர்த்தத்துக்கும், மாறாதேயென்றது - ஏவகாரார்த்தம். "கைம்மா துன்பொழித்தாய்" இத்யாதியைக் கடாக்ஷித்து, "மெய்ம்மால்" என்றதுக்கு பாவம் - **ஆனைக்கு** இத்யாதி. **பரஸம்ருத்த்யேக ப்ரயோஜநர்** - நித்ய*

† குண்டலிதம்.

உபகாரத்துக்குத்தோற்று உபகாரஸ்ம்ருதியாலே அஞ்சலிபண்ணிச் சொல்லும்பாசுரத்தை, அஹ்ருதய மாகச் சொல்லி அது நெஞ்சிலே ஊற்றிருந்து பொய்ம்மால்போய் மெய்ம்மாலாய்விழுந்தது: அவள் உம்மளவில் செய்ததேன் ? என்ன,—[எம்பிரானுமென்மேலானே] - (நான் மெய்சொன்னவன்றே பொய்சொன்னவன்றேடு வாசியற) என்றுமொக்க மெய்ம்மாலாய்ப் போருகிறவன் விடுமோ. எனக்கு உபகாரகனுனவனும், கலியர் சோறுகண்டாற்போலே என்பக்கலிலேவந்து மேல்விழுந்தான். இது இருந்தபடியால் - [எம்மாபாவியர்க்கும் விதிவாய்க்கின்று வாய்க்குங்கண்டீர்] - எவ்வளவு மஹா பாபத்தைப்பண்ணினுர்க்கும், பகவத்க்ருபை பெருகாநின்றுள்ள விடத்தில் தப்பவிரகில்லைகிடீர் பூசலிடுகை - ப்ரஸித்தமாகக் கூப்பிடுகைக்கும், ஒன்றேடொன்று ஸம்பந்திக்கிறதுக்கும் பேர். (எ)

எட்டாம் பாட்டு.

மேலாத்தேவர்களும் நிலத்தேவரும் மேவித்தொழும்
மாலார்வந்தினநாள் அடியேன்மனத்தேமன்னினுர்
சேலேய்கண்ணியரும் பெருஞ்செல்வமும்நன்மக்களும்
மேலாத்தாய்தந்தையும் அவரேயினியாவாரே.

ஆ.—(மேலாத்தேவர்களும்) நித்ய ஸித்த புருஷர்களாலும், கர்மபூமியிலே வர்த்த மாநராய் ப்ரக்ருதிஸம்ஸ்ருஷ்டராயிருந்துவைத்து ஸ்வாநுபவைகபோகரான திவ்யபுருஷர்களாலும் அபிவந்த்யமாநனுன எம்பெருமான் இனநாள் அடியேன்மனத்தே மன்னினுன். இனி ஸர்வகாலமும் எனக்கு, சேலேய்கண்ணியரும் பெரும் செல்வமும் நன்மக்களும் மேலாத்தாய் தந்தையும் மற்றுமெல்லாம் ஆவான் அவன் என்கிறுர்.

ஓ.—எட்டாம்பாட்டில், தனக்கு விலக்ஷணபோக்தாக்க ளுண்டாயிருக்கச் செய்தே என்னுள்ளே இப்போது புகுந்தான், எனக்கினி ஸர்வவிதபோகமும் எம்பெருமானே யென்கிறுர்

[மேலாத்தேவரென்று தொடங்கி] அயர்வறும் அமரர்களும் பூமியிலே வைஷ்ணவர்களும் அநந்ய ப்ரயோஜநராய்த் தொழும்படியான பெருமையுடையவர் இப்போது என்னையல்லதறியாதே, என்மநஸ்ஸிலேவந்து செறிந்தார். [சேலேயென்று தொடங்கி] இனி ஹாஸ்யைகளான ஸ்திரீகளும் அதுக்குறப்பான அபரிமிதஸம்பத்தும் குணவான்களான புத்ராதிகளும் பரிவுடைய தாயும் தந்தையும் மற்றுமெல்லாமாவார் அவரே.

ப.—அநந்தரம், உபயவிபூதிநாதனுன மேன்மையையுடையவன் என்நெஞ்சில் வந்து புகுந்து தன் ஸர்வவிதபந்துத்வத்தையும் அநுபவிப்பியாநின்றுன் என்கிறுர்.

மேலாம் - ஸர்வப்ரகாரோத்க்ருஷ்டரான, தேவர்களும் - ஸூரிகளும், நிலம் - இவ் விபூதியில், தேவரும் - பகவத்ஜ்ஞாநப்ரேமாதிகளாலே உஜ்ஜ்வலஸ்வபாவரான பாகவதரும், மேவி - அநந்யப்ரயோஜநத்வாதிகளாலே ஒருநீராகப் பொருந்தி, தொழும் - அநுபவிக்கும்படி

---

*ஸூரிகள். **அஹ்ருதயமாக** என்றது - முதற்பாட்டைக் கடாக்ஷித்து. **மால்** - ஸ்நேஹம். மேலுக்கு அவதாரிகை - **அவள்** இத்யாதி. "எம்பிரானுமென்மேலானே" என்றதுக்கு பாவம் - **என்றுமொக்க** இத்யாதி. ஸப்தார்த்தம் - **எனக்கு** இத்யாதி. "என்மேலான்" என்றத்தை - ஹேதுவாகக்கொண்டு, "எம்மாபாவியர்க்கும்" இத்யாதியை உபஸம்ஹரிக்கிறுர்-**இதுஇருந்தபடியால்** இத்யாதி. இது என்பக்கல் ப்ராவண்யம். அம்மான் இத்யாரப்ய, யானுர், கைம்மாதுன்பொழித்தாய் இத்யாரப்ய, என்மேலானே, ஆகையாலே - எம்மாபாவியர்க்கும் இத்யாரப்ய அந்வயம்.* (எ)

யான; மாலார் - ஸர்வாதிகாரனவர், (தம்முடைய மேன்மை நிற்கச்செய்தே), இனநாள் - இப்போது, வந்து - என்பக்கலிலே அபிமுகராய்வந்து, அடியேன் - ஸர்வகாலமும் தமக்கு ஶேஷபூதனான என்னுடைய ஸம்பந்தமே பற்றாசாக, மனத்தே - நெஞ்சுக்குள்ளே, மன்னினார் - ப்ரதிஷ்டிதரானார்; இனி-இனிமேற்பட்டு, (ஔபாதிகபந்துக்கள்போலன்றியே), சேலேய்கண்ணியரும் - விலக்ஷணத்ருஷ்டிகளான ஸ்த்ரீகளும், பெரும் - அதிஶயிதமான, செல்வமும் - ஐஶ்வர்யமும், நல் - குணாதிகரான, மக்களும்-புத்ரர்களும், மேலாப்-ப்ரியஹிதங்களால் மேற்பட்ட, தாய்தந்தையும்-மாதாபிதாக்களும், அவரே - அவரே, ஆவார் - ஆகிநிற்பர். இவ்வோவிஷயஸித்திகளாற்பிறக்கும் ப்ரீதி, தம்மை அநுபவித்துப் பிறக்கும்படி யாகாநின்றாரென்று கருத்து.

இ.—எட்டாம்பாட்டில், உபயவிபூதி யுக்தனானவன் விபூதியைவிட்டு என்னுள்ளே ஸ்தாவரப்ரதிஷ்டையாய் நின்றான். நானும் என் விபூதியெல்லாம் அவனேயாகப் பற்றினேனென்

[மேலாம்இத்யாதி]-நித்யஸூரிகளும் பூமியிலுண்டான ஸ்ரீவைஷ்ணவர்களும் ஒரு நீராகச்சேர்ந்துஅடிமைசெய்யும் ஸர்வாதிகனானவன் வந்து. காட்டில் திர்யக்குக்களோடு இளையபெருமாளோடு வாசியற அடிமைகொண்டாற்போலே, விலக்கடியுண்டான ஸம்ஸாரத்திலிருக்கிறவர்களோடு நிலவரான நித்யஸூரிகளோடு வாசியற அடிமைகொள்ளும் ஏற்றத்தை யுடையவனென்கை. [இனநாள்] - இப்போது. பூர்வக்ஷணத்தில் அறியாதேயிருக்க, இங்ஙனே பலித்துக்கொடு நிற்கக்கண்டேன். [அடியேன்மனத்தே மன்னினார்] - ஸம்பந்தமடியாக மநஸ்ஸிலே செறிந்தார். இனி நீர் செய்யப்பார்த்த தென்? என்ன,-[சேலேய் கண்ணியரும்] - போக்யைகளான ஸ்த்ரீகளும் அதுக்குறுப்பான நிரவதிகஸம்பத்தும், குணவான்களான, புத்ரர்களும், பரிவுடையதாயும் தந்தையும் ஆவாரவரே. க்லேஶகரமான அவ்வோபந்துக்களாலே க்லேஶப்படவேண்டா. "மாதாபிதா ப்ராதா", "ஸுஹ்ருத்தாவஸ".

ஈடு.—எட்டாம்பாட்டு. உபயவிபூதிநாதனானவன் என்பக்கலிலே மேல்விழுந்து என்னை விடாதே ஹ்ருதயத்திலே புகுந்திருந்தான்; நானும் இனி நித்யஸூரிகளைப்போலே நித்யஸம்ஸாரத்தை விட்டு, அவனையே எல்லாவுறவுமுறையுமாகப் பற்றப் பார்த்தேனென்கிறார்.

[மேலாத்தேவர்களும்] - நித்யஸூரிகளும். [நிலத்தேவரும்] - பூஸுரரான ஸ்ரீவைஷ்ணவர்களும். [மேவித்தொழும்மாலார்] - இளையபெருமாளும், இடக்கைவலக்கையறியாத குரங்குகளும் ஒக்க அடிமைசெய்தாற்போலே. இரண்டுவிபூதியிலுள்ளாரும் ஒரு மிடறாகச் சேர்ந்து அடிமை செய்யும் ஸர்வாதிகனானவன். [வந்து] - தானிருந்தவிடத்தே நான் செல்ல ப்ராப்தமாயிருக்க, நானிருந்தவிடத்திலே தானேவந்து. [இனநாள்] - இப்போது. பூர்வக்ஷணத்தில் அறியாதிருக்க, இங்ஙனே விடிந்துகொண்டு நிற்கக் கண்டேன். இப்படி வருகைக்குஅடியேன்? என்னில், - [அடி

எட்டாம்பாட்டு - மேலாத்தேவர்களும் இத்யாதி. உபயவிபூதிநாதன் என்றது - "
கள்" இத்யாதியைப்பற்ற. என்பக்கலிலே புகுந்திருந்தான் என்றது - "அடியேன் மனத்தே மன்னினார்" என்றத்தைப்பற்ற. நானும்இனி நித்யஸூரிகளைப்போலே நித்யஸம்ஸாரத்தை விட்டென்றது - அர்த்தஸித்தம். "சேலேய்கண்ணியரும்" இத்யாதியைப்பற்ற - அவனையேஎல்லாவுறவு இத்யாதி. உறவுமுறை - ப்ராப்தஸம்பந்தம்.

மேலாத்தேவர்களும் - மேலானதேவர்களும். மேவி - அந்யோந்யம் ஸஹ்ருதயராய். மால் - பெருமை. நித்யஸூரிகளோடொக்க ஸம்ஸாரிகளும் தொழுதமைக்கு த்ருஷ்டாந்தம் - இளையபெருமாளும் இத்யாதி கீழ் இரண்டுபதத்தையுங்கூட்டி ஶப்தார்த்தம் - இரண்டுவிபூதி இத்யாதி. "இனநாள்" என்றத்தை - க்ஷணபரமாக்கி, இப்போது என்கிறார். இதுக்குபாவம்-பூர்வக்ஷணத்தில்இத்யாதி(மனத்துள்ளான்)இத்யாதிக்கு

யேன்] - விடவொண்ணுத ப்ராப்தியை யிட்டு வந்தான். வந்துசெய்ததேன்? என்னில்,—[மனத்தே மன்னிஞர்] - "மனத்துள்ளான் மாகடல்நீருள்ளான் மலராள் தனத்துள்ளான்" என்கிறபடியே - பரமயோகிகள் நெஞ்சிலும் திருப்பாற்கடலிலும் பெரியபிராட்டியார் திருமுலைத்தடத்திலுமிருக்கக் கடவ அவன், நித்யஸம்ஸாரியாய்ப்போந்த என்நெஞ்சிலே ஸ்த்தாவரப்ரதிஷ்ட்டையாயிருந்தான். இனி நீர்செய்யப்பார்த்த தேன்? என்ன,— இனி எனக்குஒரு செயலுண்டோ? இவனை யொழிய வேன்கிருர், [சேலேய் இத்யாதி]- தங்கள் நோக்காலே துவக்கவல்ல ஸ்த்ரீகளும், நிரவதிக ஸம்பத்தும், குணுதிகரான புத்ரர்களும், தந்தாமையழிய மாறியாகிலும் ப்ரஜையை நோக்கும் மாதாபிதாக்களுமெல்லாம் இனி அவரே எனக்காகப் பற்றப்பார்த்தே னென்கிருர். [அவரேயினியாவரே] - க்லேஶகரமான அவ்வோ ஸம்பந்தங்களாலே க்லேஶப்படவேண்டா. "மாதாபிதா" (மாதா பிதா) "அஹம்தாவத்" (அஹம்தாவத்). (அ)

ஒன்பதாம் பாட்டு.

ஆவாரார் துணையென்று அலைநீர்க்கடலுளழுந்தும்
நாவாய்போல் பிறவிக்கடலுள் நின்றுநான்துளங்கத்
தேவார்கோலத்தோடும் திருச்சக்கரம்சங்கினோடும்
ஆவாவென்றருள்செய்து அடியேனொடுமானனே.

ஆ.—(ஆவாரார்) - ஆவாரார்துணையென்று அலைநீர்க்கடலுளழுந்தும் நாவாய்போல் பிறவிக்கடலுள்ளே அதிநயநீயனுப்படி நின்று நான்நடுங்க, எம்பெருமான் தன்னுடைய நிரவதிக காருண்யத்தாலே யாவா னென்றுஅருள்செய்து, தன்னுடைய ஸர்வலோகேஶ்வரத்வ ஸூசகமான நிரவதிக ஸௌந்தர்யத்தோடும் திருவாழி திருச்சங்கு தொடக்கமாகவுள்ள திவ்யாயுதங்களோடுங் கூடவந்து, அவர்களோடு கலந்தருளுமாபோலே அடியேனோடும் கலந்தருளினு னென்கிருர்.

ஒ.—ஒன்பதாம்பாட்டில், ஸம்ஸாரத்தில் நான் பட்டக்லேசமெல்லாம் நீங்கும்படி தன்னுடைய நிர்வதிக க்ருபையாலே அப்ராக்ருதமான வடிவோடேவந்து என்னோடே ஸம்ஶ்லேஷித்தா னென்கிருர்.

ப்ர:—(சேலேய்கண்ணியரும் இத்யாதி)— ஸுபாலோபநிஷதி ॥ சு ॥ "மாதா பிதா ப்ராதா" இத்யாதி. சுயோஸ்யாகாஶே ॥ரு அ॥ ராமேநாஸ்ய ஸுநாமதேந ஸுமேஶ உஶாயம் வ்யாஸேந மக்ஷணவந்ந "அஹமத்தாவந்ஹாராஜே" இத்யாதி ॥௩க॥

அர்த்தம் - பரமயோகிகள் இத்யாதி. "மனத்தேமன்னினூர்" என்றதுக்கு பதார்த்தம் நித்யஸம்ஸாரி இத்யாதி "மனத்துள்ளான்" இத்யாதி பாசுரம், மூன்றுந்திருவந்தாதி மூன்றும்பாட்டு. "சேலேய்கண்ணியரும்" இத்யாதி விஶேஷணத்துக்குபாவம் - த்யாகத்தினுடைய தௌர்கட்யம் சொல்லுகை. சேல் - மத்ஸ்யம். ஏய்கை - ஒப்பு துவக்கவல்ல - ஈடுபடுத்தவல்ல. புத்ராதிகளை அழியமாறி ஜீவிக்கும் மாதா பிதாக்களை வ்யாவர்த்திக்கிறது. மேலாத்தாய்தந்தை யென்று. ஆவார் - ஆகிறவர்கள்; இதுக்குபாவம் எல்லாம் என்றது. பலிதம் - எனக்காக இத்யாதி. "அவரே" என்கிற அவதாரணார்த்தம் - க்லேஶகரமான இத்யாதி. அவனுடைய ஸர்வவிதபந்துத்வத்திலே ப்ரமாணம் - மாதாபிதா இத்யாதி. "மாதா பிதா ப்ராதா நிவாஸஶ்ஶரணம் ஸுஹ்ருத்" இத்யாதி ஸுபாலோபநிஷதி. இப்படியிருந்த பேருண்டோ என்ன, அஹம்தாவத் இத்யாதி. அஹம்தாவந் மஹாராஜே பித்ருத்வம் நோபலக்ஷயே । ப்ராதா பர்த்தா ச பந்துஶ்ச பிதா ச மம ராகவ:" அடிதொடங்கி, தந்தையும் - ஆவார் - இனி - அவரே இத்யந்வய: தந்தையும் - இனி, (அவரே - ஆவாரோ அவரேயாகாநிற்பரென்று உரையில் அர்த்தம். (அ)

[ஆவாரென்று தொடங்கி]-க்ஷுபிதமான கடலின் நடுவே அழுந்துகிற நாவாய் போலே ஸம்ஸாரஸமுத்ரத்தின் நடுவே அகப்பட்டு நின்று ரக்ஷகராவார் ஆரென்று நான் நடுங்க. [தேவாரென்று தொடங்கி] - அறவிலக்ஷணமான ஒப்பனையோடும் திவ்யாயுதங்களோடும் கூடவந்து தன்னுடைய நிரவதிகக்ருபையை என்பக்கலிலே பண்ணி என்னோடே ஸம்ஶ்லேஷித்தான்.

ப.—அநந்தரம், இப்படி ஸர்வவித பந்துவானவன் தன் அஸாதாரண விக்ரஹத்தோடேகூட என்னோடே கலந்தானென்கிறார்.

துணை-துணை, ஆவார் - ஆவார், ஆர்-ஆர், என்று - சொல்லி, அலை-அலைகிற, நீர்-நீரையுடைத்தான, கடலுள் - கடலிலே, அழுந்தும் - அழுந்துகிற, நாவாய்போல்-நாவாய்போலே, பிறவிக்கடலுள் - ஸம்ஸாரஸமுத்ரமத்யத்திலே, நின்று-நின்று, நான் - (கரையேறிக்கொள்ள மாட்டாத) நான், துளங்க-நடுங்க, (அவ்விழவிலே), தேவு - திவ்ய ஸௌந்தர்யாதிகளால், ஆர்-பூர்ணமான, கோலத்தொடும் - வடிவோடும், திருச்சக்கரம் சங்கினொடும் - அவ்வடிவுக்கு ஶோபாவஹமான திவ்யாயுதங்களோடுங்கூட, ஆஆ என்று-ஐயோ ஐயோ என்று, அருள்செய்து - க்ருபைபண்ணி, அடியேனொடும் - தன்னுடைமையான வென்னுடனே, ஆனான்-கூடினான். கீழ், "விதி" என்று சொல்லிப் போந்தத்தை இங்கே "அருள்" என்று வெளியாக்கினாராயிற்று. தேவு - அழகு; திவ்யமாய், அப்ராக்ருதமென்றபடி.

இ.—ஒன்பதாம் பாட்டில், நான் ஸம்ஸாரத்தில் பட்ட க்லேஶமெல்லாந் தீரும்படி தன் க்ருபையாலே அப்ராக்ருதமான வடிவோடேவந்து கலந்தானென்கிறார்.

[ஆவாரார் துணையென்று] - இத்தஶையில் நமக்குத் துணையாவாராரென்று. [அலைநீர்இத்யாதி]-க்ஷுபிதமான கடலுக்குள்ளே யழுந்துகிற நாவாய்போலே ஸம்ஸாரார்ணவத்திலே நின்று நான்துளங்க. நாவாயென்று- அதில் நிற்கிறவர்களைச் சொல்லுகிறது; மஞ்சா꞉ க்ரோஶந்தி இதிவத். கேவலம் நாவாயைச் சொன்னபோது, கரையிலே நின்றார், "இதுக்குத்துணையாவாரார்" என்கிறார்களாகக்கடவது. அப்போது-தனக்கு ஓடுகிற தஶையை யுணரமாட்டாதவளவைச் சொல்லுகிறது. நாவாய் "ஆவாரார் துணை" என்கையாவது - "வ்ருஷிவ்ருதீக்ஷாஶ்ராமய꞉" என்றாற்போலே யாகக்கடவது; நடுங்குகையாவது-அசைந்துவருகை. இந்நடுக்கத்தில் அவன் செய்ததென்? என்ன— [தேவாரித்யாதி]- அப்ராக்ருத திவ்யஸம்ஸ்தாநத்தோடும், அவ்வடிவுக்குச்சேர்ந்த திவ்யாயுதங்களோடும். "ஆழ்வார்களைச்சேர்த்துக்கொண்டாற்போலே என்னையும் சேர்த்துக்கொண்டான்" என்று ஆளவந்தார் நிர்வாஹம். எம்பெருமானார் "கூராராழிவெண்சங்கேந்தி - வாராய் என்று இவர் உகந்தபடியே வந்தான்" என்றருளிச்செய்வர். அப்ராக்ருத திவ்யஸம்ஸ்தாநமேயாகிலும் பூவேளைக்காரரைப்போலே ஆழ்வார்களையொழியக் காணமாட்டார். [ஆவாவென்றருள் செய்து] - ஐயோ! ஐயோ! என்று தன்னுடைய நிரவதிக க்ருபையைப் பண்ணி. *கேசவன்தமர் தொடங்கி, க்ருபையை - விதிஶப்தத்தாலே சொல்லிப் போந்தவர், இப்பாட்டிலே "அருள்" என்று வெளியிடுகிறார். [அடியேனொடுமானானே]- ஸ்வரூபாநுரூபமாக ஶேஷியாய்வந்து கலந்தான்.

ஈடு.—ஒன்பதாம்பாட்டு. பலசொல்லியென்? நான் ஸம்ஸாரத்தில் பட்ட க்லேஶமெல்லாந் தீரும்படி தன்க்ருபையாலே அப்ராக்ருதமான வடிவோடேவந்து கலந்தானென்கிறார்.

[ஆவாரார்துணையென்று] - துணையாவாராரென்று. [அலைநீரித்யாதி] - க்ஷுபிதமான கடலுக்குள்ளே அழுந்துகிற நாவாய்போலே, ஸம்ஸாரார்ணவத்திலே நின்று நான் நடுங்க. நாவாய்போல் என்கிறவிடத்தில் - நாவாய்மாத்ரத்தை நினைத்தபோது, ஆவாரார் துணையென்றவிடம் - கரையில் நின்றார் வார்த்தையாகக்கடவது. அதுக்குக்கருத்து - நோவுபடாநிற்க உணர்த்தியற்றிருந்தபடி. அன்றிக்கே, உஷா:கெளராஶி போலே தத்ரஸ்த்தரான புருஷர்களைச் சொல்லிற்றாகவுமாம். நடுங்குகையாவது - அசைந்துவருகை. இந்நடுக்கத்தில் அவன் செய்ததேன்? என்னில்—[தேவாரித்யாதி] - †(தேவு-அழகு; திவ்யமாய், அப்ராக்ருதமென்றபடி.) அப்ராக்ருத திவ்ய ஸம்ஸ்த்தாநத்தோடும், அவ்வடிவுக்குச்சேர்ந்த திவ்யாயுதங்களோடுங்கூடவந்து, ஐயோ ஐயோ என்று என்பக்கலிலே க்ருபையைப்பண்ணி, என்னோடேவந்து கலந்தான். ஆளவந்தார் அருளிச்செய்தாராகத் திருமாலையாண்டான் பணிக்கும்படி — "(திருச்சக்கரம்சங்கினோடும் - அடியேனோடுமானான் என்று) கையில் ஆழ்வார்களோடு பொருந்தினாற்போலே என்னோடேவந்து கலந்தானென்கிறார்" என்று. அத்தை எம்பெருமானார் கேட்டருளி, "இங்ஙனேயாகவடுக்கும் - 'கூரா

ஒன்பதாம்பாட்டு-ஆவாரார் இத்யாதி. நாலாம்பாட்டும் அஞ்சாம்பாட்டும் தவிரக் கீழ்ப்பாட்டெல்லாம் - தம்மோடேகலந்தமை சொல்லுகையாலே - பலசொல்லி யென் என்றது. "பிறவிக் கடலுள்நின்று நான்துளங்க" என்றத்தைப்பற்ற-நான் ஸம்ஸாரத்தில் இத்யாதி. தீரும்படி என்றது - அர்த்தஸித்தம். தன்க்ருபையாலே யென்றது-"அருள்செய்து" என்றத்தைப்பற்ற. "தேவார்கோலம்" என்றத்தைப்பற்ற - அப்ராக்ருத இத்யாதி. கலந்தானென்றது - "அடியேனொடுமானான்" என்றத்தைப்பற்ற.

"அலைநீர்க்கடலுள்" என்றதுக்கு அர்த்தம்-க்ஷுபிதமான கடலுக்குள்ளே யென்று. அழுந்துகிற-அமிழாநிற்கிற. "நாவாய்போல்" என்கிற பதத்துக்கு-கௌமாத்ரமாக விவக்ஷித்து, அசேதநமான நாவாய்க்கு, "துணையாவாரார்" என்னும் நினைவு கூடுமோவென்னல்- நாவாய்போல் இத்யாதி. நாவாயைத்ருஷ்டாந்தமாக்கினதுக்கு பாவம்-அதுக்கு இத்யாதி. அதுக்குக்கருத்து என்றது - கரையிலுள்ளார் "இதுக்கு ரக்ஷகரார்" என்று நோவுபடவேண்டும்படி அசேதநமான நாவாய்போலென்றதுக்குக் கருத்தென்றபடி. கரையிலே நின்றார் வார்த்தையாம் பக்ஷத்தில் - தன்னுடைய அவஸ்த்தையைத் தான் சொல்லமாட்டேனென்று கருத்து. நாவாயிலிருக்கிற மநுஷ்யரைச் சொல்லும்போது - தமக்குஜ்ஞாநமுண்டாய் "நமக்கு உபாயமாரோ" என்று து:கப்படுகிறாரென்று கருத்து. முந்தினபக்ஷத்தில், அசேதநத்துக்குத் துளக்கமேதென்ன, நடுங்குகை இத்யாதி. மற்றைப்பக்ஷத்தில், மாநஸசலநத்தைச் சொல்லுகிறது. எம்பெருமானார் நிர்வாஹத்திலே நோக்காகவருளிச்செய்கிறார்—அப்ராக்ருத இத்யாதி. "தேவு - கோலத்தொடும்-ஆர்-திருச்சக்கரம் சங்கினொடும்வந்து, ஆவாவென்றருள்செய்து அடியேனொடுமானான்" என்று அந்வயித்து, அப்ராக்ருத இத்யாதிக்கு ஶப்தார்த்தம் கண்டுகொள்வது. "கோலம்" என்றதுக்கு அர்த்தம்-ஸம்ஸ்த்தாநமென்று. "ஆர்" என்றதுக்கு அர்த்தம் - சேர்ந்த என்று. வந்து என்றது - அத்யாஹாரலப்யம். ஆளவந்தார் நிர்வாஹத்தில் ஶப்தநிர்வாஹம் - தேவார்கோலத்தொடும்- அதாவது - அப்ராக்ருதமாய் அழகிதான திருமேனியோடே; திருச்சக்கரத்தொடும் சங்கினொடும் அடியேனொடுமானான்—அதாவது - திருவாழியோடும் ஸ்ரீபாஞ்சஜந்யத்தோடும் பொருந்தினாற்போலே, அப்ராக்ருதவிக்ரஹத்தோடே என்னோடேவந்து கலந்தானென்று. "அடியேனொடும்" என்றசப்தத்தாலே - கையில் ஆழ்வார்களோடு சேர்ந்தாற்போலே என்னோடேசேர்ந்தானென்றபடி. அத்தை -

† குண்டலிதக்ரந்தம் க்வாசித்கம்.

ராழிவெண்சங்கேந்தி-வாராய்' என்றுயிற்று இவர் ஆசைப்பட்டிருப்பது, ஆசைப்பட்டபடியே திவ்யாயுதங்களோடேவந்து கலந்தா னென்கிறார் " என்று அருளிச்செய்தருளும்படி. இவர் தாம் பூவேளைக்காரரைப்போலே, இவைகாணுதபோது கைமேலே முடிவாரொருவரிறே. [அருள்செய்து அடியேனெடுமோனனே] - * கேசவன்தமர்தோடங்கி, லோபத்தாலே, க்ருபையை-விதிஸப்தத்தாலே சோல்லிப்போந்தவர், இப்பாட்டிலே "அருள்" என்று வெளியிடுகிறார். [அடியேனெடுமோனன்]- ஸ்வரூபாநுரூபமாக ஸேஷியாயே வந்துகலந்தான்.

பத்தாம் பாட்டு.

ஆறுளுடையானென்று அஃதேகொண்டுகந்துவந்து
தானேயின்னருள்செய்து என்னைமுற்றவுந்தானுனன்
மீனுயாமையுமாய் நரசிங்கமுமாய்க்குறளாய்க்
காறுரேனமுமாய்க் கற்கியாமின்னங்கார்வண்ணனே.

ஆ.—(ஆறுளுடையானென்று.) தான் என்னோடேபண்ணின ஸம்ஶ்லேஷத்தை அநுஸந்தித்தவித்தனையுமேகொண்டு உகந்துவந்து தானே இன்னருள்செய்து, இதுக்கு முன்பு என்னோடு ஒன்றும் ஸம்ஶ்லேஷியாதானுய்க்கொண்டு என்னை வேறு படக்காணவொண்ணுததொருபடி ஸம்ஶ்லேஷித்து, இதுக்கு முன்பு தான் பண்ணியருளின ஸர்வதிவ்யாவதாரங்களையும் எனக்கு போக்யமாகக் காட்டியருளினுன். ஆதலால், இதற்குமுன்பு தான்பண்ணியருளின இந்தத் திருவவதாரங்களெல்லாம் என்பக்கலுள்ள அபிநிவேஸத்தாலே; வேறுமெனக்காகப்பண்ண எண்ணினதுக்கும் முடிவுண்டோ வென்கிறார்.

" திருச்சக்கரம்சங்கினெடுய் " என்றத்தை - த்ருஷ்டாந்தமாக யோஜித்த ஆளவந்தார் நிர்வாஹத்தை. எம்பெருமானர் நிர்வாஹத்தில், "அடியேனெடும்" என்றசஸப்தத்துக்கு-அதிஹேயனுன என்னோடும் என்றபடி. **ஆர் - திருச்சக்கரமென்றது** - *திருமேனிக்குத் தகுதியான வென்றபடி. ஆளவந்தார் நிர்வாஹத்தில்,* **ஆர்கோலம்** - *அழகியதிருமேனி; "கோலத்தொடும்" என்ற சஸப்தம் அவ்யயம்; கோலத்தோடேயென்றபடி. எம்பெருமானர் நிர்வாஹத்திலே ஹேத்வந்தரம்* - **இவர்தாம் இத்யாதி.** *பூவேளைக்காரராவது - ராஜாக்களுக்கு தத்தத்காலங்களிலே பூவிடாவிடில் குத்திக்கொண்டு முடியுமவர்கள்.* **இவை - கைமேலே - காணுதபோது - முடிவாரொருவரிறே** *என்று ப்ரக்ருதார்த்தங் கண்டு கொள்வது; கைமேலேமுடிவார்-யுத்தத்திலே முடிவாரென்று சாடுவுக்கு அர்த்தம். " அருள்செய்து " என்கிறவிடத்தில் விதிஸப்தமில்லாமற் போவானென்? என்கிற சங்காபரிஹாரார்த்தம் புநःப்ரதீகக்ரஹணம் -* **அருள்சேய்து இத்யாதி** *.கேசவன்தமர் தொடங்கி என்றது - " மதுசூதனை " என்கிற பாட்டுத் தொடங்கி யென்றபடி. தொடங்கியென்றது - "என்றுமொன்ருகி" "கையார்சக்கரம்" "அம்மானுழிப்பிரான்" என்கிற பாட்டுக்களைப் பற்ற.* **லோபத்தாலே** - *"க்ருபையைவெளியிடவொண்ணுது" என்கிற லோபத்தாலே. " அருள்செய்து " என்கிற ல்யபந்தத்துக்கு - "* **அடியேனெடுமோனன்** *" என்கிற பதத்தோடு ஏகவாக்யதை தோற்றுகைக்காக,* **அருள்சேய்துஅடியேனெடுமானனே** *என்றுகீழே சொல்லிற்று; இப்போது, "அடியேனெடுமோனன்" என்கிறமாத்ரத்துக்கு - "* **அடியேன்** *" என்கிறதினுலே ப்ரதிகோடித்வேநோபஸ்த்திதமாயிருக்கிற ஸேஷித்வ விஸிஷ்டனுய்வந்து கலந்தானென்று அர்த்தவிஸேஷம் சொல்லுகைக்காக புநःப்ரதீகக்ரஹணம்-* **அடியேனெடுமானனென்று.** *உரையன்வயம் க்ரமத்திலே.*

ஒ.—பத்தாம்பாட்டில், எம்பெருமான் என்பக்கல்பண்ணின மஹோபகாரத்தை நான் சிறிது அநுஸந்திக்க, இந்த க்ருதஜ்ஞதையே பற்றாசாக வந்து என்னோடே நிரவதிக ஸம்ஶ்லேஷத்தைப்பண்ணி யருளினான் என்கிறார்.

[தானே இன்னருள் என்று தொடங்கி] - நான் அபேக்ஷியாதிருக்கத் தன் பேறாகக்கொண்டு என்னோடே ஸம்ஶ்லேஷித்து எனக்கு எல்லா போகமுமானான். என்னை முற்றவும்தானானான் என்கிறது - என்னை உள்ளும் புறம்பும் ஓரிடமொழியாமே வ்யாபித்தான் என்றுமாம். [மீனாய்என்று மேலுக்கு] - என்னை விஷயீகரிக்கைக்காக மத்ஸ்யகூர்மாதி அநேகாவதாரங்களைப்பண்ணிப் பின்னையும் என்பக்கலுள்ள அபிநிவேஶாதிஶயத்தாலே கற்கியாகக்கடவ பரமோதாரன்.

ப.—அநந்தரம், இப்படி அஸாதாரணவிக்ரஹ விஶிஷ்டனானவன் தன்னுடைய ஸர்வாவதாரங்களையும் அநுபவிப்பித்துக்கொண்டு என்பக்கலிலே கலந்தானென்கிறார்.

(ஜகத்ரக்ஷணார்த்தமாக), மீன்-மத்ஸ்யமும், ஆய், ஆமையும் - கூர்மமும், ஆய், நரசிங்கமும் - நரசிம்ஹமும், ஆய், குறள் - வாமநனும், ஆய், கானேனமும்-வநவராஹமும், ஆய்-ஆய்; இன்னம்-இன்னமும், கற்கி-கல்கியும், ஆம்-ஆவதான, கார்-காளமேகம் போலேஶ்யாமளமான, வண்ணன் - அஸாதாரணவிக்ரஹத்தை யுடையவன், (என்னை), ஆள்-அடிமையாக, உடையான் - உடையன், ஆனான்-ஆனான், என்று-என்கிற, அம்மாத்ர-அந்த உக்திமாத்ரமே, கொண்டு - பற்றாசாகக்கொண்டு, உகந்து - அதிப்ரீதனாய், வந்து-வந்து, தானே-அபேக்ஷாநிரபேக்ஷமாகத்தானே, இன்-நிரதிஶயபோக்யையான, அருள்-க்ருபையை, செய்து-பண்ணி, என்னை-என்னைப்பற்ற, தான்-தான், முற்றவும் - ஸகலாவதார விஶிஷ்டனாய்க்கொண்டு, ஆனான்-ஸம்ஶ்லேஷித்தான். அவ்வவதாரவைலக்ஷண்யங்களை யநுபவிப்பித்தானென்று கருத்து.

இ.—பத்தாம்பாட்டில், அவன் தன் க்ருபையாலே ஶப்தாதிவிஷய ப்ராவண்யத்தைத் தவிர்த்துத் தன் பக்கலிலே ருசியைப்பிறப்பித்த மஹோபகாரத்தை அநுஸந்தித்த க்ருதஜ்ஞதையே பற்றாசாக வந்து என்னோடே நிரவதிக ஸம்ஶ்லேஷத்தைப் பண்ணினான் என்கிறார்.

[ஆனானுடையான்] - என்னை அடிமை கொள்வானானான் என்கிற இந்த உக்தியையே குவாலாகக் கொண்டு. இப்படி சொல்லுகைக்குத் தான்பண்ணின க்ருஷியை மறந்தான். என்னுடைய உக்திமாத்ரத்தையே குவாலாக நினைத்தான். பலம் புஜிக்கிற நானன்றிக்கே, உகப்பும் தன்னதேயாயிற்று. [வந்து] - தான் இருந்தவிடத்தே நான் செல்லுகையன்றிக்கே, நான் இருந்தவிடத்தே தான் வந்து. அர்த்தியாதிருக்கத் தானே தன்பேறாக க்ருபைபண்ணி. [என்னை முற்றவும்தானானான்] - உள்ளோடு புறம்போடு வாசியறக்கலந்தான் என்னுதல், ''சேலேய்கண்ணியரும் பெருஞ்செல்வமும்'' என்கிறபடியே ஸர்வவித பந்துவுமானா னென்னுதல். [மீனாய்] - ஜ்ஞாநப்ரதாநார்த்தமாக ஜலசரஸஜாதீயனானான். [ஆமையுமாய்] - தாரணார்த்தமாகக் கூர்மரூபியானான். [நரசிங்கமுமாய்] - சடக்கென விரோதியைப் போக்குகைக்கு இரண்டு வடிவைச் சேர்த்துக்கொண்டு வந்து பிறந்தான். [குறளாய்] - கொடுத்து வளர்ந்தகையைக்கொண்டு அர்த்தியானான். [கானேனமுமாய்] - ஸம்ஸாரார்ணவத்தினின்றும் எடுக்கைக்கு வராஹரூபத்தைக்

கொண்டான். [காநநேனம்] - மநுஷ்யர் நடையாடாத காட்டிலே மிகவும் வர்த்திக்கும் வராஹம். என் கார்யம் சமைந்தபின்பும், 'ஸம்ஸாரத்தினின்றும் கால்வாங்குந்தனையும் இவர்க்கு என் வருகிறதோ' என்று கொண்டு அஞ்ஜைத மீண்டிலன். மேல்வரும் விரோதத்தைப் போக்குகைக்கு இன்னமும் கற்கியாக விருந்தான். நான் தன்னைத் தப்புகைக்காக பிறந்தவளவும் போரும் அவன் ரக்ஷிக்கைக்காகப் பிறந்தபிறவி. நான் கர்மத்தாலே பிறந்தவையடங்க அநுக்ரஹத்தாலே பிறந்தான். [கார்வண்ணனே] - வார்ஷுக வலாஹகம்போலே இருக்கிறானித்தனை, வர்ஷித்தானாயிருக்கிறிலன்.

ஈடு.—பத்தாம்பாட்டு. அவன் தன் க்ருபையாலே ஶப்தாதிவிஷய ப்ராவண்யத்தை யறுத்துத் தன்பக்கலிலே ருசியைப்பிறப்பித்த மஹோபகாரத்தையநுஸந்தித்த க்ருதஜ்ஞதையேபற்றாசாக வந்து, என்னோடே நிரவதிகஸம்ஶ்லேஷத்தைப்பண்ணினானென்கிறார்.

[ஆனானுடையான்] - என்னை அடிமைகொள்வானானானென்று, அறியாதே இங்ஙனே ஒருவார்த்தை சொன்னேன்; இந்த உக்திமாத்ரத்தையேகொண்டு. இப்படி சொல்லுகைக்குத் தான் பண்ணின க்ருஷியையடைய மறந்தான், இந்தவுக்தியையே துவாலாகநினைத்தான். [உகந்து]-பலபோக்தாவான நானன்றிக்கே, உகப்பும் தன்னதேயாயிற்று. [வந்து] - அதுவும் மாறாடிற்று. [தானேஇன்னருள்செய்து]-நான் அர்த்தியாதிருக்கத்தானே தன்பேறாக க்ருபையைப்பண்ணி. [என்னைமுற்றவும்தானானான்] - உள்ளோடுபுறம்போடு வாசியறக் கலந்தானென்னுதல், எனக்கு ஸர்வவிதபோக்யமானானென்னுதல். * ஆகமுற்று

ப்ர:—(ஆனானுடையான்இத்யாதி)—(காநநேனம்) — ஶரண்யகாநனே ஷட்த்ரிம்ஶத் ராவணம் வ்ருதி ராஜீவ:, "வநகவஸ்யரோயநீ" இத்யாதி ॥ க௪ ॥ "ஸஹஸ்ரததொராராஜோவாஸவத் இவோதித:॥க௫॥"

பத்தாம்பாட்டு-ஆனான் இத்யாதி. அவன் தன்க்ருபையாலே ஶப்தாதிவிஷய ப்ராவண்யத்தை யறுத்தென்றது - கீழ்ப்பாட்டைக் கடாக்ஷித்து. "ஆளுடையான் - ஆனான்" என்றத்தைப்பற்ற-தன்பக்கலிலே யித்யாதி, க்ருதஜ்ஞதையென்னுமளவும். பற்றசாக - ஹேதுவாக. "என்னைமுற்றவுந் தானானான்" என்றத்தைப்பற்ற-என்னோடே இத்யாதி.

என்னையென்றது - அர்த்தஸித்தம். "ஆளுடையான் - ஆனான்-என்று" என்று அந்வயித்து அர்த்தம் - அடிமைகொள்வானானானென்று என்று. அறியாதேஇத்யாதி - அர்த்தஸித்தம். "அஞ்ஜதே கொண்டு" என்றத்தைப்பற்ற - இந்தவுக்திமாத்ரத்தையேகொண்டு என்றது. "அஞ்ஜதே" என்கிறவவதாரணத்துக்குபாவம் - இப்படி சொல்லுகைக்கு இத்யாதி. க்ருஷியென்றது - "மீனாயாமையுமாய்" என்கிற அவதாரங்களைப்பற்ற. "கொண்டு" என்றதுக்கு பாவம் - இந்தவுக்தியை இத்யாதி. துவால்-அதிகம். உகப்பும் - என்கிற சப்தத்தாலே - க்ருஷியும் தன்னதென்றபடி. அதுவும் மாறாடிற்று-உகப்புமாறாடினாற்போலே யென்றபடி. "தானே" என்ற அவதாரணார்த்தம் - நான்அர்த்தியாதிருக்க இத்யாதி. "இன்" என்றதுக்கு அர்த்தம் - தன்பேறாக வென்றது. "என்னைமுற்றவும்தானானான்" என்றதுக்கு அர்த்தத்ரயம்.—முந்தின அர்த்தத்திலே, என்னையென்றது - என்னோடேயென்றபடியாய், முற்றவுமென்றது - எல்லாவிடத்திலுமென்றாய், உள்ளோடு புறம்போடு வாசியறத் தான் என்னோடு கலந்தானென்றபடி. த்விதீயார்த்தத்தில், என்னையென்றது-எனக்கென்றபடியாய், முற்றவுமென்று-ஸர்வவிதபோக்யமுமென்றாய், தான் எனக்கு ஸர்வவிதபோக்யமுமானானென்றபடி. த்ருதீயார்த்தம்-என்னைத் தனக்கு ஸர்வவிதபோக்யமுமாகக்கொண்டானென்று. அதுக்கு ப்ரமாணம்-ஆகமுற்றும் இத்யாதி. இந்த ப்ரமாணமே-மூன்றாமர்த்தஸூசகம். இந்தவுக்திமாத்ரத்தையே கொண்டு தன்பேறாக விரும்பக்கூடுமோ

மகத்தடக்கினன். [மீனாயித்யாதி]-ஸர்வவிஸஜாதீயனானதான் ஜ்ஞாநப்ரதாநார்த்தமாக ஜல சரஸஜாதீயனானன், தாரணார்த்தமாகக் கூர்மரூபியானன், சடக்கென விரோதியைப்போக்குகைக்காக இரண்டுவடிவைச் சேர்த்துக்கொண்டு வந்துபிறந்தான், கொடுத்து வளர்ந்தகையைக்கொண்டு அர்த்தியானன், ஸம்ஸாரார்ணவத்தில்நின்றும் என்னையெடுக்கைக்கு வராஹரூபத்தைக்கொண்டான். [கானரேனம்]-காடடங்கக்கோலஞ்செய்தான். "ஸௌாஹயது ஆஜ்ஞகாரணாஜ்ஞு" (ஸோபயந்தண்டகாரண்யம்) என்கிறபடியே - காடடங்க மயிற்கழுத்துச் சாயலாக்கும்படியான வடிவையுடையவனென்னுதல், மநுஷ்யஸஞ்சாரமில்லாத காட்டிலேவர்த்திக்குமென்னுதல். [கற்கியாமின்னம்]-என்காரியம் சமைந்தபின்பும், "ஸம்ஸாரத்தில்நின்றும் கால்வாங்குந்தனையும் இவர்க்குஎன்வருகிறதோ" என்று கொண்டகுதைமாறுகிறிலன். மேல்வரும் விரோதத்தைப் போக்குகைக்கும் இன்னம் கற்கியாகவிருந்தான். நான் தப்புகைக்குப் பிறந்தபிறவிகளோபாதிபோரும் அவன் என்னை ரக்ஷிக்கைக்காகப் பிறந்த பிறவி. நான் கர்மத்தாலே பிறந்த பிறவியடையத் தானும் அநுக்ரஹத்தாலே பிறந்தான். [கார்வண்ணனே] - வர்ஷுகவலாஹகம்போலே யிருக்கிறானத்தனை. வர்ஷித்தானாயிருக்கிறிலன். வண்ணம் - ஸ்வபாவம். மீனாயென்று தொடங்கி, என்னைமுற்றவும் தானானனென்று அந்வயம். (கo)

பதினோரம் பாட்டு.

கார்வண்ணன்கண்ணபிரான் கமலத்தடங்கண்ணன்தன்னை
ஏர்வளவொண்கழனிக் குருகூர்ச்சடகோபன்சொன்ன
சீர்வண்ணவொண்தமிழ்கள் இவையாயிரத்துளிப்பத்தும்
ஆர்வண்ணத்தாலுரைப்பார் அடிக்கீழ்ப்புகுவார்பொலிந்தே.

ஆ.—(*கார்வண்ணன்.*)**நீலமேகநிபனாய் புண்டரீகதளாமலாயதேக்ஷணனாய் ஆஸ்ரிதஸுலபனான எம்பெருமானைச் சொன்ன இத்திருவாய்மொழியை ஆர்வண்*

வென்ன, என்னைப்பெறுகைக்கு அநாதிகாலம் எதிர்சூழல்புக்குத் திரிந்தபின்பு கிமுதவென்கிறார்-மீனாயித்யாதி. "ஜநகஉபூவஸெஜிவ்யும்" இத்யாதி ப்ரமாணங்களைப்பற்ற - **ஸர்வவிஸஜாதீயனான** *வென்றது. ஜ்ஞாநப்ரதாநார்த்தமாக - வேதோபதேசமுகேந ப்ரஹ்மாவுக்கு ஜ்ஞாநப்ரதாநார்த்தமாக. "கானார்" என்றதுக்கு அர்த்தத்வயம்.—முந்தினது - காட்டிலே ஸ்வதேஜஸ்ஸாலே பரந்து வ்யாபித்திருக்கிற ஏனமென்று; இரண்டாவது - காட்டிலே பொருந்தி வர்த்திக்கிற ஏனமென்றபடி. ஆர்தல் - பொருந்துதல். சாட்வர்த்தந்தோன்றுகைக்காக-***காடடங்கக்கோலஞ்செய்தான்** *என்றது. கோலம் - அழகும், வராஹமும்.* **சாயல்** *- நிறம். கொண்டகுதை-கொண்ட உத்யோகம். ஸப்தார்த்தம் - மேல்வரும் இத்யாதி.* **விரோதத்தைப் போக்குகைக்கும்***-என்ற சகாரம் - இழே-***விரோதியைப்போக்குகைக்காக** *என்றத்தோடே ஸமுச்சயம். அநேகாவதார கதநத்துக்கு ஹ்ருதயம்* **நான்தப்புகைக்கு** *இத்யாதி. இருவர் பிறவிக்கும் ஹேதுவேதன்ன-* **நான்கர்மத்தாலே** *இத்யாதி. "கார்வண்ணன்" என்கிறவிடத்திலே, வண்ணமென்று - ஸ்வபாவமாதல், நிறமாதல்; இரண்டும் -* **வர்ஷுகவலாஹகம்** *என்றத்தைப்பற்ற. கார் - வர்ஷுகவலாஹகம். பலிதம் -* **வர்ஷித்தானாயிருக்கிறிலன்** *என்றது. வர்ஷித்த மேகம்போலே யிருக்கிறிலன் இத்யர்த்தம். மீனாயித்யாரப்ய, கார்வண்ணன் - ஆளுடையான் - ஆனன் - என்றதிந்தே கொண்டித்யாரப்ய, முற்றவுந்தானானன் இத்யந்வயம்.* (க●)

ணத்தாலுரைப்பார் பகவச்சேஷதைகரதிகளாய்க் கொண்டு அவன் திருவடிகளின்கீழே புகப்பெறுவ ரென்கிறார்.

ஒ.—நிகமத்தில், இப்பத்தும் வல்லார் நிரவதிக வைஷ்ணவஸ்ரீயை யுடைய ராய்க்கொண்டு எம்பெருமான் திருவடிக்கீழே புகுவரென்கிறார்.

[கார்வண்ணனென்று தொடங்கி] - காளமேகம்போலே ஸ்ரமஹரமான திரு நிறத்தையுடையனும் உத்புல்லபுண்டரீக தடாகம்போலே யிருக்கிற திருக்கண்களை யுடையனுமையாலே ஸ்லாக்யனை க்ருஷ்ணனை, ஏர்களின் ஸம்ருத்தியையுடைத்தாய் அழகியதாயிருக்கிற வயலோடுங்கூடின திருநகரியையுடைய ஆழ்வார் அருளிச்செய்த சீரிதான படியையுடைய ஆயிரந்திருவாய்மொழியிலும் இத்திருவாய்மொழியை ப்ரீதி பூர்வகமாகச் சொல்லுமவர்கள். கவிகளுக்கு அங்கமான சீரையும் வண்ணத்தையு முடைய ஒள்ளியதமிழ் என்றுமாம்.

ப.—அநந்தரம், இத்திருவாய்மொழியை அப்யஸிக்கவல்லவர்கள் ஆவிர்ப் பூதஸ்வரூபகுண ஸம்பத்விஸிஷ்டராய்க்கொண்டு க்ருஷ்ணன் திருவடிகளை ப்ராபிப்பர்க ளென்று பலத்தை அருளிச்செய்கிறார்.

கண்ணன் - க்ருஷ்ணனுய்வந்தவதரித்த, பிரான் - மஹோபகாரகனுய், (ஆஸ்ரிதர்க்குஉபகரிக்கும்), கார் - காளமேகம்போலேஸ்ரமஹரமான, வண்ணன் - வடிவையும், கமலம் - தாமரைபோலே, தடம்-பெருத்த, கண்ணன்தன்னை - கண்களையுமுடையவனை, ஏர்-ஏர்களின், வளம் - மிகுதியையுடைத்தாய், ஒண் - ஸ்லாக்யமான, கழனி - கழனியை யுடைத்தான, குருகூர்-திருநகரிக்கு நிர்வாஹகரான, சடகோபன் - ஆழ்வார், சொன்ன- அருளிச்செய்த, சீர்-சீரும், வண்ணம் - சந்தமுமுடைத்தாய், ஒண்-அர்த்தப்ரகாஸகமாகை யாலே நல்ல, தமிழ்கள் - த்ராமிடரூபமாயிருக்கிற, இவை - இவை, ஆயிரத்துள் - ஆயிரந்திருவாய்மொழியிலும், இப்பத்தும் - இப்பத்தையும், ஆர்வணத்தால் - "கவயோயமஷீ" என்கிறபடியே) அம்ருதபாநம் பண்ணுவாரைப்போலே, உரைப் பார்-சொல்ல வல்லவர்கள், பொலிந்து - ஆவிர்ப்பூதமான ஸ்வரூபகுணவிவ்ருத்தியை யுடையராய்க்கொண்டு, அடிக்கீழ் - அந்த க்ருஷ்ணன் திருவடிகளை, புகுவார் - ப்ராபிப் பர்கள். ஆர்வணத்தா லுரைப்பாரென்று - ஸ்வச்சந்தத்தாலே உரைக்குமவர்களார், அவர்கள் அடிக்கீழ்ப்புகுவார்க ளென்றுமாம். இது - கலித்துறை.

ஈ.—நிகமத்தில், இப்பத்தை யப்யஸிக்க வல்லார் இங்கே நிரவதிகவைஷ்ணவஸ்ரீயையுடையராய் அவன்திருவடிக்கீழே புகக்கடவரென்கிறார்.

[கார்வண்ணனித்யாதி]-உபகாரஸீலனுன க்ருஷ்ணனையாயிற்றுக் கவிபாடிற்று. தாழநின்று அவ்வடிவை என்னை அநுபவிப்பித்தவன். [ஏர்வளமித்யாதி]-ஏர்களின் ஸம்ருத் தியை யுடைத்தாய் அழகிதான வயலோடுகூடின திருநகரி. வளமென்று - அழகுக்கும், மிகுதிக்கும் பேர். இங்கு மிகுதியைச் சொல்லுகிறது. [சீர்வண்ணவொண்தமிழ்கள்]- சீரையுடைத்தான தமிழென்னுதல், கவிகளுக்கு அங்கமான சீரையும் வண்ணத்தையு முடைய அழகிய தமிழென்னுதல். சீராகிறது - பாவிலேகதேஸம். வண்ணமாகிறது - தூங்கலோசையென்றும், வண்ணவோசையென்றுஞ் சொல்லக்கடவது. [ஆர்வணத்தா

லுரைப்பார்] - ஸாதரமாகச் சொல்லுமவர்கள். ஆருதல் - பருகுதல். அம்ருதபாநம் போலே யிருக்கை. "தொண்டர்க்கமுதுண்ண" என்னக்கடவதிறே. [பொலிந்தே - அடிக்கீழ்புகுவார்] - அத்யவஸாயமாத்ரமாய் ருசியின்றிக்கே யிருக்கப் போய்ப்புகுகையன்றிக்கே, இங்கே வைஷ்ணவஸ்ரீயோடே நெடுநாளநுபவித்து, தாய் நிழலிலே யொதுங்கிறுற்போலே போயநுபவிக்கப் பெறுவர்கள்.

ஈடு.—நிகமத்தில்-இப்பத்தை அப்யஸிக்கவல்லார், நிரவதிக ஸ்ரீவைஷ்ணவ ஸ்ரீயையுடையராய் அவன் திருவடிக்கீழே புகப்பெறுவ ரென்கிறார்.

[கார்வண்ணன்] - காளமேகம்போலே ஶ்ரமஹரமான வடிவையுடையவன். [கண்ணபிரான்] - க்ருஷ்ணனாய் வந்தவதரித்து அவ்வடிவை என்னை அநுபவிப்பித்தவன். [கமலத்தடங்கண்ணன்தன்னை] - உத்புல்லபுண்டரீக தடாகம்போலே குளிர்ந்து செவ்வியை யுடைத்தான திருக்கண்களையுடையவனை. வடிவெல்லாம் கண்ணாயிருக்கிறபடி. "நிறமுடைநாற்றடந்தோள்" என்று - கீழே தமக்குக்காட்டி ஸமாதாநம்பண்ணின வடிவைச் சொன்னபடி. இவர் தேஹஸம்பந்தத்தை அநுஸந்தித்து அஞ்சினபோது, ஶ்ரமஹரமான வடிவைக் காட்டித் தன்னை முழுக்கக்கொடுத்துத் திருக்கண்களாலே குளிரநோக்கி நின்றநிலை. [ஏர்வளவொண்கழனி] - ஏரினுடைய ஸம்ருத்தியையுடைத்தாய் அழகியதான வயலோடேகூடின திருநகரி. வளமென்று - மிகுதிக்கும், அழகுக்கும் பேர். இங்கு மிகுதியைச் சொல்லுகிறது. [சீர்வண்ணவொண்தமிழ்கள்] - சீரிதான ப்ரகாரத்தையுடைத்தான அழகிய தமிழென்னுதல், கவிக்கு அங்கமான சீரையும் வண்ணத்தையுமுடைய அழகிய தமிழென்னுதல். சீரென்று-பாவிலேகதேசம். வண்ணம் - ஓசை. [ஆர்வண்ணத்தால்]- பூர்ணமாகவென்னுதல். ஆர்தல் - பருகுதலாய், "தொண்டர்க்கமுதுண்ண" என்கிறபடியே பருகுவாரைப்போலேயென்னுதல்; அபிநிவிஷ்டராய்உரைப்பாரென்கை. [பொலிந்தே-

நிகமம் - கார்வண்ணன் இத்யாதி. "உரைப்பார்" என்றத்தைப்பற்ற-அப்யஸிக்கவல்லார் என்றது. "பொலிந்து" என்றத்தைப்பற்ற - நிரவதிகஸ்ரீவைஷ்ணவஸ்ரீயையுடையாராய் என்றது. "அடிக்கீழ்ப்புகுவார்" என்றத்தைப்பற்ற-அவன்திருவடிக்கீழே இத்யாதி.

வடிவு என்றது - "கார்வண்ணன்" என்றது - பஹுவ்ரீஹி யாகையாலே. கமலத்தடம் - கமலங்களையுடைத்தான தடாகம். "தடம்" என்றதுக்கு - விஸ்த்ருதமென்றுக்கி, அர்த்தாந்தரம் - வடிவெல்லாம் இத்யாதி. அதாவது - கமலம் போலேயாய்ப் பெருத்த கண்ணையுடையவனென்றபடி. அத்ர - "க்ருபயா பரயா கரிஷ்யமாணே ஸகலஜநம் கிலஸமுகே தாக்ஷிணேத்ரு" இத்யாதி ஸ்ரீரங்கராஜஸ்தவ ஶ்லோகோநுஸந்தேயঃ. இப்போது வடிவழகையும் கண்ணழகையும் சொன்னதுக்கு பாவம் - நிறமுடை இத்யாதி. கீழ்வாக்யவிவரணம் - இவர் தேஹஸம்பந்தத்தை இத்யாதி. முழுக்கக்கொடுத்து என்றது - "பிரான்" என்றத்தைப் பற்ற. திருநகரி - ஆழ்வார் அருளிச்செய்த வென்று கூட்டிக்கொள்வது. சீரிதான ப்ரகாரமென்றது - வக்த்ருப்ரபந்த ப்ரதிபாத்ய வைலக்ஷண்யங்களை. இரண்டாமர்த்தத்தில், சீர்களையும் வண்ணத்தையுமுடைய ஒண்தமிழென்கை. பாவிலேகதேசமென்றது - எழுத்து, அசை, சீர், பந்தம், அடி, தொடை, நிரை, இத்தனையுங்கூடினது - ஒருபா; இதில் ஏகதேசமென்றபடி. இவையாயிரத்துளிப்பத்துமென்று கூட்டிக்கொள்வது. ஆர்வண்ணத்தால் - ஆதாபூர்த்தி ப்ரகாரத்தோடே யென்று த்விதீயார்த்தம். தொண்டர்க்கு இத்யாதி- ஆஶ்ரிதர்க்கு அம்ருதபாநம் பண்ணுகைக்கு ஸூக்திமாலைகளைச் சொன்னே னித்யர்த்தঃ. பருகுவாரைப் போலே உரைக்கையாவதேதென்ன - அபிநிவிஷ்டராய் இத்யாதி. பொலிந்து - இங்கே ஸ்ரீவைஷ்

அடிக்கீழ்ப்புகுவார்] - விஸ்ரம்பமாத்ரமேயாய் ருசியின்றிக்கேயிருக்கப் போய்ப்புகுகையன்றிக்கே, எம்பெருமானாரைப்போலே நூற்றண்டு ஸ்ரீவைஷ்ணவஸ்ரீயோடே யிருந்து, பின்பு தாய்நிழலிலே யொதுங்குவாரைப்போலே அவன் திருவடிகளிலே புகப்பெறுவர். (கக)

ணவஸ்ரீ ஸம்ருத்தராயிருந்து "பொலிந்தே" என்றதுக்கு பாவம் - விஸ்ரம்பம் இத்யாதி. விஸ்ரம்பமாத்ரமேயாயென்றது - "பேறுதப்பாது' என்று விஸ்வாஸமாத்ரமேயா யென்றபடி. கண்ணபிரான் - கார்வண்ணன் - கமலத்தடம் தொடங்கி, உரைப்பார் - பொலிந்தே - அடிக்கீழ்ப்புகுவார் இத்யந்வய:.

த்ரவிடோபநிஷத்ஸங்கதி:—[illegible] ॥

த்ரவிடோபநிஷத்தாத்பர்யரத்நாவலி:—[illegible] ॥

திருவாய்மொழி நூற்றந்தாதி.

கையாரும் சக்கரத்தோன் காதலின்றிக்கேயிருக்கப்
பொய்யாகப்பேசும் புறனுரைக்கு—மெய்யான
பேற்றையுபகரித்த பேரருளின் தன்மைதனைப்
போற்றினனேமாறன்பொலிந்து.

ஆழ்வார் திருவடிகளே ஶரணம், எம்பெருமானார் திருவடிகளே ஶரணம், ஜீயர் திருவடிகளே ஶரணம்.

இரண்டாந்திருவாய்மொழி—பொலிகபொலிக: ப்ரவேஶம்.

*ஆ.—*ஒன்றுந்தேவில் தம்முடைய உபதேசத்தாலே வைஷ்ணவீக்ருதரான ஜநங்களைக் கண்டு நிரதிஶயஹர்ஷயுக்தராய், அந்தஹர்ஷப்ரகர்ஷத்தாலே அவர்களைத் திருப்பல்லாண்டு பாடுகிறார்.*

ஒ.—இரண்டாந் திருவாய்மொழியில், * ஒன்றுந்தேவில் - தாம் பகவத்பரத்வத்தை உபபாதிக்கக்கேட்கையாலே லோகத்தில் சேதநர்க்குப் பிறந்த வைஷ்ணவஶ்ரீயைக் கண்டு அவர்களுக்கு மங்களாஶாஸநம்பண்ணி, ஸாத்விகராயிருப்பாரெல்லாம் விஸ்த்ருதராயும், ராஜஸராயும் தாமஸராயு முள்ளாரெல்லாம் ஸங்குசிதராயும், உத்தமதர்மங்களெல்லாம் ப்ரவ்ருத்தமாயும், இப்படி க்ருதயுக ஸமமாயிற்றென்றும், காலதர்மாதிகாராதிகளுடைய வுத்தமத்வம் பகவத்ஸ்பர்ஶத்தாலே யென்றும், பகவத்ஸ்பர்ஶஹீநமாகில் இவையெல்லாம் ஹேயமென்றும் உபபாதித்து ; தம் வாயாலே பகவத்பரத்வத்தைக்கேட்டு அதில் துணியமாட்டாதாரைத் துணிவித்து முடிக்கிறார். *" ஒன்றுந்தேவு கேட்டுத் திருநாட்டினின்றும் திருவாய்மொழி யநுபவிக்கவந்த நித்யஸூரிகளைக் கண்டு ஹ்ருஷ்டராய் மங்களாஶாஸநம் பண்ணுகிறார்" என்றுஞ் சொல்லுவர்.

ப.—இரண்டாந் திருவாய்மொழியில், கீழே - பகவத்க்ருபாபாரவஶ்யத்தை அநுஸந்தித்து ஸந்துஷ்டரான ஆழ்வாருடைய ப்ரீதியை அநுபவிக்கைக்கு, பகவத்குணாநுபவவித்தராய் ஸூரிஸமரான பாகவதர்கள் ஸம்ஸாரத்தில் துரிதமெல்லாம் நீங்கும்படி ப்ரேமபரவஶராய்த் திரண்டுவந்தபடியைக் கண்டு, “ஈஶ்வரன் இவர்களையிட்டு ஜகத்தைத் திருத்த நினைத்தானாகக்கூடும்” என்று திருவுள்ளம்பற்றி; அவனுடைய நிரதிஶயமாஹாத்ம்யத்தையும், மாஹாத்ம்யப்ரகாஶகமான ஶ்ரிய:பதித்வாதி சிஹ்நத்தையும், ஆஶ்ரிதோபகாரகமான விக்ரஹாதியோகத்தையும், உபகாரார்த்தமான ஸமுத்ரஶாயித்வத்தையும், அதுக்குமடியான ஸ்ரீவைகுண்டவாஸத்தையும், ஆஶ்ரிதரக்ஷணார்த்தமான ஆயுதவத்தையையும், அவதாரதசையிலுண்டான அதிஶயிதாதிக்யத்தையும், ஆதிக்யலக்ஷணமான ஸ்ரீவத்ஸசிஹ்நத்தையும், ஆஶ்ரிதவிஷயத்தில் அப்ரச்யுதஸ்வபாவத்தையும், அதிஶயிதஶீலவத்தையையு மநுஸந்தித்து, “இவ்வோ ஸ்வபாவங்களில் வித்தரான பாகவதர் இங்கே ஸந்நிஹிதராகப்பெறுவதே!” என்று ஹ்ருஷ்டராய் மங்களாஶாஸநம்பண்ணி, இவர்களை யநுவர்த்தித்து ஶாந்தஸ்வபாவராய் இவர்களோடொக்க நீங்களும் பகவத்விஷயத்தை யநுபவிக்கப் பாருங்கோளென்று லௌகிகரைக்குறித்து உபதேஶித்தருளுகிறார்.

இ.—இரண்டாந் திருவாய்மொழியில், * “ஒன்றுந்தேவில் பரத்வோபதேஶத்தாலே திருந்தினவர்களுடைய வைஷ்ணவஶ்ரீ, நித்யஸூரிகளும் இங்கேவந்து கண்டு அநுபவிக்கவேண்டும்படி யிருக்கையாலே, “இஸ்ஸமுதாயத்தைக்கண்டு மங்களாஶாஸநம் பண்ணுகிறார்” என்று எம்பெருமானார் அருளிச்செய்வர். “ஆழ்வாருடைய வைஷ்ணவஸ்ரீயை யநுபவிக்கைக்கு நித்யஸூரிகளும் இங்கேவர, அவர்களுக்கு மங்களாஶாஸநம் பண்ணுகிறார்” என்று - நித்யஸூரிகள் பக்கலிலே ப்ராதாந்யந்தோற்ற அருளிச்செய்வர் ஆளவந்தார். இவருடைய பரத்வோபதேஶத்தாலே “ஸத்ஸங்காஜ்ஜாயதே ஜ்ஞாநம்” என்று ஸாத்விகர் விஸ்த்ருதராயும், ராஜஸரும் தாமஸரும் அஜ்ஞாநத்தாலும் அநவதாநத்தாலும் ஸங்குசிதராயும், ஸாத்விகபரிக்ரஹத்தாலே வைஷ்ணவதர்மம் அபிவ்ருத்தமாயும், இதரதர்மங்கள் அபிபூதமாயும், இப்படி க்ருதயுக ஸமமாயிற்றென்றும்; தேஶகாலதர்மாதிகாரிகள் “ஸர்வேஷாம் க்ஷத்ரியாணாம் ... ஶேஷவாஸிந:” என்கிறபடியே பகவத்ஸ்பர்ஶத்தாலே நன்றாய், அல்லாதபோது ஹீநமென்றும் சொல்லி, தம்முடைய உபதேஶத்தாலே திருத்த யோக்யதையுடையாரைத் திருத்தி, ஒருபடியாலும் திருந்தாதாரை உபேக்ஷித்து முடிக்கிறார். “க்ஷாமம் தத் ... வாஸநம்” என்னுமளவுகண்டு மீளவேணுமிறே திருந்தாதார்க்கு. *வீற்றிருந்தேழுலகில் - எம்பெருமானுக்கு மங்களாஶாஸநம் பண்ணினார்; இதில் ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு மங்களாஶாஸநம் பண்ணுகிறார்.

ஈடு.—இத்திருவாய்மொழியை ஆளவந்தார் அருளிச்செய்தாராகத் திருமாலையாண்டான் பணிக்கும்படி—“ஆழ்வாருடைய ஸ்ரீவைஷ்ணவஸ்ரீயைக் காண்கைக்காக நித்யஸூரிகள் இங்கேவர, அவர்களைக்கண்டு மங்களாஶாஸநம்பண்ணுகிறார்” என்று. *“நண்ணாதார் முறுவலிப்பவிலே-ஸம்ஸாரிகள் படுகிற க்லேஶத்தை யநுஸந்தித்து,அதுக்குப்

பொலிகபொலிக ப்ரவேஶ. இத்திருவாய்மொழிக்கு த்வேதாஸங்கதி—இத்திருவாய்மொழியை இத்யாதியாலும்,நண்ணாதார் இத்யாதியாலும். ஒன்றுந்தேவுக்கும் இத்திருவாய்மொழிக்கும் நேரே ஸங்கதி; நடுவே கையார்சக்கரம் - ப்ராஸங்கிகம். ஆழ்வாருடைய ஸ்ரீவைஷ்ணவஸ்ரீயையென்றது -

பரிஹாரமாக, *ஒன்றுந்தேவிலே - பகவத்பரத்வத்தை உபபாதித்துத் திருத்த, அத்தாலே திருந்தி ஸம்ஸாரபரமபதவிபாகமற்று அங்குள்ளாரும் இங்கே வரலாம்படியிருக்கிற இருப்பைக் கண்டு மங்களாஶாஸநம் பண்ணுகிறார்'' என்று, இங்குள்ளார் பக்கலிலே ப்ராதாந்யந் தோற்ற எம்பெருமானார் அருளிச்செய்யும்படி. தாம் பகவத்பரத்வத்தை உபபாதிக்க அத்தாலே திருந்தின ஸாத்விகருடைய விஸ்த்ருதராயிருக்கிறபடியையும், ராஜஸராயும் தாமஸராயுமுள்ளார் அநவதாநத்தாலும் அஜ்ஞாநத்தாலும் ஸங்குசிதராயிருக்கிறபடியையும், ஸாத்விகர் பரிக்ரஹித்ததாகையாலே உத்தமதர்மமான வைஷ்ணவதர்மமே ப்ரஸித்தமாய்ப் போருகிற படியையும், அதுக்கு விருத்ததர்மங்கள் அபிபூதமாய்ப்போருகிறபடியையும், தேசகாலங்கள் அதிகாரிகளங்கங்கள் என்கிற வற்றுக்குண்டான நன்மைகள், ''ஸர்வேஷாம் கில தர்மாணாமுத்தமோ வைஷ்ணவோ விதி꞉'' (ஸர்வேஷாம்கிலதர்மாணாமுத்தமோவைஷ்ணவோவிதி꞉) என்கிறபடியே - பகவத்ஸ்பர்ஶத்தாலேயாயிருக்கிறபடியையும், அது இல்லையாகில் எல்லாநன்மைகளு முண்டானாலும் அவையடையத் தண்ணிதாயிருக்கிறபடியையும் சொல்லி, தம்மாலே திருந்தின ஸ்ரீவைஷ்ணவர்கள் திருவடிகளிலே விழுந்தும், திருந்து

ப்ர:—(பொலிகபொலிக)—ஶாந்திபர்வ, மோக்ஷதர்மே, ஸர்வேஷாம் கில தர்மாணாமுத்தமோ வைஷ்ணவோ விதி꞉ । ரக்ஷதே பகவாந் விஷ்ணுர்பக்தாநாத்மஶரீரவத் ॥

ஆழ்வார் உபதேசத்தாலே திருந்தின ஸ்ரீவைஷ்ணவர்களுடைய ஸம்ருத்தியை யென்றபடி. நித்யஸூரிகள் இங்கே வரவென்றது - ''தேவர்கள்தாமும் புகுந்து'' ''நேமிப்பிரான் தமர்போந்தார்'' என்னுமவற்றைப் பற்ற. இங்குள்ளார்பக்கலிலே ப்ராதாந்யமாவது - மங்களாஶாஸநவிஷயத்வம். பாட்டு ப்ரமேயங்களை உட்கொண்டு விவரணம் - **தாம் பகவத் இத்யாதி. ஸாத்விகருடைய** என்றது - ''கடல்வண்ணன் பூதங்கள்'' என்றத்தைப்பற்ற. ''மலியப்புகுந்து'' என்றத்தைப்பற்ற - **விஸ்த்ருதராய்** என்றது. **அநவதாநத்தாலும் அஜ்ஞானத்தாலும்-ராஜஸராயும் தாமஸராயுமுள்ளார் என்று** அந்வயிப்பது. **ஸங்குசிதராய்** என்றது - ''உள்ளீரேல்'' என்றத்தைப் பற்ற. **ஸாத்விகர் பரிக்ரஹித்ததாகையாலே** என்றதுக்கு மூலம் - ''மேவித்தொழும் அடியாரும் பகவரும் மிக்கதுலகே'' என்றது. **உத்தமதர்மமான வைஷ்ணவதர்மமே** - என்றவிடத்திலே - ''[illegible]'' என்கிற ஶ்லோகம் அநுஸந்தேயம். வைஷ்ணவதர்மமே ப்ரஸித்தமா யென்றது - ''பெரியகிதயுகம்பற்றி'' என்றத்தைப் பற்ற. ''திரியுங்கலியுகம்நீங்கி'' என்றத்தைப்பற்ற - **அதுக்கு விருத்ததர்மங்கள்** இத்யாதி; ''சமயத்தையெல்லாமெடுத்துக்களைவன'' என்றத்தைப் பற்றவாதல். **தேசகாலங்கள்** என்றது - ''மண்மேல், கலியுங்கெடும்'' என்றத்தைப்பற்ற. இந்த இரண்டும் - அதிகார்யங்கங்களுக்கும் உபலக்ஷணம். பாகவதஸ்பர்ஶத்தாலேயென்ன வேண்டியிருக்க, பகவத்ஸ்பர்ஶத்தாலேயென்றது - பாகவதர்களுக்கு பகவானோடுண்டான அவிநாபாவஸம்பந்தத்தைப்பற்றவென்று கருத்து. ஸர்வேஷாமிதி - ''ஸர்வேஷாம் கில தர்மாணாமுத்தமோ வைஷ்ணவோ விதி꞉ । ரக்ஷதே பகவாந் விஷ்ணுர்பக்தாநாத்மஶரீரவத்'' இதிமோக்ஷதர்மே. ஸர்வேஷாம் தர்மாணாம் மத்யே வைஷ்ணவோவிதிருத்தம꞉, பகவாந் விஷ்ணுர்ப்பக்தாநாத்மஶரீரவத்ரக்ஷதே இத்யந்வய꞉; விதி꞉ - தர்ம꞉; இது உத்தமமானபடியென்? என்ன; ஸர்வேஶ்வரன் ஸ்ரீவைஷ்ணவர்களை ''ஜ்ஞாநீ த்வாத்மைவ மே மதம்'' என்று - தனக்குதாரகமாகக்

கைக்கு யோக்யதையுடையாரைத் திருத்தியும், திருந்தாதாரை உபேக்ஷித்தும், இப்படி
பாகவத ஸம்ருத்திக்கு மங்களாஶாஸநம் பண்ணுகிறார்.

முதற்பாட்டு.

பொலிகபொலிகபொலிக போயிற்றுவல்லுயிர்ச்சாபம்
நலியும்நரகமும்நைந்த நமனுக்கிங்கியாதொன்றுமில்லை
கலியுங்கெடுங்கண்டுகொண்மின் கடல்வண்ணன்பூதங்கள்மண்மேல்
மலியப்புகுந்திசைபாடி ஆடியுழிதரக்கண்டோம்.

ஆ.—(பொலிக.) ஸர்வாத்மாக்களுடைய ஸர்வபாபங்களும் போய், தத்பல
பூமியான நரகங்களும் தத்பலயாதநாரஹிதங்களாய், தத்பலாநுபவப்ரயோஜகனான யமனும்
ஸ்வகர்த்தவ்யரஹிதனாய், இனிமேலும் ரௌரவாதிநரகயாதநாஸ்பதமான அவைஷ்ணவ
ஜந்துக்கள் உளவாகாதபடியாகவும், எம்பெருமானுடைய அபரிமித காம்பீர்யௌதார்யாதி
கல்யாணகுணாநுபவ லப்தஸத்தாகரான ஸ்ரீவைஷ்ணவர்கள் இந்தஜகத்தெல்லாம் நிறை
யும்படி வந்து புகுந்து, எம்பெருமானுடைய ஸ்வரூபரூபகுணவிபவ சேஷ்டிதங்களைப்
பாடி யாடி வர்த்திக்கக் காணப்பெற்றோம்; இந்த ஸம்ருத்தி நித்யஸித்தையாகவேணு
மென்கிறார்.

ஒ.—முதற்பாட்டில், ஸ்ரீவைஷ்ணவஸம்ருத்தியைக்கண்டு மங்களாஶாஸநம்
பண்ணுகிறார்.

[பொலிகவென்று தொடங்கி] - ஆத்மாக்களை மிகவும் நலியக்கடவ பாபம்
போயிற்று; கர்மாநுகுணமாக நலியக்கடவ நரகம் கோப்புக்குலைந்தன; ஸம்ஸாரத்தில்
யமனுக்கு ஒருஸாத்யம் இல்லாதபடியாயிற்று; கலியுகந்தான் முதலிலே நசிக்கும்;
இத்தைக்கண்டு கொள்ளுங்கோள்; எம்பெருமானுடைய அழகுக்கும் குணங்களுக்கும்
தோற்றிருக்கும் ஸ்ரீ வைஷ்ணவர்கள் இஜ்ஜகத்தெல்லாம் நிறையும்படி வந்து புகுந்து
ஹர்ஷப்ரகர்ஷத்தாலே எம்பெருமானுடைய குணசேஷ்டிதாதிகளைப்பாடி ஸஞ்சரிக்கக்
கண்டோம்; இஸ்ஸம்பத்து மேன்மேலும் ஸம்ருத்தமாகவேணும்.

ப.—முதற்பாட்டில், நிரவதிக மாஹாத்ம்யயுக்தனான ஸர்வேஶ்வரனாலே
லப்தஸத்தாகரான பாகவதருடைய ஸம்ருத்தியைக் கண்டு மங்களாஶாஸநம்பண்ணுகிறார்.

கடல் - ரத்நாகரமாய் தர்ஶநியமான கடல்போலே, வண்ணன் - குணவைலக்ஷ
ண்யத்தாலும் ரூபவைலக்ஷண்யத்தாலும் அபரிச்சிந்நமாஹாத்ம்யனான ஸர்வேஶ்வரனாலே,
பூதங்கள் - (லப்தஸ்வரூபஸத்தாகரான) பாகவதரானவர்கள், மண்மேல் - (பகவத்குணங்

கொள்ளுகையாலே. பகவத் ஸம்பந்தமுண்டானால் தேசகாலங்களுக்கு நன்மையுண்டென்று சொல்லு
கையாலே, இந்த ஸம்பந்தமில்லாதபோது எல்லாம் வ்யர்த்தமாமென்று அருளிச்செய்தது - இத்திருவாய்
மொழியிலே உக்தமன்றிக்கேயிருந்தாலும், ப்ரதிகோடித்வேந அர்த்தாத் ஸித்தம். "தொழுதுதொழுது
நின்றார்த்தும்" என்றத்தைப்பற்ற - திருவடிகளிலே விழுந்தும்என்றது. திருத்தியும், உபேக்ஷித்து
மென்றது - "தொழுதுய்மினீரே," "உய்யும்வகையில்லை" என்றத்தைப்பற்ற.

களுக்கு மேட்டுமடையான) பூமியிலே, மலிய - ஸம்ருத்தமாம்படி, புகுந்து - வந்துபுகுந்து, (பகவத்குணங்களை), இசை - இசையிலே, பாடி - பாடி, ஆடி - (ஹர்ஷப்ரகர்ஷத்தாலே) ஸஸம்ப்ரமந்ருத்தம்பண்ணி, உழிதர - எங்கும்வ்யாபரிக்க, கண்டோம் - கண்டோம்; (ஆதலால்), வல்லுயிர்ச்சாபம் - ஆத்மாவுக்கு வந்தேறியாய் அநுபவவிநாஶ்யமாய் ப்ரபலமான அவித்யாதிரூபமானசாபமானது, போயிற்று - நஶித்துப்போயிற்று; (அவித்யாகர்மாதிகள் போகையாலே), நலியும் - தத்பலமாய் நலியும்; நரகமும் - நரகங்களும், நைந்த - சிதிலமாயிற்றின; (ஆதலால்), நமனுக்கு - தந்நிர்வாஹகனான யமனுக்கு, இங்கு- இந்தவிபூதியில், யாது - நிர்வாஹ்யமாயிருப்பதேதேனும், ஒன்றும் - ஒரு அம்ஶமும், இல்லை - இல்லை; கலியும் - இதுக்கெல்லாம் அடியான காலதோஷமும், கெடும் - நஶியாநிற்கும்; கண்டுகொண்மின் - "இது 'கலௌ க்ருதயுகம் தஸ்ய' என்கிறபடியே கார்த்தயுகதர்மவ்ருத்திகளான பாகவதஸந்நிதியாலே வந்தது" என்னுமிடம் ப்ரத்யக்ஷித்துக் கொள்ளுங்கோள்; பொலிக பொலிக பொலிக-இது ஸம்ருத்தமாகவேணும், த்ரிராவ்ருத்தி- "ஶாந்திஶ்ஶாந்திஶ்ஶாந்திஃ" என்கிற ஶ்ருதிச்சாயையாலே. பூதஶப்தம் நபும்ஸகமாகையாலே அஃறிணை.

ஈடு.—முதற்பாட்டில் ஸ்ரீவைஷ்ணவ ஸம்ருத்தியைக் கண்டு மங்களாஶாஸநம் பண்ணுகிறார்.

[பொலிக] - ஸம்ருத்தமாயிடுக. முக்காலருளிச்செய்கிறது - வைதிகமான மங்களாஶாஸநமும் "ஶாந்திஶ்ஶாந்திஶ்ஶாந்திஃ" என்று முக்கால்சொல்லுகையாலே. [போயிற்று வல்லுயிர்ச்சாபம்]-உயிரினுடைய வலியபாபமானது போயிற்று. பாபமாகிறது-அவித்யா கர்மவாஸநாருசிகள்; இத்தை - ஶாபமென்கிறது, அநுபவித்தாலல்லது போகாமையாலும், ஆகந்துகமாகையாலும். கர்மம் போகையாலே, கர்மாநுகுணமாக அநுபவிப்பிக்கும் நரகமும் கோப்புக்குலைந்து கட்டழிந்துபோயிற்று. சிறைகிடப்பாரில்லாமையாலே சிறைக்கூடம் பேணவேண்டாவிறே. கர்மமும் கர்மாநுபவ ஸ்தாநமும் போகையாலே, அதுக்கு நிர்வாஹகனான யமனுக்கும் இந்த ஸம்ஸாரத்தில் ஸாத்யமொன்றுமில்லாதபடியாயிற்று. 'நமன்தமராலாராயப்பட்டறியார்', "ப்ரபுரந்யேஷாம் ந வைஷ்ணவானாம்". அவன்முக்தப்ராப்யபூமியிலே யாராயில்ஆராயுமித்தனை; இங்கு ஓரவகாஶமில்லை யென்கை. அபாபனான தர்மபுத்ரனுக்கு ஒரு பாபலேஶத்தாலே நரகதர்ஶநம் பண்ணவேண்டிற்று, அதுவுமில்லையிறே இவர்களுக்கு. [கலியும்கெடும்] - அதுக்கெல்லாம் அடியான காலதோஷமும் போயிற்றதே. கலிக்கடைத்தகாலமாயிருக்க, போகையாவதென்னென்னில் - [கண்டுகொண்மின்] - அநுபூதார்த்தத்திலும் ஸம்ஶயமுண்டோ. இவையடங்கப்போகைக்கு அடியென்? என்ன - [கடல்வண்ணன்இத்யாதி] - பாகவத ஸஞ்சாரமில்லாமையினாலே காலதோஷமுண்டாகிறது, அவர்கள் ஸஞ்சாரமுண்டாகையாலே கலி துர்ப்பலமாயிற்று. [கடல்வண்ணன் பூதங்கள்] - பூதங்களென்கிறது - "பூஸத்தாயாம்" என்று தாதுவாகையாலே, அவன் ஸத்தையே ஸத்தையாயநுகையாலே. அவன் வடிவழகை யநுபவித்து அத்தாலே லப்தஸத்தாகராயிருக்கும் ஶ்ரீவைஷ்ணவர்கள். [மண்மேல்] - அழகுக்குத் தோற்றிருப்பார் உள்ளது பரமபதத்திலேயாயிருக்க, அதுக்கு ஸம்பாவனையில்லாத பூமியிலே. அவர்களுக்குஅளவென்னென்னில்-[மலியப்புகுந்து]-"அடியார்கள் குழாங்கள்" என்னும்படிநெருங்கப்புகுந்து. [இசைபாடியாடி]-"ஸாமகாயந்நாஸ்தே" என்னும்படியே

பாடி இருந்தவிடத்தில் இருக்ககமாட்டாதே ஆடி. [ஊழிதரக்கண்டோம்] - ஸஞ்சரிக்கக் கண்டோம். போயிற்றுவல்லுயிர்ச்சாபம்,நலியும் நரகமும் நைந்த, நமனுக்கிங்கியாதொன்று மில்லை, கலியுங்கெடும் கண்டுகொண்மின் - பொலிக பொலிக பொலிக.

ஈடு.—முதற்பாட்டு. ஸ்ரீவைஷ்ணவ ஸம்ருத்தியைக் கண்டு மங்களாஶாஸநம் பண்ணுகிறார்.

[பொலிக பொலிக பொலிக] - ஸ்ம்ருத்தமாக வேணும், ஸம்ருத்தமாக வேணும், ஸம்ருத்தமாகவேணும். "*ஶாந்திஶ்ஶாந்திஶ்ஶாந்திঃ*" என்று வைதிகமான மங்களாஶாஸநங்கள் முக்கால் சொல்லக்கடவதாயிருக்குமிறே. "முற்பட பகவத் ஸம்ருத்திக்கு மங்களாஶாஸநம் பண்ணி, பின்னை பாகவத ஸம்ருத்திக்கு மங்களா ஶாஸநம் பண்ணவேண்டாவோ? பெரியாழ்வாரைப்போலே" என்ன, "அப்படியே யன்றோ செய்தது, * வீற்றிருந்தேழுலகிலே - பகவத்ஸம்ருத்திக்கு மங்களாஶாஸநம் பண்ணி ஞர் கண்டீரே; பின்னை இதிலே - பாகவதஸம்ருத்திக்கு மங்களாஶாஸநம் பண்ணு கிறார்" என்று ஜீயர் அருளிச்செய்தார். பரமாசார்யரான இவரைப் பின்சென்றா ரித்தனைகாணும் பெரியாழ்வாரும். [போயிற்றுவல்லுயிர்ச்சாபம்] - உயிரினுடைய வலிய ஶாபம் போயிற்றது. ஶாபோபஹதரைப்போலே அநுபவித்தாலல்லது நஶியாமையாலே, பாபத்தை - ஶாபமென்கிறது. ஆத்மாவைப் பற்றிக்கிடக்கிற அவித்யாதிகள் போயிற்றது. [நலியும்நரகமும்நைந்த] - கர்மாநுகூலமாக சேதநரைக்கொண்டுபோய் நலியக்கடவதான நரகங்களும் ஶிதிலமாயிற்றின. நரகாநுபவத்துக்கு ஆளில்லாமையாலே, நரகங்களும் கட்டி மேய்க்கை தவிர்ந்து கோப்புக்குலைந்தது. அவ்விடங்களுக்கு அதிகாரிகளா யிருக்குமவர்கள் செய்ததென்? என்னில்,-[நமனுக்கிங்கியாதொன்றுமில்லை] - யமனும் இனிப்பரமபதத்திலே போய் ஆராயில் ஆராயுமத்தனை; தனக்கு அடைத்த இந்நிலத்தில் ஆராயலாவதொன்றில்லை. [யாதொன்றுமில்லை] - தர்மபுத்ரனுக்கும் ஒருகால் நரகதர்ஶநம் பண்ணவேண்டிற்றிறே, அதுக்கும் ஆளில்லை. இவையெல்லா முண்டாவது க்ருதயுகத்திலேயன்றோ, கலியுகத்

---

*முதற்பாட்டு - **பொலிகபொலிக** இத்யாதி. **ஸ்ரீவைஷ்ணவஸம்ருத்தியை** என்றது - "கடல்வண்ணன்பூதங்கள்" இத்யாதியைப்பற்ற. "பொலிகபொலிகபொலிக" என்றத்தைப்பற்ற, **மங்களாஶாஸநம்பண்ணுகிறார்** என்றது.*

***பெரியாழ்வாரைப்போலே**யென்ன, நம்பிள்ளையென்று கூட்டிக்கொள்வது. வீற்றிருந்தேழுல கிலே "போற்றி" என்று - **பகவத்ஸம்ருத்திக்கு மங்களாஶாஸநம்பண்ணினார்** என்றபடி. பெரியாழ் வாரைப்போலே யென்று - பின்பு அவதரித்த பெரியாழ்வாரைப் பூர்விகரான நம்மாழ்வாருக்கு த்ருஷ் டாந்தமாகச் சொல்லக்கூடுமோ? என்ன; அங்ஙனல்ல, பெரியாழ்வாரே நம்மாழ்வாரைப் பின்சென்றா ரென்கிறார் - **பரமாசார்யரான** இத்யாதி. பாபத்துக்கு - ஶாபஶப்தவாச்யத்வங்கூடுமோ? என்ன, லக்ஷணயா கூடுமென்கைக்காக, ஶக்யஸம்பந்தத்தை யுபபாதிக்கிறார் - **ஶாபோபஹதரை** இத்யாதி. ஜாத்யேகவசநமாக்கி, ஶாபத்துக்கு - அவித்யாதிகளாக அர்த்தாந்தரமாதல், விவரணமாதல் - **ஆத்மாவை** இத்யாதி. "உயிர் - வல் - சாபம் - போயிற்று" - **ஆத்மாவைப்பற்றிக்கிடக்கிற வலிய அவித்யா**கர்மாதி ரூப ஶாபமானது நஶித்துப் போயிற்றென்று ஶப்தார்த்தம். "நரகம்" என்றத்தை - ஜாத்யேகவசநமாக்கி அருளிச்செய்கிறார் - **நரகங்களும்** என்று. பாபம்போனமாத்ரத்தாலே நரகங்களுக்கு ஸ்வரூபேண நைதில்யங்கூடுமோ? என்ன **நரகாநுபவத்துக்கு** இத்யாதி. **கட்டிமேய்க்கை** - பரிபாலநம். **கோப்பு** கட்டு, ஶவரணை யென்றபடி. "இங்கு" என்றதுக்கு ப்ரதிகோடித்வேநோபஸ்திதமானத்தை அருளிச் செய்கிறார் - **யமனும்** இத்யாதி. ஶப்தார்த்தம் - **தமக்கு** இத்யாதி. **அதுக்கும்** - தர்மபுத்ரனைப்போலே*

திலே யுண்டாமோ பின்னை? என்னில்,—[கலியும்கெடும்] - அந்தக்கலிகாலமும் நசித்துப் போம். கீழ்ச்சொல்லிக்கொண்டு போந்தவற்றை - பூதகாலபரமாக்கி, கலியும்கெடுமென்ற இத்தை - பவிஷ்யத்தாக்கி நிர்வஹிக்கவுமாம். அன்றிக்கே, இவையுமெல்லாம் போயிற்றின, அதுவும் நசித்ததென்றே யிருக்க அமையுமென்று, இங்ஙனே ஏகரீதியாகச்சொல்லவுமாம். கலிக்கடைத்த காலமாயிருக்கச்செய்தே - கெடுமாவதென்? என்னில்,—[கண்டு கொண்மின்] - அநுபவத்தாலே யறியுமதுக்கு உபதேசம் வேணுமோ? நீர் “இது நசிக்கும்” என்று சொல்லுகிறது என்கொண்டு? என்னில்,-[கடல்வண்ணன் இத்யாதி] - பாகவதஸஞ்சார மில்லாமையிறே இப்பொல்லாங்கு உண்டாகைக்கு அடி, அதுஉண்டானபின்பு இது நிற்குமோ. “நதத்ர ஸஞ்சாரிஷ்ணவ:”. [கடல்வண்ணன்பூதங்கள்] - பூதங்களென்கிறது - (“ஸத்தாயாம்” என்று தாதுவாகையாலே), அவன் ஸத்தையே ஸத்தையாய் அறுகையாலே. அவனுடைய ஸ்ரமஹரமான வடிவழகை அநுஸந்தித்து அத்தாலே தங்கள்ஸத்தையாம்படி யிருக்குமவர்கள். அவனழகிலே தோற்றிருப்பாருள்ளது நித்யவிபூதியிலேயன்றோ? என்னில், - [மண்மேல்] - இங்கேயென்று படியெடுத்துக்காட்டுகிறார். பகவதநுபவத்துக்கு மேட்டுமடையான ஸம்ஸாரத்திலே, மருபூமியில் தண்ணீர்போலே எங்கேனும் ஒருவரிருவர்உண்டாமத்தனையன்றோ? என்ன,-[மலியப்புகுந்து] “அடியார்கள் குழாங்கள்” என்கிறபடியே, நெருங்கப்புகுந்து. [இசைபாடி இத்யாதி] - ப்ரீதிப்ரகர்ஷத்தாலே பாடுவது, உடம்புஇருந்தவிடத்திலிராதே ஆடுவதாய்க்கொண்டு, யமாதிகள் தலைமேலே அடியிட்டுச் சஞ்சரிக்கக்கண்டோம். உழிதருகை - நிர்ப்பயமாக எங்கும் ஸஞ்சரிக்கை. (கடல்வண்ணனென்றுதொடங்கி, உழிதரக்கண்டோம்) - போயிற்று வல்லுயிர்ச்சாபம், நலியும் நரகமும் நைந்த, நமனுக்கு இங்குயாதொன்றுமில்லை, கலியுங்கெடுங் கண்டுகொண்மின் - பொலிக பொலிக பொலிக. (க)

ஒருகால் நரகதர்ஸநம்பண்ணுகைக்கும். “கலியுங்கெடும்” என்றதுக்கு - பவிஷ்யத்காலபரமாகவும், பூதகாலபரமாகவும் யோஜநாத்வயம். பவிஷ்யத்கால பரமானபோது, “கெடும்” - போம், போகப்புகுகிற தென்றபடி. பூதகாலபரமானபோது, “கேடும்” - கெட்டதென்றபடி. ஏகரீதியாக - “போயிற்று, நைந்த” என்கிற பதங்களோடே ஏகரீதியாக. பாகவதசஞ்சார முண்டானல் பொல்லாங்குகள் போமோவென்ன-பாகவதசஞ்சாரம் இத்யாதி. “யத்ராஷ்டாக்ஷரஸம்ஸித்தோ மஹாபாகோ மஹீயதே । நதத்ர ஸஞ்சாரிஷ்ணூநிவ்யாதிதுர்ப்பிக்ஷதஸ்கரா:”. வ்யாதிதுர்ப்பிக்ஷதஸ்கரா: என்றது - திருமந்த்ரத்தில் த்ருதீயபதோக்தமான பகவதேகபோகத்வ விரோதியான விஷயப்ராவண்யத்தையும், மத்யமபதோக்தமான பகவதேகோபாயத்வ விரோதியான ஸ்வரக்ஷணேஸ்வாந்வயமடியாக வருகிற உபாயதுர்ப்பிக்ஷத்தையும்,ப்ரதமபதோக்தமான பகவதநந்யார்ஹஸேஷத்வ விரோதியான ஆத்மாபஹாரமாகிற தஸ்கரத்தையும் சொல்லுகிறது.யத்வா, நாட்டில் விளைகிற வ்யாத்யாதிகளைச் சொல்லவுமாம். இங்கே - “மஹாத்மாக்களுண்டாயிருக்கச்செய்தே வ்யாதிதுர்ப்பிக்ஷதஸ்கரங்களுண்டாகைக்கு அடியேது” என்ன, “ஸ்வதர்மஜ்ஞாநவைராக்யஸாத்யபக்த்யேககோசரா: । நத்ரஸ்ரீநிவஸந்த்யேதே ஸுஜீவிக்ஷம் ஸ்ரமணஸ்தலம்” என்று அருளிச்செய்வர். “பூதங்கள்” என்கிறவிடத்திலே - “ஸத்தாயாம்” என்றதிலே நோக்கு. படி - பூமி, மாதிரியும். “மண்மேல்” என்றத்தையுங் கூட்டிக்கொண்டு “மலியப்புகுந்து” என்றதுக்கு அவதாரிகை- பகவதநுபவத்துக்கு இத்யாதி. கடல்வண்ணன் பூதங்கள் தொடங்கி, கண்டோம், போயிற்று வல்லுயிர்ச் சாபந் தொடங்கி, கண்டுகொண்மின், பொலிகபொலிகபொலிக இத்யந்வய:. (க)

இரண்டாம் பாட்டு.

கண்டோங்கண்டோங்கண்டோம் கண்ணுக்கினியனகண்டோம்
தொண்டீரெல்லீரும்வாரீர் தொழுதுதொழுதுநின்றார்த்தும்
வண்டார்தண்ணந்துழாயான் மாதவன்பூதங்கள்மண்மேல்
பண்தான்பாடிநின்றாடிப் பரந்துதிரிகின்றனவே.

ஆ.—(கண்டோம்). கண்டோம் கண்டோம் கண்டோம், கண்ணுக்கினியன கண்டோம், தொண்டீரெல்லீரும்வாரீர், தொழுதுதொழுது நின்றார்த்தும். அது என்? என்னில்:— வண்டார்தண்ணந்துழாயான் மாதவன்பூதங்கள் மண்மேல் பண்தான்பாடி நின்றாடிப் பரந்து திரிகின்றனவென்கிறார்.

ஒ.—இரண்டாம்பாட்டில், ஸ்ரீவைஷ்ணவ ஸம்ருத்தியைக் கண்ட ஆழ்வார் அநுகூலரெல்லாரும் வாருங்கோள், இஸ்ஸம்ருத்தியை அநுபவிக்க என்கிறார்.

[கண்ணுக்கினியன கண்டோம்] - கொடுவுலகங்கண்டு முன்பட்டநோயெல்லாம் தீரக்கண்ணுக்கு இனிய வைஷ்ணவர்களைக் கண்டோம். [தொண்டீர்] - சபலமுடையீர். [வண்டாரென்று மேலுக்கு] - ஸ்ரீயஃபதியினுடைய போக்யதையிலே ஈடுபட்டிருக்கும் ஸ்ரீவைஷ்ணவர்கள் பகவத்கதைக்கு அடைவில்லாத ஸம்ஸாரத்தில் பகவத்குணாநுஸந்தாநபலாத்காரத்தாலே பண்களைப் பாடிக்கொண்டு எங்கும்பரந்து திரியாநின்றார்கள்.

ப.—அநந்தரம், பாரத்வப்ரகாசகமான ஸ்ரீயஃபதித்வாதிகளையுடைய ஸர்வேஸ்வரன்குணங்களிலே வித்தரான பாகவதரைக் கண்டுகந்து, மங்களாசாஸநம்பண்ண வாருங்கோளென்று அநுகூலவர்க்கத்தைக் கூட்டிக்கொள்ளுகிறார்.

வண்டு - வண்டுகளாலே, ஆர் - பூர்ணமாய், தண் அம் - செவ்வியையுடைத்தான, துழாயான் - திருத்துழாய்மாலையை யுடையனாய், மா - அவ்வழகையநுபவிக்கிற லக்ஷ்மிக்கு, தவன்-வல்லபனான ஸர்வேஸ்வரனுக்கு, பூதங்கள் - சேஷபூதரானவர்கள், மண்மேல் - (இந்தபோக்யதைக்கு நிலவரில்லாத) பூமியின்மேல், (அநுபவபரவசராகக்கொண்டு), பண்தான் - பண்மிகும்படி, நின்று-நின்று, பாடி-பாடி, ஆடி-(ப்ரேமபாரவஸ்யத்தாலே) ஆடி, பரந்து - எங்கும்பரந்து, திரிகின்றன - வ்யாபரியாநின்றார்கள், கண்ணுக்கு - நம்கண்ணுக்கு, இனியன-போக்யமான ஸம்ருத்திகளை, கண்டோம் - காணப்பெற்றோம்; கண்டோம் கண்டோம் கண்டோம்-ஒருகால்கண்டு விடுகையன்றியே, ‘‘[illegible]’’ என்று த்ரிராவ்ருத்திபோலே, நிரந்தராநுபவம் பண்ணப்பெற்றோம்; தொழுதுதொழுது-இந்த ப்ரீதிபரவசராய்க்கொண்டு நிரந்தராநுவ்ருத்திபண்ணி, நின்று-நின்று, ஆர்த்தும் - ஸஹர்ஷகோலாஹலம் பண்ணுவோம்; தொண்டீர்-பகவத்பாகவத விஷயத்தில் அநுகூலரானவர்களே! (இப்போகத்தையிழவாதே), எல்லீரும் - எல்லாரும், வாரீர் - வாருங்கோள்.

இ.—இரண்டாம்பாட்டில், ஸ்ரீவைஷ்ணவ ஸம்ருத்தியை அநுபவிக்கைக்கு அநுகூலரெல்லாரும் வாருங்கோள் என்கிறார்.

[கண்டோம்] - காணப்பெற்றோம். ப்ரீதிப்ரகர்ஷத்தாலே ஆவர்த்திக்கிறார். [கண்ணுக்கினியன கண்டோம்] - "காணிலுமுருப்பொலார்", "கொடுவுலகங்காட்டேல்" என்கிற ஸம்ஸாரத்திலே பாகவதர்களைக் கண்டு அநுபவிக்கப்பெற்றோம். "ஸுஹ்ருதஶீத நேத்ராஸ்ஸ்மிதாஸ் ஸஞ்சக்ஷுர்த்ருஶ்யதமாஸ்துவாநு । ஸதாவபரமஹம்ஸாவிஶேஷாத்ருஷ்டவ்யஸ ஸுஹ்ருதஹிதா:." [தொண்டீரெல்லீரும்வாரீர்] - "பெரியோரையொருகாலும் பிரிகிலேனே" என்னும் பாகவதவிஷயத்தில் சபலரெல்லாரும் திரளுங்கோள். திரண்டு செய்யப்புகுகிறதென்? என்ன, - [தொழுது தொழுது நின்றார்த்தும்] - மங்களாஶாஸநம்பண்ண வாருங்கோள். வீப்ஸையாலே அதுதானே ப்ரயோஜநமாயிருக்கை. [வண்டார் இத்யாதி] - தோள்மாலை யழகையும், பிராட்டியோட்டைச்சேர்த்தி யழகையும் தாரகமாகவிருக்கும் ஸ்ரீவைஷ்ணவர்கள். [வண்டார் தண்ணந்துழாய்] - வண்டுகள் படிகிற திருத்துழாய். [மண்மேல்] - "ஒண்டொடியாள் திருமகளும் நீயுமே" என்னும் தேசமொழிய, இதுக்கு விருத்தமான ஸம்ஸாரத்திலே. [பண்தான் இத்யாதி] - பகவதநுபவத்தால் வந்த ப்ரீதியாலே, பரப்ரேரிதராயன்றிக்கே தானே பண்களைப் பாடியாடி. [பரந்துதிரிகின்றனவே] - "ஸாமகாயந்நாஸ்தே" என்று இருந்தவிடத்தே சென்று அநுபவிக்குமவர்களை நாமிருந்தவிடத்தே அநுபவிக்கப்பெற்றோம். கண்டோம் கண்டோம் கண்டோம்.

ஈடு.—இரண்டாம் பாட்டு. இவ்வைஷ்ணவ ஸம்ருத்தியை அநுபவிக்கைக்கு அநுகூலரேல்லாரும் வாருங்கோ ளேன்கிறார்.

[கண்டோம் இத்யாதி] - காணப்பெற்றேம். ப்ரீதிப்ரகர்ஷத்தாலே - பலகாலும் சோல்லுகிறார். [கண்ணுக்கினியனகண்டோம்] - "கோடுவுலகங்காட்டேல்" என்று - அபாகவதரைக்கண்ட இன்னாப்புத்தீர, பாகவத ஸமுதாயத்தைக் காணப்பெற்றேம். [தோண்டீரேல்லீரும்வாரீர்] - பாகவதவிஷயத்தில் சபலராய், †"பேராளன்பேரோதும் பேரியோரை யோருகாலும் பிரிகிலேன்" என்றிருப்பாரடையத் திரளுங்கோள். "வாருங்கோள்" என்கிறது என்ன ப்ரயோஜநத்துக்கேன்னில்,—[தோழுதுதோழுது நின்றார்த்தும்] - ப்ரயோஜநத்துக்கு ப்ரயோஜநம் தேடவேணுமோ? கைமேலே ப்ரயோஜநமன்றே. வீப்ஸையாலே அதுதானேப்ரயோஜநமாயிருக்கிறது. ஆர்த்தும்-ஆர்த்துக்கோள்வோம். ஸஹர்ஷகோலாஹலம்

இரண்டாம்பாட்டு - கண்டோம் இத்யாதி. இவ்வைஷ்ணவஸம்ருத்தியை என்றது - "மாதவன்பூதங்கள்" இத்யாதியைப்பற்ற. "தொண்டீரெல்லீரும்வாரீர்" என்றத்தைப்பற்ற-அநுபவிக்

இனியன - இனியவஸ்துக்களை. கோடுவுலகங்காட்டேல் - க்லேஶோத்தரமான ஜகத்தை எனக்குக் காட்டாதொழியவேணும். இன்னாப்பு - வெறுப்பு. பாகவதஸமுதாயமென்றது - 'இனியன' என்ற பஹுவசநத்தைப்பற்ற. "தொண்டீர்" என்று - பாகவதபக்தரை விவக்ஷித்து அருளிச்செய்கிறார்-பாகவதவிஷயத்தில் சபலராய் என்று. பேராளன் இத்யாதி - ஸர்வாதிகனுடைய திருநாமங்களை ஸங்கீர்த்தநம்பண்ணுகிற மஹான்களை க்ஷணகாலமும் பிரியக்ஷமனல்லேன் இத்யர்த்த:. என்ன ப்ரயோஜநத்துக்கேன்னில் என்றதுக்கு உத்தரம் - "தொழுது" என்று. அதாவது - வேறொரு ப்ரயோஜநார்த்தமாக வன்று அழைக்கிறது, உத்தேஶ்யரான பாகவதர்களைத் தொழுகைக்காக வென்றபடி. ஆனால், பாகவதர்களைத் தொழுகைதானும் ஒரு ப்ரயோஜநத்துக்காகவாகவுங் கூடுமே, அதுக்காகவோ அழைக்கிறதென்னில்; அதுக்கு உத்தரம் - "தொழுது தொழுது" என்கிற வீப்ஸை. இந்த வீப்ஸைக்கு ப்ரயோஜநம் அருளிச்செய்கிறார்-ப்ரயோஜநத்துக்கு இத்யாதி. கைமேலே யென்றது - சாடு; அஞ்சலியும், ஹஸ்தகதமும். "ஆர்த்தும்" என்றதுக்கு அர்த்தம்-ஸஹர்ஷகோலாஹலம் இத்யாதி. வண்டார்-

---

† பெரியதிருமொழி-௬, ௭, ௯.

5—7

பண்ணுவோம். [வண்டார் இத்யாதி]-வண்டுகள் மாறாதபடியானசெவ்வித்துழாய்மாலையை யுடையனாய், ஶ்ரிய:பதியாகையாலேவந்த ஏற்றத்தையுடையனாயிருக்கிறவனுடைய ஸ்ரிய: பதித்வத்திலும் ஓப்பனையிலும் தோற்றிருக்கும் ஸ்ரீவைஷ்ணவர்கள், "ஒண்டொடியாள் திருமகளும் நீயுமே" என்னும்தேசமொழிய, விருத்தமான பூமியிலே, பரப்ரேரிதராயன்றிக்கே தங்கள் ப்ரீதிக்குப்போக்குவிட்டு, பண்மிகும்படிநின்று தாங்களேபாடி, அது இருந்தவிடத்தி லிருக்கவொட்டாமையாலே ஆடி, பரந்துதிரிகின்றன. கண்டோம் கண்டோம் கண்டோம் கண்ணுக்கினியனகண்டோம் தொண்டீரேல்லீரும் வாரீர் தொழுதுதொழுது நின்றார்த்தும்.

மூன்றாம் பாட்டு.

திரியுங்கலியுகம்நீங்கித் தேவர்கள்தாமும்புகுந்து
பெரியகிதயுகம்பற்றிப் பேரின்பவெள்ளம்பெருகக்
கரியமுகில்வண்ணனெம்மான் கடல்வண்ணன்பூதங்கள்மண்மேல்
இரியப்புகுந்திசைபாடி எங்குமிடங்கொண்டனவே.

ஆ.—(திரியும்.) வைஷ்ணவதர்ம விபர்யயஹேதுவான கலியுகம் நீங்கி,
ஸர்வகாலமும் கலியுகாத்ய வ்யவஹிதமாய்க்கொண்டு கேவல க்ருதயுகமேயாய்ச் செல்லும்
படியாகவும், *அயர்வறுமமரர்களும் புகுந்து பேரின்பவெள்ளம் பெருகும்படியாகவும்,
கரியமுகில்வண்ண னெம்மான் கடல்வண்ணன் பூதங்கள் மண்மேல் இரியப்புகுந்து இசை
பாடி எங்கும் இடங்கொண்டன; இவர்களைத் தொழுது தொழுது நின்றார்த்தும்,
தொண்டீரெல்லீரும் வாரீ ரென்கிறார்.

ஓ.—மூன்றாம்பாட்டில், *அயர்வறுமமரர்களுக்கும் புகுந்து பரிமாறலாம்படி
ஸம்ஸாரமடைய வைஷ்ணவர்களே யாயிற் றென்கிறார்.

[திரியுமென்று தொடங்கி] - ஸகல பதார்த்தங்களும் ஸ்வஸ்வபாவத்தைவிட்டு
அந்யதாவாகக்கடவதான கலியுகம் நீங்குவதும் செய்து விலக்ஷணரான அயர்வறுமமரர்
களும் வந்துபுகுந்து கேவல வைஷ்ணவ தர்மமே நடையாடக்கடவதாய் யுகாந்தர வ்யவ
தானமின்றிக்கேயிருக்கும் க்ருதயுகம்வந்து ப்ரவேசித்து பகவதநுபவத்தாலே நிரதிஶயா
நந்தம் பெருகும்படி. [கரியமுகில்வண்ண னெம்மானென்று தொடங்கி] - காளமேக நிப
மானவடிவழகாலே என்னைத்தோற்பித்து அடிமைகொண்ட கடல்வண்ணனழகிலே என்
னைப்போலே தோற்று அடிமையான ஸ்ரீவைஷ்ணவர்கள் பூமியெல்லாம் ஆரவாரப்படும்
படி புகுந்து இசை பாடி எங்கும் தங்களுக்கு ஸ்த்தானமாகக் கொண்டார்கள்.

ப.—அநந்தரம், ஆஶ்ரிதார்த்தமான வடிவையுடையனான ஸர்வேஶ்வர
னுடைய ஸௌந்தர்யாதிகளில் வித்தரான பாகவதர், இந்த விபூதிஸஞ்சாரிகளுக்கும் நிலமாம்
படி ஸர்வப்ரதேசத்திலும் அவஷ்டம்பித்தார்க ளென்கிறார்.

ஆர்தல் - பொருந்துதலாகையாலே மாறாதபடியானவென்றது. "பண்தான்பாடி" என்றதுக்கு பாவம் - பாப்ரேரிதராய் இத்யாதி. பண்தான் - தானென்றது - தாமென்றபடியாய், தாங்களே பண்பாடி யென்று பொருள். வண்டார்தண்ணந்துழாயான் என்றுதொடங்கி, கண்டோம் கண்டோம் இத்யாதிக்கு முன்னே கூட்டிக்கொள்வது; (ஆர்த்தும்) இத்யந்வய இதிஶேஷ:. (உ)

திரியும் - சேதநருடைய ஸ்வபாவங்கள் அதரோத்தரமாம்படியான, கலியுகம் - கலியுகம், நீங்கி - கடக்கப்போய், தேவர்கள் - (அஸ்கலிதஜ்ஞாநௌஜ்ஜ்வல்யத்தையுடைய) ஸூரிகளும், தாமும் - ஸ்வயமேவ, புகுந்து - ப்ரவேஶித்து, பெரிய - (யுகாந்தரவிச்சேத மில்லாதபடி) ஏகாகாரமாய்வளர்ந்த, கிதயுகம் - க்ருதயுகமானது, பற்றி - கைக்கொண்டு, பேரின்பவெள்ளம் - பகவதநுபவஜநிதமான அபரிச்சிந்நாநந்த ஸாகரம், பெருக - மேன் மேலும் பெருகும்படியாக, கரிய - ஶ்யாமளமான, முகில் - மேகம்போலே அநுபாவ்ய மான, வண்ணன் - வடிவை யுடையனுய்க் கொண்டு, எம்மான் - எனக்கு ஸ்வாமியாய், கடல்வண்ணன் - அநவதிககுண ஸாகரனுன ஸர்வேஶ்வரனுடைய, பூதங்கள் - ஸ்வபாவங் களிலே வித்தரான பாகவதர், மண்மேல் - இப்பூமியிலே, இரிய - ப்ரீதிகோலாஹலம் பிறக்கும்படி, புகுந்து - ப்ரவேசித்து, (ஹர்ஷத்தாலே), இசை - கீதங்களை, பாடி - பாடிக் கொண்டு, எங்கும் - ஸர்வப்ரதேஶங்களும், இடம் கொண்டன - தங்களுக்கிடமாம்படி கைக்கொண்டார்கள். தொழுது தொழுது நின்றார்த்தும் - வாரீரென்று அந்வயம்.

இ.—மூன்றும்பாட்டில், *அயர்வறுமமரர்களுக்கும் புகுந்து பரிமாறலாம்படி ஸம்ஸாரமடைய வைஷ்ணவர்களே யாயிற் றென்கிறார்.

[திரியும் கலியுகம் நீங்கி] - "ஹவிஷ்யத்யயரோத்தரம்" என்கிறபடியே, பதார்த்தங்களினுடைய ஸ்வபாவம் மாறுடியிருக்கும் கலிஸ்வபாவம் போய். க்ஷுத்ர தேவதைகள் பரராகவும் பரதேவதை அபரனுகவும் கடவதாயிறே இக்கால மிருப்பது. [தேவர்கள் தாமும் புகுந்து] - தேவர்களென்கிறது - ஆக்கரான இந்த்ராதிகளையன்று, இவர்களுடைய லோகத்தைக் கண்டால் ஶங்கைபண்ணும் நித்யஸூரிகளும் புகுந்தார்கள். "வாஸுதேவேதிநாமாநி-தஸ்யாஜநாயோகோத்ரயகேவே ஸாதிகம்வம்"

என்னக்கடவதிறே. [பெரியகிதயுகம்பற்றி] - யுகாந்தரவ்யவதாநமின்றிக்கே யொரு போகியான க்ருதயுகம் ப்ரவேசித்து, கேவலம் வைஷ்ணவ தர்மமே நடையாடக்கடவ காலமாகை. [பேரின்பவெள்ளம் பெருக] - பண்டே பெரிதான ஆநந்த ஸமுத்ரம், அதுக்குமேலே பெருகும்படி. அநந்தக்லேஶ பாஜநமான தேசத்திலே *அந்தமில்பேரின்ப முண்டாம்படியாயிற்று. [கரிய இத்யாதி] - காளமேகநிபஶ்யாமளமான வடிவழகாலே என்னை அடிமைகொண்டாற்போலே, அவ்வடிவிலே தோற்றிருக்கும் ஸ்ரீவைஷ்ணவர்கள். [மண்மேலிரியப்புகுந்து]-பரமபதத்திற்போலே பூமியெல்லாம் ஆரவாரப்படும்படிபுகுந்து, பகவதநுபவஜநித ப்ரீதியாலே பாடி, எங்கும் தங்களுக்கு ஸ்தாநமாகக் கொண்டார்கள். பாஹ்யகுத்ருஷ்டிகளுக்கு இடமில்லாதபடி ஶிஷ்யர்களும் ப்ரஶிஷ்யர்களுமாய் வ்யாபித் தார்கள். "ஹாகாரம்வாநரீகாதம்" என்கிறபடியே ப்ரதிகூலர்க்குஇடமில்லையாயிற்று.

ஈடு.—மூன்றும்பாட்டு. நித்யஸூரிகளுக்கும் புகுந்து பரிமாறலாம்படி ஸம் ஸாரமடைய ஸ்ரீவைஷ்ணவர்களேயாயிற்று என்கிறார்.

மூன்றும்பாட்டு - திரியும் இத்யாதி. நித்யஸூரிகளுக்கும் புகுந்தென்றது - "தேவர்கள் தாமும்புகுந்து" என்றத்தைப்பற்ற. "எங்குமிடங்கொண்டன" என்றத்தைப்பற்ற - ஸம்ஸாரம் இத்யாதி.

[திரியுங்கலியுகம்நீங்கி] - "ஹவிஷ்யந்த்யபராதாஶ்ச" என்கிறபடியே பதார்த்த ஸ்வபாவங்கள் மாறும்படியான கலிகாலமானது கழிந்தது. ஸத்வரஸ்வபாவமான காலமென்றுமாம். [தேவர்கள்தாமும்புகுந்து] - இவ்வருகில் ஆக்கரான இந்த்ராதிகளன்றிக்கே, அவர்கள் ஸந்தமும் பொறுக்கமாட்டாதே சர்த்திபண்ணும் நித்யஸூரிகளுமகப்பட "இவ்விடம் ஸம்ஸாரம்" என்று பாராதே புகுந்து. [பெரியகிதயுகம்பற்றி] - கலிகாலாதிகளால் வ்யவஹிதமல்லாத ஒருபோகியான க்ருதயுகத்தையுடைத்தாய். அன்றிக்கே,

---

ப்ர:—(திரியும் கலியுகம்)— மஹாபாரதே மோக்ஷதர்மே த்விசத்வாரிம்ஸே அத்யாயே ஸ்ரீ ஜநார்த்தநவசநம் பகவாந், "தத: கலியுகே ப்ராப்தே வர்த்தமாநே யுகபர்யயே। பஞ்சாநாம் நிர்ஹ்ருதாநாம் மோஹயிஷ்யாமி மாநவாந்। தத: ஸம்ஸாரம் விஷ்ணுஸ்ஸ்த்ரீணா: காஷாயவாஸிந:। தேஷாம் ஸர்வே தபோயுக்தா: உபதேக்ஷ்யந்தி வாசகா:। தேஷாம் ப்ருதக் ஸ்தம் ச ஸாக்ஷம் ச ஹவிர்ஹவ்யம் காஷ்யவந்। விப்ராஸ்ச க்ஷத்ரியாஸ்சைவ வைஸ்யாஸ்ச ஸர்வ ஏவ ச। ஸர்வே தாயாதஸ்தாஸ்ச ஸர்வே ஸத்யவிவர்ஜிதா। ஸர்வே க்ஷீணாஸ்தாஸ்ச ஸர்வே வீர்யாஸ்ச ப்ராஹ்மணா:। நிவ்ருத்தயஜ்ஞா ஸ்வாத்யாய

"திரியும்" என்றதுக்கு-"பால்திரிந்தது" என்னுமாப்போலே, பதார்த்தஸ்வபாவங்கள் மாறும் கலியுகமென்கிற முந்தின அர்த்தத்தை ப்ரமாணபூர்வகமாக அருளிச்செய்கிறார், ஹவிஷ்யந்தி இத்யாதி. மஹாபாரதே மோக்ஷதர்மே த்விசத்வாரிம்ஸே பகவான், "தத: கலியுகே ப்ராப்தே வர்த்தமாநே யுகபர்யயே। பஞ்சாநாம் நிர்ஹ்ருதாநாம் மோஹயிஷ்யாமி மாநவாந்" இத்யாரப்ய, "விப்ராஸ்ச க்ஷத்ரியாஸ்சைவ வைஸ்யாஸ்ச ஸர்வ ஏவ ச। ஸர்வே தாயாதஸ்தா ஸர்வே ஸத்யவிவர்ஜிதா। ஸர்வே க்ஷீணாஸ்தாஸ்ச ஸர்வே வீர்யாஸ்ச ப்ராஹ்மணா:। நிவ்ருத்தயஜ்ஞா ஸ்வாத்யாய விஷ்ணுபக்திவிவர்ஜிதா:। ஶூத்ரா: ஸ்வயம் தேஷ்வ யஜந்தே ப்ராஹ்மணாஸ்ஸ்வவர்ஜிதா:। க்ஷத்ரியா ஸ்த்ரீஷு ஸக்தா மாம்ஸபக்ஷணா: ப்ராயஸ:। ப்ராஹ்மணா ஸர்வயஜ்ஞேஷு ப்ரவர்த்ததி ந க்ஷத்ரியா:। ததா க்ஷயம் யாந்தி காஷாயவேஷ்டிதா:। ந ஸ்ருண்வந்தி பிதுர்வாக்யம் புத்ராஸ்து ஸதாஸதா:। நஷ்டதாநகலௌ ஜாதாநி ஹவிஷ்யந்த்யபராதாஶ்ச" இதி. ஸத்வரமாவது - போவதுவருவதாகை. "தாமும்" என்ற சப்தத்துக்கு பாவம் - இவ்வருகில் இத்யாதி. "தாமும்" என்ற சப்தம் - ப்ராதாந்யத்திலேயாய், அப்படி ப்ரஸித்தரானவர்களுமென்றபடி. ஆக்கரான - ஸ்ருஜ்யரான. சர்த்திபண்ணும் என்றது - ஹேயதையைப்பற்ற. புகுந்து - புகுரலாம்படி. "பெரியகிதயுகம்" என்றதுக்கு அர்த்தத்வயம்.—முந்தினது - கலிகாலாதிகளால் இத்யாதி; கலிகாலாதிகளால் என்றது - கலித்ரேதாத்வாபரங்களாலென்றபடி. க்ருதயுகத்தையுடைத்தாயென்றது- உடையராயென்றபடி. "பற்றி" என்றதுக்கு அர்த்தம் - உடைத்தாய் என்றது. யுகாந்தரவ்யவஹித மல்லாத - க்ருதயுகமென்று சொன்னது - "பெரிய" என்று தைர்க்யம் சொன்னதுக்குத் தாத்பர்யம். "பற்றி" என்கிறவிது - பூதங்களுக்கு விசேஷணம். வ்யவஹிதமல்லாத - க்ருதயுகமென்றது அபூதமென்று கருத்து. இந்த முதல்பக்ஷத்திலே அந்வயம்; தேவர்கள் தாமும்புகுரலாம்படியாகவும் - பேரின்பவெள்ளம் பெருகலாம்படியாகவும் - திரியும் கலியுகம் நீங்கி - பெரியகிதயுகத்தையுடையரான கரியமுகில்வண்ண னெம்மான் கடல்வண்ணன்பூதங்கள் மண்மேல் இசைபாடி யெங்கு மிடங்கொண்டனவென்று. "பெரியகிதயுகம்" என்றதுக்கு இரண்டாமர்த்தம் - அன்றிக்கே ஆப்பான்

ஆப்பான் "ஆதிஸ்ருஷ்டியில் க்ருதயுகத்தைக்காண்சொல்லுகிறது" என்பராம். [பேரின்ப வெள்ளம்பெருக] - *அந்தமில்பேரின்பவெள்ளம் இங்கே யுண்டாம்படி. [பெரியகிதயுகம் பற்றிப் பேரின்பவெள்ளம்பெருக] - ஆதி க்ருதயுகத்தைப்பற்றி நடுவேள்ள காலதோஷங்கள் தெரியாதபடி பேரின்பவெள்ளம் பெருகிற்று. "கிண்ணகம்இத்தைப்பற்றிப் பெருகிற்று" என்னக்கடவதிறே. [பற்றி] - கலியைப்போகப்பற்றி, க்ருதயுகத்தைப் புகுரப்பற்றியென்றுமாம். [கரியஇத்யாதி] - "மேகஸ்யாமம்" என்கிற வடிவைக்காட்டி என்னை எழுதிக்கொண்டாற்போலே எழுதிக்கொள்ளும் ஸ்ரமஹரமான வடிவிலே தோற்றிருக்கும் ஸ்ரீவைஷ்ணவர்கள். [மண்மேலிரியப்புகுந்து] - பெரிய ஆரவாரத்தோடே ஸஞ்சரிக்கலாவது நித்யவிபூதியிலேயிறே. ஸம்ஸாரத்திலே ஆரவாரத்தோடே புகுந்து. [இசைபாடி] - பகவதநுபவஜநித ப்ரீதியாலே பாடி. [எங்குமிடங்கொண்டனவே] - எங்கும் தங்களுக்கு

விப்ராஸ் ஸ்வகர்மநிரதா:। க்ஷத்ரியாஸ்ச ஸ்வதர்மே ப்ராஹ்மணாஸ்ரயநிரதா:। க்ஷத்ரி
ஹோத்ராஸ்ச ஸேவந்தி ஶாஸ்த்ரவர்த்மநா ப்ராஹ்மணஸ்ருதி । ப்ராஹ்மணாஸ்ச வ்ருத்தயஜ்ஞா:
ப்ரவர்த்தந்தி ந தக்ஷிணா:। தத்வ ப்ரஜா: ப்ரஜயம்யாந்தி காமதுகா வ்ருக்ஷா:
நஸ்யந்தி விதா:வாத்ராந்நஸம்ஷாநஸஹோதரா:। நஶ்யத்யா நகஷத்ராணி
ஹவிஷ்யத்யுயரோத்ரஸு॥".

(கரியமுகில் வண்ணன்) — ஸ்ரீமதயோத்யாகாண்டே ॥ அ௯ ॥ ராமேஷ்வ
க்ஷய விக்ருஷ்டம் வ்ருத்திமத்தாம் பௌராணாம் மேநாய:, "மேகஸ்யாமம்
மஹாபாஹும் ஸ்திரஸத்த்வம் த்ருடவ்ரதம் । கதா த்ரக்ஷ்யாமஹே ராமம் ஜகதஶ்ஶோக
நாஶநம்॥அ॥".

இத்யாதி. இப்போது, பெரியவென்று - ஶ்லாக்யமாய், யுகாந்தர ஸம்ஸர்க்க தோஷமின்றிக்கே ஶ்லாக்யமான ஆதித்ருஷ்டியில் க்ருதயுக மென்றபடி. இப்போது, "பற்றி" என்றது - தொடங்கி யென்றபடி. இந்தப் பக்ஷத்தி லந்வயம்; திரியும் கலியுகம் நீங்கி - பெரியகிதயுகந்தொடங்கிப் பேரின்பவெள்ளம் பெருகலாம்படியாகவும் - தேவர்கள்தாமும் புகுரலாம்படியாகவும் - கரியமுகில்வண்ண னென்று தொடங்கி மேலெல்லாம் யதாக்ரமம். தாத்பர்யம் - அந்தமில் இத்யாதி. ஆப்பான் நிர்வாஹத்திலே, கீழையுங்கூட்டி ஶப்தார்த்தம் - ஆதிக்ருதயுகத்தை இத்யாதி. த்விதீயார்த்தத்தில், "பற்றி" என்றால் - தொடங்கியென்று காட்டுமோ வென்ன, கிண்ணகம் இத்யாதி. "கலியுகம்நீங்கி" என்றத்தையுங் கூட்டி, "பற்றி" என்றதுக்கு மூன்றுமர்த்தம் - கலியைப்போகப்பற்றி இத்யாதி. போகப்பற்றி யென்றது - போயென்றபடியாய், "கலியுகம்நீங்கி" என்றத்தை விவரிக்கிறது. புகுரப்பற்றி யென்றது - வந்தென்றபடி. அதாவது - கலியுகம்போய் க்ருதயுகம்வந்தென்று மூன்றுமர்த்தம். ஆக, "பற்றி" என்றதுக்கு - உடையராயென்றும், தொடங்கியென்றும், வந்தென்றும் அர்த்தத்ரயங் கண்டுகொள்வது. போகப்பற்றி, புகுரப்பற்றியென்று - முழுச்சொல்லு. ஶ்ரமஹரத்வம் - ஶ்யாமத்வம். திருமேனிக்கு த்ருஷ்டாந்தம் சொல்லுகிறவிடத்திலே மேகமானாலும் ஸமுத்ரமானாலு மொன்றே யமைந்திருக்க, "முகில்வண்ணன்" என்றும், "கடல்வண்ணன்" என்றும் இரண்டையும் சொல்லுவானென்? என்கிற ஶங்கையிலே, முந்தினத்தை - த்ருஷ்டாந்தமாக்கி அருளிச்செய்கிறார் - மேகஸ்யாம இத்யாதி. எழுதிக்கொள்ளும் - அவர்களை எழுதிக்கொள்ளு மென்றபடி. இரிய - ஆரவாரித்து. "மண்மேல்" என்றதுக்கு பாவம்-பெரிய ஆரவாரத்தோடே இத்யாதி. ஶப்தார்த்தம் - ஸம்ஸாரத்திலே இத்யாதி. "எங்கும்" என்றதுக்கு பாவம் - பாஹ்ய இத்யாதி. "கொண்டன" என்ற பஹுவசநத்துக்குத் தாத்

ஸ்த்தாநமாகக் கொண்டார்கள். பாஹ்யகுத்ருஷ்டிகளுக்கு இடமில்லாதபடி ஶிஷ்யர்களும் ப்ரஶிஷ்யர்களுமாய் வ்யாபித்தார்கள். "ப்ராகாரம் வாநரீக்ருதம்" என்கிறபடியே ப்ரதிகூலர்க்கு இடமில்லாதபடி யாயிற்று. (௩)

ப்ர:—(எங்குமிடங்கொண்டனவே)—யுத்தகாண்டே ॥ ௪௧ ॥ ஸ்ரீவால்மீகி:, "தேஷாம் வேஷ்டஹிரண்யாபம் ஸர்வே வக்ஷ்யந்தி வாநரா:। ஶ்ருத்வா ச விவிதாம் நாம ஸாமர்த்யம் பாஹுவீர்யதா:॥ ௩௫ ॥ ராக்ஷஸாவிஷ்டம் ஜ்ஞாத்வா ராக்ஷஸம் ஜ்ஞாத்வா ஸ்வயம் ப்ரமாணம் ச ஸர்வேஷாம் ராக்ஷஸாநாம் ச தேஜஸா வீர்யவதே ॥ ௩௬ ॥ த்ருஷ்டம் ஹி ஸர்வம் வ்ருக்ஷாணாம் ப்ராகாரவஶிவாஸ்தம்। உத்த்ருத்ய ராக்ஷஸாநாம் ப்ராகாரம் வாநரீக்ருதம் ॥ ௩௭ ॥.

நான்காம் பாட்டு.

இடங்கொள்சமயத்தையெல்லாம் எடுத்துக்களைவனபோலே
தடங்கடற்பள்ளிப்பெருமான்தன்னுடைப் பூதங்களேயாய்க்
கிடந்துமிருந்துமெழுந்துங் கீதம்பலபலபாடி
நடந்தும்பறந்துங்குனித்தும் நாடகஞ்செய்கின்றனவே.

ஆ.—(இடங்கொள்.) ஸர்வஜகத்தையும் ஆக்ரமித்துக்கொண்டிருக்கிற வேத பாஹ்ய ஸமயங்களையெல்லா மெடுத்துக்களைவனபோலே, ஜகத்தெல்லாம் தடங்கடல் பள்ளிப்பெருமான் தன்னுடைப் பூதங்களேயாய், பரமபுருஷநிரவதிக கல்யாணகுணாம்ருத பாநத்தாலே மத்தராய்க் கிடந்துமிருந்துமெழுந்தும் கீதம்பலபலபாடி நடந்தும் பறந்தும் குனித்தும் இங்ஙனே தர்ஶநீயமான சேஷ்டிதங்களைப் பண்ணாநின்றார் - இவர்களைத் தொழுதுதொழுது நின்றார்த்தும், தொண்டீரெல்லீரும் வாரீ ரென்கிறார்.

ஒ.—நாலாம்பாட்டில், அவிசால்யமான பாஹ்ய ஸமயங்கள் எல்லாவற்றையும் வேரோடே பறிப்பாரைப்போலே எங்கும் வைஷ்ணவர்களேயாய் பகவத்குணாநுபவஜநித ஹர்ஷப்ரகர்ஷத்தாலே பாடியும் ஆடியும் களித்துத் திரியாநின்றார்க ளென்கிறார்.

[தடங்கடற்பள்ளிப் பெருமான்தன்னுடைப் பூதங்களேயாய்] - ஆஶ்ரிதாநுக்ரஹார்த்தமாகத் திருப்பாற்கடலிலே வந்து கண்வளர்ந்தருளின மஹாகுணத்தையுடையவனுக்கேபற்ற ஸ்ரீவைஷ்ணவர்களேயாய். நாடகம் - மநோஹாரிசேஷ்டிதம்.

பர்யம் - ஶிஷ்யர்களும் இத்யாதி. வ்யாபித்ததுக்கு த்ருஷ்டாந்தம் - ப்ராகாரம் இத்யாதி. "த்ருஷ்டம் ஹி ஸர்வம் வ்ருக்ஷாணாம் ப்ராகாரவஶிவாஸ்தம்। உத்த்ருத்ய ராக்ஷஸாநாம் ப்ராகாரம் வாநரீக்ருதம்" இதி யுத்தகாண்டே. "தேஶ்யாம் தூமாவாஹம் ஶ்ரவஸ்தம் த்ருஷ்டம் ததா பூர்ணமாம் ஜநதஶோகநாஶநம்" இத்யயோத்யா காண்டே பௌரஜநமநோரத:. எங்குமிடங்கொண்டன - தொழுதுதொழுதுநின்றார்த்தும் - தொண்டீரெல்லீரும் வாரீரென்று கீழ்ப்பாட்டோடே அந்வயம். (௩)

ப.—அநந்தரம், ஆஶ்ரிதோபகாரகனான அர்ணவஶாயியினுடைய குணத்திலே வித்தரானவர்கள், பாஹ்யஸமயங்களை உத்பாடநம்பண்ணுவாரைப்போலே அநேகவிதமான ஹர்ஷசேஷ்டிதங்களைச் செய்யாநின்றார்க ளென்கிறார்.

இடங்கொள் - (வைதிகஸங்கோசம்பிறக்கும்படி) ஸர்வப்ரதேசத்திலுமவஷ்டம்பிக்கக்கடவதான, சமயத்தை-பௌத்தார்ஹதாதிபாஹ்யஸமயங்களை, எல்லாம்-எல்லாம்-(ஸவாஸநமாக), எடுத்து - உத்பாடநம்பண்ணி, களைவணபோலே-போகடுவாரைப்போலே, தடம் - விஸ்தீர்ணமான, கடல் - கடலிலே, பள்ளி - (ஆஶ்ரிதார்த்தமாகக்) கண்வளர்ந்தருளுகிற, பெருமான்தன்னுடை - ஸர்வாதிகன் குணங்களிலே ஈடுபட்ட, பூதங்களை - பாகவதர்கள் தாங்களே, ஆய்-லோகமெல்லாமாய், (அவ்வோப்ரதேசங்களிலே,) கிடந்தும்-கிடந்தும், இருந்தும் - இருந்தும், எழுந்தும்-நின்றும், (பகவத்குணசேஷ்டித ப்ரகாஶகங்களான), பலபல - பலபல, கீதம் - கீதங்களை, பாடி - பாடிக்கொண்டு, நடந்தும் - தர்ஶநீயமாம்படி ஸஞ்சரித்தும், பறந்தும் - ஹர்ஷத்தாலே தரையிலே கால்படாதபடி மேற்கிளம்பியும், குனித்தும் - ஸம்ப்ரமந்ருத்தம்பண்ணியும், இப்படி, நாடகம் - நாடகங்கள், செய்கின்றன - செய்யாநின்றார்கள். இப்பாட்டும் - கீழோடே அந்விதம்.

இ.—நாலாம்பாட்டில், அவிசால்யமான பாஹ்யஸமயங்களை வேரோடே யறுப்பாரைப்போலே எங்கும் வைஷ்ணவர்களேயாய், பகவத்குணாநுபவஜநிதஹர்ஷத்தாலே களித்துத் திரியாநின்றார்க ளென்கிறார்.

[இடங்கொள் இத்யாதி] - பயிரேயும்படி களைவளருமாபோலே ஸாத்விகர்க்கு அவகாஶமில்லாதபடி எங்கும் வ்யாபிக்கும் பாஹ்யஸமயங்களையெல்லாம் பறித்துப்போகடுமாபோலே. போலே யென்கிறது - இதுதான் ஸ்வயமுத்தேஶ்யமன்றிக்கே, பகவதநுபவத்தோடே ஸ்வைரஸஞ்சாரம் பண்ணத் தானேநசித்துப்போமித்தனை; அல்லது பகவத்விபூதிக்கு மங்களாஶாஸநம் பண்ணுகிறவர்கள் அத்தை யழிக்கத்தேடுகிறார்களன்றே. [தடங்கடலித்யாதி] - ஆஶ்ரிதாநுக்ரஹார்த்தமாகத் திருப்பாற்கடலிலே வந்து கண்வளர்ந்தருளின மஹாகுணத்துக்கே அற்ற ஸ்ரீ வைஷ்ணவர்களேயாய். "பாலாழிநீகிடக்கும் பண்பையாங்கேட்டேயும் காலாழும் நெஞ்சழியும் கண்சுழலும்" என்றிருக்குமவர்கள். [கிடந்துமித்யாதி] - ஒரோப்ரதேஶங்களிலே கிடந்தும், ஒரோவிடங்களிலே யிருந்தும், ஒரோவிடங்களிலே நின்றும், பகவதநுபவ ஜநிதஹர்ஷத்தாலே பலபாட்டுக்களைப்பாடியும் மநோஹாரியாம்படி யுலாவியும், கால்தரையில் பாவாதபடி ஸம்ப்ரமந்ருத்தம்பண்ணியும். [நாடகம்செய்கின்றனவே] - இவர்கள் வ்யாபாரம் இவர்க்கு வல்லா ராடினாற்போலேயிருக்கிறது. எம்பெருமானாருடைய ஸ்திதிகமநஶயநாதிகளை நாம் கொண்டாடுமாபோலேயும், ஆளவந்தார் நடையை ராஜா கொண்டாடினாற்போலேயும் இவர் கொண்டாடுகிறபடி.

ஈடு.—நாலாம் பாட்டு. அவிசால்யமான பாஹ்யஸமயங்களை வேரோடே அறுப்பாரைப்போலே எங்கும் வைஷ்ணவர்களேயாய், பகவத்குணாநுபவஜநிதஹர்ஷத்தாலே களித்துத்திரியாநின்றார்க ளென்கிறார்.

நாலாம்பாட்டு - இடங்கோள் இத்யாதி "இடங்கொள்" இத்யாதியைப்பற்ற - அவிசால்யமான இத்யாதி.

[இடங்கொள் இத்யாதி] - பயிர்தேயும்படி களை வளருமாபோலே, ஸாத்விக ரோதுங்கும்படி வளருகிற பாஹ்யஸமயங்களையெல்லாம் பறித்துப்போகடுவோரைப்போலே. "போலே" என்பானேன்? என்னில்:—ஸாத்விகர்க்கு "பிறரைநலியவேணும்" என்றொருஅபி ஸந்தியில்லையிறே; நெற்செய்யப்புல்தேயுமாபோலே, இவர்களூன்றவூன்ற அவை தன்னடையே தேயுமத்தனை. [தடங்கடல்பள்ளிப்பெருமான்] - *தாளுந்தோளும் முடிகளும் பரப்பிக் கண்வளர்ந்தருளுகைக்கீடான பரப்பையுடைத்தான திருப்பாற்கடலிலே கண் வளர்ந்தருளுகிற அழகையநுஸந்தித்து, †"பாலாழிநீகிடக்கும் பண்பை யாங்கேட்டேயும் காலாழும் நெஞ்சழியும் கண்சுழலும்" என்று, அதிலே ஈடுபட்டிருக்கும் ஸ்ரீவைஷ்ணவர் களேயாய். [கிடந்தும் இத்யாதி] - தங்களுக்கு இஷ்டஸர்வசேஷ்டித விஷயமாம்படி பூமியைக் கைக்கொண்டு. ஓரோப்ரதேசங்களிலே கிடந்தும், ஓரோப்ரதேசங்களிலே யிருந்தும், ஓரோவிடங்களிலே நின்றும், பகவதநுபவஜநிதஹர்ஷத்தாலே பலபலபாட்டுக்களைப்பாடியும், மநோஹாரியாம்படி உலாவியும், கால்தரையிலேபாவாதபடி ஸஸம்ப்ரமந்ருத்தம் பண்ணியும். [நாடகஞ்செய்கின்றனவே]- இவர்கள் வ்யாபாரம் இவர்க்கு வல்லாராடினாற் போலேயிருக்கை. "எம்பெருமானாருடைய ஸ்த்திதி கமநஶயநாதிகளை நாம் கொண்டாடுமாபோலேயும், ஆளவந்தார்நடையை ராஜா கொண்டாடினாற்போலேயும் இவர் கொண்டாடுகிறபடி" என்று அருளிச்செய்வர். இந்தும் கீழே அந்வயம். (ச)

ஐந்தாம் பாட்டு.

செய்கின்றதென்கண்ணுக்கொன்றே ஒக்கின்றதிவ்வுலகத்து
வைகுந்தன்பூதங்களேயாய் மாயத்தினாலெங்கும்மன்னி
ஐயமொன்றில்லையரக்க ரசுரர்பிறந்தீருள்ளீரேல்
உய்யும்வகையில்லைதொண்டீர் ஊழிபெயர்த்திடுங்கொன்றே.

ஆ.—(செய்கின்றது.) என்கண்ணுக்கொன்று செய்கிறாற்போலே யிரா நின்றது. என்னென்னில் - இந்த லோகத்திலெங்கும் ஆஶ்சர்யமாம்படி வைகுந்தன் பூதங்களேயாய், எங்கும் அவர்களே மன்னுகையாலே அவைஷ்ணவரான உங்களுக்கு உய்யும் வகையின்றியே, அதத்விஷயப்ரவணரான நீங்களெல்லாரும் உபஸம்ஹ்ருதராய், ஸ்ருஷ்டிபெருமாபோலே யிருந்தது; இது நிஸ்ஸம்ஶய மென்கிறார்.

தேயும்படி - க்ஷயிக்கும்படி. களைகை - போக்குகை. ஸ்ரீவைஷ்ணவர்கள் பாஹ்யநிரஸநம்பண்ணினார்களோ, "களைவனபோலே" என்பானென்? என்ன-போலே இத்யாதி. நெற்செய்ய - பிணையடிக்க. புல்தேயும் - களங்களிலிருக்கிற புல்தேயும். "தடங்கடல்பள்ளிப்பெருமான்தன்னுடைப்பூதங்கள்" என்கிற ஸமபிவ்யாஹாரத்தாலே - "பாலாழி" என்கிற பாட்டின்அர்த்தம் உபஸ்திதமாக அத்தையும்கூட்டி பாவம் - தாளும் இத்யாதி. "பாலாழி" இத்யாதிக்கு அர்த்தம் அஸக்ருல்லிகிதம். இவர்கள் வ்யாபாரத்தை "நாடகம்" என்கிறதென்? என்ன- இவர்கள்வ்யாபாரம் இத்யாதி. வல்லார்-கூத்துவல்லார். "அவர்களுடைய ஸ்த்திதிகமநாதிகள் இவர்க்கு ஆகர்ஷகங்கள்" என்றதுக்கு த்ருஷ்டாந்தங்கள் - எம்பெருமானார் இத்யாதி. அருளிச்செய்வர் - நஞ்சீயரிதி ஶேஷ꞉. நாடகஞ்செய்கின்றன - நின்றார்த்தம் - வாரீரென்று கீழோடே அந்வயம். (ச)

† பெரியதிருவந்தாதி-ருச.

ஒ.— அஞ்சாம்பாட்டில், ஸ்ரீவைஷ்ணவர்கள், அஸுரராக்ஷஸரான உங்களை முடித்து யுகத்தையும் பேர்ப்பர்க ளென்கிறார்.

[செய்கின்றதென்று தொடங்கி] - செய்கிறபடி பார்த்தோமுக்கு இங்ஙனே யாம்போலே யிராநின்றது. [இவ்வுலகத்தென்று தொடங்கி]-என்னென்னில்;- இவ்வுலகத்திலெங்கும் வைஷ்ணவர்களேயாய் தங்களுடைய இச்சாநுகுணமாக எங்கும்விடாதே வர்த்தித்து. [ஐயமொன்றில்லை] - ஒரு ஸம்ஶயம் இல்லை. [அரக்கரென்று தொடங்கி]-ராக்ஷஸரும் அஸுரருமாய்ப் பிறந்து வர்த்திக்கிறீர் உள்ளீராகில் ஹேயரான நீங்கள் பிழைக்கைக்கு உபாயம் இல்லை. ஸ்ரீவைஷ்ணவர்கள் மன்னுகையாலே யுகந்தானே உங்களை முடித்துப்போரு மென்றுமாம்.

ப.—அநந்தரம், ப்ரதிகூலரான அஸுர ராக்ஷஸ ப்ரக்ருதிகளைக் குறித்து, ஸ்ரீவைகுண்டநாதனுடைய குணாநுஸந்தாந வித்தரான பாகவதர் உங்களை நிரஸித்துப் போகடுவர்கள், உங்களுக்கு உஜ்ஜீவிக்க விரகில்லை யென்கிறார்.

செய்கின்றது - இவர்கள் செய்கிற வ்யாபாரம், என்கண்ணுக்கு - என்கண்ணுக்கு, ஒன்றேயொக்கின்றது- அதிசயிதமாயிருப்பதொன்றுபோலேயிராநின்றது,(ஏதென்னில்), இவ்வுலகத்து - (ப்ரதிகூலப்ரசுரமான) இந்தலோகத்திலே, வைகுந்தன் - பரமபதநிலயனுடைய, பூதங்களே - குணாநுபவவித்தரான பாகவதர்தாங்களே, ஆய் - ஆய், மாயத்தினால் - ஆஶ்சர்யவ்ருத்திகளாலே, எங்கும் - ஸர்வப்ரதேசத்திலும், மன்னி - நிரந்தரவாஸம்பண்ணி, அரக்கரசுரர் - ராக்ஷஸியாயும் ஆஸுரியாயுமுள்ள ப்ரக்ருதிகளோடே, பிறந்தீர் - பிறந்தவர்கள், உள்ளீரேல் - உண்டாகில், தொண்டீர் - இதரவிஷயசபலரானவர்களே, கொன்று-உங்களைநிரஸித்து, (கலி க்ருதயுகமாம்படி),ஊழி-காலத்தை, பெயர்த்திடும்-பேதிக்கும்படியாயிராநின்றது; (ஆதலால்உங்களுக்கு), உய்யும் - உஜ்ஜீவிக்கும், வகை - ப்ரகாரம், இல்லை-இல்லை; (இதில்), ஐயம் - ஸந்தேஹமும், ஒன்று - ஒன்றும், இல்லை - இல்லை.

இ.—அஞ்சாம்பாட்டில், வைஷ்ணவர்கள் அஸுரராக்ஷஸரான உங்களையும் முடித்து யுகத்தையும் முடிப்பர்க ளென்கிறார்.

[செய்கின்றது இத்யாதி] - செய்கின்றது-செய்கிறபடி. என்கண்ணுக்கொன்று செய்கிறப்போலே யிராநின்றது. அதேதென்னில்,—[இவ்வுலகத்து] - பகவத்குணத்துக்கு மேட்டுமடையான தேசத்திலே. [வைகுந்தன் பூதங்களேயாய்] - "மாகவைகுந்தம் காண்பதற்கு" என்றும், "கண்ணன் விண்ணூர்தொழுவே சரிகின்றன சங்கம்" என்றும் ஆசைப்படும் வைஷ்ணவர்களேயாய். [மாயத்தினால்]-"மாயாவயுநஂஜ்ஞாநஂ" என்கிறபடியாலே, இச்சையாலே. [எங்கும் மன்னி] - எங்கும் வர்த்தித்து. [ஐயமொன்றில்லை] - ஸம்ஶயமொன்றுமில்லை. [அரக்கர் இத்யாதி] - அஸுரராக்ஷஸரான நீங்கள் மநுஷ்யவேஷத்தைக்கொண்டு பிறந்துகலந்து திரிகிறீருள்ளீராகில். ஸாகஸாரணர்களைப்போலே கடற்கரையிலே யொற்றுப்பார்க்கவந்தார் குரக்குவடிவைக்கொண்டு. [உய்யும் வகையில்லை] - உஜ்ஜீவிக்கும் விரகில்லை. பகவத்வ்யதிரிக்த விஷயங்களிலே ஸக்தரான நீங்கள். [ஊழிபெயர்த்திடுங்கொன்றே] - வைகுந்தன் பூதங்கள் உங்களைக்கொன்று கல்பத்தையும் போக்குமென்னுதல், ஊழிதானே உங்களையும்கொன்று தானும் பேருமென்

னுதல். வைஷ்ணவஸகாரம் காலதோஷத்தையும்போக்கி விரோதிகளையும் நஶிப்பிக்கு
மென்கை. அரக்கரசுரர் - தொண்டீர் - பிறந்தீருள்ளீரேல் உய்யும்வகையில்லை, வைகுந்
தன் பூதங்கள் - கொன்று ஊழிபெயர்த்திடும் - ஐயமொன்றில்லை.

ஈடு.—அஞ்சாம்பாட்டு. ஸ்ரீவைஷ்ணவர்கள் அஸுரராக்ஷஸரான உங்களையும்
முடித்து யுகத்தையும் பேர்ப்பர்க ளென்கிறார்.

[செய்கின்றது இத்யாதி]-செய்கிறபடி பார்த்தேனுக்கு, என் கண்ணுக்கொன்று
போலே இராநின்றது. என்போலே இராநின்றதென்றால் ;—ஹகவத்குணங்களுக்கு மேட்டு
மடையான ஸம்ஸாரத்திலே, நித்யவிபூதியிலிருப்புக்குத் தோற்றிருக்கும் ஸ்ரீவைஷ்ணவர்
களேயாய். [மாயத்தினால் எங்கும்மன்னி] - "மாயாவயுநம்ஜ்ஞாநம்" (மாயாவயுநம்
ஜ்ஞாநம்) என்கிறபடியே, இச்சாபர்யாயமான ஜ்ஞாநத்தாலே. இச்சையாலே எங்கும் புகுந்
திருந்து. [ஐயமொன்றில்லை] - 'இங்கேயிருந்தே அவ்விருப்புக்குத் தோற்றிருப்பார்கள்' என்ற
தில் ஒரு ஸம்ஶயமில்லை. "பேர்த்திடும்" என்னுமதில் ஒரு ஸம்ஶயமில்லை யென்றுமாம்.
[அரக்கர் இத்யாதி] - ராக்ஷஸராயும் ஆஸுரப்ரக்ருதிகளாயு மிருப்பார் மநுஷ்யஶரீரத்தை
யேறிட்டுக்கொண்டு, ஸ்ரீ வாநரஸேனையின் நடுவே சுகஸாரணர்கள் புகுந்தாற்போலே
புகுரப்பார்த்தாருண்டாகில் உங்களுக்கு உஜ்ஜீவிக்க விரகில்லை. "வாழாட்பட்டு
நின்றீருள்ளிரேல்" என்று - தேடவேண்டாதே, எல்லாரும் வாழாட்பட்டு, அரக்கரசுரர்
பிறந்தீருள்ளீரேலென்று - தேடவேண்டும்படியாயிற்று * ஒன்றுந்தேவுங்கேட்டு ஸம்ஸாரம்

அஞ்சாம்பாட்டு - செய்கின்றது இத்யாதி. ஸ்ரீவைஷ்ணவர்களென்றது - "வைகுந்தன்
பூதங்கள்" என்றத்தைப்பற்ற. அஸுரராக்ஷஸரான உங்களையும் முடித்தென்றது. "அரக்கரசுரர்பிறந்தீ
ருள்ளீரேல் உய்யும்வகையில்லைகொன்றே" என்றத்தைப்பற்ற. யுகத்தையும் பேர்ப்பர்களென்றது -
"ஊழிபெயர்த்திடும்" என்றத்தைப்பற்ற. யுகத்தை - கலியுகத்தை.

செய்கிறபடி-ஸ்ரீ வைஷ்ணவர்கள் செய்கிறபடி. பார்த்தேனுக்கு என் கண்ணுக்குஎன்றது -
பார்த்திருக்கிற என்னுடைய கண்ணுக்கென்றபடி. ஸ்ரீராமாயணத்தில் 'ஸிஜஸு-ஈஷக-ஷீடா:'
என்கிற விடத்திலே - ஸித்தமாயிருக்கிற அந்நத்தினுடைய கூடங்களென்று, அந்நஶப்தத்
துக்கு லுப்தஷஷ்டியாக அர்த்தம் சொன்னாற்போலே, இங்கேயும் கண்டுகொள்வது. யத்வா,
"பண்டேனமாய்" என்கிற பாட்டிலே "கண்டேனுக்கு" என்கிற பாசுரத்துக்கு அர்த்தம் -
கண்டமாத்ரத்திலே என்று சொன்னாற்போலே, பார்த்தேனுக்கு என்கிறதுக்கும் - பார்த்தமாத்ரத்
திலே யென்று அர்த்தங்கண்டுகொள்வது. ஒன்றுபோலேயிராநின்ற தென்றது - "ஒன்றேயொக்
கின்றது" என்றத்தைப் பற்ற. என்போலே இராநின்றதென்றால் என்றதுக்கு - "ஊழிபெயர்த்
திடும்" என்றத்தோடே அந்வயம். "ஊழிபெயர்த்திடும்" என்றதுக்கு - ஊழியையும் பேர்ப்
பர்கள்போலே இராநின்றார்களென்று அர்த்தமானபோது, என்போலேயிராநின்றதென்றால்
என்றது - என்போலேயிராநின்றார்க ளென்று லென்றபடி. என்போலேயிராநின்றதென்றால் என்ற
அநந்தரம், ஸ்ரீவைஷ்ணவர்கள் உங்களையுங் கொன்று யுகத்தையும் பேர்ப்பர்கள்போலே இராநின்ற
தென்று கண்டுகொள்வது. நித்யவிபூதியிலிருப்பென்றது - "வைகுந்தன்" என்றத்தைப்பற்ற.
இச்சாபர்யாயம் என்றதுக்கு நிகண்டு - மாயா இத்யாதி. இச்சையாலே - "எங்கும் வ்யாபித்துத்
திருத்தவேணும்" என்கிற இச்சையாலே. ஐயம் - ஸம்ஶயம். "இவ்வுலகத்து வைகுந்தன்பூதங்கள்"
இத்யாதிபதங்களைக் கூட்டிக்கொண்டு, "ஓர் ஐயம் இல்லை" என்றந்வயித்து ஶப்தார்த்தம் - இங்கே
இத்யாதி. அஸுரராக்ஷஸர்கள் ஸந்நிஹிதராயிருக்கிறார்களோ "அரக்கரசுரர்பிறந்தீர்" என்கைக்கு
என்ன - ராக்ஷஸராயும் இத்யாதி. ராக்ஷஸராயும் - ராக்ஷஸப்ரக்ருதிகளாயும். "உள்ளீரேல்"
என்று யதிசப்தார்த்த கடிதயாகச் சொல்லுவானென், அத்தனை அபூர்வமோ என்னவாழா

திருந்தினபடி. [தோண்டீர்] - "ஸேவாஸ்வவ்ருத்திः" (ஸேவாஸ்வவ்ருத்திः) என்கிற இதர விஷயங்களிலே தோண்டுபட்டிருக்க உங்களைக் கல்பந்தானே ஹிம்ஸித்துக்கொண்டு தானும் பேருமென்னுதல்; அன்றிக்கே, வைகுந்தன் பூதங்கள் உங்களையும் கொன்று ஊழியையும் பேர்ப்ப ரென்றுமாம். †(அரக்கரசுரர் - தொண்டீர்-பிறந்தீருள்ளீரேல் உய்யும்வகையில்லை, வைகுந்தன்பூதங்கள் - கொன்று - ஊழிபெயர்த்திடும் - ஐயமொன்றில்லை. இது வாக்யார்த்தத்துக்குச் சேரும்). (ரு)

ஆறாம்பாட்டு.

கொன்றுயிருண்ணும்விசாதி பகைபசிதீயனவெல்லாம்
நின்றிவ்வுலகிற்கடிவான் நேமிப்பிரான்தமர்போந்தார்
நன்றிசைபாடியுந்துள்ளியாடியும் ஞாலம்பரந்தார்
சென்றுதொழுதுய்ம்மின்தொண்டீர் சிந்தையைச்செந்நிறுத்தியே.

ஆ.—(கொன்று.) ஸர்வாத்மாக்களுடைய ஸர்வபாதா பரிஹாரார்த்தமாக ஶங்கசக்ரகதா ஶார்ங்காதி திவ்யாயுதோபேத பரமபுருஷ கைங்கர்யைக ஸ்வரூபரான ஸ்ரீவைஷ்ணவஜநங்கள் இந்தலோகத்திலே போந்து, நன்றிசைபாடியும் துள்ளியாடியும் ஞாலம்பரந்தார். நீங்களும் இந்ததேவதைகளைவிட்டு அநந்ய ப்ரயோஜநராய்க்கொண்டு எம்பெருமானை ஆஶ்ரயித்து உஜ்ஜீவியுங்கோ ளென்கிறார்.

ஒ.—ஆறாம்பாட்டில், ஸர்வாத்மாக்களுடைய ஸகலதுঃகங்களையும் போக்குகைக்காக ஸ்ரீ வைஷ்ணவர்களே லோகமெங்கும் பாடியாடிப்பரந்தார், நீங்களும் இதர தேவதா பரத்வஶங்கையைத்தவிர்ந்து அவனை யாஶ்ரயித்து உஜ்ஜீவியுங்கோளென்கிறார்.

[கொன்றுயிருண்ணும் விசாதி] - கொன்று ப்ராணஹாநி பண்ணக்கடவதான வ்யாதிதொடக்கமானவை நின்று. [கடிவான்]-கடிகைக்காக. [நேமிப்பிரான்தமர்போந்தார்]- ஸஞ்சரிக்கிற ஸ்ரீவைஷ்ணவர்கள். துள்ளியாடுகை - ஸஸம்ப்ரமமாக ஆடுகை.

ப.— அநந்தரம், ஸாம்ஸாரிக ஸகலக்லேஶமுந் தீரும்படி ஆஶ்ரிதஸம்ரக்ஷணார்த்தமான திருவாழியையுடைய ஸர்வேஶ்வரனுக்கு அடியாரானவர்கள் ஜகத்தெங்கும்

இத்யாதி. நிரதிசய ஸுகரூபமானஅடிமைப்பட்டுநின்றபேருண்டாகி வித்யர்த்தஃ. திருப்பல்லாண்டு(௩). கொண்டு - இதரவிஷயசாபல்யமென்றர்த்தம், ஸேவா இத்யாதி. "ஊழி" - கல்பம் - கலியுகம். செய்கின்றதென் கண்ணுக்கென்று தொடங்கி, எங்கும் மன்னிநின்றார்கள், ஐயமொன்றில்லை, தொண்டரான - அரக்கரசுரர் பிறந்தீருள்ளீரேல் உய்யும்வகையில்லை, ஊழியானது - உங்களையுங்கொன்று - தானும்பேர்த்திடுமென்று ப்ரதமயோஜனைக்கு அந்வயம். செய்கின்றதென் கண்ணுக்கென்று தொடங்கி எங்கும் மன்னினார்கள் ஐயமொன்றில்லை, தொண்டரான- அரக்கரசுரர்தொடங்கி, உய்யும்வகையில்லை, உங்களையுங்கொன்று - ஊழியையும் பேர்த்திடுமென்று இரண்டாம்யோஜனைக்கு அந்வயம். அர்த்த பேதமொழிய அந்வயத்தில் அதிக பேதமில்லை. (ரு)

† குண்டலிதக்ரந்தம் க்வாசித்கம்; வ்யாக்யாநத்துக்கும் சேராது.

பரந்தார்கள் ; அவர்களை யாஶ்ரயித்து உஜ்ஜீவியுங்கோளென்று கீழ்ச்சொன்னவர்களை
நோக்கி அருளிச்செய்கிறார்.

கொன்று - ஶரீரத்தைமுடித்து, உயிர் - ப்ராணனை, உண்ணும் - க்ரஸிக்கக்
கடவ, விசாதி - வ்யாதியும், பகை - பகையும், பசி - பசியும்முதலான, தீயன - க்ரூரஸ்வ
பாவங்கள், எல்லாம் - எல்லாவற்றையும், இ-இந்த, உலகில் - லோகத்திலே, நின்று -
நின்று, கடிவான் - கடிகைக்காக, நேமி - சக்ராயுதனான, பிரான் - ஸர்வேஶ்வரனுடைய,
தமர் - அடியாராய்க்கொண்டு, போந்தார் - போந்தவர்கள், நன்று-விலக்ஷணமான, இசை-
இசைகளை, பாடியும் - பாடியும், துள்ளி - ஸஸம்ப்ரமமாகக் கிளர்ந்து, ஆடியும் - ஆடியும்,
ஞாலம் - பூமியெங்கும், பரந்தார் - பரந்தார்கள் ; தொண்டீர் - (தேவதாந்தரங்களையும்
விஷயாந்தரங்களையும் உத்தேஶ்யமாகவும் போக்யமாகவும் நினைத்து) சபலரானவர்களே !
சிந்தையை - உங்கள் அந்யபரமான நெஞ்சை,(ப்ராப்தமான பாகவதவிஷயத்திலே),செம்-
செவ்விதாக, நிறுத்தி - நிறுத்தி, சென்று-(அவர்கள் பரிஸரத்திலே) சென்று, தொழுது-
ஶேஷத்வாநுரூபவ்ருத்தியைப்பண்ணி, உய்ம்மின் - பிழைக்கும்படி பாருங்கோள்.

இ.—ஆறும்பாட்டில், ஸகலருடைய துக்கங்களையும் போக்குகைக்காக
ஸ்ரீ வைஷ்ணவர்கள் லோகமடங்கப் பரந்தார்கள், அவர்களோடே நீங்களும் அவனை
யாஶ்ரயித்து உஜ்ஜீவியுங்கோ ளென்கிறார்.

[கொன்றுஇத்யாதி] - கையுந்திருவாழியுமான அழகிலே ஈடுபட்டிருக்கும்
ஸ்ரீவைஷ்ணவர்கள், கடிவான் போந்தாரானவர்கள் - அதுக்காக லோகத்திலே பூமியிலே
பரந்தார்கள். “யத்ராஷ்டாக்ஷரஸம்ஸித்தோ மஹாபாகோ மஹீயதே” - இத்யாதி.
[நன்று இத்யாதி] - பகவதநுபவஜநித ஹர்ஷத்தாலே நன்றான இசையைப் பாடியும்.
துள்ளியாடுகை - ஸஸம்ப்ரமமாக ஆடுகை. [சென்று இத்யாதி.] - சென்று அவர்களைத்
தொழுது உஜ்ஜீவியுங்கோளென்று பணிக்கும் திருமாலையாண்டான். அவர்களோடே
சென்று ஸர்வேஶ்வரனைத் தொழுது உஜ்ஜீவியுங்கோளென்று அருளிச்செய்வர் எம்பெரு
மானார். [தொண்டீர்] - தேவதாந்தரங்களிலே பாத்வஶங்கைபண்ணி அவ்வோவிடங்
களிலே தொண்டுபட்டிருந்தவர்கள். திருத்துகைக்கு யோக்யதையுண்டானவர்கள்.
“ஸஜ்ஜந்தாஶ்ச யாந்த்யஸம்ஶயாத்தாவிநஶ்யதி। நாயம்லோகோஸ்தி நபரோ நஸு
கம் ஸம்ஶயாத்மந:”. தேவதாந்தரங்களிலும் ப்ரயோஜநாந்தரங்களிலும் போன
நெஞ்சை வகுத்த விஷயத்திலே அநந்யப்ரயோஜநமாக்கி. “யத்ராஷ்டாக்ஷரஸம்ஸித்த:”
- என்னக்கடவதிறே.

ஈடு.—ஆறும்பாட்டு. ஸகல துக்கங்களையும் போக்குகைக்காக ஸ்ரீவைஷ்
ணவர்கள் லோகமடங்கப் பரந்தார்கள்; அவர்களோடே நீங்களும் அவனை யாஶ்ரயித்து
உஜ்ஜீவியுங்கோ ளென்கிறார்.

ஆறும்பாட்டு - கொன்றுயிர் இத்யாதி. ஸகலதுக்கங்களையு மென்றது - “கொன்று”
இத்யாதியைப்பற்ற. போக்குகைக்காக என்றது - “கடிவான்” என்றத்தைப்பற்ற. ஸ்ரீவைஷ்ண
வர்களென்றது - “நேமிப்பிரான்தமர்” என்றத்துக்கு எம்பெருமானார் நிர்வாஹத்தைப்பற்ற. லோக
மடங்கப் பரந்தார்க ளென்றது - “ஞாலம்பரந்தார்” என்றத்தைப்பற்ற. “சென்றுதொழுதுய்ம்மின்”
இத்யாதியைப்பற்ற - அவர்களோடே இத்யாதி.

[கொன்றுயிர் இத்யாதி] - தேஹவிஶ்லேஷத்தைப் பிறப்பித்து ப்ராணன்களை அபஹரிக்கக்கடவதான வ்யாதி. அன்றிக்கே, ப்ராணனை விஶ்லேஷிப்பித்து ஶரீரத்தை முடிக்கும் வ்யாதியென்னுதல். உயிரென்று - இப்போது, ஶரீரம். அப்படி செய்யும் பகையும் பசியும். இப்படி பிரித்துச்சொல்லுகிறதென்? தண்ணியவையெல்லாம்,—[நின்றிவ் வுலகில்கடிவான்] - விடாதே நின்று போக்குகைக்காக. [நேமிப்பிரான் தமர்போந்தார்] - கையுந்திருவாழியுமான அழகிலே தோற்றிருக்குமவர்கள் வந்தார்கள். போந்தநேமிப்பிரான் தமர் [நன்று இத்யாதி] - நன்றான இசைபாடியும், ஸஸம்ப்ரமந்ருத்தம்பண்ணியும், இப்படி பூமியடையப் பரந்தார்கள். [சென்றுதொழுதுய்ம்மின்] - அவர்கள்பாடே சென்று அவர்களைத்தொழுது உஜ்ஜீவித்துப் போங்கோளென்னுதல்; அவர்களோடே சென்று ஸர்வேஶ்வரனை யாஶ்ரயித்து உஜ்ஜீவித்துப் போங்கோளென்னுதல். [தொண்டீர்] - அப்ராப்த விஷயத்தில் தொண்டுபட்டிருக்கிற நீங்கள். திருந்துகைக்கு யோக்யதையுடைய நீங்கள். அதுசெய்யுமிடத்தில் [சிந்தையைச் செந்நிறுத்தியே] - தொழுதவநந்தரம் "தெஹிமெதநாமிதெ" (தேஹிமேததாமிதே) என்னாதே தொழுங்கோள். (சு)

ஏழாம்பாட்டு.

நிறுத்திநும்முள்ளத்துக்கொள்ளும் தெய்வங்களுநம்மையுய்யக்கொள்
மறுத்துமவனோடேகண்டீர் மார்க்கண்டேயனுங்கரியே
கறுத்தமனமொன்றும்வேண்டா கண்ணனல்லால்தெய்வமில்லை
இறுப்பதெல்லாம் அவன்மூர்த்தியாயவர்க்கேயிறுமினே.

முந்தின அர்த்தத்துக்கு, உயிரென்று - ப்ராணன், கொன்றென்றதுக்கு - தேஹத்தை யென்று அயாஹரிப்பது. த்விதீயார்த்தத்துக்கு, உயிரென்று-ஶரீரம், ப்ராணனையென்று அத்யாஹரிப்பது. முந்தினவர்த்தத்திலே - கொல்லுகைக்கும் உண்கைக்கும் ப்ராணன்கள் விஷயம்; த்விதீயார்த்தத்துக்கு - ஶரீரம் விஷயம். இப்போது - இரண்டாமர்த்தம் சொல்லுகிறபோது. "கொன்றுயிருண்ணும்" என்றத்தை - பகை பசிக்கும் விஶேஷணமாக்கி அருளிச்செய்கிறார் - **அப்படி** இத்யாதி. **தண்ணியவையெல்லாம்** என்றது - "தீயனவெல்லாம்" என்றத்தைப்பற்ற. "விசாதிபகைபசி" என்றத்தை - "வ்யாதிதுர்பிக்ஷதஸ்கரா:" என்றத்தோடே யோஜித்தும் அருளிச்செய்வர். **விடாதே** என்கிறதுக்குக் கீழே - இவ்வுலகில் என்று அந்வயித்துக்கொள்வது. விடாதே யென்றது - அர்த்தஸித்தம். **நேமிப்பிரான்தமர்** - ஆளவந்தார் நிர்வாஹத்திலே, நித்யஸூரிகள்; எம்பெருமானார் நிர்வாஹத்திலே, ஸ்ரீவைஷ்ணவர்கள். **போந்தநேமிப்பிரான்தமர்** - செய்ததென்னென்னில் என்று அத்யாஹரிப்பது. போந்த - வந்த. திருமாலையாண்டான் நிர்வாஹம் - **அவர்கள்பாடே** இத்யாதி. அவர்கள் - நித்யஸூரிகள். **பாடேசென்று** - ஸமீபத்திலே போய். எம்பெருமானார் நிர்வாஹம் - **அவர்களோடேசென்று** இத்யாதி. விவரணம்-**திருந்துகைக்கு** இத்யாதி. அதாவது - அப்ராப்த விஷயத்திலேயாகிலும் ஶேஷத்வத்துக்கு இசைகையாலே, திருந்துகைக்கு யோக்யதையுடைய நீங்களென்றபடி. அது - ஆஶ்ரயணம். **செந்நிறுத்தி** - செவ்வையாக நிறுத்தி. சிந்தைக்குச் செவ்வையாவது - அநந்ய ப்ரயோஜநத்தையென்று விவக்ஷித்து அருளிச்செய்கிறார்-**தொழுத** இத்யாதி. தொண்டீர், கொன்றுயிருண்ணுமென்று தொடங்கி, தீயனவெல்லாம் - இவ்வுலகில் - நின்று - கடிவான் நேமிப்பிரான் தமர் போந்தார்; போந்த நேமிப்பிரான்தமர், நன்றிசைபாடியுந்தொடங்கி, பரந்தார்; அவர்களோடே மின்சென்று - சிந்தையைச்செந்நிறுத்தி - தொழுதுய்ம்மின் இத்யந்வய: (சு)

ஆ.—(நிறுத்தி.) மற்று, நாங்கள் ஆஶ்ரயிக்கிற ப்ரஹ்மருத்ராதிதேவதை
கள் எங்களுக்கு ரக்ஷகராகமாட்டாரோவென்னில்; - உங்களாலே ஸமாஶ்ரிதைகளான
தேவதைகள், உங்களை எம்பெருமான் ரக்ஷிக்குமிடத்தில் புருஷகாரமாமத்தனை; இப்
பொருளில் மார்க்கண்டேயனும் ஸாக்ஷி. ஆகையால், நாராயணனே ஸர்வேஶ்வரன்,
இதிலொன்றும் ஸம்ஶயிக்க வேண்டா. ஆதலால் அவனை யாஶ்ரயியுங்கோள். அக்நீந்த்
ராதிதேவதைகளையும் ஆராத்யதயா ஶாஸ்த்ரங்கள் ப்ரதிபாதியாநின்றனவிறே யென்
னில்; - அப்படியன்று ஶாஸ்த்ரங்களில் சொல்லுகிறது. எங்ஙனேயென்னில்; - அக்நீந்த்
ராதி ஸமஸ்ததேவதாந்தர்யாமிதயா ஶரீரிபூதனான பரமபுருஷனே ஸர்வகர்மஸமாராத்ய
னென்றது. ஆனபின்பு, நித்யநைமித்திககாம்யரூப ஸர்வகர்மங்களாலும் அக்நீந்த்ராதி
ஸமஸ்ததேவதாந்தர்யாமியான பரமபுருஷனை யாஶ்ரயியுங்கோ ளென்கிறார்.

ஒ.—ஏழாம்பாட்டில், உங்கள் தேவதைகள் உங்களை ரக்ஷிப்பது அவன் ப்ர
ஸாதத்தாலே யானபின்பு அவர்களை "அவனுக்கு ஶேஷபூதர்" என்று புத்திபண்ணி,
தத்ஸமாராதந புத்த்யா அவர்களை ஆஶ்ரயியுங்கோ ளென்கிறார்.

[நிறுத்தியென்று தொடங்கி] - உங்கள் ஹ்ருதயங்களிலே நீங்கள் நிறுத்திக்
கொள்ளுகிற தேவதைகள் உங்களை ரக்ஷிக்கும்போது தாங்களாக ரக்ஷிக்க க்ஷமரல்லாமை
யாலவன் ப்ரஸாதங்கொண்டே ரக்ஷிப்பது; இவ்வர்த்தத்துக்கு ஸ்ரீமார்க்கண்டேய
பகவான் ஸாக்ஷி. [கறுத்தமனமொன்றும் வேண்டா] ஸம்ஶயிக்கவேண்டா. [இறுப்ப
தென்றுமேலுக்கு] - இந்த்ராதி தேவதைகளை ஶரீரமாகக்கொண்டு அவர்களுக்கு அந்
தராத்மதயா நின்றான் ஸர்வேஶ்வரனென்று புத்திபண்ணி அத்தேவதாமுகமாகப்
பண்ணும் நித்யநைமித்திககர்மங்களை தத்ஸமாராதநபுத்த்யா பண்ணுங்கோள்.

ப.—அநந்தரம், தேவதாந்தரபரரானாரைக்குறித்து; அவனையொழிய இவர்
களுக்கு ரக்ஷணஶக்தியில்லை, ஸர்வஸுலபனான க்ருஷ்ணனே பரதேவதை, ஆனபின்பு,
தேவதாந்தரவிஷயமான நித்யநைமித்திகாதிதர்மங்களை, அவர்களுடைய பகவச்சரீரத்வ
புத்தியைப்பண்ணி அநுஷ்டிக்கும்படி பாருங்கோ ளென்கிறார்.

நும் - உங்கள், உள்ளத்து - நெஞ்சுக்குள்ளே, நிறுத்தி - ஸ்வாபாஶ்ரயமல்
லாமையாலேவலியப்பிடித்து நிறுத்தி, கொள்ளும் - கொள்ளும், தெய்வங்கள் - தெய்
வங்கள், உம்மை - உங்களை, உய்யக்கொளும் - உஜ்ஜீவிப்பித்துக்கொள்வதும், அவ
னோடே - தங்களுக்கும் பலப்ரதத்வஶக்தி கொடுத்தவன்தன்னோடே, மறுத்து - மீண்டு
சென்று கிட்டிக்கிடீர், (இது),மார்க்கண்டேயனும் - மார்க்கண்டேயனும், கரி - ஸாக்ஷியாக,
கண்டீர் - கண்டிகோள், (ஆகையாலே), கறுத்த - (இதரதேவதாபரத்வப்ரதிபத்தி பண்
ணும்படி)மலிநமான, மனம்-நெஞ்சு, ஒன்றும் - ஒருபடியாலும், வேண்டா - வேண்டுவ
தில்லை; ("யோயோயாம்யாம்தநும்பக்த:" என்கிறபடியே), கண்ணனல்லால் - (தேவ
தாந்தரங்களுக்கு ஶரீரியான) க்ருஷ்ணனையொழிய, தெய்வம் - பரதேவதை, இல்லை -
இல்லை, (ஆனபின்பு), இறுப்பது-ஶாஸ்த்ரீயமாய்க் கர்த்தவ்யமான நித்யநைமித்திகங்களை,
எல்லாம் - எல்லாம், அவன் - அந்தக்ருஷ்ணனுக்கு, மூர்த்தியாயவர்க்கே - ஶரீரங்களான
அந்ததேவதைகளை விஷயீகரித்து, இறுமின் - ஸர்வயஜ்ஞாநாம்போக்தாவான அந்த
க்ருஷ்ணன் பர்யந்தமாக ஸமர்ப்பியுங்கோள். இதிலே - பாகவதோத்கர்ஷஹேதுவான
பாரம்யம் சொல்லிற்றாயிற்று.

இ.—ஏழாம்பாட்டில், நாங்கள் நெடுநாளாஶ்ரயித்தவர்களை பலம்கிட்டுவதற்கு முன்பே விடவோவென்னில்; அவர்கள் பலம் தருவதும் அவனைக் கொண்டாயிற்று, ஆன பின்பு " அவர்கள் அவனுக்கு ஶரீரபூதர் " என்று புத்திபண்ணி பகவத்ஸமாஶ்ரயண புத்யா ஆஶ்ரயியுங்கோளென்கிறார்.

[நிறுத்தி இத்யாதி] - உங்கள் நெஞ்சிலே நீங்கள் நிறுத்திக்கொள்ளுகிற தேவதைகள். த்யேயவஸ்துக்களை நிறுத்துகையும் த்யாதாவுக்கே பரமென்கை. "ஜகதாம் ஸர்வ்வேஷாம் ஹ்ருதி திஷ்டதி" என்கிறவன் அவஸரப்ரதீக்ஷனாய் நிற்கிறதன்றே; யுக்த்யாபாஸங்களாலும் வசநாபாஸங்களாலும் பொரிபுறந்தடவி நிறுத்துகை. [உம்மையுய்யக்கொள்]-உங்களை உய்யக்கொள்ளுமிடத்தில். ரக்ஷிக்கும்போது தாங்கள் அக்ஷமராகையாலே; "பேணிலும் வரந்தர மிடுக்கிலாத தேவரை", "திருவில்லாத் தேவரை"; [மறுத்துமவனோடே கண்டீர்]-மீண்டுமவனோடே சேர்ந்து அவன் ப்ரஸாதத்தாலே கிடீர். நீங்கள் அவர்களை யாஶ்ரயித்தாலும் பலம்தருவான் அவனே; "ஸர்வஸ்ய"; "நஹி பாலந ஸாமர்த்த்யம்ருதே ஸர்வேஶ்வரம் ஹரிம்". இவர்களை யாஶ்ரயிக்க, வேறேயொருவன் பலம் தருமதெங்கே கண்டோமென்னில், [மார்க்கண்டேயனும் கரியே]-ஸ்ரீமார்க்கண்டேயபகவான் ஸாக்ஷி. [கறுத்தமனமொன்றும் வேண்டா] - இதர தேவதைகள்பக்கல் பரத்வபுத்தியாகிற தண்ணிய நெஞ்சு ஒன்றும் உங்களுக்கு வேண்டா. "ஜகந்நாராயணாத்மகம் ஸம்ஶயாத". [கண்ணனல்லால் தெய்வமில்லை] - "ஸர்வே தேவா தேவகீபுத்ர ஏவ" என்கிறபடியே க்ருஷ்ணனையொழிய ஆஶ்ரயணீயரில்லை. அவனுக்கு ப்ரகாரபூதராய்க் கொண்டு உபாதித்தனை அல்லாததேவதைகள்; "யோ யோ யாம்யாம் தநும் பக்தஃ". [இறுப்பதெல்லாம்] - "தேவதாராதநம்" என்று தோற்றுகிற நித்யநைமித்திக கர்மமெல்லாம். [அவன்மூர்த்தியாயவர்க்கே யிறுமினே] - "இவர்கள் அவனுக்கு ஶரீரபூதரானவர்கள், அந்தராத்மா ஸர்வேஶ்வரன்" என்று புத்திபண்ணி தத்ஸமாராதந புத்யா பண்ணுங்கோள். தன் திருவடிகளைப் பிடித்தார்க்குத் தானே பலங்கொடுக்கக்கடவனாயிருக்குமிறே அவன்.

ஈடு.—ஏழாம்பாட்டு. நாங்கள் நெடுநாள் தேவதைகளுக்குப் பச்சையிட்டு ஆஶ்ரயித்துப் போந்தோம்; அதின்முடிவுகண்டு பின்னை பகவத்ஸமாஶ்ரயணம்பண்ணுகிறோமென்ன; நீங்கள் ஆஶ்ரயிக்கிற தேவதைகள் உங்களை ரக்ஷிப்பதும் அவன்பக்கலிலே கொண்டு சென்று காட்டிக்கொடுத்தாயிற்று, ஆனபின்பு, அவனையே ஆஶ்ரயிக்கப் பெறில்அழகிது; அதுவும் மாட்டிகோளாகில், நீங்கள் அவர்களுக்கு இடுகிறவற்றை " இவர்கள் அவனுக்குத்தநு

ஏழாம்பாட்டு - நிறுத்தி இத்யாதி. " அவனோடேகண்டீர் " என்கையாலே உத்தரப்ரத்யுத்தரமாக அருளிச்செய்கிறார் - நாங்கள் இத்யாதி. இந்த ஶங்காபரிஹாரம் " ஓடியோடி " என்கிற பாட்டிலும் சொல்லிற்றே யென்னில்; அங்கே - அவர்களையாஶ்ரயித்தால் பலமில்லை யென்றது, இங்கு-தேவதைகள் ஈஶ்வரன்பக்கலிலே கொடுபோய்ச் சேர்ப்பர்களென்கிறதாகையாலே புநருக்தியில்லை. "நிறுத்தி" இத்யாதியைப்பற்ற, நீங்கள்ஆஶ்ரயிக்கிற இத்யாதி. அவனையேயாஶ்ரயிக்கப்பெறில் அழகிதென்றது - கீழிற்பாட்டில் " சென்றுதொழுதுய்ம்மின் " என்றத்தைக் கடாக்ஷித்து. இடுகிறவற்றை யென்றது - " இறுப்பதெல்லாம் " என்றத்தைப்பற்ற. அவனுக்குத்தநுபூதர் என்றது - " அவன்

பூதர், இவர்கள் முகத்தாலே நாம் ஸகவத்ஸமாராதநம்பண்ணுகிறோம் ''என்று புத்திபண்ணி
யாகிலும் இடப்பாருங்கோ ளென்கிறார்.

[நிறுத்தி] - த்யேயவஸ்துவை ஸ்த்திதிப்பிக்கையும் த்யாநம் பண்ணுகிறவனுக்கே
ஹாரமாயிற்று. ஆஶ்ரயிக்கிற இவன் எடுத்துநிறுத்த, நிற்கிறவையிறே அவை. [நும்முள்ளத்
துக்கொள்ளும் தெய்வங்கள்]- உந்தாமுடைய ஹ்ருதயங்களிலே கொள்ளுகிற தேவதைகள்.
[உள்ளத்துக்கொள்ளும்] - ''புறம்பே சிலரறியில் அபஹஸிப்பர்கள்'' என்று தாங்களறிந்த
தாக உபாஸிக்குமத்தனை. [உம்மையுய்யக்கொள்] - உந்தாமை உஜ்ஜீவிப்பித்துக்கொண்
டார்களாகிறபடி. [மறுத்துமித்யாதி] - நீங்கள் ''அவனிலும் இவர்கள் ஆஶ்ரயணீயர்''
என்றுபற்ற, இவர்கள் உங்களை அவன்பக்கலிலே கொண்டுபோய்க்கிடிகோள் ரக்ஷிப்பது.
என்றும் ரக்ஷணதர்மம் கிடப்பது அவன்பக்கலிலே, ''**நஹிபாலநஸாமர்த்யம்ருதே**
ஸர்வேஶ்வரம்ஹரிம்'' (நஹிபாலநஸாமர்த்யம்ருதேஸர்வேஶ்வரம்ஹரிம்) என்கிறபடியே
வேறுசிலரை யாஶ்ரயிக்க, அவன் பலப்ரதனாகையாவதென்? என்ன, [மார்க்கண்டேயனும்
கரியே] - கரியென்று-ஸாக்ஷிக்குப் பேர். இவ்வர்த்தத்துக்கு ஸாக்ஷி ஸ்ரீமார்க்கண்டேயன்.
அவன் நெடுநாள் தேவனையாஶ்ரயிக்க, அவனைப்பார்த்து, ''நெடுநாள் நீ நம்மையாஶ்ரயித்
தாய், இவ்வாஶ்ரயணம் பாழேபோகவொண்ணாது, உன்னோடு என்னோடு வாசியில்லை,
உனக்கொருபுகல்காட்டித்தரப்போரு'' என்று ஸர்வேஶ்வரன் பக்கலிலே கொண்டுசென்று,
அவன் அபேக்ஷிதத்தைத் தலைக்கட்டிக்கொடுத்தான்; ஆனபின்பு, இதில் ஸாக்ஷி அவனே.
[கறுத்தமனமொன்றும்வேண்டா] - க்ஷுத்ரதேவதைகள் பக்கலிலே பரத்வ ப்ரதி
பத்திபண்ணியிருக்கும் தண்ணியநெஞ்சு உங்களுக்கு வேண்டா. [கண்ணனல்லால்
தெய்வமில்லை] - ''**ஸர்வேதேவா தேவகீ புத்ர ஏவ**'' (ஸர்வேதேவா தேவகீ
புத்ர ஏவ) என்கிறபடியே, அவனுக்கு ப்ரகாரமாயல்லது ஸ்வதந்த்ரமாயிருப்பதொரு தேவதை

ப்ர:—(கண்ணனல்லால் தெய்வமில்லை) — ஸஹாஸ்ரநாமே
வாஸுதேவ ஶாஹாத்ம்யாயே பீஷ்ம:, ''ஜ்யோதீம்ஷி ஶுக்ராணி ச யாநி
லோகே த்ரயோ லோகாலோகபாலாஸ்த்ரயீ ச । த்ரயோ(அ)க்நயஶ்சாஹுதயஶ்ச பஞ்ச
ஸர்வே தேவா தேவகீ புத்ர ஏவ॥ரு॥''.

மூர்த்தியாய்'' என்றத்தைப்பற்ற. இடப்பாருங்கோள் என்றது - ''இறுமின்'' என்றத்தைப்பற்ற.
இவன் ஸ்த்திதிப்பிக்கவேணுமோ? ஸ்வயமாக நிற்கமாட்டார்களோவென்ன, - த்யேயவஸ்
துவை இத்யாதி. விவரணம் - ஆஶ்ரயிக்கிற இத்யாதி. அடுத்து என்று பாடமானபோது - பலாத்கரித்
தென்றபடி. நிறுத்த-ஸ்த்திதிப்பிக்க. ''உள்ளத்து'' என்றதுக்குபாவம்-புறம்பே இத்யாதி. உய்யக்
கோள்-ரக்ஷிப்பது. மறுத்தும்-பின்னையும். ரக்ஷணதர்மந்தேவதைகளுக்கில்லையோவென்ன என்றும்
இத்யாதி. உக்தார்த்தத்துக்கு ப்ரமாணம் நஹி இத்யாதி. இதம் ப்ரமாணம் பூர்வமேவ லிகிதம். அது எப்
படியென்ன - அவன்நெடுநாள் இத்யாதி. ஸர்வேஶ்வரன்பக்கலிலே - இத்யாதிக்கு ப்ரமாணம் -
''அஹம் தேஜ நகோவத்ஸ ஹ்ருஷீகேஶ: விதாமஹ: । ஆயு: ப்ரதாதா பளராணஃ
கிஶ்யம் நாவஸவ்யவ'' இத்யாதிகள் கண்டுகொள்வது. ருத்ரனையுபாஸித்த மார்க்கண்
டேயனுக்கு ஆயு:ப்ரதாதா நாராயணனென்கையாலே - அவன்கொடுப்பித்ததுஸித்தம். ''கண்ண
னல்லால் - இல்லை'' என்று தேவதாந்தரங்களினுடைய ஸ்வரூபநிஷேதம்பண்ணுகிறாரோ வென்ன-
ஸர்வேதேவா இத்யாதி. ''ஜ்யோதீம்ஷி ஶுக்ராணிசயாநிலோகே த்ரயோலோகா

யில்லை; "யோ யோ யாம் யாம் தநும் பக்த:" (யோயோயாம்யாம்தநும்பக்த:) என்கிற படியே-அவனுக்குத் தநுபூதராயுள்ளராகி லாமித்தனே. [இறுப்பது இத்யாதி]-ஆனபின்பு,நீங்கள் அவ்வவதேவதைகளுக்குக் கொடுக்கும் ஸமாராதநத்ரவ்யங்களையெல்லாம் "இவர்கள் அவனுக்கு ஶரீரபூதர்" என்று புத்திபண்ணி, அவர்களுக்குக் கொடுக்கப்பாருங்கோள். இறுப்பதெல்லாம் - "தேவதாந்தராய" என்று தோற்றுகிற நித்யநைமித்திக கர்மங்களையெல்லாம், அவன்மூர்த்தியாயவர்க்கே - அவனுக்கு ஶரீரபூதரான அவர்களுக்கே. "அந்தராத்மா ஸர்வேஶ்வரன்" என்று புத்திபண்ணி தத்ஸமாராதந புத்த்யா பண்ணுங்கோள். (எ)

எட்டாம் பாட்டு.

இறுக்குமிறையிறுத்துண்ண எவ்வுலகுக்குந்தன்மூர்த்தி
நிறுத்தினன்தெய்வங்களாக அத்தெய்வநாயகன்தானே
மறுத்திருமார்வனவன்தன் பூதங்கள்கீதங்கள்பாடி
வெறுப்பின்றிஞாலத்துமிக்கார் மேவித்தொழுதுய்ம்மினீரே.

ஆ.—(இறுக்கும்) கேவலேந்த்ராதிகளையே ஸ்வகர்மங்களாலே ஸமாராதித்து ஸ்வாபிலஷிதபுத்ரபஶ்வாதிபலங்களை அவர்கள் பக்கலிலே பெற்றன்றோ எல்லாரும் புஜிக்கிறதென்னில்;— இந்த்ராதிகளை எல்லாரும் ஸ்வாதிகாராநுகுணகர்மங்களாலே யாராதித்து ஸ்வாபிலஷிதங்களைப் பெற்று அநுபவிக்கும்படி அந்த ஸர்வேஶ்வரனான பரமபுருஷன் தானே ஸ்வஶரீரபூதரான அந்த இந்த்ராதிகளை, ஸர்வகர்மஸமாராத்யராய் ஸமாராதகாபிலஷித பலப்ரதாந ஸமர்த்தராம்படி பண்ணியருளினான்; ஆதலால், அவனே ஸர்வேஶ்வரன். இப்படி ஸர்வேஶ்வரனாகையாலும், பகவதேகபோகரான ஸ்ரீவைஷ்ணவர்களாலே இந்த லோகம் பூர்ணமாகையாலும், நீங்களும் எம்பெருமானையே அநந்யப்ரயோஜநராய்க் கொண்டு ஆஶ்ரயித்து உஜ்ஜீவியுங்கோ ளென்கிறார்.

ப்ர:—ஸ்ரீமத்பகவத்கீதாஸு ஸப்தமே ஸர்கவாந், "யோ யோ யாம் யாம் தநும் பக்த: ஶ்ரத்தயார்சிதுமிச்சதி । தஸ்ய தஸ்யாசலாம் ஶ்ரத்தாம் தாமேவ விததாம்யஹம்"॥உக॥.

மோக்ஷமாஸநீவ । ப்ரயோஜநமஶ்ரத்தயஶ்வரஸ்ஸவேதேவாதேவகீவஸ்த்ரு வரவ' இதி பாரதேபீஷ்ம:. தேவதைகள் தத்பாதந்த்ரைகளென்றதுக்கு ப்ரமாணாந்தரம் யோய இத்யாதி. "யோ யோ யாம் யாம் தநும் பக்த: ஶ்ரத்தயார்சிதுமிச்சதி । தஸ்ய தஸ்யாசலாம் ஶ்ரத்தாம் தாமேவ விததாம்யஹம்" இதி கீதாயாம் ஸப்தமே. இறுப்பது-கொடுப்பது. நம்முள்ளத்து - நிறுத்தி - கொள்ளும் தெய்வங்களும் உம்மை உய்யக்கொள் - மறுத்துமவனோடேகண்டீர், மார்க்கண்டேயனுங்கரியே இத்யாரப்யாந்வய:. அவனோடே - அவன்பக்கலிலே ; கொண்டுபோய் இத்யத்யாஹார:. அவன்மூர்த்தியா யவர்க்கே - அவனுக்கு ஶரீரபூதரானவர்களுக்கே. (எ)

ஒ.—எட்டாம்பாட்டில், தேவதாந்தரங்களை யாஶ்ரயித்து அபேக்ஷிதங்களைப் பெற்றாரில்லையோவென்னில், அந்த தேவதைகள் ஆஶ்ரிதாபேக்ஷிதங்கள் கொடுக்கவல்ல ராம்படி பண்ணினன் எம்பெருமானே; அவனை யாஶ்ரயித்து உஜ்ஜீவியுங்கோ ளென்கிறார்.

[இறுக்குமென்று தொடங்கி] - பிந்நருசிகளான அதிகாரிகள் ஸ்வவர்ணஸ்வா ஶ்ரமோசித கர்மங்களாலே ஸமாராதித்து ஸ்வாபிலஷிதங்களைப்பெற்று அநுபவிக்கும்படி ஸ்வஶரீரபூதமான தேவதைகளை ஸர்வேஶ்வரன்தானே ஸமாராத்யராகவும் ஆராதகர்க் கும் அபிமதபலங்களைக் கொடுக்க வல்லராம்படியும் பண்ணினன். [மறுத்திருமார்வ னென்று தொடங்கி] - அவனழகுக்குத் தோற்று அநந்யப்ரயோஜநரான வைஷ்ணவர்கள் இகழாதே மிகவும் ஹ்ருஷ்டராய்க்கொண்டு பூமியிலே திரண்டார்கள்; அவர்களைப்போலே நீங்களும் எம்பெருமானை அநந்யப்ரயோஜநராய் ஆஶ்ரயித்து உஜ்ஜீவியுங்கோள்.

ப.—அநந்தரம், இப்படி ஸர்வதேவதாநாயகனாய் ஸ்ரீவத்ஸவக்ஷாவான க்ருஷ் ணனுடைய ஶேஷபூதரானவர்கள் லோகத்திலே அதிகராய் வர்த்தியாநின்றார்கள், அவர் களை யாஶ்ரயித்து உஜ்ஜீவியுங்கோ ளென்கிறார்.

இறுக்கும் - கர்த்தவ்யமாய், இறை - கடமையான நித்யநைமித்திகங்களை, இறுத்து - ஸமர்ப்பித்து, உண்ண - உஜ்ஜீவிக்கைக்காக, எவ்வுலகுக்கும் - நாநாருசிகளான ஸமஸ்தலோகத்துக்கும், தன் - தன்னுடைய, மூர்த்தி - ஶரீரபேதங்களை, தெய்வங்களாக - தத்தத்கர்மாராத்யதேவதைகளாக, நிறுத்தினன் - நிறுத்தினவன், அத்தெய்வநாயகன் தானே - ஸர்வதேவதாநாயகனான க்ருஷ்ணன்தானே, (ஆகையால்), மறு - அந்த ஸர்வாதி கத்வஸூசகமான ஸ்ரீவத்ஸத்தை, திருமார்வன் - திருமார்பிலுடையனான, அவன்தன் - அவனுக்கு, பூதங்கள் - ஶேஷபூதரான பாகவதர்கள், கீதங்கள் - நாநாகீதங்களை, பாடி - பாடி, ஞாலத்து - ஸாம்ஸாரிகதோஷத்தாலுண்டான, வெறுப்பு இன்றி - விஷாதம் இல் லாதபடி, மிக்கார் - ஸர்வோத்க்ருஷ்டராய் வர்த்தியாநின்றார்கள்; நீர் - நீங்கள், மேவி - அவர்களைக்கிட்டி, தொழுது - தொழுது, உய்மின் - உஜ்ஜீவியுங்கோள்.

இ.—எட்டாம்பாட்டில், தேவதாந்தரங்களை யாஶ்ரயித்து அபேக்ஷிதங்கள் பெற்றாரில்லையோவென்ன ;—ரஜஸ்தமஃப்ரசுரராயிருக்குமவர்களுக்கு ஆஶ்ரயணீயராக வும், அபேக்ஷிதப்ரதராகவும் தேவதைகளைப் பண்ணினன் ஸர்வேஶ்வரனே; ஆனபின்பு, அவனையாஶ்ரயியுங்கோ ளென்கிறார்.

[இறுக்குமிறையிறுத்துண்ண] - ஸ்வவர்ண ஸ்வாஶ்ரமோசித கர்மங்களாலே ஸமாராதித்து ஸ்வாபிலஷிதங்களைப் பெற்று உஜ்ஜீவிக்க. [எவ்வுலகுக்கும் தன்மூர்த்தி நிறுத்தினன் தெய்வங்களாக] - பிந்நருசிகளான அதிகாரிகளை யுடைத்தான ஸர்வலோகங் களுக்கும், தன் ஶரீரபூதரான தேவதைகளை ஸமாராத்யராக நிறுத்தினன். "ஶாஸ்த்ர ஸ்ரோதஸ்" என்றிருப்பார் தலைவணங்குகைக்காக நிறுத்தினன். [அத்தெய்வநாயகன் தானே]-ஆஶ்ரயிக்கிறவர்களோடு ஆஶ்ரயணீயரோடு வாசியற எல்லார்க்கும் நிர்வாஹகன் அவன்தானே. சேதநருடைய குணாநுரூபமாக ஆராத்யராகவும், அபிமதபலப்ரதராம் படியாகவும் பண்ணினன். [மறுத்திருமார்வன்] - மறுவையும் திருவையும் மார்விலே யுடையவனென்னுதல், ஸ்ரீவத்ஸத்தைத் திருமார்விலேயுடையவனென்னுதல். [அவன் தன் பூதங்கள்] - அஸாதாரணவிக்ரஹத்திலழகிலே தோற்றுத் தாங்கள் உளராயிருக்கும்

ஸ்ரீவைஷ்ணவர்கள், பகவதநுபவஹர்ஷத்தாலே பாடி, "ஸம்ஸாரத்திலே யிருந்தோம்" என்னும் வெறுப்பின்றிக்கே பூமியிலே திரண்டார்கள்; நீங்கள் அவர்களோடேகூட அநந்ய ப்ரயோஜநராய்த் தொழுது உஜ்ஜீவியுங்கோ ளென்னுதல், அவரைத் தொழுது உஜ்ஜீவியுங் கோ ளென்னுதல்.

ஈடு.—எட்டாம் பாட்டு. ராஜஸராயும் தாமஸராயுமுள்ள சேதநர் குணாநு குணமாக ஆஶ்ரயிக்கலாம்படி இதரதேவதைகளை லோகமடங்கப் பரப்பிவைத்தான்; அவனுடைய அஸாதாரணவிக்ரஹத்திலே தோற்றிருக்கும் ஸ்ரீவைஷ்ணவர்கள் லோக மடங்கப் பரந்தார்கள். அவர்களைப்போலே நீங்களும் அவனை யாஶ்ரயிக்கப் பாருங்கோள் என்கிறார்.

[இறுக்குமித்யாதி] - செய்தபயிருக்குக்கடமையிறுக்குமாபோலே, உந்தாமுடைய புண்யபாபாநுரூபமாக அவ்வவதேவதைகளுக்குக் கோடுக்கும் த்ரவ்யங்களைக்கோடுத்து ஜீவிக்கைக்காக, எல்லாலோகங்களிலும், தனக்குத் தநுபூதரான தேவதைகளை நிறுத்தி னான்; இவ்வருகுள்ளாரோடு அத்தேவதைகளோடு வாசியற எல்லார்க்குமோக்க நியாமகனா யிருக்கிற தானே. ராஜாக்கள் ஊர்தோறும் கூறுசெய்வார்களை வைக்குமாபோலே. [மறுத் திருமார்வன்] - ஸ்ரீவத்ஸத்தையும் பிராட்டியையுமுடைய மார்வனென்னுதல், ஸ்ரீவத் ஸத்தையுடைத்தான திருமார்வையுடையவனேன்னுதல். [அவனித்யாதி] - அவனுடைய அஸாதாரணவிக்ரஹத்திலே தோற்றிருக்கும் ஸ்ரீவைஷ்ணவர்கள், ப்ரீதிப்ரகர்ஷத்தாலே கீதங்களைப்பாடி, "ஸம்ஸாரத்திலே வர்த்திக்கவேண்டாநின்றதே!" என்கிற வெறுப்பின் றிக்கே பூமியெங்கும் பரந்தார்கள். [மேவித்தொழுதுய்ம்மினீரே] - ஆனபின்பு, நீங்கள் அவர்களைச் சென்றுஆஶ்ரயித்து உஜ்ஜீவியுங்கோளேன்னுதல், அந்த ஸத்வநிஷ்டரானவர்க

எட்டாம்பாட்டு - இறுக்கும் இத்யாதி. *கீழ்ச்சொன்னபடியே, பலப்ரதாநமுக்தருமன்றிக்கே, பகவத்ப்ரகாரமான ஆகாரத்தாலே யொழிய ஸ்வதந்த்ர அநுபாஸ்யருமாயிருக்க, இந்த தேவதைகளை ஈஶ்வரன்தான் ஸ்ருஷ்டிப்பானென்? என்ன* - ராஜஸராயும் இத்யாதி. *சேதநர்குணாநுகுணமாக* - இத் *யாதிக்கு - "யக்ஷரக்ஷாம்ஸி ராஜஸா: । ப்ரேதாந் பூதகணாம்ஶ்சாந்யே யஜந்தே தாம ஸாஜநா:" இத்யாதியிலே நோக்கு.* பரப்பிவைத்தான் - *என்றவநந்தரம், ஆகையாலேயென்று கூட்டிக்கொள்வது. "மறுத்திருமார்வன்" இத்யாதியைப்பற்ற* - அஸாதாரண இத்யாதி. *"மேவித் தொழுதுய்ம்மினீர்" என்றத்தைப்பற்ற*-அவர்களைப்போலே இத்யாதி.

"இறுக்குமிறையிறுத்து" என்று - நித்ய நைமித்திகாதி ரூபேண அவர்களை யாராதிக்கை யைச் சொல்லுகிறது. கடமை - *ருணமும், வரியும்.* புண்யபாபாநுரூபமாக *என்றது* - புண்ய *வ்ருத்திக்கும் பாபக்ஷயத்துக்குமாக என்றபடி என்னுதல்; அன்றிக்கே, தேவதாந்தர ஸமாஶ்ரயண ஹேதுவான புண்யபாபாநுகுணமாகவென்னுதல். "அத்தெய்வநாயகன்" என்றதுக்குபாவம்* - இவ் வருதுள்ளார் *இத்யாதி. "நிறுத்தினான்" என்றதுக்கு த்ருஷ்டாந்தம்* - ராஜாக்கள் *இத்யாதி.* கூறு செய்வார்கள் - *தாந்யாதிகளை விபஜிக்கும் அதிகாரிகள், மணியக்காரரை யென்றபடி. மூந்தினவர்த் தத்தில்,* திருவென்று - *பிராட்டி. த்விதீயார்த்தத்தில்,* திருவென்கிறது - *மார்வுக்கு விஶேஷணம். திருமார்வ னென்றபடி. கீழேயுங்கூட்டி "பூதங்கள்" இத்யாதிக்கு ஶப்தார்த்தம்*-அவனுடைய *இத்யாதி,* வேண்டாநின்றதே - *வேண்டியிருந்ததே.* வெறுப்பு - *குத்ஸை. "மேவி" என்று - கிட்டியென்னுதல் அநந்ய ப்ரயோஜநரா யென்னுதல். தொழுகை - பாகவதவிஷயமாதல், பகவத்விஷயமாதல். அத்தெய்வ நாயகன்தானே* - இறுக்கும்மென்றுதொடங்கி, *தன்மூர்த்தியை - தெய்வங்களாக - நிறுத்தினான்; ஆகை யாலே* அவர்களைவிட்டு - *மறுத்திருவென்று தொடங்கி அந்வயம்.* திருமார்வனவன்தன் பூதங்கள் - திரு

ளோடொக்க நீங்களும் அநந்யப்ரயோஜநராய் ஸர்வேஶ்வரனை யாஶ்ரயித்து உஜ்ஜீவித்துப்
போங்கோ ளென்னுதல். (அ)

ஒன்பதாம் பாட்டு.

மேவித்தொழுதுய்ம்மினீர்கள் வேதப்புனிதவிருக்கை
நாவிற்கொண்டச்சுதன்தன்னை ஞானவிதிபிழையாமே
பூவிற்புகையும்விளக்குஞ் சாந்தமும்நீரும்மலிந்து
மேவித்தொழுமடியாரும் பகவரும்மிக்கதுலகே.

பகவத்ஸ்வரூபரூபகுணவிபூதி ப்ரதிபாதகமாய்
ஆ.—(மேவித்தொழுது.) பக்திமார்க்கம் தப்பாமே புஷ்பதூப பரிஶுத்தமான ருக்குக்களைச் சொல்லிக்கொண்டு அநந்யப்ரயோஜநராய்க்கொண்டு எம்பெரு தீபாநுலேபந ஸலிலாத்யுபகரணங்களாலே பரமபுருஷகுணசேஷ்டிதாநுபவைகபோகரான மானுக்கு அடிமைசெய்கிற பரிஜநங்களும், நீங்களும் அப்படியே அநந்யப்ரயோஜநராய்க் திவ்யஜநங்களுமேயாயிற்று இந்தலோகம்; கொண்டு எம்பெருமானுக்கு அடிமைசெய்து உஜ்ஜீவியுங்கோ ளென்கிறார்.

ஒ.—ஒன்பதாம்பாட்டில், பகவத்பரிசர்யைக போகரான வைஷ்ணவர்களும், அதுக்கு க்ஷமரன்றிக்கே தத்குணைகதாரகரான வைஷ்ணவர்களுமேயாயிற்று இந்த லோகம்; நீங்களும் அவர்களைப்போலே அநந்யப்ரயோஜநராய் எம்பெருமானுக்கு அடிமைசெய்து உஜ்ஜீவியுங்கோ ளென்கிறார்.

[வேதப்புனிதமென்று தொடங்கி] - வேதத்தில் பகவத்ப்ரதிபாதகமான ஸ்ரீ புருஷஸூக்தாதிகளில் ருக்குக்களைச் சொல்லிக்கொண்டு ஆஶ்ரிதரை ஒருநாளும் விடாத ஸ்வபாவனானவனை வேதாந்தங்களில் ப்ரதிபாதிக்கிற பக்திமார்க்கம் தப்பாமே. [பூவில் புகை] - பூவோடுகூடின புகை. மலிவு - மிகுதி. மேவித்தொழுகை - அநந்ய ப்ரயோஜ நராய் ஆஶ்ரயிக்கை.

ப.—அநந்தரம், ஆஶ்ரிதரைக்கைவிடாத அப்ரச்யுதஸ்வபாவனுடைய கைங் கர்யநிஷ்டராலும் குணநிஷ்டராலும் லோகம் மிகுந்தது, அவர்களை யாஶ்ரயித்து உஜ்ஜீவியுங்கோ ளென்கிறார்.

வேதம் - வேதத்தில், புனிதம் - ஸ்வரூபகுணாதி ப்ரதிபாதகமாகையாலே பரம பாவநங்களான, இருக்கை - ஸ்ரீ புருஷஸூக்தநாராயணாநுவாகாதி ருக் விஶேஷங்களை, நாவில் - நாவிலே, கொண்டு - உச்சரித்துக்கொண்டு, ஞானவிதி - பக்திரூபஜ்ஞாநவிதா நம்பண்ணுகிற ஶாஸ்த்ரமர்யாதை, பிழையாமே - தப்பாதபடி, (ஆராதநோபகரணமான), பூவில் - புஷ்பத்தோடுகூடின, புகையும் - தூபமும், விளக்கும் - தீபமும், சாந்தமும் - சாத்துப்படியும், நீரும் - திருமஞ்சனமும், மலிந்து - பூர்ணமாகவுடையராய்க்கொண்டு, அச்சுதன் தன்னை - அப்ரச்யுதஸ்வபாவனான ஸர்வேஶ்வரனை, மேவி - அநந்யப்ரயோஜந

மார்பையுடையனான அவனுக்கு ஶேஷபூதரானவர்க ளென்றபடி. "கடல்வண்ணன்பூதங்கள்" இத்யாதி ஸ்தலங்களிலும் - கடல்வண்ணனுடைய பூதங்களென்று ஷஷ்டீஸமாஸபுருஷனைக் கண்டுகொள்வது.

ராய்க்கொண்டு, தொழும் - ஶேஷவ்ருத்திமுகத்தாலே ஆஶ்ரயிக்கும், அடியாரும் - ஶேஷ பூதரையும், பகவரும் - அவனுடைய ஜ்ஞாநஶக்த்யாதி குணாநுஸந்தாநநிஷ்டரான முநிகளையும், மிக்கது - மிகவுடைத்தாயிற்று, உலகு - லோகம், (ஆனபின்பு), மேவி - அவர்களைக்கிட்டி, தொழு து-தொழுது, நீர் - நீங்கள், உய்ம்மின்கள் - உஜ்ஜீவியுங்கோள்.

இ—ஒன்பதாம்பாட்டில், கைங்கர்யநிஷ்டரும் குணநிஷ்டரும் பூமியிலே புகுந்து ஸம்ருத்தமாக வர்த்தியாநின்றார்கள், நீங்களும் அவர்களோடொக்க ஆஶ்ரயித்து உஜ்ஜீவியுங்கோ ளென்கிறார்.

[மேவி இத்யாதி] - அநந்யப்ரயோஜநராய்த் தொழுது உஜ்ஜீவியுங்கோள், வேதத்தில் விபூதிவிஷயமாகச் சொன்னவை யன்றிக்கே, பகவத்குணங்களையும் வடிவழகையும் ப்ரதிபாதியாநின்றுள்ள ஸ்ரீ புருஷஸூக்தாதிகளை நாக்கிலே கொண்டு. [அச்சுதன்தன்னை] - அஹ்ருதயமாகச்சொன்னத்தை ஸஹ்ருதயமாக நினைத்து "நத்ருஜெயம்" என்னுமவன். அகவாய்பாராதே உக்திமாத்ரத்தைக்கொண்டு நழுவவிடாதவனை. [ஞான விதிபிழையாமே] - வேதாந்தங்களில் ப்ரதிபாதிக்கிற பக்திமார்க்கம் தப்பாமே. ஞான மென்று - ஜ்ஞாநவிஶேஷமான பக்தியைச்சொல்லுகிறது. [பூவிற்புகையும்] - பூவோடே கூடின புகையையும், ஸமாராதந த்ரவ்யங்களையும் மிகுத்து. [மேவித்தொழுமடியாரும்] - அநந்யப்ரயோஜநராய்த் தொழும் கைங்கர்யநிஷ்டரும். [பகவரும்] - அதுக்குக்ஷமரன்றிக்கே குணாநுபவம்பண்ணும் குணநிஷ்டருமாகக் கொண்டு லோகமடங்க ஸம்ருத்தமாயிற்று. கிடந்தவிடத்தே கிடந்து குணாநுபவம்பண்ணும் ஸ்ரீபராங்குஶ்வானையும், தொடர்ந்து அடிமைசெய்யும் இளையபெருமாளையும்போலே இருக்குமவர்கள். மேவித் தொழுதுய்ம்மினீர்கள்.

ஈடு.—ஒன்பதாம்பாட்டு. பகவத்குணநிஷ்டரும் கைங்கர்யநிஷ்டருமான ஸ்ரீவைஷ்ணவர்கள் பூமியெங்கும் பரந்தார்கள், நீங்களும் அவர்களோடொக்க அநந்யப்ரயோஜநராய் ஆஶ்ரயியுங்கோ ளென்கிறார்.

[மேவி இத்யாதி] - அநந்யப்ரயோஜநராய்க்கொண்டு ஆஶ்ரயித்து உஜ்ஜீவிக்கப் பாருங்கோள். [வேதப்புனிதவிருக்கை நாவிற்கொண்டு] - வேதத்தில் அவன்விபூதிவிஷயமாகப் பரக்குமவற்றை யன்றிக்கே, அஸாதாரண விக்ரஹத்திலும் குணங்களிலும் ஸ்வரூபத்திலுமாகப் பரந்திருக்கிற ஸ்ரீபுருஷ ஸூக்தாதிகளை நாக்கிலேகொண்டு. [அச்சுதன்தன்னை] - இவர்கள் நாவிலேகொண்டு அஹ்ருதயமாகச் சொன்னால் அத்தை ஸஹ்ருதயமாகக் கொண்டு

ஒன்பதாம்பாட்டு - மேவி இத்யாதி. **பகவத்குணநிஷ்டரும்** என்றது - "பகவரும்" என்றத்தைப்பற்ற. **கைங்கர்யநிஷ்டரும்** என்றது - "அடியாரும்" என்றத்தைப்பற்ற. **பூமியெங்கும் பரந்தார்கள்** என்றது - "மிக்கதுலகு" என்றத்தைப்பற்ற. "மேவித்தொழுது" இத்யாதியைப்பற்ற- **அநந்யப்ரயோஜநராய்** இத்யாதி.

புனிதவிருக்கை - பவித்ரமான ருக்குக்களை. பவித்ரத்வம் - அஸாதாரண விக்ரஹாதி ப்ரதிபாதகமானவற்றுக்கே என்று கருத்து. மேலே "**ஞானவிதி**" என்று - ஜ்ஞாநவிஶேஷமான பக்தியைச் சொல்லுகையாலே, "நாவிற்கொண்டு" என்று - அஹ்ருதயமாகச் சொல்லுகை அடியார்க்கும் பகவர்க்கும் விருத்தமாகையாலே, "வேதப்புனிதவிருக்கைநாவிற்கொண்டு" என்றத்தை - "**அச்சுதன் தன்னை** - மேவித்தொழுதுய்ம்மினீர்கள்" என்று உபதேஶவிஷயமாயிருக்கிறவர்களுக்கு ஶேஷமாக அந்வயிப்பது. கீழேயுங்கூட்டி, அச்சுதஶப்தத்துக்கு - நஸ்ராவயதி ஸ்வாஶ்ரிதாந் இதி அச்யுதஃ என்கிற வ்யுத்பத்தியிலே நோக்காகஆர்த்தம்-**இவர்கள்நாவிலே** இத்யாதி. "ஹ்ருதிஸ்த ஜ்ஞாநவிஶேஷஃ" என்றத்தைப்

"நத்யஜேயம்" (நத்யஜேயம்) என்னுமவன். [ஞானவிதிபிழையாமே] - ஞானமென்கிறது - ஜ்ஞாநவிஶேஷமான பக்தியை. பக்திபலாத்க்ருதமான க்ரியைகளி லொன்றும் தப்பாமே. [பூவில் இத்யாதி] - பூவோடேகூடினபுகை தொடக்கமான ஸமாராதநோபகரணங்களை மிகுத்துக்கொண்டு அவனைவிடாதே நின்று அடிமைசெய்யுமவர்களும், குணநுஸந்தாநத்துக்கு அவ்வருகொன்றுக்கு க்ஷமரன்றிக்கேயிருக்கும் ஸ்ரீவைஷ்ணவர்களும்,மிக்கது லோகம். (தொடர்ந்தடிமைசெய்யும்) இளையபெருமாளையும், (கிடந்தவிடத்தேகிடந்து குணநுபவம் பண்ணும்) ஸ்ரீபரதாழ்வானையும்போலே இருப்பாரேயாயிற்று லோகமடைய; நீங்களும் மேவித்தொழுதுய்ம்மின். (கூ)

பத்தாம் பாட்டு.

மிக்கவுலகுகள்தோறும் மேவிக்கண்ணன்திருமூர்த்தி
நக்கபிரானோடு அயனுமிந்திரனும்முதலாகத்
தொக்கவமரர்குழாங்கள் எங்கும்பரந்தனதொண்டீர்
ஒக்கத்தொழகிற்றிராகில் கலியுகமொன்றுமில்லையே.

ஆ.—(மிக்க.) சதுர்முகபசுபதிப்ரதமகப்ரப்ருதி ஸமஸ்ததேவநிகாயங்களும் பரமபுருஷஸமாஶ்ரயணத்தாலே லப்தலோகாதிபத்யரானார்கள்; ஆனபின்பு, நீங்களும் அவர்களைப்போலே எம்பெருமானை யாஶ்ரயிக்க வல்லிகோளாகில், இக்கலியுகமொன்று மில்லை யென்கிறார்.

ஒ.—பத்தாம்பாட்டில், நீங்களாராதிக்கிற தேவதைகளும் எம்பெருமானை ஸமாஶ்ரயித்துத் தந்தாமுடைய பதங்களைப்பெற்றது, நீங்களும் அவர்களைப்போலே எம்பெருமானை யாஶ்ரயித்துப் பிழையுங்கோ ளென்கிறார்.

[மிக்கவென்று தொடங்கி] - ப்ரஹ்மருத்ராதி தேவதாகணங்கள் விலக்ஷணமான திருமேனியையுடைய க்ருஷ்ணனை ஆஶ்ரயித்து ஸம்ருத்தமான லோகங்கள் தோறும் தங்கள் ஐஶ்வர்யங்களால் விஸ்த்ருதமாயின. [ஒக்கவென்று தொடங்கி] - அவர்களைப்போலே நீங்களும் அவனை யாஶ்ரயிக்க வல்லிகோளாகில் கலியுக ப்ரயுக்தமான ஸகல தோஷங்களும் நீங்கும்.

பற்ற-ஜ்ஞாநவிஶேஷமான இத்யாதி. விதீயத ஐதிவிதி: என்கிற வ்யுத்பத்தியிலே நோக்காகவர்த்தம் ஹத்தி ஸமாக்ருத இத்யாதி. அதாவது - விதீயத ஐதிவிதி: என்று - ஆராதநரூபமான கர்மங்களைச் சொல்லுகிறதென்றபடி. "பூவில்" என்றது - த்ருதீயையாய், பூவோடே என்றபடி. பகவர் - பகவான்கள். ஜ்ஞாநாதிகர் இத்யர்த்த:. அவர்களாகிறார் - குணநிஷ்டர். மிக்கது - ஸம்ருத்தமாயிற்று. லோகம் - மிக்கது என்றந்வயம். இளையபெருமாள் கைங்கர்யநிஷ்டர், ஸ்ரீபரதாழ்வான் குணநிஷ்டர். ஞானவிதிபிழையாமே யென்று தொடங்கி, மேவித்தொழுமடியாரும் பகவரும் - உலகு-மிக்கது; அவர்களோடொக்க-வேதப்புனிதவிருக்கை நாவிற்கொண்டச்சுதன் தன்னை - மேவித்தொழுதுய்ம்மினீர்கள் இத்யந்வய:. கீழிற்பாட்டுக்களிற்போலே, இப்பாட்டிலும் - ஸ்ரீவைஷ்ணவர்களைத் தொழுமென்ற பக்ஷத்திலே; வேதப்புனிதவிருக்கை நாவிற்கொண்டு - ஞானவிதிபிழையாமே பூவிற்புகையுந் தொடங்கி, அச்சுதன் தன்னை - மேவித்தொழுமடியாரும் பகவரும் - மிக்கதுலகு; அவர்களை - மேவித்தொழுதுய்ம்மினீர்கள் என்று அந்வயம். (க)

ப.—அநந்தரம், இப்படி ஸர்வாதிகனான ஸர்வேஶ்வரனுக்கு ஶேஷபூதரான பாகவதருடைய ஆஶ்ரயணீயதையை ப்ரதிபாதித்து, இப்பாட்டில்-ப்ரயோஜநாந்தரார்த்தமாக தேவதாந்தரங்களை யாஶ்ரயிப்பாரைக்குறித்து; அவனை யாஶ்ரயித்து தேவதைகள் அபிலஷிதபதங்கள் பெற்றவோபாதி நீங்களும் அவனை யாஶ்ரயிப்புதிகளாகில், உங்களுடைய புத்திபேதஹேதுவான காலதோஷமில்லை யென்கிறார்.

நக்கன் பிரானோடு - நக்னனான ஈஶ்வரனோடேகூட, அயனும் - ப்ரஹ்மாவும், இந்திரனும் - இந்த்ரனும், முதலாக - முதலாக, தொக்க - திரண்ட, அமரர்குழாங்கள்-தேவதாஸமூஹங்களானவை, கண்ணன் - ஸர்வாபாஶ்ரயபூதனான க்ருஷ்ணனுடைய, திரு - ஸ்ரீமத்தான, மூர்த்தி - விக்ரஹத்தை, மேவி-ஆஶ்ரயித்து, மிக்க - போக்யபோகோபகரணாதிகளால் ஸம்ருத்தமான, உலகுகள்தோறும் - லோகங்கள்தோறும், எங்கும்-ஸர்வத்ர, பரந்தன - விஸ்தீர்ணமான ஸம்பத்தையுடையரானார்கள்; தொண்டீர் - இதர புருஷார்த்த சபலரானவர்களே! ஒக்க - நீங்களுமவர்களோடொக்க, தொழ - அவனையே தொழ, கிற்றிராகில் - வல்லிகோளாகில், கலியுகம் - (உங்களுக்குத் தேவதாந்தரப்ராவண்யரூபபுத்யபகர்ஷஹேதுவான) கலியுகதோஷம், ஒன்றும் - ஒன்றும், இல்லை-இல்லை. கலியுகத்தில் பகவதர்ச்சநவிமுகராம்படி பாஷண்டோபஹதராயிறே ஜநங்க ளிருப்பதென்று கருத்து.

இ.—பத்தாம்பாட்டில், நீங்களாராதிக்கிற தேவதைகளும் அவனை யாஶ்ரயித்துத் தந்தாமுடைய பதங்களைப் பெற்றது, நீங்களும் அவர்களைப்போலே அவனை யாஶ்ரயித்துப் பிழைபுங்கோ ளென்கிறார்.

[கண்ணன் திருமூர்த்தியை - மேவி] - க்ருஷ்ணனுடைய அஸாதாரண விக்ரஹத்தைப்பொருந்தி யாஶ்ரயித்து. [நக்கபிரான் இத்யாதி] - பிரானென்று - ஸ்வகோஷ்டி ப்ரஸித்தி. தொக்க-திரண்ட. மிக்க வுலகுகள் - ஸம்ருத்தமான லோகங்கள். ப்ரஹ்மா தொடக்கமாகத் திரண்டதேவதா ஸமூஹங்கள் ஸம்ருத்தமான லோகங்கள் தோறும் தங்களுடைய ஐஶ்வர்யத்தாலே விஸ்த்ருதரானார்கள். [தொண்டீர்] - தேவதாந்தரஶேஷபூதரான நீங்கள். நீங்களும் அவர்களைப் போலே ஆஶ்ரயிப்புதிகோளாகில் கலியுக ப்ரயுக்தமான ஸகலதோஷங்களும் நீங்கும். தொக்க அமரர்குழாங்கள் - மிக்கவுலகுகள் தோறும் - எங்கும் பரந்தன.

ஈடு.—பத்தாம்பாட்டு. நீங்கள் ஆஶ்ரயிக்கிற தேவதைகள் செய்கிற இத்தை நீங்களும் செய்திகோளாகில், யுகப்ரயுக்தமான தோஷங்களும் போமென்கிறார்.

[மிக்க இத்யாதி] - விஸ்த்ருதமான லோகங்களெங்கும் க்ருஷ்ணனுடைய அஸாதாரணவிக்ரஹத்தை ஸமாஶ்ரயமாகப்பற்றி. [நக்கன் இத்யாதி] - ருத்ரனோடே ப்ரஹ்மா

பத்தாம்பாட்டு - மிக்க இத்யாதி. "நக்கபிரானோடு" என்று தொடங்கி, ' அமரர்குழாங்கள்-கண்ணன்திருமூர்த்தி - மேவி" என்றதைப்பற்ற-நீங்கள்ஆஶ்ரயிக்கிற இத்யாதி. நீங்களும் செய்திகோளாகில் என்றது - "ஒக்கத்தொழகிற்றிராகில்" என்றதைப்பற்ற. "கலியுகமொன்றுமில்லை" என்றத்தைப்பற்ற - யுகப்ரயுக்தமான இத்யாதி.

"கண்ணன்திருமூர்த்தி - மேவி" என்றந்வயிப்பது. மேவுகை - சுபாஶ்ரயத்வேநபற்றுகை. "தொக்க" - திரண்ட. பஹுவசநத்தோடேகூட்டி "எங்கும் பரந்தன" என்றதுக்கு விவரணம் - விபூதி விஸ்தாரத்தையுடையரானார்கள் என்று "தொண்டீரொக்க" 'இத்யாதியைப்பற்ற - அப்ராப்த இத்

வும் இந்த்ரனும் இவர்கள் தொடக்கமாகத் திரண்ட தேவதா ஸமூஹங்க ளெங்குமொக்கப் பரந்து விபூதிவிஸ்தாரத்தை யுடையரானார்கள். அப்ராப்த விஷயத்தே தொண்டுபட்டுத் திரிகிற நீங்கள் அவர்களோடொக்க ஸர்வேச்வர ஸமாச்ரயணம்பண்ணப்பெறில், உங்கள் தோஷம் போகையேயன்றிக்கே யுகப்ரயுக்ததோஷமும் போமென்கிறார். (௧௦)

பதின்றாம்பாட்டு.

கலியுகமொன்றுமின்றிக்கே தன்னடியார்க்கருள்செய்யும்
மலியுஞ்சுடரொளிமூர்த்தி மாயப்பிரான்கண்ணன்தன்னைக்
கலிவயல்தென்னன்குருகூர்க் காரிமாறன்சடகோபன்
ஒலிபுகழாயிரத்திப்பத்து உள்ளத்தைமாசறுக்குமே.

ஆ.—(கலியுகம்.) ஸ்வாச்ரிதர் அபேக்ஷித்தால் கலியுகத்தையே க்ருதயுகமாக்கி யருளும் ஸ்வபாவனாயிருந்த எம்பெருமானைச் சொன்ன இத்திருவாய்மொழி, வைஷ்ணவத்வ விரோதி ஸகலவிரோதங்களையும் போக்குமென்கிறார்.

ஒ.—நிகமத்தில், இத்திருவாய்மொழி கற்றார்க்கு தேவதாந்தரங்களிலுண்டான பரத்வஜ்ஞாநமும் எம்பெருமான் பக்கலுண்டான ப்ரயோஜநாந்தர பரத்வமாகிற மாநஸதோஷமும் போமென்கிறார்.

[கலியுகமென்று தொடங்கி] - தன்னுடையார்க்கு கலியுகதோஷம் ஒன்றும் தட்டாதபடி அருள்செய்யும் ஸ்வபாவனாய், மிகவும் விலக்ஷண தேஜோரூபமான திருவடிவை யுடையனாய், அத்யாச்சர்யகுண சேஷ்டிதனான க்ருஷ்ணனை. [கலிவயல்] - ஸம்ருத்தமான வயல். [ஒலிபுகழ்] - வ்யக்தமாக பகவத்குணப்ரதிபாதகமாகை.

ப.—அநந்தரம், இத்திருவாய்மொழி, அப்யஸித்தவர்கள் நெஞ்சில் ஸகல மாலிந்யமும் அறுக்குமென்று பலத்தை அருளிச்செய்கிறார்.

தன் - தனக்கு, அடியார்க்கு - அஸாதாரணசேஷபூதரானவர்களுக்கு, கலியுகம் - கலியுகதோஷம், ஒன்றும் - ஒன்றும், இன்றிக்கே - தட்டாதபடி, (ஸ்வவிஷயஜ்ஞாநப்ரேமவ்ருத்திகளை), அருள் - தன்னருளாலே, செய்யும் - கொடுக்கையாலே, மலியும் - அபிவ்ருத்தமான, சுடர் - ப்ரகாசத்தையுடைத்தான, ஒளிமூர்த்தி - தேஜோமய திவ்யவிக்ரஹத்தை யுடையனாய், மாயம் - ஆச்சர்ய குணசேஷ்டிதங்களை, பிரான் - அவர்களை யநுபவிப்பிக்குமுபகாரகனான, கண்ணன்தன்னை - க்ருஷ்ணனைப்பற்ற, கலி - ஸம்ருத்தமான, வயல் - வயலையுடைத்தாய், தென் - தெற்குத்திக்குக்கு, நன் - ச்லாக்யமான, குருகூர் - திருநகரிக்கு நிர்வாஹகராய், காரி - ஜநகவைலக்ஷண்யத்தையும்,

யாதி. தொண்டுபட்டு - அடிமைப்பட்டு. உங்கள் தோஷம் போகையே இத்யாதிக்குக் கருத்து - நீங்கள் பாகவதர்களானால் உங்கள் ஸஞ்சாரத்தாலே யுகப்ரயுக்ததோஷமும் போமென்கை. யுகப்ரயுக்த தோஷம் - கலியுகப்ரயுக்ததோஷம். தொண்டர், நக்கபிரானென்று தொடங்கி, குழாங்கள் - கண்ணன் திருமூர்த்தி - மேவி - மிக்கவுலகுகள்தோறும் - எங்கும்பரந்தன; ஆகையாலே நீங்களும் - ஒக்கத்தொழுகிற்றிராகில் கலியுகமொன்றுமில்லை இத்யந்வயம். (௧௦)

மாறன் - குலவைலக்ஷண்யத்தையுமுடையரான, சடகோபன் - ஆழ்வாருடையதாய், ஒலி - ஸுப்ரஸித்தமான, புகழ் - பகவத்குணப்ரதைதையுடைத்தான, ஆயிரத்து - ஆயிரந்திருவாய்மொழியில், இப்பத்து - இப்பத்தும், உள்ளத்தை - அப்யஸித்தவர்கள் நெஞ்சை, மாசு - (பாகவதஸாம்ய ப்ரதிபத்திரூபமாயும், அதுக்கடியான பகவதுத்கர்ஷாதி ஶங்காரூபமாயும், தேவதாந்தரபரத்வ ப்ரதிபத்திரூபமாயும், ப்ரயோஜநாந்தர ப்ராவண்ய ரூபமாயுமுள்ள) மாசு, அறுக்கும் - அறும்படிபண்ணும். இது அறுசீராசிரியவிருத்தம்.

இ.—நிகமத்தில், இத்திருவாய்மொழி அப்யஸித்தார்க்கு இதுதானே இதர பரதவஜ்ஞாநததுக்கும ப்ரயோஜநாந்தரபரதைக்கும் அடியான மாநஸ தோஷத்தைப் போக்குமென்கிறார்.

[கலியுகமித்யாதி] - தன்னடியார்க்குக் கலியுகமொன்றும் தட்டாதபடி அருள் செய்யும். நாட்டுக்கிட்ட நினைப்பன்றிறே அந்தஃபுரத்துக்கிடுவது. "கலௌ க்ருதயுகம் தஸ்ய", "ஸர்வஸ்வம் ஜீவிதம் ஜஹ்யாம்", "கோஷே யத்ருச்சிதஸ்யஸ்யாத்". [மலியும் சுடரொளிமூர்த்தி] - மிகவும் விலக்ஷணதேஜோரூபமான வடிவையுடையவன். அருளாதே அநாதரிக்கிலும் விடவொண்ணாத வடிவு. அருள் செய்தது அவ்வடிவுதானேயாயிற்று. அத்யாஶ்சர்ய குணசேஷ்டிதங்களையுடைய க்ருஷ்ணனை. [கலிவயல்] - ஸம்ருத்தமான வயல். [ஒலிபுகழ்] - பகவத்குணங்களை வ்யக்தமாக ப்ரதிபாதித்த இப்பத்து. [உள்ளத்தைமாசறுக்குமே] - அந்தஃகரணதோஷத்தைப் போக்கும். அதாகிறது—தேவதாந்தரங்களில் பரத்வ ஶங்கை, பகவத்பரத்வத்தில் அதிஶங்கை, ஸ்ரீவைஷ்ணவ விஷயத்தில் ஸஜாதீயபுத்தி, அபாகவதஸம்ஶ்லேஷம், ப்ரயோஜநாந்தரபுத்தி, இப்படிப்பட்ட அந்தஃகரண தோஷங்களை யறுக்கும்.

ஈடு.—நிகமத்தில், இத்திருவாய்மொழி கற்றார்க்குத் தேவதாந்தரங்கள் பக்க லுண்டான பரத்வஶங்கையும், எம்பெருமான்பக்கல் ப்ரயோஜநாந்தரபரதையுமான மாநஸ தோஷம் போ மென்கிறார்.

[கலியுகமொன்றுமின்றிக்கே] - "கலௌ க்ருதயுகம் தஸ்ய" (கலௌக்ருத யுகம்தஸ்ய) என்கிறபடியே, கலிதோஷங்க ளொன்றும் வாராதபடியாகத் தன்னடியார்க்கு அருள்செய்யும். நாட்டுக்கிட்ட வஂக மல்லவிறே அந்தஃபுரத்துக்கிடுவது. [மலியும்சுடரொளி மூர்த்தி] - அருள்செய்யாதொழிந்தாலும் விடவொண்ணாத வடிவழகு. சுடரென்றும், ஒளி யென்றும் - பர்யாயமாய், இரண்டாலும் - மிகுதியைச் சொல்லுகிறது. மலிதல் - நிறைத

ப்ர:—(கலியுகமொன்று மின்றிக்கே)-"கலௌ க்ருதயுகம் தஸ்ய கலிஸ்தஸ்ய க்ருதேயுகே । யஸ்ய சேதஸி கோவிந்தோ ஹ்ருதயே யஸ்ய நாச்யுத:॥".

நிகமம் - கலியுகம் இத்யாதி. "இப்பத்து உள்ளத்தைமாசறுக்கும்" என்றத்தைப்பற்ற-இத் திருவாய்மொழிகற்றார்க்கு இத்யாதி.

கலியில்லாமல் போமோவென்ன, கலௌ இத்யாதி. "கலௌ க்ருதயுகம் தஸ்ய கலிஸ்தஸ்ய க்ருதேயுகே । யஸ்ய சேதஸி கோவிந்தோ ஹ்ருதயே யஸ்ய நாச்யுத:". ஸர்வர்க் கும் கலியுகமாயிருக்க, அடியார்க்கு அந்ததோஷமொன்றும் வாராதபடி அருள்செய்யும்படி எப்படி யென்ன-நாட்டுக்கு இத்யாதி. அஂகம் - அர்க்கம். மூல்யதநமித்யர்த்த:. சுடரொளி - மிக்க தேஜஸ் ஸென்றர்த்தமாயிருக்க, "மலியும்" என்றபதம் வ்யர்த்தமன்றோ வென்ன, மலிதல் இத்யாதி. அப்போது, "சுடரொளி - மலியும் - மூர்த்தி" என்றந்வயம். "பிரான்" என்றது - குணசேஷ்டிதங்களை யாஶ்

லாய், மிக்கதேஜஸ்ஸாலே நிறைந்த வடிவேன்றபடி. [மாயமித்யாதி] - ஆஶ்சர்யமான குணசேஷ்டிதங்களையுடைய க்ருஷ்ணனையாயிற்றுக் கவிபாடிற்று. [கலிவயலித்யாதி] - கலியேன்று - மிடுக்குக்கும், ஆரவாரத்துக்கும் பேர். இவற்றால் - பூஸாரத்தைச் சொல்லுதல்; நடுவது, அறுப்பது, உழுவதாய்ச் செல்லுகிற ஆரவாரத்தைச் சொல்லுதல். இப்படிப் பட்ட வயலையுடைத்தாயிருந்துள்ள திருநகரியில் ஆழ்வாரருளிச்செய்த, ப்ரஸித்தமான புகழையுடைத்தான ஆயிரத்திலும், இந்தப் பத்தும்; தேவதாந்தரங்கள்பக்கல் பரத்வஶங்கைபண்ணுதல், ஸ்ரீவைஷ்ணவர்கள்பக்கல் ஸஜாதீயபுத்தி பண்ணுதல், "அபாகவதஸஹவாஸம் நன்று" என்றிருத்தல், ப்ரயோஜநாந்தரங்களை அபேக்ஷித்தல் செய்கையாகிற மாநஸதோஷங்களைப் போக்கும். (கக)

ரிதர்க்கு அநுபவிப்பிக்கும் உபகாரகனென்றபடி. மிடுக்கு - பூஸாரம். அருளிச்செய்தவென்று அர்த்தஸித்தம். ஒலி - ஶப்தம். அதாவது - ப்ரஶம்ஸையாய், ப்ரஸித்தியைக் காட்டுகிறது. பரத்வஶங்கையும், ஸஜாதீயபுத்தியும், "அபாகவதஸஹவாஸம் நன்று" என்றிருக்கையும், ப்ரயோஜநாந்தரத்தை யபேக்ஷித்தல் செய்கையுமாகிற மாநஸதோஷங்களைப் போக்குமென்றது - "கண்ணனல்லால்தெய்வமில்லை", "தொழுதுதொழுதுநின்றார்த்தும்", "ஊழிபெயர்த்திடும்கொன்றே", "சிந்தையைச் செந்நிறுத்தியே" இத்யாதிபதங்கள் இத்திருவாய்மொழியிலே யிருக்கையாலே என்று கண்டுகொள்வது. மாசென்று - இத்யாதிபதங்கள் அழுக்காய், அத்தாலே தோஷம் சொல்லுகிறது. கலிவயல் என்று தொடங்கி, சடகோபன் - கலியுகமொன்று மித்யாரப்ய. அருள்செய்யும் - சுடரொளி மலியும் - மூர்த்தி மாயப்பிரான் கண்ணன்தன்னை, சொன்ன - ஒலிபுகழித்யாரப்ய அந்வய:. சொன்னவென்று - அத்யாஹார்யம் சடகோபனொலிபுகழாயிரமென்றதுக்கு-"ஆழ்வாருடையதாய்ஸுப்ரஸித்தமான பகவத்குணப்ரதையையுடைத்தான வாயிரம்" என்று உரையில் ஶப்தார்த்தம். உள்ளத்தைமாசறுக்கும் - நெஞ்சைமாசறும்படிபண்ணும்.

"கறுத்தமனமொன்றும் வேண்டா" என்று - ப்ரணவோக்த அநந்யார்ஹஶேஷத்வத்தையும், "அவர்களை, சென்றுதொழுதுய்ம்மின்" என்று-நமஸ்ஸினர்த்தமான ததீயஶேஷத்வத்தையும், "சிந்தையைச் செந்நிறுத்தி" என்று - த்ருதீயபதஸித்தமான ஐஶ்வர்ய கைவல்ய வ்யாவ்ருத்தமான புருஷார்த்தத்தையும் சொல்லுகையாலே, "மாசறுக்கும்" என்கிறவிடத்திலே - பதத்ரயார்த்தமும் சொல்லுகிறது.

த்ரவிடோபநிஷத்ஸங்கதி:—[illegible]

[illegible]

த்ரவிடோபநிஷத்தாத்பர்யரத்நாவலி:—[illegible]

[illegible]

திருவாய்மொழி நூற்றந்தாதி.

பொலிகபொலிகவென்றுபூமகள்கோன்தொண்டர்
மலிவுதனைக்கண்டுகந்துவாழ்த்தி—யுலகில்
திருந்தாதார்தம்மைத்திருத்தியமாறன்சொல்
மருந்தாகப்போகும்மனமாசு.

ஆழ்வார் திருவடிகளே ஶரணம், எம்பெருமானார் திருவடிகளே ஶரணம், ஜீயர் திருவடிகளே ஶரணம்.

மூன்றாந்திருவாய்மொழி—மாசறுசோதி : ப்ரவேஶம்.

ஆ.—(மாசறுசோதி.) இப்படி ஆஶ்ரித வாத்ஸல்யாத் யநவதிக கல்யாண குணவிபூஷிதனாயிருந்த எம்பெருமானோடே ஸம்ஶ்லேஷிக்க ஆசைப்பட்டுப் பெறாதே சிரகாலம் அவஸந்நையாயிருந்தா ளொருபிராட்டி, தன்னுடைய வ்யஸநத்தைப் பொறுக்க மாட்டாமையாலே "மடலூர்ந்தாகிலும் அவனோடே ஸம்ஶ்லேஷிக்கவேணும்" என்று மநோரதித்து மடலூருகையிலே வ்யவஸிதையாயிருந்த விடத்தில், இவளுடைய தோழியானவள் "நீ ஆசைப்படுகைக்கீடான ஸௌந்தர்யாதி கல்யாணகுணங்கள் அவனுக்குண்டோ? உண்டானால்தான் அவனை யுத்திஶ்ய மடலூருகை யுக்தமோ? இவ்வூரெல்லாம் உன்னைப்பழிசொல்லாதோ?" என்ன;—

ஒ.—மூன்றாந்திருவாய்மொழியில், கீழில் திருவாய்மொழியில் - வைஷ்ணவ ஸம்ருத்தியைக்கண்டு மங்களாஶாஸநம்பண்ணியும், ஸம்ஶயாநரைத்திருத்தியும் சென்ற ஹாவவ்ருத்தி பர்யவஸித்தபின்பு எம்பெருமானுடைய ஸௌந்தர்ய ஶீலாதிகளிலே தோற்றுப் பழையபடியே பாஹ்யஸம்ஶ்லேஷாபேக்ஷைபிறந்து அது கைவாராமையாலே அவஸந்நராய்; எம்பெருமான் மேல்விழவும், தம்மோடே கலந்தால் "அவனுடைய குணங்களுக்கு க்லாநி பிறக்கும்" என்று பார்த்து அகலும் ஸ்வபாவரான ஆழ்வார், தம் ஸ்வரூபத்துக்குப் போராதபடி "வழியல்லாவழியேயாகிலும் எம்பெருமானோடே ஸம்ஶ்லேஷிப்போம்" என்று தமக்குப்பிறந்த தஶாவிபாகத்தை அந்யாபதேஶத்தாலே பேசுகிறார். எம்பெருமானைப் புணர்ந்து பிரிந்தா ளொரு பிராட்டி தன்னாற்றாமையாலே எல்லாரும் இகழும்படி தன்னுடைய குடிப்பிறப்பையும் பந்துக்களையும் தோழிமாரையும் மற்றுமுள்ள மர்யாதைகளையும் பாராதே மடலூர்ந்தாகிலும் அவனோடே ஸம்ஶ்லேஷிக்கையிலே அத்யவஸிக்க, இத்தையறிந்த தோழியானவள் "இதுகாரியமன்று" என்று கற்பிக்க, அவளுக்குத் தன் தஶையை யறிவித்து மடலூருகை தவிரே னென்கிறாள். * ஏறாளுமிறையோனில் - தான்முடியப் பார்த்தாள், இத்திருவாய்மொழியில் - அவன் ஸ்வரூபத்தை யழிக்கப் பார்க்கிறாள்.

ப.—மூன்றாந்திருவாய்மொழியில்,கீழ் அநுஸந்தித்தபாகவதோத்கர்ஷஹேதுவான பகவதுத்கர்ஷத்தையும், குணவிக்ரஹாதி வைலக்ஷண்யத்தையும் அநுஸந்தித்து, அவனுடைய ஆலோகாலாபாதி முகத்தாலே ஸம்ஶ்லேஷித்து அநுபவிக்கைக்கு ஆசைப்பட்டு அது கிடையாமையாலே, ஆஶாஜநகமான ஆபிரூப்யாதிஶயத்தையும், அவயவ விஶேஷவைலக்ஷண்யத்தையும், ப்ரதிபந்தக நிவர்த்தகமான பாலசேஷ்டிதத்தையும், அபிநிவேஶவர்த்தகத்வத்தையும், அநந்யார்ஹதாபாதகத்வத்தையும், ஆகர்ஷகத்வ ஸ்வபாவ யோகத்தையும், ஆஸக்திஹேதுவான அர்ணவஶாயித்வாதிகளையும், அகிலவிரோதி நிவர்த்தநத்தில் அநாயாஸத்தையும்,உத்துங்கதேஶ வாஸித்வத்தையும், அஸாதாரணசிஹ்ந யோகத்தையும் அநுஸந்தித்து, ஏவம் விஶிஷ்டனான ஸர்வேஶ்வரன் விஷயத்தில் தமக்குப்பிறந்த அபிநிவேஶாதிஶயத்தாலே, "இரண்டு தலைக்கும் அநநுரூபமான ஸ்வப்ரவ்ருத்திவிஶேஷத்தாலேயாகிலும் ப்ராபிக்கக்கடவோம்" என்கிற த்வராதிஶயத்தால் தமக்குப் பிறந்த வ்யவஸாயவிஶேஷத்தை அந்யாபதேஶ முகத்தாலே, நாயகனான ஈஶ்வரனோடு கலந்து பிரிந்தாளொருநாயகி தத்ப்ராப்த்யபிநிவேஶ த்வரையாலே, தன்குடிப்பிறப்புக்கும் பெண்மைக்கும் அநநுரூபமாம்படி "அவனுடைய மெய்ப்பாட்டை யழித்து மடலூர்ந்

தும் பெறக்கடவோம்" என்கிற அறுதிப்பாட்டைப் பாங்கிக்கு உரைத்த பாசுரத்தாலே அருளிச்செய்கிறார்.

இ.— மூன்றாந்திருவாய்மொழியில், * நண்ணாதார்முறுவலிப்பவில் ஸம்ஸாரிகள் துர்க்கதியை யநுஸந்தித்து * ஒன்றுந்தேவிலே-அவர்களைத் திருத்தி, "இவர்களிலே அந்யதமராயிருந்த நம்மை இவர்களையுந் திருத்தும்படி பண்ணுவதே!" என்று ஈஶ்வரன் பண்ணின உபகாரத்தை யநுஸந்தித்துத் திருந்தினவர்களுக்கு மங்களாஶாஸநம்பண்ணின பாவவ்ருத்திபர்யவஸித்து * ஏறாளுமிறையோனில் தமக்குப்பிறந்த இழவே தலையெடுத்து ஆற்றாமையாலே, "மடலெடுத்தாகிலும் கிட்டுவோம்" என்று துணிகிறாள். * ஏறாளுமிறையோனில்-அவன் விரும்பாத ஆத்மாத்மீயங்கள் வேண்டேனென்று தன்னை முடிக்கப்பார்த்தாள், அது அவனதாகையாலே முடிந்ததில்லை; இதில் - அத்தலையை பிடித்து அழிக்கத்தொடங்கினாள். அங்கு, "உயிரினாற்குறைவிலம்" என்று - உயிரை வேண்டா வென்றாள்; இங்கு - உயிருக்குமுயிரை வேண்டேனென்கிறாள். இதில் - அவன் ஸ்வரூபத்தை யழிக்கப்பார்க்கிறாள். அவன்தானே மேல்விழ "தம்மோட்டைக் கலவி அவனுக்கு அவத்யம்" என்று அகன்றவர் தம்மைப்பாராதே "வழியல்லாவழியேயாகிலும் அவனோடே ஸம்ஶ்லேஷிப்போம்" என்று தமக்குப்பிறந்த தஶாவிஶேஷத்தை அந்யாபதேசத்தாலே அருளிச்செய்கிறார். அதாவா, "மலியும் சுடரொளி மூர்த்திமாயப்பிரான் கண்ணன்தன்னை" என்று வடிவழகை அநுஸந்தித்தபோதே "பெறவேணும்" என்னும் ஆசைபிறந்து அதுகிடையாதே ஒருபிராட்டி தஶையை ப்ராப்தராய், அவள் பேச்சாலே தம்முடைய தஶையைப் பேசுகிறாரென்றுமாம். அவனைப்புணர்ந்து பிரிந்தாளொரு பிராட்டி, தன்னாற்றாமையாலே எல்லாரும் இகழும்படி தன்னுடைய பிறப்பையும் பந்துக்களையும் தோழிமாரையும் மற்றுமுள்ள மர்யாதைகளையும் பாராதே, "நாம் மடலூர்ந்தேயாகிலும் அவனோடே ஸம்ஶ்லேஷிப்போம்" என்று அத்யவஸிக்க, இத்தையறிந்த தோழி "கார்யமன்று" என்று கற்பிக்க, அவளுக்குத் தன் தஶையை யறிவித்து மடலூருகை தவிரேனென்கிறாள்.

ஈடு.—' மலியுஞ்சுடரொளிமூர்த்தி மாயப்பிரான்கண்ணன்தன்னை " என்று - வடிவழகையும் குணங்களையும் ஸௌலப்யத்தையும் அநுஸந்தித்து; இப்படி ஸுலபனுமாய், ஆஶ்சர்யமான குணசேஷ்டிதங்களை யுடையனுமாய், அவையில்லையேயாகிலும் விடவொண்ணாத வடிவழகையுமுடையனான இவனை பாஹ்ய ஸம்ஶ்லேஷாபேக்ஷை பிறந்து அணைக்கக்கோலிக் கையைநீட்ட, அகப்படாதே கைகழிந்து நிற்க, அத்தாலே கலங்கி மடலெடுக்கையிலே உபக்ரமிக்கிறார். மடலெடுக்கையாவது - போர்சுட்டுப் பொரிகோறிக்கை

மாசறுசோதி ப்ரவேஶம். கீழே - தாம் திருத்தத்திருந்தின ஸ்ரீவைஷ்ணவஸம்ருத்திக்கு மங்களாஶாஸநம் பண்ணினவர்க்கு, இத்திருவாய்மொழியிலே - மடலெடுக்கும்படியான ஆற்றாமை வருகைக்கு அடி ஏதென்ன, கீழிற்றிருவாய்மொழியோடே ஸங்கதி - மலியும்சுடரொளி இத்யாதி. உக்தகுணத்ரயத்தையும் அவரோஹ க்ரமத்தாலே விவரிக்கிறார் - இப்படி ஸுலபனுமாய் இத்யாதி. அவரோஹக்ரமமாக அருளிச்செய்தது-இம்மூன்றிலும், "ஶாம்ஸாம்ஸ்ப்ருஷ்டிஶிவாஹாரிணம்" என்கிற வடிவழகே ஆகர்ஷகமென்னுமிடந்தோற்றுகைக்காகவும், "ரூபௌதார்யகுணை:" என்கிறபடியே "மாசறுசோதி" என்று - ப்ரதமம் வடிவழகை அருளிச்செய்கையாலே, வடிவழகிலே பர்யவஸிப்பிக்கைக்காகவும். **கலங்கி** என்றவநந்தரம், ஒருபிராட்டி தசையை ப்ராப்தராயென்று கூட்டிக்கொள்வது. "மடலூர்தும்" என்றத்தைப்பற்ற - **மடலெடுக்கையிலே** இத்யாதி. **தூதப்ரேஷ**

யோபாதி. "அநீதிசெய்யாதே கொள்ளுங்கோள்" என்று பிறரைத்திருத்தினவர், "நீர்செய்யப்பார்க்கிற இது அநீதி, அத்தைத்தவிரும்" என்று பிறர் திருத்தவும் திருந்தாதபடியானார். பிறரை பகவத்விஷயத்திலே ப்ரவணராக்குகைக்குத் திருத்துகிற இவரை, "பகவத்ப்ராவண்யமாகாது" என்று திருத்தப்பார்த்தால் திருந்தாரிறே.

அன்றிக்கே, * ஏறாளுமிறையோனில் - அவனுக்கு உறுப்பல்லாத நானும் என்னுடைமையும் வேண்டாவென்று அலாபத்தாலே கூப்பிடும் தம்மோடொக்கக் கூப்பிடுகைக்குத் துணைதேடி லோகவ்ருத்தாந்தத்தை அநுஸந்தித்தவிடத்து, தாம் பகவத்விஷயத்திலே ப்ரவணராயிருக்குமாபோலே அவர்கள் இதர விஷயங்களிலே ப்ரவணராயிருக்கிறபடியைக்கண்டு, அவர்கள் அநர்த்தத்துக்கு நொந்து அவர்களுக்கு பகவத்பரத்வத்தை உபபாதித்துத் திருத்தி, "இவர்களிலே ஒருவனாயிருக்கிற என்னை, இவர்களையும் திருத்தும்படியாக்குவதே ஸர்வேஶ்வரன்" என்று அவன் தமக்குப்பண்ணின உபகாரத்தை ஸ்மரித்து, தாம் திருத்தத் திருந்தின ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு மங்களாஶாஸநம்பண்ணி, இப்படி பரஹிதத்துக்கு வேண்டுவதெல்லாம் செய்து கையொழிந்தபின்பு பழைய தம்மிழவே தலையெடுத்து, "வழியல்லாவழியேயாகிலும் கிட்டுமத்தனை" என்னும்படியான விடாய் பிறந்து மடலெடுக்கையிலே யொருப்பட்டுச் செல்லுகிறது - இந்தத்திருவாய்மொழி. ஓரோ விஷயங்களிலே ஓரொருத்தர்க்கு ஸங்கமுண்டானால் அவ்விஷயங்கள் கிடையாவிட்டால் "அவை இப்போதே பெறவேணும்" என்னும்படியான த்வரைபிறந்தால், பின்னையவையிருந்தவிடங்களிலே புகைசூழ்ந்து புறப்படவேண்டும்படியாயிருப்பதொரு ஸாஹஸத்தைப் பண்ணிப் புறப்படவிடுவித்து முகத்திலே விழிப்பாரைப்போலே, "அத்தலைக்குப் பழியை விளைத்தாகிலும் முகத்திலேவிழிக்குமத்தனை" என்று ஸாஹஸத்திலே யொருப்பட்டு, தமக்கு இவ்வளவாகப் பிறந்த தஶையை அந்யாபதேசத்தாலே பேசுகிறார்.

ணுதிகள் பண்ணுதே மடலெடுக்கிறதென்னென்ன - மடலெடுக்கையாவது இத்யாதி. தூதப்ரேஷணத்தைப்பற்ற நிஷித்தமாய் அவற்றிலும் கார்யகரமாகையாலே மடலெடுக்கிறாரென்று கருத்து. தூதப்ரேஷணாதிகள்போலன்றிக்கே ஸாஹஸப்ரவ்ருத்தியுமாய், அல்ப பலமுமாயிருக்குமென்றதுக்கு த்ருஷ்டாந்தம்-போர்சூட்டுஎன்று தொடங்கி. 'தத்ஸ்ய ஸத்ருஶம்ஸவெக" என்றிருக்கிற இவர் அநீதியிலே ப்ரவர்த்திக்கிறதென்? என்ன, ஸ்வாபதேஶத்திலே பரிஹாரம் - பிறரை இத்யாதி.

ஏறாளுமிறையோனோடே ஸங்கதியாக ஸங்கத்யந்தரம்-அன்றிக்கே இத்யாதி. கீழ்த்திருவாய்மொழியோடே ஸங்கதி அருளிச்செய்ததுக்குக் கருத்து-"மலியும்சுடரொளிமூர்த்தி, மாயப்பிரான், கண்ணன் தன்னை" என்கிற மூன்றுவிஶேஷணத்தையும், "மாசறுசோதி, ஆசறுசீலனை, ஆதிமூர்த்தியை" என்கிற பதங்களாலே அநுபாஷிக்கையாலே. ஏறாளுமிறையோனோடே அருளிச்செய்ததுக்குக் கருத்து - "நாடி, எனைநாளையும்", "முன்செய்யமாமையிழந்து" இத்யாதிகளைக் கடாக்ஷித்து. தம்மோடொக்க இத்யாதி-கண்ணுதாரில் ப்ரமேயம். அவர்களுக்கு இத்யாதி - ஒன்றுந்தேவில் ப்ரமேயம். இவர்களிலே இத்யாதி-கையார்சக்கரத்தில் ப்ரமேயம். தாம்திருத்த இத்யாதி-பொலிகவில் ப்ரமேயம். கையொழிந்தபின்பு - திருத்துகிற கார்யமானபின்பு. பழையதம்மிழவேயென்றது - ஏறாளுமிறையோனில் இழவேயென்றபடி. வழியல்லாவழியே யாகிலும் என்றது - அத்தலையாலே பெறுகையன்றிக்கே ஸாதநாநுஷ்டாநத்தைப் பண்ணியாகிலுமென்றபடி. மடலெடுக்குமது ஸாஹஸப்ரவ்ருத்திவிஶேஷமென்னுமதுக்கு - "மடலெடுக்கையாவது" இத்யாதி வாக்யத்திலே ஒருத்ருஷ்டாந்தம்அருளிச்செய்து, த்ருஷ்டாந்தாம்-ஓரோவிஷயங்களிலே இத்யாதி. அவை - விஷயங்கள். ஒரு ஸாஹஸத்தைப்பண்ணியென்றது - அக்நிப்ரக்ஷேபத்தைப்பண்ணி யென்றபடி. முகத்திலே விழிக்குமத்தனை என்றது - "தூமுறுவல் தொண்டைவாய்ப்பிரானை" என்கிறவிடத்தைக் கடாக்ஷித்து.

"அபிமத விஷயத்தைப் பிரிந்து ஆற்றமாட்டாதார் மடலெடுக்கக்கடவர்கள்" என்று ஒன்றுண்டு தமிழர் சொல்லிப்போருவது. அதாவது - "துல்யஶீலவயோ வ்ருத்தாம்" (துல்யஶீலவயோவ்ருத்தாம்) என்று ஶீலத்தாலும் வயஸ்ஸாலும் அபிஜநத்தாலும் வடிவழகாலும் ஸம்பத்தாலும் குறைவற்றிருப்பன இரண்டு விஷயமாய், அதுதன்னில் "அறிவு, நிறைவு, ஓர்ப்பு, கடைப்பிடி" என்றாற்போலே சொல்லுகிற நாயகலக்ஷணங்கள் நாயகனுக்கும் உண்டாய், "நாண், மடம், அச்சம், பயிர்ப்பு" என்றாற்போலே சொல்லுகிற நாயகியுடையலக்ஷணங்கள் நாயகிக்கும் உண்டாய், இப்படி இரண்டுதலையும் குறைவற்று இவர்கள் தாங்கள் ப்ராப்தயௌவநருமாயிருக்க; இவர்களைப் புறம்புகூட்டு வாரின்றிக்கேயிருக்க, யாத்ருச்சிகமாக அவனும் "வேட்டைக்கு" என்று புறப்பட்டு, இவளும் "பூக்கொய்துவிளையாட" என்று உத்யாநத்திலே புறப்பட, அவ்விடத்திலே தைவயோகத்தாலே இருவர்க்கும் கண்கலவியுண்டாய், சிலரடியாகவந்த ஸம்ஶ்லேஷமல்லாமையாலே பிரிவோடே வ்யாப்தமாகப் பிரிந்து, குணாதிகவிஷயமாகையாலே இரண்டுதலைக்கும் ஆற்றாமைவிஞ்சி, ஒருதலையை யொழிய ஒருதலைக்குச் செல்லாமைபிறந்து,

---

உல்லோகமாகச் செல்லப்போகாதே, மடலெடுக்கை ஶாஸ்த்ரஸித்தமோவென்ன-அபிமத விஷயத்தை இத்யாதி. ஸமயஸித்தமென்றபடி. "பிரிந்தாற்றமாட்டாதார்" என்கைக்கு, பிரிவு ஸம்ஶ்லேஷபூர்வகமன்றோ; அந்த ஸம்ஶ்லேஷம்வருகைக்கு ஹேதுவேது, பிரிவு வருவானென்? பிரிந்தால் ஆற்றாமை வருகைக்குத்தான் ஹேதுவேதென்ன - அதாவது இத்யாதி. யாத்ருச்சிகஸம்ஶ்லேஷமாகையாலே பிரிவு விளைந்தது, குணாதிகவிஷயமாகையாலே ஆற்றாமை விளைந்ததென்றபடி. "துல்யஶீலவயோவ்ருத்தாம் துல்யாபிஜநலக்ஷணாம் । ராகவோர்ஹதி வைதேஹீம் தம் சேயமஸிதேக்ஷணா" இதி ஸுந்தரகாண்டே ஸீதாம் த்ருஷ்ட்வா ஹநூமான். இந்தஶ்லோகத்திலே, "லக்ஷணாம்" என்கையாலே - வடிவழகாலும் ஸம்பத்தாலும் என்றது ஸித்தம். கீழே - ஸம்ஸ்க்ருதலக்ஷணம் அருளிச்செய்து, த்ராவிடலக்ஷணம் அருளிச்செய்கிறார்-அறிவுநிறைவு இத்யாதி. அறிவு ஸமீசீநஜ்ஞாநம். நிறைவு - ஐஶ்வர்யாதிபூர்த்தி. ஓர்ப்பு - நிரூபணஸாமர்த்யம். கடைப்பிடி - ஒரு விஷயத்தை ஸ்வீகரித்தால் யாவதாயுஷம் விடாமலிருக்கை. நாண் - லஜ்ஜை. மடம் - மடப்பம். மடப்பமாவது - ஸ்த்ரீத்வமும், பவ்யதையும். அச்சம் - பீருதை. பயிர்ப்பு பிடித்ததுவிடாமலிருக்கை. பிரிவில் வைவர்ண்ய மென்றுமாம். ஸ்வாபதேஶத்திலே, வேட்டைக்குப் புறப்படுகையாவது - ஹிரண்ய ராவணாதி நிரஸநார்த்தமாக அவதரிக்கை; பூக்கொய்து விளையாடுகையாவது - "அற்ப சாரங்களவை சுவைத்தகன்று" என்கிறபடியே விஷயப்ரவணராகை; உத்யாநமாவது - "பெய்தகாவு" என்கிற லீலாவிபூதி; தைவயோகத்தாலே இருவர்க்கும் கண்கலவியுண்டாயென்றது - யாத்ருச்சிக ஸுக்ருதமடியாகபகவத்கடாக்ஷம் பிறக்கை; தோழிமாராவார் - "தூர்த்தரோடிசைந்த" என்கிறபடியே விஷயப்ராவண்யஸஹகாரிகள். கண்கலவி - காந்தர்வவிவாஹம். சிலரடியாகவந்த ஸம்ஶ்லேஷமல்லாமையாலேயென்றது-"நாஸௌ புருஷகாரேண" இத்யாதியைப்பற்ற பிரிவோடே வ்யாப்தமாக - பிரிவோடே தலைக்கட்ட. ஸ்வாபதேஶத்திலே, இதுக்குக் கருத்து - ஸ்வாதந்த்ர்யமடியாகவே கடாக்ஷிக்கையாலே, அந்தக்கடாக்ஷம் அவன் ஸ்வாதந்த்ர்யத்தாலே, இந்தச்சேதநன் நினைத்த போதாக பலவ்யாப்தமாகாதொழிகை யென்று. குணாதிகவிஷயமாகையாலே - பரஸ்பரம் குணாதிக விஷயமாகையாலே. இரண்டுதலைக்கு மென்று தொடங்கி, செல்லாமைபிறந்து என்றதுக்கு - ஆற்றாமைவிஞ்சுகை இரண்டுதலைக்கும் ஸமமானாலும், செல்லாமை யொருதலைக்கே விஞ்சியிருக்குமென்று தாத்பர்யம். ஒருதலைக்கு அத்தனைசெல்லாமை இல்லாமைக்கு ஸூசகம் - "பழிக்கஞ்சிக்கூடுதல்" இத்யாதி வாக்யம். இனி, மடலெடுக்கும் லக்ஷணமேதென்ன ; தத்ப்ரகாரத்தையும் அதுதான் கார்யகரமாம்

இரண்டு தலையையுமழித்தாகிலும் பேறப்பார்க்கை. மடலூருகையாவதுதான் - அபிமத விஷயத்தைப் பிரிந்த ஆற்றாமையாலே அவ்விஷயத்தை ஒருபடத்திலே யெழுதி, வைத்த கண்வாங்காதே அத்தைப் பார்த்துக்கொண்டு, பனைமடலைக் குதிரையாகக்கொண்டு, பிரிந்த போதுதொடங்கி கண்டபோகோபகரணங்களெல்லாம் அக்நி கல்பமாய்த் தோற்ற, ஊணுமுறக்கமு மின்றிக்கே, உடம்பில் துளிநீரேறிட்டுக்கொள்ளாதே, மயிரை விரித்துக்கொண்டு திரியாநின்றால், இத்தர்மஹாநியைக்கண்ட க்ஷத்ரியாதிகள் “கெட்டேன், இவனுக்கு ஒரு விஷயத்திலே இத்தனை பாவபந்தமுண்டாகாதே” என்று, அவர்கள் அவ்விஷயத்திலே கூட்டுதல்; இல்லையாகில், இதுவே ஹேதுவாக இரண்டுதலையிலுள்ள பந்துக்களும் கைவிட, அலக்குப்போர்போலே ஒருவர்க்கொருவர் புகலாய் அங்ஙனேகூடுதல், தோழிமார் கூட்டுதல், ஆற்றாமைகூட்டுதல், அந்தவிஷயந்தான் குணாதிகவிஷயமாயிருக்குமாகில் பழிக்கு அஞ்சிக்கூடுதல், இவையித்தனையுமில்லையாகில் முடிந்து பிழைத்தல்செய்கையாவதொரு ஸாஹஸப்ரவ்ருத்திவிஶேஷமாயிற்று. இதுதன்னை “கடலன்னகாமத்தராகிலும் மாதர் மடலூரார் மற்றையார்மேல்என்று”-ஆஶ்ரயத்தளவல்லாதபடி ஆற்றாமைகரைபுரண்டாலும் ஸ்த்ரீகள் மடலூரக்கடவர்களன்று; நாயகன் தன்னாற்றாமையாலே மடலெடுத்து உலகின்மேல் வைத்துச் சொல்லுதல், † (உலகின்மேல்வைத்துச் சொல்லுகையாவது - ஸ்வாபிப்ராயத்தை யறிவியாமல் “ஒருவன்மடலூரப்போகிறான்” என்று அந்யாபதேசேந சொல்லுகை.) “நான்வரைபாயப்புகா நின்றேன், மடலெடுக்கப்புகாநின்றேன்” என்று

ப்ரகாரத்தையும் தமிழருடைய ஸம்மதியாலே காட்டுகிறார் - **மடலூருகையாவதுதான்** *இத்யாதி. படம் - பலகை. பனைமடல் - பனைமட்டை.* **குதிரையாகக்கொண்டு** *என்றதுக்கு* - **திரியாநின்றால்** *என்றத்தோடே அந்வயம்.* **போகோபகரணங்களெல்லாம் அக்நிகல்பமாய்** *என்றவிடத்திலே-“சாந்தமும் பூணும்”, ‘திரிகின்றது வடமாருதம்’. ‘யாநிஶேஶயனீயாநி’, ‘ஶஷ்வச்ச ஶ்வஸோ வாயு:’ இத்யாத்யநுஸந்தேயம்.* **ஊணுமுறக்கமுமின்றிக்கே** *என்றவிடத்திலே - “நெடிதுயிர்க்குமுண்டறியாள்” இத்யாதியும், “உண்ணும்நாளில்லையுறக்கமுந்தானில்லை” இத்யாதியும் அநுஸந்தேயம்.* **உண்டாகாதே** *யென்றது - முழுச்சொல்லாய், உண்டாயிற்றதே யென்றபடி.* **பந்துக்கள் கைவிடுகையாவது** - *“இவள் எங்களைவிட்டுக்கடவாதிருக்க வேண்டியிருக்க, சிலசெயல்களைச் செய்யாநின்றாள்; இது நங்குடிக்குச் சேராது” என்று அவர்கள் கைவிட என்றபடி.* **அலக்குப்போராவது** - *ஶேவகர் ஈட்டிகளை யொன்றோடொன்றெதிர்த்துவைக்கை.* **தோழிமார்கூட்டுதல்** *என்றவிடத்திலே* - *சித்ரலேகா வ்ருத்தாந்தத்தை நினைப்பது.* **ஆற்றாமைகூட்டுதலென்றது** - *மடலெடுக்கிறவனுக்கு உண்டான ஆற்றாமை மடலெடுக்கப்படுகிற விஷயத்துக்குமுண்டாகை.* **ஆற்றாமைகூட்டுதல்** *என்றவிடத்திலே- “ஶ்வஶுரஸ்ய க்ருஹே ஸஹ” இத்யாதியில் வ்ருத்தாந்தத்தை நினைப்பது. அந்தவிஷயம் - நாயகன் அத்தனைசெல்லாமையில்லாத அந்தவிஷயம்.* **பழிக்கஞ்சிக்கூடுதலென்றது** - *“நமக்காகவிவன் முடியாநின்றான்” என்கிற பழிக்கஞ்சிக்கூடுதலென்றபடி. இம்மடலெடுக்கைதான் தமிழருடைய ஸித்தாந்தாநுகுணமாக ஸ்த்ரீகளுக்குச்சேராதென்று ஶங்கித்துப் பரிஹரிக்கிறார்* - **இதுதன்னைக்கடலன்ன** *இத்யாதி. இக்குறளுக்கு அர்த்தம்* - **ஆஶ்ரயத்தளவல்லாத**’ *வென்று தொடங்கி,* **அல்லர்களென்று** *என்னுமளவாக. மற்றையார்மேலே யென்று கூட்டிக்கொண்டு, அநந்தரம்* - **ஸ்த்ரீகள்மடலூா** *இத்யாதி அநுஸந்திப்பது.* **கடலன்ன** - *ஸமுத்ரஸத்ருஶமான,* **காமத்தராகிலும்** - *காமத்தையுடையவராகிலும்,* **மாதர்**-*ஸ்த்ரீகள்* **மடலூரார்** - *மடலெடார்கள்,* **மற்றையார்மேல்** - *நாயகன்மேலேயென்று ஶப்தார்த்தம். பின்னை, யார்தான் மடலூரக்கடவர்களென்ன-* **நாயகன்** *இத்யாதி. மடலெடுத்து-மடலெடுக்கைக்காக. உலகின்மேல்வைத்துச் சொல்லுகையாவது- “நாயகியைப்பிரிந்தார் மடலெடுப்பர்களோ” என்றாற்போலே லோகத்தின்மேலே வைத்து ப்ரஸங்*

† *குண்டலிதக்ரந்தம் க்வாசித்கம். வ்யாக்யாநத்துக்குச்சேராது.*

தோழிக்கு வந்து அறிவித்தால், அவள் கூட்டிற்றிலளாகில் பின்பு அவன் இதுசெய்யக்கடவன்; இத்தனையல்லது ஸ்த்ரீகள் மடலெடுக்கக் கடவரல்லர்கள் என்று இங்ஙனே ஒருமர்யாதை கட்டினார்கள் தமிழர்; இங்கு அங்ஙனன்றிக்கே, பிராட்டிதான் மடலெடுத்ததாக இராநின்றது, தமிழர் "ஸ்த்ரீகள்மடலூரக்கடவரல்லர்" என்றுசொன்ன இது பின்னைச்சேரும்படி என்? என்னில்; அவர்கள் ஒருதலையிலேதான் அத்தை யிசைந்தார்களே, அப்படியிசைகைக்கு அடி ஆற்றாமையே, அது இரண்டுதலைக்கு மொத்தபின்பு ஒருதலையிலோதுக்குவாரார். வரம் பழியவாகிலும் முகங்காட்டிவைத்துக்கொண்டு யரிக்க வேண்டும்படியா யிருப்பதொரு விஷயம் புறம்பில்லையே; இங்ஙனேயிருப்பார் சிலரைக் கல்பித்துக் கொண்டார்களித்தனை யிறே. இதுக்கு ஒருமர்யாதை கட்டுகையாவது - ஆசைக்கு ஒரு வரம்பிட்டார்களாமித்தனை யிறே; அப்போது பின்னை ராஜாஜ்ஞைக்கு நிற்கவேணும், இல்லையாகில் வேலியடைத்தால் நிற்கவேணும், ஆகையால் அவர்கள் ப்ரேமஸ்வபாவம் அறிந்திலர்களாமித்தனை.

இவர்தாம் * வளவேழுலகிலே - நாம் அவனோடே கலக்கையாகிற இது அவனுக்கு அவத்யாவஹம், நம்பேற்றுக்காக அவனோடேகலந்து அவனுக்கு அவத்யத்தை விளைப் பதிற்காட்டில் நாம் அகன்று முடிந்தாகிலும் அத்தலைக்கு அதிசயத்தைப்பண்ணவமையுமென்றிருக்குமத்தோடும் சேராது; இனி * ஏறாளுமிறையோனிலே - அவனுக்கு உறுப்பல்லாத ஆத்மாத்மீயங்கள் நசித்துப்போக வமையுமென்று சொன்னவத்தோடும் சேராது; ஆக,

---

இக்கை. வரைபாயப்புகாநின்றேன் - ப்ருகுபதநம்பண்ணப்புகாநின்றேன். இது இங்கேசேரும்படி எங்ஙனேயென்று ஶங்கிக்கிறார்-இங்கு இத்யாதி. பிராட்டி - இத்திருவாய்மொழியில் நாயகி. புருஷர்கள் மடலூருகைக்கு எந்தஹேதுவோ, அந்தஹேதுவே ஸ்த்ரீகளுக்கும் உண்டாகையாலே ஸ்த்ரீகள் மடலூரத்தட்டில்லையென்று பரிஹரிக்கிறார் - அவர்கள் இத்யாதி. ஒருதலையிலொதுக்குவாரார் என்கிறவிடத்திலே - "ஸ்த்ரீணாம் த்விகுண ஆஹார: லஜ்ஜா சாபி சதுர்குணா । ஸாஹஸம் ஷட்குணம் சைவ காமஸ்சாஷ்டகுணஸ்ஸ்ம்ருத:" என்கிற ஶ்லோகம் அநுஸந்தேயம். இழ் - தமிழர்மர்யாதாப்ரயுக்தஶங்கையை அநப்யுபகம்யவாதத்தாலே பரிஹரித்து; அப்யுபகம்ய, அவர்கள் "இல்லை" என்றதுக்குக் கருத்து இன்னதென்கிறார் - வரம்பழிய இத்யாதி. அன்றிக்கே, பெண்மடல் லோகத்திற்கண்டோமில்லை யென்ன - வரம்பழிய இத்யாதி யாதல். வரம்பாவது - ஸ்த்ரீத்வாபிமாநாதிகள். விஷயம்புறம்பில்லையே - ஈஶ்வரனைப்போலே இதிஶேஷ:. ஈஶ்வரனையொழியப் புறம்பில்லையென்றபடி. ஆகையாலே இவள் பகவத்விஷயத்தில் மடலூருகைக்குத் தட்டில்லை. புறம்பு விஷயமுண்டாய், வாஸவதத்தாதிகள் மடலெடுக்கிறதாயிருக்கிறதே யென்ன - இங்ஙனே இத்யாதி. இப்படி கல்பித்துக்கொள்ளுகையாலே, அர்த்தஸ்திதியைப் பார்த்தால் ஆண்மடலுமில்லை, பெண் மடலுமில்லை யென்று கருத்து. "ஒருதலையிலொதுக்குவாரார்" என்ற பூர்வபக்ஷபரிஹார விவரணம்-இதுக்கொரு இத்யாதி. ப்ரேமஸ்வபாவமறியாமையிறே இவ்வ்யவஸ்தைகட்டினதுக்கு நிபந்தனமென்று கருத்து. அப்போது - ராகப்ராப்தமன்றிக்கே, "புருஷர்களே மடலெடுக்கக்கடவர்கள்" என்று வைதமாகக்கல்பித்தபோதென்றபடி. வேலியடைத்தால் நிற்கவேணும் என்ற வநந்தரம், இப்படி நில்லாமல் ஸ்த்ரீகள் ப்ரவர்த்திக்கையாலே ஆற்றாமை இரண்டுதலைக்கும் ஸமமாகையாலே, ஸ்த்ரீகள் மடலூரத்தட்டில்லை யென்று கொள்வது.

இழே - மடலெடுக்கை அந்யாபதேஶஸமாதிக்குச் சேராதென்று ஶங்கித்துப்பரிஹரித்து, ஸ்வாபதேஶத்திலு மிதுசேராதென்று ஶங்கித்துப்பரிஹரிக்கிறார்-இவர்தாம்என்று தொடங்கி, இதில் எனக்குஉறுப்பல்லாத அவனும் அவனுடைமையும் வேண்டாவென்கிறார் என்கிற வாக்யமளவாக.

வீதராகராயிருப்பார் செய்வதுமோன்றல்ல, இவர்தம் ஸ்வரூபத்தோடும் சேராது, ஜ்ஞாநாதிகரா யிருப்பார் செய்வதுமோன்றல்ல, ஆனால் இது இருந்தபடியேன் ? என்னில்; இவற்றுக்கெல்லாம் பரிஹாரம், பட்டர் திருமடல் அருளிச்செய்கிறபோது அருளிச்செய்தருளினர், இங்குத்தைக்கும் வேண்டுவேது சொல்லவேணுமிறே. ஜ்ஞாநாதிகராயிருப்பார் ஜநககுலத்திலுள்ளார்க்குமே யில்லையிறே ; அக்குடியிலே பிறந்த பிராட்டியானவள், "யாநஶக்யா புராத்ரஷ்டும்" (யாநஶக்யாபுராத்ரஷ்டும்) என்கிறபடியே, பெருமாள் காட்டுக்கு எழுந்தருளுகிறபோது † "மன்னனிராமன்பின் வைதேவியென்றுரைக்கும் அன்னநடையவணங்கு நடந்திலளே" என்கிறபடியே - அவர்பின்னே பிராட்டி புறப்பட்டுப்போகையாலே ஶிஷ்டாசாரமுண்டாயிருந்தது; இனித்தான் * மயர்வறமதிநல மருளப்பெற்ற இவர் அநுஷ்டிக்கையாலே இதுதானே ப்ரமாணமாகத் தட்டில்லையிறே, "யத்யதாசரதி ஶ்ரேஷ்ட:" (யத்யதாசரதிஶ்ரேஷ்ட்ட:) என்றும், "ஸயத்ப்ரமாணம் குருதே" (ஸயத்ப்ரமாணம்குருதே) என்றும் ஸத்துக்களுடைய அநுஷ்ட்டாநத்தை ப்ரமாணமாகக் கோள்ளக் கடவதிறே. ஆனாலும் காமத்தை நிஷேதியாநின்றதேயென்னில்; அப்ராப்த

ப்ர:— ஶ்ரீ அயோத்யாகாண்டே ॥ ௩௩ ॥ வநவாஸாய ச கச்சதா ராமேண ஸஹ கச்சந்தீம் ஸீதாமாலோக்ய ஜநா:— "யாநஶக்யா புரா த்ரஷ்டும் பூதைராகாஶகைரபி । தாமத்ய ஸீதாம் பஶ்யந்தி ராஜமார்ககதா ஜநா: ॥ அ ॥".

ஶ்ரீபகவத்கீதாஸு த்ருதீயே, "யத்யதாசரதி ஶ்ரேஷ்டஸ்தத்ததேவேதரோ ஜந: । ஸயத்ப்ரமாணம் குருதே லோகஸ்ததநுவர்த்ததே ॥ உக ॥".

ஆகவீதராகராயிருப்பார் என்றவிடத்திலே, ஆக என்றவநந்தரம், இவர்தம் ஸ்வரூபத்தோடும் சேராது என்றத்தை அநுஸந்திப்பது. ஸ்வரூபத்தோடு மென்றது-"வளவேழுலகிலே" இத்யாதி வாக்யத்தாலும், "இனி எருளுமிறையோனிலே" இத்யாதிவாக்யத்தாலும் சொன்ன ஶேஷத்வபாரதந்த்ர்ய விஶிஷ்ட ஸ்வரூபத்தோடு மென்றபடி. வீதராக இத்யாதி - காமம் வீதராகர்க்கு நிஷித்ததயா த்யாஜ்யமாகையாலே செய்வதொன்றல்லவென்றபடி. ஜ்ஞாநாதிகர்-ஶிஷ்டர்கள். ஆனால் - இப்படியானால். அருளிச்செய்கிறபோது - அர்த்தம் அருளிச்செய்கிறபோது. இங்குத்தைக்கும் - மாசறுசோதிக்கும். வேண்டுவது - வேண்டினபரிஹாரங்கள். ஶங்காத்ரயத்தையும் அவரோஹக்ரமத்தாலே பரிஹரிக்கிறாராகத் திருவுள்ளம்பற்றி, அதில், "ஶிஷ்டாநுஷ்ட்டாநமில்லை" என்ற ஶங்கைக்கு ஶிஷ்டாநுஷ்ட்டாநமுண்டென்று பரிஹரிக்கிறார் - ஜ்ஞாநாதிகராய் இத்யாதி. யாநஶக்யாஜதி- "யாநஶக்யா புரா த்ரஷ்டும் பூதைராகாஶகைரபி । தாமத்ய ஸீதாம் பஶ்யந்தி ராஜமார்ககதா ஜநா:" இத்யயோத்யாகாண்டே ப்ரயாணகாலே. பெரிய திருமடலில் மன்னனிராமன் இத்யாதி. ராஜாவான சக்ரவர்த்திதிருமகன் பின்னே, வைதேஹியென்று சொல்லப் படுகிறவளாய் அன்னம்போன்ற நடையையுடையளாய் அப்ராக்ருதஸ்வபாவையான பிராட்டிபோயிற்றிலளோ இத்யர்த்த:. இவருக்கு ஒருஶிஷ்டாசாரம் வேணுமோ, இவருடைய ஆசாரமே நமக்கு ப்ரமாணதமமன்றோவென்கிறார்-இனித்தான் இத்யாதி. ஜ்ஞாநாதிகர் செய்தது ப்ரமாணமென்றத்தைக் காட்டுகிறார், யத்யத் இத்யாதி. "யத்யதாசரதி ஶ்ரேஷ்டஸ்தத்ததேவேதரோ ஜந: । ஸயத்ப்ரமாணம் குருதே லோகஸ்ததநுவர்த்ததே" இது கீதாஸு த்ருதீயே. "வீதராகராய்" இத்யாதி த்விதீயஶங்கையை யநுவதித்துப் பரிஹரிக்கிறார் - ஆனாலும் இத்யாதி. நிஷேதியாநின்றதே என்கிறவிடத்திலே - "ஶாஸ்த்ரஜ்ஞாநவ்யதிரிக்தவிஷயா:", "காமோ நாவமந்தவ்யோ" இத்யாதியைக் கண்டுகொள்வது. அப்ராப்த இதி - பகவத்வ்யதிரிக்தவிஷயங்கள் அப்ராப்

---

* பெரிய திருமடல்-ருக.

விஷயத்தில் காமத்தையிறே நிஷேதித்தது, அவை நிலைநில்லாமையாலே; பகவத்விஷயத்
தில் காமத்தை "நிதித்யாஸிதவ்ய:" (நிதித்யாஸிதவ்ய:) என்று விதியாநின்ற
திறே. வேதாந்தவிஹிதையான பக்தியையிறே - இங்கு, காமமென்கிறது. * வளவேழுல
கில் - நாம்கிட்டுகை அவனுக்கு அவத்யமென்று அகன்ற இவர், அத்தலையையழித்து முகங்
காட்டுவித்துக்கொள்ளப் பார்க்கிற இது இவர் ஸ்வரூபத்தோடு சேருமோ என்னவும்
வேண்டா; அங்கு அகலநினைத்ததும் அத்தலைக்கு அவத்ய பரிஹாரத்துக்காகவிறே; தமக்கு
ஆற்றாமை கரைபுரண்டிருந்தது, "தன்னையாசைப்பட்டார் பெறுதேமுடிய, முகங்காட்
டாதேயிருந்தான்" என்கிற அவத்யத்தை பரிஹரிக்கைக்குச் செய்கிறாராகையாலே † (இது
வும் இவர் ஸ்வரூபத்தோடே சேரும்). அங்குஅகன்றது ஜ்ஞாநகார்யம், இங்குமேல்விழுகிறது
பக்திகார்யம். இத்தனை கலங்கப்பண்ணிற்றில்லையாகில் அத்தலையில் வைலக்ஷண்யத்
துக்கு நமஸ்காரம். இவர்தாம் இப்படி கலங்கிற்றிலராகில் இவருடைய ப்ரேமத்துக்கு
நமஸ்காரம். அவன் அருளிற்றும் மதிநலமிறே, அதுபடுத்துகிறபாடிறே இதெல்லாம்; மதியின்
கார்யம் அது, நலத்தின்கார்யம் இது. இனித்தான் ஸித்தோபாயத்தை ஸ்வீகரித்து அது
பலியாவிட்டால் ஸ்வரூபத்தை அந்யதாகரிக்குமித்தனையிறே; அவன் ஸ்வரூபம் அந்யதாகரித்

ப்ர:—ப்ருஹதாரண்யகே (அ-ரு) மைத்ரேயீ ப்ராஹ்மணே, "ஆத்மா வா அரே
த்ரஷ்டவ்ய: ச்ரோதவ்யோ மந்தவ்யோ நிதித்யாஸிதவ்ய:॥".

தங்களாகையாலும் அஸ்த்திரங்களாகையாலும், தத்விஷயத்தில் காமத்தையிறே நிஷேதித்த தென்ற
படி. "இதரவிஷயத்தில் காமமாகாது, பகவத்விஷயத்தில் காமமாம்" என்னுமதுக்கு நியாமகமே
தென்ன - பகவத்விஷயத்தில் இத்யாதி. "நிதித்யாஸிதவ்ய:" என்று பக்தியையன்றோ விதிக்
கிறதென்ன - வேதாந்தவிஹிதை இத்யாதி. "இவர்தம் ஸ்வரூபத்தோடும் சேராது" என்ற ப்ரதம
ஶங்கையை அநுவதித்து, ஷட்விதமாக பரிஹரிக்கிறதாகத் திருவுள்ளம்பற்றி; ப்ரதமம், மடலெடுக்கை
அதிசயாதாயகமென்று பரிஹரிக்கிறார், - வளவேழுலகில் இத்யாதி. இவர் ஸ்வரூபத்தோடு - அத்
தலைக்கு அதிசயாதாயகமான ஸ்வரூபத்தோடு. செய்கிறாராகையாலே என்ற ஹேதுவுக்கு - என்னவும்
வேண்டா என்றத்தோடே யந்வயம். த்விதீயபரிஹாரம் - அங்கு அகன்றது இத்யாதி. இத்தால் - பக்தி
கார்யமான கலக்கத்தாலே, ஸ்வரூபவிருத்தமானாலும் தவிரப்போகா தென்றபடி. ஆக, முந்தினபரி
ஹாரம் - அநப்யுபகமேந; இரண்டாவது - அப்யுபகமேந. இப்படி அத்தலைக்கு அவத்யத்தை
விளைத்தாகிலும் கிட்டப்பார்க்கிற இது கலக்கத்தாலேயிறே, கலங்குகைக்கு ஹேதுவேதென்ன-
இத்தனை இத்யாதி. கலங்கப்பண்ணிற்றில்லையாகில் - அதிமாத்ரப்ராவண்யத்தை விளைத்ததில்லை
யாகில். வைலக்ஷண்யத்துக்கு நமஸ்காரம் - வைலக்ஷண்யத்துக்கு அவத்யம். ஹேத்வந்தரம்-இவர்
தாம் இத்யாதி. கலங்கிற்றிலராகில் - அதிமாத்ர ப்ரேமயுக்தரல்லராகில். ப்ரேமத்துக்கு நமஸ்கார மென்
றது - அல்லாதார் ப்ரேமத்திற்காட்டில் இவர் ப்ரேமத்துக்கு வாசியில்லாமையாலே, ப்ரேமத்துக்கு அவத்ய
மென்றபடி. அதாவது - ஈஶ்வரவைலக்ஷண்யத்தாலும், தாம் ப்ரேமஸ்வபாவராகையாலும் கலங்கினா
ரென்றபடி. "வளவேழுலகிலகன்றது ஜ்ஞாநகார்யம், இது பக்திகார்யம்" என்கைக்கு, இவர்க்கு ஜ்ஞாந
பக்திகளுண்டோவென்ன, அவனருளிற்றும் இத்யாதி. "அங்ககன்றது ஜ்ஞாநகார்யம்" இத்யாதி வாக்ய
விவரணம் - மதியின்கார்யம் இத்யாதி. "வளவேழுலகில் ஸ்வரூபத்துக்குச்சேராது" என்ற
ஶங்கைக்கு த்ருதீயபரிஹாரம் - இனித்தான் இத்யாதி. "தத்தஸ்யஸத்ருஶம்பவேத்" என்று
இராதே, இப்படி அந்யதாகரிக்கலாமோ வென்ன - அவன்ஸ்வரூபம் இத்யாதி. அவன் ஸ்வரூபம்-
ரக்ஷகத்வஸ்வரூபம். அவன்ரக்ஷகத்வஸ்வரூபம் இப்போது அந்யதாகரித்த தென்கைக்கு நியாமக

† குண்டலிதக்ரந்தம் வ்யாக்யாநவிருத்தம்.

தால் இத்தலைசொல்லவேண்டாவிறே. "இத்தலையில் கர்த்தவ்யமில்லையாகில் அவனுக்கு அஶக்தியில்லையாகில் நடுவேவிளம்பத்துக்கு ஹேதுவேன்?" என்று தோற்றுமிறே. ஆற்ருமையையும் ஆவிஷ்கரித்து அம்பும் தொடுக்கவேண்டும்படியான விஷயத்தை யன்றே இவர்பற்றிற்று. இவர் தமக்கு "மடலேடுக்கக்கடவேன்" என்று துணிந்த துணிவுக்கு மேற்பட அநுஷ்டிக்கவேண்டுவதில்லையாயிற்று குணாதிகவிஷயமாகையாலே. கடலைப் பெருமாள் ஶரணம்புக்கவிடத்தில் தானாகவந்து முகங் காட்டாமையாலே நாலுமூன்றும்பை விட்டு உடம்பிலே பாதிவேந்தபின்பிறே வந்து முகங்காட்டிற்று; இங்கு அதெல்லாம் வேண்டாமையாலே, "**சாபமாநய**" (சாபமாநய) என்கிறவோபாதி, "மடலூருவேன்" என்று அச்சமுறுத்தி முகங்காட்டுவித்துக்கொள்ளப் பார்க்கிறார். தம்முடைய ஸ்வரூபத்தில் கலக்கம் அநுவர்த்தியாநிற்கச்செய்தேயும், அவனுடைய குணஜ்ஞாநத்தில் கலக்கமின்றிக்கே யிருக்கிறதுகாணும் இவர்க்கு. * ஏறாளுமிறையோனில் - அவனுக்கு உறுப்பல்லாத நானும் என்னுடைமையும் வேண்டா என்று முடித்துக்கொள்ளப்பார்த்தவிடத்தில், அது தம்மையதன்றிக்கே, அவனுளனாக இது அழியாததாயிருந்தது; இனி "அத்தலையே பிடித்து † (அழிப்போம்" என்று,) வேர்ப்பற்றேடே யழிக்கப்பார்க்கிறார்; உண்டாம்போதும் அத்தலையாலேயுண்டாய், இல்லையாம்போதும் ஒன்றாக இல்லையாம்படியிறே வஸ்துஸ்வரூபந்தானிருப்பது. "உயிரினாற்குறைவிலம்" என்றார் அங்கு, இங்கு - உயிர்க்கு உயிரினால் குறைவிலம் என்கிறார். * ஏறாளுமிறையோனில் - அவனுக்கு உறுப்பல்லாத நானும்

ப்ர:—யுத்தகாண்டே (உக) ஸமுத்ரம் ப்ரதி ராமவசநம், "சாபமாநய ஸௌமித்ரே ஶராம்ஶ்சாஶீவிஷோபமாந் । ஸாகரம் ஶோஷயிஷ்யாமி பத்ப்யாம் யாந்து ப்லவங்கமா:॥உஉ॥".

மேலேதென்ன - இத்தலையில் இத்யாதி. ஆக, மடலெடுக்கையை அப்யுபகம்ய பரிஹரித்தார் - கீழெல்லாம்; இதெல்லாம்வேண்டுவது இவர் தாம் மடலெடுத்தாலன்றே, "ஊர்ந்தும்" என்கையாலே - மடலெடுக்கவேயில்லையே யென்று அநப்யுபகம்யவாதத்தாலே நாலாம் பரிஹாரம் - ஆற்றாமையையும் இத்யாதி. இவ்வாக்யத்தை - இவர்தமக்குமடலேடுக்க இத்யாதி வாக்யாநந்தரம் அநுஸந்தித்துக் கொள்வது. குணாதிக விஷயமானால் உத்யோகமாத்ரமே போருமோ வென்ன-கடலை இத்யாதி. "சாபமாநய ஸௌமித்ரே ஶராம்ஶ்சாஶீவிஷோபமாந் । ஸாகரம் ஶோஷயிஷ்யாமி பத்ப்யாம்யாந்து ப்லவங்கமா:" இதி யுத்தகாண்டே ஸமுத்ரம் ப்ரதிராம:. மடலெடுக்கும்படிகலங்கு கிறதசையிலே "குணாதிகன்" என்று குணஜ்ஞாநமுண்டாகக் கூடுமோவென்ன-தம்முடைய இத்யாதி. கீழே "இனி ஏறாளுமிறையோனிலே" இத்யாதி வாக்யத்தாற் சொன்ன ஶங்கையைப் பரிஹரிக்கிறார் - ஏறாளும் இத்யாதி. இது - அஞ்சாம்பரிஹாரம். அதாவது - அத்தலையில் விநியோகத்துக்கு உறுப்பல்லாத ஸ்வஸத்தா நாஶத்துக்கு உடலாக அவனையழிக்கப் பார்க்கிறாராகையாலே, பராதிசயகரத்வரூபமான ஸ்வரூபத்துக்கு விரோதமில்லையே யென்று கருத்து. அத்தலையேபிடித்து வேர்ப்பற்றேடேயழிக்க வென்றது - அவனுக்கு நிரூபகமான ரக்ஷணதர்மம் இவர் மடலெடுத்தால் அழியுமாகையாலே, நிரூபகத்தையொழிய நிரூப்யஸித்தியில்லை யென்னு மத்தைப்பற்ற. அவனை யழித்தால் ஸ்வஸத்தை யழியுமோவென்ன - உண்டாம்போதும் இத்யாதி. ஒன்றாக - ஒன்றும். "ஏறாளுமிறையோனில்" இத்யாதிவாக்யத்தை முகபேதேந விவரிக்கிறார் - உயிரினால் இத்யாதி. "இனி ஏறாளுமிறையோனிலே" இத்யாதி ஶங்கைக்கு அப்யுபகமவாதேந பரிஹாராந்தரம் - ஏறாளும் இத்யாதி. இது - ஆறாம்பரிஹாரம். அதாவது - ஸ்வரூபவிருத்தமானாலும், ஆற்றாமையின் முறு

---

† குண்டலிதம் வ்யாக்யாந விருத்தம்.

என்னுடைமையும் வேண்டாவென்றார், இதில் - எனக்கு உறுப்பல்லாத அவனும் அவனுடைமையும் வேண்டா வென்கிறார். "ராவணன் மாயாசிரஸ்ஸைக்காட்டினபோது, இதரஸ்த்ரீகள் அஹ்ருதயமாக அழுமாபோலே தன்னாற்றாமையாலே கூப்பிட்டு, இவ் வார்த்தை கேட்டபோதே முடியாதிருப்பானேன்" என்று பட்டரைச் சிலர்கேட்க, "ஜ்ஞாநாஜ்ஞாநங்களன்று ஜீவநநிமித்தம், அத்தலையில் ஸத்தையாயிற்று; அதுக்கு அழிவில்லாமையாலே யிருந்தாள்" என்று அருளிச்செய்தார்.

இப்படி அத்தலையை அழித்தாகிலும் முகங்காட்டுவித்துக்கொள்ள வேண்டும்படி தமக்குப் பிறந்த தசாவிசேஷத்தை; எம்பெருமானோடே கலந்து பிரிந்தாளோரு பிராட்டி ஆற்றாமை மீதூர்ந்திருக்கச் செய்தே இவள் தரித்திருந்த இருப்பைக்கண்டு, தோழியானவள், "முன்புத்தையளவுகளன்றிக்கே இவள் தேறியிருந்தாள், அவன் வாராதிருக்க இவளுக்கித்தனை தேற்றம் உண்டாம்போது, ஸாஹஸங்களிலே துணிந்தாளாகவேணும்" என்றுபார்த்து, "நீசெய்யநினைக்கிற இது உன்தலைமைக்கும் அவன்தலைமைக்கும், உன் மதிப்புக்கும், † (அவன்மதிப்புக்கும்) உன்பிறப்புக்கும் உன்னுடைய மர்யாதைகளுக்கும் போராதுகிடாய்" என்ன; "என்ஸ்வரூபத்தை அழித்தாகிலும் † (அவன்ஸ்வரூபத்தையழித்தும்) மடலெடுக்கை தவிரேன்" என்று துணிந்த துணிவைத் தோழிக்கு அறிவிக்க;

குதலாலே ஸ்வரூபத்தை அதிக்ரமித்து அவனை யழிக்கப்பார்க்கிறு ரென்றபடி. இத்தால் - ஏருளுமிறையோனிற்காட்டில் இதுக்கு ஆற்றாமை அதிகமென்று கருத்து. "உண்டாம்போதும் அத்தலையாலேயுண்டாய்" என்கைக்கு, அவன் ஸத்தையடியாக இத்தலையில் ஸத்தையுண்டானமை எங்கே கண்டோமென்ன; ஸம்வாதம் - ராவணன் இத்யாதி. கூப்பிட்டு என்ற வநந்தரம், ஸத்தையோடேயிருந்தா ளென்று கூட்டிக்கொள்வது. முடியாதிருப்பானேன் என்றதுக்கு - அவர் ஜீவித்திருந்தமையை தபோவிசேஷத்தாலே யறிகையாலே முடியாதிருந்தாளோ வென்று தாத்பர்யம். ஜீவநநிமித்தம் - ஜீவிக்கைக்கும் முடிகைக்கும் நிமித்தம். ஸத்தையாயிற்று - ஸத்தாதத்ராஹித்யங்களாயிற்று. யத்வா, ஜ்ஞாநாஜ்ஞாநங்களன்று ஜீவநநிமித்தம் என்கிறவிடத்திலே - "அவர் ஜீவித்திருக்கிறார்" என்கிற ஜ்ஞாநம் ஜீவநநிமித்தமன்றென்று இவ்வளவே இவ்விடத்துக்கு அபேக்ஷிதம். அஜ்ஞாநத்தையுங் கூட்டிச் சொன்னது - த்ருஷ்டாந்தார்த்தமென்னுதல். அவதாரத்தின் மெய்ப்பாட்டாலே "எதிர்த்தலையுண்டு" என்கிற ஜ்ஞாநமில்லாமையாலே, ஜ்ஞாநம் ஜீவநநிமித்தமன்றென்று தாத்பர்யம்.

ஆக, ப்ராஸங்கிகஸங்காஸமாதாநங்களைப்பண்ணி, இத்திருவாய்மொழியில் ப்ரமேயத்தை அருளிச்செய்கிறார்-இப்படி இத்யாதி. தசாவிசேஷத்தை-ஈஸ்வரனுக்கு அறிவிக்கவேணுமென்று பார்த்தென்று கூட்டிக்கொள்வது. மீதூர்ந்து - மேலேவ்யாபித்து. தேற்றம் - தெளிவு. "யாமடலூர்ந்தும், யாமடமின்றி" இத்யாதியைப்பற்ற - உன்தலைமைக்கும் என்றது. தலைமை - வைலக்ஷண்யம். "ஆதிமூர்த்தி" என்றத்தைப்பற்ற - அவன்தலைமைக்கும் என்றது. "என்னைநிறைகொண்டான்" என்றத்தைப்பற்ற - உன்மதிப்புக்கும் என்றது. "குதிரியாய்மடலூர்தும்" என்றத்தைப்பற்ற உன்பிறப்புக்கும் இத்யாதி. "என்னைநிறைகொண்டான்" என்றத்தைப்பற்ற - உன்னுடைய மர்யாதைகளுக்கும் போராதென்று. "யாமடலூர்ந்தும்" என்றத்தைப்பற்ற - என்ஸ்வரூபத்தையழித்தாகிலும் என்றது. தோழிக்கு அறிவிக்க என்றதுக்கு-தோழிக்கு அறிவிக்கிற வ்யாஜத்தாலே ஈஸ்வரனுக்கு அறிவிக்க என்று

---

† குண்டலித க்ரந்தங்களிரண்டும், "அழித்தாகிலும்" என்ற விடத்தில், "அழித்தும்", என்ற பாடமும், "அறிவிக்க" என்கிற விடத்திலே, "அறிவிக்கிற பாசுரத்தாலே அருளிச் செய்கிறார்" என்ற பாடமும் வ்யாக்யாந விருத்தங்கள்.

இத்தைக்கேட்டு அஞ்சி, ஸர்வேஶ்வரன், இருந்தவிடத்தில் இருக்கமாட்டாமை வந்து முகங் காட்டித் தானும் ஸத்தைபெற்று இவளையும் தரிப்பித்தாளுய்த் தலைக்கட்டுகிறது. இவர் மடலிலே துணிந்தால் கடுகவந்துமுகங்காட்டிப் பிழைக்கில் பிழைக்குமித்தனைபோக்கி, இல்லையாகில் ஸத்தைகிடக்க விரகில்லையிறே அவனுக்கு; ப்ரஹ்மாஸ்த்ரத்துக்குத் தப்ப வொண்ணுதிறே அவனுக்கு. இதுக்குமுன்பு, "அவனாலேபேறு" என்று போந்தாரே யாகிலும், ப்ராப்யமான கைங்கர்யத்துக்கு பூர்வகாலீநமா யிருப்பன பரபக்தி பரஜ்ஞாந பரமபக்திகளென்று சிலஉண்டிறே, அவைதவிரவொண்ணுதிறே. இனி, பக்திமானுக்கும் பக்தியுண்டு; ப்ரபந்நனுக்கும் பக்தியுண்டு, ருசியையொழிய ப்ரபத்தி பண்ணக்கூடாதே. பக்திமானுடையபக்தி, வைதமாய்வருமது; ப்ரபந்நனுடையபக்தி, ருசிகார்யமாயிருக்கும். பக்திமானுக்கு ஸாதநரூபமாயிருக்கும், இவனுக்கு தேஹயாத்ராஶேஷமாயிருக்கும். பக்திமானுக்கு பலஶ்ரத்தையில்லாதபோது தவிரலாயிருக்கும், ப்ரபந்நனுக்கு ஸ்வரூப ப்ரயுக்தமாய் வருமதாகையாலே ஒருகாலும் தவிராதாயிருக்கும்.

முதற்பாட்டு.

மாசறுசோதி என்செய்யவாய்மணிக்குன்றத்தை
ஆசறுசீலனை ஆதிமூர்த்தியைநாடியே
பாசறவெய்தி அறிவிழந்தேனைநாளையும்
ஏசறுமூரவர்கவ்வை தோழியென்செய்யுமே ?

அத்யாஹரிப்பது. "இரைக்கும் கருங்கடல்வண்ணன்" என்றத்தைப்பற்ற- **முகங்காட்டித் தானும்ஸத்தை பெற்று** *என்றது. முகங்காட்டாவிடில் இவளுக்கு ஸத்தையில்லையாமதொழிய, அவனுக்கு ஸத்தை யில்லையாமோ வென்ன -* **இவர்மடலிலே** *இத்யாதி. அதாவது - பரமப்ரணயியாகையாலே, இவளை தரிப்பியாவிடில் அவனுக்கும் ஸத்தை கிடவாதென்றபடி. விரகில்லாமை எப்படியென்ன -* **ப்ரஹ்மாஸ்த்ரத்துக்கு** *இத்யாதி.* **ப்ரஹ்மாஸ்த்ரத்துக்கு** *- அத்தைப்போலே துர்லங்க்யமானதுக்கு. இத்திருவாய்மொழியில், "மடல்" என்றுசொல்லுகிறது - ஸ்வாபதேஶத்திலே, பக்தியையிறே; இது பின்னை அவனையே உபாயமாகப்பற்றியிருக்கிற இவர்க்கு உண்டாகலாமோவென்ன -* **இதுக்கு முன்பு** *இத்யாதி. அதாவது - ஸாதகபக்தியன்று, ஸாத்யபக்தி இவரதென்றபடி. இவர்தாம் ஆர்த்த ப்ரபந்நராகையாலே, ப்ரபத்தேঃபூர்வபாவித்வேநவும் பக்தியுண்டென்கிறார் -* **இனிபக்திமானுக்கும்** *இத்யாதி. இனிமேல் - பக்திப்ரபத்தி நிஷ்டர்களுடைய பக்திதாரதம்யத்தை அருளிச்செய்கிறார்-* **பக்திமானுடைய** *இத்யாதியால்.* **வைதமாய்** *- "நிதித்யாஸிதவ்யঃ" என்கிற விதிமூலமாய்.* **ருசி கார்யமாயிருக்கும்** *- ராகப்ராப்தமாயிருக்கும். விவரணம் -* **பக்திமானுக்கு** *இத்யாதி வாக்யத்வயமும். அதாவது - வைதமாகையாலே அவனுக்கு ஸாதநரூபமாயிருக்கும், தேஹயாத்ராஶேஷமாகையாலே இவனுக்கு ருசிகார்யமாயிருக்கு மென்றபடி. ஆக, ஸ்வயம்ப்ரயோஜநத்வத்தால் வந்த ஏற்றத்தை அருளிச்செய்து, நித்யத்வத்தாலும் ஏற்ற முண்டென்கிறார் -* **பக்திமானுக்கு பலஶ்ரத்தை** *இத்யாதி. அதாவது - ஸாதநரூபமாயிருக்கையாலே பக்தனுக்குத்தவிரலாயிருக்கும், ப்ரபந்நனுக்கு அநுபவகைங் கர்யரூப தேஹயாத்ராஶேஷமாயிருக்கிற வாகாரத்தாலே கிஞ்சித்காராஶ்ரயமான ஶேஷத்வரூபஸ்வ ரூபப்ரயுக்தமாய் வருமதாகையாலே தவிராததாயிருக்கு மென்றபடி.*

ஆ.—நிரதிசய நிர்மலஜ்யோதிஸ்ஸௌந்தர்ய ஸௌசீல்யாத்யஸங்க்யேய கல்யாணகுணகணமஹோததியாயிருந்த பரமபுருஷனை ஆசைப்பட்டுப் பெறுதே அறிவழிந்து எத்தனை காலமுண்டு தோழீ; ஆனபின்பு, எனக்கு ஒருயுக்தாயுக்ததை யுண்டோ? என்னை ஏசுகையிலே தீர்ந்திருக்கிற ஊரவர் கவ்வைதா னிப்படி அறிவழிந்திருக்கிற என்னை எத்தைச் செய்வதென்று தோழியைக் குறித்துச் சொல்லுகிருள்.

ஒ.—முதற்பாட்டில், இப்பிராட்டி மடலூரத்துணிந்தமையை அறிந்த தோழி 'இது அபவாதகரம்' என்று நிஷேதிக்க, 'நான் அவனுடைய ஸௌந்தர்யாதிகளிலே அகப்பட்டுப் பழிக்கு அஞ்சாததசையானேன்' என்கிருள்.

[மாசு என்று தொடங்கி] - என்னோட்டை ஸம்ஶ்லேஷஜநிதஹர்ஷப்ரகர்ஷத்தாலே முறுவல்செய்த திருப்பவளத்தை யுடையனுய், மடலூர்ந்தாகிலும் ஸம்ஶ்லேஷிக்க வேண்டும்படி அபரிச்சேத்யமான அழகையுடையனுய், தன் பேறுகவந்து ஸம்ஶ்லேஷிக்கும் ஸ்வபாவனுமாய்ப் பெருமதிப்பனுமானவனை. [நாடியே என்று தொடங்கி] - நிரந்தரமாகத் தேடி துக்கப்பட்டு அறிவிழந்து அநேக காலமுண்டு தோழீ! ஏசுகையிலே துணிந்த ஊரார் சொல்லும்பழி எத்தைச்செய்வது? [பாசறவு] - பந்துக்கள் பக்கல் பற்றறுகையுமாம்.

ப.—முதற்பாட்டில், இவளுடைய வ்யவஸாயம் அறிந்த தோழி விலக்க உத்யோகித்து, "ஊரார் பழிசொல்வார்காண்" என்ன; அவனுடைய ஆபிரூப்யாதிகளிலே யகப்பட்டுக் கலங்கின என்னை ஊர்ப்பழி என்செய்யு மென்கிருள்.

மாசு - அழுக்கு, அறு - அற்ற, சோதி - தேஜஸ்ஸையுடைத்தாய், செய்ய - சிவந்த, வாய் - வாயையுடைத்தான, என்மணிக்குன்றத்தை - மாணிக்கமலைபோலே எனக்குபோக்யனுனவனுய், (ப்ரணயித்வத்தால்வந்த தாழ்ச்சியாலே), ஆசு - குற்றம், அறு - அற்ற, சீலனை - ஶீலத்தையுடையனுய், ஆதி - தான்முற்பாடனுய்வந்து அநுபவிப்பித்த, மூர்த்தியை - ஸ்வாமியானவனை, நாடியே - நிரந்தரமாகத்தேடி, பாசு - மேனியிற்பசுமை, அறவெய்தி - அழிந்து, அறிவு - அறிவும், இழந்து - இழந்து, எனை நாளையம் - எத்தனைகாலத்தோம், தோழி - தோழீ, ஏசு - ஏசுதலிலே, அறும் - அறுதிப்பட்ட, ஊரவர் - ஊரவரது, கவ்வை - ஆரவாரம், என் - எத்தை, செய்யும் - செய்வது? பாசறவு - நிறமழிவு. பாசென்று - ஸ்நேஹமாய், அத்தைமிகவெய்தியென்றுமாம். ஏசுதல் - பழித்தல். கவ்வை - அலர்.

இ.—முதற்பாட்டில், மடலூரத் துணிந்தமையை யறிந்ததோழி, "இது அபவாதம்" என்று நிஷேதிக்க, நான் அவனுடைய ஸௌந்தர்யாதிகளிலே அகப்பட்டுப் பழிக்கஞ்சாத தசையானேன் என்கிருள்.

[மாசறுசோதி] - நான் அவனை மாசறுசோதியாக்கக்காண் புகுகிறது. விரக்தராய் ஸ்வரூபஜ்ஞராயிருக்கிற இவருட்பட இப்படி மடலெடுக்கும்படியிறே விஷயவைலக்ஷண்யம். "ஹகாநாஜ்" என்கிறவடிவை நிலைநிறுத்தப் புகுகிறேன். விஶேஷணங்களடைய - மடலெடுக்கைக்கு விஷயமாக்குகிருள். அழுக்கற்ற அழகை உடையவனை. அழகுக்கு மாசாகிறது - வ்யதிரேகத்தில் மடலெடாதொழிகை. இவ்வழகு விஶ்லேஷத்தில் மடலிலே மூட்டாதாகில், அல்லாதவிஷயத்தோபாதியா

மென்கை. அவ்வடிவைப் பிரிந்தபோது என் மர்யாதையை நோக்கியிருக்கவோ வென்கிறாள். [என்செய்யவாய்] - கலந்தபோது அகவாயில் ஹர்ஷந்தோற்றும்படி ஸ்மிதத்தாலே விக்ருதனாயிருந்தபடி. [என்செய்யவாய் - மாசறுசோதி] - ஸ்மிதமும் வடிவழகுமாயிற்று என்னை மடலிலே மூட்டிற்று. பண்டுமொரு ஸ்மிதமிறே ஊர்பூசல் விளைத்தது, இவள் கையிலே மடலைக்கொடுத்து ஊர்பூசலாக்கிற்றொரு ஸ்மிதமாயிற்று. "ஸ்வாதந்த்ரஃ" என்று - ஒருத்தரையும் மதியாதவன், என்னோடே கலந்து பெறாப் பேறுபெற்றாற்போலே விக்ருதனாயிருக்க, நான் ஸ்த்ரீத்வத்தை நோக்கியிருக்கவோ? [மணிக்குன்றத்தை] - கலந்தபோது குளிர்ந்தவொளியை யுடையனாய், பிரிவுப்ரஸக்த மாய்த் தன் செல்லாமையாலே கால்வாங்கமாட்டாதே நின்றபடி. "ஸவிகாராய" என்கிற வடிவும் இப்படி விக்ருதமாயிருக்க. நான் அவிக்ருதையாயிருக்கவோ? [ஆசறுசீலனை] - "தன்னுடைய உத்கர்ஷமும் இவள் அபகர்ஷமும் பாராதே கலப்பதே, இதொருஶீலவத்தையே" என்று சொல்லும்படி பண்ணக்காண் நான் புகு கிறது. வடிவிலே யகப்பட்ட அளவேயோ, அகவாயில் குணத்திலேயுமன்றோ அகப் பட்டது. குற்றமற்றஶீலத்தை யுடையவனை. அதாவது - கலக்கிறபோது தன்பேறாக வந்து கலக்கை. என்பேறாக வந்து கலந்தானே என் ஸ்வரூபத்தை நோக்கியிருக்க. [ஆதிமூர்த்தியை] - என்னைப் பெறுகைக்கு க்ருஷிபண்ணிப் போந்தவனை. "ஸஹா ஸஸ்ஸாஷவஸ்ஸவஜ" என்கிறபடியே, என்பேற்றுக்கு முற்பாடனாயிருக்க, நான் ஆற் றாமையிலும் பிற்பாடை யாகவோ. தன் மேன்மைபாராதே என் சிறுமைபாராதே கலந் தவனன்றோ, நான் ஆறியிருக்கவோ? [ஆதிமூர்த்தியை] - அவன் நீர்மை அதுவானா லும் உன்மதிப்புக்குப் போராதுகாண் மடலெடுக்கை என்ன; பெருமதிப்பனைக் குறித்து மடலெடுத்தால் அம்மதிப்பு உண்டாமித்தனை யன்றோ. "காரணந்து த்⁴யேயஃ" என்று ஶாஸ்த்ரங்கள் மூட்டுகிற விஷயத்திலேயன்றோ நான் மடலெடுக்கிறது. [நாடியேபாசறவெய்தி] - அவன் என்னைப்பெறுகைக்கு க்ருஷிபண்ணினநாளோ பாதி போரும் நான் ஆற்றாமையாலே தேடி க்லேஶப்படுகிற நாள். பாசறவென்று - துக்க மாதல், பந்துக்களோட்டைப்பற்றறுதியாதல். பாசென்று - பசுமையாய், வைவர்ண்யத் தைப்பெற் றென்னவுமாம். [நாடியேபாசறவெய்தி] - நிரந்தரமாகத்தேடி பலித்தது இது வென்கிறாள். ஆனாலும் உன்னறிவுக்குப் போராதென்ன - [அறிவிழந்தெனை நாளையம்]- அறிவிழந்து அநேகங் காலமுண்டு. நாம் அறிவிழந்து எத்தனைகாலத்தோம். திர்யக்குக் களின் காலிலேவிழுந்து தூது விட்டபோதே போயிற்றில்லையோ அறிவு; *மதியெல்லாம் உள்கலங்கியன்றோ அப்படிசெய்தது; ஆனாலும் ஊரார் சொல்லும் பழிக்குஅஞ்சவேண் டாவோ? என்ன-[ஏசறுமித்யாதி] - அவ்வெல்லை கடந்திலோமோ? என்கிறாள். [ஏசறு மூரவர்] - "ஏசியறவேணும்" என்றிருக்கிறவர்கள். ஏசுகையிலே துணிந்திருக்கிறவர் கள். கவ்வை - பழி. [தோழியென்செய்யுமே] - இவ்விஷயத்துக்குப் புறம்பானார் சொல்லுமதுக்கு ஒரு ப்ரயோஜநமில்லையென்று அறியாயோ? அவர்கள்பழி நமக்குப் புறம்பாமித்தனை யன்றோ? நமக்கு இது உபகாரகமன்றோ, பழிபற்றறுக்கிறது. "அல ரெழிலாருயர் நிற்குமதனைப் பலரறியார் பாக்கியத்தால்".* நமக்கு ஸ்மாரகமன்றோ என் கிறாள்.

ஈடு.—முதற்பாட்டு. "ஸௌந்தர்யத்தாலும் ஶீலத்தாலும் மதிப்பாலும் பழிப்பற்ற தொருவிஷயமாயிற்று அது, நீசெய்யப்புகுகிற இது அவ்விஷயத்துக்குப் பழிப்பை விளைக்கப் புகுகிறாய் கிடாய்" என்று தோழி சொல்ல; நான் அவ்விஷயத்துக்குப் பழிப்புண்டாக்கப் புகுகிறேனல்லேன், பழிப்பு அறுக்கப் புகுகிறேன்காணென்கிறாள்.

[மாசறுசோதி] - கலந்துபிரிந்தவள் ஆற்றாமையின்றிக்கே மர்யாதைகளை நோக்கிக்கொண்டிருக்கையாகிறது அத்தலைக்கு அவத்யம்போலே காணும்; பிரிந்தால் இப்படி

முதற்பாட்டு - மாசறு இத்யாதி. மடலெடுக்கைக்குறுப்பாக நாயகிசொல்லுகிற "மாசறு சோதி" இத்யாதி விஶேஷணங்கள்-"மடலெடுக்கவொண்ணாது" என்று நிஷேதிக்கிற தோழிக்கும் அர்த்தஸ்வபாவத்தாலே ஹேதுத்வேந விவக்ஷிதங்களென்கிறார்-ஸௌந்தர்யத்தாலும் இத்யாதி. "ஆதி மூர்த்தியை" என்னுமளவும் கடாக்ஷித்து-ஸௌந்தர்யத்தாலும் ஶீலத்தாலும் மதிப்பாலும் என்றது. மதிப்பாவது - காரணத்வப்ரயுக்தமானமேன்மை. நீசெய்யப்புகுகிறவிது - நீசெய்யப்புகுகிறவித்தால். பழிப்பு - அவத்யம். மடலெடுத்தால் ஸௌந்தர்யத்துக்குப் பழிப்புண்டாகையாவது - "நாயகனானவன் நாயகிபக்கலிலே பரமப்ரணயியாகையாலே, 'ஊரோ நாம ஶ்ரீ வ ஜ கிஸலய தாம்வூஹா லோகநேந' என்கிற கணக்கிலே தன்ஸௌந்தர்யத்தைத் தானே மேல்விழுந்து ப்ரணயிநியானவளுக்கு அநுபவிப்பிக்க வேண்டியிருக்க, அது செய்யாதே, ப்ரணயிநி மடலெடுக்கும்படி தாழ்த்தபோதே ஸௌந்தர்யம் நிஷ்பலமன்றோ" என்று நாட்டார் சொல்லுகிறவழியாலே அவத்யமாகை யென்றபடி. ஶீலத்துக்குப் பழிப்புண்டாகையாவது - "நாயகனானவன் நாயகிவிஷயத்திலே தலை தடுமாறாய் நிற்க வேண்டியிருக்க, இவள் மடலெடுக்கும்படி உபேக்ஷிக்கையாலே, தலை தடுமாறாப் பரிமாறுகிற ஶீலகுணமும் அவனுக்கு ஸங்குசிதம்" என்று நாட்டார் சொல்லுகிறவழியாலே அவத்யமுண்டாகை. மதிப்புக்குப் பழிப்புண்டாகையாவது - "தன்னை யாசைப்பட்டு மடலெடுக்கும்படி ஒருவிஷயம் இப்படி நோவுபடாநிற்கிறவளவிலும் உபேக்ஷித்தபோதே, ஸ்வவிஷய ப்ராவண்யாதிஶயித்தர்த்தமாக ஸர்வவஸ்துக்களையும் உண்டாக்கும்படியான அவன் மேன்மை யென்னன்புது" என்று நாட்டார் சொல்லுகிறவழியாலே அவத்யமுண்டாகை. பழிப்பு அறுக்கப் புகுகிறேனென்றது - "மாசறு, ஆசறு" என்று விஶேஷிக்கையாலே ஸித்தம். மடலெடுத்தால் ஸௌந்தர்யத்துக்குப் பழிப்பறும் ப்ரகாரமாவது-"இப்படி ஸர்வப்ரகார விலக்ஷணையான இவளுங்கூட மடலெடுத்தபோதே அவனுடைய ஸௌந்தர்யம் அபரிச்சிந்நமன்றோ" என்று நாட்டார் சொல்லுகிறவழியாலேயென்றும்; ஶீலத்துக்குப் பழிப்பறும் ப்ரகாரமாவது - நான் "மடலெடுக்க" என்று உபக்ரமித்தபோதே அவன் வந்து முகங்காட்டுகை நிஶ்சிதமாகையாலே "தன்னை யாசைப்பட்டு மடலெடுக்க ஒருப்பட்டபோதே, தன்பெருமைபாராதேவந்துமுகங்காட்டுவதே! இவன்ஶீலமிருந்தபடியென்" என்று நாட்டார் சொல்லுகிறவழியாலே யென்றும்; மதிப்புக்குப் பழிப்பறுகையாவது- "நாரீணாமுத்தமையான விவள் மடலெடுக்கும்போதே ஸர்வாதிகவஸ்துவேயாகவேணும்" என்று நாட்டார்சொல்லுகிற வழியாலே யென்றும் தாத்பர்யம்.

"மாசறுசோதி" என்றதுக்கு - மடலெடுக்கையாலே மாசறுசோதி யென்று அபாவித்வேநவும், மாசறுசோதியாகையாலே மடலெடுக்கிறேனென்று பூர்வபாவித்வேநவும், இரண்டு தாத்பர்யம். அதில் முந்தின தாத்பர்யத்தில், மடலெடுக்கையாலே மாசறுசோதியென்று விவக்ஷித்தபோதே - மடலெடாதொழிகை சோதிக்கு மாசென்று வ்யதிரேகமுகத்தாலே பலிதத்தை வ்யாக்யாதா அருளிச்செய்கிறார் - கலந்துபிரிந்தவள் இத்யாதி. ஆற்றாமையின்றிக்கே - மடலெடுக்கும்படியான வாற்றாமையின்றிக்கே. மர்யாதைகளை-ஸ்த்ரீத்வ மர்யாதைகளை. நோக்கிக்கொண்டிருக்கையாகிறது-"நோக்கிக்கொண்டிருக்கவேணும்" என்று மடலெடாதிருக்கையாகிறது. அத்தலைக்கு-ஸௌந்தர்யவிஶிஷ்டமான அத்தலைக்கு. அவத்யம் - ஸௌந்தர்யஹாநி. மர்யாதைகளை நோக்கிக்கொண்டிருந்தால் அத்தலைக்கு அவத்யமாகவேணுமோவென்ன-பிரிந்தால் இத்யாதி. இப்படிப்பண்ணாதவன்று-இப்படிமடலெடுக்கப் பண்ணாதவன்று. பூர்வபாவியான இரண்டாம் தாத்பர்யத்தை அருளிச்செய்கிறார்-

பண்ணுதவன்று மாசிறே ஸௌந்தர்யத்துக்கு. நான் என்னுடைய மர்யாதைகளைக் குலைத்தாகிலும் அவன்முகத்திலே விழிக்கை தவிரேனென்கிறாள்; வடிவு அதுவாயிருக்க, எங்ஙனே நான் மடலெடாதொழியும்படி. கேடுவாய், அவ்வடிவு ஹேயப்ரத்யநீகங்காண், நான் மடலெடாதிருக்கை அவ்வடிவுக்கு ஹேயத்தை யுண்டாக்குகைகாண். "அவன் அவ்வடிவையுகந்தார்க்குக் கோடான்" என்னும் பழியைத் துடைக்கக்காண் நான் பார்க்கிறது; "ஸக்தாநாம்" (பக்தாநாம்) என்கிற உடம்பை "தனக்கு" என்றிருக்கையாகிற இது அவ்வடிவுக்கு மாசிறே. [மாசறுசோதி] - "மடலெடுக்கை மாசு" என்றிருக்கிறாள் தோழி; "மடலெடாதொழிகை மாசு" என்றிருக்கிறாள் இவள், வ்யதிரேகத்தில் இப்படியாற்றாமை விளையாதாகில் நாம்காண்கிற விஷயங்களோபாதியாமே. வடிவிலே அணைந்தவளாகையாலே முற்பட வடிவிலே மண்டுகிறாள். [மாசறுசோதி] - நாம் மடலெடுக்க நினைத்தவளவிலே மாசற்றுவருகிறபடி பாரா யென்கிறாள். மேல், "ஆசறுசீலனை" என்ற நிற்கச்செய்தே, வடிவழகைச் சொல்லுகிறது - குணத்திலும் விக்ரஹம் ஆகர்ஷகமாயிருக்கையாலே. [என்செய்யவாய்] - "அவாக்யநாதர:" (அவாக்யநாதர:) என்று அவிக்ருதமா யிருக்கக்கடவ தத்வம், என்னோடே கலந்து அத்தால்வந்த ப்ரீதிக்குப் போக்குவிட்டு ஸ்மிதம்பண்ணி விகாரித்ரவ்யம்போலே விக்ருதனாகாநிற்க, நான் அவனைப்பிரிந்து அவிக்ருதையாயிருக்கவோ. ஒருவார்த்தை சொல்லக்கடவதன்றிக்கே, முகம்பார்த்து

நான் என்னுடைய இத்யாதி வாக்யத்வயத்தாலே. "தவிரேன்" என்கைக்கு ஹேதுவேதென்ன-வடிவு இத்யாதி. வடிவு - வடிவில் ஸௌந்தர்யம். அபரபாவியான முந்தின தாத்பர்யத்திலே, "சோதி" என்று - ஸௌந்தர்யமென்று அருளிச்செய்து, சோதியென்று - விக்ரஹமாய், இதுக்கு மாசு இன்னதென்று காட்டுவாராக வடிகொண்டெழுந்திருக்கிறார்-கேடுவாய் இத்யாதிவாக்யத்வயத்தாலே. கெடுவாய் என்றது - வார்த்தைப்பாடு. மடலெடுத்தால் வடிவுக்கு ப்ரத்யுத அதிசயமொழிய, ஹேயமன்றுகாணென்கிறாள்-அவன் அவ்வடிவை இத்யாதி. உகந்தார்க்குக் கொடாதொழிகை அவத்யமோவென்ன-ஸக்தாநாம் இத்யாதி. "மடலெடுக்கவொண்ணாது" என்று நிஷேதிக்கிற தோழியைக் குறித்து, "மடலெடாதிரேன்" என்று சொல்லுகிற நாயகி, "மாசறுசோதி" என்றபோதே - மடலெடாதொழிகை மாசென்று நாயகிக்கு விவக்ஷிதமென்று தோற்றுகையாலும்; நிஷேதிக்கிற தோழிக்கும் "மடலெடுக்கை மாசு" என்று விவக்ஷிதமென்று தோற்றுகையாலும், இரண்டையும் அருளிச்செய்கிறார் - மடலேடுக்கை இத்யாதி. மடலெடா தொழிகை மாசானபடி எப்படி யென்ன - வ்யதிரேகத்தில் இத்யாதி. "ஆசறுசீலனை" என்ற குணத்தை முற்படச் சொல்லாதே, வடிவைச் சொல்லுவானென்னென்ன - வடிவிலே இத்யாதி. வடிவிலேயணைந்தவள் என்கிறவிடத்திலே - "ரூபௌதார்யகுணை:" என்றத்தைக் கண்டுகொள்வது மண்டுகை - ஈடுபடுகை. "மாசறு" என்றவர்த்தமானார்த்தம் - நாம்மடலேடுக்க இத்யாதி. மாசற்று வருகிறபடி பாராயென்றது - "அதிவிலக்ஷணையான இவள் இப்படி மடலெடுத்தபோதே அவன் அபரிமித ஸௌந்தர்யயுக்தனன்றோ" என்று நாட்டார் கொண்டாடிச் சொல்லுகிறத்தைப் பற்ற. அவன் முன்னேயில்லாதிருக்க, பாராயென்று - காட்டக்கூடுமோவென்ன; லௌகிகர் கொண்டாடுகையாலே, அத்தைக்கேட்டு, "பாராய்" என்று சொல்லுகையாலே விரோதமில்லை. வடிவை முற்படச் சொன்னதுக்குத் தாத்பர்யாந்தரம்-மேல் ஆசறு இத்யாதி. அவாக்யநாதர:இதி சாந்தோக்யே (௩-௧௪) "ஸர்வகர்மா ஸர்வகாம: ஸர்வகந்த: ஸர்வரஸ: ஸர்வமிதமப்யாத்தோऽவாக்யநாதர:" வாக்:-உக்தி:, ஸோऽஸ்யாஸ்தீதி வாகீ, ஸ ந பவதீத்யவாகீ; ததஸ்து ஹேது: (அநாதர இதி) ஆதராபாவ:. ஸர்வஸ்ய ஆப்தத்வாத் ஆதராபாவ ஹேது: - ஸம்ப்ரயாஸக்தி:. சிவப்புத்தோற்றுவது ஸ்மிதத்தாலே யாகையாலே-ஸ்மிதம்பண்ணி என்கிறார். "அவாக்ய நாதர:" என்கிற ஶ்ருதிக்கு அர்த்தம்-ஒரு வார்த்தைஇத்யாதி. ஹேதுபூர்வகமாக அநாதரஶப்தார்த்தம்-முகம்பார்த்து இத்யாதி. ஆனால், "அவிகாராய" என்றத்தோடு விரோதியாதோவென்ன-கர்மநிபந்

வார்த்தைசொல்லுகைக்குத் தன்னோடொப்பதொரு தத்வாந்தரமில்லாமையாலே அநாதரித்
திருக்குமவனிறே. "கர்மநிபந்தநமான விகாரமில்லை" என்ற இத்தனைபோக்கி, ஆஸ்ரித
ஸம்ஸ்லேஷவிஸ்லேஷங்களால் வரும் விகாரமில்லை யென்னில் ஒருசேதநனோடு கலந்த
தன்றிக்கே யொழியுமிறே. அவன்கலந்தபோது பண்ணின ஸ்மிதமன்றோ என்னை அவ்யவ
ஹிதமான உபாயத்திலே மூட்டிற்று. ஸம்ஸாரி முக்தனானால் அவனுக்குப் பிறக்கும்
ஹர்ஷம்போலேகாணும் இத்தலையைப்பெற்று அவன் ஸ்மிதம்பண்ணி நின்றநிலை. [என்
செய்யவாய் இத்யாதி] - இவளுடனே கலந்தத்தாலுண்டான ப்ரீதியாலே ஸ்மிதம்பண்ணி
வடிவிலே வேறுபாடுதோற்ற நின்றநிலையாயிற்று இவளைக் கையும் மடலுமாம்படி. தொட்டு
விட்டது. † (பண்டும் ஒருஸ்மிதமிறே ஊர்ப்பூசலை விளைத்தது) வாய்க்கரையிலேநின்று
மடலெடுக்கிறாளிறே; கழுத்துக்கு மேலேயிறே இவள் மடலெடுக்கப்பார்க்கிறது. [மணிக்
குன்றத்தை] - கழுத்துக்குமேலே யன்றிக்கே மெய்யேமடலெடுக்கப் பண்ணிற்றென்கிறாள்.
என்னோடேவந்து கலந்தத்தாலே வடிவில் வைவர்ண்யம்போய்ப் புகர்த்துக்குளிர்ந்து
‡ (வளர்ந்து) நிலைபெற்றபடியும், பிரிவை ப்ரஸங்கித்துக் கால் வாங்கமாட்டாதே நின்ற
நிலையுங்காண் என்னை மடலிலே துணியப்பண்ணிற்று. மாணிக்கமலைபோலே போக்ய
னானவனை. [ஆசறுசீலனை] - வெறும் வடிவழகுகண்டன்றுகாண் நான் துவக்குண்டது,
அகவாயில்ஶீலத்தையும் கண்டுகாணென்கிறாள். ஆசு - குற்றம். குற்றமற்ற ஶீலத்தை
யுடையவனை. அவன்கலக்கிறபோது என்பேறாகக் கலந்தானாகிலன்றோ நானும் பிரிவில்
என்பேற்றுக்கு வேண்டுமத்தைச் செய்திருக்கலாவது; அம்மேன்மையுடையவன் இப்படி
தாழநின்று என்னைப்பெற்றவிது பெருப்பேறாகத் தான் நினைத்திருக்க, நான் அவனைப்

தநம் இத்யாதி. விஸ்லேஷதஶையிலே ஸ்மிதங்கூடுமோவென்ன-அவன்கலந்த இத்யாதி அவ்யவஹித
மான உபாயத்திலே-மடலெடுக்கையிலே. கீழே "விகாரித்ரவ்யம்போலே விக்ருதனாகாநிற்க" என்றத்தை
த்ருஷ்டாந்தபூர்வகமாக விவரிக்கிறார் - ஸம்ஸாரி இத்யாதி. சேதநனை விகாரித்ரவ்யமென்றது - ஸ்வ
பாவாந்யதாபாவமுண்டாகையாலே. "மணிக்குன்றத்தை" என்றத்தையுங்கூட்டி புநः ப்ரதீகக்ரஹண
பூர்வகமாக பாவம் - என்செய்யவாய் இத்யாதி. இவளுடனே இத்யாதி -தொட்டுவிட்டது - ஈடுபடுத்
திற்று. சாடு-வாய்க்கரையிலே இத்யாதி வாக்யத்வயமும். வாய்க்கரை - ஸமீபஸந்தியென்று சாடு.
ப்ராக்ருதம் - திருப்பவளம். நின்று - ஈடுபட்டுநின்று. கழுத்துக்கு மேலேயிறே - கழுத்துக்கு மேலான
திருப்பவளத்திலேயிறே யென்று ப்ராக்ருதம்; அஹ்ருதயமாக வென்று சாடு. கழுத்துக்குமேலே
யன்றிக்கே இத்யாதியும் சாடு. திருப்பவளமாத்ரமன்றிக்கே யென்று - ப்ராக்ருதம்; அஹ்ருதயமாக
வன்றிக்கே யென்று - சாடு. மெய்யே - சரீரமே, ஸத்யமாகவென்றும். "மணிக்குன்றத்தை" என்ற
துக்கு பாவம்- என்னோடே இத்யாதி. வைவர்ண்யம்போன வொழிய புகர்த்திருக்கை கூடாமையாலே,
புகர்த்திருந்தபோதே - வைவர்ண்யம்போய் என்றது ஸித்தம். புகர்ந்துக்குளிர்ந்து என்றது-'மணி'
என்றத்தைப்பற்ற. "குன்றம்" என்றத்தைப்பற்ற - நிலைபெற்றபடியும் இத்யாதி. தாத்பர்யம் -
வெறும்வடிவழகு இத்யாதி. சீலம் - ஸௌஶீல்யம். ஸப்தார்த்தம் - ஆசு இத்யாதி. சீலத்துக்குக் குற்ற
மாவது - பாரார்த்தமாக ஸம்ஶ்லேஷிக்கை. தன்பேறாக ஸம்ஶ்லேஷிக்கை - குற்றமற்றிருக்கை.
இது சொல்லுகிறதுக்கு பாவம் - அவன்கலக்கிறபோது இத்யாதி. யத்வா, சீலத்துக்குக் குற்றமில்லா
மையேதென்ன - அவன்கலக்கிறபோது இத்யாதி என்னுதல். என்பேற்றுக்கு வேண்டுமத்தைச்செய்
திருக்கலாவதென்றது - என்னுடைய ஸ்த்ரீத்வமாகிற பரமலாபத்தைப் பெறுகைக்குறுப்பாக மட
லெடாதிருக்கலாவ தென்றபடி. மேல் "ஆதிமூர்த்தி" என்றத்தைக் கடாக்ஷித்து பாவம்- அம்மேன்மை

---

† குண்டலித க்ரந்தம் ப்ரக்ஷிப்தம்.
‡ குண்டலிதம் வ்யாக்யாநத்துக்குச் சேராது.

பிரிந்து வைத்து, “வரில்போகடேன், கெடில்தேடேன்” என்று நினைத்திருக்கலாமோ? அவன் தன்குணம் பரிஹரித்துப்போக, என்னைப் பழி பரிஹரித்திருக்கச்சொல்லுகிருயோ? [ஆதிமூர்த்தியை] - “ஒருகுடியிலே பிறந்த உனக்கு, அவன் தானே வரவிருக்குமதொழிய நீ பதறுகிறவிது உன்மதிப்பை யறுத்துக்கொள்ளப் பார்க்கிருய்கிடாய்” என்ன,—நான் மதிப்பை யறுத்துக்கொள்ளப் பார்க்கிறேனல்லேன், மதிப்பையுண்டாக்கிக்கொள்ளப் பார்க்கிறே னென்கிருள்; “**காரணந்து த்⁴யேய:**” (காரணம்துத்யேய:) என்று ஶாஸ்த்ரங்கள் ஒருமிடறுசெய்கிற விஷயத்தையன்ரே நான் ஆசைப்பட்டது, இவ்விஷயத்தை ஆசைப்பட்டுப் பெருதே முடிந்தாலும் அதுதானே மதிப்பாம்படியான விஷயமன்ரே. வ்யாக்யாநம் பண்ணுவதற்கு முன்பேயும் ஒருபொருளுண்டு இதுக்கு அருளிச்செய்வது - “**பூர்வஜ**” (பூர்வஜ) என்கிறபடியே நம்மோட்டைக் கலவிக்கு அவன் முற்பாடனாகச் செய்தே, பிரிவில் ஆற்ருமைக்கு நான் பிற்பாடையாகவோ. “ஆனாலும், ‘அபிமத விஷயத்தைப்பிரிந்தாள், அநந்தரம் மடலூர்ந்தாள்’ என்னுமே, ‘சிலநாள் ஆற்ருமையோடே பாடாற்றிக்கிடந்தாள், பின்பு தன்னால் பொறுக்கவொண்ணுமையான வளவானவாறே மடலெடுத்தாள்’ என்னும் வார்த்தை படைக்கவேணுங்காண்” என்ன, [நாடியே பாசறவெய்தி]-இன்ரே, நான் எத்தனைகாலமுண்டு இப்படி க்லேஶப்படுகிறது. அவன் இத்

ப்ர:—(ஆதிமூர்த்தியை)—அத²ர்வஶிகாயாம், “ந காரணம் காரணாநாம் த்⁴யாதா த்⁴யாதா காரணந்து த்⁴யேய:”.

(பூர்வஜ—என்கிறபடியே)—ஜிதந்தாயாம், “ஜிதந்தே புண்ட³ரீகாக்ஷ நமஸ்தே விஶ்வபா⁴வந। நமஸ்தேऽஸ்து ஹ்ருஷீகேஶ மஹாபுருஷ பூர்வஜ”.

யுடையவன் இத்யாதி. ‘ஆசறு’ என்றத்தால் பலிதம் - **அவன் தன்குணம்** இத்யாதி. கீழே, வரில் போகடேன் கெடில் தேடேனென்றது - வந்தால் விட்டுவிடேன் கெட்டால் தேடானென்றபடி. **குணம் பரிஹரித்து**-தன்பேருகக் கலந்து ஶீலகுணத்துக்கு அவத்யம் வாராமல் பரிஹரித் தென்றபடி. “ஆதி” என்றதுக்கு அர்த்தத்வயம். முந்தினது - ஜகத்காரணமென்று; த்விதீயம் - தம்முடைய ப்ராவண்யத்துக் கடியென்று. மூர்த்திஶப்தம் - ஸ்வாமி வாசகம். முந்தினவர்த்தம் - ஒருகுடியிலே இத்யாதி. ஒருகுடி - அத்விதீயமான குடி. மதிப்பு-ஆதிக்யம். மதிப்பை யுண்டாக்கிக்கொள்ளும் ப்ரகாரமேதென்ன - **காரணந்து** இத்யாதி. “ஆதி” என்றதி னிரண்டாமர்த்தம் - **வ்யாக்யாநம்** இத்யாதி. வ்யாக்யாநம் - ஒன்பதினுயிரப்படி. அன்றிக்கே, வ்யாக்யாநம் பண்ணுவதற்குமுன் பென்றது - ப்ராஸங்கிகமாகப் பாட்டுக்குத் தாத்பர்யம் அருளிச்செய்யும்போ தென்றபடி. அந்தப்பொருள்தானேதென்ன - **பூர்வஜ** இத்யாதி. “ஜிதந்தே புண்ட³ரீகாக்ஷ நமஸ்தே விஶ்வபா⁴வந। நமஸ்தேऽஸ்து ஹ்ருஷீகேஶ மஹாபுருஷ பூர்வஜ.” ஜிதந்தே புண்டரீகாக்ஷ என்று - ப்ரணவோக்தஶேஷத்வமும், நமஸ்தே என்று - நமஶ்ஶப்தோக்த பாரதந்த்ர்யமும், விஶ்வபாவந என்று - நாராயண ஶப்தோக்தகாரணத்வமும், நமஸ்தேஸ்து என்று - கைங்கர்யப்ரார்த்தனையும், ஹ்ருஷீகேஶ என்று - கைங்கர்யத்தில் ஸ்வார்த்ததாநிவ்ருத்தியும் சொல்லுகிறது; விஶ்வபாவந என்று - ஜகத்காரணத்வம் சொல்லியிருக்க, பின்னையும் பூர்வஜ என்னும்போது - யஸ்மாத்பூர்வம்ஜாயதேஜகத் ஸபூர்வஜ: என்று காரணத்வம் சொல்லுகையன்றிக்கே, சேதநோஜ்ஜீவநத்துக்கு முற்பாடனாய் க்ருஷிபண்ணுமவனென்றேயாகவேணு மென்றபடி. விஶ்வபாவந என்று-விஶ்வத்தை ஸவிப்பிக்குமவன் - உண்டாக்குமவன். ஜகத்காரண மென்றபடி. **பாடாற்றி** - பொறுத்து. “எனைநானையம்” என்னுமளவுக்கும் ஸாவம் - **இன்றே** இத்யாதி. விவரணமாதல், “ஆதிமூர்த்தி” என்றதி னிரண்டாமர்த்தத்தைக் கடாக்ஷித்தாதல் - **அவன்** இத்யாதி. பட்ட

கால
தலையைப் பெறுகைக்குப் பட்டதெல்லாம் போராதோ நான் அவனைப்பிரிந்துபட்டது. சிறைக்
மெல்லாம் தேடிக்காணப்பெறுதே துஃகப்பட்டுத்திரிந்த தத்தனையாகாதேதான்; உந்நேயமித்தனைகாணும்
கூடத்திலேபிறந்து அங்கேவளருமாபோலே. விஶ்லேஷத்தாலே ஙகைச
ஸம்ஶ்லேஷம். பகவத்தத்வமுள்ளவிடமெங்கும் புக்குத்தேடிக் காணப்பெறுமை பாசறவு -
யற்று, பின்பாகாதே மடலெடுத்தது. [பாசறவெய்தி] - துஃகத்தையுடையேனாய். வைவர்ண்
துஃகம். பாசு என்று - பசுமையாய், அது அறுகையாவது - வைவர்ண்யமாய், பந்துக்
யத்தை பஜித்தேன்னுதல்; அன்றிக்கே, பாசென்று - பாசமாய், அதாவது - பற்றாய், யெய்தி
கள்பக்கல் ஸங்க மற்றேன்னுதல். [பாசறவெய்தி]-ஸ்நேஹமடைய அவன்பக்கலிலே [அறி
யேன்னுதல். எல்லாம்செய்தாலும் இது அறிவுடையார் செய்வதொன்றல்லவென்ன, * மயர்வறமதிநல
விழந்தேனைநாளையம்] - அறிவு குடிபோய் எத்தனையோர்காலத்தோம். விழுந்து
மருளப்பெற்றவன்றே போயிற்றில்லையோ நம்முடைய அறிவு. திர்யக்கின்காலிலே கற்பிக்கைக்கு;
தூதுவிட்டவன்று, அது "ஜ்ஞாநகார்யம்" என்றிருந்தாயோ இன்றிருந்து மற்றேன்று
அன்றே * மதியெல்லாமுள்கலங்கிற்றில்லையோ. தன்பக்கலிலே கைவைத்தால் தோழுதாரத்தோள்"
அறியாதபடி பண்ணும் விஷயமிறே, † "பேரின்பமெல்லாந்துறந்தார் ப்ராப்தி
என்னக்கடவதிறே. "ஹெநாவஜநஸ்ஸ்மரந்" (நோபஜநம்ஸ்மரந்) என்று - ஜ்ஞாநம்பிறந்த
ஸமயத்தில் இவ்வருகுள்ளவற்றை நினையாதபடி பண்ணுகையே யன்றிக்கே, விஷயமன்றோ?
ஸமயமேபிடித்தும் இவ்வருகுள்ளவற்றை நினையாமே பண்ணவல்ல நீ யேல்
தன்னையநுஸந்தித்து லோகயாத்ரையையும் அநுஸந்திக்கும்படியோ அவன்படி.

ப்ர:—(நோபஜநம்ஸ்மரந் என்று ப்ராப்திஸமயத்தில்)-சாந்தோக்ய (கஉ)
"ஸ ஏஷ ஸம்ப்ரஸாத:" இத்யாதி "நோபஜநம்ஸ்மரந்நிதம் ஶரீரம்".

"எனைநாளையம் - நாடியே - பாசறவெய்தி" என்று அந்வயித்து
தெல்லாம் - பட்டகாலமெல்லாம். ஆவம் - காலமெல்லாம் இத்யாதி. ஸர்வகாலமும் துஃகப்பட்டமைக்கு த்ருஷ்டாந்தம் - சிறைக்கூடத்
திலே இத்யாதி. இத்தால் - வ்யஸநாதிசயத்தாலே, ஸர்வகாலமும் துஃகப்பட்டதாய்த் தோற்றுகிற
தென்று கருத்து. ஸம்ஶ்லேஷம் ஒருகாலுமில்லையோ வென்ன - விஶ்லேஷத்தாலே இத்யாதி.
உந்நேயம் - அநுமேயம். அவதாரணத்தோடேகூட்டி "நாடி" என்றதுக்கு ஆவம் - பகவத்தத்வம்
இத்யாதி. பரத்வாதிகளெங்கும் புக்கென்றபடி. "பாசறவெய்தி" என்றதுக்கு நாலர்த்தம். அதாவது
பாசறவு - துஃகமும், வைவர்ண்யமும்; எய்தி - ப்ராபித்து. மூன்றாமர்த்தம்,—பாசு - ஸங்கம், அறவு -
நிவ்ருத்தி, பந்துவிஷயாஸக்தி நிவ்ருத்தியை யடைந்தேனென்றபடி. நாலாமர்த்தம்,—பாசத்தை - ஸ்நே
ஹத்தை, அற - மிகவும், எய்தி என்று கண்டுகொள்வது. எத்தனையோர்காலத்தோம் - எத்தனை
காலங்களை யுடையோமானோம். அப்படி அநேக காலமுண்டோ வென்ன - மயர்வற இத்யாதி.
போனமைக்கு நியாமகமேதென்ன - திர்யக்கின் இத்யாதி. தூதுவிட்டவென்றது - அஞ்சிறையமட
நாரையிலே. கற்பிக்கைக்கு - "மடலெடுக்கவேண்டா" என்று கற்பிக்கைக்கு. தூதுவிட்டது
அஜ்ஞாநகார்யமென்றது அவ்விடந்தன்னிலே ஸ்புடமென்கிறார் - அன்றே மதியெல்லாம் இத்
யாதி. மதிகலங்கினால் "ஆசறுசீலனை ஆதிமூர்த்தியை" என்னும்படி யென்னென்ன - தன்
பக்கலிலே இத்யாதி. இத்தால் - லௌகிகஜ்ஞாநமில்லையென்ற வித்தனைபோக்கி, பகவத்விஷய
ஜ்ஞாநமில்லையென்கிறதன்றென்று கருத்து. உக்கத்துக்கு ப்ரமாணம் - பேரின்பம் இத்யாதி.
அந்த அழகியதோளைத் தொழுதவர்கள், ஒரோமனையிடத்திற் பிறந்தவர்கள் பிறந்து ப்ராபிக்கும் நிரதி
ஶயஸுகமெல்லாவற்றையும் பரித்யஜித்தவர்களாவர் கிடிகோ ளித்யர்த்தஃ. தோளழகுதானே மற்றுள்ள
இன்பங்களைத் துறக்கும்படி பண்ணுமென்கை. † இரண்டாந்திருவந்தாதி - நாற்பத்திரண்டாம்பாட்டு-
"நினைப்பன்" இத்யாதி. வ்யதிரிக்தவிஷயஜ்ஞாநாபாவம் ப்ராப்த்யவஸ்தையிலேயன்றோ வென்ன-
நோபஜநம் இத்யாதி. அப்படிவிலக்ஷணவிஷயமோவென்ன - தன்னை இத்யாதி. அவன்படி -

லாம்சொன்னாலும் பழிக்கு அஞ்சவேணுங்கா ணென்ன, [ஏசறும் இத்யாதி] - நமக்கு மடலெடுக்கை குற்றமாகிலன்றே அவர்களுக்கும் பழிசொல்லுகை குற்றமாவது. அறிவுடையார்க்கு வரக்கடவதான பழி, அது வாஸநையோடே குடிபோன நமக்கு வாராதுகாண்; இதுக்கு அஞ்சவேண்டா. இதுக்கு மூன்றுபடியாக அருளிச்செய்வர்,—"இவளையொருபழி சொன்னோமாய் விடவல்லோமே" என்று அதிலேயற்றிருக்கிற வென்னுதல்; ஏசுகையிலே துணிந்திருக்கிற. அன்றிக்கே, "பகவத்விஷயத்திலே கைவைத்திருக்கிறவர்களுக்கு ஒரு பழி சொன்னோமாய் விடவல்லோமே" என்று துஃகப்பட்டிருக்கிற வென்னுதல். ஏசற்றிருக்கிற நமக்கு. அதாவது - ஏசுமெல்லைகடந்தவென்னுதல். [ஊரவர்கவ்வை] - பகவத்விஷயத்திலே கைவைத்தார் "இது பழி" என்னிலன்றே பழியாவது; இதுக்குப்புறம்பாய் நின்றவர்கள் சொல்லுமது நமக்குப்பழியோ? [தோழி] - ஸமாநஸுகதுஃகையான உனக்கு, "இதுபழி" என்று தோற்றிலன்றே எனக்கு மீளவேண்டுவது. [என்செய்யுமே] - ஏசறுமெல்லையிலே நிற்கிற எனக்கு, இது ஏசாம்படியிருப்பார்சொல்லும் வார்த்தைகொண்டு காரியமென்? ஊரார்பழி புகழா மெல்லையிலேயன்றே நாம் நிற்கிறது; அவர்கள் சொல்லுகிறவிது நமக்கு அவத்யமோ, தாரகமாமித்தனையன்றே? "அலரேழலாருயிர்நிற்கும்" என்னக்கடவதிறே. †"அலர்தூற்றிற்றதுமுதலாக்கொண்டவேன்காதல்" என்கிறபடியே, அவர்கள்பழி தாரகமாகவன்றே மடலெடுக்க விருக்கிறது. (க)

இரண்டாம்பாட்டு.

என்செய்யுமூரவர்கவ்வை தோழியினிநம்மை
என்செய்யதாமரைக்கண்ணன் என்னைநிறைகொண்டான்
முன்செய்யமாமையிழந்து மேனிமேலிவெய்தி
என்செய்யவாயுங்கருங்கண்ணும் பயப்பூர்ந்தவே.

அவன் வைலக்ஷண்யம். "ஏசறும்" என்றதுக்கு மூன்றர்த்தம்,—ஏசுகையிலே துணிந்திருக்கிற வென்று முந்தினது; ஏசறுமென்று - முழுச்சொல்லாய், துஃகப்பட்டிருக்கிறவென்று இரண்டாவது; ஏசறுகை - துஃகப்படுகை. ஏசுகையை - லௌகிகர் சொல்லுகிற நிந்தையை, அற்றிருக்கிற - கடந்திருக்கிற வென்று மூன்றாவது; இப்போது, தனக்கு விசேஷணம். அதாவது - ஊரார்பழி புகழாம்படி யிருக்கிற நமக்கென்றபடி. முந்தினவர்த்தத்திலே நோக்காக பாவம் - **நமக்கு இத்யாதி.** *மூன்றாமர்த்தத்திலே நோக்காக பாவம் -* **அறிவுடையார்க்கு இத்யாதி.** *பழிசொல்லுகை குற்றமாவதென்றது - "ஏசுகையிலேயற்றிருக்கிற ஊரவர்" என்றத்தைப்பற்ற. பூர்வவாக்யவிவரணம் -* **ஏசுகையிலே துணிந்திருக்கிற***வென்றது. இரண்டாமர்த்தம், ஏசுகை - துஃகப்படுகை யென்றாக்கி, அத்தை ஸஹேதுகமாக அருளிச்செய்கிறார் -* **அன்றிக்கே பகவத்விஷயத்திலே இத்யாதி.** *ஏசுமெல்லையைக் கடந்திருக்கையாவது - ஏசுகையை துணியாமலிருக்கையென்றபடி. "ஊரவர்" என்றதுக்கு பாவம் -* **பகவத்விஷயத்திலே இத்யாதி.** *"என்செய்யும்" என்றதுக்கு - புகழாமென்று தாத்பர்யம். மூன்றாமர்த்தத்தை யுபஜீவித்துக்கொண்டு, "ஊரவர்கவ்வை - என்செய்யும்" என்றதுக்கு பாவம் -* **ஏசறுமெல்லையிலே இத்யாதி.** *இது - மடல். விவரணம் -* **ஊரார் இத்யாதி.** *"என்செய்யும்" என்ற ஸ்வரத்துக்கு - வ்யதிரேகத்திலே நோக்காக தாத்பர்யாந்தரம் -* **அவர்கள் சொல்லுகிற இத்யாதி.** *"பழிதாரகம்" என்னுமதுக்கு ப்ரமாணம் -* **அலரேழில் இத்யாதி. அலரேழில் -** *அபவாத முதிக்கில், ஆருயிர்நிற்கும் - பூர்ணப்ராணன் நிற்குமித்யர்த்தஃ.* **அலர்தூற்றிற்றதுமுதலாகக்கொண்டவேன்காதல்** *- பழியைத்தூற்றினவது ஹேதுவாகக்கொண்ட வென்காத லித்யர்த்தஃ. மாசறுசோதி தொடங்கி, ஏனைநாளையம், தோழி - ஏசறுமூரவர்கவ்வை - என்செய்யு மித்யந்வயஃ.* (க)

† *திருவாய்மொழி-எ, ந, அ.*

ஆ.—(என்செய்யும்.) எம்பெருமான் தன்னுடைய, அதிஸீதளமாய் ஸர்வ ஸத்வமநோஹரமாய் அருணகமலஸத்ருஶமான அழகிய திருக்கண்களைக் காட்டி என்னைத் தோற்பித்துப் போனான்; அவனை ஸம்ஶ்லேஷிக்கப்பெறாமையாலே, தத்ஸம்ஶ்லேஷஜநிதமான ஔஜ்ஜ்வல்யமுமிழந்து, மேனி மெலிவெய்தி, தத்ஸம்ஶ்லேஷத்தால் புதுக்கணித்த என்செய்யவாயும் கருங்கண்ணும் பயப்பூர்ந்த; இனி நம்மை என்செய்யும் ஊரவர் கவ்வை தோழீ யென்கிறாள்.

ஒ.— இரண்டாம்பாட்டில், ஏதேனும் தசையிலும் 'இங்ஙன்செய்கை ஈடல்ல' என்ற தோழியைக் குறித்துத் தரிப்பு அரிதாம்படி ஹ்ருதயத்திலும் ஶரீரத்திலும் பிறந்த ஶைதில்யத்தை அறிவிக்கிறாள்.

[என்செய்யும் என்று தொடங்கி] - ஸம்ஶ்லேஷதசையில் என்பக்கல் மிகவும் ப்ரவணனாய் ஸ்நேஹமாக நோக்கின நோக்காலே என்னை நிறையைக் கொண்டான். நிறைபோவதுக்கு முன்பே அழகிய நிறத்தையும் இழந்து உடம்பும் மெலிந்து அவனுக்கு அத்யந்தம் ஸ்ப்ருஹணீயமான என்னுடைய சிவந்த வாயும் கறுத்த கண்ணும் விவர்ணமாயிற்றின. நிறையாகிறது - மநஸ்ஸில் ஓடுகிறது ஒருவர்க்கும் தெரியாதபடியிருக்கை.

ப.—அநந்தரம், அவன்கண்ணழகாலே என் ஸர்வஸ்வத்தையும் அபஹரித்து என் வைலக்ஷண்யமடங்க அழிந்திருக்க, ஊரார் என் செய்வ தென்கிறாள்.

செய்ய - சிவந்த, தாமரை - தாமரைபோன்ற, கண்ணன் - கண்ணழகையுடையனாய்க்கொண்டு, என் - எனக்கு பவ்யனானவன், என்னை - என்னை, நிறைகொண்டான் - பூர்த்யபஹாரம் பண்ணினான்; (ஸ்த்ரீத்வபூர்த்தி போனபடியாலே), முன் - முன்புதோற்றுகிற, செய்ய - விலக்ஷணமான, மாமை - மாமைநிறமும், இழந்து - இழந்து, மேனி - (அதுக்காஶ்ரயமான) ஶரீரமும், மெலிவு எய்தி - மெலிவு எய்தி, (அவன்செய்யவாயும் செய்யதாமரைக்கண்ணும் குறியழியாதிருக்க), என் - என், செய்யவாயும் - செய்யவாயும், கருங்கண்ணும் - கருங்கண்ணும், பயப்பு - ஒருவெளுப்பாம்படியான வைவர்ண்யம், ஊர்ந்த - பரந்தன; தோழி - தோழீ, இனி - இனி, நம்மை - நம்மை, ஊரவர்கவ்வை - ஊரவர்கவ்வை, என்செய்யும் - என்செய்யும். நம்மையென்று - ஸமதுஃகையான தோழியையும் கூட்டிக்கொள்ளுகிறாள்.

இ.—இரண்டாம்பாட்டில், எல்லா தசையிலும் பழி பரிஹரிக்கவேண்டாவோ வென்ன, பழி பரிஹரிக்குமெல்லை கடந்ததுகாணென்று தன் வடிவைக் காட்டுகிறாள்.

[தோழி - இனி - என் செய்யுமூரவர் கௌவை] - இனியென்று தன் வடிவைக் காட்டுகிறாள். மேலடங்க-'இனி' என்கிற இதன் விவரணம். [தோழி] - இப்படி அவகாஹிப்பதற்கு முன்னே மீட்க வேண்டாவோ? [நம்மை] - நிறத்தில் வேறுபாடு அவளுக்கும் ஒத்திருக்கிறபடி. "ஸகலஂஷ-ேஂவஂஸ-வஜுநள". 'வாயாலே மடலெடுக்க வேண்டா' என்கிறாளத்தனை, வைவர்ண்யம் இருவருக்கும் ஒத்திருக்கும். "யாமுடைத் துணையென்னும் தோழிமாரும் எம்மின் முன் அவனுக்கு மாய்வராலோ". 'எனக்கு அவன் வேணும்' என்னும் அளவிறே இவளுக்கு உள்ளது. 'இவள் நோவுபோகவேணும்' என்றும், 'இருவரும் சேரவேணும்' என்றும் இரட்டித்திறே அவள் நோய் இருப்பது. "தஷாஸீஞி ஷஹொதயு-ஂராஷ-ஜ ஸஉவாஂஶ-ஸோநு" என்று பெருமாளிற்காட்டில் ஒளி

மழுங்குனார்கிற மஹாராஜர். இவ்வைவர்ண்யத்துக்கு அடி சொல்லுகிறது [என் செய்ய இத்யாதி] - கண்ணாலே 'தவாஹ்மி' என்று சொல்லி என்னை ஸர்வஸ்வாபஹாரம் பண்ணினான். கிட்டினால் " என்னுடையவன் " என்னும்படியிறே இருப்பது. வாத்ஸல்யத்தாலே குதறிச்சிவந்த கண்ணாலே 'ஆத்மாத்மீயங்கள் நீயிட்டவழக்கன்றோ ?' என்று சொல்லி என்னை உரிகூறைகொண்டான். " தூதுசெய்கண்கள்கொண்டொன்றுபேசி" என்னக்கடவதிறே. சொலவொன்றும் செயலொன்றுமாயிற்று. அவனுக்குப் புண்டரீகாக்ஷத்வம்போலே இவளுக்கு ஸ்த்ரீத்வம். "என்னை நிறைகொண்டான்" என்று வாய்விடப் பண்ணுகை. இழந்தவை இன்னவை என்கிறாள், மேல்—[முன்செய்யமாமையிழந்து] - முன்னேயுள்ளமாமையென்னுதல், நிறைக்குமுன்னே யென்னுதல், முன்னே - காணக்காண வென்னுதல். முன்பு தோன்றினவற்றை வாங்கியிறே கிழிச்சீலையறுப்பது. [செய்யமாமை] - ஸ்ப்ருஹணீயமானமாமை யென்கை; சிவப்பைச் சொல்லுகையன்று தாத்பரியம். [இழந்து] - அவன் விரும்பினதாகையாலே நிறம், நிதியிழந்தாற்போலே சொல்லுகிறாள். [மேனிமெலிவெய்தி] - வடிவுதான் நீர்ப்பண்டம்போலே காணக்காண சருகாகிறபடி. நிறம் வந்தாலும் அவன்தான் வந்தாலும் ஆஶ்ரயமில்லையென்கை. [என் செய்யவாயும்] - அவயவியாகத் தேடுகிறேனோ அவயவங்கள்தோறும் அழிந்து வாராநிற்க. அவன் வாய் புலற்றுமதாகையாலே - என்னதென்கிறாள். அவன் உகந்த வழியாலே தமக்கு ப்ராப்யமாகலாமிறே. "தொழுது வைத்தேன்". அவன் 'என்னது' என்று சொல்லக்கேட்டிருக்குமே. அத்தாலே, என்னது என்கிறாள். சிவந்த வாயும், கறுத்தகண்ணும் ஒரு வெளுப்பாயிற்று. ப்ரளயகாலத்தில் ஸூக்ஷேத்ரம் போலே ஏகோதகமாய் அழிந்தது. [பயப்பூர்ந்ததுவே] - விஷம் ஊர்ந்தாற்போலே வைவர்ண்யம் வண்டலிட்டுவாராநின்றது. மடலை நிஷேதித்தாயாகிலும் வடிவை மறைக்கலாமோ வென்கை.

ஈடு.—இரண்டாம்பாட்டு. "கீழிற்றிருவாய்மொழியில்நின்றும் இத்திருவாய்மொழிக்குப் புகுருகைக்கு வழியிரண்டாயிருக்கும்; * சீலமில்லாச்சிறியனிலே-கூப்பிட்டார் ; கூப்பிடச்செய்தேயும் வந்து முகங்காட்டாமையாலே, அவனுக்கு உறுப்பல்லாத ஆத்மாத்மீயங்கள் எனக்கு வேண்டாவென்றார் ; இப்படியொழியப் பேறிழவு புறம்பேயாயிருக்கிற ஸம்ஸாரிகள் படியைக்கண்டு வெறுத்தார் ; 'ஈஶ்வரனும் கைவாங்கின இவர்களை நான்திருத்துவேன்' என்று, பகவத்பரத்வத்தை உபபாதித்துத்திருத்தினார்; 'இவர்களிலேயொருவனாயிருக்கிற எனக்கு இவ்வாசியுண்டாவதே' என்று, பகவத்க்ருபையைக் கொண்டாடினார்; தாந்திருத்தத் திருந்தின ஸ்ரீவைஷ்ணவ ஸம்ருத்திக்கு மங்களாஶாஸநம் பண்ணினார்; தொடங்கினகார்யம் தலைக்கட்டினவாறே பழைய இழவே தலையெடுத்து, தம் ஆற்றாமையாலே மடலூர்ந்

இரண்டாம்பாட்டு—என்செய்யும் இத்யாதி முதற்பாட்டுக்கு வ்யாக்யாநம் அருளிச்செய்தவநந்தரம் மத்யே ஒரு ஸ்ரீவைஷ்ணவர் எழுந்தருளி, "ப்ரவேஶமும் பாட்டும் அடியேனுக்கு ப்ரஸாதிக்கவேணும்" என்ன, அவருக்காக அருளிச்செய்கிறார் - **கீழிற்றிருவாய் மொழியில்நின்றும்** *இத்யாதி.* **வேண்டாவென்றார்** *- ஏறாளுமிறையோனிலே.* **வெறுத்தார்**-*நண்ணாதாரிலே.* **திருத்தினார்** *- ஒன்றுந்தேவிலே.* **பகவத்க்ருபையைக் கொண்டாடினார்** *- கையார்சக்கரத்திலே.* **மங்களாஶாஸநம் பண்ணினார்** *- பொலிகபொலிகவிலே. தொடங்கின கார்யம் - ஸம்ஸாரிகளைத் திருத்துகை.* **பழைய இழவே** *- ஏறாளுமிறையோனிலிழவே.* **வழியல்லாவழி** *- ஸ்வாதந்த்ர்யம்.* *" செய்ய வாய் " என்று -*

தாகிலும் பெறப்பார்க்கிறு ரென்னுதல். அன்றிக்கே, கீழே, 'மலியுஞ்சுடரொளிமூர்த்தி' என்று - வடிவழகை யநுஸந்தித்து, அநந்தரம் பாஹ்யஸம்ச்லேஷாபேக்ஷை பிறந்து அப்போதே பெறுமையாலே, வழியல்லாவழியே மடலூர்ந்தாகிலும் பெறப்பார்க்கிறு ரென்னுதல்.

[மாசறுசோதி இத்யாதி] - † (மடலேடுத்தாகிலும் பெறவேண்டும்படி பழிப்பற்ற வடிவழகை யுடையனும், என்னோட்டைக்கலவியால் வந்த ப்ரீதிதோற்ற ஸ்மிதம்பண்ணி, அந்தக்கலவியாலே வேறுபட்டுள்ள வடிவையுடையனும், என்னோடேகலக்கிறவிடத்துத் தன்பேறுகக் கலந்தவனுமாய், மடலேடுத்துப்பெறுதே முடிந்தாலும் 'இந்த விஷயத்தை யாசைப்பட்டன்றே மடலேடுத்தது' என்று அதுதன்னைப்பீடாகச் சொல்லலாம்படி மதிப் பனுமாயுள்ளவனை). "[என்செய்யவாய் - மாசறுசோதி - மணிக்குன்றத்தை] - என்று அந் வயமிருப்பது, 'இனி விசேஷணந்தோறும் ஒருபொருள் சொல்லவேணும்' என்னுமத்தாலே சொன்னோம்" என்று அருளிச்செய்வர். †([நாடியே இத்யாதி] - நெடுநாள் தேடி துஃகப்பட்டு, அறிவுகுடிபோனார் செய்யுமத்தைச் செய்கிறது எத்தனைகாலமுண்டு? "இவ்விஷயத்திலே கைவைத்தார்க்கு ஒரு பழிசொன்னோமாகவேணும்" என்று அதிலேதுணிந்திருக்கிற.)

ஊரவர்சொல்லும் பழி நமக்கு என்செய்யப்புகுகிறதென்று நின்றது - கீழ்; இரண் டாம்பாட்டு—இதென்னவார்த்தை சொன்னயாறும், எல்லாம்செய்தாலும் பழிபரிஹரிக்க வேணுங்காணென்ன; நான் "பழிபரிஹரிக்கவேண்டா" என்றேனல்லேன், பழிபரிஹரிக்கு மெல்லை கடந்ததுகா ணென்கிறுள்.

[என்செய்யும் ஊரவர்கவ்வை தோழீ யினிநம்மை யென்று] - தன்வடிவைக் காட்டுகிறுள். இந்த இனிக்குப் பொருள் சொல்லுகிறதாயிற்று - பாட்டில் மேலிற்றுறை யும். என்செய்ய தாமரைக்கண்ணனென்று தொடங்கி, என்செய்யவாயும் கருங்கண்ணும் பயப்பூர்ந்த - என்செய்யும் ஊரவர்கவ்வை தோழீ இனி நம்மை என்று அந்வயம். இனி என்னை யென்னுதே, நம்மையென்கிறுள் - வாயாலே "மடலூரக் கடவதல்ல" என்று நிஷேதியா நிற்கச்செய்தேயும், உடம்பு வெளுக்கிறமை அவளுக்கும் ஒத்திருக்கையாலே.

அவயவசோபை, "மாசறுசோதி" என்று - ஸமுதாயசோபை, "மணிக்குன்றத்தை" என்றது - இரண்டுக்கு மாச்ரயமான விக்ரஹத்தை யென்னு மர்த்தவிசேஷம் தோற்றுகைக்காக அந்வயித்தது. அந்வயித்தால்போருமோ, கீழைப்போலே ப்ரதிபதம் அர்த்தம் அருளிச்செய்ய வேண்டாவோவென்ன - இனிவிசேஷணம் இத்யாதி.

வ்ருத்தாநுவாத பூர்வகமாக இரண்டாம்பாட்டுக்கு அவதாரிகை - ஊரவர் இத்யாதி. எல்லாம் செய்தாலும் - ஆற்றுமையாலே எத்தனைகாலம் பாடாற்றியிருந்தாலும். பரிஹரிக்குமெல்லை - "தத் வ்யஸநம் ஸம்ஹவெக" என்றிருக்கை.

"பரிஹரிக்குமெல்லைகடந்தது" என்றது என்கொண்டென்ன - என்செய்யுமூரவர் இத் யாதி. இனியென்று-தன்வடிவைக் காட்டுகிறுள் என்றபடி. "இனி" என்றால் - வடிவைக்காட்டின தாமோவென்ன-இந்த இனிக்கு இத்யாதி. அதாவது, மேலே சொல்லுகிற வைவர்ண்யாதிகளை-"இனி" என்று பராமர்சிக்கிறதாகையாலே, அர்த்தாத், "இனி" என்று - வடிவைக்காட்டின தாகலா மென்ற படி. இனிக்கு - "இனி" என்கிறதுக்கு. அந்வயப்ரதர்சநமுகேந உக்தார்த்தம் விசதீகரோதி - என் செய்யதாமரைக்கண்ணன் இத்யாதி. "நம்மை" என்றதுக்கு - ஆத்மநி பஹுவசநமாக்கி, தன்வடி வைக்காட்டுகிறள் என்றார் கீழ்; அங்ஙனன்றிக்கே, தோழியையுங் கூட்டிக்கொண்டு - "நம்மை" என்கிறுளென்று விவக்ஷித்து, நிஷேதிக்கிறவளைக் கூட்டிக்கொள்ளுவானென்னென்ன - இனி என்னை இத்யாதி. இப்போது, தன்வடிவை யென்றது - தங்கள்வடிவை யென்று கண்டுகொள்வது. நாயகிக்

---

† குண்டலிக்ரந்தத்வயம் க்வாசித்கம்,

* "தோழிமாரும் எம்மின்முன் அவனுக்கு மாய்வராலோ" என்னக்கடவதிறே. "எனக்கு அவன் வேணும்", "இவளுக்கு அவன் வேணும்" என்னுமிதுவேயாயிற்று வாசி. இவளிலும் தோழிமார்க்கு ஆற்றாமை விஞ்சியிருக்கும்; அதுக்கடி - நாயகனைப் பிரிகையாலுண்டான ஆற்றாமையிறே இவளுக்குள்ளது, இவள்நோவுபடக் காண்கையாலும், இவளும் அவனுமாய்ச் சேரவிருக்குமது காணப்பெறாமையாலும் தோழிக்கு இரட்டித்திருக்குமிறே. "ததாஸீதித்யாதி" (ததாஸீதித்யாதி) - 'பெருமாளும் பிராட்டியுமான இருப்பிலே பிரிவுவிளைந்தது' என்று இளையபெருமாள் மஹாராஜர்க்கு அறிவிக்க, அவ்வார்த்தை செவிப்படப்பட, பெருமாள் திருமேனியில் வைவர்ண்யம் இவருடம்பிலே மாறிற்றாயிற்று. "அத்யர்த்தம் நிஷ்ப்ரப:" (அத்யர்த்தம் - நிஷ்ப்ரப:) என்று - பிராட்டியைப் பிரிகையாலுண்டான ஆற்றாமையிறே பெருமாளுக்கு உள்ளது, இவர்தம்முடைய ஆற்றாமையைக் காண்கையாலும், பிராட்டியும் தாமுமாகச் சேரவிருக்கக் காணப்பெறாமையாலும் இவர்க்கு அவ்வளவன்றிக்கே மிக்கிருக்குமிறே. அஹ்ரிதேயவசநமாயிற்று - அர்த்தஸப்தம். அத்யர்த்தமாவது-அஹ்ரிதேயமல்லவென்கிறது. †(வாசாமகோசரமென்றபடி.) [தோழி இனிநம்மை] என்கிறாள் - "ஏகம் து:க2ம் ஸுக2ஞ்ச" (ஏகம்து:கம்ஸுகஞ்ச

ப்ர:—(என்செய்யுமூரவர்கவ்வை தோழியினிநம்மை) — ஸுந்தரகாண்டே, [௬௫] ஸீதாம்ப்ரதி ஹநுமாந், "தத்ஸ்ஸந்நாஸஜம் ஶோகம் ராகவஸ்யாக்நிஷு கடூ॰ணா: | லக்ஷ்மணோ வாநரேந்த்ராய ஸுக்ரீவாய ந்யவேதயத் || ௬௫ || ஸத்ருஶா வாநரேந்த்ரஸ்ய லக்ஷ்மணேநேரிதம் வச: | ததாஸீந்நிஷ்ப்ரபோத்யர்த்தம் ராஹுக்ரஸ்த இவாம்ஶுமாந் ||௬௬||".

(ஏகம்து:க2ம் ஸுக2ஞ்ச நௌ என்கிற ப்ராப்தியைமுன்னிட்டுக்கொண்டு)— கிஷ்கிந்தாகாண்டே பஞ்சமே, "த்வம் வயஸ்யோஸி ஹ்ருத்யோமே ஹ்யேகம் து:க2ம் ஸுக2ஞ்ச நௌ | ஸுக்ரீவோ ராகவம் வாக்யமித்யுவாச ப்ரஹ்ருஷ்டவத்".

கொழிய தோழிக்கு உடம்பு வெளுக்கக்கூடுமோவென்ன - தோழிமாரும் இத்யாதி. தோழிமாரும், ஈடுபடுகிற எனக்குமுன்னே, "இவளுக்கு அவன் உதவப் பெற்றதில்லை" என்று அவன்பொருட்டு ஈடுபடாநிற்பர்கள் இத்யர்த்த:. மாய்வர் - ஈடுபடாநிற்பர்கள். உடம்புவெளுக்கிறமை இருவருக்கு மொத்திருந்தால் வாசியேதென்ன - எனக்கு இத்யாதி. எனக்கு அவன்வேணும் என்னும் நாயகி, இவளுக்கு அவன்வேணும் என்னும்தோழி என்று கூட்டிக்கொள்வது. "எம்மில்முன்" என்கிறவிடத்தில், "எம்மில்" என்கிறதுக்குஹ்ருதயம்-இவளிலும் இத்யாதி. விஞ்சியிருக்கைக்குஅடியேதென்ன-அதுக்கடி இத்யாதி. தோழிமார்க்கு இரட்டித்திருக்குமென்றதுக்கு ஸம்வாதம் - ததாஸீத் இத்யாதி. "ஸத்ருஶா வாநரேந்த்ரஸ்ய லக்ஷ்மணேநேரிதம் வச: | ததாஸீந்நிஷ்ப்ரபோத்யர்த்தம் ராஹுக்ரஸ்த இவாம்ஶுமாந்" இதி ஸுந்தரகாண்டே பஞ்சஷஷ்டிதமே ஸீதாம்ப்ரதி ஹநுமான். இஸ்ஸ்லோகத்துக்கு அடியேதொடங்கி அர்த்தம்-பெருமாளும்பிராட்டியும் இத்யாதி. மாறிற்றாயிற்று - இங்குமுண்டாயிற்றென்றபடி. இவர்தம்முடைய - பெருமாளுடைய தாமுமாக - பெருமாளுமாக. இவ்வர்த்தத்தை இஸ்ஸப்தம் வசிக்குமோ வென்ன - அஹ்ரிதேய இத்யாதி. அத்யர்த்தம் - வாசாமகோசரமாம்படி. வைவர்ண்யமாகிறவர்த்தம் வாக்குக்கு அவிஷயமாம்படி யென்றபடி. இவ்விடத்தில், அதி யென்கிறது - ஈவர்த்தகம். அவளுடம்பு வெளுக்கிறது தனக்காகவென்று இவள் எப்படியறிந்தாளென்ன-தோழியினிநம்மை இத்யாதி. அதாவது-ஸமாநஸுகது:கைகளாகையாலே, உடம்புவெளுக்க

* திருவாய்மொழி - கூ, கூ

† குண்டலித க்ரந்தம் க்வாசித்கம்.

நௌ) என்கிற ப்ராப்தியை முன்னிட்டுக்கொண்டு. "பழி" என்று பரிஹரிக்கப் பார்க்கிற வள்தன்னையும் பழி சொல்லுகிறுளிறே, "ஏகம் து:கம் ஸஹாவஹே நௌ" (ஏகம் துःகம்ஸஹகஞ்சநௌ) என்றிருக்குமது அவளுக்கு முண்டாகையாலே. பழிக்கு அஞ்சவேண் டாமைக்கு நமக்கு இப்போதுவந்ததேன்? என்ன, [என்செய்ய தாமரைக்கண்ணனேன்னை நிறைகோண்டான்] - "என்னுடைய ஆத்மாத்மீயங்களுடைய நீயிட்ட வழக்கன்றே" என்கிற அகவாயில் தண்ணளி தோற்றும்படி வாத்ஸல்யத்தாலே குதறிச்சிவந்த தாமரை போன்ற திருக்கண்களாலே குளிரநோக்கி, "நானும் என்னுடைமையும் உன்னது" என்றுசோல்லுவாரைப்போலே வந்து இத்தலையை ஸர்வஸ்வாபஹாரம் பண்ணிக்கோண்டு போனுன். எனக்கு உபகரிப்பாரைப்போலேயிருக்கநோக்கி, என்னை உரிகூறை கோண்டு போனுன். சோலவோன்றும் சேயலோன்றுமாயிருந்தது; † "தூதுசேய்கண்கள் கோண் டோன்றுபேசி" என்னக்கடவதிறே. [என்னைநிறைகோண்டான்] - அவனுடைய புரு ஷோத்தமத்வத்துக்குப் புண்டரீகாக்ஷத்வம் எல்லையாயிருக்குமாபோலே யாயிற்று இவள் ஸ்த்ரீத்வத்துக்கு நிறை எல்லையாயிருக்கும்படி. அவன் புருஷோத்தமனுனுற்போலே

ப்ராப்தியுண்டென்றபடி. இப்படிசொல்லுகிறதின் கருத்தை அருளிச்செய்கிறுர் - பழியென்று இத் யாதி. விவரணமாதல். "க்ஷமம் வயஸோ ரூபे ஹ்ருத்யே ஸௌஹ்ருதம் து:கம் ஸுக ஸுக நௌ । ஸுக்ரீவோ ராகவம் வாக்யம் இத்யாவாச ப்ருஹ்ருஷ்டவத்" இதி கிஷ்கிந்தா காண்டே பஞ்சமே. "என்செய்ய தாமரைக்கண்ண னென்னைநிறைகொண்டான்" என்றதுக்கு - "நான் என்னுடையவன்" என்கிற ஆகாரம் தோற்றும்படி கண்ணலே குளிரநோக்கி என்னை ஸர்வஸ்வாபஹாரம் பண்ணினுனென்றர்த்தம் விவக்ஷித்து அருளிச்செய்கிறுர்-என்னுடைய இத்யாதி. இந்தவர்த்தத்தில், "நிறை" என்கிறது - நிறையவென்ருய், எல்லாவற்றையுமென்றபடி. என்செய்ய தாமரைக்கண்ணன் - என்னுடைய செய்யதாமரைக்கண்ணன். "செய்யதாமரைக்கண்ணன்" என் றது - இப்போது, வாத்ஸல்யகுணபரம். இத்தால் - "நான் உன்னுடையவனன்றோ" என்று அவன் கண்ணலே யறிவித்தமையைக் கொண்டு - என் என்கிறு னென்றபடி. குதறி - உல்பணமாய். கீழ்வாக்யவிவரணம் - எனக்கு இத்யாதி. இருக்கநோக்கி - இருக்கும்படி நோக்கி. உரிகூறை கோண்டு-கூறையையுரிந்துகொண்டு. கூறை-புடவை. இத்தால் அவன் தௌராத்ம்யத்தை பலிப்பிக் கிறுர் - சோலவோன்றும் இத்யாதி. கண்ணலேநோக்கின வித்தனையன்றோ, சொன்னுனேபின்னை யென்ன - தூதுசேய் இத்யாதி. தூதக்ருத்யத்தைப்பண்ணுகிற கண்களைக் கொண்டு ஸ்வாபிப்ரா யத்தை ஸ்பஷ்டமாகச்சொல்லி யித்பர்த்தः. "நிறை" என்றது - ஸாகல்யவாசியென்றும், "செய்ய தாமரைக்கண்ணன்" என்றது - வாத்ஸல்யகுணபரமென்றும் அருளிச்செய்து; "செய்யதாமரைக் கண்ணன்" என்றது - பரத்வபரம் என்று அர்த்தாந்தரம் விவக்ஷித்து, அத்தையே த்ருஷ்டாந்தமாக்கி, "நிறை" என்றதுக்கு - அடக்கமென்று அர்த்தாந்தரம் அருளிச்செய்வதாகத் திருவுள்ளம்பற்றி புநःப்ர தீகக்ரஹணம் - என்னைநிறைகோண்டான் என்று. அத்தையுபபாதிக்கிறுர் - அவனுடைய இத்யாதி. இத்தால் - இவ்விலக்ஷணவஸ்துவை யபஹரிக்கிறுனுகையாலே, தன் வைலக்ஷண்யத்தைக் காட்டி அபஹரித்தா னென்று கருத்து. இப்போது, "என்" என்றது - செய்யதாமரைக்கண்ணனுன ஆகா ரத்தை எனக்குக்காட்டி யென்றபடி. கீழ்வாக்யவிவரணம் - அவன் இத்யாதி. ஆக, 'என்' என்ற துக்கு - என்னுடையவென்றும், எனக்கென்றும்; "செய்யதாமரைக்கண்ணன்" என்றது - வாத் ஸல்யகுணபரமென்றும், பரத்வபரமென்றும்; "நிறை" என்றதுக்கு - ஸமஸ்தமுமென்றும், அடக்க மென்றும் அர்த்தத்வயம் கண்டுகொள்வது. விஶ்லேஷித்து நோவுபடுகிற ஸமயத்திலே "என்" என் றது; அவன் கலந்தபோது "நான் உன்சரக்கன்றோ" என்று கண்வழியாலே சொன்னதுகொண்டு,

---

† திருவாய்மொழி - க, க, க.

யாயிற்று, இவள் நாரீணாமுத்தமையாயிருக்கும்படி. [என்] - பிரிவோடேயிருந்து மடலூர்ந்து பழிவிளையாநிற்கச்செய்தேயும் "என்னுடையவன்" என்னலாம்படிகாணும் அவன் கிட்டினு லிருக்கும்படி. [என்னைநிறைகொண்டான்] - "நூறுயிரம் புருஷோத்தமர்கள் கூடினுலும் தோற்றுப்போமிதுக்கு மேற்படச் செய்யலாவதில்லை" என்றுயிற்று இவளுடைய ஸ்த்ரீத்வாபிமாநந்தா னிருப்பது. [என்செய்ய தாமரைக்கண்ண னென்னை நிறைகொண் டான்] - தன்னுடைய பும்ஸ்த்வத்தையடைய அழியமாறி என்னுடைய ஸ்த்ரீத்வத்தைக் கொண்டான். தான்தோற்றுப்போலேகாணும் இவளைத் தோற்பித்தது. [என்னை நிறை கொண்டான்] - கடலைத் தறைகண்டான். "என்னைநிறைகொண்டான்" என்று இவள் தான் தோழிக்குச்சொல்லும்படியிறே பண்ணிற்று. தோழிதானும் இவள்வடிவிலே வேறு பாடுகொண்டு "உற்றநன்னோயிதுதேறினோம்" என்று இவள் அகப்பட்டபடி யறியுமத்தனை போக்கி, இவள்தான் தோழிக்கும் வாய்விட்டுச்சொல்லாதபடியிறே ஸ்த்ரீத்வந்தா னிருப் பது. "நைவமாகிஞ்சிதப்ரவீத்" (நைவமாகிஞ்சிதப்ரவீத்) என்னக்கடவதிறே. [நிறைகொண்டான்] - நிறையாகிறது - அடக்கம். அகவாயிலோடுகிறவிது பிறர்க்குத்தெரி யாதபடி மறைத்துக்கொண் டிருக்கையிறே. நான் எனக்கு ஓடுகிற தசையை உனக்கு

ப்ர:—(நைவமாகிஞ்சிதப்ரவீத் என்னக்கடவதிறே) — ஸ்ரீமதயோத்யா காண்டே, [௫௮] தஶரதம் ப்ரதி ஸுமந்த்ர:, "ஜாநகீ து மஹாராஜ நிஶ்வஸந்தீ மநஸ்விநீ। பூதோபஹதசித்தேவ விஷ்டிதா விஸ்ம்ருதா ஸ்திதா॥௩௪॥ அப்ரத்ருஷ்டவ்யஸநா ராஜபுத்ரீ யஶஸ்விநீ। தேந து:கேந ருததீ நைவ மா கிஞ்சிதப்ரவீத்॥௩௫॥".

"என்" என்கிருளென்று - கீழே அருளிச்செய்து; அங்ஙனன்றிக்கே, அவன் கிட்டினபோது தாழ நின்று பரிமாறினமையைப்பற்றச் சொல்லுகிருளென்று தாத்பர்யாந்தரம் - பிரிவோடே இத்யாதி. ஸாமாந்யேந "நிறைகொண்டான்" என்றுலும் - தன்னுடைய நிறைகொண்டமை ஸித்திக்குமா யிருக்க, "என்னை" என்று விஶேஷித்து ஊன்றிச்சொன்னதுக்கு பாவம்-நூறுயிரம்இத்யாதி. இத்தால் - அவனுடைய பும்ஸ்த்வத்தையும் அதிக்ரமித்திருக்கும் இவளுடைய ஸ்த்ரீத்வமென்று கருத்து. இப் படி அதிக்ரமித்திருக்குமாகில், நிறைகொள்ளக்கூடுமோவென்ன; கீழிற்பதத்தையும்கூட்டிபாவம்- தன்னுடைய இத்யாதி. அதாவது - எனக்குத்தாழநின்று நிறைகொண்டானென்று கருத்து. அழிய மாறி-அழித்து. விவரணம்-தான் இத்யாதி. தோற்றுப்போலேயென்றது - "ஆத்மாத்மீயங்கள் நீயிட்ட வழக்கு" என்றத்தைப்பற்ற. "நூறுயிரம்" இத்யாதிவாக்யவிவரணம்-கடலை இத்யாதி. து:காதிஶயத் தாலே இப்படி சொல்லவுங்கூடுமே, இது வாஸ்தவமென்று இவளறியும்படி எப்படியென்ன - என்னை நிறைகொண்டானென்று இத்யாதி. இத்தால்-எத்தனை யாற்றுமையுண்டானுலும் இவ்வார்த்தை சொல் லாத இவள் சொன்னபோதே, இது வாஸ்தவமென்று கருத்து. ஆனுல்-இதுக்குமுன்பு தோழிக்குத் தன் தசைசொல்லாளோவென்ன - தோழிதானும் இத்யாதி. உற்றநன்னோய் இத்யாதி-உள்ளூறப்பெற்ற ஶ்லாக்யமான நோய்இது என்று அறுதியிட்டோ மித்யர்த்த:. அப்படி அந்தரங்கர்க்கும் வாய்விட்டுச்சொல் லாதபடிபண்ணுமோ ஸ்த்ரீத்வமென்ன-நைவமாகிஞ்சித் இத்யாதி. "அப்ரத்ருஷ்டவ்யஸநா ராஜபுத்ரீ யஶஸ்விநீ। தேந து:கேந ருததீ நைவ மா கிஞ்சிதப்ரவீத்" இத்ய யோத்யாகாண்டே தஶரதம்ப்ரதி ஸுமந்த்ர:. ஸ்த்ரீத்வமென்றதுக்கு ஶப்தநிர்வாஹம் - நிறையாகிறது அடக்கம் இத்யாதி. "என்னைநிறைகொண்டானென்று" இத்யாதி வாக்யவிவரணம் - நான் எனக்கு

வாய்விட்டுச் சொல்லும்படியன்றே பண்ணிற்று. "நிறைகொண்டான்" என்கிற இதினுடைய வ்யாக்யாநமாயிருக்கிறது - மேல். உன்னை அவன் கொண்டதுதானேதென்ன, "நிறைகொண்டான்" என்கிற சொல்லுக்குள் அடங்கினவைதன்னை எண்ணுகிருள். [முன்செய்யமாமையிழந்து மேனிமெலிவெய்தி என் செய்யவாயும் கருங்கண்ணும் பயப்பூர்ந்த - என்செய்யு மூரவர்கவ்வை தோழி இனிநம்மை] - நீ "மடலூருவேன்" என்கிற வாயைப் புதைத்தால், என்வடிவு மடலெடுக்கிறவித்தை என்கொண்டு மறைப்பாய்? [முன் இத்யாதி] - இதுக்குமூன்றுபடியாக அருளிச்செய்தருளுவர்,—தன்பக்கல் கைவைப்பதற்குமுன்னே - பிறந்தபோதே உண்டான நிறத்தையிழந்தேன்னுதல்; அன்றிக்கே, அல்லாத இழவுகளுக்கு முன்னே நிறத்தையிழந்தேன்னுதல்; முன்பு தோற்றினவற்றைப் பறித்துக்கொண்டு, பின்பிறே கிழிச்சீரை யறுத்துக்கொள்வது; அவன்தானும் முந்துறவிரும்பிற்று இந்நிறத்தைக்காணும்; அங்ஙனன்றிக்கே, முன்னே - காணக்காண நிறத்தை இழந்தேன்னுதல். [செய்யமாமை] - "செய்யமாமை" என்றும் சொல்லாநின்றது, "மணிமாமை" என்றுஞ் சொல்லாநின்றது; இரண்டாலும் - சிவப்பும், கறுப்புமல்ல இங்குச்சொல்லுகிறது; இரண்டிலுமொக்க வேறின ப்ரயோஜநம் - ஸ்ப்ருஹணீயதையாயிற்று. [இழந்து] - அவனோடு கலந்துபெற்ற நிறத்தைத் தநமாக நினைத்திருந்தபடியாலே - இழந்தேன்கிருள். [மேனி மெலிவெய்தி] - இனி அவன்வந்தாலும் நிறம்வந்தாலும் தோங்குகைக்கு ஆஶ்ரயமில்லை; ஆஶ்ரயமுண்டாளுலிறே தோங்குவது. நீர்ப்பண்டம்போலே காணக்காணச் சருகாகாநின்றதாயிற்று. [என்செய்யவாய் இத்யாதி] - அவயவியாகத் தேடுகிறேனே, அவயவங்கள்தோறும் வற்றிவருகிறபடி பாராயோ? [என்செய்யவாயும்கருங்கண்ணும்] - இப்போது தன்னுடைய அவயவங்களைத் தானே ப்ரஶம்ஸிக்கிருளல்லள்; அவன்வந்து கிட்டின

இத்யாதி. "நிறை" என்றதில், முந்தின அர்த்தத்திலே நோக்காக உத்தரபதாவதாரிகை - நிறைகோண்டானென்கிற இதினுடைய இத்யாதி. மற்றைப்பக்ஷத்தில், அடக்கம் போனபோதே யல்லாதவையும் போயிற்றென்கிருளென்று உத்தரபதஸங்கதி யாகக்கடவது. வ்யாக்யாநமாயிருக்கிறது - "ஸாவஸ்வாபஹாரம் பண்ணிக்கொண்டுபோனான்" என்றதின் வ்யாக்யாநமாயிருக்கிறதென்றபடி. உத்தரப்ரத்யுத்தரரூபேண இவ்வாக்யவிவரணம - உன்னையவன் இத்யாதி. இப்படி அந்வயித்ததுக்கு பாவமாதல், "மாமை" இத்யாதிக்கெல்லாம் பாவமாதல் - நீமடலூருவேனென்கிற இத்யாதி. புதைத்தால்-மூடினுல். இதுக்கு-"முன்" என்றதுக்கு. மூன்றுபடியாவது - அவனோடே கலப்பதற்கு முன்னேயென்னுதல், மேனிமெலிவெய்துகை தொடக்கமான இழவுகளுக்கு முன்னேயென்னுதல, காணக்காணவென்னுதல் என்று. முன்-முன்னே. மேனிமெலிவெய்துகை தொடக்கமான இழவுகளுக்கு முன்னே, நிறமிழக்கைக்கு ஹேதுவேதென்ன - முன்புதோற்றின இத்யாதி. கிழிச்சீரை - சாளிகை. ஹேத்வந்தரம் - அவன்தானும் இத்யாதி. அதாவது - தான் முந்தற விரும்பினதாகையாலே முற்படஅபஹரித்தானென்றபடி. அவன் முந்தற நிறத்தை விரும்புகையாலேயன்றே, அவனுக்கு உறுப்பல்லாத ஆத்மாத்மீயங்களை வேண்டாவென்கிற - ஏருளும்மறையோனிலே, முந்தற "மணிமாமைகுறைவிலம்" என்றது. இது இருபத்துநாலாயிரத்திலே வ்யக்தம். ஏருளும்மறையோனிலே மணிமாமையென்றும் சொல்லாநின்றது, இது வ்யாஹதமன்றோவென்னில் என்று ஶங்காவாக்யத்தைப் பூரித்துக்கொள்வது. இங்கு - இவ்வோவிடங்களிலே. போய்என்னுதே, "இழந்து" என்றதுக்கு பாவம்-அவனோடு இத்யாதி. அவன்வந்தாலும் நிறம்வந்தாலும் என்றதுக்கு பாவம் - அவன்வந்தால் நிறம்வருமே, அந்தநிறத்துக்கு ஆஶ்ரயமில்லையென்றபடி. "முன் - மேனிமெலிவெய்தி" என்று, முன் என்கிறபதத்தை இங்கேயுங் கூட்டிபாவம்-நீர்ப்பண்டம் இத்யாதி. நீர்ப்பண்டம் - ஜலமயபதார்த்தம். அவயவியாக - ஶரீரியாக. "செய்யவாயும் கருங்கண்ணும்" என்று விஶேஷணமிட்டு - தன் அவயவங்களை தானே வர்ணிக்கலாமோ வென்ன - இப்போது இத்யாதி. அவனுடைய ஸ்ரீஸஹஸ்ரநாமத்துக்

போது அவனுடைய ஸ்ரீஸஹஸ்ரநாமத்துக்கு விஷயம் இவையேயாயிற்று. அத்தைச் செவியாலே கேட்டிருக்குமே, அத்தாலேசொல்லுகிறாள். தான் இழந்தக்ரமம் சொல்லாநிற்கச் செய்தே, அவன் உகந்தக்ரமம் தோற்றாநின்றதுகாணுமிவளுக்கு. [என் இத்யாதி] - அவன் தனக்கு இத்தை ஸர்வஸ்வமுமாக நினைத்திருந்தபடியாலே, இவளும் "உன்னது என்னது" என்று ஒருதலை பற்றுகிறாள். ஸ்வஸ்வரூபமும் ப்ராப்யாந்தர்க்கதமாயிறே உத்தேஸ்யமாவது. இங்ஙனன்றாகில், "த்வ்யக்ஷரஸ்து பவேந் ம்ருத்யு:" (த்வ்யக்ஷரஸ்துபவேந்ம்ருத்யு:) என்கிற வழியாலே பற்றுகிறாளன்றே. [என்செய்யவாயும்கருங்கண்ணும் பயப்பூர்ந்த] - அவனுடைய வாய்ப்புகுசோறு பறியுண்ணாநின்றதேன்கிறாள். † "செங்கனி வாய்நுகர்ந்தான்", ‡ "மணநோக்கமுண்டான்" என்னக்கடவதிறே. [செய்யவாயும் கருங்கண்ணும் பயப்பூர்ந்த] - கடலும்மலையும் குடியிருப்புமான விடமெல்லாம் ப்ரளயகாலத்தில் ஏகோதகமாமாபோலே, எங்குமொக்க வைவர்ண்யமேயாயிற்று. ஒருவெளுப்பாயிற்று. விஷம்பரந்தாற்போலே காணக்காண வண்டலிட்டு வைவர்ண்யமானது பரப்புமாறிற்று. (௩)

ப்ர:—(இங்ஙனன்றாகில், 'த்வ்யக்ஷரஸ்து பவேந் ம்ருத்யு:' என்கிறவழியாலே பற்றுகிறாளன்றே)—ஸமர்த்யதே, "த்வ்யக்ஷரஸ்து பவேந் ம்ருத்யுஸ் த்ர்யக்ஷரம் ப்ரஹ்மண: பதம் । மமேதி த்வ்யக்ஷரோ ம்ருத்யுர் ந மமேதி ச சாஸ்வதம் ॥.

கென்றது - அவன்பண்ணும் ஸ்தோத்ரத்துக்கென்றபடி. விஷயமென்று அறியும்படி எப்படியென்ன- **அத்தைச்செவியாலே** *இத்யாதி. "செய்யமாமை, செய்யவாயும், கருங்கண்ணும்" என்கிறவர்ணனையால் பலித்தவர்த்தம் -* **தான் இழந்த** *இத்யாதி. தானிழந்தக்ரமமாவது - மாமை, மேனி, செய்யவாய், கண், இவற்றை யிழந்தக்ரமம். "என்" என்று - மமகாரந்தோற்றச் சொல்லலாமோவென்ன -* **அவன் தனக்கு** *இத்யாதி. இத்தை - அவயவத்தை. ஸர்வஸ்வமுமாக நினைத்திருந்தபடியாலே யென்றது - "செங்கனிவாய்நுகர்ந்தானை" "மணநோக்கமுண்டான்" என்றத்தைப்பற்ற.* **உன்னதென்னதென்று**- *உன்னதாகையாலே என்னது என்று. ஒருதலை - ததீயத்வாகாரம். இதுக்கு ஸ்வாபதேஸம் -* **ஸ்வஸ்வரூபமும்** *இத்யாதி.* **ப்ராப்யாந்தர்க்கதமாயிறே** *- ப்ராப்யபூதனுக்கு உபயுக்தமாயிறே. ஸ்வஸ்வரூபமும் இத்யாதிவாக்யத்துக்குத் தாத்பர்யம்-ப்ராப்யபூதனான ஈஸ்வரனுடைய "மதீயம்" என்கிற அபிமாநாந்தர்ப்பூதமான வழியாலேயன்றோ ஆத்மஸ்வரூபந்தானும் "ஸ்வநாஸ்மை" இத்யாதிப்படியே ப்ராப்யமாயிற்று; ஆகையாலே, ஆத்மதர்மமான ஜ்ஞாநபக்த்யாதிகளும் அவனுக்கு உறுப்பான வழியாலேயன்றோ ஆதரிக்க ப்ராப்தமென்று. 'த்வ்யக்ஷரஸ்து பவேந் ம்ருத்யுஸ் த்ர்யக்ஷரம் ப்ரஹ்மண: பதம் । மமேதி த்வ்யக்ஷரோ ம்ருத்யுர் ந மமேதி ச சாஸ்வதம்' இதி பகவச்சாஸ்த்ரே. அல்லாத அவயவங்களுக்கும் வைவர்ண்யமொத்திருக்க, கண்ணையும் வாயையும் விஸேஷிக்கிறதுக்குக் கருத்தென்னென்ன-* **அவனுடைய** *இத்யாதி. "வாய்ப்புகுசோறு" என்றதுக்கு ப்ரமாணம்-* **செங்கனிவாய்** *இத்யாதி. சிவந்த கனிபோன்ற வாயைபுஜித்தவனை யித்யர்த்த:.* **மணநோக்கமுண்டானே** *- பிராட்டியுடைய அழகிய நோக்கை தாரகமாகவுடையவனே யித்யர்த்த:. † முந்தினபாசுரம், திருமொழி மூன்றாம்பத்து ஏழாந் திருமொழி இரண்டாம்பாட்டு, "பண்டிவன்" இத்யாதி. ‡ பிந்தினபாசுரமும், எட்டாம்பத்து பத்தாந் திருமொழி முதற்பாட்டு, "வண்டார்" இத்யாதி. "முன்செய்யமாமை" இத்யாதியையுங் கூட்டி பாவம்-* **கடலும்** *இத்யாதி. "பயப்பு" என்றத்தைப்பற்ற -* **ஒருவெளுப்பாயிற்று** *என்றது. வெளுப்பாயிற்றென்றது - வெள்ளமாயிற்றென்று சாடு, வெளுத்ததென்று ஸஹஜார்த்தம். "ஊர்ந்த" என்றதுக்கு பாவம் -* **விஷம்** *இத்யாதி.* **பறப்புமாறிற்று** *- இடமில்லாதபடி பரம்பிற்று. அந்வய: பூர்வமேவோக்த:.* (௨)

மூன்றாம் பாட்டு.

ஊர்ந்தசகடம் உதைத்தபாதத்தன்பேய்முலை
சார்ந்துசுவைத்தசெவ்வாயன் என்னைநிறைகொண்டான்
பேர்ந்தும்பெயர்ந்தும் அவனோடன்றியோர்சொல்லிலேன்
தீர்ந்தவென்தோழி என்செய்யுமூரவர்கவ்வையே?

ஆ.— (ஊர்ந்தசகடம்.) "ஆகிலும் மடலூருகை நமக்குப் போராது" என்று தோழிசொல்ல,—தன்னுடைய அதிதைவாதிமாநுஷ திவ்யசேஷ்டிதங்களாலும் அழகாலும் என்னை நிறைகொண்டான்; ஆனபின்பு, பேர்ந்தும் பெயர்ந்தும் அவன் திறமல்லது மற்றேதேனும் சொல்லிலும் கேளேன். நான் ஏதேனுமொன்றைச் சொன்னால் அத்தைச் செய்கையிலே எனக்கு முற்படவே துணிந்திருக்கக்கடவ நீ என்னை ப்ரதிபந்திக்கலாமோ? நீ ப்ரதிபந்திக்கிறது "ஊரவர் நம்மைப்பழிசொல்லுவர்" என்றிறே, அதுதத்குணபராஜிதரான நம்மைச்செய்வதென்? என்கிறாள்.

ஒ.— மூன்றாம்பாட்டில், ஏதேனும் சிலவற்றாலே போதுபோக்கி யிருக்குமத்தனையல்லது அஸத்ருஶங்களிலே ப்ரவர்த்தித்தால் நாடு பழிசொல்லாதோ? என்ன,— 'எனக்கு அவனாலல்லது செல்லாது, நாட்டார் சொல்லும் பழி என்னை எத்தைச் செய்வது?' என்கிறாள்.

[பேய்முலை என்று தொடங்கி] - யசோதைப்பிராட்டி முலையிலே அணையுமாபோலே அணைந்து பேய்முலையைச் சுவைப்பதும் செய்து தாய் முகத்தில் சிரிக்குமாபோலே முறுவல் செய்கையாலே சிவந்த திருப்பவளத்தையுடையவன் இச்சேஷ்டிதங்களாலே என்னை நிறைகொண்டான். [பேர்ந்தும் என்று தொடங்கி] - போயும் வந்தும் அவன்திறமான சொல்லாலல்லது போது போக்குகைக்கு வேறொரு சொல் உடையேனல்லேன். 'தீர்ந்த' என்றதுக்குக் கருத்து - அந்தரங்கையான நீயே நிஷேதிக்கக்கடவையோ? என்று.

ப.— அநந்தரம், அவனுடைய விரோதிநிவர்த்தகமான அதிபாலசேஷ்டிதத்திலே அகப்பட்ட என்னை ஊரார் அலர் என்செய்யுமென்கிறாள்.

ஊர்ந்த - நலியநினைந்துஊர்ந்துவந்த, சகடம் - சகடத்தை, உதைத்த - (ஸ்தந்யார்த்தியாயழுதுநிமிர்ந்த அங்கபரவ்யாபாரத்தாலே முறிந்துவிழும்படி) உதைத்த, பாதத்தன் - திருவடிகளையுடையவனாய், (அதுபக்வதசையாம்படி அதிஶைஶவாவஸ்தையிலே), பேய்முலை - பேய்முலையை, சார்ந்து - (தாய்முலையோபாதி நெஞ்சு பொருந்திச்) செறிந்து, சுவைத்த - (ப்ராணஸஹிதமாகப் பசையற) உண்ட, செம் - சிவந்த, வாயன் - திருப்பவளத்தையுடையவன், (இப்பருவம்நிரம்பாச்செயலாலே), என் - என், நிறையை - நிரப்பத்தை, கொண்டான்-அபஹரித்தான்; (ஆகையாலே), பேர்ந்தும் பெயர்ந்தும் - மீண்டும் மீண்டும், அவனோடன்றி - அவனோடுசேர்ந்ததன்றி, ஓர் - வேறொரு, சொல் - வார்த்தையை, இலேன் - உடையேனல்லேன், என் - என்னோடொருநெஞ்சாம்படி, தீர்ந்த - அறுதியுடைய, தோழி-தோழீ, ஊரவர் - ஊரவருடைய, கவ்வை-அலர், என்-எத்தை,

செய்யும் - செய்யும்? அவன்கொண்டநிறையை மீளஅழைக்குமோ, அவனையொழிய வேறே சிலரை நான்பெற்றிடப்பண்ணுமோ வென்று கருத்து.

இ.—மூன்றாம்பாட்டில், ஏதேனுமொரு லோகயாத்ரையாலே போது போக்கி யிருக்கவன்றோ அடுப்பது என்ன,—அவனுலல்லது எனக்குச் செல்லாதான பின்பு அவ்வெல்லைகழிந்தே னென்கிறாள்.

[ஊர்ந்த இத்யாதி]-பூதனை விஷயமாகவும் சகடாஸுரன் விஷயமாகவும் பண்ணின சேஷ்டிதங்களாலே, அவர்கள் நிரஸநமென்று ஒரு வ்யாஜத்தையிட்டு என்னுடைய ஸ்த்ரீத்வத்தை யிழந்தேனென்கிறாள். பருவம் நிரம்பி ப்ராணயத்திலே தேஶிகனுய்ச் செய்தவையொழிய, பாலசேஷ்டிதங்களும் தனக்காகச் செய்தானென்றிருக்கிறாள்; "அவதரித்தது தனக்கு" என்றிருக்கையாலும், ஸ்நேஹம் ஸத்தாப்ரயுக்தமாகை யாலும். ஊர் சகடமன்று, ஊர்ந்த சகடம். அது செய்ததெல்லாம் செய்தற்றது, இவன் மௌக்த்யத்தாலே யகப்பட்டான், திருவடிகளினுடைய அவதாரத்தாலே பிழைத்தானித்தனை. தாயார் ரக்ஷகமாக நிறுத்தின சகடம், பாடிகாப்பாரே களவுகாணுமா போலேயிறே நலிந்தது. [உதைத்த பாதத்தன்] - "ஸ்தந்யார்த்தீ ப்ரரோத ஹ" என்று, முலையை நினைத்துச் சீறித் திருவடிகளை நிமிர்த்தான், மேல் விழுந்த சகடம் துகளாய்ப் போயிற்று. "இது பக்வதசை" என்னும்படியிறே பூதனநிரஸநதசை. [பேய் முலை இத்யாதி] - யசோதைப்பிராட்டிமடியிலேயணைந்து முலைக்கீழே முழுகிறாற்போலே யாயிற்று முலையுண்டது. [சுவைத்த] - "ப்ராணைஸ்ஸஹ ஸ்தநம் பபௌ" என்னுமாபோலே உயிரும் முலையிலே சுரக்கும்படியாயிற்று முலையுண்டது. [செவ்வாயன்]-பிள்ளைகள் தாய் முகத்திலே சிரிக்குமாபோலே ஸ்மிதம்பண்ணின திருவதரத்தில் பழுப்பையுடையவன். [என்னை நிறைகொண்டான்]-ஒரு செயலாலே இரண்டு ஸ்த்ரீ வதம் பண்ணினுன். ஆசைப் பட்டாரில் உகவாதாரதே நன்றாயிற்றுகாணும்; அவளை நற்கொலையாகக்கொன்றான், என்னை உயிர்க்கொலையாகக் கொன்றான். நிறை - நிறைவு, அடக்கம் - ஸ்த்ரீத்வம். நிருபகமான ஸ்த்ரீத்வம் போனால் நிரூப்யமுண்டோ? என்கை. அவன் அப்படிச் செய்தால் லோக யாத்ரையோடே போதுபோக்கினாலோ என்ன, [பேர்ந்தும் இத்யாதி] - போயும் வந்தும் அவன் திறமான சொற்களாலல்லது வேறு போதுபோக்குகைக்குச் சொல்லுடையே னல்லேன். "அவனை நினை, அவனைமற," என்று சொல்லுகிற வித்தனையிறே. இத்தையிறே * ஏதுசெய்தால் மறக்கேன் என்கிறது. "நாம் இவ்விஷயத்தில் மூட்டப்படும் பாடும் நம் மாலும் மீட்கவொண்ணாதபடி ப்ரவணையாவதே!" என்று ப்ரீதையானாள். [தீர்ந்தவென் தோழி] - அந்தரங்கையான நீ, நிஷேதிக்கக் கடவையோ? "அதிற்குறையுண்டோ ஊரார் பழிக்கு அஞ்சியன்றோ நான் விலக்குகிறது" என்ன, ஊரார் பழிகொண்டு கார்யமென்? உன்னெஞ்சில் குறையில்லாமையேயன்றோ எனக்கு வேண்டுவதென்கிறாள்.

ஈடு.—மூன்றாம்பாட்டு. "என்செய்யுமூரவர்கவ்வை" என்றாள்; "எல்லாம்செய்

மூன்றாம்பாட்டு - ஊர்ந்தசகடம் இத்யாதி. கீழிற்பாட்டிலே - பழிபரிஹரிக்குமெல்லை கடந்ததென்று சொல்லியிருக்க, இப்பாட்டிலே மீளவும் "என்செய்யு மூரவர்கவ்வை" என்றதுக்கும்; மடலூருகிற ஸமயத்திலே பழிசொல்லவேண்டி யிருக்க, அவன் பண்ணினவுபகாரம் முதலானவற்றைச் சொல்லுகிறதுக்கும் அநுகுணமாக அவதாரிகை - என்செய்யுமூரவர்கவ்வை என்றாள் இத்யாதி. என்றாள் என்றவநந்தரம், கீழே, மீளவுமிப்பாட்டிலே " என்செய்யுமூரவர்கவ்வை " என்று சொல்லு

தாலும் பழி பரிஹரிக்கவேண்டாவோ'' என்றிருக்குமிறே இவள்; ''இதுபழி'' என்று பரிஹரிக்க வோண்ணாதபடி எனக்கு ப்ராவண்யத்தை விளைத்தவனெங்குத்தான், '' இதுபழி '' என்று மீளாதபடி இவ்விஷயத்திலே ப்ரவணையாயிருக்கிற நான் எவ்வளவிலே நிற்கிறேன், '' இது பழி '' என்று சோல்லுவர்கள்தான் எவ்வளவிலே நிற்கிறார்கள், அவர்கள் சோல்லுகிறத் தைச் சோல்லுகிற தோழியான நீதான் எவ்வளவிலே நிற்கிறு யென்கிறாள்.

[ஊர்ந்தசகடமுதைத்த பாதத்தன்] - இதுக்கு முன்பெல்லாம்; ஶகடாஸுர நிரஸநம்பண்ணினதும், பூதநா ஸ்தந்யபாநம் பண்ணி அவளை நிரஸித்ததும், '' கம்ஸன் வர விட்டவற்றைப் போக்கினது '' என்றிருந்தாள் அவள்; '' எனக்குத் தன்பக்கலிலே ப்ராவண் யத்தை விளைக்கைக்காகச் செய்தான் '' என்றிருக்கிறாளாயிற்று இவள். பருவம்நிரம்பிப் ப்ர ணயியாய் அதில் தேசிகனானபின்பு செய்தவையன்றோ இவளுக்குத் தன்பக்கலிலே ப்ரா வண்யம் மிகுகைக்குச் செய்தவையாவது, பால்யத்திலே செய்தவை இவளுக்கு உடலாம் படி யெங்ஙனே? என்னில்,—இவளுக்குத் தன்பக்கல் ப்ராவண்யத்தை விளைக்கை அவ னுக்கு ஸத்தாப்ரயுக்தமென்கை. * ''எந்நின்றயோனியுமாய்ப்பிறந்தாய்'' என்று - அவற்றை யொழியவேயும் பின்பு பண்ணின வ்யாபாரங்களுமெல்லாம் தனக்காகப்பண்ணினான் என் றிருக்கிறாளாயிற்று. [ஊர்ந்தசகடம்] - ஊருகிற ஶகடமல்ல; அது செய்வதெல்லாம் செய் தற்றது, இவன் ஜீவநாத்ருஷ்டத்தாலே தப்பினவித்தனை. இரண்டு ஶகடத்தை இரண்

வானென்னென்ன என்று அத்யாஹரிப்பது. பரிஹரிக்கிறார் - எல்லாம்செய்தாலும் இத்யாதி.
எல்லாம் செய்தாலும் - எத்தனை ஆற்றாமைபட்டாலும். இவள்-தோழி. பழிக்கிறஸமயத்திலே உப
காரங்களைச் சொல்லுகிறதுக்கு விரோதமில்லை. ப்ரத்யக தன்னிடத்திலே அத்யந்த ப்ராவண்யத்தை
ஜநிப்பிக்கிறதிலே ஹேதுக்களென்கிறார் - இதுபழியென்று இத்யாதி. இது - '' ஊர்ந்தசகடம் '' இத்
யாதியைப் பற்ற அவனெங்குத்தான் - அவன் எத்தனை உபகாரங்களைப் பண்ணினான். '' பேர்ந்தும்
பெயர்ந்தும் '' இத்யாதியைப்பற்ற - இதுபழியென்று மீளாதபடி இத்யாதி. நான் எவ்வளவிலே நிற்
கிறேனென்றது - ஊரார்பழி புகழாமெல்லையிலே நிற்கிற என் நிலை எது என்றபடி. '' ஊரவர் ''
என்றத்தைப்பற்ற - இதுபழியென்று இத்யாதி. எவ்வளவிலே நிற்கிறார்கள் என்றது - பகவத்
விஷயாவகாஹநத்தையே '' தோஷம் '' என்று சொல்லுகிறவர்கள் நிற்கிற நிலை எது என்றபடி.
''தீர்ந்தவென்தோழி'' என்றத்தைப்பற்ற - அவர்கள் இத்யாதி. நீதான் எவ்வளவிலே நிற்கிறு யென்
றது - ஸமாநஸுகதுக்கையான உன்னிலை எது என்றபடி.

'' ஊர்ந்த'' என்றுதொடங்கி - அவன் வ்யாபாரங்களைச் சொல்லி, ''என்னை நிறைகொண்
டான்'' என்றதுக்கு பாவம் - இதுக்குமுன்பெல்லாம் இத்யாதி. இவள் இவ்வ்யாபாரங்களை ''ஸ்வார்
த்தம்'' என்றபோதே - தோழிஇதுக்கு ஹேது அந்யதாவாக நினைத்திருந்தமை அர்த்தாத்ஸித்தம். இது
க்கு முன்பெல்லாம் - நாயகி ஸ்வார்த்தமாகச் சொன்னதுக்கு முன்னெல்லாம். அவள்-தோழி. சட
ஸ்த்தஶங்கையை யநுவதித்துப் பரிஹரிக்கிறார் - பருவம் இத்யாதி. இவளுக்குத் தன்பக்கல் இத்யாதி
வாக்யத்துக்கு - அவன் தன் ஸத்தையை நோக்கித் தந்ததே ஹேதுவாக ப்ரவணையாகிறாளாகையாலே
பால்யாவஸ்த்தையில் வ்யாபாரங்களும் ப்ராவண்ய ஹேதுவாகலாமென்று கருத்து. ஸத்தாப்ரயுக்தம் -
பால்ய யௌவநாத்யவஸ்த்தைகளென்கிற வாசியின்றிக்கே ஸ்வரூபப்ரயுக்தம். பலிதம் - எந்நின்ற
இத்யாதி. அதாவது - அவதாரந்தொடங்கிப் பின்புண்டான வ்யாபாரங்களெல்லாம் ஆஶ்ரித வஶீகர
ணார்த்தமா யிருக்குமென்றபடி. அவற்றையொழியவேயும் - ஜந்மங்களை யொழியவேயும். எந்நின்ற
யோனியுமாய்ப்பிறந்தாய் - ரூபப்ரகார வ்யவஸ்திதங்களான ஸகலஜந்மங்களிலு மவதீர்ணனானவனே
இத்யர்த்தः. *திருவிருத்தம் முதற்பாட்டு, ''பொய்ந்நின்ற'' இத்யாதி. ''ஊர்ந்த'' என்ற பூதநிர்த்தேஶத்
துக்கு பாவம் - ஊருகிற இத்யாதி. புறம்பேயிருக்கிற ஶகடம் இவன் ஶயிக்கிறவுள்ளே யிருக்கைக்கு
ஹேதுவேது, அது ஊருகைக்கு ப்ரஸக்தியேது, அசேதநமானவதுதான் ஊரக்கூடுமோவென்ன -

டருகுமிழுத்து நடுவே தொட்டிலையிட்டு வளர்த்திப்போனாள் தாயார்; பாடிகாப்பாரே களவு காணுமாபோலே, காவலாக வைத்த ஶகடமே அஸுராவேஶத்தாலே ஊர்ந்துவந்ததாயிற்று. அசேதநமான ஶகடத்திலே அஸுரர்கள் ஆவேஶித்து நலிவதாக ஊர்ந்துவந்தவித்தனையிறே. [உதைத்தபாதத்தன்] - அதுவும் செய்வதெல்லாம் செய்து, இவனும் அகப்படுவதெல்லா மகப்பட்டு நின்றான்; திருவடிகளினுடைய அவதாநத்தாலே தப்பினவித்தனை. இவனை யடி காத்துத் திரிந்த வித்தனையிறே. [உதைத்தபாதத்தன்] - முலைவரவுதாழ்த்துச் சீறி நிமிர்த்த திருவடிகளுக்கு இலக்காய்த் துகளாய்ப்போன வித்தனையாயிற்று; "ஸ்தந்யார்த்தீ ப்ரருரோத ஹ" (ஸ்தந்யார்த்தீப்ரருரோதஹ). நமக்குப்புகலான திருவடிகள்தானே நம் அநிஷ்டங்களையும் போக்கித் தருமாயிற்று. ஶகடாஸுரநிரஸநம் பண்ணினவிது, பருவம் நிரம்பி கம்ஸவதம் பண்ணினத்தோடொக்கச் சொல்லலாம்படியிறே இதுக்குமுன்பே பூதனையை நிரஸித்தசெயல். ஶகடம்வந்து கிட்டினபோது சிலராலே பரிஹரிக்கலாம்; பூதனை தாய் வடிவுகொண்டுவந்து நலியப்புக்கால் பரிஹார மில்லையிறே, ஈன்றாரே நஞ்சிட்டாற்போலே யிருப்பதொன்றிறே. [பேய்முலை இத்யாதி] - பிள்ளைகள் முலையுண்ணப்புக்கால் தாய்மார் முலைக்கீழே முழுசினவாறே பால்சுரக்கும், பின்னைப் பாலையுண்டு உபகாரஸ்ம்ருதியாலே

ப்ர:—(உதைத்த பாதத்தன்)— ஸ்ரீவிஷ்ணுபுராணே, பஞ்சமேம்ஶே,

[ஸு] "கதாசிச்சகடஸ்யாத꞉ ஶயாநோ மதுஸூதந꞉ । சிக்ஷேப சரணாவூர்த்வம் ஸ்தந்யார்த்தீ ப்ரருரோத ஹ ॥க॥ தஸ்ய பாதப்ரஹாரேண ஶகடம் பரிவர்த்திதம் । வித்வஸ்தகும்பபாண்டம் தத் விபரீதம் பபாத வை ॥உ॥".

இரண்டுஶகடத்தை இத்யாதி. வளர்த்திப்போனாள் - *கண்வளர்த்திப்போனாள்.* பாடிகாப்பார் - *க்ராம ரக்ஷகர், தலையாரிகளென்றபடி. அஸுரர்கள் அதிலே யாவேஶித்து வருகைக்கு ஹேதுவேதென்ன -* அசேதநமான இத்யாதி. *"தானவவேஷத்தோடே வரில் ஆராய்ச்சிப்படும்" என்று, தெரியாதபடி இதிலே யாவேஶித்து வந்தார்களென்று கருத்து. "பாதத்தன்" என்று - பாதத்துக்கு நிரூபகத்வம் சொன்னதுக்கு ஹாவம் -* அதுவும் இத்யாதி. அடிகாத்து *என்றது - சாடு; ப்ரதிபதம்.* "உதைத்த" *என்று-வதத்கர்த்ருகமாயிருக்க, "திருவடிகளினுடைய அவதாநத்தாலே"* என்கிறபடியென்னென்ன - *முலைவரவு இத்யாதி. இத்தால்-அபுத்திபூர்வக வ்யாபாரமென்றபடி. முலைவரவுதாழ்த்துச் சீறினதுக்கு ப்ரமாணம் ஸ்தந்யார்த்தீ இத்யாதி.* "கதாசிச்சகடஸ்யாத꞉ ஶயாநோ மதுஸூதந꞉ । சிக்ஷேப சரணாவூர்த்வம் ஸ்தந்யார்த்தீ ப்ரருரோத ஹ । தஸ்ய பாதப்ரஹாரேண ஶகடம் பரிவர்த்திதம்" இதி பஞ்சமேம்ஶே. *திருவடிகள் அவனுடைய அநிஷ்டத்தைப் போக்கினமையைச் சொன்ன வித்தால் பலிதம் -* நமக்கு இத்யாதி. *நம் அநிஷ்டங்களையும் போக்கித்தரும் - நமக்கு அநிஷ்டங்களைப் போக்குகிறவனுடைய அநிஷ்டங்களைப் போக்கினவழியாலே நம் அநிஷ்டங்களையும் போக்கித் தருமென்றபடி. மேலுக்கு அவதாரிகை -* ஶகடாஸுர இத்யாதி. *யத்வா, பூதநாநிரஸநம் முந்தினதா யிருக்க, அத்தை ஶகடாஸுரநிரஸநாநந்தரம் சொல்லுவானென்னென்ன -* ஶகடாஸுர இத்யாதி *என்னுதல். அதாவது - உத்தரோத்தராதிகபாதகங்களை நிரஸித்து ஈடுபடுத்தினபடியாலே, ஶகடாபேக்ஷயா அதிக பாதகமாயிருக்கிற பூதநா நிரஸநத்தைப் பின்பு அருளிச்செய்கிறாரென்றபடி. பூதனை "அத்யந்த பாதகை" என்று தோற்றியிருக்குமளவன்றிக்கே, அவளால் வந்த பாதகத்வம் அபரிஹார்யமென்கிறார்-* ஶகடம் இத்யாதி. ஈன்றாரோ - *பெற்றவர்களே.* ஈன்றாரோ நஞ்சிட்டாற்போலே *என்கிற விடத்திலே - "விஷ்யாவிஷயாவாஸ்தஸாவேஷவிஷயாவஹா । கிம் கர்த்து꞉ ஶக்யமஸ்யாபி ஶ்ரோமராக்ஷா யாம் ஸம்ஸ்தரஸி" என்றது அநுஸந்தேயம்.* முழுசினவாறே - *முட்டினவாறே. "சார்ந்து" -* முழுசி.

முகத்தைப் பார்த்து ஸ்மிதம்பண்ணுமாயிற்று; அப்படியே அவளும் தாயாய் வந்து முலை
கொடுக்கையாலே இவனும் பிள்ளையாயே முலைக்கீழே முழுசி முலையுண்டு, உபகாரஸ்ம்ருதி
யாலே முகத்தைப்பார்த்து அதரத்தில் பழுப்புத்தோற்ற ஸ்மிதம் பண்ணியாயிற்று முலையுண்
டது. * "மழலைமென்னகையிடையிடையருளா வாயிலேமுலையிருக்கவென்முகத்தே"
என்னக்கடவதிறே. † "உயிரைவற்றவாங்கி யுண்டவாயான்" என்கிறபடியே - முலைப்
பாலோடேகூட விரங்கி உயிரையும் சுரக்கும்படியாகவாயிற்று முலையுண்டது. [என்னை
நிறைகொண்டான்] - ஒரு வ்யாபாரத்தாலே இரண்டு ஸ்த்ரீவதம் பண்ணினான். தன்னை
ஆசைப்பட்டாரில் உகவாதார்க்கே நன்றாயிற்று; அவளை நற்கொலை பாகக் கொன்றான், என்னை
உயிர்க்கொலையாகக் கொன்றான். அவனுடைய வ்யாபாரங்களிலே யொன்று குறைதல்,
நான் இழந்தவற்றிலே யொன்று குறைய இழத்தல்செய்யிலன்றோ நீ சொல்லுகிற ஹிதவசநம்
கேட்கவல்லேனாவது. ஆகில், இங்ஙனேத்த தசைகளுண்டானால் அவ்விஷயத்தை மறந்து
லோகயாத்ரையை யந்வேஷித்துப் புறம்பு ஏதேனு மொன்றைக்கொண்டு போதுபோக்கி
யிருக்கவேண்டாவோ, எல்லாம் செய்தாலும் இழக்கலாவதொன்றோ நிறையென்ன,—
[பேர்ந்தும் பெயர்ந்தும் இத்யாதி] - மறக்கையாவது ஸ்மரிக்கையிலே யொன்றாகவேணுமே
நான் ஆறியிருக்கைக்கு. ‡ "ஏது செய்தால் மறக்கேன்" என்னக்கடவதிறே; நாட்டார் அபி

பழுப்பு - சிவப்பு. ஸ்மிதம்பண்ணி யுண்டதுக்கு ப்ரமாணம் - மழலை இத்யாதி. இது * பெருமாள்
திருமொழி, ஏழாந்திருமொழி, ஏழாம்பாட்டு, "தழைகளே" இத்யாதி. மழலை இத்யாதிக்கு
அர்த்தம்-வாயிலே முலையிருக்கச்செய்தே, முலை சுரக்கும்படியாக என்முகத்திலே இடையிடை
யிலே மழலைச் சிரிப்பாகச் சிரியாவென்று. "சுவைத்த" என்றதுக்கு ப்ரமாணம்-உயிரைவற்ற இத்யாதி.
ப்ராணனைப் பாலோடொக்க வற்றும்படியாக புஜித்தவாயையுடையவன் இத்யர்த்தஃ. † திருமொழி,(௧, ௩)
முற்றமூத்திலே, (௧). "நிறை" என்று - அடக்கமாய், ஸ்த்ரீகளுக்கு அஸாதாரண தர்மமாகையாலே,
அத்தைக் கொள்கை - ஸ்த்ரீத்வத்தை முடிக்கையென்று பலிப்பது; அத்தை யருளிச் செய்கிறார் - ஒரு
வ்யாபாரத்தாலே இத்யாதி. ஒருவ்யாபாரத்தாலே - பேய்முலை சுவைக்கையாலே. "இரண்டு ஸ்த்ரீவதம்
பண்ணினான்" என்கைக்கு, பூதனையை முடித்தாற்போலே தன்னைமுடிக்கவில்லையே; அடக்கத்தைக்
கொண்ட ளவன்றோவென்ன - தன்னை இத்யாதி. விவரணம் - அவளை இத்யாதி. "ஊர்ந்தமடம்"
இத்யாதியையுங்கூட்டிக்கொண்டு, "நிறை" என்றதுக்கு - ஸாகல்யபரமாக அர்த்தாந்தரம் - அவ
னுடைய இத்யாதி. இழக்கலாவதொன்றோ - இழக்கத்தக்கதோவென்றபடி. பேர்ந்தும்பெயர்ந்தும்-
போயும்வந்தும்; அதாவது - விஶ்லேஷித்தும் ஸம்ஶ்லேஷித்தும்; அவனோடன்றியோர்சொல்லிலேன்-
அவனோடு ஸம்பந்தியாமல் ஒருவார்த்தையுடையே னல்லேன் இத்யர்த்தஃ. அதாவது - ஸம்ஶ்லேஷித்த
போதோடு விஶ்லேஷித்த போதோடு வாசிபற அவனையொழிய எனக்கு ஒரு வார்த்தை யில்லையென்ற
படி. இத்தால்பலிதம் - ஸம்ஶ்லேஷதசையிலும் விஶ்லேஷதசையிலும் அவனைமறக்கப்போகாதென்று.
மறக்கச் சொல்லுகிறவளைக்குறித்து, "விஶ்லேஷதசையிலே மறக்கப்போகாது" என்னும் இவ்வளவே
சொல்லவமைந்திருக்க, "பெயர்ந்தும்" என்று - ஸம்ஶ்லேஷதசையிலும் மறக்கப்போகாதென்று
சொல்ல ப்ரஸக்தியேதென்ன; த்ருஷ்டாந்தார்த்தமென்கிறார் - மறக்கையாவது இத்யாதி. அதாவது,
மறக்கையாகிறது - இதரவிஷய ஸ்மரணமாகையாலே, அநுபூதவிஷயத்தை மறக்கையும் - இதரவிஷ
யத்தை ஸ்மரிக்கையிலே யொன்றாகவேணும்; அப்படி இதரவிஷய ஸ்மரணரூபமான விஸ்மரணம்
ஸம்ஶ்லேஷதசையில் இல்லாதவோபாதி, விஶ்லேஷதசையிலுமில்லையிறே; அது உண்டாகவேணுமே
நான் ஆறியிருக்கைக்கென்று - இவ்வாக்யத்துக்குக் கருத்து. அப்படி ஸம்ஶ்லேஷ தசையிற்போலே
விஶ்லேஷதசையிலும் மறக்கப்போகாதோவென்ன; ஸம்வாதம் - ஏதுசெய்தால் இத்யாதி. எத்தைச்
செய்தால் மறக்கலாம்; கூடினால்தான் மறக்கலாமோ, மறக்கலாமாகில் கூடித்தான் பார்ப்போமென்ற
படி. ‡ திருமொழி - ஒன்பதாம்பத்து, மூன்றாந்திருமொழி, மூன்றாம்பாட்டு. "விஶ்லேஷாவஸ்தையில்

மத விஷயங்களோடு கலந்தபோது அவற்றை நினைத்து, பேரவிருந்தபோது அவற்றை மறந் திருப்பர்கள், கலந்தவிஷயத்தினுடையவும் பிரிந்தவிஷயத்தினுடையவும் தண்மையாலே; இது போகத்தில் விஸஜாதீயமான விஷயமாகையாலே, பிரிந்தபோது மறக்கலாயிருந்ததில்லை, இனிக் கூடித்தான் பார்ப்போமோ மறக்கலாமாகில் என்கிறாள். கூடினாலும் மறக்கலாமோ? என்னில்,—அது செய்யலாமன்றுயிற்று பிரிந்தபோது மறக்கலாவதென்று வ்யதிரேகோக்தி. [பேர்ந்தும்பெயர்ந்தும்] - போயும்வந்தும். [அவனோடன்றியோர்சொல்லிலேன்] -"அவனைமற, அவனைநினை" என்றே நீ சொல்லுவது, ஆகையாலே அவனையொழிய எனக்கு வேறொரு சொல்லின்றிக்கே யிருந்தது. இவள் இப்படி சொன்னவாறே, நிஷேதிக்கிற தோழி யுகந்தாள்- "நாம் இவளை அவனோடே சேர்க்கப்படும்பாடும், அப்படி சேர்ப்பித்தநாமே இவளை மறப்பிக்க யத்நித்தாலும் மறவாதபடி அவகாஹிப்பதே" என்று உகந்தாள்; இவள், நிஷேதிக்கிற உக்தி யைவிட்டு இவள் நெஞ்சைக் கண்டாள் [தீர்ந்தவென்தோழி] - தாய்மார்சொல்லுகிற ஹித வசநத்தை நீயும் சொல்லுகையாலே, "நீயும் அவர்களோடொக்க நிஷேதிக்கிறாய்" என்றிருந் தேன், உன்நினைவு இதுவாகப்பெறுவதே, நீ நீயாம்படியே யிருந்தாய், வரவிரு என்கிறாள்; "ராவணன்வரவிட்டஆள்" என்று ஶங்கித்திருந்தவள், "பெருமாள்பக்கலினின்றும் வந்தவன்" என்று அறிந்தபின்பு அவனைக்கொண்டாடினாற்போலே; "अर्हसे च कपिश्रेष्ठ मया समभिभाषितुम्" (அர்ஹஸேசகபிஶ்ரேஷ்ட்டமயாஸம்பாஷிதும்)-

ப்ர:—(தீர்ந்தவென்தோழி)—ஸாந்த்வகாரணே [௩௬] ஹநுமந்தம் ப்ரதி ஸீதா, "अर्हसे च कपिश्रेष्ठ मया समभिभाषितुम्। यद्यसि प्रेषितस्तेन रामेण विदितात्मना ॥१०॥ प्रेषयिष्यति दुर्धर्षो रामो न ह्यपरीक्षितम्। पराक्रममविज्ञाय मत्सकाशं विशेषतः ॥११॥" (ஸகீஹிதைஷிணீ என்கிற அவர்கள்படியாயிருந்ததீ, நீ என்கிறாள்).

மறக்கப்போகாது" என்னாதே, "எதுசெய்தால்மறக்கேன்" என்று விஶேஷித்ததுக்கு பாவம் - நாட் டாரென்று தொடங்கி, கூடித்தான்பார்ப்போமோ மறக்கலாமாகில் என்னுமளவும். கலந்தவிஷயத் தினுடையவும் பிரிந்தவிஷயத்தினுடையவும் என்றது - கலந்தவிஷயமென்றும் பிரிந்தவிஷயமென்றும் இரண்டில்லாமையாலே, கலந்து பிரிந்தவிஷயத்தினுடைய வென்றபடி. தடஸ்த்தஶங்கையை யநு வதித்துப் பரிஹரிக்கிறார் - கூடினாலும் இத்யாதி. "பேர்ந்தும்பெயர்ந்தும்" இத்யாதிக்கு - விலக்ஷண விஷயமாகையாலே ஸம்ஶ்லேஷஸமயத்திற்போலே விஶ்லேஷஸமயத்திலும் மறக்கப் போகாதென்று ஒரு தாத்பர்யம் கீழேயருளிச்செய்து, ஸம்ஶ்லேஷதசையோடு விஶ்லேஷதசையோடு வாசியற நீ அவ னுக்கு ஸ்மாரிகையானவழியாலும் அவனைமறக்கப்போகாதென்று தாத்பர்யாந்தரம் - அவனைமற இத் யாதி. அன்றிக்கே, "ஓர் சொல்லிலேன்" என்னாதே, "அவனோடன்றி" என்று விஶேஷித்ததுக்கு பாவமாதல். அதாவது - "கலவியில் அவனை நினை, பிரிவில் அவனை மற" என்றிறே நீ சொல்லுவது; "அவனைமற" என்று சொன்னதும் அவனுக்கு ஸ்மாரகமா யிருக்குமென்றபடி. விவரணம் - நாமிவளை இத்யாதி. இவளை - நாயகியை. இவள் - ஸகியை. உக்தியைவிட்டு இவள் நெஞ்சைக் கண்டாள் - "அஹ்ருதயோக்தி" என்று தோழி நெஞ்சை யறிந்தாளென்றபடி. தீர்ந்தவென்தோழி - என்கிறா ளென்று கூட்டுவது. நீ நீயாம்படியேயிருந்தாய் என்றது - எனக்கு நாயகன் விஷயத்தில் ப்ராவண் யம் உனக்கு அபிமதமாம்படி யிருக்கையிறே ஸ்வரூபம், ஆகையாலே நீநீயாம்படியே யிருந்தாயென்ற படி. வரவிரு - வந்திரு. முந்தற வெறுத்திருந்தவள், பின்பு ஆநுகூல்யத்தை யறிந்து கொண்டாடி னதுக்கு த்ருஷ்டாந்தம் - ராவணன் இத்யாதி. கொண்டாடினபடியைக் காட்டுகிறார்-अर्हसे च இத்யாதி. "यद्यसि प्रेषितस्तेन रामेण विदितात्मना" இத்யுத்தரார்த்தம், ஸாந்த்வ

"ஸகீபிஸ்ஸுகமாஸ்வ" (ஸகீபிஸ்ஸுகமாஸ்வ) என்கிற அவர்கள்படியாயிருந்ததீ நீயேன் கிருள். "ஸமாத்வாதஸுதத்ராஹம்" (ஸமாத்வாதஸுதத்ராஹம்) என்கிறதும் உன்னோடே சொல்லலாயிருந்தது. அத்தோழிதானும், "பிறர்சொல்லுகிற ஹிதவசநமும் இவள்செவி யிற்படும்படியோ இவள்தான் நின்றநிலை" என்று அறிகைக்காகச் சொன்ன ளித்தனையிறே. ஊரார்பழிக்கு அஞ்சியன்றோ நான் விலக்குகிறதென்ன,—[என்செய்யும் இத்யாதி] - ஆகில் உனக்கு வார்த்தைசொல்ல வடுப்பது இப்படியேகாண், "நாட்டார் பழிசொல்லுவர்கள்" என்று சொல்லாதே "என் நினைவு இருந்தபடி இது" என்று சொல்லலாவதுண்டாகிற் சொல்லிக்காண யென்கிருள். ஊரார் பழிகொண்டு காரியமேன், உன்னெஞ்சிற் குறையில் லாமையேயன்றோ எனக்கு வேண்டுவது என்கிருள். (௩)

நான்காம் பாட்டு.

ஊரவர்கவ்வையெருவிட்டு அன்னைசொல்நீர்படுத்து
ஈரநெல்வித்திமுளைத்த நெஞ்சப்பெருஞ்செய்யுள்
பேரமர்காதல் கடல்புரையவிளைவித்த
காரமர்மேனி நங்கண்ணன்தோழிகடியனே ?

ப்ர:—(ஸமாத்வாதஸுதத்ராஹம் என்கிறதும் உன்னோடேசொல்லலாயிருந் தது)—ஸுந்தரகாண்டே [௩௩] ஹநுமந்தம் ப்ரதி ஸீதா, "ஸமாத்வாதஸுதத்ராஹம் ராகவஸ்ய நிவேஸநே । ஸுக்ரீவாதீநாம் ஸர்வேஷாம் வநவாஸாநாமஸ்து ஸதா ஸுகம் ஸுகிநீ॥".

காண்டே ஹநுமந்தம் ப்ரதி ஸீதா. "ஸமாத்வாதஸுதத்ராஹம் ராகவஸ்ய நிவேஸநே । ஸுக்ரீவாதீநாம் ஸர்வேஷாநுஸஹமாநு ஸவநக்காலஸம்ப்ருக்தி நீ" இதிச தத்ரைவ. "யோஸௌ ஸுஜ்ஞாநாஸாநுஷாநுஸோமாநு ஸவநகாலஸம்ப்ருக்தி நீ" இதிச தத்ரைவ. "யோஸௌ ஹிஹாஷிதாஸ்ம - சஹஸ்வெ" என்றதுக்குபாவம் - ஸஸீஹி: இத்யாதி. அதாவது-பெருமாள் "தோழிமாரோடேயிரு" என்றருளிச்செய்த தோழிமாரோபாதியாயிருந்தாய் நீயென்றபடி. அவர் கள்படியாய் - தோழிமார்படியாய். "ஸஹ, சஹி" என்கிறஉபஸர்கார்த்தம்-ஸமாத்வாதஸு இத்யாதி. என்கிறதும் - என்கிற ரஹஸ்யமும். உன்னோடே - திருவடியோடே. "தீர்ந்தவென்தோழி" என்னும் படியான இவள் "பழிக்கு அஞ்சவேணும்" என்பானென்னென்ன - அத்தோழிதானும் இத்யாதி. "தீர்ந்தவென்தோழி" என்று இவள் இப்படி கொண்டாடினவாறே, "என்னைக்கொண்டாடுகிறது என்ன என்றிவ்வளவும் அவதாரிகையாகக் கொண்டுகார்யமென், ஊரார் பழிசொல்லுகிருர்களே" என்ன என்றிவ்வளவும் அவதாரிகையாகக் கொண்டு, அவள் சொன்னதுக்கு உத்தரம் - என்செய்யுமூரவர்கவ்வை யென்று. இதுக்கர்த்தம் - ஊரார்பழிகொண்டு கார்யமென்? என்று. "ஊரவர்கவ்வை-என்செய்யும்" என்கையாலே பலிதம் - ஆகில் உனக்கு இத்யாதி. இப்படியேகாண் - இப்படியோகாண் இத்யர்த்தஃ. தீர்ந்தவேன்தோழி - என் னோடு ஒரு நெஞ்சாம்படி யறுதியுடைய தோழி. கவ்வை - பழி. "ஸகீபிஸ்ஸுகமாஸ்வ" என் கிறதுக்கு ஆகரம் கண்டுகொள்வது. ஊர்ந்த இத்யாரப்ய, தீர்ந்தவென்தோழி - ஊரவர்கவ்வை - என் செய்யு மித்யந்வயஃ. (௩)

ஆ.—(ஊரவர்கவ்வை.) "இப்படி தன்னைப்பிரிந்து அத்யந்தம் அவஸந்நையாயிருக்கச்செய்தே, தன்னுடைய லோபத்தாலே தன்னை உனக்குக்காட்டித் தாராதேயிருக்கிற அவனை யாசைப்படுகிறதுதான் என்" என்று தோழிசொல்ல; ப்ரதிபந்தக ஸமஸ்த ஹஸ்ராங்க ளுளவாயிருக்கச்செய்தே, அவற்றையே வர்த்தகமாகக்கொண்டு தன்திருவடிகளிலே நிரவதிகமான அபிநிவேஶத்தை எனக்குவிளைவித்த காரமர்மேனி நங்கண்ணனையே! தோழீ லுப்தனென்று சொல்லுகிறதென்கிறாள்.

ஒ.—நாலாம் பாட்டில், இப்படி தன்னைப்பிரிந்து துக்கப்படாநிற்க, வாராத நிர்க்ருணனை 'நீ என்செய்ய ஆசைப்படுகிறாய்?' என்ன, 'தன்பக்கலிலே எனக்கு அதிமாத்ர ப்ரேமத்தை விளைப்பித்த பரமோபகாரகனையே நீ நிர்க்ருணனென்று சொல்லுவது' என்று தோழியை கர்ஹிக்கிறார்.

[ஊரவர் என்று தொடங்கி] - ஊரார்சொல்லும் பழியாகிற எருவையிட்டுத் தாயார் சொல்லும் ஹிதவசநமாகிற நீரைப்பாய்ச்சி ஸங்கமாகிற நெல்லைவித்தி முளைத்த நெஞ்சாகிற பெரிய செய்யிலே. [பேரமர்காதல் என்று மேலுக்கு] - பெரிதாய்க் கால தத்த்வமுள்ளதனையும் கிடையாவிட்டாலும் விடாதகாதலைக் கடல்போலே விளைவித்த வர்ஷுகமான மேகம்போலே ஶ்ரமஹரமான நிறத்தையுடையனாய் நாமிட்ட வழக்கான க்ருஷ்ணன்.

ப.—அநந்தரம், தன்பக்கலிலே அபிநிவேஶத்தை வளரும்படி க்ருஷிபண்ணின உபகாரஶீலனை, அநுபகாரகரைப்போலே குறையச்சொல்லக்கடவையோவென்று; தன்னைமீட்கைக்காக அவனை யியற்பழித்ததோழியைக் குறித்துச் சொல்லுகிறாள்.

ஊரவர் - ஊரார், கவ்வை - அலராகிற, எரு-எருவை, இட்டு-இட்டு, அன்னை-தாயாருடைய, சொல் - நிரந்தரஹிதவசநமாகிற, நீர்-நீரை, படுத்து - நிறுத்தி, ஈரம்-ஆசையாகிற, நெல்-நெல்லை, வித்தி-விரைத்து, முளைத்த - அதுமுளைத்த, நெஞ்சம்-நெஞ்சமாகிற, பெரும்-பெரிய, செய்யுள் - விளைநிலத்துக்குள்ளே, பேர்-மிகவும்பெருத்து, அமர்-ஊர்ப்பூசலையுடைத்தான, காதல்-அபிநிவேஶத்தை, கடல்புரைய - கடல்போலே ஸம்ருத்தமாக, விளைவித்த - பலிக்கும்படிபண்ணின, கார் - வர்ஷுகவலாஹக ஸ்வபாவத்தை, அமர்-உடைத்தான, மேனி-திருமேனியையுடையனாய், நம்-நமக்கு பவ்யனான, கண்ணன்-க்ருஷ்ணன், தோழி - (முன்பு அவன்குணத்தைச்சொல்லி மூட்டின) தோழீ! கடியனே-(இன்று அவன், குறைசொல்லி யியற்பழிக்கும்படி) கடியனானானோ? பேரமர்-பெரியவமர்த்தியுமாம்.

இ.—நாலாம்பாட்டில், "இவளை எத்தைச்சொல்லி மீட்கலாவது" என்று பார்த்து "ஊரார்கிடக்க, உன்னோடே கலந்துவைத்து நிர்க்ருணரைப்போலே வாராத அவன்தானோ நன்றாகச் செய்தான்" என்ன; இவர்கள்பழி நமக்கு உத்தேஶ்யமாம்படி ப்ராவண்யத்தை விளைத்தவனைக் குறைசொல்லக் கடவையோ வென்கிறாள்.

[ஊரவர்கவ்வை யெருவிட்டு] - ஊரார் சொல்லுகிற பழியை ப்ரேமத்துக்கு எருவாக இட்டு. ப்ராதிகூல்ய நிவ்ருத்தி பிறந்து இவ்விஷயத்திலே கைவைத்தவன்றே பழிசொல்லத் தொடங்கினார்கள். 'விபீஷணஸ்து தர்மாத்மா ந து ராக்ஷஸசேஷ்டித:'

என்றுளிறே பொருத்தி. நான் மறக்கப்பார்த்தாலும் அவர்கள் ஸ்மாரகராய் அவத்யகாராகாநின்றார்கள். இவர்களாலேயிறே எனக்கு தரித்திருக்கலாயிற்று. [அன்னைசொல் நீர்படுத்து] - தாயார்சொன்ன ஹிதவசனத்தையே நீராக நிறுத்தி. ஊரார் பழிசொல்லப் புக்க பின்பிறே தாய்மாரும் அறிந்தது. எருவாகிறது ஒருகால் இட்டுவிடுமித்தனையிறே, நீர் எப்போதும் வேணும்; அகத்துக்குள்ளேயிருந்து எப்போதும் சொல்லாநிற்கும் இவள், ஊரார் ஒருகால் சொல்லி விடுமித்தனை. [ஈரநெல்வித்தி] - ஸங்கமாகிற நெல்லைவித்தி. ஸங்கத்துக்கும் அவன்அடியென்றிருக்கிறாள். [முளைத்த] - வித்தினாலும், முளைக்கும் போது அவன் வேணுமென்றிருக்கிறாள். "ஜநிவக்ஷஜயஸ்ஸவழ". [நெஞ்சப்பெரும் செய்யுள்] - ஸம்ஶ்லேஷவிஶ்லேஷங்களாலே த்ரிபாத்விபூதிஸத்ருஶமாம்படி பண்ணி. [பேரமர்காதல்]-ஊரார்பழியும் தாயார்ஹிதவசனமும் கேளாதபடியான காதல். அமர்ந்த காதல் - தர்ம்யநுபந்தியானகாதல். பெரிதான அமரை விளைத்தகாதல். ஊரார்பூசலாக் கினகாத லென்னவுமாம். ஈரம்-ஸங்கம். காதல்-காமம். "ஸஞ்ஜாதஸ்ஸ்ஞாயதேகாமஃ" [கடல்புரைய விளைவித்த] - "ஸமுத்ரெயொஷெஹாஊயிஃ" என்ற கடலொப்பாமித் மாட்டாத காதலென்கை. "கடல்புரைய" என்றார் முதல்; அநந்தரம் "கடலின்மிகப் பெரிதால்" என்றார்; பின்னை, "மண்டிணிஞாலமு மேழ்கடலும் நீள்விசும்பும் கழியப்பெரிதால்" என்றார்; முடிவிலே, "அதனிற்பெரிய வென்னவா" என்றார்; இதிறே காதல் பெருகினபடி. இதிறே, *பொய்ந்நின்றஞானத்திற்குப் பின்பு இவ்வளவும்வர விளைத்துக்கொண்ட கார்யம். [காரமர்மேனி] - எருவும் நீருமுண்டானாலும் வர்ஷம் வேணுமிறே. வர்ஷுக வலாஹகம்போலே ஶ்ரமஹரமான வடிவு. [நங் கண்ணன்] - விரூபனானாலும் விடவொண்ணாத பவ்யதை. இவ்வடிவும் பவ்யதையுமாயிற்று புறம்புள்ளாரோட்டைத் தொக்கையறுத்தது, அபரிச்சிந்நமானகாதலை விளைத்ததும். [நங்கண்ணன்] - க்ருஷ்ணனென்றால் "பெண்களுக்குக்கையாள்" என்று ப்ரஸித்தமிறே. [தோழிகடியனே] - இவ்விஷயத்திலே மூட்டுகைக்கு க்ருஷிபண்ணின நீ, இப்படி ப்ராவண்யத்தை விளைத்தவனை "நிர்க்க்ருணன்" என்னக்கடவையோ? அவன் நீர்மைசொல்லிப் பொருந்தவிடுகையும், குற்றம்சொல்லி மீட்கையும்உனக்கே பரமாவதே! தாய்மார்வார்த்தைபோலே இராநின்றதீ உன்வார்த்தையும்!

ஈடு.— நாலாம்பாட்டு. "என்செய்யுமூரவர்கவ்வை" என்றாள்; ஊரார்சொல்லும்பழியேயாய், அவன்தான் நமக்கு உடலானானே அவர்கள் சொல்லும்பழி பொறுத்திருக்கைக்கு; ஆனபின்பு அவன்கடியன்காணென்றாள்; ஏதேனுமொன்றைச் சொல்லியாகிலும்

நாலாம்பாட்டு.-ஊரவர் இத்யாதி. "என்செய்யுமூரவர்கவ்வை" என்று கீழிற்பாட்டிற் சொன்னவநந்தரம், "கடியனே" என்கிற பிரிநிலையாலே - அவன்கடியனல்லாமையைச் சொல்லுகைக்கு ப்ரஸக்தியெது; அது தோழிசொன்னது கொண்டென்னில், "தீர்ந்தவென்தோழி" என்று-இவள்ப்ராவண்யம் கண்டுகேக்குமவள் "கடியன்" என்று சொல்லுகைக்கடியெது; அவன் முகங்காட்டாதிருக்க, "கடியனல்லன்" என்று சொல்லக்கூடுமோ; கடியனல்லாமையை ஸாதிக்கிறவிவள், அவன் முகங்காட்டாதிருக்க, ஊரார்பழிமுதலானவற்றாலே தன்பக்கல் ப்ராவண்யத்தைவிளைத்த இவ்வளவு மாத்ரத்தைச் சொல்லுகிறதுக்குக் கருத்தெது; என்கிற ஶங்கைகளின்மேலே யருளிச்செய்கிறார் - **என்செய்யுமூரவர்கவ்வை என்றாள்** இத்யாதி. இவ்வாக்யத்தால் - "அவன் கடியனல்லாமையைச் சொல்லுகைக்கு ப்ரஸக்தியெது" என்கிற ஶங்கை பரிஹ்ருதம். ஏதேனுமொன்றை இத்யாதி வாக்

மீட்கவேணுமே அவளுக்கு, "அவன் நிர்க்க்ருணன்காண்" என்ன; "கெடுவாய் நீசொல்லும் வார்த்தையேயிது, அவன் நமக்கு என்னகுறைசெய்தான்" என்ன, "ஊரவர்பழிசொல்லி லும் மீளாதபடியான ப்ராவண்யமுண்டான விடத்திலும் இத்தசையில்வந்து முகங்காட் டிற்றிலன் கண்டாயே" என்ன ; அவன் இப்போது வந்து முகங்காட்டிற்றிலனாகிலும், தான் முகங்காட்டாதபோதும் தன்னையொழிய நமக்கு மற்றொன்றால் பொருந்தாதபடி பண்ணினனே! அவன் செய்தபடி பொல்லாதோவென்கிறாள்.

[ஊரவர் இத்யாதி] - இதெல்லாம் செய்தாய் நீயோ. ப்ராதிகூல்ய நிவ்ருத்தியுண் டான வன்றுதொடங்கி ஊரவர் பழிசொல்லத் தொடங்கினார்கள்காணும். "**விபீஷணஸ்து தர்மாத்மா**" (விபீஷணஸ்துதர்மாத்மா) - என்றார்களிறே தங்களைவிட்டுப்போருவ தற்குமுன்னே; இவன் இக்குடியிலுள்ளார்படியல்லன், இவனுக்கு வாசியுண்டு; அந்த வாசிதன்னைச் சொல்லுகிறது 'தர்மாத்மா' வென்று. "மறக்குடி யறஞ்செய்யக்கெடும்"

ப்ர:—(விபீஷணஸ்து தர்மாத்மா என்றார்களிறே தங்களைவிட்டுப்போரு வதற்கு முன்னே)—ஆரண்யகாண்டே, [கஎ] ராமம் ப்ரதி ஶூர்பணகா, "ஸாஹம் ஶூர்பணகா நாம ராக்ஷஸீ காமரூபிணீ । அரண்யம் விசராமீதம் ஏகா ஸர்வ பயங்கரா ॥ உஉ ॥ ராவணோ நாம மே ப்ராதா பலீயாந் ராக்ஷஸேஶ்வர: । வீரோ விஶ்ரவஸ: புத்ரோ யதி தே ஶ்ரோத்ரமாகத: ॥ உங ॥ ப்ரவ்ருத்தநித்ரஶ்ச ஸதா கும்பகர்ணோ மஹாபல: । விபீஷணஸ்து தர்மாத்மா ந து ராக்ஷஸசேஷ்டித: ॥ உச ॥ ப்ரக்யாதவீர்யௌ ச ரணே ப்ராதரௌ கரதூஷணௌ ।

யத்தாலே - "இவள் ப்ராவண்யங்கண்டுகெக்குமவள் 'கடியன்' என்கைக்கடியெது" என்கிற ஶங்கை பரிஹ்ருதம். **அவன்நிர்க்க்ருணன்காண் என்ன** *என்றது - "அவன்கடியன்காண்" என்றதின்நிகமநம். நிர்க்க்ருணனென்றது - "கடியன்" என்கிறத்தோடே பர்யாயம்.* **கெடுவாய்** *இத்யாதி வாக்யத்தாலே - உத்தரப்ரத்யுத்தரமுகேந அந்த நிர்க்க்ருணதையை த்ருடீகரிக்கிறார்.* **அவன் இப்போதுவந்து** *இத்யாதி வாக்யத்தாலே - "அவன் முகங்காட்டாதிருக்கச்செய்தே 'கடியனல்லன்' என்று சொல்லக் கூடுமோ, ப்ராவண்யத்தைவிளைத்த இவ்வளவுமாத்ரத்தைச் சொல்லுகிறவிதுக்குக் கருத்தேது" என்கிற ஶங்காத்வயமும் பரிஹ்ருதம். ஏதேனுமொன்றை இத்யாதி வாக்யத்துக்கு - தோழிக்கு இவள் ப்ராவண்யம் கண்டுகெக்குமது உண்டேயாகிலும், "இவளுடைய அதிமாத்ரப்ராவண்யம் ஸத்தையையு மழிக்குமோ" என்கிற அதிஶங்கையாலே சொல்லக்கூடுமென்று கருத்து.*

ஊரவர்கவ்வைதொடங்கி, "கடல்புரையவிளைவித்த" என்னுமளவுக்கும் பாவம்-இதெல் **லாம்** *இத்யாதி. விரையாக ரூபித்த ஸங்கத்துக்கு அநந்தரபாவியான ஊரவர்பழியை, விரைப்பதற்கு முன்னே இடக்கடவ எருவாக ரூபிக்கலாமோவென்ன -* **ப்ராதிகூல்ய** *இத்யாதி. அதாவது - ஸங்க முண்டானது கண்டு பழிசொல்லுகிறதன்று, அவன்பக்கல் அத்வேஷமுண்டானதுகொண்டே பழி சொல்லுகிறார்களென்றபடி. ப்ராதிகூல்ய நிவ்ருத்திமாத்ரத்திலே பழிசொன்னாருண்டோவென்ன-* **விபீஷணஸ்து** *இத்யாதி. "ப்ரவ்ருத்தநித்ரஶ்ச ஸதா கும்பகர்ணோ மஹாபல:। விபீஷணஸ்து தர்மாத்மா ந து ராக்ஷஸசேஷ்டித:" இத்யாரண்யகாண்டே ராமம் ப்ரதி ஶூர்ப்பணகா. இங்கு, தர்மாத்மாவென்று - ஹிம்ஸாதி ப்ராதிகூல்யநிவ்ருத்தி மாத்ரம் சொல்லுகிறது.* **துஷ்டார்த்தம் - இவன்இக்குடியில் இத்யாதி.** *"தர்மாத்மா-ஸநாதநதர்மமான பெருமாளை ஆத்மாவாகவுடையவன்" என்றும் சொல்லுவர்கள். தர்மாத்மாவென்றால் - அதுபழியோவென்ன -* **மறக்குடி** *இத்யாதி.* **மறக்**

என்றதிறே; ‘‘நதூராக்ஷஸசேஷ்டிதஃ’’ (நதுராக்ஷஸசேஷ்டிதஃ) - ஜாதிமாத்ரமே இவன்பக்கல் உபஜீவிக்கலாவது. ஊரார்சொல்லுகிற பழியை இவளுடைய ப்ரேமத்துக்கு எருவாக இட்டான். ஊரார் பழிசொல்லிற்றிலர்களாகில், இவள்தானும் கைவாங்கியிருக்குங்காணும்; இவள் ‘‘மறப்பேன்’’ என்னுமன்றும், மறக்கவொண்ணாதபடி ஊரார் ஸ்மாரககோடியிலே நிற்பர்களாயிற்று. [அன்னை இத்யாதி] - தாயாரும் இதுக்குமுன்பெல்லாம், ‘‘என்மகள்’’ என்றேயிருந்தாள், ஊரார் பழிசொல்லப்புக்க பின்பாயிற்று இவள்அறிகிறது. அன்னைசொல்லுண்டு - தாயாருடைய ஹிதவசநம், அத்தை நீராகப்பாய்ச்சி. எருவாவது-அடியிலே ஒருகாலேயிட்டுவிடுவதிறே, நீர் மாறாமல் பாய்ச்சவேணுமே; ஊரார் ஒருகால் சொல்லிவிடுமித்தனையே, தாயார் அகத்துக்குள்ளேயிருந்து எப்போது மொக்க ஹிதஞ்சொல்லாநிற்குமிறே. [ஈரநெல் இத்யாதி] - ஸங்கமாகிறநெல்லை வித்தி. இவள், ஸங்கமிருக்கும்படி வ்யுத்பத்திபண்ணிற்றும் இவ்விஷயத்திலேயாயிற்று; *‘‘முலையோமுழுமுற்றும் போந்தில - பெருமான் மலையோ திருவேங்கடமென்று கற்கின்றவாசகமிவள்பரமே’’ என்று-பால்யாத்ப்ரப்ருதி வேறொன்றறியாள். புறம்பே சிலவிஷயங்களிலே ஸங்கமுண்டாய் விரக்தி பிறக்க வேண்டாவாயிற்று இவளுக்கு. ஸ்வவிஷயஜ்ஞாநத்துக்கு உபகாரகமான மூலஸுக்ருதமும் அவன்தானே யாயிற்று. [முளைத்த] - எருவுமிட்டு நீரும்பாய்ச்சினாலும் முளைக்கும்போதும் அங்குரஶக்தி யுண்டாம்போதும் அவன் உண்டாக்கவேணுமே;

---

*தூடி - கிராதவம்ஶம். அறம்-தர்மம். ஶப்தார்த்தம் - ஊரார் இத்யாதி. பழி எருவானபடி எங்ஙனே யென்ன; பயிர் எருவிலே வேரூன்றுமாபோலே ப்ராவண்யவர்த்தகமாகையாலே யென்கிறார் - ஊரார் பழி இத்யாதி. விவரணம் - இவள்மறப்பேன் இத்யாதி. தாய் அறிந்தபின்பு ஊராரறியவேண்டியிருக்க, ஊரார்பழியைத் தாயாருடைய ஹிதவசநமாகிற நீர் பாய்ச்சுமதுக்குப் பூர்வபாவியான எருவாக நிரூபிக்கலாமோவென்ன - தாயாரும் இத்யாதி. 'என்மகள் என்றேயிருந்தாள் என்றது-‘‘மாத்ருகுணமன்றோபுத்ரியதும், ஆனபின்பு, என்னைப்போலே இவளும் மர்யாதாதிக்ரமம் பண்ணாள்’’ என்றேயிருந்தாளென்றபடி. ஶப்தார்த்தம் - அன்னை சொல்லுண்டு இத்யாதி. அன்னைசொல்லை எருவாகவும், ஊரார்பழியை நீராகவும் நிரூபியாதொழிவானென்னென்ன - எருவாவது இத்யாதி. அதாவது - அர்த்தஸ்வபாவத்தைப்பற்ற இப்படியே நிரூபிக்கவேணுமென்றபடி. ஏதத்விவரணம்-ஊரார் இத்யாதி. ஸாமாந்யேந ‘‘ஈரம்’’ என்றாற்போருமோ, இன்னவிஷயத்தில் ஈரமென்று விஶேஷிக்கவேண்டாவோ வென்ன - இவள்ஸங்கம் இத்யாதி. வ்யுத்பத்திபண்ணிற்றும் - பரிஶீலநம் பண்ணிற்றும். ‘‘ஈரநெல் வித்திமுளைத்த’’ இத்யாதிகள் காரமர்மேனிக்கு விஶேஷணமாகையாலே - இவ்விஷயத்திலே வ்யுத்பத்திபண்ணினது ஸ்புடம். உக்தத்துக்கு ப்ரமாணம் - முலையோ இத்யாதி. யௌவநஸூசகமான முலையானவை மிகவும் முழுக்கத்தோற்றினவில்லை, ஸ்வாமியானவனுடைய மலையோ திருவேங்கடமென்று ஸந்தைசொல்லுவாரைப்போலே பலகாலும் அப்யஸிக்கிறபாசுரம் இவன்தலையிலே கிடப்பதொன்றே இத்யர்த்தஃ. * திருவிருத்தம் - அறுபதாம்பாட்டு. இத்தால் அல்லாதாரில் வ்யாவ்ருத்தி - புறம்பே இத்யாதி. பகவத்விஷய ஸங்கத்துக்கடி ஸுக்ருதமாயிருக்க, ‘‘ஈரநெல்வித்தி’’ என்று - அவனை ஹேதுவாகச் சொல்லலாமோவென்ன - ஸ்வவிஷய இத்யாதி. இவர்க்கு மூலஸுக்ருதமும் அவனேயென்றபடி. கீழும் மேலுமெல்லாம் அவன்க்ருஷியை யருளிச்செய்கையாலே, ‘‘முளைத்த’’ என்றது - முளைப்பித்தவென்றபடி. ஸாதநமுண்டானால் ஸாத்யம் தன்னடையே ஸித்தியாதோ, இவன் முளைப்பிக்கவேணுமோவென்ன - எருவும் இத்யாதி. அங்குரஶக்தி - அங்குரிப்பிக்கும்ஶக்தி. ‘‘ஸாதநஸம்பத்தியுண்டானாலும் ஸாத்யஸித்தியவனதீனை’’ என்றதுக்கு ப்ரமாணம் _ ஶ்ரீராமோ ஹ்யம் இத்யாதி. ‘‘ஶ்ரீராமோஹ்யைஶ்வர்யம் ஹோமாம்ஶ்வாநுஷ்டிகாநு । ஊஷாதி யாயதாம்வாம்ஸாவேவம்த்வஹோஹரிஃ’’ இதி பாகவதே. ‘‘ஶ்ரீராமோஹ்யைஶ

ஆ.—(பேய்முலை.) பூதநா ஶகட யமளார்ஜுந குவலயாபீட ப்ரப்ருத்யா ஶ்ரிதவிரோதி நிரஸநைக ஸ்வபாவனாயிருந்தவனை ''குணஹீநன்'' என்றுசொல்லுகிற அன்னையர், ''இவனையாகாதே ப்ரணயித்வ வாத்ஸல்யகாருண்யாதி குணஹீநனென்று சொல்லுவது'' என்று லஜ்ஜித்துத் தலையெடுக்கமாட்டாதே யிருக்கும்படி, எந்நாள் கொலோ யாமுறுகின்றது தோழி யென்கிறாள்.

ஒ.—எட்டாம்பாட்டில், மஹோபகாரகனானவனை 'குணஹீனன்' என்று சொல்லுகிற தாய்மார் ''இவனையாகாதே 'நாங்கள் குணஹீநன்' என்று சொல்லிற்று'' என்று லஜ்ஜிக்கும்படி என்றோ நாம் அவனைக்காண்பது? என்கிறாள்.

[பேய்முலை என்றுதொடங்கி] - பூதனை தொடக்கமான விரோதிவர்க்கத்தைப் போக்கி அது பாத்தம் போராமை ஸ்மிதம்பண்ணுகையாலே வெளுத்த திருமுத்தையும் சிவந்த திருப்பவளத்தையுமுடைய திவ்யாஸ்யத்தையுமுடையனாய் இப்படி உபகாரக

ப.—அநந்தரம், அநாயாஸேந அகிலவிரோதியையும் நிவர்த்திப்பிக்குமவனை நான்கிட்டுவது என்றோ வென்கிறாள்.

பேய் - பேயின், முலை - முலையை, உண்டு - உண்டு, சகடம் - ஶகடத்தை, பாய்ந்து - பாய்ந்து, மருது - மருதின், இடை - நடுவே, போய் - போய், முதல் - வேர் பறித்து, சாய்த்து - விழவிட்டு, புள் - வகாஸுரனாகிற பக்ஷியின், வாய் - வாயை, பிளந்து - பிளந்து, களிறு - குவலயாபீடத்தை, அட்ட - நிரஸித்தவனாய், (விரோதிகளினுடைய பற்றுசறுதியாலே ஸவ்ஜ்ஞமாக ஸ்மிதம்பண்ணுகையாலே), தூ - வெளுத்த, முறுவல் - முறுவலொளியையும், தொண்டை - தொண்டைப்பழம்போலே சிவந்த, வாய் - அதரஶோபையையும், பிரானை - ஆஶ்ரிதைகளான கோபிமாரை அநுபவித்த உபகாரகனை, தோழி - தோழீ! அன்னையர் - (அவனைக் குற்றஞ்சொன்ன) அன்னையர், நாண - லஜ்

தால் - கேவலம் ப்ரணயரோஷமடியாகச் சொன்ன வார்த்தையல்லாமையாலே பரிஷ்டாசாரமென்று தாத்பர்யம். க்ரமேணான்வயஃ. (எ)

ஜிக்கும்படியாக, யாம் - நாம், உறுகின்றது - கிட்டுவது, எந்நாள்கொலோ - என்று யிருக்கிறதோ? நாம் கிட்டினால் அவர்கள் நாணுமித்தனை யென்றுகருத்து.

இ.—எட்டாம்பாட்டில், மஹோபகாரகனான இவனை "குணஹீநன்" என்கிற தாய்மார், "இவனையோ குணஹீநனென்கிறது" என்று லஜ்ஜிக்கும்படி என்றோ நாம் அவனைக் காண்பதென்கிறாள்.

[பேய்முலை இத்யாதி] - பூதனையுடைய முலைவழியே ப்ராணனை முடித்து, அந்த அவஸாதத்தைத் தப்பி; ரக்ஷையாக நிறுத்தின ஶகடந்தானே அஸுராவேஶத்தாலே மேல்விழ, அத்தை நிரஸித்து; தவழ்ந்துபோகாநிற்க முன்னேநின்ற யமளார்ஜுநங்கள் நடுவேபோய், அவ்வாபத்தைத் தப்பி; தன்னைக்கொண்டு தப்புகையன்றிக்கே அஸுராவிஷ்டமான குருந்தை வேரோடே பறித்து; பகாஸுரனை நிரஸித்து; குவலயாபீடத்தை முடித்த. [தூமுறுவல்] - பெருமிடுக்கையுடையவையா யிருக்கச்செய்தேயும் ஒன்றுக்கும் பாத்தம் போராமையாலே ஸ்மிதம்பண்ணினான். வெளுத்த தந்தபங்க்தியும், ஆதொண்டைப்பழம்போலேயிருக்கிற திருவதரத்தையு முடையனாய், எனக்கு உபகாரகனானவனை; இவள் தலைமைக்கு "பூத்தருபுணர்ச்சி, புனல்தருபுணர்ச்சி, களிறுதருபுணர்ச்சி" என்று தமிழர்சொன்ன வகைபோய், அவன் தன்னை நோக்கினதுக்கு இவள் எழுதிக்கொடுக்கிறாளிறே. மடலையெடுத்து அழிக்க நினைக்கிறவள் "உபகாரகன்" என்பானென்? என்னில்;—அச்சமுறுத்தி முகங்காட்டுவித்துக் கொள்ளுகையொழிய, அழிக்க நினைக்கிறாளோ. காணுமத்தனையேயாம்படியாகத் தன்னை நோக்கிவைத்தான், நாமென்றோகிட்டுவது. [யாம்] - பேறிருவர்க்கும் ஒத்திருக்கிறபடி. "ஶோகஸ்யாஸ்ய கதா பாரம் ராகவோதிகமிஷ்யதி". [அன்னையர் நாணவே] - அவனுக்கு குணஹாநி சொல்லுகிற தாய்மார் லஜ்ஜிக்கும்படி. இவள்தான் அவனைப்பெற்றுத் தனக்குவரும் லாபமொழிய, "இவனையோ நாம் இப்படி சொல்லிற்று" என்று அவர்கள் லஜ்ஜித்துக் கவிழ்ந்து நிற்கை யுத்தேஶ்யமென்றிருக்கிறாள்.

ஈடு.—எட்டாம்பாட்டு. மஹோபகாரகனை "குணஹீநன்" என்று சொல்லுகிற தாய்மார், "இவனையாகாதே நாம் குணஹீநனென்றது" என்று லஜ்ஜிக்கும்படி என்றோ நாம் அவனைக் காண்பதென்கிறாள். அவன் தன்ஸத்தையையுண்டாக்கி, நம் ஸத்தையைத்தந்தான்; நாம் அவன்ஸத்தையாலுண்டானபலம் பெறுவதென்றோவென்கிறாள்.

[பேய்முலை இத்யாதி] - பூதனையால்வந்த ஆபத்தைத்தப் தப்பி; உணர்ந்து நோக்கவொண்ணாதபடி, ரக்ஷகமாகவைத்த ஶகடம் அஸுராவேஶத்தாலே யூர்ந்துவர, அத்தை அநாயாஸேந முறித்து; தவழ்ந்துபோகாநிற்க, நிர்விவரமாக வழியிலேநின்ற மருது

எட்டாம்பாட்டு. - பேய்முலை இத்யாதி. "பேய்முலையுண்டு" இத்யாதியைப்பற்ற - மஹோபகாரகனை இத்யாதி. "நாணவே" என்றத்தைப்பற்ற - லஜ்ஜிக்கும்படி என்றது. அவன் மஹோபகாரகனானபடியை விவரியாநின்றுகொண்டு, கீழ்வாக்யத்தை விவரிக்கிறார் - அவன்தன் ஸத்தை இத்யாதி. பலமாவது - உறுகை. அதாவது - கிட்டுகை.

உணர்ந்து நோக்கவொண்ணாதபடி ரக்ஷகமாகவைத்த - ரக்ஷகமாக வைத்ததாகையாலே உணர்ந்துநோக்கப்போகாதென்றபடி. அநாயாஸேந - ஒருமுக்தன் செய்த வ்யாபாரமாகையாலே, "பாய்ந்து" என்று - போரப்பொலியச்சொன்ன தித்தனைபோக்கி, வஸ்துதஃ அநாயாஸேந முறித்தானென்றபடி. "மருது" என்ற ஏகவசநத்தைப்பற்ற - நிர்விவரமாக என்றது. த்விதீயார்த்தத்துக்கு

களின் நடுவேபோய். [முதல்சாய்த்து] - தான் அவற்றைத் தப்பிப்போனவளவேயன்றிக்கே அவைதன்னை வேரோடே பறித்துவிழவிட்டேன்னுதல்; அன்றிக்கே, குருந்தத்தைப் பறித்துப்போகட்டேன்னுதல். வைகாஸுரனை வாயைக்கிழித்து, குவலயாபீடத்தை முடித்த. [தூமுறுவல்தொண்டைவாய்ப்பிரானை] - ப்ரதிபந்தகமாய்வந்தவைதான் ப்ரவலமாயிருக்கச்செய்தேயும், தன்வீரத்துக்கு அவை பாத்தம்போராமையாலே ஸ்மிதம்பண்ணி நின்றபடி. தூய்தானதந்தபங்க்தியையும், தொண்டைபோன்றவதரத்தையு முடையவனை. வெண் முறுவலையும், சிவந்தவதரத்தையுமுடைய உபகாரகனை. இப்போது அவனையழிக்க நினைத்து மடலெடுக்கிறாளாகில் அவன் பண்ணினவுபகாரத்தைச் சொல்லுவானேன் ? என்னில்,—இதிறே இவள்தான் அவனையழிக்கநினைத்தபடி - அச்சமுறுத்தி முகங்காட்டுவித்துக்கொள்ளப்பார்க்கிற வித்தனைபோக்கி, அவனையழிக்கையுத்தேஶ்யமாய்ச் செய்கிறதன்றிறே. [பிரானை] - "அவ்வுபகாரங்களெல்லாம் தனக்காகச்செய்தது" என்றிருக்கிறாள். தமிழரது ஒருஸங்கேதமுண்டு, அதாகிறது - "பூத்தருபுணர்ச்சி, புனல்தருபுணர்ச்சி, களிறுதருபுணர்ச்சி, என்று. பூத்தருபுணர்ச்சியாவது - இவள் 'உத்யாநவநத்திலே பூக்கொய்ய' என்று புறப்பட்டுப் பூக்கொய்யாநிற்க, அருங்கொம்பிலேட்டாதேநின்றபூவை இவள் ஆசைப்பட்டால், அத்தை, தன்னைப்பேணாதே ஏறிப்பறித்துக்கொடுக்க, 'இவன்தன்னைப்பேணாதே தன்நினைவைத்தலைக்கட்டினான்' என்று அதுக்குத்தன்னைக்கொடுக்கை. புனல்தருபுணர்ச்சியாவது - புதுப்புனலாடப்போய் நீரிலேயிழிந்து விளையாடாநிற்க, அமிழ்ந்தவதில்நின்று மேடுத்து ஏறவிட்டதுக்காகத் தன்னைக்கொடுக்கை. களிறுதருபுணர்ச்சியாவது - வீதியிலே நின்று விளையாடாநிற்க, யானையின்கையிலே யகப்படப்புக, அதின்கையில்நின்றும் மீட்டதுக்குத் தன்னைக்கொடுக்கை" என்று ஒருமர்யாதைகட்டினார்கள்; இவளைநோக்கினதுக்காக இவள் தன்னை அவர்களுக்காக்கவிறே சொல்லிற்று; அவ்வளவன்றிக்கே, இவள் தலைமையிருந்தபடி - அவன் தன்னைத்தப்புவித்த உபகாரத்துக்கு அநந்யார்ஹமாக எழுதிக்கொடுக்கிறாள். அங்கு ஓரோவுபகாரத்துக்கிறே அவ்வவர்க்காகுவது, இங்கு எல்லாவுபகாரங்களையும் பண்ணினால் அவனுக்காக்காதொழியவொண்ணாதிறே. [எந்நாள்கொலோ யாமுறுகின்றதுதோழீ] - அவன்தன்னை யுளுக்கிவைத்தான், இனி நாம் அவனைக்கிட்டு

"முதல்" என்று - பூண்டாய், அத்தாலே - குருந்தத்தைச் சொல்லுகிறது. குருந்தம் - குருக்கத்தி. வைகாஸுரனை இத்யாதிக்கு - "புள்வாய்பிளந்துகளிறட்ட" என்று ப்ரதிகங் கண்டுசொல்வது. பாத்தம் பாத்ரம், விஷயமென்றபடி. "முறுவல்" என்றதுக்கு - ஸ்மிதமாக அர்த்தமருளிச்செய்து, தந்தபங்க்தியாக அர்த்தாந்தரம் - தூய்தான இத்யாதி. "முறுவல்" என்று - தந்தத்தைச்சொன்னது, "தந்தமும் முறுவலும் தட்டமும்பல்லாம்" என்றத்தைப்பற்ற. ப்ரதமார்த்த விவரணம் - வெண்முறுவல் இத்யாதி. இதிறேயென்றது - வக்ஷ்யமாணத்தை. "வக்ஷ்யமாண" என்றத்தை உபபாதிக்கிறார் - அச்சமுறுத்தி இத்யாதி. இத்தால் - அவன் உபகாரங்களைச் சொல்லத் தட்டில்லையென்று கருத்து. அவன் செய்தபடிகளைச் சொல்லி, "எந்நாள்கொலோயாமுறுகின்றது" என்றதுக்கு பாவம் - அவ்வுபகாரங்களெல்லாம் இத்யாதி. தனக்காகச்செய்தது - எனக்குத் தன்பக்கலிலே ப்ராவண்யம் விளைக்கைக்காகச் செய்தது. அவன்தன்னைநோக்கினத்தையே இவள்தனக்கு உபகாரமாகச் சொல்லுகையாலே வ்யாவ்ருத்திகாட்டுகிறார் - தமிழர் இத்யாதி. புதுப்புனல் - நூதநப்ரவாஹம். இவளைநோக்கினதுக்காக - நாயகியானவள் தன்னை நோக்கினதுக்காக. இவள் - நாயகி. தலைமை - ஶ்லாக்யதை. இன்னும் ஓகாரத்தாலே வ்யாவ்ருத்தி - அங்கு இத்யாதி. "யாம்" என்று - தோழியையுங்கூட்டிச்சொன்னதுக்கு பாவம் - ஶோகஸ்ய இத்யாதி. "ஶோகஸ்யாஸ்ய கதா பாரம் ராகவோயமதிகஷ்ய்தி । ஸ்வஸைந்யபரிவ்ருதோ ஹத்வா ராக்ஷஸமஹாரயமா" இதி ஸுந்தரகாண்டே

வது என்றோ? [தோழி] - "ஶோகஸ்யாஸ்யகதாபாரம் ராகவோதிகமிஷ்யதி" (ஶோகஸ்யாஸ்யகதாபாராம் ராகவோதிகமிஷ்யதி) என்றுபோலேகாணும் தோழிதானிருப்பது. இப்போது அவனை ஸ்பர்ஶித்து நம்ப்ரயோஜநம்பெற ஆசைப்படுகிறோமல்லோம், [அன்னையர்நாணவே] - "பிரிந்தவநந்தரம் அவன்தானே வருமளவும் ஆறியிருந்திலள், அவன்தான் வரவுதாழ்த்தான்" என்று இரண்டுதலைக்கும் பழிசொல்லுகிற தாய்மார் முன்பே; "நாம் இத்தலைமடலெடுக்குமளவாம்படி பிற்பாடராநோமாகாதே" என்று, "ஹ்ரீரேஷாஹிமமாதுலா" (ஹ்ரீரேஷாஹிமமாதுலா) என்கிறபடியே அவன் லஜ்ஜித்துவந்து நிற்கிறபடியைக்கண்டு, "இவனையோ நாம் இவ்வார்த்தைசொல்லிற்று" என்று அவர்கள் லஜ்ஜித்துக் கவிழ்தலையிடும்படியாக. (அ)

ஒன்பதாம்பாட்டு.

நாணும்நிறையுங்கவர்ந்து என்னைநன்னெஞ்சங்கூவிக்கொண்டு
சேணுயர்வானத்திருக்கும் தேவபிரான்தன்னை
ஆணையென்தோழி! உலகுதோறலர்தூற்றி ஆம்
கோணைகள்செய்து குதிரியாய்மடலூர்துமே.

ஆ.—(நாணும்.) நாணும்நிறைவுங்கவர்ந்து என்னை நன்னெஞ்சங் கூவிக்கொண்டு, ஒருவர்க்கும் செல்லவொண்ணாத திருநாட்டிலே எழுந்தருளியிருக்கிற தேவபிரான்தன்னை அயர்வறுமமரர்களுங்கூடத் தேறுதலொருபடி, தோழீ, ஆணை, அவனையுலகுதோறலர்தூற்றி, மற்றும் செய்யலாம் மிறுக்குக்களெல்லாம்செய்து குதிரியாய் மடலூர்துமென்கிறாள்.

ஒ.—ஒன்பதாம்பாட்டில், தன்னெஞ்சிலே மடலூரவேணுமென்று துணிந்த துணிவை வ்யக்தமாகத் தோழிக்கு வாய்விடுகிறாள்.

ப்ர —(பேய்முலையித்யாதி)— (எந்நாள்கொலோயாமுறுகின்றதுதோழி) — தத்துவஸத்தியம் ஸுவிரஹஜநிதம் ராகவஸ்ய ஶோகவேகம் ஹநுமத்ந வாக்யேன உக்தவிதா ஸீதா "ஶோகஸ்யாஸ்யகதாபாரம் ராகவோதிகமிஷ்யதி। வ்யவஸாயஃ பரிப்ராப்தோ ஹதநளஸ்ஸாமரே யதா॥ரு॥".

தாரண்யகாண்டே ஶூர்பணகா:"வ்யஸீதஜ்ஞாஹவத்ஞோஸௌ ஹ்ரீரேஷாஹிமமாதுலா। யதீதுஶோஸௌஹம்விதெளா ராவணஸ்யோபராவஸிதஃ॥கூ॥"

ஸப்தத்ரியபோ ஹநூமந்தம்ப்ரதிவஸீதா. இத்தால் - ஸமதுஃகையாகையாலே அவனையுங்கூட்டிச் சொல்லுகிறாளென்றபடி. மேலுக்கு அவதாரிகை - இப்போது இத்யாதி. "வ்யஸீதஜ்ஞாஹவ ஞோஸௌ ஹ்ரீரேஷாஹிமமாதுலா। யதீதுஶோஸௌஹம்விதெளா ராவணஸ்யோபராவஸிதஃ" இத்யாரண்யகாண்டே தஶமே ஸர்கே. பேய்முலையுண்டு என்று தொடங்கி, பிரானை-தோழி, அன்னையர்நாணவே - எந்நாள்கொலோ யாமுறுகின்றது இத்யந்வயஃ. (அ)

[நாணும் நிறையும் என்று தொடங்கி] - லஜ்ஜையையும் அடக்கத்தையும் நிஶ்ஶேஷமாகப் போக்கி அவ்வழியே தானென்றால் மிகவும் ப்ரவணமான என்னுடைய நெஞ்சையும் தன்பக்கலிலே அழைத்துக்கொண்டு மிகவும் தூரமானதிருநாட்டிலே யிருக்கிற அயர்வறுமமரர்களதிபதியை. [ஆணை என்று தொடங்கி] - வாயால் நிஷேதியாநின்றுவைத்தே, 'இவள் இத்தனையும் செய்து முடிப்பதுகாண்' என்று உகந்திருக்கிற தோழியை ப்ரீதியாலே என்தோழீ என்று ஸம்போதித்து உன்னாணையே உலகுதோறும் அவனைப்பழிதூற்றிச் செய்யலாம் மிறுக்குக்களெல்லாம்செய்து தடையில்லாதே மடலூரக்கடவேன்.

ப.—அநந்தரம், என்னை ஸர்வஸ்வாபஹாரம்பண்ணி எட்டாமலிருக்கிறவனை, ஸர்வலோகமும் பழிக்கும்படி மடலூரக்கடவேனென்று தோழிக்குத் தன்னெஞ்சை வெளியிடுகிறாள்.

என்னை - என்னை, நாணும்-லஜ்ஜையையும், நிறையும்-பூர்த்தியையும், கவர்ந்து-அபஹரித்து, நல் - ஸ்நேஹாத்தரமான, நெஞ்சம் - நெஞ்சையும், கூவிக்கொண்டு - அழைத்துக்கொண்டு, ("விஸ்ருதஃ வ்யூஹேஷு ஸவ்யதஃ வ்யூஹேஷு" என்கிறபடியே), சேணுயர் - மிகவும் உயர்ந்த, வானத்து - (பரமாகாஶஶப்தவாச்யமான) பரமபதத்திலே, இருக்கும் - இருப்பானை, தேவர்-ஸூரிகளுக்கு, பிரான்தன்னை - (இங்குப் பண்ணின ப்ரவ்ருத்திகளை ப்ரகாஶிப்பிக்கும்) ஸர்வாதிகனானவனை, என் - எனக்குவிதேயையான, தோழி - தோழீ! ஆணை-உன்னாணையே, உலகுதோறு - ஸர்வலோகங்களிலும், அலர்-பழி, தூற்றி-(ப்ரஸித்தமாம்படி) தூற்றி, ஆம்-என்னால் செய்யலாம், கோணைகள்-மிறுக்குக்களடங்க, செய்து - செய்து, குதிரி-ஒருவர்க்கடங்காத நாணமற்றபெண், ஆய்-ஆய்க்கொண்டு, மடல் - மடல், ஊர்தும் - ஊரக்கடவேன். குதிரி - நாணற்பெண், கோணை - மிறுக்கு.

இ.— ஒன்பதாம்பாட்டில், தன்னெஞ்சில் வ்யவஸாயத்தைப் பிறர்க்காக மறைத்துப் போந்தாள் இதுக்குமுன்பு, அத்தைத் தோழிக்கு வாய்விடுகிறாள்.

[நாணும்நிறையுங்கவர்ந்து] - அகம்விட்டுப் புறப்படக்கடவதன்றிக்கே யிருக்கிற லஜ்ஜையையும், அகவாயிலுள்ளது வாய்விடக்கடவதன்றிக்கேயிருக்கிற மடப்பத்தையும் அபஹரித்து. [என்னை] - அவையே நிரூபகமான என்னை. [நன்னெஞ்சம் கூவிக்கொண்டு] - அவற்றுக்கு ஆஶ்ரயமாய் என்னிலும் தன்பக்கலிலே ப்ரவணமான நெஞ்சையும் அபஹரித்து. [சேணுயர் இத்யாதி] - மிகவும் உயர்ந்த பரமபதத்திலே கொடுபோயிருக்கும். இந்த்ராதிகள் குடியிருப்புப்போலன்றிக்கே ஸர்வாதிகமாயிறே பரமபதமிருப்பது. "இவள் தன் த்வரையாலே, திருப்பாற்கடலிலே கிடக்கில் திரையிலேயடியிட்டு வரக்கூடும்" என்று நினைத்து, நம்முடைய த்வரையாலும் சென்று கிட்டவொண்ணாதேஶத்திலே யிருந்தான். [தேவபிரான்] - இங்குநின்றும் கொடுபோன வொடுக்குமாடுகளை அங்குள்ளார்க்குப் பாரித்துக்கொண்டிருக்கிறபடி. "நாம் ஸம்ஸாரத்திலே போய்ப் பெற்றது இது" என்று காட்டுகிறபடி. [தன்னை] - ஸர்வோத்க்ருஷ்டனை நான் அழிக்கப்புகுகிறபடி பாராய். [ஆணை] - "பகட்டுகிறாளித்தனைபோக்கிச் செய்துமுடிக்கப் புகுகிறாளோ" என்று தோழியிருக்க; உன்னாணை என்கிறாள். [என்தோழி] - "இவள் இத்தனையும் செய்துமுடிப்பதுகாண்" என்கிறதுதோற்ற தோழியிருக்கிறபடியைக்

கண்டு, 'என்தோழி' என்று உகக்கிறாள். "[ஆணை - என்]" - என்று சொல்லுவாருமுண்டு. நீ என் நினைவைப் பின்செல்வாயாகில் இனித் தடையென்? என்கிறாள். நீ என்வழியே யொழுகுவாயாகில், நிவாரகருண்டோ? [உலகுதோறலர்தூற்றி] - ஒரு லோகமாத்ரத்திலே பழிசொல்லிவிடுவேனோ, பரமபதமெல்லையாகப் பழித்துக்கொடு செல்லுகிறேன். அலர் - பழி. என்னை ஊரார் பழிசொல்லும்படி பண்ணினானாகில், தன்னை லோகமாகப் பழிசொல்லும்படி பண்ணுகிறேன். [ஆங்கோணைகள் செய்து] - என்னாலான மிறுக்குக்கள்செய்து. கோணை-மிறுக்கு. அதாவது-மடல்கொண்டு புறப்பட்டவாறே எதிரேவரும், சென்று கும்பிடக்கடவேன். [குதிரியாய்] - குதிரியென்று - தடையில்லாப்பெண். குதிரியாய் - அடங்காஸ்த்ரீயாய். குதிரியென்று - ஆபரணமிட்டுவைக்குஞ்செப்பாய், இவளுக்கு ஆபரணம் - நாணும்நிறையுமிறே, அவை போகையாலே, கேவலஶரீரமாத்ரமேயாய்ச் செல்லக்கடவேன். குதிரி-குதிரையையுடையவள். பனைமடலைக் குதிரையாகவுடையவளென்றுமாம். [மடலூர்துமே] - இரண்டு தலையையும் நோக்கியிருந்தது அமையும், இனி மடலூர்ந்தே விடக்கடவேன். மடலாகிறது - அபிமதவிஷயத்தை ஒருபடத்திலேயெழுதிப் பனைமடலைக் குதிரையாகக்கொண்டு உடம்பைப்பேணாதே மயிரைவிரித்துக் கண்வாங்காதே பார்த்துக்கொண்டு திரியாநின்றால், ஹோமோபகரணங்கள் கண்டால் அக்நிகல்பமாயிருக்கக்கடவதாய் இப்படி செல்லாநின்றால்; ராஜாக்கள் கூட்டுதல், ஆற்றாமை கூட்டுதல், இரண்டுதலையிலுள்ள பந்துக்களும் கைவிட்டு ஒருவர்க்கொருவர் தஞ்சமாய் முடிகைதானே பேறாகச்செய்யுமதாயிற்று.

ஈடு.—ஒன்பதாம்பாட்டு. நெஞ்சு விம்மல்பொருமலாகாநிற்கவும், தன் ஸ்த்ரீத்வத்தாலே இதுக்குமுன்பு மறைத்துக்கொண்டுபோந்தாள்; இனி "அவனையழிக்கப்புகுகிற நாம் ஆர்க்குமறைப்பது" என்று அதுதன்னையே சொல்லுகிறாள்.

[நாணும்நிறையுங்கவர்ந்து] - ஸத்தாப்ரயுக்தமானத்தையுங்கொண்டான், களவு கலந்தால் வருமத்தையுங்கொண்டான். வாசல்விட்டுப் புறப்படக்கடவதல்லாத லஜ்ஜையையும் கைக்கொண்டு, அகவாயிலோட்டம் தாய்மார்க்கும் சொல்லக்கடவதன்றிக்கேயிருக்கும் அடக்கத்தையும் கைக்கொண்டு. [என்னை] - அவையே நிரூபகமான என்னை. [நன்னெஞ்சங்கூவிக்கொண்டு] - பறித்துக்கொண்ட நாணும் நிறையும் தந்தாலும் இட்டுவைக்கைக்குக் கலமில்லாதபடி; அவற்றுக்கு ஆஶ்ரயமான, என்னிற்காட்டிலும் தன்பக்கல் ஸாவஸந்தத்தில் ஊற்றமுடைய நெஞ்சைத் தன்பக்கலிலே நொடித்துக்கொண்டு. "இவற்றைக்கொண்டு இன்னம் கடலிலேகிடக்கில், இவள் த்வரையிருந்தபடியால் திரைமேலே

ஒன்பதாம்பாட்டு.—நாணும்நிறையும் இத்யாதி. கீழெல்லாம் மறைத்துப்போந்தவள், இப்போது "மடலூர்தும்" என்பானென்? என்ன - நெஞ்சு இத்யாதி. விம்மல்பொருமல் - ஆற்றாமையால் வந்த மநோவிகாரம். அதுதன்னையே - மடல்தன்னையே.

கவர்ந்து - அபஹரித்து. நாணுக்கும் நிறைவுக்கும் பேதமேதென்ன - ஸத்தாப்ரயுக்தம் இத்யாதி. களவாகிறது - அகவாயிலோடுகிறத்தை மறைக்கையாய், அதுள்ளது யௌவநத்திலேயாகையாலே, களவென்று - யௌவநத்தைச்சொல்லி, களவுகலந்தாலென்றது - யௌவநம் குடிபுகுந்தாலென்றபடி. கீழ்வாக்யத்வயத்தையும் அடைவே விவரிக்கிறார் - வாசல் இத்யாதி வாக்யத்வயத்தாலே. புறப்படக்கடவதல்லாத - புறப்படப்பண்ணக்கடவதல்லாத. "என்னை" - என்னுடைய. நொடித்துக்கொண்டு - இங்கிதமாகவழைத்துக்கொண்டு. கீழே "அலைகடற்பள்ளியம்மான்" என்று வைத்து, இங்கே "சேணுயர்வானத்திருக்கும்" என்கிறதென்? என்ன - இவற்றைக்கொண்டு இத்யாதி.

யடியிட்டுக் கையும்மடலுமாய் வந்து நிற்கவுங்கூடும்" என்றுபார்த்து, எட்டாநிலத்திலே போய் இருந்தானாயிற்று. [சேணுயர்வானத்திருக்கும்] - சேணென்றும் - உயர்த்தி, உயரென்றும் - உயர்த்தி; இரண்டாலும்-மிக்க ஓக்கத்தையுடைத்தான, வானத்திலேயிருக்கும். அந்தரஜாதிகளான இந்த்ராதிகள் குடியிருப்பிலன்றிக்கே, பரமபதத்திலே. [தேவபிரான் தன்னை] - இங்கேவந்து கொண்டுபோன நாணும் நிறையுமான ஓடுக்குமாட்டைப் பாரித்துக்கொண்டு, தன்வெற்றி காட்டிக்கொண்டிருக்கிறபடி. "ஸம்ஸாரமண்டலத்திற்போய் நான் பெற்றுக்கொண்டுவந்தவை யிவை" என்று தன்வெற்றி காட்டிக்கொண்டிருக்கிற ஓலக்கம் முந்தறமுன்னம் அதுவாகப்பெற்றோமிறே, ப்ரஹ்மாதிக ளோலக்கம்போலே லாஹாலாஹாதிகளில்வரும் துடிப்பறியாத ஓலக்கமன்றிக்கே. வ்யதிரேகத்தால்வரும் வ்யஸநம் அறியார்களேயாகிலும், அந்வயத்தால்வரும் ரஸம் அறிவர்களிறேமுன்னம். [சேணுயர் வானத்திருக்கும் தேவபிரான்தன்னை] - அவன்தானும், "ப்ரளயத்துக்கு அழியாதநிலம்" என்னுமித்தனையுமாயிற்று ஏற்றமாக அவ்விடத்துக்கு நினைத்திருப்பது; "விரஹப்ரளயம் ஏறிப்பாயாதவிடமில்லை" என்று அறியமாட்டுகிறிலன்; அறிந்தானாகில் கிடந்தவிடத்தே கிடக்குமே! [தன்னை] - பார்கிடாய் அவ்வோலக்கமும் அவனும் அவ்விருப்பும் என் கையிலே படப்புகுகிறபாடு; இருந்தவிடத்தே இருக்கவொட்டுவேன் என்றிருக்கிறாயோ? இப்போது இங்ஙனே ஒரு வாய்ப்பகட்டுச் சொல்லுகிறாயாகில், அதுசெய்து தலைக்கட்ட வல்லையாகப்புகுகிறாயோ? என்ன, — [ஆணை] - இவள் இப்போது அவனாணை இடுகிறாளோ, தோழியாணையிடுகிறாளோ? என்னில்; — அழிக்கநினைக்கிறவனாணையிடாளே, இனித் தோழியாணையாமத்தனையிறே. இதுக்கு உடன்பட்ட தோழியையொழிய, "வேறு பரதேவதையுண்டு" என்று இராளே இவள்தான். "இது உக்திஸாரமேயாய்ப்போகாமே,

மிக்கவோக்கம் *என்கிற விசேஷணத்துக்கு வ்யாவ்ருத்தி -* **அந்தரஜாதி** *இத்யாதி. இது - சாடு. அந்தரத்திலே - ஆகாசத்திலே ஸஞ்சரிக்கிற, ஜாதியென்றும்; நிஹீநஜாதியென்றும். "தேவபிரான்" என்றதுக்கு - நித்யஸூரிகள்பக்கலிலே வெறுப்புத்தோன்ற பாவம் - இங்கேவந்து இத்யாதி. ஒடுக்கு* **மாட்டை** *- முட்டுக்கோல்கொண்டபஹரித்தத்ரவ்யத்தை. "தன்னை" என்றதுக்கு பாவம் - தன்வெற்றி* **காட்டிக்கொண்டு** *என்றது. "தேவபிரான்" என்றதுக்கு - நித்யஸூரிகள்பக்கல் ஆதரந்தோன்ற பாவாந்தரம் -* **ஸம்ஸார** *இத்யாதி. அன்றிக்கே, இங்கேவந்து இத்யாதிவாக்யம் - "இருக்கும்" என்றதுக்கு பாவமாய்,ஸம்ஸார இத்யாதிவாக்யம் - "தேவபிரான்"என்றதுக்கு பாவமாதல், கீழ்வாக்ய விவரணமாதல்.* **ஸம்ஸாரமண்டல** *இத்யாதிவாக்யம் - ப்ரஹ்மாதிகள் இத்யாதிவாக்யாநந்தரே அநுஸந்தேயம்.* **அதுவாக** *- அந்த நித்யஸூரிக ளோலக்கமாக. அதுவாகப்பெற்றோமிறே யென்று - நித்யஸூரிகளுடைய ஓலக்கத்தைக் கொண்டாடுகைக்கு ஹேதுவேதென்ன - ப்ரஹ்மாதிகள் இத்யாதி ஆதல். லாபத்தால் வரும் துடிப்பாவது - ஈடுபாடு. துடிப்பு - ஈடுபாடும், க்லேசமும். லாபத்தால் வரும் துடிப்பொழிய, அலாபத்தால்வரும் துடிப்பறிவர்களோ? என்ன -* **வ்யதிரேகத்தால்** *இத்யாதி. அதாவது - அந்வயரஸமறிந்தபோதே, "இம்மகளைப்பெற்றதாயர்" இத்யாதிப்படியே வ்யதிரேகதுக்கமும் பொறுக்கமாட்டார்களென்றபடி. "சேணுயர்வானம்" என்றதுக்கு, "இவற்றைக்கொண்டு" இத்யாதிவாக்யத்திலே - ஒருதாத்பர்யம் அருளிச்செய்து, தாத்பர்யாந்தரம்-***அவன்தானும்** *இத்யாதி. "அறியான்" என்று எப்படியறிவாய்? என்ன -* **அறிந்தானாகில்** *இத்யாதி. "தேவபிரான்தன்னை" என்றதுக்கு - நித்யஸூரிகள் பக்கலிலும் வெறுப்புத்தோன்ற தாத்பர்யாந்தரம் -* **பார்கிடாய்** *இத்யாதி.* **வாய்ப்பகட்டு** *- ச்ருஹைச்வர்யம். "ஆணை" என்றதுக்கு அர்த்தத்வயம் - ஆணையாதல், தடையாதல்.* **அழிக்கநினைக்கிறவன்** *- அழிக்கநினைக்கப்பட்டவன். ஆணையிடும்போது ஒருதேவதையாணை இடவேண்டாவோ? என்ன -* **இதுக்குஉடன்பட்ட** *இத்யாதி.* **தோற்றவிருந்தாள் என்றவநந்தரம்**

இவள் இத்தனையுஞ்செய்து தலைக்கட்டப்பெறுவதுகாண்" என்று தன்னினைவு தோற்ற விருந்தாள், "என்தோழீ" என்று அவளை அணைத்துக்கோள்ளுகிறாள். அன்றிக்கே, "இவளது கூடப்புகாநின்றதோ" என்றிருந்தாளாய், அவளைப்பார்த்து, "ஆணையென்" என்கிறாளென்னுதல். அவன் என்சோல்வழியே வருமாகில், நீ என்கருத்திலே யொழுகுவுதியாகில், தாய்மார்தோடக்கமானார் வார்த்தைகோண்டு கார்யமில்லையாயிற்றபின்பு, இனித்தடையேன்? என்றுமாம். அவன் இவள்வழியேவருகையாவது என்? என்னில்,—ஸர்வாதிகனுகையாலே அழியவிடானே, இவள்தானே இவள்கருத்திலே நடப்பாளொருத்தியே. [ஆணையென்] - தடையேன்? ஆணை - தடை. [உலகுதோறலர்தூற்றி] - "அஸாதாரண விபூதியிலுள்ளார்தாம் பிறரறியும்படி இரார்களிறே" என்றிருக்கைக்கு, அவ்வோலகத்திலே வந்தாலோ! நான்சொல்லுவது; வழியடையப் படப்புகுகிறபாடு பார்கிடாய் என்கையிலே. லோகங்களெங்கும்புக்கு அழிக்கக்கடவேன். அலர் - பழி. என்னை ஊரார் பழிசொல்லும்படி பண்ணினுகில், தன்னை லோகமாகப் பழிசொல்லும்படி பண்ணுகிறேன். [ஆங்கோணைகள்செய்து] - என்னுலான மிறுக்குக்களையெல்லாம் பண்ணக்கடவேன். கோணை - மிறுக்கு. அதாவது - நான் கையும்மடலுமாய்ப் புறப்பட்டவாறே, "நம்குணநிஷ்ட்டர் படி யிதுவன்றோ" என்று குணங்கோண்டாடி அதிலே செலவெழுதக்கடவன்; "அன்று, உன்னைப்பெறுக்கைக்கு ஸாதநாநுஷ்ட்டாநம் பண்ணுகிறேன்" என்னக்கடவேன். நான் கையும்மடலுமாய்ச் சென்றவாறே அஞ்சி எதிரேபுறப்பட்டு நிற்கக்கடவன், அப்போதாக அவன்காலிலே குனியக்கடவேன். "ருணம் ப்ரவ்ருத்தமிவ" (ருணம்ப்ரவ்ருத்தமிவ) என்னும்படி தோட்டுவிடக்கடவேன், "ஸ்ரிரஸாயாசதஸ்தஸ்ய வசநம்நக்ருதம்மயா" (ஸ்ரிரஸாயாசதஸ்தஸ்ய வசநம்நக்ருதம்மயா) - என்று புண்படும்படி பண்ணக்கடவேன்.

'அத்தை அவள்முகவிகாஸத்தாலேயறிந்து' என்றுகூட்டுவது. "என்" என்கிறபதத்தை - கீழேகூட்டுதல், மேலேகூட்டுதல். அதாவது - "என் - தோழி" என்னுதல், "ஆணை - என்" என்னுதல். **இவளது கூடப்புகாநின்றதோ** - இவளுடையவுத்யோகம் கார்யபர்யவஸாயியாகப்புகாநின்றதோ? என, தடையில்லையோ? என்ன - **அவனென்** இத்யாதி. **ஒழுகுவுதியாகில்** - புகுவுதியாகில். தடஸ்த்தஸங்காபரிஹாரமுகேந பூர்வவாக்யவிவரணம் - **அவன்இவள்** இத்யாதி. ஸர்வாதிகனென்றது - "தேவபிரான்" என்றத்தைப்பற்ற. **அலர்தூற்றி** - அபவாதம்சொல்லி. தேவபிரானைப் பழிசொல்லுகிறாளாகில், உலகுதோறலர்தூற்றுகிறது எதுக்கென்ன - **அஸாதாரண** இத்யாதி. அதாவது - தோஷத்தையும் குணவதுபாதேயமாகக்கொள்ளுகிற அவ்விபூதியிலன்றிக்கே, குணத்தையும் தோஷமாகக் கொள்ளுகிற உலகுதோறென்றபடி. தாம் பிறரறியும்படி இரார்களிறேயென்றது - இவள்செய்கிற நீதி தங்களுக்கு அநபிமதமாகிலும், பிறரறியாதபடி அடக்கிக்கொண்டிருப்பார்களிறே என்றபடி. கீழ் வாக்யவிவரணம் - **லோகங்கள்** இத்யாதி. அழிக்கக்கடவேன் - "குனுதிகன்" என்கிற பெருமையையென்றபடி. **அதாவது** - மிறுக்காவது. "கோணைகள்" என்கிற பஹுவசநதாத்பர்யம்-**நான் கையும் மடலும்** இத்யாதிவாக்யத்வயம். **குணநிஷ்ட்டர்படியிதுவன்றோ** - ஸௌந்தர்யாதி குணநிஷ்ட்டர் க்ஷணகாலவிஶ்லேஷம் பொறுக்கமாட்டாதபடியிதுவன்றோ? காலிலேகுனிந்தால் அவனுக்கு மிறுக்காயிருக்குமோ? என்ன - **ருணம் ப்ரவ்ருத்தம்** இத்யாதி. **தோட்டுவிடுகை** - ஈடுபடுத்துகையும், ப்ரஹரிக்கையும். ப்ரமாணாந்தரம் - ஸ்ரிரஸா இத்யாதி. "கோவிந்தேதி யதாக்ரந்தத் க்ருஷ்ணா மாம் தூரவாஸிநம்। ருணம் ப்ரவ்ருத்தமிவ மே ஹ்ருதயாந்நாபஸர்பதி" இத்யுத்யோகபர்வணி த்ருதராஷ்ட்ரம் ப்ரதி ஸஞ்சயோக்தம் க்ருஷ்ணவசநம். "ஶஸ்ரவ தயித ஸ்மபோஷஸ்ய வி த்ருக்ஷ்ய ஸ்ரமதஃ। ஸ்ரிரஸாயாசதஸ்தஸ்ய வசநம் ந க்ருதம் மயா॥௧௬॥" இதி யுத்தகாண்டே [௧௨௰]ராவணவதாநந்தரே ராமோக்தி. இதுக்கு அர்த்தம் - பிள்ளை இத்யாதி. காலிலேகுனிந்

பிள்ளைதலையாலேயிரந்த காரியத்தை மறுத்துப்போந்தோ மென்றாரிறே. நான் இத்தைச் செய்தால், அவர் தம்மனிச்சழியாமைக்காக, "தம்மோடு அஸாதாரணஸம்பந்தமுடையார் தங்கள் ஆதரத்தாலே செய்யக்கடவதோன்றன்றோ இது" என்னக்கடவன்; "அதன்று இது, நான் ஸாதநாநுஷ்டாநம் பண்ணுகிறேன்" என்னக்கடவேன். "நித்யாஞ்ஜலிபுடாஹ்ருஷ்டா:" (நித்யாஞ்ஜலிபுடாஹ்ருஷ்டா:) என்கிறவிதிலே செலவெழுதப் பார்ப்பர் அவர்; "அங்ஙனன்று, உன்னுடம்புபெறுகைக்காகச்செய்கிறேன்" என்னக்கடவேன். [குதிரியாய்] - "குந்திரி" என்கிறவித்தை [குதிரி] என்கிறதாய், அதாகிறது - அடங்காஸ்த்ரீயாய், தடையில்லாப்பெண் என்றபடியாய், தடையுடையேனன்றிக்கே என்னுதல்; அன்றிக்கே, குதிரி என்று செப்பாய்; ஸ்த்ரீகளுக்கு தநமாகிறது - நாணும் நிறையுமிறே, அது இட்டுவைக்கும் கலமாகுமிறே ஶரீரம், அவைபோகையாலே கேவல ஶரீர மாத்ரமேயாய் என்னுதல். பனைமடலைக் குதிரையாகப்பண்ணிக் கையிலேகொள்ளக்கடவது, அத்தையுடையேனாய் என்னுதல். [மடலூர்துமே] - "செய்யக்கடவதாயிற்றபின்பு, இனி, ஒன்றைநினைத்து ஒன்றைச்சொல்லுகிறதென்?" என்று பார்த்து அதுதன்னையே சொல்லுகிறாள். (௯)

பத்தாம்பாட்டு.

யாமடலூர்ந்தும் எம்மாழியங்கைப்பிரானுடைத்
தூமடல்தண்ணந்துழாய் மலர்கொண்டுசூடுவோம்
யாமடமின்றித் தெருவுதோறயல்தையலார்
நாமடங்காப்பழிதூற்றி நாடுமிரைக்கவே.

ஆ.—(யாமடலூர்ந்தும்.) யாமடமின்றித் தெருவுதோறயல்தையலார்நாவுங் கூடமடங்காத பழிகளைத்தூற்றி நாடுமிரைக்க யாம்மடலூர்ந்தாகிலும், எம்மாழியங்கைப் பிரானுடைத் தூமடல்தண்ணந்துழாய் மலர்கொண்டு சூடுவோமென்கிறாள்.

ததுக்கும் ஈஶ்வரன் செலவெழுதினபடியை த்விவிதமாகக்காட்டுகிறார் - நான்இத்தைச்செய்தால் இத்யாதியாலும், நித்யாஞ்ஜலிபுடா இத்யாதியாலும். (ஸாரா-கூ0) "உத்தாநாம் லக்ஷணம் ஹ்யேதத்க்ருதஜ்ஞத்வமதீவதாஸிநாம் । நித்யாஞ்ஜலிபுடாஹ்ருஷ்டா நம இத்யேவவாதிந:" இத்தைச்செய்தால் - *காலிலேகுனிந்தால்.* மனிச்சு - *பௌருஷம். "நத்வம் ஸ்வாமீ ஶேஷாநத்ராஸமாஶ்ரிதா: । நத்ந த்வம்ஸாமேவாயம் நவ்யேயாஜநவஶ்யக:"* *என்றத்தைக்கடாக்ஷித்து* - அஸாதாரணபந்தமுடையார் *இத்யாதி. தங்கள் ஆதரத்தாலே - "ஸ்வரூப ப்ராப்தமன்றோ" என்கிற தங்கள் ஆதரத்தாலே.* நித்யாஞ்ஜலிபுடாஹ்ருஷ்டா: *என்கிறவிதிலே யென்றது - ப்ராப்யத்வத்திலே யென்றபடி.* மூந்தின *அர்த்தத்துக்கு,* குதிரி - *குத்ஸிதஸ்த்ரீயாய், அடங்காப்பெண் என்றபடி; அன்றிக்கே, ஆபரமிட்டுவைக்கும் செப்பென்னுதல்; குதிரையையுடையவள் என்னுதல். "மடலூர்துமே" என்கிற அவதாரணார்த்தம் -* செய்யக்கடவதாய் இத்யாதி. ஒன்றைநினைத்து - *படலைநினைத்து.* ஒன்றைச்சொல்லுகிறதேன் - *"உலகுதோறலர்தூற்றி" என்றுசொல்லுறதென்?* அதுதன்னையே - *மடலூருகைதன்னையே. க்ரமேணாந்வய:* (௯)

ஒ.—பத்தாம்பாட்டில், இருந்ததேகுடியாக க்ஷோபிக்கும்படி மடலூர்ந்தாகிலும் நிரதிசயபோக்யனானவனைக் காணக்கடவோமென்கிறாள்.

[யாம் என்றுதொடங்கி] - மடலூர்ந்தாகிலும், கையும்திருவாழியையும்காட்டி நம்மை இப்பாடுபடுத்தினவனுடைய செவ்வித்திருத்துழாய்மலர்கொண்டு சூடுவோம். [யாம் என்று தொடங்கி] - நாம் ஸ்த்ரீத்வத்தைத் தவிர்ந்து அபந்துக்கள்வாயிலும் புறப்படாத குணஹாநியைத் தெருவுதோறும் ப்ரஸித்தமாகச்சொல்லி ஜகத்தும் க்ஷோபிக்கும்படியாக.

ப.—அநந்தரம், நிரதிசயபோக்யமான அஸாதாரண சிஹ்நங்களையுடையவனை எங்கும்பழிதூற்றி ஜகத்க்ஷோபம் பிறக்கும்படி மடலூர்ந்தேயாகிலும் அவன் மாலையைச்சூடுவோ மென்கிறாள்.

(அத்யந்தாபிநிவேசத்தாலே), யா - ஏதேனுமொருபடியாலும் ஸ்த்ரீத்வாநுரூபமான, மடம்-ஒடுக்கம், இன்றி-இன்றியே, (லோகத்தளவில் பர்யவஸியாதே), தெருவுதோறு-தெருவுதோறும் புக்கு, அயல்-அயலாரான, தையலார்-ஸ்த்ரீகளானவர்கள், நாநா, மடங்கா - ஓவாதேசொல்லும், பழி-பழியை, தூற்றி-தூற்றி, நாடும்-ஸகலஜகத்தும், இரைக்க - க்ஷோபிதமாய்க் கூப்பிடும்படி, யாம் - (மடலூரத்தகாத ஸ்த்ரீத்வத்தையுடைய) நாம், மடல்-(நமக்குசூடல்லாத) மடலை, ஊர்ந்தும் - ஊர்ந்தேயாகிலும், ஆழியங்கை - கையுந்திருவாழியுமானவழகை யநுபவிப்பித்து, எம்-நம்மை வஶீகரித்த, பிரானுடை - உபகாரகனுடைய, தூ-செவ்வியாலே தூய்தான, மடல் - இதழையுடைய, தண்-ஶ்ரமஹரமாய், அம்-தர்ஶநீயமான, துழாய் - திருத்துழாய், மலர் - பூந்தாரை, கொண்டு - ("வதிஷ்யாமி தாவஹீதா" என்கிற கணக்கிலே கையில்மடல்வாங்குகைக்காக) அவன்தரவாங்கி, சூடுவோம் - நந்தலையிலே சூடக்கடவோம். பன்மை - மடலூரத்துணிந்த மர்வோக்தி. யாமடமென்றது - ஏதேனுமொருமடப்பமுமென்றபடி.

இ.—பத்தாம்பாட்டில், இருந்ததேகுடியாக க்ஷோபிக்கும்படி மடலூர்ந்தேயாகிலும், நிரதிசயபோக்யனானவனைக் காணக்கடவோமென்கிறாள்.

[யாமடலூர்ந்தும்] - செய்யக்கடவதல்லாதத்தைச் செய்தேயாகிலும். "ததஸ்யஸத்ருஶம்" என்று இருக்கக்கடவ நாம் மடலூர்ந்தேயாகிலும். இங்கு மடலாகநினைக்கிறது;—பெற்றன்றித்தவிராத வ்யவஸாயத்வரையும், அதுக்கடியான உபாயவைலக்ஷண்யாநுஸந்தாநமும், "உபாயந்தன்னாலே பேறு" என்கிற துணிவும், வேறொன்றை யுபாயமாக நினையாமையும், க்ரமப்ராப்தி பற்றாமையும், மடலாய்ச்செல்லுகிறது. [எம்மாழியங்கைப்பிரானுடை] - கையுந்திருவாழியுமான சேர்த்தியழகைக் காட்டி இப்படி மடலெடுப்பித்தவனுடைய. [தூமடல் இத்யாதி] - மடலைக்கொடுபுறப்பட்டால், எதிரேவந்து என்கையில் மடலைவாங்கித் தன்தோளில் மாலையைவாங்கி என்தோளிலே யிடிலிறே அவனுக்கு நிறமுள்ளது; இல்லையாகில், அவன்படும்படிபாராய். செவ்விமாலை சூடக்காண் நான் வேண்டியிருக்கிறது, என்தோளில் மாலைபாராய் சருகானபடி. அத்தலையை யழித்தாகிலும் பெறக்கடவோம். [தூமடல்] - செவ்வித்திருத்துழாய். உனக்கு நிரூபகமான ஸ்த்ரீத்வம் எல்லாவளவிலும் விடாதுகாணென்ன;—[யாமடமின்றி] - லஜ்ஜா சூந்யையாய். [தெருவுதோறு] - லோகமாகத் திரண்டவிடத்தே சொல்லிவிடேன்,

தெருவுகள்தோறும் புகக்கடவேன். [அயல்தையலார்] - "க்ருஹார்ச்சனைகள், அர்ச்சக பராதீனன்" என்றுஞ்சொல்லி மூலைகளிலே யிருக்கவொட்டுவேனே? [அயல்தையலார்] - அந்யைகளான ஸ்த்ரீகள். [நாமடங்காப்பழிதூற்றி] - அவர்களுக்கு நாப்புரளாத பழி யென்னுதல். நாமடங்காதே - வாயோவாதே பழிசொல்லும்படியென்னுதல். [தூற்றி] - ஶிஶுபாலாதிகள்வாக்கில் கேளாததும் கேட்கும்படி. அவன் ஊரவர்கவ்வை பரி ஹரியானாகில், நாடாகப் பழிசொல்லும்படி பண்ணுகிறேன். ஜகத்க்ஷோபத்தைப் பண்ணக்கடவேன். இந்நாட்டுக்கு ஒருபேரிறே யுண்டாகப்புகுகிறது. "ஒருத்தி யொருவனைப் படுத்திற்றே; ஒருவன் முகங்காட்டிற்றிலன்" என்னும்படி பண்ணுகிறேன். "ஒருவன் உளனாகில் ஒருத்தியுடம்பு இங்ஙனே யிருக்கவடுக்குமோ, ஜகத்து நிரீஶ்வரம்" என்னும்படி பண்ணுகிறேன். கலந்த என்வார்த்தையிற்காட்டிலோ வடிவில்லாத வேதத்தின்வார்த்தை. எல்லாரையும் நாஸ்திகராம்படி பண்ணுகிறேன். நாடுமிரைக்கவே - யாமடலூர்ந்தும் - தூமடல்தண்ணந்துழாய்மலர்கொண்டுசூடுவோம்.

ஈடு.—பத்தாம்பாட்டு. ஜகத்க்ஷோபம்பிறக்கும்படி மடலூர்ந்தாகிலும், நிரதிஶயபோக்யனானவனைக் காணக்கடவே னென்கிறாள்.

[யாமடலூர்ந்தும்] - செய்யக்கடவதல்லாதத்தைச் செய்தேயாகிலும். "தத்தஸ்யஸத்ருஶம்பவேத்" (தத்தஸ்யஸத்ருஶம்பவேத்) என்றிருக்கக்கடவநாம், மடலூர்ந்தே யாகிலும். இங்கு, மடலாகநினைக்கிறது;—பெற்றன்றித்தரியாத உபேயவைலக்ஷண்யமும், அதுக்கடியான உபாயவைலக்ஷண்யாநுஸந்தாநமும், "அவ்வுபாயந்தன்னாலே பேறு" என்கிறதுணிவும், வேறொன்றை உபாயமாகநினையாமையும், க்ரமப்ராப்திபற்றாதொழிகையும் - மடலாய்ச்செல்லுகிறது. "மடலூர்தும்" என்றாள் கீழ்; "இது உனக்குவார்த்தை

ப்ர:—(யாமடலூர்ந்தும்)— ஸாந்த்ரகாண்டே [௩௯] ஹநூமத்வாக்யம் ஸீதா, "ஶரௌரஸ்தைஸ்ஸுதீக்ஷ்ணாக்ரைர்ப்பாணைரக்ஷோகணாந்: । ஶாம்ப்யேதவ்யதிகா கா தத்தஸ்ய ஸத்ருஶம்பவேத்॥௩௦॥"

பத்தாம்பாட்டு.—யாமடல் இத்யாதி. "நாடுமிரைக்க - யாமடலூர்ந்தும்" என்றத்தைக் கடாக்ஷித்து-ஜகத்க்ஷோபம் இத்யாதி. "எம்மாழி" இத்யாதியைப்பற்ற-நிரதிஶயபோக்யன் என்றது.

"ஊர்ந்தும்" என்கிற அபிப்ராயார்த்தம் - செய்யக்கடவதல்லாத இத்யாதி. "யாம்" என்றதுக்கு பாவம் - தத்தஸ்ய இத்யாதி. ஸ்வாபதேஶம் - இங்கு மடலாக இத்யாதி. இங்குமடலாக நினைக்கிறது என்றவநந்தரம், எத்தையென்னில் என்று கூட்டுவது. மடலென்கிறது - க்ரமப்ராப்தி பற்றாதொழிகையாகிற த்வரையையேயானாலும், தத்தேதுக்களாகையாலே மற்றவையும் மடலென்கிறது. உபேயவைலக்ஷண்யம் - உபேயபூதனான ஈஶ்வரனுடைய ஸௌந்தர்யாதி நிபந்தநமான வைலக்ஷண்யம். அதுக்கடியான - பெற்றன்றித்தரியாமைக்கடியான. உபாயவைலக்ஷண்யம் - உபாயபூதனான ஈஶ்வரனுடைய ஸர்வஜ்ஞத்வ ஸர்வஶக்தித்வாதி நிபந்தநமான வைலக்ஷண்யம். துணிவு - ரக்ஷகாந்தராஶூந்யமாக "ஈஶ்வரனாலேயேபேறு" என்கிற அத்யவஸாயம். வேறொன்றை - ஸித்தோபாயவ்யதிரிக்தமான உபாயாந்தரங்களை. உபாயவைலக்ஷண்யாநுஸந்தாநத்துக்கு த்வராஹேதுத்வம் எப்படியென்னில்;—ஜ்ஞாநஶக்த்யாதிவிஶிஷ்டனே உபாயமாகையாலே விளம்பஹேதுவில்லையென்று த்வராஹேதுவாம். உபாயம் அவிளம்ப்யபலப்ரதமானாலும், தனக்கு அத்யவஸாயமில்லாவிட்டால் ஆறியிருக்கலாம்; அத்யவஸாயமுண்டானால் ஆறியிருக்கப்போகாமையாலே துணிவும் த்வராஹேதுவென்றபடி. "மடலூர்ந்தும்" என்ற அபிப்ராயத்தாலே - "மடலூரவொண்ணாது" என்கிற நிஷேதம் ப்ரஸக்தமாகவேண்டுகையாலே, அந்தப்ரஸக்தியைக் காட்டுகிறார் - மடலூர்தும் என்றாள்கீழ் இத்யாதி.

யல்ல ; முதல்தன்னிலே ஸ்த்ரீகள் மடலூரக்கடவதல்லவாக விலக்கிற்று ; அதுக்குமேலே, நீயாகிறாய் "நித்யம்ப்ராணஸமாஹிதா" (நித்யம்ப்ராணஸமாஹிதா) என்கிறபடியே, உன்னையழியமாறியும் அவனுக்கு ஹிதகாமையாயிருப்பாளொருத்தி ; அவன்தான் உன் பக்கல் வருகைக்கு உன்னிற்காட்டில் த்வரித்திருக்கிறானொருவன் ; க்ரமப்ராப்திபற்றாமல் படுகிறாயித்தனை, நீ ஸாஹஸத்திலே ஒருப்படுகிற இது உன்ஸ்வரூபத்தோடுசேராது" என்ன;— அதுபார்க்கவொண்ணாதபடிகாண் எனக்கு அவன்பக்கலுண்டான ப்ராவண்யாதிஶய மென்கிறாள். [யாமடலூர்ந்தும்] - இப்படியிருக்கிற என்ஸ்வரூபத்தை அழியமாறியாகிலும் பெறத்தவிரேன். [மடலூர்ந்தும்] - இத்தைச்செய்தாகிலும். செய்யக்கடவதல்லாதது செய்தாகிலும் பெறக்கடவேன். அஹமர்த்தத்தோடு சேராத செயலைச் செய்தேயாகிலும். ப்ரணவத்தில் அஹமர்த்தத்துக்கு வாசகஶப்தமிருக்கிறபடியாயிற்று - யாமென்கிறது. அத்தலையையிட்டிறே இவனை நிரூபிப்பது. [எம்மாழி இத்யாதி] - நாராயணஶப்தார்த்தம். இவனையிட்டிறே அவனைநிரூபிப்பது. [எம் இத்யாதி] - அவன் கையுந்திருவாழியும்போலே யன்றோ நான் கையும்மடலுமாய்ப் புறப்பட்டால் இருப்பது. நான் கையும்மடலுமாய்ப்

ப்ர:—ஸ்ரீராமாயணே ஸம்க்ஷேபே நாரதஃ, "ராமஸ்ய தயிதா பார்யா நித்யம் ப்ராணஸமா ஹிதா । ஜநகஸ்ய குலே ஜாதா தேவமாயேவ நிர்மிதா ॥ உசு½ ॥ ஸர்வலக்ஷணஸம்பந்நா நாரீணாமுத்தமா வதூ: । ஸீதாப்யநுகதா ராமம் ஶஶிநம் ரோஹிணீ யதா ॥ உஎ½ ॥"

யத்வா, புநஶ்ச ஒருவைஷ்ணவர் எழுந்தருள, அடியேதொடங்கி ப்ரஸாதிக்கிறார் - மடலூர்துமென்றாள் இத்யாதி என்னுதல். விலக்கிற்று - "கடலன்னகாமத்தராகிலும்" இத்யாதியாலே விலக்கிற்று. உன்ஸ்வரூபத்தோடு - அவனுக்கு அதிஶயகரமான உன்ஸ்வரூபத்தோடு. "மலர்கொண்டு சூடுவோம்" என்றத்தைக்கூட்டி, "யாம்" என்றதிலேநோக்காக ஹாவம் - இப்படி இத்யாதி. என்ஸ்வரூபத்தை - ஸ்த்ரீத்வஸ்வரூபத்தை. இது - "யாம்" என்றபதத்துக்கு தாத்பர்யம். ஶப்தார்த்தம் - இத்தைச்செய்தாகிலும் என்றது. இத்தை - நிஷித்தமான மடலூருகையை. "மலர்கொண்டுசூடுவோம்" என்றத்தைக்கூட்டி, "மடலூர்ந்தும்" என்றதிலேநோக்காக தாத்பர்யம் - செய்யக்கடவது இத்யாதி. "யாமடலூர்ந்தும்" என்றதுக்கு ஸ்வாபதேஶத்திலே ஹாவம் - அஹமர்த்தத்தோடு இத்யாதி. அதாவது - ப்ரணவோக்தமான ஶேஷத்வஸ்வரூபத்துக்குச்சேராத ஸ்வப்ரவ்ருத்தியைச் செய்தேயாகிலுமென்றபடி. ப்ரணவத்திற்போலே இங்கு அஹமர்த்தவாசகமான ஶப்தமேதென்ன - ப்ரணவத்தில் இத்யாதி. ப்ரணவத்தில் அஹமர்த்தத்துக்கு - ப்ரணவோக்தஶேஷத்வாஶ்ரயமான அஹமர்த்தத்துக்கு. "ஓங்காரோ விஷ்ணுவாசக:" என்று - ப்ரணவம் ஈஶ்வரவாசகமன்றோ? என்ன - அத்தலையை இத்யாதி. அதாவது - "ராஜபுருஷன்" என்கிறவிடத்தில் - ராஜாவைவிட்டு புருஷனை நிரூபித்தாற்போலே, ஈஶ்வரனையிட்டு இவனை நிரூபிக்கிறதாகையாலே, ஶப்தப்ராதாந்யத்தையிட்டு ஜீவனைச் சொல்லுகிறதென்னலாமென்றபடி. நாராயணஶப்தார்த்தம் என்றதுக்கு தாத்பர்யமேதென்ன - இவனை இத்யாதி. அதாவது - நாரங்களுக்கு அயநமென்று - சேதநனையிட்டு அவனைநிரூபித்தவோபாதி, இங்கும் "எம்" என்று - இத்தலையையிட்டு அவனைநிரூபிக்கிறதென்றபடி. "யாமடலூர்ந்தும்" என்றத்தையும் கடாக்ஷித்து, "ஆழியங்கைப்பிரான்" என்றதுக்கு ஹாவம் - அவன்கையும் இத்யாதி. கையுந்திருவாழியும்போலே - கையுந்திருவாழியுமாய்ப்புறப்பட்டாற்போலே. இவ்வாக்யத்துக்கு ஹாவம்-அவன்கையுந்திருவாழியுமாய்ப்புறப்பட்டால் கார்யம் அமோகமாமாப்போலே,நான்கையும் மடலுமாய்ப்புறப்பட்டால் கார்யம் அமோகமாம்படியும் என்று. அன்றிக்கே, அவனுக்குப்போலே தேஜஸ்கரமென்றுமாம். "தூமடல்தண்ணந்துழாய்" இத்யாதியைக் கடாக்ஷித்து, "ஆழியங்கை" என்றதுக்கு ஹாவாந்தரம் - நான்கையும் இத்யாதி. அதாவது - தனக்கிடுகைக்காகத் திருவாழியைச்

புறப்பட்டால், அஞ்சி எதிரேவந்து தன்கையிலாபரணத்தைவாங்கி என்கையிலேயிட்டு, தன் தோளில் மாலையைவாங்கி என்தோளிலேயிட்டானாகில் குடியிருக்கிறான்; இல்லையாகில் எல்லாங்கூடவில்லையாகிறது. [தூமடல்] - என்தோளில் மாலையைப்பாராய், நான் செவ்விமாலை சூடவேணுங்காண். விரஹத்தாலே தன்மார்பில் மாலை சருகாயிறேகிடக்கிறது, செவ்விமாலையுள்ளது அவன்பக்கலிலேயிறே. ஒன்றைச்சொல்லுகிறாயாகில் செய்து தலைக்கட்டப்புகுகிறாயோ, உன் ஸ்த்ரீத்வம் உன்னைக்காற்கட்டுங்காண் என்ன,—[யாமடமின்றி] - அதுவோ! ஸ்த்ரீத்வமில்லாதார்செய்வதை முதலிலே செய்யக்கடவோம். [தெருவுதோறு] - "உலகுதோறலர்தூற்றி" என்றாளே கீழே; அங்ஙன் லோகமாகத்திரண்டத்திலே லோகத்துக்காக ஒருவார்த்தை சொல்லிவிடுவேனோ, தெருவுகள்தோறும்புக்கு, அறியாதாரெல்லாரும் அறியும்படி அலர்தூற்றக்கடவேன். "க்ருஹார்ச்சனைகள், அர்ச்சகபராதீநம்" என்றுஒருமூலைகளிலேபுக்கு இருக்கவொட்டுவேனோ. அயல்தையலாருண்டு- அந்யைகளான ஸ்த்ரீகள்; அவர்கள் நாப்புரளாதபடியான பழிகளையுமெல்லாம் சொல்லி. ஶிஶுபாலாதிகள்வாயில் கேளாதவையுமெல்லாம் என்வாயிலேகேட்கவிறே புகுகிறான். அன்றிக்கே, அவர்கள் நா, மீளாதே உருவப்பழிசொன்னபடியேயிருக்கும்படியான பழிகளைத்தூற்றியென்றுமாம். அன்றிக்கே, நாம் தங்களுக்கடங்காதே மடல்கொண்டு புறப்பட்டபழிதூற்றியென்றுமாம். [நாடுமிரைக்கவே] - அவன் என்னுடைய ஊரவர்கவ்வை பரிஹரித்திலனாகில், நான் தன்னை நாடாக இரைக்கும்படி பண்ணுகிறேன். ஜகத்க்ஷோபம்பிறக்கும்படி பண்ணுகிறேன். "ஒருத்தி ஒருவனைப்படுத்திற்றே! ஒருவன்முகங்காட்டிற்றிலன்" என்னும்படிபண்ணுகிறேன். தத்வபரமானவாக்யங்களும் உபாஸநபரமானவாக்யங்களுமெல்லாம் அழியவிறேபுகுகிறது; "ஒருவன் உளனாகில், ஆசைப்பட்டவள் இப்படிபட இருக்குமோ, ஆனபின்பு நிரீஶ்வரங்காண் ஜகத்து" என்னும்படிபண்ணுகிறேன். அவனோடே

சொல்லுகிறாளென்றபடி. ஆபரணத்தை - திருவாழியை. அன்றிக்கே, "ஆழி" என்று - திருவாழிமோதிரமென்றுமாம். எல்லாங்கூட - உபயஸ்வரூபமும். தூமடல் - செவ்வியுடையதளம். "தூமடல்" என்கிறவிஶேஷணத்துக்கு ஭ாவம் - என்தோளில் இத்யாதி. தனக்குச்செவ்வியமாலையில்லையோ? என்ன - விரஹத்தாலே இத்யாதி. "மடலூர்ந்தும்" என்றத்தையுங்கூட்டி ஭ாவம் - அதுவோ இத்யாதி. அதுவோவென்றது - ஸத்ரீத்வமோ காற்கட்டுவதென்றபடி. முதலிலே - ஸ்த்ரீத்வமில்லாதார் என்று அந்வயிப்பது. ஸ்த்ரீத்வமில்லாதார் - ஸ்வதந்த்ரர். கீழே, "உலகுதோறலர்தூற்றி" என்றுசொல்லியிருக்க, மீளவும் "தெருவுதோறலர்தூற்றி" என்றதுக்கு ஭ாவம் - உலகுதோறு இத்யாதி. அலர்தூற்ற - அபவாதம்சொல்ல. "தெருவுதோறலர்தூற்றி" என்றதுக்கு ஸ்வாபதேஶம் - க்ருஹார்ச்சனைகள் இத்யாதி. அர்ச்சாவதாரப்ராவண்யத்தைப்போக்கி நாஸ்திகராம்படிபண்ணக்கடவன் என்றபடி. அயல்தையலார் நாமடங்காப்பழிதூற்றி என்று ப்ரதீகம்கண்டுகொள்வது. நாப்புரளாதபடியான - சொல்லக்கூசும்படியான. "அயற்றையலார்" என்றதுக்கு ஸ்வாபதேஶம் - ஶிஶுபாலாதிகள் இத்யாதி. த்விதீயார்த்தத்துக்கு, "நாமடங்கா" என்றது - நா மீளாதே என்றபடி. த்ருதீயார்த்தத்துக்கு - "நாம், அடங்கா" என்று பதச்சேதம். அடங்கா - அடங்காதே. தங்களுக்கு - அயல்தையலாரான தங்களுக்கு. இரைக்க - கோஷிக்க. "நாமடங்கா" என்றதின் முந்தின அர்த்தத்வயத்துக்குச்சேர ஭ாவம் - அவன்என்னுடைய இத்யாதி. அதாவது - நானும்பழிதூற்றி, நாடுமிரைக்கும்படிபண்ணுகிறேனென்றபடி. "நாடுமிரைக்க" என்றதுக்கு ஸ்வாபதேஶம் - தத்வபரமான இத்யாதி. தத்வபரமானவாக்யங்கள் - "நாராயணபரம்ப்ரஹ்ம" இத்யாதிவாக்யங்கள். உபாஸநபரமானவாக்யங்கள் - "நிதித்யாஸிதவ்ய:" இத்யாதிகள். வாச்யபூதன் இல்லாமையாலே அழியவிறேபுகுகிறது என்றபடி. அழியும்படி எப்படி? என்ன - ஒருவன் இத்யாதி. வேதம்

கலந்த என்வார்த்தையொழிய, அடியில்லாத வேதஞ்சொன்னவார்த்தையைக் கேட்பர்களோ? ப்ரமேயஶ்ரேஷ்டமானத்தை அழித்தேன், இனி ப்ரமாணஶ்ரேஷ்டமானது தானேநில்லாதிறே. "ஆசைப்பட்டார்க்குப் பலம் இதுவானபின்பு இனி உபாஸநத்துக்குப் பலமில்லை" என்று கைவாங்கி ஜகத்தடைய நாஸ்திகராம்படிபண்ணுகிறேன். [நாடுமிரைக்கவே - யாமடலூர்ந்தும்] - நாட்டார்சொல்லும்பழிதானே ப்ராரகமிறே. "ஊரவர்கவ்வை எரு" என்றாளே, அதிலேயிறே வேரூன்றித்தரிப்பது. (கo)

பதினோராம் பாட்டு.

இரைக்குங்கருங்கடல்வண்ணன் கண்ணபிரான்தன்னை
விரைக்கொள்பொழில் †குருகூர்ச்சடகோபன்‡சொன்ன
நிரைக்கொளந்தாதி ‡யோராயிரத்துளிப்பத்தும்
உரைக்கவல்லார்க்கு வைகுந்தமாகுந்தம்மூரெல்லாம்.

ஆ.—(இரைக்கும்.) ஓதங்கிளருகிற கடல்போலேயிருந்த திருமேனியையுடைய கண்ணபிரான்தன்னை விரைக்கொள்பொழில் குருகூர்ச்சடகோபன்சொல் நிரைக்கொளந்தாதியாயிரத்துள் இப்பத்தும் உரைக்கவல்லார்க்கு; இத்திருவாய்மொழியைச் சொல்ல, தாங்களிருந்ததேசமே தங்களுக்குத் திருநாடென்கிறார்.

ஒ.—நிகமத்தில், இத்திருவாய்மொழி சொல்லவல்லாரிருந்த தேசத்திலே எம்பெருமான் தானேவந்து நித்யஸம்ஶ்லேஷம் பண்ணும் என்கிறார்.

[இரைக்கும் என்று தொடங்கி] - ஓதங்கிளருகிற கடல்போலேயிருந்த திருநிறத்தையுடையனாய் தண்ணளியையுமுடையனான க்ருஷ்ணனை. [விரைக்கொள்பொழில்] - தாம் வ்யவஸிதரானவாறே 'எம்பெருமானுடையவரவு அணித்து' என்று ஸஞ்ஜாதபரி

சொன்னத்தைவிட்டு நம்வார்த்தையைப் ப்ரமாணமாகக்கொள்ளுவர்களோ? என்ன - அவனோடேகலந்த இத்யாதி. வாக்யங்களையழிக்கப்போமோ? என்ன - ப்ரமேயஶ்ரேஷ்டம் இத்யாதி. அதாவது - அந்தரங்கையான நான் இப்படி ப்ரமேயமானவஸ்துவை அழிக்கையாலே, தத்ப்ரதிபாதகமான ப்ரமாணம் அப்ரமாணமாயேவிடுமென்று கருத்து. உபாஸநபரவாக்யங்களை அழிக்கும்படி எப்படி? என்ன - ஆசைப்பட்டார்க்கு இத்யாதி. "நாடுமிரைக்கவே" என்றதுக்கு - ஈஶ்வரவிஷயமாகப்பழிசொல்லுவர்களென்றுசொல்லி, நாயகிவிஷயமாகத் தாத்பர்யாந்தரம் - நாட்டார் இத்யாதி. "நாடுமிரைக்கவே" என்ற அவதாரணத்துக்கு ஹாவமாதல் - நாட்டார் இத்யாதி. இவ்வாக்யத்துக்கு- "அயல்தையலார் நாமடங்காப்பழி என்னைத்தூற்றவும், நாடும் என்னையிரைக்கவும், அதுவே ப்ராரகமாக - மடலூர்ந்தும்" என்று அந்வயமுகேந தாத்பர்யமாகக்கண்டுகொள்வது. நாட்டார்பழி ப்ராரகமோ? என்ன - ஊரவர் இத்யாதி. யாமடமின்றி - நாம் ஸ்த்ரீத்வாநுரூபமான ஒடுக்கமின்றிக்கே என்று ஶப்தார்த்தம். லஜ்ஜாஶூந்யராய் என்றபடி. "ஶாஸ்த்ரஜ்ஞயிதாஶாயஶா நித்யம்ப்ராணஸஞோஷிதா" இத்யாதி ஸங்க்ஷேபே. உத்தரார்த்தபூர்வகம் பூர்வார்த்தத்தையநுஸந்திக்கை அந்வயம். (௪0)

---

† 'குருகூரவர்சடகோபன்' என்று உரைக்குப்பாடம்.

‡ 'சொன்னிரை' என்றும் "அந்தாதியாயிரத்துள்" என்றும் ஆறாயிரப்படிக்குப் பாடம்.

மளமான திருச்சோலை. [நிரைக்கொளந்தாதி] - ஸுஸங்கதமான அர்த்தஶப்தங்களையுடைத்தாகை.

ப.—அநந்தரம், இத்திருவாய்மொழியை அநுஸந்திக்கவல்லவர்களிருந்த தேசமே பரமபதமாமென்று பலத்தையருளிச்செய்கிறார்.

இரைக்கும் - அலையெறிந்திரைக்கிற, கருங்கடல் - கருங்கடல்போலே அவிஶ்ருத்தமான, வண்ணன் - வடிவழகையுடையனாய், பிரான் - அவ்வழகை ஆஶ்ரிதர்க்கு அநுபவிப்பிக்கும் ஸ்வபாவனை, கண்ணன்தன்னை - க்ருஷ்ணனை, விரைக்கொள் - பரிமளோத்தரமான, பொழில் - பொழிலையுடைய, குருகூரவர் - திருநகரியிலுள்ளார்க்கு நிர்வாஹகரான, சடகோபன் - ஆழ்வார், சொன்ன - அருளிச்செய்த, நிரை - எழுத்தும் அசையும் சீரும் தளையும் அடியும் தொடையும் பாவும் இனமும் இசையும் தாளமும் மற்றுமுள்ள ஶப்தாலங்காரமும், கொள் - உடையதாய், அந்தாதி - அந்தாதியாய், ஓர் - அத்விதீயமான, ஆயிரத்துள் - ஆயிரந்திருவாய்மொழியினுள்ளும், இப்பத்தும் - இவை பத்தையும், உரைக்கவல்லார்க்கு - ஶப்தமாத்ரோச்சாரணம் பண்ணுமவர்களுக்கு, தம்தாந்தாங்களிருந்த, ஊரெல்லாம் - ஊரெல்லாம், வைகுந்தம் - பரமபதமென்னலாம்படி, ஆகும் - ஆநந்தாவஹமாயிருக்கும். இது - கலித்துறை.

இ.—நிகமத்தில் இத்திருவாய்மொழியை அப்யஸிக்கவல்லாரிருந்த தேசத்திலே அவன்தானேவந்து நித்யஸம்ஶ்லேஷம்பண்ணுமென்கிறார்.

[இரைக்குங்கருங்கடல்வண்ணன்] - க்ஷுபிதமான கடல்போலேயிருக்கிற வடிவழகையுடையவன். மடலெடுப்பித்தவடிவழகு இருக்கிறபடி. "வாவஶோ நய" என்றபோது கடல் பயத்தாலே வெருவுண்டாப்போலே, இவள் மடலிலேதுணிந்தவாறே ஸர்வாதிகன் கலங்கினபடி யென்றுமாம், இது அநந்தாழ்வான்வார்த்தை. எப்போதும் கடலின் ஸ்வபாவத்தை யுடையவன். [கண்ணபிரான்] - ஸம்ஶ்லேஷதஶையில் தாழநின்று பரிமாறினபடி. வடிவழகது, ஸ்வபாவமது, மடலூராதொழியப்போமோ? [விரைக்கொள் இத்யாதி] - இவர் வ்யவஸிதரானவாறே "அவன்வரவுஅணித்து" என்று சோலை ஸஞ்ஜாதபரிமளமாயிற்று. [நிரைக்கொளந்தாதி] - இவர் ஆற்றாமையாலே முன்னடிதோற்றாதேயிருந்ததஶையிலே சொல்லச்செய்தேயும், எழுத்தும் சொல்லும் பொருளும் அடியும் தொடையும் பாவும் இசையும் தாளமும் அந்தாதியும் சேரவிழுந்தபடி. ருஷி, ஶோகவேகத்தாலேசொன்னது ப்ரஹ்மாவின் ப்ரஸாதத்தாலே ஶ்லோகமானாப்போலே, பகவத்ப்ரஸாதமடியாக ஸர்வலக்ஷணோபேதமாயிற்று. இத்திருவாய்மொழியைச் சொல்லவல்லார்க்கு உத்தேஶ்யபூமி பரமபதமாகக்கடவதென்னுதல். இதுசொன்னவர்களிருந்தவிடமே பரமபதமென்னுதல்; அதாகிறது-அவர்களுக்கு இவரைப்போலே மடலெடுக்க வேண்டா, அவன்தானே மடலெடுத்து இவர்களிருந்தவிடத்தே நித்யஸம்ஶ்லேஷம் பண்ணுமென்கிறது.

ஈடு.—நிகமத்தில் - இத்திருவாய்மொழி அப்யஸிக்கவல்லாரிருந்த தேசத்தே அவன்தானேவந்து நித்யஸம்ஶ்லேஷம் பண்ணுமேன்கிறார்.

நிகமம் - இரைக்கும் இத்யாதி. "நிரைக்கொளந்தாதி" இத்யாதியைப்பற்ற - இத்திருவாய்மொழி இத்யாதி.

[இரைக்குங்கருங்கடல்வண்ணன்] - அநந்தாழ்வான் பணித்தானாக நஞ்சீயர் வந்து பட்டருக்கு, " 'வாவஜாநய' (சாபமாநய) என்றபோது கடல் கீழ்மண்கொண்டு மேல்மண்ணெறிந்தாற்போலேயாயிற்று, இவள் 'மடலூர்வன்' என்ற துணிவைக்கேட்டு அவன்தன் ஸர்வாதிகத்வம் கலங்கினபடி" என்று அருளிச்செய்தார். வண்ணனென்றவிது - ஸ்வபாவபரமானபோதைக்காகிறது. [கடல்வண்ணன்] - மடலூர்ந்தாகிலும் பெறவேண்டும்படியான வடிவழகைச்சொல்லுகிறது. ஓதங்கிளர்ந்தகடல்போலே ஶ்ரமஹரமான வடிவையுடையவன். [கண்ணபிரான்தன்னை] - அவ்வடிவை, அவதரித்து எனக்கு உபகரித்த க்ருஷ்ணனை. வடிவழகிது, ஸ்வபாவமிது. [விரைக்கோள்பொழில்] - இவர் கையும் மடலுமாய்ப்புறப்பட்டவாறே, ஊர் ஸஞ்ஜாதபரிமளமானபடி, "அவன்வரவணித்து" என்று. [நிரைக்கோளந்தாதி] - இவர் முன்னடிதோற்றுதே மடலூரச்செய்தேயும், ப்ரபந்தமானது, எழுத்தும் சொல்லும் பொருளும் அடியும் தொடையும் பாவும் இசையும் தாளமும் அந்தாதியும் சேரவிழுந்தபடி. " ஶோகஶ்ஶ்லோகத்வமாகதஃ " (ஶோகஶ்ஶ்லோகத்வமாகதஃ) என்று ஶோகவேகத்தாலே சொல்லச்செய்தேயும், ப்ரஹ்மாவின்ப்ரஸாதத்தாலே ஸர்வலக்ஷணோபேதமானாற்போலே; இவர்முன்னடிதோற்றுதபடி கலங்கிச்சொல்லச்செய்தேயும், பகவத்ப்ரஸாதமடியாகப்பிறந்த ப்ரபந்தமாகையாலே லக்ஷணங்கள் சேரவிழத் தட்டில்லையிறே. [உரைக்கவல்லார்க்கு] - மடலேடுக்கவேண்டா, இப்பாசுரமாத்ரத்தைச் சொல்லவமையும். [வைகுந்தமாகுந் தம்மூரெல்லாம்] - அவர்களுக்கு உத்தேஶ்யபூமி பரமபதமாம். அன்றிக்கே, இவர்களுக்கு நாடறியமடலேடுத்துக்கொண்டு புறப்படவேண்டாதே, இவர்களிருந்தவிடங்களிலே அவன் தானேவந்து நித்யஸம்ஶ்லேஷத்தைப்பண்ணுகையாலே, அவர்களிருந்த

வண்ணம் - ஸ்வபாவமாதல், வடிவாதல். கீழே " நாமெமிரைக்கவே - யாமடலூர்ந்தும் " என்றவநந்தரம், " இரைக்குங்கருங்கடல்வண்ணன் " என்றதுக்குக் கருத்தேதென்ன - **அநந்தாழ்வான்** இத்யாதி. அநந்தாழ்வான்நிர்வாஹத்திலே, **வண்ணம்** - ஸ்வபாவம். "கண்ணபிரான்" என்றது - க்ஷோபிதமானகடல்போலே கலங்கினஸ்வபாவத்தையுடையவனாய்வந்து கண்ணுக்குவிஷயமான உபகாரகனென்றபடி. **வந்து** - திருநாராயணபுரத்தில்நின்றும்வந்து. **ஆகிறது** - அநந்தாழ்வான் நிர்வாஹமென்றபடி. "இரைக்கும்" என்றது - லக்ஷணயா, க்ஷோபிதமென்றபடி. பட்டர்நிர்வாஹம் - **மடலூர்ந்தாகிலும்** இத்யாதி. **வண்ணம்** - வடிவு. இப்போது "இரைக்கும்" என்ற விஶேஷணத்துக்கு பாவம் - **ஓதங்கிளர்ந்த** இத்யாதி. **ஓதம்** - திரை. இந்தப்பக்ஷத்தில், " இரைக்கும் " இத்யாதிக்கு - வடிவழகிது, ஆஶ்ரிதஸவ்யதாஸ்வபாவமிது, எங்ஙனே நான் மடலூராதொழிவதென்றபடி. " இரைக்கும்கருங்கடல்வண்ணன்" என்று - " மாசறுசோதி " என்றத்தைச் சொல்லுகிறது. "கண்ணபிரான்" என்று - "ஆசறுசீலனை" என்றத்தைச் சொல்லுகிறது. கீழ்ச்சொன்ன பதத்வயார்த்தங்கமநம்-**வடிவழகு** இத்யாதி. **ஸ்வபாவமிது** என்றவநந்தரம், **மடலூராதொழியப்போமோ** என்று கூட்டி நிர்வஹிப்பது. நிர்வாஹகரான இவர் நோவுபடாநிற்க, ஊரில் ஸம்ருத்திக்கு அடியேதென்ன - **இவர்** இத்யாதி. **நிரைக்கோள்** - லக்ஷணஸம்ருத்தியையுடைத்தான. **நிரையென்று** - ஒழுங்காய், லக்ஷணஸமூஹமென்றபடி. முன்னடிதோற்றுதே மடலூரச்செய்தே சொன்னது லக்ஷணோபேதமாகக்கூடுமோ? என்ன - **ஶோகஶ்ஶ்லோகத்வம்** இத்யாதி. " ஸலக்ஷணப்ரஶஸ்தார்த்தயுக்தைஶ்சாபி ஸுலக்ஷணை: । ஸோऽநுவ்யாஹரணாத்பூய ஶோகஶ்ஶ்லோகத்வமாகதஃ॥ ௪௦॥ " இதி பாலகாண்டே த்விதீயே. முந்தின அர்த்தத்துக்கு, "உரைக்கவல்லாரான - எல்லார்தமக்கும் - ஊர்-வைகுந்தமாகும்" என்று ஶப்தநிர்வாஹமாதல்; **ஊர்** - உத்தேஶ்யபூமி. "வைகுந்தம் - எல்லாம் - தம்மூர்-ஆகும்" என்று ஶப்தநிர்வாஹமாதல். **த்விதீயார்த்தத்துக்கு**, "தம்

விடந்தானே பரமபதமாம். அவன்ஸந்நிதியுள்ளவிடம் ஸ்ரீவைகுண்டமாகக் குறையில்லையிறே. இப்பாஸுரமாத்ரத்துக்கு இதுகூடுமோ? என்னவொண்ணாது; இதில்சொல்லுகிற பகவத்குணங்களைப் பார்த்தால், "இந்த உக்திதானும் மிகை" என்னலாம்படியிருக்கும்; இதுகூடாதாகில், பரிபூர்ணஸமாஶ்ரயணத்துக்கும் பலமில்லையாம்; இங்ஙனன்றாகில் புருஷோத்தமன் இதரஸஜாதீயனானானே. (௧௧)

மூரெல்லாம் - வைகுந்தமாகும்" என்று ஶப்தார்த்தநிர்வாஹம். இவர்களிருந்தவிடத்தை வைகுந்தமாகச் சொல்லலாமோ? என்ன-அவன்ஸந்நிதி இத்யாதி. மடலெடுக்கவேண்டும்படி துர்லபமான பலம் இப்பாசுரமாத்ரத்தால் பெறலாமோ? என்ன-இப்பாசுரம் இத்யாதி. "[illegible]" என்கையாலே, பலமுண்டென்றபடி. பகவத்குணங்களாவன - "ஆசறுசீலனை", "வாசுதேவன்" இத்யாதிகளிற்சொல்லுகிற குணங்கள். இது கூடாதாகில் - பகவத்குணநிச்யத்தாலே பலஸித்தி கூடாதாகில். பரிபூர்ணஸமாஶ்ரயணமாவது - பரமபக்தியுக்தராய் ஆஶ்ரயிக்கை. பலமில்லையாமென்றது - பலகௌரவத்தைப்பார்த்தால் பரிபூர்ணஸமாஶ்ரயணமும் அத்யந்தவிஸத்ருஶமாகையாலே, அதுக்கும் பலமில்லையென்றபடி. "அவன்தான் இவ்வளவை வ்யாஜமாக்கி மஹாபலத்தைக்கொடுக்கும்" என்று சொல்லலாமோ? என்ன - இங்ஙன் இத்யாதி. க்ரமேணாந்வய: (௧௧)

த்ரவிடோபநிஷத்ஸங்கதி:—[illegible]

த்ரவிடோபநிஷத்தாத்பர்யரத்நாவலி: — "[illegible]"

திருவாய்மொழி நூற்றந்தாதி.	மாசறுசோதிகண்ணன்வந்துகலவாமையால் ஆசைமிகுந்துபழிக்கஞ்சாமல் ஏசறவே மண்ணில்மடலூரமாறனெருமித்தான் உள்நடுங்கத்தான்பிறந்தவூர்.

ஆழ்வார் திருவடிகளே ஶரணம், எம்பெருமானார் திருவடிகளே ஶரணம், ஜீயர்திருவடிகளே ஶரணம்.

நான்காந்திருவாய்மொழி—ஊரெல்லாம்: ப்ரவேஶம்.

ஆ.—(ஊரெல்லாந்துஞ்சி.) இப்படி மடலூருகையிலே அத்யவஸித்திருந்த பிராட்டி மடலூரக்ஷமையல்லாதபடி அத்யந்தம் அவஸந்நையாய்;

ஒ.—நாலாந்திருவாய்மொழியில், இப்பிராட்டி தன்தௌர்பல்யத்தாலே மடலூரவும் மாட்டாதிருக்கச்செய்தே, அதுக்குமேலே ராத்ரியும்வந்து சராசரங்களடைய உறங்கி பந்துக்களெல்லாம் இவளார்த்திபொறுக்கமாட்டாதே பரவஶராய் நித்ரிக்கிற தஶையிலே தனிப்பட்டுக் கலங்கி; அநேககல்பமாய் மஹாந்தகாரமாய்த் தனக்குப் பிழைக்கைக்கு அவகாஶம் தாராதிருந்துள்ள ராத்ரியையும், தன்வ்யஸநத்துக்கு ஹேதுவான கொடிய கர்மத்தையும், ஏவம்விதமான தஶைகளிலே உதவக்கடவனான புருஷோத்தமனையும், அவனுடைய தாக்ஷிண்யாதி குணங்களையும், இவற்றையெல்லாம் பலகாலும் சொல்லி; இத்தஶையில் தன்னை 'ஐயோ!' என்று க்ருபைபண்ணியாதல், 'இதுயுக்தமன்று' என்று பொடிந்தாதல் முகங்காட்டுவாரொருவரையும் பெறாதே அத்யந்தம் அவஸந்நையாய் மிகவும் ப்ரலாபித்து முடியப்புகுகிறவள்; ஜகத்ரக்ஷாசிந்தாத்மிகையான யோகநித்ரையைப் பண்ணியிருக்கிறவன் நான் இப்படி அவஸந்நையாக என்னை உபேக்ஷியானென்று யரிக்கிறாள்.

ப.—நாலாந்திருவாய்மொழில், கீழ்-தம்முடைய அநுபவாபிநிவேஶத்தாலே ஸத்வரராய்க்கொண்டு ஸ்வரூபாநுரூபமான ஸ்வப்ரவ்ருத்தியாலேயாகிலும் அவனைப் பெறுவதாக உத்யோகித்த இவர், அநுபவயோக்யமானகாலம் ஸந்நிஹிதமாயிருக்கச்செய்தேயும் அவன் அஸந்நிஹிதனாயிருக்கையாலே அத்யந்தஆர்த்தராய் ஒருப்ரவ்ருத்தி க்ஷமரல்லாதபடி மிகவும் அவஸந்நராய், விளம்பக்ஷமரல்லாமையாலே, இவ்வவஸ்தையிலே அவன் முகங்காட்டி ரக்ஷிக்கைக்கு உடலான; அகிலஜகத்ரக்ஷணார்த்தப்ரவ்ருத்தியையும், ஆபிரூப்யப்ரகாஶகமான ஶ்வபதையையும், அநிஷ்டநிராஸகத்வதையையும், அபிஷ்டலாபத்தாலே புதுக்கணித்த அவயவஶோபாதியாலுண்டான அத்யந்தத்ருப்தியையும், உபகாரகவிக்ரஹயோகத்தையும், ஸ்த்ரீபரிகர்ஷணமணவத்தையையும், ஆகாங்க்ஷாஜநகமான அஸாதாரணசிஹ்நத்தையும், ஆஶ்ரிதார்த்தமாக ஆயுதமெடுத்துக் காரியங்கொள்ளுமாகாரத்தையும், அதிஶயித ஐஶ்வர்யத்தையும், அநந்யார்ஹமாக்கும் அபதாநவிஶேஷத்தையும் அநுஸந்தித்து; "ஏவம்வித ஸ்வபாவனான ஈஶ்வரன் இவ்வவஸ்தையில்வந்து ஸம்ஶ்லேஷித்து ரக்ஷிக்கிறிலன், முடிகைக்கும் யோக்யதையில்லாதபடி பராதீநமான இவ்வாத்மாவை ரக்ஷிக்கும்விரகென்?" என்று, காலவிளம்பம்பொறாமல் ஆர்த்தராய்க் கூப்பிட்டப்ரகாரத்தை; அபிமதநாயகனான ஈஶ்வரனைப்பிரிந்து ஆற்றாமையாலே இரவு நெடுமைக்கிரங்கிக்கூப்பிட்ட நாயகிப்ராசுரத்தாலே யருளிச்செய்கிறார்.

இ.—நாலாந்திருவாய்மொழியில், "நாடுமிரைக்கவே - யாமடலூர்ந்தும்" என்று பெரிய த்வரையிறே கீழ்ச்சென்றது; மடலெடுக்கைதான் அவனைப்பெறுகையோபாதி தேட்டமாம்படி ஶைலஹாநிபிறந்து, இவ்வளவிலே ராத்ரிவந்து கைக்கொண்டு, அதுதான் ஸந்த்யாமாத்ரமன்றிக்கே மத்யராத்ரியாய், சராசரங்களடைய வுறங்கி, ஹிதம் சொல்லும் பந்துக்களும் இவளார்த்திபொருக்கமாட்டாமை பரவஶராய்விழுந்து, உசாத்துணையுமின்றிக்கே தனிப்பட்டு; வ்யஸநத்துக்கடியான தன்னுடைய பாபத்தையும், இஸ்

ஸமயத்திலும் முடியவொண்ணாதபாரதந்த்ர்யத்தையும் அநுஸந்தித்து; "விஷஸ்யதா தாநஹிமேஸ்தி கஸ்சிச்சஸ்த்ரஸ்ய வா வேஸ்மநி ராக்ஷஸஸ்ய" என்று - இத்தனைவிஷந்தருவாரையுங் காண்கிறிலேன், விஷம்போலேநின்று கொல்லுகையன்றிக்கே அப்போதே முடியும்படி ஒருஶஸ்த்ரந்தருவாரையுங் காண்கிறிலேன், அவரைப்பிரித்து உயிர்க்கொலையாக்கும் ராவணக்ருஹத்தில் நற்கொலையாக்கும் பரிகரத்தைத்தருவார் சிலதார்மிகரைக் கிடைக்குமோவென்னும்தசையாய்; ப்ரளயாபத்தசையிலே யுதவும் புருஷோத்தமனுடைய குணங்களை யநுஸந்தித்து, "அவையும் எனக்கு கார்யமாகாதொழிவதே!" என்று வேண்யுத்க்ரதநத்திலே யொருப்பட்ட பிராட்டியைப்போலே முடிவுதேட்டமானதசையிலே, ஈஶ்வரன் "ஜமத்ரக்ஷணார்த்தமாகத் திருப்பாற்கடலிலே யோகநித்ரைபண்ணாநின்றோம்" என்று தன்னுடைய ரக்ஷணோத்யோகத்தை ஸ்மரிப்பிக்க, நம்முடைய ரக்ஷணத்திலே உத்யுக்தனானபின்பு இனியொருதட்டில்லையென்று அவன்குணஜ்ஞாநத்தாலே தரித்துத்தலைக்கட்டுகிறது.

ஈடு.—"நாடுமிரைக்கவே - யாமடலூர்ந்தும்" என்று - பெரியதொரு த்வராரஸமாயிறே கீழ்ச்சென்றது, மடலூரப்பெறுகைதான் அவனைப் பெறுகையோபாதி தேட்டமாம்படி வ்யவஸாயிக்கது; இனித்தான், மடலூரும்போது அபிமதவிஷயத்தைப்படத்திலேஎழுதவேணுமே, அதுக்குஅவகாசமில்லாதபடி †"ஆழிகொண்டன்றிரவிமறைப்ப" என்கிறபடியே ஆதித்யனை மறைத்தானாதல், தைவயோகத்தால் அஸ்தமித்ததாதல் செய்து ராத்ரியாய், அதுதான் ஸந்த்யாமாத்ரமன்றிக்கே சராசரங்களடங்கும்படி மத்யராத்ரமாய்; பழிசொல்லுவாரோடு, அநுகூலராய் ஹிதஞ்சொல்லி விலக்குவாரோடு வாசியற எல்லாருமொக்க உறங்குகையாலே ஒருவுசாத்துணையுமின்றிக்கே, இவ்வளவிலே, ப்ரளயாத்யாபத்துக்களிலே யுதவும் ஸ்வபாவனுமாய் ஸர்வரக்ஷகனான புருஷோத்தமனுடையகுணங்களை அநுஸந்திக்க, அவைதான் பிரிவிலே அநுஸந்திக்கையாலே மிகவும் ஆற்றாமைக்கு உறுப்பாய், * வேண்யுத்க்ரத

ஊரெல்லாம்துஞ்சி ப்ரவேஶே, வர்த்திஷ்யமாணத்தோடே ஸங்கதிக்காக வ்ருத்தகீர்த்தநம் - **நாடுமிரைக்கவே** இத்யாதி. கீழ்ச்சென்றது என்றவநந்தரம், 'இப்படி த்வரையதிஶயித்தால் பின்னை மடலூராதொழிவானென்? என்னில்' என்று வாக்யத்தைக்கூட்டி நிர்வஹிப்பது. மடலூராதொழிந்ததுக்கு ஹேத்வந்தரம் - **இனித்தான்** இத்யாதி. **ஆழிகொண்டு** இத்யாதி - அரசர்கள் காத்துக்கொண்டு நின்றவன்று, திருவாழியைக்கொண்டு ஆதித்யனைமறைக்க இத்யர்த்தঃ. †பெரியாழ்வார்திருமொழி, நாலாம்பத்து, முதல்திருமொழி, எட்டாம்பாட்டு, "**நாழிகைகூறிட்டு**" இத்யாதி. **ஆதித்யனைமறைத்தானாதல்** - "இவள்மடலெடுத்தால் தனக்குஅவத்யமாம்" என்னுமத்தாலே ஆதித்யனைமறைத்தானாதல். *மாசறுசோதிப்ரவேஶத்திலே "அச்சமுறுத்தி முகங்காட்டுவித்துக்கொள்ளப்பார்க்கிறார்" என்கையாலும், *யானேய்நோக்குப்ரவேஶத்திலே "அவனுக்குஅவத்யமென்று மடலெடுக்கைதவிர்ந்தாள்" என்று அருளிச்செய்கையாலும் - மடலெடாமைக்குஅவையும் ஹேதுவாகக்கண்டுகொள்வது. "நள்ளிருளாய்" என்றத்தைப்பற்ற - **மத்யராத்ரமாய்** என்றது. இருளென்று - ஸம்ஸாரமாகிற காளராத்ரியைச்சொல்லுகிறது; விடிவாவது - பகவத்ஸம்ஶ்லேஷலாபம். "மத்யராத்ரமாய்" என்றதுக்கு விவக்ஷிதம் - **பழிசொல்லுவாரோடு** இத்யாதி. "ஊரெல்லாம்" என்றத்தைப்பற்ற - **பழிசொல்லுவாரோடு** என்றது. "அன்னையருந்தோழியரும்" என்றத்தைப்பற்ற - **அநுகூலராய்ஹிதஞ்சொல்லி** இத்யாதி. "பாரெல்லாமுண்ட" என்றத்தைப்பற்ற - **ப்ரளயாத்யாபத்துக்களிலே** இத்யாதி. "மண்ணளந்த" இத்யாதியைப்பற்ற - **ஸர்வரக்ஷகனான** இத்யாதி. **குணங்களையநுஸந்திக்க** - "குணம்பாடி - ஆவிகாத்திருப்பேனே" என்கிறபடியே குணங்களையநுஸந்திக்க என்றபடி. வேண்

நாதிகளிலே யொருப்பட்டாரோபாதி முடிந்து பிழைக்கவேண்டுமெளவாய், அதுதன்னைப் பெறுகை மடலூரப்பெறுகையோபாதி தேட்டமாய்; † (விட்டது) "விஷஸ்ய தாதா" (விஷஸ்யதாதா) - இத்தனை நற்சரக்குத்தரும் உதாரரை இவ்வூரில்கிடைக்குமோ? "மே" (மே) - உண்டாகில்தான் எனக்கு இது ஸம்பவிக்குமோ? "ஶஸ்த்ரஸ்ய வா" (ஶஸ்த்ரஸ்ய வா) - விஷம்போலே சிறிதுபோதுநின்று கொல்லுமதன்றியே கடுகமுடிக்கும் ஶஸ்த்ரத்தைத் தான் தருவாருண்டோ? "வேஶ்மநிராக்ஷஸஸ்ய" (வேஶ்மநிராக்ஷஸஸ்ய) - பிரித்து வைத்து உயிர்க்கொலையாக நலிகிறவனுடைய ஊரிலே, நற்கொலைக்குப் பரிகரமானத்தைத் தான் தருவாருண்டோ? இப்படிமுடிகை தேட்டமாம்படியிருக்கிறவளவிலே, "நாம் ஸர்வ ரக்ஷகராகையாலே எல்லாருடையரக்ஷணத்துக்குமாகத் திருப்பாற்கடலிலேவந்து சாய்ந்தோம், உம்முடையரக்ஷணத்திலே உத்யுக்தராயிருந்தோம், க்ரமப்ராப்திபற்றாமைப் பதறுகிற வித்தனை" என்கிறவித்தை ஸ்மரிப்பிக்க; அவன் ஸர்வரக்ஷகனாகில், நம்முடையரக்ஷணத்திலே உத்யுக்தனாகில், க்ரமப்ராப்திபற்றாமல் பதறுகிறோமித்தனை, நம்மோபாதியாலுள்ள ரக்ஷணம் நமக்குஸித்தியாதோவென்று அவன்குணஜ்ஞாநத்தாலே தரித்தாராய்ச்செல்லுகிறது. ‡(கீழ் - தம்முடைய அநுபவாபிநிவேஶத்தாலே ஸத்வரராய்க்கொண்டு ஸ்வரூபாநுரூபமான ப்ரவ்ருத்தியிலேயாகிலும் அவனைப்பெறுவதாக உத்யோகித்த இவர், அநுபவயோக்யமான காலம் ஸந்நிஹிதமாயிருக்கச்செய்தேயும் அவன் அஸந்நிஹிதனாகையாலே அத்யந்தம் ஆர்த்தராய் ஒரு ப்ரவ்ருத்திக்ஷமரல்லாதபடி மிகவும் அவஸந்நராய், விளம்பாக்ஷமராகையாலே, இவ்வவஸ்தையிலே அவன்வந்து ரக்ஷிக்கைக்கு உடலான குணங்களை ஆர்த்தராய்க் கூப்பிட்ட ப்ரகாரத்தை. அபிமதநாயகனை ஈஶ்வரனைப்பிரிந்து ஆற்றாமையாலே இரவு நெடுமைக்கிரங்கிக் கூப்பிட்ட நாயகிபாசுரத்தாலே யருளிச்செய்கிறார்.)

ப்ர:—(ஊரெல்லாந்துஞ்சி ப்ரவேஶே) ஸுந்தரகாண்டே, ஷட்விம்ஶஸர்கே, "ஸா ஜீவிதம் க்ஷிப்ரமஹம் த்யஜேயம் விஷேண ஶஸ்த்ரேண ஶிதேந வாபி। விஷஸ்ய தாதா நஹி மேऽஸ்தி கஶ்சிச்ச ஶஸ்த்ரஸ்ய வா வேஶ்மநிராக்ஷஸஸ்ய॥ இதீவ தேவீ பஹுதா விலப்ய ஸீதாத வேண்யுத்க்ரதநம் க்ருஹீத்வா। உத்பத்ய வேண்யுத்க்ரதநேந ஶீக்ரமஹம் கமிஷ்யாமி யமஸ்ய மூலம்॥ ஶோகாநுபேதா ஸா பஹுதா விசிந்த்ய ஸர்வாத்மநா ராமமநுஸ்மரந்தீ। ப்ரவேபமாநா பரிஶுஷ்கவக்த்ரா நகோத்தமம் புஷ்பிதமாஸஸாத॥"

யுக்தகரநாதி இதி - ஆதிஶப்தேந - விஷபக்ஷணம். "மாயும்வகையறியேன்" என்றத்தைப்பற்ற - அதுதன்னைப்பெறுகை இத்யாதி. அதுதன்னை - முடிகைதன்னை. "வேண்யுக்த்ரதநாதிகளிலே யொருப்பட்டாரோபாதி" என்கைக்கு, அப்படிபிராட்டி முடியத்தேடினளோ? என்ன - விஷஸ்ய தாதா இத்யாதி. "ஸா ஜீவிதம் க்ஷிப்ரமஹம் த்யஜேயம் விஷேண ஶஸ்த்ரேண ஶிதேந வாபி। விஷஸ்ய தாதா நஹி மேऽஸ்தி கஶ்சிச்ச ஶஸ்த்ரஸ்ய வா வேஶ்மநிராக்ஷஸஸ்ய" இதி ஸுந்தரகாண்டே ஷட்விம்ஶஸர்கே. உண்டாகில்தான் எனக்கு இது ஸம்பவிக்குமோ என்றது - தாதாவுண்டாகிலும் பாபியான எனக்குத் தாரார் என்னுதல், எனக்குப்பலியாது என்னுதல். "மடலூரப்பெறுகையோபாதி தேட்டமாய்" என்றவாக்யத்தோடே - இப்படிமுடிகை தேட்டமாம்படியிருக்கிற இத்யாதிவாக்யத்துக்கு ஸங்கதி. "யோகுசெய்தபெருமானை" என்றத்தைப்பற்ற - நாம்ஸர்வரக்ஷகராகையாலே இத்யாதி. நம்மோபாதியாலுள்ள என்றவிடத்திலே, ஓபாதியென்று - அம்ஶம். நம்முடைய அம்ஶத்துக்குண்டான ரக்ஷணமென்றபடி.

---

† குண்டலித அக்ஷரங்கள் வ்யாக்யாநோக்தாந்வய விருத்தம். ‡ குண்டலித க்ரந்தம் க்வாசித்கம்

முதற்பாட்டு.

ஊரெல்லாந்துஞ்சி உலகெல்லாம்நள்ளிருளாய்
நீரெல்லாந்தேறி ஓர்நீளிரவாய்நீண்டதால்
பாரெல்லாமுண்ட நம்பாம்பணையான்வாரானால்
ஆரெல்லேவல்வினையேன் ஆவிகாப்பாரினியே.

ஆ.—ஸர்வஜந்துக்களும் ப்ரஸுப்தமாய் ஸர்வலோகமும் அந்தகாரபரிபூரித மாய்படி ஒருநீளிரவுவந்து எங்கும்முடிகிறதில்லை. இந்ததசையில் அந்தப்பரமகாருணிகனை பாம்பணையான் வாராதொழிந்தான், இனிநான் எங்ஙனே தரிக்கும்படியென்கிறாள்.

ஒ.—முதற்பாட்டில், ராத்ரியாகிற இம்மஹாபத்தும் செல்லாநிற்க, ஆபத்ஸகனை எம்பெருமான் வருகிறிலன், இனி எனக்கு ரக்ஷகராவாருண்டோ ? என்கிறாள்.

[ஊரெல்லாம் என்று தொடங்கி] - ஊரெல்லாம் உறங்குகையாலே சிலருடன் போதுபோக்கப்பெறுமையாலும் லோகமெல்லாம் மஹாந்தகாரமாகையாலே ஒன்றைக் கண்டு காலக்ஷேபம் பண்ணப்பெறுமையாலும் ஜலதத்வமும் ஒலியடங்கி ஶ்ரவணேந்த்ரியத்துக்கு விஷயமில்லாமையாலும் ஹ்ருதயம் தனிமைப்பட்டு ஆற்றாமை மிகுகையால் பண்டுபோலே நீளிராவாகாதே, எல்லாராத்ரிகளும் ஒரு நெடியராத்ரியாய் அதுக்கு ஓர் அவஸாநம் காணப்பெறுகிறதில்லை. எல்லார்க்கும் ஆபத்ஸகனாய் ஆஶ்ரிதஸம்ஶ்லேஷஸ்வபாவனானவன் இத்தஶையில் வந்து தோற்றுகிறிலன். [ஆர்எல்லே என்றுதொடங்கி]- ஏவம்விதனானவனும்கூட வாராதொழிகைக்கு ஈடான பாபத்தைப்பண்ணின என்னுடைய ப்ராணனை. எல்லே என்று - தோழியுடைய ஸந்நிதியிலே அவளைச்சொல்லும் சொல்லைச் சொல்லுகிறாள். நம் என்றும், எம்என்றும் பலபாட்டிற்சொல்லுகிறது - ஸம்ஶ்லேஷதஶையில் அவன் தனக்குக் கைவந்தபடியை நினைத்து.

ப.—முதற்பாட்டில், ஜகத்தெல்லாம் இருளாம்படி ஏகராத்ரியாய் நீண்டது, ஸர்வரக்ஷகனை ஸர்வேஶ்வரன்வந்து ரக்ஷிக்கிறிலன், இனி இவ்வாத்மாவை ரக்ஷிப்பாராரென்கிறாள்.

(பழிசொல்லும் அயலாரோடு; ஹிதஞ்சொல்லும் தாய்மாரோடு, ஸமதுக்கைகளாய் உசாத்துணையான தோழிமாரோடு வாசியற, ஒருமுகத்தில்தரியாதபடி), ஊர் - ஊராக, எல்லாம் - எல்லாரும், துஞ்சி - உறங்கி, (புறம்பே ஒருபதார்த்ததர்ஶநத்தாலே தரியாதபடி), உலகெல்லாம் - லோகமடைய, நள் - செறிந்த, இருளாய் - இருளாய், நீர் - நீரென்றுபேர்பெற்றவை, எல்லாம் - எல்லாம், தேறி - (ஜலசராஸத்வங்களினுடைய கோலாஹலமில்லாமையாலே) அலையடங்கித்தெளிந்து, (ஒருஶப்தஶ்ரவணமில்லாதபடியாய்), ஓர் - அஹோராத்ரவிபாகமற்று ஏகாகாரமாய், நீள் - வளர்ந்த, இரவாய் - ராத்ரியேயாய், நீண்டது - ஓரவதிகாணவொண்ணாதபடி நீண்டுவிட்டது; (இவ்வளவில்), பார் - ப்ரளயாபத்ஸகையானபூமியை, எல்லாம் - எல்லாம், உண்ட - வயிற்றிலேவைத்து ரக்ஷித்தவனாய், பாம்பு - ஶேஷபூதனான திருவனந்தாழ்வானை, அணையான் - படுக்கையாகக்கொண்டு வடிவுகொடுத்து ரக்ஷிக்கையாலே, நம் - நமக்குத் தஞ்சமானவன், வாரான் - வந்துமுகங்காட்டி ரக்ஷிக்கிறிலன், எல்லே - என்னே! இனி - ரக்ஷகன் உதவாத

பின்பு, வல் - (அநுக்ரஹவிஷயமல்லாத) வலிய, வினையேன் - பாபத்தையுடையேனுடைய என்னுடைய, ஆவி - ஆத்மாவை, காப்பார் - ரக்ஷிப்பார், ஆர் - ஆர்? உறங்குகிற ஊரார் காக்கவோ, ஓரிருள்விழுங்கின லோகங்காக்கவோ, ஜடமானஜலதத்வங்காக்கவோ, ஹேதுகமான தீர்க்கராத்ரிகாக்கவோ என்றுகருத்து. எல்லே - என்னேயென்று விஷாதஸூசகம்.

ஈடு.— முதற்பாட்டில், ப்ராயாபத்ஸகனானவன், என்னை விரகப்ரளயங்கொள்ள, வந்து உதவிற்றிலன்; இனி ஸத்தையை நோக்குவாரார்? என்கிறாள்.

[ஊரெல்லாந்துஞ்சி] - சிலருடன் போதுபோக்கவொண்ணாதபடி ஊராகவுறங்கிற்று. உணர்ந்திருப்பார்சிலரும் உறங்குவார்சிலருமன்றிக்கே, இருந்ததேகுடியாக வுறங்கிற்று. இவள்பிறந்த ஊராகையாலே இவள்தசையை யநுஸந்தித்து சோகத்தாலே சோர்ந்து கிடந்தபடி. நாட்டுபாஸத்திநன்றுபோலே ஒன்றிரண்டுபேராகிலும் உணர்ந்திருக்கப் பெற்றதோ? பழிசொல்லுவாருமின்றிக்கே ஹிதஞ்சொல்லுவாருமின்றிக்கே உசாத்துணையுமின்றிக்கே யிருக்கிறபடி. புறம்புபோய் ஒன்றைக்கண்டு தரித்தாலோ? என்னில்,— [உலகெல்லாம்நள்ளிருளாய்] - ப்ரளயங்கோத்தாற்போலே, பதார்த்தங்களடைய இருள்மறைத்தது. நள்ளிருள் - செறிந்த இருளென்னுதல், நடுஇருளென்னுதல், ஸகல பதார்த்தங்களும் ஒடுங்கினால் ராத்ரிக்கு அஸாதாரணமான ஒலியென்னுதல். பதார்த்ததர்ஸநம்பண்ணியும் தரிக்கவொண்ணாதபடியாயிற்றென்கை. [நீரெல்லாந்தேறி] - ஜலசரஸத்வங்களும் த்வநியடங்கி, ஸ்ரவணேந்த்ரியத்துக்கு முதலிலே விஷயமில்லையென்கை. ஆக, மூன்றுபதத்தாலும் வாகிந்த்ரியத்துக்கும் சக்ஷுஸ்ஸுக்கும் ஸ்ரவணத்துக்கும் விஷயமில்லையென்கை. பகலில்வந்தால் இந்த்ரியங்கள் ஸ்வஸ்வவிஷயங்களிலே பாலிபாய்ந்து ஆற்றாமைமட்டஞ்செய்யும், அங்ஙனுமொன்றின்றிக்கே ஸர்வேந்த்ரியங்களுக்கும் பிரிந்தவிஷயமொன்றுமேயாய் ஆற்றாமை விஞ்சியிருக்குமிறே. [ஓர்நீளிரவாய் நீண்டதால்] - பகல்விரவின இரவின்றிக்கே இரவேயாகை. மநுஷ்யராத்ரியிற்காட்டில் தேவர்களுடையராத்ரி நீண்டிருக்குமிறே, அதுக்கும் ஓரவதியுண்டு, அங்ஙனும் ஓரவதி காண்கிறிலோம். [பாரெல்லாமுண்ட] - ப்ரளயாபத்தில் தரம்பாராதே எல்லாரையும் ரக்ஷித்தவன். ஜகத்துக்கெல்லாம் வந்தவாபத்துப் போருமாயிற்று இவளுக்குவந்தது. ப்ரளயங்கொள்ளப்புக்க ஜகத்து மடலெடுக்கப்புகமாட்டாமையன்றே ரக்ஷித்தது, தந்தாமால் பரிஹரிக்கவொண்ணாத ஆபத்துக்களில் உதவுமவனன்றோ? அன்று ஒருவர் அர்த்தியாதிருக்க ரக்ஷித்தான், இன்று இரந்ததே குற்றம். [நம்பாம்பணையான்] - "உடம்பிலேயணைய வேணும்" என்பார்க்கு உடம்புகொடுக்குமவன். ஸம்ஸாரிகளுக்குச் செய்யுமதும் பெற்றிலேன், அநந்யப்ரயோஜநர்க்குச் செய்யுமதும் பெற்றிலேன். ஸாமாந்யரக்ஷணமு மில்லையாயிற்று, விசேஷரக்ஷணமு மில்லையாயிற்று. [நம்] - ஸம்ஸ்லேஷதசையில் கையாளாய்த் தாழநின்று பரிமாறினபடி. அத்தாலே, கூப்பிடுகைக்குவேண்டுவது பண்ணிப்போனானித்தனை. [வாரானால்] - வருகிறிலன். வயிற்றிலேவைத்து ரக்ஷிக்கவேண்டா, உடம்பிலே யணைக்கவேண்டா, வந்து முகங்காட்டவமையும். "ஜ்யேஷ்டே வநவஹி நஸ்ஸாகஸேவெநேஷ்யதி ராகவ: । தஸ்ய வ்ருக்ஷஸ்ய ஸோகஸ்ய ஸம்ஸுஷ்யந்தி வஸூநி: ॥". [ஆவிகாப்பார்-ஆர்] - ப்ரளயத்தின்கையிலேயகப்பட்டாரைப்போலே இந்தராத்ரியின்கையிலே யகப்பட்டுக்கிடக்கிற நான் ப்ராணரக்ஷணம்பண்ணவோ? "எம்மில்முன்னவனுக்கு மாய்வராலோ" என்று எனக்குமுன்னே தளருகிற தோழிகாக்கவோ? ஹிதம்சொல்லுகிற தாயார் காக்கவோ?

பழிசொல்லுகிற ஊரார் காக்கவோ? [எல்லே] - என்னே. ஆஶ்சர்யத்திலேயாதல்; தோழிஸந்நிதி யின்றிக்கேயிருக்க, வாஸனையாலே அவளை ஸம்போதிக்கிறாளாதல். [வல்வினையேன்] - ஆபத்ஸகனாய் ஆஶ்ரிதஸம்ஶ்லேஷஸ்வபாவனானவன் உதவாதபடியான மஹாபாபத்தைப் பண்ணினேன். [வல்வினையேனாவி] - விரஹத்துக்குச் சிளையாத ஆவி. பிரிவேஹேதுவாக நூறேபிராயமென்னும் ஆவி. [இனி-ஆர்] - ஆபத்துக்களிலே உதவிப்போருமவன் உதவாதபின்பு, வேறு யார் என்னை நோக்கவோ?

ஈடு.—முதற்பாட்டு. ப்ரளயாபத்திலே வந்து உதவினவன் என்னை விரஹப்ரளயங்கோக்க வந்து உதவாதபின்பு, இனி நான்ஜீவிக்கை என்று ஒரு பொருளுண்டோ? என்று தன்ஜீவநத்திலே நசையறுகிறாள்.

[ஊரேல்லாம்துஞ்சி] - ஊரவர்கவ்வை எருவாக மடலூரவிருந்தோம், இனி ஆர்பழி யாரகமாக நாம் மடலூருவது. சிலர் உறங்கச் சிலர் உணர்ந்திருக்கையன்றிக்கே, எல்லாருமொக்க உறங்கிற்று. திருவடிசெல்லுகிறக்ஷணத்திலே ராக்ஷஸிகளடைய உறங்கினாற்போலே, பழிசோல்லுவாரடங்க உறங்கிற்றாயிற்று. அன்றிக்கே, இவள்பிறந்தவூராகையாலே இவள்தசையைக்கண்டு ஶோகித்து, கோரைசாய்ந்தாற்போலே எல்லாருமொக்க உறங்கினபடியைச்சொல்லிற்றாகவுமாம். நாகபாசத்தினன்றாகில் ஒரு ஸ்ரீஜாம்பவான்மஹாராஜர், திருவடிதொடக்கமானார்தானுணர்ந்திருந்தமையுண்டிறே; இங்கு அங்ஙனுமொருவர் இல்லையாயிற்று. ஆக, பழிசோல்லுவாரோடு ஹிதஞ்சோல்லுவாரோடு உசாத்துணையாவாரோடுவாசியற, எல்லாருமொக்க உறங்கிற்றென்கை. இத்தால் சோல்லிற்றாயிற்று - பழிசோல்லியலைப்பாருங்கூட இல்லாதபடி எல்லாருங்கூட உறங்குகையாலே, சிலருடன் உசாவிக்காலக்ஷேபம்பண்ணவோண்ணாதபடியான தசைபிறந்தபடி சோல்லுகிறது. ஊரேல்லாம் உறங்கிற்றாகில், புறம்பே லோகத்திலேபோயாகிலும் உசாத்துணையாவாருண்டாகில் பார்த்தாலோ? என்ன,—[உலகேல்லாம்நள்ளிருளாய்] - ப்ரளயங்கோத்தாற்போலே லோகமடைய இருளேயாயிற்று. நள்ளேன்று - நடுவாதல், செறிவாதல். நடுவான இருளேன்னுதல், செறிவான இருளேன்னுதல். அன்றிக்கே, எல்லாப்பதார்த்தங்களினுடையவும் ஒலியடங்கினால் ராத்ரி தனக்கேன்னவே யொருத்வநியுண்டு, அத்தைச்சோல்லுகிறதாதல். ஆக, சக்ஷுர்விஷயமாவதோன்று மில்லாதபடியாயிற்றேன்கை. [நீரேல்லாம்தேறி] - ஜலசரஸத்வங்களடைய ஆழவிழிந்து, அங்குள்ளத்வநியும் அடங்கிற்று. ஊரேல்லாம்துஞ்சி

முதற்பாட்டு.—ஊரேல்லாம் இத்யாதி. "பாரெல்லாம்" இத்யாதியைக்கடாக்ஷித்து - ப்ரளயாபத்திலே இத்யாதி.

ஊரெல்லாம்துஞ்சினால் தனக்குவந்ததேதென்ன - ஊரவர் இத்யாதி. "எல்லாம்" என்றதுக்கு அர்த்தம் - சிலருறங்க இத்யாதி. ப்ரதிகூலரடைய உறங்கினதுக்கு த்ருஷ்டாந்தம் - திருவடி இத்யாதி. அன்றிக்கே, "ஊரெல்லாம்" என்று - தாய்மார் தோழிமார் தடஸ்தரெல்லாரையும் சொல்லுகிறதென்று விவக்ஷித்து, எல்லாருமொக்க அவிஶேஷேண உறங்கக்கூடுமோ? என்ன - அன்றிக்கே இவள்பிறந்த இத்யாதி. ஶோகம் அதிஶயித்தால் உறங்கக்கூடாதாகையாலே, கோரைசாய்ந்தாற்போலே எல்லாருமொக்க மோஹித்துக்கிடக்கிறபடியைச் சொல்லுகிறதென்று கருத்து. ஆக, ப்ரதிகூலரெல்லாம் உறங்கியென்று முந்தின அர்த்தம், தாய்மார்தோழிமார் தடஸ்தரெல்லாரும் உறங்கியென்று த்விதீயார்த்தம். த்விதீயார்த்தத்தில், "எல்லாம்துஞ்சி" என்றத்தாலே ஒருவ்யாவ்ருத்தி அருளிச்செய்கிறார் - நாகபாச இத்யாதி. நாகபாசத்தினன்று - ப்ரஹ்மாஸ்த்ரத்தினன்று உக்தார்த்தத்வயநிகமநம் - ஆகப்பழி இத்யாதி. உசாவுகை - சொல்லுகை. விவரணம் - நடுவான

என்கையாலே - சிலர்வார்த்தைகேட்டுப் போதுபோக்குமதில்லையென்கை. உலகெல்லா மென்று - கண்ணுக்கிலக்காமதோன்றில்லாமையாலே ஒன்றைக்கண்டுபோதுபோக்குமதில்லை யென்கை. நீரெல்லாம்தேறி என்கையாலே - முதலிலே ஶ்ரவணேந்த்ரியத்துக்கு விஷய மில்லையென்கை. இவைதான் - ஸர்வேந்த்ரியவ்ருத்திகளுக்கும் உபலக்ஷணமாயிருக்கிறது. பகலில்வந்தால் இந்த்ரியங்கள் ஸ்வஸ்வவிஷயங்களிலே பல்லிபற்றுகையாலே ஆற்றாமை அரையாறுபட்டிருக்கும், ராத்ரியில் எல்லா இந்த்ரியங்களுக்கும் பிரிந்தவிஷயமொன்றுமே இலக்காகையாலே ஆற்றாமைகரைபுரண்டிருக்கும். [ஓர்நீளிரவாய்நீண்டதால்] - பண்டும் ராத்ரிநெடுகாநிற்கச்செய்தே பகலும் இரவுமாய்வருமிறே, பகல்விரவாதராத்ரியாய். [நீண்ட தால்] - மநுஷ்யர்களுடைய ராத்ரியிற்காட்டில் தேவர்களுடையராத்ரி நீண்டிருக்குமாகிலும் அதுக்கு அவதியுண்டு, அங்ஙனுமொரு அவதியில்லையாயிருந்தது. [பாரெல்லாமுண்ட] - ப்ரளயாபத்தில் தரம்வையாதே எல்லாரையுமொக்கரக்ஷித்தவன். ப்ரளயாபத்திலகப்பட் டாரெல்லார்க்கும் உண்டான ஆபத்து இவளொருத்திக்கும் உண்டுபோலேகாணும். ப்ர ளயத்தில், சிலாமடலெடுக்கப்புக்கு அதுவும்மாட்டாத தசையுண்டாயன்றிறே உதவிற்று. தந்தாமால் பரிஹரித்துக்கொள்ளவொண்ணாதபடியான ஆபத்துவந்தால் உதவுமவன். [நம் பாம்பணையான] - உகந்தார்க்கு உடம்புகொடுக்குமவன். திருவநந்தாழ்வானைப் படுக்கை யாகவுடையவன். ஆக, அஸ்ப்ருஷ்டஸம்ஸாரகந்தர் படியுமல்லையாயிற்று, ஸம்ஸாரிகள் படியுமில்லையாயிற்றே! நமக்கெனகிறாள். நித்யஸூரிகளை நித்யாநுபவம்பண்ணுவிக்கும்; ஸம்ஸாரிகளுக்கு அபேக்ஷையின்றிக்கே இருக்கச்செய்தேயும், தான் அறிந்ததாக ஆபந்நரான வாறேவந்து ஆபந்நிவாரணம்பண்ணும், தனக்குற்றுட்டை ஸம்பந்தத்தாலே. [நம்] - ஸம்ஶ் லேஷத்து, கூப்பிடுகைக்குவேண்டுவது கொடுத்தபடியாலே - நம் என்கிறாள். [வாராநல்]- வயிற்றிலேவைத்து ரக்ஷிக்கவேண்டா, உடம்போடே யணையவேண்டா, வந்துமுகங்காட்ட வமையுங்கிடீர். "ஊருஷ்டூவவஹ்நஶோகஶ்வந்நஷ்டநிராவஹ: | தஶஸ்வஸ்

இத்யாதி. நடுவென்று - ஸாராயஶத்தைச்சொல்லுகிறது. சிலர்வார்த்தைகேட்டு என்றவநந்தரம், 'அதுக்குத் தானும் ப்ரத்யுத்தரஞ்சொலவ' என்றுகூட்டுவது; இதுக்கு நியாமகம் - "சிலருடனுசாவி" என்று கீழ் அருளிச்செய்கையாலே. இத்தால் - வாகிந்த்ரியத்துக்கு விஷயமில்லையென்றபடி. ஸர்வேந்த்ரியவ்ருத்திகளுக்கும் - ஸர்வேந்த்ரியவ்ருத்திவிஷயபதார்த்தங்களுக்கும். விஶ்லேஷதுக்கம் திவா ராத்ரவிஶேஷமறஸமாநமாயிருக்க, ராத்ரியில் துக்கம் அதிஶயிக்கைக்கு ஹேதுவேதனை - பகலில் வந்தால் இத்யாதி. பல்லிபற்றுகை - பாவிபாயகை. பல்லிபற்றினாற்போலே ஸ்வஸ்வவிஷயங்களை விடாதே பற்றுகை. "ஓர்" என்றதுக்கு பாவம - பண்டும் இத்யாதி. பண்டும் ராத்ரிநெடுகாநிற்க என்றது - "சேட்பட்டயாமங்கள்" என்றத்தைப்பற்ற. பகலுமிரவுமாய் என்றது - "சுடர்கொளி ராகப்பகல்" என்றதைப்பற்ற. விரவாத - கூடாத. "நீளிரவாய" என்னவமைந்திருக்க, "நீண்ட தால்" என்றுவிஶேஷித்ததுக்கு பாவம - மநுஷ்யர்களுடைய இத்யாதி. "எல்லாம்" என்றதுக்கு பாவம் - ப்ரளயாபத்தில் இத்யாதி. "வைஹாயஸந்நாஸந்நாமு ஹோராத்ராயய:" என்று எல்லார்க் கும்வந்த ஆபத்தைரக்ஷித்தோம், உமக்கொருவர்க்காகச் செய்யப்போமோ? என்ன; இதுக்குப்பரிஹார ரூபேண வ்யாக்யாதாவின் ஈடுபாடு - ப்ரளயாபத்திலகப்பட்டார் இத்யாதி. "பார்" என்ற அம்சத்தை ஸமாதிக்கு பாவம் - ப்ரளயத்தில் இத்யாதி. இத்தால்பலிதம் - தந்தாமால் இத்யாதி. இவ்விஶே ஷணத்வயத்துக்கும் பாவம் - ஆக இத்யாதி. அவர்கள்பக்கல் இவன் செய்கிறதேதென்ன - நித்ய ஸூரிகளை இத்யாதி. இத்தசையிலும் முகங்காட்டாதிருக்க, "நம்" என்பானென்? என்ன - ஸம்ஶ் லேஷித்து இத்யாதி. கூப்பிடுகைக்குவேண்டுவதென்றது - ப்ராவண்யம். முகங்காட்டினவாறே துக்கம்போமோ? என்ன - ஊருஷ்டூவவஹ்நி இத்யாதி. "ஊருஷ்டூவவஹ்நஶோகஶ்வந்

ஸ்யலோகஸ்ய ஸமுத்யந்நிவபாஸ்கரஃ'' (த்ருஷ்டஏவஹி நஸ்ஸோக மபநேஷ்ய திராகவஃ - தமஸ்ஸர்வஸ்யலோகஸ்ய ஸமுத்யந்நிவபாஸ்கரஃ). [இனி] - இவ்வளவில். [ஆவிகாப்பார் - ஆர்] - ப்ரளயாபத்தில் அகப்பட்டாரோபாதி ஆபந்நையாயிருக்கிற நான் ரக்ஷிக்கவோ, ''எம்மின்முன்னவனுக்குமாய்வராலோ'' என்கிறபடியே - 'இவளுக்கு அவன் வேணும்' என்று என்பேற்றுக்கு எனக்குமுன்னே நோவுபடுகிற தோழி ரக்ஷிக்கவோ, ஹிதஞ்சொல்லுகிறதாயார் ரக்ஷிக்கவோ, பழிசொல்லுகிறஊரார் ரக்ஷிக்கவோ? [எல்லே] - ஆஶ்சர்யத்திலேயாதல், தோழியை ஸம்போதிக்கிறாளாதல். மேலே ''அன்னையரும்தோழியரும்'' என்று - அவர்களும் உறங்கினார்களென்றுநிற்கச்செய்தேயும், தன் ஆபத்தே செப்பேடாக ''இவ்வளவில் அவள் உணர்ந்திருக்க ஸம்பாவனையுண்டு'' என்றுபார்த்து - எல்லே என்கிறாள். [வல்வினையேன்] - ஸர்வரக்ஷகனுமாய், உடம்போடணைந்தாரைப்பிரியாதவனுமாயிருக்கிற அவன் வந்து உதவாதபடியாயிருக்கிற மஹாபாபத்தைப்பண்ணினேன். [வல்வினையேனுவி] - பிரிவே ஹேதுவாக நூறேபிராயமாயிருக்கிற என்னுடைய ஆவியை. ''பிரிவுக்குச்சிளையாத இது இனிமுடியப்புகுகிறதோ'' என்றிருக்கிறாள். ரக்ஷகனானவன் வந்திலன், எனக்குமுன்னே தோழி நோவுபட்டுக்கிடந்தால், இனிவாயகர் ரக்ஷகராகவோ.

இரண்டாம் பாட்டு.

ஆவிகாப்பாரினியார்? ஆழ்கடல்மண்விண்மூடி
மாவிகாரமாய் ஓர்வல்லிரவாய்நீண்டதால்
காவிசேர்வண்ணன் என்கண்ணனும்வாரானால்
பாவியேன்நெஞ்சமே! நீயும்பாங்கல்லையே.

ஆ.—(ஆவிகாப்பார்.) *ஆழ்கடல்மண்விண்மூடி மாவிகாரமாய் ஓர் வல்லிரவாய்நீண்டது, காவிசேர்வண்ணன் என்கண்ணனும் வருகிறிலன், பாவியேன்நெஞ்சமே, நீயும் எனக்குத்துணையன்றியே போனாய், ஆவிகாப்பாரினியார் என்கிறாள்.*

ஐ.—*இரண்டாம்பாட்டில், இத்தசையிலே க்ருஷ்ணனும் வருகிறிலன், மஹாபாபியான என்னோட்டை ஸம்பந்தத்தாலே, நெஞ்சே, நீயும் பாங்கன்றியே ஒழியாநின்றாய் என்கிறாள்.*

த்ருஷ்டஏவ ஹி நஶ்ஶோகமபநேஷ்யதி ராகவஃ। தமஸ்ஸர்வஸ்யலோகஸ்ய ஸமுத்யந்நிவபாஸ்கரஃ॥ ௯॥'' உத்யோககாண்டம் [அரு] விதுரவாக்யம். ஸௌசௌநகாரத்தில் ஸாரணாம்ஸீநோராஃ. எம்மின்முன்னவனுக்குமாய்வர் - அவன்விஷயமாக ஈடுபடுகிற எனக்கு முன்னே, ''இவளுக்கு அவனுதவப்பெறுகிலதில்லை'' என்று அவன் பொருட்டு ஈடுபட்டாநிற்பர்கள் இத்யாதஃ. ''அன்னையரும்தோழியரும்-துஞ்சுவரால்'' என்றிருக்க, தோழியை ஸம்போதிக்கக்கூடுமோ? என்ன - மேலேஅன்னையரும் இத்யாதி. செப்பேடு - தாம்ரஶாஸநம். ''வல்வினையேன்'' என்றதுக்குத்தாத்பர்யாந்தரம் - பிரிவே ஹேதுவாக இத்யாதி. வல்வினையேனுகையாலே நூறேபிராயமாயிருக்கிறவென்னுடைய என்றபடி. ''நூற்றுபிராயமாய்'' என்று நிஶ்சயிக்கிறது எப்படியென்ன - பிரிவுக்கு இத்யாதி. சிளையாத - இளையாத. ''இனி'' என்றதுக்கு பாவம் - ரக்ஷகனானவன் இத்யாதி. வாயகர்-பழிசொல்லுமவர்கள். ஊரெல்லாம் என்றுதொடங்கி வாரானால், எல்லே, இனி - வல்வினையேனுவிகாப்பார் - ஆர் என்று அந்வயம்.

[ஆழ்கடல் என்று தொடங்கி] - அபரிச்சேத்யமான கடலையும் பூமியையும் ஆகாசத்தையும் அடையமறைத்து அவ்வளவன்றிக்கே மஹாவிகாரத்தையுடைத்தாய் நூறாயிரம் ஆதித்யர்கள் வந்தாலும் பேதிக்கவொண்ணாதது ஒருராத்ரிவந்து தனக்கு அவஸாநமில்லாதபடியாயிற்று. [காவிசேர்வண்ணன்] - காவிபோலேயிருக்கிற நிறத்தை யுடையவன்.

ப.—அநந்தரம், தன்னுடைய ஆஸ்ருப்யத்தை ப்ரகாஶிப்பித்து ஆஶ்ரித ஸவ்யனான க்ருஷ்ணனும் வருகிறிலன்; நெஞ்சே, நீயும் விதேயமாயிருக்கிறிலை, இனி ப்ராணரக்ஷணம்பண்ணுவாரார் என்று நெஞ்சைக்குறித்துச் சொல்லுகிறாள்.

ஆழ்-ஆழ்ந்த, கடல் - கடலையும், மண்-பூமியையும், விண்-ஆகாசத்தையும், மூடி-மூடி, (அவ்வளவில்நில்லாதே அகிலலோகத்தையும் விளாக்கொலைகொள்ளும்படி), மா-பெரிய, விகாரமாய் - விகாரத்தையுடைத்தாய்க்கொண்டு, வல்-(அநேகம் ஆதித்யர்களாலும் பேதிக்கவரிதான) சிக்கெனவையுடைத்தான, ஓரிரவாய் - தமோமயராத்ரியேயாய், நீண்டது - முடிவறவளர்ந்தது; காவி - செய்தலோடு, சேர்-சேர்ந்த, வண்ணன்-நிறத்தையுடையனாய், என் - அந்நிறம் எனக்கு ஸ்வம்மாம்படிபவ்யனான, கண்ணனும் - க்ருஷ்ணனும், வாரான் - இவ்வளவில்வருகிறிலன்; பாவியேன் - (பவ்யனும் அபவ்யனும்படியான) பாபத்தையுடையேனான என்னுடைய, நெஞ்சமே - நெஞ்சமே! (அவனைப்போலே), நீயும்-நீயும், பாங்கல்லை - அநுகூலித்திருக்கிறிலை; இனி-ரக்ஷகனான அவனும் உதவாதே உசாத்துணையான நீயும் உதவாதபின்பு, ஆவி-ப்ராணனை, காப்பார்-காப்பார், ஆர்-ஆர்? ஒருவருமில்லையென்று கருத்து.

இ.—இரண்டாம்பாட்டில், இத்தசையில் உதவக்கடவ க்ருஷ்ணனும் வருகிறிலன், நெஞ்சே, நீயும் அஸவ்யமாகாநின்றாயென்கிறாள்.

[இனி-ஆவிகாப்பார்-ஆர்] - உதவுமவன் உதவுகிறிலன், நெஞ்சும் பாங்காகிறதில்லை, இனி காப்பார் ஆர்? [ஆழ்கடல்இத்யாதி] - அபரிச்சேத்யமான கடலையும் பூமியையும் ஆகாஶத்தையும மறைத்து, அவ்வளவிலும பர்யவஸியாதே மஹத்தான விகாரத்தை உடைத்தாய், நித்யவிபூதியையும கண்செக்கிறாப்போலே யிராநின்றது. ஸ்ரீ விஶ்வரூபங்காட்டினாப்போலே. ஸர்வஶக்திசெய்யுமதத்தையும செய்யாநின்றது. அத்விதீயமாய் அதிப்ரபலமான ராத்ரியாய் முடிவுகாணப்போகிறதில்லை. நூறாயிரமாதித்யர்களாலும் பேதிக்கப்போகாத பராபலயம. இருளுக்கும ராத்ரிக்கும வாசி தெரிவிக்கமாட்டாமையாலே - இருளை ராத்ரியென்கிறாள். [காவிசேர்வண்ணன] - 'ஹாமேஶூநீவரவத்ராஸம்' என்கிற நிறத்தையுடையவன் - இருளோடு சேர்ந்த நிறமாகையாலே, இருளோடே செறிந்து வரலாங்கிடீர். கம்ஸன் காவலாகவைத்த துஷ்ப்ரக்ருதிகள் கணபடாதபடி இருளிலே வந்து அவதரித்தவன். அன்று தாமஸப்ரக்ருதிகளைபோக்க வந்தவனுக்கு, இன்று இந்ததமஸ்ஸைப் போக்கலாகாதோ. [என்கண்ணன்] - முன்பு ராத்ரிகளிலே வந்து உதவுமவன். [பாவியேன்நெஞ்சமே] - அவனும் என்னுடையவனாயிறே யுதவாதொழிந்தது, ஆபத்துக்கு உதவாதவனாயனமே, அது உனக்குமொக்குமே. என்கண்ணன என்னலாமபடியேற அவன்ஸவயதை. ஸவயானாடங்க அஸவயாம பாபத்தைப பண்ணினேன். [நீயுமபாஙகல்லையே] - ஶேஷியாய் ஸவதந்த்ரனானவன் செய்யுமததை, பாரதந்த்ர்யமே ஸ்வரூபமாயிருக்கிற நீயும் செய்யவேணுமோ. "ப்ரணயித்வததை விட்டேன்" என்னலாம், ஸ்வதந்த்ரனாகையாலே; உனக்கு அஙஙன் இருபபதொன்றுணடோ?

ஈடு.—இரண்டாம்பாட்டு. இத்தசையில் க்ருஷ்ணனும் வருகிறிலன்; என்னோட்டை ஸம்பந்தத்தாலே, அவனைப்போலே நெஞ்சே! நீயும் பாங்கன்றிக்கே யொழிந்தா யென்கிறாள்.

[ஆவிகாப்பாரினியார்] - உதவுமவன் உதவிற்றிலன், நெஞ்சும் பாங்கன்றிக்கே யொழிந்தது, இனிரக்ஷகரார். கண்ணனும்வாரான் - நெஞ்சமே! நீயும்பாங்கல்லை - ஆவி காப்பாரினியார். [ஆழ்கடல் இத்யாதி] - வ்யாபகபதார்த்தங்களை வ்யாப்யங்களிலே யொன்றுமறைத்தது. அபரிச்சேத்யமானகடல், எல்லாப்பதார்த்தங்களுக்கும் இடங்கொடுக்கக்கடவபூமி, அதுக்கும் அவகாசப்ரதாநம்பண்ணும் ஆகாசம், இவற்றையடையமறைத்து. [மாவிகாரமாய்] - பின்னையும் அவ்வளவில் பர்யவஸிப்பதாயிருக்கிறதில்லை, மஹாவிகாரத்தையுடைத்தாய் நித்யவிபூதியையும் கணிசிக்கிறப்போலேயிராநின்றது. வைஶ்வரூப்யங்காட்டின ஸர்வஶக்தி செய்வதெல்லாம் செய்யாநின்றது. [ஓர்வல்லிரவாய்] - ராத்ரிக்கும் இருளுக்கும்வாசி புத்திபண்ணியிராமையாலே - இருளை ராத்ரியென்கிறாள். [ஓர்வல்லிரவாய்] - திருவாழியையிட்டுத் துண்டித்து உதவவரிலும் வரவொண்ணாதபடி செறிந்திருக்கை. [நீண்டதால்] - ஒருமுடிவுகாணவொண்ணாது. [காவிசேர்வண்ணன்] - "ஸாந்த்ரேந்தீவரஶ்யாமம்" (புல்லேந்தீவரபத்ராபம்) என்கிற நிறத்தையுடையவன். இருளோடு ஒருகோவையானநிறம், *இருளன்னமாமேனியிறே. கறுப்பு உடுத்து வருவாரோபாதி வரலாங்கிடீர். [என்கண்ணன்] - கம்ஸன் காவலாகவைத்த துஷ்ப்ரக்ருதிகள் கண்படாதபடி, இருளிலேவந்து உதவினவன். † நள்ளிருட்கண்வந்த வெந்தை பெருமானன்றே. [வாரானால்] - தாமஸபரக்ருதிகளை நிரஸிக்கவருமவன், தமஸ்ஸா

இரண்டாம்பாட்டு.—ஆவிகாப்பார் இத்யாதி. "ஆழ்கடல்" இத்யாதியைப்பற்ற - இத்தசையில் இத்யாதி. நெஞ்சே நீயும் பாங்கன்றிக்கேயொழிந்தாய் என்றது - அவனை அநுஸந்தித்து பார்த்துக்கொண்டிருக்கைக்கு, நீ என்னைதுமாயிருக்கிறாயில்லை; "என்னெஞ்சினாருமங்கேயொழிந்தார்" என்று, நீயும் அங்கேயொழிந்தா யென்றபடி.

அந்வயமுகேந தாத்பர்யம் - உதவுமவன் இத்யாதி. தாத்பர்யாநுகுணமாகப் பதாந்வயங்காட்டுகிறார் - கண்ணனும் இத்யாதி. வ்யாபகபதார்த்தங்களாவன - பூதங்கள். வ்யாப்யங்களிலே யொன்று என்றது - ப்ருதிவீகார்யத்வேந வ்யாப்யமான தமஸ்ஸென்றபடி. "தமஸா தேஜஸ்காயம் ..." என்றும் சொல்லுவார்கள். வ்யாபகங்களெவை? என்ன - அபரிச்சேத்யமான இத்யாதி. "ஆழ்" என்றது - இவ்விடத்தில், அபரிச்சேத்யமென்றபடி. கணிசிக்கிறப்போலே - ஸ்வாதீநமாக்க அபேக்ஷிக்கிறாப்போலே. வ்யாப்யமானது வ்யாபகங்களை வ்யாபித்ததுக்கு த்ருஷ்டாந்தம் - வைஶ்வரூப்யம் இத்யாதி. அதாவது - அர்ஜுநனுக்கு க்ருஷ்ணன் வைஶ்வரூப்யங்காட்டினபோது எங்கும் வ்யாபித்தாப்போலே, இதுவும் எங்கும் வ்யாபித்ததென்றபடி. இப்படிசெய்கிறது இருளாகையாலே, "ஓர்வல்லிருள்" என்னவேண்டாவோ? என்ன - ராத்ரிக்கும் இத்யாதி. "வல்" என்றதுக்கு பாவம் - திருவாழியை இத்யாதி. காவி - கருநெய்தல். "ஸாந்த்ரேந்தீவரஶ்யாமம் ஸந்த்யாப்ர ஸமேக்ஷணம்। ஶ்ரீவத்ஸவக்ஷஸம் ஜாதம் ததாஷ்டாவக்ஷ ப்ருஹத்ஸிம॥" உத்தரே ஷஷ்டோத்யாயே. பலிதம் - இருளோடு இத்யாதி. இதுக்குப்ரமாணம் - இருளன்ன இத்யாதி. இருளோடொத்த ஶ்லாக்யமானவடிவையுடைய இத்யர்த்த:. *பெரியதிருவந்தாதி, இருபத்தாறும் பாட்டு, "யானுமென்னெஞ்சும்" இத்யாதி. இப்படிசொல்லுகிறதுக்கு பாவம் - கறுப்புடுத்து இத்யாதி. விஶ்லேஷித்தவனை "என்" என்கிறதென்? என்ன - கம்ஸன் இத்யாதி. அப்படி இருளிலே வந்து உதவினானோ? என்ன - நள்ளிருட்கண் இத்யாதி. செறிந்த இருளிலேவந்துதோன்றின என்னுடையகுலநாதரானவர் இத்யர்த்த:. †திருமொழி, ஏழாம்பத்து, அஞ்சாந்திருமொழி, முதற்பாட்டு,

தன்னையே நிரஸிக்கவந்தாலாகாதோ? வந்தானாகில் அப்போதே விடியுமே இவளுக்கு, ‡ பகற்கண்டேன் நாரணனைக்கண்டேனிறே. [பாவியேன்நெஞ்சமே] - உனக்கும் அவனோடொத்த ப்ராப்தியேயிறே. அவன் உதவும் ஸ்வபாவனல்லாமையன்றே உதவாவிட்டது, என்னோட்டை ஸம்பந்தமிறே - என்மார்விலேயணைக்கையிறே அவன் உதவாதொழிகிறது, அது உனக்குமொக்குமிறே. [நீயும்பாங்கல்லையே] - ஓராகாரத்தாலே ஸாஜாத்யமுண்டானால் வேறோராகாரத்தாலே வ்யாவ்ருத்தியுண்டானா லாகாதோ, ஸ்வதந்த்ரனாய் பரதந்த்ரனான அவனோபாதியாகவேணுமோ பாரதந்த்ர்யமேஸ்வரூபமான நீயும். அவனுக்கு ப்ரணயித்வம் தவிர்ந்ததென்றால் ஸ்வாதந்த்ர்யமேஜீவிக்கும், உனக்கு அங்ஙனன்றில்லையே. இருவர் ஸஹ்யராயிருந்தால், அவர்களிலே ஒருவன் அஸஹ்யனானால் மற்றையவனும் அஸஹ்யனாகவேணுமோ. "என்கண்ணனும்வாரானால்," "என்னெஞ்சமே" என்று ஒக்கச்சொல்லலாயிருக்கிறதிறே. (௨)

மூன்றாம் பாட்டு.

நீயும்பாங்கல்லைகாண் நெஞ்சமே! நீளிரவும்
ஓயும்பொழுதின்றி ஊழியாய்நீண்டதால்
காயுங்கடுஞ்சிலை என்காகுத்தன்வாரானால்
மாயும்வகையறியேன் வல்வினையேன்பெண்பிறந்தே.

ஆ.—(நீயும்.) மடநெஞ்சமே! நீயும் துணையன்றியேபோனாய். நீளிரவும்ஓயும் பொழுதின்றி ஊழியாய்நீளாநின்றது, ப்ரதிகூலநிரஸநஸ்வபாவமான ஸ்ரீஸார்ங்கத்திருவில்லையுடைய என்காகுத்தன்வருகிறிலன், வாராதொழிந்தால்தான் முடியலாமிறே, 'முடிவன்' என்றால் முடியவொண்ணாதபடி பாபத்தினால் பராதீனையாய்ப்பிறந்தேனென்கிறாள்.

"தந்தைகாலில்" இத்யாதி. தாமஸப்ரக்ருதிகள் - கம்ஸாதிகள். வந்தாக்பலமேதென்ன - வந்தானாகில் இத்யாதி. அதுக்குநியாமகமேதென்ன - பகற்கண்டேன் இத்யாதி. இரவுசகலசாதபகலாய்ச் செல்லும்படியானதொரு நல்வடிவைக்கண்டேன், ஒருகாலத்திலும் போக்குவரத்தின்றிக்கேயிருக்கிற உபயவிபூதியுக்தனான நாராயணனாகிற ஆதித்யனைக்கண்டேனித்யர்த்தஃ. அஜ்ஞாநம்நீங்கி அறிவு பிறந்து ஸவிபூதிகனான எம்பெருமானைக்கண்டேனென்றகருத்து. ‡இரண்டாந்திருவந்தாதி. எண்பத்தோராம்பாட்டு. "என்கண்ணன்" "பாவியேன்நெஞ்சம்" என்றதுக்கு ஹாவம் - உனக்கும் இத்யாதி. ஸம்பந்தமேதென்ன - என்மார்விலே இத்யாதி. கீழே. "நீயும்" என்றசப்தத்துக்கு - ஸமுச்சயமாக அருளிச்செய்து, வ்யாவ்ருத்திபரமாகத் தாத்பர்யாந்தரம் - ஓராகாரத்தாலே இத்யாதி அதாவது - மார்பிலேயணைத்த ஆகாரத்தாலே ஒத்திருந்தாலும், என்னை விஸ்லேஷிப்பாநிருந்த ஆகாரத்தாலே வ்யாவ்ருத்தமானாலாகாதோ? என்றபடி. சப்தத்துக்குத் தாத்பர்யாந்தரம் - ஸ்வதந்த்ரனாய் இத்யாதி. பாதந்த்ரனானநான், ஸ்வதந்த்ரனாய் பாதந்த்ரனானவனைப்போலேயிருந்தால் வரும் அநர்த்தமேதென்ன - அவனுக்கு இத்யாதி. "ஓராகாரத்தாலே" இத்யாதிவாக்யவிவரணம் - இருவர் இத்யாதி. இருவரும் ஸஹ்யரென்றதோ? என்ன - என்கண்ணனும் இத்யாதி. ஆழ்கடல் இத்யாரப்ய, நீயும் பாங்கல்லையே, இனி - ஆவிகாப்பார் - ஆர் இத்யந்வயஃ. (௨)

ஒ.—மூன்றாம்பாட்டில், ஸகலது:க்கங்களையும் கெடுத்து உஜ்ஜீவிப்பிக்கும் ஸ்வபாவனான காகுத்ஸ்தனும் வருகிறிலன், பரதந்த்ரையாகையாலே முடியவும் விரகு பெறுகிறிலேனென்று இன்னாதாகிறாள்.

[நீளிரவு என்று தொடங்கி] - அபரிச்சேத்யமாம்படி வளர்ந்த ராத்ரி கல்பமாய் வந்துதோற்றி ஒன்றும் குறைந்துகாட்டாதே நெடுகிற்று. ப்ரதிகூலரை உபஹரிக்கும் ஸ்வபாவமாய் தர்ஶநமாத்ரத்திலே பயாவஹமான ஸ்ரீஸார்ங்கத்தையுடையனான சக்ரவர்த்திதிருமகனும் வருகிறிலன்.

ப.—அநந்தரம், அநிஷ்டநிவர்த்தகஸீலனான சக்ரவர்த்திதிருமகன் வருகிறிலன், பராதீனையாகையாலே முடியவிரகறிகிறிலேனென்று நெஞ்சைப்பார்த்துச் சொல்லுகிறாள்.

நெஞ்சமே - நெஞ்சமே! நீயும் - ஸர்வகார்யத்துக்கும் ப்ரதாநகாரணமான நீயும், பாங்கல்லை - விதேயமாயிருக்கிறிலை; நீள்-பண்டேநீண்டுவருகிற, இரவும்-ராத்ரியும், ஓயும்பொழுது - ஓயுங்காலம், இன்றி-இன்றியே, ஊழிபாய் - கல்பமாய்க்கொண்டு, நீண்டது - வளர்ந்துவிட்டது; காயும் - ஆஸ்ரிதவிரோதிகளைச்சுட்டுப் போகடுவதான, கடு-கடிய, சிலை - ஸ்ரீஸார்ங்கத்தையுடையனான, என்காகுத்தன் - பரோபகாரஸீலமான குடியிலேபிறந்த சக்ரவர்த்திதிருமகன், வாரான் - ஸ்ரீஜநகராஜன்திருமகளுக்கு உதவினாப்போலேவந்து உதவுகிறிலன்; வல்வினையேன் - (அவன் உதவாமைக்கடியான) ப்ரபலபாபத்தையுடையநான், பெண்-(முடியும்போதும் ஸ்வாதந்த்ர்யமில்லாத) பெண்ணாய், பிறந்து - பிறந்து, மாயும்வகை - முடியும்ப்ரகாரம், அறியேன் - அறிகிறிலேன்.

இ.—மூன்றாம்பாட்டில், ஸகலது:க்கங்களையும்போக்கும் காகுத்ஸ்தன் வருகிறிலன், பாரதந்த்ர்யையாகையாலே முடியும்விரகு அறிகிறிலேனென்கிறாள்.

[நீயும்இத்யாதி]- 'மந:பூர்வம்' என்கிறபடியே உன்னையொழிய ஒருகார்யம்செய்யவொண்ணாதபடிப்ரதாநமான நீயும் பாங்காகிறிலை. முதலிலேநெடிதானராத்ரியும், முடிவுகாணவொண்ணாதே-வளராநின்றாலும் குறைந்துவரலாமிறே அங்ஙனேசெய்யாதே, நிலைபெறுகிறதில்லை. அவ்வளவன்றிக்கே, "ராத்ரி" என்கிற பேரைப்போகட்டு, "கல்பம்" என்கிற பேரையுடைத்தாய்; அவ்வளவிலும் தலைக்கட்டாதே நெடுகாநின்றது. [காயுங்கடுஞ்சிலை] - ப்ரதிபக்ஷத்தை பஸ்மமாக்குவதாய், பெருமாள்கண்பார்க்கிலும் கண்பாராதஸிலை. "ஸவ்யஸாசீ", வில்லையணைக்கவே பணிபோரும்படியிறேயிருப்பது. [என்காகுத்தன்] - பிராட்டிக்கு உதவினது தனக்கு உதவிற்றென்றிருக்கிறாள். ஒருநாள் ஓராபத்திலே யுதவினார்க்குப் பின்பு உதவலாகாதோ? "தயரதற்குமகன்தன்னையன்றி மற்றிலேன்தஞ்சமாகவே" என்னக்கடவதிறே. கீழே "கண்ணனும் வாரானால்" என்றாள், "அஶிக்ஷிதக்ஷத்ரியபுத்ரனல்லேன்" என்று அவன் வரத்தவிர்ந்தாலும், முடிசூடிநோக்கிப்போந்தகுடியிலே பிறந்தார்க்கு வரவேண்டாவோ. 'சினத்தினால்தென்னிலங்கைக் கோமானைச்செற்ற மனதுக்கினியானை" என்றார்களிறே பெண்கள். இருந்தவிடத்தே சென்று விரோதியைப்போக்கினவன் வருகிறிலன். "ஸஹியாதாவிஹாதரா" என்னக்கடவதிறே. [மாயும்வகையறியேன்]- அஹிமதர் வாராவிட்டால் முடிகையிறே ப்ரியம், அதுக்கு விரகறிகிறிலேன். "காலோ ஹி து:ஸாதிக்ரம:" என்றாளிறே பிராட்டி. [வல்

வினையேன்] - *அவன்வாராமைக்கடியானபாபத்தைப் பண்ணினேன். முடியவும் அரிதான பாபத்தைப் பண்ணினேன். பாபம் மரணஹேதுவன்றிக்கே ஜீவிக்கைக்கு ஹேதுவா யிருக்குமாகாதே, ஜீவிக்கை தேட்டமானபோது அரிதாம், முடிகையும் தேட்டமான போது அரிதாம், அநிஷ்டாவஹம் பாபமித்தனையிறே. [பெண்பிறந்தே]* - *முடிகையும் ஜீவிக்கையும் ஸ்வாதீநமல்லாதஜந்மத்தே பிறந்தேன். எல்லாவளவிலும் அவனைநோக்க வேண்டும் ஜந்மமிறே. முடியும்போது, ஆண்பிள்ளையுமாய் ஸ்வதந்த்ரனுமான சக்ரவர்த்தி போல்வார் வேணுமாகாதே.*

ஈடு.—மூன்றாம்பாட்டு. ஸகலதுஃகங்களையும்போக்கும் ஸ்வபாவனான காகுத் ஸ்த்தனும் வருகிறிலன், பரதந்த்ரையாகையாலே முடியவும் விரகறிகிறிலே னென்கிறாள்.

[நீயும்பாங்கல்லைகாண் நெஞ்சமே] - கங்கைக்கு அக்கரைப்பட்டவன்று, இளைய பெருமாளைப்பார்த்து, "பிள்ளாய், நீயும் படைவீடேறப்போ" என்றாரிறே, "வநவாஸம் இவரையொழியவும் தலைக்கட்டலாம்" என்று ப்ரமித்து; அப்படியே இவரும் தந்திருவுள் ளத்தைப்பார்த்து, "நீயும்பாங்கல்லைகாண்" என்கிறார். "மநஏவ" (மநஏவ) என்கிற படியே - நெஞ்சைக்கொண்டேயிறே எல்லாம்பெறவிருக்கிறது, ஆயிருக்கச்செய்தேயும், இன்னாப்பாலே சொல்லுகிறார். [நீளிரவு இத்யாதி] - முதலிலே நெடிதான ராத்ரியானது; அதுக்குமேலே, ஒருமுடிவுகாணவொண்ணாதபடி யிராநின்றது. அடிகாணவொண்ணாத படியுமாய், முடிவுக்கும் ஓரெல்லைகாணவொண்ணாதபடி யிராநின்றது. முடிவுகாண வொண்ணாதிருக்கச்செய்தேயும் அடியற்றிருப்பனவுண்டிறே, இது அப்படியிருக்கிறதில்லை. [ஓயும்போழுதின்றி] - நின்றவிடத்தில் நின்றும் கால்வாங்கக்கடவதன்றிக்கே. [ஊழியாய்] - "சாத்தன், கூத்தன்" என்றாற்போலே சிலபேராய், அவர்கள் தாங்கள் ஜீவிக்கப்புக்க

மூன்றாம்பாட்டு.—நீயும் இத்யாதி. "காயும்கடுஞ்சிலை" இத்யாதியைப்பற்ற - ஸகல இத்யாதி.

புநஃச "நீயும்பாங்கல்லைகாண்" என்றதுக்கு ஸத்ருஷ்டாந்தமாக பாவம் - கங்கைக்கு இத் யாதி. பிள்ளாய், நீயும் படைவீடேறப்போ என்றாரிறே யென்றது - "அயோத்யாமிதவநவாஸம் காமவஸ்விஸ்ருஜஸ்வ ஸ | அஹமேகோ கமிஷ்யாமி ஸீதயாஸஹ தண்டகாந் || கசுஉ ||" (அயோத்யாகாண்டே, ருங) என்றத்தைப்பற்ற. பாங்கல்லைகாண் - பாங்கன்றிக்கேயொழிந்தாய் காணென்றபடியாய், இத்தால் - உன்னைக்கொண்டு கார்யமில்லையென்று உபேக்ஷிக்கிறானென்றபடி. "பாங்கல்லைகாண்" என்கிறதென், மநஸ்ஸையொழிய ஒருகார்யமுண்டோ? என்ன - மநஏவ இத்யாதி. "மநஏவ மநுஷ்யாணாம் காரணம் பந்தமோக்ஷயோ: | பந்தாய விஷயாஸங்கி மோக்ஷே நிர்விஷயம் மந: || உஅ ||" இதி ஸ்ரீவிஷ்ணுபுராணே, ஷஷ்டே ஸப்தமே. இன்னாப்பு - வெறுப்பு. பாங்கன்றிக்கே யொழிகையாவது - வேறொன்றை யநுஸந்தித்து தரிக்கமாட்டாமை. "நீள்" என்றும், "ஓயும்பொழுதின்றி" என்றும் விசேஷித்ததுக்கு பாவம் - முதலிலே இத்யாதி. கீழ்வாக்யவிவரணம் - அடிகாண இத்யாதி. ஆனால், "ஓயும்பொழு தின்றி" என்று - முடிவில்லாமைசொன்னபோதே, அடிகாணவொண்ணாமையும் ஸித்தமன்றோ, "நீளிரவு" என்றுவிசேஷிக்கவேணுமோ? என்ன - முடிவுகாண இத்யாதி. அதாவது - ப்ரவாஹ ஸாவத்துக்கு முடிவின்றிக்கேயிருக்கச்செய்தேயும் அடியுண்டாயிருக்குமிறே, அத்தைப்பற்ற விசே ஷிக்கிறதென்றபடி. அடியற்றிருப்பன - அடியுண்டாயிருப்பன. "நீளிரவு" என்று - அடிகாண வொண்ணாதென்றபோதே, முடிவுகாணவொண்ணாமையும் ஸித்தமன்றோ, "ஓயும்பொழுதின்றி" என்றுவிசேஷிக்கவேணுமோ? என்ன; ப்ராமவ்யாவ்ருத்த்யர்த்தம் விசேஷிக்கவேணுமென்று

வாறே சிறுபேர்தவிர்ந்து, "சோழக்கோனர், தொண்டமானர்" என்று பட்டப்பேர்பெற்று வாழுமாபோலே, ராத்ரியானதுபோய் "கல்பம்" என்னும்பேரை யுடைத்தாகாநின்றது. [நீண்டதால்] - அதுதனக்கும் ஓரவஸாநமுண்டிறே, அதுவுமில்லையாயிற்று இதுக்கு. [காயும் கடுஞ்சிலை இத்யாதி] - ஒருத்தியுடைய நெடிதானராத்ரியைப் பரிஹரிக்கைக்காக வ்யாபரித்த வில்வலியையுடையவனும் வருகிறிலன். ப்ரதிபக்ஷத்தின்மேலே காயாநிற்பதாய், எதிரிகள் பக்கல் பெருமாள்கண்பார்க்கிலும் தான் கண்பாராதபடியான சிலையையுடையவன். அவனுடைய ஶாங்கம் என்னளவிற்கண்டிலேன். †(ஶாங்கமென்று - பக்ஷபாதத்துக்குப்பேர்.) [என்காகுத்தன்] - பிராட்டிக்கு உதவினதும் "தனக்கு உதவிற்று" என்றிருக்கிறாள். "தயரதற்குமகன்தன்னையன்றி மற்றிலேன்தஞ்சம்" என்று நான் தஞ்சமாகநினைத்திருக்குமவனும் வருகிறிலன். "சினத்தினால் இத்யாதி" - பிராட்டியுடைய விரோதியைப்போக்கினது அவளுக்குக் காரியம் செய்தானாக நினைத்திருக்கையன்றிக்கே, தன்சினம் தீர்ந்தானாயிருக்குமவன். [காகுத்தன்] - கீழே, "கண்ணனும்வாரானால்" என்றது; அபிஷிக்தக்ஷத்ரிய புத்ரரல்லாதார்தாம் தவிருகிறார்கள், முடிசூடி நோக்கும் குடியிலே பிறந்தவனுக்கு வரத் தட்டேன். ககுத்ஸ்த்தகுலோத்பவனானவனும் வாராதொழிவதே! [வாரானால்] - எதிரிகள் வரப்போரவிருக்கையன்றிக்கே, தானே யெடுத்துவிட்டுச் சென்று பொருமவனும் வருகிறிலன். "அபியாதா" (அபியாதா) - எதிரிகள் வரப்போரவிருக்கை யன்றிக்கே, எடுத்துவிட்டுப் பொருகையும் தமக்கேபணியாயிருக்கும். "ப்ரஹர்த்தாச" (ப்ரஹர்த்தாச) - தூசித்தலையில்நின்று, "முதல்வெட்டு ஆரது" என்றால், அதில்முற்பாடும் தம்மதாயிருக்கும். "ஸேநாநயவிஶாரத:" (ஸேநாநயவிஶாரத:) - தாம்போகாதே, தூசியுமணியும் பேரணியுமாகவகுத்துவிட்டால், ஒக்கநின்று பொருவித்தாற்போலே வென்று மீளும்படி படைகோக்கவல்லவர். [மாயும்வகையறியேன்] - இவன்வாராமையறிந்தால் இனிமுடிகையிறே ஸுகம், முடியும்விரகறிகிறிலேன். [வல்வினையேன்] - முடிகை ஸுகமாய்த் தேட்டமானால் அதுவும் கிடையாதபடியான பாபத்தைப்பண்ணினேன். பாபமானது

கண்டுகொள்வது. ஓயுகை - முடிகை. ராத்ரியானது - ராத்ரி என்கிற பேரானது. அதுதனக்கும் - அந்தக்கல்பந்தனக்கும். ஒருத்தியுடையநெடிதானராத்ரியென்றது - நெடிதானவிஶ்லேஷ வ்யஸநமென்றபடி. காயாநிற்பதாய் - ஊஹியாநிற்பதாய். கண்பார்க்கிலும் - தயைபண்ணிலும். சாங்கமென்றது - சாடு; வில்லும், பக்ஷபாதமும். க்ருஷ்ணனன்றோ பெண்களுக்குத்தஞ்சம், பெருமாள் தஞ்சமாயிருப்பரோ? என்ன; பெண்களுடையகார்யம் தன்பேறாகச்செய்யுமவராகையாலே தஞ்சமென்கிறார் - சினத்தினால் இத்யாதி. கோபத்தாலே, அழகியலங்கைக்கு அதிபனானராவணனை நிரஸித்த மனத்துக்கினியானை இதி பாசுரார்த்த:. எடுத்தபாசுரத்துக்கு பாவம் - பிராட்டியுடைய இத்யாதி. "காகுத்தன்" என்றதுக்கு பாவம் - கீழேகண்ணனும் இத்யாதி. ஸப்தார்த்தம் - ககுத்ஸ்த்த இத்யாதி. "ஊழியாய்நீண்டதால், காகுத்தன்வாரானால்" என்றுகூட்டிபாவமாதல், தாத்பர்யாந்தரமாதல் - எதிரிகள் இத்யாதி. தான் எடுத்துவிட்டுப்பொருமவனோ? என்ன - அபியாதா இத்யாதி. "அபியாதா ப்ரஹர்த்தாச ஸேநாநயவிஶாரத: । அப்ரத்ருஷ்யஶ்ச ஸங்க்ராமே க்ருத்தைரபி ஸுராஸுரை: ॥ உகூ॥" உத்யோகாண்டே (க). பொர - யுத்தம்பண்ண. தூசி - யுத்தம். தூசியுமணியும்-தூசியிலணியும். அணி - இடவணி, வலவணி. பேரணி-பின்னணி. அன்றிக்கே,தூசியும் பின்னணியு மணியுமென்னுதல். தூசி-யுத்தமும், முன்னணியும். அணியாவது-வ்யூஹம். வதைத்து - விஹஜித்து. கீழ்வாக்யவிவரணம் - பாபமானது இத்யாதி. புண்யமே ஜீவநஹேது

---

† குண்டலிதம் க்வாசித்கம், ப்ரக்ஷிப்தம்.

விநாஶஹேதுவாகையன்றிக்கே, ஜீவிக்கைக்கு ஹேதுவாவதே! ஜீவிக்கை தேட்டமான போது அரிதாம், முடிகை தேட்டமானபோது அரிதாம், ஏதேனுமாக அநிஷ்டாவஹம் பாபமாமித்தனையிறே. [பெண்பிறந்தே] - பரதந்த்ரஜந்மத்திலே பிறந்தார்க்கு நினைத்த போது முடியப்போமோ. பிறர்க்காக ஜீவிக்கவேண்டும் பரதந்த்ரஜந்மத்திலே பிறக்கைக் கீடான மஹாபாபத்தைப் பண்ணினேன். "பாபாநாமாகரஸ்த்ரியஃ" (பாபாநாமாகரஸ்த்ரியஃ) என்னக்கடவதிறே. "நசாஸ்யமாதா" (நசாஸ்யமாதா) - பிராட்டி திருவடியைக்கண்டவநந்தரம், பெருமாள்பக்கல் ப்ரணயரோஷத்தாலே, "இவன் அவர்வர விட்டஆள்" என்று சீறிச் சிலவார்த்தையருளிச்செய்ய; "தேவரீர் எழுந்தருளியிருந்தவிடம் அறியாமலிருந்தாரித்தனையல்லது ஸாவபந்தத்தில் ஊற்றம்போராமையோ, அறிந்தபின்பு இனித்தாழ்த்தாராகிலன்றோ குற்றமாவது" என்று அச்சிவிட்டு ஆறும்படி சிலவார்த்தை விண்ணப்பம்செய்து; பின்னையுந்தான், "அவரைப்பிரிந்து பத்துமாஸமுண்டே, இவ்வளவும் முடியாமல் தரித்திருந்ததன்றோ தேவரும்" என்று தனக்குக்கருத்து என்னுமிடம் தோற்ற விருந்தான்; அதுவோ உனக்குநினைவு! வாராய், நாட்டார்க்கு, மாதாவென்றும் பிதாவென்றும் ப்ராதாவென்றும் பந்துக்களென்றும் பலதலைத்திருக்கையாலே ஸ்நேஹமானது எங்கும் பால் பாய்ந்திருக்கும்; பெருமாள் அங்ஙனன்றிக்கே, எல்லார்பக்கல்பண்ணும் ஸ்நேஹத்தையும் என்பக்கலிலே ஒருமடையாகச்செய்து வைக்கையாலே, எல்லாம் செய்தாலும், கடலையணை செய்து விரோதிவர்க்கத்தைக்கிழங்கெடுத்து "தண்ணீர் தண்ணீர்" என்று வருகைதவிரார்; தாபார்த்தன் விடாய்ப்பட்டுப் பந்தலேறவரக்கொண்டு தண்ணீர்ச்சாலுருட்டிக்கிடந்தால் பிழையாதாப்போலே, அவர் இப்படிவரக்கொண்டு நானின்றிக்கே யிருப்பனாகில் பின்னை யவரைக்கிடையாதென்று, அவர்க்காக என்னை நோக்கிக்கொண்டிருந்தேன். அவரைக் கண்ட பிற்றைநாள் நான் இருந்தேனாகிற்காண் நீ இவ்வார்த்தைசொல்லுவ தென்றருளிறே. "தூத" (தூத) - முன்பு, "வாநர" என்றாற்போலே சொல்லிப்போந்தவள், இப்போது

வொழிய, பாபம் ஜீவநஹேதுவாமோ? என்ன - ஜீவிக்கைதேட்டமானபோது இத்யாதி. "வல்வினையேனுகையாலே - மாயும்வகையறியேன்" என்றுகூட்டி ஸாவம் அருளிச்செய்து, "பெண்பிறந்தே - மாயும்வகையறியேன்" என்றுகூட்டி ஸாவம் - பாரதந்த்ரஜந்மத்திலே இத்யாதி. "பெண்பிறந்தே - மாயும்வகையறியேன் - வல்வினையேன்" என்றுகூட்டி ஸாவாந்தரம் - பிறர்க்காக இத்யாதி. அப்படி ஸ்த்ரீஜந்மம் பாபபலமோ? என்ன - பாபாநாம் இத்யாதி. அதாவது - பாபபலமாய் பாபஹேதுவுமாய் இருக்குமென்றபடி. "நாஶநாநாமாகரஃக்ரோதஃ க்ஷுதாவஶிஹவாகரஃ । ஸ்த்ரியோநாமாகரஸ்தோயம் பாபாநாமாகரஸ்த்ரியஃ" இதி ஹோஹாரதே. பாரதந்த்ரஜந்மத்திலே பிறந்தார்க்கு நினைத்தபோதாக முடியப்போகாதென்றதுக்கு ஸம்வாதம் - நசாஸ்ய இத்யாதி. "நசாஸ்யமாதா நபிதா நசாந்யஸ் ஸ்நேஹாதிகோ விததே ஸ்த்யா ஸமோவா । தாவத்த்யஹம் தூத ஜிஜீவிஷேயம் யாவத்ப்ரவ்ருத்திம் ஶ்ருணுயாம் ப்ரியஸ்ய ॥ நஉ ॥" இதி ஸுந்தரகாண்டே (நசு) ஸநத்ரிம்ஶஸ்ஸர்க்கே ஸீதா. இந்தஶ்லோகத்திலே, "தாவத்யஹம் ஜிஜீவிஷேயம்" என்று-ஜீவநாவதி சொன்னதுக்கு அநுகுணமாக ஶ்லோகாவதாரிகை - பிராட்டி இத்யாதி. நசாபி ஸுஸ்வாஜநீதே ராகஃஸௌமநோவநஃ । தேநசாம்நாநயத்ராஶ" என்கிற ஶ்லோக தாத்பர்யம்-தேவரீர் இத்யாதி. பின்னையுந்தான் என்றது - வார்த்தைப்பாடு. முழுச்சொல். பலதலைத்திருக்கையாலே - பஹுமுகமாகையாலே. எல்லாம்செய்தாலும் என்றது - என்னைப்பிரிந்து இவ்

அவர்பக்கலுண்டான சிவிட்கு இவ்வளவும் ஏறிப்பாய்ந்து, அவர்வரவிடவந்தவனன்றோ நீயும் என்றருளிறே. [வல்வினையேன்பெண்பிறந்தே - மாயும்வகையறியேன்] - ஸ்வேச்சாதீநமான மரணமாம்போது ஆண்பிறந்த சக்ரவர்த்தி ஹீஷ்மாதிகளாகவேணுமாகாதே;ஜ்ஞாநவான்களாதல் ஸ்வதந்த்ரராதல் செய்யவேணும், அறிவிலிகளான பெண்பிறந்தார்க்கு நினைத்தபடி முடியப்போமோ. (௩)

நான்காம் பாட்டு.

பெண்பிறந்தாரெய்தும் பெருந்துயர்காண்கிலேனென்று
ஒண்சுடரோன் வாராதொளித்தான் இம்மண்ணளந்த
கண்பெரியசெவ்வாய் எங்காரேறுவாரானுல்
எண்பெரியசிந்தைநோய் தீர்ப்பாரார்என்னையே?

ஆ.—(பெண்பிறந்தார்.) நான்படுகிற இந்தமஹாதுக்கத்தைக் காண்கையில் முடிகையே நன்றென்றுபார்த்து ஆதித்யன்வாராதே, தன்னைக்கொண்டு முடிந்தான்; இந்ததசையில் தன்னுடைய காருண்ய ஸௌசீல்யஸௌந்தர்யாதி குணங்களாலே என்னைத்தோற்பித்து எனக்குப் பரமபோக்யனுயிருந்தவன் வருகிறிலன், வாராதொழிந்தால் அளவிறந்தசிந்தைநோய்தீர்ப்பார் ஆர் என்னை யென்கிறுள்.

ஒ.—நாலாம்பாட்டில், கண்டார்க்குப் பொறுக்கவொண்ணுதபடி வ்யஸநப்படாநிற்க, எல்லாருடைய ஆபத்துக்களையும் போக்குவானுன திருவுலகளந்தருளின எம்பெருமான் வருகிறிலன். என்னுடைய நிரவதிக சிந்தாவ்யஸநத்தைப் போக்குவார் ஆர்? என்கிறுள்.

[பெண்பிறந்தார் என்றுதொடங்கி] - நான்படுகிற மஹாதுக்கத்தைப் பெண்ணுய்ப்பிறந்தார் படும் மஹாதுக்கம் இனி நான் காணமாட்டேனென்று தான்வரில் நமக்கு ஆஸ்வாஸகரமான ஒளியையுடைய ஆதித்யன் வாராதே ஒளித்தான். [இம்மண் என்றுதொடங்கி] - குணுகுண நிரூபணம்பண்ணுதே எல்லாருடைய ஆபத்துக்களையும்போக்கி ரக்ஷிக்கும் ஸ்வபாவனுய் நிரதிசயஸௌந்தர்யயுக்தனுய் ஜகத்தினுடைய ஆபந்நிவாரணத்தாலே மேநாணித்திருக்கிறவன்.

ப.—அநந்தரம், அபேக்ஷித்தபூமியை யளந்துகொண்ட ப்ரீதியாலே புதுக்கணித்த அவயவாதிஶோபையாலே செருக்கனுன த்ரிவிக்ரமன் வருகிறிலன், அபரிச்சிந்நமான என்னுடைய சிந்தாரோகத்தைத்தீர்ப்பார் ஆர்? என்கிறுள்.

வளவும்தாழ்த்தாலும் என்றபடி. எத்தனைநாட்சென்றுகிலு மென்றுமாம். அவரைக்கண்டபிற்றைநாள் என்றது - அவருடைய அநாதரகர்ப்பமானவ்ருத்தியாலே என்னையுபேக்ஷிக்கைக்குடலான அவருடைய மாநஸவ்யாபாரத்தையறிந்த பிற்றைநாளென்றபடி. ஜ்ஞாநவான்கள் - ஹீஷ்மாதிகள். ஸ்வதந்த்ரர் - சக்ரவர்த்தி. அறிவிலிகளான - அறிவிலிகளாய் பாரதந்த்ரர்களான இத்யர்த்தঃ. நீளிரவு இத்யாரப்ய வாராஞல், நெஞ்சமே, நீயும் பாங்கல்லைகாண், வல்வினையேன் பெண்பிறந்தே - மாயும்வகையறியேன் இத்யர்வயঃ. (௩)

(பாதந்த்ரைகளாய் ம்ருதுஸ்வபாவைகளான), பெண்-பெண்ணாய், பிறந்தார்-பிறந்தார், எய்தும்-ப்ராபிக்கிற, பெருந்துயர் - துஸ்ஸஹமானமஹாதுஃகத்தை, காண்கிலேன் - காணமாட்டுகிறிலேன், என்று - என்று, ஒண்-உதயகாலத்திலே தர்ஶநீயமான, சுடரோன் - தேஜஸ்ஸையுடைய ஆதித்யன், ("வீஷோ ஸ்ஸாத்ஸிவதே:" என்று ஈஶ்வராநுவிதாநம்பண்ணிவரும் காலத்திலும்), வாராது-வாராதே, ஒளித்தான் - (ஆராய்ந்தாலும் அறியவொண்ணாதபடி) ஒளித்துப்போனான்; இ-இந்த, மண்-பூமியை, அளந்த-தனக்கேயாம்படி அளந்துகொண்டப்ரீதியாலே, பெரிய-பரந்த, கண்-திருக்கண்களையும், செம்-சிவந்த, வாய் - திருவதரத்தையுமுடையனாய், எம்-(அந்தபூமியைப்போலே இவ்வயவஸ்தையாலே) எம்போல்வாரையும் அநந்யார்ஹமாக்கி, (அத்தாலே), கார்-காளமேகம்போலே ஶ்யாமளமான வடிவையுடையவனாய், ஏறு-(நினைத்ததுமுடித்தப்ரீதியாலே) ருஷபம்போலேசெருக்கனாயிருக்கிற த்ரிவிக்ரமன், வாரான் - வருகிறிலன்; எண்-நினைவுக்கு, பெரிய - (அவ்வருகேவிஞ்சி அவாங்மநஸகோசரமான) பெரிய, சிந்தைநோய் - மநோரதவ்யாதியை, என்னை-என்னை, தீர்ப்பார் - தவிர்ப்பார், ஆர்-ஆர்?

ஐ.—நாலாம்பாட்டில், கண்டார்க்குப் பொறுக்கவொண்ணாத வ்யஸநம் செல்லாநிற்க, வரையாதே ரக்ஷிக்கும் ஸ்ரீவாமநன் வருகிறிலன், என்னுடைய சிந்தாவ்யதையைப் போக்குவாராரென்கிறாள்.

[பெண்பிறந்தார்] - பாதந்த்ரைகளாய் ம்ருதுப்ரக்ருதிகளாய்ப்பிறந்த ஸ்த்ரீகள். [எய்தும்பெருந்துயர்] - அநுபவிக்கும் மஹாதுஃகம். பாரதந்த்ர்யத்தாலே முடியவும் மாட்டாதே, மார்த்தவத்தாலே க்லேஶமும் பொறுக்கமாட்டாதொழிகை. [காண்கிலேனென்று] - இந்த துஃகத்தைப் பொறுக்கமாட்டேனென்று. ஸர்வரக்ஷகன் பொறுக்குமித்தனைபோக்கி, ரக்ஷணமாத்ரத்திலேயந்வயித்தவர்கள் பொறுக்கவல்லர்களோ; வருத்தவன் பொறுக்குமித்தனைபோக்கி, அந்யர் பொறுக்கவல்லர்களோ; "உக்தஃ ஸஹஸா ஸம்ஹரேவ புருஷோத்தமோஸி" என்று புருஷோத்தமன் பொறுக்குமித்தனைபோக்கி புருஷர்கள் பொறுக்கவல்லர்களோ. [ஒண்சுடரோன்] - தோற்றத்திலே துஃகநிவ்ருத்தியைப் பண்ணுமவன். [வாராது] - ஈஶ்வராஜ்ஞையாலே இருந்தவிடத்திலிராதவனும் தோற்றுகிறிலன். [ஒளித்தான்] - ஈஶ்வரபடர் காணவொண்ணாதபடி மறைந்தான். "இத்தர்மஹாநிகாண்பதில், ஈஶ்வராஜ்ஞாதிலங்கநத்தால்வந்தது அநுபவிக்கவமையும்" என்றிருந்தான். [இம்மண்ணளந்த] - இப்பூமிக்கு என்ன ஆபத்துண்டாய் அளந்தான். இப்பூமி மஹாபலிகையிலகப்பட்டதெல்லாம் இவள் விரஹத்தின்கையிலே அகப்பட்டாளாயிற்று. பூமியை வரையாதேயளந்தவன். [கண்பெரியசெவ்வாய்] - மஹாபலியாலே நெருக்குண்ட பூமியின்க்லேஶம்போகக் குளிரநோக்கின கண்ணிற்பரப்பையுடையனாய், அதின்க்லேஶம் போனதிறனுண்டான ப்ரீதியாலே பண்ணின ஸ்மிதத்தாலே சிவந்த அதரத்தையுடையவன். பிறர்ப்ரயோஜநத்துக்கு இரங்குமவன் தன்ப்ரயோஜநத்தை விட்டுவைப்பதே. [எங்காரேறு] - பூமியின்க்லேஶம்போனது தன்பேறென்னுமிடம் நிறத்திலேதோற்றி, "இதுகைப்பட்டது" என்று மேனாணித்திருந்தவன். [வாரானுல்] - இரக்கவேண்டா, அளக்கவேண்டா, வடிவழகைக்காட்டவமையும். [எண்பெரியசிந்தைநோய்] - வேதங்களுக்கு நிலமல்லாத பகவத்விஷயத்தை யுள்ளபடிபேசினார், தம்முடைய சிந்தாவ்யதை தம்முடையஜ்ஞாநத்துக்கு அவிஷயமாயிற்று. "சுவாமி ஸஹஸ்ர"என்னும

தொழிய "இவ்வளவு" என்னவொண்ணாது. [தீர்ப்பாரார்] - வரையாதே ஸர்வரக்ஷக ஞனவன் உபேக்ஷித்தபின்பு ஆராலேபோக்கலாம். [என்னையே] - மறக்கவும்மாட்டாதே நினைக்கவும்மாட்டாதேயிருக்கிற வென்னை. இது இவளுக்கேயுள்ளதொன்று.

ஈடு.—நாலாம்பாட்டு. கண்டார்க்குப்போறுக்கவொண்ணாதபடி வ்யஸநம் செல்லாநிற்க, வரையாதேரக்ஷிக்கும் ஸ்ரீவாமநனும் வருகிறிலன், என்சிந்தாவ்யஸநத்தைப் போக்குவாரார் ? என்கிறாள்.

[பெண்பிறந்தார் இத்யாதி] - பரதந்த்ரஜந்மமாகையாலே முடியவும்பெறாதே, ம்ருதுஸ்வபாவைகளாகையாலே பிரிவும் பொறுக்கமாட்டாதேயிருக்கிற ஸ்த்ரீகள் அநுபவிக்கிற மஹாதுக்கத்தைக் காணமாட்டேனென்று. [ஒண்சுடரோன்வாராதொளித்தான்] - ஸர்வரக்ஷகன்பொறுக்குமித்தனைபோக்கி, ரக்ஷணைகதேஶத்திலே அந்வயித்தவர்களுக்குப் பொறுக்கப்போமோ? புருஷோத்தமன் பொறுக்குமத்தனைபோக்கி, புருஷர்களால் பொறுக்கப் போமோ? தன்தோற்றரவிலே ஸகலக்லேஶமும் போம்படியான ப்ரகாஶத்தையுடையவனும் வாராதேமறைந்தான். வந்திலன் என்னாதே, ஒளித்தானேன்கிறது - "**பீஷாஸ்மாத்வாத: பவதே**" (பீஷாஸ்மாத்வாத:பவதே) இத்யாதியாலே பகவதாஜ்ஞையாலே முப்பதுவட்டம்வரவேணுமே; இங்ஙனேயிருக்கிறவன், "ஈஶ்வராஜ்ஞைமறுத்தால் வேணுமாகில் தலையை அறுத்துவைக்குமித்தனையன்றோ, இக்கொடுமை என்கண்ணால் காணப்போகாது" என்று ஈஶ்வரபடர் தேடிவந்தாலும் காணாதபடியொளித்தான். *"ஒளியவன்விசும்பியங்கும்

ப்ர:—*(ஒண்சுடரோன்வாராதொளித்தான்)* — *தைத்திரீயகோபநிஷத்* [ஆ-அ] *பீஷாஸ்மாத்வாத: பவதே । பீஷோதேதி ஸூர்ய: । பீஷாஸ்மாதக்நிஶ்சேந்த்ரஶ்ச । ம்ருத்யுர்தாவதி பஞ்சம இதி ॥*

நாலாம்பாட்டு.—பெண்பிறந்தார் இத்யாதி. "ஒண்சுடரோன்வாராதொளித்தான்" என்றத்தைப்பற்ற - கண்டார்க்கு இத்யாதி. "இம்மண்ணளந்த" என்றத்தைப்பற்ற - வரையாதே இத்யாதி. "எண்பெரியசிந்தைநோய்" இத்யாதியைப்பற்ற - என்சிந்தாவ்யஸநத்தை இத்யாதி.

*"இம்மண்ணளந்த" என்றத்தைப்பற்ற வ்யங்க்யமாக வெறுப்பிலே பாவம் - ஸர்வரக்ஷகன் இத்யாதி. "கண்பெரியசெவ்வாய் என்காரேறு" என்றத்தைப்பற்ற பாவம் - புருஷோத்தமன் இத்யாதி. இத்தால்தாத்பர்யம் - ரக்ஷணைகதேஶத்திலே அந்விதனுமாய் "ஒருசேதநமாத்ரம்" என்று சொல்லப்படுமவனுமான ஆதித்யனுங்கூடப் பொறுக்கமாட்டாதேயிருக்க, ஸர்வரக்ஷகனுமாய் புருஷோத்தமனுமானவன் இத்தைப்பொறுத்திருப்பதேயென்று. ஒண்மைக்குபாவம் - தன்தோற்றரவிலே இத்யாதி. முப்பதுவட்டம் - முப்பதுநாழிகைக்கொருவட்டம். தலையையறுத்துவைக்குமித்தனையன்றோ வென்றது - ஒளித்திருக்கச்செய்தேயும் ஈஶ்வரபடர்வந்தால் இருக்கும் அத்யவஸாயத்தாலே. ஒளித்தானென்றது - ஒளித்தானென்கைக்காக என்றபடியாய்; வந்திலனென்னாதே ஒளித்தானேன்கிறது என்று கீழோடே அந்வயிப்பது. தான் ஒளிக்கும்போது ரதாதி சிஹ்நங்களை வைத்துப்போமோவென்னா அவற்றோடேயொளித்தானென்று விவக்ஷித்து, அதுக்குப்ரமாணம் - ஒளியவன் இத்யாதி. அது; வது - "சிஹ்நங்களைவைத்துப்போனால் மீளவும் இவற்றில் நசையாலே வரக்கூடும், அப்போதாகப் பெண்பிறந்தார்வ்யஸநம் காணவேண்டிவரும்" என்று அவற்றையுங்கொண்டு மறைந்தானென்று கருத்து. ஒளியவன் இத்யாதிக்கு - ஆதித்யன் ஆகாஶத்திலே சஞ்சரிக்கிற தேரும்போயிற்று இதி ஶப்தார்த்த: ஆதித்யனும் போனான், அவன்தேரும் போயிற்றென்றபடி. *திருமொழி, எட்டாம்பத்து, அஞ்சாந்திருமொழி, இரண்டாம்பாட்டு, "மாரிமாக்கடல்" இத்யாதி. "ஒளித்தான்" என்றதுக்கு*

தேரும்போயிற்று'' என்னக்கடவதிறே. வரவுக்கு ஸூசகமும் காணவொண்ணுதபடி மறைந்தது; "[Grantha]"(ஸோபிரேணுர்நலக்ஷ்யதே), †"சுழன்றிலங்கு வெங்கதிரோன் தேரோடும்போய்மறைந்தான்'' என்னுமாபோலே. [இம்மண்ணளந்த] - இப்பூமிக்கு என்னதுயருண்டாய் அளந்துகொண்டான். பூமிக்கு மஹாபலியாலுண்டான இடரளவோ எனக்கு ராத்ரியாலுண்டான இடர். வரையாதே எல்லாரையும் ரக்ஷிக்குமவன். [கண்பெரியசெவ்வாய் இத்யாதி] - க்ருபையால் பெரியனாய் பூமியையளந்து, பூமியிலுள்ளார் விடாய்போம்படி குளிரக்கடாக்ஷித்து, அத்தாலுண்டான ப்ரீதிப்ரகர்ஷந்தோற்ற ஸ்மிதம்பண்ணுகையாலே சிவந்த அதரத்தையுடையவனாய். [எம்] - ஸர்வவிஷயமாகப்பண்ணும் ரக்ஷணத்தையே ஸ்வபாவமாக வுடையவனுமாய். [கார்] - இவற்றைரக்ஷிக்கையால் தன்னிறம் பெற்றிருப்பானுமாய். [ஏறு] - "அதுதன்பேறு'' என்னுமிடந்தோற்ற மேனாணித்திருக்குமவனும் வருகிறிலன். எம் என்று - ஸர்வரக்ஷகனுடைய ரக்ஷ்யவர்க்கத்திலே தானும் அந்யதமையாகையாலே சொல்லுகிறாள். என் என்று பாடமானபோது - பண்டு என்னோடே கலந்தத்தாலே தன்னிறம்பெற்று மேனாணித்திருந்தவனென்கை. [வாரானால்] - இரக்கவேண்டா, அளக்கவேண்டா, வடிவைக்காட்டவமையும். [எண்பெரியசிந்தைநோய்] - "[Grantha]'' (யஸ்யாமதம் தஸ்ய மதம்) என்கிறபடியே - வேதாந்தங்கள், நிலமன்று என்று மீண்ட பகவத்விஷயத்தை, இத்தனைபோதும் பேசினார்; தம்முடைய சிந்தாவ்யஸநமயர்வறமதிநலமருளப்பெற்ற ஜ்ஞாநத்துக்கும் அவிஷயமாயிராநின்றது. "எண்பெரியது'' என்னுமித்தனை, "இவ்வளவு''

ப்ர:—ஸ்ரீவிஷ்ணு [Grantha] ॥ ௩௦ ॥ [Grantha] ॥ ௩௪ ॥

(எண்பெரியசிந்தைநோய்) — [Grantha] [௨] "[Grantha] ॥''

ஸாவாந்தரம் - வரவுக்கு இத்யாதி. ஸூசகம் - ரதாதிகள். ஸூசகமும் காணவொண்ணாதபடிமறைந்ததுக்கு ப்ரமாணத்வயம்- [Grantha] இத்யாதி. "[Grantha]'' [Grantha], [Grantha]. சுழன்றிலங்கு இத்யாதி - சுழன்றுவருவானாய் ப்ரகாசத்தைப் பண்ணுகிற ஆதித்யனானவன் தேரோடேபோய்மறைந்தான் இத்யர்த்தஃ. †திருமொழி, ஒன்பதாம்பத்து, நாலாந்திருமொழி, ஆறும்பாட்டு. "இ'' என்று விசேஷித்ததுக்கு ஸாவம் - இப்பூமிக்கு இத்யாதி. அதுவென், மஹாபலியாலே துயரில்லையோ? என்ன - பூமிக்கு இத்யாதி. "மண்ணளந்த'' என்றதுக்கு ஸாவம் - வரையாதே இத்யாதி. "கண்'' என்று - க்ருபையாய், க்ருபையாலே பெரியவனென்னுதல்; பெரியகண்ணை யுடையவனென்னுதல். இவ்விரண்டையும் தந்த்ரேண அருளிச்செய்கிறார் - க்ருபையால் இத்யாதி. "எம்'' என்ற அஸ்மச்சப்தம் - ரக்ஷணப்ரஸித்தியைச் சொல்லுகிறதாய், அத்தால்பலிதம் - ஸர்வவிஷயமாக இத்யாதி. "கார், ஏறு'' என்கிற இரண்டுபதங்களுக்கும் ஸாவம் - தன்னிறம் இத்யாதி. எண்பெரிய - எண்ணுக்ககப்படாத. [Grantha] இதி - [Grantha], [Grantha]; [Grantha], [Grantha]. இத்தனைபோதும்

என்னப்போகாது. பிரிந்தவிஷயத்துக்கு அநுரூபமாயிறே சிந்தாவ்யஸநந்தான் இருப்பது, அதுக்கு ஓரவதியில்லையே. "தத்ப்ராப்திமஹாதுக்க" (தத்ப்ராப்திமஹாது꞉க). [சிந்தைநோய்தீர்ப்பாரார்] - சிந்தாவ்யஸநம்போமித்தனையேவேண்டுவது, அவனைமறக்கவுமமையும். †"ஏதுசெய்தால்மறக்கேன்" என்னுமவர்களிறே இவர்கள்தான், அவனை மறக்கவுமாம் நினைக்கவுமாம், வ்யஸநம்போமித்தனையேவேண்டுவது. இப்போது மறக்கவும் அமையும் என்றது-மறக்கை உத்தேஶ்யமாய்ச்சொன்னவார்த்தையன்றே; ஓடுகிற வ்யஸநாதிஶயத்தைச்சொன்னபடியிறே. அலாபதசையில் ஸ்ம்ருதிதான் மிகவும் ஆற்றாமைக்கு உடலாயிருக்குமிறே, $"கண்ணன்நாமமேகுழறிக்கொன்றீர்," ‡"காட்டேன்மின்னும்முரு என்னுயிர்க்கதுகாலன்" என்னக்கடவதிறே. [என்னையே] - இவ்வ்யக்தியொன்றுக்குமேயுள்ளதொரு வ்யஸநமாயிற்று. நாட்டார் ஸ்மரித்து து꞉கநிவ்ருத்திபண்ணிக்கொண்டு போகாநின்றார்களிறே, அதுசெய்யலாமிறே ஸாதநபுத்த்யா இழிந்தார்க்கு, "நிதித்யாஸிதவ்ய꞉" (நிதித்யாஸிதவ்ய꞉) என்று - ஸ்ம்ருதிதன்னையே விதியாநின்றதிறே; அவனுடையபடியிலே இழிந்தார்க்கிறே இதுள்ளது. (ச)

ஐந்தாம் பாட்டு.

ஆரென்னையாராய்வார் அன்னையருந்தோழியரும்
நீரென்னேயென்னாதே நீளிரவுந்துஞ்சுவரால்
காரன்னமேனி நங்கண்ணனும்வாரானால்
பேரென்னமாயாதால் வல்வினையேன்பின்னின்றே.

ஆ.—(ஆரென்னை.) அன்னையருந்தோழியரும் நீரென்னேயென்னாதே நீளிரவுந்துஞ்சினார், ஆரென்னையாராய்வார்; ஸர்வாவஸ்த்தையிலும் எனக்குத் துணையாயிருக்

பேசினாரென்றது - "இம்மண்ணளந்த" இத்யாதியாலே பேசினாரென்றபடி. அதுக்கு ஹேதுவேதென்ன - பிரிந்தவிஷயத்துக்கு இத்யாதி. அதுக்கு - ஸர்வப்ரகாரவிலக்ஷணமான பகவத்விஷயத்துக்கு. "விஷயாநுரூபமாயிருக்கும்வ்யஸநம்" என்னுமதுக்கு ப்ரமாணம் - தத்ப்ராப்தி இத்யாதி. "த்யாத்வா விமோஹாத் க்ஷீணவாஸநயா ததா । தத்ப்ராப்திமஹாது꞉க விலீநா ஶேஷபாதகா । நிருச்ச்வாஸதயா முக்திம் கதாந்யா கோபகந்யகா ॥" இதி, ஶ்ரீவிஷ்ணுபுராணே. சிந்தாவ்யஸநம் மறந்தாலொழியத் தீராதேயென்ன - சிந்தாவ்யஸநம் இத்யாதி. "மறக்கையுத்தேஶ்யம்" என்றிருப்பார்களோ? என்ன - ஏதுசெய்தால் இத்யாதி. எத்தைச்செய்தால் மறக்கலாம் இத்யர்த்த꞉. திருமொழி. இதுக்குஹாவம் - அவனைமறக்கவுமாம் இத்யாதி. வ்யாக்யாநத்தில் இப்படி இல்லாவிட்டாலும் இவ்விடத்தில் இப்படி கொள்ளவேணும். "கூடுகையுத்தேஶ்யம்" என்னுமதொழிய, "மறக்கையுத்தேஶ்யம்" என்னலாமோ? என்ன - இப்போது இத்யாதி. இவ்வாக்யத்துக்கு விவரணமாகவுமாம் - அவனைமறக்கவுமாம் இத்யாதிவாக்யம். மறக்கை தேட்டமாகைக்கு, ஸ்ம்ருதிதான் அப்படி து꞉கரூபமாயிருக்குமோ? என்ன - அலாபதசையில் இத்யாதி. "அலாபதசையில் ஸ்ம்ருதி ஆற்றாமைக்குடல்" என்னுமதுக்குப்ரமாணம் - கண்ணன் இத்யாதி. க்ருஷ்ணனுடையதிருநாமத்தை அநக்ஷரமதுரமாகச் சொல்லி முடித்துவிட்டிகோள். காட்டாதேகிடிகோள் உங்கள்வடிவை, என்ப்ராணனுக்கு அந்தவடிவு ம்ருத்யுவாயிருக்கும் இத்யர்த்த꞉. அவதாரணார்த்தம் - இவ்வ்யக்தி இத்யாதி. அல்லாதார்க்கில்லையோ? என்ன - நாட்டார் இத்யாதி. தனக்கும் அப்படி செய்யவொண்ணாதோ? என்ன - அதுசெய்யலாமிறே இத்யாதி. ஸ்ம்ருதிக்கு ஸாதநத்வமுண்டோ? என்ன - நிதித்யாஸிதவ்ய꞉ இதி. அதுசெய்யலாமிறே இத்யாதிவாக்யஶேஷம் - அவனுடைய இத்யாதி. அதாவது - ப்ராப்யபுத்த்யா இழிந்தார்க்கு பரித்திருக்கப்போகாதென்றபடி. படியிலேஇழிந்தார்க்கு - விக்ரஹத்திலே இழிந்தார்க்கு. விக்ரஹாநுபவம்பண்ணுமவர்களுக்கென்றபடி. இதுள்ளது - ஸ்ம்ருதி, வ்யஸநத்துக்குடலாமாகாரமுள்ளது. க்ரமேணார்த்த꞉. (ச)

† திருமொழி-க, ரு, ரு. $ திருவாய்மொழி, க, ரு, அ. ‡ திருவாய்மொழி-க, ரு, எ.

கக்கடவ காரன்னமேனி நங்கண்ணனும் வருகிறிலன், வாராதொழிந்தால் இவ்வ்யஸநத்துக்கு ஆஸ்ரயமான என்பேர் முடியப்பெறலாமிறே, நான்முடிந்தபின்பும் என்னுடைய பேரானது முடிகிறதில்லையென்கிறாள்.

ஒ.—அஞ்சாம்பாட்டில், துர்த்தஸையிலே உதவக்கடவரான அன்னையரும் தோழிமாரும் ஆராய்கிறிலர்கள், அவர்கள் உதவாதபோது வந்து உதவக்கடவ க்ருஷ்ணனும் வருகிறிலன். நான்போய் ஸப்தாவஸேஷையானேன் என்கிறாள்.

[அன்னையரும் தோழியரும் நீரென்னேயென்னாதே நீளிரவும் துஞ்சுவரால்]- நான் அவஸந்நையானால் உதவக்கடவ நீங்களும் 'நீ என்பட்டாய்?' என்னாதே நான் ஈடுபடுகிற இராவெல்லாம் கிடந்து உறங்காநின்றீகோள். [நீர் என்னே] - 'உன்னுடைய நீர்மைஎன்?' என்று வினவாதே உறங்காநின்றார்கள் என்றுமாம்.[கார் என்றுதொடங்கி]- வர்ஷுகமான மேகம்போலே ஸ்ரமஹரமான திருநிறத்தையுடைய க்ருஷ்ணனும் வருகிறிலன், நான் முடிந்தபின்பும் என்பேர் என்னை முடிந்தேனாக வொட்டுகிறதில்லை.

ப.—அநந்தரம், உபகாரஸீலமான வடிவையுடைய க்ருஷ்ணனும்வருகிறிலன், நான் நாமாவஸேஷையானேன், என்னையாராய்வார் ஆர் என்கிறாள்.

அன்னையரும் - (பரிவராய்வந்து ஆராயும்) தாய்மாரும், தோழியரும் - (ஸௌஹார்தத்தாலே ஆராயும்) தோழிமாரும், நீர் - இவள்நீர்மை, என்னே- ஏதாயிருக்கிறது, என்னாதே - என்றுநிரூபியாதே, நீள் - தீர்க்கையான, இரவும் - ராத்ரிமுழுக்க, துஞ்சுவர் - உறங்காநின்றார்கள்; (அவர்கள் ஆராயாதவளவிலும் ஆராயக்கடவனாய்), காரன்ன - (அதிஸயிதோபகாரஸீலமான) காளமேகம்போலேயிருக்கிற, மேனி - திருமேனியையுடையனாய், நம் - நமக்குஸுலபனான, கண்ணனும் - க்ருஷ்ணனும், வாரான் - வந்து ஆராய்கிறிலன்; வல்வினையேன் - (ப்ராப்தராய் ஆராய்வாரும் ஆராயாமைக்கீடான)ப்ரபல பாபத்தையுடையேனான எனக்கு, பின் - பின்பு, நின்று - நின்று, பேர் - நாமமாத்ரம், என்னை - என்னை, மாயாது - முடியவொட்டுகிறதில்லை; (ஆனபின்பு), என்னை - என்னை, ஆராய்வார் - ஆராய்வார், ஆர் - ஆர்? ஒருவருமில்லையென்றபடி. "அத்யந்தாவஸாதம் பிறந்தவளவிலும் இன்னாள்கிடந்தாள்" என்கிற நாமமாத்ரமே ஸத்பாவஸூசகமென்று கருத்து. (வல்வினையேன்பின்னின்று - ஆரென்னையாராய்வார்) என்று அந்வயிக்கவுமாம். நீரென்னேயென்னாதேயென்று - நீர்என்செய்தீரென்னாதேயென்றுமாம்.

இ.—அஞ்சாம்பாட்டில், ஆபத்திலுதவும் அன்னையரும்தோழியரும் ஆராய்கிறிலர், அவர்கள் உதவாதபோது உதவும் க்ருஷ்ணனும் வருகிறிலன், நான் ஸப்தாவஸேஷையாகாநின்றேனென்கிறாள்.

[ஆரென்னையாராய்வார்] - தன்னைநலிந்த ராக்ஷஸிகளையுங்கூட "அஞ்சாதே" என்று ஆராய்ந்தாளிறே "ஆரென்னையாராய்வார்" என்கிறாள். [அன்னையரும் தோழியரும்] - இவளுடைய அவஸாதாதிஸயம், தாய்மாரோடு தோழிமாரோடுவாசியறச் சொல்லும்படியாய்விட்டது. என்நினைவேநினைவாயிருப்பார்க்கும், நிஷேதிப்பார்க்கும் வாசியற்றது. [நீரென்னே இத்யாதி] - அன்னையரும் தோழியருமான நீங்கள், என்னேயென்னாதே - என்பட்டாயென்னாதே யென்னுதல்; அன்றியே, [நீர்] - இதொரு நீர்மையே- அவனுக்குத் தன்னையொழியச் செல்லுவதாயிருக்க, அவனையொழியத் தனக்குச் செல்

லாதபடியாயிருக்கிற இதொருஸ்வபாவமே! [என்னே] - இதோராச்சர்யமென்னுதல். [நீளிரவுந்துஞ்சுவரால்] - நெடியராத்ரியெல்லாம், எனக்கு உறங்காதொழிகை ஸ்வபாவமாயிருக்கிறாப்போலே அவர்களுக்கும் உறங்குகையே ஸ்வபாவமாயிற்று. ப்ரதமயோஜனையில், துஞ்சுதிரென்னுமர்த்தத்தைக் காட்டக்கடவது. [காரன்ன] - வர்ஷுகமான மேகம்போலே ச்ரமஹரமான வடிவையுடைய க்ருஷ்ணனும் வருகிறிலன். "தாவஸாரவிரஸ்ஜ" என்று, ஒருநீர்ச்சாவியிலே வர்ஷித்தாப்போலே தோற்றுமவனும் வருகிறிலன். [நங்கண்ணனும்] - பெண்களுக்கேயுதவுமவனும் வருகிறிலன். [பேரென்னை மாயாதால்] - கார்யத்தாலே நான்முடியச்செய்தேயும், "இன்னாள், இன்னாள்" என்கிற பேர் என்னை முடிந்தேனுக வொட்டுகிறதில்லை. அவனொடொத்ததீ யிதுவும், அவன் வாராதவோபாதி இதுவும்போகிறதில்லை. இத்தால் - சென்றற்றநிலையைச் சொல்லுகிறது. மப்தாவஸேஷையானேனென்றபடி. [வல்வினையேன்] - முடிகைதேட்டமானவளவிலும் முடியப்பெறுதபாபத்தைப் பண்ணினேன். [பின்னின்றே]-நான்முடிந்தபின்பும் பின்னே நின்று பேர் என்னை முடிந்தேனுகவொட்டுகிறதில்லை. "நாமஸேஷாவஸேஷிதா" என்கிறபடியே ஒக்கவந்தால், ஒக்கப்போகலாகாதோ?

ஈடு.—அஞ்சாம்பாட்டு. ஆபத்தில் உதவும் அன்னையரும்தோழியரும் ஆராய்கிறிலர்கள், அவர்கள் உதவாதபோது உதவும் க்ருஷ்ணனும் வருகிறிலன், நான் மப்தாவஸேஷையானேனென்கிருள்.

[ஆரென்னையாராய்வார்] - "தாஸீநாம்ராவணஸ்யாஹம் மர்ஷயாமீஹதுர்பலா" (தாஸீநாம்ராவணஸ்யாஹம் மர்ஷயாமீஹதுர்பலா) - திருவடிசேன்று ராக்ஷஸிகளை நலியப்புக; இவர்கள் ராவணன்சோறுண்டு அவனுக்குப் பரதந்த்ரைகளாகையாலே என்னை நலிந்தார்களாகில், தங்களாலேவந்ததோன்றன்றுகில், அதுதனக்கு நாமும் "பொறுத்தோம்" என்று, நேர்த்தரவுகொடுத்தபின்பு இனி இவற்றை நலிகிறதேன்? என்ன; "ராவணனும்பட்டானுகில் நம்மை நெடுநாள் நலிந்துபோந்த இப்பெண்பயல்களை இப்போது பொறுக்கவேண்டுகிறதேன்?" என்ன,—"துர்பலா" (துர்பலா)-"சிலர்

ப்ர—:(ஆரென்னையாராய்வார்)—யுத்தகாண்டே [ககசு] ஹநுமந்தம் ப்ரதி ஸீதா, "ராஜஸம்ஸ்ரயவஶ்யாநாம் குர்வதீநாம் பராஜ்ஞயா। விதேயாநாம் ச தாஸீநாம் க꞉ குப்யேத்வாநரோத்தம॥" தாஸீநாம்ராவணஸ்யாஹம் மர்ஷயாமீஹதுர்பலா॥ சO॥ ஸஜ்ஜாராவணே நிஹதா ராக்ஷஸ்யாஸ்தத்ஜயந்து। ஹதே தஸ்மிந்ந குர்யுர்ஹி தர்ஜநம் வாநரோத்தம॥ சக॥"

அஞ்சாம்பாட்டு.—ஆரென்னை இத்யாதி. "அன்னையருந்தோழியரும்" இத்யாதியைப் பற்ற - ஆபத்திலுதவும் இத்யாதி.

வ்யாக்யாதாவின் ஈடுபாடு - தாஸீநாம் என்றுதொடங்கி, ஆரென்னையாராய்வார் என்கிறளிறே என்னுமளவும். "ராஜஸம்ஸ்ரயவஶ்யாநாம் குர்வதீநாம் பராஜ்ஞயா। தாஸீநாம் ராவணஸ்யாஹம் மர்ஷயாமீஹதுர்பலா" இதி யுத்தகாண்டே ஹநுமந்தம் ப்ரதி ஸீதா. "மர்ஷயாமி" என்றதுக்கு அர்த்தம்-அதுதனக்கு நாமும் பொறுத்தோம் என்று. நேர்த்தரவு கொடுத்தபின்பென்றது - "ஸக்ருதேவ ப்ரபந்நாய" என்றத்தைப்பற்ற. நேர்த்தரவு - செல்லுச்சீட்டு. ராவணனும்பட்டானுகில் என்றதுக்கு - ராவணனுலே தேவரீருக்கு நலிவுவாராமலிருக்கைக்காக முன்பு இவர்களை நலியாமல்விட்டதென்று தாத்பர்யம். பொறுக்கவேண்டுகிறதேன்? என்ன -

நம்மைநலிந்தார்கள்” என்று நாம் அவர்களை நலியப்புக்கால், அப்போதே அவர்கள் கண்குழிவுகாணமாட்டாதார் பின்புசெய்வதேன் பொறுமல். ராவணனும்பட்டு, பெருமாளும் விஜயிகளானபின்பு, இனி இதொழிய வேறொருதெளர்பல்யமில்லையிறே. தன்னைநலிந்த ராக்ஷஸிகளையும், நீங்கள் அஞ்சாதே கொள்ளுங்கோள் என்று - **“பவேயம் ஶரணம் ஹி வ:”** (பவேயம்ஶரணம்ஹிவ:) என்னக்கடவ அவள், இப்போது, தன்னையாராய்வார் தேட்டமாய் - ஆரேன்னையாராய்வா ரேன்கிறாளிறே. [அன்னையரும்தோழியரும்] - என் தசையைக்கண்டு என்னோடொக்க உறக்கந்துறந்தவர்களோடு, “உறக்கம்துறக்கக்கடவதன்று” என்று நிஷேதிக்குமவர்களோடு வாசியற ஒக்கவெடுக்கும்படியாய் வந்துவிழுந்தது. என் நினைவே நினைவாயிருக்குமவர்களோடு, தங்களுக்கென்ன ஒருநினைவுண்டாய் நியமிக்கத்தக்கவர்களோடு வாசியற்றது. [அன்னையரும்தோழியரும் நீரேன்னேயென்னாதே நீளிர

[நின்று இத்யாதி]-முடிவின்றிக்கே நிரந்தரமாக உருகுகிற என்னைப்போலே, மஹாதத்வமான ஆகாசம் சென்றற்று நுண்துளியாய் உருகிச்செல்லுகிற ராத்ரியிலே, ஸகலபதார்த்தங்களுக்கும் அவகாஶப்ரதாநம்பண்ணும் மஹாதத்வம் அழிகிறபடிக்கு வேறு த்ருஷ்டாந்தமில்லை, என்னைச்சொல்லுமித்தனை. அளவுடையாரெல்லாரும் அழிகிறகாலமாகாதே. [அன்றொருகால் இத்யாதி] - "ஒருகாலத்திலே காதாசித்கமாக பூமியை அளந்தானித்தனை, நியதஸ்வபாவனன்று" என்றாகிலும் சொல்லுகிறாரில்லை. இவள்தான், வரையாதே யளந்துகொண்ட மஹாகுணத்தை விஸ்வஸித்தாயிற்று இந்த ராத்ரியிலும் முடியாதேகிடந்தது. "இந்தமஹாகுணத்தையுடையவன் தன்னாலேவந்த வாற்றாமைக்கு உதவாதொழியுமோ" என்று பார்த்திருந்தாய், "வாரான்" என்று சொல்ல வமையும். [பிரான்] - "உபகாரகன்" என்றிறே ப்ரமித்திருக்கிறது, பெருக்காறு வற்றினாற்போலே அக்காலத்திலே வற்றிற்றென்றாகிலும் சொல்லவமையும். [ஒன்று] - அவன் திறமாக ஒருவார்த்தையு மமையும். "கடியன்கொடியன்" என்று அவன்குணஹாநியைச் சொல்லவுமமையும். [ஒருகால்] - ஒருகால் சொல்லவுமமையும். வாரானென்ற போதே முடியாதார்க்கிறே இருகாற்சொல்லவேண்டுவது. [உலகோவுறங்குமே]-"அன்னையரும் தோழியரும்" என்றுஇன்னுதானது லோகமாகச்சொல்லவேண்டும்படியாயிற்று

அதுக்குப்பின் பிறந்த அவஸாதாதிஶயம். "வாராதவனைநல்லன்" என்னும்படியிருந்ததி ஸங்கிஹிதரான லோகத்தார்படி.

ஈடு.—பத்தாம்பாட்டு. இந்தராத்ரியில் என்னுடைய வ்யஸநத்தைக்கண்டு வைத்து அவன்திறமாக ஒருவார்த்தைசோல்லாதே லோகமாகவுறங்குவதே! என்கிருள்.

[நின்று இத்யாதி] - பரப்பையுடைத்தான, ஸகலபதார்த்தங்களுக்கும் அவகாச ப்ரதாநம்பண்ணும் ஆகாசமானது, சென்றற்று நுண்ணியதுளியாய் இற்றுவிழாநின்றது - ஆரைப்போலேயென்றால், — [நின்று உருகின்றேனேபோல] - ப்ரத்யக்ஷித்தத்தையிறே உபமானமாகச்சொல்லுவது. † (மஹாதத்த்வமான ஆகாசம் அழிகிறபடிக்கு வேறு த்ருஷ்டாந்தமில்லை, என்னைச் சொல்லுமித்தனை. அளவுடையாரெல்லாரும் அழிகிற காலமாகாதே.) "யஸ்யஸாஜநகாத்மஜா-அப்ரமேயம்ஹிதத்தேஜ:" (யஸ்யஸாஜநகாத்மஜா - அப்ரமேயம்ஹித்தேஜ:) என்று - பேரியவர்களுடைய பெருமையும் தன்ஸம்பந்தத் தாலேயாம்படி யிருக்குமவளிறே. "ஶ்ரிய:பதியாகையாலே ஸர்வாதிகன்" என்னக்கடவதிறே. இப்படிசெல்லுகிற இரவிடத்து. [அன்றேருகால் இத்யாதி] - " 'பிரிவாற்றாமையிலும் ஜீவிக்கைக்குநிமித்தம் அவனுடைய அடிப்பாடு - வரையாதே எல்லாரையுமோக்க ரக்ஷித்தவன், தன்னாலேவந்த ஆற்றாமையைப் பரிஹரியாதிருக்குமோ' என்னுமதிறே, அதுவும் அவனுக்கு, புழுக்குறித்தது எழுத்தானாற்போலே காதாசித்கமாகவந்ததோன்று, அது அவனுக்கு நியதஸ்வபாவமன்றுகாண்" என்றுசோல்லுகிறாரில்லை. [அன்றேருகால்] - அன்று அங்ஙனே ஒருகால்செய்தானித்தனை, அவனுக்கு எற்றைக்கும் நியதமாயிருப்பதோரு ஸ்வபாவமன்றுகாண் என்கிறாரில்லை. [பிரான்] - என்றுநிற்கச்செய்தேயிறே [வாரான்]

ப்ர:—(நின்றுருகுகின்றேனேபோலே)—ஸுந்தரகாண்டே [௩௭] ராவணம்ப்ரதி ஶ்ரீவ: "அப்ரமேயம்ஹிதத்தேஜோயஸ்யஸாஜநகாத்மஜா । நத்வம்ஸமர்த்தஸ்தாம்ஹர்த்தும்ராமசாபாஶ்ரயாம்வநே॥க அ॥"

பத்தாம்பாட்டு.—நின்றுநுத இத்யாதி. "சென்றுருகி" இத்யாதியைப்பற்ற - இந்தராத்ரியில் இத்யாதி. அவன்திறமாக - அவன்விஷயமாக. ஒருவார்த்தை - எனக்கு ஒருவார்த்தை.

"சென்று" என்றது - சேன்றற்று என்றதாய், து:கித்தென்றபடி. தன்னையொழிய வேறு த்ருஷ்டாந்தமில்லையோ? என்ன - ப்ரத்யக்ஷித்தத்தை இத்யாதி. மஹாதத்த்வமான ஆகாசத்துக்கு அணுவான தன்னை த்ருஷ்டாந்தமாகச்சொல்லலாமோ? என்ன - யஸ்யஸா இத்யாதி. "நத்வம்ஸமர்த்தஸ்தாம்ஹர்த்தும்ராமசாபாஶ்ரயாம்வநே" இத்யுத்தரார்த்தம். ஸுந்தரகாண்டே ராவணம்ப்ரதி ஶ்ரீவ:. உபபாதகம் - ஶ்ரிய:பதி இத்யாதி. "வையமளந்தபிரான்" என்றதும், "வாரான்" என்றதும் - பரஸ்பரவிருத்தமாகையாலே, இவையித்தனையும் ஜீவநத்தில் நசையறுக்கைக்கு உடலான லோகோக்தியாகக்கூடாமையாலே, "வையமளந்தபிரான்" என்றத்தை - நாயகியினுடைய அபிப்ராயமாக்கி, "அன்றொருகால்" என்றபதத்தை அநுஸந்தித்துக்கொண்டு, "வாரான்" என்ற லௌகிகோக்திக்கு பாவம் - பிரிவாற்றாமையிலும் என்றுதொடங்கி அது அவனுக்குநியதஸ்வபாவமன்றுகாணென்று சோல்லுகிறாரில்லை என்னுமளவும். அடிப்பாடு - திருவடிகளின்ஸாந்நித்யம்; அடிப்பாடு - அவகதியும். விவரணம் - வரையாதே இத்யாதி. என்னுமதிறே என்றவநந்தரம், ஜீவிக்கைக்கு ஹேதுவென்று அத்யாஹார்யம். குறித்தது - குறியிட்டது. இப்படிதொகுத்து அருளிச்செய்த தாத்பர்யத்தைப் பதங்களிலே எறிட்டுக்காட்டுகிறார் - அன்றேருகால் என்றுதொடங்கி, வாராமையேகாண் ஸ்வபாவம் என்கிறாரில்லை என்னுமளவும் எற்றைக்கும் - என்றைக்கும்.

---

† குண்டலிக்ரந்தம் க்வாசித்கம்.

என்கிறது. "'லோகத்தையடைய அளந்துகொண்ட உபகாரகனன்றே' என்று நினைக்கிறுயாகில், பெருக்காறு பெருகினுற்போலே அது அங்ஙனே ஒருகால் செய்துபோனவித்தனை, வாராமையேகாண் ஸ்வபாவம்" என்கிருரில்லை. [ஒன்று] - "வாரான்" என்னவேண்டா, "வரும்" என்னவுமமையும். "இன்னம்வரும்" என்னும் நசைகொண்டு ஜீவிக்க இருப்பார்க்கிறே "வரும்" என்றே சொல்லவேண்டுவது. "வரும்" என்னவுமாம், "வாரான்" என்னவுமாம். [ஒருகால்] - ஒருகால்சொன்னல் பின்னையும் ஜீவிப்பார்க்கிறே இருகால் மட்டுச்சொல்லவேண்டுவது. "அவன் இனிவாரான்" என்று அறிந்தபோதே மூச்சடங்குமிறே. [உலகு ஓ! உறங்குமே] - "அன்னையரும்தோழியரும் உறங்காநின்ருர்கள்" என்று இன்னுதானத்தை, லோகத்தையடைய இன்னுதாம்படிகாணும் அதுக்குப்பின்பு பிறந்த தமாவிசேஷம். பிரிந்தவனேடோத்ததீ! இந்தலோகம். (க0)

பதினேராம் பாட்டு.

உறங்குவான்போல் யோகுசெய்தபெருமானைச்
சிறந்தபொழில்சூழ் குருகூர்ச்சடகோபன்சொல்
நிறங்கிளர்ந்தவந்தாதி ஆயிரத்துளிப்பத்தால்
இறந்துபோய்வைகுந்தம் சேராவாறெங்ஙனேயோ?

ஆ.—(உறங்குவான்.) ஸ்வாத்மாநுபவஜநித நிரவதிகாநந்த மஹிமப்ரஸக்தஸ்தைமித்யத்தாலே நிஸ்தரங்கமஹார்ணவ ஸத்ருசனை எம்பெருமானைச்சொல்லி அலற்றின இத்திருவாய்மொழியில்சொன்ன ஆர்த்தியை அநுஸந்தித்தார் எங்ஙனே தரிக்கும்படி யென்கிருர்.

"பிரான்" என்ருநிற்க, "வாரான்" என்னக்கூடுமோ? என்கிற விரோதத்தை அநுவதித்துப்பரிஹரிக்கிருர் - பிரான்என்ருநிற்க *இத்யாதி. விவரணம் -* லோகத்தை *இத்யாதி. "வரும்" என்றசொல்லுகையே அபேக்ஷிதமாயிருக்க, "வாரான்" என்றும், "ஒன்று" என்றும் -* இரண்டையும் சொல்லுவானென்? *என்கிறசங்கையிலே அருளிச்செய்கிருர் -* இன்னம்வரும் என்னும் *இத்யாதி. கீழே, "ஒன்று" என்றதுக்கு -* வருமென்னவுமமையும் *என்று அர்த்தமருளிச்செய்து; அங்ஙனன்றிக்கே,* வாரானென்றென்று *- அதாவது - வாரானென்கிற* ஒருவார்த்தையை *என்று அர்த்தாந்தரத்தைவிவக்ஷித்து, "ஒருகால்" என்றதுக்கு அர்த்தமருளிச்செய்கிருர் -* ஒருகாற்சொன்னல் *இத்யாரப்ய,* மூச்சடங்குமிறே *இத்யந்தேந. ஆப்தரையன்றேவெறுப்பது, லோகத்தைவெறுக்கிறதென்? என்ன -* அன்னையரும்தோழியரும் *இத்யாதி, "ஓ!" என்றதுக்குபாவம் -* பிரிந்தவனேடு *இத்யாதி. அதாவது - நிர்த்தயமாயிருக்கிறதென்றபடி.* நின்றுருகு *இத்யாரப்ய,* உலகு - உறங்கும், ஓ! *இத்யநவய:. நின்றுருகுகின்றேனேபோல -* ஒருகாலுமொழியாமே நின்று உருகாநிற்கிற என்னைப்போலே. *நெடுவானம்சென்றுருகி நுண்துளியாய்ச்செல்கின்றகங்குல்வாய் - பரப்பையுடைய* ஆகாசம் *து:கித்து* உருகி நுண்ணியதுளிகளையுடைத்தாய்க்கொண்டு இடைவிடாமல்செல்லுகிற ராத்ரியிடத்து. *சென்று - சென்றற்று; து:கித்தென்னுதல், க்ஷயித்தென்னுதல். அன்று - மஹாபலியபஹரித்த அன்று.* ஒருகால் - ஒருகாலத்திலே. வாரானென்றென்றேருகாற்சொல்லாது *- வாரானென்றும் வருமென்றும்* ஒருகாற்சொல்லாதே *என்னுதல்; வாரானென்றொன்று - வாரானென்கிற* ஒருவார்த்தையை, ஒருகாற்சொல்லாதேயென்னுதல் *என்று பதார்த்தம்.* (க0)

ஒ.— நிகமத்தில், இத்திருவாய்மொழியில் ஆழ்வார்க்குச்சென்ற ஆர்த்தியை அநுஸந்தித்தார் எங்ஙனே யரிக்கும்படி? என்கிறார்.

[உறங்குவான் என்றுதொடங்கி] - கண்வளருவான்போலே ஜகத்ரக்ஷோபாய சிந்தை பண்ணுகிற ஸர்வேஶ்வரனை. இது - தமக்குத் தரிப்புப்பார்த்தபடி. [சிறந்த பொழில்] - ஸம்ருத்தமான பொழில். நிறம்-பண்.

ப.—அநந்தரம், இத்திருவாய்மொழிக்குப் பலமாகப் பரமபதப்ராப்தியை அருளிச்செய்கிறார்.

உறங்குவான்போல் - (படுக்கைவாய்ப்புப்பெற்று) உறங்குகிறவன்போலே, (ஏகாந்தஸ்த்தலமான க்ஷீரார்ணவத்திலே), யோகு - ஜகத்ரக்ஷணசிந்தாயோகத்தை, செய்த - பண்ணிக்கிடக்கிற, பெருமானை - ஸர்வேஶ்வரனைப்பற்ற, சிறந்த - ஸம்ருத்தமான, பொழில் - பொழிலாலே, சூழ்-சூழப்பட்ட, குருகூர் - திருநகரிக்கு நிர்வாஹகரான, சடகோபன் - ஆழ்வார், சொல்-அருளிச்செய்த, நிறம்-பண், கிளர்ந்த - மிஞ்சின, அந்தாதி - அந்தாதியான, ஆயிரத்துள் - ஆயிரத்துள், இப்பத்தால் - இப்பத்தால், இறந்து - ஶரீரவிஶ்லேஷம்பிறந்து, போய் - அர்ச்சிராதியாலேபோய், வைகுந்தம்-பரமபதத்தில், சேராவாறு - புகாதொழிவது, எங்ஙனே - எங்ஙனே? அத்தேசத்திலே புகுகை யறுதியென்று கருத்து. நிறம்-பண், சந்தமாகவுமாம். இது-கலிவிருத்தம், நாலடித்தாழிசையாகவுமாம்.

இ.—நிகமத்தில், இப்பாசுரங்கேட்டார் இவர்தசையை யநுஸந்தித்தார் பிழையாரென்கிறார். பரமபதஸித்திசொல்லிற்று - முடிந்தால் புகுமிடம் அதுவாகையாலே சொன்னவித்தனை.

[உறங்குவான் இத்யாதி] - “நம்மால்கார்யமில்லாதவிவர்களால் கார்யமென்?” என்று லோகத்தாரைவிட்டு, “இத்தசையை விளைத்தவன் இவ்வளவிற்செய்வதென்” என்று அவனை யநுஸந்தித்தார்; ஜகத்ரக்ஷணார்த்தமாகத் திருப்பாற்கடலிலே சாய்ந்தருளினபடியை யநுஸந்தித்து, “இப்போது வாராமையாலே வெறுத்தோமித்தனை, நம்முடையரக்ஷணசிந்தை பண்ணிக்கிடக்கிறான் நம்மைக்கைவிடான்” என்று இம்மஹாகுணத்தை யநுஸந்தித்து தரிக்கிறார். கண்வளருகை என்று ஒருபேராய், ஜகத்ரக்ஷணோபாயசிந்தைபண்ணுகிற ஸர்வேஶ்வரனை. [சிறந்த இத்யாதி] - இவர் குணாவிஷ்காரத்தாலே தரித்தவாறே, திருநகரியும் தரித்தபடி. விஶ்லேஷத்தில் “ஶுஷ்யவ்ருக்ஷா:” என்றும், ஸம்ஶ்லேஷத்தில் “அகாலபலிநோவ்ருக்ஷா:” என்றுமிறே யிருப்பது. சிறந்தபொழில் - ஸம்ருத்தமானபொழில். [நிறங்கிளர்ந்தவந்தாதி] - பண்ணிலேகிளர்ந்த வந்தாதி. நிறம்-பண். [இப்பத்தால் இத்யாதி] - இப்பத்தை யநுஸந்தித்தால், எங்ஙனே ஶரீரவிஶ்லேஷம்பிறந்துபோய் பரமபதம்புகாதொழியும்படி. “பேறென்னைமாயாதால்” என்று - முடிகைதேட்டமாய், அதுதானும்பெறாதே இவர்பட்டக்லேஶத்தைப்படாதே, இப்பாஸுரத்தைக்கேட்டுப் பிழையாரென்கை. பகவத்பரருடைய ஆர்த்தியைக்கண்டால் தரிக்கமாட்டாதொழிகையிறே ஸ்வரூபம். இவருடைய ஹாவபாவமில்லையேயாகிலும், இவர்தசையை யநுஸந்தித்தால் பரமபதம்புகாதொழிய ஸம்பாவனையில்லையென்கிறது.

ஈடு.—நிகமத்தில், இவர்பாசுரங்கேட்டார், இவர்தசையை யநுஸந்தித்தார் பிழையார்களேன்கிறார். † (பரமபதஸித்திசொல்லிற்று) முடிந்தார் புகலிடம் அதுவாகை யாலே சொன்னவித்தனை.

[உறங்குவான்போல் யோகுசெய்தபெருமானை] - அவன்வரவுதாழ்க்கையாலே "நம்மைமறந்து உறங்குகிறானே" என்றுசொன்னவித்தனை, அவன் உறங்குகிறிலன்; நம்முடையரக்ஷணசிந்தை பண்ணுகிறானித்தனை. "நித்ராஸிஜாகர்யயா" (நித்ராஸி ஜாகர்யயா). அந்யபரதையைத்தவிர்ந்து நம்முடையரக்ஷணசிந்தை பண்ணுகிறானித்தனை யல்லது, மறந்து உறங்குகிறானல்லன். மேல் உஜ்ஜீவிப்பிக்கவிருக்கிற ஸர்வேஶ்வரன், இவ்வளவிலே தன்படிகளை ஸ்மரிப்பித்தான். [சிறந்தபொழில்] - அவன் ரக்ஷணசிந்தை பண்ணிக்கொண்டு கண்வளர்ந்தருளுகிறபடியை அநுஸந்தித்து இவர் புரித்தவாறே, ஊரும் புரித்தது. விரஹத்தில் "அபிவ்ருக்ஷா:" (அபிவ்ருக்ஷா:) என்றும், வரவணித்தானால் "அகாலபலிநோவ்ருக்ஷா:" (அகாலபலிநோவ்ருக்ஷா:) என்றும் சொல்லலாம்படி யாயிறே யிருப்பது. [நிறங்கிளர்ந்தவந்தாதி] - பண்ணிலேகிளர்ந்த அந்தாதி. [இப்பத்தால் இத்யாதி] - இப்பத்தையும் அநுஸந்தித்தவர்களுக்கு, பகவத்விரஹத்தில் இவரைப்போலே, "பேரென்னைமாயாதால்" என்று முடிவுதேட்டமாய் நோவுபடமேதுவேண்டா; இத்தை அநுஸந்தித்தவர்கள் பிழையார்கள். இப்பாசுரத்தைக் கேட்டு பிழைக்கமாட்டாதவர்கள் புகும்தேசம் பரமபதமாகையாலே சொன்னவித்தனை - இவ்விடம். இத்தால் ஒருபலஞ் சொல்லிற்றாகவும் வேணுமிறே, இது என்சொல்லிற்று? என்னில்,—பகவத்விஷயத்தில்

ப்ர:—(சிறந்தபொழில்சூழ்)—அயோத்யாகாண்டே [௫௯] உபாயம் ச்ருதி: "விஷயே தே மஹாராஜ ராமவ்யஸநகர்ஶிதா:। அபி வ்ருக்ஷா: பரிம்லாநா: ஸபுஷ்பாங்குரகோரகா:॥ ௪॥"

[ரா-யு-௧௨௭]-ச்ருதிஶ்ச யாதே, ஸராஜஸம் ச்ருதிராஹ:, "அகாலபலிநோ வ்ருக்ஷா: ஸர்வே சாபி மதுஸ்ரவா:। பவந்து ஶரதே ஹ்ருஷ்டா: ஸமயோத்யாம் ப்ரதி கதா:॥ ௧௯॥"

நிகமம். - உறங்குவான் இத்யாதி. "இப்பத்தாலிறந்துபோய்" இத்யாதியின் முந்தின அர்த்தத்தைக்கடாக்ஷித்து அவதாரிகை - இவர்பாசுரம் இத்யாதி. இவர்பாசுரங்கேட்டார் இவர் தசையை அநுஸந்திப்பரே, ஆகையாலே பிழைபாரென்றபடி. ஆனால், பரமபதஸித்தியைப் பலமாகச் சொல்லுவானென்? என்ன - முடிந்தார் இத்யாதி.

இப்போது, "உறங்குவான்போல்" என்று - அவன் உறங்காமையைச்சொல்லுகிறவிது, "பாம்பணையான்" என்று - தம்மைமறந்து உறங்கினானாகச்சொன்னத்தோடு விரோதியாதோ? என்ன - அவன்வரவு இத்யாதி. விஶ்லேஷதுக்கதசையில், "உறங்குவான்போல்" என்று விஶேஷித்ததுக்கு பாவம் - மேல்உஜ்ஜீவிப்பிக்க இத்யாதி. ஸ்மரிப்பித்தான் - ஆகையாலே சொல்லுகிறாரென்று கருத்து. இவ்வாக்யம் - அவன்வரவு இத்யாதி வாக்யத்துக்குமுன்னே அநுஸந்தேயம். இவர் புரித்த வாறே ஊரும் புரித்ததுக்கு த்ருஷ்டாந்தம் - விரஹத்தில் இத்யாதி. பண்ணிலேகிளர்ந்த - பண்ணிலேசொன்ன. இவ்விடம் - "வைகுந்தஞ்சேராவாறெங்ஙனேயோ" என்றவிடம். பரமபத ப்ராப்தி சொன்னது - அப்ரதாநமென்று அருளிச்செய்து; அங்ஙனன்றிக்கே, முக்யபலம் அதுவாகையாலே சொல்லிற்றென்று தாத்பர்யாந்தரம் - இத்தாலொருபலம் இத்யாதி. "எங்ஙனேயோ" என்றதுக்கு

---

† குண்டலிதம் க்வாசித்கம்.

அவகாஹித்தவர்களுடைய பாசுரம் கேட்டவர்களுக்கு, ப்ரக்ருதிவிஶ்லேஷாநந்தரம், அவர்கள் ப்ராப்யமாக நினைத்திருக்கும் தேசப்ராப்தி தப்பாதென்கை. பகவத்ப்ரவணரானார் பாசுரங்கேட்டுப் பொறுக்கமாட்டாதே ஈடுபட்டு ப்ரக்ருதிவிஶ்லேஷம்பிறந்தவர்கள், அவர்களுக்கு உத்தேஶ்யமான தேசத்தைக் கிட்டாதொழியவிரகுண்டோ. [இப்பத்தாலிறந்துபோய் வைகுந்தம்சேராவாறெங்ஙனேயோ] - "நீளிரவாய்நீண்டதால்", "ஒண்சுடரோன் வாராதொளித்தான்" என்று - இங்கேயிருந்து க்லேஶப்படாதே, அஸ்தமியாத ஆதித்யனும் அஸ்தமியாத பகலுமான தேசத்திலே புகப்பெறுவர். (கக)

ஶாவம் - பகவத்ப்ரவணரானார் இத்யாதி. "வைகுந்தம்" என்றதுக்குஶாவம் - நீளிரவாய் இத்யாதி. அஸ்தமியாத ஆதித்யனையுடைத்தாகையாலே ஒருஹோகியானபகலென்றபடி. "ஸவிவ்ருக்ஷா:" இத்யாதி, பூர்வமேவலிகிதம். க்ரமேணாந்வய:. (கக)

த்ரவிடோபநிஷத்ஸங்கதி: — *தாம் ஸுகாம் விஷயதீஸகமௌர்த்ய யா ணாரோஹாதிகாஸவிய மாம்ஸ்வ விஸம்ஜ்ஞ்யஸ்ரீ: | ஶௌரி திமாவிரஹிணீஸ்வஜநஶோகரோத ஸ்தஸோஹாஹ்வயாப்ரஜநிரஸ்யாதிதாவ தஸ்ய ||*

த்ரவிடோபநிஷத்தாத்பர்யரத்நாவலி:— *ஸ்வஸ்த்யந்தஸ்வத்யாய த்யாகத்யஜநநாதீய ப்ரவீரஸ்வஸ்தஸ்யா மௌக்காந்தம் விக்ராஹ்வாஶ்ரிதஜநஸிதவப்ரதேஷ க்ருதேநேதஶ்ரேஷ்டிநேதஸ்வ | வக்ராத்ருஶ்யாநிதகாத்ரௌநயநதாஸம்வதாவாரநகாஸ க்ஷீராப்யௌஶேஷஶாயீஜகதவநரஹாநீக்ஷிதோஜ்ஞாபிதேந ||*

திருவாய்மொழி நூற்றந்தாதி.

ஊரநினைந்தமடலூரவுமொண்ணாதபடி
கூரிருள்சேர்கங்குலுடன்கூடிநின்று - பேராமல்
தீதுசெய்யமாறன்திருவுளத்துச்சென்றதுயர்
ஓதுவதிங்கெங்ஙனேயோ.

ஆழ்வார் திருவடிகளே ஶரணம், எம்பெருமானார் திருவடிகளே ஶரணம், சீயர் திருவடிகளே ஶரணம்.

ஐந்தாந்திருவாய்மொழி—எங்ஙனேயோ: ப்ரவேஶம்.

ஆ.— அநுபூதபரமபுருஷகுணஸ்மரணத்துக்குங்கூட க்ஷமையல்லாதபடி ராத்ரியில் மதியெல்லாமுள்கலங்கி அத்யந்தம் அவஸந்நையாய், விடிந்தவாறே லப்தஸம்ஜ்ஞையாய், பண்டுகண்டு அநுபவித்தநம்பியுடைய திருநகரியினுடைய அழகையும், நம்பிதம்முடைய ஸௌந்தர்ய ஸௌஶீல்ய ஸௌகுமார்ய லாவண்ய யௌவநாத்யநவதிகாதி

ஸாயாஸங்க்யேய கல்யாணகுணங்களையும், திவ்யபூஷண திவ்யாயுதஜநிதமான அழகையும் ஸ்மரித்து, அந்த ஸ்மரணஜநிதமான ப்ரீதியாலும், தத்ஸம்ச்லேஷாலாபநிபந்தநமான அப்ரீதியாலும் விசிஷ்டையாய் தத்ஸம்ச்லேஷார்த்தமாக இருந்து நோவுபடுகிற பிராட்டி, "பரமப்ராப்யனான எம்பெருமான்பக்கல் நீ உன்னுடைய அபிநிவேசந்தோற்ற இருத்தல், அந்தவிச்லேஷஜநிதமான அவஸாதந்தோற்ற இருத்தல், அவன் எழுந்தருளியிருந்த திருக்குறுங்குடியிலே போக உத்யோகித்தல்செய்யல், 'தன்னையுத்தேசித்து இவள் இப்பாடுபடாநிற்கச்செய்தே வாராதொழிவதே, ஒருவனுடைய கொடுமையிருந்தபடியென்?' என்றுகொண்டு இந்தலோகம் அவன்பக்கலிலே நைர்க்ருண்யாதிதோஷத்தை ஸங்கிக்கும், இதுவல்லது நங்குடிக்குப்பழியில்லை; ஆனபின்பு, அவன்தானே ஸம்ச்லேஷிக்கக்கண்டு இருக்குமத்தனையல்லது இப்படிபடுகை ஈடல்ல" என்று தன்னைப் பொடிந்து தனக்கு முகங்காட்டாதேயிருந்த தன்னுடைய அன்னைமாரைக்குறித்து; நம்பியுடைய,ஸ்வதஸ்ஸித்தமாயும் அந்யோந்ய ஸம்ஸர்க்கஸித்தமாயும் ஸதாநுபாவ்யமாகமாயிருக்கச்செய்தே அபூர்வவத்விஸ்மயமாநுபாரநமுமாயிருந்த நிரவதிக திவ்ய ஸௌந்தர்யமும், திவ்யாவயவ திவ்யபூஷண திவ்யாயுதங்களுமெல்லாம் என்னெஞ்சுள்ளும்புகுந்து நிறைந்திருக்கிற இருப்பும், அவற்றில் என்னெஞ்சுவிழுந்து அவையல்லது அறியாதே இருக்கிற இருப்பும் உங்களுக்குத் தெரியாமையிறே நீங்கள் என்னைப் பொடிகிறதென்று சொல்லுகிறாள்.

ஒ.—அஞ்சாந்திருவாய்மொழியில், இப்படி ராத்ரியில் அத்யந்தம் அவஸந்நையான பிராட்டி, விடிந்தவாறே, செல்லுகிற வ்யஸநம் சிறிது நீங்கி, முன்பு அநுபூதமான நம்பியுடைய ஸௌந்தர்யாதிகளை ஸ்மரிக்கையாலே சிறிதுதரிப்போடேகூட, இப்போது காணப்பெறாத வ்யஸநத்தாலே நோவுபடுகிற இவளை, தோழிமாரும் தாய்மாரும் மற்றுமுண்டான உறவுமுறையாரும் "நீ இப்படி வ்யஸநப்படுகை ஸ்த்ரீத்வத்துக்கும் ஆபிஜாத்யத்துக்கும் போராது" என்று பொடிய, "நம்பியுடைய அழகிலே நான் அகப்பட்டபடி அறியாமையிறே நீங்கள் என்னைப்பொடிகிறது" என்ன, "நாங்களும் நம்பியைக் கண்டு வருகிறோம், எங்களுக்கு இப்படி அவஸாதம் பிறவாதே ஸுகிகளாயிராநின்றோம், நீ இங்ஙனே படுவானென்?" என்று அவர்கள்கேட்க, "ஸ்நேஹஹீநரான உங்களுக்கு நம்பியுடையவழகும் ஒப்பனையும் திவ்யாவயவங்களின் அழகும் தன்னில்சேர்த்தியும் தோற்றுமோ? அப்படி அறிகைக்கீடான அறிவையும் ஸ்நேஹத்தையும் அவன் எனக்குத் தந்தருளுகையாலே நான் அறிந்தேன்" என்று அவர்களுக்குச்சொல்லி, இப்படிப் பட்ட நம்பியுடைய அழகிலும் வேண்டற்பாட்டிலும் தான் மிகவும் அவகாஹித்து "இது எத்தனையேனும் அளவுடையாரேயாகிலும் அவன்பக்கல் பரிவில்லாதார்க்கு அறிய முடியாதிருக்கப்பெற்றோமே!" என்று ப்ரீதையாய் முடிக்கிறாள்.

ப.—அஞ்சாந்திருவாய்மொழியில், கீழ் "உறங்குவான்போல் யோகுசெய்த பெருமான்" என்று - அவனுடைய ஆச்ரிதஸம்ரக்ஷணசிந்தாயோகத்தை அநுஸந்தித்து ஆச்வஸ்தராய், பூர்வாநுபூதமான, "நல்கியென்னைவிடான்" என்கிறபடியே- தம்மை ஒருகாலும் கைவிடாத நம்பியுடைய வடிவழகு ஸ்ம்ருதிவிஷயமாய் ஆந்தர ப்ரீதியை ஜநிப்பிக்க, பாஹ்யஸம்ச்லேஷாலாபத்தாலுண்டான ஆர்த்தியுமொக்க நடக்கச்செய்தே; நம்பியுடைய அஸாதாரண சிஹ்நாவயவ வைலக்ஷண்யத்தையும், அலங்கார சோபையையும்,

ஆஶ்ரிதரைக்காத்தூட்டும் ஆயுதபூர்த்தியையும், பரத்வப்ரகாஶகமான பரிஷ்காரப்ரகாரத்தையும், அதிஶயிதபோக்யமான முகாவயவஶோபையையும், முகாவயவத்தோடு சேர்ந்த ரூபபுஜவைலக்ஷண்யத்தையும், தேஜோமயமாய் உத்துங்கமான திவ்யவிக்ரஹயோகத்தையும், ஸர்வாவயவ ஸௌந்தர்யத்தையும், அஸங்க்யேயாபரணஶோபாவிஶிஷ்டமான அதிஶயிதபோக்யதையையும், அநந்யகோசரமாம்படி ஆந்தரமாகப்ரகாஶிக்கிற அதிஶயிததேஜோவிஶிஷ்டமான ப்ராப்யவேஷத்தையும் அநுஸந்தித்து, இந்த ஆந்தராநுபவப்ரீதியோடே அலாபநிபந்தநமான அப்ரீதியும் ஒக்கநடக்கையாலே இவரை ஆஶ்வஸிப்பிப்பதாக உத்யோகித்த ஸுஹ்ருத்துக்களையும் பரிவரையுங்குறித்து ஸ்வதசையை ஆவிஷ்கரித்த ப்ரகாரத்தை; நாயகனைப்பிரிந்த காமினியானவள், தத்ஸௌந்தர்யாதி ஸ்மரணத்தாலும் தத்அலாபார்த்தியாலும் ப்ரீத்யப்ரீதிகள் ஸமமாய்நடக்க, இவள் ஆர்த்தியை மீட்கைக்காக நியமித்த தோழிமாரையும் தாய்மாரையுங்குறித்து, தான் இவ்விஷயத்தில் அகப்பட்டபடியைச் சொல்லி அவர்களுக்கு மறுத்துரைத்தபடியாயிருக்கையாலே கழற்றெதிர்மறை என்கிற துறையாலே யருளிச்செய்கிறார்.

இ.—அஞ்சாந்திருவாய்மொழியில், "அஞ்சுடரவெய்யோன் அணிநெடுந்தேர் தோன்றுதால்" என்று வெறுத்த ஆதித்யனும் உதித்து, ராத்ரிவ்யஸநமும் அந்த ஆதித்யோதயத்தாலே சிறிதுநீங்கி, "அன்னையருந்தோழியரும் நீரென்னேயென்னாதே" என்றுசொன்ன ஹிதஞ்சொல்லுகிற அன்னையருந்தோழியரும் உணர்ந்து, ஹிதஞ்சொல்லுவாரும் உசாத்துணையாவாருமுண்டாகையாலும்; ஒன்றைஸ்மரித்து ஶரிக்கைக்கு "நீயும்பாங்கல்லைகாண்நெஞ்சமே" என்கிறநெஞ்சமும் பாங்காய், முன்பு அநுபூதமான நம்பியுடைய ஸௌந்தர்யாதிகளை ஸ்மரிக்கையாலும் சிறிதுதரிப்புண்டாய், அப்போதுகாணப்பெறாத வ்யஸநத்தாலே விஷாதமுமுண்டாகையாலே ப்ரீத்யப்ரீதி ஸமமாய்ச் செல்லுகிறது; திருவடி வார்த்தைசொன்னவநந்தரம், பிராட்டி "ஹர்ஷஶோகஸமாவிஷ்டா" என்று - பெருமாள் தன்னையல்லது அறியாதேயிருந்தாரென்ற வார்த்தையாலே ப்ரீதியும், அவர் தளர்ந்தாரென்ற வார்த்தையாலே அப்ரீதியுமாயிருந்தாப்போலே. ஶுபகவத்ஸௌந்தர்யாதிகள் ஸ்ம்ருதிவிஷயமாகையாலே ப்ராப்யருசி நலிகிறபடியைக்கண்டு பந்துக்கள், "இத்தனை அதிப்ராவண்யமாகாது, இது உன்னுடைய ஸ்த்ரீத்வத்துக்கும் ஆபிஜாத்யத்துக்கும் அவன்தலைமைக்கும் போராது" என்று ஹிதஞ்சொல்லிமீட்கப்பார்க்க, "உங்களுக்கு அபிநிவேஶம்போராமையாலும், நம்பிபடிகள்தோற்றாமையாலும் மீட்கப்பார்க்கிறிகோளித்தனை; நான் மயர்வறமதிநலமருளப்பெறுகையாலே, நம்பியுடைய ஒப்பனையழகிலும் வடிவழகிலும் ஆபரணச்சேர்த்தியிலும் வேண்டற்பாட்டிலும் அகப்பட்டேன், உங்கள்ஹிதவசனத்தாலே மீட்கவொண்ணாது" என்று தன்படிகளைச்சொல்லி, எத்தனையேனும் அளவுடையாரேயாகிலும் பரிவில்லாதார்க்கு அறியமுடியாதாயிருக்கப்பெற்றோமென்று ப்ரீதியோடே தலைக்கட்டுகிறது. * மாசறுசோதியில் - ப்ராப்யத்வரையாலே உபாயாத்யவஸாயம் கலங்கினபடி; * ஊரெல்லாந்துஞ்சியில் - த்வரையுங்கூடக்கலங்கி முடிவுதேட்டமானபடி; இதில் - "ரக்ஷகன் அவனே" என்னுந்துணிவு செல்லாநிற்க, ப்ராப்யருசி நலிகிறது. * ஏழையராவியும் - உருவெளிப்பாடாய் இராநிற்கச்செய்தே, இவ்வளவன்றியே பாத்யகத்வம் முறுகியிருக்கும்.

ஈடு.—* மாசறுசோதியிலே ''நாடுமிரைக்கவே - யாமடலூர்ந்தும்'' என்று - மடலூரப் பாரித்தாள்; பாரித்தபடியே தலைக்கட்டப்பெறாமையாலே ''* ஊரெல்லாம் துஞ்சி உலகெல்லாம்நள்ளிருளாய், முதலிலே மடலூருகைக்கு விஷயந்தான் இல்லாதபடி பழிசொல்லுவாருங்கூட உறங்கிற்று'' என்று வெறுத்தாள்; ''அஞ்சுடரவெய்யோன் அணி நெடுந்தேர்தோன்றாதால்'' என்று - ஆதித்யோதயத்துக்கு ஸூசகமுங்கூட இல்லையாயிற் றென்று வெறுத்தாள்; ''நீயும்பாங்கல்லைகாண்நெஞ்சமே'' என்று - ஒன்றைஸ்மரித்து தரிக் கைக்கு விரகற்றதென்றும் வெறுத்தாள். * மாசறுசோதியில்-ப்ராப்யத்வரையாலே உபாயாத் யவஸாயம் கலங்கினபடி, * ஊரெல்லாந்துஞ்சியில் - அத்த்வரையுங்கூடக் கலங்கினபடி. இதில் - ''ரக்ஷகன் அவன்'' என்னும்தேளிவும் செல்லாநிற்க, ப்ராப்யருசிநலிகிறபடி. இக் குறைகளேல்லாம் தீரும்படி போதும் விடியப்பெற்று, ''அன்னையருந்தோழியரும்'' என்கிற இழவுதீர, உகப்பாரும் பொடிவாரும் ஹிதஞ்சோல்லுவாருமாகப் பெற்றது. அநந்தரம் வந்துவர்க்கமடைய உணர்ந்து ''தீர்ந்தவென்தோழீ'' என்று இவளுடைய துணிவுகண்டு உகப்பாரும், ''தோழிமீரென்னையினியுமக்காசையில்லை''என்னவேண்டும்படி

எங்ஙனேயோ ப்ரவேசம்,—கீழில்துக்கமெல்லாம் இதிலே தீர்ந்ததென்கைக்காக, கீழ் துக்க ஹேது மூன்றென்கிறார் - மாசறுசோதி இத்யாதி வாக்யத்ரயத்தாலே. தலைக்கட்டப்பெறாமை யாலே என்றவிடத்திலே - தலைக்கட்டப்பெற தபடி ராத்ரியாய் இருள்வந்து மூடி நின்றமையாலே என்று அத்யாஹார்யம். மடலூருகைக்கு விஷயந்தானில்லாதபடி என்றதுக்கு - இவர்கள் பழி சொல்லுமது, அவ்விஷயத்துக்கு ஸ்மாரகமாய் அவ்வழியாலே மடலூருகைக்கு விஷயத்தைக்காட்டிக் கொடுக்குமதொன்றுகையாலே மடலூருகைக்கு விஷயமுண்டு; இவர்கள் பழிசொல்லாதே உறங்கு கையாலே மடலூருகைக்கு விஷயமில்லையென்று தாத்பர்யம். ஒன்றைஸ்மரித்து தரிக்கைக்கு விர கற்றது என்றதுக்கு பாவம் - மநஸ்ஸு அவன் பக்கலிலே ப்ரவணமாகையாலே வேறொன்றை ஸ்மரித்து தரிக்கைக்கு முடலன்றிக்கே, அலாபதசையாகையாலே அவனைஸ்மரித்து தரிக்கைக்குமுட லன்றிக்கே விரகற்றதென்று. ஆக, பழிசொல்லுவாருங்கூட இல்லாதபடி உறங்குகையாலும், ஆதித் யோதயத்துக்கு ஸூசகமுமின்றிக்கே ராத்ரி வ்யஸநமாகையாலும், நெஞ்சு பாங்கல்லாமையாலும் வெறுத்தாளென்று துக்கஹேது மூன்று. வெறுத்தாள் என்கிற வாக்யத்துக்கு - ''இக்குறைகளேல் லாம்'' என்றவாக்யத்தோடே ஸங்கதி. நடுவே ஸ்வாபதேசம் - மாசறுசோதியில் இத்யாதி. த்வரையுங்கூடக்கலங்கினபடி என்றதுக்கு தாத்பர்யம் - மடலெடாதொழிந்தது ராத்ரியில் இருளாலே என்கிறவத்தால், மடலாகிறது - ப்ராப்யத்வரையாகையாலே, இந்த த்வராஜ்ஞாநம் ஸம்ஸ்ருதிகாள ராத்ர்யநுஸந்தாநஜந்த மஹாவ்யஸநத்தாலே தலைமடிந்து, ஸம்ஸாரதுக்கமே மேலிட்டதென்று. ''நிறை ந்தவன்பழி நங்குடிக்கிவளென்று அன்னைகாணகொடாள்'' என்று - தாயாரானவவஸ்தையும், தலை மகளானவவஸ்தையும் ஆழ்வார்தமக்கே யுள்ளதொரு அவஸ்தையாகையாலே, அத்தைப்பற்ற - இதில் ரக்ஷகன் இத்யாதி. இதில் 'ரக்ஷகன் அவன்' என்னும் தெளிவும் சொல்லாநிற்க ப்ராப்யருசி நலிகிறபடி யென்றது - * மாசறுசோதியிலும் * ஊரெல்லாந்துஞ்சியிலும்போன அத்யவஸாயமும் த்வரையும் இரண்டும் இத்திருவாய்மொழியிலேயுண்டாய்ச் செல்லுகிறதென்றபடி. கீழே * ஊரெல் லாந்துஞ்சியில்வ்யஸநத்துக்குச் சொன்ன ஹேதுக்கள் மூன்றும் இத்திருவாய்மொழியிலே போன படியை அருளிச்செய்கிறார் - இக்குறைகளேல்லாம் என்று தொடங்கி, ஸஹகாரியாயிற்று என்னு மளவாக. உகப்பார் - உயிர்த்தோழி. பொடிவார் - தாய்மார். ஹிதஞ்சொல்லுவார் - மற்றைத் தோழிமார். ''தோழிமார்களும் அன்னையரும்முனிதிர்'' என்று இதுக்குச்சந்தை. உகப்பாரார், பொடிவாரார், ஹிதஞ்சொல்லுவாரார்? என்ன; இத்தைவிவரிக்கிறார் - அநந்தரம் இத்யாதி. அநந் தரம் - போதுவிடிந்தவநந்தரம். துணிவுகண்டு உகப்பாரும் என்றவநந்தரம், '''எங்ஙனேயோவன்னை மீர்காளென்னைமுனிவதுநீர்'' என்று பொடிவாரும்' என்று கூட்டிக்கொள்வது. ஹிதஞ்சொல்லி யலைப்பாருண்டாகை துக்கஹேதுவன்றோ, அத்தை அநுகூலமாகச்சொல்லுகிறதென்? என்ன -

ஹிதஞ்சொல்லி யலைப்பாருமாகப்பெற்றது; அவ்வழியாலே அவர்கள் தாங்கள் இவ்விஷயத்துக்கு ஸ்மாரகராவார்களிறே. ஆதித்யனும் உதித்து, பதார்த்ததர்ஶநம் பண்ணப்பெறுகையாலே வ்யஸநமும் பாலிபாயப்பெற்றது. இவ்வளவு ஆஶ்வாஸமுண்டானவாறே, நெஞ்சு ஸ்மரித்து தரிகைக்கு ஸஹகாரியாயிற்று. இப்படி ராத்ரி வ்யஸநம்போம்படி போதுவிடியப் பெறுகையாலே ஒருதரிப்புமுண்டாய், அவனை அநுபவிக்கப்பெறாமையாலே ஆற்றாமைக்கு முடலாய் நோவுபட்டுச்செல்லாநிற்க, உணர்ந்த பந்துக்களுடைய, "நீ இப்படி இவ்விஷயத்திலே அதிமாத்ரப்ரவணையாகிற இது உனக்குக்குடிப்பழி. உன்னுடைய ஸ்த்ரீத்வத்துக்குப் போராது, அவன் தலைமைக்கும் போராது" என்று ஹிதஞ்சொல்லி மீட்கப்பார்க்க, "இவர்கள் உகந்தருளினநிலங்களில் வாசியறியார்கள்" என்றிருந்தாளிவள், "நீங்கள் சிலர் காட்டக் கண்டிகோளல்லாமையாலே இவ்விஷயத்தை உள்ளபடி அறிந்திலிகோள்; நான் அங்ஙனன்றிக்கே, அவன்தானே மயர்வறமதிநலமருளித் தன்னைக்காட்டக் காண்கையாலே உள்ளபடி கண்டேன்; ஆகையாலே, நம்பியுடைய வடிவழகிலும் ஒப்பனையழகிலும் ஆஹரணச் சேர்த்தியிலும் வேண்டற்பாட்டிலும், நான் உங்கள் ஹிதவசநத்துக்கு மீளாதபடி அகப்பட்டேன்" என்று இங்ஙனே தன்படிகளைச் சொல்லாநிற்கச்செய்தே; "ஸ்வயத்நத்தால் காண்பார்க்கு அறியவொண்ணாதபடியாகப் பெற்றோமிறே, இவ்வஸ்துதான் உண்டாகப்பெற்றால் நாம் பெற்றபோது பெறுகிறோம், பிறரறியாதொழியப்பெற்றோமிறே" என்னும் ப்ரீதியோடே தலைக்கட்டுகிறது. ஆக, போதும்விடிந்து ஹிதஞ்சொல்லியலைப்பாரும் உண்டாகப்பெறுகையாலே ஒருதரிப்பும், அதுதான் நினைத்தவிடிவாகப் பெறாமையாலே ஒரு அப்ரீதியும்; அவனை ஸ்மரிக்கப்பெறுகையாலே ஒருப்ரீதியும், அதுதான் அநுபவமாகப் பெறாமையாலே ஒரு அப்ரீதியும்; ஆதித்யனுதித்துப் பதார்த்ததர்ஶநம் பண்ணப்பெறுகையாலே ஒருப்ரீதியும், அதுதான் அவனைக்காணப்பெறாமையாலே ஒரு அப்ரீதியுமாய்; ப்ரீத்யப்ரீதி ஸமமாய்ச் செல்லுகிறது.

அவ்வழியாலே இத்யாதி. அவ்வழியாலே - *பழிசொல்லுகிறவழியாலே. த்விதீய த்ருதீய வெறுப்புக்களும் தீர்ந்தமையைக்காட்டுகிறார்* - ஆதித்யனும் *இத்யாதியாலும்*, இவ்வளவு ஆஶ்வாஸம் *இத்யாதியாலும்*. பாலிபாய்கை - *நாநாமுகமாகப் பிரிந்துபோகை.* இக்துறைகளெல்லாம் இத்யாதி *வாக்யநிகமநபூர்வகமாக இத்திருவாய்மொழியில் ப்ரமேயத்தை அருளிச்செய்கிறார்* - இப்படி ராத்ரி *இத்யாதி.* குடிப்பழியென்றது - "*நிறைந்தவன்பழி*" *என்றத்தைப்பற்ற.* ஸ்த்ரீத்வத்துக்குப் *போராதென்றது* - "*முன்னின்றாய்*" *என்றத்தைப்பற்ற.* அவன் தலைமைக்கும் போராதென்றது - "*சிறந்தகீர்த்தி*" *என்றத்தைப்பற்ற.* "*என்னெஞ்சினால் நோக்கிக்காணீர்*" *என்றத்தைப்பற்ற* - நீங்கள் *சிலர் இத்யாதியும்,* நான் அங்ஙனன்றிக்கே *இத்யாதியும்.* வடிவழகிலுமென்றது - "*நீலமேனி*" *என்றத்தைப்பற்ற.* ஒப்பனையழகிலுமென்றது - "*பூந்தண்மாலைத்தண்டுழாயும்*" *என்றத்தைப்பற்ற.* ஆபரணச்சேர்த்தியிலுமென்றது - "*மின்னுநூலுங்குண்டலமும்*" *என்றத்தைப்பற்ற.* வேண்டற்பாட்டிலுமென்றது - "*பொன்முடியும்*" *என்றத்தைப்பற்ற.* வேண்டற்பாடு - *பெருமை.* ஸ்வயத்நத்தால் காண்பார்க்கென்றது - "*அறிவரியபிரானை*" *என்கிறபாட்டில் - தம்மைப்போலே பரிவில்லாமையாலே ஸ்வயத்நபராகச்சொன்ன ஸித்தோபாயநிஷ்டரையாதல்,* "*என்னெஞ்சினால்நோக்கிக்காணீர்*" *என்கிறபாட்டிற்சொன்ன உபாஸகரையும் ஸ்வக்ருத ஸ்வீகாரபரரையுமாதல். கீழ் வாக்யவிவரணம்*-இவ்வஸ்துதான் இத்யாதி. *அந்யாபதேஶமாவது அப்ரீதிகர்ப்பமாகையாலே, கீழ் மூன்றுவகையாகச் சொன்ன தரிப்பிலே அப்ரீதியுமுண்டென்று, இப்படி ப்ரீத்யப்ரீதிஸாம்யத்தை த்ரேதா உபபாதிப்பிக்கிறார்* - ஆக போது இத்யாதி. *தான்நினைத்தவிடிவாகப் பெறாமையாலேயென்றது* † - *என்றபடி.* அவனை ஸ்மரிக்கப்பெறுகையாலே - *வ்ருத்தகீர்த்தநமுகத்தாலே ஸ்மரிக்கப்பெறுகையாலே.*

---

† *இங்கே இந்த ப்ரதீகத்துக்கு விவரண வாக்யம் காணவில்லை.*

* ஏழையராவியும் - உருவெளிப்பாடாயிருக்கச்செய்தே, அதில் இதுக்கு வாசி - அதில், "இணைக்கூற்றங்கொலோ" என்றும், "உய்விடமேழையர்க்கும் அசுரர்க்கும் அரக்கர்கட்கும் எவ்விடம்" என்றும்-பாயகத்வம் உறைத்திருக்கும்; இதில் - கீழ்ப்பிறந்த து:கநிவ்ருத்தியுண்டாம்படி ஸ்மரித்து தரிக்கவும்பெற்று அதுதான் அநுபவமாகப்பெறுமை யாலே வந்த அப்ரீதியுமாய், இப்படி ப்ரீத்யப்ரீதி ஸமமாய்ச்செல்லுகிறது. ஜாபாலிபக வானும் வார்த்தைசொல்லி, "ஸ்ரீவஸிஷ்டபகவானும் இக்குடியில்போந்தபடிகளையுமெல் லாம்சொல்லி, "இனி மீண்டு திருவபிஷேகம்பண்ணவமையும்" என்ன, பெருமாள் "அங் ஙன்செய்வதில்லை" என்று முடிய நின்றபடியைக் கண்டவாறே, பௌரஜநங்களெல்லாம் உகப்பதுஞ்செய்தார்கள் வெறுப்பதுஞ்செய்தார்கள்; "ரக்ஷகனானவன் தொடங்கினகார்யத் திலே இப்படிமுடியநின்றவிடம் நம்முடையரக்ஷணத்துக்குமுண்டிறே" என்று உகப்பதுஞ் செய்தார்கள், "அத்தாலே நாம்பெற்றதென், இப்போது பதினாலாண்டு இழந்திருக்கவேண்டா நின்றதே" என்று வெறுப்பதுஞ் செய்தார்களிறே. திருவடி பிராட்டியைத் திருவடிதொழு தபோது, "நமக்குப் பராக்ரமிக்கைக்குக் கைம்முதலுண்டாகப் பெற்றோமிறே" என்று உகப்பதுஞ்செய்தான், "இவள் அவரைப்பிரிந்து இவ்விருப்பிருப்பதே" என்று வெறுப்பதுஞ் செய்தான். பிராட்டிதான் திருவடிவார்த்தையைக் கேட்டபோது, "**அம்ருதம்விஷஸம் ஸ்ருஷ்டம்த்வயாவாநரபாஷிதம்**" (அம்ருதம் விஷஸம்ஸ்ருஷ்டம் த்வயாவாநரபாஷி தம்)-என்று பெருமாள் என்னைப்பிரிந்தவிடத்தில் என்னையல்லது அறியார் என்றுசொன்னது எனக்கு இனிதாயிருந்தது, அவர் பிரிவிலே தளராநின்றாரென்று சொன்னபடியாலே வெறுப் பாயிருந்ததென்றாளிறே. அப்படியே இவர்க்கும் ப்ரீத்யப்ரீதி ஸமமாய்ச் செல்லுகிறது.

---

*இத்திருவாய்மொழியிலே "வந்தெங்கும்நின்றிடுமே" என்கிற ஸ்வாரஸ்யத்தாலே - உரு வெளிப்பாடாயிருக்கிறதென்று விவக்ஷித்து, *ஏழையராவிக்கும் இதுக்கும் வாசியருளிச்செய்கிறார் - ஏழையராவியும் இத்யாதி. உருவெளிப்பாடாவது - ப்ரத்யக்ஷமாகத்தோற்றுகை. ப்ரீத்யப்ரீதிஸம மாய் உருவெளிப்பாடாய் செல்லுகிறது என்று அத்யாஹார்யம். ஆழ்வார்க்கு * முனியே நான்முக னளவும் மாநஸாநுபவமாயிருக்க, உருவெளிப்பாட்டுக்கு வாசியென்? என்னில்; பூர்வாநுபூதரஸத் தைமறந்து ரஸாந்தரமாய்ச் செல்லுகை - மாநஸாநுபவம்; அநுபூதரஸம் அநுவர்த்தியா நிற்கச்செய்தே ரஸாந்தராபேக்ஷஜநிக்கை உருவெளிப்பாடென்று பேதங்கண்டுகொள்வது. "வ்ருக்ஷேவ்ருக்ஷே ச பச்யாமி" என்றவிடத்தில் உருவெளிப்பாடு ஹ்யப்ரயுக்தம்; இங்கு ப்ராவண்யப்ரயுக்தம். ப்ரீத்ய ப்ரீதிரூபவிருத்த தர்மத்வயத்துக்கு ஏகதர்மியில் ஏகதைவஸமாவேசம் கூடுமோவென்ன; உதாஹர ணத்ரயம் - ஜாபாலி இத்யாதி. அதுக்குஹேதுவேதென்ன - ரக்ஷகனானவன் இத்யாதி. இவ் விடத்திலே - "தத்ருஷ்டம் ஜ்யேஷ்டம் ... ஜநா ஹர்ஷஸமாவ்ருத: ... விதா: । நயாத்யோத்யேதி ... ஹர்ஷித:"*

என்கிற ஶ்லோகம் அநுஸந்தேயம். த்விதீயோதாஹரணம் - திருவடி இத்யாதி. வெறுப்பதும்செய் தான் என்கிற விடத்திலே - "அசோகவநிகாமத்யே ... நிரீக்ஷணாத் । ஸம்வா ஹர்ஷம் ... விஷண்ணம் ..." என்றது அநுஸந்தேயம். த்ருதீயோதா ஹரணம் - பிராட்டி இத்யாதி. நிகமிக்கிறார் - அப்படியே இத்யாதி. "அம்ருதம்விஷஸம்ஸ்ரு ஷ்டம்த்வயாவாநரபாஷிதம் । யச்ச நாந்யமநா ராம: யச்ச சோகபராயண: ॥ உ ॥"

இதி ஸுந்தரகாண்டே (நுஎ) ஸர்கே ... வீதா.

முதற்பாட்டு.

எங்ஙனேயோவன்னைமீர்காள்! என்னைமுனிவதுநீர்?
நங்கள்கோலத்திருக்குறுங்குடிநம்பியை நான்கண்டபின்
சங்கினோடும்நேமியோடும் தாமரைக்கண்களோடும்
செங்கனிவாயொன்றினோடும் செல்கின்றதென்னெஞ்சமே.

ஆ.—(எங்ஙனேயோ.) என்னுடையப்ரக்ருதியறிந்திருக்கிற தாய்மாரான நீங்கள், என்னுடைய அவஸாதத்துக்கடியான நம்பியுடைய அழகை இன்றாகாதே என்னைப்பொடிகிறபடி எங்ஙனே? நமக்காக நிரதிஶய ஸௌந்தர்யத்தோடே திருக்குறுங்குடியிலே நின்றருளின நம்பியை நான்கண்டபின், சங்குசக்கரங்களோடும் தாமரை போன்ற திருக்கண்மலர்களோடும் சிவந்தகனிபோலேயிருக்கிற திருப்பவளமொன்றோடும் மிகவும் பூணுநின்றது என்னுடைய அந்தஃகரணம் என்கிறாள்.

ஒ.—முதற்பாட்டில், ஆழ்வார்களோடேசேர்ந்த திருமுகத்திலழகை அநுஸந்தித்து என் அந்தஃகரணம் அங்கே மிகவும் ப்ரவணமாகாநின்றது என்கிறாள்.

[எங்ஙனேயோ என்றுதொடங்கி] - என்னுடைய ப்ரக்ருதியறிந்திருக்கிற தாய்மாரான நீங்கள் என்னுடைய அவஸாதத்துக்கு அடியான நம்பியுடைய அழகை இன்றாகாதே என்னை முனிகிறபடி எங்ஙனே? [நங்கள்கோலத் திருக்குறுங்குடிநம்பியை] - நமக்காக நிரதிஶயபோக்ய ஸௌந்தர்யத்தோடே திருக்குறுங்குடியிலே நின்றருளின நம்பியை. பாட்டுத்தோறும், 'நான்' என்கிறது - சாபலாதிஶயத்தாலே. நேமி-திருவாழி. [செங்கனிவாய் என்றுதொடங்கி] - சிவந்த கனிபோலேயிருக்கிற திருப்பவளம் ஒன்றோடும் மிகவும் பூணுநின்றது என்னுடைய அந்தஃகரணம்.

ப.—முதற்பாட்டில், நம்பியுடைய அஸாதாரணசிஹ்நமான ஆழ்வார்களிலும், ப்ரதாநமான அவயவஶோபையிலும் என்னெஞ்சு ஸக்தமாய் நடவாநின்றதென்கிறாள்.

அன்னைமீர்காள் - அன்னைமீர்கள்! நீர்-(பெற்ற) நீங்கள், ஓ-ப்ரியஞ்செய்யாதே, என்னை - (நல்லதுகண்டுமேல்விழுந்த) என்னை, ஓ-உகக்கப்ராப்தமாயிருக்க, முனிவது - முனிகிறபடி, எங்ஙனே-எங்ஙனே? நங்கள் - நங்குடிக்கு அஸாதாரணபூதராய், கோலம் - தர்ஶநீயவேஷரான, திருக்குறுங்குடி - திருக்குறுங்குடியில், நம்பியை-கல்யாணகுணபரிபூர்ணரானநம்பியை, நான்-நான், கண்டபின் - அநுபவித்தபின்பு, (அவருடைய ப்ராப்யஸ்வத்துக்கு அஸாதாரணசிஹ்நமான), சங்கினோடும்-ஸ்ரீபாஞ்சஜந்யத்தோடும், நேமியோடும்-திருவாழியோடும், தாமரை-தாமரைபோலே தர்ஶநீயமான, கண்களோடும்-திருக்கண்களோடும், செம்-சிவந்த, கனி-கனிபோலே, ஒன்று-அத்விதீயமாயிருக்கிற, வாயினோடும்-திருவதரத்தோடும், என்-என், நெஞ்சம்-நெஞ்சு, செல்கின்றது-ஸக்தமாய் நடவாநின்றது. கோலம் - ஊருக்கு விஶேஷணமுமாம்.

இ.—முதற்பாட்டில், கையிலாழ்வார்களோடே சேர்ந்த திருமுகத்திலழகிலே என் நெஞ்சு ப்ரவணமாகாநின்றதென்கிருள்.

[அன்னைமீர்காளென்னைமுனிவது - எங்ஙனேயோ] - இஸ்ஸௌந்தர்யத்தில்மூட்டின் நீங்களே மீட்கப்பார்க்கிறபடி எங்ஙனேயோ? நீங்கள்கற்பித்தது பலிக்கப்புக்கவாறே பொடியுமத்தனையோ? [நீர்] - என்ப்ரக்ருதியறியும் நீங்கள். [என்னைமுனிவது] - என்னுடைய ப்ராவண்யத்துக்கடியான நம்பியுடைய வடிவழகையன்றோ இன்னுதாவது. உங்களையும்மறந்து என்ப்ரக்ருதியையும்மறந்தால் விஷயத்தையும் மறக்கவேணுமோ. [முனிவது-எங்ஙனேயோ] - கொண்டாடவேண்டும்தலையில் பொடிவதெங்ஙனேயோ? [நங்கள் இத்யாதி] - இக்குடிக்காக முற்றூட்டானநிரதிசயஸௌந்தர்யத்தோடே திருக்குறுங்குடியிலேநின்றருளின நம்பியை. உடையநங்கையார் நம்பியையாஶ்ரயித்தாயிற்று ஆழ்வாரைப் பெற்றது. அநந்தவ்ரதம் அநுஷ்டித்தன்றிறே பெற்றது. "நெடுங்காலமும்கண்ணன்நீண் மலர்ப்பாதம் பரவிப்பெற்ற". [கோலத்திருக்குறுங்குடியென்று] - நகரீலக்ஷணங்களையுடைத்தென்று ஊரோடேகூட்டவுமாம். [நம்பியை] - கல்யாணகுணபூர்ணனை. குணங்களால்பூர்ணமான விஷயத்தையன்றோ நான் அகப்பட்டது. திருக்குறுங்குடியிலே புகுந்தபின்பாயிற்று பூர்ணனுயிற்று. [நான்] - சாபல்யத்தாலே பூர்ணையான நான். [கண்டபின்]-மீட்கப்பார்க்கில் ஓக்கவேதுடக்கவேண்டாவோ. [சங்கினோடும் இத்யாதி]-ஒருகலத்திலே யுண்பாரைப்போலே, வாகம்ருதஸாரஸ்யத்தையறியும் ஸ்ரீபாஞ்சஜந்யத்தோடே ஸாம்யமுண்டே. ஶ்யாமமானவடிவுக்கு பாஹ்யமான ஆழ்வார்களோடே யுண்டான சேர்த்தியோடும், இரண்டிலும்வந்து அலையெறிகிற திருக்கண்களோடும். "விகாஸம், செவ்வி, குளிர்த்தி, நாற்றம்" என்கிறவிவை யுண்டாயிருக்கை. சிவந்தகனிபோலேயிருந்த முறுவலொன்றினேடும். விசேஷகடாக்ஷத்தாலே ஸ்வத்தஹாவரானல் அது தன்பேருக முகங்கொடுக்கும்முறுவல், வேறொரழகை நினைக்கவேண்டாத முறுவல். ஜாதி, வ்யக்திதோறும் பரிஸமாப்பவர்த்திக்குமாப்போலே, நெஞ்சு அழகுதோறும் செல்லாநின்றது. [செல்கின்றது] - இன்னமும் தறைகண்டதில்லை. நாங்களும் அவ்வழகை யநுபவித்தன்றோ இருக்கிறதென்ன,—[என்நெஞ்சமே] - அவன்தானேகாட்டக்கண்டு அநுபவித்த என் நெஞ்சு. உங்கள்வார்த்தைகேட்கைக்கு நெஞ்சுடையாரையன்றோ ஹிதஞ்சொல்லி மீட்பது.

ஈடு.—முதற்பாட்டு. திருக்கையிலாழ்வார்களோடே சேர்ந்த நம்பிதிருமுகத்திலழகிலே, என் அந்தஃகரணம் மிகவும் ப்ரவணமாகாநின்றதேன்கிருள்.

[எங்ஙனேயோ இத்யாதி] - ஹிதஞ்சோல்லத் தோடங்கினவாறே தந்தாமை மறக்குமித்தனையோ. ஒன்றைப் பரிஹரிக்கப்பார்த்தால் அதினுடைய நிதானமறிந்து பரி

முதற்பாட்டு - எங்ஙனேயோ இத்யாதி. உத்தரார்த்தத்தைக்கடாக்ஷித்து அவதாரிகை- திருக்கையில் இத்யாதி. திருக்கையில் இத்யாதிக்குமுன்னே, தாய்மாரானபேர், "நீ இப்படிசெய்கிறது யுக்தமன்று" என்று நிஷேதிக்க அவர்களைக்குறித்தென்று கூட்டிக்கொள்வது.

" அன்னைமீர்காள் - முனிவது - எங்ஙனேயோ " என்று கூட்டிஹாவம் - ஹிதஞ்சோல்ல இத்யாதி. இந்த ஹாவத்துக்கு " அன்னைமீர்காள் " என்றதிலேநோக்கு. தந்தாமை-"பிரானிருந்தமை காட்டினீர்" என்று ப்ராவண்யஜநகைகளான தந்தாமையென்றபடி. " என்னைமுனிவது - எங்ஙனேயோ" என்றுகூட்டி, "என்னை" என்றதிலேநோக்காக ஹாவம் - ஒன்றை இத்யாதி. விவரணம் - என்

ஹரிக்கவேண்டாவோ. என்னுடைய ப்ராவண்யத்தைப் பரிஹரிக்கப்பார்த்தால், எனக்கு இவ்வளவான ப்ராவண்யத்தைவிளைத்த நம்பியுடையஅழகையறிந்து அத்தையன்ருேபோடிவது. என்னுடைய நிலைக்கும் உங்களுடைய ஹிதவசநத்துக்கும் என்னசேர்த்தியுண்டு. நம்பியுடைய அழகையறிந்து அநுபவித்திருக்கிறநீங்கள், அதிலேதுவக்குண்டிருக்கிற என்னை மீட்கப்பார்க்கிறபடி எங்ஙனேயோ ? [அன்னைமீர்காள்] - இக்குலதர்மத்துக்கு நான் ஏதேனும் தப்பநின்றதுண்டோ. ''பேராளன்பேரோதும் பெரியோரை'' என்றும், ''யவரேலுமவர்'' என்றும் நீங்கள்சொல்லும்வார்த்தைகேட்டு வளர்ந்தவளன்ருே நான். தாந்தாம் செய்யுமத்தை வயிற்றிற்பிறந்தார்செய்தவாறே குற்றமாமித்தனையோ. புத்ரர்களாகவுமாம், ஶிஷ்யர்களாகவுமாம், பகவத்விஷயத்தில் ஓரடிவரநின்றவர்கள் ஶ்லாகநீயராமத்தனையன்ருே. கூரத்தாழ்வார் ஓரளவிலே நங்கையார் திருவடிசார்ந்தவாறே, ''இன்னமுமொரு விவாஹம்பண்ணுவோமோ'' என்று விசாரித்து, ''இதுதான் க்ரமத்தாலேவந்து ஆழ்வானுக்கு விரோதமாய்த் தலைக்கட்டும்; இனித்தான், ''ஆநாஶ்ரமீ நதிஷ்டேத்'' என்று ஶாஸ்த்ரம் சொல்லாநின்றது ; இஶ்ஶாஸ்த்ரார்த்தத்தை அநுஷ்டிப்போமோ! பாகவதபரிசர்யையைப்பண்ணுவோமோ'' என்று விமர்ஶியா, ''அஸ்ஸாமாந்யதர்மத்திற்காட்டில் இவ்விஶேஷதர்மமே ப்ரபலம்'' என்று தவிர்ந்தார். [என்னைமுனிவதுநீர்] - என்னை உங்கள்சொற்கேளாதபடி பண்ணின நம்பியழகையன்ருே முனிவது. [என்னை] - நம்பியுடையவழகிலே துவக்குண்டிருக்கிற என்னை இதுவே யாத்ரையாயிருக்கிற நீங்கள் விலக்குகிறபடி எங்ஙனேயோ. [நங்கள் இத்யாதி] - † உங்களையறியாவிட்டால் அவ்விஷயத்தையும் அறியாதொழியவேணுமோ என்கிருள். [நங்கள்] - இக்குடிக்காக முற்றூட்டுப்போலே காணும் நம்பியுடையவழகு. ஸர்வேஶ்வரனைநோக்கி அநந்தவ்ரதம் நோற்றுப் பெற்றவர்

னுடைய இத்யாதி. ''என்னை - நீர் - முனிவது - எங்ஙனேயோ'' என்று கூட்டி பாவம் - என்னுடைய நிலைக்தும் இத்யாதி. அதாவது - நான் அதிப்ராவணையாகையாலே, கரைமேலேநிற்கிற உங்கள் வசனங்கொண்டு கார்யமில்லையென்றபடி. ''நீர் - என்னைமுனிவது - எங்ஙனேயோ'' என்றுகூட்டி பாவம் - நம்பியுடைய இத்யாதி. ஆக, ''நீர்'' என்றதுக்கு இரண்டுபாவம். இவ்வாக்யங்களெல்லாம் ''நங்கள்'' என்றத்தையும் கடாக்ஷித்து. ''அன்னைமீர்காள், நம்பியைநான்கண்டபின்'' என்று கூட்டி பாவம் - இக்குலதர்மத்துக்கு இத்யாதி. அதாவது - பகவத்விஷயப்ராவண்யம் இக்குலதர்மமாகையாலே, நான்செய்ததில் தப்புண்டோவென்றபடி. பகவத்ப்ராவண்யம் இக்குலதர்மமோ என்ன - பேராளன் இத்யாதி. அதாவது - பாகவதரை ஶ்லாகிக்கையாலே ஸித்தமென்றபடி. இத்தால்பலிதம் - தாந்தாம் இத்யாதி. குற்றமாமித்தனையோ - குணமாமித்தனையன்ருே. ''முனிவது - எங்ஙனேயோ'' என்றுகூட்டி பாவம் - புத்ரர்கள் இத்யாதி. ''பகவத்விஷயத்தில் அவகாஹநங்கொண்டு புத்ரர்கள் ஶ்லாகநீயர்'' என்னுமதுக்கு ஸம்வாதம் - கூரத்தாழ்வார் இத்யாதி. கூரத்தாழ்வார் - ஆழ்வான் திருத்தமப்பனுர். ''ப்ரஹ்மசாரீ க்ருஹஸ்தோ வா வாநப்ரஸ்தோ யதிஸ்ததா:। ஆநாஶ்ரமீ நதிஷ்டேத் தாவதேகமபி ந வா ஜ்ஞ:'' இதி ஸ்ம்ருதே: ஶ்ரு. ஸிம்ஹாவலோகநந்யாயேந, ''ஒன்றைப் பரிஹரிக்கப்பார்த்தால்'' இத்யாதி வாக்யவிவரணம் - என்னையுங்கள் இத்யாதி. ''நம்பியுடையவழகை'' இத்யாதி வாக்யவிவரணம் - நம்பியுடையவழகிலே இத்யாதி. உங்களை - வடகரான உங்களை. ''கோலத்திருக்குறுங்குடிநம்பியை'' என்றத்தைப்பற்ற - அவ்விஷயத்தையும் என்றது. ''நங்கள்'' என்றதின் தாத்பர்யம் - இக்குடிக்காக இத்யாதி. முற்றூட்டு - ஏகபோகம். பூர்ணபோகமென்று ஶப்தத்துக்குஅர்த்தம். இதுக்கு நியாமகமேதென்ன - ஸர்வேஶ்வரனை இத்யாதி. அநந்தவ்ரதம்நோற்

† இவ்விடத்தில், ''உங்களையும் என்னையும் அறியாவிட்டால்'' என்று பாடம் க்வசித் காண்கிறது.

களைப்போலன்றிக்கே, நம்பியை ஆஶ்ரயித்தாயிற்று இவரைப்பெற்றது. "உடையநங்கையார் நம்பியையாஶ்ரயித்து ஆழ்வாரைத் திருவயிறுவாய்த்தார்" என்று ப்ரஸித்தமிறே. * நெடுங்காலமும்கண்ணன் நீள்மலர்ப்பாதம் பரவியிறே பெற்றது. கோலமென்கிற இது - நகரத்துக்குவேண்டும் அலங்காரங்களை உடைத்தாயிருக்குமென்று, திருக்குறுங்குடிக்கு விஶேஷணமாதல்; அன்றிக்கே, நம்பிதம்முடைய ஸௌந்தர்யத்தைச் சொல்லுதல். [நம்பியை] - கல்யாணகுணங்களால் பூர்ணமானவிஷயத்திலே அகப்பட்டிருக்கிற என்னை எங்ஙனே மீட்கப்பார்க்கிறபடி. [நம்பியைநான்] - அகப்படுத்துகைக்கு ஸௌந்தர்யஶீலாதிகளால் அத்தலை குறைவற்றிருக்கிறப்போலே யாயிற்று அகப்படுகைக்குச் சாபலத்தால் இத்தலை குறைவற்றிருக்கிறபடி. [கண்டபின்] - நீங்களும் இவ்விஷயத்தைக் கண்டன்றோ ஹிதஞ்சொல்லுகிறது. [கண்டபின்] - ப்ரதேஜஸலே ஸேதுபந்தமன்றோ நீங்கள்செய்கிறது. காண்பதற்குமுன்னே மீட்டிகோளல்லிகோளே, இனிமீட்கப்போமோ? மீட்கப்போகாமல் இப்போதுவந்ததேன்? என்ன; கைமேலே ஒருமுகத்தாலே தான் அகப்பட்டபடியைச் சொல்லுகிறாள் [சங்கு இத்யாதி] - நீங்கள் ஹிதஞ்சொல்லுவதுதான் நெஞ்சுடையார்க்கன்றோ. [சங்கினோடும்] - $ "செங்கமலநாண்மலர்மேல் தேனுகருமன்னம்போல்" என்கிறபடியே, ஶ்யாமமானதிருமேனிக்குப்பரபாகமான வெளுத்தநிறத்தையுடைத்தான ஸ்ரீபாஞ்சஜந்யத்தோடும்; இக்கைக்கு இது ஆஹரணமானால், வேறொன்றுவேண்டாதே தானே ஆபரணமாகப்போரும்படியிருக்கிற நேமியோடும். [தாமரைக்கண்களோடும்] - கண்காணக் கைவிட்டுப்போயிற்றுக்காணும். விகாஸாதிகளாலே தாமரைபோலேயிருக்கிற திருக்கண்களோடும். [செங்கனிவாய்] - கண்டபோது, நான் உன்சரக்கன்றோ - "தவாஸ்மி" (தவாஸ்மி) என்றமுறுவலோடும். [ஒன்றினோடும்] - ஸம்ஸாரயாத்ரையை முக்தன் மறக்கு

றுப்பெற்றவர்கள் - தேவகீப்ரப்ருதிகள். ப்ரஸித்திமாத்ரமன்றிக்கே இவருக்தியுமுண்டென்கிறார் - நெடுங்காலமும் இத்யாதி. அநேககாலமும் க்ருஷ்ணனுடைய நிரதிஶயபோக்யமான திருவடித்தாமரைகளை ஆஶ்ரயித்துப்பெற்ற இத்யர்த்தஃ. *திருவிருத்தத்தில், (௩௭) "கொடுங்காற்சிலையர்" இத்யாதி. "கண்ணன்குறுங்குடி" என்று - அங்குநிற்கிறவன் க்ருஷ்ணனுகையாலே, இது ப்ரமாணமாகக் குறையில்லை. "நம்பியைநான்கண்டபின் - என்னை - எங்ஙனே - முனிவது" என்றிகூட்டி பாவம் - கல்யாணகுணங்களால் இத்யாதி. ஸமபிவ்யாஹாரதாத்பர்யம் - அகப்படுத்துகைக்கு இத்யாதி. "கண்ட" என்றதுக்கு பாவம் - நீங்களும் இத்யாதி. விஷயவைலக்ஷண்யத்தைக் கண்டிருந்தும் மீட்கப்பார்க்கிறது யுக்தமோ? என்றபடி. "பின்" என்றதுக்குபாவம் - ப்ரதேஜஸலே இத்யாதி. விவரணம் - காண்பதற்கு இத்யாதி. கைமேலே, ஒருமுகத்தாலே என்றது - சாடு. கைமேலே - திருக்கைகள்மேலேயிருக்கிற ஆழ்வார்களுடையசேர்த்தியழகிலே என்று ஸ்வபாவார்த்தம்; ப்ரத்யக்ஷமாக என்று சாட்வர்த்தம். ஒருமுகத்தாலே - தாமரைக்கண்கள், செங்கனிவாய், இவைகளுடைய ஸௌந்தர்யத்தாலே இதி ஸ்வபாவார்த்தஃ; ஏகமுகமாக என்று சாட்வர்த்தம். "செல்கின்றதென்னெஞ்சம்" என்றத்தைப்பற்ற - நீங்கள் இத்யாதி. சேங்கமலம் இத்யாதி - செந்தாமரையினுடைய அப்போதலர்ந்த செவ்விய மலரின்மேலே மதுபாநம்பண்ணும் அன்னம்போல் இத்யர்த்தஃ. $ நாய்ச்சியார் திருமொழி, "கர்ப்பூரம்நாறுமோ" என்கிறதிருமொழி, ஏழாம்பாட்டு. சாடு - கண்காண இத்யாதி. கண்காண என்று - ப்ரத்யக்ஷமாக என்றுசாடு, கண்களைக்காண என்று ஸ்வபாவார்த்தம். கைவிட்டு - திருக்கைகளைவிட்டு என்று ஸ்வபாவார்த்தம்; விட்டுப்போயிற்று என்று சாடு. முறுவலோடும் - "தவாஸ்மி" என்றபோதுண்டான முறுவலோடும். ஸ்மிதத்தாலல்லது அதரத்தில் பழுப்புத்தெரியாததுகொண்டு, முறுவல் என்று வ்யாக்யாநம்பண்ணிற்று. "ஒன்றினோடும்" என்றத்தை - * செங

மோபாதி, இவ்வருகுண்டானவற்றோடு அவ்வருகுள்ளவற்றோடு வாசியற எல்லாவற்றையும் மறக்கப்பண்ணவற்றான திருவதரத்தோடும். அன்றிக்கே, ஜாதி, வ்யக்திதோறும் பரிஸமாப்ய வர்த்திக்குமாபோலே, நெஞ்சு அழகுதோறும் செல்லாநின்றது. ஸர்வேஶ்வரனோடு ஸாம்யம்பெற்றதாகிலும் தெரிகிறதில்லை. அவன் வ்யாபியாநிற்கச்செய்தே ஆகாஶ வ்யாப்திபோலன்றிக்கே பதார்த்தங்கள்தோறும் பரிஸமாப்யவர்த்திக்குமாபோலே, இதுவும் அழகுகள் தோறும் பரிஸமாப்ய வர்த்தியாநின்றது. [செல்கின்றது] - இன்னமும் தறைகண்டதில்லை. நாங்களுமெல்லாம் நம்பியுடைய அழகை, அநுபவித்திருக்கிறோமன்றோ, எங்கள்சொல்லு மறுக்கலாகாதுகாண் என்ன; உங்கள்சொல்லை மறுத்தேனேயாகிலும் நம்பியுடையதிருமுகம் மறக்கவொண்ணுதேன்கிறாள். எங்களுக்கு இப்படியிராதொழிவானேன்? என்ன,—[என் னெஞ்சமே] - உங்களைப்போலன்றிக்கே, அவன்தானேகாட்டப்பெறுகையாலே முழுக்க அநுபவித்த என்னெஞ்சானது.

[எங்ஙனேயோ இத்யாதி] - ஹேதுவான நம்பியுடைய அழகைப்பொடியாதே, என்னைப்பொடியக்கூடினபடி எங்ஙனேயோ? ப்ராவண்யமே ஸ்வபாவமாம்படி வளர்த்து வைத்து, இப்போதாகப்பொடிகிறபடி எங்ஙனேயோ? முன்பு நீங்கள் கற்பித்துப்போந்து, அதுபலிக்கப்புக்கவாறே பொடியுமத்தனையோ? [கோலம்] - உங்கள் ஹிதவசநத்துக்கு மீளாதபடியான ஸௌந்தர்யத்தையுடையவர். [திருக்குறுங்குடிநம்பியை] - பரத்வத்தில் முதன்மையிலேயோ அகப்பட்டது மீளுகைக்கு. [நம்பியை] - குணத்தில் அபூர்த்தியுண் டாய்த்தான் மீளுகிறதோ. [நான்கண்டபின்] - இவ்விஷயத்தில் சாபலமில்லாமல் மீளு கிறேனோ. [சங்கினோடும்] - ஸ்ரீபாஞ்சஜந்யத்தோடே விஶேஷித்து ஒரு ப்ராப்தியுண்டு காணும் இவளுக்கு, வாகம்ருதச்சுவடறிந்திருக்கையாலே; ஒருகலத்திலே ஜீவிப்பாரைப் போலே.　　　　(க)

கனிவாய்மாத்ரத்தோடே அந்வயித்துபாவம் - **ஸம்ஸார இத்யாதி.** *இவ்வருகுண்டானவை - சங்கும் நேமியும். அவ்வருகுள்ளவை - அதரத்துக்குமேலாயுள்ள தாமரைக்கண்கள். "ஒன்றினோடும்" என்றத்தை - * சங்குமுதலானவை யெல்லாவற்றிலும் ப்ரத்யேகம் அந்வயித்துபாவாந்தரம்* - **அன்றிக்கேஜாதி** *இத்யாதி. அணுவானநெஞ்சுக்கு அழகுகள்தோறும் வ்யாப்திகூடுமோ? என்ன - ஸர்வேஶ்வரனோடு இத்யாதி. ஸாம்யத்தை விவரிக்கிறார்* - **அவன் வ்யாபியாநிற்க** *இத்யாதி. வர்த்தமாநார்த்தம்* - **இன் னமும் தறைகண்டதில்லை** *என்று. "தாமரைக்கண்கள், செங்கனிவாய்" என்றதுக்கு ப்ரத்யேகம் தாத்பர்யமருளிச்செய்து, ஸமுதாயேந ரஸோக்தியாகபாவம்* - **நாங்களுமெல்லாம்** *இத்யாதி.*

புநஶ்ச ஒரு **ஸ்ரீ***வைஷ்ணவர்க்கு ப்ரஸாதிக்கிறார்*-**எங்ஙனேயோ** *இத்யாதி. "என்னைமுனி வது - எங்ஙனேயோ" என்றுகூட்டி பாவம் -* **ஹேதுவான** *இத்யாதி.* **ஹேதுவான** *- ப்ராவண்ய ஹேதுவான. "அன்னைமீர்காள் - நீர் - என்னைமுனிவது - எங்ஙனேயோ" என்றுகூட்டி பாவம் -* **ப்ராவண்யமே** *இத்யாதி. கீழ்வாக்யவிவரணம் -* **முன்பு** *இத்யாதி. "நீர்" என்றதுக்குபாவமாதல். அல்லாதவற்றுக்கு முன்னே * சங்கைச்சொல்லுவானென்? என்ன -* **ஸ்ரீபாஞ்சஜந்யத்தோடே** *இத் யாதி. நங்கள்கோலம் இத்யாரப்ய, என்னெஞ்சம் - செல்கின்றது, அன்னைமீர்காள், நீர் - என்னை முனிவது - எங்ஙனேயோ இத்யந்வயஃ.*　　　　(க)

இரண்டாம் பாட்டு.

என்னெஞ்சினால்நோக்கிக்காணீர் என்னைமுனியாதே
தென்னன்சோலைத்திருக்குறுங்குடிநம்பியை நான்கண்டபின்
மின்னுநூலுங்குண்டலமும் மார்பில்திருமறுவும்
மன்னுபூணும்நான்குதோளும் வந்தெங்கும்நின்றிடுமே.

ஆ.—(என்னெஞ்சினால்.) "நம்பிதிருவழகை நாங்கள் அநுபவித்தோமல்லோமோ, நாங்கள் பேசாதிருக்க நீ இங்ஙனே படுகிறதென்?" என்று அவர்கள் பொடிய; என்னை நீங்கள்பொடியாதே, உங்களுக்குக் காணவேணுமாகில் என்னைப்போலே ஸ்நேஹ யுக்தமான நெஞ்சை யுடையீராய்க்கொண்டு அநுஸந்தித்தறியுங்கோள். தென்னாட்டுச் சோலைசூழ்ந்த திருக்குறுங்குடிநம்பியை நான்கண்டபின், மின்னாநின்றுள்ள திருயஜ்ஞோபவீதமும் திருக்குண்டலங்களும் திருமார்வில்திருமறுவும் திருவுடம்போடுபொருந்தின திருவணிகலன்களும்திருத்தோளழகும் சுற்றும்வந்துஎன்னைநெருக்காநின்றனஎன்கிறாள்.

ஒ.—இரண்டாம்பாட்டில், நம்பியுடைய திருமார்பிலும் திருத்தோளிலுமுண்டான ஸ்வாபாவிகமான அழகும் திருவணிகலன்களின் அழகும் சுற்றும்வந்து நின்று என்னை நெருக்காநின்றன என்கிறாள்.

[என்னெஞ்சினால்என்றுதொடங்கி]-'நம்பிதிருவழகை நாங்கள் அநுபவித்தோமல்லோமோ, நாங்கள் பேசாதிருக்க, நீ இங்ஙன் படுகிறதென்?' என்று அவர்கள்பொடிய, என்னை, நீங்கள் பொடியாதே உங்களுக்குக்காணவேணுமாகில் என்னைப்போலே ஸ்நேஹ யுக்தமான நெஞ்சையுடையீராய்க்கொண்டு அநுஸந்தித்து அறியுங்கோள். [தென் என்றுதொடங்கி] - தென்னாட்டுச்சோலைசூழ்ந்ததிருக்குறுங்குடிநம்பியை நான்கண்டபின். [மின்னுநூல்] - மின்னாநின்றுள்ள திருயஜ்ஞோபவீதம். [மன்னுபூண்]-திருவுடம்போடு பொருந்தின திருவணிகலன்கள்.

ப.—அநந்தரம், நம்பியுடைய ஒப்பனையழகும் தோளும் ஸர்வதேசத்திலும் வந்துநின்று அநுபவவிஷயமாகாநின்றது என்கிறாள்.

என்னை-என்னை, முனியாதே - நியமித்துவார்த்தைசொல்லாதே, என்னெஞ்சினால் - (அநுபவித்தாலும் குறியழியாத உங்கள் நெஞ்சுபோலன்றியே பாவயுக்தமான) என்னெஞ்சாலே, நோக்கி - அநுபவித்து, காணீர் - பாரீகோள்; தென் - தெற்குத்திக்கிலே, நன்-நன்றான, சோலை - சோலையையுடைத்தான, திருக்குறுங்குடி - திருக்குறுங்குடியில், நம்பியை - நம்பியை, (அவனருளடியாக), நான் -நான், கண்டபின் - கண்டபின்பு, மின்னும் - (வடிவுக்குப்பரபாகமாய் ப்ரஹ்மவர்ச்சஸ) ப்ரகாசகமான, நூலும் - திருயஜ்ஞோபவீதமும், குண்டலமும் - (இருபாடுமிலங்குகிற) திருமகரகுண்டலங்களும், மார்பில் - (விலக்ஷணமான) திருமார்பில், திரு-கழற்றாத ஆபரணமான, மறுவும் - ஸ்ரீவத்ஸமும், மன்னு - எப்போதும்கழற்றாத, பூணும் - ஆபரணவர்க்கமும், (சதுர்வர்க்கப்ரதமான), நான்கு-நாலு, தோளும்-திருத்தோள்களும், எங்கும்-நான்போனவிடமெங்கும் வந்து-வந்து, நின்றிடும் - நில்லாநின்றன.

இ.—இரண்டாம்பாட்டில், நம்பியுடைய தோளழகும் ஆபரணஸ்ரீயும் ஸர்வதோதிக்கமாக ஜ்வலியாநின்றன என்கிறாள்.

*[என்னெஞ்சினால் இத்யாதி] - "நாங்களும் நம்பியையநுபவித்தே ஸ்த்ரீத்வம் கெடாமலிருக்கிறிலோமோ, எங்களுடைய ஹிதவசநம் கேளாதே மறுமாற்றம் சொல்லுகை போராதுகாண்" என்ன,—என்நெஞ்சுபோலே அதிப்ரவணமான நெஞ்சை யுடையீராய் அநுபவித்து அறியுங்கோள் என்னைப் பொடியாதே. என்நெஞ்சை யுடையீராய்க் காணப்பெறுமன்று "பிள்ளையைப் பிள்ளையென்றெண்ணப்பெறுவரே" என்று உங்களை நீங்களே பொடிவுதிகோள். என் நெஞ்சை இரவலாக வாங்கிக் காணமாட்டிகோளோ? என்னைப் பொடியாதே. "ஶ்யாமநவெஸவெ". [தென்னன்சோலை]-தெற்குத்திக்கிலேயாய் நன்றான சோலையென்னுதல், * தென்னன்கொண்டாடும் சோலையென்னுதல். நம்பியழகுக்குமுன்னே சோலையழகு வந்து வடிம்பிடுகிறபடி. [சோலைத்திருக்குறுங்குடி] - நம்பிக்கு ஆபரணம்போலேயாயிற்று ஊருக்குச் சோலை. [நான்கண்டபின்] - சோலையிலும் ஒப்பனையிலும் ஆழங்காற்படும் நான். [மின்னுநூலும்] - மேகத்திலே மின்னினாற்போலேயிருக்கிற திருயஜ்ஞோபவீதமும். பரந்த மின்திரள் சுழித்தாற்போலேயிருக்கிற திருமகரகுண்டலமும், வெறும்புறத்திலே ஆலத்திவழிக்கவேண்டும் திருமார்விலே கழற்றிச்சாத்தவேண்டாதபடியான ஸ்ரீவத்ஸமும், நாய்ச்சிமாரோடு கலக்கும்போது கழற்றவேண்டாத ஆபரணங்களும். [மன்னுபூண்] - திருவுடம்போடு பொருந்தின திருவணிகலன்கள். கல்பகதரு பணைத்தாற்போலேயாய், ஸஹஸ்ரஹஸ்ர ஹஸ்ரங்களான திருத்தோள்களும். [வந்தெங்கும் நின்றிடுமே] - உங்கள் ஹிதவசனங்களைக் கேட்டு அகலநினைத்தாலும் அங்கேயங்கே நில்லாநின்றது. "வ்ருக்ஷே வ்ருக்ஷே வபஶ்யாமி" என்கிறது உகப்பார்க்கும் ஒத்தது.*

ஈடு.—இரண்டாம்பாட்டு. நம்பியுடையதோளழகும் ஸ்ரீயும் ஸர்வதோமுகமாகநின்று நலியாநின்றதென்கிறாள்.

[என்னெஞ்சினால் இத்யாதி] - நாங்களும் நம்பியை அநுபவித்தே ஸ்த்ரீத்வங் கெடாமலிருக்கிறிலோமோவென்ன,—[என்னெஞ்சினால் நோக்கிக்காணீர்]-நீங்கள் என்னைப் பொடியாதே உங்களையேபொடிந்துகோள்ளும்படி, என் நெஞ்சை இரவலாகவாங்கிப்பார்க்க வல்லிகோளோ. † ([என்னை]) "இவளையாகாதே நாம் இத்தனை சொல்லிற்று" என்று பின்னை உங்களை நீங்களே பொடிந்துகோள்ளுவதிகோள். [முனியாதே] - '"†கணபுரம் கைதொழும்பிள்ளையைப் பிள்ளையென்றெண்ணப்பெறுவரே" என்னக்கடவதாயிருக்க, நம்

இரண்டாம்பாட்டு.—என்னெஞ்சினால் இத்யாதி. "மின்னுநூலும்" இத்யாதியை யக்ஷ்ய ஸ்டாக்ஷித்து வ்யுத்க்ரமமாக அவதாரிகை - நம்பியுடைய இத்யாதி "எங்குமின்றிடும்" என்றது - உருவெளிப்பாடாகையாலே, அது ஸாமுகமானமையைப்பற்ற - நலியாநின்றதென்கிறாள் என்றது.

உன் நெஞ்சினால் கண்டவாறியேதென்ன - நீங்கள்என்னை இத்யாதி. கீழ்வாக்யவிவரணம் - இவளையாகாதே இத்யாதி. "என்னைமுனியாதே" என்றதுக்கு - என்னைக்கொண்டாடும்படியென்றாய், அத்தால்பலித்தது - உங்களைமுனிந்துகொள்ளும்படியென்றாக்கி, அர்த்தை ப்ரமாணகதநமுகேந அருளிச்செய்கிறார் - கணபுரம் இத்யாதி. திருக்கண்ணபுரத்தைக் கைதொழுகிற பெண்பிள்ளையை, தன்வயிற்றிற்பிறந்தவள் என்று எண்ணப்பெறுவர்களோ; "தன்வயிற்றிற்பிறந்தாள்" என்கிற அர்த்தத்தைக்கொண்டு நியமிக்கப்பெறுவர்களோ? என்றபடி. †திருமொழி, எட்டாம்பத்து, இரண்டாந்திருமொழி, ஒன்பதாம்பாட்டு, "முள்ளெயிறேந்தில" இத்யாதி. "என்னெஞ்சினால்

† குண்டலிதம் க்வாசித்கம். வ்யாக்யாந விருத்தம்.

வயிற்றிற்பிறந்த இதுவே ஹேதுவாக, இவள்நின்றநிலைபாராதே நாம்பொடிந்தோமித்தனை யாகாதே' என்று பின்னையும் உங்களை நீங்களே பொடிந்துகொள்ளுவதிகோள். [என் னெஞ்சினால் நோக்கிக்காணீர்] - "பக்த்யா ஶாஸ்த்ராத்வேத்மி ஜநார்த்தநம்" (பக்த்யா ஶாஸ்த்ராத்வேத்மிஜநார்த்தநம்) - என்கிறபடியே, ஸஞ்ஜயனைநோக்கி த்ருதராஷ்ட்ரன், நீயும்நானு மொக்க ஶாஸ்த்ரவாஸனைகள் பண்ணிப்போந்தோம், இங்ஙனே இருக்கச்செய்தே எனக்கு உன்பக்கலிலேகேட்டு அறியவேண்டும்படி உனக்கு இவ்வர்த்தத்தில் வைஶத்யமுண்டான படி எங்ஙனே ? என்ன,—எனக்கு வாசிகேளாய், "மாயாம் நஸேவே" (மாயாம் நஸேவே) - நான் வஞ்சநங்கள் செய்துபோரேன். ராஜாவானவனுக்கு ஒரு தாழ்ச்சியும் தனக்கோரு உத்கர்ஷமும் சொல்லுகிறானகையாலே - பத்ரம் தே என்கிறான். "நவ்ருதா தர்மமாசரே" (நவ்ருதாதர்மமாசரே) - நான் ஒருநாளும் வ்யர்த்தமான தர்மங்களநுஷ்ட்டியேன். "ஶுத்தபாவம் கத:" (ஶுத்தபாவம்கத:) - நினைவும் சொலவும் செயலும் ஒருபடிப்பட்டிருப்பன். "பக்த்யா" (பக்த்யா) - வரியடைவேகற்று அவனை அறிந்தவனல்லேன், பக்திஸஹக்ருத ஶாஸ்த்ரத்தாலே அவனை அறிந்தவன் என்றானிறே. "நாபிஜாநாதி கேஶவம்" (நாபிஜாநாஸிகேஶவம்) - என்று தந்தாமுக்கென்னவும் ஒரு கைம் முதலுடையார்க்கு அவனை அறியப்போகாதென்றதிறே. அப்படியே நீங்களும் என் நெஞ்சையுடையீராய்க்கொண்டு அறியப்பாருங்கோள். [தென்னன் இத்யாதி] - நம்பி

ப்ர:—(என்னெஞ்சினால் நோக்கிக்காணீர்) - ஶ்ரீமஹாபாரதே, உத்யோக [கூஅ] த்ருதராஷ்ட்ரம்ப்ரதி ஸஞ்ஜய:, "மாயாம் நஸேவே பத்ரம் தே ந வ்ருதா தர்மமாசரே । ஶுத்தபாவம் கதோ பக்த்யா ஶாஸ்த்ராத்வேத்மி ஜநார்த்தநம் ॥ ரு ॥"

தத்ரைவ [கூஅ] தம்ப்ரதி ஸ:, "வித்யாராஜந் நதே வித்யா மம வித்யா நஹீயதே । வித்யாஹீநஸ்தமோத்வஸ்தோ நாபிஜாநாதி கேஶவம் ॥ உ ॥"

நோக்கிக்காணீர்" என்கையாலே - உங்களுக்கு பக்தியில்லை என்றபடி. பக்தியினாலொழிய ஶாஸ்த்ரத்தாலே அவனை அறியப்போகாதோ? என்ன - பக்த்யா ஶாஸ்த்ராத் இத்யாதி. இந்தஶ்லோகத்துக்கு அர்த்தமருளிச்செய்கைக்காக அவதாரிகை - ஸஞ்ஜயனை இத்யாதி. பக்திஸஹக்ருத ஶாஸ்த்ரத்தாலன்றிக்கே, கேவலஶாஸ்த்ரத்தால் அறியப்போகாதோ? என்ன; அறியப்போகாதென்னுமதுக்கு ப்ரமாணாந்தரம் - நாபிஜாநாதி இத்யாதி. "மாயாம் நஸேவே பத்ரம் தே நவ்ருதா தர்மமாசரே । ஶுத்தபாவம் கதோ பக்த்யா ஶாஸ்த்ராத்வேத்மி ஜநார்த்தநம்"; "வித்யாராஜந் நதே வித்யா மமவித்யா நஹீயதே । வித்யாஹீநஸ்தமோத்வஸ்தோ நாபிஜாநாதி கேஶவம்" இதி பாரதே த்ருதராஷ்ட்ரம்ப்ரதி ஸஞ்ஜய:. இஶ்ஶ்லோகத்தில் "ராஜந்" என்றதுக்கு பாவம் - தந்தாமுக்கென்ன இத்யாதி. அதாவது - பக்திஸஹக்ருதமல்லாத கேவலஶாஸ்த்ரம். பக்தி ஸஹகாரமில்லாதபோது ஶாஸ்த்ரஜ்ஞாநம்முடியாது, ஶாஸ்த்ரஜ்ஞாநமில்லாதபோது அவனை அறியப் போகாதென்று - இஶ்ஶ்லோகத்துக்குத் தாத்பர்யமாகையாலே, தந்தாமுக்கென்னவும் ஒருகைம்முதலுடையார்க்கு அவனை அறியப்போகாதென்றபடி. கைம்முதலாவது - பக்திஸஹக்ருதமல்லாத கேவலஶாஸ்த்ரம். கீழ்வாக்யத்தில் - பக்தியினாலொழிய அவனை அறியப்போகாதென்றத்தை விஶதமாக வத்கரித்தபடியே, நீங்களும் என் நெஞ்சையுடையராய்க்கொண்டு அறியப்பாருங்கோ ளென்கிறார் - அப்படியே இத்யாதி. "மின்னுநூலும்" இத்யாதியைக்கடாக்ஷித்து பாவம் - நம்பியுடைய இத்

யுடையவடிவுக்கு ஆபரணம்போலேயாயிற்று ஊருக்குச் சோலை. தெற்குத்திக்கிலேயாய் நன்றானசோலையென்னுதல்; அன்றிக்கே, *"தென்னன்கொண்டாடும்" என்னுமாபோலே யாதல். [நான்கண்டபின்] - ஆபரணச்சேர்த்தியையும் சோலைவாசியையும் அறிந்த நான் கண்டபின். [மின்னுநூலும் இத்யாதி] - மேகத்தில் மின்னினாற்போலேயிருக்கிற திரு யஜ்ஞோபவீதமும், [குண்டலமும்] - பரந்த மின் ஓரிடத்திலே சுழித்தாற்போலேயிருக்கிற திருமகரகுண்டலமும், வெறும்புறத்திலே ஆலத்திவழிக்கவேண்டும்படியிருக்கிற திருமார் பிலே கிடக்கிற ஸ்ரீவத்ஸமும், [மன்னுபூணும்] - நாய்ச்சிமாரோடு கலக்கும்போதும் கழற்றவேண்டாதபடியிருக்கிற ஆபரணங்களும். அதாவது - அத்யந்த ஸுகஸ்பர்ஸமா யிருக்கை. [நான்குதோளும்]-ஆபரணத்துக்காபரணமாய்க் கல்பகதருபணைத்தாற்போலே யிருக்கிற திருத்தோள்கள் நாலும். "**ஸர்வபூஷணபூஷார்ஹா:**" (ஸர்வ பூஷணபூஷார்ஹா:) என்கிறபடியே. [வந்தெங்கும்நின்றிடுமே] - "உங்கள்ஹிதவசநத் தின்படியே செய்யவேணும்" என்று நான் கடக்கநிற்கவும், அங்கேயும் பலவகையாக வாராநின்றது. * "**வ்ருக்ஷே வ்ருக்ஷே ச பஸ்யாமி**" (வ்ருக்ஷேவ்ருக்ஷேசபஸ்யாமி)

ப்ர:—(நான்குதோளும்)— கிஷ்கிந்தாகாண்டே [௩] ஸம்வாதே, ராம லக்ஷ்மணௌ ப்ரதி ஹநூமதுக்தி, "ஆயதாஸ்ச ஸுவ்ருத்தாஸ்ச பாஹவ: பரிகோபமா: । ஸர்வபூஷணபூஷார்ஹா: கிமர்த்தம் ந விபூஷிதா: ॥கரு॥"

ஆரண்யகாண்டே [௩௯] ராவணம் ப்ரதி மாரீச:, "வ்ருக்ஷே வ்ருக்ஷே ச பஸ்யாமி சீரக்ருஷ்ணாஜிநாம்பரம் । க்ருஹீததநுஷம் ராமம் பாஸஹஸ்தமிவாந்தகம்

---

*யாதி. தென்னன்கொண்டாடும் - தக்ஷிணதிக்குக்கு ப்ரபுவான மலயத்வஜ சக்ரவர்த்தியாலே கொண்டாடப்பட்டதென்றபடி. *பெரியாழ்வார்திருமொழி, நாலாம்பத்து. இரண்டாந்திருமொழி, ஏழாம்பாட்டு, "மன்னர்மறுக" இத்யாதி. கீழும்மேலும்கடாக்ஷித்து "நான்" என்றபதத்துக்கு பாவம்- ஆபரணச்சேர்த்தி இத்யாதி. "மன்னு" என்றதுக்குபாவம் - நாய்ச்சிமாரோடு இத்யாதி. மன்னு பூணும் - நித்யமாகப்பொருந்தின ஆபரணவர்க்கமும். "எப்போதும்கழற்றாத ஆபரணவர்க்கமும்" என்று உரை. அத்யந்த ஸுகஸ்பர்ஸமாயிருக்கை என்கிறவிடத்திலே - "ஸுகஸ்பர்ஸை ரநர்க்யை: காஞ்சநகேயூரஹாரநூபுரமகுடமணிக்ருதபூஷணமணைர் திவ்யாபரணை:" இத்யாத்யநுஸந்தேயம். ஸர்வபூஷணபூஷார்ஹா:-ஸர்வ பூஷணாநி பூஷயிதும் அர்ஹா: என்றபடி. பலவகையாக - பஹுவகுப்பாக. "வ்ருக்ஷேவ்ருக்ஷேசபஸ்யாமி" என்கிறவிடத்திலே - பயத்தினாலே தோன்றினபடி, இங்கு - ப்ராவண்யத்தாலே தோன்றினபடி. பலம்-ப்ராயு. "வ்ருக்ஷேவ்ருக்ஷேசபஸ்யாமிசீரக்ருஷ்ணா ஜிநாம்பரம் । க்ருஹீததநுஷம்ராமம்பாஸஹஸ்தமிவாந்தகம்" ஆரண்யகாண்டே, ராவணம்ப்ரதிமாரீச:.தென்னன்சோலை இத்யாரப்ய,வந்தெங்கும்நின்றிடும், ஆகையால் - என்னை முனியாதே - என்னெஞ்சினால்நோக்கிக்காணீர் இத்யந்வய:. ஸ்வாபதேஸத்திலே, "அன்னைமீர்" என்று - உபாயாத்யவஸாயநிஷ்டரைச் சொல்லுகிறதாகையாலே, "அறிவரியபிரானை" என்கிற விடத்திற்போலே த்வராநிஷ்டராய் மங்களாஸாஸநபரரான தம்முடையநினைவாலே அவர்களை அநு ராகநினைத்து - "என்னெஞ்சினால்நோக்கிக்காணீர்" என்கிறாராதல்; இவ்வர்த்தம் - "அறிவரிய பிரானை" என்கிறவிடத்திலே ஸ்பஷ்டம். அன்றிக்கே, "அறிவரியபிரானை" என்கிறபாட்டிலே - உபாயாத்யவஸாயநிஷ்டரைச்சொல்லி; இங்கே, "என்னெஞ்சினால்நோக்கிக்காணீர்" என்று - உபா*

போலே, உகப்பார்க்கும் உகவாதார்க்கும் ஒலமோன்ருய்விட்டது. நான் எங்கே ஒதுங்குவேன், சொல்லிக்காணீர்கோள், (உ)

மூன்ரும் பாட்டு.

நின்றிடுந்திசைக்கும்நையுமென்று அன்னையரும்முனிதிர்
குன்றமாடத்திருக்குறுங்குடிநம்பியை நான்கண்டபின்
வென்றிவில்லும்தண்டும்வாளும் சக்கரமும்சங்கமும்
நின்றுதோன்றிக்கண்ணுள்நீங்கா நெஞ்சுள்ளும்நீங்காவே.

ஆ.—(நின்றிடும்.) நம்பியுடைய ஸௌர்யாதிகளிலே அகப்பட்டமையறிந்த தாய்மாரான நீங்களும் 'ஸ்தப்தையாகாநின்ருள், அறிவுகெடாநின்ருள், ஸிதிலையாகாநின்ருள்'ளென்று பொடியாநின்றீர்கோள். குன்றம்போலே நெடுமாடங்களையுடைய திருக்குறுங்குடிநம்பியை நான்கண்டபின், வெற்றியைக்கொடுக்கும் வில்லுமுதலான திவ்யாயுதவர்க்கம் புறம்புள்ளுமொக்க நிரந்தரமாகத் தோற்றுநின்றனவென்கிருள்.

ஒ.—மூன்ரும்பாட்டில், நம்பியுடைய ஸ்ரீஸார்ங்கம்தொடக்கமான திவ்யாயுதவர்க்கம் புறம்பும் உள்ளுமொக்க நிரந்தரமாகத் தோற்றுநின்றன என்கிருள்.

[நின்றிடும்திசைக்கும்நையும் என்று அன்னையரும் முனிதிர்] - நம்பியுடைய ஸௌர்யாதிகளிலே அகப்பட்டமை அறிந்த தாய்மாரான நீங்களும் 'ஸ்தப்தையாகாநின்ருள், அறிவுகெடாநின்ருள், ஸிதிலையாகாநின்ருள்' என்று பொடியாநின்றீர்கோள். [வென்றிவில்] - வென்றியைக்கொடுக்கும் வில்.

ப.—அநந்தரம், இவ்வழகைக்காத்தூட்டும் ஆயுதவர்க்கம் வஹிரந்த꞉ப்ரகாஸித்தும் போகிறதில்லையென்கிருள்.

நின்றிடும் - (ஒருவ்யாபாரக்ஷமையன்றியே) ஸ்தப்தையாய் நில்லாநிற்கும், திசைக்கும் - (சொல்லிற்றறியாதபடி) அறிவழியாநிற்கும், நையும் - (ஆந்தராநுஸந்தாநத்தாலே) ஸிதிலையாகாநிற்கும், என்று - என்றுகொண்டு, அன்னையரும் - பெற்றதாய்மாராய் அடியிலே இப்ப்ரியத்திலே ப்ரவர்த்திப்பித்தநீங்களும், முனிதிர் - அப்ரியவசநங்களைப் பண்ணாநின்றீர்கோள்; குன்றம் - மலைபோலேயிருக்கிற, மாடம் - மாடங்களையுடைத்தான, திருக்குறுங்குடிநம்பியை - திருக்குறுங்குடிநம்பியை, நான் - ("தம் த்ருஷ்ட்வா" என்கிறபடியே வீரவேஷம்கண்டுகக்கும்) நான், கண்டபின் - அநுபவித்தபின், வென்றி- வென்றியையுடையவான, வில்லும் - வில்லும், தண்டும்-கதையும், வாளும் - வாளும்,

௧௭॥ ௯௨½॥ [illegible] । [illegible] ॥ ௧௫½॥"

ஸகலரையும் ஸ்வம்ருதஸ்வீகாரபரலரையும் சொல்லுகிறதாதல். ஆக, "அன்னைமீர்" என்றதுக்கு - "அறிவரியபிரானை" என்கிறவிடத்திலும் இவ்விடத்திலுமாக ஸ்வாபதேஸம் த்விவிதமாகக்கண்டுகொள்வது.

சக்கரமும் - சக்ரமும், சங்கமும் - ஶங்கமும், நின்று - ஒருபடிப்படநின்று, கண்ணுள்-என்கண்ணுக்குள்ளே, தோன்றி - தோன்றி, நீங்கா - போகிறனவில்லை; (இப்படிபுற வாயளவன்றியே), நெஞ்சுள்ளும் - நெஞ்சுக்குள்ளே, நீங்கா-நீங்குகிறனவில்லை.

இ.—மூன்றும்பாட்டில், நம்பியுடைய திவ்யாயுதவர்க்கம் உள்ளும்புறம்பு மொக்க தோற்றுநின்றதென்கிறாள்.

[நின்றிடும் இத்யாதி] - "ஸ்தம்பஸம்மோஹ..." என்று ராமஶரங் களாலே உகவாதார் படுமத்தை முகபேதத்தாலே திவ்யாயுதங்கள் படுத்தாநின்றது; ஸ்தப்தையாக்குவது, அறிவுகெடுப்பது, ஶைதில்யத்தை விளைப்பதாகாநின்றது. ஸ்தப்தையாகாநின்றாள், அறிவுகெடாநின்றாள், ஶிதிலையாகாநின்றாளென்று குற்றமாக நினைத்துப் பொடியாநின்றிகோள். சில ஸ்தம்பநத்தைப் பண்ணும், சில உள்ளறிவைப் போக்கும், சில அறிவுகொடுத்து ஶைதில்யத்தை விளைக்கும். [அன்னையரும்முனிதிர்]- இந்த ஶைதில்யத்துக்கு அடியான நீங்களும் பொடியாநின்றிகோள். இந்தவழகில் உங்களுக்கு அந்வயமில்லையாய்ப் பொடிகிறிகோளோ? ஊராராய்த்தான் சொல்லுகிறி கோளோ? இக்குடிக்காகவுள்ள ப்ராவண்யம் என்னளவிலே வந்தவாறே குறையாமோ? [குன்றம் இத்யாதி] - மலைகளைச் சேரவைத்தாற்போலேயிருக்கிற மாடங்களையுடைய திருக்குறுங்குடி நம்பியை. [நான்] - ஆயுதச்சேர்த்தியிலே ஆழங்காற்படும் நான். வீர பத்நிகள் தோற்குமிறே. [வென்றிவில்லும்] - ஆயுதகோடியிலும் ஆபரணகோடி யிலும் முதலிடலாயிறே யிருப்பது. வென்றிகொள்ளும் வில்லும். அல்லாதவற்றுக்கும் வென்றியென்கிறது உபலக்ஷணம். உகப்பாரோடு உகவாதாரோடு வாசியில்லை வெற்றி கொள்ளுகைக்கு. அநுகூலரை ஆபரணமாய் அழிக்கும், ப்ரதிகூலரை ஆயுதமாய் அழிக்கும், ஆகாரத்வயத்தாலும் வெற்றியே ஸ்வபாவமாயிருக்கை. "ஸ..." [நின்றுதோன்றிக்கண்ணுள்நீங்கா] - மறக்கவொண்ணாதபடி இடைவிடாதே ப்ரத்யக்ஷித்து என்கண்வட்டத்தை விடுகிறனவில்லை. [நெஞ்சுள்ளும் நீங்காவே] - கண்முகப்பே நின்று நலியப்புக்கவாறே கண்ணைப் புதைத்தாள், அகவாயிலும் வந்து ப்ரகாஶிக்கப்புக்கது, உபயாகாரத்தாலும் அநுபவிக்கவல்லள் காணும் இவள்.

ஈடு.—மூன்றும்பாட்டு. நம்பியுடைய திவ்யாயுதவர்க்கம் உள்ளும் புறம்பு மொக்க நிரந்தரமாகத் தோற்றுநின்றதென்கிறாள்.

[நின்றிடும்] - "ஸ்தம்பஸம்மோஹ..." (சிந்தம்பிங்நம்ஶாைர்தக்தம்)-என்று ராமஶரங்கள் ஒன்றுசெய்தது மற்றையது செய்யாதாப்போலேயாயிற்று, நம்பியுடைய வழகுகளும். ஒன்று ஸ்தம்பநத்தைப்பண்ணும், ஒன்று அறிவைக்குடிபோக்கும், ஒன்று

மூன்றும்பாட்டு-நின்றிடும் இத்யாதி. "வென்றிவில்லும்" இத்யாதியைப்பற்ற-நம்பியுடைய திவ்யாயுத இத்யாதி. திவ்யாயுதவர்க்கம்-திவ்யாயுதங்களினுடைய சேர்த்தியழகு.

அழகுகளுமென்றது - ஆயுதங்களினுடைய சேர்த்தியால் வந்த அழகுகளுமென்றபடி. அழகுகளும் என்றவநந்தரத்திலே, 'முகபேதத்தாலே படுத்தாநின்றது' என்றுகூட்டி நிர்வஹிப்பது. "ஸ்தம்பஸம்மோஹ... ராமஶரா... ॥ ௨௨ ॥" இதி யுத்தகாண்டே ॥ ௯௪ ॥ ... முகபேதத்தாலேபடுத்தும் ப்ரகாரங்களைக்காட்டுகிறார் - ஒன்றுஸ்தம்பநத்தை இத்யாதி. அறிவுகுடி

அறிவைக்கொடுத்து நையப்பண்ணும். ஸ்தப்தையாகாநின்றாள், அறிவுகேடாநின்றாள், ஶிதிலையாகாநின்றாளென்று என்குற்றமாக நினைத்துப் பொடியாநின்றீர்கோள். [அன்னையரும் முனிதிர்] - தெளிந்திருப்பார்தான் பொடியப்பெற்றதோ. இதுக்கெல்லாம், தாயாயிருக்கிற நீங்கள் இப்படிசெய்யக்கடவதோ. தெளிவதுகலங்குவதாய் இதுதானேயாத்ரையாய்ப்போந்த நீங்களும் முனியாநின்றீர்கோள். § “ஆழியோடும் பொன்னார்சார்ங்கமுடையவடிகளை யின்னாரென்றறியேன்” என்னுமவர்களிறே. யௌவநத்தில் நீங்கள் செய்துபோந்தது அப்பருவத்தில் நான் செய்தவாறே குற்றமாயிற்றே. இக்குடிக்காக ஭கவத்ப்ராவண்யமே யாத்ரைபோலேகாணும். [குன்றமித்யாதி] - மலைகளை நெருங்கவைத்தாற்போலேயிருக்கிற மாடங்களையுடைத்தான. [நான்கண்டபின்] - ஆயுதம்பிடித்தபிடியில் வாசியறியும் நான் கண்டபின். வீரபத்நியாகையாலே வாசியறியுமிறே! பெருமாளுக்கு வில்லெடுத்துக் கொடுப்பாள் பிராட்டியிறே. பெருமாள் “வில்லைத்தா” என்ன, கொடுத்து, அவர் கையும்வில்லுமாய் நின்றநிலையைக் கண்டவாறே, “நீர் இப்படி ஸாயுதராய்த் திரியப்புக்கால் உம்மை ருஷிகள் வந்து ஶரணம்புகுவர்கள்; அவர்களுக்கு விரோதிகளான ராக்ஷஸரோடே எதிரிடவேண்டி

ப்ர :—(அவர் கையும்வில்லுமாய் நின்றநிலையைக்கண்டவாறே) ஆரண்யகாண்டே, நவமே “ஸுதீக்ஷ்ணேநாப்யநுஜ்ஞாதம் ப்ரஸ்திதம் ரகுநந்தநம் | ஹ்ருத்யயா ஸ்நிக்தயா வாசா பர்த்தாரமிதமப்ரவீத் ||1|| ப்ரதிஜ்ஞாதஸ்த்வயா வீர தண்டகாரண்ய

போனால் கையும்படியென் ? என்ன - ஒன்றுஅறிவைக்கொடுத்து இத்யாதி. சஶப்தத்துக்குபாவம் - தெளிந்திருப்பார் இத்யாதி. அதாவது - பூர்வம் இவ்விஷயத்திலே நீங்களும் ஈடுபட்டிறே கிடந்தது, ஆகையாலே தெளிந்திருப்பார்தான் பொடியப்பெற்றதோவென்றபடி. இதுக்கெல்லாம் - இந்தப்ராவண்யாதிகளுக்கெல்லாம். கீழ்வாக்யவிவரணம் - தெளிவதுகலங்குவது இத்யாதி. யௌவநதசையில் தெளிவதுகலங்குவதாயென்றபடி. அப்படி தெளிவது கலங்குவதாயிருப்பர்களோ என்ன - ஆழியோடும் இத்யாதி. தேவத்வஸூசகமான திருவாழியையும், மநுஷ்யத்வைகாந்தமாய் ஸ்ப்ருஹணீயமான ஸ்ரீஶார்ங்கத்தையுமுடைய ஸ்வாமிகளை ; அடையாளம் சொல்லாநிற்கச்செய்தே “இன்னாரென்றறியேன்” என்னுமவர்களிறேயென்றபடி. விஷயவைலக்ஷண்யம் அப்படி கலங்கப்பண்ணுமென்றபடி. § திருமொழி, பத்தாம்பத்து, பத்தாந்திருமொழி, ஒன்பதாம்பாட்டு, “இன்னாரென்றறியேன்” இத்யாதி. இது பெண்பிள்ளைவார்த்தையானாலும், இங்கு, “அன்னையர்” என்கிறது-அத்யவஸாய நிஷ்டரான ஸ்ரீவைஷ்ணவர்களையாகையாலே, அவர்களுக்கும் தெளிவதும்கலங்குவது முண்டாகையாலே இங்கு ப்ரமாணமாகக்குறையில்லை. “஭கவத்விஷயத்தில் அவகாஹித்தவர்கள் தெளிவது கலங்குவதாவர்கள்” என்னுமதுக்கு ஸ்வாபதேஶவிவக்ஷயா ப்ரமாணமருளிச்செய்து, அந்யாபதேஶஸமாதியாலே அருளிச்செய்கிறார் - யௌவநத்தில் இத்யாதி. இவ்வாக்யம் - “தெளிவது கலங்குவதாய்” இத்யாதிவாக்யவிவரணம். யௌவநத்தில் என்றதுக்குபாவம் - த்வரையுண்டானபோது நீங்கள்செய்தத்தை அந்தத்வராவஸ்த்தையிலே நான் செய்தால் குற்றமாயிற்றோவென்று. “தெளிவது கலங்குவதாய் இதுதானே யாத்ரையாய்ப்போந்த” என்றத்தால் பலிதம் - இக்குடிக்காக இத்யாதி. மாடங்களையுடைத்தான - ‘திருக்குறுங்குடிநம்பியை’ என்று கூட்டிக்கொள்வது. “வென்றிவில்லும்” இத்யாதியைக்கடாக்ஷித்து “நான்” என்றதுக்குபாவம் - ஆயுதம் இத்யாதி. வாசியறிகைக்கு ஹேதுவேதென்ன - வீரபத்நி இத்யாதி. வாசியறிந்து கொடுத்தவிடமுண்டோ என்ன - பெருமாளுக்கு இத்யாதி. (ஆரண்யகாண்டே தஶமே) “[illegible] ||17||” என்கிறஶ்லோகம்அநுஸந்தேயம். ப்ராஸங்கிகம் - பெருமாள் இத்யாதி. நீரும் நானும் இரண்டிடத்திலேயாகவேண்டி வருமென்றது-பிராட்டிபாசுரத்தி லில்லையாகிலும், “அப்யஹம்ஜீவிதம்ஜஹ்யாம்த்வாம்வாஸீதே ஸல

வரும், அது பின்னை சாதிப்பகையாம், பின்னை நீரும் நானும் இரண்டிடத்திலேயாகவேண்டி வரும், ஆனபின்பு, வில்லைப்போகட்டு தாபஸவேஷத்தோடே திரியவமையும்" என்றுளிறே. பெருமாள்பக்கல் ஸாங்கமிறே இப்படி சோல்லுவித்தது. [வென்றிவில் இத்யாதி] - திவ்யாயுதங்களுக்கு இரண்டிலும் மெய்க்காட்டுண்டுகோணும்; ஆயுதங்களிலும்ஆபரணங்களிலும். வினைத்தலையிலாயிற்று "ஆயுதம்" என்றறியலாவது.[வென்றிவில்லும்] - உகப்பாரோடு உகவாதாரோடு வாசியற வெற்றியே ஸ்வபாவமாயிருக்கிற திருவில்லும். "ஶக்ர சாப நிபே சாபே க்ருஹீத்வா ஶத்ரு நாஶநே" (ஶக்ரசாபநிபேசாபேக்ருஹீத்வாஶத்ருநாஶநே) - அநுகூலர்க்குக் கண்டு ஜீவிக்கைக்குமாய், ஶத்ருக்களுக்குப் பிடித்தபிடியிலே முடிகைக்கும் உடலாயிருக்குமிறே. [தண்டும் இத்யாதி] - அதின்ஸ்வபாவத்தை யுடைத்தான மற்றதிவ்யாயுதங்களும். [நின்றுதோன்றிக்கண்ணுள் நீங்கா]-கண்வட்டத்தைவிடாதேநின்று தோன்றுநின்றது. இவை கண்முகப்பேநின்று நலியப்புக்கவாறே, அஞ்சிக் கண்ணைச்செம்பளித்தவாறே நெஞ்சுக்குள்ளேநின்று ப்ரகாசிக்கத்தொடங்கிற்று [நெஞ்சுள்ளும்நீங்காவே] கீழ் "வந்தெங்கும்நின்றிடுமே" என்றது, இங்கு உள்ளும்புறம்புமொக்க நலியாநின்றன.

வாஸிநாம் । ஜ்ஷீணாம் ரக்ஷணாயைவ வயம் ஸத்யம் ப்ரதிஶ்ருதாம் ॥கo॥ வந சர்யா ப்ரதிஜ்ஞாதா உக்ஷணா இதி விஶ்ருதம் । த்வயா ஸத்யம் ஸந்தாபா யத்தவாண ஶரா ஸந: ॥கக॥ தக்ஷஸாம் த்வயா ஸ்வ ஷதாம் ... । ... ॥ கஉ ॥ ... ॥ கங ॥ ... ॥கச॥" ... "வி... த்வாவலஷ்வஶர" ...

க்ஷணாஸ்" என்று பெருமாள் உத்தரம் சொல்லுகையாலே, பிராட்டிக்கு இப்படி கருத்தென்று ஸித்தம். ஶார்ங்கம் - பக்ஷபாதமும், வில்லும். ப்ரணயிநி, ஶத்ருநிரஸநஹேதுவான ஆயுதங்களைச் சொல்லுவானென்? என்ன - திவ்யாயுதங்களுக்கு இத்யாதி. அழகுக்கு உடலாகையாலே சொல்லுகிறுளென்றபடி. மெய்க்காட்டு - எண்ணிக்கைகொடுக்கை. இரண்டிடத்திலும் அந்வயமுண்டென்றபடி. அது அறியும்படி எங்ஙனே ? என்ன - வினைத்தலையில் இத்யாதி. ஶப்தார்த்தம் - உகப்பாரோடு இத்யாதி. ஸாமாந்யேந வெற்றியைச் சொல்லுகையாலே - உகப்பாரோடு உகவாதாரோடு வாசியற என்றது. இப்படி உபயகோடியையும் வெல்லுகைக்கு அடியான ஸௌந்தர்யாயுதத்வங்களாகிற ஆகாரத்வயம் திவ்யாயுதங்களுக்குண்டோவென்ன - ஶக்ர சாப நிபே இத்யாதி. "ஶக்ர சாப நிபே சாபே க்ருஹீத்வா ஶத்ரு நாஶநே । ஶ்ரீ ... ॥ இதி கிஷ்கிந்தாகாண்டே த்ருதீயே ஸர்கே ... எடுத்த ப்ரமாணத்துக்கு அர்த்தம் - அநுகூலர்க்கு இத்யாதி. "வென்றி" என்றது - ஸர்வதிவ்யாயுதங்களுக்கும் விஶேஷணமென்கிறுர் - அதின்ஸ்வபாவத்தை இத்யாதி. "கண்ணுள்நீங்காதே - நின்று - தோன்றி" என்று அந்வயித்து அர்த்தம்-கண்வட்டத்தை இத்யாதி. கீழே "வந்தெங்கும்நின்றிடும்" என்றத்துக்கும், இங்கே "கண்ணுள்நீங்கா நெஞ்சுள்ளும்நீங்கா" என்றத்துக்கும் வாசியேதென்ன - கீழ்வந்தெங்கும் இத்யாதி. அதாவது - "வந்தெங்கும்" என்றது - புறம்பெங்குமென்றபடி. இத்தால் பலிதமேதென்ன - நம்பியுடைய இத்யாதி. விவரணம் - அவ்வழகு இத்யாதி. அவர் கையும் வில்லுமாய் நின்றநிலையைக்கண்டவாறே என்கிறவிடத்திலே - ஸந்தீக்ஷணா ...

நம்பியுடையவழகுக்கு உள்ளதெல்லாம் உண்டாயிற்று இவளுக்கும், அவ்வழகு எங்குமொக்க நலிகிறுப்போலேயாயிற்று இவளும் கட்கண்ணாலும் உட்கண்ணாலும் அநுபவிக்கிறபடியும்.

நான்காம் பாட்டு.

நீங்கநில்லாகண்ணநீர்களேன்று அன்னையரும்முனிதிர்
தேன்கோள்சோலைத்திருக்குறுங்குடிநம்பியை நான்கண்டபின்
பூந்தண்மாலைத்தண்டுழாயும் போன்முடியும்வடிவும்
பாங்குதோன்றும்பட்டும்நாணும் பாவியேன்பக்கத்தவே.

ஆ.—(நீங்கநில்லா) "நம்பியைப்பிரிந்தால் தரிக்கமாட்டாள்" என்று அறிந்த தாய்மாரானநீங்களும், கண்ணநீர்மாறுகிறதில்லையென்று பொடியாநின்றீர்கோள். தேனைச்சொரியாநின்ற திருச்சோலையையுடைய திருக்குறுங்குடிநம்பியை நான்கண்டபின், தர்ஶநீயமாய்க் குளிர்ந்திருந்த திருத்தோள்மாலையும் நிரதிஶயதீப்தியுக்தமான திருவபிஷேகமும் திருவுடம்பும் திருவரைக்குத்தகுதியாய்த்தோற்றுகிற பட்டும் விடுநாணும், கண்டுவைத்து அநுபவிக்கப்பெறாத பாபத்தைப்பண்ணின என்னுடைய பார்ஶ்வத்திலே நின்று என்னை நலியாநின்றனவென்கிறாள்.

ஒ.—நாலாம்பாட்டில், திருத்தோள்மாலை திருப்பரிவட்டம் முதலானவையெல்லாம் என் பார்ஶ்வத்திலேநின்று என்னை நலியாநின்றன என்கிறாள்.

[நீங்கநில்லாகண்ணநீர்களென்று அன்னையரும்முனிதிர்] - 'நம்பியைப் பிரிந்தால் தரிக்கமாட்டாள்' என்று அறிந்த தாய்மாரான நீங்களும் 'கண்ணநீர் மாறுகிறதில்லை' என்று பொடியாநின்றீர்கோள். வடிவு - திருவுடம்பு. [பாங்குதோன்றும்பட்டு] - திருவரைக்குத்தகுதியாய்த் தோற்றுகிற பட்டு. நாண் - விடுநாண். கண்டுவைத்து அநுபவிக்கப்பெறாத இன்னாப்பாலே 'பாவியேன்' என்கிறாள்.

ப.—அநந்தரம், பரத்வப்ரகாஶகமான நம்பியுடைய வேஷவைலக்ஷண்யமானது என்பார்ஶ்வஸ்த்தமாகாநின்றதென்கிறாள்.

கண்ணநீர்கள் - (இவள்) கண்ணநீர்கள், நீங்க-போக, நில்லா - நிற்கிறனவில்லை, என்று-என்று, அன்னையரும் - மூட்டினநீங்களும், முனிதிர் - முனியாநின்றீர்கோள்; தேன் - தேனை, கொள் - உடைத்தான, சோலை - சோலைகளையுடைத்தான, திருக்குறுங்குடிநம்பியை - திருக்குறுங்குடிநம்பியை, நான் - (அவர்மேன்மைகண்டு உகக்கும்) நான், கண்டபின் - அநுபவித்தபின்பு, பூ-அநுபாவ்யமாய், தண்-ஶ்ரமஹரமான, மாலை-மாலாரூபமாயுள்ள, தண்டுழாயும் - செவ்வித்திருத்துழாயும், பொன் - ஆபிராஜ்யஸூசகமாய் ஸ்ப்ருஹணீயமான, முடியும் - முடியும், வடிவும் - (அம்மாலைக்கும் முடிக்கும் தகுதியான) வடிவும், பாங்கு - (திருவரைக்குப்) பாங்காய், தோன்றும் - தோன்றுகிற, பட்டு-பட்டுப்பரிவட்டமும், நாணும் - (மேலாபரணமான) விடுநாணும், பாவியேன் - (உள்ளே

[illegible] " இத்யாரண்யகாண்டத்திலே ஒன்பதாம்ஸர்க்கத்தில் ஶ்லோகங்களநுஸந்தேயங்கள். க்ரமேணார்வய:. (ந)

ப்ரகாஶியாநிற்க, கிட்டியநுபவிக்கப்பெறாத) பாபத்தையுடையேனான என்னுடைய, பக்கத்த - பார்ஶ்வஸ்த்தங்களாகாநின்றன. 'தேங்கொள்சோலை' என்று பாடமாகவுமாம்.

இ.—நாலாம்பாட்டில், ரக்ஷணத்துக்குக் கவித்தமுடியும், தனிமாலையும், பரிவட்டப்பண்பும் முதலானவை பார்ஶ்வத்திலேநின்று என்னைநலியாநின்றனவென்கிறாள்.

[நீங்கநில்லாகண்ணநீர்கள்] - அவன்நீங்க, கண்ணநீர்கள் நீங்குகிறனவில்லையென்னுதல்; பேரநிற்கிறதில்லையென்னுதல். மாற்றநில்லாவென்னுதல்; அப்போது, நீக்கவென்று - வல்லொற்றாகக்கடவது. [அன்னையரும்முனிதிர்] - இவ்விஷயத்திலில்லையானால் ஆநந்தாஶ்ருவுமில்லையோ. [தேன்கொள்சோலை] - தேன்மாறாதசோலை. அச்சோலையில் தேனைமாற்றவல்லிகோளோ என்கண்ணநீரைமாற்றுகைக்கு. இவள்கண்ணநீர்க்கு ஸஹ்யம் ஸோக்யதையாயிற்று. [நான்] - ஸ்வாபாவிகமான மேன்மையிலே ஈடுபட்டநான். [பூந்தண் இத்யாதி] - தர்ஶநீயமாய்க் குளிர்ந்த திருத்துழாய்மாலையும். உபயவிபூதிரக்ஷணத்துக்காக 'முதலி' என்று தோன்றும்படி இட்டதனிமாலையும். ஸ்ப்ருஹணீயமான திருவபிஷேகமும். "உபயவிபூதிநாயகன்" என்று கோட்சொல்லுகிற முடியென்கை. [வடிவும்] - அந்தமுடிக்குத்தகுதியான விக்ரஹமும். திருவரைக்குத்தகுதியான பட்டும். [நாண்] - விடுநாண். [பாவியேன்] - உருவெளிப்பாடாய்ச்செல்லாநிற்க, அநுபவிக்கப்பெறாத பாபத்தைப்பண்ணினேன். அநுபவத்துக்கு விஷயமாகாதொழிந்தால் உள்ளுபெரியதிருநாளாய்ச் செல்லவேணுமோ. [பக்கத்தவே] - ஆதிராஜ்யஸூசகமானமுடியும் தனிமாலையும், இவைதான் மிகையென்னும் வடிவும், அதுக்குத்தகுதியான திருப்பீதாம்பரமும் பக்கம்விட்டுப்போகிறதில்லை, அணைக்க எட்டுகிறதுமில்லையென்கை.

ஈடு.—நாலாம்பாட்டு. ரக்ஷணத்துக்குக் கவித்தமுடியும், தனிமாலையும், பரிவட்டப்பண்பும் முதலானவை பார்ஶ்வத்திலே நின்று என்னைநலியாநின்றனவென்றாள்.

[நீங்கநில்லாகண்ணநீர்கள்] - அவன்நீங்க, கண்ணநீர்கள் நீங்குகிறனவில்லை. அன்றிக்கே, நீங்கநில்லா - பேரநில்லாவென்னுதல். "நீக்கநில்லா" என்கிறத்தை - மெலித்து, [நீங்கநில்லா] - என்றுகிடக்கிறதாய், மாற்றநிற்கிறனவில்லை யென்னுதல். [அன்னையரும்முனிதிர்]-உங்கள்கண்களால் ஆநந்தாஶ்ருவும் பாய்ந்தறியாதோ. [தேன்கோள் இத்யாதி]-அச்சோலையில் தேனை வற்றப்பண்ணமாட்டிகோளோ நான் என்கண்ணநீரைமாற்ற. இக்கண்ணநீர்க்கு ஸஹ்யம் அவ்வூரில் ஸோக்யதைபோலேகாணும். [நான்கண்டபின்] - அவனுடைய ஸ்வாபாவிகமான மேன்மையையறியும் நான் கண்டபின். [பூந்தண் இத்

நாலாம்பாட்டு. - நீங்க இத்யாதி. "பூந்தண்மாலை" இத்யாதியைப்பற்ற வ்யுத்க்ரமமாக அருளிச்செய்கிறார் - ரக்ஷணத்துக்கு இத்யாதி.

த்விதீயார்த்தத்துக்கு, "நீங்கநில்லா" என்று - முழுச்சொல்லாய், நீங்குகிறனவில்லையென்றபடி. த்ருதீயார்த்தத்துக்கு, நீக்கவென்றது - தாய்மார் நீக்கவென்றபடி. நீக்க - துடைக்க. உங்கள் கண்களால் இத்யாதிக்கு - தாய்மாரான உங்கள்கண்களால் பகவதநுபவஜநிதமான ஆநந்தாஶ்ருவும் பாய்ந்தறியாதோ என்னை இப்படி சொல்லுகைக்குஎன்றபடி. இப்படி சொன்னதுக்கு பலித்தபாவம்- இக்கண்ணநீர்க்கு இத்யாதி. இத்தால் - "சோலையில் மதுவைத் தானும்நானும் கூடவிருந்து மதுபானம்பண்ணவேண்டியிருக்க, அத்தை நான் இழந்திருப்பதே" என்னும் ஆற்றாமையாலே கண்ணநீர் பாய்கிறதென்று கருத்து. ஸஹ்யம் - உத்பத்திஸ்த்தாநமான ஸஹ்யபர்வதம். "பூந்தண்மாலை" இத்யாதி மேலையுங்கடாக்ஷித்து "நான்" என்றதுக்கர்த்தம் - அவனுடைய ஸ்வாபாவிகமான இத்யாதி.

யாதி] - உபயவிபூதிக்குமாக முதலியாகவிட்ட, தர்சநீயமாய்க் குளிர்ந்த செவ்வித்திருத்துழாய்த் தனிமாலையும், உபயவிபூதியும் தன்முடியிலே செல்லும்படி கவித்த திருவபிஷேகமும், அம்மாலைக்கும் முடிக்கும் இசைந்த வடிவும்; "இவனே மாலைக்கும் முடிக்குமுரியான்" என்று படியெடுத்துக்காட்டலாமே. "'வடிவும்' என்பதே!" என்று விஜ்ஞராய்ருளுவர். [பாங்குதோன்றும்பட்டும்]-திருவரைபூத்தாற்போலே அங்குத்தைக்குப் பாங்காய்த் தோற்றுகிற திருப்பீதாம்பரமும். [நாணும்]-விடுநாணும். [பாவியேன்பக்கத்தவே] - அநுபவிக்கத்தருதல், உருவெளிப்பாடாய்த் தோன்றுதேயொழிதல் செய்யாதபடியான மஹாபாபத்தைப் பண்ணினேன். அருகேநின்று ப்ரகாசியாநின்றது அநுபவயோக்யமாகப் பெறுகிறதில்லை. அணைக்கத்தருதல், அகலநிற்றல் செய்கிறதில்லை. (ச)

ஐந்தாம் பாட்டு.

பக்கம்நோக்கிநிற்கும்நையுமென்று அன்னையரும்முனிதிர்
தக்ககீர்த்தித்திருக்குறுங்குடிநம்பியை நான்கண்டபின்
தொக்கசோதித்தொண்டைவாயும் நீண்டபுருவங்களும்
தக்கதாமரைக்கண்ணும் பாவியேனுவியின்மேலனவே.

ஆ.—(பக்கம்நோக்கி.) தன்தசையை அநுஸந்தித்து, "ஸர்வதா அருகே வரக்கூடும்" என்று வரஸம்பாவனையுள்ள பார்ஸ்வத்தைப்பார்த்து நில்லா நின்றாள், பின்னை இங்ஙனே நிற்கமாட்டாதே ஸிதிலையாகாநின்றாளென்று, என்னோடு பழகியிருக்கிற தாய்மாரானநீங்களும் பொடியாநின்றிகோள். திருக்குறுங்குடிக்குக் கீர்த்தி தகுதியானுப்போலே ஒன்றுக்கொன்று தகுதியாய்த்திரண்ட சோதியையுடைத்தாய், தொண்டைபோலே சிவந்திருக்கிற வாயும் புருவத்துக்குத் தகுதியாய்த் தாமரைப்பூப்போலேயிருக்கிற திருக்கண்களும், அவனழகை நினைத்தால் நோவுபடுகைக்கீடான பாபத்தைபண்ணின என்னை உயிர்நிலையிலே நலியாநின்றனவென்கிறாள்.

ஒ.—அஞ்சாம்பாட்டில், திருக்குறுங்குடிக்குக் கீர்த்தி தகுதியானாற்போலே ஒன்றுக்கொன்று தகுதியாயிருக்கிற திருப்பவளம் முதலான திருமுகத்திலழகுகளானவை என் உயிர்நிலையிலே நலியாநின்றன என்கிறாள்.

[பக்கம்நோக்கிநிற்கும்நையும் என்று அன்னையரும்முனிதிர்] - தன்தசையை அநுஸந்தித்து"ஸர்வதா அருகேவரக்கூடும்"என்று வரஸம்பாவனையுள்ள பார்ஸ்வத்திலே

"பூ-தண்-தண்டுழாயின்-மாலையும்" இத்யந்வய:. "வக்ஷஸ்ஸ்ரஜம் ச துளஸீகமலாகுலஸ்ய ரெஹெவெ ஜயஸ்ரீவஸவெ ஸுமகுஞ்சயதிதராம்" இத்யாதி ஸ்லோகத்தை உட்கொண்டு - உபயவிபூதிக்கும் இத்யாதி. முடியிலே - திருவபிஷேகத்திலே. படியென்று - த்ருஷ்டாந்தத்துக்கும் திருமேனிக்கும் பேர். வடிவும் என்பதே என்றது - கீழும்மேலும்சொன்ன ஆபரணமத்யத்திலே வடிவையும் ஆபரணகோடியாக அருளிச்செய்வதே யென்றபடி. விஜ்ஞாயருளுவர் ஜீயர்என்றபடி. "பக்கத்தவே" என்றதுக்கு ஹாவம் - அருகே இத்யாதி. ஏவகாரார்த்தம் - அணைக்க இத்யாதி. க்ரமேணாந்வய:. (ச)

பார்த்துநில்லாநின்றாள்; பின்னை அங்ஙன் நிற்கமாட்டாதே ஶிதிலையாகாநின்றாள் என்று என்னோடே பழகியிருக்கிற தாய்மாரான நீங்களும் பொடியாநின்றீகோள். [தொக்க சோதித்தொண்டைவாயும்] - திரண்ட சோதியையுடைத்தாய்ச் சிவந்திருக்கிற வாயும். தொண்டை - ஆதொண்டைப்பழம். [தக்கதாமரைக்கண்ணும்] - புருவத்துக்குத்தகுதியாய்த் தாமரைப்பூப்போலேயிருக்கிற திருக்கண்களும். [பாவியேன்] - அவனழகை நினைத்தால் நோவுபடுகைக்கிடான பாபத்தைப் பண்ணினேன்.

ப—அநந்தரம், நம்பியுடைய முகாவயவஶோபையானதுஎன் ஆத்மகதமாய்த் தோற்றுநின்றதென்கிறாள்.

பக்கம்-(அவன்வருகைக்கு ஸம்பாவனையுள்ள) பார்ஶ்வத்தை, நோக்கி-நோக்கி, நிற்கும் - நிற்கும், நையும் - (வரக்காணாமையாலே) ஶிதிலையாகாநிற்கும், என்று - என்று இப்படி, அன்னையரும் - (ஸ்நேஹத்தைப்பிறப்பித்த) நீங்களும், முனிதிர் - (ஸ்நேஹம் தவிருகைக்காக) முனிந்து வார்த்தைசொல்லாநின்றீகோள்; தக்க - (பூர்த்திக்குத்) தகுதியான, கீர்த்தி - கீர்த்தியையுடைய, திருக்குறுங்குடிநம்பியை - திருக்குறுங்குடிநம்பியை, நான் - (அவருடைய கீர்த்தியிலே யகப்பட்ட) நான், கண்டபின் - அநுபவித்தபின்பு, தொக்க - திரண்ட, சோதி - ஜ்யோதிஸ்ஸையுடைத்தான, தொண்டை - தொண்டைப் பழம்போலேயிருக்கிற, வாயும் - திருவதரமும், நீண்ட - நீண்ட, புருவங்களும் - திருப் புருவங்களும், தக்க - (அப்புருவத்துக்குத்)தகுதியான நீட்சியையுடைத்தாய், தாமரை - தாமரைபோலே தர்ஶநீயமான, கண்ணும் - திருக்கண்களும், பாவியேன் - நினைத்தபடி அநுபவிக்கப்பெறாத பாபத்தையுடையேனான என்னுடைய, ஆவியின்மேலன- ஆத்மகத மாகாநின்றது.

ஈ.—அஞ்சாம்பாட்டில், ஒன்றுக்கொன்றுதகுதியான நம்பிதிருமுகத்திலழகுகள் என்னை உயிர்நிலையிலே நலியாநின்றனவென்கிறாள்.

[பக்கம்நோக்கிநிற்கும்] - தன்தலையாலேசெப்பேடாக வரஸம்பாவனையுள்ள பார்ஶ்வத்தையே பார்த்து நில்லாநின்றாள். "நைஷா பஶ்யதி ராக்ஷஸ்யோ நேமாந் புஷ்பபலத்ருமாந் । ஏகஸ்தஹ்ருதயா நூநம் ராமமேவாநுபஶ்யதி". [நையும்]- வரக்காணாமையாலே அங்ஙன் இருக்கவும்மாட்டாதே ஶிதிலையாகாநிற்கும். [என்று அன்னையரும் இத்யாதி] - * அறியாக்காலத்துள்ளே யடிமைக்கணன்புசெய்வித்துவைத்த படியை யறிந்த நீங்களும் பொடியாநின்றீகோள். "வாத்ஸல்யாதஸஹிஷ்ணவ:" என்னும்படியிறே யிருப்பது. [தக்க இத்யாதி] - சொன்னசொன்ன ஏற்றமெல்லாம் தகும்படியான கீர்த்தியையுடைய. [நான்] - அந்தகீர்த்தியே தாரகமாயிருக்கிற நான். [தொக்கசோதி] - திரண்டசோதி. [தொண்டை] - ஆதொண்டைப்பழம். உபமாநத்தை ஶிக்ஷித்துக்கொண்டு இழியவேண்டும்படியான திருவதரம். தேஜஸ்தத்வங்களைத் திரட்டினாற்போலேயிருக்கிற ஆதொண்டைப்பழம் இதுக்கு த்ருஷ்டாந்தமாமித்தனை. உபமாந ரஹிதமாய் நீண்டபுருவங்களும். அப்புருவத்துக்குத் தகுதியாய்த் தாமரைப்பூப்போலே யிருக்கிற திருக்கண்களும். [பாவியேன்] - அவனழகை யநுஸந்தித்தால் ப்ரீயப்படுகை யன்றிக்கே நோவுபடும்படியான பாபத்தைப்பண்ணினேன். [ஆவியின்மேலனவே] - தோற்புரையிலே போகையன்றிக்கே, உயிர்நிலையிலேநின்று நலியாநின்றது. உள்ளு வெளிச்சிறக்கிறாப்போலே புறம்புமாகப்பெற்றோமாகிறிலோம்.

ஈடு — அஞ்சாம்பாட்டு. ஒன்றுக்கொன்று தகுதியான நம்பியுடைய திருமுகத்தி லழகுகள் என் உயிர்நிலையிலே நலியாநின்றனவென்கிறாள்.

[பக்கம்நோக்கிநிற்கும்] - அவன்வருகைக்கு ஸம்ஹாவனையுள்ள பார்ஶ்வத்தைப் பார்த்துக்கொண்டு நிற்குமாயிற்று; "नैषा पश्यति राक्षस्यो नेमान् पुष्पफलद्रुमान् । एकस्थहृदया नूनं राममेवानुपश्यति" (நைஷாபஶ்யதிராக்ஷஸ்யோநேமாந்புஷ்பபலத்ருமாந் - ஏகஸ்த்தஹ்ருதயாநூநம் ராமமேவாநுபஶ்யதி). "नैषा पश्यतीत्यादि" (நைஷாபஶ்யதி இத்யாதி)- ராக்ஷஸீ தர்ஶநத்தோடு புஷ்பபலத்ரும தர்ஶநத்தோடு வாசியற்றிருக்கிறதுகாணும் இவளுக்கு. "एकस्थेत्यादि" (ஏகஸ்த்த இத்யாதி) - அருகிருந்தவர்களையும் பாராளாயிற்று. அத்திக்கில் வந்து தோற்றுமையாலே யையும். [என்று அன்னையரும் முனிதிர்] - * அறியாக்காலத்துள்ளே அடிமைக்கண்அன்பு செய்வித்தபடியை அறியும் நீங்களும் முனியாநின்றீகோள். "बाल्यात्प्रभृति सुस्निग्धः" (பால்யாத் ப்ரப்ருதிஸுஸ்நிக்த:) என்னும்படியிறே இவள் தன்படி. [தக்க இத் யாதி] -சொன்னசொன்னபடியெல்லாம் தகும்படியிருக்கிற கீர்த்தியையுடைய திருக்குறுங் குடி நம்பியை. [நான்கண்டபின்] - அக்கீர்த்தியே ஜீவநமாக இருக்கும் நான் கண்டபின். [தொக்கசோதித்தொண்டைவாயும்] - சோதிதொக்கதொண்டைபோலேயிருக்கிற திருவதர மும். *"கோலந்திரள்பவளக்கொழுந்துண்டம்" என்னுமாபோலே, தேஜஸ்தத்வம் திரண் டாற்போலேயிருக்கிற தொண்டைபோன்றவாயும். தொண்டையென்பது-கோவை. இத்தை அதரத்துக்கு ஒப்பாகச் சொல்லக்கடவதிறே. [நீண்டபுருவங்களும்] - உபமாநரஹிதமாய், தனக்கு ஓரவதியில்லாமையாலே தன்னினேற்றமே சொல்லும்படியிருக்கிற திருப்புருவங் களும். [தக்கதாமரைக்கண்ணும்] - அதினுடைய நேடுமைக்கு அவயுயில்லாதாப்போலே

ப்ர:—பாலகாண்டே [கஅ] வால்மீகி:, "बाल्यात्प्रभृति सुस्निग्धो लक्ष्मणो लक्ष्मिवर्धनः । रामस्य लोकरामस्य भ्रातुर्ज्येष्ठस्य नित्यशः ॥"

அஞ்சாம்பாட்டு.—பக்கம் இத்யாதி. உத்தரார்த்தத்தைத் கடாக்ஷித்து அவதாரிகை - ஒன் றுக்கொன்று இத்யாதி. உயிர்நிலையிலே - மர்மஸ்த்தாநத்திலே.

ஸம்ஹாவனை - யோக்யதை. அப்படிப் பார்த்துக்கொண்டிருந்தபேருண்டோ? என்ன - நைஷா இத்யாதி. "नैषा पश्यति राक्षस्यो नेमान् पुष्पफलद्रुमान् । एकस्थहृदया नूनं राममेवानुपश्यति ॥ २५ ॥" இதி ஸுந்தரகாண்டே (கசு) एकस्थहृदया नूनं. राक्षस्यः என்றது-ஆர்ஷம்; ராக்ஷஸீ: என்றபடி. க்ரூரராக்ஷஸிகளோடே போக்ய மான புஷ்பாதிகளை ஸஹபடித்ததுக்குபாவம் - ராக்ஷஸீதர்ஶநத்தோடு இத்யாதி. அதாவது - தானும் பெருமாளுங்கூட புஷ்பாபசயம்பண்ணுகிறதுக்கு ஸ்மாரகமாய்க்கொண்டு ப்ரதிகூலங்களாகையாலே இவையும்பாதகமென்றபடி. "राममेव" என்கிற அவதாரணத்துக்குபாவம்- அருகிருந்தவர்களையும் இத்யாதி. "அன்னையரும்" என்ற சப்தத்துக்குபாவம்- அறியாக்காலத்துள்ளே இத்யாதி. பால் யத்திலேயே அடிமையிலே ப்ராவண்யத்தை யுண்டாக்குவித்த இத்யர்த்த:. த்ருஷ்டாந்தகதநமுகேந உக்தார்த்தவிவரணம்-बाल्यात्प्रभृति இத்யாதி. கீர்த்யதஇதி,கீர்த்தி: என்று-ஸ்துதியைச்சொல்லு கிறது. தொக்க - திரண்ட. கோலந்திரள்பவளக்கொழுந்துண்டம் என்றதுக்கு - ஸௌந்தர்ய ஸௌகந்த்ய ஸௌகுமார்ய ஸாரஸ்யாதிகள் திரண்டதொரு பவளத்தினுடைய கொழுந்தான துண்ட மென்று ஶப்தார்த்தம். "தொக்கசோதித்தொண்டைவாய்" என்றாற்போலே, இதுக்கு உபமாநம் சொல்லாமைக்குபாவம் - உபமாநரஹிதமாய் இத்யாதி. இதுக்கு உபமாநமுண்டாகச்சொல்லலாமோ?

அபரிச்சேத்யமாய், அப்புருவங்களுக்குத் தகுதியாயிருக்கிற தாமரைக்கண்ணும். தாமரையை ஒருபோலியாகச்சொல்லில் சொல்லலாமத்தனை. [பாவியேனுவியின்மேலனவே] - உயிர் நிலையிலே நலியா நின்றன. [பாவியேன்] - அகவாயில் வெளிச்சிறப்பழகிது, அப்படியே புறம்பேயும் தோற்றப்பெறுகிறதில்லை, பாவியேன். (௫)

ஆறாம் பாட்டு.

மேலும்வன்பழிநங்குடிக்கிவளென்று அன்னைகாணகொடாள்
சோலைசூழ்தண்திருக்குறுங்குடிநம்பியை நான்கண்டபின்
கோலநீள்கொடிமூக்கும் தாமரைக்கண்ணும்கனிவாயும்
நீலமேனியும்நான்குதோளும் என்னெஞ்சம்நிறைந்தனவே.

ஆ.—(மேலும்வன்பழி.) இப்போதன்றிக்கே மேலும் நங்குடிக்கு நிலைநிற்கும் பழியை விளைக்குமிவளென்று, தாயார் நம்பியைக்காண இடங்கொடாதே நோக்காநின்றாள். சோலைகளாலே சூழப்பட்ட திருக்குறுங்குடிநம்பியை நான்கண்டபின், கோலம் கொழுந்துவிட்டதொரு கொடிபோலேயிருக்கிற திருமூக்குமுதலான திவ்யாவயவங்களினுடைய அழகுகள் என்னெஞ்சம்நிறையப் புகுந்து நலியாநின்றனவென்கிறாள்.

ஒ.—ஆறாம்பாட்டில், திவ்யாவயவங்களினுடைய அழகுகள் என் நெஞ்சு நிறையப்புகுந்து நலியாநின்றன என்கிறாள்.

[மேலும்வன்வழி நங்குடிக்கு இவளென்று அன்னைகாணகொடாள்] - இப்போ தன்றிக்கே மேலும் நம்குடிக்கு நிலைநிற்கும்பழியை விளைக்கும் இவளென்று தாயார் நமக்கு நம்பியைக்காண இடங்கொடாதே நோக்காநின்றாள். [கோலநீள்கொடிமூக்கு] - கோலம்கொழுந்துவிட்டதொருகொடிபோலேயிருக்கிற திருமூக்கு.

ப.—அநந்தரம், முகசோபையோடேகூடின ரூபஸௌஜவைலக்ஷண்யம் என் நெஞ்சிலே பூர்ணமாயிற்றென்கிறாள்.

நங்குடிக்கு - (அவன்வரக்காணவிருக்கும்) நங்குடிக்கு, இவள் - (தான்காண த்வரிக்கிற) இவள், மேலும்-(இன்றையளவன்றியே) உள்ளதனையும், வன்-(கழிக்கவரிய) சிக்கென்ற, பழி-பழிதான் ஒருவடிவாயிருக்கிறவளாயிருக்கும், என்று - என்று, அன்னை-தாயாரானவள், காண-நம்பியைக்காண, கொடாள் - இடந்தருகிறிலள்; சோலை - சோலை, சூழ்-சூழ்ந்து, தண்-ப்ரமஹரமான, திருக்குறுங்குடி - திருக்குறுங்குடியில், நம்பியை-நம்பியை, நான் - (பழிபுகழாம்படியான ப்ராவண்யத்தையுடைய) நான், கண்டபின் - கண்டபின்பு, கோலம் - அபிரூபமாய், நீள்-நீண்ட, கொடி - கற்பகக்கொடிபோலேயிருக்கிற, மூக்கும்-திருமூக்கும், தாமரை - (அதினுடையபூவென்னலாம்படியாய்த்) தாமரை

என்ன - தாமரையை இத்யாதி. இது "தாமரை" என்ற ஏகவசநத்துக்கு பாவமாதல். ஒருபோலியாக - ஒரு ப்ரகாரத்துக்குப் போலியாகவென்றபடி. நலியாநின்றன - ஆகையாலே பாபி என்றபடி. அழகுகள் ஈடுபடுத்துகை நல்லதன்றோ? என்ன - அகவாயில் இத்யாதி. வெளிச்சிறப்பு - ப்ரகாஶம். தக்ககீர்த்தி இத்யாரப்ய, ஆவியின்மேலனவே, பக்கம் நோக்கிநிற்கும் நையுமென்று அன்னையரும் முனிதிர்; பாவியேன் இத்யந்வயஃ. க்ரமேணாந்வயோவா. (௫)

போலேயிருக்கிற, கண்ணும்-திருக்கண்களும், கனி - (அதின்கனியென்னும்படி) பழுத்த, வாயும் - திருவதரமும், நீலம் - (அதுக்குப்பராஹாகமான) நீலநிறத்தையுடைய, மேனியும்- திருமேனியும், (பச்சிலைமரம்பணைத்தாற்போலேயிருக்கிற), நான்கு - நாலு, தோளும் - திருத்தோள்களும், என்-என், நெஞ்சம் - நெஞ்சிலே, நிறைந்தன - நிறைந்தன.

இ.—ஆறும்பாட்டில், நம்பியினுடைய திருமுகத்தில் அவயவஶோபைகள் என் நெஞ்சுநிறையப் புகுந்து நலியாநின்றன வென்கிறாள்.

[மேலும் வன்பழி] - இப்போதன்றியே, இக்குடியுள்ளவளவும் ப்ரபலமான பழி. [நங்குடிக்கு] - "தத்தஸ்யஸத்ருஶம்ஹவேத்" என்றிருக்கும் நங்குடிக்கு. [இவள்- வன்பழி] - பழியைவிளைப்பிக்குமிவளென்கை. தாயார் நம்பியைக்காண இடங்கொடாதே நோக்காநின்றாள். நாட்டார் செய்யுமத்தை நோன்புநோற்றுப்பெற்ற தான் செய்யாநின் றாள். ஶ்ரமஹரமான சோலைசூழ்ந்த திருக்குறுங்குடிநம்பியை. [நான்] - பழி புகழாம் படி யவகாஹித்த நான். [கோலநீள் இத்யாதி] - அழகுமிக்க கொடிபோலேயிருக்கிற மூக்கும். அழகுகோழுந்துவிட்டதொரு கொடிபோலேயிருக்கை [தாமரைக்கண்ணும்]- அக்கொடி பூத்தாற்போலேயாய் தாமரைப்பூப்போலேயிருக்கிற திருக்கண்களும். [கனி வாயும்] - அது ஒருபலத்தை யுண்டாக்கினாற்போலேயாய், கனிபோலேயிருக்கிற திரு வதரமும். [நீலமேனியும்] - இவற்றுக்குப் பராஹாகமாய், தாமரையிலைபோலேயிருக்கிற திருமேனியும். [நான்குதோளும்]-கல்பகதருபணைத்தாற்போலே மனோஹரமாய், அவ்வழ கைக் காத்தூட்டக்கடவ தோள்களும். [என் நெஞ்சம் நிறைந்தனவே] - ஹிதவசநங் கேட்கைக்கு நெஞ்சில் இடமில்லை.

ஈடு.—ஆறும்பாட்டு. நம்பியுடைய திவ்யாவயவஶோபைகள் என்நெஞ்சுநிறை யப்புகுந்து நலியாநின்றனவென்கிறாள்.

[மேலும் இத்யாதி]-இப்போது சிலர் நாலுவார்த்தைசொல்லிவிடுகையன்றிக்கே, மேலும் இக்குடிக்கு உருவநிலைநின்றபழியை விளைக்குமவள் இவளென்று. [அன்னைகாண கொடாள்]-தன்னோடு ஸாம்யமுடையார் சொல்லுகையன்றிக்கே, அடியிலே என்னைப்பேறு கைக்கு நோன்புநோற்றுப்பெற்ற இவளும் இப்படி சொல்லாநின்றாள். [சோலை இத்யாதி]- ஶ்ரமஹரமான சோலையாலே சூழப்பட்ட திருக்குறுங்குடிநம்பியை. [நான்கண்டபின்]- பழி புகழாம்படி இவ்விஷயத்திலே அவகாஹித்த நான் கண்டபின். "பழி" என்று அச்சமுறுத்தி மீட்கவொண்ணாதபடி அவகாஹித்த நான் கண்டபின். [கோலநீள் இத் யாதி]-அழகுமிக்க கொடிபோலேயிருக்கிற திருமூக்கும், அதின்படியேயாயிருக்கிற தாமரைக் கண்ணும். அக்கொடி பூத்தாற்போலேயாயிற்றுத் திருக்கண்களிருப்பது. [கனிவாயும்]- அது ஒருபலத்தையுண்டாக்கினாற்போலேயிருக்கிற கனிவாயும், அத்தாமரையின் இலைபோ

ஆறும்பாட்டு.-மேலும் இத்யாதி. "கோலநீள்கொடிமூக்கு" இத்யாதியைக்கடாக்ஷித்து அவ தாரிகை - நம்பியுடைய திவ்யாவயவ இத்யாதி.

வன்பழி - வலியபழியை விளைக்கும். கீழெல்லாம் "அன்னைமீர்காள்" என்று- பஹுவசந மாகச்சொல்லி, இங்கே "அன்னை" என்று - ஏகவசநமாகச்சொன்னதுக்குபாவம் - தன்னோடுஇத்யாதி. ஸாம்யமுடையாரென்றது - வளர்த்த தாய்மாரை. "காணக்கொடாள்" - * உட்கண்ணாலும் நெஞ்சாலும் காணக்கொட்டாள். "பழி" என்று சொன்னால் மீளவொண்ணாதோ? என்ன - பழிபுகழாம்படி இத்யாதி. கீழ்வாக்யவிவரணம்-பழிஎன்று அச்சம் இத்யாதி. கோலம்-அழகு. அதின்படியேயாயிருக் கிறவென்றது - "கோலநீள் - தாமரைக்கண்" என்றபடி. ஆநுபூர்விக்கு ரஸோக்தியாகபாவம் - அக்

லே நீலமாயிருக்கிற திருமேனியும்; ஒருபெருவெள்ளம்போலேயாயிற்றுத் திருமேனி, அத்தை நீஞ்சுகைக்குச் சிலதெப்பங்கள்போலேயிருக்கிற திருத்தோள்கள்நாலும். [என்னெஞ்சம் நிறைந்தனவே]-உங்களுடைய ஹிதவசநத்துக்கேல்லாம் என்நேஞ்சில் இடமில்லை. (௬)

ஏழாம் பாட்டு.

நிறைந்தவன்பழிநங்குடிக்கிவளென்று அன்னைகாணகொடாள்
சிறந்தகீர்த்தித்திருக்குறுங்குடிநம்பியை நான்கண்டபின்
நிறைந்தசோதிவெள்ளஞ்சூழ்ந்த நீண்டபொன்மேனியொடும்
நிறைந்தென்னுள்ளேநின்றொழிந்தான் நேமியங்கையுளதே.

ஆ.—(நிறைந்த.) ஒருவராலும் போக்கவொண்ணாத வன்பழியை நங்குடிக்கு விளைக்குமிவள் என்று அன்னை காணகொடாள். சிறந்தகீர்த்தித் திருக்குறுங்குடிநம்பியை நான்கண்டபின், நிறைந்த சோதிவெள்ளஞ்சூழ்ந்த ஸௌகுமார்யத்தை மிக்கு விலக்ஷணமான திருமேனியழகும், அல்லாதவழகிற்காட்டில் கையுந்திருவாழியுமான அழகும் என் நெஞ்சிலே வேர்விழுந்ததென்கிறாள்.

ஒ.—ஏழாம்பாட்டில், நம்பியுடைய திருமேனியில் அழகுவெள்ளம் என்னுடைய நெஞ்சிலே வேர்விழுந்தது என்கிறாள்.

[நிறைந்தவன்பழி] - ஒருவராலும்போக்கவொண்ணாத பழி. [நீண்டபொன் மேனி] - ஸௌகுமார்யத்தைமிக்கு விலக்ஷணமான திருமேனி. [நேமிஅம்கைஉளதே] - அல்லாத அழகிற்காட்டில் கையுந்திருவாழியுமான அழகே ஹ்ருதயத்தை வருத்தாநின்றது என்றுகருத்து.

ப.—அநந்தரம், நிரதிசயதேஜோவிசிஷ்டமாய் உத்துங்கமான ஸ்ப்ருஹணீய விக்ரஹத்தோடே நம்பி என் நெஞ்சுக்குள்ளே கையுந்திருவாழியுமாய் நின்றானென்கிறாள்.

நம்-நம்முடைய, குடிக்கு - குடிக்கு, இவள்-இவள், நிறைந்த - பூர்ணமாய், வன்-ப்ரபலமான, பழி-பழி, என்று - என்று, அன்னை - தாயார், காண-காண, கொடாள்-இடங்கொடுக்கிறிலள்; சிறந்த - சிறப்பையுடைத்தான, கீர்த்தி - கீர்த்தியையுடைய, திருக்குறுங்குடிநம்பியை - திருக்குறுங்குடிநம்பியை, நான் - (அக்கீர்த்யதிசயத்துக்ககப்பட்ட) நான், கண்டபின் - அநுபவித்தபின்பு, நிறைந்த - பூர்ணமான, சோதிவெள்ளம் - தேஜோராசியாலே, சூழ்ந்த - சூழப்பட்டு, நீண்ட - உத்துங்கமாய், பொன் - ஸ்ப்ருஹணீயமான, மேனியொடும் - வடிவோடேகூட, என்னுள்ளே - என் நெஞ்சுக்குள்ளே, நிறைந்து - நிறைந்து, நின்றொழிந்தான் - நின்றுவிட்டான்; நேமி-(அஸாதாரணசிஹ்நமான) திருவாழியும், அம்-அழகிய, கை-திருக்கையிலே, உளது - உண்டாயிருந்தது.

இ.—ஏழாம்பாட்டில், நம்பியுடைய திருமேனியில் அழகுவெள்ளம் என் நெஞ்சிலே வேர்விழுந்ததென்கிறாள்.

கொடி இத்யாதி. இவ்விடத்திலே "விஜஸதி நாஸாகுஹ வஹ்நீ ஸௌஹ்ருஜ நிஜயஹ" இத்யாத்யநுஸந்தேயம். நங்குடிக்கு - மேலும்வன்பழி இத்யாரப்ய, க்ரமேணாந்வய:. (௬)

[நிறைந்தவன்பழி] - அதிமாத்ரமாய் ஒருத்தரால் மீட்கப்போகாத ஸகவத்ப்ராவண்யத்தைச் சொல்லுகிறது. [நங்குடிக்கிவள்] - "வகுத்தவிஷயமேயாகிலும் நாம் மேல்விழுந்துபெறுகை அவத்யம்" என்றிருக்குங்குடி. இங்கு, தாயார்வார்த்தையும் மகள்வார்த்தையும், இரண்டும் இவ்வாழ்வார்வார்த்தையிறே; "பழி" என்று பரிஹரிக்கிறவள் - உபாயத்திற் கொத்தையறுக்கிறாள், பழிபாராதே மேல்விழுகிறவள் - உபேயத்திற் கொத்தையறுக்கிறாள். தாயார் பூர்வார்யத்தை நிஷ்கர்ஷிக்கிறாள், மகள் உத்தரார்யத்தை நிஷ்கர்ஷிக்கிறாள். உபேயருசியாலே செய்கிறவற்றிலே உபாயபுத்திபண்ணித் தவிருகை அர்த்தமன்று, அவற்றில் கர்த்தவ்யபுத்திபண்ணி யநுஷ்டிக்கையும் அர்த்தமன்று; ப்ராப்யருசியடியாய்த் தவிரலாவ தொன்றுமில்லை. உபாயபுத்த்யா த்ருணச்சேதமும் மிகை. பிள்ளைகள்விவாஹார்த்தமாக ஆழ்வான்ப்ரதிபத்தியை யநுஸந்திப்பது. த்ருஷ்டத்தோடு அத்ருஷ்டத்தோடு வாசியென். [சிறந்தகீர்த்தி] - நம்பிக்கு அதிஶயத்தைப் பண்ணுங்கீர்த்தி. [நான்] - அந்தகீர்த்தியோபாதி அவனுக்குச்சிறந்தநான். "யஸ்ய ஸா ஜநகாத்மஜா - அப்ரமேயம் ஹி தத்தேஜ:". [நிறைந்த இத்யாதி] - அபரிச்சிந்நமான தேஜஸ்ஸினுள்ளே உந்நேயமாம்படியாயிற்று திருமேனியிருப்பது. இத்தேஜஸ்ஸினுள்ளே, வடிவுதான் அபரிச்சேத்யமான போக்யதையையுடைத்தாய் நித்யஸ்ப்ருஹா விஷயமாயிருக்கை. இந்தவிக்ரஹத்தோடே நெஞ்சுநிறையும்படி நின்றான். அவன்நிறைவைக் குறைக்கிலன்றோ என்பழியைக்குறைப்பது. [நேமியங்கையுளதே] - அல்லாத அழகுகளெல்லாவற்றிலும் மிகுதியாயாயிற்று கையுந்திருவாழியு மிருப்பது. வெறும்புறத்திலே ஆலத்திவழிக்கவேண்டும்படியானகையிலே திருவாழியுமானால் மீட்கப்போமோ?

ஈடு —ஏழாம் பாட்டு. நம்பியுடைய திருமேனியி லழகுவெள்ளம் என்நெஞ்சிலே வேர்விழுந்த தென்கிறாள்.

[நிறைந்த இத்யாதி] - ஆண்டாள் ஒருநாள் ஹட்டரையும் சீராமப்பிள்ளையையும் காட்டி, "இவர்கள் விவாஹப்ராப்தரானார்கள், பேசாதே இருக்கிறதேன்?" என்ன,— "ஆகில், நாளைப் பெருமாள்பாடேபோனவாறே வரக்காட்டு" என்ன, அவர்களையுங்கொண்டு திருமுன்பே நிற்கச்செய்தே, பெருமாள் அருளப்பாடிட்டு, "ஒன்றுசொல்லுவாய்போலே இருந்தாயீ!" என்று திருவுள்ளமாக, " 'இவர்கள் விவாஹப்ராப்தரானார்கள்' என்று சொல்லாநின்றார்கள்" என்ன, "நாமே ஸத்ருஶமானவிடத்திலே ஸம்பந்தித்துத்தருகிறோம்" என்று அருளிச்செய்ய, பிற்றைநாள் மன்னியைக்கொண்டுவந்து நீர்வார்த்தார்கள். ஆக, "அத்தலையாலே வருமதொழிய, தாந்தாம் ஒன்றை ஆசைப்படுகையுங்கூடப் பழி"

ஏழாம்பாட்டு - நிறைந்த இத்யாதி. உத்தரார்த்தத்தைக் கடாக்ஷித்து அவதாரிகை - நம்பியுடைய இத்யாதி. என்நெஞ்சிலே வேர்விழுந்தது என்றது - "என்னுள்ளே நின்றொழிந்தான்" என்றத்தைப்பற்ற.

வன்பழி - வலிய பழியை விளக்கும். இங்கு, பழியாகச் சொல்லுகிறது - ஸ்வாபதேஶத்திலே, த்ருஷ்டாத்ருஷ்டவிபாகமற அவன்கை பார்த்திருக்கையொழிய ஸ்வயத்நமென்று விவக்ஷித்து, ஸ்வயத்நம் பழியென்னுமதுக்கு ஐதிஹ்யம் - **ஆண்டாள்** இத்யாதி. இத்தால் - ஈஶ்வரனையொழிய த்ருஷ்டார்த்தமாகவும் தானாக ஒரு ப்ரவ்ருத்திபண்ணுகை ஸ்வரூபவிருத்தமென்று தோற்றுகையாலே, அத்ருஷ்டார்த்தமான ஸ்வயத்நம் ஸ்வரூபவிரோதித்வேந அவத்யாவஹமென்னுமது கைம்புத்யஸித்தமென்றபடி. **மன்னியை** - கன்னியை. இத்தால், ப்ரபந்நனுக்கு த்ருஷ்டார்த்தமான ஸ்வயத்நமும் பழியென்றபோதே - ஸ்வயத்நரூபமான உபாயாந்தரங்கள் பழியென்னு

என்றிருக்குங்குடிகாணும். "அதபாதகபீதஸ்த்வம்" (அதபாதகபீதஸ்த்வம்) - "தர்ம புத்ரன் ஒருதடவற்போய்சொல்லி அதுக்கு நரகதர்ஶநம் பண்ணினன்" என்று ப்ரஸித்தமிறே. அடுத்தடுத்து ராஜஸூயங்களைப் பண்ணினனித்தனைபோக்கி, "நிஷித்தாநுஷ்ட்டாநம் பண்ணினன்" என்று ப்ரமாணப்ரஸித்தியில்லை. "அதபாதகபீதஸ்த்வம்" (அதபாதகபீதஸ்த்வம்)-கீழேசெய்துபோந்தவை பாதகமென்றுதோற்றி பீதபீதனுயாகில். அஹங்கார மமகாரகர்ப்பமான க்ரியாகலாபமடைய, "க்ருஷ்ணனே நங்காரியத்துக்குக் கடவன்" என்று அறிந்தவநந்தரம் பாதகஸமமாய்த் தோற்றிற்றுயிற்று. "விமுக்தேத்யாதி" (விமுக்தேத்யாதி) - உப்பைத்தோட்டுப் புளியைத்தோட்டு நீநின்று சிலவற்றைச்செய்யாதே, புறம்புள்ளவற்றையடையப் போகட்டு, "உடையவனே நங்காரியத்துக்குக்கடவன்" என்று அவன் பக்கலிலே பரத்தைப் போகட்டிருக்கப்பார். இப்போது "பழி" என்று பரிஹரிக்கப்பார்க்கிறது இவ்விஷயத்திலுள்ள ப்ராவண்யத்தையிறே; "பழி" என்று பரிஹரிக்கப்பார்க்கிற திருத்தாயாராயும், "பழியென்றுமீளேன்" என்கிற பிராட்டியாயும் ஓடுகிற இவ்விரண்டாகாரமும் ஆழ்வார்தமக்குப் பிறந்த அவஸ்த்தாவிஶேஷங்களிறே; சரமஶ்லோகத்துக்குக் கீழுள்ளவற்றை அநுஸந்தித்தாற்போலே இருக்கிறதாயிற்று - "பழி" என்று பரிஹரிக்கப்பார்க்கிற திருத்தாயார்வார்த்தையானவிடம்; சரமஶ்லோகத்தில் நிஷ்கர்ஷம்போலே இருக்கிறதாயிற்று- "பழியென்றுமீளேன்" என்கிற இவள்வார்த்தையானவிடம். "பழி" என்று பரிஹரிக்கப்பார்க்கிறவிது - உபாயத்தில் கோத்தையறுக்கிறது; "பழியென்றுமீளேன்" என்கிறவிது -

---

*மத்தை விதத்தவத்கரித்து, அதுக்குப்ரமாணம் - அத இத்யாதி. "அதபாதகபீதஸ்த்வம் ஸர்வபாவேந பாரத । விமுக்தாந்யஸமாரம்போ நாராயணபரோ பவ" இதி ஹாரீதஸ்ம்ருதௌ ஶ்ரீவிஷ்ணுவசநம் ஸ்ம்ருதி. பாதகஶப்தம் - நிஷித்தாநுஷ்ட்டாநத்தைச் சொல்லுமதொழிய, உபாயாந்தரத்தைச் சொல்லுமோ? என்ன - தர்மபுத்ரன் இத்யாதி. அதாவது - ஔசித்யத்தாலே, பாதகஶப்தம் - இவ்விடத்தில், உபாயாந்தரங்களைச் சொல்லுகிறதென்றபடி. அபஶப்தம் - ப்ரஶ்நபரமாய், பாதகபீதோ - பாதகபீதஶ்சேத் இத்யர்த்தஃ. தடவற்போய் ஆபாஸமானபொய். கீழேசெய்துபோந்தவை - ராஜஸூயாதிகள். கீழ்ச்செய்துபோந்த ராஜஸூயாதிகள் பாதகஸமமாய்த் தோற்றுகைக்கடியேதென்ன - அஹங்கார இத்யாதி. "வி" என்கிற உபஸர்க்கார்த்தம் - உப்பைத்தோட்டு இத்யாதி. அதாவது; "வி" என்கிற உபஸர்க்கத்தாலே - ஸவாஸநத்யாகம் சொல்லுகிறதென்றபடி. * நாராயண ஶப்தார்த்தம் - உடையவனே என்றது. இது தத்புருஷனில் அர்த்தம். ஸ்வரக்ஷணார்த்தமான யத்நத்தை - "பழி" என்றதாகில்; ஆழ்வார்க்கு ஸ்வரக்ஷணார்த்தமான வ்யாபாரமில்லையே, ஆனபின்பு இப்போது ஸ்வாபதேஶத்திலே "நிறைந்தவன்பழி" என்றது எத்தையென்ன - இப்போது இத்யாதி. தடஸ்த்த ஶங்கையை யநுவதிக்கிறார் - பழியென்று பரிஹரிக்கப்பார்க்கிற திருத்தாயார் இத்யாதி. அவஸ்த்தாவிஶேஷங்களிறே என்றவநந்தரம், 'இவ்வுபயாவஸ்த்தாநுகுணப்ரமாணமேது, இவ்வுபயாகாரமும் ஒருவர்க்கே கூடும்படிதான் எங்ஙனே' என்று அத்யாஹரிப்பது. இதுக்குப் பரிஹாரம் - சரமஶ்லோகத்துக்கு இத்யாதி. கீழுள்ளவற்றை - கீழ்ச்சொன்ன உபாயாந்தரங்களை. அநுஸந்தித்தாற்போலே - அநுஸந்தித்து நிஷேதித்த பூர்வார்த்தம்போலே. சரமஶ்லோகத்தில் நிஷ்கர்ஷம்போலே யென்றது - அநிஷ்டநிவ்ருத்தி ஆநுஷங்கிகமாகையாலே, உபேயநிஷ்கர்ஷத்திலே நோக்கான சரமஶ்லோகத்தில் உத்தரார்த்தம்போலே யென்றபடி. ஆக, இவ்வவஸ்த்தாத்வயத்துக்கும் ஸாதகப்ரமாணம் - சரமஶ்லோகத்தில் பூர்வோத்தரார்த்தங்களென்றும், இவ்வவஸ்த்தாத்வயமும் அத்யவஸாயத்வாரரூபாவஸ்த்தாபேதத்தாலே கூடுமென்றும் கண்டுகொள்வது. கீழ்வாக்யத்வயஸூசிதம் - பழியென்று இத்யாதி வாக்யத்வயமும். உபாயத்தில் கொத்தையறுக்கிறதென்றது - ஸித்தோபாயம் சேதநப்ரவ்ருத்தியில் ஒன்றையும் ஸஹியாமையாலே,*

உபேயத்தில் கோத்தையறுக்கிறது. ஸ்வரூபமாய் அந்வயித்ததத்தில் மிகுதியாய்க்கழிவதொன்றுண்டோவென்றபடி; "ஸ்வேந ரூபேணாபிநிஷ்பத்யதே" (ஸ்வேநரூபேணாபிநிஷ்பத்யதே) என்கிறவிதில் மிகுதியாய் த்யாஜ்யமாயிருப்ப தொன்றில்லையிறே. உபாயாம்ஶத்தில் வந்தால், "கர்த்தவ்யாம்ஶங்களிலேயும் உபாயபுத்தி பிறக்கிறதோ" என்று துணுக்கென்னவேண்டும்படியாயிருக்கும்; உபேயத்தைப்பார்த்தால், "அஹம் ஸர்வம் கரிஷ்யாமி" (அஹம்ஸர்வம்கரிஷ்யாமி) என்கிறபடியே, விடலாவதொன்றில்லையாயிருக்கும். பழைய நாஸ்திக்யத்தாலே கர்த்தவ்யாம்ஶத்தில் சோம்பிக் கைவாங்கினத்தை, "உபாயவிரோதியான ஆகாரத்தாலே விட்டேன்" என்னுமதுவும் வார்த்தையல்ல; உபேயருசியாலே செய்யுமத்தை, "இவை உபாயமாய் அந்வயிக்கிற் செய்வதேன்?" என்று விடுமதுவும் வார்த்தையல்ல.

ப்ர:—சாந்தோக்யே [௮-௧௨] "ஏவமேவைஷ ஸம்ப்ரஸாதோऽஸ்மாச் சரீராத் ஸமுத்தாய பரஞ்ஜ்யோதிருபஸம்பத்ய ஸ்வேந ரூபேணாபிநிஷ்பத்யதே".

அயோத்யாகாண்டே [௩௧] "பவாம்ஸ்து ஸஹ வைதேஹ்யா கிரிஸாநுஷு ரம்ஸ்யதே । அஹம் ஸர்வம் கரிஷ்யாமி ஜாக்ரதஸ் ஸ்வபதஶ்ச தே ॥௨௫॥".

ஸ்வரக்ஷணார்த்த ப்ரவ்ருத்தி ஸித்தோபாயத்துக்கு அவத்யமாகையாலே, ஸ்வரக்ஷணத்தில் நிவ்ருத்தி - உபாயாம்ஶத்தில் கொத்தையை அறுக்கிறது. உபேயத்தில் கொத்தையைக்கிறதென்றது-"கைங்கர்யம் பெற்றபோது பெறுகிறோம்" என்று ஆறியிருக்கிற இது உபேயமான கைங்கர்யத்துக்குக் கொத்தையாகையாலே, **தத்விஷய**த்யர்த்தமான *ப்ரவ்ருத்திக்கடியான ப்ராவண்யம் உபேயத்தில் கொத்தையறுக்கிறதென்றபடி. ஆக, உபாயத்தினுடைய நைரபேக்ஷ்யத்தைப் பார்த்தால் ஸ்வப்ரவ்ருத்தியெல்லாம் கொத்தையாயிருக்கும்; உபேயவைலக்ஷண்யத்தைப் பார்த்தால் த்வரியாதே ஆறியிருக்கை கொத்தையாயிருக்கும்; ஆகையால் இரண்டு கொத்தையையும் அறுக்கிறதென்று ஃபலிதார்த்தம். கோத்தை - அவத்யம். "பழியென்றமீளேன்" என்கிறவிது உபேயத்தில் கொத்தையை அறுத்தாலும், ஸித்தோபாயத்தினுடைய நைரபேக்ஷ்யத்துக்கு ஹாநிகமன்றோ? என்ன -* **ஸ்வரூபமாய் இத்யாதி. ஸ்வரூபமாய்அந்வயித்தத்தில்** *- ஸ்வரூபாந்தர்க்கதமாய் அந்வயித்த பாரதந்த்ர்யாதிகளில்.* **மிகுதியாய்க்கழிவது** *- த்யாஜ்யமாய்க்கழிவது. என்றபடிஎன்றது - "பழியென்றமீளேன்" என்றதுக்கு அபிப்ராயமென்றபடி. பாரதந்த்ர்யாதிகள் ஸ்வரூபாந்தர்க்கதங்களோ? என்ன-ப்ரமாணஶதமுகேந உக்தார்த்தவிவரணம் -* **ஸ்வேந ரூபேண** *இத்யாதி.* **ஸ்வேந ரூபேண** - **ஸ்வாஸாதாரணாகாரேண.** *ஸ்வாஸாதாரணாகாரமாவது - அபஹதபாப்மத்வாதிகள், ஶேஷத்வ பாரதந்த்ர்யாதிகள், பாரதந்த்ர்யாதிகளென்றபடி. கீழே, "உபாயத்தில் கொத்தையறுக்கிறது, உபேயத்தில் கொத்தையறுக்கிறது" என்று சொன்ன ஆகாரத்வயமும் மற்றும் ஸித்தோபாயநிஷ்டரா யிருப்பார்க்கும் ஸமாநமாகையாலே, அவர்கள் அநுஷ்டிருக்கிற நித்யநைமித்திகரூபமான கர்த்தவ்யாம்ஶங்களில் இவ்வுபயாகாராநுகுணமாக அவர்களுக்கு உண்டாம் ப்ரதிபத்திவிஶேஷங்களைக் காட்டுகிறார் -* **உபாயாம்ஶத்தில் இத்யாதி.** *உபாயாம்ஶத்தில் வந்தாலென்றது - உபாயாதிகாரமாகிற ஆகாரத்தைப் பார்த்தால் என்றபடி.* **உபேயத்தைப்பார்த்தால்** *- உபேயாதிகாரத்தைப் பார்த்தால். இப்படி உபேயாதிகாரத்தைப் பார்த்தால் கர்த்தவ்யங்களில் த்யாஜ்யாம்ஶ மில்லையாகையாலே, நாஸ்திக்யபுத்த்யாதிகளால் விடுமது அப்ராமாணிகமென்று அருளிச்செய்யாநின்றுகொண்டு உபேயாதிகாராநுகுணமாக ஶிஷ்டாநுஷ்டாநத்தையுங் காட்டுகிறார் -* **பழைய** *இத்யாதி,* **யாத்ரையிருக்கும்படியிறே இது** *என்னுமளவாக.* **உபாயவிரோதியான ஆகாரத்தாலேவிட்டேன் என்னுமதுவும் வார்த்தையல்ல** *என்றவநந்தரத்திலே; கர்த்தவ்யாம்ஶத்தில் சோம்பாதிருந்தாலும், "உபாயாங்கதயா ஆஶ்ரமகர்மம் ஶாஸ்த்ரவிஹிதமாகையாலே இது நமக்குக் கர்த்தவ்யம்" என்கிற புத்தியாலே அநுஷ்டிக்குமதுவும் வார்த்தையல்ல, என்கிற இதுவும் கண்டு*

லௌகிகரோபாதி கர்த்தவ்யமடைய அநுஷ்ட்டியாநிற்கச்செய்தே அவற்றில் உபாயபுத்தி பண்ணுதேபோரும் நம்முதலிகளுடைய யாத்ரையிருக்கும்படியிறே இது. ஆக, "இது பழி" என்று பரிஹரிக்கப்பார்க்கிறவிடம் - பூர்வார்த்தத்தில் நிஷ்கர்ஷமிருந்தபடி; "இது பழி" என்று மீளாதொழிகிறவிடம் - உத்தரார்த்தத்தில் நிஷ்கர்ஷமிருந்தபடி. [சிறந்த இத்யாதி] - தகுதியாயிருந்துள்ள கீர்த்தியையுடைய திருக்குறுங்குடிநம்பியை. [நான்கண்டபின்]-அக்கீர்த்தியோபாதி அங்குத்தைக்குச் சிறந்த நான்கண்டபின். "யஸ்யஸாஜநகாத்மஜா - அப்ரமேயம்ஹிதத்தேஜ:" (யஸ்யஸாஜநகாத்மஜா - அப்ரமேயம்ஹிதத்தேஜ:) என்கிறபடியே, அவனுக்கு அக்கீர்த்தியோபாதி, தன்னோட்டை ஸம்பந்தமும் ஏற்றமாம்படி இருக்குமவளிறே. [நிறைந்த இத்யாதி] - ச்ருங்காதரங்கமத்யே வர்த்திப்பாரைப்போலே தேஜஸ்தரங்கமத்யேயாயிற்று இருப்பது. தேஜஸ்ஸின் நடுவே வடிவு உந்நேயமாயாயிற்று இருப்பது. அவ்வடிவுதான் எவ்வளவுபோருமென்னில், — அபரிச்சேத்யமாய் ச்லாக்யமாயிருக்கும். [நிறைந்து என்னுள்ளே நின்றொழிந்தான்] - ஒருநாள் ஜீயர் கோவிலுக்கு எழுந்தருளாநிற்க, வழியிலே பிள்ளானைக்கண்டு, "ஈச்வரனுக்கு ஸ்வரூபவ்யாப்தியேயோ உள்ளது, விக்ரஹவ்யாப்தியுமுண்டோ?" என்றுகேட்க, "ஸர்வவிஷயமாக ஸ்வரூபவ்யாப்தியேயுள்ளது; உபாஸகவிஷயத்தில், அவர்கள்பக்கல் அநுக்ரஹத்தாலே, அவர்கள் சுபாச்ரயமாக பாவித்த விக்ரஹத்தோடே எழுந்தருளியிருக்கும்; இனி ஸ்வரூபவ்யாப்திக்கு ப்ரமாணங்கண்டவிடம் - ஸாமாந்யவிஷயமாகிறது, விக்ரஹவ்யாப்திக்கு ப்ரமாணங்கண்டவிடம் - விசேஷவிஷயமாகிறது" என்று பணித்தானும். [நேமியங்கையுளதே] - வடிவழகெல்லாம் ஒருதட்டும், கையுந்திருவாழியுமான அழகு ஒருதட்டுமாயாயிற்று இருப்பது. அவன்கையில் திருவாழிபிடித்திலனாகில் நான் பழிபரிஹரித்து மீளேனோ? அவன்கையில் திருவாழியிருக்க, என்னாலே பழிக்கஞ்சி மீளப்போமோ? [நிறைந்தென்னுள்ளேநின்றொழிந்தான்] - உங்கள் ஹிதவசநம் கேட்கைக்கு உள் அவகாசமில்லாதபடி நிறைந்துநின்றான். [நின்றொழிந்தான்] - இனி கந்தவ்யமில்லையாம்படி அவன் வந்து உள்ளேநிற்க, எனக்கு இனி கந்தவ்யமுண்டோ. அவனை என் உள்ளினின்றும்

ஆரண்யகாண்டே [௩எ] மாரீசவ:, "அப்ரமேயம் ஹி தத்தேஜோ யஸ்ய ஸா ஜநகாத்மஜா । ந த்வம் ஸமர்த்தஸ்தாம் ஹர்த்தும் ராமசாபாச்ரயாம் வநே ॥௧௮॥"

கொள்வது. ஆனால் த்யாகப்ரகாரம் ஏதென்ன - லௌகிகரோபாதி இத்யாதி. சாமஸ்லோகத்துக்குக் கீழுள்ளவற்றை இத்யாதி வாக்யந்தொடங்கிச் சொன்ன அர்த்தத்தை ஸ்புடமாகக் காட்டாநின்றுகொண்டு நிகமிக்கிறார் - ஆகஇது இத்யாதி. சிறந்த - அதிசயகரியான. தானும் அக்கீர்த்தியோபாதி அதிசயகரியோ? என்ன - யஸ்யஸா இத்யாதி. ஆனால் வடிவை க்ரஹிக்கும்படி என்னென்ன - தேஜஸ்ஸின்நடுவே இத்யாதி. "நீண்டபொன்மேனியொடும் நிறைந்து என்னுள்ளே நின்றொழிந்தான்" என்ற விக்ரஹவ்யாப்தி ப்ரஸங்கத்திலே ஐதிஹ்யம் - ஒருநாள் இத்யாதி. ஸ்வரூபவ்யாப்திக்கு ப்ரமாணம் - "அந்தர்பஹிச்ச" இத்யாதி. விக்ரஹவ்யாப்திக்கு ப்ரமாணம் - "நீலதோயத" இத்யாதி, "யேஷாம் ஸ்ரீநிவாஸோ ஹ்ருதயேஷு ஸந்நிஹித:" இத்யாதி. திருமேனியிலே திருவாழியும் அந்தர்ப்பூதமாயிருக்க, தனித்துச் சொல்லுவானென்? என்ன-வடிவழகெல்லாம் இத்யாதி. இத்தால் தாத்பர்யம் - அவன்கையில் இத்யாதி. வ்யதிரேகமுகேந சொன்னத்தை அந்வயமுகேந விவரிக்கிறார் - அவன்கையில் இத்யாதி. அவன் வந்து உள்ளேநிற்க கந்தவ்யமுண்டோ என்கையாலே - உள்ளில்நின்றும் போந்தானாகில் கந்தவ்யமுண்டென்று பலிக்கையாலே; அத்தையும், கந்தவ்யமுண்டோ என்றதின் கருத்தையும் அருளிச்செய்கிறார் - அவனை இத்யாதி. "நிறை

புறப்படச் சொல்லமாட்டிகோளோ நான் என் பழியைப் பரிஹரிக்க. வெறும்புறத்திலே ஆலத்திவழிக்கவேண்டும்படியிலே திருவாழியுமானால் மீளப்போமோ. அவனுடைய நிறைவைக்குறைக்கவோ, என்பழிநிறைவைக் குறைக்கவோ. (எ)

எட்டாம் பாட்டு.

கையுள்நன்முகம்வைக்கும்நையுமென்று அன்னையரும்முனிதிர்
மைகோள்மாடத்திருக்குறுங்குடிநம்பியை நான்கண்டபின்
செய்யதாமரைக்கண்ணுமல்குலும் சிற்றிடையும்வடிவும்
மொய்யநீள்குழல்தாழ்ந்ததோள்களும் பாவியேன்முன்னிற்குமே.

ஆ.—(கையுள்.) கைதொடப்பொறுத ஸுகுமாரமான முகத்தை, விஷண்ணையாய்க் கையிலேவைக்கும், மிகவும் அவஸந்நையாமென்று அங்யரைப்போலே தாய்மாரானநீங்களும் பொடியாநின்றிகோள். நம்பியுடைய திருமேனியில் நீலவர்ணமான தேஜஸ்ஸாலே மைகோள்மாடமான திருக்குறுங்குடிநம்பியை நான்கண்டபின், செய்ய தாமரைக்கண்ணும் அகன்ற நிதம்பமும் சிறுத்த இடையும் நிருபமமான வடிவும் அழகிய குழல்தாழ்ந்த தோள்களும், இவற்றையநுபவித்துப் பிரிகைக்கீடான பாபத்தைப்பண்ணின என்னுடையமுன்னே நின்று நலியாநின்றனவென்கிறாள்.

ஒ.—எட்டாம்பாட்டில், அழகிய குழல்தாழ்ந்த தோள்களோடு கூடின, மற்றுமுண்டான திவ்யாங்கங்களிலே அழகுகள் என்முன்னேநின்று நலியாநின்றன என்கிறாள்.

[கையுள் நன்முகம் வைக்கும் நையுமென்று அன்னையரும் முனிதிர்] - கைதொடப்பொறுத ஸுகுமாரமான முகத்தை விஷண்ணையாய்க் கையிலேவைக்கும், மிகவும் அவஸந்நையாம் என்று அங்யரைப்போலே தாய்மாரான நீங்களும் பொடியாநின்றிகோள். [மைகொள்மாடம்] - நம்பியுடைய திருமேனியில் நீலமானதேஜஸ்ஸாலே கறுத்த மாடம். பழைமையாலே கறுத்தமாட மென்னவுமாம். [பாவியேன்] - இவ்வழகை அநுபவித்துப் பிரிகைக்கீடான பாபத்தைப் பண்ணினேன்.

ப.—அநந்தரம், நம்பியுடைய ஸர்வாவயவசோபைகளும் என்முன்னே நில்லாநின்றனவென்கிறாள்.

(ஆற்றாமையாலே), கையுள் - கையுள்ளே, நல் - அழகிய, முகம் - முகத்தை, வைக்கும் - வையாநிற்கும், நையும் - (அதற்குமேலே) ஶிதிலையாகாநிற்கும், என்று - என்று, அன்னையரும் - இப்ரைமநில்யத்துக்கு க்ருஷிபண்ணின நீங்களும், முனிதிர் - முனியாநின்றிகோள்: (நம்பியுடைய நிழலீட்டாலே), மை - கருகினநிறத்தை, கொள் - உடைத்தாய், மாடம் - மாடங்களையுடைத்தான, திருக்குறுங்குடிநம்பியை - திருக்குறுங்குடிநம்பியை, நான் - (நைவேப்ரக்ருதியான) நான், கண்டபின் - கண்டபின், செய்ய -

த்து என்னுள்ளே நின்றொழிந்தான், நிறைந்தவன்பழி " என்கிற இரண்டையுங்கூட்டி ஹாவம் - அவனுடைய இத்யாதி. நங்குடிக்கு இவள் - நிறைந்தவன்பழி - என்று அன்னை காணகொடாள் இச்யாரப்ய, க்ரமேணுந்வய:. (எ)

சிவந்த, தாமரை - தாமரைபோலேயிருக்கிற, கண்ணும் - திருக்கண்களும், அல்குலும் - (அநுபாவ்யமான) கடி ப்ரதேசமும், சிறு - (முஷ்டிக்ராஹ்யமாம்படி) சிறுகின, இடையும் - இடையும், வடிவும் - (இவ்வவயவஸோபைக்கு ஆஸ்ரயமான) வடிவும், மொய் - செறிவை, †கொள் - உடைத்தாய், நீள் - நீண்ட, குழல் - குழல்கள், தாழ்ந்த - தாழ்ந்த, தோள்களும் - புஜஸிகரங்களும், பாவியேன் - (அபிநிவேஸாநுரூபமாக அநுபவிக்கப் பெறாத) பாபத்தையுடையேனான என்னுடைய, முன் - முன்னே, நிற்கும் - நில்லாநின்றன.

இ.—எட்டாம்பாட்டில், ஸார்வத்ரிகமான அங்கஸோபை என்முன்னேநின்று நலியாநின்றதென்கிறாள்.

[கையுள்நன்முகம்வைக்கும்] - கைதொடப்பொறாத ஸுகுமாரமான முகத்தை, ஆற்றாமையாலே கையுள்ளே வைக்கும். [நையும்] - தன்கைபட்டநோவு பொறாமை நோவுபடும். [அன்னையரும்முனிதிர்] - தாய்மாரானநீங்கள் இப்படிசெய்பவரவர்கவ்வையை நாம் இன்னதாகிறதென்? காந்தகரஸ்பர்ஸமொழியத் தன்கைபடவும் பொறாத முகம். இத்தால் - தன்னோடு தனக்கு அந்வயமில்லாத பாரதந்த்ர்யத்தைச் சொல்லுகிறது. [நையும்] - அவ்வளவுமன்றிக்கே மிகவும் அவஸந்நையாம். [மைகொள்மாடம்] - பழைமையாலே கறுத்தமாடமென்னுதல், நம்பியுடையநிழலீட்டாலே கறுத்தமாடமென்னுதல். "ஸோஹயந்நுஜ்ஞகாரணாம்". [நான்] - மாடத்திற்பழைமைபோலே நைவுக்குப்பழையனான நான். "நைவாயவெம்மேபோல்" என்னக்கடவதிறே. அநந்யார்ஹமாக்கும் கண்ணும், அதுக்குத்தோற்றார் இளைப்பாறும் அல்குலும், கீழையும்மேலையுங்கொண்டறியும்படி உந்நேயமான இடையும், இவற்றுக்கு ஆஸ்ரயமானவடிவும், தர்ஸநீயமாய்க் கண்டால் மறக்கப்போகாத குழல்கள்வந்து அலையெறியாநிற்பதாய் அணைக்கப்பாங்கான தோளும். மொய் - அழகு. [பாவியேன்] - முன்னேநில்லாநிற்க அநுபவயோக்யமல்லாத பாபத்தைப் பண்ணினேன். கண்வட்டத்திலே தோற்றாநிற்க, அணைக்க எட்டாதிருக்கிறதிறே.

ஈடு.—எட்டாம்பாட்டு. ஸார்வத்ரிகமான அங்கஸோபை என்முன்னேநின்று நலியாநின்றதென்கிறாள்.

[கையுள்நன்முகம்வைக்கும்]-அவனைப்பிரிகையால்வந்த தளர்த்தியாலே கையிலே முகத்தை வையாநின்றாள். இத்தனை ஸாஹஸத்திலே துணியும்படியாவதே இவள். தன்முகத்தில்வாசி தான் அறியாதொழியவேணுமோ. "ஸுஜநஸ்ய ஸுகஸ்ய ச" (புஜ

எட்டாம்பாட்டு.—கையுள் இத்யாதி. உத்தரார்த்தத்தைக்கடாக்ஷித்து அவதாரிகை - ஸார்வத்ரிகமான இத்யாதி. ஸார்வத்ரிகம் - ஸர்வாங்கவ்யாபி.

இத்தனை ஸாஹஸத்திலே என்றது - தன்கையுங்கூடப்பொறாத ஸௌகுமார்யத்தைப்பற்ற. "நன்முகம்" என்று விஸேஷித்ததுக்கு பாவம் - தன்முகத்தில் இத்யாதி. ஸ்வாபதேஸத்திலே, தன்முகத்தில் வாசியாவது - அந்யஸ்பர்ஸாஸஹதாரூபமான வாசியென்றபடி. இத்தால் - பகவதபேக்ஷயா அந்யையான தன்கையும் பொறாது என்றபடி. "தன்கையுங்கூடப்பொறாது" என்றதுக்கு ப்ரமாணம் - ஸுஜநஸ்ய இத்யாதி. "உபயாஸஞ்ஜாதஸ்ய ஸூக்ஷநாஸஸ்ய ஸுப்ருவம் । கதம் நாபேக்ஷ்யாம்யஹம் ஸுஜநஸ்ய ஸுகஸ்ய ச ॥ கூ ॥" இதி ஸுந்தரகாண்ட

† 'மொய்கொள்நீள்' என்றுபாடம் உரைக்கு ஸ்வரஸம்.

மந்யஸ்யகஸ்யசித்) என்னக்கடவதிறே. காந்தனுடைய கரஸ்பர்ஶமேயாயிற்றுப் பொறுப்பது. இத்தால் - தன்னோடு தனக்கு அந்வயமில்லாத பாரதந்த்ர்யத்தைச் சொல்லுகிறது. அதிறே - நமஶ்ஶப்தார்த்தமாகிறது. இதினுடைய ஸங்க்ரஹரூபமான உகாரத்திலேயும் இது உண்டாயிருக்கச்செய்தே இங்கேயும் சொல்லும்போது - இதுவே அர்த்தமாகவேணுமிறே. [நையும்] - தன்கையுங்கூடப் பொறுமையாலே நையும். [என்று அன்னையரும் முனிதிர்] - ஊரவர்கவ்வைக்கு நான்வெறுக்கிறதேன். [மைகொள்மாடம்] - பழைமையாலேயாதல், உள்ளுநிற்கிறவனுடைய நிழலீட்டாலேயாதல். “ஶோபயந்தண்டகாரண்யம்” (ஶோபயந்தண்டகாரண்யம்) என்னுமாபோலே. [நான்கண்டபின்] - அம்மாடத்தோபாதி நைவுக்குப்பழையேனான நான் கண்டபின். “நைவாயவெம்மேபோல்” என்னக்கடவதிறே. [செய்யதாமரைக்கண்ணும்] - அநந்யார்ஹமாக்கும் கண்ணும். [அல்குலும்]-அந்நோக்குக்குத்தோற்றார் தரித்து இளைப்பாறும் அல்குலும். [சிற்றிடையும்] - இரண்டும் ஏகஸந்தர்ப்பமாயிருக்கையாலே உந்நேயமான இடையும். [வடிவும்] - என்னை மீளவொட்டாத வடிவும். மெய்யே மீளவொட்டுகிறதில்லைகாணும் இவளை. [மொய்ய இத்யாதி] - தர்ஶநீயமாய், கண்டார்க்கு ஒருகாலும் மறக்கவொண்ணாதபடியிருக்கிற திருக்குழலானவை தாழ்ந்து, அணைக்கைக்கு யோக்யமான திருத்தோள்களும். [பாவியேன் முன்னிற்குமே] - அநுபவயோக்யமல்லாதது முன் நிற்கையாகிறது க்லேஶாதிஶயத்துக்கு உடலாயிருப்பதொன்றிறே. “முன்னிற்கும்” என்றுநிற்கச்செய்தேயிறே “பாவியேன்” என்கிறது. கண்ணுக்குத் தோற்றுநிற்கச்செய்தே ஆனைக்குச்சுதிரைவையாநின்றது. (௮)

---

[௨௧] ராவணம்வ்ருதி ஸீதா. ஆனால் பொறுப்பதேதென்ன - காந்தனுடைய இத்யாதி. “தன்கையுங்கூடப்பொறுது” என்றதுக்கு ஸ்வாபதேஶம் - இத்தால் இத்யாதி. இத்தால் - “நன்முகம்” என்றத்தால். ஏவம்பூதமான பாரதந்த்ர்யத்துக்கு ப்ரமாணம் - அதிறே இத்யாதி. இது நமஶ்ஶப்தார்த்தமென்கைக்கு நியாமகமேதென்ன - இதினுடைய இத்யாதி. அதாவது; ஏதத்ஸங்க்ரஹமான உகாரத்திலேயும் - அந்யஶேஷத்வநிவ்ருத்தி ப்ரதிபாதிதமாயிருக்க, மீளவும் “நம:” என்னும்போது - ஸ்வஶேஷத்வ நிவ்ருத்திரூபமாய், தன்னோடு தனக்கு அந்வயமில்லாத பாரதந்த்ர்யமே நமஶ்ஶப்த ப்ரதிபாத்யமாகவேணுமிறே யென்றபடி. இது - தன்னோடு தனக்கு அந்வயமில்லையென்கிற ஆகாரம். இங்கேயும் - நமஸ்ஸிலேயும். இதுவே - தன்னோடு தனக்கு அந்வயமில்லாத பாரதந்த்ர்யமே. சப்தார்த்தம் - ஊரவர் இத்யாதி. பழைமையாலேயாதல் என்றத்தைக் கடாக்ஷித்து - அம்மாடத்தோபாதி இத்யாதி. நைவுக்குப் பழையளோ? என்ன - நைவாய இத்யாதி. “வநகவஸ்யரோயந் ஶிவீகநகரோயா। ஶோபயந்தண்டகாரண்யம் தீப்தேந ஸ்வேந தேஜஸா॥க௫½॥” இதி ஆரண்யகாண்டே [௫-௮] ஶ்ரீவ:. அநந்யார்ஹமாக்கும் கண்ணும் என்றது - “ஜிதந்தே புண்டரீகாக்ஷ” என்றத்தைப்பற்ற. இரண்டும் ஏகஸந்தர்ப்பமாயிருக்கையாலே - கீழும்மேலும் ஏகஸந்தர்ப்பமாயிருக்கையாலே. மெய் - சாடு; விக்ரஹமும், ஸத்யமும். நீட்சிக்கு அர்த்தம் - கண்டார்க்கு இத்யாதி. நீட்சியாவது - மநஸ்ஸிலே ஸர்வகாலமும் வர்த்திக்கை. முன்னேநிற்கை நல்லதன்றோ? என்ன - அநுபவ இத்யாதி. அநுபவயோக்யமல்லாமைக்கு நியாமகமேதென்ன - முன்னிற்கும் இத்யாதி. அதாவது - முன்னே நிற்கச்செய்தேயும் அநுபவயோக்யமல்லாமையாலிறே பாவியேன் என்கிறதென்றபடி. அநுபவயோக்யமல்லாததுக்கு த்ருஷ்டாந்தம் - கண்ணுக்கு இத்யாதி. ஆனைக்குக்குதிரை வையாநின்றது - பிடிகொடுக்குமாபோலேயிருந்து பிடிகொடாதிருந்ததென்றபடி. க்ரமேணாந்வய:. (௮)

ஒன்பதாம் பாட்டு.

முன்னின்றாயென்றுதோழிமார்களும் அன்னையரும்முனிதிர்
மன்னுமாடத்திருக்குறுங்குடிநம்பியை நான்கண்டபின்
சென்னிநீண்முடியாதியாய உலப்பிலணிகலத்தன்
கன்னல்பாலமுதாகிவந்து என்னெஞ்சங்கழியானே.

ஆ.—(முன்னின்றாயென்று.) ஒருவராலும் காணவொண்ணாதபடிவர்த்திக்கும் ஸ்த்ரீத்வத்தை யுடையவளான நீ, கண்காணநிற்பதே! என்று தோழிமாரும் தாய்மாரும் திரளநின்று நலியாநின்றீர்கள். நித்யமாய்ச் செல்லுகிற மாடங்களையுடைய திருக்குறுங்குடிநம்பியை நான் கண்டபின், சென்னிநீண்முடியாதியாய் முடிவில்லாத திவ்யபூஷண ஸஞ்ஷயங்களுடைய சேர்த்தியாலே, கண்டசர்க்கரையும்பாலும் கலந்தாற்போலே நிரதிஶய போக்யனாய் என்னெஞ்சில் புகுந்து எனக்கு மறக்கவொண்ணாதபடி ஒருக்ஷணமும் என் ஹ்ருதயத்தைவிட்டுப் போகிறிலனென்கிறாள்.

ஒ.—ஒன்பதாம்பாட்டில், அழகெல்லாவற்றோடுங்கூட நம்பிவந்து என்னெஞ்சிலே புகுந்து எனக்கு மறக்கவொண்ணாதபடி ஒருக்ஷணமும் என்னெஞ்சைவிட்டுப் போறிலன் என்கிறாள்.

[முன் நின்றாயென்று தோழிமார்களும் அன்னையரும் முனிதிர்]-ஒருவராலும் காணவொண்ணாதபடி வர்த்திக்கும் ஸ்த்ரீத்வத்தையுடையையான நீ கண்காண நிற்பதே! என்று தோழிமாரும் தாய்மாரும் திரளநின்று நலியாநின்றிகோள். [மன்னுகை] - காலமுள்ளதனையும் செல்லுகை. உலப்பில்லாமை - முடிவில்லாமை. [கன்னல் என்றுதொடங்கி]-இப்பூஷணஸஞ்ஷயங்களுடைய சேர்த்தியாலே கண்டசர்க்கரையும் பாலும் கலந்தாற்போலே நிரதிஶயபோக்யனாய் என் ஹ்ருதயத்தைவிட்டுப் போகிறிலன்.

ப.—அநந்தரம், நம்பி அஸங்க்யேயாபரண ஶோபாவிஶிஷ்டத்வத்தாலே அதிஶயிதபோக்யனாய்க்கொண்டு என்னெஞ்சுவிட்டுப் போகிறிலனென்கிறாள்.

(அஸூர்யம் பஶ்யையாய்க்கொண்டு வளர்ந்த நீ, மநுஷ்யர்காண) முன்-முன்னே, நின்றாய்-நின்றாய், என்று-என்று, தோழிமார்களும் - (ஸமாநதுக்கைகளான) தோழிமாரும், அன்னையரும் - (ஹிதபரைகளான) தாய்மாரும், முனிதிர்- முனியாநின்றிகோள்; மன்னும் - ஸாஸ்த்திரமான, மாடம் - மாடங்களையுடைய, திருக்குறுங்குடிநம்பியை - திருக்குறுங்குடிநம்பியை, நான் - (ஸ்த்ரீத்வம்பேணாமல் புறம்பு புறப்படும்படியான) நான், கண்டபின் - கண்டபின்பு, சென்னி - உத்தமாங்கத்தில், நீள் - (ஆதிராஜ்யஸூசகமாய்) ஓங்கிய, முடி - திருவபிஷேகம், ஆதியாய் - முதலாய், உலப்பில் - அஸங்க்யேயமாய், அணி - அணியப்பட்ட, கலத்தன் - ஆபரணங்களையுடையவன், கன்னல் - கன்னலும், பால் - பாலும், அமுது - அமுதமும்போலே, ஆகி - நிரதிஶயபோக்யனாய்க்கொண்டு, வந்து - வந்து, என் - என், நெஞ்சம் - நெஞ்சை, கழியான் - விட்டுப்போகிறிலன்.

இ.—ஒன்பதாம் பாட்டில், நம்பி, போக்யதையெல்லாவற்றோடுங்கூட என் நெஞ்சிலே புகுந்து விடுகிறிலனென்கிறாள்.

[முன்நின்றாயென்று] - ஒருவராலும் காணவொண்ணாதபடி வர்த்திக்கும் ஸ்த்ரீத்வத்தையுடையவளாயிற்று இவள்; "யாநஸக்ர்யாவாராதூஷ்டும் ஹஸ்தெதாராக

ஸ்கைரபி" என்னும்படி இருக்குமவளிறே. துணையாவாரோடு பொடிவாரோடு வாசியறப் பொடியத் தொடங்கிற்று. [மன்னுமாடம்] - ப்ரளயாந்தஸ்த்திரமான மாடமென்று தோற்றும்படியிருக்கை. "நப்லாவயதிஸாகர:". [நான்] - லஜ்ஜையைக்கைவிட்ட நான். [சென்னி நீண்முடி இத்யாதி] - சென்னியில் ஆதிராஜ்யஸூசகமான திருவபிஷேகந்தொடக்கமான அஸங்க்யாத திவ்யாபரணத்தையுடையவன். [கன்னல்பாலமுதாகி] - ஸர்வ ரஸங்களுடைய சேர்த்தியால் கண்டசர்க்கரையும் சேலப்பாலும் கலந்தாற்போலேயாய். [வந்தென்னெஞ்சங்கழியானே] - வந்து என் நெஞ்சினின்றும் போகிறிலன். முன் நிறுத்தினுரைத் தவிர்க்கமாட்டாதே முன்னே நின்றேனென்று என்னைப்பொடியுமத்தனையோ. எனக்கு மறக்கை தேட்டம், முடியாமை இருக்கிறேனித்தனை.

ஈடு.—ஒன்பதாம்பாட்டு. நம்பி, போக்யதைகளெல்லாவற்றோடுங்கூட என் நெஞ்சிலே புகுந்து விடுகிறிலனென்கிறாள்.

[முன்னின்றாயென்று] - தோழிமார்முன்புங்கூட நின்றறியாள்போலேகாணும் இவள்தான். "யாநஸக்யாபுராத்ரஷ்டும் பூதைராகாஸகைரபி" (யாநஸக்யாபுராத்ரஷ்டும் பூதைராகாஸகைரபி) என்னும்படியிருக்குமவளிறே இவள்தான். இவள்துணிவைக்கண்டவாறே, உகப்பாரோடு, பொடிவாரோடுவாசியறப் பொடியத்தொடங்கிற்று. [மன்னுமாடம்] - "வாஸுதேவக்ருஹம்த்வேகம் நப்லாவயதிஸாகர:" (வாஸுதேவக்ருஹம்த்வேகம்நப்லாவயதிஸாகர:) என்கிறபடியே, ப்ரளயாதிகளிலுங்கூட அழியாதென்றிருக்கிறாள். [நான்கண்டபின்] - பிற்காலியாதபடியான நான். லஜ்ஜை குடிபோன நான். [சென்னி இத்யாதி] - தலையான முடிதொடக்கமான முடிவில்லாத ஆபரணங்களையுடையவன். சென்னியிலுண்டான ஆதிராஜ்யஸூசகமான திருவபிஷேகந் தொடக்கமான எண்ணிறந்த திவ்யாபரணங்களை யுடையவன். [அணிகலன்] - சேர்த்தி

ஒன்பதாம்பாட்டு.— முன்னின்றாய் இத்யாதி. "கன்னல்பாலமுதாகி" இத்யாதியைக் கடாக்ஷித்து அவதாரிகை - நம்பிபோக்யதை இத்யாதி.

இப்போது, "முன்னின்றாய்" என்கையாலே - பூர்வம் இவர்கள்முன் நின்றறியாளென்றபடி. ஒருவர்முன்பும் நின்றறியாமைக்கு ப்ரமாணம் - யாநஸக்யா இத்யாதி. "யாநஸக்யாபுராத்ரஷ்டும் பூதைராகாஸகைரபி । தாமத்ய ஸம்ப்ரபஸ்யந்தி ராஜமார்க்கதா ஜநா:॥அ॥" இத்யயோத்யாகாண்டே (௩௩) ஸர்க்கே. இவளுகப்பைப் பின்செல்லுகிற தோழியார்களும் தாய்மாரோடொக்கப் பொடியலாமோ? என்ன - இவள்துணிவை இத்யாதி. அதாவது - "ஸுஹ்ருதஸ்ச ப்ரஹ்ருஷ்டாஸ்ச ஸந்தோ நிந்தந்தி ..." என்னுமத்தாலே பொடிகிறாளென்றபடி. மன்னுகை - பொருந்துகையாய், அதாவது - ஸர்வகாலத்தோடும் பொருந்துகையென்று விவக்ஷித்து அருளிச்செய்கிறார் - வாஸுதேவக்ருஹம் இத்யாதி. "ப்லாவயாமாஸ தாம் ஸூந்யாம் த்வாரகாஞ்ச மஹோததி: । வாஸுதேவக்ருஹம்த்வேகம் நப்லாவயதிஸாகர:॥ கூ॥" இதி ஸ்ரீவிஷ்ணுபுராணே பஞ்சமாம்ஸே ஷட்த்ரிம்ஸே. "முன்னின்றாய்" என்றத்தைக்கடாக்ஷித்து - பிற்காலியாத இத்யாதி. விவரணம் - லஜ்ஜை இத்யாதி. "சென்னி" என்றதுக்கு அர்த்தாந்தரமாதல், விவரணமாதல் - சென்னியில் இத்யாதி. அர்த்தாந்தரமானபோது, முந்தினவர்த்தம்; "சென்னி" என்று - தலையாய், சென்னியானமுடி - தலையானமுடி. ஸ்ரேஷ்டமான முடியென்று. சென்னியிலுண்டான இதி த்விதீயார்த்த:. அணிகலத்தன் - அணியப்பட்ட - சாத்தப்பட்ட, திருவாபரணங்களையுடையவன். கலத்தன் என்னாதே, "அணியப்பட்ட" என்று விசேஷித்

யிருக்கிறபடி. [கன்னல்பாலமுதாகி]-ஸர்வரஸத்துக்கும் உபலக்ஷணம். [வந்து இத்யாதி] - வந்து என்னெஞ்சினின்றும் போகிறிலன். முன்னேநிறுத்தினவனைப் பொடியமாட்டார்கள்; "பெற்றோம், பிழைத்தோம்" என்று, "முன்னின்றாய்" என்று என்னைப் பொடியு மித்தனை காணும் இவர்கள்வல்லது. எனக்கு மறக்கைதேட்டம், முடியாமையிருக்கிறேனத்தனை. (௯)

பத்தாம் பாட்டு.

கழியமிக்கதோர்காதலளிவளென்று அன்னைகாணகொடாள்
வழுவில்கீர்த்தித்திருக்குறுங்குடிநம்பியை நான்கண்டபின்
குழுமித்தேவர்குழாங்கள் கைதொழச்சோதிவெள்ளத்தினுள்ளே
எழுவதோருருவென்னெஞ்சுள்ளெழும் ஆர்க்குமறிவரிதே.

ஆ.—(கழிய.) லோகத்தில் தங்களுக்கு அஹிமதரைப் பிரிந்தால் நாட்செல்ல நாட்செல்ல ஸ்நேஹம் குறையக்கடவதாயிருக்க, இவளுக்கு வர்த்திப்பாநின்றதென்று தாயாரானவள் நம்பியை அநுஸந்திக்க வொட்டுகிறிலள். பூர்ணையான கீர்த்தியையுடைய திருக்குறுங்குடிநம்பியை நான் கண்டபின்; * அயர்வறு மமரர்களுடைய ஸமூஹங்கள் திரண்டநுபவிக்க, அழகுவெள்ளத்தின் நடுவே உஜ்ஜ்வலமாய்த் தோற்றுகிற விலக்ஷணமான நம்பியுடைய திருமேனி என்னெஞ்சிலே ப்ரகாசிக்கிறபடி ஒருவர்க்கும் கோசரமன்றென்கிறாள்.

ஒ.—பத்தாம்பாட்டில், நம்பியுடைய திருமேனி என்னெஞ்சிலே ப்ரகாசிக்கிறபடி ஒருவர்க்கும் கோசரமன்று என்கிறாள்.

[கழிய என்றுதொடங்கி] - லோகத்தில் தங்களுக்கு அஹிமதரைப் பிரிந்தால் நாட்செல்லநாட்செல்ல ஸ்நேஹம் குறையக்கடவதாயிருக்க, இவளுக்கு வர்த்திப்பாநின்றது என்று தாயாரானவள் நம்பியை அநுஸந்திக்க வொட்டுகிறிலள். [வழுவில்கீர்த்தி] - பூர்ணமான கீர்த்தி. [குழுமித்தேவர் என்றுதொடங்கி] - அயர்வறுமமரர்களுடைய ஸமூஹங்கள் திரண்டு அநுபவிக்க அழகுவெள்ளத்தின்நடுவே உஜ்ஜ்வலமாய்த் தோற்றுகிற விலக்ஷணமான திருவடிவு என்னுடைய ஹ்ருதயத்திலே விகஸியாநின்றது. ஒருருவென்று - அது கிட்டினவாறே "இன்னதென்றறியேன்" என்னுமாபோலே கலங்கி நிலையிடவொண்ணாமை.

ப.—அநந்தரம், நித்யஸூரி போக்யமாய் அத்யுஜ்ஜ்வலமான ப்ராப்ய விக்ரஹமானது அநந்ய கோசரமாம்படி என் அகவாயிலே ப்ரகாசியாநின்றதென்கிறாள்.

தத்துக்கு பாவம் - அணிகலன்-சேர்த்தியிருக்கிறபடி யென்று. யத்வா, "கன்னல்பாலமுதாகி" என்கிறதுக்கு அவதாரிகையாதல் - சேர்த்தியிருக்கிறபடி என்றது. அவதாரிகையானபோது, பூஷ்யபூஷணங்களின்சேர்த்தி, கன்னலும் பாலும் கலந்தாற்போலே போக்யமாயிருக்கிறதென்றபடி. முன்னே நிறுத்தினவனை - தான் என்னெஞ்சுக்குள்ளேயிருந்து உங்கள்முன்னே நிறுத்தினவனை. "என்னெஞ்சங்கழியானே" என்கிற அவதாரணத்துக்கு பாவம் - எனக்குமறக்கை இத்யாதி. முடியாமை - இடையாமை, க்ரமேணாந்வய:. (௯)

இவள் - இவள், கழிய - கைகழிய, மிக்கதோர் - விஞ்சின, காதலள் - காதலையுடையவளானாள், என்று - என்று, அன்னை - அன்னையானவள், காண - (நம்பியைக்) காண, கொடாள் - இடந்தருகிறிலள், (ஆஶ்ரிதரை அநர்ஹராக்கும்), வழுவில் - அவிகலமான, கீர்த்தி - கீர்த்தியையுடைய, திருக்குறுங்குடிநம்பியை - திருக்குறுங்குடி நம்பியை, நான் - (அபிநிவேஶாதிஶயத்தையுடைய)நான், கண்டபின் - கண்டபின், தேவர்குழாங்கள் - ஸூரிஸங்கங்களானவை, குழுமி - பரஸ்பரம் ஸங்கீபவித்து, கைதொழ - ஶேஷவ்ருத்திபண்ணி அநுபவிக்கும்படி, சோதிவெள்ளத்தினுள்ளே - தேஜோராஶிமத்யத்திலே, எழுவது - உச்ச்ரிதமாய்த் தோற்றுகிற, ஓர் - அத்விதீயமான, உரு - ப்ராப்யவிக்ரஹமானது, (அப்படியே), என் - என், நெஞ்சுள் - நெஞ்சுக்குள்ளே, எழும் - தோன்றாநின்றது; (இது), ஆர்க்கும் - எத்தனையேனும் அறிவுடையார்க்கும், அறிவு - (ஸ்வயத்நத்தால்) அறிய, அரிது - அரிது.

இ.—பத்தாம்பாட்டில், நம்பியுடைய திருமேனி என்னெஞ்சிலே ப்ரகாஶிக்கிறபடி ஒருவர்க்கும் கோசரமன்றென்கிறாள்.

[கழியமிக்கதோர்காதல்] - அளவற விஞ்சின காதலென்னுதல், நாள்கழியக் கழிய விஞ்சினகாதலென்னுதல். "ஶோகஸ்யைககாரணம் ஹ்ருதயஸ்திதி। ஐவாபஸ்ருதஃகாஷா ஹ்ருஹநிவயபதே". [அன்னைகாணகொடாள்] - தாயார் நம்பியை நினைக்கவும் விட்டுக்கொடாள். "ஒருவிஷயத்திலே ப்ரவணையாகக் காணவல்லேனே" என்றிருந்தவள், நெஞ்சையும் காவலிடாநின்றாள். க்ருஷிபண்ணினவள்தானே நிஷேதிக்கிறது தர்மிலோபம் வருமளவாகையாலே. [வழுவில்கீர்த்தி] - குறைவற்றகீர்த்தி. [நான்] - கீர்த்திபோலே ப்ருதக்ஸ்திதியில்லாதநான். [குழுமி இத்யாதி] - நித்யஸூரிகளுடைய ஸமூஹங்கள் திரண்டு அநுபவிக்க. திண்ணகத்திலிழிவாரைப்போலே திரள்திரளாக வாயிற்று இழிவது. [சோதி இத்யாதி] - அழகுவெள்ளத்தின்நடுவே உஜ்ஜ்வலமாய்த் தோற்றுகிற அத்விதீயமான விக்ரஹம். "இன்னதொன்றறியேன்" என்கிறபடியே நித்யாபூர்வமாயிருக்கும் வடிவு. "தேஜஸாம்ராஶிமூர்ஜிதம்". [என்னெஞ்சுள்ளெழும்] - அத்திரளோடே அவ்வடிவு என்னெஞ்சிலே ப்ரகாஶியாநின்றது. அது நாங்கள் காண்கிறிலோமீ! என்ன,— [ஆர்க்குமறிவரிதே] - ஸ்வயத்நத்தாலே காண்பார்க்கும் அறியவொண்ணாது, த்வரையில்லாதார்க்கும் அறியவொண்ணாது. எனக்கு மறக்கவொண்ணாதாப்போலே பிறர்க்கு நினைக்கவொண்ணாது.

ஈடு.—பத்தாம்பாட்டு. நம்பியுடைய திருமேனி என் நெஞ்சிலே ப்ராகாஶிக்கிறபடி ஒருவர்க்கும் கோசரமன்றென்கிறாள்.

[கழியமிக்கதோர் காதலளிவள்] - இதர விஸஜாதீயமான காதல்; அன்றிக்கே, நாள்கழியக்கழியப் பெருகிவருகிற காதலென்னுதல்; **"ஶோகஸ்யைககாரணம் ஹ்ருதயஸ்திதி। ஐவாபஸ்ருதஃகாஷா ஹ்ருஹநிவயபதே"** (ஶோகஶ்சகில

பத்தாம்பாட்டு.—கழிய இத்யாதி. நாலாம்பதத்தைக் கடாக்ஷித்து அவதாரிகை - நம்பியுடைய திருமேனி இத்யாதி.

முந்தின அர்த்தம் - லோகத்தைக்கடந்த மிகுதியானகாதலென்று. அதாவது - இதரவிஸஜாதீயமான காதல் என்றபடி. "நாள்கழியக்கழியப் பெருகிவரும்" என்றதுக்கு த்ருஷ்டாந்தம் - ஶோகஸ்ய இத்யாதி. "ஶோகஸ்யைககாரணம் ஹ்ருதயஸ்திதி। ஐவாபஸ்ருதஃ

காலேநகச்சதாஹ்யபகச்சதி- மமசாபஶ்யதஃகாந்தாமஹந்யஹநிவர்த்ததே) - நாட்டார் அஹி மதவிஷயத்தைப்பிரிந்தநாள் ஒருபடியாய், பின்போருபடியாய், பின்னைத் தானே மறந்து போகாநிற்பர்கள் ; எனக்கு அங்ஙனன்றிக்கே, நாள்சேல்லச்சேல்ல மோகம் பெருகிவாரா நின்றது. [அன்னைகாணகோடாள்] - "இவளோருவிஷயத்திலே காதல்பண்ணக் கண் டேனுகவல்லேனே" என்றிருக்கு மவளும் காணவேண்டுகிறிலள். ஆனுல் இப்போது இங் ஙன் படுகிறதேன் ? என்னில், — யர்மிலோபம்வரும்படி ப்ரவணையாக வோட்டாளே, "ஆஶ்ரயமுண்டாய் மேல் நடக்கவேணும்" என்றிருக்குமே. காண்கையாகிறது - அநு ஸந்திக்கை. § "நேஞ்சேன்னுமுட்கண்" என்னக்கடவதிறே. நேஞ்சையுங்கூட வாய்கட்டா நின்ருள். [வழுவில் இத்யாதி] - குறைவற்ற கீர்த்தியையுடைய. [நான்] - அக்கீர்த்திக்குப் பிரித்து ஸ்திதியில்லாதாப்போலே, அவனையோழியத் தனித்து ஸ்திதியில்லாத நான். [கண்டபின்] - இவர்க்கு இப்போது காட்சியாவதுதான் ஏதேன்னில், — அடியில் * போய்நின்றஞானந்தோடங்கி *முனியேநான்முகனளவும்சேல்ல ஏகவாக்யமிறே, நடு வுள்ளவை அநுஹவப்ரகாரங்களால் பிறக்கிற விஶேஷங்களிறே. [குழுமி இத்யாதி] - நித்யஸூரிகளுடைய திரளானவை, கிண்ணகத்தில் இழிவாரைப்போலே கைகோத் துக்கோண்டு இழியும்படி. [சோதிவேள்ளத்தினுள்ளே யேழுவதோருரு] - "தேஜஸாம் ராஶிமூர்ஜிதம்" (தேஜஸாம்ராஶிமூர்ஜிதம்) தேஜஸ்ஸின் நடுவே உந்நேயமாயாயிற்று வடிவிருப்பது. [என்னேஞ்சுள்ளேழும்] - நித்யஸூரிகள் நடுவே தோன்றுமாபோலே என் நேஞ்சுக்குள்ளே ப்ரகாஶியாநின்றது. † (அது நாங்கள் காண்கிறிலோமீ! என்ன) [ஆர்க்குமறி வரிதே] - † (ஸ்வயத்நத்தால் காண்பார்க்கும் அறியவோண்ணுது, த்வரையில்லாதார்க்கும் அறியவோண்ணுது.) எனக்கு மறக்கவோண்ணுதாப்போலேயாயிற்று ஸ்வயத்நத்தாலறி வார்க்கும் அறியவோண்ணுதிருக்கிறபடியும். (கo)

ப்ர:—(சோதிவேள்ளத்தினுள்ளே எழுவதோருரு)—ஶ்ரீவிஷ்ணுபுராணே ப்ரதமேம்ஶே நவமே, "தம்ஸ்ருஷ்டாஶேஷதேஜாம்ஸி ஸ்வஸ்ருஷ்டாயா: ப்ரஸந்நவக்த்ராஸ்ஸந்தோ தேஜஸாம்ராஶிமூர்ஜிதம்॥ கூள॥"

காஞ்சநா ஶேஷநிவயபூர்வம்॥ ॥" இதி ஶ்ரோகானுவந்து ராஶி:. "ஶஶ" என்ற சசாரம் துஶப்தார்த்தமாக்கி - எனக்கு அங்ஙனன்றிக்கே என்கிறது. இங்ஙன் படுகிறதேன்? என்னில்- காதல் மிக்கால் காணவோட்டாமல் படுகிறதேன்? என்னில். "காண" என்கிற இதுக்கு அநுஸந் திக்கை அர்த்தமாஞல், நினைக்கவோட்டாளென்னுமல், "காணகோடாள்" என்பானேன் ? என்ன - நேஞ்சேன்னும் இத்யாதி. நேஞ்சாகிற ஆந்தரத்ருஷ்டி இத்யர்த்த:. § பேரிய திருவந்தாதி, இருபத் தெட்டாம்பாட்டு, "அன்றே நங்கண்காணும்" இத்யாதி. ஏகவாக்யமிறே - மாநஸாநுபவமென்று ஏகவாக்யமிறே. ஆனுல் "பெற்றொழிந்தேன்" "கண்டுகோண்டுய்ந்தொழிந்தேன்" என்று சொன்ன துக்கு ஸ்வபமேதென்ன - நடுவுள்ளவை இத்யாதி. "தேவர்குழாங்கள் - குழுமி" இத்யந்வய:. குழுமி- ஸங்கீபவித்து. எழுவது - உந்நேயம். "என்னேஞ்சுள்ளேழும் ஆர்க்கும் அறிவரிதே" என்றதுக்கு, அவதாரிகையிற்சொன்ன அர்த்தமன்றிக்கே அர்த்தாந்தரம் - எனக்கு மறக்க இத்யாதி. இவள் - கழியமிக்க இத்யாரப்ய, தேவர்குழாங்கள் - குழுமி - கைதொழ இத்யாரப்யாந்வய:. (கo)

---

† குண்டலிதக்ரந்தங்களிரண்டும் க்வாசித்கம். வ்யாக்யாநத்துக்குச் சேராது.

பதினோராம் பாட்டு.

அறிவரியபிரானை ஆழியங்கையனையேயலற்றி
நறியநன்மலர்நாடி நன்குருகூர்ச்சடகோபன்சொன்ன
குறிகொளாயிரத்துள்ளிவைபத்தும் திருக்குறுங்குடியதன்மேல்
அறியக்கற்றுவல்லார்வைட்டணவர் ஆழ்கடல்ஞாலத்துள்ளே.

ஆ.—(அறிவரிய.) கையுந்திருவாழியுமாயிருக்கிற தன்னுடைய திருவழகு ஒருவர்க்கும் அறியவொண்ணாதபடியாயிருக்கிற மஹோபகாரகனை அவ்வுபகார ஜநித ப்ரீதி ப்ரகர்ஷத்தாலே பரவசராய் அலற்றி, மிகவும் பரிமளத்தையுடைய செவ்விப் பூவைக்கொண்டு, நம்பியுடைய திருவழகை முட்டக்காண்கைக்கீடான ப்ரஜ்ஞாவத்தையுடைய ஆழ்வார் அருளிச்செய்த, ஸகலதிவ்யலாஞ்சநவிஷயமான ஆயிரந்திருவாய்மொழியிலும், ஸௌந்தர்ய ஸௌசீல்யாதிகளால் திருநாட்டிலும் அவதாராதிகளிற்காட்டிலும் பரத்வமுள்ளது நம்பிபக்கலிலே யென்று உபபாதித்த இத்திருவாய்மொழியை வ்யக்தமாக அப்யஸித்தவர்கள் ஸம்ஸாரத்திலிருந்துவைத்தே வைஷ்ணவர்களென்கிறார்.

ஒ.—நிகமத்தில், இத்திருவாய்மொழி யப்யஸித்தவர்கள் ஸம்ஸாரத்திலே இருந்துவைத்தே வைஷ்ணவர்கள் என்கிறார்.

[அறிவரிய என்றுதொடங்கி] - கையுந்திருவாழியுமாயிருக்கிற தன்னுடைய திருவழகு ஒருவர்க்கும் † தெரியாதபடியாயிருக்கிற மஹோபகாரகனை அவ்வுபகாரஜநித ப்ரீதிப்ரகர்ஷத்தாலே பரவசராய் அலற்றி. [நறிய என்றுதொடங்கி] - மிகவும் பரிமளத்தையுடைய செவ்விப்பூவாகக்கொண்டு நம்பியுடைய திருவழகை முட்டக்காண்கைக்கீடான ப்ரஜ்ஞாவத்தையுடைய ஆழ்வார் அருளிச்செய்த அவனுடைய திவ்யலாஞ்சநங்களை அநுஸந்தித்த ஆயிரந்திருவாய்மொழியிலும், ஸௌந்தர்யசீலாதிகளால் திருநாட்டிலும் அவதாராதிகளிலும் பரத்வமுள்ளது நம்பிபக்கலிலே என்று உபபாதித்த இத்திருவாய்மொழியை வ்யக்தமாகக் கற்றிருக்குமவர்கள்.

ப.—அநந்தரம், இத்திருவாய்மொழியை அப்யஸித்தவர்களுக்குஸகவச்சேஷத்வமாகிற ஸ்வரூபலாபம் ஃபலமாகவருளிச்செய்கிறார்.

(ஸ்வஸாமர்த்யத்தால் அறிய நினைத்திருப்பார்க்கு), அறிவு - அறிய, அரிய- ஒண்ணாதபடியான, பிரானை - ஸ்வாமியாய், ஆழி-(அதுக்குஸத்ருசமான) திருவாழியை, அம்-அழகிய, கையனை - திருக்கையிலேயுடையவனை, அலற்றி - (ப்ரேமபாரவச்யந் தோற்றும்படி) அலற்றி, நறிய - பரிமளோத்தரமாய், நல்-ச்லாக்யமான, மலர் - புஷ்பங்களைப்போலே, நாடி - ஆராய்ந்து, நன் - அநுபவயோக்யமான ஜ்ஞாநாதிவைலக்ஷண்யத்தையுடையராய், குருகூர் - திருநகரிக்கு நிர்வாஹகரான, சடகோபன் - ஆழ்வார், சொன்ன - அருளிச்செய்த, ஆயிரத்துள் - ஆயிரத்துள், குறி- ஆயுதாவயவாபரணரூப சிஹ்நங்களை, கொள் - உடைய, திருக்குறுங்குடியதன்மேல்,— இவைபத்தும் - இவை பத்தையும், அறிய - ஜ்ஞாநப்ரகாசம்பிறக்கும்படி, கற்று - அப்யஸித்து, வல்லார் -

---

† 'அறியவொண்ணாதபடியாயிருக்கிற' என்றும் பாடங்காண்கிறது.

அர்த்தாநுஸந்தாநம் பண்ணவல்லவர்கள், ஆழ் - அகாதமான, கடல் - கடல்சூழ்ந்த, ஞாலத்துள்ளே - பூமிக்குள்ளே, வைட்டணவர் - பகவதஸாதாரணஸம்பந்தாநுபவ தத்பராய்க்கொண்டு வர்த்திப்பர்கள். நன்குருகூரென்று - ஊரழகாகவுமாம். இது - அறுசீராசிரியவிருத்தம்.

இ.— நிகமத்தில், இத்திருவாய்மொழியப்யஸிப்பார் ஸம்ஸாரத்திலேயிருந்தே வைஷ்ணவர்களென்கிறார்.

[அறிவரியபிரானை] - ஸ்வயத்நத்தாலே அறியுமவர்களால் அறியவொண்ணாதொழியப்பெற்றோமே யென்கிறார். இக்குடியிலுள்ளார் ஸ்வயத்நத்தால் அறியுமவர்களோ? என்னில்,—"இவளாலேமீளலாம்" என்று மீட்கப்பார்த்தபோதே, "தந்தாமாலே பெறவுமாம்" என்றிருந்தார்களாமிறே. [ஆழியங்கையனையேயலற்றி] - கையுந்திருவாழியுமான அழகையே சொல்லியாயிற்று இதிற்கூப்பிட்டது. முதலிலே "சங்கினோடும்நேமியோடும்" என்று, "வில்லும்தண்டும்வாளும்சக்கரமும்" என்று, "நேமியங்கையுளதே" என்று, இதுவேயாயிற்று எல்லாவற்றோடும் சேர்த்து அநுபவித்தது. [நறியநன்மலர்நாடி] - பரிமளிதமான செவ்விப்பூவாகப் பாட்டுக்களைத்தேடிக்கொண்டு. "சொன்மாலைகள்" என்றும், "அடிசூட்டலாகுமந்தாமமே" என்றும் சொல்லக்கடவதிறே. [நன்குருகூர்ச்சடகோபன்] - இவ்வூரில் ஜந்மமாயிற்று இவர்க்கு இப்ப்ராவண்யத்தை விளைத்தது. நம்பியுடையவழகை முட்டக்காணவல்ல ஆழ்வாரென்றுமாம். [சொன்னகுறிகொளாயிரத்துள்ளிவைபத்தும்] - அழகை மெய்க்காட்டுக்கொண்டுசொன்ன இப்பத்தென்னுதல், திவ்யலாஞ்சநங்களைச் சொன்ன இப்பத்தென்னுதல். [அறியக் கற்றுவல்லார்] - பரமபதத்திலும் அவதாரங்களிலும் திருக்குறுங்குடிநிலையிலே அழகாலும் ஶீலத்தாலுமுண்டான ஏற்றமறிந்து கற்கவல்லவர்கள். குணாதிக்யமிறே வஸ்துவுக்கு ஏற்றம். வ்யக்தமாகக்கற்கவல்லார்களென்றுமாம். [ஆழ்கடல்ஞாலத்துள்ளேவைட்டணவர்] - மருபூமியான ஸம்ஸாரத்திலே, உகந்தருளினநிலத்திலேற்றமறியுமவர்கள் நித்யஸூரிகளோடொப்பர்கள்.

ஈடு,—நிகமத்தில் - இத்திருவாய்மொழியை அப்யஸிக்கவல்லார் ஸம்ஸாரத்திலேயிருந்தே வைஷ்ணவர்களென்கிறார்.

[அறிவரியபிரானை]- நாம் பெறுதல் இழத்தல் செய்கிறோம், ஸ்வயத்நஸாத்யமன்றிக்கே யொழியப்பெற்றோமே முன்னம். வஸ்துதான் உண்டானால் நினைத்தபோது பெற்று அநுபவிக்கலாமிறே. இவர்கள் பின்னை ஸ்வயத்நத்தாலே அறியுமவர்களோ? என்னில்;—ஆகவேணுமிறே, "மீளலாம்"‡என்றிருந்தபோதே, "தந்தாமாலே யறியவுமாம்" என்றிருந்தார்களாமிறே. [ஆழியங்கையனையே யலற்றி] - "சங்கினோடும் நேமியோடும்" என்று

நிகமம்.— **அறிவரிய** இத்யாதி. நாலாம்பாதத்தைக்கடாக்ஷித்து - அவதாரிகை.

தாம் பெறுதிருக்கவும், அறிவரியனானமையைக்கொண்டு - "பிரான்" என்கிறதென்? என்ன - **நாம்பெறுதல்** இத்யாதி. ஸ்வயத்ந ஸாத்யனல்லாததுகொண்டு தனக்குலாபமேதென்ன - **வஸ்துதான்** இத்யாதி. இத்தால் - ஸ்வயத்நஸாத்யனன்றிக்கே யொழிந்தால் வஸ்துஸத்பாவத்துக்கு அழிவில்லாமையாலே, நினைத்தபோது அநுபவிக்கலாமென்றபடி. இவர்களென்றது - தாய்மாராகச் சொல்லப்படுகிற அத்யவஸாயநிஷ்டரை. **மீளலாம்** - மீட்கலாம். கைவிடாமலென்றது - சாடு; கையைவிடுகையும், விச்சேதிக்கையும். "ஆழியங்கையனையே" என்று - அவதரிக்கிறதென், "சங்கி

‡ 'என்றிருந்தாப்போலே' என்று பாடாந்தரம்.

தொடங்கினபடியே தலைக்கட்டுகிறார்.அவனைக்கைவிடாமல் அநுஸவிக்கவல்லார் இவரைப் போலில்லை. கையுந்திருவாழியுமானவழகை அல்லாதவழகுகளோடே சேர்த்து அநுஸவித்த வித்தனை - இதுக்குமுன்பெல்லாம்; கையுந்திருவாழியுமான அழகையாயிற்று உருவச்சொல்லிக் கூப்பிட்டது - இதில். [நறியநன்மலர்நாடி]-பரிமளத்தையுடைத்தாய் நன்றாயிருக்கிற புஷ்பங்களானவற்றைத் தேடிக்கொண்டு. "அடிசூட்டலாகுமந்தாமம்" என்னக்கடவதிறே. [நன்குருகூர்ச்சடகோபன்] - இக்காதலுண்டாகைக்கடி அவ்வூரில் பிறப்பாயிற்று. [குறிகொள் இத்யாதி] - ஆயிரத்திலும் வைத்துக்கொண்டு, நம்பியுடையவழகை மெய்க்காட்டுக்கொண்ட இப்பத்தும் திருக்குறுங்குடிவிஷயம். திவ்யாயுதங்களும் திவ்யாஸரணங்களும் சேர்ந்த சேர்த்தியாலுண்டான நம்பியுடையவழகைத் திரளச்சொன்ன பத்தும். † (திவ்யலாஞ்சநங்களைக்கொண்டு சொன்ன பத்தென்னவுமாம்.) இத்தை [அறியக்கற்றுவல்லார்]- கற்றறியவல்லார். அறிந்து கற்கையாவது - "ஸ்ரீவைகுண்டத்திலே நித்யஸூரிகள் நடுவேயிருக்கிற இருப்பிலுங்காட்டில், திருக்குறுங்குடியில் நிற்கிற நிலையிலே குணாதிக்யமுள்ளது" என்னுமிடத்தை யறிந்து அப்யஸிக்கவல்லவர்கள். வஸ்துவுக்கு குணத்தாலேயிறே உத்கர்ஷம்; அந்தகுணாதிக்யமெங்கேயுண்டு, அங்கேயிறே ஏற்றம். [ஆழ்கடல்ஞாலத்துள்ளே - வைட்டணவர்]-மருபூமியான ஸம்ஸாரத்திலே யிருக்கச்செய்தே நித்யஸூரிகளோடொக்கச் சொல்லலாம்படி யாவர்கள் உகந்தருளினநிலங்களில் வாசியறியுமவர்கள். (கக)

ளொடும் நேமியொடும்" இத்யாதியாலே - மற்றையாழ்வார்களோட்டைச் சேர்த்தியழகையும் இத்திருவாய்மொழியில் அநுபவிக்கவில்லையோ? என்ன - கையுந்திருவாழியுமான இத்யாதி. சேர்த்து - காதசிதகமாகச் சேர்த்து. இதுக்குமுன்பெல்லாம் - இத்திருவாய்மொழிக்கு முன்பெல்லாமென்னுதல், இப்பாட்டுக்கு முன்பெல்லாமென்னுதல். உருவ - அவிச்சிந்நமாக. புஷ்பங்களானவற்றை புஷ்பங்கள்போலேயிருக்கிற ஸூபதங்களை. பாட்டுக்கள் மாலையாயிருக்குமோ? என்ன - அடிசூட்டலாகும் இத்யாதி. அந்தாமம் - அடிசூட்டலாகுமென்று - அழகியமாலையை ஸமர்ப்பித்தால் எத்தனையுகப்புண்டு, அத்தனையுகப்புண்டு இத்திருவாய்மொழியை யநுஸந்தித்தால் ஈஸ்வரனுக்கு என்றபடி. இத்தால் - "அடிசூட்டலாகுமந்தாமம்" என்றதுக்கு - அவ்விடத்தில் அருளிச்செய்த அர்த்தமன்றிக்கே, இப்படியும் ஓரர்த்தம் விவக்ஷிதமென்று கண்டுகொள்வது. நன்மைக்கு அர்த்தம் - இக்காதல் இத்யாதி. குறிகொள் என்றது - குறியென்று - மெய்க்காட்டாய், அழகை மெய்க்காட்டுக்கொண்ட என்றபடி. மெய்க்காட்டுக்கொண்ட - விஶதமாக அறிவித்த. "குறி" என்று - ஆயுதாபரணரூப சிஹ்நமாய், அவற்றினுடைய சோத்தியால்வந்த அழகைச்சொன்ன இப்பத்தென்று அர்த்தாந்தரம் - திவ்யாயுதங்களும் இத்யாதி. ஆக, "குறிகொள் - இவைபத்தும்" என்றதுக்கு - மெய்க்காட்டுக்கொண்ட இவைபத்துமென்றும், ஆயுதாதிலாஞ்சநங்களையுடைய இவைபத்தென்றும் அர்த்தத்வயம். இவைபத்தும் லாஞ்சநங்களை யுடைத்தாகையாவது - ப்ரதிபாத்யதயா வுடைத்தாகையென்றபடி. தத்ப்ரதிபாதக மித்யர்த்த:. குணாதிக்யம் - ஸௌலப்யாதிகுணாதிக்யம். குணாதிக்யமேயோ உத்கர்ஷஹேது, மேன்மைவேண்டாவோ? என்ன - வஸ்துவுக்கு இத்யாதி. அறியக்கற்றுவல்லார் - ஜ்ஞாநப்ரகாசம்பிறக்கும்படி அப்யஸித்து அர்த்தாநுஸந்தாநம்பண்ண வல்லவர்களென்று ஸப்தார்த்தம். கற்றறியவல்லார் என்று வாக்யமிருந்ததாகில், அர்த்தாந்தரமாகக் கண்டுகொள்வது. க்ரமேணான்வய:.

த்ரவிடோபநிஷத்ஸங்கதி:— [illegible] ॥

---

† குண்டலிதம் க்வாசித்கம்.

த்ரவிடோபநிஷத்தாத்பர்யரத்நாவலி:— ஸ்வாங்கே சேஷ்ட்யாதியுக்தஸ்ரு ஷ்டாதிஸ்ரவிததயா ஸாத்ருஶ்யதோ வ்ருத்தஸ்யா பிம்போஷ்டாசேஷ்டிதாநா வ்யததிநிரவதி ஜ்யோதிரத்யத்புதைஸ்த்யை: நேத்ராப்ஜா சேஷ்டிதாயா ஶேஷாஹரண ஸாக்ஷியோ ஸ்வப்நஸம்ஸ்த்ருஷ்டநாஜ்ஞா சேஷ்டாஸ்வாபாவஜஸ்ரம் ஸ்பஷ்டிதவிஷயதயா ஹாதிவேதஸ்த்யாயீ॥

திருவாய்மொழி நூற்றந்தாதி.

எங்ஙனேநீர்முனிவது என்னையினிநம்பியழகு
இங்ஙனேதோன்றுகின்றதென்முன்னே - அங்ஙன்
உருவெளிப்பாடாவுரைத்ததமிழ்மாறன்
கருதுமவர்க்கின்பக்கடல்.

ஆழ்வார்திருவடிகளேஶரணம், எம்பெருமானார்திருவடிகளேஶரணம், ஜீயர்திருவடிகளேஶரணம்.

ஆறாந்திருவாய்மொழி— கடல்ஞாலம் : ப்ரவேஶம்.

ஆ.—(கடல்ஞாலம்.) இப்படி எம்பெருமானைப்பிரிந்த வ்யஸநமேமிக்கு அந்த வ்யஸநாதிஶயத்தாலே ஆத்மதாரணக்ஷமையன்றிக்கே யிருந்த பிராட்டி, ஆத்மதாரணார்த்தமாக "ஸ்ரீகோபிகளைப்போலே வண்துவரைப்பெருமானுடைய திவ்யசேஷ்டிதங்களையும், மற்றும் ஜகத்ஸ்ருஷ்ட்யாதி வ்யாபாரங்களையும் அநுகரித்துதரிப்போம்" என்று அதிலேயொருப்பட, இவள்படியைக்கண்ட திருத்தாயார், "இவள்சொல்லுகிற பாசுரங்கள் ஆஶ்சர்யமாயிராநின்றன, இவள்பக்கல் எம்பெருமான் ஆவேஶித்தானாகாதே, இவளுடைய அதிலோகமான ப்ரவ்ருத்திகள் 'இன்னபடி' என்று அத்யவஸிக்க முடிகிறதில்லை" என்று, வினவவந்தவர்களை நோக்கிச் சொல்லுகிறாள்.

ஒ.—ஆறாந்திருவாய்மொழியில், கீழில் திருவாய்மொழியில் சென்ற வ்யஸநமே தலையெடுத்து ஆத்மதாரணம் பண்ணமுடியாமையாலே "ஸ்ரீகோபிகளைப்போலே க்ருஷ்ணனுடைய சேஷ்டிதாதிகளையும் மற்றும் ஜகத்ஸ்ருஷ்ட்யாதி திவ்யவ்யாபாரங்களையும் அநுகரித்து தரிப்பேன்" என்று அதிலே உபக்ராந்தையான இவள்தசையை அநுஸந்தித்து, "இவள் தனக்கு தாரணார்த்தமாக அநுகரிக்கிறாள்" என்று தன்கலக்கத்தாலே துணியமாட்டாதே, "இந்த விகாரம் மந்த்ரௌஷதாதிகளால் பிறந்ததோ? தனக்குத்தானே பிறந்ததோ?" என்று இப்புடைகளாலே பலஶங்கைகளைப் பண்ணி கீதாசார்யனான க்ருஷ்ணனோட்டை வசநவ்யக்தி ஸாதர்ம்யத்தாலும் அவனுடைய ஜ்ஞாநமுத்ரா நிரீக்ஷணாதிகளோடு உண்டான ஸாதர்ம்யத்தாலுமாக "எம்பெருமான் இவள்பக்கலிலே ஆவேசிக்கையாலே அவனுடைய பேச்சைப் பேசுகிறாப்போலே யிருந்தது, இவளுடைய அதிலோகமான ப்ரவ்ருத்திகள் இன்னபடி யென்று அத்யவஸிக்க முடிகிறதில்லை" என்று வினவவந்தவர்களை நோக்கித் திருத்தாயார் சொல்லுகிறாள். இடைப்பெண்களைப்போலே சேஷ்டாநுகாரக்ஷமை யல்லாமையாலே ஸ்ரீகீதையில் விபூத்யத்யாயப்படியே ப்ராசுர்யேண அநுகரிக்கிறாள்.

ப.—ஆறாந்திருவாய்மொழியில், கீழ் - ஆந்தராநுபவப்ரீதி நடக்கச்செய்தே பாஹ்யஸம்ஶ்லேஷாலாபத்தாலே அப்ரீதியுங்கலந்து நடந்தவித்து, பாவநாப்ரகர்ஷத்தாலே அலாபநிபந்தநமான ஆர்த்தியே விஞ்சும்படி அதிஶயிதாபிநிவேஶம்பிறந்து, பகவத்தாதாத்ம்யப்ரதிபத்தி பிறக்கும்படி பாவனைமுதிர ; ஸர்வநிர்வாஹகனான ஸர்வேஶ்வரனுடைய ஜகத்ஸ்ருஷ்ட்யாதி வ்யாபாரங்களும், தத்ப்ரதிபாதகமான வித்யாஸ்தலங்களும், ஜகத்துக்கு ப்ரதாநகாரணபூதமான மஹாபூதங்களும், ஸகலக்ரியைகளும், ஜகத்விஷயரக்ஷணவ்யாபாரங்களும், அவதாரசேஷ்டிதங்களும், ஜகத்திலுண்டான ஸமஸ்தபந்துவர்க்கமும், ப்ரஹ்மாதிகளான தேவர்ஷிவர்க்கமும், புண்யபாபரூபகர்மங்களும், ஸ்வர்க்கநரகாதிரூபபலங்களும் நானிட்டவழக்கென்று, அநுகாரரூபோக்தியைப்பண்ணும்படி இவர்க்கு அநந்யபாவனைபிறந்தபடிகண்ட பரிவரானவர்கள், ஜிஜ்ஞாஸுக்களான பார்ஶ்வஸ்தர்க்கு இவர்படியை அறிவித்தப்ரகாரத்தை ; பிரிவாற்றாமையால்வந்த பாவனையாலே க்ருஷ்ணாநுகாரம்பண்ணின கோபிமாரைப்போலே, நாயகனான ஈஶ்வரனுடைய ப்ரகாரங்களை அநுகரிக்கிற நாயகியுடைய ப்ரவ்ருத்திவிஶேஷங்களை நற்றாயானவள் வினவினார்க்குரைத்த பாசுரத்தாலே அருளிச்செய்கிறார்.

இ.—ஆறாந்திருவாய்மொழியில், கீழ் - ப்ரீத்யப்ரீதி ஸமமாய்ச் சென்றது, இதில் - அப்ரீத்யம்ஶமே தலையெடுத்து, ஸ்மரித்து தரித்ததுவும்போய், ஆத்மதாரணம் பண்ணமுடியாமையாலே அநுகரித்து தரித்த ஸ்ரீகோபிமாரைப்போலே அநுகாரமாய்ச் செல்லுகிற இவள்தஶையைக்கண்ட திருத்தாயார், "இவ்விகாரம் மந்த்ரௌஷதாதிகளாலே வந்ததோ, ஆற்றாமையாலே அநுகரித்து தரிக்கிறாளோ" என்று ஶங்கித்து, அவளுடைய வசநவ்யக்திஸாதர்ம்யத்தாலும் ஜ்ஞாநமுத்ராநிரீக்ஷணாதிஸாதர்ம்யத்தாலும், "ஈஶ்வரன் இவள்பக்கலிலே ஆவேஶித்தாப்போலே யிராநின்றது" என்று; இவள் ப்ரவ்ருத்திகளை "இன்னபடி" என்று அத்யவஸிக்கமாட்டாமையாலே, வினவவந்தவர்களை நோக்கிச் சொல்லுகிறாள். இடைப்பெண்களைப்போலே சேஷ்டாநுகாரமில்லாமையாலே, உக்த்யநுகாரமாய்ச் செல்லுகிறது ; மயர்வறமதிநலமருளப்பெறுகையாலே, அநுகாரம் அவர்களைப்போலே அவதாரத்தளவிலேயாய் ப்ராதேஶிகமன்றிக்கே ஸவிபூதிகனானவனை யநுகரிக்கையாய், விபூத்யத்யாயத்திற்சொன்னபடியே ப்ராசுர்யேண அநுகரிக்கிறாள். கீழில்திருவாய்மொழியில் - விக்ரஹவைலக்ஷண்யம் சொல்லிற்று, இதில் - அதுக்குள்ளான ஸ்வரூபத்தை அநுஸந்திக்கிறாள். தேஹாத்மாபிமாநம் முற்றினால் வேறொன்றுந்தோற்றாதாப்போலே, ப்ரகாரியான அவ்வளவுஞ்செல்லத் தன்னை யநுஸந்தித்த பாவநாப்ரகர்ஷத்தாலே 'அஹம் மநுரபவம் ஸூர்யஶ்ச', 'ஹாவு ஹாவு ஹாவு', "தத் ஸர்வம் ஸமாப்நோஷி" என்கிறபடியே அவன்பாசுரமேயாயிருக்கத்தட்டில்லை.

ஈடு.—கீழில்திருவாய்மொழியில் - ப்ரீத்யப்ரீதி ஸமமாயிறேசென்றது ; இரண்டுமாய்க்கலந்து சென்றால் ப்ரீதியே தலையெடுக்கவுமாமிறே, பாஹ்யஹாநியாலே அப்ரீத்யம்ஶமே தலையெடுத்தது; கீழ் உருவெளிப்பாட்டாலே அவனை ஸ்மரித்துதரித்த அம்ஶமும்போய்,

---

கடல்ஞாலம் ப்ரவேஶே, வ்ருத்தகதநபூர்வகமாக வர்த்திஷ்யமாணஸங்கதி - கீழில்திருவாய்மொழியில் இத்யாதி. தலையெடுக்கவுமாமிறே என்றவநந்தரம், 'அதுசெய்யாதே' என்றுகூட்டுவது. தலையெடுத்தது என்றவநந்தரம், 'ஆகையாலே' என்றுகூட்டுவது. அநுகாரப்ரகாரமேதென்ன- ஓரோ இத்யாதி. இங்கு, அநுகாரமாவது - அவன்சொல்லும் வார்த்தையை யநுகரிக்கையென்று ஶாப்தமாயிருந்ததேயாகிலும், இந்தஶப்தாநுகாரம் - தத்பூர்வபாவியான ஜ்ஞாநமுத்ராநிரீக்ஷணாத்யநு

அலாஹத்தால்வரும் துவட்சியேயாயிற்று; இப்படி துவண்ட இவள் பிரிவாற்றாமையாலே அவனை யநுகரித்து யரிக்கப்பார்க்கிறாள். ஓரோ அர்த்தோபந்யாஸங்கள் பண்ணவிருப்பாரைப்போலே ஜ்ஞாநமுத்ரையுந்தானுமாய் ஶ்ரீதோபநிஷதாசார்யனைப்போலே யிருந்தாள்; இத்தைக்கண்ட திருத்தாயார், "இது ஏதேனும் மணிமந்த்ரௌஷதாதிகளாலேவந்த விகாரமோ?" என்று ஶங்கித்து, அங்ஙனேயொருபுடைகள் காணாமையாலே "அதல்ல" என்று அறிந்தாள்; இனி, "அவனைப்பிரிகையாலேவந்த ஆற்றாமையாலே அநுகரித்து யரிக்கிறாள்" என்று தெளியமாட்டிற்றிலள் தன்கலக்கத்தாலே; இவ்வளவிலேபுகுந்து "இது தான் என்?" என்று வினவப்புகுந்த பந்துக்களைப்பார்த்து திருத்தாயார்; அவனோட்டை வசநவ்யக்தி ஸாமர்ம்யத்தாலும் ஜ்ஞாநமுத்ராதிரீக்ஷணாதிகளிருந்தபடியாலும், ஸர்வேஶ்வரன் இவள்பக்கலிலே ஆவேஶித்தானாகவேணுமென்று சொல்லுகிறாள், "அநுகரித்து யரிக்கிறாள்" என்று அறியமாட்டாமையாலே. பிரிவாற்றாமையுண்டானால் அநுகரித்து யரிக்கக்கடவதிறே, க்ருஷ்ணனை அநுகரித்தார்களிறே திருவாய்ப்பாடியில் பெண்கள்; "க்ருஷ்ணோஹமேஷ லலிதம் வ்ரஜாம்யாலோக்யதாம் கதி:" (க்ருஷ்ணோஹமேஷலலிதம்வ்ரஜாம்யாலோக்ய தாம்கதி:) - நான் க்ருஷ்ணன், இங்ஙனேநடக்கப்புகாநின்றேன் நடைச்சக்ரவத்துப்பிடிக்க வேண்டும்படியாக; கண்படைத்தாரடையக் கண்டுகொள்ளுங்கோள் என்றாளிறே. "துஷ்டகாளீய திஷ்டாத்ர" (துஷ்டகாளீயதிஷ்ட்டாத்ர) - ஒருத்தி காளியனாய்க்கிடக்க,

---

ப்ர:—கடல்ஞாலம் ஶ்ரீவைஶே. (க்ருஷ்ணனை அநுகரித்தார்களிறே திருவாய்ப்பாடியில்பெண்கள்) — ஶ்ரீவிஷ்ணுபுராணே பஞ்சமேம்ஶே [௧௩] "கோபீஷு கதிர்ப்யாபிஷு க்ருஷ்ணசேஷ்டாஸ்வாயத்தமானஸா: । அந்யோந்யமூசு: க்ருஷ்ணஸ்ய சேஷ்டா: ... ॥ உச௨ ॥ க்ருஷ்ணோஹம் ... ஸர்வஸர்வம் ॥ உ௫ ॥ க்ருஷ்ணோஹமேஷ லலிதம் வ்ரஜாம்யாலோக்யதாம் கதி: । அந்யா ப்ரவீதி க்ருஷ்ணஸ்ய மம கீதிர்நிஶம்யதாம் ॥ உ௬ ॥ துஷ்டகாளீய திஷ்டாத்ர க்ருஷ்ணோஹமிதி சாபரா । பாஹுமாஸ்போட்ய க்ருஷ்ணஸ்ய லீலாஸர்வஸ்வமாததே ॥ உ௭ ॥ அந்யா ப்ரவீதி போ கோபா நிஶ்ஶங்கை: ஸ்தீயதாமிஹ । அலம் வ்ருஷ்டிபயேநாத்ர த்ருதோ கோவர்த்தநோ மயா ॥ உ௮ ॥ தேநுகோயம் மயா க்ஷிப்தோ விசரந்து யதேச்சயா । காவோ ப்ரவீதி சைவாந்யா க்ருஷ்ணலீலாநுகாரிணீ ॥ உ௯ ॥"

---

*காரத்துக்கும் உபலக்ஷணமென்றுவிவக்ஷிதம். அநுகரிக்கிறாளென்று தெளியவொண்ணாதோ? என்ன- இனிஅவனை இத்யாதி. தெளியமாட்டாள் என்றதுக்கு ஸ்வாபதேஶம் - *தனக்கும்தன் தன்மையறிவரியானைப்போலே, ஸ்வவைபவம் தமக்கும்தெரியாது என்றபடி. இது ஏழாம்பாட்டிலே வ்யக்தம். பந்துக்களையென்றது - "உற்றீர்கட்கு" என்றத்தைப்பற்ற. அவனோட்டைவசநவ்யக்தி ஸாமர்ம்யத்தாலும் - அவனுடைய உக்திகளைச்சொல்லுகையால்வந்த ஸாமர்ம்யத்தாலும். வசநவ்யக்தி - வசநஶரீரம். வசநமென்றபடி. அநுகரித்து யரிக்கவேணுமோ? என்ன - பிரிவாற்றாமை இத்யாதி. இதுக்கு உதாஹரணம் - க்ருஷ்ணனை இத்யாதி "க்ருஷ்ணோஹம் ... ஸர்வஸர்வம் । க்ருஷ்ணோஹமேஷ லலிதம் வ்ரஜாம்யாலோக்யதாம் கதி: । அந்யா ப்ரவீதி க்ருஷ்ணஸ்ய மம கீதிர்நிஶம்யதாம் । துஷ்டகாளீய திஷ்டாத்ர க்ருஷ்ணோஹமிதி சாபரா"*

ஒருத்தி க்ருஷ்ணனாய் ஏறி ஆடினளிறே. “ப்ரதிகூலனான காளியனானலாகாதோ க்ருஷ்ணனாகத்தன்னை அநுகரிக்கிற பெண்ணின்கால்பொடி படப்பெறில்” என்றிருந்தாள்; க்ருஷ்ணனானவள்தானும் இவளை “காளியன்” என்றே நினைத்துக் கண்ணற்றுத் துகைத்தாளிறே அநுகாரத்தில் மெய்ப்பாட்டாலே. அவர்கள் ஓரவதாரத்திலே அநுபவிக்கையாலே அங்குள்ளசேஷ்டிதங்களை அநுகரித்தார்கள், இவள் மயர்வறமதிநல மருளப்பெற்றவளாகையாலே உபயவிபூதியுக்தனை அநுகரிக்கிறாள். இங்கு - கால், நடைதாராமையாலே அங்குப்போலே காயிகமான அநுகாரமல்ல, வாசிகமாத்ரத்தாலேயாயிற்று அநுகரிக்கிறது. ஆக, “பிறப்பே பரதந்த்ரஜந்மத்திலே பிறந்தவள் பிறப்பே ஸ்வதந்த்ரனானவன் வார்த்தையும் சொல்லாநின்றாள், ஸ்த்ரீத்வத்துக்கு எல்லையான இவள் புருஷோத்தமன்சொல்லும் வார்த்தையையும் சொல்லாநின்றாள்; அறிவுக்குவிஷயம் வ்யவஸ்திதமாயிருக்க, ஸர்வஜ்ஞன் சொல்லும் வார்த்தையைச் சொல்லாநின்றாள்” என்றுகொண்டு; இவள்செய்கிறபடிகளைத் திருத்தாயார், வினவப்புகுந்தவர்களுக்குச் சொல்லுகிறாள்.

கீழில்திருவாய்மொழியில் - உருவெளிப்பாட்டாலே அநுபவித்தது விக்ரஹவைலக்ஷண்யத்தையிறே, அதுவேயிறே ஸுபாஸ்ரயம்,†(தேஹாத்மாபிமாநம் முற்றினால் வேறொன்றுதோற்றாதாப்போலே, ப்ரகாரியான அவனளவும்செல்லத் தன்னையநுஸந்தித்த பாவநாப்ரகர்ஷத்தாலே அவன்தானாகப்பேசுகிறாள்.) அத்தையிறே பாவித்தது. பாவநாப்ர

ஐதிஹ்யாதிவசனங்களுடைய அர்த்தம். நடைச்சக்ரவத்துப்பிடிக்கையாவது - “நடைச்சக்ரவர்த்தி வந்தான்” என்று விருதுபிடிக்கை. விரோதியான காளியனாகலாமோ? என்ன - ப்ரதிகூலனான இத்யாதி. க்ருஷ்ணனானவள் துகைக்கலாமோ? என்ன - க்ருஷ்ணனானவள் இத்யாதி. ஆனால் அவர்களைப்போலே ஓரவதாரத்தை அநுகரியாதே பரத்வத்தை அநுசரிப்பானென்? என்ன - அவர்கள் இத்யாதி. உபயவிபூதியுக்தனையென்றது - “கூந்தல்மலர்மங்கைக்கும்” இத்யாதியைக் கடாக்ஷித்து. இன்னமும் ஓராகாரத்தாலே வ்யாவ்ருத்தி - இங்கு கால் இத்யாதி. “அவனோட்டை வசநவ்யக்தி” இத்யாதிவாக்யவிவரணம் - ஆகப்பிறப்பே இத்யாதி. கீழ்வாக்யவிவரணம் - ஸ்த்ரீத்வத்துக்கு இத்யாதி. விஷயம் வ்யவஸ்திதமாயிருக்க - “ஸர்வேஸ்வரனே ஸர்வநிர்வாஹகன்” என்றறிவுக்கு விஷயம் வ்யவஸ்திதமாயிருக்க. ஸர்வஜ்ஞன் சொல்லும் வார்த்தையாவது - “அஹம் க்ருத்ஸ்நஸ்ய ஜகத: ப்ரபவ:” இத்யாதிகள்.

ஸ்வாபதேசம் - கீழில்திருவாய்மொழியில் இத்யாதி. உருவெளிப்பாட்டாலேயநுபவித்தது விக்ரஹவைலக்ஷண்யத்தையிறே என்றவநந்தரத்திலே, அதுவேயிறே ஸுபாஸ்ரயம் என்கிறத்தைச்சொல்லி; அநந்தரம், இதில் - இந்த ஸுபாஸ்ரயமான விக்ரஹத்துக்குமுள்ளான ஸ்வரூபவைலக்ஷண்யத்தைச் சொல்லுகிறது என்று ஒருவாக்யம் அத்யாஹரித்து, அத்தையிறே பாவித்தது என்றுதொடங்கிச் சொல்லிக்கொள்வது. அதுவேயிறே - விக்ரஹமேயிறே. ஸுபாஸ்ரயம் - த்யேயவஸ்து. அத்தை - ஸ்வரூபத்தை. அத்தை பாவித்தால் அவன்சொல்லும் வார்த்தையைச் சொல்லவேணுமோ? என்ன; தேஹாத்மாபிமாநிக்கும் தேஹாத்மாபிமாநம் முற்றினால் வேறொன்று தோற்றாதாப்போலே, ப்ரகாரியளவும் செல்லத் தன்னையநுஸந்திக்கும்படி பாவனை முற்றினால் அவன்சொல்லும்வார்த்தையும் சொல்லலாமென்கிறார் - பாவநாப்ரகர்ஷத்தாலே இத்யாதி. “தத்பாவபாவமாபந்நஸ்ததாஸௌ பரமாத்மநா। பவத்யபேதீ பேதஸ்ச தஸ்யாஜ்ஞாநக்ருதோ பவேத்” இதிஷஷ்டாம்ஸே வாக்யம் ப்ரஸித்திமுபஸ்தம். “தத்பா

---

† குண்டலிதம் க்வாசித்கம். வ்யாக்யாநத்துக்குச்சேராது.

கர்ஷத்தாலே, "तद्भावभावमापन्नस्तदासौ परमात्मना । भवत्यभेदी" (தத்பாவபாவமாபந்நஸ்ததாஸௌபரமாத்மநா - பவத்யபேதீ) என்றும், "अहं मनुरभवं सूर्यश्च" (அஹம்மநுரபவம்ஸூர்யஶ்ச) என்றும், "मत्तस्सर्वमहं सर्वम्" (மத்தஸ்ஸர்வமஹம்ஸர்வம்) என்றும் - அவனாக பாவித்தால் பின்னை அவன் சொல்லும்வார்த்தை சொல்லலாயிருக்குமிறே; அப்படியே, விபூத்யத்யாயத்தில் அவன் சொன்னபடிகளை ப்ராசுர்யேண அநுகரிக்கிறாள். அதர்வஶிரஸ்ஸிலே - ருத்ரன் தன்னை ஸத்தைப் பரக்கநின்று பேசினான், தனக்கு அடங்காத ஐஶ்வர்யமாயிருந்தது, இவன் இப்படிபேசுகைக்கு அடியேன்? என்று ஶ்ருதிதானே ஶங்கித்து, "सोऽन्तरादन्तरं प्राविशत्" (ஸோந்தராதந்தரம்ப்ராவிஶத்) - என்று பரமாத்மப்ரவேசத்தாலே சொன்னான்

ப்ர.—षष्ठेंऽशे [எ] खाण्डिक्यं प्रति केशिध्वजः, "तद्भावभावमापन्नस्तदासौ परमात्मना । भवत्यभेदी भेदश्च तस्याज्ञानकृतो भवेत् ॥ ௯௫ ॥ विभेदजनकेऽज्ञाने नाशमात्यन्तिकं गते । आत्मनो ब्रह्मणो भेदमसन्तं कः करिष्यति ॥ ௯௬ ॥ इत्युक्तस्ते मया योगः खाण्डिक्य परिपृच्छतः । संक्षेपविस्ताराभ्यां किं तवान्यत् क्रियताम् ॥ ௯௭ ॥"

अथर्वशिरसि, "देवा ह वै स्वर्गं लोकमायंस्ते देवा रुद्रमपृच्छन् को भवानिति सोऽब्रवीदहमेकः प्रथममासं वर्तामि च भविष्यामि च नान्यः कश्चिन्मत्तो व्यतिरिक्त इति सोऽन्तरादन्तरं प्राविशत्."

भावम् - तद्विषयम्, तदा - ध्यानदशायाम्, तस्याज्ञानकृतो भवेत् - भेदाज्ञानकृतो भवेत्" इति वा विवक्षायाम्. तस्यां योजनायाम्, द्वितीयभावशब्दस्य अर्थः. विज्ञानस्य, भावशब्दः - स्वभावपर्यायादि स्वभावपरः, तद्भाव इत्यस्य तद्भावः, तद्भावस्य भावः तद्भावभावः - तद्भावत्वम्. परमात्मभावप्राप्तिरित्यर्थः. तदा - ध्यानदशायाम्, अभेदी भवति - परमात्मनैकाकारो भवतीत्यर्थः. देवादिनानात्वभेदश्च देवमनुष्यादिभेदाज्ञानकृतो भवेदित्यर्थः इति भाष्यनिर्वाहः.
அன்றிக்கே, பாவநாப்ரகர்ஷத்தாலே என்கிற ஶப்தஸ்வாரஸ்யத்தைப்பற்ற யோஜநாந்தரமுண்டு. அதாவது; भावशब्दः - भावनापरः. असौ - चेतनः, शरीरविषयनिरन्तरध्यानपरिपाकवशः, तदा - भावनादशायाम्, परमात्मना स्वशरीरभूतेन तादात्म्यानुसन्धानं यातीति, देहव्यतिरिक्तचेतनस्य भावनाप्रकर्षज्ञानाभावकृतो भवेदिति. "அவனாகபாவித்தால் அவன்சொல்லும் வார்த்தையைச் சொல்லலாயிருக்கும்" என்னுமதுக்கு ப்ரமாணாந்தரங்களை யருளிச்செய்கிறார் - अहं मनुरभवम्, मत्तस्सर्वम् இத்யாதி. "तद्धैतत् पश्यन्नृषिर्वामदेवः प्रतिपेदे अहं मनुरभवं सूर्यश्च" இத்யாதி. "मत्तस्सर्वमहं सर्वं मयि सर्वं सनातने । अहमेवाव्ययोऽनन्तः परमात्मात्मसंश्रयः" इति प्रथमेंऽशे, एकोनविंशे. "அவன் சொல்லும்வார்த்தையைச் சொல்லலாயிருக்கும்" என்னுமதுக்கு ப்ரமாணாந்தரம் - அதர்வஶிரஸ்ஸிலே இத்யாதி. "देवा ह वै स्वर्गं लोकमायंस्ते देवा रुद्रमपृच्छन् को भवानिति सोऽब्रवीदहमेकः प्रथममासं वर्तामि च भविष्यामि

என்றதிறே. அந்தஹாவம்வந்தால் அப்படியே சொல்லலாயிருக்குமே.ஆக, "இப்படி பிரிவாற்றாமையாலே அவனையநுகரித்து யரிக்கிறாள்" என்று அறியமாட்டாதே, "ஸர்வேஶ்வரன் ஆவேஶித்தான்போலே இராநின்றது" என்று, திருத்தாயார் வினவவந்தவர்களுக்குச் சொல்லுகிறாள்.

முதற்பாட்டு.

கடல்ஞாலஞ்செய்தேனும்யானேயென்னும் கடல்ஞாலமாவேனும்யானேயென்னும், கடல்ஞாலங்கொண்டேனும்யானேயென்னும் கடல்ஞாலங்கீண்டேனும் யானேயென்னும், கடல்ஞாலமுண்டேனும் யானேயென்னும் கடல்ஞாலத்தீசன்வந்தேறக்கோலோ? கடல்ஞாலத்தீர்க்கிவையென்சொல்லுகேன்? கடல்ஞாலத்தேன்மகள்கற்கின்றவே.

ஆ.—கடலோடேகூடின ஜகத்தை ஸஹாயாந்தர நிரபேக்ஷமாக ஸ்ருஷ்டித்தேனும் நானென்னும். இஜ்ஜகத்து மஹாத்மகம், ஸ்வதந்த்ரமாயிருப்பதொரு பதார்த்தமில்லையென்னும். இத்தை மஹாபலியபஹரிக்க, நான் அளந்துகொண்டேனென்னும்.

[illegible] ருத்ரன்தன் வைபவத்தைப் பாக்கநின்று பேசினுளென்றது - "[illegible]" இத்யாதியைப்பற்ற. ஆனாலும் தன்னைப்பெருக்கச்சொல்லலாமோ? என்ன - அந்தஹாவம் இத்யாதி. நிகமநம் - ஆகஇப்படி இத்யாதி.

ப்ரளயார்ணவத்திலே அழுந்தின இத்தை ஸஹாயநிரபேக்ஷமாக எடுத்தேனும் நானென்னும். பூமிதான் ‘‘ப்ரளயம் வாராநின்றது’’ என்று அறியாதிருக்க, நானே அறிந்து வயிற்றிலேவைத்துப் பரிஹரித்தேனென்னும். இவள்பக்கல் கடல்ஞாலத்தீசன் வந்து ஆவேசித்தானோ? இந்தபூமியிலே இருந்துவைத்து என்மகள் மேன்மேலனச்சொல்லுகிற இவற்றை லௌகிகரான உங்களுக்குச்சொல்ல உபாயமுண்டோ வென்கிறாள்.

ஒ.—முதற்பாட்டில், என்மகள் ஜகத்ஸ்ருஷ்ட்யாதி வ்யாபாரங்களெல்லாம் பண்ணினேன் என்னாநின்றாள்; இது, எம்பெருமான் தன்பக்கல் ஆவேசிக்க, சொல்லுகிறப்போலே யிருந்தது என்கிறாள்.

[கடல்ஞாலம் என்றுதொடங்கி] - கடலோடுகூடின ஜகத்தை ஸஹாயாந்தரநிரபேக்ஷமாக ஸ்ருஷ்டித்தேனும் நான் என்னும். இஜ்ஜகத்து மதாத்மகம், ஸ்வதந்த்ரமாயிருப்பதொருபதார்த்தமில்லை என்னும். இத்தை மஹாபலி அபஹரிக்க, சிலர் உபாயோபதேசம்பண்ணாதேயிருக்க, நான் அளந்துகொண்டேன் என்னும். ப்ரளயார்ணவத்திலே அழுந்தின இத்தை ஸஹாயநிரபேக்ஷமாக எடுத்தேனும் நான் என்னும். பூமிதான் ‘ப்ரளயம் வாராநின்றது’ என்று அறியாதிருக்க நானே அறிந்து வயிற்றிலேவைத்துப் பரிஹரித்தேன் என்னும். [கடல் என்றுதொடங்கி] - இப்பூமியிலே இருந்துவைத்து என்மகள் மேன்மேலெனச்சொல்லுகிற இவற்றை லௌகிகரான உங்களுக்குச் சொல்ல உபாயமுண்டோ?

ப.—முதற்பாட்டில், ஜகத்ஸ்ருஷ்ட்யாதிகளெல்லாம் நானே செய்தேனென்று ஸர்வேச்வராவிஷ்டையானுப்போலே சொல்லாநின்றாளென்கிறாள்.

கடல் - கடல்சூழ்ந்த, ஞாலம் - ஜகத்தை, (ஸஹாயாந்தரநிரபேக்ஷமாக), செய்தேனும் - ஸ்ருஷ்டித்தேனும், யானே - நானே, என்னும் - என்னாநிற்கும்; கடல்ஞாலமாவேனும் - (இத்தை ஸ்ருஷ்ட்யநந்தரம் அநுப்ரவேசித்து ‘‘[illegible]’’ என்கிறபடியே) தத்தச் சப்தவாச்யதயா ததாத்மகனாய் நிற்பேனும், யானே-நானே, என்னும்-என்னும்; கடல்ஞாலம் - இத்தை, கொண்டேனும் - (மஹாபலி அபிமாநிக்க, அர்த்தியாய் இரந்து) அளந்துகொண்டேனும், யானே - நானே, என்னும் - என்னும்; (அவாந்தரப்ரளயத்திலே வராஹவேஷத்தைக்கொண்டு), கடல்ஞாலம் - இத்தை, கீண்டேனும் - கீண்டெடுத்தேனும், யானேயென்னும் - யானேயென்னும்; (மஹாப்ரளயத்திலே ‘‘[illegible]’’ என்கிறபடியே), கடல்ஞாலம் - இத்தை, உண்டேனும் - உபஸம்ஹரித்தேனும், யானே - நானே, என்னும் - என்னும்; கடல்ஞாலத்தீசன் - ஸகலஜகந்நியந்தாவான ஸர்வேச்வரன், வந்து - வந்து, ஏற - இவளை ஆவேசிக்க, கொலோ - கூடுமோ? கடல்ஞாலத்தீர்க்கு - அவிசேஷஜ்ஞராய் ஸம்ஸாரவர்த்திகளான உங்களுக்கு, கடல்ஞாலத்து - இத்தேசத்திலேயிருந்துவைத்து, என்மகள் - (அப்ராக்ருதஸ்வபாவையான) என்மகள், கற்கின்ற - அப்யஸிக்கிறனவாயுள்ள, இவை - இந்த அபிப்ராயிதாகாரங்களை, என் - என்னை, சொல்லுகேன் - சொல்லுவேன். உண்டேனென்று - வடதளசாயி வ்யாபாரமாகவுமாம்.

இ.—முதற்பாட்டில், இவள் ஜகத்ஸ்ருஷ்ட்யாதிகளெல்லாம் பண்ணினேன் நானே என்னாநின்றாள், அவன் தன்பக்கலிலே யாவேசிக்கச் சொல்லுகிறாற்போலே யிருந்ததென்கிறாள்.

[கடல்ஞாலம்செய்தேனும் யானேயென்னும்] - கடலோடுகூடின ஜகத்தை ஸஹாயாந்தரநிரபேக்ஷமாக ஸ்ருஷ்டித்தேன் என்னும். "அஹம் க்ருத்ஸ்நஸ்ய ஜகத: ப்ரபவ:" என்னாநின்றாள். [யானே] - என்கிற அவதாரணத்தாலே - த்ரிவிதகாரணமு மாகை. "ந மே விது: ஸுரகணா: ப்ரபவம் ந மஹர்ஷய:" என்கிற ப்ரஹ்மருத்ராதிகளும் காணகோடியிலேயாமித்தனை. [ஆவேனும்] - இத்தையுண்டாக்கி, வஸ்துத்வ நாமரூபபாக்த்வங்களுக்காக அநுப்ரவேசிக்கையாலே இஜ்ஜகத்துமதாத்மகம். ஸாமாநாதிகரண்யம் - அநுப்ரவேசக்ருதம். "தத்ஸ்ருஷ்ட்வா ததேவாநுப்ராவிசத்". ஸ்வதந்த்ரமாயிருப்பதொருபதார்த்த மில்லையென்கை. [கொண்டேனும்] - இத்தை மஹாபலி அபஹரிக்க, அவன்பக்கலிலே ஔதார்யகுணம்கிடக்கையாலே உபாயத்தாலே அர்த்தியாய் என்னைத்தாழவிட்டு அளந்துகொண்டேனும்யானே யென்னும். [கிண்டேனும்] - அபஹாரமாத்ரமேயன்றிக்கே ப்ரளயார்ணவநிமக்னையான பூமியை, அபேக்ஷாநிரபேக்ஷமாக மஹாவராஹமாயெடுத்தேனும்யானே யென்னும். [உண்டேனும்]-பூமியளவேயன்றிக்கே ஸகலலோகங்களையும் ப்ரளயங்கொள்ளப்புக, "ப்ரளயம்வாராநின்றது" என்றும் அறியாதேயிருக்க, நானேயறிந்துநோக்கினே னென்னும். [யானே] - அர்த்திப்பாரின்றிக்கேயிருக்க, நானேவயிற்றிலேவைத்துநோக்கினே னென்னும். [ஈசன்] - ஸர்வஸ்ரஷ்டாவாய் ஸகலாந்தர்யாமியாய் ஸர்வாபத்ஸகனானவன் வந்து ஆவேசித்தானோ, அறிகிறிலேன். "உன்னைக்கொண்டு நிர்ணயிக்கவர, நீ ஸம்சயியாநின்றாயீ" என்ன,—இவ்விஷயத்தில் என்னளவும் புதியதுண்ணாதே நித்யஸம்ஸாரிகளான உங்களுக்கு எத்தைச்சொல்லுவதென்கிறாள். [கடல்ஞாலத்தென்மகள்] - ஸம்ஸாரத்திலேயிருந்துவைத்து நித்யஸூரிகள் யாத்ரையாய்ச் செல்லுகிற என்மகள்படியை.

ஈடு.—முதற்பாட்டு. என்மகள், ஜகத்ஸ்ருஷ்ட்யாதி வ்யாபாரங்களெல்லாம் பண்ணினேன் நான் என்னாநின்றாள்; எம்பெருமான் தன்பக்கலிலே ஆவேசித்துச் சொல்லுகிறாள்போலே இராநின்றதென்கிறாள்.

[கடல்ஞாலம் இத்யாதி] - * **அஹம் க்ருத்ஸ்நஸ்ய ஜகத: ப்ரபவ:** என்னாநின்றாள். கடலோடுகூடின ஜகத்திலே ஸகலபதார்த்தங்களும், கண்ணுக்கிட ஒரு துரும்பில்லாதபடி அழிந்து, "**ஸதேவ**" (ஸதேவ) என்கிறபடியே-தனக்கென்ன ஒரு நாமரூபங்களில்லாதபடி அழிந்தவன்று, இத்தை உண்டாக்கினேன் நான் என்னாநின்றாள். ஸூக்ஷ்மசிதசித்விசிஷ்டப்ரஹ்மமே காரணமாய், அதுதானே ஸ்த்தூலாவஸ்த்தையை ஹிக்கையிறே கார்யமாகிறது. விசிஷ்டமே காரணமுமாய் கார்யமுமாயிருக்கையாலே புறம்பு ஒரு காரணமில்லாமையாலே, தானே உபாதாநமும் நிமித்தமும் ஸஹகாரியுமாயிறே யிருப்பது. இப்படி

முதற்பாட்டு.—**கடல்ஞாலம்** இத்யாதி. பாட்டெல்லாம்கடாக்ஷித்து அவதாரிகை - **என்மகள்** இத்யாதி.

ஸ்ருஷ்டி அப்யயபூர்விகையாகையாலே அப்யயத்தையுங்கூட்டி யருளிச்செய்கிறார் - **கடலோடு** இத்யாதி. கண்ணுக்கிட ஒருதுரும்பென்றது - இளநீர்க்குழம்பிடுகிற துரும்பைச்சொல்லுதல், அஞ்சநமெழுதுகிற தூரியக்கோலைச்சொல்லுதல். "யானே" என்ற அவதாரணார்த்தம் - **ஸூக்ஷ்ம** இத்யாதி. யத்வா, த்ரிவிதகாரணமும் தானேயாகக்கூடுமோ? என்ன - **ஸூக்ஷ்ம** இத்யாதி என்னுதல். த்ரிவிதகாரணமும் தானேயானாலும், பரிணாமம் விசேஷணாம்சத்திலே யென்னுமிடந்தோற்ற - **ஸூக்ஷ்மசிதசித்விசிஷ்ட ப்ரஹ்மமே காரணமாய்** என்றது. விவரணம் - **விசிஷ்டமே** இத்யாதி. ஸூக்ஷ்மசிதசித்விசிஷ்டவேஷேணோபாதாநத்வம், ஸங்கல்பவிசிஷ்டவேஷேண நிமித்தத்வம், ஜ்ஞாந

த்ரிவிதகாரணமும் தானேயாய் இத்தை உண்டாக்கினேன் நான் என்றுநின்றாள். அவதாரணத்தாலே - காரணாந்தரநிஷேதம் பண்ணினபடி. [கடல்ஞாலமாவேனும்]- "தத்ஸ்ருஷ்ட்வா ததேவாநுப்ராவிஶத் ததநுப்ரவிஶ்ய ஸச்சத்யச்சாபவத்" (தத்ஸ்ருஷ்ட்வா ததேவாநுப்ராவிஶத் ததநுப்ரவிஶ்ய ஸச்சத்யச்சாபவத்) என்கிறபடியே இவற்றை உண்டாக்கி, இவற்றினுடைய வஸ்துத்வநாமபாக்த்வங்களுக்காக அநுப்ரவேஶித்து, இவற்றைச் சொல்லும் ஶப்தங்கள் தன்னளவும்வரும்படி இவையாய் நிற்கிறேன் நான் என்றுநின்றாள். வாசகமாயாதல் போதகமாயாதல் அவனைக் காட்டக்கடவதிறே; தோற்றுகிற இத்தைச் சொல்லிக்கொண்டு அபர்யவஸாநவ்ருத்தியாலே அவனளவும் வருதல், இஸ்ஸங்காதந்தனக்கே வாசகமாயாதல் இருக்குமிறே. [ஸச்சத்யச்சாபவத்] (ஸச்சத்யச்சாபவத்)- என்கிறவிது ஸ்வரூபைக்யமல்ல, அநுப்ரவேஶக்ருதம் என்னுமிடத்தைச் சொல்லிற்றிறே [ததநுப்ரவிஶ்ய] (ததநுப்ரவிஶ்ய) என்று. [கடல் இத்யாதி]-இவற்றை ஸ்ருஷ்டித்து, "மேலுள்ளது தானே நடக்கிறது" என்று விடுகையன்றிக்கே, இவற்றை அடியோத்திக்கொண்டுசேன்று ரக்ஷிக்கும்படி. மஹாபலிபோல்வார், பருந்திருஞ்சிறுப்போலே இத்தையபஹரித்து "என்னது" என்னுமன்று, இத்தை எல்லைநடந்து மீட்டுக்கொண்டேன் நான் என்றுநின்றாள். [யானே] - "ஆஸுரப்ரக்ருதிகள் இவன்முன்பு நில்லார்களிறே" என்னுமத்தாலே, "ராஜ்யத்தை வாங்கித்தரவேணும்" என்று அபேக்ஷித்தமாத்ரமேயிறே இந்த்ரன்பக்கல் உள்ளது; அவனுடைய ஔதார்யத்துக்கீடாகத் தன்னை அர்த்தியாக்கி, அவன்தரும் விரகறிந்து வாங்கினான் தானேயிறே. [கடல் இத்யாதி] - ஆஸுரப்ரக்ருதிகளாயிருப்பார் இத்தை அழிக்கையன்றிக்கே, பூமிக்கு ரக்ஷகமாகவைத்த கடல்தானே இத்தையழிக்க, அண்டபித்தியிலே புக்குச் சேர்ந்த இத்தை இடந்தெடுத்தேனும் நான் என்றுநின்றாள். அமிழ்ந்துகிடக்கிற பூமி,

---

ப்ர:—(ஆவேனும்)—தைத்திரீயகே [ஆ] "ஸோகாமயத பஹுஸ்யாம் ப்ரஜாயேயேதி ஸ தபோதப்யத ஸ தபஸ்தப்த்வா இதம் ஸர்வமஸ்ருஜத யதிதம் கிஞ்ச தத்ஸ்ருஷ்ட்வா ததேவாநுப்ராவிஶத் ததநுப்ரவிஶ்ய ஸச்சத்யச்சாபவத்॥"

ஶக்த்யாதி விஶிஷ்டவேஷணஸஹகாரித்வம். அவதாரணார்த்தத்தை முக்தகண்டமாக அருளிச்செய்கிறார் - **அவதாரணத்தாலே** இத்யாதி. அடியிலே - அஹம் க்ருத்ஸ்நஸ்ய. "அஹம் க்ருத்ஸ்நஸ்ய ஜகத: ப்ரபவ: ப்ரளயஸ்ததா। மத்த: பரதரம் நாந்யத் கிஞ்சிதஸ்தி தநஞ்ஜய॥[க-ரு]॥" என்று ஸ்ரீகீதாஶாஸ்த்ரே. "ஆவேனும்" என்றதனப்ரகாரத்தைக்காட்டுகிறார்-தத்ஸ்ருஷ்ட்வா இத்யாதி. தன்னளவும்வரும்படி யெப்படியென்ன - **வாசகமாய்** இத்யாதி. இத்தை வ்யுத்க்ரமமாக விவரிக்கிறார் - **தோற்றுகிற** இத்யாதி. வாசகமாயாத லென்றது-அஸ்மந்மதாநுஸாரேண. போதகமாயாதலென்றது - ப்ராபாகரமதாநுஸாரேண. ஸங்காதத்துக்கு வாசகமாகையாவது - "வநம்" என்றால் - ஒன்றுக்கு ப்ராதாந்யமின்றிக்கே ஸகலவ்ருக்ஷங்களுக்கும் ஸாதாரணமாகிறப்போலே, "தேவதத்தன்" என்றால், இஶ்ஶப்தம் - சிதசிதீஶ்வரவாசகமாயிருக்கை. போதகமாகையாவது-ப்ரதமம்தோற்றுகிற அசித்தைச் சொல்லி, ததபிமாநியான சேதநனைச்சொல்லி, தந்தர்யாமியான ஈஶ்வரனைச்சொல்லுகை. ஸங்காதத்துக்கு வாசகமாகிறதென், ஸ்வரூபைக்யம் சொன்னாலோ? என்ன - ஸச்சத்யச்ச இத்யாதி. "ததநுப்ரவிஶ்ய" என்றது - இவ்விடத்தில் அநுவாதமன்றிக்கே சிதசித்வாசிஶப்தம் ஸ்வபர்யந்தமாகைக்காக நின்றநிலையைச் சொல்லுகிறதென்றபடி. "யானே" என்கிறதென், இந்த்ரன் அர்த்திக்கவில்லையோ? என்ன - **ஆஸுர** இத்யாதி. அவதாரணார்த்தம் - **அமிழ்ந்துகிடக்கிற** இத்யாதி.

"என்னை எடுக்கவேணும்" என்று அபேக்ஷித்தமை இல்லையிறே; தானேயிறே செய்தான். [உண்டேனும்]-சிலர் இருக்கச் சிலர் அழிகையன்றிக்கே, ஸ்ரஷ்டாக்களோடு ஸம்ஹர்த்தாக்களோடு வாசியற எல்லாரையுமொக்க ப்ரளயங்கொள்ளப்புக, இத்தையடைய வயிற்றிலே வைத்து ரக்ஷித்தேன் நான் என்னுநின்றாள். "அப்போதுவேறுசிலர் ரக்ஷித்தார்கள்" என்கைக்கு மற்றொருவர் உண்டாகைக்கு ஸம்பாவனையுமில்லை. [ஈசன்]-ஸர்வஸ்ரஷ்டாவாய் ஸர்வாந்தர்யாமியாய் ஸர்வாபத்ஸகனான ஸர்வேஶ்வரன் வந்து ஆவேசித்தானோ, அறிகிறிலேன். "உன்னைக்கேட்டு அறுதியிட வந்தோம், நீயும் ஒக்க விசாரியாநின்றாயீ! நாங்கள் பின்னை நிர்ணயிக்கும்படி என்?† (நாங்கள் தெரியும்படி என்?) நாங்கள் தெளியும்படி நீயே சொல்லாய்" என்ன,—[கடல்ஞாலத்தீர்க்கு] - "வைகுந்தத்தமரர்" என்னுமாபோலே, நித்யஸம்ஸாரிகளாய், பகவத்விஷயம் புதியது உண்டறியாதே போருகிற உங்களுக்கு நான் எத்தைச் சொல்லுவேன். கோலோ என்றவிடம் - ஸம்ஶயோக்தியல்ல, காணுங்கோளென்று நிர்ணயித்துச் சொல்லுகிறாள். [கடல் இத்யாதி] - இதுதான் நித்யஸூரிகள் சொல்லக்கடவ வார்த்தை; ஆக, நித்யஸூரிகள் சொல்லக்கடவ வார்த்தையை ஸம்ஸாரத்திலேயிருந்து என்மகள் சொல்லுகிற இதுக்கு நான் எத்தைச்சொல்லுவது. (க)

இரண்டாம் பாட்டு

கற்குங்கல்விக்கெல்லையிலனேயென்னும் கற்குங்கல்வியாவேனும்யானேயென்னும், கற்குங்கல்விசெய்வேனும்யானேயென்னும் கற்குங்கல்வித்தீர்ப்பேனும் யானேயென்னும், கற்குங்கல்விச்சாரமும்யானேயென்னும் கற்குங்கல்விநாதன்வந்தேறக்கொலோ? கற்குங்கல்வியீர்க்கிவையென்சொல்லுகேன்? கற்குங்கல்வியென்மகள்காண்கின்றவே.

ஆ.—(கற்குங்கல்வி.) நான்கற்ற வித்யைகளுக்கு ஒருமுடிவில்லையென்னும். எல்லாரும் விரும்பிக் கற்கிற வித்யைகள் நான் இட்டவழக்கென்னும். அவற்றை உண்டாக்கினேன் நானேயென்னும். அவற்றினுடைய தாத்பர்யநிர்ணயம் என்னாலேயென்னும். வித்யாபலம் நானேயென்னும். அப்யஸிக்கப்படும் ஸகலவித்யாவேத்யனான ஸர்வேஶ்வரன்வந்தேறினானோ? அறிவில்லாத உங்களுக்கு, அறியத்தொடங்கும் பருவத்தையுடைய இவள் அநுஸந்திக்கிறவற்றைச் சொல்ல விரகுண்டோவென்கிறாள்.

ஒ.—இரண்டாம்பாட்டில், 'ஸர்வவித்யாவேதநமும் வித்யாப்ரவர்த்தகாதிகளும் நான் இட்டவழக்கு என்னுநின்றாள்' என்கிறாள்.

[கற்கும் என்றுதொடங்கி] - நான்கற்ற வித்யாஸ்தலத்துக்கு ஒருமுடிவில்லை என்னும்; எல்லாரும் விரும்பிக்கற்கிற வித்யைகள் நான் இட்டவழக்கு என்னும்; அவற்றை

"உண்டேனும்" என்று - ரக்ஷணத்தைச்சொல்லுகிறது, ரக்ஷணம் ப்ராகமாகையாலே. ஏவகாரார்த்தம் - அப்போது இத்யாதி. வைகுந்தத்தமரர் என்னுமாபோலேயென்றது - பரமபதத்தை இருப்பிடமாகவுடைய நித்யஸூரிகளென்று விஶேஷித்தாப்போலேயென்றபடி. "கொலோ" என்றதுக்கு - கீழே ஸம்ஶயோக்தியாக அருளிச்செய்து, நிஶ்சயோக்தியாகத் தாத்பர்யாந்தரம் - கோலோவென்றவிடம் இத்யாதி. இதுதானென்றது - "கடல்ஞாலம்" இத்யாத்யுக்தியை. க்ரமேணாந்வய:. (க)

யானே உண்டாக்கினேன் என்னும்; அவற்றினுடைய தாத்பர்யநிர்ணயம் என்னாலே என்னும்; வித்யாபலம் நானே என்னும்; அப்யஸிக்கப்படும் ஸகலவித்யாவேத்யனான ஸர்வேஶ்வரன் வந்தேறினானோ? [கற்கும்கல்வி என்று தொடங்கி] - அறிவில்லாத உங்களுக்கு அறியத்தொடங்கும் பருவத்தையுடைய இவள் அநுஸந்திக்கிற இவற்றைச் சொல்ல விரகுண்டோ?

ப.—அநந்தரம், ஸகலவேதவித்யைகளும் தத்ப்ரவர்த்தகாதிகளும் நானிட்ட வழக்கென்னாநின்றாளென்கிறாள்.

கற்கும் - (புஸ்தகநிரீக்ஷணாதிகளாலன்றியே ஆசார்யமுகத்தாலே) கற்கப்படும், கல்விக்கு - வேதரூபவித்யைகளுக்கு, ("ஶ்ருதோ வேத:" என்கிறபடியே), எல்லை-எல்லையை, இலன் - உடையேனல்லேன், என்னும் - என்னும்; கற்குங்கல்வியாவேனும் - அந்தவித்யைகள் எனக்கு ப்ரகாரமாம்படி ஸப்தப்ரஹ்மாத்மகனாய் நிற்பேனும், யானே - நானே, என்னும் - என்னும்; கற்குங்கல்வி - அவற்றை, செய்வேனும் - (ஸப்தப்ரபுத்த ந்யாயத்தாலே ஸ்ருஷ்டிகாலத்திலே யதாபூர்வம்) உண்டாக்குவேனும், யானே - நானே, என்னும் - என்னும்; கற்குங்கல்வி தீர்ப்பேனும் - ஸம்ஹாரஸமயத்திலே உபஸம் ஹரித்து என்னெஞ்சிலே இட்டுவைப்பேனும், யானே - நானே, என்னும் - என்னும்; கற்குங்கல்விச்சாரமும் - அந்த வித்யாஸாரமான மூலமந்த்ராதிகளும், யானே - நானிட்ட வழக்கு, என்னும் - என்னும்; கற்குங்கல்வி - ஸகல வேதப்ரதிபாத்யனான, நாதன் - ஸர்வேஶ்வரன், வந்தேற - இவளை ஆவேஶித்தானாக, கொலோ - கூடுமோ? கற்குங் கல்வியீர்க்கு - இன்று எண்பசலிலே இதுகற்கும்படியான உங்களுக்கு, கற்குங்கல்வி - இன்று வார்த்தைகற்கும் பருவமான, என்மகள் - என்பெண்பிள்ளை, காண்கின்ற - தான் கண்டு சொல்லுகிற, இவை - இவற்றை, என்-என்னென்று, சொல்லுகேன் - சொல்லுவேன்? "கற்கும்கல்வியென்று - ஸகலவித்யாஸ்த்தாநம்" என்றும் சொல்லுவாருமுளர்.

இ.—இரண்டாம்பாட்டில், ஸர்வ வித்யாவேத்யமும் வித்யாப்ரவர்த்தகத்வாதிகளும் நானிட்டவழக்கென்கிறாள்.

[கற்குங்கல்விக்கெல்லையிலனே யென்னும்] - அல்பகாலத்திலே ஸாந்தீபநியோடே நான் கற்ற பாட்டுக்கு எல்லையில்லை யென்னாநின்றாளென்னுதல், "யதோ வாசோ நிவர்த்தந்தே" என்று மீண்டது என்னை யென்னாநின்றாளென்னுதல்; கற்குங்கல்வியினுடைய எல்லையினுள்ளே நில்லேனென்னாநின்றாளென்னுதல். [ஆவேனும்]-வித்யைக்கு நிலமன்றியிருக்குமளவன்றிக்கே, எல்லாரும் அப்யஸிக்கிறவித்யைகள் நானிட்ட வழக்கென்னும். "ஸர்வவித்யா" என்னக்கடவதிறே. [செய்வேனும்] - அப்யஸிக்கக்கடவ வித்யைகளை ஸப்தப்ரபுத்தந்யாயத்தாலே யுண்டாக்குவேன்நானே யென்னும். [தீர்ப்பேனும்] - இவற்றினுடைய தாத்பர்யார்த்தநிர்ணயம்பண்ணுவேன்நானே யென்னாநின்றாளென்னுதல், அத்யாபகரும் அத்யேதாக்களும் இரண்டும்நானேயென்னு மென்னுதல். பரக்கக்கற்றுவைத்தே "ஸந்திக்தே" என்கிறாருமுண்டிறே. தீர்கையாவது - அவற்றின்முடிவுகாண்கை. [சாரம்] - வித்யாஸாரமான பலம். [கற்குங்கல்விநாதன்]- ஸகலவித்யாவேத்யனான ஸர்வேஶ்வரன். [கற்குங்கல்வியீர்க்கிவை] - ஸகவத்விஷய மென்றால் இன்றுகற்கவேண்டியிருக்கிற உங்களுக்கு இவற்றைச்சொல்ல விரகுண்டோ?

அறியத்தொடங்கும் பருவத்தையுடைய இவள் புக்கு அவகாஹிக்கிற நிலங்களை என்னால் பேசலாயோவிருக்கிறது.

ஈடு.—இரண்டாம்பாட்டு. ஸகலவித்யாவேதநமும் அவ்வித்யாப்ரவர்த்தகத்வாதிகளும் நானிட்டவழக்கேன்கிறாள்.

[கற்கும் இத்யாதி] - அல்பகாலத்துக்குள்ளே ஸாந்தீபநியோடே நான்கற்ற பரப்புக்கு ஓர் எல்லையில்லை என்னாநின்றாள். அன்றிக்கே, **"யதோவாசோநிவர்த்தந்தே"** (யதோவாசோநிவர்த்தந்தே) என்கிற ஶ்ருதிக்கு நிலமன்றிக்கேயிருக்கிறேன் நான் என்னாநின்றாள். கற்கும்கல்வியினுடைய எல்லைக்குள்ளே நிற்கிறேனல்லேன். அன்றிக்கே, $"வேதாந்தவிழுப்பொருளின்மேலிருந்தவிளக்கை" என்கிறபடியே, வேதாந்தவேத்யன் நான் என்னாநின்றாள் என்னுதல். [ஆவேனும்]-அவற்றுக்கு அவிஷயமானவளவேயோ, அவைதான் என் அதீநமன்றோ. **"த்வமேவவித்யா"** (த்வமேவவித்யா) என்கிறபடியே.[செய்வேனும்]-அவ்வித்யைகள்தம்மை அவ்வவகாலங்களிலே உண்டாக்குவேனும் நான் என்னாநின்றாள். [கற்குங்கல்விதீர்ப்பேனும்] - அவற்றின் ஸம்ஶயங்களைத் தீர்த்துத் தாத்பர்யநிர்ணயம் பண்ணுவேனும் நான் என்னாநின்றாள். பரக்கக் கற்றுவைத்தே "ஶூந்யமே தத்வம்" என்கிறார் உண்டிறே. அன்றிக்கே, அத்யேதாக்களும் அத்யாபகரும் நானிட்டவழக்கு என்னாநின்றாள் என்றுமாம். தீர்ப்பேனென்னுங்காட்டில் - இவ்வர்த்தத்தைக் காட்டுமோ? என்னில்,—தீர்க்

ப்ர:—(கற்குங்கல்விக்கெல்லையிலனே)—தைத்திரீயம் [க] "யதோவாசோ நிவர்த்தந்தே। அப்ராப்யமநஸாஸஹ".

இரண்டாம்பாட்டு,—கற்கும் இத்யாதி. "கற்குங்கல்வி" என்றதின் த்ருதீயார்த்தத்தைப் பற்ற - ஸகலவித்யாவேதநமும் என்றது.

விவரணம் - கற்குங்கல்வியினுடைய இத்யாதி. த்ருதீயார்த்தத்துக்கு, எல்லையென்று - வேதாந்தமாய், இல்லென்று - இருப்பிடமாய், வேதாந்தத்தை இருப்பிடமாகவுடையவனென்று ஸப்தார்த்தமாய், வேதாந்தவேத்யனென்று பலிக்கிறது. த்விதீயத்ருதீயார்த்தங்களுக்கு, கற்குமென்றது - எல்லாராலுமென்றபடி. த்விதீயார்த்தத்தை யுபஜீவித்து மேல்பதத்துக்கு அவதாரிகை - அவற்றுக்கு இத்யாதி. "கற்குங்கல்வியாகிறவன் இவனே" என்னுமதுக்கு ப்ரமாணம் - த்வமேவ இத்யாதி. "த்வமேவமாதாச பிதாத்வமேவ த்வமேவபந்துஶ்ச ஸகாத்வமேவ। த்வமேவவித்யா த்ரவிணம் த்வமேவ த்வமேவஸர்வம் மமதேவதேவ". அவ்வவகாலங்களிலே-ஸ்ருஷ்டிகாலங்கள்தோறும். ஸம்ஶயமுண்டாயே தீர்க்கவேணுமே, ஸம்ஶயப்ரஸக்தியேதென்ன - பரக்கக்கற்று இத்யாதி. ஶூந்யமே தத்த்வமென்றது - ப்ரபஞ்சமித்யாத்வம் சொல்லுகிற மாயாவாதிகளுக்கு முபலக்ஷணம். இப்படி கொள்ளவேண்டுகிறது - "வேதத்தில் ஸம்ஶயங்கள்தீர்ப்பேன்" என்கிற பதஸ்வாரஸ்யத்துக்காக. "கற்குங்கல்விதீர்ப்பேன்" என்றதுக்கு ஹ்ருதயாந்தரம் - அத்யேதாக்களும் இத்யாதி. இவ்வர்த்தத்தை - "அத்யேதாக்களும் அத்யாபகரும் நானிட்டவழக்கு" என்கிறவர்த்தத்தை. "தீர்ப்பேனும்" என்றதுக்கு - ஶிஷ்யாசார்யராய் நிர்வஹிக்கிறவனும் நானே யென்று இரண்டாமர்த்தம். ஸாராம்ஶமான ப்ரயோஜநம் - மோக்ஷம். ஓவ்வோக்குழி - பாலெழுத்திடுகிறவரிக்குழி. அவகாஹிக்கிற என்றது - "காண்கின்ற" என்றதுக்கர்த்தம். "கற்கும்" என்றால் - பூதவர்த்தமாநார்த்தவாசகமாகையாலே, "கற்குங்கல்விபீர்க்கு, கற்குங்கல்வியென்மகள்" என்கிறவிடத்தில் வர்த்தமாநார்த்தவாசகமாயிருக்கிறது. வேதாந்தவிழுப்பொருளின்மேலிருந்தவிளக்கை - வேதாந்தப்ரதிபாத்யங்களான சீரியவர்த்தங்களுக்கெல்லாம் மேலாயிருந்துள்ள ஸ்வயம்ப்ரகாஶவஸ்துவானவனை. $ பெரியாழ்வார்திருமொழி, நாலாம்பத்து, மூன்றாந்திருமொழி, பதினோராம்பாட்டு, "மாலிருஞ்சோலையென்னும்" இத்யாதி. கற்குங்கல்விக்கு

கையாகிறது - அவற்றினுடைய எல்லை காண்கையிறே. [சாரமும்] - அவ்வித்யைகளுடைய ஸாரம்ஸமான ப்ரயோஜநமும் நான் என்னுநின்றாள். [நாதன்வந்தேறக்கோலோ] - ஸகல வித்யாவேத்யனான ஸர்வேஶ்வரன் வந்து ஆவேஶித்தானோ? [கற்கும் இத்யாதி]-இப்போது கற்று அறியவேண்டும்படி, ஹகவத்விஷயத்தில் ஒவ்வோக்குழியிடாதேயிருக்கிற உங்களுக்கு நான் எத்தைச்சொல்லுவது. [கற்கும் இத்யாதி] - சொன்னவார்த்தையைச் சொல்லுமித்தனைபோக்கி, தானாக ஒருவார்த்தை சொல்லமாட்டாத அளவாயிருக்கிற இவள் இவ்விஷயத்திலே அவகாஹிக்கிற எல்லையை, நான் எத்தைச்சொல்லுவது. (உ)

மூன்றாம் பாட்டு.

காண்கின்றநிலமெல்லாம்யானேயென்னும் காண்கின்றவிசும்பெல்லாம்யானேயென்னும், காண்கின்றவெந்தீயெல்லாம்யானேயென்னும் காண்கின்றவிக்காற்றெல்லாம்யானேயென்னும், காண்கின்றகடலெல்லாம் யானேயென்னும் காண்கின்றகடல்வண்ணனேறக்கொலோ? காண்கின்ற வுலகத்தீர்க்கேன்சொல்லுகேன்? காண்கின்றவென்காரிகை செய்கின்றவே.

ஆ.—(காண்கின்ற.) அபரிச்சேத்யமான ப்ருதிவ்யாதி ஹூதபஞ்சகமும் நானிட்டவழக்கு என்னாநின்றாள். கடல்போலே எப்போதும் தர்ஶநீயமான திருநிறத்தையுடையவன் வந்தேறினானோ? நமக்குத்தெரியாத நிலத்திலேபுக்கு அவகாஹித்து என்மகள் பண்ணுகிற சேஷ்டிதங்கள் நீங்கள் காண்கிறபடிக்கு மேற்பட என்னால் சொல்லலாவதில்லையென்கிறாள்.

ஒ.—மூன்றாம்பாட்டில், 'அபரிச்சேத்யமான ப்ருதிவ்யாதி ஹூதபஞ்சகமும் நான் இட்டவழக்கு என்னாநின்றாள்' என்கிறாள்.

[காண்கின்ற கடல்வண்ணன்] - கடல்போலே எப்போதும் தர்ஶநீயமான திருநிறத்தையுடையவன். [காண்கின்ற என்றுதொடங்கி] - நீங்கள் காண்கிறபடிக்கு

என்றுதொடங்கி, கற்குங்கல்வியீர்க்கு - கற்குங்கல்வியென்மகள் காண்கின்ற - இவையென்சொல்லுகேன் இத்யந்வய꞉. கற்குங்கல்விக்கெல்லையில னென்றதுக்கு - நான்கற்றவேதரூபவித்யைகளுக்கு முடிவில்லாதவனென்னுதல்; எல்லாராலும் கற்கப்படுகிற வேதத்தினுடைய எல்லைக்குள்ளே நிற்கிறேனல்லேனென்னுதல்; எல்லாராலும் கற்கப்படுகிற வேதத்தினுடைய எல்லையை - வேதாந்தத்தை, இல்லாக - இருப்பிடமாக, உடையவனென்னுதல் என்று அர்த்தத்ரயம். த்விதீயத்ருதீயார்த்தங்களுக்கு, கல்விக்கென்றது - கல்வியினுடைய என்றபடி. கல்வி - வித்யை. மேல், "கற்கும்" என்றவற்றுக்கெல்லாம் - எல்லாராலும் கற்கப்படும் என்றே அர்த்தங்கண்டுகொள்வது. செய்வேனும் - உண்டாக்குவேனும். சாரம் - ஸாரம்; ஹலமித்யர்த்த꞉. கல்விநாதன் - வேதப்ரதிபாத்யனான ஸர்வேஶ்வரன். ஏறக்கொலோ— ஏறினானோ? ஆவேஶித்தானோ? இத்யர்த்த꞉. கற்குங்கல்வியீர்க்கு - இன்றுஎன்பக்கலிலே கற்றறியவேண்டும்படியான உங்களுக்கு. கற்கும்கல்வியென்மகள் - கல்வி - கற்கும் - என்மகள். இன்று வார்த்தை கற்கும் பருவமான என்பெண்பிள்ளை. கல்வி - வார்த்தை, ஜ்ஞாநமும். காண்கின்ற - கண்டுசொல்லுகிறவற்றை; அவகாஹித்துச்சொல்லுகிறவற்றை. என்சொல்லுகேன் - என்னென்றுசொல்லுவேன் இத்யர்த்த꞉. (உ)

மேற்பட என்னால்சொல்லலாவதில்லை. நமக்குத்தெரியாத நிலத்திலேபுக்கு அவகாஹித்த என்மகள் பண்ணுகிற சேஷ்டிதங்கள். "இப்பாட்டில், 'காண்கின்ற' என்கிறனவெல்லாம்· ப்ரமாணத்தாலே காணும் காட்சி" என்றும் சொல்லுவர்.

ப.—அநந்தரம், ப்ரமாணஸித்தமான ஜகத்துக்கு ப்ரயோஜகாரணமான மஹாபூதங்கள் நானிட்டவழக்கென்னுமென்கிறாள்.

காண்கின்ற - (ப்ரமாணத்தாலே) காணப்படுவதான, நிலமெல்லாம் - (சரமபூதமான) ப்ருதிவியெல்லாம், யானே - நானே, என்னும் - என்னாநிற்கும்; காண்கின்ற - அப்படிப்பட்ட, விசும்பு - (ப்ரதமபூதமான) ஆகாசமும், எல்லாம்,—யானே - நானே, என்னும் - என்னாநிற்கும்; காண்கின்ற - தேஜோபதார்த்தங்களில் ப்ரதாநமாய், வெம் - உஷ்ணஸ்பர்சமான, தீ - அக்நியும், எல்லாம்,—யானே - நானே, என்னும் - என்னாநிற்கும்; காண்கின்ற-தத்பூர்வஸாவியாய், இ-ப்ராசகத்வாதிகளாலே ஸங்கிஹிதமான, காற்றெல்லாம் - வாயுக்களும், யானே - நானே, என்னும் - என்னாநிற்கும்; காண்கின்ற - ததநந்தரஸாவியான, கடல் - ஜலதத்வம், எல்லாம் - எல்லாம், யானே - நானே, என்னும் - என்னாநிற்கும்; காண்கின்ற - தர்சநீயமாய், கடல் - (அபரிச்சிந்நமான) கடல்போன்ற, வண்ணன் - வடிவையுடைய ஸர்வேச்வரன், ஏறக்கொலோ - ஆவேசித்தானோ? காண்கின்ற - காண்கிற, உலகத்தீர்க்கு - லோகமொழிய அறியாத உங்களுக்கு, காண்கின்ற - ஒருவருங்காணவொண்ணாதவற்றையும் காணும்படியாய் அஹ்ருபையான, என் - என், காரிகை - மகள், செய்கின்ற - செய்கிறவற்றை, என் - என்னென்பதாக, சொல்லுகேன் - சொல்லுவேன்.

இ.—மூன்றாம்பாட்டில், அபரிச்சேத்யமான ப்ருதிவ்யாதி பஞ்சபூதங்களும் நானிட்டவழக்கென்கிறாள்.

[காண்கின்ற] - காணப்புக்கால் கண்டுமுடியவொண்ணாத பரப்பை யுடைத்தாயிருக்கை. காண்கையாவது - சாஸ்த்ரத்தாலே காண்கையென்றுமாம். [காண்கின்ற கடல்வண்ணன்] - கடல்போலேதர்சநீயமாய் கண்டுமுடியவொண்ணாத போக்யதையையுடைத்தான திருநிறத்தையுடையவன். [காண்கின்றவுலகத்தீர்க்கு] - நீங்கள்காண்கின்றபடிக்கு மேற்பட உட்புக்கேனாகிலும் என்னால்பாசுரமிட்டுச் சொல்லலாவதில்லை. கரையிலேநின்றாரோடு உட்புக்காரோடு வாசியில்லை. நமக்குத்தெரியாத நிலத்திலேபுக்கு அவகாஹித்த என்மகள்பண்ணுகிற சேஷ்டிதங்கள்.

ஈடு.—மூன்றாம்பாட்டு. காரணமான ப்ருதிவ்யாதி பூதபஞ்சகங்களும் நானிட்ட வழக்கென்னாநின்றாளென்கிறாள்.

[காண்கின்ற இத்யாதி] - காணப்புக்கால் கண்டதாய்த் தலைக்கட்டமுடியாதபடியான பரப்பையுடைத்தான பூமியெல்லாம் நானிட்டவழக்கு என்னாநின்றாளென்கிறாள். இப்படி இருக்கிறதுதான் கார்யரூபையான ப்ருதிவியிறே, கண்ணுக்குத் தோற்றுகிற இது

மூன்றாம்பாட்டு.— காண்கின்ற இத்யாதி. கார்யவாசிசப்தத்தாலே காரணத்தைலக்ஷிக்கிறதென்று விவக்ஷித்து அருளிச்செய்கிறார் - காரணமான இத்யாதி.

வர்த்தமாநநிர்த்தேசார்த்தம் - காணப்புக்கால் இத்யாதி. காண்கின்ற - காணப்படாநிற்கிற. "காண்கின்ற" என்று - ப்ரத்யக்ஷமாகச்சொல்லுகையாலே, கார்யப்ருதிவியென்று ஸித்தம். அப்படிகண்டு தலைக்கட்டமுடியாதபடியாயிருக்குமோ? என்ன - இப்படியிருக்கிறது இத்யாதி. அன்

இவ்வளவானால், இதுக்குங்கூடக் காரணமாய்த்தான் ஶாஸ்த்ரங்கொண்டு அறியவேண்டும்படி யிருக்குமது இவ்வளவல்லவிறே. [காண்கின்ற இத்யாதி]-காணப்புக்கால் கண்டதாய் முடியவொண்ணாதபடியாய், இதுதனக்குங்கூட அவகாஶப்ரதாநம்பண்ணும் ஆகாசமும் நானிட்டவழக்கு என்னாநின்றாள். [காண்கின்ற இத்யாதி]-அப்படிப்பட்ட தேஜஸ்தத்வமும் நானிட்டவழக்கு என்னாநின்றாள். ஸ்பர்ஶங்கொண்டு அறியும்படியிருக்கிறகாற்றும் நானிட்டவழக்கு என்னாநின்றாள். [காண்கின்ற] - காண்பார்க்குக் கண்டதாய்த் தலைக்கட்டமுடியாதபடியான பரப்பையுடைய கடலெல்லாம் நானிட்டவழக்கு என்னாநின்றாள். காணப்புக்கால் கண்டதாய் மீளவொண்ணாதபடியான கடல்போலே ஶ்ரமஹரமானவடிவையுடைய ஸர்வேஶ்வரன் வந்து ஆவேசித்தானோ? [காண்கின்ற இத்யாதி] - நீங்களும் என்னோடொக்கக் காணாநின்றிகோளாகில்,உங்களுக்கு நான் என்ன பாசுரமிட்டுச் சொல்லுவது; உங்களோடு என்னோடு வாசியுண்டோ சொல்லவொண்ணாமைக்கு. [காண்கின்ற இத்யாதி] - "யதோவா சோநிவர்த்தந்தே" (யதோவாசோநிவர்த்தந்தே) என்கிற அபரிச்சேத்யமான விஷயத்தை யுட்புக்குப் பேசுகிற என்பெண்பிள்ளைசெய்கிற இத்தை நான் சொல்லுவதேன்? (௩)

நான்காம் பாட்டு.

செய்கின்றகிதியெல்லாம்யானேயென்னும் செய்வானின்றனகளும்யானேயென்னும், செய்துமுன்னிறந்தவும்யானேயென்னும் செய்கைப்பயனுண்பேனும்யானேயென்னும், செய்வார்களைச்செய்வேனும்யானேயென்னும் செய்யகமலக்கண்ணனேறக்கோலோ? செய்யவுலகத்தீர்க்கிவையென்சொல்லுகேன்? செய்யகனிவாயிளமான்திறத்தே.

ஆ.—(செய்கின்ற.) வர்த்தமான க்ரியைகளும், மேல்வருவதான க்ரியைகளும், பண்டுசெய்த க்ரியைகளும், க்ரியாபலம் புஜிப்பேனும், க்ரியாகர்த்தாக்களை அவற்றில் ப்ரவர்த்திப்பிப்பேனும் நானேனென்னும். இவள்கண்ணினழகாலும் அவன் ஆவேசித்தாற்போலே இராநின்றது. சிவந்த கனிபோலேயிருக்கிற வாயையுடையவளாயிருக்கிற சிறுபெண்பிள்ளை யிடையாட்டத்தில் ஆழங்காணமாட்டாதே படுபாடான உங்களுக்கு எத்தைச் சொல்லுவேனென்கிறாள்.

ஒ.—நாலாம்பாட்டில், 'க்ரியாதிகளெல்லாம் நான் இட்டவழக்கு என்னாநின்றாள்' என்கிறாள்.

றிக்கே, "காண்கின்ற" என்றதுக்கு அர்த்தத்வயம்,— கண்ணுக்கு விஷயமான கார்யபூமியென்னுதல், ஶாஸ்த்ராதிகளால் காணப்படுகிற காரணபூமியென்னுதலென்று. அதில் கார்யபூமியை யருளிச்செய்தார் - காணப்புக்கால் இத்யாதியாலே. காரணமானபூமியை யருளிச்செய்கிறார் - இப்படியிருக்கிறது இத்யாதி வாக்யத்வயத்தாலே. ஏதத்த்விதீயயோஜநாபிப்ராயேண - அவதாரிகையென்று கண்டுகொள்வது என்றுமாம். "இக்காற்று" என்றது - பாரகத்வேந ஸந்நிஹிதமாகையைப்பற்ற. ஆனாலும், எங்களைப்பற்ற நீ அந்தரங்கையன்றோ, உன்னாலேசொல்லவொண்ணாதோ? என்ன - உங்களோடு இத்யாதி. காண்கின்றவென்காரிகை - ஸாக்ஷாத்கரித்த என்பெண்பிள்ளை. காரிகை - பெண்பிள்ளை. க்ரமேணாந்வயஃ. (௩)

[செய்கின்றகிதி என்றுதொடங்கி] - வர்த்தமாநக்ரியைகளும் மேல்வருவதான க்ரியைகளும் பண்டுசெய்தக்ரியைகளும். [செய்கை என்றுதொடங்கி] - க்ரியாஃபலம் ஹூஜிப்பேனும் க்ரியாகர்த்தாக்களை அவற்றில் ப்ரவர்த்திப்பிப்பேனும். [செய்யகமலக் கண்ணன் ஏறக்கொலோ] - இவள்கண்ணினழகாலும் அவன் ஆவேஶித்தாற்போலே யிராநின்றது. [செய்ய உலகத்தீர்க்கு என்றுமேலுக்கு] - ஆழங்காணமாட்டாதே படு பாடரான உங்களுக்கு எத்தைச்சொல்லுவேன்? சிவந்த கனிபோலேயிருக்கிற வாயை யுடையளாயிருக்கிற சிறுபெண்பிள்ளை யிடையாட்டத்தில். [செய்யகனிவாய்] - அநு காரரஸத்தால்பிறந்த பௌஷ்கல்யத்தைச் சொல்லுகிறது.

ப·—அநந்தரம், ஸர்வக்ரியைகளும் நானிட்டவழக்கென்னு மென்கிறாள்.

செய்கின்ற - செய்யப்படாநிற்கிற, கிதி-(வர்த்தமான) க்ரியையும், எல்லாம்,— யானேயென்னும்,— செய்வான் - மேற்செய்வதாக, நின்றனகளும் - நிற்கிற (ஃவிஷ்யத்) க்ரியையும், யானேயென்னும்,—முன்-முன்பு, செய்து-செய்து,இறந்தவும்-கழிந்த (ஃூத) க்ரியையும், யானே - நானிட்டவழக்கு, என்னும் - என்னும்; செய்கை - இந்த க்ரியையி னுடைய, பயன் - ஃலத்துக்கு, உண்பேனும் - ஃோக்தாவும், யானே - நானே, என்னும்- என்னும் ; செய்வார்களை - இக்க்ரியைக்கு அநுஷ்டாதாக்களை, செய்வேனும் - உண் டாக்குவேனும், யானே - நானே, என்னும் - என்னும்; (இது), செய்ய - சிவந்த, கம லம்-தாமரைபோலேயிருக்கிற, கண்ணன்-கண்ணையுடைய ஸர்வேஶ்வரன்,ஏறக்கொலோ- ஆவேஶித்தபடியோ? செய்ய - செவ்வையொழிய அறியாத, உலகத்தீர்க்கு - லோகத் தீர்க்கு, செய்ய - சிவந்த, கனி-கனிபோலேயிருக்கிற, வாய் - அதரத்தையுடையளாய், இளம்-மூக்தமான, மான்-மான்போலே பேதையான இவள், திறத்து - இடையாட்டத்து, இவை - இவை, என் - என்னாக, சொல்லுகேன் - சொல்லுவேன்.

ஈ.—நாலாம்பாட்டில், க்ரியாதிகளெல்லாம் நானிட்டவழக்கென்றுநின்று ளென்கிறாள்.

[செய்கின்றகிதி] - வர்த்தமான காலத்திலுள்ள க்ரியாஜாதங்கள். [செய்வா நின்றனகள்] - ஃவிஷ்யத்காலத்திலுள்ள க்ரியாஜாதங்களும். [செய்து முன்னிறந்த வும்] - ஃூதகாலத்திற் செய்தற்றவையும். [செய்கைப்பயனுண்பேனும்] - ஸகலகர்மங் களினுடைய ஃலஃோக்தாவும். "அஹம் ஹி ஸர்வயஜ்ஞாநாம் ஃோக்தா" என்றுநின்றாள். [செய்வார்களைச்செய்வேனும்] - அநுஷ்டாதாக்களை யநுஷ்டிக்கப்பண்ணுவேனும். என்னை ஆஶ்ரயிக்கப்பண்ணுவே னென்னுதல். [செய்யகமலக்கண்ணன்] - இவள்கண்ணி லழகாலும் அவன் ஆவேஶித்தாற்போலே யிராநின்றது. அஸிதேக்ஷணையாகைதவிர்ந்து புண்டரீகாக்ஷன்வடிவை யுடையளாகாநின்றாள். புண்டரீகாக்ஷனுக்கிறே இப்ரவ்ருத்திக ளுள்ளது. [செய்யஉலகத்தீர்க்கு] - ஆழங்காணமாட்டாதே படுபாடரான உங்களுக்கு. செய்ய - செவ்வையுடைய. [செய்யகனிவாயிளமான் திறத்தே] - சிவந்த கனிபோலே யிருக்கிற வாயையுடையளான பாலையிடையாட்டத்தில். விவர்ணையாயிருந்துள்ள இவள் அநுகாரத்தாலே, இவளுடைய அதரம் தன்னிறம்பெற்றிருக்கிறபடியை, அவிக்ருதையா யிருக்கிற நான் எத்தைச்சொல்லுவேன்.

ஈ௫.—நாலாம்பாட்டு. காலத்ரயத்திலுமுண்டான க்ரியாஜாதமெல்லாம் நானிட்டவழக்கென்றுநின்ருளென்கிருள்.

[செய்கின்ற இத்யாதி] - அதில் வர்த்தமாநமான க்ரியாஜாதம், செய்யக்கடவதாய் நிற்கிற க்ரியாஜாதம், முன்புசெய்தற்ற க்ரியாஜாதம், இவையடைய நானிட்டவழக்கு என்று நின்ருள். [செய்கைப்பயனுண்பேனும்] - ''அஹம் ஹி ஸர்வயஜ்ஞாநாம் போக்தா ச'' (அஹம்ஹிஸர்வயஜ்ஞாநாம்போக்தாச) என்றுநின்ருள். க்ரியாபலபோக்தாக்களும் நானிட்டவழக்கு என்றுநின்ருள். அன்றிக்கே, செய்கையாகிற க்ரியையும், பலபோக்தாவும் நானிட்டவழக்கு என்றுநின்ருள். [செய்வார்களை இத்யாதி] - க்ரியாகர்த்தாக்களை இடுவித்து அவற்றை அநுஷ்டிப்பிப்பேனும் நானேன்றுநின்ருள். அன்றிக்கே, அவர்கள் இவற்றைக் கொண்டு என்னையாஶ்ரயிக்கும்படி பண்ணுவேனும் நானேன்றுநின்ருள். [செய்ய] - அஸிதேக்ஷணையான ஆகாரம்போய், புண்டரீகாக்ஷன்படியாய்விட்டது. * மையகண்ணளான ஆகாரம்போய், * செய்யகோலத்தடங்கண்ணன்படியாய்விட்டது. [செய்யவுலகத்தீர்க்கு]-''சொல்லலாம், ஆகாது'' என்று அறியாதே, '' சொல்லு, சொல்லு '' என்று அலைக்கிற படுபாடரான உங்களுக்கு நான் எத்தைச்சொல்லுவது. [செய்யகனிவாய்] - அநுகார † (ரஸ) த்தாலே ஸம்ஶ்லேஷஸமயத்திற்போலேயிருக்கிற இவள், அதரம் செவ்விபெற்றுவரும்படி விக்ருதையாய், அதிமுக்தையாயிருக்கிறபடி நான் எத்தைச்சொல்லுவது. பிரிவில் விவர்ணமாகை ப்ராப்தமாயிருக்க, இவளதரம் செவ்விபெற்றுவருகிறதிறே அநுகாரத்தால்வந்த தரிப்பாலே. சிவந்தகனிபோலேயிருக்கிற அதரத்தையுடையளாய், முக்தமான மான்போலே பேதையான இவளிடையாட்டத்தே. (ச)

நாலாம்பாட்டு.—செய்கின்ற இத்யாதி. ''கிதி'' என்று - க்ருதியாய், க்ரியையைச்சொல்லுகிறது.

''செய்கின்ற, செய்வானின்றனகளும், செய்துமுன்னிறந்தவும்'' என்கிற மூன்றுக்கும் - வர்த்தமானபவிஷ்யத்பூத க்ரியாஜாதபரதயா வ்யாக்யாநம் - **அதில் இத்யாதி.** அர்த்தாந்தரம் - **க்ரியா** பல இத்யாதி. முந்தினவர்த்தத்துக்கு, ''செய்கைப்பயன்'' என்றது - யாகத்தில் ப்ரயோஜநரூபமான ஹவிஸ்ஸென்றபடி. த்விதீயார்த்தத்துக்கு, பலபோக்தாக்களென்று - ஸ்வர்க்காதி பலபோக்தாக்களென்றபடி. முந்தினவர்த்தத்வயத்திலும் - செய்கையினுடைய பலமென்றபடி. **த்ருதீயார்த்தத்துக்கு** - செய்கையும் பயனுண்பேனுமென்றபடி. செய்கை - யாகாதிக்ரியைகள். **த்ருதீயார்த்தத்தில்,** க்ரியையுமென்றது - க்ரியாமாத்ரமாதல், ''கருமமும்'' என்றவிடத்திற்போலே க்ரியாநுஷ்டாதாக்களாதல். ''செய்வார்களைச்செய்வேன்'' என்றதுக்கு அர்த்தத்வயம்;—செய்வார்களை - காம்யமான ஸ்வர்க்காதி பலஸாதநகர்த்தாக்களை, செய்வேனும் - தேவதாந்தரங்களை யாஶ்ரயிப்பிப்பேனும் நானென்னுதல் என்று அர்த்தம். இத்தையருளிச்செய்கிருர் - **க்ரியாகர்த்தாக்களை** இத்யாதி. அன்றிக்கே, செய்வார்களை - மோக்ஷஸாதநமான யஜ்ஞாதிகர்மங்களைச் செய்கிறவர்களை, செய்வேனும் - என்னை யாஶ்ரயிப்பிப்பேனுமென்னுதல். இத்தை யருளிச்செய்கிருர் - **அன்றிக்கேயவர்கள்** இத்யாதி. **அஸிதேக்ஷணை** - இத்யாதி வாக்யத்துக்கு - புண்டரீகாக்ஷனுக்கேயிறே இப்ப்ரதிபத்தியுள்ளதென்று கருத்து. விவரணம் - **மையகண்ணளான** இத்யாதி. ''செய்யவுலகத்தீர்க்கு'' என்றவிடத்தில், செய்யவென்று - செவ்வையாய், **படுபாடரான** என்றபடி. **படுபாடர்** - க்ருஹீதக்ராஹிகள். இத்தையருளிச்செய்கிருர் - **சொல்லலாம்** இத்யாதி. **அநுகாரத்தாலே** - ஶப்தாநுகாரத்தாலே. அநுகாரத்தாலேயாகவேணுமோ, வாஸ்தவமாகச் சிவந்திருக்கவொண்ணுதோ? என்ன - **பிரிவில்** இத்யாதி. ''அஹம் ஹி ஸர்வயஜ்ஞாநாம் போக்தா ச ப்ரபுரேவ ச । ந து மாமபிஜாநந்தி தத்த்வேநாதஶ்ச்யவந்தி தே ॥உச॥'' இதி ஶ்ரீகீதாயாம் நவமே. செய்கின்ற என்றுதொடங்கி, உலகத்தீர்க்கு - செய்யகனிவாயிளமான்திறத்து - இவையென்சொல்லுகேன் இத்யந்வய꞉. (ச)

† குண்டலிதம் க்வாசித்கம்.

ஐந்தாம் பாட்டு.

திறம்பாமல்மண்காக்கின்றேன்யானேயென்னும் திறம்பாமல் மலையெடுத்தேனேயென்னும், திறம்பாமலசுரரைக்கொன்றேனேயென்னும் திறங்காட்டி அன்றைவரைக்காத்தேனேயென்னும், திறம்பாமல்கடல் கடைந்தேனேயென்னும் திறம்பாதகடல்வண்ணனேறக்கொலோ? திறம் பாதவுலகத்தீர்க்கென்சொல்லுகேன்? திறம்பாதென்திருமகளெய்தினவே.

ஆ.—(திறம்பாமல்.) ஒருவர்க்கும் தப்பச்செய்யவொண்ணாதபடி இத்தரையெல்லாம் ஒருதுணையின்றிக்கே காக்கின்றேன். சலியாதபடி கோவர்த்தநோத்தரணம் பண்ணினேன். தப்பாதபடி கோலி அஸுரரை முடித்தேன். ஒருவர்க்கும் அறியவொண்ணாத என்படியை லோகத்திலே ஆவிஷ்கரித்து தர்மபுத்ராதிகள் ஐவரையுங் காத்தேன். நினைத்தபடி தப்பாமல் கடலைக்கடைந்தேனென்னும். ஒருவர்க்கும் தன் ஶாஸநத்தைத் தப்பவொண்ணாதபடியான ஸர்வேஶ்வரன் ஆவேஶித்தானோ? லக்ஷ்மீஸமையான என்மகள் பகவத்குணங்களிலே தப்பாமே அகப்பட்டபடிகளை, "கேட்டல்லது போகோம்" என்று நிர்ப்பந்திக்கிற உங்களுக்கு என்னென்று சொல்லுகேனென்கிறாள்.

ஓ.—அஞ்சாம்பாட்டில், 'ஜகத்ரக்ஷணப்ரமுகமான சேஷ்டைகளெல்லாம் பண்ணுவேன் நான் என்னாநின்றாள்' என்கிறாள்.

[திறம்பாமல் மண்காக்கின்றேன்] - ஒருவர்க்கும் தப்பச்செய்யவொண்ணாதபடி இப்பூமியையெல்லாம் ஒருதுணையின்றிக்கே காக்கின்றேன். [திறம்பாமல் மலையெடுத்தேன்] - சலியாதபடி கோவர்த்தநோத்தரணம் பண்ணினேன். [திறம்பாமல் அசுரரைக் கொன்றேன்] - தப்பாதபடிகோலி அஸுரரை முடித்தேன். [திறம்காட்டி அன்று ஐவரைக்காத்தேன்] - இப்படி கோவர்த்தநோத்தரணம்பண்ணி ஒருவர்க்கும் அறியவொண்ணாத என்படியை லோகத்திலே ஆவிஷ்கரித்து தர்மபுத்ராதிகள் ஐவரையும் காத்தேன். [திறம்பாமல் கடல்கடைந்தேன்] - நினைத்தபடி தப்பாமல் கடலைக்கடைந்தேன். [திறம்பாதகடல்வண்ணன்] - ஒருவர்க்கும் தன்ஶாஸநத்தைத் தப்பவொண்ணாதபடியான ஸர்வேஶ்வரன். [திறம்பாத என்றுமேலுக்கு] - 'கேட்டல்லது போகோம்' என்று நிர்ப்பந்திக்கிற உங்களுக்கு எத்தைச்சொல்லுவேன்? லக்ஷ்மீஸமையான என்மகள் பகவத்குணங்களிலே தப்பாமே அகப்பட்டபடிகள்.

ப.—அநந்தரம், ஜகத்ரக்ஷணாதி வ்யாபாரமெல்லாம் செய்கிறேன் நானேயென்னுமென்கிறாள்.

திறம்பாமல் - ஆஜ்ஞையை அதிலங்கியாதபடி, மண் - ஜகத்தை, காக்கின்றேன் - ரக்ஷிக்கிறேன், யானே - நானே, என்னும் - என்னும்; (மோரக்ஷணார்த்தமாக), திறம்பாமல் - சலியாதபடி, மலை - மலையை, எடுத்தேனே - எடுத்தேனே, என்னும் - என்னும்; திறம்பாமல் - தப்பாதபடி, அசுரரை - (அரிஷ்டதேநுகப்ரப்ருதிகளான) அஸுரர்களை, கொன்றேனே - கொன்றேனே, என்னும் - என்னும்; திறம் - (விஜயஹேதுவான உபாய) ப்ரகாரங்களை, காட்டி - காட்டிக்கொடுத்து, அன்று - (துர்யோதநாதிகள் எதிரிட்ட) அன்று, ஐவரை - பாண்டவர்கள் ஐவரையும், காத்தேனே - ரக்ஷித்தேனே, என்னும் -

என்னும்; திறம்பாமல் - நினைவு தப்பாதபடி, கடல் - கடலை, கடைந்தேனே - கடைந்தேனே, என்னும் - என்னும்; திறம்பாத - (ஆஸ்ரிதரக்ஷணத்தில்) திறம்புதலில்லாத, கடல்வண்ணன் - கடல்வண்ணனானவன், ஏறக்கொலோ - இவளை ஆவேஸித்தபடியோ, (இது). திறம்பாத - "அறியவேணும்" என்கிற நினைவு தப்பாதிருக்கிற, உலகத்தீர்க்கு - லோகத்தீர்க்கு, என் - என்னுடைய, திரு - லக்ஷ்மீஸமாநரூபான, மகள் - பெண்பிள்ளை, திறம்பாது - தப்பாதபடி, எய்தின - ப்ராபித்த ஸ்வபாவங்களை, என் - ஏதாக, சொல்லுகேன் - சொல்லுவேன். திறம்பாதகடலென்று - கரைகடவாத கடலென்றுமாம்.

இ.—அஞ்சாம்பாட்டில், ஜகத்ரக்ஷணாதி சேஷ்டிதங்களெல்லாம் பண்ணுவேன் நானே யென்றுநின்றாளென்கிறாள்.

[திறம்பாமல் மண்காக்கின்றேன்] - ஒருவர்கூறை யெழுவருடுக்கிற ஸம்ஸாரத்திலே ஒருவர்க்கும் தப்பச்செய்யவொண்ணாதபடி, பூமியையெல்லாம் ஒரு துணையின்றிக்கே காக்கிறேனென்னும். "பீஷாஸ்மாத்வாத꞉பவதே" என்கிற ஆஜ்ஞையாலே சிறியத்தைப் பெரியது நின்றுமே நோக்குகிறேன் நானே யென்னும். சலியாதபடி கோவர்த்தநத்தை எடுத்தேனென்னும். இடையர்மேலாதல் பசுக்கள்மேலாதல் ஒருதுளி விழாதபடி யெடுக்கை. [திறம்பாமலசுரரைக்கொன்றேனே யென்னும்] - தப்பாதபடிகோலி அஸுரரைக் கொன்றேனென்னும். மாரீசனை விட்டது ராவணனுக்குப் பார்வையாக. [திறங்காட்டியன்றைவரைக்காத்தேனே] - லோகத்திலே என்படிகளைக்காட்டி, பகலைஇரவாக்கியும், "ஆயுதமெடேன்" என்று ஆயுதமெடுத்தும் ஆஸ்ரித பக்ஷபாதத்தை வெளியிட்டு, "நகாங்க்ஷே விஜயம்க்ருஷ்ண" என்கிற அர்ஜுநனை "கரிஷ்யே வசநம் தவ" என்னப்பண்ணி. [திறம்பாமல்கடல்கடைந்தேனேயென்னும்] - திறம்பாமற் கடைகை- தப்பாமல் கடைகை. மந்தரம் கீழேவிழுதல், மேலேகொந்தளித்தல்செய்யாதபடி மஹாதத்த்வத்தைக் கலக்கினேன். தன்ஸாஸநத்தை ஒருவராலும் தப்பவொண்ணாதபடியான ஸர்வேஸ்வரன். [திறம்பாதவுலகத்தீர்க்கென்சொல்லுகேன்] - "கேட்டல்லது போகோம்" என்றிருக்கிற உங்களுக்கு லக்ஷ்மீஸமையான என்மகள் பகவத்குணங்களிலே தப்பாதே யகப்பட்டபடிகள். ஹிதஞ்சொல்லி மீட்கவொண்ணாதபடியிறே யகப்பட்டது.

ஈடு.—அஞ்சாம்பாட்டு. ஜகத்ரக்ஷணப்ரமுகமான சேஷ்டிதங்களுமெல்லாம் பண்ணினேன் நானேன்றுநின்றாளென்கிறாள்.

[திறம்பாமல் இத்யாதி] - ஒருவர்கூறை எழுவர் உடாதபடி, "பீஷாஸ்மாத்வாத꞉பவதே" (பீஷாஸ்மாத்வாத꞉பவதே) என்கிறபடியே, பூமியை நோக்குகிறேன் நானேன்னும். ஒரு பசுவின்மேலாதல் ஒரு இடையன்மேலாதல் ஒரு துளிபடாதபடி கோவர்த்தநகிரியை தரித்து ரக்ஷித்தேனும் நானென்றுநின்றாள். அஸுரவர்க்கத்தைத்

அஞ்சாம்பாட்டு.—திறம்பாமல் இத்யாதி.

"திறம்பாமல் மண்காக்கின்றேன்" என்றவிடத்திலே, திறம்பாமல் என்றதுக்கு - ஒருவர் நிமித்தமான பயத்தாலே சலியாதபடி என்று அர்த்தம்விவக்ஷித்து - ஒருவர்கூறை இத்யாதி. ஒருவர் கூறை யெழுவருடுக்கையாவது - ஒருவன்கையில்புடவையை ஒருவன்பறிக்க, அவன்கையிலத்தை வேறொருவன்பறிக்க, இப்படி எழுபேராகப் பறித்துடுக்கை. இது-எளியாரை வலியார் பாதிக்கைக்கு த்ருஷ்டாந்தம். இப்படி எளியாரை வலியார் பாதியாதபடி ஸ்வஸ்வமர்யாதையிலே நிறுத்தி பூமியை ரக்ஷிக்கிறேனென்றபடி. "திறம்பாமல் மலை, திறம்பாமல் அசுரரை" என்கிற இரண்டிடத்திலும்,

தப்பாதபடி அறுத்துப்போகட்டேனென்னும். [திறங்காட்டி இத்யாதி] - லோகத்திலே என் படிகளைக் காட்டி; பகலை இரவாக்கியும், "ஆயுதமெடேன்" என்று ஆயுதமெடுத்தும், ஶத்ருக்களுடைய உயிர்நிலையைக் காட்டியும் இப்படி அன்று பாண்டவர்களை பக்ஷபதித்து ரக்ஷித்தேனும் நானேனென்னுநின்றாள். "நகாங்க்ஷே விஜயம் க்ருஷ்ண" (நகாங்க்ஷேவிஜயம் க்ருஷ்ண) என்ற அர்ஜுநனை, "கரிஷ்யே வசநம் தவ" (கரிஷ்யேவசநம்தவ) என்னப் பண்ணினானிறே. [திறம்பாமற்கடல்] - ஒருதாழிக்கு உட்பட்ட தயிரை ஒன்றும் பிறிகதிர்ப் படாதபடி கடைவாரைப்போலே, ஸமுத்ரமென்கிற மஹாதத்த்வத்தின் நடுவே மந்தரத்தை நட்டுக் கடைகிறவிடத்துக் கீழேவிழுதல் மேலேகோந்தளித்தல் செய்யாதபடி கடலைக் கடைந்தேனும் நானேனென்னும். [திறம்பாத] - தன் ஶாஸநத்தை ஒருவரால் தப்பவொண்ணாதபடியிருக்கிற அபரிச்சேத்ய ஸ்வபாவனை ஸர்வேஶ்வரன் வந்து ஆவேசித்தானோ? [திறம்பாத] - "கேட்டல்லது கால்வாங்கோம்" என்று இருக்கிற உங்களுக்கு நான் எத்தைச்சொல்லுவது. லக்ஷ்மீஸமையான என்மகள், ஹிதஞ்சொல்லி மீட்கவொண்ணாதபடி ப்ராபித்தவற்றை நான் எத்தைச் சொல்லுவது? ஆழங்காலிலே இழிந்தார்படியைக் கரையிலேநின்றாராலே சொல்லப்போமோ? (ரு)

ஆறாம் பாட்டு.

இனவேய்மலையேந்தினேன்யானேயென்னும் இனவேறுகள் செற்றேனும்யானேயென்னும், இனவான்கன்றுமேய்த்தேனும் யானேயென்னும் இனவாநிரைகாத்தேனும்யானேயென்னும், இனவாயர்தலைவனும்யானேயென்னும் இனத்தேவர்தலைவன்வந்தேறக்கொலோ? இனவேற்கண்ணல்லீர்க்கிவையென்சொல்லுகேன்? இனவேற்கண்ணியென் மகளுற்றனவே.

திறம்பாமல் என்றதுக்கு - தப்பாமல் என்று அர்த்தம். திறங்காட்டி - பக்ஷபாதப்ரகாரங்களைக்காட்டியென்னுதல்; திறமென்று - ஸமூஹமாய், தத்த்வவிவேகந்தொடங்கி ப்ரபத்திபர்யந்தமான அர்த்த ஸமூஹங்களைக்காட்டியென்னுதல். இரண்டர்த்தத்தையும் அடைவே யருளிச்செய்கிறார் - லோகத்திலே என்படிகளை இத்யாதியாலும், நகாங்க்ஷே இத்யாதியாலும். திறம்பாமல்கடல் - சலியாதபடி ஸமுத்ரத்தை. திறம்பாதகடல்வண்ணன் இத்யாதி - திறம்பாத - அதிக்ரமிக்கப்போகாத. இது - *கடல்வண்ணனுக்கு விசேஷணம். திறம்பாதவுலகத்தீர்க்கு - சலியாதவுலகத்தீர்க்கு. திறம்பாது- சலியாமல். எய்தின - ப்ராபித்தன. அவள் ப்ராபித்தத்தை உன்னாலே சொல்லப்போகாதோவென்ன - ஆழங்காலிலே இத்யாதி. திறம்பாமல் இத்யாரப்ய, உலகத்தீர்க்கு - என்திருமகள் - திறம்பாது - எய்தின - என்சொல்லுகேன் இத்யந்வய꞉. பீஷாஸ்மாத் வாத꞉ பவதே என்றது - இவன் நிமித்தமான பயத்தாலே காற்றுமுதலானவை ஸ்வஸ்வகார்யஞ் செய்யுமென்றபடி. "நகாங்க்ஷே விஜயம் க்ருஷ்ண நசராஜ்யம் ஸுகாநிச। கிம் நோ ராஜ்யேந கோவிந்த கிம் போகைர் ஜீவிதேந வா ॥ ௩௨ ॥" இதி கீதாஸூக்தௌ. "நஷ்டோ மோஹ꞉ ஸ்ம்ருதிர் லப்தா த்வத்ப்ரஸாதாந் மயாச்யுத। ஸ்திதோஸ்மி கதஸந்தேஹ꞉ கரிஷ்யே வசநம் தவ ॥ ௭௩ ॥" இத்யஷ்டாதஶே. (ரு)

ஆ.—(இனவேய்மலை.) திரள்திரளானமூங்கிலையுடைத்தான கோவர்த்தந கிரியுத்தாரணம் முதலான க்ருஷ்ணசேஷ்டிதங்களெல்லாம் நானே பண்ணுநின்றேன் என்னு நின்றாள். [இனத்தேவர்] - தனித்தனி அநுபவிக்கமுடியாமையாலே திரண்டிருக்கிற * அயர்வறுமமரர்களதிபதியானவன் ஆவேசித்தானோ? வேல்போலேயிருக்கிற கண்ணை யுடையீராய் அவஹிதராயிருக்கிற உங்களுக்கு, தான்படுகிறபாட்டைப் பிறரைப்படுத்த வல்ல கண்ணழகையுடைய இவளுற்றனவிவற்றை என்சொல்லுகேனென்கிறாள்.

ஒ.—ஆறும்பாட்டில், 'கோவர்த்தனோத்தாரணம் முதலான க்ருஷ்ணசேஷ்டி தங்களெல்லாம் பண்ணினேன் நான் என்று இவள் சொல்லாநின்றாள்' என்கிறாள்.

[இனவேய்மலை]-திரள்திரளான மூங்கிலையுடைத்தான கோவர்த்தநகிரி. [இன வாயர்தலைவன்] - ஒருதரத்தில் ஆயர்க்கெல்லாம் ப்ரதாநன். [இனத்தேவர்] - தனித்தனி பகவத்குணங்கள் அநுபவிக்கமுடியாமையாலும், ஒருவரையொருவர் பிரியமாட்டாமையா லும் திரண்டிருக்கிற அயர்வறுமமரர்கள். [இனவேற்கண் நல்லீர் என்றுதொடங்கி] - வேல்போலேயிருக்கிற கண்ணையுடையீர். கேட்கைக்கு அவஹிதராயிருக்கிறபடி. தான் படுகிறபாட்டைப் பிறரைப்படுத்தவல்ல கண்களையுடைய இவள் உற்ற இவற்றை என் சொல்லுகேன்.

ப.—அநந்தரம், க்ருஷ்ணசேஷ்டிதங்களைச் செய்தேனும் நானேயென்னு மென்கிறாள்.

இனம் - திரளான, வேய் - மூங்கிலையுடைய, மலை - கோவார்த்தநத்தை, ஏந்தி னேன் - எடுத்தேன், யானே - நானே, என்னும் - என்னும்; இனம் - திரளவந்த, ஏறு கள் - ஏழு எருத்தையும், செற்றேனும் - கொன்றேனும், யானே - நானே, என்னும் - என்னும்; இனம் - ஓரினத்தில், ஆன்கன்று - கன்றுகளை, மேய்த்தேனும் - மேய்த்தே னும், யானே - நானே, என்னும் - என்னும்; இனம் - திரள்திரளான, ஆநிரை - பசுக் களை, காத்தேனும் - ரக்ஷித்தேனும், யானே - நானே, என்னும் - என்னும்; இனம் - ஒரு தரத்தில், ஆயர் - இடைப்பிள்ளைகளுக்கு, தலைவனும் - நாயகனுமிருப்பேனும், யானே - நானே, என்னும் - என்னும்; இனம் - ஸங்கமான, தேவர் - ஸூரிகளுக்கு, தலைவன் - நிர்வாஹகனான ஸர்வேஶ்வரன், வந்தேறக்கொலோ - ஆவேசித்தபடியோ? இனம் - தன் னில்தான்செறிந்து, வேல்-வேல்போலேயிருக்கிற, கண்-கண்ணழகையுடைய, நல்லீர்க்கு- உங்களுக்கு, வேல் - வேலோடு, இனம் - ஒத்திருக்கிற, கண்ணி - கண்ணையுடைய, என்- என்னுடைய, மகள் - பெண்பிள்ளை, உற்றன - லஹித்த, இவை-இந்த ஸ்வபாவங்களை, என் - ஏதென்று, சொல்லுகேன் - சொல்லுவேன். இனத்தேவரென்று - ஸாம்யம் பெற்றவரென்றுமாம்.

இ.—ஆறும்பாட்டில், க்ருஷ்ணசேஷ்டிதங்களெல்லாம் பண்ணினேன் நானே என்னுநின்றாளென்கிறாள்.

[இனவேய்மலை] - திரள்திரளான மூங்கிலையுடைத்தான கோவர்த்தநகிரி. மலை யைக் கவிழ்த்துப் பிடித்தபோது, அணுக்களைக் கவிழ்த்துப்பிடித்தாற்போலே யிருக்கை. திரளான எருதுகளேழையும் ஊட்டியாக நெரித்தேனும்நானே. "வத்ஸைர் ஸமதம்வாலம்" என்று என்னோடொத்தபருவத்திற்கன்றுகள் மேய்த்தேனும் நானே. பருவம்நிரம் பின பசுக்களை மேய்த்தேனும்நானே. ப்ரதமத்தில் ப்ரஹ்மசர்யத்தை யநுஷ்டித்துப்

பின்பு கார்ஹஸ்த்யத்திலே இழியுமாப்போலே. என்தரத்திலிடைப்பிள்ளைகளுக்கெல்லாம் தீம்புக்குத்தலைவனும் நானே. [இனத்தேவர்] - பஞ்சவிம்ஶதிவார்ஷிகராயிருக்கையாலே தன்பருவத்தோடொத்த நித்யஸூரிகளென்னுதல், தனியநுபவிக்கமாட்டாமையாலும் ஒருவரையொருவர் பிரியமாட்டாமையாலும் திரண்டிருக்கிற நித்யஸூரிகளென்னுதல். [இனவேற்கண்ணல்லீர்க்கு] - தன்னிலொத்தவேலொழுங்குபோலேயிருக்கிற கண்ணழகையுடைய உங்களுக்கு. கேட்கையிலே அவஹிதராயிருக்கிறபடி. [இனவேற்கண்ணியென்மகள்] - தன்கண்ணுக்கிலக்கானார் படும்பாட்டைத் தான்படுகிறவளுற்றவற்றையென் சொல்லுகேன்.

ஈடு.—ஆறும்பாட்டு. கோவர்த்தனோத்தரணம் முதலான க்ருஷ்ணசேஷ்டிதங்களெல்லாம் பண்ணினேன் நான் என்றுநின்றாளென்கிறாள்.

[இனவேய்மலை] - அணுக்கனைக் கவிழ்த்துப் பிடித்தாற்போலே, திரள்திரளான மூங்கிலையுடைத்தான மலையை அநாயாஸேந தரித்தேன் நான் என்றுநின்றாள். [இனம்] - ஒன்றிரண்டன்றிக்கே ம்ருத்யுஸத்ருஶமாயிருக்கிற ருஷபங்கள் ஏழையும் ஒருகாலே ஊட்டியாகநெரித்துப்போகட்டேன் நான் என்னும். [இனவான்கன்று] - "வத்ஸமத்யகதம் பாலம்" (வத்ஸமத்யகதம் பாலம்) என்கிறபடியே என்னோடொத்தபருவமான கன்றுகளை மேய்த்தேனும் நானென்னும். [இனவாநிரை] - முன்பு ப்ரஹ்மசர்யமநுஷ்டித்துப் பின்பு கார்ஹஸ்த்யதர்மம் அநுஷ்டிப்பாரைப்போலே, பால்யத்திலே கன்றுகளைமேய்த்து, பருவம்நிரம்பினபின்பு பசுக்களை மேய்த்தேனும் நானென்னும். [இனவாயர்] - † "தன்னேராயிரம்பிள்ளைகள்" என்கிறபடியே, என்னோடொத்த பருவத்தில் பிள்ளைகளும் நானுமாய்த் தீம்புசெய்து திரிகிறவிடத்தில், அவர்களில் என்றனைத் தீம்பரில்லையென்னும். [இனத்தேவர்] - நைரபேக்ஷ்யத்துக்குத் தன்னோடொத்திருக்கிற நித்யஸூரிகளுக்கு நிர்வாஹகனான ஸர்வேஶ்வரன் வந்து ஆவேசித்தானோ? அன்றிக்கே, [இனத்தேவர்] - தனியநுபவிக்கவொண்ணாமையாலே திரள்திரளாயிருக்கிற நித்யஸூரிகளென்னுதல். "அடியார்கள்குழாங்கள்" என்னக்கடவதிறே. [இனவேல்] - வேலொழுங்குபோலே, "இவள்தசை எவ்வளவாய்த் தலைக்கட்டுகிறது" என்று கூர்க்கப்பார்த்துக்கொண்டிருக்கிற உங்களுக்கு நான் எத்தைச்சொல்லுவது. ஏன்றான், சொல்ல அருமையென்? என்ன, [இனவேற்கண்ணி] - தன்கண்ணுக்கிலக்கானார் படுவதைத் தான் படுகிறபடியைச் சொல்லப்போமோ. ‡ "உயிர்காமின்கள்ஞாலத்துள்ளே" என்றிறே இவள்கண்ணுக்கு இலக்கானார் படுவது. (சு)

ஆறும்பாட்டு.—இனவேய் இத்யாதி.

அணுக்கன் - குடை. இனவேய் - திரளானமூங்கில். "இனவேறுகள்" என்றவிடத்தில், இனமென்றது - ஸத்ருஶமாய், ம்ருத்யுஸத்ருஶமாயிருக்கிற என்றபடி. ஊட்டியென்று - கழுத்தாய், கழுத்துத் தன்னையிலே யகப்படும்படியாக நெரித்தேன்றபடி. ஊட்டி - ஊணும், கழுத்தும். **வான்கன்று** *- பெரியகன்றுகள்.* **இனவாநிரை** *- திரளானபசுக்கூட்டம்.* **நல்லீர்க்கு** *- விலக்ஷணைகளான உங்களுக்கு.* **இனவேற்கண்** *- ஒன்றுக்கொன்று ஒப்பாய் வேல்போலேயிருக்கிறகண்.* **தன்னோராயிரம்பிள்ளைகள்** *- தன்னோடொத்த ஆயிரம்பிள்ளைகளோடே. †பெரியாழ்வார்திருமொழி, மூன்றும்பத்து.* **உயிர்காமின்கள்ஞாலத்துள்ளே** *- ஸம்ஸாரத்திலேயிருக்கிற நீங்கள் உயிரைக்காத்துக்கொள்ளுங்கோள். ‡ திருவிருத்தம், ஆறும்பாட்டு, "தடாவிய" இத்யாதி.* "ஸஞ்சசாரகீடதாக்ஷ க்ருஷ்ணஸ்ஸஹராமவாந் । வத்ஸமத்யகதம் பாலம் நீலோத்பலதலச்சவிம் ॥ ௧௧ ॥" இதி ஸ்ரீவிஷ்ணுபுராணே, பஞ்சமாம்ஸே, ஷஷ்டாத்யாயே. (சு)

ஏழாம் பாட்டு.

உற்றார்களெனக்கில்லையாருமென்னும் உற்றார்களெனக்கிங்கெல்
லாருமென்னும், உற்றார்களைச்செய்வேனும்யானேயென்னும் உற்றார்களை
யழிப்பேனும்யானேயென்னும், உற்றார்களுக்குற்றேனும்யானேயென்னும்
உற்றாரிலிமாயன்வந்தேறக்கொலோ? உற்றீர்கட்கென்சொல்லிச்சொல்லு
கேன்யான்? உற்றென்னுடைப்பேதையுரைகின்றவே.

ஆ.—(உற்றார்கள்.) இஜ்ஜகத்தில் என்படியை யறிந்து எனக்கு பந்துக்களா யிருப்பார் ஒருவருமில்லை. அவர்கள் அப்படியிருந்தமை யறிந்துவைத்தே, எனக்கு உறவாக நினைத்திராதார் ஒருவருமில்லை. சிலர் என்னை ஆஶ்ரயிக்கும்படி பண்ணுவேன். அநாஶ்ரயிக்குமவர்களில் ப்ரயோஜநாந்தரபரர்க்கு அவர்கள் வேண்டினவற்றைக்கொடுத்து அகற்றுவேன் நான். அநந்யப்ரயோஜநரானவர்களுக்கு எல்லா பந்துக்ருத்யமும் பண்ணுவேன் நான் என்னும். எத்தனையேனும் அளவுடையார்க்கும் முட்டக்காணவொண்ணாத அத்யாஶ்சர்யபூதனானவன் ஆவேசித்தானோ? ஈடுபட்டு, அத்யந்த பாலையான என் மகள் சொல்லுகிறவற்றை, உறவுமுறையாரான உங்களுக்கு என்னபாசுரத்தாலே சொல்லுவேன் நான் என்கிறாள்.

ஒ.—ஏழாம்பாட்டில், 'எம்பெருமான் ஆஶ்ரிதவிஷயத்தில் இருக்கும் இருப்பைத் தன்படியாகப் பேசாநின்றாள்' என்கிறாள்.

[உற்றார்கள் எனக்கில்லையாரும்] - இஜ்ஜகத்தில் என்படியறிந்து எனக்கு பந்துக்களாயிருப்பார் ஒருவருமில்லை. [உற்றார்கள் எனக்கு இங்குஎல்லாரும்] - அவர்கள் அப்படியிருந்தமை அறிந்துவைத்தே, நான் எனக்கு உறவாகநினைத்திராதார் ஒருவருமில்லை. [உற்றார்களைச் செய்வேனும் யானே] - சிலர் என்னை ஆஶ்ரயிக்கும்படி பண்ணுமவன் நான். [உற்றார்களை அழிப்பேனும்யானே] - ஆஶ்ரயிக்குமவர்களில் ப்ரயோஜநாந்தரபரர்க்கு அவர்கள்வேண்டினவற்றைக் கொடுத்து அவர்களை அகற்றுவேன் நான். என்னுடைய ஸௌந்தர்யாதிகளைக்காட்டி அவர்களை ஈடுபடுத்துவேனும் நான் என்றுமாம். [உற்றார்களுக்கு உற்றேனும்] - அநந்யப்ரயோஜநரானவர்களுக்கு எல்லா பந்துக்ருத்யம் பண்ணுவேனும். [உற்றாரிலிமாயன்] - எத்தனையேனும் அளவுடையார்க்கும் முட்டக்காணவொண்ணாதபடியான அத்யாஶ்சர்யபூதனானவன். [உற்றீர்கள் என்று தொடங்கி] - உறவுமுறையாரான உங்களுக்கு என்னபாசுரத்தாலே சொல்லுவேன் ஈடுபட்டு அத்யந்தபாலையான என்மகள் சொல்லுகிறன.

ப.—அநந்தரம், ஜகத்தில் பந்துக்களளவில் அவன்படியெல்லாம் தன்படியாகச் சொல்லாநின்றாளென்கிறாள்.

உற்றார்கள் - (ஒருபாதியாலேகிட்டுதல், என்னையுள்ளபடியறிந்துகிட்டுதல் செய்திருக்கும்) பந்துக்கள், எனக்கு - எனக்கு, யாரும் - ஒருவரும், இல்லை - இல்லை, என்னும் - என்னும்; இங்கு - இஜ்ஜகத்தில், (நிருபாதிகஸம்பந்தத்தைப்பார்த்தால், அவர்கள் தாரதம்யம்பாராதே), எல்லாரும் - எல்லாரும், எனக்கு - எனக்கு, உற்றார்கள் - பந்

துக்களாயிருக்கும், என்னும் - என்னும்; உற்றார்களை - அவர்களை எனக்கு உற்றாராம் படி, செய்வேனும் - பண்ணுவேனும், யானே - நானே, என்னும் - என்னும்; உற்றார் களை - ப்ரயோஜநாந்தரத்துக்காகக் கிட்டினவர்களை, அழிப்பேனும் - (அவற்றைக் கொடுத்து) உறவறுத்துவிடுவேனும், யானே - நானே, என்னும் - என்னும்; உற்றார் களுக்கு - அநந்யப்ரயோஜநராய்க் கிட்டினார்க்கு, உற்றேனும் - எல்லாவுறவுமுறையும், யானே - நானே, என்னும் - என்னும்; உற்றார் - எத்தனையேனும் அளவுடையராகிலும் தன்னை முட்டக்கண்டு கிட்டினார், இலி - இல்லாத, மாயன் - ஆஶ்சர்யபூதன், வந்தேறக் கொலோ - ஆவேசித்தபடியோ? உற்றீர்கட்கு - பந்துக்களான உங்களுக்கு, என்னு டைப்பேதை - அதிபாலையான என்னுடைய பெண்பிள்ளை, உற்று - உள்ளுறக்கண்டு, உரைக்கின்ற - சொல்லுகிற வார்த்தைகளை, என் - என்னபாசுரம், சொல்லி - சொல்லி, சொல்லுகேன் - சொல்லுவேன்?

இ.—ஏழாம்பாட்டில், அவன் ஆஶ்ரிதவிஷயத்திலிருக்கு மிருப்பைத் தன் படியாகப் பேசாநின்றா ளென்கிறாள்.

[உற்றார்களெனக்கில்லையாரும்] - ஒருபாதியால்வந்த பந்துக்கள் ஒருவரு மில்லையென்னுதல், என்படியையறிந்து எனக்கு ஸ்நேஹிக்கக்கடவார் ஒருவருமில்லை யென்னுதல். [உற்றார்களெனக்கிங்கெல்லாருமென்னும்] - "பதிம்விஶ்வஸ்ய" என் கிறபடியே பார்த்தால், இஜ்ஜகத்திலெல்லாரும் பந்துக்களென்னுதல்; அவர்கள் இப் படியிருந்தமை யறிந்துவைத்தே, நிருபாதிகபந்துவாய் எல்லார்க்கும் ஸ்நேஹித்திருப்பே னென்னுதல். [உற்றார்களைச்செய்வேனும்யானேயென்னும்] - சிலரென்னையாஶ்ரயிக்கப் பண்ணுவேனும் நானே. [உற்றார்களையழிப்பேனும்யானே] - ப்ரயோஜநாந்தரபரரை ப்ரயோஜநங்களைக்கொடுத்து அகற்றுவேனும்நானே யென்னுதல்; அவர்களை, ஸௌந்தர் யாதிகளைக்காட்டி யழிப்பேனும்நானே யென்னுதல். [உற்றார்களுக்குற்றேனும்] - அநந்ய ப்ரயோஜநர்க்கு எல்லாவுறவும் நானேயென்னுதல், அநந்யப்ரயோஜநர்க்கு அநந்யப்ரயோ ஜநனாயிருப்பேனும் நானேயென்னுதல். [உற்றாரிலிமாயன்] - எத்தனையேனும் அளவுடை யார்க்கும் முட்டக்காணவொண்ணாதபடியான ஆஶ்சர்யபூதன். ஸ்வயத்நத்தால் ஒரு வர்க்கும் கிட்டவொண்ணாதவன். [உற்றீர்கட்கென்சொல்லிச் சொல்லுகேன்யான்] - ஆனாலும், பந்துக்களான எங்களுக்குச் சொல்லவேண்டாவோ? என்னில்,—பந்துக்க ளாகவமையுமோ, விஷயஞ் சொல்லலாகவேண்டாவோ? உறவுமுறையான உங்களுக்கு, என்னபாசுரத்தைச்சொல்லிச் சொல்லுவேன். பருவம்நிரம்பாத என்பெண் ஈடுபட்டுச் சொல்லுகிற வார்த்தைகளை வாய்க்கரையிலே நிற்கிறநான் எத்தைச் சொல்லுவது.

ஈடு.—ஏழாம்பாட்டு. எம்பெருமான் ஆஶ்ரிதவிஷயத்தில் இருக்கிற இருப்பைத் தன்படியாகப் பேசாநின்றாளென்கிறாள்.

[உற்றார்கள் எனக்கில்லை யாருமென்னும்] - எனக்கு ஒருபாதியால்வந்த பந்துக் கள் ஒருவருமில்லை யென்னும். அன்றிக்கே, என்னோட்டை ஸம்பந்தமறிந்து எனக்கு ஸ்நே

ஏழாம்பாட்டு.—உற்றார்கள் இத்யாதி.

உபாதியால் - *கர்மமாகிறவுபாதியால். த்விதீயார்த்தத்துக்கு - உற்றிருப்பாரென்றாய், ஸ்நேஹிப்பாரென்றபடி. ஸம்பந்தமறிந்து ஸ்நேஹியார்களோவென்ன - பதிம் இத்யாதி. கீழிற்பதத்*

ஹிக்கக்கடவார் ஒருவருமில்லை யென்னுதல், "பதிம்விஶ்வஸ்ய" (பதிம்விஶ்வஸ்ய)என்று இத்தை ஓதிவைத்தே தேவதாந்தரஸஜநமிறே பண்ணுவது. [உற்றார்கள் எனக்கு இங்கெல்லாருமென்னும்] - எனக்கு நிருபாதிகபந்துக்களல்லாதார் இல்லையென்னும். அவர்கள் இப்படி யிருக்கச்செய்தே நிருபாதிகபந்துவாய் எல்லார்க்கும் ஸ்நேஹித்திருப்பனென்னுதல். [உற்றார்களைச்செய்வேனும் யானேயென்னும்] - அவர்களிலே சிலர் வந்து என்னை ஆஶ்ரயிக்கும்படி பண்ணுகிறேனும் நானேன்னும். [உற்றார்களையழிப்பேனும்]-அவர்களுக்கு ப்ரயோஜநாந்தரங்களிலே ருசியுண்டானால், அந்த ப்ரயோஜநங்களைக் கொடுத்து என்பக்கலினின்றும் அகற்றுவேன் நானேன்னும். அன்றிக்கே, ஆண்டான்பணித்தானாக இளையபெருமாள், "அவர்களை ஸௌந்தர்யாதிகளாலே அழிப்பேனும் நானேன்னுநின்றாள்" என்றும் அருளிச்செய்வர். [உற்றார்களுக்கு உற்றேனும் யானேயென்னும்]-என்பக்கல் அநந்யப்ரயோஜநராய்ப் பரிமாறுவார்க்கு என்றனை யநந்யப்ரயோஜநர் இல்லையென்னுதல். அன்றிக்கே, என்னையே ஸர்வவிதபந்துவுமாகப் பற்றினவர்களுக்கு, நானும் அவர்களையே ஸர்வவிதபந்துவுமாக இருப்பேன் என்னவுமாம். [உற்றாரிலி]-இற்றைக்குமுன்பு ஸ்வயத்நத்தாலே கிட்டினார் ஒருவருமில்லாதபடியிருக்கிற ஆஶ்சர்யபூதனான ஸர்வேஶ்வரன் வந்து ஆவேசித்தானோ? [உற்றீர்கள் இத்யாதி]-"இங்ஙன் ஸம்ஶயிக்கக்கடவதோ, பந்துக்களுக்குநிஶ்சயித்துச்சொல்லவேணுங்காண்" என்ன,—உறவுமுறையாரா மித்தனையோ வேண்டுவது, சொல்லலாய்ச் சொல்லவேண்டாவோ. என்ன பாசுரத்தைச் சொல்லிச் சொல்லுவேன்? என்றான், சொல்லவொண்ணாமைக்கு வந்ததேன்? என்னில்,—[உற்று இத்யாதி] - பருவம்நிரம்பாத என்பெண், மறுபாடுருவத்தைத்துச்சொல்லுகிறவற்றை, கரையிலேநிற்கிற நான் எத்தைச்சொல்லுவது. திருத்தாயாரான தசையும் இவர்தமக்கே யுள்ளதோன்றுகில், இங்குச்சொல்லவொண்ணாதபடி கலங்குகையாவதேன்? என்னில்,—"தனக்கும்தன்தன்மையறிவரியான்" என்று - ஈஶ்வரனை, தன்படி தானும் அறியான் என்று சொல்லுமாபோலே; தம்தசை தமக்குங்கூடப் பேச்சுக்கு நிலமன்றென்கிறது. (எ)

எட்டாம் பாட்டு.

உரைக்கின்றமுக்கட்பிரான்யானேயென்னும் உரைக்கின்றதிசைமுகன்யானேயென்னும், உரைக்கின்றவமரரும்யானேயென்னும் உரைக்கின்றவமரர்கோன்யானேயென்னும், உரைக்கின்றமுனிவரும்யானேயென்னும் உரைக்கின்றமுகில்வண்ணனேறக்கொலோ? உரைக்கின்றவுலகத்தீர்க்கென்சொல்லுகேன்? உரைக்கின்றவென்கோமளவொண்கொடிக்கே.

---

*தில் அர்த்தத்வயாநுகுணமாக அர்த்தத்வயம் - **எனக்குநிருபாதிக இத்யாதி** வாக்யத்வயத்தாலே. என்னை ஆஶ்ரயிக்கும்படி பண்ணுகிறேனு மென்றது - "தேஷாம்ஸததயுக்தாநாம்" இத்யாதியைப்பற்ற. **இளையபெருமாள்** - ஆண்டான்ஸ்ரீபாதத்திலவர். உற்றார்களுச்குற்றேனும் - அநந்யப்ரயோஜநராய்க்கிட்டினார்க்கு உற்றிருப்பேனுமென்னுதல்; உறுதல் - கிட்டுதல். அன்றிக்கே, உறவுமுறையார்க்கு உறவுமுறையாயிருப்பேனுமென்னுதல். உற்றாரிலி - கிட்டினவர்களில்லாதவன். என்சொல்லிச்சொல்லுகேன் - எந்தபாசுரத்தையிட்டு எந்தவர்த்தத்தைச்சொல்லுவேன். **மறுபாடுருவ** - அப்பாலுருவ. நன்றாக அவகாஹித்தென்றபடி ஸ்வாபதேசத்திலே ஜிஜ்ஞாஸுப்ரஶ்நத்தை யநுவதித்துப் பரிஹரிக்கிறார் - **திருத்தாயாரான இத்யாதி. தனக்கும்தன்தன்மையறிவரியான்** - ஸ்வதஸ்ஸர்வஜ்ஞனான தன்னாலும் தன்னைப் பரிச்சேதிக்கப்போகாதவன். உற்றார்கள் - யாரும் - எனக்கிங்கில்லை - என்னும், இங்கெல்லாரும் - எனக்கு - உற்றார்கள் - என்னும் இத்யாதப்ய, உற்றீர்கட்கு - என்னுடைப்பேதை - உற்று - உரைக்கின்ற - என்சொல்லிச்சொல்லுகேன் இத்யந்வயः.* (எ)

ஆ.—(உரைக்கின்ற.) ஜகத்ப்ரயோகநராக ஶாஸ்த்ரங்களிற்சொல்லப்படுகிற சதுர்முகப்ரமுவரும் நானிட்ட வழக்கென்றுநின்றாள். காலதத்த்வமுள்ளதனையும் பேசினாலும் பேசிமுடிக்கவொண்ணாத அழகையுடையவன் ஆவேசித்தானோ? அதிலோகமான பேச்சைப் பேசுவதும்செய்து, துஃகஸைஹயுமன்றிக்கே யிருக்கிற இவ்விலக்ஷணையான பெண்பிள்ளைக்குப்பிறந்த அவஸாதத்தை "சொல்லு, சொல்லு" என்று நிரந்தரமாகச்சொல்லுகிற லௌகிகரான உங்களுக்கு ஏதென்று சொல்லுவேன் நானென்கிறாள்.

ஓ.—எட்டாம்பாட்டில், 'ஜகத்ப்ரயோகநராக ஶாஸ்த்ரங்களிற் சொல்லப்படுகிற சதுர்முகப்ரமுவரும் நான் இட்டவழக்கு என்றுநின்றாள்' என்கிறாள்.

[உரைக்கின்றமுகில்வண்ணன்] - காலதத்த்வமுள்ளதனையும் பேசினாலும் பேசிமுடிக்கவொண்ணாத அழகையுடையவன். வார்த்தை அருளிச்செய்யும்போதை யழகைச் சொல்லிற்றாகவுமாம். [உரைக்கின்ற என்று மேலுக்கு] - அதிலோகமான பேச்சைப் பேசுவதும்செய்து துஃகஸைஹயுமன்றிக்கேயிருக்கிற இவ்விலக்ஷணையான பெண்பிள்ளைக்குப் பிறந்த அவஸாதத்தை 'சொல்லு, சொல்லு' என்று நிரந்தரமாகச் சொல்லுகிற லௌகிகரான உங்களுக்கு எத்தைச்சொல்லுவேன்?

ப.—அநந்தரம், ஜகத்ப்ரயோகநராய் ப்ரஹ்மருத்ராதிகளான தேவர்களும் ருஷிகளும் நானிட்ட வழக்கென்னு மென்கிறாள்.

உரைக்கின்ற - ("ஸஶிவஃ" என்று ஶகவத்ப்ரகாரமாகச்) சொல்லப்படுகிற, முக்கண் - த்ரிநேத்ரனும், பிரான் - ஈஶ்வரனாக ப்ரஸித்தனான ருத்ரன், யானே - எனக்கு ப்ரகாரபூதன், என்னும் - என்றுநிற்கும்; உரைக்கின்ற - ("ஸப்ரஹ்மா" என்று) சொல்லப்படுகிற, திசைமுகன் - சதுர்முகன், யானே - எனக்கு ப்ரகாரபூதன், என்னும் - என்னும்; (அப்படியே), உரைக்கின்ற - (ஶகவத்விபூதிதயா, "ஶக்ஷாதயஃ" என்று) சொல்லப்படுகிற, அமரரும் - தஶப்ரஜாபதிகளான தேவர்களும், யானே - எனக்கு விதேயர், என்னும் - என்னும்; உரைக்கின்ற - ("ஸேந்த்ரஃ" என்று) சொல்லப்பட்ட, அமரர்கோன் - (த்ரயஸ்த்ரிம்ஶத்கோடி தேவதாதிபதியான) இந்த்ரனும், யானே - எனக்கு ப்ரகாரபூதன், என்னும் - என்னும்; உரைக்கின்ற - ("தேவஷீணாஞ்ச நாரதஃ" இத்யாதிகளிலே) சொல்லுகிற, முனிவரும் - ருஷிகளும், யானே - நானிட்ட வழக்கு, என்னும் - என்னும்; உரைக்கின்ற - ("நீலதோயதமத்யஸ்தா" என்று வேதாந்தங்களிலே) சொல்லுகிற, முகில் - காளமேகநிபஶ்யாமமான, வண்ணன் - வடிவை யுடையவன், ஏறக்கொலோ - ஆவேசித்தபடியோ? உரைக்கின்ற - ("சொல்லு,சொல்லு" என்று) உரைக்கின்ற, உலகத்தீர்க்கு - லோகத்தாரான உங்களுக்கு, உரைக்கின்ற - லோகமர்யாதையல்லாத பேச்சை யுடையளாய், என்,— கோமளம் - ஸுகுமாரமாய், ஒண் - தர்ஶநீயமான, கொடிக்கு - கொடிபோலே ஆஶ்ரயவ்யதிரேகத்தில் தறைப்படும் படியான இவளுக்குண்டான, இவை - இஸ்ஸ்வபாவங்களை, என் - ஏதாக, சொல்லுகேன் - சொல்லுவேன்.

இ.—எட்டாம்பாட்டில், ஜகத்ப்ரயோகநராக ஶாஸ்த்ரம்சொல்லுகிற சதுர்முகாதிகளும் நானிட்டவழக்கென்றுநின்றாளென்கிறாள்.

[உரைக்கின்ற] - வேதத்தில் அர்த்தவாதப்ரதேசங்களிலும் தாமஸபுராணங்களிலும் சொல்லுகிறவன். [பிரான்] - ஸ்வகோஷ்டீப்ரஸித்தி. "ஶம்ஹாராம்ஶஜ

ரஸாஸ்மி" என்று ஈஶ்வரனுக்கு ப்ரகாரமாகச் சொல்லப்பட்டவ னென்றுமாம். [உரைகின்ற திசைமுகன்] - "ஸஹஸ்ரணேத்ராய ஜ்யேஷ்டாய ஶ்ரேஷ்டாய" என்று - ருத்ரனுக்கும் ஜநகனுனப்ரஹ்மானாநிட்டவழக்கென்னும். [உரைக்கின்றவமரரும்]-ப்ரஹ்மாவாலே ஸ்ருஷ்டராய் நித்யஸ்ருஷ்டிக்குக்கடவராக ஶாஸ்த்ரங்களிலே சொல்லப்படுகிற ப்ரஜாபதிகளும் நானிட்டவழக்கென்னும். [உரைக்கின்ற] - "ஸஹஸ்ராக்ஷஸ்ஸஹஸ்ரபாத்" என்று ஸகவத்ப்ரகாரமாகச் சொல்லப்படுகிற வென்றுமாம். [உரைக்கின்றவமரர்கோன்] - "நக்ஷத்ராணாமஹம் ஶஶீ" என்று சொல்லப்படுகிறவனென்னுதல், "தேவாநாமஸ்மி வாஸவ:" என்று ப்ரகாரமாகச் சொல்லப்படுகிறவனென்னுதல். [உரைக்கின்ற முனிவரும்]- வேதார்த்தத்தைஸ்மரித்து கர்தவ்யாகர்தவ்யங்களைச்சொல்லும் மந்வாதிகளும் நானிட்ட வழக்கென்னும். [உரைக்கின்றமுகில்வண்ணன்] - "நீலதோயதமத்யஸ்தா" என்று வர்ஷாகவலாஹகம்போலே சொல்லப்படுகிறவனென்னுதல், வார்த்தைசொல்லுகிறபோதை யழகைச் சொல்லுதல். [உரைக்கின்றவுலகத்தீர்க்கு] - "சொல்லவொண்ணாது" என்றறியாதே "சொல்லு, சொல்லு" என்கிற லௌகிகரான உங்களுக்கு என்சொல்லுகேன். [உரைக்கின்றவென்கோமளவொண்கொடிக்கே] - அதிலோகமான பேச்சையுடையளாய், ஸுகுமாரியாகையாலே துக்கஸஹையன்றிக்கே, "பதிஸம்யோகஸுலபம் வய:" என்று உபக்நத்தோடே சேர்க்கவேண்டும் பருவத்தையுடைய இவளுக்கு ஓடுகிற தசையை. [கோமளவொண்கொடிக்கு] - கொழுந்து விடுகிற அழகையுடைய என்பெண்ணுக்கு.

ஈடு.—எட்டாம்பாட்டு. ஜகத்ப்ரதாநரான ப்ரஹ்மாதிகள் நானிட்ட வழக்கு என்றுநின்ருளென்கிருள்.

[உரைக்கின்ற] - வேதத்திலே ஸகவத்விபூதியைப் பரக்கச்சொல்லுகிற இடங்களிலே யாதல், அர்த்தவாதப்ரகரணங்களிலே யாதல், தாமஸபுராணங்களிலே யாதல் சொல்லப்படுமவனாய், ஸ்வகோஷ்டிக்கு உபகாரகனான ருத்ரன் நானிட்ட வழக்கு என்றுநின்றாள். "ருத்ராணாம் ஶங்கரஶ்சாஸ்மி" (ருத்ராணாம்ஶங்கரஶ்சாஸ்மி) என்று ஈஶ்வரனுக்கு ப்ரகாரமாகச் சொல்லப்பட்டவனென்றுமாம். [உரைக்கின்றதிசைமுகன்] - "விரூபாக்ஷாய ஸஹஸ்ரணேத்ராய ஜ்யேஷ்டாய ஶ்ரேஷ்டாய" (விரூபாக்ஷாய

ப்ர :—(உரைக்கின்ற திசைமுகன்) ஸாமவேதே [ஸாமோபநிஷதி] "ஸஹஸ்ரணேத்ராய ஜ்யேஷ்டாய ஶ்ரேஷ்டாய கபோலாய கபாலிநேதயே நம:"

எட்டாம்பாட்டு.—உரைக்கின்ற இத்யாதி.

"உரைக்கின்ற" என்றதுக்கு அர்த்தத்வயம் - பரனுகச் சொல்லப்படுகிற வென்னுதல், ஸகவத்ப்ரகாரபூதனுகச் சொல்லப்படுகிற வென்னுதல். இந்த அர்த்தத்வயத்தையும் அடைவே யருளிச் செய்கிருர் - வேதத்திலே இத்யாதியாலும், ருத்ராணாம் இத்யாதியாலும். ஸகவத்விபூதியைப் பரக்கச்சொல்லுகிற இடங்களாவன - "நமஸ்ஸோமாய ஸ்ருவாய" இத்யாதிகள். அர்த்தவாதப்ரகரணங்களாவன-"ஶங்கராய ருத்ராய நம:ஸ்துதிஸ்" இத்யாதிகள். 'ருத்ராணாம் ஶங்கரஶ்சாஸ்மி வித்தேஶோ யக்ஷரக்ஷஸாம் । வஸூநாம் பாவகஶ்சாஸ்மி மேரு: ஶிகரிணாமஹம் ॥ உங ॥' இதி கீதாஸு, உபநிஷத். "ஸஹஸ்ரணேத்ராய இத்யாதி - ஸாமவேதே. "ஸஹஸ்ராக்ஷஸ்ஸஹஸ்ரபாத் ஸஹஸ்ரஶீர்ஷா புருஷ: । விஶ்வதோமுகோ விஶ்வதஸ்பாத் ॥ ௩க ॥" இதி ஶ்ரீவிஷ்ணுபுராணே (க-உஉ).

ப்ரஹ்மணஃ புத்ராய ஜ்யேஷ்ட்டாய ஶ்ரேஷ்ட்டாய) என்கிறபடியே, அவன்தனக்குங்கூட ஜநகனாக ப்ரமாணப்ரஸித்தனாயிருக்கிற சதுர்முகனும் நானிட்டவழக்கேன்கிறாள். [அமரர்]- ப்ரஹ்மாவாலே ஸ்ருஷ்டராய், நித்யஸ்ருஷ்டிக்குக் கடவராக ஶாஸ்த்ரங்களிலே சொல்லப் படுகிற தக்ஷப்ரஜாபதிகளும் நானிட்ட வழக்கேன்னும். [உரைக்கின்ற அமரரேன்று] - "ப்ரஹ்மாதக்ஷாதயஃ" (ப்ரஹ்மதக்ஷாதயஃ) என்று ஹகவத்ப்ரகாரமாகச் சொல்லப் படுகிற என்றுமாம். [உரைக்கின்ற அமரர்கோன்] - "நக்ஷத்ரவஸ்துத்ரஃ" (நக்ஷிரிந் த்ரத்வதுத்தரஃ) என்று சொல்லப்படுகிறவன் என்னுதல். "தேவாநாம்ஶிவாஸவஃ" (தேவாநாமஸ்மிவாஸவஃ) என்று ப்ரகாரமாகச் சொல்லப்படுகிறவன் என்னுதல். [முனிவ ரும்] - வேதார்த்தத்தை ஸ்மரித்து, ஜகத்துக்கு கர்த்தவ்யங்களைச் சொல்லும் மநுவாதிக ளும் நானிட்டவழக்கேன்னும். [முகில்வண்ணன்] - "நீலதோயதமத்யஸ்த்தா" (நீல தோயதமத்யஸ்த்தா) என்று வர்ஷுக வலாஹகமாகச் சொல்லப்படுகிற என்னுதல். வார்த் தை சொல்லுவதாய், கழுத்தே கட்டளையாக நீரைமுகந்து, மின்னி, முழங்கி, வில்லிட்டு வருவதொரு மேகம்போலே வடிவழகையுடைய ஸர்வேஶ்வரன் வந்து ஆவேசித்தானோ! அறிகிறிலேன். [உரைக்கின்ற உலகத்தீர்க்கு]-சிலவற்றைச் சொல்லுமித்தனையாய், "சொல்ல லாம், சொல்லவொண்ணாது" என்று பாராதே, "சொல்லு, சொல்லு" என்றலைக்கிற லௌ கிகரான உங்களுக்கு நான் எத்தைச் சொல்லுவது. [உரைக்கின்ற இத்யாதி]-அதுவும் சொல் லியொழிவேனிறே வார்த்தை சொல்லிற்றிலளாகில். கோமளமென்கையாலே - ஸௌகுமார் யத்தைச் சொல்லிற்று. கொடியென்கையாலே - "பதிஸம்யோகஸுலபம்வயஃ" பதிஸம்யோகஸுலபம்வயஃ) என்கிறபடியே ஒரு கொள்கொம்போடே சேராதபோது தறை ப்படும் பருவமென்கை. (அ)

ப்ர:—(உரைக்கின்ற அமரர்கோன்) ஸ்ரீகீதாயாம் த்ருதீயாஷ்டகே, "நக்ஷத்ராணாமஹம் ஶஶீ" ... [illegible]

நக்ஷத்ராணாம் ஸ்ரீகீதாயாம் த்ருதீயாஷ்டகே, ... "வேதாநாம் ஸாமவேதோஸ்மி தேவாநாமஸ்மி வாஸவஃ । இந்த்ரியாணாம் மநஶ்சாஸ்மி பூதாநாமஸ்மி சேதநா ॥ உஉ ॥" இத்யாதிஷீதாஸுஶ்லோகே. உரைக்கின்றமுனிவரும் - ஶாஸ்த்ரங்களைத் தாந்தாம் சொல்லு கிறமுனிகளும். "உரைக்கின்ற" என்றதுக்கு சொல்லப்படுகிறவென்று மேழெல்லாம் அர்த்தம்; இங்கே, சொல்லுகிறவென்று அர்த்தங் கண்டுகொள்வது. "உரைக்கின்ற" என்றமாத்ரத்துக்கு அர்த் தாந்தரம் - வார்த்தைசொல்லுவதாய் இத்யாதி. கழுத்தே கட்டளையாக - கண்டபர்யந்தமாக. மேகத்தை வர்ணித்துச்சொன்னது - "முகில்" என்கையாலே அர்த்தாத்ஸித்தம். உரைக்கின்றவுலகத் தீர்க்கு - "சொல்லு, சொல்லு" என்றுரைக்கிற லௌகிகரான உங்களுக்கு. உரைக்கின்ற என் கோமள வொண்கொடிக்கு - உல்லோகமான வார்த்தையைச் சொல்லுகிற, ஸௌகுமாரையாய், தர்ஶநீயமான கொடிபோலேயிருக்கிற என்மகளுக்கு. உண்டான ஸ்வஹாவங்களென்று கூட்டுவது. வார்த்தைசொல் லிற்றிலளாகில் - பகவத்விபூதியைப் பரக்கச் சொல்லிற்றிலளாகில். ஆகையால் ஈத்ருஶவைஹவம் என்னால் சொல்லப்போகா தென்று கருத்து. "பதிஸம்யோகஸுலபம் வயோத்ருஷ்ட்வா ச மே பிதா ॥ சிந்தார்ணவகதஃ ஶ்ரீமாந் நாஸஸாதாப்லவோ யதா (௩௬)॥" இத்யயோத்யா காண்டே (௧௧௮) ஶ்ரீஸீதாவாக்யம் ஸீதா. உரைக்கின்ற முக்கட்பிரான் இத்யாரப்ய, உல கத்தீர்க்கு - உரைக்கின்ற என் கோமளவொண்கொடிக்கு - என்சொல்லுகேன் இத்யந்வயஃ. (அ

ஒன்பதாம் பாட்டு.

கோடியவினையாதுமிலனேயென்னும் கோடியவினையாவேனும் யானேயென்னும், கோடியவினைசெய்வேனும்யானேயென்னும் கோடியவினைதீர்ப்பேனும்யானேயென்னும், கோடியானிலங்கைசெற்றேனேயென்னும் கோடியபுள்ளுடையவனேறக்கோலோ? கோடியவுலகத்தீர்க்கிவையென்சொல்லுகேன்? கோடியேன்கோடியென்மகள்கோலங்களே.

ஆ.—(கொடியவினை.) கர்மவஶ்யரை நலியுமாபோலே நலியக்கடவதாய், கொடிதானகர்மங்கள் எனக்கொன்றுமில்லை யென்னும். அவை நானிட்ட வழக்கென்னும். ப்ரதிகூலர்க்குக் கொடிதான பாபத்தை விளைப்பேன் நான் என்னும். அநுகூலர்க்குக் கொடிதான வினையைத் தீர்ப்பேனும் நான் என்னும். கொடியானிலங்கையை ஒருபடியழித்தேனென்னும். ப்ரதிபக்ஷத்துக்குக் கொடியனான பெரியதிருவடியை வாஹநமாகவுடையவன் வந்தேறினானோ? இப்படி படுகைக்கீடான பாபத்தைப் பண்ணின என்னுடைய மகளுடைய ஒருப்பாடுகளை "சொல்லு, சொல்லு" என்று மிகவும் அலைக்கிற உங்களுக்கு என்னென்று சொல்லுவே னென்கிறாள்.

ஒ.—ஒன்பதாம்பாட்டில், ' அகர்மவஶ்யத்வப்ரமுகமான ஶக்திகளைத் தன்னினவாகப் பேசாநின்றாள்' என்கிறாள்.

[கொடியவினையாதுமிலனே] - கர்மவஶ்யரை நலியுமாபோலே என்னைநலியக்கடவதாய்க் கொடிதானகர்மங்கள் எனக்கு ஒன்றுமில்லை. [கொடியவினையாவேனும்யானே]- அவை நான்இட்டவழக்கு. [கொடியவினைசெய்வேனும்யானே] - ப்ரதிகூலர்க்குக் கொடிதானபாபத்தை விளைப்பேன்நானே. [கொடியவினைதீர்ப்பேனும்யானே] - அநுகூலர்க்குக் கொடிதானவினையைத் தீர்ப்பேனும்யானே. [கொடியான்இலங்கைசெற்றேனே] - லங்கையை ஒருபடி அழித்தேன். கொடியானென்கிற அம்ஶமத்தனையும்-திருத்தாயார் வார்த்தை. [கொடியபுள்] - ப்ரதிபக்ஷத்துக்குக் கொடியனான பெரியதிருவடி. [கொடிய உலகத்தீர் என்றுதொடங்கி] - 'சொல்லு,சொல்லு' என்று மிகவும் அலைக்கிற உங்களுக்கு எத்தைச்சொல்லுவேன்? இப்படிபடுகைக்கு ஈடான பாபத்தைப்பண்ணின என்னுடைய மகளுடைய ஒருப்பாடுகள். கோலங்கள் - தர்ஶநீயப்ரவ்ருத்திகளாகவுமாம்.

ப.—அநந்தரம், க்ரூரமான கர்மப்ரகாரங்களெல்லாம் நானிட்டவழக்கென்னுமென்கிறாள்.

கொடிய - (கர்மவஶ்யரான பத்தசேதநரைக் கண்ணற்றுநலியும்) கொடுமையையுடைத்தான, வினை-கர்மம், யாதும்-ஒன்றும், இலன் - ("ந மாம் கர்மாணி லிம்பந்தி" என்கிறபடியே) எனக்கில்லை, என்னும் - என்னாநிற்கும்; (அந்தக்ரூரகர்மமானது என் நிக்ரஹமாகையாலே), கொடியவினை - அது, ஆவேனும் - ஆகிறேனும், யானே - நானே - என்னும் - என்னும்; ("தாநஹம் த்விஷத:" என்கிற ப்ரதிகூலரானவரை), கொடியவினை- அந்தக் கர்மங்களிலே மூட்டி, செய்வேனும் - செய்விப்பேனும், யானே-நானே, என்னும்-என்னும்; கொடியவினை - அந்தக் கர்மத்தை, தீர்ப்பேனும் - ("மோக்ஷயிஷ்யாமி" என்று) ஆஶ்ரிதர்க்குப் போக்குவேனும், யானே-நானே, என்னும்-என்னும்; கொடியான்-க்ரூரகர்மாவான ராவணனுடைய, இலங்கை - லங்கையை, செற்றேன் - அழித்தேன், என்னும்-என்னும்; கொடிய - (ஆஶ்ரிதவிரோதிகளுக்கு) ம்ருத்யுஸமனான, புள் - பெரிய திருவடியை, உடையவன் - வாஹநமாகவுடையவன், ஏறக்கொலோ-ஆவேஶித்தபடியோ? கொடிய - ("நமக்கு இது நிலமன்று" என்றிராதே அதிநிர்ப்பந்தம் பண்ணுகிற) கொடுமையையுடைய, உலகத்தீர்க்கு - லோகத்தீர்க்கு, கொடியேன்-(இவளை இப்படி விக்ருதை

யாகக் காணவைத்த பாபத்தின்) கொடுமையை யுடையேனை, என்-என்னுடைய, கொடி-கொடிபோலே மெல்லியளான, மகள்-பெண்பிள்ளையினுடைய, கோலங்கள் - தர்ஸநீய சேஷ்டிதங்களான, இவை - இவற்றை, என் - என்னென்று, சொல்லுகேன் - சொல்லுவேன். கொடியபுள்ளென்று - கொடியிலேயான புள்ளென்றுமாம். கோலங்களென்று - ஒருப்பாடாகவுமாம்.

இ.—ஒன்பதாம்பாட்டில், அகர்மவஶ்யத்வப்ரமுகமான ஸகவதுக்திகளை தன்னினவாகப் பேசாநின்றாளென்கிறாள்.

[கொடியவினையாதுமிலனே] - கர்மவஶ்யரைக் கண்ணற்றுநலியும் கர்மங்கள் எனக்கொன்றுமில்லையென்னும். "அநஶ்நந்நந்யோ அபிசாகஶீதி", "நமாம்கர்மாணி லிம்பந்தி". "நாட்டிற்பிறந்துபடாதனபட்டு" என்கிறபடியே - ஐச்சமாய் வருமது தவிர்க்கப்போகாது. [கொடியவினையாவேனும்] - அவை நாணிட்டவழக்கென்னும். கர்மமாகிறது என்னுடையநிக்ரஹமன்றோ வென்னும். [கொடியவினைசெய்வேனும்] - ப்ரதிகூலர்க்குக் கொடிதான பாபத்தை விளைப்பேனும் நானே யென்னும். ஆஶ்ரிதர்திறத்தில் விரோயிகளை பாபங்களிலேமூட்டுகை. "தாநஹம் த்விஷத: க்ரூராந் ஸம்ஸாரேஷு நராதமாந் । க்ஷிபாம்யஜஸ்ரமஶுபாநாஸுரீஷ்வேவ யோநிஷு". [கொடியவினை தீர்ப்பேனும்] - ஆஶ்ரிதர்க்கு அவஶ்யம் அநுபோக்தவ்யமான கர்மத்தைப் போக்குவேனும் நானே என்னும். "அஹம் த்வா ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி" என்னாநின்றாள். [கொடியானிலங்கை] என்கிறவிடம் - தாயார்வார்த்தை; அவனாலே ஆவிஷ்டையாயிருக்கிறவிவள் இத்தனைமதித்து வார்த்தைசொல்லாளிறே, "சுரிகுழல்கனிவாய்த்திருவினைப் பிரித்த கொடுமையையுடையவன்" என்றிருக்குமிறே தாயார். [கொடியபுள்ளுடையவன்]- ஆஶ்ரிதவிரோதிகளுக்கும்ம்ருத்யுவான பெரியதிருவடியை வாஹநமாகவும்த்வஜமாகவுமுடையவன். [கொடிய உலகத்தீர்க்கு] - "நமக்குநிலமன்று" என்றறியாதே அதிநிர்ப்பந்தம் பண்ணுகிற உங்களுக்கு. [கொடியேன்கொடியென்மகள்] - இவளை, அநுகரித்து தரிக்கக் காண்கையான மஹாபாபத்தைப்பண்ணின என்மகளுடைய. [கோலங்களே] - தர்ஸநீயமான வ்யாபாரங்களென்னுதல், ஒருப்பாடுகளென்னுதல்.

ஈடு.—ஒன்பதாம்பாட்டு. அகர்மவஶ்யத்வ ப்ரமுகமான ஸகவதுக்திகளைத் தன்னினவாகப் பேசாநின்று ளேன்கிறாள்.

[கொடியவினையாதுமிலனேயென்னும்] - கர்மவஶ்யரைக் கண்ணற்றுநலியும் கர்மங்கள் எனக்கு ஒன்றுமில்லையேன்னும்.† "அநஶ்நந்நந்யோ அபிசாகஶீதி"(அநஶ்நந்நந்யோ அபிசாகஶீதி), "நமாம்கர்மாணி லிம்பந்தி" (நமாம்கர்மாணிலிம்பந்தி) என்று அவன்படியைத் தான் சொல்லாநின்றாள். "நாட்டிற்பிறந்துபடாதனபட்டு" என்கிறவிடம்-

† த்வா ஸுபர்ணா ஸயுஜா ஸகாயா ஸமாநம் வ்ருக்ஷம் பரிஷஸ்வஜாதே। தயோரந்ய: பிப்பலம் ஸ்வாத்வத்த்யநஶ்நந்நந்யோ அபிசாகஶீதி॥

ஒன்பதாம்பாட்டு.—கொடிய இத்யாதி. தன்னினவாக - தன்னதுகளாக.

"கொடிய" என்றதுக்குபாவம் - கர்மவஶ்யரை இத்யாதி. கண்ணற்று - நிர்த்தயமாக அநஶ்நந்: இதி, — "த்வா ஸுபர்ணா" இத்யாதி, ஜீவாத்மா. ஸுபர்ணௌ - ஶோபநபக்ஷிஸத்ருஶௌ. ஶோபநஜ்ஞாநாவித்யர்த்த:. ஸயுஜௌ - ஸமாநபூத வ்யாப்யவ்யாபகரூபௌ. ஸகாயௌ - ஶேஷஶேஷிபாவஸம்பந்தயுக்தௌ. அவதாரதசையிலே து:கித்வமுண்டாகச் சொல்லுகிறதேயென்ன - நாட்டில் இத்யாதி. "அகர்மவஶ்யந்" என்று சொல்லிவைத்து. "கொடியவினைசெய்வேன்" என்கிற இது விருத்தமன்றோ? என்ன - ஆஶ்ரித

ஐச்சிகமிறே. [ஆவேனும்] - நான் இவற்ருல் ஸ்பர்ஶிக்கப்படாதமாத்ரமேயாய், அவை தான் எனக்குப் புறம்பாயிருக்கிறதோ; அப்பாபமாகிறது - என்னுடைய நிக்ரஹமன்றோவென்னும். [செய்வேனும்] - ஆஶ்ரிதவிரோதிகளுக்குக் கோடியதான பாபத்தை விளைப்பேனும் நானே யென்னும். ஆஶ்ரிதவிரோதிகளைப் பாபங்களிலே மூட்டுகை - செய்கையாகிறது. "*தாநஹம்த்விஷத꞉ க்ரூராந்*" (தாநஹம்த்விஷத꞉க்ரூராந்). [தீர்ப்பேனும்]-என்னை ஆஶ்ரயித்தவர்களுக்கு அவைவந்துகிட்டாதபடி, "*ஸர்வபாபேப்யோமோக்ஷயிஷ்யாமி*" (ஸர்வபாபேப்யோமோக்ஷயிஷ்யாமி) என்பேனும் நானேஎன்னும்.[கோடியானிலங்கை செற்றேனேயென்னும்]-இவ்விடத்தில், "கோடியானேன்கிறவிடம் - திருத்தாயார் வார்த்தை காண்" என்று அருளிச்செய்வர் ஜீயர், எதிரிகளை இவன் ஒன்ருக மதித்திருந்தானுகாமைக்கு; அவனாலே ஆவிஷ்டையிறே இவள். * சுரிகுழல்கனிவாய்த்திருவினைப்பிரித்த கொடுமையுடையவன் என்னக்கடவதிறே. [கோடியபுள்] - ஆஶ்ரிதவிரோதிகளுக்கு ம்ருத்யு ஸத்ருஶமான பெரியதிருவடியை வாஹநமாகவுடைய ஸர்வேஶ்வரன் வந்து ஆவேசித்தானே? [கோடியவுலகத்தீர்க்கு] - "கேட்கவேணும்" என்று திரண்டுகிடக்கிற உலகத்தீர்க்கு என்னுதல்; 'ஶக்யம், அஶக்யம்' என்று பாராதே, "சோல்லு, சோல்லு" என்று நிர்ப்பந்தித்து ஸ்வார்த்தபரைகளாயிருக்கிற உங்களுக்கு எத்தைச் சோல்லுவதுஎன்னுதல். [கோடியேன்] - இவள் அநுகரித்துச்சோல்லுகிற பாசுரங்களைக் கேட்கவேண்டும்படியான பாபத்தைப் பண்ணினஎன்மகள் தர்ஶநீயமான ப்ரவ்ருத்திகளை யென்னுதல், ஒருப்பாடுகளை யென்னுதல். (௯)

பத்தாம் பாட்டு.

கோலங்கோள்சுவர்க்கமும்யானேயென்னும் கோலமில்நரகமும்யானேயென்னும், கோலந்திகழ்மோக்கமும்யானேயென்னும் கோலங்கோளுயிர்களும்யானேயென்னும், கோலங்கோள்தனிமுதல்யானேயென்னும் கோலங்கோள்முகில்வண்ணனேறக்கோலோ? கோலங்கோளுலகத்தீர்க்கேன்சோல்லுகேன்? கோலந்திகழ்கோதையென்கூந்தலுக்கே.

விரோதிகளுக்கு இத்யாதி. விவரணம் - ஆஶ்ரிதவிரோதிகளை இத்யாதி. செய்வேனும் - செய்விப்பேனும். அப்படி மூட்டுமோவென்ன - தாநஹம் இத்யாதி. பெண்பிள்ளை ஸர்வேஶ்வரனை அநுகரித்துச்சொல்லுகிருளாகையாலே, இவள்சொன்னதே அவன்சொன்னதாம் என்றுவிவக்ஷித்து, எதிரிகளை இவன் ஒன்றுகமதித்திருந்தானுகாமைக்கு என்கிருர். அவன் அப்படிகொடியனே? என்ன - சுரிகுழல் இத்யாதி. அழகியகுழலையும் கனிந்தவதரத்தையுமுடைய பிராட்டியைப்பிரித்த க்ரௌர்யத்தையுடைய இத்யர்த்த꞉. *திருமொழி, அஞ்சாம்பத்து, எழாந்திருமொழி, எழாம்பாட்டு. "கொடியவுலகத்தீர்க்கு" என்றது, "கொடிய" என்றத்தைநீட்டி, கோடியவென்ருய், கோடுதல் - வளைதலாய், திரண்டுகிடக்கிற உலகத்தீர்க்கு என்றபடி. அன்றிக்கே, கொடியவென்று - க்ரூரரென்ருய், ஸ்வார்த்தபரதையாகிற க்ரௌர்யத்தையுடையவர்களென்னுதல். கோலங்கள் - தர்ஶநீயப்ரவ்ருத்திகளாதல்; கோலுதல் - உத்யோகமாய், ஒருப்பாடுகளென்றபடி. கொடியவினை இத்யாரப்ய, உலகத்தீர்க்கு - கொடியேன்கொடி என்மகள்கோலங்கள் - இவையென்சொல்லுகேன் இத்யந்வய꞉. "நசாஹம் க்ஷமாமி ஶுபாணி நசைவாப்ரியாணி। இதிமே த்விஜநாதிகப்ரதி ந ஸ்பர்ஶயாம்யஹம்॥ ௧௭॥" இதி கீதாஸு வசநம். "தாநஹம் த்விஷத꞉ க்ரூராந் ஸம்ஸாரேஷு நராதமாந்। க்ஷிபாம்யஜஸ்ரமஶுபாநாஸுரீஷ்வேவ யோநிஷு॥ ௧௯॥" இதி ஶ்லோகஶ்ச. "ஸர்வபாபேப்யோ" இத்யுபாதேஶ꞉. (௯)

ஆ.—(கோலங்கொள்.) கலப்பற்ற ஸுகரூபமானஸ்வர்க்கமும், ஸுகஸம்பந்தமின்றிக்கே து:கமேயானநரகமும், அபரிச்சிந்ந ஸுகரூபமானமோக்ஷமும், கர்மாநுகுணமாக தேவாதிஶரீரப்ரவேஶம் பண்ணக்கடவ ஆத்மாக்களும், விசித்ரகார்யஜநநஶக்தியுக்தையான ப்ரக்ருதியும் நானிட்டவழக்கு என்று சொல்லாநின்றாள். ஸமஸ்தகல்யாணகுணாத்மகனாய், வில்லிட்டுமின்னி தர்ஶநீயமான மேகம்போலேயிருக்கிற திருநிறத்தையுடையவன் வந்து ஏறினானோ ? அழகிய மாலையையும் மயிர்முடியையுமுடைய என்மகளுக்குப்பிறந்த அவஸ்த்தைகளை, கேட்கையிலே ஒருப்படாநின்றுள்ள உலகத்தீர்க்கு என்சொல்லுவே னென்கிறாள்.

ஒ.—பத்தாம்பாட்டில், 'ஸ்வர்க்கப்ரமுகமான பதார்த்தங்களெல்லாம் நான் இட்டவழக்கு என்றுசொல்லாநின்றாள்' என்கிறாள்.

[கோலம்கொள்சுவர்க்கம்] - கலப்பற்ற ஸுகரூபமான ஸ்வர்க்கம். [கோலமில் நரகம்] - ஸுகஸம்பந்தமின்றிக்கே வெறுந்து:கமேயான நரகம். [கோலம்திகழ்மோக்கமும்]- அபரிச்சிந்ந ஸுகரூபமான மோக்ஷமும். [கோலம்கொள்உயிர்களும்] - நாநாவேஷமாக எழுதியணிந்துதோற்றுமவர்களைப்போலே, கர்மாநுகுணமாக தேவாதிஶரீரப்ரவேஶம் பண்ணக்கடவ ஆத்மாக்களும். ஜ்ஞாநாநந்த லக்ஷணமான ஆத்மாக்களென்றுமாம். [கோலம்கொள்தனிமுதல்] - விசித்ரகார்யஜநநஶக்தியுக்தையான ப்ரக்ருதி. ஸமஸ்தகல்யாணகுணாத்மகனாய், இதெல்லாவற்றுக்கும் அடியாயிருக்கிற ஸர்வேஶ்வரன் என்றுமாம். [கோலங்கொள்முகில்வண்ணன்] - வில்லிட்டுமின்னி தர்ஶநீயமான மேகம்போலேயிருக்கிற திருநிறத்தையுடையவன். [கொலங்கொள் என்றுதொடங்கி] - கேட்கையிலே ஒருப்படாநின்றிருந்துள்ள உலகத்தீர்க்கு அழகியமாலையையும் மயிர்முடியையுமுடைய என்மகளுக்குப்பிறந்த இவ்வவஸ்த்தைகளை என்சொல்லுவேன் ?

ப.—அநந்தரம், ஸ்வர்க்கநரகாதிகளான ஸகலஃபலங்களும் நானிட்டவழக்கென்னு மென்கிறாள்.

கோலம் - (தர்ஶநீய) போக்யதையை, கொள் - உடைத்தான, சுவர்க்கமும் - ஸ்வர்க்கமும், யானேயென்னும்,—கோலம்-ஒருவைலக்ஷண்யமும், இல் - இன்றியே, நரகமும் - (து:கோத்தரமான) நரகமும், யானேயென்னும்,—கோலம் - (நிரதிஶயாநந்த) ரூபவைலக்ஷண்யத்தாலே, திகழ் - விளங்குவதான, மோக்கமும் - மோக்ஷமும், யானேயென்னும்,—கோலம்-இவ்வோபலங்களை, கொள்-பற்றக்கோலும் ஒருப்பாட்டையுடைய, உயிர்களும் - ப்ராணிகளும், யானே - நானே, என்னும் - என்னும்; கோலம் - இவற்றையடையத் தன்நினைவிலே நிர்வஹிக்கும் ஒருப்பாட்டை, கொள் - உடைத்தாய், தனி - ஸஹாயாந்தர நிரபேக்ஷமான, முதல் - பரமகாரணவஸ்து, யானே - நானே, என்னும் - என்னும்; கோலம் - பசுத்தவடிவும் ஸ்புரிக்கிறமின்னும் நாநாவர்ணமான இந்த்ரதநுஸ்ஸுமானகோலத்தை, கொள் - உடைத்தான, முகில் - மேகம்போலேயிருக்கிற, வண்ணன் - வடிவையுடையவன், ஏறக்கொலோ - ஆவேஶித்தபடியோ; கோலங்கொள்-"கேட்டல்லது போகோம்" என்று ஒருப்படுகிற, உலகத்தீர்க்கு - உங்களுக்கு, கோலம்-அழகு, திகழ் - விளங்குகிற, கோதை - மாலையையுடைய, என்கூந்தலுக்கு - மயிர்முடியையுடையளான என்பெண்பிள்ளைக்கு, என்-என்னப்ரகாரமாயிருந்தது என்று, சொல்லுகேன் - சொல்லுவேனோ ?

இ.—பத்தாம்பாட்டில்,ஸ்வர்க்கப்ரமுகமான பதார்த்தங்களெல்லாம்நானிட்ட வழக்கென்றுநின்றா ளென்கிறாள்.

[கோலங்கொள்சுவர்க்கமும்]-ஸுகரூபமான ஸ்வர்க்கங்களும். நிலைநில்லாமையாலே முகப்பில்தர்ஶநீயதையைப்பற்றச் சொல்லுகிறது. [கோலமில்நரகமும்] - ஸுகஸம்பந்தமின்றிக்கே நிஷ்க்ருஷ்டது:கமேயான நரகமும். [கோலந்திகழ்மோக்கமும்] - நிஷ்க்ருஷ்டஸுகமாய் அபுநராவ்ருத்திலக்ஷணமாகையாலே அபரிச்சிந்நஸுகமான மோக்ஷமும். [கோலங்கொளுயிர்களும்] - நாநாவேஷமாகவெழுதியணிந்து தோற்றுவாரைப்

போலே தேவாதிஶரீரப்ரவேஶம்பண்ணுகிற ஆத்மாக்களும். ஜ்ஞாநாநந்தலக்ஷணமான ஆத்மாக்களென்றுமாம். [கோலங்கொள்தனிமுதல்] - விசித்ரகார்யகாரிணியான ப்ரக்ருதியென்னுதல், அப்படிப்பட்ட ஸங்கல்பஜ்ஞாநமென்னுதல், உபயத்தையும் ப்ரகாரமாகவுடையனாய் ஸமஸ்தகல்யாணகுணாத்மகனான ஸர்வேஶ்வரனென்னுதல். [கோலங்கொள்முகில்வண்ணன்] - மின்னி வில்லிட்டு தர்ஶநீயமான மேகம்போலேயிருக்கிற திருநிறத்தையுடையவன். [கோலங்கொளுலகத்தீர்க்கு] - விஷயஸ்வபாவமறியாதே, கேட்கையிலேயொருப்படாநின்ற உங்களுக்கு. [கோலந்திகழ்கோதையென்கூந்தலுக்கே] - அழகுவிளங்காநின்றுள்ள மாலையையும் மயிர்முடியையுமுடைய என்மகளுக்குப் பிறந்த அவஸ்தைகளை. தன்மயிர்முடிகண்டார்படும்பாட்டைத் தான்படுகிற இவள்படிகள் பேச்சுக்குநிலமோ ?

ஈடு.—பத்தாம்பாட்டு. ஸ்வர்க்கப்ரமுகமான பதார்த்தங்களெல்லாம் நானிட்ட வழக்கென்னுநின்றாளென்கிறாள்.

[கோலங்கோள் இத்யாதி] - ஸுகரூபமான ஸ்வர்க்கம். நிலைநில்லாமையாலே, முகப்பில் தர்ஶநீயதையைப்பற்றச்சொல்லுகிறது. "நரகத்தோடேத்திருக்கச்செய்தே, வாசலிலே கழஞ்சுசெம்மண் பூசியிருக்குமாபோலேகாண்" என்று அருளிச்செய்வர். [கோலமில்]-ஆபாத ப்ரதீதியில் அங்ஙனும் ஒன்றின்றியிலே யிருக்கிற நரகமும் நானிட்டவழக்கு என்னுநின்றாள். [மோக்கமும்] - அபுநராவ்ருத்தி லக்ஷணமான மோக்ஷமும் நானிட்டவழக்கு என்னுநின்றாள். "கடல்ஞாலம்செய்தேன்" என்று - ஸ்ருஷ்டிதொடங்கி, மோக்கமும்யானேயென்று - மோக்ஷபர்யந்தமாக ஸ்வகார்யமென்கிறாள். [கோலங்கோள் உயிர்களும்] - நாடகங்கட்டி ஆடுவாரைப்போலே, தேவனாக, மநுஷ்யனாக; இப்படி நாநாவான ஶரீரபரிக்ரஹம் பண்ணுகிற ஆத்மாக்கள் என்னுதல்; ஜ்ஞாநாநந்தலக்ஷணமான ஆத்மாக்களென்னுதல். [கோலங்கோள்தனிமுதல்] - இதுக்கெல்லாம் காரணமான மூலப்ரக்ருதியைச் சொல்லுதல், ஸங்கல்பரூபஜ்ஞாநத்தைச் சொல்லுதல். விசித்ரகார்யகாரிணியான ப்ரக்ருதியையும், அப்படிப்பட்ட ஸங்கல்பரூபஜ்ஞாநத்தையும் ப்ரகாரமாகவுடையனாய், ஸமஸ்தகல்யாணகுணாத்மகனான ஸர்வேஶ்வரனென்னுதல்; [கோலங்கோள்முகில்வண்ணன்]-திருமேனிக்கு மேகத்தை ஒப்பாகச் சொல்லும்போது, அலங்கரித்துச் சொல்லவேணுமாயிற்று. மின்னிமுழங்கி வில்லிட்டு வந்து தோற்றினபோதாயிற்று ஒப்பாகச் சொல்லலாவது. [கோலங்கோள் உலகத்தீர்க்கு] -

---

பத்தாம்பாட்டு.—கோலங்கோள் இத்யாதி.

கோலங்கொள்சுவர்க்கம் - ஸுகத்தையுடைய ஸ்வர்க்கம். கோலம் - ஸுகம். பரமபதம் போலே ஸுகரூபமோ? என்ன; மேலே "கோலந்திகழ்மோக்கம்" என்று விஶேஷிக்கையாலே அதில்லையென்கிறார் - நிலைநில்லாமையாலே இத்யாதி. நிலைநில்லாமையாலே - நிலைநில்லாததுமாய், துஃகமிஶ்ரமுமான ஸுகத்தையுடைத்தாகையாலே. முகப்பில்தர்ஶநீயதை - ஆபாததஃ உண்டான தர்ஶநீயதை. "முகப்பில்தர்ஶநீயதையைப்பற்ற" என்றதுக்கு ஆப்தஸம்வாதம் - நரகத்தோடு இத்யாதி. அருளிச்செய்வர் - ஜீயரென்றபடி. கோலமில்நரகமும் - ஸுகலேஶமுமின்றிக்கேயிருக்கிற நரகமும். கோலந்திகழ்மோக்கமும் - நிரதிஶயாநந்தரூபத்வாதி வைலக்ஷண்யத்தாலே விளங்குகிற மோக்ஷமும். அபுநராவ்ருத்திலக்ஷணமானவென்றது - தாத்பர்யார்த்தம். அபுநராவ்ருத்திலக்ஷணமான என்றத்தோடே, ஸுகைகதாநமாயென்றுகூட்டுவது. கோலங்கொளுயிர்களும் - கோலம் - ஶரீரம். தேவாதிநாநாஶரீரங்களையுடைய ஆத்மாக்களும். த்விதீயார்த்தத்துக்கு, "கோலம்" என்று - அழகு. ஆத்மாவுக்கு அழகாவது - ஜ்ஞாநாநந்தங்களை ஸ்வரூபமாகவுடையனாகை. இதுக்கெல்லாம் - ப்ரத்யக்ஷபரித்ருஶ்யமான ஜகத்துக்கெல்லாம், ப்ரக்ருதிக்கும், ஸங்கல்பரூபஜ்ஞாநத்துக்கும் அழகேதென்ன, விசித்ரகார்யகாரத்வமென்கிறார் - விசித்ர இத்யாதி. "கோலங்கொள்தனிமுதல்" என்றதுக்கு மூன்றாமர்த்தம் - ஸமஸ்தகல்யாணகுண இத்யாதி. ஆக, "தனிமுதல்" என்று - ப்ரக்ருதியாதல், ஸங்கல்பமாதல், ஈஶ்வரனாதல். ப்ரக்ருதியையும் ஸங்கல்பத்தையும் சொன்னபோது, "கோலம்" என்று - விசித்ரகார்யகாரத்வத்தைச்சொல்லுகிறது. ஈஶ்வரனைச்சொன்னபோது, கோலமென்று - கல்யாணகுணங்களைச்சொல்லுகிறது. "கோலங்கொள்முகில்வண்ணன்" என்கிறவிடத்தில், கோலமென்று - பசுத்தவடிவும் ஸ்புரிக்கிறமின்னும் நாநாவர்ணமான யுநுஸ்ஸுமான அலங்காரத்தைச் சொல்லுகிறது. கோலங்கோளுலகத்தீர்க்கு - கோலுதலை - ஒருப்பாட்டை, உடைய உலகத்தீர்க்

''கேட்கவேணும்'' என்று ஒருப்பட்டிருக்கிற உலகத்தீர்க்கு. அன்றிக்கே, மயிரும் உகிரும் பேணி, உடம்புபேணிவந்து அலங்கரித்துநிற்கிற உங்களுக்கு நான் எத்தைச்சொல்லுவது. [கோலம் இத்யாதி]-அழகியமாலையையும் மயிர்முடியையுமுடைய என்மகளுக்குப் பிறந்த அவஸ்த்தைகளை. இவள்மாலையையும் மயிர்முடியையும்கண்டார் படுகிறபாட்டைத் தான் பட்டு அநுகரித்துச் சொல்லுகிறவற்றை நான் எத்தைச்சொல்லுவது. (க௦)

பதினோராம் பாட்டு.

கூந்தல்மலர்மங்கைக்தும்மண்மடந்தைக்தும்குலவாயர்கொழுந்துக்துங்கேள்வன்தன்னை, வாய்ந்தவழுதிவளநாடன் மன்னுகுருகூர்ச்சடகோபன்குற்றேவல்செய்து, ஆய்ந்ததமிழ்மாலையாயிரத்துள் இவையுமொருபத்தும்வல்லார் உலகில், ஏந்துபெருஞ்செல்வத்தராய்த் திருமாலடியார்களைப்பூசிக்கநோற்றார்களே·

ஆ.— (கூந்தல்.) கூந்தல்மலர்மங்கைக்கும் மண்மடந்தைக்கும் குலவாயர்கொழுந்துக்குப் கேள்வன்தன்னை அநுகாரத்தாலே கிட்டின மன்னுகுருகூர்ச்சடகோபன் வாசிககைங்கர்யமாய் ஆராய்ந்துசொன்ன ஆயிரத்தில் இப்பத்தும் வல்லவர்கள் லோகத்தில் எல்லாரும் கொண்டாடும்படியான பெருஞ்செல்வத்தை யுடையராய், ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு ப்ரியமானவ்ருத்தி பண்ணப்பெறுவரென்கிறார்.

ஒ.—நிகமத்தில், இப்பத்தும்வல்லவர்கள் ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு அடிமை செய்யப்பெறுவர் என்கிறார்.

[வாய்ந்த] - ஸாக்ஷாத்கரித்த. [ஆய்ந்த]-ஆராய்ந்துசொன்ன. [உலகில்ஏந்து பெருஞ்செல்வத்தராய்] - லோகத்தில் எல்லாரும்கொண்டாடும்படியான பெருஞ்செல்வத்தையுடையராய். [திருமால் இத்யாதி] - இத்திருவாய்மொழியில் ஆழ்வார்பண்ணின அநுகாரம் ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு ப்ரியமாயிருக்கையாலே இதுகற்றாரும் ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு ப்ரியமானவ்ருத்திபண்ணப்பெறுவர்.

ப.—அநந்தரம், இத்திருவாய்மொழிகற்றார் ஸர்வலோக ஸம்பாவநீயராய்க் கொண்டு பாகவதகிஞ்சித்காரம்பண்ண இட்டுப்பிறந்தார்களென்று பலத்தை யருளிச் செய்கிறார்.

கூந்தல் - (''வாசஞ்செய்பூங்குழலாள்'' என்கிறபடியே விலக்ஷணமான) மயிர் முடியை யுடையளாய், மலர் - தாமரைப்பூவில்பிறப்பாலே நிரதிசய போக்யபூதையாய், மங்கைக்கும் - (நித்யயௌவநஸ்வபாவையான) லக்ஷ்மிக்கும், மண்மடந்தைக்கும் - (இவளோடொத்த ரூபவைலக்ஷண்யத்தையுடைய) ஸ்ரீபூமிப்பிராட்டிக்கும், குலம் - அபிஜாதரான, ஆயர் - கோபாலர்க்கு; கொழுந்துக்கும் - (ஶிரோபூதையான) நப்பின்னைப்பிராட்டிக்கும், கேள்வன்தன்னை - அபிமதனான ஸர்வேஶ்வரனை யுத்தேசித்து, வாய்ந்த - பாவநாப்ரகர்ஷத்தாலே தத்பாவத்தைக் கிட்டியிருப்பாராய்,வழுதிவளநாடன் - வழுதிவளநாட்டுக்கு நிர்வாஹகராய், மன்னு - ஸ்தைர்யமான, குருகூர்-திருநகரிக்கு நிர்வாஹகரான, சடகோபன் - ஆழ்வார், குற்றவேல் - அந்தரங்கவ்ருத்தியாக, செய்து - அநுஷ்டித்து, ஆய்ந்த - ஆராய்ந்துசொன்ன, தமிழ் மாலை-தமிழ்த்தொடையான, ஆயிரத்துள்-ஆயிரத்துள்,இவையுமொருபத்தும்-''இவையுமொருபத்தே!'' என்னும்படி விலக்ஷணமான இவைபத்தையும், வல்லார் -(பாவவ்ருத்தியோடே) அப்யஸிக்கவல்லவர்கள், உலகில்-லோகத்தி

கென்னுதல்; ஒருப்பாடு - *உத்யோகம். அலங்காரத்தையுடைய உலகத்தீர்கென்னுதல்.* கோலம் - *அலங்காரம்.* ஒருப்பட்டிருக்கிற - *யத்நப்பட்டிருக்கிற.* கோதை - *மாலை.* கூந்தல் - *மயிர்முடி.* *''கூந்தலுக்கு''* - பிறந்தவவஸ்த்தைகளை *என்று கூட்டுவது.* இதுக்குபாவம் - இவள்மாலையையும் *இத்யாதி. கோலங்கொள் இத்யாரப்ய, உலகத்தீர்க்கு - கூந்தலுக்கு - என்சொல்லுகேன் இத் யந்வயஃ.* (க௦)

லே, வந்து - ப்ரீத்யா வஹிக்கும்படியான, பெருஞ்செல்வத்தராய் - ஸ்ரீவைஷ்ணவஸம்பத்தை யுடையராய்க்கொண்டு, திருமால்-ஸ்ரீய:பதியான ஸர்வேஶ்வரனுக்கு, அடியார்களை - ஶேஷபூதரான பாகவதர்களை, பூசிக்க - ஆராதிக்கைக்கு, நோற்றார்கள் - பாக்யம் பண்ணினவர்களாவர்கள். ஏய்ந்தவென்று பாடமாய் - பொருந்தினவென்றுமாம். இது - எண்சீராசிரியவிருத்தம்.

இ.—நிகமத்தில், இப்பத்தை யப்யஸிக்கவல்லவர்கள் ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு அடிமைசெய்யப்பெறுவ ரென்கிறார்.

[கூந்தல்இத்யாதி] - "விஷ்ணோ: ஸ்ரீ:" என்று-அவனுக்குநிரவதிகஸம்பத்தான பிராட்டிக்கும், அந்தஸம்பத்துக்கு விளைபூமியான ஸ்ரீபூமிப்பிராட்டிக்கும், வல்லபையான நப்பின்னைப்பிராட்டிக்கும் காந்தனானவனை. இத்தால்-ஒரு அவதாரமாத்ரத்தளவன்றிக்கே உபயவிபூதிநாதனான பூர்ணவிஷயத்திலே அநுகரிக்கிறாளென்று தோற்றியிருக்கிறபடி. [வாய்ந்த] - வாய்க்கையாவது - கிட்டுகை. அதாவது - பாவநாப்ரகர்ஷத்தாலே ஸாக்ஷாத்கரிக்கை. [குற்றேவல்செய்து]-அந்தரங்கவ்ருத்திசெய்து. இவர்பாசுரத்தையே அந்தரங்கவ்ருத்தியாகக் கொள்ளுகை. இவர்தாம் வாசிகமானவடிமைக்கவ்வருகு க்ஷமரல்லர். [ஆய்ந்ததமிழ்மாலை] - ஆராய்ந்துசொன்ன தமிழ்த்தொடை. [உலகிலேய்ந்து பெருஞ்செல்வத்தராய்] - இந்தலோகத்தில் எல்லாருங்கொண்டாடும்படியான ஸ்ரீவைஷ்ணவஸ்ரீயையுடையராய் லக்ஷ்மீபதிக்கு அடியாரானவர்களை ஆராதிக்கப்பெறுவர்கள். அவர்களுக்கு ஆராதநமாகிறது - இவர் அநுகரித்த இப்பாசுரத்தைச்சொல்லுகை. "தொண்டர்க்கமுதுண்ணச்சொன்மாலைகள்சொன்னேன்" என்னக்கடவதிறே. இவர் இவ்வநுகாரத்தாலே ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு ப்ரியகரரானாற்போலே, இது கற்றாரும் ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு ப்ரியமானவ்ருத்தியைப் பண்ணக்கடவரென்கை.

ஈடு.—நிகமத்தில் - இத்திருவாய்மொழி யப்யஸிக்கவல்லவர்கள் ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு அடிமைசெய்யப்பெறுவர்க ளென்கிறார்.

[கூந்தல்மலர்மங்கைக்கும்] - ஸர்வேஶ்வரனுடைய ஐஶ்வர்யத்துக்கும் ஹேதுபூதையாயிருக்கும் பெரியபிராட்டியார். "விஷ்ணோ: ஸ்ரீ:"(விஷ்ணோஸ் ஸ்ரீ:)என்கிறபடியே, ஸர்வேஶ்வரனுடைய ஸம்பத்தாயிருக்கிற பெரியபிராட்டியார். அதுக்கு விளைபூமியாயிருக்கிற ஸ்ரீபூமிப்பிராட்டி. அதினுடைய பலரூபையாயிருக்கும் நப்பின்னைப்பிராட்டி "ஸ்ரியா ஸார்த்தம்ஜகத்பதி:"(ஸ்ரியாஸார்த்தம்ஜகத்பதி:).[கேள்வன்தன்னை]-இவர்களுக்குப் பதியாயுள்ளவனை. இத்தால் - ஒரு அவதாரமாத்ரமன்றிக்கே, உபயவிபூதிநாதனான பூர்ணவிஷயத்திலே அநுகரிக்கிறாரென்று தோற்றியிருக்கிறபடி. [வாய்ந்த] - வாய்க்கையாவது - கிட்டுகை. கிட்டின. அநுகாரத்தாலே கிட்டினபடியை நினைக்கிறது. [குற்றேவல்செய்து] - ஆழ்வார் அவன் திருவடிகளிலே அந்தரங்கவ்ருத்திகள் பண்ணினபடியாயிற்று இவைதான். வாசி

நிகமம்.—கூந்தல் இத்யாதி. "இவையுமோர்பத்தும்வல்லார் - திருமாலடியார்களைப் பூசிக்க நோற்றார்கள்" என்ற பதத்தைக் கடாக்ஷித்து - அவதாரிகை.

அர்த்தாந்தரம் - விஷ்ணோ:ஸ்ரீ: இத்யாதி. பலரூபை - அநுபவரூபை. ஸ்ரீபூமிநீளைகளோடே கூடியிருக்குமதுக்கு ப்ரமாணம் - ஸ்ரியாஸார்த்தம் இத்யாதி. ஸ்ரியாஸார்த்தம் என்றது - பூமிநீளைகளுக்கு முபலக்ஷணம்; 'வைகுண்டே து பரே லோகே ஶ்ரீஸஹாயோ ஜநார்த்தந: | உபாப்யாம் பூமிநீளாப்யாம் ஸேவித:' என்னக்கடவதிறே. "நித்யைவைஷா ஜகந்மாதா விஷ்ணோ: ஶ்ரீரநபாயிநீ | யதா ஸர்வகதோ விஷ்ணுஸ் ததைவேயம் த்விஜோத்தம" இதி ப்ரயோகம் ஷஷ்டீ, "(யத்வா) ஸர்வகதோ விஷ்ணு:, யதா யச்ச ஸர்வ:, இயமபி, ததா - தச்ச ஸர்வேதி விஷ்ணோஸ் ஸர்வகதத்வ ஜ்ஞாநாதிஸ்வரூபைக்யாணாம் ஜ்ஞாநாதிதேஶ:. அதவா, ஸமவாய விஶேஷேண ஸர்வகத:, ஸம்பந்தஸ்வாஸ்ரயத்வாத், க்ஷணேஶ தத்தத்ஸந்நிதாநாத் ஸர்வகத

கமாக அடிமைசெய்தபடி யாயிற்று. அநுகாரம் அடிமையானபடி எங்ஙனே? என்னில்,— அப்படியாகத் தட்டேன், கொள்ளுகிறவன்கருத்தாலே. அவனுகப்பேயிறே அடிமையாலும் புருஷார்த்தம். ''நம்முடைய விஶ்லேஷத்தில் அநுகரித்துதரிக்கவேண்டும்படி ஸம்ஸாரத்திலே இப்படியுண்டாவதே'' என்று திருவுள்ளம்போர வுகக்கும், அது அடிமையாய்த் தலைக்கட்டுமித்தனை. [ஆய்ந்ததமிழ்மாலை] - ஆராய்ந்து சொன்ன தமிழ்த்தொடை ஆயிரத்திலும் இப்பத்தை அப்யஸிக்கவல்லவர்கள். [உலகிலேந்துபெருஞ்செல்வத்தராய்] - இந்தலோகத்திலே எல்லாரும் கொண்டாடும்படி வைஷ்ணவஶ்ரீயையுடையராய். அன்றிக்கே, ''நின்னையேதான்வேண்டி நீள்செல்வம் வேண்டாதான்தன்னையேதான்வேண்டும் செல்வம்'' என்கிறபடியே, லோகத்திலே முகந்தெழுபானையான நிரவதிகஸம்பத்தை யுடையராய்க்கொண்டு. [திருமாலடியார்களைப் பூசிக்க நோற்றார்களே]- ஶ்ரீமத்புத்ரர்களை ஆராதிக்கப் பெறுவர்கள். ஶ்ரிய:பதியடியாரை ஆராதிக்கையாவது - இவர் அநுகாரத்தாலே ஶ்ரீவைஷ்ணவர்களுக்கு ப்ரியகரரானாற்போலே, இது கற்றார்களும் ஶ்ரீவைஷ்ணவர்களுக்கு ப்ரியகரமானவ்ருத்தி பண்ணப்பெறுவரென்கை. அதாவது - இவர் அநுகரித்த இப்பாசுரத்தைச் சொல்லுகை. ''தொண்டர்க்கமுதுண்ணச்சொன்மாலைகள்சொன்னேன்'' என்னக்கடவதிறே. (கக)

[illegible]'' இதி ஶ்ரீவிஷ்ணுசித்தீயம். ''வைகுண்டே² து பரே லோகே ஶ்ரியா ஸார்த⁴ம் ஜக³த்பதி:। ஆஸ்தே விஷ்ணுரசிந்த்யாத்மா ப⁴க்தைர்பா⁴க³வதைஸ்ஸஹ.'' இதி ஶைவே. *ப்ரத்யக்ஷமாகக் கிட்டினாரோ? என்ன* - அநுகாரத்தாலே இத்யாதி. *ஈஶ்வரனைக்கிட்டினபடியை இத்யர்த்த:. அந்தரங்கவ்ருத்தியேதென்ன* - வாசிகமாக இத்யாதி. வாசிகமாக அடிமை செய்தபடியாயிற்று - *அநுகார முகத்தாலே வாசிகமாக அடிமைசெய்தபடியாயிற்று.* கொள்ளுகிறவன் *கருத்தாலே யடிமையாம்ப்ரகாரமேதென்ன* - அவனுகப்பேயிறே இத்யாதி. இது அவனுக்கு *உகப்பானபடியைக் காட்டுகிறார்* - நம்முடைய இத்யாதி. ஏந்து - *எல்லாராலும் கொண்டாடப்படுகிறவென்னுதல், முகந்தெழுபானைபோலே உத்தரோத்தரம் அபிவ்ருத்தமாய் வருகிறவென்னுதல். முகந்தெழுபானையாவது - ஜலத்தைமுகந்து மேலேயெழுகிற ஏற்றப்பானை. ''ஏய்ந்த'' என்று பாடமானாலும் - அர்த்தமிதுவே. ஏந்துகை - அங்கீகரிக்கையாய், கொண்டாடுகை. ''செல்வம்'' என்று - வைஷ்ணவஶ்ரீயாதல், த்ருஷ்டைஶ்வர்யமாதல். இப்பாசுரத்தைச் சொன்னால் அவர்களுக்கு உகப்பாமோ? என்ன* - தொண்டர்க்கு இத்யாதி. நின்னையேதான்வேண்டி இத்யாதி - உன்னையே வேண்டி *நிரவதிகஸம்பத்தைக் காற்கடைக்கொண்டவன் தன்னையே அவஸரப்ரதீக்ஷமாய்ப் பார்த்திருக்கும் ஐஶ்வர்யம்போலே இத்யர்த்த:. நின்னையேதானென்று - முழுச்சொல்லாய், உன்னையேயென்றபடி. வேண்டாதான்தன்னையேதானென்றதும் - முழுச்சொல்லு. வேண்டாதவன்தன்னையேயென்றபடி.* பெருமாள்திருமொழி, *அஞ்சாந்திருமொழி, ஒன்பதாம்பாட்டு.* (கக)

த்ரவிடோபநிஷத்ஸங்கதி: — ஶோகஶ்ச தம் பரிஜிஹீர்ஷுரபி ஸ்வாநாம் ஸமுசிததநுநாகாரஸேவநம் ஶௌரே:। தஸ்ய ப்ரவ்ருத்திரபி தாத்ருஶீதி தத்³வ்ருத்தாந்தோ நிரூபிதே ॥

த்ரவிடோபநிஷத்தாத்பர்யரத்நாவலி: — ஸ்ருஷ்டி ஸ்வாதந்த்ர்ய ஸர்வவ்யாபகதநுகேஶந ஸம்பத்துஷ்டி கேஶந க்ருத்யாஶரணபரதயா ஸம்ப்ரதாயாக்ருதேஸ்து। ஶௌரேர்நாராயணத்வ: ஸ்வஜநஹிததயா ஸ்வாஜ்ஞ ஸத்ஸ்வாவதாரோத்ஸவேநாநந்தா: ப்ராப்ய நிஶ்ஶேஷ ஸம்பந்தி⁴நோ யோஜ்யா: மஹாநி ॥

திருவாய்மொழி நூற்றந்தாதி.

கடல்ஞாலத்தீசனைமுன்காணமல்நொந்தே
உடலுமவனுகரிக்கலுற்றுத்—திடமாக
வாய்ந்தவனாய்த்தான்பேசும்மாறனுரையதனை
ஆய்ந்துரைப்பாராட்செய்யநோற்றார்.

ஆழ்வார் திருவடிகளே ஶரணம், எம்பெருமானார் திருவடிகளே ஶரணம், ஜீயர்திருவடிகளே ஶரணம்.

ஏழாந்திருவாய்மொழி—நோற்றநோன்பு: ப்ரவேஶம்.

ஆ.—(நோற்றநோன்பு.) இப்படி எம்பெருமானுடைய ஸ்வரூபரூபசேஷ்டித ஸர்வைஶ்வர்யோக்திகளை அநுகரித்தத்திலும் ஓர் ஆலம்பமலபமாநரான ஆழ்வார், "தன்னை விஶ்லேஷித்து நான் இப்பாடுபடாநிற்கச்செய்தே என்னை எம்பெருமான் உபேக்ஷித்திருக்கிறது, ஸ்வஸம்ஶ்லேஷோபாயரூப கர்மயோக ஜ்ஞாநயோக பக்தியோகங்களில்லாமையாகாதே" என்று பார்த்து;

ஒ.—ஏழாந்திருவாய்மொழியில், அநுகரித்து தரிக்கப்பார்த்தவிடத்திலும் அதுவும் மிகவும்ஸ்மாரகமாய்க்கொண்டு வ்யஸநஹேதுவான தஶையிலும் எம்பெருமான் வந்துதோற்றி அருளாவிட்டவாறே, 'இவர்தாமே ஜ்ஞாநாத்யுபகரணங்களையுடையர்; அந்தஉபாயங்கள் தலைக்கட்டினவாறே நம்மைவந்து ப்ராபிக்கிறார்' என்று எம்பெருமான் விரைதல்கெட்டிருக்கிறானாகக்கொண்டு எம்பெருமானுக்கு நம்முடையஸ்திதியை விண்ணப்பஞ்செய்ய, நம்முடைய அபேக்ஷிதங்களைச்செய்தருளுமென்றுபார்த்தருளி, கடற்கரையிலே ஸ்ரீஸுக்ரீவமஹாராஜர்தொடக்கமான முதலிகளோடும் இளையபெருமாளோடும் ஸர்வரக்ஷணதீக்ஷிதனாய்க்கொண்டு இருந்தருளின சக்ரவர்த்திதிருமகனை "ராவணோ நாம துர்வ்ருத்த:" என்றுதொடங்கி - தன்னுடையஸ்வரூபத்தை அறிவித்து அநந்ய ப்ரயோஜநனாய்க்கொண்டு ஸ்ரீவிபீஷணாழ்வான் ஶரணம்புக்காற்போலே; தன்னுடையாரெல்லாரும்ஸேவைபண்ண, பிராட்டிமாரோடே வீற்றிருந்தருளின வானமாமலையை ஶரணம் புகுகிறார்.

ப.—ஏழாந்திருவாய்மொழியில், கீழில்திருவாய்மொழில் அநுகாரம் ப்ராப்தியோடு தலைக்கட்டமாட்டாமையாலே ஆர்த்தியே அதிஶயித்து, பாவநையால் வந்தஅநுகாரத்தாலே அல்பம் ஆஶ்வஸ்தராய் ப்ரவேஶயம்பிறந்து, இவ்வளவில்; தன்னை லபிக்கைக்குத் தானே உபாயமான இவன் முகங்காட்டாதொழிந்தது நம்முடைய அநுகாரார்த்தமான பாவநையை உபாஸநமாக நினைத்து, "அதினுடைய சரமதஶையிலே வருகிறோம்" என்று விளம்பித்தானாக அதிஶங்கைபண்ணி, "நம்ஆகிஞ்சந்யத்தை முன்னிட்டுக்கொண்டு அபேக்ஷிக்க அவன்ஆபிமுக்யம்பண்ணும்" என்று அறுதியிட்டு; அகிஞ்சநரும் ஆசைப்படும்படியான அவனுடைய ஆஶ்ரிதஸம்ஶ்லேஷ ஸ்வபாவத்தையும், அநிஷ்டநிவர்த்தகத்வத்தையும், அதிஶயிதபரத்வப்ரகாஶகங்களான அஸாதாரணாகாரங்களையும், ஆஶ்ரிதஸம்ரக்ஷணப்ரகாரத்தையும், ஆஶ்ரிதவிரோதிகளை அந்தர்ப்பேதம்பண்ணும் ஆகாரத்தையும், ஆஶ்ரிதோபகாரத்தால்வந்த ஔஜ்ஜ்வல்யத்தையும், அகிலஸத்தாஹேதுத்வத்தையும், ஆஶ்ரிதவிரோதி அவனிட்டவழக்கென்னுமத்தையும், விரோதிநிவர்த்தகத்வத்தால்வரும் விஶேஷௌஜ்ஜ்வல்யத்தையும், விரோதிநிவர்த்தகமான உபாயப்ரகாஶகத்வத்தையும் அநுஸந்தித்து, "ஏவம்விஶிஷ்டனானநீ, உன்னை ப்ராபிக்கைக்கு ஹேதுவான உபாயாந்தரங்களில் அகிஞ்சநனாய் ஆர்த்தனான எனக்கு உன்திருவடிகளே உபாயமாக உபகரித்த இதற்கு என்னப்ரத்யுபகாரம் பண்ணுவேன்" என்று அலமரும்படி தமக்குப்பிறந்த ஆஶ்வாஸவிஶேஷத்தை, சிரீவரமங்கையிலே ஆஸந்நமாக எழுந்தருளியிருக்கிற வானமாமலையைநோக்கி விண்ணப்பஞ்செய்கிறார்.

இ.—ஏழாந்திருவாய்மொழியில், கீழ் - அநுகரித்து தரிக்கப்பார்த்தவிடத்திலும், அதுவும் ஸ்மாரகமாய்க்கொண்டு மிகவும்வ்யஸநஹேதுவாய், இவ்வளவிலும் அவன் வந்துமுகங்காட்டக்காணுமையாலே, "நம்பக்கல் தன்னையநுபவிக்கைக்குப் பரிகரமான ஜ்ஞாநஶக்திகளைத் தன்னைப்பெறுகைக்கு ஸாதநங்களாகநினைத்து; நம் ஆற்ருமையை, உபாயாந்தரநிஷ்டர் அநுஷ்டானதஶையில் உபாயத்தினுடைய துஷ்கரதையாலே படுவதொரு க்லேஶமுண்டு, அதுவாகவித்தைநினைத்து, இவ்வுபாயம் தலைக்கட்டினவாறே நம்மை ப்ராபிக்கிருர்" என்று அவன் ஆறியிருந்தானுகக்கொண்டு அவனுக்குத் தன் நிலையை விண்ணப்பம்செய்யவே தம் அபேக்ஷிதம் கிட்டும் என்றுபார்த்தருளி; தன்பரிகரமடங்கஸேவிக்கப் பிராட்டிமாரோடேவீற்றிருந்தருளின வானமாமலையை, தன்வெறுமையைமுன்னிட்டுக்கொண்டு ஶரணம்புகுகிருர்.

ஈடு.—கீழில்திருவாய்மொழியில் - அநுகரித்து தரிக்கப்பார்த்தார், "அநுகரித்து தரிக்கவேண்டும்படியான கலக்கம் பிறந்தவிடத்திலும் வந்து முகங்காட்டிற்றிலன், இதுக்குஅடியென்? தன்பக்கல் ஆஶாலேஶமுடையார்க்குத் தானேவந்து முகங்காட்டி ரக்ஷிக்கக்கடவ ஸர்வேஶ்வரன் நம்பக்கல்ஆறியிருக்கைக்கு நிபந்தநமென்?" என்று பார்த்தார்; "இனி இங்ஙனேயாமித்தனை; நம்ப்ரக்ருதி ஸ்வபாவத்தாலே, தன்னாலல்லது செல்லாதபடியாயிருப்பதோர் ஆற்ருமை யுண்டாயிருந்தது; நமக்குஅத்தை 'ஸ்வரூபம்' என்று அறியாதே 'உபாயம்' என்று இருந்தானுகவேணும்" என்று பார்த்து, தங்கையில் ஒன்று இல்லாமையை யறிவித்து அவன் திருவடிகளிலே ஶரணம் புகுகிருர். கடற்கரையில் வெளியிலே, மஹாராஜருள்ளிட்ட முதலிகளோடும், "லக்ஷ்மணம் புண்யலக்ஷணம்" (லக்ஷ்மணம்புண்யலக்ஷணம்) என்கிற தம்பியோடுங்கூட எழுந்தருளியிருக்க, ஸ்ரீவிபீஷணுழ்வான் "ராவணோ நாம துர்வ்ருத்த:" (ராவணோநாமதுர்வ்ருத்த:)என்று ஸ்வநிகர்

ப்ர.—யுத்தகாண்டே [கஅ] ஸமுத்ரவசநாத்ரகவே, "ஆநாய்யைவ தேவதாக்யம் ஶ்ருத்வா ஸர்வாந் நிரீக்ஷ்ய ச ||ரு|| ஸம்ஹ்ருஷ்டஸ்த்வப்ரவீத் ராமோ லக்ஷ்மணம் புண்யலக்ஷணம் | இதி ஹோவாச காகுத்ஸ்தோ வாக்யம் ஸத்யபராக்ரம: ||எ||".

ததைவ [கள] "ராவணோ நாம துர்வ்ருத்தோ ராக்ஷஸோ ராக்ஷஸேஶ்வர: | தஸ்யாஹமநுஜோ ப்ராதா விபீஷண இதி ஶ்ருத: ||கo|| தேந ஸீதா ஜநஸ்தாநாத்த்ருதா ஹத்வா ஜடாயுஷம் | ருத்தா ச விவஶா தீநா ராக்ஷஸீபிஸ்ஸுரக்ஷிதா ||கக||".

நோற்றநோன்பு ப்ரவேஶ,-ஸங்கத்யர்த்தமாக வ்ருத்தவர்திஷ்யமாணகதநம் - கீழில் இத்யாதி. கீழே - அநுகரித்து தரிக்கப்பார்த்தவர், இங்கே "நோற்றநோன்பிலேன்" என்று-உபாயஶூந்யதையைச்சொல்லுகைக்கடியேதென்ன; ப்ரஸங்கமருளிச்செய்கிருர் - அநுகரித்து இத்யாதி. ஆற்ருமையுண்டாயிருந்ததென்றது "ஆற்றகிற்கின்றிலேன்" என்றத்தைப்பற்ற உபாயமென்றிருந்தானுகவேணுமென்றது-ஆற்ருமையாவது - ஸ்நேஹமாய், ஸ்நேஹபூர்வமநுத்யாநம் - ஶக்தியாகையாலே, இது உபாயமாகவேணுமென்றிருந்தா னென்றபடி. உபாயமென்றிருந்தானுக வேணும் - என்றதுக்கு நியாமகம் - வ்யவஸ்தஸ்யஹி வ்யதிரேக:, ஆகையாலே "நோன்பிலேன்" என்றுசொன்னதுவேயென்றுகருத்து. த்ருஷ்டாந்தகதநமுகேந விஸ்தரஸங்கதி - கடற்கரையில் இத்யாதி. "ஸர்வாந் நிரீக்ஷ்ய" என்றத்தைப்பற்ற-மஹாராஜருள்ளிட்டமுதலிகளோ

ஷத்தை முன்னிட்டுக்கொண்டுவந்து பெருமாள்திருவடிகளிலே விழுந்தாற்போலே, இவரும்; அவன் கடற்கரையிலே தனியிருந்த இழவுதீர, பிராட்டிமாரோடும் நித்யபரிகரத்தோடுங்கூட சிரீவரமங்கலநகரிலே திருவநந்தாழ்வான்மேலே எழுந்தருளியிருக்கிற வானமாமலைதிருவடிகளிலே, வேரற்றமரம்போலே புகலற்றுவிழுந்து ஶரணம்புகுகிறார். இவர்தாம் என்கொண்டு அவனை வடிம்பிடப்பார்க்கிறது? என்னில்,— அவன் ரக்ஷ்யவிஷயாபேக்ஷியாயிருந்தான், நமக்கு ரக்ஷாபேக்ஷை யுண்டாயிருந்தது; ஆனபின்பு இதுக்குமேற்பட ஸம்பந்தமுண்டோ?

முதற்பாட்டு.

நோற்றநோன்பிலேன் நுண்ணறிவிலேன் ஆகிலுமினியுன்னைவிட்
மாற்றகிற்கின்றிலேன் அரவினணையம்மானே! [டொன்று
சேற்றுத்தாமரைசெந்நெலூடுமலர் சிரீவரமங்கலநகர்
வீற்றிருந்தவெந்தாய்! உனக்குமிகையல்லேனங்கே.

ஆ.—எனக்கு இவையொன்றும் அல்லையேயாகிலும், நிரவதிகபோக்யனுமாயிருந்த உன்னைவிட்டு ஒருபடியாலும் நான் தரிக்கமாட்டாமையாலும், அடியேனை விஷயீகரிக்கைக்காக நீ சிரீவரமங்கலநகரிலே வந்து புகுந்தருளுகையாலும், உனக்கு அடிமையான இவ்வாத்மாவை நீ போகிடில் இழவு உன்னதாகையாலும் அடியேனைப் பொகட்டருளவொண்ணாது; ஆதலால் அடியேனை விஷயீகரித்தருளவேணு மென்கிறார்.

ஓ—முதற்பாட்டில், கர்மாத்யுபாயரஹிதராய் ரக்ஷாபேக்ஷரான ஆழ்வார், பூர்ணனாய் ரக்ஷ்யவிஷயார்த்தியாயுள்ள எம்பெருமானைக்கண்டு தம்முடைய அபேக்ஷிதம் பெறுகைக்கு உத்யோகிக்கிறார்.

[நோற்ற என்றுதொடங்கி]-ஶாஸ்த்ரீயமாம்படி அநுஷ்டிதமான கர்மமாதல், தாத்ருஶஜ்ஞாநமாதல் உடையேனல்லேன். இவை உண்டானால் உண்டாகக்கடவ ஶக்தியில்லையென்னுமிது கிம்புநர்ந்யாயஸித்தம். ஶக்தியில்லையாக்கிற்று - அத்தை உபாயமாக நினைத்திராமை. [இனி என்று தொடங்கி]-அத்யந்தபோக்யனான உன்னைவிட்டு இனி ஒரு க்ஷணமும் தரிக்கமாட்டுகிறிலேன். [அரவினணை என்று தொடங்கி]-அநந்தஶாயியான

டும் என்றது. நித்யபரிகரத்தோடுமென்றது - "கருளப்புட்கொடி" என்றத்தைப்பற்ற. திருவநந்தாழ்வான்மேலேயென்றது - "அரவினணை" என்றத்தைப்பற்ற. "ஆறெனக்கு" இத்யாதியைப் பற்ற - புகலற்று இத்யாதி. என்கொண்டு - என்னஸம்பந்தங்கொண்டு. வடிம்பிடப்பார்க்கிறது - த்வரித்து நிர்ப்பந்திக்கிறது. ரக்ஷ்யவிஷயாபேக்ஷியாயிருந்தானென்றது - "சிரீவரமங்கலநகர்வீற்றிருந்த" என்றத்தைப்பற்ற. ரக்ஷாபேக்ஷை யுண்டாயிருந்ததென்றது-"ஆற்றகிற்கின்றிலேன்" என்றத்தைப்பற்ற. "[illegible] இதி [illegible]. ததைவ, "[illegible]".

ஸர்வேஶ்வரனாயிருந்துவைத்துச் சேறானநிலங்களில் செந்நெற்கள்நடுவே தாமரை அலரா நின்றுள்ள சிரீவரமங்கலநகரிலே உன்வேண்டற்பாடுதோற்றும்படி இருந்தருளின இருப்பைக்காட்டி என்னை அடிமைகொண்டவனே! ரக்ஷ்யவிஷயம் தேட்டமாய்க்கொண்டிருக்கிற உன்னுடைய நீர்மைக்குப் புறம்பு அல்லேன். [உனக்கு மிகையல்லேன் அங்கே]-உன்னுடைய திருவடிகளில் அடிமையொழிய ஒருக்ஷணமும் தரிக்கும்ப்ரக்ருதியல்லேன். இவ்வாத்மா அடிமைசெய்து க்ருதார்த்தமானால் இத்தால்வந்த ப்ரீதியும் தேவரீருக்கேயென்றுமாம்.

ப.—முதற்பாட்டில், உன்னை லபிக்கைக்கு ஶாஸ்த்ரோக்தங்களான உபாயங்கள் எனக்கின்றியிருக்கச்செய்தே, உன்னையொழியச் செல்லாதபடி அபிநிவிஷ்டனான நான், ஆஶ்ரிதஸம்ஶ்லேஷத்தாலே உபகாரகனாய் அவஸரப்ரதீக்ஷனான உனக்குப் புறம்போவென்கிறார்.

நோற்ற-ஃபலவ்யாப்தமாம்படி அநுஷ்டிதமான, நோன்பு-கர்மயோகம், இலேன் உடையேனல்லேன்; (ஆகையாலே), நுண்-ஸூக்ஷ்மரூபமான, அறிவு-ஜீவபரவிஷயஜ்ஞாநயோகத்தை, இலேன் - உடையேனல்லேன்; (ஆகையாலே), ஆகிலும் - உபயஸாத்யமான பக்தியின்றிக்கேயிருக்கச்செய்தேயும், இனி-உன்னுடைய குணாநுஸந்தாநம் பிறந்தபின்பு, உன்னை-(ரக்ஷணைகஶீலனான) உன்னை, விட்டு - ஒழிய, ஒன்றும் - ஒருக்ஷணமும், ஆற்ற- ஆற்ற, கிற்கின்றிலேன்-மாட்டுகிறிலேன்; அரவு-ஆஶ்ரிதனான ஶேஷனை, அணை - அணையாகக்கொண்டு அவனுக்குத் திருமேனியை உபகரித்த, அம்மானே - அஸாதாரணஸ்வாமியாய், சேறு-சேற்றுநிலத்து, தாமரை - தாமரையானது, செந்நெலூடு-செந்நெலோடே கலந்து, மலர்-மலரும்படி தர்ஶநீயமான, சிரீவரமங்கலநகர்-சிரீவரமங்கலநகரிலே, வீற்று - ஆஶ்ரிதஸம்ரக்ஷணத்தில் அவஸரப்ரதீக்ஷை தோன்றும்படி வ்யாவ்ருத்தமான, இருந்த- இருப்பாலே, எந்தாய் - எனக்கு உபகாரகனானவனே! அங்கு - அங்கு நீ இருக்கிற இருப்பில், உனக்கு - ரக்ஷணஶீலனான உனக்கு, மிகை - ரக்ஷ்யவஹிர்பூதன், அல்லேன - அல்லேன்.

இ.—முதற்பாட்டில், எனக்குப் பேற்றுக்குடலாயிருப்பதொரு கைம்முதலில்லை, இல்லாமையாலே ரக்ஷகாபேக்ஷையுண்டு; பூர்ணரான தேவர் ரக்ஷ்யவிஷயார்த்தியாயிருந்தீர், ஆகையாலே தேவர் என் அபேக்ஷிதம் செய்தருளவேணுமென்கிறார்.

[நோற்றநோன்பிலேன்] - நோன்பிலேன் என்னாதே, நோற்ற நோன்பிலேனென்கிறது - ஃபலவ்யாப்தமாம்படி யநுஷ்டிதமாயிருப்பதொரு கர்மமில்லையென்கிறது. என் ஆற்றாமையாலே சிலவுண்டானாலும், சக்ரவர்த்தியுடைய புத்ரகாமேஷ்டி போலேயாதல், ஶ்ரீவஸுதேவருடைய அநந்தவ்ரதம்போலேயாதல் ஃபலவ்யாப்தமாயிருப்பதொரு தர்மமில்லை. "நயஜ்ஞநிஷ்டோஸ்மி" என்கிறவிடத்தில் - தர்மமில்லை என்னாதே, தர்மநிஷ்டையில்லை என்றாற்போலே [நுண்ணறிவிலேன்]-அறிவிலேனென்னாதே, நுண்ணறிவிலேனென்றது-ஸ்வரூபஜ்ஞாநபூர்வகமாக பரஸ்வரூபத்தை ஸாக்ஷாத்காரபர்யந்தமாக அறியும் அறிவையுடையேனல்லேன். கர்மமில்லையென்றபோதே - தத்ஸாத்யமான ஜ்ஞாநமில்லையென்னுமிடம் அர்த்தஸித்தமாயிருக்க, "ஜ்ஞாநமில்லை" என்றதென்? என்னில்,— பூர்வஜந்மத்திலே கர்மத்தையநுஷ்டித்து, தத்ஃபலமான ஜ்ஞாநம்

இந்தஜந்மத்திலே நைஸர்கிகமாகப் பிறக்கலாமிறே; அத்தாலே சொல்லிற்று. அன்றிக்கே, புராணங்களிலே தனித்தனியே கர்மஜ்ஞாநங்களை ஸாதநமாகச்சொல்லுகையாலே சொல்லிற்றாகவுமாம். ஹக்தியில்லை யென்னுமொழிவானென்? என்னில்,— ஹக்தியாகிறது - ஜ்ஞாநவிஶேஷமாகையாலே, ஜ்ஞாநத்தைச்சொன்னபோதே - அதுவும் சொல்லிற்றாயிற்று. இவையில்லையாகில், முதலில்லாதார் அத்தாலேவரும் ஃபலத்தை இழக்குமித்தனையன்றோ? என்னில்,— [ஆகிலும்]-இங்ஙனேயிருந்ததேயாகிலும். [உன்னைவிட்டொன்று மாற்றகிற்கின்றிலேன்] - ஸாதநாநுஷ்டாநத்தைப்பண்ணி ஃபலம்தாழ்ந்தாரைப்போலே பதறுகின்றேன். ஆற்றாமையன்றோ-ஹக்தியாகிறது, ஹக்தியில்லை என்பானென்? என்னில்,- கர்மஜ்ஞாநஸஹக்ருதையாய் ஶாஸ்த்ரஸித்தையான நூற்படித்த ஹக்தியில்லை; அவனையொழியச்செல்லாமையுண்டென்கிறார். அத்தைத் தாம் ஸாதநமாகநினைத்திராரிறே. [இனி] - என்பக்கலிலே முதலுண்டானவன்று, அது தலைக்கட்டுந்தனையும் ஆறியிருக்கலாம்; அதின்றிக்கே, நீயே உபாயமானபின்பு விளம்பஹேதுவுண்டாய் ஆறியிருக்கிறேனோ. [இனி] - உன் ஶரணங்களிலே அவகாஹித்தபின்பு ஒருக்ஷணமும் ஆறியிருக்க க்ஷமனாகிறிலேன். உன்பக்கல் உபாயபாவம் அஸித்தமாய் ஆறியிருக்கிறேனோ, என்பக்கல் ஆகிஞ்சந்யம் அஸித்தமாய் ஆறியிருக்கிறேனோ. என்ஸத்தைக்கு நான்ஹேதுவானதுமன்று, உபாயத்திலும் எனக்கு அதிகாரமுண்டு. ஸ்வரக்ஷணத்தில் ப்ராப்தியில்லாத ஸ்வரூபஜ்ஞாநமும், புருஷார்த்தத்தில் ருசியுமே ஹிதாம்ஶத்தில்வேண்டுவது; ஆனபின்பு ஆறியிருப்போமோவெனகை. [அறவினை இத்யாதி]-இதுக்குக்கீழ்-தம்முடைய வெறுமைசொல்லிற்று; இதுக்குமேல் - அவனுடைய உபாயபாவம் சொல்லுகிறது. அவனைப் பார்த்தாலும் இவர்க்கு இழக்கவேண்டா, தம்முடைய அதிகாரத்தைப்பார்த்தாலும் இழக்கவேண்டா. திருவநந்தாழ்வானைப் படுக்கையாகவுடைய ஸர்வேஶ்வரனைவைத்து, விஸத்ருஶமான ஸம்ஸாரத்திலே, ஒருஹேதுவின்றிக்கேயிருக்கப் புகுந்திருக்கிறது என்னைவிஷயீகரிக்கைக்காகவன்றோ. அரவையணையாகவுடைய ஸர்வேஶ்வரனே! [சேற்றுத்தாமரை] - வரள்தாமரையுண்டாகையாலே - சேற்றுத்தாமரையென்று விஶேஷிக்கிறார். செந்நெற்களூடேயலர்ந்த தாமரைகள் செந்நெலுக்குங்கூட நிழற்செய்யாநிற்குமென்கை. வானமாமலைக்கு ஸத்ருஶமாயிருந்துள்ள போக்யதையைச் சொல்லுகிறது. [சிரீவரமங்கலநகர்] - பரமபதத்திற்காட்டில் தனக்கு நகரமாக விரும்பி வர்த்திக்கிற தேசம். ஸம்ஸாரிகளுடைய ரக்ஷணத்துக்காக நித்யவாஸம்பண்ணுகிற தேஶம். [வீற்றிருந்த] - அஜஹத்ஸ்வபாவனுய்வருகையாலே தன் ஐஶ்வர்யத்தாலுள்ள வேறுபாடெல்லாம் தோற்றவிருக்கிறபடி. நீ பரமபதத்திலே யிருந்தாயாகில் நான் ஆறியிரேனோ. உன் பூர்த்தியிற் குறைவுண்டாகில்தான் ஆறியிரேனோ. [எந்தாய்] - அவ்விருப்பு ஸர்வஸாதாரணமாயிருக்கச்செய்தே, இவர் தம்மையெடுக்கைக்காக என்றிருக்கிறார். [உனக்குமிகையல்லேனங்கே] - அங்கே வீற்றிருந்த உனக்குமிகையல்லேன். ரக்ஷ்யவிஷயம் தேட்டமான உனக்குப் புறம்பல்லேன. உன்திருவடிகளில் அடிமையொழிய தரிக்கும் ப்ரக்ருதியல்லேன்; "தவதாஸ்யஸுகைகஸங்கிநாம்" என்கிறபடியே இத்தலையில்பேறால்வந்த உகப்பும் தேவர்க்கே யென்றுமாம். ப்ரீதி உன்பக்கலிலேயானால் இழவும் உன்பக்கலிலேயாகவேண்டாவோ.

ஈடு.—முதற்பாட்டு. எனக்குப் பேற்றுக்கு உடலாயிருப்பதொரு கைம்முதலில்லை, இல்லாமையாலே ரக்ஷகாபேக்ஷையுண்டு; பரிபூர்ணரான தேவர் ரக்ஷ்யவிஷயார்த்தியாய் இருந்தீர், ஆகையாலே தேவரே என் அபேக்ஷை செய்தருளவேணு மென்கிறார்.

[நோற்றநோன்பிலேன் நுண்ணறிவிலேன்]-"ந தர்மநிஷ்டோஸ்மி ந சாத்மவேதீ ந பக்திமாம்ஸ்த்வச்சரணாரவிந்தே" (நதர்மநிஷ்டோஸ்மி நசாத்மவேதீ நபக்திமாம்ஸ்த்வச்சரணாரவிந்தே) என்கிறார். "ந தர்மநிஷ்டோஸ்மி" (நதர்மநிஷ்டோஸ்மி)-நாட்டார் "இவன் சில செய்யாநின்றான்" என்றிருக்கைக்கும், அதுகண்டு நான் "நமக்குச் சில உண்டாகாதே" என்று ப்ரமிக்கைக்கும், நீ கைவிடுகைக்கும் வேண்டுவதுண்டு; ஃபலத்தோடே வ்யாப்தமாயிருப்பதொன்றில்லை. "ந சாத்மவேதீ" (நசாத்மவேதீ) - தாச்சீல்யந்தோற்ற இருப்பன், எனக்கு அதுதானுமில்லை. *தஜ்ஜ்ஞாநமஜ்ஞாநமதோந்யதுக்தமிறே, ஆத்மயாதா

ப்ர.—(நோற்றநோன்பு இத்யாதி) ஸ்தோத்ரே, யாமுநாசார்ய:, "ந தர்மநிஷ்டோஸ்மி ந சாத்மவேதீ ந பக்திமாம்ஸ்த்வச்சரணாரவிந்தே | அகிஞ்சநோநந்யகதிஶ்ஶரண்ய த்வத்பாதமூலம் ஶரணம் ப்ரபத்யே ||".

ஸ்ரீவிஷ்ணுபுராணே ஷஷ்டாம்ஶே, [ரு] "ஸஞ்ஜாயதே யேந ததஸ்ததோஷம் ஶுத்தம் பரம் நிர்மலமேகரூபம் | ஸந்த்ருஶ்யதே வாப்யதிகம்யதே வா தஜ்ஜ்ஞாநமஜ்ஞாநமதோந்யதுக்தம் ||ருஎ||".

முதற்பாட்டு-நோற்ற இத்யாதி. "நோற்றநோன்பிலேன்"என்றத்தைப்பற்ற - எனக்குப் பேற்றுக்கு இத்யாதி. ரக்ஷகாபேக்ஷையுண்டென்றது-"ஆற்றகிற்கின்றிலேன்" என்றத்தைப்பற்ற. ரக்ஷ்யவிஷயார்த்தியாயிருந்தீரென்றது - "சிரீவரமங்கலநகர்வீற்றிருந்த" என்றத்தைப்பற்ற. என் அபேக்ஷைசெய்தருள வேணுமென்றது-மேலிற்பாட்டில் "அருளாய்" என்றத்தைப்பற்ற.

இப்படிசொன்னபேருண்டோ?என்ன-நதர்ம இத்யாதி. ஸ்தோத்ரே.என்கிறாரென்றது-"பேற்றுக்கடியான கர்மஜ்ஞாநங்களில்லை" என்று ஆளவந்தாரருளிச்செய்தாப்போலே இவரும் அருளிச்செய்கிறாரென்றபடி. ஆழ்வார்கருத்தை யநுவிதாநம்பண்ணி ஆளவந்தார் அருளிச்செய்தாரேயாகிலும், புத்திவைஶத்யார்த்தம், இவர் அருளிச்செய்தாப்போலே அவர் அருளிச்செய்கிறாரென்று வ்யாக்யாதாவுக்குச்சொல்லலாமாகையாலே விரோதமில்லை. யதாவாஸ்ஸ்மி என்னாதே "நதர்மநிஷ்டோஸ்மி" என்றதுக்கு ஹாவம் - நாட்டார் இத்யாதி. இத்தால்-பலஸாதநத்தில் உபக்ரமித்தமாத்ரமொழிய, ஸாதநத்தையநுஷ்டித்து,"பலம்கைவரும்"என்று நிஶ்சயிக்கத்தக்கதில்லையென்றபடி. "ஆத்மவேதீந" என்றத்துக்கு-ஆத்மவேதந ஸ்வபாவனல்லவென்று பொருளாய், அத்தையெடுத்துக்கழிக்கிறபோதே-அதிலே கிஞ்சிதந்வயமுண்டென்று தோற்றுகையாலே, தாச்சீல்யந்தோற்றவிருப்பன் என்கிறார். இவ்வாத்மவேதநத்தில் கிஞ்சிதந்வயமுண்டென்றதுதான் போராதோ என்கிற ஶங்கையிலே; அல்பஜ்ஞாநம் லௌகிகஜ்ஞாநத்தோடே கூடினதாகையாலே அஜ்ஞாநகல்பமாயிருக்குமென்றதுக்கு ப்ரமாணங்காட்டாநின்றுகொண்டு, "தாச்சீல்யந்தோற்றவிருப்பன் எனக்கு அதுதானுமில்லை" என்றத்தை விவரிக்கிறார் - தஜ்ஜ்ஞாநம் இத்யாதி வாக்யத்வயத்தாலே. தாச்சீல்யம் - தத்ஸ்வபாவம். தாச்சீல்யந்தோற்றவிருப்பன் - ஜ்ஞாநஸ்வபாவனான ஆகாரந்தோற்றவிருப்பன். அதுதானுமில்லை - ஆத்மஜ்ஞாநஶீலதையுமில்லை. தஜ்ஜ்ஞாந

த்ம்யஜ்ஞாந பூர்வகமாயிருக்கும் ஈஶ்வரஜ்ஞாநம் எனக்கில்லை. "ந பக்திமாந்" (நபக்திமாந்)-பக்தியில்லை என்று சொல்லவேண்டாவிறே· கீழில் அவை இரண்டும் உண்டானால் வருமதிறேயது [நோற்றநோன்பிலேன்] - நோன்பிலேன் என்னவமையாதோ, "நோற்ற நோன்பிலேன்" என்னவேணுமோ? என்னில்,—ஸாதநங்களைச் சமைய அநுஷ்டித்து, பலத்தோடே வ்யாப்தமாகப் பார்த்திருக்கலாவது ஒன்றில்லை என்கைக்காக· சக்ரவர்த்தி ஸ்ரீவஸுதேவரைப்போலே பேற்றுக்கடியாக நினைத்திருக்கலாவதொன்றில்லை. [நுண்ணறிவிலேன்] - "ந தர்மநிஷ்டோஸ்மி" (நதர்மநிஷ்டோஸ்மி) என்கிறவிடத்தில், தர்மமில்லை என்னாதே தர்மநிஷ்டனாகப் பேறுகிறிலேன் என்றாற்போலே, அறிவிலேன் என்னாதே, நுண்ணறிவிலேன் என்கிறது. ஸ்வஸ்வரூபஜ்ஞாநபூர்வகமாகப் பரஸ்வரூபத்தை ஸாக்ஷாத்காரபர்யந்தமாக அறியும் அறிவையுடையேனல்லேன். "ந பக்திமாந்" (நபக்திமாந்) என்றும், $ "நின்கணும்பத்தனல்லேன்" என்றும் எடுத்துக்கழித்தமாத்ரம் இங்கும் எடுத்துக்கழியாதொழிவானேன்? என்னில்,—"உபயபரிகர்மிதஸ்வாந்தஸ்ய" (உபயபரிகர்மிதஸ்வாந்தஸ்ய) என்கிறபடியே, அவையிரண்டுமுண்டானால் வருமதிறே பக்தி; அவை இல்லாமையாலே எடுத்துக்கழிக்கவும் வேண்டாவிறே. ஆனால் இவ்வோபாதி, "கர்மமில்லை" என்றபோதே - ஜ்ஞாநமில்லையாகாதோ, அது எடுத்துக் கழிக்கவேண்டுவானேன்? என்னில்,— பூர்வஜந்மத்திலே கர்மம் தலைக்கட்டின வளவிலே ஶரீரவிஶ்லேஷம் பிறந்தால் அநந்தர ஜந்மத்திலே ஜ்ஞாநமுண்டாகக்கடவது. பக்தியும் அப்படியானாலோ? என்னில்,—ஜ்ஞாநகர்மங்களிரண்டும் உண்டானால் பக்தி கூடியல்லது நில்லாது, ஆனபின்பு இங்கு அப்படியாகவொண்ணாது. "உன்னைவிட்டொன்றுமாற்றகிற்கின்றிலேன்" என்று

ஜ்ஞாநநிஷ்டோஸ்மி... பூர்வமேவலிகிதம் மஹாப்ரவேஶாதௌ. கீழில் அவையிரண்டுமுண்டானால் வருமதிறேயது என்றதுக்கு அநந்தரத்திலே, 'அவையிரண்டுமில்லாமையாலே பக்தியுமில்லையென்கிறார்' என்று கூட்டுவது. அப்படி பார்த்திருந்தபேறுண்டோவென்ன-சக்ரவர்த்தி இத்யாதி. "நுண்ணறிவிலேன்" என்றதுக்கு, "ந சாத்மவேதீ" என்றத்தை எடாதே, "ந தர்மநிஷ்டோஸ்மி" என்றத்தை த்ருஷ்டாந்தமாகவெடுத்தது - இதிலே "நிஷ்டையில்லை" என்னுமது ஸாப்தமாய் வ்யக்தமாயிருக்கையாலேயென்று கருத்து. "நுண்ணறிவு" என்றதுக்கு பாவம் - ஸ்வஸ்வரூபஜ்ஞாந இத்யாதி. நின்கணும்பத்தனல்லேன் - தேவரீரிடத்திலும் பக்தியையுடையேனல்லேன். $ திருமாலை, இருபத்தஞ்சாம்பாட்டு, "தளித்து" இத்யாதி. உபயபரிகர்மிதஸ்வாந்தஸ்ய-கர்மஜ்ஞாநங்களாலே அலங்க்ருதமான மநஸ்ஸையுடையவனுக்கு. பூர்வஜந்மவிஹித்த கர்மஜ்ஞாநங்களாலே அநந்தரஜந்மத்திலே பக்தியுமுண்டாகலாமே, ஆனபின்பு அவையுடையவனுக்கே பக்திநிஷேதமும் பண்ணலாமேயென்று ஶங்கித்துப்பரிஹரிக்கிறார் - பக்தியும்அப்படி இத்யாதி. பக்திகூடியல்லது நில்லாதென்றது - "பக்திஶ்ச ஜ்ஞாநவிஶேஷ:" என்றும், "ஞானங்கனிந்தநலம்" என்றும் சொல்லுகிறபடியே, ஜ்ஞாநத்தினுடைய பரிபாகம் பக்தியாகையாலே ஜ்ஞாநம் பக்திவ்யாப்தமாயேயிருக்குமென்றபடி. பக்தியும்அப்படியானாலோவென்னில் - பூர்வஜந்மத்திலே கர்மஜ்ஞாநங்களையநுஷ்டித்து, இந்தஜந்மத்திலே பக்தியுண்டானாலோவென்னில். ஜிஜ்ஞாஸாப்ரஶ்நாநுவாதம் - உன்னைவிட்டு இத்யாதி. "ஸ்நேஹபூர்வமநுத்யாநம் பக்திரித்யபிதீயதே॥ பஜநம் த்ரிஷ்யதாம்வேதே ஸேவாயாம்பரிகீர்த்தித:। தஸ்மாத்

இவர் சொல்லுகிற இது பக்தியன்றோ, "ஸ்நேஹபூர்வமநுத்யாநம் பக்திஃ" (ஸ்நேஹ பூர்வமநுத்யாநம்பக்திஃ இறே; ஆனபின்பு இது உபாயமாகாதோ? என்னில்,—அங்ஙனேயன்றிறே, கர்மஜ்ஞாந ஸஹக்ருதாந்தஃகரணனுக்குப் பிறக்கும் பக்தியிறே ஶாஸ்த்ரங்களில் ஸாதநமாகச் சொல்லிப்போருகிறது; இது அங்ஙனன்றிக்கே, அவனநுக்ரஹமடியாக வந்ததாகையாலே இது ஸ்வரூபமாமித்தனை. அங்ஙனன்றிக்கே, புராணங்களிலே தனித்தனியே கர்மஜ்ஞாநங்களை ஸாதநமாகச் சொல்லுகையாலே சொல்லிற்றாகவுமாம். இவையில்லையாகில் முதலில்லாதார் பலிசை இழக்குமத்தனையன்றோ? என்ன,— [ஆகிலும்] - இங்ஙனே இருந்ததேயாகிலும். "ஆற்றகிற்கின்றிலேன்" என்கிற இத்தை - "உபாயம்" என்று இருந்தாராகில், [ஆகிலும்] என்கைக்கு விஷயமில்லை. ஆனால், நீர் இந்நாள்வரையும் ஆறியிருந்தீரே? என்ன;— [இனி] - உன்னையும் அறியாதே என்னையும் அறியாதே இருந்தவன்று இழக்கவமையாதோ, உன் நிறைவும் என் குறைவும் அறிந்த இன்றும் இழக்கவேணுமோ? ஒருவன்கையிலே சோறுமுண்டாய் அவன் இடுவானுமானால், ஒருவனுக்குச்சோறுமின்றிக்கே பசியனுமானால் இழக்கவேணுமோ? [இனி]-என்கையிலேயும் ஒன்றுமுண்டாய் அது சமையுந்தனையும் ஆறியிருக்கிறேனோ. ஸத்தையை உபாயத்திலே சிலவெழுதிக் கைவிடப்பார்க்கில் பார்க்குமித்தனை. அநாதிகாலம் மெய்மறந்து இழந்தகாலம் போராதோ, நான் மெய்யாக இசைந்த இன்றும் இழக்க

வாஸ்வாஸ்யேம் ஜ்ஞாநஸக்திமத் ஸஹஸ்தயஸ்" என்றது அநுஸந்தேயம். உத்தரம் - அங்ஙனன்றன்றது இத்யாதி. "கர்மஜ்ஞாநாங்கிகையாயிருக்கும்பக்தி" என்கிறவேதாந்த ப்ரக்ரியையை யுபஜீவித்து அருளிச்செய்தார் - கீழ்; "ஜ்ஞாநஸம்வ்ருத்தம் கர்மஜநகாதிஷு ஹ்யஶ்ருதே | கர்மஸம்வ்ருத்தம் ஜ்ஞாநம் வ்யாஸோ நாஸ தாதிஷு | கர்மஜ்ஞாநாவ்ருதாஸக்திர் ஹ்ராதவ்ருத்தவாஶ்யா" என்று - கர்மஜ்ஞாநாதிகளை ப்ரத்யேகம் ஸாதநமாகச்சொல்லுகிற புராணப்ரக்ரியையை யுபஜீவித்து அருளிச்செய்கிறார் - அங்ஙனன்றிக்கேபுராணங்களிலே இத்யாதி. இந்தப்பக்ஷத்தில்,கர்மஜ்ஞாநராஹித்யம் சொன்னது-பக்திராஹித்யத்துக்கு முபலக்ஷணம். "ஸாதநாஸாவேஸாத்யாஸாவஃ" என்றத்தையுட்கொண்டு அருளிச்செய்கிறார் - முதலில்லாதார் இத்யாதி. பலிசு - வட்டி. இங்ஙனேயிருந்ததேயாகிலும் - நிஸ்ஸாதநனாயிருந்தேனேயாகிலும். கர்மஜ்ஞாநாங்ககபக்தியில்லாவிட்டாலும், "ஆற்றகிற்கின்றிலேன்" என்கிற பகவத்ப்ரஸாதமடியாகவந்த பக்திதானே ஸாதநமாகாதோ? என்ன - ஆற்றகிற்கின்றிலேனென்கிறவித்தை இத்யாதி. விஷயமில்லையென்றது - "ஆகிலும்" என்கிறபதம் வ்யர்த்தமாமென்றபடி. அதாவது - "உபாயாந்தரங்கள் தமக்கில்லை" என்று அருளிச்செய்யக்கூடாதென்றபடி. கீழிற்பதங்களையும் "அரவினணையம்மானே"என்றத்தையும் கடாக்ஷித்து "இனி" என்றதுக்கு பாவம் - உன்னையும் இத்யாதி. விவரணம் - உன்னிறைவும் இத்யாதி. அபூர்ணனுக்குப் பூர்ணன்கார்யம்செய்யவேணுமோ? என்ன; வேணுமென்னுமத்தை லௌகிகத்ருஷ்டாந்தத்திலே காட்டுகிறார் - ஒருவன் இத்யாதி. "நோற்றநோன்பிலேன் நுண்ணறிவிலேன்" என்கிற பதமாத்ரத்தைக்கடாக்ஷித்து, "இனி" என்றதுக்குத் தாத்பர்யாந்தரம் - என்கையிலேயும் இத்யாதி. "ஒன்றுமில்லை" என்கிறதென், "ஆற்றகிற்கின்றிலேன்" என்கிறபக்தி உபாயமாகாதோ என்று ஈஶ்வராபிப்ராயமாக அருளிச்செய்கிறார் - ஸத்தையை இத்யாதி. "அரவினணையம்மானே" என்றபதத்துக்கு - அநந்தஶாயித்வம் ஸர்வாதிகலக்ஷணமாகையாலே, பூர்த்திசொல்லுகிறதென்றும்; "அரவினணை" என்று ஶேஷஶாயியாகையாலே பரமபோக்யுமாய், "அம்மானே" என்று - ஶரீரித்வேந ஶேஷியுமானவனேயென்றும் இரண்டர்த்தம். இந்த இரண்டாமர்த்தத்தைக்கடாக்ஷித்து "இனி" என்றதுக்கு மூன்றாம் பாவம் - அநாதிகாலம் இத்யாதி. மெய்மறந்தென்றது - சாடு, ஶரீரஶரீரிபாவஸம்பந்

வேணுமோ? [உன்னைவிட்டு]-நீயும் என்னைப்போலே இருந்தாயாகில் நான் ஆறியிரேனோ, நானும் சிறிது செய்துவரவேண்டும்படியோ நீ இருக்கிறது. [உன்னைவிட்டு] - ப்ராணனை விட்டு ப்ரக்ருதி தரிக்கவற்றோ. [ஒன்றுமாற்றகிற்கின்றிலேன்] - உன்னுடைய ஸ்வரூப ஜ்ஞாநம் எனக்கு தாரணத்துக்கு உடலாயிருக்கிறதில்லை. "தத்தஸ்ய ஸத்ருஶம் பவேத்" (தத்தஸ்யஸத்ருஶம்பவேத்) என்று ஆறியிருக்கைக்கும் ஒருவழியுண்டிறே அவளுக்கு, கடலை அணைசெய்யவும் ராவணனை அழியச்செய்யவும் வேண்டாவிறே இவர்க்கு. [அரவினணையம்மானே] - கீழ் - தம்முடைய அபூர்த்தி சொல்லிற்று; மேல் - அவனுடைய பூர்த்தி சொல்லுகிறது. [அரவினணை] - உன்னுடைய ஸௌகுமார்ய ப்ராவண்யம் என்றால் ஆறியிருக்கலா யிருக்கிறதோ? நீ பரமபோகியாயிருக்க, என்றால் ஆறியிருக்கப்போமோ? அநந்தஶாயித்வம் - ஸர்வாதிகத்வத்துக்கு லக்ஷணமிறே. அரவை அணையாகவுடைய ஸர்வேஶ்வரனே! இன்-சாரியை. [சேற்றுத்தாமரை இத்யாதி] - வெறும் அரவினணை யம்மானுமாகில் நான் ஆறியிருக்கலாயிற்றே. [சேற்றுத்தாமரை] - பரமபதத்தையும் விஸ்மரிக்கும்படியான தேசம். சேறுகளிலே தாமரைகளானவை செந்நெலூடே, அவற்றுக்கு அணுக்கனிட்டாற்போலே அலராநிற்கும். ராஜாக்கள் எடுத்துவிட்டவிடத்தே பரிகரமும் புகுமித்தனையிறே. [சிரீவரமங்கலநகர்]-"தேவாநாம் பூரயோத்யா" (தேவாநாம்பூரயோத்யா) என்னுமாபோலே. பரமபதத்திற்காட்டில் தனக்கு நகரமாக விரும்பி வர்த்திக்கிறதேசம். ஸம்ஸாரிகளுடைய ரக்ஷணத்துக்காக நித்யவாஸம்பண்ணுகிற தேசம். [வீற்றிருந்த] - "அங்கே இருக்கக்கடவ நமக்கு இவ்விருப்பு இருக்கவேண்டாநின்றதே" என்னும் வெறுப்போடன்றிக்கே, தட்டியிலிருந்தவன் முடிசூடினாப்போலே தன் வேறுபாடு தோற்ற விருக்கை. [எந்தாய்] - அங்குத்தையிருப்பு நித்யஸூரிகளுக்கு ஆனாப்போலே, இவ்விருப்பு எனக்காகவன்றோ இருக்கிறது. சிரீவரமங்கலநகரான - அங்கே -

---

தத்தைமறந்தென்று ஸ்வஹாவார்த்தம்; உடம்புதெரியாதே மோஹித்தென்று சாடு. மெய்யாக - ஶரீரதயா ஶேஷமாகவென்றும், ஸத்யமாகவென்றும் அர்த்தத்வயம். "அரவினணையம்மானே" என்றபதத்தின் - பூர்ணனென்ற முந்தினவர்த்தத்துக்கு அநுகுணமாக, "உன்னை" என்றதுக்கும் - பூர்ணனானவுன்னை யென்று அர்த்தம் விவக்ஷித்து ஹாவம் - நீயும் என்னைப்போலே இத்யாதி வாக்யத்வயம். பரமபோகியுமாய் ஶேஷியுமானவனென்ற இரண்டாமர்த்தத்துக்கு அநுகுணமாக, போக்யமானவுன்னை யென்று அர்த்தாந்தரம் - ப்ராணனை இத்யாதி. "ஒன்றும்" என்று விஶேஷித்ததுக்கு ஹாவம் - உன்னுடைய இத்யாதி. பிராட்டிக்கு ஸ்வரூபஜ்ஞாநம் தரிக்கைக்குடலாயிற்றில்லையோ? என்ன - தத்தஸ்ய இத்யாதி. வழியாவது - க்ரமேண விரோதியைப் போக்கவேண்டுகை. த்வரையுண்டாயிருக்கச்செய்தே அவளுக்கு ஆறியிருக்கைக்கும், இவர்க்கு ஆறியிருக்கவொண்ணாமைக்கும் ஹேதுவேதென்ன - கடலை இத்யாதி. "அரவினணையம்மானே" என்றதுக்கு - போக்யதையைப்பற்ற ஹாவாந்தரம் - உன்னுடைய இத்யாதி. விவரணம் - நீபரமபோகி இத்யாதி. "அரவினணையம்மானே" என்றத்தாலே - பூர்த்தியைச்சொல்லும்படி யெங்ஙனே? என்ன-அநந்தஶாயித்வம் இத்யாதி. அவ்வூரில் தாமரையையும் செந்நெலையும் வர்ணிக்கிறதுக்கு ஹாவம் - பரமபதத்தையும் இத்யாதி. வர்ணித்ததுக்குத் தாத்பர்யாந்தரம்-ராஜாக்கள் இத்யாதி. அதாவது - ஸர்வேஶ்வரன்வந்து அவதரிக்கையாலே, நித்யஸூரிகளும் தத்ரூபேண வந்து அவதரிக்கையாலே அவனோபாதியுத்தேஶ்யமாய் வர்ணிக்கிறாரென்றபடி. "நகர்" என்றதுக்கு ஹாவம்-தேவாநாம் இத்யாதி. தட்டி-சிறைச்சாலை. முந்தினவர்த்தத்துக்கு, எந்தையாய் ஸந்நிஹிதனானவுனக்கு மிகையல்லேன் - உன்னுடைய ரக்ஷணத்துக்குப் புறம்பல்லேனென்றபடி. த்விதீயார்த்தத்துக்கு, உனக்குப் புறம்பாய்த்தோற்றிற்றாகில், அல்லேன் - தரியேனென்றபடி.

வீற்றிருந்த எந்தாய்! [உனக்கு மிகையல்லேன்] - நித்யவிபூதியிலே நெடுங்கைநீட்டாக இருந்தாயாகில் நான் பூரித்திருக்கலாயிற்றே, எனக்காகவந்தவிடத்தே நான் இழக்கவோ. [அங்கே - வீற்றிருந்த - உனக்குமிகையல்லேன்]-ரக்ஷ்யவிஷயம் தேட்டமான உனக்குப் புறம்பல்லேன். அன்றிக்கே, [உனக்கு மிகையல்லேன்] - "வைதர்ம்யம்நேஹவித்யதே" (வைதர்ம்யம்நேஹவித்யதே) என்று மற்றைப்போதைக்கு நானிரேன். உனக்கு மிகையானபோது அல்லேனாய்விடுவேன். இத்தால் நமக்கு லாபமேன்? என்ன:— [அங்கே] - "தவஸார்த்த ப்ரகல்பதே" (தவசார்த்த ப்ரகல்பதே) என்று; இத்தால் வரும் ப்ரயோஜநமும் தேவரதே. ஸ்தநந்ய்ய ப்ரஜையைப் பால்குடித்துவயிறுநிறையக்கண்டு உகக்கும் தாயைப்போலே, சேஷபூதன் ஸ்வரூபம்பெற்று அடிமைசெய்கை சேஷிக்குப் பேறிறே. (க)

இரண்டாம் பாட்டு.

அங்குற்றேனல்லேனிங்குற்றேனல்லேன் உன்னைக்காணுமவாவில்
எங்குற்றேனுமல்லேன் இலங்கைசெற்றவம்மானே [வீழ்ந்து நான்
திங்கள்சேர்மணிமாடநீடு சிரீவரமங்கலநகருறை
சங்குசக்கரத்தாய் தமியேனுக்கருளாயே.

ஆ.—(அங்குற்றேனல்லேன்.) உன் திருவடிமலர்களைப்பெற்றேனல்லேன், பெறுகைக்கீடான உபாயம் உடையேனல்லேன், உன்னைக்காணுமவாவில் வீழ்ந்து நான் இனிமேல் ஒருபாயம் அநுஷ்டிக்க க்ஷமனல்லேன். ஆகிலும் அசோகவநிகையில் பிராட்டியுடைய ப்ரதிபந்தகத்தை அன்றுபோக்கினாப்போலே, அடியேனுடைய ப்ரதிபந்தகத்தையும் நீயே நிர்ஹேதுகமாகப்போக்கி, தமியேனுக்கு அருளாயென்கிறார்.

ஒ.—இரண்டாம்பாட்டில், திருவடிகளை நான்பெறுமிடத்தில் ப்ரதிபந்தகமுண்டென்னில், அத்தையும் நீயே போக்கி உன்க்ருபையாலே ரக்ஷித்தருளவேணும் என்கிறார்.

[அங்குற்றேன் என்றுதொடங்கி] - ஸாதநமநுஷ்டித்து முக்திப்ராப்தனாயிருக்கிறேனல்லேன்; ஸாதநாநுஷ்டாநம்பண்ணுகிறேனல்லேன், உன்னைக்காணவேணுமென்னும் ஆசையாலே பலஹீநனாய்த் தளர்ந்து இனி உபாயாநுஷ்டாநக்ஷமனுமல்

நெடுங்கை நீட்டாக - *அதிதூரமாக. "உனக்குமிகையானால். தரியேன்" என்னுமத்தை த்ருஷ்டாந்த பூர்வகமாகக் காட்டுகிறார் - வைதர்ம்ய இத்யாதி. இத்தால் - மிகையாய்த்தோற்றாதே அடிமைகொண்டவித்தால். "அங்கே" என்றதுக்கு அர்த்தாந்தரம்-தவசு இத்யாதி. சகாரஃ-அவதாரணே. "இவரை யடிமைகொண்டால் அவன்பேறாயிருக்கும்" என்னுமத்தை ஸத்ருஷ்டாந்தமாகக்காட்டுகிறார்-ஸ்தநந்தயஇத்யாதி.* "க்ஷீராபேக்ஷஸ்தநந்தயஸ்ய வைதர்ம்யம் நேஹவித்யதே| க்ருதார்த்தோஹம் பவிஷ்யாமி தவஸார்த்த ப்ரகல்பதே ||உஉ||" உத்யோகபர்வணி [ரு.க] ஸாஸ்த்யகி வசனம். *க்ரமேணாந்வயஃ.* (க)

லேன். அங்குவரமாட்டேன், என் அபிநிவேசத்தாலே இங்குநிற்கமாட்டேன், பிறரோடு பொருந்துகிறதில்லை யென்றுமாம். சந்த்ரனுக்குத்தோள்தீண்டியான மணிமாடங்களை யுடைத்தான ஸ்ரீவரமங்கலமாகிற நகரத்திலே நித்யஸந்நிஹிதனாய் ப்ரதிபந்தகநிரஸநத்துக்கு ஈடான ஸ்ரீபாஞ்சஜந்யத்தையும் திருவாழியையு முடையையாயிருக்கிற நீ ராவணனைப்போக்கினாற்போலே என்ப்ரதிபந்தகங்களையும் போக்கி உன்னைப்பெறாதே தனிப்பட்டுக்கிடக்கிற எனக்கு.

ப.— அந்தரம், என்னை அங்கீகரிக்கைக்கு ப்ரதிபந்தகமான அநிஷ்டமுண்டானாலும், அதுக்கு நிவர்த்தகன் நீயாகையாலே, எனக்கு க்ருபைபண்ணி யருளவேணுமென்கிறார்.

அங்குற்றேன் – நிஷ்பந்நோபாயனாய்க்கொண்டு நீ யிருக்கிற ப்ராப்யஸ்தலத்தில் புகுந்தவன், அல்லேன்—அல்லேன்;("உபாயசூந்யர் ஆறியிருக்கையன்றோவுள்ளது" என்று நிரபேக்ஷனாய்), இங்குற்றேன்-இருந்தவிடத்திலிருக்கிறேன், அல்லேன்-அல்லேன்;உன்னை-(நிரதிசயபோக்யனான) உன்னை, காணும்—அநுபவிக்கவேணுமென்கிற, அவாவில்-அபிநிவேசத்திலே, வீழ்ந்து—அகப்பட்டு, நான்—(ஆற்றாமையையுடைய)நான், எங்குற்றேனும்—அந்யபரரான லௌகிகர் நிலையிலொன்றிலும், அல்லேன்—அல்லேன்; இலங்கை-(ஆஸ்ரித விஷயத்தில் ப்ரதிபந்தகமான லங்கையை, செற்ற—அழியச்செய்து ப்ராபித்துக்கொண்ட, அம்மானே-அஸாதாரணஸ்வாமியாய், (பிற்பட்டார்க்கு உதவுகைக்காக), திங்கள்-சந்த்ரனோடு, சேர்—சேரும்படி, மணி—மாணிக்யமயமான, மாடம்—மாடங்கள், நீடு—வளர்கிற, சிரீவரமங்கலநகர் – சிரீவரமங்கலநகரிலே, உறை—நித்யவாஸம்பண்ணுமவனாய், சங்குசக்கரத்தாய்-ஆஸ்ரிதவிரோதி நிரஸநகரமாயும் போக்யமாயுமுள்ள ஆயுதவிசேஷங்களையுடையவனே, தமியேனுக்கு—உன்னையொழியத் துணையில்லாத எனக்கு, அருளாய்—(உன் உபகாரசீலமான) க்ருபையைப்பண்ணி யருளவேணும்.

இ.—இரண்டாம்பாட்டில், "ஆற்றகிற்கின்றிலேன்" என்கிற ஆற்றாமை போருமோ, ப்ரதிபந்தக முண்டே?என்னில்; அதையும், பிராட்டியுடைய விரோதியைப் போக்கினாப்போலே தேவரே போக்கி க்ருபையாலே ரக்ஷித்தருளவேணுமென்கிறார்.

[அங்குற்றேனல்லேன் இத்யாதி.]-ஸாதநமநுஷ்டித்து முக்தப்ராயனாயிருக்கிறேனல்லேன்; ஸாதநாநுஷ்டாநம்பண்ணுமவர்களிலே யொருவனாயிருக்கிறேனல்லேன். மேலும் ஸாதநாநுஷ்டாநம்பண்ண வொண்ணாதபடி ஸௌந்தர்யாதிகளிலே ஈடுபட்டு, உன்னைக்காணவேணுமென்னும் ஆசையாலே பலஹீநனாய்த்தளர்ந்து இனி யுபாயாநுஷ்டாநக்ஷமனுமல்லேன். இது பூர்வர்கள்நிர்வாஹம். அங்ஙனன்றிக்கே, நீயிருந்தவிடத்தே வந்துகிட்டி உன்னை யநுபவிக்கிறவனல்லேன், உன்பக்கலில்நிரபேக்ஷராயிருக்கிற ஸம்ஸாரிகளிலே யொருவனாயிருக்கிறேனல்லேன்;உன்னையொழிய தரித்திருக்கிற ஸம்ஸாரிகளோடு பொருத்தமுடையேனல்லேன். அங்குவரமாட்டேன், அபிநிவேசத்தாலே இங்கு நிற்கமாட்டேன், பிறரோடு பொருத்தமுடையேனல்லே னென்றுமாம். [இலங்கைசெற்றவம்மானே] - இவ்வளவிற் செய்யவடுப்பதென்? என்ன,—"தத்தஸ்யஸத்ருஸம்பவேத்" என்றிருந்தவள்விஷயத்தில் பண்ணினத்தை என்விஷயத்திலே பண்ணவேணும். [அம்மானே] - ஸர்வஸாதாரணன் ஒருவ்யக்தியிலே செய்தது எல்லார்க்கும் பொதுவன்றோ?

பிராட்டியோடு ஸம்ஸாரியோடு வாசியுண்டோ ப்ராப்தியில், "க்ஷயிகிஞ்சித்ஸ்ரவலெஞ்" என்று இன்று ஆஸ்ரயித்தவன்பக்கல் பக்ஷபாதம் மிக்கன்றே விருப்பது. பிராட்டி, லங்கையையழித்தல் ராவணனையழித்தல் செய்திலன்றே என்விரோதிநிவ்ருத்தியிலே எனக்கு ப்ராப்தியுள்ளது. "நகஶ்சாந்நாபராத்யதி ஸ்ரீவஹஸ்ஹஸ்ஹஸ்ராஹ-ம்ஜநகாத்மஜா"என்றுளிறே. அவதாரத்திற் பிற்பாடரானீரேயென்ன,—[திங்கள்சேர் இத்யாதி] - சந்த்ரபதத்திலேசெல்லவோங்கின மணிமயமான மாடங்களையுடைத்தான சிரீவரமங்கலநகரிலே, பிற்பாடர்க்கும் இழக்கவேண்டாதபடி நித்யஸந்நிஹிதனாயிருக்கிறவனே. சந்த்ரஸூர்யர்களும் வந்து இளைப்பாறும்தேச மென்கை. ஸந்நிதியுண்டானாலும் ஸஹகாரிகள் வேண்டாவோ? என்ன,—[சங்குசக்கரத்தாய்] - *எப்போதும் கைகழலாநேமியானாயன்றே இருக்கிறது. "ஸாவஜாநய" என்னவேண்டாவே. ஸக்திக்கு கர்மஜ்ஞாநஸஹகாரம்போலேயாயிற்று இவனுக்கு திவ்யாயுதங்கள். உபாயம் புஷ்கலமானாலும் அதிகாரிஸம்பத்தியும் வேண்டாவோ? என்ன,—[தமியேனுக்கு] - என்பக்கல் ஸத்தாதிரேகியிருப்பதொன்றுமில்லை யென்னுதல், ஆற்றாமையோடே ஒருதுணையின்றிக்கேயிருக்கிற எனக்கு என்னுதல். செய்யவேண்டுவதென்? என்ன,—[அருளாயே] - ருசிக்குப்பண்ணின க்ருஷியை விரோதிநிவ்ருத்திக்கும் ப்ராப்திக்கும் பண்ணுமித்தனை யென்கிறார்.

ஈடு.—இரண்டாம்பாட்டு. "ஆற்றேன்" என்றால் பெற்றதேன், ப்ரதிபந்தகங்கள் இன்னமுண்டே? என்ன;—பிராட்டிக்கு வந்த ப்ரதிபந்தகங்களைப்போக்கினாப்போலே அடியேனுடைய விரோதியையும் போக்கியருளவேணு மென்கிறார்.

[அங்குற்றேனல்லேன்] - முக்தர் இஸ்ஸம்ஸாரத்திலே யுலாவினாப்போலே ஸித்தஸாதநனாய்த் திரிகிறேனல்லேன். [இங்குற்றேனல்லேன்] - இங்கேயிருந்து ஸாதநாநுஷ்டானம்பண்ணுமவர்களிலே யொருவனாயிருக்கிறேனல்லேன். அன்றிக்கே, [அங்குற்றேனல்லேன்] - "நோபஜநம்ஸ்மரந்நிதம்ஶரீரம்" (நோபஜநம்ஸ்மரந்நிதம்ஶரீரம்) என்கிறபடியே, உன்னை யநுபவித்து ஸம்ஸாரத்தை நினையாதிருக்கிறேனல்லேன். [இங்குற்றேனல்லேன்] - "மறந்தேனுன்னைமுன்னம்" என்கிறபடியே, உன்னைமறந்து "அவர்தரும் கலவியேகருதி" என்கிறபடியே அதுவே ப்ராப்யமாக இருக்கிறேனல்லேனென்னுதல்.

இரண்டாம்பாட்டு.—அங்குற்றேன் இத்யாதி. "இலங்கைசெற்றவம்மானே" என்றத்தைக்கடாக்ஷித்து அவதாரிகை-ஆற்றேன் என்றால் இத்யாதி.

உபாஸகரிலே, ஆரப்தயோகரென்றும் ஆரூடயோகரென்றும் த்விவிதராயிருப்பர்கள்; அவர்களில் ஆரூடயோகர்படி எனக்கில்லையென்று விவக்ஷித்து அருளிச்செய்கிறார் - முக்தர் இத்யாதி. ஸித்தஸாதநனென்றது-ஸாதநமெல்லாம் அநுஷ்டித்து,பலாநுபவத்துக்காக அங்கே போகவிருக்கிற ஆரூடயோகனென்றபடி. ஆரப்தயோகர்படியை விவக்ஷித்து அருளிச்செய்கிறார் - இங்கேயிருந்து இத்யாதி. ஸாதநாநுஷ்டானம்பண்ணுமவர்களிலே யென்றது - ஸாதநாநுஷ்டானம்பண்ண ஆரம்பித்த ஆரப்தயோகரிலே யென்றபடி. ஆக, இப்பதத்வயத்தால் - "நோற்றநோன்பிலேன் நுண்ணறிவிலேன்" என்று சொன்ன உபாயஶூந்யதையை முகபேதேந அநுஸந்திக்கிறாரென்றும்; த்விதீயயோஜநைக்கு இப்பதத்வயத்தாலும் - "உன்னைவிட்டொன்றுமாற்றகிற்கின்றிலேன்" என்கிறத்தை முகபேதேந அநுஸந்திக்கிறாரென்றும் கண்டுகொள்வது. மறந்தேனுன்னைமுன்னம் - ஸ்பஷ்டோர்த்தம். அவர்தருங்கலவியேகருதி - ஸ்த்ரீகள் தருகிற கலவியையே மநோரதித்து. திருமொழி, "வாடினேன்" இத்யாதி. அதுவே - இதரவிஷயமே. இதர

* யாதனும்பற்றிநீங்கும்விரதத்தை நல்வீடுசெய்கையாலே அப்படி இருக்கமாட்டாரே. [உன்னை இத்யாதி]-ஆனால்;மேலொருகாலாகிலும் சிலசெய்யவல்லீரோ? என்னில்;—அது, முன்பே "உன்னைவிட்டொன்றுமாற்றகிற்கின்றிலேன்" என்றுசொன்னேனிறே. ஒன்று செய்கைக்கு யோக்யர் ஶக்தரா யிருப்பரன்றோ. "உன்னைக்காணவேணும்" என்று ஆசையாலே பலஹீநனாய்த்தளர்ந்து இனி உபாயாநுஷ்டாநக்ஷமனல்லேன். இது பூர்வர்கள் நிர்வாஹம். [அங்குற்றேனல்லேன்] - நித்யஸூரிகளோடொக்க அங்கேயிருக்கிறேனல்லேன். [இங்குற்றேனல்லேன்] - ஸம்ஸாரிகளோடொக்க இங்கேயுண்டுடுத்துப் போருகிறேனல்லேன். [உன்னை இத்யாதி] - இங்ஙனேயானால், நீவந்து முகங்காட்டுமளவும் நடுவோரிடத்தில் நிற்க க்ஷமனாகிறிலேன். [அவாவில்வீழ்ந்துநான்] - § "ஆசையென்னுங் கடலில்வீழ்ந்திங்கயர்த்தோம்" என்கிறபடியே,அவ்வபிநிவேஶத்திலே விழுந்து கரையேற மாட்டாதே தடுமாறுநின்றேன். † (அங்குவரமாட்டேன், அபிநிவேஶத்தாலே இங்கு நிற்க மாட்டேன்.) [இலங்கைசெற்றவம்மானே] - தந்தலையில் ஒன்றுமில்லாமையைக்கண்டார், ஒன்றுமில்லாதார்பெற்றவிடத்தைப் பார்க்கிறார்; கைம்முதலற்றவன் ஸஞ்சிதமான தநத்தை வாங்கிப்பார்க்குமாபோலே. [இலங்கைசெற்றவம்மானே] - தன்பேறாயிருக்கிற

விஷயமே ப்ராப்யமென்றிருந்தாலோ? என்ன - யாதானும் இத்யாதி. ப்ரக்ருதி ப்ராக்ருதங்களில் ஏதேனுமொன்றைப்பற்றி பகவத்விஷயத்தைவிட்டே போம்படியான இஸ்ஸம்ஸாரிசேதநனுடைய ஸங்கல்பத்தைப் புநரந்வயமில்லாதபடி நன்றாக விடுவிக்கையாலே இத்யர்த்தः. *திருவிருத்தம், தொண்ணூற்றஞ்சாம்பாட்டு,"யாதானுமோராக்கை"இத்யாதி. கீழ்ப்பதத்வயத்தின் முந்தினவர்த்தாநுகுணமாக மேலுக்கு அவதாரிகை - ஆனால் இத்யாதி. ஆனாலென்றது - ஆரூடயோகரும் ஆரப்தயோகரும் அல்லீராகிலென்றபடி. சிலசெய்யவல்லீரோ - ஸாதநாநுஷ்டாநம் பண்ண யோக்யதைதான் உமக்குண்டோ. நம்மைவிட்டு தரிக்கமாட்டீரென்றால், "யோக்யதையில்லை" என்னுமதுக்கு உடலாகவேணுமோ? என்ன - ஒன்றுசெய்கைக்கு இத்யாதி. அதாவது - "காலாழும்" இத்யாதிப்படியே, பக்திபாரவஶ்யத்தாலே அஶக்தனான நான் மேலும் ஸாதநாநுஷ்டாநத்துக்கு க்ஷமனல்லேனென்றபடி. கீழ்ப்பதத்தின் த்விதீயார்த்தத்துக்குச்சேர "எங்குற்றேனுமல்லேன்" என்றதுக்கு - த்விதீயார்த்தாநுவாத பூர்வகமாக உபப்தப்ரபந்நனுமல்லேனென்றுஅர்த்தாந்தரம்-நித்யஸூரிகள் இத்யாதி, க்ஷமனாகிறிலேன் இத்யர்த்தம். நித்யஸூரிகளிலும் ஸம்ஸாரிகளிலும் கூட்டன்றிக்கே ஆர்தரானால் ஸ்வரூபஜ்ஞாநத்தாலே தரித்திருந்தாலோ? என்ன - இங்ஙனேயானால் இத்யாதி. அதாவது - பக்திபாரவஶ்யத்தாலே, "பேசிசெய்தபடிகண்டிருக்கிறோம்" என்று ஆறியிருக்க க்ஷமனாகிறிலேனென்றபடி. இத்தால் - உபப்தப்ரபந்நனல்லேனென்றபடி. ஆசையென்னுங்கடலில்வீழ்ந்திங்கயர்த்தோம் - "உம்மைக்காணவேணும்" என்கிற ஆசையாகிற பெருங்கடலிலே புக்ககப்பட்டு இங்கு அறிவுகெட்டோமித்யர்த்தः. § திருமொழி நாலாம்பத்து, ஒன்பதாந்திருமொழி, மூன்றாம்பாட்டு, "பேசுகின்றது" இத்யாதி. "அங்குற்றேனல்லேனிங்குற்றேனல்லேன்" என்றதின் முந்தினவர்த்தாநுகுணமாக, "இலங்கைசெற்றவம்மானே" என்றதுக்கு ஸங்கதி - தந்தலையில் இத்யாதி வாக்யத்வயமும். இத்தால் உன்னையே உபாயமாக அத்யவஸித்த பிராட்டிக்கு உதவினாப்போலே, எனக்கு நீயே உதவவேணுமென்கை. கீழ்ச்சொன்னதுக்கு த்ருஷ்டாந்தம் - கைம்முதலற்றவன் இத்யாதி. த்விதீயார்த்தத்துக்குச்சேர, "இலங்கைசெற்றவம்மானே" என்றதுக்கு இரண்டாம்பாவம் இப்பாட்டின் அவதாரிகையிலே கண்டுகொள்வது "அம்மானே" என்றதுக்கு பாவம்-தன்பேறாக இத்யாதி. பிராட்டியோபாதி தமக்கு உதவவேண்டும்படியான ப்ராப்தியைவிவக்ஷித்து - 'அம்

† குண்டலிதம் க்வாசித்கம்,

படி. ஸ்வரூபம் ப்ரகாஶித்தால், அவன்தலையிலே தள்ளிவைக்கவுங்கடவதாய், அவனும் பிராட்டிமாரோடொக்க மேல்விழுந்து விரோதிகளையும்போக்கி அணைக்கைக்கு வேண்டும் ப்ராப்தியுண்டாய்க்காணு மிருப்பது. அவையெல்லாம் செய்தமையுண்டு, ஆனாலும் அதுக்குப்பிற்பட்டதே? என்ன,—அக்கண்ணழிவு அறுத்து வைத்தாயிறே. [திங்கள் இத்யாதி] - சந்த்ரபதத்திலே செல்லவோங்கி ரத்நமயமான மாடங்களையுடைய சிரீவரமங்கலநகரிலே, அவதாரம்போலே தீர்த்தம் ப்ரஸாதியாதே நித்யவாஸம்பண்ணுகிறிலையோ? [திங்கள்சேர் மணிமாடநீடு]-சந்த்ரனோடேசேரும்படி மாணிக்யமயமான மாடங்கள்வளருகிற. நீடுகை - நீட்சியை யுடைத்தாகை. அது அப்படியேயானாலும் பரிகரமில்லையே? என்ன,—[சங்கு சக்கரத்தாய்] - அங்ஙன் கண்ணழிவுசொல்லலாமோ, ஓரோகைக்குப்படையன்றோ கூட நிற்கிறது என்கிறார். இங்கு, "சாபமாநய ஸௌமித்ரே" (சாபமாநயஸௌமித்ரே)என்ன வேண்டும் குறையுண்டோ. பிறர்கைபார்த்திருக்கவேண்டும் குறையுண்டோ இங்கு. பரிகரங்களை யழைத்துக் காரியங்கொள்ளவேண்டும்படியோ உனக்கிருக்கிறது. நீ ஸந்நிஹித னல்லாமையோ, நீ ஶக்தனல்லாமையோ, உனக்குப் பரிகரமில்லாமையோ, பரிகரந்தான் கைகழியநின்றோ, எத்தாலேதான் இழக்கிறதென்ன;—அவையெல்லாமப்படியே, இத்தலை இப்படி குறைவற்றாலும் ப்ரயோஜநமில்லையே, அத்தலையும் குறைவறவேணுமே? என்ன,—[தமியேனுக்கு] - இத்தலையும் குறைவற்றதென்கிறார். அங்கே பிரியாதிருக்கிறார்படியல்லேன், இங்கே பிரியாதிருக்கிறார்படியல்லேன். இங்குள்ளார்க்கு இவ்விஷயத்தை யறியாமையாலே பிரிவில்லையே. [தமியேனுக்கு] - உன்னை யொழியத் துணையில்லாத எனக்கு ஸ்வரூபத்தை, "ஸாதநம்" என்று சிலவெழுதிக்கழிக்கில் கழிக்குமித்தனை. நீ உபாயமானாலும் உபாயப்ரதிபத்திபண்ணுவார்வேண்டாவோ. [தமியேன்] - பிராட்டியில் வ்யாவ்ருத்தி. அங்கானால் ஒரு த்ரிஜடையாகிலுமுண்டிறே,

மானே" என்கிறாரென்று தாத்பர்யாந்தரம் - ஸ்வரூபம் இத்யாதி. அதுக்கு - ராமாவதாரத்துக்கு. கண்ணழிவு - குறை. கை - யுத்தமும், கரமும். படை - ஆயுதமும், ஸேனையும். "சங்குசக்கரத்தாய்"என்று நிரூபகமாகச்சொன்னதுக்கு ஹாவம்-இங்கு சாபமாநய இத்யாதி. "ஸௌமித்ரே" என்றதுக்கு ஹாவம் - பிறர்கை இத்யாதி. "சாபமாநய" என்றதுக்கு ஹாவம்-பரிகரங்களை இத்யாதி. "திங்கள்சேர்" இத்யாதிக்குத் தாத்பர்யகதநமுகேந மேலுக்கு அவதாரிகை - நீ ஸந்நிஹிதன் இத்யாதி. "சிரீவரமங்கலநகருறை" என்றத்தைப்பற்ற - நீ ஸந்நிஹிதனல்லாமையோ என்றது. "இலங்கைசெற்றவம்மானே" என்றத்தைப்பற்ற - நீஶக்தனல்லாமையோ என்றது. "சங்குசக்கரத்தாய்" என்றத்தைப்பற்ற - உனக்குப்பரிகரமில்லாமையோ என்றது. இத்தை நிரூபகமாகச்சொல்லுகையைப்பற்ற - பரிகரந்தான் கைகழிய நின்றோ என்றது. அத்தலையும் குறைவறவேணுமேயென்றது - உமக்கு இச்சையுமுண்டாகவேணுமேயென்றபடி. "அங்குற்றேனல்லேன்" இத்யாதியின் த்விதீயார்த்தாநுகுணமாக, "தமியேன்" என்றதுக்குஹாவம்-அங்கே பிரியாது இத்யாதி. இங்குள்ள ஸம்ஸாரிகளுக்குப் பிரிவில்லாமையெப்படி? என்ன-இங்குள்ளார்க்கு இத்யாதி. "அங்குற்றேனல்லேன்" இத்யாதியின் முந்தினவர்த்தாநுகுணமாக, "தமியேன்" என்றதுக்கு-உபாயஶூந்யனான எனக்கு என்று அர்த்தாந்தரம் விவக்ஷித்து, "உபாயஶூந்யன்" என்று சொல்லுவானென், "அவாவில்வீழ்ந்து" என்றஶக்தி யுபாயமானாலோ? என்ன - ஸ்வரூபத்தை இத்யாதி. ஸ்வரூபத்தை ஸாதநமென்று சிலவெழுதவொண்ணுமோ? என்ன-நீயுபாயம் இத்யாதி. ஆக, ஸாதநாந்தரஶூந்யனென்றபடி. "இலங்கைசெற்றவம்மானே" என்றத்தைக்கடாக்ஷித்து, "தமியேன்" என்றதுக்கு - ஸம்ஸாரிகளிலே தமக்கொருதுணையில்லாதவனென்று மூன்றும் ஹாவம் - பிராட்டியில்வ்யாவ்ருத்தி யென்று. தத்விவரணம் - அங்கானால் இத்யாதி. ஆக, "தமி

இங்கு "ஆவாரார்துணை" என்னும்படியிறே தனி. ஆனால் செய்யவேண்டுவதேன்? என்ன,—[அருளாயே] - என் வெறுமையும் உன் பௌஷ்கல்யமும் அறிக்கைக்கு, நீ அடியில் தந்வதருள் இன்று குடிபோயிற்றோ. அன்று நான் அபேக்ஷியாதிருக்க அருளின நீ, அபேக்ஷிக்கைக்கு யோக்யதையைப் பிறப்பித்துப் போகடவோ. ருச்யுத்பாதநம்பண்ணுவாரொருவரும், உபாயாநுஷ்டாநம்பண்ணுவாரொருவருமாயோ இருப்பது. * நின்னருளேபுரிந்திருக்கிற எனக்கு அருளாயாகில் பின்னையார்க்கு வேறு அருள இருக்கிறாய்.

மூன்றாம் பாட்டு.

கருளப்புட்கொடிசக்கரப்படை வானநாடவெங்கார்முகில்வண்ணா
பொருளல்லாதவென்னைப்பொருளாக்கி யடிமைகொண்டாய்
தெருள்கொள்நான்மறைவல்லவர்பலர்வாழ் சிரீவரமங்கலநகர்க்கு
அருள்செய்தங்கிருந்தாய்! அறியேனொருகைம்மாறே.

ஆ.—(கருளப்புள்.) இப்படி நிர்ஹேதுகமாக உம்முடைய அபேக்ஷிதத்தைச்செய்தால் ப்ரயோஜநமென்? என்னில்;—ஸர்வபரிவாரண ஹேயப்ரத்யநீக ஸமஸ்த ஸர்வஸ்வாத்மாநாநாவித்யாநந்த பரிஜந பரிசாரிகா பரிவ்ருத பரிபூர்ணயசஸ்ஸனாய், ஸ்வாபாவிகாநவதிக ஜ்ஞாநசக்த்யாதி ஸர்வகல்யாணகுண ஸ்வரூப ஐச்வர்யாதிசயயோபேதனாய், நித்யநிரவத்யநிரதிசயகல்யாணவிக்ரஹவிசிஷ்டனாயிருந்த நீ, க்ஷுத்ரவிஷயஜ்ஞாநரஹிததயா ஸ்வஸம்பந்தனான என்னை, க்ஷுத்ரவிஷயஜ்ஞாநவத்தயா வஸ்துவாய்த்வத்கைங்கர்யைகரதியுமாயிருக்கும்படி பண்ணியருளிற்று என்பக்கல் என்ன ப்ரயோஜநங்கொள்ளுகைக்காக; ஒரு ப்ரயோஜநாபேக்ஷையால் செய்தருளினாயல்லையிறே, உன்னுடைய நிரதிசயௌதார்யகாருண்யாதிகளாலே செய்தருளினாயத்தனையிறே, இன்னம் குறையும் அப்படியே செய்தருளாயென்கிறார்.

ஒ.—மூன்றாம்பாட்டில், உம்மைவிஷயீகரித்தால் ப்ரயோஜநம் என்? என்னில்,—ஸர்வப்ரகாரபரிபூர்ணனான நீ அத்யந்தநிஹீநனான என்னை விஷயீகரித்துப்பெற்றது ஒருப்ரயோஜநம் கண்டிலேன், வெறும் உன்க்ருபையாலே செய்தருளினாயத்தனை. அப்படியே மேலும் என் அபேக்ஷிதங்கள் செய்தருளவேணும் என்கிறார்.

யேன்" என்றத்துக்கு - பிரிந்திருக்கிற எனக்கென்றும், உபாயசூந்யனான எனக்கென்றும், ஸம்ஸாரிகளில் துணையில்லாத எனக்கென்றும் மூன்றர்த்தம் கண்டுகொள்வது. தமியேனுக்கு - தனியேனுக்கு. "சங்குசக்கரத்தாய்தமியேன்" என்றத்தைக்கடாக்ஷித்து, "அருளாய்" என்றதுக்குஹாவம் - என்வெறுமையும் இத்யாதி. அதாவது - இப்படியருளின நீ பேற்றுக்கீடாகவும் அருளவேணுமென்றபடி. அடியில்தந்தவருளென்றது - * மயர்வறமதிநலமருளினத்தைப் பற்ற. கீழ்வாக்யவிவரணம் - அன்றுநான் இத்யாதி. நான் அபேக்ஷியாதிருக்கவென்றது - "மயர்வறமதிநலமருளினன்" என்றவிடத்தில், எனக்கென்னுதத்தைப்பற்ற யோக்யதையைப்பிறப்பித்தால் ப்ராப்தியும் பண்ணித்தரவேணுமோ? என்ன - ருச்யுத்பாதநம் இத்யாதி. "தமியேனுக்கு அருளாய்" என்றுகூட்டி ஹாவம் - நின்னருளே இத்யாதி. உன்க்ருபையையே ஆதரித்திருந்தேன். க்ரமேணாந்வய:,

[கருளப்புட்கொடி என்று தொடங்கி] - பெரியதிருவடியை த்வஜமாகவும், திருவாழியாழ்வானை ஆயுதமாகவும், ஸ்ரீவைகுண்டத்தை ஸ்த்தாநமாகவும் உடையையா யிருந்துவைத்து என்பக்கலிலே ஔதார்யத்தைப்பண்ணி உன்னையறியாமையாலே அவஸ்துவான என்னை அறிவித்து ஒரு சரக்காக்கி அடிமைகொண்டாய். [தெருள்கொள் என்றுதொடங்கி] - அறத்தெரியும்படி நாலுவேதத்தையும் அப்யஸித்தவர்கள் க்ருதார்த்தராம்படி சிரீவரமங்கலநகரிலுள்ளார்க்கெல்லாம் உன்னுடைய ஸௌந்தர்யாதிகளை அநுபவிக்கக்கொடுத்துக்கொண்டு என்னை அடிமைகொள்ளுகைக்கு ஈடாக அங்கே இருந்தாய். இவ்வுபகாரத்துக்கு ஒரு ப்ரத்யுபகாரம் நான் செய்தேனாக அறிந்திலேன்.

ப.—அநந்தரம், அதிஶயிதபரத்வஸூசகமான ஆகாரங்களை யுடையையாய்க்கொண்டு என்னையங்கீகரித்து அடிமைகொண்ட உபகாரத்துக்கு நான் ஒருப்ரத்யுபகாரம் செய்தேனாக அறிகிறிலேனென்கிறார்.

கருளன் - கருடனாகிற, புள் - பக்ஷியை, கொடி - கொடியாகவும், சக்கரம் - திருவாழியை, படை - ஆயுதமாகவும், வானம் - பரமபதத்தை, நாடு - நாடாகவுமுடையையாய், (இப்படி பரமப்ராப்யனானவுன்னை), கார்முகில் - (எதிர்த்தலையில் தரம்பாராதே யுபகரிக்கும்) காளமேகம்போலே, எம் - எனக்காக்கின, வண்ணா - வடிவையுடையையாய், (அவ்வடிவழகாலே), பொருள் - ஒருவஸ்துவென்று, அல்லாத - புத்திபண்ணவொண்ணாதபடி * ஸுஹஸெளவான, என்னை - என்னை, பொருள் - லப்தஸ்வரூபனாம்படி, ஆக்கி - அங்கீகரித்து, (அதுக்குமேலே), அடிமை - வாசிகமானகைங்கர்யத்தையும், கொண்டாய் - கொண்டவனாய், (அது முழுக்க நடத்துகைக்காக), தெருள் - ஜ்ஞாநாதிஶயத்தை, கொள் - உடையராய்க்கொண்டு, நால் - நாலுவகைப்பட்ட, மறை - வேதங்களையும், வல்லவர் - (தாங்கள்நினைத்தபடி) நிர்வஹிக்கவல்லவர்கள், பலர் - பலரும், வாழ் - (பகவதநுபவத்தாலே ஸம்பந்நராய்)வர்த்திக்கிற, சிரீவரமங்கலநகர்க்கு - சிரீவரமங்கலநகருக்கு, அருள் - நிரவதிகக்ருபையை, செய்து - பண்ணி, அங்கு - அங்கே, இருந்தாய் - இருக்கிறவனே, (இப்படி இதுக்குமுன்பு நீபண்ணின உபகாரத்துக்கு நான்), ஒரு - ஒரு, கைம்மாறு - ப்ரத்யுபகாரம், அறியேன் - பண்ணினேனாகவறிகிறிலேன். ஆனபின்பு மேலும் நீயேயருளவேணுமென்று வாக்யஶேஷமாய், "தமியேனுக்கருளாய்" என்றதோடே யந்வயிக்கிறது. கருளப்புள்ளென்று - "கறையணிமூக்கு" என்னுமாபோலே "ஸுகேஶாஹஸ்திதாஷ" என்கிறபடியே கறுத்த திருமுகமுடையவனென்னவுமாம். தெருள்கொள் நான்மறையென்று - வேதவிஶேஷணமாகவுமாம்.

இ.—மூன்றாம்பாட்டில், "ஶாஹஸஹஸம்வெத்யோக்தாஸி" என்கிறபடியே, பலம் உம்மதானபின்பு ஸயநத்திலும் அந்வயம்வேண்டாவோ? என்ன,—இவ்வளவுவர இதுக்குமுன்பு நிர்ஹேதுகமாக விஷயீகரித்தபின்பு, மேலும் நீயே செய்தருளவேணுமென்கிறார்.

[கருள இத்யாதி] - பெரியதிருவடியை த்வஜமாகவும், திருவாழியை ஆயுதமாகவும், பரமபதத்தை ஸ்தாநமாகவுமுடையையாய்வைத்து. பெரியதிருவடியை மேற்கொள்ளுதல், திருவாழியைச் சலியாமல்பிடித்தல், பரமபதத்தை இருப்பிடமாகவுடையனாதல், இவையாயிற்று ஸர்வாதிகவஸ்துவுக்கு லக்ஷணம். ஓரோவொன்றேயமைந்திருக்க,

ஸர்வப்ரகாரபரிபூர்ணனு யிருக்கிறபடி. [கருளப்புள்] - புள்ளென்று - பக்ஷிஸாமாந்யம். கருடனாகிற புள்ளென்றுவிஶேஷிக்கிறது. "ஈடே" என்கிறவித்தை-"ஈளே" என்னுமாப்போலே கருளனென்கிறது. கருளென்று - கறுப்பாய், சீற்றமாய்; ப்ரதிபக்ஷத்தின்மேலே சீற்றத்தையுடையவ னென்றுமாம். "கருளுடையபொழில்மருது" என்னக்கடவதிறே. [எங்கார்முகில்வண்ணா]-ஸ்தலவிஶேஷம்பாராதே என்பக்கலிலே ஔதார்யத்தைப்பண்ணினவனே. என்னளவுபாராதே ப்ரயோஜநநிரபேக்ஷமாகப் பண்ணினபடி. பண்ணினஔதார்யமேதென்ன,—[பொருளல்லாதஇத்யாதி]-ஓரறிவின்றிக்கேயிருக்கிறவென்னை. உண்வாசியையறிவித்து ஒருவஸ்துவாக்கி. "அஸந்நேவ" என்கிறவென்னை "ஸந்தமேநம்" என்று உஜ்ஜீவிக்கும்படி பண்ணினாய். [அடிமைகொண்டாய்] - "பெருமக்களுள்ளவர்" என்கிற நித்யஸித்தர் செய்யக்கடவ கைங்கர்யத்தை என்னைக்கொண்டாய். உண்டாக்கினவளவேயன்றிக்கே, ஜீவநமும் இட்டிலையோ. மயர்வறமதிநலமருளப்பெற்றவர் இப்படி சொல்லுகையாலே, ஸ்வநிகர்ஷம்சொல்லுகை ஜ்ஞாநகார்யம்; "ஶாம்ஶோஹம்" என்றிருக்கை அஜ்ஞாநகார்யம். [தெருள்கொள் இத்யாதி] - "வேதாஹமேதம் புருஷம் மஹாந்தம்" என்கிறபடியே, பகவத்விஷயமே வேததாத்பர்யமென்று உணர்ந்திருக்குமவர்களென்னுதல்; ப்ரதிபாத்யத்தை யுள்ளபடிகாட்டித்தரவல்ல வேதமென்னுதல். [பலர்வாழ்]- நித்யஸூரிகளைப்போலே திரள்திரளாக பகவத்குணாநுபவம்பண்ணி வர்த்திக்கிறவர்கள். இத்தலையில் ஸாதநமுமில்லை, செய்யலாவதொரு ப்ரத்யுபகாரமுமில்லையென்று பகவத்குணாநுபவமே யாத்ரையாயிருக்குமவர்கள். ஸ்ரீவரமங்கலநகரிலுள்ளார் ஆஶ்ரயிக்கவன்றிக்கே, அவர்கள்பக்கல் தண்ணளியாலே வந்திருந்தவனே. என்னை அடிமைகொள்ளுகைக்காக அங்கேவந்திருந்தாயென்றுமாம். "கைங்கர்யத்தளவும்வரப் புகுராநிறத்தினோம், அதுக்கு அவிச்சேதமுண்டாம்போது நம்ஸந்நிதிவேணும்" என்று அங்கேயிருந்தாய். [அறியேனொருகைமாறே] - இவ்வளவு உபகரித்ததுக்கு நான் ஒருப்ரத்யுபகாரம் பண்ணினேனாக அறிகிறிலேன். ப்ராப்த்யபாயத்தாலே மேலுள்ளதும் நீயேசெய்யுமித்தனையென்கை.

ஈடு.—மூன்றாம்பாட்டு. "அருளாய்" என்றீர், அருளக்கடவோம், அதில் ஒரு தட்டில்லை; ஆனாலும், "ஶாஸ்த்ரபலம்ப்ரயோக்த்ரு" (ஶாஸ்த்ரபலம்ப்ரயோக்தரி), "கர்த்தா ஶாஸ்த்ரார்த்தவத்த்வாத்" (கர்த்தாஶாஸ்த்ரார்த்தவத்த்வாத்) அன்றோ, அருள்பெறுவார்பக்கலிலேயும் சிறிது உண்டாகவேணுங்காணுமென்ன; இது மேலுற்றைக்கிட்ட மர்

யம்" என்றிருக்கிறவருக்கு, ஹோக்யதைக்குத்தோற்று - "அடியேன்" என்கிறவிது சேருமோ? என்ன - பரவாநஸ்மி இத்யாதி. விரோதியாய்நிற்கும் நிலேகுலேகைக்கு ஹேதுவேதென்ன; த்ருஷ்டாந்த பூர்வகமாக அருளிச்செய்கிருர் - அஹம் என்றிருக்க இத்யாதி. "ஶேஷத்வம் ஆத்மாவுக்கு" இத்யாதிவாக்யவிவரணம் - ஶேஷத்வாகாரமான இத்யாதி. தாஞெழுதும்படியாயிற்று என்றவநந்தரம், 'இதினுடைய ஹோக்யதை' என்றுஶேஷம். விரோதியானஶரீரமும் அழியும்படியாயிற்று என்ளுருஶாவமருளிச்செய்து, அசேதநமானஶரீரமும் அழியும்படியாயிற்றென்று தாத்பர்யார்த்தம் - ஜ்ஞாநாநந்த இத்யாதி. அன்பையுடைத்தென்ளுதே, "அன்பாயே" என்றதுக்குஶாவம் - உன்பக்கலிலே இத்யாதி. அமூர்த்தமானவன்பு நீராகக்கூடுமோவென்ன; அசேதநமான தேஹம் விஷயவைலக்ஷண்யத்தாலே அன்பாளுப்போலே, அமூர்த்தமானவன்பும் நீராயிற்றென்கிருர்-உடலம் இத்யாதி. ஶாஸ்த்ரம் சொல்லுகிறபடியன்றிக்கே,உடலம்அன்பாய்அன்புநீராய் இப்படி அமர்யாதமாகக்கூடுமோ? என்ன - முந்தற ஶ்ரவணமாய் இத்யாதி. நீர்கரையக்கூடுமோ? என்ன - அன்புநீராளுல் இத்யாதி. வர்த்தமாந நிர்த்தேஶத்துக்கு அர்த்தம் - அழிக்கைக்கு இத்யாதி. ஆஹரணம்போலே ஶ்லாக்யமான இவர்திருமேனியை யுருக்கலாமோ? என்ன - அழிப்பாளன் இத்யாதி. அழிப்பாளன் - தட்டான். இவர்திருமேனி ஆஹரணமாயிருக்குமோ? என்ன-

போலேகாணும் இவனும் உருக்கியழிக்கிறபடி. ×தேசமானவணிகலனு மிவர்கைகூப்புச் செய்கையிறே. ஆழ்வார்க்குள்ளவுடலையுருக்கி யழிக்குமித்தனையோ? என்னில்,—[நெடு மாலே] - எதிர்த்தலையிலழிவுகண்டபின்பிறே இத்தலையிலழிவு. அவனுடைய வ்யாமோஹத்தைப்பார்க்கில் இதொன்றும் போராதபடியாயிருக்கும். அவனுடைய அழிவுசொல்லும்போது இனி இவ்வடைவில் வாசகஶப்தமிட்டுச்சொல்லவொண்ணாது, [நெடுமால்] என்னி லென்னுமித்தனை. மாலென்று - வ்யாமோஹம். நெடுமாலென்று - மிக்கவ்யாமோஹத்தையுடையனாயிருக்கை. அன்றிக்கே, மாலென்று - பெரியோனென்றபடியாய், அது தானும் ப்ரஹ்மருத்ராதிகளளவோ? என்னில்,—அல்ல, *மனிசர்க்குத் தேவர்போலத் தேவர்க்கும் தேவனென்கிறது. நெடுமாலென்று - ஸர்வேஶ்வரனென்றபடி. அவனுடைய பெருமையும் இவரையழிக்கைக்கு உடலாமித்தனையிறே. [சீரார் இத்யாதி] - மிக்ககனத்தையுடைத்தான செந்நெற்கதிர்களானவை கண்வளர்ந்தருளுகிற அழகைக்கண்டு, பரிசர்யைபண்ணுவாரைப்போலே அசையாநிற்கும். சீர் - கனமும், அழகும் கவரிபோலே வீச. கவரி - சாமரம். அன்றிக்கே, செந்நெலுக்குச் சீர்மையாவது - ஆராவமுதாழ்வார்க்கு அமுதுபடியாகிற சீர்மையாகிலுமாகிறது. அப்போது "அஹமந்நம்" (அஹமந்நம்) என்கிற சீர்மை. [கவரிவீசும்] - "அகாலபலிநோவ்ருக்ஷா:" (அகாலபலிநோவ்ருக்ஷா:) என்னுமா போலே. அறுத்துநடவேண்டாபோலேகாணும். கருத்தறிந்து அடிமைசெய்வாரைப்போலே. ஶேஷவஸ்துவின் வ்யாபாரமடைய ஶேஷி தனக்கு அடிமையாக நினைத்திருக்கிறபடி. [செழுநீர்] - கண்வளர்ந்தருளுகிற ஸௌகுமார்யத்துக்குப்போரும்படி அழகிதான ஜலஸம்ருத்தியை யுடைத்தான திருக்குடந்தையிலே. செழுநீர் - பெருநீரென்றுமாம். [ஏரார் கோலம் இத்யாதி] - அழகுசமைந்தவொப்பனை நிறம்பெறும்படி கண்வளர்ந்தருளினாய். நாட்டார் உலாவித்திரியும்போது அவயவங்களிலுண்டான பொல்லாங்குகள் மறைந்து ஒன்றுபோலேயிருக்கும், ஓரிடத்திலே யிருத்தல் கிடத்தல்செய்தவாறே வைரூப்யந்தோற்றிக் கண்கொண்டு பார்க்கவொண்ணாதபடியிருப்பார்கள்; இங்கு அங்ஙனன்றிக்கே, "ஸமயாபோதிதஸ்ஸ்ரீமாந்" (ஸமயாபோதிதஸ்ஸ்ரீமாந்) என்று கிடந்தகிடைக்கு ஆலத்தி

ப்ர.—(சீரார்செந்நெல்) யுத்தகாண்டே [௧௨௭] "அகாலபலிநோவ்ருக்ஷா: ஸர்வே சாபி மதுஸ்ரவா:। பவந்து மார்கே பகவந் அயோத்யாம் ப்ரதி கச்சத: ॥ ௧௮ ॥"

தேசயான இத்யாதி. அழிக்குமித்தனையோ - தனக்கு ஒருவிக்ருதியில்லையோ என்றுகூட்டுவது. *நெடுமைக்கு அர்த்தம் - அவனுடைய இத்யாதி. ஆனால், "நீராயலைந்துகரைய" என்றாப்போலே வாசகஶப்தமிட்டுச் சொல்லாதொழிவானென்? என்ன - அவனுடையஅழிவு இத்யாதி. நீர்மைபோலே மேன்மையும் ஈடுபடுத்தக்கூடுமோ? என்ன - அவனுடையபெருமையும் இத்யாதி. "சீர்" என்று - கனமாய், ஆர்தல் - மிகுதியாய், மிக்ககனத்தையுடைய செந்நெலென்னுதல்; "சீர்" என்று - அழகாய், அழகுமிக்க செந்நெலென்னுதல். வர்த்தமானார்த்தம் - அகால இத்யாதி. விவரணம் - அறுத்து இத்யாதி. அசேதநமானசெந்நெல் கவரிவீசக்கூடுமோ? என்ன - கருத்தறிந்து இத்யாதி. அதாவது - *அஹ்ருதஸஹஜதாஸ்யரான ஸூரிகளுடைய அவதாரமாகையாலே கூடுமென்றபடி. இவை அசேதநங்களானாலும் ஶேஷிநினைவாலே யடிமையாகக்கூடுமென்று பரிஹாரார்த்தம் - ஶேஷவஸ்துவின் இத்யாதி. *செழுமை - அழகாதல், ஸம்ருத்தியாதல். "கிடந்தாய்கண்டேன்" என்கைக்கு-கிடக்கிறதிலே அப்படியழகுண்டோ? என்ன; நாட்டாரைப்பற்ற வ்யாவ்ருத்தமாயன்றோ கிடையழகிருப்பதென்கிறார்-நாட்டார் இத்யாதி. "ஸ்ரீமான்"

வழிக்கவேண்டும்படியிருக்கை. "இவனுணரில் செய்வதேன்" என்று வயிறுபிடிக்க வேண்டும்படியிருக்கை. [கிடந்தாய்கண்டேன்] - "ஸர்வஸாரஸ்வ:" (ஸர்கஸர்ப்த:) என்கிறபடியே கிடையழகைக் கண்ணாலே காணப்பெற்றேன், நினைத்தபரிமாற்றம் பெற்றிலேன். † (என்னைப்பற்ற) எழுந்திருத்தல், இருத்தல், உலாவுதல், "என்செய்தாய்" என்னுதல், அணைத்தல்செய்யப்பெறுகிறிலேன். [எம்மானே] - "இதுநம்மது" என்று இராதொழியப்பெற்றேனாகில் நான் ஆறியிருக்கலாயிற்றே. வடிவோடொக்க ப்ராப்தியும் என்னை நலியாநின்றது. ப்ராப்தியையிட்டு இப்படி என்னை நலியலாமோவென்கிறார். (க)

இரண்டாம் பாட்டு.

எம்மானேயென்வெள்ளைமூர்த்தி! என்னையாள்வானே!
எம்மாவுருவும்வேண்டுமாற்றால் ஆவாயெழிலேறே!
செம்மாகமலஞ்செழுநீர்மிசைக்கண்மலரும் திருக்குடந்தை
அம்மாமலர்க்கண்வளர்கின்றானே! என்னான்செய்கேனே?

ஆ.—(எம்மானே.) எம்பிரானே, ஸமஸ்தஜகத்ஸ்ருஷ்டிக்ஷமமான ஶுத்ததிவ்யரூபனே, அந்ததிவ்யரூபகதஸௌந்தர்யத்தாலே என்னைத்தோற்பித்து உனக்கடிமையாக்கினவனே, ஆஶ்ரிதபரித்ராணார்த்தமாக இச்சாநுகுண திவ்யரூபவிஶிஷ்டனாய்க் கொண்டு பிறந்தருளுமவனே, நிரதிஶயதீப்தியுக்தனானவனே, திருக்குடந்தையில் தாமரைகளெல்லாம் மலராநிற்கச்செய்தே உன்னுடைய திருக்கண்களாகிற தாமரைகள் அலருகின்றனவில்லை; நான் என்செய்கேனென்கிறார்.

ஓ.—இரண்டாம்பாட்டில், தன்திறத்தில் செய்தருளின உபகாரத்தையும் ஆஶ்ரிதவிஷயத்தில் செய்தருளும் உபகாரங்களையும் எம்பெருமானுக்கு அறிவித்து, ஏவம்

என்றதுக்குபாவம் - இவனுணரில் இத்யாதி. "வாயஸேந தததஸ்ய நபயவக்த்ராஸ்தாநயா| ஸமீரணோயிதஸ்ரீமாந் ஸர்வஸாரஸ்வேரபவ: (உசஉ½) :" இதிஸர்வஸாரஸ்க்காண்ட [௩அ]ஸநாஜநம்வ்ருதிவிதா. "கிடந்தாய்கண்டேன்" என்றதுக்குபாவம் - எழுந்திருத்தல் இத்யாதி. எழுந்திருத்தலித்யாதி - வாக்யஶேஷமாய்க்கிடக்கிறது. "எம்மானே" என்கிறதுக்கு இரண்டுபாவம்,—முந்தினது - இதுநம்மதென்று இத்யாதி. இரண்டாவது - வடிவோடொக்க இத்யாதி. வடிவோடொக்க - வடிவழகுபோலே. "இதுநம்மதென்று" இத்யாதிவாக்யத்தால் பலிதம் - ப்ராப்தியை இத்யாதி. அதாவது - அப்ராப்தமாகில் ஆறியிருக்கலாம், ப்ராப்தமாகையாலே "இப்போதேபெறவேணும்" என்னும்த்வரையைப் பிறப்பியாநின்றது; இதறிந்து சீக்ரமாக உதவவேணுமென்கை. எம்மானே - ஆராவமுதே என்றுதொடங்கி க்ரமேணார்வய:. "ஶரவாநஷ்டிகாகுஸ்த:", "ஸஹஸ்ராவரோஹாதாமாநேணநூராஸ்ரேவாமத:", "ஸ்காமஹிநோவ்யக்ஷாஸவேஶ்வாவிஶேஸஸ்வா: | ஸவதேஶரமேஶமவஸேயாஸ்யாம்வ்ருதிமதுத:" இத்யாதி, வடிவேஶ்வேவஸக்ரூஷிவிதழ். (க)

† குண்டலிதம் வ்யாக்யாநத்துக்குச் சேராது; க்வாசித்கம்.

ஸமத்தனான நீ என் அபேக்ஷிதம் செய்தருளுகிறிலையென்று அவஸந்நராய், கிம்கர்தவ்யதாமூடராய்க் கூப்பிடுகிறார்.

[எம்மானே என்றுதொடங்கி] - எனக்கு நாயனுமாய் என்னோட்டை ஸம்ஶ்லேஷைகதாரகஸ்வரூபனுமாய் விஶ்லேஷதசையிலும் நான் அவஸந்நனாகாதபடி உன் குணங்களாலே என்னை நிர்வஹிப்பதும்செய்து ஆஶ்ரிதர்க்கு ஈடாக தேவமநுஷ்யாதி ஸஜாதீயமாய் அதிஶ்லாக்யமான எல்லாவடிவையுமுடையையாகவல்லையுமாய், ஆஶ்ரித பரித்ராணம்பண்ணப்பெற்றதால் நிரதிஶயதீப்தியுக்தனுமாய் மேனாணித்திருக்குமவனே! [செம்மாகமலம் என்றுமேலுக்கு] - சிவந்து பெருத்திருந்துள்ள தாமரைப்பூக்கள் பெருநீர்மேலே மலராநின்றுள்ள திருக்குடந்தையிலே அழகிய தாமரைப்பூப்போலேயிருக்கிற திருக்கண்கள் அலரக்காண்கிறிலேன். நான்செய்வதென்?

ப.—அநந்தரம், ஆஶ்ரிதார்த்தமாக அநேகாவதாரங்களைப்பண்ணின நீ, உன் கண்ணாலே புரட்டிப்பார்க்கிறிலை; நான் என்செய்வேனென்கிறார்.

எம்மானே - (என்காரியம் நீயிட்டவழக்காம்படி) எனக்குஸ்வாமியாய், என் - எனக்கு ஸத்த்வோத்ரேகம்பிறக்கும்படி, வெள்ளை - பரிஶுத்தமான, மூர்த்தி - வடிவையுடையையாய், (அவ்வடிவழகைக்காட்டி), என்னை - என்ஸத்தைபழியாமல், ஆள்வானே - அநுபவிப்பித்துக்கொண்டுபோருமவனாய், எ - (இப்படி ஆஶ்ரிதார்த்தமாக தேவாதிகளான) எல்லாவகைகளையுமுடைத்தாய், மா - ஶ்லாக்யமான, உருவும் - அவதாரவிக்ரஹங்களை, வேண்டுமாற்றால் - இச்சாப்ரகாரத்தாலே, ஆவாய் - அங்கீகரித்து நிற்குமவனாய், எழில் - அவ்வோவிக்ரஹங்களிலழகாலே * பும்ஸாம்த்ருஷ்டிசித்தாபஹாரத்தைப் பண்ணி, ஏறே - செருக்கனாயிருக்குமவனாய்வைத்து, செம் - சிவந்த, மா - பெருத்த, கமலம் - தாமரைகள், செழு - ஸம்ருத்தமான, நீர்மிசை - ஜலத்தின்மேலே, கண் - எங்குமொக்க, மலரும் - மலருகிற, திருக்குடந்தை - திருக்குடந்தையிலே, அ - அந்த, மா - விலக்ஷணமான, மலர் - தாமரைப்பூப்போலேயிருக்கிற, கண் - திருக்கண்கள், வளர்கின்றானே - வளரும்படி கிடக்கிறவனே! நான் - நான், (இதற்கு), என் - என், செய்கேன் - செய்வேன்? எல்லாத்தாமரையும் மலரச்செய்தே, இவையிரண்டுதாமரை என்னைநோக்கி மலருகிறதில்லையென்று கருத்து. "அம்மாமலரென்றது - அழகியபெரியமலர்" என்றும் சொல்லுவர்.

இ.—இரண்டாம்பாட்டில், கண்வளரக்கண்டேன், கண்களாலே குளிரநோக்கக் காண்கிறிலேன் என்று முன்புபண்ணின உபகாரங்களைச்சொல்லிக் கூப்பிடுகிறார்.

[எம்மானே] - நீ நினைத்தபடிசெய்யுமித்தனைபோக்கி என்னுடைய ஹிதத்துக்கு நான்கடவேனோ. உடையவன் நினைத்தபடியன்றோ உடைமை. [என்வெள்ளைமூர்த்தி] - ப்ரயோஜநநிரபேக்ஷமாக என்னை விஷயீகரித்தவனே! வெளுப்பாலே ஶுத்தியைநினைக்கிறது. மூர்த்தி-ரூபமாய், ஸ்வபாவத்தை நினைக்கிறது. ஶுத்தஸ்வபாவன். எனக்குத் தன்பேறாகவுபகரித்தவன். [என்னையாள்வானே]-உன்னைப்பிரிந்துமுடியும் தசைகளிலே குணஜ்ஞாநத்தாலே ஜீவிப்பித்துப்போந்தவனே! [எம்மாவுருவும்] [எ-உரு, மா-உரு] எவ்வுருவுகொண்டால் ஆர்த்தரக்ஷணம்தலைக்கட்டும், அவ்வுருவைக்கொள்ளும்; அதுதான் அப்ராக்ருத திவ்யஸம்ஸ்தாநமாயிருக்கை. [வேண்டுமாற்றாலாவாய்] - இச்சையாலே

என்னுதல். ஆஶ்ரிதர்க் கிடாகவென்னுதல். [எழிலேறே] - நித்யஸூரிகள் நடுவிருப்பிற் காட்டில், ஆஶ்ரிதர்கார்யம் செய்யப்பெறுகையாலே நிரதிஶய தீப்தியுக்தனாய் மேனாணித்திருக்கை. “பலபிறப்பாயொளிவருமுழுநலம்”. [செம்மாகமலம்] - சிவந்து பெருத்தகமலம். [செழுநீர்] - ஜலஸம்ருத்தியைச் சொல்லுதல், தர்ஶநீயமென்னுதல். [அம்மாமலர்க் கண்வளாகின்றானே] - அழகிய தாமரைப்பூப்போலேயிருக்கிற திருக்கண்கள் அலரக் காண்கிறிலேன். [அம்மாமலர்] - அவற்றோடு ஸஜாதீயமாயிற்றின இரண்டுபூ அலரக் காண்கிறிலேனென்றுமாம். தம்பக்கல் விஶேஷகடாக்ஷம்பண்ணுகை - இவை மலருகையாவதென்றிருக்கிறார். [என்னான்செய்கேனே] - இவையிரண்டுமலர்ந்தாலல்லது தரியாத நான் என்செய்வேன். இவ்வூரில் புஷ்பங்களடைய மலர்ந்து வண்டுகள் மதுபாநம்பண்ணிக் களிக்கச்செய்தேயும், இவையிரண்டும் மலர்ந்தால் அத்தேனைப்பருகவிருக்கிற நான் பட்டினிவிட்டேபோமித்தனையோ.

ஈடு.—இரண்டாம்பாட்டு. இப்படி கூப்பிடச்செய்தேயும் ப்ரதிவசநம்பண்ணாமையாலே, “உம்முடையகார்யம் நீரேசெய்யுமித்தனையன்றோ” என்றிருந்தானாகக்கொண்டு, முன்புபண்ணின உபகாரங்களைச்சொல்லிக் கூப்பிடுகிறார்.

[எம்மானே] - உடைமையோ! உடையவனே உடைமையைநிர்வஹிப்பார். “நீயே உன்கார்யம்செய்து தலைக்கட்டிக்கோள்” என்கைக்கு வெறும் நானேயாயிருந்தேனோ. எம்மானே-என்னுதனே! [எம்மானேயென்வெள்ளைமூர்த்தி]- “பதிம்விஶ்வஸ்ய”, (பதிம்விஶ்வஸ்ய,) “யஸ்யாஸ்மி” (யஸ்யாஸ்மி) என்கிற ப்ரமாணங்கொண்டறிந்தேனோ.

இரண்டாம்பாட்டு, - எம்மானே இத்யாதி. பாட்டையெல்லாம் கடாக்ஷித்து அவதாரிகை - இப்படி இத்யாதி. உம்முடையகார்யம் நீரே செய்யுமித்தனையன்றோ வென்றது - ஹலம் உம்மதானபின்பு அதுக்குத்தக்க ஸாதநாநுஷ்டாநமும் நீரே செய்யுமத்தனையன்றோவென்றபடி.

“எம்மானே - என்னான்செய்கேன்” என்று அந்வயத்தைவிவக்ஷித்து, ஸாதநாநுஷ்டாநம் பண்ணப்போகாதென்கிறவிடத்திலே ஸ்வாமித்வத்தைச்சொல்லுகிறதுக்கு ப்ரயோஜநமேதென்ன - உடைமையோ இத்யாதி. இவ்வாக்யத்துக்கு தாத்பர்யம் - ஸ்வம்மான என்னைப்பெறுகைக்கு ஸ்வாமியானநீயே ஸாதநாநுஷ்டாநம்பண்ணுமத்தனை யென்றிறே, அத்தையருளிச்செய்கிறார் - நீயே இத்யாதி. வெறும் நானேயாயிருந்தேனோ-கேவலம் ஸ்வதந்த்ரனாயிருந்தேனோ, உமக்கு ஸ்வம்மன்றோவென்றபடி. இவ்விடத்திலே - “யேநாஹ²மேவாஹிதவந்தோ மோகே தேநாத்²யகாமாணிஸமாஹதே । க்ஷமோக்ஷமேதேஷாம்ப்ரஹவதிநாமாஹோஶ்வரயோரஸ்யமாயா மதே:” என்கிறஶ்லோகம் அநுஸந்தேயம். இது - பாண்டவர்கள் நிமித்தமாக ஸாத்யகி நம்பிமூத்தபிரானைப்பார்த்துச்சொன்னது. அதாவது - ஆரண்யபர்வத்திலே யயாதியினுடைய பெண்ணின்பிள்ளைகள் ஶைப்யன்முதலானார் நாலுபேர்; இவர்கள், யயாதி ஸ்வர்க்கத்திலேயிருந்து விழுந்தபோது தங்கள் ஸுக்ருதங்களைக்கொடுத்து ஸ்வர்க்கத்திலே யேற்றினார்களென்றுகதை. “எம்மான்” என்று அறிந்திருக்கச்செய்தேயும் உபாஸகர் ஸ்வயத்நத்தாலே தங்கள்கார்யம் செய்துகொள்ளவில்லையோ? என்ன,—“எம்மானே” என்கிறவிது - ஸாதநாநுஷ்டாநம்பண்ண ப்ராப்தியில்லாமையைச் சொல்லுகிறதென்னுமிடந்தோன்ற அருளிச்செய்கிறார் - பதிம்விஶ்வஸ்ய இத்யாதி. யஸ்யாஸ்மிநதமந்தரேமி,— யஸ்ய - ஶேஷிணஸ்ய, தாஸோஸ்மி, தம், நாந்தரேமி - அதிக்ரமிக்கிறேனல்லேனென்றபடி. “வெள்ளை” என்று - வெளுப்பாய், ஶுத்தியைச்சொல்லி, “மூர்த்தி” என்று - ஸ்வரூபமாய், ஶுத்தஸ்வரூபனாகையாலே

பின்னை எங்ஙனே செய்தபடி? என்னில்,—ஜ்ஞாநஸ்வரூபனாகையாலே, தன்படிகளி லொன்றும் குறையாதபடி எனக்குத் தன்பேறாகத் தானே காட்டக்கண்டேன். சிறிது மயர்வுகிடக்க நீ யருளினையாகில் நான் ஆறியிருக்கலாயிற்றே. † (மூர்த்தி - ரூபமாய், ஸ்வபாவத்தைநினைக்கிறது. ஜ்ஞாநஸ்வபாவனே) [என்னையாள்வானே] - காட்டுகிறபோது தெரியக்காட்டி, பின்னை என்வழியேயாக்கி என்னைக்கைவிட்டாயோ. *அஞ்சிறையமடநாரை, * மாசறுசோதி தொடக்கமான வ்யஸநங்களையும்போக்கி ஜ்ஞாநத்தாலே தரிப்பித்துக்கொண்டுபோந்தபடி. [எம்மாவுருவும்] - எனக்காகவும் ஆஶ்ரிதர்க்காகவும் நீபடும்பாடு அறிவுதியே. எவ்வகையாலும் விலக்ஷணமான விக்ரஹம். அதாவது - "ப்ரக்ருதிம்ஸ்வாமதிஷ்டாய" (ப்ரக்ருதிம்ஸ்வாமதிஷ்டாய) என்கிறபடியே அப்ராக்ருததிவ்யஸம்ஸ்தாநமாயிருக்கை. [வேண்டுமாற்றால்] - "தனக்குவேண்டுருக்கொண்டு" என்கிறபடியே இச்சையாலேயென்னுதல்; ஆஶ்ரிதர் வேண்டுமாற்றாலேயென்னுதல். ‡ "தமருகந்ததெவ்வுருவ மவ்வுருவந்தானே" என்னக்கடவதிறே. [எவ்வுருவும்வேண்டுமாற்றாலாவாய்] - "எந்நின்ற யோனியுமாய்ப்பிறந்தாய்", ஆஶ்ரிதார்த்தமாக நீகொள்ளாதவடிவுண்டோ. [எம்மாவுருவும்]- எல்லாவடிவும் அவன்கொண்டதாகையாலே ஶ்லாக்யமாயிருக்கிறபடி. அதாவது - "ஆவிர்பூதம்" (ஆவிர்பூதம்) என்கிறபடியே அப்ராக்ருத திவ்யஸம்ஸ்தாநத்தை இதர

ப்ர.—ஶ்ரீகீதாஸு பகவதோக்தம், "அஜோऽபி ஸந்நவ்யயாத்மா பூதாநாமீஶ்வரோऽபி ஸந் | ப்ரக்ருதிம் ஸ்வாமதிஷ்டாய ஸம்பவாம்யாத்மமாயயா ||௬||".

ஶ்ரீவிஷ்ணுபுராணே பஞ்சமேம்ஶே [௩] "ததோऽகிலஜகத்பத்மபோதாயாச்யுதபாநுநா | தேவகீபூர்வஸந்த்யாயாமாவிர்பூதம் மஹாத்மநா ||௨||"

எனக்குத் தன்பேறாக * மயர்வறமதிநலமருளினனென்கிறார் - ஜ்ஞாநஸ்வரூபன் இத்யாதி. "ஒன்றும்குறையாதபடி" என்றத்தை விவரிக்கிறார் - சிறிது இத்யாதி. "எம்மாவுரு" என்றதுக்கு மூன்றுபொருள்,—அதில் முந்தினது; "எம்" என்று - ஷஷ்டீவசநமாய், அதுக்கர்த்தம்- 'எனக்காகவும் இத்யாதி. "எ" என்றதுக்கு - எவ்வகையாலும் என்று இரண்டாமர்த்தம் - எவ்வகையாலும் இத்யாதி. எவ்வகையாலுமென்றது - அப்ராக்ருதமாகையாலும், இச்சாநிபந்தநமாகையாலும், பரார்த்தமாகையாலுமென்றபடி. அவதாரவிக்ரஹத்துக்கு வைலக்ஷண்யமுண்டோ? என்ன - அதாவது இத்யாதி. வேண்டுமாற்றால் - இச்சித்தப்ரகாரத்தாலே இதிஶப்தார்த்தஃ. தான் இச்சித்தபடியேயென்னுதல், ஆஶ்ரிதர் இச்சித்தபடியேயென்னுதல். ஆஶ்ரிதர் வேண்டின படியே விக்ரஹத்தைக்கொள்ளுமோ? என்ன - தமருகந்தது இத்யாதி. "எ" என்றதுக்கு - எல்லாமானவென்று மூன்றாமர்த்தம் - எவ்வுருவும் இத்யாதி. அதில்ப்ரமாணம் - எந்நின்ற இத்யாதி. ஸகலஜாதிகளிலும் அவதீர்ணனானவனே இத்யர்த்தஃ. மாவுரு - விலக்ஷணவிக்ரஹம். இது - அர்த்தத்ரயத்துக்குமொக்கும். "வேண்டுமாற்றால் - எம்மாவுருவுமாவாய்" என்று அர்த்தத்ரயத்திலும் அந்வயிப்பது. இச்சித்தபடியே எங்களுக்காக விலக்ஷணமான அவதாரவிக்ரஹங்களையுடையனானவனேயென்று ப்ராதமிகார்த்தம், இச்சையாலே எல்லாவகையாலும் விலக்ஷணமான விக்ரஹங்களையுடையவன் என்று இரண்டாமர்த்தம். அநேகமான விக்ரஹங்களையுடையவனேயென்று மூன்றாமர்த்தமென்று கண்டுகொள்வது. "வேண்டுமாற்றால்" என்றத்தைக்கடாக்ஷித்து- ஆஶ்ரிதார்த்தமாக இத்யாதி. "மாவுரு" என்றதுக்கர்த்தம் - எல்லாவடிவும் இத்யாதி. இந்த வாக்யம் - திர்யகாதிவிக்ரஹங்கள் ஶ்லாக்யமாயிருக்குமோவென்கிற ஶங்கைக்கு பரிஹாரமாயு

† குண்டலிதம் க்வாசித்கம். ‡ முதல்திருவந்தாதி—௪௪,

ஸஜாதீயமாக்குமித்தனையிறே. "ரூபமந்யத்தரேர்மஹத்" (ரூபமந்யத்தரேர்மஹத்) என்னுமித்தனையிறே. [வேண்டுமோற்றலாவாய்] - கர்மமடியாக இவன் பிறக்குமாபோலேயிறே அநுக்ரஹமடியாக அவன்பிறக்கும்படி. இருவர்க்கும் பிறவியொக்கும். இவனுக்குக் கர்மக்ஷயம்பிறக்க ஜந்மக்ஷயம்பிறக்கும், இவன்கர்மம் அவன்காலிலே குனியப்போம்; அவனுக்கு நித்யமாய்ச்செல்லாநிற்கும். இனி அவனுக்குக் கர்மமேன்னப்பார்க்கிறது - அநுக்ரஹத்தையிறே, அதுதானும் நித்யமிறே அவனுக்கு. இவனுக்கு இவன்தன்னளவிலே பிறக்கவமையும், அவனுக்கு எல்லார்க்குமாகப் பிறக்கவேணுமே. இவனுக்குக் கர்மமடியாக வந்ததாகையாலே ஸ்வார்த்தமாயிருக்கும், அவனுக்கு அநுக்ரஹமடியாக வந்ததாகையாலே பரார்த்தமாயிருக்கும். * "பஹூநி மே வ்யதீதாநி ஜந்மாநி தவ ச" (பஹூநிமேவ்யதீதாநி ஜந்மாநிதவச) விறே. தவ ச என்கிறது-உன்னுடையபிறவி மெய்யாயிருக்குமாபோலே என்னுடையஜந்மமும் ஐந்த்ரஜாலிகமன்றுகாண். இப்படியிராதவன்று

தத்ருஷ்டேஷம் [எ]. "ஸத்த்வாஸ்ருக்ஷ்யம் ஸ்ருதாம்நாயத்ருஷ்டிஷ்டிதாம் | தஸ்மிந் ரூபம் வைஸ்வரூப்யம் ரூபமந்யத்தரேர்மஹத் || எ0½ ||".

யிருக்கிறது. "அவனுடையவிக்ரஹம் அப்ராக்ருதம்" என்கிறதுக்கு ப்ரமாணம் - ரூபமந்ய இத்யாதி. "ஸத்த்வாஸ்ருக்ஷ்யம் ஸ்ருதாம்நாயத்ருஷ்டிஷ்டிதாம்| தஸ்மிந் ரூபம் வைஸ்வரூப்யம் ரூபமந்யத்தரேர்மஹத்" இதிஷஷ்டே. "தேவகீவ்ருஷ்டபோஸ்யாயா ஹவி ஸம்ஹிதம் மஹாத்மநா" இதி பஞ்சமே. விஸ்வரூபம் வைஸ்வரூப்யம்-விஸ்வத்திலுண்டான ரூபங்களைப்பற்ற விலக்ஷணமாயிருக்கும். இப்படி அழகாலே விலக்ஷணமாய் உபாதாநத்ரவ்யம் ஒன்றாயிருக்குமோ? என்ன, அந்ய - வேறாயிருக்கும். அதாவது - அப்ராக்ருதமாயிருக்குமென்றபடி. "ஆவாய்" என்ற வர்த்தமாநத்துக்கு அர்த்தம் - கர்மமடியாக இத்யாதி. ஆனால் இருவர்க்கும் வாசியேதென்ன-இருவர்க்கும் இத்யாதிவாக்யத்வயம். கர்மக்ஷயம்பிறக்கைக்குஹேதுவேதென்ன-இவன்கர்மம் இத்யாதி. நித்யமாகச்செல்லுகைக்கு ஹேதுவேதென்ன - இனி அவனுக்கு இத்யாதி. அதுதானும்நித்யமிறேஅவனுக்கு - ஆனவன்பு, அநுக்ரஹத்துக்கு முடிவில்லாமையாலே அநுக்ரஹகார்யமான பிறவியும் நித்யமாய்ச்செல்லாநிற்குமென்றபடி. அதுதானும் என்ற சப்தம் - ஸ்வரூபநித்யத்வத்தைஸமுச்சயிக்கிறது. நித்யதையாலே வ்யாவ்ருத்தியருளிச்செய்து, பரார்த்ததையாலும் வ்யாவ்ருத்தமென்கிறார்-இவனுக்கு இவன்தன்னளவிலே இத்யாதி. இந்தஸ்வார்த்தபரார்த்ததைகளுக்குஹேதுவேதென்ன-இவனுக்குகர்மம் இத்யாதி. ஈஸ்வரனுடைய அவதாரங்கள் அஸங்க்யாதங்களாயிருக்குமோ? என்ன,—ப்ரமாணம் - பஹூநி இத்யாதி. "பஹூநி மே வ்யதீதாநி ஜந்மாநி தவ சார்ஜுந | தாந்யஹம் வேத ஸர்வாணி ந த்வம் வேத்த பரந்தப ||ரு||" இதி ஸ்ரீகீதாயாம் சதுர்த்தே. ஸ்லோகார்த்தம் - தவ ச இத்யாதி. ஜந்மரஹிதனாயிருக்கிற நீ இப்படி அநேகாவதாரங்களைப் பண்ணுகிறாயென்றால், இது ஐந்த்ரஜாலிகமொழிய ஸத்யமாகக் கூடுமோவென்று அர்ஜுநன் ஸங்கிக்க; உன்னுடைய பிறவி எப்படிஸத்யம், அப்படி இதுவும் ஸத்யமென்றபடி. "தவ ச" என்கிறது - த்ருஷ்டாந்தார்த்தமென்கிறது. இப்படியிராதவன்று இத்யாதிவாக்யத்துக்குக் கருத்து - அவதாரங்கள் அஸத்யமானால், அவதாரங்களில் உக்தங்களான "ஸக்ருதேவ" இத்யாதிஸ்லோகங்களும் அஸத்யங்களாகையாலே, அவ்வார்த்தைகளை விஸ்வஸித்து நிர்ப்பரனாயிருக்கக்கூடாதென்று. அன்றிக்கே, இப்படி அவன் அநுக்ரஹத்தாலே அநேகாவதாரங்களைப்பண்ணாதபோது, இவனுக்கு "அவனேரக்ஷகன்" என்று விஸ்வஸித்து நிர்ப்பரனாயிருக்கவிரகில்லையென்கிறார் - இப்படியிராதவன்று இத்யாதி. ஆவாய் - ஆகிற

இவனுக்கு மார்விலே கைவைத்துறங்கவொண்ணாதே. [எழிலேறே] - இப்படி ஆஸ்ரிதார்த்தமாகப் பிறவாநின்றால் பழையபுகழிற் குறைந்துவருமோ? என்னில், [illegible] [illegible]லாத வேழலுமுண்டாயிருக்கை. கர்மத்தாலேபிறக்கிலிறே நிறக்கேடாவது. *பலபிறப்பாயொளி வருமுழுநலமிறே. "ஸஉஶ்ரேயாந்பவதிஜாயமாந:" (ஸஉ:ஶ்ரேயாந்பவதிஜாயமாந:) ஸவஜ்வ என்கிறதிறே - எல்லார்க்கும் பிறக்கப்பிறக்கப் புகர் அழிந்துவரும். இவனொருவனுக்கும் பிறவாநின்றால் புகருண்டாகாநிற்குமிறே. தேசமறியப்புகருண்டாய் நெஞ்சுவேறுத் திருக்குமோ? என்னில்,—"பிறக்கப்பெற்றோம்" என்னும் மேனாணிப்பை [illegible]யனாயிருக்கும். "பட்டிமேய்ந்தோர்காரேறு" என்கிறபடியே. "வானிளவரசு" [illegible]படியே அகம்படிவைத்த அரசாயிருக்கும் அங்கு, அச்சேறுப்புத்தீர ஸ்வைரம் ஸஞ்சரிக்கப்போந்த விடமிறே இது, ஆகையாலே, அங்குநின்றும்போந்து பிறந்தபின்பாயிற்று எழிலேறாயிற்று. அடியறிவார் "பவாந்நாராயணோதேவ:" (பவாந்நாராயணோதேவ:) என்றால், அது

ப்ர.—(எழிலேறே) யஜுஷி, [க-ந, உ-கூ, ஐ-க] "ப்ரஜாபதிஶ்சரதிகர்ப்பே அந்த: அஜாயமாநோ பஹுதா விஜாயதே" [illegible] ஸ உ ஶ்ரேயாந் பவதி ஜாயமாந: ! [illegible] ஸாயி யோ ஜநாந்தேவயஜ:".

யாஜ்ஞிகாண்டே [கஉ0] ராவணவதாநந்தரம், "உத்யோகோ ஜ்யோதிஷாம்வர ஸஹஸ்ரஸூர்யஸங்காஶோ ராவண: | க்ருத்வா ஸுமஹதம் கர்ம யோ ஹி தேஜஸா ஸமந்விதம் || க0½ || ஸூதா நந்தந ராஷ்ட்ரம் [illegible] | [illegible] || கக½ || உதிஷ்டராஜா காகுத்ஸ்த ஸ்வாம் [illegible] | க்ஷத்ரிய தேஜ: [illegible] || கஉ½ || பவாந்நாராயணோ தேவ: ஶ்ரீமாம்ஶ்சக்ராயுதோ விபு: | ஏகஶ்ருங்கோ வராஹஸ்த்வம் பூதபவ்ய ஸபத்நஜித் || கந½ ||".

வனே. அதுக்கு ஹேதுவேதென்ன - கர்மத்தாலே இத்யாதி. பிறக்கப்பிறக்கப் புகர் அதிஶயிக்கைக்கு ப்ரமாணம் - பலபிறப்பாய் இத்யாதி. "ஆத்மாவைப்போலல்ல இவன்பிறவி" என்றதுக்கு ப்ரமாணம்- ஸஉஶ்ரேயாந் இத்யாதி. இந்தஶ்ருதியிலே - சேதநர்க்கு வ்யாவ்ருத்தி தோன்றுகிறதோ? என்ன - ஸவஜ்வ இத்யாதி. இதுக்கர்த்தம் - எல்லார்க்கும் இத்யாதி. "ஏறே" என்கிறபதத்துக்கு அவதாரிகை - தேசமறிய இத்யாதி. மேனாணிப்பு - கர்வம். அவதரித்த விடத்தில் வ்ருஷபம்போலே மேனாணித்திருக்கைக்கு ப்ரமாணம் - பட்டி இத்யாதி. ஸ்வைர ஸஞ்சாரம்பண்ணி அத்தாலே அத்விதீயமான கறுத்த வ்ருஷபம்போலே மேனாணித்திருக்குமவனித்யர்த்த:. நாய்ச்சியார்திருமொழி, பதினாலாந்திருமொழி, முதற்பாட்டு. இதுக்கர்த்தம் - வானிளவரசு இத்யாதி. வானிளவரசு-வ்ருத்தமந்த்ரிகளிட்டே பாலராஜாவானவன் வர்த்திக்குமாபோலே, பரமபதத்துக்கு இளவரசாயுள்ளவனித்யர்த்த:. பெரியாழ்வார்திருமொழி, மூன்றும் பத்து, ஆறுந்திருமொழி, மூன்றும்பாட்டு. அகம்படி - பழையபடியார். சேறுப்பு - ஸங்கோசம். வாயை. "இதுவே இஷ்டமாய் மேனாணித்திருக்கும்" என்கைக்கு ஸம்வாதத்தையருளிச்செய்கிறார் - அடியறிவார் இத்யாதி. சூழ்த்துக்கொடுக்கை - ஆணையிட்டுக்கொடுக்கை. "பவாந்நாராயணோதேவ: ஶ்ரீமாம்ஶ்சக்ராயுதோ விபு:| ஏகஶ்ருங்கோ வராஹஸ்த்வம் பூதபவ்ய

அஸஹ்யமாய், "ஆத்மாநம்மாநுஷம்மந்யே" (ஆத்மாநம்மாநுஷம்மந்யே) என்றும், "அஹம்வோபாந்தவோஜாத:" (அஹம்வோபாந்தவோஜாத:) என்றும் சூழ்த்துக்கொடுக்கும்படியிறே அவதாரத்திலே மெய்ப்பாடிருக்கும்படி. [செம்மா இத்யாதி]-அவதாரகாலத்திலுதவாதார்க்கும் இழக்கவேண்டாதபடியிறே கோயில்களிலேவந்து கண்வளர்ந்தருளுகிறது. [செம்மாகமலம் இத்யாதி] - பரிமளம் முகத்தேவந்தலையேறிய அதுதானே தொடைகுத்தக்கிடந் துறங்குகிறபடி. சிவந்த பெரியகமலங்களானவை, தர்ஶநீயமான நீரையமுக்கி மேலேயலருகிறபோது, கடல்நிறமானவடிவையும் அங்குத்தை யவயவங்களையும் காட்டாநின்றன. [செம்மாகமலம்] - அரைக்ஷணத்திலே செவ்விமாறுகிறதாமரை அங்குத்தைக் கோப்பாகாதிறே, வருந்திச்சொல்லும்போதும் இத்தனையேறிட்டுச் சொல்லவேணுங்காணும். [அம்மாமலர்க்கண் வளர்கின்றானே]-அழகிய தாமரைப்பூப்போலேயிருக்கிற திருக்கண்கள் அலரக் காண்கிறிலேன். [அம்மாமலர்] - அவற்றோடே ஸஜாதீயமாயிற்றின இரண்டுபூ அலரக்காண்கிறிலேனென்றுமாம். [என்நான்செய்கேனே] - இவையிரண்டு மலர்ந்தாலல்லது யரியாதிருக்கிற நான் என்செய்கேன். திருக்குடந்தையிலே தாமரைகள் அலர்ந்தால் மதுபாநம்பண்ணக்கடவ வண்டுகள் மதுபாநம்பண்ணிக்களியாநின்றன, இத்தாமரைகள் அலர்ந்தால் மதுபாநம்பண்ணக்கடவவண்டு இங்ஙனே பட்டினிகிடந்துபோமித்தனையோ. [என்னான்செய்கேனே]-"இக்கூப்பீடு உருவச்செல்லும்'என்றிருக்கிறாயோ, சென்றற்றதுகிடாய். "இவையொழிய மதுபாநம்பண்ணேன்" என்கையிறே இவர்க்கு இங்ஙன் படவேண்டுகிறது. இனி இவையலருகையாவது-விஶேஷகடாக்ஷம்பண்ணுகைகாணும். அவன்கண் விழியாதபோது இவர் கண்விழிக்கமாட்டாரே. (௨)

ப்ர.—ஸ்ரீவிஷ்ணுபுராணே வஜ்ரஸம்வாதே [௩௩] ஶரவர்ஷே நாராயணாநசே, "நாஹம்தேவோ நகந்தர்வோ நயக்ஷோ நசதாநவ: । அஹம்வோபாந்தவோ ஜாதோ நைதச்சிந்த்யமிதோந்யதா ॥ ௩௨½ ॥".

ஸபத்நீஜிக' இதி யாஜகாணஸ்ய ஹா. "ஆத்மாநம்மாநுஷம்மந்யேராமம்தஶரதாத்மஜம்" இத்யாதி. "நாஹம்தேவோ நகந்தர்வோ நயக்ஷோ நசதாநவ:। அஹம்வோ பாந்தவோஜாதோ நைதச்சிந்த்யமிதோந்யதா" இதிவஜ்ரஸம்வாதே. கோயில்களிலே என்கிற ஸஹவசநத்துக்கு-"நாகத்தணைக்குடந்தை" இத்யாத்யநுஸந்தேயம். "செம்மாகமலம்" என்றதுக்கு - போக்யமாயிருக்குமென்று, போக்யதைக்குறுப்பாகஸாவம் - பரிமளம் இத்யாதி. அவன் திருமேனிக்கும் திவ்யாவயவங்களுக்கும் போலியாயிருக்குமென்று உபமாநபரமாக ஸாவாந்தரம் - சிவந்த இத்யாதி. "செம்மா" என்றுவிஶேஷித்ததுக்கு ஸாவம் - அரைக்ஷணத்திலே இத்யாதி. "அம்" என்று - அழகாகவர்த்தம் - அழகிய இத்யாதி. "அ" என்று பூர்வபராமர்ஶியாக்கி அர்த்தாந்தரம் - அவற்றோடே இத்யாதி. "அம்மாமலர்க்கண்வளர்கின்றானே, என் - செய்கேன்" என்றதுக்கு ஸாவம் - திருக்குடந்தையிலே இத்யாதி. "நான்" என்றதுக்குஸாவம்- இக்கூப்பீடு இத்யாதி. அல்லாதபூக்களில் மதுவைப்பாநம்பண்ணவொண்ணுதோ இவர்க்கென்ன- இவையொழிய இத்யாதி. "கமலேந்த்ரிய்யூதி" என்னக்கடவதிறே. சென்றற்றதுகிடாய்-முடியுமளவாயிற்று கிடாயென்றபடி. ஸ்வாபதேஶம் - இனியிவை இத்யாதி. க்ரமேணாந்வய:. (௨)

மூன்றாம் பாட்டு.

என்னான்செய்கேன்யாரேகளைகண் என்னையென்செய்கின்றாய்
உன்னாலல்லால்யாவராலும் ஒன்றும்குறைவேண்டேன்
கன்னார்மதிள்சூழ்குடந்தைக்கிடந்தாய் அடியேனருவாணாள்
சென்னாளெந்நாளந்நாள் உனதாள்பிடித்தேசெலக்காணே.

ஆ.—(என்னான்செய்கேன்) என்னாலொருசெயலில்லை, நீயல்லது எனக்கு மற்றொருகதியில்லை, என்னுடைய யத்நத்தாலே உன்திருவடிகளைப் பெறக்கடவனாகவோ! பார்த்தருளுகிறது, உன்னுடைய க்ருபையாலே உன்திருவடிகளைப் பெறுகையொழிய வேறொருபாயத்தால் பெறிலும்வேண்டா; ஆனபின்பு, இனி இவ்வாத்மா உள்ளகாலமும் உன் திருவடிகளைப்பிரியாதேயிருக்கும்படி பார்த்தருளவேணுமென்கிறார்.

ஓ.—மூன்றாம்பாட்டில், இப்படி கூப்பிட்டவிடத்திலும் ஸ்வாபிலஷிதம் பெருமையாலே 'நம்முடைய நிர்வாஹம் நாமே செய்துகொள்வோம்' என்று பார்த்தருளினாகாதே! என்று நினைத்து; 'என்னுடைய அபேக்ஷிதங்கள் நீயே செய்தருளவேணும்' என்கிறார்.

[என் என்றுதொடங்கி] - உன்திருவடிகளைப்பெறுகைக்கு என்னால் செய்யலாவதொரு ப்ரவ்ருத்தியில்லை; உன்னையொழிய வேறு நிர்வாஹகருண்டாக ஸம்பாவனையுமில்லை. என்னை நீயே விஷயீகரிக்கப்பார்த்தருளினாயோ? தானே யத்நம்பண்ணிவருகிறானென்று விடப்பார்த்தருளினாயோ? [உன்னாலென்றுமேலுக்கு]-நானே யத்நம்பண்ணி உன்னைப்பெற அமையுமென்று இருக்கிறாயாகில் என்னுடைய யத்நத்தாலேயாதல் ஹேத்வந்தரங்களாலேயாதல் வரும் ஒன்றால் பரிக்கும் ப்ரக்ருதியல்லேன். 'ஸ்நேஹிகளுக்குளென் புகுருகிறதோ?'என்று அஞ்சவேண்டாதபடி செம்பாலேசெய்த திருமதிள்சூழ்ந்த திருக்குடந்தையிலே கண்வளர்ந்தருளுகிறவனே! என்னுடைய ஆத்மா உண்டாய்ச்செல்லும்நாள் எத்தனைநாளுண்டு? அத்தனைநாளும் உன்திருவடிகளைப்பெற்றுச் செல்லும்படி பார்த்தருளவேணும்.

ப.—அநந்தரம், அகிஞ்சநனான நான் உன்னையொழிய வேறொருவராலும் அபேக்ஷையையுடையேனல்லேன்; இப்படியாக்கின நீயே, யாவதாத்மபாவி உன்திருவடிகளிலே யடிமைகொண்டருளப் பார்க்கவேணுமென்கிறார்.

நான் - (கர்த்ருத்வம் ஸ்வாதீநமல்லாத) நான், (ஸ்வரக்ஷணார்த்தமாக), என் - என்னப்ரவ்ருத்தியை, செய்கேன் - பண்ணுவேன்; (வேறு, தந்தாங்காரியம் தாந்தாமறியாத சேதநரில்), களைகண் - ரக்ஷகராவார், யார் - ஆர், என்னை - (அஶக்தனான) என்னை, என்செய்கின்றாய் - (துஸ்ஸாதோபாயங்களிலே மூட்டநினைத்திருக்கிறாயோ, உனக்கே பரமாக ஏறிட்டுக்கொள்ள நினைத்திருக்கிறாயோ), என்செய்யவிருக்கிறாய்? உன்னாலல்லால் - (ஸர்வரக்ஷகனாய்ப்ராப்தனாய் ஶக்தனான) உன்னையொழிய, யாவராலும் - (அரக்ஷகராய் அப்ராப்தராய் அஶக்தரானவர்கள்) ஆரேனுமொருவராலும், ஒன்று - ஒரு, குறையும் - குறையும், (நிரம்புவதாக), வேண்டேன் - வேண்டியிரேன்; கன்-சிக்கெனவு, ஆர் - விஞ்சி

யிருக்கிற, மதிள் - மதிள், சூழ் - சூழ்ந்த, குடந்தை - திருக்குடந்தையிலே, கிடந்தாய் - கண்வளர்ந்தருளினவனே! அடியேன் - உனக்கடியேனான என், அரு - ஆத்மவஸ்து, வாழ் - உஜ்ஜீவிக்கும், நாள் - காலம், செல் - அநுவர்த்திக்கும், நாள் - நாள், எ - எத்தனை, நாள் - நாள், அந்நாள் - அந்நாளெல்லாம், உன - உன், தாள் - திருவடிகளை, பிடித்தே - அவலம்பித்துக்கொண்டே, செல - நடக்கும்படி, காண் - பார்த்தருளவேணும். கன்னென்று - தொழிலுமாம். அருவென்று - அணுரூபமான ஸ்வரூபம்.

ஈ.—மூன்றும்பாட்டில், இப்படி கூப்பிட்டவிடத்திலும் அபிமதம்பெறாமை யாலே, ''தானே ஸாயநாநுஷ்டாநம்பண்ணிவருகிறான்' என்று கைவிட்டிருந்தான்''என்று நினைத்து, என்னபேக்ஷிதம் செய்தருளவேணுமென்கிறார்.

[என்னான் இத்யாதி] - உன் திருவடிகளைப்பெறுகைக்கு என்னாற் செய்யலாவ தில்லை. எனக்கும் செயலுக்கும் என்னசேர்த்தியுண்டு. ஒருஊர்வலன்தலையிலே மலையை யெடுத்தினப்போலே யிருக்கையிறே என்னை ஸாயநாநுஷ்டாநத்திலே மூட்டுகையாவது. ஒருஸர்வசக்தி நிர்வஹிக்குமத்தை நான்செய்யவோ. நீர் ஊர்வலராகில் வேறேசிலர் நிர் வாஹகராலோ? என்ன,—[யாரேகளைகண்] - ஸ்வரக்ஷணத்தில் அசக்தரானவர்கள் எனக்கு ரக்ஷகராகவோ. அமிழ்ந்துவார் அமிழ்ந்துவாரை எடுக்கவோ. என்னளவும் புகுர நில்லாதவர்கள் எனக்கு ரக்ஷகராகவோ. [என்னையென் செய்கின்றாய்] - நீ உன் னைத்தரப்பார்த்தாயோ, உபாயாந்தரங்களைக்காட்டி யகற்றப் பார்த்தாயோ. "நெறி காட்டி நீக்குதியோ". [உன்னாலல்லால் இத்யாதி] - நானும் எனக்குக்கடவனாய், பிறரும் சக்தரானவன்றும், உன்னால்வரும் நீயொழிய என்னால்வரும்நீயும் வேண்டா, பிறரால்வரும்நீயும் வேண்டாவென்கை. "ஸுஜெவொ வாயஹூ©ெதாஜெஹவ". [கன்னார் மதிள்] - செம்பாலேசெய்த மதிளென்னுதல்; கன்னென்று - தொழிலாய், தொழில்மிக் கிருந்துள்ள மதிளென்னுதல். "என்புகுருகிறதோ" என்று ஆச்ரிதர்க்கு அஞ்சவேண்டா திருக்கை. அவன்சக்தியை யநுஸந்தித்துத் தமக்கு அவன் மதிளாக நினைத்திருப்பர், அவன் ஸௌகுமார்யத்தைப்பார்த்தால் மங்களாசாஸநம்பண்ணுமித்தனையிறே.மதிளுக்கு மதிளிடுகிறார். உபாயம் ஸந்நிஹிதமாய் ஸாரக்ஷிதமானால் கொள்ளப்புகுகிறகார்யம் என்? என்னில்,—[அடியேன் இத்யாதி] - என்னாத்மாவுண்டாய்ச் செல்லும்நாள் எத்தனை நாளுண்டு, அத்தனைநாளும் உன்திருவடிகளையே பெற்றுச் செல்லும்படி பார்த்தருள வேணும். [அடியேனரு] - உனக்கு அநந்யார்ஹசேஷமான ஆத்மவஸ்து. தாம்நினைத்த பரிமாற்றம் கிட்டாமையாலே, "அதுக்கடியான அத்யவஸாயங்குலைகிறதோ" என்று அஞ்சி, அதுகுலையாதபடி பார்த்தருளவேணுமென்கிறா ரென்றுமாம். "உன்னாலல்லால் யாவராலும் ஒன்றும் குறைவேண்டேன்" என்கிறது குலையாதபடி பார்த்தருளவேணும். அத்யவஸாயமிது, ருசியில்வந்தால் பரமபக்தியுக்தர், விளம்பத்துக்கு அடியென்? என் னில்,—பக்திவிபாகத்துக்காகவும், இவருடைய ப்ரேமம் வழிந்தசொல்லாலே நாட்டைத் திருத்துகைக்கும்.

ஈடு.—மூன்றாம்பாட்டு. இப்படி நசையற்றாப்போலே துடித்துக்கிடந்து கூப்பிட்டவிடத்திலும்; குளிரநோக்குதல் வினவுதல் செய்யாமையாலே, பேறு தம்மதானால் பெறுவார்க்கும் சிலசெய்யவேணுமென்று இருந்தானாகக்கொண்டு; நான் என்காரியம் செய்கையென்று ஒன்றுண்டோ, நீசெய்து தலைக்கட்டித் தரவேணுமென்கிறார்.

[என்னுன்செய்கேன் யாரேகளைகண் என்னையென்செய்கின்றாய்] - என்மேலே விட்டிருக்கிறாயோ? பிறர்மேலே விட்டிருக்கிறாயோ? நீயேசெய்யக்கடவதாக நினைத்திருக்கிறாயோ? [என்னுன்செய்கேன்] - "நான்செய்வது எது" என்று கேட்கிறாரல்லர், நான் செய்து தலைக்கட்டவேதாக நினைத்திருக்கிறவற்றுக்கும் எனக்கும் என்னசேர்த்தியுண்டு. [யாரேகளைகண்]-அமிழ்ந்துகிறார் அமிழ்ந்துகிறாரையெடுக்கவோ. *வொாயஜஃவாஹரூ பண்ணுகைக்கும் ஆளல்லாதவர்கள் என்கார்யம்செய்யவோ. [என்னையென்செய்கின்

பிர.—(என்னுன்செய்கேன்)நீ தாவஸுஉஹபெஜ,"உஹி தாஉஉ தவ ரணாவொ யஜஃவாஹரூ | கூயஜஞூஸஂஷிதஂ தாஷு ஷிவாஶஷிவ || கூ ||".

மூன்றாம்பாட்டு.—என்னுன் இத்யாதி. "என்னுன்செய்கேன்"இத்யாதியைக்கடாக்ஷித்து அவதாரிகை - இப்படி இத்யாதி. நசையற்றாப்போலே - தம்முடையப்ராணனில் நசையற்றாப்போலேயென்றபடி.

"என்னுன்செய்கேன்" என்று - தம்முடைய செயலறுதியும், "யாரேகளைகண்" என்று - பிறர் ரக்ஷகரல்லாமையும், "என்னையென்செய்கின்றாய்" என்று - அவனைக்கேட்கிறதுமான இம்மூன்றிலும் இவர்க்குண்டான ஹாவத்தை யருளிச்செய்கிறார் - என்மேலே இத்யாதி. "இவன் தானே ஸாயநாநுஷ்டாநம்பண்ணுகிறான், நாமென்" என்று என்மேலேயாக்கி முகங்காட்டாதிருக்கிறாயோ, அஸ்ஸாயநாநுஷ்டாநத்துக்கு நான் க்ஷமனல்லேனென்கிறவிது - என்மேலே விட்டிருக்கிறயோ என்றதுக்கு தாத்பர்யம். "இவன் ஸாயநாநுஷ்டாந க்ஷமனல்லனேயாகிலும் பிறர் இவனை ரக்ஷிக்கிறார்கள்" என்று அவர்கள்மேலேயாக்கி முகங்காட்டாதிருக்கிறாயோ, அவர்கள் ரக்ஷிக்கமாட்டார்களென்கிறவிது - பிறர்மேலே விட்டிருக்கிறயோ என்றதுக்கு தாத்பர்யம். "தன்னிலையும் பிறர்நிலையும் இப்படியானபின்பு நாமேயன்றோ உளோம்" என்று நீயே ரக்ஷிக்கப் பார்த்தாயோ என்கிறவிது - நீயேசெய்யக்கடவதாக நினைத்திருக்கிறயோ என்றதுக்கு ஹாவம். என்னுன்செய்கேனென்றது - அநுவாதமன்றிக்கே ப்ரச்நோக்தியுமன்றிக்கே, க்ஷேபோக்தியாய், அஜ்ஞனாய் அஶக்தனான நான் என்ன ஸாயநாநுஷ்டாநம் பண்ணுவேனென்றபடி. இத்தைக் காட்டுகிறார் - நான்செய்வது இத்யாதி. என்னசேர்த்தியுண்டு என்கிறவிடத்திலே - ஸ்ரீவசநபூஷணத்திலே, "என்னுன்செய்கேன் என்கிறவிடத்திலே இம்மூன்றுமுண்டு" என்றருளிச்செய்த அர்த்தத்ரயமும் விவக்ஷிதம். அதாவது - எம்பெருமான் தம்முடைய ஆர்த்திகண்டு இரங்கக்காணாமையாலே, தன்னைப்பெறுமிடத்தில் சில ஸாயநாநுஷ்டாநம் பண்ணவேணுமென்று இருந்தானாகக்கொண்டு; உபாயாந்தராநுஷ்டாநத்துக்கு யோக்யதையில்லாதபடி அஜ்ஞனாய் அஶக்தனான நான் என்செய்கேன்; ஜ்ஞாநம் தந்தோமே? என்னில்,—நீதந்த ஜ்ஞாநத்தாலே ஸ்வரூபபாரதந்த்ர்யத்தை யுணர்ந்து "ஸாயநாநுஷ்டாநம் அப்ராப்தம்" என்றிருக்கிற நான் என்செய்கேன்; ஸ்வரூபத்துக்குச்சேராதாகிலும் உன்னைப்பெறலாமாகில் அதுதன்னை அநுஷ்டிக்கலாயிற்றிறே, ஜ்ஞாநமாத்ரத்தைத்தந்தாயாகில், பக்திரூபாபந்நஜ்ஞாநத்தைத் தருகையாலே ஒன்றையும் அடைவுபட அநுஷ்டிக்க க்ஷமனல்லாதபடி பக்திபரவஶனானேன் என்செய்வேனென்றபடி. நீர் அஶக்தரானால், ஶக்தரான தேவதாந்தரங்கள் ரக்ஷகரானாலோ? என்ன - அமிழ்ந்துகிறார் இத்யாதி. அதாவது-அஶக்தரென்றபடி. எடுக்கமாட்டாவிட்டால் உசாத்துணையாவர்களோ? என்ன-வொாயஜ இத்யாதி. அதாவது - அஜ்ஞதையாலும் என்கார்யம் செய்யமாட்டார்களென்றபடி. "என்செய்

றாய்] - * நெறிகாட்டி நீக்குதியோ, நின்பால் கருமாமுகிமேனிகாட்டுதியோ, நீ நினைத்திருக்கிறதேன்? [என்னான்செய்கேன் யாரேகளைகண் என்னையென்செய்கின்றாய்] - என்னையறியாயோ! பிறரையறியாயோ! உன்னையறியாயோ! என்னை நானாகவன்றோ வ்யவஸ்தைபண்ணியிருக்கிறது. [யாரேகளைகண்] - என்னளவுகிட்டாதார் எனக்குரக்ஷகராகவோ. [என்னையென்செய்கின்றாய்] - நீசெய்து தலைக்கட்டப்பார்த்தாயோ? அன்றிக்கே, "ஸாத்யநாநுஷ்டாநம்பண்ணிவாரும்" என்று நளன் தமயந்திக்கு வழிகாட்டினாப்போலே கைவிடப்பார்த்தாயோ? [என்னான்செய்கேன்] - தாம் கைவாங்கினபடி. [யாரேகளைகண்] - பிறர்பக்கல்நின்றும் கைவாங்கினபடி. [என்னையென்செய்கின்றாய்] - 'மத்யாஜீ மாம் நமஸ்குரு' (மாத்யாஜீமாம்நமஸ்குரு) என்னப்பார்த்தாயோ? "மாமேவைஷ்யஸி" (மாமேவைஷ்யஸி) என்னப்பார்த்தாயோ? [உன்னாலல்லால் யாவராலும் ஒன்றும் குறைவேண்டேன்] - நீ

ப்ர.— தத்ர வசநம், "மந்மநா பவ மத்பக்தோ மத்யாஜீ மாம் நமஸ்குரு | மாமேவைஷ்யஸி யுக்த்வைவமாத்மாநம் மத்பராயண:" || ௯௪ ||

கின்றாய்" என்கிற ஸம்பூயம் த்விஶிஷ்டமாகையாலே அருளிச்செய்கிறார்-நெறிகாட்டி இத்யாதி. உபாயாந்தரங்களைக் காட்டி "அவற்றை அநுஷ்டித்துவா" என்று அகற்றப்பார்க்கிறாயோ, அன்றிக்கே உனக்கு அஸாதாரணமாய்க் கறுத்து ஸ்லாக்யமான அஞ்சநம்போலேயிருக்கிற திருமேனியைக் காட்டுதியோவென்றபடி. பெரியதிருவந்தாதி, ஆறும்பாட்டு. இப்பதத்ரயங்களிலும் விவக்ஷித்த மூன்று ஆகாரங்களாலே - உன் உபேக்ஷையொழிய, வேறு முகங்காட்டாமைக்கு ஹேதுவில்லையென்று இவர்க்கு அபிப்ரேதமென்னுமிடந்தோற்ற அருளிச்செய்கிறார் - என்னையறியாயோ இத்யாதி. "அஜ்ஞனாய் அஶக்தனான நான் என்னஸாதநாநுஷ்டாநம் பண்ணுவேன்" என்னுமத்தை வ்யங்க்யமாக அருளிச்செய்கிறார்-என்னை நானாக இத்யாதி. என்னை நானாகவன்றோ வ்யவஸ்தைபண்ணியிருக்கிறதென்றது-என்னை "அஜ்ஞன், அஶக்தன், அப்ராப்தன்" என்று வ்யவஸ்தைபண்ணியிருக்கவில்லையோ, ஸர்வஜ்ஞனாய் ஸர்வஶக்தியான தேவரீரோபாதி விசாரித்துவிட்டதோவென்றபடி. என்னளவுகிட்டாதாரென்றது - என்னைப்போலே உன்ப்ரஸாதத்துக்கு இலக்காகாதாரென்றபடியென்னுதல், என்னளவு ஜ்ஞாநஹக்திரஹிதரென்னுதல். நளன் தமயந்திக்கு வழிகாட்டுகையாவது - காட்டிலேதமயந்தியை உபேக்ஷிப்பதாகநினைத்து, "ஏஷ பந்தா விதர்பாணாமேஷ யாதி ச கோஸலாந்" - என்கிறபடியே - இதுவுங்கள்தமப்பனார் ஊருக்குப் போகிறவழி, இது நம்முடைய ஊருக்குப்போகிறவழியென்றது. இம்மூன்றுபதத்தாலும் - "அஹமஸ்ம்யபராதாநாமாலயோ கிஞ்சநோ கதி:" என்று ப்ரபத்தியை விதிக்கிற ஶ்லோகத்திற்சொன்ன ஆகிஞ்சந்ய அநந்யகதித்வங்களும், "அவனேரக்ஷகன்" என்னுமதுவும் சொல்லிற்று என்னுமிடந்தோற்ற அருளிச்செய்கிறார்-தாம்கைவாங்கினபடி இத்யாதி. என்னையறியாயோ என்றுதொடங்கி, மாமேவைஷ்யஸி என்னப்பார்த்தாயோ என்னுமளவும் - உத்தரோத்தர விவரணமாகவுமாம். "மந்மநா பவ மத்பக்தோ மத்யாஜீ மாம் நமஸ்குரு | மாமேவைஷ்யஸி யுக்த்வைவமாத்மாநம் மத்பராயண:", இதி பகவத்கீதாயாம், தத்ர "மத்யாஜீ மாம் நமஸ்குரு" என்று பக்த்யுபாயத்தைச் சொல்லுகிறது. கீழ் அநந்யோபாயத்வத்தாலே யருளிச்செய்து, அநந்யப்ரயோஜநத்வத்தாலே யருளிச்செய்கிறார், மேல் உன்னாலல்லால் என்று தொடங்கி. அதாவது - தமக்கு உபாயாந்தரங்களிலே ஜ்ஞாநஶக்திகளுமுண்டாய் ரக்ஷகாந்தரங்களுக்கு மோக்ஷப்ரதத்வஶக்தியுமுண்டாகிலும் ஸ்வரூபவிருத்தமாகையாலே தமக்கு வேண்டாவென்கிறார் - உன்னாலல்லால் இத்யாதியாலே என்று. "உன்னாலல்லால்" இத்யாதிக்கு மூன்றுபொருள். முந்தினது; "என்னான்செய்கேன்" என்கிற பதமாத்ரத்தைக்கடாக்ஷித்து, உன்னால்வரும் உன்னையொழிய உபாயாந்தரங்களால்வரும்

“ மாம் நமஸ்குரு ” (மாம்நமஸ்குரு) என்றால் எனக்கு போகம்போகாதுகிடாய் பெறுவது உன்னையேயாகிலும் உன்னாலேபெறுமன்று வேண்டுவேன், என்னாலும் பிறராலும் பெறும் உன்னையும் வேண்டேன். உன்னாலல்லால் என்கிறவித்தை - உபேயவிஷயமாக்கி, “ உன்னையொழிய மற்றென்றால் எனக்கொரு குறையில்லை ” என்றுசொல்லுவாருமுண்டு [யாவராலும்] - யாவையாலுமென்னாதே, யாவராலுமென்கிறது - “ உபாயமாவம் ஒருசேதநனாலே ” என்றிருக்கையாலே. [ஒன்றுங்குறைவேண்டேன்] – அல்லாதவற்றுக்கும் அபிமதஸித்தியுண்டேயாகிலும், காலன்கொண்டு மோதிரமிடுமோபோலே ஸ்வரூபவிரோதியானது எனக்குவேண்டா. கடல்கடத்தப்பெறவிருத்தல், பித்துப்பெறவிருத்தல் செய்யாத பிராட்டியைப்போலே. அதாவது - இரண்டுதலையையும் அழிக்கையிறே. ஒருவராலும் ஒருகுறை நிரம்புவதாகவேண்டியிரேன். [கன்னார்மதில்சூழ்குடந்தைக்கிடந்தாய்]- இருவருடைய உபாயம் அரண்செய்து கிடக்கிறபடி. “ அவனே உபாயோபேயம் ” என்று அறுதியிட்டவர்கள். அத்தலையில் பரிவரே அவனைக்காக்கைபணியிறே; * செவ்வடி செவ்விதிருக்காப்பிறே. [கன்னார்மதிள்] - தொழில்மிக்க மதிளென்னுதல், செம்பாலே பெய்யப்பட்ட மதிளென்னுதல். கன்னென்று - தொழிலும், செம்பும், சிக்கெனவும். [அடியேனரு]- உனக்கு அநந்யார்ஹமாய்த்தனக்குஉரித்தல்லாதஇவ்வாத்மவஸ்து. [வாணாள்சென்னாளெந்நாள்]-ஜீவித்துக்கொண்டுசெல்லும்நாள் யாதொருநாள். [அந்நாள்]-அவ்வளவும். [உனதாள்

உன்னையும் வேண்டேனென்கிறார் - நீ மாம் நமஸ்குரு இத்யாதி. இ அர்த்தத்துக்கு “ யாவராலும் ” என்றது - யாவையாலுமென்றபடி. இரண்டாவது; “ என .” யாரேகளைகண்” என்கிற பதத்ரயத்தையும் கடாக்ஷித்து, உன்னாலேபெறும் உன்னையொழிய உபாயாந்தரங்களாலும், ரக்ஷகாந்தரங்களாலும் பெறும் உன்னையும் வேண்டேனென்கிறார் - பெறுவது உன்னையேயாகிலும் இத்யாதிவாக்யத்வயத்தாலே. “ யாவராலும் ” என்ற சப்தத்தாலே - ரக்ஷகாந்தரங்களால் ஸாதிக்கப்போகாதது ஸாதிக்கப்பெற்றாலுமென்றபடி. மூன்றாம்பொருள்; உம்மாலும் பிறராலும் ஸாத்யமல்லாத என்னைவிட்டு, உபயஸாத்யமான ஐஸ்வர்யாதிகளைப் பெற்றுப்போமென்ன - உன்னாலல்லால் என்கிறவித்தை இத்யாதி. சொல்லுவாருமுண்டு என்கையாலே - முந்தினயோஜநாத்வயமே உபாயப்ரகரணத்துக்குச் சேருமென்றபடி. மூன்றாம்யோஜனையில், உன்னையொழிய மற்றொன்றாலென்றது - ப்ராப்யனான உன்னையொழிய வேறோர் ஐஸ்வர்யாதிகளாலென்றபடி. அசேதநமான ஐஸ்வர்யாதிகளை - “ யாவராலும் ” என்றது; “ ப்ராப்யம் ஒரு பரமசேதநம் ” என்கிற வாஸனையாலே அருளிச்செய்கிறாரென்றபடி. முந்தின அர்த்தத்திலே, யாவையாலுமென்று - அசேதநமாகச்சொல்லாதே, “யாவராலும்” என்று சேதநராகச்சொல்லுகிறதென்? என்ன - யாவையாலுமென்னாதே இத்யாதி. பெறுவது நம்மையானால் உபாயாந்தர ரக்ஷகாந்தரங்களாலே நம்மைப்பெற்றால் விரோதமேதென்ன - அல்லாதவற்றுக்கும் இத்யாதி இந்தவாக்யத்துக்கு - “ பெறுவதுன்னையேயாகிலும் ” என்கிறவாக்யத்தோடேஸங்கதி. காலன்கொண்டு - காலபுருஷதாநம்வாங்கி. அப்படி “என்னாலும் பிறராலும் வருமவனும்வேண்டா” என்றிருந்தபேருண்டோ? என்ன - கடல்கடத்த இத்யாதி. திருவடி கடல் கடத்தவென்றபடி. தான் ஸபித்தென்றபடி. அப்படிசெய்தால் அவனுடைய ரக்ஷகத்வத்துக்கும் தன்னுடைய பாரதந்த்ர்யத்துக்கும் சேராதென்கிறார் - அதாவது இத்யாதி. “கன்னார்மதிள்சூழ்” என்றதுக்குபாவம் - இவருடைய இத்யாதி. அரண்செய்துகிடக்கிறபடி - அவிசால்யமாயிருக்கிறபடி. ஸ்வயத்நநிவ்ருத்தரான இவர் அத்தலைக்கு ரக்ஷைதேடுவானென்? என்ன-அவனே உபாயோக்தார்த்தத்துக்கு ப்ரமாணம் - செவ்வடி இத்யாதி. கன் - செயலும், செம்பும்.

ரும். ஆர்தல் - மிகுதி. உபாயம் ஸந்நிஹிதமானால் கொள்ளப்புகுகிறகார்யமேதென்ன - அடியேனரு இத்யாதி. “உன்னாலல்லால்” இத்யாதியாலே - நீயே உபாயமென்றால், விரோதி

பிடித்தேசெலக்காணே] - உன்திருவடிகளையேபெற்றுச் செல்லும்படி பார்த்தருளவேணும். காற்கூறும் விடாதபடி பார்த்தருளவேணும். "ஒன்றும்குறைவேண்டேன்" என்றவநந்தரம் வந்து குறைநிரப்பக்கண்டிலர்; இனி அநுபவம்பெற்றபோதுபெற, "உன்னாலல்லால் யாவராலும் ஒன்றும் குறைவேண்டேன்" என்கிற இவ்வத்யவஸாயம் குலையாதபடி பார்த்தருளவேணுமென்கிறார். அடிவிடில் அத்யவஸாயம் குலையுமே, அடியேபிடித்து ஜீவித்தவரத்தை விடாரே இப்போதாக. அத்யவஸாயமிது, ருசியில்வந்தால் பரபக்தியுக்தர், விளம்பத்துக்கு அடியேன்? என்னில், —பக்திவிபாகத்துக்காகவும், இருவருடைய ப்ரேமம்வழிந்த சொல்லாலே நாட்டைத் திருத்துகைக்காகவும். (௩)

நான்காம் பாட்டு.

சேலக்காண்கிற்பார்காணுமளவும் செல்லுங்கீர்த்தியாய்!
உலப்பிலானே! எல்லாவுலகுமுடையவொருமூர்த்தி!
நலத்தால்மிக்கார்குடந்தைக்கிடந்தாய்' உன்னைக்காண்பான்நான்
அலப்பாய் ஆகாசத்தைநோக்கி யழுவன்தொழுவனே.

ஆ.—(செலக்காண்கிற்பார்.) ஜ்ஞாநஶக்த்யாதிஶயாவஹ ஸௌந்தர்ய கல்யாணகுண ஸந்தோஹாஶ்ரயமே, ஸர்வாத்மாக்களையும் உன்னழகாலே தோற்பித்து அடிமையாக்கிக்கொள்ளவல்ல திருவுடம்பை யுடையவனே, நலத்தால் மிக்கார் குடந்தைக்கிடந்தாய், உன்னைக் காண்பான் நான் அலமந்து "ஸ்ரீகஜேந்த்ராழ்வானுக்கு வந்து தோற்றியருளினாப்போலே வந்து தோற்றாய்" என்றுகொண்டு ஆகாசத்தைநோக்கி அழுவன்தொழுவனென்கிறார்.

ஓ.—நாலாம்பாட்டில், ஸர்வேஶ்வரனாயிருந்துவைத்து ஆஶ்ரிதர்க்காகத் திருக்குடந்தையிலேவந்து கண்வளர்ந்தருளுகிற உன்னை 'காணவேணும்' என்று அலமந்து காணப்பெறாமையாலே நோவுபடாநின்றேனென்கிறார்.

[செல என்றுதொடங்கி] - எத்தனையேனும் அளவுடையார்க்கும் முட்டப்பரிச்சேதிக்கவொண்ணாதபடியிருந்துள்ள குணப்ரதையையுடையையாய் அவ்வளவுமன்றிக்கே உன் குணவிபூத்யாதிகளுக்கும் முடிவில்லாதவனே! [எல்லாவுலகுமுடையவொரு மூர்த்தி] - ஸமஸ்தலோகங்களையும் ஶேஷமாகவுடைய அத்விதீயனான ஸர்வேஶ்வரனே! 'ஸர்வாத்மாக்களையும் தன் அழகாலே தோற்பித்து அடிமையாக்கிக்கொள்ளவல்ல விலக்ஷணமான திருவுடம்பையுடையவனே' என்றும்சொல்லுவர். [நலத்தால்என்றுமேலுக்கு]- உன் திருவடிகளுக்கு மிகவும் ஸ்நேஹிகளானவர்களைப் பிரியமாட்டாமை அவர்களதான

யைப்போக்கி கைங்கர்யத்தைத் தந்தருளவேணுமென்னாதே "உனதாள்பிடித்தே செல்லும்படி பார்த்தருளவேணும்" என்பானென்? என்ன - ஒன்றும்குறைவேண்டேன் என்று இத்யாதி. "உன தாள்பிடித்தே செலக்காணே" என்றதுக்கர்த்தம் - காற்கூறும் இத்யாதி. இது - சாடு. உன தாள்பிடித்தே செலக்காணேயென்றது - உன்திருவடிகளையேபிடித்துச் செல்லும்படி பார்த்தருள வேணுமென்றபடி. "பிடித்தே" என்ற அவதாரணார்த்தம் - அடிவிடில் இத்யாதி. கீழ் - "உன்னாலல்லால்" என்றதின் அர்த்தத்வயாநுகுணமாக அருளிச்செய்து, த்ருதீயார்த்தாநுகுணமாக பாவாந்தரம் - அடியேபிடித்து இத்யாதி. அதாவது - உன்திருவடிகளே ப்ராப்யமாகச் செல்லும்படி பார்த்தருளவேணுமென்றபடி. க்ரமேணாந்வயம். (௩)

திருக்குடந்தையிலே கண்வளர்ந்தருளினவனே! ப்ரதிபாபஹோக்பனான உன்னை நினைத்த படி அநுபவிக்கப்பெறாதே அத்யந்தம் அவஸந்நனான நான் காணவேணுமென்று அலமந்து "இவ்வார்த்திக்கு வந்துதோற்றியருளாதொழியான்" என்று பார்த்து வரஸம்பாவனையுள்ள ஆகாசத்தைநோக்கி எங்கும் காணாமையாலே அதிஸ்நேஹிகளைப்போலே அழுவதும்செய்வன். க்ருபணரைப்போலே தொழுவதும் செய்வன்.

ப.——அநந்தரம், அபரிச்சிந்ந மாஹாத்ம்யத்தையுடைய ஸர்வேஶ்வரனான உன்னை இந்த அர்ச்சாவதாரதசையிலே நினைத்தபடி கண்டு அநுபவிக்கவாசைப்பட்டு அலமந்து க்லேஶியாநின்றேனென்கிறார்.

செல - மேலேபோக, காண்கிற்பார் - காணவல்ல ஶக்தியையுடையவர்கள், காணுமளவும் - காணவல்லவளவுக்கும், செல்லும் - அவ்வருகேபோம்படியான வைபவத்தையுடைய, கீர்த்தியாய்-ஶாணவிபூதி ப்ரபையையுடையவனாய், (அந்தகுணவிபூதிகளினுடைய கணக்கு), உலப்பு - முடிவு, இலானே-இன்றியேயிருக்குமவனாய், எல்லாவுலகும் - ஸர்வலோகத்தையும், உடைய - அடிமையாகவுடைத்தாய், ஒரு - அத்விதீயமான, மூர்த்தி - ப்ராப்யவிக்ரஹத்தையுடையனாய்வைத்து, நலத்தாலிக்கார் - உன்பக்கல் ப்ராவண்யம் விஞ்சியிருப்பாருடைய, குடந்தை - திருக்குடந்தையிலே, கிடந்தாய் - (அவர்களுக்கநுபாவ்யனாய்க்கொண்டு) கண்வளர்ந்தருளினவனே! உன்னை-(இப்படி ஸர்வாயிகனாய் ஸர்வஸுலபனான) உன்னை, நான் -(அத்யந்தாபிநிவிஷ்டனான) நான், காண்பான்-நினைத்தபடி கண்டநுபவிக்கைக்காக, அலப்பாய்-அலமந்து, ஆகாசத்தை-(நீவரஸம்பாவனையுள்ள) ஆகாசத்தை, நோக்கி - நோக்கி, அழுவன் - பக்திபரவஶரைப்போலே யழுது, தொழுவன் - (ப்ரபத்திபரரைப்போலே) தொழுவதாகாநின்றேன். பாலரைப்போலே யழுவது, பக்வரைப்போலே தொழுவதாகாநின்றேனென்றுமாம்.

இ.—நாலாம்பாட்டில், ஸர்வேஶ்வரனாய்வைத்து ஆஶ்ரிதர்க்காகத் திருக்குடந்தையிலே ஸந்நிஹிதனாயிருக்க, நினைத்தபரிமாற்றம்பெறாமையாலே நோவுபடாநின்றேனென்கிறார்.

[செலக்காண்கிற்பார் இத்யாதி] - அவ்வருகுபடக்காணவல்லவர்கள். எத்தனையேனும் அளவுடையார் காணிலும் அவர்கட்கு அவ்வளவேபாய், தான் அபரிச்சேத்யமாயிருக்கும் ஶாணவத்தாப்ரபையையுடையவனே. "உதிக்ஷயாநிவ தடுகெ". [உலப்பிலானே] - இப்படிப்பட்ட ஶாணவிபூத்யாதிகளுக்குத் தொகையில்லாதவனே! [எல்லாவுலகுமுடைய இத்யாதி] - ஸமஸ்தலோகங்களையும் ஶேஷமாகவுடைய அத்விதீயனான ஸர்வேஶ்வரனே! ஸர்வாத்மாக்களையும் எழுதிக்கொள்ளவல்ல அத்விதீயவிக்ரஹத்தையுடையவனே யென்றுமாம். [நலத்தால்மிக்கார்] - க்ரமப்ராப்திபற்றாதபடி ஸ்நேஹித்திருக்குமவர்கள். [குடந்தைக்கிடந்தாய்] - அவர்களதான திருக்குடந்தையிலே, அவர்களைப் பிரியமாட்டாமையாலே உடம்போடேகண்டு அநுபவிக்கலாம்படி கண்வளர்ந்தருளுகிறவனே! [உன்னைக்காண்பான்] - ஆஶ்ரிதவத்ஸலனான உன்னைக் காண்கைக்காக. அத்தலை இத்தலையாய், நீ என்னைக்காணப்பட்ட வளவன்று, நான் உன்னைக்காண்கைக்குப் பட்டது. [அலப்பாய்] - அலமந்து. [ஆகாசத்தைநோக்கி] - விஷயம் ஸந்நிஹிதமாயிருக்கச்செய்தே ஆகாசத்தைப்பார்க்கிறது - நினைத்தபரிமாற்றம் பெறாமையாலே

ஸ்ரீ கஜேந்த்ராழ்வானுக்கு உதவவந்து தோற்றினாற்போலே, தன் தலையைப்பார்த்துத் தோற்றுகிறானென்று பார்த்து. “என்னுடைய நிராலம்பநதையைப்பார்த்து” என்னுமாம் ஆண்டான். [அழுவன்தொழுவனே] - வரக்காணாமையாலே, ஸ்நேஹிகள் செய்வதும் செய்யாநின்றேன்; க்ருபணர்செய்வதும் செய்யாநின்றேன். சபலர்செய்வதும் செய்யாநின்றேன், விரக்தர்செய்வதும் செய்யாநின்றேன்.

ஈடு.—நாலாம்பாட்டு. ஸர்வேஶ்வரனாயிருந்துவைத்து ஆஶ்ரிதர்க்காகத் திருக்குடந்தையிலே ஸந்நிஹிதனாயிருக்க, நினைத்தபரிமாற்றம் கிடையாமையாலே நோவுபடாநின்றேனேனென்கிறார்.

[சேல இத்யாதி]-உன்னுடைய குணவத்தாப்ரதையடங்கலும் அழியப்புகாநின்றதுகிடாய். [சேலக்காண்கிற்பார் காணுமளவும் செல்லும்கீர்த்தியாய்] - எத்தனையேனும் அளவுடையாரும் தாங்கள் நின்றவளவுகளைக்கழித்து அவ்வருகேகாணப்புக்கால், அவ்வளவுகளை யுடையனாயிருக்கும். “பேசுவாரேவ்வளவுபேசுவர் அவ்வளவே - வக்கரனைக்கோன்றான்வடிவு”-திவ்யவிக்ரஹவைலக்ஷண்யத்தைப் பேசுமவர்கள் யாதோரளவுசொல்லுவர்கள், அவ்வளவாயிருக்குமத்தனை. [உலப்பிலானே]-ஸ்வரூபகுணங்கள் புருஷவைஶ்யாநமல்லாதவளவாய்; தான் ஸாவயியாயிருக்குமோ? என்னில்,-[உலப்பிலானே] - ஸ்வதஃ எல்லைகாணவோண்ணாதபடியா யிருக்கை. *தனக்குந்தன்தன்மை

நாலாம்பாட்டு.—சேல இத்யாதி. “எல்லாவுலகுமுடையவொருமூர்த்தி, குடந்தைக் கிடந்தாய், நானலப்பாய் ஆகாசத்தை” இத்யாதியைக்கடாக்ஷித்து அவதாரிகை-ஸர்வேஶ்வரனாய் இத்யாதி.

“செல” என்றுதொடங்கி, “கீர்த்தியாய்” என்று - கீர்த்தியை வர்ணித்ததுக்குஹாவம் - உன்னுடைய இத்யாதி. “செலக்காண்கிற்பார்” என்றது - முன்புண்டானஜ்ஞாநம் போராது” என்று அத்தைக்கழித்து மேன்மேலன ஜ்ஞாநாதிஶயத்தைஸம்பாதித்துக்கொண்டு காணவல்லார் என்று அர்த்தமருளிச்செய்கிறார் - எத்தனையேனும் இத்யாதி. அவ்வருகே காணப்புக்காலென்றது - மேன்மேலன ஜ்ஞாநாதிஶயத்தைஸம்பாதித்துக்கொண்டு காணப்புக்காலென்றபடி. அவ்வளவுகளை யுடையனாயிருக்குமென்றது - “காணுமளவும்செல்லும்” என்றதுக்கர்த்தம். “செலக்காண்கிற்பார்” இத்யாதிக்கு - மேலேபோகக்காணவல்ல ஶக்தியையுடையவர்கள் காணவல்லவளவுக்கும் அவ்வருகேபோம்படியான கீர்த்தியையுடையவனேயென்று நிஷ்க்ருஷ்டமான பதார்த்தம். அப்படிகாண்பார் காணுமளவாயிருக்குமோ? என்ன - பேசுவார் இத்யாதி. மறுபாடுருவப் பேசுகைக்கு ஶக்தராயிருக்குமவர்கள், தங்கள் ஜ்ஞாநஶக்திகளைக்கொண்டு எவ்வளவுபேசவல்லார்கள், அவ்வளவேயாயிருக்கு மத்தனையல்லது, உள்ளபடி கண்டுபேசவொண்ணாது, தந்தவக்ராஸுரனைமுடித்துப் பொகட்டவனுடையவடி வென்றபடி. மூன்றாந்திருவந்தாதி, இருபத்தோராம் பாட்டு. வக்கரனை - தந்தவக்கரனை. வடிவென்றது - ஸ்வரூபகுணங்களுக்குமுபலக்ஷணம். இந்தப் பாசுரத்துக்கு அர்த்தம் - திவ்யவிக்ரஹ இத்யாதி. ஸ்வரூபகுணங்கள் இத்யாதிஶங்காவாக்யத்துக்கு ஹாவம்-ஸமுத்ரம் இச்சேதநனால் பரிச்சேதிக்கவொண்ணாதே யிருந்ததேயாகிலும் ஸாவயவதஃ பரிச்சிந்நமாயிருக்குமிறே; அப்படியே ஸ்வரூபகுணங்களுக்கு பரிச்சேதமுண்டோவென்று, ஶங்கைக்குவுதயமுண்டென்றபடி. ஶங்காவாக்யத்திலே, ஸ்வரூபகுணங்கள் - என்றருளிச்செய்கையாலே, “கீர்த்தியாய்” என்கிறவிதுக்கு-கீர்த்யதே இதி கீர்த்திஃ என்று, ஹோக்யதையாலே ஸர்வதாகீர்த்தநீயமான ஸ்வரூபகுணங்களையுடையவனே யென்றும் ஓரர்த்தம் கண்டுகொள்வது. “கீர்த்தி” என்றதுக்கு - குணவத்தாப்ரதையென்றுமுந்தினவர்த்தம். “எல்லா

யறிவரியானிறே. [எல்லாவுலகுமுடையவொருமூர்த்தி] - வடிவழகைக்காட்டி ஸர்வப்ராணிகளையும் காற்கீழேயிட்டுக்கொள்ளக்கடவனாய். வடிவுகண்டபோதே, "இவனே இதுக்கெல்லாம்கடவன்" என்று தோற்றும்படியிருக்கும் மூர்த்திஶப்தந்தான் - விக்ரஹத்துக்கு வாசகமாய், ஐஶ்வர்யத்துக்கும் வாசகமாயிருக்கும்; அப்போது, ஸகலலோகங்களுக்கும் நிர்வாஹகனாய் அத்விதீயனான ஸர்வேஶ்வரனென்றபடி. இத்தால் இவர்க்குப் பேறு என்? என்னில்,—உன்பெருமையை யழிக்கக்கிடாய் புகுகிறாயென்கை; "நீர் நோவுபடுகிறவிடம் என்னெல்லைக்குளன்று என்னவொண்ணாதே அவனுக்கு. [நலத்தால் மிக்கார்குடந்தைக்கிடந்தாய்]-நீஸ்வரூபங்களால் விஸஜாதீயனாய்க்கொண்டு அங்கேயிருந்தாயாகில் நான் ஆறியிரேனோ,உன்னையல்லது செல்லாதாருடைய தேசத்தைவிரும்பி விடமாட்டேதே படுகாடுகிடவாநின்றாய். [நலத்தால்மிக்கார்] - க்ரமப்ராப்திபற்றாதபடி ஸ்நேஹித்திருக்குமவர்கள், நலம்-ஸ்நேஹம் [உன்னைக்காண்பான்நான்]-ஶ்ரீவைகுண்டம் கலவிருக்கையாயிருக்க, ஆஶ்ரிதரை விடமாட்டாதே திருக்குடந்தையில் கண்வளர்ந்தருளுகிற உன்னை,அத்தலை இத்தலையாய் நான்காணவாசைப்பட்டு அலமாவாநின்றேன். அத்யபிநிவிஷ்டனான நான் [உன்னைக்காண்பான்நான்] - காண்கிறேன் நானன்றோ, காண்கிறது உன்னையன்றோ; ஆனபின்பு எங்ஙனே ஆறியிருக்கும்படி [உன்னை] - கீழ்ச்சொன்ன போக்யதையுடைய உன்னையென்றுமாம் [அலப்பாய்] - அலமந்து. கண்டபோது "கண்டுகொள்ளுகிறோம்" என்று, சூது சதுரங்கம் பொருது ஆறியிருக்கும் விஷயமன்றே. காணப்பெறாமையாலேவந்த துடிப்பு. [ஆகாசத்தைநோக்கி] - திருவடியுடைய த்வநி ஒருதிக்கிலேயாயிருக்

---

*வுலகுமுடையவொருமூர்த்தி" என்றதுக்கு மூன்றுபொருள்.—அதாவது; மூர்த்தியென்று - விக்ரஹமாய், அத்தாலே - ஸௌந்தர்யத்தைவிவக்ஷித்து, விக்ரஹஸௌந்தர்யத்தாலே எல்லாவுலகங்களையும் ஶேஷமாகக்கொண்டானென்னுதல்; அன்றிக்கே, மூர்த்தியென்று - விக்ரஹமாய், விக்ரஹத்தைக்கண்டவாறே "இவனே எல்லாலோகங்களுக்குமஶேஷி" என்று தோற்றும்படியிருக்குமென்னுதல்; இந்தவர்த்தத்வயத்தையும் அடைவேயருளிச்செய்கிறார் - வடிவழகைக்காட்டி இத்யாதி. த்விதீயார்த்தத்துக்கு,"கண்டவாற்றால் தனதே யுலகெனநின்றான்", "ஶ்ரீவஶ்ரியாவஶ்யா" இத்யாத்யநுஸந்தேயம். * மூர்த்திஶப்தம் - விக்ரஹவாசியோ என்கிறஶங்கையையும் பரிஹரித்துக்கொண்டு மூன்றாமர்த்தம் - மூர்த்திஶப்தந்தான் இத்யாதி. ஐஶ்வர்யத்துக்கு வாசகமானபோதைக்கு ஶப்தநிர்வாஹங்காட்டுகிறார் - அப்போது இத்யாதி. அப்போது - ஐஶ்வர்ய வாசகமானபோதென்றபடி. உம்மைத்தவிரவிட்டால் நம்பெருமை யழிந்ததாகவேணுமோ? என்ன நீர்நோவுபடுகிற இத்யாதி. - அவனுக்கென்றது - அவ்வுனக்கென்றபடி. பூர்வார்த்தத்தையெல்லாம் கடாக்ஷித்துஹாவம் - நீ ஸ்வரூபரூப இத்யாதி. படுகாடு - வெட்டி விழுந்த காடு. "உன்னை" என்றதுக்கு - ஸௌலப்யபரமாகஹாவம் - ஶ்ரீவைகுண்டம் இத்யாதி. கலவிருக்கை - நெஞ்சு பொருந்தியிருக்கை. அபிமதமான வாஸஸ்தாநமென்றபடி. "நான்" என்றத்தையும்கடாக்ஷித்து "உன்னை" என்றதுக்கு-ப்ராப்யபரமாகஹாவாந்தரம் - காண்கிறேன் நான் இத்யாதி. நானன்றோ - * ஆராதகாதலையுடைய நானன்றோவென்றபடி. விவரணம் - கீழ்ச்சொன்ன இத்யாதி. கீழ்ச்சொன்ன என்றது - "ஒருமூர்த்தி" என்றத்தையாதல் "ஆராவமுதே" என்றத்தையாதல். அலமருகிறதென்? என்ன - கண்டபோது இத்யாதி. ஆகையாலே - காணப்பெறாமையாலேவந்ததுடிப்பு என்றபடி. "ஆகாசத்தைநோக்கி" என்றதுக்கு மூன்றுதாத்பர்யம், - முந்தினது ஆகாசத்தை இத்யாதி. ஆகாசத்தைநோக்குகைக்கு ஹேதுவேதென்ன - திருவடியுடைய இத்யாதி. ச்லகத்தாலே*

கச்செய்தே "ஸாத்ர்யகூர்த்வஞ்ச" (ஸாதிர்யகூர்த்வஞ்ச) என்று - பிராட்டி எங்குமோக்கப் பார்த்தாளிறே. [உன்னை] என்னுநிற்கச்செய்தே, [ஆகாசத்தைநோக்கி] என்பானேன்? என்னில்,—[அலப்பாய்] என்றதிறே, கலக்கத்தின் கார்யமிருக்கிறபடி. விஷயம் ஸந்நிஹிதமா யிருக்கச்செய்தே ஆகாசத்தைப்பார்க்கிறது, நினைத்த பரிமாற்றம் பெறுமை யாலே. "ஸ்ரீகஜேந்த்ராழ்வானுக்கு வந்துதோற்றினாப்போலே தந்தையையைப்பார்த்துத் தோற்றுகிறானோ" என்று பார்த்து. "[ஆகாசத்தைநோக்கி] - என்னுடைய நிராலம்ப நதையைப்பார்த்து" என்று ஆண்டான்வார்த்தை. அன்றிக்கே, "ககநாஸக்தலோசந:" (ககநாஸக்தலோசந:) என்றுகொண்டு, கண்களிலக்கில் தைக்கமாட்டாதபடியாயிற்றுச் சென்றற்றபடி. [அழுவன்தொழுவனே]-ஸ்நேஹிகள் செய்வதையும் செய்யாநின்றேன், க்ருபணர்செய்வதையும் செய்யாநின்றேன். சபலர்செய்வதையும் செய்யாநின்றேன், விரக்தர் செய்வதையும் செய்யாநின்றேன். (௪)

ஐந்தாம் பாட்டு.

அழுவன்தொழுவனாடிக்காண்பன் பாடியலற்றுவன்
தழுவல்வினையால்பக்கநோக்கி நாணிக்கவிழ்ந்திருப்பன்
செழுவொண்பழனக்குடந்தைக்கிடந்தாய் செந்தாமரைக்கண்ணா!
தொழுவனேனையுனதாள் சேரும்வகையேசூழ்கண்டாய்.

ஆ.—(அழுவன்.) அழுதுகாண்பன், தொழுதுகாண்பன், ஆடிக்காண்பன், பாடிக்காண்பன், அலற்றிக்காண்பன், பின்னையும் நீ வரக்காணேன். காணுதொழிந்தவாறே, "இந்தலோகத்தார் உன்பக்கலிலே கர்ஹாநியைச் சொல்லாநிற்கிறாரே!" என்று லஜ்ஜித்துத் தலையெடுக்கமாட்டாதே, "என்னுடையபாபம்" என்றிருப்பன். செழுவொண்பழனக்குடந்தைக்கிடந்தாய், செந்தாமரைக்கண்ணா, உன்திருவடிகளைச்சேர்வதொரு விரகு பார்த்தருளாயென்கிறார்.

ப்ர —(ஆகாசத்தைநோக்கி) ஸாந்த்வகாண்டே, [௩௧] "ஸாத்ர்யகூர்த்வஞ்ச தயாவ்யஸ்தா நிரீக்ஷமாணா தமேவ்ஞாபி | ஊதஸ்யூர்விஜயாயேந தாமா ஸ்வா தாதஜம்ஸ்யாயதிபொதயஸ்ய || ௪௬½ ||".

---

*யென்றபடி. இரண்டாவது - என்னுடையநிராலம்பநதை இத்யாதி. ஆகாசத்தை - நிராலம்ப நதையை இத்யர்த்த:. அதாவது - அநந்யகதித்வமென்று கருத்து; த்ருதீயதாத்பர்யம்-அன்றிக்கே கக இத்யாதி. அதாவது - ஆற்றாமையாலே புரோவர்த்திவிஷயம் தெரியாமையாலே ஆகாசத்தைப்பார்த்தென்றபடி. இலக்கில் - லக்ஷ்யத்தில். ஸ்நேஹிகள் - உபாஸகர். க்ருபணர் - ப்ரபந்நர். க்ரமேணாந்வய:. "ததோ கோவிந்தஸம்வ்ருத்தோ ஸ்ருதயோ நாவ: | விமோவாரு வத்தோ ககநாஸக்தலோசந:" இத்யொத்யாகாண்டே கேகேயிவாக்யோக்தி வேண் ஈட்டிலேதாதமாய:. "ஸாத்ர்யகூர்த்வஞ்ச" இத்யாதி *ஆடியாடியிலே விவிதம்.*

ஒ.—அஞ்சாம்பாட்டில், உன்னைக் காணவேணுமென்னும் சாபலத்தாலே உபாயப்ரவ்ருத்திகள் பலவும் பண்ணியும் காணப்பெறுகிறிலேன்; நீயே உன்திருவடிகளை நான் பெறும்வழி பார்க்கவேணுமென்கிறார்.

[அழுவன் என்றுதொடங்கி] - அதிபாலரைப்போலே அழுவதும்செய்வன்; பேரறிவாளரைப்போலே தொழுவதும்செய்வன்; சாபலத்தின் மிகுதியாலே என்செய்தால் கிடைக்குமென்று அறியாதே கூத்தாடிப்பார்ப்பன். பரவசனாய்ப் பாடுவதும்செய்து அவ்வளவன்றிக்கே கூப்பிடுவதும்செய்வன். நீ வாராதொழிந்தாலும் என்னைவிடாதேயிருக்கிற அதிமாத்ரஸ்நேஹத்தாலே வரஸம்பாவனையுள்ள தேசத்தைப்பார்த்து வரக்காணாமையாலே என்செய்தோமானோமென்று லஜ்ஜித்துக் கவிழ்ந்திருப்பன். ஶக்தியை 'வினை' என்பானென்? என்னில்,—அநிஷ்டாவஹமாகையாலே. [செழுவொண்பழனம் என்று மேலுக்கு] - பெருத்து அழகிதான நீர்நிலத்தையுடைய திருக்குடந்தையிலே கண்வளர்ந்தருளினவனே! அழகிய கண்களாலே நோக்கி ஹேயனான என்னை உன்திருவடிகளிலே சேரும்படி பார்த்தருளவேணும். 'செந்தாமரைக்கண்ணா' என்றது, கண்களாலே நோக்கவேணுமென்னுங்கருத்தாலே.

ப.—அநந்தரம், உன் கண்ணழகாலே ஈடுபட்டு நாநாவிதஉபாயவ்ருத்திகளைப் பண்ணுகிற நான் உன்திருவடிகளைச் சேரும்படி பார்த்தருளவேணுமென்கிறார்.

அழுவன் - (கலக்கத்தாலே) அழுவது, தொழுவன் - (தெளிவாலே) தொழுவது, (ப்ரமத்தாலே) ஆடி - ஆடி, காண்பன் - பார்ப்பது, பாடி - (குணபாரவஶ்யத்தாலே) பாடுவது, அலற்றுவன்-(ஆர்த்தியாலே) ப்ரலாபித்து அலற்றுவது, ("இவ்வவஸ்தையில் வாராதொழியக்கூடாது" என்றுநினைத்து), தழு - என்னைத்தழுவி, (விடாதேநிற்கிற) வல்வினையால் - காதலாகிறப்ரஹலபாபத்தாலே, பக்கம்-(அவன் வரஸம்பாவனையுடைய), பக்கங்களை, நோக்கி - பார்த்து, (அங்குக்காணாமையாலே), நாணி-("ஸ்வரூபமும் பெற்றிலோம், அபிமதமும்பெற்றிலோம்" என்று) லஜ்ஜித்து, கவிழ்ந்திருப்பன் - கவிழ்ந்திருப்பன்; செழு - ஸம்ருத்தமாய், ஒண் - தர்ஶநீயமான, பழனம் - நீர் நிலங்களையுடைய, குடந்தை - திருக்குடந்தையிலே, கிடந்தாய் - (ஆஶ்ரிதார்த்தமாகக்) கண்வளர்ந்தருளுமவனாய், (அவர்களுக்கு ரக்ஷகமும் போக்யமுமாய்) செம்-சிவந்த, தாமரை-தாமரைபோலேயிருக்கிற, கண்ணா - திருக்கண்களையுடையவனே! தொழுவனேனை - (அநந்யகதித்வத்தாலே) அத்யந்தக்ருபணனான என்னை, உன் - (ப்ராப்தனான) உன்னுடைய, தாள் - (போக்யமான) திருவடிகளை, சேரும்வகை - சேரும்படி, (நீயே) சூழ்கண்டாய் - ஒரு நல்விரகு பார்க்கவேணும். தொழுவன் - தண்ணியன். சூழ்ச்சி - விரகு

இ.—அஞ்சாம்பாட்டில், சாபலத்தாலே உபாயப்ரவ்ருத்திகளைப்பண்ணினவிடத்திலும் காணப்பெறுகிறிலேன், உன்திருவடிகளை நான் பெறும்படி பார்க்கவேணுமென்கிறார்.

[அழுவன்தொழுவன்] - பாலர்செய்வதும் செய்யாநின்றேன்; அறிவுடையார் செய்வதும் செய்யாநின்றேன். [ஆடிக்காண்பன்] - "என்செய்தால் அபிமதம்கிடைக்கும்"

என்று அறியாமையாலே ஆடிப்பார்ப்பன். [பாடியலற்றுவன்] - வாய்விடாத காம்பீர்யம் குலைந்து கூப்பிடாநின்றேன். ப்ரேமம்வழிந்தசொல் - பாட்டு. அதுதான் அடைவுகெடக் கூப்பிடுகை - அலற்றுகை. [தழுவல்வினையால்] - உடன்வந்தியாய் ஒருத்தரால் போக்க வொண்ணாத ப்ரேமத்தாலே † "கிட்டாது" என்றாலும் விடாதேயிருக்கிற அதிமாத்ர ப்ராவண்யமென்கை. ஹத்தியை - பாபமென்கிறது, இக்க்லேசத்துக்கெல்லாம் அடியா கையாலே; அநிஷ்டாவஹமிறே - பாபம். [பக்கம்நோக்கி] - ஆர்த்தியே செப்பேடாக வரஸம்ஹாவனையுள்ள திக்கைப்பார்ப்பன். [நாணிக்கவிழ்ந்திருப்பன்] - வரக்காணாமை யாலே, ஆசைக்குஃபலம் அழகிதாயிருந்தது என்று லஜ்ஜித்துக் கவிழ்ந்திருப்பன். "ஆசைப்பட்டார்க்கு அழகிதாக உதவினான்" என்று நாட்டார் சொல்லும் அவத் யத்துக்கு லஜ்ஜித்திருப்பனென்றுமாம். [செழுவொண்பழனம்] - பெருத்து தர்ஶநீய மான நீர்நிலங்கள். "ஆசைப்பட்டார்க்கு நெடுங்கைநீட்டாகவொண்ணாது" என்று காண் கைக்கு அண்ணிதாகவந்து கண்வளர்ந்தருளுகை. [செந்தாமரைக்கண்ணா] - ஸந்நிதியே யன்றிக்கே, ரக்ஷணபரிகரமுடையவனே, என்னார்த்திதீரநோக்குகைக்கு யோக்யதை யுண் டாயிருக்க, இழக்கவோ. அழகிய திருக்கண்களாலே குளிரநோக்கியருளவேணு மென்கை. "ஊவெொ஬ஊ஥஧ாெ஥஥". [தொழுவனேனை] - க்ருபணனென்னுதல், ஹேயனென்னுதல். புறம்புபுகலற்று உன்னாலல்லது செல்லாதபடியான க்ருபணனான என்னை. ஸாஹஸங் களிலேப்ரவணனாய் ஹேயனான என்னையென்றுமாம். உன் திருவடிகளிலே சேரும்படி ஒரு விரகுபார்த்தருளவேணும். உன் திருவடிகளைப் பெறவேணும், அது நான் அறியாதபடி நீயே ஒரு நல்விரகு பார்த்தருளவேணுமென்கிறார்.

ஈடு —அஞ்சாம்பாட்டு. "உன்னைக்காணவேணும்" என்னும் சாபலத்தாலே ஊயநீயப்ரவ்ருத்திகள் பலவும் பண்ணினவிடத்திலும் காணப்பெற்றிலேன், உன்திருவடி களை நான் பெறும்படி பார்த்தருளவேணுமென்கிறார்.

[அழுவன்தொழுவன்] பாலர்செய்வதையும் செய்யாநின்றேன், வேதாந்தஜ் ஞானமுடையார் செய்வதையும் செய்யாநின்றேன். "மற்றவள்தனருள் நினைந்தேயழுங் குழவி" என்னக்கடவதிறே. [ஆடிக்காண்பன்] - கலியர் "இத்தனைசோறிடுகிறோம், ஆட வல்லையோ" என்றால் ஆடுமோபோலே, ஆடியும்பார்ப்பன்."என்பட்டால்பெறலாம்" என்ற றியாரே. [பாடியலற்றுவன்] - ப்ரேமம்வழிந்தசொல்பாட்டாய், அதுதானும் அடைவுகே

அஞ்சாம்பாட்டு. அழுவன் இத்யாதி "அழுவன் தொழுவன்" இத்யாதியையும், "உன தாள்சேரும்வகையே" இத்யாதியையும்கடாக்ஷித்து அவதாரிகை-உன்னைக்காண இத்யாதி.

கீழ், காணப்பெறாமையாலே - "அழுவன் தொழுவன்" என்றார்; இங்கு, காணவேணு மென்று - "அழுவன் தொழுவன்" என்கிறார், ஆகையாலே புனருக்தியில்லை. 'ஊஜூ஻஥ைஉ஦ா஬஥ ஊ஥ஜூ஥ா" இத்யாதியைக்கடாக்ஷித்து; வேதாந்தஜ்ஞாநமுடையார் இத்யாதி. பாலர் அழுவர் களோ? என்ன-மற்றவள்தான் இத்யாதி. அந்தத்தாயினுடைய அருளைநினைந்தே யழுகிறகுழந்தை யென்றபடி. பெருமாள்திருமொழி, அஞ்சாந்திருமொழி, முதற்பாட்டு -"தருதுயரம்" இத்யாதி க்லியர் - ஆடுமோப்போலே என்று அந்வயம். கலியர் - பசியர். ஆடுவன் என்னாதே, "காண்பன்" என்றதுக்குஹாவம் - என்பட்டால் இத்யாதி. அறியாரே - ஆகையாலே-பார்ப்பன்என்கிறாரென்று கூட்டுவது. "தழுவல்வினையால், காணப்பெறாதே" என்றத்யாஹார்த்தவ்யம். "தழுவல்வினையால் அழுவன்தொழுவன்" என்று தொடங்கி அந்வயமென்று திருவுள்ளம்பற்றி அருளிச்செய்கிறார் -

டக்கூப்பிடுகை - அலற்றுகை. [தழுவல்வினையால்] -இப்படி பட்டாலும் காணவொண்ணுத்ரே உடன்வந்தியானவல்வினை. என்னைத் தழுவிவிடாதேநிற்கிற காதலாகிற ப்ரவல பாபத்தாலே. ஸக்தியை - பாபமென்கிறது, அநிஷ்டாவஹம் - பாபமாகையாலே. [பக்கம்நோக்கி] - "ஆர்த்தியேசெப்பேடாகவரும்" என்றிருக்கையாலே, வரஸம்பாவனையுள்ள திக்கைப்பார்த்து. [நாணிக்கவிழ்ந்திருப்பன்] - அங்கு வந்து தோற்றக்காணுமையாலே, "ஆசைப்பட்டு அழகிதாகவுண்டோம்" என்று லஜ்ஜித்துக் கவிழ்தலையிட்டிருப்பன். அன்றிக்கே, [பக்கம்நோக்கி நாணிக்கவிழ்ந்திருப்பன்]-"அருகுநின்றார் இவனைஎன்சொல்லுவார்களோ" என்றதுக்கு லஜ்ஜித்துக் கவிழ்தலையிட்டிருப்பனென்றாராகவுமாம். "ஆசைப்பட்டார்க்கு அழகிதாக உதவினான்" என்று நாட்டார் சொல்லும் அவத்யத்துக்கு லஜ்ஜித்திருப்பன். [செழுவொண்பழனக்குடந்தைக்கிடந்தாய்] - பெருத்து அழகிதானநீர்நிலைகளையுடைய திருக்குடந்தையிலே கண்வளர்ந்தருளுகிறவனே. [செந்தாமரைக்கண்ணு] - முவாந்தரத்தாலே என்ஜீவநமாய்க்கிடக்கிறாயல்லை. கையிலேநிதியுண்டாயிருக்க ஆர்த்தர்க்கிடாதாரைப்போலே. என்ஜீவநம் ஒருமுகம் செய்துகிடக்கிறதன்றோ. [தொழுவனேனை] - க்ருபணனென்னுதல், ஹேயனென்னுதல். புறம்புபுகலற்று, உன்னாலல்லது, செல்லாதபடி க்ருபணனானவென்னை; ஸாஹ்யவிஷயங்களிலே ப்ரவணனாய் ஹேயனானவென்னை யென்னுதல். [உனதாள் இத்யாதி] - உன்திருவடிகளைக்கிட்டுவதோருவிரகு நான் அறியாதபடி நீயேபார்த்தருளவேணும். தம்மாற்றாமை பேற்றுக்குடலன்றிக்கே; அது ப்ரக்ருதியாய், "அவனாலேபேறு" என்றிருக்கிறபடி. [சூழ்கண்டாய்] - அநந்யப்ரயோஜநர்திறத்தில் கார்யசிந்தையும் அவனதாயிருக்கிறபடி. (௫)

ஆறாம் பாட்டு.

சூழ்கண்டாயென் †தொல்லைவினையையறுத்து *உன்னடிசேரும்
ஊழ்கண்டிருந்தே தூராக்குழிதூர்த்து எனைநாளகன்றிருப்பன்
வாழ்தொல்புகழார் குடந்தைக்கிடந்தாய் வானோர்கோமானே!
யாழினிசையே யமுதே அறிவின்பயனேயரியேறே

ஆ.—(சூழ்கண்டாய்.) என்னுடைய ப்ரதிவம்பகஸமூகத்தைப்போக்கி உன் திருவடிகளைச் சேர்வதோருபாயத்தைச் செய்தருளவேணும்; செய்தருளுமிடத்தில், நீ

இப்படிபட்டாலும் இத்யாதி. வல்வினையென்று - ஆழ்வாரபிப்ராயத்தாலே, பாபமென்கிறது தத்த்வஸ்த்யிதி, ஸக்தியென்றபடி. உடன்வந்தியென்றது, போனபோனவிடமெல்லாம் ஒக்க வருகிறதென்றபடி. அழகிதாகவுண்டோம் - நன்றாக ஸஜ்ஜித்தோமென்று வெறுப்பு. பழனம் - நீர்நிலங்கள் என்னுடைய ஆர்த்திதீர்க்கைக்கு பரிகரம் உன்கையிலே புண்டாயிருக்க நான் ஆர்த்தனாயிருக்க என்னைக்கடாக்ஷியாதே யிருக்கிறாயென்னுமத்தை ஸகிதர்பாசமாகக்காட்டுகிறார் - கையிலே இத்யாதி.முகாந்தரத்தாலே இத்யாதி வாக்யத்தோடே ஸம்பந்தம் – என்ஜீவநம் இத்யாதி வாக்யத்துக்கு. இரண்டாமர்த்தத்துக்கு, "தொழுவன்" என்றது - தொழும்பனென்றபடியாய், ஹேயன் என்றபடி. உக்தார்த்தத்வயவிவரணம் - புறம்பு இத்யாதி. தொழுகை - கார்ப்பண்ய கார்யமென்றுவிவக்ஷித்து-உன்னாலல்லது செல்லாதபடி க்ருபணனானவென்னை என்கிறார். சேரும் வகையைப்பார்என்றதே. "சூழ்கண்டாய்" என்றதுக்குஹாவம் - நான் அறியாதபடி இத்யாதி. சூழ்ச்சியாவது - புறம்பு ஒருவரறியாதபடிபார்க்கும்விரகு. "அழுவன்தொழுவன்" இத்யாதியான வாற்றாமை புண்டாயிருக்க, "சூழ்கண்டாய்" என்று - நீயேவிரகுபார்த்தருளவேணுமென்கிற தென்? என்ன - தம்மாற்றமை இத்யாதி. ஹலிதம் - அநந்யப்ரயோஜநர் இத்யாதி. சேருமவகையேசூழ்கண்டாய் - சேரும்படியே விரகுபார்க்கவேணுமென்று ஸம்தார்த்தம் க்ரமேணாந்வயஃ (௫)

---

† வினையறுத்து என்று பாடாந்தரம்.

செய்தருளுகிற உபாயத்தையறிந்து அதில் அகப்படாதேதப்பிலும், நான் அறியாத தொருபடி செய்தருளவேணுமென்று; அபேக்ஷித்தபடியே செய்தருளக்காணாமையாலே, ஆஶ்ரித வாத்ஸல்ய ஸௌஶீல்யஸௌலப்ய போக்யதாத்யபரிமித கல்யாண குணகணனாயிருந்த உன் திருவடிகளோடுள்ள ஸம்ஶ்லேஷமாகிற மஹாரஸத்தை யறிந்துவைத்தே, துஷ்பூரமான இந்த்ரியங்களாலே இந்தப்ராக்ருதவிஷயங்களையே ஸேவித்து இன்னமெத் தனைகாலம் உன் திருவடிகளை அகன்றிருக்கக்கடவேனென்கிறார்.

ஒ.—ஆறாம்பாட்டில், உனனுடைய போக்யதையிலே அகப்பட்டிருந்துள்ள எனக்கு இதரவிஷயங்களோடு சேருகிறதில்லையானபின்பு நீயே த்வத்ப்ராப்தி ப்ரதிபந்த கங்களையும் போக்கி உன்னைப்பெறுவதொருவிரகு அறியில் அத்தைத்தப்பிலும் நான் அறியாதபடி பார்த்தருளவேணுமென்கிறார்.

[உன்னடி என்றுமேனுக்கு] - உன் திருவடிகளில் ஐஶ்வர்யரஸம் முறையென்னு மிடம் அறிந்துவைத்து துஷ் பூரமான இந்த்ரியங்களுக்கு இரைதேடியிட்டு இன்னம் எத் தனைநாள் அகன்று இருக்கக்கடவேன? [வாழ்தொல்புகழார் என்றுதொடங்கி] - அயர் வறுமமரர்க ளதிபதியா யிருந்துவைத்து ஒருநாளும் விஶ்லேஷ கந்தமின்றிக்கே என்றும் உன்னை ஸேவிக்கப்பெற்றார்களென்னும் இந்த ஶ்லாக்யமானபுகழை யுடையவர்களதான திருக்குடந்தையிலே கண்வளர்வதும்செய்து அநுபவிப்பார்க்கு ஒருநாளும் விடவொண் ணாதபடி நிரதிஶயபோக்யனுமாய் அறிவினுடைய ப்ரயோஜநரூபனுமாய் முகக்கொள் ளவொண்ணாதபடி யிருக்குமவனே!

ப.—அநந்தரம், நித்யஸூரிஸேவ்யனாய் நிரதிஶயபோக்யனான நீ என் விரோ யியைப்போக்கி உன் திருவடிகளிலே சேர்த்துக்கொண்டருளவேணு மென்கிறார்.

வாழ் - (பகவதநுபவமாகிற) வாழ்ச்சியாலே, தொல் - ஸ்வாபாவிகமான, புகழார் - புகழையுடையவர்களதான, குடந்தை - திருக்குடந்தையிலே, கிடந்தாய் - (அவர்களுக்கு அநுபாவ்யனாய்க்) கண்வளர்ந்தருளினவனாய், (அப்படியே), வானோர் - நித்யஸூரிகளுக்கும், கோமானே - (போக்யனாய்க்கொண்டு) நிர்வாஹகனாய், யாழின் - (மிடறுபோலேபோதுசெய்யாத) யாழின், இசையே - இசைபோலே (ஶ்ரவணபோக்ய னாய்) அமுதே - நித்யபோக்யமான அம்ருதம்போலே ஸ்துத்யாதிமுகத்தாலே நாக்குக்கு இனியனாய், அறிவின்பயனே - ஜ்ஞாநபலமாகையாலே மநஸ்ஸுக்கு போக்யனாய், (இப் படி பாஹ்யாப்யந்தரரூப ஸர்வேந்த்ரியங்களாலும் அநுபவியாநின்றாலும்) அரியேறே - ஸிம்ஹஶ்ரேஷ்டம்போலே †வளாய்க் கொள்ளவொண்ணாதபடி மேனாணித்திருக்குமவ னே, (நான்) உன்-உன், அடி - திருவடிகளை, சேரும் - சேர்ந்து அநந்யார்ஹனாயிருக்கும், ஊழ் - பழமையை, கண்டிருந்தே - கண்டிருந்தே, தூரா - துஷ்ப்பூரமான, குழி - தூரா சையாகிறகுழியை, தூர்த்து - (தூர்விஷயங்களாலே) தூர்த்து, எனை — எத்தனை, நாள் - நாள், அகன்று - அகன்று, இருப்பன் - இருக்கக்கடவேன், (இதுக்கடியான) என் - என் னுடைய, தொல்லைவினையை-அநாதிபாபத்தை, அறுத்து-அறுத்து, உன்னடிசேரும்படி - ஸ்வரூபப்ராப்தமான உன் திருவடிகளைச்சேரும்படி, சூழ்கண்டாய் - சூழ்ந்தருளவேணும்.

இ.—ஆறாம்பாட்டில், உன்போக்யதையிலே யந்வயித்த எனக்கு விச்சேதம் பிறவாதபடி த்வத்ப்ராப்திப்ரதிபந்தகங்களையும் போக்கி, உன்னைப்பெறுவதொருவிரகு பார்த்தருளவேணுமென்கிறார்.

---

† வளாய்க்கொள்ள - சுற்றிக்கொள்ள.

[சூழ்கண்டாய் இத்யாதி] - என்னுடைய ப்ராரப்தகர்மங்களையறுத்து, உன் திருவடிகளைக் கிட்டுவதொருவிரகு பார்த்தருளவேணும். க்ரமத்திலே செய்கிறோமென்ன; அதுக்கு அவயியென் என்கிறார். [உன்னடிசேரும் இத்யாதி]-உன் திருவடிகளைச்சேரும் முறைமைகண்டுவைத்தே, தூஷ்பூரமான இந்த்ரியங்களுக்கு இரைதேடியிட்டு எத்தனை நாள் அகன்றிருக்கக்கடவேன். இப்படி யாறியிருக்கப்பார்த்தால் முறையையறிவித்த தென்? மயர்வறமதிநலமருளிற்றில்லையாகில், நானும் ஆறியிருக்கலாயிற்றே. "வேதேணை வதாஷ்டூமேவவிஷ" என்று ஓர் அவதிபெறிலும் பெற்றத்தோடொக்கும். [வாழ் தொல்புகழார்] - விஶ்லேஷமங்யமில்லாதபடி உன்னை யநுபவிக்கையாகிற ஶ்லாக்யமான புகழை யுடையவர்களான திருக்குடந்தை. பழையதானபுகழென்றுமாம். "எனைநாள கன்றிருப்பன்" என்ன வேண்டாதவர்கள். விஷயஸந்நிதி தமக்கும் அவர்களுக்கும் ஒத்திருக்க, அவர்கள் வாழுகிறபடி எங்ஙனே? என்னில்,—தம்மைப்போலே கூப்பிடாமையாலே "நினைத்தபரிமாற்றம் பெற்றார்கள்" என்றிருக்கிறார். [வானோர்கோமானே] - விஶ்லேஷ யோக்யதையும் இல்லாதவர்களைச்சொல்லுகிறது. அவர்களை நித்யாநுபவம்பண்ணுவிக்கிற வன்கிடீர்! இங்கேவந்து ஸுலபனாயிருக்கிறான். [யாழினிசை இத்யாதி] - அநுபவிப்பாருடைய ஸர்வேந்த்ரியங்களுக்கும் போக்யமாயிருக்கிறபடி. மிடற்றோசை கர்மாநுகுணமாகப்போதுசெய்யும். அத்தை வ்யாவர்த்திக்கிறது. [அமுதே] - ரஸனைக்கு போக்யமாயிருக்கிறபடி. [அறிவின்பயனே] - ஜ்ஞாநத்துக்கு ப்ரயோஜநரூபமானவிஷயம். மனஸ்ஸுக்கு போக்யமாயிருக்கிறபடி. [அரியேறே] - கண்ணுக்கு முகக்கொள்ளவொண்ணாத போக்யதையையுடையவனே. இங்குள்ளார்க்கும் அங்குள்ளார்க்கும் உன்னை யநுபவிக்கக்கொடுத்து நிரதிஶயபோக்யபூதனாயிருக்க,நான் இந்த்ரியங்களுக்கு இரையிட்டு எத்தனைகாலம் அகன்றிருக்கக்கடவேன்.

ஈடு.—ஆறும்பாட்டு. உன்போக்யதையிலே யந்வயித்த எனக்கு ஒருவிச்சேதம் வாராதபடி த்வத்ப்ராப்தி ப்ரதிபந்தகங்களையும்போக்கி, உன்னைப்பெறுவதோரு விரகு பார்த்தருளவேணுமென்கிறார்

[சூழ்கண்டாயென்தோல்லைவினையையறுத்து] - என்னுடைய ப்ராக்தநமான கர்மங்களை ஸவாஸநமாகப்போக்கி, உன் திருவடிகளை நான்வந்து கிட்டுவதோருவழி நீயே பார்த்தருளவேணும். க்ரமத்திலேசெய்கிறோமென்ன; அதுக்கவயியேன்? என்கிறார். [உன்னடிசேருமூழ்கண்டிருந்தே] - நாட்டாரோபாதி உன்னையறியாதொழியப்பெற்றிலேன். உன் திருவடிகளைக்கிட்டும் முறைமை அறிந்துகோண்டிருந்தே. [தூராக்குழிதூர்த்து] - துஷ்பூரமான இந்த்ரியங்களுக்கு இரையிட்டு. [எனைநாளகன்றிருப்பன்] - இன்னமும் எத்தனைநாள் இங்ஙனேயிருக்கக்கடவேன். ஸ்ரீஹரதாழ்வான்போல்வார்க்கோ ஒருநாளிட்டுக்

ஆறும்பாட்டு. - சூழ்கண்டாய் இத்யாதி. "சூழ்கண்டாய்" என்றுதொடங்கி, "உன்னடி சேரும்" என்னுமளவும் கடாக்ஷித்து அவதாரிகை - உன்போக்யதையிலே இத்யாதி.

அநுவாதமன்றிக்கே, "உன்னடிசேரும்படி - சூழ்கண்டாய்" என்றும், "உன்னடிசேரும் ஊழ்கண்டிருந்தே" என்றும், "உன்னடிசேரும்" என்றத்தை - கீழும்மேலும் கூட்டுவது. "ஊழ்" என்றது - ஶேஷஶேஷிபாவமுறையென்றபடி. "இருந்தே" என்கிற அவதாரணத்துக்கு அர்த்தம் - நாட்டார் இத்யாதி. "எனைநாளகன்றிருப்பன்" என்கிறதென், நமக்கு "நாளிட்டுக்கொடுக்கவேணும்" என்று நிர்ப்பந்தமுண்டோ? என்ன - ஸ்ரீஹரதாழ்வான் இத்யாதி. "வாழ்"

கொடுக்கலாவது. [வாழ்தொல்புகழார்குடந்தைக்கிடந்தாய்] - "பிரிந்திருக்கும் நாளெவ் வளவு" என்றுகேட்க வேண்டாதவர்கள். அவன் கண்வட்டத்தில்வர்த்தித்து வாழப் பெறுகையால் வந்த ஶ்லாக்யமான புகழையுடையவர்கள். பழையபுகழென்றுமாம். விஷ யஸந்நிதி தமக்கும் அவர்களுக்கும் ஒத்திருக்க, அவர்கள் வாழ்கிறபடி எங்ஙனே? என் னில்;—தம்மைப்போலேகூப்பிடாமையாலே நினைத்த பரிமாற்றம் பெற்றார்களென்றிருக் கிறார். [வானோர்கோமானே] - அவர்கள் சிலவர் நாள்நடையாடாததேசத்திலேவர்த்திக் கிறவர்கள்காணும். [யாழினிசையே] - மிடற்றோசைபோலே கர்மாநுகுணமாகப் போது செய்கையன்றிக்கேயிருக்கை. "யாழ்பயில்நூல்நரம்பின்முதிர்சுவையே" என்னக்கடவ திறே. [அமுதே] - செவிக்கதுவாய், நாக்குக்கொன்று தேடவேண்டாதபடி போக்யமா யிருக்கை. [அறிவின்பயனே] - அறிவின் ப்ரயோஜந ஸுகம். மநஸ்ஸுக்கு போக்யமா யிருக்கிறபடி. [அரியேறே] - ஸர்வவஸ்து விஸஜாதீயதையால்வந்தமேனாணிப்பை யுடைய வனே. கண்ணுக்கு முகக்கொள்ளவொண்ணாதபோக்யதையுடையவனென்றுமாம். †[ஸிம் ஹஶ்ரேஷ்டம்போலே முகக்கொள்ளவொண்ணாதபடி மேனாணித்திருக்குமவனே.] இங்குள்ளார்க்கும் அங்குள்ளார்க்கும் உன்னை யநுபவிக்கக்கொடுத்து நிரதிஶயபோக்ய னாயிருக்க, நான் இந்த்ரியங்களுக்கு இரையிட்டு எத்தனைகாலம் அகன்றிருக்கக்கடவேன்

ஏழாம் பாட்டு.

அரியேறேயென்னம்பொற்சுடரே செங்கட்கருமுகிலே
எரியேபவளக்குன்றே நால்தோளெந்தாயுனதருளே
பிரியாவடிமையென்னைக்கொண்டாய் குடந்தைத்திருமாலே
தரியேனினியுன்சரணந்தந்து என்சன்மங் களையாயே.

*என்றதுக்குபாவம் - பிரிந்து இத்யாதி. *வாழ்ச்சியை ஹேதுவாக்கி, "தொல்புகழார்" என்ற துக்கு அர்த்தம் - அவன்கண்வட்டத்தில் இத்யாதி. தம்மைப்போலே "எனைநாளகன்றிருப்பன்" என்றுநாளிட்டுக்கொடுக்க வேண்டாதே, நிரந்தரம் அநுபவித்துக்கொண்டிருப்பர்கள் திருக்குட ந்தையிலுள்ளவர்களென்றார் - கீழ்; அந்தகாலந்தானுமின்றிக்கே நிரந்தர ஹ்ருதயதநுபவம்பண்ணு வர்கள் நித்யஸூரிகளென்கிறார் - மேல் - அவர்கள்சிலவர் இத்யாதி. கண்டத்வநியைச்சொல் லாதே, வீணாஸ்வரத்தைச் சொன்னதுக்கு பாவம் - கர்மாநுகுணமாக இத்யாதி. போதுசெய் கையாவது - மொட்டிக்கையாய்; ஶ்லேஷ்மாதிகளாலே அபிஹதமாம் தசையுண்டிறே கண்டத் வநிக்கு, அதின்றிக்கேயிருக்கையென்றபடி. அவன் யாழினிசையோ? என்ன - யாழ்பயில் இத் யாதி. செவிக்கதுவாயென்றது - செவிக்கு ப்ராணம் போக்யமாயென்றபடி. ஒருவனே ஸர்வேந் த்ரியவிஷயமாகச் சொல்லுகையாலே - ஸர்வவஸ்துவிஸஜாதீயதையால்வந்த என்கிறது. த்வி தீயார்த்தத்துக்கு, அப்ரத்ருஷ்யமான அரியேறுபோலே பரிச்சேதித்து அநுபவிக்கவொண்ணாத போக்யதையை யுடையவனென்றபடி. முகக்கொள்ள - பரிச்சேதித்து க்ரஹிக்க. அரியேறு - ஸிம்ஹஶ்ரேஷ்டம்போலே யிருக்குமவனென்னுதல், அரிபோலேயும் ஏறுபோலேயும் இருக்கும வனென்னுதல். "வாழ்தொல்புகழார்" என்று தொடங்கி, "எனைநாளகன்றிருப்பன்" என்னு மளவுக்கும் பாவம் - இங்குள்ளார்க்கும் இத்யாதி. வாழ்தொல்புகழார் இத்யாரப்ய, அரியேறே என் தொல்லைவினை யறுத்து உன்னடிசேரும்படி - சூழ்கண்டாய்; உன்னடிசேரும் ஊழ்கண்டிருந் தே தூராக்குழிதூர்த்து எனைநாளகன்றிருப்பன் இத்யந்வய:. (௬)*

† குண்டலிதம் க்வாசித்கம்,

ஆ.—(அரியேறே.) உன்னுடைய க்ருபையாலே உன்னழகைக்காட்டி என்னை ஆத்மாந்தஹாஸ்யைக ரதியாகப்பண்ணியருளினாய், இனி உன் திருவடிகளைப்பிரிந்து ஒரு க்ஷணமாத்ரமும் தரிக்கமாட்டேன்; ஆனபின்பு, முந்தற உன் திருவடிகளைத்தந்து, பின்னை என்னுடைய ப்ரதிஹந்யகத்தைப் போக்கியருளவேணு மென்கிறார்.

ஒ.—ஏழாம்பாட்டில், வெறும் உன்க்ருபையாலே உன்னுடைய ஸௌந்தர்யாதிகளைக்காட்டி என்னை ஆத்மாந்தமான அடிமையாலல்லது செல்லாதபடி பண்ணியருளினாய்; இனி உன் திருவடிகளையொழியச் செல்லாதானபின்பு திருவடிகளைத்தந்து பின்னை ஸம்ஸாரத்தை அறுக்கவேணுமென்கிறார்.

[என் என்றுதொடங்கி] - அழகியபொன்போலே ஸ்ப்ருஹணீயமான ஒளியையுடையையாய் ஸ்ப்ருஹணீயமான திருக்கண்களையும் ஶ்ரமஹரமான வடிவையுமுடையையுமாய் எரியேய்ந்த பவளக்குன்றுபோலே உஜ்ஜ்வலனுமாய் நாலுதிருத்தோளையும் காட்டி என்னை உனக்கு ஆக்கிக்கொள்வதும்செய்து உன்க்ருபையாலே என்னை ஆத்மாந்தமாக அடிமைகொள்வதும்செய்து அதுக்கடியாகப் பிராட்டியோடேகூடித் திருக்குடந்தையிலேவந்து கண்வளர்ந்தருளுகிறவனே!

ப.—அநந்தரம், உன்னுடைய விக்ரஹவைலக்ஷண்யத்தைக்காட்டி, என்னையடிமைகொண்டபின்பு, உன் திருவடிகளைத்தந்து, விரோதியைப்போக்கவேணுமென்கிறார்.

அரியேறே - நிரங்குஶ ஸ்வாதந்த்ர்யத்தாலே மேனாணித்திருப்பானாய், (கேவல ஸ்வாதந்த்ர்யமேயன்றியே), அம் - ஸ்ப்ருஹணீயமான, பொன்-பொன்போலேயிருக்கிற, சுடர் - வடிவிலொளியை, என் - எனக்கு அநுபவிப்பிப்பானாய், (ஆஶ்ரிதவிஷயத்தில் வாத்ஸல்யாம்ருதவர்ஷியான), செம் - சிவந்த, கண்-திருக்கண்களையுடைத்தாய், கருமுகிலே - முன்புசொன்ன பொன்னொளிக்கு ஆஶ்ரயமான நீலதோயதநிபவிக்ரஹத்தையுடையனாய், எரியே - (ஆஶ்ரிதவிரோதிவிஷயத்தில் "ஜ்வலிதம் பாவகோபமம்" என்னும்படி) அக்நிபோலே சிவந்த, பவளக்குன்றே - பவளக்குன்றென்னலாம்படி உத்துங்கமாய் ஸ்திரமான வடிவையுடையனாய், நால்தோள் - அந்த வடிவோடுசேர்ந்த நாலுதோள்களையுங் காட்டி, எந்தாய் - என்னை எழுதிக்கொண்ட ஸ்வாமியாய், உனது - உன்னுடைய, அருள் - க்ருபையை, பிரியா - ஒருகாலும்பிரியாதபடி, (நிரந்தரமாக), அடிமை - வாசிகாதி கைங்கர்யங்களை, (என்னை), கொண்டாய் - கொண்டவனாய், அடிமைக்கு ப்ரதிஸம்பந்தியாக, குடந்தை - திருக்குடந்தையிலே, திருமாலே - லக்ஷ்மீஸஹிதனாய்க்கொண்டு ஸந்நிஹிதனானவனே! இனி - (இப்படி உபகாரகனான நீ பிராட்டியோடுங்கூட ஸந்நிஹிதனான) பின்பு, தரியேன் - ஆறியிருக்கமாட்டேன். (எனக்கு ப்ராப்யமான); உன் - உன், சரணம் - திருவடிகளை, தந்து - தந்து, என் - என்னுடைய, சன்மம் - ஶரீரஸம்பந்தத்தை, களையாய் - ஸவாஸநமாகப் போக்கவேணும். எரியேயென்று - ஸம்புத்தியாகவுமாம்.

இ.—ஏழாம்பாட்டில், உன்க்ருபையாலே உன்வைலக்ஷண்யத்தைக்காட்டி, அடிமையாலல்லது செல்லாதபடி பண்ணினபின்பு, திருவடிகளைத்தந்து பின்னை ஸம்ஸாரத்தை யறுக்கவேணுமென்கிறார்.

[அரியேறே] - ஸ்வவ்யதிரிக்தஸமஸ்தவஸ்துக்களுக்கும் ஶேஷியாகையாலே மேனாணித்திருக்கிறபடி. இத்தலைக்கு வணக்கம் ஸ்வரூபமாயிருக்குமாபோலேயிறே. அவ

னுக்கும் இறுமாப்பு ஸ்வரூபமாயிருக்கும்படி. அந்த இறுமாப்பிலே அல்லாதாருடைய ஶேஷத்வமும் தோற்றியிறேயிருப்பது. [என்னம்பொற்சுடரே] - விலக்ஷணமானபொன் போலே ஸ்ப்ருஹணீயமான ஒளியையுடையவனே! வடிவில்வாசியை எனக்கு அறிவித்தவனே! அம்மேனாணிப்போபாதி இவ்வடிவும் "ஸர்வாயிதஸ்" என்னுமிடத்தைக் காட்டுகிறது. "ஶட்கூரஹம்". [செங்கட்கருமுகிலே] - வாத்ஸல்யாம்ருத வர்ஷியான திருக்கண்களையுடையவனே. [கருமுகில்] - கண்டபோதே ஸகலதாபங்களும்கெடும்படியாயிற்று வடிவிருப்பது. [எரியேபவளக்குன்றே] - எரியேய்ந்த பவளக்குன்றே. உகவாதார்க்கு அநபிஹவநீயனாய் அநுகூலர்க்கு ஔஜ்ஜ்வல்யத்தாலே ஸ்ப்ருஹாவிஷயமாயிருக்கை. [குன்றே] - அபரிச்சேத்யனானவனே. [நால்தோளெந்தாய்] - திருவடியகப்பட்டதுறையிலேயாயிற்று இவரும் அகப்பட்டது. "கூயதாஸு". ஹோக்யமுமாய் அபாஶ்ரயமுமாயிருக்கிற தோள்களைக்காட்டி என்னை எழுதிக்கொண்டவனே. [உனதருள் இத்யாதி] - அருளாலேயென்னுதல்; அருளேய்ந்த - அருளோடேகூடின என்னுதல். நிர்ஹேதுக க்ருபையாலே என்னை ஆத்மாந்தஊஸ்யத்திலே ஸ்வீகரித்தாய். கைங்கர்யங்கொள்ளும்போது க்ருபைமுன்னாகவேண்டியிருக்கையாலே, அத்தோடேகூடினவடிமையென்றுமாம். அடிமைகொள்ளுகைக்காகப் பிராட்டியோடேகூடத் திருக்குடந்தையிலேவந்து கண்வளர்ந்தருளுகிறவனே. "ஒருதேஶவிஶேஷத்திலே" என்னவேண்டாதபடி தேஶத்திற்குறையில்லை, ஶ்ரீயஃபதியாகையாலே ப்ராப்யத்திற்குறையில்லை. "ஹவாஂஹுஸ்ஸஹ வெதெஹ்யா" என்ற இளையபெருமாளைப்போலே பற்றுகிருர். [தரியேனினி] - மாதாபிதாக்கள் ஸந்நிஹிதரானபின்பு மாதாபிதாக்கள் ஸந்நிதியிற் பசிபொறுக்கலாம், ஸந்நயியுண்டானால் பசிபொறுக்கப்போகாதிறே. தரியாமை எவ்வளவுபோருமென்ன,—[உன்சரணம் தந்து என்சன்மங்களையாயே] - ஜந்மஸம்வந்யமற்று உன்திருவடிகளைப்பெறப்பற்றுது. முலையைக்கொடுத்து சிகித்ஸிப்பாரைப்போலே, திருவடிகளைத்தந்து விரோயியைப்போக்கவேணும்.

௭௫.—ஏழாம்பாட்டு. உன்க்ருபையாலே உன்வைலக்ஷண்யத்தைக்காட்டி அடிமையாலல்லது செல்லாதபடியாக்கினபின்பு, உன் திருவடிகளைத்தந்து பின்னைஸம்ஸாரத்தை யறுக்கவேணுமென்கிருர்.

[அரியேறே] - ஸ்வவ்யதிரிக்தங்களுக்கெல்லாம் தானே கடவனாகையால் வந்த மேனாணிப்பு. [என்னம்பொற்சுடரே] - அம்மேன்மைக்குச் சிறிதுஉள்ளாகப் பார்த்தவாறே ப்ரகாஶித்துத்தோற்றுகிற தேஜஸ்ஸு விலக்ஷணமான பொன்போலே ஸ்ப்ருஹணீயமான ஒளியை யுடையவனே. அவ்வடிவில் வாசியை எனக்கறிவித்தவனே. [செங்கட்கருமு

ஏழாம்பாட்டு. - அரியேறே இத்யாதி. "அரியேறே" இத்யாதியையும், "உனதருளே", இத்யாதி மேலெல்லாவற்றையும் கடாக்ஷித்து அவதாரிகை - உன்க்ருபையாலே இத்யாதி. "அரியேறே" இத்யாதியைப்பற்ற - உன்வைலக்ஷண்யத்தை யென்றது.

"அரியேறே" என்றதுக்கு - கீழே - ஸர்வவஸ்து விஸஜாதீயதையால்வந்தமேனாணிப்பென்று அருளிச்செய்து, இங்கே - ஸர்வநிர்வாஹகனாகையால்வந்த மேனாணிப்பென்கையாலே புநருக்தியில்லை. "என்" என்றதுக்கு அர்த்தம் - அவ்வடிவில் இத்யாதி. அதுக்கும் அடியான வென்றது - "அரியேறே" என்றமேன்மைக்கும் அடியானவென்னுதல், "அம்பொற்சுடரே"

கிலே] - அதுக்கும் அடியான திருக்கண்களும் திருமேனியு மிருக்கிறபடி. [எரியேபவளக் குன்றே] - எரி - கேட்டைநக்ஷத்ரம் நக்ஷத்ரபதத்தளவாக ஓங்கின பவளக்குன்றே ஸமுதாயமிருக்கிறபடி. எரியேய்ந்த பவளக்குன்றுபோலேயிருக்கை. அக்நிகல்பமான தேஜஸ்ஸையுடைய பவளக்குன்றே. இத்தால் நினைக்கிறது - ஔஜ்ஜ்வல்யத்தையும், ஸ்ப்ருஹணீயதையையும். உகவாதார்க்கு அநபிபவநீயனாய், அநுகூலர்க்கு ஔஜ்ஜ்வல்யத்தாலே ஸ்ப்ருஹாவிஷயமாயிருக்கை. [குன்றே] - அபரிச்சேத்யனானவனே. [நால்தோளெந்தாய்] - கல்பகதரு பணைத்தாற்போலே யிருக்கிற திருத்தோள்களைக்காட்டி என்னை அநந்யார்ஹமாக எழுதிக்கொண்டவனே. திருவடிதோற்ற துறையிலேயாயிற்று இவரும்தோற்றது. [உனதருள் இத்யாதி] - உன்னுடைய கேவலக்ருபையாலே என்னை ஆத்மாந்தநாஸ்யத்தைக்கொண்டாய். [அருளே] - அருளாலே. [குடந்தைத்திருமாலே] - அடிமைகொள்ளுகைக்காகப் பெரியபிராட்டியாரோடேகூடத் திருக்குடந்தையிலேவந்து கண்வளர்ந்தருளினவனே. "ஒருதேசவிசேஷத்தே" என்றதைபடி தேசத்தில் குறையில்லை, ஸ்ரிய:பதியாகையாலே ப்ராப்யத்திற்குறையில்லை. "ஸராம:ஸஹ ஸஹவைதேஹ்யா" (பவாம்ஸ்து ஸஹவைதேஹ்யா) என்ற இளைய பெருமாளைப்போலே பற்றுகிறார் இவரும்.[தரியேனினி]- அச்சேர்த்தி கண்டபின்பு என்னால் பிரிந்துதரித்திருக்கப்போகாது. மாதாபிதாக்கள் ஸந்நிதியுமாய் அவர்கள் ஸ்ரீமான்களுமாய் உதாரருமாயிருக்க, ப்ரஜை பசித்துதரித்துக்கிடக்கவற்றே? தரியாமை எவ்வளவுபோருமென்ன;—[உன்சரணந்தந்து என்சன்மங்களையாயே] - மூலைகொடுத்து சிகித்ஸிப்பாரைப்போலே, முற்படத்திருவடிகளைத்தந்து, பின்னை ஜந்மஸம்பந்தத்தை யறுக்கவேணும். * புண்ணாராக்கையின் புணர்வினையிறே யறுக்கப் புகுகிறது; அதுக்கடியிலே தரிப்பித்துக்கொண்டு, பின்னை யறுக்கவேணுமென்கிறார் (எ)

என்ற தேஜஸ்ஸுக்கும் அடியான வென்னுதல். தேஜஸ்ஸுக்கு அடியாகையாவது - ஆஸ்ரயமாயிருக்கை. சிவந்தகண்ணையுடையனுக்கு அறுத்தமுகில்போலே யிருக்கிறவனே என்று ஸப்தார்த்தம். எரிபோலவும் பவளக்குன்றுபோலவுமிருக்கிறவனே என்றபடி. அதாவது: எரியென்று - கேட்டைநக்ஷத்ரமாய், எரியே - கேட்டைநக்ஷத்ரம்போலே யிருக்கிறவனே யென்றபடி. கேட்டையை த்ருஷ்டாந்தமாகச் சொன்னத்தால்ஹவிதம் ஸமுதாயமிருக்கிறபடி என்று. ஸமுதாயமென்றது-ஸமுதாயஶோபையென்றபடி. எரிபோலவும் பவளக்குன்றுபோலவும் இருக்கிற ஸமுதாயஶோபையை யுடையவனென்று - கீழ் அருளிச்செய்து, எரிபோலேயிருக்கிற பவளக்குன்றேஎன்று அர்த்தாந்தரம் - எரியேய்ந்த இத்யாதி. இத்தை விவரிக்கிறார் - அக்நிகல்பமான இத்யாதி. "எரி" என்கையாலே - ஔஜ்ஜ்வல்யம்; "பவளக்குன்று" என்கையாலே - ஸ்ப்ருஹணீயதை. "ஸ்வயதாஹ்ய" இத்யாதி ஶ்லோகத்தைக் கடாக்ஷித்து - திருவடிதோற்ற இத்யாதி. 'அருளே" என்ற அவதாரணத்துக்கு அர்த்தம் - கேவலக்ருபையாலே என்று. அருளேயென்றது - அருளாலேயென்றபடி. தரித்திருக்கப்போகாமைக்கு ஹேதுவேதென்ன - மாதாபிதாக்க இத்யாதி. எவ்வளவுபோருமென்னவென்றது - ப்ரக்ருதிஸம்பந்தத்தையறுத்துத் திருவடிகளைத்தரப்பற்றுமோ வென்னவென்றபடி. களையாயே - களையவேணும். இது புண்ணேயென்ன - புண்ணாராக்கை இத்யாதி.புண்ணால் நிறைந்த ஶரீரத்தின் ஸம்பந்தத்தையிறே யென்றபடி. அரியேறே இத்யாதஹ), க்ரமேணார்த்தயஃ. (எ)

எட்டாம் பாட்டு.

களைவாய்துன்பங்களையாதொழிவாய் களைகண்மற்றிலேன்
வளைவாய்நேமிப்படையாய் குடந்தைக்கிடந்தாய்மாமாயா
தளராவுடலமெனதாவி சரிந்துபோம்போது
இளையாதுனதாளொருங்கப்பிடித்துப் போதவிசைநீயே.

ஆ.—(களைவாய் துன்பம்.) களைவாய் துன்பம், களையாதொழிவாய், திருவுள்ளமானபடி செய்தருளாய; எனக்கு நீயல்லது மற்றொரு கதியில்லை. அடியேனுடைய துக்கங்களைப் போக்குகைக்காகவன்றோ திருவாழியை ஏந்திகொண்டிருந் தருளுகிறதும் திருக்குடந்தையிலே புகுந்தருளிற்றும். ஆனபின்பு, உடலந்தளர்ந்து என்னுவி சரிந்து போகா நின்றது, இவ்வாத்மா முடிவதற்குமுன்னே ஈண்ட உன் திருவடிகளிலே வாங்கியருளவேணுமென்கிறார்.

ஓ.—எட்டாம்பாட்டில், 'தரியேன்' என்றபின்பும் எம்பெருமான் வந்து விஷயீகரியாவிட்டவாறே அவனை அநுஸந்திக்கவொண்ணாதபடி கலங்கின ஆழ்வார்; 'ரக்ஷிக்கிலும் ரக்ஷிக்கிறாய் தவிரிலும் தவிருகிறாய்' அதுநிற்க, என்னை உன் திருவடிகளை நினைக்க வல்லேனாம்படி பண்ணியருளவேணும்; இதுவே எனக்கு இப்போது வேண்டுவது என்கிறார்.

[களைவாய் என்றுதொடங்கி] - உன்னைவிஶ்லேஷித்துப் படுகிறதுக்கத்தை போக்கிலும்போக்கு, தவிரிலும் தவிரு; வேறு ரக்ஷகரையுடையேனல்லேன். [வளையாய் நேமிப்படையாய்] - வளைந்திருந்துள்ள வாயையுடைய திருவாழியாகிற திவ்யாயுதத்தை ஏந்திற்று ஆஶ்ரிதருடைய ஆபந்நிவாரணார்த்தமாகவன்றோ? [குடந்தைக்கிடந்தமாமாயா] அதுக்குமேலே அத்யாஶ்சர்யமான அழகோடேகூடத் திருக்குடந்தையிலே கண்வளர்ந்தருளுகிறது, ஆஶ்ரிதர்க்கு அணித்தாகவன்றோ? [தளராஉடலம் என்றுமேலுக்கு]-விரஹவ்யஸனத்தின்மிகுதியாலே ஶரீரம்தளர்ந்து ப்ராணனும் ஶிதிலமாய்ப்போகிற இப்போது தரித்து ஏகாக்ரனாய் உன்திருவடிகளை அநுஸந்திக்கவல்லேனாம்படி நீயே பண்ணியருளவேணும்.

ப.—அநந்தரம், விபரீதமே பலிக்கிலும் வேறொருரக்ஷகரையுடையேனல்லேன்; இப்படி அநந்யமதியான நான் உன்திருவடிகளை விடாதபடி அநுமதிபண்ணவேணுமென்கிறார்.

துன்பம்-(உன்னை யநுபவிக்கப்பெறாத) துக்கத்தை, களைவாய்-போக்குவாய் களையாதொழிவாய் - போக்காதொழிவாய்செய், களைகண் - துக்கநிவர்த்தகவஸ்துவை மற்று - வேறு, இலேன் - உடையேனல்லேன்; (துக்கநிவ்ருத்திக்குப் பரிகரமாய்), வளை - சூழ்ந்த, வாய் - வாயையுடைத்தான, நேமி - திருவாழியை, படையாய் - ஆயுதமாக வுடையையாய், (ஆஶ்ரிதார்த்தமாக) குடந்தை-திருக்குடந்தையிலே, கிடந்த-கண்வளர்ந்தருளுகிற, மாமாயா - அத்யாஶ்சர்யஸௌந்தர்யயுக்தனே! (உன்னை அநுபவிக்கப் பெறாத ஆர்த்தியாலே) உடலம் - ஶரீரம், தளரா - தளர்ந்து, எனது - என்னுடைய ஆவி - ப்ராணனானது, சரிந்து - நிலைகுலைந்து, போம்போது - ஶரீரத்தைவிட்டுப் போம்

படியானபோதாயிற்று. (இவ்வளவில்) இளையாது-சித்தசெளர்வல்யம்பிறவாதே, உன - உன், தாள்-திருவடிகளையே, ஒருங்க-(உபாயமும் உபேயமுமாக) ஒருபடிப்பட, பிடித்து-பிடித்து, போத - போதும்படி, நீயே - நீயே, இசை - அநுமதி பண்ணவேணும்.

இ.—எட்டாம்பாட்டில், "தரியேன்" என்றபின்பும் முகங்கிடையாமையாலே கலங்கி, அநுபவம்பெற்றிலேனாகிலும் "உன் திருவடிகளே தஞ்சம்" என்றுபிறந்த விஶ்வாஸங்குலைகிறதோவென்று அஞ்சாநின்றேன், இது குலையாதபடி பார்த்தருளவேணுமென்கிறார்.

[களைவாய் என்றுதொடங்கி]-உன்னைப்பிரிந்துபடுகிற து:க்கத்தைப் போக்கிலும்போக்கு, தவிரிலும்தவிரு, வேறுரக்ஷகரை யுடையேனல்லேன். நீ உன்கார்யம் செய்யிலும்செய், தவிரிலும்தவிரு, என்தலையிற்குறையில்லை. "க்ஷமஓவோவாயஹமிதொமெ ஸுவ" என்கிற அம்ஶத்திற்குறையில்லை. "ஸ்வநுவாவெவெஹ்யாமொக்ஷயிஷ்யாமி" என்கிற உன்கூறுசெய்யிலும்செய், தவிரிலும் தவிரு. து:க்கநிவ்ருத்தி உம்மதானபின்பு, க்ருஷியும் உம்மதாகவேண்டாவோ? என்ன; து:க்கியானைக்கு க்ருஷிபண்ணின நான் நிவர்த்தகனாகவோ, ஒருஸர்வஶக்திக்ருத்யத்தை நான்செய்யவோ. [வளைவாய் இத்யாதி]-பார்த்தவிடமெல்லாம் வாயான திருவாழியை ஆயுதமாகவுடையவனே. *கைகழலாநேமியானை யிருக்கிறது என்னுது:க்கநிவ்ருத்திக்கன்றோ. அதுக்குமேலே திருக்குடந்தையிலேவந்து ஆஶ்சரியமான அழகோடே கண்வளர்ந்தருளுகிறது எனக்கு அணித்தாகவன்றோ. ஶக்திவைகல்யம் சொல்லவொண்ணாது, "ஸுலபனன்று" என்னவொண்ணாது, "ருத்யுத்பாதகனன்று" என்னவொண்ணாது. [தளரா இத்யாதி]—[உடலமானது - தளரா] - ஶரீரமானது கட்டுக்குலையா, என் ப்ராணனும் ஶரீரத்தைவிட்டுப் பெறக்கடவபோதாயிற்று இப்போது. அங்ஙனன்றியே, அந்திமஸ்ம்ருதியை அபேக்ஷிக்கிறாராலோ? என்னில்,— அந்திமஸ்ம்ருதியொழிய விஷயில்லாத அதிகாரியல்லாமையாலே அத்தைச்சொல்லுகிற தன்று. இவன்பக்கல் இதில்லாதபோது அவன் "அஹம் ஸ்மராமி" என்கையாலே விஶ்லேஷவ்யஸநத்தாலே ஶரீரமும்தளர்ந்து ப்ராணனும் ஶரீரத்தைவிட்டுப்போம்தசையாயிற்று இப்போதென்கை. [இளையாது இத்யாதி] - அபேக்ஷிதம்பெற்றிலேனேயாகிலும், என்ன பேக்ஷிதவிஷிக்கு உன் திருவடிகளைப்பற்றினபற்று நெகிழாமற்பண்ணியருளவேணும். "அநுபவம்பெறுமையாலே, அதுக்கடியான உபாயாத்யவஸாயமும் குலைகிறதோ" என்று அஞ்சி இதுகுலையாதபடி பார்த்தருளவேணுமென்கிறார். ஒருங்க - ஒருபடிப்பட.

ஈடு.—எட்டாம்பாட்டு. "தரியேன்" என்றபின்பும் முகங்கிடையாமையாலே கலங்கி; அநுபவம்பெற்றிலேனேயாகிலும், "உன் திருவடிகளே தஞ்சம்" என்றுபிறந்த விஶ்வாஸம் "குலைகிறதோ" என்று அஞ்சாநின்றேன்; அது குலையாதபடி பார்த்தருள வேணுமென்கிறார்.

எட்டாம்பாட்டு.—களைவாய் இத்யாதி. "வஹுஸகுஸ்யஹிவு திஷெயம்" என்கிற ந்யாயத்தாலே, இப்போது, "விஶ்வாஸம் குலையாதபடி பண்ணவேணும்" என்கைக்கு ப்ரஸங்கமேதென்ன - தரியேனென்றபின்பு இத்யாதி. "இளையாதுனதாள்" இத்யாதியைப்பற்ற - உன்திருவடிகளேதஞ்சமென்று இத்யாதி.

[களைவாய்துன்பம் களையாதொழிவாய் களைகண்மற்றிலேன்] – நீ உன்காரி செய்யிலும்செய், தவிரிலும் தவிரு; நான் குறைவற்றேன், "த்வமேவோபாயபூதோமேபவ" (த்வமேவோபாய பூதோமேபவ) என்கிற அம்சத்தில்குறையில்லை; "ஸர்வபாபேப்யோமோக்ஷயிஷ்யாமி" (ஸர்வபாபேப்யோமோக்ஷயிஷ்யாமி) என்னும் உன்கூ செய்யிலும்செய், தவிரிலும்தவிரு. அப்படி செய்கிறோம் என்னுமையாலே; என்னுடை ரக்ஷணத்துக்கன்றோ இக்கிடையென்கிறார் - மேல். [வளைவாய்நேமிப்படையாய்] - பா தவிடமெங்கும் வாயான திருவாழியை ஆயுதமாக வுடையவனே. களையாதொழிகை குச் சொல்லலாம் கண்ணழிவுண்டோ. என்கையில் ஆயுதத்துக்கு வாயல்லாத வி முண்டோ. அது வாய்படைத்த ப்ரயோஜநம் பெறவேண்டாவோ. "பரிகரமில்லை"எ னப்போமோ. "கைகழிந்து போயிற்று, இனிப் படைதிரட்டவேணும்" என்னும் கண்ண வுண்டோ. [நேமிப்படையாய் - களைகண்மற்றிலேன்] - அப்படியிருப்பது என்கையிலே ராயுதமுண்டோ, பிறர்கையிலோராயுதமுண்டோ, உன்கையிலாயுதமில்லையோ. [குட ந்தைக்கிடந்தமாமாயா] - நீ "மாம்" என்றதுக்குப்பின்பு இவ்வருகுள்ள ஏற்றமெல்லா பாராய். இத்தால்-அவதாரதசையிலும் அர்ச்சாவதாரம் ஸுலபமென்றபடி. திருக்குட ந்தையிலேவந்து ஆஸ்சர்யமான அழகோடே கண்வளர்ந்தருளுகிறது ஆஸ்ரிதர்க்காகவன்றே ஸக்திவைகல்யம் சொல்லவொண்ணாது. "ஸுலபனன்று" என்னவொண்ணாது, "ருச்யு

ப்ர.—(களைகண்மற்றிலேன்) அஹமஸ்ம்யபராதாநாமாலயோகிஞ்சநோகதி: த்வமேவோபாயபூதோமேபவேதி ப்ரார்த்தநாமதி: | ஸரணாகதிரித்யுக்தா ஸாதேவேஸ்மிந்ப்ரயுஜ்யதாம் ||"

"துன்பம் - களைவாய், துன்பம் - களையாதொழிவாய்" என்றபடி. குறைவற்றப்ரகாரத்தை விவரிக்கிறார் - த்வமேவ இத்யாதி. அதாவது - சரமஸ்லோகபூர்வார்த்தப்ரதிபாத்யாதிகாரி க்ருத்யத்தில் குறையில்லையென்றபடி. நீயுன்காரியம் இத்யாதியின்விவரணம் - ஸர்வபாபேப்ய இத்யாதி. உத்தர - பாகம். "குடந்தைக்கிடந்த" என்றதுக்கு அவதாரிகை - அப்படி இத்யாதி. "நேமிப்படையாய்" என்றதுக்கு பாவம் - களையாதொழிகை இத்யாதி. கண்ணழிவு குறை. "வளைவாய்" என்றதுக்கு பாவம் - உன்கையில் இத்யாதி. "களையாதொழிகைக்கு இத்யாதி விவரணம் - பரிகரம் இத்யாதி. "படையாய்" என்று நிரூபகமாகச் சொன்னதுக்கு பாவம் - கைகழிந்து இத்யாதி. "மற்றிலேன்" என்றதுக்கு பாவம் - அப்படி இத்யாதி. "குடந்தைக்கிடந்த" என்று அர்ச்சாவதாரஸௌலப்யம் சொல்லுகையாலே-நீமாம்என்றதுக்கு இத்யாதி இத்தால் - அவதாரவ்யாவ்ருத்தி. மாம் என்றதுக்கு என்றது - க்ருஷ்ணாவதாரஸௌலப்யத்தைப்பற்ற. ஏற்றமெல்லாம் - அர்ச்சகபராதீநனாயிருக்கிற ஏற்றமெல்லாமென்றபடி. "குடந்தைக்கிடந்த" என்றத்தோடே - "மாமாயா" என்றத்தைக்கூட்டி பாவம் - திருக்குடந்தையிலே இத்யாதி. "மாமாயா" என்று - அழகால்வந்த ஆஸ்சர்யத்தைச் சொல்லுகிறது. மாமாயா - அத்யாஸ்சர்ய ஸௌந்தர்ய யுக்தனே இத்யர்த்த:. "நேமிப்படையாய்" இத்யாதி பதத்ரயத்தையும் கடாக்ஷித்து பாவம் - ஸக்திவைகல்யம் இத்யாதி. "தளரா" என்றது - தளர்ந்தென்றபடி. கட்டுக்

பாதகனல்லன்” என்னவொண்ணாது. [தளராவுடலம்] - ஶரீரமானது கட்டுக்குலையா. தளரா - தளர. [எனதாவிசரிந்துபோம்போது] - என் ப்ராணனானது முடிந்துபோமளவாயிற்றுகிடாய். [போம்போது] - போம்போதாயிற்று. இதுதான் அந்திமஸ்ம்ருதியானாலோ? என்னில்,—“காஷ்டபாஷாணஸந்நிபம்” (காஷ்ட்டபாஷாணஸந்நிபம்) என்றும், “அஹம் ஸ்மராமி” (அஹம்ஸ்மராமி) என்றும் சொல்லுகிறது இவரறியாரன்றே; இவர்தாம் அவ்வயிகாரிகளுமன்றே. விஶ்லேஷவ்யஸநத்தாலே ஶரீரமும் தளர்ந்து, ப்ராணனும் ஶரீரத்தைவிட்டுப் போம்தசையாயிற்று இப்போதென்கை. [இளையாது இத்யாதி] - அபேக்ஷிதம் பெற்றிலேனேயாகிலும், என்னபேக்ஷிதம் ஸித்திக்கும்படி உன் திருவடிகளைப் பற்றினபற்று நெகிழாமற்பண்ணியருளவேணும் அநுபவம் கிடையாமையாலே, “அதுக்கடியான உபாயாத்யவஸாயமும் குலைகிறதோ” என்றஞ்சி; இது குலையாமல் பார்த்தருளவேணுமென்கிறார். ஒருங்க - ஒருபடிப்பட. (௮)

ஒன்பதாம் பாட்டு.

இசைவித்தென்னையுந்தா ளிணைக்கீழிருத்துமம்மானே
அசைவிலமரர்தலைவர்தலைவா ஆதிப்பெருமூர்த்தி!
திசைவில்வீசுஞ்செழுமா மணிகள்சேருந்திருக்குடந்தை
அசைவிலுலகம்பரவக்கிடந்தாய் காணவாராயே.

ஆ.—(இசைவித்து.) “இவ்வாத்மா உனக்கேயடிமை” என்னுமிடத்தை என்னை ஸம்வதிப்பித்து, என்னை ஸ்வரூபாநுரூபஸம்ஶ்லேஷவியோகைகஸுகது

ப்ர.—(தளராவுடலமித்யாதி) ஸ்ரீவராஹே, “ஸ்திதே மநஸி ஸுஸ்வஸ்தே ஶரீரே ஸதி யோ நர꞉ । தாதுஸாம்யே ஸ்திதே ஸ்மர்தா விஶ்வரூபம் ச மாமஜம் । ததஸ்தம் ம்ரியமாணம் து காஷ்டபாஷாணஸந்நிபம் । அஹம் ஸ்மராமி மத்பக்தம் நயாமி பரமாம் கதிம் ॥”.

குலையாவென்றது - கட்டுக்குலைந்தென்றபடி. போமளவாயிற்றுகிடாய் என்று மிறுக்கி யோஜிக்கிற ·தன்; இருந்தபடியே, அந்திமஸ்ம்ருதி ப்ரார்த்தனையாகக்கொண்டாலோ வென்று ஶங்கிக்கிறார் - இதுதான் இத்யாதி. அவ்வதிகாரிகளுமன்றேயென்றது - உபாஸகரன்றேயென்றபடி; அபேக்ஷிதங்களான அநுபவகைங்கர்யங்களை ப்ரார்த்தியாதே, “உனதாள்பிடித்தே” என்று - அத்யவஸாயத்தை ப்ரார்த்திக்கிறதென்? என்ன - அநுபவங்கிடையாமையாலே இத்யாதி. ஒருபடிப்பட - விச்சேதமில்லாதபடி. எனதாவிசரிந்துபோம்போது - என் ப்ராணனானது நிலைகுலைந்து முடிந்துபோம்படியானபோதாயிற்று; இவ்வளவில், இளையாது - அத்யவஸாயம் நெகிழாமல், உன்திருவடிகளே உபாயமாக ஒருபடிப்பட பிடித்துப்போகும்படி நீயே அநுமதிபண்ணியருளவேணுமிதி ஶப்தார்த்த꞉ போத - போகும்படி. க்ரமேணாந்வய꞉. “ஸஹைவஸ்வராயா நாராயணோ கிஞ்சிந்நாமதி꞉ । தவைவோபாயபூதோ ஹி தேவ திவ்யாயுதாதி꞉ । ஶரணாகதிரித்யுக்தா ஸாக்ஷிவேஷோநுஜ்ஞாதா॥”. “காஷ்டபாஷாணஸந்நிபம்” இத்யாதி, ஸ்ரீவராஹே. (௮)

உஜ்ஜீவனுக்கினவனே, ஶேஷஶேஷாஶந ஶ்ரீ—ஸகலஜீவநாநாவிபாகஸம்ஸ்ருஷ்டி ஶிவஜநவஸிவஸிதவாரணய—ஸ்மஸனாய் ஸர்வேஶ்வரனாயிருந்துவைத்து, ஸர்வஸமாஶ்ரயணீயத்வார்த்தமாகத் திருக்குடந்தையிலே கண்வளர்ந்தருளுகிறவனே, காணவாராயென்கிறார்

ஒ.—ஒன்பதாம்பாட்டில், ஸர்வேஶ்வரனாயிருந்துவைத்து ஸர்வஸமாஶ்ரயணீயனானைக்காகத் திருக்குடந்தையிலேவந்து கண்வளர்ந்தருளி என்னை அடிமையிலே இசைவித்து அத்தாலல்லது செல்லாதபடி பண்ணியருளின நீ உன்னைக் கண்ணாலேகாணலாம்படி வரவேணுமென்கிறார்.

[அம்மானே] - பெரியோனே! [அசைவிலமரர் என்றுதொடங்கி] - அயர்வறுமமரர்களுக்குத் தலைவனான ஶ்ரீஸேனாபதியாழ்வானுக்குத் தலைவனாய் ஸகலஜகத்துக்கும் காரணபூதனான ஸர்வேஶ்வரனுமாய் திக்குக்களிலேசெல்ல ஒளிவிடாநின்றுள்ள ஶ்லாக்யமான ரத்நங்கள்சேரும் திருக்குடந்தையிலே வருத்தமின்றிக்கே லோகமெல்லாம் ஆஶ்ரயிருக்கும்படி கிடந்தவனே!

ப.—அநந்தரம், என்னை யநுமதியைப் பிறப்பித்து உன்திருவடிகளே ப்ராப்யமாக அநுபவித்த நீ கிடையழகைக்காட்டினவோபாதி நடையழகுகாண வரவேணுமென்கிறார்.

என்னை - (அநாதிகாலம் விமுகனான) என்னை, இசைவித்து - (ஶேஷத்வமாகிறஸ்வரூபத்திலே "ஓம்" என்று இசையும்படிபண்ணி, (அதுக்கிடாக), உன்-உன், தாளிணைக்கீழ் - திருவடிகள் விஷயமான ப்ராப்ய ப்ராபகபுத்தியோடே, இருத்தும் - (அநந்யபரனாயிருக்கும்படி) பண்ணின, அம்மானே - ஸ்வாமியாய், (இப்படி ஸ்வரூபஜ்ஞாநம் பிறப்பித்தார்க்கு ப்ராப்யனாகைக்காக ஸகலதநுபவத்துக்கொருகாலும்), அசைவு-அசைவு, இல் - இல்லாத, அமரர் - ஸூரிகளுக்கு, தலைவர் - தலைவரான அநந்தகருடவிஷ்வக்ஸேநர்க்கு, தலைவா - தலைவனாய், ஆதி - ஸமஸ்தகாரணபூதமாய், பெரு - ஸர்வாதிகமான, மூர்த்தி - விக்ரஹத்தையுடையனாய், (ஆஶ்ரிதர்க்கு அநுபவார்த்தமாக), திசை - திக்குக்கள்தோறும், வில் - ஒளியை, வீசும் - பரப்புகிற, செழு - ஶ்லாகநீயமாய்; மா - பெருவிலையனான, மணிகள் - ரத்நங்கள், சேரும் - சேருகிற, திருக்குடந்தை - திருக்குடந்தையில், அசைவு - ஶௌர்லப்யஸங்கையாலேவந்த அலைச்சல், இல் - தீர்ந்து, உலகம்-லோகம், பரவ - ஸ்துதிக்கும்படி, கிடந்தாய் - கண்வளர்ந்தருளினவனே, (லோகத்துக்குக் கிடையழகுகாட்டினவோபாதி), காண-(நான்நடையழகு) காணும்படி, வாராய் - வரவேணும். துர்வஸாமரத்திலேயசைகிறலோகம் அழகிலே யகப்பட்டுப் பரவும்படியென்றுமாம். அசைவில்லாத பரமபதமாகவுமாம். இடம்வலங்கொள்ளுகிற திருமேனியசைவிலே லோகம் பரவுமென்றுமாம்.

இ.—ஒன்பதாம்பாட்டில், ஸர்வேஶ்வரனாய்வைத்து, ஸர்வஸமாஶ்ரயணீயனாகைக்காக ஸந்நிஹிதனாய், என்னையடிமையாலல்லது செல்லாதபடிபண்ணின நீ, கண்ணாலேகாணலாம்படி வரவேணுமென்கிறார்.

[என்னை - இசைவித்து] - நெடுநாள் விமுகனான என்னையும் அடிமையிலே இசைவித்து, என்னிசைவுக்கு எதிர்சூழல்புக்குத்திரிந்த உனக்கு அபேக்ஷிதம்செய்யக் குறையென்? நான் அறியாதேயிருக்க என்காரியம்செய்த நீ, இன்று இரக்கச்செய்தே

விளம்பிக்கிறதென்? [உன்தாளிணைக்கீழிருத்தும்] - பரகுபரகு என்று திரியாதபடி உன் திருவடிகளை விஷயமாம்படி பண்ணுமவனே என்கை; "நிழலுமடிதாறுமானோம்" என்கிற படியே - மிதியடியாம்படி ஸ்ரீஶடகோபனுக்கி பெருங்காற்றிற்பூளைபோலே *யாதானும் பற்றிநீங்கும்விரதமாயிறே முன்புவர்த்தித்தது. [அம்மானே]-இசைவே தொடங்கி இவர் கார்யம் தானே செய்யவேண்டும் ப்ராப்தி. [அசைவில் இத்யாதி] - இவரை இசைவித்தாலும் அறுதல்பிணைக்கத் தான் குறைவாளனல்லன்கிடீர். வ்ருத்திஹ்ராஸாதிகளின்றிக்கேயிருக்கிற நித்யஸூரிகளுக்குத் தலைவரான ஸேனைமுதலியார் போல்வார்க்குத் தலைவனானவனே. ஜகத்காரணபூதனான ஸர்வாதிகனே. 'காரணந்து—த்யேய:" என்று உபாஸகர்க்கு ஸமாஶ்ரயமானவனென்கை. அங்குள்ளார்க்கு போகஹேதுவாய், இங்குள்ளார்க்கு ஸத்தாஹேதுவாயிருக்கை. [திசையில்வீசும் இத்யாதி]-நித்யஸூரிகளோபாதி ஸம்ஸாரிகளும் அநுபவிக்கலாம்படி ஸந்நிஹிதனாயிருக்கிறபடி. திக்குக்களிலேசெல்ல ஒளிபரம்பா நிற்பதாய், ஶ்லாக்யமாய்ப் பெருவிலையனான ரத்நங்கள்சேரும் திருக்குடந்தை ஆராவமுதாழ்வாராதல், திருமழிசைப்பிரான்போல்வாராதல் புருஷரத்நங்கள்சேரும் ஊராயிற்று. [அசைவிலுலகம்பரவ] - வருத்தமின்றிக்கே லோகமானது ஆஶ்ரயிக்கவென்னுதல்; நித்யஸூரிகள் நீர்மைக்குத்தோற்று ஏத்தும்படியென்னுதல். இடம்வலங்கொண்டபோதெல்லாம், திருத்திரையெடுத்தாப்போலே லோகமடங்க ஏத்தக்கிடந்தாயென்னுதல். [கிடந்தாய்காணவாராயே] - கண்வளர்ந்தருளுகிற வழகை அநுபவித்தால், நடையழகையநுபவிக்கவேண்டாவோ. அதீந்த்ரியமானவடிவைக் கண்ணுக்கிலக்காக்கின அருமையுண்டோ நடக்கையில்.

ஈ௯.—ஒன்பதாம்பாட்டு. ஸர்வேஶ்வரனுய்வைத்து ஸர்வஸமாஶ்ரயணீயனுகைக்காக இங்கே ஸந்நிஹிதனாய் எனக்கு அடிமையாலல்லது செல்லாதபடிபண்ணின நீ, கண்ணாலே காணலாம்படி வரவேணுமென்கிறார்

[இசைவித்தென்னை] - என்னை இசைவித்து நெடுநாள்விமுகனான என்னை அடிமையிலே இசைவித்து. இசையாத என்னை இசைவித்தவருமைவேணுமோ இசைந்திருந்த நீ கார்யம் செய்கைக்கு. [என்னை] - நித்யஸம்ஸாரிகளுக்கும் இவ்வருகாயிருக்கிற என்னை. [உன்தாளிணைக்கீழிருத்தும்] - நித்யஸூரிகளடிமைசெய்கிற உன்திருவடிகளிலே இருத்தினவனே. பரகுபரகு என்று திரியாதபடி தன்திருவடிகளிலே விஷயமாம்படி பண்ணுமவனென்கை. "நிழலுமடிதாறுமானோம்" என்கிறபடியே மிதியடியாம்படி ஸ்ரீஶடகோபனுக்கி. பெருங்காற்றில் பூளைபோலே * யாதானும்பற்றி நீங்கும் விரதமாயிறே முன்பு

ஒன்பதாம்பாட்டு.—இசைவித்து இத்யாதி. "ஆதிப்பெருமூர்த்தி, உலகம்பரவ, காணவாராய்" இத்யாதிபதங்களைக்கடாக்ஷித்து அவதாரிகை - ஸர்வேஶ்வரனாய் இத்யாதி. "உலகம்பரவ" என்றத்தைப்பற்ற - ஸர்வஸமாஶ்ரயணீயனுகைக்காக என்றது.

"காணவாராய்" என்றமாத்ரம் சொல்லவமைந்திருக்க, "இசைவித்தென்னை" என்கிற பதப்ரயோகத்துக்கு பாவம் - இசையாத இத்யாதி. இசையாத என்னை என்கிறவிடத்திலே - "யானொட்டி" இத்யாத்யநுஸந்தேயம். இசைந்திருந்தநீயென்றது - "எதிர்சூழல்புக்கு" என்கிறத்தைப்பற்ற. "அசைவிலமரர்" இத்யாதியைக் கடாக்ஷித்து பாவம் - நித்யஸூரிகள் இத்யாதி. அசைவாவது - சலநமாய், இல்லென்று - இல்லாமையால், கல்பாவஸாநத்திலே நஶியாத அமரரென்றபடி. "அமரர்" என்றபோதே - நித்யத்வம் ஸித்தமாயிருக்க, "அசைவில்" என்று விஶே

வர்த்தித்தது. [அம்மானே] - பேறு இவரதாயிருக்க, அவன் இசைவிக்கவேண்டி ப்ராப்திசொல்லுகிறது. [அசைவிலமரர்தலைவர்தலைவா] - அசைவில்லாத அமரருண்டு நித்யஸூரிகள், அவர்களுக்குத் தலைவனான ஸ்ரீஸேநாபதியாழ்வானுடைய கார்யமு இவன் ஸங்கல்பாயத்தமாயிருக்கிறபடி. அசைவில்லாமை யாவது - ப்ரஹ்மாதிகளுடை அமரத்வம்போலே ஸாபேக்ஷிகமன்று. கல்பாவயியன்று என்றபடி. ஜ்ஞாநத்துக்கு ஸங்கோசவிகாஸங்களை யுடையரன்றிக்கே யிருக்கையென்றுமாம். [ஆதிப்பெருமூர்த்தி] - இவ்வு குள்ளாருடையவும் ஸத்தைக்கு ஹேதுபூதனானவனே. ஜகத்காரணபூதனான ஸர்வ யிகனே. மூர்த்தி - ஸ்வாமி. [திசைவில் இத்யாதி] - ஸத்தையைநோக்கி, மேலுள்ள திவர்கள் தாங்களே நிர்வஹித்துக்கொள்ள விருக்கையன்றிக்கே, மேலுள்ளதும் தாமே செய்வானாக நினைத்துவந்து கிடக்கிறபடி. திக்குக்களிலே தேஜஸ்ஸு பரவாநின்றதாய் தர்சநீயமாய், பெருவிலையனான ரத்நங்கள் சேராநிற்கிற திருக்குடந்தையிலே. வில் தேஜஸ்ஸு. [அசைவிலுலகம்பரவக்கிடந்தாய்] - லோகமானது வருத்தமற்று ஆச்ரயிக் கும்படி கிடந்தாய். சௌலப்யசங்கையால்வந்த அலைச்சல்தீர்ந்து. அன்றிக்கே, அசை வில்லாத லோகமுண்டு - நித்யவிபூதி, அங்குள்ளாரும்வந்து ஆச்ரயிக்கக்கிடந்தாய். அன் றிக்கே, அசைவுண்டு - இடம்வலங்கொள்ளுகை, அத்தைக்கண்டு லோகமானது பரவும் படிகிடந்தாய். [கிடந்தாய்காணவாராயே] - கண்வளர்ந்தருளுகிற அழகுகண்டு அநுபவித் தேன், இனி நடையழகுகண்டு நான்வாழும்படி வரவேணும். [செழுமாமணிகள் சேரும் திருக்குடந்தை] - "ஆராவமுதாழ்வார், திருமழிசைப்பிரான்போல்வார் புருஷரத்நங்கள் சேரும் திருக்குடந்தை" என்று நிர்வஹிப்பர்கள். (க)

ஷித்ததுக்கு பாவம் - அசைவில்லாமையாவது இத்யாதி. அபேக்ஷிகமன்றென்றது - நம்மிற்காட் டில் நாலுநாள் சாவாதிருக்கிறத்தையிட்டு - அவர்களை, அமரரென்னுகின்றதிறே; அப்படியன் றென்றபடி. "அசைவில்" என்று - ஸ்வபாவசலநராஹித்யத்தைச் சொல்லுகிறதென்று விவ க்ஷித்து; அப்போது, "அமரர்" என்று - ஸ்வரூபம் நித்யமென்றபோதே, தத்ஸ்வபாவபூதஜ் ஞாநசலநராஹித்யமும் ஸித்தமன்றோ; அப்ரஸக்தநிஷேதம்பண்ணுகிறதென்? என்ன-வ்யத்தவ்யா வ்ருத்த்யர்த்தமாக வென்கிறார் - ஜ்ஞாநத்துக்கு இத்யாதி. "மூர்த்தி" என்று - ஸ்வாமியாய், ஸர்வ காரணபூதனாய் ஸர்வாதிகனான ஸர்வேச்வரனென்றபடி. "வில்" என்று - தேஜஸ்ஸு. முந் தினவர்த்தத்துக்கு, "அசைவில்" என்று - வருத்தமற்று என்றபடி. வருத்தமற்றென்றது - "அதீந்த் ரியனானவனை நாம் எங்கே யாச்ரயிக்கப்புகுகிறோம்" என்கிற ப்ரயாஸமின்றிக்கேயென்றபடி. த்விதீயார்த்தத்துக்கு, அசைவிலென்று-ஜ்ஞாநஸங்கோசமில்லாதவென்றபடி. ஸம்ஸாரிகளுக்கு முகங்கொடுத்துக்கொண்டிருக்கிற நீர்மையை யநுஸந்தித்து நித்யவிபூதியிலுள்ளாரும் வந்து ஆச்ரயியாநிற்பர்களென்றபடி. மூன்றாமர்த்தத்துக்கு, "அசைவில்" என்று - விஷயஸப்தமி. அசைவுவிஷயமாகப் பரவும்படி கிடந்தாயென்றபடி. "செழுமாமணிகள்" என்றது - புருஷரத்ந பரமானபோது, வில்வீசுகையாவது - இவர்களுடைய ஜ்ஞாநப்ரகாசம் லோகமெங்கும் பரம்பி யிருக்கை. என்னை - இசைவித்து என்றுதொடங்கி அந்வயம். (க)

பத்தாம் பாட்டு.

வாராவருவாய்வருமென்மாயா மாயாமூர்த்தியாய்
ஆராவமுதாய் அடியேனாவியகமேதித்திப்பாய்
தீராவினைகள்தீரவென்னையாண்டாய் திருக்குடந்தை
ஊராய்உனக்காட்பட்டும் அடியேனின்னமுழல்வேனோ.

ஆ.—(வாராவருவாய்.) கண்கள் உகக்கும்படிவாராதே என்னெஞ்சுக்குத் தோற்றும்படி வருமவனே, உன்னுடைய நிரவதிக ஸௌந்தர்யநிதியான வடிவைக்காட்டி எனக்கு நிரதிசயபோக்யமானவனே, த்வதேகபோகத்வவிரோதியாய் ஒருவராலும் தீர்க்கவொண்ணாத விரோதிகளைத் தீர்த்தருளினவனே, இப்படி அடியேனை விஷயீகரித் தருளுகைக்கிடாகத் திருக்குடந்தையிலே புகுந்தருளினவனே, உனக்காட்பட்டும் அடியேனின்னமுழல்வேனோ வென்கிறார்.

ஓ.—பத்தாம்பாட்டில், திருக்குடந்தையிலேபுகவே நம்முடைய ஸகலது:கங்களும்போய் அபேக்ஷமநோரதங்களும் பெறலாமென்று புக்க ஆழ்வார் அப்படி பெறாமையாலே, 'இன்னம் எத்தனையிடம் தட்டித்திரியக்கடவேன்?' என்கிறார்.

[வாராவருவாய் வருமென்மாயா] - எனக்குப் புறம்புதோற்றாதே உள்ளநுபவிக்கலாம்படியிருக்கிற ஆச்சர்யபூதனே! எனக்குப் புறம்பு அநுபவிக்கவொண்ணாதபடியான அருவாய்க்கொண்டுவருமவனே! என்றுமாம். [மாயா என்றுதொடங்கி] - நித்ய ஸித்தமான வடிவையுடையையாய் நிரதிசய போக்யனாய்க்கொண்டு என் ஹ்ருதயத்திலே தித்திக்குமவனே! [தீரா என்றுதொடங்கி] - உன்னை யநுபவிக்கைக்கு விரோதியுமாய் ஒருவராலும் தீர்க்கவொண்ணாதேயிருக்கிற வினைகளைத் தவிர்த்து என்னை ஆளுவதும்செய்து என்னை விஷயீகரிக்கைக்காகத் திருக்குடந்தையிலேவந்து புகுந்தருளினவனே!

ப.—அநந்தரம், கண்டு அநுபவிக்கவொண்ணாதபடி அகவாயிலேநின்று நிரதிசய ஸாரஸ்யத்தை விளைக்கிற உன்னை, அர்ச்சாவதார ஸுலபனாகப்பெற்று அடிமை புகுந்துவைத்து எத்தனைகாலம் அலமரக்கடவேனென்கிறார்.

வாரா-கண்ணிட்டுக்கண்டு அநுபவிக்கலாம்படி வடிவழகோடே நடந்துவாராதே, அருவாய் - அரூபியாய்க்கொண்டு, வரும் - என்னகவாயிலேவந்து தோன்றி, என் மாயா - உன ஆச்சர்யகுணங்களை எனக்கு ப்ரகாசிப்பிக்கிறவனாய், (அந்த அந்தராத்மத்வத்தளவன்றியே), மாயா - அபக்ஷயவிநாசாதிரஹிதமான, மூர்த்தியாய் - நித்யமங்கள விக்ரஹ யுக்தனாய்க்கொண்டு, ஆரா - அநுபவிக்க த்ருப்திபிறவாத, அமுதாய் - அம்ருதம் போலே போக்யபூதனாய், அடியேன் - உனக்கு சேஷமான என்னுடைய, ஆவி - ப்ராணாச்ரயமான, அகம் - நெஞ்சுக்குள்ளே, தித்திப்பாய் - நிரதிசய ஸாரஸ்யத்தை விளைப்பானாய், (இந்த ஆந்தராநுபவத்துக்கு அநாதி ப்ரதிபந்தகமாய்), தீரா - ஒருகாலும் தீராத, வினைகள் - பாபங்கள், தீர - நசிக்கும்படியாக, என்னை - என்னை, ஆண்டாய் - வாசிககைங்கர்யங்கொண்டு போந்தவனாய், (அவ்வளவில் நில்லாதே கண்டு அநுபவிக்கலாம்படி), திருக்குடந்தை - திருக்குடந்தையை, ஊராய் - அஸாதாரணதேசமாகவுடையையாய்க்கொண்டு ஸந்நிஹிதனானவனே, உனக்கு - (இப்படி ஸௌலப்ய ஸௌந்தர்ய

விஶிஷ்டனை) உனக்கு, ஆட்பட்டும் - அடிமைப்பட்டிருக்கச்செய்தேயும், அடியேன் - அநந்யார்ஹனாய் அநந்யகதியான நான், இன்னம் - இன்னம் மேலுண்டானகாலத்திலும், உழல்வேனோ - நினைத்தபடி பரிமாறப்பெறாமல் அலமரக்கடவேனோ? இன்னம் எத்தனை உகந்தருளின நிலத்திலே முகங்காட்டி, ஆசைப்பட்டபடி யநுபவிக்கப்பெறாதே க்லேஶிக்கக்கடவேனென்று கருத்து. வாராவருவாயென்று நித்யமான ஆத்மாவுக்கு அந்தர்யாமியாயென்றுமாம்.

௰.—பத்தாம்பாட்டில், "திருக்குடந்தையிலேசெல்ல நம்மநோரதங்களெல்லாம் ஸித்திக்கும்" என்றுபுக, அப்படி பெறாமையாலே; இன்னமும் எத்தனையிடம் தட்டித் திரியக்கடவேனென்கிறார்.

[வாரா இத்யாதி] - புறம்பு கண்ணாலேகண்டு அநுபவிக்கவாராதே, மறந்து பிழைக்கவொண்ணாதபடி அகவாயிலே அருவாய்க்கொண்டு ப்ரகாஶிக்கிற ஆச்சர்யபூதனே, அன்றிக்கே, பாஹ்யஸம்ஶ்லேஷம்பண்ணுகைக்கு வாராதே அரூபியாய் வர்த்திக்கும் ஆஶ்சரியபூதனே யென்றுமாம்; "அடியேனுள்ளிபகமே தித்திப்பாய்" என்று மேலே உண்டாகையாலே, முற்பட்டதுவே நிர்வாஹம். அநாஶ்ரிதர்க்கு அநுபவிக்கவொண்ணாதே ஆஶ்ரிதர்க்கு அநுபவிக்கவாயிருக்குமென்றுமாம். [மாயாமூர்த்தியாய்] - "ஸதைகரூபரூபாய" என்கிற நித்யமங்கள விக்ரஹத்தை யுடையையாய், நாட்செல்ல நாட்செல்ல பர்யாப்திபிறவாத போக்யதாப்ரகர்ஷத்தை யுடையையாய். [அடியேன் இத்யாதி] - உனக்கு ஸ்வமான என்னெஞ்சினுள்ளே உன் போக்யதையை ஆவிஷ்கரித்து அநுபவிப்பித்தவனே. [தீராவினைகள்] - அநுபவவிநாஶ்யமாய், உன்னையொழிய ஒருத்தராற்போக்கவொண்ணாதே த்வதநுபவவிரோதியான கர்மங்கள்தீர, [என்னையாண்டாய்] - அந்தகர்மங்களைப்போக்கி "அடியேனுள்ளிபகமேதித்திப்பாய்" என்னும்படி புகுரநிறுத்தினவனே. [திருக்குடந்தையூராய்] - என்னை அடிமைகொள்ளுகைக்குத் திருக்குடந்தையிலேவந்து ஸந்நிஹிதனானவனே. பரவ்யூஹவிபவங்களை வ்யாவர்த்திக்கிறது [ஊராய்] - அவ்வூரைத் தனக்கு நத்தமாகநினைத்திருக்கை, [உனக்காட்பட்டும்] - ஸம்ஸாரிகளை யநுபவிப்பிக்கவந்து கிடக்கிற உனக்காட்பட்டும். பரமபதத்திலிருப்பிலேயாதல், அவதாரங்களிலேயாதல் ஆசைப்பட்டேனோ [அடியேன்] - ஆநுகூல்யவஸ்து இங்ஙனேயலமந்துதிரிகிறது. இன்னமும் எத்தனை திருப்பதிகள் தட்டித்திரியக்கடவேன்.

ஈடு.—பத்தாம்பாட்டு. "திருக்குடந்தையிலேபுக, நம் மநோரதமெல்லாம் ஸித்திக்கும்" என்றுசெல்ல, மநோரதித்தபடி தாம் பெறாமையாலே; இன்னமும் எத்தனை திருவாசல் தட்டித் திரியக்கடவேனென்கிறார்.

[வாராவருவாய்] - வாராதவருவாய். பாஹ்யஸம்ஶ்லேஷம்பண்ணவாராத அரூபித்ரவ்யமாய். [வருமேன்மாயா]-[அருவாய் - வருமேன்மாயா] என்று, [அரு] என்கிற பதத்தை - இங்கேயுங் கூட்டிக்கோள்வது. மறந்துபிழைக்கவொண்ணாதபடி அகவாயிலேயருவாயக்கோண்டு ப்ரகாஶிக்கிற ஆஶ்சர்யபூதனே. [மாயாமூர்த்தியாய்] - நித்யமான

பத்தாம்பாட்டு.—வாரா இத்யாதி. "உனக்காட்பட்டும் அடியேனின்னமுழல்வேனோ" என்றத்தைக்கடாக்ஷித்து அவதாரிகை - திருக்குடந்தையிலே இத்யாதி.

மேலே, "வருமென்மாயா" என்னாநிற்க, "வாராவருவாய்" என்கிறதென்? என்ன - பாஹ்யஸம்ஶ்லேஷம் இத்யாதி. அகவாயிலேயருவாய்க்கோண்டு என்றது - அருவென்று - ஆத்மாவாய், அகவாயிலே தாரகனாய்க்கொண்டு என்றபடி. மாயா - நசியாதவென்றபடி. "மாயா"

திவ்யமங்களவிக்ரஹத்தை யுடையையாய். அல்லாதாருடைய தேஹங்களடைய உத்பத்தி விநாஶங்களை யுடைத்தாயிறேயிருப்பது. [ஆராவமுதாய்]-நிரதிஶயபோக்யனாய்க்கொண்டு எனக்கு மறக்கவொண்ணாதபடி யிருக்கிறவனே. [அடியேனுவியகமேதித்திப்பாய்] - என்றும் உனக்கு ஸ்வம்மான என்னெஞ்சினுள்ளே உன் போக்யதையை யாவிஷ்கரித்து அநுபவிப்பித்தவனே. [தீராவினைகள்தீர வென்னையாண்டாய்] - அநுபவைகவிநாஶ்யமாய், உன்னையொழிய ஒருவரால் போக்கவொண்ணாத, த்வாநுபவவிரோதியான கர்மங்களைப் போக்குவித்து, "அடியேனுவியகமேதித்திப்பாய" என்னும்படி புகுர நிறுத்தினவனே. "பிணியுமொழிகின்றதில்லை பெருகுமிதுவல்லால்" என்கிறபடியே - * தீர்ப்பாரையாமினி இல்வினைகள் தொடக்கமானவற்றைப்போக்கி என்னை யடிமைகொண்டாயென்றுமாம். [திருக்குடந்தையூராய்] - என்னை யடிமைகொள்ளுகைக்குத் திருக்குடந்தையிலேவந்து ஸந்நிஹிதனானவனே. பரவ்யூஹவிபவங்களை வ்யாவர்த்திக்கிறது. நான் கிட்டாத அம்பரத்துக்கு நீ கிட்டவந்து கிடக்கிறவனே. ஒருநத்தமில்லாதானொருவனையோ நான்பற்றிற்று. [உனக்காட்பட்டும்] - ஸம்ஸாரிகளை யநுபவிப்பிக்க வந்துகிடக்கிற உனக்காட்பட்டும். [அடியேன்] - ஆருடையவஸ்து இங்ஙன் அலமந்துதிரிகிறது. [இன்னமுழல்வேனோ]-என் ஸர்வஸ்வத்தையும் உன்திருவடிகளிலேபோகட்டு, நீசெய்து தலைக்கட்டக்கடவையாக நினைத்திருக்கிற நான், இன்னம் எத்தனை திருப்பதிகள்புக்குத் தட்டித்திரியக்கடவேனென்கிறார். (௧௦)

பதினோராம் பாட்டு.

உழலையென்பில்பேய்ச்சிமுலையூடு அவளையுயிருண்டான்
கழல்களவையேசரணாகக்கொண்ட குருகூர்ச்சடகோபன்
குழலின்மலியச்சொன்ன ஓராயிரத்துளிப்பத்தும்
மழலைதீரவல்லார் காமர்மானேய்நோக்கியர்க்கே.

ஆ.—(உழலை) ஆஶ்ரிதவிரோதி நிரஸநைகபோகனாயிருந்த எம்பெருமானுடைய திருவடிமலர்களையே ப்ராப்யமும் ப்ராபகமுமாகக்கொண்ட குருகூர்ச்சடகோபன், வண்டுவரைப்பெருமானுடைய திருக்குழலோசையிற்காட்டிலும் இனியவாகச்சொன்ன ஆயிரத்துளிப்பத்தும் மழலைதீரவல்லார், மானேய்நோக்கியர்க்கு ப்ரியதமர் போக்யராமாபோலே, எம்பெருமானுக்கு போக்யராவரென்கிறார்.

ஓ.—நிகமத்தில், இத்திருவாய்மொழிபத்தும் பழுதறக்கற்கவல்லார் காமிநிகளுக்குக் காமுகரைப்போலே ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு போக்யராவர் என்கிறார்.

என்று விஶேஷிப்பானென்? என்ன - அல்லாதாருடைய இத்யாதி. விஶ்லேஷத்தில் நோவுபடாநிற்க, "ஆண்டாய்" என்கிறதென்? என்ன - அநுபவைக இத்யாதி. "தீர" என்றது - தீரப்பண்ணியென்றபடி. த்விதீயார்த்தத்துக்கு. "வினை" என்று - விஶ்லேஷதுஃகம். விவரணம் - நான்கிட்டாத இத்யாதி. நான்கிட்டாத அம்பரத்துக்கு நீ கிட்டவந்து கிடக்கிறவனேயென்றது - நீ இருக்கிற பரமபதத்தே நான் கிட்டவேண்டும்படியிருக்க, நானிருக்கிறவிடத்திலே நீ கிட்டவந்து கிடக்கிறவனேயென்றபடி. "ஊராய்" என்றதுக்குபாவம் - ஒருநத்தம் இத்யாதி. தட்டித்திரிகை - ப்ரதிஹதபலனாய்த்திரிகை. வாரா வருவாய் தொடங்கி அடைவே யந்வயம். (௧௦)

[உழலை என்றுதொடங்கி] - உழலைபோலேயிருக்கிற எலும்பையுடைய பூதனை யுடைய முலைவழியே அவளுடைய ப்ராணனை வாங்கின அவன் திருவடிகளை தம்முடைய இஷ்டங்கள்பூரிக்கைக்கு உபாயமென்று அத்யவஸித்த ஆழ்வார். தமக்குத் தத்ப்ராப்தி விரோதிநிரஸநம்பண்ணுவானும் அவனையென்று கருத்து. [குழலின்மலிய] - திருக்குழலோசையிலுங்காட்டில் இனிதாக.

ப.—அநந்தரம், இத்திருவாய்மொழியை மௌக்த்யந்தீர்ந்து அப்யஸிக்க வல்லவர்கள் ஸுந்தரியர்க்குக் கமநீயராவரென்று ஃபலத்தை யருளிச்செய்கிறார்.

உழலை – உழலைகோத்தாற்போலேயிருக்கிற, என்பு - எலும்புகளையுடைய, பேய்ச்சி - பேய்ச்சி, முலையூடு – முலையினகவழியாலே, அவளை - அவளை, உயிருண்டான் – ப்ராணாபஹாரம்பண்ணின விரோதி நிரஸநஸ்வபாவனான க்ருஷ்ணனுடையவையாய், அவை - தமக்கு உபாயமாக முன்பு ப்ரகாசிப்பித்த, கழல்களை - திருவடிகளையே, சரணாக - அம்மநோரதஸித்திக்கு உபாயமாக, கொண்ட – வ்யவஸாயம்பண்ணிக்கொண்ட, குருகூர்த் திருநகரிக்கு நிர்வாஹகரான, சடகோபன் - ஆழ்வாரானவர், குழலில் - ஷட்ஜஸ்வரத் துக்கும் உத்பாதகமான வங்கியத்திலும், மலிய - மிக்கவினிமையை யுடைத்தாம்படி, சொன்ன - அருளிச்செய்த, ஓர் - அத்விதீயமான, ஆயிரத்துள் - ஆயிரந் திருவாய்மொழி யினுள், இப்பத்தும் - இப்பத்தையும், மழலை - தங்கள்மௌக்த்யம், தீர - தீர்ந்து, வல்லார் - ஸாவவ்ருத்தியோடே சொல்லவல்லவர்கள், மானேய் - மான்போலேயிருக்கிற, நோக்கியர்க்கு - நோக்கையுடைய * மதிமுகமடந்தையரான திவ்யாப்ஸரஸ்ஸுக்களுக்கு, காமர் - ப்ரஹ்மாலங்காரமுகத்தாலே கமநீயராம்படி யாதரிக்கப்படுவர்கள். மானேய் நோக்கியர்க்குக் காமுகரைப்போலே, ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு ஆதரணீயரென்று த்ருஷ்டாந்தாபிப்ராயமாகவும் சொல்லுவர். குழல் – வங்கியம். இது - அறுசீராசிரியவிருத்தம்.

இ.—நிகமத்தில், இப்பத்தை அப்யஸிக்கவல்லார், காமினிகளுக்கு காமுகரைப்போலே ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு போக்யராவரென்கிறார்.

[உழலை இத்யாதி] - உழலைகோத்தாற்போலேயிருக்கிற எலும்பையுடையளான பூதனையுடைய முலைவழியே ப்ராணனை வாங்கினவன். அகவாயில் நீர்மையற்றிருக்குமா போலேயாயிற்று வடிவிலும் பசையற்றிருக்கும்படி. [கழல்கள் இத்யாதி] - விரோதி நிரஸநசீலனுடைய திருவடிகளே இஷ்டஸித்திக்கு உபாயம் என்று அத்யவஸித்த ஆழ்வார். விரோதியைப்போக்குவானும் தன்னைத்தருவானும் அவனேயென்கை. அவதாரணத்தாலே - ஸஹகாரிநைரபேக்ஷ்யம் சொல்லுகிறது. "ஏவமேவோபாயஸ்து தோபி", "நாபேக்ஷ". [குழலின்மலிய] - திருக்குழலோசையுங்காட்டில் இனிதாக. இவர்பேச்சைக்கேட்டால் பகையரும் இரங்கவேண்டும்படியிருக்கை. ஆனால் அவன் இரங்கி முகங்கொடாதொழிவானென்? என்னில்,—"ஸஹோதராஸ்ம்ருத்யுஸ்ஸ:" என்று கைவிட்ட ஸம்ஸாரத்திலே தன்னை ஆசைப்பட்டுக்கூப்பிடுகிற இது அவனுக்கு ஆகர்ஷகமா யிருக்கையாலே. [மழலைதீரவல்லார்] - "அழுவன்தொழுவன்" என்ற இவருடைய ஸாவ வ்ருத்தியோடே கற்கவல்லவர்கள், மானேய்நோக்கியர்க்கு காமுகரைப்போலே, ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு போக்யராவர். த்ருஷ்டாந்தமல்லாதபோது, "அற்ப சாரங்கள்" "தூராக்குழிதூர்த்து" என்று முன்புசொன்னதுக்கும் "பல நீ காட்டிப்படுப்பாயோ"

"இறிசெய்தென்னைப் புறத்திட்டின்னங் கெடுப்பாயோ" என்று மேற்சொல்லப்படுகிற இவர்படிக்கும் சேராது. த்ருஷ்டாந்தமாகச் சொல்லாதொழிந்தது ஸர்வயா ஸத்ருஶமாகையாலே.

ஈடு.—நிகமத்தில் - இப்பத்தைப் பழுதறக்கற்கவல்லார், காமிநிகளுக்குக் காமுகரைப்போலே ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு ஹோக்யராவரென்கிறார்.

[உழலையென்பில் இத்யாதி] - உழலை கோத்தாற்போலேயிருக்கிற எலும்புகளையுடைய பூதனைமுலைவழியே அவளுடையவுயிரையுண்டான். [கழல்களவையேசரணாகக் கொண்ட] - விரோதிநிரஸநஶீலனுடைய திருவடிகளையே, அநிஷ்டநிவ்ருத்திக்கும் இஷ்டப்ராப்திக்கும் உபாயமென்று அத்யவஸித்த ஆழ்வார். விரோதியைப்போக்குவதும் அவனைத்தருவதும் திருவடிகளேயென்கை - அவதாரணத்தால். [கழல்களவையே சரணாகக்கொண்ட] - பலியாவிட்டாலும் தம்மடிவிடாரிறே யிவர். [குழலில் மலிய] - திருக்குழலோசையிற்காட்டிலும் மிஞ்சி, கேட்டார் நோவுபடும்படியாயிருக்கை. * மரங்கள் நின்றும் மதுதாரைகள்பாயவிறே அங்கு, * மரங்களுமிரங்கும்வகை இங்கு; இனி, நாமிரங்குகிற விது தன்னேற்றமிறேயிங்குத்தைக்கு. அத்விதீயமான ஆயிரந்திருவாய்மொழியில் இப்பத்தையும். [மழலைதீரவல்லார்] - இளமைதீரவல்லார். அதாவது - "வரிற்போகடேன், கெடில் தேடேன்" என்றிருக்கையன்றிக்கே, இவர்சொன்ன ஆற்றாமையோடே சொல்ல வல்லார். "அழுவன்தொழுவன் ஆடிக்காண்பன் பாடியலற்றுவன்" என்றிறே இவராற்றாமை. [காமர்மானேய்நோக்கியர்க்கே]-மானையேய்ந்த நோக்கையுடைய ஸ்த்ரீகளுக்குக் காமுகரைப்போலேயாவர். ஆவதேன்? என்னில்,—"தூராக்குழிதூர்த்து எனைநாளகன்றி

நிகமம்.—உழலை இத்யாதி. "மழலைதீரவல்லார்" என்று தொடங்கி மேலைக்கடாக்ஷித்து அவதாரிகை - இப்பத்தை இத்யாதி. பழுதற - மௌக்த்யநிரஸ.

உழலைகோத்தாப்போலே யிருக்கிற எலும்புகளையுடைய என்றதுக்கு தாத்பர்யம் - அகவாயில்மாத்ரமன்றிக்கே வடிவிலும் ஒருபசையில்லையென்று. பூதனைமுலையுண்டவன் திருவடிகளை உபாயமாகக்கொண்டதுக்கு ஹாவம் - விரோதிநிரஸந இத்யாதி. அவதாரணத்துக்கு அர்த்தம் - விரோதியை இத்யாதி. கொண்ட - அத்யவஸித்தவென்றபடி. "கொண்ட" என்றதுக்கு ஹாவம் - பலியாவிட்டாலும் இத்யாதி "பூதனையை நிரஸித்தவன்" என்று கீழேசொல்லி,"குழலில்மலிய" என்கையாலே, குழலென்கிறவிது - ஸாமாந்யமேயாகிலும், க்ருஷ்ணன்திருக்குழலோசையென்று விவக்ஷித்து அருளிச்செய்கிறார்-திருக்குழலோசை இத்யாதி. திருக்குழலோசையைப்பற்ற இதுக்கு ஆதிக்யமேதென்ன; ஸாம்யகதநமுகேந ஆதிக்யமருளிச்செய்கிறார் - மரங்கள்நின்றும் இத்யாதி வாக்யத்ரயெண. பாஶுரஸ்ய ஸ்பஷ்டோர்த்தः. பெரியாழ்வார்திருமொழி, மூன்றும்பத்து, ஆறாந் திருமொழி, பத்தாம்பாட்டு, "கருங்கண்தோகை" இத்யாதி. தன்னேற்றமிறேயென்றது - "மரங்கள்போல் வலியநெஞ்சம்" என்றத்தைப்பற்ற. இளமையாவது - ஔதாஸீந்யம். ஔதாஸீந்யப்ரகாரோபபாதநம் பண்ணுகின்றுகொண்டு, அதின்றிக்கே கற்கையாவது - ப்ரமேயுக்தராய்க் கற்கையென்கிறார் - வரில்போகடேன் இத்யாதி. இவராற்றாமையோடே சொன்னதோ? என்ன - அழுவன் இத்யாதி. காமுகரைப்போலேயாவரென்றது - ஸ்திரீகளுக்குக் காமுகர்ஹோக்யராமாபோலே, ஈஶ்வரனுக்கும் ஸ்ரீவைஷ்ணவர்களுக்கும் ஹோக்யராவரென்றபடி. இது அவதாரிகைக்குச் சேர்ந்தவர்த்தம். ஆவதென்னென்னிலென்றது - இருந்தபடியே அர்த்தம் சொல்லாமல் த்ருஷ்டாந்தமாகச்சொல்லுவானென்? என்னிலென்றபடி. ப்ரகரணவிரோதத்தாலே மிறுக்கி யோஜித்தோமென்று-தூராக்குழி இத்யாதிவாக்யத்துக்குத் தாத்பர்யம். ஆனபின்பு, முதல்சொன்

ருப்பன்'' என்றவிவர் இது ஃபலமாகச்சொல்லும்போது கீழோடே வ்யாஹதமாம். ஆனால் சொல்லிற்றாயிற்று என்? என்றால்,—“மேல் கோடிதானநரகம்” என்னாநிற்கச்செய்தேயும், விஷயப்ரவணர் அதுபாராதே மேல்விழுமாபோலே, இதுகற்றாரை எம்பெருமானும் ஸ்ரீ வைஷ்ணவர்களும் மேல்விழுந்து போக்யராகக் கொள்ளுவர்கள். இங்ஙனன்றாகில், விப்ரலம்பகர் வார்த்தையாமிறே. இவர் ப்ராமாணிக ரன்றிக்கேயொழிவரே. ப்ரகரணத்துக்கீடாயிறே தலைக்கட்டியிருப்பதும் அவர்களுக்குப்போல் என்றொருஶப்தம் இங்குக் கண்டிலோமீ! என்னில்,—“முற்றுவமை” என்றொரு லக்ஷணமிருக்கிறபடி. த்ருஷ்டாந்தம் புக்கவிடத்தே தார்ஷ்டாந்திகமும் வரக்கடவது. “தாவிவையங்கொண்ட தடந்தாமரைகள்'' என்னாநின்றதிறே. (௧௧)

யாலே அழுக்குச்சட்டையும் தாங்களுமாயிறே யிருப்பது. "வ்ருத்தாந்" (வ்ருத்தாந்)-தொண்ணூற்றஞ்சுவயஸ்ஸுக்குமேலாய் வீதராகராயிருப்பாரையிறே அந்த:புரங்களுக்குவைப்பது. "வேத்ரபாணீந்"(வேத்ரபாணீந்)-பெருமாள் விற்பிடித்தாப்போலே அவர்கள் பிரம்பு பிடித்தபடி. விற்பிடித்து ரக்ஷகரா யிருப்பாரும் பிரம்புபிடித்து ரக்ஷகராயிருப்பாருங்காணும். "ஸ்வலங்க்ருதாந்" (ஸ்வலங்க்ருதாந்.) - பேணுத பரிவட்டங்களையுடையராய் வ்ருத்தருமா யிருந்தார்களாகில் இவர்களுக்கு அலங்காரமாவதேன்? என்னில்;—பெருமாள் சக்ரவர்த்தி மாளிகையிலே போய்த் திருமஞ்சனம்பண்ணி யமுதுசெய்து மீண்டு திவ்யாந்த:புரத்திலே எழுந்தருளும்போது, சக்ரவர்த்தியோபாதி, பழையராகையாலும் தங்கள் பரிவாலுமாக இவரை மடியிலே வைத்தணைத்து உச்சியை மோந்துவிடுவர்கள்; அத்தாலே குங்குமக்குழம்பும் கோயிற்சாந்துமாயிருப்பர்கள். பெருமாளுடையவும் பிராட்டியுடையவும் ஒப்பனைபோலன்று இவர்களோப்பனை. அப்படியே இவர்களும் [சூடுமலர்க்குழலீர்] என்னும்படியா யிருக்கிறபடி. [துயராட்டியேனைமெலியப் பாடுநல்வேதவொலி] - எனக்குத் துயரைவிளைக்கைக் கித்தனைபோக்கி, ப்ராஹ்மணர் வேண்டிச் செய்கிருர்களன்றே. ப்ராஹ்மணராகில் தார்மிகராயிருக்கவேண்டாவோ, ஸ்த்ரீவதம்பண்ணலாமோ. [துயராட்டியேனை] - நலிவார்க்கு ஆஶ்ரயம் வேண்டாவோ. நலிகைக்குத் தென்றலே யமையாதோ. திருவடி மத்ய ராத்ரத்திலே சென்று பிராட்டியைக்கண்டு சிலவார்த்தை விண்ணப்பம்செய்ய, அவள் இவனை "இன்னன்" என்று அறுதியிடமாட்டாதே; "முன்பு ஸந்யாஸிவேஷங்கொண்டு அவர் பக்கல்நின்றும் பிரித்தாய், இப்போது வாநரவேஷங்கொண்டு சிலவார்த்தைகளைச்சொல்லி நலியாநின்றுய், இவையெல்லாம் உனக்காகாதுகாண்", "ஸந்தாபம் தநுஸே பஹுநம்" (ஸந்தாபம்தநுஸேபநம்) - வாராய், நீயும் உன்னையுகந்தாரைப் பிரிந்து நோவுபடுவதிகிடாய். [மெலியப்பாடும்] - கர்த்தவ்யமாலுைம் சிலர்க்கு நலிவாறுல் தவிரவேண்டாவோ. எல்லா

க்ஷாந்துவாஸ்ஸோஹிதாந்॥௯॥" இத்யயோத்யாகாண்டே (௧௬). இந்தஶ்லோகத்தில், "ஸ்வலங்க்ருதாந்" என்றபதம் இங்குவேண்டுவது. இப்படியிருக்கிறதெதுக்கென்ன - விற்பிடித்து இத்யாதி. தந்திருமாளிகையிருக்க, சக்ரவர்த்திமாளிகையிலே - அமுதுசெய்து என்கிறதுக்கு நியாமகமேதென்ன; "ஆடியமுதுசெய்யப்பனுமுண்டிலன்" இத்யாதியுண்டென்று கண்டுகொள்வது. "ஸ" என்றதுக்கு அர்த்தம் - பெருமாளுடைய இத்யாதி. "மெலியப்பாடும்" என்றதுக்குபாவம் - எனக்கு இத்யாதி. "மெலியப்பாடும்" என றதக்கு ஹார்த்தபாவம் - ப்ராஹ்மணராகில் இத்யாதி வாக்யத்வயமும். "துயராட்டியேனை" என்றதுக்குபாவம் - நலிவார்க்கு இத்யாதிவாக்யத்வயமும், துயர் - து:கம். இரண்டாலும் நலிவிலிடுமதுக்குத்ருஷ்டாந்தம் - திருவடி இத்யாதி. "ஸந்தாபம் தநுஸே பஹுநம்" என்றதுக்கு அர்த்தம் - வாராய் இத்யாதி. "ஸம்வ்ருத்த்யா ரூபம் யச்ச த்வயா ஜநஸ்தாநே॥ ஜநஸ்தாநே யதா த்ருஷ்டஸ் ஸம்ஸ்ஸஸாஸ்ய ராவண:॥௧௫॥ உபஸஸ்ருஷ்டாந் காமரூபி நிஶாசர । ஸந்தாபயஸி மாம் பூய ஸந்தாபம் தநுஸே பஹுநம்॥௧௬॥" இதி ஸுந்தரகாண்டே (௩௪) ராவணபுத்த்யா ஹநுமந்தம் ப்ரதி ஸீதா. "ஸ்வாத்யாயோத்யேதவ்ய:" என்று விதிக்கையாலே கர்த்தவ்யமானத்தைத் தவிரப் போமோ? என்ன - கர்த்தவ்யமானலும் இத்யாதி. பிராட்டியானவவஸ்த்தையிலும் வேதத்தை ப்ரஸங்கிக்கிற ஸூக்தியை யநுஸந்தித்து வ்யாக்யாதாவின் ஈடுபாடு - எல்லாவளவிலும் இத்யாதி. எல்லாவளவிலுமென்றது - தாமானதன்மையோடு பிராட்டியானதன்மையோடு வாசியற ஸர்வாவஸ்த்தையிலுமென்றபடி. "எல்லாவளவிலும்" என்கைக்கு, தாமானதன்மையிலே வேதத்தைப்ரஸங்

வளவிலும் இவர்க்கு வேதத்திற்கிடக்கிற ப்ராவண்யம் பாரீர், முதல்வார்த்தைதான் * உளன் சுடர்மிகுசுருதியுளிறே. அதாவது - "ஸர்வே வேதா யத்பதமாமநந்தி" (ஸர்வேவேதாயத்பதமாமநந்தி) "ஸர்வே வேதா யத்ரைகம் பவந்தி" (ஸர்வேவேதாயத்ரைகம்பவந்தி) "வேதைஶ்ச ஸர்வைரஹமேவ வேத்ய:" (வேதைஶ்சஸர்வைரஹமேவவேத்ய:) என்றிறே ப்ரமாணங்கள். [மேலியப்பாடும்] - அவர்களேல்லாம் சமைந்தாலல்லது ஶ்ரு குலாங்நிவ்ருத்தராகார்களிறே; இவள்தனக்கு, வேதகோஷத்தைக்கேட்டவாறே, நாயகன் பேர்வைத்துப் புணர்த்தபுணர்ப்புகேட்டாற்போலேகாணும் அஸஹ்யமாயிருக்கிறபடி. இருவருங் கூடவிருந்து கேட்கக்கடவதைத் தனியிருந்து கேட்கப்புக்கால் பொறுக்கவொண்ணதிறே. அவன்பேர்வைத்துப் புணர்த்தாலும், "ஸீதாயாஶ்சரிதம் மஹத்" (ஸீதாயாஶ்சரிதம்மஹத்) என்றிறே புணர்ப்புத்தானிருப்பது. இனித்தான், "ஹ்ரீஶ்ச தே லக்ஷ்மீஶ்ச பத்ந்யௌ" (ஹ்ரீஶ்சதே லக்ஷ்மீஶ்ச பத்ந்யௌ), "ஈஶ்வரீம் ஸர்வபூதாநாம்" (ஈஶ்வரீம்ஸர்வபூதாநாம்), "அஸ்யேஶாநா ஜகதோ விஷ்ணுபத்நீ" (அஸ்யேஶாநாஜகதோவிஷ்ணுபத்நீ)என்று இவையிறே அவன் விரும்பிக்கேட்பது. [பாடுநல்வேதவொலி]-ஈஶ்வரனைப்பாடுகிற பழம்புணர்ப்பான வேத மென்னுதல், கானத்தையுடைத்தான ஸாமவேத மென்னுதல். [நல்வேதம்] - "உளன்சுடர்மிகுசுருதியுள்" என்று, ப்ரமாணாந்தரங்களில் உத்கர்ஷமாதல்; "வேதாநாம் ஸாமவேதோஸ்மி" (வேதாநாம்ஸாமவேதோஸ்மி) என்கிற

ப்ர:—கடவல்ல்யாம் [க-உ] ஸர்வே வேதா யத்பதமாமநந்தி தபாம்ஸி ஸர்வாணி ச யத்வதந்தி। யதிச்சந்தோ ப்ரஹ்மசர்யம் சரந்தி தத்தே பதம் ஸங்க்ரஹேண ப்ரவீம்யோமித்யேதத்.

ஶ்ருதௌ [ஆ-ந-பம்-உக] "ஏக: ப்ரவிஷ்டஶ்ஶாஸ்தா ஜநாநாம் । ஏகஸ்ஸந் பஹுதா விசார: । ஶதம் ஶுக்ராணி யத்ரைகம் பவந்தி । ஸர்வே வேதா யத்ரைகம் பவந்தி । ஸர்வே ஹோதாரோ யத்ரைகம் பவந்தி । ஸ மாநஸீந ஆத்மா ஜநாநாம் । ஏக: ப்ரவிஷ்டஶ்ஶாஸ்தா ஜநாநாம் ஸர்வாத்மா ॥"

ஶ்ரீகீதாஸு பஞ்சதஶே, "ஸர்வஸ்ய சாஹம் ஹ்ருதி ஸந்நிவிஷ்டோ மத்தஸ்ஸ்ம்ருதிர்ஜ்ஞாநமபோஹநஞ்ச । வேதைஶ்ச ஸர்வைரஹமேவ வேத்யோ வேதாந்தக்ருத்வேதவிதேவ சாஹம் ॥கரு॥"

உத்தரநாராயணே, "ஹ்ரீஶ்ச தே லக்ஷ்மீஶ்ச பத்ந்யௌ அஹோராத்ரே பார்ஶ்வே நக்ஷத்ராணி ரூபம்॥"

கித்தவிடமுண்டோ? என்ன - முதல்வார்த்தை இத்யாதி. உத்தாஹரணமன்றோ இவனைச்சொல்லுவது, மற்றுள்ளவிடமெல்லாம் இவனைச்சொல்லாதேயென்ன - அதாவது இத்யாதி. யத்பதமென்றது - யாதொருத்தனுடைய ஸ்வரூபமென்றபடி. பத்யதஇதிபதம் - ஸ்வரூபமித்யர்த்த:. "ஸர்வே வேதா:" இத்யாதி கடவல்ல்யாம். "வேதைஶ்ச ஸர்வைரஹமேவ வேத்ய:" இத்யாதி, ஶ்ரீகீதாயாம். "பாடும்" என்கிற வர்த்தமாநத்துக்கு அர்த்தம் - அவர்களேல்லாம் இத்யாதி. இவளுக்கு வேதம் பாதகமாகிறதேப்படியென்ன - இவள்தனக்கு இத்யாதி நாயகன் புணர்ப்புகேட்டால் நல்லதன்றோ, பாதகமாமோ?என்ன - இருவரும் இத்யாதி. ஈஶ்வரனுக்குத் தன் புணர்ப்பு கேட்கலாமோ? என்ன - அவன்பேர் இத்யாதி. ஆனால் இருவர்புணர்ப்பும் ஸமமாகக்கேட்குமோ? என்ன - இனித்தான் இத்யாதி. புணர்ப்பு - ப்ரபந்தம். ஸ்வரத்தோடேகூடப் பாடாநின்றுள்ள ஸாமவேதத்தி

உத்கர்ஷமாதல். ஸ்வரத்திலே வைகல்யமுண்டாதல், "வேதாநாம்ஸாமவேதோஸ்மி" (வேதாநாம்ஸாமவேதோஸ்மி) என்கிறபடியே அந்தரங்கமான வேதமன்றிக்கே யொழிதல் தான் செய்ததாகில், நான் ஆறியிருக்கலாயிற்றே. [வேதவொலி பரவைத்திரைபோல் முழங்க]- ஓதங்கிளர்ந்த கடல்போலேகாணும் ஸாமத்வநி யிருக்கிறபடி. [முழங்க] - அதில் பர்வமோழிந்தநாள்களும் பகலு மாறியிருக்கலாமிறே. [மாடுயர்ந்தோமப்புகைகமழும்] - ஓத்துச்சொல்லிச் சொல்லாதவிடமெல்லாம் வைதிகக்ரியைகளேயாய்க்கிடக்குமித்தனை. மாடு - பர்யந்தம். [உயர்ந்தோமப்புகைகமழும்]-ஆகாசமடங்கலும்இடமடைத்து,வைமாநிகரை முகம்பார்த்து அநுபவிக்கவொட்டாதபடியெழாநின்றது.[மாடுயர்ந்தோமப்புகைகமழும்]-"கர்மணைவ ஹிஸம்ஸித்திமாஸ்திதாஜநகாதய:" (கர்மணைவஹிஸம்ஸித்திமாஸ்த்திதாஜநகாதய:) என்கிறபடியே, ஜ்ஞாநத்தில் தலைநின்றவர்களிறே; இனிபலாபிஸந்திபண்ணி யநுஷ்டித்து பலவ்யாப்தமானவாறே மீளுமவர்களன்றே.[கமழும்]-ஹோமதூமமும், ஹவிஸ்ஸூக் கொள்ளவந்துநிற்கிற எம்பெருமானுடைய மாளிகைச்சாந்துமாகக் கமழுகிறபடி. [திருவல்லவாழ்நீடுறைகின்றபிரான்] - அவதாரம்போலே தீர்த்தம் ப்ரஸாதியாதே பிற்பாடர்க்கு உதவும்படி ஶ்ரமஹரமான திருவல்லவாழிலே நித்யவாஸம்பண்ணுகிற உபகாரகன். [கழல்காண்டுங்கொல்நிச்சலுமே] - அவன் இங்கே நித்யவாஸம்பண்ணாநின்றால், நாமும் நித்யவாஸம் பண்ணும் தேசத்தில்போய்ப் பெறக்கடவபேற்றைப் பெறவல்லோமே. அங்கும்போனால் ஸ்தாவரஸ்ருஷ்டியிறே. (௫)

னுடைய கோஷமென்று ஶப்தார்த்தம். "பாடும்" என்கையாலே - ஸ்வரவைகல்யமில்லையென்றபடி. நல்வேதம் - ஸாமவேதம். இதுக்கு ஹார்த்தபாவம் - ஸ்வரத்திலே இத்யாதி. 'திரையோடேகூடின - பரவையொலிபோலே - பாடுநல்வேதவொலி - முழங்க" என்றந்வயித்துஅர்த்தம் - ஓதம்கிளர்ந்த இத்யாதி. ஸமுத்ரகோஷத்துக்கு காலவிச்சேதமுண்டு, இதுக்கதுதானு மில்லையென்கிறார் - அதில் இத்யாதி. இது - "முழங்கும்" என்கிற வர்த்தமாநத்துக்கு அர்த்தம். அதில் - ஸமுத்ர கோஷத்திலென்றபடி. ஆனால், அநத்யயநங்களிலே ஓதலாமோ? என்னில்; - தர்ஶபூர்ணமாஸங்களிலும் யஜ்ஞக்ரியாஶேஷமானவை சொல்லலாமென்றபடி. "மாடு" என்றதுக்கு அர்த்தம் - ஓத்துச்சொல்லி இத்யாதி. பலம் ஸித்தமானால் கர்மாநுஷ்டாநாந்நிவ்ருத்தராகார்களோ, "கமழும்" என்று - வர்த்தமாநமாகச் சொல்லுவானென்? என்ன; - ஜ்ஞாநாதிகராகையாலே பலாபிஸந்தி யில்லையென்கிறார் - கர்மணைவஹி இத்யாதி வாக்யத்வயத்தாலே. ஶப்தார்த்தம்-ஹோமதூமமும் இத்யாதி.எம்பெருமானுடைய மாளிகைச்சாந்தென்றது - ஹார்த்தபாவம். "நிச்சலும் - கழல்காண்டுங்கொல்" என்றதுக்கு பாவம் - அவன்இங்கே இத்யாதி. காண்கிறமாத்ரம்போருமோ? என்ன - அங்கும்போனால் இத்யாதி. கீழ்ப்பாட்டு - "தீர்த்தம்ப்ரயச்சாந்ஜாதிஷ்டி" என்றதினர்த்தம்; இப்பாட்டு - "கதாநாஸாக்ஷாத்கரவாணிசக்ஷுஷா" என்றதினர்த்தம். "காவ்யம்ராமாயணம்க்ருத்ஸ்நம் ஸீதாயாஶ்சரிதம்மஹத்| பௌலஸ்த்யவதமித்யேவசகாரசரிதவ்ரத:||எ||" இதி பாலகாண்டே(௪). "வேதாநாம்ஸாமவேதோஸ்மி தேவாநாமஸ்மிவாஸவ: | இந்த்ரியாணாம்மநஶ்சாஸ்மி பூதாநாமஸ்மிசேதநா||உஉ||" இதி பகவத்கீதாயாம் தஶமே. ததேதத்வயத்ருதீயே, "கர்மணைவஹிஸம்ஸித்திமாஸ்திதாஜநகாதய: | லோகஸங்க்ரஹமேவாபி ஸம்பஶ்யந்கர்துமர்ஹஸி||உ0||" இதி க்ரமேணாந்வய:. (௫)

நான்காம் பாட்டு.

நிச்சலுந்தோழிமீர்காள்! எம்மைநீர்நலிந்தென்செய்தீரோ?
பச்சிலைநீள்கமுகும் பலவுந்தெங்கும்வாழைகளும்
மச்சணிமாடங்கள்மீதணவும் தண்திருவல்லவாழ்
நச்சரவினணைமேல் நம்பிரானது நன்னலமே.

ஆ.—(நிச்சலும்.) பச்சிலைநீள்கமுகும் பலவும் தெங்கும் வாழைகளும் மச்சணிமாடங்களின்மேலே யணவாநின்ற ஸ்ரமஹரமான திருவல்லவாழிலே நின்றருளின எம்பெருமான், திருவநந்தாழ்வானைப்போலே என்னை அநந்யார்ஹமாக்கிக்கொண்டான், தோழிமாரானநீங்கள் நித்யமாக என்னை யலைத்து என்னப்ரவ்ருத்திபண்ணுகிறீர்கோளென்கிறாள்.

ஒ.—நாலாம்பாட்டில், 'இங்ஙனேமநோரதிக்கை ஈடன்று' என்று நிஷேதிக்கிற தோழிமாரைக்குறித்து, 'என்னுடையநற்சீவன் அவன்பக்கலது, உங்களுடையஜல்பம் வ்யர்த்தம்' என்கிறாள்.

[நிச்சலும் என்றுதொடங்கி] - விபரீதமேபலித்துவாராநிற்க, தோழிமாரான நீங்கள் நித்யமாக என்னை அலைத்து என்னப்ரவ்ருத்தி பண்ணுகிறீர்கோள்? [பலவு] - பலா. [மச்சணிமாடம் என்றுதொடங்கி] - பலநிலமான அழகிய மாடங்களின்மேலே அணவாநின்ற ஸ்ரமஹரமான திருவல்லவாழிலே நின்றருளித் திருவநந்தாழ்வானைப் போலே என்னை அநந்யார்ஹமாக்கிக்கொண்டவனதாயிற்று.

ப.— அநந்தரம், சோலைகளோடுகூடின மாடங்களையுடைய திருவல்லவாழிலே நித்யாஸ்ரித ஸம்ஸ்லிஷ்டனாய் வர்த்திக்கிற உபகாரகன்பக்கலிலே என்னுடைய ஸ்நேஹமாயிருக்க, நீங்கள் நலிந்து என்னப்ரயோஜநமுண்டென்கிறாள்.

தோழிமீர்காள்-(ப்ரியபரத்வமே ஸ்வரூபமான) தோழிமீர்காள்! எம்மை - (உங்களபிமதம் வலியாதவவஸ்த்தையையுடைய) எம்மை, நீர் - (ஜீவத்வாக்யைகளல்லாத) நீங்கள், நிச்சலும்-நிரந்தரமாக, நலிந்து-நிஷேதித்துநலிந்து, என் - என்னகாரியம், செய்தீர்-செய்கிறீர்கோள்? பசு-பசுத்த, இலை-இலையையுடைத்தாய், நீள்-நீண்ட, கமுகும்-கமுகும், பச்சிலைநீள்-அப்படிப்பட்ட, பலவும்-பலவும், தெங்கும்-தெங்கும், வாழைகளும்-வாழைகளும், மச்சு-மச்சுக்களின், அணி - நிரையையுடைத்தான, மாடங்கள்-மாடங்களின், மீது-மேலே, அணவும் - (அவ்வோநிலங்களுக்கு நிழல்செய்யும்படி) அணவின, தண்-குளிர்ந்த, திருவல்லவாழ்-திருவல்லவாழிலே, நஞ்சு-(அநாஸ்ரிதர்க்கு அணுகவொண்ணாதபடி) நஞ்சையுமிழ்கிற, அரவினணைமேல்-திருவரவணையின்மேலே கண்வளர்ந்தருளுகிறபடியை, நம் - நமக்கு ப்ரகாஸிப்பித்த, பிரானது - மஹோபகாரகனிடத்து, (என்னுடைய), நல்-மிகுந்த, நலம் - நலமானது. நற்சீவனென்றுமாம்.

இ.— நாலாப்பாட்டில், "இங்ஙனம் மநோரதிக்கை ஈடன்று" என்று நிஷேதிக்கிற தோழிமாரைக்குறித்து; என்னுடையநற்சீவன் அவன்பக்கலது, உங்களுடைய ஜல்பம் வ்யர்த்தமென்கிறாள்.

[நிச்சலுந்தோழிமீர்காள்] - "கழல்காண்டுங்கொல்நிச்சலும்" என்று - எனக்கு நித்யகைங்கர்யத்திலுள்ள ருசி போரும் உங்களுக்கு என்னைமீட்கையிலுண்டான ருசி. [தோழிமீர்காள்] - உங்களை யாராகநினைத்துத்தான் நிஷேதிக்கிறீர்கோள். தாய்மார்செய்யக்கடவதைத் தோழிமாரானநீங்கள் செய்யக்கடவீர்கோளோ. [எம்மை] - உங்கள்சொற் கேளாத என்னை. [நீர்]-உங்கள்சொல்ஜீவியாதிருக்கிற நீங்கள். [நலிந்தென்செய்தீரோ] - அத்தலைக்கு என்னப்ரயோஜநங்கொள்ளுகிறீர்கோள். செய்துதலைக்கட்டலாவதிலேயன்றோ ப்ரவர்த்திப்பது. [நிச்சலும் - நலிந்தென்செய்தீரோ] - "மாசறுசோதியேதொடங்கி விலக்கிப்போருகிறீர்கோள், என்னப்ரயோஜநம்பெற்றீர்கோள்" என்று பிள்ளான். [பச்சிலை இத்யாதி] - பசுமைபறாத இலைகளையுடைத்தாய் ஓங்கியிருந்துள்ள கமுகுகளும். அவன் ஸந்நிதியில் வர்த்திப்பார்க்கு பசுமையும் ஓக்கமும் மாறாதிருக்குமென்கை; தனக்கு வைவர்ண்யமும் உறாவுதலுமாயிறே யிருக்கிறது. [பலவு]-பலா. [மச்சணிமாடங்கள்] - பலநிலமான மாடங்களின்மேலே யணவாநிற்கக்கடவதாய். மாளிகைக்கு நிழற்செய்தாப் போலேயிருக்கை. [தண்திருவல்லவாழ்] - ஸ்ரமஹரமானவூர். [நச்சரவு] - ப்ரதிகூலர்க்குக் கிட்டவொண்ணாதபடி அரணுண்டாயிருக்கை. "தீமுகத்துநாகணை" என்கிறாளாகவுமாம். திருவநந்தாழ்வான்மேலேசாய்ந்த அழகைக்காட்டி என்னை அநந்யார்ஹமாக்கினவன் பாடது என்னுடைய நற்சீவன். திருவநந்தாழ்வானைப்போலே என்னை அநந்யார்ஹமாக்கினவ னென்றுமாம். அவன்பக்கலிலே நற்சீவனுயிருக்க கேவல ஶரீரத்துக்கு ஹிதஞ்சொல்லுகிற இத்தால் ப்ரயோஜநமென்? அவன்பக்கலிலேசென்று ஹிதஞ்சொல்லுங்கோள்.

ஈடு.—நாலாம்பாட்டு. "இங்ஙன் மனோரதிக்கை ஈடன்று" என்று நிஷேதிக்கிற தோழிமாரைக்குறித்து; என்னுடைய நற்சீவன் அவன்பக்கலது, உங்களுடைய ஜல்பம் வ்யர்த்தமென்கிறாள்.

[நிச்சலும்தோழிமீர்காள்] - தோழிமார் "உனக்கு இத்தனையாகாதுகாண்" என்று பலகாலும் சொல்லுவர்களே, அது பலியாதிருக்கச்செய்தேயும், இவளையிழக்கவொண்ணாதென்று பார்த்துத் திரியவும் சொல்லத்தொடங்கினார்கள்; நீங்கள் நலிகைதவிரீர்கோளாகில், நானிருந்தவிடத்தேபோய் நலியுங்கோளேன்கிறாள். என்னுடைய நற்சீவனுனது அவன்பக்கலிலே யானபின்பு, நீங்கள் சொல்லுகிறவற்றால் என்னப்ரயோஜநமுண்டு. எனக்கு "அவனைக்காணவேணும்" என்னும்ஆசை நித்யமாய்ச்செல்லுகிறாப்போலே, உங்களுக்கும் "என்னைமீட்கவேணும்" என்கிற இவ்வஹிஸந்தி மாறாதே செல்லுகிறபடி. [தோழிமீர்காள்] - நீங்கள் நீங்களாய்ச்சொல்லுகிறீர்கோளோ, தாய்மாராய்ச்சொல்லுகிறீர்கோளோ. இத்தனை ஸ்வரூபஜ்ஞாநமில்லாதார் உண்டாயிற்றே. ஒன்றுசொல்லுவார்

நாலாம்பாட்டு.—நிச்சலும் இத்யாதி. "நம்பிரானதுநன்னலம்" என்றத்தைக்கடாக்ஷித்து அவதாரிகை-இங்ஙன் இத்யாதி.

"நிச்சலும்தோழிமீர்கள் எம்மை நீர்நலிந்தென்செய்தீரோ" என்றதுக்கு ப்ரஸக்தியருளிச்செய்கிறார் - தோழிமார் என்றுதொடங்கி, திரியவும்சொல்லத்தொடங்கினார்கள் என்னுமளவும். "நம்பிரானதுநன்னலம்" என்றத்தைக்கடாக்ஷித்து, "எம்மைநீர்நலிந்தென்செய்தீரோ" என்றதுக்கு ஶாவம் - நீங்கள் இத்யாதி. ஏதத்விவரணம் - என்னுடைய இத்யாதி. "கழல்காண்டுங்கொல்நிச்சலுமே" என்றவநந்தரம், "நிச்சலும் - நலிந்து" என்றதுக்கு ஹார்த்தஶாவம் - எனக்கு அவனை இத்யாதி. "தோழிமீர்காள் - நலிந்தென்செய்தீரோ" என்றதுக்கு ஹார்த்தஶாவம் - நீங்கள் இத்யாதி,

தம்மையறிந்தன்றே சொல்லுவது. [எம்மைநீர்] - உந்தாமையழியமாறியும் என்னுடைய ஜீவநமே எண்ணக்கடவநீங்கள், உங்கள்ஹிதவசநம் நெஞ்சிற்பட்டால் ஜீவியாத என்னை. [நலிந்தென்செய்தீரோ] - நான்ஜீவிப்பனேயோ ! உங்கள் ஸ்வரூபத்தோடு சேர்ந்தோ. [நிச்ச சலும்தோழிமீர் இத்யாதி] - " * மாசறுசோதிதொடங்கி இவ்வளவும்வர ஹிதஞ்சொல்லு கிற நீங்கள் என்னப்ரயோஜநம் பெற்றிகோள்" என்றுபிள்ளான். [தோழிமீர்காளெம்மைநீர் நலிந்தென்செய்தீரோ] - தாந்தாம் நலிவுபட்டும் பிறரைநோக்குவார், தாங்களே பிறரை நலியவும்பார்ப்பரோ. [என்செய்தீரோ] - ஒன்றுசெய்வது ஒரு ப்ரயோஜநத்தளவுமன்றே, லாஹாலாஹமறிந்தாலும் கைவாங்கவேண்டாவோ. [எம்மைநீர் நலிந்தென்செய்தீரோ] - ப்ராவண்யத்துக்கு முற்பாடராளுல் ப்ராப்திக்கு முற்பாடராகவேண்டாவோ. [பச்சிலை இத்யாதி] - அந்நிலத்திலே யகப்பட்டாரையும் சிலர் மீட்கநினைப்பரோ. ஹிதஞ்சொல்லு வார் பசுமையுள்ளவிடத்தேயன்றே சொல்லுவது, இங்கு விவர்ணமாயிறே கிடக்கிறது. பிரியாதிருப்பார்க்குப் பசுமைமாறாதிறே. [பலவும்] - பலா. " '[நீள் - கமுகும்] என்றுப் போலே, பலவும் - தெங்கும், வாழைகளும்' என்று (பச்சிலைநீள் என்கிறத்தை -'அவற்றி லேயும்) உய்ந்தபிள்ளை கூட்டும்படிகாணும்" என்று ஜீயர் அருளிச்செய்வர். [மச்சணி மாடங்கள்] - பலநிலங்களையுடைத்தாகையாலே அலங்க்ருதமான மாடங்கள். [மீதண வும்] - செல்வப்பிள்ளைகளுக்கு அணுக்கனிட்டாற்போலேகாணும் கவிந்துகொண்டுநிற்கிற படி. [தண்திருவல்லவாழ்] - ஶ்ரமஹரமாம்படி சோலைசெய்தவூர். பசுமைமாறாத இலை களையுடைத்தாய் நீண்டகமுகும், அப்படிப்பட்டபலவும், தெங்கும், வாழைகளும், மச்சுக் களின் நிரையையுடைத்தான மாடங்களின்மேலே, அவ்வோநிலங்களுக்கு நிழல்செய்யும்

*ஹிதவசநத்துக்குஹாவம் - இத்தனை இத்யாதி. இத்தனையென்றது - இத்தனைபேரென்றபடி. "நீங் கள் நீங்களாய்ச்சொல்லுகிறிகோளோ" என்றதின்பலிதம் - ஒன்றுசொல்லுவார் இத்யாதி. "எம்மை" என்றது - ஆத்மநிஹிதவசநமாகையாலே - என்னை என்கிறார். என்செய்தீர் - என்னப்ரயோஜநம் பெற்றிகோளென்றபடி. "என்செய்தீரோ" என்றதுக்குஹாவம் - நான்ஜீவிப்பனேயோ இத்யாதி. "நிச்சலும்" இத்யாதிக்கு ஹாவார்த்தம் - மாசறுசோதி இத்யாதி. ஆக, "நிச்சலும்" என்றதுக்கு - இந்தத்திருவாய்மொழியிலே பலகாலும் ஹிதஞ்சொல்லி என்செய்தீரோவென்னுதல், * மாசறுசோதி தொடங்கி இவ்வளவும் ஹிதஞ்சொல்லி என்செய்தீரோவென்னுதல். "நீர்நலிந்து"என்றதுக்குஹாவம்- தாந்தாம்நலிவுபட்டும் இத்யாதி. என்னுடைய ஸத்தாநாஶமொழிய வேறொருப்ரயோஜநமில்லை யென்று - கீழ் அருளிச்செய்து, உங்கள் ஹிதவசநத்துக்கு நான்மீளாதபின்பு உங்களுக்கு ஒரு ப்ர யோஜநமில்லையென்று ஹாவார்த்தம் - ஒன்றுசெய்வது இத்யாதிவாக்யம். விவரணம் - லாபாலாபம் இத்யாதி. நலியப்ராப்தியில்லையாகில், எதுக்குப்ராப்தியுண்டென்ன - ப்ராவண்யத்துக்கு இத்யாதி. ப்ராவண்யத்துக்கென்றது - ப்ராவண்யத்தை விளைக்கைக்கென்றபடி. "பச்சிலை" என்றுதொடங்கி - அவ்வூரை வர்ணிக்கிறதுக்கு ஹாவம் - அந்நிலத்திலே இத்யாதி. "பச்சிலை" என்றத்துக்கு ஹாவம் - ஹிதஞ்சொல்லுவார் இத்யாதி. இங்குப்பசுமையில்லையோ? என்ன - இங்குவிவர்ணமாய் இத்யாதி. அங்குப்பசுமையுண்டாகைக்கு ஹேதுவேதென்ன - பிரியாதிருப்பார்க்கு இத்யாதி. ஈஶ்வரனைப் பிரியாதிருக்கிறமரங்களுக்கென்றபடி. பிரியாதிருப்பார்க்கென்றது - பிரிவால்வரும் வ்யஸநமின்றிக்கே யிருப்பார்க்கென்றபடி. "பலவும்" என்றது - பலாமரமென்றபடி. உய்ந்தபிள்ளைநிர்வாஹத்துக்கு, * நீட்சி கமுகுக்கு விஶேஷணமானுப்போலே, பலவுமென்று - ஹிதவசநமாய், பலவானதெங்கும் பலவானவாழைகளுமென்னுதல்; அன்றிக்கே, பச்சிலைநீளென்றது - * கமுகுக்கு விஶேஷணமானுப் போலே, "பச்சிலைநீள் - பலவும், பச்சிலைநீள் - தெங்கும், பச்சிலைநீள் - வாழைகளும்" என்று கூட்டுத லென்றபடி. பலநிலங்களாவது - தளத்தின்மேல்தளம். மச்சை, அணியாக - அலங்காரமாகவுடைத் தான, க்ருஹங்களென்று ஶப்தார்த்தம். மச்சு - மேல்தளம், அணி - அலங்காரம். மேல்தளமென்று*

படி யணவின குளிர்ந்த திருவல்லவாழிலே. [நச்சரவினணைமேல்] - மேலும்சுற்றும் சோலையுண்டானால் கீழும் சோலையுண்டாகவேணுமோ. இங்கும் ஶைத்ய ஸௌகந்த்ய ஸௌகுமார்யங்களால் குறையில்லையே. [நச்சரவு] - படுக்கையும் தானேயாய்க்காத்தூட்டவும் வற்றாயிருக்கை. பச்சிலையித்யாதிக்கு - போகிகளாயிருப்பார் விடாதே வர்த்திக்கலாம் தேசம். [நச்சரவு] - இளையபெருமாள் கையும்வில்லுமாய் வெளிக்காவல்நிற்க, பெருமாளும் பிராட்டியுமாய்க் காட்டிலே ரமித்தாப்போலே. * ***ரக்ஷணாவநேத்ருய:*** இறே, அப்படியே இங்கும் காவலுண்டாயிருக்கிறபடி. அநந்தமுகமான காவலிறே. பெருமாளும் இளையபெருமாளும் பிராட்டியும் ஶ்ருங்கிபேரபுரத்திலே விட்டருளினவன்று ஸ்ரீகுஹப்பெருமாள் இளையபெருமாளைப்பார்த்து, "பெருமாளும்பிராட்டியும் கண்வளராநின்றார்கள், உமக்கீடாம்படி திருவடிகளிலே தலையாம்படி படுக்கைபடுத்தேன்; நாங்கள் காடராய் அங்கேயிங்கேதிரிகையாலே எங்களுக்கு உறக்கம்வாராது, நீர் ராஜபுத்ரராகையாலே ஸுகுமாரர்;'ஹரதாதிகள் வருவர்கள்' என்றஞ்சவேண்டா, நானும் என்பரிக்ரமுமுண்டு, நீர் கண்வளர்ந்தருளும்" என்ன,—"***கதம் தாஸரதௌ பூமௌ ஶயானே ஸஹஸீதயா***" (கதம்தாஶரதௌபூமௌஶயாநேஸஹஸீதயா) - வாரீர், மஹாராஜனை சக்ரவர்த்தி அறுபதினாயிரமாண்டு அநபத்யனாய் வருந்திப்பெற்ற ஸுகுமாரரான பெருமாள் தரைக்கிடைகிடக்க, எனக்குக்கண்ணுறங்குமோ; அவர்தாம் வஸிஷ்டாதிகள் கீழே தரையிலேயிருந்து மறிவர், அதுவுமின்றிக்கேயிருக்கிற பிராட்டியோடேகூடக் கிடக்கிறபடிபாரீர்; ஆனபின்பு, எனக்கு உறக்கமுண்டாய் அதுபோகைக்கு அபிஸந்திபண்ணியிருக்கிறேனல்லேன்காணும், உறக்கம் தேட்டமாய்க்கிடையாமையாலேயிருக்கிறேன். [நம்பிரானதுநன்னலமே] - "***அஸ்யா தேவ்யா மனஸ் தஸ்மிந் தஸ்ய சாஸ்யாம் ப்ரதிஷ்டிதம்***" (அஸ்யாதேவ்யாமநஸ் தஸ்மிந் தஸ்யசாஸ்யாம்ப்ரதிஷ்டிதம்) என்னும்படியே யிருந்ததாகில் நான் ஆறியிரேனோ, இரண்டும் அங்கே யொருதலைத்தபின்பு நான் எங்ஙனே ஆறியிருக்கும்படி. [நம்பிரானது

ப்ர:—(நச்சரவினணைமேல்)—ஸங்க்ஷேபே, "ரக்ஷாவஸர ஸம்ப்ராப்தா ரக்ஷணாவநேத்ருய: । ஶேஷஶய்யா ஸஹாஸ்தா தேநவஸநுஸுவ ॥ ௯ ॥"

சொன்னபோதே - பலநிலங்களென்று அர்த்தாத்ஸித்தம். மீது - மேல். அணுக்கன் - குடை. "மீதணவும்" என்று - மேற்சோலையைச்சொன்னபோதே, சுற்றும் என்று அர்த்தாத்ஸித்தம். அரவைச் சோலையாகச்சொல்லுகைக்கடியேதென்ன; குணஸாம்யத்தாலேயென்கிறார் - இங்கும்ஶைத்ய இத்யாதி. "அரவினணை" என்றும், "நஞ்சு" என்றும் விஶேஷித்ததுக்குபாவம் - படுக்கையும் இத்யாதி. காத்தூட்டவும் வற்றாயிருக்கையென்றது - விரோதிகள் வாராமல் காத்துஉஜ்ஜீவிப்பிக்கவும் வற்றாயிருக்கையென்றபடி. பச்சிலை இத்யாதிக்கு - தாத்பர்யமிதிஶேஷ:. காத்தூட்டினதுக்கு த்ருஷ்டாந்தம் - இளையபெருமாள் இத்யாதி. உக்தத்துக்கு ப்ரமாணம் - ரக்ஷணா இத்யாதி. இளையபெருமாள் காத்தப்ரகாரத்தைக்காட்டுகிறார் - பெருமாளும் இத்யாதி. "காவல்" என்றப்ரஸங்கத்திலே யருளிச்செய்கிறாரதல். "ஶயானே" என்னாதே, "ஶாயநே" என்றதுக்குபாவம் - மஹாராஜனை இத்யாதி. "யோ நிஶ்சய ஸுஷ்ட கஷ்டம் ஶக்யா" என்று அந்வயித்துபாவம் - ஆனபின்பு இத்யாதி. அபிஸந்தி - நினைவு. தாத்பர்யம் - அஸ்யாதேவ்யா இத்யாதி. அதாவது - பிராட்டிக்கு மநஸ்ஸு அவர்பக்கலிலேயாய், ப்ராணன் அவள்பக்கலிலேகிடந்ததிறே; எனக்கு அங்ஙனன்றிக்கே, ப்ராணனும் மநஸ்ஸும் அவர்பக்கலிலேயானபின்பு ஆறியிருக்கப்போமோவென்றுகருத்து. இரண்டும் அங்கே யொருதலைத்தபின்பென்றது - பிராட்டிக்குப்போலே, "ப்ரதிஷ்டிதம்" என்று - மநோமாத்ர

நன்னலமே] - திருவநந்தாழ்வான்மேலேசாய்ந்த வடிவழகைக்காட்டி என்னை அநந்யார்ஹ மாக்கினவன்பாடது என்னுடையநற்சீவன். திருவநந்தாழ்வானைப்போலே என்னை அநந் யார்ஹமாக்கினவ னென்றுமாம். அவன்பக்கலிலே நற்சீவனுயிருக்க, கேவலஶரீரத்துக்கு ஹிதஞ்சொல்லுகிற இத்தால் ப்ரயோஜநமேன்; அவன்பக்கலிலேசென்று ஹிதஞ்சொல்லுங் கோள் வேணுமாகில். (௪)

ஐந்தாம் பாட்டு:

நன்னலத்தோழிமீர்காள்! நல்லவந்தணர்வேள்விப்புகை
மைந்நலங்கொண்டுயர்விண்மறைக்கும் தண்திருவல்லவாழ்
கன்னலங்கட்டிதன்னைக் கனியையின்னமுதந்தன்னை
என்னலங்கொள்சுடரை என்றுகொல்கண்கள்காண்பதுவே

ஆ.—(நன்னலம்.) நான் ஒன்றை யாசைப்பட்டால் அத்தைமுடிக்கும் ஸ்வ ஹாவமன்றோ உங்களது. [நல்லவந்தணர்] - அநந்யப்ரயோஜநரான ப்ராஹ்மணருடைய யாகங்களிலே கறுத்தெழுகிற ஹோமதூமங்கள் ஆகாஶாவகாஶமெல்லாம் மறைக்கும் படியான திருவல்லவாழிலேயிருந்து நிரதிஶயபோக்யனுமாய் என்னை ஸர்வஸ்வஹரணம் பண்ணின அழகையுமுடையவனை என்னுடையகண்கள் விடாய்தீரக் காணப்பெறுவ

ஒ.—அஞ்சாம்பாட்டில், நான் செய்தபடி செய்ய, என்னுடைய கண்கள் விடாய்தீரக்காணப்பெறுவது என்று? என்கிறாள்.

[நன்னலத் தோழிமீர்காள்]-நான் ஒன்றை யாசைப்பட்டால் அத்தை முடிக் கும் ஸ்வபாவமன்றோ உங்களது? [நல்ல அந்தணர் என்று தொடங்கி]-அநந்ய ப்ரயோ

மன்றிக்கே, ப்ராணனும் அங்கே யொருதலைத்தபின்பென்றபடி. "நன்னலம்" என்று - நற்சீவனும், "ப்ராணன் நம்பிரானது" என்றபோதே - மநஸ்ஸு அங்கே ப்ரவணமாயிற்றென்று அர்த்தாத்ஸித்தம். அன்றிக்கே, "நன்னலம்" என்று - ஸ்நேஹமாய், ததாஶ்ரயமானமநஸ்ஸைலக்ஷித்து, "நம்பிரானதே நன்னலம்" என்று அந்வயித்துஹாவம் - ஸஹ்யாஜேவ்யா இத்யாதி என்னுதல். அதாவது - இவள் திருவுள்ளம் அவனிடத்திலேயாய் அவன்திருவுள்ளம் இவளிடத்திலேயா யிருக்கையன்றிக்கே, இரண் டும் அங்கே யொருதலைத்தபின்பென்றபடி. "நச்சரவினணைமேல் நம்பிரானதுநன்னலம்" என்றதுக்கு ஸப்தார்த்தம் - திருவநந்தாழ்வான்மேலே சாய்ந்தருளினவழகைக்காட்டி என்னை யநந்யார்ஹமாக்கினவ னிடத்தது என்னுடைய நற்சீவனென்னுதல்; அன்றிக்கே, திருவநந்தாழ்வானைப்போலே என்னை யநந்யார்ஹமாக்கினவனென்னுதல். "நம்பிரானதுநன்னலம் - எம்மைநீர்நலிந்தென்செய்தீரோ" என்று அந்வயித்துஹாவம் - அவன்பக்கலிலே இத்யாதி. இத்தால் - நற்சீவன் அவன்பக்கலிலேயாயிருக்க, கேவலஶரீரத்துக்கு ஹிதஞ்சொல்லி என்னப்ரயோஜநமென்றபடி. தோழிமீர்காள், நீர் - எம்மை - நிச்சலும் - நலிந்தென்செய்தீரோ இத்யாரப்யாந்வய:. "க்ஷயம்ஜாஶாஶயஸஹேஶயாநேஸ ஹஸீதயா । ஶக்யாநிஜாயோஷ்யம்ஜீவிதம்வாஸுவாநிவா(க)" இத்யோ த்யாகாண்டே ஶ்ஹம்வ்ருதிக்ஷண:. "ஸஹ்யாஜேவ்யாநேஸஸிநுதஸ்யவாஸ்யாம்வ்ருதி ஷ்டித: । தேநேயம்ஸவயாநுதாஸஹேதநஜீவதி॥ரு௨॥" இதி ஸுந்தர காண்டே [கரு] ஸநந்தோ. (௪)

ஜநரான ப்ராஹ்மணருடைய யாகங்களில் கறுத்து எழுகிறஹோமதூமங்கள் ஆகாஶாவகாஶத்தையெல்லாம் மறைக்கும்படியான திருவல்லவாழியிலே யிருப்பதும்செய்து நிரதிஶயபோக்யனுமாய் என்னை ஸர்வஸ்வஹரணம் பண்ணின அழகையுடையவனை.

ப.—அநந்தரம், விலக்ஷணரான வைதிகாக்ரேஸரருடைய அக்நிஹோத்ரதூமமானது ஆகாசத்தைமறைக்கும் திருவல்லவாழில் நிரதிஶயபோக்யபூதனானவனை நங்கண்கள் காண்பதென்றோவென்கிறாள்.

நன்னலம்-என்னிலும் எனக்குமிகவும்நல்ல, தோழிமீர்காள் - தோழிமீர்காள்! நல்ல - அநந்யப்ரயோஜநராய் அதிப்ரவணரான, அந்தணர் - வைதிகருடைய, வேள்வி-வைதார்த்தரூபமான அக்நிஹோத்ராதிகர்மங்களில், புகை - தூமங்களானவை, மை-மையினுடைய, நலம் - நன்றானநிறத்தை, கொண்டு - கொண்டு, உயர் - உயர்ந்த, விண்-ஆகாசத்தை, மறைக்கும் - தன்னிறமேயாம்படிமறைத்து நிழலைச்செய்கையாலே, தண் - குளிர்ந்த, திருவல்லவாழ் - திருவல்லவாழிலே வர்த்திப்பானாய், கன்னல்-கரும்பினுடைய, அம் - கோதற்ற, கட்டிதன்னை - கட்டிபோலே பாஹ்யாப்யந்தரவிகாரஹிதரஸத்தையுடையனாய், கனியை - அப்போதே நுகரவேண்டும் பக்வபலம்போலே இனியனாய், இன் - இனிமைக்குமேலே, அமுதந்தன்னை - இழந்தஸத்தையையுண்டாக்கும் அம்ருதரூபனாய், (என்னோடு ஸம்ஶ்லேஷித்தகாலத்தில்), என்-என், நலம் - ஆத்மகுணத்தோடு ரூபகுணத்தோடுவாசியற, கொள் - புஜித்து, சுடரை - அத்தாலேயொளிபெற்ற வடிவையுடையனானவனை, கண்கள் - என்னிலும்பெருவிடாய்ப்பட்டகண்கள், காண்பது - தன் னினைவுக்கீடாகக்கண்டு அநுபவிப்பது, என்றுகொல் - என்றோ?

ஈ.—அஞ்சாம்பாட்டில், நான்செய்தபடிசெய்ய, என்கண்களின்விடாய்தீரக் காணப்பெறுவது என்று?என்கிறாள்.

[நன்னலத்தோழிமீர்காள்]-என் அபிமதஸித்திக்கு என்னிற்காட்டில் அபிநிவேஶித்துத் தலைக்கட்டுமவர்களன்றோ நீங்கள். [நல்லவந்தணர் இத்யாதி] - அநந்யப்ரயோஜநரான ப்ராஹ்மணருடைய யாகங்களில் ஹோமதூமமானது, வெளிறுகழிந்தாப்போலேயிருக்கிற நிறத்தையுடைத்தாய், அந்தரிக்ஷத்தளவன்றியே ஸ்வர்கத்தளவும் செல்லமறைக்கும். அநந்யப்ரயோஜநருடைய ஹோமதூமமாகையாலே, ப்ரயோஜநாந்தரபரர் அப்ஸரஸ்ஸுக்களும்தாங்களுமாய் முகம்பார்க்கவொண்ணாதபடி மறைக்கை. [திருவல்லவாழ்கன்னலங்கட்டிதன்னை] - "சிறுமலையன்" என்னுமாப்போலே. [கன்னலங்கட்டி] - அழகிய கன்னற்கட்டி. [கனியை] - கண்டபோதே நுகரலாம்படியிருக்கை. [இன்னமுதந்தன்னை] - ரஸத்துக்குமேலே, போனவுயிரை மீட்கவற்றாகை. என்னை ஸர்வஸ்வாபஹாரம்பண்ணி, அத்தாலே உஜ்ஜ்வலனாயிருக்கிறவனை. என்னை யெழுதிக் கொண்டவழகையுடையவனை யென்றுமாம். [என்றுகொல் இத்யாதி] - "நான்பட்டது பட ப்ரஜைஜீவிப்பதுகாண்" என்பாரைப்போலே, என்கண்களின்விடாய் தீருவது என்றோ? என்கிறாள். * முடியானேயிற்கரணங்களிறே, "காணவிரும்புமென்கண்களே" என்று கண்களும்தாமும் தனித்தனியே விடாய்க்கும்படியிறே இவருடையவிடாய். என்னலங்கொள்சுடரை என்கண்களின்விடாய்தீரக் காணப்பெறுவதென்றோ?

ஈடு.—அஞ்சாம்பாட்டு. நான் செய்தபடிசெய்ய, இக்கண்களின்விடாய்தீரக் காணப்பெறுவதேன் றென்கிறாள்.

[நன்னலத்தோழிமீர்காள்]-நன்னலமாவது-இவள்பக்கல் இவர்களுக்குண்டான ஸ்நேஹம். தங்கள் கார்யம் தலைக்கட்டிக்கொள்ளுகையன்றிக்கே யிருக்கை. ஆனபின்பு, "தாய்மார் பழிசொல்லுவர்கள்" என்று அஞ்சி என்வழியே உங்களுக்கு ஒழுகாதிருக்கப்போமோ '**வாநராணாம் நராணாஞ்ச கதமாஸீத் ஸமாகம:**'(வாநராணும்நராணுஞ்சகதமாஸீத்ஸமாகம:) - குருகுலவாஸம்பண்ணுத திர்யக்குக்களுக்கும், வஸிஷ்ட்டஶிஷ்யர்களான ராஜபுத்ரர்களுக்கும் இதொருசேர்த்தியுண்டானபடி யெங்ஙனே; ஶாஸ்த்ரவஶ்யரிறே குருகுலவாஸத்துக்கு யோக்யர். மேல் இதுக்குஅடிசொல்லுகிறான்"**ராமஸுக்ரீவயோரைக்யம் தேவ்யேவம் ஸமஜாயத**' (ராமஸுக்ரீவயோரைக்யம்தேவ்யேவம்ஸமஜாயத) - தங்களையும் அறியாதே எங்களையும் அறியாதே இங்ஙனே விழுந்துகொடுநிற்கக்கண்டோமித்தனை. அதாவது- இளையபெருமாள் கையும்வில்லுமாய் உணர்ந்துகொண்டு நின்றுநோக்கக்கடவ அந்த:புரகார்யத்துக்கு அடியேன் வரும்படியன்றே அவர்கள் ஸங்கதரானபடி. இளையபெருமாள் அடிமையில் தப்பிநின்றவளவுக்கும் திருவடியைக்கொண்டு இழையிடவேண்டும்படியாகவிறே அவர் நிலவரானபடி, இளையபெருமாள்பேரநிற்கையிறே பிரியவேண்டிற்று. "**ஏவம்ஸமஜாயத**" (ஏவம்ஸமஜாயத) - தங்களளவிலும் பெருக்கப்பார்த்தார்கள். ஐஶ்வர்யம் அவனுக்குக் காடுபடும்படியிறேபார்த்தது. இப்படியிறே ஸக்யமிருப்பது; இவர்களும் தோழிமாரிறே. [நல்லவந்தணர்] - அநந்யப்ரயோஜநரான ப்ராஹ்மணர். அவர்கள்கண்டிகோளே அத்தலைக்கு ஈடா

அஞ்சாம்பாட்டு.—நன்னலம் இத்யாதி. "என்றுகொல்கண்கள்காண்பதுவே" என்றத்தைக்கடாக்ஷித்து அவதாரிகை - நான்செய்தபடி இத்யாதி.

"நலம்" என்றதுக்குபாவம் - இவள்பக்கல் இத்யாதி. "நல்" என்றதுக்குபாவம் - தங்கள் கார்யம் இத்யாதி. "நன்னலம்" என்று - ஸ்வப்ரயோஜநத்தை யபேக்ஷியாத ஸ்நேஹத்தையுடையவர்கள் என்றவளுடைய ஹார்த்தபாவம் - ஆனபின்பு இத்யாதி. தோழிமார்க்கும் இவளுக்குமுண்டான ஸ்நேஹத்துக்கு த்ருஷ்டாந்தம் - வாநராணாம் இத்யாதி. திர்யக்குக்களுக்கு குருகுலவாஸயோக்யதையில்லையோ? என்ன - ஶாஸ்த்ரவஶ்யர் இத்யாதி. இதுக்கடியென்றது - ஸமாகமத்துக்கடியான, "ஏவம்ஸமஜாயத" என்றநிர்ஹேதுகத்வமென்றபடி. "ஏவம்ஸமஜாயத" என்றதுக்கு மூன்றுபாவம். தங்களையும் இத்யாதிவாக்யத்வயம் - முந்தினது. அதாவது - அந்த:புரகார்யத்துக்கு அடியேன் வரும்படியன்றே ஸங்கதரானபடி யென்றுகருத்து. தங்களையும் அறியாதே - இத்யாதிக்கு - தங்கள்பெருமையையும் நங்கள்சிறுமையையும்பாராதே அசிந்திதமாகச்சேரவிழுந்ததென்றபடி. அடியேன்வரும்படியன்றேயென்றது - "உத்தம:ப்ரத்யவர:கஶ்சித்ஸ்வாமிஸுக்ரீவ ஸந்நிதௌ" என்கிறபடியே எல்லாரிலும் தாழ்ந்த நான் வரும்படியன்றேயென்றபடி. "ஏவம்ஸமஜாயத" என்றதுக்கு இரண்டாம்பாவம் - இளையபெருமாள் அடிமையில் இத்யாதி. அதாவது-ப்ராதாவான இளையபெருமாளுடைய அபராதத்தையும் நான் க்ஷமிப்பிக்கும்படியென்றுகருத்து. நிலவர் - அந்தரங்கர். இளையபெருமாள் அடிமையில் தப்பநின்றாரோ? என்ன - இளையபெருமாள் பேரநிற்கையிறே இத்யாதி. மூன்றாம்பாவம் - தங்களளவிலும் இத்யாதி. அதாவது - தங்களுடைய ஐஶ்வர்யத்தைப்பற்றவும் அதிகமானவைஶ்வர்யத்தையுடையராம்படியென்றுகருத்து. கீழ்வாக்யவிவரணம் - ஐஶ்வர்யம் இத்யாதி. காடுபடும்படியென்றது - ஸம்ருத்தமாம்படியென்னுதல், காட்டுக்கெல்லாம் அதிபதியாம்படியென்னுதல்;"ஸுக்ரீவஸேனைராஜ்யம்" என்னக்கடவதிறே. "நன்னலத்தோழிமீர்காள்" என்றவனந்தரம், "நல்லவந்தணர்" என்றதுக்குபாவம் - அவர்கள்கண்டிகோளே இத்யாதி.

கப்பரிமாறுகிறபடி; ஆனபின்பு, நீங்களும் அப்படியாயிருக்கவேண்டாவோ. அநந்யப்ரயோஜநரான ப்ராஹ்மணருடைய யாகங்களிலுண்டானஹோமதூமமானது, வெளிறுகழித்துக்கொண்டு அந்தரிக்ஷத்தளவன்றியே உயர்விண்மறைக்கும். கறுத்தெழுகிற தூமங்கள், இங்கே கண்ணழிவறப் புண்யங்களை யநுஷ்டித்து ஸம்ஸாரவெக்காயம் தட்டாதபடிபோய் அப்ஸரஸ்ஸுக்களோடே அநுபவிக்கிற வைமாநிகரை முகத்தோடுமுகம்பார்க்க வொட்டாதே மறைக்கிறபடி. மிதுநமாய்க்கலப்பாரை முகத்தோடுமுகம் பார்க்கவொட்டாமை அந்நிலத்திலுள்ளார்க்கு ஸ்வபாவம்போலேகாணும். அவர்கள்புகைத்தலிருக்கிறபடி. [தண்திருவல்லவாழ்கன்னலங்கட்டிதன்னை]-''இன்னமலையின்கட்டி'' என்னுமாபோலே. கரும்பினுடைய கோதற்றகட்டியை. [கனியை] - அவ்வளவும் பார்த்திருக்கவேண்டாதபடி பக்வமானபலமாயிருக்கை. [இன்னமுதந்தன்னை] - உடம்பைப்பூண்கட்டிக்கொடுக்க வற்றாயிருக்கை. அதாவது - போக்த்ருத்வஶக்தியைக் கொடுக்கை. [இன்னமுதம்]-தேவர்களுடைய உப்புச்சாறுபோலன்றிக்கே, ஆத்மோஜ்ஜீவநம்பண்ணிக்கொடுக்க வற்றாயிருக்கை. [என்னலங்கொள்சுடரை] - என்னை ஸர்வஸ்வாபஹாரம்பண்ணி, அத்தாலே உஜ்ஜ்வலனாயிருக்கிறவனை. என்னையெழுதிக்கொண்ட அழகையுடையவனை யென்றுமாம். இத்தலையை ஸர்வஸ்வாபஹாரம்பண்ணினமை தன்பேறு என்னுமிடம் வடிவிலே தோற்றும்படியாயிருக்கை. [என்றுகொல் கண்கள்காண்பதுவே]-''நான்பட்டதுபட, ப்ரஜைஜீவிக்கப்பெறுவதுகாண்'' என்பாரைப்போலே, என்கண்களின்விடாய்தீர்வதென்றோ? என்கிறார். * முடியானேயிற்கரணங்களுடையவரிறே. இந்த்ரியங்களும் தாமும் தனித்தனியே சேதநஸமாதியாலே விடாய்க்குமவரிறே. ''காத்ரைஶ்ஶோகாபிகர்ஶிதை: | ஸம்ஸ்ப்ருஶேயம்'' (காத்ரைஶ்ஶோகாபிகர்ஶிதை:- ஸம்ஸ்ப்ருஶேயம்)ப்ரஜைகள் ஜீவித்தால் பசிகேடுவாரஹிமாநிகளிறே.

ஆறும் பாட்டு.

காண்பதெஞ்ஞான்றுகொலோ? வினையேன்கனிவாய்மடவீர்!
பாண்குரல்வண்டினொடு பசுந்தென்றலுமாகியெங்கும்
சேண்சினையோங்குமரச் செழுங்கானல்திருவல்லவாழ்
மாண்குறள்கோலப்பிரான் மலர்த்தாமரைப்பாதங்களே.

வெளிறு - அஸாராம்ஶம். ''மைந்நலம்'' - நலமானமை. நன்றான கறுப்பென்றபடி. உயர்விண் - ஸ்வர்க்கமென்றபடி. ''முகம்பார்க்கவொட்டாதே மறைக்கிறபடி'' என்றதுக்குஹார்த்தபாவம் - மிதுநமாய் இத்யாதி. சாடு - அவர்கள்புகைத்தல் இத்யாதி. சாடுவுக்கு, பொருமை; தூமமும். ''அமுதம்'' என்றதுக்குபாவம் - உடம்பை இத்யாதி. அதாவது என்றது - பூண்கட்டிக்கொடுக்கையாவதென்றபடி. ''இன்'' என்றதுக்குபாவம் - தேவர்கள் இத்யாதி. ''நலம்'' என்று - நன்மையாய், ஸர்வஸ்வத்தையுமென்றபடி. என்னையெழுதிக்கொண்ட - என்னையநந்யார்ஹமாக்கினவென்றபடி. ''என்னை ஸர்வஸ்வாபஹாரம்பண்ணி'' இத்யாதிவாக்யவிவரணம் - இத்தலையை இத்யாதி. உமக்குக்காண வேண்டாவோ? என்ன - நான்பட்டது இத்யாதி. அசேதநமானகண் விடாய்க்கக்கூடுமோ? என்ன - முடியானேயில் இத்யாதி. விவரணம் - இந்த்ரியங்களும் இத்யாதி. கரணங்கள் விடாய்க்கக்கூடுமென்னுமதுக்கு ப்ரமாணம் - காத்ரை: இத்யாதி. கண்களின்விடாய்தீர்ந்தால் தமக்குலாபமேதென்ன - ப்ரஜைகள் இத்யாதி. க்ரமேணான்வய:. ''யதா தம் புருஷவ்யாக்ரம் காத்ரைஶ் ஶோகாபிகர்ஶிதை: । ஸம்ஸ்ப்ருஶேயம் ஸகாமாஹம் ததா குரு தயாம் மயி ॥ ௬ ॥'' இதி ஸுந்தரகாண்டே (௪௦) ஹநூமந்தம் ப்ரதி ஸீதா. (௫)

ஆ.—(காண்பது.) [வினையேன்கனிவாய்மடவீர்] - இப்போது நான் நோவுபடாநிற்க, நீங்கள் உருவுதல்தீர்ந்து பண்டுபோலேயிருப்பதே. மதுபானமத்தமாகையாலே நல்லமிடற்றோசையையுடைய வண்டுகளோடுகூட எங்கும் இளந்தென்றலுண்டாய், அத்தாலே அறவுயர்ந்த பணைகளையுடைத்தாய்க்கொண்டு வளராநின்றுள்ள அழகிய சோலையையுடைய திருவல்லவாழிலே நின்றருளின ஸ்ரீவாமநனுடைய மிகவும் ஸ்ப்ருஹணீயமான திருவடிகளை நான் காண்பதென்றோவென்கிறாள்.

ஒ.—ஆறும்பாட்டில், திருவல்லவாழிலே நின்றருளுகிற ஸ்ரீவாமநனுடைய மிகவும் ஸ்ப்ருஹணீயமான திருவடிகளை நான் காண்பது என்றோ? என்கிறாள்.

[கனிவாய் மடவீர்] - இப்போதை உருவுதல் தீர்ந்து பண்டுபோலே நீங்கள் புஷ்டைகளாயிருக்கக் காணவல்லேனே யென்று கருத்து. [பாண் என்று தொடங்கி]-மதுபாநமத்தயாகையாலே நல்லமிடற்றோசையோடுகூடின வண்டுகளோடுகூட எங்கும் இளந்தென்றல் உண்டாய் அத்தாலே அற உயர்ந்த பணைகளையுடைத்தாய்க்கொண்டு வளராநின்றுள்ள அழகிய சோலையையுடைய திருவல்லவாழிலே.

ப.—அநந்தரம், பாடுகிறவண்டும் புதுத்தென்றலுமான கடற்கரைச்சோலையையுடைய திருவல்லவாழிலேநிற்கிற, ஆஸ்ரிதார்த்தமாக வர்த்தியான ஸ்ரீவாமநனுடைய போக்யமான திருவடிகளைக் காண்பதென்றோ வென்கிறாள்.

பாண் - காநரூபமான, குரல் - மிடற்றோசையையுடைய, வண்டினொடு-வண்டுகளோடே, பசுந்தென்றலும் - புதுத்தென்றலும், ஆகி-ஆய், எங்கும் - ஸர்வப்ரதேசத்திலும், சேண்-உயர்ந்த, சினை-பணைகளையுடைத்தாய்க்கொண்டு, ஓங்கு-வளருகிற, மரம்-மரங்களையுடைய, செழு-தர்சநீயமான, கானல் - கடற்கரைச்சோலையையுடைத்தான, திருவல்லவாழ் - திருவல்லவாழிலேநிற்கிற, மாண்-(அர்த்தித்வப்ரகாசகமான) ப்ரஹ்மசர்யத்தையும், குறள் - வாமநத்வத்தையுமுடைத்தான, கோலம் - தர்சநீயவிக்ரஹத்தையுடையனான, பிரான் - மஹோபகாரகனுடைய, மலர்-மலர்த்தியையுடைய, தாமரை - தாமரைபோலே போக்யமான, பாதங்கள் - திருவடிகளை, கனி - கனிபோலேபழுத்த, வாய் - அதரசோபையையுடையராம்படி முகமலர்ந்து, மடவீர் - எனக்கு விதேயைகளாய்ப்போந்தவர்களே! வினையேன்-(என்னினைவுக்கீடாகப் பரிமாறப்பெறாத) பாபத்தையுடையேனான நான், காண்பது-காண்பது, என்ஞான்றுகொலோ - எந்நாளாயிருக்கிறதோ?

இ.—ஆறும்பாட்டில், திருவல்லவாழிலேநின்றருளின ஸ்ரீவாமநனுடைய போக்யமானதிருவடிகளை நான்காணப்பெறுவதென்றோ? என்கிறாள்.

[காண்பதென்ஞான்றுகொலோ] - பிறக்கும் "ஐயோ!" என்னும் தசையோவிது, கண்கள்செய்தபடிசெய்ய, நான்காணப்பெறுவதென்றோ வென்கிறாள். கன்று வேறு, தாய் வேறாக்கும் விஷயமிறே. "ப்ரஜைபட்டதுபடுகிறது, நான் பசிதீரும்வழியென்" என்பாரைப்போலே. [வினையேன்] - கண்கள் விடாய்க்கன்றிக்கே, என்விடாய்க்கன்றிக்கே அலமாக்கும்படியான பாபத்தைப் பண்ணினேன். [கனிவாய்மடவீர்] - இப்போதை யுருவுதல்தீர்ந்து பண்டுபோலே உங்களைக் காணவல்லேனேயென்றுகருத்து. "வண்ணந்திரிவுமனங்குழைவும்" என்று, இவள் துவண்டிருக்க தத்காலீநவிசேஷணமாகக்கூடாதிறே. [பாண்குரல் இத்யாதி] - பாண்-பாட்டு. மதுபாநமத்தமாகையாலே நல்லமிடற்றோசையையுடைய வண்டோடே. இயலைக்கற்று இசையோடேகூட்டுகையன்

றிக்கை, பாட்டாயிருக்கை. [பசுந்தென்றலுமாகியெங்கும்] - சோலையெங்கும் இளந் தென்றல் ஸஞ்சரிக்கை. பசுந்தென்றல் - கலப்பற்ற தென்றலென்றுமாம். "வஸந்தே ஸாவஸம்வ்யேஷ்டாவ்யக்தாஹ்வாவிநிஸ்ஸ்ருதः । நிஸ்வாஸஉவஸீதாயாவாதிவாயஸ்ஸுநோஹரः". [சேண்சினையோங்குமரம்] - மழையாலே மரங்கள் பணைக்குமாப்போலே. தென்றலாலே உயர்ந்த பணைகளையுடையவாய்க்கொண்டு வளராநின்றுள்ள மரங்களை யுடைத்தாகை. பணைக்கு ஓக்கம் - சுற்றிலேவளருகை, மரத்துக்கு ஓக்கம் - மேலே வளருகை. [செழுங்கானல்] - தர்ஸநீயமான கானல். கானலென்று - கடற்கரைச்சோலை யாதல், நெய்தல்நிலமாதல். [மாண்குறள்கோலப்பிரான்] - தன்னுடைமைபெறுகைக் குத்தானர்த்தியாய் வடிவைக் குறுகவிட்டு மிக்கவழகையுடையனாய், ஸௌலப்யத்தையும் அழகையும் திருவல்லவாழிலே ஆஸ்ரிதரையநுபவிப்பித்துக்கொண்டு நிற்கிறவனுடைய நிரதிஸயபோக்யமான திருவடிகளை - காண்பதெஞ்ஞான்றுகொலோ. மலர்த்தாமரை - அப்போதலர்ந்த செவ்வித்தாமரை.

ஈடு.—ஆறும்பாட்டு. திருவல்லவாழிலே நின்றருளின ஸ்ரீவாமநனுடைய போக்யமான திருவடிகளை நான் காண்பதென்றோவென்கிறாள்.

[காண்பதெஞ்ஞான்றுகொலோவினையேன்] - ப்ரஜைகள்செய்தபடிசெய்ய, நான் முன்னம் என்பசிதீர்வதென்றோ. [வினையேன்] - லோகவிஸஜாதீயமான பாபத்தைப் பண் ணினேன். காணுமைக்குப்பாபம்பண்ணினாருங்கூடக்காணும்படியான விஷயத்தை, காண் கைக்கு யோக்யதையுண்டாய்வைத்தே காணாதபடியான பாபத்தைப் பண்ணினேன். * மாண்குறட்கோலப்பிரானிறே. [காண்பதெஞ்ஞான்றுகோலோவினையேன்]- நீங்கள்காட்டு கைக்கு த்வரிக்க ஆறியிருக்கக்கடவநான், இன்று "காண்பதெஞ்ஞான்றுகோலோ" என்னும் படியான பாபத்தைப் பண்ணினேன். [கனிவாய்மடவீர்] - உங்களை நான் பண்டுபோலே காண்பதென்றோ. "ப்ரியோஹிஜ்ஞாநிநோத்யர்த்தம்" (ப்ரியோஹிஜ்ஞாநிநோத்யர்த்தம்)

ப்ர:—(கனிவாய் மடவீர்) ஸமவந்தாவஸ்வஸ்யே, "தேஷாம்ஜ்ஞாநீநித்யயுக்தவ்கபக்திர்விஸிஷ்யதே । ப்ரியோஹிஜ்ஞாநிநோத்யர்த்தமஹம்ஸசமமப்ரியः ।".

ஆறும்பாட்டு.—காண்பது இத்யாதி. "மாண்குறள்கோலப்பிரான் மலர்த்தாமரைப்பாதங் கள் - காண்பதெஞ்ஞான்றுகொலோ" என்றத்தைக்கடாக்ஷித்து அவதாரிகை - திருவல்லவாழிலே இத்யாதி.

ஈடு - கண்களின்விடாயைச்சொல்லி, அநந்தரம் தம்விடாயைச்சொன்னதுக்கு பாவம் - ப்ரஜைகள் இத்யாதி. தீருவது - தீர்த்துக்கொள்வது. விவரணம் - காணுமைக்கு இத்யாதி. பாபம் பண்ணினாரென்றது - மஹாபலிபோல்வாரை. அப்படி பாபம்பண்ணினவர்களும் அவனைக்கண்டார் களோ? என்ன - மாண்குறள் இத்யாதி. "வினையேன்" என்றதுக்கு பாவாந்தரம் - நீங்கள் இத் யாதி. அன்றிக்கே, காணுமைக்கு இத்யாதிவாக்யமும் - ஓரர்த்தமாய், இது - மூன்றாமர்த்தமாதல். இப்பக்ஷத்தில், முந்தினவர்த்தத்துக்கு, லோகவிஸஜாதீயமானவென்றது - * சுழிபமிக்கதோர்காதலா யிருக்கை. "கனிவாய்மடவீர்" என்றத்தை - தத்காலீநவிஸேஷணமாக்காதே பவிஷ்யத்தாக நிர்வஹிக் கிறதுக்கடியேதென்ன; இவளதரம் விவர்ணமாயிருக்க, அவர்களதரம் செவ்விபெற்றிருக்கக்கூடாமை யாலே யென்பாராக நினைத்து; இவள்விஷயத்தில் இவர்களுக்குண்டான ஸ்நேஹத்தை த்ருஷ்டாந்த பூர்வகமாகக் காட்டுகிறார் - ப்ரியோஹி இத்யாதி. அதாவது - ஜ்ஞாநியானவன்விஷயத்தில் ஈஸ் வரன் மிகவும் ஸ்நேஹித்திருக்குமாபோலே, இவர்களும் இவள்விஷயத்திலே அதிஸ்நிக்தைகளாயிறே

என்னும்படியிறே அவர்களிருப்பது. இவள் * மாசுடையுடம்போடுதலையுலறி வாய்ப்புறம் வெளுத்திருக்க அவர்கள் தங்களைப்பேணியிரார்களே. அவர்கள் பண்டுபோலேயிருக்கக்காண் கையும் இவளுக்கு ப்ரார்த்யமானபடி. [பாண்குரல்வண்டினேடு] - இவற்றின் த்வநியில் வெள்ளோசையாய்க்கழியுண்பதில்லை, பரப்படங்கலும் பாட்டாயிருக்கும். அதாவது-இயல் கற்று இசையோடேகூட்டிற்றன்றே அவற்றுக்கு, பேச்சேதோடங்கி யிசையிறே. "தேன் போலேஇனியபாட்டு" என்னக்கடவதாயிருக்குமதுபோய், வடிவே தேனும் அதுக்குமேலே பாட்டுமானல் மிகவும் இனிதாயிருக்குமிறே. பாண்குரல்-ஶாநரூபமானமிடற்றோசை. [பசுந் தென்றலுமாகி யெங்கும்] - கலப்பற்றதென்றலுமாயிருக்கை. பலவிடங்களிலே காலிட்டுவா ராதே †தாய்தலையாயிருக்கை. [பசுந்தென்றல்] - இளந்தென்ற லென்றுமாம். [சேண்சினை இத்யாதி] - கவடுகளானவை சுற்றிலேபணைத்திருப்பனவாய் மேலோக்கத்தையுடைத்தான மரங்களையுடைத்தாகையாலே, அழகியசோலையையுடைய. [செழுங்கானல்]-தர்ஶநீயமான கானல். கானலென்று - கடற்கரைச்சோலையாதல், நெய்தல்நிலமாதல். சேண் - உயர்த்தி. சினை - கவடு. பணைக்கு ஓக்கம்-சுற்றிலேவளருகை. மரத்துக்கு ஓக்கம்-மேலே.[மாண்குறள் கோலப்பிரான்] - தன்னுடைமைபெறுகைக்குத் தான் அர்த்தியாய், பெருவிலையனுனவடி வைச் சிறுகவிட்டு மிக்கவழகையுடையவனும், ஸௌலப்யத்தையும் அழகையும் திருவல்ல வாழில் ஆஶ்ரிதரையநுபவிப்பித்துக்கொண்டு நிற்கிறவனுடைய நிரதிஶயபோக்யமான திரு வடிகளை - காண்பதென்ஞான்றுகொலோ. [மலர்த்தாமரைப்பாதங்கள்] - அப்போதலர்ந்த தாமரைபோலே நிரவதிகபோக்யமான திருவடிகளை. அடியிலே இவர்க்குத் தானேயிறே

யிருப்பதென்றபடி. இப்படி அதிஸ்நிக்தகளாகையாலே, இவளதரம் விவர்ணமாயிருக்க அவர்களதரம் நிறம்பெற்றிருக்கக்கூடாதென்கிறார் - இவள் மாசுடை இத்யாதி. இவள் அவனைப்பிரிந்த ஸமயத்திலே அவர்களதரம் உருவினவுறைப்பை யருளிச்செய்கிறார் - அவர்கள்பண்டு இத்யாதி. மாசுடை இத்யாதி- *ஸ்நாநமின்றிக்கே அழுக்குடையவுடம்போடே தலைமயிரையுமுதறி அதரமும்வெளுத்து ஏகபுக்தமாய்க் கொண்டு என்றபடி. உலறி - உதறி. அதாவது - மயிரைப்பேணுதே யென்றபடி. குரலென்னுதே, "பாண்குரல்" என்றுவிஶேஷித்ததுக்குஹாவம் - இவற்றின் இத்யாதி.* வெள்ளோசையாய்-*அஸார மாய்.* வெள்ளோசை - *அஸாரம்ஶம்.* பாண் - *ஶாநம். பாட்டாயிருக்குமென்றது - ஶாநமாயிருக்கு மென்றபடி.* பேச்சேதோடங்கி இசை *என்றத்தால்பலிதம் - நிரதிஶயபோக்யத்வமென்று விவக்ஷித்து, அதின் சரமாவதி -* தேன்போலே *இத்யாதி.* தேனென்று - வண்டுக்குப்பேர். "எங்கும் - பாண்குரல் வண்டினெடு, எங்கும்-பசுந்தென்றலுமாகி" *என்றுகூட்டுவது. பசுந்தென்றல்-செவ்வித் தென்றல் என்று அர்த்தம்விவக்ஷித்து,அதுக்குச்செவ்வியேதென்ன*-கலப்பற்ற இத்யாதி. *"கலப்பற்ற" என்றத்தை விவரிக்கிறார்* - பலவிடங்களிலே *இத்யாதி. பலவிடங்களிலே காலிட்டுவாராதேயென் றது - பலஶரீரங்களிலேபட்டு அந்ததர்க்கந்தம் கலசிவாராதேயென்றபடி. தாய்தலைத்தென்றலா யிருக்கையென்றது* - *மேல்வருகிற தென்றலுக்கெல்லாம் தாயாய், முந்திவருகிறபோதே இங்கேவருமதாயிருக்கையென்றபடி. சினை - கவடு. ஶாகை இத்யர்த்தஃ.* சேண் - *உயர்த்தி. உயர்ந்தபணைகளை யுடையவன்றபடி.* நெய்தல்நிலம் - *ஸமுத்ரப்ராந்தம். ஸௌலப்யத்தையும் அழகையுமென்றது - "மாண்" என்றத்தையும், 'கோலம்" என்றத்தையும்பற்ற.* வாமநனைச்சொன்னதுக்குஹாவம் - *தமக்குத் திருவடிகளிலே ருசிபிறந்தது அவன்க்ருபையாலேயென்று திருவுள்ளம்பற்றி*-அடியிலே இவர்க்குத் தானேயிறே ருசியையுண்டாக்கினன் *என்கிறார். பலபாட்டுக்களிலும் திருவடிகளைச் சொன்னதுக்கு ஹாவம் -* அடிகள் *இத்யாதி. கனிவாய்மடவீர், எங்கும் - பாண்குரல்வண்டினெடு - எங்கும் - பசுந் தென்றலுமாகி என்றுதொடங்கி, பாதங்கள் - காண்பதென்ஞான்றுகொலோ வினையேன் இத்யந்வயஃ.*

† *'தாய்தலைத்தென்றலாய்' என்று பாடாந்தரம்.*

ருசியையுண்டாக்கினுன். "அடிகள், அடிகள்" என்று வாய்புலற்றும்படியிறே திருவடிகளில் ஹோக்யதையிருப்பது. (௬)

ஏழாம் பாட்டு.

பாதங்கள்மேலணி பூந்தொழக்கூடுங்கோல்?பாவைநல்லீர்!
ஓதநெடுந்தடத்துள் உயர்தாமரைசெங்கழுநீர்
மாதர்கள்வாண்முகமும் கண்ணுமேந்துந்திருவல்லவாழ்
நாதனிஞ்ஞாலமுண்ட நம்பிரான்தன்னைநாடொறுமே.

ஆ.—(பாதங்கள்.) தன்மநோரதத்தை நிஷேபியாமையாலே தோழிமாரை யுகந்து ஸம்போதிக்கிறுள். கடல்போலே பெருத்திருந்துள்ள பொய்கைகளிலே வளர்ந்த தாமரைப்பூவும் செங்கழுநீர்ப்பூவும், ஸ்த்ரீகளுடைய அழகியமுகங்களோடும் கண்களோடும் ஒக்கும்படியான திருவல்லவாழுக்கு நாயகனுய், ஜகத்தையெல்லாம் ப்ரளயத்தில் தன்வயிற்றிலேவைத்துப் பரிஹரித்தருளி, அவ்வளவுமன்றிக்கே ஆஸ்ரிதர்க்கு மிகவும் உபகாரகனுனவனுடைய திருவடிகளிலே நித்யமாகப் பூவையணிந்து தொழவல்லோமோ

ஒ.—ஏழாம்பாட்டில், திருவல்லவாழில் நின்றருளின எம்பெருமான் திருவடிகளிலே நித்யமாகப் பூவையணிந்து தொழவல்லோமே யென்கிறுள்.

[பாவைநல்லீர்] - தன்மநோரதத்தை நிஷேத்யயாமையாலே தோழிமாரை உகந்து ஸம்போதிக்கிறுள். [ஓதநெடுந்தடம் என்று தொடங்கி] - கடல்போலே பெருத்திருந்துள்ள பொய்கைகளிலே வளர்ந்த தாமரைப்பூவும் செங்கழுநீர்ப்பூவும் ஸ்த்ரீகளுடைய அழகிய முகங்களோடும் கண்களோடும் ஒக்கும்படியான திருவல்லவாழுக்கு நாயகனுய் ஜகத்தையெல்லாம் ப்ரளயகாலத்தில் தன் திருவயிற்றிலே வைத்துப் பரிஹரித்தருளினவன், அவ்வளவன்றிக்கே ஆஸ்ரிதர்க்கு மிகவும் உபகாரகனுனவனை.

ப.—அநந்தரம், தர்ஸநீய தடாகங்களையுடைய திருவல்லவாழுக்கு நிர்வாஹகனை ஆபத்ஸகன் திருவடிகளிலணிந்த பூவையாகிலும் தொழக்கூடுமோவென்கிறுள்.

ஓதம் - ஸமுத்ரம்போலே, நெடு-பெருத்த, தடத்துள் - தடாகங்களுக்குள்ளே, உயர்-உயர்ந்த, தாமரை - தாமரையும், செங்கழுநீர் - செங்கழுநீரும், மாதர்கள் - மாதருடைய, வாள்-ஒளியையுடைத்தான, முகமும்-முகத்தழகையும், கண்ணும்-கண்ணழகையும், ஏந்தும்-ஹ்ரிக்கும்படியான, திருவல்லவாழ் - திருவல்லவாழுக்கு, நாதன் - ஸ்வாமியாய், இ-இந்த, ஞாலம் - ஜகத்தை, உண்ட-ப்ரளயங்கொள்ளாதபடி வயிற்றிலேவைத்து நோக்கின அபதாநத்தாலே, நம்-நமக்கு, பிரான்தன்னை - உபகாரகனென்றுதோன்றவிருக்கிறவனை, நாடொறும் - நித்யமாக, பாவை-பாவைபோலே, நல்லீர்-அவயவங்களினுடைய வகுப்பழகையுடைய விலக்ஷணஸ்வபாவைகளே! பாதங்கள் - திருவடிகளின், மேல் - மேலே, அணி-அணிந்த, பூ-பூவையாகிலும், தொழ-தொழ, கூடுங்கொல்-கூடுமோ?

"தேஷாம் ஜ்ஞாநீ நித்யயுக்த ஏகபக்திர்விஶிஷ்யதே । ப்ரியோ ஹி ஜ்ஞாநிநோऽத்யர்த்தமஹம் ஸ ச மம ப்ரிய:" இதி ஸ்ரீகீதாஸு ஸப்தமே. (௬)

இ.—ஏழாம்பாட்டில், அவன்திருவடிகளிலே நித்யமாகப் பூவையணிந்து தொழவல்லோமோவென்கிறாள்.

[பாதங்கள் இத்யாதி]-"பாதங்கள்மேலே நித்யமாகப் பூவையணிந்து தொழக்கூடவற்றே" என்று நிர்வஹிப்பர் ஜீயர். அணி-அணிந்து. பூ-பூவை. "பாதங்களைப் பூ மறைத்தலில் அப்பூவையாகிலும் தொழவற்றே" என்று ஒருதமிழன். "ஸ்வாபாவிகமானவழகுக்குமேலே அழகிதாக அலங்க்ருதமான திருவடிகளைக் கூடவற்றே" என்று அருளிச்செய்வர் பிள்ளை. பூ-அழகு. அணி-அலங்காரம். மேலே - பூ-அணி-பாதங்களை. [பாவைநல்லீர்] -இவள்தசையைக்கண்டு விஶ்லேஷ க்ஷமைகளன்றிக்கே ஸ்திமிதைகளாயிருந்தபடி. ஶ்லேஷயாமையாலே யுகந்து ஸம்போஶிக்கிறாளென்றுமாம். [ஓதம் இத்யாதி] - கடல்போலே பெருத்தபொய்கைகளிலே யடியுயரத்தாலேயுயர்ந்த தாமரைகளும் செங்கழுநீரும், ஸ்த்ரீகளுடைய ஒளியையுடைத்தான முகத்தையுங்கண்ணையும், ஏந்தும் - ப்ரகாஶிப்பியாநின்றதென்னுதல், தோற்பிக்குமென்னுதல். [திருவல்லவாழ் நாதன்] - ஸ்ரீவைகுண்டநாதனிலேற்றம். ஒருவர்கூறையெழுவருடுக்கிற தேஶத்திலே தரிசறவிருக்கிற இடமிறே இங்கு; குறைவற்றவர்களுக்கு ஸந்நிதிபண்ணின மாத்ரமிறே அங்கு. [இஞ்ஞாலமுண்ட] - தன்மேன்மை பாராதே ஆபத்துக்களிலே தளர்ந்தார் தாவளம். [நம்பிரான்] - நம்மை ஸம்ஸாரார்ணவம் கொள்ளாமல் எடுக்குமவன். நம்பிரான்தன்னை நாடொறும் - பாதங்கள்மேலணி பூந்தொழக்கூடுங்கொல்.

ஈடு.—ஏழாம்பாட்டு. அவன்திருவடிகளிலே நித்யமாகப் பூவையணிந்து தொழவல்லோமே யென்கிறாள்.

[பாதங்கள்மேலணிபூந்தொழக்கூடுங்கோல்] - திருவடிகளின்மேலே புஷ்பங்களையணிந்து நமக்குத்தொழக்கூடவற்றே. [பாவைநல்லீர்] - இவளை ஶ்லேஷிக்கைக்கு க்ஷமைகளன்றிக்கே ஸ்திமிதைகளாயிருந்தபடி. எழுதினபாவைபோலே யிருந்தார்கள். ஶ்லேஷியாமையாலே யுகந்து ஸம்போஶிக்கிறாளாகவுமாம். [ஓதம் இத்யாதி] - கடல்போலேபெருத்திருந்துள்ள தடாகங்களினுள்ளே, ஓக்கத்தையுடைத்தான தாமரைசெங்கழுநீரானவை, அவ்வூரில் ஸ்த்ரீகளுடைய ஒளியையுடைத்தான முகத்தையும் கண்ணையும் ஶரியாநின்றன. † (ப்ரகாஶிப்பியாநின்றதென்றபடி.) அன்றிக்கே, திருவோலக்கத்திற்படியே

ஏழாம்பாட்டு.—பாதங்கள் இத்யாதி. "நாடொறும் - பாதங்கள்மேலணிபூந்தொழக்கூடுங்கொல்" என்றத்தைக்கடாக்ஷித்து அவதாரிகை - அவன்திருவடிகளிலே இத்யாதி.

"பாவைநல்லீர்" என்றதுக்கு மூன்றர்த்தம். அதில் முந்தினது - இவளை இத்யாதி. அதாவது - மரப்பாவைபோலே ஶ்லேஷிக்க க்ஷமைகளன்றிக்கேயிருக்கிற நல்லீரென்றபடி. இரண்டாவது - எழுதினபாவை இத்யாதி. அதாவது - கொல்லிமலையிலெழுதினபாவைபோலே அவயவங்களினுடைய வகுப்பழகையுடைய நல்லீரென்றபடி. மூன்றாவது - ஶ்லேஷியாமையாலே இத்யாதி. அதாவது - பாவைபோலே பாதந்த்ரைகளான நல்லீரென்றபடி. நல்லீர் - விலக்ஷணஸ்வபாவைகளே. இது அர்த்தத்ரயத்துக்குமொக்கும். பாவை - மரப்பாவையாதல், கொல்லிமலையிலெழுதினபாவையாதல். பாவை - ப்ரதிமை. பாவை என்று - ஸ்த்ரீகளுக்கும்பேர். இப்போது, பெண்களில் நல்லரானவர்களே யென்றபடி, இது மூன்றுமர்த்தத்துக்குச்சேரும். அதாவது - கீழ்ச்சொன்னபடியே பாவைபோலே பாதந்த்ரைகளான நல்லீரென்னுதல்; பாவைகளில் - பெண்களில், நல்லரானவர்களேயென்னுதல். ஏந்துகை - ஶரிக்கை. அதாவது - ஸாத்ருஶ்யத்தைவஹிக்கை: த்விதீயார்த்தத்துக்கு, ஏந்துகை -

---

† குண்டலிதம் வ்யாக்யாந விருத்தம்.

அவற்றைத்தள்ளும்படியாயிருக்கை. ‡ (திருவோலக்கத்தில் அலங்காரார்த்தமான தாமரைகளை நிராகரிக்குமென்றபடி.) [யாதர்கள் வாண்முகமும் கண்ணுமேந்தும்] - ஊருக்கும் வயலுக்கும் வாசிதெரிகை அரிதாயிருக்கை. [திருவல்லவாழ்நாதன்] - ஸ்ரீவைகுண்டநாதனிலேற்றம். ஸ்ரீவைகுண்டத்துக்குக் கடவனாயிருக்கிறது - அந்தঃபுரத்துக்குக்கடவனென்கிறமாத்ரமிறே, * ஒண்டொடியாள் திருமகளும் நீயுமேநிலாநிற்ப இருக்கிறவிடமிறே; இது அங்ஙனன்றிக்கே, ஒருவர்கூறையை யெழுவருடுக்கிறதேசத்தில் தரிசறவிருக்கிறவிடமிறே. [இஞ்ஞாலமுண்ட] - மேன்மைபாராதே தளர்ந்தார்தாவளமாயிருக்கும். ஆபத்தே செப்பேடாக வயிற்றிலேவைத்துநோக்கும். அது கதையில், கேட்கவேண்டியிருந்ததோ, [நம்பிரான்] - ஸம்ஸாரப்ரளயங்கொண்ட என்னை எடுத்து இவ்வளவாக்கி யுபகரித்தவன். நாடொறும் - பாதங்கள்மேலணி பூந்தொழக்கூடுங்கொல். (எ)

எட்டாம் பாட்டு.

நாடொறும்வீடின்றியே தொழக்கூடுங்கொல்? நன்னுதலீர்!
ஆடுறுதீங்கரும்பும் விளைசெந்நெலுமாகியெங்கும்
மாடுறுபூந்தடஞ்சேர் வயல்சூழ்தண்திருவல்லவாழ்
நீடுறைகின்றபிரான் நிலந்தாவியநீள்கழலே.

ஆ.—(நாடொறும்.) [நன்னுதலீர்] - [illegible]லலாடைகளாக உங்களைக்காண்பதென்றோ. எப்போதும் பக்வஃபலமாய் அருகேயிருக்கிற பூத்தபொய்கைகளோடுசேர்ந்த வயல்சூழ்ந்து ஸ்ரமஹரமான திருவல்லவாழிலே, அநுக்ரஹஶீலனாய்க்கொண்டு நிரந்தரவாஸம்பண்ணுகிறவனுடைய, குணகுணநிரூபணம் பண்ணாதே எல்லாரையும் அங்கீகரிக்கக்கடவதாய், ஆஸ்ரிதரிருந்தவிடத்திலேசெல்லும் திருவடிகளை ஸர்வகாலமும் இடைவிடாதே தொழக்கூடவற்றோவென்கிறாள்.

ஒ.—எட்டாம்பாட்டில், ஸர்வகாலமும் இடைவிடாதே அடிமைசெய்யக்கூடவற்றோ? என்கிறாள்.

[நன்னுதலீர்] - [illegible]லலாடைகளாக உங்களைக்காண்பதுஎன்றோ? [ஆடுறுதீங்கரும்பும்விளைசெந்நெலுமாகி] - எப்போதும் பக்வஃபலமாயிருக்கை. [மாடு என்றுதொடங்கி] - அருகேகிட்டியிருக்கிற பூத்தபொய்கைகளோடு

தள்ளுகை. திருவோலக்கத்திற்படியாவது - ஶிஷ்டர்களோலக்கத்திலே அஶிஷ்டர்கள்வந்திருந்தால், க்ரமேண கடத்திவிடுகை. முந்தினவர்த்தத்துக்குஃபலிதம் - ஊருக்கும் இத்யாதி. அதிஶயமேதென்ன - ஸ்ரீவைகுண்ட இத்யாதி. தரிசு - பாழ்கிடக்கிறநிலம். தனிசர் என்றுபாடமாகில், தனிசர் - குறும்பர். தாவளமென்று - க்ருஹமாய், ஆதாரமென்றபடி. விவரணம் - ஆபத்தே இத்யாதி. பாவைநல்லீர் இத்யாரப்ய, நம்பிரான்தன்னுடைய - பாதங்கள்மேல் - நாடொறும் - பூவை - அணிந்து - தொழக் கூடுங்கொல் இத்யந்வயঃ. ஒருவர்கூறையை யெழுவருடுக்கையாவது - கலஹத்திலே ஒருவர்புடைவையை ஏழுபேர் பறித்துடுக்கையாதல், தாரித்ர்யத்தாலே ஒருத்தன்புடைவையை ஏழுபேருடுக்கையாதல். (எ)

‡ குண்டலிக்ராந்தம் ப்ராக்ஷிப்தம்.

சேர்ந்த வயல் சூழ்ந்து ஸ்ரமஹரமான திருவல்லவாழிலே அநுக்ரஹஸீலனாய்க்கொண்டு நிரந்தரவாஸம்பண்ணியருளுகிறவனுடைய குணாகுணநிரூபணம்பண்ணாதே எல்லாரையும் அங்கீகரிக்கக்கடவதாய் ஆஸ்ரிதர் இருந்தவிடத்திலேசெல்லும் திருவடிகளை.

ப.—அநந்தரம், அழகியவிளைநிலங்களாலே சூழப்பட்ட திருவல்லவாழிலே நித்யவாஸம்பண்ணுகிறவனுடைய, ஸகலஸம்ஸ்லேஷ ஸ்வபாவமான திருவடிகளை நிரந்தராநுபவம் பண்ணக்கூடுமோவென்கிறாள்.

எங்கும் - ஸர்வப்ரதேசத்திலும், ஆடு-ஆடுதலை, உறு-உறும்படி, ... ய, கரும்பும் - கரும்பும், விளை-முதிரவிளைந்த, செந்நெலும் - செந்நெலும், ஆகி-ஆய், மாடு-பரிஸரத்தை, உறு-அணுகின, பூந்தடம் - பூத்ததடாகங்களை, சேர் - சேர்ந்த, வயல்-வயலாலே, சூழ் - சூழப்பட்ட, தண்-குளிர்ந்த, திருவல்லவாழ் - திருவல்லவாழிலே, நீடுறைகின்ற - நிரந்தரவாஸம்பண்ணுகிற, பிரான் - மஹோபகாரகனுடைய, நிலம் - பூமியை, தாவிய - அளந்துகொண்டு, நீள் - எல்லார்தலையிலும் சென்றுபொருந்தும்படி வளர்த்தியையுடைத்தான, கழல்-திருவடிகளை, நல்-தத்ப்ராவண்யத்தாலே தர்ஸநீயமாம்படியான, நுதலீர் - நுதலையுடையவர்களே! நாடொறும் - நாடோறும், வீடு - க்ஷணவிச்சேதம், இன்றியே - இன்றியே, தொழக்கூடுங்கொல் - தொழக்கூடுமோ?

இ.—எட்டாம்பாட்டில், ஸர்வஸுலபனவன்திருவடிகளிலே ஸர்வகாலமும் இடைவிடாதே அடிமைசெய்யக்கூடவற்றே யென்கிறாள்.

[நாடொறும் இத்யாதி] - நாடொறுமென்று - தர்ஸபூர்ணமாஸாதிகளை வ்யாவர்த்திக்கிறது. வீடின்றியேயென்று - நித்யாக்நிஹோத்ரத்தை வ்யாவர்த்திக்கிறது. "ஒழிவில்காலமெல்லாம் உடனாய்மன்னி" என்றிறே இவர்ப்ரார்த்திப்பது. ஆசார்யோபதேசத்தை விஸ்வஸித்து அபேக்ஷிக்கிற நம்மைப்போலேயன்றியிலே, தாஸ்யரஸித்து ராகத்தாலே யபேக்ஷிக்கிறாரிறே. [நன்னுதலீர்] - அவன் வந்தவுபகாரத்துக்கு அவன் திருவடிகளிலேவிழுந்து பூணாவொஸவுவாயுணதைகளான உங்களைக்காணவல்லேனே. நுதல்-நெற்றி. இவளுக்குக்கைங்கர்யத்தில் உகப்புப்போலே, இவள்பேறே தங்களுக்கு உகப்பாயிருக்குமவர்களிறே. நீங்களும் உங்கள் ஸ்வரூபம்பெற்று, நானும் என் ஸ்வரூபம்பெறுவதென்றோ. [ஆடுறுதீங்கரும்பும்] - கரும்புகளும் ஆட ப்ராப்தமாயிருக்கும். தீ-தித்திப்பு. செந்நெலும் அறுக்கப்ராப்தமாயிருக்கும். அவ்வூரில் பதார்த்தங்கள் எப்போதும் பக்வபலமாயிருக்குமென்கை. [மாடு இத்யாதி] மாடு-பர்யந்தம். பர்யந்தத்திலேகிட்டின பூத்ததடாகங்களும், அத்தோடுசேர்ந்த வயலையுடைத்தாய் ஸ்ரமஹரமான திருவல்லவாழிலே நித்யவாஸம்பண்ணுகிற மஹோபகாரகன். பரமபதத்திற்போலே, ஸம்ஸாரிகளுக்கு அடிமையிலே யபேக்ஷைபிறந்தபோது அநுபவிக்கைக்கு நித்யவாஸம்பண்ணுகிறதேசம். குணாகுணநிரூபணம்பண்ணாதே, ஸேஷபூதரிருந்தவிடமேயெல்லையாக வளரும் திருவடிகளை - நாடொறும்வீடின்றியே தொழக்கூடுங்கொல்.

ஈடு.—எட்டாம்பாட்டு. ஸர்வஸுலபனவன் திருவடிகளிலே ஸர்வகாலமும் இடைவிடாதே அடிமைசெய்யக்கூடவற்றே யென்கிறாள்.

எட்டாம்பாட்டு.—நாடோறும் இத்யாதி. "நீடுறைகின்றபிரான் நிலந்தாவியநீள்கழல் - நாடொறும்வீடின்றியே தொழக்கூடுங்கொல்" என்றதைக்கடாக்ஷித்து அவதாரிகை - ஸர்வஸுலபனை இத்யாதி.

[நாடோறும் இத்யாதி] - நாடோறுமென்று - தர்ஶபூர்ணமாஸாதிகளை வ்யாவர்த்திக்கிறது. வீடின்றியேயென்று - நித்யாக்நிஹோத்ரத்தை வ்யாவர்த்திக்கிறது. "ஒழிவில்காலமெல்லாம்" என்கிறபடியேயிறே இவர் ப்ரார்த்திப்பது. ஆசார்யோபதேஶத்தை விஶ்வஸித்து அபேக்ஷிக்கிற நம்மைப்போலன்றியே, தாஸ்யம்ரஸித்து ராகத்தாலே யபேக்ஷிக்கிறாரிறே. [நன்னுதலீர்] - அவன்வந்தவுபகாரத்துக்கு அவன்திருவடிகளிலே விழுந்து ஜ்ஞாநவைராக்யஸம்பந்நைகளாக உங்களைக்காணவல்லேனே. "தலையில் வணங்கவுமாங்கொலோ" என்று தொழக்கடவளே, அப்போது இவர்களும் தொழுவர்களே; இவளுக்குக் கைங்கர்யத்தில் உகப்புப்போலே, இவள்பேறே தங்களுக்கு உகப்பா யிருக்குமவர்களே. [ஆடுறுதீங்கரும்பும்] - கரும்புகள் எப்போதும் ஆடுகையிலே யுற்றிருக்கை. தீ - தித்திப்பு. செந்நெலும் எப்போதும் அறுக்கைக்குப் பக்வமாய் விளைந்து கிடக்கை. அங்குள்ளவையடைய பக்வஃபலமாய்க்காணு மிருப்பது. [மாடுறுபூவித்யாதி] - அருகேயுற்றிருப்பதாய்ப் பூக்களையுடைத்தான தடாகங்களைச்சேர்ந்த வயல்களாலே சூழப்பட்டிருப்பதாய் ஶ்ரமஹரமான திருவல்லவாழிலே. ஊரைத் தடாகங்கள்சூழ்ந்து, தடாகங்களை வயல்கள்சூழ்ந்திருக்க, இப்படிகளாலே குளிர்ந்துகாணும் ஊர்தானிருப்பது. [நீடு இத்யாதி] - குணகுணநிரூபணம்பண்ணாதே எல்லார்தலைமேலும் பொருந்தும்படி ஸுலபமானதிருவடிகளைக்கொண்டு, அவதாரம்போலே தீர்த்தம்ப்ரஸாதியாதே நித்யவாஸம் பண்ணுகிற உபகாரமே இங்குத்தைக்குத்தன்னேற்றம். நிலந்தாவியநீள்கழல் - நாடோறும் வீடின்றியேதொழக்கூடுங்கொல். (அ)

ஒன்பதாம் பாட்டு.

கழல்வளைபூரிப்பயாங்கண்டு கைதொழக்கூடுங்கொலோ ?
குழலென்னயாழுமென்னக் குளிர்சோலையுள்தேனருந்தி
மழலைவரிவண்டுகளிசைபாடும் திருவல்லவாழ்
சுழலின்மலிசக்கரப்பெருமானது தொல்லருளே.

ஆ.—(கழல்வளை.) குளிர்ந்தசோலைகளிலேபுக்கு மதுபாநத்தைப்பண்ணி, குழலோசையென்னவும் யாழோசையென்னவுமாம்படி, முக்யமாய்க் கண்ணுக்கு அழகிய

தர்ஶபூர்ணமாஸம் - பக்ஷாந்தோறுமிஷ்டி. "யாவஜ்ஜீவமக்நிஹோத்ரம்ஜுஹுயாத்தர்ஶபூர்ணமாஸாப்யாம் யஜேத" ; இது - நித்யாக்நிஹோத்ரம். ஒருகால்தொழுதாற்போராதோ, "நாடோறும்வீடின்றி" என்கிறதென் ? என்ன - ஒழிவில் இத்யாதி. நமக்கு இப்படி யபேக்ஷை பிறக்கவில்லையேயென்ன - ஆசார்ய இத்யாதி. தன்தசையைக்கண்டு உருவியிருக்கிறவர்களை - "நன்னுதலீர்" என்னக்கூடுமோ ? என்ன - அவன்வந்த இத்யாதி. தோழிமார் வணங்குவர்களோ ? என்ன - தலையில் இத்யாதி. ஆடுறு - ஆலையாடுகைக்கு பக்ஷமாயிருக்கை. ஆடுகையிலே யுற்றிருக்கையென்றது - ஆலையாடுகையிலே யொருப்பட்டிருக்கை. ஃபலிதம் - அங்குள்ளவை இத்யாதி. அதாவது - நாம் சேருகையேதாமஸம், அவன் நம்மையநுபவிப்பிக்குமென்றபடி. மாடுறு - பர்யந்தத்திலேகிட்டியிருக்கை. தண்மைக்குஹேது - ஊரை இத்யாதி. குணகுணேத்யாதி வாக்யத்துக்குக் கருத்து - ஸௌலப்யம் வாமநனுக்கும் இவனுக்கும் ஸமாநம், நீடுறைகின்றதே இங்குத்தைக்குத் தன்னேற்றமென்று. ஆடுறு இத்யாரப்ய, நீள்கழல் - நன்னுதலீர் - நாடொறும் வீடின்றியேதொழக்கூடுங்கொல் இத்யந்வயம். (அ)

வானவண்டுகள் ப்ரீத்யதிஶயத்தாலே இசைபாடாநின்றுள்ள திருவல்லவாழிலே, ப்ரதி கூலநிரஸநத்வரையாலே மிகவும் சுழன்றுவாராநின்றுள்ள திருவாழியை யரித்துக் கொண்டுநின்ற ஸர்வேஶ்வரனை, நம்முடைய கழலுகிறவளைகள் பூர்ணமாகக் கண்டுதொழ லாம்படி அவனருள் கூடவற்றேவென்கிறாள்.

ஒ.—ஒன்பதாம்பாட்டில், நம்முடைய கழலுகிறவளைகள் பூர்ணமாம்படி அவ னைக்கண்டுதொழலாம்படி அவனருள்கூடவற்றே யென்கிறாள்.

[குழல் என்றுதொடங்கி] - குளிர்ந்த சோலைகளிலேபுக்கு மத்⁴பாநத்தைப் பண்ணி, குழலோசையென்னவும் யாழோசையென்னவுமாம்படி முக்³மாய் கண்ணுக்கு அழகியவான வண்டுகள் ப்ரீத்யதிஶயத்தாலே இசைபாடாநின்றுள்ள திருவல்லவாழிலே நின்றருளுவதும்செய்து ப்ரதிகூலநிரஸநத்வரையாலே மிகவும் சுழன்றுவாராநின்றிருந் துள்ள திருவாழியையுடைய ஸர்வேஶ்வரனுடைய. [சுழலின்மலிசக்கரம்] - சுழலுவது போலத் துளங்காநின்றுள்ள சக்கரமென்னவுமாம். [தொல்அருள்] - ஸ்வாபா⁴விகமான அருள்.

ப.—அநந்தரம், மது⁴பாநமத்தமான வண்டுகளாடும் திருவல்லவாழில் கையுந் திருவாழியுமான ஸர்வேஶ்வரனுடைய க்ருபையானது, நாம் அவனை யநுப⁴விக்கும்படி லப்யையாகவற்றேவென்கிறாள்.

குளிர் - குளிர்ந்த, சோலையுள் - சோலையிலே, தேன் - மதுவை, அருந்தி - பாநம்பண்ணி, மழலை - முக்தங்களாய், வரி - வரியையுடைத்தான, வண்டுகள் - வண்டு களானவை, குழலென்ன - குழலென்றுசொல்லும்படியாகவும், யாழென்னவும் - யா ழென்றுசொல்லும்படியாகவும், இசை - இசை, பாடும் - பாடாநிற்கிற, திருவல்லவாழ் - திருவல்லவாழிலே நிற்பானாய், சுழலில் - ஸ்வரித்தஜோப்ரமணத்தாலே, மலி - மிகைத் திருக்கிற, சக்கரம் - திருவாழியையுடையனான, பெருமானது - ஸர்வேஶ்வரனுடைய, தொல் - ஸ்வாபா⁴விகமான, அருள் - க்ருபையானது, கழல் - கழலுகிற, வளை - வளை கள், பூரிப்ப - பூரிக்கும்படி, யாம் - நாம், கண்டு - அவனைக்கண்டு, கைதொழ - கை தொழும்படியாக, கூடுங்கொலோ - கிட்டவற்றேரா? அருளென்று - உதவியாய், அவ னுடைய உபகாரத்தைக்கண்டு நாம்கைதொழக்கூடுமோவென்றுமாம்.

இ.—ஒன்பதாம்பாட்டில், நம்முடைய கழலுகிறவளைகள் பூரிக்க அவனைக் கண்டு தொழலாம்படி அவனருள்கூடவற்றே யென்கிறாள்.

[கழல்வளை இத்யாதி] - கையில்தொங்காதே கழலுவது இடுவதாகிற வளை. அவன்வந்த ஹர்ஷத்தாலே பூர்ணமாம்படி, விடாய்ப்பட்ட நாம் கண்டுதொழும்படி அவன் இரங்கக்கூடவற்றோ. விஶ்லேஷத்தில் வளைகழலுவது தனக்கேயானாலும், காட்சி எல்லார்க் கும் ஒத்திருக்குமிறே. [குழல் இத்யாதி] - குழலென்னவும் யாழென்னவுமாயிருக்கை. "விஷ்ணாவஜ்ஞஸோவீரே" என்றாப்போலே ஸர்வதா ஸத்ருஶமில்லாமையாலே - கதிர்பொறுக்குகிறாள். நாட்டில் இனியவற்றெல்லாம் சேரக்கேட்டாப்போலேயிருக்கும். குளிர்சோலையிலே குளிருக்கு பரிஹாரமாக மது⁴பாநம்பண்ணி. அருந்தல் - உண்டல். [மழலைவரிவண்டுகள்] - முக்³மாய் தர்ஶநீயமான வண்டுகள் ப்ரீதிக்குப்போக்குவிட்டுப் பாடாநின்றுள்ள திருவல்லவாழ். கூட்டும்சொலவுமின்றிக்கே இசையைப்பாடும். [சுழலின் மலிசக்கரப்பெருமான்] - விரோதி⁴நிரஸநத்வரையாலே மிகவும்சுழன்றுவருகிற திருவாழி

யைக் கையிலேயுடைய ஸர்வேஶ்வரனுடைய. சுழல்வதுபோலத்துளங்கா நின்றுள்ள சக்கரமென்றுமாம். ஸ்வாபாவிகமான அவன்ப்ரஸாதத்தாலே - கழல்வளைபூரிப்ப யாங்கண்டுகைதொழக்கூடுங்கொலோ. அவ்வண்டுகள்போலே களித்து அநுபவிக்கவல்லோமோ.

ஈடு.—ஒன்பதாம்பாட்டு. நம்முடைய கழலுகிறவளைகள் பூரிக்க அவனைக் கண்டுதொழும்படி அவனருள்கூடவற்றேயென்கிறாள்.

[கழல்வளைபூரிப்ப] - "வெள்வளை" என்னுமாபோலே, கழல்வளையென்று - வளைக்கு விஶேஷணமாய்விட்டதுகாணும். இவளைக்கைவிடுகையாலேயிறே இதுவிஶேஷணமாகவேண்டிற்று. பூரிப்ப - பூர்ணமாக. அவன்வரில் கைமேலேகாணலாமேயிவற்றை. [யாங்கண்டுகைதொழக்கூடுங்கொலோ] - இதுக்குமேலே க்ரியை. [யாம்] - விஶ்லேஷத்தில் வளைகழலுவது தனக்கேயானாலும் காட்சி எல்லார்க்கும் ஒத்திருக்குமே. [குழலென்னயாழுமென்ன] - குழலென்னவுமாய் யாழென்னவுமாயிருக்கை. நாட்டிலினியவற்றையெல்லாம் சேரக்கேட்டாப்போலேயிருக்கும். "விஷ்ணுநாஸத்ருஶோவீர்யே ஸோமவத்ப்ரியதர்ஶந:" (விஷ்ணுநாஸத்ருஶோவீர்யேஸோமவத்ப்ரியதர்ஶந:) என்னுமாபோலே. [குளிர்சோலையுள்தேனருந்தி] - ஶ்ரமஹரமானசோலையிலே குளிருக்குப் பரிஹாரமாகத் தேனைப்பருகி. அருந்தல் - உண்டல். [மழலைவரிவண்டுகள்] - முக்யமாய் தர்ஶநீயமான வண்டுகள், ப்ரீதிக்குப்போக்குவிட்டுப் பாடாநின்றுள்ள திருவல்லவாழ். இதிலேநிற்பானாய் [இசைபாடும்] - செருக்கருமாய் ஸுகுமாரருமாயிருப்பார், "மரம்" என்று சந்தநத்தைக்கழித்துப் புழுகுநெய்யையேயிட்டுக்கொண்டு திரியுமாபோலே, இவையும் இயலைவிட்டு இசையையேபாடும். [சுழல் இத்யாதி] - ப்ரதிகூலநிரஸநத்வரையாலே மிகவும் சுழன்றுவாராநின்றுள்ள திருவாழியையுடைய ஸர்வேஶ்வரன். [சுழலின்மலிசக்கரம்] -

---

ப்ர:—(குழலென்னயாழுமென்ன)—ஸக்ஷெ, "விஷ்ணுநாஸத்ருஶோவீர்யே ஸோமவத்ப்ரியதர்ஶந: । காலாக்நிஸத்ருஶ: க்ரோதே க்ஷமயா ப்ருதிவீ

ஒன்பதாம்பாட்டு.—கழல்வளை இத்யாதி. "கழல்வளைபூரிப்பயாங்கண்டுகைதொழ - பெருமானதுதொல்லருள் - கூடுங்கொலோ" என்றத்தைக்கடாக்ஷித்து அவதாரிகை - நம்முடைய இத்யாதி.

விஶேஷணமாகைக்கு ஹேதுவேதென்ன - இவளை இத்யாதி. இவளைக் கைவிடுகையாலே யென்றது - இவளை அவன் கைவிடுகையாலேயென்னுதல், இந்தவளை கையைவிடுகையாலேயென்னுதல். அது பூரிக்கைக்குஹேதுவேதென்ன - அவன்வரில் இத்யாதி. இதுக்குமேலே க்ரியையென்றது - இந்தக்ரியைக்குமேலே யத்வயமென்றபடி. யாழ் - வீணை. குழலென்னவுமாய் இதி - குழல்போலேயும் வீணைபோலேயுமிருக்கையென்றபடி. "குழலென்னயாழுமென்ன" என்றத்தால்ஃலிதம்- நாட்டில் இத்யாதி. ஒன்றுக்கு அநேகத்ருஷ்டாந்தம் சொன்னவிடமுண்டோ? என்ன - விஷ்ணுநா இத்யாதி. "சுழலின்மலிசக்கரம்" என்றதுக்கு இரண்டுபொருள். அதில் மலி - சுழலில் - சக்கரம் - மிகவும் சுழன்றுவாராநின்றுள்ள சக்கரமென்னுதல்; இத்தையருளிச்செய்கிறார் - ப்ரதிகூல இத்யாதி. இரண்டாவது, உபமார்த்தே பஞ்சமியாய்; சுழல்வதுபோல், மலி - துளங்காநின்றுள்ள, சக்கரமென்னுதல்; இத்தை யருளிச்செய்கிறார் - சுழல்வதுபோல இத்யாதி. மலிதல் - துளங்குதல். துளங்குகையாவது - சலித்தலும், விளங்குதலும். "தொல்லருள்" என்றதுக்கு - அவதாரிகையிலே ஓரர்த்தம், பாட்டின்முடிவிலே ஓரர்த்தம். அவதாரிகைக்குச்சேர; கழல்வளைபூரிப்ப யாங்கண்டுகைதொழும்படி - மழலைவரிவண்டுகள் - குளிர்சோலையுள்தேனருந்தி - குழலென்ன யாழுமென்ன - இசைபாடும் இத்யா

சுழல்வதுபோலத் துளங்காநின்றுள்ள சக்கரமென்னவுமாம். [தொல்லருள்] - ஸ்வாபாவிகமான அருளாலே - கழல்வளைபூரிப்ப யாங்கண்டு கைதொழக்கூடவற்றே. (கூ)

பத்தாம் பாட்டு.

தொல்லருள்நல்வினையால் சொலக்கூடுங்கொல்?தோழிமீர்காள்!
தொல்லருள்மண்ணும்விண்ணும் தொழநின்றதிருநகரம்
நல்லருளாயிரவர் நலனேந்துந்திருவல்லவாழ்
நல்லருள்நம்பெருமான் நாராயணன்நாமங்களே.

ஆ.—(தொல்லருள்.) தோழிமீர்காள், தன்னுடைய கண்ணழிவற்ற க்ருபையை ஸம்ஸாரமும் திருநாடுமொக்க அநுபவிக்கலாம்படியான திருநகரியாய், எம்பெருமான்தன்னிற்காட்டில் அநுக்ரஹஸீலரான ஆயிரவர்தன்னுடைய கல்யாணகுணத்தைக் கொண்டாடும்படியான திருவல்லவாழிலே நின்றருளி, நல்லருளையுடையனாய்க்கொண்டு நமக்கு ஸ்வாமியான நாராயணனுடைய திருநாமங்களை, அவனுடைய ஸ்வாபாவிகக்ருபையாலே நாம் ப்ரீதிப்ரேரிதராய்க்கொண்டு சொல்லக்கூடவற்றேயென்கிறாள்.

ஒ.—பத்தாம்பாட்டில், எம்பெருமானுடைய ஸ்வாபாவிகமானக்ருபையாலே அவன்தன்னைக்காணப்பெற்று, ப்ரீதியாலே இனிதாய்க்கொண்டு திருநாமங்களைச் சொல்லக்கூடவற்றோ? என்கிறாள்.

[தொல்லருள் என்றுதொடங்கி] - தன்னுடைய கண்ணழிவற்ற க்ருபையை ஸம்ஸாரமும் திருநாடும் ஒக்க அநுபவிக்கலாம்படியான திருநகரியாயுள்ளது. [நல்லருள் என்றுதொடங்கி] - எம்பெருமான்தன்னிற்காட்டிலும் அநுக்ரஹஸீலரான ஆயிரவர் தன்னுடைய கல்யாணகுணத்தைக் கொண்டாடும்படியான திருவல்லவாழிலேநின்றருளி நல்லஅருளையுடையனாய்க்கொண்டு நமக்கு ஸ்வாமியான நாராயணனுடைய நாமங்களை.

ப.—அநந்தரம், விலக்ஷணபுருஷவாஸஸ்தாநமான திருவல்லவாழில் நிருபாதிகஸம்பந்த விஶிஷ்டனான நாராயணன் திருநாமங்களை, அவன் க்ருபையாலே நாம் சொல்லக்கூடுமோவென்கிறாள்.

தொல் - ஸ்வாபாவிகமான, அருள் - அவனுடைய உபகாரகத்வத்தை, மண்ணும் - ஸம்ஸாரத்திலுள்ளாரோடு, விண்ணும் - பரமபதத்திலுள்ளாரோடுவாசியற, தொழ - அநுபவித்துத்தொழும்படி, நின்ற - அவன்வந்துநின்ற, திரு - ஸ்ரீமத்தான, நகரம் - நகரமாய், நல் - ஆஶ்ரிதவிஷயத்தில் அவனிலும்விஞ்சின, அருள் - அருளையுடையரான, ஆயிரவர் - ஆயிரம்புருஷர்கள், நலன் - பகவத்ஜ்ஞாநப்ரேமாதிரூபமான நன்மையை, ஏந்தும் - தரிக்கும்படியான, திருவல்லவாழ் - திருவல்லவாழிலே, நல் - நன்றான, அருள் - அருளையுடையவனாய்க்கொண்டு, நம் - நம்மை யநுபவிப்பிக்கும், பெருமான் -

---

ரப்ய, தொல்லருளானது - கூடுங்கொலோ என்று அந்வயமாதல்; தொல்லருளாலே - கழல்வளைபூரிப்ப யாங்கண்டுகைதொழக்கூடுங்கொலோ என்று அந்வயமாதல். 'விஷ்ணுநாஸத்ருஶோவீர்யே', இத்யாதி ஸக்ஷெவெ. (கூ)

ஸ்வாமியாய், நாராயணன்-ஸமஸ்தகுணவிஹிதியுக்தனான நாராயணனுடைய, நாமங்கள் - தத்தத்குணவிஹிதிவாசகமான திருநாமங்களை, தோழிமீர்காள் - (திருநாமோச்சாரணத்துக்கு உகந்திருக்கும்) தோழிமீர்காள்! (அவனுடைய), தொல் - ஸ்வாபாவிகமான, அருள் - அருளாகிற, நல்வினையால் - ஸுக்ருதவிசேஷத்தாலே, சொலக்கூடுங்கொல் - நாம்சொல்லக்கூடுமோ? அருளென்று - உபகாரமாய், அதடியான அவனுடைய நல்ல செயல்களாலே சொல்லி ஏத்தக்கூடுமோவென்றுமாம்.

இ.—பத்தாம்பாட்டில், அவனுடைய ஸ்வாபாவிக க்ருபையாலே திருநாமங்களைச் சொல்லக்கூடவற்றேயென்கிறாள்.

[தொல்லருள் இத்யாதி] - ஸ்வாபாவிகக்ருபையாலேயுண்டான ஸுக்ருதத்தாலே அவனைக்கண்டு திருநாமங்களைச் சொல்லக்கூடவற்றே வென்னுதல்; ஸ்வாபாவிகக்ருபையாலே அவனைக்காணப்பெற்று, ப்ரீதியாலே யுகந்துகொண்டு திருநாமத்தைச்சொல்லக்கூடவற்றே வென்னுதல். நல்வினை - உகப்பு. [தொல்லருள் இத்யாதி]- தன்னுடைய ஸ்வாபாவிகமானசீர்மையை உபயவிபூதியும் அநுபவிக்கும்படி பழையதாகவிரும்பிவர்த்திக்கிறதேசம். நித்யஸூரிகளும், ஸம்ஸாரிகளுக்கு முகங்கொடுத்துநிற்கிற சீலவத்தையை இங்கேவந்து அநுபவிப்பர்கள். [நல்லருளாயிரவர்] - "ஈக்ஷணஸ்வயம்ஸீத:" என்கிறபடியே ப்ரஜாரக்ஷணத்தில் அவன்தன்னிற்காட்டிலும் அநுக்ரஹசீலராயிருக்குமவர்கள். [நலனேந்தும்திருவல்லவாழ்] - அவனுடைய கல்யாணகுணத்தைக் கொண்டாடி வர்த்திக்கு மூரென்னுதல், ப்ரேமத்தாலே மங்களாசாஸநம்பண்ணி வர்த்திக்கு மூரென்னுதல். [நல்லருள்நம்பெருமான்] - நல்ல அருளையுடையனாய் நமக்கு ஸ்வாமியுமாயிருக்குமவன். நல்லருளாகிறது - வாத்ஸல்யம். வாத்ஸல்யமும், ஸ்வாமித்வமும் - நாராயணசப்தார்த்தம். அர்த்தத்தையருளிச்செய்து, பின்னை சப்தத்தையருளிச்செய்கிறார் [நாராயணன்நாமங்களே] - நாராயணசப்தம்-பூர்வநிர்தேசம், இஸ்ஸ்வபாவங்களாலே நிரூபித்த வஸ்துவுக்கு உண்டான குண சேஷ்டிதங்களுக்கு வாசகம் - அல்லாததிருநாமங்கள்.

ஈடு.—பத்தாம்பாட்டு. அவனுடைய ஸ்வாபாவிக க்ருபையாலே அவனைக் காணப்பெற்று, ப்ரீதியாலே இனிதாய்க்கொண்டு திருநாமங்களைச் சொல்லக்கூடவற்றே யென்கிறாள்.

[தொல்லருள் இத்யாதி] - அவனுடைய ஸ்வாபாவிகமான அருளாலே. [நல்வினையால்] - அதாவது - அவனைக்காணப்பெற்று, அப்ப்ரீதியாலே, சொல்லக்கூடவற்றே. ஸ்வாபாவிக க்ருபையாலே அவனைக்காணப்பெற்று, ப்ரீதியாலே யுகந்துகொண்டு திருநாமத்தைச்சொல்லக்கூடவற்றேவென்னுதல்; நல்வினை - உகப்பு. அன்றிக்கே, ஸ்வாபாவிகக்ருபையாலுண்டான ஸுக்ருதத்தாலே அவனைக்கண்டு திருநாமங்களைச்சொல்லக்கூட

பத்தாம்பாட்டு.—தோல்லருள் இத்யாதி. "தொல்லருள்நல்வினையால் - நாராயணன் நாமங்கள் - சொலக்கூடுங்கொல்" என்றத்தைக்கடாக்ஷித்து அவதாரிகை - அவனுடைய இத்யாதி.

"தொல்லருள்நல்வினையால்" என்றதுக்கு இரண்டுபொருள். முந்தினது - தொல்லருளாலே அவனைக்காணப்பெற்று, அத்தால்வந்த ப்ரீதியாலே திருநாமங்களைச்சொல்லக்கூடுமோவென்று; இத்தை யருளிச்செய்கிறார் - அவனுடையஸ்வாபாவிகக்ருபையாலே இத்யாதி."தொல்லருளாலே," அவனைக்காணப்பெற்று என்று அத்யாஹரிப்பது. இந்தயோஜனையில், "நல்வினை" என்று - ஸத்கர்ம

வற்றேவென்னுதல். "'நா, நீரற்றிருக்கை பாபஃபலமிறே, நா நீருண்டாய்த் திருநாமம் சொல்லவல்லோமே யென்கிருள்' என்று அம்மங்கியம்மாள் வாக்யார்த்தமாகச்சொல்லும்" என்று அருளிச்செய்வர். [தொல்லருள் இத்யாதி] - தன்னுடைய கண்ணழிவற்ற க்ருபையை ஸம்ஸாரத்திலுள்ளாரும் நித்யவிபூதியிலுள்ளாரும் தொழநின்ற மஹாநகரம். [நல்லருளாயிரவர்] எம்பெருமானிலும் ப்ரஜாரக்ஷணத்தில் அநுக்ரஹஶீலராயிருக்கிறவர்கள். [நலன் இத்யாதி] - அவனுடைய கல்யாணகுணங்களைக்கொண்டாடி வர்த்திக்குமூரென்னுதல், ப்ரேமத்தாலே மங்களாஶாஸநம்பண்ணி வர்த்திக்குமூரென்னுதல். [நல்லருள்நம்பெருமான்] - நல்ல அருளையுடையனுய் நமக்கு ஸ்வாமியாயிருக்குமவன். நல்லருளாகிறது - வாத்ஸல்யம். வாத்ஸல்யஸ்வாமித்வங்கள் - நாராயணஶப்தார்த்தம். அர்த்தத்தையருளிச்செய்து பின்னை ஶப்தத்தையருளிச்செய்கிருர் [நாராயணன்நாமங்களே] - நாராயணஶப்தம் - யர்மிநிர்தேஶம் இஸ்ஸ்வபாவங்களாலே நிரூபிதவஸ்துவுக்குண்டான குணசேஷ்டிதங்களுக்கு வாசகம் - அல்லாத திருநாமங்கள். (க0)

பதிஞேராம் பாட்டு.

நாமங்களாயிரமுடைய நம்பெருமானடிமேல்
சேமங்கொள்தென்குருகூர்ச் சடகோபன்தெரிந்துரைத்த
நாமங்களாயிரத்து ளிவைபத்துந்திருவல்லவாழ்
சேமங்கொள்தென்னகர்மேல் செப்புவார்சிறந்தார்பிறந்தே.

மாய், தத்ஃபலமான ப்ரீதியைலக்ஷிக்கிறது. இரண்டாமர்த்தம் - தொல்லருளாகிற நல்வினையாலே நாவுக்குநீர்வந்து திருநாமங்களைச்சொல்லக்கூடுமோவென்று; இத்தை யருளிச்செய்கிருர் - நா நீரற்றிருக்கை இத்யாதி. அதாவது - நா நீரற்றிருக்கை பாபஃபலமானுல், நா நீர்வருகை புண்யஃபலமாகையாலே, அவனுடையக்ருபையாகிற ஸுக்ருதத்தாலே நா நீருண்டாய்த் திருநாமம் சொல்லவல்லோமோவென்றபடி. நல்வினை - ஸுக்ருதம். தொல்லருள் - ஸ்வாஹாவிகக்ருபை. அருளென்னுதே, "நல்லருள்" என்று விஶேஷித்ததுக்குபாவம் - எம்பெருமானிலும் இத்யாதி. "நலன்" என்றது - நலமாய், அத்தால் - குணஸமூஹத்தைச்சொல்லி; ஏந்துகையாவது - ப்ரீக்கையாய், அவன்குணங்களைக்கொண்டாடிக்கொண்டிருக்கையென்று மூந்தினவர்த்தம். இரண்டாமர்த்தத்துக்கு, நலமென்று - நலமாய், அதாவது - ப்ரேமமாய், ஏந்துகையாவது - ஏறிட்டுக்கொள்ளுகையாய், ப்ரேமத்தாலே அவனுடைய ரக்ஷகத்வத்தைத் தாங்கள் ஏறிட்டுக்கொண்டு அவனுக்கு மங்களாஶாஸநம்பண்ணுகிறவூரென்று ஶப்தார்த்தம். நாராயணஶப்தம் ப்ரஸ்துதமானுல் அர்த்தகதந நிர்ப்பந்தமுண்டாகையாலே, நாராயணஶப்தார்த்தமாக யோஜிக்கிருர் - நல்லருளாகிறது இத்யாதி. வாத்ஸல்யம் - வைஹாவ்ரீஹியிலே. ஸ்வாமித்வம் - தத்புருஷனிலே. நாராயணஶப்தமும் திருநாமமன்ரே, இத்தைப்ரதாநமாகச் சொல்லுவானென்? என்ன - நாராயணஶப்தம் இத்யாதி. யர்மிநிர்த்தேசமென்றது - ஸ்வரூபநிரூபகமென்றபடி. இஸ்ஸ்வஹாவங்களாலேயென்றது - வாத்ஸல்யஸ்வாமித்வங்களாலேயென்றபடி. குணங்களில்வைத்துக்கொண்டு ஜ்ஞாநாநந்தாமலத்வாதிகள் நிரூபகங்களாய், அல்லாதகுணங்கள் இவற்ருலே நிரூபிதமான ஸ்வரூபத்துக்கு விஶேஷணமாணுப்போலே; திருநாமங்களிலும் நாராயணஶப்தம் ஸ்வரூபநிரூபகமாய், அல்லாததிருநாமங்கள் இந்தத்திருநாமத்தாலே நிரூபிதமான வஸ்துவுக்குண்டான குணசேஷ்டிதங்களுக்கு வாசகமாயிருக்குமென்றபடி. தோழிமீர்காள், நலனேந்தும் - நல்லருளாயிரவரையுடைத்தாய் - தொல்லருள் மண்ணும் விண்ணும் தொழநின்றதிருநகரமான - திருவல்லவாழில் நல்லருள் நம்பெருமான் நாராயணன் நாமங்களை - தொல்லருள் நல்வினையால் சொலக்கூடுங்கொல் என்று அந்வயம். (க0)

ஆ.—(நாமங்கள்.) நாமங்களாயிரத்தையுமுடையனாய் ஸர்வேஶ்வரத்வேந ப்ரஸித்தனானவன் திருவடிகளிலே, தமக்கு ரக்ஷையாகப்பார்த்துக்கொண்ட ஆழ்வார் ஆராய்ந்தருளிச்செய்த ஆயிரந்திருநாமங்கள்போலே குணசேஷ்டிதாதிகளுக்கு ப்ரதிபாதகமான ஆயிரத்திலும் இத்திருவாய்மொழியைத் திருவல்லவாழாகிற க்ஷேமமுடைத்தான தென்னகரிலே கூட்டிச்சொல்லவல்லவர், ஸம்ஸாரத்திலேயிருந்துவைத்தே எல்லாரிலும் சிறந்தாரென்கிறார்.

ஒ.—நிகமத்தில், இப்பத்தும்வல்லார் ஸம்ஸாரத்திலேயிருந்துவைத்தே எல்லாரிலும் சிறந்தார் என்கிறார்.

[நாமங்கள் என்றுதொடங்கி] - நாமங்களாயிரத்தையுமுடையனாய் ஸர்வேஶ்வரத்வேந ப்ரஸித்தனானவன் திருவடிகளிலே தமக்கு ரக்ஷையாகப்பார்த்துக்கொண்ட ஆழ்வார் ஆராய்ந்து அருளிச்செய்த. [நாமங்களாயிரத்து என்றுமேலுக்கு] - எம்பெருமானுக்குத் திருநாமங்கள்போலே குணசேஷ்டிதாதிகளுக்கு ப்ரதிபாதகமான ஆயிரந்திருவாய்மொழியிலும் இத்திருவாய்மொழியைத் திருவல்லவாழாகிற க்ஷேமமுடைத்தான தென்னகரிலேகூட்டிச் சொல்லவல்லவர்.

ப.—அநந்தரம், இத்திருவாய்மொழியைச்சொல்லவல்லவர்கள் பகவதநுபவ யோக்ய ஜந்மத்தையுடையவர்களென்று பலத்தை யருளிச்செய்கிறார்.

நாமங்களாயிரமுடைய - ("பேராயிரங்கொண்டதோர்பீடுடையன் - நாராயணன்" என்கிறபடியே ப்ரதாநநாமமான நாராயணஶப்தத்திலுடைய அம்ஶமான) நாம ஸஹஸ்ரத்தையு முடையனாய், நம்பெருமான் - (அவற்றை யநுபவித்து) "நம்ஸ்வாமி" என்று ஸர்வரும் பற்றும்படியான ஸர்வேஶ்வரனுடைய, அடிமேல் - திருவடிகளின் மேலே, (நினைத்தபடி யநுபவிக்கப்பெறாத அநிஷ்டநிவ்ருத்தி நடக்கச்செய்தேயும்), சேமம்-க்ஷேமகரத்வ புத்திரூப வ்யவஸாயத்தை, கொள் - உடையராய், தென்-கட்டளைப்பட்ட, குருகூர் - திருநகரிக்கு நிர்வாஹகரான, சடகோபன் - ஆழ்வார், தெரிந்து - ("இத்திருவடிகளே ரக்ஷகம்" என்று) ஆராய்ந்து விஶ்வஸித்து, உரைத்த - அருளிச்செய்த, நாமங்கள் - அவனுக்குத் திருநாமங்கள்போலே வாசகமான, ஆயிரத்துள் - ஆயிரத்துள், இவை - இவை, பத்தும் - பத்தையும், திருவல்லவாழ் - திருவல்லவாழாகிற, சேமங்கொள் - ரக்ஷாயுக்தமான, தென்-அழகிய, நகர்மேல் - திருநகரிவிஷயமாக, செப்புவார் - செப்பவல்லவர்கள், பிறந்து - ஶரீரஸம்பந்தத்தோடே யிருந்துவைத்து, சிறந்தார்-பகவதநுபவமாகிற சிறப்பையுடையராவர்கள். இது - கலித்துறை.

இ.—நிகமத்தில், இப்பத்தும்வல்லார், ஸம்ஸாரத்திலேயிருந்துவைத்தே பகவத்குணாநுபவத்தாலே எல்லாரிலுஞ்சிறந்தவர்களென்கிறார்.

[நாமங்கள் இத்யாதி]-"தேவோ நாம ஸஹஸ்ரவாந்" என்கிறபடியே குண சேஷ்டிதங்களுக்குவாசகமான திருநாமங்களையுடையனாகையாலே ஸர்வேஶ்வரனாக ப்ரஸித்தனானவன். [அடிமேற்சேமங்கொள்] - அவனைப்பெறாதே நோவுபடநோவுபட அவன்திருவடிகளேரக்ஷகமாகப் பற்றும் ஆழ்வார். பிராட்டி ஆற்றாமைமிக்கவிடத்திலும் ராவணனையாஶ்ரயியாதே, பெருமாள்வரவைப் பார்த்திருந்தாப்போலே. [தெரிந்துரைத்த நாமங்களாயிரத்துள் இவைபத்தும்] - அவனுக்குத்திருநாமங்கள்போலே குணசேஷ்டிதங்களுக்கு ப்ரதிபாதகமான ஆயிரத்திலும் ஆராய்ந்துரைத்த இப்பத்தையும், திரு

வல்லவாழாகிற சேமமுடைத்தான தென்னகரிலே கூட்டிச்சொல்லுவார். [தென்னகர்] - ராஜாவையிட்டு - தென்னகரென்னுதல், தெற்குத்திக்கில் நகரென்னுதல். [சிறந்தார் பிறந்தே] - ஒருவனுக்குப்பிறக்கைபோக்கித் தாழ்வின்றிக்கேயிருக்க,பகவதநுபவம்பண்ணப்பெறுகையாலே இவர்கள் சீரியர்கள். "சீதனையேதொழுவார்விண்ணுளாரிலும் சீரியரே" - அவனுக்கு உறுப்பாகையாலே முக்தஶரீரத்திலும் ஶ்லாக்யம். ஆஶ்ரிதார்த்தமான பகவதவதாரம்போலே ஶ்லாக்யமென்கை.

ஈடு.—நிகமத்தில் - இத்திருவாய்மொழியை யப்யஸிக்கவல்லார் ஸம்ஸாரத்திலே யிருந்துவைத்தே பகவத்குணாநுபவத்தாலே எல்லாரிலும் சிறந்தவர்களென்கிறார்.

[நாமங்கள்இத்யாதி]-"தேவோநாமஸஹஸ்ரவாந்"(தேவோநாமஸஹஸ்ரவாந்) என்கிறபடியே, குணசேஷ்டிதங்களுக்கு வாசகமான திருநாமங்களை யுடையனாகையாலே ஸர்வேஶ்வரனாக ப்ரஸித்தனானவன். நம் - ப்ரஸித்தி. பெருமான் - ஸர்வேஶ்வரன். [அடிமேல்சேமங்கோள்] - புறம்புள்ள காற்கட்டுக்களைவிட்டு, அவன்திருவடிகளே தமக்கு ரக்ஷகமாகப் பற்றின ஆழ்வார். [தெரிந்துரைத்தநாமங்களாயிரத்து ளிவைபத்தும்] - அவனுக்குத் திருநாமங்கள்போலே குணசேஷ்டிதாதிகளுக்கு ப்ரதிபாதகமான ஆயிரத்திலும் ஆராய்ந்துரைத்த. ஆயிரந்திருநாமங்களைச்சொன்னால் அவன்குணங்கள் தோற்றுமாப்போலேயிறே இவற்றுக்கும் அவன்குணங்கள் தோற்றும்படி. இவை பத்தையும், திருவல்லவாழாகிற சேமமுடைத்தான தென்னகரிலே கூட்டிச் சொல்லுவார். தென்னகர்- அழகியநகரி. [சிறந்தார்பிறந்தே] - ஒருவனுக்குப் பிறக்கைபோக்கித் தாழ்வின்றிக்கே யிருக்க, அவனுக்கு * பலபிறப்பா யொளிவருமாப்போலே, இவர்களும் இங்கே பகவ

ப்ர:—(நாமங்களாயிரமுடைய) — மஹாபாரதே, "ஸஹஸ்ரஶீர்ஷ: புருஷாய தேவாய ஸஹஸ்ரநாதந: । ஸஹஸ்ராக்ஷ: ஸஹஸ்ரபாஸ்ஸஹஸ்ரசரணார்பித:। ஸஹஸ்ரபாஹுர்ஜங்கோ தேவோநாம ஸஹஸ்ரவாந்। ஸஹஸ்ரகோடியுகதேவோ விஶ்வரூபோ மஹாத்யுதி: ॥"

நிகமம்.—நாமங்கள் இத்யாதி. "இவைபத்தும் - செப்புவார் சிறந்தார்பிறந்தே" என்றத்தைக் கடாக்ஷித்து அவதாரிகை - இத்திருவாய்மொழியை இத்யாதி.

"நாமங்களாயிரமுடைய" என்கிறவிது - ஹேதுகர்ப்ப விஶேஷணமென்று திருவுள்ளம்பற்றி - திருநாமங்களையுடையனாகையாலே என்கிறார். "நம்" என்று - ப்ரஸித்தியைச் சொல்லுகிறது. "பெருமான்" என்று - ஸர்வேஶ்வரன். ஆயிரம்பாட்டுக்களில் இவைபத்தென்றதே, "நாமங்களாயிரத்துளிவைபத்தும்" என்பானென்? என்ன,—"நாமங்களாயிரமுடைய" என்றத்தை ஹ்ருதீகரித்து பாவம் - ஆயிரந்திருநாமங்களை இத்யாதி. தோற்றும்படி - ஆகையாலே திருநாமங்களான ஆயிரமென்னக் குறையில்லை என்று அத்யாஹார்யம். சேமம் - திருமதிள் முதலான ரக்ஷை. கூட்டிச் சொல்லுகையாவது - ப்ரதிபாதகமென்கிற நினைவோடே சொல்லுகை. "பிறந்தே - சிறந்தார்" என்று அந்வயிப்பது. ஜந்மத்தையுடையராயிருக்கச்செய்தே ஶ்லாக்யராயிருப்பர்கள். பிறவியில் ஶ்லாக்யதை கூடாதென்னுமத்தையும்; இப்படிக்கொத்த ஜந்மத்தையுடையரா யிருக்கச்செய்தே, ஈஶ்வரனுக்குப் பிறக்கப்பிறக்க குணங்கள் புகர்பெற்று வருமாபோலே, இவர்களும் பகவதநுபவம் பண்ணுகையாலே ஶ்லாக்யரா யிருப்பர்களென்னுமத்தையும் அருளிச்செய்கிறார் - ஒருவனுக்கு இத்யாதி. ஒருவனுக்கு - ஸம்ஸாரிசேதநனுக்கு. பிறக்கைபோக்கி - பிறக்கையைப்பற்ற, ஜந்மத்தைக்காட்டிலும் தாழ்ச்சியின்றிக்கே யிருக்கவென்றபடி. "இங்கேபகவதநுபவம்பண்ணுகையாலே அவர்கள் சீரியர்" என்றதுக்கு

தநுஸந்தாநம்பண்ணுகையாலே சீரியர்கள். † "சீதனையேதொழுவார் விண்ணுளாரிலும் சீரியர்" என்னக்கடவதிறே. இப்பத்தை யப்யஸிக்கவல்லார், என்னைப்போலே அவனிருந்ததேசத்திலே போகப்புக்கு, ஶலஹாநியாலே நடுவழியிலே விழுந்து நோவுபடாதே உகந்தருளின தேசத்திலே புக்கு அநுபவிக்கப் பெறுவர்கள். இவர்கள்ஜந்மங்கள் கர்மநிபந்தநமா யிருக்கச்செய்தே அவனுக்குறுப்பாகையாலே முக்தஶரீரத்திலுங்காட்டில் ஶ்லாக்யம். ஆஶ்ரிதார்த்தமான ஭கவதவதாரம்போலே ஶ்லாக்யமென்கை. (கக)

ப்ரமாணம் - சீதனையே இத்யாதி. ஶ்ரீதளஸ்வபாவனானவனையே யநுபவிக்கப்பெற்றவர் நித்யஸூரிகளிலும்ரகனத்தவர்களித்யர்த்த:. இத்திருவாய்மொழியில் அர்த்தாநுகுணமாக ஫லமருளிச்செய்கிறார்- இப்பத்தை யப்யஸிக்க இத்யாதி. ஭கவதவதாரம் ஐச்சிகமாகையாலே யொளிவரக்கூடும், கர்மநிபந்தந ஜந்மாக்களான இவர்கள் சிறக்கக்கூடுமோ? என்ன - இவர்கள் ஜந்மங்கள் இத்யாதி. ஸத்ருஷ்டாந்தமாக உக்தார்த்தத்தை ஸ்த்திரீகரிக்கிறார்:- ஆஶ்ரிதார்த்தமான இத்யாதி. நாமங்களாயிரத்துள் இவைபத்தும் திருவல்லவாழ் சேமங்கொள் தென்னகர்மேல்செப்புவார் - பிறந்தே - சிறந்தார் இத்யந்வய:. "ஸஹஸ்ரபாஹுஸ்ஸர்வஜ்ஞோ தேவோ நாமஸஹஸ்ரவாந் । ஸஹஸ்ரஶீர்ஷோ தேவோ விஶ்வாத்மா ஸஹஸ்ராக்ஷ: ஸஹஸ்ரபாத்" இதி பாரதே. (கக)

த்ரவிடோபநிஷத்ஸங்கதி. — ஜந்மப்ராந்தி: ஶ்ருதிமதஸ்துதவஶ்ச வேதார்த்தஞ்ஞை: ப்ரவ்ருத்த ‡ ப்ரஸாவிதா ஸ்வப்நேஶ்வ । தத்ஹார்த்தாத்ஹிதம்ப்ரத யீஶ்வராத்ர யாயாம்ஸ்ஸ்வத்யக்ஷயஶவஸேஶ்வந்தி ॥

த்ரவிடோபநிஷத்தாத்பர்யரத்நாவலி. — ஸ்வாமித்வாத்ஸம்ஶ்ரிதாநாம் ப்ரவகரணரஸாத்ஸ்வஸ்த்ய ஸம்ஶ்லேஷகத்வாத் ஸ்வப்ராஸ்வாதஸ்வஹேதுப்ரகவத்வாதயாத் தாரணாதஸ்வகத்வாத் । ஸ்வத்யாஸ்யாநாவஸத்ர்யா ஹ்ருதிஹரணாத்வாவிநாராயணத்வாத் இத்யாஸஶ்ரிதாநாம்ஸவதிஶிஶிதீவ்ரா மகாஶ்வநிஜ: ॥

திருவாய்மொழி நூற்றந்தாதி.

மாநலத்தால்மாறன் திருவல்லவாழ்புகப்போய்த்
தானிளைத்துவீழ்ந்தவ்வூர் தன்னருகில் - மேல்நலங்கித்
துன்பமுற்றுச்சொன்னசொலவுகற்பார் தங்களுக்குப்
பின்பிறக்கவேண்டாபிற.

ஆழ்வார் திருவடிகளே ஶரணம், எம்பெருமானார் திருவடிகளே ஶரணம், ஜீயர்திருவடிகளே ஶரணம்.

---

† திருவிருத்தம்-எக.

‡ (ப்ரஸூதி) உபலக்ஷணத்ருதீயா. (ப்ரஸாதக:-ப்ரநி:)இத்யந்வய:.

பத்தாந்திருவாய்மொழி—பிறந்தவாறு: ப்ரவேஶம்.

ஆ.—(பிறந்தவாறும்.) இப்படி சிரீவரமங்கலநகர் திருக்குடந்தைத் திருவல்லவாழ்களில் எம்பெருமானோடு யதாமநோரதம் ஸம்ஶ்லேஷிக்கப்பெறாமையாலே அவஸந்நரான ஆழ்வார்; எம்பெருமான் ஸ்ரீமதுரையிலேவந்து வஸுதேவர்திருமகனாய்ப் பிறந்தருளினபடியையும், ஸகலமநுஜநயநவிஷயதாங்கதனாய்க்கொண்டு வளர்ந்தருளினபடியையும், அஶேஷஜநமநோநயநஹாரியாய் அதிதைவாதிமாநுஷமான திவ்யசேஷ்டிதங்களைப் பண்ணினபடியையும், மற்றும் மத்ஸ்யகூர்மாதிரூபேண அவதீர்ணனாய்ச் செய்தருளின திவ்யசேஷ்டிதங்களையும் காணப்பெற்றிலேன்; இனி "அவற்றையநுஸந்திக்க வேணும்" என்றுபுக்கு மிகவும் ஶிதிலனாகாநின்றேன்; அந்தஶைதில்யத்தைப்போக்கி, அநுஸந்திக்கவல்லேனாம்படி பண்ணியருளவேணுமென்று எம்பெருமானை ஶரணமாகப் பற்றிமுடிக்கிறார்.

ஒ.—பத்தாந்திருவாய்மொழியில், திருவல்லவாழில் எம்பெருமானோடே பரிமாறவேண்டியிருக்கிறபடிகளை நெடும்போது மநோரதித்து அப்படிபெறாதே மிகவும் அவஸந்நராய், திருவடி ராமாவதாரத்தில் ஸக்தனாயிருக்குமாபோலே பகவத்குணசேஷ்டிதாதிகள் எல்லாவற்றிலும் தனித்தனியே ஸக்தராகையாலே ஸ்நேகத்தில் திருவடியிற் காட்டில் விலக்ஷணரான ஆழ்வார், ஆஶ்ரிதர் வாழும்படியும், அவர்களுக்கு விரோதிகள் மண்ணுண்ணும்படியுமான க்ருஷ்ணாவதாரத்தையும், மற்றும் எம்பெருமானுடைய திவ்யாவதார சேஷ்டிதங்களையும், ஜகத்ஸ்ருஷ்ட்யாதிகளையும் அநுஸந்திக்கவென்று புக்கு மிகவும் ஶிதிலராய்; அந்தஶைதில்யத்தைப் போக்கியருளி, தரித்துநின்று தேவரீரை அநுஸந்திக்கவல்லேனாம்படி பண்ணியருளவேணுமென்று எம்பெருமானை ஶரணமாகப் பற்றி முடிக்கிறார். ஆழ்வார்தாம் எம்பெருமானை விஶ்லேஷித்திருக்கிறதஶையிலே க்ருஷ்ணாவதாரகுணசேஷ்டிதாதிகளும் மற்றுமுண்டான எம்பெருமானுடைய குணசேஷ்டிதாதிகளும் பாதிஸ்தமாய்க்கொண்டு மிகவும் நலிய, அவற்றாலே மிகவும் அவஸந்நராய்; இவ்வவஸாதம்தீரும்படி உன்திருவடிகளிலே வந்துசேர்வது என்றென்று எம்பெருமானைக் குறித்துக் கூப்பிடுகிறார் என்றுமாம்.

ப.— பத்தாந்திருவாய்மொழியில், இப்படி திருவல்லவாழிலே யநுபவிக்க ஆசைப்பட்டு அதுகிடையாமையாலே ஆர்த்தராய், "நினைந்திருந்தேசிரமந்தீர்ந்தேன்" என்கிறபடியே அவனுடைய ஸர்வாவதாரஸித்தமான குணசேஷ்டிதங்களை யநுஸந்தித்து, தரிக்கப்பார்த்து; க்ருஷ்ணனுடைய அவதாராதி வ்ருத்தாந்தத்தையும், அஶிமதவிஷயவ்யாபாரத்தையும், பாலசேஷ்டிதங்களையும், த்ரிபுரவாஸிகளான அஸுரவர்க்கத்தினுடைய அந்தர்ப்பேதத்தையும், அதிமாநுஷசேஷ்டிதங்களையும், ஸ்த்தித்யாஸநஶயநாதி வ்யாபாரத்தையும், ஆந்தரமாகவும் பாஹ்யமாகவும் ப்ரகாஶாப்ரகாஶகத்வத்தையும், ஸர்வாதிகத்வஸூசகமான ஸ்ருஷ்டிவ்யாபாரங்களையும், அர்த்தியாயும் தன்னபேக்ஷிதம் தலைக்கட்டிக்கொள்ளுமாகாரத்தையும், ஆஶ்ரிதவிஷயத்தில் அருந்தொழில் செய்து உபகரிக்கும்படியையுமநுஸந்தித்து, அவைதானே அப்ராப்திதஶையில் ஶைதில்யாவஹமாகையாலே ஆர்த்தராய், "உன்னுடைய சேஷ்டிதாதிகளை நான்நிலைநின்று அநுஸந்திக்கும்படி பண்ணியருளவேணும்" என்று அபேக்ஷித்து, அவன்திருவடிகளிற்பிறந்த

உபாயவிஶ்வாஸம் யாவத்ப்ராப்தி யநுவர்த்தித்தபடியை யருளிச்செய்து, இப்படி உபாய ஸாதநனுடைய ஸ்வரூபயாதாத்ம்யத்தை நிரூபித்துத்தலைக்கட்டுகிறார்.

இ.—பத்தாந்திருவாய்மொழியில், "திருவல்லவாழி நலேபுகவேணும், பரிமாற வேணும்" என்று மநோரதித்தபடி பெருமையாலே மிகவும் அவஸந்நராய்நின்றது-கீழ்; இத்திருவாய்மொழியில் - அவனுடைய குணசேஷ்டிதாதிகளை யநுஸந்திக்கப் புக்கு ஶிதிலரானவர்; இஶ்ஶைதில்யத்தைப் போக்கியருளி, தரித்துநின்று அநுபவிக்க வல்லேனும்படி பண்ணியருளவேணுமென்று ஶரணம்புகுகிறார். திருவடி ராமாவதாரத்திலே ஸக்தனாயிருக்குமாபோலே, இவர் எல்லாவவதாரத்திலுமுண்டான குணசேஷ்டிதாதிகளிலும் ஆழங்காற்படவல்லராயிருப்பர்; "மண்ணைமுன்படைத்துண்டுமிழ்ந்து கடந்திடந்துமணந்தமாயங்கள்" என்றாரிறே. திருவடியைப்போலன்றியே, ஸகவத்ப்ரஸாதமடியாகவந்த ஜ்ஞாநாதிக்யத்தையுடையராகையாலே, திருவடியிற்காட்டில் விலக்ஷணர் இவர். அர்ச்சாவதாரத்திலே தம்மபேக்ஷிதம் பெறநினைத்தவர், அங்குக்கிடையாமையாலே அவதாரங்களிலே போகிறார். விஸவங்களிலுமிழந்தார்க்கு இழவுதீர்க்கிற விடமாயிருக்க, அவதாரங்களிலே போருகையாவதென்? என்னில்,—அர்ச்சாவதாரத்தில், அதீந்த்ரியனானதன்னை ஸம்ஸாரிகள்கண்ணுக்கு விஷயமாக்குகையும் ஸர்வாபேக்ஷிதங்களையுங் கொடுக்கையுமொழிய, குளிரநோக்குதல் வினவுதல்செய்யக்கடவதன்றாக ஸங்கல்பித்திருக்கையினாலே, "ஸத்யஸங்கல்பனுடைய ஸங்கல்பங்குலையும்படி அதிநிர்பந்தம்பண்ணக் கடவோமல்லோம்" என்று, "ஸம்ஸாராக்ஷஸ்த்வஸ்ரீ த்ராவஸாமாஸம்வசிஷ்வஸஜ" என்றக்ருஷ்ணாவதாரத்திலே போந்தார் ப்ரத்யாஸத்தியாலே. அதுவும் தீர்த்தம்ப்ரஸாதிக்கையாலே, "பல்வினைபட்டுத் தெறித்தது" என்றுகூப்பிடுகிறார். இது ஆழ்வான்நிர்வாஹம். "உன்னைப்பிரிந்து நோவுபடுகிறஸமயத்திலே உன்னுடைய குணசேஷ்டிதாதிகள் ஸ்ம்ருதிவிஷயமாய்நின்று நலியாநின்றது, இவ்வவஸாதந்தீரும்படி உன்திருவடிகளிலேவந்து சேருவது என்றென்கிறார்" என்று பிள்ளைதிருநறையூரரையருளிச்செய்தார்நிர்வாஹம்.

ஈடு.—"திருவல்லவாழிலே போய்ப்புக்கு அங்குநிற்கிறவனோடே பரிமாறவேணும்" என்று மநோரதித்துக்கொண்டுபோக, கால்நடைதாராமல் நடுவழியிலே விழுந்து கிடந்து கூப்பிட்டார்; இனி "இவ்வளவில் குணநுபவம்பண்ணியாகிலும் தரிப்போம்" என்று பார்க்க, அதுதானும் பேற்றோபாதியரிதாம்படி ஶைதில்யத்தைவிளைப்பிக்க; ஸர்வாவஸ்த்தைகளிலும் - உன்னைப்பிரிந்துநின்றாலும் தரித்துநின்று குணநுபவம்பண்ணவல்லேனும்படி பண்ணியருளவேணுமென்று அவன் திருவடிகளிலே ஶரணம்புகுகிறார்.

ருஷிகளுக்குண்டான ஸம்ஸாரபயத்தோபாதியும்போருமாயிற்றுஆழ்வார்களுக்கு ஸகவத்விரஹத்தால்வரும் க்லேஶம்; அவர்கள் தந்தாம்பேற்றுக்குத் தாந்தாம் கிலயத்நம்

பிறந்தவாறுப்ரவேஶ, திருவல்லவாழிலேயென்று தொடங்கி கூப்பிட்டார் என்னுமளவும் உத்தாநுவாதம். இனி இவ்வளவில் என்று தொடங்கி, ஶரணம்புகுகிறர் என்னுமளவாக ஆழ்வான் நிர்வாஹத்திலே ஸங்க்ரஹஸங்கதி. குணநுபவம் பண்ணியாகிலும் என்ற விடத்திலே-"கோவிந்தன் குணம்பாடி-ஆவிகாத்திருப்பேனே" என்றத்தையும், "கூஶம்வெஸம்ஹரிப்ரேக்ஷக்ஷிவ்ஸோம்ஸ்ரவ்ரவஸ்தெவஶி: இத்யாதியையும் அநுஸந்திப்பது. "ஸர்வாவஸ்த்தைகளிலும்" என்றதின் விவரணம் - பிரிந்துநின்றாலும் என்றது.

மற்றும் ஸகவத்விஷயத்திலே கைவைத்திருப்பார் பலருமுண்டே, அவர்களுக்கு இவ்வாற்றாமை காண்கிறிலோமே? என்ன - ருஷிகளுக்கு இத்யாதி. இத்தால் - ருஷிகள் முதலானார்க்கு ஸம்ஸார

பண்ணுநிற்பர்கள், இவர்கள் அத்தலையாலே பெருமளவும் அஶோகவநிகையில் பிராட்டியைப்போலே துடியாநிற்பர்கள்; அவர்களுக்குத் தங்கள்தலையிலேயும் சிலகிடக்கையாலே விளம்பம் பொறுக்கலாம், இவர்களுக்கு அங்ஙன் சொல்லலாவதொன்றில்லையாகையாலே கிடந்து அலமாப்பர்கள். "அவனடியாலேநம்பேறு" என்றிருக்கிறவர்களுக்கு ஒரு கண்ணழிவில்லையே சொல்லலாவது. "**நசஸீதா த்வயா ஹீநா நசாஹமபி ராகவ**" (நசஸீதாத்வயாஹீநாநசாஹமபிராகவ) என்கிறபடியே, லாஹாலாஹங்களில் பிராட்டியையும் தம்மையும் ஏகப்ரக்ருதியாகச் சொன்னாரிறே. "**பாவோ நாந்யத்ர கச்சதி**" (பாவோ நாங்யத்ரகச்சதி) என்று, திருவடி ராமாவதாரமொன்றிலும் ஸக்தனாயிருக்குமாபோலே, இவர் எல்லாவவதாரங்களிலும் எல்லாசேஷ்டிதங்களிலும் அகப்பட்டிருப்பாரொருவர். அர்ச்சாவதாரத்திலே தம்மபேக்ஷிதம்பெற ஆசைப்பட்டவர், அதுகிடையாமையாலே அவதாரங்களிலேபோகிறார்; "விபவமுள்ளவிடத்தேசென்றால் சிறிது அபேக்ஷிதம் கிடைக்கும்" என்றிருப்பரே. விபவங்களிலே இழந்தார்க்கும் இழவுதீர்க்கிற விடமாயிருக்க, இத்தைவிட்டு "பெறலாம்" என்று விபவமுள்ளவிடந் தேடிப்போகையாவதென்? என்னில்,—அர்ச்சாவதாரத்தில், அதீந்த்ரியஜ்ஞானதன்னை ஸம்ஸாரிகள் கண்ணுக்கு விஷயமாக்குகையும் ஸர்வாபேக்ஷிதங்களையும் கொடுக்கையுமொழிய, குளிரநோக்குதல் வினவுதல் அணைத்தல் செய்யக்கடவதன்றாக ஸங்கல்பித்திருக்கையாலே, "ஸத்யஸங்கல்ப

---

*பயமாத்ரமொழிய பகவத்விரஹத்தால்வரும் க்லேஶமில்லையென்றபடி. இருவரும் பகவத்விஷயத்திலே அந்வயித்திருக்க, அவர்களுக்கு இல்லாமல் போவானென்; ஆழ்வார்களுக்கு பகவத்விரஹக்லேஶமுண்டாவானென்? என்கிற ஶங்கையிலே, இரண்டுக்கும் ஹேதுவை அருளிச்செய்வதாக; ருஷிகளுடையவும் ஆழ்வார்களுடையவும் ப்ரதிபத்திஶரீரத்தை யருளிச்செய்கிறார் - **அவர்கள்தந்தாம்** இத்யாதி வாக்யத்வயத்தாலே. "ஸ்வப்ரயத்நத்தாலேபேறு" என்றிருக்கை-ருஷிகள் ப்ரதிபத்திஶரீரமாகையாலே, "நாம் அநுஷ்டித்தவுபாயம்முற்றி க்ரமத்திலே பலிக்க வேண்டாவோ" என்று அவர்களுக்கு விரஹம் பொறுக்கலாயிருக்குமென்றும்; ஆழ்வார்களுக்கு அவர்களைப்போலே தங்கள்தலையிலேயும் சிலவுண்டாய், அது பக்வமாய்ப்பெறவேணுமென்னு மதில்லாமையாலே விரஹம் பொறுக்கமாட்டார்களென்றும் அருளிச்செய்கிறார் - **அவர்களுக்குத் தங்கள்** இத்யாதிவாக்யத்வயத்தாலே. இவர்களுக்கு அப்படிமுற்றி பலிக்கவேண்டுவதொன்றின்றிக்கே யிருப்பானென்? என்ன - **அவனடியாலே** இத்யாதி. அன்றிக்கே, "இவர்களுக்கு அங்ஙன்" இத்யாதிவாக்யவிவரணமாதல். "அஶோகவநிகையில் பிராட்டியைப்போலே" என்று அவளோடு ஒப்புச்சொல்லலாமோ? என்ன - **நசஸீதா** இத்யாதி. இத்திருவாய்மொழியிலே - க்ருஷ்ணாவதாரம் சொல்லாநிற்க, அவதாராந்தரங்களையும் சொல்லுவானென்? என்ன - **பாவோ நாந்ய** இத்யாதி. "**ஸ்நேஹோ மே பரமோ ராஜந் த்வயி நித்யம் ப்ரதிஷ்டித: | பக்திஶ்ச நியதா வீர பாவோ நாந்யத்ர கச்சதி" உத்தரஶ்ரீராமாயணே.** கீழ்மூன்று திருவாய்மொழிகளிலும் - அர்ச்சாவதாரத்தை யருளிச்செய்தவர், அத்தைவிட்டு இங்கே விபவங்களிலே வருவானென்? என்ன - **அர்ச்சாவதாரத்திலே** இத்யாதி. தம்மபேக்ஷிதமாவது - குளிரநோக்குதல், அணைத்தல்முதலானது. ரஸோக்தி - **விபவம்** இத்யாதி. இழவுதீர்க்கிறவிடமாயிருக்கவென்றது - அவதாரங்களில் பிற்பட்டார்க்கும் அநுபாவ்யமாம்படி ஸதாஸந்நிஹிதமாகையைப்பற்ற. **ஸத்யஸங்கல்பனுடைய ஸங்கல்பம்தலையும்படி** என்றவிடத்திலே - "கூரத்தாழ்வான் ஆர்த்தராய் ஶரணம்புக, பெருமாளுமிரங்கி 'மூன்றுநாளைக்குவீடுதந்தோம்' என்ன, 'ஆழ்வான் திருமதிளுக்குப்புறம்பானார்' என்றுகேட்டு உடையவர் ஓடிச்சென்று, 'ஆழ்வான், நாம் இங்கேயிருக்க உமக்குப் பரமபதத்தேபோகவேண்டிற்றோ' என்ன, 'அடியேன் ஸம்ஸாரத்தில் அடிக்கொதிப்பாலே மறந்தேன்' என்ன, 'ஆகில் நாமும் ஶரணம்புகுந்தால் இன்னம்சிலநாள் ஆழ்வானை இங்கேவைக்க இரங்குவர்' என்று திருவாசலளவும்சென்று, 'ஸத்யஸங்கல்பனுடைய ஸங்கல்பத்தைக்*

னுடைய ஸங்கல்பம்குலையும்படி அதிநிர்ப்பந்தம் பண்ணக்கடவோமல்லோம்'' என்று, ''ஸம்ஸ்ப்ருஶ்யாக்ருஷ்ய ச ப்ரீத்யா ஸுகாடம் பரிஷஸ்வஜே'' (ஸம்ஸ்ப்ருஶ்யாக்ருஷ்யச ப்ரீத்யா ஸுகாடம்பரிஷஸ்வஜே) என்னும் க்ருஷ்ணாவதாரத்திலே போந்தார் ப்ரத்யாஸத்தியாலே. ''இவ்வாழ்வார்களெல்லாரும் க்ருஷ்ணாவதாரமென்றவாறே போரமண்டியிருப்பர்கள், இதுக்குஹேதுவேன்?'' என்று பட்டரைக்கேட்க, ''ஒருவனுக்குத்து:கம் சிலநாள் கழிந்தால் பொறுக்கலாம், அணித்தானால் ஆறியிருக்கப்போகாதிறே; அப்படியே; அல்லாத அவதாரங்களைப்போலன்றிக்கே, ஸமகாலமாகையாலே, 'ஒருசெவ்வாய்க்கிழமை முற்பட்டப் பெற்றிலோம், பாவியேன்! பல்லிலேபட்டுத் தெறிப்பதே,' என்னுமிழவாலே வயிறெரித் தலையாயிருக்கும்'' என்று அருளிச்செய்தார். இனித்தான் ராமாவதாரத்தில், தமப்பன் ஶம்பராந்தகனாய் ஏகவீரனாயிருப்பானொருவன்; பிள்ளைகள்தாங்கள் ஆண்புலிகள், குடி தானே வன்னியமறுத்திருப்பதொருகுடி; இவையெல்லாம் மிகையாம்படி, குணத்தாலே நாட்டையெல்லாம் ஒருமார்வெழுத்தாக்கிக்கொண்டிருப்பர்கள், ஆகையால் எதிரிகள் என்கிற ஶப்தமுமில்லை; இங்கு அங்ஙனன்றிக்கே, தமப்பன் ஒருஸாதுவ்ருத்தன்; பிறந்தது கம்ஸன்சிறைக்கூடத்திலே, வளர்ந்ததும் அவனகத்தருகே; ஸ்ரீப்ருந்தாவநத்திலே, எழும் பூண்கேளகப்பட அஸாரமயமாயிருக்கும், ரக்ஷகரானவர்கள் ஓரடிதாழநிற்கில் பாம்பின் வாயிலே விழும்படியாயிற்று இவன்தன்படிகளிருப்பது, அப்படியானால் வயிறெரியாதே

ப்ர:—விஷ்ணுபுராணே பஞ்சமேம்ஶே [13] ''விஜ்ஞாபிதோ ஹரிஸ்தாபி ஶௌரிர்த்ருஷ்ட்வா யாதவ: । க்ருஷ்ணோ‌஽பி ஸ்ரீவாணநாநாவிதவஸாதன: ॥1॥ ஸோ‌஽பஹ்நம் த்வஜவஜ்ராப்ஜக்ருதசிஹ்நேந பாணிநா । ஸம்ஸ்ப்ருஶ்யாக்ருஷ்ய ச ப்ரீத்யா ஸுகாடம் பரிஷஸ்வஜே ॥2॥''

குலைக்கவேண்டா' என்றுமீண்டருளினர்'' என்றுப்ரஸாதிப்பர். அதாவது - நானொருவன்தோன்றிப் பெருமாளை இரண்டுவார்த்தைசொல்லுவாராகப் பண்ணலாமோவென்றுகருத்து. ''ராமோ த்விர் நாபி பாஷதே'', ''ந த்யஜேயம் கதஞ்சந'', ''ஏதத் வ்ரதம் மம'' இத்யாதி. அதிநிர்ப்பந்தம்பண்ணக் கடவோமல்லோம் என்கையாலே - தாம்நிர்ப்பந்தித்தால் செய்வர் என்னுமிடந்தோற்றுகிறது. விஹவார்தரங்களைவிட்டு க்ருஷ்ணாவதாரத்திலே போருகைக்குஹேது - ப்ரத்யாஸத்தியாலே யென்று. ''ப்ரத்யாஸத்தியாலே'' என்றத்தை ஆப்தஸம்வாதமுகேந விவரிக்கிறார் - இவ்வாழ்வார்கள் இத்யாதி. பட்டரைக்கேட்கவென்றது - பட்டரைநஞ்சீயர்கேட்கவென்றபடி. செவ்வாய்க்கிழமைமுற்படப்பெற்றிலோம் என்றவிடத்திலே - ''ராமே ஶக்ரஸமே வீரே ஸுதே ஸுபிதா வநமயா । ஶுக்லபக்ஷே ஜநிவிஶுத்த்யாம் பாராக்ஷேமாயம் ஹமவாநுகாஶதே'' என்றது அநுஸந்தேயம். விஶுத்த்யாம் - சதுர்த்தஸ்யாம். செவ்வாய்க்கிழமை - செவ்வாயினுடையசாரம். ப்ரத்யாஸத்திமாத்ரமன்றிக்கே, பரியவேண்டும் ஹேதுக்களுண்டாகையாலும் க்ருஷ்ணாவதாரத்திலேபோந்தாரென்கிறார் - இனித்தான் இத்யாதி. வன்னியமறுத்திருப்பதொருகுடி - குறும்பரான ஶத்ருக்களைச் சேதித்திருப்பதொருகுடி. மிகையாம்படி - அதிகமாம்படி. ஒருமார்வெழுத்தாக்கிக்கொண்டிருப்பர்களென்றது - எல்லாரையும் அடிமையாக்கிக்கொண்டிருப்பர்களென்றபடி. ஒருமார்வெழுத்தென்றது - மார்வெல்லாமோரெழுத்தென்றபடி. இவ்விடத்திலே-''பத்ரேஷு ஶிஶிவேது:உரோவிந்யஸ்தகேஶாப்ய । தஸ்மாத் ஸ்வைணகேஶவஸ்யாஸ்ய தேசத்து தாக்ஷய'' என்கிறது அநுஸந்தேயம். ரக்ஷகரானவர்களென்றது - நம்பிமூத்தபிரானை. இவைகளெல்

செய்வதேன்? இவர்கள்; அக்காலத்திலே உணர்ந்துநோக்கப்பெற்றிலர்கள், அவ்விழவுக்கு இன்றிருந்து நோவுபடுகிறார்கள். அவர்களிலே யொருவரானவிவர் சொல்லுகிறபடியிறேயிது- $“தெரிந்துணர்வு இத்யாதி” - மாயாம்ருகத்தின்பின்னேபோய் இளைத்து மீண்டெழுந்தருளின்போது அடிசுட்டுப் பொறுக்கமாட்டாமையாலே தழைகளைமுறித்துப்போகட்டு அவற்றிலே நின்று ஆறியெழுந்தருளினார் என்று கேட்டு, பாவியேன்! அன்று உதவி அத்திருவடிகளிலே என்தலையை மடுக்கப்பெற்றிலேன், வ்யர்த்தமேபோயிற்றிறே அநாதிகாலமெல்லாம் என்று நோந்தாரிறே. இப்படியேயிறே போனதுக்கு இவர்கள் வயிறெரியும்படி. †“திருநீலமணியார்மேனியோடு என்மனம்சூழவருவாரே” என்றும் வயிறுபிடித்தாரிறே இவர்.

“இவர் அவனுடைய அவதாரங்களையும்,ஜகத்ஸ்ருஷ்ட்யாதி வ்யாபாரங்களையும், ‡“தாயர்மகிழ வொன்னார்தளரத் தளர்நடைநடந்த” என்கிறபடியே, ஆஸ்ரிதரைவாழ்விக்கவும் அநாஸ்ரிதரையழியச்செய்யவும் அடியிட்டு அப்படி வளர்ந்தருளின க்ருஷ்ணாவதாரத்தையும் அநுஸந்தித்து மிகவும் ஶிதிலரானவிவர்; யரித்துநின்று உன்னை யநுஸந்திக்கவல்லேனாம்படி பண்ணியருளவேணுமென்று அவனை ஶரணம்புகுகிறார்” என்று ஆழ்வான்பணிக்கும். அன்றியே,‘விஶ்லேஷஸமயத்திலே உன்குணங்கள் புத்திஸ்த்தமாய்க்கொண்டு மிகவும் நலிய, அத்தாலே நெருக்குண்டு நோவுபடுகைதவிர்ந்து, உன்திருவடிகளிலேவந்துசேர்ந்து உன்னைக்கிட்டி யநுபவிக்கும்படி பண்ணியருளவேணுமென்று அவனைக்குறித்து அருளிச்செய்கிறார்’

ளாம் அதீதகாலங்களிலேயன்றோ, அதுக்கு இப்போது நோவுபடுகிறதென்? என்ன - அக்காலத்திலே இத்யாதி. அப்படி அதீதகாலாபதாநத்துக்கு நோவுபட்டார்களோ? என்ன - அவர்களிலே இத்யாதி. இதுவென்றது - வக்ஷ்யமாணத்தை. பாட்டுக்கருத்து - மாயாம்ருகத்தின் இத்யாதி. போனதுக்கு வயிறெரிகைக்கு இவர்தாம் அப்படி பரிவரோ? என்ன - திருநீலமணியார் இத்யாதி.

ப்ராஸங்கிகங்களை யருளிச்செய்து தலைக்கட்டினவநந்தரம், இத்திருவாய்மொழிக்கு மூன்றுநிர்வாஹமருளிச்செய்வதாகத் திருவுள்ளம்பற்றி,முந்தற இத்திருவாய்மொழி ப்ரமேயங்களையெல்லாம்சேரப்பிடித்துக்கொண்டு ஆழ்வான் நிர்வாஹத்தை யருளிச்செய்கிறார்—இவர்அவனுடைய இத்யாதி “கொப்பூழ்ச்செந்தாமரைமேல்” இத்யாதியைப்பற்ற-ஜகத்ஸ்ருஷ்ட்யாதி வ்யாபாரங்களையும் என்றது. ஒன்னார் - ஶத்ருக்கள். “வதுவைவார்த்தையுள்” இத்யாதியைப்பற்ற - ஆஸ்ரிதரைவாழ்விக்கவும் இத்யாதி. ஶிதிலரானஇவரென்றது-விரஹதசையில் அநுஸந்தாநமாகையாலேபாதகமாக, ஶிதிலரானவரென்னுதல்; “நினைதொறும் சொல்லுந்தொறும்நெஞ்சிடிந்துகும்” என்றபோக்யதையாலே ஈடுபட்டு ஶிதிலரானவரென்னுதல். “நாகணைமிசைநம்பிரான்” இத்யாதியைப்பற்ற - ஶரணம்புகுகிறார் என்றது “நின்றுநின்றுநினைகின்றேன்” இத்யாதியைப்பற்ற - ஆழ்வான்நிர்வாஹம். “என்கண்கட்குத்திண்கொள்ள” இத்யாதியைப்பற்ற - எம்பார்நிர்வாஹம். “செய்துபோனமாயங்களும்” என்றத்தைப்பற்ற - பிள்ளான்நிர்வாஹம். ஸம்ஸ்ப்ருஸ்ய இத்யாதி - “ஸோஸ்ய ந்யஞ்ஜநாஜ்ஞாஜ்ஞாதஹி தோநவாணிநா । ஸம்ஸ்ப்ருஸ்யாங்க்ருஷ்யவக்த்ராஸூம் மாயம் வரிஷ்வஜே” இதி வருசை௰ஸ. தெரிந்துணர்வு இத்யாதி - பெரியதிருவந்தாதி, எண்பத்திரண்டாம்பாட்டு.[தெரிந்துணர்வொன்றின்மையால்] - “ஹயவதிஷயஸேவா ஸோஷெளஸ்ய” என்றிருக்கத்தக்க விஶதஜ்ஞாநம் ஏகதேசமுமில்லாமையாலே. [தீவினையேன்] - அநுபவத்தாலே யடிக்கழஞ்சுபெறக்கடவ காலத்தைப் பாழேபோக்குகைக்கீடான துஷ்கர்மத்தைப்பண்ணின நான். [கரந்துருவிலம்மானை] - மறைத்த ராக்ஷஸரூபத்தையுடைய மாயாம்ருகத்தை. கரக்கை - மறைக்கை. உருவில் - ரூபத்தையுடைய. அம்மானை - அந்தமானையென்றபடி. [அஞ்ஞான்று] - பிராட்டி “பிடித்துத்தரவேணும்”

$ பெரியதிருவந்தாதி, அ௨.. † திருவாய்மொழி - அ, ௩, ௬.
‡ பெரியாழ்வார் திருமொழி - ௧, எ, ௧௧.

என்று எம்பார் அருளிச்செய்யும்படி. அங்ஙனன்றிக்கே, " 'ஸர்வேஶ்வரன் க்ருஷ்ணனாய் வந்து திருவவதாரம்பண்ணித் திருவாய்ப்பாடியிலே வளர்ந்தருளாநின்றான்" என்றுகேட்டு, 'அங்கே யஶாமநோரஶம் நமக்குக் கலந்து பரிமாறலாம்' என்று தெற்குத்திருவாசலாலே சென்றுபுக, 'இப்போது இங்ஙனே வடக்கிற்றிருவாசலாலே புறப்பட்டு * தன்னுடைச் சோதியேறவெழுந்தருளினான் ' என்றுகேட்டு விழுந்துகிடந்து கூப்பிடுகிறார் என்று பிள்ளான் பணிக்கும்" என்றருளிச்செய்வர்.

முதற் பாட்டு.

பிறந்தவாறும்வளர்ந்தவாறும் பெரியபாரதங்கைசெய்து ஐவர்க்குத்
திறங்கள்காட்டியிட்டுச் செய்துபோனமாயங்களும்
நிறந்தனூடுபுக்கெனதாவியை நின்றுநின்றுருக்கியுண்கின்ற இச்
சிறந்தவான்சுடரே! உன்னையென்றுகொல்சேர்வதுவே ?

ஆ.—அகர்மவஶ்யனாயிருந்துவைத்து ஆஶ்ரித ஸம்ஶ்லேஷார்த்தமாக அப்ராக்ருத திவ்ய ஸம்ஸ்த்தாநத்தோடேகூட வந்து அவதரித்ததும்; பூதநாதிப்ரதிபக்ஷங்கள் மாயும்படியாகவும், நவநீதசௌர்யாதி திவ்யசேஷ்டிதங்களாலே அநுகூலர் வாழும்படியாகவும், வளர்ந்தபடியும்; பாண்டவர்களுக்காக அபரிச்சேத்யமான ஶாரதஸேனையை யணிவகுத்தும், "ஆயுதமெடேன்" என்று ஆயுதமெடுத்தும், பகலை இரவாக்கியும், தூத்யஸாரத்யாதிகளைப்பண்ணியும், இப்படிசெய்த சீர்மையறியாத தூர்த்தேசத்திலே யிராதே யெழுந்தருளின ஆஶ்சர்யங்களும்; விரஹவ்யஸநத்தாலேயறவவஸந்நமான என்னுடைய ஆத்மாவை மர்மத்திலே புக்கு விடாதேநின்று ஶிதிலமாக்கி முடியாநின்றது; அபரிச்சேத்யமான அழகையுடைய உன்னைக் கிட்டுவதென்றோவென்று எம்பெருமானைக் குறித்துக் கூப்பிடுகிறார்.

ஒ.—முதற்பாட்டில், உன்னுடைய அவதாராதிகள் என்னை மர்மத்திலே தொட்டு ஶிதிலமாக்காநின்றன, இந்தஶைதில்யம் நீங்கி யரித்துநின்று உன்னை அநுபவிப்பது என்றென்று, இத்திருவாய்மொழியில் ப்ரதிபாதிக்கிற அர்த்தத்தை ஸங்க்ரஹேண அருளிச்செய்கிறார்.

[பிறந்தவாறும் என்று தொடங்கி] - அகர்மவஶ்யனாயிருந்துவைத்து ஆஶ்ரித ஸம்ஶ்லேஷார்த்தமாக அப்ராக்ருத திவ்யஸம்ஸ்த்தாநத்தோடேகூடவந்து

என்று அர்த்தித்த அக்காலத்திலே. [பின்தொடர்ந்த] - பின்பற்றிப்போன. [ஆழியங்கையம்மானை]- கைகேயிவரத்திலகப்படாத அருகாழிமோதிரத்தோடேகூடின அழகியதிருக்கையையுடைய ஸர்வேஶ்வரனை. [எத்தாதயர்த்து] - இளையபெருமாளும் உதவப்பெறாததனிமையிலேயுதவி மங்களாஶாஸநம் பண்ணி ஸ்துதிக்கப்பெறாதே யறிவுகெட்டு. [கீழ்நாள்களெல்லாம்] - கீழ்கழிந்த அநாதிகாலமெல்லாம். [வாளாவிருந்தொழிந்தேன்] - வ்யர்த்தமேயிருந்துவிட்டேனித்யர்த்தஃ. திருநீலம் இத்யாதி - ஸௌந்தர்ய ஸௌகுமார்யாதி ஸம்பத்தையுடைத்தாய் நீலரத்நம்போலேயிருக்கிற திருமேனியோடேகூட, "இவ்வடிவழகுக்கு என்னதீங்குவருகிறதோ" என்று என்மநஸ்ஸானது ப்ரமிக்கும்படி ஸம்ஸாரத்திலேவருவாரோ இத்யர்த்தஃ. தாயர்மகிழ இத்யாதி - பெரியாழ்வார்திருமொழி. பெற்றதாயான யசோதையும் அவளோபாதி ஸ்நேஹிகளானவர்களும் ப்ரீதராம்படியாகவும், கம்ஸாதிகளான ஶத்ருக்கள் நஶிக்கும்படியாகவும் தளர்நடைநடந்தவென்றபடி.

பண்ணினபடியாலும், பூதநாதிப்ரதிபக்ஷம் மாய்ந்துபோகும்படியாகவும் நவநீதசௌர்யாதி திவ்யசேஷ்டிதாதிகளாலே அநுகூலர்வாழும்படியாகவும் வளர்ந்தருளினபடியாலும் பாண்டவர்களுக்காக அபரிச்சேத்யமான பாரதஸேனையை அணிவகுத்து 'ஆயுதமெடேன்' என்றுவைத்து ஆயுதமெடுத்தும், பகலை இரவாக்கியும், தூத்யஸாரத்யாதிகளைப்பண்ணியும்; இவ்வழிகளாலே ஆஶ்ரிதர்பக்கல் நீயிருக்கும்படிகளைக்காட்டி இப்படிசெய்து உன் சீர்மை யறியாத துர்ஜ்ஜநர்த்திஸிராதே எழுந்தருளின ஆஶ்சர்யங்களாலும். [நிறந்தனூடுபுக்கு என்றுமேனுக்கு] - விரஹவ்யஸநத்திலே அற அவஸந்நமான என்னுடைய ஆத்மாவை மர்மத்திலேபுக்கு விடாதேநின்று ஶிதிலமாக்கிமுடியாநிற்பதும்செய்து அபரிச்சேத்யமாய் சிறந்திருந்துள்ள இவ்வழகை யுடையவனே! பிரியாதபடி கிட்டுவது என்றென்கிறார் என்றுமாம்.

ப.—முதற்பாட்டில், க்ருஷ்ணனுடைய அவதாராதி சேஷ்டிதங்களை ஸங்க்ரஹேண அருளிச்செய்கிறார்.

பிறந்த - ("அஜாயமாந:", "நாராயணாத்", "ஸ உ ஶ்ரேயாந் பவதி ஜாயமாந:" என்கிறபடியே அகர்மவஶ்யனுய்வைத்து அஜஹத்ஸ்வபாவனுய் ஆஶ்ரிதஸம்ரக்ஷணார்த்தமாக இதர ஸஜாதீயனுய்ப்) பிறந்த, ஆறும் - ப்ரகாரமும், வளர்ந்த - (கைக்கீழே காற்கீழே விரோதிகளழியும்படியாகவும், ஆஶ்ரிதாபிமாநித்த த்ரவ்யமே தாரகமாம்படியாகவும்) வளர்ந்த, ஆறும் - ப்ரகாரமும், பெரியபாரதம் - மஹாபாரதத்திலே, கைசெய்து - படையைக்கைவகுத்து, ஐவர்க்கு-பாண்டவர்களைவர்க்கும், திறங்கள்-விஜயோபாயப்ரகாரத்தை, காட்டியிட்டு - ப்ரதர்ஶிப்பித்து, செய்து - (ஆஶ்ரிதர்க்கு உபகரித்தும், அநாஶ்ரிதரை யழியச்செய்தும்) அவதாரகார்யம் சமைந்து, போன-* தன்னுடைச்சோதியேறப்போன, மாயங்களும் - ஆஶ்சர்யப்ரகாரங்களும், நிறந்தன் - மர்மமான ஹ்ருதயப்ரதேஶத்துக்கு, ஊடு - உள்ளே, புக்கு - ப்ரவேஶித்து, எனது-என், ஆவியை - ஆத்மாவை, நின்று நின்று - க்ஷணந்தோறும் நின்றுநின்று, உருக்கி - த்ரவத்ரவ்யமாக்கி, உண்கின்ற - க்ரஸியாநின்றன; இ-எனக்கு நித்யஸந்நிஹிதமாய், சிறந்த - அநுரூபமாய், வான் - அபரிச்சேத்யமான, சுடரே - தேஜஸ்ஸை யுடையவனே! (இந்தஸ்வபாவங்களை ஶிதிலனுகாமல் நின்று அநுபவிக்கலாம்படி), உன்னை - உன்னை, என்றுகொல் - என்றோ, சேர்வது-சேர்வது.

இ.—முதற்பாட்டில், உன்னுடைய அவதாராதிகள் என்னை மர்மத்திலே நலியாநின்றன, தரித்து உன்னை யநுஸந்திப்பதென்று? என்று, இத்திருவாய்மொழியிலர்த்தத்தை ஸங்க்ரஹேண அருளிச்செய்கிறார்.

[பிறந்தவாறும்]-இவர்க்குமூன்று அவஸாதமுண்டு-"எத்திறம்" என்றும், "பிறந்தவாறும்" என்றும், "கண்கள்சிவந்து" என்றும்."மூன்றிலும்அவ்வாறுமாஸம்மோஹித்துக்கிடந்தார்" என்றுப்ரஸித்தம். "ஆவிர்பூதம் மஹாத்மநா" என்று-தோஷஸ்பர்ஶத்தைப் பற்ற ருஷிசொன்னான்; ஆஶ்ரிதர்க்காக கர்பவாஸம்பண்ணினனென்கிற மஹாகுணத்தை இழக்கவொண்ணதென்று - இவர்,பிறந்தவாறு என்கிறார். அகர்மவஶ்யனுயிருந்துவைத்து ஆஶ்ரிதாநுக்ரஹமேஹேதுவாகப் பிறந்தபடி. அப்ராக்ருதஸம்ஸ்தாநத்தை இதரஸஜாதீயமாக்கினபடி. அஜஹத்ஸ்வபாவனுய் வந்துபிறந்தபடி. அவதாரங்களில் ஈடுபடுவாரவுடையவர்களிறே, "தஸ்ய தீரா: பரிஜாநந்தி யோநிம்". "பிறந்தவாறு" என்றால்,

"வளர்ந்தவாறு" என்னமாட்டாதே அதுதன்னையே ஆவர்த்தித்து ஈடுபடுகை - வஸிஜா நஷியிறே. ஸம்ஸாரிகளுக்கு,பிறக்கப்பிறக்க ஒளிமழுங்குமாபோலே, அவனுக்கேயிறே ஒளிவிஞ்சிவருவது; "ஸ உ ஶ்ரேயாந் பவதி ஜாயமாந:", "ஜநகஸூநுபவநீலம் தேஜ:" என்று அவன்றானும் மதித்திறேயிருப்பது. [வளர்ந்தவாறும்] - பூதநாதிப்ரதிபக்ஷம் மாயவும்; நவநீதசௌர்யசேஷ்டிதாதிகளாலே அநுகூலர் வாழவுமிறே வளர்ந்தது. பூதநாதிகளுயிர் மாளவும், யசோதாதிகள்வெண்ணெய் மாளவுமிறே வளர்ந்தது. ப்ரதிகூலர் உயிரும், அநுகூலஸ்பர்ஶமுள்ள த்ரவ்யமுமே தாரகமாகவளர்ந்தபடி. [பெரியபாரதம்] - பால்யத்தில் தன்னைநோக்கினான், பக்வனானபின்பு ஆஶ்ரிதரைநோக்கித்திரிந்தான். பிறந்து வளர்ந்து பெரியபாரதம்கைசெய்தென்றுதொழிந்தது - தனித்தனியே ஆழங்காற்படுகிறபடி தோற்றுகைக்காக. [பெரியபாரதம்] - மஹாபாரதமென்கிறார். [கைசெய்து] - அபரிச்சேத்யமான பாரதஸேனையை கையுமணியும்வகுத்து யுத்தம்பண்ணுவித்தபடி. [ஐவர்க்குத்திறங்கள்காட்டியிட்டு] - "ஆயுதமெடேன்" என்று ஆயுதமெடுத்தும், பகலை இரவாக்கியும், எதிரிகள்மர்மத்தைக் காட்டிக்கொடுத்தும், தூத்யஸாரத்யாதிகளைப் பண்ணியும், ஆஶ்ரிதர்பக்கல் நீபண்ணியிருக்கும் ஓரங்களை வெளியிட்டும். [செய்துபோன மாயங்களும்] - உகவாதார் மண்ணுண்ணும்படியாகவும், உகந்தார் உன்படிகளையநுபவித்துவாழும்படியாகவும் பண்ணி; உன்சீர்மையை யறியாதே ஸஜாதீயபுத்திபண்ணும் தூர்தேஶத்திலிராதே, போன ஆஶ்சர்யசேஷ்டிதங்களும். அவதரித்தவோபாதி ப்ரியம் போரும் இவர்க்கு எழுந்தருளினதுவும். "க்ருஷ்ணாஶ்ரயா: க்ருஷ்ணபலா: க்ருஷ்ணநாதாஶ்ச பாண்டவா:। க்ருஷ்ண: பராயணம் சைஷாம் ஜ்யோதிஷாமிவ சந்த்ரமா:"॥ [திறந்தனூடுபுக்கு] - தோற்புரையேபோகாதே மர்மத்திலேபுக்கு. துர்யோதநாதிகள்நஶித்துப்போனார்கள், பாண்டவர்கள்ராஜ்யம்பெற்றுப்போனார்கள், இவரை அந்தகுணசேஷ்டிதங்கள் மர்மத்திலேநலியாநின்றது. [எனதாவியை] - விரஹத்தாலே அவஸந்நமான என்னுத்மாவை. எல்லாரும் மஹாபாரதத்திலேகேட்டு தரிக்கிறதிறே. [நின்றுநின்று] - இடைவிடாதே நின்று. [உருக்கி உண்கின்ற] - ஶிதிலமாக்கி முடிக்கின்ற. முடியவுமொட்டாதே ஜீவிக்கவுமொட்டாதே நலிகிறபடி. [இச்சிறந்தவான்சுடரே] - நாட்டுக்கு "பரமபதத்தேறப்போனான்" என்றுபோராய், இவருள்ளேபுகுந்தான். தகுதியாய் அபரிச்சேத்யமான அழகையுடையவனே. [உன்னை இத்யாதி] - உன்குணசேஷ்டிதாதிகளாலே யழிகிறவென்னை, நினைத்து தரிக்கவல்லேனும்படி பண்ணியருளவேணுமென்னுதல்; பிரியாதபடி கிட்டுவதென்றென்னுதல். பிறந்தவாறென்றுதொடங்கி - எனதாவியை - உருக்கிஉண்கின்ற என்று நிர்வஹித்துப் போருவது. ஒருதமிழன், [பிறந்தவாற்றாலும் என்றுதொடங்கி - செய்துபோனமாயங்களாலும் - உருக்கியுண்கின்ற - இச்சிறந்தவான்சுடரேயென்று] - அவன்பக்கலிலேயாக்கி

ஈடு.—முதற்பாட்டு. இத்திருவாய்மொழியில் ப்ரதிபாதிக்கிற அர்த்தத்தை ஸங்க்ரஹேண அருளிச்செய்யாநின்றுகொண்டு; உன்னுடைய அவதாராதிகள் என்னை மர்மத்திலேதொட்டு ஶிதிலமாக்காநின்றன, இஸ்ஸம்ஶ்லேஷயம் நீங்கி உன்னை தரித்துநின்று நான் அநுஸந்திப்பதெப்போதென்கிறார்.

முதற்பாட்டு.—பிறந்தவாறும் இத்யாதி. "பிறந்தவாறும்" என்று தொடங்கி, "உருக்கியுண்கின்ற; உன்னையென்றுகொல்சேர்வதுவே" என்கிறவற்றைக்கடாக்ஷித்து அவதாரிகை - இத்திருவாய்மொழியில் இத்யாதி.

[பிறந்தவாறும்] - மாதாபிதாக்களுக்குக் காற்கட்டறும்படியிறே பிறந்தது. தன்னைப் பெற்றவர்களுடைய பந்தத்தை அறுத்துக்கொண்டுவந்து பிறப்பாருமுண்டோ. "இவனிறே நமக்குக் காற்கட்டானுன்" என்றிருந்தார்கள் அவர்கள்; அது பொறுக்கமாட்டாமை, "உங்களுடைய பந்தம் நான் பொறுக்கமாட்டேன்" என்றுவிட்டான். * தந்தைகாலில் விலங்கறவிறே வந்து தோன்றிற்று - பிறக்கிறபோதே மாதா பிதாக்கள் காலில் க்ரந்தியை சிதிலீகரித்துக்கொண்டுகோணும் பிறந்தது. [பிறந்தவாறும்] - பிள்ளாய்! பிறக்கிறபோதும் ஒரு விளக்கெரிந்தாலாகாதோ, தானே விளக்காகவிறே பிறந்தது. * ஆயர்குலத்தினில் தோன்றும்மணிவிளக்கிறே. [பிறந்தவாறும்] - அகர்மவஶ்யனுன தான் கர்மவஶ்யரோடொக்கப்பிறப்பது, பிறந்தால் ஆஶ்ரிதஸம்ரக்ஷணமே தனக்கு ப்ரயோஜனமாயிருப்பது, அவர்கள் ஆபத்துப்படுங்காலமே தனக்குப் பிறக்கைக்கும் காலமாவது, பிறவாநின்றால் தன் ஐஶ்வர்யத்திலொன்றும்குறையாமற் பிறப்பது, அப்ராக்ருத ஸம்ஸ்தாநத்தை இதரஸஜாதீயமாக்காநிற்பது, தன்ஜந்மத்தை யநுஸந்தித்தாருடையஜந்மங்கள் போம்படியாயிருப்பது, இவையெல்லாவற்றையும் நினைக்கிறது. "நமக்காக இவர்கள் பிணைபட்டுச் சிறையிருக்கும்படி இவர்களுக்கு இங்ஙனேபிறப்பதே" என்று ஈடுபடாநிற்பதான படிகளையெல்லாம் நினைக்கிறது. [பிறந்தவாறும்] - "ஆவிரபூத்" என்கிறத்தைக்கொண்டு, தோற்றினவாறும் என்னுதொழிவானேன்? என்னில், — ஸம்ஸாரிகள் பத்துமாஸம் கர்ப்பவாஸம்பண்ணுவர்

மேன்மைதோற்றவந்து பிறந்தானென்கிறுர் - மாதாபிதாக்கள் இத்யாதி. மேன்மைதோற்றவந்து பிறக்கையாலே ஈடுபட்டுச்சுடலாக அருளிச்செய்கிறுர் - தன்னைப்பெற்றவர்கள் இத்யாதி. இது - "பிறந்தவாறு" என்கிறவருடைய ஹார்த்தபாவம். அதாவது - எல்லாரும் தங்களைப் பெற்றவர்களுக்குப் பாசத்தை யுண்டாக்குவர்களொழிய, பாசத்தை யறுத்துக்கொண்டு வந்து பிறப்பாருண்டோ வென்றபடி. "மாதாபிதாக்கள்" இத்யாதி பூர்வ்வவாக்யவிவரணம் - இவனிறே இத்யாதி வாக்யத்வயம். மாதாபிதாக்கள்காற்கட்டு அறும்படி வந்து பிறந்தானே? என்ன - தந்தைகாலில் இத்யாதி. *திருமொழி, எட்டாம்பத்து. அஞ்சாந்திருமொழி, முதற்பாட்டு. ஸ்ரீவஸுதேவர்காலில் விலங்கு கழலும்படி வந்தவதரித்தவித்யர்த்தஃ. எடுத்தபாசுரத்துக்கு ரஸோக்தியாக அர்த்தம் - பிறக்கிறபோது இத்யாதி. க்ரந்தி - முடிச்சு. நீர்மையும் தோற்றப்பிறந்தானென்கிறுர் - பிள்ளாய் இத்யாதி. பிள்ளாயென்றது - வார்த்தைப்பாடு. ஈடுபாட்டிலே. வேறொருவிளக்கில்லையோ? என்ன - தானே இத்யாதி. அவன்தான் விளக்கோ? என்ன - ஆயர் இத்யாதி. பாசுரஸ்ய ஸ்பஷ்டோர்த்தஃ. பிறந்ததுமென்னுதே, "ஆறும்" என்றதுக்கு பாவம் - அகர்மவஶ்யனுன இத்யாதி. இவ்வாக்யத்தில் - "நகர்மவஶகோ" "ஶரீரணாய", "பரித்ராணாய", "யதாயதாஹிதர்மஸ்ய", "ஸுஜாவிஸஜ்வயாதா", "ஜந்மகர்மசமேதிவ்யம்" இத்யாதி ப்ரமாணங்கள் அநுஸந்தேயம். இவர்பந்தம் பொறுக்கமாட்டாதே அவன்நெஞ்சு நொந்திருக்கும்ப்ரகாரத்தை இப்பதத்திலே வெளியிட்டுக்காட்டுகிறுர் - நமக்காக இத்யாதி. இந்தவாக்யம் - நான்பொறுக்கமாட்டேனென்றுவிட்டான் என்றவநந்தரம் அநுஸந்தேயம். அன்றிக்கே, "தன்னைப்பெற்றவர்களுடைய" இத்யாதிவாக்யவிவரணம் - நமக்காக இத்யாதி என்னுதல். ஆவிர்ப்பூதமென்கிறத்தைக்கொண்டு என்றது - "ஆவிரபூத்" என்று ருஷிசொன்னுப் போலேயென்றபடி. தோற்றினவாறுமென்னுதொழிவானேன் - இல்லாதபிறவியையிட்டு குணுதாகம்பண்ணலாமோவென்று கூட்டுவது. பரிஹாரம் - ஸம்ஸாரிகள் இத்யாதி. அதாவது - ருஷி, "ஆவிரபூத்" என்றது - அவதாரம் ஐச்சிகமென்கைக்காக; இவர், பிறந்தவாறுமென்றது --

களாகில் "ததஶ்ச த்வாதஶே மாஸே" (ததஶ்ச த்வாதஶே மாஸே) என்கிறபடியே பன்னிரண்டுமாஸம் கர்ப்பவாஸம்பண்ணுகையாலும், அவளுக்கு முலை சுரக்கையாலும், முலைபெறுவிடில் இவன்தான் நோவுபடுகையாலும் தன்னைக்கட்டவும் அடிக்கவுமாம்படி எளியனாக்கிவைக்கையாலும் - பிறந்தவாறுமென்கிறார். பகல்கண்டகுழியிலே யிராவிழுவாரைப் போலே, பருவம் முற்றினவளவிலே "எத்திறம்" என்று மோஹித்துவிழக்கடவ இவர் அதுக்குமவ்வருகேபோய் இழிகிறாரிறே கலக்கமிருக்கிறபடி. "எத்திறம்" என்று அங்கே ஆறுமாஸமும், "பிறந்தவாறும்" என்று இங்கே ஆறுமாஸமும் மோஹித்துக்கிடந்தாரென்று ப்ரஸித்தமிறே. ஸ்ரீபரதாழ்வான் ராமவிஶ்லேஷத்தாலே மோஹித்துத் தறைப்பட்டுக் கிடக்க, தாய்மாரடங்கலும்சுற்றும்பார்த்துநிற்க, 'ஶத்ருக்நோ நந்தரஸ்த்தித:' (ஶத்ருக்நோ நந்தரஸ்த்தித:) என்கிறபடியே - ஸ்ரீஶத்ருக்நாழ்வான் கிட்டவுங்கூட வயப்பட்டு ஸ்தப்தனாய் நின்றானிறே; அப்படியே; * நல்லார் நவில்குருகூரிறே, ஜகத்தில் அறிவுடையாரடங்கலும் திரண்டு இவர்படிகளைக்கண்டு அறிவுகெடும்படியிறே இவர் கலங்கிக்கிடந்தகிடை. [வளர்ந்தவாறும்] - வளர்ந்தபடியை யநுஸந்தித்தால் பிறந்தவாற்றிலே கால்வாங்கி இளைப்பாறவேண்டும்படியிறே யிருப்பது. பிறக்கிறபோது சிறைக்கூடத்திலேதான் பிறந்தால்,

---

ப்ர:—(பிறந்தவாறும்)—வஸுதேவம்ஶ[ங] "தேவாகீ"உதாஹ[உ].

பாலகாண்டே[கஅ] "ததஶ்ச த்வாதஶே மாஸே சைத்ரே நாவமிகே திதௌ। நக்ஷத்ரே(அ)திதிதைவத்யே ஸ்வோச்சஸம்ஸ்தேஷு பஞ்சஸு॥அ॥ க்ரஹேஷு கர்க்கடே லக்நே வாக்பதாவிந்துநா ஸஹ। ப்ரோத்யமாநே ஜகந்நாதம் ஸர்வலோகநமஸ்க்ருதம்॥கூ॥ கௌஸல்யாஜநயத்ராமம் ஸர்வலக்ஷணஸம்யுதம்॥கo॥".

அயோத்யாகாண்டே [அஎ] ஶத்ருக்நோ(அ)நந்தர " ததவஸ்தம் து பரதம் ஶத்ருக்நோ(அ)நந்தரஸ்த்தித: । பரிஷ்வஜ்ய ருரோதோச்சைர்விஸம்ஜ்ஞ: ஶோககர்ஶித:॥ச॥".

அவதாரத்தில் மெய்ப்பாட்டுக்காகவென்றபடி. "தேவகீபூர்வஸந்த்யாயாமாவிர்பூதம்" இதி வஸுதேவம்ஶ. ததஶ்ச த்வாதஶே மாஸே சைத்ரே நாவமிகே திதௌ। நக்ஷத்ரே(அ)திதிதைவத்யே ஸ்வோச்சஸம்ஸ்தேஷு பஞ்சஸு" இத்யாதி, "கௌஸல்யாஜநயத்ராமம் ஸர்வலக்ஷணஸம்யுதம்" இதி பாலகாண்டே. வளர்ந்தவாற்றிலே "எத்திறம்" என்று மோஹிக்கிறவிவர், அதுக்கு அவ்வருகான பிறந்தவாற்றிலேபோவானென்? என்ன - பகல்கண்ட இத்யாதி. இப்படிசொல்லுகைக்கு இரண்டிடத்திலும் மோஹித்தாரோ? என்ன - எத்திறம் இத்யாதி. மோஹித்ததசையில் இவரைநோக்கினாரார்? என்ன; ஶத்ருக்நாநந்தமாக அருளிச்செய்கிறார் - ஸ்ரீபரதாழ்வான் இத்யாதி. "ததவஸ்தம் து பரதம் ஶத்ருக்நோ(அ)நந்தரஸ்த்தித:" உதாஹ்ருதயோ த்யாகாண்டே ஶத்ருக்நோ(அ)நந்தர. அப்படியே என்றதுக்கு - ஜகத்தில் அறிவுடையார் என்றத்தோடே யந்வயம். நல்லார்நவில்குருகூர் - ஸத்துக்கள் திரண்டிருக்கிற திருநகரியென்னுதல். ஸத்துக்களாலே ஸ்துதிக்கப்பட்ட குருகூரென்னுதல். நவிலுதல் - திரளுதல், ஸ்துதித்தலும். நவிலுகை - பயிலுகையாய், ஸ்துதிக்கையென்றபடி. *திருவிருத்தம், சாற்றுப்பாட்டு. வளர்ந்தவாறிருக்கும் ப்ரகாரம் பிறந்தவாற்றிலும் அதிகமென்கிறார் - வளர்ந்தபடியை இத்யாதி. வளர்ந்தபடியை யநுஸந்தித்து ஈடுபடுகிற ஆழ்வாருடைய ஹார்த்தபாவமாதல், விவரணமாதல் - பிறக்கிறபோது இத்யாதி.

வளருகிறபோது நாட்டாரோடொக்க வளரத்தான்பெற்றதோ. [வளர்ந்தவாறும்] - பூதநாதிகளுயிர்மாளவும், யஶோதாதிகளுடைய ஸ்நேஹம் வளரவுமிறே வளர்ந்தது. "தாயர்மகிழவொன்னார்தளரத் தளர்நடைநடந்து" என்கிறபடியே. * மிடறுமெழுமெழுத்தோட வெண்ணெய் விழுங்கிப்போய்ப் படிறுபலசெய்திப்பாடியெங்கும் திரியவிறே அவர்கள் உகந்திருப்பது. [வளர்ந்தவாறும்] - இவன் கால் நெடுகநெடுக, ப்ரதிகூலருடலும் மாண்டது, அநுகூலருடலும் மாண்டது; $ "பொட்டத்துற்று" என்றும், ¶ "வெண்ணெய்விழுங்கிவெறுங்கலத்தைவெற்பிடையிட்டு" என்றும் அநுகூலருடலேயிறே மாண்டது. இப்படி ப்ரதிகூலர் மண்ணுண்ணவும், தான் நெய்யுண்ணவும், அநுகூலர் கண்ணுண்ணவுமிறே வளர்ந்தருளிற்று. [பெரியபாரதம்] - "மஹாபாரதம்" என்றிறே ப்ரஸித்தி. [கைசெய்து] - கையுமணியுமாக வகுக்கைதொடக்கமான பூசலுள்ளதெல்லாம் நினைக்கிறது. [ஐவர்க்குத்திறங்கள்காட்டியிட்டு] - அறிவுபிறப்பதற்குமுன்பு ஸத்தையே ப்ரதிகூலநிரஸநத்துக்குடலாயிற்று, ஸஹாவஸ்தாநமில்லையிறே திமிரதேஜஸ்ஸுக்களுக்கு; பருவம் நிரம்பினபின்பு அநுகூலர்க்குக் கையாளானபடி. [திறங்கள்காட்டியிட்டு] - தூதுபோயும், ஸாரத்யம்பண்ணியும், "ஆயுதமெடேன்" என்று ஆயுதமெடுத்தும், பகலையிரவாக்கியும், எதிரிகள் உயிர்நிலைகளைக் காட்டிக்கொடுக்கை தொடக்கமானவற்றையெல்லாம் சொல்லுகிறது. [செய்து] - இப்படிசெய்து. [போனமாயங்களும்] - ஆஶ்ரிதரக்ஷணத்துக்காக வந்து பிறந்து அவர்களுடைய ஆபத்துக்களைப்போக்கி யுபகரித்தால், "இது நமக்காகச்செய்தானிறே" என்று இருக்கையன்றிக்கே, இவன்தன்னோடே எதிரிடும்படியான ஸம்ஸாரத்திலேயிராதே,

வளர்ந்ததுமென்னுதே, "ஆறும்" என்றதுக்குபாவம் - பூதநாதிகள் *இத்யாதி. உக்தார்த்தத்துக்கு ப்ரமாணம்* - தாயர் *இத்யாதி.* ஶ்ரீவைஶவணவாமெடாராவிஷித8. *தீம்புகளாலே தாய்மார்க்கு ஸ்நேஹம் வளருமோ? என்ன* - மிடறுமெழமெழத்து *இத்யாதி.* *பெரியாழ்வார்திருமொழி, *மூன்றாம்பத்து, இரண்டாந்திருமொழி, ஆறாம்பாட்டு. ஓதநாபூபாதிகள்போலன்றிக்கேமிடற்றிலுறுத்தாமல் மெழுமெழுத்துள்ளேயோடும்படி வெண்ணெயை யமுதுசெய்து, புறம்பேபோய்த் தீம்புகள்பலவுஞ்செய்து இத்திருவாய்ப்பாடியெங்கும் திரியவித்யர்த்த8.* படிறு - *தீம்பு.* பூதநாதிகளுயிர்மாள *என்றத்தையும்,* யஶோதாதிகளுடைய ஸ்நேஹம்வளரவும் *என்றத்தால் ஹலிதமான நவநீதக்ஷயத்தையும் ரஸோக்தியாக அருளிச்செய்கிறார்* - இவன்கால்நெடுக *இத்யாதி. உடலென்று - ஶரீரமும், உத்பத்தியும், ஐஶ்வர்யமும். ப்ரதிகூலருடல் மாண்டதோ? என்ன* - பொட்டத்துற்று *இத்யாதி.* $பெரியாழ்வார்திருமொழி, *மூன்றாம்பத்து, அஞ்சாந்திருமொழி, முதற்பாட்டு இது.* ¶*இரண்டாம்பத்து, ஒன்பதாந்திருமொழி, முதற்பாட்டு* - வெண்ணெய்விழுங்கி *இத்யாதி. [அட்டுக்குவிசோற்றுப்பருப்பதமும் தயிர்வாவியும் நெய்யளறுமடங்கப்பொட்டத்துற்று] - ஆக்கிக்குவித்தசோற்றுபர்வதமும், அதின்மேலேவிட்ட தயிரோடையும், நெய்ச்சேறுமுதலானவற்றையடங்கச் சடக்கெனவமுதுசெய்து இத்யர்த்த8.* பருப்பதம் - *பர்வதம்.* பொட்ட - *சீக்ரமாக.* துற்று - *அமுதுசெய்து. [வெண்ணெய்விழுங்கியித்யாதி] - தாழிகளில்வெண்ணெயை யமுதுசெய்து, அதிருந்தபாத்ரத்தைக் கல்லிலேயிட்டு உடைத்தென்றபடி.* வெற்பு - *கல்லு.* கண்ணுண்கையாவது - *கண்ணாலேயநுபவிக்கை.* பெரியபாரதம்கைசெய்து - *மஹாபாரதத்திலே படையைக் கைவகுத்தென்று ஶப்தார்த்தம்.* கைவகுக்கையாவது - *வ்யூஹம் பிரிக்கை.* கையுமணியும்வகுக்கை - *ஸேனையில் வ்யூஹப்பிரிக்கை. ஸத்தாமாத்ரமே ப்ரதிகூலநிரஸநஹேதுவாமோ? என்ன* - ஸஹாவஸ்தாநம் *இத்யாதி. "பெரிய" இத்யாதிக்கு அவதாரிகை* - பருவம்நிரம்பின *இத்யாதி. "திறங்கள்" என்றவைஹுவசநார்த்தம்* - தூதுபோயும் *இத்யாதி. "திறம்" என்றது - ப்ரகாரம். விஜயோபாய ப்ரகாரமென்றபடி. "செய்து" என்றது* - கீழ்ச்செய்தசெயல்களை.

ஓரளவிலே இங்குநின்றும்போன ஆஶ்சர்யசேஷ்டிதங்களும். "க்ருத்வா பாராவதரணம் ப்ருதிவ்யா: ப்ருதுலோசந: । மோஹயித்வா ஜகத்ஸர்வம் கத: ஸ்வம்ஸ்தாநமுத்தமம் ॥" (க்ருத்வாபாராவதரணம் ப்ருதிவ்யா: ப்ருதுலோசந: - மோஹயித்வாஜகத்ஸர்வம் கதஸ்ஸ்வம்ஸ்த்தாநமுத்தமம்) - வந்து திருவவதாரம்பண்ணி, அநுகூலர் கார்யங்களடையத் தலைக்கட்டி; ப்ரதிகூலரையடைய முடைகோலுக்கு இரையாக்கி, அநுகூலரையடையக் கண்ணுலேவிழவிட்டு, உபயகோடியையும் நோவுபடுத்தி; இங்குநின்றும் போய்த் தப்பப்பெறுவதே ! என்கிறது. "ஸ்வம்ஸ்தாநமுத்தமம்" (ஸ்வம்ஸ்த்தாநமுத்தமம்)-இங்குள்ளாரடங்கலும் எதிரம்புகோக்குமாபோலேயிறே அங்குள்ளாரடங்கலும் எதிரேற்கப் போனபடி. [நிறந்தனூடேபுக்கு] - தோல்புரையேபோமதன்று, நிறத்திலே - மர்மத்திலே, நலிகிறபடி. [எனதாவியை] - அல்லாதாரடங்கலும் இவற்றைக்கேட்டு உண்டுடுத்துக் காலம்போக்கித் திரியாநின்றார்களிறே. [ஆவியைநின்றுநின்றுருக்கி] - * அச்சேத்யமுமாய் அதாஹ்யமுமாயிருக்கிற ஆத்மாவை இடைவிடாதே ஶிதிலமாக்காநின்றன. [நின்றுநின்றுருக்கியுண்கின்ற]-அது ஒருகால்செய்து போகச்செய்தேயும் இது உருவநின்று நலியாநின்றது. [இச்சிறந்தவான்சுடரே] - தகுதியாய் அபரிச்சேத்யமான இவ்வழகையுடையவனே. வஸ்து பிறக்கப்பிறக்கவாயிற்றுத் தேஜஸ்ஸு உஜ்ஜ்வலமாவது.[இச்சிறந்த] - பூதகாலமாயிருக்கச்செய்தேயும், இவர்க்கு இது ஸமகாலம்போலேயும் கண்ணுக்கு விஷயமாயிருக்கிறபடி. வான்சுடர் இங்கே வந்தபின்பு சிறந்ததென்றுமாம். பிறந்தவாற்றாலும், வளர்ந்தவாற்றாலும், பெரியபாரதம் கைசெய்து ஐவர்க்குத் திறங்கள்காட்டியிட்டுச் செய்துபோன மாயங்களாலும், நிறந்தனூடேபுக்கு எனதாவியை நின்றுநின்று உருக்கியுண்கின்ற - இச்சிறந்தவான்சுடரே என்று, அவன்தனக்கு விஶேஷணமாக்குதல்; உருக்கியுண்கின்றவென்று- குணபரமாக்குதல். அதாவது - பிறந்தவாறென்றுதொடங்கி, மாயங்களும் உருக்கியுண்கின்றன வென்றபடி. இதுவே நிர்வஹித்துப்போருமது. [உன்னை யென்றுகொல் சேர்வதுவே]- நான் த்ருஶித்துநின்று அநுஸந்திக்கவல்லேனும்படி பண்ணியருளவேணு மென்கிறார். அன்

ஓரளவிலே - ஓரவஸரத்திலே. அவதரித்தது குணமொழிய, போனது குணமாய் ஸைதில்யஜநகமாகக் கூடுமோ? என்ன; பரிவாரகையாலே குணமாய்த்தோற்றுகிறதென்கிறார் - ஆஶ்ரிதரக்ஷணத்துக்கு இத்யாதி. உக்தத்துக்குப்ரமாணம் - க்ருத்வா இத்யாதி. "க்ருத்வாபாராவதரணம் ப்ருதிவ்யா: ப்ருதுலோசந: । மோஹயித்வா ஜகத்ஸர்வம் கதஸ்ஸ்வம்ஸ்தாநமுத்தமம்" இதி ஶ்ரீவிஷ்ணுபுராணே. "கதஸ்ஸ்வம்ஸ்தாநம்" என்றதிலேநோக்கு. முடைகோலுக்கிரையாக்கியென்றது - "பாராவதரணம்க்ருத்வா" என்றதிலே விவக்ஷிதம். "ப்ருதுலோசந:-ஜகத்ஸர்வம்மோஹயித்வா" என்றதுக்கர்த்தம் - அநுகூலரையடைய இத்யாதி. "உத்தமம்" என்றதுக்கு அர்த்தம் - இங்குள்ளார் இத்யாதி. "உண்கின்ற" என்றவர்த்தமாநார்த்தம் - அதோருகால் இத்யாதி. அதென்றது - "பிறந்தவாறும்" என்றுதொடங்கிக் கீழ்ச்சொன்ன சேஷ்டிதங்களெல்லாவற்றையும். "சிறந்த" என்றதுக்கு - தகுதி என்று கீழ் அர்த்தமருளிச்செய்து, மிகுதியாகவர்த்தாந்தரம் - வஸ்து பிறக்க இத்யாதி. "சுடர்" என்று - அழகும், தேஜஸ்ஸும். "இச்சிறந்த" என்று - ப்ரத்யக்ஷமாகச்சொன்னதுக்கு பாவம் - பூதகாலமாய் இத்யாதி. "வான்" என்றதுக்கும், "இ" என்றதுக்கும் அர்த்தாந்தரமாதல், "வஸ்துபிறக்க" இத்யாதிவாக்யவிவரணமாதல் - வான்சுடர் இங்கே இத்யாதி. குணபரமான போது, இச்சிறந்தவான்சுடரே - பிறந்தவாறும்என்றுதொடங்கி, உருக்கியுண்கின்ற; ஆகையாலே, உன்னையென்றுகொல் சேர்வதுவே இத்யந்வய:. கீழ் - மாநஸமாகச் சேருகையை யருளிச்செய்து, எம்பார்நிர்வாஹத்திலே, காயிகமாகச்சேருகையை யருளிச்செய்கிறார் - அன்றிக்கே இத்யாதி. நிறந்

நிக்கே, சேருகையாகிறது - இரண்டுதலையும் சேருகையாய், நான் அநுஸந்தித்து ஶிதிலனாகை தவிர்ந்து உன்னைப் பிரியாதபடி கிட்டப்பெறுவது என்று? என்கிறாராகவுமாம். (க)

இரண்டாம் பாட்டு:

வதுவைவார்த்தையுளேறுபாய்ந்ததும் மாயமாவினைவாய்பிளந்ததும்
மதுவைவார்குழலார் குரவைபிணைந்தகுழகும்
அதுவிதுவுதுவென்னலாவனவல்ல என்னையுன்செய்கைநைவிக்கும்
முதுவையமுதல்வா! உன்னையென்றுதலைப்பெய்வனே?

ஆ.—(வதுவை). விவாஹப்ரஸங்கத்திலே ஏறுகளிலே பாய்ந்தபடியும், வஞ்சகமாய்வந்தகுதிரையை வாய்பிளந்தபடியும், மதுஸ்யந்தியான குழலையுடையவர்களோடே திருக்குரவையிலே கலந்தகலப்பும்; உன்செயலானவையாலே, எல்லாசேஷ்டிதங்களும், உன்குணப்ரஸங்கத்திலே நையும் ப்ரக்ருதியான என்னை மிகவும் ஶிதிலமாக்காநின்றன, ப்ரளயத்திலழுந்தின ஜகத்தை யுண்டாக்கினாற்போலே என்னை தரிப்பித்து, உன்னை யநுபவிக்கவல்லேனாம்படி பண்ணியருளவேணுமென்கிறார்.

ஒ.—இரண்டாம்பாட்டில், ஏறுபாய்கைதொடக்கமான ஸகலசேஷ்டிதங்களும் என்னை ஶிதிலனாக்காநின்றன. நான் உன்னை தரித்துநின்று அநுபவிக்கவல்லேனாம்படி பண்ணவேணுமென்கிறார்.

[வதுவை என்றுதொடங்கி] - விவாஹப்ரஸங்கத்திலே எருதுகளிலே பாய்ந்தபடியும், வஞ்சகமாய்வந்த குதிரைவாய் பிளந்தபடியும், மதுஸ்யந்தியான குழலையுடையவர்களுடைய மாலையிலே அவர்களுக்குப்பிரிந்தால் தரிக்கவொண்ணாதபடி கலந்தகலப்பும். [அது என்றுதொடங்கி] - உன்செயலானவையாலே எல்லாசேஷ்டிதங்களும் உன்குணப்ரஸங்கத்திலே நையும்ப்ரக்ருதியான என்னை மிகவும் ஶிதிலமாக்காநின்றன. [முதுவையம் என்றுதொடங்கி] - ப்ரளயகாலத்தில் அழிந்த ஜகத்தை உண்டாக்கினாற்போலே தரித்து உன்னை அநுபவிக்கவல்லேனாம்படி பண்ணவேணுமென்று கருத்து.

ப.—அநந்தரம், ஆஶ்ரிதவிஷயத்தில் உன்னுடைய வ்யாபாரங்கள் என்னை ஶிதிலனாக்காநின்றதென்கிறார்.

வதுவைவார்த்தையுள் - வதுவைகல்யாணவார்த்தை பிறந்தவளவிலே, ஏறு - ஏறுகளை, பாய்ந்ததும் - மேல்விழுந்துகொன்றதுவும், மாயம் - அஸுராவிஷ்டமாய்க்ருத்ரிமமான, மாவினை - கேஶியாகிறகுதிரையை, (கோபிமார் அஞ்சாதபடி), வாய்-வாயை, பிளந்ததும் - பிளந்ததுவும், மதுவை - மதுவை, வார்-வாராவிடுகிற, குழலார் - குழலை

தலூடுபுக்கு - மர்மமானஹ்ருதயப்ரதேஶங்களுக்குள்ளே புக்கென்றபடி. நிறம் - மர்மம். நின்று நின்றுருக்கியுண்கின்ற - க்ஷணந்தோறும் இடைவிடாதேநின்று த்ரவத்ரவ்யமாக்கி க்ரஸியாநின்றன. கவியாநின்றதென்றபடி. ஆவி - ஆத்மா. "சிறந்தவான்சுடரே" என்றவநந்தரம், தரித்துநின்றென்று கூட்டிக்கொள்வது. (க)

யுடையரான பெண்களுடனே, குரவை - குரவை, பிணைந்த - கோத்து, குழகும்-இனிய வ்யாபாரங்களைப் பண்ணினதுவும், அது-அது, இது-இது, உது-உது, என்னலாவன - என்றுவிசேஷித்துச்சொல்லலாவன, அல்ல-அல்ல, என்னை - (உன்னளவில் அதிப்ரவணனை) என்னை, (நிரதிசயபோக்யமான), உன்-உன், செய்கை - செயலானவை, நைவிக்கும் - ஶிதிலனாக்காநிற்கும்; வையம் - ஜகத்துக்கு, முதுமுதல்வா - ப்ரதாநகாரணபூதனானவனே ! உன்னை-உன்னை, என்று-என்று, தலைப்பெய்வன் - கிட்டுவேன்? அழிந்த ஜகத்தையுண்டாக்கினநீ ஶிதிலனாகிறவென்னை ஸத்திரனாக்குவதென்றென்று கருத்து. வதுவை - விவாஹம்.

இ.—இரண்டாம்பாட்டில், “க்ஷயிதிஶிலாவலி கிங்காலம் ஸீதயா” என்கிறவாஸனையாலே, ஐவர்க்குத் திறங்கள்காட்டியிட்டு என்று - ஆஶ்ரிதர்க்கு உதவினபடிசொல்லிற்று, கீழ் ; இங்கு பிராட்டிமார் திறத்துச்செய்த செயல்களைச்சொல்லி; அவை என்னை ஶிதிலமாக்காநின்றன. நான் தரித்துநின்று அநுபவிக்கவல்லேனும்படி பண்ணவேணுமென்கிறார்.

[வதுவை இத்யாதி] - வதுவை - விவாஹம். [வார்த்தையுள்] - “எருதுகளேழையும் நிரஸித்தார்க்கு இவளைக்கொடுக்கக்கடவோம்” என்றுபிறந்த ப்ரஸித்தி. [ஏறுபாய்ந்ததும்] - எருதுகள்மேலேவிழுந்தபடி, இவர்க்கு ம்ருத்யுவின்வாயிலே விழுந்தாப்போலேயாயிற்றிருக்கிறது; பொய்கையிலே பாய்ந்தாப்போலேயிராநின்றது அவனுக்கு. கருமாரிபாய்ந்தாலாகாதோ என்னும்படியிறே இவன்போக்யதை. [மாயமாவினை வாய்பிளந்ததும்] - கம்ஸப்ரேரிதமாய் க்ரித்ரிமவேஷத்தைக்கொண்டுவந்து, சீற்றத்தாலே அங்காந்தது; சிறுபிள்ளைகள் த்வாரங்கண்டால் கைநீட்டும்வாஸனையாலே கையைநீட்டினான், அபூர்வதர்ஶநத்தாலே விம்மிற்று, பூரித்தவாறே இரண்டுகூறாய்விழுந்தான். ஸ்ரீநாரதபகவான், “ஜகதுஹஸிதம்” என்றுவந்துவிழுந்தாப்போலேயாயிற்று இவர்க்கிருக்கிறது. “வ்யாதிதாஸ்யோ மஹாரௌத்ரஸ்ஸோஸுர: க்ருஷ்ணபாஹுநா। நிபபாத த்விதாபூதோ வைத்யுதேந யதா த்ரும:”. இத்தால்-ஸ்ரீப்ருந்தாவநத்துக்கு வழியிசங்கும்படி பெண்களுக்கு வன்னியமறுத்துக்கொடுத்தபடி. [மதுவைவார் இத்யாதி] - மதுஸ்யந்தியான குழலையுடையவர்கள். குரவைக்கூத்திலேயவர்களோடேதன்னையும் ஒருவனாகக்கோத்தபடி. மதுவார்குழலார் என்னவமைந்திருக்கச்செய்தே, மதுவைவார்குழலாரென்றது- “கண்ணையுண்ணீர்மல்க” என்றாப்போலே. [குழகும்] - அவர்களுக்கு, பிரிந்தால் தரிக்கவொண்ணாதபடி கலந்தகலப்பு. தன்மேன்மைபாராதே தாழ்வுசொல்லிக் கீழ்மைசெய்து கலக்கை. [அதுவிது இத்யாதி] - அந்தச்செயல் இந்தச்செயல் உந்தச்செயலென்று விசேஷிக்கவொண்ணாது. நானுகையும் உன்னுடையசேஷ்டிதங்களாகையும் அமையும் என்னை நோவுபடுத்த. அதுவே ப்ரயோஜநம். “இப்பாட்டிற்சொன்ன விரோதிநிரஸநத்தையும், ஆஶ்ரிதஸம்ரக்ஷணத்தையும், ஸாமாந்யரக்ஷணத்தையும் - அதுவிதுவுதுவென்றுசொல்லுகிறது”. என்றுபிள்ளான். [முதுவையமுதல்வா] - ப்ரவாஹரூபேண நித்யமாய், ப்ரளய காலத்திலழிந்த ஜகத்தை யுண்டாக்கினவனே! அழிந்தவஸ்துவையுண்டாக்கின அருமையுண்டோ உள்ளவஸ்துவை தரிப்பிக்கைக்கு. அழிந்தவஸ்துவையுண்டாக்கினாப்போலே, ஶிதிலனான என்னை தரித்துநின்று அநுபவிக்கவல்லேனும்படி பண்ணவேணும். [உன்னை இத்யாதி] - உன்னை என்று கிட்டுவதென்றுமாம்.

ஈடு.—இரண்டாம்பாட்டு. ஏறடர்க்கைதொடக்கமான உன்சேஷ்டிதங்கள் என்னை ஶிதிலமாக்காநின்றன. நான் தரித்துநின்று அநுபவிக்கும்படி பண்ணவேணுமென்கிறார். இனி, அல்லாதவவதாரங்களையும் ஆராய்ந்தால் இத்தன்மையவாயிருக்குமிறே, ஆகையாலே அவ்வருகு போகமாட்டார், அடியில் இழியமாட்டார், இனி வளர்ந்தவாறேறப் போமித்தனையிறே; "சீராற்பிறந்து" இத்யாதி. பிறந்தவாறு அவனேசெய்கையாலே இவர்க்கு அங்குச் செய்யலாவதில்லை, இனி அநுகூலர்க்குக் கண்டு பரிகைக்கு விஷயமுள்ளது வளர்ந்தவாற்றிலேயிறே, அவ்வளர்ந்தவாறுதான் இருக்கிறபடிசொல்லுகிறார்.

[வதுவைவார்த்தையுள்] - வதுவை - விவாஹம். [வார்த்தையுள்] - "எருதுகளேழையும் நிரஸித்தார்க்கு இவளைக் கொடுக்கக்கடவோம்" என்றுபிறந்த ப்ரஸித்தி. [ஏறுபாய்ந்ததும்] - ஏறுகளின்மேல் விழுந்தபடிகளையும். இவர்க்கு ம்ருத்யுவின்வாயிலே விழுந்தாப்போலேயாயிற்றிருக்கிறது, பொய்கையிலேபாய்ந்தாப்போலே யிராநின்றது அவனுக்கு. கருமாரிபாய்ந்தாலாகாதோ என்னும்படியிறே அவளுடையபோக்யதை. [மாயமாவினை வாய்பிளந்ததும்] - கம்ஸப்ரேரிதமாய் க்ருத்ரிமவேஷங்கொண்டு வந்ததாயிற்று. க்ருத்ரிம

இரண்டாம்பாட்டு.—வதுவை இத்யாதி. "ஏறுபாய்ந்ததும்" இத்யாதி மேலெல்லாம் கடாக்ஷித்து அவதாரிகை - **ஏறடர்க்கை** *இத்யாதி. பிறந்தவாற்றிலேயாதல் அவதாராந்தரங்களிலேயாதல் போகாதே, வளர்ந்தவாற்றிலேபோவானென்? என்ன -* **இனிஅல்லாத** *இத்யாதி.* **இத்தன்மையவாயிருக்கும்** *- இந்தஸ்வபாவத்தையுடைத்தாயிருக்கும். அதாவது - இப்படியே பரியவேண்டியிருக்குமென்றபடி.* **அவ்வருகு** *- அவதாராந்தரங்களில்.* **அடியில்** *- பிறந்தவாற்றில்.* **அடியில் இழியமாட்டார்** *- மோஹிப்பிக்கையாலேயென்று கருத்து. "அவதாராந்தரங்களும் இத்தன்மையவாயிருக்கும்" என்றதுக்கு ப்ரமாணம் - சீரால் இத்யாதி.* **பெரியதிருவந்தாதி,** *பதினாறும்பாட்டு. [சீராற்பிறந்து சிறப்பால்வளராது] - சீர்மையோடேபிறந்து உபலாலநத்தோடே வளராதே. அதாவது - சக்ரவர்த்தி வஸுதேவாதிகள் அஶ்வமேதமநந்தவ்ரதம் முதலானவற்றை அநுஷ்டித்து, தத்பலமாகச் சீர்மையோடேவந்துபிறந்து, அவர்கள் ஸ்நேஹோத்தரமாக உபலாலித்துவளர்க்க வளர்ந்தாப்போலே பிறந்து வளராதேயென்றபடி. [பேர்வாமனாகாக்கால்] - பேரும் "ஶ்ரிய:பதி" என்றாப்போலன்றிக்கே, சிறுமைக்குவாசகமான வாமநனென்னும திருநாமத்தையுடையையாகாதொழிந்தால். [மார்பாரப்புல்கிநீயுண்டுமிழ்ந்தபூமிநீரேற்பரிதே] - நீ அஹிம்வேலங்தோற்ற மார்வாரவணைத்து வயிறாரவுண்டு வெளிநாடு காணவுமிழ்ந்த பூமியானது, நீரேற்றிரந்து வாங்கிக்கொள்ளக்கிடையாதோ. [பேராளா] - ஜகத்ரக்ஷணத்தில் நிரவதிகவ்யாமோஹத்தையுடையவனே. [யாமறிய] - நாங்கள் யதாவாக அறியும்படி. [நீ] - ஸர்வஜ்ஞனானநீ. [சூழ்ந்து - சொல்லு] - இத்தை நன்றாக ஆராய்ந்து அருளிச்செய்யவேணுமித்யர்த்த:. மோஹிப்பிக்கையாலே அடியில் இழியமாட்டாரென்று - கீழேயருளிச்செய்து, அங்ஙனன்றிக்கே, பிறந்தவாறு அவனேசெய்ததாகையாலே பரியவிஷயமில்லாமையாலும் அடியிலிழியமாட்டாரென்கிறார் -* **பிறந்தவாறு அவனே** *இத்யாதி.* **அவனே** *என்கிற ஏவகாரத்தாலே - கர்மத்தை வ்யவச்சேதிக்கிறது. இங்குப்பரியத்தக்கதுண்டோ? என்ன -* **இனிஅநுகூலர்க்கு** *இத்யாதி.*

"ஏறு" என்று - ஜாத்யேகவசநம். 'பாய்ந்ததும்" என்றதுக்குஹார்த்தபாவம் - **இவர்க்கு** *இத்யாதிவாக்யத்வயம். அதாவது - அவன்ஸௌகுமார்யத்தையும் அவற்றின் க்ரௌர்யத்தையும் அநுஸந்திக்கையாலே ம்ருத்யுவின்வாயிலேவிழுந்தாப்போலேயிருந்தது இவர்க்கு; அவனுக்கு அவளோட்டைச்சேர்த்திக்குஹேதுவாகையாலே, பொய்கையிலே பாய்ந்தாப்போலே ஸுகரூபமாய்த் தோற்றிற்றென்றபடி. ஸுகரூபமாய்த்தோற்றுகைக்கு ஹேதுவேதென்ன -* **கருமாரி** *இத்யாதி.* **கருமாரிபாய்கையாவது** *- காமாக்ஷியினுடைய ஆலயத்திற்குளத்தில் சங்குத்வயமத்யேவிழுகை.* **மாயமாவினை** *- மாயமாவை. க்ருத்ரிமமான குதிரையை.* **மா** *- குதிரை. அஸுரன் குதிரையாய்வருகைக்கு ஹேதுவையருளிச்செய்கிறார் -* **கம்ஸ** *இத்யாதி. இவனை நிரஸிக்கையில் பாலக்ரீடைபோலே அநாயாஸேந நிரஸிக்கும்படியை யருளிச்செய்*

மாகக் குதிரைவடிவைக்கோண்டு வாயையங்காந்துகோண்டு ஓர் அஸுரன்வந்துதோன்ற, சிறுபிள்ளைகள் த்வாரங்கண்டவிடத்திலே கைநீட்டும்வாஸநையாலே அதின்வாயிலேகையை நீட்டினுன்; அபூர்வதர்ஶநத்தாலே கைவிம்மிற்று, பூரித்தவாறே இரண்டுகூருய்விழுந்தான். ஸ்ரீநாரதஙகவான் "ஜகதஸ்தமிதம்" (ஜகதஸ்தமிதம்) என்றுவந்துவிழுந்தாப்போலே இவர்க்கு இப்போதிருக்கிறது. "வ்யாதிதாஸ்யோ மஹாரேளத்ரஸ்ஸோஸுர: க்ருஷ்ணபாஹுநா | நிபபாதத்விதாபூதோவைத்யுதேநயதாத்ரும:" (வ்யாதிதாஸ்யோமஹாரேளத்ரஸ்ஸோஸுர:க்ருஷ்ணபாஹுநா | நிபபாதத்விதாபூதோவைத்யுதேநயதாத்ருமஃ). இத்தால் - ஸ்ரீப்ருந்தாவநத்துக்கு வழியிசங்கும்படி பேண்களுக்கு வன்னியமறுத்துக்கோடுத்தபடி. [மதுவைவார் இத்யாதி] - மது ஸ்யந்தியான குழலையுடையவர்கள். மதுவைவார்குழலாரேன்றது - மதுவார்குழலாரேன்றபடி. சோற்பாடு. குரவைகோப்பிலே தன்னையும் ஒருவனுக்கித் தோடுத்தபடி. [குழகும்] - அவர்கள் அபிஸந்தியைக் குலைத்து ஸக்நாபிமாநைகளாகப்பண்ணி, அவர்களோடோக்கத் தான் கலந்தபடி. அதாவது - வேற்றுள் என்னவோண்ணுதபடி, இவர்களிலே ஒருவனேன்னலாம்படி புக்கு நின்றுனுயிற்று. [அதுவிதுவுதுவேன்னலாவனவல்ல] - அதுவாகவுமாம், இதுவாகவுமாம், உதுவாகவுமாம், எனக்கு இதிலோரு நிர்பந்தமில்லை. [என்னையுன்சேய்கைநைவிக்கும்] - அச்சேயலாகவுமாம், இச்சேயலாகவுமாம், உச்சேயலாகவுமாம், அதில் எனக்கோரு தாத்பர்யமில்லை; உன்னுடைய சேஷ்டிதங்களாகையும், நானுகையுமே எனக்கு நோவுபடுகைக்குவேண்டுவது. "இத்தால்சோல்லிற்றுயிற்று - இப்பாட்டில் மூன்றர்த்தம் சோல்லாநின்றது, அதாவது - அநுகூலஸம்ஶ்லேஷமும், ப்ரதிகூலநிரஸநமும், மத்யஸ்த்தரக்ஷணமு

கிருர் - க்ருத்ரிமமாக இத்யாதி. "வ்யாதிதாஸ்ய:" என்றத்தைப்பற்ற - வாயையங்காந்து கோண்டு என்றது. ஶக்திபூர்வகமாக நிரஸிப்பார் இரண்டுகையாலே நிரஸிக்கவேணுமே, அப்படி சொல்லாதே "க்ருஷ்ணபாஹுநா" என்று ஏகவசநமாகச்சொல்லுகையாலே - அதின்வாயிலே கையைநீட்டினுன் என்கிருர். விம்மிற்று - பருத்தது. அவன் பட்டுப்போயிருக்க, "மாயமா" என்கிறதென்? என்ன - ஸ்ரீநாரத இத்யாதி. அப்படி க்ரூரமாய்வந்ததோ? என்ன - வ்யாதித இத்யாதி. ஶ்ரீ ரா ஷ. கீழ்-நப்பின்னைக்கு உதவினபடிசொல்லிற்று; இங்கு - பெண்களுக்கு உதவினபடி சொல்லுகிறதென்கிருர் - இத்தால் இத்யாதி. இசங்கும்படி - நடக்கும்படி. வன்னியம் - குறும்பு, விரோதமென்றபடி. "மதுவை" என்றதில், ஐகாரம் - அவ்யயம். சோற்பாடு - சொல். அதாவது - அக்ஷரஸங்க்யாபூரணமென்றபடி. "குழகும்" என்றதுக்கு - மேன்மைதோற்றுதபடி ஸஜாதீயனுய்க் கலந்தானென்கிருர் - குரவைகோப்பிலே இத்யாதி. அன்றிக்கே, விடவ்யாபாரத்தாலே பெண்கள் நெஞ்சில் மறத்தைப்போக்கி வஶீகரித்துக்கலந்தானென்றர்த்தாந்தரம் - அவர்கள் அபிஸந்தி இத்யாதி. அபிஸந்தியாவது - ப்ரணயரோஷத்தால்வந்தநினைவு. முந்தின அர்த்தவிவரணம் - அதாவதுஇத்யாதி. அதாவதென்றது - அவர்களோடொக்கத் தான் கலக்கையாவதென்றபடி. வேற்றுள் - பரன். அர்த்தத்வயத்துக்கும், "குழகு" என்று - ஸாமர்த்யம். குழகு - விரகும், லீலாவ்யாபாரமும், ஸவ்யதையும். "அதுவிதுவுது" என்றதுக்கு - அல்பாநல்பமத்யமவ்யாபாரமாக அருளிச்செய்கிருர் - அதுவாகவுமாம் இத்யாதி. "அதுவாகவுமாம்" இத்யாதியின் விவரணம் - அச்சேயலாகவுமாம் இத்யாதி. அர்த்தாந்தரம் - இத்தால் இத்யாதி. இத்தாலென்றது - "அதுவிதுவுது" என்றவித்தாலென்றபடி. மத்யஸ்த்தரக்ஷணமுமென்றது - நப்பின்னையைப்போலே அந்தரங்கைகளுமன்றிக்கே, கேஶியைப்போலே ப்ரதிகூலைகளுமன்றிக்கேயிருக்கிற மதுவைவார்குழலாருடைய ரக்ஷணத்தை. அதுவிதுவுது என்று விஶேஷித்துச்சொல்லலாவனவல்லவென்று ஶப்தார்த்தம். "என்னையுன்செய்கைநைவிக்கும்" என்றவகர்

மானவிவற்றை - அதுவிதுவது என்கிறது'' என்னும்பிள்ளான். [முதுவையமுதல்வா] - இவர்தம்மதும் அவ்வளவாகாதேதான். ப்ரளயங்கொண்ட ஜகத்தோபாதியாகாதே இவரும் அழிந்தபடி, இத்தோடொக்க இவரையும் அடிதோட்டும் உண்டாக்கவேண்டியிருக்கிறபடி. பழையதான பூமிக்குக் காரணமென்னுதல், பூமிக்குப் பழையகாரணமென்னுதல். [உன்னை யென்றுதலைப்பெய்வனே] - உன்னையநுஸந்தித்து ஶிதிலனாகாதே, தரித்துநின்று அநுஸந் திக்கும்படி பண்ணவேணும். உன்னை வந்துகிட்டப்பெறுவதென்றோ என்றுமாம். தலைப் பெய்கை - கிட்டுகை. (௨)

மூன்றும் பாட்டு.

பெய்யும்பூங்குழற்பேய்முலையுண்ட பிள்ளைத்தேற்றமும் பேர்ந்தோர்சாடி
செய்யபாதமொன்றால் செய்தநின்சிறுச்சேவகமும் [றச்
நெய்யுண்வார்த்தையுளன்னைகோல்கொள்ள நீயுன்தாமரைக்கண்கள்நீர்
மையவேநிலையும்வந்து என்னெஞ்சையுருக்குங்களே. [மல்க

ஆ.—(பெய்யும்பூங்குழல்.) பூப்பெய்தகுழலையுடைய பூதனையுடைய முலை யுண்ட பிள்ளைத்தனத்திலே யுண்டாயிருக்கிற ரஸஜ்ஞாநமும்; அதுக்குமேலே அஸுரா வேஶத்தாலே ஊருகிறதொருஶகடத்தை சிவந்ததிருவடியொன்றாலே உதைத்த சிறுமை யிலுண்டான ஆண்பிள்ளைத்தனமும்; நெய்யைக்களவுகண்டான் என்னும் வார்த்தாப்ரஸ் தாவத்திலே ஸ்நேஹிநியான தாயார் கையிலே யொருதுரும்பைக்கொள்ள, அத்யந்தஸுந் தரனானநீ, உனக்குத்தகுதியாய்த் தாமரைப்பூப்போலேயிருக்கிற கண்கள் அச்சத்தி னாலே நீர்மல்கும்படி, "அடிபடுகிறது" என்றுபேகணித்து நின்றநிலையும் வந்து என் னெஞ்சை நீராக்காநின்றனவென்கிறார்.

ஒ.—மூன்றும்பாட்டில், உன்னுடைய பாலசேஷ்டிதங்கள் என்னை மிகவும் கலியாநின்றன என்கிறார்.

[பெய்யும்பூங்குழல் என்றுதொடங்கி]-தன்னை அறியவொண்ணாதபடி யஶோ தைப்பிராட்டியைப்போலே ஒப்பித்துவந்த பூதனையுடைய முலையுண்ட பிள்ளைத்தனத் திலே உண்டாயிருக்கிற ரஸஜ்ஞாநமும். பூப்பெய்தகுழலையுடைய - பிள்ளையென்றுமாம். [பேர்ந்து என்றுதொடங்கி] - அதுக்குமேலே அஸுராவேஶத்தாலே உயிர்பெற்று ஊரு கிறதொரு ஶகடத்தை சிவந்த திருவடியொன்றாலே உதைத்த சிறுமையிலுண்டான ஆண்பிள்ளைத்தனமும், நெய்யைக்களவுகண்டானென்னும் இவ்வார்த்தாப்ரஸ்தாவத்திலே ஸ்நேஹிநியான தாயார் கையிலே ஒருதுரும்பைக்கொள்ள ஆத்யந்தஸுந்தரனான நீ உனக்

தாம், "முதுவையமுதல்வா" என்று - காரணத்வம்சொன்னதுக்கு பாவம் - இவர்தம்மதும் இத்யாதி வாக்யத்ரயம். பூர்வவிவரணம் - ப்ரளய இத்யாதிவாக்யத்வயம். அடிதோட்டும் - அடியேதொடங்கி. ஸத்தையேதொடங்கியென்றபடி. "முது" என்றது - * வையத்துக்கு விஶேஷணமாதல். * முதல் வனுக்கு விஶேஷணமாதல். இத்திருவாய்மொழியில், கிட்டுகைக்கு வாசகங்களான ஶப்தங்களெல்லாம்- ஆழ்வான் நிர்வாஹத்தில், மாநஸாநுஸந்தாநபரங்கள்; எம்பார்நிர்வாஹத்தில், காயிகமாகக் கிட்டுகை யென்று கண்டுகொள்வது. (௨)

குத்தகுதியாய்த் தாமரைப்பூப்போலேயிருக்கிற கண்கள் அச்சத்தினாலே நீர்மல்கும்படி 'அடிபடுகிறது' என்று பேகணித்து நின்றநிலையும் வந்து என்னெஞ்சை நீராக்காநின்றன.

ப.—அநந்தரம், உன்னுடைய பாலசேஷ்டிதங்களானவை என்னெஞ்சை உருகப்பண்ணாநின்றனவென்கிறார்.

(யஶோதைவடிவுகொண்டு ஒப்பித்துவருகைபாலே), பெய்யும் - வைத்த, பூ - பூவையுடைத்தான, குழல் - மயிர்முடியையுடைய, பேய் - பேயின், முலை - முலையை, உண்ட - உண்ட, பிள்ளை - பிள்ளைத்தனத்திலே, தேற்றமும் - வேற்றுமுலையையறிந்த தெளிவும்; ஓர் - அஸுராவிஷ்டமாய்நலியவந்ததொரு, சாடு - சகடம், பேர்ந்து - பேர்ந்து போய், இற - முடியும்படியாக, செய்ய - சிவந்த, பாதம் - திருவடி, ஒன்றால் - ஒன்றாலே, செய்த - செய்தருளின, நின் - உன்னுடைய, சிறச்சேவகமும் - பாலபாக்ரமமும்; நெய் - நெய், உண் - அமுதுசெய்த, வார்த்தையுள் - வார்த்தைபிறந்தவளவிலே, அன்னை - தாயானயஶோதை,(பரிவாலே கையிலே), கோல் - கோலை, கொள்ள - கொள்ள, நீ - (எல்லாரையும் உன்கோற்கீழே நடத்தும்படி ஸர்வஶக்தியான) நீ, உன் - உனக்கு அநுரூபமாய், தாமரை - தாமரைபோலேயிருக்கிற, கண்கள் - கண்களானவை, நீர் - நீர், மல்க - மல்கும்படி, பைய - பூதனைக்கொண்டு ஒடுங்கிநிற்கும், நிலையும் - நிலையும், வந்து- (முற்காலத்திலே செய்துபோனவை இன்று என்னளவும்) வந்து, என் - என்னுடைய, நெஞ்சை - சபலமானநெஞ்சை, உருக்குங்கள் - உருக்காநின்றன.

இ.—மூன்றாம்பாட்டில், உன்னுடைய பாலசேஷ்டிதங்கள் என்னை நலியாநின்றதென்கிறார். ப்ரதிகூலருடைய ப்ராணனும், ஆஶ்ரிதஸ்பர்ஶமுள்ளத்ரவ்யமுமே யாரகமாக வளர்ந்தானென்று - 'வளர்ந்தவாறு' என்றுசொன்னவிடத்தை விவரிக்கிறது இங்கு.

[பெய்யும் இத்யாதி] - பேயின்முலையுண்ட - பெய்யும்பூங்குழல் - பிள்ளையென்னுதல்; பெய்யும்பூங்குழல் - பேயென்னுதல். திருமஞ்சனம்பண்ணி ஒப்பித்து முலைகொடுத்து வளர்த்திவைத்தபிள்ளையென்னுதல்; தன்னை அறியவொண்ணாதபடி, இவன்சோம்பாதபடி எப்போதும் ஒப்பித்திருக்கும் யஶோதைப்பிராட்டியைப்போலே ஒப்பித்துவந்த பூதனையென்னுதல். [பிள்ளைத்தேற்றமும்] - ஐஶ்வரமான ஜ்ஞாநமின்றிக்கே, "தாய்முலையன்று, வேற்றுமுலை" என்றறியும்தெளிவு. அத்யந்தஶைஶவத்திலும் பிள்ளைகள் முலைவாசியறிவர்களிறே. பிள்ளைத்தனத்தின்மெய்ப்பாட்டினாலே வரும் ரஸஜ்ஞாநமும். "பேயகர்" என்றறியுவுமாம், அறியாதொழியவுமாம், ஶத்ருக்கள்கிட்டினால் முடியக்கடவதானவஸ்துஸ்வபாவத்தாலே முடிந்தாளித்தனை. [பேர்ந்து]- அதுக்குமேலேயென்னுதல்; [ஓர்சாடிற - பேர்ந்தென்று] - அவன்தன்னோடேயாதல். அஸுராவேஶத்தாலே உயிர்பெற்று ஊருகிற ஶகடம் துகளாம்படிபேர்ந்து. [செய்ய பாதம்] - சிவந்ததிருவடிகள். என்னுடைய ஜீவநத்தைக்கொண்டுகிடீர் விரோதியைப் போக்கிற்று. [ஒன்றால்] - கருவிச்செய்கையன்றிக்கே அநாதரமிருக்கிறபடி. சிறுமையிலுண்டான ஆண்பிள்ளைத்தனமும், ராமாவதாரத்தில் சிறச்சேவகமும், ஆயுதாப்யாஸம் பண்ணியும் விஶ்வாமித்ராதிகளோடே மந்த்ரஶ்ரவணம்பண்ணியுமிறே; அதிற்காட்டில் வ்யாவ்ருத்தமாயிருக்கிறபடி. [நெய்யுண் இத்யாதி] - "நெய்யைக்களவுகண்டான்" என்னும்வார்த்தாப்ரஸ்தாவத்திலே, ஸ்நேஹாதிஶயத்தாலே தாயார் கையிலே கோலையெடுத்

தாள். எதிரிகளஞ்சும்படி கோல்கொள்ளுமவன்கிடீர்! இவள்கையிற்கோலுக்கு அஞ்சுகிறான். ஶத்ருக்களை அஞ்சப்பண்ணும், ஆஶ்ரிதர்க்குத் தான் அஞ்சும். "தாயெடுத்த சிறுகோலுக்கு" என்னக்கடவதிறே. [நீ]-வெறும்புறத்திலே ஆலத்திவழிக்கவேண்டும் அழகையுடையநீ, ஸர்வஶக்தியானநீ யென்றுமாம். [உன்தாமரைக்கண்கள்] - உனக்குத்தகுதியான கண்கள். [நீர்மல்க] - கண்ணிற்பரப்படங்க நீரிலேநிறையும்படி. [பையவேநிலையும்] - அஞ்சி முகத்தைப் பாராநிற்கச்செய்தே, தெரியாதபடி பின்னே கால்வாங்கிநிற்குமென்னுதல்; பேகணித்து நின்றநிலையென்னுதல். [வந்தென்னெஞ்சையுருக்குங்களே] - "பூதகாலத்திற்செய்துபோனது" என்றிருக்கவொண்ணாதபடி புக்கவிடம்புக்கு என்னெஞ்சை நீராக்கநின்றன.

ஈடு.—மூன்றாம்பாட்டு. உன்பாலசேஷ்டிதங்கள் என்னை நலியாநின்றதென்கிறார்.

[பெய்யும்பூங்குழற்பேய்முலையுண்ட] - ப்ரதிகூலருடையப்ராணனும் ஆஶ்ரித ஸ்பர்ஶமுள்ள த்ரவ்யமுமே தாரகமாக வளர்ந்தானென்று - "வளர்ந்தவாறு" என்று சொன்னவிடத்தை விவரிக்கிறது இங்கு. பிள்ளையைத் திருமஞ்சனம்செய்து ஒப்பித்துக் கண்வளரப்பண்ணிக் கடக்கநின்றாள் யஶோதைப்பிராட்டி, அவ்வளவிலேவந்துகிட்டினாள் பூதனை. [பெய்யும்பூங்குழல்] - பிள்ளை என்று அங்கேசொல்லுதல்; அன்றிக்கே, [பெய்யும்பூங்குழல்] - பேய் என்று பூதனையோடேகூட்டுதல். பிணக்கோலமாக ஒப்பித்து வந்தாள்காணும். "பிள்ளையணுங்கவொண்ணாது" என்று தாய்மார் எப்போதும் ஒப்பித்தபடியே இருப்பர்களாயிற்று, இவளும் அப்படியேவந்தாளாயிற்று; * பெற்றதாய்போல்வந்த பேய்ச்சியிறே. வைத்தபூவையுடைய மயிர்முடியுடையபேய். [பேய்முலையுண்டபிள்ளைத் தேற்றமும்] - ஐஶ்வர்யமான ஜ்ஞாநமின்றிக்கே, "தாய்முலை" என்றும், "வேற்றுமுலை" என்றும் அறியும்தெளிவு. அத்யந்தஶைஶவத்திலும் பிள்ளைகள் முலைவாசியறிவர்களிறே. இவனும் "தாய்" என்றேநினைத்து உண்டான்கிடீர். [பிள்ளைத்தேற்றமும்] - பால்யத்தில் தெளிவிருக்கிறபடி. அதாவது - யஶோதைப்பிராட்டி முலைகொடுக்க ப்ரீதியாலேபண்ணும் முக்யஜல்பிதங்களை இவள்பக்கலிலே பண்ணினானாயிற்று. "பாதகர்" என்று அறியவுமாம், அறியாதிருக்கவுமாம், ஶத்ருக்கள்கிட்டினால் முடியக்கடவதான வஸ்துஸ்வபாவமிருக்கிறபடி. [பேர்ந்து] - அதுக்குமேலே. [ஓர்சாடிற] - "ப்ரதிகூலம்" என்று ஶங்கிக்கவுமொண்ணாதுகிடீர். பூதனையை, "இன்னாள்" என்று ஆராய்கைக்காகிலும் விஷயமுண்டு, இது ரக்ஷகமாகவைத்ததுகிடீர். யஶோதையைக் கண்டவாறே "இவளார்" என்று ஆராய்ச்சிப்படுமிறே. [ஓர்சாடு] - பாதகத்தில் கொடுமைக்கு இத்தோடொப்பதில்லை

மூன்றாம்பாட்டு.—பெய்யும் இத்யாதி. "பெய்யும்பூங்குழல்" இத்யாதியைபக்கடாக்ஷித்து அவதாரிகை - உன்பாலசேஷ்டிதங்கள் இத்யாதி.

*பெய்யும்பூங்குழல் - வைத்தபூவையுடைத்தான மயிர்முடியையுடையவென்று ஶப்தார்த்தம். "பெய்யும்பூங்குழல்" என்றத்தை - * பிள்ளைக்கு விஶேஷணமாக்குவாராக ப்ரயோஜனங்காட்டுகிறார் - பிள்ளையை இத்யாதி. இவள் ஒப்பித்துவருகைக்கு ஹேதுவேதென்ன - பிள்ளையணுங்க இத்யாதி. அணுக்கம் - பால்யாதி. தாயாய்வந்ததுக்குப்ரமாணம் - பெற்றதாய் இத்யாதி. பாஶரஸ்யஸ்பஷ்டோர்த்தஃ. "உண்ட" என்றதுக்குபாவம் - இவனும்தாய் இத்யாதி. பிள்ளையாலல் தேற்றமேதென்ன - பால்யத்தில் இத்யாதி. "தாய்" என்றே நினைத்துண்டானாகில், அவள்முடியக்கூடுமோ? என்ன - பாதகர் இத்யாதி. "ஓர்" என்றதுக்கு அர்த்தம் - ப்ரதிகூலமென்று இத்யாதி. இது பூதனைக்கும் ஒவ்வாதோ? என்ன - பூதனையை இத்யாதி. விஷயமென்றது - யோக்யதையென்றபடி. யோக்யதையெப்படியுண்டு? என்ன - யஶோதையை இத்யாதி. ஆராய்ச்சிப்படும் - விசாரிக்கப்*

கிடீர். [இற] - முறிய. "தளர்ந்தும் முறிந்தும்" இத்யாதி. [செய்யபாதம்] - சிவந்ததிருவடிகள். என்னுடையஜீவநத்தைக்கொண்டுகிடீர் விரோதியைப்போக்கிற்று. இவர்க்கு ஜீவநம் அடியிலே கல்பித்திறேகிடப்பது. [ஒன்ருல்] - "இன்னதிருவடி" என்று நியதியில்லையிறே. கருவிச்செய்கிருனன்றே. [செய்தநின்சிறுச்சேவகமும்] - நீ சேவகம்செய்ய வடியிட்டபடியும். ராஜகுமாரனுய்ப்பிறந்து, பருவம்நிரம்பி, ஆயுதஶ்ரமம்பண்ணி, வஶிஷ்டாதிகளைப்பின்சென்று, விஶ்வாமித்ராதிகள்பக்கலிலே அஸ்த்ரலாபமுண்டாய், பின்பிறே தாடகாமாரீசஸுபாஹுக்களை நிரஸித்தது ; அதெல்லாம் பருவநிரம்புவதற்குமுன்னே, வாயாலும் காலாலுமாயிருக்கிறபடி இங்கு. வாயால் வலியார்க்குத் தாயாரும்வேண்டாவாயிற்றுகாணும். இவனைப்போலே கால்கடியாரில்லை, ஆகையிறே காலிலே கொடிகட்டி வைக்கிறது. "𑌧𑍍𑌵𑌜𑌾𑌰𑌵𑌿𑌨𑍍𑌦𑌾𑌙𑍍𑌕𑍁𑌶𑌵𑌜𑍍𑌰𑌲𑌾𑌞𑍍𑌛𑌨𑌂 | 𑌤𑍍𑌰𑌿𑌵𑌿𑌕𑍍𑌰𑌮𑌤𑍍𑌵𑌚𑍍𑌚𑌰𑌣𑌾𑌮𑍍𑌬𑍁𑌜𑌦𑍍𑌵𑌯𑌂" (த்வஜாரவிந்தாங்குஶவஜ்ரலாஞ்சநம் | த்ரிவிக்ரமத்வச்சரணாம்புஜத்வயம்) என்கிறபடியே. அப்போதும் * அவுணனுள்ளத்து எண்மதியுங்கடந்து அண்டமீதுபோயிற்றதும் கடுகித் திருவடிகளிறே. [நெய்யுண் இத்யாதி] - பருவம்நிரம்புவதற்குமுன்பு தான் ப்ரதிகூலரை யஞ்சப்பண்ணுமாபோலேகாணும் பருவம் நிரம்பநிரம்ப அநுகூலர்க்குத் தான் அஞ்சும்படியும். [நெய்யுண்வார்த்தையுள்] - நெய்யைக்குறியிட்டுக்கடக்கவைத்துப்போய் அநந்தரத்திலேவந்துபார்த்தாள், குறியழிந்துகிடக்கையாலே "நெய்களவு போயிற்று" என்ருள்; அவ்வளவிலே பையாக்க விழிக்கத்தொடங்கினன் [அன்னைகோல்கொள்ள] - "மாதாவிறேயெடுத்தாள்" என்னும்விஹாகமறிகிறிலன். அவள்வார்த்தையிறே "உந்தமடிகள்முனிவர்" - வாரீர்பிள்ளாய், உங்கள்தமப்பனர் கேட்பராகில் உம்மைப்பொடிவர்; "உன்னை நான் என்கையிற்கோலால் நொந்திடமோதவுங்கில்லேன்" - இதுதான் இருக்கிறபடிகண்டீரே; இத்தைக்கொண்டு இனி நீர் ஒன்றும் செய்யாதபடி பண்ணிக்கொள்ளலாமிறே வல்

பலம். வ்யூஹகத்தில்கொடுமைக்கு இத்யாதி வாக்யாநந்தரத்திலே, ப்ரதிகூலமென்றுஶங்கிக்க இத்யாதிநாலுவாக்யங்களும் அநுஸந்திப்பது. "ஓர்சாடு" என்றது - அத்விதீயமானசாடென்றவிவக்ஷித்து, அதுக்கு அத்விதீயத்வமேதென்ன - வ்யூஹகத்தில் இத்யாதி. முறித்ததுக்குப்ரமாணம் - தளர்ந்தும் இத்யாதி. "இற" என்றவநந்தரம், "செய்யபாதம்" என்கிறவருடையபாவம் - என்னுடைய இத்யாதி. ரஸோக்தி - இவர்க்கு இத்யாதி. நியதியில்லாமைக்குஹேது - கருவி இத்யாதி. அதாவது -
தமாகவேணும்" என்னும்கருவுதலாலே யுதைக்கில், வலத்திருவடியாலே யுதைக்கவேணும்; அங்ஙனன்றிக்கே, அனந்தலிலேயுதைக்கிருனைகயாலே, ஏதேனுமொன்றுஅமையுமென்றபடி. சிறுச்சேவகம் - பால்யத்தில்பௌர்யம். இவ்விரண்டையும் பால்யத்திலேசெய்கையாலே ராமாவதாரவ்யாவ்ருத்தி - ராஜகுமாரனுய் இத்யாதி. இவ்விடத்திலே, வஶிஷ்டாதிகளைப்பின்சென்று அஸ்த்ரலாபமுண்டாய் தாடகையை; விஶ்வாமித்ராதிகள்பக்கலிலே அஸ்த்ரலாபமுண்டாய் மாரீசஸுபாஹுக்களை என்று அந்வயித்துக்கொள்வது ; விஶ்வாமித்ராஸ்த்ரப்ரதாநம் தாடகாநிரஸநாநந்தரமாகையாலே. "வாயாலும்" என்றத்தை ரஸோக்தியாலே விவரிக்கிருர் - வாயால்வலியார்க்கு இத்யாதி. கொடி - த்வஜம், இதுக்குப்ரமாணம் - 𑌧𑍍𑌵𑌜𑌾𑌰𑌵𑌿𑌨𑍍𑌦 இத்யாதி. திருநெடுந்தாண்டகப்பாசுரத்தையுட்கொண்டு, "த்ரிவிக்ரம" என்றதுக்குபாவம் - அப்போதும் இத்யாதி. அப்போதும் - அந்தவவதாரஸமயத்திலும். அவுணனுள்ளத்து இத்யாதி - மஹாபலியினுடைய ஹ்ருதயத்திலுண்டான மநோரதரூபஜ்ஞாநத்தை அதிக்ரமித்து அண்டபித்திக்கு மவ்வருகேபோயிற்றென்று அர்த்தம். பையாக்க—ஐயந்தோற்ற. அன்னை கோல்கொண்ட வநந்தரத்திலே இவன் கண்ணநீர்விழவிட்டது ப்ராந்திகார்யமென்கிருர் - மாதாவிறே இத்யாதி. ப்ராந்திகார்யமென்கிறதென், அவளடியாளோ? என்ன - அவள்வார்த்தை இத்யாதி, "உந்த

லார்க்கு, நான் அதுக்கு ஶக்தையாகிறிலேன். * தாயெடுத்த சிறுகோலுக்குளைந்தோடியிறே - "அச்சமுறுத்துகிறபடியிது, பட்டாலும்நோவாது" என்றறிகிறிலன். தமப்பனார் எடுத்தாராகிலும் சிறிது ஆறலாங்காணும், ஹிதகாமராகையாலே அதுப்ராப்தமிறே; உகப்பேபின்செல்லக்கடவ இவள் பொடிந்தால் பின்னைப் பொறுக்கப்போகாதிறே. இவள்தான் இப்படி செய்வானேன் ? என்னில்,—ஸ்நேஹமின்றிக்கேயொழிந்தால் இன்னாரென்றுண்டோ கல்லும் தடியும் கொள்ளுகைக்கு. [நீயுன் தாமரைக்கண்கள்நீர்மல்க] - வெறும்புறத்திலே ஆலத்திவழிக்கவேண்டும்படியிருக்கிற நீ, அதுக்குமேலே கண்களும் கோட்புக்கால் பொறுக்கப்போமோ. †(கோட்புகுகையாவது-வாலசூதாதிகள் அபிநவமாக பலவத்துக்களாகை.) [உன்தாமரைக்கண்கள்] - "ராகவோர்ஹதி வைதேஹீம்" (ராகவோர்ஹதிவைதேஹீம்) என்கிறபடியே உனக்குத்தகுதியானகண். "தக்கதாமரைக்கண்" என்னக்கடவதிறே. [பையவேநிலையும்] - "அடிக்க" என்று அவள் கோலையெடுத்தாள்; அவளைப் பார்த்துநின்று கண்ணநீரைவிழவிடாநிற்பது, உடம்புவெளுப்பதாய்ப் பேகணித்துநின்ற நிலையும். அன்றிக்கே, அஞ்சி அவள்முகத்தைப்பார்த்து நிற்கச்செய்தே பின்பே கால்வாங்கக் கணிசித்துமாட்டாதொழிவது, ஊன்றநிற்கமாட்டாதொழிவதாய்த் தறையில்கால்பாவாதபடி பொய்க்க அடியிட்டுக்கொண்டுநின்ற நிலைகாணும். பைய - மெள்ள. [வந்து இத்யாதி] - அச்செயல்கள் என்னை நலியாநின்றன. உனக்கானால் தப்பியாகிலும்போகலாம், அதுவுமொண்ணாதபடி புக்கவிடம்புக்கு வடிம்பிட்டுநலியாநின்றன. [பையவேநிலையும் வந்தென்னெஞ்சையுருக்கும்] - என்னை ஓரடிபோகவொட்டாதே காற்கட்டாநின்றதென்கிறார். [நெஞ்சையுருக்கும்] - இவர்நெஞ்சிலேயடியிட்டபடி. [உருக்கும்] - முதல் நெஞ்சையுருக்க வடியிட்டது. (ரு)

மடிகள்" இத்யாதிக்குஅர்த்தம் - வாரீர் இத்யாதி, ஶக்தையாகிறிலேன் என்னுமளவும். மோதத - அடிக்க. இது திருமொழி, பத்தாம்பத்து, நாலாந்திருமொழி, எட்டாம்பாட்டு. தாய் கோலெடுத்தால் இவன்பயப்படுமோ ? என்ன,—ப்ரமாணம் - தாயெடுத்த இத்யாதி. உளைந்தோடி - ஈடுபட்டோடி. பயப்பட்டோடியென்றபடி. எட்டாம்பத்து, மூன்றாந்திருமொழி, அஞ்சாம்பாட்டு, "வாயெடுத்த" இத்யாதி. "எடுத்த" என்றதுக்குபாவம் - அச்சம் இத்யாதி. "சிறுகோல்" என்றதுக்குபாவம்- பட்டாலும் இத்யாதி. சிறுகோல் - வைக்கோல். "தாயெடுத்த" என்றதுக்கு வ்யாவர்த்யம் - தமப்பனார் இத்யாதி. ரஸோக்தி - ஸ்நேஹம் இத்யாதி. ஸ்நேஹம் - நெய். கோட்புகுகையாவது - நூதநமாக புஷ்பிதமாகை. அப்படி ததுதியாயிருக்குமோ ? என்ன - தக்க இத்யாதி. "பைய" என்றது - பொய்க்க என்றபடி. பொய்க்க - மெள்ள. தறையில் கால்பாவாதபடி மெள்ளவடியிட்டென்றபடி. இவ்விடத்திலே - "ஶோகவ்யாகுலசித்தஸ்ய" இத்யாதி குந்தீவசநம் அநுஸந்தேயம். "உருக்குங்கள்" என்கிறவைஹவசநார்த்தம்-அச்செயல்கள் இத்யாதி. "வந்து" என்றதுக்குபாவம்- உனக்கானால் இத்யாதி. தப்பியாகிலும்போகலாமென்றது - யஶோதை அபலையாகையாலே தொடரமாட்டாளென்றபடி. சாடு - என்னைஓரடி இத்யாதி. காலானது நெஞ்சைக்கட்டாநின்றதென்று ஸ்வபாவார்த்தம்;நெஞ்சழிந்தால் தப்பப்போகாதிறேயென்றுத்வநி. வர்த்தமானார்த்தம் - முதல்நெஞ்சை இத்யாதி. க்ரமேணோக்தம் : "ராகவோர்ஹதி வைதேஹீம் தஞ்சேயமஸிதேக்ஷணா" இதி ஸுந்தரகாண்டே, ஸர்க்கம் 16. (ரு)

† குண்டலிதம் ப்ரக்ஷிப்தம்.

நான்காம் பாட்டு.

கள்ளவேடத்தைக்கொண்டுபோய்ப் புரம்புக்கவாறும் கலந்தசுரரை
உள்ளம்பேதஞ்செய்திட்டு உயிருண்டவுபாயங்களும்
வெள்ளநீர்ச்சடையானும் நின்னிடைவேறலாமைவிளங்கநின்றதும்
உள்ளமுள்குடைந்து என்னுயிரையுருக்கியுண்ணுமே.

ஆ.—(கள்ளவேடத்தை.) கண்டாருடையநெஞ்சை அபஹரிக்கும்படியான அழகியவேஷத்தைக்கொண்டு த்ரிபுரத்திலேபுக்கபடியும், அஸுரரோடேசேர்ந்து வைதிகஸ்ரத்தைகளைப்போக்கி அவர்களுக்கு ப்ராணஹாநிபண்ணினவிரகுகளும், கங்கையை யரித்த ருத்ரன் த்வதயீநனென்று ப்ரஸித்தமாம்படி நின்றதுவும், அந்தஃகரணத்தை யுள்ளேபுக்குக் குடைந்து என் ஆத்மாவை நீராக்கி முடியாநின்றனவென்கிறார்.

ஒ.—நாலாம்பாட்டில், பௌத்தாவதாரவ்ருத்தாந்தம் மிகவும் என்னை நலியா நின்றது என்கிறார்.

[கள்ளவேடத்தை என்றுதொடங்கி] - கண்டாருடையநெஞ்சை அபஹரிக்கும்படியான அழகிய வேஷத்தைக்கொண்டு த்ரிபுரத்திலேபுக்கபடியும், அஸுரரோடே சேர்ந்து வைதிகஸ்ரத்தைகளைப்போக்கி அவர்களை ப்ராணஹாநிபண்ணின விரகுகளும், கங்கையினுடைய நீர்வெள்ளத்தை ஜடையிலேயரித்த ப்ரபாவத்தையுடைய ருத்ரனும் "விஷ்ணுராத்ரா" இத்யாதிப்ரக்ரியையாலே த்வதயீநன் என்னுமிடம் ப்ரஸித்தமாம்படி நின்றதுவும். [உள்ளம் என்று தொடங்கி] - அந்தஃகரணத்தை உள்ளேபுக்குக் குடைந்து என் ஆத்மாவை நீராக்கிமுடியாநின்றன.

ப.—அநந்தரம், த்ரிபுரவாஸிகளான அஸுரவர்க்கத்தை அந்தர்மோஹநாதிகள் பண்ணிமுடித்தப்ரகாரம் என்னாத்மாவை ஶிதிலமாக்காநின்றதென்கிறார்.

(வேதைகவேத்யனுய்வைத்து); கள்ளவேடத்தை -(வேதபாஹ்ய பௌத்தரூபமான) க்ருத்ரிமவேஷத்தை, கொண்டு - கொண்டு, போய்-(அழகாலும் பக்வதையாலும் ஆப்தபுத்திபிறக்கும்படி) போய், புரம்-த்ரிபுரத்திலே, புக்க-புக்க, ஆறும்-ப்ரகாரமும்; அசுரரை - அங்குத்தையஸுரரை, கலந்து - உட்புக்குச்செறிந்து, உள்ளம்பேதம் - சித்தபேதத்தை, செய்திட்டு-பண்ணி, (அவர்களுக்கு உபாஸ்யனானருத்ரன்தன்னாலே), உயிர் - அவர்கள்ப்ராணனை, உண்ட - அபஹரித்த, உபாயங்களும் - விரகுகளும், வெள்ளம் - ஸம்ருத்தமான, நீர்-கங்காஜலத்தை, சடையானும் - ஜடையிலேயுடையருத்ரனும், நின்னிடை - உன்பக்கல், வேறலாமை - ("விஷ்ணுராத்ராஸஹவதாஸவஸு" என்று ஶரீரஶரீரிபாவத்தாலே) அப்ருதக்ஸித்தப்ரகாரமானபடி, விளங்க - ப்ரமாணப்ரஸித்தமாக, நின்றதும் - நின்றதுவும், உள்ளம் - என்னெஞ்சுக்குள்ளே, உள்-ஜ்ஞாநவ்ருத்திகள்தோறும், குடைந்து - அவகாஹித்து, என்-என், உயிரை - ஆத்மாவை, உருக்கி - நீராகவுருக்கி, உண்ணும் - க்ரஸித்துவிடாநின்றன.

இ.—நாலாம்பாட்டில், பௌத்தாவதாரவ்ருத்தாந்தம் மிகவும் என்னைநலியா நின்றதென்கிறார். அநுகூலவிஷயத்திற்களவுசொல்லிற்று, இனி ப்ரதிகூலவிஷயத்தில் தன்னைக்களவுகண்டபடி சொல்லுகிறது.

[கள்ளவேடத்தைக்கொண்டு] - "யதாஹிசோரஸ்ஸ ததாஹிபுத்த:" என்கிறபடியே க்ரித்ரிமவேஷத்தைக்கொண்டு, "வேதைஶ்ச ஸர்வைரஹமேவ வேத்ய:" என்று வேதார்த்ததத்வஜ்ஞானவன், வேதாப்ராமாணிகவாதிகள்வேஷத்தைக் கொள்ளுகை. பாகத்தாலும் அழகியஸந்நிவேஶத்தாலும், சென்றுபுக்கபோதே "ஆப்தன்" என்று விஶ்வஸிக்கும்படி புக்கபடியும். வையஹிம்ஸையையும் ஸாமாந்யஹிம்ஸையேயபாதியாக்கப் புகுகிறவனாகையாலே, பசும்புல்லுச்சாவ மிதியாதே கூசியடியிட்டுப்புக்கபடி. [கலந்து இத்யாதி] - அஸுரர்களோடேசேர்ந்து வைதிகவ்ரதத்தைபோம்படி பௌத்திகளோஹித்து. அவர்களை ப்ராணஹாநிபண்ணிப் பிணமாக்கி, "இன்னார்கொன்றார்" என்று விருதுபிடிக்கும்படி நின்றவிரகுகளும். கங்கையினுடைய நீர்வெள்ளத்தை ஜடையில்யரித்த ப்ரபாவத்தையுடைய ருத்ரனும், "விஷ்ணுராத்தா" என்கிறபடியே ஶரீரவத்பரதந்த்ரனென்னுமிடம் ப்ரஸித்தமாம்படி நின்றதுவும். ருத்ரனையும் தன்னையும் ஸமமாகச்சொல்லலாம்படி த்ரிமூர்த்திமத்யஸ்திதியைச் சொல்லிற்றுகவுமாம். [உள்ளம் என்றுதொடங்கி] - ஜ்ஞாநப்ரஸரணத்வாரமான மநஸ்ஸிலேபுகுந்து, "ஸூக்ஷ்மாத் ஸூக்ஷ்மதரம்" என்கிற ஆத்மாவை நோக்கிமுடியாநின்றன.

ஈடு.—நாலாம்பாட்டு. பௌத்தாவதார வ்ருத்தாந்தம் மிகவும் என்னை நலியாநின்றதென்கிறார். அநுகூலவிஷயத்தில் களவுசொல்லிற்று - கீழ்ப்பாட்டில், ப்ரதிகூலவிஷயத்தில் களவுகண்டபடிசொல்லுகிறது - இப்பாட்டில்.

[கள்ளவேடத்தைக்கொண்டு] - "யதாஹிசோரஸ்ஸ ததாஹிபுத்த:" (யதாஹிசோரஸ்ஸததாஹிபுத்தஃ) என்கிறபடியே, க்ருத்ரிமவேஷத்தைக்கொண்டு. "வேதைஶ்ச ஸர்வைரஹமேவ வேத்ய:" (வேதைஶ்சஸர்வைரஹமேவவேத்யஃ) என்று வேதார்த்ததத்வஜ்ஞனவன், வேதாப்ராமாணிக வேஷத்தைக்கோண்டு. கண்டார் நெஞ்சுகளடங்கலும் அபஹ்ருதமாம்படி, கறுத்துநெய்த்தவடிவும் வடிந்தகாதும் இடுக்கின புஸ்தகமுமாய் நின்றநிலையைக்காணும் நினைக்கிறது. "இவன்சோன்னதுக்கு மேற்பட

நாலாம்பாட்டு.—**கள்ளவேடத்தை** இத்யாதி. "கள்ளவேடத்தைக்கொண்டு" இத்யாதியைக்கடாக்ஷித்து அவதாரிகை - பௌத்த இத்யாதி. "ஶரணாகதஸ்நாநப்ரஶம்ஸா ஜநக:" என்கிற ப்ரகரணத்திலே, யர்மஶௌர்யம்பண்ணின பௌத்தாவதாரவ்ருத்தாந்தம்ஶைய்யில் யஜநகமென்னக்கூடுமோ? என்னில், - கீழ்ப்பாட்டிற்சொன்ன சௌர்யம் ஆஶ்ரிதவிஷயத்திற்செய்ததாகையாலே குணமாய் ஶைப்யில்யஜநகமானுப்போலே, இப்பாட்டிற்சொன்ன சௌர்யமும் ஆஶ்ரிதவிரோதிநிரஸநத்துக்கு உறுப்பாகையாலே குணமாய் ஶைப்யில்யஜநகமாகக்கூடுமென்று விவக்ஷித்து, கீழ்ப்பாட்டோடே இப்பாட்டுக்கு ஸங்கதியருளிச்செய்கிறார் - **அநுகூலவிஷயத்தில்** இத்யாதி வாக்யத்வயத்தாலே. பௌத்தவேஷமென்னாதே, "கள்ளவேடம்" என்று விஶேஷித்ததுக்கு ஹாவம் - யதாஹி இத்யாதி. "யதாஹி சோரஸ்ஸ ததாஹி புத்தஸ் ததாகதம் நாஸ்திகமத்ர வித்தி। தஸ்மாத்தி யஶ்ஶக்யதம: ப்ரஜாநாம் ந நாஸ்திகேநாபி முகோ புதஸ்ஸ்யாத்" (ருச) அயோத்யாகாண்டம் [கoகூ] ஜாபாலிநிராஸ:. "கொண்டு" என்கையாலே - தனக்குச்சேராதத்தை ஏறிட்டுக்கொண்டானென்று விவக்ஷித்து அருளிச்செய்கிறார் - வேதைஶ்ச இத்யாதி. "வேடம்" என்றதுக்குஹாவம் - **கண்டார்** இத்யாதி. "வேடம்" என்று - விக்ரஹஸௌந்தர்யத்தை யருளிச்செய்ததுக்கு ஹாவம் - **இவன்சோன்னதுக்கு** இத்யாதி. விக்ரஹ

அர்த்தமில்லை'' என்று, கேட்டார்நெஞ்சிலே தேறும்படியிறே வடிவையிட்டு மயக்கினபடி. [போய்] - அதாவது - ''காலுக்குட்பட்ட க்ஷுத்ரபதார்த்தங்கள் நோவுபடுகிறது'' என்னும் ஸயந்தோற்றப் போய்க்க அடியிட்டுக்கொண்டு போனபடி. அவர்கள் தாங்கள் ஶாஸ்த்ர விரோதமானவற்றை ப்ரவர்த்தியாநிற்கச்செய்தேயும், முகப்பில்நின்று ஒன்றுபோலேயிருக்க, ''பரஹிம்ஸைபண்ணலாகாது, நிஷித்தத்ரவ்யஸேவைபண்ணலாகாது, க்ருத்ரிமஹாஷணம் பண்ணக்கடவதன்று, விஷயப்ராவண்யமாகாது'' என்றுப்போலே, சிலசொல்லுவர்களாயிற்று; அவையெல்லாம் தோற்றும்படிக்கீடாகப் போனபடி. பெருமாள், ''வனத்துக்கெழுந்தருள'' என்று புறப்பட, ஜாபாலிகன் மீண்டு புகுரும்படிக்கீடாகச் சிலவற்றைச்சொல்ல,

---

ப்ர:—(பெருமாள் வனத்துக்கு எழுந்தருள என்று புறப்பட ஜாபாலிகன் மீண்டும் புகுரும்படிக்கீடாகச் சிலவற்றைச்சொல்ல)— [illegible]

(பெருமாள் சிவிட்கென்று செவியைப் புதைத்து)—[கoகூ] [illegible]

(உன்னைக்கொண்டு கார்யங்கொண்ட ஐயரையன்றோ வெறுப்பது)—[கoகூ] [illegible]

ஸௌந்தர்யத்தாலே அவர்களை விஶ்வஸிக்கும்படி மயக்குகைக்காக க்ஷத்ருஶவேஷத்தை பரிக்ரஹித்தானென்றபடி. கள்ளவேடத்தைக்கொண்டு புறம்புக்கவாறுமென்னுதே, ''போய்'' என்று விஶேஷித்ததுக்குபாவம் - **காலுக்குட்பட்ட** *இத்யாதி.* **போய்க்க** *- மெள்ள. அவர்கள் வைதிகஶாஸ்த்ரத்தையைக் குலைக்கப்புகுகிறானாகில், அஹிம்ஸாதிதர்மம் தோற்றப்போவானேன்? என்ன -* **அவர்கள்** *இத்யாதி. அவர்களென்றது-பௌத்தரை. அவைதிகமதஸ்தாபகாவதாரசேஷ்டிதம் இவரை ஈடுபடுத்தக்கூடுமோ? என்ன,— ஆஶ்ரிதவிரோதிநிரஸநார்த்தமாகையாலே கூடுமென்னுமதுக்கு த்ருஷ்டாந்தத்வேந ஐதிஹ்யம் -* **பெருமாள்** *இத்யாதி. இவ்வாக்யத்தால் - ''ப்ரதிகூலவிஷயத்தில் களவுகண்டபடிசொல்லுகிறது''*

பெருமாள் சிவிட்கென்று செவியைப்புதைத்து, "வாராய், என்முன்னேநின்று யார்மருசிகுலேயும்படிக்கீடாக நாஸ்திகவாதம்பண்ணுவதே, உன்னைவெறுக்கிறதென், உன்னைக்கொண்டு கார்யங்கொண்ட ஐயரையன்றேவெறுப்பது" என்ன; "நாயன்றே, நீர் மீண்டெழுந்தருளித் திருவபிஷேகம்பண்ணியருளி ஸ்ரீபரதாழ்வான்கண்ணிலே கண்ணநீரைமாற்றினவாறே, நான் நாஸ்திகனுகைதவிர்ந்து ஆஸ்திகனும்படிபாரீர்" என்ன; அவ்வளவிலே இவனை **"ஜாபாலிர்ப்ராஹ்மணோத்தம:"** (ஜாபாலிர்ப்ராஹ்மணோத்தம:) - என்றூர்களிறே, நாங்களுமெல்லாம் நூலிட்டிருக்கையாலே, ப்ராஹ்மணரென்று கொள்ளுமித்தனை; **ப்ரஹ்மஸம்பந்தீ** - **ப்ராஹ்மண:** இறே, ப்ராஹ்மணனுகிறன் - ப்ரஹ்மஸம்பந்தியானவனிறே; அதுள்ளது இவனுக்கேயிறே, இவ்வளவிலே லோகாயதமதத்தை உபந்யஸித்தானொருவனிறே. [புரம்புக்கவாறும்] - ஊரைக்கிட்டினபின்பு பண்ணின நியதிகளையெல்லாம் நினைக்கிறது. அதாவது - வையஹிம்ஸையையும் ஸாமாந்யஹிம்ஸையோபாதி யாக்கப் புகுகிறவனுகையாலே, பசும்புல்லும்சாவ மிதியாதே கூசியடியிட்டுப் புக்கபடி. [கலந்து] -

---

(நாஸ்திகனுகைதவிர்ந்து ஆஸ்திகனும்படி பாரீர் என்ன)—[௧௦௯] "இதி ப்ருவந்தம் வசநம் ஸரோஷம் ராமம் மஹாத்மாநமதீநஸத்த்வம் । உவாச பத்யம் புநராஸ்திகஞ்ச ஸத்யம் வச: ஸாநுநயஞ்ச விப்ர: ॥ ௧௭ ॥ ந நாஸ்திகாநாம் வசநம் ப்ரவீம்யஹம் ந நாஸ்திகோஹம் ந ச நாஸ்தி கிஞ்சந । ஸமீக்ஷ்ய காலம் புநராஸ்திகோபவம் பவேய காலே புநரேவ நாஸ்திக: ॥ ௧௮ ॥ ஸ சாபி காலோயமுபாகத: ஶநைர் யதா மயா நாஸ்திகவாகுதீரிதா । நிவர்த்தநார்த்தம் தவ ராம காரணாத் ப்ரஸாதநார்த்தம் து மயைததீரிதம் ॥ ௧௯ ॥"

என்றத்தை ஸ்த்திரீகரித்தபடி. சிலவற்றைச்சொல்ல வென்றது - "ஸாது ராகவ மாபூத்தே புத்திரேவம் நிரர்த்தகா" இத்யாத்யநுஸந்தேயம். செவியைப்புதைத்தென்றது-"ஸுகாயம் காயஸஜ்ஞாஸ மேஸ்யம்வ்யஸ்யஸ்தி தம்" இத்யாதியைப்பற்ற. ஐயரையன்றே வெறுப்பதென்றது- "நிந்தாம்யஹம் கர்ம பிது: க்ருதம் தத் யஸ்த்வாமக்ருஹ்ணாத் விஷமஸ்தபுத்திம் । புத்த்யாநயைவம்விதயா சரந்தம் ஸுநாஸ்திகம் தர்மபதாதபேதம்" என்றத்தைப்பற்ற. நாஸ்திகனுகைதவிர்ந்து ஆஸ்திகனும்படிபாரீர் என்றது - "ந நாஸ்திகாநாம் வசநம் ப்ரவீம்யஹம் ந நாஸ்திகோஹம் ந ச நாஸ்தி கிஞ்சந । ஸமீக்ஷ்ய காலம் புநராஸ்திகோபவம் பவேய காலே புநரேவ நாஸ்திக:" இத்யாதியைப்பற்ற. "ஆஶ்வாஸயந்தம் பரதம் ஜாபாலிர்ப்ராஹ்மணோத்தம: । உவாச ராமம் தர்மஜ்ஞம் தர்மாபேதமிதம் வச:" இத்யயோத்யாகாண்டே அஷ்டஶததமே. எடுத்தஸ்லோகத்துக்கு அர்த்தம் - நாங்களும் இத்யாதி. இவனுக்கு ப்ரஹ்மஸம்பந்தமேதென்ன - இவ்வளவிலே இத்யாதி. இவ்வளவிலேயென்றது - பெருமாள் "நாம் திரும்புவதில்லை, மீண்டுவருமளவும் ராஜ்யத்தைநோக்கிக்கொண்டிரும்" என்று ஸ்ரீபரதாழ்வானை ஆஶ்வஸிப்பிக்கிறவளவிலேயென்றபடி. "புக்கவாறும்" என்றப்ரகாரமேதென்ன - ஊரைக்கிட்டின இத்யாதி . இவ்வர்த்தத்தையென்றது - ஜாபாலியுபந்யஸித்த பௌத்தமதத்தை யென்றபடி. கலக்க

இவர்களிலே யொருவனுய்ப்புக்குநின்று இவ்வர்த்தத்தை உபந்யஸித்தபடி. தன்வார்த்தையை விஶ்வஸிக்கைக்காக இவர்களோடே ஒருநீராய்க்கலந்து பரிமாறினபடி. [அசுரரையுள்ளம்பேதம்செய்திட்டு] - ஆஸுர ப்ரக்ருதிகளான இவர்களுக்கு அவைதிகமதத்தையுபந்யஸித்து வைதிகஶ்ரத்தையைப்போக்கினனாயிற்று. இவர்களுக்கு வைதிகஶ்ரத்தையுண்டோ? என்னில்,—"அக்நிஹோத்ராஶ்ச வேதாஶ்ச ராக்ஷஸாநாம் க்ருஹே க்ருஹே" (அக்நிஹோத்ராஶ்சவேதாஶ்சராக்ஷஸாநாம் க்ருஹேக்ருஹே) இறே. எல்லார்க்கும் சிலவுண்டாகை தவிராதிறே. தர்மருசியுள்ளவையுண்டாகிலும் குலைந்துபோம்படி ப்ரதிபேதங்களைப் பண்ணினனாயிற்று. [உயிருண்டவுபாயங்களும்] - இவர்களுடைய உயிரைப்போக்கின உபாயங்களும். இவர்களுடைய வைதிகஶ்ரத்தையைப்போக்கி ஸர்வப்ராயராம்படிபண்ணி, நின்றானொரு பிக்ஷுகனுக்குங்கூட மேல்விழலாம்படி அவர்களையடியறுத்து, "நான்செய்தேன்" என்று கவிபாடுவித்துக்கொள்ளலாம்படி பண்ணினபடி. "அவன்செய்தான்" என்று சொல்லாநிற்கச்செய்தேயும் இச்செயலொன்றும் அவன்தலையில் அந்வயியாதபடி சொன்னபடிபாரீர்! "விஷ்ணுராத்மா பகவதோ பவஸ்யாமிததேஜஸ꞉। தஸ்மாத்தநுர்ஜ்யாஸம்ஸ்பர்ஶம் ஸ விஷேஹே மஹேஶ்வர꞉" (விஷ்ணுராத்மாபகவதோபவஸ்யாமிததேஜஸ꞉- தஸ்மாத்தநுர்ஜ்யாஸம்ஸ்பர்ஶம்ஸவிஷேஹேமஹேஶ்வர꞉) - என்கிறபடியேயிறே - சேதநனைக்கொண்டு கார்யங்கொண்டத்தோடு, அசேதநத்தைக்கொண்டு கார்யங்கொண்டத்தோடு, வாசியில்லை. ருத்ரன்தன்னோடு அவன் கையில்வில்லோடு வாசியில்லை இவனுக்கு. காரணாவஸ்த்தையில் சிதசித்துக்களைக்கொண்டு கார்யங்கொண்டவோபாதி யாயிற்று. முன்பு அவன்தானே செய்வானாகக்கொண்டெடுத்துப்பார்த்தானிறே; அதுமுடியாதொழிய, பின்பு இவன் உள்ளீடாய் நிற்கையிறே செய்து தலைக்கட்டவல்லனாயிற்று. பண்டு ஒருராஜா, "ருத்ரதத்த்வமே பரதத்த்வம்"

வேண்டுவானென்? என்ன - தன்வார்த்தையை இத்யாதி. வைதிகஶ்ரத்தையைக் குலைக்கைக் கடியென்? என்னில் - "ஶ்ரத்தாம் ஸகலஸத்தாநாம் ஸஹஜாம் அகாரணம் । உவொஷித ஸ்வதர்மஸ்ய காரணம் பரமம் ஹி ஸா" என்றருளிச்செய்வர். 'அக்நிஹோத்ராஶ்ச வேதாஶ்ச ராக்ஷஸாநாம் க்ருஹே க்ருஹே। யாஜ்ஞத்யஶ்ச யஜ்ஞா ராக்ஷஸாநாம் நிவேஶநே'.

இவனே ஸம்ஹரித்தான், ருத்ரனன்றோ ஸம்ஹரித்தவன்? என்ன - இவர்களுடைய இத்யாதி. அடியறுத்தென்றது - ஸலஹாநியைப்பண்ணியென்றபடி. நின்றானொருபிக்ஷுகனுக்குங்கூட - இன்னானென்று பேருமில்லாத பிக்ஷுகனுக்குங்கூடவித்யர்த்த꞉ வ்யாக்யாதாவின் ஈடுபாடு - அவன்செய்தான் இத்யாதி. "ருத்ரன்செய்தான்" என்று ப்ரமாணம்சொல்லாநிற்க, ஸர்வேஶ்வரன் த்ரிபுரதஹநம் பண்ணினானென்கிறது என்கொண்டென்ன; ப்ரமாணங்கொண்டென்கிறார் - விஷ்ணுராத்மா இத்யாதி. "விஷ்ணுராத்மா பகவதோ பவஸ்யாமிததேஜஸ꞉। தஸ்மாத்தநுர்ஜ்யா ஸம்ஸ்பர்ஶம் ஸ விஷேஹே மஹேஶ்வர꞉" இதி ஹோரஹாரபதே (கர்ணபர்வணி).

சேதநனைகையாலே ருத்ரனுக்கும் இதில் அந்வயமில்லையோ? என்ன - சேதநனை இத்யாதி. விவரணம் - ருத்ரன்தன்னோடு இத்யாதி. சிதசித்விஶாகமறக் காரியங்கொள்ளக் கண்டவிடமுண்டோ? என்ன - காரணாவஸ்த்தை இத்யாதி. "தஸ்மாத்-ஸவிஷேஹே" ன்றதுக்கர்த்தம் - முன்பு அவன் இத்யாதி. "தஸ்மாத்" என்றதின் அர்த்த ஸாமார்த்யத்தாலே-முன்பெடுத்துப்பார்க்க, முடியாதொழிந்தது ஸித்தம். "இவன் அந்தராத்மாவாய் நிற்கையாலே செய்தான்" என்றதால் ஃபலிதமான ருத்ரோச்ச்ராயஹேதுபூதத்வத்துக்கு ஐதிஹ்யம் - பண்டொருராஜா இத்யாதி. ஒருவரென்றது - ஆழ்

என்றெழுதி, ''எழுத்திட்டுத்தாருங்கோள்'' என்ன, அப்படி பலரும் எழுதி யெழுத்திடா நிற்கச்செய்தே; ஒருவர், '' வாராய், நீ இவ்வோலைகேடாமே நோக்கிவைத்தாலிறே இவனுடையபரத்வம் ஸாதிக்கலாவது; நீ நினைக்கிற தேவதைக்குண்டான உச்ச்ராயங்கள் 'ஸர்வேஶ்வரனாலே' என்று ப்ரமாணங்கள் சொல்லாநின்றன; ஆனபின்பு, இன்று, நீ சொல்ல, நான் எழுத்திட்டுப்போகிறேன்; நாளை ஒருவிவக்ஷிதன்தோன்றி ' இவன் அஜ்ஞனாயிருந்தானீ!' என்னக்கேட்பதில் இன்று நீ நினைத்தத்தைச் செய்துகொள்ளமாட்டாயோ '' என்றார். [உபாயங்களும்]-அப்போதிருந்து சிந்தித்தவற்றையெல்லாம் நினைக்கிறது. [வெள்ளநீர் இத்யாதி] - இதுக்கு ஆளவந்தார் அருளிச்செய்ததாகத் திருமாலையாண்டான் பணிக்கும்படி,—'' ப்ரஹ்மருத்ரர்கள்நடுவே நின்றதொரு முதல்களவுண்டு, அத்தைச்சொல்லுகிறது'' என்றாயிற்று. அதாவது-ருத்ரனையும் தன்னையும் ஸமமாகச்சொல்லலாம்படி த்ரிமூர்த்தி மத்யஸ்த்திதியைச் சொல்லுகிறதென்று. இத்தை எம்பெருமானார் கேட்டருளி, '' அழகிது, ஆகிலும் அத்தனைதூரம் தேடிப்போகவேணுமோ, இவன்தன்விஷயத்திறே முன்புபண்ணின உபகாரத்துக்கு ஓரளவுண்டோ, இதுதானே யமையாதோ '' என்று அருளிச்செய்தார். [வெள்ளநீர் இத்யாதி]-கங்காஜலத்தைத் தன்ஜடையில் ஏகதேஶத்திலே தரித்த ப்ரஸாவத்தையுடைய ருத்ரனும் உன்பக்கல் வேறல்லாதபடிதோற்ற நின்றமையும். அதாகிறது - '' ஶரீரஹேதன் '' என்னுமிடந்தோற்றநின்றபடி. இங்ஙன்சொல்லுகிறதேன், ஐக்யமாகக் காண்டாலோ ? இத்தையென்னில்,—அங்ஙன் கொள்ளுமன்று ''விஷ்ணுராத்மா'' (விஷ்ணுராத்மா) என்கிற ப்ரமாணத்துக்கு விஷயமின்றிக்கே யொழியுமே. '' நலந்திகழ் சடையான்முடிக்கொன்றைமலரும் நாரணன்பாதத்துழாயுங் கலந்திழிபுனலால் புகர்படு கங்கை''. அவனுடைய ஶேஷத்வத்துக்கும் இவனுடைய ஶேஷித்வத்துக்கும் ப்ரமாணம் ஒரு வெள்ளமென்கிறார்காணும். ருத்ரன்ஜடையில் கொன்றையும் ஸர்வேஶ்வரனடியில் திருத்துழாயும் கூடிவந்திழிகிறபடி. [உள்ளமுள்குடைந்து] - என் அந்தஃகரணத்தைப் புக்கு அவகாஹித்து, '' அச்சேத்யோயமதாஹ்யோயம் '' (அச்சேத்யோயமதாஹ்யோயம்) என்கிற ஆத்மாவைப் புக்கு அழித்து நோவுபடுத்தாநின்றது. ஜ்ஞாநப்ரஸரத்வாரமான மநஸ்ஸிலேபுகுந்து ஆத்மாவை நீராக்கிமுடியாநின்றன. (௪)

(உயிரையுருக்கி)—ஸ்ரீகீதாஸுக்தியே '' அச்சேத்யோய மதாஹ்யோய மக்லேத்யோஶோஷ்ய ஏவ ச । நித்ய ஸர்வகத ஸ்தாணு ரசலோயம் ஸநாதந: ॥ உ௪ ॥ ''

வானை. ஸஹவசநார்த்தம் - அப்போது இத்யாதி. முதற்களவாவது - ''த்ரைவிஷ்டபமிஷ்டு'' என்கிறபடியே யவதரித்து, அவர்களோடே ஸஹபடிக்கலாம்படியிருக்கிற த்ரிமூர்த்திமத்ய ஸ்த்திதியை. முன்புபண்ணினவென்றது - த்ரிபுரதஹநஸமயத்தில் அந்தராத்மாவாகை முதலானவை. எம்பெருமானார் நிர்வாஹத்திலே ஶப்தார்த்தம் - கங்காஜலத்தை இத்யாதி. ப்ரமாணாந்தரவிரோதமுங்காட்டுகிறார் - நலந்திகழ் இத்யாதி. ஒருவெள்ளமென்றது - சாடு. கங்கையென்னுதல், ப்ரவாஹம்போலே அநேகமென்னுதல். இதுக்கர்த்தம் - ருத்ரன்ஜடையில் இத்யாதி. நலந்திகழ் இத்யாதி - பெரியாழ்வார்திருமொழி, நாலாம்பத்து, ஏழாந்திருமொழி, இரண்டாம்பாட்டு, '' கலம்போதி '' இத்யாதி. நலந்திகழ் இத்யாதிக்கர்த்தம் - திருவடிகள்விளக்கின தீர்த்தத்தை தரித்துக்கொண்டிருக்கிற நன்மை விளங்காநின்ற ஜடையையுடையனான ருத்ரனுடைய ஶிரஸ்ஸில் கொன்றைப்பூவும், அவனுக்கு ஶரீரியும் ஶேஷியுமான நாராயணனுடைய திருவடிகளில் திருத்துழாயுமான இரண்டோடுங்கலந்து ஆகாசத்தினின்றும் பூமியிலே விழுந்து ப்ரவஹிக்கிறஜலத்தால் ஒளியையுடைத்தாயிருந்துள்ள கங்கையென்றபடி. 'உள்ளமுள்'' என்றது - மநஸ்ஸுக்குள்ளென்றபடி. (௪)

ஐந்தாம் பாட்டு.

உண்ணவானவர்கோனுக்கு ஆயரொருப்படுத்தவடிசிலுண்டதும்
வண்ணமால்வரையையெடுத்து மழைகாத்ததும்
மண்ணைமுன்படைத்துண்டுமிழ்ந்து கடந்திடந்துமணந்தமாயங்கள்
எண்ணுந்தோறுமென்னெஞ்சு எரிவாய்மெழுகோக்கும்நின்றே.

ஆ.—(உண்ண.) உண்ணவானவர்கோனுக்கு ஆயரொருப்படுத்தவடிசிலுண்டதும்; இந்த்ரன் க்ருத்தனாய்வர்ஷிக்க, நாநாவர்ணமான பெரியமலையையெடுத்து மழைகாத்ததும்; ஜகத்ஸ்ருஷ்ட்யாதிகளைப் பண்ணினதுவும், இப்படிசெய்தருளின ஆஸ்சர்யங்களை யநுஸந்திக்குந்தோறும் என்னுடையமநஸ்ஸு, நெருப்பிலேபுக்க மெழுகுபோலே ஒருகாலேமுடியாதே நின்று உருகாநின்றதென்கிறார்.

ஒ.—அஞ்சாம்பாட்டில், ஆஸ்ரிதவிஷயமாகச்செய்த சேஷ்டிதங்களும் அநுஸந்திக்குந்தோறும் என்மநஸ்ஸு அறவழியாநின்றது என்கிறார்.

[ஒருப்படுத்த] - சமைத்த. [வண்ணமால்வரையையெடுத்து மழைகாத்ததும்] - இந்த்ரன் க்ருத்தனாய் வர்ஷிக்க நாநாவர்ணமான பெரியமலையை எடுத்து மழை அவர்கள்மேல்படாமே காத்ததும். [மண்ணை என்றுதொடங்கி] - ஜகத்ஸ்ருஷ்ட்யாதிகளைப் பண்ணுவதும்செய்து ஜகதுஹ்மாகிநியான பிராட்டியோடு ஸம்ஸ்லேஷித்து இப்படி செய்தருளின ஆஸ்சர்யங்களை அநுஸந்திக்குந்தோறும் என்னுடைய மநஸ்ஸு நெருப்பிலேபுக்க மெழுகுபோலே ஒருகாலே முடியாதே நின்று உருகாநின்றது.

ப.—அநந்தரம், அதிமாநுஷசேஷ்டிதங்களை அநுஸந்திக்குந்தோறும் என்னெஞ்சு, அக்நிஸகாஸத்தில் மெழுகுபோலே யாகாநின்றதென்கிறார்.

வானவர்கோனுக்கு - ஸபரிகரனான இந்த்ரனுக்கு,உண்ண - புஜிக்கைக்காக, ஆயர் - (பஸுரக்ஷணதத்பரரான) இடையர், ஒருப்படுத்த - ஸோத்யோகராய்ச்செய்த, அடிசில் - அடிசிலை, உண்டதும் - (கோவர்த்தநரூபியாய்க்கொண்டு) அமுதுசெய்ததும், வண்ணம் - யாதுக்களாலே நாநாவர்ணமாய், மால்-பெருத்திருக்கிற, வரையை - மலையை, எடுத்து-எடுத்து, மழை-(ஆராதநபங்கத்தாலே க்ருத்தனான இந்த்ரன் ப்ரவர்த்திப்பித்த) மழையை, காத்ததும் - தடுத்ததும், (இப்படி விஸேஷவிஷயமன்றியே), மண்ணை - (பூம்யுபலக்ஷிதமான) ஜகத்தை, முன்-ப்ரதமத்திலே, படைத்து - ஸ்ருஷ்டித்து, உண்டு - ப்ரளயம்வந்தவாறே வயிற்றிலேவைத்துநோக்கி, உமிழ்ந்து - (அநந்தரத்திலே) உமிழ்ந்து, கடந்து-(அந்யாபிமாநம்தீரும்படி) அளந்து, இடந்து - (அவாந்தரப்ரளயத்திலே வராஹரூபியாய்) இடந்து, மணந்த - ப்ரளயோத்த்ருதையான பூமியோடே ஸம்ஸ்லேஷித்த, மாயங்கள் - ஆஸ்சர்யகுணசேஷ்டிதங்களுமானவிவை, எண்ணுந்தோறும் - இத்தையநுஸந்திக்கும் காலந்தோறும், என்-என், நெஞ்சு-நெஞ்சானது, நின்று-ஒருபடிப்பட, எரி வாய்-அக்நியிடத்தில், மெழுகொக்கும் - மெழுகுபோலே த்ரவியாநின்றது.

இ.—அஞ்சாம்பாட்டில், ஆஸ்ரிதவிஷயமாகவும் ஸர்வவிஷயமாகவும் பண்ணின சேஷ்டிதங்களை யநுஸந்திக்குந்தோறும் என்மனஸ்ஸு அழியாநிற்குமென்கிறார்.

[உண்ண இத்யாதி] - ஸபரிகரனை இந்த்ரனுக்கு ருஜுக்களான கோபர் சமைத்தவடிசிலை, "மொவஷ-ழ்மெ.நாஷி" என்று அமுதுசெய்ததும். "முன்னிருந்துமுற்றத்தான் துற்றியதெற்றெனவும்". மஹிஷியைப் பிறர்க்குக்கொடுத்தாப்போலேயாயிற்று ஆம்ரிதஸ்பர்ஸமுள்ள த்ரவ்யத்துக்கு தேவதாந்தரஸ்பர்ஸம். இந்த்ரன் க்ருத்தனாய் வர்ஷித்தான்; அநுகூலனுக்கு காதாசித்கமாகவந்ததாகையாலே, ராவணாதிகளைப்போலே அழியச்செய்திலன். [வண்ணமால்வரை] - தாதுக்களாலே நாநாவர்ணமான பெரியமலை. இவர்தாம் அதிலே ஈடுபடுகிறார். "பசிக்ராஹத்தாலே வர்ஷித்தானாகில் தானேவிடுகிறான்" என்று ஆந்ருஸம்ஸ்யத்தாலே மலையையெடுத்து, ரக்ஷ்யவர்க்கம் நோவுபடாமல் காத்ததுவும். [மண்ணை இத்யாதி] - "வேண்டா" என்றாலும் தேவதாந்தரஸ்பர்ஸம் தவிர அறியாதவர்கள்விஷயத்திற்செய்யுமவை சொல்லுகிறது. அர்த்தித்வாதிநிரபேக்ஷமாக ஜகத்தை ப்ரதமத்திலே ஸ்ருஷ்டித்து, ப்ரளயாபத்துவந்தவாறே எடுத்துத் திருவயிற்றிலேவைத்துநோக்கி, வெளிநாடுகாண உமிழ்ந்து, மஹாபலியபஹரிக்க எல்லைநடந்து மீட்டுக்கொண்டு, பின்பு அவாந்தரப்ரளயங்கொண்ட பூமியை மஹாவராஹமாய் எடுத்து, அதெல்லாம் பூமிக்கு அபிமாநிநியான பிராட்டிக்காகையாலே அவள்விரும்பியணைக்க அவளோடுஸம்ஸ்லேஷித்து, இப்படிசெய்தருளின ஆம்சர்யசேஷ்டிதங்களை. [எண்ணுந்தோறும்]-எண்ணப்புகுவது, முடியஅநுஸந்திக்கமாட்டாதொழிவதான பரிவ்ருத்திதோறும். [என்னெஞ்சு] - நாட்டார் இதடங்க அநுஸந்தித்து உண்டுடுத்துத்திரிய, நினைத்தவாறே மிருதுவானநெஞ்சானது அக்நியையணைந்தமெழுகுபோலே நின்று உருகாநிற்கும். முடிவதும்செய்யாதே தரிப்பதும்செய்யாதே நிற்கை. எண்ணுகைக்கு அவஸாநமில்லாமையாலே உருகுகைக்கும் அவஸாநமில்லை.

ஈடு.—அஞ்சாம்பாட்டு. ஆஸ்ரிதவிஷயமாகவும் ஸர்வவிஷயமாகவும்பண்ணின சேஷ்டிதங்களை யநுஸந்திக்குந்தோறும் என்மநஸ்ஸானது மிகவும் அழியாநின்றதென்கிறார்.

[உண்ண இத்யாதி] - வானவர்கோனுக்கு-உண்ண - ஆயரொருப்படுத்தவடிசிலுண்டதும். தான் பிறந்துவளருகிறவூரிலே சிலர் வர்ஷார்த்தமாக இந்த்ரனுக்குச் சமைத்த அடிசிலைத் தான் புகுந்து பூஜித்த அதுவும். "நாம்பிறந்துவளருகிறவூரிலே வேறேயும் ஓராஸ்ரயணீயவஸ்துவுண்டாகையாவதேன்?" என்று பொறாமையாலே; "வாரீர்கோள், இந்த்ரனாகிறானேவன், கண்டறியாதானொருவனே! நமக்கு உபகரிக்கப்புகுகிறான்; ஆனபின்பு, மேகங்களும்வந்து பணியும்படிக்கீடாய், புல்லுந்தண்ணீருமுடைத்தாய், பசுக்களுக்கும் இடங்கொடுத்துநிற்கிற மலையன்றோ நமக்கெல்லாம்கடவது" என்று சொல்ல, இடையராகையாலே சொல்லிற்றைக்கேட்பார்சிலரோ, இனி இவன்தானே சொன்னவை

அஞ்சாம்பாட்டு —உண்ண இத்யாதி. "அடிசிலுண்டதும், மழைகாத்ததும்" இத்யாதிகளைக்கடாக்ஷித்து அவதாரிகை - ஆஸ்ரித இத்யாதி.

"ஆயர் - வானவர்கோனுக்கு - உண்ண - ஒருப்படுத்த அடிசிலுண்டதும்" என்று அந்வயிப்பது. வர்ஷார்த்தம் - தான்பிறந்து இத்யாதி. இந்த்ரனுக்கு இட்டத்தைத் தான் புஜிக்கைக்கு ஹேதுவேதென்ன - நாம்பிறந்து இத்யாதி. ஒருப்படுத்த - ஸோத்யோகராய்ச்சமைத்த இத்யர்த்தః எவன் - ஒருவனில்லையென்று க்ஷேபத்திலே. இதுக்குஹேது - கண்டறியாதான் என்றது. காணப்படாதவனென்றபடி. இவன் நாஸ்திகமாகச்சொன்னால் கேட்கிறதென்? என்ன, - ஹேதுத்வயம் - இடையராகையாலே இத்யாதி, இனிஇவன்தான் இத்யாதி. இந்த்ரனுக்கு இடையரிடுகிறவித்தால்

மறுக்கவொண்ணாதபடியாயிருக்குமே; ''இம்மலையின்முன்னேயிடுங்கோள்'' என்ன, அங்கே கொடுவந்து குவித்தார்கள்; அத்தைத் தான் புக்கிருந்தமுதுசெய்தான். தனக்கு அஸாதாரணராயிருப்பாருடைய த்ரவ்யத்தை வேறேசிலர்க்குக் கொடுக்கையாவது, மஹிஷீஸ்வேதத்தைப் பிறர்க்குக்கொடுத்தமாத்ரமிறே. அவன்தன் பரிகரத்தோடுங்கூட இதுகொண்டுத்ருப்தனாகவிருக்க, இத்தைத்தான் கைக்கொண்டானாயிற்று. அவன் க்ரோதத்தாலே வர்ஷிப்பிக்கத்தொடங்கினான் [வண்ணமால்வரை இத்யாதி] - அடைகொண்டு பாழ்போக்குவானொருவனன்றே. '' நம்மஹிமதம்பெற்றோமாகில் என்செய்தால் நல்லது '' என்று போகட்டுப் போகாதே, நாநாவானபாதுக்களையுடைத்தாய் ஒருவரால் கணிசிக்கவொண்ணாத பெரிய மலையை, ஸுகுமாரமான கையைக்கொண்டு ஏழுநாள் ஒருபடியேதரித்து, ஒருபசுவின் மேலேயாதல் ஓரிடையன்மேலேயாதல் ஒருதுளிவிழாதபடி காத்ததும். அவனை நிரஸிக்கலாயிருக்கச்செய்தேயும், ''தேவப்ரக்ருதியான இவனை நலிகிறதேன், பசிக்ராஹத்தாலே செய்தானாகில் தானே கையோய்ந்துவிடுகிறான், அவ்வளவும் நம்ரக்ஷ்யவர்க்கத்தை நாம் கடகிட்டுநோக்குவோம்''என்றுஆந்ருஸம்ஸ்யங்கொண்டாடிவிட்டான்.''நம்விபூதியைஇவன் நோக்கவல்லன், இவன்கண்ணுடையன் '' என்றிறே இவனைத் தான் இங்குத்தைக்கிட்டது, இப்படியிருக்கச்செய்தேயும் இவன்கண்ணறையர்செய்வதைச் செய்தான். [மண்ணை இத்யாதி] - ''வேண்டா'' என்றாலும் தேவதாந்தரஸஜநம்தவிராதார் ஓர் ஊரளவன்றிக்கே, இருக்கிற ஜகத்திலுள்ளார்விஷயத்திற்செய்யு மவற்றைச்சொல்லுகிறது. அர்த்தித்வாதிநிரபேக்ஷமாக இவற்றையுண்டாக்கி, ப்ரளயாத்யாபத்துக்கள்வர இவைநோவுபடாதபடி வயிற்றிலேவைத்துநோக்கி, ''உள்ளேகிடந்து மறைந்துபோகவொண்ணாது'' என்றுபார்த்து வெளிநாடுகாணப் புறப்படவிட்டு, பின்பு மஹாபலிபோல்வார் அபஹரிக்க எல்லைநடந்து மீட்டுக்கொடுத்து,பின்பு அவாந்தரப்ரளயங்கொண்டபூமியை மஹாவராஹமாய் எடுத்துக்கொண்டேறி, இவையெல்லாம் பிராட்டிப்படுக்கைப்பற்றாகையாலே அவளுக்கு ப்ரியமாகச்செய்து அவளோடேஸம்ஸ்லேஷித்த ஆஸ்சர்யமான சேஷ்டிதங்களை. [மணந்த] - ஸம்ஸ்லேஷித்த. [எண்ணுந்தோறும்] - அவனுடைய ரக்ஷணத்திலும் பரப்புண்டாகாதே இவருடையபாரிப்பு. எண்ணமாட்டார், எண்ணாதிருக்கமாட்டார், ரக்ஷணத்துக்கு அவன் சமைந்தாப்போலேகாணும் அழிகைக்கு இவர்சமைந்தபடி. [என்னெஞ்சு] - இத்தையநு

தனக்குஹாநியேது, ''அவர்களிட்டால் இட்டுப்போகிறார்கள்'' என்றிருக்கவொண்ணாதோ? என்ன - **தனக்குஅஸாதாரண** *இத்யாதி. இந்த்ரனென்னாதே, ''வானவர்கோன்'' என்றதுக்குபாவம் -* **அவன் தன்பரிகரத்தோடும்** *இத்யாதி. மேலுக்கவதாரிகை -* **அவன்க்ரோத** *இத்யாதி. தன்காயமானால ''பட்டதுபடுகிறது'' என்றிருக்கவொண்ணாதோ? என்ன -* **அடைகொண்டு** *இத்யாதி.* **அடைகொண்டு பாழ்போக்குவான்** *- ''ரக்ஷிக்கிறோம்'' என்று கைக்கொண்டு கைவிடுவானென்றபடி; யத்வா, ஒரு வன்க்ஷேத்ரத்தை வாங்கிப் பாழேபோக்குவானென்னுதல்; அடையென்று - இலட்சமாய, ரக்ஷ்யவஸ்துவைக்கைக்கொண்டு கைவிடுவானென்னுதல். ஸப்தார்த்தம் -* **நாநாவான** *இத்யாதி. மலையெடுக்கைக்கு ஸக்தனானவன் ஸாபராதனைநிரஸிக்கலாகாதோ? என்ன -* **அவனைநிரஸிக்கலாய்** *இத்யாதி.* **பசிக்ராஹம்** *- பசிக்கோபம்.* **கடகிட்டு** *- பரிசையையிட்டு.* **கடகு** *- பரிசை* **ஆந்ருஸம்ஸ்யங்கொண்டாடுகைக்கு** *இவன்செய்தவுபகாரமேதென்ன -* **நம்விபூதி** *இத்யாதி.* **கண்** *- கண்ணும், தயையும், இது சாடு.* **கண்ணறையர்** *- அந்தாஃ, க்ருபா ரஹிதாஸ்ச. ''மாயங்கள்'' என்றது - மாயங்களையென்றபடி. எண்ணும்போதென்னாதே, 'எண்ணுந்தோறும்'' என்றதுக்கு பாவம் -* **அவனுடைய** *இத்யாதி.* **அதாவது** *- ரக்ஷணத்துக்கு உறுப்பான வ்யாபாரம் அநேகமானாப்போலே, அவற்றைப்பற்றிவருகிற இவர்பாரிப்பும் அநேகமென்றபடி. பாவாந்தரமாதல், கீழ்வாக்யவிவரணமாதல் -* **எண்ணமாட்டார்** *இத்*

ஸந்தித்தே நாட்டார் உண்டுடுத்துக் காலம்போக்கா நின்றார்களிறே. [எரிவாய்மெழுகோக் கும்] - அக்நிஸகாசத்தில் மெழுகுபோலே உருகாநின்றது. [நின்றே] - அது ஒருகாலே யுரு குதல் கரிதல்செய்யுமிறே, இது உருகினபடியே இராநின்றது. (3)

ஆறும் பாட்டு.

நின்றவாறுமிருந்தவாறும் கிடந்தவாறும்நினைப்பரியன
ஒன்றலாவுருவாய் அருவாயநின்மாயங்கள்
நின்றுநின்றுநினைகின்றேன் உன்னையெங்ஙனம்நினைகிற்பன்?பாவி
யேற்கு ஒன்றுநன்குரையாய் உலகமுண்டவொண்சுடரே!

ஆ.—(நின்றவாறும்.) ராமக்ருஷ்ணாவதாரங்களில் நின்றருளுகை தொடக் கமாயுண்டான சேஷ்டிதங்களையும், மற்றும் நினைக்கவரியவாய் அநேகப்ரகாரமாய் எனக் குத் தோற்றுதிருக்கிற உன்னுடைய ஆச்சர்யமான சேஷ்டிதங்களையும், நினைக்கும்படி நின்றுநின்று ஆராயாநின்றேன்; உன்னை எங்ஙனேநினைப்பன். ப்ரளயத்தில் ஜகத்துக்கு வந்த ஆபத்தைநீக்கி உஜ்வலனானநீ, உன்னுடைய குணப்ரஸங்கத்திலே ஸிதிலனுகைக் கீடான பாபத்தைப்பண்ணின என்னுடைய மைதில்யம்போய் நான்யுதரிப்பதொரு நல்விரகுசொல்லவேணுமென்கிறார்.

ஒ.—ஆறும்பாட்டில், உன்னுடைய ஸகலசேஷ்டிதங்களும் காணப்பெறாத நான் அவற்றைநினைக்கவும் க்ஷமனாகிறிலேன், தரித்துநின்று அநுஸந்திக்கவல்லேனும்படி பண்ணியருளவேணுமென்கிறார்.

[நின்றவாறு என்றுதொடங்கி] - ராமக்ருஷ்ணாவதாரங்களிலும் உகந்தரு ளின கோயில்களிலும் நின்றருளுகை தொடக்கமாக உண்டான சேஷ்டிதங்களையும் மற் றும், நினைப்பார்க்கு மைதில்யஹேதுவாகையாலே நினைக்க அரியவாய் அநேகப்ரகாரமாய் எனக்குத் தோற்றுதிருக்கிற உன்னுடைய ஆச்சர்யமான சேஷ்டிதங்களையும். [நின்று என்று தொடங்கி] - வருந்தி உன்னை நினைக்கப்புகுவன் நினைக்கமாட்டுகிறிலேன். உன்னை நினைக்கும்படி நின்றுநின்று ஆராயாநின்றேன். உன்னை எங்ஙனே நினைப்பேன் என்று மாம். [பாவியேற்கு என்றுதொடங்கி] - ப்ரளயார்ணவத்திலே இஜ்ஜகத்தையெல்லாம் திருவயிற்றிலேவைத்து பரிஹரித்தருளி " இதுசெய்யப்பெற்றோம் " என்னும் ஹர் ஷப்ரகர்ஷத்தாலே உஜ்வலனான நீ ஜகத்துக்குவந்த ஆபத்தை நீக்கினாற்போலே உன்னு டைய குணப்ரஸங்கத்திலே ஸிதிலனுகைக்கு ஈடான பாபத்தைப்பண்ணின என்னு டைய மைதில்யம்போய் நான் தரிப்பதொருநல்விரகு அருளிச்செய்யவேணும்.

ப.—அநந்தரம், ஸ்த்தித்யாஸநசயநாதிவ்யாபாரங்கள் ஒருபடிப்பட நினைக் கலாயிருக்கிறதில்லை, நான் நினைக்கவல்லனும் ப்ரகாரம் அருளிச்செய்யவேணுமென்கிறார்.

யாதி. அதாவது - ஈடுபாட்டால் வந்த மைதில்யத்தாலே யநுஸந்திக்கமாட்டார், அநுஸந்தியாதபோது தரித்திருக்கமாட்டாமையாலே எண்ணுதிருக்கமாட்டாரென்றபடி. "என்" என்றதுக்குபாவம் - இத்தை இத்யாதி. க்ரமேணுர்வய:. (ரு)

(திருவூரகம், திருப்பாடகம் திருவெஃகா இவற்றிலே), நின்றவாறும் - நின்றபடியும், இருந்தவாறும் - இருந்தபடியும், கிடந்தவாறும் - கிடந்தபடியும், (அப்படி ஆஸ்ரிதஹ்ருதயங்களிலே "திஷ்டந்" என்றும் "ஆஸீந" என்றும் "ஶேதே" என்றும் ப்ரமாணஸித்தமாம்படி வர்த்தித்தபடியாகவுமாம்), நினைப்பு - நினைக்கைக்கு, அரியன - அரியவாயிராநின்றன; (இப்படி), ஒன்று-ஒருபடி, அலா-அல்லாத, உருவாய்-ஆகாரத்தையுடையவனாய், அருவாய - எனக்கு அநுபவிக்கைக்கு உருத்தெரியாத, நின் - உன்னுடைய, மாயங்கள் - ஆஶ்சர்யசேஷ்டிதங்களானவற்றை, நின்றுநின்று - ஶிதிலமான நெஞ்சை ஶைதில்யந்தோறும் நின்றுநின்றுவருத்தி, நினைகின்றேன் - முட்டநினைக்கப் பாராநின்றேன்; உன்னை - (ஶைதில்யாவஹசேஷ்டிதனை) உன்னை, எங்ஙனம் - எங்ஙனே, நினைகிற்பன் - ஒருபடிப்பட நினைக்கவல்லேனாவேன்? பாவியேற்கு - (ஸ்திரசிந்தைபண்ணமாட்டாத) பாபத்தையுடையேனான எனக்கு, உலகம் - ப்ரளயாபத்திலே யழிகிறஜகத்தை, உண்ட - அமுதுசெய்துநோக்கி, ஒண்சுடரே - அத்யுஜ்ஜ்வலனானவனே! (ஶைதில்யார்ணவத்தில் அழுந்தாதபடி "ஸ்தெளஹி" என்னும்படியாக), ஒன்று - அத்விதீயமாயிருப்பதொரு, நன்கு - விலக்ஷணோபாயம், உரையாய் - அருளிச்செய்யவேணும். நின்றவாறும் இருந்தவாறும் கிடந்தவாறுமென்று - க்ருஷ்ணாவதாரத்திலே தொட்டிலுக்குள்ளே நின்று இருந்து கிடந்தபடியையுஞ்சொல்லுவார்.

ஈ.—ஆறும்பாட்டில், உன்னுடைய ஸகலசேஷ்டிதங்களையும் காணவாசைப்பட்டநான், அவற்றைநினைக்கவும் க்ஷமனாகிறிலேன்; ப்ரளயாபத்தில் ஜகத்தைரக்ஷித்தாப்போலே, அநுஸந்திக்கவல்லேனாம்படி பண்ணவேணுமென்கிறார்.

[நின்ற இத்யாதி] - "க்வதிஷ்டஸி", "உபவிஶாஸீநஹ", "யோஹம்ஸஜலஶாயீ" என்று திருக்குரவையிலேநின்றும், பெண்களோடேகழகமிருந்தும், அவர்கள்மடியிலே சாய்ந்தும், அர்ச்சாவதாரத்திலும், "நின்றதெந்தையூரகத்து" இத்யாதி. "நிற்பதுமோர்வெற்பகத்து" நின்றுமிருந்துங்கிடந்தும் உண்டானசேஷ்டிதங்களையும், அவன்நிலையை அநுஸந்தித்தபோது "நிலையாரநின்றான்" என்பர்கள்; இருப்பை அநுஸந்தித்தபோது "பிரானிருந்தமைகாட்டினீர்" என்பர்கள்; கிடையை அநுஸந்தித்தபோது "கிடந்ததோர் கிடக்கை" என்பர்கள். [நினைப்பரிய] - உபக்ரமத்திலே ஶைதில்யஹேதுவாகையாலே நினைக்க அரியனவாய். [ஒன்றலாவுருவாய்] - அநேகமான ப்ரகாரங்களாய். [அருவாயநின்மாயங்கள்] - எனக்குத்தோன்றாதிருக்கிற, நின்மாயங்கள் - உன்னுடைய ஆஶ்சர்யசேஷ்டிதங்களையும். [நின்றுநின்று இத்யாதி] - உபக்ரமத்திலே, ஶிதிலனாய் வருந்திவருந்தி நினைக்கிற நான், உன்னை எங்ஙனே நினைத்துத்தலைக்கட்டும்படி. நினைக்கும்படியை நின்றுநின்று ஆராயாநின்றேன், உன்னை எங்ஙனம் நினைகிற்பனென்றுமாம். நினையாதிருக்கமாட்டார் விஷயவைலக்ஷண்யத்தாலே, நினைக்கமாட்டார் ஶைதில்யத்தாலே. [பாவியேற்கொன்றுநன்குரையாய்] - உன்குணப்ரஸங்கத்திலே ஶிதிலனாம்படி பாபத்தைப்பண்ணின எனக்கு, தரித்துநின்று அநுபவிக்கைக்கு ஒருநல்விரகுசொல்லாய், நினைக்கவும்வல்லதாய் அத்தாலே அபிமதங்களையும் பேறுநின்றதிறே நாடாக. [உலகமுண்டவொண்சுடரே] - அபேக்ஷையுமின்றிக்கே உபகாரஸ்ம்ருதியுமின்றிக்கே யிருக்கிற பூமியை ரக்ஷித்து, அது உன்பேறாக உகந்தவுகப்பாலே உஜ்ஜ்வலனானவனே.

ஈடு.—ஆறும்பாட்டு. உன்ஸகலசேஷ்டிதங்களையுங்காண, விடாய்ப்பட்ட நான் நினைக்கவும் க்ஷமனாகிறிலேன்; ப்ரளயபத்தில் ஜகத்தைரக்ஷித்தாப்போலே, அநுஸந்திக்க வல்லேனாம்படிபண்ணி என்னைரக்ஷிக்கவேணுமென்கிறார்.

[நின்ற இத்யாதி] - இவர் இவ்விஷயத்திற்படுகிறபாடெல்லாம் நமக்கு இதர விஷயங்களிலே அநுபவஸித்தமிறே, இவ்விஷயத்திலின்றிக்கே யொழிகிறவித்தனை. வடக்கு நின்றும் போரப்பாடவல்லராயிருப்பாரோருத்தர் "பெருமாளைத்திருவடிதொழவேணும்" என்றுவர, ஆழ்வார்திருவரங்கப்பெருமாளரையர் தீர்த்தத்தினன்றிராத் திருமாலையைப்பாடிச் சமைந்து பெருமாளை மத்தகஜங்களையேத்துமாபோலேயேத்தி வஶமாக்கிக்கணிசங்கொண்டு, "நாயன்றே, தேவர்திருவடிகளுக்குப்போரநல்லானொருத்தன் எழுநூற்றுக்காதமாறுண்டு தேவரை 'திருவடிதொழவேணும்' என்றுவருகிறது; இவனையழைத்துக்கொண்டு ஸம்பாவனைபண்ணியருளவேணும்" என்ன, பெருமாளும் "அப்படியேசெய்கிறோம்" என்று திருவுள்ளமாய் அருளப்பாடிட்டு, திருப்புன்னைக்கீழ்நின்றும் அவர்நின்றவிடத்தளவும்செல்ல நாலுகோல்தறை திருக்கைத்தலத்திலே எழுந்தருளி, விண்ணப்பஞ்செய்வார்களையெல்லாம் அருளப்பாடிட்டு, "வாரிகோள், இவன்வந்ததூரத்துக்கெல்லாம்போருமோ நாம் இவனுக்குச்செய்த தரம்" என்று திருவுள்ளமானார். இப்படியேயிறே நம்மிழவுகளும் திருவுள்ளத்திலேபட்டவையெல்லாம் ஆறும்படிக்கீடாகமுகந்தந்தருளவல்லபடியும். ஒருநாள் ஸ்ரீவைஷ்ணவவண்ணத்தான் திருப்பரிவட்டங்களை அழகிதாகவாட்டி எம்பெருமானார்க்குக்கொண்டு வந்துகாட்ட, போரத்ருபதராய் இவனையுங்கூடக்கொண்டு பெருமாள்பாடேபுக்கு, "நாயன்றே இவன்திருவரைக்கீடாம்படி இவற்றைத்தோட்டபடி பார்த்தருளவேணும்" என்றுகாட்ட, கண்டு போரவுகந்தருளி எம்பெருமானாரை அருளப்பாடிட்டு, "இவனுக்காக, கம்ஸனுடைய ஈரங்கொல்லி நந்திறத்திற்பண்ணினகுற்றம்பொறுத்தோம்" என்று திருவுள்ளமானார். [நின்றவாறும் இத்யாதி] - லங்காத்வாரத்திலே கையும்வில்லுமாய் நின்றபடியாதல், வாலிவதம்பண்ணிக் கையும்வில்லுமாய் நின்றபடியாதல்; "**அவஷ்டப்⁴ய ச திஷ்ட²ந்தம் த³த³ர்ஶ த⁴நுரூர்ஜிதம்—ராம:**" (அவஷ்டப்யசதிஷ்டந்தம்ததர்ஸநுரூர்ஜி

ஆறும்பாட்டு.—**நின்றவாறும்** *இத்யாதி. பாட்டையெல்லாங்கடாக்ஷித்து அவதாரிகை* - **உன்ஸகல** *இத்யாதி.*

"நின்றவாறும்" இத்யாதியாலே - ப்ரத்யவஸ்தையிலும் இவர்படுகிறப்போலே, நமக்கு இவ்விஷயத்தில் ஈடுபாடு காண்கிறோமில்லையேயென்ன - **இவர்இவ்விஷயத்தில்** *இத்யாதி.* **இவர்** *ஈடுபடுவது ஆஶ்ரிதார்த்தமான செயலுக்காகையாலே, ப்ரஸங்காத், அவன் ஆஶ்ரிதார்த்தமாகச்செய்யும் செயலுக்கு ஐதிஹ்யம்* - **வடக்குநின்றும்** *இத்யாதி.* **தீர்த்தத்தினன்றிரா** - *தீர்த்தவாரியினன்றிருந்தென்றபடி.* **பாடிச்சமைந்து** - *பாடிமுடித்து.* **கணிசங்கொண்டு** - *ஶபதங்கொண்டு.* **ஆறுண்டு** - *வழியுண்டு. வ்யாக்யாதாவின் ஈடுபாடு* - **இப்படியே** *இத்யாதி. அநுகூலரானவரைப்போலே ஸாபராதரான நம்மை அங்கீகரிக்கக்கூடுமோ? என்ன, - புருஷகாரபலத்தாலே கூடுமென்னுமதுக்கு ஐதிஹ்யம்* - **ஒருநாள்** *இத்யாதி. அன்றிக்கே, "இவன்வந்ததூரத்துக்கெல்லாம்போருமோ" என்கையாலே - ஆயாஸங்கண்டு இரங்குமென்று வித்தவத்கரித்து, அப்படி ஆயாஸங்கண்டு இரங்குமோ? என்ன* - **ஒருநாள்** *இத்யாதி என்னுதல்.* **தோட்டபடி** - *வெளுப்பித்தபடி. த்விதீயார்த்தத்துக்கு ப்ரமாணம்* - **அவஷ்டப்⁴ய** *இத்யாதி. "அவஷ்டப்⁴ய ச திஷ்ட²ந்தம் த³த³ர்ஶ த⁴நுரூர்ஜிதம் । ராமம் ராமாநுஜஞ்சைவ ப⁴ர்த்துஶ்சைவாநுஜம் ஶுபா⁴" [௨௫½] ஐதிகிஷ்கிந்தாகாண்டே.* [௧௧] *எடுத்தஶ்லோகத்துக்கு அர்த்தம்*-**வாலிவதம்** *இத்யாதி. அவரையிடுவித்துக்கொல்லுவிக்கையாவது*

தம்-ஸுபா) - வாலிவதம்பண்ணிக் கையும்வில்லுமாய்க்கொண்டு வென்றிபுனைந்துநின்ற பெருமாளையும், அவரையிடுவித்துக்கொல்லுவித்த தம்பியாரையும், இருவரையும் அநுவர்த்தித்து முடிசூடவிருக்கிற மஹாராஜரையுங்கண்டவிவள் "நமக்குசத்ருக்கள்" என்றிராதே, ஸுபஹ்ருதயையாளுள் அவர்பக்கல் ஸாங்கத்தாலே. இனித்தான் தண்ணீர்குடிக்கைகல்லின ஏரியிலே கல்லேச்சட்டிக்கொண்டு விழுந்துமுடிந்துபோவாரைப்போலே, ஆஸுரப்ரக்ருதியானவாறே முடிந்துபோனான்வாலி; இவர்செய்தகுற்றமுண்டோ? என்றிருந்தாள். அவர் தம்முயிர்நிலையிலே நலிந்தாரைவிட்டுவைப்பரோ. [இருந்தவாறும்]- "**உடஜே ராம மாஸீநம்**" (உடஜேராமமாஸீநம்) என்றிருந்தவிருப்பும். [கிடந்தவாறும்] - **அஞ்ஜலிம் ப்ராங்முகஃ க்ருத்வா ப்ரதிசிச்யே மஹோததேஃ**" (அஞ்சலிம்ப்ராங்முகஃக்ருத்வாப்ரதிசிச்யேமஹோததேஃ) என்கிறபடியே, கடற்கரையிலே கிடந்தகிடையும். **ப்ரதிசிச்யே** என்கிறதிறே - ஒருகடலோடே யொருகடல் ஸ்பர்த்தித்துகிடந்தாப்போலே யிருக்கையாலே; "கருணையென்னுங்கடல் கருங்கடலைநோக்கிக்கிடந்ததே" என்றானிறே. அதாகிறது - பின்பு விடக்கடவதாகத்தொடுத்த அம்பு முன்புவிடமாட்டாமையில்லையிறே; அப்படிப்பட்ட அம்பிருக்க, தந்தோள்வலிகிடக்க, தரம்போராதார்முகங்காட்டாதேயிருக்கப் பொறுத்துக் கிடந்த கிடையைச்சொல்லுகிறது; நின்றுமிருந்தும்கிடந்தும் என்று திரளச்சொல்லவமையுமாயிருக்க, நின்றவாறும் இருந்தவாறும் கிடந்தவாறுமென்கிறாரிறே - தனித்தனியே உளுக்கினபடி. அங்ஙனன்றிக்கே, கோவர்த்தநோத்தரணம்பண்ணி நின்றநிலையாதல், திருக்குரவைக்கு முற்சாமமாகப் பெண்களோடே கழகமிருந்தவிருப்பாதல், ஒரோருத்தர் மடிகளிலே சாய்ந்தபடியாதல். நின்றானாகில் "நிலையாரநின்றான்" என்பார்கள் - "நின்றவன் இருத்தல்சாய்தல் செய்யிற் செய்வதென்?" என்று வயிறுபிடிக்கவேண்டும்படியிறே அதிருப்பது; இருந்தானாகில், "பிரானிருந்தமைகாட்டினீர்" என்னும்படியிருக்கும்; கிடந்தானாகில், "கிடந்ததோர்கிடக்கை" என்பர்கள். "நிற்பதுமோர்வெற்பகத்திருப்பவிண்கிடப்பதும் நற்பெருந்திரைக்கடலுள்" என்கிறபடியே, திருமலையிலே நின்றபடியும், பரமபதத்திலே இருந்த

புருஷகாரபூதராயிருக்கை. ஸாங்கம் - பக்ஷபாதமும், வில்லும். கீழ்-கையும்வில்லுமானவழகைக்கண்டு ஸாங்கத்தாலே சுபஹ்ருதயையாளுளென்று அருளிச்செய்து, ஆச்ரிதபக்ஷபாத ஸ்ரீணநுஸந்தானத்தாலே சுபஹ்ருதயையாளுளென்று பாவாந்தரம்-இனித்தான் இத்யாதி. "உடஜே ராமமாஸீநம் ஜடாமண்டலதாரிணம்। க்ருஷ்ணாஜிநதரம் தந்வீரவக்ஷவாஸஸம்" [ரா-அ-கக] இதி ச்ருதேஃ. [உடு] "ததஸ்ஸாகரவேலாயாம் தர்பாநாஸ்தீர்ய ராகவஃ। அஞ்ஜலிம் ப்ராங்முகஃ க்ருத்வா ப்ரதிசிச்யே மஹோததேஃ" இதி ஸ்ரீராமாயணே. [உக] அவரையும்கடலாகச்சொன்னவிடமுண்டோ? என்ன - கருணையென்னும் இத்யாதி. இந்தக்கம்பன்கவிக்கு அர்த்தம் - அதாகிறது இத்யாதி. உளுக்கினபடி - ஈடுபட்டபடி. கழகம் - ஓலக்கம். தனித்தனியே உளுக்கினபடியைக் காட்டுகிறார் - நின்றானாகில் இத்யாதி. கிடந்ததோர்கிடக்கையென்பர்கள் என்னுமளவும். நிலையார என்றதுக்கு இரண்டுபொருள் - நின்றவன் இத்யாதி. அதாவது - நின்றவன் இருந்தாற்செய்வதென் என்றும், சாய்ந்தருளிச்செய்வதென் என்றும் இரண்டுபொருள். நிலையாரநின்றான் - நிலைபடியநின்றான். நிலைபொருந்தநின்றானென்றபடி. இந்தப்பாசுரம் திருமொழியில், "குலையார்ந்தபழுக்காயும்" என்கிறபாட்டிலே. இருந்தமை - இருந்தபடியை. இருப்பிலழகையென்றகருத்து. கிடந்ததோர் கிடக்கைகண்டு—திருமாலை, இருபத்துமூன்றும்பாட்டு, "கங்கையில்" இத்யாதி. இதுக்கு அர்த்தம் - "ஒருக்கணித்தோ மல்லாந்தோ கண்வளர்ந்தருளுகிறது" என்று தெரியாதபடி இருப்பதொரு கிடந்த கிடையழகைக்கண்டு என்றபடி. நிற்பதுமோர் இத்யாதி - அத்விதீயமான திருமலையிலே நிற்பதுவும்,

படியும், திருப்பாற்கடலிலே கண்வளர்ந்தருளினபடியுமாகவுமாம். "நிற்பதுமிருப்பதுங் கிடப்பதுமென்னெஞ்சுளே" என்கிறபடியே, இவர்திருவுள்ளத்திலே * திகழுமணிக்குன்ற மொன்றேயொத்து நின்றபடியும்; "செவ்வாய்முறுவலோடு எனதுள்ளத்திருந்த வவ்வாயன்றி யானறியேன்" என்னும்படி இருந்தபடியும்; "நின்றுமிருந்துங்கிடந்தும்" என்கிறபடியே, தந்திருவுள்ளத்திலேநின்றபடியும் இருந்தபடியும் கிடந்தபடியுமென்னுதல். அன்றிக்கே, திரு வூரகத்திலே நின்றபடியும், திருப்பாடகத்திலே இருந்தபடியும், திருவெஃகாவிலே கிடந்த படியுமாதல். "நின்றவாறுமிருந்தவாறுங்கிடந்தவாறும்" என்று ஆழ்வார்பாடாநிற்க, "இவை யெல்லாம் தொட்டிலிலே" என்று அருளிச்செய்தார் எம்பெருமானார். தொட்டிற்பழுவைப் பிடித்துக்கொண்டு நிற்கும்படியும், தரித்துநிற்கமாட்டாமை விழுந்திருக்கும்படியும், அது தான் பொறுக்கமாட்டாமை சாய்ந்துகிடக்கும்படியுஞ் சொல்லுகிறது. அதவா, [நின்ற வாறுமிருந்தவாறும்கிடந்தவாறும்] - * போரார்வேற்கண்மடவாள்போந்தனையும் பொய் யுறங்கி, அவள்போனவாறே எழுந்திருந்துநின்றவாறும்; அடியோசைப்பட்டவாறே வந்திருந்த படியும், நிழலாடினவாறே முன்கிடந்ததானத்தேயோராதவன்போல் கிடந்தவாறுமென்று மாம். [நினைப்பரியன] - அது ஒருகால் செய்துபோகச்செய்தேயும் இவர்க்கு இன்றுங்கூட நினைக்கவும் அரிதாயிராநின்றது. "இமையோர்தமக்கும் - செவ்வேநெஞ்சால் நினைப்பரி தால் வெண்ணெயூணென்னுமீனச்சொல்" என்றாரிறே முன்பே. [ஒன்றலாவுருவாய்] - இவர்தமக்கு ஒன்றே போருமாகாதே யுள்ளதனையும் நோவுபடுகைக்கு. ஒன்றல்லாத ப்ர காரங்களையுடையவாய். [அருவாயநின்மாயங்கள்] - கண்ணுக்கு அவிஷயமாயிருக்கிற உன் னுடைய ஆஶ்சர்யமான சேஷ்டிதங்களை. [நின்றுநின்றுநினைகின்றேன்] - நினைத்துத்தலைக் கட்டமாட்டார், நினையாதிருக்கமாட்டார். வருந்தி உன்னைநினைக்கப்புகுவன், நினைக்க

விண்ணிலே - பரமபதத்திலே இருப்பதும், நன்றாய்ப் பரப்பையும் அலைகளையுமுடைய திருப்பாற் கடலிலே கண்வளர்ந்தருளுவதுமென்றபடி. திருச்சந்தவிருத்தம், அறுபத்தஞ்சாம்பாட்டு. திகழு மணிக்குன்றமொன்றேயொத்துநின்ற விளங்காநிற்கிறதொரு மாணிக்கமலைபோலே நின்றவென்றபடி. செவ்வாய் இத்யாதி - சிவந்ததிருப்பவளத்தின் முறுவலோடே என்னெஞ்சுக்குள்ளேயிருந்த அந்த வாகாரத்தையொழிய வேறொராகாரத்தை அறியேனென்றபடி. நின்றுமிருந்தும்கிடந்துமென்கிற படியே இத்யாதி - பெரியதிருவந்தாதி, முப்பத்தஞ்சாம்பாட்டு. இந்தவாக்யத்தில், கிடந்தும் என் றதுவே இவ்விடத்துக்குவேண்டுவது. ஆழ்வார் என்றது - ஆழ்வார்திருவரங்கப்பெருமாளரைய ரென்றபடி. பழுவை - தொட்டிற்சட்டத்தை. போரார்வேற்கண் இத்யாதி - சிறியதிருமடல். இதுக்கு அர்த்தம் - யுத்தோந்முகமான கூர்மையுடைய வேல்போன்ற கண்களையுடைய யசோதைப் பிராட்டிபோந்தனையும் பொய்யாகநித்ரைபண்ணி. ஆர் - கூர்மை. முன்கிடந்ததானத்தே - முன்பு கிடந்த ஸ்த்தாநத்திலே. ஓராதவன்போல் - அறியாதவன்போலென்றபடி. ஆக, "நின்றவாறும்" இத்யாதிக்கு வழு தாத்பர்யம். நினைக்கவும் அரிதோ? என்ன - இமையோர் இத்யாதி. நித்யஸூரி களுக்கும் நேரே நெஞ்சால் பரிச்சேதித்துநினைக்கவரிது, வெண்ணெயை யமுதுசெய்தானென்று சொல்லுகிற அபக்ருஷ்டவசநம் இத்யர்த்தః. திருவிருத்தம், தொண்ணூற்றெட்டாம்பாட்டு, "துஞ்சா முனிவரும்" இத்யாதி. நோவுபடுகைக்கு என்றவநந்தரத்திலே, 'அநேகமானால் சொல்லவேணுமோ' என்று கூட்டிக்கொள்வது. உரு - ப்ரகாரம். மாயங்கள் - மாயங்களை. "நின்றுநின்றுநினைகின்றேன்" இத்யாதிக்கு இரண்டுபொருள் - நினைப்பரியனவொன்றலாவுருவாயருவாயநின்மாயங்களான - நின்ற வாறும் இருந்தவாறும் கிடந்தவாறுமான இவற்றை - தரித்துநின்று அநுஸந்திக்கலாமோவென்று வருந்தியநுஸந்திப்பன்; அவை எனக்கு ஶைதில்யத்தை விளைக்கையாலே உன்னை எங்ஙனேயநுஸந் திக்கவல்லேன்; என்றால் உன்குணங்களை தரித்துநின்று அநுஸந்திக்க முடியாதென்று ஒருபொருள். இத்தையருளிச்செய்கிறார் - நினைத்துத்தலைக்கட்டமாட்டார் இத்யாதி நாலுவாக்யத்தாலே. நினைத்

மாட்டுகிறிலேன். அன்றிக்கே, நினைக்கைதான் தேட்டமாய் ‘‘நினைக்கலாவதோருவழியேதோ’’ என்று ஆராயாநின்றேன். [உன்னையெங்ஙனம்நினைகிற்பன்] - ஸர்வஜ்ஞனுமாய் ஸர்வஶக்தியுமான நீ, நான் உன்னைநினைக்கலாவதோரு வழியிட்டுத்தரவல்லையே. ‘‘தோண்டெல்லாம் நின்னடியே தொழுதுய்யுமா கண்டு’’ - ஶேஷவர்க்கமடங்கலும்- ஐஶ்வர்யார்த்திகள், ஆத்மப்ராப்திகாமர், பகவத்ப்ராப்திகாமர் இவரடங்கலும் சென்றுகிட்டித் தந்தாம் ப்ரயோஜநங்களைப்பெற்று மீளுகிறபடியைக்கண்டு, ‘‘தான்கணபுரந்தொழப்போயினாள்’’ - நமக்கும் கலந்து பரிமாறி மீளலாமென்றுபோனாள்; ‘‘தான்’’ - விஷயத்தையே பார்க்குமித்தனையோ, தந்தாமையும் பார்க்கவேண்டாவோ. ஒருப்ரயோஜநத்துக்காகப்போவார்க்கன்றோ அதுகொண்டு மீளலாவது, தன்னையே ப்ரயோஜநமாகப்பற்றிப்போவார்க்கு மீளவிரகுண்டோ. இப்படியேயிறே பகவத்ப்ராவண்யமுடையார்படி. [பாவியேற்கு] - என்னையொழிந்தாரடங்கலும் நினைப்பாரும் அபிமதம்பெறுவாருமாய்க்கிடீர்! செல்லுகிறது. ‘‘ஸம்ருதோயச்சதிஶோபநம்’’ (ஸம்ருதோயச்சதிஶோபநம்) என்கிறபடியேயிறே நாடடங்கலும். [ஒன்றுநன்குரையாய்] - அர்ஜுநனுக்குச்சொன்னாற்போலே எனக்கும் ஒரு நல்வார்த்தை சொல்லவல்லையே. அவ்வளவாகாதே இவர்தம்மதும். இனி ‘‘ப்ராப்திக்கும் விரோதிபோகைக்கும் கடவேன்நான்’’ என்றானிறே. அவ்வளவேயிறே வேண்டுவது, பின்புவருமவை தன்னடையேவருமவையிறே. ஸ்வஸ்வரூபஸித்தியிறே ப்ராப்யம், ப்ராப்தி

துத்தலைக்கட்டமாட்டாரென்றது - ‘‘நின்றுநின்றுநினைகின்றேன்’’ என்றதுக்கர்த்தம். நினையாதிருக்கமாட்டாரென்றது - ‘‘உன்னை எங்ஙனம்நினைகிற்பன்’’ என்றதுக்கர்த்தம். இக்குணங்கள் ஈடுபடுத்துகையாலே நினைத்துமுடிக்கமாட்டார், அக்குணங்களையொழியச்செல்லாமையாலே நினையாதிருக்கமாட்டாரென்று - நினைத்துத்தலைக்கட்டமாட்டார் இத்யாதிவாக்யத்வயத்துக்கும் தாத்பர்யம். இத்தை விஶதீகரிக்கிறார் - வருந்தி இத்யாதி. ஒன்றலாவுருவாயருவாயநின்மாயங்களான - நின்றவாறும் இருந்தவாறும் கிடந்தவாறும் ஶிதிலமாகப்பண்ணுமவை; ஆகையாலேநினைப்பரியன; ‘‘உன்னை யரித்துநின்று அநுபவிக்கும் உபாயமேது’’ என்று பலகாலும் விசாரியாநின்றேன், அது நீயே நிச்சயித்தருளிச்செய்யுமத்தனைபோக்கி, நான் எங்ஙனே நிச்சயிக்கப்புகுகிறேன் என்று இரண்டாமர்த்தம். இத்தையருளிச்செய்கிறார் - அன்றிக்கேநினைக்கைதான் இத்யாதி. ‘‘உலகமுண்ட’’ என்கிறதிலே - ‘‘மேல்ப்ராளயம்வரப்போகிறது’’ என்று ஏற்கவே விசாரித்துரக்ஷிக்கையாலே, ஸர்வஜ்ஞத்வம் தோன்றுநின்றது; சிறியவயிற்றிலே பெரியலோகங்களை யடக்குகையாலே, ஸர்வஶக்தித்வம் தோன்றுநின்றது; அத்தைப்பற்ற - ஸர்வஜ்ஞனுமாய் ஸர்வஶக்தியுமானநீ என்கிறார். ‘‘நின்றுநின்றுநினைகின்றேன்’’ என்றதின் இரண்டாமர்த்தத்துக்கு, ‘‘உன்னை எங்ஙனம் நினைகிற்பன்’’ இத்யாதிக்கு - யரித்துநின்று நினைக்கும்படி சொல்லவேணுமென்றபடி. லோகத்தார் அவனைநினைத்து கார்யங்கொள்ளாநிற்க, இவர்க்கு நினைக்கைதேட்டமாவானென்? என்ன - தோண்டெல்லாம் இத்யாதி. இதுக்கர்த்தம் - ஶேஷவர்க்கமடங்கலும் இத்யாதி. இத்தால் - ப்ரயோஜநாந்தரபரரானவர்களுக்கு ப்ரயோஜநார்த்தமாக நினைக்கலாம், அநந்யப்ரயோஜநர்க்கு ஈடுபாட்டுக்குடலாகையாலே நினைக்கப்போகாதென்றபடி. கீழ்வாக்யவிவரணம் - ஒருப்ரயோஜநத்துக்காக இத்யாதி. தோண்டெல்லாம் இத்யாதி - இப்பாசுரம் திருமொழி, எட்டாம்பத்து, இரண்டாந்திருமொழி, எட்டாம்பாட்டு. உய்யுமாகண்டு - உஜ்ஜீவிக்கும்படிகண்டு. அதாவது - தந்தாமபிமதம்பெறக்கண்டென்றபடி. அர்ஜுநனுக்குச் சொன்னாற்போலேயென்றது - அர்ஜுநனுக்கு ‘‘மாஶுச:’’ என்று சொன்னாற்போலேயென்றபடி. ஆனால், அர்ஜுநனைப்போலே இவர்க்கு ஶோகமுண்டோ? என்ன - அவ்வளவு இத்யாதி. அவ்வளவாகாதேயென்றது - அவ்வளவன்றோவென்றபடி. அர்ஜுநனுக்குச்சொன்னதேதென்ன - இனிப்ராப்திக்கும் இத்யாதி. இனியென்றது - அவன்ஶோகித்தவநந்தரமென்றபடி. சரமஶ்லோகத்தில் ‘‘மோக்ஷயிஷ்யாமி’’ என்று - விரோதிநிவ்ருத்தியன்றோ சொல்லிற்று, ப்ராப்திசொல்லவில்லையே; ஆனபின்பு

பலமான கைங்கர்யம் சொல்லவேண்டாவே, ப்ராப்தியளவுமிறே ப்ரமாணம்சொல்லுவது. அவ்வருகுள்ளது ப்ரமாணத்துக்கு விஷயமன்றே. அப்படியே "உனக்கும்நானேகடவேன்" என்று ஒருவார்த்தை சொல்லவல்லேயே. [உலகமுண்டவொண்சுடரே] - உண்டியுடல் காட்டுமே. நினைக்கை குற்றமாய்விட்டதோ. நினைவுங்கூடத் தேட்டமானால் நீயேசெய்து தலைக்கட்டவேண்டாவோ. இவை ஆபத்துங்கூடவறிவிக்கமாட்டாத ஸமயத்திலே நீயே யறிந்து வயிற்றிலேவைத்துநோக்கி, இவ்வுபகாரம் இவையறியாதொழிய, "இது உன்பேறு" என்னுமிடம் வடிவில் புகரிலேதோற்றவிருப்பானொருவனல்லேயோ. [உலகமுண்டவொண் சுடரே] - "உன்பேறாக ரக்ஷித்தாய்" என்று மெய்யேயன்றோ சொல்லுகிறது. (௬)

ஏழாம் பாட்டு.

ஒண்சுடரோடிருளுமாய்நின்றவாறும் உண்மையோடின்மையாய்வந்துஎன்
கண்கோளாவகை நீகரந்தென்னைச்செய்கின்றன
எண்கோள்சிந்தையுள்நைகின்றேன் என்கரியமாணிக்கமே! என்கண்கட்
திண்கோள்ளவோருநாள் அருளாயுன்திருவுருவே. [குத்

ஆ.—(ஒண்சுடர்.) ஆஶ்ரிதர்க்கு மெய்யனாய்த்தோற்றியும், அநாஶ்ரிதர்க்குப் பொய்யனாய்க் கைவாராதேயிருக்கிறபடியையும், ஹ்ருதயத்திலே ஸந்நிஹிதனாய்

இவர்களும் அவ்வளவுபோருமோ? என்ன, - அநிஷ்டநிவ்ருத்தியைச்சொன்னால் - இஷ்டப்ராப்தி அர்த்தஸித்தமாய்வருகையாலே சொல்லிற்றில்லையென்கிறார் - அவ்வளவேயிறே இத்யாதிவாக்யத்வயத்தாலே. அவ்வளவேயன்றேவேண்டுவதென்றது - விரோதிபோமளவேயிறே வேண்டுவதென்றபடி. பின்புவருமவை ஏதென்ன - ஸ்வஸ்வரூப இத்யாதி. ப்ராப்யமென்றது - ப்ராப்தியென்றபடி. இத்தால் - ப்ராப்தியும் சரமஶ்லோகத்தில் அர்த்தாத் உக்தமென்றுகருத்து. ப்ராப்திமாத்ரகதநம் போருமோ, கைங்கர்யம்சொல்லவேண்டாவோ? என்ன - ப்ராப்திபலமான இத்யாதி. அதாவது - ராமப்ராப்தமாகையாலே ப்ரீதிகாரிதயாய்த்தன்னடையே வருமென்றபடி. அபரிச்சிந்நத்வேந ப்ரமாண விஷயமாகையாலும் சொல்லவேண்டாவென்று பரிஹாராந்தரம் - ப்ராப்தியளவுமிறே இத்யாதி வாக்யத்வயத்தாலே. "உலகமுண்டவொண்சுடரே"-லோகத்தையமுதுசெய்து அத்யுஜ்ஜ்வலனானவனே இதி ஸப்தார்த்த: உலகமுண்டால் ஒண்சுடராகவேணுமோ? என்ன - உண்டி இத்யாதி. உண்டி - போஜநத்தை. "வபுஷா ஜ்ஞாதிஹோஜநம்" என்னக்கடவதிறே. "உலகம்" என்ற அசேதநஸமாதிக்கு, "நின்றுநின்றுநினைகின்றேன்" என்றதின் முன்றினவர்த்தத்துக்குச்சேர பாவம்—நினைக்கை இத்யாதி. அதாவது - நினைக்கமாட்டாதேயிருக்கிற லோகத்தை ரக்ஷித்தாய், சேதநனானவாசிக்கு நினைக்கிறவென்னை ரக்ஷித்தாலாகாதோ என்றுகருத்து. "நின்றுநின்றுநினைகின்றேன்" என்றதின் தவிதீயார்த்தத்துக்குச்சேர பாவம் - நினைவுங்கூட இத்யாதி. "உலகமுண்டவொண்சுடரே" என்றதுக்கு ஸப்தார்த்தம் - இவையாபத்துங்கூட இத்யாதி. சாடுவுக்காக பதோபாதானம்பண்ணி யருளிச்செய்கிறார் - உன்பேறாக இத்யாதி. மெய் - சரீரமும், ஸத்யமும். நினைப்பரியனவாய் - நின்றவாறும் இருந்தவாறும் கிடந்தவாறுமாய்க்கொண்டு - ஒன்றலாவுருவாயருவாய நின்மாயங்களை நின்றுநின்று நினைகின்றேன், உன்னை எங்ஙனம் நினைகிற்பன், உலகமுண்டவொண்சுடரே, பாவியேற்கு ஒன்று நன்குரையாய் இத்யந்வய:. "ஸ்யாமலஸ்ரமணகோஸ்த்யஸ்தோயத்யதிமோஹநம் | வாவஷயஸ்மஹவதிஸர தாநதஉஹதி-ஸ்ம" இதி ஸ்ரீவிஷ்ணுபுராணே, சுஸாஸ்ராஹகாநு ஹதி ஹலாகு:. (௬)

வைத்தே என்கண்ணுக்குக் காணவொண்ணாதபடி மறைந்து என்னை நலிகிறநலிவுகளையும் மநோரயிக்கிற மநோரதத்திலே ஸிதிலனாகாநின்றேன். உன்வடிவழகை எனக்கு புஜிக்கத்தந்தருளின நீ, நான் த்ருடமாகக் காணலாம்படி என்னுடையகண்களுக்கு உன்னுடைய திருவுருவை ஒருநாள் அருள்வேணுமென்கிறார்.

ஒ—ஏழாம்பாட்டில், கண்ணால் காணப்பெறாதே, ஆந்தராநுஸந்தானமேயாய் ஸிதிலனாய்ப்போகாதே கண்ணாலேகண்டு பரித்து அநுபவிக்கவல்லேனாம்படி பண்ணியருளவேணுமென்கிறார்.

[ஒண்சுடர் என்றுதொடங்கி] - ஆஸ்ரிதர்க்கு மெய்யனாய்த்தோற்றியும் அநாஸ்ரிதர்க்குப் பொய்யனாய் கைவாராதேயிருக்கிறபடியையும் ஹ்ருதயத்திலே ஸந்நிஹிதனாய் வைத்தே என்கண்ணுக்குக் காணவொண்ணாதபடி மறைந்து என்னை நலிகிறநலிவுகளையும், [எண்கொள் என்றுதொடங்கி] - மநோரதிக்கிற மநோரதத்திலே ஸிதிலனாகாநின்றேன். உன்வடிவழகை எனக்கு ஸூஜிக்கத்தந்தவனே! த்ருடமாகக் காணலாம்படி என்னுடைய கண்களுக்கு உன்னுடைய திருவுருவை ஒருநாள் அருளவேணும்.

ப—அநந்தரம், பாஹ்யஸம்ஸ்லேஷம்பண்ணி நினைத்தபடி அநுபவிக்கப்பெறாதே மாநஸாநுபவமேயாய் க்லேஸியாதபடி, என்கண்கள் ஸ்த்திராநுபவம்பண்ணும்படி உன்வடிவைக் காட்டவேணுமென்கிறார்.

உண்மையோடு - என்னகவாயிலே ப்ரகாஸித்து உளனாகிற ஆகாரத்தோடே, இன்மையாய் - புறவாயில் ப்ரகாஸத்தினுடையவில்லாமையை யுடையனாய்க்கொண்டு, வந்து - வந்து, ஒண் - ஒள்ளிய, சுடரோடு - தேஜஸ்ஸோடே ஸஹாவஸ்த்திதமான, இருளுமாய் - இருளென்னலாம்படி, நின்ற - நின்ற, ஆறும் - ப்ரகாரமும், (அப்ப்ரகாரத்திலே), என் - என், கண் - கண், கொளாவகை - உன்னையநுபவியாதபடி, கரந்து - உள்ளே மறைந்து நின்று, நீ—, என்னை - என்னை, செய்கின்றன - செய்கிறவிவற்றை, எண் - எண்ண வேணுமென்று, கொள் - கொள்ளுகிற, சிந்தையுள் - நெஞ்சோடே, நைகின்றேன் - ஸிதிலனாகாநின்றேன்; என் - என்னுடைய, இந்தஸைதில்யத்துக்கு ஹேதுவாய், கரிய மாணிக்கமே - நீலரத்நம்போலேயிருக்கிற வடிவையுடையவனே, உன் - உன்னுடைய, திரு - ப்ராப்தமாய் போக்யமான, உரு - ரூபத்தை, (காணவாசைப்பட்ட), என் - என், கண்கட்கு - கண்களுக்கு, திண் - திண்மையையுடைத்தாக, கொள்ள - காணும்படி, ஒருநாள் - ஒருகால், அருளாய் - அருளவேணும். கலந்தென்றுபாடமாய் - கலசியென்றுமாம்.

இ—ஏழாம்பாட்டில், மாநஸாநுஸந்தாநமேயாய் ஸிதிலனாய்ப்போகாமே, கண்ணாலேகண்டு அநுபவிக்கலாம்படி பண்ணவேணுமென்கிறார்.

[உண்மையோடின்மையாய்வந்து - ஒண்சுடரோடிருளுமாய்நின்றவாறும்] - எனக்கு உண்மையோடே ஒண்சுடராயிருக்கும் ஹார்த்தமாக; இன்மையோடே இருளாயிருக்கும் பாஹ்யாபேக்ஷையிலே. அன்றிக்கே, ஆஸ்ரிதர்க்கு உண்மையோடே ஒண்சுடராயிருக்கும், அநாஸ்ரிதர்க்கு இன்மையோடே இருளாயிருக்கும். [என்கண்கொளாவகைநீகரந்துஎன்னைச்செய்கின்றன] - தன்திறத்திற்சொன்ன இரண்டையும் சொல்லுகிறது. என்கண்ணுக்கு விஷயமாய், மறக்கவொண்ணாதபடி நெஞ்சிலே விஸதமாகநின்று என்னை நீசெய்கிறவற்றுக்கு அவதியில்லை. [எண்கொள்சிந்தையுள்நைகின்றேன்] - நினைக்க

மநோரதிக்கிறவளவிலே ஶிதிலனாகாநின்றேன். [என்கரியமாணிக்கமே] - ஸௌந்தர்யத்தைப்பார்த்து மீளவொண்ணாத வடிவழகு. அவ்வடிவை எனக்கு முற்றூட்டாக்கினவனே [என்கண்கட்கு] - தமக்குமுன்னே "என்றுகொல் கண்கள்காண்பது" என்னும்படி விடாய்க்கும் கண்கள். [திண்கொள்ள] - த்ருடமாகக் காணலாம்படி ஸ்வப்நதர்ஶநம்போலே மாநஸாநுபவமாத்ரமன்றிக்கே ஸாக்ஷாத்ப்ரத்யக்ஷமாம்படி. [ஒருநாளருளாய்] - விடாயன். "ஒருகால் நாக்கு நனைக்கவேணும்" என்னுமாபோலே. [உன்திருவுருவே] - அப்ராப்த விஷயத்தையோ நான் ஆசைப்படுகிறது. "ஹக்ஷா.நாஸ்ரு" என்கிறவடிவையன்றோ.

ஈடு.—ஏழாம்பாட்டு. மாநஸாநுஸந்தாநமேயாய் ஶிதிலனாய்ப்போகாமே, கண்ணாலேகண்டு அநுபவிக்கவல்லேனாம்படி பண்ணியருளவேணுமென்கிறார்.

[உண்மையோடின்மையாய்வந்து - ஒண்சுடரோடிருளுமாய்நின்றவாறும்] - எனக்கு உண்மையோடே ஒண்சுடராய் நிற்கும் ஹார்த்தமாக; இன்மையோடிருளாயிருக்கும் பாஹ்யாபேக்ஷையில். அன்றிக்கே, ஆஶ்ரிதர்க்குத் தன்படிகளிலொன்றும் குறையாதபடி காட்டிக்கொடுத்து, அவர்களுக்கு "இவ்வளவு" என்று பரிச்சேதிக்கலாம்படி ப்ரகாஶித்து நின்றபடியும்; அநாஶ்ரிதர்க்குத் தன்படிகளிலொன்றும் தெரியாதபடி பண்ணி, அத்தாலே அவர்களுக்கு "இல்லை" என்னும்படி இருளப்பண்ணிக்கொடு நின்றபடியும். ஆஶ்ரிதர்க்கு ஒண்சுடரோடு உண்மையாய்நின்றும், அநாஶ்ரிதர்க்கு இருளோடு இன்மையாய் நின்றும். [வந்தென்கண்கோளாவகைநீகரந்தென்னைச்செய்கின்றன] - இவையெல்லாம்தவிர, என்பக்கல்பரிமாறுகிற வேறுபாடும். ஒண்சுடராதல் இருளாதல், இரண்டத்தொன்றாகப்பெற்றிலேன்; நடுவேநின்று க்லேஶியாநின்றேன். முக்தர்க்குக்கூட்டல்லர், ஸம்ஸாரிகளுக்குக்கூட்டல்லர், அந்தரப்பட்டு நிற்கிறாரிறே இவர்தாம். என்னெஞ்சிலேவந்துபுகுந்து என்கண்ணுக்கு

---

*ஏழாம்பாட்டு.—ஒண்சுடர் இத்யாதி. "எண்சொல்சிந்தையுள்நைகின்றேன், என்கண்கட்குத் திண்கொள்ள" இத்யாதியைக்கடாக்ஷித்து அவதாரிகை - **மாநஸாநுஸந்தானமேயாய்** இத்யாதி.*

*"உண்மையோடு - ஒண்சுடராய், இன்மையோடு - இருளாய்" என்று அந்வயித்து, ஸ்வவிஷயமாக அருளிச்செய்கிறார் - **எனக்கு** இத்யாதியாலே. உண்மையோடொண்சுடரும், இன்மையோடே இருளுமாகிறவிரண்டும் ஏகாஶ்ரயகதமாகக்கூடாமையாலே, அதுகூடுகைக்காக - **ஹார்த்தமாக** என்றும், **பாஹ்யாபேக்ஷையில்** என்றும் அருளிச்செய்தது. ஆஶ்ரிதர்க்கு உண்மையோடொண்சுடராய், அநாஶ்ரிதர்க்கு இன்மையோடிருளாய் என்று அந்வயித்து, ஆஶ்ரித அநாஶ்ரிதவிஷயமாக யோஜநாந்தரம் - **அன்றிக்கே ஆஶ்ரிதர்க்குத் தன்படிகள்** இத்யாதிவாக்யத்வயத்தாலே. தன்படிகளென்றது - ஶேஷித்வாதிகள். கீழே ஸ்வவிஷயத்திலே, **ஹார்த்தமாக** என்றும், **பாஹ்யாபேக்ஷையில்** என்றும் இவர் அருளிச்செய்கைக்கடி - "என்கண்கொளாவகை நீகரந்தென்னைச்செய்கின்றன" என்றுவிஶதமாக ஆழ்வாரருளிச்செய்தவிது. ஆஶ்ரிதாநாஶ்ரிதவிஷயமாகவே, கீழ் அந்வயித்தபடியன்றிக்கே அந்வயபேதேந த்ருதீயதாத்பர்யமாதல்; த்விதீயார்த்தவிவரணமாதல் - **ஆஶ்ரிதர்க்கு ஒண்சுடரோடு** இத்யாதி வாக்யத்வயம். ஒண்சுடர் - ஒள்ளியசுடர். அழகியசுடரென்றபடி. "ஒண்சுடர்" இத்யாதியின் த்விதீயார்த்தத்துக்குச்சேர அர்த்தம் - **இவையெல்லாம்** இத்யாதி. இவையெல்லாமென்றது - ஆஶ்ரிதவிஷயத்தில் ப்ரகாஶிக்கையும் அநாஶ்ரிதர்க்கு ப்ரகாஶியாமையுமென்றபடி. விவரணம் - **ஒண்சுடராதல்** இத்யாதிவாக்யத்வயம். ஆஶ்ரிதர் - முக்தர். அநாஶ்ரிதர் - ஸம்ஸாரிகள். இத்தால் - ஆஶ்ரிதர்க்கும் அநாஶ்ரிதர்க்கும் கூட்டல்லவென்றபடி. ஶப்தார்த்தம் - **என்னெஞ்சிலே** இத்யாதி. "ஒண்சுடரோடு"*

அவிஷயமாம்படி மறையநின்று நீ என்னை நலிகிறவற்றையும். கண்கோளாவகை - கண் க்ரஹியாதபடி. [எண்கோள்சிந்தையுள் நைகின்றேன்] - பெற்ற வம்ஸங்கொண்டு கார்யங் கொள்ளமாட்டுகிறிலேன். கைப்புகுந்ததுகொண்டு மேலுள்ளதுபெற விரகு பார்க்கமாட்டு கிறிலேன். எண்ணப்புக்கு, மநோரதமாத்ரத்திலேஶிதிலனாகாநின்றேன். [என்கரியமாணிக்கமே] - சக்ஷுர்விஷயமான பதார்த்தங்களைக்கொண்டு நான் காலம்போக்கமாட்டாமே, உன்வடிவின்சுவட்டை அறிவித்தாயே. [என்கரியமாணிக்கமே] - "இவ்வடிவைப்பிரிந் தார்க்கு ஜீவிக்கவுமாம்" என்று தோற்றியிருந்ததோ. [என்கண்கட்கு] - இவற்றின்விடாய் உனக்குத் தெரியுமிறே; "நான்பெற்றேன்" என்றாலும் ஆறியிராதவையன்றோ ? வேறொன் றிட்டு மறைக்கலாமவையன்றே. [திண்கொள்ள] - மாநஸாநுபவத்தை ப்ரத்யக்ஷஸமாநா காரமாகப் பண்ணினோமே" என்று நீ சொல்லுமது எனக்குவார்த்தையன்றுகிடாய். [திண் கொள்ள] - ஸ்வப்நாநுபவம்போலே மாநஸாநுபவமாகவொண்ணாது, ப்ரத்யக்ஷிக்கவேணும் த்ருடமாக. இங்ஙன் செய்யப்போமோ? என்னில், - சிலர்க்கு ஸதாதர்ஶநயோக்யனாகாநின் றாயே. [ஒருநாளருளாய்] - ஒருநாளமையும்மென்கிறாரல்லர், விடாயின்பெருமை சொல்லு கிறார்; தாபார்த்தன் "ஒருகால் நாக்குநனைக்கவமையும்" என்றாற்போலே. "கிட்டினால் பின்னைவிடும்படிசொல்லுகிறோம் " என்று. [உன்திருவுருவே] - இதேதேனுமுன்னதோ ! நோக்கிக்கொண்டுகிடக்கைக்கு, * நதெரஙெவடு—ஹஸ்தாநாடு அன்றோ. (எ)

இத்யாதியில் ஸ்வவிஷயமான மூந்தினவர்த்தத்துக்கும், "என்கண்கொளாவகை நீகரந்தென்னைச்செய் கின்றன" என்றதுக்கும் அர்த்தபேதமில்லாமையாலே, அநுவாதமாகக்கொள்ளுவது. "நைகின்றேன்" என்றதுக்குபாவம் - பெற்றஅம்ஸம் இத்யாதி. பெற்றஅம்ஸமாவது - மாநஸாநுபவம். காரியங் கொள்ளமாட்டுகிறிலேனென்றது - "இதுண்டாயிற்றே, மேலும் க்ரமத்திலேபெறுகிறோம்" என்ற அவ்வளவும் ஆறியிருக்கமாட்டுகிறிலேனென்றபடி. கீழ்வாக்யவிவரணம் - கைப்புகுந்தது இத்யாதி. கைப்புகுந்ததென்றது - மாநஸாநுபவத்தை. ஸப்தார்த்தம் - எண்ணப்புக்கு இத்யாதி. கீழே, நலிகிற வற்றையும் என்றதுக்கு - எண்ணப்புக்கு என்கிறவித்தோடேஸம்பந்தம். எண்கோள் - எண்ணைக் கொள்ளுமளவில். எண்ணப்புக்கென்றபடி. சிந்தையுள் - மநோரதமாத்ரத்திலே இத்யர்த்தஃ. "என்" என்றதுக்குபாவம் - சக்ஷுர்விஷயமான இத்யாதி. "கரியமாணிக்கம்" என்றதுக்குபாவம் - இவ் வடிவை இத்யாதி. "என்கண்கட்கு" என்றதுக்குபாவம் - இவற்றின் இத்யாதிவாக்யத்வயம். தெரியு மிறேயென்றது - ஹ்ருஷீகேஶனாகையாலே தெரியுமிறேயென்றபடி. பெற்றேனென்றாலும் - பெற்றே னென்றுபாவித்தாலும் கண்களின்விடாயின் சரமாவதியாதல், மேலுக்கு அவதாரிகையாதல் - வேறொன் றிட்டு இத்யாதி. கீழ்வாக்யவிவரணம் - ஸ்வப்நாநுபவம் இத்யாதி. "ஒருநாள்" என்றதுக்கவதாரிகை- சிலர்க்கு இத்யாதி. சிலர்க்கென்றது - நித்யஸூரிகளுக்கென்றபடி. ஆதரம் அல்பமாய் ப்ரார்த்திக் கிறாரோ ? என்ன - ஒருநாளமையும் இத்யாதி. விடும்படி - விட்டுப்போகிறபடி. "உன்" என்ற துக்கு பாவமாதல், பிரிநிலையேகாரமாக்கி பாவமாதல் - இதேதேனும் இத்யாதி. உண்மையோடின்மை யாய்வந்து - ஒண்சுடரோடிருளுமாய்நின்றவாறும், என்கண்கொளாவகை நீகரந்தென்னைச்செய்கின்றன எண்கொள்சிந்தையுள் நைகின்றேன்; என்கரியமாணிக்கமே, உன்திருவுருவு - என்கண்கட்குத் திண் கொள்ள ஒருநாளருளாய் இத்யந்வயஃ. (எ)

எட்டாம் பாட்டு.

திருவுருவுகிடந்தவாறும் கொப்பூழ்ச்செந்தாமரைமேல் திசைமுகன்
கருவுள்வீற்றிருந்து படைத்திட்டகருமங்களும்
பொருவிலுன்றனிநாயகமவை கேட்குந்தோறுமென்னெஞ்சம் நின்று
அருவிசோருங்கண்ணீர் என்செய்கேனடியேனே. [நெக்கு

ஆ.—(திருவுருவு.) அழகியவடிவோடே ஏகார்ணவத்திலே கண்வளர்ந்தருளினபடியும், திருநாபிகமலத்திலே சதுர்முகனுகிற அதிஷ்டாநத்தினுள்ளே வீற்றிருந்து ஸ்ருஷ்டித்த க்ரமங்களும், ஒப்பின்றிக்கே விஜாதீயமான உன்னுடைய குணசேஷ்டிதங்களைக் கேட்குந்தோறும் என்னெஞ்சம் நெகிழ்ந்து நிற்பதும்செய்து, கண்ணீர் அருவிபோலே சோராநின்றதென்கிறார்.

ஒ—எட்டாம் பாட்டில், உன்குணசேஷ்டிதாதிகளைக் கேட்குந்தோறும் பரிதிலனுகாநின்றேன், என்செய்கேனென்கிறார்.

[திரு என்றுதொடங்கி] - அழகிய உருவோடே ஏகார்ணவத்திலே கண்வளர்ந்தருளினபடியும் திருநாபிகமலத்திலே சதுர்முவனுகிற அதிஷ்டாநத்தினுள்ளே வீற்றிருந்து ஸ்ருஷ்டித்தசெயல்களும். [பொருவில் என்றுதொடங்கி] - ஒப்பின்றிக்கே விஜாதீயமான உன்னுடைய குணசேஷ்டிதங்களைக் கேட்குந்தோறும் என் நெஞ்சம் நெகிழ்ந்து நிற்பதும்செய்து கண்ணீர் அருவிபோலே சோராநின்றது.

ப.—அநந்தரம், உன்னுடைய ஸர்வாதிகத்வ ஸூசகமான ஸ்ருஷ்ட்யாதி வ்யாபாரங்களைக் கேட்குந்தோறெல்லாம் என்னெஞ்சுநெகிழ்ந்து கண்ணீர்சோராநின்றது, நான் என்செய்வேனென்கிறார்.

(காரணமான ஏகார்ணவஜலத்திலே), திரு-அழகிய, உருவு-திருமேனி, கிடந்தவாறும் - கண்வளர்ந்தபடியும், கொப்பூழ் - அந்தவடிவிற்கொப்பூழில், செம் - சிவந்த, தாமரைமேல் - தாமரையின்மேலேயுண்டான, திசைமுகன் - சதுர்முகனுகிற, கருவுள் - கருவுக்குள்ளே, வீற்று - அந்தராத்மாவான வேறுபாடுதோன்றும்படி, இருந்து- இருந்து, படைத்திட்ட - ("அவன்ஸ்ருஷ்டிபண்ணினுன்" என்னும்படி நீ ஜகத்தை) ஸ்ருஷ்டித்த, கருமங்களும் - வ்யாபாரங்களுமாகிற, பொரு-எதிர், இல்-இல்லாத, உன்-உன்னுடைய, தனிநாயகம் - அத்விதீயநாயகத்வ ப்ரகாஶகமான, அவை- அவற்றை, கேட்குந்தோறும்- (ப்ரமாணமுகத்தாலே) கேட்குந்தோறும், என்-என், நெஞ்சம் - நெஞ்சு, நின்று - ஒருபடிப்பட நின்று; நெக்கு - கட்டுக்குலைந்து நெகிழ்ந்து, கண்ணீர் - கண்ணீரானது, அருவி - அருவிபோலே, சோரும் - விழாநின்றது; அடியேன்-(நீயிட்ட வழக்காம்படி பரதந்த்ரனுன) நான், என் - எத்தை, செய்கேன் - செய்வேன். ஸம்பந்தமுண்டாகையாலே விடமாட்டுகிறிலேன், ஸாயில்யம்பிறவாதபடி யத்நிக்கமாட்டுகிறிலேன்.

இ.—எட்டாம்பாட்டில், உன்குணசேஷ்டிதாதிகளை கேட்குந்தோறும் பரிதிலனுகாநின்றேன், என்செய்கேனென்கிறார்.

[திருவுருவுகிடந்தவாறும்] - அழகியவடிவோடே ஏகார்ணவத்திலே கண்வளர்ந்தருளினபடியும், "கிடந்ததோர்கிடக்கை" என்று மித்தனை போக்கி பாசுரமிட்டுப் பேசமுடியாது. அல்லாதார்க்கு உறங்கும்போதழகழிந்திருக்கும், "ஸாவஸாவஷ்டம்பேவர ஜேவ:" என்று கண்வளர்ந்தருளும் போதாபிற்று அழகுதுறைத்திருப்பது. [கொப்பூழித்யாதி] - திருநாபிகமலத்திலே சதுர்முகனுகிற அதிஷ்டானத்துக்குள்ளே. "ஸ்ருஷ்டிம் தத: கரிஷ்யாமி த்வாமாவிஶ்ய ப்ரஜாபதே" எனகிறபடியே சதுர்முகன் ஆஸனபத்மத்தோபாதியாயிருக்கை. [வீற்றிருந்து] - அவனுக்கந்தராத்மாவாய், ஸர்வநியந்த்ருத்வத்தால்வந்த வேறுபாடு தோற்றவிருந்து. [படைத்திட்டகருமங்களும்] - ஸ்ருஷ்டியுத்த வ்யாபாரங்களும். ப்ரஹ்மஸ்ருஷ்டியடைய "அவனேசெய்கிறுன்" என்னும்படி யிருந்தபடி. [பொருவிலித்யாதி] - உபமானமின்றிக்கே அத்விதீயமாய் ஐஶ்வர்யப்ரகாஶகமான குணசேஷ்டிதங்கள் கேட்குந்தோறும். [என்நெஞ்சம்நின்றுநெக்கு] - திண்ணிதான என்னெஞ்சு மலைநெகிழ்ந்தாப்போலே நெகிழ்ந்து கண்ணநீராருவியாய் ப்ரவஹியாநின்றது. [என்செய்கேனடியேனே] - ப்ராப்தியைபுணர்ந்தவாறேவிட்டு யரிக்கப்போகிறதில்லை. பரதந்த்ரவஸ்துவாகையாலே பெறுதற்கும் யத்நம்பண்ணப்போகிறதில்லை.

ஈடு.—எட்டாம்பாட்டு. உன்குணசேஷ்டிதாதிகளைக் கேட்டகேட்டபோதுதோறும் ஶிதிலனுகாநின்றேன், என்செய்கேனென்கிருர்.

[திருவுருவுகிடந்தவாறும்] - காந்திமிக்கவடிவோடே ஏகார்ணவத்திலே கண்வளர்ந்தருளினபடியும். ஶர்ஶநீயமானவடிவோடே ஏகார்ணவத்திலே கண்வளர்ந்தருளினபடியும். [கொப்பூழ் இத்யாதி] - ஏகார்ணவத்திலே ஸ்ருஷ்ட்யுந்முகனுய்க் கண்வளர்ந்தருளிப் பின்பு அக்காலம் வந்தவாறேயெழுந்திருந்து இவற்றையெல்லாமுண்டாக்கினுன், ப்ரஹ்மஸ்ருஷ்டியளவும்செல்ல அவ்வருகுள்ளதெல்லாம் தானேயுண்டாக்கிப்பின்பு திருநாபியிலேயுண்டான தாமரைப்பூவில் ப்ரஹ்மாவினுடைய வுத்பத்திக்குத்தானுதாரமாய், பின்பவன் தன்னைத் தனக்காதாரமாகக்கொண்டு இவ்வருகுண்டான கார்யவர்க்கங்களையடங்கலுமுண்டாக்கினபடியும். [திசைமுகன்கருவுள்வீற்றிருந்து]-சதுர்முகனுகிற சரீரத்தையதிஷ்டித்துக்கொண்டுநின்று. "ஸ்ருஷ்டிம் தத: கரிஷ்யாமி த்வாமாவிஶ்ய" (ஸ்ருஷ்டிம்தத:கரிஷ்யாமி த்வாமாவிஶ்ய)என்கிறபடியே,"ஏதௌ த்வௌ விபுதஶ்ரேஷ்டௌ"(ஏதௌத்வௌவிபுத

எட்டாம்பாட்டு.—திருவுருவு இத்யாதி. "தனிநாயகமவைகேட்குந்தோறுமென்னெஞ்சம்" இத்யாதியைக்கடாக்ஷித்தவதாரிகை - உன்குணசேஷ்டிதம் இத்யாதி.

திரு - காந்தி. (மிக்க) அர்த்தஸித்தம். உருவு - விக்ரஹம். விவரணம் - தர்ஶநீயமான இத்யாதி. மேலே "கொப்பூழ்" இத்யாதிக்குச்சேர - ஏகார்ணவத்திலே கண்வளர்ந்தருளினபடியும் என்றது. கீழ்வாக்யவிவரணம் - ப்ரஹ்மஸ்ருஷ்டியளவும் இத்யாதி. "கருவுள்வீற்றிருந்து" என்கையாலே - அவன்தன்னைத்தனக்காதாரமாகக்கொண்டு என்றது. அதிஷ்டித்ததுக்கு ப்ரமாணத்வயம்- ஸ்ருஷ்டிம் தத:, ஏதௌ இத்யாதி. "ஸ்ருஷ்டிம் தத: கரிஷ்யாமி த்வாமாவிஶ்ய ப்ரஜாபதே । ததஸ்ஸ்ருஜ்யஸ்ய ஸர்வஸ்ய ஹரோஹாதிவிஹேது:" இதி ஸ்ரீவிஷ்ணுதர்மே. "ஏதௌ த்வௌ விபுதஶ்ரேஷ்டௌ ப்ரஸாதக்ரோதஜௌ ஸ்ம்ருதௌ । ததாதர்ஶிதபந்தாநௌ ஸ்ருஷ்டிஸம்ஹாரகாரகௌ" இதிநாராயணீயே நாமநிர்வசநாத்யாயே. "கருவுள்வீற்றிருந்து" என்றதுக்கு

ஶ்ரேஷ்டேள)''இன்ன ஆசனத்தையுடையனுய்க்கொண்டு''என்றாற்போலே. [வீற்றிருந்து]-தன்னைஶ்வர்யத்தால் உள்ள மேன்மை தோன்றவிருந்தபடி. பொற்குப்பியில் மாணிக்கம் போலே.† (அழகியதிருமேனியோடே கண்வளர்ந்தபடியும்,அந்தவடிவில் கொப்பூழில்சிவந்த தாமரையின்மேலேயுண்டான சதுர்முகன் கருவுக்குள்ளே அந்தராத்மாவான வேறுபாடு தோன்றும்படியிருந்து). [படைத்திட்டகருமங்களும்] ஸ்ருஷ்டித்தவ்யாபாரங்களும். [பொருவில் இத்யாதி]-ஒப்பின்றிக்கே யத்விதீயமாய் ஐஶ்வர்யப்ரகாசகமான உன்குணசேஷ்டிதங்கள் கேட்குந்தோறு மென்னெஞ்சானது மலைநெகிழ்ந்தாப்போலே நெகிழ்ந்து, கண்ணநீரருவியாய் ப்ரவஹியாநின்றது.

[என்செய்கேனடியேனே]-பரதந்த்ரனானநான் கார்யம்செய்து கொள்ளப்பார்த்திருக்கிறேயோ. வேறொன்றாலேபோதுபோக்கித் தரித்திருக்கவோ, நானெத்தைச்செய்வேன்?

ஒன்பதாம் பாட்டு.

அடியைமூன்றையிரந்தவாறும்அங்கேநின்றாழ்கடலுமண்ணும்விண்ணும்
முடியவீரடியால் முடித்துக்கொண்டமுக்கியமும்
நொடியுமாறவைகேட்குந்தோறும்என்னெஞ்சம்நின்றனக்கேகரைந்துகும்
கொடியவல்வினையேன் உன்னையென்றுகொல்கூடுவதே?

ஆ.—(அடியை) மஹாபலி பக்கலிலே மூன்றடியை யிரந்தபடியும், அங்கிலேயிலேநின்றே யிரண்டடியாலே த்ரைலோக்யத்தை யகப்படுத்திக்கொண்டு நீநினைத்ததத்தை முடித்துக்கொண்ட வேண்டப்பாடும், அவற்றைச்சொல்லக் கேட்குந்தோறு மென்னுடைய வந்தக்கரணம் உன்னுடைய ப்ரஸ்தாவமாத்ரத்திலே கரைந்துகும். உன்னையநுஸந்தித்தால் ஸ்திதிலனுகைக்கீடான மஹாபாபத்தைப்பண்ணின நான் உன்னை யென்று புரித்தநுபவிப்பதென்கிறார்.

ஒ—ஒன்பதாம் பாட்டில், த்ரைவிக்ரம வ்ருத்தாந்தாநுஸந்தாநத்தாலே மிகவும் ஸ்திதிலனுகாநின்றேன். நான் யரிப்புடையேனுய் உன்னை அநுபவிப்பது என்று என்கிறார்.

[அடியை என்றுதொடங்கி] - மஹாபலியை மூன்று அடியை இரந்தபடியும், அங்கிலேயிலேநின்றே இரண்டடியாலே த்ரைலோக்யத்தை அகப்படுத்திக்கொண்டு நீ நினைத்ததை முடித்துக்கொண்ட வேண்டப்பாடும். [நொடியும் என்றுதொடங்கி] - அவற்றைச்சொல்லக் கேட்குந்தோறும் என்னுடைய அந்தக்கரணம் உன்னுடைய ப்ரஸ்

பாவம் - இன்ன ஆசனத்தை இத்யாதி. ''வீற்றிருந்து'' என்றதுக்கு - பரபாகத்தால் வந்த வழகாக பாவாந்தரம்—பொற்குப்பியில் இத்யாதி. பொற்குப்பியில்மாணிக்கப்போலே - தன்னைஶ்வர்யத்தாலுள்ள மேன்மைதோன்றவிருந்தபடி என்றதை யித்துக்கொண்டு ஏகதாத்பர்யமாகவுமாம். ''தனிநாயகமவை''-ஐஶ்வர்யப்ரகாசகமான வந்தகுணசேஷ்டிதங்களையென்று சப்தார்த்தம். ''நெக்கு'' - நெகிழ்ந்து. ''அடியேன் - என்செய்கேன்'' என்றுகூட்டிபாவம்- பரதந்த்ரனை இத்யாதி ''அருவிசோருங்கண்ணீர் - என்செய்கேன்'' என்றுகூட்டிபாவம் - வேறொன்றாலே இத்யாதி. க்ரமேணாந்வயஃ. (அ)

† குண்டலிதம் க்வாசித்கம்.

தாவமாத்ரத்திலே கரைந்து உகும். உன்னை அநுஸந்தித்தால் ஶிதிலனாகைக்கீடான மஹாபாபத்தைப்பண்ணின நான் உன்னை என்று தரித்து அநுபவிப்பது.

ப.—அநந்தரம், அர்த்தியாயிருந்து அபேக்ஷிதம் தலைக்கட்டிக்கொண்ட வுன்னுடைய வபதாநங்களைக் கேட்குந்தோறெல்லாமென்னெஞ்சுஉருகாநின்றது, ஸ்த்திரசித்தனாய்ப்படி உன்னைக்கூடுவதென் றென்கிறார்.

(த்ரைலோக்யத்தையு மபேக்ஷியாதே,) மூன்று - மூன்று, அடிபை - அடியை, இரந்த - "தரவேணும்" என்று அவன்மருதபடி அபேக்ஷித்த, ஆறும் - ப்ரகாரமும், அங்கு - அவனிசைந்து உதகம்பண்ணின யஜ்ஞவாடந்தன்னிலே, நின்றே - நின்றே, ஆழ் - அகாதமான, கடலும் - சமுத்திரங்களையும், மண்ணும் - சப்தத்வீபையான பூமியையும், விண்ணும் - ப்ரஹ்மலோகபர்யந்தமான ஆகாசத்தையும், ஈரடியால் - இரண்டடியாலே, முடிய - முடியும்படியாக, முடித்துக்கொண்ட - தன்னினைவு தலைக்கட்டிக்கொண்ட, முக்கியமும் - ப்ராதாந்யமுமாகிற, அவை - அவற்றை, நொடியும் - சொல்லும், ஆறு - ப்ரகாரம், கேட்குந்தோறும் - கேட்குந்தோறும், என் - என், நெஞ்சம் - நெஞ்சானது, நின்தனக்கே - அவாப்தஸமஸ்தகாமனாய்வைத்து ஆஶ்ரிதார்த்தமாக அர்த்தியான உன்னுடைய ஶீலஸ்வரூபத்திலே, கரைந்து - கரைந்து, உகும் - ஒழுகிப்போகாநின்றது; வல் - ஒரு ப்ராயஶ்சித்தஸாத்யமன்றியே, கொடிய - அநுபவித்துக்கழிக்கவொண்ணாதே, வினையேன் - அநிஷ்டாவஹமான, ப்ரேமரூபமாயிருக்கிற பாபத்தையுடையேனான நான், (உடைகுலைப்படாதபடி) நிலைநின்றநுபவிக்கும்படியாக, உன்னை - உன்னை, என்றுகொல் - என்றோ? கூடுவது - கூடுவது. (நொடிதல் - சொல்லுதல்.)

இ—ஒன்பதாம்பாட்டில், த்ரைவிக்ரமவ்ருத்தாந்தாநுஸந்தானத்தாலே மிகவும் ஶிதிலனாகாநின்றேன், தரித்துன்னை யநுபவிப்பதென் றென்கிறார்.

[அடியையித்யாதி] - இந்தாணிழந்தது த்ரைலோக்யமிறே. "த்ரைலோக்யத்தையும்தா" என்றால் இசையான், 'அடி' என்றால், உதாரனாகையாலே யிசையக்கூடும். என்று அடியையிரந்தான். ஓரடிக்குச்சிறையிட்டுவைக்க நினைக்கிறானாகையாலே மூன்றையிரந்தான். [இரந்தவாறும்]-தன்னைத யவனதாக்கித் தானர்த்தியானபடியும். [அங்கே நின்று] - நீரேற்றவிடந்தன்னிலே நின்று. போய்ப்புகுரில், "அக்காலும் வடிவுமன்று" என்று வழக்கு பேசுவர்களிறே. [ஆழ்கடலித்யாதி] - அபரிச்சேத்யமான கடல்களையும், பஞ்சாஶத்கோடி விஸ்தீர்ணையான பூமியையும் ப்ரஹ்மலோக பர்யந்தமான ஆகாசலோகங்களையும் இரண்டடியாலே முடியும்படியாகத் தலைக்கட்டிக்கொண்ட வேண்டப்பாடும். முக்கியம் - ப்ரயாஸமானசெயல். ஸ்வவ்யதிரிக்தங்களையும் திருவடிகளின்கீழே யகப்படுத்துகையால் வந்த ப்ராதாந்யந்தோற்றநின்றபடி. [நொடியுமித்யாதி] - அவைநொடியுமாறு கேட்குந்தோறும். நொடிதல் - சொல்லுதல். நான்சொல்லவேண்டா, குணகதநம்பண்ணுவார் பாஸுரங்கேட்குந்தோறும். [என்னெஞ்சு நின்றனக்கே கரைந்துகும்]-அவாப்தஸமஸ்தகாமனை நீ ஆஶ்ரிதார்த்தமாக அர்த்தியானநீர்மையை யநுஸந்தித்து, என்மனஸ்ஸு "இதென்னநீர்மை" என்று த்ரவித்து ஶிதிலமாகாநின்றது. [கொடியவல்வினையேன்] - ப்ராயஶ்சித்த ஸாத்யமன்று, அநுபவவிநாஶ்யமன்று. ஶைதில்யஹேதுவான ப்ரேமத்தையிறே - பாபமென்கிறது. "யஷாஹேஷ்ரீத ந தெதா ஜஹாஹயா ஹி கோக்ஷகோ வெநாதி" என்கிறதிறே யிவர்க்கு ஹ்யஸ்தாநமாயிற்று. உன்னை தரித்தனுபவிப்பதென்றோ?

ஈடு.—ஒன்பதாம்பாட்டு. த்ரைவிக்ரமாபதாநத்தையநுஸந்தித்து அத்தாலே ஶிதிலனாகிற நானுன்னையரித்து நின்றநுபவிப்பதென்றென்கிறார்.

[அடியைமூன்றையிரந்தவாறும்] - இவையபேக்ஷிக்கமாட்டாதவன்றும் இவற்றின் ஹிதசிந்தை பண்ணுமளவேயோ, இவையுண்டானாலும் சிறியத்தைத்பெரியது நலியாதபடி நோக்குவானவனென்கிறது. [அடியைமூன்றையிரந்தவாறும்] - நேராய்ப்போகாமே மூன்றையிரந்தபடி. இரண்டடியிரந்தானாகி லவனைச்சிறைசெய்யவிரகில்லையே. [அங்கே நின்று] - கடக்கநாலடிபோனானாகில் "க்ருத்ரிமம்பண்ணினான்" என்று அவனுக்கு வழக்குப்பேசலாமிறே. [ஆழ்கடலித்யாதி] - இவருடையநெஞ்சைக் கரைக்கவடியிடுகிறபடி. பூம்யந்தரிக்ஷாதிகளடங்கலு மிரண்டடியிலேயடங்கும்படிக்கீடாக அளந்து தலைக்கட்டிக் கொண்டபடியும். [முக்யமும்] - முக்யமும் வேண்டப்பாடும். அதாவது - ஆஶ்ரிதார்த்தமாகப்பண்ணினவஞ்சனையால் வந்தவேண்டப்பாடிருக்கிறபடி. அன்றியே, ஸ்வவ்யதிரிக்தங்களும் தன்றிருவடிகளின்கீழே யகப்படுகையாலே வந்தவேண்டப்பாடும். [நொடியுமாறித்யாதி] - நொடிதல் - சொல்லுதல். திருவுலகளந்தருளின வ்ருத்தாந்தத்தை வ்யாசாதிகள் சொல்லாநிற்பர்கள், அவர்கள் சொல்லும் ப்ரகாரங்களைக் கேட்குந்தோறும். நான் சொல்லவேண்டா. [என்னெஞ்சம்நின்றனக்கேகரைந்துகும்] - மஹாபலியைப்போலே ஔதார்யம் கொண்டாடுகிறேனல்லேன், இந்த்ரனைப்போலே ராஜ்யமாளுகிறேனல்லேன், என்னுடையமநஸ்ஸானது உன்பக்கலிலே சிதிலமாய் மங்காநின்றது.

[கொடியவல்வினையேன்] - "யந்நாமஸங்கீர்த்தநதோ மஹாபயாத் விமோக்ஷமாப்நோதி" (யந்நாமஸங்கீர்த்தநதோமஹாபயாத்விமோமக்ஷமாப்நோதி) என்கிறபடியே திருநாமஸங்கீர்த்தநம் மஹாபாதகங்களையும் போக்குமென்று சொல்லாநிற்க, அதுதானே ஶைதில்யஹேதுவாம்படி மஹாபாபத்தைப்பண்ணினேன். [உன்னையென்றுகொல்கூடுவதே] - உன்னைநான் தரித்தநுபவிப்பதென்றோ - அநுபவிப்பவந்துகிட்டுவதென்றோ. (கூ)

ஒன்பதாம்பாட்டு.—அடியை இத்யாதி. "அடியைமூன்றை" இத்யாதிகளையும், "என்னெஞ்சம் நின்றனக்கேகரைந்துகும். உன்னையென்றுகொல்கூடுவது" என்கிறபதங்களையும் கடாக்ஷித்தவதாரிகை - த்ரைவிக்ரம இத்யாதி. அபதாநம் - வ்ருத்தமானசேஷ்டிதம்.

*கீழிற்பாட்டோடேஸங்கதி இவையபேக்ஷிக்க இத்யாதி. நேராய் - சமமாய். இரண்டடியிரந்தால் நேராய்ப்போமோவென்ன - இரண்டடியிரந்தானாகில் இத்யாதி. ரஸோக்தி இவருடைய இத்யாதி. "முடிய" - (அடங்கும்படி) 'முடித்துக்கொண்ட' - (தலைக்கட்டிக்கொண்ட). வேண்டப்பாடு - பெருமை. "அவை" என்றது - (திருவுலகளந்தருளின வ்ருத்தாந்தத்தை) "நொடியுமாறு" - (சொல்லும்ப்ரகாரங்களை) "கேட்கும்" என்றதுக்குபாவம் - நான்சொல்லவேண்டாவென்று. நான்சொல்லவேண்டாவென்றது - * என்னெஞ்சுருகைக்கு நான்சொல்லவேண்டா, கேட்டமாத்திரத்திலேயுருகுமென்றபடி. "நின்றனக்கே" என்கிற வவதாரணார்த்தம் - மஹாபலியை இத்யாதி. * கரைந்துகுகைக்குஹேது கொடியவல்வினையென்றுவிவக்ஷித்து, திருநாமஶ்ரவணத்தாலேயுருகுகை பாபபலமோவென்ன-எந்நாம இத்யாதி. "யந்நாமஸங்கீர்த்தநதோ மஹாபயாத் விமோக்ஷமாப்நோதி ந ஸம்ஶயம் நர: । ஸத்ய:க்ருதாகோ(?) ஹரேர்நாமஸங்கீர்த்தநாதேவ விமுச்யதே ஹரி:", இதிஸ்ரீவிஷ்ணுதர்மே மங்களஸ்தவே. க்ரமேணாந்வய:.* (கூ)

பத்தாம் பாட்டு.

கூடிநீரைக்கடைந்தவாறும் அமுதந்தேவருண்ணவசுரரை
வீடும்வண்ணங்களேசெய்துபோனவித்தகமும்
ஊடுபுக்கெனதாவியையுருக்கியுண்டிடுகின்ற நின்தன்னை
நாடும்வண்ணஞ்சொல்லாய் நச்சுநாகணையானே!

ஆ.—(கூடிநீரை) அசுரர்களோடே கூடிநின்று கடலைக்கடைந்தருளினபடியும்; அதின்பலமான அம்ருதத்தை தேவர்கள்புஜிக்க, அசுரர்களத்தைவிடும்படியாக ஒரு வடிவைக்கொண்டுபோன விஸ்மயமு முள்ளேபுக்குஎன்னாத்மாவையுருக்கி முடிக்கின்றன. திருவநந்தாழ்வா னுன்னோடு நித்யஸம்ஶ்லேஷம் பண்ணுமாபோலே நானுன்னைப் பூர்ணமாக தரித்து நின்றநுபவிக்கும் விரகுசொல்லவேணு மென்கிறார்.

ஒ.—பத்தாம்பாட்டில், உன்னுடைய ஸமுத்ரமதநவைசித்ரியத்தை அநுஸந்தித்து ஶிதிலனாகாநின்றேன், தரித்து நின்று உன்னை அநுபவிக்கும்விரகு சொல்லவேணுமென்று ப்ரார்த்திக்கிறார்.

[கூடிநீரை என்றுதொடங்கி] - அஸுரர்களோடே கூடிநின்று கடலைக் கடைந்தருளினபடியும், பலரூபமான அம்ருதத்தைத் தேவர்கள்புஜிக்க அஸுரர்கள் அந்த அம்ருதத்தை விடும்படியாக அவர்களெதிரே ஒருஸ்த்ரீ வேஷத்தைக்கொண்டு அவர்கள்தொடரப்போன விஸ்மயமும். [ஊடுபுக்கு என்றுமேலுக்கு] - உள்ளேபுக்கு என் ஆத்மாவை உருக்கிமுடிக்கிற உன்னை, திருவநந்தாழ்வான் உன்னோடு நித்யஸம்ஶ்லேஷம்பண்ணுமாப்போலே, பூர்ணமாக தரித்துநின்று அநுபவிக்கும் விரகு சொல்லாய்.

ப.—அநந்தரம், ஆஶ்ரிதார்த்தமாகவருந்தொழில் செய்துபகரித்த அம்ருதமதநவ்ருத்தாந்தங்களானவை என்னை ஶிதிலமாக்காநின்றது, உன்னை நிலைநின்றநுபவிக்கும்படி யருளிச்செய்யவேணு மென்கிறார்.

கூடி - தேவாசுரர்களிருவரோடுங்கூடிநின்று, நீரை-க்ஷீரார்ணவஜலத்தை, மத்தும் கயிறுமாதாரமும்முதலான சம்விதாநங்களைப்பண்ணி, கடைந்த - கடைந்த, ஆறும்-ப்ரகாரமும், அமுதும் - அங்குத்தோற்றினவம்ருதமானது, தேவர் - தேவர்கள், உண்ண - உண்ணும்படி, அசுரரை - அசுரர்களை, வீடும் - விடுவிக்கும், வண்ணங்கள் - ப்ரகாரங்களையுடையஸ்திரீவேஷபரிக்ரஹாதிகளை, செய்துபோன - பண்ணிப்போன, வித்தகமும் - விஸ்மயநீயாகாரமும், ஊடு - உள்ளே, புக்கு - புக்கு, எனது - என், ஆவியை - ஆத்மாவை, உருக்கி - நீர்ப்பண்டமாகவுருக்கி, உண்டிடுகின்ற - க்ரஸித்துவிடாநின்றன; நஞ்சு-அநுபவவிரோதிகளை, (அழியச்செய்யும் விஷத்தையுடையனான),நாகம்-திருவநந்தாழ்வானோடே, அணையானே - நித்யஸம்ஶ்லிஷ்டனானவனே, நின்றன்னை - உன்னை, நாடும் - நித்யாநுபவம்பண்ணும், வண்ணம் - ப்ரகாரம், சொல்லாய் - அருளிச்செய்யவேணும்.

இ.—பத்தாம்பாட்டில், ஸமுத்ரமதநவைசித்ரியத்தை யநுஸந்தித்து ஶிதிலனுகாநின்றேன், உன்னை யரித்து நின்றநுபவிக்கும் விரகு சொல்லவேணுமென்று ப்ரார்த்திக்கிறார்.

[கூடி] - "ஃபலமொக்கக்கொள்ளக்கடவோம்" என்று அஸுரர்களோடேகூடி, தேவாஸுரர்களுக்கு விரோதமேபோக்கி ஸௌஹார்தமில்லையிறே. "ஸுராநஸுரைஸ்ஸார்த்தம்" [நீரைக்கடைந்தவாறும்] - க்ஷீராப்தியையிறேகடைந்தது. ஃபலவேளையிலே தேவர்களம்ருதத்தை புஜிக்க, அஸுரர்களம்ருதத்தைவிட்டுப் போம்படிசெய்து. [போன வித்தகமும்] - ஒருஸ்த்ரீ வேஷத்தைக்கொண்டு அவர்கள் தொடரப்போனவிஸ்மயனீயமானசெயலும். "அம்ருத்ததைநாய்க்கிடாய்" என்று பின்தொடரும்படியான வடிவையாயிற்றுக்கொண்டது. "மாயயா மோஹயித்வா தாந் விஷ்ணுஸ் ஸ்த்ரீரூபஸம்ஸ்தித:" [ஊடு புக்கு] - தோற்புரையேபோகாதே மர்மத்திலேபுக்கு. "அச்சேத்யோऽயமதாஹ்யோऽயம்" என்கிற வாத்மவஸ்துவை. [உருக்கியுண்டிடுகின்ற] - த்ரவத்ரவ்யமாக்கி, முடித்துவிடாதே யொழிகிறவுன்னை. "புருஷோத்தமனிப்படி செய்வதே!" என்கிற குணப்ரஸங்கத்திலே ஶிதிலனுகாநின்றேன், யரித்தநுபவிக்கும்படி ஒரு நல்விரகு சொல்லவேணும். [நச்சு நாகணையானே] - நித்யாநுபவம் பண்ணுகிற திருவநந்தாழ்வானைப்போலே யரித்து நின்றநுபவிக்கும்படி பண்ணியருளவேணும்.

ஈடு.—பத்தாம்பாட்டு. ஸமுத்ரமதநவைசித்ர்யத்தை யநுஸந்தித்து ஶிதிலனுகாநின்றேன், உன்னை யரித்துநின்றநுஸந்திக்கவல்லேனும்படி விரகுசொல்லவேணுமென்கிறார்.

[கூடிநீரைக்கடைந்தவாறும்] - "நாம் சமவிபாகம்பண்ணி புஜிக்கக்கடவோம்" என்று அசுரர்களோடேகூடி சமுத்ரத்தைக்கடைந்தபடியும். கடைந்துபிடித்துக்காணு மிவருடைய ஆவியையுருக்கிற்று. [அமுதம்தேவருண்ணவித்யாதி] - ஃபலவேளையிலேவந்தவாறே ப்ரயோஜநரூபமான அம்ருதத்தை யநுகூலவர்க்கமான தேவஜாதியேபுஜித்து, ஆசுரப்ரக்ருதிகள் "அம்ருதத்தைநாய்க்கிடு" என்று அத்தைவிட்டு அவர்கள்பின்தோடரும்படிக்கீடாக தர்ஶநீயமான ஸ்திரீவடிவைக்கோண்டுபோன விஸ்மயநீயமான செயலும். "மாயயா மோஹயித்வா தாந் விஷ்ணுஸ் ஸ்த்ரீரூபஸம்ஸ்தித:" (மாயயாமோஹயித்வாதாந்விஷ்ணுஸ்ஸ்

பத்தாம்பாட்டு.—கூடி இத்யாதி. "கூடிநீரை" என்றுதொடங்கி "நின்றன்னை நாடும் வண்ணம் சொல்லாய்" என்னுமளவும் கடாக்ஷித்தவதாரிகை - ஸமுத்ரமதநேத்யாதி.

"கூடி" என்றவிடத்திலே - "ஸுராநஸுரைஸ்ஸார்த்தம் ..." இத்யாத்யநுஸந்தேயம். தேவர்களுக்குமசுரர்களுக்கும் பரஸ்பரசங்கதி யின்றிக்கேயிருக்க, கூடுகையாவதென்னென்ன; கார்யார்த்தமாகக்கூடியென்கிறார் - நாம் இத்யாதி. நீரை—சமுத்ரத்தை. "நீர்" என்று - சமுத்ரத்துக்கும்பேர். காணு கடைந்துபிடித்து இத்யாதி. கடைந்து வெண்ணெயைப் பிடித்திருக்கவேணுமென்று காணுவுக் கர்த்தம்; ஸமுத்ரத்தைக்கடைந் தம்ருதத்தை யெடுத்த செயலாலே யிவருடைய ஆவியையுருக்கி - யென்று ப்ரக்ருதார்த்தம். ப்ரயோஜநரூபமான - சாராம்சமான. "வீடும்" என்றது - விடுமென்றபடி. ஸ்த்ரீவடிவைக்கொண்டதுக்கு ப்ரமாணம் - மாயயா இத்யாதி. "மாயயா மோஹயித்வா தாந் விஷ்ணுஸ் ஸ்த்ரீரூபஸம்ஸ்தித: । தாநவேப்யஸ்ததாதாய தேவேப்ய: ப்ரத

திரீரூபமாஸ்த்திதஃ)"வானவரைப்பெண்ணாகியமுதூட்டும்பெருமானூர்".கடைந்தவாற்றாலும் வித்தகத்தாலும். [ஊடுபுக்கு] - தோற்புரையேபோகாதே மர்மத்திலேபுக்கு. [எனதாவியை]- "அச்சேத்யோயமதாஹ்யோயம்" (அச்சேத்யோயமதாஹ்யோயம்) என்கிற ஆத்மவஸ்துவை. [உருக்கியுண்டிடுகின்றநின்றன்னை]-த்ரவத்ரவ்யமாக்கி, முடித்துவிடாதேயொழிகிற உன்னை. "புருஷோத்தமனிப்படிசெய்வதே" என்று இக்குணப்ரஸங்கத்திலே சிதிலனாகாநின்றேன், தரித்தநுபவிக்கும்படி நல்விரகுசொல்லவேணும், உம்மை தரிப்பிக்கப்போமோ நம்மாலென்ன; ஒருவன் பரமபோகியாய்நின்று தரித்து உன்னை யநுபவிக்கப்பண்ணிக் கொடுத்திலேயோ; அப்படியேநானும் தரித்துன்னையநுபவிக்கும்படி பண்ணியருளவேணும்.

பதினோராம் பாட்டு.

நாகணைமிசைநம்பிரான்சரணேசரணமக்கென்றுநாடொறு
மேகசிந்தையனாய்க்குருகூர்ச்சடகோபன்மாற
னாகநூற்றவந்தாதியாயிரத்துள்ளிவையுமோர்பத்தும்வல்லார்
மாகவைகுந்தத்துமகிழ்வெய்துவர்வைகலுமே.

ஆ.—[நாகணைமிசை] சரணம்புக்காரை எம்பெருமானுபேக்ஷிக்க நினைக்கிலுமுபேக்ஷிக்கவொட்டாதே விஷயீகரிக்கப்பண்ணும் ஸ்வபாவனான திருவநந்தாழ்வான் மேலே கண்வளர்ந்து, ஆஸ்ரிதவிஷயத்தி லுபகாரகனாயிருந்துள்ள வெம்பெருமானுடைய திருவடிகளே நமக்குசரணமென்று நாள்தோறு மிதொருமனோரதமேயுடையரான ஆழ்வார், தாமுளராகைக்காக பகவத்குண ப்ரேரிதராய்க்கொண்டுசொன்ன ஆயிரத்திலுமிப்பத்தும்கற்றார், ஸ்ரீவைகுண்டத்திலேபோ யெம்பெருமானை நித்யாநுபவம் பண்ணப்பெறுவ ரென்கிறார்.

ஒ.—நிகமத்தில், இப்பத்தும்கற்றார் ஸ்ரீவைகுண்டத்திலேபோய் எம்பெருமானை நித்யாநுபவம் பண்ணப்பெறுவர் என்கிறார்.

[நாகணை என்று தொடங்கி] ஶரணம்புக்காரை எம்பெருமான் உபேக்ஷிக்க நினைக்கிலும், உபேக்ஷிக்கவொட்டாதே விஷயீகரிக்கப்பண்ணும் ஸ்வபாவனான திருவநந்தாழ்வான்மேலே கண்வளர்ந்தருளுவதும்செய்து. ஆஶ்ரிதவிஷயத்தில் உபகாரஶீலனாயிருந்துள்ள எம்பெருமானுடைய திருவடிகளே நமக்கு ஶரணம் என்று. [நாடோறும்

ஏளவ..நஃ" இதிப்ரதமேம்ஶ நவமே. "உருக்கியுண்டிடுகின்ற - நின்றன்னை" என்று - அவனுக்கு விசேஷணம். வர்த்தமாநநிர்த்தேசத்துக்கர்த்தம் - த்ராவத்ராவ்யம் இத்யாதி. உருக்கும் ப்ரகாரத்தைக்காட்டுகிறார் - புருஷோத்தமன் இத்யாதி. அதாவது - "நச்சுநாகணையான்" என்று - ஸர்வாதிகத்வம் ஸூசிதமாகையாலே, "புருஷோத்தமனிப்படி ஸ்த்ரீரூபத்தை பஜிப்பதே" என்று சிதிலனாகாநின்றேனென்றபடி. நச்சுநாகணையானே, கூடிநீரைக்கடைந்தவாற்றாலும், அமுதமென்றுதொடங்கி, வித்தகத்தாலும் ஊடுபுக்கென்றுதொடங்கி, உண்டிடுகின்ற நின்றன்னைநாடும் வண்ணம் சொல்லாயித்யந்வயஃ. (௧0)

என்றுதொடங்கி] நாள்தோறும் இதொரு மநோரதமேயுடையரான ஆழ்வார் தாம் உஜ்ஜீவிக்கைக்காக பகவத்குணப்ரேரிதராய்க் கொண்டு சொன்ன ஆயிரம் திருவாய்மொழியிலும்.

ப.—அநந்தரம், இத்திருவாய்மொழிக்கு ஃபலமாக பரமபதத்திலாநந்தப்ராப்தியையருளிச்செய்கிறார்.

நாகணைமிசை - திருவநந்தாழ்வான்மேலே கண்வளர்ந்தருளின, நம் - நம்முடைய, பிரான் - ஸ்வாமியானவன், சரணே - திருவடிகளே, சரண் - உபாயம், நமக்கு- நமக்கு, என்று - என்று, நாடொறும் - என்றுமொக்க, ஏகசிந்தையனாய் - மநோரதத்தையுடையராய்க்கொண்டு, குருகூர்ச்சடகோபன்மாறன் - ஆழ்வார், ஆக - தாமுஜ்ஜீவிக்கைக்கு, நூற்ற - அருளிச்செய்த, அந்தாதி - அந்தாதியான, ஆயிரத்துள் - ஆயிரத்துள், ஓர் - அத்விதீயமான, இவை - இவை, பத்தும் - பத்தையும், வல்லார் - அப்யஸிக்கவல்லவர்கள், மாகம் - பரமாகாசமான, வைகுந்தத்து - ஸ்ரீவைகுண்டத்திலே, வைகலும் - யாவதாத்மபாவியானகாலமெல்லாம், மகிழ்வெய்துவர் - ஆநந்தநிர்ப்பரராயிருக்கப்பெறுவர்கள். நூற்கை - பண்ணுகை. இது - ஆசிரியத்துறை.

இ.—நிகமத்தில், இப்பத்தும்கற்றார் பரமபதத்திலேபோய் நித்யாநுபவம் பண்ணப்பெறுவரென்கிறார்.

[நாகணை மிசை நம்பிரான்]-அநந்தஶாயித்வம் ஸர்வாதிகவஸ்துவுக்கு லக்ஷணமாகையாலே, ஸர்வாதிகனேஶரண்யனென்கிறது. திருவனந்தாழ்வானுடைய புருஷகாரபாவம் சொல்லுகிறதென்றுமாம். படுக்கையைச்சொல்ல - படுக்கையையுடையாரைச் சொல்லிற்றாயிறே. [நம்பிரான்] - ஆஶ்ரிதவிஷயத்தில் உபகாரஶீலனானவன். [சரணே சரணநமக்கென்று] - நமக்குத்திருவடிகளேஉபாயமென்று, அவதாரணத்தாலே உபாய நைரபேக்ஷ்யம் சொல்லுகிறது. ஸாம்ஸாரிகஸ்வபாவங்கள் மேலிட்டு விபரீதமேபலியாநின்றாலும், இதொழியவேறொன்றில் கால் தாழாதொழிகை - மஹாவிஶ்வாஸமாகிறது. [நாடொறும் இத்யாதி] - நாள்தோறுமிதுவே மநோரதமானவாழ்வார், பகவத்குணப்ரேரிதராய்த்தாமுஜ்ஜீவிக்கைக்காக வருளிச்செய்த ஆயிரத்துளிவையுமோர் பத்தும்வல்லார். [மாகம்] - பரமாகாசம் என்னக்கடவதிறே. [வைகலும்-மகிழ்வெய்துவர்] - குணங்களை நினைத்து ஶிதிலனாகிறவென்னைப்போலேயன்றியே, ஶரீத்தங்கே நின்றுநித்யநுபவம் பண்ணப்பெற்று, பரமபதத்திலே ஆநந்தநிர்பரராகக்கடவர்கள்.

ஈடு.—நிகமத்தில், இப்பத்தும்கற்றார் பரமபதத்திலே போய் நித்யாநுபவம்பண்ணப்பெறுவரென்கிறார்.

[நாகணையித்யாதி] - திருவநந்தாழ்வானைப் படுக்கையாகவுடைய ஸர்வேஶ்வரன் திருவடிகளே நமக்குபாயம் என்று. அநந்தசாயித்வம்- ஸர்வாதிகவஸ்துவுக்கு லக்ஷணமாகையாலே, ஸர்வாதிகனே சரண்யனென்கிறது. (திருவநந்தாழ்வானுடைய புருஷகாரஹாவம்

நிகமம். நாகணை இத்யாதி. "இப்பத்தும்வல்லார் மாகவைகுந்தத்து" இத்யாதியைக் கடாக்ஷித்தவதாரிகை - இப்பத்தும்கற்றார் இத்யாதி. ஸப்தார்த்தம் - திருவநந்தாழ்வான் இத்யாதி. அவனை உபாயமாக ஸ்வீகரிக்கும்போது த்வயத்திற்போலே புருஷகாரபுரஸ்ஸரமாகவேண்டாவோ

சொல்லுகிறதென்றுமாம்.†) இவனுடையவுபாயஹாவத்தில் புருஷகாரமாகவல்லார் அவள் பரிகரத்திலுள்ளாராகாதே. படுக்கைகிடப்ப தந்தஃபுரத்திலேயிறே. [நம்பிரான்] - ஆஶ்ரிதவிஷயத்திலுபகாரசீலனானவன். [சரணேசரண் - என்று] அவதாரணத்தாலே- உபாயநைரபேக்ஷ்யஞ்சொல்லுகிறது. ஸாம்ஸாரிக ஸ்வபாவங்கள் மேலிட்டு விபரீதமே பலியாநின்றாலு மப்படியடிக்கழிவு செய்வாரொருவரல்லரேயிவர். இதொழிய வேறொன்றில் கால்தாழாதொழிகை-மஹாவிஶ்வாஸமாகிறது. இத்தால் - * ஏகபதத்திலர்த்தம் சொல்லுகிறது. [நாடோறுமேக சிந்தையனாய்] - புறம்புண்டானசிந்தனைபோய், இவ்விஷயத்திலே ஏகாகாரமான மநோரதமுடையராய். அர்த்தார்ஜநம்பண்ணப்போவாரொரு சிராயைவிஶ்வஸித்து நாலாண்டு பதிற்றாண்டிழியாநின்றார்களிறே, பேற்றின்சீர்மையைப்பார்த்தா லவ்வளவாகிலும் வேண்டாவோ இவ்விஷயத்தில். ஸம்ஸாரஸ்வபாவத்தால் வ்யஸநபரம்பரைகள் வந்தாலும் வ்யவசாயங்குலையாமே போருமதிறே ஸ்வரூபமாவது. [குருகூர்ச்சடகோபன்மாறன்] - அதுக்கெல்லாவற்றுக்கு மடியான பிறப்பிருக்கிறபடி. [ஆகநூற்றவந்தாதி]-தாமுளராகைக்காகச் சொன்னவந்தாதி ஆயிரத்திலு மிப்பத்தை அப்யசிக்கவல்லார். [மாகமித்யாதி] - மஹாகாசமென்று பேரையுடைய ஸ்ரீவைகுண்டத்திலே. [வைகலும் - மகிழ்வெய்துவர்] - காலதத்த்வமுள்ளதனையும் நித்யாநுபவம்பண்ணப்பெறுவர். "அநுசந்தாநத்துக்கு விச்சேதம்வாராதபடி பண்ணியருளவேணும்" என்று ப்ரார்த்திக்கவேண்டும்படியானஸம்ஸாரத்தை விட்டு, பகவதநுபவத்துக்கு விச்சேத மொருநாளுமில்லாத பரமபதத்திலே புக்கநுபவிக்கப் பெறுவர். மா வென்று - மஹத்தை. கம் என்று - ஆகாசம். (கக)

வென்ன; அதுவுமுண்டென்கிறார் - இவனுடைய இத்யாதி. இத்தால் - திருவநந்தாழ்வானே புருஷகாரமென்றுகருத்து. இவன்பிராட்டிபரிகரமோவென்ன - படுக்கை இத்யாதி. "சரணே" என்கிறவவதாரணத்துக்கிரண்டர்த்தம் - உபாயநைரபேக்ஷ்யமாதல், தம்முடைய மஹாவிஶ்வாஸமாதல், மூந்நினவர்த்தம் - சரணேசரண் இத்யாதி. இரண்டாமர்த்தம் - ஸாம்ஸாரிக இத்யாதி விவரணம் - இதொழிய இத்யாதி. முந்நினவர்த்தவிவரணம் - இத்தாலேகபதேத்யாதி. இத்தனையருமையுண்டானால் 'இத ஹாவெந" என்றும், "தொழுது - என்னுமிதுமிகை" என்றும் - ப்ரபத்தியை ஸூசகமாகச்சொல்லுவானென்னென்ன - அர்த்தார்ஜந இத்யாதி. சிராய் - மரச்சக்கை. அத்தால் - கப்பலைச் சொல்லுகிறது. "நாடொறுமேகசிந்தையனாய்" என்றதத்தால்பலிதம் - ஸம்ஸாரஸ்வபாவத்தால் இத்யாதி. இத்தால் இது ஸ்வரூபமாகையாலே சாதநத்தி லந்வயியாதென்றபடி. "குருகூர்" என்று விசேஷித்ததுக்குபாவம் - அதுக்கெல்லாவற்றுக்கும் இத்யாதி. "ஆக" - (தாமுளராகைக்காக) "நூற்ற" - சொன்ன "மாகவைகுந்தம்" என்ற புநருக்திபரிஹாரம் பேரையுடையவென்று இத்திருவாய்மொழியின் ப்ரமேயாநுகுணமாக பலமருளிச்செய்கிறார் - அநுசந்தாநத்துக்கு இத்யாதி. "வைகலும்" என்ற பதத்துக்குவாசகை - பகவதநுபவத்துக்கு இத்யாதி. வைகலும் - யாவத்காலமும். மகிழ்வெய்துவர் - ஆநந்தத்தையுடையவர்களென்று சப்தார்த்தம். மகிழ்ச்சி - ஆநந்தம். எய்துகை - ப்ராப்திக்கை. (கக)

த்ரவிடோபநிஷத்ஸங்கதி.— [illegible] ॥

த்ரவிடோபநிஷத்தாத்பர்யரத்நாவலி.— [illegible]

[illegible]

திருவாய்மொழி நூற்றந்தாதி.

பிறந்துலகங்காத்தளிக்கும்பேருட்கண்ணனுடன்
சிறந்தகுணத்தாலுருகுஞ்சீலத் - திறந்தவிர்ந்து
சேர்ந்தநுபவிக்குநிலைசெய்யென்றசீர்மாறன்
வாய்ந்தபதத்தேமனமேவைகு.

ஆழ்வார் திருவடிகளேசரணம், எம்பெருமானார் திருவடிகளேசரணம், சீயர்திருவடிகளேசரணம்.

ஐந்தாம்பத்து ஸம்பூர்ணம்

௫ - ஆம் பத்து—பிழை திருத்தம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
௬	5	ஸ்வாத ந்த்ர்ய	ஸ்வாதந்த்ர்ய
௭	29	புறமேபுந்மே	புறமே புறமே
௧௦	24	நுளைத்தல்	துளைத்தல்
௧௧	11	வெளிக்கண்டு	வெளிகண்டு
,,	39	யஜோஜீஹா௱ந	யஜோஜீ௱ந
௧௨	18	நத நுரஃ	நத நுரஃ
௧௩	16	நிரவதி பக்தி	நிரவதிகபக்தி
௧௫	3	உன்னை கயாழிய	உன்னையொழிய
,,	9	தோம்றம்	தோன்றம்
,,	19	ஷாதொவஹு	ஷாதொஹு
௩௦	12	எவித்தொழும்	மேவித்தொழும்
௩௨	24	ஸ் ஸார	ஸர்ஸார
௩௮	35	ஹேதவேதன்ன	ஹேதுவேதென்ன
௪௭	1	யண்டாமொ	யுண்டாமோ
௫௫	7	டகவிலே	கடலிலே
௫௬	16	கோண்டாடுகிற	கொண்டாடுகிற
௫௯	11	நின்றவ்வுல	நின்றிவ்வுல
௬௧	23	அயாஹிரிப்பது	அத்யாஹரிப்பது
,,	40	மின் சென்ற	பின்சென்ற
௬௩	20	இறப்பதெல்லாம்	இருப்பதெல்லாம்
௭௦	30	ஷஊாக்ஷத	வஊாத்ஷத
௭௭	33	அவர்ளுக்கு	அவர்களுக்கு
௮௨	17	நிஷியஹவிதவஹ்ஃ	நிஷியஹாவிதவஹ்ஃ
௯௦	26	த்வமும்	த்வயமும்
௯௪	34	சோழிமாரும்	தோழிமாரும்
௯௬	2	அசந்ததரம்	அநந்தரம்
௯௭	8	மெருமாள்	பெருமாள்
,,	23	ஷஜை௱	ஷ௱ஜை
௯௯	16	கடிவதிறே	கடவதிறே
௧௦௧	39	பறப்புமாறிற்ற	பரப்புமாறிற்ற
௧௨௦	22	குறிப்பு	குறைப்பு
௧௨௬	27	யிருக்குவ	யிருக்குமவ
௧௩௩	28	ஆபத்தைத்தப்	ஆபத்தைத்
௧௪௦	33	ஆபாமிட்டு	ஆபரணமிட்டு
௧௪௯	17	மொழில்	மொழியில்
,,	37	பொருக்க	பொறுக்க
௧௫௧	14	ஸ்வருபாநு	ஸ்வருபாநு
,,	35	ஊாதாவண்டாகிலும்	ஊாதாவுண்டாகிலும்
௧௫௩	14	இருளென்லுதல்	இருளென்னுதல்
௧௭௩	9	புதையடிமுற்றல்	புதையமுடிற்றல்
௧௯௯	4	யரிகைக்கு	யரிக்கைக்கு
௨௦௧	24	அன்னைமீர்கள்	அன்னைமீர்காள்
௨௦௪	26	என்றிகூட்டி	என்ற கூட்டி
௨௧௮	6	ராமவேவாநு	ராமமேவாநு
௨௧௯	18	வன் வழி	வன்பழி
௨௨௧	32	ஆம்	அம்
௨௨௪	17	கொத்தையைக்	கொத்தையறக்
,,	32	அநுஷ்டிருக்கிற	அநுஷ்ட்டிக்கிற
௨௨௯	15	போறிலன்	போகிறிலன்
௨௩௦	6	சேலப்பாலும்	சேர்ப்பாலும்
௨௫௯	26	ப்ரயோஜாரான	ப்ரயோஜநரான
௨௬௪	31	வார்த்தைசொல்	வார்த்தைசொல்

ஸ்ரீ

பகவத் விஷயம்

ஆறாம் பத்து

(நயமாம்வீர)-என்னை அறியாதாப்போலே உம்மையும் அறிந்திலீராகில், நான் சொல்லக்கேளும். உமக்கொருதுறைகளு மில்லை காணும்; என்னைக்கொடுபோகப் பாரும். "விஸ்ரப்த:" (விஸரப்த:) - தந்தாமை யறியாவிட்டால் ஆப்தர்வாயிலே கேட்டறியவேணுங்காணும். "பாபம்மயி நவித்யதே" (பாபம்மயிநவித்யதே)-போகடும்; இங்ஙனன்றாகில், நீரென்னை யிங்கே நிறுத்திப்போனால், நீர் மீண்டுவருந்தனையும் தரித்திருக்கைக்குவேண்டும்ஹேது எனக்கில்லைகாணும். இப்படியிறே ப்ரணயரோஷம் தலையெடுத்தாலிருக்கும்படி. இன்ன மிவ்வளவேயோ? இவர்தாம் இலக்காகச் சொன்னவையிறேயிவை. இவர்வரவிட்டஆளின் முன்பேயும்* "குஶலீயதி காகுத்ஸ்த்த: கிம் ந ஸாகரமேகலாம் । மஹீம் தஹதி கோபேந யுகாந்தாக்நிரிவோத்தித:" (குஶலீயதிகாகுத்ஸ்த்த: கிம்நஸாகரமேகலாம் | மஹீம்தஹதிகோபேந யுகாந்தாக்நிரிவோத்தித:)என்னுமவளிறே. "காகுத்ஸ்த்த:" (காகுத்ஸ்த்த:) - பரபரிபவம் பொறாத குடியிலேயன்றோ தாம் பிறந்தது; "பிறர்க்குவந் தவை பரிஹரிக்குமத்தனையல்லது, தமக்குவந்தது பரிஹரிக்கலாகாது"என்றிருக்கிறாரோ? "கிம் நஸாகரமேகலாம் மஹீம் தஹதி" (கிம்நஸாகரமேகலாம்மஹீம்தஹதி)-"த்ர வத்ரவ்யத்துக்கு ஓரம்பும் கடிநத்ரவ்யத்துக்குஓரம்பும் வேணும்" என்றிருக்கிறாரோ? கடலில் நீரே நெய்யாக எரிக்கவல்ல அம்புடையவரன்றோ. ஒக்கக் கைப்பிடித்தவளாகிலும் பரி வட்டம் பேணியிருக்கும்படிவைத்தாரிறே; ராஜாக்களுக்கு பூமியும் ஸ்த்ரீபோலேயிறே; ஈஶ்வரர்கள் ஸ்ருஷ்டித்தபடி கிடப்பது இவர் கண்சிவக்குமளவுமாகாதேயென்றும், "பஶ்யாமி தேஷாம் ப்ரஹ்மாதீநாம் ஸர்வேஷாம் ந யத:ஸ்திதி" (தர்

---

*ஸாந்த்ரகாநநே ஷஷ்டிம் ஸஹஸ்ரைஶ்ச ஸ்ருதிவஸ்தா, "த்ரிலோக்யாம் காகுத்ஸ்த்ரோ பஶ்சாத்பாஸ்யதயா: । ப்ரக்ஷண ஶைலாதேஜா ஸாத்ரிதாந்த வயுந: ॥ கஉ ॥

என்னையறியாதாப்போலே உம்மையுமறிந்திலீராகி லென்றது - "ஜாநந்த்யாவிநாஶதீ", "அகலகில்லேனிறையும்" என்கிற என் ஸ்வரூபத்தை யறியாதாப்போலே, "ஶத்ரோ: ப்ரக்யாத வீர்யஸ்ய" என்கிற உம்மையும் அறிந்திலீராகிலென்றபடி. விஶ்லேஷத்தில் தரிக்கைக்குஹேது-பாப மென்று விவக்ஷித்தருளிச்செய்கிறார் - போகடும் இத்யாதி. போகடும் - விடுமென்றபடி. உக்தார்த் தத்தை ப்ராக்ருதத்திலே எழுதுகிறார் - இப்படி இத்யாதி. இவர்தாம்இலக்காக - பெருமாள்முன்னிலை யாக. 'ஆளின்முன்பேயும் - என்னுமவளிறே' இதிவாக்யாந்வய:. "காகுத்ஸ்த்த:" என்கிறவளுடைய ஹார்த்தஸாவம் - பரபரிபவம் இத்யாதி வாக்யத்வயமும். தஹியாமைக்குஹேது நம்பக்கலுபேக்ஷை யொழிய, தம்முடையஅம்பு இரண்டையும் தஹிக்கமாட்டாமையில்லையென்கிறார் - த்ரவத்ரவ்யத்துக்கு இத்யாதிவாக்யத்வயத்தாலே. இரண்டுக்கும் வேறே அம்பு வேண்டாவோவென்ன - கடலில்நீரே இத் யாதி. இப்படியிருக்க, தாம் தஹியாதிருந்தது, என்பக்கல் ஸ்நேஹமில்லாமை என்று கருத்து. "மேகலாம்" என்றதுக்கு ஹார்த்தஸாவம் - ஒக்கக்கைப்பிடித்த இத்யாதி. ஈஶ்வரர்களான ப்ரஹ்மாதிகள் ஸ்ருஷ்டித்தத்தை இவராலே யழிக்கப்போமோ வென்ன - ஈஶ்வரர்கள் இத்யாதி. இது - "கோபேந" என்றதுக்குஸாவம். "காகுத்ஸ்த்த: - குஶலீயதி - உத்தித: - யுகாந்தா

மாபதேமாத்த்யஜதம்சராஜ்யம் மாம்சாப்யரண்யம்நயதஃபதாதிம்) - என்கிறபடியே பித்ரு வசநபரிபாலநம் பண்ணப் போந்தாரோ? என்னை நலிகைக்காகப் போந்தாரத்தனையிறே என்றும்-இப்புடைகளிலே சொன்னவை அநேகமிறே. இவளும் * மாசறுசோதிதொடங்கிப் போர நோவுபட்டு, அது தன்னை * வைகல்பூங்கழிவாயளவும் வரப் பாடாற்றி, அவ்வள விலும் வரக்காணுமையாலே தூதுவிட்டு, தூதவாக்யமத்தலைப்பட்டு மீளுவதற்குமுன்னே பற்றுதபடி பதறி, ''இனி அவன்றான்வந்தாலும் ஸம்ஶ்லேஷமாய் அதுவிஶ்லேஷாந்தமா யல்லதுஇராது; ஆனபின்பு, அவன்வந்து கலந்துபிரிந்தகோள்வாய் பொறுக்க அரிதாயிருக்கும்; அநந்தரம் பிரிவாகிற புதுக்கோமுற்றவன்வந்து முதன்மைகொண்டாடுமதில், முகம்பழகின வ்யஸநமேயமையும்'' என்று ஆற்றாமை தோற்றவிருந்தாள். எங்ஙனே யிருந்தாளோவென் னில்?—''ஹிமஹத நளிநீவ நஷ்டஶோபா'' (ஹிமஹதநளிநீவநஷ்டஶோபா)- பன் னிரண்டாண்டு தண்ணீர்த்துரும்பறக் கலந்துபோந்த விவளுக்கு வந்தேறியானபிரிவிறே: அத்தாலே அழகழிந்திருந்தாள். ''வ்யஸநபரம்பரயா'' (வ்யஸநபரம்பரயா)- பிரிவோ பாதி கலவியும் வந்துகழியப்பெற்றதில்லை. ''அதிபீட்யமாநா'' (அதிபீட்யமாநா)- ஆஶ் ரயத்தினளவல்லாதபடியாயிருக்கை. ''ஸஹசரரஹிதேவசக்ரவாகீ'' (ஸஹசர ரஹிதேவசக்ரவாகீ)- வருமளவும்உணர்ந்து பொறுத்திருக்கமாட்டாதிருக்கை. அவற்றின்படி யங்ஙனேயிறே: ''ஜநகஸுதா'' (ஜநகஸுதா)-''இவைவரும்'' என்று வளரப்பெற்ற தில்லை. ''க்ருபணாம்தஶாம்ப்ரபந்நா'' (க்ருபணாம்தஶாம்ப்ரபந்நா)- கீழ்ச்சொன்ன விவையொன்றும் ஒப்பாகமாட்டாது,சிலசொல்லிற்றுமித்தனை. இவளும்அப்படியே,''முகம் பழகினவாற்றாமையோடே யிருந்து முடியவமையும்; இனி, அவன் வரவுநமக்குவேண்டா'' என்றிருக்கிறாள். இவள்தானிப்படி பாரிக்கைக்கு அவன்றான் வாராநின்றானேவென்னில்?- அவன் வரவுக்கு ஸூசகமான நன்னிமித்தங்கள் அநேகமுளவாயிருந்தன. ''வக்ஷீவ''

ந்ரிவ, கொவெந-ஷாமாஶவேஷாம்ஹீ, உஹதிகிம்ந'' - தஹியாரோ. தஹியாமை யாலே ப்ராணயித்வமில்லை என்றபடி. அன்றிக்கே, ஈஶ்வரஸத்தையுண்டானல் ஜகத்தை தஹியாரோ, ஆஶ்ரிதபரிபவம் பொறுப்பரோவென்னுதல் ; ''க்ஷயிஜீவத்ருவி'' இதிவத். 'என்றும், என்றும்' என் றது தாத்பர்யாந்தரமல்ல: இப்படியுமிப்படியும் சொன்னுளென்றபடி. பிராட்டி நெடுநாள் விஶ்லே ஷித்துஊடினுள், இவளிப்படி நெடுநாள் நோவுபட்டாளோவென்ன -இவளும் மாசறுசோதி இத்யாதி. கோள்வாய் - புதுப்புண். புதுக்கோமுற்றவன் - புத்ததிகாரி. எங்ஙனேயிருந்தாளோவென்னிலென் றது - இவளாற்றாமை தோற்றவிருந்த ஆகாரம் ஆரைப்போலே யிருந்ததென்னில்என்றபடி. ஹிம ஹதமாவதற்கு முன்பு தாமரையோடை நன்றாயிருந்தவோபாதி, இவளும் திருவயோத்யையி லிருக்கிற நாள் பன்னிரண்டுஸம்வத்ஸரமும் ஒருவிக்கமறக் கலந்தாளென்று - ''நஷ்டஶோபா'' என்றதுக்கு ஹாவமருளிச்செய்கிறார்-பன்னிரண்டாண்டு இத்யாதி. தண்ணீர்த்துரும்பறவென்றது-'ஸமா த்வாதஶ' என்கிறவிடத்தில், ''காமோ நாபத்ருஜஸம்யோகே'' என்று, அத்யந்தஸம்யோகே விஹித த்விதீயையைப்பற்ற. ''பரம்பரயா'' என்றதுக்கு ஹாவம் - பிரிவோபாதி இத்யாதி. ''அதி'' என்கிற உபஸர்க்கார்த்தம் - ஆஶ்ரயத்தின் இத்யாதி. ''சக்ரவாகீ'' என்றதுக்குஹாவம்- வருமளவு இத்யாதி. கீழ்ச்சொன்னவிவையென்றது - நளிநீசக்ரவாகிகளை. 'அவன்றான் வாராநின்றானேவென் னில்' என்கிற ஶங்கைக்குஅஞ்சு பரிஹாரம் அருளிச்செய்கிறார் - அவன்வரவுக்கு இத்யாதி. அண்டஜ மென்னுதே, 'வக்ஷீ' என்றதுக்குஹாவம் - சிறகைவிரித்தது என்று. ''காஷ்டநிஷ்ஃ'' என்னுதே,

(பக்ஷீச)- பக்ஷியானது சிறகை விரித்தது. † (பக்ஷத்தையுடைத்தென்கிறவிஶேஷணத்துக் கிதுவேயிறேகருத்து.) "ஶாகாநிலய:" (ஶாகாநிலய:) - உலர்ந்தகொம்பிலன்றிக்கே, பசுமையையுடைத்தான பணையிலேயிருந்தது. வ்ருக்ஷத்தை வலமாகவந்து, தழைத்தபணை யிலே நற்றரிக்கஇருந்தது. "ப்ரஹ்ருஷ்ட:" (ப்ரஹ்ருஷ்ட:)-அங்குள்ள பலாதிகளை புஜிக் கையாலுண்டான ஹர்ஷம் வடிவிலே தோற்றும்படி இருந்தது. "புந:புநஶ்சோத்தம ஸாந்த்வவாதீ" (புந:புநஶ்சோத்தமஸாந்த்வவாதீ)-மேன்மேலென நல்வார்த்தைகள் சொல் லத் தொடங்கிற்று. அதுக்கு மேலே, "ஸுஸ்வாகதாம்வாசமுதீரயாந:" (ஸுஸ் வாகதாம்வாசமுதீரயாந:)- இவ்வளவல்லகிடாய்அத்தலைபட்டது என்று சொல்லுமாபோலே யிருந்தது. "புந:புநஶ்சோதயதீவ" (புநபுநஶ்சோதயதீவ) - வரவு நிஶ்சிதமான பின்பு, குளித்தலோப்பித்தல் செய்யாதிருக்கிறது என்னென்று சொல்லுமாபோலே யிருந்தது. "ஹ்ருஷ்ட:" (ஹ்ருஷ்ட:)-வந்தால் பிறக்கும் வேறுபாடுதோற்ற உடம்புமயிரெறிந்திருந்தது. "ததாகதாம்" (ததாகதாம்)- "ரஹஸ்யஞ்சப்ரகாஶஞ்ச"(ரஹஸ்யஞ்சப்ரகாஶஞ்ச)- என்றுகொண்டு ப்ரஹ்மாவின் ப்ரஸாதத்தாலே யுள்ளபடியெல்லாம் தோற்றக்கடவதாகப் பெற்றுடையனான ருஷிக்குப் பாசுரமிட்டுச் சொல்லவொண்ணாதபடி யிருக்கிற படி. "தாம்"(தாம்)-தர்மிக்குமேற்பட அவ்வருகொன்றின்றிக்கேயிருக்கை. "வ்யதிதாம்" (வ்யதிதாம்) - கீழ்ச்சொன்னவை ப்ரக்ருதியாய், வ்யஸநமுள்ளது மேலேயென்று தோற்றும்படியாய்இருந்தாள்; "ஸமாத்வாதஶதத்ராஹம்" (ஸமாத்வாதஶதத்ராஹம்) என்று பன்னிரண்டாண்டு கலந்துபிரிந்த இவளுக்கு அதொன்றுந்தோற்றாதே துக்கத் தையிட்டு நிரூபிக்கவேண்டும்படியா யிருந்தாள். "அநிந்திதாம்" (அநிந்திதாம்)- அத்தலையைப் பிரிந்தா லிருக்கக்கடவபடியே யிருந்தாள் இப்படி யிராத வன்று நிந்திதையேயாகாதே. "வ்யபேதஹர்ஷாம்" (வ்யபேதஹர்ஷாம்) - "ஹர் ஷம் குடிபுகுந்துபோயிற்று" என்று தெரியாதா யிருக்கை. "ஸுதீர்கஸாம்"

"ஶாகாநிலய:" என்றதுக்குஹ்ருதயம் - உலர்ந்த இத்யாதி. நன்னிமித்தமாகையாலே ததுபயுக்தத் தையுங்கூட்டிக்கொண்டு, "நிலய:" என்கிற பதத்துக்கு ஹ்ருதயம்-வ்ருக்ஷத்தை இத்யாதி. பக்ஷியானது இரையெடுத்தால் நல்ல லக்ஷணமிறே, ஆகையாலே யருளிச்செய்கிறார் - அங்குள்ளபலாதிகளை இத் யாதி. * உத்தமஸாந்த்வவாதியாகையாவது - பெருமாள் சீக்ரத்திலே வருகிறாரென்கை. "ஸுஸ்வாகதாம் வாசம் - உத உதீரயாந: - உத" என்று உத ஶப்தத்தை - கீழ்ப்பதங்களிலுங் கூட்டுவது. வந் தால்பிறக்கும் வேறுபாடென்றது - பெருமாள்வந்தால் பிராட்டிக்குப் பிறக்கும் ஸந்தோஷமென்றபடி. "ரஹஸ்யஞ்சப்ரகாஶஞ்சயத்வ்ருத்தம் தஸ்யதீமத:। ராமஸ்யஸஹஸௌமித்ரே ராக்ஷஸாநாஞ்சஸர்வஶ:" இதி பாலகாண்டே. ததாகதாம் - வாசாமகோசரமான தசையை யடைந்தவ ளென்றபடி. தாமென்றது - ஸ்வரூபமாத்ரவாசி. "வ்யதிதாம்" என்றதுக்கு - * ஆதிகர்மணிக்த ப்ரத்யயமாய், வ்யஸநோபக்ரமத்தைச்சொல்லுகிறது என்றர்த்தம் அருளிச்செய்கிறார் - கீழ்ச்சொன் னவை இத்யாதி. ப்ரக்ருதியாயென்றது - ஸ்வஸ்த்த தசையாயென்றபடி. "வ்யதிதாம்" என்ற துக்கு நிரூபகமாக ஹ்ருதயம் - 'ஸமாத்வாதஶ' இத்யாதி. 'அத்தலையைப்பிரிந்தால்' இத்யாதிக்கு- உத்தமநாயகனைப் பிரிந்தாலிருக்கக்கடவபடியே இருந்தாளென்று கருத்து. உபஸர்க்கார்த்தம் - ஹர் ஷம்குடிபுகுந்து இத்யாதி. "ஸுதீர்காம்" என்கைக்கு - இத்தசையிலழகுண்டோ வென்ன - மண்

† குண்டலிக்ரந்தம் க்வாசித்கம்.

(பரிதீநமாநஸாம்)-ஹர்ஷம்வந்தாலும் ஆஶ்ரயமுமின்றிக்கேயிருக்கை. 'ஶாஹாஃ' (ஶாபாம்)- மண்தின்றுவந்த நகடுபோலன்றிறே குணதிகவிஷயத்தைப் பிரிந்தால் இருக்கும்படி; கடலேறிவடிந்தாற்போலே யிருக்கிற அவ்விருப்புதனக்கே ஆலத்திவழிக்கவேண்டும்படி யிருக்கை. "நிமித்தாநிஶாபாநிபேஜிரே" (நிமித்தாநிஶாபாநிபேஜிரே)- நிமித்தங்களானவை இத்தலைக்கு நன்மைசொல்லித் தந்தாம் ஸ்வரூபம் பெற்றன. "நரம்ஶ்ரியாஜுஷ்டமிவோபஜீவிநः" (நரம்ஶ்ரியாஜுஷ்டமிவோபஜீவிநः)- ஸாக்ஷால்லக்ஷ்மிக்குக் கிஞ்சித்கரித்து ஸ்வரூபம்பெற்றன; என்போலவென்னில்?—அர்த்திகளாயிருப்பார் உதாரர் பக்கலிலேசென்று தந்தாம் ப்ரயோஜநம் பெற்று ஹ்ருஷ்டராமாபோலே. இப்படியாயிருந்தன நிமித்தங்களின்அளவு. இனி, அவனளவு பார்த்தால், "ஆர்த்தோவாயதிவாத்ருப்தः" (ஆர்த்தோவாயதிவாத்ருப்தः)-ஆர்த்தனாய் ஶரணம்புகவுமாம்; அன்றிக்கே, நாம் திருநாமங்களைச் சொன்னால் சேவகர் நம்மை ஆக்ஷேபித்துச் சொல்லுமாபோலே செருக்காலே சொல்லவுமாம். இங்ஙன் விகல்பிப்பானேன்? ஆர்த்தனுக்கன்றே பலப்ராப்தியுள்ளது? மற்றையவனுக்குஉண்டாகச் சொல்லுகிறவிடம் ப்ரஸித்தமன்றிறே யென்னில்?—இஶ்ஶ்லோகத்தால், ஶரணாகதலக்ஷணம் சொல்லுகிறதல்ல: ஶரண்யலக்ஷணம் சொல்லுகிறது. இவனுடைய ஆர்த்திதானுமுபாயத்தில் அந்வயியாதிறே; ஆனபின்பு அவனோடிவனோடு வாசியில்லை. "தன்தனைசயறிந்து, 'நமக்கோருகைம்முதலில்லையாயிருந்தது' என்று தன்குறையை

தின்றுவந்த இத்யாதி. இங்கே - "க்ஷாவத்ஸீம் ப்ரஹ்யாதேஷீம் ஸவத்ராவ...ாதுஶः என்றதநுஸந்தேயம். நகடு - வைவர்ண்யமும், ஶோபையும், வ்யாதியும். விவரணம் - கடலேறி இத்யாதி 'ஆலத்திவழிக்கவேண்டும்படி' என்றவிடத்திலே- "அலமருகின்றனவாழியரோ" என்றது அநுஸந்தேயம். 'ஶாஹாநி - நிமித்தாநி - பேஜிரே" என்றந்வயித்தர்த்தம் - நிமித்தங்களானவை இத்யாதி. "ஸஜ்ஜேஸவாயாஃ" என்கிறதாதுவாலும், "ஶ்ரியாஜுஷ்டம் - நரமிவ" என்ற த்ருஷ்டாந்தபலத்தாலும் "ஸ்வரூபம்பெற்றன" என்றது. இப்படியந்வயியாதே, "நிமித்தங்களானவை ஶாபத்வத்வங்களையடைந்தன" என்றுகொள்ளுமளவில், "தயாமதாஃ" இத்யாதி காரகங்களுக்கு அந்வயமின்றிக்கேயொழியும்; ஆகையாலே ஸவம் ஸம்ப்ராதாம் ப்ராவத்ரு என்று அத்யாஹரித்து யோஜிக்கவேணும். இப்படியுமோருருவிலே அருளிச்செய்தார். "நிமித்தங்களானவை" இத்யாதி வாக்யவிவரணம் - ஸாக்ஷால்லக்ஷ்மிக்கு இத்யாதி. நிமித்தங்கள்மாத்ரமன்றிக்கே, அவன் க்ருபாவிஶிஷ்டனுகையாலும் வரவுதப்பாதென்று த்விதீயபரிஹாரம் - ஆர்த்தோவா இத்யாதி. "த்ருப்தனுவான் - ஸம்ஸாரதோஷ பகவத்வைலக்ஷண்ய ஜ்ஞாநயுக்தனாய் ஸதாசார்யஸமாஶ்ரயணபூர்வகமாக 'ஈஶ்வரனேயுபாயோபேயம்' என்று அத்யவஸித்து, தேஹாந்தரம் ஸஹியாமல்ஏதத்தேஹாவஸாநத்தளவும் ஆறியிருக்குமவனாயிருக்க, 'சேவகர்நம்மையாக்ஷேபித்துச் சொல்லுமாபோலே' என்று லக்ஷரிப்பானென்" என்றுகேட்க;—"ஶரண்யவைபவ ப்ரகரணமாகையாலே நஹிநிந்தாந்யாயேந லக்ஷரிக்கிறார்" என்றருளிச்செய்வர். அன்றிக்கே, த்ருப்தியின் சரமாவதியான அஹ்ருதயோக்தியாகச்சொல்லுகிற அதிகாரியைச் சொல்லுகிறதென்னுதல்; "ப்ரவ்ருத்திவாரேவயேநகேநாபிப்ரகாரேண த்வயவக்தாகஃ" இத்யாத்யநுஸந்தேயம். 'இங்ஙன்விகல்பிப்பானென்' என்றதுக்குக்கருத்து - இருவர் ப்ரபத்தியும் நெடுவாசிப்பட்டிருக்க, "ரக்ஷிதவ்யः" என்கிற ஏகபலவிஷய விகல்பங்கூடுமோவென்னி லென்றபடி. ஏன், விகல்பிக்கைக்குக் குறையேதென்ன - ஆர்த்தனுக்கன்றே இத்யாதி. 'ப்ரஸித்தமன்றிறே' என்கையாலே - அபுத்திபூர்வகமாக ஏககரணத்தாலே ப்ரபத்தி பண்ணுகிற சரமாவதி த்ருப்தன்? அவிவக்ஷிதனென்று கருத்து. ஶரண்யலக்ஷணஞ் சொல்லுகிறதுகொண்டு ஆர்த்தனையும் த்ருப்தனையு மொக்கச்சொல்லலாமோவென்ன - இவனுடைய இத்யாதி. ஆர்த்தனோடு ஸாம்யஞ்

அறிவிக்கவும் மாட்டாதபடியாயிருந்தான்; ஆனபின்பு, இவனுக்கு நாமே யாகாதேயுளோம்'' என்று திருவுள்ளம் இவன்பக்கலூன்றியிருக்கும். ''பரேஷாம்ஶரணாகத: அரி:'' (பரேஷாம்ஶரணுகத: அரி:) - ஶத்ருக்களில் வைத்துக்கொண்டு ஶரணுகதனுன ஶத்ருவாயிற்றிவன். அதேதென்னில்;— ''ஶரணம்'' என்கிற உக்தியைச் சொல்லுகையாலே ஶரணுகதன் என்னவுமாய், அகவாயில்இல்லாமையாலே ஶத்ருவென்னவுமாயிருக்கை. அன்றிக்கே, பூர்வவ்ருத்தத்துக்கு அநுதாபமில்லாமையாலும், இப்போது 'ஶரணம்' என்கிற ஶப்தத்தைச் சொல்லுகையாலும், இரண்டும் சொல்லலாயிருக்கை. ''கொன்றேன்-அன்றே வந்தடைந்தேன்'' என்னுமாபோலே. ''ப்ராணாந்பரித்யஜ்ய'' (ப்ராணுந்பரித்யஜ்ய)-ப்ராணங்களை யொருதலையாகவிட்டு. ''ப்ராணாநபி'' என்னவேண்டாவோவென்னில்?—அவன் சொன்ன சொலவுக்கு இதொன்றும் போராமையாலே அது வேண்டாவாயிற்று. ''ரக்ஷிதவ்ய: க்ருதாத்மநா'' (ரக்ஷிதவ்ய: க்ருதாத்மநா) - சிக்ஷிதமநாவாய் இருக்குமவனால் இத்தனையும்செய்யப்படும். அறிவுடையார்க்கித்தனையும் செய்தல்லது நிற்கவொண்ணுது. இதிறேயவன்படி. ''இப்படி, களித்து 'ஶரணம்' என்றாலும் பொறுக்கமாட்டாதவன், * மாசறுசோதியேதொடங்கிப் போரமிறுக்கப்பட்டு நாலுப்ரயோகம் அடுத்து ஶரணம்புக்கு, அவ்வளவிலும் முகங்காட்டாதொழியச் செய்தேயும் தூதுவிட்டு, 'இப்படி இம்மிறுக்குக்களெல்லாம்பட்டது நம்மையுத்தேசித்திறே' என்றிருக்கும்'' என்றிருக்கையாலும், இவ்வளவும்வர இவள்தான் முடியாதே கிடக்கையாலும், அவன் ஸ்வபாவத்தை விஸ்வஸித்திருக்கையினுலும், அவன்வரவுக்கு த்யோதகமான ஸந்நிமித்தங்கள் அநேகங்களுண்டாகையினுலும், இதெல்லாங்கிடக்க ''நம்முடைய பாக்யஹாநிதான் அவனை நம்முன்னே கொண்டுவந்து நிறுத்தும்'' என்றிருக்கையினுலும், ''பிரிவுஅநிஷ்டமான தஶையிலே போகவல்ல நிர்லஜ்ஜன் வரவுஅநிஷ்டமானதஶையிலேமுன்னேவந்துநிற்கவும்

சொல்லி, ஆதிக்யஞ்சொல்லுகிறார் - தன்தசை இத்யாதி. ''கூடேதூரவாயஹிவாரூரவ்ஷ:'' என்று-ஆர்த்தனையும் ப்ரதிஜ்ஞைபண்ணி, ''பரேஷாமபி ஶரணாகத: அரி:'' என்று கொண்டு த்ருப்தன் படியைச்சொல்லுகிறது; இஶ்ஶ்லோகம் - ஶரண்யன்படியைச் சொல்லுகிறதாகையாலே. அதேதென்னென்னிலென்றது - ஶரணாகதத்வமும் ஶத்ருத்வமும் விருத்தமன்றோவென்றபடி. லோகபரிபாடியாலே கீழருளிச்செய்து, ஶாஸ்த்ரபரிபாடியாலேபரிஹாராந்தரம் - அன்றிக்கே பூர்வவ்ருத்தத்துக்கு இத்யாதி. மூன்றும்பரிஹாரம் - கொன்றேன் இத்யாதி. அதாவது - ''பரேஷாமபி - ஸ்வஸாது - ஶரணாகத:'' என்றந்வயித்து, பிறர்க்கும் ஶத்ருவாய்க்கொண்டு ப்ராயஶ்சித்தாதிகள் பண்ணுதே ஶரணாகதனென்றபடி கொன்ற உதிரக்கைகழுவாதே உடனேவந்தடைந்தேனித்யர்த்த:. திருமொழி முதற்பத்து ஒன்பதாந்திருமொழி மூன்றும்பாட்டு. ஒருதலையாக - தனக்கே பரமாக வென்றபடி. இவனிலும் ப்ராணங்களதிகமன்றோ என்றசங்கித்து, ஶரணாகதர்க்கு ப்ராணங்கள் ஸத்ருஶமாகாமையாலே யென்று பரிஹரிக்கிறார் - ப்ராணாநபி இத்யாதி. விவரணம் - அறிவுடையார்க்கு இத்யாதி. ஶரணாகதிவைபவத்தி லறிவுடையார்க்கென்றபடி. 'இனியவனளவுபார்த்தால்' என்று கீழ்ச்சொன்னவாக்யத்துக்கு 'இதிறேயவன்படி' என்றவாக்யத்தோடேயந்வயம். இஶ்ஶ்லோகத்தாற்சொன்ன குணதிஶயத்தை கிம்புநர்ந்யாயத்தாலே இவர்பக்கலிலேயேறிட்டுக்காட்டுகிறார் - இப்படிகளித்து இத்யாதி. மூன்றும்ஹேது - இவ்வளவும் வர இத்யாதி. கீழ்ச்சொன்ன நன்னிமித்தங்களையும், ''கூடேதூரவா'' இத்யாதியாற்சொன்ன அவன்குணதிஶயத்தையும் வ்யுத்க்ரமமாக அநுவதிக்கிறார் - அவன்ஸ்வபாவத்தையித்யாதியாலே. அவன் ஸ்வபாவத்தை - க்ருபாவைஶிஷ்ட்யஸ்வபாவத்தை. நாலாம்ஹேது - இதெல்லாங்கிடக்க இத்யாதி. அஞ்சாம்ஹேது - பிரிவநிஷ்டமான இத்யாதி. முன்னேவந்துநிற்கிறதெதுக்கென்ன - இன்னமுமொருகால் இத்யாதி.

வல்லன்'' என்றிருக்கையினாலும், ''இன்னமுமோருகால் கலந்துபிரிந்து நம்மைமுடிக்க வேணும்'' என்றிருக்கையினாலும், ''வரவுதப்பாது'' என்று அவன் வரவை நிஶ்சயித்து-தோழிமாருந்தானுமாக ''இனி அவன் வந்தாலு மவனுக்கு முகங்கொடுத்தல் வார்த்தை சொல்லுதல் செய்யக்கடவோமல்லோம்'' என்று ஸங்கல்பித்து, ''அவனறியாததோரிடத்தே போயிருக்கவேணும்'' என்று பார்த்து; காயாம்பொழிலாய் அதிலே விளையாடுசூழலாய் அதின் நடுவே அதி மநோஹரமாய் இருப்பதோரு மண்டபமாய், அதிலே இவர்களெல்லாருங்கூடிக் கழகமாகவிருந்து, வந்தாலு மவனுக்கு இட்டீடுகொள்ளுகைக்குப் பற்றுசில்லாதபடி பூவை கிளிதொடக்கமான அசேதநமாயும் சேதநமாயுமுள்ள லீலோபகரணங்களை ஊரழிபூசலில் அரணுள்ள கோட்டைகளிலே சரக்குவாங்குவாரைப்போலே ஓரிடத்தே திரளவாங்கி, இனி இவர்கள் மறந்தவை ஏதேனுமுண்டாகில் அதுபெற்று அவனுக்கு ஸத்தையுண்டாக வேண்டும்படியாய், இப்படி யிவர்கள் சமயமிட்டு, வந்தாலும் அனுக்குப் புகுரவொண்ணாத படி அநாதரமாகிற கன்மதிளை உரக்கவிட்டு, அவனுடைய ஸர்வஜ்ஞத்வங்கொண்டு காரியங் கொள்ளுகைக்கு ஒருவழியில்லாதபடியும் ஸர்வஶக்தித்வங்கொண்டு வ்யாபரிக்கவொண் ணாதபடியாகவும் இவர்கள் வ்யவஸ்தை பண்ணியிருந்து - க்ருஷ்ண வ்ருத்தாந்தம் சொல்லு வார் ''கச்சித் ஸாகுமாலீக்ருஷ்ண:'' (கச்சித்ஸாகுமாலீக்ருஷ்ண:) - என்று இப்பிதற்றுத் தானேன் என்று- ''அதவாகிந்ததாலாபை:'' (அதவாகிந்ததாலாபை:)- என்பாராய், ஆஸுரப்ரக்ருதிகளான உகவாத ஹிரண்யாதிகள் கோஷ்டிகளில் திருநாமம் சொல் லுகை அஸஹ்யமாமோபாதி, இவர்கள் கோஷ்டியிலும் உகவை தலைமண்டையிட்டு, திரு நாமஞ்சொல்லில் நெஞ்சு சிவிட்கேன்னும்படியாய்க் கொண்டிருந்தார்கள் இவர்கள். இதுஇத் தலையிருந்தபடி. இனி, அத்தலை இருந்தபடியென்னேன்றால்; ''வேறுகொண்டு உம்மையா னிரந்தேன்'' என்கிற ஆர்த்தநாதம் செவிப்பட்டது. ''ஶாசிஶ்ரவா:'' (ஶாசிஶ்ரவா:)

அன்றிக்கே, * இன்னுயிர்ச்சேவல் ப்ரக்ரியையாலே ஆரம்பஹேதுவாதல். கீழ்ச்சொன்ன ஹேதுக்க ளைந்தும் சர்மவிஶேஷத்தாலே விபலமாய், வாராதிருக்கையே நியதமென்னுமத்தைத் தோற்றுவிக் கிறது - வந்தாலும் என்கிற சப்தம். காயாம்பொழில் - காசாந்தோப்பு. விளையாடுசூழல் - மணற் குன்று. கழகம் - ஸமூஹம். இட்டீடுகொள்ளுகை - வார்த்தையிட்டு வார்த்தைகொள்ளுகை. 'பூவை கிளிதொடக்கமான - சேதநமாயும் அசேதநமாயும்' என்றந்வயிப்பது. அசேதநமான லீலோபகரணங் களாவன - பந்து, கழல்தொடக்கமானவை. பூவை - கறுத்தகிளி. ஊரழிபூசல் - ஊரழியும்படியான சண்டை. ஆனால், ''என்னுடைய பந்தும்கழலும்தந்துபோகு'' என்று - அவன்கையிலே யிருக்கிற தாகச் சொல்லாநின்றதேயென்ன - இனிஇவர்கள்மறந்தவை இத்யாதி. உரக்க - த்ருடமாக. 'ஸர்வ ஜ்ஞத்வங்கொண்டு' இத்யாதிக்குபாவம்-அவனுக்குமுன்னே யேலக்கோலிச்செய்கிறாளாகையாலே அது கொண்டு கார்யங்கொள்ள வழியில்லை. அந்த:புரமாகையாலே ஸர்வஶக்தித்வங்கொண்டு கார்யமில்லை யென்றபடி. கச்சித்ஸாகுமாலீக்ருஷ்ண: என்று க்ருஷ்ணவ்ருத்தாந்தம் சொல்லுவார் 'அதவாகிந்த தாலாபை:' என்று - இப்பிதற்றுத்தானென் என்பாராய் என்றந்வயிப்பது. உகவை - உகப்பு. சிவிட்கு - அஸஹ்யம். இவர்களிப்படி யிருந்தார்களாகில் அவனென்செய்தானென்னும்ஆகாங்க்ஷையை யநுவதிக்கிறார் - இனியித்தலை இத்யாதி. கீழே, விட்ட ஆள்சென்று அவனுக்கறிவிக்க, அவனு மிழவாளனாய் வருகிறானென்றார்; இங்கே, தூதரைக்குறித்துச்சொன்ன ஆர்த்தநாதம் செவிப்பட்டு வருகிறானென்றார்; இவையிரண்டுக்கும் சேர்த்தியென்னென்னில்; தூதர்சென்றறிவிக்க, வருகிறா னென்றும்; இவளார்த்தநாதம் கேட்டுவருகிறானென்று மிரண்டுஸங்கதியாக யோஜித்துக்கொள்வது: இங்கேயிருந்துகூப்பிட்டால் கேட்குமோவென்ன - ஶாசிஶ்ரவா இத்யாதி. இதுக்கர்த்தம் - நல்லது

நல்லதுசேவிப்படுமேவனிறே. இவ்வளவில் ஆறியிருக்குமவனன்றே; '**பரமாபதமாபந்ந:**' (பரமாபதமாபந்ந:)-என்றுகொண்டு ஸ்ரீகஜேந்த்ராழ்வானுடைய ஆர்த்தநாதம் செவிப்பட்ட போது "**அஸ்வீக்ருதப்ரணீதமணிபாதுகம் கிமிதிசாகுலாந்த:புரம் அவாஹநபரிஷ்க்ரியம்**" (அஸ்வீக்ருதப்ரணீதமணிபாதுகம் கிமிதிசாகுலாந்த:புரம் அவாஹந

காருண்மையால், ...பதறமஜுருந்தபடியால 'இதுஇவ்வளவுகளல்லன்று. இதுக்கடியேன்?' என்று திவ்யாந்த:புரம் கைநெருக்கும்படியாய், ஸாவஜ்ஞனை பெரிய திருவடியைப் பண் செய்தேறப்பெறாதே வெறும்புறத்தேமேற்கொண்டு "**பகவதஸ்த்வராயைநம:**" (பக வதஸ்த்வராயைநம:)-என்றுஅறிவுடையார் ஈடுபடும்படிவந்து தோற்றினாற்போலவும்; த்ரௌப

இத்யாதி. செவிப்பட்டால் மெள்ளவரவொண்ணாதோவென்ன - இவ்வளவில் இத்யாதி. ஆர்த்த நாதம் கேட்டு த்வரித்துவந்ததுக்கும், ஆறியிராமைக்கும் க்ரமேண மூன்று த்ருஷ்டாந்தம்-பரமாபதம் இத்யாதி. "**பரமாபதமாபந்நோ மநஸாசிந்தயத்தரிம் । ஸ து நாகவர: ஸ்ரீமாந் நாராயண பராயண:**" *இதிமஹாபாரதே. தத்ரைவ ஸஹஸ்ரநாமாத்யாயே,* "**ராஜோபஹாஸி ராஜபஹாஸி பத்யேயோ நிஸ்ஸம்ஶயோ விப்ருவா:**" *இதி.* "**க்வசித் கஸ்மாச்ச க்ருஷ்ணஸ்ய தேவ வாஸுதேவ: । அஸ்மிந்நேவ ஹஸது ஸகீர்த்தநயோஷிதா । ஸ்நேஹாத்ஸோபநயிகம் கரோதி க்ஷணஸ்மரண: । அயமாகிஞ்சாநாமபௌபராகியதாம்கமா । அப்ய ஸோபதாரம் த்ருஷ்டம் ஸக்ருத்பாஷிஷ்யதி**" *இதிபஞ்சமவேதே பலபத்ரம்ப்ரதிமைநேய:.* "**ஆர்த்தோ வா யதி வா த்ருப்த: பரேஷாம் ஶரணாகத: । அரி: ப்ராணாந் பரித்யஜ்ய ரக்ஷிதவ்ய: க்ருதாத்மநா**" *இதி யுத்தகாண்டே அபயப்ரதாநப்ரகரணே.* "**ஸ பித்ரா ச பரித்யக்த: ஸுரைஶ்ச ஸமஹர்ஷிபி: । த்ரீந் லோகாந் ஸம்பரிக்ரம்ய தமேவ ஶரணம் கத:**" "**யச்சாபவாதாத்ருஜ்ஜம்ஶ்ராதராஜ்யம் நயத: பதாதிம் । நாவஶ்யாயஸ்ய நஶ்யேத்ஶோக: க்வசிதமேயம்ஹ்ருதயேகரோதி**" *இதி ஸுந்தரகாண்டே ஹநூமந்தம்ப்ரதி ஸீதா. தத்ரைவ ஹநூமாந்,* "**ஹிமஹதநளிநீவ நஷ்டஶோபாவ்யஸநபரம்பரயாதிபீட்யமாநா । ஸஹசரரஹிதேவ சக்ரவாகீஜநகஸுதாக்ருபணாம்தஶாம்ப்ரபந்நா**" "**பக்ஷ்யஶாவாநியம: ப்ரஹ்ருஷ்ட: பாந்த: பாந்தஶ்வாதவேஸாந்வாதீ । ஸ்வஸாமதாம்வாவமேதீரயாந: பாந்த: பாந்தஶ்வாஸய தீவஹ்ருஷ்ட:**" "**தயாமதாஞாம் வ்யதிதாமநிந்திதாம் வ்யபேதஹர்ஷாம் பரிதீநமாநஸாம் । ஶுபாம் நிரீக்ஷ்ய நிராஹாரநிவேஜிரேநாரம் ப்ரியாஜாஷ்டிவோபஜீவிந:**". "**ஸமாதாபதேஶ்ரமம் ராவணஸ்ய நிவேஶநே । ஹாஜ்ஞா நாமா நாஷாநுவோமாநுஸ்வகாமஸௌஸ்பநீ**" "**ஸா தமாதமஸம் வித்தா ஸீதாவிபாமவக்ஷஸம் । ப்ரணயாத்வாபிமாநாத்வபரிசிக்ஷேபராவயம் । கிக்தாமந்த்ய**" *இத்யாதி.* '**ஸ்கலிதகடிபட்டஹஸ்தஸ்வீக்ருத ப்ரணீதமணி பாதுகம் கிமிதிசாகுலாந்த:புரம் । அவாஹநபரிஷ்க்ரியம் பதகராஜமாரோஹத: கரிப்ரவரப்ரும்ஹிதே பகவதஸ்த்வராயைநம:**'' *இதி ஸ்ரீரங்கராஜஸ்தவே.* '**கிமிதி**'' *என்றதினர்த்தம் - 'திவ்யாந்த:புரம் கைநெருக்கும்படி' என்றது. பண்செய்து - அலங்கரித்து.*

தியை துஶ்ஶாஸநன் நலிகிறபோது ரக்ஷகராக ப்ரஸித்தரான பர்த்தாக்கள்ஐவரிருக்க, "𑌗𑍋𑌵𑌿𑌨𑍍𑌦𑍇𑌤𑌿 𑌯𑌦𑌾𑌕𑍍𑌰𑌨𑍍𑌦𑌤𑍍" (கோவிந்தேதியதாக்ரந்தத்) என்று நம்மை ரக்ஷகராக நினைத்துக் கூப்பிட, "𑌮𑌾𑌂 𑌦𑍂𑌰𑌵𑌾𑌸𑌿𑌨𑌮𑍍" (மாந்தூரவாஸிநம்)என்று 'நான் ஸந்நிஹிதனாய்உதவப்பெற்றிலேன் அவளாபத்துக்கு' என்றுநோந்து, "அவள் தனக்கு அடுக்கும்படி செய்தாள், நான்அவதரித்தே அவதாரப்ரயோஜநமொன்றும் பெற்றிலேன்" என்று இழவாளனாய், தர்மபுத்ரன் தலையிலே முடியையும் வைத்து இவள் குழலையும் முடிப்பித்து விரோதிவர்க்கம் கிழங்கெடுத்துப் போகட்டு * தன்னுடைச் சோதியேற எழுந்தருளுகிறபோதும் "𑌨𑌾𑌤𑌿𑌸𑍍𑌵𑌸𑍍𑌥𑌮𑌨𑌾𑌃"(நாதிஸ்வஸ்தமநா:) என்று திருவுள்ளம் புண்பட்டாற்போலவும்; "𑌶𑌰𑌤𑌲𑍍𑌪𑌗𑌤𑍋 𑌭𑍀𑌷𑍍𑌮𑌃 𑌶𑌾𑌮𑍍𑌯𑌨𑍍𑌨𑌿𑌵 𑌹𑍁𑌤𑌾𑌶𑌨𑌃 । 𑌮𑌾𑌂 𑌧𑍍𑌯𑌾𑌤𑌿 𑌪𑍁𑌰𑍁𑌷𑌵𑍍𑌯𑌾𑌘𑍍𑌰𑌸𑍍𑌤𑌤𑍋 𑌮𑍇 𑌤𑌦𑍍𑌗𑌤𑌂 𑌮𑌨𑌃" (ஶரதல்பகதோபீஷ்மஶ் ஶாம்யந்நிவ ஹுதாஶந꞉ மாம்த்யாதிபுருஷவ்யாக்ரஸ்ததோ மேதத்கதம்மந:) என்றுகொண்டு ஶரதல்பகதரான ஸ்ரீபீஷ்மர்க்கு முற்பாடராய் உதவ வேண்டியிருக்கப் பிற்பாடரானோம் என்று நோவுபட்டாற்போலவும்; "𑌤𑍇𑌨 𑌤𑍇 𑌤𑌮𑌨𑍁𑌵𑍍𑌰𑌤𑌾𑌃" (தேநதேதமநுவ்ரதா:) என்று என் முற்பாடு கண்டுஅநுவர்த்திக்கக்கடவர்கள் முற்பாடராம்படி நாம் பிற்படுவதே என்றிருக்கும் அவனிறே; இப்படிகளாலே திருவுள்ளம்போரவிரங்கி, "𑌪𑍍𑌰𑌸𑍀𑌦𑌨𑍍𑌤𑍁 𑌭𑌵𑌨𑍍𑌤𑍋 𑌮𑍇 𑌹𑍍𑌰𑍀𑌰𑍇𑌷𑌾 𑌹𑌿 𑌮𑌮𑌾𑌤𑍁𑌲𑌾 । 𑌯𑌦𑍀𑌦𑍃𑌶𑍈𑌰𑌹𑌂 𑌵𑌿𑌪𑍍𑌰𑍈𑌰𑍁𑌪𑌸𑍍𑌥𑍇𑌯𑍈𑌰𑍁𑌪𑌸𑍍𑌥𑌿𑌤𑌃" (ப்ரஸீதந்துபவந்தோமே ஹ்ரீரேஷாஹிமமாதுலா யதீத்ருஶைரஹம்விப்ரை ருபஸ்த்தேயைருபஸ்த்தித:)-என்று தண்டகாரண்ய பரிஸரவர்த்திகளான ருஷிகளுடைய ஆர்த்திக்கு முற்பாடராய் உதவப்பெற்றிலோமென்னும் இழவாலே லஜ்ஜித்து, அவர்களைக் காலைக்கட்டிப் பொறுப்பித்துக் கொள்ளும் அவனிறே; இனி "𑌵𑍍𑌯𑌸𑌨𑍇𑌷𑍁 𑌮𑌨𑍁𑌷𑍍𑌯𑌾𑌣𑌾𑌮𑍍" (வ்யஸநேஷுமநுஷ்யாணாம்)-என்று ஸாமாந்யத்திலே இருக்கும்படிகண்டால், ப்ரணயிநி ஒருதலையாலும் சொல்லவேண்டாவிறே. "நாம்கிட்டி நின்று கையைக் காலைப்பிடிக்க வேண்டும் விஷயம் ஒரு திர்யக்கின் காலிலே

'விரோதிவர்க்கம் கிழங்கெடுத்து - இவள்குழலையும்முடிப்பித்து - தர்மபுத்ரன் தலையிலே முடியையும் வைத்து' என்றந்வயிப்பது. "𑌗𑍋𑌵𑌿𑌨𑍍𑌦𑍇𑌤𑌿 𑌯𑌦𑌾𑌕𑍍𑌰𑌨𑍍𑌦𑌤𑍍 𑌕𑍃𑌷𑍍𑌣𑌾 𑌮𑌾𑌂 𑌦𑍂𑌰𑌵𑌾𑌸𑌿𑌨𑌮𑍍 । 𑌋𑌣𑌂 𑌪𑍍𑌰𑌵𑍃𑌦𑍍𑌧𑌮𑌿𑌵 𑌮𑍇 𑌹𑍃𑌦𑌯𑌾𑌨𑍍𑌨𑌾𑌪𑌸𑌰𑍍𑌪𑌤𑌿" இதிமஹாபாரதே. "𑌨𑌾𑌤𑌿𑌸𑍍𑌵𑌸𑍍𑌥𑌮𑌨𑌾𑌃" என்றது ப்ரமாணத்திரட்டிலே கண்டுகொள்வது. "𑌶𑌰𑌤𑌲𑍍𑌪𑌗𑌤𑍋 𑌭𑍀𑌷𑍍𑌮𑌃 𑌶𑌾𑌮𑍍𑌯𑌨𑍍𑌨𑌿𑌵 𑌹𑍁𑌤𑌾𑌶𑌨𑌃 । 𑌮𑌾𑌂 𑌧𑍍𑌯𑌾𑌤𑌿 𑌪𑍁𑌰𑍁𑌷𑌵𑍍𑌯𑌾𑌘𑍍𑌰𑌸𑍍𑌤𑌤𑍋 𑌮𑍇 𑌤𑌦𑍍𑌗𑌤𑌂 𑌮𑌨𑌃" இதி மஹாபாரதே. "𑌮𑌾𑌂 𑌧𑍍𑌯𑌾𑌤𑌿" என்று அவன்முற்பாடுசொல்லி, "𑌤𑌤𑌃" என்கையாலே, தத்ஸம்பந்தம் - ஹேதுபரமன்று, ஆநந்தர்யபரமென்றபடி. "பிற்பாடரானோமென்று நோவுபட்டாற்போலவும்" என்றவநந்தரம், பிற்பாட்டுக்கு நோவுபடுமவனிறே என்றத்யாஹரிப்பது. பிற்பாட்டுக்கு நோவுபடுமென்னுமதுக்கு ப்ரமாணத்வயம்-𑌤𑍇𑌨 𑌤𑍇 இத்யாதி, 𑌪𑍍𑌰𑌸𑍀𑌦𑌨𑍍𑌤𑍁 இத்யாதி. "𑌸𑌰𑍍𑌵𑍇𑌷𑌾𑌂 𑌹𑌿 𑌸 𑌧𑌰𑍍𑌮𑌾𑌤𑍍𑌮𑌾 𑌵𑌰𑍍𑌣𑌾𑌨𑌾𑌂 𑌕𑍁𑌰𑍁𑌤𑍇 𑌦𑌯𑌾𑌮𑍍 । 𑌚𑌤𑍁𑌰𑍍𑌣𑌾𑌂 𑌹𑌿 𑌵𑌯𑌃𑌸𑍍𑌥𑌾𑌨𑌾𑌂 𑌤𑍇𑌨 𑌤𑍇 𑌤𑌮𑌨𑍁𑌵𑍍𑌰𑌤𑌾𑌃" இத்யயோத்யாகாண்டே. "𑌪𑍍𑌰𑌸𑍀𑌦𑌨𑍍𑌤𑍁 𑌭𑌵𑌨𑍍𑌤𑍋 𑌮𑍇 𑌹𑍍𑌰𑍀𑌰𑍇𑌷𑌾 𑌹𑌿 𑌮𑌮𑌾𑌤𑍁𑌲𑌾 । 𑌯𑌦𑍀𑌦𑍃𑌶𑍈𑌰𑌹𑌂 𑌵𑌿𑌪𑍍𑌰𑍈𑌰𑍁𑌪𑌸𑍍𑌥𑍇𑌯𑍈𑌰𑍁𑌪𑌸𑍍𑌥𑌿𑌤𑌃" இத்யாரண்யகாண்டே. திருவயோத்யாவாஸிகளுக்கு முந்தற க்ருபைபண்ணினபின்பிறே அவர்கள் இவரிடத்திலே ஸ்நேஹித்தது; அத்தையுட்கொண்டு, இவன் பிற்பாட்டுக்கு நோவுபடும்ப்ரகாரத்தை யருளிச்செய்கிறார் - என்முற்பாடுகண்டு இத்யாதி. "𑌪𑍍𑌰𑌸𑍀𑌦𑌨𑍍𑌤𑍁" என்றதுக்குபாவம் - காலைக்கட்டி இத்யாதி. இவளார்த்திக்குஅவன் நோவு

விழும்படி நாம் பிற்படுவதே! நமக்கினியொரு பும்ஸ்த்வமாவதேன்? நாம் அங்கு இனிப்போய்ச் செய்வதேன்? இங்கிருந்து செய்வதேன்?'' என்றுகொண்டு தடுமாறி, இத்தலையோடே கலந்தல்லது தரிக்கமாட்டாதானாய், இவர்களிருந்தவிடத்துக்கு அதூரவிப்ரக்ருஷ்டமாகவந்து, ப்ரணயகோபத்தாலே அணுகவொண்ணாதபடியிருக்கிற இருப்பைக்கண்டு, ''இத்தலையில் அபிஸந்தியைக் குலைத்து நாம் கூடினோமாம்படியேன்?'' என்று சிந்தித்து, ''அழகுகொண்டு வெல்லுவோம்'' என்று பார்க்கில், ஸௌந்தர்யம்கொண்டு தண்ணீர் வார்ப்பாரில்லை யிக்கோஷ்டியில்; ''**அஸிதேக்ஷணா**'' (அஸிதேக்ஷணா) என்கிற தன்னேற்றம் உண்டிறே இத்தலைக்கு; இனி, ''மேன்மைகொண்டுவெல்லுவோம்'' என்று பார்க்கில், அந்தஃபுரத்தை ஆனைக்காலிட்டுத் துகைப்பித்து புஜிக்கவொண்ணாதே; இனி இவ்விஷயத்தைப் பெறுகைக்குத் தாழ்ச்சியேயிறே பரிகரம்: அது இத்தலையின் கடாக்ஷம் பெறுதிருக்க ப்ரவர்த்திக்குமன்று நிஷ்ப்ரயோஜநமிறே; இனி இத்தனையும் செய்தால், ஆசையற்றுப் போகைக்குத் திருவடிகள்பேராதே; இசைவின்றிக்கே இருக்க, மேல்விழமாட்டானே; இனி விழுக்காடுபாராதே மேல்விழுமன்று, ம்ருதுப்ரக்ருதியாகையாலே இழக்கவரிலும் வருமே; இனி, சேர்ந்து குளிர்ந்த தண்ணீர் ஸந்நிஹிதமாயிருக்க, பெருவிடாயனானவன் அழிஞ்சுக்காடேறப் போகமாட்டானே; அதாவது-''இவன் அல்பம்தாழ்த்தான்''என்று வெறுத்து, ''புகுருவானல்லன் நம்கோஷ்டியில்'' என்றிருக்கிற இவர்களைவிட்டு நாட்டாரோடே உறவுபண்ணப் போவானன்றே; இனி ''ஒருபடிபொருந்தினோமாம்விரகேன்?'' என்று கடல்கடந்த திருவடி பட்டதெல்லாம் பட்டு, '' '**ராஜாதஶரதோநாம**' (ராஜாதஶரதோநாம) என்னும் அளவன்றே; இனிச்செய்யவடுப்பதேன்?' என்று ''**ஏவம் பஹுவிதாம் சிந்தாம்**'' (ஏவம் பஹுவிதாம்சிந்தாம்) என்று மநோரதித்து,''நந்தலையும் அவர்கள்காலுங்கிடந்ததாகில் காலைக்

---

*படும் ப்ரகாரத்தை யருளிச்செய்கிறார்- இனி **வ்யவஸோ நஷ்டே** இத்யாதி. ப்ரஸீதந்து என்றது-நாலாம் த்ருஷ்டாந்தமாகவுமாம். மேல் ஈஶ்வரன்செய்யும் ப்ரகாரங்களை விஸ்தரேண அருளிச்செய்கிறார் -* **நாம் கிட்டிநின்று** *இத்யாதி. 'இப்படிகளாலே திருவுள்ளம்போரவிரங்கி - நாமகிட்டிநின்று கையைக்காலைப் பிடிக்க' என்று அந்வயித்துக்கொள்வது. இப்படிகளாலேயென்றது - பூர்வோக்தத்ருஷ்டாந்தத்தற படிகளாலே யென்றபடி. வேண்டுமவிஷயம்-நாயகி. ஒருதிர்யக்கு-தூதுவிட்டபக்ஷி. இருக்கிறவிருப்பை-கழகமிருக்கிற விருப்பை. தண்ணீர்வார்ப்பாரில்லை என்றது - துப்புவாரில்லை என்றபடி. அப்படி ஸௌந்தர்யத்திலே அதிகையோவென்ன- அஸிதேக்ஷணா இத்யாதி.* ''**ராமஶ்ச பூர்ணசந்த்ரஸ்ய ஹ்ருதய்யஸ்யா ஸிதேக்ஷணா**''. *'ஆனைக்காலிட்டு' இத்யாதிக்குக்கருத்து-ரஸிகத்வபங்கமாமென்று. ஆனைக்காலிட்டுத் துகைப்பிக்கையாவது - பலாத்காரம்பண்ணுகை. 'ஆனைக்காலிட்டு அழித்து' என்றும் பாடமுண்டு; அதுக்கும் - கீழ்ச்சொன்னதே யர்த்தம். இவ்விடத்திலே - ''**ஸ்வஹிதாவநிதா ஸர்வ வஶ்யேவோமதாவரா । ஸாராஜ்ஞா க்ருஷ்ணா ஸேஹாஸாவிரஸா ஹஸேவஸ**'' என்கிறது அநுஸந்தேயம். ஆனால் தாழ்ச்சிசெய்துவிடுகிறதுக்கென்னென்ன -* **அதுஇத்தலையின்** *இத்யாதி. அது-தாழ்ச்சி. ஆனால், '' ஸஹாயம் '' என்றுவிட்டுப்போகிறதுக்கென்னென்ன -* **இனி இத்தனையும்** *இத்யாதி. இத்தனையும் செய்தாலென்றது - இப்படியானாலென்றபடி. பலாத்காரத்தாலே மேல்விழவொண்ணாதோவென்ன -* **இசைவின்றிக்கே** *இத்யாதி. ம்ருதுப்ரக்ருதிகளாகையாலே-மாநிநிகளாகையாலேயென்றபடி. அத்தாலே முடிவர்களென்றுகருத்து. இவர்களிசையாவிட்டால் வேறபிமதவிஷயங்களில்லையோ, அங்கேறப்போகவொண்ணாதோவென்ன ; ஒண்ணாதென்னுமத்தை ஸதிர்ஶநமாக வருளிச்செய்கிறார் - 'இனிச்சேர்ந்து' இத்யாதிவாக்யத்வயத்தாலே. அழிஞ்சுக்காடு-பாலைநிலம். திருவடியைப்போலே திருநாமஸங்கீர்த்தநம் பண்ணினாலோவென்ன -* **ராஜா தஶரத** *இத்யாதி.* '' **ஏவம்பஹு**

கட்டிப் போருத்திக்கோள்ளுகிறோம்'' என்று அறுதியிட்டான். தலையான உபாயமிதிற்காட்டில் இல்லையே: இதுதான் அடியிலே கண்டதோன்றிறே. ஆக, இப்படி அறுதியிட்டு, தன்னிறத்தோடு ஒக்க விகல்பிக்கலாவதோரு சோலையுள்ளிட்டு அவளுக்கும் தோழிமார்க்கும் தெரியாதபடி கிட்டச்சென்று, அவர்களைக் காணப்பெறாதே விடாய்த்தவன் கண்களாரளவும் நின்று விளைநீரடைத்துக்கொண்டு க்ருதார்த்தனாய் நின்றான். ஆலோகாநந்தரம் ஆலாபாதிகளிலே ஶ்ரத்தை வர்த்திக்குமிறே, அதுவும்பெற்றிலன் ; அவ்வளவிலும் தனக்கு ப்ராணதாரகமான இவர்களுடைய பூவை கிளிதொடக்கமானவற்றினுடைய இனியபேச்சைக் கேட்கப்பெறாமையாலும் மிகவும் தளர்ந்து; ''தானும் அவளுமானாலவளிற் காட்டிலும் தன்பக்கல் ப்ரேமமிரட்டித்திறே தோழிமாரிருப்பது; பிரிவிலும் அப்படியே'' என்றிருந்தான்; அவர்கள் அங்ஙனன்றிக்கே அவளிற்காட்டிலும் கோபமதிஶயித்திருந்தார்கள். ''ஸப்ராதுஶ்சரணௌ காடம்''(ஸப்ராதுஶ்சரணௌகாடம்) என்று புருஷகாரம் முன்னாகத் தன்பக்கல் புகுந்தார்க்குத்தன்திருவுள்ளம்இரங்கும்படிதான்அறியுமேஇங்குஅப்படியேஅவர்கள்புருஷகாரமாகவும்பெற்றதில்லை;இனிஇத்தலையிலிசைவுண்டானாலும்அவர்களிசையாதவன்றுஅழைக்கவும் போகாதே; ''தத்தமஸ்யாபயம்மயா'' (தத்தமஸ்யாபயம்மயா) என்றாலும், ''வத்யதாம்''(வத்யதாம்) என்றவர்தம்மையிட்டே ''ஆநய'' (ஆநய)என்னவேண்டிற்றிறே; அவ்வழிகளாலும் ஒருமுகம்பெற்றிலன். ''நஜீவேயம்க்ஷணமபி'' (நஜீவேயம்க்ஷணமபி) என்றும், ''க்ஷணேபி தே யத்விரஹோதிது꞉ஸஹ꞉''(க்ஷணேபிதேயத்விரஹோதிது

ஹ꞉ வியாம் ஹிம்ஸாம் ஹிதயிக்ஷ்வாகூணாம் மஹாகவே꞉ । ஸம்ப்ருதேயஸ்ய ராஜ்யம் தேவேந்த்ர ஸத்ருஶம் ராஜா தஶரதோ நாம ரதகுஞ்ஜரவாஜிமாந் । புண்யஶீலோ மஹாகீர்த்தி ருஜுராஸீந் மஹாயஶா꞉ '' இதி ஹநூமாந். ராஜா தஶரதோ நாம என்னுமளவன்றே என்றது-பிராட்டியைப்போல திருநாமங்கேட்டு மீளும் அளவன்று என்னுதல், பிராட்டிக்கு ராவணபயமொழிய ப்ராணபயரோக்ஷமில்லையென்னுதல். இத்தால் கோபம்தீருமோவென்ன - தலையான இத்யாதி. இது, சாடு; தலையான-ஶ்ரேஷ்டமான. இதுதான் அறிந்தபடியெங்ஙனேயென்ன-இதுதானடியிலே இத்யாதி; அதாவது - ''ததேவ ஶரணம் கத꞉'' என்ற காகத்தை க்ருபையாலே ரக்ஷிக்கையாலே அடியிலே கண்ட தொன்று என்றபடி. விளைநீரடைக்கையாவது - விளையுமளவுக் கொருகாலே நீரகட்டுகை. ஸமாதாநம்பண்ணுகைக்குத் தோழிமாரில்லையோவென்ன - தானுமவளுமானால் இத்யாதி. அப்படியேயென்றிருந்தான்என்றது - ஸ்நிக்தைகளாய் புருஷகாரமாவர்களென்றிருந்தானென்றபடி. அங்ஙனன்றிக்கே - தான்நினைத்தபடியன்றிக்கே இத்யர்த்த꞉. ''புருஷகாரபூர்வகமாகப்பற்றினால் கார்யகரமாம்'' என்றுதானறிந்தபடியென்னென்ன-ஸப்ராது꞉ இத்யாதி. அதாவது-இளையபெருமாள் தம்மைப்பின் செல்லுகைக்கு உறுப்பாகப் பிராட்டியைப்புருஷகாரமாகமுன்னிடத் தான் இரங்கி அவரைக்கூட்டிக்கொண்டுபோனதையறிந்திருக்குமவனாகையாலே என்றுகருத்து. அஹேதுகமாகநாயகிதனக்கேயிசைவுஉண்டானாலோவென்ன - இனியித்தலையில் இத்யாதி. இசையாதவன்று அழைக்கப்போகாதோ வென்ன - தத்தமஸ்ய இத்யாதி. ''ஆநயைநம் ஹரிஶ்ரேஷ்ட தத்தமஸ்யாபயம் மயா । விபீஷணோ வா ஸுக்ரீவ யதி வா ராவண꞉ ஸ்வயம்'' இதி யுத்தகாண்டே ஸுக்ரீவம்ப்ரதிராம꞉. ''வத்யதாமேஷ தீவ்ரேண தண்டேந ஸசிவை꞉ ஸஹ । ராவணஸ்ய ந்ருஶம்ஸஸ்ய ப்ராதா ஹ்யேஷ விபீஷண꞉'' இதி ஸுக்ரீவ꞉. அவ்வழிகளாலும் என்றது - பூவைகிளிதொடக்கமானவற்றினுடைய பேச்சு, தோழிமாருடைய புருஷகாரபாவம் நாயகியினுடைய இசைவுஆகிற வழிகளாலுமென்றபடி. ஆனால் ''மெள்ளப்பெறுகிறோம்'' என்றறியிருந்தாலோவென்ன - நஜீவேயம் இத்யாதி. ''நஜீவே

ஸ்ஸஹ:)என்றும் க்ஷணமாத்ரவிஶ்லேஷமும்பொறுக்கமாட்டாதவன், அவர்கள்ஸந்நிதியிலே முகம்பெறுமேநின்றுபிழைக்கமாட்டானே. இனிஇவன்தன்அணுகுதலாலே இவர்களிருந்த விடம்அடங்கலும்"மோஹயந்தண்டகாரண்யம்"(மோஹயந்தண்டகாரண்யம்) என்கிற படியே மயிர்கழுத்துச்சாயலாய், இவனுடைய நிரந்தரகடாக்ஷபாதத்தாலே புளகிதகாத்ரைக ளாய், இவனுடைய கடாக்ஷபாதத்தா லுண்டான மைத்யம் இவர்களுடையப்ரணய ரோஷத்தால் வந்த கோபாக்நியும் விரஹாக்நியுமன்றாகில் பொறுக்க வரிதாம்படியாய்; கோபந் தான் அவன் ஸந்நிதியிலே மிகைத்து வாரா நிற்குமிறே, இவ்வோலக்ஷணங்களைக்கொண்டு இவன் வந்தமையை நிஶ்சயித்துத் தங்களிலே ஒருமித்து முகம் மாறியிருக்க; இவனும் அவ் விருப்பைக்கண்டு எதிரிகளிட்ட மதிளாகிலிறே முறித்துப் புகலாவது; கிட்டப் பெறுமையா லும் ஸந்நிதியாலும் ஆற்றாமை கரைபுரண்டு கால்தறையில் பாவாதபடியாய்க்கொண்டு தடு மாறிவருகிற சமயத்திலே, இவனுடைய ஜீவநாத்ருஷ்டத்தாலே இவர்கள் மறந்துபோன பந் தும் கழலும்இவன்காலிலேதாக்க; அப்போது, இருட்டறைகளிலேதடவிக்கொண்டுவோராநின் ருல் உறியும் வெண்ணெயும் கையிலே தாக்கினுல் ஹ்ருஷ்டனுமாபோலே பெரிய ஹர்ஷத் தோடே விழுந்து இவற்றை எடுத்துக்கொண்டு, அத்தலையில் பண்ணின வ்யாமோஹம்அடங் கலும் இதிலேதோற்றும்படி கண்களிலே ஒற்றிக்கொள்வது தலையிலே வைத்துக்கொள்வ தாய், பிராட்டி திருவாழிமோதிரங்கண்டு பட்டதெல்லாம் பட்டான். "க்ருஹீத்வா ப்ரேக்ஷமாணா ஸா"(க்ருஹீத்வாப்ரேக்ஷமாணுஸா)-"ராவணன்மாயையாலேவந்ததோ?"என் னும் பயத்தாலே முற்படக் கண்வைக்கமாட்டாதே யிருந்தாள்: "அத்தலையாலேவந்தது" என்று தெளிந்த பின்பு கண்மாறவைக்க வரிதாம்படியா யிருந்தாள். 'அத்தலையாலேவந்தது' என்று தெளிந்தபின்புகண்மாறவைக்கைஅரிதாம்படியாய்இருந்தார்கள். "ஸா ப்ரேக்ஷமாணா" (ஸா - ப்ரேக்ஷமாணு) - "பஶ்ய தேவி" (பஶ்யதேவி) என்றுகொண்டு முன்பு

யம் க்ஷணமபி விநா தாம் ஜீவிதம் க்ஷணாத்" இதி ராமः. 'க்ஷணமபி தே' இத்யாதி ஸ்தோத்ரே, "ஸக்ருத் த்வதாகார விலோகநாஶயா" இத்யாதி. இப்படி இவன் தடுமாறுகிறவிடத்தில் அவர் கள் செய்ததென் னென்ன - இனியிவன்றன்அணுகுதலாலே இத்யாதி. இவன் வந்தத்தை மூன்று வழியாலே அறிந்து த்ருடப்ரக்ருதிகளாய் முகம்மாறியிருந்தார்க ளென்றபடி. அகன்றிருந்தாலன்றே கோபம், ஸந்நிஹிதனுயிருந்தால் கோபம்சமியாதோ வென்ன - கோபந்தான் இத்யாதி. இது மூன் றும்ஹேது. இவ்வோலக்ஷணங்களைக்கொண்டென்றது - தாங்களிருந்தவிடம் மயிர்கழுத்துச்சாயலாகை யும், தாங்கள் புளகிதகாத்ரைகளாயிருக்கையும், மிகைத்துவருகிறகோபத்தையுடையராகையுமாகிற லக்ஷணங்களைக் கொண்டென்றபடி. இவ்வளவில் அவன்செய்ததென் என்ன-இவனும் அவ்விருப்பை இத்யாதி. கிட்டப்பெறுமையாலுமென்றது - அவர்களோடே கலக்கப்பெறுமையாலுமென்றபடி. கலக்கப்பெறுவிட்டாலும், தூரஸ்தனுயிருந்தானுகில் பொறுத்திருக்கலாம்:ஸமீபத்திலேயிருந்து, கலக் கப்பெறுவிட்டால் பொறுக்கவொண்ணுதிறே: அத்தைப்பற்ற 'ஸந்நிதியாலும்' என்கிருர். "ஶநக ஸம்ஶயரோபிதநீலவீக்ஷணக்ஷணோபயா। மோஹயந்தண்டகாரண்யம் ஶீக்ரேண ஸஹ தேஜஸா" இதி ஆரண்யகாண்டேமாரீசः. பிராட்டி யப்படிபட்டாளோ வென்ன - க்ருஹீத்வா இத்யாதி. "க்ருஹீத்வா ப்ரேக்ஷமாணா ஸா பர்த்து: கரவிபூஷணம் । பர்த்தாரமிவ ஸம்ப்ராப்தா ஜாநகீ முதிதாபவத்" இதி ஸுந்தரகாண்டே. வர்த்தமாநநிர்த்தேசத்திலே நோக்காக பாவம் - ராவணன் இத்யாதி. "ஸா" என்றதிலேநோக்காகபாவம் - பஶ்யதேவி இத்யாதி. "வாநரோஹம் மஹாபாகே தூதோ ராமஸ்ய தீமதः । ராமநாமாங்கிதஞ்சேதம் பஶ்ய தேவ்யங்குலீய

பார்வைக்கு க்ருஷி பண்ணவேண்டும்படியிருந்தவள் தானே, கண்மாறவைக்கைக்கு க்ருஷி பண்ணவேண்டும்படியாயிருந்தாள். "பர்த்துஃகரவிபூஷணம்" (பர்த்துஃகரவிபூஷணம்)-முதல்கைப்பிடிக்கிறபோதுஉறுத்தின்படியைநினைத்தாள். 'கரவிபூஷணம்' (கரவிபூஷணம்)-அணிமிகுதாமரைக்கையிறே. ஆபரணத்துக்குஆபரணங்காணும் "பர்த்தாரமிவ" (பார்த்தாரமிவ)-இவன்இத்தைத் திருக்கையிலேகொடுத்தவாறே, இத்தோடே சேர்ந்த விரலையும்தோளையும் நினைத்தாள்; அந்நினைவுதான், தான் இக்கரையில்ஆளாகவும்அவர்அக்கரையிலாளாகவும், கடல்இடையிலேகிடக்கிறதாகவும்அறிந்திலள்; ஒரு படுக்கையிலே கூடவிருந்ததாக நினைத்தாள்; ஒரு சூது சதுரங்கங்களிலே தோற்றுத்தன்கையிலிருந்ததாகநினைத்தாள். "இவ" (இவ)என்கிறன்ருஷி, ஜநநீஸமாதியாலே; இவளுணர்ந்தாலென்படக்கடவள்என்று. 'ஜாநகீ' (ஜாநகீ)-ஸோகஹர்ஷங்களுக்குஇளையாதகுடியிலேபிறந்தவள். "முதிதாபவத்" (முதிதாபவத்)-ஹ்ருஷ்டையானாள். அப்படியேயாயிற்றுஇவனும் இவைபெற்றபின்பு. ஸம்ஸாரி, முக்தனானால் அவனுடைய லீலோபகரணமும் போகோபகரணமும்ஸமமாய்த்தோற்றக்கடவது; ஆகாராந்தரமான ஸ்ம்ருதியில்லையே: ததீயத்வாகாரத்தாலே நித்யவிபூதியோடொக்கத் தோற்றுமித்தனை; அப்படியே இவளுடைய லீலோபகரணமும் போகோபகரணமாய்த் தோற்றக்கடவது. அவற்றிலே அவன்பண்ணும் வ்யாமோஹத்தைக்கண்டார்கள். "நம்மைப்பிரிந்த பின்பு ஸத்தையோடே குறியழியாமே யிருக்கக்கடவ இவன் இவையெல்லாம் நம்மை யுத்தேசித்துச்செய்கிறானாகக்கூடாம்; இங்ஙனே யாகவேணும்: ...."நம்மைப்பிரிந்தபின்பு போய்ச் சிலரோடே கலந்தான்; அவர்களையும் பிரிந்தான்; அவ்வாற்றாமையோடே இங்குவந்தான்; இவற்றை 'அவர்களுடைய லீலோபகரணமாயிருக்கும்' என்று ப்ரமித்தானித்தனை, இது நம்பக்கல் வ்யாமோஹமுடையனாய்ச் செய்கிறானல்லன்" என்றுகொண்டு, இவர்களிருக்க, அவனும் தன்னழகாலும் குணங்களாலும் தன் செல்லாமைகளாலும் தாழ்ச்சிகளாலும் இத்தலையில் ஊடலைத்தீர்த்து ஸம்ஸ்லேஷித்தபடி சொல்லுகிறது - இத்திருவாய்மொழி.

ஷம்", பூஷணம் என்னாதே, "விபூஷணம்" என்கையாலே, ஆபரணபூதமானகரத்துக்கும் ஆபரணமென்கிறார் - அணிமிகு இத்யாதி. "ஸ்ரீஹஸ்தாபரணம் ஸமர்ப்பயாமாஸ" என்றந்வயம். திருவாழிமோதிரமன்றோ கையிலிருக்கிறது? இத்தாலே பர்த்தாவை ஸம்ப்ராப்தையானாள் என்னக்கூடுமோவென்ன; பாவநாப்ரகர்ஷத்தாலே பர்த்தாவை ஸம்ஸ்லேஷித்ததாக நினைத்தாளென்கிறார். இவனித்தை இத்யாதி. கூடவிருந்ததாகநினைத்தால், அவன் திருக்கையில் மோதிரம் தன்கையில் வருவானென்னென்ன - ஒருசூது இத்யாதி. ஆனால், பர்த்தாரமேவ ஸம்ப்ராப்தா என்னவமைந்திருக்க, "இவ" என்றுசொல்லுவானென்னென்ன - இவஎன்கிறன் இத்யாதி. "இவ" என்றதுக்குஇரண்டு தாத்பர்யம்: முந்தினது - தாயாருடைய ஸம்ஸ்லேஷப்ரகாரத்தை ஸ்புடீகரிக்கவொண்ணாமையாலே இவ என்கிறான் என்று; இத்தையருளிச்செய்கிறார் - 'ஜநநீஸமாதியாலே' என்று. த்விதீயதாத்பர்யம் - இவளுணர்ந்தால் இத்யாதி. அதாவது - இந்தபாவனைகுலைந்தால், "இவர்களறியும்படி இருந்தோமோ" என்று லஜ்ஜித்து நோவுபடப்புகுகிறாளோ என்றபடி. இவளுணர்ந்தால் இத்யாதி வாக்யம் - வ்யாக்யாதாவின் ஈடுபாடாதல். பிராட்டி, போகோபகரணமான திருவாழிமோதிரத்தையாதரித்தாள்; இவன் லீலோபகரணங்களை போகோபகரணங்களாக ஆதரிக்கிறதென்னென்ன; அதுவும் "இவளுடையது" என்கிற வாகாரத்தாலே போகோபகரணம்போலே யவனுக்குத்தேஸ்யமாயிருக்குமென்னுமத்தை ஸநிதர்ஸநமாக அருளிச்செய்கிறார் - ஸம்ஸாரி இத்யாதி. அவனுடையஎன்றது - ஈஸ்வரனுடையஎன்றபடி. ஆகாராந்தரமென்றது - கர்மநியந்தநமான வாகாரமென்றபடி. தங்களுடைய பந்துமுதலானவற்றிலே அபிநிவேஸம்பண்ணுகிற இவனைக்கண்டு இவர்கள்செய்ததென் என்ன.

இனி, இத்திருவாய்மொழிதன்னை, பூர்வாசார்யர்கள், "பகவத்விஷயத்தில் ஸாபத்ந்யந் தோற்ற வார்த்தைசொல்லுகை ஶேஷத்வலக்ஷணமன்று, * வளவேழுலகிற்படியாலே அயோக்யதாநுஸந்தாநம் பண்ணுகிறார்" என்று நிர்வஹிப்பர்கள். இத்தைப் பட்டர் கேட்டு, "என்சொன்னரானார்கள்! இவர்க்கு பகவத்விஷயத்திலுண்டான ருசிக்கு ப்ரகாசகம் இத்திருவாய்மொழியாயிருக்கும்: இதுக்கு வேறே யொருவழியிடவேதே! ஆனபின்பு இதுவே பொருளாமித்தனை" என்றருளிச்செய்தார். ஹரிஷ்யாமிஸபாந்தவம்" (ஹரிஷ்யாமிஸ பாந்தவம்) என்று மஹாராஜரோடே பெருமாளுக்குக்கிலாய்க்கைக்கும் உறவுண்டாயிற்றிறே.

முதற் பாட்டு.

மின்னிடைமடவார்கள் நின்னருள்சூடுவார் முன்புநானதஞ்சுவன்
மன்னுடையிலங்கை அரண்காய்ந்தமாயவனே!
உன்னுடையசுண்டாயம் நானறிவன் இனியதுகோண்டுசெய்வதேன்?
என்னுடையபந்தும் கழலும் தந்துபோகுநம்பீ!

ஆ.—"நிரவதிக ஸௌந்தர்ய குணயுக்தைகளாய் உன்னருள்சூடப் பிறந்தவர்களுடைய பந்தும்கழலுமல்லகாண் இவை: என்னுடைய பந்துங்கழலும்" என்ன; "ஆனாலென்?" என்ன, "என்னுடைய பந்துங்கழலும் எடுத்து விளையாடுகிற இத்தை அவர்கள் காணில் செய்வதென்" என்ன; "அஸந்நிஹிதைகளாயிருக்கிற அவர்கள் காண்கைக்குபாயமென்?" என்ன, "நான் அஸந்நிஹிதையாயிருக்கச் செய்தே, நீ அவர்களோடே கலந்து பரிமாறிற்றுஎல்லாம் எங்ஙனே கண்டபடி; அப்படியே அவர்களும் காணுவர்களிறே" என்ன; "கண்டால்தான் வருவதென்?" என்ன, "தங்கள் கடாக்ஷதாரகனாயிருந்த உன்னை உபேக்ஷிப்பாரென்று பார்த்து நான் அஞ்சாநின்றேன்" என்ன; "உனக்கென்னோடு உறவில்லையாகில் வருகிறதென்?" என்ன, "என்னுடைய க்ருபையாலே உனக்கு அநிஷ்டம் வருகிறது; என்றஞ்சுகிறேன் அத்தனை உறவினாலல்ல" என்றிவள் சொல்ல, "இப்படி அஸம்பாவிதங்களை ஆசங்கிக்கிறதென்? அந்யோந்யதேசேந வருகைக்கு ப்ரஸங்க

அவற்றிலே இத்யாதி. தன்னழகாலுமென்றது - "தாமரைப்புரைகண்ணிணையும்" இத்யாதியைப்பற்ற. "நம்பீ" என்றத்தைப்பற்ற 'குணங்களாலும்' என்றது. தன்செல்லாமைகளாலுமென்றது - "எம்குழறுபூவையொடும்," "மையிற்பாவைபறிப்பது" என்றத்தைப்பற்ற. தாழ்ச்சிகளாலுமென்றது - "உணக்கிநீவளைத்தால்" என்றத்தைப் பற்ற, இனி, இத்திருவாய்மொழிக்கு ஸ்வாபதேஶமிரண்டு வகையாக வருளிச்செய்கிறார் - இனி இத்திருவாய்மொழிதன்னை இத்யாதி. 'ஶேஷத்வலக்ஷணமன்று' என்றதுக்குக்கருத்து - "உன்றன்திருவுள்ளமிடர்கெடுந்தோறும் நாங்கள் வியக்கவின்புறுதும்" என்றிருக்கிறவிவர், ஸ்ரீவைஷ்ணவர்களோடேகலந்தத்தைத் தமக்கு அஸஹ்யமாகச் சொல்லுகை ஶேஷத்வவிருத்தமென்று. இதுவேபொருளாம் இத்தனையென்றது - இத்திருவாய்மொழியிற்சொல்லுகிற ப்ராவண்யகார்யமான ப்ரணயரோஷமே ஸ்வாபதேஶத்திலும் பொருளாமென்றபடி. ப்ராவண்யாதிஶயத்தாலே ப்ரணயரோஷமாகச்சொன்ன இடமுண்டோவென்ன - ஹரிஷ்யாமி இத்யாதி. கிலாய்க்கைக்கும் - ப்ரணயரோஷம்பண்ணுகைக்கும் என்றபடி. "ஸகவாநரவரேணவாலீமஹோரணநிஹதோதயா । ஸுக்ரீவஸஹிதம் த்வாத்ய ஹரிஷ்யாமிஸபாந்தவம்" இதி கிஷ்கிந்தாகாண்டோக்தம்.

முண்டோ? உன்பக்கலுள்ள ப்ரேமாதிஶயத்தாலே உன்னைப்பிரிந்து தரிக்கமாட்டாமையாலே வந்தேன் அத்தனை" என்று அருளிச்செய்ய, "என்பக்கலுனக்கு ஸ்நேஹமானது பொய்யிறே" என்ன; "நானொருவரேனும் ஒருவரோடே பரிமாறினால் அவர்கள்பக்கல் பொய்யான ஸ்நேஹத்தைப் பண்ணுமவனோ?" என்றருளிச்செய்ய, "உனக்காரேனும் ஒருவர் திறத்திலே மெய்யான ஸ்நேஹமுண்டாகில் அவர்களை 'இன்னார்' என்று சொல்லிக்காண்" என்ன ; " அஶோகவநிகையிலே யிருந்த ஸ்ரீஜநகராஜர்தநயைதிறத்து நான் பண்ணின ஸ்நேஹம் மெய்யன்றோ " என்றருளிச்செய்ய, "அதுவும் பொய்யே"என்றிவள் சொல்ல ; "அவள்பக்கலுள்ள ஸ்நேஹம்பொய்யாகில் அவளுக்காக லங்கையை அழிக்கக்கூடுமோ?" என்றருளிச் செய்ய, "அதுஎன்னைஅகப்படுத்துகைக்குச் செய்த வஞ்சனையென்னுமிடம் அறியேனோ? ஆதலால்,என்னுடைய பந்துங்கழலும் தந்து, அங்கேபோகு நம்பி!" என்று சொல்லுகிறாள்.

ஓ.—முதற்பாட்டில், இப்பிராட்டியும் தோழிமாரும் வாங்மறந்து, அசேதநமாகையாலே தானாக இருக்கவும் அறியாத பந்தையும், கழலையும் தன்னுடைய ஜீவனு ஊஷ்டத்தாலே கண்டெடுத்துக்கொண்டு " ஶ்ரூஹீநாவேக்ஷணாலஸா " என்னும் படியாலே திருக்கண்களாலே யவற்றை நிரந்தரமாக நோக்கித் திருவுடம்பில் எங்கும் படும்படியணைத்துக்கொண்டு, இப்பிராட்டியை ஸ்பர்ஶிக்கப்பெறுமையாலுள்ள வ்யஸநமெல்லாந்தீர விளைநீரடைத்துக்கொள்ளுகிறபடியைக்கண்டு, "இது நம்மோட்டை ஸ்நேஹத்தாலே பிறந்ததாகில்இத்தனைகாலம் தாழ்க்கக்கூடாதாகையாலே,மற்றும்சிலர் பக்கலிலே ஸ்நேஹத்தைப்பண்ணி அவர்களோடேகலந்து பிரிந்து பிரிவாற்றாமையாலே கலங்கி, நம்மை 'அவர்கள்'என்று ப்ரமித்து, நம்முடையபந்தையுங்கழலையும் அவர்களினவாகக் கொண்டாஶ்வஸிக்கிறான்" என்று நிரூபித்து, அவனைக்குறித்து, உன்னை இப்படி கலங்கப்பண்ணவல்ல நிரவதிக ஸௌந்தர்யத்தையும் ஆத்மகுணத்தையுமுடையராய்"உன் அருள் சூடப் பிறந்தவர்கள் இத்தை அறியிற்செய்வதென்?" என்ன, "அவர்கள் அஸந்நிஹிதைகளன்றோ, காணும்படியெங்ஙனே?" என்ன, "அவர்களோடு நீ கலந்து பரிமாறினபடியை அஸந்நிஹிதையாய் வைத்தே நான்எங்ஙனே யறிந்தபடி? அப்படியே யவர்களும் அறிவர்; ஆதலால் அவர்கள் காணச்செய்கிற செயலன்றே இது" என்ன,"அங்ஙனேயானால் வருவதென்?" என்ன, "தத்கடாக்ஷைகதாரகனாயிருக்கிற உன்னை அவர்கள் கடாக்ஷியாதொழிவரென்று அஞ்சாநின்றேன்"என்ன, "என்னோடு உனக்குஉறவுஇல்லையாகில் நீ அஞ்சுகிறதென்?" என்ன, "சிலர் அனர்த்தப்படக்கண்டால் 'ஐயோ' என்னும்போது உறவுவேணுமோ?" என்றுஇவள் அருளிச்செய்ய ;"இப்படி அதிசங்கை பண்ணுகிறதென்,எனக்கு வேறொரு ஸ்ப்ருஹணீயவிஷயமுண்டோ? உன்னுடைய கடாக்ஷமேயன்றோ எனக்கு தாரகம்"என்ன, "அது பொய்யிறே" என்ன, "என்னோடு பரிமாறுவார்திறத்தில் நான் பொய் செய்வதுண்டோ?" என்ன, "நீ யார்திறத்தில் மெய்செய்தாய்?" என்ன, "ஸ்ரீஜநகராஜன் திருமகளுக்காக ஏகதாரவ்ரதனாய் * உண்ணாதுறங்கா தொலிகடலையூடறுத்துச் சென்றிலங்கையை யழித்தது பொய்யோ?" என்ன, "அதுவும் அவளுக்கு ஸ்நேஹித்துச் செய்தாயில்லை: ஒருத்திக் கொருமெய் செய்யவே எல்லாரும் மெய்யனென்று உன்னை விஶ்வஸித்துஉனக்ககப்படுவரென்றுசெய்தாயத்தனை" என்ன," ஆகில்,உன்னைஅகப்படுத்துகைக்காக அச்செயல்களைச்செய்தாலோ?"என்ன,"நான் அது வஞ்சனமென்னுமிடம் பண்டே யறிவன்: அத்தை இனி என்பக்கல் ஆவிஷ்கரித்து ப்ரயோஜனமில்லை: அபூர்வைகள் பக்க

லிலே போ'' என்ன,போகாதேபின்னையும் பந்தையும்கழலையும்இவன்விரும்பப்புகஎன்னை உன்னருள்சூடப் பிறந்த மின்னிடைமடவார்களாக ப்ரமித்து, என்னுடைய லீலோப கரணங்களையும் அவர்களினவாகக் கருதி இவற்றைக் கொண்டு ஆஶ்வஸிக்கிறாய்; இவை அவர்களுடையன அல்ல,என்னுடைய பந்தும் கழலும் இவை;இவற்றைத்தந்து அவர்கள் உன்னை உபேக்ஷியாமே அவர்கள் இருந்த இடத்தேற ஈண்டெனப்போகு நம்பீ என்று எம்பெருமானை முகம்பாராதே இருந்து அருளிச்செய்கிறாள்.

ப.—முதற்பாட்டில், இவள், தன் லீலோபகரணங்களையும் மறையவைத்துத் தோழிமாரையும் விமுகைகளாம்படிபண்ணி இருக்கிறவளவில், தன் பாக்ய விஶேஷத் தாலே இவள் விஸ்மரித்து, அசேதநமாகையாலே தான் போகமாட்டாத பந்தையும் கழலையும் எடுத்துக்கொண்டு அவற்றிலே அத்யாதரத்தைப்பண்ணி, "நாம்முன்பு பெண்பிறந் தார்க்கு உதவி விரோதிநிரஸநம் பண்ணின ஆகாரத்தை ஆவிஷ்கரித்து, அபிமுகியாக்கக் கடவோம்'' என்று நினைத்துநிற்க, "அவை எங்களது: நீ நினைத்தவர்களது அன்று காண்; தந்துபோ'' என்று அவனோடு உறவற வார்த்தை சொல்லுகிறாள்.

(உன்னைத் தம்தாம்பக்கலிலே அபிநிவேஶிக்கும்படி பண்ணுகிற), மின்-மின் போலே நுடங்கும், இடை-இடையை யுடையராகையாலே ரூப சோபையில் குறைவற்று, மடவார்கள் - மடப்பம்முதலான ஆத்மகுணங்களையும் உடையவர்களாய்க்கொண்டு, (இவ் விரண்டும் உண்டாயிருக்கச் செய்தே என்னைப் போலன்றியே), நின்-உன், அருள்-அருளை, சூடுவார் - தலைக்கொண்டிருக்கும் அவர்களின், முன்பு - ஸந்நிதியிலே, நான்-அவர்கள் அளவில் நீ பண்ணின வ்யாபாரம் அறிந்திருக்கிற நான், அது - நீ இங்குப்பண்ணும் அதிக்ரமங்கள் அவர்களறிந்து நீ ஶிதிலனாம்படி உனக்குமுகப்ரதாநம்பண்ணாதே வெறுப்பரென்கிற இத்தைப்பற்ற, அஞ்சுவன் - அஞ்சாநிற்பன்; மன்னுடையிலங்கை அரண்காய்ந்த - நமக்குன்னையொழிய வேறு சிலருண்டோ! நாம்முன்பு ஏகதாரவ்ரத ராய் அவர்களுக்கு வந்த இடையூறு கழித்துக்கொடுத்ததை கேட்டு அறியாயோ! என்ன, மாயவனே - "பெண்பிறந்தார்க்கு உதவுமவன்'' என்று இளநெஞ்சாய் அகப்படுகைக்குச் செய்த க்ருத்ரிமசேஷ்டிதத்தையுடையவனே! (அது), உன்னுடைய - உன்னுடைய, சுண்டாயம் - ஸ்வார்த்தபரதை யென்று, நான்-புறம்புள்ளாரைப் போலன்றியே உன் நினைவறியும் நான், அறிவன் - அறிவன்; இனி-இனி, (ஒருபேதைக்குப் பொய்குறிக்குமா போலே, என்பக்கல்), அது-அது, கொண்டு - கொண்டு, செய்வது - செய்யலாவது, என்-உண்டோ? நம்பீ - நாஶொருத்தியுமே அல்லாதபடி, ("பதினாறுமாயிரவர்தேவிமார்'' என்று ப்ரஸித்தமான பூர்த்தியை உடையவனல்லையோ? அவர்கள் வெறுதபடிபோக ப்ராப்தம்: போமிடத்தில்), என்னுடைய - என்னுடைய மமதாந்தர்ப்பூதமான, பந்தும்-பந்தையும், கழலும் - கழலையும், தந்து - தந்து, போகு-போ. "விமுகருடைய மமதா விஷயம் த்யாஜ்யமாக நினைத்திருக்கும்'' என்றிருந்தாள் இவள்; "இவள்வைமுக்யம் ப்ரணயக்ருதமாகையாலே இவளோடு ஸம்பந்தித்தவஸ்து உத்தேஶ்யம்'' என்றிருந்தான் அவன். செந்நூலும் கருநூலும் வெண்ணூலுமிட்டுச் சமைத்த பந்தையும் ஐந்துகழலையும் அவனுதரித்தது - இவருடைய குணத்ரயாத்மக ஶரீரமும் இந்த்ரியங்கள் ஐந்தும் தன் விஷயமாக்க நினைத்து: இவள் அது தரச்சொன்னது - உன்னைக் கிடையாவிட்டால் பழைய ஶரீரேந்த்ரியங்கள் அமையுமென்றுநினைத்து. சுண்டாயம் - ஸ்வார்த்தபரத்வம்.

இ.—முதற்பாட்டில், இவர்கள் மறைக்க மறந்து, அசேதநமாகையாலே இருக்கஅறியாத பந்தையும்கழலையுமெடுத்துக்கொண்டு "ஶ்ரீஸூக்திஶ்லோகாலா" என்கிறபடியே இவற்றிலே பண்ணுகிற அத்யாதரத்தைக்கண்டு, "இவனுடன் வார்த்தை சொல்லாதே இருக்கிறதென்?" என்று "இவை நீ நினைக்கிறவர்களுடையனவன்று காண்: எங்களுடையன காண் : இவற்றைத்தந்து, அவர்கள் உன்னைஉபேக்ஷியாபே அவர்களிருந்த விடத்திலே போ" என்கிறாள்.

[மின்னிடைமடவார்கள் நின்னருள் சூடுவார் முன்பு] - பந்திலும் கழலிலும் பண்ணுகிற அபிநிவேசத்தைக் கண்டு, "இது நம் பக்கல் ப்ரேமத்தாலே வந்ததாக மாட்டாது, வேறே சிலரோடே கலந்து பிரிந்து பிரிவாற்றாமையாலே கலங்கி, நம்மை அவர்களாக ஸமித்து பந்தையும் கழலையும் அவர்களினவாகக் கொண்டாடீவஸிக்கிறான்" என்று பார்த்து, உன்னை இப்படி கலங்கப் பண்ணவல்லவழகையும் ஆத்ம குணத்தையுமுடையவர்கள் முன்பே இதென்ன காரியம் செய்கிறாய் என்கிறாள். [மின்னிடை]- தேக குணத்துக்கு உபலக்ஷணம். [மடவார்கள்]-நாண், மடம், அச்சம், பயிர்ப்பு முதலானவை ஆத்ம குணங்களுக்கு உபலக்ஷணம். தன்னோடு கலக்கிறபோது "இதோரழகே! இதோர் ஆத்ம குணமே!" என்று கொண்டாடும்படியைக் கண்டு, "இவன் புக்கவிடமெங்கும் சொல்லும்படி இதுவிறே" என்று கல்பித்துச் சொல்லுகிறாள். மடவார்களென்கிற ஹுவசனத்தாலே—ஒருவர்க்கு உற்றாயிராத பரபரப்பைச் சொல்லுகிறாள்.

"இதுவென்?, அவர்களார்?" என்ன, [நின்னருள் சூடுவார்]-உன்னுடைய ப்ரஸாதத்துக்குப்பாத்ரபூதைகள். எங்களை அவர்களாக ப்ரமித்து முன்னடிதோற்றாதபடி பண்ணினவர்கள்: அவர்கள் ஸந்நிதியிலே இதென்ன காரியம்செய்கிறாய். "இவள்:விமுகையாகைதவிர்ந்து வார்த்தை சொல்லுமவளானால்,மற்றுள்ளது பார்த்துக் கொள்ளுகிறோம்" என்று அத்தை இசைந்து, "அவர்களிங்குண்டோ?" என்றான் ; அவர்களோடு கலந்தபடியை அஸந்நிஹிதையான நானறிந்தபடி கண்டாயே; அப்படியேயவர்களும் அறிவர்கள் காண்: உன்னைப்போலே அந்யபரைகளோ அவர்கள்? செய்யாதொழியில் அத்தனையல்லது செய்தது மறைக்க வொண்ணாதுகாண். "அங்ஙனேயானால் வருவதென்?" என்ன; [நான தஞ்சுவன்] - "அஞ்சவேண்டுகிறதென்" என்ன, "பசு கிணற்றிலே விழுந்தால், 'ஐயோ!' என்பாரில்லையோ?, அவர்கள் கடாக்ஷமேதாரகமாக இருக்கிற உன்பக்கலிலே வைமுக்யத்தைப் பண்ணுவர்கள். "அத்தால் வருவதென்" என்ன, 'நீ துடிப்புதி; அது நான் காணமாட்டேன்'. அவர்கள்பக்கல் முகம்பெறாதே நிற்கும் தடுமாற்றத்தை 'அது' என்கிறாள். "என்னோடு உறவில்லையாகில் அஞ்சுகிறதென்?" என்ன, "பாரார்த்தம் பொறுக்கமாட்டாதொழிகைக்குஉறவுவேணுமோ? உன்னைப்போலே பாரார்த்தமே போதுபோக்காக இருக்கிறவர்களோ நாங்கள்?" என்ன, "இப்படி அதிசங்கை பண்ணுகிறதென்? உன்னையொழிய வேறுசிலர் உண்டோ எனக்கு?" என்ன, "அதுபொய்யிறே" என்ன, "நான் ஆர்திறத்திலே பொய்செய்தேன்" என்ன, "நீ ஆர்திறத்திலே மெய்செய்தாய்" என்ன;—[மன்னுடை இத்யாதி]-"ஏக தாரவ்ரதனாய் * உண்ணுதுறங்கா தொலிகடலையூடறுத்துச் சென்றொருத்திக்காக இலங்கையைழித்தது பொய்யோ?" என்ன, அதுவும் "சினத்தினாற்றென்னிலங்கைக் கோமானைச் செற்ற மனத்துக்கினியானை" என்று, இளிம்பராயிருப்பார் அகப்படுகைக்காகச் செய்தாய் இத்தனை. [மன்னுடை இலங்கை]-ராவணபாலிதையான லங்கை. ஆரேனுக்

கும் ரக்ஷிக்கலாம் அரணுடைய வூர்; வெளி நிலத்திலும் ரக்ஷிக்கவல்ல ராவணன். [அரண் காய்ந்த]-அவ்வரணையழித்து மூலையடியே வழிபோம்படி பண்ணினவன். [மாயவனே]-க்ருத்ரிமசேஷ்டிதங்களைப் பண்ணுமவனே! "அது சிலரை அகப்படுத்துகைக்குச் செய்ததாகில், உன்னை அகப்படுத்துகைக்கு ஆளோ" என்னில்;—[உன்னுடைய சுண்டாயம் நானறிவன்] - உன்னுடைய க்ருத்ரிமலீலையென்னுமிடம் நானறிவன். [இனி அது கொண்டு செய்வதென்] - நானறிந்த பின்பு அத்தை முன்னிட்டு என் பக்கல் ப்ரயோஜநமில்லை; அபூர்வைகள் பக்கலிலே போவென்ன, "கைப்பட்டத்தைச் செய்பலாவதில்லையிறே" என்று பந்தையும் கழலையுங்கொண்டு, "போகிறோம்" என்று போகப்புக்கான்: [என்னுடைய பந்துங்கழலும்] - இவை யாரதாக நினைத்துக்கொண்டு போகிறாய்? நீ நினைக்கிறவர்களதல்ல காண்; என்னுடையபந்தும் கழலும்கிடாய்; ஸ்வரூபத்தைப் பார்த்தாலும் மமகாரம் த்யாஜ்யம்; 'அஹங்காரஸஹஹிதேந ந ...' என்கிற படியே; ப்ரணயதாரையில் வந்தாலும் 'உன்னது, என்னது' என்கைக்கு மேலில்லை உறவறுதிக்கு: தானே பொகட்டுப்போம்" என்று 'என்னுடைய' என்கிறாள். அவனும் * 'யஸ்யைதே தஸ்ய தத்தநம்' அன்றோ? ஸ்வரூபஜ்ஞாநமுடைய உன்னுடைய மமகார விஷயம் அடங்கலும் 'என்னதன்றோ' என்று போகத்தொடங்கினான்; [தந்து போகு]-"உயிரை வைத்துப்போ" என்பாரைப்போலே. "அவன் மாட்டான்" என்று அறிந்து மர்மஜ்ஞையாகையாலே 'தந்து போகு' என்கிறாள். "இவர்கள் தொட்டளைந்தது" என்றிறே அவனாதரிக்கிறது: இவளும் அவன் தொட்டளைந்தவற்றைக் கொண்டு தரித்துக் கிடக்கைக்காக 'தந்து போகு' என்கிறாள். "நான் தருவேனோ? இவையொழிய எனக்குச் செல்லுமோ?" என்றான். [நம்பீ] - முதலிகளன்றோ; உமக்குப் புக்கவிடம் எங்கும் பந்தும் கழலும் அன்றோ, "ஷோடஸஸ்த்ரீஸஹஸ்ராணி" என்கிறபடியே அபிமதவிஷயங்களொன்றிரண்டோ? நடக்கலாகாதோ? ஸூத்துக்குப்பொருள் சொல்லுகையன்றிக்கே, உக்திப்ரத்யுக்தியாலே நினைவைச்சொல்லுகிற இதுவிறே இத்திருவாய்மொழிக்குக் கருத்து. திருப்பாவைக்கு "எல்லேயிளங்கிளியே" என்கிற பாட்டுப் போலே, இத்திருவாய்மொழியும் ஸாவப்ரயாநமென்னும் இடத்தைக் காட்டுகிறதாயிற்று.

ஈடு.—முதற்பாட்டு. இப்படி வரவுதாழ்த்ததும் இத்தலையை ஒழியச்செல்லுவதாயன்றிறே; கடுக வந்துகொண்டு நின்றான், பந்தையும் கழலையும் எடுத்துக்கொண்டான், அலப்யலாபமென்று தோற்றும்படி நின்றான், இத்தலையில் பண்ணக்கடவ வ்யாமோஹம் அடங்கலும் இவற்றின்பக்கலிலே பண்ணினான். அவன்படுகிற அலமாப்பைக் கண்டு, "இவையெல்லாம் நம்மைக்குறித்துச் செய்கிறானல்லன், தான் கலந்துபிரிந்தவர்களுடைய உபகரணங்களாகக் கொண்டு செய்கிறான் இத்தனை; இவனுடன் வார்த்தை சொல்லாதே இருக்

முதற்பாட்டு.—மின்னிடை இத்யாதி. இத்தனை வ்யாமோஹம் பண்ணுகிறவன் வாராதிருப்பானென் என்ன - இப்படிவரவுதாழ்த்தது இத்யாதி. 'செல்லுவதாயன்றிறே' என்ற அநந்தரம், ப்ராவண்யம் விளைக்கைக்காக இறே: அதுவிளைந்தவாறே 'கடுக வந்துகொடு நின்றான்' என்று கூட்டிக்கொள்வது. 'இப்படிவரவுதாழ்த்ததும்' என்றுதொடங்கி, 'காரைச்சுமந்ததொரு மின்னின்றதீ என்ன' என்னுமளவும் பாட்டில் தாத்பர்யத்தையும் ஸூசிப்பியாநின்றுகொண்டு, "மின்னிடைமடவார்" என்றபதத்துக்கவதாரிகை அருளிச்செய்தபடி. 'காரைச் சுமந்ததொரு மின்னின்றதீ!' என்றது - அலகபாரத்தைச்சுமந்ததோரிடை இருந்ததீஎன்றபடி. "காரைச்சுமந்ததொரு மின்னின்றதீ!" என்று அவன் தங்களைவர்ணித்ததுக்கு இவர்கள்ப்ரதிவசநத்வேந "மின்னிடைமடவார்" என்றதுக்கு

கிறதேன்'' என்று, ''வாராய்! நீ நினைக்கிறவர்களது அன்றுகாண் இவை; உனக்கு உபேக்ஷா விஷயமான எங்களதுகாண் இவை, இவற்றைத்தந்து அவர்கள்பக்கலிலேறப்போ'' என்ன.

''ஓம், அதுசெய்கிறேன்,†(இங்ஙனே)-காரைச்சுமந்ததோரு மின் நின்றதீ!''என்ன [மின்னிடைமடவார்கள்] என்கிறார்கள் - '' அவர்கள்பாடேறப்போகிறவன் இடையிலே இதோன்றைச் சொன்னான், அது தான் நிலைநில்லாது '' என்று பார்த்து ''வாராய்! நீ உபேக்ஷித்ததோருவிஷயத்திலே இத்தனை கால் தாழ்ந்தால், உன்னை விரும்பியிருப்பார் அநேகராகையாலே போரநெருக்குண்புதி கிடாய். அவர்கள் தங்கள்படி இருந்தபடியேன்தான்? இதோரு தேஹகுணமும் ஆத்மகுணமும் இருக்கும்படியே! [மின்னிடை] - மற்றும் தேஹகுணத்துக்குஉபலக்ஷணம். [மடவார்கள்] இது-நாண், மடம், அச்சம், பயிர்ப்பு முதலான ஆத்மகுணங்களுக்கும் உபலக்ஷணம். மடவாரேன்கிற பஹுவசநத்தாலே - ஒருவர்க்கு உற்றாருயிராமை சொல்லுகிறது. நீ அதஸ்மிம்ஸ்தத்புத்தி பண்ணும்படி பண்ணுவிப்பதே அவர்கள் சிலர். இவனுடைய அலமாப்பைக்கோண்டே அவர்களுடைய வைலக்ஷண்யத்தை அநுமிக்கிறாளிறே. பாவியேன், உன்னை இங்ஙனே இடையிலே பிச்சேறித் துடிக்கப் பண்ணினார் ஆரோ? [மின்னிடைமடவார்கள்] - இவனோடு ஸம்பந்தமுடையாருடைய தேஹ குணங்களையும் ஆத்மகுணங்களையும் ஸாபாஶ்ரயமாக நினைத்திருந்தபடி தோற்ற வார்த்தை சொன்னபடியேன் தான்! ப்ரணயரோஷம் புறவாயிலே செல்லா நிற்கச் செய்தேயும், அகவாயில் நினைவு இதிறே. அகவாயிலும் த்வேஷமேயானாலும் வஸ்துஇருந்தபடி சொல்லவேணுமே; த்வேஷத்தாலேசோல்லு மன்றம் † '' தாரூணௌரூவை

---

† ப்ர.—[முதற் பாட்டு] - [மின்னிடை மடவார்கள்] - ஶூர்ணகாஜ்ஞை [கசு] ஜநஸ்தாநேஸ்ததாரம் வரம்ஶூதிஶாவிருணவா, '' இதி ஸாத்ருவவ ஸ்ரூஶ்கா க்ஷஐஸ்வ விஶேஷதஃ। தஸ்யஶாவிருணவாவாக்யம் ஸஹாஷிதேஜ

இரண்டு தாத்பர்யம். அதில், அவன்சொன்னவார்த்தை அஸ்த்திரமாகையாலே, உன்னுடைய மின்னிடைமடவார்களல்லோம் நாங்கள் என்று முந்தினபாவம்; அத்தை அருளிச்செய்கிறார் - அவர்கள் பாடேற இத்யாதி. இடையிலே நடுவேஎன்றும், இடையிலேஎன்றும் அர்த்தத்வயம். இத்தனைகால் தாழ்ந்தாலென்றது - எங்கள்பக்கல் ஸ்நேஹமின்றிக்கே தாமஸித்தாலென்றபடி. போரநெருக்குண்புதிகிடாயென்றது - ''நீ அந்யாஸக்தன்'' என்று அவர்கள் உன்னை முகம்பாராமையாலே போர நோவுபடுவுதி கிடாய் என்றபடி. ''மின்னிடைமடவார்'' என்றுவர்ணித்ததுக்கு பாவம் - அவர்கள் தங்கள் இத்யாதி. படி - வடிவு. விவரணம் - இதோரு இத்யாதி. ஆத்மகுணம் - பவ்யதைதொடக்கமானவை. உற்றாருயிராமை - பொருந்தினவளுயிராமை. ''மின்னிடைமடவார்'' என்றதுக்கு - இவன் அபிமதவிஷயங்களோடே கலந்து பிரிந்துவந்து தங்களைக்கண்டு அவர்களாக ப்ரமித்துச்சொல்லுகிறானென்று த்விதீயதாத்பர்யம் - நீ அதஸ்மிந் இத்யாதி. ''மின்னிடைமடவார்கள்'' என்று அவர்கள் வைலக்ஷண்யத்தை இவர்கள் அறிந்தபடியென்என்ன - இவனுடைய இத்யாதி. அலமாப்பாவது - அதஸ்மிம் ஸ்தத்புத்தி பண்ணுகை. '' நீ அதஸ்மிம்ஸதத்புத்தி'' இத்பாதிவாக்யத்துக்கு மேஸாக்தியாக விவரணம்—பாவியேன் இத்யாதி. இடையிலேபிச்சேறி - நடுவேப்ராந்தேன்றும், இடையைக்கண்டு பிச்சேறி என்றும் அர்த்தத்வயம். பதோபாதாந பூர்வகமாக ஸ்வாபதேஶம் - மின்னிடைமடவார்கள் இவனோடு ஸம்பந்தம் இத்யாதி. நினைத்திருந்தபடி - ஆழ்வார் நினைத்திருந்தமை என்றபடி. ப்ரணயரோஷம் செல்லாநிற்க, ஸாபாஶ்ரயமாக நினைக்கக்கூடுமோ? என்ன - ப்ரணயரோஷம்புறவாயிலே இத்யாதி. பட்டர் நிர்வாஹத்திலே ப்ரணயரோஷமன்றோ, ஶ்லாகிக்கலாமோ? என்ன - அகவாயிலும் இத்யாதி. ஶத்ருஶத்ருஷ்டாந்தமாக விவரணம் - த்வேஷத்தாலே இத்யாதி. ''தாரூணௌரூவைஸம்வை

ஸம்பந்நௌ'' (தருணௌரூபஸம்பந்நௌ) என்றல்லது சொல்லவொண்ணாதே. [மின்னிடைமடவார்கள்] - தங்கள் பாடுகேட்டிலுல், "இதோரிடையே! இதோருதுணமே!" என்று அவனுழங்கால்படும் துறையறியுமே; "அப்படியேயிறே இவன்போனவிடத்திலும்" என்றிருக்கிறார்கள். இங்ஙனன்றாகில் எதிர்த்தலையைக் கண்டு சொல்லுகிறாளன்றே. இப்படி இருப்பாருமுண்டோ புறம்பே என்ன, [நின்னருள்சூடுவார்] - உன்னுடைய ப்ரஸாதத்துக்கு பாத்ரபூதைகளாயிருப்பார். இவ்வளவில் "உன்தலையிலே கால்வைக்கப் பிறந்தார்" என்றுசொல்லவிறேஅடுப்பது; அங்ஙன்சொல்லுமன்று; அது அவனுக்குஇடமாமே: அதாவது - இவள்காலைத் தன்தலையிலே எடுத்துவைத்துக்கொள்ளுமென்கை. உறவுதோற்றுமல் இருக்கிறவள் அங்ஙன்சொல்லாளிறே. பாவபந்தம் அடியாகவந்த கலவியாகையாலும், நினைவும்அத்தலையாலே வந்ததாகையாலும், அவன்வார்த்தையாகநடுவொன்றில்லையேயாகிலும் இடையீடுபோறுக்கக்கடவது. ஆனாலென்? அவர்களிங்கு இல்லையேயென்றான். [முன்பு] - எங்களை அவர்களாகநினை. நாங்கள்காண் அவர்களென்கிறாள். அவையெல்லாமிங்கேயிறே'' என்னவேண்டியிருக்க, தனக்கு வேறே சிலர் உண்டாகச் சொல்லுவானேன்? என்னில்; பல கேட்க நினைத்திருக்கிறவன் ஒருவார்த்தையோடே தலைக்கட்டானே;

ஸர்கே ॥ ௧௭ ॥ தருணௌ ரூபஸம்பந்நௌ ஸுகுமாரௌ மஹாபலௌ ।
புண்டரீகவிஶாலாக்ஷௌ சீரக்ருஷ்ணாஜிநாம்பரௌ ॥ ௧௪ ॥ ஃபலமூலாஶநௌ தாந்தௌ
தாபஸௌ ப்ரஹ்மசாரிணௌ । புத்ரௌ தஶரதஸ்யாஸ்தாம் ப்ராதரௌ ராமலக்ஷ்மணௌ ॥
௧௫ ॥ கந்தர்வராஜப்ரதிமௌ பார்த்திவவ்யஞ்ஜநாந்விதௌ । தேவௌ வா மாநவௌ வா தௌ
ந தர்க்கயிதுமுத்ஸஹே ॥ ௧௬ ॥

நௌ ஸுகுமாரௌ மஹாபலௌ । புண்டரீகவிஶாலாக்ஷௌ சீரக்ருஷ்ணாஜிநாம்பரௌ

இத்பாரண்யகாண்டே வராம்ப்ரதி சூர்ப்பணகா. அவர்கள் வைலக்ஷண்யத்தை இவர்கள் அறிந்தபடி என்? என்கிறசங்கைக்குப் பரிஹாராந்தரம் - **தங்கள்பாடு** *இத்யாதி. "அநுமிக்கிறாள்" என்று கொள்ளாதவர்களுக்கு அநிஷ்டப்ரஸஞ்ஜநம் பண்ணுகிறார் -* **இங்ஙனன்றாகில்** *இத்யாதி.* **'உறவுதோற்றுமல்'** *இத்யாதி வாக்யாநந்தரம், 'அங்ஙன்சொல்லுமன்று' இத்யாதிவாக்யம் அநுஸந்திப்பது. ப்ரத்யுத்தரமாக அவன் வார்த்தை இல்லாமலிருக்கப் பரிஹரிக்கக் கூடுமோ? என்ன -* **பாவபந்தம்** *இத்யாதி. அதாவது - ஸ்நேஹபூர்வகமான கலவியாகையாலே பாவகர்ப்போக்தியாயிருக்கும் என்றபடி.* **நினைவும் அத்தலை** *யாலே வந்ததாகையாலும் என்றது - இவர்கள்சொலவும் அவன்வார்த்தைக்கு ப்ரத்யுத்தரமாகையாலும் என்றபடி அதாவது - ப்ரணயதாரையில் விதக்தைகள் சொல்லுகிற வார்த்தையாகையாலே, இவர்கள் சொலவு நாயகனுடையநினைவை அநுவிதாநம்பண்ணி அவ்வுக்திக்கு ப்ரத்யுக்தியாயிருக்கும் என்றபடி. நினைவென்றது - நினைவின்கார்யமானசொலவை நினைவென்று - சொலவைச்சொல்லுமோ? என்ன; - " 'இந்தவார்த்தையை அங்கேநினைப்பிடு' என்றால் - அங்கேசொல்லென்றபடியிறே" என்று அருளிச்செய்வர். இடையீடு பொறுக்கக்கடவதென்றது - நடுவே அவன்வார்த்தையை அத்யாஹரித்துக் கொள்ளக்கடவது என்றபடி. ஆனாலென்றது - அவர்கள் "அந்யாஸக்தன்" என்று முகம்மாறியிருந்தாலென்றபடி, பூர்வவாக்யவிவரணம் -* **நாங்கள்காண்** *இத்யாதி. அதாவது - உன்னுடைய வ்யாபாரங்களெல்லாம் நாங்களறிந்தாற்போலே, நீ இங்குச் செய்தவையும் அவர்கள் அறிவர்கள் என்றபடி.* **அவையெல்லாம்** *இத்யாதி சங்காவாக்யத்துக்குபாவம் — வேறேசிலருண்டாகச்சொல்லுகை ப்ரணயித்வத்துக்குச் சேராதென்று. இதுவார்த்தை இட்டு வார்த்தைகொள்ளுகைக்காகச் சொன்னது அத்தனையொழிய, தனக்கு வேறேசிலருண்டென்று சொன்னவார்த்தை அன்றென்று பரிஹரிக்கிறார் -* **பல கேட்க,** *இத்யாதி வாக்யத்வயத்தாலே. நான் ஒளித்துச்செய்கிறவை அவர்களறிவர்களோ? என்ன -*

இட்டீடுகோள்ளுகையிறே இவன்தனக்கு தாரகம். [முன்பு] - நீ செய்யுமவை யேல்லாம் மறைக்கப் போகாதுகாண். நீ அங்குச்செய்தவை எல்லாம் கண்டாயே நாங்கள் அறிந்தபடி; இப்படியே, நீ இங்குச் செய்யுமவையெல்லாம் அவர்கள் அறிவர்கள் காண். அவர்களுக்கு உன்னைப்போலே வேறு அந்யபரதை இல்லைகாண். உன்னைப் போலே நினையாதே கோள்ளாய் அவர்களை. உன்னைக் கலந்து பிரிந்தார் உன்னை ஸாக்ஷாத் கரித்தபடியே இருப்பர்கள்காண்; "பிரிந்தோன்றுநோக்காது தம்முடைய பின்னே திரிந்துழ லும் சிந்தனையார்" என்றிறே இருப்பது. அவர்களுக்கு வேறுவிஷயமில்லாமையாலே ஸர்வ காலத்துக்கும் ஸ்ம்ருதிவிஷயம் நீயேகாண். ஆனாலேன்? உங்களுக்கு என்னோடொரு ஸம் பந்தமில்லைஆனபின்புஅத்தால்வருவதோன்றில்லையே?என்றான்: [நானதஞ்சுவன்]-உன்னைப் போல் அல்லோம்காண் நாங்கள். நீ இங்கே சிறிதுபோது கால்தாழ்த்துப் போனால், அவர்க ளுன்னை அரைக்ஷணம் முகம்மாறினால், நீ பொறுக்கமாட்டாமல் கிடந்து துடிக்கும்துடிப்பு நான் காணமாட்டேன்: கலந்துபிரியவல்லாயும் துடிப்பக்காணவல்லாயும் நீயேகாண்; பரா நர்த்தங் கண்டால் பொறுக்கமாட்டோங்காண் நாங்கள். உன்னோடு உறவு இல்லையேயாகி லும் நீ படும் அலமாப்புக்கண்டால் பொறுக்கமாட்டோம்;சிலர் கிணற்றிலே விழுந்தால் ஒரு குரல் கூப்பிடும்போது உறவுவேணுமோ? அவர்கள் பக்கல் முகம்பெறாதே நிற்கும் தடுமாற் றத்தை 'ஆற்றேன்'என்கிறாள்.அரைக்ஷணம் இத்தலையையோழிய ஜீவிக்கமாட்டாதே சேல் லாமையையுடைய என்னைப்போய்யனுக்கிப் புறம்பாக்கி வார்த்தைசோல்லுவதே! என்றான்.

நீ செய்யுமவை இத்யாதி. "எங்களையவர்களாகநினை" என்ற வாக்யவிவரணம் - நீஅங்கு இத்யாதி வாக்யத்வயம். அவர்களுக்கு வேறுபராக்கில்லையோ? என்ன - அவர்களுக்கு இத்யாதி. அந்யபரதை இல்லாமைக்கு ஹேது உன் வைலக்ஷண்யம் என்கிறார் - உன்னைக்கலந்து இத்யாதி. பகவதேக பரதைக்கு ப்ரமாணம் - பிரிந்தோன்று இத்யாதி. வேறொன்றைப்பாராதே தம்முடையபின்னே இடைவிடாமல் திரிந்து தடுமாறுகிற மநஸ்ஸை உடையவர்களென்றபடி. பெரியதிருவந்தாதி ஐம்பதாம் பாட்டு. நம்மைக்கலந்துபிரிந்தார் நம்மை ஸாக்ஷாத்கரித்தபடியே இரு என்ன - அவர்களுக்கு வேறுவிஷயம் இத்யாதி. கீழில் பதத்தையும் அநுசரித்து, "நானதஞ்சுவன்" என்ற துக்கு அவதாரிகை - ஆனால் இத்யாதி. ஆனாலென்றது - அவர்களறிந்தாலென்றபடி. அத்தால் வருவது ஒன்றில்லையே என்றது - அவர்கள் முகம்பாராமையால் வரும் வ்யஸநம் உங்களுக்கில்லையே என்றபடி. இதுக்கு உத்தரமாக - நீ இங்கேசிறிதுபோது இத்யாதிவாக்யத்தைச்சொல்லிக் கொண்டு, அநந்தரம் உன்னைப்போலல்லோங்காண்நாங்கள் என்கிறவாக்யம் அநுஸந்திப்பது. துடிப்புக்காண மாட்டாமைக்குஅடி ஏதென்ன, - எங்கள் ப்ரக்ருதிஸ்வபாவம் என்கிறார்கள். உன்னைப்போலல்லோம் காண்நாங்கள் என்ற இத்தைவிவரிக்கிறாள் - கலந்து பிரியவல்லாயும் இத்யாதிவாக்யத்வயத்தாலே. துடிப்பென்றது - "அது" என்றத்தைப்பற்ற. கலந்து பிரியவல்லாயும் இத்யாதிவாக்யம் - "நான தஞ்சுவன்" என்றதுக்கு ப்ரதிகோடித்வேந பாவமாயிருக்கிறது. "ஆனாலென்? உங்களுக்கு என்னோடு ஒரு ஸம்பந்தமில்லையானபின்பு." என்கிற ஶங்கைக்குப் பரிஹாரம்ஏதாயிற்று என்ன - உன்னோடு உறவில்லையே இத்யாதி. இந்தவாக்யம், நீயிங்கேசிறிதுபோது இத்யாதிவாக்யத்துக்கு விவரணமா யிருக்கிறது. உறவில்லாத இடத்திலே தயை உதிக்குமோ? என்ன - சிலர்கிணற்றிலே இத்யாதி. "மின்னிடை" இத்யாதிக்கு - மின்போலே நுடங்குமிடையையும் ஆத்மகுணங்களையும் உடையராய், உன்னருளை ப்ரஸாதிக்கும்அவர்கள் ஸந்நிதியில் நீ பண்ணின வ்யாபாரம் அறிந்திருக்கிற நான், நீ இங்குப்பண்ணும் அதிக்ரமங்களை அவர்கள் அறிந்து நீ ப்ரதிலனும்படி உனக்கு முகங்கொடாதே வெறுப்பர் என்கிறத்தைப் பற்ற 'அஞ்சாநின்றேன்' என்று பதார்த்தம். "மன்னுடையிலங்கை" இத்யாதிக்கு அவதாரிகை - அரைக்ஷணம் இத்தலையை இத்யாதி. "மின்னிடைமடவார்" என்று - எங்களையவர்களாக ப்ரமித்தாய் என்கையாலே, போய்யனுக்கி என்றது. "நின்னருள்சூடுவார்" என்கை

[மன்னுடையிலங்கையரண்காய்ந்தமாயவனே]-“என்தான்? நீ பொய்யனல்லேயோ?” என்றாள். “நான் என்னோடே பரிமாறினரில் இதுக்குமுன்பு ஆர்க்குப் பொய்செய்தேன்?” என்றான்; “நீதான் ஆர்க்கு மெய் செய்தாய்” என்றாள்; “என்தான், “உண்ணுதுறங்கா தொலிகடலையூடறுத்து” என்று, ஏக தாரவ்ரதனாய்க்கொண்டு நான் பட்டதெல்லாம் பொய்யோ?” என்றான். “அதுதான் நீ வேண்டிச்செய்தாயோ? ஒருதுறையிலே ஒருமெய் பரிமாறுவிடில், நமக்கு மேல் உள்ளதெல்லாம் ஒருதொகையில் அகப்படாதென்று செய்தாயத்தனையன்றோ? அபலைகளைஅகப்படுத்திக்கொள்ள இட்டவழியன்றோ?” [மன்னுடையிலங்கையரண்காய்ந்த] - நிலமிதிதானேதிரிகள் மண்ணுண்ணும்படியாய், அதுக்கு மேலே “லங்காம்ராவணபாலிதாம்” (லங்காம்ராவணபாலிதாம்) என்றுகொண்டு, ஸிம்ஹங்கிடந்த முழஞ்சுபோலே பையலுணர்ந்து நோக்குகிற ஊரையழியச்செய்த. [மன்னுடை] - மன்னனையுடைய. [மாயவன்]-க்ருத்ரிம வ்யாபாரத்தைஉடையவன். “அழகிது: ஒருமெய்யுமுண்டாகச்சொன்னாயே; அத்தைஇங்கே செய்தேனானலோ? மேலுள்ளதும் எல்லாமாகைக்காக” என்றான். [உன்னுடைய சுண்டாயம் நானறிவன்]-அது உனக்குச் செய்யலாவது செவ்வேபரிமாறும் அவர்களோடேகாண்; நீசெய்கிறவையெல்லாம் பண்டே எனக்கு ஜ்ஞாதங்காண்; நீ செய்கிறவையெல்லாம் “மெய்” என்றிருப்பாள் ஸ்ரீஜநகராஜன் திருமகள்காண்; உன்னுடைய க்ருத்ரிம லீலைகளெல்லாம் நானறிவன். சுண்டாயம்-ஸ்வார்த்தபரத்வம். “அறிந்தேன், அறியாவிடிலென்? ப்ரவ்ருத்தமாயிற்றே” என்றான்: [இனியதுகொண்டுசெய்வதென்]-“ஸாத்யமாயிற்றுஅதிறே” என்றான்: “ஸாத்யாம்ஸத்துக்குஒருப்ரயோஜநம் கண்டிலோமீ” என்றாள். † (அதாவது - நானறிந்த பின்பு உன்க்ருத்ரிமத்தை முன்னிட்டு என்பக்கல் ப்ரயோஜநமில்லையென்கை. அவனும் ஒன்றைநினைத்து, “ஆகில் எனக்கு ஸாத்யாம்ஸம்தான் இல்லையோ?” என்றான்; † (என்றவநந்தரத்தே கைப்பட்ட பந்தையும் கழலையும்கொண்டுபோகப்புக்கான்) [என்னுடையபந்துங்கழலும்]-கைப்பட்ட பந்தையும் கழலையும் போரவிரும்பப் புக்கான். “பாவியேன், நீ எங்கே செய்யக்கடவத்தை எங்கேசெய்கிறாய்? அவை நீ நினைக்கிறவர்களதன்று காண்: அவைஎன்னது காண்” என்றாள். “அதுதான், மெய்யே” என்றான்: இவன் விருப்பத்துக்கு அதுதானேயிறே

யாலே, புறம்பாக்கி என்றது. “மாயவன்” என்றது - சரம உக்த்யபிப்ராயத்தாலே யாகையாலே, தத்பூர்வபாவியான உக்திகளை அருளிச்செய்கிறார் - “என்தான்? நீ பொய்யன்” இத்யாதி. அபலைகளை இத்யாதி வாக்யம் - சரம உக்த்யபிப்ராயமான “மாயவன்” என்கிறதுக்குத் தாத்பர்யம். தொகை - ஸங்க்யை. ஸப்தார்த்தம் - நிலமிதி இத்யாதி. நிலமிதி - நிலத்தின் ஸ்வஹாவம். வீரக்ஷேத்ரம் என்றபடி. முழஞ்சு - புதர். “உன்னுடையசுண்டாயம்” என்றதுக்கு அவதாரிகை - அழகிது இத்யாதி. ஆனால், நீ எப்படிக்கொத்தவள் என்ன - நீ செய்கிறவை இத்யாதி. செவ்வே பரிமாறும் அவர்கள் ஆர்? என்ன - நீசெய்கிறவை இத்யாதி. ஸப்தார்த்தம் - உன்னுடைய இத்யாதி. ப்ரவ்ருத்தமாயிற்றே என்றது - ஆலோகாலாபாதிகள் ப்ரவ்ருத்தமாயிற்றே என்றபடி. ஏதத்விவரணம் - ஸாத்யமாயிற்று அதிறே என்றான் என்றது. இதுக்கு அநந்தரம், இனி அதுகொண்டுசெய்வதென்? என்றது அநுஸந்தேயம். ஒருப்ரயோஜநங்கண்டிலோமீ என்றது - ஸம்பாஷணாதிகளாற் பெற்ற ப்ரயோஜநம் ஒன்றுங் கண்டிலோமீ என்றபடி. அதாவது - ஸம்ஶ்லேஷம்வாராதென்றபடி. ஒன்றைநினைத்தென்றது - கைப்பட்ட பந்தையும் கழலையும் நினைத்தென்றபடி. கைப்பட்டபந்தையும் இத்யாதி வாக்யாநந்தரே - என்னுடையபந்துங்கழலும் என்றது அநுஸந்தேயம். மெய்யேயென்றது - மெய்யோவென்றபடி. மெய்யானாலென்? என்ன - இவன்விருப்பத்துக்கு இத்யாதி. அதெப்

† குண்டலீக்ராந்தத்வயம் க்வாசித்கம்.

வேண்டுவேது; "யஸ்யைதே தஸ்ய தத்தநம்" (யஸ்யைதேதஸ்யதத்தநம்) என்று மற்றையது அநந்தரத்தே வருமிறே. †(அதாவது-ஸ்வரூபஜ்ஞாநமுடைய உன்னுடைய மமகாரவிஷயம் அடங்கலும் என்னதன்றோ என்று போகத்தொடங்கினான்.) இனிப்ரவேஸத்திலே, "முடியப்பார்க்கிறாள்" என்று சொல்லிற்று ஒன்றுண்டு: அது - இப்பதத்திலே தோற்றுகிறது. அவன் ஸந்நிதியிலே "என்னது" என்று சொல்லுகைக்கு மேற்பட்ட முடிவில்லை இறே; *"த்வ்யக்ஷரஸ்து பவேந்ம்ருத்யு:" (த்வ்யக்ஷரஸ்துபவேந்ம்ருத்யு:) இறே. 'மாமகா: பாண்டவாஸ்சைவ" (மாமகா:பாண்டவாஸ்சைவ)- என்கிறவிடத்துக்கச் சிறியாத்தான் சொல்லும்படி- "என்னுடையவர்களென்றும் பாண்டவர்களென்றும் பிரித்தான், அது இறே விநாஸபர்யந்தம் ஆக்கிவிட்டது" என்று. இதுதான் தத்த்வகதையேயன்று, ப்ரணயகோஷ்ட்டியிலும்; கலவியிலேவந்தால் "உன்னது, என்னது" என்கையிறே உறவறுகையாவது. [என்னுடைய பந்துங்கழலும்] - "ஆத்மேத்யேவ து க்ருஹ்ணீயாத்" (ஆத்மேத்யேவதுக்ருஹ்ணீயாத்) என்கிறபடியே ஒன்றையொன்று உபாசியாநிற்கச்செய்தே, தன்னை உபாசித்ததென்று சொல்லலாம்படியிறே இரண்டுவஸ்துவுக்கும் ப்ரத்யாஸத்தி இருந்தபடி. ஸ்வரூபம் விஸதமானால், "நான்" என்னவுமாய் "அடியேன்" என்னவுமாய்க்காணும் இருப்பது. [தந்துபோகு நம்பீ] - நீ இங்கே கால்தாழாநின்றாய்: இதுக்கொரு தாத்பர்யம் அறியாதே உன்னையுபேக்ஷிக்கத் தொடங்குவர்கள்: அதுக்குமுன்னே போ. [நம்பீ]-முகப்பழக்கமும் இன்றிக்கேஇருந்தது; முதலியாருமாயிரா நின்றீர்: கடுகப்போகப் பாரும். "கண்டகாட்சி புல்லெழுந்துபோனபடி

படி என்ன.- யஸ்யைதே இத்யாதி. "[illegible] யத்தஸ்யேமங்கி யஸ்யைதே தஸ்ய தத்தநம்" இத் யுத்யோகபர்வணி த்ருதராஷ்ட்ரம் ப்ரதிவிதுர:. யஸ்யைதே இத்யாதிவாக்யத்துக்கு - இவர்கள் அவனுடையவர்கள், ஆனால் இவர்களது அவனுடையதாமிறே என்று கருத்து. மற்றையது என்றது - ஸேஷபூதனுடைமை ஸேஷியதாகை என்றபடி. அதுதான்மெய்யே இத்யாதி வாக்யத்ரயமும் - "தந்துபோகு" என்றதுக்கு அவதாரிகை. இப்பதத்திலே என்றது - "என்னுடைய" என்றபதத்திலே என்றபடி. அதெப்படி என்ன - அவன் ஸந்நிதி இத்யாதி. "என்னது" என்றால், முடிவாம்படி எங்ஙனே? என்ன; அஹங்கார மமகாரங்கள் விநாஸகரமென்று ஸாஸ்த்ரஞ்சொல்லுகையாலே என்கிறார் - த்வ்யக்ஷரஸ்து இத்யாதி "த்வ்யக்ஷரஸ்து பவேந்ம்ருத்யுஸ் த்ர்யக்ஷரம் ப்ரஹ்மண: பதம் | மமேதி த்வ்யக்ஷரோ ம்ருத்யுர் நமமேதி ச ஸாஸ்வதம்" இதி பகவச்சாஸ்த்ரே. அஹங்கார மமகாரங்கள் விநாஸகரமென்னுமதுக்கு ஸம்வாதம் - மாமகா இத்யாதி. "தர்மக்ஷேத்ரே குருக்ஷேத்ரே ஸமவேதா யுயுத்ஸவ: | மாமகா: பாண்டவாஸ்சைவ கிமகுர்வத ஸஞ்ஜய" இதி பகவத்கீதாஸு ப்ரதமே. இதுதான் ஸ்வாபதேஸத்தில் அன்றிக்கே அந்யாபதேஸத்திலும் விநாஸகரமென்கிறார் - இதுதான் தத்த்வ இத்யாதி. தத்த்வகதையிலே "என்னது" என்கை-உறவறுகையானால், உறவறுதப்ரகாரம் ஏதென்ன?—ஆத்மேத்யேவ இத்யாதி. அதாவது - சேதநன் ஈசுவரனை உபாசியாநிற்கச்செய்தே தன்னையே உபாசித்தது என்னலாம்படியன்றோ ஸரீரஸரீரிபாவத்தால் வந்த ப்ரத்யாஸத்தி இருக்கிறபடி; இப்படிஸரீரபூதனாய் அவன் அபிமாநத்திலே அந்தர்ப்பூதனாயிருக்கை உறவறுமையாவது என்றபடி. "ஆத்மேத்யேவ து க்ருஹ்ணீயாத் ஸர்வஸ்ய தந்நிஷ்பத்தே:" இதி வாக்யகாரவசநம். ஆனாலும், அவன் அபிமாநத்திலே அந்தர்ப்பூதனாயிருக்கும் ஆகாரந்தோற்றுவது - அடியேன் என்றாலன்றோ? என்ன- ஸ்வரூபம் இத்யாதி. "போகு" என்றத்துக்கு பாவம் - நீ இங்கே இத்யாதி. "நம்பீ" என்றத்தால் பலிதமான தாத்பர்யம் - முகப்பழக்கம் இத்யாதி. முன்பு முகப்பழக்கமில்லையோ? என்ன - கண்டகாட்சி இத்யாதி. பெரியமுதலியார் - ஆள

யிறே இவள் இங்ஙன் சொல்லுகிறது '' என்று பெரியமுதலியார்வார்த்தை. என்னுடைய பந்துங்கழலும் என்றவிடம் - அவன்போகடுகைக்குச் சொன்னவார்த்தை. தந்துபோகு என்றவிடம் - அவன்விரும்பினவையொழியத் தனக்குச்செல்லாது என்னுமிடந் தோற்றுகிறது. [நம்பீ] - '' ***ஷோடஶஸ்த்ரீஸஹஸ்ராணி*** '' (ஷோடஶஸ்த்ரீஸஹஸ்ராணி) என்று உமக்குப் போனவிடமெங்கும் கொண்டாட்டத்தால் குறையில்லை, எங்களுக்கு உம்மைக் கிடையாது; இனி உம்முடைய கரஸ்பர்ஶம் உண்டாய்ப் போகட்டவை கொண்டாகிலும் எங்களுக்கு ஜீவித்துக் கிடக்கவேணும்; ஆனபின்பு அவற்றை எங்களுக்குத் தந்துபோம். "உயிரைவைத்துப்போம்'' என்பாரைப் போலே. இவன் இவை கைவிட்டுப் போகமாட்டான் என்று அறிந்து, மர்மஜ்ஞை ஆகையாலே 'தந்துபோ' என்கிறாள்.

இரண்டாம் பாட்டு.

போகு†நம்பீ! உன் தாமரைபுரைகண்ணிணையும் செவ்வாய்முறுவலும்
ஆகுலங்கள்செய்ய அழிதற்கேநோற்றோமேயாம்?
தோகைமாமயிலார்கள் நின்னருள்சூடுவார் செவியோசைவைத்தெழ
ஆகள்போகவிட்டுக் குழலூதுபோயிருந்தே.

ஆ.—*(போகுநம்பீ) - இப்படி எம்பெருமானை உத்திஶ்ய தான் சொன்ன வார்த்தைகளாகிற அம்ருதவர்ஷத்தாலே அவன் உஜ்ஜீவித்து ப்ரதிஶயப்ரீதியுக்தனுமாய், புதுக்கணித்த திருக்கண்களையும் திருப்பவளத்தையும் உடையனுமாயிருந்தவிடத்தில், இதுவெல்லாம் அவர்களாகக் கருதி இவனுக்கு வந்ததாகக்கொண்டு, 'இவ்வழகை ஆசைப்பட்டுப்பெறாதே அவஸந்நைகளாய் மாயப்பிறந்தவர்கள்காண் நாங்கள்; இவ்வழகைக்கண்டு வாழப்பிறந்தவர்கள் அல்லோம்; தோகை மாமயிலார்கள் நின்னருள் சூடுவார்; நீயும் அங்கேபோய் அவர்களோடேகலந்து பரிமாறு' என்று இவள்சொல்ல,*

ப்ர.—ஸ்ரீ விஷ்ணுபுராணே பஞ்சமேம்ஶே ஏகத்ரிம்ஶோத்யாயே,
" ஏகஸ்மிந்நேவ கோவிந்த: காலே தாஸாம் மஹாமுநே । ஜக்ராஹ விதிவத் பாணீந் ப்ருதக்கேஹேஷு யோஷிதாம் ॥ ௧௭ ॥ ஷோடஶஸ்த்ரீஸஹஸ்ராணி ஶதமேகம் ததோதிகம் । தாவந்தி சக்ரே ரூபாணி பகவாந் தேவகீஸுத: ॥ ௧௮ ॥

வந்தார். "என்னுடைய பந்தும் கழலும் தந்துபோகு'' என்கிறவளுடைய ஹார்த்தபாவம்— என்னுடைய பந்தும் இத்யாதி. விவரணம் - ஷோடஶ இத்யாதி. "ஷோடஶஸ்த்ரீஸஹஸ்ராணி ஶதமேகம் ததோதிகம் । தாவந்தி சக்ரே ரூபாணி பகவாந் தேவகீஸுத:'' இதி பஞ்சமேம்ஶே. "தந்துபோகு'' என்றதக்கு - ஸ்வஸத்தை தரிக்கைக்காகத் தந்துபோ என்கிறாளென்று கீழ் அருளிச்செய்து, அவன் போகாமைக்காகச் சொல்லுகிறாள் என்று பாவாந்தரம் - உயிரைவைத்து இத்யாதி. மன்னுடையிலங்கை - ராஜாவையுடைய லங்கை. மன் - ராஜா. சுண்டாயம் - க்ருத்ரிமமும், லீலையும், ஸ்வார்த்தப்ரவ்ருத்தியும். கழல் - கழற்சோடி. (௧)

---

† *'நம்பி' என்றும் பாடமுண்டு.*

பின்னையும் அவனெழுந்தருளாதே நின்றவாறே, 'போனால், அவர்களைச் சந்திக்கைக்கு உபாயம் அறியாதே நிற்கிறாயோ? ஆகில், நல்லதோர் உபாயமுண்டு; அது என்னென்னில்? பசுக்களைக் கழியப்போகவிட்டு அவற்றை அழைக்கிறாயாய்* ஆய்ச்சியர்க்கேஊதும் அத்தீங்குழலைப் போயிருந்து ஊது' என்றுசொல்லுகிறாள்.

ஒ.—[போகுநம்பீ] - இப்பிராட்டி ''போகுநம்பீ'' என்று முதல் சொன்ன வார்த்தையைக்கேட்டு, அவனும் ''போவோம்'' என்று சிறிது கிட்டவர, ''உறவு உடையாரைப்போலே எங்களைத்தீண்டாதே கடக்கநில்லும்'' என்ன, தன்னைக்கிட்டவேண்டா என்றுஇவள்நிஷேதித்த நிஷேதவசனத்தைக்கேட்டு,கமர்பிளந்தவிடத்திலேஒருபாட்டம் மழைவிழுந்தாற்போலே இவனுக்குத் திருக்கண்களிலும் திருப்பவளத்திலும் பிறந்த புதுக்கணிப்பைக்கண்டு அவர்கள் ஈடுபட, அத்தைக்கண்டு''ஈடுபடா நின்றுவைத்து, என்னோடு உறவில்லை என்கிறபடி எங்ஙனே?'' என்றுஅவன் அருளிச்செய்ய, ''நாங்கள் உன் அழகைக்கண்டால்ஈடுபட்டுஸம்ஶ்லேஷிக்கும்உறவைஉடையவர்களல்லோம்; உன்னழகைக் கண்டு ஈடுபட்டு ஶிதிலைகளாய்ப்போகப் பிறந்தோமித்தனை'' என்று பராங்முகிகளாய் நிற்க, எம்பெருமானும் ''நீங்கள்ஆராலாகிறீர்; இதொரு மயிர்முடியிருந்தபடியென்?'' என்ன, ''போலியைக்கண்டு ப்ரமிக்கும்படி உன்னை இப்படிப் பிச்சேற்றும் மயிர்முடியை உடையராய் உனக்கு ஶத்ருசைகளாயிருக்கும் அவர்களோடேபோய் ஸம்ஶ்லேஷி'' என்ன, ''அவர்களைச் சந்திக்கவல்ல விரகுபெறுந்தனையும் இங்ஙனே யிருக்கிறோம்'' என்ன, ''நீ உனக்கு அபிமதைகளாயிருக்கிறவர்களை விஶ்லேஷித்து நோவுபட்டிராதே அவர்களோடே ஸம்ஶ்லேஷிக்கைக்கு உபாயஞ்சொல்லக்கேளாய்; 'அதென்?' என்னில், குழலை ஊதி அக்குழலோசைவழியே அவர்களையடைய மெய்க்காட்டுக்கொண்டு அவர்களோடே ஸம்ஶ்லேஷி'' என்ன, அவனும், ''பெண்களையொழிக்கைக்குக் குழலூதுகிறான்' என்பர்;அது ஈடன்று'' என்ன, ''நீ மேய்க்கிற பசுக்களைக்கடக்கவிட்டு அவற்றை அழைக்கிறாயாகப் பெண்களெல்லாம்வந்துதிரளுகைக்குநீர்வாய்ப்பான நிலங்களிலேபோய் இருந்து குழலூதி அவ்வழியாலே அவர்களையழைத்து அவர்களோடே ஸம்ஶ்லேஷி'' என்கிறாள்.

ப.—அநந்தரம், இவள், போகச்சொன்னவிடத்திலும் போகாதே இவளைப் பார்த்து மந்தஸ்மிதம் பண்ணினஅதிலே ஶிதிலசித்தையாய்; எங்களைநலியாதே, உன்னபிமதைகள் இருந்த பரிஸரத்திலேபோய் அவர்கள்வருகைக்கு ஈடாக இருந்து குழலை

நம்பீ - (எங்களையொழியக் குறைவாளன் அன்றியே) பூர்ணனான நீ, போகு - (''போ'' என்றுசொல்லப்போகாதிருக்கிறதென்? எங்கள் அருகினின்றும்)போ: உன் - இங்கேநின்று எங்களைப் பார்ப்பது முறுவலிப்பது ஆகிற உன்னுடைய, தாமரைபுரை - தாமரைபோலே ஊர்ஶநீயமான, கண்ணிணையும் - கண்களும், செம் - சிவந்த, வாய் - வாயிலே பரக்கிற, முறுவலும் - முறுவலும்(கண்டு உகக்கும்படி பாக்யம்பண்ணினவர்கள் அன்றியே), யாம் - நாங்கள் (நின்றநிலையைக்குலைத்து), ஆகுலங்கள் - அலமாப்புக்களை, செய்ய - பண்ண, அழிதற்கு - அழிந்துவிடுகைக்கு, நோற்றோமே - நோற்றே வைத்தவர்கள் அல்லோமோ, (உங்களை அழிக்கைக்கோ? நான்வந்தது, உங்கள் மயிர்முடி கண்டு உகந்தேன்அத்தனையன்றோவென்னில்;-அவர்கள் நாங்கள்அல்லோங்காண்), தோகை-தோகைவிரித்த,மா-நல்ல,மயிலார்கள் - மயில்போலே அலைந்த குழலைஉடையவர்கள், நின்-உன்னுடைய, அருள்-அருளை, சூடுவார் - சூடுமவர்களல்லவோ, (அவர்கள் அஸந்நிஹிதைக

என்றோ? என்னில்; - அவர்கள்), ஓசை - த்வநி, செவிவைத்து - கேட்டு, எழ-எழுந்திருந்துவரும்படியாக, ("அவர்களைக்குறித்துஊதுகிறான்" என்று நாட்டுக்குத்தெரியாதபடி), ஆகள்-பசுக்களை, போகவிட்டு-தூரத்திலேபோகவிட்டு, (அழைப்பாரைப்போலே), போய்-அங்கேபோய், இருந்து - இருந்து, குழல்-குழலை, ஊது-ஊது. "அதுவுமிங்கேயாகாதோ" என்றிராதேகொள்என்று கருத்து.

இ.—இரண்டாம்பாட்டில், "தந்துபோகு நம்பீ!" என்றாள்; அவனும் 'போவோம்'என்று கிட்டவரநின்றான்;ப்ரணயயாத்ரையில் வ்யவஹாரமும் ப்ரதிபத்தியும் வ்யுத்பத்திவேளையிற்போலன்றிறே இயலறியும் அவனாகையாலே, "'வார்த்தை சொல்லோம்' என்றிருந்தவள் வார்த்தைசொல்லக்கடவளாய் 'போ' என்றாளாகில், இனிச்செய்வதென்?" என்று வர நின்றான். [போகுநம்பீ] - என்கிறாள். நீர் பரபரப்பாய் முதலிகளாயிருப்புதிர்; உறவு உடையாரைப்போலே தீண்டாதேபோம், எத்தனைபேரைத் தீண்டினீரென்று அறியோம்: எங்கள்மேல் புடைவைபடாமே போம்; முற்பட "போகுநம்பீ" என்றவாறே வரநின்றான்; பின்பு "போகுநம்பீ" என்றவாறே தொட்டான். [உன் தாமரைபுரை கண்ணிணையும் செவ்வாய்முறுவலும்] - இவளுடைய அம்ருதோபமமான நிஷேதவசனம் கேட்டவாறே, ஒரு நீர்ச்சாவியிலே ஒருபாட்டம் மழைவிழுந்தாற்போலே அவயவங்கள் விக்ருதமாயிற்றின. "ஸஹோத்ராவஸ்த்ரஶ்ரூஷூ" என்றுகிட்ட உபேக்ஷிக்கக்கிடையாத ஸம்ஸாரத்திலே இவ்வளவு அவகாஹித்து ப்ரணயரோஷத்தாலே "போ" என்பாரைப்பெற்றால் விக்ருதனாகச் சொல்லவேணுமோ? [தாமரைபுரை கண்ணிணையும்] - விகாஸம், செவ்வி, குளிர்த்தி, பரிமளம் இவற்றை உடைத்தாகை. [செவ்வாய்முறுவலும்] - ஹர்ஷத்துக்குப் போக்குவிட்டு அயாத்தில் பழுப்பெறித்துத் தோற்ற ஸ்மிதம்பண்ணி நின்றநிலை. [ஆகுலங்கள்செய்ய வழிதற்கே நோற்றோமேயாம்] - இவளுடையநிஷேதவசனத்தாலேஅவனுக்குப்பிறந்தவிகாரம்இவர்களுக்கு ஈடுபடுகைக்கு உறுப்பாயிற்று. அவனுக்கு ஒன்றிரண்டு அவயவமாயிற்று விக்ருதமாயிற்று: இவர்களுக்கு ஸர்வாவயவங்களும் ஶிதிலமாயிற்று; அணு அழிக்குமாபோலன்றிறே விபு அழிக்குமது. "போகுநம்பீ" என்று உறவற்ற வார்த்தைக்கும், "அழிதற்கே நோற்றோமேயாம்" என்கிறவிதுக்கும் ஒருசேர்த்தி இல்லையீ! என்ன, [நோற்றோமேயாம்] - "உன்னழகைக்கண்டு ஈடுபட்டு ஸம்ஶ்லேஷிக்கும்உறவுஉடையவர்கள்அல்லோம் நாங்கள்: இங்ஙனே அழிந்து போம்படி பாபத்தைப்பண்ணினார் சிலர்காண்!பிரிவு கலவிக்குஉறுப்பாமவர்களன்று: ஆற்றாமையோடே முடிந்துபோவார் சிலர்காண்! "கர்த்ராவவிஸ்ய ஸாதேந காவிவெந்நெஷ்வராஜ்ஞா" என்னுமவர்களல்லோம்; "ஸுக்ருதம் ஸ்வஹிஜ்யதே" என்று முடிந்து போமவர்கள்" என்று தாங்களழிந்தபடி நேராக அவனறியாதபடி முகத்தைத் திரியவைத்து நின்றார்கள். அதுதான் அவன் பாக்யஃபலமாயிற்று; பெருக்காற்றை எதிர்செறிப்பாரைப்போலே கண்ணுங்கண்ணீரும் பேணாத வடிவும் கண்டால் இவன் ஆற்றமாட்டானே; "கிம் தவ நேத்ராஸ்யாம்" என்று-கண்டார்க்கு ஆற்றவொண்ணாதவிருப்பை இவன்தானே கண்டால் பாடாற்றவல்லனோ? [தோகைமாமயிலார்கள்] - "இதொருமயிர்முடி இருக்கும்படியே!" என்றான்; நீ போலி கண்டு ப்ரமிக்கும்படி மயிர்முடி உடையார்ஆரோ? "அங்ஙனே சிலருண்டோ?" என்ன, [நின்னருள்சூடுவார்] - உன்னோடே ஸம்ஶ்லேஷித்துப் பிரிவிலே இப்படி பிச்சேறும்படி பண்ணினவர்கள். "அவர்களைப் பிரிந்து நோவுபடாதே அவர்களோடே ஸம்ஶ்லேஷி"

என்ன, ''அவர்களைக்கிட்டுமளவும் இங்ஙனே இருக்கிறேன்'' என்று திகைத்திருந்தான்; '''அவர்களோடேகிட்டும் விரகென்?' என்றிருக்கிறாயாகில், அவர்களைக்கிட்டும் விரகு சொல்லுகிறேன், கேள்'' என்ன, ''அதேது?'' என்ன-[செவியோசை வைத்தெழ குழலூது] - '''எங்களுக்கே ஒருநாள்வந்து ஊத உன்குழல் இன்னிசை போதராதே' என்று குழலூதுகை என்ன, ''பெண்களோட்டைக் கலவி என்ன - பர்யாயம், அது ஈடன்று'' என்ன, அதுக்கு உபாயம் சொல்லுகிறோம்:- [ஆகள் போகவிட்டுக்குழலூது]- பசுக்களைக் கைகழியவிட்டுக் குழல் ஊது. கண்டார்க்குப்பசுமறிக்கக் குழலூதுகிறாயாய், அதுக்கு' ஸ்வாபதேசம் - பெண்களை அழைக்கையாக ஊது. ''செவியோசை வைத்தெழுகை ஃபலமாய், குழலூதுகை உபாயமாயிருந்தது; அதுதான் அபிமதவிஷயத்தைப்பற்றவன்றோ செய்வது; இங்கே இருந்து ஊதுகிறேன்'' என்று குழலைவாங்கி ஊதினான். [போயிருந்தே - குழலூது] - ஒன்றைச்சொல்ல ஒன்றைச்செய்கிறதென்? உனக்கு அபிமதைகள் திரளுகைக்கு நீர்வாய்ப்பான நிலங்களிலேபோயிருந்து ஊதாய்.

ஈடு ---இரண்டாம்பாட்டு. நோக்குப் பெறுதவன் முகம் பார்க்கப் பெற்றான்; வார்த்தை கேட்கப் பெறுதவன் 'போ' என்னவும் பெற்றான்; இனி இதுக்கு மேற்பட க்ருதார்த்தனாகை இல்லையிறே. ''போ என்றால் அவ்வார்த்தையே யன்றிறே இவன் புத்தி பண்ணுவது; அதில் அகவாயில் ஓடுகிறதும் அறியும் அவனிறே ''. '' இன்னம் என் கையகத்தீங்கு ஒருநாள் வருதியேல் என்சினம் தீர்வனானே '' என்று இதனை உய்ந்தபிள்ளை பாடாநிற்கச்செய்தே, காலாலே உதைப்பது கையாலே தள்ளுவதாய் அபிநயித்துக்காட்டினார்; இத்தை எம்பார் கேட்டருளி, ''அங்ஙனன்று: அதுபின்னைப் பெற்றானாகில் அவன் நெடுநாள் ப்ரார்த்தித்துக் கிடந்ததன்றோ; ஆனபின்பு, அதன்று பொருள்'' என்று முகத்தைத் திரிய வைத்துக் காட்டினார். ''நீயகலநின்று பண்ணினவை எல்லாம் உன்ஸந்நிதியிலே உன்னைப் பண்ணுவேன் என்கிறாள்'' என்று அருளிச் செய்தார். எம்பார் தாம் பாஹ்யவிஷயங்களில் ருசி இல்லாமையாலே பதார்த்தஜ்ஞானம் இன்றிக்கே இருப்பர்: இப்படி இருக்கையாலே '''ஸ்த்ரீகளுக்குஅஸாதாரணமான சிஹ்நங்களேங்ஙனேயிருக்கும்படி?' என்றுசிங்கப்பிரானைக்

இரண்டாம்பாட்டு - போதுநம்பீ இத்யாதி. இவர்களாலே திரஸ்க்ருதனாயிருக்க, ''தாமரை புரைகண்ணிணையும் செவ்வாய்முறுவலும்'' என்று ப்ரீதியால்வந்த நேத்ரவிகாஸமும் மந்தஸ்மிதமும் உண்டாகக் கூடுமோ? என்ன - நோக்குப்பெறுதவன் இத்யாதி. ஆனாலும் ''போகு'' என்று தள்ளாநிற்க, க்ருதார்த்ததைகூடுமோ? என்ன - போஎன்றால் இத்யாதி - திரஸ்காரமே க்ருதார்த்ததைக்கு ஹேது என்னுமதுக்கு ஸம்வாதம் - இன்னமென்கையகத்து இத்யாதி. அன்றிக்கே, நோக்குப் பெறுவிடில் அக்ருதார்த்தனாய் இருக்குமென்னுமதுக்கு ஸம்வாதமாதல். இன்னமென்கையகத்து இத்யாதிக்கு - நீ நியத ஸ்வபாவனல்லாமையாலே என்கையிலேயும் ஒருநாளகப்படக் கூடுமிறே. ஆனபின்பு இன்னமென்கையிலே இங்கொருநாள் வந்தகப்பட்டாயாகில் என் கோபம் தீருவன் நான் என்று பாவார்த்தம். பெருமாள்திருமொழி, ஆறாந்திருமொழி, எட்டாம்பாட்டு, ''என்னைவருக'' இத்யாதி. 'அதுபின்னைப்பெற்றானாகில்' என்றவிடத்திலே - ''ஸா [illegible] [illegible] । [illegible] [illegible]'' என்கிற ஶ்லோகம் அநுஸந்தேயம். கீழ்வாக்யத்துக்கு பாவம் - நீஅகலநின்று இத்யாதி. எம்பார்க்கு இவ்வர்த்தம் அறியக்கூடாதென்கைக்காக அவருடைய இதர விஷயவைராக்யத்தை அருளிச்செய்கிறார் - எம்பார்தாம் இத்யாதிவாக்யத்வயத்தாலே. இப்படி விரக்தராயிருக்கிறவர், ஶ்ருங்காரவிதக்தரிலுங்காட்டில் இத்திருவாய்மொழியில் ப்ரௌடராய் அரு

கேட்டருளினார்” என்று ப்ரஸித்தமாயிருக்கும்; இப்படி இருக்கிறவர்தாம் * மின்னிடை மடவார் அருளிச்செய்யப்புக்கால், “இந்த ஸந்யாஸி பிரட்டுப்பாடத்தொடங்கினார்” என்பராம்பிள்ளையுறங்காவில்லிதாசர். இவருடைய பகவத்விஷயத்தில் அவகாஹநம் இருக்கும்படி! ஒரு க்ஷேத்ரவிஷயத்திலே நாலுநாள் வாசனை பண்ணினார்கள் போரவிதக்தராய் இராநின்றார்கள், அவ்வளவு அல்லவிறே ஸமஸ்தகல்யாணகுணாத்மகனோடே நெடுநாள் வாசனை பண்ணினார்க்கு இருக்கும்படி. எம்பார் “(...

[போகுநம்பீ] - “போகுநம்பீ” என்று முன்பே சொல்லச்செய்தே, திரியவும் சொல்லும்போது ஒன்று இரண்டடி வரவிட்டுக் கிட்ட நின்றாகவேணுமிறே. வாரீர்! எத்தனைபேரைத் தீண்டிவந்தீரென்று தெரியாது; புடைவைபடாமே கடக்கநில்லும் என்றாள். “போ” என்ன வரநிற்கக்கடவன், “தீண்டாதேகொள்ளும்” என்றால் என்படுமோ? [நம்பீ] - எளியார் செய்வதை நீர் செய்யக்கடவீரோ? நீர் நிரபேக்ஷரன்றோ? [நம்பீ] - எங்கள்பக்கலில் இப்படி கால்தாழ்க்க நீரேதேனும் குறைவாளரோ? நாங்கள் வேண்டியிருந்ததோ உமக்கு?. “உயிரினாற் குறைவிலம்” என்று * ஏறாளுமிறையோனிலே, தம்மை அழிக்கப்பார்த்தார்; அது அவனுண்டாகையாலே அழிந்ததில்லை; * மாசறுசோதியிலே - அதுக்கடியான அவன்தன்னை அழிக்கப்பார்த்தார்; இங்கு - அவன்வரக்கொள்ள, “போ” என்னா நின்றார்; இதுக்கடி என்னென்று அறிகிறிலோம். இவர்கள் இப்படி [நம்பீ] என்று சொல்லி இருக்கையாவது - இக்கோஷ்டிக்கு அநர்ஹனாகையிறே; தாழ்ச்சியே மேன்மையாம் இடத்தில் முதன்மை கொண்டாடுகை போராதே. [உன்தாமரைபுரைகண்ணிணையும் செவ்வாய் முறுவலும்] - காணப்பெறாதே விடாய்த்து உறாவின கண்களும், கண்டு செவ்விபெற்றுக் குளிர்ந்தன; அகவாயில் ஹர்ஷத்துக்குப் போக்காக ஸ்மிதம் பண்ணவும் பெற்றான். இவர்

ளிச்செய்யும் வார்த்தைகளுக்கு ஹேது அருளிச்செய்கைக்கு உபோத்காதம் - இப்படியிருக்கிறவர்தாம் இத்யாதி. இதுக்கு ஹேதுவருளிச்செய்கிறார் - இவருடைய இத்யாதி. அவகாஹித்தால் தெரியுமோ? என்ன - ஒருக்ஷேத்ர இத்யாதி. ஆழ்வார் ப்ரணயரோஷத்தாலே ஊடி “போகு” என்கிற இத்தை அநுஸந்தித்த எம்பாருடைய ஈடுபாடு - எம்பார் வாவென்பாரையும் இத்யாதி.

முதல் “போகுநம்பீ” என்றவாறே வந்தான்: அவனைமீளவும் “போகுநம்பீ” என்றுசொல்லுகிறதுக்கு பாவம் - வாரீர் இத்யாதி. என்படுமோவென்றது - தீண்டிவிடுமென்றபடி. “நம்பீ” என்றதுக்கு - பூர்ணரென்றர்த்தம் அருளிச்செய்கிறார் - எளியார் இத்யாதிவாக்யத்வயத்தாலே; எளியார் - சப்பரர். * மின்னிடைமடவாரால் பூர்ணரென்றர்த்தாந்தரமாதல், கீழ்வாக்யவிவரணமாதல் - எங்கள்பக்கலில் இத்யாதி. இவர் ப்ராவண்யாதிஶயம் என்னென்று வ்யாக்யாதாவின் ஈடுபாடு - உயிரினால் இத்யாதி. இதுக்கடி என்னென்றறிகிறிலோம் என்றது - நெடுநாள்பட விஶ்லேஷிக்கையாலே ப்ரணயரோஷம் தலையெண்டையிட்டுச் சொல்லுகிற வார்த்தையன்றோ? என்றபடி. “கடியன் கொடியன்” என்றாற்போலே சொல்லாதே, “நம்பீ” என்கிற இது - கொண்டாட்டமாயிருக்க, உறவறச்சொல்லுகிற வார்த்தையோ? என்ன - இவர்கள்இப்படி இத்யாதி. இதுக்கு உபபத்தி - தாழ்ச்சியே இத்யாதி. விஶ்லேஷவேளையிலே இவன் கண் விகஸிதமாகைக்கு ஹேத்வந்தரம் - காணப்பெறாதே இத்யாதி. முந்தினஹேது - அவர்களுடைய நோக்குப் பெறாமையாலே உறாவிக்கிடந்தவன் அவர்கள் தன் முகம்பார்க்கப் பெறுகையாலே ஸந்தோஷித்தான் என்று; இத்தை அருளிச்செய்தார் - அவதாரிகையிலே. இவர்கள் ப்ரஸந்நராகாதேயிருக்க, ஹர்ஷம் பிறக்கும்படி என்? என்ன - இவர்

கள் நிஷேதவசனமாகிற அம்ருதபானத்தாலே அவனுக்குப்பிறந்த வேறுபாடு இருக்கிறபடி. "வா" என்பாரையும்கூடக் கிடையாத ஸம்ஸாரத்திலே "போ"என்பாரைக்கிடையாதிறே. ஒருப்ரயோஜநத்துக்காகவும் தன்னைவேண்டுவார் இன்றிக்கே இருக்கிறவிடத்தே, தன்னையே ப்ரயோஜநமாகப்பற்றி இப்படிப் படுவாரைக் கிடையாதிறே. [ஆகுலங்கள்செய்ய] - ஆகுலம்-பூசலும், வருத்தமும், துஃகமும். ஹேது இரண்டாயிருக்கச்செய்தே, ஸர்வகரணங்களும் அழியாநின்றது. அவனுக்கு ஒன்றிரண்டாயிற்று விக்ருதமாயிற்று; இவர்களுக்கு ஸர்வாவயவங்களும்விக்ருதமாயிற்று. அணுஅழிக்குமாபோலன்றிறேவிஹ்வஅழிப்பது. "வாரிகோள்! உங்களுக்கென்னோடு ஒன்றில்லை என்றுநின்றிகோள்: ஸாவபந்தம் உடையாரைப்போலே வார்த்தை சொல்லாநின்றிகோள்: வ்யாஹதமாயிருந்ததீ! 'போகுநம்பீ' என்று நின்றிகோள்: 'ஆதலங்கள்செய்ய' என்றுநின்றிகோள்: இதுக்கடியேன்?" என்றான். "வாராய்!நாங்கள்தாம் ஸாவபந்தமுண்டாய்ச் செய்கிறோம் என்றிருக்கிறாயோ?சந்த்ரதர்ஶநத்தில் சந்த்ரகாந்தம்உருகுகிறதுஎன்னஸாவபந்தமுண்டாய்? "அவஶ்யமநுபோக்தவ்யம்" (அவஶ்யமநுபோக்தவ்யம்) என்கிற விதியைத்தப்பவொண்ணுமோ?" [அழிதற்கேநோற்றோமேயாம்]-எங்களுக்கிது ப்ரக்ருதிகாண். இளையபெருமாள் காடேறப் போகாத அன்றன்றோ எங்களால் அழியா திருக்கலாவது? "ஸ்ருஷ்டஸ்த்வம் வநவாஸாய" * (ஸ்ருஷ்டஸ்த்வம் வநவாஸாய) இறே. நோன்பாகிறது - பூர்வஜந்மத்தில் உள்ளதிறே. இவர்கள் இப்படி சொன்னவாறே, "அவ்வழிவு ஸம்ஶ்லேஷார்த்தமிறே" என்று பார்த்து, அவன், "நம் தர்ஶநத்திலே இத்தனை வேறுபாடு உண்டான பின்பு மேலுள்ளதெல்லாம் செய்துகொள்ளிகோமோ!" என்றான்; அதுவோ உன்நினைவு! நாங்கள் அவர்களல்லோம் காண்! நாங்கள் இங்ஙனே அழிந்தேபோக நோற்றோம் காண்!

ப்ர.— அயோத்யாகாண்டே [௪0] "ஸ்ருஷ்டஸ்த்வம் வநவாஸாய ஸ்வநுரக்தஸ் ஸுஹ்ருஜ்ஜநே । ராமே ப்ரமாதம் மா கார்ஷீ: புத்ர ப்ராதரி கச்சதி । ரு ॥"

கள்நிஷேத இத்யாதி. வேறுபாடு - விக்ருதி. ஸிம்ஹாவலோகநந்யாயேந "போகுநம்பீ" என்றதைக்கடாக்ஷித்து ஸாவம் - வாவென்பாரையும் இத்யாதி. அதுவா, நிஷேதவசநத்தாலே விகாரம் வரக்கூடுமோ? என்ன - வாவென்பாரையும் இத்யாதி என்னுதல். விவரணம் - ஒருப்ரயோஜநத்துக்கு இத்யாதி. "ஆகுலங்கள்" என்கிற பஹுவசநார்த்தம் - ஹேதுவிரண்டாய்இத்யாதி. ஹேது இரண்டு என்றது - கண்ணும் செவ்வாயும். ஆகுலம் - விகாரம். விவரணம் - அவனுக்கு இத்யாதி. இதுக்குஹேதுவேதென்ன - அணு இத்யாதி. கீழெல்லாம்கடாக்ஷித்து மேலுக்கு ஸங்கதி - வாரிகோள் இத்யாதி. கீழுக்தத்தை விசதீகரிக்கிறார் - போகுநம்பீ இத்யாதி. "அழிதற்கே" என்றதிலே நோக்காக ப்ரத்யுத்தரம் - வாராய் இத்யாதி. பாவபந்தமின்றிக்கே ஒழிய உருகக் கூடுமோவென்ன, கூடுமென்னுமதுக்கு த்ருஷ்டாந்தம் - சந்த்ரதர்ஶநத்தில் இத்யாதி. ஆனால் இது வருவானென்? என்ன - அவஶ்யம் இத்யாதி. "அவஶ்யமநுபோக்தவ்யம் க்ருதம் கர்ம ஶுபாஶுபம் । நாபுக்தம் க்ஷீயதே கர்ம கல்பகோடிஶதைரபி" "அழிதற்கேநோற்றோமே" என்கிற அவதாரணத்துக்கு அர்த்தம் - எங்களுக்கிது ப்ரக்ருதிகாண் என்று. இதுக்கு த்ருஷ்டாந்தம் - இளையபெருமாள் இத்யாதி. அவர் காடேறப்போனதுக்கு ப்ரமாணம் - ஸ்ருஷ்டஸ்த்வம் இத்யாதி. "அவஶ்யமநுபோக்தவ்யம்" என்கிறவாக்யவிவரணம் - நோன்பாகிறது இத்யாதி. "அழிதற்கே" என்கிற அவதாரணத்திலே நோக்காக சங்கித்து பரிஹரிக்கிறார் - இவர்கள்இப்படி இத்யாதி. மேலுள்ளதெல்லாம் இத்யாதிக்கு கருத்து - காண ஸைதில்ய ஜநக கர்மம் தானே

[யாம்] - உன்னைப்பிரிந்தால் கலக்கைக்கு நோற்றார் வேறேசிலர் காணேன்கிறாள். நெடும் போது இவர்கள்பேச்சுக்கேட்கையால் உண்டான ஹர்ஷந்தோற்றப் பார்த்துக்கொடு நின்றான்: "நம் தர்ஶநம் இவனுக்குஆஶ்வாஸஹேதுவாய் இருந்தது" என்று, முகத்தைமாறிப் பின்னோக்கி இருந்தாள்; அவ்வளவில் அவன் நெஞ்சிலே மயிர்பாடு உண்டாயிற்று. [தோகை மாமயிலார்கள்]- "நம்வைவர்ண்யமும் கண்ணீரும் இவன் காண்பானல்லன்: தைவயோகத்தால் காணுமவற்றை நம்மால் செய்யலாவதில்லை யிறே" என்றுத் திரிய இருந்தாள்; அதுதானே இவனுக்குக் கார்யமாயிற்று. † (பெருக்காற்றை எதிர்செறிப்பாரைப் போலே, கண்ணுங்கண்ணீரும், பேணுதவடிவுங்கண்டால் அவன் ஆற்றமாட்டானே.) முறுவலுக்கும் கண்ணுக்கும் இலக்காய் அழிந்து போகாதே, திரியவிருந்ததும் நின்றுஅநுஹவிக்கைக்குஉடலாயிற்று. "நங்கார்யம் தலையாகப்போயிற்று" என்று இருக்கிறானிறே அவன். "**ஊருப்யாமுதரம்சாத்யபாஹுப்யாஞ்சபயோதரௌ**"(ஊருப்யாமுதரம்சாத்யபாஹுப்யாஞ்சபயோதரௌ) என்றுகொண்டு 'அவனுடைமை ஆசுரப்ரக்ருதிகள் காணவொண்ணாது' என்று மறைக்கக் கடவ அவள், "இவன்தான்காணவொண்ணாது" என்று மறைக்கும்படி காணும், ப்ரணயகோபம் தலைமண்டை இட்டபடி. [தோகைமாமயிலார்கள்] - "**நீலநாகாபயாவேண்யா**" (நீலநாகாபயாவேண்யா) என்று, பேணுத குழலிருக்கிற

ப்ர.—[தோகைமாமயிலார்கள்]—ஸுந்தரகாண்டே [௧௯] "ததோ த்ருஷ்ட்வா ஸ வைவர்ண்யம் ராக்ஷஸாதிபம் | ப்ராவேபத வராரோஹா ப்ரவாதே கதலீ யதா ||௨|| ஊருப்யாமுதரம் சாத்ய பாஹுப்யாஞ்ச பயோதரௌ | உபவிஷ்டா விசாலாக்ஷீ ருதந்தீ வரவர்ணிநீ || ௩ || தசக்ரீவஸ்து வைதேஹீம் ரக்ஷிதாம் ராக்ஷஸீகணை: | ததர்ச தீநாம் து:கார்தாம் நாவம் ஸந்நாமிவார்ணவே || ௪ ||

ஸம்ஶ்லேஷத்தை உண்டாக்காதோ? என்ற. "யாம்" என்றதுக்கு வ்யாவர்த்யம் - உன்னைப்பிரிந்தால் இத்யாதி. முகம்மாற வைத்ததுக்கு இரண்டு ஹேது - "தாமரைபுரைகண்ணிணையும் செவ்வாய்முறுவலும்" என்றத்தைக்கடாக்ஷித்து ப்ரதமஹேது - நம்தர்ஶநம் இத்யாதி. மயிர்பாடு - மயிரின் வைலக்ஷண்யம். "ஆகுலங்கள்செய்யவழிதற்கே நோற்றோமேயாம்" என்றத்தைக் கடாக்ஷித்து, பின்னோக்கியிருந்ததுக்கு த்விதீயஹேது - நம் வைவர்ண்யமும் இத்யாதி. பின்னோக்கியிருந்தாலும் போக்யமான மயிர்முடி காண்பனே என்ன - தைவயோகத்தால் இத்யாதி. திரியவிருந்தாள் - திரும்பி யிருந்தாள். கார்யமானபடியைக் காட்டுகிறார் - முறுவலுக்கும் இத்யாதி. அதாவது - இவனுடைய முறுவலுக்கும் கண்ணுக்கும் இலக்காய் இவன் அழியாதே தரித்துநின்று மயிர்முடியை அநுஹவிக்கைக்கு உடலாயிற்று என்னுதல். "ஆகுலங்கள்" என்ற விக்ருதியிலே இவர்களுக்கும் கண்ணீரும் முறுவலும் உண்டென்று ஸித்தம். ரஸோக்தி - நங்கார்யம் இத்யாதி. இவர்கள்அவனுக்கு போக்யமான அவயவங்களை மறைக்கலாமோ? என்ன - ஊருப்யாம் இத்யாதி. அன்றிக்கே, வ்யாக்யாதாவின் ஈடுபாடாதல். ஊருப்யாமுதரஞ்சாஸ்யபாஹுப்யாஞ்ச பயோதரௌ | உபவிஷ்டா விசாலாக்ஷீ ருதந்தீ வரவர்ணிநீ" இதி ஸுந்தரகாண்டே. "நீலநாகாபயாவேண்யா ஜகநம் கதயைகயா | நீலயா நீரதாபாயே வநராஜ்யா மஹீமிவ" இதி ஸுந்தரகாண்டே. 'ஆனார் ஆகிடுக' என்றது - ஸ்நேஹிகளாகவுமாம், தத்ரஹிதராகவுமாமென்னுதல்; முன்னோக்கியிருந்தாலுமாம், பின்னோக்கியிருந்தாலுமாம், நமக்கு அதுகொண்டு

படியைக் கண்டான்; "நீங்கள்முன்னமானுராகிடுக: இதொருமயிர்முடி இருந்தபடி என் தான்!" என்ருன். இவள்தான் ஓதிநல்லளாயிருக்குமே; இவன் கூழை ஆகையாலே கோண்டாடுமே. *குழல் கூழை ஓதி இறே. †(குழலென்றும் கூழையென்றும்,ஓதியென்றும் மயிர்முடி இறே.) எங்கள் மயிர்முடியைக்கண்டு தந்தாம் மயிர்முடிஎன்று ப்ரமிக்கும்படிபண்ணுவதே அவர்கள் சிலர்! அபிமதவிஷயத்தைப் பிரிந்தால் கண்டதெல்லாம் அதுவாய்த்தோற்றுமிறே என்ருர்கள். தோகைவிரித்த நல்லமயில்போலே அலைந்தகுழலை உடையவர்கள். "அங்ஙனே சிலருண்டோ?" என்ருன். [நின்னருள்சூடுவார்] - உன்ஞேடு ஸம்ஶ்லேஷித்துப் பிரிவிலே இப்படிப் பிச்சேறும்படிப் பண்ணினவர்கள். அவர்களைப்பிரிந்து நோவுபடாதே அவர்களோடே ஸம்ஶ்லேஷி. "ஆனாலதுக்கேன்? அவர்களைப்பெறுகைக்கு ஒருவிரகு பெறுந்தனையும் நான் இங்ஙனே சற்றுப்போது இருந்துபோகிறேன்" என்ருன்; உனக்கு இங்ஙன் விரகற்றுப் போகவேண்டுமோ? நீ கைகண்டத்தை ப்ரயோகி; "அதேது?" என்ன [செவியோசைவைத்தெழக் குழலூது] - "எங்களுக்கே ஒருநாள் வந்தூத உன்குழலின்னிசைபோதராதே" என்று இருக்குமவர்கள்; நீகுழலூதினுல் அதுசென்று செவிப்படும்: அநந்தரத்தே வருவர்கள் காண். ஸர்ப்பயாகத்தில் ஸர்ப்பங்கள் வந்துவிழுமாபோலே, நீ குழலூதவே பெண்களடங்கலும் உன்காற்கீழேவந்துவிழுங்காண்! "குழலோசைகேட்பதுஎப்போது?" என்று செவிகொடுத்துக்காண் அவர்களிருப்பது; உன்னைப்பிரிந்தார் ஸர்வகரணங்களும் உன்மேலே வைத்திருப்பார்கள்காண். "தூவலம்புரியுடையதிருமால் தூயவாயில் குழலோசைவழியே கோவலர்சிறுமியர் இளங்கோங்கை குதுகலிப்ப உடலுள்அவிழ்ந்தெங்கும் காவலும்கடந்து

காரியமில்லை என்னுதல். அவனிப்படி கொண்டாடுகைக்கு அடி - இவள் குழலில் வைலக்ஷண்யம் என்னுமத்தை ரஸோக்தியாக அருளிச்செய்கிருர் - இவள்தான் இத்யாதி. ஓதிஎன்று - குழலும், அத்யயநமும். இப்படி விலக்ஷணையான இவளுடைய வைலக்ஷண்யத்தை நன்ருக அறியும் அவனுகையாலே கொண்டாடினுன் என்னுமத்தை ரஸோக்தியாகக் காட்டுகிருர் - இவன்கூழை இத்யாதி. கூழைஎன்று - மயிரில் வைலக்ஷண்யம் அறிந்தவனும், சபலனும். இச்ஶப்தத்வயமும் - கேஶவாசி என்கிறதுக்கு நிகண்டு - 'குழல்கூழையோதியிறே' என்று. அவர்கள் வைலக்ஷண்யத்தால் அன்றிக்கே, இவன் ப்ராவண்யத்தாலும் ப்ரமிக்கிருன் என்று ஹேத்வந்தரம் - அபிமத இத்யாதி. தோகையுடைத்தாய் ஶ்லாக்யமான மயில்போலேஇருக்கிற அலகபாரத்தை உடையவர்களென்று ஶப்தார்த்தம். தோகை - பிஞ்சம். கீழ்வாக்யத்துக்கு பலிதம் - அவர்களைப்பிரிந்து இத்யாதி. கைகண்டது - அநுபூதமானது. கையிலேயிருந்த குழலென்று சாடு. நான்குழலூதினுல், அந்யபரைகளானவர்களுக்கு இது செவிப்படுமோ? என்ன - எங்களுக்கே இத்யாதி. இதுக்கர்த்தம் - நீ ஸர்வஸாதாரணனை பின்பு உன்குழலும் ஸர்வஸாதாரணமாயிருக்க, எங்களுக்கே ஒரோவிடங்களிலே ஒருநாள் நாங்கள் கேட்க வந்தூதவேணுமென்ருல் நீ யூதிலும் இசை புறப்படாதபடி ஆயிற்று குழலின் ஸ்வபாவம் என்று. விவரணம் - ஸர்ப்பயாகத்தில் இத்யாதி. ஸர்ப்பயாகம்பண்ணினவன் - ஜநமேஜயன். "எங்களுக்கேயொருநாள்" இத்யாதிவாக்ய விவரணம் - குழலோசைகேட்பது இத்யாதி. அதுக்கடி - அவர்களுக்கு உன்விஷயத்தில் உண்டான ப்ராவண்யம் என்கிருர்கள் - உன்னைப்பிரிந்தார் இத்யாதி. குழலோசையிலே ஈடுபட்டு அவர்கள் வருவர் என்றதுக்கு ப்ரமாணம் - தூவலம்புரி இத்யாதி. 'தூவலம்புரிஉடைய திருமால்'-நினைவறிந்து கார்யம்செய்யவல்ல சுத்தியையுடைத்தான வலம்புரியையுடைய ஶ்ரிய:பதியானவனுடைய. 'தூயவாயில்குழலோசைவழியே' - தன் உக்தி விசேஷங்களாலே அநுகூலரை வாழப்பண்ணும் சுத்தியையுடைய திருப்பவளத்திலே வைத்தூதுகிற திருக்குழலோசை வழியே. 'கோவலர்சிறுமியர்'-கோ ரக்ஷணத்தில் ஸமர்த்தரானவர்களுடைய சிறுப்பெண்கள். 'இளங்கொங்கை குதுகுலிப்ப'-பரிணதமான முலைகளானவை தங்களைப் பிற்பாடராக்கி "நாங்கள் முன்னே போகிறோம்" என்று கௌதூஹலம்பண்ண. 'உடலுளவிழ்ந்து'-ஶரீரமும் மநஸ்ஸும் கட்டுக்குலைந்து.

கயிறுமாலையாகிவந்து கவிழ்ந்துநின்றனர்'' என்று நீ குழலூதப்புக்கால் நிற்பாருண்டோ? உன் காற்கீழேவந்து விழுவர்காண்! அத்தைச்செய் என்றாள். ''அதெனக்கொரு விரகன்று; 'கொங்கு நறுங்குழலார்களோடு குழைந்து குழல்இனிதூதிவந்தாய்' என்று ஒத்த தரத்தில் பெண்களுந்தானும் கலக்கைக்காக அவர்களை அழைத்துக் குழலூதாநின்றான் என்பர்கள்; நான் குழலூதுகை பெண்களையழைக்கையென்று ப்ரசித்தம்; அதெனக்கீடன்று'' என்றான்; ஆகில் உனக்கொரு நல்விரகுசொல்லக்கேள்: [ஆகள்போகவிட்டு] - பசுக்களைக்கைகழிய விடுவது, அநந்தரத்தே குழலையூதுவதா? ''அறியாதார் பசுக்களை மறிக்கவூதினானென்றிருப்பர்கள்; அதறிந்துபோரும் பெண்கள் உன்பக்கலிலே வந்துகிட்டுவர்கள். இதுதான் உனக்கு ஜாத்யுசிதவ்ருத்தியுமிறே. * தீங்குழலூதிற்றும் நிரைமேய்த்ததுமிறே. ஆனபின்பு அத்தைச்செய்'' என்றாள். ''அநுஷ்டேயமான உபாயஸ்வரூபம் இருக்கும்படி அறிந்தோம்: அநுஷ்டாநப்ரகாரத்துக்கூடான உபதேசம்பெற்றோம்; இனி உபேயாம்சத்தில் கைப்படாதது இல்லை; இனி நமக்கொருகுறையில்லை'' என்று பார்த்து, அவ்விடந்தன்னிலே இருந்து ஊதப்புக்கான். இனித்தான் வித்யதிக்ரமம் பண்ணும்அவனன்றே; ''தோகைமாமயிலார்கள் - செவியோசைவைத்தெழ'' என்றிறே இவர்கள்சொல்லிற்று; ''இன்னவிடத்தே'' என்றுசொல்லிற்றிலர்களே! இங்கே இருந்துஊதத்தொடங்கினான். ''அதுவோ பார்த்தபடி; நீ துடியாமைக்குஒருவிரகுசொன்னோமாகில் அத்தை இங்கே கொள்ளப் பார்த்தாயோ?'' [குழலூதுபோயிருந்தே] - உனக்குப் பெண்கள் படும் வாய்ப்புள்ள இடங்களிலேபோயிருந்துஊதப் பாராய்! [தோகைமாமயிலார்கள்]-இவன் ஓதியுணர்ந்தவனாகையாலே கொண்டாடத் தொடங்கினான்; ''இவன் ஓதியுணராமலிறே நங்குழலை இப்படிக் கொண்டாடுகிறது'' என்று, ''இது ப்ராமகவாக்யம்'' என்று அவர்கள் அந்யதாகரிக்கிறார்கள். தலையானபேச்சையிறே இவர்கள் அந்யதாகரிக்கிறது. [செவியோசைவைத்தெழ] - குழலோசையைச் செவியிலே வைத்துக்கொண்டெழ. [ஆகள் போகவிட்டுக் குழலூது] -

---

எங்குங்காவலுங்கடந்து-எங்குமுண்டான காவல்களை யெல்லாம் கடந்து. கயிறுமாலையாகி வந்து - கயிற்றிலே ஒழுங்குபடச் சேர்த்த மாலைகள்போலே நிரைநிரையாகவந்து. கவிழ்ந்துநின்றனர் - இவனைக் கண்டவாறே லஜ்ஜித்துக் கவிழ்தலையிட்டுநின்றார்களென்கை. பெரியாழ்வார்திருமொழி, மூன்றாம் பத்து, ஆறாந்திருமொழி, முதற்பாட்டு, ''நாவலம்'' இத்யாதி. ப்ரக்ருதோப ஸம்ஹாரம்-நீ குழலூத இத்யாதி. ''ஆகள்போகவிட்டு'' என்றதுக்கு அவதாரிகை - அதெனக்கு இத்யாதி. ''குழல் இனிதூதி - கொங்குநறுங்குழலார்களோடு குழைந்து - வந்தாய்'' என்றந்வயம். இனிதாகக்குழலூதி, பரிமளத்தையும் அழகையுமுடைய குழலையுடையவர்களோடே ஒருநீராகக் கலந்துவந்தாய் இத்யர்த்தஃ. கொங்கு - பரிமளம். நறு - அழகு. பெருமாள்திருமொழி, ஆறாந்திருமொழி, ஒன்பதாம்பாட்டு, ''மங்கலநல்'' இத்யாதி. இதுக்குபாவம் - ஒத்ததரத்தில் இத்யாதி. இதுக்காகப் பசுக்களை மேய்த்துக் கொண்டு திரியவோ? என்ன - இதுதானுனக்கு இத்யாதி. ஜாத்யுசிதவ்ருத்தியென்னுமதுக்குப் ப்ரமாணம் - தீங்குழல் இத்யாதி. 'அநுஷ்டேயமான' என்றுதொடங்கி, 'இங்கே கொள்ளப் பார்த்தாயோ' என்னுமளவும் - ''போயிருந்து'' என்றதுக்கு அவதாரிகை. உபாயஸ்வரூபம் - குழலூதுகை. அநுஷ்டாநப்ரகாரம் - ஆகள்போகவிடுகை. அநுஷ்டாநம் - உபாயத்தைச்செய்கை. இவர்கள்சொன்ன மாத்ரத்திலே ஊதவேணுமோ என்ன - இனித்தான் வித்யதிக்ரமம் இத்யாதி. வாய்ப்பு - ஸித்தி. புநஶ்ச, ஒரு ஸ்ரீவைஷ்ணவர் எழுந்தருள அவருக்காகவாதல், ரஸோக்திக்காகவாதல் பதோபாதாநம் - தோகைமாமயிலார்கள் இத்யாதி. ஓதியுணர்ந்தவன் - மயிரில்வைலக்ஷண்யம் அறிந்தவன், அதீத்ய ஜ்ஞாநவான் என்றும்; ஓதியுணராமல் - எங்கள்குழலென்று அறியாமலென்றும், அத்யயநம்பண்ணி அறியாமலென்றும் அர்த்தத்வயம். ப்ராமகவாக்யம் என்றது - ப்ராந்தவாக்யம் என்றபடி. தலையான என்றது - சாடு; ஶ்லாக்யமான என்றும், தலைவிஷயமான என்றும். குழலூதினால், பசுக்கள் மேய்கை

பசுக்களைப்போகவிட்டுக்குழலூது. ஊதவே, உன்நினைவும் முடிந்து பசுக்களின் வயிறும் நிறையும். "செவியோசை வைத்தெழுகை லலமாய், குழலூதுகை உபாயமா யிருந்தது; அதுதான் அபிமதவிஷயத்தைப்பற்றியன்றே செய்வது; இங்கே இருந்துஊதுகிறேன்" என்று குழலைவாங்கி ஊதினன். [போயிருந்தே - குழலூது] - ஒன்றைச் சொல்ல, ஒன்றைச்செய்யாதே; உனக்கபிமதைகள் திரளுகைக்கு நீர்வாய்ப்புள்ள நிலங்களிலே போயிருந்துஊதாய். (உ)

மூன்றும் பாட்டு.

போயிருந்துநின்புள்ளுவம் அறியாதவர்க்குஉரைநம்பீ! நின்செய்ய
வாயிருங்கனியுங்கண்களும் விபரீதம்இந்நாள்
வேயிருந்தடந்தோளினார் இத்திருவருள்பெறுவார்யவர்கொல்?
மாயிருங்கடலைக்கடைந்த பெருமானாலே.

ஆ.—(போயிருந்து.)—இப்படிஇவன், மேன்மேலென இவளுடைய அம்ருதோபமமான வார்த்தைகளைக் கேட்டதினாலே வந்த நிரவத்யகப்ரீதியாலே அத்யத்புத நிரவத்யக ஸௌந்தர்யமயமான திருப்பவளத்தையும் திருக்கண்களையுமுடையனாய்க் கொண்டு விநீதனாய் அருளிச்செய்ய;

இவற்றையெல்லாம் உன்னுடைய க்ருத்ரிமம் அறியாதார்க்குப் போயிருந்து சொல்லென்று அவனை உபாலம்பித்துவைத்து; உன்னுடைய திருக்கண்களினுடையவும் திருப்பவளத்தினுடையவும் அழகுஇருந்தபடியென்? கண்டுங்கேட்டும் அறியாததொருபடியான இவ்வழகு, திருப்பாற்கடலிலே அம்ருத மதந ஸமயத்திலே அவதீர்ணையாய் அம்ருத ஸ்ரீகாராலங்க்ருதையாய் ஸௌந்தர்ய ஸௌகந்த்ய ஸௌகுமார்ய லாவண்ய யௌவநாத்யபரிமிதோதார குணபரிபூர்ணையாய் ஸர்வ திவ்யபூஷண பூஷிதையாய் ஸர்வேஶ்வரேஶ்வரியான பெரியபிராட்டியோடு அன்றுகலந்த கலவியாலும் பிறந்ததில்லை; இப்படி பெரியபிராட்டியிற்காட்டிலும் உனக்கபிமதைகளாய் உன்னை புஜிக்கப்பிறந்தவர்களாரோ? என்கிறாள்.

ஒ.—[போயிருந்து] - "'குழலூது போய்' என்று என்னைச் சொல்லுவானென்? நான் ஜாத்யுசிதமான வ்ருத்தியாகையாலே குழல் ஊதுகிறேனித்தனைபோக்கி, வேறு சிலரை அழைக்கைக்காகவோ குழல் ஊதுவது? நான் உன்னையல்லது அறிவேனோ?" என்று அருளிச்செய்ய; "உன்னுடையபொய் அறியும் எங்கள்பக்கல் விலை செல்லாது. உன்பொய்யில் புதியதுஉண்டறியாத அபூர்வைகள் கோஷ்டியிலேபோய் இருந்து சொல்லு" என்று பிராட்டி உபாலம்பிக்க, தன்னைக்குறித்து இவள் மேன்மேலெனசொல்லுகிற அம்ருதோபமமான வார்த்தைகளைக் கேட்டதினாலே பிறந்த நிரவத்யக

தவிர்ந்து வருமிறே; வந்தால் அவற்றுக்குப் பட்டினி யாகாதோ என்ன-ஊதவே உன் நினைவும் இத்யாதி. உன்னினைவு முடிந்தென்றது - உன்னினைவுதலைக்கட்டி என்றபடி. நினைவுதலைக்கட்டுகை யாவது - அபிமதைகளான பெண்களும்வருகை. "அநுஷ்டேயமான" இத்யாதி வாக்யவிவரணம் செவியோசை வைத்தெழுகை இத்யாதி. (உ)

ஹர்ஷப்ரகர்ஷத்தாலே அத்யாஸ்சர்யமாம்படி திருக்கண்களிலும் திருப்பவளத்திலும் பிறந்த அழகைக்கண்டு, "எங்களை யாராகக் கருதி இப்படி ஹ்ருஷ்டனுகிறுய்?" என்ன, "நீங்கள் ஆரானுல் ஆகிறீர்; இது ஒருதோளழகு இருந்தபடி என்?" என்ன, அல்பஸா த்ருஸ்யத்தைக்கண்டு இவன் இப்படி ப்ரமிக்கும்படியான தோளழகு உடையராய் அம்ருதமதந ஸமயத்தில் பெரிய பிராட்டியாரோடு ஸம்ஸ்லேஷித்தபோதும் பிறவாத பௌஷ்கல்யத்தை இவனுக்குப் பிறப்பித்து இப்படி இவனுக்கு ஸ்ப்ருஹணீயதமைகளாய் இருக்கிறவர்கள் ஆரோ? என்கிறுள். அம்ருத மதநத்தில் தன்கையில் கடல்பட்டத்தை இவன்தன்னைப் படுத்தினவர்கள் ஆரோ? என்றுமாம்.

ப.—அநந்தரம், "போயிருந்து - குழலூது" என்றவாறே புகுரவிருந்து சில உபச்சந்தநவாக்யங்களைச் சொல்லி, போகச்சொல்லுகிறபோதை ஹஸ்தசேஷ்டையைக்கொண்டாட; அக்ஷோப்யமான கடலையும் க்ஷுபிதமாம்படி பண்ணின உன்னை இப்படி ப்ரமிக்கும்படி தங்கள்தோள்களாலே கலக்கினுர் ஆரோ? என்கிறுள்.

(வேறேசிலரும் உண்டாய் அங்கேபோயிருக்கவும் சொல்லுகிறதென்? உங்களையொழிய ஆருண்டு எனக்கு? இருப்பிடமும் உங்கள் ஸந்நிதியல்லவோ? என்ன; ஆஸந்நமாகப் புகுந்திருக்கிற இவ்விருப்பைத் தவிர்ந்து), நம்பீ - ("கள்வம்பொதிமறை" என்னும்படி களவால்) பூர்ணனுன நீ, போய் - (எங்கள் பரிஸரத்தில் நின்றும்) போய், இருந்து - (உன்னபிமதைகள் பரிஸரத்திலே) இருந்து, நின் - உன்னுடைய, புள்ளுவம் - களவு, அறியாதவர்க்கு - அறியாதார்க்கு, உரை - (இந்தக் கள்ளவார்த்தைகளைச்) சொல்லு; (எங்களளவில்) நின் - உன்னுடைய, செய்ய - சிவந்த, வாய் - அபரமாகிற, இரு - ஸ்லாக்யமான, கனியும் - கனியும், கண்களும் - (பிறரையழிக்கைபே ஸ்வபாவமாயிருக்கும்) கண்களும், (முன்புபோலே ஹ்ருத்யமாயிருக்கையன்றியே), இந்நாள் - இப்போது, விபரீதம் - பாதகமாயிராநின்றன. (இவ்வளவில் உன்னுடைய நிஷேதார்த்தமான எங்களுடைய ஹஸ்தசேஷ்டையைக் கொண்டாடாதே; நீ கொண்டாடும் தோளழகை உடையவர்களல்லோம் நாங்கள்); மா - அகாதமாய், இரு - விஸ்தீர்ணமான, கடலை - கடலை, கடைந்த - கடைந்த, பெருமானுலே - அதிஸயிதசக்தியான இவன்தன்னுலே, இத் திருவருள் - நெஞ்சு கலங்கி வாய்விட்டுக்கொண்டாடும்படியான அருளை, பெறுவார் - பெற்றிருப்பாராய், (அதுக்கடியான), வேய் - வேய்போலே, இரு - சுற்றுடைத்தாய், தட - நெடிதான, தோளினுர் - தோளையுடையவர்கள், யவர்கொல் - ஆர்?— அவர்களைக்கண்டேனுகில், உன்னேபாதி நானும் கொண்டாடலாயிற்றேயென்று ப்ரணயரோஷத்தாலே வினவினுள் என்று கருத்து.

இ.—மூன்றும்பாட்டில், "'குழலூது போயிருந்து' என்று என்னைச் சொல்லுகிறது என்? சிலரை அழைக்கைக்காகவோ குழல் ஊதுவது? ப்ராஹ்மணர்க்கு ஸந்த்யாவந்தநம்போலே ஜாத்யுசிதவ்ருத்தியன்றோ?" என்ன, "இவ்வஸங்கத பாஷணங்களை இங்கே இருந்து சொல்லாதே, போ" என்கிறுள்:—[போயிருந்து நின்புள்ளுவம் அறியாதவர்க்குஉரை] - உன்பொய்யிலே பழகின எங்கள்பக்கல் உன்பொய் விலைசெல்லாது; இங்கு நின்றும்போய், உன்பொய் அறியாதவர்கள் கோஷ்டியிலே இருந்து சொல்லு. நினைவுஒன்றும் சொலவு ஒன்றுமான உன்னைஅறியாதே ப்ரமிக்கைக்கு பஞ்சலக்ஷங்குடியிற் பெண்களுண்டே! [நம்பீ] - "நமக்கு அங்ஙனே சிலருண்டோ? நான்

உன்னை ஒழிய அறிவேனோ?" என்ன, "உமக்கு அநேகர் அன்றோ? பூர்ணர் அல்லீரோ?" என்ன; தன்னைக்குறித்து இவள்சொல்லுகிற அம்ருதோபமமான வார்த்தையைக்கேட்டு விக்ருதனானான். [நின்செய்யவாயிருங்கனியுங் கண்களும் விபரீதமிந்நாள்] - பக்வபலம் போலே போக்யமாய்ச் சிவந்த அதரத்தையும், ப்ரேமத்தாலே குதறிச்சிவந்த திருக்கண்களையும் கொண்டு, என்னை யாராகப்ரமித்து ஹ்ருஷ்டனாகிறாய்? "உன்புள்ளுவம் அறியாதவர்க்குஉரை" என்ற ப்ரஸங்கத்திலே, நீ இப்படிபடும்படி யிருப்பதே சிலர்! [விபரீதமிந்நாள்] - "நாங்கள் முன்பு ஒருநாளும் இச்செவ்வி கண்டறியோமீ!" என்ன;

"அவைகிடக்க, இதொருதோளழகு இருந்தபடிஎன்!" என்றான். [வேயிருந் தடந்தோளினார்] - "பசுமைக்கும் செவ்வைக்கும் மூங்கில்போலேயாய் நீண்டு சுற்றுடைத்தாய் உன்னை இப்படி ப்ரமிக்கும்படிபண்ணின தோளழகை உடையார் ஆரோ?" என்ன, "எனக்கு அப்படி இருப்பார்ஆர்?" என்ன; [இத்திருவருள் பெறுவார்] - ஸ்வதஸ்ஸர்வஜ்ஞனான உனக்கு அந்யதாஜ்ஞாநம் பிறக்கும்படி பண்ணினவர்கள். செய்யவாயிருங்கனியுமென்கிறவிடம் - அவன்பக்கல் இவர்களுக்குண்டான பாவபந்தம் சொல்லுகிறது. வேயிருந்தடந்தோளினார் என்கிறவிடம்அவனுக்குஇவர்கள்பக்கலுண்டான பாவபந்தம்சொல்லுகிறது. [யவர்கொல்]-உனக்கு இப்படி ஸ்ப்ருஹணீயதமைகளாயிருக்கும்வர்கள் ஆரோ? இவன்பக்கல் ப்ரணயரோஷத்தாலே சொல்லுகிறார்கள்; தன்னைப் போக்கி இவனோடு கலந்தவர்களைத் தனக்கு உத்தேஶ்யர் என்றிறே இவர் இருப்பது. [மாயிருங்கடலைக்கடைந்த பெருமானாலே] - கடலைக்கடைந்து பிராட்டியை லபித்த போதும் கண்டிலோமீ இச்செவ்வி! அகாதமாய்ப் பரந்த கடல் உன்கையிலே பட்ட பாட்டைத் தங்கள்கையிலே படும்படிபண்ணினார் ஆரோ? என்னவுமாம். * மந்தரம் நாட்டியன்று மதுரக்கொழுஞ்சாறு கொண்ட சுந்தரத்தோளுடையவுன்னை மறுகப்பண்ணின தோளழகையுடையார் ஆரோ? என்னவுமாம்.

ஈடு.—மூன்றாம்பாட்டு. " 'குழலூது போயிருந்து' என்றிறே என்னைச் சொல்லுகிறது; உக்தமானது தன்னை அநுஷ்டிக்கும் அத்தனையிறே. இனித்தான் 'உனக்குப் பெண்கள்படும் நீர்வாய்ப்புள்ள இடங்களிலே போயிருந்து ஊது' என்றிறே நீங்கள் சொல்லிற்று; அழகிது, இத்தனையிறே. நீர்வாய்ப்புள்ளவிடந்தான் எது? அத்தைச்சொல்லலாகாதோ?"

மூன்றாம்பாட்டு—போயிருந்து இத்யாதி. கீழ்ப்பாட்டிலே, "குழலூதுபோயிருந்து" என்றவநந்தரம், "போயிருந்து நின்புள்ளுவம் அறியாதவர்க்குரை" என்றதுக்குஸங்கதி. குழலூதுகையைவிட்டு வார்த்தைசொல்லப்புக்கான் என்றது, இதுஸாப்தமான ப்ரமேயம். அப்படி சொன்ன வார்த்தைதான் இரண்டு. அதாவது - "நீர்வாய்ப்புள்ளவிடமேது" என்றொருவார்த்தை; இத்தை அருளிச்செய்கிறார் - 'குழலூது போயிருந்து என்றிறே' என்றுதொடங்கி, 'இனியபேச்சிலே கைவைத்தான்' என்னுமளவும். "நான்சிலரை யழைக்கைக்காகவோ குழலூதுவது? எனக்கது ஜாத்யுசிதவ்ருத்தியன்றோ?" என்று இரண்டாம்வார்த்தை; இத்தை அருளிச்செய்கிறார் - நான்செய்தபடி செய்கிறேன் இத்யாதி. ஆக, "நீர்வாய்ப்புள்ளவிடமேது" என்றும், "நான்குழலூதுகை ஜாத்யுசிதவ்ருத்தியாகையாலே பெண்களை அழைக்கைக்கு ஸாதநமாகமாட்டாது" என்றும்வார்த்தைசொல்லப்புக்கான்; "போயிருந்து நின்புள்ளுவம் அறியாதவர்க்கு உரை நம்பீ" என்கிறார்கள் என்றுஸங்கதி. 'குழலூது போயிருந்து என்றிறே' என்றது 'போயிருந்து - குழலூது என்றிறே' என்றபடி. 'உக்தமானது தன்னை அநுஷ்டிக்கும் அத்தனையிறே என்றது - நீங்கள்சொன்னத்தை நான்செய்யும் அத்தனையிறே என்றபடி. இவர்கள்சொன்னதேதென்ன? அத்தை விஶதீகரிக்கிறார் - இனித்தான் இத்யாதி. பெண்கள்படும்-பெண்களகப்படும். நீர்வாய்ப்புள்ளவிடங்களிலே- பலிக்குமிடங்களிலே. பேச்சு குழலில் இனி

என்று இரண்டடி உட்புகுரவிட்டு நற்றரிக்க இருந்து, குழலில் இனியபேச்சிலே கைவைத்தான். குழலோசைபோலன்றிறே பேச்சில் இனிமை இருக்கும்படி! "நான் செய்தபடி செய்கிறேன், 'செவியோசை வைத்தெழ-குழலூது போயிருந்து' என்றுநீங்கள் சொன்னஇதுக்குக் கருத்து எனக்குப் போச்சுதில்லை; இதேனக்கு ஜாத்யுசிதவ்ருத்தி அன்றோ?" என்றான்.

[போயிருந்து நின் புள்ளுவம் அறியாதவர்க்குஉரை நம்பீ]-உன்போய்யிலேபழகின எங்கள்பக்கல் உன்போய் விலைசெல்லாது; இங்குநின்றும் போய் உன் போய் அறியாதவர்கள் கோஷ்ட்டியிலே இருந்துசொல்லு. நினைவொன்றும் சொலவொன்றுமான உன்னை அறியாதாரையும் கிடைக்குமிறே; பஞ்சலக்ஷங்குடியில் பெண்களுண்டாகையாலே. உன்போய்யை "மெய்" என்றிருக்கும் அவர்களுக்கன்றோ இதெல்லாம் சொல்லுவது? "போய்கேட்டிருந்தேன்" என்று இருப்பாரையும் கிடைக்குமே. [நம்பீ] - பூர்ணர் அல்லீரோ! உமக்கு எங்களைப் பெறாமல் இருந்தீரோ? தன்னைக்குறித்து இவர்கள்சொல்லுகிற அம்ருதோபமமான நிஷேதவசநங் கேட்டவாறே அவன்முகத்திலே ஓருல்லாஸம் பிறந்தது. [நின்செய்யவாயிருங் கனியும் கண்களும் விபரீதமிந்நாள்] † (உன்னுடைய சிவந்த அதரமாகிற ஶ்லாக்யமான கனியும், பிறரையழிக்கையே ஸ்வபாவமாயிருக்கும் கண்களும் முன்புபோலே ஹ்ருத்யமாயிருக்கை அன்றிக்கே, இப்போது பாதகமாயிராநின்றது.) நாங்கள் இதுக்குமுன்பு ஒருநாளும் இச்சேவ்வியும் வேறுபாடுங் கண்டறியோம்: இவையிருந்தபடி என்? என்றார்கள். "கழுத்துக்குமேலே ஒன்றைச்சொல்லுகிறிகோளித்தனையன்றோ! அது கிடக்கிடுங்கோள்; இதொரு தோளழகுஇருந்தபடியேன்?" என்றான். [வேயிருந்தடந்தோளினார் இத்திருவருள் பெறுவார் யவர்கோல்?] - ஆரேனும் தோளழகைக்கண்டு, தந்தாம் தோளழகென்று ப்ரமிக்கும்படிக்கு ஈடான தோளழகுஉடையாராரோ? † (பசுமைக்கும் சேவ்வைக்கும் மூங்கில்போலேயாய் நீண்டு சுற்றுடைத்தான தோளையுடையவர்கள்.) [இத்திருவருள்பெறுவார் யவர்கோல்] - நீ கிடந்து இப்படி துடிக்கும்படி பண்ணவல்லராவதே அவர்கள் சிலவர்! செய்யவாயிருங்கனியும் கண்களும்என்ற விடம் - அவன்பக்கல் இவர்களுக்கு உண்டான பாவ

தாயிருக்குமோ என்ன - குழலோசைபோல் இத்யாதி. போச்சுதில்லை - தெரியவந்ததில்லை. 'செய்தபடிசெய்கிறேன்' என்றது - சொன்னபடி செய்கிறேன் என்றபடி.

"நின் புள்ளுவம் அறியாதவர்க்கு" என்றதுக்கு வ்யாவர்த்யம்-உன்போய்யிலே இத்யாதி. என் புள்ளுவம் அறியாதபேருண்டோஎன்ன - நினைவொன்றும் இத்யாதி. பலிதம் - உன்போய்யை இத்யாதி. பொய்யை 'மெய்" என்றிருப்பாருண்டோ? என்ன-போய்கேட்டு இத்யாதி. புல்லாணி எம்பெருமான் பொய்கேட்டிருந்தேனே-புல்லாணிஎம்பெருமானுடையபொய்யைக்கேட்டு தரித்திருந்தேன் இத்யர்த்தஃ. திருமொழிஒன்பதாம்பத்து நாலாந்திருமொழி அஞ்சாம்பாட்டு, "வில்லாலிலங்கை" இத்யாதி. "நமக்கு அங்ஙனேசிலருண்டோ, நானுன்னையொழிய அவறிவனோ?" என்கிறவனுடைய உக்தியை உட்கொண்டு சொல்லுகிறார்கள் - பூர்ணர் இத்யாதி. 'எங்களைப்பெறாமல்' குறைவாய் 'இருந்தீரோ' என்றுகூட்டுவது. புள்ளுவம் - பொய். "நின்செய்யவாய்" இத்யாதிக்கு அவதாரிகை - தன்னைக்குறித்து இத்யாதி. வாயாகிற இருங்கனி - பக்வபலம். "இந்நாள்" என்றுவிசேஷித்ததுக்குபாவம் - நாங்கள்இதுக்குமுன்பு இத்யாதி. இச்சேவ்வியும், வேறுபாடும் என்றிரண்டாகச்சொல்லிற்று - "இருங்கனியும், விபரீதம்" என்றத்தைப்பற்ற. "விபரீதமிந்நாள்" என்றது - முன்புபோலே ஹ்ருத்யமாயிருக்கையன்றிக்கே, இப்போது பாதகமாயிராநின்றன என்றபடி. கழுத்துக்குமேலே என்றது - "வாய், கண்கள்" என்றத்தைப் பற்ற; அஹ்ருதயமென்று சாடு. தோளழகு கழுத்துக்குக் கீழேயாகையாலே - ஸஹ்ருதயமென்றுத்வநி. வேயிருந் தடந்தோளினார் - மூங்கில்போலேநீண்டு சுற்றுடைத்தான தோள்களையுடையவர்கள் இத்யர்த்தஃ. தங்களுக்கு அந்யோந்யமுண்டான பாவ பந்தத்தை இருவரும்

† குண்டலிதம் க்வாசித்கம்.

வைந்தம் சொல்லுகிறது ; வே யிருந்தடந்தோளினூர் என்றவிடம்—இவனுக்கு அவர்கள் பக்கலுள்ள ஹாவபைந்தம் சொல்லுகிறது. இவர்களுக்குத் தன்பக்கல் ஹாவபைந்தம் தன்முகேநஅறிந்தான்அவன்: தங்கள்பக்கல் இவனுக்குண்டானஹாவபைந்தம்கைமேலே கண்டுவிட்டார் அவர்கள். [யவர்கோல்] - உனக்கு இப்படி ஸ்ப்ருஹணீயதமைகளாய் இருக்குமவர்களாரோ ? இவன்பக்கல் ப்ரணயரோஷத்தாலே சொல்லுகிறுளத்தனை போக்கி, இவனோடு கலந்தாரைத் தனக்கு உத்தேஶ்யரென்றிறே இவளிருப்பது. [மாயிருங் கடலைக்கடைந்தபெருமானாலே - இத்திருவருள்பெறுவார்யவர்கோல்] - " மந்தரம்நாட்டி அன்று மதுரக்கொழுஞ்சாறுகொண்ட சுந்தரத்தோளுடையான்" என்றுசொல்லுகிற தோளழகுடையவன் விரும்பும்படியான தோளழகு படைப்பதே! தன் தோளழகு கண்டு பெண்பிறந்தார் அடங்கலும் படும்பாட்டையடங்கலும் இவன்தன்னைப் படுத்தும்படியான தோளழகுடையார் உண்டாவதே!பெரியவன் கையிலே பெரியதுபட்ட பாடுஅடங்கலும் தங்கள் கையிலே இவன்படும்படி பண்ணவல்லராவதே ! *வைகுண்டோ ஹி தநுஜாநாம் உமேஶ†வாதயஃ*" என்று கொண்டு அது ஊமைக்கூறனுகப் பட்டதெல்லாம் படுகையிறே. அன்றிக்கே, மந்தரத்தைநட்டுக் கடலைநெருக்கிக் கடைந்து பெரியபிராட்டியாரை லஹித்தவன்றும் இவ்வேறுபாடு கண்டிலோமீ! பழையாரைப் பெற்றாற்போலன்றிறே புதியாரைப் பெற்றால் இருக்கும்படி.

(௩)

நான்காம் பாட்டு.

ஆலினிலையேழுலகுமுண்டு அன்று நீகிடந்தாய் உன்மாயங்கள்
மேலைவானவரும்அறியார்இனிஎம்பரமே?
வேலினேர்தடங்கண்ணினூர் விளையாடுசூழலைச் சூழவேநின்று
காலிமேய்க்கவல்லாய்! எம்மைநீகழறேலே.

அறிந்தபடி எங்ஙனே? என்ன இவர்களுக்கு இத்யாதி. தன்முகேந என்றது - தன்னுடையமுகத்தாலே என்றபடி. அதாவது - தன்னுடைய முகத்தைக் கொண்டாடுகையாலே அறிந்தானென்றபடி; அவர்கள்வார்த்தையைக் கொண்டறிந்தான் என்றும். கைமேலே என்றது - சாடு; ப்ரத்யக்ஷமாக என்றும், தோளழகைக் கொண்டாடுகையாலே என்றும். இது - "வேயிருந்தடந்தோளினூர்" என்றதைப் பற்ற. "மாயிருங்கடலை" இத்யாதிக்கு மூன்றுபாவம். முந்தினது - மந்தாம்நாட்டி இத்யாதி. துர்வாஸஶ்ஶாபோபஹதான அன்று மந்தரபர்வதத்தைக் கடலிலேநட்டு அம்ருதமாகிற செவ்விய ஸாராம்ஶத்தைக்கொண்ட அழகியதோளுடையவன் இத்யர்த்தஃ. நாய்ச்சியார் திருமொழி. "சுந்தரத்தோளுடையான்" என்றதுக்குபாவம் - தன்தோளழகு இத்யாதி. இது - கீழ்வாக்யவிவரணம். "பெருமான், மாயிருங்கடல்" என்றத்தைக்கடாக்ஷித்து த்விதீயதாத்பர்யம் - பெரியவன் இத்யாதி. 'கையிலே இவன்படும்படி என்றது - தோளழகிலே இவன் ஈடுபடும்படி என்றபடி. விவரணம் - வைகுண்ட இத்யாதி. ஊமைக்கூறன் - அநக்ஷரமாகச்சொல்லுகை. த்ருதீயதாத்பர்யம் - அன்றிக்கே இத்யாதி. முந்தினவிரண்டுபாவமும் - "வேயிருந்தடந்தோளினூர்" என்றத்தைக்கடாக்ஷித்து. மூன்றும்பாவம் - "நின்செய்யவாயிரு" இத்யாதியைக் கடாக்ஷித்து. பெரிய பிராட்டியாரைப் பெற்றத்தைப் பற்ற இவர்களைப் பெற்றதுக்கு ஏற்றமேது என்ன - பழையாரை இத்யாதி. மாயிருங்கடலை - அகாதமாய் விஸ்தீர்ணமானகடலை இத்யர்த்தஃ.

(௩)

† சிலகோஶங்களிலே 'வாதஃ' என்று காண்கிறது.

ஆ.—(ஆலினீளிலை) "நம்முடையவிளம்பமிறே இவளுடைய இவ்வதிசங்கைக்குக் காரணம்" என்று பார்த்து, "நான் பரதந்த்ரன் அல்லேனோ? எனக்குப் பசு மேய்க்கப் போகவேண்டாவோ? நீ நினைத்தபோதே வரலாயிருக்குமோ? ஆகையாலே விளம்பித்தேன்; மற்றொன்றால் விளம்பித்தேன் அல்லேன்" என்று இவனருளிச் செய்ய; ஸர்வலோகங்களையும் அமுதுசெய்து ஓராலிலையிலே கண்வளர்ந்தருளின இம்மஹாஸ்சர்யத்தையுடைய உனக்கு "பசுமேய்க்கப் போனேன்" என்கிற பொய்யை, கேட்டார்க்கு "மெய்" என்றிருக்கும்படி சொல்லுகை ஆஸ்சர்யமோ? "பசுமேய்க்கப்போனமை பொய்யோ?" என்னில்,—வேலினேர் தடங்கண்ணினார் விளையாடும் மணற்குன்றுகளிலே நின்றோ காலி மேய்ப்பது! இந்தப்பொய்கள் எங்களுக்குச் சொல்லவேண்டா என்கிறாள்.

ஒ.—[ஆலினீளிலை] - "நாம் தாழ்கையிறே இவள்இப்படிநினைக்கைக்கு ஹேது" என்று பார்த்து, "நான் எனக்கு உரியேனோ? பசுக்களின்பின்னே போகவேண்டாவோ? நினைத்தபடி வரலாயிருக்குமோ? பசுக்களுடைய ரக்ஷணார்த்தமாகப் போக வேண்டுகையாலே தாழ்த்தேனத்தனை; மற்று விளம்பஹேதுவில்லை" என்று அவன் அருளிச்செய்ய; எல்லா லோகங்களையும் திருவயிற்றிலேவைத்து வடதளத்திலே கண் வளர்ந்தருளுகையாகிற ஆஸ்சர்யசேஷ்டிதத்தை யுடைய உனக்கு "பசுமேய்க்கப் போனேன்' என்ற அஸத்யத்தை, கேட்டார்க்கு "ஸத்யம்" என்று தோற்றும்படி சொல்லுகை விஸ்மயமோ?" என்று இவள் அருளிச்செய்ய, "நான் பசுக்களைமேய்க்கப் போனமை அஸத்யமோ?" என்று அருளிச்செய்ய, "பெண்களுடைய நோக்கிலே அகப்பட்டு அவர்களைவிட்டுப் போகமாட்டாதே அவர்கள் விளையாடுகிற மணற்குன்றுகளிலே நின்றோ பசுமேய்ப்பது? இப்பொய்களை எங்களையொழியப் புறம்பேசொல்" என்கிறாள். பசுக்கள் மேய்க்கைக்கு ஸம்பாவனையில்லாத வேலினேர்தடங் கண்ணினார்விளையாடுகிற மணற்குன்றுகளிலே நின்று பசுக்களை வயிறு நிரம்பும்படி பண்ணவல்லன் என்று வடதளஸயநம்போலே இருப்பதோர் ஆஸ்சர்யோதாஹரணம் சொல்லிற்றாகவுமாம்.

ப.—அநந்தரம், "ஜாத்யுசிதமாகப் பசுக்களை மேய்க்கப்போகச் சிறிது விளம்பித்தவளவிலே இப்படி அந்யபரனாகச் சொல்லலாமோ?" என்று அடர்த்து வார்த்தை சொல்ல, "கூடாதது கூடும்படி செய்யவல்ல உனக்கு எது சொல்லவொண்ணாதது?" என்கிறாள்.

ஏழுலகும் - ஸமஸ்தலோகங்களையும், உண்டு -(சிறுவயிற்றிலே அடங்கும்படி) அமுதுசெய்து, ஆலின்-("இன்னவிடத்திலே முளைத்தது" என்று தெரியாததோர்) ஆலினுடைய, நீள்-(முகிழ்விரிந்து) நீளுமளவான, இலை-இலையிலே, அன்று-(ஸர்வலோகமும் ப்ரளயங்கொண்ட)அன்று, நீ-("ப்ரளயத்திலேவிழுவோம்"என்றறியாத மௌக்த்யத்தை யுடைய)நீ, கிடந்தாய் - நிஸ்ஸங்கமாகக் கிடந்தவன் அல்லையோ! (எவம்விதமான), உன்-உன்னுடைய, மாயங்கள் - க்ருத்ரிம சேஷ்டிதங்களை, மேலை-அஸ்ப்ருஷ்ட ஸம்ஸாரகந்தரான, வானவரும் - நித்யஸூரிகளும், அறியார் - (* ஓர் மாயையினால் ஈட்டிய வெண்ணெய் தொடுவுண்ணப் போத விட்டிருந்தவர்களாகையாலே) அறியார்கள்; இனி - இனி, எம்-(இதுக்கு) நாங்கள் பாசுரமிட்டுச் சொல்லுகை, பரமே - பரமோ? (அதுகிடக்கிடீர்), வேலின்நேர் - வேல்போலே ஆளழிக்கும்படியான, தடம் - பெரிய, கண்ணினார் - கண்களை யுடையவர்கள் (கண்வட்டம் விடமாட்டாமையாலே), விளையாடு-அவர்கள்விளையாடு

கிற, சூழலை - மணற்குன்றை, சூழ-சூழ, நின்றே-நின்றே, காலி-காலிகளை, மேய்க்கவல்லாய் - வயிறுநிறையமேய்க்கவல்ல அவடிதவடநாஸமர்த்தனன்றோ? (ஆகையாலே), எம்மை - இக்ருத்ரிமம் அறிந்த எங்களை, நீ-நீ, கழறேல் - (காலிமேய்க்கப் போன என்னைக் களவுசொன்னேனென் என்று சொல்லுகையாவதென்?'' என்று) மேலிட்டு வார்த்தை சொல்லாதேகொள்.

இ.—நாலாம்பாட்டில், ''அரைக்ஷணம் தாழ்த்தோமென்று அஸங்கதஹாஷணங்களைச் சொல்லுகிறதென்? நான் பரதந்த்ரன் அல்லேனோ? மாதாபிதாக்கள் 'போய்ப் பசுக்களைமேய்' என்று நியமித்தால் உங்கள்பக்கல் வரப்போமோ? இதொழிய, வேறுவிளம்பஹேதுவில்லை'' என்ன, '' அவடிதங்களை வடிப்பிக்கை நீவல்லதொன்று அன்றோ?'' என்கிறாள். [ஆலினீளிலையேழுலகுமுண்டு] - சிறுவடிவைக்கொண்டு ஸகல லோகங்களையும் திருவயிற்றிலே வைத்து ஒருபவனுன ஆலந்தளிரிலே கண்வளர்ந்தாய். [நீளிலை] - ''ஆலம்பேரிலை'' என்னுமாபோலே விபரீத லக்ஷணையாய், சிற்றிலை என்றபடி. [அன்று] - வெறும் ப்ரளயமொழியப் பரிவருமின்றிக்கே இருந்த அன்று. இப்படி அவடிதங்களைச் செய்யவல்ல உனக்கு ''பசு மேய்க்கப்போனேன்'' என்று இவ்வஸத்யத்தை, கேட்டார்க்கு ''ஸத்யம்'' என்னும்படிசொல்லுகை விஸ்மயமோ? ''நான் அரைக்ஷணம் தாழ்த்த கோபத்தாலே 'அஸத்யன்' என்றிகோள்; எல்லாரும் அறியாரோ என் அஸத்யம்!'' என்ன, [உன்மாயங்கள் மேலை வானவரும் அறியார்] - உன்னுடைய க்ருத்ரிமங்கள் ஆக்கனுன ப்ரஹ்மாதிகளே அன்றிக்கே, நித்யஸூரிகளும் அறியார்கள்; * சூட்டுநன்மாலைகள் தூயனவேந்திக்கொடு நிற்கச்செய்தே, ஈட்டிய வெண்ணெய்தொடுவுண்ணப்போருமவனல்லையோ! பழையாரை விடுகை உனக்குப் பழையதாய்ப்போருவதொன்று அன்றோ? [இனிஎம்பரமே] - இப்படி ஒருத்தர்க்கும் நிலமல்லாதக்ருத்ரிமத்தை அபலைகளான நாங்கள் அறியவோ? ''பழங்கிணறு கண்வாங்குகிறதென்? அது கிடக்கிடாய், நான் பசுமேய்க்கப்போனமை அஸத்யமோ?'' என்ன,-[வேலினேரித்யாதி]- ''பெண்கள் திரள இருக்கிற மணற்குன்றிலேயோ உன்னைப்பசுமேய்க்கச் சொல்லிற்று?'' என்கிறாள். [வேலினேர்தடங்கண்ணினார்] - ஓர் ஆளும் ஒருநோக்கும்நேரான கண்ணழகை உடையவர்கள். அவர்கள்நோக்கிலே அகப்பட்டு உன்கண்ணுக்கு இரையிட்டாயித்தனையன்றோ? [விளையாடுசூழலைச் சூழவேநின்று] - கண்ணுக்கிட ஒரு துரும்பில்லாத இடத்திலேயோ பசுமேய்ப்பது? [சூழவேநின்று] - அவர்கள் கண்வட்டத்தை விடாதேநின்றோ பசுமேய்க்கச் சொல்லிற்று! இப்பொய்களை எங்களையொழியச் சொல்லாய் என்கிறாள். [காலிமேய்க்கவல்லாய்] - மணற்குன்றிலே பசுக்களை வயிறு நிரப்பவல்லவன் என்று, வடஊளஸயநம்போலே இருப்பதொன்றிறே இதுவும். வல்லாயென்று-ஸாமர்த்யம்தோற்ற வார்த்தை சொன்னவாறே, மிகைத்து வார்த்தைசொன்னான்:[எம்மை நீகழறேலே] என்கிறாள்; ஆற்றாமைக்கு உதவாததுக்குமேலே, மிகைவார்த்தை சொல்லாதேகொள். [எம்மை] - உன்னைப்பிரிந்த ஆற்றாமையாலே நோவுபடுகிற எங்களை. [நீ] - பிரிவால்நோவு இன்றிக்கே எங்களை நோவுபடுத்துகிற நீ. [கழறேலே] - மிகை வார்த்தை சொல்லாதேகொள். ஆற்றாமைக்கு உதவினார்க்கன்றோ வாயுள்ளது?

ஈடு—நாலாம்பாட்டு. "நான் சொன்னவையெல்லாம் இவர்கள் அந்யதாவாக புத்திபண்ணுகிறது, நம்மையொழியச் செல்லாமை பிறந்து நாம்அரைக்ஷணம் தாழ்த்தது பொறுக்கமாட்டாமை இறே" என்றுபார்த்து, "நீங்களென்னை இங்ஙனேசொல்லலாமோ? நான் பித்ராதிகளுக்குப் பரதந்த்ரனன்றோ? அவர்கள் என்கையிலே கோலைத்தந்து'நீ போய்ப் பசுமேய்த்துவா' என்றால், என்னால் மாட்டேனென்னப்போமோ?" என்றான்; பித்ராதிகளுக்குப் பரதந்த்ரராய்க்கொண்டு பசுமேய்ப்பார் மேய்க்கும்படியிதுவோ? நீசெய்யுஞ்செயல் சேர்ந்திருக்கிலிறே, நீ சொல்லுஞ்சொலவும் சேர்ந்திருப்பது.

[ஆலினீளிலையேழுலகுமுண்டுஅன்றுநீகிடந்தாய்] - ஓராலிலையாவது, அதுதான் முகிழ் விரியாதஅளவாயிருப்பது; அதிலே, ஏழுலகங்களையும் வயிற்றிலேவைத்து, ஒரு யசோதாதிகளுங்கூட உதவாததசையிலேகண்வளர்ந்தருளினாய். ஜகத்தையடங்கலும் வயிற்றிலேவைத்து, சிறுவடிவைக்கொண்டு ப்ரளயத்திலே தனியேகிடக்கவல்லவனன்றோ நீ! அஸங்கதங்களை ஸங்கதமாகச்செய்யவல்ல ஸாமர்த்த்யமுடைய உனக்கு இவையெல்லாம் சேரச் சொல்லுகை பொருளோ? நீ சொல்லுகிறவை ப்ரணயிகள்கோஷ்ட்டியில் பரிமாறுவதல்ல காண்; "பிதாநாமமூர்த்தம்ஶிரோரோக꞉" (பிதாநாமமூர்த்தம்ஶிரோரோக꞉) என்றும், "குரவ꞉கிம்கரிஷ்யந்தி" (குரவ꞉கிம்கரிஷ்யந்தி) என்றுங்காண்இங்குப் பரிமாறுமவை. "அன்னையென்செய்யிலென்? ஊர் என்சொல்லிலென்?" என்றிறே இங்கிருப்பது. "தத்தாநாம்விரஹாக்நிநா" (தக்தாநாம்விரஹாக்நிநா) இதுக்கு நீர்சொரியவல்லவர்களோ அவர்கள்? அவர்களை மறைத்து வந்து கிட்டக்கடவ எங்களுக்கு இவை

ப்ர.—[நாலாம்பாட்டு] [கழறேல் இத்யாதி] [மழறுதேன் மொழியார்கள்] ஸமவக்ஷ்த்வாஸ்தாதமே, நவேஷாமோஹஸ்ஸ்ம்ப்ரியாயை தவஸாஹஸ்தயாஸ்வ்யாத। ஸ்யோதாஸ்மதவஸேதஹ꞉ கரிஷ்ய வசநஞ்ச ॥ ௪௩ ॥

நாலாம்பாட்டு.—ஆலினீளிலை இத்யாதி. ப்ரணயரோஷத்தாலே ஊடுகிறஇடத்திலே, பெண்களிருக்கிற மணற்குன்றிலே அவன் பசுமேய்த்த ப்ரகாரத்தையும், வடதளசயநத்தையும் சொன்னதுக்கு ப்ரயோஜநம் அருளிச்செய்கிறார் - நான்சொன்னவையெல்லாம் இத்யாதி. இத்தால் - இவர்கள் ப்ரணயரோஷம் தீருகைக்காக, தான் தாழ்த்ததுக்கு பித்ராதிகள் ஏவினதடியாகப் பசுமேய்த்தபடியை அவன்சொல்ல, அத்தை அஸங்கதோக்தியாகப் பரிஹாஸம்பண்ணுகிறவர்கள், "இவன்சொல்லும் அதுஅஸங்கதோக்தி"என்னுமதுக்கு உறுப்பாக, அஸங்கதவ்யாபாரமான வடதளசயநத்தை முன்னிடுகிறார்கள் என்றபடி: செய்யுஞ்செயலென்றது - "ஆலினீளிலை" இத்யாதியைப்பற்ற.

நீளிலைஎன்றது - நீளுகிறஇலையென்றாய், முகிழ்விரியாத சிற்றிலைஎன்றபடி. ஒரு யசோதாதிகளுங்கூட உதவாத தசையிலேஎன்றது - பரிவரில்லாத தசையிலே என்றபடி. விவரணம்-ஜகத்தை இத்யாதி. ஃபலிதம் - அஸங்கதங்களை இத்யாதி. பொருளோ - அருமையோ என்றபடி. இது அஸங்கதமானபடியைக்காட்டுகிறார்-நீ சொல்லுகிறவை இத்யாதி. அதாவது - "பித்ராதிகளுக்குப் பரதந்த்ரன்" என்று சொல்லுமவை ப்ரணயிகள்கோஷ்ட்டியில் பரிமாறுமவை அன்றென்றபடி. ப்ரணயிகள் கோஷ்ட்டியில் பரிமாறும்படி எங்ஙனே? என்ன - பிதாநாம் இத்யாதி. "குருணாம் ஶிரோவேதனம் கிம் வ்யஸநம் ஏஷாம் குரவ꞉கிம்கரிஷ்யந்தி தக்தாநாம்விரஹாக்நிநா" இதி பஞ்சமேம்பே [18, 22]. ப்ரமாணாந்தரம்-அன்னையென் இத்யாதி. மாத்ராதிகளை த்ருணீகரிக்கலாமோ? என்ன - தக்தாநாம் இத்யாதி. கீழ்வாக்யத்துக்குஃபலிதம் - அவர்களைமறைத்து இத்யாதி. நீங்கள்

வார்த்தையல்ல காண்! † ("நான் அரைக்ஷணம் தாழ்க்க, கோபத்தாலே 'அஸத்யன்' என்றிகோள்; எல்லாரும் அறியாரோ என் அஸத்யம்" என்ன), [உன்மாயங்கள் மேலைவானவரும் அறியார்] - உன்னுடைய க்ருத்ரிமங்கள், ஆக்கனை இந்த்ராதிகள் அன்றிக்கே நித்யஸூரிகளும் அறியார்கள். "ப்ரஹ்மாபி நவேத நாராயணம் ப்ரபும்" (ப்ரஹ்மாபிநவேத நாராயணம்ப்ரபும்) என்கிறபடியே அறியாமைக்கு அவர்களும் ஒத்திருக்கச்செய்தே, உகந்தாரைக் காற்கடைக்கொள்ளுகிற ப்ரகரணமாகையாலே நித்யஸூரிகளை நிதர்ஶநமாகச்சொல்லுகிறது; "சூட்டுநன்மாலைகள் தூயனவேந்தி" என்றுகொண்டு அவர்கள் ஸமாராதநத்துக்கு வேண்டுவனகொண்டுநிற்க, * ஈட்டியவெண்ணெய் தொடுவுண்ணப்போந்ததிறே; அது தன்னையும் விட்டிறே அடலாயர்தங்கொம்பினுக்குக் கோட்டிடையாடிற்று. பழையாரையெல்லாம் காற்கடைக் கொள்ளுகிற ப்ரகரணமாயிற்றிறே. நவப்ரியைகளை விரும்புவாரைப்போலேகாணும். [இனிஎம்பரமே] - நித்யஸூரிகளோடு ஒக்கத் தங்களையும் ஸமாநாதிகரிக்கிறார்கள். அவர்களுக்கு நிலமல்லாதது எங்களால் அளவிடப்போமோ? அவையெல்லாம் எங்களையொழியச் சொல்லாய். "என்தான்? நான்பசுமேய்த்தமை இல்லையென்கிறீகோளோ? அறிந்திலோமென்கிறீகோளோ? நான்சொன்னது பொய் என்கிறீகோளோ?" என்றான்; அவையெல்லாம் அப்படியேயானாலும் நீதான் பசுமேய்க்கும்படி இப்படியேயோ? [வேலினேர்தடங்கண்ணினார் விளையாடுசூழலைச்சூழவேநின்றுகாலிமேய்க்கவல்லாய்] - பெண்களுடைய கண்களிலேதுவக்குப்பட்டு அவ்வருகு போகமாட்டாதே நின்றுபோலேகாணும் பசுமேய்ப்பது! ஹோக்தாக்கள் அளவல்லாதபடி பரப்பையுடைத்தாய், ஓராளுமோருநோக்கும்நேரான கண்ணையுடையராயிருக்கை. "கார்த்தண்கமலக் கண்ணென்னும் நெடுங்கயிறுபடுத்தென்னை, ஈர்த்துக்கொண்டுவிளையாடும் ஈசன்தன்னைக்கண்டீரே" என்று, தன்கண்ணழகைக் கண்ட பெண்கள்படும்பாடெல்லாம் இவன்தன்னை அவர்கள்படுத்தவல்லவர்கள். [விளையாடுசூழலைச்சூழவேநின்று காலிமேய்க்கவல்லாய்] - "உன் வயிறும்நிறைத்துப்பசுக்களின்வயிறும் நிறைத்தல்லது வாராதேகோள்" என்றன்றோ பித்ராதி

'பொய்" என்கிறுப்போலே, எல்லாரும் "பொய்" என்றார்களோ? என்ன - உன்னுடைய க்ருத்ரிமங்கள் இத்யாதி. "மேலைவானவரும்" என்று விஶேஷிக்கவேணுமோ? ப்ரஹ்மாதிகளும் அறியாரென்னவொண்ணாதோ? என்ன - ப்ரஹ்மாபி இத்யாதி. நித்யஸூரிகளைக் காற்கடைக்கொண்டானோ? என்ன - சூட்டுநன்மாலைகள் இத்யாதி. கோட்டிடை - கொம்பின்நடுவே. "உகந்தாரைக் காற்கடை" இத்யாதிவாக்யவிவரணம் - பழையாரை இத்யாதி. 'பழையார்' என்கிறது - இங்கே, ஊடுகிறவர்களை. 'புதியார்' என்கிறது - அவன்மின்னிடைமடவாரை. நித்யஸூரிகளை வஞ்சித்தாற்போலே எங்களையும் வஞ்சித்தாய் என்று ஹ்ருதயம் - நித்யஸூரிகளோடொக்க இத்யாதி. 'ஸமாநாதிகரிக்கிறார்கள்' என்றது - அறியாமையில் ஸாம்யத்தைப்பற்ற. அவையெல்லாம் என்றது - மாயங்களெல்லாம் என்றபடி. அதாவது - "மாதாபிதாக்களுக்குப் பாதந்த்ரன்" என்று தொடங்கிச்சொல்லுகிற வார்த்தைகள் என்றபடி. வேலினேர் - வேலோடு ஸத்ருஶமான இத்யர்த்தம். தாத்பர்யார்த்தம் - பெண்களுடைய இத்யாதி. "வேலினேர்" என்ற பதத்துக்கு ஹார்த்தமிவம் - கார்த்தண்கமலம் இத்யாதி. மேகத்திலே ஸ்ரமஹரமான தாமரைபூத்தாற்போலே இருக்கிற திருக்கண்களாகிற பாசத்திலே அகப்படுத்தி, என்கார்யம் என்புத்த்யதீநமல்லாதபடி என்னைத் தன்பக்கலிலே இழுத்துக்கொண்டு, இதுவே லீலையாகஇருக்கும் ஈசனைக் காணப்பெற்றாருண்டோ? இத்யர்த்தம். நாச்சியார்திருமொழி, பதினலாந்திருமொழி, நாலாம்பாட்டு. "வேலினேர்" இத்யாதிக்கு இரண்டுதாத்பர்யம்; முந்தினது - பித்ருவசந பரிபாலநத்துக்காகவானால் மணற்குன்றிலேவந்து பசுமேய்ப்பார்களோ! இது, பொய் என்று;

கள்உன்னைச்சொல்லிவிட்டது? "இன்னவிடத்தேநின்று பசுமேய்" என்றொரு ப்ரதேஶநிய மம்பண்ணிவிட்டார்களோ? அவர்கள் நியமித்ததொழியச் செய்யப்பார்த்தால் அது இங்குச் செய்யலாகாதோ? கண்ணுக்கிடஒருதுரும்பும் இன்றியே, அவர்கள் விளையாடுகிற மணற் குன்றுகளைச்சூழநின்று மேய்க்கவேணும்போலே காணும். பசுக்கள்மேய்க்கைக்கு ஸம் பாவனையில்லாத இடங்களிலே இவற்றின் வயிறுகளைநிறைத்துக்கொடுபோகையினாலே, கீழில் அகடிதகடநாஸாமர்த்த்யம்போலே இதுவுமோர் ஆஶ்சர்யஞ் சொல்லுகிறதாகவுமாம். [வல்லாய்] - உன்னை யாரேனும் நியமித்தாலும் நீ நினைத்ததுசெய்து தலைக்கட்டவல்லான் ஒருத்தனன்றோ! என்கிறாள். இவர்கள்சொன்ன மர்மம் புத்திபண்ணாதே, "நம்முடைய ஸாமர்த்த்யந்தோற்றச் சொல்லாநின்றார்கள்" என்று, தன்மேன்மை தோற்றச் சிலசொல்லப் புக்கான் ; "இவன்அழியும்படி நெடும்போதுசிலவார்த்தைசொன்னோம்; இன்னும் சில சொல்லுவானுக்கு" என்று இருந்தாள். "**ஜதீவ**" (இதீவ)-கீழேநெடும்போதுசிலபாசுரமிட்டுச் சொல்லிக்கொடு போந்தான் ; ப்ரணயதாரையில் ஓடுமேது ருஷிகளாயிருப்பார்க்கு நிலமன்றே. இப்புடைகளிலே—என்கிறான். "**தெவீ**" (தேவீ) - வல்லபைகளுடைய பரிமாற்றம் கடக்க நிற்பார்க்குத் தெரியாதிறே. "**வசநம்மஹார்த்தம்**" (வசநம்மஹார்த்தம்)- கடக்க நிற்பார்க்கேயன்று: தேசிகரானவர்கள் தங்களுக்கும் தெரியாதபடியாயிருக்கை. "**தம் வா நரெந்த்ரம்**" (தம்வாநரேந்த்ரம்)-இவனோடு ஒக்கக்கடவார்ஒருத்தருமில்லை, ஶேஷத்வத்துக்கு முடிசூட்டினார்மஹாராஜரேயாகிலும், பாரதந்தர்யத்தின்எல்லையிலே நின்றான்இவனென்கை. இவ்வளவிலே இவள்முகம்பார்த்து வார்த்தை சொல்லப்பெற்றிலரிறே அவர். "**மதுரார்த்தம்**" (மதுரார்த்தம்) - அபூமியென்னக் கைவாங்கவேண்ணுதபடியா யிருக்கை.

இத்தை அருளிச்செய்கிறார் - உன்வயிறும்நிறைத்து இத்யாதி. "விளையாடுகுழல்" என்றத்தைக் கடாக்ஷித்துஹார்த்தஸாவம் - இன்னவிடத்தே இத்யாதி. கீழ்ச்சொன்ன வ்யங்க்யங்களுக்கு ஹலிதம் - அவர்கள்நியமித்ததொழிய இத்யாதி. எதத்விவரணம் - கண்ணுக்கிட இத்யாதி. பசுக்கள்மேய்க் கைக்கு ஸம்பாவனையில்லாத இடங்களிலே இவற்றின் வயிறுகளை நிறைத்துக்கொண்டு போகை யினாலே, கீழ் அகடிதகடநா ஸாமர்த்யம்போலே இதுவும்ஓராஶ்சர்யம் என்று "வேலினோர்" இத்யா திக்கு இரண்டாம்ஸாவம் - பசுக்கள்மேய்க்கைக்கு இத்யாதி. ப்ரதினஸாவத்துக்குச்சேர "வல்லாய்" என்றதுக்கர்த்தம் - உன்னையாரேனும் இத்யாதி. ஆகையாலே எங்களோடும் ஸம்ஶ்லேஷிக்கலாம் என்றபடி. த்விதீயஸாவத்துக்குச்சேர "வல்லாய்" என்றதுக்கு - அகடிதகடநாஸமர்த்தன் என்றர்த்தங் கண்டுகொள்வது. த்விதீயார்த்தத்துக்குச்சேர மேலுக்கவதாரிகை - இவர்கள்சொன்ன இத்யாதி. மர்மமென்றது - வ்யங்க்யமாகச் சொன்னவார்த்தையை யென்றபடி. ப்ரதினவர்த்தத்துக்குச்சேர அவ தாரிகாந்தரம் - இவனழியும்படி இத்யாதி. இவனழியும்படியென்றது - இவன் நிருத்தரனாம்படி என்கை. சொல்லுவானுக்கென்றது - சொல்லக்கடவனென்றபடி. இதுக்குத்ருஷ்டாந்தம் - ஜதீவ இத்யாதி. இதுக்கு ஹேதுவேதென்ன - 'தெவீ' என்று பதஸங்கதி. இவன் சொன்னவார்த்தை விரக் தனுக்கே யன்றிக்கே, உட்புகுந்தநாயகனுக்குந் தெரியாதென்கிறார் - கடக்க இத்யாதி. தேஶிகர் - பெருமாள். வாநரேந்த்ரமென்னாதே, "தம்வாநரேந்த்ரம்" என்றதுக்குஸாவம் - இவனோடொக்க இத்யாதி. இவனோடொக்கக் கடவார் ஒருத்தருமில்லையென்றது - பெருமாளுக்கு ப்ரத்யாஸந்நன் என்னுமதுகொண்டிறே; அது மஹாராஜருக்கும் இல்லையோவென்ன - ஶேஷத்வத்துக்கு இத்யாதி. அதெப்படி என்ன - இவ்வளவிலே இத்யாதி. அதாவது - மஹாராஜர்க்குப்போலே யதேஷ்ட விநி யோகார்ஹத்வம் மாத்ரமன்றிக்கே, யதேஷ்ட விநியுஜ்யமாநரான திருவடி வாநரேந்த்ரரென்றபடி. அவரென்றது - மஹாராஜரை: அபூமியென்னவென்றது - "மஹார்த்தம்" என்றத்தைப் பற்ற. ஸரஸ

"உக்த்வா" (உக்த்வா) - அவனும் அவனுடையவர்களும் வாழும்படி வார்த்தைசொன்னாள். "ஶ்ரோதும்புநஸ்த்ஸ்யவசோபிராமம்" (ஶ்ரோதும்புநஸ்த்ஸ்யவசோபிராமம்) - "அழிந்தாரையாக்கவல்லன்" என்னுமிடங்கண்டாள்; தானழிச்சதலைஉண்டாம்படி வார்த்தைசொல்லவல்லமை கேட்கவேணுமென்றிருந்தாள். "ராமார்த்தயுக்தம்" (ராமார்த்தயுக்தம்)- ராமப்ரயோஜநயுக்தம்; தன்கார்யம்செய்து தலைக்கட்டவல்லானொருத்தன், "விரராம"(விரராம)-நெடும்போதுதான் வார்த்தைசொல்லுகையினாலும்,ஸ்வாமிவார்த்தைசொல்லும்போது மேலிட்டு வார்த்தைசொல்லவொண்ணாமையினாலும் பேசாதேயிருந்துஅவனுக்கு அவகாச ப்ரதாநம் பண்ணினாள். "ராமா"(ராமா)-இவ்விட்டுநீட்டுகையொழிய வார்த்தை சொல்லாதே யிருக்கிறபோதை அழகைஅவர்தாம் காணப்பெற்றிலோம். இவனும்அடர்த்து வார்த்தைசொன்னான். [எம்மை நீ கழறேலே]-வாராய்! நோவுபடுத்தி நலிந்தார் முடிக்கவும் தேடுவர்களோ? [எம்மை]-உன்னைப்பிரிந்து ஆற்றாமைநோவுபடுகிற எம்மை. [நீ]-ஒருகாலமும் பிரியாத நீ, பிரிவால் வரும்நோவுஇன்றிக்கே இருக்கிற நீ. [கழறேலே] - விசாய்ந்து வார்த்தை சொல்லாதேகோள்; நீ இங்ஙன் மேலிட்டு வார்த்தை சொல்லப்பெறாய் காண். நீயும் நாங்களுமானால் எங்களை நீயடர்த்து வார்த்தைசொல்ல என்ன ப்ராப்தியுண்டு? சேதநரைப்போலே வந்து வார்த்தைசொல்லுவதே! அதிலேவைத்து மிகைத்து வார்த்தைசொல்லுவதே. ஆற்றாமைக்கு உதவினார்க்கன்றோ வாயுள்ளது! (௬)

மாகையாலே, "நிலமன்று" என்று விடப்போகாதிருக்கையென்றகருத்து. அவனுடையவர்களுமென்றது - திருவடியும், திருவடியுடையபெருமாள் மஹாராஜர் தொடக்கமானவர்களும் என்றபடி. தான் பெருமாளை ப்ரணயரோஷத்தாலே அழித்த வார்த்தைக்கு இவன் ஸமாதாநம் பண்ணவல்லனென்கிற இது அறிந்தபடி எங்ஙனேயென்ன - அழிந்தாரை இத்யாதி. அதாவது - வேண்யுத்க்ரதநத்திலே ஒருப்பட்டு முடிப்பப்புக்க தன்னை யுண்டாக்குகையாலே, அழிந்தாரை ஆக்கவல்லனென்னுமிடம் கண்டாளென்றபடி. இப்படியாகையாலே 'தானழிச்சதலை' என்றகூட்டிக்கொள்வது. தானழிச்சதலை என்றது - "நிர்த்தயர், ஸ்வார்த்தபரர்" என்று தானழித்தபெருமாளை என்றபடி. உண்டாம்படி வார்த்தைசொல்லுகையாவது - நிர்த்தோஷராம்படி வார்த்தைசொல்லுகை. ராமப்ரயோஜநயுக்தம்- ராமனுகிற ப்ரயோஜந யுக்தமென்றபடி. மோக்ஷியானவனை ஸமாதாநம்பண்ணுகை மோக்ஷபூதனுடைய கார்யமாகையாலே, தன்கார்யம் செய்து தலைக்கட்டவல்லானென்றது. அது - "தஸ்ய" என்றதுக் கர்த்தமானால் ஸ்வரஸம். வெறுமனேயிருந்ததுக்கு ப்ரயோஜநம் - நெடும்போது இத்யாதி ஸ்வாமி வார்த்தை யென்றது - ஸ்வாமியுடையவார்த்தை யென்றபடி. இவ்விட்டு நீட்டுகையொழியவென்றது - இவள் வார்த்தை சொல்லுகிறபோதை அழகை திருவடிசொல்லக் கேட்கையன்றிக்கே யென்றபடி. (இவனும் சிலசொல்லுவானுக்கென்றிருந்தாள் - - இவனுமடர்த்துவார்த்தைசொன்னான்) என்று கீழோடே ஸங்கதி. விவரணம் - பிரிவால்வரும் இத்யாதி. விசாய்ந்து - மேலிட்டு. மேலிட்டுவார்த்தை சொல்லவொண்ணாதோ என்ன, ஸாபராதனான உனக்கு அதுக்கு யோக்யதையில்லைகாண் என்கிறார் - நீஇங்ஙன் இத்யாதி. "எம்மைநீ" என்கிறபதங்களையுங்கூட்டி உக்தார்த்தவிவரணம் - நீயும் நாங்களும் இத்யாதி. ஸாபராதனான நீயும், து:கிதைகளான நாங்களுமானாலென்றபடி. சேதநரைப்போலே என்றது - எங்களைச் சைதந்யம் உள்ளவர்களைப்போலே எண்ணி என்றபடி. "ஜடீவஜைவீவடநம் ஸஹாயம்தவாநமேந: ஸ்யாராமஸ்ஸ் | ஶ்ரோதும்புநஸ்த்ஸ்யவசோபிராமம்ராமார்த்தயுக்தம்விரராமராமா" இதி ஸுந்தரகாண்டே. (௬)

ஐந்தாம் பாட்டு.

**கழறேல்நம்பீ! உன்கைதவம் மண்ணும்விண்ணும் நன்கறியும்திண்சக்கர
நிழறுதோல்படையாய்!உனக்குஒன்றுஉணர்த்துவன்நான்
மழறுதேன்மொழியார்கள்நின்னருள்சூடுவார் மனம்வாடிநிற்க எம்
குழறுபூவையோடும் கிளியோடும் குழகேலே.**

ஆ.—(கழறேல்) - இப்படி தன்னை உத்திஸ்ய மேன்மேல் இவள் சொன்ன வார்த்தைகளையே தனக்குப் பற்றுசாகக் கொண்டு, இவளுடைய கிளிகளையும் பூவைகளையும் எடுத்து அவற்றைக்கொண்டு திருநாமங்களைச் சொல்லுவித்து ஆஸ்வஸியா நின்று கொண்டு, "என்பக்கல் பொய்யுண்டோ?" என்று தானருளிச்செய்ய, "உன்னுடைய பொய்யை அறியாதாருண்டோ? பகலை இரவாக்கவல்லனல்லையோ? அது நிற்க, ஒரு ஹிதம் சொல்லக்கேள்! அதேதென்னில்; - உன்திருநாமங்களைக் கேட்க இருந்தாயாகில், நின்னருள்சூடுவார் மனம்வாடி நிற்க இங்கேநின்று எங்களுடைய பூவைகளையும் கிளிகளையும் உன்திருநாமங்களைச் சொல்லுவித்துக்கொண்டு கேளாதே: உன்னுடைய மழறுதேன் மொழியார்களைச் சொல்லுவித்துக்கொண்டு கேள்!" என்கிறாள்.

ஒ.—[கழறேல் நம்பீ] . "நான் சொன்னவையெல்லாம், பொய்யைமெய்யாக உபபாதித்தேனாக, என்னை க்ருத்ரிமனாக்குவதே!" என்று எம்பெருமான் அருளிச்செய்ய, பிராட்டியும், முதன்மையடித்து "எங்களை அஹிஹஸித்து வார்த்தைசொல்லாதே கொள்ளும் உம்முடைய க்ருத்ரிமம் ஸகலலோகப்ரஸித்தமன்றோ?" என்ன, அவனும், "நான் பொய்யனென்னுமிடத்துக்கொரு ஸாக்ஷிகாட்டிக்காண்!" என்ன, "ஜயத்ரதவதத்தினன்று பகலையிரவாக்கவேணுமென்று நீர் ஒருபொய்யிலே துணிய, அதுக்குப் பெருநிலைநின்று அத்தை முற்றததலைக்கட்டவல்ல உம்முடையகையில் திருவாழியைக் கேட்டுக்கொள்ளும்!" என்ன, அவன் மேல்சொல்லலாவது காணாமையாலே நிருத்தரனாயிருக்க; "நீ இன்னாதாயிராதே உனக்கு ஒருஹிதம் சொல்லக்கேள்!" என்ன, அவனும், "இது ஒருபேச்சில் இனிமையிருக்கும்படியே!" என்று கொண்டாட, போலியைக்கண்டு பிச்சேறும்படியான பேச்சழகையுடையவர்கள் மனம்வாடாமே அங்கே போவென்று இவள் பேசாதேயிருக்க, "நீபேசாதே யிருந்தாயேயாகிலும் எனக்கு ஸாரகம் இவற்றின் பேச்சே அமையும்" என்று இவளுடைய பூவையையும் கிளியையும் இவன் உபலாளிக்க; இவள் "நீ நினைக்கிறவர்களின அல்ல: எங்களின: இவற்றோடே குழகாதேகொள்" என்கிறாள்.

ப.—அநந்தரம், "உன்பொய்க்குப் பெருநிலைநிற்கும் பரிகரத்தையுடைய நீ, அஹ்ருதயமாக எங்கள்பேச்சைக் கொண்டாடுவது: இனியபேச்சையுடைய எங்கள் பூவையையும் கிளியையும் கொண்டாடுவதாகாதே கொள்" என்கிறாள்.

நம்பீ-("பொய்நம்பி" என்னும்படி பொய்யாலே) நிறைந்தவனான நீ, கழறேல்-("என்னைப் பொய்செய்தேன் என்கையாவதென்?" என்று) மேலிட்டுவார்த்தை சொல்லாதேகொள்; திண் - (பகலைஇரவாக்கின பொய்க்குப் பெருநிலை நிற்கும்) திண்மையை

யுடைய, சக்கரம் - திருவாழியாகிற, நிழறு - தேஜஃப்ரஸாரியான, தொல் படையாய் - அஸாதாரணாயுதத்தை யுடையவனே ! உன்-உன்னுடைய, கைதவம் - க்ருத்ரிமசேஷ்டிதங்களை, மண்ணும் - (அந்த மஹாபாரத ஸமரத்திலே) பூமியில் திரண்ட ராஜலோகங்களோடு, விண்ணும் - ஊர்த்வலோக வாஸிகளான தேவர்களோடு வாசியற, நன்கு - நன்றாக, அறியும் - அறியும்; (ஆனபின்பு), உனக்கு - உனக்கு, நான் - நான், ஒன்று - ஒன்று, உணர்த்துவன் - அறிவிக்கக்கேள்; (எங்கள்வார்த்தை இனிமை கொண்டாடாதே; நாங்கள் அவர்களல்லோம்); நின்-உன்னுடைய, அருள்-அருள், சூடுவார் - சூடுகைக்கு இட்டுப்பிறந்தவர்களாய், மழறு - அஹிநவமான, தேன் - தேன்போலே யிருக்கிற, மொழியார்கள் - மொழியையுடையவர்கள், மனம் - நெஞ்சானது, வாடி - செவ்வியழிந்து விஷண்ணமாம்படி, நிற்க-நிற்க, எம்-(அவர்களதன்றியே) எங்களதாயிருப்பதாய், குழறு-(அவர்களைப்போலே உனக்குத் தெளிய வார்த்தைசொல்லமாட்டாதே,) அநக்ஷர ஸரஸமான குழறுதலையுடைத்தான, பூவையொடும் - பூவையோடும், கிளியோடும் - கிளியோடும், குழகேல் - லீலாரஸம் கொண்டாடாதேகொள். இங்கு, பூவையும் கிளியுமென்றது-ஆஸ்ரிதர்க்கு உசாத்துணையாகைக்கு யோக்யமான வ்யவஹாரத்தை யுடைத்தாய் ததேகரக்ஷ்யமான ஶிஷ்யவர்க்கத்தை ஸூசிப்பிக்கிறது.

ஈடு.—அஞ்சாம்பாட்டில், "அஸங்கதங்களைச் செய்தேனென்றும், பொய்யை மெய்யாக உபபாதித்தேனென்றும் என்னை க்ருத்ரிமனாக்குவதே!" என்ன, [கழறேல் நம்பீ] - முதலிகளென்று அபிஸந்தித்து வார்த்தை சொல்லாதே கொள்ளும். "நெஞ்சில் மறமுடையார் சொல்லுமது வார்த்தையன்று; உங்களையொழிய ஸாக்ஷிஉண்டோ?" என்ன, [உன்கைதவம்மண்ணும் விண்ணும் நன்கறியும்] - உன் க்ருத்ரிமம் உபயவிபூதியும் நன்றாகவறியும். தானும் அவனுமானால் உபயவிபூதியும் தன்பக்ஷத்திலே நிற்குமென்றிருக்கிறாளாதல், * வாயுந்திரையுகளிற்படியே யெல்லாரும் தன்னைப்போலே இழவாளரென்று இருக்கிறாளாதல். "இதெல்லாம் வேண்டா; நான்பொய்யன் என்னுமிடத்துக்கு ஒரு ஸாக்ஷி காட்டிக்காண்!" என்ன, [திண்சக்கரநிழறுதொல் படையாய்] - உன் பரிகரத்திலே காட்டுகிறேன் ; ஜயத்ரயவதத்தினன்று "பகலை இரவாக்கவேணும்" என்று ஒருக்ருத்ரிமத்திலே துணிய, அதுக்குப் பெருநிலைநின்ற திருவாழியைக் கேட்டுக்கொள். [திண்சக்கரம்] - விஶ்லேஷிப்பிக்கப்போகாதவன். உன்னிலும் களவில் திண்ணியவன் என்றுமாம். [நிழறு] - இவனுடைய களவுக்கு நிழறுசெய்து கொடுக்குமவன். [தொல்படை]-* கைகழலா நேமியானிறே. [உனக்கொன்றுணர்த்துவன் நான்] - வார்த்தைமுட்டி நிருத்தரனாய் நின்றான்: "இவனையுண்டாக்கிக் காரியம் கொள்ளவேணும்" என்று பார்த்து, "உனக்கொரு ஹிதம் சொல்லக்கேள்!கலங்கின உன்னைத்தெளியும்படி வார்த்தை சொல்லக்கேள்!" என்ன, அவனும் "இதொரு பேச்சில் இனிமை இருந்தபடி என்?" என்றான்; இவள் சொல்லும் அர்த்தத்தில் தாத்பர்யமில்லையே அவனுக்கு.

[மழறுதேன் மொழியார்கள்]-போலிகண்டு இப்படி உன்னைப்பிச்சேறப்பண்ணினவர்கள் ஆரோ? [மழறுதேன்] - மழலைத்தேன். கலங்கின தேன்போலே இருந்துள்ள பேச்சழகையுடையவர்கள். "ஆரோ" என்றவாறே "நீங்களேயன்றோ" என்று தங்கள் தலையிலே ஏறிடப்புகுகிறானோ என்று, 'நின்னருள் சூடுவார்' என்கிறாள். [மனம்வாடி நிற்க] - உன்உகப்புக்கு இலக்கானவர்கள் ஆஶ்ரயமழிந்த தளிர்போலே நெஞ்சுவாடி

நிற்க. அதாவது - * மாசறுசோதிதொடங்கி நெடுகப் பிரிவாலே நோவுபட்டு, முடியவும் பெறாதே ஸம்ஶ்லேஷிக்கவும்பெறாதே யிருக்கிற என்னைப்போலேயன்றியே அனிச்சம் பூப்போலே இருக்கிறவர்கள் நெஞ்சு உலர்ந்துநிற்க இங்கிராதேபோ என்று பேசாது இருந்தாள். "உன்பேச்சிலும் இவற்றின் பேச்சன்றோ எனக்கு ப்ராகம்" என்று, இவளுடைய பூவையையும் கிளியையும் கொண்டாடத்தொடங்கினான்; சிலரை ஆதரிக்கையாவது - அவர்களுடைமையை ஆதரிக்கையிறே. [எம்குழறுபூவையொடுங்கிளியோடுங்குழகேலே] - பாவீ! எங்களினகாணிவை: நீ நினைக்கிறவர்களின அல்ல. [குழறு பூவை] - அநக்ஷர ஸரஸமாகப் பேசுகையாலே, கலங்கின உனக்குத் தெளியவார்த்தை சொல்லவல்லவையும் அன்று; அவற்றோடே, குழகாதேகொள் - செறியாதேகொள்.

ஈடு—அஞ்சாம்பாட்டு. "ஸ்நேஹிகளாயிருப்பார்க்குக் குற்றத்தைக் குணமாகக் கொள்ளவுமாம்: நிஸ்ஸ்நேஹிகளுக்கு குணந்தன்னையே குற்றமாகக் கொள்ளவுமாம்: விஷயாநுகுணமாயிறே குணதோஷங்கள் இருப்பது; ஆகையாலே, நான் சொன்னவை எல்லாம் இப்போது இத்தலைக்குக் குறையாய்த் தோற்றுமிறே; ஆனாலும் மத்யஸ்த்தர்சொன்னதிறே அர்த்தமாய்த் தலைக்கட்டுவது" என்றான்.

[கழறேல்நம்பீ] - அது முன்னம் செய்தபடிசெய்ய: நீர்தாம் முதன்மைகொண்டாடி அஹிஹவித்துவார்த்தைசொல்லாதேகொள்ளும்எங்களை. [நம்பீ] - ப்ராபவங்கொண்டு அஹிமதம் சாதிக்கவொண்ணாதுகாணும்! 'நெஞ்சில் வெறுப்புடையார்சொல்லுமது வார்த்தையன்று; உங்களையொழிய ஸாக்ஷியுண்டோ?' என்ன, [உன்கைதவம் மண்ணும் விண்ணும் நன்கறியும்] - உன் க்ருத்ரிமம் எங்களளவன்று: ஸகலலோக ப்ரஸித்தங்காண். * வாயுந்திரையுகளில் வாஸனையாலே "ஜகத்தையெல்லாம் தம்மைப்போலே நினைத்திருக்கும்" என்றிருக்கிறார். ஸம்பந்தம் அவிஶிஷ்டமானால் அங்ஙன் நினைத்திருக்க ஒருதட்டில்லையிறே. அன்றிக்கே, ஶேஷியொருவனானால் ஶேஷவஸ்துக்களெல்லாம்ஒருமிடறா யிருக்குமிறே; ஒரு

அஞ்சாம்பாட்டு.—கழறேல் இத்யாதி. "உன்கைதவம் மண்ணும்விண்ணும் நன்கறியும்" என்கிறபதத்துக்கீடாக "மத்யஸ்த்தர் வேணும்" என்று அவன் சொல்லுகிறதாக அவன்வார்த்தையை யூஹித்து; "அதுக்கு வேறு மத்யஸ்த்தரைத் தேடவேணுமோ? அந்தரங்கைகளான நாங்கள் சொன்னது போராதோ?" என்று சொல்லுவர்களாக எண்ணி, "நீங்கள் சொன்னது நமக்கு விஸ்வஸநீயமாயிராது" என்கைக்குறுப்பான உபபத்தியைப் பலவார்த்தைகளாலே தர்ஶிப்பியாநின்றுகொண்டு, இப்படியாகையாலே மத்யஸ்த்தர் சொன்னதே அர்த்தமாவதென்கிறான் என்றருளிச்செய்கிறார் - ஸ்நேஹிகளாயிருப்பார்க்கு இத்யாதி. ஆகையாலேயென்றது - லோகபரிபாடி அதுவாகையாலே யென்றபடி. குறையாய்த் தோற்றுமிறே என்றது - "அஸங்கதங்களைச்செய்தேன்" என்றும், "பொய்யைமெய்யாக உபபாதித்தேன்" என்றும் இவ்வழியாலே குறையாய்த் தோற்றுமிறே யென்றபடி. ஆனாலுமென்றது - நீங்கள் சொன்னவார்த்தை விஸ்வஸநீயமானாலுமென்றபடி.

கழறுகை - அஹிஹவித்து வார்த்தைசொல்லுகை. இது - கீழிலநுவாதம். மத்யஸ்த்தரைக்கொண்ட ஹிமதம்ஸாதித்துக்கொள்ளுகிறபோது ஸாதித்துக்கொள்ளுகிறோம்: நீ எங்களை அஹிஹவித்து வார்த்தைசொல்லாதே கொள்ளென்கிறாள் - அதுமுன்னம் இத்யாதி. அதுமுன்னமென்றது - மத்யஸ்த்தர் சொன்னதென்றபடி. முதன்மை - பாரவம். "உன்கைதவம்" இத்யாதிக்கவதாரிகை - நெஞ்சில் இத்யாதி. நான் க்ருத்ரிமனென்றதுக்கு உங்களையொழிய ஸாக்ஷியுண்டோ என்று கூட்டுவது. நான் "க்ருத்ரிமன்" என்றுசொன்னால், எல்லாரும் அப்படி சொல்லுவர்களோ என்ன - வாயுந்திரை இத்யாதி. அப்படி நினைக்கக்கூடுமோ என்ன - ஸம்பந்தம் இத்யாதி. உபயவிபூதியும் தன்பக்ஷத்திலே நிற்கையாலே "க்ருத்ரிமன்" என்று சொல்லுவர்களென்று விவக்ஷித்தருளிச்செய்கிறார் - அன்றிக்கே

வனுக்குப் பல அடிமைஉண்டானால் தங்களில் எல்லாரும் ஒத்திருப்பார்களிறே க்ருதஸங்கேதிகளாய். மண்ணிலுள்ளாரும் விண்ணிலுள்ளாரும் அழகிதாக அறியும். விஶேஷஜ்ஞரோடு அவிஶேஷஜ்ஞரோடுவாசியற அறியும். "இவ்விடையாட்டம் இரண்டும் அறியாதாரையோ ஸாக்ஷியாகச்சொல்லுவது? * அறிவினால்குறைவில்லாத அகல்ஞாலமன்றோ இது!" என்றான். [விண்ணும்நன்கறியும்] - "ஆனாலும், அவர்களிலே ஒருத்தரைச் சொல்லச்சொல்லுங்கோள் பொய்யென்று" என்றான்; ஆனால், உனக்குப்பக்ஷபதித்திருக்கும் அவர்களிலே ஏற்றுகிறோம் கைமேலே: [திண்சக்கரநிழறுதொல்படையாய்] - குற்றந்தன்னையே குணமாகக்கொள்ளுவாரைக்கேள்! உன் க்ருத்ரிமத்துக்குப் பெருநிலைநிற்பார்க்கன்றோ தெரிவது! உன் நினைவு அறிந்து கையிலேவந்திருப்பது: "பகலையிரவாக்கவல்லையோ?" என்று கேட்டால் "ஓம்" என்றுகொண்டு ஆதித்யனைமறைப்பது; இப்படியேயிறே அவனுடைய வர்த்தநம். [திண்சக்கரம்] - அப்பொய்யிலவனைப் பேதிக்கிலும் இவனைப்பேதிக்க வொண்ணாதாயிருக்கை. ஸ்வதந்த்ரனாகையாலே கார்யாநுகுணமாக ஏறிட்டுக்கொள்ளும்அவன்: இவனுக்கு அதில்லையிறே. [நிழறுதொல்படையாய்] - நிழறுகையாவது - நடத்துகை. அதாவது - நிறங்கொடுக்கையாய், அஸத்ய ப்ரதிஜ்ஞனாயிருக்கச் செய்தே ஸத்யப்ரதிஜ்ஞனானால் பிறக்கும் கார்யத்தைப் பிறப்பித்துக் கொடுக்கை. [தொல்படையாய்] - இப்படிக்குப் பழையனாய்ப் போருகை. இவள் இப்படி சொன்னவாறே "ஸ்வபக்ஷத்திலே சிலர் இப்படிநமக்குண்டாவதே!" என்று, சொல்லலாவதுகாணாமல் கவிழ்தலையிட்டான். [உனக்கு ஒன்றுணர்த்துவன்நான்] - வாராய்! நீ சொலவற்றிருக்கவேண்டா; உனக்கு நான் நல்லதொரு ஹிதஞ்சொல்ல வாஎன்றாள். இது செவிகொடுத்துக் கேட்டானாகில், இதுக்குச் சொல்லலாவதொரு மறுமாற்றமில்லை; தனக்கு மேல்வார்த்தைசொல்லுகைக்கு ஒருபோக்கடியு

ஶேஷி இத்யாதி. விவரணம் - ஒருவனுக்கு இத்யாதி. விவரணம் - விஶேஷஜ்ஞர் இத்யாதி. இங்கே "விண்" என்று - உபரிதநலோகவிவக்ஷயா அருளிச்செய்து, நித்யவிபூதிவிவக்ஷயா அர்த்தாந்தரம் - இவ்விடையாட்டம் இத்யாதி. இடையாட்டம் - வ்யாபாரம். அறிவினாற் குறைவில்லா அகல்ஞாலமென்றது - "நமக்கு ஜ்ஞாநமில்லை" என்று, குறைவு படவும் அநுதபிக்கவும் அறியாத அகல்ஞாலமென்றபடி. 'ஏற்றுகிறோம்கைமேலே' என்றது - சாடு; ப்ரத்யக்ஷமாக இசைவிக்கிறோமென்று சாடுவுக்கு அர்த்தம்; கையில் திருவாழியைக்கொண்டு அறிவிப்பிக்கிறோம் என்று ஸ்வஹாவார்த்தம். குற்றந்தன்னையே குணமாகக் கொள்ளுவாரைக் கேளென்றது - தோஷத்தை யதாவாக அறிந்திருக்கச்செய்தேயும், நாட்டார் "தோஷம்" என்று நினையாதே, "குணம்" என்றுகொள்ளும்படி மறைக்கும் அவர்களைக் கேளென்றபடி. விவரணம் - உன்க்ருத்ரிமத்துக்கு இத்யாதி. அதாவது - உன் க்ருத்ரிமத்துக்கு ஸஹாயம் பண்ணுவார்க்கன்றோ உன் தோஷத்தை மறைக்கும் ப்ரகாரம் தெரிவதென்றபடி. பெருநிலைநிற்பார் - ஸஹாயம்பண்ணுவார். பெருநிலை நிற்கும்படியைக் காட்டுகிறார் - உன்நினைவறிந்து இத்யாதி. கையிலேவந்திருப்பதென்றது - பீஷ்மநிரஸநத்துக்காகக் கையிலேவந்திருப்பதென்றபடி. * திண்மைக் கர்த்தம் - அப்பொய்யில் இத்யாதி. பேதிக்கவொண்ணாமைக்கு ஹேதுவேதென்ன - ஸ்வதந்த்ரன் இத்யாதி. இவனுக்கதில்லையிறே என்றது - பாரதந்த்ரனாகையாலே பேதிக்கப்போகாதென்றபடி. நடத்துகையாவது - பெருநிலைநிற்கை. அர்த்தாந்தரம் - அதாவது நிறங்கொடுக்கை இத்யாதி. அதாவதென்றது - நிழறுகையாவதென்றபடி. 'கார்யத்தைப் பிறப்பித்து' என்றவிடத்திலே - "ஸ்வநிமஶேஷஹாய" இத்யாத்யநுஸந்தேயம். இப்படிக்கென்றது - இவ்வாகாரங்களுக்கென்றபடி. திண்ணிதான திருவாழியாகிற தேஜஸ்கரமான அஸாதாரணாயுதத்தை யுடையவனே! என்று ஶப்தார்த்தம். நல்லதொரு ஹித மென்றது - க்ருத்ரிமங்களைப் பண்ணாதே அங்கேறப் போ என்கையாதல், க்ருத்ரிமங்களைப்பண்ணினேனென்று சொல்விடு என்கையாதல். 'மறுமாற்றமில்லை'

மில்லை; †(இவனுக்குப் போக்கடியாவது - ''நான் ஸ்வதந்த்ரன்'' என்றுசொல்லுகையிறே.) இதெல்லாங் கிடக்கச்செய்தே பேசாதேபுகா ''இதொரு பேச்சின்இனிமை யிருந்தபடி யென்?'' என்றான். [மழறுதேன்மொழியார்கள்] - பாவியேன், நீ யாருடைய பேச்சை யாருடைய பேச்சென்று ப்ரமிக்கிறாய்! மழறுதேன் - மழலைத்தேன். கலங்கின தேன்போலே இனியபேச்சுக்களையுடையராயிருக்கை. இவன் ஸந்நிதிமாத்ரமையாலே கலக்கமும் மாறாதே யிருக்குமே. ''அவையெல்லாம் இங்கேயிறே'' என்னுமே அவன். [மொழியார்கள்] - எத்தனைபேர் உனக்கு? [நின்னருள்சூடுவார்] - ஆரேனும் பேச்சைக்கேட்டுத் தங்கள் பேச்சென்று ப்ரமிக்கும்படி பண்ணவல்லவர்கள். ஓருக்தியாலே 'ஸ்திதோஸ்மிகதஸந்தேஹ:' (ஸ்திதோஸ்மிகதஸந்தேஹ:) என்னும்படி வார்த்தைசொல்லவல்ல உன்னை ஓருக்தியாலே கலங்கப்பண்ணவல்லவர்கள். ''அதுக்கென்?'' என்றான்; ''அவர்களெங்களைப் போலல்ல காண்; நீ ப்ரயோஜந நிரபேக்ஷமாக இங்கே நிற்கச் செய்தேயும், இத்தை அறிந்துவைத்தும் க்ஷணமாத்ரவிஶ்லேஷம் பொறுக்கமாட்டாமையாலே அவர்கள் மநஸ்ஸு வாடுங்காண்! ஆஶ்ரயத்தை யிழந்த தளிர்போலேகாண் அவர்கள் நெஞ்சு வாடும்படி. 'கொங்கைமேல் குங்குமத்தின் குழம்பழியப் புகுந்தொருநாள் தங்குமேல் என்னாவி தங்கும்' என்றிருக்குமவர்களிறே அவர்கள்; அவ்வளவில் நீ உதவப்பெறாமையாலே போர நோவுபடுவர்கள்; அதுகண்டால், நீ பொறுக்கவல்லையோ?'' என்றுசொல்லிப் பேசாதேயிருந்தாள். ''உங்கள்பேச்சிலும் எனக்கு ஸாரகம் இவற்றின்பேச்சன்றோ!'' என்று அவர்களைவிடாப் பூவையையும் கிளியையும் கொண்டாடப் புக்கான்; சிலரை ஆதரிக்கையாவது - அவர்களுடைமையை ஆதரிக்கை யிறே. அவற்றை ஆதரித்து வார்த்தைகொள்ளப் புக்கவாறே, வாராய்! அவைதான் நீ ஆரினவென்றிருக்கிறாய்? அவை நீ நினைக்கிறவர்களதன்று காண்! [எம்குழறுபூவையொடும் கிளியொடும் குழகேலே] - அவை உனக்குவார்த்தைசொல்லுகிறனவல்லகாண்! அவற்றுக்குஅது ஸ்வபாவங்காண்! [குழகேலே]- நாங்கள் அந்யமாக வார்த்தை சொல்லச்செய்தேயும் கண்டாயே நீ அநந்யகதித்வந்தோற்ற வார்த்தைசொல்லுகிறபடி; அப்படியே இவற்

என்றது - திருவாழியாலே ஆதித்யனை மறைக்கையாலே, ''க்ருத்ரிமத்தைப்பண்ணவில்லை'' என்று சொல்லலாவதொரு ப்ரத்யுத்தரமில்லையென்றபடி. 'போக்கடியும் இல்லை' யென்றது - தான் அஸத்யவாதி என்னுமதுக்கு ப்ரத்யுத்தரமில்லாதபின்பு, இவர்களோடிட்டீடுகொண்டு வார்த்தைசொல்லுகைக்கு அவகாசம் இல்லையென்றபடி. 'இதெல்லாங் கிடக்கச்செய்தே' என்றது - 'உணர்த்துவன் நான்'' என்றால், ''அதெது'' என்றுகேட்குதல், ப்ரத்யுத்தரம்சொல்லுதல் செய்கையாகிற இதெல்லாங் கிடக்கச்செய்தே என்றபடி. பேசாதேபுகா - பேசாதேயிருந்து. மழலைத்தேன் - இளந்தேன். அர்த்தாந்தரம் - கலங்கின இத்யாதி. கலங்குகைக்கு ஹேதுவதென்ன - இவன்ஸந்நிதி இத்யாதி. ''மொழியார்கள்'' என்றதுக்கு அவதாரிகை - அவையெல்லாம் இத்யாதி. ''மழறுதேன்'' என்றதினர்த்தத்வயத்துக்கும்சேர ஸாவம் - ஆரேனும்பேச்சை இத்யாதி வாக்யத்வயமும் என்னுதல்; கீழ்வாக்யத்துக்குஹ்ருதம் - ஓருக்தியாலே இத்யாதி என்னுதல். ஓருக்தியாலே - ''ஸ்திதோஸ்மி'' என்கிற உக்தியாலே இத்யர்த்த:. 'எங்களைப்போலல்லகாண்' என்றது - நெடுநாள்பிரிந்து நோவுபட்டு, ஜீவிக்கவும் மாட்டாதே முடியவும்மாட்டாதே யிரித்திருக்கிற எங்களைப்போலல்லகாண் என்றபடி. விவரணம் - நீ ப்ரயோஜந இத்யாதி. ''வாடிநிற்க'' என்றதுக்குஸாவம் - ஆஶ்ரயத்தை இத்யாதி. க்ஷணமாத்ரம் விஶ்லேஷம்பொறுக்கமாட்டாமல் வாடுகைக்கடியேதென்ன - கொங்கைமேல் இத்யாதி. நாச்சியார்திருமொழி. பாசுரஸ்ய ஸ்பஷ்டோர்த்த:. இவர்களைவிட்டுப் பூவைகிளிகளையாதரிக்கிறது என்னென்ன - சிலரை இத்யாதி. ''எம்'' என்றதுக்குஸாவம் - வாராய் இத்யாதி. ''குழறுபூவை'' என்றதுக்குஸாவம் - அவை இத்யாதி. ஸ்வபாவமானபடி எப்படியென்ன - நாங்கள்அந்யமாக இத்

றின்பேச்சும் அந்யார்த்தங்காண்! ([குழறுபூவை] - அநக்ஷரஸ்ரஸமாகப்பேசுகிற பூவை. குழகுதல் - லீலாரஸங் கொண்டாடுகை.) (௫)

ஆறாம் பாட்டு.

குழகிஎங்கள்குழமணன்கொண்டு கோயின்மைசெய்துகன்மமொன்றில்லை
பழகியாமிருப்போம் பரமேயித்திருவருள்கள்?
அழகியார் இவ்வுலகுமூன்றுக்கும் தேவிமை தகுவார் பலருளர்
கழகமேறேல் நம்பீ! உனக்கும் இளைதேகன்மமே.

ஆ.—(குழகி.)-முற்பட இவளையணுகக்கூசியிருந்த எம்பெருமான், இப்படி இவள் தன்னைக்குறித்துச் சிலவார்த்தைகளைச் சொன்னவாறே, அதுவேபற்றாசாக நிர்ப்பயனாய்ச் சென்றணுகி, இவள்பாடேயிருந்த குழமணனை எடுத்தருள; "குழகியெங்கள் குழமணன்கொண்டு அடிக்கழிவு செய்தால் உனக்கென்ன ப்ரயோஜநமுண்டு?" என்று இவள்சொல்ல, "என்னுடைய ஆத்மதாரணார்த்தமாக எடுத்தேன்" என்று அவனருளிச்செய்ய, "நாங்கள் இப்பொய்களுக்குப் பழையோமல்லோமோ! உன்னுடைய இந்த நிரவதிகமான அபிநிவேசத்துக்கு நாங்கள் விஷயமாகப்போதுவோமோ?" என்று இவள் சொல்ல, "நீ யல்லது மற்றெனக்கு ஸ்ப்ருஹணீயவிஷயமுண்டோ?" என்று அவனருளிச்செய்ய, "த்ரைலோக்யத்திலுள்ளாரிலும் அழகியார் உனக்கே தேவிமைக்குறுப்பாயிருப்பார் எத்தனைபேருளர்! அதுநிற்க; நீ முந்தற எங்கள்பரிஷத்திலே வந்தேறாதே கொள்: இது உனக்கும் இளையதான கன்மம்" என்கிறாள்.

ஒ.—[குழகி] - முந்தற இப்பிராட்டியும் தோழிமாரும் அநபிமுகைகளாயிருக்கையாலே அணுகக் கூசியிருந்த எம்பெருமான், தன்முகமுத்ரையாலும் ஸவிநயமாய் ஸாவமர்ப்பமான பேச்சுக்களாலும் கலங்கி மருந்திடுபட்டாரைப்போலே இவர்கள் நிஷேதிக்கமாட்டாதேயிருக்க அதுவேபற்றாசாகக்கொண்டு நிர்ப்பயனாய்ச்சென்று அணுகி இவள்பாடேஇருந்த குழமணனை எடுத்தருள, குழகி "எங்கள் குழமணன் கொண்டு அடிக்கழிவுசெய்தால் உனக்கு என்ன ப்ரயோஜநமுண்டு?" என்ன, அவனும் "எனக்கு இனி இதுவேப்ரயோஜநம்; ப்ரயோஜநத்துக்கு ப்ரயோஜநமுண்டோ?" என்ன, "நாங்கள் இப்பொய்களுக்குப் பழையோம் அல்லோமோ? உன்னுடைய நிரவதிகமான அபிநிவேசத்து நாங்கள் விஷயமாகப் போருவுதோமோ?" என்று பிராட்டி அருளிச்செய்ய, "நீயல்லது எனக்கு ஸ்ப்ருஹணீயவிஷயமுண்டோ?" என்று எம்பெருமான் அருளிச்செய்ய, "அழகியார் இவ்வுலகு மூன்றுக்கும் தேவிமைதகுவார் பலர்உளர்: அங்கே போ" என்று இவர்கள் சொல்ல, "அங்கே போவோம்" என்று இவர்களிருந்தகோஷ்டியில் நடுவேவந்துபுகுரப்புக, "முதலிகளாயிருக்கிற உமக்குச் சிறுப்பெண்கள்கழகத்திலே புகுருகை ஈடென்னப்போராது" என்ன, "எனக்கு முதலித்தனம்வேண்டா; நான் பயலியாதி. அந்யயாக - வேறாக; உறவற என்றபடி. குழகேலே - ஆதரித்து வார்த்தைகொள்ளாதேகொள். குழறுகை - அநக்ஷர ஸரஸமாகச் சொல்லுகை. "ஸ்திதோஸ்மி கதஸந்தேஹ: கரிஷ்யே வசநம் தவ" இதி பகவத்கீதா ஸ்வஷ்டாதஶே. (௫)

யாய்ப் போகவே அமையும்" என்று அவன் அருளிச்செய்ய, *"தீமைசெய்யும் சிரீதரனை உனக்கும் இதுபாலிஶப்ரவ்ருத்தி" என்கிறாள்.

ப.—அநந்தரம், மேனாணித்துக் குழமணனையெடுத்த அவனைக்குறித்து, "உன்னுடைய ஈஶ்வரத்வம் எங்களோடேகாட்டாதே;அதுக்குத்தகுவாரோடேகாட்டு" என்கிறாள்.

குழகி எங்கள் குழமணன் கொண்டு - விளையாட்டிலே எங்கள் குழமணனையெடுத்துக்கொண்டு, கோயின்மைசெய்து - கைப்பட்ட ப்ரியத்தாலே மேன்மை பாவித்தால், ஒன்று-ஒரு, கன்மம்-காரியம், இல்லை-இல்லை; (உம்முடைய ஸரஸங்களும் மேன்மையும்), யாம் - நாங்கள், பழகி - பண்டேபழகி, இருப்போம் - இருப்புதோம்; இ-இந்த, திரு - அதிஶயிதமான, அருள்கள் - அருள்களானவை, பரமே - நாங்கள் பொறுக்கவல்லவை யல்ல; அழகியார்-(அதுக்கநுரூபமான) அழகையுடையராய், இ-(உம்முடைய ஸர்வேஶ்வரத்வத்துக்கு விஷயமான) இந்த, உலகுமூன்றுக்கும் - லோக த்ரயத்துக்கும், தேவிமை - உம்மோடொக்கமுடிசூடுகைக்கு, தகுவார் - தகுதியாயிருப்பார், பலர் - (ஷோடஶஸஹஸ்ரஶ்ச" என்னும்படி) அநேகம்பேர், உளர் - உளர்; நம்பீ-பரிபூர்ணனானமேன்மையையுடைய உனக்கு அவர்கள்திரளல்லவோ தகுவது! கழகம் - எங்கள் திரளில்வந்து, ஏறேல் - ஏறாதேகொள்; உனக்கும் - (பிறர்க்குத்தீமைசெய்கையே ப்ரக்ருதியான)உனக்கும்,கன்மம் - இந்தச்செயல், இளைது - பால்யஸூசகம். கழகம்- திரள், குழமணனென்று - ஆஶ்ரிதருடைய லீலாபரிகரமும் அவனுக்கபிமதமென்று ஸூசிப்பிக்பிக்கிறது.

இ—ஆறாம்பாட்டில், முன்பு இவளும் தோழிமாரும் அஸஹிஷ்ணுவரீகைகளாயிருக்கையாலே அணுகக்கூசினவன், தன்னுடைய முகவிகாரத்தாலும் ஸ்மிதவீக்ஷணாதிகளாலும் ஹாவகர்ப்பமான தாழ்ந்த பேச்சுக்களாலும் இவர்கள் மருந்திடுபட்டாப்போலேயாய் இவனைநிஷேதிக்கமாட்டாத தஶையிலே நிர்ப்பயனாய்ச்சென்று அணுகி, இவர்கள் பாடே இருந்தகுழமணனைமேல்விழுந்து எடுத்துக்கொண்டான். [குழகி எங்கள் குழமணன்கொண்டு] - பாவீ! இது ஆரதாகஎடுத்தாய்? எங்களதுகாண்; நீ நினைக்கிறவர்களதன்றுகாண்! என்கிறாள். "எங்களது என்றவாறே பொகட்டுப்போம்" என்று சொன்னாள்; அதுதானே அவனுக்குவிருப்பத்துக்கு உடலாயிற்று. "எங்கள் அநுமதி வேண்டாவோ உனக்கு?" என்ன, "எனக்குநிவாரகர்உண்டோ? நான்செய்தது செய்யலாமித்தனையன்றோ" என்ன, [கோயின்மைசெய்து கன்மமொன்றில்லை] - நிவாரகர் இல்லையென்று,அடிக்கழிவானசெயல்களைச்செய்தால் உனக்கு ஒருகார்யமில்லை; நீ நினைக்கிறவர்களது அல்லாமையாலே உனக்கு ஒன்றும்வாயாது;எங்களநுமதி இல்லாமையாலும் ப்ரயோஜநமில்லை. "ப்ரயோஜநமில்லையாவதென்? இதுதானே ப்ரயோஜநம்; ப்ரயோஜநத்துக்கு ப்ரயோஜநமுண்டோ?" என்ன, [பழகியாமிருப்போம்] - இப்பொய்களுக்குப்பழையோம் அல்லோமோ? [பரமேயித்திருவருள்கள்]—"'உங்களுடைய லீலோபகரணம் எனக்கு போகோபகரணமன்றோ? இதொழியவேறொரு ப்ரயோஜநம்உண்டோ?' என்று நீசொல்லுகிற அபிநிவேஶமெல்லாம் எங்களளவோ? இதுக்கு நாங்கள் விஷயமாகப்போருமோ? போலிகண்டுப்ரமிக்கும்படி உன்னைப்பண்ணினவர்கள் பக்கலிலேபோ" என்ன, "அவர்கள் ஆர்? அங்ஙனேயும் சிலருண்டோ!" என்ன, "அவர்களைச்சொல்லித்தருகிறோம்:[அழகியா

ரிவ்வுலகுமூன்றுக்கும்] -‘ த்ரைலோக்யராஜ்யம் ஸகலம்ஸீதாயா நாப்நுயாத் கலாம்’’ என்றிருக்குமவர்கள். [தேவிமைதருவார்] - உனக்குப் பட்டத்துக்குரியராய் இருக்குமவர்கள். ‘‘ராகவோஹஞ்சதி’ என்று உனக்குஸத்ருசைகளாயிருப்பார். [பலருளர்]- ஒருவரிருவர் அல்லர். ஓரடிப்பாடரல்லீரே! பரப்பரன்றோ நீர் ! ! அவர்கள் பக்கலிலே போம்’’ என்ன, ‘‘போவோம்’’என்று இவர்கள் திரளிலே வந்து புகுரப்புக, [கழகமேறேல்]-‘‘எங்கள்திரளிலேவாரு தேகொள்’’ என்ன,‘‘எனக்குக்குற்றமென்?’’என்ன, [நம்பீ]- ஸமஹமாத்யாத்மகுணேபேதர்திரளிலேயன்றோநீர்புகுவது! அவர்களன்றோஉம்மைக்கிட்ட உரியார்; சிறுப்பெண்கள்திரளிலே புகுகை ஈடன்று’’ என்ன, ‘‘ஆனால் நாம் செய்ததுக்கு நிவாரகர் உண்டோ?’’என்ன, [உனக்குமிளைதேகன்மமே]-* தீமைசெய்யும் சிரீதரனை உனக்கும் இது ஸாவிஸப்ரவ்ருத்தி என்கிறாள். ‘‘ஸர்வேஸ்வரனாய் அவாப்தஸமஸ்தகாமனானஅவனைச் சில பெண்கள் ‘எங்கள்திரளிலே புகுராதேகொள்’என்ன, புகமாட்டாதே பேகணித்துநின்ற இந்த ஆஸ்ரிதபாரதந்த்ர்யத்தை, உத்கர்ஷம்சொல்லப்பொறாத ஸம்ஸாரத்திலே தங்களைஒழிய ஆர் விஸ்வஸிக்க எழுதியிட்டுவைத்தார்கள்’’ என்றுபட்டர் அருளிச்செய்தார்.

ஈடு.—ஆறும்பாட்டு. தங்களகவாயிலோடுகிறது தெரியாமல் மறைத்துக்கொண்டு அநபிஹவநீயைகளா யிருக்கிற இப்பிராட்டியையும் தோழிமாரையுங்கண்டு,அவன் தன்முக முத்ரைகளாலும், பாவகர்ப்பமான உக்திகளாலும், அத்தை அநுவதித்தாற்போலேயிருக்கிற விலாஸசேஷ்டிதங்களாலுமாக இவர்கள் அபிசந்தியைக்குலைத்து, இனி இவர்கள் நான் சொன்னவையெல்லாம் ‘‘வேண்டா’’ என்னமாட்டாதவர்க ளென்னும்படி வாய்மாளப் பண்ணி, அவ்வளவிலேசென்று இவளுடைய லீலோபகரணமான குழமணனை எடுத்துக் கொண்டான்.

[குழகியெங்கள்குழமணன்கொண்டு] என்கிறார்கள். குழகுகையாவது - யுவாக்களாயிருக்கும் அவர்கள், எதிர்த்தலை தங்களுக்கு அஹ்வ்யமானால் அவர்களைச் சேரவிட்டுக் கொள்ளுகைக்காகப் பண்ணும் சேஷ்டிதங்களுக்குப்பேர். மேன்மையாலேயாகவுமாம், கீழ்மையாலேயாகவுமாம்; ஏதேனுமாக இவ்வளவுகிட்டிநின்று அவர்கள்நினைவைக்குலைத்துக் குழமணனை எடுத்துக்கொள்ளும்படியாகக் கைப்புகுந்தானிறே. [எங்கள்குழமணன் கொண்டு] - அதுதான் நீ யாரதென்று இருக்கிறாய்? அது நீ நினைக்கிறவர்களதல்ல காண்; அது எங்களது. உனக்குஇதினால் ஒருகார்யமில்லை. ‘‘‘எங்களது’ என்றவாறே போகட்டுப்

ஆறும்பாட்டு.—குழகி இத்யாதி. ‘‘குழகியெங்கள் குழமணன்கொண்டு’’ என்கிறபதத்திலே நோக்காக அவதாரிகை - தங்களகவாயில் இத்யாதி. ‘‘குழகியென்றது:குபாவம் - தன்முக இத்யாதி. அத்தை - அந்தபாவத்தை. அநுவதிக்கை - ஸூசிப்பிக்கை. ‘சொன்னவையெல்லாம்’ என்றது - செய்தவையெல்லாமென்றபடி. ‘வாய்மாளப்பண்ணி’ என்றது - ஈடுபடுத்தியென்றபடி.

‘‘குழகி’’ என்றால் - ‘முகமுத்ரைகளாலும்’ என்றுதொடங்கிச்சொன்ன இவையெல்லாங் காட்டுமோ? என்ன - குழகுகையாவது இத்யாதி. ‘‘குழகி’’ என்கிறஇது - ஸாமாந்யஸப்தமாகையாலே, கீழ்ச்சொன்னவற்றையெல்லாம் காட்டும் என்றுகருத்து. ‘‘கோயின்மைசெய்து’’ என்கிற பதத்தாலே - மேன்மைதோற்றியிருக்க, முகமுத்ரைதொடக்கமானவற்றால் குழமணன்கொள்ளுகிறபடி எங்ஙனே? என்ன - மேன்மையாலே இத்யாதி. குழமணன் - மரப்பாச்சி. ‘‘எங்கள்’’ என்றவந்தாம்‘‘கொண்டு’’ என்கிறபதத்துக்கு வாஸனை - எங்களதென்றவாறே இத்யாதி. கோயின்மை

போம்'' என்று சொன்னார்கள்; அதுதானே அவனுக்குப் பற்றுகைக்குஉடலாயிற்று. "எங்களநுமதிவேண்டாவோவுனக்கு ? " என்ன, "எனக்கு நிவாரகருண்டோ! நான்செய்வது செய்யலாமித்தனையன்றோ ? " என்ன, [கோயின்மைசெய்து கன்மமொன்றில்லை] - நீசெய்கிற அடிக்கழிவால் உனக்கொரு ஃபலமில்லை. கன்மமென்று - கன்மஃபலத்தை நினைக்கிறது. ஆராய்ச்சியில்லாதவிடத்தே செய்யுமவற்றைச் செய்யாதே கொள்ளாய். அவை செய்தாலும்ஆமிறே உனக்கொருப்ரயோஜநமுண்டாகில். கோயின்மைசெய்கை யாகிறது - இவர்கள் இசைவின்றிக்கே யிருக்க இவர்கள் லீலோபகரணங்களை எடுத்துக்கொள்வது, அவர்கள் வேண்டவேண்டக் கொடாதொழிவதாய் மிறுக்குப்பண்ணுகை. [கன்மமொன்றில்லை] - நீ போகிறவிடத்துக்கு இவை கொண்டுபோகவொண்ணாது; உனக்கு இவைதான் வேண்டா: இனி எங்களுக்கோ அநபிமதம்; ஆனபின்புஇச்செயலாலென்ன ப்ரயோஜநமுண்டு? இவைகொண்டுபோனால், தங்களதல்லாமையாலே அவர்கள் முகம் பாரார்களே; நீ ஆதரித்தவிஷயத்தினதல்லாமையாலே உனக்குவேண்டா, எங்கள் இசைவோடேகொடு போகாமையாலே எங்களுக்கு ப்ரியமன்றே! ஆனபின்பு, இத்தால்வருவதொரு பேறில்லை காணென்றார்கள். " அதுகிடக்க; நான் முன்னம் உங்களோடேகககண்டன்; எனக்கும் ஒருப்ரயோஜநமில்லை, இத்தை ஸாதநமாகக்கொண்டு சாதிக்கவேண்டுவதோர் அர்த்தங் கண்டு வைத்திலேன்; இதுதானேயிறே எனக்குப்ரயோஜநம்; ப்ரயோஜநத்துக்கு ஒருப்ரயோஜநமுண்டோ?" என்றான்; அங்ஙனேயானவன்று அநவஸ்த்தைவரத்தொடங்குமிறே. [பழகியாமிருப்போம்] - இப்பொய்களுக்குப் பழையோமல்லோமோ! எங்களுக்கன்றுகாண் இவை சொல்லுவது! நீசொல்லும் பொய்யெல்லாம் "மெய்" என்றிருப்பார்க்குச்சொல்லாயென்றார்கள். அவனும், " இத்தலையையொழிய எனக்குச்செல்லாது " என்னுமிடந் தோற்றச் சிலக்ரியைகளைப் பண்ண, [எம்பரமேயித்திருவருள்கள்] - நீ எங்களளவல்லாத அபிநிவேசத்தைப்பண்ணி, குளப்படியிலே கடலை மடுத்தாற்போலே நீசெய்கிறவையெல்லாம் எங்களால்பொறுக்கப்போமோ? நீசெய்கிறவையெல்லாம் பொறுக்கவல்லார் வேறே சிலவர்களென்றார்கள். " அவர்களார் ?" என்றான்: [அழகியாரிவ்வுலகு மூன்றுக்கும்] -

---

யாவது - நியாமகர்கீழடங்காத ஆகாரமாகையாலே - 'நீசெய்கிற அடிக்கழிவால்' என்கிறார்கள். அடிக்கழிவு - அடைவுகேடு. கோயின்மைசெய்து - மேன்மைபாவித்துஇத்யர்த்த:. குழகி - வசீகரண வ்யாபாரங்களைப்பண்ணி என்று ஶப்தார்த்தம். கன்மம் - கர்மம். "கன்மம்" என்றால் - பலத்தைக்காட்டுமோ ? என்ன - **கன்மமென்று** இத்யாதி. "கோயின்மைசெய்து" என்றபதத்துக்கர்த்தம் - **ஆராய்ச்சி** இத்யாதி. '**ஆராய்ச்சியில்லாதவிடத்தே**' என்றது - அராஜகதேஶத்திலேயென்றபடி. "கன்மமொன்றில்லை" என்றதுக்கர்த்தம் - **அவைசெய்தாலும்** இத்யாதி. "கோயின்மைசெய்து" என்று இவர்கள் சொல்லுகைக்கு அவன்செய்தகோயின்மையேதென்ன - **கோயின்மைசெய்கையாகிறது** இத்யாதி. "ஒன்று" என்றதுக்குபாவம் - **நீபோகிறவிடத்துக்கு** இத்யாதி. அடைவே கீழ்வாக்யவிவரணம் - **இவைகொண்டுபோனால்** இத்யாதி. மேலிற்பதத்துக்கவதாரிகை - **அதுகிடக்க** இத்யாதி. 'அது கிடக்க' என்றது - எனக்கு உங்கள்பக்கல் ஸ்நேஹமில்லையென்றதுகிடக்கவென்றபடி. '**அங்ஙனேயானவன்று**' - ப்ரயோஜநத்துக்குப்ரயோஜநம் கல்பிக்குமன்று. 'அநவஸ்த்தை'யாவது - **அதுக்கும் ப்ரயோஜநம், அதுக்கும்ப்ரயோஜநமாகை.** "பழகியாமிருப்போம்" என்றதுக்கு ஹார்த்தபாவம் - **எங்களுக்கன்றுகாண்** இத்யாதி. "எம்" என்றத்யாஹரித்து - 'எம்பரமே' என்கிறார். "அழகியாரிவ்வுலகுமூன்றுக்கும்" - உலகுமூன்றும் விலையாகப்போரும்படி அழகியாரென்றுவிவக்ஷித்து, அதுக்கு ப்ரமாணம் - **த்ரைலோக்யராஜ்யம்** இத்யாதி. "ராஜ்யம்வா த்ரிஷு லோகேஷு ஸீதா வா ஜநகாத்மஜா । த்ரைலோக்யராஜ்யம் ஸகலம் ஸீதாயா நாப்நுயாத்கலாம்" இதிஸுந்தர

"த்ரைலோக்யராஜ்யம்ஸகலம் ஸீதாயா நாப்நுயாத்கலாம்" (த்ரைலோக்ய ராஜ்யம்ஸகலம்ஸீதாயாநாப்நுயாத்கலாம்) - மூன்றுலோகத்தையும், அத்தோடே விஶ்வ ஶப்தவாச்யனானவன்தன்னையுங்கூட ஒருதட்டாக்கினால், பிராட்டியுடைய ஒருகலா மாத்ரத்துக்கு எடை நிற்கமாட்டாது. "அவர்களெங்ஙனேயிருப்பர்கள்?" என்றான்: [தேவி மைதகுவார்]-"உனக்குப் பட்டங்கட்டப்போரும்படியாயிருப்பார்"என்ன, "ஆனால்,எனக்கு உபேக்ஷிக்கைக்கும் சிலர்வேணுமே!" என்றான்: [பலருளர்] - உனக்குப்போகடுகைக்கும் விஷயமங்கே உண்டென்கிறார்கள். ஒருத்தனுக்கொன்று ஸ்வபாவமானால், அது வேறோ ரிடத்தே போங்காட்டில் குலையாதிறே; அப்படியே, அங்குள்ளாரையும் போகடுகை இவனுக்கு ஸ்வபாவமென்னுமிடந்தோற்றச் சொல்லுகிறாள். "ஓரடிப்பாடரல்லீரேநீர்; பரப்பரல்லீரோ! அவர்கள்பக்கலேறப்போம்" என்ன, "ஆனால், அங்குப் போம்வழி யும், போனாற்செய்யும்படிகளும் எல்லாம் கேட்டுப்போகவேணுமே; இனித்தான் அந்தேவாஸிகளுக்கிறே ஒன்று சொல்லுவதும்; "பரிப்ரஶ்நேந ஸேவயா" (பரிப்ரஶ் நேநஸேவயா) என்றிறே கேட்பார்படி; ஆனபின்பு, நாலடிகிட்டநின்று கேட்கவேணும்" என்று திரளிலேவந்து புகுரப்புக்கான்: [கழகமேறேல்நம்பீ] - அவர்கள்முன்னமானாரா கிடுக; †ஏறிட்டுக்கொள்ளுவதெங்களுக்குப் பரமோ?நீர் முன்னம் எங்களோலக்கத்தில் புகுரா தேகோள்ளும். இவ்விடத்தே பட்டரருளிச்செய்வதொரு வார்த்தையுண்டு:—'ஸமஸ்தகல் யாணகுணாத்மகனாய் உபயவிபூதியுக்தனாய் ஸர்வாதிகனாய் ஸர்வநியந்தாவாயிருக்கிற ஸர் வேஶ்வரன் நாலிடைப்பெண்களிருந்தவிடத்தே புக்கல்லது நிற்கமாட்டாத செல்லாமை விளைய அவர்கள் 'நீயிங்குப்புகுராதேகோள்' என்ன, விலங்கிட்டாற்போலே பேரவும் திரிய வும் மாட்டாதே தடுமாறிநின்றானென்கிற ஸௌஶீல்யம் † (தங்களையுமிவர்களையுமொழிய)

காண்டே. [16;14] * ஸகலஶப்தத்துக்கர்த்தம் - விஶ்வஶப்தவாச்யனான இத்யாதி. 'கலாமாத்ரத் திக்கு என்றது - அழகிலே கலாமாத்ரத்துக்கென்றபடி. அவர்களெங்ஙனேயிருப்பர்களென்றது - அவர்கள் நமக்கு உபேக்ஷாவிஷயமாயிருப்பர்களோ? ஆதரவிஷயமாயிருப்பர்களோ? என்றபடி. தேவிமை - தேவியாகைக்கும். ஆனாலென்றது - அவர்களெனக்கு ஆதரவிஷயமானாலென்றபடி. உபேக்ஷிக்கிறதுக்குத் தாங்களே விஷயமித்தனையொழிய, அங்குள்ளாரை இவன்போகடுமோ? என்ன - ஒருத்தனுக்கு இத்யாதி. "அழகியார்" இத்யாதிக்கு - இவ்வுலகம்மூன்றும் விலையாம்படியான அழகை யுடையராய்; தேவியாகைக்கும் தகுதியாயிருப்பார் அநேகம்பேருளர் என்று ஶப்தார்த்தம். தேவி யாகைக்கும் - பட்டமஹிஷியாகைக்கும். "மூன்றுக்கும்" என்றது - மூன்றுமென்றபடி. "அழகை யுடையராய்த் இந்தலோகத்ரயத்துக்கும் ஒக்கமுடிசூடுகைக்குத் தகுதியாயிருப்பார் அநேகம்பேருளர்" என்று இருந்தபடியே உரையில் ஶப்தார்த்தம். "பலர்" என்றதுக்குபலிதம் - ஓரடிப்பாடர்இத்யாதி. அதாவது - உபேக்ஷாவிஷயமும் உண்டென்றபடி. ஓரடிப்பாடர் - சங்குசிதர். தூரவிருந்துகேட்க வொண்ணாதோ? என்ன - இனித்தான் இத்யாதி. அந்தேவாஸியானால் கிட்டவரவேணுமோ? என்ன, பரிப்ரஶ்நேஇத்யாதி. "தத்வித்தி ப்ரணிபாதேந பரிப்ரஶ்நேந ஸேவயா । உபதேக்ஷ்யந்தி தே ஜ்ஞாநம் ஜ்ஞாநிநஸ்தத்வதர்ஶிந:" இதி பகவத்கீதாஸு [4;34]. 'ஏறிட்டுக்கொள்ளுவதெங்களுக் குப் பரமோ' என்றது - இதுக்குமுன்பில்லாத ஆசார்யத்வத்தை ஏறிட்டுக்கொள்ளுகை எங்களுக்குப் பரமோவென்னுதல்; போம்வழியும் போனால்செய்யும்படிகளும் சொல்லுமத்தை ஏறிட்டுக்கொள்ளுகை எங்களுக்குப் பரமோவென்னுதல். இவர்கள் "கழகமேறேல்" என்றவாறே அவன் ஸ்தப்தனாய்நின்ற படியை அநுஸந்தித்து பட்டர்ஈடுபாடு - இவ்விடத்தேபட்டர் இத்யாதி. இது - ப்ராஸங்கிகம். 'நாலிடைப்பெண்கள்' என்றது - "ஆய்ச்சியோம்" என்றத்தைப்பற்ற. வ்யாஸாதிகள் என்றது - க்ருஷ்ணவ்ருத்தாந்தத்திலே ஈடுபட்டவர்களாகையாலே. ஆதிஶப்தத்தாலே - ஆழ்வார்களைச்சொல்லு

† ஏறிட்டுக்கொள்ளாதது என்றும் பாடமுண்டென்பது அடையவளைந்தானரும்பதத்தா லேற்படுகிறது.

ஆரறிந்து கோண்டாட வ்யாஸாதிகளேழுதியிட்டுவைத்துப்போனார்களோ?'' என்றருளிச் செய்வர். "ஸர்வநியந்தாவானவன் சிலர்க்கு நியமிக்கலாம்படி எளியனானான்" என்றால், "இதுமெய்" என்று கைக்கொள்ளுவாரைக் கிடையாதிறே. ஶாஸ்த்ரங்களேல்லாம் ஈஶேஶி தவ்யவிபாகம்பண்ணி ஒருங்கவிடாநிற்க, அத்தலையித்தலையாகச் சோல்லுகிறதிறே இது! 'சாதுகோட்டியுட்கோள்ளப்படுவார்' என்றுசோல்லுவது - வைஷ்ணவர்களுடைய திரளிலே ஒருவன்வந்துபுகுந்தால் துர்மாநத்தாலே மலையிட்டமுக்கினாற்போலே இருக்கையன்றிக்கே, நீரும்நீரும் கலந்தாற்போல இவன் புகுந்தமை தெரியாதபடியிருந்து, அவர்கள்இடங்கோடுத்து அவர்கள் பரிக்ரஹிக்கையிறே ஒருவனுக்கு நன்மையாவது ; இது இவர்களுக்கேயன்றியே, அவனுக்குமோத்திருக்கிறபடி; "**ஸசாபிராமஃபரிஷத்கதஶ்ஶநைர்ப்பூஷயாஸக்தமநாபபூவஹ**" (ஸசாபிராமஃபரிஷத்கதஶ்ஶநைர்ப்புபூஷயாஸக்தமநாபபூவஹ) - பெருமதிப்பராய்ப் பாட்டறிந்து கோண்டாடுகைக்குப் போரும்படி பேரறிவாளரான வித்வஜ்ஜநங்களும் தாமுமாகப் பேரோலக்கமிருந்து பிள்ளைகளைப் பாடவிட்டுத் தாம் ஸிம்ஹாஸநஸ்த்தராயிருந்தார்; இவர்கள் தாழவிருக்கத் தாமுயரவிருந்த இடம் தமக்கு அநபிமதமாகையாலே ஸிம்ஹாஸநத்தினின்றும் மேள்ள இழிந்து, தெரியாதபடி இவர்கள் நடுவே புகுந்திருந்தார். அது என்னேன்னில்:-ராஜா எழுந்திருந்தால் ஓலக்கம் கிளம்புமிறே; தாம் எழுந்திருந்தவாறே ஓலக்கம் கிளம்புகிறதாகக்கருதி, மேள்ளப்புகுந்திருந்தா ரேன்கிறது. இங்ஙன்வேண்டுவானேன்? என்னில்; **அநுபுபூஷயா** என்னுதல், **ஸிஷாஸயா** என்னுதல்-'இவர்களோடேகூடியிருந்து அநுபவிக்கைக்காக' என்னுதல், 'தாமுளராகைக்காக' என்னுதல். [நம்பீ] - உமக்கும் எங்களுக்கும் உள்ள நேவோசிபாரீர்! உமக்கோன்று கேட்கவேண்டும்படியாயிருந்ததோ? முதலிகளாயிருக்கிற உமக்கு நாங்களிருக்கிற இடத்தே

கிறது. "ஆரறிந்துகொண்டாட" என்பானென்? கொண்டாடுவாரில்லையோ? என்ன, ஸர்வநியந்தாவானவன் இத்யாதி. 'ஶாஸ்த்ரஞ்சொன்னால் மெய் என்றுகொள்ளலாமே' என்ன - ஶாஸ்த்ரங்களேல்லாம் இத்யாதி. 'ஒருங்கவிடுகை' யாவது - ஒருதலைப்படவிடுகை. 'அத்தலையித்தலையாகச் சொல்லுகிறதிறே' என்றது - நியந்த்ருநியாம்யபாவத்தையாரூடி, அவனை நியாம்யனாயும் இவர்களை நியந்த்ரிகளாயும் சொல்லுகிறதிறே யென்றபடி. "சழகமேறேல்" என்கையாலே - ஸ்ரீவைஷ்ணவ கோஷ்ட்யந்தர்ப்பாவம் ஶேஷபூதர்க்கேயன்றிக்கே ஶேஷியானவனுக்கும் உத்தேஶ்யமென்கிறார் - சாதுகோட்டி இத்யாதி. ஸ்ரீவைஷ்ணவர்கள் திரளிலேபுகுந்தால் அவர்கள் ஸஹ்ருதயமாக பரிக்ரஹிக்கும்படியாவர்கள் இத்யர்த்தஃ. பெரியாழ்வார்திருமொழி, மூன்றாம்பத்து, ஆறாந்திருமொழி சாற்றுப்பாட்டு - "குழலிருண்டு" இத்யாதி. "உட்கொள்ள" என்றதுச்சுபாவம் - வைஷ்ணவர்களுடைய இத்யாதி. 'துர்மாநத்தாலே' - வருகிறவனுடைய துர்மாநத்தாலே யென்றபடி. அப்படி ஒத்திருக்குமோ? என்ன - ஸஹாபி இத்யாதி. "ததஸ்துதௌராமவசஃ ப்ரசோதிதாவகாயதாம் மார்க்க

விதாநஸம்பதா । ஸசாபிராமஃ பரிஷத்கதஶ்ஶநைர்ப்புபூஷயாஸக்தமநாபபூவஹ" இதிபாலகாண்டே. [4;31½] "ஶநைஃ" (ஶநைஃ) - *என்றதுக்கர்த்தம் -* தெரியாத *படியென்று: 'அதுவென்? என்னில்' என்றது - ஸிம்ஹாஸநத்திலிருந்தவர்க்கு இங்ஙன்வேண்டுவானென் என்னில் என்றபடி 'இங்ஙன்வேண்டுவானென்னென்னில் என்றது - மெள்ளவாகிலும்இவர்கள்நடுவே புகுரவேண்டுவானென்? ஸிம்ஹாஸநத்திலேதானே யிருந்துவிட வொண்ணாதோ! என்றபடி. 'அநுபுபூஷயா' என்றவிஸர்க்கத்தைக்கூட்டினது - "யாதோஜீநநாவஸமாயாஃ" என்கிறந்யாயத்தைப்பற்ற. உக்தார்த்தத்வயவிவரணம் -* இவர்களோடே இத்யாதிவாக்யத்வயம். *'தாமுளராகைக்காக' என்றது - "ஸிஷாஸதாயாஃ" என்கிற தாதுவைப்பற்ற. தாத்பர்யாந்தரம் - முதலி*

புகுருகைபோருமோ? என்றார்கள். "அழகிது! நான் முதலியாகிலும் ஆகிறேன்; பயலியாகிலும் ஆகிறேன்; என்னைத்தான் அறிகையில்லையோ! * 'தீமைசெய்யும்சிரீதரன்' என்றன்றோ என்னைச்சொல்லுவது? ஆனபின்பு, நாலுபேண்களிருந்தவிடமெங்கும் தீம்புசெய்கை எனக்கு ஸ்வரூபமன்றோ?" என்றான். [உனக்கு மிளைதேகன்மமே]- தீம்புசெய்கையிலே சமைந்திருக்கிற உனக்குங்கூட இதுபாலிசம். தீமைசெய்வார்க்கும் ஒருப்ராப்திவேண்டாவோ? (சு)

ஏழாம் பாட்டு.

கன்மமன்றுஎங்கள்கையில்பாவைபறிப்பது கடல்ஞாலமுண்டிட்ட
நின்மலா ! நெடியாய்! உனக்கேலும்பிழைபிழையே
வன்மமேசொல்லிஎம்மைநீவிளையாடுதி அதுகேட்கில்என்னைமார்
தன்மபாவமென்னார் ஒருநான்றுதடிபிணக்கே.

ஆ—(கன்மமன்று.) - இப்படி அவன் நிவார்யமாணனாயிருக்கச்செய்தேயும் இவளுடைய பரிஷத்திலேபேறி இவளுடைய கையிற்பாவையைப் பறித்தருள, "எங்கள் கையிற்பாவை பறிப்பது உனக்கவத்யாவஹமாம்; அநந்ய ப்ரயோஜநனாய்க்கொண்டு ஸர்வாத்மாக்களையும் வயிற்றிலேவைத்து மஹாகுணத்தை விளைத்தாற்போலே, இத்தீமையும் உனக்கு மஹாவத்யத்தைவிளைக்கும்" என்று இவள்சொல்ல,அதன்மேலே பணிமொழிகளை இவன் அருளிச்செய்ய, "இங்ஙனே அதிதுஸ்ஸஹமான வார்த்தைகளையே சொல்லி எம்மைநீவிளையாடுதி; அதுகேட்கில் என்னைமார் இதுகூடும்கூடாது என்று பாராதே உன்னையுபேக்ஷித்து ஒருநாளும் கடாக்ஷிப்பதும் செய்யார்" என்கிறாள்.

ஒ.—[கன்மமன்று] - இவர்கள்கழகத்திலே ஏறப்புக்கு இவர்களாலே நிவார்யமாணனாய் ஏறப்பெறாதொழிந்த எம்பெருமான், செய்யலாவது காணாமையாலே, அவர்களுடைய லீலோபகரணமான பாவையைச் சென்றெடுக்கக்கணிசிக்க, அத்தையறிந்து பிராட்டியும் தோழிமாருமாகப் பாவையைச் சென்றெடுக்க, அத்தை இவன்தான் அவர்கள் கையினின்றும் பறிக்கப்புக, அவர்களும் எங்கள் கையில் பாவையைப்பறிப்பது உனக்குப் போராதென்றுசொல்ல, அவனும் "பஹுகுணனனவெனக்கு அல்பதோஷம் தோற்றப்படுமோ?" என்றுஅருளிச்செய்ய; அவர்களும் நிர்ஹேதுகமாக ஜகத்தை ப்ரளய காலத்திலே திருவயிற்றிலேவைத்து பரிஹரிக்கை†தொடக்கமான அபரிச்சேத்யமஹாகுணங்களையுடையையாயிருந்தாயேயாகிலும் அக்குணங்களுக்கு நிறம்தருமாபோலே இப்போராச்செயலும் உனக்குஅவத்யாவஹமென்று அருளிச்செய்ய, அதுக்குமேலே சில பணிமொழிகளை எம்பெருமான் அருளிச்செய்ய,"இப்படிபொறுக்கவொண்ணாத வார்த்தைகளைச்சொல்லி எங்களோடே நீவிளையாடுதி: அதுகேட்கில் என்னைமார்கூடும் கூடாதென்று நிரூபியாதொழிவர்கள்," என்ன, "ஆனால்தான் வந்ததென்?" என்ன, "ஒருநாளாக அவர்க

களாய் இத்யாதி. பயலி - பாலிசன். பாலிசமாவானென்? என்ன - தீமைசெய்வார்க்கும் இத்யாதி. பாலிசம் - சப்பளை. கன்மம் - கர்மம். இந்தக்கார்யமென்றபடி 'தீமைசெய்யும்சிரீதரன்' - தீம்புசெய்யும் ஸ்ரீதரனித்யர்த்தஃ. நாச்சியார்திருமொழி, இரண்டாந்திருமொழி, முதற்பாட்டு - "நாமமாயிரம்" இத்யாதி. "கழகம் - திரள். இளைது - பால்யஸூசகம்" என்றுஉரையிலர்த்தம். (சு)

† தொடக்கமானவையென்று இருக்கலாமெனத் தோன்றுகின்றது.

ளுக்கும் உனக்கும் விப்ரதிபத்தியாய்முடியும்'' என்கிறாள். ஐம்மார் - ஆணுடன் பிறந்தார்.

ப.—அநந்தரம், ப்ரயோஜநநிரபேக்ஷமாக ஸர்வலோகத்தையும் ரக்ஷிக்கும் பெருமையையுடைய உனக்கு, எங்களை ஸ்பர்ஶித்துக் கையில் பாவையைப்பறிக்கிற இது கார்யமன்று என்கிறாள்.

எங்கள் - எங்கள், கையில் - கையிலிருக்கிற, பாவை - பாவையை,, பறிப்பது- தீண்டிப்பறிப்பது, கன்மம் - காரியம், அன்று - அன்று; கடல் - ப்ரளயார்ணவத்திலே அழுந்துகிற, ஞாலம் - ஜகத்தை, உண்டிட்ட - அமுதுசெய்து வயிற்றிலேவைத்து ரக்ஷித்து, நின்மலா - அதுதானே ப்ரயோஜநமாம்படியான ஔஜ்ஜ்வல்யத்தையுடையை யாய்! நெடியாய் - (''இன்னமும்செய்ததுபோராது'' என்று அவற்றை வெளிநாடுகாட்டி ரக்ஷிக்கும்) பெருமையையுடையவனே! உனக்கும் - இப்படிப்பட்டஉனக்கும், பிழை - (இப்படி அபலைகளா யிருப்பாரைத் தீண்டிப்பறித்தா யென்கிற)பிழை, பிழையே - அவத்யமாயேவிடும்; நீ-(இப்படிபெரியையாயிருக்கிற) நீ, வன்மம் - (''நானுங்களைஸ்பர்ஶிக்கலாமோ? அன்றுஆரைநினைத்திருந்திகோள்' என்றுபூர்வஸம்ஶ்லேஷஸ்மரணத்தைப்பண்ணுவித்து எங்களுக்குநினைக்கவும் சொல்லவுமொண்ணாத) மர்மங்களை, எம்மை - எங்களை நோக்கி, சொல்லி - சொல்லி, விளையாடுதி - லீலைகொண்டாடாநின்றாய்; என்னைமார் - எங்களுடைய ஆணுடன்பிறந்தார், அதுகேட்கில் - அதுகேட்பராகில், தன்மபாவம் - தர்மமும்பாபமுமென்று, என்னார் - நிரூபியார்கள்; ஒருநான்று - ஒருநாள் வரையிலே வந்து, தடி-தடியையெடுத்து, பிணக்குஆம் - பிணங்கும்படியாம். என்னைமார் - ஆணுடன் பிறந்தார். என்னைமார் என்கிறது - ஸஹஜமான தூர்மாநதம்பமதாதிகள் பகவத்விரோதிகளென்று ஸூசிப்பிக்கிறது. 'பாவை' என்கிறது - ஆஶ்ரிதவிஷயத்தில் பரதந்த்ரமான அசித்வஸ்துவும் ஈஶ்வரனுக்கு உத்தேஶ்ய மென்று ஸூசிப்பிக்கிறது.

இ.—ஏழாம்பாட்டில், ''கழகமேறேல்நம்பீ'' என்று - தங்கள் திரளிற்புகுரவொட்டிற்றிலர்கள்; அவனும் செய்யலாவதுகாணாமையாலே அவள்கையிற் பாவையைக் கடாக்ஷித்தான்; ''ஸ்வ்ருக்ஷிதஜ்ஞாஸ்தகோஸலா:'' என்று நினைவறியுமவர்களாகையாலே எல்லாருங்கூட அத்தைப்பற்ற, இவன் அத்தை அவர்கள் கையினின்றும் பறிக்கப்புக்கான். [கன்மமன்றெங்கள் கையிற் பாவைபறிப்பது]-எங்கள்கையிற் பாவைபறிப்பது கார்யமன்று, நீ நினைக்கிறவர்களது அல்லாமையாலே உனக்கொரு ப்ரயோஜநமில்லை. எங்கள் அநுமதியில்லாமையாலே பறிக்கப்போகாது. தன்னுடைய ஶக்திகொண்டு அழிக்கலாவது எதிரிகளாகிலிறே! அபலைகள் கையில் அதுபறிக்க ஶக்தனல்லனே. ஒருகலத்திலே உண்பாரைப்போலே அவர்கள்கையிலும் தன்கையிலுமாக இருக்கிலிறே ப்ரயோஜநமுள்ளது. ''ப்ரயோஜநமில்லாமையே அன்று, உனக்குகுணஹாநியாய் வரும்'' என்ன, ''பஹுகுணனான எனக்கு அல்பதோஷம் தோற்றப்படுமோ?'' என்ன, [கடல்ஞாலமுண்டிட்ட நின்மலாநெடியா யுனக்கேலும்பிழைபிழையே] - நிர்ஹேதுகமாக ப்ரளயாபத்திலே ஜகத்தைவயிற்றிலேவைத்து நோக்கினவனாய், ''ஆகாஶவந்நிர்லேப:'' என்கிறபடியே ஹேயப்ரத்யநீகனாய், ''யதோவாசோநிவர்த்தந்தே'' என்று அபரிச்சேத்ய மஹாகுணனாயிருந்த உனக்கு வந்ததாகிலும், பிழையானது பிழையேகாண். லோகத்துக்கு ப்ரகாஶகனான சந்த்ரனுக்கு உண்டானமறுவும் லோகப்ரஸித்தமன்றோ! குணங்கள் புக்கவிடமெங்கும் குணஹாநியும் புகுங்காண். குணங்கள் உனக்கு நிறந்

தருமாபோலே இ க்ஷுத்ரப்ரவ்ருத்தியும் உனக்கு அவத்யாவஹங்காண் என்ன, மேற் சொல்லலாவது கண்டிலன்; அவர்கள் செவியிலே, "இன்னது சொன்னான்" என்று அநுபாஷிக்க வொண்ணாதாயிருப்பதொன்றைச் சொன்னான். அதாவது - ப்ரணய வேளையிற் பணிமொழிகள்: [வன்மமே சொல்லியெம்மை நீ விளையாடுதி] - நினைக்கவுங் கூடக் கூசவேண்டும் நெஞ்சறிந்த வார்த்தையைச் சொல்லி எங்களோடே விளையாடுதி. இவன்ஹேமபுத்தியாலே நோக்கழியச்சொன்ன வார்த்தையே தங்களுக்கு அவனோடு ஸாவபந்யம் இல்லையென்று தோற்றுகைக்காக அஸத்ஸமமாக்கி 'விளையாடுதி' என்றாள். "எங்களோடு விளையாட முறை உண்டோ?" என்ன, "பஞ்சலக்ஷங்குடியிற் பெண்களிலும் எனக்கு விளையாட்டு முறையில்லாதார் உண்டோ?" என்ன:— [அது கேட்கிலென்னைமார் தன்மபாவமென்னார்] - என்பந்துக்கள் அத்தைக்கேட்கில் கூடும் கூடாதென்று நிரூபியார் கள். என்னைமார் - தமையன்மார்-ஐம்மார், ஆணுடன் பிறந்தார். "வேலைப்பிடித்தென்னை மார்களோட்டி லென்னவிளையாட்டோ?" என்னக்கடவதிறே: ஸங்யாக்களுக்கு உப லக்ஷணம். உன்னோடு ஸாவபந்யம் இல்லை என்றறியாதே, உன்னுடைய சள†ப்ரவ்ருத் தியை "மெய்" என்று, "ஸம்ஶ்லேஷம் வ்ருத்தம்" என்று மேலிடுவர்கள். 'நிரூபித் துச்சொல்லுகை - தர்மம், நிரூபியாதே சொல்லுகை - பாபம்'என்னாதே கேட்டமாத்ரத் திலே பொறார்கள். "அவர்கள் அறியப்புக்கா நின்றார்களோ?" என்ன, "பிறந்ததொன்று நாளோட்டத்திலே அறியார்களோ?" என்ன, "ஆனால்தான் வருவதென்?" என்ன. [ஒரு நான்று] - ஒருநாளாக உன்னோடே விவாதமாய் முடியுமென்கை. [தடிபிணக்கே] - இடையர் பெருமிடுக்கரை அழியச்செய்யும்போதும் தடியாலே அழிக்குமித்தனை.

ஈடு.—ஏழாம்பாட்டு. ஸர்வோபாயங்களையும் அநுஷ்டித்து ஸ்ரீபரதாழ்வான் தன்பக்கல் பட்டதெல்லாம் தான் இவர்கள் பக்கலிலே பட்டான். "**விநிவர்த்தயிதும்பலாத்**" (விநிவர்த்தயிதும்பலாத்) என்று மீட்கையிலே போர வருந்தினானிறே. "**ஶேஷ்யே புரஸ்தாச்சாலாயா யாவந்மே ந ப்ரஸீததி**" (ஶேஷ்யேபுரஸ்தாச்சாலாயா யாவந்மேநப்ரஸீததி) - தாமேயிரங்கி மீளும்படிபண்ணுகிறேன்; அதுதான் கேட்டார்வாய் கேட்கவேணுமோ? '**பலாத்**'என்றானிறே. அப்படியே இவனும்ஸர்வோபாயங்களையும் ப்ரவர்த்திப்பித்தவிடத்திலும் அணுகவொண்ணாதபடி கடுமைதோற்ற இருந்தார்கள்; "இனிச் செய்யலாவதென்?" என்றுபார்த்தான்; "பலத்தாலே கார்யங்கொள்ளுவோம்" என்றுநிஶ்ச யித்து, இவர்கள்பாவையை எடுப்பானாகக் கணிசித்தான்; "**ஹ்ருதக்ஷிதஜஜ்ஞாஸஸ்கொ**

ஏழாம்பாட்டு.—கன்மம் இத்யாதி. "கன்மமன்றெங்கள்கையில் பாவைபறிப்பது" என்ற திலேநோக்காக அவதாரிகை - ஸர்வ இத்யாதி. 'ஸர்வோபாயங்களையும்' என்றது - தாய்மாரையிட் டும், வஸிஷ்டாதிகளையிட்டும், சொல்லிவைக்கை தொடக்கமானவற்றை. 'ஸ்ரீபரதாழ்வான் பட்ட தெல்லாம்' என்றதுக்குப்ரமாணம் - விநிவர்த்தயிதும் இத்யாதி. ப்ரமாணாந்தரம் - ஶேஷ்யே இத்யாதி. "ஸ ஏவாயம் மயா விநிவர்த்தயிதும்பலாத் । ஸ்வகஷயா ப்ராணான் ஸாயுஜ்யேநாம் ஸம்யக் புனா ரோ" "ஜ்ஞாஸம் ரோ நிரா ரொ கொ யதஸ்ய ஷீணோ யஸ்மிஜம்: ஶேஷ்யே புரஸ்தாச்சாலாயா யாவந்மே ந ப்ரஸீததி" இத்யயோத்யாகாண்டே. இதுக்குபாவம் - தாமேயிரங்கி இத்யாதி. கணிசிக்கை - உபக்ரமிக்கை. அவன்கணிசித்தபடியை இவர்களறிந்தபடியெங்ஙனே? என்ன - ஹ்ருதக்ஷிதஜ்ஞா இத்யாதி. "இங்கிதஜ்ஞாஸ்ஸ்வயா:

† சளம்-ஸவ்யாஜம்

[illegible] ” (ப்ரேக்ஷிதஜ்ஞாஸ்துகோஸலா:) என்று நினைவறியுமவர்களாகையாலே, எல்லாருங்கூடவைத்த பாவையைச் சென்றெடுத்துக்கொண்டார்கள்; அதுதான் “நங்கார்யம்” என்றே இருந்தான். “ப்ருதக்ப்ரயத்நாபேக்ஷிதமின்றிக்கே ஒழியப்பெற்றோம்” என்று பார்த்தான். திருக்குரவைபோலே ஆளுக்காளாய்நின்று கைப்பிடிக்க வேண்டாவாயிருந்தது; “நல்லவாய்ப்பு” என்று இவர்கள் பாவையைச் சென்றுபற்றினன்.

[கன்மமன்று] - வாராய்! உனக்கிதுகார்யமன்று கிடாய் என்கிறார்கள். “ஏன்தான் இதுகார்யமன்றிக்கே ஒழிவானேன்?” என்றான். [எங்கள்கையிற்பாவைபறிப்பது] - “இதுதான்ஆரதேன்றிருக்கிறாய்? நீ நினைக்கிறவர்களதன்றுகாண்! இதேங்களதுகாண்!!” என்றார்கள். “அதுதான் மெய்யே!” என்றான்; *[illegible] இறே. † (இவர்கள் ஸ்வரூபஜ்ஞராகையாலே இவனுடையவர்களிறே). இவர்கள் “எங்களது” என்கையிறே அவன்விருப்பத்துக்கடி. “இவர்களது” என்னுமிடம் அறுதியிட்டுக்கொள்ளுகையிலேயிறே அவனுக்குத் தாத்பர்யம்; நீ நினைக்கிறவர்களதன்று என்கையிறே இவர்களுக்குத் தாத்பர்யம். [எங்கள்கையில் பாவைபறிப்பது]-இவர்கள்கையிலே பாதிகொடுத்துப்போலே காணும்பறிப்பது! அவர்கள்விட்டுக் கடக்கநிற்கும் அதிலொருப்ரயோஜநமில்லையே; அத்தையவர்கள் ஒருதலைபற்றத் தானு மொருதலை பற்றுமன்றிறே ஒருகலத்திலே உண்பாரைப்போலே ஹோ[illegible]மாயிருப்பது. [கையில்பாவைபறிப்பது] - கிடக்கிறதெல்லாங் கிடக்க, எங்கள்கையிற் பாவைபறிப்பது கன்மமன்று. செய்யக் கடவதல்லாதத்தைச் செய்யாநின்றாய்; உனக்கு இத்தாலொரு ப்ரயோஜநமில்லைகாண் என்றார்கள். ஆக, இத்தால் ஃபலித்ததேன்? என்னில்;—ஒருவைஷ்ணவன் “என்னது” என்றபிமாநித்துக் கைப்பிடித்தால் “அவன் விரும்புவது” என்றபடி. “ ‘செய்யக்கடவதல்லாதத்தைச் செய்யாநின்றாய்’ என்று நீங்கள் சொல்லுவானேன்? செய்யக்கடவதுக்கும் செய்யக்கடவதல்லாததுக்கும் வரம்புகட்டினேன் நானன்றோ!” என்றான். [கடல்ஞாலமுண்டிட்ட] - ப்ரளயாத்யாபத்திலே இவற்றை

ப்ரேக்ஷிதஜ்ஞாஸ்து கோஸலா: । [illegible] ணாவயா:”. “எங்கள்” என்று - பஹுவசநமாய், “பாவை” என்று - ஏக வசநமாயிருக்கையாலே - எல்லாருங்கூடவைத்தபாவையை இத்யாதி. கார்யமானபடியெங்ஙனே? என்ன - ப்ருதக்ப்ரயத்ந இத்யாதி. அபேக்ஷிதமென்றது - அபேக்ஷையென்றபடி. விவரணம் - திருக்குரவை இத்யாதி.

மெய்யானல் தனக்குப்ரயோஜநமேதென்ன-[illegible] இத்யாதி. ஆகையாலே, ‘இவர்களதென்னுமிடம்’ என்று கூட்டிக்கொள்வது. இவர்கள் “எங்களது” என்றதுக்குஹ்ருதயமேதென்ன - நீநினைக்கிற இத்யாதி. “எங்கள்” என்றபஹுவசநத்துக்கும், “ பாவை ” என்ற ஏக வசநத்துக்கும், “பறிப்பது” என்கிற வர்த்தமானத்துக்கும் ஃபலிதார்த்தம் - இவர்கள்கையிலே இத்யாதி. இவன் பக்தனன்றோ? பாதி கொடுக்கிறதென்? என்ன - அவர்கள்விட்டு இத்யாதி. விவரணம் - அந்தையவர்கள் இத்யாதி. “கையில்” என்றதுக்குபாவம் - கிடக்கிறதெல்லாம் இத்யாதி. ‘‘வாராயுனக்கு” இத்யாதிவாக்யத்திலே, “கன்மம்” என்று - கார்யமாக விவக்ஷித்தருளிச்செய்து, கர்மபலத்தை விவக்ஷித்தருளிச்செய்கிறார் - செய்யக்கடவதல்லாதத்தை இத்யாதி. ‘ஆகஇத்தால்’ என்றது - “எங்களது” என்றதேஹேதுவாக அவன் மேல்விழுந்து வந்துபறிக்கிறஇத்தால் என்றபடி. ‘பலித்ததென்னென்னில்’ என்றது - ஸ்வாபதேசத்தில்எந்தஅர்த்தம் சொல்லிற்றாயிற்றென்னில்என்றபடி. “கன்மமன்று” என்றதின் முந்தினவர்த்தத்துக்குச்சேர மேலிற்பதத்துக்கு அவதாரிகை-செய்யக்கடவதல்லாதத்தை இத்யாதி. வரம்புகட்டுகையாவது - கடலாலேசூழப்பண்ணுகை. வரம்புகட்டினபடியைக் காட்டுகிறார் - ப்ரளயாத்யாபத்திலே இத்யாதி. நாயகியின் ஹார்த்தபாவத்தை வ்யாக்யாதா அருளிச்

---

† குண்டலிக்ரந்தம் க்ஷேபகம்.

யெல்லாமெடுத்து வயிற்றிலேவைத்து நோக்கிற்றிலேனோ? இவர்களளவும் அப்படியேயாகாதே தான். இவன்சென்று பறித்திலனாகில் அழியுமளவாகாதே அவர்களது. அது அவஸ்த்தாந்தரத்தை பஜித்தாகிலும் கிடக்குமிறே; இவர்களுக்கிவனையொழிந்தவன்று ஸத்தாநாசமிறேயுள்ளது! "ஆபத்ரக்ஷகனன்றோநான்! ஆனபின்பு, நான் செய்யுமவையெல்லாம் ப்ரயோஜநநிரபேக்ஷமாயன்றோ இருப்பது ; ஆகையினால் எனக்கிதுதானேயிறே ப்ரயோஜநம்! ப்ரயோஜநத்துக்கு ப்ரயோஜநம் வருமன்று அநவஸ்த்தையாமிறே; இத்தை ஸாதநமாக நினைத்திருக்கிலிறே நான் வேறேயொன்றை ப்ரயோஜநமாக ஸாதித்துக்கொள்வது!" என்றான்; நீ இங்ஙன்சொல்லுமது வார்த்தையன்றுகாண்; எங்களிசைவின்றிக்கேயிருக்க, நீ பலத்தாலே பறிக்கிறஇதுக்கு "ஆபத்ரக்ஷகன்" என்று சொல்லுகிறஇது,நிர்வாஹமாகமாட்டாதுகாண்; ஆனபின்பு,உனக்கு குணஹாநியேகாண்மேற்படுவது" என்றார்கள். [நின்மலாநெடியாய்!] "ஸஹஸ்ர குணனானஎனக்கு ஒருதோஷம் கிடக்குங்காட்டில் அது தெரியாநின்றதோ?" என்றான். [நின்மலா! நெடியாய்!] - நிர்மலனான சந்த்ரனுக்குமன்றோ மறு கிடக்கிறது! ஆனபின்பு, குணம்ப்ரகாசிக்குமிடமெங்கும் குணஹாநியும் ப்ரகாசிக்குங்காண்!! ஹேயப்ரத்யநீகனாய் அபரிச்சேத்ய மஹாகுணனானவனே! [உனக்கேலும்பிழைபிழையே] - அபரிச்சேத்யமான குணங்களையுடையையா யிருந்தாயேயாகிலும், குணஹாநி குணஹாநியாயே கிடக்குங்காண். இவர்கள் இப்படி சொன்னவாறே, இதுக்கொரு மறுமாற்றம் காணாமையாலே, பிறர்க்குப் பாசுரமிட்டுச் சொல்லவொண்ணாதபடி இவர்கள் செவியிலே சிலவற்றைச் சொல்லப்புக்கான்: "வன்மமேசொல்லி" என்கிறார்கள். தங்கள்நெஞ்சும் அவன்நெஞ்சும் அறியுமத்தனை ; வாசாவ்யவஹரிக்கவொண்ணாது † (ப்ரணயவேளையில்பணிமொழிகள்). [எம்மை நீவிளையாடுதி] - நீ மர்மம்சொல்லும்போது, சொல்லுகிறஉன்னையும் கேட்கிற எங்களையும் அறிந்தன்றோசொல்லுவது. ("இவன்சொன்னமர்மமெது" என்று எம்பாரைச்சிலர் கேட்க, *"மயர்வறமதிநலமருளப்பெற்றவர் பாசுரமிடமாட்டாமல் 'வன்மம்' என்றுநின்றார்; என்னைப்பாசுரமிடச்சொல்லுகிறீகோளோ?" என்றருளிச்செய்தார்.) [விளையாடுதி] - அவன்தன்னையழியமாறி ஒருமர்மம்சொன்னானானான்; இவர்கள் அத்தையெல்லாம் விளையாட்டாக்குகிறார்கள்; நெஞ்சிலில்லாதவை சொல்லுகிறவத்தால் உனக்கென்ன ப்ரயோஜநம்

செய்கிறாய் - இவர்களளவும் இத்யாதி. வ்வரணம் - இவன்சென்று இத்யாதி. இவர்களளவுமப்படியே ஆகாதேதானென்றது - இவர்கள்தசையும் ஜகத்தின்படியன்றோவென்றபடி. பூமியோடு ஸாம்யமன்றிக்கே ஆதிக்யமருளிச்செய்கிறார் - அதுஅவஸ்த்தாந்தரத்தை இத்யாதி. "கன்மம" என்றதின் த்விதீயார்த்தத்துக்குச்சேர, "கடல்ஞாலமுண்டிட்ட" என்றதுக்கு இரண்டாம்அவதாரிகை-ஆபத்ரக்ஷகனன்றோ இத்யாதி. இந்தவவதாரிகாந்வயத்துக்குச்சேர, "கடல்ஞாலமுண்டிட்ட" என்றதுக்கு ஸாவம் - எங்களிசைவின்றிக்கே இத்யாதி. அதாவது, இசைவின்றிக்கே இருக்கப்பறிக்கையாலே உனக்கொருப்ரயோஜநமில்லையென்று த்விதீயஸங்கதிக்குபரிஹாரம்; பலத்தாலே பறிக்கிறஇதுஉனக்குக் கார்யமன்றென்று முந்தினஸங்கதிக்கு பரிஹாரம். "பிழைபிழையே" என்றத்தை - "கடல்ஞாலமுண்டிட்ட, நின்மலா, நெடியாய்" என்றபதத்ரயத்திலும் அந்வயிப்பது. நின்மலா - ஹேயப்ரத்யநீகனானவனே. நெடியாய் - பெரியோனே; ஸமஸ்தகல்யாணகுணாத்மகனே. உனக்கேலும் பிழைபிழையே - இப்படிப்பட்டஉனக்கும் அபலைகளைத் தீண்டிப்பறிக்கிற இநதத்தப்பு அவத்யமாயேவிடுமென்று பரப்தார்த்தம். சிலவற்றையென்றது - ப்ரணயவேளையிற் பணிமொழிகளை. வன்மம் - மர்மம். அந்தவன்மமேதென்ன - தங்கள்நெஞ்சும் இத்யாதி, சுஸஊஸ்வஸம்வேத்யமென்றபடி. 'சொல்லுகிறவுன்னையும்' இத்யாதிக்குக்கருத்து-உனக்குமெங்களுக்கும் உறவுஉண்டானாலன்றோ ஹாஸ்யப்பண்ணலாவது. உறவில்லாதவிடத்திலே ஹாஸ்யம்பண்ணலாமோவென்று. விளையாட்டாக்குகைக்குஹேதுவேதென்ன - நெஞ்சி

---

† குண்டலி க்ரந்தத்வயம் ப்ராக்ஷிப்தம்.

உண்டேன்கிறார்கள். திரியவும் சிலவற்றைச்சொல்லப்புக்கான்: [அதுகேட்கிலேன்னைமார்] - சொல்லுகிறவையெல்லாம் எங்கள்பந்துக்கள் கேட்பர்களாகில் சாலத் தப்பாய்விடுங்கிடாய். என்னைமார் - ஆணுடன்பிறந்தார். [தன்மபாவமென்னார்] - உன்பக்கலெங்களுக்கு ஹாவபந்தமில்லை என்னுமிடம் அறியார்கள். நீ மேல்விழுகிறத்தைக் கண்டு, "இதுசெய்யலாம், இதுசெய்யவொண்ணாது" என்றுபாராதே நலிவர்கள்கிடாய். "ஆனாலென்? அவர்கள் அது அறியாநின்றார்களோ? அவர்களிங்கில்லையே!" என்றான். [ஒருநான்று] - அதுவோ! முதலிலே தவிரில் அறியாதொழியுமத்தனைபோக்கி, எல்லாம் செய்தாலு முண்டானாலொரு நாள்வரையிலே அறிவர்கள்காண். "அழகிது; அறிந்தால்தான் வருவதென்?" என்றான். [தடிபிணக்கே] - பின்னைக்குத்தும் பூசலுமாயன்றே தலைக்கட்டுவது. ராமாவதாரத்தில் ஸர்வவ்யாபாரங்களும் விற்கொண்டே வ்யாபரிக்குமாபோலே, க்ருஷ்ணாவதாரத்திலே தடிகொண்டே கார்யங்கொள்ளுமத்தனை. (எ)

எட்டாம் பாட்டு.

பிணக்கியாவையும்யாவரும் பிழையாமல்பேதித்தும்பேதியாததுஓர்
கணக்கில்கீர்த்திவெள்ளக் கதிர்ஞானமூர்த்தியினாய்! [தோமை
இணக்கிஎம்மைஎம்தோழிமார் விளையாடப்போதுமினேன்னப்போந்
உணக்கிநீவளைத்தால் என்சொல்லாருகவாதவரே!

ஆ.—(பிணக்கி.)-"இப்படி இவன் க்ருத்ரிமம்செய்து நம்மை இங்கிருந்து விளையாடவொட்டானாகில், நாமிங்குநின்றும் போவோம்" என்று பார்த்துத் தன் தோழிமாரோடேகூடப் போகப்புக, "நான்போகவொட்டேன்" என்றுஇவன் தங்களை வளைத்தருள, "அறியாதே விளையாடப்போந்த எங்களை உன்னுடைய நிரவதிக ஸௌந்தர்யத்தாலே இழுவித்துக்கொண்டு, ஸர்வேஶ்வரனான நீ வளைத்தால், உன்னை உகவாதவர் உனக்கென்ன பழிசொல்லார்? உனக்கெங்களோடே ஸம்ஶ்லேஷம் வ்ருத்தமென்றும் சொல்லுவரிறே! ஆனபின்பு இதுஈடல்ல" என்று அவனை உபாலம்பிக்கிறாள்.

ஒ.—[பிணக்கியாவையும்.]-"நாமிருக்கிலிறே இங்கு இவனுக்கு நம்மை நலியலாவது; நாம் போவோம்" என்று தோழிமாரும்தானும்போக உபக்ரமிக்க, எம்பெருமானும் அவர்கள் போகிற வழியைக்கொண்டு அவர்களைப் போகவொட்டாதே வளைக்க, அவர்களும் சேதநாசேதநங்களை தேவதிர்யங்மனுஷ்யாதி விபாகங்களை ஒழிந்து ஒன்றும் படிகலசி, "அழித்தது ஸ்ருஷ்டித்தது" என்று தெரியாதபடி, ஸம்ஹாரகாலத்துக்கு முன்பு இருந்தபடிகளில் ஒருவாசிபடாதபடி ஸ்ருஷ்டித்து இதில் ஓராயாஸப்படாதபடி

லில்லாதவை இத்யாதி. திரியவும் சிலவற்றையென்றது-பஞ்சலக்ஷங்குடியிற்பெண்களும் எனக்குஉறவன்றோ? என்கை. என்னையாரென்றது - பந்துக்களுக்குமுபலக்ஷணம். "தன்மபாவமென்னார்" என்றதுக்குபாவம் - உன்பக்கல் இத்யாதி. பாவபந்தமென்றது - ஸம்ஶ்லேஷமென்றபடி. ஸம்ஶ்லேஷமுண்டென்று நிரூபித்துச்செய்கை - தர்மம், நிரூபியாமல்செய்கை - பாபம். இரண்டும்பாராதே யடிப்பர்களென்றபடி. தடியென்? ஆயுதமில்லையோவென்ன - ராமாவதாரத்தில் இத்யாதி. என்னைமார் - ஆணுடன்பிறந்தார். தமையன்மாரென்றபடி. தடிபிணக்கு-தடிச்சண்டை. (எ)

மஹாப்ரஸாவமான விலக்ஷணஸங்கல்ப ரூபஜ்ஞாநத்தையுடைய ஸர்வேச்வரனான நீ, 'தோழிமார் தங்களோடே கூடிக்கொண்டு விளையாடப் போருங்கோள்' என்ன அறியாதே போந்த எங்களை உன்னுடைய ஸௌந்தர்யாதிகளாலே நெருக்கி எங்களைப் போக வொட்டாதொழிந்தால் இத்தை ஸஹியாத உன்னுடைய மின்னிடைமடவார் இம்மாத்ரத்தையே கொண்டு, யோக்யதையாலே, "ஸம்ச்லேஷம் வ்ருத்தம்" என்று சொல்லி உன்னை உபேக்ஷிப்பார் என்கிறாள்.

ப —அநந்தரம், "இவன் ஸந்நிதியிலிருக்கிலன்றோ மர்மம் சொல்லுவது?" என்றுபோகத்தேட, இவர்கள் போகிறவழியைக் கட்டித்தகைந்த அவனைநோக்கி; "எல்லாம் அறிவீர் ஈதேயறியீர்" என்று ஸர்வஜ்ஞனான நீ யெங்களைத் தகைந்தால்உகவாதார் என் சொல்லாரென்கிறாள்.

யாவரும் யாவையும் - ஸகல சேதநாசேதநங்களையும், பிணக்கி-(ஸம்ஹ்ருத்ய வஸ்த்வைகியிலே நாமரூபவிபாகாநர்ஹதமாம்படி) கலசி, (ஸ்ருஷ்டியில்வந்தவாறே), பிழையாமல் - (அவ்வோ சேதநருடைய கர்மங்களுக்கு ஸாங்கர்யம்) பிறவாதபடி, பேதித்தும்- தேவதிர்யகாதிபேதத்தைப் பண்ணினவிடத்தும், பேதியாதது - (தத்கததோஷத்தால்) ஸ்வரூபத்துக்கு பேதம்வாராதபடி,ஓர் - அத்விதீயமாய், கணக்குஇல் - அபரிச்சிந்நமான, கீர்த்திவெள்ளம் - கீர்த்திஸமுத்ரத்தையுடைத்தாயிருக்கிற, கதிர் - ப்ரபாரூபமான, ஞானம் - ஸங்கல்ப ரூப ஜ்ஞாநத்தை, மூர்த்தியினாய் - வடிவாகவுடையவனே! எம் - ஸஜாதீயைகளாய் ஸமாநதுக்கைகளான, தோழிமார் - தோழிமார், எம்மைஇணக்கி - நாங்கள் இசையும்படி வார்த்தைசொல்லி, 'விளையாட- விளையாட, போதுமின்-போங்கோள்' என்ன - என்றுலீலையை வ்யாஜமாகச் சொன்னபடியாலே,போந்தோமை - (நீ இங்கு நிற்பதறியாதே லீலாபரைகளாய்) வந்த எங்களை, உணக்கி - உண்ணவுமொட்டாதே உணங்கும்படிபண்ணி, நீ-நீ, வளைத்தால் - தகைந்தால், (இச்செய்திகண்டு),உகவாதவர்-உகக்க மாட்டாத நாட்டார், என் - என்ன, சொல்லார் - சொல்லார்? உகவாதவர் - உன்னுடைய மின்னிடை மடவாரென்றுமாம். இங்கு, இணக்கி எம்தோழிமாரென்றது ஸாஜாத்யத்தாலே கலந்து லீலாரஸ வ்யபதேசத்தாலே பகவத்விஷயத்திலே மூட்டும் பாகவதவிஷயத்தை ஸூசிப்பிக்கிறது.

இ.— எட்டாம்பாட்டில், "நாம் இங்கிருக்கிலிறே இவனுக்கு மர்மங்களைச் சொல்லி நலியலாவது; நாம் போவோம்" என்று, எல்லாரும்கூடப் போகப்புக்கார்கள்; இவர்கள் போகிறவழி ஓரடிப்பரப்பாய் ஒழுகப்போகவேண்டுகையாலே, வழியைக்கட்டியிருவிலங்காகக்கிடந்தான்; அவனைப்பார்த்து வார்த்தை சொல்லுகிறார்கள்:—[பிணக்கி இத்யாதி]. [யாவையும்யாவரும் - பிணக்கி] - சேதநாசேதநங்களை ஜீவாத்விபாகமற்று "தமஏகீபவதி" என்று தன்னோடே அவிபக்தமாம்படி கலசி. [பிழையாமல் பேதித்தும்] - ஸ்ருஷ்டிகாலத்திலே ஒருத்தன் கர்மம் வேறொருவன் அநுபவியாதபடி, பேதித்தும் - ஸ்ருஷ்டித்து மென்றபடி. [பேதியாததோர் கணக்கில் கீர்த்திவெள்ளக் கதிர்ஞான மூர்த்தியினாய்] - ஸம்ஹாரகாலத்தில், அசித்கதமான ஸூக்ஷ்மபரிணாமம், சேதநகதமான அஜ்ஞாநம்: ஸ்ருஷ்டிகாலத்தில், அசித்கதமான ஸ்வரூபாந்யதாபாவம், சேதநகதமான ஸ்வபாவாந்யதாபாவம்: ஆக, இப்பேதங்கள் ஒன்றுமின்றிக்கே ஏகரூபமாய் அத்விதீயமாய் அநவதியான ஏகரூபத்வமாகிற கீர்த்தி ஸமுத்ரத்தை யுடையையாய்,

ப்ரஹாரூபமான ஸங்கல்பஜ்ஞாநத்துக்கு ஆஶ்ரயமானவனே! இத்தால் - விஶ்லேஷதசையில் கலக்கமும், ஸம்ஶ்லேஷதசையில் ஹோமரூபவிக்ருதியு மின்றிக்கே ஏகரூபனென்கை. [இணக்கி இத்யாதி] - "உன்னோட்டை கலவி அபாயம்" என்று அறியாத எங்களை உன்னோடே சேர்த்து. இவ்வளவாக விளைத்தவர்களைச் சொல்லாதே உன்னைச் சொல்லுகிறதென்? ஸ்வத்விஷயத்தில் வைராக்யம் பிறந்தால் உபகாரகரைக் கொண்டாடுமென்னும் அர்த்தமிறே உள்ளோடுகிறது. "நித்யாயதீயவரணளஹரணாதீயடு"; [எந்தோழிமார்] - ஸஜாதீயராயிறே சேர்ப்பது. [விளையாடப்போதுமி னென்னப் போந்தோமை] - "க்ருஷ்ணனுண்டு" என்றறிந்தோமாகில்,வாரோம்; இவ்வகப்பாட்டை அறிந்திருந்தோமாகில் வாராதொழியலாயிற்று. "அத்தால் வந்ததென்?" என்ன, [உணக்கி நீ வளைத்தால்] - உணக்குகையாவது - ஜரிக்கமாட்டாதே துவளும்படிபண்ணுகை. உன்முகம் பார்த்து அநுபவிக்கப்பெறாமையாலே ஜரிக்கமாட்டுகிறிலோம்; நீ வளைக்கையாலே போகமாட்டுகிறிலோம். [என்சொல்லாருகவாதவரே] - நீயும் நாங்களுமாக இருக்கக்கண்டால் உகவாதவர் என்சொல்லார்? "உங்கள் ஸந்நிதிமாத்ரமேயன்றோ உள்ளது: இதுக்குச் சொல்லுவதெத்தை?" என்ன, யோக்யதையாலே 'ஸம்ஶ்லேஷம் வ்ருத்தம்' என்று உன்னுடைய மின்னிடைமடவார்கள் உபேக்ஷிப்பர்கள்; பிரிவாற்றாமையாலே கண்ணுஞ்சுழலை இடுகிறவர்கள் எத்தைச் சொல்லார்? உன்மேன்மையையும் குணவத்தாப்ரதையையும் இழக்கக்கிடாய்புகுகிறாய். ஆப்பான், "இவனை இவர்கள் கடந்துபோனார்களாகிற் செய்வதென்?" என்ன, ஜீயர், "அது ஆர்க்கு அழகு?" என்று அருளிச்செய்தார். நின்றார்களாகில் நினைத்தது பெற்றானாகிறான்; கடந்து போனார்களாகில் ஸம்ஶ்லேஷார்த்தமான க்ருஷி தலைக்கட்டிற்றாகிறது.

ஈடு.—எட்டாம்பாட்டு. கிட்டிநின்று இவர்களைச் சிலமிறுக்குக்களைப் பண்ணப்புக்கான்;' 'இங்கே யிருக்கிலன்றோ இதெல்லாம் வேண்டுவது" என்றுபார்த்து, ஒருவரோருவராகப் போகப்புக்கார்கள்; "இதுவோ பார்த்தபடி!" என்று வழியைப்பற்றி இருவிலங்காகக்கிடந்தான். உத்யாநமாகையாலே வழி ஓரடிப்பாடாயிருக்குமிறே. இப்பாட்டை ஜீயர் அருளிச்செய்யாநிற்கச்செய்தே ஆப்பானிருந்தவர் "இவர்களிவனைக் கடந்துபோனார்களாகிற்செய்வதென்?" என்றுகேட்க, "அது ஆர்காரியம்? பின்னை இரண்டத்தொன்று ஸித்திக்கும் என்றன்றோ அவன்தான்கிடந்தது!" என்றருளிச்செய்தார். † (நின்றார்களாகில் நினைத்தது பெற்றானாகிறான்; கடந்துபோனார்களாகில் ஸம்ஶ்லேஷார்த்தமான க்ருஷி தலைக்கட்டிற்றாகிறது.)

நீ வழியைப்பற்றிக் கிடவாநின்றாய்; நீசெய்கிறவையெல்லாம் உறவுஉண்டாய்ச் செய்கிறாயென்றிருப்பர்கள்கிடாய்; நீஸர்வவிஷயமாகப்பண்ணும் லீலைக்கோரளவுஉண்டோ?

எட்டாம்பாட்டு.—பிணக்கி இத்யாதி. "உணக்கிநீவளைத்தால்" என்றிருக்கையாலே - இவன் அவளைவளைத்துக்கிடக்கும்போது, இவன்மிறக்கடியாக இவர்கள்போகப்புக்கார்களாகவேணுமென்கிறார் - கிட்டிநின்று இவர்களை இத்யாதிவாக்யத்வயத்தாலே. மிறக்குக்களை - நிஷ்டுரோக்திகளை. இருவிலங்கு - பெருவிலங்காதல், இரட்டைவிலங்காதல். வேறுவழியில்லையோ? என்ன - உத்யாநம் இத்யாதி. இரண்டத்தொன்றஎன்றது - தகைவுபட்டு நிற்கையாதல், கடந்துபோம்போது ஸ்பர்ஶமாதல்; ஸ்பர்ஶித்தல்லது போகக்கூடாதிறே.

"பிணக்கி" என்றுதொடங்கி, "பேதியாதது" என்னுமளவுக்கும் அவதாரிகை - நீவழியைப் பற்றி இத்யாதி. "பேதித்தும் பேதியாதது" என்றதுக்கு ஹார்த்தபாவம் - அப்படியே இத்யாதி.

---

† *குண்டலிதக்ரந்தம் ப்ரக்ஷிப்தம்.*

உன்னையொழிந்த வஸ்துக்களெல்லாவற்றுக்கும் கோடிவிகாரத்தைப்பண்ணி, அவிக்ருதனு யிருப்பானொருவனிறே; அப்படியே எங்களை விக்ருதராகப்பண்ணி நீ அவிக்ருதனுயிராநின்ருய்! [யாவையும்யாவரும் - பிணக்கி] - தன்பக்கல்பொருந்துகைக்கு நினைவில்லாதவற்றையும், நினைவாலே பொருந்தாதவற்றையுங்கூட்டி, "தமஃபரேதேவ ஏகீபவதி" (தமஃபரேதேவ ஏகீபவதி) என்று தன்னோடு அவிபக்தமாம்படி கலசி. [பிழையாமல் பேதித்தும்] - தப்பாமல் பிரித்தும். வயிற்றிலே வைத்துப்புறப்படவிடுதல், ஸம்ஹரித்துப்புறப்பட விடுதல். ஓரோக்ஷோபங்களிலே யமர்ந்தநிலங்களிலே குடிவாங்கிப் பின்புதெளிந்தவாறே ஸ்வஸ்த்தாநங்களிலேபுகுந்து, விட்டகார்யங்களிலே அதிகரிப்பாரைப்போலே. ஒருத்தன் பண்ணினகர்மம் வேறொருத்தன்சென்று புஜியாதபடி தன்பக்கலினின்றும் பிரித்தும். [பேதியாததோர்கணக்கில் கீர்த்திவெள்ளக்கதிர்ஞானமூர்த்தியினாய்] - கார்யாவஸ்த்தமானதுவே காரணாவஸ்த்தமானாலும், அசித்கதமான ஸூக்ஷ்மபரிணாமம், சேதநகதமான அஜ்ஞாநம், ஸ்ருஷ்டிகாலத்தில் அசித்கதமான ஸ்வரூபாந்யதாபாவம், சேதநகதமான ஸ்வபாவாந்யதாபாவம், ஆக இப்பேதங்கள் ஒன்றும் இன்றிக்கே. ஏகரூபமாய், அத்விதீயமாய், அநவதியான கீர்த்தி ஸமுத்ரத்தை யுடைத்தாய், ப்ரபாரூபமான ஸங்கல்பரூபஜ்ஞாநத்துக்கு ஆஶ்ரயமானவனே! *எல்லாப்பொருள்களுக்கும் வித்தாய் முதலிற்சிதையாத மனஞ்செய் ஞானமிறே. இத்தால் - விஶ்லேஷதஶையில் கலக்கமும், ஸம்ஶ்லேஷதஶையில் ஹோகரூபவிக்ருதியுமின்றிக்கே ஏகரூபனென்கை. [கணக்கில் கீர்த்திவெள்ளம்] - "இப்படிப்பட்ட குணங்களை அளவிடுவோம்" என்றுபார்த்தாருண்டாகில் இளைத்துக் கால்வாங்கும்படி இருக்கை. [கதிர்ஞானமூர்த்தியினாய்] - இப்படி கூட்டுவனகூட்டிப் பிரிப்பன பிரித்தாலும், ஜ்ஞாநத்துக்கொரு குறைவற்றிருக்கை. [கதிர்ஞானமூர்த்தியினாய்] - கார்யங்கொண்டதென்று மழுங்காதிருக்கை: கார்யங் கொள்ளக்கொள்ளப் புகர்த்துவருகை. [கதிர்ஞானமூர்த்தி

---

*நீ அவிக்ருதனுயிராநின்ருயென்றது - விஶ்லேஷத்தால் வந்தகலக்கமும், ஸம்ஶ்லேஷத்தால்வந்த போகரூபவிக்ருதியும் இன்றிக்கேயிராநின்ருயென்றபடி. அசேதநங்களை முந்தறச்சொல்லி சேதநரை அநந்தரம்சொன்னதுக்குபாவம் - தன்பக்கல் இத்யாதி. அதாவது - இரண்டுவஸ்துக்களுக்கும் பொருந்தாமை ஸமாநமாகையாலே அசேதநங்களோடே சேதநரையுங்கூட்டி அருளிச்செய்கிருரென்றபடி. நினைவாலேயென்றது - நினைவு உண்டாயிருக்கச்செய்தேயென்றபடி. கூட்டியென்றதே, "பிணக்கி" என்றதுக்குபாவம் - தமஃபர இத்யாதி. பிணக்கி - கலசி. மஹாப்ரளயபக்ஷத்திலே, பிணக்குகை - கலக்கை; அவாந்தர ப்ரளயபக்ஷத்திலே, பிணக்குகை - வயிற்றிலேவைக்கையென்று கண்டுகொள்வது. இதுக்குச்சேர அர்த்தத்வயம் - வயிற்றிலே இத்யாதிவாக்யத்வயம். 'வயிற்றிலேவைத்துப்புறப்படவிடுதல்' என்றதுக்கு த்ருஷ்டாந்தம் - ஓரோக்ஷோபங்களிலே இத்யாதி. ஸம்ஹரித்துப்புறப்பட விடுதலென்றபக்ஷத்தில், "பிழையாமல்" என்றதுக்கர்த்தம் - ஒருத்தன் இத்யாதி. பிரிக்கை - ஸ்ருஷ்டிக்கை. "பேதியாதது" என்றதுக்கர்த்தம் - 'கார்யாவஸ்த்தம்' என்றுதொடங்கி, 'ஆக இப்பேதங்களொன்றுமின்றிக்கே' யென்னுமளவும். கார்யாவஸ்த்தமானதுவேயென்றது - கார்யாவஸ்த்த ப்ரஹ்மஸ்வரூபமென்றபடி. காரணாவஸ்த்தையில் 'அசித்கதமான ஸூக்ஷ்மபரிணாமம்' என்றுகூட்டுவது. ஏகரூபனுமாய் அத்விதீயனுமாய், கீர்த்திஸமுத்ரத்தையுடையனுமாயென்று திருத்துவது. ஸ்வரூபாந்யதாபாவமாகிறது - ஸ்தூலபரிணாமம். இது - ஸூக்ஷ்மபரிணாமம் என்றதுக்கு ப்ரதிகோடி. ஸ்வபாவாந்யதாபாவமாகிறது - ஜ்ஞாநவிகாஸம்; இது - 'சேதநகதமானவஜ்ஞாநம்' என்றதுக்குப்ரதிகோடி. "பேதியாதது" என்றத்தால் பலிதம் - 'ஏகரூபமாய்என்று. "ஓர்" என்றுதொடங்கி உண்டானபதங்களுக்கெல்லாம் பதார்த்தம் - அத்விதீயமாய் இத்யாதி. "பேதித்தும் பேதியாதது"என்றதுக்குப்ரமாணம்- எல்லப்பொருள்களுக்கும் இத்யாதி. "கணக்கில்" என்றதுக்குபாவம் - இப்படிப்பட்ட இத்யாதி. "கதிர" என்றுவிஶேஷித்ததுக்குபாவம் - 'இப்படி கூட்டுவன' இத்யாதிவாக்யத்ரயத்தாலே. "இப்படி

யினாய்] - ஜ்ஞாநஸ்வரூபனையுள்ளவனே! [இணக்கியித்யாதி] - நீ செய்கிறவற்றால் ப்ரயோஜந முள்ளது நீ யிருந்தவிடத்தே நினைத்துத் தேடிவந்தாருண்டாகிலன்றோ! [இணக்கி] - இசையும்படி வார்த்தைசொல்லி. "அவ்விடம் க்ருஷ்ணன் வாராத விடம்" என்றுகிடீர் சொல்லிக்கொண்டுபோந்தது. [எம்மை] - உன்னோட்டைக்கலவி அபாயம் என்றறியாத எங்களை. [எந்தோழிமார்] - உன்னைவெறுக்கிறதேன்? உன்பக்கல் குற்றமுண்டோ? சேர்த்தாராலேவந்ததுகிடீர்! பகவத்விஷயத்தில் வைலக்ஷண்யம் நெஞ்சிலேபட்டால் உபகாரகரைக்கொண்டாடுமென்னும் அர்த்தமிறே உள்ளோடுகிறது. "நித்யம் யதீயசரணௌ ஶரணம் மதீயம்" (நித்யம்யதீயசரணௌஶரணம்மதீயம்) என்று இங்கோடு அங்கோடு வாசியற அவர்களாலே வருமதிறே. [எந்தோழிமார்]-ஸஜாதீயராயிறேசேர்ப்பது. [விளையாடப்போதுமி னென்னப்போந்தோமை] - அவர்கள் உனக்குப் பெருநிலை நிற்பதறியப் பெற்றிலோம். சோலவுக்குமேல்அகவாய் ஆராயப்பெற்றிலோம். "நீயுண்டு" என்றறிந்தோமாகில் இவ்விடமென்று நினையோம்; "அவர்களுனக்குப்பார்வை" என்னுமிடம் அறியப்பெற்றிலோம். "போகடுங்கோள்; ஆனாலென்? அவர்கள்சொல்லப்போந்திகோளாகில் உங்களுக்கு வந்த அநர்த்தமேன்?" என்றான்: [உணக்கிநீவளைத்தால்]-உணக்குகையாவது - ஶரிக்கமாட்டாதே துவளும்படி பண்ணுகை. எங்களுக்கு இதுக்குமேல் வருவதேன்? கால் வாங்கிப்போகப் பெறுகிறிலோம்; கிட்டிநின்று முகம்பார்த்து அநுபவிக்கப்பெறுகிறிலோம். இதுகாணவேண்டாதவர்கள் என்சொல்லுவர்கள்? "எத்தைச் சொல்லுவது: என்னை 'ஈஶ்வரன்' என்றிகோளாகில், உங்களை 'இடைச்சிறுபெண்கள்' என்றிகோளாகில், இனி எத்தைச்சொல்லுவது?" என்றான். "நீ ஸர்வேஶ்வரனானதுவும், நாங்கள்இடைப்பெண்க

கூட்டுவன" இத்யாதிவாக்யவிவரணம் - 'கார்யங்கொண்டது 'இத்யாதிவாக்யத்வயம். ஞானமூர்த்தியினாய்" என்றதுக்கு - ஸங்கல்ப ரூபஜ்ஞாநத்துக்குஆஶ்ரயமானவனென்று கீழ்அருளிச்செய்து, ஸ்வரூபபரமாகவர்த்தாந்தரம் - 'ஜ்ஞாநஸ்வரூபனையுள்ளவனே' என்று; ஏததர்த்தகதநார்த்தம் பதோபாதாநம் - கதிர்ஞானமூர்த்தியினாய் என்று. "பேதியாததோர் கணக்கில்கீர்த்திவெள்ளம்" என்றபதங்கள் - யோஜநாத்வயத்திலும், ஸ்வரூபவிசேஷணங்கள். "இணக்கி" என்றதுக்கு ஹார்த்தபாவம் - நீ செய்கிற இத்யாதி. விவரணம் - அவ்விடம் இத்யாதி. இணக்கி - இசையும்படிவார்த்தைசொல்லி. 'கலவி அபாயமென்றறியாத' என்றது - கலவியாகிறஅபாயம் வருமென்றறியாத என்றபடி. "எம்" என்றதுக்குபாவம் - உன்னை இத்யாதி. ஸ்வாபதேஶம் - பகவத்விஷயத்தில் இத்யாதி. ஆஶ்ரயணதசையிலொழிய போகதசையிலும் ஆசார்யன்வேணுமோ என்ன - நித்யம்யதீய இத்யாதி. "ஸத்வார த்வாலி" என்றதுக்கர்த்தம் - இங்கோடு இத்யாதி. தோழிமாராகவேணுமோ சேர்க்கைக்கென்ன - ஸஜாதீயராய் இத்யாதி. "விளையாடப்போதுமினென்னப்போந்தோமை"என்றதுக்கு ஹார்த்தபாவம்- அவர்கள்உனக்கு இத்யாதி. பெருநிலை-ஸஹாயம். "விளையாடவாருங்கோள்"என்றுநிற்க, இவனுக்குப் பெருநிலையென்று சொல்லுகிறபடி எங்ஙனேயென்ன - சோலவுக்கு இத்யாதி. அகவாயாராய்ந்தால் நீங்கள் செய்வதென்?என்ன - நீயுண்டென்று இத்யாதி. "உனக்குப்பெருநிலைநிற்பது" என்றத்தை விவரிக்கிறார்-அவர்கள்உனக்கு இத்யாதி.பார்வை-பக்ஷிக்ரஹணஸாதநமான பக்ஷிமுதலானது .உணக்கி- துவளப்பண்ணி. "உணக்கி" என்றதுக்குபாவம் - எங்களுக்கு இத்யாதி. "பிணக்கியாவையும் யாவரும், விளையாடப்போதுமின்" என்றபதத்வயத்தையுங்கடாக்ஷித்து யோக்யதையில்லையென்கிறார் - என்னை ஈஶ்வரன் இத்யாதி. அதாவது - ஸர்வாதிகனான எனக்கு அதிக்ஷுத்ரைகளான உங்களோடு ஸம்ஶ்லேஷயோக்யதையில்லாமையாலே அபவாதவசநயில்லை என்றகருத்து. அவன்சொன்னதுக்கு உத்தரம் - நீ ஸர்வேஶ்வரனானதுவும் இத்யாதி. இதுக்குபாவம் - ஸர்வேஶ்வரனுடைய த்தும் நப்பின்னைப்பிராட்டியைக் கைப்பிடிக்கையாலே, இடைப்பெண்களானதுவே ஹேது என்றபடி. ஹலி

ளான இதுவுமேயிறே சொல்லுகைக்கு ஹேதுவும்.'' ஈஶ்வரனோடோக்கப் பழிசொல்லுகைக்கு இவர்கள்தாம் ஒரு நப்பின்னைப்பிராட்டிபோல்வார்ஆகாதேதான். ''அது என்தான்? என்னோடு உங்களுக்கு பாவபந்தமில்லை என்றுநின்றிகோளாகில் இத்தால் வருவதேன்?'' என்றான்: [என்சொல்லாருகவாதவரே] - '' உன்பக்கல் எங்களுக்கு பாவபந்தமில்லை '' என்று அறிவார்களோ உகவாதார்? நீ அல்பம்கால்தாழ்த்த இதுவே ஹேதுவாக ''ஸம்ஶ்லேஷம் ப்ரவ்ருத்தமாயிற்று'' என்றார்களோ ? வளைக்கிற உன்னையும், வளைப்புண்கிற எங்களையும் அறிந்தோ அவர்கள் வார்த்தைசொல்லுவது ? [என்சொல்லாருகவாதவரே] - உன்னுடைய மின்னிடைமடவார் உன்னை நெகிழ வார்த்தை சொல்லுவர்கள். பிரிவாற்றாமல் கண்ணுஞ்சுழலையிடுகிறவர்கள் எத்தைச் சொல்லார்? (அ)

ஒன்பதாம் பாட்டு.

உகவையால்நெஞ்சமுள்ளுருகிஉன்தாமரைத்தடங்கண்விழிகளின்
அகவலைப்படுப்பான் அழித்தாயுன்திருவடியால்
தகவுசெய்திலைஎங்கள்சிற்றிலும் யாமடுசிறுசோறுங்கண்டு நின்
முகவொளிதிகழ முறுவல்செய்துநின்றிலையே.

ஆ.—(உகவையால்.)-தன்னை எம்பெருமான் இப்படி வளைக்கச் செய்தேயும் அவனைக் கடாக்ஷியாதே யிருந்து தன் தோழிமாரோடேகூடச் சிற்றிலிழைத்துச் சிறுசோறிட்டு விளையாடாநிற்க, இவளுடைய கடாக்ஷமல்லது தனக்குஆத்மதாரணம் இல்லாமையாலே, ''ஏதேனுமொருபடியால் இவள் நம்மைக் கடாக்ஷிக்கஅமையும் '' என்று பார்த்து, இவள் தன்னைப்பார்த்தருளும்படியாக இவளுடைய சிற்றிலைத் தன்னுடைய திருவடிகளாலேயழித்தருள, இவளும் அவனுடைய திருமுகத்தைப்பார்த்து அவனுடைய திருக்கண்களினழகாலே வஶீக்ருதையாய், ''உன்பக்கலுள்ள ப்ரீத்யதிஶயத்தாலே நெஞ்சுருகிக்கொண்டு உன் தாமரைத்தடங்கண் விழிகளாகிற வலையிலே நாங்கள் அகப்படுகைக்காக, எங்கள் சிற்றிலும் யாமடுசிறுசோறும் உன்திருவடியா லழித்தருளினாய் ; நாங்கள் விளையாடுகிறபடியைக் கண்டு உகந்துகொண்டு நிற்கமாட்டிற்றில்லை; ஒன்றும் க்ருபையில்லையாகாதே?'' என்றுகொண்டு, தன்னுடைய அத்யவஸாயத்தை, எம்பெருமான் தன்னழகாலே அழித்ததாக அவனையின்னாதாகிறாள்.

ஒ.—[உகவையால் நெஞ்சமுள்ளுருகி] - எம்பெருமான் தன்னைப் போகவொட்டாதொழிய, அவனைக் கடைக்கணியாதிருந்து, தானும் தோழிமாரும் சிற்றிலிழைக்கை தொடக்கமான லீலாவிநோதவ்யாஜத்தாலே அந்யபரைகளைப்போலே யிருக்க,

---

தம் - ஈஶ்வரனோடோக்க இத்யாதி. த்விதீயாவதாரிகையாகப் பழிசொல்லாமைக்கு ஹேத்வந்தரம் - அது என்தான் இத்யாதி. விவரணம் - நீ அல்பம் இத்யாதிவாக்யத்வயமும். இதில், உகவாதாரென்று - லௌகிகராகவருளிச்செய்து, அர்த்தாந்தரம் - உன்னுடையமின்னிடை இத்யாதி. இந்தப்பக்ஷத்தில் பழிக்குவிஷயம் - ஈஶ்வரன். வளைக்கிறஇவனையும் வளைப்புண்கிற இவர்களையும் அறிந்தால் ''பாவபந்தமில்லை'' என்று நிஶ்சயிக்கலாயிருக்க, அதுசெய்யாதே ''பாவபந்தமுண்டு'' என்றுசொல்லுகிறபடி எங்ஙனே ? என்ன - பிரிவாற்றாமல் இத்யாதி. (அ

இவளுடைய வீக்ஷிதாதிகளையொழியத் தான் பரிக்கக்ஷமனல்லனுகையாலே, இவள்கடாக்ஷிக்கைக்காக இவளுடைய சிற்றிலையும் சிறுசோற்றையும் தன் திருவடிகளாலே சிதற, சிற்றிலழித்த சீற்றத்தாலே தன்னுடைய ஸங்கல்பத்தைமறந்து, அவன்முகத்தைப் பார்த்து அவன் கண்ணழகிலே ஈடுபட்ட பிராட்டி,"நாங்கள் ப்ரீத்யதிசயத்தாலே நெஞ்சு உருகி தாமரைத்தடாகம்போலே மனோஹரமான உன்னுடைய திருக்கண்களின் நோக்காகிற வலையுள்ளே அகப்படும்படி பண்ணுகைக்காக எங்கள் சிற்றிலையும், நாங்கள் அடுகிற சிறுசோற்றையும் உன் திருவடிகளாலே அழித்தருளினாய்; எங்களுடைய லீலாவிநோதங்களைக்கண்டு ப்ரீதனாய் உன்னுடைய முகவொளிதிகழ முறுவல்செய்து நின்றிலை; இங்ஙனே செய்தவிடம் தக்கோர்மைசெய்தா யல்லை" என்றுசொல்லி, "எம்பெருமானோடு ஸம்ப்லேஷியேன்" என்று தான்பண்ணின ஸங்கல்பத்தையும் அவன் தன்னுடைய ஸௌந்தர்யாதிகளாலே ஶிதிலமாக்கினபடியைச்சொல்லி அவனை இன்னுதாகிறாள்.

ப.—அநந்தரம், இவன் தகைந்தவாறே கடக்கப்போய்ச் சிற்றிலிழைக்க, "நம்மை அநுவர்த்தித்துப்போகாதேஅநாதரித்தார்கள்" என்கிற சீற்றத்தாலே சிற்றிலையழிக்க, நாங்கள் உன்முகஶோபையைப் பார்த்திருந்து சிற்றிலிழையாதபடி இத்தையழித்தாயே! என்றின்னுதாகிறாள்.

உகவையால் - அகவாயிலுகப்பாலே, நெஞ்சம் - நெஞ்சானது, உள்ளுருகி - உள்ளுருகி, உன் - உன், தாமரை - தாமரைபோலேயிருக்கிற, தட - பெரிய, கண் - கண்ணினுடைய, விழிகள் - பார்வைகளாகிற, வலை - வலைக்குள்ளே, அகப்படுப்பான் - அகப்படுத்துகைக்காக, எங்கள் - எங்கள், சிற்றிலும் - சிற்றிலையும், யாம் - நாங்கள், அடு-அடுகிற, சிறுசோறும் - சிறுசோற்றையும், கண்டு - கண்டு, நின் - உன்னுடைய, முகம் - திருமுகத்தில், ஒளிதிகழ - ஒளிதிகழும்படி, முறுவல் - முறுவல், செய்து - செய்து, நின்றிலை - பார்த்துக்கொண்டுநில்லாதே, உன் - உன், திருவடியால் - திருவடிகளாலே, அழித்தாய் - அழித்தாய்; தகவுசெய்திலை - இதிலோர் இரக்கமறச்செய்தாய். இத்தால் - ஆஶ்ரிதருடைய லீலாவிபூதியிற் பாரிப்பை அழிக்குமென்னுமிடம் தோற்றுகிறது.

இ.—ஒன்பதாம்பாட்டில், "'போகவொட்டேன்' என்றால், நினைத்தபரிமாற்றம் பெற்றாலன்றோ இவனுக்கு ப்ரயோஜநமுள்ளது; ஒருதேச விசேஷத்திலே முக்தர் ஸம்ஸாரிகளோடு உறவற்றிருக்குமாபோலே, அந்யபரதை பண்ணுவோம்" என்று சிற்றிலிழைக்கத் தொடங்கினார்கள்; இவர்களுடைய வீக்ஷிதாதிகளையொழியத் தனக்குச் செல்லாமையாலே, இவர்கள் கடாக்ஷிக்கைக்காகச் சிற்றிலையும் சிறுசோற்றையும் தன் திருவடிகளாலே அழித்தான்; அத்தாலே இவர்களுக்குச் சீற்றம்பிறந்து, தங்கள் ஸங்கல்பத்தை மறந்து அவன்முகத்தைப்பார்த்துச் சொல்லுகிறார்கள்: [உகவையால் நெஞ்சமுள்ளுருகி] - பிரிந்து நெஞ்சைப் புண்படுத்துகையால்வந்த உருகுதல் ஒழிய, எங்களுகவையால் நெஞ்சமுள்ளுருகி. [உன் தாமரைத்தடங்கண்விழிகளின் அகவலைப்படுப்பான்] - தாமரைத்தடாகம்போலே மனோஹரமான உன்னுடைய கண்ணில் நோக்காகிற வலையுள்ளே அகப்படுத்துகைக்காக. த்ருஷ்டிபந்தத்தாலேயிறே அநந்யார்ஹமாக்குவது. [அழித்தாயுன் திருவடியால்] - உன்சிற்றிலழிக்கவேண்டும் பரிகரம் அமையாதோ இதுக்கு? ஜகதுபஸம்ஹாரம் பண்ணுவது ஸங்கல்பத்தாலேயிறே. ஸங்கல்பத்தாலே

யாதல், கையாலேயாதலழிக்கலாகாதோ? [தகவுசெய்திலை] - நிர்த்தயர்செய்வதைச் செய்தாய். பிரிந்தபோதே ப்ரணயித்வம் போயிற்றிறே. நீர்மையுடையார் செய்வதும் செய்திலை. "நான்செய்த குறையென்?" என்ன:—[எங்கள் சிற்றிலுமித்யாதி] - எங்கள் லீலைகளைக்கண்டு ப்ரீதனாய், நின்முகவொளிதிகழ முறுவல்செய்து நிற்க, நாங்கள் சிற்றிலைத் தொட்டுக்கொண்டிருந்து கடைக்கண்ணாலே உன்னைப் பார்த்துக்கொண்டிருக்க வைத்திலையே. முழுக்கப்பார்க்கில் எல்லாரோபாதியுமாமே. ப்ரணயியைப்பார்ப்பது கடைக்கண்ணாலேயிறே. உன்னுடைய லீலைபோலே என்றிருந்தாயோ எங்களுடைய லீலையை? கர்மநிபந்தநமாகையாலே த்யாஜ்யமிறே இது. "உன்னோடு ஸம்ஶ்லேஷியேன்" என்று நான்பண்ணின ஸங்கல்பத்தை அழகாலே அழித்தாய்; லீலைகளைத்திருவடிகளாலே அழித்தாய் என்று இன்னாதாகிறாள்.

ஈடு.—ஒன்பதாம்பாட்டு. "இவன் 'போகவொட்டேன்' என்று வளைத்துக் கிடந்ததுக்கு ப்ரயோஜநமுள்ளது இவனுக்கு நினைத்தபடி பரிமாறப் பெற்றாலன்றோ? ஒரு தேசவிசேஷத்திலே முக்தர் ஸம்ஸாரிகளோடு உறவற்றிருக்குமாபோலே இவன்முகம் பாராதேயிருக்கிறோம்" என்றத்யவஸித்துப் பேசாதே யிருந்தவாறே, "தன்னை நினைத்துக்கொண்டிருந்தோம் என்றிருக்குமிவன்" என்று "அந்யபரதைதோற்றச் சிற்றிலிழைப்போம்" என்று இழைக்கப்புக, "என்னைப்பாராதே இருப்பதுமன்றிக்கே சிறிது அந்யபரதை பண்ணுவதே!" என்று சிற்றிலையும் சிறுசோற்றையும் தன்திருவடிகளாலே அழிக்க, அத்தாலே அவர்களுக்குச் சீற்றம்பிறந்து, தங்கள் ஸங்கல்பத்தை மறந்து அவன்முகத்தைப் பார்த்துச் சொல்லுகிறார்கள். அவனுடைய அபிமதசித்திக்கும் ஸாதநம் திருவடிகள்காணும். அடியுடையார்க்கெல்லாம் சாதித்துக்கொள்ளலாமே.

[உகவையால் நெஞ்சமுள்ளுருகி) - வாராய்! உன்ப்ரவ்ருத்தி வ்யர்த்த ப்ரவ்ருத்திகாண்; பிரிந்து நெஞ்சைப் புண்படுத்துகையாலே வந்த உருகுதலொழிய, எங்களுக்கு உகவையால் நெஞ்சமுள்ளுருகிப் பண்ணவிறே நீ பார்த்தது; அதுசெய்யப்போகாது. [உன்தாமரையித்யாதி] - பகற்கண்டகுழியிலே விழவிட்டகப்படுத்துவான்; த்ருஷ்டிபந்தத்தாலேயிறே அநந்யார்ஹமாக்குவது. தாமரைபோலே பரிமளத்தையும் குளிர்த்தியையும் சிவப்பையு முடைத்தாய், போக்தாக்களாலுண்டறுக்கவொண்ணாத போக்யதா ப்ரகர்ஷத்தையுடைய திருக்கண்களின் நோக்காகிற வலையுள்ளே அகப்படுத்துகைக்காக. [அகவலை] - வலைக்குள்ளே. அகவலை - அகவியவலை என்றுமாம். *கண்ணென்னும் நெடுங்கயி

ஒன்பதாம்பாட்டு - உகவை இத்யாதி. "அழித்தாயுன் திருவடியால்" என்றத்தைக்கடாக்ஷித்து, ததநுகுணமாக அவதாரிகை - இவன்போகவொட்டேன் இத்யாதி. சிற்றில் - சிறியக்ருஹம். ரஸோக்தி - அவனுடைய இத்யாதிவாக்யத்வயமும். அடியுடையார்க்கு - ஐஶ்வர்யமுடையார்க்கென்றும், திருவடிகளையுடையார்க்கென்றும் அர்த்தத்வயம்.

இவனுடைய ஸங்கல்பவாக்யத்தைச் சொல்லுமவர்களுடைய உட்கருத்தை இவர்கள் வார்த்தையாலே அருளிச்செய்கிறார் - வாராய் இத்யாதி. இவனுடைய ப்ரவ்ருத்திதன்னையும், அது வ்யர்த்தமானபடியையும் அடைவே சொல்லுகிறார்கள் - பிரிந்து இத்யாதிவாக்யத்வயத்தாலே. உகவை - உகப்பு. "உன் தாமரைபுரைகண்ணிணையும் செவ்வாய் முறுவலுமாகுலங்கள்செய்ய" என்றத்தைப் பற்ற - 'பகற்கண்டகுழியிலே' என்றது. கண்ணாலே அகப்படுத்துமோ? என்ன - த்ருஷ்டிபந்தத்தாலே இத்யாதி "தாமரைக்கண்களுக்கற்றுத்தீர்ந்தும்" என்னக்கடவதிறே. விழி - நோக்கு. "வலை - அகப்படுப்பான்" என்னுதல் - "அகவிய - வலைப்படுப்பான்" என்னுதல். படுப்பான் - படுத்துகைக்காக இத்யர்த்தம். அகவியவலை - நெடியவலை. அப்படிநெடியவலையாயிருக்குமோ? என்ன - கண்

றிறே கண்ணிலே யகப்பட்டால், ஜ்வரஸந்நிபதிதரைப்போலப் பிதற்று மித்தனையிறே ; ‘ தாமரைக்கண்ணனை விண்ணோர்பரவுந்தலைமகனை ” என்கிறபடியே. [அழித்தாயுன் திருவடியால்] - ஸங்கல்பத்தாலழிக்கலாவது தன்சிற்றிலிறே; இவர்களுடைய சிற்றில் ஸ்பர்ஶித்தழிக்கவேணுமே: உன்சிற்றிலழிக்கும் பரிகரமமையாதோ இதுக்கு? ஜகதுபஸம்ஹாரம் பண்ணுவது ஸங்கல்பத்தாலேயிறே. ஶேஷபூதனுக்குத் திருவடிகள் உத்தேஶ்யமானவோபாதி, ப்ரணயிநிகளுக்கும் திருவடிகளுத்தேஶ்யமாயிறேயிருப்பது. [அழித்தாய்] - வெறுஞ் சிற்றிலையன்றுகாண் நீ யழித்தது ; எங்களகவாயையும் அழித்தாய்காண் ; * சிற்றிலோடெங்கள் சிந்தையும் சிதைத்தாய்காண். காலாலே சிற்றிலையழித்து, கண்ணாலே யெங்களபிஸந்தியையும் அழித்தாய்காண் என்கிறார்கள். [தகவுசெய்திலை] - க்ருபையுடையார் செய்வதைச்செய்திலை. பிரிந்தபோதே ப்ரணயித்வம்போயிற்றிறே ; இனிக்கண்ணுடையார் செய்வதும் செய்திலை. கண்படைத்ததுக்கு ப்ரயோஜநம் நல்லதுகண்டுகொண்டிருக்கவன்றோ ? * உன்முகத்தனகண்களல்லவே ! “நான் செய்தகுறையேன்?” என்ன,- [எங்கள்சிற்றிலித்யாதி] - உன் ஸ்ருஷ்டிபோலே அநுபாதேயமோ எங்கள்ஸ்ருஷ்டி? உபாதேயமன்றோ ? “என்னுடைய ஸ்ருஷ்டி அநுபாதேயமானபடியேன் ? உங்கள்ஸ்ருஷ்டி உபாதேயமானபடியேன் ?” என்னுமே அவன் ; உன்னைப்போலே நெருப்பும் காற்றும் அன்னலுந் துன்னலுமாகவிட்டு கர்மாநுகுணமாக ஸ்ருஷ்டித்ததோ இது ? * வண்டல் நுண்மணல் தெள்ளி யாம் வளைக் கைகளால் சிரமப்பட்டதன்றோ இது! [யாமடுசிறுசோறுங் கண்டு]- நீ யடுசிறுசோறு நிர்மால்யத்தோபாதி புறம்பு ஒருத்தர்க்கு புஜிக்கலாகாது; நீயே புஜிக்கு மத்தனை ; † (அத்தாபரமாத்மாவிறே). நாங்களடுசிறுசோறு *மூடநெய்பெய்து முழங்கை வழி

ணென்னும் இத்யாதி. கண்களாகிற நெடியகயிறென்றபடி. நாச்சியார்திருமொழி, “கார்த்தண்” இத்யாதி. அப்படி கண்ணழகிலே ஈடுபடுவர்களோவென்ன - கண்ணிலே இத்யாதி. உக்தார்த்தத்துக்கு ப்ரமாணம் - தாமரைக்கண்ணனை இத்யாதி. ஸங்கல்பத்தாலே அழிக்கவொண்ணாதோ ? என்ன - ஸங்கல்பத்தால் இத்யாதி. “திருவடியால் - அழித்தாய்” என்றவர்களுடையஹார்த்தபாவம் - உன் சிற்றில் இத்யாதி. அவன்சிற்றில் - ஜகத்தென்னுமத்தையும், அழிக்கும் பரிகரம் - ஸங்கல்பமென்னுமத்தையும் வ்யக்தமாக அருளிச்செய்கிறார் - ஜகதுபஸம்ஹாரம் இத்யாதி. ப்ரணயிநியானவள் காலாலென்னாதே, “திருவடியால்” என்று பூஜ்யமாகச்சொல்லுவானேன்? என்ன - ஶேஷபூதனுக்கு இத்யாதி. ஹார்த்தபாவம் - வெறுஞ்சிற்றிலை இத்யாதி. விவரணம் - சிற்றிலோடு இத்யாதி. நாச்சியார்திருமொழி. சிதைத்தாய் - அழித்தாய் இத்யர்த்த꞉. அழித்தப்ரகாரமேதென்ன - காலாலே இத்யாதி. ப்ரணயிநி க்ருபைசெய்திலையென்னலாமோ? என்ன - பிரிந்த இத்யாதி. தகவு - க்ருபை. “தகவு” என்றதுக்கு அர்த்தாந்தரம் - இனிக்கண்ணுடையார் இத்யாதி. தகவு - ந்யாயம்: ஏகார்த்தமாதல். கண்ணுடையாரென்றது - ஶ்லேஷம்; கண்ணுக்கும், தயைக்கும்பேர். விவரணம் - கண்படைத்ததுக்கு இத்யாதி. இரண்டாமர்த்தத்துக்கு, கண்படைத்தார்க்கு யோக்யமானது செய்திலையென்று ஸப்தார்த்தம். நல்லதுகாணுதபோது கண்படைத்ததுக்கு ப்ரயோஜநமில்லையோ? என்ன - ‘உன்முகத்தனகண்களல்லவே’ என்று. உன்முகத்திலிருக்கிறவை கண்களல்லவோ இத்யர்த்த꞉. நாச்சியார்திருமொழி. “எங்கள்சிற்றில்” என்றதுக்கு வாஸநை - உன்ஸ்ருஷ்டிபோலே இத்யாதி. அன்னல் - வெய்யில். துன்னல் - சிறுதிவலை. ‘வண்டலித்யாதி’ - நாச்சியார்திருமொழி; “குண்டுநீர்” இத்யாதி. பாசுரத்துக்கர்த்தம் - வண்டலிலுள்ள நுண்ணியமணலைத்தெள்ளி தூர்ப்பலைகளான நாங்கள் வளையையுடைய கைகளாலே க்லேஶப்பட்டிட்டதன்றோவென்று. “யாமடு” என்றதுக்கு ஹாவம் - நீ யடு இத்யாதி. நீயேபுஜிக்குமத்தனையென்றது - ‘யஸ்ய ப்ரஹ்ம ச க்ஷத்ரம் ச உபே பவத ஓதந꞉’ என்றத்தைப்பற்ற. ‘மூடநெய்பெய்து’ இத்யாதிக்கு - பால்சோறு மூடநெய்யைவிட்டுக் கலந்து முழங்கை வழியிலே நெய்பெருகும்படி கூடியிருந்தென்றர்த்தம். ஸ்வாபதேஶத்தில், அவன்சிற்றிலாவது - லீலா

வாரக் கூடியிருந்து புஜிக்குமதன்றே? [கண்டு நின்முகவொளிதிகழ முறுவல்செய்துநின்றிலையே] - எங்களுடைய லீலாவிநோதங்கண்டு ப்ரீதனாய், உன்னுடைய முகவொளிதிகழ மந்தஸ்மிதம்பண்ணி நிற்கமாட்டிற்றிலையே; இங்ஙன்செய்தவிடம் தக்கோர்மை செய்தாயல்லையே என்று இன்னாதாகிறார்கள். [தகவுசெய்திலை] - நாங்கள் சிற்றிலிழைக்கிறோமாகப் பாவித்துக் கடைக்கண்ணாலே உன்முகவொளியையும் முறுவலையுங் கண்டுகொண்டிருக்க வொட்டிற்றிலையே. முழுக்கப்பார்க்கில் எல்லாரோபாதியுமாமே: ப்ரணயியைப் பார்ப்பது கடைக்கண்ணாலேயிறே? எங்ஙனே பாராதேயிருந்து சிற்றிலிழைத்தார்கள்தான்!

பத்தாம் பாட்டு.

நின்றிலங்குமுடியினாய்! இருபத்தோர்கால்அரசுகளைகட்ட
வென்றிநீள்மழுவா!வியன்ஞாலம் முன்படைத்தாய்! [சுடர்!
இன்றிவ்வாயர்குலத்தை வீடுய்யத்தோன்றியகருமாணிக்கச்
நின்தன்னால்நலிவேபடுவோம் என்றும் ஆய்ச்சியோமே.

ஆ.—(நின்றிலங்கு.) இப்படி - எம்பெருமானுடைய அழகாலும் ஸ்வவிஶ்லேஷஜநித நிரவதிகாவஸாதத்தாலுமாகத் தன்னுடைய ஊடலெல்லாந்தீர்ந்து, தன்னை யகப்படுத்தின அவனுடைய அழகையும் ஸௌர்யகாருண்ய வாத்ஸல்யாதிகுணங்களையும் பேசி, இப்படியே குணவானாயிருந்துவைத்து, விஶ்லேஷபரம்பரைகளாலே எங்களை யென்றும் இங்ஙனே நலிவேசெய்துபோனாய்; ஆய்ச்சியோமாய்ப்பிறந்து நாங்கள் உன்னாற்பட்டது உன்னைப்பிரிந்தார்படும் வ்யஸநம் அறியாத நீ யறியாய்காண் என்கிறாள்

ஒ.—[நின்றிலங்கு முடியினாய்] - அந்யபரைகளாய் நேராகப்பாராதேயிருந்த இப்பிராட்டியும் தோழிமாரும் நேரப்பார்க்கைக்காக, இழைக்கிறசிற்றிலைத் திருவடிகளாலே அழித்தருள, அவ்வந்யாயப்பாடறிவிப்பாரைப்போலே, அவனைத் திருவடிகளை தொடங்கித்திருமுடியளவும் நோக்குகையாலே அவனுக்குப்பிறந்த வழகையும், மேன்மையையும், தாங்கள் இவனோடேஸம்ஶ்லேஷிப்போமல்லோமென்றுஅத்யவஸாயம்பண்ணியிருக்க அத்தை அழித்த ப்ரஸங்கத்தாலே இருபத்தொருபடிகால் க்ஷத்ரியகுலத்தையெல்லாம் கோலியறுத்த ஆண்பிள்ளைத்தனத்தையும், பண்டு ப்ரளயகாலத்தில் அஸத்கல்பமான ஜகத்தை உண்டாக்கினாற்போலே இடைச்சாதியடையத் தலையெடுக்கும்படிவந்து திருவவதாரம் பண்ணியருளின உபகாரத்தையும் பேசாநின்றுகொண்டு ஊடல்தீர்ந்து, அவனோடு ஸம்ஶ்லேஷித்து, ஏவம்விதனான உன்னால் இடைப்பெண்களான நாங்கள் நலிவேபடப் பிறந்தோமென்று தங்களுடைய ஆர்த்தியெல்லாம்தீரத் தாங்கள்பட்டநோவை அறிவிக்கிறாள்.

விபூதி. "எங்கள்சிற்றில்" என்றுதொடங்கி, "நின்றிலை - தகவுசெய்திலை" என்றந்வயித்துஸாவம் - எங்களுடைய இத்யாதிவாக்யத்வயம். திகழுகை - ப்ரகாசிக்கை. தக்கோர்மை - க்ருபை, ந்யாயமும். இன்னாதாகை - வெறுக்கை. கீழ்வாக்யவிவரணம் - நாங்கள்சிற்றில் இத்யாதி. வ்யாக்யாதாவின் ஈடுபாடு - எங்ஙனே இத்யாதி. (கூ)

ப.—அநந்தரம், "முகவொளிதிகழமுறுவல்செய்து நின்றிலையே" என்று முகம்பார்த்து வார்த்தைசொன்னவளவிலே தங்களகவாயில் மறந்தீர்ந்து, தங்களை பஹுமுகப்ரவ்ருத்தியாலே அவனுபிமுக்யம் பண்ணுவித்தபடியை நினைத்து, ஸர்வப்ரகாரரக்ஷகனை! உன்னாலே நாங்கள்இப்படிநலிவுபடுவதே! என்று ஸமாஹிதையாய் வார்த்தை சொல்லுகிறாள்.

(ஸமஸ்த ஜகத்ரக்ஷணத்துக்கும் ஒருநாளும் தாழ்வில்லாமையாலே), நின்று - நிலைநிற்க, இலங்கு - விளங்குகிற, முடியினாய் - திருவபிஷேகத்தையுடையையாய், இருபத்தோர்கால் - இருபத்தொருபடிகால், அரசு - ராஜாக்களை, களைகட்ட - உன்மூலநம் பண்ணின, வென்றி - வென்றியையுடைத்தான, நீள் - பெரிய, மழுவா - மழுவையுடையையாய்! வியல் - விஸ்தீர்ணமான, ஞாலம் - ஜகத்தை, முன் - ஸ்ருஷ்டிகாலத்திலே, படைத்தாய் - உற்பாதித்தவனாய், இன்று - இக்காலத்திலும், இ - இந்த, ஆயர்குலம் - இடைக்குலமானது, வீடு - தங்கள்குடியோடே, உய்ய - உஜ்ஜீவிக்கும்படியாக, தோன்றிய - அவதீர்ணனான, கருமாணிக்கச்சுடர் - நீலரத்ந ப்ரபோஜ்ஜ்வலமான வடிவையுடையவனே! நின்தன்னால் - (இப்படி ஸர்வப்ரகாரரக்ஷகனானையினாலே எங்களுக்கு நாயகனுமாய் எங்கள்மறத்தையும் அழித்து அழிந்தஸத்தையுமுண்டாக்கி எங்களோடுறவும் உடையையாய் அநுபாவ்யமான வடிவையுமுடைய) உன்னாலே, ஆய்ச்சியோம் - அறிவில்லாத இடைக்குலத்திலே பிறந்த நாங்கள், என்றும் - என்றும், நலிவு - நலிவு, படுவோமே - படும்படியாவதேயென்று ஸமாஹிதையானபின்பு முன்புபட்ட நலிவை நினைத்துச் சொன்னாளாகிறது

"நானதஞ்சுவன்" என்று முதற்பாட்டிலேவந்த ஒருமைக்குப்பின்பு வந்த பன்மையெல்லாம் - ஆத்மநிபஹுவசநமாதல், தோழிமார்களையுங்கூட்டி அவர்களுக்காகச் சமைந்துசொன்னதாதல்.

இ.—பத்தாம் பாட்டில், லீலையைத் திருவடிகளாலேஅழித்த சீற்றத்தாலே முன்புத்தையவற்றை மறந்து, அவ்வந்யாயப்பாட்டைஅறிவிப்பாரைப்போலே, "இவனை முகம்பாரோம்" என்ற ஸங்கல்பமழிந்து முகத்தைப் பார்த்தார்கள்; நெஞ்சில் மறமெல்லாம்போய் அந்தத்திருவடிகளை தொடங்கித் திருமுடியளவும்பார்க்க, அத்தாலே அவனுக்குப்பிறந்த விஸ்லேஷத்தைச்சொல்லுகிறாள்: [நின்றிலங்கு முடியினாய்] - என்னைத் தோற்பிக்கையாலே நிலைநின்று விளங்காநின்ற திருவபிஷேகத்தை உடையவனே! அபிஷிக்தக்ஷத்ரியர் விஜயாபிஷேகம் பண்ணினாற்போலே, எங்களைத் தோற்பித்த பின்பு முடியும் நற்றரித்து விளங்குவதுஞ்செய்த தென்கை. இத்தலையில் ஸத்தை உண்டாம் அத்தாலே ரக்ஷகத்வம் நிலைநின்றபடி. [இருபத்தோர்கால் இத்யாதி] - "உங்களயிஸந்யியைக்குலைத்து முகம்பார்க்கப் பண்ணினோமிறே" என்ன, உன்னோடு எதிரிட்டாரில் உன்னைவென்றாருண்டோ? இருபத்தோர்படிகால் க்ஷத்ரியகுலத்தைக் கோலியறுத்த ஆண்பிள்ளையல்லையோ? எதிரிகளை மழுவாலே அழித்தாற்போலே, அநுகூலரை அழகாலே அழிப்புதி. "ஸம்ஸாரஸ்ருஷ்டிவித்தாவஹாரிணீ" என்று ஆண்களை அழிக்கக்கடவநீ, அபலைகளை அழிக்கச்சொல்லவேணுமோ? [வியன்ஞாலமுன்படைத்தாய்] - ப்ரளயத்திலே உருமாய்ந்து கிடந்த பூமியை உண்டாக்கினாற்போலேயிறே ப்ரணயரோஷத்தாலே அழிந்த எங்களை உண்டாக்கினபடி. வியன் - விஸ்மயம். ப்ரளயங்கொண்ட பூமியை எடுத்தாற்போலேயிறே விரஹப்ரளயங்கொண்ட எங்களை எடுத்த

படி. அங்கு விலக்குவாரில்லாமையாலே செய்யலாம்; நிஷேதிக்கச்செய்தேயன்றோ உண்டாக்கிற்று. [இன்று இத்யாதி] - இன்று இவ்விடைச்சாதி ஸபரிகரமாக உஜ்ஜீவிக்கும்படி தோன்றினவன். வீடுய்ய - ஸபரிகரமாக உய்ய. [கருமாணிக்கச்சுடர்] - ப்ரணயரோஷத்தாலேஇருய்த்திருக்கிற எங்களை மேல்விழுந்து உன்னழகை அநுபவிப்பித்தவனே! [நின்தன்னால் நலிவே படுவோமென்றும்]-இவ்வநுபவம் ஸ்வப்நகல்பமாய், ஆற்றாமையிறே யெங்களுக்கு நிலைநின்று போருவதென்று தாங்கள் பட்டநோவை அறிவிக்கிறார்களென்னுதல்; "ஜிதனே" என்றும், "தோற்றோம்மடநெஞ்சம்" என்றும் தாங்கள் தோற்றபடியை அவன்தனக்குச் சொல்லுகிறார்களாகவுமாம். [ஆய்ச்சியோமே] - இடக்கையும் வலக்கையும் அறியாத நாங்கள்.

ஈடு.—பத்தாம்பாட்டு. "நின்முகவொளிதிகழமுறுவல்செயதுநின்றிலையே" என்று விழுக்காடறியாதே வாய்தப்பச் சொல்லிக்கொண்டு நின்றார்கள்; காலால் அழித்தது சிற்றிலையன்றே: இவர்கள்நெஞ்சில் மறத்தையேயிறே; அந்த மறம் போனவாறே மேல்நோக்கி பாதாதிகேசாந்தமாகப் பார்த்தார்கள்; தங்களை ஜயிக்கையாலுண்டான ஹர்ஷம் வடிவிலேதோற்றும்படி நின்றான்; அவ்வடிவில் பிறந்தவேறுபாட்டைச் சொல்லுகிறார்கள்.

[நின்றிலங்குமுடியினாய்] - இவர்களை ஜயிப்பதற்குமுன்பு தலைச்சுமையாய்க் காணும் கிடந்தது; இப்போதாயிற்று நற்றரித்து ஒளிவிடத் தொடங்கிற்று. சில ராஜாக்கள் தந்தாமெதிரிகளை யழித்து வீராபிஷேகமும் விஜயாபிஷேகமும் பண்ணி நிற்குமாபோலே, முன்பே முடிசூடியிருக்கச்செய்தேயும் இவர்களைத் தோற்பிப்பதற்குமுன்பு அஸத்ஸமமாய்க் காணும் இருந்தது. ராவணாதிகளை ஜயித்ததுக்குச் சூடினமுடிபோலல்லவிறே ப்ரணயிநிகளை ஜயித்ததுக்குச்சூடின முடியிருப்பது; இவர்கள் அபிஸந்தியைக் குலைத்துப் பொருந்தவிட்டுக்கொண்டபின்பு காணும் மேன்மையையுடையனாய் உஜ்ஜ்வலனுமாய் முடியும்நற்றரித்தது. 𑌅𑌭𑌿𑌷𑌿𑌚𑍍𑌯 𑌤𑍁 𑌲𑌙𑍍𑌕𑌾𑌯𑌾𑌂 𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌂 𑌵𑌿𑌭𑍀𑌷𑌣𑌂 𑌕𑍃𑌤𑌕𑍃𑌤𑍍𑌯𑌃" (அபிஷிச்யச லங்காயாம்ராக்ஷஸேந்த்ரம் விபீஷணம் க்ருதக்ருத்ய:)- "ஸ்ரீபரதாழ்வானைப்போலே 'நான் முடிசூடேன் நீர்முடிசூடும்' என்று முடிக்குஇருய்க்கிற் செய்வதேன்?" என்று உடம்புவெளுத்

பத்தாம்பாட்டு.—நின்றிலங்கு இத்யாதி. "நின்றிலங்குமுடியினாய்" இத்யாதியைக்கடாக்ஷித்து அவதாரிகை - நின்முகம் இத்யாதி. 'விழுக்காடறியாதே'யென்றது - மேல் ஸம்ஶ்லேஷிக்குமதறியாதேயென்றபடி. வாய்தப்பச்சொல்லுகைக்கு ஹேதுவேதென்ன - காலாலழித்தது இத்யாதி. இந்தப்பாட்டுக்கவதாரிகை - அந்தமறம் இத்யாதி.

ஸுஸ்த்திரமாய் ப்ரகாசியாநிற்கிற முடியையுடையவனே என்று ஸப்தார்த்தம். இப்போது ஸுஸ்த்திரமாய் ப்ரகாசியாநிற்கிறதென்கையாலே-இதுக்குமுன்பு அதில்லையென்று தோற்றிற்றிறே; அத்தையருளிச்செய்யாநின்றுகொண்டு, "நின்றிலங்கு" என்கிறத்தை ஸஹேதுகமாக அருளிச்செய்கிறார் - இவர்களை இத்யாதி வாக்யத்வயத்தாலே. "நின்று, இலங்கு" என்கிறபதத்வயத்துக்குமர்த்தம்- 'நற்றரித்து ஒளிவிடத்தொடங்கிற்று' என்று. உக்தத்துக்குத்ருஷ்டாந்தம் - சிலராஜாக்கள் இத்யாதி. வீராபிஷேகம் - அபிமந்யுவுக்கும், விஜயாபிஷேகம் - அர்ஜுநனுக்குமாக விபாகங்கண்டுகொள்வது. அபலைகளைஜயித்து முடிசூடினானென்றது அதிசயமோ? என்ன - ராவணாதிகளை இத்யாதி. "நின்று, இலங்கு, முடியினாய்" என்றபதத்ரயார்த்தத்தையும் அவரோஹணக்ரமத்தாலே விவரிக்கிறார் - இவர்கள்அபிஸந்தியை இத்யாதி. இவர்களைப்பொருந்தவிட்டுக்கொண்டு அத்தாலே க்ருதார்த்தனாயிருந்ததுக்கு த்ருஷ்டாந்தம் - 𑌅𑌭𑌿𑌷𑌿𑌚𑍍𑌯 இத்யாதி. "𑌅𑌭𑌿𑌷𑌿𑌚𑍍𑌯 𑌕𑍃𑌤𑌕𑍃𑌤𑍍𑌯𑌃" என்கிறதென்? அபிஷேகம்பண்ணுகிற தருந்தலோவென்ன - ஸ்ரீபரதாழ்வானை இத்யாதி. உடம்புவெளுத்திருந்த பெரு

துக்காணும் இவரிருந்தது; ‘‘ஒருபடி அத்தலைச்சுமையைக் கழித்துப்போந்தோம்; இதுவும் தலைச்சுமையாகிற் செய்வதேன்?’’ என்று. இக்ஷ்வாகுவம்ஶ்யர்க்குப் பணியிறே முடிக்கு இருக்கை. அடிக்கு இருயாதிருக்கையும் முடிக்குஇருக்கையுமிறே ஸ்வரூபம். ‘‘அதுகிடக்க; உங்கள் அஹிஸங்கியையைக்குலைத்து உங்களைவென்றோமிறே’’ என்றான். [இருபத்தோர்காலித்யாதி] - மிடுக்கரான ராஜாக்களை இருபத்தொருபடிகால்வென்ற உனக்கு அபலைகளான எங்களை வெல்லுகை பெரியபணியோ? ‘‘எனக்கு’’ என்றிருப்பாரையும் உனக்காக்கிக்கொள்ளவல்ல உனக்கு உனக்கேயாயிருப்பாரை வெல்லுகை பெரியஏற்றமோ? ஆசுரப்ரக்ருதிகளாய் நாட்டைப் பட அடித்துத்திரிகிற க்ஷத்ரியகுலத்தைக் கிழங்கெடுத்த மிடுக்கனே! களைகட்டுகையாவது - எடுத்துப் போகடுகை. ராஜாக்களை வென்றவுனக்கு இடைச்சிகளை வென்றாயென்பது ஓரேற்றமோ? † (ராஜாக்களை யுந்மூலமாம்படிபண்ணின வெற்றியையுடைத்தான பெரியமழுவையுடையவனே!) [வியன்ஞாலமுன்படைத்தாய்]-ப்ரளயத்திலே உருமாய்ந்துகிடந்த பூமியையுண்டாக்கினாற்போலேயிறே ப்ரணயரோஷத்தாலேயழிந்த எங்களையுண்டாக்கினபடி. வியன் - விஸ்மயம். ப்ரளயங்கொண்ட பூமியையெடுத்தாற்போலே, விரஹப்ரளயங்கொண்ட எங்களை யெடுத்தபடி. அங்கு விலக்குவார்இல்லாமையாலே செய்யலாம்; ‘‘கழகமேறேல்’’ என்று நிஷேதிக்கச்செய்தேயன்றோ உண்டாக்கிற்று? [இன்றித்யாதி] - ‘‘ப³ஹு ஸ்யாம்’’ (பஹுஸ்யாம்) என்று பொதுவானஸ்ருஷ்டி தேடிப்போகவேணுமோ? இவ்விடைக்குலத்தேவந்து பிறந்து, இன்று இவ்விடைச்சாதியை ஸபரிகரமாக வடிவைக் காட்டி ரக்ஷித்தவனன்றோ? ஆஶ்ரிதவிஷயத்திற்பண்ணின ஓரம் தன் பேறு என்னுமிடம் வடிவிலேதோன்றும்படிகாணும்இருக்கிறது. [வீடேய்ய]-‘‘[illegible]’’

மாளுடைய வுட்கருத்தை யருளிச்செய்கிறார் - ஒருபடிஅத்தலை இத்யாதி. ‘உடம்புவெளுத்துக்காணும் இவரிருந்தது’ என்றவாக்யத்தை - மேலில்வாக்யத்திலும் கூட்டிக்கொள்வது. ஸ்ரீபரதாழ்வான் முடிக்கிருய்த்தால்இவர்க்கு முடிக்கிருய்க்கவேணுமோ? என்ன - இக்ஷ்வாகு இத்யாதி. ஸ்ரீவிபீஷணாழ்வானை இக்ஷ்வாகுவம்ஶஜ ரென்றது - ‘‘[illegible]’’ என்றத்தைப்பற்ற. அவர்கள்தான் முடிக்கிருய்க்கைக்கு அடியேதென்ன, ஸ்வரூபஜ்ஞாநம்பிறந்த வுரப்பென்கிறார் - அடிக்கிறயாது இத்யாதி. அதுகிடக்கவென்றது - ‘‘நின்றிலங்குமுடியினாய்’’ என்றென்னைக்கொண்டாடுகிறது கிடக்க என்றபடி. ‘‘உங்களைவென்றோம்’’என்று சொன்னவனுக்கு மூன்றுவகையாகவுத்தரம் சொல்லுகிறார்கள் - மிடுக்கரான இத்யாதியாலும், எனக்கென்றிருப்பாரை இத்யாதியாலும், ராஜாக்களை இத்யாதியாலும். அதாவது - காயிகமும்மாநஸமும் ஜாதிப்ரயுக்தமுமான தோல்விகளென்றபடி. ஶப்தார்த்தம் - ஆசுரப்ரக்ருதிகளாய் இத்யாதி. இருபத்தொருதலைமுறை ராஜாக்களை யுந்மூலநம்பண்ணினவெற்றியையுடைத்தான பெரியமழுவை யுடையையாய் இத்யர்த்த:. தங்கள் ப்ரணயரோஷத்தைப்போக்கிச் சேர்த்துக்கொண்டபடி சொல்லுகிறவிடத்திலே ஸ்ருஷ்டியைச் சொல்லுகிறதுக்குபாவம் - ப்ரளயத்திலே இத்யாதி. தங்களுக்கு ப்ரளயமுண்டோவென்ன - ப்ரளயங்கொண்ட இத்யாதி. முன்படைத்தாய் - மஹாப்ரளயாந்தத்திலே படைத்தாயென்றபடி. வியன்ஞாலம் - விஸ்மயநீயமான பூமியென்னுதல், விஸ்தீர்ணமான பூமியென்னுதல். ஜகத்ஸ்ருஷ்டியத்தனை அருமையுண்டோவென்ன, அதிலும் இது அதிகமென்கிறார் - அங்குவிலக்குவார் இத்யாதி வாக்யத்வயத்தாலே. ‘‘கருமாணிக்கச்சுடர்’’என்றதுக்கு மூன்று பாவம். தன்வடிவழகாலே இடைக்குலத்தை வசீகரித்தவனென்று பூர்வபாவியாக ஒருபாவம்; இத்தையருளிச்செய்கிறார் - ஸபரிகரமாக இத்யாதியாலே. இத்தை உஜ்ஜீவிப்பித்தபின்பு அவன்வடிவு புகர்பெற்றதென்று அபாபாவியாக இரண்டாம் பாவம்; இத்தையருளிச்செய்கிறார் - ஆஶ்ரிதவிஷயத்தில் இத்யாதி. இடைக்குலத்தை உஜ்ஜீவிப்

(ஸபுத்ரபௌத்ரஸ்ஸகணஃ) என்கிறபடியே ஸபரிகரமாகவுய்ய. [தோன்றிய] - ஆவிர்ப்பவித்த. ப்ரணயரோஷத்தாலே "சேரோம்" என்றிருக்கிற தங்களைச் சேர்த்தபடியாலே 'கருமாணிக்கச்சுடர்' என்கிருர்கள். [நின்தன்னுலித்யாதி] - சத்ருக்களாய் முடிந்துபோகப் பெருதே, ஸம்ஸாரிகளாய் அந்யபரராய்ப்போகப் பெருதே,நீ நலியவும் நாங்கள்நோவுபடவுமாம்படி சமைந்துவிட்டதிறே! இரண்டுதலையுங்கூடி மேல்விழுந்தணைத்துக்கொண்டு நின்று சொல்லுகிற வார்த்தையிறே. இவ்வளவும் தங்கள் வெற்றியேயிறே சொல்லிப்போந்தது; இப்போதிறே தங்கள்தோல்விக்குஇசைந்தது. †(இவ்வநுபவம் ஸ்வப்நகல்பமாய்ஆற்ருமையிறே எங்களுக்கு நிலைநின்று போருவதென்று, தாங்கள் பட்டநோவை யறிவிக்கிருர்களென்னுதல்; அன்றிக்கே, "ஜிதந்தே" (ஜிதந்தே) என்றும், "தோற்ருேம்மடநெஞ்சம்" என்றும் தாங்கள் தோற்றபடியை அவன்றனக்குச் சொல்லுகிருர்களாகவுமாம்.) [நலிவேபடுவோம்] - இதுதான் எங்களுக்கு மெய்யாகப்புகாநின்றதோ? எங்களுடையதேயிறே எங்களுக்கு ஸித்தித்துவிடுவது. இவர்களுடையதாவது - "கூடிலும் நீங்கிலும் யாம்மெலிதும்" என்று மெலிவேயாயிருக்கை. [ஆய்ச்சியோமே] - இடக்கையும் வலக்கையும் அறியாத நாங்கள். (க0)

பித்தவனுய், எங்கள் ப்ரணயரோஷந்தீர்க்கையாலே யுஜ்ஜ்வலனனவனே என்று மூன்ரும்ஹாவம்; இத்தையருளிச்செய்கிருர் - ப்ரணயரோஷத்தாலே இத்யாதி. பூர்வபாவியான அர்த்தவிவரணமாதல். "கருமாணிக்கச்சுடர்" என்று - ஸம்புத்தி. "நின்தன்னுல் நலிவேபடுவோம்" என்றவர்களுடைய ஹார்த்தஹாவமாதல், "நலிவே" என்ற அவதாரணத்துக்குஹாவமாதல் - சத்ருக்களாய் இத்யாதி. "அரசு களைகட்ட வியன்ஞாலம்" என்றபதங்களைப்பற்ற - சத்ருக்களாய் என்றும், ஸம்ஸாரிகளாய் என்றும் அருளிச்செய்தது. இத்தால் - ராஜாக்களையும் ஸம்ஸாரிகளையும் வ்யாவர்த்திக்கிறதென்று கருத்து; "நலிவேபடுவோம்" என்றது - ப்ரணயரோஷத்தாலே சொல்லுகிற வார்த்தையோ? என்ன - இரண்டுதலையும் இத்யாதி. இதுக்குநியாமகமேதென்ன - இவ்வளவும் இத்யாதி. ஸம்ஶ்லேஷம் சித்தித்திருக்க, "என்றும் - நலிவேபடுவோம்" என்பானென்? என்ன - இதுதான் இத்யாதி. என்றும் - ஸர்வகாலமும். "நலிவேபடுவோம்" என்று - தங்கள்துஃகம்சொல்லுகிருர்களாதல், தோல்வி சொல்லுகிருர்களாதல்; முந்தினது - 'சத்ருக்களாய்' இத்யாதிவாக்யத்திலே கண்டுகொள்வது. அதாவது - ஸம்ஶ்லேஷமல்பமாய், தாங்கள் பட்டநோவே அதிகமென்றறிவிக்கிருர்களென்றபடி. தோல்வி சொல்லுகிறது - 'இவ்வளவும் தங்கள்வெற்றியேயிறே' இத்யாதிவாக்யத்திலே கண்டுகொள்வது. 'கூடிலும்நீங்கிலும்யாமெலிதும்' - திருவிருத்தம்பதினுரும்பாட்டு, "பலபலவூழிகளாய்" இத்யாதி. 'கூடிலும்நீங்கிலும்யாமெலிதும்' என்றதுக்கர்த்தம் - கூடில் "மேல்பிரிவுவருகிறதோ?" என்னும்பயத்தாலும், நீங்கில் விஶ்லேஷவ்யஸநத்தாலும் மெலிவுதோமென்றபடி. ஆய்ச்சியோம் - அறிவில்லாத இடைக்குலத்திற்பிறந்தநாங்கள், என்றும் - நலிவேபடுவோம் இத்யந்வயஃ. "நானதஞ்சுவன்" என்ற ஏகவசநத்துக்குப் பின்புசொன்ன பன்மையெல்லாம் - ஆத்ம்நி பஹுவசநமாதல், தோழிமாரையுங்கூட்டிக்கொண்டாதல். (க0)

பதினோராம் பாட்டு.

ஆய்ச்சியாகியஅன்னையால் அன்றுவெண்ணெய்வார்த்தையுள்சீற்றமுண்
கூத்தஅப்பன்தன்னைக் குருகூர்ச்சடகோபன் [டழு
ஏத்தியதமிழ்மாலை ஆயிரத்துள்இவையுமோர்பத்து இசையோடும்
நாத்தன்னால்நவிலஉரைப்பார்க்கு இல்லைநல்குரவே.

ஆ—(ஆய்ச்சியாகிய.) - அதிஸ்நேஹிநியான யசோதைப்பிராட்டி, "வெண்ணெய்களவுகண்டாய்" என்று பொடிந்தபோதுபோலே, ஆழ்வார் தாம் ப்ரணயகோபத்தாலே "எம்பெருமானோடு கலப்பேனல்லேன்" என்றுஅகல, அது பொறுக்கமாட்டாமே தளர்ந்த தளர்த்தியை அநுஸந்தித்து இனியராய் அவ்வெம்பெருமானை ஏத்தின இத்திருவாய்மொழியை, இப்பாவவ்ருத்தியின்றிக்கே சொன்னார்க்கும், எம்பெருமான் ஸந்நிஹிதனாயிருக்கச்செய்தே †பிறங்கித் தாம்பட்ட துக்கம் படவேண்டா வென்கிறார்.

ஒ.— [ஆய்ச்சியாகிய அன்னையால்] - அதிஸ்நேஹிநியான யசோதைப்பிராட்டி 'வெண்ணெய் களவுகண்டாய்' என்று பொடிந்தபோதுபோலே ஆழ்வார் தாம் ப்ரணயகோபத்தாலே "எம்பெருமானோடே கலப்பேனல்லேன்" என்றகல, அதுபொறுக்கமாட்டாமை தளர்ந்த தளர்த்தியை அநுஸந்தித்து இனியராய், எம்பெருமானை ஏத்தின இத்திருவாய்மொழியை இப்பாவவ்ருத்தியின்றிக்கே வாங்மாத்ரத்தாலே சொன்னார்க்கும் எம்பெருமான் ஸந்நிஹிதனாய் இருக்கச்செய்தே † பிறங்கி ஆழ்வார் தாம்பட்ட துக்கம் படவேண்டாவென்கிறார்.

ப.—அநந்தரம், இத்திருவாய்மொழியைச்சொல்லுமவர்களுக்கு பகவதலாபரூபமான தாரித்ர்யமில்லையென்றுபலத்தை யருளிச்செய்கிறார்.

ஆய்ச்சியாகிய - இடைக்குலத்திலேபிறந்த, அன்னையால் - யசோதையாகிற தாயாராலே, அன்று—, வெண்ணெய்வார்த்தையுள் - வெண்ணெய்க்களவு வார்த்தை பிறந்தவளவிலே, சீற்றமுண்டு-சீறப்பட்டு, அழு - அழுது தோப்புக்கண்டமிட்ட, கூத்தன்-கூத்தையுடையவனான, அப்பன்தன்னை - லோகோபகாரகனை, குருகூர்ச்சடகோபன் - ஆழ்வார், ஏத்திய - ஸ்தோத்ரரூபமாகவருளிச்செய்த, தமிழ்மாலை - த்ராவிட ஸந்தர்ப்பரூபமான, ஆயிரத்துள்ளும் - ஆயிரத்துள்ளும், இவை - (விமுகரை அபிமுகராக்கிக்கொண்ட அத்விதீயமான) இவை, ஓர்பத்தும்-பத்தையும், இசையொடும் - இசையோடே கூட, நாத்தன்னால் - நாவுக்கு ப்ரயோஜநமாக, நவில - செறிய, உரைப்பார்க்கு - உரைப்பார்க்கு, நல்குரவு - பகவதலாபமாகிற தாரித்ர்யம், இல்லை - இல்லை. இது - ஆசிரியத்துறை.

இ.—நிகமத்தில், இப்பத்தை ஸாதரமாகக்கற்குமவர்கள், நான் பட்ட க்லேசம் படார் என்கிறார்.

[ஆய்ச்சியாகிய அன்னையால்] - அன்னையென்று பொதுவிலே சொன்னால் தேவகிப்பிராட்டிபக்கலிலும் ஏறு மென்று; 'ஆய்ச்சியாகிய' என்று விசேஷிக்கிறார். முலையுண்டு வளர்ந்த விடத்திலேயிறே அச்சமுள்ளது! [அன்று வெண்ணெய் வார்த்தையுள் சீற்றமுண்டு] - வெண்ணெய் களவுபோயிற்றென்கிற வார்த்தையிலே "இவனே

† பிறங்கல்-செறிதல். ஸஹசரித்தல்

ஈடு—இரண்டாம்பாட்டு. ''தோல்லருணல்வினையால் சோலக்கூடுங்கோல்'' என்று ப்ரார்த்தித்தபடியே பெறுகையாலே திருநாட்டிலேதான் என்னோடொப்பாருண்டோ? என்கிறார்.

[கேயத்தீங்குழலூதிற்றும்]-கேயமென்று பாட்டு: தீமென்று இனிமை; இனிமையையுடைய பாட்டென்றபடி. தான்நினைத்த பெண்களுடையபேரைவைத்துப்புணர்த்துச்சுவைப்பாட்டாகவைத்துஊதிற்றும். [நிரைமேய்த்ததும்]-பெண்களையழைக்கைக்கும் பசுமேய்க்கைக்கும் ஒன்றே பரிகரம்; குழலையூதவே பசுக்கள்வயிறுநிறையும். சக்ரவர்த்தித்திருமகனுக்கு வில்லு கைவந்திருக்குமாபோலேயாயிற்று, க்ருஷ்ணனுச்குக் குழல் கைவந்திருக்கும்படி.

இரண்டாம்பாட்டு.—கேயத்தீங்குழல் இத்யாதி. ''நேயத்தோடு கழிந்தபோது எனக்கெவ்வுலகம்நிகர்'' என்றத்தைக் கடாக்ஷித்தவதாரிகை-தோல்லருள் இத்யாதி.

பாட்டுக்களை வைத்து இனிதாகக் குழலூதினதும் என்று ஸப்தார்த்தம். கேயம் - கேயம். கானமென்றபடி. ஊதுகைக்கு விஷயங்காட்டுகிறார்—தான் நினைத்த இத்யாதி. சுவைப்பாட்டாக - ரஸவத்கானமாக. கீழ்ப்பதத்தையுங்கூட்டி பதச்சேர்த்திக்குபாவம் - பெண்களை இத்யாதி. பெண்களை அழைக்கைக்கொழிய, பசுமேய்க்கைக்கும் பரிகரமாகக்கூடுமோ? என்ன - குழலை இத்யாதி. குழலொழிய வ்யாபாராந்தரமில்லையோ? என்ன - சக்ரவர்த்தி இத்யாதி. ''நிரைமேய்த்ததும்'' என்றத்

[கேண்டையித்யாதி]- கரவதத்தின்அன்றுபிராட்டி "பர்த்தாரம் பரிஷஸ்வஜே" (பர்த்தாரம்பரிஷஸ்வஜே)என்றுஅணைத்தாற்போலேயாயிற்று,பசுமேய்த்துவந்த ஶ்ரமமெல்லாம் போம்படி நப்பின்னைப்பிராட்டி முக்யமான அழகிய கண்ணாலே குளிரநோக்கி அழகியதிருக்குழலில் பரிமளத்தாலே திருமேனியை வாஸிதமாக்கித் தன்தோளோடே யணைத்ததுவும். [கேண்டையோண்கண்] - கேண்டைபோலே அதிமுக்யமாய்அம்ருதத்தைவர்ஷித்தாற்போலே குளிரநோக்குகிற கண்கள். [வாசப்பூங்குழல்] - * வாசஞ்செய்பூங்குழலிற்காட்டிலும் பொலிவையுடைத்தான தன்னேற்றமுடைய குழலையுடையவள். [பின்னை தோள்கள் மணந்ததும்]-அவளுடைய தோள்களுடனே கலந்ததுவும். மணத்தல்-கலத்தல். "தோளி" என்கிறபடியே இவளுக்குஅழகு கைவிஞ்சியிருக்குமே. [மற்றும்பல] - மற்றைப்பிராட்டிமாரோடு கலந்தபடி. சக்ரவர்த்தித்திருமகனுக்கு அத்யயநம், ஆசார்யஸேவை அஸ்தரஶஸ்த்ராப்யாஸங்களுண்டாமாபோலே,இவனுக்கு எல்லாமிவையேயிறே. [மாயக்கோலப்பிரான்]- நப்பின்னைப்பிராட்டியோடுகலந்த ஒற்றுமஞ்சளுந்தானுமான அத்யாஶ்சர்யமான ஒப்பனையுடைய வுபகாரகன். [மாயக்கோலப்பிரான்]-நப்பின்னைப்பிராட்டியோடு கலந்தாற்போலே, அல்லாதபிராட்டிமார் "கோங்கைமேல்குங்குமத்தின் குழம்பழியப் புகுந்தொருநாள், தங்குமேலென்னுவிதங்கும்" என்றிருக்குமவர்களுடைய திரு முலைத்தடத்தில் குங்குமக்குழம்பும் கோயிற்சாந்துமாய் நின்ற அழகைச் சொல்லவுமாம். [தன்செய்கைநினைந்து மனங்குழைந்து நேயத்தோடுகழிந்தபோது] - அவன்செயல்களை நினைத்தவாறே நெஞ்சு தன்வசமின்றியழியும்படி. "நினைதோறும் - நெஞ்சிடிந்துகும்" என்றிறேயிருப்பது. [நேயத்தோடு கழிந்தபோது] - ஸ்மர்த்தவ்யவிஷயரஸ்யதையாலே ஸ்மரணந்தான் இனிதாய்க் கழிந்த

ப்ர.—[கேண்டை இத்யாதி]—ஶ்ராமண்யகாண்டே, [கூ0] "தம் த்ருஷ்ட்வா ஶத்ருஹந்தாரம் மஹர்ஷீணாம் ஸுகாவஹம் । பபூவ ஹ்ருஷ்டா வைதேஹீ பர்த்தாரம் பரிஷஸ்வஜே ॥கூகூ௯॥"

தையுங் கூட்டிஹாவம் - காவதத்தின் இத்யாதி. ஶப்தநிர்வாஹம் - கேண்டைபோலே இத்யாதி. கெண்டைபோலே அழகிய கண்களையும், பரிமளத்தையுடைத்தாய் அழகிதான குழலையுமுடைய நப்பின்னைப் பிராட்டியுடைய தோள்களுடனே ஸம்ஶ்லேஷித்ததுமென்று ஶப்தார்த்தம். வாசஞ்செய்கிற குழலென்னுதே, "வாசந்தானுகைகுழல்" என்கையாலே - பிராட்டி திருக்குழலிற்காட்டிலும் நப்பின்னைப்பிராட்டி திருக்குழலுக்குஏற்ற முண்டென்கிறார் - வாசஞ்செய் இத்யாதி. வாசம் - பரிமளம். பொலிவு - ஸம்ருத்தி. பூவென்று - அழகு. அவயவாந்தரங்களிருக்க, "தோள்கள்" என்று விஶேஷித்தஅுக்குஹாவம் - தோளி இத்யாதி. கைவிஞ்சியிருக்கும் - தோளிலே விஞ்சியிருக்குமென்றும், அதிகமாயிருக்குமென்றும் அர்த்தத்வயம். இவனுக்கு வேறு அத்யயநாதி வ்யாபாரமில்லையோ? இதுவோ க்ருஷி? என்ன - சக்ரவர்த்தி இத்யாதி. "பின்னைதோள்கள் மணந்ததும்" என்றத்தோடேகூட்டி, "மாயக்கோலம்" என்றதுக்குஹாவம் - நப்பின்னை இத்யாதி. "மற்றும்பல" என்றத்தோடேகூட்டி ஹாவாந்தாம் - நப்பின்னைப்பிராட்டியோடு கலந்தாற்போலே இத்யாதி. "நேயம்" என்று - ஸ்நேஹமாய், இனிமையை லக்ஷிக்கிறது. அப்படி நெஞ்சு ஶிதிலமாமோ? என்ன - நினைதோறும் இத்யாதி. அநுபவத்தாலுண்டாகக்கடவ ப்ரீதி, ஸ்மரணத்தாலே கூடுமோ? என்ன - ஸ்மர்த்தவ்யவிஷய இத்யாதி. நேயத்தோடு கழிந்தபோது-ஸ்நேஹத்தோடே போதுகள் போகாநின்றனவென்று ஶப்தார்த்தம். நித்யாநுஸந்தானம் பண்ணுகிற நித்யஸூரிகளைப்பற்றத் தமக்குஅதிசயமென்ன? என்ன-அநுபவவேளை இத்யாதி. எவ்வுலகம் நிகரே - எந்தலோகந்தானொப்பாவது? பரமபதந்தானொப்போவென்று நிஜஶப்தார்த்தம்; ஆனாலும், "உலகம்" என்று லோகத்திலுள்ளாரைச் சொல்லி, எனக்கு எந்த லோகத்திலுள்ளார் தான்

போது. நேயம் - நேசம். [எனக்கெவ்வுலகம்நிகரே]- ஒருதேசவிசேஷத்தில்தான் எனக்கு எதிருண்டோ? அநுபவவேளைபோலே ஸ்ம்ருதிவேளையிலும் இனிமையோடே செல்லக்கடவதானல் எனக்குஎங்கே எதிர்? ஆகாசவாயர்எனக்குஎதிரோ!வாய்-இடம்.பரமாகாசமென்கிற பரமபதமாகிற இடத்திலுள்ளார்தான் எனக்குஒப்பாரோ!! உலகமென்பது உயர்ந்தோராகையாலே, ஸூரிகளென்றபடி. (உ)

மூன்றும் பாட்டு.

நிகரில்மல்லரைச்செற்றதும் நிரைமேய்த்ததும், நீள்நெடுங்கைச்
சிகரமாகளிறட்டதும் இவைபோல்வனவும்பிறவும்
புகர்கோள்சோதிப்பிரான்தன் செய்கைநினைந்துபுலம்பிஎன்றும்
நுகரவைகல்வைகப்பெற்றேன் எனக்குஎன்னினிநோவதுவே?

ஆ—(நிகரில்.)-பசுமேய்த்தருளி விளையாடினாற்போலே அநாயாஸேந செய்தருளின அதிபலபராக்ரம மல்ல கிரிவராஸத்ருஶ நிரவத்யகவல குவலயாபீட ப்ரப்ருதி ப்ரதிகூலநிரஸந ஸ்வரூப ஸர்வதிவ்ய சேஷ்டிதங்களையும் அநுசந்தித்து, அவ்வநுசந்தாந ப்ரீதியாலே அப்ரக்ருதிங்கதனைக்கொண்டுஅலற்றி அநுபவிக்கப்பெற்ற எனக்குஇனி ஒருநோவுமில்லை யென்கிறார்.

ஒ.—மூன்றாம் பாட்டில், க்ருஷ்ணசேஷ்டிதங்களை அநுபவித்துக்கொண்டு எனக்குக் காலமெல்லாம் போகப்பெற்றேன்; "இன்னது பெற்றிலேன்" என்று நோவவேண்டுவதில்லை யென்கிறார். [நிகரில்மல்லரைச்செற்றதும் நிரைமேய்த்ததும்] - தங்கள்மிடுக்குக்கு லோகத்தில் ஒப்பின்றிக்கே யிருக்கிற மல்லரைச்செற்றது பசுமேய்த்தாற்போலே வருத்தமில்லாத லீலாமாத்ரமே. [புகர்கொள்சோதி] - ப்ரதிகூலநிரஸநத்தாலே ஒளிபெற்ற தேஜஸ்ஸு. [நுகர வைகல் வைகப்பெற்றேன்]-அநுபவிக்கைக்கு ஈடாகக்காலம்நெடுகப்பெற்றேனென்றுமாம்.

ப—அநந்தரம், நிரதிசயஔஜ்ஜ்வல்யவிசிஷ்டனான க்ருஷ்ணனுடைய நித்யாநுபாவ்யசேஷ்டிதங்களை அநுபவிக்கைக்கு உறுப்பாகக் காலம் நெடுகப்பெற்றேன்; எனக்குஎதுக்கு நோவுபடவேணு மென்கிறார்.

(மிடுக்குக்கு), நிகர் - ஒப்பு, இல் - இல்லாத, மல்லரை - மல்லரை, செற்றதும் - கொன்றதும், (விரோதிகள் தன்னை "எளியன்" என்று நினைத்திருக்கும்படி),

ஒப்பு; பரமபதத்திலுள்ளவர்கள் தான் ஒப்பர்களோ? என்றுஅர்த்தங்கண்டுகொள்வது. "எவ்வுலகம்" என்றால் - தேசத்தைக் காட்டுமெதொழிய, ஸூரிகளைக் காட்டாதேயென்ன;—"ஸ்தாநிகோபாதாஸதி" என்கிற ந்யாயத்தாலே காட்டுமென்னுமத்தை ரஸோக்தியாக அருளிச்செய்கிறார் - ஆகாஸ இத்யாதி. ஆகாசத்தைப் பார்த்து வாயைத் திறந்துகொண்டிருக்கிறவர்கள்; தரித்ரரென்றபடி. "ஆகாசவாயர்" என்றதுக்கு வாஸ்தவமான அர்த்தத்தையருளிச் செய்கிறார்-வாய் இத்யாதி வாக்யத்வயத்தாலே. இன்னமொருவழியாலே, உலகம் என்றது ஸூரிகளைக் காட்டுமென்கிறார் - உலகமென்பது இத்யாதி. உயர்ந்தோர் - உத்க்ருஷ்டர். ஆக, உலக மென்று - லோகத்திலுள்ளாரென்னுதல், பெரியோரென்னுதலென்றபடி. (உ)

நிரை - பசுவின்பின்னே, மேய்த்ததும் - கோல்கொண்டுபோய் மேய்த்ததுவும், (அந்த கோபாலதசையிலே), நீள் - உத்துங்கமாயிருப்பதாய், நெடு - நெடிய, கை - கையையுமுடைத்தாய், சிகரம் - பர்வதசிகரம்போலே ப்ரபலமாய், மா - (ஆகரத்திற்பிறப்பாலே) ஶ்லாக்யமான, களிறு - யானையை, அட்டதும் - அழித்ததுவும், இவைபோல்வனவும் - இவைபோலே யநுஷ்டவ்யமுமாய், பிறவும் - மற்றும் பலவாயிருப்பனவுமாய், புகர்கொள் சோதி - அத்யுஜ்ஜ்வலதேஜோரூபனை, பிரான்தன் - க்ருஷ்ணனுடையதான, செய்கை - சேஷ்டிதங்களை, நினைந்து - அநுஸந்தித்து, புலம்பி - வாய்விட்டலற்றி, என்றும் - நாடோறும், நுகர - புஜிக்கும்படியாக, வைகல் - காலம், வைக - மிகவும் நெடுக, பெற்றேன் -; இனி - இனி, எனக்கு - எனக்கு, என் - எதுக்கு, நோவது - நோவவேணும்? அநுபவ காலமில்லாமல்நோகிறேனோ? அநுபவம் ஸரஸமல்லாமல்நோகிறேனோ? என்று கருத்து.

இ.—மூன்றும்பாட்டில், க்ருஷ்ணசேஷ்டிதங்களை அநுபவித்துக்கொண்டு காலம் போக்கப்பெற்ற எனக்கு ஒருவிஶ்லேஷமாகிறநோவு இல்லை என்கிறார். [நிகரில் மல்லரைச்செற்றதும்] - மிடுக்குக்கு ஸத்ருஶமின்றிக்கே இருக்கிற மல்லரைச்செற்றதும். க்ஷத்ரிய ஜந்மத்துக்கு அநுரூபமாக விரோதிநிரஸநம் பண்ணினதும். [நிரைமேய்த்ததும்] - கோபஜந்மத்துக்கு அநுரூபமாகப் பசுமேய்த்ததும். பசுமேய்த்த அநாயாஸத்தோபாதியாயிற்று, மல்லரைலீலையாக நிரஸித்ததும். [நீள்நெடுங்கை] - வீப்ஸையாலே அறநெடிய கையென்கை: கடக்கப்போனாலும் எட்டிப்பிடிக்க வல்ல கை. அவன் அதுக்குத் தப்பின பின்பும் இன்று இவர் வயிறுபிடிக்கிறார். [சிகரமாகளிறட்டதும்] - பர்வதஶிகரம்போலே உரத்துப்பெருத்திருக்கிற குவலயாபீடத்தை நிரஸித்ததும். [இவைபோல்வனவும் பிறவும்] - இவைபோலே மற்றுமுண்டான கேசிநிரஸநாதிகளும். [புகர்கொள்சோதி] - விரோதி நிரஸநத்தாலே ஒளிபெற்ற தேஜஸ்ஸு. [பிரான்] - உபகாரஶீலன். [தன்செய்கைஇத்யாதி] - தன் சேஷ்டிதங்களை அநுஸந்தித்து நாள்தோறும் அடைவுகெடக்கூப்பிட்டு. [நுகரவைகல்வைகப்பெற்றேன்] - அநுபவத்தோடே காலம் கழியப்பெற்றேன் என்னுதல்; அநுபவிக்கலாம்படி காலம் நெடுகப்பெற்றேன் என்னுதல். [எனக்கென் இனி நோவதுவே] - ப்ரீதிப்ரேரிதனாய் அநுபவிக்கிற எனக்கு இப்படி காலம் நித்யமானபின்பு, விஶ்லேஷமாகிற நோவு உண்டோ?

ஈடு—மூன்றும்பாட்டு. க்ருஷ்ணசேஷ்டிதங்களையே அநுபவித்துக்கொண்டு காலம் போக்கப்பெற்ற எனக்கு "இன்னது பெற்றிலேன்" என்று நோவவேண்டுவதில்லையென்கிறார்.

[நிகரில் மல்லரைச் செற்றதும்] - மிடுக்குக்கு ஸத்ருஶமின்றிக்கே யிருக்கும் மல்லரைச்செற்றதும். †மவ்ய ஸேவையாலே ம்ருதுஸ்வபாவராயிருப்பார் இரண்டுபிள்ளைகளிறே: அஸங்க்யஸங்க்ஷணங்களாலும் ஶஸ்த்ராஸ்த்ர ஶிக்ஷைகளாலும் மலைபோலே திண்ணிதான தோளையுடைய மல்லரைப் பொடிபடுத்தினார்கள்; புழுக்குறித்தது எழுத்தானாற்போலே இங்

மூன்றும்பாட்டு.—நிகரில் இத்யாதி. "நுகரவைகல்வைகப்பெற்றேன்" இத்யாதியைக் கடாக்ஷித்து அவதாரிகை - க்ருஷ்ணசேஷ்டிதங்களை இத்யாதி.

"நிகரில்" என்கையாலே - இவர்களை ஜயித்தது ஆஶ்சர்யமென்கிறார் - மவ்ய இத்யாதி. ம்ருதுக்களானால் அவர்கள் பொடிபடும்படி யெங்ஙனே? என்ன - புழுக்குறித்தது இத்யாதி. வாய்த்துக்

† கோஸேவையாலேஎன்று பாடமிருக்கலாம்.

ஙனே வாய்த்துக்கொண்டு நிற்கக்கண்டதித்தனை; இல்லையாகில் சில முக்யருடைய வ்யாபார மாகமாட்டாதிறே. "ந ஸமம் யுத்தமித்யாஹு:" (நஸமம்யுத்தமித்யாஹு:) என்று கொண்டு ஸர்வரும் அஞ்சும்படியிறே அற்றைச்செயல். "ஏவிற்றுச்செய்வானேன்றெதிர்ந்து வந்த மல்லரை"-ஸ்வதந்த்ரராய்வந்து மேல்விழிலிறே "முடியாது" என்றுகைவாங்கலாவது? கம்ஸனுக்குப் பரதந்த்ரராய் வருகையாலே இங்குத் தோற்றார்களாகில் அவன் அங்கே தோள்களைக் கழிக்குமாயிற்று; ஆனபின்பு, "கோழைகளாய்க் கோலையுண்பதில் புகழோடேமுடிய வமையும்" என்று மேலிட்டார்கள். "சாவத்தகர்த்தசாந்தணிதோள்சதுரன்"-கூனி சாத்தி விட்ட சாந்து குறியழியாமேகாணும் அவர்களோடுவ்யாபரித்தது. மல்லரோடேகூட ஸர்வாவயவங்களும் பொருந்தி வ்யாபரியாநிற்கச்செய்தே, சாத்தின சாந்து குறியழிந்ததில்லைகாணும். கூனி சாத்திவிட்ட அநந்தரத்திலே பெண்கள் கண்ணாலே இலச்சினையிட்டு விடுகையினாலே இவனாலழிக்கவும் போகாதிறே. இவர்கள் கண்ணாலே இலச்சினையிடுகையாவது- அவன்தோளிலே சேலும்கயலுமிடுகையிறே. இவன் மல்லரோடே அழித்தானாகிலும், "மற்றெங்கேனும் அழித்தான்" என்றிறே அவர்கள் இருப்பது. இது அழித்துப்போனானாகில், பின்பு பெண்கள் கோஷ்டிக்குஆளாகானே. என்று எதிர்ந்துவருகையாவது - பொரக்கடவோமென்று நெஞ்சிலே துணிந்துவருகை. [நிரைமேய்த்ததும்] - முதற்பிறவிக்கூடாகச் செய்த செயலும், இரண்டாம் பிறவிக்கூடாகச்செய்த செயலும்: க்ஷத்ரியஜந்மத்துக்கூடாம்படி மல்லரோடே யுத்தம்பண்ணினான்; கோபஜந்மத்துக்கு ஸத்ருசமாம்படி பசுக்களை மேய்த்தான். பசுமேய்த்தபோதை ஆயாஸமாகாதே, மல்லரோடு பொருதபோதுமுள்ளது. [நீள்நெடுங்கைச் சிகரமாகளிறட்டதும்] - மல்லர்க்குத் தப்பிலும் தப்பவொண்ணாதுகிடீர் இதுக்கு. [நீள்நெடுங்கை]-தூரப்போய்த்தப்பவொண்ணாதபடி கையாலே வளைத்துக்கொள்ள வற்றாயிருக்கை. 'நெடுங்கை' என்னாநிற்கச்செய்தே, 'நீள்நெடுங்கை' என்கிறதிறே-இதின்

கொண்டு - ஸித்தித்துக்கொண்டு. வாய்த்ததென்று சொல்லவேணுமோ? இவர்கள் நிரஸித்தார்களென்னவொண்ணாதோ? என்ன - இல்லையாகில் இத்யாதி. ஆகையாலே 'ந ஸமம் யுத்தம்' என்று கூட்டுவது. பரதந்த்ரராய் வருகையாலும்ஏதந்நிரஸநம்அவெடிதமென்றுவிவக்ஷித்து, அதுக்குப்ரமாணம்-ஏவிற்று இத்யாதி. ஏவினத்தைச் செய்கைக்காக வுத்யோகித்தெதிர்ந்து வந்த மல்லரைக் குற்றுயிராக்கிவிடாதே முடியும்படியாகத் தகர்த்த. சாந்தால் அணியப்பட்ட தோளையுடைய சாதுர்யமுடையவனுடைய மலை இத்யர்த்த: பெரியாழ்வார் திருமொழி, நாலாம்பத்து, இரண்டாந்திருமொழி ஆறும்பாட்டு. "ஏவிற்றுச் செய்வான்" என்றதுக்கு அர்த்தம்-ஸ்வதந்த்ரராய் இத்யாதி. "சாவத்தகர்த்த" என்றவநந்தரம், "சாந்தணி தோள்சதுரன்" என்கையாலே - சாந்தழியாமல் பொருதபடியாயிற்று. இவனுடைய ஸாமர்த்த்யமென்று வ்யாக்யாதாவின்ஈடுபாடு - கூனி இத்யாதி. மேலெழுந்தவாரியாக இவர்களோடே யுத்தம் பண்ணுகையாலே சாந்தழியாதிருந்ததென்றாலோ? என்ன - மல்லரோடே இத்யாதி. குறியழியாமைக்கு ஹேதுவேதென்ன கூனிசாத்திவிட்டவநந்தரத்திலே இத்யாதி. இலச்சினை - அடையாளம். இலச்சினையிடுவதாவது எது? என்ன - இவர்கள்கண்ணாலே இத்யாதி. சேலும்கயலுமிடுகையாவது - தத்துல்யங்களான கண்களாலே பார்க்கை. மல்லயுத்தத்திலழிந்தால் இவர்கள்செய்வதேதென்ன - இவன்மல்லரோடே இத்யாதி. இவர்களிப்படியிருந்தால் இவனுக்கு ஹாநியேதென்ன - இதுஅழிந்து இத்யாதி. விவரணம் - க்ஷத்ரிய இத்யாதி. பதச்சேர்த்திக்கு தாத்பர்யாந்தரம் - பசுமேய்த்த இத்யாதி. "மிகவும் பெரிய கையையுடைய ஆனை" என்றதுக்கு ஹார்த்தபாவம்-மல்லர்க்கு இத்யாதி. அதுக்குஹேது - தூரப்போய் இத்யாதி. "வளைத்துக்கொள்ளவற்று" என்னுமதுக்கு ஸப்தம்ஏது? என்ன-நெடுங்கையென்னா நிற்க இத்யாதி. "சிகரமாகளிறு" என்றதுக்கு ஹார்த்தபாவம் - ஒருகை இத்யாதி "பர்வ

பெருமை யிருக்கிறபடி! [சிகரமாகளிறட்டதும்]-ஒருகை வேணுமோ? இதுதன்னைக் காண வமையாதோ? "ஆனைமாமலை" என்னக் கடவதிறே. பர்வதஶிகரம்போலே யாயிற்றுப் பெருத்திருக்கிறபடி.[அட்டதும்]-முடித்ததும்.[இவைபோல்வனவும்பிறவும்]-இவை தொடக்கமான கேஶிநிரஸநாதிகளும்.[புகர்கோள்சோதி]-குவலயாபீடநிரஸநத்துக்கு அநந்தரம்வடிவிற்பிறந்த ஒளிபெற்ற தேஜஸ்ஸு. [பிரான்] - உபகாரஶீலன். "ஸவ்யஃ பஶ்யத" (ஸக்யஃ பஶ்யத) என்னும்படி யிருக்குமிறே. "ஸ்வேதாம்புகணிகாசிதம்" (ஸ்வேதாம்புகணிகாசிதம்) - ஆனையோடே பொருதாலும் இங்ஙனேயோ வேர்ப்பது? முலையாகிற மலையோடு பொருதத்தோடு ஆனையாகிறமலையோடு பொருதத்தோடு வாசியில்லைகாணும் இவனுக்கு. [தன்செய்கை நினைந்து புலம்பி]-உபகாரஶீலனானவனுடைய சேஷ்டிதங்களை அநுஸந்தித்து, அதுஉள்ளடங்காமை புலம்பி. [என்றும் நுகரவைகல்வைகப்பெற்றேன்] - நாடோறும் புஜித்துக்கொண்டு, வைகலானது வைகப்பெற்றேன்: காலமானது கழியப்பெற்றேன். வைகலென்பது - காலம். வைகுகையாவது - கழிகை. அன்றிக்கே, அநுபவிக்கைக்குப்போரும்படி காலமானது நெடுகப்பெற்றேனென்றுமாம். அப்போது, வைகுகையாவது - நெடுகுகை. [எனக்கேன் இனி நோவதுவே]-"காலம் நெடுகுவது குறுகுவதாகாத இடந்தேடி யநுபவிக்கப்பெற்றிலேன்" என்கிற அத்ருப்தியுண்டோ எனக்கேன்கிறார். [எனக்கேன் இனி நோவதுவே] - அவனுக்கு வரும் நோவிறே, இவர்க்கு நோவாவது ; அது கழியப்பெற்றதிறே. இவர்நோவு போக்கும் அவனுக்கு வரும் நோவிறே. இவர்க்கு நோவாவது: அதுபோகவே இவர்க்கு நோவு போயிற்றதாமிறே. உயிருக்கு வரும் நோவு உடம்புக்கு நோவாமிறே.

(௬)

†சிகரம்போலே பெருத்திருக்கும்" என்றதுக்கு ப்ரமாணம் - ஆனை இத்யாதி. ஒளிபெற்ற தேஜஸ்ஸென்றது - மிக்கதேஜஸ்ஸென்றபடி. உபகாரஶீலனென்றது - புகர்கொள்சோதியை உபகரித்தவனென்றபடி. ஆர்க்குஉபகரித்தான்? என்ன; - மதுரையிற் பெண்களுக்கு உபகரித்தானென்று விவக்ஷித்து, அவர்கள் அதிலே ஈடுபட்டு இருந்தமையைச் சொன்ன ப்ரமாணத்தை அருளிச்செய்கிறார் - ஸவ்ய இத்யாதி. "ஸவ்யஃ பஶ்யத க்ருஷ்ணஸ்ய முகமத்யருணேக்ஷணம் । கஜயுத்தக்ருதாயாஸஸ்வேதாம்புகணிகாசிதம்" இதிபஞ்சமேம்ஶே.[20-54]"பஶ்யத" என்கையாலே - உபகாரந் தோற்றுகிறது. 'இங்ஙனேயோவேர்ப்பது?' என்றது - தங்கள் கலவியாலே வேர்க்கக்கண்டிருக்கையாலே, தங்கள் முலையிலே ஸம்ஶ்லேஷித்தாற்போலேயோ? என்றபடி. வ்யாக்யாதாவின் ஈடுபாடு - முலையாகிற இத்யாதி. புலம்பி - அக்ரமமாகக்கூப்பிட்டு. "நிகரில்" இத்யாதியைக் கடாக்ஷித்து ஹாவாந்தரம் - அவனுக்குவரும் இத்யாதி. அவனுடைய நோவு இவரதாமோ? என்ன; - த்வேதா பரிஹரிக்கிறார் - இவர்நோவு இத்யாதி வாக்யத்ரயத்தாலே.

(௬)

———

† திருவாய். 8, 4, 1.

நான்காம் பாட்டு.

**நோவ ஆய்ச்சிஉரலோடார்க்க இரங்கிற்றும், வஞ்சப்பெண்ணைச்
சாவப்பாலுண்டதும் ஊர்சகடமிறச்சாடியதும்
தேவக்கோலப்பிரான்தன் செய்கைநினைந்து மனங்குழைந்து
மேவக்காலங்கள்கூடினேன்எனக்குஎன்னினிவேண்டுவதே?**

ஆ.—(நோவ ஆய்ச்சி.) - உரலோடே கட்டிவைக்கலாம்படி ஆஸ்ரிதர்க்குப் பரமசுலபனான படியும், தத்விரோதி பூதநா ஶகடநிரஸநம் பண்ணினபடியும், தொடக்கமாகவுள்ள திவ்யசேஷ்டிதங்களை ஸ்நேஹத்தோடே அநுபவிக்கப்பெற்ற எனக்கு இனி வேண்டுவதுஉண்டோ? என்கிறார்.

ஒ.—நாலாம்பாட்டில், யசோதைப்பிராட்டிக்கு அத்யந்தம்பவ்யனாய் அவ் விருப்பிலே ப்ரதிகூலரை மாய்த்த க்ருஷ்ணனை, அநுபவிக்கப்பெற்ற எனக்கு இனி அவாப்தவ்யம் இல்லை என்கிறார். [தேவக்கோலப்பிரான்] - ஊருகிற சகடத்தைத் தப்பாதபடி நிரஸித்திருந்த அப்ராக்ருதமான அழகை உடையான்.

ப.—அநந்தரம், அப்ராக்ருதவிக்ரஹனான க்ருஷ்ணனுடைய பாலசேஷ்டிதங்களை அநுபவிக்கைக்குக் காலங்கூடப்பெற்றேன்; எனக்குஇனி அபேக்ஷிதமுண்டோ? என்கிறார்.

நோவ - நோம்படியாக, ஆய்ச்சி - ஆய்ச்சியானவள், உரலோடு - உரலோடு, ஆர்க்க - இறுகக்கட்ட, இரங்கிற்றும் - அதுக்கு ஈடுபட்டிருந்ததுவும், வஞ்சம் - (தாய் வடிவுகொண்டு) வஞ்சகையாய்வந்த, பெண்ணை - பேய்ச்சியை, சாவ - சாம்படியாக, பால் - முலைப்பால், உண்டதும் - அமுதுசெய்ததுவும், ஊர் - அசுராவேசத்தாலே ஊர்ந்துவருகிற, சகடம் - சகடமானது, இற - முறியும்படி, சாடியதும் - திருவடிகளாலே பாய்ந்ததுவுமாயுள்ள, தேவக்கோலம் - அப்ராக்ருத விக்ரஹயுக்தனான, பிரான்தன் - க்ருஷ்ணனுடைய, செய்கை - சேஷ்டிதங்களை, நினைந்து - அநுசந்தித்து, மனம் - நெஞ்சு, குழைந்து - நெகிழ்ந்து, மேவ - பொருந்தும்படியாக, காலங்கள் - காலங்கள், கூடினேன் - சித்திக்கப்பெற்றேன்; எனக்கு - எனக்கு, என் - எது, இனி - இனி, வேண்டுவது - அபேக்ஷிதமாக உண்டு? நித்யாநுபவமே புருஷார்த்தம் என்று கருத்து.

இ.—நாலாம்பாட்டில், ஆஸ்ரிதபவ்யனான இருப்பிலே ப்ரதிகூலரைமாய்த்த க்ருஷ்ணனை அநுபவிக்கப்பெற்ற எனக்கு அவாப்தவ்யம் உண்டோ என்கிறார். [நோவ] - தாயார்க்கு ப்ரேமம்உள்ள அளவும் சீற்றம் உண்டிறே. இவர் தம்திருமேனியிலே கட்டினாற்போலே நோவுபடுகிறார். [ஆய்ச்சியுரலோடார்க்க இரங்கிற்றும்] - தாயார்கட்டின கட்டுக்கு ப்ரதிக்ரியை இல்லாமையாலே நோவுபட்டு ஸீதனாய் இருந்ததும். ஆஸ்ரித கர்மபந்தமும் ப்ரதிகூலர் பந்தித்தபந்தமுமிறே அறுக்கலாவது. [வஞ்சமித்யாதி] - தாய் வடிவு கொண்டுவந்த பூதனை முடியும்படி நச்சுப்பாலுண்டதும், ஶார்பணகையைப்போலே பின்பிருந்து பூசல்விளைக்கவையாதே முடிக்கப்பெற்றபடி. [ஊர்சகடமித்யாதி] - பரிஹாரமாகவைத்த சகடம் அஸுராவேசத்தாலே வந்து நலியப்புக, திருவடிகளாலே

துகளாம்படி சாடிபதும்; முலைவரவுதாழ்த்துத் திருவடிகளை நிமிர்த்தமாத்ரத்திலே சகடாஸுரன் அழிந்தபடியாலே - சாடியது என்கிறார். [தேவக்கோலப்பிரான்] - விரோதியை அழிக்கையால்வந்த அப்ராக்ருதமான அழகை எனக்கு உபகரித்தவன். அவன் சேஷ்டிதங்களை அநுபவித்து நெஞ்சுநெகிழ்ந்து இச்சேஷ்டிதங்களோடே பொருந்தும்படி காலங்களைக்கூடப்பெற்றேன்; இனி, எனக்கு வேண்டுவதுஎன்? இவ்வநுபவத்தோடே காலம் செல்லப்பெற்ற எனக்கு அவாப்தவ்யம் உண்டோ ?

ஈடு:—நான்காம்பாட்டு. ஆஶ்ரிதபவ்யனை இருப்பிலே ப்ரதிகூலரை மாய்த்த க்ருஷ்ணனையநுபவிக்கப் பெற்ற எனக்கு அவாப்தவ்யமுண்டோ? என்கிறார்.

[நோவஆய்ச்சி உரலோடார்க்க இரங்கிற்று] - சீயர்இப்பாட்டை இயலருளிச்செய்யப் புக்கால் "நோவ" என்றருளிச்செய்யும் அழகுகாணும். நோவவென்கிறார்காணும் ஆழ்வார், தம்திருமேனியிலே கயிறுஉறுத்தினாற்போலே. [ஆய்ச்சிஉரலோடார்க்கஇரங்கிற்றும்] - ஒருத்வேஷமுண்டாய்க் கட்டுகிறது அல்லவிறே, ஸ்நேஹகார்யமான கோபமாகையாலே ஸ்நேஹமுள்ளவளவும் இடைநிற்குமிறே கோபமும். * தாயெடுத்த சிறுகோலுக்குளைந்தோடியிறே,'விளியாவார்க்கவாப்புண்டு விம்மியழுதான்':வாய்விட்டழமாட்டாததிறே இவரை வருத்துகிறது. †(விளியாவார்க்க-கோபித்துக்கட்ட.)[ஆய்ச்சியுரலோடார்க்க] -"தறியார்ந்தகருங்களிறேபோலநின்று தடங்கண்கள்பனிமல்கும் தன்மையானை" - ஒரு மத்தகஜத்தைத் தறியோடே சேர்த்தாற்போலேகாணும் இவன் கட்டுண்டு நின்ற நிலை! ஓர்அபலை கட்டின கட்டுஅவிழ்த்துக்கொண்டுபோகமாட்டாதே, நின்றழுகையே ஸ்வபாவமா யிருந்தபடி. "யதிஶக்நோஷி" (யதிஶக்நோஷி) என்றருளிறே.[உரலோடார்க்கஇரங்கிற்றும்]-உர

நாலாம்பாட்டு.—நோவ இத்யாதி. "நோவவாய்ச்சி" இத்யாதியையும், "வஞ்சப்பெண்ணை" இத்யாதிகளையும், "எனக்கென்னினிவேண்டுவது" என்றத்தையும் கடாக்ஷித்தவதாரிகை - ஆஶ்ரித இத்யாதி.

ப்ராஸங்கிகம் - சீயர் இத்யாதி. நோவஎன்று அருளிச்செய்யும் அழகுகாணும் என்றது - நோவவென்று சீயர் ஈடுபட்டு அநுஸந்திக்கும்போது நன்றாயிருக்குமென்று நம்பிள்ளை அருளிச்செய்வரென்றபடி. சீயர் ஈடுபட்டதுக்கு பாவம் - நோவவென்கிறார் இத்யாதி. ப்ரியபரையானவள் நோவக் கட்டுவானென்? என்ன - ஒரு த்வேஷம் இத்யாதி. இடைநிற்குமிறே - ஸத்ருஶமாயிருக்குமிறே. எவ்வளவு ஸ்நேஹமுண்டு, கோபமும் அதுக்குஒத்திருக்கு மென்றபடி. இத்தால் - கோபாதிஶயத்தாலே நோவக்கட்டினாள் என்னுதல். தாயார் மெள்ளக் கட்டினாலும் பொறுக்க வொண்ணாமையாலே நோவாயிருக்குமென்னுதல்; இந்தவர்த்தத்துக்கு ஸூசகம்-தாயெடுத்த என்கிற ப்ரமாணம். ப்ரியபரையான தாய் பரிபவித்தால் பொறுக்கமாட்டாமல் இந்நனும் ப்ரகாரத்துக்குத் திருமொழியில் ப்ரமாணத்ரயம் - தாயெடுத்த, விளியாவார்க்க, தறியார்ந்த இத்யாதி. உளைந்தோடி - பயப்பட்டோடி. விளியாவார்க்கவாப்புண்டு - அழைத்துக்கட்டக்கட்டுண்டு, விம்மியழுதான் - விக்கியழுதான் இத்யர்த்தஃ. "விம்மி" என்றதுக்கு பாவம் - வாய்விட்டு இத்யாதி. விம்மியழுதானோ? என்ன - தறியார்ந்த இத்யாதி. தறியோடே சேர்ந்த கறுத்த ஆனைபோலே நின்று தடங்கண்களினின்றும் நீர் பெருகுகையை ஸ்வபாவமாகவுடையவன் இத்யர்த்தஃ. "தறியார்ந்த"இத்யாதிக்குஅர்த்தம்-ஒருமத்தகஜத்தைஇத்யாதி. "தன்மையானை" என்றதுக்குஅர்த்தம்-ஓரபலைஇத்யாதி. தாயெடுத்தவித்யாதி:எட்டாம்பத்து மூன்றாந் திருமொழி அஞ்சாம்பாட்டு, "வாயெடுத்த" இத்யாதி. விளியாவார்க்கவித்யாதி:ஆறாம்பத்து ஏழாந் திருமொழி நாலாம்பாட்டு, "ஒளியாவெண்ணெய்" இத்யாதி. தறியார்ந்தவித்யாதி: இரண்டாம்பத்து பத்தாந்திருமொழி ஆறாம்பாட்டு, "உறியார்ந்த" இத்யாதி. அவிழ்த்துக்கொண்டு போகமாட்டாததுக்கு ப்ரமாணம் - யதிஶக்நோஷி இத்யாதி. "யதிஶக்நோஷிகச்சத்வம் அதிசஞ்சலசேஷ்டித" இத்யாதி

லோடேகட்ட இரங்கிற்றும்: துர்யோதநாதிகளுடைய பந்தமாகிலிறே அறுக்க விரகு சிந்திப்பது. [இரங்கிற்றும்] - மாநஸபீடையை அநுசந்தித்தபடி. இரக்கம் - ஈடுபாடு. [வஞ்சப்பெண்ணைச் சாவப்பாலுண்டதும்] - கேட்டேன்! பேய்த்தாய்பக்கலிலும் அங்ஙனிருந்தானாகில் என்படக்கடவதுதான்? [சாவப்பாலுண்டதும்] - சூர்ப்பநகியைப்போலே அங்கஹாநியைப் பண்ணிவிட்டுப் பூசலைவிளைப்பியாதே முடித்துவிடப் பெற்றபடி. [பாலுண்டதும்] - யசோதைப்பிராட்டிமுலை யுண்ணும்போதும் தான்உயிர்பெற உண்ணுமாபோலேகாணும் இவள்முலை யுண்கிறபோதும் தான்உயிர்பெற முலையுண்டபடி. * பெருமுலையூடுயிரைவற்ற வாங்கியுண்டவாயானிறே. இவன் பிள்ளையாயே முலையுண்டானத்தனை; வஸ்துஸ்வபாவத்தால் ப்ரதிகூலர் முடிந்ததித்தனையிறே. [ஊர்சகடமிறச்சாடியதும்] - ப்ரேரகர் வேண்டாதபடி தானே வந்து நலிந்தபடி. ஒருமநுஷ்யவடிவுகொண்டு வந்து நலியிலிறே பரிஹரிக்கலாவது. இத்தால் சொல்லிற்றாயிற்று - ஸஹாயாந்தர நிரபேக்ஷமாக பாதகத்வத்தில் உறைப்புச் சொன்னபடி. [இறச்சாடியதும்]- “தளர்ந்தும் முறிந்தும் சகடவசுரர் உடல் வேறாப் பிளந்து”என்று சொல்லக்கடவதிறே. [சாடியதும்] - அநாயாஸேந திருவடிகளை நிமிர்க்கச்செய்தேயும், ஒருமுக்த்தனுடைய வ்யாபாரமாகையாலே போரப் பொலியச் சொல்லுகிறார். “பேர்ந்தோர் சாடிறச் செய்யபாதமொன்றால் செய்த நின்சிறுச்சேவகமும்” என்னக்கடவதிறே. [தேவக்கோலப்பிரான்] - ப்ராக்ருத ஸஜாதீயனாய்நின்றுசெய்யவும் பெற்றதில்லையே. அதிபால்யத்திலே செய்த செயலாகையாலே அப்ராக்ருதமா யிருப்பதோர்

ப்ர. —[நோவ இத்யாதி]—[ஆய்ச்சியுரலோடார்க்க] — ஶ்ரீவிஷ்ணுபுராணே [௫]
“[illegible] ॥ ௧௪ ॥ [illegible] ॥ ௧௫ ॥”

பஞ்சமேம்பே. இரங்குவானென்? அவிழ்த்துக்கொண்டு போகவொண்ணாதோ? என்ன - துர்யோதநாதிகள் இத்யாதி. “வஞ்சப்பெண்ணை” இத்யாதிக்கு ஹார்த்தபாவம் - கேட்டேன் பேய்த்தாய் இத்யாதி. அங்ஙனிருந்தானாகிலென்றது - தாய்பக்கல்போலே யிருந்தானாகிலென்றபடி. “சாவ” என்றதுக்கு வாஸனை - சூர்ப்பநகியை இத்யாதி. “உண்டதும்” என்றதிலே ரஸோக்தி - யசோதை இத்யாதி. தாய்முலை யுண்ணும்போது தன்னுயிர்பெறவுண்டான், பேய்முலையுண்ணும்போது அவளுயிரைத் தான்பெறவுண்டானென்றபடி. உயிர்பெற வுண்டதுக்கு ப்ரமாணம் - பெருமுலை இத்யாதி. திருமொழி மூன்றாந்திருமொழி முதற்பாட்டு, “முற்றமூத்து” இத்யாதி. பாசுரஸ்ய ஸ்பஷ்டோர்த்த꞉. இவன் முக்தனாய் முலையுண்டால் அவள் முடியக்கூடுமோ? என்ன - இவன்பிள்ளையாயே இத்யாதி. “ஊர்” என்றதுக்குபாவம் - ப்ரேரகர் இத்யாதி. “சகடம்” என்று - அசேதநமாகச்சொல்லுகையாலே, அபரிஹார்யமான ஆபத்தென்கிறார் - ஒருமநுஷ்யவடிவு இத்யாதி. மநுஷ்யவடி வென்றது - பூதனையைக் கடாக்ஷித்து. “ப்ரேரகர்” இத்யாதிவாக்யத்தால் பலிதம் - இத்தால் இத்யாதி. இத்தாலென்றது - “ஊர்” என்கிறஇத்தாலென்றபடி. முறியச் சாடினத்துக்கு ப்ரமாணம் - தளர்ந்தும் இத்யாதி. சாடியதும் - உதைத்ததும். “சாடியதும்” என்று இத்தைப் பெருக்கச்சொல்லுவானென்? என்ன - அநாயாஸேந இத்யாதி. போரப் பொலியச் சொன்னதுக்கு ப்ரமாணம் - பேர்ந்தோர் இத்யாதி. “சிறுச்சேவகம்” என்றதிலே நோக்கு. “தேவக்கோலம்” என்றதுக்கு பாவம் - ப்ராக்ருத இத்யாதி. அதாவது - ப்ராக்ருத ஸஜாதீயனாயிருக்கச்செய்தேயும் வ்யாபாரம்அதிமாநுஷமாயிருக்கிறதென்றபடி. விவரணம் - அதிபால்யத்திலே இத்யாதி. மேவுகை - அநந்ய ப்ரயோஜநனாகை. ‘உடைகுலைப்

ஒப்பனைபோலேயிருக்கிறபடி. † (அப்ராக்ருதமான அழகை எனக்கு உபகரித்தவன். கோலம் - ஒப்பித்த விக்ரஹம்.) [தன்செய்கைநினைந்து மனங்குழைந்துமேவக்காலங்கள் கூடினேன்]-அவனுடைய சேஷ்டிதங்களை யநுஸந்தித்து அகவா யுடைகுலைப்பட்டு அநந்ய ப்ரயோஜநனாய்க் கொண்டு காலம் போக்கப்பெற்றேன். நெஞ்சு நெகிழ்ந்து சேஷ்டிதங்களோடே பொருந்தும்படி காலங்களைக் கூடப்பெற்றேன். [எனக்கென்னினிவேண்டுவதே] - இனி அவாப்தவ்ய மொன்றில்லை யென்கிறார். (௪)

ஐந்தாம் பாட்டு.

வேண்டித்தேவரிரக்கவந்துபிறந்ததும் வீங்கிருள்வாய்
பூண்டுஅன்றுஅன்னைபுலம்பப்போய் அங்கோராய்க்குலம்புக்கதும்
காண்டலின்றிவளர்ந்து கஞ்சனைத்துஞ்சவஞ்சஞ்செய்ததும்
ஈண்டுநான்அலற்றப்பெற்றேன் எனக்கென்ன இகலுளதே?

ஆ:—(வேண்டி) - பூபாரநிர்ஹரணார்த்தமாக பூமியிலேவந்து திருவவதாரம் பண்ணி யருளவேணுமென்று தேவர்கள்அர்த்திக்கத் தான் ஆசைப்பட்டுக்கொண்டு ஸ்ரீவஸுதேவர் திருமாளிகையிலேவந்து பிறந்தருளினபடியையும், "துராத்மாவானகம்ஸன் காணிற்செய்வதென்?" என்று ஸ்ரீவஸுதேவரும் தேவகிப்பிராட்டியும் பயப்பட்டு அலற்ற அவர்களுடைய பயம்போம்படியாக அதிபஹுளதம:பூர்ணமான மத்யராத்ரத்திலே தன்னுடைய சதுர்ப்புஜ திவ்யரூப திரஸ்காரபூர்வகமாகத் திருவாய்ப்பாடியிலே யெழுந்தருளினபடியும், அங்கே கம்ஸப்ரப்ருதி ப்ரதிகூலர் அறியாதபடி வளர்ந்தருளிக் கஞ்சனைத் துஞ்ச வஞ்சஞ்செய்ததும், இவையெல்லாவற்றையும் இங்கேயலற்றப்பெற்றேன்; எனக்கு இனிஒரு து:கமுண்டோ? என்கிறார்.

ஒ.—அஞ்சாம்பாட்டில், திருவவதாரம் பண்ணியருளின பின்பு கம்ஸன் அறியாதபடி வளர்ந்து கம்ஸனை மாய்த்தபடி இன்றுஇருந்து அநுபவிக்கப்பெற்ற எனக்கு இனி ஒருமிடியில்லை யென்கிறார். எதிர்உண்டோ என்றுமாம். [வேண்டித்தேவரிரக்க வந்து பிறந்ததும்] - தேவர்கள் இரக்கத் தானேஅபிநிவிஷ்டனாய்வந்து பிறந்ததும். இருளிலேவந்து பிறந்தான் என்றுமாம். கம்ஸபயத்தாலும், "விஸ்லேஷிக்கிறேன்" என்னும் வ்யஸநத்தாலும் கட்டிக்கொண்டு தாயார் கதற இருளிலேபோனான் என்னவுமாம். [ஈண்டு நானலற்றப்பெற்றேன்] - ஸமகாலத்திலேயிருந்து பயப்படாதே இப்போது நிர்பயனாய் இனிதாக அநுபவிக்கப்பெற்றேன்.

ப.—அநந்தரம், அர்த்திதார்த்தகரனான க்ருஷ்ணனுடைய அவதாரப்ரமுக கம்ஸவதபர்யந்த சேஷ்டிதங்களை இங்கே அநுபவிக்கப்பெற்ற எனக்குஎன்ன விரோதம் உண்டென்கிறார்.

பட்டு'—குலையென்று - கரையாய், கரையுடையப்பட்டென்றபடி; நெஞ்சுநெகிழ்ந்தென்றபடி. மேவ - அநந்யப்ரயோஜநனாய்ப் பொரும்படியாகவென்றபடி. தேவக்கோலப்பிரான்தன் - அப்ராக்ருதவிக்ரஹயுக்தனாய் உபகாரசீலனான க்ருஷ்ணனுடைய இத்யர்த்தம். (௪)

தேவர் - தேவர்கள், இரக்க-,வேண்டி - தன்னிச்சையாலே, வந்து - (க்ஷீராா்ணவத்தில் நின்றும்) வந்து, பிறந்ததும் - அவதரித்ததுவும், அன்று - அப்போதே, அன்னை - பெற்றதாயாரான தேவகியானவள், பூண்டு - (கம்ஸ பயத்தாலே) எடுத்தணைத்து, புலம்ப - கூப்பிட, வீங்கு - செறிந்த, இருள்வாய் - இருளிடத்திலே, போய்-, அங்கு - கம்ஸவிஷயமானதேசந்தன்னிலே, ஓர் - (அவனுக்கு அஞ்சாமல் மறைத்து வைத்துநோக்கும்படி) அத்விதீயமான, ஆய்க்குலம் - இடைக்குலத்திலே, புக்கதும் - ப்ரவேசித்ததுவும், காண்டல்-அந்தக்கம்ஸனுடையகாட்சி, இன்றி - இல்லாதபடி, வளர்ந்து-, கஞ்சன் - கம்ஸன், துஞ்ச - முடியும்படியாக, வஞ்சம் - வஞ்சனை, செய்ததும் - செய்ததுவும், ஈண்டு - இங்கேயிருந்து, நான் - நான், அலற்ற - வாய்விட்டுச்சொல்ல, பெற்றேன் - பெற்றேன்; எனக்கு - எனக்கு, என்ன - என்ன, இகல் - விரோதம், உளது - உண்டு? உண்டாகில் கம்ஸன்பட்டது படு மென்று கருத்து.

இ.—அஞ்சாம்பாட்டில், அவதரித்து, கம்ஸன் அறியாதபடி வளர்ந்து கம்ஸனை மாய்த்தபடியை இன்று இருந்து அநுபவிக்கப்பெற்ற எனக்கு எதிர் இல்லையென்கிறார்.

[வேண்டி இத்யாதி] - தேவர்கள் அர்த்திக்க, வேண்டிவந்து தன்னுகப்பாலே பிறந்ததுவும். "ஹிதாய லோகஸ்ய", "ஸம்பூஜ்யமானோ தே3வ ஸங்கை:4", ஸரிஸ்ருணாயவஸாயடுநாடு." [வீங்கிருள்வாய்] - வளருகிற இருளிலே. வீங்கிருள்வாய் பிறந்ததும் என்னுதல், வீங்கிருள்வாய் ஆய்க்குலம் புக்கதுவும் என்னுதல். "வீங்கிருளினுண்டுளியாய்" என்று பயஹேதுவானஇருள் அன்றிக்கே, பயநிவ்ருத்திக்கு உடலான இருளிறே. [பூண்டன்றுஅன்னைபுலம்ப] - பிறந்த அன்றே தேவகியார், முன்பே ஆறுபிள்ளைகளை இழக்கையாலும், வாத்ஸல்யத்தாலும், கம்ஸ பயத்தாலும் திருவடிகளைக் கட்டிக்கொண்டு கதற. [போய்] - முலைச்சுவடு அறியாமையாலே இவனுக்குப் போகலாமிறே. [அங்கோராய்க்குலம்புக்கதும்] - அத்தசையிலே அஞ்சினன் புகலிடமாயிருப்பது ஓர் இடைச்சேரி உண்டாவதே! கம்ஸனுக்குக் குடிமக்களாய் இருக்கச்செய்தேயும் "அவனுக்குஅநிஷ்டம்" என்று பாராதே மறைத்துவைத்து அடைக்கலம் நோக்கவல்ல ஊர். [காண்டலின்றி வளர்ந்து] - கம்ஸன் வஞ்சித்து வரக்காட்டின துஷ்ப்ரக்ருதிகள் அறியாதபடி வளர்ந்து. [கஞ்சனைத்துஞ்சவஞ்சம் செய்ததும்] - கம்ஸன் அழைத்து வஞ்சிக்கநினைக்க, அவன் நினைவை அவன்தன்னோடே போக்கினதுவும். ராமாவதாரம்போலே "செவ்வைப்பூசல் அல்லது அறியான்" என்று இராமையிறே பிழைத்தது. [ஈண்டுநான் அலற்றப்பெற்றேன்] - இங்கேஇருந்து அநுபவித்து ப்ரீதியாலே அடைவுகெடப் பேசப்பெற்றேன். ஈண்டு - இங்கு என்றபடி: இப்போது என்னவுமாம்; இக்காலத்திலே:அதாகிறது-தேவகியாரையும் ஸ்ரீவஸுதேவரையும்போலே ஸமகாலத்திலே இருந்து வயிறு எரியாதே, கம்ஸவிஜயபர்யந்தமாக இக்காலத்திலே அநுபவிக்கப்பெற்றேன். [எனக்கென்ன இகலுளதே] - எனக்கு என்ன எதிர்உண்டு என்னுதல், எனக்கு என்ன க்லேஶம் உண்டு என்னுதல். இகல் - யுத்தம்:யுத்தத்தாலே வரும் க்லேஶமாதல், யுத்தத்தில் வரும் எதிர் ஆதல்.

ஈடு:—அஞ்சாம்பாட்டு. அவதரித்து கம்ஸனையறியாதபடிவளர்ந்து கம்ஸனை மாய்த்தபடியை இன்றுஇருந்தநுஸந்திக்கப்பெற்ற எனக்கு ஓரெதிரில்லை யென்கிறார்.

[வேண்டித்தேவரிரக்கவந்துபிறந்ததும்] - தேவரிரக்க வேண்டி வந்துபிறந்ததும். "எங்களளவறியாதே ஒருவனுக்கு வரங்கொடுத்து அவனையுயரப்பார்த்தோம்: எங்களுக்குக் குடியிருப்பு அரிதாயிற்று" என்று தேவஜாதி கப்படங்கட்டிக்கொண்டு செல்ல "பிதரம்ரோசயாமாஸ" (பிதரம்ரோசயாமாஸ) என்கிறபடியே தான் அர்த்தியாய்வந்துபிறந்ததுவும். "ஆத்மமாயயா"(ஆத்மமாயயா)என்னும்படியிறே; ஆத்மேச்சயா என்றபடி; "மாயா வயுநம் ஜ்ஞாநம்" (மாயா வயுநம் ஜ்ஞாநம்). இரக்கிறவர்களளவுபார்த்தல், தன்னளவு பார்த்தல் செய்கையன்றிக்கே வந்து பிறந்தபடிகாணும்,இவரைவருத்துகிறது. தான்இரப்பாளனாய்க் காரியஞ்செய்யுமவன், பிறந்தால் பொறுக்கமாட்டானிறே. [பிறந்ததும்வீங்கிருள்வாய்] - "மத்யராத்ரே ஶிலாதாரே ஜாயமாநே ஜநார்த்தநே" (மத்யராத்ரே ஶிலாதாரேஜாயமாநேஜநார்த்தநே) என்னும்படியிறே. "இவனும் விழுக்காடறியாதே யகப்பட்டுக்கொடுகின்றான், கம்ஸபயமும் ப்ராப்தமாயிராநின்றது. இருளாலேயிறே நாம் பிழைத்தது! இனி இவ்விருளைச் சரணம்புகுமித்தனையிறே" என்று பிள்ளையுறங்காவில்லிதாஸர் பணிப்பராம். * ஊரெல்லாந்துஞ்சியில் கூற்றமான இருள்இவர்க்கு இப்போது ஆதரத்துக்கு விஷயமாயிற்றிறே. வீங்கிருள்வாய் பூண்டன்றன்னை புலம்பப்போய் என்றுமாம்; "மக்களறுவரைக் கல்லிடைமோத விழந்தவள்"என்கிறபடியே பெற்றுப்பெற்றுஇழந்தவளாகையாலே,

---

அஞ்சாம்பாட்டு.—வேண்டி இத்யாதி. "காண்டலின்றிவளர்ந்து" இத்யாத்யுத்தரார்த்தத்தைக் கடாக்ஷித்தவதாரிகை - அவதரித்து இத்யாதி.

*தேவர்களிரக்கும் ப்ரகாரத்தைக் காட்டுகிறார் - எங்களளவு இத்யாதி. கப்படம் - கார்ப்பண்யஸூசகபடவிசேஷம், கப்பரையும். "வேண்டி-வந்து" - அர்த்தியாய்வந்தித்யர்த்த:. "ஸ தேவைர் விஜ்ஞாபித: கருணாத்மா ததாவிஷ்ணு: பிதரம்ரோசயாமாஸ ததா தஶரதம் ந்ருபம்" பாலகாண்டே. "வேண்டி வந்து" என்றதுக்கு - இச்சித்துவந்தென்றர்த்தாந்தரம் - ஆத்மமாயயா இத்யாதி. இதுக்கர்த்தம் - ஆத்மேச்சயா என்றபடி என்று. மாயா ஶப்தம் - இச்சா வாசகமாமோ? என்ன - மாயாவயுநம் இத்யாதி. "தேவர்" என்றதுக்கு பாவமாதல், "வந்து பிறந்ததும்" என்றதுக்கு ஸார்த்தபாவமாதல் - இரக்கிறவர்கள் இத்யாதி. இரக்கிறவர்களளவாவது - "ஈஶ்வரோஹம்"என்றுஇருக்கிற துர்மாநாதிதோஷம்: தன்னளவாவது - தன்பெருமை. இருவாளவும் பாராமல்வந்து பிறக்கைக்குஅடிஎது?என்ன - தானிரப்பாளனும் இத்யாதி. "வீங்கிருள்வாய்" - ப்ரவ்ருத்தமான இருளிலே. வளருகிற இருளிலேயோபிறந்தான்? என்ன - மத்யராத்ரே இத்யாதி. "மத்யராத்ரே ஶிலாதாரே ஜாயமாநே ஜநார்த்தநே । ஸம்ஜஜ்ஞுர்ஜலதா: வர்ஷம் வ்யஷிஞ்சந்மேதிநீம்" இதி பஞ்சமேம்ஶே த்ருதீயே. இருளென்னுதே, "வீங்கிருள்", என்று ஶ்லாகித்ததுக்கு ஸம்வாதம் - இவனும் இத்யாதி. இருளை சரணம்புகுமித்தனையென்றது - இருளை உத்தேஶ்யதாபுத்திபண்ணி வணங்குமத்தனையென்றபடி. *ஊரெல்லாந்துஞ்சியிலே, "வீங்கிருளினுண்டுளியாய்" என்று இருளுக்குஅஞ்சினபடியையும், இப்போது கொண்டாடுகிறபடியையும் அநுஸந்தித்து வ்யாக்யாதா ஈடுபடுகிறார் - ஊரெல்லாம் இத்யாதி. "வீங்கிருள்வாய்" என்றத்தை - கீழ் மேலுங் கூட்டுவது. அன்று - பிறந்தஅன்று. காலைப்பூண்டுகொண்டு புலம்புகைக்கு ஹேதுஏது? என்ன - மக்களறுவரை இத்யாதி. பிள்ளைகளறுவரையும் கம்ஸன் கல்லிடைமோத, அவர்களையிழந்த தேவகிப்*

இவனையும்இழக்கிறேமோ!'' என்று விரஹகாதரதையாலே காலைப்பூண்டுகிடந்து கூப்பிடப் போய். பிள்ளைபக்கல் வாத்ஸல்யத்தாலே இவள் கூப்பிட, இவன் முலைச்சுவடறியாமை யாலே போனபடி. வீங்கிருள் - வளர்கிறஇருள். [அங்கோராய்க்குலம்புக்கதும்] - அவ் வவஸ்த்தையிலே இடையிலே வளருகைக்குஓர் அஞ்சினுன்புகலிட முண்டாவதே! [ஆய்க் குலம்]-''கம்ஸன்னாயகன்'' என்று பயப்படவறியாதவர்கள்.''குடிவாய்உடன்படவிருந்தா னுகில் இருக்கிறுன், இல்லையாகில் உழக்கோலாலே தகர்க்கிறேம்'' என்றிருப்பர்கள். [காண்டலின்றிவளர்ந்து]- கம்ஸனும் அவன்வரக்காட்டின வாருகவர்க்கமும் காணுதபடி வளரப்பெறுவதே! [கஞ்சனைத்துஞ்ச வஞ்சம் செய்ததும்] - ஸ்ரீநாரதபகவான் அறிவித்த பின்பு ஒருபோதுதாழாதேவந்து, அவன்தான் நினைத்தவஞ்சனையை அவன்தன்னேடே போக்கினதும். கம்ஸன் முடியும்படியாக வஞ்சனைசெய்தது, ராமாவதாரம்போலே ''செவ் வைப்பூசலல்லதறியேன்'' என்றிராமையிறே [ஈண்டுநோனலற்றப்பெற்றேன்] - தேவகியா ரைப்போலே ஸமகாலத்திலேயிருந்து பயப்படாதே,இப்போது பயங்கெட்டிருந்து அநுபவிக் கப்பெற்றேன். ஈண்டு - இப்போது. [எனக்கேன்ன இகலுளதே] - கம்ஸன்பட்டபின்பு எனக்கு சத்ருக்களுண்டோ? இகல் - சத்ரு. † (எல்லாரும் சேஷபூதராகையாலே தமக்கு சத்ருவில்லை. அவனும் நாராயணனுகையாலே அவனுக்கு சத்ருவில்லை. இனி யிவர் சத்ருக்கள் பகவத்விமுகரிறே.) கம்ஸனைமுடித்தபடியை இன்றுஇருந்து அநுபவிக்கப் பெற்ற எனக்குஇனி ஒரு மிடியில்லை என்கிறு ராகவுமாம். (ரு)

ஆரும்பாட்டு.

இகல்கோள்புள்ளைப்பிளந்ததும் இமிலேறுகள்செற்றதுவும்
உயர்கோள்சோலைக்குருந்தொசித்ததும் உட்படமற்றும்பல
அகல்கோள்வையமளந்தமாயன் என்னப்பன்தன்மாயங்களே
பகலிராப்பரவப்பெற்றேன் எனக்கென்னமனப்பரிப்பே?

ஆ.—(இகல்கொள்.) - கம்ஸப்ரேரித ப்ரதிகூல விஹங்கவிசேஷ தூர்த்தம வ்ருக்ஷ குந்தருபாஸுரநிரஸந ப்ரப்ருதி பரமபுருஷ திவ்யசேஷ்டிதங்களை ஸர்வ காலமும் வத்தப்பெற்ற நான் அவாப்தஸமஸ்தமநோரதனுனேன் என்கிறுர்.

ஒ.—ஆரும்பாட்டில், க்ருஷ்ணனுடைய ப்ரதிகூலநிரஸந பரம்பரைகளை அநுபவிக்கப்பெற்ற எனக்கு இனி ஒரு மனோதுக்கம் இல்லை என்கிறுர். [இகல்கொள் புள்ளைப்பிளந்ததும்] - எதிரிட்டபுள்ளைப் பிளந்ததும். இமில்என்று கருத்தைச்சொல்லு

பிராட்டியுடையவென்றபடி. பெரியாழ்வார்திருமொழி, அஞ்சாம்பத்து, மூன்றுந்திருமொழி, ''துக்கச் சுழலை'' இத்யாதி. காலைப்பூண்டு - க்ருஷ்ணனுடையகாலைப்பூண்டு. இவள்கூப்பிடுகிறதுக்கும் அவன் போனதுக்கும் ஹேதுவேதென்ன - பிள்ளைபக்கல் இத்யாதி. ''ஓர்'' என்றதுக்கு ஹார்த்தபாவ மாதல், ஈடுபாடாதல் - அவ்வவஸ்த்தையிலே இத்யாதி. அஞ்சினுன்புகலிடம் - பயஸ்த்தன்புகுமிடம். பயப்படவறியாமையின் எல்லையைக்காட்டுகிறுர் - குடிவாயுடன் இத்யாதி. குடிவாய்உடன்படவிருந்தா னுகிலென்றது - குடிமக்களோடொத்திருந்தானுகிலென்றபடி. குடிவாய் - குடிமக்கள். உழக்கோல் - தாற்றுக்கோல். நாரதபகவான்சொன்னது கம்ஸனேடே. மிடி - க்லேசம். (ரு)

கிறது. [உயர்கொள்சோலைக்குருந்தொசித்ததும்] - ஸ்ப்ருஹணீயமாம்படி உயர்ந்து தழைத்துநின்ற குருந்தின்வடிவைக்கொண்ட அஸுரனை முடித்ததும்.

ப.—அநந்தரம், பூர்வாவதாரத்திலே அம்பாஷிமாந நிவர்த்தகமான த்ரைவிக்ரமத்தைப் பண்ணின க்ருஷ்ணனுடைய விரோதிநிரஸந வ்யாபாரங்களை அஹோராத்ர விஶ்ரமமற அநுபவிக்கப்பெற்றேன்; எனக்குஎன்ன மநோதுஃகமுண்டென்கிறார். இகல் - யுத்தத்திலே, கொள் - ஒருப்பட்டுவந்த, புள்ளை - பகாசுரனை, பிளந்ததும் - வாயைக்கிழித்ததுவும், இமில் - (செருக்கடியான) பிசலையுடைய, ஏறுகள் - ஏறுகளை, செற்றதுவும் - செறுத்துக் கொன்றதுவும், உயர் - உயர்த்தியை, கொள் - உடைத்தாய், சோலை - தழைத்த, குருந்து - குருந்தை, ஒசித்ததும் - முறித்ததுவும், உட்பட - முதலாக, மற்றும் - பின்னும், பல - விரோதிநிரஸநரூபமாய்க்கொண்டு பலவாயுள்ளனவாய், அகல் - விஸ்தாரத்தை, கொள் - உடைய, வையம் - பூமியை, அளந்த - அளந்து மஹாபலியஷிமாநத்தை யழித்துக்கொடுத்த, மாயன் - ஆஶ்சர்யபூதனான த்ரிவிக்ரமனாய், என் - அவ்வவதாரத்தோடுண்டான ஐக்யத்தை யெனக்கு ப்ரகாஶிப்பித்த, அப்பன்தன் - மஹோபகாரகனான க்ருஷ்ணனுடைய, மாயங்கள் - ஆஶ்சர்யசேஷ்டிதங்களை, பகல்இரா - பகலோடிரவோடு வாசியற, பரவ - ஸ்துதிக்க, பெற்றேன் - பெற்றேன்; எனக்கு -, என்ன -, மனப்பரிப்பு - மநோதுஃகம் உண்டு? பகவதநுபவகாலம் பாழ்போகிலிறே மநோதுஃகமுள்ளதென்று கருத்து.

இ.—ஆறும்பாட்டில், க்ருஷ்ணனுடைய ப்ரதிகூல நிரஸந பரம்பரையை அநுபவிக்கப்பெற்ற எனக்கு ஒருமநோதுஃகம் இல்லை என்கிறார்.

[இகல்கொள் இத்யாதி] - யுத்தோந்முகனான பகாஸுரனைப்பிளந்ததும். பக்ஷிவேஷத்தாலே வந்து எதிரிட்டானாயிற்று பகாஸுரன்; அவனை அநாயாஸேந பிளந்தான். [இமிலேறு இத்யாதி] - கண்டார்க்கு பயாவஹமான கருத்துக்களையுடைய ரிஷபங்களை நிரஸித்ததும். இமில் - கருத்து. [உயர்கொள் இத்யாதி] - ஓங்கித்தழைத்திருந்துள்ள குருந்தை முறித்ததும்; தர்ஶநீயமான ஸ்தாவரவேஷத்தைக் கொண்டு வந்த மஹாஸுரனை முடித்ததும். [உட்படமற்றும்பல] - கன்றும் விளவாயும் வந்த அஸுரர்முதலாக வேறும்நிரஸித்தவை அநேகங்கள். இந்த திர்யக்ஸ்தாவரங்களை நித்யஸூரிகள் கைங்கர்யத்துக்காக பரிக்ரஹிப்பர்கள்; இங்கு ப்ராதிகூல்யத்துக்குஉறுப்பாகக் கொண்டவடிவுகளிறே இது. இதுக்கு பாபப்ராசுர்யம் அடி; அதுக்குஇச்சைஅடி. [அகல்கொள்இத்யாதி] - பரப்பைஉடைத்தானபூமிஅடங்கலும் தன்திருவடிகளின்கீழேயிட்டுக் கொண்ட ஆஶ்சர்யத்தை யுடையவன். வரையாதே தீண்டும் ஸ்வபாவ ஸாம்யத்தாலே சொல்லுகிறது. [என்னப்பன்] - இவ்வபதாநம் தமக்குஉதவ ஷஷித்தது என்று இருக்கிறார். [மாயங்களே] - ஆஶ்சர்யசேஷ்டிதங்களையே. [பகலிரவு இத்யாதி] - இரவோடு பகலோடு வாசியற அநுபவித்து ப்ரீதியாலே அடைவுகெடப்பேசப்பெற்றேன். [எனக்கென்ன மனப்பரிப்பே] - எனக்குஎன்ன மநோது:கமுண்டு. பரிவு என்கிறத்தை சந்தஸ்ஸுக்குச்சேர ‘பரிப்பு’ என்று சொல்லுகிறது.

ஈடு.—ஆறும்பாட்டு. க்ருஷ்ணனுடைய ப்ரதிகூல நிரஸந பரம்பரையை அநுஸந்தித்து, இப்படி அநுபவிக்கப் பெற்ற எனக்கொரு மநோதுঃகமில்லையென்கிறார்.

[இகல்கொள்புள்ளைப்பிளந்ததும்] - (இகல் - யுத்தம்.) கேவலம் புள்மாத்ரமாய்வந்து தோற்றுகை யன்றிக்கே, யுத்தோந்முகமாய்க்கொண்டு எதிரிட்ட புள்ளை நிரஸித்ததும். அசுராவேசத்தோடே வரச்செய்தேயும் 'பாதிக்கவருகிறது' என்று பிறரஞ்சாத வடிவுகொண்டு வந்தபடி. * பள்ளத்தில்மேயும் பறவையுருக்கொண்டுவந்தது. [இமிலேறுகள் செற்றதுவும்] - ககுத்தையுடைத்தான வ்ருஷபங்களைச் செற்றதுவும். [உயர்கொள்சோலைக் குருந்தொசித்ததும்] - ஓக்கத்தை யுடைத்தாய்ச் சோலைசெய்துநின்ற குருந்தை முறித்ததும். "முக்யராயிருப்பார்க்கு ஆகர்ஷகமாயிருக்கும்" என்று தழைத்துநின்றது; "இனியித்தைமுறித்துக் கார்யங்கொள்வோம்" என்று பொடிபடுத்தினன். [உட்படமற்றும்பல] - இப்புடையிலே மற்றுமுண்டான ப்ரதிகூலநிரஸநங்கள் அநேகமிறே. [அகல்கொள்வையமித்யாதி]- பரப்பையுடைத்தான பூமியடங்கலும் அநாயாஸேநவளர்ந்த ஆஶ்சர்யபூதனுன உபகாரகனுடைய ஆஶ்சர்யசேஷ்டிதங்களையே. [பகலிராப்பரவப்பெற்றேன்] - நாட்டார் அபிமத விஷயங்களை புஜிக்கைக்கு 'பகல் இரா' என்று கூறிட்ட காலம்இரண்டும் இவ்விஷயத்திலே அநுபவிக்கப்பெற்ற எனக்கு, இரவுபகல் புறம்பே விஷயங்களை யநுபவிப்பாருடைய மநோதுঃகமுண்டோ? பரிவென்று - துঃகம். அதிலே ஒரு †ஒற்றெழுத்தேறினுலும் அவ்வர்த்தத்தையே காட்டக்கடவது. (ஞ)

ஏழாம் பாட்டு.

மனப்பரிப்போடு அழுக்குமானிடசாதியில்தான்பிறந்து
தனக்குவேண்டுருக்கொண்டு தான்தனசீற்றத்தினைமுடிக்கும்
புனத்துழாய்முடிமாலைமார்பன் என்னப்பன்தன்மாயங்களே
நினைக்கும்நெஞ்சுடையேன் எனக்கினியார்நிகர்நீள்நிலத்தே?

ஆ.—(மனப்பரிப்போடு.) - ப்ரணதஜநஸமீஹித நிர்வர்த்தநவிஷய மநோரதனுய்க்கொண்டு, அசேஷதோஷாஸ்பத மநுஷ்யஜாதியிலே ஸ்வாஸாதாரண திவ்யரூபத்தோடே வந்துபிறந்தருளி, ஸ்வாபிமத த்விபுஜ சதுர்ப்புஜாதிரூபங்களை யாஸ்தாநம்பண்ணிக்கொண்டு விரோதிநிரஸநம்பண்ணி பரிபூர்ண மநோரதனுகையாலே,

---

ஆறும்பாட்டு-இகல் இத்யாதி. "இகல்கொள்" என்று தொடங்கி, "மற்றும்பல" என்னுமளவுங் கடாக்ஷித்தவதாரிகை-க்ருஷ்ணனுடைய இத்யாதி. "எனக்கென்ன மனப்பரிப்பு" என்றத்தை எனக்கொரு மநோதுঃகமில்லையென்கிறுரென்றது. இகல் - யுத்தம். புள்ளென்னுதே, "இகல்கொள் புள்" என்று விசேஷித்ததுக்கு பாவம்-கேவலம் இத்யாதி. "புள்" என்றதுக்கு பாவம்-அசுராவேச இத்யாதி. அஞ்சாத வடிவுகொண்டு வந்ததுக்கு ப்ரமாணம் - பள்ளத்தில்மேயும் இத்யாதி. நீர்த்தாழ்வுகளிலே இரைதேடித் திரிகிற வகமாகிற பக்ஷியின் வடிவைக்கொண்டுஇத்யர்த்தঃ. பெரியாழ்வார் திருமொழி, இரண்டாம்பத்து, அஞ்சாந்திருமொழி, நாலாம்பாட்டு. சோலை செய்து நிற்கைக்கு ஹேது வேதென்ன - முக்யராய் இத்யாதி. "பகலிரா" என்று விசேஷித்ததுக்கு பாவம்-நாட்டார் இத்யாதி. கூறிடுகையாவது - அபிமதவிஷயங்களுக்குக் கொடுக்கைக்குஉறுப்பாக அர்த்தார்ஜநம்பண்ணுகைக்குப் பகலையும், அவற்றை அநுபவிக்கைக்கு ராத்ரியையும் அவச்சேதிக்கை யென்றபடி. (ஞ)

அதிபரிமள துலஸீமாலாலங்க்ருதனாயிருந்த எம்பெருமானுடைய ஆஸ்²சர்ய திவ்யசேஷ்டிதங்களையே நினைக்கும் நெஞ்சாகிற மஹாநிதியையுடையனான என்னோடொக்க இந்த லோகத்தில் த⁴ந்யனுண்டோ? என்கிறார்.

ஒ.—ஏழாம்பாட்டில், ஆஸ்ரிதருடைய நோவு பொறுக்கமாட்டாமை அப்ராக்ருத திவ்யஸம்ஸ்தா²நத்தோடேகூட தானேவந்து பிறந்தருளி, ஆஸ்ரிதவிரோதி⁴ நிரஸநத்தைப் பண்ணியருளினவனுடைய சேஷ்டிதங்களை நினைக்கும் நெஞ்சுடைய எனக்கு ஆர் நிகர் நீள்நிலத்து? என்கிறார். [தனக்கு வேண்டுருக்கொண்டு] - தனக்கு அபிமதமான த்விபுஜசதுர்புஜாதிரூபங்களைக்கொண்டு. [தான் தனசீற்றத்தினை முடிக்கும்]-ஆஸ்ரிதருடையவிரோதி⁴களைப் போக்கினால் அவர்களுக்கு ஒரு காரியஞ்செய்தானாயன்றிக்கே தன்னுடைய சீற்றத்தை முடித்தானாயிருக்கும். [புனத்துழாய் முடிமாலை மார்பன்] - ஆஸ்ரிதருடைய விரோதி⁴களைப்போக்கித் திருமஞ்சனமாடி யருளி ஒப்பித்த அழகிய திருத்துழாய்மாலையைத் திருமுடியிலும் திருமார்பிலும் உடையவன்.

ப.—அநந்தரம், அதிஸ²யித போ⁴க்யாகாரனான க்ருஷ்ணனுடைய ஆஸ்ரித விரோதி⁴நிரஸநார்த்தமான அவதாரவைலக்ஷண்யத்தை அநுஸந்திக்கும் நெஞ்சையுடைய எனக்கு பூமியில் ஸத்ருஸ²ருண்டோ? என்கிறார்.

("ப்⁴ருஸ²ம் ப⁴வதி து³:கி²த:" என்கிறபடியே ஸம்ஸாரிகள் படுகிற து³:க²த்தைக்கண்டு பரது³:கா²ஸஹிஷ்ணுத்வரூபமான), மனம்பரிப்போடு - நெஞ்சில து³:க²த்தோடே, அழுக்கு - ஹேயமான, மாணிடசாதியில் - மநுஷ்யஜாதியிலே, தான்-(ஹேயப்ரத்யநீகனான) தான், பிறந்து - தத்ஸஜாதீயனாய்ப் பிறந்தவிடத்திலும், தனக்கு வேண்டு - தன் இச்சாநுரூபமான, உரு - அபிமதவிக்ரஹங்களை, கொண்டு - பரிக்ரஹித்து, தான் - (ஆஸ்ரிதவாத்ஸல்யத்தையுடைய)தான், (ஆஸ்ரிதவிரோதி⁴ நிரஸநத்தாலே), தன-தன், சீற்றத்தினை - சீற்றம், முடிக்கும் - முடிப்பானாயிருப்பானாய், புனம்-தன்னிலத்தில் நின்றாற்போலே செவ்விபெற்ற, துழாய்-திருத்துழாய் மாலையையுடைத்தான, முடி-திருமுடியையும், மாலை- அந்தத்திருமாலையையுடைத்தான, மார்பன் - திருமார்பையுமுடையனாய், என் - அவ்வழகையெனக்கு ப்ரகாஸி²ப்பித்த, அப்பன்தன் - உபகாரகனானவனுடைய, மாயங்கள் - ஆஸ்²சர்யசேஷ்டிதங்களை, நினைக்கும - நினைக்கும்படி விதே⁴யமான, நெஞ்சு-நெஞ்சை, உடையேன் - அஸாதாரணமாகவுடையேனான, எனக்கு - எனக்கு, இனி-இனி, நீள்நிலத்து-இந்தமஹாப்ருதிவியில், நிகர் - ஒப்பார், ஆர்-ஆர்?

இ.—ஏழாம்பாட்டில், ப்ரதிகூலர் அநுகூலரை நலியுமது பொறுக்கமாட்டாமை அவதரித்து, அவர்களை அழியச்செய்யும் சேஷ்டிதங்களை நினைக்கும் நெஞ்சுடைய எனக்கு பூ⁴மியில் எதிர்இல்லை என்கிறார். [மனப்பரிப்போடு] - "நமக்கு அநந்யார்ஹஸே²ஷமாயிருக்கிற இவ்வஸ்து, தேஹஸம்ப³ந்த⁴த்தாலே ப³ஹுமுக²மாக நோவுபடுவதே!" என்னும் மனோதுக்கத்தோடேயாயிற்று திருவவதரித்தது. [அழுக்குமாணிட சாதியில்] - ப்ரஹ்மாதிகளுங்கூட அருவருக்கும் மனுஷ்யஜாதியிலே. [தானபிறந்து] - ஹேயப்ரத்யநீகனான தான் அப்ராக்ருததிவ்யஸம்ஸ்தா²நத்தோடே க³ர்ப⁴வாஸம் பண்ணிக்கொண்டு அவதரித்து. "ஸோ நாகே³ஷ லோகே ஜஜ்ஞே". தன்ஜந்மத்தை அநுஸந்தி⁴க்க, ஸம்ஸாரிகளுடைய ஜந்மஸம்ப³ந்த⁴ம் போம்படியான தான்பிறந்து. [தனக்கு வேண்டுருக்கொண்டு] - சதுர்பு⁴ஜனாவது, த்விபு⁴ஜனாவது, கோ³பாலனாவது, வைஸ்²வ

ரூப்யத்தைக் கொள்வதாகை. இவைதான் ஆஶ்ரிதார்த்தமாகையாலே தனக்கு அபிமதமாயிருக்கும். [வேண்டுரு] - ஐச்சம் என்றுமாம். [தான் தனசீற்றத்தினை முடிக்கும்] - ஆஶ்ரிதவத்ஸலனான தான் ஆஶ்ரிதவிரோதிகளைப்போக்கி, அத்தாலே தன்சினம் தீரத்தானாய் இருக்கும். ப்ரஜையை நலிந்தவர்களைத் தாய் 'தனக்குஶத்ரு' என்று இருக்குமாபோலே. [புனத்துழாய் முடிமாலைமார்பன்] - ஆஶ்ரிதவிரோதிகள் போகப்பெற்றவத்தாலே ஒப்பித்திருக்கிறபடி. [தன்மாயங்களே] - அவனுடைய ஆஶ்சர்யசேஷ்டிதங்களையே இடைவிடாமல் அநுஸந்திக்கும் நெஞ்சுடையேன். "காரணம் வஸ்மோக்ஷயோ:" என்கிறபொதுமை தவிர்ந்து, அஸாதாரணமான நெஞ்சைப்பெற்றேன். [எனக்கு இனியார் நிகர் நீள்நிலத்தே] - பஞ்சாஶத்கோடி விஸ்தீர்ணையான பூமியில் எனக்கு எதிர் ஆர்?

ஈடு.—ஏழாம்பாட்டு. ப்ரதிகூலர் ஆஶ்ரிதரை நலியுமது பொறுக்கமாட்டாமை அவதரித்து அவர்களை யழியச்செய்யும் சேஷ்டிதங்களை நினைக்கும் நெஞ்சுடைய எனக்கு பூமியில் நிகரில்லை யென்கிறார்.

[மனப்பரிப்போடு அழுக்கு மானிடசாதியில்தான் பிறந்து]- நாட்டாரை அழுக்குடம்பு கழிக்கும் தான்கிடீர் அழுக்கு மானிடசாதியிலே வந்து பிறந்தான். ப்ரஜை கிணற்றிலேவிழுந்தால் எடுக்க வருந் தாய் நெஞ்சுநோந்துவந்து எடுக்குமாபோலே, "இவற்றுக்கு உதவப்பெற்றிலோம்" என்னும் திருவுள்ளத்தில் தளர்த்தியோடே வந்து பிறக்கை. [தான் பிறந்து]-ஹேயப்ரத்யநீகனான தான் அப்ராக்ருத திவ்ய ஸம்ஸ்த்தாநத்தோடே கர்ப்பவாஸம் பண்ணிக்கொண்டவதரித்து: பிறக்கைக்குக் கர்மம்பண்ணிவைத்தவருங்கூட அருவருக்கும் ஜந்மத்திலே கிடீர் அகர்மவஶ்யனான தான்பிறந்தது; இதுக்கடி காருண்யமிறே. [தனக்கு வேண்டுருக்கொண்டு]-அப்ராக்ருத திவ்ய ஸம்ஸ்தானத்தை யுடையனாய்க்கொண்டு. அப்படி பிறந்தால் ஒருபடிப்பட்டிருக்கப் பெற்றேமோ!. "த்விபுஜோவா சதுர்ப்புஜோவா" (த்விபுஜோவா சதுர்ப்புஜோவா) என்னும்படியிறே பட்டபடி. ஈஶ்வரத்வத்தைக் கைகழிய விட்டபின்பிறே இவனுக்கு இங்கு இடங்கொடுத்தது. இவைதான் ஆஶ்ரிதார்த்தமாகையாலே தனக்கபிமதமாயிருக்கும். ஐச்சமென்றுமாம். [தான் தனசீற்றத்தினைமுடிக்கும்]-

ஏழாம்பாட்டு - மனப்பரிப்பு இத்யாதி. "மனப்பரிப்போடழுக்கு" என்று தொடங்கி, "நினைக்கும் நெஞ்சுடையேன்" இத்யாதிகளைக் கடாக்ஷித்து அவதாரிகை - ப்ரதிகூலர் இத்யாதி.

"தான்" என்றதுக்கு பாவம் நாட்டாரை இத்யாதி. நாட்டாரை யென்கிறது "ஹேயமான வுடம்பைக் கழிக்கவேணும்" என்று ப்ரார்த்திக்கிற முமுக்ஷுக்களை. "மனப்பரிப்போடு" என்றதுக்கு ஸத்ருஷ்டாந்தமாக பாவம் - ப்ரஜை இத்யாதி. இவற்றுக்கென்றது - தனக்கு அநந்யார்ஹஶேஷமாய் வைத்து நோவுபடுகிற இவற்றுக்கென்றபடி. "தான்" என்றதுக்கு - அகர்மவஶ்யனான தான் என்று ஆர்த்தாந்தரம்-பிறக்கைக்கு இத்யாதி. "தனக்கு வேண்டுருக்கொண்டு" என்றதுக்கு இரண்டர்த்தம். † அப்ராக்ருத திவ்ய ஸம்ஸ்தானத்தை யுடையனாய்க்கொண்டு என்னுதல்; த்விபுஜனுதல் சதுர்ப்புஜனுதல வேண்டினபடியாய்க்கொண் டென்னுதல். ஒரு படிப்பட்டிருக்க வில்லையோ? என்ன-த்விபுஜோவா இத்யாதி. சதுர்ப்புஜனானவன் த்விபுஜனாகைக்கு அடியேதென்ன - ஸம்ஸாரத்தினுடைய கொடுமை யென்கிறார்-ஈஶ்வரத்வத்தை இத்யாதி. "மனப்பரிப்போடு" இத்யாதிக்கு - "ஸம்ஸாரிகளுடைய து:க தர்ஶநத்தால் வந்த மனோது:கத்தோடே, ஹேயமான மநுஷ்ய ஜாதியிலே, ஹேயப்ரத்யநீகனான தான் தத்ஸஜாதீயனாய்ப் பிறந்து, அவ்விடத்திலும் தன் இச்சாநுரூபமான அபிமதவிக்ரஹங்களை பரிக்ரஹித்து" என்று உரையிலே ஶப்தார்த்தம். கைகழியவிட்ட என்றது - ஶ்லேஷம்; கைகளைக்கழிய விட்ட என்றும், கைகழியும்படிவிட்ட என்றும். இதுக்கு - "உபஸம்ஹர விஶ்வாத்மந் ரூபமேதச்சதுர்ப்புஜம்"

ஆஸ்ரிதவிரோதி போக்கினானாயிருக்கையன்றிக்கே தன்சினந் தீர்ந்தானாயிருக்கை; மாதாவானவள், ப்ரஜையை நலிந்தவர்களைத் தான் நலிந்து தன்சினந்தீருமாபோலே. "கோபஸ்யவஸமேயிவாந்" (கோபஸ்யவஸமேயிவாந்). [புனத்துழாய்முடிமாலைமார்பன்] - ஆஸ்ரிதவிரோதிகளைப் போக்கித் திருமஞ்சனம்பண்ணியொப்பித்து, திருமேனியின் ஸ்பர்ஸத்தாலே தன்நிலத்திலே நின்றாற்போலே செவ்விபெற்றிருக்கிற திருத்துழாய்மாலையைத் திருமுடியிலும் திருமார்பிலுமுடையனாய், அவ்வொப்பனையாலே என்னையெழுதிக்கொண்டான். [தன்மாயங்களே நினைக்கும்நெஞ்சுடையேன்] - "காரணம்பந்தமோக்ஷயோ:" (காரணம்பந்தமோக்ஷயோ:) என்று பொதுவாகையன்றிக்கே, அவனுடைய ஆஸ்சர்ய சேஷ்டிதங்களையே அநுஸந்திக்கும் நெஞ்சையுடையேன். [எனக்குஇனியார்நிகர் நீள்நிலத்தே]- பூமி பரப்புடைத்தென்று, எனக்குஒப்பாருண்டோ? பரமபதத்தையொன்றாக நினைக்கிறிலர்; தம்மைப்போலே கவிபாடியடிமைசெய்வாரில்லாமையாலே, ஸம்ஸாரத்தேயிருந்து கவிபாடியடிமைசெய்யப்பெற்ற எனக்கு, பூமியில்லார் எதிருண்டோ? என்கிறார். (எ)

எட்டாம் பாட்டு.

நீணிலத்தோடுவான்வியப்ப நிறைபெரும்போர்கள்செய்து
வாணனாயிரந்தோள்துணித்ததும் உட்படமற்றும்பல
மாணியாய்நிலங்கொண்டமாயன் என்னப்பன்தன்மாயங்களே
காணும்நெஞ்சுடையேன் எனக்கினியென்னகலக்கமுண்டே?

ஆ.—(நீள்நிலத்தொடு.) - வாணவிஜய ப்ரமுகமான க்ருஷ்ணசேஷ்டிதங்களையும், மற்றும் ஸ்ரீவாமநனுடைய ஆஸ்சர்யசேஷ்டிதங்களையுமே யநுஸந்திக்கும் நெஞ்சுடையேனான எனக்கு இனி கலக்கமுண்டோ? என்கிறார்.

ஒ.—எட்டாம்பாட்டில், வாணவிஜய ப்ரமுகமான க்ருஷ்ணசேஷ்டிதங்களையே அநுஸந்திக்கும் நெஞ்சையுடைய எனக்கு இனி கலக்கம் உண்டோ? என்கிறார். [காணும் நெஞ்சுடையேன்] - அநுஸந்திக்கும் நெஞ்சுஉடையேன்.

ப.—அநந்தரம், ஆர்த்தியாயும் அபேக்ஷிதந்தலைக்கட்டிக்கொள்ளுமவனுடைய வாணயுத்தப்ரமுகசேஷ்டிதங்களை அநுஸந்திக்கும் நெஞ்சையுடைய எனக்கு ஒரு கலக்கமுண்டோ? என்கிறார்.

"சேதஸ்தாஹஜ்" என்றதிலே நோக்கு. "தனசீற்றத்தினை" என்றதுக்குவாஸனை - ஆஸ்ரிதவிரோதி இத்யாதி. இதுக்கு திருஷ்டாந்தம்-மாதாவானவள் இத்யாதி. ஆஸ்ரிதவிரோதிகளைத் தன் விரோதிகளாக நினைத்துச் சீறின விடம் உண்டோ? என்ன-கோபஸ்ய இத்யாதி. "ததோ ராமோ மஹாதேஜா ராவணேந க்ருதவ்ரண: । த்ருஷ்ட்வா ப்லவகஸார்தூலம் கோபஸ்ய வஸமேயிவாந்" இதி யுத்தகாண்டே ருக-காகா "புனத்துழாய்-மாலையை - முடியிலேயும் - மார்பிலேயுமுடையவன்" என்றந்வயம். "மாயங்களே" என்றவகாரார்த்தம்-காரணம் இத்யாதி. சேநஸ்ஸ்சேநாஷ்ட்ராணாம்காரணம்பந்தமோக்ஷயோ: இத்யாதி. கீழே "எனக்கெவ்வுலகம் நிகர்" என்றாரே; இங்கே "நீள்நிலத்து" என்பானென்? என்ன-பரமபதத்தை இத்யாதி அதுக்கடியேதென்ன-தம்மைப்போலே இத்யாதி. (எ)

நீள்-பெரிய, நிலத்தொடு - பூமியோடே, வான் - ஆகாசமும், வியப்ப - விஸ்மயப்படும்படியாக, நிறை - (வாணனொருவனுமே யெதிராயிருக்கப் படைத்துணைக்கு வந்த தனித்தனியே ப்ரதாநரான ருத்ரஸுப்ரஹ்மண்யாதிகளோடேகூட) பஹுபரிகர பூர்ணமான, பெரும்போர்கள் - மஹாயுத்தங்களை, செய்து - பண்ணி, வாணன் - பாணனுடைய, ஆயிரந்தோள் - (யுத்தகண்டூதிப்ரசுரமான) ஆயிரந்தோள்களையும், துணித்ததும்-துணித்ததுவும், உட்பட - முதலாக, மற்றும்—,பல - பலவாயுள்ளவையாய், மாணியாய் - (அர்த்தியான) ப்ரஹ்மசாரியாய், நிலம் - பூமியை, கொண்ட - பரிக்ரஹித்த, மாயன் - க்ருத்ரிமனாய், என்-அந்தக்ருத்ரிமத்தை யெனக்கு ப்ரகாசிப்பித்த, அப்பன்தன்-உபகாரகனான க்ருஷ்ணனுடையதான, மாயங்கள் - ஆஶ்சர்யசேஷ்டிதங்களை, காணும்-அபரோக்ஷித்தநுபவிக்கும், நெஞ்சு - நெஞ்சை, உடையேன்-;இனி-,எனக்கு-,என்ன-, கலக்கம்-, உண்டு - உண்டு? அவிதேயசித்தர்க்கு இறே ஸ்வரக்ஷணே ஸ்வாந்வயஅந்யரக்ஷ்யத்வாதிகளாலுள்ள கலக்கமுள்ளது.

ஈ.—எட்டாம்பாட்டில், பாணவிஜய ப்ரமுகமான க்ருஷ்ணசேஷ்டிதங்களை அநுஸந்திக்கும் நெஞ்சுடைய எனக்கு ஒருகலக்கமில்லையென்கிறார். [நீணிலத்தொடு வான்வியப்ப] - பரப்பையுடைத்தான பூமியில் உள்ளாரோடே தேவர்களுங்கூட விஸ்மயப்படும்படி பராபிபவஸாமர்த்யத்தையுடைய தேவர்களோடு, எளியரான மநுஷ்யர்களோடு வாசியற ஆஶ்சர்யப்படும்படி இருக்கை. "ராஜ்ஞாநீயஸ்யவிக்ரமௌஜஸ:" என்று எதிரிகளுங்கூட விஸ்மயப்படும்படி இருப்பது. [நிறை பெரும்போர்கள்செய்து] - வலிதாய்ப் பெரிதான யுத்தத்தைப்பண்ணி. [வாணன் இத்யாதி] - அப்ராப்தவிஷயத்திலே அஞ்ஜலிபண்ணினதுக்கு ப்ராயஶ்சித்தம் பண்ணுவாரைப்போலே பாணனுடைய பாஹுவநத்தை சேதித்ததும். உஷை பித்ருஹீநையாகாமைக்காக இறே கொல்லா

[உட்பட மற்றும்பல] - "பாணனைரக்ஷிக்கிறேன்" என்று எறட்டுக் [illegible], பசுவும்குட்டியும் தானுமாக முதுகிட்டுப்போனபடியும், "க்ருஷ்ண க்ருஷ்ண மஹாபாஹோ ஜாநே த்வாம் [illegible]" என்று முதுகிலே அம்பு தைத்தபின்பு ஸர்வேஶ்வரனாக அறிந்தபடியும்; வேறும் அநேகம். [மாணியாய் நிலங்கொண்ட] - ஆஶ்ரிதரக்ஷணத்திலே, அர்த்தியாய்த்தன்னை அழியமாறி ரக்ஷித்தவன். [மாயன்]-தன்னுடைமையைப் பிறரதாக்கி இரந்து, சிறுகாலைக்காட்டிப் பெரியகாலாலே அளந்துகொண்டும், தன் அழகாலும் ஶீலத்தாலும் ஶுக்ராதிகள் வார்த்தை செவிப்படாதபடி மஹாபலியை எழுதிக்கொண்டும், இப்படி ஆஶ்சர்யசேஷ்டிதங்களை யுடையவன். [என்னப்பன்] - அவர்கள் தலையிலே திருவடிகளைவைத்த இது தம்பேறாக நினைத்திருக்கிறபடி. இப்படி தனித்தனியே அநுபவித்துமுடிக்கவொண்ணாத ஆஶ்சர்யசேஷ்டிதங்களையேஅநுஸந்திக்கும் நெஞ்சையுடையேன். [காணும் நெஞ்சு] - அநுஸந்திக்கும் நெஞ்சு. "நெஞ்சென்னும் உட்கண்" என்னக்கடவதிறே. அங்ஙனன்றியே, "*முடியானேயிற் கரணங்களையுடையராகையாலே, மநஸ்ஸு சக்ஷுரிந்த்ரியவ்ருத்தியையும் லபிக்கவற்றானபடி சொல்லுகிறது" என்று பிள்ளான் பணிக்கும். [எனக்கினிஎன்னகலக்கமுண்டே] - இதரதேவதைகளை "ரக்ஷகர்" என்று இருக்கிற கலக்கமும், ஈஶ்வரனுடைய ர[illegible]ல அதிஶங்கைபண்ணும் கலக்கமும், "தனக்குத்தானே கடவன்" என்கிற கலக்கமும்இல்

ஈடு.—எட்டாம்பாட்டு. பாணவிஜயப்ரமுகமான க்ருஷ்ணசேஷ்டிதங்களையே அநுஸந்திக்கும் நெஞ்சையுடைய எனக்குஒரு கலக்கமில்லை என்கிறார்.

[நீள்நிலத்தோடுவான்வியப்ப] - பூமியிலுள்ளாரோடு ஸ்வர்க்கத்திலுள்ளாரோடு வாசியற விஸ்மயப்பட. கண்டதுக்கெல்லாம் ஆஶ்சர்யப்படும் மநுஷ்யரோடொக்க, ஒன்றுக்கும் விக்ருதராகாதே தந்தாமைப் போரப்பொலியநினைத்திருக்கும் தேவர்களும் விஸ்மயப்படும்படி. கும்பிடுவாரோடு கும்பீடுகொள்ளுவாரோடு வாசியறும்படியாக "வியப்ப" என்று மேலேகிடக்கையாலே, * மஞ்சாக்ரோஶந்திபோலே யிருக்கிறது. [நிறைபெரும்போர்கள் செய்து] - குறைவற்ற மஹாயுத்தத்தைப்பண்ணி. அதாவது - ஈஶ்வராபிமாநிகளான ருத்ராதிகளும் கெட்டோடும்படியான போரைச்செய்து. † (பஹுபரிகரபூர்ணமான மஹாயுத்தங்களைப்பண்ணி). [வாணனாயிரந்தோள் துணித்ததும்] - வகாதவிஷயங்களை யநுவர்த்தித்த தோள்களைக்கழித்தபடி. "இவன் கரபாதை ஆற்றமாட்டாமல் கண்டார் காலிலெல்லாம் குனிந்துதிரியாநின்றான்" என்றுஅக்கரத்தைக்கழித்துவிட்டான். [வாணனித்யாதி] - "கைகழியப்போய் ருத்ரனை யாஶ்ரயித்தான், இவன் கரபாதையாற்றனை" என்று அத்தைப் படைக்கடைத்துவிட்டான். [வாணனித்யாதி] - வாணன் தேவதாந்தரபஜநம்பண்ணுகையிறே அவனுக்கு இங்ஙன்கைபிழைப்பாடுவந்தது" என்று நாட்டார் கைவந்தபடி செய்கைக்காகச் செய்தான். "ஈஶ்வராய" என்றிறே தேஹஸம்பத்தியைக் கொடுத்தது. ஈஶ்வரன் கைவந்தபடி செய்யாதவர்களைக் கைமேலே தண்டிக்கை ப்ராப்தமிறே. ஸர்வேஶ்வரன் தன்னை ஆஶ்ரயிக்கைக்காக இவனோடே கைசெய்திறே அடியிலேவிட்டது. " அத்தை

எட்டாம்பாட்டு - நீள்நிலத்தோடு இத்யாதி. "வாணனாயிரந்தோள் துணித்ததும்" இத்யாதியைக் கடாக்ஷித்தவதாரிகை - பாண விஜய இத்யாதி.

பூமியில் இத்யாதி "ஜ்ஞாநஶ்ரேஷ்டாஶமீ" என்றாற்போலே- "நீள்நிலம், வான்" என்கிறதென்று கருத்து. அவர்களுக்கு வாசியேதென்ன - கண்டதுக்கெல்லாம் இத்யாதி வாக்யத்வயம். "நிலம், வான்" என்கிற ஶப்தம் - தேவமநுஷ்யர்களை லக்ஷிக்கும்படி என்? என்ன - வியப்ப இத்யாதி. "நிறை" - பரிகரபூர்ணமான. தலையையறாதே தோள்களைக் கழிப்பானேன் ? என்ன - வகாத இத்யாதி- வகாத விஷயங்களை - அப்ராப்த விஷயங்களை. "அப்ராப்த விஷயங்களை யநுவர்த்திக்கைக்கடி - யுத்த கண்டூதியால் வந்த செருக்கு" என்று அத்தைக் கழித்துவிட்டானென்னுமத்தை ரஸோக்தியாக அருளிச் செய்கிறார்- இவன் கரபாதை இத்யாதி. கரம்-இறையும், கையும். " வகாத விஷயங்களை " இத்யாதி வாக்யத்தை விவரியாநின்றுகொண்டு, கரத்தைக் கழித்தது திவ்யாயுதங்களாலே என்னுமத்தை ரஸோக்தியாக அருளிச்செய்கிறார்- கைகழியப்போய் இத்யாதி. படையென்று - ஆயுதமும், சேனையும். படைக்கடைத்துவிட்டான் - திருவாழிக்குச் செலவிட்டானென்றும், சேனைக்குச் செலவிட்டானென்றும். அடைத்துவிடுகை - செலவிடுகை. "அப்ராப்த விஷயத்தை யாஶ்ரயித்த கைகள்" என்று இவற்றை சேதித்தால் நாட்டார் கைவந்தபடி தொழுகைக்கு உறுப்பாயிருக்குமென்று செய்தானென்னுமத்தை ரஸோக்தியாக அருளிச்செய்கிறார்-வாணன் இத்யாதி. கைபிழைப்பாடு-கைகள்அவனைவிட்டுப்போகை. கைவந்தபடி - கைக்குத்தகுதியானபடி. கைவந்ததெதுக்காக? என்ன-ஈஶ்வராய இத்யாதி. அப்ராப்த விஷயத்தைத் தொழுத கைகளை ஈஶ்வரன் சேதிக்கை யபங்யாயமாயிராதென்னுமத்தை ரஸோக்தியாக அருளிச்செய்கிறார் - ஈஶ்வரன் இத்யாதி. கைவந்தபடி - சொன்னபடியென்று சாடுவுக்கர்த்தம். கைமேலே - ப்ரத்யக்ஷமாகவென்றும், ஸத்ய: என்றும் சாடு; கையை சேதிக்கவென்று ஸ்வபாவார்த்தம். "ஸம்ஸாராய நிவேதிதா" என்கிற ஶ்லோகார்த்தத்தை ரஸோக்தியாக அருளிச்செய்கிறார்- ஸர்வேஶ்வரன் இத்யாதி. கைசெய்தென்றது - கையை இவனோடே கூட்டியென்றும், அலங்கரித்தென்றும். சாஸ்த்ரவஶ்யனன்றிக்கே, யுத்த கண்டூதியாலே வந்த அஹங்காரமுடையவனாகையாலே

ஹாவமேயோ வேண்டுவது; பெற்றவர்களென்று, அஸக்யங்களிலே யிழியக்கடவதோ ? [உமக்காசையில்லை] - ப்ராப்தயௌவநைகளானார்பக்கல் பெற்றவர்களுக்கு ப்ராப்தி யுண்டோ ? புக்கவிடத்தே ப்ரவணையாகாநிற்க, பெற்ற ப்ராப்திகொண்டுமீட்கவோ? [விடுமினோ]-இவ்வளவில் நீங்கள் கைவாங்கவமையும். பெற்றதாய்மார் "விடுமின்" என்னுங் காட்டில்விடார்களிறே ; பின்னையும் நிர்ப்பந்திக்க, வேண்டா, இவளுக்கு ஓடுகிற ரஸத்தைக் கண்டுகொடுநிற்கப் பாருங்கோள் : இவளுடைய அநுபவத்துக்குத் தண்ணீர்த் துரும்பாகாதே இத்தைக்கண்டுகொடுநிற்க வமையுமென்கிறாள். எங்களை "ஆசைப்பட வேண்டா, விடுங்கோள்" என்றதென்? என்னில்:—இவள் பேச்சிலும் நினைவிலும் நீங்கள ளாதல் நாளுதலுண்டோ ? † (உங்களையாதல் என்னையாதல், சொல்லுதல் நினைத்தல் செய்கிறாளோ;) "த்யக்த்வா புத்ராம்ஶ்ச தாராம்ஶ்ச" (த்யக்த்வாபுத்ராம்ஸ்சதாராம்ஸ்ச) என்னும் நிலையன்றோ இவளது! [தவளவொண்சங்கு] - ஶ்யாமமான திருமேனிக்குப் பரபாகமான வெண்மையையுடைத்தாய், "உண்பதுசொல்லில் உலகளந்தான்வாயமுதம்" என்கிற அழகையுடைத்தான சங்கு. [சக்கரம்] - அங்ஙனம்ஒரு விசேஷணமிட்டுச் சொல்லவொண்ணாத அழகையுடைய சக்கரம். [என்றும்] - "இவற்றைக்காணவேணும்" என்னுதல்; "இவற்றோடேவரவேணும்" என்னுதல் சொல்லமாட்டுகிறிலள், பலஹாநியாலே [தாமரைத்தடங்கணென்றும்]- அந்த ஆழ்வார்க ளளவும் வந்துஅலையெறிகிற திருக்கண்கள். தாமரையை யொருவகைக்கு ஒப்பாகச்சொல்லலாய், ஹோக்தாக்களளவன்றிக்கே யிருக்கிற திருக்கண்கள். [என்றும் என்றும்] - ஒருமலையெடுத்தாற்போலே, சொல்லுக்குச்சொல்லு தளர்ந்து நடுநடுவே விச்சேதித்தாயிற்றுச் சொல்லுவது. திவ்யாயுதங்களையும் கண்ணழகையுங் காட்டியாகாதே இவளைத்தோற்பித்தது. [குவளையித்யாதி] - இக்கண்களைக்கண்டால் * தாமரைத்தடங்கணன்றோ நீர்மல்கவடுப்பது? கண்ணும்கண்ணநீருமாய் இவளிருக்கிற இருக்கை கண்டுகொண்டிருக்கவன்றோ உங்களுக்கு அடுப்பது? "ஶ்ரீதநாசுதே...

ப்ர.—யுத்தகாண்டே [கள] "ஸர்வம் பரித்யஜ்ய ஸ்வஜநாந் ஸர்வாணி ச வநாநி ச | த்யக்த்வா புத்ராம்ஶ்ச தாராம்ஶ்ச ராகவம் ஶரணம் கத:॥ கசு॥"

எங்கள் வார்த்தை கேட்கவேண்டாவோ? என்ன - பெற்றவர்களென்று இத்யாதி. என்று - என்ற மாத்ரத்திலே. "உமக்காசையில்லை" என்றதுக்குபாவம் - ப்ராப்தயௌவநைகள் இத்யாதி. ப்ராப்தியில்லையோ ? என்ன - புக்கவிடத்தே இத்யாதி. மேலுக்கவதாரிகை - பெற்றதாய்மார் இத்யாதி; கண்டுகொடுநிற்க வமையுமென்கிறாளென்னுமளவும் விவரணம் - இவளுடைய இத்யாதி. அவதாரிகாந்தரம் - எங்களை இத்யாதிவாக்யத்வயம். "த்யக்த்வா புத்ராம்ஶ்ச தாராம்ஶ்ச ராகவம் ஶரண கத:" இத்யாதி விபீஷணஃ. உண்பதுசொல்லில் இத்யாதி. நாய்ச்சியார்திருமொழி. ஸ்பஷ்டோர்த்த: "தாமரை" என்றுசொல்லிவைத்து, "தடங்கண்" என்கையாலே - இது ஸத்ருஸோபமானமென்கிறார்-தாமரையை இத்யாதி. இது - ஸப்தார்த்தமும். திவ்யாயுதங்களையும் திருக்கண்களையும் வர்ணிக்கிறதுக்கு பாவம் - திவ்யாயுதங்களையும் இத்யாதி. "குவளையொண்மலர்" என்கிற விசேஷணத்துக்கு பாவம் - இக்கண்களை இத்யாதி. முந்தினவவதாரிகைக்குச்சேர "கண்கணீர்மல்க" என்றதுக்குபாவம்-கண்ணுங்கண்ணநீரும் இத்யாதி. இவ்வாகாரம் தர்ஶநீயமாயிருக்குமோ? என்ன - ஶ்ரீதநாசு இத்யாதி. "ஶ்ரீதநாசுதே ராம: ...." இதி ஸ்ரீவிஷ்ணுதத்வே. ஸ்லோகத்துக்கு பாவம் -

ஆஹ்லாதஶீதநேத்ராம்பு:'' (ஆஹ்லாதஶீதநேத்ராம்பு:) இத்யாதி. ஸதாதர்ஶநத்துக்குஒருதேசந்தேடிப்போக வேண்டாகாணும். குவளைப்பூப்போலே அழகியகண்கள் நீர்மல்க. அவள் தன்னுடைய ஸ்த்ரீத்வத்தைக் காற்கடைக்கொள்ள, நீங்கள் எங்ஙனே மீட்கப்பார்க்கும்படி? கண்ண நீர்பாய்கையாவது - ஸ்த்ரீத்வமழிகையிறே. [நின்றுநின்றுகுமிறுமே] - பேச்சுப்போய்க் கண்ணநீராய், கண்ணநீர்போய்த் தமோறுகிற அவஸ்த்தையிலே மீட்கப்போமோ? ராஜ கோஷ்ட்டியிலே "உகும், இறும்" என்று சிலர் பொருள் சொல்ல, விக்ரமசிங்கனென்பா னொருவன், "அங்ஙனல்ல, கன்றைக்கடக்கக் கட்டிவைத்தால் முலைக்கண் கடுத்துப் பசு அலமந்து படுமாபோலே, உள்ளோடுகிற க்லேஶம் வாய்விடமாட்டாதே நோவுபடுகிற இவ ளுக்கு இதுவார்த்தையோ?" என்றான். பெருவெள்ளத்தில் சுழிக்குமாபோலே, அகவாயி லுள்ளது வெளியிடமாட்டாள். உள்ளேநின்று சுழிக்கிறபடி. தொலைவில்லிமங்கலந் தொழுமென்கையாலே - காயிகவ்யாபாரம் சொல்லிற்று; தவளவொண்சங்குசக்கரமென்றும் தாமரைத்தடங்கணென்றும் என்று சொல்லுகையாலே - வாசிகவ்யாபாரம் சொல்லிற்று; குமிறு மென்கையாலே - மாநஸவ்யாபாரம் சொல்லிற்று. (க)

இரண்டாம் பாட்டு.

குமிறுமோசைவிழவொலித் தொலைவில்லிமங்கலங்கொண்டுபுக்கு
அமுதமென்மொழியாளை நீருமக்குஆசையின்றியகற்றினீர்
திமிர்கொண்டாலொத்துநிற்கும்மற்றிவள் தேவதேவபிரானென்றே
நிமியும்வாயொடுகண்கள்நீர்மல்க நெக்கொசிந்துகரையுமே.

ஆ.—(குமிறும்.) - கம்பீர விவித மங்களவாத்ய ப்ரமுதித ஜநகோஷத்தை யுடைத்தான மஹோத்ஸவம் செல்லாநிற்கத் திருத்தொலைவில்லிமங்கலத்திலேகொண்டு புக்கீர்கோள்; அன்றுதொடங்கி விரஹவ்யஸநத்தாலே சித்ரார்ப்பிதையைப்போலே ஒரு சேஷ்டிதக்ஷமையன்றியேநின்று, அதிமது ஸ்வரமாக, தேவதேவபிரானென்றே சொல் லிச்சொல்லிக்கொண்டு அழுதுநெக்கொசிந்து நீராயுருகாநிற்கும்; ஆதலால் அங்கேகொண்டு புக்கு வலிய இழந்தீர்கோள்; இனி இவளை யாசைப்பட்டால் கிடைக்குமோ? என் கிறாள்.

ஸதாதர்ஶநத்துக்கு இத்யாதி. இரண்டாமவதாரிகைக்குச் சேரபாவம் - அவள்தன்னுடைய இத்யாதி. காற்கடைக்கொண்டபடி யெங்ஙனே? என்ன - கண்ணநீர் இத்யாதி. "நின்று நின்று" என்றதுக்கு பாவம்-பேச்சுப்போய் இத்யாதி. "தமோறுகிறவவஸ்த்தை" என்றதுக்கு ஸம்வாதம்-ராஜகோஷ்ட்டி யிலே இத்யாதி. "உகும், இறும்" என்றபக்ஷத்திலே ஶப்தார்த்தம்; உகும் - உக்கிப்போகாநின்றாள், இறும் - மறியாநின்றாள்என்று குமிறுகையாவதேதென்ன - பெருவெள்ளத்தில் இத்யாதி. குமிறும் - உள்ளேநின்றுசுழியாநிற்குமென்றபடி. "நின்றுநின்று" - ப்ரதிக்ஷணம்ஆத்மதாரணம்பண்ணிநின்று. "உகும், இறும்" என்றதுக்கு - "த்ரவத்ரவ்யமாய்த் தளர்ந்துவிழாநிற்கும்" என்று உரையில் ஶப்தார்த் தம். "சிந்தையாலும்" இத்யாதிக்குச்சேர, கரணத்ரயமு மங்கேப்ரவணமானபடி சொல்லுகிறதென் கிறார் - தொலைவில்லி இத்யாதிவாக்யத்ரயத்தாலே. 'அன்னைமீர், நீர் - தவளவொண்சங்கு'என்று தொடங்கி, குமிறும்; ஆகையாலே - 'தவளில்'என்றுதொடங்கி, விடுமினோ இத்யந்வய:. (க)

ஒ.—இரண்டாம்பாட்டில், இவளைத் திருத்தொலைவில்லி மங்கலத்திலே திருநாளிலே கொடுபுகுவார் உண்டோ? என்கிறாள். [குமிறுமென்று தொடங்கி] - எழுத்தும்சொல்லும் பொருளும் தெரியாதே ஒன்றாய்எழுகிற த்வநியை உடைத்தான திருநாளில் ஆரவாரத்தை உடைத்தான திருத்தொலைவில்லிமங்கலத்திலே தான் அறியாதிருக்கிற இவளை, நீங்களே கொடுபுக்கு. [அமுதமென்று தொடங்கி] - இவளுடைய இனியபேச்சுக்கள், கேட்க ஆசையில்லாமையாலே நீங்கள் இவள் அகலும்படி பண்ணினிகோள். [திமிர்கொண்டாலொத்துநிற்கும்] - ஸ்தப்தையானாற்போலே இருக்கும். [மற்றென்று தொடங்கி] - பின்னையும் இவள் திருத்தொலைவில்லிமங்கலத்தில் எம்பெருமானுடைய திருநாமத்தைச் சொல்லவென்று உபக்ரமித்து முடியச்சொல்லமாட்டாதே கண்கள் நீர்மல்கி உள்ளோடுகிற அவஸாதத்தின் மிகுதியாலே ஶிதிலையுமாய் நீராகாநின்றாள். நிமிகை - உதடுநெளிக்கை.

ப.—அநந்தரம், நித்யசூரிகளுக்கு அநுபாவ்யனான தேவபிரானெழுந்தருளியிருக்கிற திருத்தொலைவில்லிமங்கலத்திலே மஹோத்ஸவத்திலே கொண்டுபுக்கு இவளையகலும்படி பண்ணினிகோளென்கிறாள்.

குமிறும் - கம்பீரமான, ஓசை - நாநாவிதகோஷத்தையுடைய, விழவொலி - உத்ஸவகோலாஹலத்தையுடைத்தான, தொலைவில்லிமங்கலம் - திருத்தொலைவில்லி மங்கலத்திலே, கொண்டு - கொண்டு, புக்கு - புக்கு, அமுதம் - அம்ருதம்போலே ஸரஸமாய், மென் - ம்ருதுவான, மொழியாளை - பாஷணத்தையுடையஇவளை, நீர் - (இவள்வார்த்தையினிமையறிந்து போந்த) நீங்கள், உமக்கு - உங்களுக்கு, ஆசை - (அதில்)ஆசை, இன்றி - இல்லாமையாலே, அகற்றினீர் - (உங்களோடு)உறவற்றகலும்படி பண்ணினிகோள்; (இவள் உறவறுதியறிந்தபடியென்? என்னில்;) இவள் - இவள், திமிர்கொண்டாலொத்து - திமிர்கொண்டாற்போலேயாய், நிற்கும் - பேசாதேநில்லாநிற்கும்; மற்று - மற்று, (இவள் வார்த்தைசொல்லில்), தேவர் - தேவர்களான நித்யசூரிகளுக்கும், தேவர் - தேவர்களான விஷ்வக்ஸேநாதிகளுக்கும், பிரான் - தன்னை யநுபவிப்பித்துக்கொண்டிருக்கிற மஹோபகாரகன், என்றே - என்கிற அர்த்தோக்திமாத்ரத்திலே, நிமியும் - நெளிந்த, வாயொடு - வாயையுடையளாய், கண்கள் - கண்கள், நீர் - நீர், மல்க - மல்கும்படியாக, நெக்கு - கட்டுக்குலைந்து, ஓசிந்து - தளர்ந்து, கரையும் - நீர்ப்பண்டமாகாநின்றாள். நிமிதல் - நெளிதல்.

இ.—இரண்டாம் பாட்டில், அவ்வூரில் கொண்டுபுக்கதுக்குமேலே, திருநாளிலேகொண்டு புகுவார் உண்டோ? என்கிறாள். [குமிறுமோசை விழவொலி] - ஓத்துச்சொல்லுவார், ஸங்கீர்த்தனம் பண்ணுவார், பாடுவாராய், எழுத்தும் சொல்லும் பொருளும் தெரியாதபடி விரவிக்கொண்டு எழுகிற த்வநியையுடைய திருநாளில் ஆரவாரம். [தொலைவில்லிமங்கலங் கொண்டுபுக்கு] - பரமபதத்திலே கொண்டுபுக்கிர்கோளாகிலும் மீட்கலாயிற்று. [கொண்டுபுக்கு] - இவள் அறியாதிருக்க, நீங்களே கொண்டுபுக்கு. [அமுதமென்மொழியாளை] - இவள் பேச்சைக்கேட்டால் போன உயிரும் மீளுமாயிற்று. [மென்மொழி] - அம்ருதத்தில் வ்யாவ்ருத்தி; ஶ்ரவணயோக்யமாயிராதே அம்ருதம். [நீருமக்காசையின்றி யகற்றினீர்] - "[illegible]" என்று இவள் பேச்சைக்கேட்க ஆசைப்பட்டிருக்குமவன் பெற்றுப்போனான்; நீங்கள் ஆசை

இல்லாமையாலே அகற்றினிகோள். தந்தாமுக்கு அநர்த்தத்தைத் தாம்தாமே விளைத்துக் கொள்ளுவார் உண்டோ? அகற்றுகையாவது - அகலும்படி பண்ணினிகோள் என்கை. அதாவது - இவ்வூரிலே புக்கபின்பு இவர்களோடே வார்த்தை சொல்லத்தவிர்ந்தாளாயிற்று. [திமிர்கொண்டா லொத்து நிற்கும்] - ஸ்தப்தையானாற்போலே நிற்கும். வ்யாபாரக்ஷமையன்றியே இராநின்றாள். “[illegible]” என்கிறபடியே பரிபூர்ண ஜ்ஞாநரைப்போலே இராநின்றாள். [மற்றிவள்] - வேறு இவள் வார்த்தைசொல்லப் புக்காளாகில். [தேவதேவபிரானென்றே] - இங்கே கண்டாலும், “*அயர்வறுமமரர்களதிபதி இங்கேவந்து ஸுலபனானான்” என்றாயிற்று இவள் வாழ்த்திபண்ணுவது. [என்றே நிமியும்] - அந்த சீலவத்தையைச் சொல்லப்புக்குத் தலைக் கட்டமாட்டாதே உதடு நெளிக்கும். உதடுநெளிக்கிற வாயோடே கண்ணநீர்மல்க. [நெக்கு] - ஶிதிலையுமாய். [ஒசிந்து] - பரவசையுமாய். [கரையும்] - நீராகாநின்றாள். [நெக்கொசிந்து கரையுமே] - பெருவெள்ளத்தில் கரையானது நெகிழ்ந்து ஓட்டுவிட்டு ஒசிந்துபோசிந்து அவயவியாகாதபடி கரைந்து போமாபோலே யழிந்துபோகாநின்றாள். இப்படி இவள் கரையாநிற்க, வன்னெஞ்சரான நாம் இதுக்குப்பாசுரமிடுவது, மீட்கத் தேடுவது ஆகாநின்றோமிறே!

ஈடு.—இரண்டாம்பாட்டு. அவ்வூரில் கொடுபுகவேண்டினால், திருநாளிலே கொடுபுகுவாருண்டோ? என்கிறாள்.

[குமிறுமோசைவிழவொலி] - “தேஷாம் புண்யாஹகோஷாணாம் கம்பீரமதுரஸ்வந: | அயோத்யாம் பூரயாமாஸ தூர்யநாதாநுநாதித:” (தேஷாம்புண்யாஹகோஷோத கம்பீரமதுரஸ்வந:- அயோத்யாம்பூரயாமாஸதூர்யநாதாநுநாதித:) என்று, ஓத்துச்சொல்லுவார், ஸங்கீர்த்தநம்பண்ணுவார், பாடுவார், இயல்விண்ணப்பஞ் செய்வாராய், எழுத்தும் சொல்லும் பொருளும் தெரியாதபடி விரவிக்கொண்டெழுகிற த்வநியையுடைய திருநாளில்ஆரவாரம். பாவியேன்! இத்த்வநி செவிப்பட்டால் சொண்டுமீளவன்றோ அடுப்பது! “இவ்விடம் பிள்ளைகொல்லி” என்று கூப்பிடுமோபோலேகாணும் த்வநியிருக்கிறது. அவ்வூரும் திருநாளும் அங்குள்ளார்படுகிறதுங் கண்டுவைத்து இவளைக்கொண்டு புகுவாருண்டோ? [கொண்டுபுக்கு] - இவளை அறியாதிருக்க நீங்களேகொண்டுபுக்கு. [அமுதமென்மொழியாளை] - இவள்மொழி, கேட்டார்க்கு நித்யத்வத்தைக்கொடுக்குமே இவ்வினியபேச்சைக் கேளாதபடி ஹாக்யஹீநைகளாவதே நீங்கள். அதாவது - அவ்வூரிலே

இரண்டாம்பாட்டு.—குமிறும் இத்யாதி. “குமிறுமோசைவிழவொலி” இத்யாதியைச் சடாக்ஷித்தவதாரிகை - அவ்வூரில் இத்யாதி.

குமிறுமோசையுண்டாகைக்கடியேதென்ன - தேஷாம் இத்யாதி. “தேஷாம் புண்யாஹகோஷாணாம் கம்பீரமதுரஸ்வந:| அயோத்யாம் பூரயாமாஸ தூர்யநாதாநுநாதித:” இத்யயோத்யாகாண்டே[கூ-அ]. “குமிறும்” என்றதுக்கர்த்தம்-எழுத்தும் இத்யாதி. “கொண்டுபுக்கு” என்றதுக்குபாவம் - பாவியேன் இத்யாதி. “குமிறுமோசை” என்றதுக்குபாவம் - இவ்விடம் இத்யாதி. “கொண்டுபுக்கு” என்னுமளவாக பதப்ரயோகத்துக்கு பலித்தபாவம் - அவ்வூரும் இத்யாதி. அம்ருதத்தினுடைய, நித்யத்வப்ரதத்வம், போக்யத்வமாகிற ஆகாரத்வயத்தையும்பற்ற பாவத்வயம்-இவள்மொழி இத்யாதிவாக்யத்வயத்தாலே. திருவாய்மொழியைக்கேட்டார்க்கு புநராவ்ருத்தியில்லாத ஸ்த்தாநமுண்டாமென்று - ஸ்வாபதேசம். ‘அதாவது அவ்வூரிலே’ இத்யாதிவாக்யத்துக்கு

புக்கபின்பு இவர்களுடன் வார்த்தைசொல்லத்தவிர்ந்தாளாயிற்று. "மதுராமதுராலாபா" (மதுராமதுராலாபா) என்னும்படிகாணுமிருப்பது. இதுகேட்க ஆசைப்பட்டிருக்குமவன் பெற்றுப்போனான். [மென்மொழி] - அம்ருதத்தில் வ்யாவ்ருத்தி. ஶ்ரவணயோக்ய மாயிராதே அம்ருதம்: வேணுமாகில் ரஸ்யதைக்கு ஒருசொல்லுக்கு நிற்கிறது, மாதுர்யம் இதுக்கேயுண்டு இத்தனை. [நீருமக்காசையின்றி யகற்றினீர்] - இவள் பேச்சுக்கேட்டுப்போருகிற நீங்களே உங்களுக்குஇவள் வழிபடாதபடி பண்ணினிகோள். [திமிர்கொண்டா லொத்து நிற்கும்]- "ஸ்தப்தோஸி" (ஸ்தப்தோஸி) என்னுமாபோலே, அநுஸந்தவிஷயத்தை யநுஸந்திக்கவும்மாட்டாதே ஸ்திமிதையாய் நில்லாநின்றாள். "ஸ்தப்தோஸ்யுத" (ஸ்தப்தோஸ்யுத) என்கிறபடியே, பரிபூர்ணஜ்ஞாநரைப்போலே யிராநின்றாளென்றுமாம். [மற்றிவள்] - இவள்இதுக்குமேலேவார்த்தைசொல்லில். [தேவதேவபிரானென்றே] - இங்கே கண்டாலும் *அயர்வறுமமரர்களதிபதி யிங்கேவந்து ஸுலபனானானென்றாயிற்றுஇவள்புத்தி பண்ணுவது. நாயகனுடைய மேன்மைக்குத்தோற்றுவார்த்தைசொல்லுகிற இவளை மீட்கப் போமோ? [என்றேநிமியும்]- "அப்பெரியவள்இப்படி ஸுலபனாய் சீலவானானவதே!" என்று, அந்தசீலவத்தையைச்சொல்லப்புக்குத் தலைக்கட்டமாட்டாதே உதடுநெளிக்கும். உதடு

ப்ர.—[அமுதமென்மொழியாளை]- ஸுந்தரகாண்டே [௬௬] "மதுரா மதுராலாபா கிமாஹ மம பாமிநீ। மத்விஹீநா வராரோஹா ஹநுமந் கதயஸ்வ மே॥"

ப்ர.—[திமிர்கொண்டாலொத்துநிற்கும்]—ஸாந்தோக்யே [௬-௧] "ஶ்வேதகேதுர்ஹாருணேய ஆஸ। தம் ஹ பிதோவாச ஶ்வேதகேதோ வஸ ப்ரஹ்மசர்யம் ந வை ஸோம்யாஸ்மத்குலீநோऽநநூச்ய ப்ரஹ்மபந்துரிவ பவதீதி॥ ஸ ஹ த்வாதஶவர்ஷ உபேத்ய சதுர்விம்ஶதிவர்ஷஸ் ஸர்வாந் வேதாநதீத்ய மஹாமநா அநூசாநமாநீ ஸ்தப்த ஏயாய। தம் ஹ பிதோவாச॥ ஶ்வேதகேதோ யந்நு ஸோம்யேதம் மஹாமநா அநூசாநமாநீ ஸ்தப்தோऽஸ்யுத தமாதேஶமப்ராக்ஷ்யோ யேநாஶ்ருதம் ஶ்ருதம் பவத்யமதம் மதமவிஜ்ஞாதம் விஜ்ஞாதமிதி."

பாவம் - தொலைவில்லிமங்கலத்திலே கொடுபுகுகையாலே யங்கே ப்ரவணையாய் இவர்களோடே வார்த்தைசொல்லத்தவிர்ந்தாளாகையாலே, அம்ருதமான இவள்பேச்சைக் கேட்டுக்கொண்டிராதே அங்கே கொடுபுக்கு இவள்பேச்சை யிழந்திகோளிறேயென்கிறாளென்றபடி. 'வார்த்தை போக்யமா யிருக்குமோ? என்ன - மதுரா இத்யாதி. "மதுரா மதுராலாபா கிமாஹ மம பாமிநீ" இத்யாதி, சுந்தரகாண்டே ராம:. 'நீருமக்கு ஆசையின்றி' என்கையாலே ப்ரதிகோடித்வேந பாவம் - இது கேட்க இத்யாதி. வ்யாவ்ருத்தி யெத்தாலே? என்ன - ஶ்ரவண இத்யாதி. மொழியாகையாலே ஶ்ரவணயோக்யமா யிருக்கும் இதுஎன்றபடி. "ஸ்தப்தோஸி"என்கிற லௌகிகபரிபாஷையாலேகீழ்பாவமருளிச்செய்து, ஶ்ருத்யுபஜீவநேநார்த்தாந்தரம்-ஸ்தப்தோஸ்யுத இத்யாதி. அன்றிக்கே, "ஸ்தப்தோஸ்யுத" என்கிறஶ்ருதிக்கே இரண்டர்த்தமாய், அதாவது - "யத்ருநாத்வதஶ்ருதி" என்கிறபடியே அநுபவத்தால் ஸ்தப்ததையாதல், ஜ்ஞாநபூர்த்தியாலே பரபரப்பற்றிருக்கிற ஸ்தப்ததையாதல். இந்த இரண்டர்த்தத்தையும் அருளிச்செய்கிறார் - ஸ்தப்தோஸி என்னுமாபோலே இத்யாதி வாக்ய பத்வயத்தாலே. நம்முடைய புத்த்யதீநமா யிருக்கிறவனை - "தேவதேவபிரான்" என்கிறதென்?

நெளிக்கிற வாயோடே கண்கள்நீர்மல்க. [நெக்கு] - சிதிலையுமாய். [ஒசிந்து] - பரவசையாய். [கரையும்] நீராகாநின்றாள். [நெக்கொசிந்துகரையுமே] - பெருவெள்ளத்தில் கரையானது நெகிழ்ந்து ஓட்டுவிட்டொசிந்து போசிந்து அவயவியாகாதபடி கரைந்துபோமா போலே, ஓரவயவியாக்கிக்காணவொண்ணாதபடி கரைந்துபோகாநின்றாள். (உ)

மூன்றாம் பாட்டு.

கரைகொள்பைம்பொழில்தண்பணைத் தொலைவில்லிமங்கலங்கொண்டுபுக்
உரைகொளின்மொழியாளைநீர் உமக்காசையின்றியகற்றினீர்
திரைகொள்பௌவத்துச்சேர்ந்ததும் திசைஞாலந்தாவியளந்ததும்
நிரைகள்மேய்த்ததுமேபிதற்றி நெடுங்கண்ணீர்மல்கநிற்குமே. [௩

ஆ.—(கரைகொள்.) - அதிமநோஹர ஸுமநோஹராபிராமாதிசீதள விடபவிராஜித வகுள சம்பகாதி தருநிகர பரிவ்ருத பர்யந்தத்தை யுடைத்தான தொலைவில்லிமங்கலத்திலே கொண்டுபுக்க அன்றுதொடங்கி, அவனைப் பிரிந்த வ்யஸநத்தாலே அப்ரக்ருதிஸ்தையாய்க்கொண்டு, அத்யந்த மதுரமான சொற்களாலே, திருப்பாற்கடலிலே கண்வளர்ந்தருளினபடியும், இந்தலோகத்தை யளந்தருளினபடியும், பசுமேய்த்தருளினபடியும், முதலாகவுள்ள திவ்யசேஷ்டிதங்களையே யலற்றித் தன்னுடையதிருக்கண்கள் பரப்புமாறும்படி நீர்மல்கி நிற்கும். ஆகலால், அங்கே கொண்டுபுக்கு இவளை வலிய இழந்திகோ ளென்கிறாள்.

ஒ.—மூன்றாம்பாட்டில், திருத்தொலைவில்லிமங்கலத்துக்குக் கொடுபோகிற நீங்கள், திருச்சோலையில் உள்ளிட்டுக்கொடுபோய்க் கெடுத்திகோள்! என்கிறாள். [கரையென்று தொடங்கி] - திருப்பொருநற்கரையை விழுங்கிக் குளிர்ந்த திருச்சோலையையும் ஸ்ரமஹரமான நீர்நிலத்தையுமுடைய திருத்தொலைவில்லிமங்கலத்திலே கொண்டுபுக்கு. [உரைகொள் இன்மொழியாளை] - "ஒருத்தி பேச்சே!" என்று நாடெல்லாம் உரைக்கும்படி யிருந்த இன்மொழியாளை. பொருளின்றி உரையே கொள்ளப்படும் மழலை வார்த்தை யுடையாள் என்றுமாம். [திரைகொள்என்று தொடங்கி] - தன்னுடைய ஸந்நிதாநத்தாலேகளித்துத் திரைமோதாநின்றுள்ள திருப்பாற்கடலிலே கண்வளர்ந்தருளினபடியும் திக்குக்களோடுகூடின ஜகத்தையெல்லாம் அநாயாஸேந வளர்ந்து அளந்துகொண்டருளினபடியும் பசுமேய்த்தருளினபடியு மாகிற ஆஶ்ரிதார்த்தப்ரவ்ருத்திகளையே அடைவுகெடச்சொல்லித் தன்கண்ணிற் பரப்பெல்லாம் நீர்மல்கப் பிதற்றவும்க்ஷமையன்றிக்கே நிற்கும்.

என்ன - இங்கேகண்டாலும் இத்யாதி. "தேவதேவபிரான்" என்றவனுடைய ஹார்த்தபாவம் - நாயகனுடைய இத்யாதி. "நெக்கு, ஒசிந்து, கரையும்" என்ற மூன்றையும் த்ருஷ்டாந்தத்திலே காட்டுகிறார் - பெருவெள்ளத்தில் இத்யாதி. 'திமிர்கொண்டால்' என்றதொடங்கி, 'ஆசையின்றி யகற்றினீர்' இத்யந்வயஃ. (உ)

ப.—அநந்தரம், ரக்ஷணார்த்தமான ப்ரவ்ருத்திகளையுடைய ஸர்வேச்வரன் வர்த்திக்கிற சோலையையும் கழனியையுமுடைய தேசத்தைக் காட்டினிகோ ளென்கிறாள்.

கரை - திருப்பொருநற்கரையை, கொள் - விழுங்கும்படியான, பை - பரந்த, பொழில் - பொழிலையும், தண் - குளிர்ந்த, பணை - நீர்நிலத்தையுமுடைய, தொலைவில்லி மங்கலம் - திருத்தொலைவில்லிமங்கலத்திலே, கொண்டு - கொண்டு, புக்கு - புக்கு, உரை கொள் - லோகமெல்லாங் கொண்டாடும்படியான, இன் - இனிய, மொழியாளை - மொழியையுடையவளை, நீர் - (இவள்வார்த்தை வாசியறியும்) நீங்கள், உமக்கு - உங்களுக்கு, ஆசை - அதில்ஆசை, இன்றி - இன்றியே, அகற்றினீர் - தூரஸ்தையாம்படி பண்ணினிகோள்; (அதுவென்னென்னில், அர்த்திகள் கூக்குரல் கேட்கும்படி), திரை - ஸ்வஸ்பர்சத்தாலே கிளம்பினதிரையை, கொள் - உடைய, பௌவத்து - கடலிலே, சேர்ந்ததும் - (அவன்ஆஸ்ரிதரக்ஷணார்த்தமாகக்) கண்வளர்ந்தருளினபடியையும், திசை - திக்குக்களோடுகூடின, ஞாலம் - பூமியை,(அநாயாஸேந), தாவி-கவட்டித்து, அளந்ததும்- அளந்துகொண்டு அநந்யார்ஹமாக்கினபடியையும், நிரைகள் - பசுத்திரள்களை, மேய்த்ததுமே - மேய்த்தபவ்யதையையுமே, பிதற்றி - (பரவசையாய்க்கொண்டு)பிதற்றி, (தன்னுடைய), நெடு-நெடிய, கண் - கண்கள், நீர் - நீர், மல்க - மகும்படி, நிற்கும் - ஸ்தப்தையாகாநிற்கும்.

ஈ.—மூன்றும்பாட்டில், திருநாளிலேதான் கொண்டு போகிறிகோள்: திருச்சோலை யுள்ளிட்டு இவளைக் கொண்டுபோய்க் கெடுத்திகோள்! என்கிறாள். [கரைகொள் இத்யாதி] - திருப்பொருநற்கரையை விழுங்கிப் பரந்து இருந்துள்ள சோலையையும் நீர்நிலங்களையும் உடைத்தான திருத்தொலைவில்லிமங்கலத்திலே இவளைக் கொண்டு புக்கு. போகிற நீங்கள் திருச்சோலையூடே கொண்டுபோக வேணுமோ? [உரைகொள் இன்மொழியாளை] - கேட்டாரடங்க "இது ஒரு பேச்சே!" என்று கொண்டாடும்படியான இனியமொழியை யுடையவள் என்னுதல்; அர்த்தத்தில் இழியவேண்டாதே, ஸப்தமே அமைந்திருக்கும் என்னுதல். "பாலேய் தமிழரிசைகாரர் பத்தர் பரவுமாயிரம்" என்று, நின்றார் நின்ற துறைகளிலே ஈடுபடும்படி இருக்கை. மாற்றும் உரையும் அற்றபேச்சு என்னுதல். உரை என்று - ஸ்ரீராமாயணமாய், அது குத்துண்ணும்படி இருக்கும் என்னுதல். [உமக்காசையின்றி யகற்றினீர்] - அவ்வூரிலே கொடுபுகுகையும், இவள்பக்கல் நசையறுகையென்றும் பர்யாயமன்றோ. இவளை வேண்டாமையிறே கொடுபுக்கது. [திரைகொள் பௌவத்துச் சேர்ந்ததும்] - வ்யூஹவிபவங்களையும் இங்கே அநுபவிக்கும்படியிறே இவள் அவகாஹித்தது. ஸ்வஸ்பர்சத்தாலே திரைக்கிளர்த்தியையுடைத்தாய்க் களித்து வருகிற திருப்பாற்கடலிலே கண்வளர்ந்தருளிற்றும். பரமபதத்தைவிட்டு, ப்ரஹ்மாதிகள் கூக்குரல் கேட்கைக்காக வந்துகிடக்கிற நீர்மையிலே ஙியிலையாகாநின்றாள்.

[திசைஞாலம் இத்யாதி] - "மஹாபலியாலே பூமி அபஹ்ருதையாயிற்று" என்று கேட்டவாறே அப்படிக்கையில் பொருந்தாதே, திக்குக்களோடேகூடின பூமியை அநாயாஸேந எல்லை நடந்துகொண்டதும், அது பரதசையென்னும்படி கோபஸஜாதீயனாய்க் கையிலே கோலைக்கொடுத்து "பசு மேய்த்துவா" என்னலாம்படியான நீர்மையையும் அநுஸந்தித்து: இப்படிப்பட்ட ஆஸ்ரிதார்த்தப்ரவ்ருத்திகளை "ஜாஉ-ஹ்ஸ்ஜஷ தஃ"

என்கிறபடியே அடைவுகெடச்சொல்லி. [நெடுங்கண்ணீர்மல்க] - இக்கண்ணில் பரப்படைய நீர்மல்கும்படி. [நிற்குமே] - பிதற்றவும் க்ஷமையன்றிக்கே ஸ்தப்தையாய் இராநின்றாள்.

ஈடு.—மூன்றாம்பாட்டு. திருநாளிலே தான் கொண்டுபோகவேண்டிலுல், திருச் சோலையுள்ளிட்டுக் கொடுபுகுவா ருண்டோ? என்கிறாள்.

[கரைகொள்பைம்பொழில்] - திருப்பொருநற்கரையைப் பொழில் விழுங்கி யிருக்கை. கரையைப் பொழில்கொண்டாற்போலே, இவளைக் குணங்கொண்டபடி. அத் திருச்சோலையை யுங்களுடைய ஹிதவசநத்தாலே பேர்த்துக்கொடுபோமன்றன்றே இவள் நிலையை யுங்களால் பேர்க்கலாவது! பரந்த பொழிலையும் குளிர்ந்த நீர்நிலங்களையுமுடைய திருத்தொலைவில்லிமங்கலத்திலே கொடுபுக்கு. [உரைகொள்இன் மொழியாளை] - "வாசெ௱ மெயெவசயஶாஶ" (பாட்யேகேயேசமதுரம்)என்னும் ஸ்ரீராமாயணம் குத்துண்ணும்படி யான பேச்சென்னுதல்; அர்த்தத்திலிழியவேண்டாதே, "உரையேயமையும்" என்னும்படி யான பேச்சென்னுதல். †(பரவ்யூஹவிபவங்களையும்இங்கேயநுபவிக்கும்படியிறே இவள்அவ காஹித்தது) "இதோருரையே! - பேச்சே!" என்று நாட்டார் கொண்டாடும்படியானபேச் சென்னுதல். அப்பேச்சில் வாசியறிந்து அநுபவிக்கமாட்டாதே, நீங்களே யாசையின்றி அகற்றினிகோள். [உரைகொள்இன்மொழி] - மாற்றும்உரையும் அற்றபேச்சென்னுதல்; உரை-அடைவுசொல். [உமக்காசையின்றியகற்றினீர்] - அவ்வூரிலே கொடுபுகுகையும், இவள் பக்கல் நசையறுகையென்றும் பர்யாயம். ஆயிட்டு, "இவளைவேண்டா" என்றன்றே கொடு புக்கதென்கிறாள். [திரைகொளித்யாதி] - ஸ்வஸந்நிதாநத்தாலே கிளராநின்றுள்ள திரைகளை யுடைத்தான திருப்பாற்கடலிலே ப்ரஹ்மாதிகள் கூக்குரல் கேட்கும்படியாகக் கண்வளர்ந் தருளினதுவும், இவர்களார்த்திகேட்ட பின்பு இந்த்ராதிகளுக்குக் குடியிருப்புப் பண்ணிக் கொடுக்க அடியிட்டபடியும். [திசைஞாலம்தாவியளந்ததும்] - திக்குக்களோடே கூடின பூமியைஇரப்பாளனுயிரந்து அநாயாஸேந வளர்ந்துஅளந்தபடியும். [திசைஞாலம்தாவியளந்த தும்] - "இந்த்ராதிகளை ரக்ஷிக்கவேணும்" என்றஆசையோடேகாணும் பூமியைஅளந்தது.

---

*மூன்றாம்பாட்டு.—***கரைகொள்** *இத்யாதி. "கரைகொள் பைம்பொழிற்றண்பணை" இத் யாதியைக்கடாக்ஷித்தவதாரிகை -* **திருநாளிலே** *இத்யாதி.*

"கரைகொள்" என்கிறவிடத்திலே, கொள்கை - க்ரஹிக்கையாய், க்ரஸிக்கையைச்சொல்லு கிறது. பதப்ரயோகத்துக்கு ஹார்த்தபாவம் - **கரையை** *இத்யாதி. பணை - நீர்நிலங்கள். குணங் கொண்டபடியென்றது - "நிரைகள் மேய்த்ததுமேபிதற்றி" என்றத்தைப்பற்ற. "பொழில்" என்ற திலே நோக்காக ஹார்த்தபாவாந்தரம் -* **அத்திருச்சோலையை** *இத்யாதி. "உரைகொள்" என்றதுக்கு அஞ்சர்த்தம். முந்தினதுக்கு, உரை - ஸ்ரீமத்ராமாயணம்; இத்தை யருளிச்செய்கிறார் -* **ஸ்ரீராமாயணம் குத்துண்ணும்படியான** *என்று. இரண்டாவது -* **அர்த்தத்தில்** *இத்யாதி. அதாவது - உக்தியே நெஞ்சை யபஹரிக்கும்படியான என்றபடி. உரை - உக்தி. மூன்றாவது -* **இதோருரையே** *இத்யாதி. அதாவது - லௌகிகஶ்லாகோக்தியை யுடைய என்றபடி. உரை - லௌகிகருடைய ஶ்லாகோக்தி; கொள்கை - உடைத்தாகை. நாலாவது -* **மாற்றும்** *இத்யாதி. உரையென்று - மாற்று; கொள்கை - ஜயிக்கை. அஞ்சாமர்த்தம் -* **உரைஅடைவுசொல்** *என்று. அதாவது - இப்பாட்டில் "கரை, உரை, திரை, நிரை" என்றாற்போலே சொன்னவை. கொள்கை - உடைத்தாகை. நாங்களகற்றினேமோ? என்ன -* **அவ்வூரிலே** *இத்யாதி. ஆயிட்டு - ஆனபின்பு. மேலுக்கவதாரிகை -* **இவர்களார்த்தி** *இத் யாதி. ஸப்தார்த்தம் -* **திக்குக்களோடே** *இத்யாதி. "திசை" என்றதிலே ரஸோக்தி -* **இந்த்ராதிகளை**

ஆசை - திக்கு. "இவன்திருவடிகளாலே நம்மை ஸ்பர்சிக்கவேணும்" என்றாசைப்பட்டுக் காணும் கிடக்கிறது பூமி. படுகை - உடைத்தாகை. பூமியினுடைய ஆசையாவது - திக்குப்பட்டிமறையிருப்பது. அவ்வளவன்றிக்கே, அறிவுகேட்டுக்குத் தலையான பசுக்களோடே சேர்ந்து வர்த்தித்தபடியுமேசொல்லி யடைவுகெடக்கூப்பிட்டு. [நெடுங்கண்ணீர்மல்க] - இக்கண்ணில் பரப்படங்கலும் பரப்புமாற ஜலதத்த்வமுண்டாவதே! [நிற்குமே]-பிதற்றவும் க்ஷமையன்றிக்கே, கண்ணநீர்மல்குகை "ஸ்வஸ்த்ததசை" என்னும்படி ஸ்தப்தையாய் நில்லாநின்றாள். (௩)

நான்காம் பாட்டு.

நிற்கும்நான்மறைவாணர்வாழ் தொலைவில்லிமங்கலங்கண்டபின்
அற்கமொன்றும்அறவுறாள் மலிந்தாள்கண்டீர் இவளன்னைமீர்!
கற்குங்கல்வியெல்லாம்கருங்கடல்வண்ணன் கண்ணபிரானென்றே
ஒற்கமொன்றுமிலள்உகந்துகந்து உள்மகிழ்ந்துகுழையுமே.

ஆ.—(நிற்கும்.) - அபௌருஷேய நிர்த்தோஷாசேஷ வேதவேதார்த்த ப்ரவர்த்தகரான திவ்யஜநங்கள் வேதவேத்யமான பகவத்ஸ்வரூபரூப குணவிபூதிகளை ஸாக்ஷாத்கரித்துக்கொண்டு வாழுகிற திருத்தொலைவில்லிமங்கலத்தைக் கண்டபின், ஸ்த்ரீத்வ ப்ரயுக்தமான மர்யாதையைக்கடந்து ஒருவர்க்கும் விதேயையன்றியே, சொல்லும்சொல்லெல்லாம் கருங்கடல்வண்ணன் கண்ணபிரானென்றே எப்போதும் சொல்லி, ஒரு ஶ்ராந்தியுமின்றியே அவன் திருநாமங்களைச் சொல்லச்சொல்ல மேல்மேல் வந்த ப்ரீதிபரம்பரையாலே அத்யந்தம் அவஸந்நையாகாநின்றாள்; இப்படி அவன்திறத்தில் அபிநிவிஷ்டையான இவளை என்னால் நிவர்த்திப்பிக்கவொண்ணா தென்கிறாள்.

ஒ.—நாலாம்பாட்டில், திருத்தொலைவில்லிமங்கலத்தையும், அங்குள்ள ஸ்ரீவைஷ்ணவர்கள் கோஷ்டியையும் யாதொருநாள் கண்டாள், அன்றுதொடங்கித் தடை நிற்கை தவிர்ந்தாள் என்கிறாள் [நிற்குமென்று தொடங்கி] - அபௌருஷேயமாய் நித்யமான வேதங்கள் தாங்களிட்ட வழக்காகையாலே வ்யாஸபதஞ்செலுத்தவல்லராயுள்ளவர்கள் அந்த வேதார்த்தஸூசனை எம்பெருமானைப்பெற்று வாழுகிற திருத்தொலை

இத்யாதி. ஆசையோடேயென்றது - ஶ்லேஷம். இன்னமும் ஒருவழியாலே ரஸோக்தி - இவன் இத்யாதி. திக்குப்பட்டிறே - அடைவுபட்டிறே இத்யர்த்த꞉. ஸ்வபாவார்த்தம் - திக்கையுடைத்தாகை. "நெடு" என்றதுக்கு பாவம் - இக்கண்ணில் இத்யாதி. திரைகொளென்றுதொடங்கி, அகற்றினீரித்யந்வய꞉. பௌவம் - கடல். "வாசஸ்தேயவசோசாரம் பூர்ணமஸ்திரஸ்திதம் । ஜாதிஸ்ஸ்வஸ்திரஸ்ஸத்கம் ஸங்க ஸமஸ்திதம்" இதி பாலகாண்டே [சு-அ]. (௩)

வில்லிமங்கலத்தைக் கண்டபின் ஒன்றும் தடைநில்லாள் ; அன்னைமீர் ! இவள் நம்மைக் கைகடந்தாள்கிடிகோள். [கற்குமென்று தொடங்கி] - சொல்லுஞ் சொல்லெல்லாம் திருநாமங்களேயாய்ச் செல்லாநின்றாள். வருத்தம் ஒன்றும் இன்றிக்கே அத்திருநாமங்கள்வழியே அவன் அழகையும் அவன் குணங்களையும் அநுஸந்தித்து மேன்மேலென ப்ரீதையாய் அந்தஃகரணமும் ப்ரீதமாய் அந்த ப்ரீத்யதிஶயத்தாலே அழியாநிற்கும்.

ப.—அநந்தரம், ஶ்லாகநீய விக்ரஹவிஶிஷ்டனான க்ருஷ்ணனுடைய விலக்ஷண புருஷாவாஸமான திருத்தொலைவில்லிமங்கலத்தைக் கண்டபின்பு ஒருவர்க் கடங்காதபடி கைவிஞ்சினாளென்கிறாள்.

நிற்கும் - நித்யமாய், நால் - நாலுவகைப்பட்ட, மறை - வேதங்களுக்கு, வாணர் - நிர்வாஹகரானவர்கள், வாழ் - (பகவதநுபவத்தாலே) வாழாநிற்கிற, தொலைவில்லிமங்கலம் - திருத்தொலைவில்லிமங்கலத்தை, கண்டபின் - கண்டபின்பு, அற-மிகவும், அற்கம் - அடக்கம், ஒன்றும் - ஒன்றும், உறாள் - உறுகிறிலள்; இவள் - இவள், மலிந்தாள் - கைகழியவிஞ்சினாள் ; (இவள்இப்படியாய்படி), அன்னைமீர்-பெற்றுவளர்த்த நீங்கள், கண்டீர் - கண்டிகோளிறே! கற்கும்-(இவள்)அப்யஸிக்கும், கல்வி-வார்த்தை, எல்லாம்-எல்லாம், கரு-ஶ்யாமளமான, கடல் - கடல்போலேயிருக்கிற, வண்ணன் - வடிவையுடையவனாய், கண்ணன் - ஆஶ்ரிதபவ்யனானக்ருஷ்ணனாகிற, பிரான் - மஹோபகாரகன், என்றே-என்று, (அவனுடைய ரூபவைலக்ஷண்யத்தையும் ஆத்மகுணத்தையும் சொல்லி), ஒன்றும் - ஒருப்ரகாரத்தாலும், ஒற்கம் - ஒடுக்கம், இலள் - இலளாய்க்கொண்டு, உகந்துகந்து - அந்தகுணாநுஸந்தாநத்தாலே மேன்மேலுமுகந்து, (அத்தாலே), உள் - நெஞ்சிலே, மகிழ்ந்து - ஆஹ்லாதம் மிக்கு, குழையும் - அது அடியாக ஶிதிலையாகாநிற்கும். அற்கம்-அல்குதலாய், அடங்குதலென்றபடி. ஒற்கம் - ஒல்குதலாய், ஒடுங்குதல் என்றபடி.

ஈ.—நாலாம்பாட்டில், அவ்வூரையும் அங்குள்ள ஸ்ரீவைஷ்ணவர்களையும் கண்டபின், தடைநிற்கை தவிர்ந்தாள் என்கிறாள். [நிற்கு நான்மறை] - அபௌருஷேயமாய் நித்யமான வேதங்கள். [வாணர்] - வேதங்கள் தாங்களிட்ட வழக்காய்ச் செல்லுகையாலே வ்யாஸபதஞ் செலுத்தவல்லவர்கள். [வாழ்தொலைவில்லிமங்கலம்] - வேததாத்பர்யபூதனானவனைக்கண்டு நித்யாநுபவம்பண்ணுகிற ஊர். "ஸாயுஜ்யாயாஜேஹ்ராமளாஸீத" என்னுமளவன்றிக்கே, "யோமாஸ்வாயுஜ்யளோளேஸ" என்று ஆரூடயோகராயிருக்குமவர்கள். [கண்டபின்] - அவ்வூரில் ஸ்ரீவைஷ்ணவர்களும் அவனுமான சேர்த்தியைக் காட்டிக்கொடுத்துக் கெடுத்திகோள். [அற்கமொன்றும் அறவுறாள்] : அற்கம் - அல்குதல், அடங்குதல், தாயார்சொல் வழிவருமத்தை ஒன்றையும் அறவிட்டாள். [மலிந்தாள் கண்டீரிவள்] - இவளுடைய ஸமவத்ப்ராவண்யம் எனக்குத் தெரியாதபடி விஞ்சினாள்கிடிகோள். [அன்னைமீர்!] - மீட்கத்தேடுகிற உங்களோடு, இவள் கருத்தறிந்தேனாய்ச் சொன்ன என்னோடு வாசியில்லை தெரியாமைக்கு. நித்யஸூரிகள் யாத்திரை ஸம்ஸாரிகளுக்குத் தெரியிலன்றோ நமக்கு இவள் அளவுதெரிவது ? [கற்குங்கல்வி இத்யாதி] - சொல்லும் சொல்லெல்லாம் திருநாமமேயாய், அதுதன்னிலும், வடிவழகுக்கும் ஆஶ்ரிதபாரதந்த்ரியத்துக்கும் வாசகமான திருநாமங்களையே சொல்லாநின்றாள். "க்ருஷ்ணனாகில் ஆஶ்ரிதபாரதந்த்ரன்" என்று ப்ரஸித்தமிறே. [பிரான்] - உபகாரஶீலன். [என்றே ஒற்கமொன்றுமிலள்] - திருநாமங்களை இடைவிடாதே

சொல்லாநின்றால், இளைப்பு ஒன்றுமின்றிக்கே இராநின்றாள். ஒற்கம் - ஒல்குதல், அதாவது - ஒடுங்குதல், இளைப்பு. [உகந்து உகந்து] - திருநாமங்களின் வழியே அவன் அழகையும் குணங்களையும் நினைத்து மேன்மேலென ப்ரீதையாய். [உள்மகிழ்ந்து குழையுமே] - அந்தஃகரண ப்ரீத்யதிஶயத்தாலே ஆஶ்ரயம் அழியாநிற்கும்.

ஈடு.—நாலாம்பாட்டு. அவ்வூரையும் அங்குள்ள ஸ்ரீ வைஷ்ணவர்களையும் யாதொருநாள் கண்டாள், அன்றுதொடங்கித் தடைநிற்கை தவிர்ந்தா ளென்கிறாள்.

[நிற்கும்நான்மறை] - நித்யமான நாலுவேதங்கள். நித்யத்வமாவது-பூர்வபூர்வோச்சாரண க்ரமத்தைப்பற்ற உத்தரோத்தரோச்சார்யமாணத்வம். ஆகையாலே நித்யமான வேதம். அபௌருஷேயமாகையாலே நிர்த்தோஷமாயிருக்குமிறே. [வாணர்] - வ்யாஸபதஞ் செலுத்தவல்லராயிருப்பர்கள். [வாழ்] - வேதார்த்தபூதனைக் கண்ணாலேகண்டு வாழாநிற்பர்கள். [வாழ்தொலைவில்லிமங்கலம்] - வேததாத்பர்யபூதனைக்கண்டு நித்யாநுபவம்பண்ணுகிறவூர். "ஸ்வாத்யாயாத் யோகமாஸீத" (ஸ்வாத்யாயாத் யோக மாஸீத) என்னுமளவன்றியே, "யோகாத் ஸ்வாத்யாயமாமநேத்" (யோகாத்ஸ்வாத்யாயமாமநேத்) என்று ஆரூடயோகராயிருக்குமவர்கள். [கண்டபின்] - அவ்வூரில் வைஷ்ணவர்களும் அவனுமான சேர்த்தியைக் காட்டிக்கொடுத்துக் கெடுத்திகோள். [அற்கமொன்றும் அறவுற்றாள்]-அற்கம் - அல்குதல். அதாவது - அடக்கம். நம் சொல்வழி வந்திருக்கும் இருப்

ப்ர.—[நிற்கும்இத்யாதி]— [நான்மறைவாணர்வாழ்தொலைவில்லிமங்கலம்]—
ஸ்ரீவிஷ்ணுபுராணே ஷஷ்டாம்ஶே [௬] அத்யாயே ஶ்ரீபராஶர:—'ஸ்வாத்யாய ஸம்யமாப்யாம் ஸ த்ருஶ்யதே புருஷோத்தம: । தத்ப்ராப்திகாரணம் ப்ரஹ்ம ததேததிதி பட்யதே ॥ ௧ ॥ ஸ்வாத்யாயாத் யோகமாஸீத யோகாத் ஸ்வாத்யாயமாமநேத் । ஸ்வாத்யாயயோகஸம்பத்த்யா பரமாத்மா ப்ரகாஶதே ॥ ௨ ॥ தத்தீக்ஷணாய ஸ்வாத்யாயஶ் சக்ஷுர் யோகஸ் ததாபர: । ந மாம்ஸசக்ஷுஷா த்ரஷ்டும் ப்ரஹ்மபூத: ஸ ஶக்யதே ॥"

நாலாம்பாட்டு.—நிற்கும் இத்யாதி. "நிற்கும்நான்மறை" என்றுதொடங்கி "அற்கமொன்றும் அறவுற்றாள்" என்னுமளவுங் கடாக்ஷித்தவதாரிகை - அவ்வூரையும் இத்யாதி.

"நிற்கும்" என்கிறவர்த்தமாநத்துக்கர்த்தம் - நித்யமான இத்யாதி. ஶப்தம் த்ரிக்ஷணாவஸ்தாயியாயிருக்க, நித்யமாகக்கூடுமோ? என்ன; - ஆநுபூர்வீநித்யத்வமே நித்யத்வமென்கிறார் - நித்யத்வம் இத்யாதி. த்ரிக்ஷணாவஸ்த்தாயித்வமாவது - உத்பந்நமாகையும், அநந்தரக்ஷணத்திலே யிருக்கையும், அநந்தரம் நஷ்டமாகையும். ஆநுபூர்வீ நித்யத்வமாவது - உபாத்யாயன் முன்னே யுச்சரிக்க, பஶ்சாத் ஓதுகிறவர்கள் உச்சரிக்கிறவடைவு தப்பாமல்வருகை. நித்யத்வத்தால் ஃபலிதம் - அபௌருஷேயம் இத்யாதி. 'நிர்த்தோஷமாயிருக்கும்'- பௌருஷேயத்வமடியாகவந்த ராகத்வேஷாதிகளின்றிக்கேயிருக்கும் இத்யர்த்தஃ. வாழ்ச்சியைக்காட்டுகிறார் - ஸ்வாத்யாயாத் இத்யாதி. "ஸ்வாத்யாயாத் யோகமாஸீத யோகாத் ஸ்வாத்யாயமாமநேத் । ஸ்வாத்யாயயோகஸம்பத்த்யா பரமாத்மா ப்ரகாஶதே" இதி ஷஷ்டேம்ஶே ஷஷ்டேத்யாயே. அஸ்யார்த்தஃ - ஸ்வகீயஶாகாத்யயநாத், யோகம் - தத்ப்ரதிபாத்யபரமாத்மத்யாநம், ஆஸீத - குர்யாத்; யோகஃ-த்யாநம். "யோகஸ்ஸந்நஹநோபாயத்யாந ஸங்கதியுக்திஷு" இதி அமரஃ. யோகவைபவாதநதீதஶாகாந்தரார்த்தஞ்ச, ஆமநேத் - ஸாக்ஷாத்க்ருத்யமநநம்குர்யாதிதி. "கண்டபின் அற்கமொன்றும் அறவுற்றாள்" என்றதுக்குஹார்த்தபாவம்- அவ்வூரில் இத்யாதி. "அற்கத்தை ஏகதேசமும் மிகவுமுடையாள்" என்னுமதுக்குநியாமகம் - நம்சொல்வழி

புத்தவிர்ந்தாள். * (தாயார்சொல்வழிவருமத்தை யொன்றையுமறவிட்டாள்.) [மலிந்தாள்] - நம்மால் ஹிதஞ்சொல்லி மீட்கவொண்ணாதபடி மிக்காள். மீட்கைக்கு யோக்யதையுமில்லாதபடி யானாள். [மலிந்தாள்கண்டீர் இவள்] - இவளுடைய பகவத்ப்ராவண்யம் எனக்குத் தெரியாதபடி விஞ்சினாள்கிடிகோள். [அன்னைமீர்] - மீட்கத்தேடுகிறவுங்களோடு, இவள்கருத்தறிந்தேனாகச் சொல்லுகிற என்னோடு வாசியில்லை தெரியாமைக்கு. நித்யசூரிகள் யாத்ரை ஸம்ஸாரிகளுக்குத் தெரியிலன்றோ நமக்கு இவள்அளவு தெரிவது![கற்குமித்யாதி]- சொல்லும் சொல்லெல்லாம் திருநாமமேயாய், அதுதன்னிலும் வடிவழகுக்கும் ஆஶ்ரிதபாரதந்த்ர்யத்துக்கும் வாசகமான திருநாமங்களையே சொல்லாநின்றாள். "க்ருஷ்ணனாகில் ஆஶ்ரிதபவ்யன்" என்று ப்ரஸித்தமிறே. [பிரான்] - அவ்வடிவழகைத்தாழநின்று என்னை அநுபவிப்பித்த வுபகாரகன். [என்றேயொற்கமொன்றுமிலள்]-திருநாமங்களை இடைவிடாதே சொல்லாநின்றால் இளைப்பொன்றுமின்றிக்கே யிராநின்றாள். "விரஹதௌர்ப்பல்யத்தாலே திருநாமத்தை முட்டச்சொல்லமாட்டாள்" என்றிராநிற்கச்செய்தே, வருத்தமறச் சொல்லாநின்றாள். திருநாமந்தான் தரிப்பைக்கொடுத்துச் சொல்லுவிக்கும்போலேகாணும்; *பாடியிளைப்பிலமிறே. ஒற்கம் - மிடி: இளைப்பின்றிக்கே யென்னுதல்; அன்றிக்கே, ஒற்கமாகிறது - ஒடுக்கமாய், தாய்மார்முன்பே 'இப்படிசொல்லாநின்றோமே' என்னும் லஜ்ஜையின்றிக்கே யென்னுதல். [உகந்துகந்து] - திருநாமத்வாரா அவன் ஸௌந்தர்ய சீலாதிகளையநுஸந்தித்து மேன்மேலென ப்ரீதையாகாநின்றாள். [உள்மகிழ்ந்துகுழையுமே] - அந்தஃகரணப்ரீத்யதிசயத்தாலே ஆஶ்ரயம் அழியா நிற்கும். (ச)

ஐந்தாம் பாட்டு.

குழையும்வாள்முகத்தேழையைத் தொலைவில்லிமங்கலங்கொண்டுபுக்கு
இழைகொள்சோதிச்செந்தாமரைக் கண்பிரான்இருந்தமைகாட்டினீர்
மழைபெய்தாலொக்குங்கண்ணநீரினோடுஅன்றுதொட்டும்மையாந்துஇவள்
நுழையுஞ்சிந்தையள்அன்னைமீர்தொழும்அத்திசையுற்றுநோக்கியே.

ஆ.—(குழையும்.) - நிரவயிகஸௌந்தர்ய ஸௌகுமார்ய ஸாரஜந்மபூமியான திருமுகத்தையுடையளாய், பண்டு எம்பெருமான்திறத்தில் அதிசபலையாயிருந்த இவ

இத்யாதி. "அற்கமொன்றும் அறவுறாள்" என்றதுக்கும் "மலிந்தாள்" என்றதுக்கும் வாசியேதென்ன - மீட்கைக்கு இத்யாதி. பாவாந்தரம் - இவளுடைய இத்யாதி. ஆனாலும் எங்களிற்காட்டில் அந்தரங்கையன்றோநீ? உனக்குத்தெரியாமை யுண்டோ? என்ன; - கீழ்ற்பதத்தையுங்கடாக்ஷித்து, "அன்னைமீர்" என்கிறதுக்குஹாவம் - மீட்கத்தேடுகிற இத்யாதி. தெரியாமையின்சாமாவதி - நித்யசூரிகள் இத்யாதி. கற்கை - சொல்லுகை. "கண்ணன்" என்றால் - ஆஶ்ரிதபாரதந்த்ர்ய வாசகமாமோ? என்ன - க்ருஷ்ணனாகில் இத்யாதி. "என்றேயொற்கமொன்றுமிலள்" என்றதுக்குஹாவம் - திருநாமங்களை இத்யாதி. "என்றே" என்றவவதாரணார்த்தம் - இடைவிடாதே என்று. இளைக்கைக்கு ப்ரஸக்தியேதென்ன - விரஹ இத்யாதி. வருத்தமறச்சொல்லுகைக்கு ஹேதுவேதென்ன - திருநாமந்தான் இத்யாதி. எங்கே கண்டோமென்ன - பாடி இத்யாதி. "மிடி" என்றதின்விவரணம் - இளைப்பின்றிக்கேயென்னுதல் என்று. உகப்புவருகைக்குஹேதுவேதென்ன - திருநாமத்வாரா இத்யாதி. "உகந்துகந்து" என்றத்தையநுவதிக்கிறது - "உள்மகிழ்ந்து" என்று. என்றேயொற்கமொன்றுமிலள் - சொல்லியேயொருப்ரகாரத்தாலும் ஒடுக்கம் இலளாய்க்கொண்டு. உகந்துகந்து - மேன்மேலுமுகந்து. (ச)

ளைத் திருத்தொலைவில்லிமங்கலத்திலே கொண்டுபுக்கு, தன்னுடைய திவ்யபூஷணங்களினுடைய நிரவதிகதேஜஸ்ஸின்வெள்ளமெல்லாம் தன்னுள்ளேயடங்கும்படி பெருகுகிற நிரவதிகமான ஜ்யோதிஸ்ஸின் வெள்ளத்திலே, பரிபூர்ணமாயலர்ந்ததொருதாமரைத்தடாகத்தினுடைய குளிர்த்தியையும் அழகையு முடைத்தான திருக்கண்களையுடையனாயிருந்த எம்பெருமான் எழுந்தருளியிருந்த இருப்பைக் காட்டினீர்; அன்றுதொடங்கி, மழைபெய்தாலொக்கும் கண்ணநீரோடேமயங்கி, அக்கண்களையே நினைத்து அந்தத் திக்கைநோக்கித் தொழாநிற்கும்; இனி இவளை யாசைப்பட்டால் கிடைக்குமோ? வென்கிறாள்.

ஒ.—அஞ்சாம்பாட்டில், இவளுடைய ஸ்வபாவத்தை அறிந்துவைத்து, இவளைத் திருத்தொலைவில்லிமங்கலத்திலே கொடுபுக்கு எம்பெருமானுடைய அழகைக் காட்டிக்கொடுத்துக் கெடுத்திகோள் என்கிறாள்.

[குழையுமென்று தொடங்கி] - தன்னுடைய மார்த்தவத்தாலே நையும் ஸ்வபாவையாய் நிரதிசயதீப்தியுக்தமான திருமுகத்தை யுடையளாய் அதிசபலையுமாயிருக்கிற இவளை திருத்தொலைவில்லிமங்கலத்திலே கொண்டுபுக்கு வேறு ஓர் ஆபரணம் வேண்டாதே தானே ஆபரணமான தேஜஸ்ஸையுடையனுய்ச்சிவந்ததாமரைப்பூப்போலே இருக்கிற திருக்கண்களை யுடையனுய் கண்களைக்காணவே அறிந்து கொள்ளலாம்படியான தண்ணளியையும் உடையனுயிருக்கிறவனுடைய, ஒருவர்க்கும் கோசரமன்றிக்கேயிருக்கிற இருப்பில் அழகையும் நீங்களே காட்டிக்கொடுத்திகோள். [இழைகொள்சோதி] - ஆபரணத்தின்ஒளி தன்னுள்ளே அடங்கின சோதி என்றுமாம். [இருந்தமை] - அவன்படிகளை எல்லாம் என்றுமாம். [மழைபெய்தாலென்று மேனுக்கு] - அன்னைமீர்! வர்ஷதாரைபோலே மிக்கிருந்துள்ள கண்ணநீரோடே அன்றுதொடங்கி மயங்கி அவ்விருப்பிலும் ஸௌலப்ய குணங்களிலே உட்புகாநின்ற சிந்தையைஉடையளாய்த்திருத்தொலைவில்லிமங்கலத்தின் திக்கை ஏகாக்ரசித்தையாய்க்கொண்டு நோக்கி அஹ்நிவேசத்தாலே தொழாநிற்கும்.

ப.—அநந்தரம், திருத்தொலைவில்லிமங்கலத்திலேயிருக்கிற அரவிந்தலோசநனுடைய ஒப்பனையழகைக்காட்டினீர்; அன்றுதொடக்கமாக இவள் விக்ருதையாகாநின்றாளென்கிறாள்.

குழையும் - ஸ்வாபாவிகமான மார்த்தவத்தையுடையளாய், வாள்-ஒளிவிடுகிற, முகத்து - முகத்தையுடையளாய், ஏழையை - (அநுபூதவிஷயத்திலே ஆழங்காற்படும் சாபலத்தையுடைய) இவளை, தொலைவில்லிமங்கலம் - திருத்தொலைவில்லிமங்கலத்திலே, கொண்டுபுக்கு-, இழைகொள் - திவ்யாபரணுங்கீகாரத்தாலுள்ள, சோதி - ஔஜ்ஜ்வல்யத்தையுடையனுய், செம்-சிவந்த, தாமரை - தாமரைபோலும், கண்-கண்ணையுமுடையனுய், பிரான் - அவ்வழகை ஆஸ்ரிதர்க்கநுபவிப்பிக்கிறவுபகாரகன், இருந்தமை - இருந்தபடியை, காட்டினீர்—; அன்னைமீர்-! அன்றுதொட்டு - அன்றுதொடங்கி, இவள்-, மழைபெய்தாலொக்கும்-மழைபெய்தாற்போலேயிருக்கிற, கண்ணநீரினொடு - கண்ணநீரோடே, மையார்ந்து - மயங்கி, நுழையும் - அவனழகிலேயுட்புக்க, சிந்தையள் - நெஞ்சையுடையளாய், அ-அவனிருந்த, திசை-திக்கை, உற்று-செறிய, நோக்கி-, தொழும் - அஞ்சலி பண்ணுநிற்கும். மையாத்தல் - மயங்குதல்.

ஜி.—அஞ்சாம்பாட்டில், இவள் ஸ்வபாவத்தை அறிந்துவைத்து, தேவபிரானுடைய அழகைக்காட்டிக் கெடுத்திகோள் என்கிறாள். [குழையும் வாண்முகத்தேழையை] - ஒரு ஸம்ஶ்லேஷவிஶ்லேஷம் வேண்டாதே, ஸ்வபாவஸித்தமான மார்த்தவத்தாலே நையும் ஸ்வபாவையாய், "உகந்துகந்துண்மகிழ்ந்து குழையும்" என்கிற பகவதநுபவத்தாலே ஒளியையுடைத்தான முகத்தை யுடையளாய், "கிடையாது" என்றாலும் மீளமாட்டாத சாபலத்தையுடையவளை; பெருக்காற்றிலே கொடுபுகுவாரைப்போலே திருத்தொலைவில்லிமங்கலத்திலே கொடுபுக்கு, அது தனக்குமேலே ஆழங்காலிலே கொடுபுகுவாரைப்போலே அங்கிருந்தஇருப்பைக் காட்டினீர். [இழைகொள்சோதி] - ஆபரணங்களினுடைய ஒளியை யுடைத்தாயிருக்கை என்னுதல்; வேறு ஆபரணம் வேண்டாதே தானே ஆபரணமான தேஜஸ்ஸென்னுதல்; ஆபரணவொளி தன்னுள்ளே அடங்கும்படி இருக்கும் சோதி என்னுதல். [செந்தாமரைக்கண்] - விகாஸம், செவ்வி, குளிர்த்தி, நாற்றம் இவற்றாலே தாமரையை ஒப்பாகச்சொல்லலாயிருக்கும் திருக்கண். அகவாயில் தண்ணளிக்கு ப்ரகாசகமான கண்கள். [பிரான்] - "ஹஸ்தாநாம்" என்கிற வடிவு. [இருந்தமை காட்டினீர்] - கிடையைக்காட்டுதல்; நின்றமையைக் காட்டுதல் அன்றிக்கே, இருந்தபடியைக் காட்டினிகோள். கிடந்தானாகில், "கிடந்ததோர் கிடக்கை" என்பர்கள்; நின்றானாகில், "நிலையாரநின்றான்" என்பர்கள்; இருந்தானாகில், "பிரானிருந்தமைகாட்டினீர்" என்பர்கள்; இருந்தபடியே உத்தேஶ்யமாயித்தன. [காட்டினீர்] - தானே கண்டு மீளவொட்டாதே, "நோக்கிருந்தபடி கண்டாயே! முறுவலிருந்தபடி கண்டாயே" என்று காட்டிக்கொடுத்துக் கெடுத்திகோள். [மழை இத்யாதி] - வர்ஷுகாம்புதரைப்போலே மிக்க கண்ணநீரையுடையளாயிராநின்றாள். காட்டின உங்களைப்போலே குறியழியாதே இருக்கிறாளோ? "ஏழை" என்றவிடத்தை ஶ்ரூதலிக்கிறாள்:—[அன்று தொட்டும்]-நீங்கள்காட்டின அன்று தொடங்கி. [மையாந்து]-மயங்கி. "குழையும்" என்றவிடத்தை ஶ்ரூதலிக்கிறாள்:—[இவள் நுழையும் சிந்தையள்]-அவன் குணங்களிலே உட்புகாநின்ற நெஞ்சையுடையவள். ஸ்வரூபத்தையும் ஆத்மகுணத்தையும்ஒழிய, வடிவழகிலே இடங்கொள்ளாநின்றாள். [அன்னைமீர்!] - இவளை மீட்கப்பார்க்கிறவளன்றோ உங்களது. [அத்திசையுற்று நோக்கி - தொழும்] - அவ்வூரின் திக்கை ஏகாக்ரசித்தையாய் நோக்கித் தொழாநின்றாள்.

ஈடு.—அஞ்சாம்பாட்டு. இவள் ஸ்வபாவத்தை யறிந்துவைத்து, தேவபிரானுடையஅழகைக் காட்டிக் கெடுத்திகோ ளென்கிறாள். அன்றியே, அவ்வூரில் வர்த்திப்பார் படியைக் காட்டினால், அவர்கள் ஜீவநத்தையும் இவளுக்குக் காட்டிக்கொடுக்கவேணுமோ? என்கிறா ளென்றுமாம்.

அஞ்சாம்பாட்டு.—குழையும் இத்யாதி. "குழையும் வாண்முகத்தேழையை" என்கிறதிலே நோக்காக அவதாரிகை - இவள்ஸ்வபாவத்தை இத்யாதி. கீழ்ப்பாட்டில் அர்த்தத்தை யநுவதித்துக் கொண்டு, "இழைகொள்சோதிச் செந்தாமரைக்கண்பிரான்" என்கிறதிலே நோக்காக அவதாரிகாந்தரம்-அன்றியே இத்யாதி.

[குழையுமித்யாதி] - ஒரு ஸம்ஸ்லேஷம் வேண்டாதே ஸ்வபாவஸித்தமான மார்த்தவத்தாலே நையும்ஸ்வபாவையாய், "உகந்துகந்து உள்மகிழ்ந்துகுழையும்". என்கிற பகவதநுபவத்தாலே ஒளியையுடைத்தான முகத்தை யுடையவளாய், "கிடையாது" என்றாலும் மீளமாட்டாத சாபலத்தை யுடையவளை. [தொலைவில்லிமங்கலங்கொண்டு புக்கு]- பகவத்பரிக்ரஹமான தேசத்திலே கொடுபுகத் தவிராதபின்பு, ஸ்ரீவைதண்டத்திலே மேன்மையைக்காட்டவன்றோ அடுப்பது! நீர்மைக்குஎல்லைநிலமானவிடத்தே கொடுபுகுவாருண்டோ? வாள் - ஒளி. [இழைகொள்சோதி] - ஆபரணங்களினுடைய ஒளியை யுடைத்தாயிருக்குமென்னுதல், வேறேராபரணம் வேண்டாதே தானே யாபரணமான தேஜஸ்ஸை என்னுதல்; ஆபரணவொளி தன்னுள்ளேயடங்கும்படியான ஸ்வாபாவிகமான புகரென்னுதல். [செந்தாமரைக்கண்பிரான்] - விகாஸாதிகளுக்குத் தாமரையை ஒப்பாகச் சொல்லலாயிருக்கிற திருக்கண்கள். அகவாயில் தண்ணளிக்கு ப்ரகாசகமானதிருக்கண்கள். [பிரான்] - "பக்தாநாம்" (பக்தாநாம்) என்கிற வடிவு. [இருந்தமைகாட்டினீர்] - நீங்கள் கெடுத்திகோள். இவளறியாத † விஷயங்களும் நீங்களே காட்டிக் கொடுத்துக் கெடுத்திகோள். [இருந்தமை] - இருப்பில் வீறு அங்கே பர்யவஸிதம்போலே. நின்றானாகில், "நிலையாரநின்றான்" என்பர்கள்; இருந்தானாகில் "இருந்தமைகாட்டினீர்" என்பர்கள்; கிடந்தானாகில் "கிடந்ததோர்கிடக்கை" என்பர்கள்; அவன்ஸ்வபாவத்தைக் காட்டினீகோள்என்றுமாம். [காட்டினீர்] - நோக்கிருந்தபடி கண்டாயே, முறுவலிருந்தபடி கண்டாயே யென்று. இப்போது அதுக்கு வந்ததேன்? என்னில்: [மழைபெய்தாலொக்கும் கண்ணநீரினோடு]-கண்டவநந்தரம் வர்ஷதாரைபோலே கண்ணநீர் வெள்ளமிடுகிறபடி பாரீகோள்! ஆளவந்தார் மணக்கால்நம்பி பக்கலிலே எம்பெருமானைக் கேட்டவநந்தரம்,

விஸ்லேஷதசையில் முகத்திலே யொளியுண்டாகைக்கு ஹேது சொல்லுகிறது - உகந்துகந்து இத்யாதி. "தொலைவில்லிமங்கலங் கொண்டுபுக்கு" என்றதுக்குஹார்த்தபாவம் - பகவத்பரிக்ரஹம் இத்யாதி. இழைகொள் சோதியான விக்ரஹத்தை யுடையனாய், செந்தாமரைபோலேயிருக்கிற திருக்கண்களையுடையதாயிருந்த விக்ரஹத்தை யநுபவிப்பித்த வுபகாரகன் என்று பர்யவஸிதார்த்தம். "இழைகொள்சோதி" என்றதுக்கு மூன்றர்த்தம்: முந்தினது - இழைகளினுடைய சோதியைக் கொண்டிருக்கிற விக்ரஹத்தையுடைய என்று; இப்போது, "இழை - சோதி - கொள்" என்றந்வயம்; கொள்கை - உடைத்தாகை; "இழைகொள்சோதி" என்கையாலே - விக்ரஹம் அர்த்தஸித்தம். இரண்டாவது - இழையாகையைக்கொண்டிருக்கிற தேஜஸ்ஸை யுடைய விக்ரஹம் என்று. மூன்றாவது - இழையென்று ஆபரணகாந்தியாய், கொள்கை - க்ரஸிக்கையாய், ஆபரணகாந்தியை க்ரஸிக்கிற தேஜஸ்ஸையுடைய விக்ரஹம் என்று; இப்பக்ஷத்தில், இழையென்று - ஆபரணகாந்தியை லக்ஷிக்கிறது. "செம்" என்றதுக்குபாவம் - அகவாயில் இத்யாதி. அவ்வடிவை ஆஸ்ரிதர்க்காக்கிக்கொண்டிருக்கை உபகாரமாவதென்று விவக்ஷித்து - பக்தாநாம் இத்யாதி. "நீங்கள்கெடுத்திகோள்" என்கைக்கு, நாங்களென்செய்தோம்? என்ன - இவளறியாத இத்யாதி. விஷயங்களென்றது - விசேஷங்களென்றதாய், விக்ரஹஸௌந்தர்யம், கண்ணழகுமுதலான ப்ரகாரங்களைச்சொல்லுகிறது. "இருந்தமை" என்றது - இருந்தப்ரகாரம்; இருப்பிலழகையென்றபடி. "இருந்தமை" என்றத்தால் பலிதம் - இருப்பில்வீறு இத்யாதி. "இருந்தமைகாட்டினீர்" என்கிறதென்? மற்றை யவஸ்தைகளும் போக்யமாயிராதோ? என்ன - நின்றானாகில் இத்யாதி. "இருந்தமை" என்றதுக்கர்த்தாந்தரம் - அவன் ஸ்வபாவத்தை இத்யாதி. "இருந்தமை" என்று - இருப்பழகாதல், ஸ்வபாவமாதல். கண்டவநந்தரம் கண்ணநீர் வெள்ளமிடுகிறதுக்கு ஐதிஹ்யம் - ஆளவந்தார் இத்யாதி. விரகில்லையோவென்றாராம் என்றவநந்தரம், மணக்கால்நம்பி "விரகுண்டு" என்று கோயிலிலே கூட்டிக்கொண்டெழுந்தருளிப் பெரியபெரு

† 'விசேஷங்கள்' என்று அடையவளைந்தானரும்பதத்திற்பாடம்.

"உபாயம் இதுக்குமேலில்லை: இவ்விஷயத்தை இப்போதே ஸாக்ஷாத்கரிக்க விரகில்லையோ?" என்றூராம். அப்படி கண்டவநந்தரம் கண்ணநீர் வெள்ளமிடப்புக்கது அத்தனை. "ஏழை" என்ற இடத்தை முதலிக்கிறூள்:—[அன்றுதொட்டும்] - நீங்கள் காட்டின அன்று தொடங்கி. [மையாந்து]-மயங்கி. "குழையும்" என்கிறவிடத்தை முதலிக்கிறூள்:—[இவள் நுழையும்சிந்தையள்] - அவன் குணங்களிலே உட்புகாநின்ற நெஞ்சையுடையவள். ஸ்வரூபத்தையும் ஆத்மகுணத்தையும் ஒழிய வடிவழகிலே இடங் கொள்ளா நின்றூள். அங்கே சுழித்து நின்று, "இதொருவடிவழகே! இதொரொப்பனையே! இதொரு கண்ணழகே!" என்று இடங்கொள்ளா நின்றூள். [அன்னைமீர்] - இவளை மீட்கப் பார்க்கிறவளவிறே யுங்களது. [தொழும்] - *"ஏகஸ்தஹ்ருதயா நூநம் ராமமேவாநுபஶ்யதி"* (ஏகஸ்த்தஹ்ருதயாநூநம்ராமமேவாநுபஸ்யதி) என்கிறபடியே, அத்திக்கை மறுபாடுருவப்பார்த்துத் தொழாநிற்கும். இவள்தொழிலும் ஒரு திக்குப் பட்டல்லதிராது காணும். (ரு)

ஆரும் பாட்டு.

நோக்கும்பக்கமெல்லாம்கரும்போடுசெந்நெலோங்குசெந்தாமரை
வாய்க்கும்தண்பொருநல்வடகரை வண்தொலைவில்லிமங்கலம்
நோக்குமேல்அத்திசையல்லால் மறுநோக்கிலள்வைகல்நாடொறும்
வாய்க்கொள்வாசகமும் மணிவண்ணன்நாமமே இவளன்னைமீர் !

ஆ.— (நோக்கும்) - அம்ருதரஸௌவநிர்ஹரேக்ஷுகாண்ட, கநகஸத்ருஶ பரிணதசாலி, ஸமுச்ச்ரித ஸமுத்புல்ல மகரந்தபூர பரிபூர்ணாரவிந்த பரிவ்ருதமான பொருநல் வடகரை வண்தொலைவில்லிமங்கலத்திலே கொண்டுபுக்க அன்றுதொடங்கி, கண்களால்அத்திக்கல்லது காணுள்;வாயால் மணிவண்ணன் நாமமல்லது சொல்லாள்;இனி இவளை நிவர்த்திப்பிக்க முடியுமோ? என்கிறூள்.

---

*மாள் திருவடிகளைக்காட்டிக்கொடுக்க, கண்டவநந்தரம் கண்ணும் கண்ணநீருமாயிருந்தார் என்று ப்ரஸித்தமிறே என்று இவ்வளவும் அத்யாஹரிப்பது. எம்பெருமானைக்கேட்டவென்றது - சாயம்லோகத்தையென்றபடி. "இருந்தமை" என்றதின் ஸ்வபாவபரமானஅர்த்தத்தைக் சடாக்ஷித்து **பாவம் - அவன்குணங்களிலே** இத்யாதி. இருந்தமை - அழகென்றவர்த்தத்தைக்கடாக்ஷித்து **பாவம் - ஸ்வரூபத்தையும்** இத்யாதி. இடங்கொள்ளும் ப்ரகாரத்தைக்காட்டுகிறூர் - **அங்கேசுழித்து** இத்யாதி. "இருந்தமை" **என்கையாலே - வடிவழகு.** "இழைகொள்சோதி" என்கையாலே - ஒப்பனை. "செந்தாமரைக் கண்" என்கையாலே - கண்ணழகு. இவளுடைய **பாவ**பந்தத்தையறியாதே 'இவளைமீட்கப்பார்க்கிறவளவிறேயுங்களது' என்றபடி. "அத்திசையுற்றுநோக்கி - தொழும்" என்றந்வயித்தர்த்தம் - **ஏகஸ்த** இத்யாதி. "நைஷா பஶ்யதி ராக்ஷஸ்யோ நேமாந் புஷ்பபலத்ருமாந் | ஏகஸ்தஹ்ருதயா நூநம் ராமமேவாநுபஶ்யதி" இதி ஸுந்தரகாண்டே [கரு உரு]. ரஸோக்தி-**இவள்** இத்யாதி. திக்குப்பட்டல்லது- அடைவுபட்டல்லதென்றும், திக்கையுடைத்தல்லதென்றும் அர்த்தத்வயம். 'அன்னைமீர் ! குழையும்' என்றுதொடங்கி, 'காட்டினீர்; அன்றுதொட்டும் - இவள் - மழைபெய்தாலொக்கும் கண்ணநீரினொடு, மையாந்து - நுழையும் சிந்தையளாய் - அத்திசையுற்றுநோக்கி-தொழும்' இத்யந்வயம்.*

(ரு)

ஒ.—ஆறும்பாட்டில், இக்கலக்கத்திலும் திருத்தொலைவில்லிமங்கலத்தை நோக்கினளாகில் மற்று ஓர்இடமும் நோக்காள் என்கிறாள். [நோக்கும் பக்கமெல்லாம்]-பார்த்தபார்த்த இடமெல்லாம். [வாய்க்கும்] - ஸம்ருத்தமாகை. [நோக்குமேல்] - நோக்க க்ஷமையாகில். [வைகல் நாடோறும் என்றுமேலுக்கு] - என்றும்ஒக்க நிரந்தரமாக இவள் பழவத்ஸௌந்தர்யாதிகளாலே விஜையாகையாலே வாயில்புறப்படும்; சொல்லும் திருநாமமே. [வைகல் நாடொறும்] - தாழ்த்து விடிகிறநாள்தோறும் என்றுமாம். அன்னைமீர் ! என்ற ஸம்போதநத்துக்குக்கருத்து - ஒருத்திபடிகண்டிகோளே ! என்கிறது.

ப.—அநந்தரம், ஸம்ருத்தமான திருத்தொலைவில்லிமங்கலத்தைக் கண்டால் வேறொன்றும் காணமாட்டாதே, எப்போதும் இவள் வாய்விடும் சொல்லெல்லாம் ஸுக்ரஹ ஸௌந்தர்யனனவனுடைய திருநாமங்களேயாய் இராநின்றதென்கிறாள்.

நோக்கும்பக்கமெல்லாம் - பார்த்தபார்த்தவிடமெல்லாம், கரும்பொடு - கரும்போடுகூடின, செந்நெல் - செந்நெலும், ஓங்கு - (அவற்றுக்கு நிழல்செய்யும்படி) ஓங்கின, செந்தாமரை - செந்தாமரையும், வாய்க்கும் - ஸம்ருத்தமாம்படியான, தண் - குளிர்ந்த, பொருநல்வடகரை - திருப்பொருநல்வடகரையிலே, வண் - நகர சம்பத்துக்களால் குறைவற்றிருக்கிற, தொலைவில்லிமங்கலம் - திருத்தொலைவில்லிமங்கலத்தை, (தன்னரதியாலே யொன்றும் பார்க்கமாட்டாதவள்), நோக்குமேல் - பார்த்தாளாகில், அ - அந்த, திசை - திக்கு, அல்லால் - ஒழிய, மறுநோக்கிலள் - வேறொன்றும் பார்க்கிறிலள்; (இவள் த்ருஷ்டிவ்யாபாரமேயன்றியே), வைகல் - எல்லாக்காலத்திலும், நாடொறும் - ஒருநாளொழியாமல், இவள்-, வாய் - வாக்கிலே, கொள் - கொள்ளும், வாசகமும் - வாசகசப்தங்களும், அன்னைமீர் - (இவளையிப்படியாக்கின) அன்னைமீர்! மணி - தனக்குமுடிந்தாளலாம்படி ஸுக்ரஹமான நீலரத்நம்போலும், வண்ணன் - வடிவழகை யுடையவனுடைய, நாமமே - ஸௌலப்யஸௌந்தர்யாதி ப்ரகாசகங்களான நாமங்களேயாயிராநின்றன.

இ.—ஆறும்பாட்டில், கலக்கத்தாலே முதலிலே பார்க்கமாட்டாள், பார்த்தாளாகில் மற்று ஓர்இடமும் நோக்காள் என்கிறாள். [நோக்கும் பக்கமெல்லாம்] - பார்த்த பார்த்த இடமெல்லாம். "பொருநல் - நோக்கும் பக்கமெல்லாம்" என்று பாடுவாருமுண்டு. கரும்புக்கும், அத்தோடேகூட எழுந்த செந்நெலுக்கும், செந்தாமரையானது நிழல் செய்யாநின்றது; "உரம்பெற்ற மலர்க்கமலம் உலகளந்த சேவடிபோல் உயர்ந்து காட்ட" என்கிறபடியே. [வாய்க்கும்] - ஸம்ருத்தமாம் என்னுதல், இட்டதெல்லாம் ஸபலமாகப்பணைக்கும் என்னுதல். ப்ரமஹரமான திருப்பொருநலின் வடகரையிலே, நகரங்களுக்குண்டான சிறப்புக்களில்ஒன்றும்குறையாத அந்தவூரை. [நோக்குமேல்] - முதலிலே பார்க்கமாட்டாள் ; பார்த்தாளாகில், அத்திக்கையல்லால் வேறு ஒரு திக்கை நோக்குகிறிலள். [வைகல் நாடொறும்] - கழிகிறநாள்தோறும் என்னுதல், தாழ்த்துவிடிகிற நாள்தோறும் என்னுதல். [வாய்க்கொள் வாசகமும்] - சொல்லும் வார்த்தையும். [மணிவண்ணன் நாமமே] - குணவிஷயமாதல், விபூதிவிஷயமாதல் அன்றிக்கே, அழகுக்கு வாசகமான திருநாமங்களே இவள் சொல்லுகிறது. [அன்னைமீர்] - இவ்விஷயத்திலே இவள் அவகாஹித்தபடி கண்டிகோளே.

ஈடு.—ஆறும்பாட்டு. தௌர்ப்பல்யத்தாலே முதலிலே பார்க்கமாட்டாள், பார்த்தாளாகில் மற்றோரிடமும் பாராளென்கிறாள்.

[நோக்கும்பக்கமெல்லாம்] - பார்த்தபார்த்தவிடமெல்லாம். " திருப்பொருநல் நோக்கும்பக்கமெல்லாம்" என்று பாடுவாருமுண்டு. [கரும்புஇத்யாதி] - கரும்பும், அத்தோடேகூட இசலிவளருகிற செந்நெலும், இரண்டுக்கும் நிழல்செய்கிற செந்தாமரையும். [வாய்க்கும்] - ஸம்ருத்தமாமென்னுதல், இட்டதெல்லாம் சதசாகமாகப்பணைக்குமென்னுதல். † (அதாவது - பஹுவாகவுண்டேன்னுதல், ஒன்றுநூறுமென்னுதல்.) [தண்பொருநல்இத்யாதி] - ஶ்ரமஹரமான திருப்பொருநல் வடகரையிலேயான ஐஶ்வர்யத்தையுடைய தொலைவில்லிமங்கலம். [நோக்குமேல்] - முதலிலேநோக்க சக்தையல்லள்; வருந்திப் பார்த்தாளாகில் அத்திக்கையொழிய முகமெடுத்துப் பார்க்கிறிலள். [வைகல்நாடோறும்] - கழிகிறநாள்தோறும். [வாய்க்கொள்வாசகமும்] - வாயாலே சொல்லுகிறசொலவும். [மணிவண்ணன்நாமமே] - வடிவழகுக்கு வாசகமானவற்றையே சொல்லாநின்றாள். குணவிஷயமாதல் விபூதிவிஷயமாதலன்றிக்கே, வடிவழகுக்குத் தோற்றமை தோற்றச் சொல்லாநின்றாள். இவள்நிலையேது? நம்நிலையேது? உங்களது ஸ்வரூபஜ்ஞாநம், இவளது ரூபஜ்ஞாநம்.

ஏழாம் பாட்டு.

அன்னைமீர்!அணிமாமயில்சிறுமானிவள் நம்மைக்கைவலிந்து
என்னவார்த்தையுங்கேட்குறாள் தொலைவில்லிமங்கலமென்றல்லால்
முன்னம்நோற்றவிதிகொலோ? முகில்வண்ணன்மாயங்கொலோ?அவன்
சின்னமுந்திருநாமமும் இவள்வாயனகள்திருந்தவே.

ஆ.—(அன்னைமீர்.) - நிரதிஶயஸௌந்தர்யமயசிலீநீப்ரக்ரியையாலே, பாலஹரிண முக்ய விலோசனையாயிருந்த இச்சிறுப் பெண்பிள்ளை, நம்முடைய விதி நிஷேதாதிலங்கிநியாய்க்கொண்டு தொலைவில்லிமங்கலமென்னும் சொல்லல்லது மற்றொரு சொல்லும் கேளாள்; வேதங்களும் வேதவிதக்ரேஸரான ஸநகாதிகளும் எத்திறற்போலே

ஆறும்பாட்டு—நோக்கும் இத்யாதி. "நோக்குமேலத்திசையல்லால் மறுநோக்கிலள்" என்றத்தைக்கடாக்ஷித்தவதாரிகை - தௌர்ப்பல்யத்தாலே இத்யாதி. 'பார்க்கமாட்டாள்' என்னுமளவும் - "நோக்குமேல்" என்கிற பதஸப்தார்த்தம்.

ஊரை 'பார்த்தபார்த்தவிடமெல்லாம்' என்றபடி. அர்த்தாந்தரம் - திருப்பொருநல் இத்யாதி. இப்போது நோக்குகை - ப்ரவஹிக்கை. பொருநல் - தாம்ரபாணி. பாடுவாருமுண்டென்றது - திருப்பொருநலுக்கு விசேஷணமாக்கிச் சொல்லுவாருமுண்டென்றபடி. ஸம்ருத்தமாமென்னுதலென்றது - கரும்புமுதலானவை ஸம்ருத்தமாமென்றபடி. 'இட்டதெல்லாம்' இத்யாதிக்கு ஸப்தநிர்வாஹம் - ஒன்றுபத்தாக வாய்க்குமென்று. "வண்மை" - ஐஶ்வர்யம். "நாமமே" என்கிற ஏவகாரார்த்தம் - குணவிஷயமாதல் இத்யாதி. "இவள், அன்னைமீர்" என்றதுக்குபாவம் - இவள்நிலையேது இத்யாதி. விவரணம் - உங்களது இத்யாதி. 'அன்னைமீர்! இவள் நோக்குமேல், நோக்கும்பக்கம்' என்று தொடங்கி, 'தொலைவில்லிமங்கலத்தையுடைய அத்திசையல்லால் மறுநோக்கிலள்; வைகல்நாடொறும் இத்யாரப்ய, மணிவண்ணன் நாமமே' இத்யந்வயம்.

(௬)

விஶதமாய் அத்யுஜ்ஜ்வலமாம்படி அவனுடைய திவ்யசிஹ்நங்களையும் ஸௌந்தர்யாதி ஸகல குணங்களையும் அதிமதுரமான சொற்களாலே சொல்லாநிற்கும். இப்படி இவளுக்குத் தேவபிரான்திருவடிகளில் உண்டான அபிநிவேஶம், ஜந்மாந்தரக்ருத பரம புருஷாநுபவஹேது மஹாபாக்யத்தாலே வந்ததோ! அன்றியே அவனுடைய நிரவதிக ஸௌந்தர்யத்தைக் காண்கையாலே வந்ததோ! என்று விஸ்மிதையாய், இப்படி அபிநிவிஷ்டையான இவள் எனக்குங்கூட விதேயையல்ல ளென்கிறாள்.

ஓ.—ஏழாம்பாட்டில், எம்பெருமானுடைய சிஹ்நங்களும் திருநாமங்களுமுடைய இவள்வாயிலே பட்டபின்பு நிறம்பெற்றன என்கிறாள். [அன்னைமீர் என்று தொடங்கி] - அன்னைமீர் அழகிய மாமையுடைய மயில்போலே இருக்கிற இச்சிறுப் பெண்பிள்ளை நம்மை கைகடந்து அந்தரங்கையாகக்கொண்டிருக்கிற நான் சொல்லினும் திருத்தொலைவில்லிமங்கலம் என்கையொழிய மற்றொன்றும் கேளாள். 'எனவார்த்தை' என்றது - ஏதேனும் ஒருவார்த்தையாகிலும் கேளாள் என்றுமாம். [முன்னம் நோற்ற விதிகொலோ? முகில்வண்ணன் மாயங்கொலோ?] - பண்டுபண்ணின பாக்யபலமோ! எம்பெருமான் தன் வடிவழகைக்காட்டிப் பண்ணின ஆஶ்சர்யமான செயலோ! [அவன் சின்னமுமென்று தொடங்கி] - அவனுடைய திருவாழி தொடக்கமான சிஹ்நங்களும் குணசேஷ்டிதங்களுக்கு ப்ரதிபாதகமான திருநாமங்களும் நிறம்பெறும்படி இவள் வாயனவாயின.

ப.—அநந்தரம், மஹோதாரனான ஸர்வேஶ்வரன் இவளுக்குப்பண்ணின அதிஶயமிருந்தபடி, வேறொரு வார்த்தையுங்கேளாதே அவனுடைய திவ்யசிஹ்நங்களும் திருநாமங்களும் தாம் திருந்தும்படி இவள்வாக்விஷயமாயிற்றென்கிறாள்.

அன்னைமீர் - பெற்றுவளர்த்த தாய்மாரே,! அணி - அழகிய, மா - நிறத்தையுடைத்தான, மயில் - மயில்போலே அபிரூபையாய், சிறு - முக்யமான, மான் - மான்போலேயிருக்கிற, இவள் - இச்சிறுப்பெண்பிள்ளை, நம்மை-, கைவலிந்து - கைவிஞ்சி, தொலைவில்லிமங்கலம் - திருத்தொலைவில்லிமங்கலம், என்று-, அல்லால் - ஒழிய, என - ஏதேனுமொரு, வார்த்தையும் - வார்த்தையும், கேட்க-, உறாள் - உறுகிறிலள்; (இதுதான்), முன்னம் - முன்பு, நோற்ற - பண்ணின, விதிகொலோ - பாக்யமோ? முகில் - உதாரஸ்வபாவமான முகில்போலே யிருக்கிற, வண்ணன் - வடிவையுடையவன்பண்ணின, மாயங்கொலோ - ஆஶ்சர்யமோ? அவன் - அவனுடைய, சின்னமும் - (அஸாதாரணமான) சிஹ்நங்களும், திருநாமமும் - (ஔதார்யாதிவாசகமான) திருநாமங்களும், திருந்த - திருத்தம்பெறும்படி, இவள்வாயனகள் - இவள்வாயன வாகாநின்றன.

இ.—ஏழாம்பாட்டில், அவன் சின்னங்களும் திருநாமங்களும் இவள்வாயிலே பட்டபின்பு நிறம்பெற்றன என்கிறாள். [அன்னைமீர்] - இவள் பருவமிது, நமக்கு அவ்வருகேபோன ஆஶ்சர்யம் பாரீகோள்: ,'லெ ஜெ ஆூய'' என்னுமாபோலே. [அணிமா மயில்சிறுமான்] - அழகிய நிறத்தையுடையளாய், முக்யமான மான்போலே அதிபாலையாயிருக்கிறவள். அழகிதாய் ஶ்லாக்யமானமாயிருக்கிற மயில்போலே இருக்கிற சிறுப் பெண் என்றுமாம்.

[இவள்நம்மைக் கைவலிந்து] - முக்யையான இவள் நம்மைக்கைவிஞ்சி. நம்மிற்காட்டிலும் அந்தரங்கையானாள். [எனவார்த்தையும் இத்யாதி] - தொலைவில்லிமங்

கலம் என்கையொழிய, ஏதேனும் ஒருவார்த்தையும் கேட்கிறிலள் என்னுதல், என்னுடைய வார்த்தையும் கேட்கிறிலள் என்னுதல். உங்களை மறைத்ததும் சொல்லுவது எனக்கிறே. அவ்வூரை நான் சொல்லிலும் கேட்கும். [முன்னம்நோற்ற விதிகொலோ]- முன்னேபண்ணின பாக்யபலமோ? "ஜந்மாந்தரஸஹஸ்ரேஷு," "ஸஹஸ்ரநாமஜந்நாமவை". [முகில்வண்ணன் மாயங்கொலோ] - அதுக்கு இத்தனை கனத்தபலம் உண்டாக மாட்டாது; அழகைக்காட்டிப் பண்ணின ஆஶ்சர்யசேஷ்டிதங்களோ! அதில் ஸம்ஶயம்- இத்தலையாலே ஸாதித்ததுக்கு இத்தனைகனத்தபலம் உண்டாகமாட்டாதென்று: இதில் ஸம்ஶயம் - இதுக்குமுன்பு ஒரு வ்யக்தியில் இப்படி பிறக்கக்காணாமையாலே. [அவன் சின்னமும்] - "தவளவொண்சங்கு சக்கரம்" என்று - ஆபரணத்தோடே விகல்பிக்கலான ஶங்கசக்ராதிசிஹ்நங்களும். "அரவிந்தலோசநன், தேவபிரான்" என்று அவனுக்கு வாசகமான திருநாமங்களும். [திருந்தவே - இவள் வாயனகள்] - நிறம்பெறும்படி இவள் வாயனவாயின. அல்லாதார், தாங்கள் திருந்துகைக்காகத் திருநாமங்கள் சொல்லுவர்கள்; திருநாமம் திருந்துகைக்கு இவள் சொல்லவேணும். நாமும் திருநாமங்கள் சொல்லுகிறோம், இவள் வாயிலேபட்டவாறே இங்ஙனே உயிர்பெறவேணுமோ? என்கிறாள்.

ஈடு.—ஏழாம்பாட்டு. அவன் சின்னமும் திருநாமமும் இவள்சொல்லப்புக்கவாறே நிறம்பெற்றன என்கிறாள்.

[அன்னைமீர்] - இவள் பருவம் இது; நமக்கவ்வருகேபோன ஆஶ்சர்யத்தைப் பாரீகோள். "மைத்ரேய" (மைத்ரேய) என்னுமாபோலே. † (அன்னைமீரேன்கிறாள், சந்தோஷத்தாலே.) [அணிமாமயில்சிறுமான்] - அழகிய நிறத்தையுடைய பெண்பிள்ளை. அழகியதாய் ஶ்லாக்யமான மயில்போலே யிருக்கிறபெண்பிள்ளை என்னுதல். [சிறுமானிவள் நம்மைக்கைவலிந்து] - நாம்கற்பித்த திருநாமங்களையும் ‡சோப்பனச்சொல்லமாட்டாதவள் நமக்குளட்டாதபடியானாள். [கைவலிந்து] - கைகடந்து. [எனவார்த்தையும் கேட்குறாள்] - தன் நினைவை நான் சொல்லிலும் மீட்கநினைத்துச் சொல்லுகிறேனென்று, என் வார்த்தையும் கேட்கத்தவிர்ந்தாள்; திருத்தொலைவில்லிமங்கலமென்னில் நான்சொன்ன

ஏழாம்பாட்டு.—அன்னைமீர் இத்யாதி. "அவன் சின்னமுந்திருநாமமும் இவள்வாயனகள் திருந்தவே" என்றத்தைக்கடாக்ஷித்தவதாரிகை - அவன்சின்னமும் இத்யாதி.

"சிறுமானிவள், எனவார்த்தையுங்கேட்குறாள்" என்றகூட்டிபாவம் - இவள்பருவம் இத்யாதி. பாட்டுத்தோறும் "அன்னைமீர்" என்கிறதுக்குபாவம் - மைத்ரேய இத்யாதி. முந்தினவர்த்தத்துக்கு, 'அணி" என்று - அழகாய், *"மாமை"என்று - நிறமாய், "இல்" என்று - இருப்பிடமாய்: அழகியநிறத்தையுடைய என்றபடி. த்விதீயார்த்தத்துக்கு, "அணி"யென்று-அழகாய்,"மா"வென்று-ஶ்லாக்யமாய், "மயில்" என்று-மயில்போலேயிருக்கிறவளென்றாய், அழகியதாய் ஶ்லாக்யமான மயில்போலேயிருக்கிற அலகபாரத்தையுடையவளென்றபடி. "சிறுமான்" - முக்தமான மான்பேடைபோலேயிருக்கிற பெண்பிள்ளை. "இவள்பருவம்" இத்யாதிவாக்ய விவரணம் - நாம்கற்பித்த இத்யாதி. ‡சொப்பன - நன்றாக. "எனவார்த்தையும்" என்கிறசப்தத்துக்குபாவம் - தன்னினைவை இத்யாதி. "கேட்குறாள்" - கேட்கவுறுகிறிலள். கேட்கை தவிர்ந்தாளென்றபடி. எல்லாமப்படியோ? என்ன - திருந்த்

---

* இம்முதற்பொருளில் 'மாமையில்'என்பது 'மாமயில்'என்று ஐகாரத்துக்கு அகரம்பெற்று வந்ததாகக்கொள்ளவேணும். † சொப்படஎன்று இருக்கலாம்: "சொப்படத்தோன்றி" சொப்படநான்சுட்டுவைத்தேன், சொப்படநீராடவேண்டும் என்று பெரியாழ்வார்திருமொழியில் வருதல்காண்க.

வார்த்தையுங்கேட்கும். எனவார்த்தை - என்னுடைய வார்த்தை. [முன்னம்நோற்ற விதிகொலோ] - ஒக்கப் பிறந்து வளர்ந்தோம், பின்புஇது ஸாதிக்கக்கண்டிலோம். முன்பே பண்ணிவைத்த ஸுக்ருதபலமோ இது! "விதிர் விதாநம்" (விதிர் விதாநம்) என்னக் கடவதிறே. இவளாலே யநுஷ்டிதமான தர்மத்துக்கு இத்தனைபலம் கனக்க வுண்டாக மாட்டாது; இது ஸித்த தர்மபல மாகவேணும்; ஆகையால், [முகில்வண்ணன் மாயங் கொலோ] - பீடாத்தை விழவிட்டு வடிவைக் காட்டினனே? அதில் ஸம்ஶயம் - இத் தலையாலே ஸாதித்ததோர் அசேதநக்ரியைக்கு இத்தனை கனத்த பலமுண்டாகமாட்டா தென்று. இதில் ஸம்ஶயம் - இப்படி இதுக்குமுன்பு ஒருவ்யக்தியில் பலிக்கக் காணா மையாலே. [அவன்சின்னமித்யாதி] - "தவளவோண்சங்குசக்கரம்" என்பதான சிஹ்நங் களும், "அரவிந்தலோசநன், "தேவபிரான்" என்பதான திருநாமங்களும். [இவள்வாய னகள்திருந்தவே] - பண்டே திருந்தியிருக்கிறவை இவள் சொல்லப்புக்கவாறே உயிர்பெற் றிராநின்றன. ('திருந்தவே - இவள்வாயனகள்'- நிறம்பெறும்படி இவள்வாயனவாயின.) பட்டர் "அழகியமணவாளப்பெருமாள்" என்றால் திருநாமம் நிறம்பெறுமாபோலேயும், சோமாசியாண்டான் " எம்பெருமானார் " என்றால் திருநாமம் நிறம்பெறுமாபோலேயும், அநந்தாழ்வான் "திருவேங்கடமுடையான்" என்றால் திருநாமம் நிறம்பெறுமாபோலே யும்: "யேத்வயாகீர்த்திதாகுணா:" (யேத்வயாகீர்த்திதாகுணா:) என்னுமாபோலே.

ப்ர.—[அன்னைமீர் இத்யாதி]—(இவள்வாயனகள்திருந்தவே)—ஸ்ரீ ஸஹ. வெ, "பஹ வோந்ருப கல்யாண குணா: புத்ரஸ்ய ஸந்தி தே । யேத்வயா கீர்த்திதா: ஸர்வே தே ஜாதா: ஸம்ப்ரதி ஸ்புடா:॥"

தொலைவில்லிமங்கலம் இத்யாதி. இப்போது செய்த ஸுக்ருதமானலோ? என்ன - ஒக்கப்பிறந்து இத்யாதி. "விதி" என்றால் - ஸுக்ருதவாசகமோ? என்ன - விதிர் விதாநம் இத்யாதி. மேலிற் பதத்துக்கு அவதாரிகை - இவளாலே இத்யாதி. ஈஶ்வரனென்னாதே, "முகில்வண்ணன்" என்ற துக்கு ஹாவம்-பீடாத்தை இத்யாதி. பீடாத்தை-*பச்சைவடத்தை. "மாயங்கொலோ" - ஆஶ்சர்யமோ? "முகில்வண்ணன் மாயமே" என்று நிஶ்சயிக்கவேண்டியிருக்க, உபயத்திலும் ஸம்ஶயிப்பானென்? என்ன - அதில்ஸம்ஶயம் இத்யாதி. வ்யக்தி - வஸ்து. அவன் சின்னமும் திருநாமமும் எங்கே சொன்னள்? என்ன - தவளம் இத்யாதி. "இவள்வாயனகள்" என்றது - இவள்வாயிலேயானவை களாய்க்கொண்டென்றபடி. "திருந்த"-நிறம்பெற்றன. முன்பே திருந்தி யிருக்கவில்லையோ? என்ன - பண்டே இத்யாதி. அதாவது - ப்ராவண்யத்தாலே சொன்னவை நிறம்பெற்றிருக்குமென்றபடி. "ப்ரா வண்யத்தாலே சொன்னவை நிறம்பெற்றிருக்கும்" என்றதுக்கு ஸம்வாதம் - பட்டர் இத்யாதி. இது வால்மீகிபகவான் பக்கலிலும் காணலாமென்கிறார் - யேத்வயா இத்யாதி. கதிதா: என்னாதே, "கீர்த்தி தா:" என்கையாலே - குணங்கள் நிறம்பெற்றனவென்று தோற்றுகிறது. 'அன்னைமீர்'என்று தொடங்கி, 'கைவலிந்து - தொலைவில்லி மங்கலமென்றல்லால் - எனவார்த்தையுங் கேட்குமள், அவன் சின்னமுந்திருநாமமும்இவள்வாயனகளாய்க்கொண்டு திருந்த; முன்னம் நோற்றவிதிகொலோ? முகில்வண்ணன் மாயங்கொலோ'இத்யந்வய:. (எ)

---

* பச்சைவடம்—வஸ்த்ரவிஶேஷம்.

எட்டாம் பாட்டு.

திருந்துவேதமும்வேள்வியுந் திருமாமகளிருந்தாம் மலிந்
திருந்துவாழ்பொருநல் வடகரைவண்தொலைவில்லிமங்கலம்
கருந்தடங்கண்ணிகைதொழுத அந்நாள்தொடங்கி இந்நாள்தொறும்
இருந்திருந்துஅரவிந்தலோசந! என்றென்றேநைந்திரங்குமே.

ஆ.—(திருந்து.) - அவிப்லுதஸ்வரவர்ணக்ரமமான ஸர்வவேதங்களாலும் ஸம்ஸ்தூயமாநனும், தத்ஸமாராதநவேஷஅநபிஸம்ஹிதபலாநுஷ்ட்டித நித்யநைமித்திகாதி ஸர்வகர்மங்களாலே ஸமாராத்யனுமாய்க்கொண்டு, லக்ஷ்மீ பூமி நீளா நாயகனை பரமபுருஷன் திருநாட்டிலே எழுந்தருளியிருக்கிற இருப்பிற்காட்டில் ஸம்ருத்தனாய் எழுந்தருளியிருந்து வாழ்கிற பொருநல் வடகரை வண்தொலைவில்லிமங்கலத்திலே, * இழைகொள்சோதிச் செந்தாமரைக்கட்பிரானிருந்தமையை அலர்ந்ததொரு நெய்தல் தடாகம்போலேயிருந்த திருக்கண்களாலே கண்டு கைதொழுதவந்நாள்தொடங்கி இந்நாள்தொறும், இருந்திருந்து அக்கண்களையே நினைத்து, அரவிந்தலோசந ! அரவிந்தலோசந! என்றென்றே சொல்லி நைந்து தளராநிற்கும் என்கிறாள்.

ஓ.—எட்டாம் பாட்டில், திருத்தொலைவில்லிமங்கலம் திருவடிதொழுத அன்றுதொடங்கி இன்றளவும் பிராட்டிக்கு உண்டான ஶைதில்யத்தைச்சொல்லுகிறாள். [திருந்து என்றுதொடங்கி] - அங்குள்ளார் பரிக்ரஹிக்கையாலே நிறம்பெற்ற வேதமும், வைதிகஸமாராதநங்களும், பெரியபிராட்டியாரும் தானும் ஸம்ருத்தமாயிருந்து வாழ்கிற திருப்பொருநல் வடகரையான திருத்தொலைவில்லிமங்கலத்தை; வேதமும் வைதிக ஸமாராதநங்களும் அத்தால்வந்த ஸம்பத்துமானவை மிக்கிருந்து வாழ்ந்துசெல்லுகிற திருத்தொலைவில்லிமங்கலம் என்றுமாம். [கருந்தடங்கண்ணி கைதொழுதவந்நாள் தொடங்கி யிந்நாள்தொறும்] - கறுத்துப் பெருத்திருக்கிற திருக்கண்களையுடைய இவள் திருவடிதொழுத அன்றுதொடங்கி இன்றளவும் நெடும்போதோடுகூடி வருந்தி அரவிந்தலோசன என்று இப்படி நிரந்தரமாகச்சொல்லி அவ்வழியாலே அவனுடைய அழகையும் குணங்களையும் நினைத்து ஶிதிலையாய் நோவுபடாநின்றாள்.

ப.—அநந்தரம், திருத்தொலைவில்லிமங்கலம் திருவடிதொழுத அன்று தொடங்கி யென்றும் அரவிந்தலோசநன் என்கிற திருநாமத்தையேசொல்லி ஶிதிலையாகாநின்றாளென்கிறாள்.

திருந்து-(பகவத்ஸ்வரூப ரூப குணவிபூதி ப்ரதிபாதநத்தில்) திருத்தமுடைத்தான, வேதமும் - ,வேள்வியும் - (அந்தவேதப்ரதிபாத்யமாய் பகவதாராதநரூபமான) யாகாதிகர்மங்களும், மா-அதுக்கு அநுரூபஸம்பதபிவர்த்தகையான, திருமகளிரும் - லக்ஷ்மியுமாகிற, தாம்-தாங்கள், மலிந்து - (பகவத்ஸம்ஶ்லேஷத்தாலே)அபிவ்ருத்தியை யுடையராய், இருந்து - ப்ரதிஷ்ட்டிதராயிருந்து, வாழ் - வாழுகிற, பொருநல்வடகரை - திருப்பொருநல் வடகரையில், வண் தொலைவில்லிமங்கலம் - திருத்தொலைவில்லிமங்கலத்தை, கரு-கருகி, தடம் - பெருத்த, கண்ணி - கண்ணையுடையவள், கைதொழுத-,

அந்நாள்தொடங்கி-, இ - இவ்வருகுண்டான, நாள்தொறும்-,இருந்திருந்து - (அரதியாலே யிரித்திருக்கமாட்டாதவள் வருந்தி)இருந்திருந்து, அரவிந்தலோசந-அரவிந்தலோசநனே! என்றென்றே-என்றுஸம்போதித்து(த்தன்னுற்றாமையாலே)பலகாலுமழைத்தே,நைந்து-ஶிதிலையாய், இரங்கும் - நெஞ்சழியாநின்றாள். தாமென்று - ஈஶ்வரன்தன்னைச் சொல்லவுமாம்.

இ.—எட்டாம்பாட்டில், திருத்தொலைவில்லிமங்கலம் திருவடிதொழுத அந்நாள்தொடங்கி இன்றளவும் உண்டான இவளுடைய ஶைதில்யத்தைச் சொல்லுகிறாள். [திருந்துவேதமும்] - வேதம் கட்டளைப்பட்டது அவ்வூரார் பரிக்ரஹித்தபின்பாயிற்று. "ஸ்வரூபம் ஜ்ஞாநமாத்ரம்" என்கிற ஶ்ருதிகள், ஜ்ஞாத்ருத்வஶ்ருதிகள், பேதாபேதஶ்ருதிகள், ஸகுணஶ்ருதிகள், நிர்க்குணஶ்ருதிகள் இவையடங்க விஷய விபாகத்தாலே ஒருங்கவிட்டுக்கொண்டு இருக்குமவர்கள். [வேள்வியும்] - வைதிகஸமாராதநமும். [திருமாமகளிருந் தாம் மலிந்திருந்துவாழ்] - ஆராத்யரான பெரியபிராட்டியாரும் தானும் ஸம்ருத்தமாயிருந்து வாழுகிற ஊரை. வேதமும் வைதிக ஸமாராதநமும் அதின் பலமான ஸம்பத்துமானவை மிக்கிருந்துவர்த்திக்கிற ஊரையென்றுமாம்; தாமென்றது - கீழ்ச்சொன்னவை தாமென்கை. [கருந்தடங்கண்ணி] - கண்ணழகுக்கு * அஸிதேக்ஷணையோடு ஒக்கும். [தடங்கண்ணி] - அவளில் காட்டில் வ்யாவ்ருத்தி; அவனை அநுபவிக்கையாலே வந்ததிறே அவளுக்கு: அம்மிதுநத்தை அநுபவிக்கும் ஏற்றம் உண்டிறே இக்கண்ணுக்கு. இவள் கருந்தடங்கண்ணி, அவன் அரவிந்தலோசநன். [கைதொழுத இத்யாதி] - திருவடிதொழுத அன்றுதொடங்கி இன்றைவரையும் என்னுதல்; அன்றுதொடங்கி இக்காலமெல்லாம் என்னுதல். [இருந்திருந்து அரவிந்தலோசனவென்று] - ஒருகால் "அரவிந்தலோசந" என்னும்போது, நெடும்போதுகூடிப் பெருவருத்தத்தோடே சொல்லவேண்டியிருக்கை. [என்றென்றே] - இருக்கமாட்டாதே நிரந்தரமாகச் சொல்லாநின்றாள். அவ்வழியாலே அழகையும் குணங்களையும் நினைத்து நையாநின்றாள். [இரங்குமே] - ஶரீரத்தளவன்றிக்கே நெஞ்சும் ஶிதிலமாகாநின்றது.

ஈடு.—எட்டாம்பாட்டு. அவ்வூரைத் தொழுத அன்றுதொடங்கி இன்றளவும் உண்டான இவளுடைய ஶைதில்யத்தைச் சொல்லுகிறாள்.

[திருந்துவேதமும்] - வேதம் கட்டளைப்பட்டது அவ்வூரிலுள்ளார் பரிக்ரஹித்த பின்பாயிற்று. ஸ்வரூபம்ஜ்ஞாநமாத்ரமென்கிற ஶ்ருதிகள், ஜ்ஞாத்ருத்வஶ்ருதிகள், பேதா

எட்டாம்பாட்டு.—திருந்து இத்யாதி. "தொலைவில்லிமங்கலம் - கைதொழுத அந்நாள் தொடங்கி" இத்யாதியைக் கடாக்ஷித்தவதாரிகை - அவ்வூரை இத்யாதி.

கட்டளைப்பட்ட ப்ரகாரத்தைக்காட்டுகிறார் - ஸ்வரூபம் ஜ்ஞாநமாத்ரம் இத்யாதி. ஸ்வரூபம் ஜ்ஞாநமாத்ரமென்கிற ஶ்ருதிகளாவன - "ஸத்யம் ஜ்ஞாநமநந்தம் ப்ரஹ்ம," "விஜ்ஞாநம் ப்ரஹ்ம" இத்யாதிகள். ஜ்ஞாத்ருத்வஶ்ருதிகளாவன - "யஸ்ஸர்வஜ்ஞஸ்ஸர்வவித்" இத்யாதிகள். "ஆஹஸர்வணைர", "நித்யோநித்யாநாம்", 'பதிம்விஶ்வஸ்ய" இத்யாதிகள் - பேதஶ்ருதிகள். "தத்த்வமஸி", "ஸர்வம்கல்விதம்ப்ரஹ்ம" இத்யாதிகள் - அபேதஶ்ருதிகள். "ஸோஶ்நுதே ஸர்வாந்காமாந்", "ஸத்யகாம:" இத்யாதிகள் - ஸகுணஶ்ருதிகள். "நிஷ்கலம் நிஷ்க்ரி

பேதஸ்ருதிகள், ஸகுணஸ்ருதிகள், நிர்க்குணஸ்ருதிகள் இவையடங்க விஷய விபாகத்தாலே ஒருங்கவிட்டிருக்குமவர்கள். [வேள்வியும்] - வைதிக ஸமாராதநமும். கற்றகல்வி அநுஷ்டாநசேஷமாயிருக்கிறபடி. [திருமாமகளிருந்தாம்] - ஆராதகருடைய பௌஷ்கல்யம் இருக்கிறபடி. [திருமாமகளிரும்] - ஸம்பத்தும். ('தாம்' - வேதமும், வைதிகக்ரியையும், ஸ்ரீ வைஷ்ணவ ஸம்பதஹிவர்த்தகையான லக்ஷ்மியுமாகிற தாங்கள் ஸகவத்ஸம்ஸ்லேஷத்தாலே அபிவ்ருத்தியுடையராய் ப்ரதிஷ்டிதராயிருந்து வாழுகிற.) அன்றிக்கே,ஆராத்யரான பிராட்டியும்அவனுமாகவுமாம். தாம் - தான். ப்ரமாண ப்ரமேய ப்ரமாதாக்கள் குறைவற்றுவர்த்திக்கிற தேசம். (ப்ரமாதாக்கள் - அர்த்தாத்சித்தம்.) [மலிந்திருந்து] - பரமபதத்தி லுள்வேதுப்போடேபோலேயாகாதே இருப்பது. [பொருநல்வடகரை] - விரஜைக்குஅக்கரை என்னுமாபோலே. [கருந்தடங்கண்ணி] - கண்ணழகுக்கு * அஸிதேக்ஷணையோடொக்கும். [தடங்கண்ணி] - அவளிற்காட்டில் வ்யாவ்ருத்தி. அவனை அநுபவிக்கையால் வந்ததிறே யவளுக்கு; அவளிற்காட்டில் ஏற்றமுண்டிறே, அம்மிதுநத்தை யநுபவிக்கையாலே இவள் கண்ணுக்கு; தொழும்போதும் வடிவழகியராயிருப்பார் தொழவேணுமாகாதே. [கைதொழுத அந்நாள் தொடங்கி] - திருவடி தொழுத அன்றுதொடங்கி இன்றளவும்வர என்னுதல்: தன் ஸத்தையுண்டான அன்று

யஃ'', ''நிஷ்களஂ'', ''நிரஞ்ஜநஂ'' இத்யாதிகள் - நிர்க்குணஸ்ருதிகள். இவையடங்க விஷய விபாகத்தாலே யொருங்கவிட்டிருக்கையாவது - ஜ்ஞாநமாத்ரம் என்றது - '''தஂ'ஷணஸாரகவாதஂதஸ்வஂ'' என்கிறபடியே ஜ்ஞாநப்ராசுர்யத்தைப்பற்றவும், ஸ்வரூபம் ஸ்வயம்ப்ரகாஶமென்று தோற்றுகைக்கும், ஜ்ஞாத்ருத்வத்தை நிஷேதிக்கவந்ததன்று' என்றும்; 'பேதாபேதஸ்ருதிகளில், பேதஸ்ருதியே - பரமார்த்தம்;அபேதம்சொல்லுகிறது - சரீராத்மபாவ ஸம்பந்தந் தோற்றுகைக்காகச் சொன்னதித்தனை'என்றும்; 'ஸகுண நிர்க்குணஸ்ருதிகளில் வைத்துக்கொண்டு, ஸகுணஸ்ருதியே - பரமார்த்தம், நிர்க்குணமென்கிறது - ப்ரஹ்மத்துக்கு ப்ராக்ருதஹேயகுணங்களில்லாமையைப் பற்றச் சொன்னவித்தனை; கல்யாணகுணங்களை நிஷேதிக்கவந்ததன்று' என்றும், இப்படி விஷய விபாகத்தாலே நிஸ்சயித்திருக்கை. ''திருந்துவேதமும்'' என்றத்தோடே, ''வேள்வியும்'' என்றதுக்கு ஸங்கதி - கற்றகல்வி இத்யாதி. ''வேள்வியும்'' என்றத்தோடே, ''திருமாமகளிரும்'' என்றதுக்கு ஸங்கதி - ஆராதகர் இத்யாதி. மந்த்ரங்களைக்கொண்டு வைதிகஸமாராதநம்பண்ணும்போது ஐஸ்வர்யம் குறைவறவுண்டாயிருக்கவேணுமே, அத்தைச்சொல்லுகிறதென்று கருத்து. ''திருமாமகளிருந்தாம்'' என்றதுக்கு திருமாமகளிரென்று - ஸம்பத்தாய், அத்தையுடையதாங்களும் ப்ராஹ்மணருமென்று யோஜனை. த்விதீயார்த்தத்துக்கு- திருமாமகளிரும், தாம் - தாமும், ஈஸ்வரனுமென்று யோஜனை. ''மலிந்திருந்து'' என்றதுக்கு பாவம் - ப்ரமாண இத்யாதி. முந்தினவர்த்தத்தில், ப்ரமாணம் - வேதம்; ப்ரமேயம் - வேள்வி: ப்ரமாதாக்கள் - ப்ராஹ்மணர். த்விதீயார்த்தத்துக்கு, ப்ரமேயம் - ஸ்ரிய:பதி; ''வேள்வி'' என்றபோதே, தத்கர்த்ருத்வேந ப்ரமாதாக்களும் அர்த்தஸித்தர். இரண்டாம்அர்த்தத்திலே, ''திருமாமகளிருந்தாம்மலிந்திருந்து'' என்று இங்கே மலிவுசொன்னதுக்குபாவம் - பரமபதத்தில் இத்யாதி. மலிந்திருந்து - மிக்கிருந்து, வாழ் - வர்த்திக்கிற, தொலைவில்லிமங்கலமென்று யோஜனை. ''திருந்துவேதம்'' இத்யாதிக்கு - ''கட்டளைப்பட்டவேதமும், வேள்வியும் - வைதிகஸமாராதநமும், திருமாமகளிரும் - ஐஸ்வர்யமுமான, தாம் - இவையெல்லாம், மலிந்திருந்து'' என்றுமுந்தினவர்த்தத்தில் யோஜனை சொல்லுவாருமுண்டு. வ்யாவ்ருத்தியை ஸஹேதுகமாகக் காட்டுகிறார் - அவனையநுபவிக்கையால் இத்யாதி. ''கருந்தடங்கண்ணி'' என்று - அவயவவைலக்ஷண்யத்தைச்சொல்லி, ''கைதொழுத'' என்றதுக்குபாவம் - தொழும்போதும் இத்யாதி. திருவடிதொழுத அன்றுதொடங்கி என்றது - அவ்வூரில் அவனைத் திருவடிதொழுத அன்றுதொடங்கி என்றபடி. ஸத்தையுண்டான

தோடங்கிஇன்றளவும்வரஎன்னுதல். ''அஸந்நேவ'' [அஸந்நேவ], ''அன்றுநான்பிறந்திலேன்,'' இதிறே முன்புத்தை நிலே. அவன்கையிலு மன்றிக்கே, பிறர்கையிலு மன்றிக்கே, தன் கையதாயிருந்தபடி என்தான் தன்ஸத்தை! * தோழுதெழுவிறே. [இருந்திருந்து அரவிந்த லோசந என்றேன்றே] - ஒருகால் ''அரவிந்தலோசந'' என்னும்போது, நடுவே பதின்கால் பட்டைப்போதிசோறு அவிழ்க்கவேணும். [என்றேன்றே]-''தேளர்ப்பல்யத்தாலே சோல்ல மாட்டாளோ?'' என்றிருக்கச் சேய்தே, சோல்லித் தலேக்கட்டாநின்றுள். அவன் அரவிந்த லோசநன்: இவள் கருந்தடங்கண்ணி. இருவரும்ஒருமுகத்திலே காணும் அகப்பட்டது. [நைந்திரங்குமே]- ஶிதிலேயாய் அழியாநின்றுள். சரீரத்தளவுமன்றிக்கே, நேஞ்சும் ஶிதில மாகாநின்றது. இரக்கம் - ஈடுபாடு. (அ)

ஒன்பதாம் பாட்டு.

இரங்கிநாள்தோறும்வாய்வேரீஇ இவள்கண்ணநீர்களலமர
மரங்களும்இரங்கும்வகை மணிவண்ணவோ! என்றுகூவுமால்
துரங்கம்வாய்பிளந்தானுறை தோலேவில்லிமங்கலமேன்றுதன்
கரங்கள்கூப்பித்தோழும்அவ்வூர்த்திருநாமங்கற்றதற்பின்னேயே.

ஆ.—(இரங்கி) - இவளேத் திருத்தொலேவில்லிமங்கலத்திலே கொண்டு புக்கு அவ்வூர்த்திருநாமத்தை நீங்கள் கற்பிக்கக் கற்றதற்பின், விஶ்லேஷவ்யஸநத் தாலே அத்யந்தமஅவஸந்நையாய், நாள்தோறும் அவன் திருநாமத்தையே வாய்வெருவி, அசேதநமான மரங்களுங்கூட இரங்கும்படி மஹார்த்தியோடே, மணிவண்ணவோ! என்று கூப்பிட்டழைத்து, துரங்கம்வாய்பிளந்தான் தன்ஶ்ரமமெல்லாம் போம்படி எழுந்தருளியிருந்த தொலேவில்லிமங்கலமென்றுசொல்லி, தன்கைகளேக் கூப்பித்தொழா

அன்றுதொடங்கி என்றது - மயர்வறமதிநலம்பெற்ற அன்றுதொடங்கி என்றபடி. இப்போதைக்கு ''தொலேவில்லிமங்கலம் - கைதொழுத அந்நாள்தொடங்கி'', என்றதுசேரும்படி எங்ஙனே? என்னில் இவள் சொற்கற்கை யென்றும், தொலேவில்லிமங்கலந்தொழுகை யென்றும், இரண்டில்லேயாகை யாலே, பால்யமேதொடங்கி இவளுக்குத் திருத்தொலேவில்லிமங்கலத்தில் ப்ராவண்யம் ஸத்தாப்ரயுக்த மென்று கண்டுகொள்வது. ஜ்ஞாநமில்லாதபோது ஸத்தையில்லேயோ? என்ன - **அஸந்நேவ** *இத்யாதி. 'அன்றுநான்பிறந்திலேன்' - பகவத்விஷயத்தில் ருசிபிறப்பதற்குமுன்பு நான்பிறந்திலேன். அஜ்ஞனும் அஸத்ஸமனும்போந்தேனென்றபடி. திருச்சந்தவிருத்தம் அறுபத்துநாலாம்பாட்டு. ''நாகிஞ்சித்குர்வத ஶேஷத்வம்'' என்கிறபடியே, தொழுகையாகிற கிஞ்சித்காரத்தை விவக்ஷித்தருளிச்செய்கிறுர் -* **அவன்கையிலும்** *இத்யாதி. இத்தால் -* **தொழுகையாகிற** *கிஞ்சித்காரத்தாலே ஸத்தாஸித்தி யென்றபடி. அப்படி தொழுகை - ஸத்தாஹேதுவாயிருக்குமோ? என்ன -* **தோழுதெழுவிறே** *என்று. ''இருந்திருந்து'' என்றதுக்கு* **பாவம்** *-* **ஒருகால்** *இத்யாதி. பட்டைப்பொதிசோறு - பாக்குப்பட்டையிற் கட்டின சோறு. ''என்றே'' என்கிற அவதாரணார்த்தம் -* **தேளர்ப்பல்யத்தாலே** *இத்யாதி. ஒரு முகத்திலேயென்றது - பரஸ்பரம் கண்ணழகிலேயென்றபடி. நைவுக்கும், இரங்குகைக்கும் பேதமேதென்ன -* **சரீரத்தளவும்** *இத்யாதி.*

(அ)

நிற்கும்; ஆதலால், அவ்வூரிலே கொண்டுபுக்கு அவ்வூர்த் திருநாமத்தைக்கற்பித்துக் கெடுத்திகோள் என்கிறாள்.

ஒ.—ஒன்பதாம் பாட்டில், இப்பெண்பிள்ளையுடைய மனோவாக்காயங்கள் மூன்றும் எம்பெருமான்பக்கலிலே மிகவும் ப்ரவணமாயிற்றின என்கிறாள். [இரங்கி யென்றுதொடங்கி] - இவள் நாள்தோறும் நோவுபட்டு எம்பெருமானுடைய குணங்களை வாய்வெருவி மிகவும் கண்ணநீர்கள்பாய மரங்களும்இரங்கும்படி திருநாமத்தைச்சொல்லிக் கூப்பிடாநின்றாள். [துரங்கமென்று தொடங்கி]-கேசிஹந்தாவான க்ருஷ்ணன்வர்த்திக்கிற தேசம் என்று தன்னுடைய அழகிய கைகளைக் கூப்பித்தொழும் திருத்தொலைவில்லிமங்கலம் என்னக் கற்றபின்பு. அவ்வூர்த் திருநாமம் என்பானென்? என்னில்; பெண்பிள்ளை "திருத்தொலைவில்லிமங்கலம்" என்றால் உள்ளஇனிமை, தன்வாயாலே சொன்னவிடத்திற் பிறவாமையாலே.

ப.—அநந்தரம், அவனுடைய ஸௌந்தர்யாதிவாசகமான திருநாமத்தைச் சொல்லிக் கூப்பிட்டு, விரோதிநிவர்த்தகனானவன் வர்த்திக்கிற திருத்தொலைவில்லிமங்கலத்தைச்சொல்லி அஞ்சலிபண்ணுநின்றாளென்கிறாள்.

இவள்-, நாள்தொறும்-, இரங்கி-நெஞ்சழிந்து, வாய்வெரீஇ - (பரவசையாய்க் கொண்டு வாஸனையாலே) வாய்வெருவி, கண்ணநீர்கள்-, அலமர - பாய்ந்தலமாக்கும்படியாக, மரங்களும் - (அசேதநமான) மரங்களும், இரங்கும்வகை - இரங்கும்படி, மணி - நீலரத்நம்போலே தர்ஶநீயமான, வண்ணவோ - வடிவையுடையவனே! என்று, கூவும் - கூப்பிட்டழையாநின்றாள்; (அவ்வளவேயன்றியே), துரங்கம் - குதிரையாய்வந்தகேசியின், வாய்-வாயை, பிளந்தான் - பிளந்தக்ருஷ்ணன், உறை-வர்த்திக்கிற, தொலைவில்லிமங்கலம் - திருத்தொலைவில்லிமங்கலம், என்று-, அவ்வூர்த்திருநாமம்-, கற்றதற்பின்னை-கற்றபின்பு,(அவ்வூரைநோக்கி), தன்கரங்கள் - தன்கைகளை, கூப்பி-, தொழும் - தொழாநிற்கும்.

இ.—ஒன்பதாம்பாட்டில், இவள் மனோவாக்காயங்கள், முதலிலேதொடங்கி அவன்பக்கலிலே ப்ரவணமாயிற்றின என்கிறாள்.

[இரங்கி] - மநஸ்ஸு நெகிழ்ந்து. [நாடொறும் வாய்வெரீஇ] - அகவாய் அழிந்தவழிபுக்குப் போக்குவிட்டு இருக்கிறபடி. [நாடொறும்] - வாஸனையே உபாத்யாயராகச் சொல்லுமதொழிய, உணர்த்தியோடே சொல்வது ஒருநாளும்இல்லை. 'நாடொறும் வாய்வெரீஇ' என்றது - *பொய்ந்நின்றஞானந்தொடங்கி இவ்வளவும் வரக் கூப்பிட்ட கூப்பீட்டையிறே. [இவள் கண்ணநீர்களலமர] - கண்கள் வாய்வெருவுகிறபடி. கண்ணாலே போக்குவிடுகிறபடி. [மரங்களுமிரங்கும்வகை] - அசித்கல்பமான ஸ்தாவரங்களும் இரங்கும்படியாயிற்று, இவள் ஆர்த்தத்வநி. "அபிவ்ருக்ஷா:பரிம்லாநா:" என்று ராமவிஶ்லேஷத்தில் பட்டது அடங்க இவள்பேச்சிலே படாநின்றன. [மணிவண்ணவோவென்று கூவுமால்] - வடிவழகுக்கு வாசகமான திருநாமத்தையே சொல்லாநின்றாள். நீலமணிபோலே குளிர்ந்திருக்கிற திருநிறத்தையுடையவனே! என்னுநின்றாள். [துரங்கமென்று தொடங்கி] - கேஶிஹந்தாவான க்ருஷ்ணன், அவதாரத்தில் பிற்பாடருடைய விரோதிகளைப் போக்குகைக்கு நித்யவாஸம்பண்ணுகிற திருத்தொலைவில்லிமங்கலமென்று. [தன்கரங்கள் கூப்பித்தொழும்] - "இவள்தொழுவித்துக் கொள்ளுமவள்"

என்றிருக்கிருள் தோழி. அத்தலை இத்தலையாவதே! என்கிருள். இதுதான் என்று தொடங்கி? என்னில், [அவ்வூர்த்திருநாமங்கற்றதற்பின்னையே] - வார்த்தைசொல்லக் கற்ற பின்பு. திருநகரியிலுள்ளார் "திருத்தொலைவில்லிமங்கலம்" என்ருயிற்று வார்த்தைகற்பது; கோயிலில் உள்ளார் "கோயில்" என்றும், "பெருமாள்" என்றும் கற்குமாபோலே. அவ்வூர்த்திருநாமம் என்கிறது - இவள்வாயால் "திருத்தொலைவில்லிமங்கலம்" என்றமையில் உள்ளஇனிமை, தான்சொன்ஞல் பிறவாமையாலே.

ஈடு.—ஒன்பதாம்பாட்டு. இவள் மனோவாக்காயங்கள் முதலிலே தொடங்கி அவன் பக்கலிலே ப்ரவணமாயிற்றின என்கிருள்.

[இரங்கி] - நெஞ்சழிந்து. [வாய்வெரீஇ] - அடியற்ற பேச்சாயிரா நின்றது. "**விசிந்த்யவாசாப்ருவதீ ததைவ**" (விசிந்த்யவாசாப்ருவதீதமேவ) என்னுமாபோலே மநஸ்ஸஹகாரமின்றிக்கேயிருக்கை. [நாள்தோறும்]-* மயர்வறமதிநலமருளப் பெற்றவன்றே அறிவுகேடும் குடிபுகுந்ததுகாணும். பக்திரூபாபந்நஜ்ஞாநமிறேபெற்றது. [இவள் கண்ண நீர்களலமர]-கண்கள் வாய்வெருவுகிறபடி. நாடோறும் வாய்வெரீஇ யென்றது, * போய்ந்நுன்ற ஞானந்தோடங்கி இவ்வளவும்வரக் கூப்பிட்ட கூப்பீட்டையிறே. [மரங்களுமிரங்கும்வகை]-சேதநாசேதநவிபாகமற அழியும்படி காணும், இவள் வாய்விட்டுக் கூப்பிடும்படி. எம்பாரை "மரங்களுமிரங்கக் கூடுமோ?" என்று கேட்க, "இதுஅருளிச்செய்த அன்று

ப்ர.—[இரங்கிநாடொறும்வாய்வெரீஇ]— ஸுந்தரகாண்டே [௩௨] "ஸ்வப்நோமயாயம் நஹிமேऽஸ்தி நித்ரா சோகேந துக்கேந ச பீடிதாயா:। ஸுகம்ஹி மேநாஸ்தி யதோऽஸ்மி ஹீநா தேநேந்துபூர்ணப்ரதிமாநநேந ॥ ௧௦ ॥ ராமேதி ராமேதி ஸதைவ புத்த்யா விசிந்த்ய வாசா ப்ருவதீ ததைவ । தஸ்யாநுரூபாம் ச கதாம் ததர்த்தம் ஏவம் ப்ரபச்யாமி ததா ச்ருணோமி ॥ ௧௧ ॥"

ஒன்பதாம்பாட்டு.—இரங்கி இத்யாதி. "இரங்கி, கூவுமால், கரங்கள்கூப்பித்தொழும், திருநாமங்கற்றதற்பின்னை" என்கிற பதங்களைக்கடாக்ஷித்தவதாரிகை - இவள் மநோவாக்காயங்கள் இத்யாதி.

நெஞ்சழிந்தால் வாய்வெருவக்கூடுமோ? என்ன - அடியற்ற இத்யாதி. இதுக்கு த்ருஷ்டாந்தம் - விசிந்த்ய இத்யாதி. "ராமேதி ராமேதி ஸதைவ புத்த்யா விசிந்த்ய வாசா ப்ருவதீ ததைவ । தஸ்யாநுரூபாம் ச கதாம் ததர்த்தம் ஏவம் ப்ரபச்யாமி ததா ச்ருணோமி" இதி ஸுந்தரகாண்டே ஸீதா. "ப்ருவதீ" என்கிறபதத்தாலே - வாக்காலேயென்னுமது ஸித்தமாயிருக்க, "வாசா" என்று விசேஷிக்கையாலே மநஸ்ஸஹகாரம் இல்லையென்றபடி. விசிந்த்யவர்த்தமாநா, வாசைவப்ருவதீ, நதுவக்துமிச்சயேதி ஸ்லோகதாத்பர்யம். "வாசாப்ருவதீ" என்றமாத்ரமே இவ்விடத்திலே வேண்டுவது. "நாடொறும்" என்கிறதுக்குஅவதியேதென்ன - மயர்வற இத்யாதி. அப்போது அறிவுகேடு குடிபுகுருகைக்கு ஹேதுவேதென்ன - பக்திரூப இத்யாதி. "வாய்வெரீஇ" என்றத்தோடேகூட்டி "இவள்கண்ணநீர்கள்" இத்யாதிக்குபாவம் - கண்கள் இத்யாதி. "அலமர" என்றது - ஸப்ருத்தமாகவென்றபடி. கீழ், "மயர்வறமதிநலம்" இத்யாதிவாக்யத்தாலே "நாடொறும் இரங்கி" என்று கூட்டியருளிச்செய்து, "நாடொறும் - வாய்வெரீஇ" என்று மேலேகூட்டிபாவம் - நாடோறும்வாய்வெரீஇயென்றது இத்யாதி. ஆக, "நாடொறும்" என்றத்தை-கீழும்மேலுங்கூட்டுவது. மரங்களிரங்கக்கூடுமோ? என்ன - சேதநாசேதந இத்யாதி. "மரங்களும்" என்ற சப்தம் - சேதநரை ஸமுச்சயிக்கிறது. இதுக்கு ஸம்வாதம் - எம்பாரை இத்யாதி. மரங்களழி

தொடங்கி எத்தனை ஹாவஸாபத்தி யில்லாதார்வாயிலே புக்கதென்று தெரியாது; இங்ஙனே யிருக்கச் செய்தே, யமநியமாதி க்ரமத்தாலே பதஞ்செய்யப் பார்த்தாலும் சுக்கான் பருக்கை போலே நெகிழாதேயிருக்கிற நெஞ்சுகளும் இன்றுஅழிகிறபடிகண்டால்ஸமகாலத்தில்மரங்கள் இரங்கச் சொல்லவேணுமோ ?" என்றருளிச் செய்தார். "மரங்களின்று மதுதாரைகள் பாயும் மலர்கள் வீழும் வளர்கொம்புகள்தாழும்" என்று அவதாரத்தில் திருக்குழலோசை யிற்பட்டதெல்லாம் இவ்வார்த்தநாதத்திலே படுமாயிற்று; **"அபி வ்ருக்ஷா: பரிம்லாநா:"** (அபிவ்ருக்ஷா:பரிம்லாநா:) என்று, ராமவிஸ்லேஷத்தில் பட்டதெல்லாம் இவள் பேச்சில் படாநின்றன. பகவத்குணங்களிலும் குணநிஷ்டர்பாசுரமழிக்கும்போலே [மணிவண்ணவோவென்று கூவுமால்] - இவளையோதான் நீங்கள் மீட்கப்பார்க்கிறது! வடிவழகைச் சொல்லியன்றோ கூப்பிடுகிறது. [துரங்கமித்யாதி] - பண்டு உபகரித்தவன் இப்போது உபகரிக்கைக்கு வந்திருக்கிற தேசம். கேசிவாயை அநாயாஸேந கிழித்தவன் வர்த்திக்கிறஇடம். [தொலைவில்லிமங்கலமென்று தன்கரங்கள் கூப்பித்தொழும்] - (அத்தலையித்தலையாவதே! என்கிறாள்.) தன்னூரின்பேரைச்சொல்ல எல்லாரும் கையெடுக்கும்படி பிறந்தவள் கிடீர் தான்அவனூரைச்சொல்லித் தொழுகிறாள்: இக்கைகண்டார் தொழுமத்தனையென்றுபோலே காணும் இவளிருப்பது. தான் தொழுவது ஸ்த்ரீத்வத்துக்குப் போராதிறே. இதுதான் என்று தொடங்கி?என்னில், [அவ்வூர்த் திருநாமம் கற்றதற்பின்னையே] - இவள் சொற்கற்றபின்பு. திருநகரியிலுள்ளார் சொற்கற்பது "திருத்தொலைவில்லிமங்கலம்" என்றுபோலே காணும். இவள் பேச்சுக்கற்கையென்றும், திருநாமஞ் சொல்லுகையென்றும் இரண்டில்லை. கோயிலிலுள்ளார் "கோயில்" என்றும், "பெருமாள்" என்றும் கற்குமாபோலே. தோழி, தன் வாயாலே " திருத்தொலைவில்லிமங்கலம் " என்றால் இவள் சொன்ன இனிமை பிறவாமையாலே, அவ்வூரென்கிறாள்காணும். என்தான்! முன்பு சொன்னாளேயென்னில்; அது அப்படியிராமலிறே அவ்வூரென்கிறது. (௬)

யக்கண்ட இடமுண்டோ? என்ன; இரண்டு உதாஹரணம், மரங்களின்றும்இத்யாதிவாக்யத்வயத்தாலே. பெரியாழ்வார்திருமொழி. ஸ்பஷ்டோர்த்த:. கீழ் - ஸாம்யஞ்சொல்லி, ஆதிக்யம்சொல்லுகிறார் - பகவத்குணங்களிலும் இத்யாதி. "வ்ருக்ஷா: பரிம்லாநா:" என்றவிடத்திற்போலே சாரீரமான வாட்டமன்றிக்கே, "இரங்கும்" என்று மநஸ்ஸௌஹித்யம் சொல்லுகையாலே, வாசியுண்டென்று கருத்து. "மணிவண்ணவோ" என்றதுக்கு ஹார்த்தபாவம் - இவளையோ இத்யாதி. விவரணம் - வடிவழகை இத்யாதி. "கேசிவாயைக்கிழித்தவன் வர்த்திக்கிற தொலைவில்லிமங்கலம்" என்றதுக்கு பாவம் - பண்டு இத்யாதி. கரங்கள்என்னாதே, "தன்கரங்கள்" என்றுவிசேஷித்ததுக்கு பாவத்வயம்- தன்னூரின்பேரை இத்யாதிவாக்யத்வயத்தாலே. அதாவது - தன்னூரின்பேரைச் சொல்ல எல்லாரும் கையெடுக்கும்படி பிறந்தவள்கிடீர் தான் "தொலைவில்லிமங்கலம்" என்று அவனூரைச்சொல்லித் தொழுகிறாள் என்னுதல்; தன் கையழகைக்கண்டு ஈடுபட்டு அவன்தொழும்படி யிருக்கக்கடவ இவள் கிடீர் இப்போது அவனைத் தொழுகிறாளென்னுதல். தான் தொழுதால் குற்றமோ? என்ன - தான் தொழுவது இத்யாதி. "கற்றதற்பின்னையே" என்றதுக்குஅர்த்தம் - இவள்சொற்கற்றபின்பு என்று. சொற்கற்றபின்பு என்றர்த்தமானால், "அவ்வூர்" என்று விசேஷிப்பானென்? என்ன - திருநகரியிலுள்ளார் இத்யாதி. சொற்கற்றே திருநாமங்கற்கவேண்டாவோ? என்ன - இவள்பேச்சு இத்யாதி. அன்றிக்கே, கீழ்வாக்யத்தால் ஸித்தமாதல். உக்தத்துக்கு த்ருஷ்டாந்தம் - கோயிலில் இத்யாதி. திருத்தொலைவில்லிமங்கலமென்னாதே, "அவ்வூர்" என்கிறதென்? என்ன - தோழி இத்யாதி. 'அவ்வூர்த்திருநாமங்கற்றதற்பின்னை 'இரங்கி'யென்று தொடங்கி, 'கரங்கள்கூப்பித்தொழும்' என்று அந்வயம். (௬)

பத்தாம் பாட்டு.

பின்னைகோல்?நிலமாமகள்கோல்?திருமகள்கோல்?பிறந்திட்டாள்
என்னமாயங்கோலோ?இவள்நெடுமாலென்றேநின்றுகூவுமால்
முன்னிவந்தவன்நின்றிருந்துறையுந் தொலைவில்லிமங்கலம்
சென்னியால்வணங்கும்அவ்வூர்த்திருநாமங்கேட்பதுசிந்தையே.

ஆ.—(பின்னைகொல்.) - நீங்கள் இவளைத் திருத்தொலைவில்லிமங்கலத்திலே கொண்டுபுக்க அன்றுதொடங்கி, அவனுடைய நிரவதிகமான ஆஶ்ரிதவாத்ஸல்யாதி குணங்களையே சொல்லிக் கூப்பிட்டு, தன்னோடு ஸம்ஶ்லேஷிக்கைக்குஉறுகத் தான் அவதாரம் பண்ணுவதற்குமுன்னே எம்பெருமான் பலவடிவுகளைக்கொண்டுநின்றிருந்துறைகிற திருத்தொலைவில்லிமங்கலத்தைச் சென்னியால்வணங்கி, அவ்வூர்த்திருநாமத்தை என்றோ கேட்பது? என்று சிந்தியாநிற்கும்; இப்படி எம்பெருமான்பக்க லுண்டான அதிநிவேஶவெள்ளத்திலே அழுந்திக்கிடக்கிற இவள், நப்பின்னைப் பிராட்டியோ? பூமிப் பிராட்டியோ? பெரியபிராட்டியோ? அன்று: இவள்தானென்று சொல்லலாமித்தனை; ஏவம்விதமான ப்ரேமாதிஶயம் கண்டும் அறியோம்; இதென்ன ஆஶ்சர்யம்! என்று விஸ்மிதையாய்க்கொண்டு, இப்படி அதிநிவிஷ்டையான இவளை என்றும் நிவர்த்திப்பிக்க முடியாதென்று சொல்லி முடிக்கிறாள்.

ஒ.—பத்தாம்பாட்டில், இவள் எம்பெருமான்பக்கலிலே அதிப்ரவணையாயிருக்கிறபடியையும், இவளுக்கு அவனல்லது செல்லாதிருக்கிறபடியையும் கண்டு, இவளோடொக்க மற்று ஶங்கிக்கலாவார் ஒருவரும் இல்லாமையாலே, பிராட்டிமாரிலே ஒருத்தியோ? என்று சங்கிக்கிறாள். [பின்னையென்று தொடங்கி] - இவர்களிலே ஒருத்தியோ? என்று சங்கித்து, அவர்களுக்கும் இவள்படியில்லாமையாலே லோகமெல்லாம் வாழ்கைக்கு இவள் ஒருத்தி பிறந்தாள் என்றுமாம். [என்னவென்று தொடங்கி] - இவள் திருநாமத்தைச்சொல்லி நிரந்தரமாகக் கூப்பிடாநின்றாள். இதுஎன்ன ஆஶ்சர்யம்! [முன்னி என்றுதொடங்கி] - "இப்பெண்பிள்ளையைக்கிடைக்கும்" என்று முற்கோலி வந்து பதறிநின்றருளியும் இருந்தருளியும் நிரந்தரமாக வர்த்தித்தருளுகிற திருத்தொலைவில்லிமங்கலத்தைத் தலையாலேவணங்கும்: அவ்வூர்த்திருநாமம் கேட்கையிலே இவளுக்கு மனோரதமும்.

ப.—அநந்தரம், அவனுடைய அதிஶயித வ்யாமோஹத்தைச் சொல்லிக் கூப்பிடாநின்றுகொண்டு, அவ்வூரைநோக்கி வணங்குவது, அவ்வூரின்பேரைப் பிறர்சொல்லக் கேட்க ஆசைப்படுவதாகாநின்றாள்; இவளுடைய அதிப்ராவண்யமிருந்தபடியால் 'இவள் ஸ்ரீபூமிநீளைகளிலே அந்யதமையோ?' என்று அதிசங்கைபண்ணுகிறாள்.

பின்னைகொல் - நிரதிஶயபோக்யபூதையான நப்பின்னைப்பிராட்டியோ? நிலப்- பூமிக்கு நிர்வாஹிகையாய், மா - ஶ்லாக்யையான, மகள்கொல் - ஸ்ரீபூமிப்பிராட்டியோ? திருமகள்கொல் - அவனுக்கு நிரதிஶய ஸம்பத்ரூபையானலக்ஷ்மியோ? பிறந்திட்டாள் - இப்படி பிறந்திருக்கிறவள். (இது), என்ன-, மாயங்கொலோ - ஆஶ்சர்யமோ! இவள்-,

நெடுமாலென்றே - அவன் வ்யாமோஹாதிசயத்தைச்சொல்லி, நின்று-, கூவும் - அழையா நின்றாள் ; (அவ்வளவேயன்றிக்கே அந்த வ்யாமோஹமடியாக), அவன்-, முன்னி-முற்பாடனாய், வந்து-, நின்றிருந்து - நிற்பதிருப்பதாய், உறையும் - நித்யவாஸம்பண்ணுகிற, தொலைவில்லிமங்கலம் - திருத்தொலைவில்லிமங்கலத்தை, சென்னியால் - தலையாலே, வணங்கும் - வணங்காநிற்கும்; (தான் சொல்லுமதிலும்), அவ்வூர்த்திருநாமம் - அவ்வூர்த் திருநாமத்தை, கேட்பதே-பிறர்சொல்லக்கேட்கையே, சிந்தை - நினைவாயிரா நின்றாள்।

இ.—பத்தாம்பாட்டில், அவனுலல்லது செல்லாதபடியான இவளுடைய ப்ராவண்யாதிசயத்தைக்கண்டு, பிராட்டிமாரிலே ஒருத்தியோ! என்று சங்கிக்கிறாள். [பின்னைகொல்] - "நப்பின்னைப்பிராட்டி பிறந்திட்டாளோ? அங்ஙனன்றியே, ஸ்ரீபூமிப்பிராட்டி பிறந்திட்டாளோ? எல்லார்க்கும் இவ்வேற்றங்களைக்கொடுக்கும் பிராட்டிதானே பிறந்திட்டாளோ?" என்பர்கள் பூர்வர்கள். ஸர்வேஶ்வரனுக்கு ஸம்பத்தாயிருக்குமவள் பிறந்தாளோ, அதுக்கு விளைபூமியாயிருக்குமவள் பிறந்தாளோ, அவ்விளைபூமியினுடைய ஸ்வஸ்வரூபமாயிருக்குமவள் பிறந்தாளோ? அங்ஙனன்றியே, அவர்களுக்கும் இவள்படி இல்லாமையாலே அவர்களோடு ஒப்பன்று; லோகமெல்லாம் வாழ்கைக்கு இவள் ஒருத்தி பிறந்தாளோ என்றுமாம். "விஷ்ணுநாஸத்ருஶோவீர்யே" என்றாற்போலே நாய்ச்சிமார்பக்கலிலும் ஒருவகைக்குஒப்புச்சொல்லலாம்படியிருக்கையாலே கதிர்பொறுக்குகிறாள். "உபௌ நௌ ஶேஷாணாம் ஸாம்யநாம்யஸ்ஸாஸ்ய" என்கிறபடியே எல்லார்க்கும் இவரை ஒப்பாகச்சொல்லலாம்; இவர்க்கு ஒப்பாவார் ஒருவருமில்லை. [என்னமாயங்கொலோ] - இவள் திருநாமத்தைச்சொல்லிக் கூப்பிடாநின்றாள், இது என்ன ஆஶ்சர்யமோ? இவ்விபூதியிலே இங்ஙனேயிருப்பாரையும் காணலாமா காதே! அவன் தன்பக்கல் பண்ணின வ்யாமோஹாதிஶயத்தைச் சொல்லிக் கூப்பிடாநின்றாள். [முன்னி இத்யாதி] - தன்னுடைய வ்யாமோஹத்துக்கு அவன் க்ருஷிபண்ணினபடி. முற்பாடனாய்வந்து, அவன் நிற்பதிருப்பதாய்க்கொண்டு நித்யவாஸம் பண்ணுகிற்கும் ஊர். பசியன் சோறுதாழ்த்தால் படுமாபோலே. [சென்னியால் வணங்கும்] - தன்கரங்கள் கூப்பித்தொழுகையும் ப்ரார்த்யமானபடி; இருந்தவிடத்தே இருந்து தலையைச்சாய்க்கும்படியாளாள். இவள் அகவாய் ஓடுகிறது அவ்வூர்த்திருநாமங்கேட்கையிலே. "திருநாமத்தைக் கேட்கவல்லேனே" என்றாயிற்று இவள் மனோரதம். "இவள் வாயாலே சொல்லக்கடவ திருநாமத்தை நாம் சொல்லிக் கெடுக்கக்கடவோமல்லோம்" என்று அவ்வூர் என்கிறாள்.

ஈடு.—பத்தாம்பாட்டு. அவனுலல்லது செல்லாத இவளுடைய ப்ராவண்யாதிஶயத்தைக் கண்டு, பிராட்டிமாரிலே யொருத்தியோ? என்று சங்கிக்கிறாள்.

[பின்னைகொல்] - பின்னை பிறந்திட்டாளோ? அங்ஙனன்றியே, ஸ்ரீபூமிப் பிராட்டி பிறந்திட்டாளோ? அன்றிக்கே, எல்லார்க்கும் இவ்வேற்றங்களைக் கொடுக்கும்

பத்தாம்பாட்டு—பின்னைகோல் இத்யாதி. "பின்னைகொல்" இத்யாதியைக் கடாக்ஷித்தவதாரிகை - அவனுலல்லது இத்யாதி.

"பிறந்திட்டாள்" என்றத்தை - மூன்றுபேரிடத்திலும் அந்வயித்தர்த்தம் - பின்னைபிறந்திட்டாளோ என்று தொடங்கி. இவ்வேற்றங்களையென்றது - இவளுக்குண்டான ஏற்றங்களையென்ற

பிராட்டிதானே பிறந்திட்டாளோ? ஸர்வேஶ்வரனுடைய ஸம்பத்தாயிருக்குமவள் பிறந்திட்டாளோ? அஸ்ஸம்பத்துவிளையும் பூமியாயிருக்குமவள் பிறந்தாளோ? அவ்விளைபூமியினுடைய ஸலரூபமாயிருக்குமவள் பிறந்தாளோ? அங்ஙனன்றிக்கே, [பிறந்திட்டாளோ] - அவர்களுக்கு இவள்படியில்லாமையாலே அவர்களோப்பன்று; லோகமெல்லாம் வாழ்கைக்கு இவளொருத்தி பிறந்தாளோ! என்றுமாம். "விஷ்ணுநாஸத்ருஶோவீரே" (விஷ்ணுநாஸத்ருஶோவீர்யே) என்றாற்போலே, நாய்ச்சிமார் பக்கலிலேயும் ஓரோவகைக்கு ஒப்புச் சொல்லலாயிருக்கையாலே கதிர்பொறுக்குகிறாள். 'உபமாநமஶேஷாணாம் ஸாதூநாம்யஸ்ஸதாபவத்" (உபமாநமஶேஷாணாம்ஸாதூநாம்யஸ்ஸதாபவத்) என்கிறபடியே இவரை எல்லார்க்கும் ஒப்பாகச் சொல்லலாய் இவர்க்குஒப்பாவார் ஒருவருமில்லைகாணும். [என்னமாயங்கொலோ] - பகவத்விபூதியில் கூடாததில்லையாகாதே! இதென்ன ஆஶ்சர்யந்தான்! [இவள் நெடுமாலென்றே நின்றுகூவும்] - தன்பிச்சைக் காற்கடைக்கொண்டு, அவன்பிச்சைச்சொல்லிக் கூப்பிடாநின்றாள். [ஆல்] - ஆஶ்சர்யத்திலே, அசை. [முன்னி இத்யாதி] - தன்னுடைய வ்யாமோஹத்துக்கும் அவன் க்ருஷிபண்ணினபடி. முற்பாடனாய்வந்து அவன் நிற்பதிருப்பதாய்க்கொண்டு நித்யவாஸம் பண்ணுகிறவூர். பசியன், சோறுதாழ்த்தால் படுமாபோலே. [சென்னியால்வணங்கும்] - *தன்கரங்கள் கூப்பித்தொழுகையும் ப்ரார்த்யமானபடி. இருந்தவிடத்தேயிருந்து தலைசாய்க்கும்படியானாள். [அவ்வூர் இத்யாதி] - அவ்வூர்த் திருநாமங்கேட்கச் செவிதாழ்க்கையிலே இவளுக்கு மநோரதம். இவள், அவ்வூரென்கிறது - பெண்பிள்ளை சொன்னாற்போலே யிராமை. ஆனால்ஒருகால் சொன்னாளே? என்னில், "அது வாய்மறுகலாகையிறே பின்பு தவிர்ந்தது" என்றருளிச்செய்வர்.

(௧௦)

படி. கீழ்வாக்யத்தை ஒருவிஶேஷந்தோற்ற வ்யுத்க்ரமமாகவிவரிக்கிறார் - ஸர்வேஶ்வரனுடைய இத்யாதி. கீழே - மூன்றுபிராட்டிமாரிடத்திலும் "பிறந்திட்டாள்" என்றத்தை யந்வயித் தருளிச்செய்து, அங்ஙனன்றிக்கே, "பிறந்திட்டாள்" என்றத்தை ப்ரத்யேகபதமாக்கி அர்த்தாந்தரம் - அங்ஙனன்றிக்கே இத்யாதி. முந்தின அர்த்தத்தில், மூவரையும் ஒப்பாகச் சொல்லுவானென்? என்ன - விஷ்ணுநா இத்யாதி. "ஓரோவகைக்கு" என்கிறதென்? ஸர்வதாஸாம்யம் சொன்னாலோ? என்ன - உபமாநம் இத்யாதி. இது - இரண்டாமர்த்தத்துக்கு அநுகுணம். த்விதீயார்த்தத்திலே, தோழியின்சொலோடு - பகவத்விபூதியில் இத்யாதி. அதாவது - அதிவிலக்ஷணையான இவள் இந்த விபூதியிலே திருவவதரிக்கையாலே, பகவத்விபூதியில் இதென்ன ஆஶ்சர்யமென்று கருத்து. மாயம் - ஆஶ்சர்யம். உறையுமென்னாதே, "நின்றிருந்து" என்று விஶேஷிக்கிறதுக்குபாவம் - பசியன் இத்யாதி. இத்தால் - நிற்பதிருப்பதாகிற இரண்டையும் ஏகஸ்தலத்திலே செய்தானென்கையாலே, ஈஶ்வரனுக்கு ஆழ்வாரை யநுபவிக்கையில் உண்டான விடாயெல்லாந் தோற்றுகிறதென்றபடி. ப்ரார்த்யமானபடியென்றது - கையெடுத்துத் தொழுகைக்கும் பலமில்லாதே போயிற்று என்றபடி. செவிதாழ்க்கையிலே இவளுக்கு மநோரதமென்றது - பலஹாநியாலே கேட்கைதானும் ப்ரார்த்யமாய்விட்டதென்றபடி. வாய்மறுகல் - கருகிப்போகை. அஸாரமென்றபடி. இவள் நெடுமாலென்றே நின்றுகூவும்; முன்னிவந்தவன் இத்யாரப்ய, கேட்பதுசிந்தை; பின்னைகொல் என்றுதொடங்கி, பிறந்திட்டாள்; என்னமாயங்கொலோ? என்றந்வயம். "யஶோதாஸுதஸ்யைவாதி ஹ்ருஷ்ணாநாநாகாரஸுயா । உபமாந மஶேஷாணாம்" இத்யாதிப்ரதமேம்பேஶ், பஞ்சதமே.

(௧௦)

பதினோராம் பாட்டு.

சிந்தையாலுஞ்சொல்லாலுஞ் செய்கையினாலுந்தேவபிரானையே
தந்தைதாயென்றடைந்த வண்குருகூரவர்சடகோபன்
முந்தையாயிரத்துள் இவை தொலைவில்லிமங்கலத்தைச்சொன்ன
செந்தமிழ்ப்பத்தும்வல்லார்அடிமைசெய்வார் திருமாலுக்கே.

ஆ.—(சிந்தையாலும்.) - வாங்மநஃ காயவ்ருத்திகளாலே தேவபிரானையே தந்தைதாயென்றடைந்த குருகூர்ச்சடகோபன் சொன்ன ஸகலவேதஸாரபூதமான ஆயிரந்திருவாய்மொழியிலும் ஸாரபூதமான இத்திருவாய்மொழியை வல்லார், எம்பெருமானுக்கும் பிராட்டிக்கும் அபிமத ஸர்வஶேஷவ்ருத்தியும் பண்ணுவாரென்கிறார்.

ஒ.—நிகமத்தில், இத்திருவாய்மொழியில் கருத்தை வ்யக்தமாக்கா நின்றுகொண்டு, இத்தைக்கற்றவர்கள் இதுக்கு அநுரூபமான கைங்கர்யத்தைப் பண்ணப்பெறுவர் என்கிறார். [சிந்தையால் என்று தொடங்கி] - மநோவாக்காயங்களினால் திருத்தொலைவில்லிமங்கலத்தில் எம்பெருமானையே எல்லா உறவுமுறையும் என்று பற்றுவதும் செய்து, திருநகரியில் உள்ளார்க்கு ஸர்வவிதமுமான ஆழ்வார் அருளிச்செய்த. [முந்தையாயிரம்] - அர்த்தப்பழமையாலே பழையதான ஆயிரம்.

ப.—அநந்தரம், இத்திருவாய்மொழியை அப்யஸிக்கவல்லவர்கள் ஸ்ரீயஃபதிக்கு நித்யகைங்கர்யபரராவர்கள் என்று ஃபலத்தை அருளிச்செய்கிறார்.

தேவபிரானையே - தேவபிரானையே, (ஹிதபரத்வத்தாலும் ப்ரியபரத்வத்தாலும்), தந்தை - தந்தையும், தாய்-தாயும், என்று - என்று அறுதியிட்டு, (இத்திருவாய்மொழியிற்சொன்ன கணக்கிலே), சிந்தையாலும் சொல்லாலும் செய்கையினாலும் - கரணத்ரயத்தாலும், அடைந்த - ஆஶ்ரயித்தவராய், வண் - "அன்னையாயத்தனாய்" என்கிற ஸ்ரீமதுரகவிகளைப்போலே தம்மைப்பற்றியிருக்கிற, குருகூரவர் - திருநகரியிலுள்ளார்க்கு நிர்வாஹகரான, சடகோபன் - ஆழ்வார், முந்தை - பழையதான வேதார்த்தத்துக்கு ப்ரகாஶகமான, ஆயிரத்துள் - ஆயிரந்திருவாய்மொழியிலும் வைத்துக்கொண்டு, தொலைவில்லிமங்கலத்தை - திருத்தொலைவில்லி மங்கலத்தைப்பற்ற, சொன்ன - அருளிச்செய்த, செம் - அர்த்த ப்ரகாசநத்தில் ஆர்ஜவத்தையுடைய, தமிழ் - தமிழான, இவைபத்தும் - இப்பத்தையும், வல்லார் - அப்யஸிக்கவல்லவர்கள், திருமாலுக்கு - ஸ்ரீயஃபதியான ஸர்வேஶ்வரனுக்கு, அடிமைசெய்வார் - அடிமைசெய்யுமவர்களாவர். இது - எழுசீராசிரியவிருத்தம்.

இ.—நிகமத்தில், இத்திருவாய்மொழியில் கருத்தைச் சொல்லிக்கொண்டு, இது கற்றவர்கள் இதுக்கு அநுரூபமான கைங்கர்யத்தைப் பண்ணப்பெறுவர் என்கிறார். [சிந்தையாலும் இத்யாதி] - மநோவாக்காயங்கள் மூன்றும் ஒருபடிப்பட அவன் பக்கலிலே ப்ரவணமாயிருக்கிறபடி. "இரங்கி" என்றும், "மணிவண்ணவோவென்று கூவுமால்" என்றும், "தன்கரங்கள் கூப்பித்தொழும்" என்றும் - மூன்றாலும் இவர்க்கு உண்டான ப்ராவண்யாதிஶயமிறே இத்திருவாய்மொழியில் சொல்லிற்று. [தேவபிரான்

*இத்யாதி] - * அயர்வறுமமரர்களதிபதியாய்வைத்துத் திருத்தொலைவில்லி மங்கலத்திலே ஸுலபனாய் இருந்தவனையே ஸர்வவிதபந்துவுமென்று, அப்படியே பற்றுவதும் செய்தவர். [வண்குருகூரவர்சடகோபன்] - அவனை தமக்கு ஸர்வவிதபந்துவுமானாற்போலே, அவ்வூரிலுள்ளார் "ஆழ்வாரே எல்லாஉறவுமுறையும்" என்றாயிற்று இருப்பது. "அன்னையாயத்தனாய்" என்னும் ஸ்ரீமதுரகவிகளைப்போலே. [முந்தையாயிரம்] - பழையதான வேதார்த்தத்தை அருளிச்செய்கையாலே, ஸர்வேஸ்வரன் இதரஸஜாதீயனானாற்போலே வேதமும் தமிழாய்வந்து இவர்பக்கலிலே அவதரித்தபடி. [செந்தமிழ்] - செவ்வியதமிழ், பசுந்தமிழ். அர்த்தத்தை விசதமாகக்காட்டுமது. இப்பத்தை அப்யஸிக்கவல்லார் ஸ்ரிய:பதிக்கு அடிமைசெய்யப்பெறுவர்.*

ஈடு.—நிகமத்தில், இத்திருவாய்மொழியிற்கருத்தை வ்யக்தமாக்காநின்று கொண்டு, இத்தைக் கற்றவர்கள் இதுக்குஅநுரூபமான கைங்கர்யத்தைப்பண்ணப்பெறுவர் என்கிறார்.

[சிந்தையாலும் இத்யாதி] - மனோவாக்காயங்கள் மூன்றும் ஒருபடிப்பட அவன் பக்கலிலே ப்ரவணமாயிருக்கிறபடி. "இரங்கி" என்றும், "மணிவண்ணவோ" என்றும், "தன்கரங்கள் கூப்பித்தொழும்" என்றும், மூன்றாலும் - இவர்க்குண்டான ப்ராவண்யாதிசயமிறே இத்திருவாய்மொழியிற் சொல்லிற்று. [தேவபிரானித்யாதி] - *அயர்வறுமமரர்களுக்கு அதிபதியாயிருந்துவைத்துத் திருத்தொலைவில்லிமங்கலத்திலே ஸுலபனாயிருந்தவனே ஸர்வவிதபந்துவுமென்று அறுதியிட்டபடியே பற்றுவதும் செய்தவர். [வண்குருகூரவர்சடகோபன்] - அவனே யிவர்க்கு ஸர்வவிதபந்துவுமானாற்போலே, அவ்வூரிலுள்ளார் ஆழ்வாரையே எல்லாவுறவுமுறையாகப் பற்றியாயிற்றிருப்பது. "அன்னையாயத்தனாய் என்னையாண்டிடும் தன்மையான்" என்றும், "*மாதாபிதா யுவதயஸ்தநயா விபூதிஸ்ஸர்வம்*" (மாதாபிதாயுவதயஸ்தநயாவிபூதிஸ்ஸர்வம்) என்றும் சொல்லுகிறபடியே இருப்பர்கள். [முந்தையாயிரம்] - பழையதான வேதார்த்தத்தை யருளிச்செய்கையாலே. ஸர்வேஸ்வரன் இதர ஸஜாதீயனாய் அவதரித்தாற்போலே, வேதமும் தமிழாய் வந்து இவர்பக்கலிலே அவதரித்தபடி. [செந்தமிழ்] - செவ்வியதமிழ், பசுந்தமிழ். அர்த்தத்தை விசதமாகக்காட்டுவது. இத்தை அப்யஸிக்கவல்லார் ஸ்ரிய:பதிக்கு அடிமை செய்யப்

நிகமம்.—சிந்தையாலும் இத்யாதி. "பத்தும்வல்லாரடிமைசெய்வார் திருமாலுக்கு" என்றத்தைக்கடாக்ஷித்தவதாரிகை - இத்திருவாய்மொழியில் இத்யாதி. கருத்தையென்றது - கரணத்ரய ப்ராவண்யத்தை. இது "சிந்தையாலும்" இத்யாதியைக்கடாக்ஷித்து.

*"சிந்தையாலும்" இத்யாதியாலே காரணகார்யங்களையிட்டு, காரணங்களைலக்ஷிக்கிறது. உக்தத்தையன்றோ நிகமிப்பது. கரணத்ரயப்ராவண்யம் கீழுக்தமோ? என்ன - இரங்கி இத்யாதி. "வண்குருகூர்" என்று - * மஞ்சாக்ரோசந்திபோலே, குருகூரிலுள்ளாரைச்சொல்லுகிறது. "அவர்" என்கிற தச்சப்தம் - ப்ரக்ருதபராமர்சியாகையாலே, கீழுக்தமான தந்தைதாயைச்சொல்லுகிறது. வண்மை-அழகு. ஆக, வண்குருகூரிலுள்ளார்க்கு, அவர்சடகோபன் - தந்தைதாயான சடகோபனென்று ஸப்தநிர்வாஹம் விவக்ஷித்தருளிச்செய்கிறார் - அவனேயிவர்க்கு இத்யாதி. அப்படியிருப்பர்களோ? என்ன - **அன்னையாய்** இத்யாதி. மாதாவும்பிதாவும் என்னையடிமைகொள்ளுமாசார்யனுமாகையே ஸ்வபாவமாகவுடையவர் இத்யர்த்த:. தாம் இப்போதருளிச் செய்ததாயிருக்க, "முந்தையாயிரம்" என்கிறதென்? என்ன - **பழையதான** இத்யாதி. பரிஹாராந்தரம் - **ஸர்வேஸ்வரன்** இத்யாதி. "பழையதான*

பெறுவர். பெருமாளும் பிராட்டியும் சேரவிருக்க இளையபெருமாள் அடிமைசெய்தாற் போலே, விஶிஷ்டவேஷத்திலே அடிமைசெய்யப்பெறுவர். (கக)

வேதார்த்தத்துக்கு ப்ரகாசகமானவாயிரம்'' என்றுஉரையில் ஶப்தார்த்தம். ஸத்ருஷ்டாந்தமாக விவரணம் - பெருமாளும் இத்யாதி. (கக)

த்ரவிடோபநிஷத்ஸங்கதி. — [illegible]

த்ரவிடோபநிஷத்தாத்பர்யரத்நாவலி. — [illegible] ॥ கூச ॥

திருவாய்மொழி நூற்றந்தாதி.

துவளறுசீர்மால்திறத்துத்தொன்னலத்தால்நாளுந்
துவளறுதன்சீலமெல்லாஞ்சொன்னான் - துவளறவே
முன்னமனுபவத்தில்மூழ்கிநின்றமாறனதில்
மன்னுமுருவப்பால்வந்தமால்.

ஆழ்வார் திருவடிகளே ஶரணம், எம்பெருமானார் திருவடிகளே ஶரணம், ஜீயர்திருவடிகளே ஶரணம்.

ஆறாந்திருவாய்மொழி: மாலுக்கு - ப்ரவேஶங்கள்.

௬.—(மாலுக்கு.)-இப்படி * மரங்களும்இரங்கும்வகை "மணிவண்ணவோ" என்றுகூப்பிட்டும் அவனைக் காணப் பெறுமையாலே மோஹதசாபந்நையாய், ஆத்மாத்மீயங்களை இழந்து அத்யந்தமவஸந்நையான இவளைக்கண்டு திருத்தாயார் இவளிலும் அதிமாத்ரவ்யஸநாபிபூதையாய்க்கொண்டு, எம்பெருமானுடைய குணசேஷ்டிதங்களுக்குத் தோற்று இவளிழந்தவற்றைச்சொல்லி அலற்றுகிறாள்.

௭.—ஆறாந்திருவாய்மொழியில், கீழில் திருவாய்மொழியில் பிறந்த வ்யஸநம் முறுகடியிடுகையாலே இப்பிராட்டியும் மோஹித்து, அது பொறுக்கமாட்டாமை இவளுடைய தோழியும் மோஹித்ததசையிலும், இவளை ஜீவிப்பிக்கைக்கு விரகுகளை மநோரதிக்கையாலே தரித்திருக்கிற திருத்தாயாரானவள், இவளுடைய வலயாதிகள் காணக்காண ஶிதிலமாய்ப்போகிறபடியைக்கண்டு, அவற்றைத் தனித்தனியே சொல்லி ஶோகிக்கிறாள்.

௮.—ஆறாந்திருவாய்மொழியில், இப்படிகரணத்ரயத்தாலும் பகவத்விஷயத்திலே ப்ரவணரான இவர், ப்ராவண்யஜநகனான அவனுடைய ஆஶ்ரித வ்யாமோஹப்ரகாஶகமான ஆகாரவிஶேஷங்களையும், அவர்களுக்கு போக்யமான ஆயுதாதிபூர்த்தியையும், ரக்ஷணப்ரகாரத்தையும், ஸர்வப்ரகாரரக்ஷோபகாரகத்வாதிஶயத்தையும், ப்ரமாணப்ரதாநாதி ரக்ஷணப்ரகாரத்தையும், ஆகர்ஷகமான அவயவஶோபையையும், அவயவஶோபையோடுகூடின ஆபரணஶோபையையும், விரோதிநிரஸநஸ்வபாவத்தையும், அபேக்ஷித ஸித்தியால்வந்த அத்யந்தோச்ச்ராயத்தையும், ஶேஷித்வபோக்யத்வாதியுக்தமான ஸர்வாத்மபாவத்தையும் அநுஸந்தித்து, ஏவம்பூதஸ்வபாவனான ஸர்வேஶ்வரன்விஷயத்தில் தமக்குப்பிறந்த நிரவதிகப்ராவண்யக்ருதமான பாரவஶ்யாதிஶயத்தாலே, ஆத்மீய பதார்த்தங்களெல்லாம் அவனிட்டவழக்காம்படி அவற்றில் ஸ்வாம்யநிவ்ருத்தி தமக்குப் பிறந்தபடியைக்கண்ட பரிவர் வித்தராய்ச் சொன்னபாசுரத்தை, நாயகன்பிரிவாற்றாத நாயகியினுடைய ஆபரணஶோபையோடு ஆரூப்யத்தோடு ஆத்மகுணத்தோடு வாசியற அழிந்துவருகிறபடியைக்கண்ட செவிலி இரங்கின பாசுரத்தாலே அருளிச்செய்கிறார்.

௯.—ஆறாந்திருவாய்மொழியில், கீழ் இவளுக்குப்பிறந்த தஶைமுற்றி வ்யஸநம் அதிஶயிக்கையாலே மோஹங்கதையாய், அதுபொறுக்கமாட்டாமையாலே இவளுடையதோழியும் மோஹிக்க, இத்தசையிலும் இவளை ஜீவிக்க விரகுகளை மநோரதிக்கையாலே தரித்திருக்கிற திருத்தாயார், இவளுடைய வலயாதிகள் காணக்காண ஶிதிலமாய்ப்போகிறபடியைக்கண்டு, அவற்றைத் தனித்தனியே சொல்லிக்கூப்பிடுகிறாள். நகரபத்தநாதிகள் வேவப்புக்கால், "அதுவிழுந்தது, உதுவிழுந்தது" என்னுமாபோலே, விரஹாக்நியாலே தன்மகள் இழந்தவற்றைச் சொல்லுகிறாள். கீழில் திருவாய்மொழியில்-அலாபதசையோபாதி, "கிடையாது" என்றாலும் விடமாட்டாதபடி தன்னுடைய மநோவாக்காயங்கள் இவ்விஷயத்திலே அதிப்ரவணமானபடி சொல்லிற்று; இதில் - அந்த அலாபத்தால் வந்த பாரவஶ்யத்தைச் சொல்லுகிறது.

ஈடு.—கீழ் இவளுக்குப்பிறந்த தசைமுற்றி வ்யஸநம் அதிசயிக்கையாலே மோஹங்கதையாய்க்கிடக்க, அதுகண்டு ஆற்ருளாய் இவளுடைய தோழியும் மோஹிக்க, இத்தசையிலும் இவளை ஜீவிப்பிக்க விரகுகளை மநோரதிக்கையாலே தரித்திருக்கிற திருத்தாயார் இவளுடைய வலயாதிகள் காணக்காண சிதிலமாகிறபடியைக்கண்டு, அவற்றைத் தனித்தனியே சொல்லிக்கூப்பிடுகிருள். ஓரோநகர பத்தநாதிகள் வேவப்புக்கால், "ஒரு மாடம் முறிந்தது, மாளிகை முறிந்தது" என்பாரைப்போலே. (விரஹாக்நியாலே தன் மகள் இழந்தவற்றைச் சொல்லுகிருள்). கீழ்த்திருவாய்மொழியில் அலாபதசையாய், "கிடையாது" என்ருலும் விடமாட்டாதபடி தம்முடைய மநோவாக்காயங்கள் அவ்விஷயத்திலே அதிப்ரவணமானபடிசொல்லிற்று; இதில், அந்த அலாபத்தால் வந்த பாரவஶ்யத்தைச் சொல்லுகிறது. "நெடுமாலென்றே நின்றுகூவுமால்" என்று தன் வ்யாமோஹத்தைக் காட்டியாயிற்று இவளையிப்படி விளைத்தது; பெரியவன் தாழநின்ருல் பொறுக்கவொண்ணாதிறே. "ராகவேணாஹயேதத்தே ஸந்தஃ" (ராகவேணுபயேதத்தே ஸந்தஃ) என்று இவன் தறைப்படும்படியிறே அவன் வ்யாமோஹம் இருப்பது.

(த்வராநுகுணமான அநுபவஅலாபத்தாலே ஆற்ருமைமுறுகி, கீழ்ச்சொன்னதசை கலங்கி, ஸம்பந்தஜ்ஞாநமும் தரிப்புக்கு உறுப்பாகையன்றிக்கே தளர்த்திக்கு உறுப்பாய்விட, உபாயாத்யவஸாய மித்தனையும் கலங்காமலிருந்து, ப்ராப்யஅலாபநிபந்தநமான பாரவஶ்யத்தாலே, *ஏருளுமிறையோனில் - தாம் "வேண்டா" என்று உபேக்ஷித்த ஆத்மாத்மீயங்களெல்லாம், தன்னடையே அழிந்து செல்லுகிறபடியை அநுஸந்திக்கிருர்.)

முதற்பாட்டு.

மாலுக்கு வையமளந்தமணாளற்கு
நீலக்கருநிற மேகநியாயற்கு
கோலச்சேந்தாமரைக் கண்ணற்குஎன்கோங்கல
ரேலக்குழலி இழந்ததுசங்கே.

ஆ.—எம்பெருமானுடைய ஆஶ்ரிதவாத்ஸல்யத்துக்கும், ஆஶ்ரிதார்த்தமான த்ரைலோக்யவிக்ரமணரூப திவ்யசேஷ்டிதத்துக்கும், ஸ்நிக்தமாயதிகம்பீரமாய் வார்ஷிக

மாலுக்குப்ரவேஶே; கீழ் - தோழிவார்த்தையாயிருக்க, இதில் - தாய்வார்த்தையாகைக்கு ஹேதுவேதென்கிற சங்கையிலே ஸங்கதி-கீழ்இவளுக்கு இத்யாதி. இதுக்கு த்ருஷ்டாந்தம் - ஓரோநகரம் இத்யாதி. 'சிதிலமாகிறபடியைக்கண்டு' என்றவநந்தரம், 'ஓரோநகரபத்தநாதிகள்' இத்யாதி வாக்யத்தை அநுஸந்திப்பது. நகரம் - ராஜதாநி. பத்தநம் - பேட்டை. "வேவப்புக்கால்" என்றதுக் கநுகுணமாக, விரஹாக்நியாலே தன்மகளிழந்தவற்றைச் சொல்லுகிருளென்று தார்ஷ்டாந்திகம் கண்டு கொள்வது. கீழ்த்திருவாய்மொழியும் இதுவும் - விஶ்லேஷமாயிருக்க, அதிற்காட்டில் இதுக்குவாசியேதென்ன - கீழ்த்திருவாய்மொழியில் இத்யாதி. இதுக்குஹேதுவேதென்ன - நெடுமால் இத்யாதி. அவன்வ்யாமோஹங்கண்டால் இவளுக்குஇப்படி ஈடுபடவேணுமோ? என்ன - பெரியவன் இத்யாதி. இத்தை ஸத்ருஷ்டாந்தமாகக்காட்டுகிருர் - ராகவேண இத்யாதி. "ராகவேணாஹயேதத்தே ஸந்ததோராவணாநுஜஃ। விபீஷணோமஹாப்ராஜ்ஞோ ஹ்ருதிம் ஸமேயிவாக்ஷ தகாண்டே, [கக-க].

மான காளமேகத்தினுடைய நிறத்தையும் குளிர்த்தியையும் பெருமையையும் அழகையுமுடைத்தான திருமேனிக்கும், மேகத்திலே அழகியதொரு தாமரைத்தடாகம்போலேயிருந்த திருக்கண்களுக்குந்தோற்று, அந்தநிரவதிகஸௌந்தர்யத்தையுடையனான எம்பெருமானையுங்கூடத் தோற்பிக்கும் திருக்குழலழகையுடையளான என் பெண்பிள்ளை, தன்னுடைய சங்கு இழந்தாளென்கிறார்.

ஒ.— முதற்பாட்டில், இவள் திருவுலகளந்தருளின எம்பெருமானுடைய குணசேஷ்டிதாதிகளிலே அகப்பட்டு வளையிழந்தாள்என்கிறாள். [மாலென்றுதொடங்கி]- ஆஸ்ரிதவிஷயத்தில் மிகவும்வ்யாமுக்தனாய் அதிமாநுஷசேஷ்டிதங்கள்பண்ணி ஆஸ்ரிதருடைய அபேக்ஷிதங்களை முடித்துக் கொடுத்த இச்செயலாலே இவளை அகப்படுத்தி இவளுக்குபோக்தாவானவனுக்கு.[நீலக்கருநிறமென்றுதொடங்கி]- அறநெய்த்துக்கறுத்த நிறத்தையுடைய மேவம்போலே ஸ்ரமஹரமானநிறத்தையும் அதினுடைய ஔதார்யாதிகளையும் உடையனாய் ஆஸ்ரிதருடைய அபேக்ஷிதம்முடித்துக் கொடுக்கப்பெற்ற ஹர்ஷப்ரகர்ஷத்தாலே அழகுபெற்ற திருக்கண்களையும் உடையவனுக்கு, விசேஷணந்தோறும் 'அவனுக்கு' என்கிறது, தனித்தனியே ஈடுபடுத்துகையாலே. [என்னென்று தொடங்கி] - ஏலம்போலே நறுநாற்றத்தைக் கமழாநின்ற குழலையுடைய என்மகள்.

ப.—முதற்பாட்டில், வ்யாமோஹகார்யமான வ்யாபாராதிகளையுடையவனுக்கு நிரதிஸயபோக்யமான வேஷத்தையுடைய பெண்பிள்ளை வளையிழந்தாளென்கிறாள்.

மாலுக்கு - ஆஸ்ரித வ்யாமோஹநிரூபிதஸ்வரூபனாய், (அந்தவ்யாமோஹமடியாக), வையம் - பூமியை, அளந்த - (வேறொருவர் அபிமாநியாதபடி) அளந்து அநந்யார்ஹமாக்கி, மணாளற்கு - அவ்வபதாந ப்ரகாசநத்தாலே தனக்கு போக்தாவாய், (அந்த போகவ்யாமோஹமடியாக), நீலம் - ஸ்நிக்தமாய், கரு - கறுத்த, நிறம் - நிறத்தையுடைத்தான, மேகநியாயற்கு - மேகத்தோடு ஸமாநந்யாயமான ஆகாரத்தையுடையனாய், (அந்தவ்யாமோஹப்ரகாசகமாய்), கோலம் - தர்ஸநீயாகாரமாய், செம் - சிவந்த, தாமரை - தாமரைபோலும், கண்ணற்கு - கண்ணையுடையனானவனுக்கு, என் - என்னுடைய, கொங்கு - தேனையுடைத்தாயுள்ள, அலர் - மலரையுடைத்தாய், ஏலம் - ஏலம்போலே ஸ்ரமஹரகந்தமான, குழலி - குழலையுடையவள், இழந்தது -, சங்கு - சங்குவளை. பதந்தோறும், அவனுக்கவனுக்கென்கிறது - தனித்தனியே அகப்படுத்துந் துறை என்கைக்காக; இப்படி மேலும் காண்பது.

இ.—முதற்பாட்டில், இவள் ஸ்ரீவாமநப்ராதுர்பாவத்தில் குணசேஷ்டிதாதிகளிலே அகப்பட்டு வளையிழந்தாள் என்கிறாள்.

[மாலுக்கு] - "நீ எனக்குவேண்டா" என்று அகன்று முடியப்புகுகிற தசையிலே தன்செல்லாமையைக் காட்டிப் பொருந்தவிட்டுக்கொண்ட வ்யாமோஹத்தை உடையவனுக்கு. அவன் தன்பிச்சைக்காட்டியாயிற்று இவளைப் பிச்சேற்றிற்று. [வையமளந்த மணாளற்கு] - உகவாதாரையுங்கூட, தன்னை இரப்பாளனாக்கித் தன்திருவடிகளின்கீழே யிட்டுக்கொண்ட வ்யாமோஹத்தாலே அநந்யார்ஹமாக்கித்தனக்குபோக்தாவானவனுக்கு. [நீலக்கருநிறமேகநியாயற்கு] - நெய்த்துக்கறுத்தநிறத்தையுடைய மேவுஸ்வபாவர்க்கு. ப்ரயோஜநநிரபேக்ஷமாகக் கொடுக்கையும், கொடுக்கப்பெறாதபோது உடம்புவெளுக்கை

யும், வ்யாமோஹமின்றிக்கே ஒழிந்தாலும் விடவொண்ணாத வடிவும் ஔதார்யமும் இருக்கிறபடி. [கோலச்செந்தாமரைக்கண்ணற்கு] - தர்ஶநீயமாய் வாத்ஸல்யத்தாலே சிவந்து விகாஸாதிகளை யுடைத்தான திருக்கண்களை யுடையவனுக்கு. "தாமரைத்தடங்கண் விழிகளின் அகவலைப்படுப்பான்" என்று கண்ணாலேயாயிற்று அகப்படுத்திக்கொண்டது விசேஷணந்தோறும் தனித்தனியே 'அவனுக்கு' என்று, தனித்தனியே அகப்பட்ட துறைகளைச் சொல்லுகிறாள். தன்மகள்மேல் பட்ட காமபாணங்களை எண்ணுகிறாள்காணுந்தாயார்! ஏலம்போல்கமழாநின்றுள்ள நறுநாற்றத்தையுடைய மயிர்முடியை யுடைய என்மகள். கொங்கு - பரிமளம். இவள் மயிர்முடி ஒன்றுக்கும் தோற்றுக் குமிழ்நீருண்ணுமவன்கிடீர் இவளை அழித்தான்; பங்களப்படைகொண்டு, தனிவீரஞ் செய்வாரை அழிக்குமாபோலே. [இழந்தது சங்கே] - இவளுக்குத்தோற்று அவன் இழக்குமத்தை இவள் இழந்தாள். சங்கு - வளை.

ஈடு.—முதற்பாட்டு. இவள் ஸ்ரீவாமநப்ராதுர்பாவத்தில் குணசேஷ்டிதங்களிலேயகப்பட்டு வளையிழந்தாளென்கிறாள்.

[மாலுக்கு] - மின்னிடைமடவாரிலே, நீ எனக்கு வேண்டா வென்ன, நீஎனக்கு வேணுமென்று தமோறி நின்றநிலையைக் காட்டியாயிற்று இவளை இப்பாடு படுத்திற்று. ஸர்வேஶ்வரனை உத்கர்ஷந்தோற்ற நின்றானாகில் இப்பாடுபடாள்கிடீர்! (வ்யாமோஹத்தை யுடையவனுக்கு). [வையமளந்தமணாளற்கு] - உகவாதாரையுங்கூட விடமாட்டாத வ்யாமோஹம். "அழித்தா யுன்திருவடியால்" என்று இவளையும் தன்காற்கீழேயிட்டுக் கொண்டானிறே. அச்செயலுக்குஎழுதிக்கொடுத்தாள் இவளொருத்தியுமேயிறே; "மூவடி மண்கொண்டளந்த மன்னன்சரிதைக்கே மாலாகிப் பொன்பயந்தேன்" என்கிறாள்: அவனிரந்து மண்பெற்றான், இவளுகந்து பொன்பெற்றாள். உகப்பாலே பெறுமது உரைபெற்றிருக்குமே. [மணாளன்]- போக்தா. [நீலக்கருநிறமேகநியாயற்கு] - நெய்த்துக்கறுத்தநிறத்தை யுடைய மேகஸ்வபாவற்கு. நியாயம்-ஸமம், ஒப்பு. ப்ரயோஜந நிரபேக்ஷமாகக் கொடுக்கை

முதற்பாட்டு.—மாலுக்கு இத்யாதி. "வையமளந்தமணாளற்கு, இழந்ததுசங்கு" என்கிற பதங்களைக்கடாக்ஷித்தவதாரிகை - இவள் ஸ்ரீவாமந இத்யாதி.

"மாலுக்கு" - வ்யாமுக்தனுக்கு. அந்த வ்யாமோஹந்தானேதென்ன - மின்னிடை இத்யாதி. வ்யதிரேகித்துபாவம் - ஸர்வேஶ்வரனை இத்யாதி. "வையமளந்த" என்றதுக்கு பாவம் - உகவாதாரையும் இத்யாதி வாக்யத்வயம். அதாவது - விமுகரான சேதநரையும் விடமாட்டாதே திருவுலகளந்தருளி யவர்களை ஶேஷமாக்கிக்கொண்டாற்போலே, ப்ரணயகோபத்தாலே விமுகையான இவளையும் "அழித்தாயுன் திருவடியால்" என்று அந்தமறத்தை மாற்றித் தனக்குஶேஷமாக்கிக்கொண்டானென்றபடி. "மணாளற்கு" என்றதுக்குபாவம் - அச்செயலுக்கு இத்யாதி. மணாளன் - நாயகன். அப்படி எழுதிக்கொடுத்திருப்பளோ? என்ன - மூவடி இத்யாதி. மஹாபலிபக்கலிலே மூவடி மண் இரந்துகொண்டளந்த மன்னனுடைய செயலுக்கே வ்யாமுக்தையாய் விவர்ணையானேன் இத்யர்த்தம். திருமொழி ஒன்பதாம்பத்து நாலாந்திருமொழி இரண்டாம்பாட்டு. "முன்னங்குறளுருவாய்" இத்யாதி. இப்பாசுரத்துக்கு ரஸோக்தியாகபாவம்-அவனிரந்துஇத்யாதி வாக்யத்வயத்தாலே. உரைபெற்றிருக்கையாவது, உரையென்று - மாற்றாய், மாற்றேறி யிருக்குமென்னுதல்; உரையென்று - கொண்டாட்டச்சொல்லாய், லௌகிகருடையகொண்டாட்டத்தை யுடைத்தாயிருக்கும் என்னுதல். "நியாயம்" என்று ஸ்வபாவமாக அருளிச்செய்து, அர்த்தாந்தரம் - நியாயம் ஸமம்ஒப்பு என்று. ஸ்வபாவமான போது, மேகம்போன்ற ஔதார்யாதிகளையுடையவற்கென்றும், ஒப்பானபோது, மேகம்போன்றவடிவை யுடையவற்கென்றும் அர்த்தங்கண்டுகொள்வது. மேகஸ்வபாவமேதென்ன - ப்ரயோஜந இத்யாதி.

யும், கொடுக்கப்பெறாதபோது உடம்பு வெளுக்கையும். வ்யாமோஹமின்றியே யொழிந்தாலும் விடவொண்ணாத வடிவும் ஔதார்யமுமிருக்கிறபடி. [நீலக்கருநிறமேகநியாயற்கு]- மஹாபலியைவடிவைக்காட்டிஅபஹரித்தாற்போலேகாணும் இவளையும் வடிவைக்காட்டி அபஹரித்தபடி. இவள் பிச்சேறுகைக்கிட்ட மை யிருக்கிறபடி. *மைப்படிமேனியிறே. [கோலச் செந்தாமரைக்கண்ணற்கு] - தர்ஶநீயமாய், வாத்ஸல்யத்தாலே சிவந்து, விகாஸாதிகளையுடைத்தான திருக்கண்களையுடையவனுக்கு. "தாமரைத்தடங்கண்விழிகளின் அகவலைப்படுப்பான்"என்று கண்ணாலேயாயிற்று அகப்படுத்திக்கொண்டது. விசேஷணந்தோறும் அவனுக்குஎன்று தனித்தனியே யகப்பட்ட துறைகளைச் சொல்லுகிறாள். [மால்இத்யாதி]-தன்மகள்மேல்பட்ட அம்புகளையெண்ணுகிறாள்; இதோருகுத்து, இதோரு வெட்டு, இதோரம்பு என்று. [என்கொங்கலரேலக்குழலி] - மதுஸ்யந்தியாநின்றுள்ள பூவையுடைத்தாய், நறுநாற்றத்தையுடைத்தான குழலையுடைய என் பெண்பிள்ளை. கொங்கென்பது - தேன். அலரென்பது - பூ. ஏலம் - நறுநாற்றம். இவள் மயிர்முடியொன்றுக்குந் தோற்றுக் குமிழிநீருண்ணுமவன்கிடீர் இவளையழித்தான்! பங்களப்படைகொண்டு, தனி வீரம் செய்வாரை யழிக்குமாபோலே. [இழந்ததுசங்கே] - இவள் மயிர்முடிகண்டு அவனிழக்கக்கடவத்தை இவ ளிழந்தாள். சங்கு - வளை. (௧)

நெய்த்து - பளபளத்து. "மாலுக்கு"என்ற பதத்திலேநோக்காக அர்த்தத்வயத்தையுங்கூட்டிபாவம் - வ்யாமோஹமின்றியே இத்யாதி. "வையமளந்தமணாளற்கு" என்றதோடே "நீலக்கருநிறம்" இத்யாதியைக்கூட்டிபாவம் - மஹாபலியை இத்யாதி. "நீலக்கருநிறம்"என்ற விசேஷணத்துக்கு பாவம் - இவள்பிச்சேறுகைக்கு இத்யாதி. திருமேனி கறுத்திருக்குமோ ? என்ன - மைப்படிமேனியிறே என்று. அஞ்சநத்தின்வடிவுபோலேயிருக்கிற திருமேனி இத்யர்த்தஃ. கண்ணைச்சொன்னதுக்கு பாவம் - தாமரை இத்யாதி. ஓரிடத்திலே, "அவனுக்கு" என்னவமைந்திருக்க, ப்ரதிபதம் ஷஷ்ட்யந்தமாகச்சொன்னதுக்குபாவம் - விசேஷணந்தோறும் இத்யாதி. அதாவது - "மாலுக்கு" என்று தொடங்கி - வ்யாமோஹகுணத்திலும், சேஷ்டிதத்திலும், விக்ரஹத்திலும், கண்ணழகிலும் தனித்தனியே யகப்பட்டதுறைகளைச்சொல்லுகிறாளென்றபடி. "மாலுக்கு" என்றுதொடங்கி, "கோலச்செந்தாமரைக்கண்ணற்கு"என்னுமளவாக இவற்றைச்சரங்களாகரூபிக்கிறார் - தன்மகள்மேல் இத்யாதி. ரீத்யந்தரேணநிரூபணம் - இதோருகுத்து இத்யாதி. அம்பென்றது - கண்ணை. இரண்டாலும் - குணசேஷ்டிதங்கள் ஈடுபடுத்தும் என்றபடி. நறுநாற்றம் - ஸுகந்தம். "மாலுக்கு" என்றுதொடங்கி - குணம், சேஷ்டிதம், வடிவழகு, அவயவஸௌந்தர்யம், என்றுஅநேகத்தைச்சொல்லி; "ஏலக்குழலி" என்று - இவளுக்குஒன்றுசொன்னதுக்குபாவம் - இவள் மயிர்முடி இத்யாதிவாக்யத்வயத்தாலே. பங்களப்படை - கூளப்படையான கூட்டுப்படை. பங்களப்படையென்றது - "மாலுக்கு" இத்யாதிபாற்சொன்னகுணாதிகளை. தனிவீரம்செய்வாரென்றது - * கொங்கலரேலக்குழலியை. "தனிவீரம் செய்வாரைப் பங்களப்படைகொண்டு அழிக்குமாபோலே" என்று அந்வயிப்பது. "கொங்கலர்" இத்யாதி விசேஷணங்களுக்குபாவம் - இவள் மயிர்முடிகண்டு இத்யாதி. (௧)

இரண்டாம் பாட்டு.

சங்குவில்வாள்தண்டு சக்கரக்கையற்கு
செங்கனிவாய்ச் செய்யதாமரைக்கண்ணற்கு
கொங்கலர்தண்ணந்துழாய் முடியானுக்குஎன்
மங்கையிழந்தது மாமைநிறமே.

ஆ.—(சங்கு.) - அளந்தருளுகிறபோது வளர்ந்த ரதாங்க சங்க சார்ங்காதி திவ்யாயுதங்களை ஏந்தின வழகுக்கும், ஸ்வசரணநளிந யுகளஸம்ஸ்பர்சோஜ்ஜீவிதமான ஸர்வாத்மாக்களையுங்கண்ட ஹர்ஷத்தாலே புதுக்கணித்த திருப்பவளத்துக்கும் திருக்கண்களுக்கும், த்ரைலோக்யவிக்ரமணுபாஸிதஸ்ரமாபநோதநார்த்தமாக *அயர்வறுமமரர்கள் அதிபரிமளதுலஸீமாலைகளைக்கொண்டு ஒப்பித்தருளின அழகுக்குந்தோற்று, என்மங்கை மாமை நிறமிழந்தாளென்கிறாள்.

ஒ.—இரண்டாம் பாட்டில், திருவுலகளந்தருளின எம்பெருமானுடைய ஸ்ரீபஞ்சாயுத தாரணத்தாலேவந்த அழகிலே அகப்பட்டு என்மகள் தன்னுடைய அழகிய நிறத்தை இழந்தாள் என்கிறாள் [சங்கென்று தொடங்கி] - திருப்பவளத்தில் அழகும் திருக்கண்களில் அழகும்போலே தகுதியான ஸ்ரீபஞ்சாயுதங்களைத் திருக்கையிலே தரித்த அழகையுடையவனுக்கு. இவை ஸர்வாயுதங்களுக்கும் உபலக்ஷணம். [கொங்கலர்] - பரிமளம்மிகுகை.

ப—அநந்தரம், போக்யமான ஆயுதாதிபூர்த்திகளையுடையவனுக்குத் தன் நிறத்தையிழந்தாளென்கிறாள்.

சங்கு வில் வாள் தண்டு சக்கரம் - த்ரைவிக்ரமாபதாநத்தில் உச்ச்ரிதமாய்த் தோன்றின ஸ்ரீபஞ்சாயுதத்தையுடைய, கையற்கு - திருக்கையையுடையனாய், (தாத்காலிகபோக்தாக்களுக்கு அநுபாவ்யமாய்), செம் - சிவந்த, கனி - கனிபோலேயிருக்கிற, வாய்-திருவதரத்தையும், செய்ய - சிவந்த, தாமரை - தாமரைபோலும், கண்ணற்கு - கண்ணையுமுடையனாய், கொங்குஅலர் - பரிமளவிகாஸியாய், தண் - ஸ்ரமஹரமாய், அம்- தர்ஸநீயமான, துழாய் - திருத்துழாயாலே யலங்க்ருதமான, முடியானுக்கு-திருமுடியை யுடையனானவனுக்கு, என்மங்கை- அவன்ஈடுபடும் பருவத்தையுடைய என்பெண்பிள்ளை, இழந்தது - இழந்தது, மாமைநிறம் - பெண்மைக்குஅஸாதாரணமான மாமைநிறத்தை. கொங்கு - தேனுதல், பரிமளமாதல்.

இ—இரண்டாம் பாட்டில், திருவுலகளந்தருளினபோதை திவ்யாயுதங்களின் அழகிலே அகப்பட்டுத் தன்னுடைய அழகியநிறத்தை இழந்தாள் என்கிறாள்.

[சங்குவில்வாள் இத்யாதி] - ஸ்ரீபஞ்சாயுதங்களின் சேர்த்தியழகிலேயாயிற்று இவள் ஈடுபட்டது. இவளுடைய நிறங்கொள்ளுகைக்கு எத்தனை ஆபரணம்வேணும்? ஸ்மிதமும் நோக்கும்போலே ஆயுதச்சேர்த்தியும் தகுதியாய் இருக்கிறபடி. [கொங்கலர்] - பரிமளம் ப்ரவஹிக்கிற குளிர்ந்த திருத்துழாய் வளையத்தை யுடையவனுக்கு. ஆபரணம்! அவயவங்கள்! ஒப்பனை! எத்தனை செயல்வேணும், இவள் நிறங்கொள்ளு

கைக்கு? [என்மங்கை] - தன்பருவத்தாலே இவற்றையடங்கத் தோற்பிக்குமவள் கிடீர். மாமை என்றும், நிறம் என்றும் - பர்யாயம்; இவ்விடத்தில் நிறம்என்றது அழகாய், நிறத்தில் அழகை இழந்தாள்.

ஈடு.—இரண்டாம்பாட்டு. திருவுலகளந்தருளினபோதை திவ்யாயுதாதிகளில் அழகிலேயகப்பட்டுத் தன்னுடைய அழகிய நிறத்தை யிழந்தா ளென்கிருள்.

[சங்குவில்த்யாதி] - ஸ்ரீ பஞ்சாயுதங்களின் சேர்த்தியழகிலேயாயிற்று இவள் ஈடுபட்டது. இவளுடைய ஓராபரணம் வாங்குகைக்கு எத்தனையாபரணம் பூண்டு காட்டினுன்? கைக்குமேல்ஐந்துங்காட்டிக்காணும் இவளுடையஆபரணம் வாங்கிற்று. ஆபரண கோடியிலும் ஆயுதகோடியிலும்இருபுடைமெய்க்காட்டிறே இவைதாம்! [செங்கனிவாய்ச் செய்யதாமரைக் கண்ணற்கு] - கையிலே யொன்றையரித்துக்காட்டி ஆகர்ஷிக்கவேண்டி யிருந்ததோ? ஸ்மிதமும் நோக்குமமையாதோ நலிகைக்கு? [கொங்கலரித்யாதி] - மயஸ்யந்தியான திருத்துழாய்மாலையை, ஆதிராஜ்யஸூசகமான திருவபிஷேகத்திலே யுடைய வனுக்கு. வைத்த வளையத்தைக் காட்டிக்காணும் இவள்நிறத்தை யபஹரித்தது. ஆபரண சோபை அவயவசோபை ஒப்பனையழகு, எத்தனை செய்யவேணும் இவள்நிறங் கொள்ளுகைக்கு. [என்மங்கை[- தன்பருவத்தாலே இவற்றையடையத் தோற்பிக்குமவள் கிடீர் நிறமிழந்தாள்! மாமைநிறம் - அழகியநிறம். மாமை - அழகு. அழகிய நிறத்தை யிழந்தாள். (உ)

மூன்றும் பாட்டு.

நிறங்கரியானுக்கு நீடுலகுண்ட
திறங்கிளர்வாய்ச் சிறுக்*கள்வரவர்க்கு
கறங்கியசக்கரக் கையவனுக்குஎன்
பிறங்கிருங்கூந்தல் இழந்ததுபீடே.

ஆ.—(நிறங்கரியானுக்கு.)-ஸர்வலோகங்களையும் அமுதுசெய்தருளின சுவடு காணலாயிருந்த திருப்பவளத்தில் அழகுக்கும், ஸகலஜந மநோநயநஹாரியான அந்தச் சிறிய வடிவு தனக்கும், திருவடிவினுடைய நீலவநம்போலே யிருந்த நிறத்துக்கும்,

இரண்டாம்பாட்டு.—சங்கு இத்யாதி. மேலிற்பாட்டுக்கள்தோறும் ஒரோவவதாரங்கள் சொல்லுகையாலே, ததநுகுணமாக இப்பாட்டையும் - கீழிற்பாட்டில் அவதாரத்தோடேசேர்த்து, "சங்கு வில்வாள்" இத்யாதியைக்கடாக்ஷித்தவதாரிகை - திருவுலகு இத்யாதி.

ஸ்மிதம் - இவளுடைய இத்யாதி.ஓராபரணமென்றது- * மாமைநிறத்தை. சாடு - கைக்கு மேல் இத்யாதி. கைக்குமேல்ஐந்துங்காட்டியென்றதுக்கு - திருக்கைகளிலிருக்கிற பஞ்சாயுதங்களைக் காட்டியென்று ஸ்வபாவார்த்தம்;குறடுகீறியாடுகிறவளவிலேஅஞ்சுக்கு இலக்காயொருபருக்கையிருந்தால், "கைமேலேயஞ்சுபோட்டுவெட்டுகிறேன்" என்றுஒட்டமோடி அப்படியேபோகட்டு அத்தைவாங்குகை யென்று சாடுவுக்குஅர்த்தம். இவற்றுக்குஆயுதத்வயமொழிய ஆபரணத்வமுண்டோ? என்ன - ஆபரண கோடியிலும் இத்யாதி. இருபுடைமெய்க்காட்டு - உபயகோட்யந்வயஃ. உபயஸேநையிலும் ஆள்காட்டுகையென்று ஸப்தார்த்தம். அலருகை - ப்ரவஹிக்கை. "சங்கு வில்வாள்" என்றுதொடங்கி மூன்றுக்கும் பேக்ஷகயந பூர்வகமாகபாவம் - ஆபரணசோபை இத்யாதி. (உ)

---

* 'கள்வனவற்கு' என்றுவழங்குவர்.

ப்ரணத பரித்ராண தத்விரோதிநிரஸநங்களிலே எப்போதும் ஸத்வரமான திருவாழியை யேந்தின திருக்கையினழகுக்குந் தோற்று, நீலரத்நங்களுடைய ஒளிகள் திரண்டாற்போலே விளங்குகிற திருக்குழலையுடையவளான என்பெண்பிள்ளை, தன்பெருமையை யிழந்தாளென்கிறாள்.

இ. — ஏழாந்திருவாய்மொழியில், கீழ் மோஹங்கதையான பிராட்டி, "சிரேணஸம்ஜ்ஞாம் ப்ரதிலப்ய" என்று காலமுணர்த்த உணர்ந்து, அநந்தரம் அவனைக்காணப்பெறாமையாலே, அவனைக்கண்டல்லது தரிக்கமாட்டாத தசைபிறந்து, பந்துக்களையும் தன்னுடைய லீலாபரிகரங்களையும் பொகட்டுத் தன்மர்யாதைகளையும் அதிலங்கித்துத் தனிவழியே திருக்கோளூரேறப்போனாள்; திருத்தாயார் "வளையிழந்தாள், நிறமிழந்தாள்" என்று கூப்பிட்டு ஶோகநித்ராவிஷ்டையாய்க் கிடந்தவள் உணர்ந்து, இவளைத் தன்மாளிகையில் காணாமையாலே "எங்கேபோனாள்" என்று விசாரித்து, இங்கிருந்தபோதும் அவனையே போதுபோக்கியிருக்கக் காண்கையாலே "திருக்கோளூரிலே போனாள்" என்று நிஶ்சயித்து, "ம்ருதுப்ரக்ருதியாய் அதின்மேலே விரஹதாபமுடையளா யிருக்கிற இவள், அவ்வூர் தனிவழியே எங்ஙனே போகிறாள்; சென்றாலுந்தான், அவ்வூரையும் அவனையுங்கண்டு எங்ஙனே உடைகுலைப்படுகிறாள்" என்று, தன்மகள அவஸாதத்தாலும், தான் அவளைப்பிரிகையாலும் மிகவும் நோவுபட்டுக் கூப்பிடுகிறாள். இங்குப்பொருந்தாமையும், அங்குப்புக்கல்லது தரிக்கமாட்டாமையும், தனிவழியே போகையும், பழிக்கஞ்சாமையும், இவையிறே கீழில் திருவாய்மொழியிற் காட்டில் இதுக்கு ஏற்றம். அவனைப்பார்த்திலள், தன்னைப்பார்த்திலள், என்னைப்பார்த்திலள், தனிவழியே போய் இத்தையெல்லாம் கடலிலே கவிழ்த்தாள் என்கிறாள். "அற்பசாரங்களவை சுவைத்தகன்றொழிந்தேன்" என்று ஶப்தாதிவிஷயங்களிலே கைகழியப்போந்தேன் என்றவர், ஸ்த்ரீத்வவிஷயத்திலே கைகழியப்போனபடி சொல்லுகிறது. நித்யஸித்தருடைய யாத்ரை ஸம்ஸாரத்திலே இவர்க்குப் பிறந்தபடி சொல்லுகிறது.

ஈடு.—கீழில் திருவாய்மொழியிலே, மோஹித்துக் கிடக்கிற தன் மகளுடைய அவஸாதத்தைக்கண்ட திருத்தாயாரானவள், "அதுபோயிற்றது, இதுபோயிற்றது" என்று அவன் திருநாமத்தைச் சொல்லக் கூப்பிட்டு இவள்தானும் மோஹித்தாள்; திருநாமப்ரஸங்கத்தாலே பெண்பிள்ளை உணர்ந்தெழுந்திருந்து புறப்பட்டுத் திருக்கோளூர் ஏறப்போனாள்; திருத்தாயாரும் வாஸனையாலேயுணர்ந்து படுக்கையைப் பார்த்தாள்; வெறும்படுக்கையாய்க் கிடந்தது; இனி, இவள் என் வயிற்றிற்பிறப்பாலும், தன் ப்ரக்ருதியாலும், இங்கிருந்தநாள் தேஹயாத்ரை இருந்தபடியாலும் இவள் திருக்கோளூரேறப் புறப்பட்டுப்போனாள் என்று அறுதியிடுகிறாள். வளையல்களெல்லாம் இழந்தாளாகில் இவள் தன்னை நமக்கிழக்க வேண்டாவிறே என்றிருந்தாள், கீழிற்றிருவாய்மொழியில். இத்திருவாய்மொழியில், இவள் தன்னை

உண்ணுஞ்சோறு ப்ரவேஶம்: கீழிற்றிருவாய்மொழியிலே, ஸ்வதசையைத் திருத்தாயார் பேசும்படி மோஹங்கதையானவள், இத்திருவாய்மொழியிலே, ஸந்நிஹிதையான திருத்தாயார் அறியாதே திருக்கோளூரேறப்போனபடி எங்ஙனே? மோஹங்கதையான அவளுணர்ந்தே போகவேணுமே? அந்த வுணர்த்திக்குத்தான் ஹேதுவேது? என்கிற ஶங்கையிலே யருளிச்செய்கிறார் - கீழிற்றிருவாய்மொழியிலே இத்யாதி. 'திருநாம ப்ரஸங்கத்தாலே' என்கிற விடத்திலே - "ஸா ராமஸங்கீர்த்தநவீதஶோகா" இத்யாத்யநுஸந்தேயம்: மோஹித்த திருத்தாயாருணருகைக்கு ஹேதுவேதென்ன - திருத்தாயாரும் இத்யாதி. "சிரேணஸம்ஜ்ஞாம் ப்ரதிலப்யசைவ" என்கிறபடியே வாஸனையாலே என்றபடி. திருக்கோளூரேறப்போனமையை எங்கொண்டறுதியிடுகிறாள்? என்ன - இனி யிவள் இத்யாதி. "என்னுடைய" என்றத்தைப்பற்ற - என் வயிற்றிற்பிறப்பாலும் என்றது. "என்" என்றது - திருக்கோளூரிலே அதிப்ராவண்யமான என்னுடையவென்றபடி. 'தன் ப்ரக்ருதியாலும்'

யப் இழந்தோமென்று கூப்பிடுகிறாள். ஆளவந்தார் கோஷ்டியிலே "*உண்ணுஞ்சோற்றிற் பிராட்டிக்கோ*கள்வன் கொல்லிற் பிராட்டிக்கோ அஞ்சவேண்டுவது?" என்று கேட்க, "இருவராய்ப் போனவர்களுக்கு வயிறெரியவேணுமோ? தனிவழியே போனவளுக்கன்றோ வயிறெரிய வேண்டுவது!" என்றிருந்த முதலிகள்சொல்ல, "அங்ஙனன்று காணுங்கோள்! இருவராய்ப் போனவர்களாகையாலே, இருவர்க்கும் அஞ்சவேணும்; தனியே போனவளுக்கொரு பயமுண்டோ?" என்றருளிச்செய்தார். அதுக்கடி - இருவரும் இருவர்க்கும் ஊமத்தங்காயாய், கடித்ததும் ஊர்ந்ததும் அறியார்கள்: இவளங்கே புக்கல்லது பரியாள் என்று கருத்து. "*அள்ளலம்பூங்கழனி யணியாலிபுகுவர்கொலோ! அன்றியே, லங்காத்வாரத்திலே புகுவர்கொலோ!" என்றிறே அங்கு வயிறுபிடி. ஆனாலும், எங்கேனும்போகிலும் இருவராயல்லது இராது அங்கு; "தனியேபோன இவளேன்படுகிறாளோ?" என்று மிகவும் நொந்து கூப்பிடுகிறாள் இவளுடைய திருத்தாயார்.

"அற்பசாரங்களவை சுவைத்தகன்றொழிந்தேன்" என்கிறபடியே "பகவத் கோஷ்டிக்கு இனி ஆளாகமாட்டாராகாதே!" என்னும்படி பப்தாதிகளிலே கைகழிந்த இவர் "ஸம்ஸாரிகளுக்கு இனி ஆளாகமாட்டார்" என்னும்படி *நாட்டாரோடு இயல்வொழிந்து * கொள்ள மாளாவின்ப வெள்ளத்தைப் புஜிக்கக் கைகழிந்தபடி சொல்லுகிறது. நரகாவஹமான விஷயத்தைப்பற்றிப் பிறர் அறியாமே போகக்கடவ இவர், ஸ்வரூபாநு

என்றது - "இளமான்" என்றவிடத்தில், இளமையாலே மார்த்தவத்தைச்சொல்லி, அத்தாலே தூரப்போகமாட்டாத ம்ருதுப்ரக்ருதியாலும் என்றபடி. தேஹயாத்ரையிருந்தபடியாலுமென்றது - "உண்ணுஞ்சோறு" இத்யாதியைக்கடாக்ஷித்து, அறுதியிடுகிறாளென்றது - "திண்ணம்" என்றதைப்பற்ற.

கீழ்த்திருவாய்மொழியிலும் ஆற்றாமையுண்டே, அதில் இதுக்கு வாசியேதென்ன - வலயாதிகள் இத்யாதி. இத்திருத்தாயாருக்கு மகளைப்பிரிந்த துக்கமும் தனிவழிபோன துக்கமும் இரண்டும் உண்டாகையாலே, முதல் பிரிவாலேவந்த துக்கத்தைக் கீழருளிச்செய்து, தனிவழி போகையாலேவந்த துக்கத்துக்கு ஸூசக ஸம்வாதம் - ஆளவந்தார் இத்யாதி. ஊமத்தங்காயாயென்றது - ஊமத்தங்காயானது ப்ராந்திஜநகமாமாபோலே, அந்யோந்ய வைலக்ஷண்யங்களாலே யொருவர்க்கொருவர் ப்ராந்திஜநகராயென்றபடி; "அகலகில்லேனிறையும்," "பத்தாபணிமலர்மேல் பாவைக்கு" என்னக்கடவதிறே. அங்கே புக்கல்லது பரியாளென்றது - "திண்ணம்" என்றதைப்பற்ற. "இருவருங்கூடப் போகையாலே இருவர்க்கு மஞ்சவேணும்" என்னுமதுக்குத் திருமொழியில் ஸூசகபதமேதென்ன - அள்ளலம் இத்யாதி. "கொலோ" என்றது - ஸம்ஶயத்தாலே. இங்குத்தையிலே ப்ரகரணத்துக்குச் சேர முதலிகள் ஸாவாஹத்தை யங்கீகரித்தருளிச்செய்கிறார் - ஆனாலும் இத்யாதி. 'அள்ளலம்பூங் கழனியணியாலிபுகுவர்கொலோ' - அழகிய பூவையுடைத்தான கழனியையுடைய அழகிய திருவாலியிலே புகுவார்களோவென்றபடி. திருமொழி மூன்றாம்பத்து ஏழாந்திருமொழி, "கள்வன்கொல்" இத்யாதி. இத்திருவாய்மொழியில் தாயார்முதலான பந்துக்களையும் போகோபகரணங்களையும் விட்டுப்போனதுக்கு ஸ்வாபதேஶம் - அற்பசாரங்கள் இத்யாதிவாக்யத்ரயத்தாலே. விஷயாநுபவத்துக்கு அல்பத்வம், நரகாவஹத்வம், குணஹீநத்வம், என்று மூன்று தோஷங்களுண்டாகையாலே, அதில்ப்ரதமம், இவற்றினுடைய அல்பத்வத்தையும் பகவத்விஷயத்தினுடைய அபரிமிதத்வத்தையும் அருளிச்செய்கிறார் - அற்பசாரங்கள் இத்யாதி. அத்யல்பமான ஸாரத்தையுடைத்தான நாநாவிதக்ஷுத்ரவிஷயங்களை யநுபவித்தது அதடியாக வுன்னைவிட்டுப்போனேன் இத்யர்த்தம். அநந்தரம், இவற்றினுடைய நரகாவஹத்வத்தையும் பகவத்விஷயத்தினுடைய ஸ்வரூபாநுரூபதையையும் அருளிச்செய்கிறார் - நரகாவஹமான இத்யாதி. அநந்தரம், இவற்றினுடைய குணஹீநதையையும் பகவத்

ரூபமான விஷயத்தைப்பற்றிப் பிறர் அறியாமே போம்படியாய் விழுந்தது. க்ஷுத்ரவிஷயத்தைப்பற்றிப் பழிக்கஞ்சாதே போகக்கடவவிவர், குணாதிக விஷயத்தைப்பற்றிப் பழிக்கஞ்சாதபடியானுர். "என்னுடைமை புக்கவிடத்திலே நானும்போய்ப் புக்கல்லது நில்லேன்" என்கிறாள்; "லக்ஷ்மணேநகதாம்கதிம்" (லக்ஷ்மணேநகதாம்கதிம்) என்கிறபடியே "ஸர்வாந்போகாந் பரித்யஜ்ய" (ஸர்வாந்போகாந் பரித்யஜ்ய) - தான் பண்டு விரும்பியிருக்கும் அவற்றோடு பெற்றவர்களோடு வாசியறப் போகட்டுப்போனாள். "பரித்யஜ்ய" - "மீண்டும் இவற்றிலே நகைபண்ணும்" என்று தோற்றுதபடிவிட்டாள். "பர்த்ருஸ்நேஹபலாத்க்ருதா" (பர்த்ருஸ்நேஹபலாத்க்ருதா)-ஒரு விஷயத்தில் ஸ்நேஹமானது எல்லாவற்றையும் விடப்பண்ணுமாகாதே; ஸ்வவசாத்தாலே போனாளென்றுகிடீர். "அசிந்தயித்வாதுஃகாநி" (அசிந்தயித்வாதுஃகாநி) - விட்டவற்றை நினையாவிட்டால், போய்ப்புகுகிறவிடத்தில் மிறுக்கைத்தான் நினையாநின்றாளோ? இவள் பெருமாளையொழியத் தன்னைக்காணிலிறே துஃகாநுஸந்தானம் பண்ணவல்லளாவது. "ப்ரவிஷ்டாநிர்ஜ்ஜநம்வநம்" [ப்ரவிஷ்டாநிர்ஜ்ஜநம்வநம்] - "போகத்துக்குஏகாந்தஸ்த்தலம்" என்னுமதுவேகிடீர் இவள் நெஞ்சில்பட்டது. "புத்ரத்வயவிஹீநம்தத்" [புத்ரத்வயவிஹீநம்தத்]- சக்ரவர்த்தி, பிள்ளைகளிருவரையும் தேடிப்போர நொந்தான். "ஸ்நுஷயாசவிவர்ஜிதம்" - (ஸ்நுஷயாசவிவர்ஜிதம்) - "மீண்டும் இவ்விடத்தை விரும்புவர்கள்" என்று நினை

விஷயத்தினுடைய குணாதிக்யத்தையும் அருளிச்செய்கிறார் - க்ஷுத்ரவிஷயத்தை இத்யாதி: என்று, மூன்றுவாக்யத்துக்கும் பேதங்கண்டுகொள்வது. 'கொள்ளமாளாவின்பவெள்ளம்' அநுபவிக்க எல்லை காணவொண்ணாத ஆநந்தஸமுத்ரமித்யர்த்தஃ. க்ஷுத்ரவிஷயத்தையென்றது - குணஹீநவிஷயத்தையென்றபடி. பெண்பிள்ளைவிட்டுப்போனாளாகில் இனியிவள்செய்வதேதென்ன - என்னுடைமை இத்யாதி. உடைமையென்றது - மகளை. புக்கல்லது நில்லேனென்றது - "செல்வவைத்தனள்" என்றதின் இரண்டாமர்த்தத்தைப்பற்ற. பெருமாள் "இளையபெருமாள் போனவழியேபோவேன்" என்றாற்போலேஎன்று இதுக்குத்ருஷ்டாந்தம்-லக்ஷ்மணேந இத்யாதி. "ப்ரவேஶய தஸம்ஹாராநுரோஹாத்ருதாஞாத்யோயயா । கஶ்சேத்வாஹம்கதிஷ்யாமி லக்ஷ்மணேநகதாம்கதிம்" இத்யுக்தம் ஸ்ரீராமாயணே. தாயார்முதலானவற்றைவிட்டுப் போனதுக்குத்ருஷ்டாந்தம் - ஸர்வாந் இத்யாதி. "ஸர்வாந்போகாந் பரித்யஜ்யபர்த்ருஸ்நேஹபலாத்க்ருதா । அசிந்தயித்வாதுஃகாநி ப்ரவிஷ்டாநிர்ஜ்ஜநம்வநம்" இதி ஸுந்தரகாண்டே ஹநுமான். * ஸர்வசப்தத்துக்கு ஸங்கோசமில்லாமையாலே பாவம் - தான்பண்டு இத்யாதி. உபசர்க்கார்த்தம் - மீண்டும் இத்யாதி. இப்படி ஸமாஸமாகவிடுகைக்கடியருளிச்செய்கிறார் - ஒருவிஷயத்தில் இத்யாதி. "பலாத்க்ருதா" என்றதுக்கர்த்தம் - ஸ்வவசாத்தாலே இத்யாதி. மிறுக்கை - துஃகத்தை. நினையாமைக்கு ஹேதுவேதென்ன - இவள்பெருமாளை இத்யாதி. "நிர்ஜ்ஜநம்" என்கிறது, ஹேதுகர்ப்பவிசேஷணமென்று விவக்ஷிதார்த்தம் - போகத்துக்கு இத்யாதி. இவள் புறப்பட்டுப்போனபின்பு திருமாளிகை எப்படியிருந்தது? என்ன, த்ருஷ்டாந்தம் - புத்ரத்வய இத்யாதி. "புத்ரத்வயவிஹீநம்தத்ஸ்நுஷயாசவிவர்ஜிதம் । அபஶ்யத்பவநம்ராஜா நஷ்டசந்த்ரமிவாம்பரம்" இத்யயோத்யாகாண்டே. இஸ்ஸ்லோகத்துக்கெல்லாம் பாவம்-சக்ரவர்த்தி இத்யாதி. "ஸ்நுஷயாசவிவர்ஜிதம்" என்றதுக்குபாவம் - மீண்டும் இத்யாதி. குழைசரக்கு அறுத்துக்கொண்டுபோனபடி யென்றது - ரக்ஷ்யவர்க்கத்தையுங்கூடக் கூட்டிக்கொண்டுபோனபடி யென்கை. அதாவது - பைநெகிழ்ந்த கயிற்றலாங்கட்டிப் பண்டங்களையெடுத்துக் கொண்டுபோம் செட்டிகளைப்போலே, தங்களுக்கு ரக்ஷ்யவர்க்க

யாதபடி குழை சரக்கறுத்துக்கொண்டு போனபடி "𑌅𑌪𑌶𑍍𑌯𑌤𑍍 𑌭𑌵𑌨𑌂 𑌰𑌾𑌜𑌾 𑌨𑌷𑍍𑌟𑌚𑌨𑍍𑌦𑍍𑌰𑌮𑌿𑌵𑌾𑌮𑍍𑌬𑌰𑌮𑍍" (அபஶ்யத் பவநம்ராஜா நஷ்டசந்த்ரமிவாம்பரம்)- நிலவோடும் நக்ஷத்திர தாராகணங்களோடுங்கூட சந்த்ரன் குடிவாங்கின ஆகாசம்போலே கிடந்தது. அப்படியே யாயிற்று இத்திருமாளிகை கிடக்கிறது. "நல்லதோர் தாமரைப்பொய்கை" இத்யாதிப் படியேயாயிற்று இவள் திருமாளிகை கிடக்கிறது. திருத்தாயாரும் இம்மாளிகையைக்கண்டு வெறுத்து, 'போகக்கடவதாகத் துணிந்தால் என்னையுங்கூட்டிக்கொண்டு போனாலாகாதோ? தனிவழியே போவதே! நான் கூடப்போகாவிட்டா லவனுடனே கூடப்போகவும் பெறு தொழிவதே! இவள் தான் எங்ஙனே போகிறாளோ! நாடடங்கவாழ்வித்துக்கொண்டு போகிறாளோ! அங்கே புக்காலென்படுகிறாளோ! வழியிலுள்ளார் என் சொல்லுகிறார்களோ! அங்கே புக்கால் அவ்வூரிற் சோலைகளையும் அங்குள்ள நீர்நிலைகளையும் அவன் குணங்களையுங் கண்டு உகக்கிறாளோ? கண்டு சிதிலையாகிறாளோ! இதெல்லாம் தான் அங்கே சென்று புக்காலிறே! என்றாற்போலே மநோரதித்துக்கொண்டு, தன்னைப் பார்த்தல் எங்களைப்பார்த்தல் செய்யாதே, இத்தையெல்லாம் கடலிலே கவிழ்த்துப்போவதே!' என்று திருத்தாயார் இன்னாதாகிறாள்.

---

*மானபிராட்டியையுங் கூட்டிக்கொண்டுபோனார்கள் என்றபடி. குழைசரக்கு - ரக்ஷ்யவர்க்கம். அறுத்துக்கொண்டுபோகையாவது - கூடக்கொண்டுபோகை. தார்ஷ்டாந்திக த்ருஷ்டாந்தத்ரயம் - நிலவோடு இத்யாதி. பிராட்டிஸ்த்தாநே நிலவு, இளையபெருமாள் ஸ்த்தாநே நக்ஷத்ரதாரா கணங்கள், ராமசந்த்ரனிறே. த்ருஷ்டாந்தாந்தரம் - நல்லதோர் இத்யாதி. பெரியாழ்வார்திருமொழி மூன்றாம்பத்து எட்டாந்திருமொழி முதற்பாட்டு. இதுக்கர்த்தம் - அழகியதொரு தாமரைப்பொய்கையானது, நாட்பூவின்மேலே யதுக்குவிருத்தமான பனியானது மிகவும்சொரிய அத்தாலே, அல்லியும் தாதும் செவ்விகெட்டுஉதிர்ந்து அழகழிந்தாற்போலே யிராநின்றது க்ருஹமானது. ஜநஸஞ்சாரமற்று வெளியாய்க்கிடவாநின்றதென்கை. ஆலென்றதும், ஓவென்றதும் - விஷாதாதிஶயஸூசகம். "எம்மையொன்றும்நினைத்திலள்" என்றத்தைப்பற்ற - போகக்கடவதாகத்துணிந்தால் இத்யாதி. "இதெல்லாங்கிடக்க" என்றத்தைப்பற்ற - தனிவழியேபோவதே என்றது. "அவன்கிடந்த" என்றத்தைப் பற்ற - நான்கூட இத்யாதி. "ஒல்கியொல்கி" இத்யாதியைப்பற்ற - இவள்தானெங்ஙனே இத்யாதி. "ஊரும்நாடும்" இத்யாதியைப்பற்ற - நாடடங்கல் இத்யாதி. "கோவைவாய்துடிப்ப" என்றத்தைப் பற்ற - அங்கேபுக்கால் இத்யாதி. "கொல்லையென்பர்கொலோ" இத்யாதியைப்பற்ற - வழியிலுள்ளார் இத்யாதி. "பூவியல்பொழிலும்" இத்யாதியைப்பற்ற - அவ்வூரில்சோலையும் இத்யாதி. அவன் குணங்களையுமென்றது - "அவன்சீர்" என்றத்தைப்பற்ற. "எங்ஙனேயுகக்குங்கொல்" "நின்றுநின்றுநையும்" என்றத்தைப்பற்ற - உகக்கிறளோ, சிதிலையாகிறளோ என்றது. "செல்லுங்கொல்" என்றத்தைப்பற்ற - இதெல்லாம்தான் இத்யாதி. "இதெல்லாங்கிடக்க" என்றதின் இரண்டாமர்த்தத்தைப்பற்ற - தன்னைப்பார்த்தல் எங்களைப்பார்த்தல் என்றது. அதாவது - தன்மார்த்தவத்தைப் பார்த்தல், எங்கள்விஶ்லேஷபீருத்வத்தைப்பார்த்தலென்றபடி. " * ஊரும்நாடுமுலகமுந் தன்னைப்போல் அவனுடையபேருந்தார்களுமே பிதற்றப்பண்ணிக்கொண்டிருக்கிறவள்போனாள்" என்கையாலே - 'இத்தையெல்லாம் கடலிலேகவிழ்த்து' என்கிறார்.*

முதற்பாட்டு.

உண்ணுஞ்சோறுபருகுநீர் தின்னும்வெற்றிலையுமெல்லாம்
கண்ணனெம்பெருமானென்றென்றே கண்கள்நீர்மல்கி
மண்ணினுள்அவன்சீர் வளம்மிக்கவனூர்வினவி
திண்ணமென்னிளமான்புகுமூர் திருக்கோளூரே.

ஆ.—லோகஸித்தமான தாரகபோஷகபோக்யங்களை இவள் "புஜிக்கவேணும்" என்று கொண்டு சொன்னால் அத்தை ஆதரியாதே, எனக்கு தாரகமும் போஷகமும் கண்ணன் எம்பெருமான் என்றென்றே சொல்லி, அவனைப் பெறாமையாலே கண்கள் நீர்மல்கியிருந்த என்னுடைய பெண்பிள்ளை, பூமியிலெங்குத்தையிலும் பகவத்குணங்கள் ஸம்ருத்தமாக இவனை வளைத்துக்கிடக்கிற திருக்கோளூரிலே அதிமாத்ராஸக்த மாநஸையாகையாலே, அவ்வூரை வினவி வினவித் தனக்கதுவே பாதேயமாகக்கொண்டு திருக்கோளூரிலே போய்ப்புகும்; இதிலொரு சந்தேஹமில்லை. அங்ஙனே கண்கள் நீர்மல்கவிருந்த இருப்பையாகிலுங்கண்டிருக்கப் பெறுகிறிலேன்; இழந்தேன்என்று அலற்றுகிறாள்.

ஒ.—முதற்பாட்டில், இப்பிராட்டியுடைய திருத்தாயாரானவள், தன் பெண்பிள்ளையைத் தன்மாளிகையில் காணாதொழிந்து, தன்மகளாகையாலும் அவளுடைய ஸ்வபாவாநுஸந்தாநத்தாலுமாக, இவள் இங்குநின்றும் போய்ப்புகும் ஊர் திருக்கோளூரே என்று அத்யவஸிக்கிறாள்.

[உண்ணுஞ்சோறென்று தொடங்கி] - பசியில் உண்ணக்கடவ சோறும், தாஹத்தால் குடிக்கக்கடவதண்ணீரும் தின்னாதொழியில் தரியாததசையில் தின்னக்கடவவெற்றிலையுமான தாரகாதிகள் எல்லாம் எனக்கு என்ஸ்வாமியான க்ருஷ்ணனே என்றுநின்றுகொண்டு அவனைக் காணப்பெறாமையாலே கண் நீர்மல்கி. [மண்ணினுள் என்று மேலுக்கு] - அவனுடைய கல்யாணகுணங்களையும் ஸம்பந்நனானவன் விரும்பியிருந்துள்ள ஊரையும் தனக்கு வழிபோகைக்கு உறுப்புண்டாம்படி வினவிக்கொண்டு என் பெண்பிள்ளை பூமியில் புகும்ஊர் திருக்கோளூரே. இது நிஶ்சிதம்.

ப.—முதற்பாட்டில், தாரகபோஷகபோக்யாதிகளெல்லாம் தானேயாயிருக்கிற க்ருஷ்ணன்வர்த்திக்கிற திருக்கோளூரே, இவள்சென்று புகும்ஊர் என்று அறுதியிடுகிறாள்.

உண்ணும் - தாரகத்வேந உண்டுகொண்டு நிற்கவேண்டும்படியான, சோறம்- சோறும், பருகும் - த்ருஷ்ணாசாந்திகரமாய்க்கொண்டு போஷகமாகையாலே பாநம்பண்ணி நிற்கவேண்டும்படியான, நீர் - தண்ணீரும், தின்னும் - ப்ரீதிஹேதுவாய்க் கொண்டு போக்யமாகையாலே தின்னக்கடவ, வெற்றிலையும் - வெற்றிலையும், எல்லாம் - (இப்படி தாரகாதிகளுக்குறுப்பான) வஸ்துக்களெல்லாம், கண்ணன் - "வாஸுதேவஸ்ஸர்வம்" என்கிறபடி வசுதேவதநயனான க்ருஷ்ணனாய், எம்-எனக்கு, பெருமான் - ஸ்வாமியான அவன், என்றென்றே - என்றென்று பலகாலுமாவர்த்தித்து, (அவனுடைய அஸந்நிதாநத்தாலே), கண்கள் - கண்கள், நீர்கள்-நீர், மல்கி - மல்கி, மண்ணினுள் - (அவன் ஆஶ்ரித

ஸங்கிதாநார்த்தமாகவந்த) பூமியிலே, அவன் - அவனுடைய, சீர் - ஸௌலப்யஸௌந்தர்ய ஸௌஶீல்யாதிகுணங்களையும், வளம் - ப்ரணயித்வசம்பத்தியால், மிக்கவன் - பரிபூர்ணனானவனுடைய, ஊர் - ஊரையும், வினவி - தான் அநுஸந்திக்குமளவன்றியே, (ப்ரணய பாரவஶ்யத்தாலே, அநுஹ்ஜ்ஞையைப்போலே ஸங்கிஹிதரையும்வினவி வழிக்குப்ராகமாக உசாவாநின்றுகொண்டு), என் - என் பெண்பிள்ளையாகையாலும், இளம் - முக்யமான, மான் - மான்போலே பேதைப்பருவமாகையாலும், வேறோரிடத்தில் தூரப்போகவல்லளல்லள்; (அவள்போய்), புகும் - புகும், ஊர் - ஊர், திருக்கோளூரே - திருக்கோளூரே; திண்ணம் - நிஶ்சிதம்.

இ—முதற்பாட்டில், தன் மகளாகையாலும், அவள்தன் ஸ்வபாவத்தாலும், இவள் இங்குநின்றும்போய்ப்புகும் ஊர் திருக்கோளூர் என்று அத்யவஸிக்கிறாள்.

[உண்ணுஞ்சோறு] - ஜீவித்தல்லது தரிக்கவொண்ணாத சோறு. [பருகுநீர்] - பாஹித்தால் பாநம் பண்ணியல்லது நிற்கவொண்ணாத தண்ணீர். [தின்னும் வெற்றிலையும்] - தின்றாலல்லது புஷ்டனாக விரகின்றிக்கே இருக்கும் வெற்றிலையும். தாரகபோஷக போக்யமானவையெல்லாம், எனக்கு நாதனான க்ருஷ்ணன். "வாஸுதேவஸ்ஸர்வம்" என்றாயிற்று இவள் இருப்பது. [என்றென்றே கண்கள்நீர்மல்கி] - இடைவிடாமல் இப்படியே சொல்லி, அவனைக்காணப்பெறாமையாலே கண்கள் ஶோகாஶ்ருவாலே நிரம்பி. அவ்விஷயத்தை இடைவிடாமல் அநுஸந்தித்து, ஸ்மர்தவ்யவிஷய ஸாரஸ்யத்தாலே "க்ரூஹாஶீதநேத்ராம்பு:" என்கிறபடியே ஆநந்தாஶ்ருவாலே நிரம்பி என்னவுமாம். [மண்ணினுள்] - உகந்தருளின நிலங்களிலே ப்ரவணையாகையாலே விண்ணிற் போகாள் என்று இருக்கிறாள். [அவன்சீர்] - சீர் என்றது ஸௌஶீல்யாதிகளை. அவை ஸ்புடமாக அநுபவிக்கலாவது இங்கே, பரமபதத்தில் குணஸத்பாவமிறே உள்ளது. [வளம் மிக்கவன்] - ஸம்பந்நனானவன் ப்ரணயதாரையில் விஞ்சினவன். [ஊர்] - பரமபதம் கலவிருக்கையென்னும்படி விரும்பி வர்த்திக்கும் நத்தம் இது. [வினவி] - வழிக்கு பாதேயமிருக்கிறபடி. "திருக்கோளூர் எங்கே" என்னவும், "இங்கே" என்னவும், "இங்கேயோ" என்று அநுபாஷிக்கையும், இதிறே வழிக்குப்ராகம். [என்னிளமான்புகுமூர் திருக்கோளூரே - திண்ணம்] - என்வயிற்றிற் பிறப்பாலும் இவள்படியாலும் இவள் புகும் ஊர் திருக்கோளூரே, ஸுநிஶ்சிதம். என்னிளமான் - அவன்சீரையும் வளம்மிக்கவன்ஊரையும்வினவி - மண்ணினுள் புகுமூர் - திருக்கோளூரே - திண்ணம். மருபூமியில் தண்ணீர்போலேயிறே ஸம்ஸாரத்தில் திருக்கோளூர்.

ஈடு.—முதற்பாட்டு. தன்வயிற்றிற்பிறப்பாலும், இவள் தன் ஸ்வபாவத்தாலும் இவள்இங்குநின்றும் போய்ப்புகும் ஊர் திருக்கோளூர் என்றத்யவஸிக்கிறாள்.

முதற்பாட்டு.—உண்ணுஞ்சோறு இத்யாதி. "திண்ணமென்னிளமான்" இத்யாதியைக் கடாக்ஷித்தவதாரிகை - தன்வயிற்றில் இத்யாதி. "என்னிளமான்" என்றத்தைப்பற்ற - தன்வயிற்றிற் பிறப்பாலும் என்றது. 'இவள்தன்ஸ்வபாவத்தாலும் என்றது. "இளமான்" என்றவிடத்தில் இளமையாலே மார்த்தவத்தைச்சொல்லி, அத்தாலே தூரப்போகமாட்டாதபடியான ம்ருதுஸ்வபாவத்தாலும் என்னுதல்; "உண்ணுஞ்சோறு" இத்யாதியைப் பற்றவாதல்.

[உண்ணுஞ்சோறு பருகுநீர் தின்னும்வெற்றிலையு மெல்லாங்கண்ணன்] - இவள் அவ்வருகே ஒருவாய்ப்புகுநீர் தேடிப்போனாளே. இங்கிருந்தநாள் அந்நபாநாதிகளாலே யரித்து, அங்கேபுக்கு அவனையரிக்கப்போனாளோ. "அஹமந்நம் - அஹமந்நாத:" (அஹமந்நம்-அஹமந்நாத:) என்றிருப்பார்க்கும் அவ்வருகே போகவேணுமோ? "சோறு, தண்ணீர், வெற்றிலை" என்னவமையாதோ? "உண்ணுஞ்சோறு" என்றாற்போலேயிருக்கிற விசேஷணங்களுக்குக் கருத்தென்? என்னில்;—"வேட்டப்பொழுதிலவையவைபோலுமே-தோட்டார்கதுப்பினளோள்" என்று அவனும்சொன்னானிறே; † (அதாவது - அபேக்ஷை யுடையபோதில் அந்தவந்த சோறு தண்ணீர் வெற்றிலைபோலாதாயிறே தோடுபொருந்தின கதுப்பையுடையவள் தோளின் ஸம்ஶ்லேஷம்;) அப்படியே, இவைதானே அநபிமதமுமா யிருக்கும் ஒரோஅவஸ்த்தைகளிலே. அதுக்காக அபிமதஸமயத்தில் இவைதான் யாதொரு படியிருக்கும் அப்படியேயாயிற்று இவர்க்குஎப்போதும் பகவத்விஷயமென்கைக்காக, தாரக போஷக போக்யங்களெல்லாம். [எல்லாம்கண்ணன்.] - "வாஸுதேவஸ் ஸர்வம்" (வாஸுதேவஸ்ஸர்வம்) என்றுகொண்டு எல்லாம் க்ருஷ்ணன் என்றிருக்குமத்தனை உண்ணுஞ்சோறென்கையாலே - அல்லாதது உண்டுசெமையும் சோறென்கையும், இதுமாறாதே புஜிக்கும் சோறென்னுமதுவும் தோற்றுகிறது. "கணைநாணிலோவாத் தொழில்சார்ங்கன்

ப்ர.—[உண்ணுஞ்சோறுபருகுநீர்இத்யாதி] — தைத்திரீயகே [ப்ரு-௧0] "ஏதத் ஸாம காயந்நாஸ்தே ஹாவு ஹாவு ஹாவு । அஹமந்நமஹமந்நமஹமந்நம் । அஹமந்நாதோஹமந்நாதோஹமந்நாத:"

[எல்லாங்கண்ணன்]—ஸ்ரீகீதாஸு, "பஹூநாம் ஜந்மநாமந்தே ஜ்ஞாநவாந்மாம் ப்ரபத்யதே । வாஸுதேவஸ் ஸர்வமிதி ஸ மஹாத்மா ஸுதுர்லப:"

"திருக்கோளூரேறப்போனாள்" என்றுசொல்லுகிற திருத்தாயார், "உண்ணுஞ்சோறு" இத்யாதியாலே இவளுடைய மேஹயாத்ரையைச்சொல்லுகிறதுக்கு ஹாவம் - இவளவ்வருகே இத்யாதி. வாய்ப்புகுநீர் - உந்மஸ்தகாநுபவம். போனாளேயென்றது - போனாளோ? என்றபடி. விவரணம் - இங்கிருந்தநாள் இத்யாதி வாக்யத்வயம். அஹமந்நாத: என்றிருப்பார்க்கும் என்றது-"அஹமந்நாத:" என்கிறஸ்ருதியில்சொல்லுகிறநித்யஸூரிகள் அநுபவம்இங்கேயுண்டாயிருப்பார்க்குமென்றபடி. அஹமந்நம் என்கையாலே - ஈஶ்வரனுக்கு நித்யஸூரிகளிடத்தில் ஆதரம்சொல்லுகிறது; அஹமந்நாத: என்கை யாலே- நித்யஸூரிகளுக்கு அவனிடத்திலுண்டான ஆதரம்சொல்லுகிறது 'வேட்டப்பொழுதில்' இத்யாதி- ஆசைப்பட்டவேளையில் அந்தவந்த வஸ்துக்கள் போக்யமாமாபோலே, பூப்பொருந்தின அளகபாரத்தை யுடையவளுடைய தோளோட்டை ஸம்ஶ்லேஷம் போக்யமாமென்றபடி. தோடு - பூ. ஆர்தல் - பொருந்துதல். கதுப்பு - அளகபாரம். ஆர்தல் - அலர்தலாகவுமாம். அன்றிக்கே, தோடென்றது - தாடங்கமாய், ஆர்தல் - பொருந்துதலாய், கதுப்பென்று கபோலமாதல். அப்படியேயென்றது - அந்தத் தமிழன் சொன்னபடியேயென்றபடி. "உண்ணும்" இத்யாதிவிஶேஷணங்களுக்கு ப்ரயோஜநம் - இவைதானேயநபிமதம் இத்யாதி. "சோறு, நீர், வெற்றிலை" என்றதுக்குஹாவம் - தாரக இத்யாதி. "எல்லாங்கண்ணன்" என்றதுக்குசம்வாதம் - வாஸுதேவ இத்யாதி. "உண்ணும்" இத்யாதிவர்த்தமாந நிர்த்தேசத்துக்கர்த்தம் - உண்ணுஞ்சோறென்கையாலே இத்யாதி. உண்டுசமையும்சோறென்றது - மாளுகையாலும், தெவிட்டுகையாலும் உண்டுசமையுமென்றபடி. உண்டுசமையுமென்றது - உண்டு செலவழியும் என்றபடி. இதுமாறாதேபுஜிக்கும் சோறுஎன்றது - மாளாமையாலும், தெவிட்டாமை யாலும் இதுமாறாதேபுஜிக்கும் சோறென்றபடி. பகவதநுபவம் அப்படிமாறாதேபுஜிக்கும் சோறாயிருக் குமோ? என்ன - கணைநாணில் இத்யாதி. ஆஶ்ரிதவிரோதி நிரஸநார்த்தமாகத் திருச்சார்ங்கள் நாணில்

தோல்சீரைநன்னெஞ்சே, யோவாதவூணாகவுண்'' என்னக்கடவதிறே. மாறாதேபுஜிக்கலாவதும், மாளாததும் இதிறே; ''அப்போழுதைக்கப்போழுதென்னாராவமுதம்'' என்றும், ''கோள்ளமாளாவின்பவெள்ளம்'' என்றுமிறேயிருப்பது. [எம்பெருமான்] - இவற்றிலாகாத தொன்றில்லைகிடீர், இவையெல்லாம்வகுத்தஅவனேயாயிருக்கை. இவள் ஸந்நிதியேயமையுங்கிடீர் எங்களுக்கு. [என்றென்றே] - இதொழிய வேறொன்றை ''தாரகம்'' என்றிருக்கில் இறே மற்றொன்றைச்சோல்லுவது. இது தன்னையே மாறாதே சோல்லி, ஒருகால் இத்தைச்சோல்லிப் பின் பூணுறக்கத்தாலே போதுபோக்கலாம் விஷயமன்றே. [கண்கள்நீர்கள்மல்கி] - இவர்களுடைய உண்ணுஞ்சோறு பருகுநீர் தின்னும்வெற்றிலையும் எல்லாமிருக்கிறபடி. இவள் முகத்தாலேகாணும் இவர்களுக்கு ஜீவநம். தன்ஜீவநத்துக்குப் போகிறவள் எங்கள் ஜீவநத்தைக்கோண்டு போகவேணுமோ? ஒருவன் பகவத்குணவித்தனாய்க் கண்ணுங்கண்ணநீருமாயிருக்க, அவனைக் கண்டுகோண்டிருக்கவாகாதேயடுப்பது. ''அழுநீர்துளும்பவலமருகின்றன வாழியரோ'' என்று சேதநராகில் மங்களாஶாஸநம்பண்ணக்கடவது. நஞ்சீயர், ''பிள்ளைதிருநறையூ ரரையரோடே மூன்று திருவாய்மோழிகேட்டேன், அதில் எனக்கோரு வார்த்தைகளும் போகாது; ஒரு திருவாய்மோழியை ப்ரஸ்தாவியா அவர்ஶிதிலராய்க் கண்ணுங்கண்ணநீருமாய் இருக்குமிருப்பை நினைத்திருப்பன்'' என்று அருளிச்செய்வர். ''ஆஹ்லாதஶீதநேத்ராம்பு:'' (ஆஹ்லாதஶீதநேத்ராம்பு:) - விரஹத்தாலே

நின்றுமொருகாலும் மாறாதசெயலையுடைய சார்ங்கத்தையுடைத்தான சக்ரவர்த்தித்திருமகனுடைய ஸ்வாபாவிகமான சௌர்யவீர்யாதி கல்யாணகுணங்களை, ஔபாதிகபந்துக்களுக்கும் நிருபாதிக பந்துவுக்கும் வாசியறியவல்ல நெஞ்சே! நித்யபோகமாக புஜி இத்யர்த்த: பெரியதிருவந்தாதி எழுபத்தெட்டாம்பாட்டு, ''துணைநாள்'' இத்யாதி. ''ஓவாதவூண'' என்றதுக்கு பாவம் - மாறாதே இத்யாதி. மாறாததுமாய் மாளாததுமாயிருக்குமோ? என்ன; இரண்டுக்குமடைவே ப்ரமாணத்வயம் - அப்போழுதைக்கு இத்யாதி. ''எல்லாங்கண்ணன்'' என்றவநந்தரம், ''எம்பெருமான்'' என்று விசேஷித்தத்துக்கு பாவம் - இவற்றில் இத்யாதி. இத்தால் - ஸ்த்ரீகளோபாதி அப்ராப்தமாய்க்கழியுண்கிற விஷயமன்று; ப்ராப்தவிஷயம்இவனென்கைக்காக - ''எம்பெருமான்'' என்கிறதென்றபடி. இவையெல்லாமென்றது - ''உண்ணுஞ்சோறு'' இத்யாதிகளை. ''உண்ணுஞ்சோறு'' இத்யாதிக்கு, ''கண்கணீர்கள்மல்கி'' என்றத்தைக்கடாக்ஷித்து ஹார்த்தபாவம் - இவள்ஸந்நிதியே இத்யாதி. வீப்ஸைக்கு பாவம - இதொழிய இத்யாதி. அவதாரணத்துக்கர்த்தம் - இதுதன்னையே இத்யாதி. மாறாதேசொல்லுகைக்கு ஹேதுவேதென்ன - ஒருகால் இத்யாதி. மகளுடையதேஹயாத்ரைசொன்னவநந்தரம், ''கண்கணீர்கள்மல்கி'' என்கையாலே - இவளுக்கிவள் கண்ணநீர் தேஹயாத்ரையென்று விவக்ஷித்தருளிச்செய்கிறார் - இவர்களுடைய இத்யாதி. தான் * மயர்வறமதிநலமருளி ஜ்ஞாதாகத் திருத்துகையாலே இவள திருத்தின நாமெல்லாமிவள்கண்ணுங்கண்ணீருமாயிருக்கிற விருப்பையே தங்களுக்கு தாரகாதிகளாக நினைத்திருப்பர்களென்னுமிடந்தோற்ற 'இவர்களுடைய' என்று பஹுவசநமாக அருளிச்செய்கிறார். ''இவள் கண்ணும் கண்ணநீருமாயிருக்கிற இருப்பே இவர்களுக்கு தாரகாதிகள்'' என்னுமத்தை ரஸோக்தியாக அருளிச்செய்கிறார் - இவள்முகத்தாலே இத்யாதி. இவள்கண்ணுங் கண்ணநீருமாயிருக்கிற இருப்பையிழந்த க்லேஶாதிஶயந்தோறறச் சொல்லுகிறவளுடைய ஹார்த்தபாவம் - தன்ஜீவநத்துக்கு இத்யாதி. இதுக்கு ஸ்வாபதேசம் - ஒருவன் இத்யாதி. கண்டுகொண்டிருக்கிற மாத்ரமன்றிக்கே மங்களாஶாஸநமும் பண்ணவேணுமென்கிறார் - அழுநீர் இத்யாதி. 'சேயரிக்கணழுநீர்துளும்பவலமருகின்றன' - சிவந்த வரியையுடையகண்கள் ப்ரேமத்தால்வந்த வுள்ளழிவாலே யழுதநீர்துளும்ப, ஆற்றாமையாலே நின்றவிடத்தில் நில்லாதே யலமாவாநின்றன. 'வாழியரோ' இது நித்யமாய்சசெல்லவேணுமென்று மங்களாஶாஸநம்பண்ணுகிறாளென்றபடி. திருவிருத்தம் இரண்டாம்பாட்டு, ''செழுநீர்'' இத்யாதி. ''கண்ணுங்கண்ணநீருமாயிருக்கிறவிருப்பைக் கண்டுகொண்டிருக்கையே புருஷார்த்தம்'' என்னு

கோதித்துப்புறப்படும் சோகாஸ்ருபோலன்றிக்கே, பகவதநுபவஜநிதமான ஹர்ஷப்ரகர்ஷத்தாலே குளிர்ந்த கண்ணீரை யுடையனாவது. "[illegible]" (புலகீக்ருதகாத்ரவாந்) உடம்படைய மயிரேறிந்திருப்பது. "[illegible]" (பரகுணாவிஷ்டஃ) - பகவத்குணாவிஷ்டனாவது, தைவாவிஷ்டரைப்போலே. அவன், "[illegible]" (ஸர்வதேஹிபிஃ - த்ரஷ்டவ்யஃ) - அவன் தேஹபரிக்ரஹம் பண்ணினார் எல்லார்க்கும் த்ரஷ்டவ்யன். தேஹபரிக்ரஹம் பண்ணினதுக்கு ப்ரயோஜநம் இவனைக்காண்கையாயிற்று. "[illegible]" (ஸதா - த்ரஷ்டவ்யஃ) ஸதா தர்சநம் பண்ணுகைக்கு ஒரு தேசவிசேஷம் தேடிப்போக வேணுமோ? அநந்தாழ்வான் சோழகுலாந்தகனிலே க்ருஷிபண்ணியிருக்கிறானொரு ஸ்ரீவைஷ்ணவனைக் கண்டு, "உம்முடைய ஊர் எது?" என்று கேட்க, 'என்னூர் திருக்கோளூர்" என்ன, "அங்குநின்றும் போந்ததென்?" என்ன, "தேஹயாத்ரை நடவாமேபோந்தேன்" என்ன, "அவ்வூரில் கழுதையை மேய்த்து ஜீவிக்கமாட்டிற்றிலையோ? நிலைநின்ற ஜீவனத்தைவிட்டுப் போந்தாயாகாதே!" என்றானும். [கண்ணனெம்பெருமானென்றென்றே கண்கள் நீர்கள்மல்கி] - இந்த பாவநாப்ரகர்ஷத்தாலே பெற்றாற்போலேயிருந்து ஆநந்தாஸ்ரு புறப்படுகிறபடியாகவுமாம்; இவ்வநுஸந்தாநத்தாலே கண்ணீர்மல்கி என்னவுமாம். [மண்ணினுள் இத்யாதி] - மண்ணினுள் புகழூர் திருக்கோளூரே. விண்ணில் ஓரூர் விசேஷிக்கவேண்டும்படியாயிராதிறே. [அவன்சீர்வளம் மிக்கவனூர்] - அவனுடைய கல்யாணகுணங்களையும் நிரவதிகஸம்பத்தையுமுடையவனுடைய வூரையும். "[illegible]" (ஸோஸ்நுதே ஸர்வாந்காமாந்ஸஹப்ரஹ்மணா) என்று அவனோடு அவன்குணங்களோடு வாசி

ப்ர.—[அவன்சீர்வளமிக்கவனூர்]—தைத்திரீயகே [ஆ - க] "[illegible] விபஸ்சிதேதி॥"

மதக்ருஸம்வாதம் - நந்தீயர் இத்யாதி. இதற்குப்ரமாணம் - ஆஹ்லாத இத்யாதி. "[illegible]" இதி ஸ்ரீவிஷ்ணுதத்த்வே. கீழே, 'வாசுதேவஸ்ஸர்வம்' இத்யாதிப்ரமாணம் கீதாஸம்வப்தமே, "[illegible]" இதி. தேஹபரிக்ரஹம்பண்ணினவர்களுக்கு இவன் த்ரஷ்டவ்யனாகவேண்டுவானேன்? என்ன - தேஹபரிக்ரஹம் இத்யாதி. "யாரகாதிகளெல்லாம் ஈஸ்வரனேயாயிருக்கும்" என்றதுச்குசம்வாதம் - அநந்தாழ்வான் இத்யாதி. இந்த ஐதிஹ்யத்திலே 'நிலைநின்ற ஜீவநத்தைவிட்டுப்போந்தாய்' என்றதுக்கு இப் தத்திலேநோக்கு. இங்குச்சொல்லுகிற கண்ணநீர் ஆநந்தாஸ்ருவென்று விவக்ஷித்து, விஸ்லேஷதசையில் ஆநந்தாஸ்ருவரக்கூடாமோ? என்ன - இந்த பாவந இத்யாதி. இவ்வநுஸந்தாநத்தாலே கண்ணீர்மல்கி என்னவுமாம் என்றது - விஸ்லேஷதசையில் அநுஸந்தாநமாகையாலே சோகாஸ்ரு மல்கியென்னவுமாம் என்றபடி. "மண்ணினுள் - புகழூர்" என்று விசேஷிக்கிறதென்? என்ன - விண்ணில் இத்யாதி. அதாவது, பரமபதமெல்லாம் அவனுக்கு பரதந்த்ரமாகையாலே விசேஷிக்கவேண்டா; இங்கு சாரசாரகையாலே விசேஷிக்கிறது என்றபடி. அவன்

யற ப்ராப்யமாகிறவோபாதி அவன் விரும்பினதேசமும் ப்ராப்யாந்தர்க்கதமாகக் கடவதிறே. [அவன் சீர்] - அவன் கல்யாணகுணங்கள். அவையாகிறன, அவன் தன்திறத்தில் தாழ நிற்கும் நிலைகள். [வளம்மிக்கவனூர்] - பரமபதம் கலவிருக்கையோபாதி உகந்த விஷயத்தைப் பெறும்இடமிறே ஊராகிறது! *கிம்கார்யம் ஸீதயாமமவிறே. பரமபதத்திற்காட்டிலும் ஆஶ்ரிதர்இருந்தஇடமிறே ஊராகிறதும், அவன் திருவுள்ளத்துக்குப் பொருந்தியிருப்பதும். [வளம்மிக்கவன்] - ப்ரணயதாரையில் விதக்ஷன் என்றுமாம். இப்போது வைதக்த்யமாவது தானிருந்தவிடத்தே இவள் வரும்படி இத்தலையை யழித்தபடி. [வினவி] - "திருக்கோளூரேத்தனை யிடம்போரும்" என்று எதிரே வந்தாரைக்கேட்டு, அவர்கள் "இன்னதனை யிடம் போரும்" என்ன, அதுதானே வழிக்கு பாதேயமாகப் போகை. "பாதேயம் புண்டரீகாக்ஷ" (பாதேயம்புண்டரீகாக்ஷ) இத்யாதி. பூவலரும்போதைச் செவ்விபோலே "திருக்கோளூரேத்தனையிடம்போரும்" என்றுகேட்கும்போதைத் திருப்பவளத்தில் செவ்வி காணப் பெற்றிலேன் என்று காணும் திருத்தாயார் தான்நோவுபடுகிறது. [என் இளமான் புகுமூர் திருக்கோளூரே] - என்வயிற்றிற் பிறப்பாலும், இவள் ப்ரக்ருதியாலும் அவ்வூரிலல்லது புகாள் என்கிறாளாயிற்று. தாய் வழிகொண்டே ஸ்வபாவங்கள் அறுதியிடலாமாகாதே. பெருமாளைக்கண்டல்லது தரிக்கமாட்டாதானாய் வருகிற ஸ்ரீபரதாழ்வானைக் கண்டுவைத்தேயும், த்ரிகாலஜ்ஞனான ருஷியுங்கூட, "கச்சிந்நதுஷ்டோவ்ரஜஸி" (கச்சிந்நதுஷ்டோவ்ரஜஸி) என்று தாயாரையிட்டு வழக்குப்பேசுவித்துக் கொண்டு இவரைக் காட்டேறப்

குணங்களோபாதி அவனூரும் ப்ராப்யமாயிருக்குமோ? என்ன - லோகஸ்நுத இத்யாதி. இந்த ஸ்துதிக்கு, இங்கு ஹோக்யஸாஹித்யம் விவக்ஷிதம். இங்கு இவளுக்கு விவக்ஷிதகுணங்கள் எவை? என்ன - அவையாகிறன இத்யாதி. "ஊர்" என்று விசேஷித்ததுக்குபாவம் - பரமபதம் இத்யாதி. கலவிருக்கை - ஓலக்கமிருக்கை. பரமபதத்தைக்காட்டிலும் இதுக்கதிசயமேது? என்ன - உகந்த இத்யாதி. உகந்தவிஷயம் அங்கில்லையோ? என்ன - கிம்கார்யம் இத்யாதி. அதாவது, அவர்களிற்காட்டில் இன்று ஆஶ்ரயித்தவர்களே அவனுக்கு மிகவும் உகந்தவர்களென்று கருத்து. "கிம்கார்யம் ஸீதயா மம" இத்யாதி யுத்தகாண்டே. இத்தால்பலிதம் - பரமபதத்தில் இத்யாதிகீழ். "வளம்" என்று - ஸம்பத்தாக அருளிச்செய்து, சாமர்த்யமாக அர்த்தாந்தரம் - ப்ரணயதாரையில் இத்யாதி. ப்ரணயதாரையில் மிக்க ஸாமர்த்யத்தையுடையவன் என்றபடி. போகிறது திருக்கோளூராகில், வெறுமனேபோகாதே வினவிக்கொண்டுபோகிறதுக்கு ப்ரயோஜநமேது? என்ன - திருக்கோளூர் இத்யாதி. வினவுகிறது பாதேயமாயிருக்குமோ? என்ன - பாதேயம் இத்யாதி. "ஶுத்தாந்த்ரயாநம் த்ருஷ்ணா ... பாதேயம் புண்டரீகாக்ஷநாமஸங்கீர்த்தநாம்ருதம்". வினவி - உசாவிக்கொண்டு; சொல்லிக்கொண்டு என்றபடி. புகுமூர் என்னுமத "...- புகுமூர்" என்று - வினவுகிறதைச்சொல்லுகிற தாயாருடைய ஹார்த்தபாவம் - பூவலரும் இத்யாதி. "திருக்கோளூரிலேபுகும்" என்று எதுகொண்டு நிஶ்சயிக்கிறது? என்ன - என்வயிற்றில் இத்யாதி. இவள் ப்ரக்ருதியாலுமென்றது - "இளமான்" என்ற ம்ருதுப்ரக்ருதியாகையாலும் என்னுதல்; 'உண்ணுஞ்சோறுமுதலானவையெல்லாங் கண்ணன்" என்னும் ப்ரக்ருதியாகையாலும் என்னுதல். தன்வயிற்றிற் பிறப்பாலே அவ்வூரிலேபோனமையை நிஶ்சயிக்கும்படியெங்ஙனே? என்ன - தாய்வழி இத்யாதி. அப்படி தாய்வழிகொண்டு அறுதியிட்டபேருண்டோ? என்ன - பெருமாளை இத்யாதி. 'கீழ்வயிற்றிற்கழலை'-அடிவயிற்றில் வ்ரணம். கீழ்வயிற்றிற் கட்டிபோலே பாதகமாமென்று கருத்து. சம்வாதாந்தரம் - பதார்த்தஸ்வபாவங்களை இத்யாதி. "கச்சிந்நதுஷ்டோவ்ரஜஸி" என்

போகவிட்டாயாகில், இன்னம் "பெருமாள் இருக்கில் கீழ்வயிற்றில் கழலையாகிறது" என்று அங்குப்போய் நலியத் தேடுகிறாயல்லையிறே என்றானிறே; அவன்படிகள் காணாநிற்கச் செய்தேயும் மாத்ருஸம்பந்தங்கொண்டு சங்கித்தானிறே; பதார்த்த ஸ்வபாவங்களைக் கொண்டு பத்தும்பத்தாக நிமித்தங்களை யறியக்கடவரா யிருப்பர்களாயிற்று வேடர்; இங்ஙனே யிருக்கச்செய்தேயும், தம் எல்லையிலே இவன்வந்து புகுந்ததுக்கு ஹ்ருஷ்டராய் "அடிச்சேரியிலே வந்துபுகுவதே!" என்பது; "ஆனாலும், ராஜாக்களாயிருப்பார் வன்னியர்பற்றிலே புகும்போது கேள்விகொண்டன்றோ புகுருவது" என்றாற்போலே யிருக்க வெளிறும்காழ்ப்புமாகச் சொல்லி, தாய்வழியை நினைத்து அசிர்த்தாரிறே ஸ்ரீகுஹப்பெருமாளும். அப்படியே இவளும் தன்வயிற்றிற்பிறந்த சுத்தியே ஹேதுவாக "திருக்கோளூரிலேபுகும்" என்றறுதியிடுகிறாள். ராமாஸ்த்ரம் இலக்குத்தப்புமோ! என்மகள புகுமூர் அதுவேயென்கிறாள். [இளமான்] - இப்பருவத்தில்இவளைத தலக்கறுக்கும்போது அவ்வூரில் அவனேயாகவேண்டாவோ? [என்னிளமான்] - க்ரமப்ராப்தி பற்றாதவள. தன் மாாத்தவம் பாராதே பதறிக்கொண்டு போனாள். [புகுமூர்] - காட்டுத்தீயிலே யகப்பட்டவன் பொய்கையும் பொழிலுந் தேடிப் புகுமாபோலே, ஸம்ஸாரமாகிற பாலைநிலத்தில் காட்டுத்தீயிலே யகப்பட்டவனுக்கு உகந்தருளின நிலங்களானவை பொய்கையும் பொழிலும்போலேயிறே. புகுமூரென்கையாலே புக்கார்போகும் ஊர் அன்றென்கை. எம்பெருமானார் தெற்கேயெழுந்தருளாநிற்க, எதிரே வருகிறாள் ஒருபெண்பிள்ளையைக் கண்டு "எங்குநின்றும்?" என்ன, "திருக்கோளூரில்நின்றும்" என்ன, "அவ்வூரில்புக்கபெண்களும் போகக்கடவராயிருப்பர்களோ!" எனறருளிச்செய்தார். 'என்னிளமான் - மண்ணினுள் - புகுமூர் திருக்கோளூரே - இது திண்ணம்' இவள் போய்ப்புகுமூர் திருக்கோளூரே, இது நிஶ்சயம். இவ்வூரில் பிள்ளைகளைக் காணவிட்டால், கோயிலுக்குள்ளே தேடும் அத்தனையிறே.

றது குஹவசநமாயிருக்க, இத்தையெடுத்தது, பரத்வாஜபகவானுக்கும் கருத்து இதுவாகையாலே அடிசசேரி - அடியாருடையகுடியம். வெளிறு - அஸாரம். காழ்பபு - சாரம். வாயமும பருஷமுமாகச் சொல்லி என்றபடி. அசிாத்தார் - சஙகித்தாா. "ஸுஹ்ருந்மேஷா வ ஐஸ்ராஜஸ்யாக்லிஷ்டகர்மண: । ஐயம்ஹஜ ஹத்வேஸநாஶஜம்ஜநயத்வம்ஜ" இதிபரதம் ப்ரதிகுஹஃ. 'கீழவயிற்றிற்கழலை' இத்யாதிவாக்யம் - "ஸுஹ்ருதவஸ்யாபாவஸ்ய பாபகதுர்த்தேஹவஸி । ஸக்ணகஂஹோக்ஷநாராஜ்யஂதஸ்யாநஜஸ்ய" இத்யாதி பாத்வாஜ வசநத்தைக்கடாக்ஷித்து. "என்" என்றதுக்குபாவம் - ராமாஸ்த்ரம் இத்யாதி. "இளமான்" என்றதுக்கு மூன்று பாவம் - இப்பருவத்தில் இத்யாதி. தலக்கு - ஜ்ஜை. "புகுமூர்" எனகிறதுக்கு ஸ்வாபதேசத்திலே பாவம் - காட்டுத்தீயிலே இத்யாதி. "புகுமூர்" என்றதுக்கு வ்யாவர்த்யமாதல், "புகும்" எனறவாத்தமாநத்துக்குபாவமாதல் - புகுமூர் என்கையாலே இத்யாதி. "போகுமூரன்று" என்றதுக்கு சம்வாதம் - எம்பெருமானார் இத்யாதி. இவள்போனத்தைக் காணாதிருக்கிறதுவள் "திண்ணம்" என்கிறதெங்ஙனே? என்ன - இவ்வூரில் இத்யாதி. 'உண்ணுஞ்சோறு' என்றுதொடங்கி, 'கண்கணீர்கள்மல்கி' இருக்கிற - 'என்னிளமான்' - 'அவன்சீரையும் வளமிக்கவனூரையும்' வினவிக்கொண்டு - 'மண்ணினுள் புகுமூர்- திருக்கோளூரே' இதுதிண்ணம் இத்யந்வயஃ. (க)

இரண்டாம் பாட்டு.

ஊரும் நாடும் உலகமுந் தன்னைப்போல் அவனுடைய
பேருந்தார்களுமேபிதற்றக் கற்புவானிடறி
சேரும் நல்வளஞ்சேர் பழனத்திருக்கோளூர்க்கே
போருங்கொல்? உரையீர் கொடியேன்கொடிபூவைகளே!

ஆ.—(ஊரும்நாடும்.) - அவனுடைய கல்யாண குணங்களையும் திவ்ய சேஷ்டிதங்களையும் நிரவதிகமான ஆர்த்தியோடே கூப்பிடுகிற தன்னுடைய ஆர்த்தஸ்வரத்தைக்கேட்டு ஊரும் நாடும் உலகமுந் தன்னைப்போலே அத்யந்தம் அவஸந்நமாய்க் கொண்டு அத்திருநாமங்களையும் திவ்ய சேஷ்டிதங்களையுமே சொல்லிக் கூப்பிடும்படியாகக் கூப்பிடுகிற இவள், அந்த வ்யஸநம் பொறுக்கமாட்டாமையாலே துரதிக்ரமமான தன்னுடைய ஸ்த்ரீத்வத்தை த்ருணவந்மர்யாதையாய்க் கொண்டு போகட்டு, நல்வளம்சேர்பழனத் திருக்கோளூர்க்கே போய்ப்புகும் ...க்யஹீனையான என்னுடைய பெண்பிள்ளை உங்களை நினைத்தாகிலும் ஒருகால் வருமேயென்று அவளுடைய பூவைகளைக் கேட்கிறாள்.

ஒ.—இரண்டாம்பாட்டில், திருக்கோளூரிலேபுக்க என் பெண்பிள்ளை மீள வருமோ? சொல்லீகோளென்று பூவைகளை திருத்தாயார் கேட்கிறாள். [அவனுடைய பேருந்தார்களுமேபிதற்ற] - தன்படியைக்கண்டு அவனுடைய திருநாமங்களையும் சேஷ்டிதங்களையும் அடைவுகெட்டுப் பிதற்றும்படிபண்ணி. [கற்புவானிடறி] - கடக்க வரிதான தன்மர்யாதையை த்ருணம்போலே போகட்டு. [சேருநல்வளமென்றுமேலுக்கு] - நல்ல ஸம்பத்தையுடைய திருக்கோளூர்க்கே போய்ச்சேரும் என் பெண்பிள்ளை, பூவைகாள்! உங்களைக்காண என்றாகிலும் வருமோ? சொல்லீகோள். [போருங்கொல்] - போகவல்லளேயோ என்றுமாம். இப்பெண்பிள்ளையைப் பிரிந்த இன்னாப்பாலே 'கொடியேன்' என்கிறாள்.

ப.—அநந்தரம், ஸர்வலோகப்ரஸித்தமாம்படி அவனுடைய நாமாதிகளை ப்ரவர்த்திப்பிக்கும் இவள், நிரதிசயபோக்யமான திருக்கோளூரிலே போய்ப்புக்கு மீண்டுபோருமோ? என்று, அவளுடைய லீலோபகரணமான பூவைகளைக் கேட்கிறாள்.

ஊரும் - (தானிருந்த) ஊரும், நாடும் - (அத்தோடே சேர்ந்த) நாடும், உலகமும் - (நாட்டோடணைந்த) லோகமும், தன்னைப்போல் - தன்னைப்போலே, அவனுடைய - அவனுடைய, பேரும் - பேரையும், தார்களும் - தாரையும், பிதற்ற - (பஹுமுகமாகப்) பிதற்றும்படியாக, வான் - ஆகாசவத் அநதிலங்க்யமான, கற்பு - ஸ்த்ரீத்வ மர்யாதையை, இடறி - கடந்து, நல் - விலக்ஷணமான, வளம் - ஸம்ருத்தியோடே, சேர் - சேர்ந்து, பழனம் - நீர்நிலங்களையுடைத்தான, திருக்கோளூர்க்கே - திருக்கோளூருக்கே, சேரும் - சென்று சேருமவளாய், கொடியேன் - தன்னைப்பிரிகைக்கு ஈடான கொடுமையையுடைய என்பெண்பிள்ளையாய், கொடி - உபக்நாபேக்ஷமான கொடிபோலே அவனைக்கிட்டியல்லது தரிக்கமாட்டாதவள், போருங்கொல் - மீண்டு போருமோ? பூவைகளே - பூவைகாள்! (என்னைப்போலன்றே உங்களுக்குச் சொல்லிப் போகக்கூடுமிறே) உரையீர் - சொல்லுங்கோள்,

ஆ.—இரண்டாம்பாட்டில், திருக்கோளூர்க்கே புக்க என்மகள் வருமோ? சொல்லீரோளென்று பூவைகளைக்கேட்கிறாள்.

[ஊரும்] - தானிருந்த ஊரும். [நாடும்]-அத்தோடு சேர்ந்தநாடும். [உலகமும்] - அத்தோடே சேர்ந்த லோகமும். ராமாவதாரத்திலும் ஒருஊரிறே திருந்திற்று; இங்கு. "ஸோகைவ தீணபுவராயபுஸஜ ஹதியொமாய" என்கிறபடியேயாயிற்று திருந்திற்று. [தன்னைப்போல்] - இவ்விஷயத்தில் தன்னைப்போலே ஹாவபந்தம் உண்டாம்படி திருத்துகை. அங்கே, பரமஸாம்யாபந்நரைத்தேடிப் போகிறாளாகில், தான் திருந்தினராகாதோ. [அவனுடைய பேருந்தார்களுமே] - "அரவிந்தலோசநன்" என்றும், "மட்டவிழ் தண்ணந்துழாய்" என்றும், "விரைமட்டலர் தண்துழாய்" என்றுஞ் சொல்லாநிற்கை. [பிதற்ற]-ப்ரீதிப்ரேரிதராய் அக்ரமமாகச்சொல்லுகை. "ஜாஜ்ஜு ஹ்ருஸ்ஜஜ தஃ" என்கிறபடியே. இப்படி, லோகமடங்க அக்ரமமாகச் சொல்லும்படிபண்ணி. [கற்புவாணிடறி] - வாணனகற்பை இடறி. வலிதானமர்யாதையை மதியாதே என்னுதல்; வலிய அறிவை என்னுதல். கடக்க அரிதானமர்யாதையை த்ருணம்போலே அதிலங்கித்து. [சேரும் இத்யாதி] - தகுதியான நல்ல ஸம்பத்தையும் நீர் நிலங்களையுமுடைய திருக்கோளூர்க்கே புகுருமோ. தன் மனஸ்ஸு அங்கே முற்பட்டுநிற்கையாலே, வந்து புகுரவல்லளோ? என்கிறாள். திருக்கோளூர்க்கே புக்கவள் மீளுமோ? என்றுமாம். [கொடியேன்] - இவளைப்பெறுகைக்கு தபஸ்ஸைப்பண்ணி வைத்து, தனியே புறப்பட்டுப்போன இவளளவு உங்களைக்கேட்டு அறியவேண்டும்படி பாபத்தைப்பண்ணினேன். [கொடி] - உபக்நத்தையொழியத் தரியாதவளை. அவ்வூரில் புக்கல்லது தரிக்கமாட்டாள் என்கை. [பூவைகளே - உரையீர்] - சொல்லாதொழிகைக்குப் பெற்ற குற்றமில்லையே உங்களுக்கு? நான் ஹிதம்சொல்லுகையாலே மறைத்தாளாகிலும், இன்ன விடத்துக்குப்போகிறேன் என்றும், அங்குப்போனால் செய்யுமவையும் உங்களுக்குச் சொல்லிப் போகக்கூடுமிறே; சொல்லீகோள்! அறிவித்துப் போனாளாகில் ராமாவதாரத்தில்போலே லோகமாகப் பின்தொடருமிறே.

ஈடு.—இரண்டாம்பாட்டு. திருக்கோளூர்க்கே போய்ப்புக்க என் பெண்பிள்ளை மீளவருமோ? சொல்லிகோள்! என்று பூவைகளைத் திருத்தாயார் கேட்கிறாள்.

[ஊரும்நாடும் இத்யாதி] - இவ்விருப்பில் என்னகுறையுண்டு? இங்கே ஒரு குறையுண்டாய், அங்கே அதுதீரப்போனளோ? இங்கே, * போதயந்தஃபரஸ்பரம்பண்ணுகைக்கு ஆளில்லாமை "யத்ர பூர்வே ஸாத்யாஸ்ஸந்தி தேவாஃ" (யத்ரபூர்வேஸாத்

ப்ர.—[ஊரும்நாடும்இத்யாதி]—மீதாஸாஃஸ்ரவணே, "மச்சித்தா மத்கதப்ராணா போதயந்தஃபரஸ்பரம் । கதயந்தஶ்ச மாம் நித்யம் துஷ்யந்தி ச ரமந்தி ச ॥ கூ ॥"

வாஜஸநேயஸம்ஹிதாயாம், "தேஹ நாகம் மஹிமாநஸ்ஸசந்தே । யத்ர பூர்வே ஸாத்யாஸ்ஸந்தி தேவாஃ"

இரண்டாம்பாட்டு.—ஊரும் இத்யாதி. "திருக்கோளூர்க்கேபோருங்கொல்" இத்யாதியைக் கடாக்ஷித்தவதாரிகை - திருக்கோளூர்க்கே இத்யாதி. இந்த அவதாரிகை மூன்றும் அர்த்தத்தைக் கடாக்ஷித்து.

தாத்பர்யார்த்தம் - இவ்விருப்பில் இத்யாதி. விவரணம் - இங்கே இத்யாதி. "தன்னைப்போல்" என்றதுக்குஹாவம்-நிரூசந இத்யாதி, "ஊரும்நாடும்" இத்யாதிக்கு தாத்பர்யவிஷத்தார்த்தத்தை.

யாஸ்ஸந்திதேவா꞉) என்றுரு தேச விசேஷந்தேடிப்போனுரோ? "நிரஞ்ஜந꞉ பரமம் ஸாம்யமுபைதி" (நிரஞ்ஜந꞉பரமம்ஸாம்யமுபைதி) என்று அவன் அங்குள்ளாரைத் தன்னோடு ஸாம்யாபந்நராம்படி பண்ணினாற்போலேயாகாதே, இங்குள்ளாரை இவள் தன்னோடொக்கப் பண்ணினபடி. [ஊரும்நாடும் உலகமுந்தன்னைப்போல்] - தானிருந்த ஊரும், அத்தோடு தோள்தீண்டியான நாடும், அத்தோடுசேர்ந்த லோகமும். ராமாவதாரத்திலும் ஒருநோயிறே திருந்திற்று; இங்கு ஸம்ஸாரமாகத் திருந்திற்றுக்கிடீர்! என்கை. இன்று நம் முளவும் வரவேறிப்பாயும்படியிறே இவள் ஸம்பந்தம் வெள்ளமிட்டபடி. "லோகேவதீர்ணபரமார்த்தஸமக்ரபக்தியோகாய" (லோகேவதீர்ணபரமார்த்தஸமக்ரபக்தியோகாய) என்னும்படியே எல்லாமேடுகளிலும் ஏறிற்றென்கை. [ஊரும்நாடுமித்யாதி] - 'காலே யெழுந்திருந்து கரிய குருவிக்கணங்கள் மாலின்வரவுசொல்லி' ப்ராஹ்ம முஹூர்த்தத்திலே திர்யக்குக்களுங்கூட எழுந்திருந்து, அவன் இவள்பக்கல் பிச்சேறிவரும்படியைச் சொல்லாநின்றன. தானிருந்தவிடத்தே செல்லவேண்டுமேவன் இவளிருந்த இடத்தேற வரும்படியைச் சொல்லி. தன்னைப்போல் அவனுடைய [பேருந்தார்களுமேபிதற்ற]-அவன் *மயர்வற மதிநலமருளவந்த பிதற்றிறேயிவளது! இவள்தான் அடியாகவந்த பிதற்றிறே யிவர்களது! [பிதற்ற]-நினைத்துச் சொல்லுகையன்றியே, பகவத்குணங்களிலே யவகாஹித்து உணர்த்தியற்றுச் சொல்லும்படியாகப்பண்ணி. [அவனுடைய பேருந்தார்களும்] - "சங்கென்னும் சக்கரமென்னும் துழாயென்னும்" என்பது, "தேவதேவபிரான்" என்பது, "விரைமட்டலர் தண்டுழாய்" என்பதாகை. [பிதற்ற] - "ஶ்ருதோ யஶ்ச ஸர்வஸ்ய ஜாதஸ்ய"

ப்ர.—முண்டகோபநிஷதி [௩-௧] "ததா வித்வாந் புண்யபாபே விதூய நிரஞ்ஜந꞉ பரமம் ஸாம்யமுபைதி"

ஸ்தோத்ரே யாமுநாசார்யா꞉, "பூயோ நமோ(அ)பரிமிதாச்யுதபக்திதத்த்வஜ்ஞாநாம்ருதாப்திபரிவாஹஶுபைர்வசோபி꞉ । லோகே(அ)வதீர்ணபரமார்த்தஸமக்ரபக்தியோகாய நாதமுநயே யமிநாம்வராய ॥"

"இவ்விருப்பில" இத்யாதி வாக்யத்ரயத்தாலே யருளிச்செய்தது, ஸப்தார்த்தம் - தானிருந்த இத்யாதி. இத்தால் வ்யாவ்ருத்தி - ராமாவதாரத்திலும் இத்யாதி. அப்படி திருந்திற்றே? என்ன - இன்று நம் முளவும் இத்யாதி. இப்படி ஸம்ஸாரமாகத்திருந்துகையாலே ஆழ்வார் க்ருபைக்கு மேட்டுமடையாயிருப்பாரில்லை என்னுமர்த்தை ஸப்ரமாணமாக அருளிச்செய்கிறார் - லோகேவதீர்ண இத்யாதி ஸ்தோத்ரே. லோகே – பகவத்பக்திக்கு மேட்டுநிலத்திலே. 'அவதீர்ணபரமார்த்த ஸமக்ரபக்தியோகாய' அவதரிக்கப்பட்ட பரமார்த்த ஸமக்ரபக்தியோகத்தையுடையவர் என்றபடி. திருந்தினதின் சரமாவதியைக்காட்டுகிறார் - காலே இத்யாதி. நாச்சியார்திருமொழி, ஒன்பதாந்திருமொழி, எட்டாம்பாட்டு; இதுக்கர்த்தம் - ப்ராஹ்ம இத்யாதி. "மாலின்" என்றது - வ்யாமுக்தனுடையவென்னுதல், பெரியோனுடையவென்னுதல். அதில் முந்தினவர்த்தம் - அவன் இவள்பக்கல் பிச்சேறிவரும்படி இத்யாதி. இரண்டாமர்த்தம் - தானிருந்தவிடத்தே இத்யாதி. * மயர்வறமதிநலம்பெற்ற தன்னைப்போலே பிதற்றுகைக்கு ஹேதுவேதென்ன - அவன்மயர்வற இத்யாதி. இத்தால் - அவன் * மயர்வறமதிநலமருளினது இவளொருத்தி யளவிலே சுவரிவிட்டது; இவள் * மயர்வறமதிநலமருளினதெல்லார்க்குமாய் விட்டதென்று - இவ்வாக்யத்துக்கு தாத்பர்யம். "பிதற்ற" என்றதுக்கர்த்தம் - நினைத்து இத்யாதி. "பேருந்தார்களும்" என்றதுக்கர்த்தம் - சங்கென்னும் இத்யாதி. "உணர்த்தியற்றுச்சொல்லும்படி" என்றதுக்குப்ரமாணம் - ஶ்ருதோயம் இத்யாதி. "ஶ்ருதோ யஶ்ச ஸர்வஸ்ய ஜாதஸ்ய"

ஜல்பத:" (ஶ்ருதோ யமர்த்தோ ராமஸ்ய ஜாமதக்ந்யஸ்ய ஜல்பத:) என்கிறபடியே. [கற்புவானிடறி] - வானான கற்பை இடறி. ஒருவரால் கடக்கவொண்ணாத மர்யாதையைக்கடந்து மலைபோலேயிருக்கிற மர்யாதையை, காற்கீழே அகப்பட்டதொரு க்ஷுத்ரபாஷாணத்தை இடறுமாபோலே இடறி. பெரு வெள்ளமானது சிறுக்கரைகளோடு பெரியகரைகளோடு வாசியற ஏறுமாபோலே, நாண், மடம், அச்சம் தொடக்கமானவற்றை மதியாதே போகை. [கற்புவானிடறி] - "வலியவறிவை யென்னுதல்; பெரியஜ்ஞானத்தை யென்னுதல்" என்றும் சொல்லுவர்கள். அப்போது, கற்பென்று - கல்வியாய், அத்தாலே அறிவைச்சொல்லி, வானென்று - வலியைச்சொல்லிற்றுகிறது. அன்றிக்கே, கற்பென்று - கல்வியாய், அத்தாலே ஜ்ஞானமாய், வானென்று - பெருமையாய், பெரியஜ்ஞானத்தை யென்றுமாம். அபிநிவேசத்துக்கு ஓரளவு உண்டாகிலிறே ஓரளவிலே தடை நிற்பது. "காவலுங்கடந்து" என்னக்கடவதிறே. "யயௌ ஸகாஶி ப்ரேமாந்தா" (யயௌசகாசித்ப்ரேமாந்தா) - ஒருத்திபுறப்பட்டுப்போனாள். இவளைக் கொண்டுபோனார் ஆர்? என்னில்: ப்ரேமத்தாலே வந்த இருட்சி வழிகாட்டப் போனாள். "குரவ: கிம் கரிஷ்யந்தி தக்தாநாம் விரஹாக்நிநா" (குரவ:கிங்கரிஷ்யந்திதக்தாநாம்விரஹாக்நிநா) - "குருக்கள்கிடாய்" என்ன, வேந்துவிழுகிறதுக்கோரு குடநீர் சொரியவல்லர்களோ? [சேருமித்யாதி] - இங்கே அசல்காக்க இருக்கிறவள் அங்கே தன் வயிறுவளர்க்கப் போவதே! இங்கே பிறர் திருந்தும்படியிருக்கிற இவளங்கே திருந்தினவிடந் தேடிப் போவதே! தன்னைக்கண்டு பிறர் வாழவிருக்கிற இவள், தான் அவனைக்கண்டு வாழப்போவதே! [சேருநல்வளமித்யாதி] - ஸத்ருஶமான நல்ல ஸம்பத்துச்

ஜல்பத: । நாரதஸ்ய ச தேவர்ஷே: க்ருஷ்ணத்வைபாயநஸ்ய ச" இதி மோக்ஷதர்மே. ஜல்பத: என்று - அக்ரம பாஷணத்தைச்சொல்லுகிறது; ஜாமதக்ந்யஸ்ய ராமஸ்ய, ஜல்பத: - ஜல்பத்தில் நின்றும், அயமர்த்த: ஶ்ருத: என்றபடி. 'ஜல்பத: என்கிறபடியே' என்றவநந்தரம், அக்ரமமாகச்சொல்லும்படி பண்ணி என்று அத்யாஹார்யம். பிதற்ற - பிதற்றும்படி பண்ணி. "வானான - கற்பு" என்று - வலியமர்யாதையாய், மர்யாதைக்கு வலிமையேதென்ன - ஒருவரால் இத்யாதி. கடக்கவொண்ணாத மர்யாதையை - குலைக்கப்போகாத ஸ்த்ரீத்வத்தையென்றபடி. கீழ்வாக்யத்தை ஸத்ருஷ்டாந்தமாக விவரியாநின்றுகொண்டு, "இடறி" என்றதுக்குபாவம் - மலைபோலே இத்யாதி. அலங்கநீயமான மர்யாதையை அதிக்ரமித்ததுக்குத்ருஷ்டாந்தம் - பெருவெள்ளம் இத்யாதி. கீழே, "கற்பு" என்று - மர்யாதையாக அருளிச்செய்து, ஜ்ஞானமாக அர்த்தாந்தரம் - வலியவறிவை இத்யாதிவாக்யத்வயம். இவ்வாக்யத்வயத்தில், "கற்பு" என்றதுக்கர்த்தபேதமில்லை. "வான்" என்றதினர்த்தத்வயத்தையும் அடைவே விவரிக்கிறார் - அப்போது இத்யாதி. மர்யாதையை அதிக்ரமிக்கலாமோ? என்ன - அபிநிவேசத்துக்கு இத்யாதி. மர்யாதாதிக்ரமத்துக்கு ஸம்வாதத்வயம் - காவலுங்கடந்து இத்யாதி. ஸ்பஷ்டோர்த்த:. பெரியாழ்வார்திருமொழி, "நாவலம்பெரிய" இத்யாதி. 'காஶ்சித் த்ருஷ்ட்வா க்ருஷ்ணஸ்ய ஹ்ரீயமாணா ஜஹௌ ஸ்வயம் । யயௌ ச காசித் ப்ரேமாந்தா தத்பார்ஶ்வமவிலம்பிதம்'" இதி பஞ்சமேம்ஶே [௧௩,௭] த்ரயோதஶே ததைவாஷ்டாதஶே, "ஶ்ருத்வைதத் ததோ வ்ரஜஸம்பந்த(?) ஜல்பதீநாம்(?) ... குரவ: கிம் கரிஷ்யந்தி தக்தாநாம் விரஹாக்நிநா" [௨௨] இதி. 'யயௌ ச காசித்'' இத்யாதிக்கர்த்தம் - ஒருத்தி இத்யாதி. காவலைக்கடந்த ப்ரகாரத்தைக்காட்டுகிறார் - ப்ரேம இத்யாதி. "ஊரும்நாடும்" இத்யாதியைக்கடாக்ஷித்து "போருங்கொல்" என்கிறவளுடைய ஹார்த்தபாவத்தை இரண்டுவகையாக அருளிச்செய்கிறார் - இங்கேயசல் இத்யாதிவாக்யத்வயத்தாலே. காக்க - ரக்ஷிக்க. "இங்கேயசல்காக்க" இத்யாதியின் விவரணம் - தன்னைக்கண்டு இத்யாதி. "போருங்கொல்" என்றதுக்குமூன்றர்த்தம். "சேரும்" என்றது - நல்வளத்துக்கு விசேஷணமாதல்; "சேரும்-கொடி" என்னு

சேர்ந்திருப்பதாய், நீர்நிலங்களையுமுடைத்தாயிருக்கிற திருக்கோளூர்க்கே. [திருக்கோளூர்க்கே போருங்கோல்] - போருங்கோலென்றது புகுங்கோல் என்றபடி. அன்றியே, இவளுக்கு முன்னே தன் நெஞ்சு முற்பட்டபடியாய், அங்கேயிருந்து அவள்வழியில் ஒருகுறைகளின்றியிலே வருமோ? என்கிறாளாகவுமாம். அன்றியே, 'நல்வளஞ்சேர் பழனத்திருக்கோளூர்க்கே-சேரும் - கொடி, பூவைகாள்!-போருங்கோல்உரையீர்!' என்றுவுதல். அதாவது மீண்டு புறப்பட்டு வரவல்லளோ? சொல்லிகோள்! [கொடியேன்] - இவளைப் பெறுகைக்கு ஸாத்யம் பண்ணிவைத்து, இவளளவுஉங்களைக்கேட்கவேண்டும்படியான பாபத்தைப்பண்ணினேன். [கொடி] - உபகந்த்தையொழியில் தறைப்படும். * கோல்தேடியோடுங் கொழுந்ததே போன்றதே மால்தேடியோடும் மனமிறே. [கொடியேன்கொடி] - பெற்ற என்னையும்விட்டு வேறேயுமோர் அபாஶ்ரயமுண்டாம்படியான பாபத்தைப்பண்ணினேன். பெற்ற தாயாரை விட்டகலுகை குடிஸ்வபாவம்போலே காணும். (*கள்வன்கொல்லிலும், *நல்லதோர்தாமரைப் பொய்கையிலுமுண்டிறே.) [பூவைகாள் - போருங்கோல்-உரையீர்] - பெற்றதாயாரைவிடலாம்; அத்தனையல்லது, பிறந்தாரைக் கைவிடப் போகாதென்றிருக்கிறாள்காணும் தன்னையிட்டு. போக்குவரத்து எனக்கன்றோ சொல்லலாகாது, உங்களுக்குஒதுக்காதே சொல்லுமே. வயிற்றிற் பிறந்தாரை ஒளிப்பாரில்லையே: [உரையீர்] - அவள் சொல்லிப்போகச்செய்தே இவை சொல்லாதிருக்கிறன என்றிருக்கிறாள். [போருங்கோல்] - என்கிற ஸம்ஶயத்துக்கடி, பாவியான நான் இருக்கையாலே மீளாதொழியவுங்கூடுமே, நீங்களிருக்கையாலே மீளவுங் கூடுமிறே; என் பாபமே ப்ரபலமாய் வாராதொழியுமோ? உங்களைப்பார்த்து வருமோ? சொல்லிகோள்! அறிவித்துப் போனாளாகில் ராமாவதாரத்திற்போலே லோகமாகப் பின்தொடருமிறே; * சுற்றமெல்லாம் பின்றொடர இறே போயிற்று!

---

*தல். த்ருதியார்த்தவிவரணம் - மீண்டுபுறப்பட்டு இத்யாதி. ஆக, புகுங்கொல், வருங்கொல், மீண்டு புறப்பட்டுவரவல்லளோ என்று மூன்றர்த்தம். "உபக்நத்தையொழியில் தறைப்படும்" என்றதுக்கு ப்ரமாணம் - **கோல்தேடியோடும்** இத்யாதி. ஸர்வேஶ்வரனைத் தேடிவிடாதே பதறிச்செல்லுகிற என்னுடைய மநஸ்ஸானது, கொம்பைத்தேடிப் படர்ந்துசெல்லுகிற கொழுந்துபோல இராநின்றது என்றபடி. இரண்டாந்திருவந்தாதி இருபத்தேழாம்பாட்டு. "கொடி" என்றதுக்கர்த்தாந்தரம் - **பெற்றவென்னையும்** இத்யாதி. 'பெற்றதாயாரைவிட்டகலுகை' இத்யாதிக்கு - "பெற்றதாயாரைவிட்டகன்று" என்றதிலே நோக்கு. பெற்ற தாயானதனக்குச் சொல்லாளோ, இவற்றைக் கேட்கிறதென்? என்ன - **பெற்றதாயாரைவிடலாம்** இத்யாதி. தன்னையிட்டென்றது - தன்மகளுக்குத்தான் மறையாதே சொல்லுமாபோலே, தான் வளர்த்த இவற்றுக்கு மறையாதே சொல்லிப்போமென்று கேட்கிறாளென்றபடி. தாத்பர்யார்த்தம் - **போக்குவரத்து** இத்யாதி வாக்யத்ரயம். "உரையீர்" என்று நியமிக்கிறதென்? என்ன - **அவள்சொல்லி** இத்யாதி. "போருங்கொல்" என்று சம்ஶயிக்கிறதென்? என்ன - **போருங்கோல் என்கிற** இத்யாதி. போருங்கொலென்று சம்ஶயிக்கிறதென்றது - வருமோ? என்று சம்ஶயிக்கிறதென்றபடி. மகள்தான் அறிவித்துப்போகாதொழிவானேன்? என்ன - **அறிவித்து** இத்யாதி. ராமாவதாரத்தில் பின்தொடர்ந்தார்களோ? என்ன - **சுற்றமெல்லாம்** இத்யாதி. பந்துவர்க்கமெல்லாம் பின்தொடரவித்யர்த்தः. பெருமாள்திருமொழி, எட்டாந்திருமொழி ஆறும்பாட்டு. கொடியேன்கொடி - கொடுமையையுடைய என்னுடைய கொடிபோன்ற பெண்பிள்ளை இத்யர்த்தः. பூவைகளென்றது - பூவைகாளென்று சம்போதனை. 'பூவைகாள்! ஊரும்நாடும்' என்றுதொடங்கி, பிதற்றும்படிபண்ணி 'வாளுன - கற்பை - இடறி - நல்வளஞ்சேர் பழனத் திருக்கோளூர்க்கே - சேரும் - கொடியேன்கொடி - போருங்கொல், உரையீர்', இத்யந்வயः. "அறிவென்கிறது - தத்வத்தை; ஜ்ஞாநமென்கிறது - உபாஸநத்தை. அன்றிக்கே, அறிவென்கிறது - திருவாய்மொழியிற்பிறந்த ஜ்ஞாநம்; ஜ்ஞாநமென்கிறது - வேதாந்தஜ்ஞாநமென்றபடி" என்று சில ஸ்ரீகோஶத்திலிருக்கிறது.* (உ)

மூன்றும் பாட்டு.

பூவைபைங்கிளிகள் பந்துதூதைபூம்புட்டில்கள்
யாவையுந்திருமால் திருநாமங்களேகூவியெழும் என்
பாவைபோய் இனித் தண்பழனத்திருக்கோளூர்க்கே
கோவைவாய்துடிப்ப மழைக்கண்ணொடுஎன்செய்யுங்கொலோ?

ஆ.—(பூவை.) - லீலார்த்தமாகக் கொண்டுவந்த சுகசாரிகாதி லீலோபகரணங்களைக்கண்டால் வரும் லீலாரஸமும், தனக்குப் பிராட்டியோடே ரமமாணனான எம்பெருமானைக் காணுமதுவே யாகையால், அவனை நினைத்துக் காணப்பெறாமையாலே அவன்திருநாமங்களைச் சொல்லிக்கூப்பிடச் சொல்லி அதினுடைய மாதுர்யத்தாலும் குளிர்த்தியாலும் உஜ்ஜீவித்திருக்கிற என் பெண்பிள்ளை திருக்கோளூரிலே போய்ப்புக்கு, இனித்தன்னுடைய மனோரதமெல்லாம் பரிபூரணமாம்படி யிருக்குமோ? அன்றியே, தன்னுடைய கண்ணநீரும் அழுகையுமேயாய் நிற்குமோ என்கிறாள்.

ஒ.—மூன்றாம்பாட்டில், திருக்கோளூர் ப்ரத்யாஸந்நமனால் எங்ஙனே உடைகுலைப்படக்கடவள் என்கிறாள்.

[பூவையென்று தொடங்கி] - பூவை பந்து முதலான அழகிய லீலோபகரணங்களைக்கண்டால் ஸ்ரீபரதாழ்வானுக்கு ராஜ்யங்கண்டாற்போலே இவளுக்கு அஸஹ்யமாய் அவற்றாலுள்ள ரஸமும் பகவந்நாமோச்சாரணத்தாலேயாய் உஜ்ஜீவிக்கும் என் மகள். [போயினியென்று மேலுக்கு] - இதுக்குமேலே ஸ்ரமஹரமான நீர்நிலங்களையுடைய திருக்கோளூர்க்கேபோய், என் பாவை, எம்பெருமானுடைய ப்ரத்யாஸத்தியாலே உடைகுலைப்பட்டு, தான் நெடுநாள் அவனைப்பிரிந்து பட்டபாடும், அவன் கைவிட்டிருந்த படியையும் நினைத்து கோவைப்பழம்போலேயிருக்கிற திருப்பவளம்துடிப்ப மிக்கிருந்துள்ள நீரையுடையகண்ணும் இவளுமாய் என்படக்கடவளோ?

ப.—அநந்தரம், தன்னுடைய லீலோபகரணங்களாலுள்ள ரஸமெல்லாம் திருநாமோச்சாரணத்தாலே பிறக்கும்படியாயிருக்கிற இவள், திருக்கோளூரிலே புக்கு அவன் தன் நினைவுக்கிடாகப் பரிமாறாமையாலே கண்ணுங்கண்ணீருமாய் எங்ஙனே க்லேசப்படுகிறாளோ? என்கிறாள்,

(லீலோபகரணமான) பூவை-பூவைகள், பை - பசுத்த, கிளிகள் - கிளிகள், பந்து - பந்து, தூதை - தூதை, பூ - பூவிடும், புட்டில்கள் -, யாவையும் -, (இவையெல்லாவற்றாலுமுள்ள ரஸம்பிறக்கும்படி), திருமால் - திருமாலுடைய, திருநாமங்களை - திருநாமங்களையே, கூவி - உச்சரித்து, எழும் - அத்தாலே யுஜ்ஜீவிக்கும்படியான, என் - என், பாவை - பெண்பிள்ளையானவள், இனி - இத்திருநாமோச்சாரண ரஸங்கிடக்கச்செய்தே பின்னையும், தண் - குளிர்ந்த, பழனம் - பழனங்களையுடைய, திருக்கோளூர்க்கே - திருக்கோளூர்க்கே, போய் - போய், (அவன் எதிர்வந்து) ஸ்வாகதாதிகளைப் பண்ணி ஆலோகாலாபாலிங்கநாதிகளாலே ஆஶ்வாஸிப்பியாமையாலே), கோவை - கோவைப்பழம்போலேயிருக்கிற, வாய் - அதரம், துடிப்ப - துடிப்ப, மழை - வர்ஷம்போலே தாராளமான நீரையுடைத்தான, கண்ணொடு - கண்களோடே நின்று, என்செய்யுங்

கொலோ - என்செய்கிறார்களோ? யாவற்றையும் திருமால் திருநாமங்களைச்சொல்லு மென்றுமாம்.

இ.—மூன்றாம்பாட்டில், திருக்கோளூர் ப்ரத்யாஸந்நமானால் எங்ஙனே உடைகுலைப்படக்கடவள் என்கிறாள்.

[பூவை]-கிளியிலே அவாந்தரபேதம். [பைங்கிளி] - பச்சைக்கிளி, பூம்புட்டில்கள். [யாவையும்] - தன்னுடைய லீலோபகரணங்களான யாவையாலும் பிறக்கும் ரஸமெல்லாம் அவனுடைய திருநாமத்தாலே பிறக்குமாயிற்று இவளுக்கு. அவனுடைய லீலோபகரணங்களோபாதியும் போருமாயிற்று இவளுடைய லீலோபகரணங்கள். [திருமால் திருநாமங்களே கூவியெழும்] - ஸஹவந்நாமங்களைச்சொல்லி உஜ்ஜீவிக்கும்; திருநாமச்சுவடறிந்தபின்பு லீலோபகரணதர்ஶநம், ஸ்ரீபரதாழ்வானுக்கு ராஜ்யதர்ஶநம்போலே அஸஹ்யமாயிருக்கும். இவளுடைய லீலோபகரணங்கள் அவனுக்கு போகோபகரணங்களாயிருக்கும். "இந்த லீலோபகரணங்கள் திருநாமத்தைச் சொல்விற்றாளோ?" என்று பெற்றிகேட்க, "பந்துதூதை பூம்புட்டில்களில் வாறது" என்று பிள்ளை பரிஹரித்தார். அவற்றைத் திருநாமத்தைச்சொல்லி அழைத்தாளாலோ என்னில்: அது, "உண்ணுஞ்சோறு பருகுநீர் தின்னும்வெற்றிலையும் எல்லாம் கண்ணன்" என்றிருக்கிறதுக்குச் சேராது. [திருமால்] - இவள் திருநாமம் சொல்லும்போது த்வயத்தில்படியே ஸ்ரீமந்நாராயணன் என்றாயிற்று சொல்லுவது. [என்பாவை] - நிருபாயிகஸ்த்ரீத்வத்தை யுடையவள். [போயினி] - லீலோபகரண ரஸமும் திருநாமமே யானவிருப்பை விட்டு. அங்கு என்ன வேற்றம்கத்துக்குப் போனாள். [தண்பழனம்] - ஶ்ரமஹரமான நீர் நிலங்களையுடைய ஊர். [கோவையாய் துடிப்ப] - கலக்கிறபோது தானே மேல்விழுந்து கலந்தபடியும், "பிரியேன், பிரியில்தரியேன்" என்று கலந்தபடியும், பிரிந்தபடியும், வரவுதாழ்த்தபடியும், தனிவழியேதான் செல்லவிருந்தபடியும், சென்றபின்பு, "ஹ்ரீரேஷா ஹி மமாதுலா" என்று லஜ்ஜாவிஷ்டனாய்க் காலைப்பிடியா தொழிந்தபடியும், இவற்றை நினைந்து கோவைப்பழம்போலேயிருக்கிற அதரம்துடிக்க, மிக்கநீரையுடைய கண்ணோடே என்படுகிறாளோ? தனிவழியே போனாள், நான்கூடப் போகப்பெற்றிலேன்! என்கிறாள்.

ஈடு.—மூன்றாம்பாட்டு. திருக்கோளூர் ப்ரத்யாஸந்நமானால் எங்ஙனே உடைகுலைப்படக்கடவள் என்கிறாள்.

[பூவையித்யாதி] - வேறொன்றைக்கொண்டு போதுபோக்கவேண்டும்பருவத்திலும் திருநாமத்தையே கொண்டு ஜீவித்திருக்குமவள்கிடீர் போனாள்! இங்கிருந்தநாள் மற்றொன்று தாரகமாய், அங்கேபோய் அவனாலே தரிக்கப்போனாளோ. பூவைதொடக்கமான லீலோபகரணங்களால் பிறக்கும் ஹர்ஷமெல்லாம் த்வயத்திற்படியே ஸ்ரீய:பதியென்கிற திருநாமத்

மூன்றாம்பாட்டு—பூவை இத்யாதி. "கோவைவாய்துடிப்ப மழைக்கண்ணொடு என்செய்யுங்கொலோ" என்றதைக்கடாக்ஷித்தவதாரிகை - திருக்கோளூர் இத்யாதி.

"கூவியெழும்என்பாவை" என்னுமளவுக்கும் தாத்பர்யசித்தார்த்தம் - வேறொன்றை இத்யாதி. விவரணம் - இங்கிருந்த இத்யாதி. "பூவை" இத்யாதிக்கு பூர்வ பக்ஷார்த்த த்வயந்தவிர, சித்தாந்தார்த்தம் இரண்டு. அதில்முந்தினது - பூவைதொடக்கமான இத்யாதி. புட்டில்கள் - புட்டில்களாகிற, யாவையும் - யாவையால்பிறக்கும் ஹர்ஷமெல்லாமென்றபடி. என மன் பாவை - உண்டாகாநின்

ணைச்சொல்லி அத்தாலேயுண்டாகாநின்றது. “ ‘ஊருநாடு முலகமுந்தன்னைப்போல்’ என்கிறபடியே, இவைதாம் திருநாமத்தைச் சொல்லிற்றுலாகாதோ” என்று பெற்றி நம்பிள்ளையைக்கேட்க, “அதுக்குவ்யபிசாரமுண்டு, ‘பந்துதூதை’ என்கிறவிடத்தே தட்டுப்பிறக்கும்” என்ன, “அங்ஙனேயிறே” என்று இசைந்துபோனார். அவன் திருநாமங்களை இவற்றுக்கிட்டு அழைத்ததாலோ? என்னில்; “(உண்ணுஞ்சோறு பருகுநீர் தின்னும் வெற்றிலையும்) எல்லாங்கண்ணன்” என்றிருக்கிற அதிமாத்ர ப்ராவண்யத்துக்கு இதுசேராது. [பூவையித்யாதி] - திருநாமச்சுவடறிந்தபின்பு லீலோபகரணதர்சநம் இவளுக்கு அஸஹ்யமாயிருக்கும்; ஸ்ரீ பரதாழ்வானுடைய ராஜ்யதர்சநம் அவனுக்கு அஸஹ்யமானாப்போலே. சக்ரவர்த்திக்கு சாஸ்த்ரார்த்தங்கள் பண்ணின அன்று நாயிறுபாடு, “கைகேயிபண்ணின கச்மலத்துக்கு நாமும் கீழோலையிட்டோமென்று நாட்டார் நினைத்திருப்பதொன்றுண்டு; அத்தோஷம் நமக்கில்லை என்றறிவிக்கவேணும்” என்றுபுக்கான். ராஜலோகமடங்கலும்திரண்டு “கர்த்தாவானவனை இழந்தோம்; அநந்தரம் ப்ராப்தரானவர் காடேறப்போய்க்கொடுநின்றார், இனிராஜபுத்ரர்களில் நின்றாரைக்கொண்டு நிர்வஹிக்குமத்தனையிறே” என்றுபார்த்து, மங்களாவஹமான தூர்யகோஷங்களையும் பண்ணிக்கொண்டிருந்தார்கள். இத்த்வநி செவிப்பட்டபோது *கருமாணிக்கமலையில் பிராட்டி ஸ்வயம்வரத்துக்கு மணமுரசு அறைந்தபோது தோழி பட்டதெல்லாம் பட்டான். “[illegible]” (விலலாபஸபாமத்யே)

ப்ர.—[பூவை இத்யாதி]—[illegible], [அஉ] “[illegible] । [illegible] ॥ கக ॥ [illegible] ॥ கஉ ॥ [illegible] ॥ கங ॥ [illegible] ॥ கச ॥ [illegible] ॥ கரு ॥

றுள்ள என் பாவையென்றபடி. கூவி - சொல்லி, எழுகை - உண்டாகை. பெற்றிநிர்வாஹத்துக்கு, கூவி - கூவும்படிபண்ணி, எழும் - சந்தோஷிக்கும், என்பாவையென்றபடி. த்ருதீயார்த்தத்துக்கு, யாவைக்கும் திருமால்திருநாமங்களையிட்டழைத்து சந்தோஷிக்கும் என்பாவை என்றபடி. இதுசேராது என்றது, வேறொன்றால் காலக்ஷேபம்பண்ணுகை சேராதென்றபடி. சித்தாந்தார்த்தத்திலிரண்டாவது - திருநாமச்சுவடு இத்யாதி. அதாவது - திருமால் திருநாமங்களைக்கூவி “மாற்பால்” இத்யாதிப்படியே பூவைதொடக்கமான யாவையையும் இகழும் என் பாவை என்றபடி. எழுகை - த்வேஷிக்கை. “எள்கலிராகம்” என்னக்கடவதிறே; கூவுகை - அநுஸந்திக்கை. பூவை - கிளியில் அவாந்தரபேதம். தூதை - சிறுசோறுசமைக்கும் பானைச்சட்டி. பூப்புட்டில்கள் - பூப்பெட்டிகள். உத்தரார்த்தத்துக்கு த்ருஷ்டாந்தம் - ஸ்ரீபரதாழ்வானுடைய இத்யாதி. ஸ்ரீபரதாழ்வானுக்கு அஸஹ்யமாயிருந்ததுக்கு ப்ரமாணோபபாதநம் பண்ணுவாராக, அதுக்கவதாரிகை - சக்ரவர்த்தி இத்யாதி. சாஸ்த்ரார்த்தங்கள் - உத்தரக்ரியைகள். நாயிறுபாடு - ப்ராதக்காலத்திலே. ‘புக்கான்’ சதஸ்ஸிலே இதிசேஷ꞉. கர்த்தா - தசரதன். ப்ராப்தரானவர் - பெருமாள். மணமுரசு - மங்களவாத்யம். அறைகை - அடிக்கை. “[illegible] । [illegible]

தனியிடத்திலன்றே பறிகொடுப்பது. தனக்கு சேஷத்வமிறே ஸ்வரூபம்; ஸ்வரூபத்தையிறே அபஹரிக்கநினைக்கிறது! "ஜகர்ஹேச" (ஜகர்ஹேச) ஸந்த்யாவந்தநத்துக்குப் பிற்பட்டாரை சிஷ்டகர்ஹைபண்ணுமாபோலே. "புரோஹிதம்" (புரோஹிதம்) இக்குடிக்கு நாங்கள் கைவாங்கியிருக்க, நீ முன்னேடிக் காரியங்கள் நடத்தக் கடவதாகச் சமைந்தபடி சாலவழகிதாயிருந்தது. "ஸபாமத்யேஜகர்ஹே" (ஸபாமத்யேஜகர்ஹே) "நியமாதிக்ரமம்ரஹஸிபோதயேத்" (நியமாதிக்ரமம்ரஹஸிபோதயேத்) என்கிற நிலையைக்குலைத்தான்; (புரோஹிதத்வமாகிற) ஹேது கழிகையினலே. "ராஜ்யஞ்சாஹஞ்சராமஸ்ய" (ராஜ்யஞ்சாஹஞ்சராமஸ்ய) சேஷவஸ்துக்களிலே ஒன்றையொன்று ஆளுமோ? அங்ஙனேயாமன்று; ராஜ்யந்தானெனக்கக் கடவதாலோ? "தர்மம்வக்துமிஹார்ஹஸி" (தர்மம்வக்துமிஹார்ஹஸி) - லோகத்திலே தமப்பன்மாரையும் தமையன்மாரையும் அழியச்செய்து தாந்தாம் ராஜ்யத்தைக் கைக்கொண்டு போருவதொன்றுண்டு; "அது இந்த வ்யக்தியிலுஞ்செய்யும்" என்றிராதேகொள்ளாய்; என் ப்ரக்ருதியறிந்து அதுக்கீடாக வார்த்தை சொல்லப்பாராய். "கதம்தஸ்ரதாஜ்ஜாதோபவேத்ராஜ்யாபஹாரக:" (கதந்தஸ்ரதாஜ்ஜாதோபவேத்ராஜ்யாபஹாரக:) - அவர் பிரிந்த அநந்தரம் முடியவல்லவன் வயிற்றிலே பிறந்தேனும்படி எங்ஙனே? அவர்போகட்டுப்போன ராஜ்யத்தை நான் அபஹரித்தால். "நமஸ்யாமிக்ருதாஞ்ஜலி:" (நமஸ்யாமிக்ருதாஞ்ஜலி:)- அப்ராப்தம் அவன்சொல்லச்செவி தாழ்த்ததுக்கு அபவாதப்ராயஸ்சித்தம்பண்ணுகிறுன். [என்பாவையோயினி] - என் புத்த்ய

புரோஹிதம்" இத்யயோத்யாகாண்டே. "ஸபாமத்யே" என்றதுக்குபாவம்-தனியிடத்தில் இத்யாதி. அதாவது - காட்டிலே பறிகொடுப்பாளாகில் நான் திரளிலேபறிகொடுத்தேன் என்றபடி. இவர்கள்பறித்ததேது? என்ன - தனக்குசேஷத்வம் இத்யாதி. இவன்கர்ஹித்த ப்ரகாரத்தை ஸத்ருஷ்டாந்தமாக உபபாதிக்கிறர் - ஸந்த்யாவந்தநத்துக்கு இத்யாதி. சிஷ்டகர்ஹை பண்ணுமாபோலேயென்றது - சிஷ்டர்கர்ஹைபண்ணுமாபோலேயென்றபடி. புரோஹிதம்பஸ்யதீதி - புரோஹித: என்றுவிவக்ஷித்துபாவம் - இக்குடிக்கு இத்யாதி. "ஸபாமத்யே" என்றத்தை - கீழே கூட்டியருளிச்செய்து, மேலேயுங்கூட்டிபாவம் - நியமாதிக்ரமம் இத்யாதி. ஹேது - குருத்வ ஹேது. "ராஜ்யஞ்சாஹஞ்ச ராமஸ்ய தர்மம் வக்துமிஹார்ஹஸி । கதம் தஸ்ரதாஜ்ஜாதோ பவேத்ராஜ்யாபஹாரக:" அசேதநமான ராஜ்யத்தைபுந் தன்னையும் சேஷமாகச் சொல்லுகிறவனுடைய ஹார்த்தபாவம் - சேஷவஸ்துக்களிலே இத்யாதி. அங்ஙனேயாமன்று என்றது - சேஷவஸ்துக்களிலே யொன்றையொன்று நியமிக்குமதாலுவென்றபடி. "தர்மம் வக்துமிஹார்ஹஸி" என்றதுக்குபாவம் - லோகத்திலே இத்யாதி. "இஹ" என்றதக்குபாவம் - என்ப்ரக்ருதி இத்யாதி. இஹ - மயி என்றபடி. நீர் நம்மை வெறுக்கிறதென்? உம்முடையதாயார் "உமக்கு" என்று ராஜ்யத்தைவாங்கிப் பெருமாளைக்காட்டிலே போகவிடாநிற்கஎன்ன - நமஸ்யாமி இத்யாதி. "யதி த்வாகாரயம் பாபம் நாஹம் தவ விரோதயே । உத்ஸ்ருஜ்ய ... நமஸ்யாமி க்ருதாஞ்ஜலி:" இப்போது நமஸ்காரத்துக்கு ப்ரஸக்கமேதென்ன - அப்ராப்தம் இத்யாதி. அபவாத ப்ராயஸ்சித்தமாவது - "தன்னிடத்தில் பாபமில்லாவிட்டாலும் லோகாபவாதமுண்டானல் ப்ராயஸ்சித்தம்பண்ணவேணும்" என்று சாஸ்த்ரஞ்சொல்லுகையாலே ப்ராயஸ்சித்தம்பண்ணுகிறனென்றபடி. "ப்ராதராசார்யஸ்ய ... நியமாதிக்ரமம் ரஹஸி போதயேத்" இதி ஆபஸ்தம்பதர்மே. "பாவை" என்று - மரப்பாவையாய், அதுபோலே பரதந்த்ரையானவளென்று சொல்லி, அநந்தரம் "போய்" என்கிறவளுடைய ஹார்த்தபாவம் - என் புத்த்யதீநம் இத்யாதி. த்விதீ

தீநமான வ்யாபாரத்தையுடையவள் கிடீர் என்னையொழியப் புறப்பட்டுப்போனாள். நிருபாதிகமான ஸ்த்ரீத்வத்தையுடையவளென்றுமாம். [இனி - போய் - லீலோபகரணங்களாற் கொள்ளும் கார்யமும் அவனேயாம்படியான இந்தப்ராவண்யத்துக்குமேலே அங்குப்போய்ப் பெறுவது என்னாகப்போனாளோ? [தண்பழனத்திருக்கோளூர்க்கே] - ஸ்ரமஹரமான நீர் நிலங்களையுடைய திருக்கோளூர்க்கே. [கோவைவாய்துடிப்ப] - கோவைப்பழம்போன்ற சிவப்பையுடைத்தான அதரமானது ஸ்ப்புரிக்க. "'பிரியேன்' என்று பிரிந்தாய்; 'வருகிறேன்' என்று வந்திலை; என்னைத்தனியேயிட்டு வைத்தாய்; நான்வருமளவும் இருந்தாய்" என்றாற்போலேயிருக்கச் சில சொல்லநினைக்குமே; அதுதோற்றும்படி உதடுநெளிக்கிறபடி. [கோவைவாய்துடிப்ப மழைக்கண்ணொடு] - நினைத்தது சொல்லித் தலைக்கட்டவொட்டாநின்றதோ கண்ணநீர்! உடைகுலைப்பட்டுக் கண்ணநீராலே தலைக்கட்டாநின்றாள். "[illegible]" (உக்த்வார்யேதிஸக்ருத்தீநம்புநர்நோவாசகிஞ்சந) என்னும்படியே. [என்செய்யுங்கொலோ] - சொல்லமாட்டாள், தவிரமாட்டாள், அழாதொழியமாட்டாள்; எங்ஙனே படுகிறாளோ? நம்மையும் பிறரையும்விட்டு அவன்திருநாமங்களை அநுஸவிக்கிறபோதை அழகுகாணப்பெற்றோம்! அவன்தன்னையே கண்டநுஸவிக்கிற போதை அழகுகாணப்பெற்றிலோமே. அநுஸந்தாநவேளையிற்போலன்றிறே கண்டால்பிறக்கும் விகாரங்கள்; "காமனுடல்கொண்ட தவத்தாற்குமையுணர்த்த வண்டலம்பும் தாரலங்கல் நீண்முடியான் தன்பெயரே கேட்டிருந்தங்காரலங்கலானமையால் - கண்டுவணங்கினார்க்கென்னுங்கொல்" என்றிறேயிருப்பது. அலாபத்தோடேயிருக்கும் இருப்புக்கண்டேன், லாபத்தோடேயிருக்கும் இருப்புக்காணப்பெற்றிலேன் என்கிறாள்.

யார்த்தத்துக்கு, பாவை யென்று - ஸ்த்ரீத்வம். "பூவை" இத்யாதியின் [illegible] கூஷித்து, "இனி" என்றதுக்குபாவம் - லீலோபகரணங்களால் இத்யாதி. துடிக்கைக்குஹேதுக்கள் - பிரியேனென்று இத்யாதி. ஆனால் அத்தைச்சொல்லாமல் உதடுநெளிக்கிறதென்? என்ன-நினைத்தது இத்யாதி. உடைகுலைப்பட்டென்றது-அவன்எதிரேவந்ததுக்கு ஈடுபட்டென்றபடி. "மழைக்கண்ணொடு" என்றது - ஹர்ஷாஸ்ருவை. சொல்லமாட்டாளமக்கு ப்ரமாணம்-உக்த்வார்ய இத்யாதி. "[illegible] । [illegible]" இத்யயோத்யாகாண்டே. [கக-ந அ] நாலாமர்த்தத்தைக்கடாக்ஷித்துபாவம் - நம்மையும் இத்யாதி. அநுஸந்தாநதசையைப்பற்ற, கண்டபோதைக்கதிசயமேதென்ன - அநுஸந்தாந வேளையில் இத்யாதி. இதுக்கு ஸம்வாதம் - காமனுடல் இத்யாதி: நான்முகன்திருவந்தாதி எழுபத்தெட்டாம்பாட்டு, "கண்டுவணங்கினார்க்கு" இத்யாதி. இதுக்கர்த்தம் - காமனுடைய சரீரத்தை தக்தமாக்கின, தபஃ-க்ரௌர்யத்தையுடைய ருத்ரனுக்கு மஹிஷியான உமையானவள். "[illegible]" இத்யாதி ப்ரஸ்நரூபேண ஸர்வேஸ்வரனை ஸ்மரிப்பிக்க, வண்டுகள் தேன்வெள்ளத்திலே அலையாநிற்கிற பூமாலையையுடைய ஆதிராஜ்ய ஸூசகமான நீண்ட திருவபிஷேகத்தையுடைய ஸர்வேஸ்வரனுடைய திருநாமத்தைக்கேட்டு அதுக்குள்ளீடான குணங்களை யநுசந்தித்துக்கொண்டிருந்த தசையிலே சூடின மாலைபோலே துவண்டபடிகண்டால், ஸாக்ஷாத்கரித்து வணங்கினவர்களுக்கு எந்த விக்ருதி பிறக்குமோவென்றபடி. தார் - புஷ்பம். அலங்கல் - மாலை. அங்கு - கேட்டிருந்தசமயத்தில், ஆர்தல் - சூடுதல், ஆய்ந்து - அநுசந்தித்து. அலம்புகை - அலைகை. "நம்மையும் பிறரையும்" இத்யாதி வாக்யவிவரணம் - அலாபத்தோடே இத்யாதி. 'பூவை' என்றதொடங்கி, திருநாமங்களை கூவியெழும்படியாயிருக்கிற 'என்பாவை' - இனித் தண்பழனத்திருக்கோளூர்க்கே போய் - கோவைவாய்துடிப்ப-மழைக்கண்ணொடு-என்செய்யுங்கொலோ' இத்யந்வயஃ. (ரு.)

நான்காம் பாட்டு.

கொல்லையென்பர்கொலோ? குணம்மிக்கனளென்பர்கொலோ?
சில்லைவாய்ப்பெண்டுகள் அயற்சேரியுள்ளாருமெல்லே!
செல்வம்மல்கி அவன்கிடந்த திருக்கோளூர்க்கே
மெல்லிடைநுடங்க இளமான்செல்ல மேவினளே.

ஆ.—(கொல்லை.) - ஐச்வர்யத்தால் ஸுஸம்ருத்தமாய்க்கொண்டு அவன் கண்வளர்ந்தருளுகிற திருக்கோளூர்க்கே, முக்தையானவள் மெல்லிடை நுடங்கப் போனாள்; மர்யாதையைக்கடந்தா ளென்று லோகத்தார் இவளுக்குக் குற்றமாகச்சொல்வரோ? அன்றியே, திருக்கோளூரிலே ஒருத்திக்குள்ள அபிநிவேசமிருக்கும்படியென்! என்று மஹாகுணமாகச் சொல்வரோ? அங்ஙனே, குணமாகச்சொல்லுகை ஸம்பவிக்குமோ? பரகதமான குணத்தையும் தோஷமாகவே காண்கிற லோகஸ்வபாவமிருந்தபடியென்! என்று இன்னாதாகிறாள்.

ஒ.—நாலாம்பாட்டில், சிறுகுவாரிகளான நம் சேரியில் உள்ளாரும் அயற்சேரியில் உள்ளாரும் அந்யஸ்த்ரீகளும் இவளுடைய வ்ருத்தாந்தத்தைக்கண்டு குணஹீனையென்பரோ? இம்மஹாகுணத்தை அறிந்து கொண்டாடுவரோ? என்கிறாள். [கொல்லை] - வரம்புகடந்தாள். [செல்வம் மல்கி என்று மேலுக்கு] - ஸம்பத்தாலே மிக்கு அவன் கண்வளர்ந்த திருக்கோளூர்க்கே அத்யந்தமுக்தையான பெண்பிள்ளை தன்னுடைய ம்ருதுவான இடைதுவளப் போய்ப்புக்காள்.

ப.—அநந்தரம், நிரதிசயைச்வர்யவிசிஷ்டனானவனுடைய திருக்கோளூர்க்கே போக ஒருப்பட்டுவிட்டாள்; இவளை ஊரார் என்ன சொல்லுவர்களோ? என்கிறாள்.

செல்வம்மல்கி - அதிசயிதஐச்வர்யத்தையுடையவனாய்க்கொண்டு, அவன் - அவன், கிடந்த - கண்வளர்ந்தருளின, திருக்கோளூர்க்கே - திருக்கோளூர்க்கே, மெல் - மெல்லிய, இடை - இடையானது, நுடங்க - நுடங்கும்படி, இள - முக்தமான, மான் - மான்போலேயிருக்கிற இவள், (தன் பலஹாநியையும் பருவத்தையும் பாராதே), செல்ல - போகையிலே, மேவினள் - நெஞ்சுபொருந்திப்போய்விட்டாள்; சில்லை - சிறுகிடுகையே ஸ்வபாவமான, வாய் - வாயையுடையவர்களாய், பெண்டுகள் - ஆஸந்நைகளானபெண்களும், அயற்சேரி - அயற்சேரியில், உள்ளாரும் - உள்ளாரும், கொல்லை - வரம்பழிந்தாள், என்பர்கொலோ - என்று கர்ஹிப்பர்களோ? குணம்மிக்கனள் - (அதிசயிதமாய் அநுரூபமான விஷயத்தையறிந்து மேல்விழும்படியான விலக்ஷண) குணாதிசயத்தையுடையவள், என்பர்கொலோ - என்று கொண்டாடுவர்களோ? எல்லே - எல்லே! இதென்னாயிருக்கிறதோ என்று விஷாதஸூசகம்.

இ.—நாலாம்பாட்டில், இவளை நாட்டார் குணஹீனை என்பர்களோ, குணாதிகையென்று கொண்டாடுவர்களோ? என்கிறாள். [கொல்லை] -வரம்பழிந்த நிலம். அவன் தானே வரவிருக்கக்கடவ மர்யாதையை அழித்துப்போனாள் என்பர்களோ? குணாதிக

விஷயத்துக்குப்போரும்படி செய்தாள் என்று கொண்டாடுவர்களோ? "தஸ்யஸத்ருசம் ஸலேக" என்கிற வசநத்தைப் பார்த்து ஸர்ஹிப்பர்களோ? இவளுடைய ருசி விஷயத்துக்கு அநுரூபமாயிருந்தது என்பர்களோ? விதியைப்பார்த்து ஸர்ஹிப்பர்களோ? காம வசநத்தைப்பார்த்து 'நன்று' என்பர்களோ? "நகாமகலுஷம் தவசித்தம் விராக்ஷிதி" - விரக்தரானநீர் காமபரவசரான எங்களை என்படுத்துகிறீர் என்றாளிறே, தாரை இளையபெருமாளை. ஸ்வரூபத்தைப் பார்த்து ஸர்ஹிப்பர்களோ, விஷயத்தைப் பார்த்து உகப்பர்களோ? [சில்லை இத்யாதி] - சிலுகுவாரிகளான நம் சேரியில் உள்ளாரும், அயற்சேரியாரான அந்யஸ்த்ரீகளும்: வசநபரானவர்களும், அவர்களுக்கு உடலன்றியே "இருந்தவூரி லிருக்கும் மானிடர் எத்தவங்கள் செய்தார்கொலோ" என்னும் ஸ்லாகிக்கிறவர்களும். [எல்லே] - என்னே என்று ஆஶ்சர்யமாதல்; சொல்லுகிறவர்களைக்குறித்து ஸம்போதநமாதல். [செல்வம்மல்கி] - "இவர்கள் சொல்லிற்றுச் சொல்லுகிறார்கள்" என்று அவள் செய்வது செய்தாள். ஸம்பத்தானது கரைபுரண்டு வரும்படியான தேசம். [அவன் கிடந்த] - தன்பெருமையைப் பாராதே, ஆர்த்தரக்ஷணார்த்தமாகவந்துகண்வளர்ந்தருளுகிற தேசம். [மெல்லிடை நுடங்க] - இவளும் தன் ஸ்வரூபத்தை அறிந்திலள்; தன் இடையை அறிந்தாளாகில் போக்கிலே ஒருப்படுமோ? ம்ருதுவான இடைதுவள. [இளமான்] - முக்த்யையானபெண். தன்மார்த்தவத்தையும், வழியில் அருமையையும், அவன் ஸ்வரூபத்தையும் அறியமாட்டாத மௌக்த்யம். [செல்ல மேவினள்] - இவள்போக்கிலே ஒருப்பட்டாள்; கொல்லையென்பர் கொலோ?

ஈடு.— நாலாம்பாட்டு. இவளைக்கண்ட நாட்டார், குணஹீனையென்பர்களோ? குணாதிகையென்று கொண்டாடுவர்களோ? என்கிறாள்.

[கொல்லையென்பர்கொலோ] - இவள் வாசல்கடந்து புறப்படக்கடவதல்லாத மர்யாதையைக் குலைத்தாள்: இவள் நிஷித்தாநுஷ்டாநம் பண்ணினாள்: இவள் வரம்பழிந்த செயல்களைச் செய்தாள்என்பர்களோ? கொல்லையென்று - வரம்பில்லாததுக்குப்பேர். [குணம்மிக்கனளென்பர்கொலோ]-குணாதிகவிஷயத்துக்குப் போரும்படி செய்தா ளென்பர்களோ? [கொல்லையென்பர்கொலோ குணம்மிக்கனளென்பர்கொலோ] - இவள் வித்யதிக்ர

நாலாம்பாட்டு.—கொல்லை இத்யாதி. "கொல்லை" என்றதொடங்கி, "அயற்சேரியுள்ளாரும்" என்னுமளவுங் கடாக்ஷித்தவதாரிகை - இவளைக்கண்ட இத்யாதி.

"கொல்லை" என்கிறதுக்கு - 'வரம்பழிந்தசெயல்களைச்செய்தாள்' என்றர்த்தமாக்கி, அது தான் இன்னதென்னுமத்தை விஶதமாக அருளிச்செய்கிறார் - இவள்வாசல் இத்யாதி. வரம்பழிந்த செயலாவது - வாசல்கடந்து புறப்படுகையும், நிஷித்தாநுஷ்டாநம்பண்ணுகையும் என்றபடி. இத்தால்வருகிற பொல்லாங்குஎது? என்ன; குடிக்கு நிலைநின்றபழியாய்விளையுமதாகையாலே, 'இவள் நிஷித்தாநுஷ்டாநம்பண்ணினாள்' என்கிறது. இனி, "கொல்லை" என்றதுக்குசப்தார்த்தம் - இவள் வரம்பழிந்த இத்யாதி. "கொல்லை" என்றால் இவ்வர்த்தத்தைக்காட்டுமோ? என்ன - கொல்லையென்று இத்யாதி. மர்யாதாதிலங்கநம்பண்ணினவளை - "குணாதிகை" என்று சொல்லுகிறபடியெங்ஙனே? என்ன - குணாதிக இத்யாதி. குணம்மிக்கனளாகையாவது - குணாதிகவிஷயத்துக்கீடாக ப்ராவண்யத்தைப் பண்ணுகையென்றபடி. "கொல்லை" இத்யாதிக்குஸ்வாபதேசம் - இவள்வித்யதிக்ரமம் இத்யாதி. அதாவது - தானேபோகையாலே அநந்யோபாயத்வவிருத்த ஸ்வயத்நஸாத்யோபாயாந்தரத்யாகவிதாயகமான "வ்ரஜ" என்கிறவிதியை யதிக்ரமித்தாளோ? என்றபடி. வித்

மம்பண்ணினுள் என்பர்களோ: அன்றிக்கே ஸித்தாந்தந்தன்னையே சொல்லுவர்களோ? ஓரளவிலேநின்று நிஷேதித்தவற்றைக்கொண்டு, இது அப்ராப்தம் என்பர்களோ; ருசிஸ்வஹாவத்தாலும் விஷயஸ்வஹாவத்தாலும் இது ப்ராப்தமென்பர்களோ? ஸாதநவிதியளவிலே நின்று தடுமாறுவர்களோ: ஸ்வஸ்வரூபத்தைப்பார்த்துத் தெளிவர்களோ? உபாயாம்சத்தைப் பற்றிநின்று, இதுகடவதல்ல என்பர்களோ: ப்ராப்தாவின் ஸ்வரூபத்தையும் ப்ராப்யஸ்வரூபத்தையும்பார்த்து, இது கடவதென்பர்களோ? அந்யநிஷேதபூர்வகமான ஸ்வரூபஜ்ஞாநம் பிறந்தால், புறப்பட ப்ராப்தியில்லை; ஸ்வரூபாநுரூபமான ப்ராப்யாநுஸந்தாநம்பண்ணினுல், போய்ப்புக்கல்லது நிற்கவொண்ணுது. விதியைப்பார்த்து கர்ஹிப்பர்களோ: காமவசநத்தைப் பார்த்து நன்றென்பர்களோ? ''நகாமதந்த்ரே தவ புத்திரஸ்தி'' (நகாமதந்த்ரே தவபுத்திரஸ்தி)-'விரக்தரானநீர்காமபரவசரானஎங்களை என்படுத்துகிறீர்?' என்றருளிறே தாரை, இளைய பெருமாளை. [சில்லைவாய்ப்பெண்டுகள்] - சிலுகுசிலுகு என்னும் ஸ்த்ரீகள். விஷயாதீந

தாந்தந்தன்னையே யென்றது - ஏதத்விவரணவாக்யங்களிலே, ''ருசிஸ்வபாவத்தாலும் விஷயஸ்வபாவத்தாலும் ஸ்வஸ்வரூபத்தைப்பார்த்தாலும்'' என்றுசொல்லப்படுகிற இவளுடைய ப்ராவண்யாஸ்ரய விஷயவைலக்ஷண்ய ஶேஷத்வஸ்வரூப மாகிற ஹேதுத்ரயத்தாலும் இது ப்ராப்தமென்கிற ஸித்தாந்தந் தன்னையேயென்றபடி. உக்தகோடித்வயவிவரணம் - ஓரளவிலே என்றுதொடங்கி மேலெல்லாம். அதில், அவனிருந்ததேசத்தேறப்போகையாகிறஇது, வித்யதிக்ரமமும் ஸித்தாந்தமுமாகிறபடி யெங்ஙனே? என்ன - ஓரளவிலே இத்யாதி. ஓரளவிலேயென்றது - ததேகோபாயத்வ ததேகரக்ஷ்யத்வாதிகளிலே என்றபடி நிஷேதித்தவற்றைக்கொண்டு என்றது - ஸ்வப்ரவ்ருத்தி ஸ்வரூபவிருத்தமென்று நிஷேதிக்கிற ''ஸ்வயம் பாதகத்ஸவ''... இத்யாதி ப்ரமாணங்களைக்கொண்டு என்றபடி. ஸித்தாந்தமாகைக்குஇரண்டுஹேது அருளிச்செய்கிருர்-ருசிஸ்வபாவத்தாலும்' இத்யாதி. ருசிஸ்வபாவமாவது - விஷயத்திலுண்டான ஆதராதிசயம். விஷயஸ்வபாவமாவது - குணுதிகவிஷயமாகை- ''ஓரளவிலே'' இத்யாதிவாக்யவிவரணம் - ஸாதநவிதியளவிலே இத்யாதி. ஸாதநவிதியளவிலேநின்று தடுமாறுவர்களோ? என்றது - ஸாதநவிதியளவிலேநின்று நிஷேதித்தத்தைக்கொண்டு தடுமாறுவர்களோ என்றபடி. ஸ்வஸ்வரூபத்தைப்பார்த்துத் தெளிவர்களோ? என்றது - சேஷத்வம் சேஷிக்கு அதிஶயகரத்வமாகையாலே, ஸ்வரூபத்தைப்பார்த்துத் தெளிவர்களோ என்றபடி. ''ஸாதநவிதி'' இத்யாதிவாக்யத்வயவிவரணம் - உபாயாம்சத்தை இத்யாதி. ப்ராப்தாவின் ஸ்வரூபத்தையுமென்றது - சேஷிவிஷயப்ராவண்யமே வடிவான ஸ்வரூபத்தையு மென்றபடி. கீழுக்தமான தெல்லாவற்றாலும் ஃபலிதம் அந்யநிஷேத இத்யாதி. ஸ்வயத்நநிஷேதபூர்வகமான பாரதந்த்ர்ய ஸ்வரூபஜ்ஞாநம்பிறந்தால் என்றபடி. ஸ்வரூபாநுரூபமான ப்ராப்யாநுஸந்தாநம் பண்ணினுலென்றது - த்வராஸ்வரூபோத்தம்பகமான ப்ராப்யவைலக்ஷண்யாநுஸந்தாநம் பண்ணினுலென்றபடி. புநஶ்ச, அந்யாபதேஶஸமாதியாலேயருளிச்செய்கிருர் - விதியைப்பார்த்து இத்யாதி. ''கடலன்னகாமத்தராகிலும்மாதர் - மடலூரார்'' இத்யாதிவிதியைப்பார்த்தென்றபடி. காமவசநமாவது - ''காஞ்சாயிப்ரீதயா யாதிஸம்ஜாதம் ஸாஹிஸாரிகா'' என்கிறஇது. காமவசநத்தை - காமசாஸ்த்ரத்தை. காமசாஸ்த்ரத்தைப்பார்த்தால் ''நன்று'' என்று தோற்றுமோ? என்ன - நகாமதந்த்ர இத்யாதி. ''நகாமதந்த்ரே தவ புத்திரஸ்தி ஸம்ஸ்வேயயா நந்த்ர வஶம்வதஸ்ய । நதேஶகாலௌ ஹி நவாயதீ தவ வேத்து காமகாரோ ஹி நந்தயஸ்ய'' இதி லக்ஷ்மணம்ப்ரதி தாரா. (கிஉ-நிச) இதுக்குபாவம்-விரக்தரானஇத்யாதி. தந்த்ரம்-ஶாஸ்த்ரம். நீர் காமஶாஸ்த்ரஜ்ஞராகிலன்றோ நான்செய்தது நன்றென்று புத்திபண்ணக் கடவீர் என்று கருத்து. சிலுகுசிலுகென்னும் ஸ்த்ரீகள் - பஹுஜல்பம்பண்ணும் ஸ்த்ரீகளென்றபடி. சில்லைவாய்ப்பெண்டுகள் - சிலுகிடுகையே ஸ்வபாவமான வாயையுடைய ஸ்த்ரீகளித்யர்த்தம். சிலுகிடுகை - சண்டையிடுகை. சிலுகு - சண்டை. அவர்களாரென்ன - விஷயாதீநம் இத்யாதி. அதா

மாய்வருமத்தையும் வசநஸித்தம் என்றிருக்குமவர்கள். உபாயபுத்த்யா வருமவற்றிலிறே விதிக்குவிஷயமுள்ளது ; குணப்ரேரிதராய்ப்போமிடத்தில் விதி கோசரியாதே [அயற்சேரியுள்ளாரும்] - (சிலுகுவாய்ச்சிகளான நம்சேரியிலுள்ளாரும் அயற்சேரியாரான அந்யஸ்த்ரீகளும்.) இவளிருந்தவூரூர்வாசியுங்கூட இல்லாதவர்கள். [எல்லே] - கீழ்ச் அவர்களை ஸம்போதித்ததாதல், இதோராஸ்சர்யமிருந்தபடி யேன்! என்றதாதல். [செல்வமித்யாதி] - அவன்வரவை அஸத்ஸமமாக்கினுள். முற்பாடனாய்வந்தவனை, தான் நாலடியிட்டுப் பிற்பாடனும்படி பண்ணினுள். அவன்ஸ்வரூபத்தை யழித்தாள். பரவ்யூஹாதிகளை விட்டு இங்குவந்துகிடக்கிறது இவளுக்கு முற்பாடனாய் உதவுகைக்குஇறே. [செல்வம்மல்கியவன்கிடந்ததிருக்கோளூர்க்கே] - நிரவதிக ஸம்பத்தானது கரைபுரளும்படியாக அவன் வந்து கண்வளர்ந்தருளுகிற திருக்கோளூர்க்கே. ரக்ஷ்யவர்க்கத்தினுடைய ரக்ஷணத்திலே அந்வயித்தாலிறே நியந்தாவினுடைய ஐஸ்வர்யம் ப்ரகாசிப்பது! [அவன்கிடந்த] - அவன் வரவுபார்த்து இவளிருக்கையன்றிக்கே, இவள்வரவுபார்த்து அவன் அவஸரப்ரதீக்ஷனாய்க் கிடக்கிறபடி. [மெல்லிடைநுடங்க] - அவன் ஸ்வரூபஜ்ஞாநமில்லாவிட்டால், தன்ஸ்வரூபஜ்ஞாநமோதான் இவளுக்குஉண்டாயிருக்கிறது. இவளுக்கு விழுக்காடறியாமை எங்குமொத்ததுகிடீர்! தன்னிடையை யறிந்தாளாகில் தான் புறப்பட்டுப்போமோ? நடுவே அறியாமல் புகுந்தபிழையிறே. [மெல்லிடைநுடங்க] - ம்ருதுவான இடையானது துவளும்படியாக.

வது - ராகப்ராப்தமாய் வருமவற்றையும் "யாயீத" "உவாஸீத" இத்யாதி வசநஸித்தோபாஸநத்திலே அந்வயிக்கும்என்றிருக்குமவர்களென்றபடி. அப்படி நினைத்திருக்கவொண்ணுமோ ? என்ன - உபாயபுத்த்யா இத்யாதி. "கொல்லை" என்கிறவர்கள்-சில்லைவாய்ப்பெண்டிகள்; "குணம்மிக்கனள்" என்கிறவர்கள் - அயற்சேரியுள்ளாரென்று கொள்ளுமளவில், 'இவளிருந்தவூரூர்வாசியுங்கூட இல்லாதவர்கள் என்றவாக்யத்தோடு வ்யாஹதமாம்; ஆகையால், இரண்டுதிறத்தாரும் "கொல்லை" என்றும் "குணமிக்கனள்" என்றும் சொல்லுவர்களோவென்றபடி. 'சில்லைவாய்ப்பெண்டிகள்" என்கிறது - அத்யவஸாயநிஷ்டரை. இவர்களுக்கு அசலானத்வராநிஷ்டரை - "அயற்சேரியுள்ளார்" என்கிறது. கீழில்அவர்களையென்றது - கீழ்ப்பாட்டிற்சொன்ன பூவைதொடக்கமானவற்றையாதல்; தன்கீழில்அவர்களையென்றாய், விதேயரான அண்டையிலிருக்கிறவர்களையாதல்; சில்லைவாய்ப்பெண்டுகள் தொடக்கமானாரையாதல். "திருக்கோளூர்க்கே - செல்லமேவினள்" என்றதாயாருடைய ஹார்த்தபாவம் - அவன்வரவை இத்யாதிவாசய சதுஷ்டயமும். விவரணம் - முற்பாடனாய் இத்யாதி. இத்தால்பலிதம - அவன்ஸ்வரூபத்தை இத்யாதி. அவன்தான் இவளுக்கு முற்பாடனாகைக்கோ வந்ததென்ன - பரவ்யூஹாதிகளை இத்யாதி. "செல்வம்" என்று - ஸம்பத்தாக அர்த்தம் - நிரவதிக இத்யாதி. ரக்ஷ்யவர்க்கத்தினுடைய ரக்ஷணசம்பந்த ஐஸ்வர்யத்தாந்தரம் - ரக்ஷ்யவர்க்கத்தினுடைய இத்யாதி. ஏகார்த்தபாவமாம; அப்பாது, பரமபதத்திலும் ஸம்பத்துண்டாயிருக்க, இங்கே கரைபுரளுகையாவதென்ன - ரக்ஷ்யவர்க்க இத்யாதி என்ற வாக்யசங்கதி. 'அவன்கிடந்த' என்கிற பதத்துக்கு ஹார்த்த பாவம - அவன்வரவு இத்யாதி. அவன்வரவுபார்த்து இவளிருக்கையன்றிக்கே என்றது - சேஷியினுடையவரவை ஆசைபட்டு அவனிருந்தம்தசத்திலே இவளெழுந்திறப்பது; அப்படியிருக்கையன்றிக்கே என்றபடி. "அவன்கிடந்த" என்றவநந்தரம், "மெல்லிடைநுடங்க" என்கிறவளுடையஹார்த்தபாவம் - அவன்ஸ்வரூபஜ்ஞாநம் என்றுமதொடங்கி. இது - ஸ்வாபதேசம். அவன் ஸ்வரூபஜ்ஞாநமாவது - அவனுடையநிருபாதிகரக்ஷகத்வஜ்ஞாநம். தன் ஸ்வரூபஜ்ஞாநமாவது-ஸ்வபரதந்த்ரத்ய ஸஹ பாரதந்த்ர்யஜ்ஞாநம். எங்குமொத்ததென்றது - அவன்ஸ்வரூபத்திறம்பாலே தன்ஸ்வரூபத்திலும் ஒத்ததென்றபடி. அதெப்படியென்ன - தன்னிடையை இத்யாதி. சாடு - நடுவே இத்யாதி. "மெல்லிடைநுடங்க - செல்லமேவினள், அவன்கிடந்த" என்கிறவளுடையஹார்த்தபாவம் - இவ்விடையை இத்யாதி. 'எதிரேபுறப்பட்டுவரவேண்டாவோ' - செல்வக்கிடப்பாலேகிடந்தானென்றபடி. இது -

இவ்விடையைக்கொண்டு இவள் நடக்கப்புக்கால் எதிரே புறப்பட்டு வரவேண்டாவோ? [இளமான்] - போகிறவழியில் மிறுக்கும், தன்ப்ரக்ருதியும் அறிந்து மீளவல்ல பருவமல்லகிடீர்! [செல்லமேவினளே] - போகவொருப்பட்டாள். இவள்கையிலும் இவர்கள்கையிலுமன்றிறே ப்ராப்தி கிடப்பது; அது அவன்கையதிறே; இத்தலையில் துணிவேயிறேயுள்ளது. கீழே - "போனாள்" என்றுநின்றாள், இங்கே - "போக்கிலேயொருப்பட்டாள்" என்றுநின்றாள்; இதுசேரும்படியென் ? என்னில்:- இவள் போகையிலே ஒருப்பட்டபோதே போய்ப்புக்காளன்றோ ? என்கிறாள். [இளமான் செல்லமேவினள் - கொல்லையென்பர்கோலோ, குணம்மிக்கனளென்பர்கோலோ] - அவள்கைகழிந்து கொடுநின்றாள்: இனியிருந்த நாம் என்கேட்கிறோமோ ? இங்கிருந்தநாள் நம்முடைய ஹிதவசநங்கேட்கிலன்றோ வழியி

"செல்வம்மல்கி" என்றதின் முந்தினஅர்த்தத்திலே பாவமாகயோஜிப்பது. ரக்ஷணசம்பத்தானபக்ஷத்தில், அவன் ரக்ஷணோத்யுக்தனாய் முற்பாடனாயிருக்க, தான் நாலடியிட்டு அவன்வரவையஸத்ஸமமாக்கினாளென்று தன்மகளைவெறுத்து அவனைக்கொண்டாடுகிறாளென்று கண்டுகொள்வது. ஏகார்த்தபக்ஷத்தில், பேதமில்லை; செல்வக்கிடப்பாலே கிடந்தானென்று கீழ்ச்சொன்னபடியேகண்டுகொள்வது. போனாளென்னாதே, "ஒருப்பட்டாள்" என்கிறதென் ? என்ன - இவள்கையிலும் இத்யாதி. அதாவது - சேதநனுடையாலே இவனிடத்தில் உத்யோகமாத்ரமேவேண்டுவது; ப்ராப்திக்கு உபாயம் அவன்நினைவாகையாலே, இவனுக்கும் பிறர்க்கும் ப்ராப்தியில்லையென்றபடி. ஆனால் இவனுக்குச் செய்யத்தக்கதேதென்ன - இந்நிலையில் இத்யாதி. 'கீழேபோனாளென்றுநின்றாள்' இத்யாதி சங்காபரிஹாரவாக்யங்களுக்கு - பாதிவழிபோனாள் என்கையிலே தாத்பர்யம். அதெங்ஙனேயென்னில்:— இத்திருவாய்மொழியின் ப்ரவேசத்திலே, "படுக்கையைப்பார்த்தவிடத்தில் வெறும்படுக்கையாய்க்கிடந்தது" என்றிருக்கையாலும்; * பொன்னுலகாளீர் ப்ரவேசத்திலே, "புறச்சோலையிலேகிடந்து தூதுவிடுகிறாள்" என்கையாலும், ஒருப்பட்டாளென்றது-பாதிவழிபோனாளென்றபடி இப்படி அந்வயித்தருக்குஹார்த்தபாவம் - அவள்கைகழிந்து இத்யாதி. வழியிலுள்ளார்பழிகேட்கில் மீளாளோ ? என்ன - இங்கிருந்தநாள் இத்யாதி. ஆனால்எந்தவார்த்தைகேட்குமென்ன - இவள்வழிப்பட்டால் இத்யாதி. நல்வழியிலுள்ளார் - * சில்லைவாய்ப்பெண்டுகள். பெருவழியானூர் - அயற்சேரியுள்ளார்: 'செல்வம்மல்கி' என்றுதொடங்கி, மேவினள்; 'சில்லைவாயென்று' தொடங்கி, 'அயற்சேரியுள்ளாரும் - கொல்லையென்பர்கொலோ குணம்மிக்கனளென்பர்கொலோ, எல்லே' இத்யந்வயஃ. "சில்லைவாய்ப்பெண்டுகள்" இத்யாதிக்கு - அப்பு அரும்பதத்திற்சொன்ன ஸ்வாபதேசம் - "சில்லைவாய்ப்பெண்டுகளென்கிறது - அத்யவஸாயநிஷ்டரை; அயற்சேரியுள்ளாரென்கிறது - அத்யவஸாயநிஷ்டர்க்கு அசலான த்வராநிஷ்டரை" என்று. அப்படி, அயற்சேரியுள்ளாரை த்வராநிஷ்டரென்றுகொள்ளுமளவில், 'இவளிருந்தவூர் வாசியுங்கூடஇல்லாதவர்கள்' என்றவாக்யத்தோடும், பாட்டுமுடிவிலே, 'இவள்வழிப்பட்டால் நல்வழியிலுள்ளார்வார்த்தை கேட்குமதொழியப் பெருவழியானூர் வார்த்தைகேளாள்' என்கிறவாக்யத்தோடும் வ்யாஹதமாயிருக்கிறது; இதுக்கு பரிஹாரம் யோஜித்துக்கொள்வது. இங்ஙனன்றிக்கே இருபத்துநாலாயிரத்திலே, "சில்லைவாய்ப்பெண்டுகள் அயற்சேரியுள்ளாரும்" என்கிறஇதுக்கு - நஞ்சேரியிலுள்ளாரும் அயற்சேரியாரான அந்யஸ்த்ரீகளுமென்று பொருள் அருளிச்செய்து, இதுக்கு ஸ்வாபதேசமாக, "அயற்சேரியுள்ளாரும்" என்கிறவிதுக்கு-வசநபரானவர்களுமென்றருளிச்செய்து, "சில்லைவாய்ப்பெண்டுகள்" என்கிறவிதுக்கு - அவர்களுக்கு உடலன்றியே, இருந்தவூரிலிருக்கும் மானிடரெத்தவங்கள்செய்தார்கொலோ" என்னும் ப்ரேமார்த்ரசித்தருமென்று ஸ்வாபதேசமாக அருளிச்செய்தார். இதிலேயும், பாட்டின்முடிவிலே 'இவள்வழிப்பட்டால் நல்வழியிலுள்ளார்வார்த்தை கேட்குமதொழியப் பெருவழியானூர்வார்த்தைகேளாள்', என்றிருக்கிறது; இவற்றையெல்லாம் அநுஸந்தித்து, 'சிலுகுசிலுகென்னும் ஸ்த்ரீகள்' என்கிறஇத்தை, "இவளுடையகுணத்திலேயீடுபட்டு அலவலைகளைப்போலே கொண்டாடுகிற நஞ்சேரியிலுள்ளாரைச்சொல்லுகிறது" என்றும்; 'விஷயாதிச

லுள்ளார் பழிகேட்பது அவள். இவள் வழிப்பட்டால் நல்வழியிலுள்ளார் வார்த்தை கேட்குமதொழியப்பெருவழியானுர் வார்த்தைகேளாள். (௪)

ஐந்தாம் பாட்டு.

மேவிநைந்துநைந்துவிளையாடலுருள்என்சிறுத்
தேவிபோய்இனித்தன்திருமால்திருக்கோளூரில்
பூவியல்பொழிலுந் தடமுமவன்கோயிலுங்கண்டு
ஆவியுள்குளிர எங்ஙனேயுகக்குங்கொல்இன்றே?

ஆ.—(மேவிநைந்து.)-பிள்ளையாய் விளையாடும் பதமாகுல் பிள்ளைகளோடே விளையாடுகையில் ஆதரமின்றியே, எம்பெருமானைக் காணவேணும்" என்றுசைப்பட்டுப் பெருமையாலே நைந்துநைந்திருந்த என்சிறுத்தேவி போய் இனித்தன் திருமால் திருக்கோளூரில் பூவியல் பொழிலையும் அதுக்குள்ளே தாமரைத்தடாகங்களையும் அதுக்குள்ளே யவன்கோயிலையுங் கண்டு, தன்னுடைய நிரவதிக ஸந்தாபமெல்லாம் போய் ஆவியுள் குளிர இன்று எங்ஙனே உகக்கிருளோ? நான் அந்த ஸம்ருத்தியைக்காணப்பெற்றிலேன் என்கிருள்.

ஒ.—அஞ்சாம்பாட்டில், திருக்கோளூர்க்கு அணித்தான திருச்சோலையையும் அங்குள்ள பொய்கைகளையும் அவன் கோயிலையும் கண்டால் எங்ஙனே உகக்குமோ? என்கிருள்

[மேவி யென்றுதொடங்கி] - அவனுடைய குணசேஷ்டிதாதிகளை அநுஸந்தித்து மிகவும் ஶிதிலையாய் விளையாட்டுகளிலும் மூளாள். ப்ராப்தயௌவனையன்றிக்கேயிருக்கிற பருவத்தில் இப்படி விலக்ஷணையாயிருக்கிற இப்பெண்பிள்ளை இதுக்குமேலே தனக்கு ஸர்வஸ்வமான ஸ்ரீய:பதியுடைய திருக்கோளூரிலே போய். [பூவியல் பொழில்] - என்றும் பூத்திருக்கும்பொழில். [ஆவியுள் குளிர] - மிகவும் கமர்பிளந்திருக்கிற ஹ்ருதயம் உள் குளிரும்படி.

ப.—அநந்தரம், ஸ்ரீய:பதியானவனுடைய விலக்ஷண போகஸ்தானத்தைக் கண்டுஎங்ஙனே ப்ரியப்படுகிருளோ? என்கிருள்.

மேவி - (அவனுடைய ஸௌந்தர்யஶீலாதிகளை) நெஞ்சாலேகிட்டி, நைந்து நைந்து - க்ஷணந்தோறும் சிதிலையாய், விளையாடல் - விளையாடுகையிலும், உறுள் - பொருத்தமற்றிருப்பாளாய், என்சிறுத்தேவி - பருவம்நிரம்பாத சிறுமையையுடையளாயிருக்கச்செய்தே வாசியறியும்படியான திவ்ய ஸ்வபாவத்தை யுடையளான என்பெண்பிள்ளை, போய் - இங்குநின்றும்போய், தன் - தனக்கஸாதாரணனை, திருமால் - ஸ்ரீமானுடைய, திருக்கோளூரில் - திருக்கோளூரில், பூ - பூவை, இயல் - இயல்பாகவுடைத்தான, பொழிலும் - பொழில்களையும், தடமும் - (பொழிலுக்குச் செவ்விகொடுக்கும்) தடாகங்களையும், அவன் - (லக்ஷ்மியோடே) அவன்வர்த்திக்கிற, கோயிலும் - போகஸ்தானமான

மாய்வருமத்தையும் வசநவித்தமென்றிருக்குமவர்கள் என்கிறவாக்யத்தை - "'அயற்சேரியுள்ளாரும்' என்கிறபதத்துக்கவதாரிகை" என்றும் நிர்வஹிப்பர்கள். (௪)

கோயிலையும், (நினைத்து முன்பு சிதிலையானவள்), இனி-இனி, கண்டு - காணப்பெற்று, ஆவி-ப்ராணாஶ்ரயமான, உள்-நெஞ்சு, குளிர-குளிரும்படியாக, இன்று-(தனக்கு நல்விடிவான) இன்று, எங்ஙனே - எங்ஙனே, உகக்குங்கொல் - உகக்கிறாளோ?

இ.— அஞ்சாம்பாட்டில், திருக்கோளூரில் சோலையையும் பொய்கைகளையும் அவன்கோயிலையும் கண்டால் எங்ஙனே உகக்குமோ? என்கிறாள்.

[மேவி] - அவனுடைய ஸௌந்தர்யஶீலாதிகளிலே நெஞ்சை வைத்து. [நைந்து நைந்து] - "நினைதோறும் சொல்லுந்தோறும் நெஞ்சிடிந்துகும்" என்று ஶிதிலையாக நின்றாள். [விளையாடலுறாள்] - பருவத்துக்கு அநுரூபமான வ்யாபாரத்தை விட்டாள். "மாற்பான் மனஞ்சுழிப்ப மங்கையர்தோள் கைவிட்டு" என்கிறபடியே அத்தலையைப் பற்றியாயிற்று இதில் உள்ளவற்றை விட்டது. [என்சிறுத்தேவி] - த்யாஜ்யோபாதேயவிபாகம், பருவம் நிரம்பாதவளவிலே இடர் உண்டாயிற்று! "வொஶ்ாக வூஹ்ஸ்ிவஸுஷிஃ" என்கிறபடியே, பருவம் நிரம்பாதிருக்கப் பிராட்டிமாரோடு ஒக்கச்சொல்லலாம்படி இருக்கிறபடி. [இனி-போய்] - இதிற்காட்டில் அங்கு என்ன? ஏற்றங்கழுண்டாய்ப்போனார். "தஷஸ்ஸஷூஶமஹெவக" என்றிருக்கமாட்டிற்றிலள். [தன்திருமால் திருக்கோளூரில்] - தனக்கு ஸர்வஸ்வமான ஸ்ரீயஃபதி கண்வளர்ந்தருளுகிறவூரிலே:பிராட்டியோபாதி தன்பக்கல் வ்யாமுக்தனானவன் வர்த்திக்கிறவூரிலே என்றுமாம். [பூவியல் பொழிலும்] - நித்யவஸந்தமான பொழிலும். [தடமும்] - அதுக்குள்ளாகப் பரப்புமாறப்பூத்த தடாகங்களும்; அதுக்குள்ளாக அவன் கோயிலும் கண்டு. இங்கேயிருந்து அநுஸந்தித்து நோவுபட்டவள் காணப்பெறுகிறாளே! [ஆவியுள்குளிர] - கமர்பிளந்த ஹ்ருதயம் மறுநனையும்படி. [எங்ஙனேயுகக்குங்கொல்] - எங்ஙனே ப்ரியப்படுகிறாளோ? இங்கேயிருந்து நினைத்துப்பட்ட க்லேஶத்தைக்கண்ட நான், அந்த அநுபவப்ரீதி காணப்பெற்றிலேன். [இன்றே] - எனக்கு அவளைப்பிரிந்த ஶோகமேயாய்ச் செல்லுகிறது, அவளுக்கு நல்விடிவாய்ப் ப்ரீதியோடே செல்லுகிறதிறே.

ஈடு.—அஞ்சாம்பாட்டு. திருக்கோளூரில் சோலைகளையும் அங்குள்ள பொய்கைகளையும் அவன்கோயிலையுங் கண்டால் எங்ஙனே யுகக்குமோ? என்கிறாள்.

[மேவி] - பகவத்குணங்களிலே நெஞ்சைவைத்து. [நைந்துநைந்து] - ஆஶ்ரயங்களை யழிக்கும் பதார்த்தம்போலே குணங்கள் தானழிக்குமே: "நினைதோறும்சொல்லுந்தோறும்" இத்யாதி. இவள்மேவிற்று நிர்க்குணமாயிருப்பதொரு விஷயத்தோடன்றே; *உயர்வறவுயர்நலமுடையவனோடே யன்றே. [மேவி] - இங்கிருந்தநாளும் எங்களோடு பொருத்தமில்லைகிடீர். [நைந்துநைந்து] - நைந்துமீளமாட்டாள்; முரித்திருக்கமாட்டாள். [விளையாட

அஞ்சாம்பாட்டு.—மேவி இத்யாதி. "திருக்கோளூரில்பூவியல்பொழிலும்" இத்; கடாக்ஷித் தவதாரிகை - திருக்கோளூரில்சோலை இத்யாதி.

மேவினால் நையவேணுமோ? என்ன - ஆஶ்ரயங்களை இத்யாதி. அழிக்கும்பதார்த்தம் - அக்நி. அப்படி குணங்களழிக்குமோ? என்ன - நினைதோறும் இத்யாதி. "மேவி" என்றால் - ஈஶ்வரனோடொழிய, குணங்களோடும் மேவியென்று காட்டுமோ? என்ன - இவள்மேவிற்று இத்யாதி. "மேவி" என்றதின் வ்யதிரேக சித்தமானவர்த்தம் - இங்கிருந்த இத்யாதி. அவனோடு மேவியென்கையாலே - இங்கிருந்தநாளும் எங்களோடு பொருத்தமில்லையென்றபடி. வீப்ஸைக்கர்த்தம் -

லுருள்] - பருவத்துக்கு அநுரூபமான வ்யாபாரத்தைவிட்டாள். விளையாடுகையைத்தவிர்ந்து மேவி நைந்தாளன்று கிறர்; இவ்விஷயத்திலே அவகாஹித்து, புறம்புள்ளவற்றை விட்டாளத்தனை. "மாற்பான்மனஞ்சுழிப்பமங்கையர்தோள்கைவிட்டு"-பகவத்குணங்கள் கொண்டுமூழ்க, புறம்புள்ளது கைவிட்டாள். நல்லதும்தீயதுமானுல், தீயதுபோலன்றிறே நல்லது பண்ணிக்கொள்ளும்படி. "பரமாத்மநி யோ ரக்தோ விரக்தோ பரமாத்மநி"(பரமாத்மநி யோரக்தோ விரக்தோ பரமாத்மநி) "மனைப்பால்பிறந்தார் பிறந்தெய்தும் பேரின்பமெல்லாம் துறந்தார்தொழுதாரத்தோள்" என்னுமாபோலே. [மேவிநைந்துநைந்து விளையாடலுருள்] - மௌக்த்யம் மாறி விஜ்ஞையாளு ளல்லள். "ஶப்தாதிகள்ஹேயம்" என்று ஶாஸ்த்ரத்தாலேயறிந்து அவற்றைவிட்டு, "பகவத்விஷயம்நன்று" என்று கைவைத்தாளன்று. [என்சிறுத்தேவி] - தன்திருமால் என்று மேலே, பெரியதேவியைச் சொல்லுகையாலே, 'சிறுத்தேவி' என்று விசேஷிக்கிருள். [என்சிறுத்தேவி] - பருவம் நிரம்பாதிருக்கச்செய்தேயும் பட்டங்கட்டின ப்ரதாநமஹிஷிகளோடொக்கச் சொல்லலாயிருக்கை. "என்பெண்பிள்ளை" என்கிற ப்ரதிபத்தியில்லைகாணும் இவள்தனக்கு. "பிள்ளையைப்பிள்ளையென்றெண்ணப்பெறுவரே" - இவளுக்கு ஹிதஞ்சொன்ன நாக்கைக் கழுவவேணுமென்கிருள். [இனி - போய்] - வேறே சிலகொண்டு போதுபோக்கவேண்டும் பருவத்திலே, அவற்றை விடும்படியான பாகம்பிறந்த இதுக்குமேலே ஓர்ஏற்றஂகமுண்டாகப்போனுளோ? [இனி] - இங்கேயிருக்கச்செய்தே *நோபஜநம்ஸ்மரந்நிதம் பிறந்ததாகில், இனி அங்குப்

ப்ர.—[மேவிநைந்துநைந்துவிளையாடலுருள்]— பார்ஹஸ்பத்யஸ்ம்ருதௌ, "பரமாத்மநி யோ ரக்தோ விரக்தோ(அ)பரமாத்மநி । ஸர்வேஷணாவிநிர்முக்தஸ்ஸ பைக்ஷம் போக்துமர்ஹதி"

[இனி - போய்]—ஶாந்தோக்யே, [அ-கஉ] "ஜக்ஷத் க்ரீடந் ரமமாண: ஸ்த்ரீபிர்வா யாநைர்வா ஜ்ஞாதிபிர்வா நோபஜநம் ஸ்மரந்நிதம் ஶரீரம்"

நைந்துமீள இத்யாதி. தாத்பர்யசித்தார்த்தம் - பருவத்துக்கு இத்யாதி. லோகத்தில் நாயகிகளில் வ்யாவ்ருத்தி சொல்லுகைக்காக அதிஷ்ட்டிகை - விளையாடுகையை இத்யாதி. பின்னையெப்படியிருந்தாள்? என்ன - இவ்விஷயத்திலே இத்யாதி. இதுக்குப்ரமாணம் - மாற்பால் இத்யாதி. "மாற்பால்மனஞ்சுழிப்ப" என்றதுக்கர்த்தம் பகவத்குணங்கள் இத்யாதி. மற்றைப்படியானுலோ? என்ன - நல்லதும் இத்யாதி. ப்ரமாணாந்தரம் - பரமாத்மநீ இத்யாதி. பார்ஹஸ்பத்ய ஸ்ம்ருதௌ, "ஸர்வேஷணாவிநிர்முக்தஸ்ஸ பைக்ஷம் போக்துமர்ஹதி" இத்யுத்தரார்த்தம். "அத்தோள் - தொழுதார் - மனைப்பால்பிறந்தார் பிறந்தெய்தும்பேரின்பமெல்லாம்துறந்தார்" இத்யந்வய:. அந்த அழகிய தோளைத்தொழுதவர்கள், மனையிடத்தில் பிறந்தவர்கள் பிறந்து ப்ராபிக்கும் நிரவதிகாநந்தம் எல்லாவற்றையும் பரித்யஜித்தவர்களாவரித்யர்த்த:. இரண்டாந்திருவந்தாதி நாற்பத்திரண்டாம்பாட்டு. "நினைப்பன்திருமாலை" இத்யாதி. லோகத்தில் நாயகிகளில் வ்யாவ்ருத்தி தன்னைச் சொல்லுகிருர் - மௌக்த்யம் மாறி இத்யாதி. ஸ்வாபதேசம் ஶப்தாதிகள் இத்யாதி. இத்தால் - இதர முமுக்ஷுக்களில் வ்யாவ்ருத்த ரென்றபடி. "சிறுத்தேவி" என்றதுக்கு தாத்பர்யாந்தரம் - பருவம் இத்யாதி. தன்வயிற்றில் பிறந்தவளை பெண்ணென்னுதே, "தேவி" என்கிறதென்? என்ன - என்பெண்பிள்ளை இத்யாதி. இப்படி ப்ரதிபத்தி பண்ணினுருண்டோ? என்ன - பிள்ளையை இத்யாதி. (திருமொழி) இதுக்குபாவம் - இவளுக்கு இத்யாதி. "இனி" என்றதுக்கு பாவம் - வேறேசில இத்யாதி. ஏற்றஂகம் - ஏறினவிலை. அதிசயமாகவென்றபடி. இத்தை ஸத்ருஷ்டாந்தமாக விவரிக்கிருர் - இனி யிங்கே

போய் அநுபவிப்பதுண்டோ? [தன்திருமால்திருக்கோளூரில்] - அவள்பக்கல்இருக்குமா போலேயாகாதே இவள்பக்கலிலும் அவன்இருக்கும்படி. லோகத்தில் ஶேஷஶேஷிபாவம் போலன்றிறே ப்ரணயினிபக்கல் பரிமாற்றம். "பதிம் விஶ்வஸ்ய" (பதிம் விஶ்வஸ்ய) என்கிறபடியே ப்ரமாணத்தைப்பார்த்துப் பரிமாறவொண்ணாதிறே அபிமதவிஷயத்தில். தனக்கு ஸர்வஸ்வமான ஸ்ரீயஃபதி கண்வளர்ந்தருளுகிற வூரிலே. [பூவியல்பொழிலும்] - தழையும்தண்டும் கொம்பும்கொடியுமாய்த் துராலாயிராதே, வெறும் பூவேயாயிருக்கை. நித்ய வஸந்தமான சோலை. (பூவையியல்வான) [தடமும்] - அப்பொழிலை வளர்ப்பதாய்ப் பரப்புமாறப் பூத்த தடாகமும். [அவன்கோயிலுங்கண்டு] - "மாமணிக்கோயிலேவணங்கி" என்கிறபடியே, அவனிலும் அவன் விரும்பி வர்த்திக்கிற கோயிலையும் கண்களாரக்கண்டு. திவ்யாத்ம ஸ்வரூபத்துக்கு ப்ரகாசகமான திவ்யமங்களவிக்ரஹம்போலே, அவையிரண்டுக்கும் ப்ரகாசகமான கோயில். கோயிலைக் கண்டபோதே உள்ளுண்டான வஸ்துவையும் அறுதியிடலாயிருக்கை. உள்ளில் பொன்னுக்குத்தக்க செப்பாயிருக்குமிறே. [கண்டு] - இங்கேயிருந்து மாநஸாநுபவமாத்ரமாய் க்லேஶப்பட்டவள் கண்ணாரக்கண்டு. "பிள்ளை திருநறையூரரையரும் பட்டருமாக உள்ளே ப்ரதக்ஷிணம்பண்ணாநிற்க, இட்ட அடி மாறியிடமாட்டாதே கண்களாலே பருகுவாரைப்போலே பார்த்து வாழ்ந்துகொண்டு போகிறபடியைப் பின்னேநின்று கண்டநுபவித்தேன்" என்று நஞ்சீயர் அருளிச்செய்வர். ஆச்சானும் ஆண்டானுமாகக் கிழக்கே நடக்கிறபோது, திருப்பேருக்குக்கிழக்குப் போகவும் மாட்டாதே, ஏறித் திருவடி தொழவும் மாட்டாதே, திருப்பேர்நகரான்கோயிலைப் பார்த்துக்கொண்டு இருந்தார்களாம். [ஆவியுள்குளிர] - இவ்விடத்தைப் பட்டர் அருளிச் செய்யாநிற்கச் செய்தே மேலெழ அருளிச்செய்தாராய், சீராமப்பிள்ளையிருந்தவர் "சீயா! எம்பார் அருளிச் செய்யும்போது 'ஆவியுள்குளிர' என்று முகந்துகொண்டருளிச்செய்யும்படி கேட்டறிகை யில்லையோ?" என்றருளிச் செய்தார். கமர்பிளந்த பாட்டங்களும் மறுநனையும்படியா

யிருக்க இத்யாதி. அதாவது - ஸம்ஸாரத்தைவிட்டுப் பரமபதத்திலேபோன முக்தனுக்குப்பிறந்த ஜ்ஞாநம் இவளுக்கு இங்கேயிருக்கச்செய்தே பிறந்தால், இனி அங்கேபோய் அநுபவிப்பதொன்றுண்டோ? என்றபடி. "திருமால்" என்றதுக்கு - திருவினிடத்திற்போலே தன்பக்கலிலும் வ்யாமுக்தனாயிருக்கிறவனென்றுஅர்த்தம் விவக்ஷித்துபாவம்-அவள்பக்கல் இத்யாதி. அவள்பக்கல் - பெரியபிராட்டியார் பக்கல். ஆஶ்ரிதர் எல்லாரையும்பற்றத் திருவுக்குமாலானபடி எப்படி? என்ன - லோகத்தில் இத்யாதி. ஆகையாலே, பதிம்விஶ்வஸ்ய என்று கூட்டுவது. "பூவியல்" என்று விசேஷித்ததுக்கு பாவம் - தழையும் இத்யாதி. "பூவியல்"என்கிற வர்த்தமாநார்த்தம் - நித்யவஸந்தமானசோலை என்று. பூவியல் - புஷ்பிதமாகையே ஸ்வபாவமான. இது - பொழிலுக்கும் தடத்துக்கும்விசேஷணம். பொழிலுக்கநந்தரம் தடத்தைச்சொல்லுகையாலே-'அப்பொழிலைவளர்ப்பதாய்' என்கிறார். கோயிலென்னாதே, "அவன்கோயில்" என்று விசேஷித்ததுக்கு பாவமாதல்; அவனைக்கண்டென்னாதே, "கோயிலுங்கண்டு" என்றதுக்கு பாவமாதல் - மாமணிக்கோயிலே இத்யாதி. 'தஞ்சைமாமணிக் கோயிலேவணங்கி'-திருமொழி, (1, 1, 6). "மணிக்கோயில்"என்றதுக்கர்த்தம் - திவ்யாத்ம இத்யாதி. இத்தால் பலிதம் - கோயிலை இத்யாதி. இவ்வர்த்தத்தை லௌகிக த்ருஷ்டாந்தத்திலே ஏறிட்டுக் காட்டுகிறார் - உள்ளில் இத்யாதி. "கண்டு"என்கிற பதத்துக்கு வாஸனை - இங்கே இத்யாதி. அவன் கோயிலைக் கண்ணால்காண்கையே புருஷார்த்தம் என்கைக்கு ஐதிஹ்யத்வயம் - பிள்ளைதிருநறையூர் இத்யாதி. கிழக்கே நடக்கிறபோது - திருக்குடந்தைக்கு எழுந்தருளுகிறபோதுஎன்றபடி. ஏறி-போய். சீயாவென்றது - பூஜ்யவாசி. முகந்துகொண்டு - மண்டியநுபவித்துக்கொண்டு. முகந்துகொள்ளுகை - மண்டியநுபவிக்கை. முகந்துகொண்டருளிச்செய்த இத்தால் பலிதம் - கமர்பிளந்த இத்யாதி.

யிருக்கை. [எங்ஙனேயுகக்குங்கோல்] - இவள்பருவம் நிரம்பாதிருக்கச்செய்தே புறம்புள்ள வற்றைவிட்டு அவனை அநுஸந்தித்து சிதிலையாகிறபோது அவ்வழகுகண்டு அநுபவிக்கப்பெற் றேன்; அவனைக்கண்டநுபவிக்கிறபோதைஅழகு நான் கண்டுவோழப்பெற்றிலேன் என்கிறாள் [இன்றே] - எனக்கு சோகத்தாலே சூந்யமாய்க்கிடக்கிற இன்று அவளுக்கநுஹவத்தாலே அடிக்கழஞ்சு பெற்றுச் செல்லுகிறதே! ஒருநாளிலே இப்படியாவதே! நாள்வாசி யற்றிருந்த திறே விஷயாதீநமாய் வருகையாலே, (ரு)

ஆறாம் பாட்டு.

இன்றுஎனக்குஉதவாதகன்ற இளமான்இனிப்போய்
தேன்திசைத்திலதமனைய திருக்கோளூர்க்கே
சென்றுதன்திருமால் திருக்கண்ணுஞ் செவ்வாயுங்கண்டு
நின்றுநின்றுநையும் நெடுங்கண்கள்பனிமல்கவே.

ஆ.—(இன்றுஎனக்கு.) - இன்று தன்னைப்பிரிந்து வ்யஸநப்படுகிற எனக் குத் துணையாகாதே என்னைப்பொகட்டுப்போன என் இளமான், இனிப்போய்த் தென் திசைத் திலதமனைய திருக்கோளூர்க்கே சென்று அவன் கோயிலுள்ளேபோய், தனக் குப்பிராட்டியோடுள்ள ஸம்ஶ்லேஷத்தாலே புதுக்கணித்த திருக்கண்களையும் திருப்பவ ளத்தையுங்கண்டு நிரவதிகப்ரீதியாலே விகஸிதமான இவளுடைய கண்களையும் ஆனந்தஜ மான கண்ணநீரையும் ஆனந்தாகதமான வையதில்ய பரம்பரையையும் காணப்பெற்றிலே னென்கிறாள்.

ஒ.— ஆறும்பாட்டில், திருக்கோளூரிலேசென்று எம்பெருமானுடையஸ்நேஹ பஹுளமான வீக்ஷிதாதிகளைக்கண்டு ப்ரீதிப்ரகர்ஷத்தாலே மேன்மேலென ஶிதிலையாகக் கடவளாகாதே யென்கிறாள்.

[இன்றுஎன்று தொடங்கி] - தன்னைப்பிரிந்து நோவுபடுகிற எனக்கு இத் தசைக்கு துணையன்றிக்கேபோன சிறுப்பெண்பிள்ளை எனக்கு உதவாததுக்குமேலே தெற்குத்திக்குக்குத் திலகம்போலேயிருக்கிற திருக்கோளூரிலேபோய்ப்புக்குப் பெரிய பிராட்டியார்பக்கல்போலே தன்பக்கல் ப்ரணயியானவன்.

ப.—அநந்தரம், அவனுடைய திவ்யாவயவசோபையை அநுபவித்து ஹர் ஷத்தாலே ஶிதிலையாமிறேயென்கிறாள்.

எனக்கு - (தன்னைப்பிரிந்துநோவுபடுகிற) எனக்கு, இன்று - இப்போது, உத வாது - உதவாதே, அகன்ற - கைகழியப்போன, இளமான் - சிறுப்பெண்பிள்ளையான வள், போய்-வருந்தி வழிநடந்துபோய், தென்திசை - தெற்குத்திக்குக்கு, திலதம்அனைய-

---

"எங்ஙனேயுகக்குங்கொல்" என்றுஈடுபடுகிற தாயாருடைய ஹார்த்தபாவம் - இவள்பருவம் இத்யாதி. "இன்றே" என்கிற ஸவாத்ருக்குபாவம் - எனக்கு இத்யாதிவாக்யத்ரயமும். நாள்வாசி - நாளின் குணம். விஷயாதீநமாய் வருகையாலேயென்றது - தனக்கபிமதையான பெண்ணைப்பிரிகையாலும், அவளுக்கபிமதனான நாயகனை அவள்பெறுகையாலுமென்றபடி, (ரு)

திலகம்போலே யலங்காரமான, திருக்கோளூர்க்கே - திருக்கோளூரிலே, சென்று - ப்ரவேசித்து, இனி-இனி (புக்கபின்பு), தன்-(ஸ்வாபிமத ஸம்ஶ்லேஷத்தைத் தனக்கு ப்ரகாசிப்பித்துத்) தன்னையுற்றாரோடு உறவறுத்த, திருமால் - ஸ்ரீமானுடைய, திரு-ஸாதராபிவீக்ஷணம்பண்ணுகிற, கண்ணும் - கண்களையும், செம்-ஸாநுநயமான ஸ்வாகதாதிவசநத்தாலே உஜ்ஜ்வலரூபமான, வாயும் - அதரத்தையும், கண்டு - கண்டு, (தன்னுடைய), நெடு-நெடிதான, கண்கள் - கண்களானவை, பனிமல்க - ஆநந்தாஶ்ருபூர்ணமாம்படி ஹர்ஷாதிஶயத்தாலே, நின்றுநின்று - ப்ரதிக்ஷணம், நையும் - சிதிலையாகாநிற்கு மிறே.

இ—ஆறாம்பாட்டில், அவனுடைய ஸ்நேஹஸஹஜமான வீக்ஷிதாதிகளைக் கண்டு ப்ரீதிப்ரகர்ஷத்தாலே ஶிதிலையாகக்கடவளாகாதே யென்கிறாள்.

[இன்றெனக்கு உதவாதகன்ற] - தன்னைப்பிரிந்து நோவுபடுகிற இத்தசையில் துணையின்றிக்கேயிருக்கிற வெனக்கு உதவாதே கைகழியப்போன. தன்னைப்பிரிந்து நோவுபடுமன்று உதவுகைக்கன்றோ தன்னைப்பெற்றது; இத்தசைக்கு உதவாளாகில், இனி எற்றைக்கு உதவ இருக்கிறாள்! "உபகாரோபகாராய ஸம்வ்ருத்ஸ்யாமி" [இளமான்] - "உதவப்பெற்றிலோம்" என்று அநுதபிக்கவும் அறியாத பருவம். [இனிப்போய்] - பெற்றாரை விடும்படி அவ்விஷயத்திலே அவகாஹித்த இதுக்குமேல் என்ன ஏற்றம் பெறப்போனாள்? பெற்றாரைவிட்டுப் பற்றுமதிறே ப்ராவண்யத்துக்கு எல்லை. [தென்திசை இத்யாதி] - தெற்குத்திக்குக்குத் திலகமான திருக்கோளூரிலேசென்று. ஸஹாயமின்றியாலேபோய்ப் புகுகையில் உண்டான அருமையைச் சொல்லுகிறது. [தன்திருமால்] - "விதாதாதுஸ்யாவ:" என்று நிருபாதிகஸம்பந்தத்தைக் காட்டியாயிற்று ஸோபாதிகஸம்பந்தத்தை அறுத்தது. [திருக்கண்ணும்] - நெடுநாள் பிரிந்துபட்ட விடாய்தீர ஸஹர்ஷமாகத்தோற்ற நோக்கும் கண். [செவ்வாயும்] - ஸாபராதனானேன் என்று தாழ்வுதோற்றச்சொல்லும் அதரமும். [கண்டு] - "நாவஜாநந்ஸஹஸ்ராக்ஷம்" என்னும்விஷயத்தையிறே கண்டது. [நின்றுநின்று நையும்] - ப்ரீதிப்ரகர்ஷத்தாலே காணக்காண ஶிதிலையாகாநின்றாளிறே. [நெடுங்கண்கள் பனிமல்கவே] - கண்களின் பரப்படங்கலும் ஆநந்தாஶ்ருவாலே பூர்ணமாகிறதிறே.

ஈடு—ஆறும்பாட்டு. அவனுடைய ஸ்நேஹபஹுமாநவீக்ஷிதாதிகளைக் கண்டு ப்ரீதிப்ரகர்ஷத்தாலே சிதிலையாகக்கடவளாகாதே யென்கிறாள். இவள்தான்உகப்பது அங்கேபுக்குத் தரித்துநிற்கவல்லளானாலிறே. "எங்ஙனேயுகக்குங்கொல்" என்றாள் கீழிற்பாட்டில்; இங்ஙனேயுகக்குமென்கிறாள் - இப்பாட்டில்; மகள் காணப்புகுகிறவிஷயத்தை யநுஸந்திப்பது, தன்மகள்படியை யநுஸந்திப்பதாய்த் திருத்தாயார் படுகிறபாடு என்தான்!

ஆறாம்பாட்டு— இன்று இத்யாதி. கீழே, "எங்ஙனேயுகக்குங்கொல்" என்றத்தோடேசேர அவதாரிகாத்வயம் அருளிச்செய்கிறார்: முந்தினதுக்கு, 'இவள்தானுகப்பது' இத்யாதிவாக்யாநந்தரம்; 'அவனுடையஸ்நேஹ' இத்யாதிவாக்யம் அநுஸந்தேயம். இரண்டாவது, 'எங்ஙனேயுகக்குங்கொல்' என்றாள் இத்யாதி அவதாரிகாத்வயமும், "தன்திருமால்திருக்கண்ணும்" இத்யாதியைக்கடாக்ஷித்து. பாட்டுக்களில் பூர்வோத்தரார்த்தங்களிலே தாயாரினுடைய ஸ்வபாவங்களையநுஸந்தித்து, வ்யாக்யாதாவின்ஈடுபாடு - மகள்காண இத்யாதி.

[இன்று எனக்கு உதவாதகன்ற] - பிள்ளைபெற்று வளர்க்கிறது ஆபத்துக்கு உதவுகைக்கன்றே? தன்னைப்பிரிந்த இத்தனிமைக்கும் இத்தசைக்கும் மேற்பட எனக்கோர் ஆபத்துண்டோ? இன்றேனக்கு உதவாதொழிவதே! "அதோநுகிம் து:கதரம் ஸோஹமிக்ஷ்வாகுநந்தந | இமாமவஸ்தாமாபந்நோ நேஹபஶ்யாமி ராகவம்" (அதோநுகிம்து:கதரம்ஸோஹமிக்ஷ்வாகுநந்தநம் இமாமவஸ்த்தாமாபந்நோநேகபஶ்யாமிராகவம்) - நான் நெடுங்காலங்கூடி வருந்தித் தம்மைப்பெற்றது, தம்மைப்பிரிந்து நான் இவ்வவஸ்த்தையைப் ப்ராபித்த இற்றைக்கன்றே? இன்று தம்மை நான் காணுதொழிவதே என்றானிறே! [எனக்குதவாது] - சக்ரவர்த்தியில் தனக்குண்டானவாசி: "நின்றுதூங்குகின்றேன்" என்னுமாபோலே; அல்லாத தாய்மாரைப்போலேயோ நான் தனக்கிருப்பது? தன் உகப்பே எனக்கு உகப்பாக இருக்குமவளன்றே நான். இவளுடைய அபிமதவிஷயத்துக்கு வடகையும்தானேயிறே. "பிரானிருந்தமை காட்டினீர்" என்று, "அன்னையும் அத்

ப்ர.—[இன்றெனக்குதவாதகன்ற]—அயோத்யாகாண்டே, [ருஉ] ஸர்கே: "மோஹிதா க்ஷம ஸ்ரோஹா ஹா ஸோ ஸுதணிக்ஷணம் | ஸாம்யதீநவ ஸ்ரீமதிஷ்யதியக்ஷய || உரு || அதோநு கிம் து:கதரம் ஸோஹமிக்ஷ்வாகுநந்தந | இமாமவஸ்தாமாபந்நோ நேஹபஶ்யாமி ராகவம் || உசு || ஹா ராம ராமாநுஜ ஹா ஹா வைதேஹி தபஸ்விநி | நமாம் ஜாநீத து:கேந ம்ரியமாணமநாதவத் || உஎ ||

இன்று எனக்கு உதவாதகன்ற - தன்னைப்பிரிந்துநோவுபடுகிற இத்தசையில், துணையின்றிக்கேயிருக்கிற எனக்கு உதவாதே என்கைகழியப்போன என்று ஸப்தார்த்தம். இதுக்குஹ்ருதயார்த்தபாவம் - பிள்ளைபெற்று இத்யாதிவாக்யத்ரயமும். உனக்குஆபத்தேதென்ன - தன்னைப்பிரிந்த இத்யாதி. "தன்னைப்பிரிந்த இத்தனிமைக்கும் இத்தசைக்கும் உதவவன்றோ தன்னைப்பெற்றது" என்கை வ்யாஹதமன்றோ? என்ன; கலக்கம்அப்படிசொல்லுவிக்குமென்கைக்கு ஸம்வாதம் - அதோநுகிம் இத்யாதி. "அதோநுகிம் து:கதரம் ஸோஹமிக்ஷ்வாகுநந்தந | இமாமவஸ்தாமாபந்நோ நேஹபஶ்யாமி ராகவம்" இதி தஸரத ப்ரலாப:. இஸ்ஸ்லோகார்த்தம் - நான் இத்யாதி. சக்ரவர்த்தியில் இவளுக்கு வாசியாவது - அவன்பிரிந்தவுடனே முடிந்தான்; இவள்முடியவும்பெறாதே தரிக்கவும்பெறாதேயிருக்கை. இதுக்குத்ருஷ்டாந்தம் - நின்று இத்யாதி. நாச்சியார்திருமொழி, ஒன்பதாந்திருமொழி, ஒன்பதாம்பாட்டு - "கோங்கலரும்பொழில்" இத்யாதி. 'கோங்கலரும்பொழில் மாலிருஞ்சோலையில் கொன்றைகள்மேல்' - கோங்கலரா நின்றுள்ள சோலையையுடைய திருமாலிருஞ்சோலைமலையில் கொன்றைகளின்மேலே;'தூங்கு †பொன்மாலைகளோடு உடனாய்நின்று தூங்குகின்றேன்' - நாலாநின்றுள்ள ஸ்ப்ருஹணீயமான மாலைகளோடே ஸத்ருஸையாய் நின்று தடுமாறுகின்றேன். கோங்கு - தேனும், பரிமளமும். அலருகை - ப்ரவஹிக்கையும், விகஸிக்கையுமென்று சப்தார்த்தம். இதுக்கு தாத்பர்யம் - கொன்றைமாலையாகையாலே அழகர்க்குமாகாது; அதுதான் திருமலையிலுள்ளதாகையாலே சைவரையும் பறிக்கவொட்டார்கள்; ஆக, இரண்டிடத்துக்குமாகாதே கிடந்து நாலுமாபோலே, நானும் தம்மோட்டை ஸம்பந்தமேஹேதுவாக பந்துக்களுக்கும் ஆகாதே தாமும் அங்கீகரிக்கப்பெறாதே நடுவேநின்று தடுமாறுகின்றேனென்ற ஆண்டாளைப்போலே, இவளும் தன்மேற்றேடே... இருக்கவும் பெறாதே முடியவும்பெறாதே நோவுபடாநின்றேன் என்கிறாளென்றபடி. "எனக்கு" என்றதுக்கு, கீழ், 'சக்ரவர்த்தியில்' வ்யாவ்ருத்தியாக அருளிச்செய்து, இங்கே 'அல்லாத தாய்மாரில்' வ்யாவ்ருத்தியாக அர்த்தாந்தரம் - அல்லாததாய்மாரை இத்யாதி. அவர்களைப்பற்ற விசேஷமேதென்ன - தன்னுகப்பே இத்யாதி. இதுக்குநியாமகமேதென்ன - இவளுடைய இத்யாதி. இதுக்குப்ரமாணம் - பிரான் இத்யாதி. இப்படி வடகையாயிருக்கச்செய்தே தனக்கு உதவாதேபோவானென்? என்ன;

† 'பூமாலை' என்று பாடாந்தரம்.

தனுமென்று அடியோமுக்கு இரங்கிற்றிலள்'' - பிள்ளைகாள்! போகட்ட நினைப்பார் பழியிட்டுப் போகவேணுமோ? அடியாரை நியாமகரென்னவேணுமோ? வழிக்குத்துணையாவாரை நிவாரகர் என்று போகவேதே! [அகன்ற] - இப்படி கைகழியப் போவதே! ஒருதேசத்தே நின்றுதான் உதவாதொழியப்பெற்றேனே ? [இளமான்] - ''போகட்டது தாயையிறே'' என்றறிந்து மீளமாட்டாத பருவங்கிடீர்! இவளைநான் வெறுக்கிறதேன்? பருவம் அதுவானால் செய்யலாவதுஉண்டோ ? [இனிப்போய்] - உறவுமுறையாரில் தாய்க்கு மேற்பட்டார் இல்லையிறே! இப்படி தாயுங்கூடப் புறம்பாம்படி அவன்பக்கலிலேபிறந்த ஸாவகாஶ்யத்துக்குமேலே ''அவ்வருகேயொன்றுண்டு'' என்று போனாளோ? வந்தேறியைக் கைவிட்டால், ஸ்வதஸ்ஸித்தமானதுக்குச் செய்யவேண்டுவதொன்றுண்டோ ? [தென்திசை இத்யாதி] - ''தெற்குத்திக்கு'' என்றுகொண்டு, ஆர்யர்களிகழ்ந்த ம்லேச்சபூமியிறே: இங்ஙனே யிருக்கச் செய்தே, ஓர் ஆஹரணந்தானே எல்லா ஆஹரணங்களுக்கும் நிறங்கொடுக்கவற்றுமா போலே, திருக்கோளூருண்டாகையாலே திக்காக ஶ்லாக்யமானபடி. ''[illegible]'' (தக்ஷிணாதிக்ருதாயேநஸரண்யாபுண்ய கர்மணா) என்னுமாபோலே. [திருக்கோளூர்க்கேசென்று] - திருத்தாயார்க்கு அரிதாய்த் தோற்றுகிறபடி. அவளுக்கு வழிப்போக்கோடு, ஊரில்புகுதியோடு, அவன் தன்னைக் காணுமத்தோடு வாசியற எல்லாம் உத்தேஶ்யமாயிருக்குமிறே. அர்ச்சிராதிகதியோடு, பரமபதத்தோடு, அங்குப்புக்கால் ஸதா-தர்ஶநம்பண்ணுமவனோடு வாசியற ப்ராப்யாந்தர்க்கதமாகக் கடவதிறே. [தன்திருமால்] - ''[illegible]'' (ஸர்வேஷாமேவலோகாநாம்பிதாமாதாசமாதவ:) - இங்கு விட்ட உறவெல்லாம் அங்கே உண்டாயிருக்கிறபடி. அவனுடைய ப்ராப்யவேஷந்தான் லக்ஷ்மீபதியாயாகாதேயிருப்பது.

''தாய் நமப்பனேனல் நம்முடைய அபிமதவிஷயத்துக்கு ப்ரதிபந்தகரன்றோ ?'' என்றும் அதிசங்கையாலே போனளென்றுமதுக்கு ஸம்வாதம் - அன்னையும் இத்யாதி. இதுக்குபாவம் - பிள்ளைகாள்! இத்யாதி பிள்ளைகாளென்றது - வார்த்தைப்பாடு. ''அடியோமுக்கு'' என்றதுக்குபாவம் - அடியாரை இத்யாதி. ஏதத்விவரணம் - வழிக்குத்துணை இத்யாதி. அடியோமை எங்களுக்குத் தாயுந்தந்தையும் என்று பேசிப்பு இரங்கிற்றிலள் இதி ஸப்தார்த்த:. திருமொழிமூன்றாம்பத்து, ஏழாந்திருமொழி, ஏழாம்பாட்டு. ''அகன்ற'' என்கிறபதத்துக்கர்த்தம் இப்படி இத்யாதி. அதாவது - நாமிருக்கிற ஊரிலேயிராதே தூரதேசத்திலேபோவதே என்றபடி. தூரத்திலேபோனதுக்கு ஏலேசிக்கிறதென் ? இருக்கிறவூரிலே உதவாதிருந்தால் நல்லதோ ? என்ன; 'அதுநல்லதன்றோ' என்கிறாள் - ஒருதேசத்தே இத்யாதி. ஏகதேசஸ்தையானால் மீளவருமென்று பாரித்திருக்கலாம், அது இல்லாதபடி தேசாந்தரஸ்தையானளென்றபடி. பகனென்னுதே, ''இளமான்'' என்றதுக்குபாவம் - போகட்டது இத்யாதி. பலிதம் - இவளைநான் இத்யாதி. ''அகன்று - இனிப்போய்'' என்கிறவளுடைய ஹார்த்தபாவம் - உறவுமுறையார் இத்யாதி. ஸாவகாஶ்யமுண்டானாலும் அநுபவ கைங்கர்யங்களுக்காகப் போகவேண்டாவோ ? என்ன - வந்தேறியை இத்யாதி. வந்தேறியை - ஔபாதிகபந்துக்களான தாய்முதலானோரை. ''திசையை'' என்றதுக்குபாவம் - தெற்குத்திக்கு என்று இத்யாதி. இதுக்குத்ருஷ்டாந்தம் - ஓராஹரணம் இத்யாதி. போய்என்னுதே, ''சென்று'' என்கிறதுக்குபாவம் - திருத்தாயார்க்கு இத்யாதி. திருத்தாயார்க்கரிதாய்த்தோற்றினால், போகிறபெண்ணுக்கும் அரிதாயிராதோ ? என்ன - அவளுக்கு இத்யாதி. வழியேதொடங்கி உத்தேஶ்யமாயிருக்குமென்றபடி. வழியேதொடங்கி உத்தேஶ்யமாகக்கூடுமோ ? என்ன - அர்ச்சிராதி இத்யாதி. ''திருமால்'' என்று அவளையும்சொன்னதுக்குபாவம் - இங்குவிட்ட இத்யாதி. கீழே - ''அகன்ற'' என்றபதத்தோடேகூட்டி பாவமருளிச்செய்து, ''கண்டு'' என்கிறபதத்தைக்கடாக்ஷித்து தாத்பர்யாந்தரம் - அவனுடைய இத்யாதி. அவனே

விஶிஷ்டவேஷத்திலல்லது ப்ரதிபத்திபண்ணவறியாள். [திருக்கண்ணும்செவ்வாயுங்கண்டு]- "இவள் முற்படும்படி நாம் பிற்பாடராவதே!" என்று பொறைகொள்ளுகைக்குக் குளிர நோக்குகிறநோக்கும், சிலசொல்லப்புக்குத் தடுமாறுகிற திருப்பவளமும் இருக்கிறபடி. அவனுடைய * கோவைவாய்துடிப்ப மழைக்கண்கள் இருக்கிறபடி. [நின்றுநின்று நையும்]- நாட்செல்லநாட்செல்ல இற்றிற்றுவிழும். கண்டால் முன்புத்தைப்பிரிவை நினைக்கஅறியாள்: எதிர்த்தலை படுகிறது கண்டு ஈடுபடுகிறபடி. "காணுங்காற்காணேன் தவறாயகாணுக்கால், காணேன்தவறல்லவை" என்றிறே இருப்பது. (அதாவது - நாயகனான வுன்னைக்காணும் போது தப்பானது கண்டறியேன். காணாதபோது தப்பல்லாததுகண்டறியேன்.) [நெடுங்கண்கள்பனிமல்கவே] - இக்கண்ணில் பரப்படங்கலும் பரப்புமாறும்படி ஜலதத்த்வம் உண்டாவதே! [நின்றுநின்றுநையும்] - மாறாதே சிதிலையாகாநின்றாள். கிண்ணகத்தில் இளகின கரைபோலே உடைதலைப்படுகிறபடி. [நெடுங்கண்கள் பனிமல்கவே] - நெஞ்சுக்குமையமில் யம்போலேகாணும் கண்ணுக்குக் கண்ணநீர். காணப்புகக்கொண்டு கண்ணநீர் பகை கொண்டாடாநின்றது. ஆநந்தாஶ்ருவோடு ஶோகாஶ்ருவோடு வாசியில்லையிறே: விலக்குமதெல்லாம் வ்யாயகமாகக்கடவது; "த்ரஷ்டவ்ய:" (த்ரஷ்டவ்ய:) என்னும் விஷயத்தை நான் அநுபவிக்கப்பெற்றிலேன். (௬)

ப்ராப்யனானலாகாதோ ? "லக்ஷ்மீபதியாய்" என்கிறநிர்ப்பந்தமேதென்ன - ப்ரீதிக்கு இத்யாதி. திருக்கண்ணும் செவ்வாயுங்கண்டால் ப்ரீதிலையாகவேணுமோ ? என்ன - இவள முற்படும்படி இத்யாதி. இத்தால் - இவள்பக்கல் அவனுக்குண்டான வ்யாமோஹாதிஶயந்தோற்றுகிறதென்கிறார் - அவனுடைய இத்யாதி. வீப்ஸைக்கர்த்தம் - நாட்செல்ல இத்யாதி. விட்டுப்போனவனைக்கண்டால் வெறுக்குமதொழிய, ஈடுபடக்கூடுமோ ? என்ன - கண்டால் இத்யாதி. "பிரிந்தவனைக்கண்டபோது அவன் தோஷந்தோற்றாது" என்கைக்குக் குறள் - காணுங்கால் இத்யாதி. "காணுங்கால் - தவறாய - காணேன்; காணுக்கால் - தவறல்லவை - காணேன்" என்றந்வயம். இதுக்கர்த்தம்: அவனைக்கண்டால் தோஷமானவை காணேன். காணவிட்டால் தோஷமல்லாதவை காணேன் என்று. தவறு - குற்றம். "நெடுங்கண்கள்" என்றுவைத்து, "பனிமல்க" என்றதுக்குபாவம் - இக்கண்ணில் இத்யாதி. "ஜலதத்த்வமுண்டாவதே" என்கைக்குஇவளறிந்தபடியென் ? என்னில்; இவள்ப்ரக்ருதியையிட்டு வித்தவத்கரிக்கிறாள் என்றுகருத்து. வர்த்தமாநார்த்தம் - மாறாதே இத்யாதி. இதுக்குத்ருஷ்டாந்தம் - கிண்ணகத்தில் இத்யாதி. "நையும்" என்றத்தையுங்கூட்டிப்பதச்சேர்த்திக்குபாவம் - நெஞ்சுக்கு இத்யாதி. "கண்டு - பனிமல்க" என்றபதச்சேர்த்திக்குபாவம் - காணப்புகக்கொண்டு இத்யாதி. ஆநந்தாஶ்ரு நல்லதன்றோ? அத்தை "பகை" என்னலாமோ ? என்ன - ஆநந்தாஶ்ருவோடு இத்யாதி. "கண்டு" என்றுதொடங்கி - இவள்படிகளைச்சொல்லுகிற தாயாருடைய ஹ்ருதயபாவம் - த்ரஷ்டவ்ய இத்யாதி. (௬)

ஏழாம் பாட்டு.

மல்குநீர்க்கண்ணொடு மையலுற்றமனத்தனளாய்
அல்லும்நன்பகலும்நெடுமாலென்றழைத்து இனிப்போய்
செல்வம்மல்கிஅவன்கிடந்ததிருக்கோளூர்க்கே
ஒல்கியோல்கிநடந்து எங்ஙனேபுகுங்கொலோசிந்தே?

ஆ.—(மல்குநீர்.) - எம்பெருமானைக்கண்டு ஸம்ச்லேஷிக்கைக்காக க்லுப்தமாக வரும் அந்தகாலமெல்லாம் அவனோடு ஸம்ச்லேஷிக்கப் பெறாமையாலே கண்ணீர் மல்கி, நெடுமால்! நெடுமால்! என்றழைத்து, இனி, இவள் தன்னுடைய விரஹவ்யஸநத்தாலும் ஸௌகுமார்யத்தாலும் அதிமாத்ரம் அவஸந்நையாய் பரிம்லாநையாய்க்கொண்டு, செல்வம்மல்கி அவன்கிடந்த திருக்கோளூர்க்கே நடந்துபோய்ப் புகும்படியைக் காணப் பெற்றிலேன் என்கிறாள்.

ஒ.—ஏழாம்பாட்டில், இவள் ப்ரக்ருதி மார்த்தவத்தையும் எம்பெருமானைப் பிரிந்து சிதிலையாயிருக்கிறபடியையும் அநுஸந்தித்து, இவள்புக்கால் படும்படியை அநுஸந்திக்கவேண்டுவது அவள் அவ்வளவும்சென்று புகவல்லளாகிலிறே என்கிறாள்.

[மல்கு என்றுதொடங்கி] - பகவத்குண ஸ்மரணத்தாலே நீர்துளும்பாநின்ற கண்ணையும் அநுஸந்தாநம்பண்ணவொண்ணாதபடி அறிவுகெட்ட மநஸ்ஸையும் உடையவளாய், அல்லாதார்க்குப்போலே வ்யர்த்தமே போகிறகாலமல்லாமையாலே, ச்லாக்யமான பகலும் இரவும் அதிவ்யாமுக்தனே! என்று கூப்பிட்டு இதுக்குமேலே ஒரு புருஷார்த்தம் தேடிப்போய். [செல்வம் மல்கி என்று மேலுக்கு] - ஐஸ்வர்யம்மிக்கு அவன் கிடந்த திருக்கோளூர்க்கே தன்னுடைய பலஹாநியாலே தளர்ந்து வாடிவாடி எங்ஙனேபோய்ப் புகக்கடவள்?

ப.—அநந்தரம், இவள்காண்கைக்கும் உகக்கைக்கும் அடியான அதிசயித வ்யாமோஹத்தையுடையவனை வாய்புலற்றிக்கொண்டு வருந்தி நடந்துபோய் எங்ஙனே அவ்வூரிலே புகுவது? என்கிறாள்.

மல்கு - (விரஹத்தாலே)மிக்க, நீர் - நீரையுடைத்தான, கண்ணொடு - கண்களோடே, மையல் - ப்ரமத்தை, உற்ற - அடைந்த, மனத்தனள் ஆய் - நெஞ்சையுடையளாய், (இப்படி பாஹ்யாப்யந்தர காரணங்கள் அவிதேயமாயிருக்க, ப்ராவண்யவாஸநாதிசயத்தாலே), நன்-(அவனைச் சொல்லுகைக்குறுப்பான) நன்மையையுடைய, அல்லும்-இரவும், பகலும் - பகலும், நெடுமால் - அதிசயிதவ்யாமோஹத்தை யுடையவனே! என்று - என்று, அழைத்து - கூப்பிட்டு, இனி - அவ்வார்த்திக்குமேலே, ஒல்கி-ஒடுங்கி, ஒல்கி - அசைந்து, நடந்து - நடந்து, ஒசிந்து - தளர்ந்து, போய் - போய், செல்வம் மல்கி - அபிவ்ருத்தைச்வர்யனாய்க்கொண்டு, அவன் - அவன், கிடந்த - கண்வளர்ந்தருளின, திருக்கோளூர்க்கே - திருக்கோளூர்க்கே, எங்ஙனே - எங்ஙனே, புகுங்கொல் - புகக்கடவளோ? ஒசிவு-தளர்த்தி, ஒல்குதல் - ஒடுக்கமாய், அசைதல்.

இ.—ஏழாம்பாட்டில், இவள் ப்ரக்ருதிமார்த்தவத்தையும், பிரிவால் வந்த சைதில்யத்தையும் அநுஸந்தித்து, இவையெல்லாம் அவ்வளவும் செல்லப்போகவல்லளாகிலிறே என்கிறாள்.

[மல்குநீர் இத்யாதி] - ஹ்ருவத்குண ஸம்ருதியாலே நீர்மல்கின கண்களையும், அநுஸந்திக்கவொண்ணாதபடி அறிவுகெட்ட மநஸ்ஸையும் உடையளாய், உள்ளூர்ப்புறம்பு மொக்க இருண்டுகிடக்க, எங்ஙனேபோம்படி? கண்ணநீராலே பதார்த்த தர்சநமில்லை: திக்ப்ரமமுண்டாம்படியாக வாய்இருண்டது. நல்ல இரவும் நல்ல பகலும், மநஸ்ஸஹகாரமுமின்றிக்கேயிருக்க, அதிவ்யாமுக்தனே! என்று கூப்பிடாநின்றாள். இரவிலும் அவ்விஷயத்தையே சொல்லிக் கூப்பிடுகையாலே ப்ரலாபமான காலம் என்கிறாள். தன் வ்யாமோஹத்தைக் காட்டியிறே இவளை யலவலையாக்கிற்று. [இனிப்போய்] - அஹோராத்ரம் அவன் வ்யாமோஹத்தை அநுபவிக்கிற இவ்விடத்தைவிட்டு என்ன ஏற்றம் பெறப்போனாள்? ''யயௌவகாவிஷ்வௌரோந்ரா'' என்கிறபடியே இருட்சி கைகொடுக்க விறே போயிற்று. [செல்வம்மல்கி யவன்கிடந்த] - ஐஶ்வர்யம் மிலுங்க அவன்கிடந்த தேசம். ''ஶ்ரீரோநுஸாவஸாநுஃவராநுவஃ'' என்ற கிடையழகு காணவாயிற்று இவள் போயிற்று. ''கிடந்ததோர் கிடக்கை'' என்னக்கடவதிறே. சாய்ந்தபோதாயிற்று அழகுமிக்கிருப்பது. [ஒல்கி யொல்கி] - ஒதுங்கியொடுங்கி; ஓரடியிடும்போது நடுவே பல கால் இளைப்பாறவேண்டும்படியிருக்கை. [ஒசிந்து] - துவண்டு எங்ஙனே போய்ப் புகக்கடவள்.

ஈடு.—ஏழாம்பாட்டு. இவள் ப்ரக்ருதிமார்த்தவத்தையும் பிரிவில்வந்த சைதில்யத்தையும் அநுஸந்தித்து, இவையெல்லாம் அவ்வளவும் செல்லப்போகவல்லளாகிலிறே யென்கிறாள். நாம் இலையகலப்படுக்கிறோமத்தனையொழிய, இவள் போய்முடியப் புகாநின்றாளோ?

[மல்குநீர்க்கண்ணொடு மையலுற்றமனத்தனளாய்]- ''என்றேனும் கட்கண்ணாற் காணாத அவ்வுருவை நெஞ்சென்னும் உட்கண்ணேற்காணும்'' என்னும்இரண்டுமொழிய

ஏழாம்பாட்டு.—மல்குநீர் இத்யாதி. ''ஒல்கியொல்கி நடந்து - ஒசிந்து'' என்கையாலே - ப்ரக்ருதிமார்த்தவம். ''மல்குநீர்க்கண்ணொடுமையலுற்றமனத்தனளாய்'' என்கையாலே - பிரிவில்வந்த சைதில்யம். இவையெல்லாமென்றது - கீழிற்பாட்டிற்சொன்ன அநுபவாதிகள். ''எங்ஙனேபுகுங்கொல்'' என்றத்தைப்பற்ற - அவ்வளவும்செல்ல இத்யாதி. 'போகவல்லளாகிலிறே - நாமிலையகலப் படுக்கிறோமத்தனையொழிய இவள் - முடிய - போய் - புகாநின்றாளோ - என்கிறாள்' என்றாதன்வயிப்பது. அன்றிக்கே, கீழ்வாக்யவிவரணமாதல் - நாம்இலையகல இத்யாதி. 'முடிய - போய் - புகாநின்றாளோ' என்றந்வயிப்பது.

''மல்குநீர்க்கண்'' என்றும், ''மையலுற்றமனம்'' என்றும் விசேஷித்ததுக்குஹார்த்தபாவம் - என்றேனும் இத்யாதி. அதாவது - ஒருவற்குப்போம்போது பாஹ்யசக்ஷுஸ்ஸாலேயாதல் ஆந்தரசக்ஷுஸ்ஸாலேயாதல் போகவேணும்; இவையிரண்டும் இவளுக்குப்போகவொண்ணாதபடி பரவசமான பின்பு, இவள்எங்ஙனேபோகப்புகுகிறாள்? என்றுகருத்து. என்றேனும் - ஒருநாளும், கட்கண்ணால் காணாதஅவ்வுருவை - பாஹ்யசக்ஷுஸ்ஸால் காணவொண்ணாத வந்தத்திருமேனியை; நெஞ்சென்னுமுட்கண் - நெஞ்சாகிற ஆந்தரத்ருஷ்டியானது; உணர்ந்து - அவன்படிகளையறிந்து. 'காணுமேல்' - ஸாக்ஷாத்கரிக்குமாகில்இத்யர்த்தஃ. பெரியதிருவந்தாதி இருபத்தெட்டாம்பாட்டு - ''அன்றேநங்கண்''

இவளெங்ஙனேபோனபடி? கண் - மல்குநீர்க்கண்ணுயிற்று; மனம் - மையலுற்றமனமா யிற்று. அகவாயும் இருண்டு புறவாயும் இருண்டிருக்க, இவள் எங்ஙனேபோனபடி? கண்ண நீராலே கண்தோற்றுது; ப்ரேமாந்தையாகையாலே நெஞ்சு இருண்டுதோற்றுது. [மல்குநீர்க் கண்ணொடுமையலுற்றமனத்தனளாய்] - இரண்டுக்கும் இரண்டும் நிரூபகமாயிருக்கிறபடி. [மையலுற்றமனத்தனளாய் நெடுமால் என்றழைத்து] - நெஞ்சொழியவே தான் கூப்பிட்டது. [அல்லு நன் பகலும்] - பகவத்விஷயத்திலே அவகாஹித்துக் கூப்பிடுகிற காலமாகை யாலே, நல்லிரவும்நன்பகலும்மென்கிறாள். நாட்டார் க்ஷுத்ரவிஷயங்களை ஆசைப்பட்டுக் கூப்பிடாநிற்க, "எல்லாங்கண்ணன்" என்று கூப்பிடுகிறாளிறே. [நெடுமால்என்றழைத்து]- அவன் தன்பக்கல் பிச்சேறியிருக்கும்படியைச் சொல்லிக்கூப்பிட்டு. [இனிப்போய்]-அவன் தன்பக்கல் பண்ணும் வ்யாமோஹத்தைச் சொல்லிக் கூப்பிடும் இதுக்குமேலே தன் வ்யா மோஹங்காட்டப்போனுளே. கண்ணுந்தோற்றுதே நெஞ்சும் பறியுண்டிருக்கும் இதுக்கு மேலே, இனிப்போய், வேறேயொன்றுண்டோ அநுபவிப்பது? [செல்வம்மல்கி அவன் கிடந்ததிருக்கோளூர்க்கே] - எதிரே பாதிவழிவந்து முகத்திலேவிழித்து உடம்பிலே அணைத் துக்கொண்டு போகாதேயொழிந்தது ஐஶ்வர்யச்செருக்கிறே!ஐஶ்வர்யத்தால்வந்த செருக்குஅன் றாகில் இவ்வரவு அவனன்றேவருவான்? வழியேபிடித்து வாழ்ந்துகொண்டுபோகலாயிருக்க, செருக்காலே இழந்தா னென்கிறாள். [செல்வம்மல்கியவன்கிடந்த] - "**ஸஶயாபோதித ஶ்ரீமாந்**" (ஸஶயாபோதிதஶ்ஶ்ரீமாந்) என்கிறபடியே, அழகுமிக்குக்கிடந்த என்னவு மாம். [அவன்கிடந்த] - "**ஸாபகஸாப்த:**" (ஸாபகஸாப்த:) என்ற கிடையழகுகாண வாயிற்று இவள் ஆசைப்பட்டுப்போயிற்று: "கிடந்ததோர்கிடக்கை" என்னக்கடவதிறே. [அவன்கிடந்த] - அவன்வரவு பார்த்து இவள் இருக்கையன்றிக்கே, இவள்வரவு பார்த்து அவன்கிடக்கும்படியாவதே! [ஒல்கியோல்கிநடந்து] -ஓரடியிலே பத்தடியிட வேண்டும்படியா யிருக்கை. [ஒசிந்து] - துவண்டு. [ஒல்கியோல்கிநடந்து - ஒசிந்து - எங்ஙனேபுகுங்கொல்] - ஒடுங்கியொடுங்கிநடந்து, அதுபொறாமல் துவண்டு, எங்ஙனே புகக்கடவளோ? [நடந்தெங்

*டாரை' என்கிறது. ''கண்டு'' என்றதுக்கு ஸ்வாபதேஶம் - இத்தால் இத்யாதி. இதுக்குப்ரமாணம் - வேறாக இத்யாதி. ஸ்ரீந்ருஸிம்ஹத்தை வ்யாவ்ருத்தமாக ஏத்தியிருக்கும் ஸ்ரீவைஷ்ணவர்களை ஜயித் திருக்குமே, அந்த ஸ்ரீவைஷ்ணவர்களை அபாஶ்ரயமாகப்பற்றி யங்கே ந்யஸ்தபராராயிருக்கும் சரமாதி காரிகளுடைய இந்நிஷ்டைக்கடியான பகவத்விஷயீகாரமாகிற தபஸ்ஸென்றபடி. நாலாந்திருவந் தாதி, ''மாறாயதானவனை'' இத்யாதி. ''அமர்'' என்கிறவர்த்தமாநத்துக்கர்த்தம் - எப்போதும் இத் யாதி. நேமி - திருவாழி. ''என்'' என்றத்தை * சக்கரத்தோடும் * கனிவாயோடுங்கூட்டி பூர்வ பாவியாகபாவம் - கையும் இத்யாதி. ''என்கனிவாய்'' என்று அபரபாவியாக பாவம் - பிரிந்து இத் யாதி. ''கையமர்சக்கரம், என்கனிவாய்'' என்று விசேஷிக்கிறவளுடைய ஹார்த்தபாவம் - திருவா ழிக்கு இத்யாதிவாக்யத்வயம். முற்றாட்டு - பூர்ணாநுபவம். ''அமர்'' என்கிற வர்த்தமாநத்தைக்கடா க்ஷித்து, ''என்'' என்கிறவளுடையபாவம் - அவன் ஜீவநத்தை இத்யாதி. ''கையமர்'' என்கிறத்தை உபஜீவித்து ரஸோக்தி - அவனுக்கே இத்யாதி. கையடைப்பாயிற்றேயென்றது - முற்றாட்டாசக் கொடுத்தானென்று, ஸ்வபாவார்த்தம்; சாடுவுக்கு, கையிலேயடைக்கப்பட்டதென்றபடி. ''கண்டு'' என்கிறதுக்கு வ்யாவர்த்யம் மூன்றவிதமாக அருளிச்செய்கிறார் - எனக்குப்போலே இத்யாதிவாக் யத்ரயத்தாலே இவற்றின்கண்ணாலேகாணுதலென்றது - இவை யிங்குநின்றும்போய் அவனைக்கண் டால் தான்கண்டாற்போலேயிருக்குமென்றபடி. இவற்றைக் காணுதலென்றது - அவனைக்கண்ட இவற்றைக்காணுதல் என்றபடி. இந்த இரண்டாம் அர்த்தத்துக்குப்ரமாணம் - தாம்ஸ்ப்ருஷ்ட்வா இத் யாதி. '' வாஹி வாத யத: காந்தா தாம் ஸ்ப்ருஷ்ட்வா மாமபி ஸ்ப்ருஶ | த்வயி மே காத்ரஸம்ஸ்பர்ஶ: சந்த்ரே த்ருஷ்டிஸமாகம:'' இதி யுத்தகாண்டே ராம: (ரு-௬). இத்தால் - 'தாம் ஸ்ப்ருஷ்ட்வா மாமபி ஸ்ப்ருஶ'' என்று பிராட்டியோட்டை ஸ்பர்ஶம் வாயுத்வாரா ஸத்வாரகமானாற்போலே, காட்சியும் ஸத்வாரகமென்றுகருத்து; இதுக்கு, 'சந்த்ரேத்ருஷ்டிஸமாகம:' என்றதுசேரும். மெத்தவசநத்துக் கர்த்தம் - தொட்டாரை இத்யாதி. ''மெய்யமர்'' என்றது - அவன் திருமேனியோடே எனக்கணைய வேண்டும்படியான என்னுதல்; என்னுடம்போடே தான் அணையவேண்டும்படியான என்னுதல். இந்த அர்த்தத்வயத்தையும் அடைவேயருளிச்செய்கிறார் - திருமேனி இத்யாதிவாக்யத்வயத்தாலே. த்விதீயார்த்தத்துக்குப்ரமாணம் - காத்ரை: இத்யாதி. அர்த்தத்வயபலிதம் - நம்ஸத்தை இத்யாதி.*

என்னக்கடவதிறே, "நம் ஸத்தை கிடக்கக்கிடக்குமிறே" என்றுதல், "குணஜ்ஞாநத்தாலே யரித்திருக்கிறுள்" என்றுதல் நினைத்திருக்குமதல்லவென்று சொல்லுங்கோள். அங்ஙனேயும் யரித்திருந்தார் உண்டிறே; மாயாமிரஸ்ஸைக்காட்டினவன்றும், பிராட்டி, லௌகிகரோடொக்கக் கண்ணநீர் விழவிட்டு, "அதுவேயாகிலும் அவருளராகிலல்லது நம் ஸத்தை கிடவாது" என்று தன்னைக்கொண்டு அறுதியிட்டு யரித்திருந்தாளிறே. "अनन्या राघवेणाहं भास्करेण प्रभा यथा" (அநந்யாராகவேணஹம் பாஸ்கரேணப்ரபாயதா) இறே; ஆதித்யன் உண்டாகிலல்லது ப்ரபையுமில்லையிறே. இங்ஙனேயிருக்கச்செய்தே ஒரு ஹேதுக்களாலே வரும் ஸங்கோசவிகாஸங்களேயிறே யுள்ளது. த்ரவ்யமாயிருக்கச்செய்தேயும் ப்ரகாரமாம் ஆகாரமுண்டே. அப்படியேயன்றிறே இங்கு; உடம்பிலே யணைந்து பிரிந்தார்க்கு உடம்பை அணைத்தல்லது நிற்கவொண்ணுதிறே. [மெய்யமர்காதல்]- "தம்மைப்போலே பொய்யுமாய் நிலைநில்லாதகாதலன்று எங்களது என்று சொல்லுங்கோள்" என்று பிள்ளான் பணிக்கும். அன்றிக்கே, [மெய்யமர்காதல்] - ஆத்மாநுபந்தியான காதல். மெய்யென்று ஆத்மாவாய், ஆத்மாவோடே பொருந்தினகாதல் என்றுமாம். "மெய்ம்மையே மிகவுணர்ந்து" என்கிறவிடத்தில், மெய்யென்கிறது ஆத்மாவையிறே. ஸத்யமான காதல் என்றபடி. [சொல்லி] - தந்தாமுக்கு இல்லாதவை பிறர்வாயிலேகேட்

[மெய்யமர்காதல்]—स्वानुरूपकामे, [உக] रावणं प्रति सीता, "शक्या लोभयितुं नाहमैश्वर्येण धनेन वा । अनन्या राघवेणाहं भास्करेण प्रभा यथा ॥கரு॥"

குணஜ்ஞாநத்தாலேயரித்திருந்தமைக்குப்ரமாணம் - "[illegible]" "[illegible]" இத்யாதிகள். அவன் ஸத்தை கிடக்க யரித்திருந்தபேருண்டோ? என்ன, அருளிச்செய்கிறுர் - அங்ஙனேயும் இத்யாதிவாக்யத்வயத்தாலே. 'அதுவேயாகிலும்' என்ற அபி ஶப்தம் - நிரர்த்தகமாய், அந்தசிரஸ்ஸாலுலென்றபடி. அப்படி அவனுண்டானபோது உண்டாய் இல்லையானபோது இல்லையாம்படி அவிநாபூதையோ? என்ன - அநந்யா இத்யாதி. சுந்தரகாண்டே ராவணம்ப்ரதிஸீதா; "शक्या लोभयितुं नाहमैश्वर्येण धनेन वा" இதி பூர்வார்த்தம். "भास्करेण प्रभा यथा" என்றத்தால் ஹலிதம் - ஆதித்யன் இத்யாதி. ப்ரபைபோலே அப்ருதக்ஸித்தையானவளுக்குப் பிரிவுவாக்கூடுமோ? என்ன - இங்ஙனே இத்யாதி. அதாவது - அப்ருதக்ஸித்தையாகிலும் தேவஸ்த்ரீகள்சிறையை விடுவிக்கைக்காக அவதாரத்தில் மெய்ப்பாட்டாலே விஶ்லேஷமாகத்தோற்றினவித்தனை; வஸ்துத: இல்லையென்றுகருத்து. ஸங்கோசவிகாஸங்களென்றது - ஸம்ஶ்லேஷ விஶ்லேஷங்களென்றபடி. ஜாதிகுணங்களுக்கொழிய த்ரவ்யத்துக்கு அப்ருதக்ஸித்த விசேஷணத்வங்கூடுமோ? என்ன - த்ரவ்யமாய் இத்யாதி. அப்படியேயன்றிறே என்றது - அவன்ஸத்தையாலே ஜீவித்தல், குணஜ்ஞாநத்தாலேஜீவித்தல் செய்யும்படியன்றிறே இங்கென்றபடி: யத்வா, சித்த்ரவ்யத்துக்கும் அசித்த்ரவ்யத்துக்குமவிநா பாவமுண்டோ? என்ன - த்ரவ்யமாயிருக்கச்செய்தே இத்யாதி. ஆக, இவ்வளவும் அவன் ஸத்தைகிடக்கக்கிடக்குமென்கிறத்தை விஸ்தரேண வுபபாதித்து, அவளிற்காட்டில் இவளுக்குண்டான வ்யாவ்ருத்தியை அருளிச்செய்கிறுர் - அப்படியேயன்றிறே இங்கு என்று. திருமேனியோடேயணைந்தே ஸத்தைதரித்திருக்கவேண்டும்படியிருக்கைக்கு அடி ஏதென்ன - உடம்பிலே இத்யாதி. மூன்றும் அர்த்தம் - தம்மைப்போலே இத்யாதி. நாலாம் அர்த்தம் - ஆத்மாநுபந்தியானகாதல் என்று. கீழ்வாக்யவிவரணம்-மெய்யென்று இத்யாதி. "மெய்" என்று - ஆத்மாவைச்சொல்லுமோ? என்ன - மெய்ம்மையே மிகவுணர்ந்து இத்யாதி. இது திருமாலையில், "மெய்ப்பொருள்" என்கிறபாட்டில். மூன்றும் அர்த்தவிவரணம் - ஸத்யமானகாதலென்ற

டறியும் இத்தனையிறே. தமக்கு உண்டாகில் இப்படி தூதுவிடப் பார்த்திராரே. காட்சிக்கு மேலே ஓரேற்றம்போலே காணும் தன் ஊமையை அவனுக்கு அறிவிக்கை. [கிளிகாள்! விரைந்தோடிவந்தே] - பிராட்டியைக் கண்டு மீண்ட அநந்தரம் முதலிகள்வந்து பெருமாளை யுகப்பித்தாற்போலவும், பெருமாள் மீண்டெழுந்தருளுகிறபோது திருவடி முன்னேவந்து ஸ்ரீபரதாழ்வானையுகப்பித்தாற்போலவும், நீங்கள் முன்னேவரவேணும். [கிளிகாள்! விரைந்தோடி வந்தே] - அறிவித்துக் கூட வரவிராதே கிடிகோள். திருவடி பிராட்டியைத் தேடிப்போகிற போது பண்ணின அஹிஸந்திகளெல்லாம் இக்கரையிலே கழித்துப் பின்பு லங்கையிலே போய்ப்புக்கு எங்குந்தேடி, அவளைக்கண்டு, அநந்தரம் "இக்காட்சியால் ப்ரோஜநமுள்ளது அவ்வாஶ்ரயமுள்ளபோதே சென்றறிவிக்கிலிறே" என்று ஒருநாளே வந்தானிறே; அதுக்கடி, போகிறபோது இவராற்றாமையைக்காண்கையாலே, "நாம்வருமளவும் இவரைக் கிடைக்கை யரிது" என்றிருந்தான்; பெருமாள்தாமும், "பிள்ளாய்! நீயிருக்கிறபோதைத் தரிப்புக்கொண்டு நீபோனாலும் இப்படியிருப்பன் என்றிராதேகிடாய்; என்னளவறிந்து கார்யஞ்செய்" என்றாரிறே. [விரைந்தோடிவந்தே] - நீங்கள் முற்படவந்த ப்ரீதி ஸாத்மித்தால், பின்பு அவன் வரவாகவேணும். அவனுடனே கூடவரில் வாய்புகுநீராய் உங்களைக்கொண்டாடவொண்ணாது; ஆனபின்பு, நான் முறைகெடாமல் அநுபவிக்கும்படி வாருங்கோள்! உபகாரகரான உங்கள் காலிலே முற்படவிழுந்தபின்பு அவன்காலிலேவிழும்படி பண்ணுங்கோள். ஆகையிறே, நம் முதலிகள் குருபரம்பரைமுன்னாக த்வயாநுஸந்தாநம்பண்ணுகிறது. இனித்தான் ஶிஷ்யனுக்கு ஆசார்யாநுவர்த்தநம்பண்ணலாவது அவன் தேஹபரிக்ரஹம்பண்ணியிருக்கிற நாளிலேயிறே; பின்புள்ளதெல்லாம் பகவதநுபவத்திலே அந்வயிக்குமிறே இருவர்க்கும். அவன் "எனக்கு" என்னும்நாளிலேயிறே, இவன் "உனக்கு" என்று கொடுக்கலாவது?

படி என்று. ஆக "மெய்யமர்" என்கிறதுக்கு நாலர்த்தம். "என்காதல்சொல்லி" என்கையாலே, தமக்கு அதில்லை என்று பாவம் - தூதுக்கு இத்யாதி. அவர்க்கில்லையென்னுமதுக்கு நியாமகம் - தமக்குஉண்டாகில் இத்யாதி. பாவாந்தரம் - காட்சிக்குமேலே இத்யாதி. "கண்டு" என்றகாட்சிக்கு மேலே, அவனோடே பேசுகையும் இவற்றுக்கேற்றம் என்றபடி. விரைந்தோடிவருகிறதுக்கு ப்ரயோஜநம் - பிராட்டியை இத்யாதி. விரைந்தோடிவருவானென்? அவனோடேகூடவந்தாலோ? என்ன - அதுக்குமுன்னே என்னபத்தை அறியுமென்னுமத்தை தர்ஶிப்பிப்பதாக அதிஷ்டிகை - அறிவித்து இத்யாதி. நீங்கள் அவனோடேகூடவந்தால் என் ஸத்தையழியும்; ஆனபின்பு, என்னை தரிப்பிக்கைக்காக ஶீக்ரமாகவாருங்கோள் என்னுமத்தையுட்கொண்டு அதுக்குத்ருஷ்டாந்தம் - திருவடிபிராட்டியை இத்யாதி. அஹிசந்திகளெல்லாமென்றது - மஹாராஜரோடே "ஒருமாசத்திலேவருகிறோம்" என்றாற்போலே யுண்டானவைகள் என்றபடி. இக்கரையிலே - கடலுக்குஇக்கரையிலே. விரைந்தோடி வரச் சொல்லுகிறதென்? அவனோடேகூடவந்தாலோ? என்கிற சங்கைக்கு த்விதீயபரிஹாரம் - நீங்கள் முற்பட இத்யாதி. த்ருதீயபரிஹாரம் - அவனுடனே இத்யாதி. வாய்புகுநீராய் - உன்மஸ்தகாநுபவமாய். "முறைகெடாமல்" என்கைக்கு, முறையேதென்ன - உபகாரகரான இத்யாதி. இந்தமூன்றும் பாவத்துக்கு த்வேதாஸ்வாபதேஶம்; அதில்முந்தினது - ஆகையிறே இத்யாதி. அதாவது, குருபரம்பரா பூர்வகமாக ஈஶ்வரனை சேவிக்கவேண்டுகையாலே முன்னேவரச்சொல்லுகிறாளென்றபடி. இரண்டாம் ப்ரகாரம் - இனித்தான் இத்யாதி வாக்யத்ரயமும். அதாவது - பகவத்ப்ராப்த்யநந்தரம் அநுவர்த்தநங் கூடாமையாலும், உங்களை நான் அநுவர்த்திக்கும்படி முன்னே வரவேணுமென்கிறாளென்றபடி. 'கிளிகாள்! மையமர்சக்காத்து' என்று தொடங்கி, 'கண்டு மெய்யமர்காதல்சொல்லி - விரைந்தோடிவந்து - 'மையமர்வாள்' என்று தொடங்கி, பாலொடு மேவீரோ இத்யந்வய: மைபொருந்தி ஒளியையுடைத்தான நெடியகண்ணையுடைய என்று ஶப்தார்த்தம்.

மூன்றாம் பாட்டு.

ஓடிவந்தென்குழன்மேல் ஒளிமாமலரூதீரோ?
கூடியவண்டினங்காள்! குருநாடுடையைவர்கட்காய்
ஆடியமாநெடுந்தேர்ப்படை நீறெழச்செற்றபிரான்
சூடியதண்டுளபமுண்ட தூமதுவாய்கள்கொண்டே.

ஆ.—(ஓடிவந்து.) - ராஜ்யப்ராப்தராய் ஸமாஶ்ரிதருமான பாண்டவர்கள் பக்கலுள்ள வாத்ஸல்யத்தாலே, த்ரைலோக்யவிஜயோபகரணபூதமாய் அத்யுந்நதமாயிருந்த திருத்தேரிலேநின்று அவர்களுக்கு ஸாரத்யம்பண்ணி தத்விரோதிகளை நிரஸித்தருளின ஸமயத்திலே, பரமபக்தியுக்தரான திவ்யஜநங்கள் ஶிரஶிரோபசாரமாகச் சாத்தியருளப்பண்ணின திவ்யகந்தமான திருத்துழாய்மதுவைப் பாநம்பண்ணி, அத்தூமதுவாய்களைக் கொண்டோடிவந்து, அம்மதுவையும் அதிஶீதளமான திவ்யகந்தத்தையும் என் குழல்மேல் ஒளிமாமலர்களிலே வர்ஷிக்கவேணும்; வர்ஷிக்கவே, அம்மலர்களும் அலர்ந்து புதுக்கணிக்கும்; * என்னிறம் பண்டுபண்டுபோலொக்கும், கெண்டையொண் கணுந்துயிலும் என்று, பரஸ்பர ஸம்ஶ்லேஷைகபோகமான வண்டுகளை நோக்கிச் சொல்லுகிறாள்.

ஓ.—மூன்றாம்பாட்டில், இனமாயிருக்கிற வண்டுகளைக்குறித்து, எம்பெருமானுக்கு என்னுடைமையை அறிவித்துவந்து என்தலைமேலே வர்த்தியுங்கோள் என்கிறாள்.

[ஒளிமாமலரூதீரோ] - உங்கள் வரவாலே தளிர்த்திருக்கிற என்னுடைய குழலில் ஒளியையுடைத்தாய்ப் பெருத்திருக்கிறபூவில் மதுவைப் பாநம்பண்ணீர்களோ. [குருநாடுடைஐவரென்று மேலுக்கு] - குருநாடுடைய தர்மபுத்ராதிகளுக்காக மனோஹரமாம்படி ஸஞ்சரியாநின்றுள்ள குதிரைபூண்ட பெரியதேரையே உபகரணமாகக்கொண்டு ஸேனையைப் பொடியாம்படிமுடித்த மஹோபகாரகன் சூடியருளின திருத்துழாயில் மதுவைப் பாநம்பண்ணுகையாலே ஶ்லாக்யமாய் தேனையுடைய வாய்களோடேகூட.

ப.—அநந்தரம், என்பக்கலினின்றும் செல்லுகையாலே ஆஶ்ரிதவிரோதிநிவர்த்தகனான க்ருஷ்ணன் ஶிரஸாவஹித்த புதுக்கணிப்போடேவந்து, "அவன்வருகிறான்" என்றலங்கரித்திருக்கிற என்குழலிற்பூவை யூதுங்கோளென்று சிலவண்டினங்களைப்பார்த்துச் சொல்லுகிறாள்.

கூடிய - பரஸ்பரம்செறிந்த, வண்டினங்காள் - வண்டினங்காள்! குருநாடுடை - குருக்ஷேத்ரநிர்வாஹகரான, ஐவர்கட்குஆய் - பாண்டவர்கள்ஐவர்க்குமாக, ஆடிய - ஊர்ஜ்ஜிதகதியான, மா - குதிரைகளையும், நெடு - ஓங்கின, தேர் - தேர்களையும், படை - ஸேனையையும், நீறுஎழ - தூளிசேஷமாம்படி, செற்ற - அழித்த, பிரான் - மஹோபகாரகனான க்ருஷ்ணன், சூடிய - திருக்குழலில்சாத்தின, தண் - ஶ்ரமஹரமான, துளபம் - திருத்துழாயிலேயிருந்து, உண்ட - பாநம்பண்ணின, தூ - தெளிந்த, மது - மதுவையுடைத்தான, வாய்கள் - வாயை, கொண்டு - உடையீர்களாய்க்கொண்டு, ஓடிவந்து - சடக்கெனவந்து, (அவனுக்கு ஸர்வப்ரகாரபோக்யமான) என் - என், குழல்மேல் - குழ

வின்மேலில், ஒளி - செவ்வியையுடைத்தாய், மா - ஶ்லாக்யமான, மலர் - பூவில், ஊதீர் - மதுபாநோத்யோகந்தோன்றும்படி ஊதவேணும்.

இ.—மூன்றாம்பாட்டில், சிலவண்டுகளைக்குறித்து, அவனுக்கு என் ஊமையை அறிவித்துவந்து என்தலைமேலே வர்த்தியுங்கோள் என்கிறாள்.

[ஓடிவந்து] - முன்பே அவற்றின்வார்த்தைகேட்கையில் உண்டான த்வரையாலேயாதல், அவற்றைஅநுபவிக்கையில் உண்டான த்வரையாலேயாதல், சடக்கென வரவேணும் என்கிறாள். [என்குழல்மேல்] - அவனோடு ஹோம ஸாம்யமுண்டாம்படிபண்ணக்கடவேன். அவன் தனக்குத்தூதுபோனவர்களுக்கு ததிமுகன்காத்திருக்கிற காவற்காட்டை அழிக்கக்கொடுத்தானித்தனையிறே; அவன் காவற்காட்டை அழிக்கத்தருகிறேன் உங்களுக்கு என்கிறாள். "ஸஹஸ்ராவாரயிஷ்யாமிப்ரியாஷாகம்வரிவஹிநஃ" என்று திருவடியைப்பற்றி அழிக்கவும்வேண்டாவிறே: இவளுடைய * வாஷவாவ்யுஹாதஸ இருக்கிறபடி. உங்களுடையவரவாலே தளிர்த்திருக்கிற என்னுடைய குழலில், ஒளியை உடைத்தாய் ஶ்லாக்யமானமலரில் மதுவைப் பாநம்பண்ணீரோ. [ஊதீரோ] - மது வின்ஸம்ருத்தியாலே, கிண்ணகத்தில்இழிவாரைப்போலே இழியமாட்டாதேநின்று பறக்கிறபடி. உங்கள் கார்யமுமாய் பரரக்ஷணமுமாகில் ஆறியிருக்கிறதென் என்கை. [கூடிய வண்டினங்காள்]- மஹாராஜரைப்போலே படைதிரட்டவிராதே, என்னுடைய ரக்ஷணத்திலே ஒருப்பட்டு முன்பே திரண்டிருக்கப்பெற்றதிறே. [குருநாடுடைஐவர்கட்காய்]- நாடுடையவர்கள் ஐவருமேயென்றிருக்கிறான்: துர்யோதநாதிகள் கிடந்தானை கண்டேறினவித்தனை [ஐவர்கட்காய்] - "நாடுடைமன்னர்" என்கிறபடியே ராஜ்யமுடையவர்கள் அவர்கள். "நாமவர்களுக்குக் கையாளாய் வ்யாபரிக்கிறோம்" என்றாயிற்று அவன் நினைத்திருப்பது; அவன்நினைவிறே இவளுக்குநினைவு. [ஆடியமாநெடுந்தேர்]-மனோஹரமாம்படி ஸஞ்சரியாநின்ற குதிரைபூண்ட பெருந்தேரை உபகரணமாகக்கொண்டு: "ரதஶ்ரேஷ்டே" என்னக்கடவதிறே. [படைநீறெழச்செற்ற] - ஆயுதமெடாமைக்கு அநுமதிபண்ணுகையாலே, தேர்க்காலாலே ஸேனையைத் தூளாக்கினான். [பிரான்] - அவனுக்கு பாரார்த்யமாக வ்யாபரிக்கையேஸ்வரூபம், தாழ்த்தது ஔபாதிகமென்றிருக்கிறாள். [சூடிய தண்டுளபமுண்ட] - ஸாரத்யம்பண்ணும்போது வைத்த வளையத்திலே மதுபாநம்பண்ணின: அவதாரங்களில் ஏதேனுமொன்றாலே வளையம்வைக்கிலும் அவ்வவஸ்தையை ப்ராபித்து அநுகூலிக்கிறது, திருத்துழாயாகக்கடவது. [தூமதுவாய்கள்கொண்டே]- அப்மதுவைப் பாநம்பண்ணுகையாலே, மாதுமாய்த் தேனையுடைய வாய்களோடேகூட; இனிதானபேச்சையுடைத்தாயிருக்கை என்றுமாம், வாய்-வார்த்தை; "ஊருஷாவீதா" என்றாற்போலே. என்னையும் மதுபாநம்பண்ணுவித்து நீங்களும் மதுபாநம் பண்ணுங்கோள்.

ஈடு.—மூன்றாம்பாட்டு. சிலவண்டுகளைக்குறித்து, அவனுக்கு என்ஊமையை அறிவித்துவந்து என்தலைமேலே வர்த்தியுங்கோள் என்கிறாள்.

மூன்றாம்பாட்டு.—ஓடிவந்து இத்யாதி. "வண்டினங்காள்! பிரான்சூடியதண்டுளபமுண்ட தூமதுவாய்கள்கொண்டு - ஓடிவந்தென்குழல்மேலொளிமாமலரூதீரோ" என்கிறபதங்களைக் கடாக்ஷித்து த்வதாரிகை - சிலவண்டுகளை இத்யாதி.

[ஓடிவந்து] - கடுக வரவேணும். என்னளவுகண்டுபோகிற உங்களுக்கு, நானுள்ளபோதே வந்துஉதவவேணும். அன்றிக்கே, அவற்றையநுபவிக்கையில் உண்டான த்வரையாலேயாதல், சடக்கெனவரவேணுமென்கிறாள். [என்குழல்மேல்] - பேரளவுடையார்படும் ஈடுபாட்டைக் கண்டு, தன்குழல்வீறு தானறிந்திருக்குமே. "சூடியதண்ணளப முண்ட தூமதுவாய்கள்கொண்டு ஓடிவந்தென்குழல்மேல் ஒளிமாமலரூதிரோ" என்பானேன், கார்யஞ்செய்து சமைந்தால் கைக்கூலி கொடுப்பாரைப்போலே? என்னில்; இவற்றுக்கு இவள்குழலில் விஷயமுண்டாகவேணுமே. இப்போது, மது-மாறிச்சருகாயிறே கிடக்கிறது; இவைமீண்டாலிறே இத்தலையில்செவ்விபிறப்பது. [என்குழல்மேல்] - அவனுக்குத் தூதுபோய்வந்தாரிற்காட்டில் இவளுக்குத் தூதுபோனார்க்குஉண்டானதன்னேற்றம் இருக்கிறபடி. அங்கு மஹாராஜருடைய மது-வநமிறேயழிந்தது; இங்கு அவன் காவற்காட்டை உங்களுக்குத் தருகிறேனேன்கிறாள். * அளகாடவியிறே. தலையான பரிசிலிறே இதுதான் ஊயி முகப்ரப்ருதிகளுடைய விலக்குகையும் இல்லையிறே யிங்கு சாந்தனுன திருவடியிறே "ஸஹஸாவாரயிஷ்யாமி யுஷ்மாகம்பரிபந்திந:" (அஹமாவாரயிஷ்யாமியுஷ்மாகம்பரிபந்திந:) என்றான். பிராட்டியைக்கண்டு உவந்தமையறியாதேயிருக்கச்செய்தேயும் மது-வநம் அழிந்தமையைக்கண்டு, மஹாராஜருடைய வால் ருஶ்யமூக பர்வதத்திலே யறைந்ததிறே. "நம்மோடு பண்ணிப்போன ஸமயம் அதிக்ரமித்திருக்கச்செய்தேயும் மது-வநமழிக்கும்போது பிராட்டியைக் கண்டார்களாகவேணுமிறே." "பிராட்டியைக்கண்டஹர்ஷம், நடுவில் மது-வநமன்றாகில் ராஜபுத்ரர்கள் முதுகோடேபோம்" என்று பட்டருளிச்செய்வர். [என்குழல்மேலொளிமாமலரூதிரோ] - என்றும் இவள்குழலில் மது-பாநம் பண்ணப்பெறுவது வண்டுகளேயாகாதே. *தூவியம்புள்ளுடைத் தெய்வ வண்டாதல்இனவயாதல். அவனேயோ ஸாமயாபத்திதரவல்லான், நானும் உங்களுக்கு அவனோட்டை ஸாமயாபத்தியைத்தருகிறே

"விரைந்தோடிவந்தே" என்கிறவடத்தல் மூந்தினவர்த்தத்தை அநுபாவதித்துக்கொண்டு. உங்களுக்குப்பிரிந்திருக்கப்போகாதென்று ஆர்த்தாந்தரம - என்னளவு இத்யாதி வாக்யத்வயத்தாலே. அவற்றை - அளகங்களை. "என்குழல்மேல" என்று - தன்குழலைத் தானே கொண்டாடலாமோ? என்ன - பேரளவு இத்யாதி. அளவுடையாரென்றது - ஈஶ்வரனை. "தோகைமாமயிலார்கள்" என்று கொண்டாடுமென்றபடி. விஷயம் - மது. தத்தலையிலென்றது - சாடு. "என்குழல்மேலொளிமாமலரூதிரோ" என்றதால் பலிதார்த்தம் - அவனுக்கு இத்யாதி. அந்த ஏற்றமேதன்னை - அங்கு இத்யாதி. இது காடோ? என்ன - அளக இத்யாதி. அவனுக்குத்தூதுபோய்வந்தார்க்குக் கொடுத்த வ்யவஹாரத்தைப்பற்ற இது ஶ்லாக்யமென்னுமத்தை ரஸோக்தியாக அருளிச்செய்கிறார் - தலையான இத்யாதி. பரிசில் - உபஹாரம். இன்னமொருவழியாலே யதிற்காட்டில் இதுக்குண்டான ஏற்றமருளிச்செய்கிறார் - ஊயிமுக இத்யாதி. அதாவது மஹாராஜருடைய காவற்காட்டைப் புகுகிறதுக்கு ப்ரதிபந்தகமுண்டு; இங்குஅதில்லையென்றபடி. அங்குவிலக்கினாருண்டோ? என்ன - சாந்தனுன இத்யாதி. "ஸர்வே ஊ்ம்ஸ்யாமஸம்யம் மது-ஸேவததம் நரா: । ஸஹஸாவாரயிஷ்யாமி யுஷ்மாகம் பரிபந்திந:" இதி மது-வநே வாநராந்ப்ரதிஹநுமான்(சுஉ-கஉ). ப்ராஸங்கிகம் 'பிராட்டியை' என்றுதொடங்கி, 'பட்டர் அருளிச்செய்வர்' என்னுமளவும். அறியாதிருக்கச்செய்தே, அறைகிறதுக்கு அடி ஏதென்ன - நம்மோடு இத்யாதி. ரஸோக்தி - என்றும் இத்யாதி. வண்டுகளேயோ மது-பானம்பண்ணுவது? என்ன - தூவியம் இத்யாதி. "தலையானபரிசிலிறே" என்றத்தைவிவரிக்கிறார் - அவனேயோ இத்யாதிவாக்யத்ரயத்தாலே: ஸாம்யாபத்தியென்றது - ஸமாநபோகத்வம். அதாவது - அவனுக்குபோக்யமானகுழலை யுங்களுக்கும் அநுபவிப்பிக்கிறேனென்றபடி "ஸோஶ்நுதே" என்கிறஶ்ருதிக்கு - இவ்விடத்திலே, போக்த்ருஸாம்யம் விவக்ஷிதம். ஸப்

ணேன்கிருள். ''ஸோம்நுதே'' என்கிறபடியே, உங்களையும் அவனையும் ஒருகலத்திலே யூட்டுகிறேனென்கிருள். தலையான ஊணிறே. [என்குழல்மேலொளிமாமலரூதிரோ]-உங்கள் வரவாலே தளிர்த்திருக்கிற என்னுடையகுழலில், ஒளியையுடைத்தாய் ஶ்லாக்யமான மலரில் மதுவைப் பாநம்பண்ணீரோ? [ஊதீரோ]-மதுவின் ஸம்ருத்தியாலே,கிண்ணகத்தில் இழிவாரைப்போலே தனித்து இழியமாட்டாதே நின்றுபறக்கிறபடி. உங்கள் கார்யமுமாய் பரரக்ஷணமுமானால் ஆறியிருக்கிறதேன்? என்கை. [கூடியவண்டினங்காள்] - மஹாராஜரைப்போலே படைதிரட்டவேண்டாவிறே யுங்களுக்கு. என்னுடைய ரக்ஷணத்திலே யொருப்பட்டு முன்பே திரண்டிருக்கப்பெற்றதிறே. இளையபெருமாள் கிஷ்கிந்தாத்வாரத்திலே சென்று குணகீர்த்தனம்பண்ணின பின்பிறே படைதிரட்டிற்று! [குருநாடுடைஐவர்கட்காய்] - பிறர்மஹிஷிகள் குழல்பேணுமையைக்கண்டு வருந்துமவன்கிடீர்; ''மைத்துனன்மார் காதலியை மயிர்முடிப்பித்தவர்களையே மன்னராக்கி'' என்கிறபடியே. ராஜ்யமுடையார் பாண்டவர்களே; நாம் அவர்களுக்கு ஏவல்தேவை செய்துநிற்கிரோமென்றுயிற்று அவன்நினைத்திருப்பது. [குருநாடுடைஐவர்] - துர்யோதநாதிகள் கிடந்தானை கண்டேறினவோபாதியிறே. ''நாடுடைமன்னர்'' என்கிறபடியே ராஜ்யம் அவர்களதே. ''துர்யோதநாதிகள் ராஜ்யம்பண்ணுகை வல்லடி'' என்றிருக்கும் பகவதபிப்ராயத்தாலே சொல்லுகிருர்; அவன்நினைவேயிறே இவர்க்கும்நினைவு. [ஆடியமாநெடுந்தேர்] - மநோஹரமாம்படி ஸஞ்சரியாநின்ற குதிரைபூண்ட பெருந்தேரை உபகரணமாகக்கொண்டு. ''உஹ

தார்த்தம் - உங்கள் இத்யாதி. ''ஊதீரோ'' என்றதுக்கு பலிதார்த்தம் - பாநம்பண்ணீரோ என்றது. சாப்தமானவர்த்தம் - மதுவின் இத்யாதி. ''ஊதீரோ'' என்கிறஸ்வரத்துக்குபாவம் - உங்கள்கார்யமும் இத்யாதி. உங்கள்கார்யமென்றது - அங்கேபோய் அறிவிக்கையை. பரரக்ஷணமென்றது-மது பாநம் பண்ணுகையை. ''கூடிய'' என்றதுக்குபாவம் - மஹாராஜரை இத்யாதிவாக்யத்வயம். படைதிரட்டுமிடத்தில் பின்னையுமொரு விளம்பமுண்டென்னுமத்தை ரஸோக்தியாலே அருளிச்செய்கிருர் - இளையபெருமாள் இத்யாதி. 'குணகீர்த்தநம்' அவருடையகுணங்களைச்சொல்லிப் புகழுகை என்ற ரஸோக்தி; சிறுநாமெழுலிகொள்ளுகையென்று வாஸ்தவமான வர்த்தம். நாங்கள் அறிவித்தால் வருமோ? என்ன - பிறர்மஹிஷிகள் இத்யாதி. அதாவது - தன்மஹிஷியிடத்தில் சொல்லவேண்டாவிறேயென்றபடி. அப்படிவருந்திருமோ? என்ன - மைத்துனன்மார இத்யாதி. மைத்துனன்மாரான பாண்டவர்களுக்கு அபிமதையான த்ரௌபதியைக்குழல்முடிப்பித்து, அந்தப்பாண்டவர்களையே ராஜாக்களாக்கி என்றபடி. பெரியாழ்வார் திருமொழி, நாலாம்பத்து, ஒன்பதாந்திருமொழி, ஆரும் பாட்டு. ''நாடுடையவர்'' என்றும், ''குருநாடுடையவர்'' என்றும் பதத்தைப்பிரித்து ப்ரதமம், ''நாடுடையவர்'' என்றதுக்கர்த்தம் அருளிச்செய்வதாகத் திருவுள்ளம்பற்றி, அவர்களோ நாடுடையவர்கள்? க்ருஷ்ணனன்றோ? என்ன; இதுக்கு உத்தரம் - ராஜ்யமுடையார் இத்யாதி. குருநாடுடையவர்கள் துர்யோதநாதிகளன்றோ? என்ன - துர்யோதநாதிகள் இத்யாதி. 'கிடந்தானை' இத்யாதிக்குக் கருத்து - பாகன் அநுமதியின்றியிலே கிடந்த ஆனையிலே தானேறினால் அதினாலே தள்ளுண்ணுமாபோலே, அவர்களும் அமர்யாதமாக ராஜ்யம்பண்ணுகையாலே ப்ரஷ்டராவர்களென்று. அவர்கள் ''எங்களது'' என்றுநினைத்திருக்க, ''கிடந்தானைகண்டேறினவோபாதி'' என்கிறது எத்தாலே? என்ன - நாடுடை இத்யாதி. செய்துதலைக்கட்டவல்ல ஈஶ்வரன்படி நினைத்திருந்தாலும், அவர்களானாதிற்க இவர்க்குஇப்படி யருளிச்செய்யலாமோ? என்ன-அவன்நினைவே இத்யாதி. சஞ்சரிக்கிறவென்றதே, ''ஆடிய'' என்றதுக்கு வாஸனை - மநோஹரம் இத்யாதி. ''மா'' என்று - குதிரை: நெடுமை - பெருமை. ''நெடுந்தேர்'' என்றதுக்கு ப்ரமாணம் மஹாத் இத்யாதி. '[illegible]
[illegible]

திவ்யந்தநேஸ்த்திதௌ" (மஹதிஸ்யந்தநேஸ்த்திதௌ) என்னும்படியிருக்கிற தேரைக் கொண்டு. [படைநீறெழச்செற்றபிரான்] - ஆயுதமெடாமைக்கு அநுமதிபண்ணுகையாலே, தேர்க்காலாலே ஸேனையைத் துகளாக்கினன். [செற்றபிரான்] - தன்னையழிய மாறியும் பரோபகாரம் பண்ணுகையே ஸ்வபாவமாகவுடையவன். தாழ்த்தது ஔபாதிகமென்றிருக்கிறாள். [செற்றபிரான்] - அர்ஜுநாதிகளும் ஶஸ்த்ரங்களோபாதியிறே; "மயைவைதே நிஹதா: பூர்வமேவ" (மயைவைதேநிஹதா:பூர்வமேவ) என்று தானே யருளிச்செய்தானிறே. [சூடியதண்ணளபமுண்ட] - ஸாரத்யம்பண்ணுகிறபோது வைத்த வளையத்திலே மதுபாநம்பண்ணுகிற வண்டுகள். அவதாரங்களில் ஏதேனுமொன்றுலே வளையம் வைக்கிலும், அவ்வவஸ்த்தையை ப்ராபித்தநுகூலிக்கிறது திருத்துழாயாகக்கடவது. [தூமது வாய்கள்கொண்டே] - அவ்வளையத்தில் மதுவைப்பாநம்பண்ணிசுத்தமாய்இனிதான வாய்களைக்கொண்டு; இனிதானபேச்சையுடைத்தாயிருக்கையென்றுமாம். [தூமதுவாய்கள்கொண்டு -ஓடிவந்தென்குழல்மேலொளிமாமலருதீரோ] - "வாஹிவாத" (வாஹிவாத) - சாக்ஷாத்ஸங்கமல்லாமையாலே நீ பெற்றபேறு என்? "த்வயிமேகாத்ர ஸம்ஸ்பர்ஶ:" (த்வயிமேகாத்ர ஸம்ஸ்பர்ஶ:) - நம்முடைய கரணங்களுக்குஸ்பர்ஶம்உன்பக்கலிலேயாயிற்றே. நமக்குத் தொட்டாரைத் தொட்டாயிற்றே. "சந்த்ரே த்ருஷ்டிஸமாகம:" (சந்த்ரேத்ருஷ்டிஸமாகம:) சேர்ஶநத்தோடொத்ததிறே எனக்கு ஸ்பர்ஶமும். அற்றதுபோருந்தும்படி வார்த்தைசொல்ல

தா:" இதி கீதாஸப்ததமே(கஉ). தேரைக்கொண்டு நிரூபிக்கிறதென்? திருவாழியில்லையோ? என்ன- ஆயுதம் இத்யாதி. "பிரான்" என்றதுக்கர்த்தம் - தன்னை இத்யாதி. தன்னையழிய மாறுகையாவது - தன்னுடைய ஸர்வாதிகத்வத்தையழித்து ஸாரதியாய் நிற்கை. "செற்றபிரான்" என்று - இத்தையே நிரூபகமாகச்சொல்லுகையாலே 'ஸ்வபாவமாகவுடையவன்' என்கிறார். இப்போதுவாராதிருக்க, "பிரான்" என்கிறதென்? என்ன - தாழ்த்தது இத்யாதி. இவனோசெற்றான், அர்ஜுநாதிகளன்றோ? என்ன - அர்ஜுநாதிகளும் இத்யாதி. இவனேசெற்றானென்னுமதுக்கும், அவர்கள் சஸ்த்ரங்களோபாதி யென்னுமதுக்கும் ப்ரமாணம்-மயைவைதே இத்யாதி. "தஸ்மாத்த்வமுத்திஷ்ட யஶோலபஸ்வ ஜித்வா ஶத்ரூந்புங்க்ஷ்வராஜ்யம் ஸம்ருத்தம் । மயைவைதே நிஹதா: பூர்வமேவ நிமித்தமாத்ரம் பவ ஸவ்யஸாசிந்" இதி கீதாஸப்தமே[கக]. "செற்றபிரான் சூடியதண்ணளபமுண்ட" என்கையாலே பலித்தபாவம் - ஸாரத்யம் இத்யாதி. க்ருஷ்ணாவதாரத்தில் திருத்துழாயுண்டோ? என்ன-அவதாரங்களில் இத்யாதி. "சூடியதண்ணளபமுண்ட தூமதுவாய்கள்கொண்டு" என்றதுக்கு இரண்டர்த்தம்; அதில் முந்தினது - அவ்வளையத்தில் இத்யாதி. திருத்துழாய்மதுவைப் பாநம் பண்ணுகையாலே பரிசுத்தமாய் இனிதானவாய்களைக்கொண்டென்றபடி; இந்த அர்த்தத்துக்கு, "உண்ட" என்றது - உண்கையாலேயென்றபடி. "மது" என்றது - இனிதானவென்றபடி. இரண்டாமர்த்தம் - இனிதானபேச்சை இத்யாதி. அதாவது - திருத்துழாய்மதுவைப் பாநம்பண்ணி பரிசுத்தமாய், இனிதாயிருப்பனவான - அவன்வரவுக்கு சூசகமான - வார்த்தைகளைக்கொண்டென்றபடி; இந்தபக்ஷத்தில், "வாய்கள்" என்று - வாய்களிலிருக்கிற வார்த்தைகளை லக்ஷிக்கிறது. முந்தினவர்த்தத்துக்கு ஸம்வாதம் - வாஹி இத்யாதி. "வாத" என்றதுக்குபாவம்-சாக்ஷாத்ஸங்கம் இத்யாதி. சாக்ஷாத்ஸங்கமல்லாமையாலே நிர்ப்பயமாகவேண்டினவிடங்களிலே போகலமென்றபடி. "த்வயிமேகாத்ர ஸம்ஸ்பர்ஶ:" என்கையாலே, பிராட்டியை ஸாக்ஷாத் அநுபவிக்கப்பெறுமையால் வந்த இழவுதோற்றுகிறதென்கிறார் - நம்முடைய இத்யாதி வாக்யத்வயத்தாலே. "வாத" என்று - வாயுவை ஸம்போதித்துவைத்து, "சந்த்ரேத்ருஷ்டிஸமாகம:" என்பானென்? என்னில் - சேர்ஶநத்தோடு இத்யாதி. அதாவது - சந்த்ரதர்ஶநம் தாரகமாமோபாதி, உன்னுடைய ஸ்பர்ஶமும் தாரகமென்கைக்காக வென்ற

வல்ல வாயைக்கொண்டு. "த்ருஷ்டாஸீதா" (த்ருஷ்டாஸீதா) என்றாற்போலே. என்னையும் மது பாநம்பண்ணுவித்து நீங்களும் மதுபாநம்பண்ணுங்கோள்.

நான்காம் பாட்டு.

தூமதுவாய்கள்கொண்டுவந்து என்முல்லைகள்மேல்தும்பிகாள் !
பூமதுவுண்ணச்செல்லில் வினையேனைப்போய்செய்தகன்ற
மாமதுவார்தண்டுழாய்முடி வானவர்கோனைக்கண்டு
யாமிதுவோதக்கவாறு? என்னவேண்டுங்கண்டீர்நுங்கட்கே.

ஆ.—(தூமதுவாய்கள்) - நீங்கள் பூமதுவுண்ணச் செல்லில், ஹாக்யஹீனையான எனக்கு "ஸம்ஶ்லேஷம்" என்றோர் இந்த்ரஜாலத்தைக்காட்டி, என்னை யகன்று திருநாட்டிலே திருமாமணிமண்டபத்திலே, * அயர்வறுமமரர்கள் திவ்யபரிஷத்திலே, * மதுவார்த்தாஸ்யமுபாஸதராயிருந்த அவர்களாலே அலங்க்ருதனாயிருந்த அவனைக் கண்டு, அவன் திருக்குழலில் திருத்துழாயின் மது வெள்ளத்தை உங்கள் தூமதுவாய்கள் கொண்டுபருகிப்பின்னை 'உம்மையொருத்தி இன்று ஆசைப்பட்டுக்கூப்பிடாநிற்க, அவளை நினையாதிருக்குமிதுவோ உம்முடைய க்ருபையாவது?' என்று அவர் ஸந்நிதியிலே சொல்ல வேணுமென்று, தனக்குப் பரமஸஹாநத்துக்களாய்த் தன் முல்லைகளிலே வந்திருந்த தும்பிகளை நோக்கிச்சொல்லுகிறாள்.

ஓ.—நாலாம்பாட்டில், என்னை நோவுபடுத்திப்போந்து எட்டாநிலத்திலே ஓலக்கமிருந்து விளையம்வைத்து போதுபோக்கி ஓரஞ்செய்கையோ நாம் தக்கோரானபடியென்று, திருநாட்டிலேசென்று எம்பெருமானுக்குச் சொல்லவேணுமென்று சில தும்பிகளைக்குறித்து அருளிச்செய்கிறாள்.

[தூமதுவென்று தொடங்கி] - நான் வளர்க்கிற முல்லைகளிலே வர்த்திக்கிற தும்பிகாள் ! உங்களுடைய இனிய பேச்சுக்களோடே அங்கேசென்று. [பூமதுவுண்ணச்செல்லில்]-பூக்களில் மதுபாநம் பண்ணப்போகில். [வினையேனையென்று தொடங்கி]- என்னோடே ஸ்வப்நகல்பமான ஸம்ஶ்லேஷத்தைப்பண்ணி விஶ்லேஷித்து, அத்தாலே க்ருதக்ருத்யனாய், திருக்குழலில் செவ்வியாலே மிகவும் மதுதாரைகள் பாயாநின்றுள்ள திருத்துழாயாலே அலங்க்ருதமான முடியையுடைய * அயர்வறும்மர்கள் தன்னுடைய

படி. அன்றிக்கே, 'ஸ்பர்ஶத்தோ டொத்ததிறே யெனக்கு தர்ஶநமும்' என்றுபாடமாகில் - அவளோட்டை ஸ்பர்ஶம் உன்பக்கலிலே ஸத்வாரகமானாற்போலே. தர்ஶநமும் எனக்கு ஸத்வாரகமாயிற்றென்று வாயுவை த்ருஷ்டாந்தீகரிக்கிறது. த்விதீயார்த்தத்தில், வாய்க்குத்தூய்மையேதென்ன - அர்றது இத்யாதிவாக்யத்வயத்தாலே: "ஷஷ்டோ வி[illegible]ஸோ வதே" என்ற த்ரௌபதிவார்த்தையாலே மாம்பழமானது கொம்பிலேயொட்டிற்றிறே. இந்த த்விதீயார்த்தத்தில், "தண்டுளபமுண்ட" என்றத்தோடு தட்டுப்படுகையாலே, தத்பரிஹாரார்த்தமாக 'வார்த்தைசொல்லவல்லவாயைக்கொண்டு' என்கிறார். 'கூடியவண்டினங்காள் குருநாடுடை' என்றுதொடங்கி, 'வாய்கள்கொண்டு - ஓடிவந்தென் குழல்மேலொளிமாமலரூதீரோ' இத்யந்வயம்.
(௩)

அழகையும் குணங்களையும் கொண்டாட இருக்குமவனைக்கண்டு. போகத்தில் அபர்யாப்தியாலே வினையேன் என்கிறாள். பொய் - ஸ்நேஹிப்பாரைப்போலேகாட்டி வஞ்சிக்கை.

ப.—அநந்தரம், ஸூரிபோக்யமான வைலக்ஷண்யத்தையுடையவனைக்கண்டு, உம்முடையதகவுடைமையிதுவோ? என்று சொல்லவேணும் என்று சிலதும்பிகளைக் குறித்துச் சொல்லுகிறாள்.

என் - நான்வளர்த்துப்போருகிற, முல்லைகள் - முல்லைகளின், மேல் - மேலே வர்த்திக்கிற, தும்பிகாள் - தும்பிகாள்! தூ-தூய, மது - மதுவை நிரூபகமாகவுடைத்தான, வாய்கள் - வாய்களை, கொண்டு - கொண்டு, வந்து-வந்து, பூ-(அம்முல்லைகளில்) பூவின், மது-மதுவை, உண்ண-உண்ண, செல்லில் - செல்ல நினைத்திகோளாகில், (அவை வாடிக்கிடக்கிற அவஸ்த்தையிற்செல்லாதே), வினையேனை - விஸ்லேஷஹேதுவான பாபத்தையுடையேனான என்னை, பொய் - க்ருத்ரிமஸம்ஸ்லேஷத்தை, செய்து - பண்ணி, அகன்ற - அகன்றவனாய், (இப்பிரிவுதானே செந்தலிப்புக்கு உறுப்பென்னலாம்படி), மா-பெருவெள்ளமான, மது-மது, வார் - ஒழுகுகிற, தண்-குளிர்ந்த, துழாய் - திருத்துழாயாலே யலங்க்ருதமான, முடி - திருமுடியையுடையனாய்க்கொண்டு, வானவர் - நித்யஸூரிகளுக்கு, கோனை-நிர்வாஹகனாயிருக்கிறவனை, கண்டு-கண்டு, நுங்கட்கு-(இவ்வவஸ்த்தையிலே ஸந்நிஹிதங்களான) உங்களுக்கு, (அவனுடைய மேன்மைக்குத் தகுதியாம்படி ஸோபசாரமாக), யாம்-நாம், இதுவோ - இம்மேன்மைகொண்டாடி யிருக்குமதுவோ? தக்கவாறு - தகவுடையோமானபடி? என்னவேண்டுங்கண்டீர் - என்று சொல்லவேணுங் காணுங்கோள்! அப்போதிறே, என்னோபாதி இம்முல்லையும் செந்தலித்து மது பானம் பண்ணலாவது என்றுகருத்து.

இ.—நாலாம்பாட்டில், என்னை நோவுபடுத்திப்போய் எட்டாத நிலத்திலே ஓலக்கமிருக்கை தக்கோர்மையோ? என்று திருநாட்டிலேசென்று சொல்லுங்கோள்! என்று சில தும்பிகளைக் குறித்துச் சொல்லுகிறாள்.

[என் முல்லைகள்மேல் தும்பிகாள் - தூமதுவாய்கள் கொண்டுவந்து] - நான் வளர்க்கிற முல்லைகளின்மேலே வர்த்திக்கிற தும்பிகாள்! இவள் உறவுகையாலே, போனி நீர்வார்ப்பாரில்லாமையாலே உறவின முல்லைகளின் மேலே பட்டினிவிடுகிறவையிறே; என்னோடொக்க நோவுபடப் பிறந்த நீங்கள். என் பரிஸரத்தில் முல்லைகள் என்றுமாம். இவள் வர்த்திக்கிற எல்லையடங்கச் சருகாயிறே கிடக்கிறது. மதுக்கமாய் இனிதான பேச்சுக்களைக்கொண்டு சென்று: வாவு செலவைக் காட்டுகிறது. [பூமதுவுண்ணச் செல்வில்] - மதுவ்ரதங்களாகையாலே பூவுள்ளவிடந்தேடி மதுபானம் பண்ணப்போகக்கடவீர்கோளிறே; மதுவுள்ளது அங்கேயாகையாலே, பூக்களில் மதுபானம் பண்ணப்போகில். [வினையேனைப் பொய்செய்தகன்ற] - "பிரியேன், பிரியிற்றரியேன்" என்ற பொய்யை மெய் என்று ப்ரமிக்கும்படியான பாபத்தைப் பண்ணின என்னை, "ராமோ த்விர்நாபி பாஷதே" என்னுமவன் இரண்டுவார்த்தை சொல்லும்படியான பாபத்தைப்பண்ணினேன். [பொய்செய்து] - இந்திரஜாலமென்றும், கனவென்றும், கலவியென்றும் பர்யாயமிறே. [அகன்ற] - தன்பேறாகக் கலந்து பொகட்டுக் கைகழியப் போனபடி. [மாமது வார் தண்டுழாய்முடி] - திருக்குழலில் செவ்வியாலே மிகவும் மதுதாரையை

யுடைத்தான திருத்துழாயாலே அலங்க்ருதமான திருமுடியையுடையவன். [அகன்ற மாமதுவார் தண்டுழாய்முடி] - இவள் பரிஸரமடங்கச் சருகாய்க்கிடக்கப் பிரிவே நோக்க அவன் வைத்த வளையம் மது சொரிகிறதிறே. [வானவர்கோனைக் கண்டு]- அவ்வழகை நித்யஸூரிகளை அநுபவிப்பித்துக் கொண்டிருக்கிறவனை. புதியாரை நோவுபடவிட்டு, பழையார்க்கு ஓலக்கங்கொடுத்துக்கொண்டு இராநின்றான்; “க்ஷயிகிஹிஸ்தாவஸெ” என்கிறவிது உக்திமாத்ரமாய் விட்டதிறே. [கண்டு] - நீங்கள் முன்பே காணப்பெறுகிறீர்களிறே. [யாமிதுவோதக்கவாறு] - நாம் தக்கோரானபடி இதுவோ? என்னுங்கோள். ஸ்த்ரீவயம் பண்ணிப்போந்து, பிரிவறியாத அந்தரங்கர்க்கு ஓலக்கங் கொடுத்து ஆந்ருஶம்ஸ்யங்கொண்டாடியிருக்கும்அதுவோ தக்கோர்மை! [என்னவேண்டுங்கண்டீர்]- அப்பேரோலக்கத்திலே பெரிய மதிப்பனைக்கண்டுவைத்து,“இப்படி சொல்லவேணுமோ?” என்றே இவ்வார்த்தை இத்தனையும் சொல்லவேணும். “வாவாயஃபுஃவோவநுஹி”. [தூங்கட்கே] - கலந்துவைத்துப் பொகட்டுப்போனவனிற் காட்டில், ஆற்றாமையிலே முகங்காட்டின உங்களுக்கு இத்தனையும் செய்யவேண்டாவோ?

ஈடு.—நாலாம்பாட்டு. என்னைநோவுபடுத்திப்போய் எட்டாநிலத்திலே ஓலக்கமிருக்கை தக்கோர்மையோ? என்று திருநாட்டிலேசென்று சொல்லுங்கோள்! என்றுசில தும்பிகளைக்குறித்துச்சொல்லுகிறாள்.

[தூமதுவாய்கள்கொண்டுவந்து] - பரிசுத்தமாய் இனிதானபேச்சை யுடைய வாயைக்கொண்டு சென்று. வந்தென்றது - சென்றென்றபடி. ஆர்த்தர்க்கு உஜ்ஜீவநஹேது வாய் இனிதுமான பேச்சைக்கொண்டு. [என்முல்லைகள்மேல் தும்பிகாள்] - உடன்கேடரா யொக்கப் பட்டினிவிட்டுக்கிடப்பாரைப் போலேயிறே நீங்கள் கிடக்கிறது. இவள்குழலில் பூவோடொக்க, உத்யாநத்திலுள்ள பூக்களும் சருகாயிறேகிடப்பது; “ஶுஷ்யவ்ருக்ஷாஃபரிம்லாநாஃ (அபிவ்ருக்ஷாஃபரிம்லாநாஃ) என்னுமாபோலே. [பூமதுவுண்ணச்செல்லில்] - மதுவ்ரதங்களாகையாலே பூவுள்ளவிடந்தேடி மதுபாநம்பண்ணப்போகக்கடவிகோளிறே. இவள்பரிஸரத்தி லுள்ளவையிறே உருவிக்கிடப்பன; அங்குள்ளவையெல்லாம் செவ்வி பெற்றிருக்குமிறே; * மாமதுவார் தண்டுழாய்முடி வானவர்கோனிறே. அவர்களில் இவ

நாலாம்பாட்டு.—தூமது இத்யாதி. “தும்பிகாள்! வினையேனைப்பொய்செய்தகன்ற - வானவர்கோனைக் கண்டுயாமிதுவோதக்கவாறென்னவேண்டுங்கண்டீர்” என்கிறபதங்களைக் கடாக்ஷித்தவதாரிகை - என்னை இத்யாதி. தக்கோர்மை - தயை. தும்பியாவது - ப்ருங்கஜாதியில்அவாந்தரம்.

* தூய்மையும் இனிமையும் வாய்களுக்கில்லாமையாலே ‘பேச்சையுடைய’ என்று அர்த்தாத் ஸித்தம். “பூமதுவுண்ணச்செல்லில்” என்றிருக்கையாலே ‘வாயைக்கொண்டுசென்று’ என்றது. “இதுவோ தக்கவாறு?” என்றதுக்கநுகுணமாக “வாய்” என்றதுக்கு - பேச்சாக அர்த்தாந்தரமாதல்; ‘பரிசுத்தமாய்” இத்யாதிவாச்யவிவரணமாதல்; அன்றிக்கே, வார்த்தைக்குத் தூய்மையாவதேதென்ன என்கிற சங்கையிலேயாதல் - ஆர்த்தர்க்கு இத்யாதி. முல்லைகள்மேல் தும்பிகாளென்றே, “என் முல்லைகள்மேல் தும்பிகாள்” என்றுவிசேஷிக்கிறதுக்குபாவம் - உடன்கேடராய் இத்யாதி. ஒக்கப் பட்டினிவிடுவானென்? இவள்முல்லையில் மதுவில்லையோ? என்ன - இவள்குழலில் இத்யாதி. உத்யாநத்திலுள்ள பூக்களென்றது - இவள் பரிசரத்திலுண்டானதோப்பில் பூக்களென்றபடி. இவள் பூ சருகானால் உத்யாநத்திற் பூ சருகாகவேணுமோ? என்ன - அபிவ்ருக்ஷா இத்யாதி. மதுவுண்ணச் செல்லவேணுமோ? என்ன - மதுவ்ரதங்கள் இத்யாதி. அவனுக்கும் விரஹதுஃகமுண்டாகையாலே அங்கு மதுவற்றியிராதோ? என்ன - இவள் பரிசரத்தில் இத்யாதி. “செவ்விபெற்றிருக்கும்” என்

னுக்கு வாசி, கவித்தமுடியும்இட்டமாலையுமே யிறே. இங்குள்ள வண்டுகள்போலே பட்டினிகிடக்க வேண்டாவிறே அங்குள்ளார்க்கு. [மாமதுவார்தண்டுழாய்] - விரஹத்திலும் ஊற்றுமாறுதவிடங்காணும் அவ்விடம். [பூமதுவுண்ணச்செல்லில்] - இவள், தன்குழலிற் பூவும்வாடி மதுவும்வற்றினபின்பு இனி இவ்விபூதியிலுண்டாகமாட்டாதேன்றிருக்கிருள்; இனி விபூதிமான்பக்கலிலே யுண்டாகில் உண்டாமத்தனை யென்றிருக்கிருள். [வினையேனை] - அவன் என்பக்கற் பேசின பேச்சுக்களையும் வ்யாமோஹத்தையும் "மெய்" என்றிருக்கும்படியான பாபத்தைப் பண்ணின என்னை. [வினையேனைப்போய்செய்து] - "கடுகப்பிரியில்இடிவிழுந்தாற்போலே இவள்முடியும்" என்றுபார்த்து, "நின்னைப்பிரியேன், பிரியிலுமாற்றேன்" என்றுற்போலேயிருக்க, அவன் பிரிவையுணர்த்திஞன்; நான் அதுக்குத் தாத்பர்யம் அறியாமைகெட்டேன். அறிந்தேனுகில், போகாதபடி காற்கட்டலாயிற்றுக் கிடீர்! [போய்செய்து] - ஸம்ஶ்லேஷத்தில் அபர்யாப்தியிருக்கிறபடி. சிரகாலம்ஜீவிக்கச் செய்தேயும் "ஒருஸ்வப்நமாய்ப்போயிற்று" என்னக்கடவர்களாயிற்று, விஶ்லேஷத்தோடே வ்யாப்தமாகையாலே. கனவென்றும், இந்திரஜாலமேன்றும், பொய்யென்றும் - அபர்யாப்தமான ஹோகத்தைச் சொல்லக்கடவது. [போய்செய்தகன்ற] - அகலுகைக்கு இட்டவழியிருக்கிறபடி. "கலக்க" என்று பேரையிட்டு, பர்யாப்தமாகக்கலவாதே வஞ்சித்து அகன்ற. [மாமதுவார்தண்டுழாய்முடி] - இங்குள்ளதும் அங்கேயாகையாலே மயா இரட்டித்திருக்குமிறே. தலையானமதுவுமே அதுதான். ஸம்ஶ்லேஷவிஶ்லேஷங்களில் ஒருபடிப்பட்டிருக்கும் அவனைக்கண்டு. [வானவர்கோனைக்கண்டு] - தந்தாமைப்பேணுவார்க்கு உடம்புகொடுத்

றதுக்குநிமாமகமேதென்ன - மாமதுவார் இத்யாதி: "தண்டுழாய்முடி" என்றவிசேஷணத்துக்கு பாவம் - அவர்களில் இத்யாதி. அதாவது - முடியுடையவராலும், திருத்துழாயோடேகூடின முடியில்லையென்றபடி. "மாமதுவார்" இத்யாதியைக்கடாக்ஷித்து, "வானவர்கோன்" என்றதுக்கு பாவம் - இங்குள்ள இத்யாதி. "மா" என்றதுக்குபாவமாதல், "வார்" என்றதுக்குபாவமாதல் - விரஹத்திலும் இத்யாதி. அவன்பக்கல்செல்லுகிறதென்? இவள்பரிசரத்திலில்லையாகிலும் இவ்விபூதியிலில்லையோ? என்ன - இவள்தன் இத்யாதி. பேசினபேச்சுக்களாவன - "பேதைநின்னைப்பிரியேன்" என்கிறபேச்சுக்கள், வ்யாமோஹமாவது - காலைக்கையைப்பிடித்துப் பரிமாறினவ்யாமோஹம். "பேசினபேச்சு" இத்யாதிகளையும், அத்தை "மெய்" என்றிருக்கும்ப்ரகாரத்தையும் விவரியாநின்று கொண்டு, பிரியநினைக்கிறவன் வெறுமனேபோகவொண்ணுதோ? இப்படிசொல்லிப்பிரியவேணுமோ? என்கிறசங்கையையும் பரிஹரிக்கிருர் - கடுகப்பிரியில் இத்யாதி. அறிந்தாற்செய்வது என்? என்ன - அறிந்தேனுகில் இத்யாதி. "பொய்செய்து" என்றதுக்கு - "நின்னைப்பிரியேன்" இத்யாதி மித்யா பாஷணங்களைப்பண்ணி யென்று கீழ் அருளிச்செய்து, அபர்யாப்தமானகலவியாக அர்த்தாந்தரம் - ஸம்ஶ்லேஷத்தில் இத்யாதி. "ஸோ ஆஉஶத த்ராஹஶ்' இத்யாதிப்படியே சிரகாலம்ஸம்ஶ்லேஷித்துப்பிரிந்தாள்" என்றது பிள்ளான்நிர்வாஹமாயிருக்க, அபர்யாப்தமானகலவியென்கிறதென்? என்ன - சிரகாலம் இத்யாதி. "பொய்" என்று - அபர்யாப்தமானகலவியைச்சொல்லுமோ? என்ன - கனவென்றும் இத்யாதி. ஆனல், கலப்பானென்? என்ன - அகலுகைக்கு இத்யாதி. அதாவது - கலவியாலொழியப்பிரிவுகூடாமையாலே, துஃகப்படுத்துகைக்குஇட்டவழியென்றபடி. விவரணம்-கலக்கவென்று இத்யாதி. "மாமது" என்றதுக்குபாவம் - இங்குள்ளதும் இத்யாதி. ரஸோக்தி - தலையான இத்யாதி. இத்தால் பலிதம் - ஸம்ஶ்லேஷவிஶ்லேஷங்களில் இத்யாதி. "வானவர்கோன்" என்கிறவனுடையஹார்த்தபாவம் - தந்தாமை இத்யாதி. தந்தாமைப்பேணுகையாவது - அவன் இங்குவந்தால் ஸ்வாநுபவ விச்சேதம் வருமென்றிருக்கை. விவரணம் - த்வயி இத்யாதி. "யாம்" என்றதுக்கு

திருக்கும் அவனைக்கண்டு. "த்வயி கிஞ்சித் ஸமாபந்நே கிம் கார்யம் ஸீதயா மம" (த்வயி கிஞ்சித்ஸமாபந்நேகிம்கார்யம்ஸீதயாமம) என்றத்தைத்தவிர்ந்து, பழைய உறவுகொண்டாடி யிருக்கிறவனைக் கண்டு. [யாம்] - ஸாபராதனுகையாலே தன்குற்றத்தை யநுஸந்தித்து, ஓலக்கமிருக்கிறனுகப் பராக்கடித்து அநபிபவநீயனுயிருக்கும்; முதன்மைகண்டு கூசாதே நின்று நம்மைக்காணு மென்பது. இப்படி சம்போதித்தவாறே முகம்பார்க்கவேண்டிவரும்; அவன் பார்த்த முகம் மாறுவதற்குமுன்னே, இதுவோ தக்கவாறு என்பது. "ஆந்ருஶம்ஸ்யம் பரோ தர்ம:" (ஆந்ருஶம்ஸ்யம்பரோதர்ம:) என்று சிலர்க்குச்சொல்லிவைத்தீரே. "நைவ தம்ஶாந் ந மஶகாந்" (நைவதம்ஶாந்நமஶகாந்), "ந மாம்ஸம் ராகவோ புங்க்தே ந சாபி மது ஸேவதே" (நமாம்ஸம்ராகவோபுங்க்தேநசாபிமதுஸேவதே) என்றவையெல்லாம் வடிவிலே கண்டோமிறே. [இதுவோ தக்கவாறு] - ஸ்த்ரீவதம்பண்ணி னையம்வைத்து ஓலக்கங்கொடுத்திருக்கையோ தக்கோர்மையாவது? [என்னவேண்டுங் கண்டீர்] - இவ்வோலக்கத்தையும் இவன்மேன்மையையுங்கண்டு "இத்தையெங்ஙனே யழிக்கும்படி?" என்று நீங்கள் ஆந்ருஶம்ஸ்யங் கொண்டாடவொண்ணுது; அவ்வளவில் என்னைப்பார்த்துச்சொல்லுங்கோள். [நுங்கட்கே] - அவனல்லாத உங்களுக்கு இத்தனையும்

ப்ர. — [தூமதுவித்யாதி] — [வானவர்கோனைக்கண்டு] — யுத்தகாண்டே [௧௮] "த்வயி கிஞ்சித் ஸமாபந்நே கிம் கார்யம் ஸீதயா மம । [illegible] ॥௫॥"

[இதுவோ தக்கவாறு] — ஸுந்தரகாண்டே [௩௮] [illegible] ஸீதா, "[illegible] ॥௩௯॥ [illegible] । ஆந்ருஶம்ஸ்யம் பரோ தர்மஸ்த்வத்த ஏவ மயா ஶ்ருத:॥௪௧॥

ஹார்த்தபாவம் - ஸாபராதனுகையாலே இத்யாதி. நம்மைக்காணுமென்றது - உம்மைக்காணுமென்ற படி. "தக்கவாறு-இதுவோ" என்கைக்கு, இவர் தயாளுவென்கிறவிடம் எப்படியறிந்தாள்? என்ன - ஆந்ருஶம்ஸ்யம் இத்யாதி. "[illegible] । ஆந்ருஶம்ஸ்யம் பரோ தர்மஸ்த்வத்த ஏவ மயா ஶ்ருத:" இதி ஸுந்தரகாண்டே ஹநுமந்தம்ப்ரதி ஸீதா. சிலர்க்கு - பிராட்டிக்கு. "தக்கவாறு" என்று ஸ்வபாவமாக்கி, "மாமதுவார்தண்டுழாய்முடி" என்றத்தைக்கடாக்ஷித்து, உன் ப்ரணயித்வஸ்வபாவம் இதுவோ? என்கிறுள்-நைவ தம்ஶாந் இத்யாதி. "நைவ தம்ஶாந் ந மஶகாந் ந கீடாந் ந ஸரீஸ்ருபாந் । ராகவோऽபநயேத் காத்ராத் த்வத்கதேநாந்தராத்மநா ॥ ந மாம்ஸம் ராகவோ புங்க்தே ந சாபி மது ஸேவதே । வந்யம் ஸுவிஹிதம் நித்யம் பக்தமஶ்நாதி பஞ்சமம்" இதி ஸுந்தரகாண்டே ஸீதாம்ப்ரதிமாருதி:. [௩௬-௪௧]

வடிவிலே கண்டோமிறேயென்றது - * மாமதுவார்தண்டுழாய் முடியனுயிருக்கையைப் பற்ற. ஸ்ருபாபா மாக்ந, "வினையேனை" இத்யாதியைக்கடாக்ஷித்துபாவாந்தரம்-ஸ்த்ரீவதம் இத்யாதி. கீழே 'ஆந்ருஶம்ஸ் யம்' இத்யாதிவாக்யம் - இவ்வர்த்தசேஷமாகக் கண்டுகொள்வது. என்னுங்கோளென்னுதே, "என்ன வேண்டுங்கண்டீர்" என்றதுக்கு பாவம்-இவ்வோலக்கத்தை இத்யாதி. "நுங்கட்கு" என்றதுக்குபாவம்- அவனல்லாத இத்யாதி. அவனல்லாதஉங்களுக்கு என்றது - நிர்க்குணனுனவனைப்போலன்றிக்கே

செய்யவேணும். இல்லையாகில், இவ்வளவிலேமுகங்காட்டின உங்களுக்கும் அவனுக்கும் வாசியில்லை. [நுங்கட்கே] - என்முல்லைகள்மேல் தும்பிகளன்றோ! உங்கள்ஜீவனம் நீங்களே நோக்கிக் கொள்ளவேணும்: அவன் ஸ்த்ரீவதம்பண்ணி ஸ்வரூபஹாநிபாராதேயோலக்கங் கொடுத்திருந்தான்; நான்பாடோடிக்கிடந்தேன்; இனி உங்கள்ஸ்வரூபஹாநி நீங்களே பரிஹரித்துக்கொள்ளுங்கோள். (ச)

ஐந்தாம் பாட்டு.

நுங்கட்குயானுரைக்கேன்வம்மின் யான்வளர்த்தகிளிகாள்!
வெங்கட்புள்ளூர்ந்துவந்து வினையேனைநெஞ்சங்கவர்ந்த
செங்கண்கருமுகிலைச் செய்யவாய்ச்செழுங்கற்பகத்தை
எங்குச்சென்றாகிலுங்கண்டு இதுவோதக்கவாறு? என்மினே.

ஆ.—(நுங்கட்கு.) - க்ரூராவலோகந காலாநல ஸத்ருஶ ப்ரதிகூல ஜாலனான பெரியதிருவடி திருத்தோளிலே ஏறியருளி வந்து என்னோடே ஸம்ஶ்லேஷித்து விஶ்லேஷிக்கிறபோது, அதிஶீதளமாய் ம்ருதஸஞ்சீவநமானதிவ்யகடாக்ஷங்களாலும் அதிமதுரமான பணிமொழிகளினாலும் திருமேனியில் அழகாலும் ஆத்மாநுரூபமான பரிஷ்வங்கத்தாலும் என்னுடைய மநஃப்ரப்ருதி ஸகல கரணங்களையும் அபஹரித்துக் கொண்டுபோனவனைத் திருநாட்டிலே சென்றாகிலுங்கண்டு, உம்முடைய தக்கவாறு இதுவோ? என்று சொல்லவேணுமென்று, தான்வளர்த்த கிளிகளைக்குறித்துச் சொல்லுகிறாள்.

ஒ.—அஞ்சாம்பாட்டில், திருநாடாகவுமாம், மற்றேதேனும்அவனுகந்தருளின தேசங்களாகவுமாம், எங்கேனும் போயாகிலும் அவனைக்கண்டு தம்முடைய தக்கோர்மையிருக்கும்படி இதுவோவென்னுங்கோளென்று, தன்னுடைய கிளிகளைக் குறித்துச் சொல்லுகிறாள்.

[வெங்கட்புள்ளென்று தொடங்கி] - ப்ரதிகூலர்க்கு பயங்கரமான த்ருஷ்டியையுடைய பெரிய திருவடியை நடத்திக்கொண்டுவந்து, தன்னை விஶ்லேஷித்தால் தரியாதபடியான பாபத்தைப்பண்ணின என்னுடைய நெஞ்சை நிஶ்ஶேஷமாகப் பறித்துக் கொள்வதுஞ்செய்து, அதனால் பிறந்த ஹர்ஷப்ரகர்ஷத்தாலே சிவந்த திருக்கண்களையுடையனாய்க் காளமேகம்போலே ஸ்ரமஹரமான திருநிறத்தையும் சிவந்த திருப்பவளத்

தயாளுக்களான உங்களுக்கு என்றபடி. விவரணம் - இல்லையாகில் இத்யாதி. த்விதீயதாத்பர்யம் - என்முல்லைகள்மேல் இத்யாதி. ஏதத்விவரணமாதல், மூன்றாம்பாவமாதல் - அவன்ஸ்த்ரீவதம் இத்யாதி. அதாவது - முல்லைகள்மேலே வர்த்திக்கிற என் தும்பிகளாகையாலே, என்விஷயமான உங்கள் பாரதந்த்ர்ய ஹாநி வாராதபடி உங்களுக்கு ஜீவநமான என்னைநோக்குங்கோள் என்றபடி. பாடோடிக்கிடக்கை - ஒருவர்க்காகப் படுத்துக்கொண்டிருக்கை. 'என்முல்லைகள்மேல் தும்பிகாள்! பூமதுவுண்ணச்செல்லில் - தாமதுவாய்கள்கொண்டுவந்து - வினையேனை'யித்யாரப்ய, 'கண்டு - நுங்கட்கு யாமிதுவோதக்கவாறென்ன வேண்டுங்கண்டீர்' என்றந்வயம். 'யாமிதுவோதக்கவாறு - நாம் இம்மேன்மை கொண்டாடியிருக்குமதுவோ தக்கோர்மையுடையோமானபடி. தக்கோர்மை - தயை. என்னவேண்டுங்கண்டீர் - என்றுசொல்லவேணுங்காணுங்கோள்' என்றபடி. (ரு)

தையும் உடையனாய் அர்த்தித்தது கொடுக்கும் மாத்ரமன்றிக்கே, தானே அபேக்ஷிதங்கள் அறிந்துகொடுக்கும் விலக்ஷண கல்பகமுமாயிருந்தவனை. என்னை ஸர்வஸ்வஹரணம் பண்ணி, விஶ்லேஷிக்கிறதுசையிலே என்னை அநுநயிக்கைக்காக வடிவழகைக்காட்டிக் கண்ணாலே நோக்கி முறுவல்செய்து தன்னையும் தன்னுடைமையையும் எனக்காகத் தந்தவனுக்குஎன்றுமாம்.

ப.—அநந்தரம், உதார ஸ்வபாவனானவனை எங்கேனுமாகிலும் போய்க்கண்டு, இதுவோ தகுதியென்று சொல்லுங்கோள் என்று தான்வளர்த்த சிலகிளிகளைப் பார்த்துச் சொல்லுகிறாள்.

(பிரிந்த அவன் பரிகரம்போலே செருக்கடியாதே), யான் - நான், வளர்த்த- (வளர்க்க) வளர்ந்த, கிளிகாள்-! வம்மின்-(அதிபரிசயத்தாலே அநாதரித்திராதே) வாருங்கோள்; யான்-(வளர்த்த உங்களாலே பயன் பெறவிருக்கிற) நான், நுங்கட்கு - (நானுண்டாகில் உண்டாம்படியான) உங்களுக்கு, உரைக்கேன் - (நீங்களே யறிந்துசெய்யும் காரியத்தைச்) சொல்லுகிறேன்; வெம் - ப்ரதிபந்தகங்களை யழலவிழிக்கும், கண் - கண்ணையுடைய, புள் - பெரியதிருவடியை, ஊர்ந்து - (தன்னுடைய த்வரைதோன்றும்படி) நடத்திக்கொண்டு, வந்து - (என்பக்கலிலே) வந்து, வினையேனை - இன்று பிரிந்திருக்கைக்கடியான பாபத்தையுடையேனான என்னை, (நானுமறியாதபடி), நெஞ்சங்கவர்ந்த - சித்தாபஹாரம் பண்ணினவனாய், (அவ்வபஹாரஹேதுவான அந்த), செம்-சிவந்த, கண்- திருக்கண்ணையும், கருமுகிலை - (அதுக்கு பரபாகமாய்ப் * பொன்மலையின்மீமிசைக் கார்முகில்போலே பெரியதிருவடி திருத்தோளிலே பொருந்தவிருக்கிற) காளமேக நிபமான ரூபத்தையுடையனாய், செய்ய - (நினைத்து முடித்த ப்ரீதியாலே) சிவந்த, வாய்-அதரசோபையையுமுடையனாய், செழுங்கற்பகத்தை - (இவ்வழகைத் தன்பேறாக அநுபவிப்பிக்கையாலே) விலக்ஷணகல்பகம்போலே மஹோதாரனானவனை, எங்காகிலும் - பரவ்யூஹவிபவாதிஸ்தலங்க ளெங்கேனுமாகிலும், சென்று - சென்று, கண்டு-கண்டு, இதுவோ- இவளை சித்தாபஹாரம்பண்ணித் தனிமைப்படுத்தின இதுவோ, தக்கவாறு - தகுதி, என்மின் - என்று சொல்லுங்கோள்!

இ.—அஞ்சாம்பாட்டில், தன்னுடைய கிளிகளைக்குறித்து, எங்கேனும் போயாகிலும் அவனைக்கண்டு இதுவோ உம்முடைய தக்கோர்மையிருக்கும்படி யென்னுங்கோள் என்கிறாள்.

[நுங்கட்கு] - "ஸகலம் தத் வஶகம் ஸர்வம்" என்றிருக்கும் உங்களுக்கு. [யான்] - என் ஸர்வபாரங்களையும் உங்கள்மேலே வைத்திருக்கிறநான். [உரைக்கேன்]- என்காரியம் நீங்களே உணர்ந்து செய்யக்கடவிகோளாயிருக்க, வார்த்தை சொல்லுகிறது என் ஆற்றாமையாலேயிறே. [வம்மின்]-என்காரியத்துக்கு உபாயசிந்தை பண்ணியிருக்கிற உங்களுக்கு ஒருவிரகுசொல்ல வாருங்கோள். [யான்வளர்த்த கிளிகாள்] - அவன் பரிகரம்போலே செருக்கியிருக்கப்பிறந்திகோளோ நீங்கள்? ரக்ஷகர் தேட்டமானசமையிலே ரக்ஷணத்திலே ப்ரவர்த்தியாதே செருக்கடித்திருக்கலாமோ? தன்னைத்தோற்றி ரக்ஷ்யரக்ஷக நியதிபற்றதிறே. [வெங்கட்புள்ளூர்ந்து வந்து] - ப்ரதிகூலர்க்கு பயங்கரமான த்ருஷ்டியையுடைய பெரிய திருவடியை நடத்திக்கொண்டுவந்து, வழியில் உண்டான ப்ரதிபந்தகங்களைப் போக்கவல்லனென்னுதல், கண்பாராதே பிரித்துக் கொண்டுபோனவனென்னுதல். "ஏகோ த்வாப்யாம் த்ரிதஶாநாம்". [வினையேனை] - பிரிந்

தால் தரிப்பரிதான பாபத்தைப்பண்ணினவென்னை. [நெஞ்சங்கவர்ந்த] - நெஞ்சை நிஶ்ஶேஷமாக அபஹரித்த; நாட்டார்க்கு மநோவிகாஸஹேதுவான விஷயம் என்னெஞ்சை யழிக்கும்படியாவதே! [செங்கட்கருமுகிலை] - கண்ணாலே குளிரநோக்கி, மேருவைக் கினிய வொரு காளமேகம் பணிந்தாற்போலே தன் வடிவைக்காட்டியாயிற்று நெஞ்சை அபஹரித்தது. [செய்யவாய்ச் செழுங்கற்பகத்தை] - அவ்வளவன்றியே, முறுவல்செய்து தன்னையும் தன்னுடைமையையும் எனக்காக்கியாயிற்று நெஞ்சை அபஹரித்தது. அன்றியே நெஞ்சை அபஹரித்தஹர்ஷத்தாலே திருக்கண்ணும் விகஸிதமாய், காளமேவம்போலே வடிவுங்குளிர்ந்து, அதுக்கு பரபாகமாய்ச் சிவந்த திருப்பவளத்தையும் உடையனாய், தானே அபேக்ஷித்துத் தன்னைக்கொடுக்கும் விலக்ஷண கல்பகமாயிருந்தவனை. [எங்குச்சென்றாகிலுங் கண்டு] - கீழ், "வானவர்கோனைக் கண்டு" என்கையாலே, ஓலக்கத்திலன்றிக்கே ஏகாந்தஸ்தலத்திலே சென்றாகிலும் வார்த்தை சொல்லுங்கோள். அங்ஙனன்றியிலே, "க்ஷேமேணைவ ஹி வைமேநமிஷ்ட்ராஜிஸாஸா ஐயம்" என்கிறபடியே, "பரமபதத்திலே கண்டிலோம்" என்று மீளாதே வ்யூஹவிபவாதிகள் எங்குந்தேடியாகிலும் கண்டு சொல்லுங்கோள். [இதுவோ தக்கவாறென்மினே] - ஸ்தாநபேதமுண்டாகிலும் பாசுரமிதுவே. சீர்மைகொண்டாடி யிருப்பார்க்கு இதல்லது மர்மமில்லை; இத்தைச் சொல்லுங்கோள்.

ஈடு.—அஞ்சாம்பாட்டு. தன்னுடைய கிளிகளைக்குறித்து எங்கேனும் போயாகிலும் அவனைக்கண்டு, இதுவோ உம்முடையதக்கோர்மையிருக்கும்படி! என்னுங்கோளென்கிறாள்.

[நுங்கட்குயானுரைக்கேன்] - தனக்குமுன்னே ஆற்றாமையோடேயிறே அவையிருக்கிறது; ஆருக்குச் சொல்லும் வார்த்தையை யாருக்குச் சொல்லுகிறது? ஆற்றாமை சொல்லுவியாதது இல்லையிறே. [நுங்கட்குயானுரைக்கேன்] - உங்களுக்குச் சொல்லுமதல்ல; நான் சொல்லுமதல்ல. வ்யஸநத்துக்கு அபிமாநிகளிருக்க, வேறே சிலர் வார்த்தை சொல்லுமாபோலே. [வம்மின்] - "இவளை ஜீவிப்பித்தோமாம் விரகேதோ?" என்று சிந்திக்கிற உங்களுக்குஒருவிரகுசொல்ல வாருங்கோள். [யான்வளர்த்தகிளிகாள்] - என்வயிற்றிலே பிறந்த உங்களுக்கு அவன் பரிகரம் போலே செருக்கடித்திருக்கக் காலமுண்டோ?

அஞ்சாம்பாட்டு.—நுங்கட்கு இத்யாதி "எங்குச்சென்றாகிலுங்கண்டு" இத்யாதியைக் கடாக்ஷித்தவதாரிகை - தன்னுடைய இத்யாதி.

"நுங்கட்கு" என்கிறஸ்வரத்துக்குபாவம் - ஆருக்குச்சொல்லும் இத்யாதி. அதாவது - என்னாற்றாமையைக்கண்டு என் கார்யத்திலே ஒருப்படாதிருப்பார்க்குச் சொல்லுமத்தை, அதிலேயொருப்பட்டிருக்கிற உங்களுக்குச்சொல்லவேணுமோ? என்றபடி. அப்படிசொல்லுகைக்கு இவற்றுக்காற்றாமையுண்டோ? என்ன - தனக்குமுன்னே இத்யாதி. முன்னேயிருக்கிற இந்தவாக்யம் - ஆருக்குச்சொல்லும் இத்யாதி வாக்யாநந்தரம் அநுஸந்தேயம். ஆனால்சொல்லுவானென்? என்ன - ஆற்றாமை இத்யாதி. "ஆருக்குச்சொல்லும்வார்த்தை" என்கிறத்தை யநுவதித்துக் கொண்டு, "யானுரைக்கேன்" என்கிறஸ்வரத்துக்குபாவம் - உங்களுக்கு இத்யாதி. விவரணம் - வ்யஸநத்துக்கு இத்யாதி. வேறேசிலரென்றது - வேறேசிலர்க்கு என்றபடி. கிளிகள் வ்யஸநாபிமாநிகளாகையாலே வார்த்தைசொல்லவேண்டாதே தானே கார்யம்செய்யுமாகில், "வம்மின்" என்றழைப்பானென்? என்ன - இவளை இத்யாதி. "யான்வளர்த்த", என்கிறதுக்குபாவம் - என்வயிற்றிலே இத்யாதிவாக்யம். அவன்பரிகரம்போலே என்றது - "வெங்கட்புள்" என்றத்தைக்கடாக்ஷித்து. 'உங்களுக்குச்

செருக்கடித்திருக்கப்பிறந்திகோளோ! [நுங்கட்கு] - "ஏகம்து:கேம்ஸுகஞ்சநௌ" (ஏகம்துꞋகேம்ஸுகஞ்சநௌ) என்றிருக்கிற உங்களுக்கு. [யான்] - உங்கள்மேலே என் ஸர்வபரங்களையும் வைத்திருக்கிற நான். [உரைக்கேன்] - நீங்களறியாததுண்டாய்ச் சொல்லுகிறேனல்லேன்; ஆற்றாமையாலே சொல்லுகிறேன். [வம்மின்] - முன் கை முக் காதமாய் இருக்கிறபடி. [யான்வளர்த்த] - *நெய்யமரின்னடிசில் நிச்சல்பாலொடுமூட்டி வளர்த்த. [கிளிகாள்] - "வளர்த்ததனால்பயன்பெற்றேன்" என்கிறபடியே, அவன்திரு நாமங்களை நீங்கள் சொல்லக் கேட்டிருக்கவும் அமையுமிறே; அதுதானே "கண்ணன்நாமமே குழறிக்கொன்றீர்" என்கிறபடியே, ஆற்றாமைக்கு உடலாகையிறே யுங்களை அவன்பக்கல் போகவிடத் தேடுகிறது. [வெங்கட்புள் இத்யாதி] - வெவ்வியதான கண்ணையுடைத்தான புள்ளை நடத்திக்கொண்டுவந்து, வருகிறபோதே வழியில் ப்ரதிபந்தகங்களைப் போக்குகை யிலே சினத்த கண்ணையுடையவன் என்னுதல்: அன்றியே, பிரித்துக்கொண்டு போகிறபோது கண்பாராதே பிரித்துக்கொண்டுபோன கொடுமையைச் சொல்லுதல்: "அக்ரூர: க்ரூரஹ்ருதய:" (அக்ரூரꞋ க்ரூரஹ்ருதயꞋ) என்னுமாபோலே. [வெங்கட்புள்ளூர்ந்துவந்து] - பட்டங்கட்டின ஆனையிலேயேறி அபிமதவிஷயத்தைக் கிட்டும் ராஜபுத்ரனைப்போலே. "அருளாழிப்புட்கடவீ ரவர்வீதியொருநாள்" என்றிறே அடியில் தூதுவிட்டது, அப்படியே வந்தபடி. [வினையேனை] - அவனைப்போலே இரண்டுநெஞ்சு படைக்கப்பெறாத பாபத் தைப்பண்ணினேன்; ஸம்ஶ்லேஷத்தில்அழிகைக்கும், விஶ்லேஷத்தில் தரிக்கைக்கும் இரண்டு நெஞ்சுண்டாகப் பெற்றிலேன் [நெஞ்சங்கவர்ந்த] - நாட்டார்க்கு மநோவிகாஸ ஹேதுவான விஷயம் என்னெஞ்சை யழிக்கும்படியாவதே! ஸாரக்ராஹியாய்க் கோதை யிட்டு வைத்துப்போனான்; பூக்கொண்டு புட்டில் போகடுவாரைப்போலே. அறமணத்திறே இவர் நெஞ்சிருப்பது; "பூசும்சாந்தென்னெஞ்சம்" என்னும்படி. [செங்கட்கருமுகிலை] - கண் லே குளிரநோக்கி, வடிவைமுற்றூட்டாக்கி நின்றநிலை. அங்ஙனன்றிக்கே, இத்தலை

சொல்லுமதல்ல, நான்சொல்லுமதல்ல" என்றதுக்குஹேதுவருளிச்செய்வதாக மீளவும் பதோபாதாந பூர்வகமாக ஶப்தார்த்தம் - ஏகம்து:கம்இத்யாதி. "உங்களுக்குச்சொல்லுமதல்ல" என்றதுக்குஹேது வருளிச்செய்து, "நான்சொல்லுமதல்ல" என்றதுக்குஹேதுவருளிச்செய்கிறார் - உங்கள்மேலே இத் யாதி. "ஆற்றாமைசொல்லுவியாததில்லையிறே" என்றத்தை - "உரைக்கேன்" என்கிறபதத்திலே ஏறிட்டருளிச்செய்கிறார் - நீங்கள் இத்யாதி. கிளி கைமேலேயன்றோ இருப்பது; ஆயிருக்க, "வம் மின்" என்கிறதென்? என்ன - முன்கை இத்யாதி. "யான்வளர்த்தகிளிகாள்" என்று ஸம்போதிக்கிற வனுடையஹார்த்தபாவம் - வளர்த்ததனால் இத்யாதி. இது "மூலைக்கதிரை" என்கிறபாட்டிலே. பயன் - ப்ரயோஜநம். கேட்டிருக்கவமைந்தால்போகவிடுகிறதென்? என்ன - அதுதானே இத்யாதி. அதுதானே - திருநாமந்தானே. கண்ணினுடையவெம்மைக்கு அடியை இரண்டுவகையாக அருளிச் செய்கிறார் - வருகிறபோது இத்யாதிவாக்யத்வயத்தாலே. இதுக்கு உதாஹரணம் - அக்ரூர: இத் யாதி. "அக்ரூர: க்ரூரஹ்ருதய: ஶீக்ரம் நயதி கேஶவம் । ஸ்வயமேவ கதாஹ்லாதம் ஶீக்ரம் ராஜஸூயதே" இதி பஞ்சமேம்ஶே அஷ்டாதஶே [௩0]. "புள்ளூர்ந்து வந்து-நெஞ்சங்கவர்ந்த" என்று கூட்டிபாவம் - பட்டங்கட்டின இத்யாதி. புள்ளூர்ந்துவரவேணுமோ? என்ன - அருளாழி இத்யாதி. "வினையேன்" என்றதுக்குஹார்த்தபாவம் - அவனைப்போலே இத் யாதி. விவரணம் - ஸம்ஶ்லேஷத்தில் இத்யாதி. சரீரத்தைவிட்டுநெஞ்சைக்கவருவானென்? என்ன- ஸாரக்ராஹி இத்யாதி. புட்டில் - பெட்டி. நெஞ்சு பூவானபடியென்? என்ன - அறமணத்து இத் யாதி. இதுக்குப்ரமாணம் - பூசுஞ்சாந்து இத்யாதி. "செங்கட்கருமுகிலை" என்றதுக்கு - பூர்வபாவி யாகவும் பரபாவியாகவும் அர்த்தத்வயம் - கண்ணாலே இத்யாதிவாக்யத்வயத்தாலே. முந்தினவர்த்தத்

யோடேவந்து கலந்தபின்பு, அத்தலைக்குவந்த பௌஷ்கல்யத்தைச் சொல்லவுமாம். அன்றிக்கே, பிரிவை ப்ரஸங்கித்துக் கண்ணாலே குளிரநோக்கி, அவன் விளைநீரடைத்துக்கொண்டு நின்ற படியாகவுமாம். [செய்யவாய்] - சாடுசதங்கள் சொல்லப்புக்கு ஸ்மிதம்பண்ணுகிற வாய். [செழுங்கற்பகத்தை] - விலக்ஷணமான கல்பகத்தை: வைலக்ஷண்யமாவது தானே யபேக்ஷித்துத் தன்னைக்கொடுக்கை. கல்பகம் தன்னைக் கொடுக்கமாட்டாதே அபேக்ஷிக்க வும்மாட்டாதே; இவன்தன்னைக்கொடுக்க வல்லவனிறே. தான் கடக்கவிருந்தாலும் தன் விபூதித்வயத்தையும் நான் நினைத்தார்க்குக் கொடுக்கும்படி எனக்குத் தந்தவனை. [எங்குச் சென்றாகிலுங்கண்டு] - ("வானவர்கோனை" என்றதிறே) "ஆள் வாராநின்றது" என்று கேட்டு ஓலக்கத்தைக் கிளப்பாக் கடக்கப்போய்த் திரைவளைத்துக் கொண்டிருப்பர். அன்றிக்கே, புகைபுக்கவிடமெங்கும் புகுங்கோள்; பரவ்யூஹவிபவார்ச்சாவதாரங்கள்; "யமாத்மா ந வேத" (யமாத்மாநவேத) என்றருளித்திருக்கும் இடமெங்கும்புக்கு. "அநேநைவ ஹி வேகேந கமிஷ்யாமி ஸுராலயம்" (அநேநைவஹிவேகேந கமிஷ்யாமிஸுராலயம்) என்கிறபடியே. "பரமபதத்தில் கண்டிலோம்" என்று மீளவொண்ணாதே. [இதுவோதக்கவாறென்மினே] - ஸ்த்தாநபேதம் உண்டானாலும் பாசுரமிதுவே. பிறர்நெஞ்சையும் அபஹரித்துத் தன்னெஞ்சையுங் கொண்டு கடக்கவிருக்கையோ தக்

ப்ர — [எங்குச்சென்றாகிலுங்கண்டு] — ஸுந்தரகாண்டே, 'வாநராந் வாநரச்ரேஷ்ட இதம் வசநமப்ரவீத் | யதா ராகவநிர்முக்த: சர: ச்வஸநவிக்ரம: ||௩௯|| கச்சேத் தத்வத் கமிஷ்யாமி லங்காம் ராவணபாலிதாம் | நஹி த்ரக்ஷ்யாமி யதி தாம் லங்காயாம் ஜநகாத்மஜாம் || அநேநைவ ஹி வேகேந கமிஷ்யாமி ஸுராலயம் ||௪௦||"

தில், "கருமுகில்" என்று - ஔதார்யம். மூன்றாம்பாவம் - அன்றிக்கேபிரிவை இத்யாதி. வாயில் சிவப்புத்தோற்றுவது ஸ்மிதத்தாலே யென்னுமத்தை ஸஹேதுகமாக அருளிச்செய்கிறார் - சாடு சதங்கள் இத்யாதி. வைலக்ஷண்யமாவது - வ்யாவ்ருத்தியென்றுவிவக்ஷிதம். இது கல்பகத்துக் கில்லையோ? என்ன - கல்பகம் இத்யாதி. "செழுங்கற்பகம்" என்றதுக்கு - ஸம்ச்லேஷதசையில் தானேயர்த்தியாய்த் தன்னைக்கொடுக்குமென்று அருளிச்செய்து, விச்லேஷதசையில் விபூதித்வயத் தையும் நான்நினைத்தார்க்குக்கொடுக்கும்படி எனக்குத்தந்தவனென்று, தாத்பர்யாந்தரம் - தான்கடக்க இத்யாதி. "எங்குச்சென்றாகிலும்" என்றதக்கு முந்தினவர்த்தம் - பரமபதத்தில் ஓலக்கத்திலிராதே அந்த:புரத்திலே யிருந்தாலும் அங்கேசென்றாகிலும் என்று விவக்ஷித்து, ஓலக்கமாயிராதே ஏகாந்தமாக அவனிருக்கைக்குஹேதுவருளிச்செய்கிறார்-ஆள்வாராநின்றது இத்யாதி. இது-கீழிற்பாட்டில்"வான வர்கோனைக்கண்டு" என்றதுக்குச்சேரும் அர்த்தாந்தரம்-அன்றிக்கே புகைபுக்கவிடம் இத்யாதி. புகை புக்கவிடம்-ஈச்வரஸந்நிதியுள்ளவிடம். விவரணம்-பரவ்யூஹ இத்யாதி. கீழே, "வானவர்கோனைக்கண்டு" என்றுவைத்து, இங்கே "எங்குச்சென்றாகிலும்" என்றதுக்கு பாவம் - அநேநைவஹி இத்யாதி. "நஹி த்ரக்ஷ்யாமி யதி தாம் லங்காயாம் ஜநகாத்மஜாம் | அநேநைவ ஹி வேகேந கமிஷ்யாமி ஸுராலயம்" இதி ஸுந்தரகாண்டே ப்ரதமே. அதாவது - "பரமபதத்திலேகண்டிலோம்" என்று மீளாதே, அநேநைவ ஹி வேகேந கமிஷ்யாமி ஸுராலயம் என்று திருவடி, பிராட்டியையிலங்கை யிலேகண்டிலனாகில் இந்த வேகத்தோடே ஸ்வர்க்கத்தே போகிறேனென்றாற்போலே, நீங்களும் அவனி ருக்கிற ஸ்த்தலங்களெங்கும் போங்கோளென்றபடி. ஸ்த்தாநபேதத்தாலே வார்த்தையும் பேதித்திருக் குமோ? என்ன - ஸ்த்தாநபேத இத்யாதி அதாவது - க்ருபாஸ்வபாவம் ஓரிடத்திலும் பேதியா தென்றபடி. "நெஞ்சங்கவர்ந்த" என்றத்தைக்கடாக்ஷித்து, "இது" என்றதுக்கர்த்தம் - பிறர்நெஞ்

கோர்மையாவது? அவனுக்கு ஆந்ருஶம்ஸ்யமில்லை யென்கையாவது - தர்மியை யில்லை யென்கை யிறே. தர்ம்யநுப்ரவிஷ்டையான க்ருபையும் எங்கள்பக்கல் காணாமையாலே தமக்கு அதுவுமில்லையென்று சொல்லுங்கோள். நீர்மைகொண்டாடியிருப்பார்க்கு இதல்லது மர்மமில்லை; இத்தையே சொல்லுங்கோள். (௫)

ஆறாம் பாட்டு.

என்மின்னுநூல்மார்வன் என்கரும்பெருமான்என்கண்ணன்
தன்மன்னுநீள்கழல்மேல்தண்துழாய் நமக்கன்றிநல்கான்
கன்மின்களென்றுஉம்மையான் கற்பியாவைத்தமாற்றஞ்சொல்லி
சென்மின்கள்தீவினையேன் வளர்த்தசிறுபூவைகளே!

ஆ — (என்மின்னுநூல்மார்வன்.) - இதுவோ தக்கவாறென்று சொல்ல வேணுமென்று தான் வளர்த்த பூவைகளை யபேக்ஷிக்க, பின்னையும் அவை போகாதிருந்தவாறே, "நம் அபேக்ஷிதம் அவன்செய்தருளாவிடிற் செய்வதென்?" என்று போகாதிருந்தனவாகக்கொண்டு, ஸ்வகீய அஸங்க்யேய திவ்யபூஷண பூஷிதமான திவ்யரூபத்தையும் தன்னையும் எனக்கே போக்யமாகப் பரிகல்பித்துக்கொண்டிருக்கிற என் கண்ணன், தன் மன்னுநீள்கழல்மேல் தண்டுழாய் நமக்கன்றி நல்கான்; ஆதலால் ஈண்டச்செல்லுங்கோளென்கிறாள்.

ஒ.—ஆறும்பாட்டில், ஆஶ்ரிதரோடு ஏகரஸனாகையாலே நம் அபேக்ஷிதங்கள் செய்வானொருவன்; அவன்பாடே சென்று, இதுவோ தக்கவாறென்று அவனுக்கு அறிவியுங்கோளென்று சில பூவைகளைக் குறித்துச்சொல்லுகிறாள்.

[என்மின்னுநூலென்று தொடங்கி] - தன்னுடைய திருமார்வில் விளங்குகிற திருயஜ்ஞோபவீதத்தையும் தன்திருநிறத்தையுங் காட்டி என்னை அடிமைகொண்டு எனக்கு ஸ்நேஹியான க்ருஷ்ணனாய் ஆஶ்ரிதர்இருந்தவிடத்தளவும் செல்லுமதான தன் திருவடிகளில் மன்னின திருத்துழாயில் செவ்வி நமக்கல்லது வேறொருவர்க்கும் கொடான். [கன்மின்களென்று மேலுக்கு] - என்கருமம் நானே தலைக்கட்டவேண்டி, இதுக்கு உங்களைத் தூதாகவிடவேண்டும்படியான பாபத்தைப் பண்ணின நான் வளர்த்த சிறுபூவைகாள்! இதுவோ தக்கவாறென்று உங்களைக் கற்பித்துவைத்த பாசுரங்களைச் சொல்லிச் செல்லுங்கோள்.

ப.—அநந்தரம், ஸர்வப்ரகாரஸவ்யனான க்ருஷ்ணன்திருவடிகளில் திருத்துழாய் நமக்கன்றித் தாரான்; நான்உங்களைக் கற்பித்துவைத்த வார்த்தைகளைச் சொல்லுங்கோளென்று தான் வளர்த்த சிலபூவைகளைக்குறித்துச் சொல்லுகிறாள்.

சையும் இத்யாதி. பலகாலும் "இதுவோ தக்கவாறு" என்றதுக்கு பாவத்தை யிரண்டுவகையாக அருளிச்செய்கிறார் - அவனுக்காந்ருஶம்ஸ்யம் இத்யாதியாலும், நீர்மைகொண்டாடி இத்யாதியாலும். விவரணம் - தர்ம்யநுப்ரவிஷ்டையான இத்யாதி. தக்கோர்மை - தயை. இதுவோ தக்கவாறென்மினே - நெஞ்சையபஹரித்துக் கடக்கவிருக்கையோ தகவுடையபடியென்று சொல்லுங்கோளென்று ஸப்தார்த்தம். தக்கவாறு - தகவுடையபடி; தயையுடையபடி. க்ரமேணாந்வய:. (௫)

தீ-(நான்உங்கள்காரியம் செய்கையன்றியே உங்களைக்கொண்டு காரியங்கொள்ள வேண்டும்படி) க்ரூரமான, வினையேன் - (பாபத்தையுடையேனான) நான், வளர்த்த - வளர்த்த, சிறு-முக்த்யமான, பூவைகளே - பூவைகாள்! என் மின்னுநூல்மார்வன் - திருமேனிக்கு பரபாகமாம்படி மின்போலே விளங்குகிற திருயஜ்ஞோபவீதத்தையுடைய திருமார்பை என்னை யநுபவிப்பித்தவனாய், என் கரும் பெருமான் - (இவ்வவயவசோபா மாத்ரமன்றியே ஸமுதாயமான) ச்யாமளவிக்ரஹத்தை எனக்கநுபவிப்பித்து என்னை யடிமைகொண்ட ஸ்வாமியானவனாய்; என் - எனக்கு ஸர்வப்ரகாரத்தாலும் நியமிக்கலாம்படி வைய்யனான, கண்ணன் - க்ருஷ்ணனானவன், தன் - தன்னுடையதாய், நீள்-ஆச்ரித ரிருந்தவிடத்தளவும் செல்லும், கழல் - திருவடிகளின், மேல்-மேலே, மன்னு-மன்னின, தண்-ச்ரமஹரமான, துழாய் - திருத்துழாயை, நமக்கு - நமக்கு, அன்றி - அன்றி, நல்கான் - உகந்து (வேறொருவர்க்குக்) கொடான், கன்மின்கள் - கற்கும்படியிருங்கோள்! என்று - என்று, உம்மை - (முக்த்யமாய்ச் செருக்கடித்திருக்கிற) உங்களை, (நிர்ப்பந்தித்து), யான் - (உங்களைக்கொண்டு காரியங்கொள்ளவிருக்கிற) நான், கற்பியாவைத்த - ("என் மின்னுநூல்மார்வன்" என்று தொடங்கி "நல்கான்" என்றதிடமீறாகக்) கற்பித்துவைத்த, மாற்றம் - வார்த்தையை, சொல்லி - சொல்லி, சென்மின்கள் - செல்லுங்கோள்!

இ.—ஆறும்பாட்டில், ஆச்ரிதரோடு ஏகரஸனாகையாலே நமக்கு அபேக்ஷிதங்கள் செய்யும் அவன்பாடேசென்று, இதுவோ தக்கவாறு என்னுங்கோளென்று சில பூவைகளைக் குறித்துச்சொல்லுகிறாள்.

[என்மின்னுநூல்மார்வன்] - மேகத்திலே மின்னினாற்போலே சாத்தின திருயஜ்ஞோபவீதத்தைக் காட்டி, என்னை அநந்யார்ஹையாக்கினவன். [என் கரும் பெருமான்] - அதுக்கு பரபாகமான வடிவை எனக்காக்கி என்னை அடிமைகொண்டவன். [என் கண்ணன்] - இங்ஙன் பிரித்துச்சொல்லவேண்டாதபடி தன்னை எனக்குக் கையாளாக்கினவன். [தன்மன்னுநீள் கழல்மேல் தண்துழாய் நமக்கன்றி நல்கான்] - அவனுடைய ஐகரஸ்யம் சொல்லுகிறாள். ஆச்ரிதர் இருந்தவிடத்தளவும் செல்லும் திருவடிகள் என்னுதல்: அளவிறந்த போக்யதையையுடைய திருவடிகளென்னுதல். திருவடிகளிலே பொருந்தி ச்ரமஹரமான திருத்துழாயில் செவ்வி நமக்கல்லதுகொடான். இனியதுகண்டால் "ஸ்வார்த்தம்" என்றிராதே "ஹஸ்தாநாத்ர" என்றிருக்குமவன். அதாகிறது-ஆச்ரிதரோடு ஏகரஸனாயிருக்கை. [கன்மின்களென்று]- நீங்கள் அபேக்ஷியாதிருக்க, நான் சொல்லுங்கோள் என்று. [உம்மை யான்] - ரக்ஷ்யங்களான உங்களை, ரக்ஷகையான நான், [கற்பியாவைத்த மாற்றம்] - கற்பித்துவைத்த மாற்றம். "தண்துழாய் நமக்கன்றி நல்கான்" என்கிற மாற்றத்தை யென்னுதல்: "இதுவோ தக்கவாறு" என்று கற்பித்த மாற்றத்தை என்னுதல். [சொல்லிச்சென்மின்கள்] - அவனுக்கு மறுமாற்றத்துக்கு அவகாசமில்லாதபடி "கிட்டினால்" என்றிராதே வழியே பிடித்துச் சொல்லிக்கொண்டு செல்லுங்கோள். [தீவினையேன் வளர்த்த சிறுபூவைகளே] - என்காரியம் நானே தலைக்கட்டவேண்டி, இதுக்கு உங்களைத்தூதாக விடவேண்டும்படி பாபத்தைப் பண்ணினேன். நானும் அவனுங்கூட உங்களுக்கு அபிமதம் தேடித்தருகையொழிய, என் அபிமதத்துக்கு உங்களைப் போகவிடும்படியான பாபத்தைப் பண்ணினேன் என்றுமாம்,

ஈடு.—ஆறும்பாட்டு. ஆஶ்ரிதரோடு ஏகரஸனாகையால் நம் அபேக்ஷிதங்கள் செய்யுமவன்பாடே சென்று, இதுவோ தக்கவாறென்னுங்கோளென்று சிலபூவைகளைக்

[என்மின்னுநூல்மார்வனித்யாதி] - தன்திருமேனியிலே சாத்தச்செய்தே என்னெஞ்சிலே இட்டாற்போலே ப்ரகாசிக்கிற திருயஜ்ஞோபவீதத்தைக்காட்டி என்னை யாநியார்ஹையாக்கினவன். என் சரக்கானவன் கடக்கவிருக்குங்காட்டில் என்சரக்கைப் பிறர்க்காக்குமோ? [என்மின்னுநூல்மார்வன்] - திருயஜ்ஞோபவீதத்திலழகை ஸ்மரிப்பித்து என்னெஞ்சில் இருளையறுத்தவன். தன்திருமார்வில் சாத்தினநூலைக்காட்டி என்னை நூலிலே வரப்பண்ணினான். [என்கரும்பெருமான்] - மேகத்திலேமின்னினாற்போலே அந்தத் திருயஜ்ஞோபவீதத்துக்குப் பரபாகமானவடிவை எனக்காக்கி என்னையடிமைகொண்டவன். [என்கண்ணன்] - இப்படிகளாலே என்னைச்சேர்த்துத் தன்னை எனக்காக்கினவன். என், என், என் என்று பதங்கள்தோறும் சொல்லுகையாலே - ஒப்பனையழகிலும், வடிவழகிலும், ஸௌலப்யத்திலும் தனித்தனியே ஈடுபட்டபடி. [தன்மன்னுநீள்கழல்மேல் தண்டுழாய் நமக்கன்றி நல்கான்]-எல்லாஞ்செய்தாலும், "ஸக்தாநாம்" (பக்தாநாம்) என்றிருக்கிறத்தைப் பிறர்க்குஆக்கான். இத்திருவாய்மொழிக்கு நிதாநமான பாட்டிறே இது. ஆஶ்ரித பரதந்த்ரனாகையாலே, "ஆஶ்ரிதர்க்கு ஸ்வம்மான பின்பு அறிவிக்கவரும்" என்று ஐகரஸ்யம்பற்றாசாகத் தூதுவிடுகிறதிறே. [தன்-நீள்கழல்மேல்-மன்னு - தண்டுழாய் நமக்கன்றிநல்கான்] - போக்யதையளவிறந்த திருவடிகளிலே பொருந்தி பரமபோக்யமான திருத்துழாயை ஸர்வதா பிறர்க்கு ஆக்கான். "மயிஜீவிதமாயத்தம்ராகவஸ்யமஹாத்மந:" (மயிஜீவிதமாயத்தம்ராகவஸ்யமஹாத்மந:) - தன்மையும் தன்முடைமையையும் எனக்காக்கினவர். இதுதான் தன் ஸ்வபாவங்கொண்டு சொல்லுகிறாளல்லள் ; அவர் ஸ்வபாவாநுஸந்தாநத்தாலே சொல்லு

ஆறும்பாட்டு.—என் இத்யாதி. "தண்டுழாய்நமக்கன்றிநல்கான்" என்றத்தைப்பற்ற- ஆஶ்ரிதரோடு இத்யாதி. "கற்பியாவைத்த" என்றத்தைப்பற்ற - இதுவோ தக்கவாறு என்றது.

"என்" என்றத்தை மின்னுநூலோடேகூட்டிபாவம் - தன்திருமேனியிலே இத்யாதி. "என்" என்றத்தை "மார்வன்" என்றத்தோடேகூட்டிபாவாந்தரம் - என்சரக்கானவன் இத்யாதி. என்சரக்கையென்றது - தண்டுழாயை. "மின்னு" என்றதுக்கு பாவம் - திருயஜ்ஞோபவீதத்தில் இத்யாதி மூன்றும்பாவமாதல். சாடு - தன்திருமார்வில் இத்யாதி. நூலிலேவரப்பண்ணினான்-சாஸ்த்ர வஶ்யனாக்கினான். நூல் - சாஸ்த்ரம். கீழ்ப்பதத்தையுங்கூட்டி, "என்கரும்பெருமான்" என்றதுக்கு பாவம் - மேகத்திலே இத்யாதி. இப்படிகளாலேயென்றது - ஒப்பனையழகு, வடிவழகுகளாகிறபடிகளாலேயென்றபடி. "என், என், என்," என்கிறபதாவ்ருத்திக்குபாவம்- என்னென்னென்னென்று இத்யாதி. உபேக்ஷித்திருக்கிறவனை -"நமக்கன்றிநல்கான்"என்பானென்? என்ன - எல்லாம்செய்தாலும் இத்யாதி. ப்ராஸங்கிகம் - இத்திருவாய்மொழிக்கு இத்யாதி. "பக்தாநாம்" இத்யாதிவாக்ய விவரணம் - ஆஶ்ரித இத்யாதி. "நமக்கன்றிநல்கான்" என்கிறவ்யதிரேகோக்தியாலே - நமக்கே தருமென்றலபித்தம். திருத்துழாயைச்சொன்னது, விக்ரஹாதிகளுக்கும் உபலக்ஷணம். "ஆஶ்ரிதபாரதந்த்ரம்" என்றதுக்குஸம்வாதம் மயிஜீவிதம் இத்யாதி. "மயிஜீவிதமாயத்தம்ராகவஸ்யமஹாத்மந: । ஸாந்த்வயித்வாமஹாபாஹோ தஸ்யராஜகுலஸ்ய" இதி ஸுந்தரகாண்டே ஹநூமந்தம் ப்ரதி ஸீதா(37 57.)ஶ்லோகத்துக்கெல்லாம்பாவம்-தம்மையும் இத்யாதி. "மஹாத்மந:"என்றதுக்கர்த்தம் இதுதான் இத்யாதி. தன்ஸ்வபாவமாவது - ஸௌந்தர்யாதிஸ்வபாவங்கள். அவன்ஸ்வபாவமாவது- க்ருபா ப்ரணயித்வங்கள். ஆஶ்ரிதர்க்குக்ருபையாலே வஶ்யனுமென்கைக்குஸம்வாதம்-கிம்புநர் இத்யாதி.

கிறுள்; "கிம்வா நக்ஷூஷிவொஜ நூ" (கிம்புநர்மத்விதோஜநஃ) - என்றவிடத்துக்குச் சொல்லுவதொரு வார்த்தையுண்டிறே. அருளாளப்பெருமாளெம்பெருமானுருடைய அந்திம தசையிலே, "திருவுள்ளத்திலோடுகிறதேன்?" என்ன, "ஒருபக்ஷி பெருமாளுடைய திருவுள்ளத்தைப் புண்படுத்தினபடியேன் என்றுகிடந்தேன் என்றார்" என்று. இதுக்குக்கருத்தாகப் பிள்ளையருளிச்செய்யும்வார்த்தை - "நாம் பண்ணின சரணாகதியாகையாலே பலத்தோடு அவ்யபிசாரியாகமாட்டாது; இனி ஶரண்யன்நீர்மையிலேற்றத்தாலே நமக்குஒருகுறையில்லையென்கிறது" என்று. (பெருமாளைப்புண்படுத்துகையாவது - ஸ்ரீவிபீஷணாழ்வானை ஶரணாகத்யநந்தரத்திலே கைக்கொள்ளாமல், "வத்யதாம்" [வத்ய.தாம்] என்று அல்பம் தாமஸம் பிறக்கையாலே, "கபோதத்தோபாதி நாம் ரக்ஷிக்கப்பெற்றிலோம்" என்றிருக்கை.) [நமக்கன்றிநல்கான்] - தனித்து, இனியது ஆஶ்ரிதரையொழிய புஜிக்கமாட்டான். [கன்மின்களென்றும்மை யான் கற்பியாவைத்த] - நெஞ்சொழிந்தபோது, தனக்கு தாரகமானவற்றைக் கற்பித்துவைக்கும். நம்முதலிகள் ஓரோஸந்தாநங்களாக "சிறியார், பெரியார்" என்றுதே த்வயத்தை யப்யஸிப்பித்துவைக்குமாபோலே. ரக்ஷ்யங்களான வுங்களை, ரக்ஷகையான நான், கற்பியாவைத்த - அப்யஸிப்பித்துவைத்த. [மாற்றம்] - அதாகிறது "நமக்கன்றிநல்கான்" என்று எல்லாவவஸ்த்தையிலும் உங்களுக்கு 'நான் சொல்லிவைக்கும்அதாதல்; "இதுவோதக்கவாறென்று சொல்லுங்கோள்" என்றதாதல். [சொல்லிச்சென்மின்கள்] - வழிக்கு பாதேயங் காணுமது, அங்கேபோனால் சொல்லப்பார்த்திராதே கிடீ

ப்ர.—யாஜ்ஞகாண்டே [க அ] ஸஹஸ்ரநாமஸ்தோத்ரே, "ஶ்ரூயதே ஹி கபோதேந ஶத்ரு: ஶரணமாகத:। அர்சிதஶ்ச யதாந்யாயம் ஸ்வைஶ்ச மாம்ஸைர் நிமந்த்ரித: ॥ உசஎ॥ ஸ ஹி தம் ப்ரதிஜக்ராஹ பார்யாஹர்தாரமாகதம்। கபோதோ வாநரஶ்ரேஷ்ட கிம் புநர்மத்விதோ ஜந: ॥ உருஅ॥

"ஸ ஹி தம் ப்ரதிஜக்ராஹ பார்யாஹர்தாரமாகதம்। கபோதோ வாநரஶ்ரேஷ்ட கிம் புநர்மத்விதோ ஜந:" இதி யுத்தகாண்டே அபயப்ரதாநப்ரகரணே. புண்படுத்தினபடியென்றது - ஒருதிர்யக்கு தன்னையழியமாறி இப்படி ரக்ஷித்தால், நாம் "ப்ராணாந் பரித்யஜ்ய" என்னும தொழிய, சேதநனைவாஸிக்கேற்றமாக ஒன்று செய்யப்பெற்றிலோமென்று புண்படுத்தினபடியென்றபடி. 'நாம்பண்ணின' இத்யாதிக்குக்கருத்து - ஶரணாகதாநுகூல்யாதிகளாலன்றிக்கே சரண்யமான கபோதகுணாதிசயத்தாலே பலசித்தியானாற்போலே, நம்முடைய ஆநுகூல்யஸங்கல்பாதிகளாலன்றிக்கே சரண்யகுணாதிஶயத்தாலே பலிக்குமயன்று. அவ்யபிசாரியாகமாட்டாது - பலத்தோடே கூட்டுவிக்கமாட்டாதென்றபடி. நல்குதல் - கொடுத்தல் என்றர்த்தமாக்கி, பிறர்க்காக்கான் என்றார்கிழ்; இங்கே நல்குதல், ஸ்நேஹித்தலாக அர்த்தாந்தரம் - தனித்துஇனியது இத்யாதி. இப்பக்ஷத்தில் ஸப்தார்த்தம் - நம்மையொழியவிரும்பானென்று. அன்றிக்கே, ஐகாஸ்யமாவதேதென்ன - தனித்துஇனியது இத்யாதி என்னுதல். இவளுக்குக் கற்பிக்க அவஸரமுண்டோ? என்ன - நெஞ்சொழிந்த இத்யாதி. நெஞ்சொழிந்தபோது - நெஞ்சுஸ்வஸ்த்தமானபோதென்றபடி. இதுக்குத்ருஷ்டாந்தம் - நம்முதலிகள் இத்யாதி. ஸந்தாநங்களாகவென்றது - புத்ரபௌத்ராதிகளெல்லார்க்கு மென்றபடி. "மாற்றம்" என்றது - ஐகாஸ்யமாதல், க்ருபையாதல். "சொல்லிச்சென்மின்கள்" என்றதுக்குபாவம் - வழிக்கு இத்யாதி. பாவாந்தரம் - அங்கேபோனால் இத்யாதி. அதாவது - அவன் வைலக்ஷண்யத்தைக்கண்டால் வாயெழாதேபோகிலும்போம்; ஆகையாலே ப்ரஹதமாகச்சொல்லிக்கொண்டுபோங்கோளென்றபடி. அவகிடக்கிடுங்கோளென்றது - நீங்கள் அங்கேபோகிறது; நான்சொன்ன வார்த்தையைச்சொல்லு

கோள். (அவனுக்கு மறுமாற்றத்துக்குஅவகாசமில்லாதபடி) போகிறபோதே சொல்லிக்கொடு போங்கோள். [தீவினையேன்] - அவைகிடக்கிடுங்கோள்; என்னுடையபாபமிருந்தபடி பாருங்கோள், புத்ரவிக்ரயரோபாதியானேன். அவனும் நானும் கூடவிருந்துஉங்களைக் கொண்டாடுகையன்றிக்கே, உங்களைக்கொண்டு கார்யங்கொள்ளும்படியான பாபத்தைப் பண்ணினேன். வயிற்றிற்பிறந்தாரை யிடுவித்து அபிமதனையழைத்துக்கொள்ளுகையோபாதி புன்மையில்லையே. (ஞ)

ஏழாம் பாட்டு.

பூவைகள்போனிறத்தன் புண்டரீகங்கள்போலுங்கண்ணன்
யாவையும்யாவருமாய் நின்றமாயனேன்னுழிப்பிரான்
மாவைவல்வாய்பிளந்த மதுசூதற்கேன்மாற்றஞ்சோல்லி
பாவைகள்!தீர்க்கிற்றிரே வினையாட்டியேன்பாசறவே.

ஆ — (பூவைகள்.) - நான்வளர்த்த சிறுபூவைகளினுடைய நிறம்போலே யிருந்த திருநிறத்தையும், புண்டரீகங்கள் போன்றிருந்த கண்களையும், அக்கண்களாலே ஸூசிதமான சேதநாசேதந ஸமஸ்த வஸ்துக்களினுடைய நியமநரூபாஸ்சர்யத்தையும், என்னைத்தோற்பித்து அடிமையாக்கின திருவாழியையேந்தின அழகையும், திருக்கைத் தழும்பாலே ஸூசிதமான மதுகைடபாதி ப்ரதிகூல நிரஸந திவ்யசேஷ்டிதங்களையும் அடையாளமாகவுடையனாயிருந்த எம்பெருமானுக்கு என் மாற்றஞ்சொல்லி என்னிழவை நீங்களே தீர்க்கத் திருமத்தனை; என்னாலொரு செயலில்லையென்று, தன்னுடைய நிரவதிக வ்யஸநத்தாலே கலங்கித் தன்பாவைகளை ப்ரார்த்திக்கிறாள்.

ஓ.—ஏழாம்பாட்டில், "சேதநங்களை தூதப்ரேஷணம் பண்ணினவிடத்தில் கார்யகரமாகாதே, எம்பெருமான் கைவிட்டாற்போலே கைவிடுகைக்கு வேறது சேதநங்களாகையோ?" என்று பார்த்து, அசேதநமான பாவைகளை, என்னுடைய ஸத்பாவத்தைக் கெடுக்கவல்லிகோளே என்று ப்ரார்த்திக்கிறாள். [பூவைகளென்று தொடங்கி] - நிரதிசயபோக்யனாய் ஸர்வாந்தராத்மாவாய்நின்றுவைத்து தத்கதசேஷரஸம்ஸ்ப்ருஷ்டனுகையாகிற ஆஸ்சர்யத்தையுடையனாய் கையுந்திருவாழியுமான அழகாலே என்னைத் தோற்பித்து அடிமைகொள்வதுஞ் செய்து, ஆஸ்ரிதவிரோதிகளைப்போக்கும் ஸ்வபாவனானவனுக்கு. [வினையாட்டியேன்] - உங்களைக்கொண்டு கார்யம் தலைக்கட்டவேண்டும்படியான பாபத்தைப் பண்ணினேன். முதலிலே உங்களைப் பற்றுமைக்கடியான பாபத்தைப்பண்ணினேன் என்றுமாம். பாசறவென்பது - வைவர்ண்யத்தோடு பற்றுதல் என்றுமாம்.

மது, அவன்வருமது. இதெல்லாம் கிடக்கிடுங்கோளென்றபடி. "தீவினையேன்" என்றதுக்கர்த்தாந்தரம் - அவனும் இத்யாதி. "புத்ரவிக்ரயரோபாதி" இத்யாதி வாக்யவிவரணம் - வயிற்றில் இத்யாதி; சொர்த்தமாதல். தீவினையேன் வளர்த்தசிறுபூவைகளே, என்மின் னு நாலென்று தொடங்கி, சென்மின்கள் இத்யந்வய:. (அ)

ப.—அநந்தரம், அஸிரூபனாய் அகிலாத்மபூதனாய் ஆஶ்ரிதவிரோதி நிவர்த்தகனானவனுக்கு என் வார்த்தையைச் சொல்லி என் வைவர்ண்யத்தைத் தீர்க்கவல்லிரோளோ? என்று தன்னார்த்த்யதிஶயத்தாலே "அசேதநங்கள்" என்று பாராதே சில பாவைகளைக்குறித்துச் சொல்லுகிறாள்.

பூவைகள்போல்- பூவைப்பூக்கள்போலே (தர்ஶநீயமான), நிறத்தன்-நிறத்தையுடையவனாய், (அதுக்குபரபாகமாம்படி), புண்டரீகங்கள்போலும் - புண்டரீகங்கள் போலேயிருக்கிற, கண்ணன் - கண்களையுடையனாய், (இவ்வஸாதாரணவிக்ரஹத்தளவன்றியே), யாவையும் - ஸகலாசேதநங்களையும், யாவரும் - ஸகலசேதநரையும், ஆய்-சரீரமாகக்கொண்டு தத்ததாகாரேண அவஸ்திதனாய், நின்ற- தத்கததோஷாஸம்ஸ்ப்ருஷ்டனாம்படி, மாயன் - (ஆஶ்சர்யசக்தியுக்தனாகையாலே கலந்திருக்கச்செய்தே) கழலநிற்கவல்லனாய், என் ஆழிப்பிரான் - கையுந்திருவாழியுமான வடிவழகை யடியிலே எனக்கநுபவிப்பித்த மஹோபகாரகனாய், மாவை - (அநுபவிக்கிற கோபிமார்க்கு ப்ரதிபந்தகமான) கேசியை, வல் - ப்ரபலமான, வாய் - வாயை, பிளந்த - கிழித்தவனாய், மதுசூதற்கு - (விரோதிநிரஸநம் ஸ்வபாவஸித்தமான) மதுசூதநனானவனுக்கு, என்மாற்றம் - கிளிகளுக்கும் பூவைகளுக்கும் சொன்ன என்வார்த்தையை, சொல்லி - சொல்லி, பாவைகள்- (பக்ஷிகள்போலே பறந்துபோகாதே என் ஆர்த்திகண்டு பொறுத்தேயிருக்கிற) பாவைகாள்! வினையாட்டியேன் - உங்களைக்கொண்டு காரியங்கொள்ளவேண்டும் பாபத்தையுடைய என், பாசறவு - நிறத்தில் பசுமையழிவை, தீர்க்கிற்றிரே-தீர்க்கவல்லிரோளோ?

ஈ.—ஏழாம்பாட்டில், "பரமசேதநன் பொகட்டுப்போனான் சைதந்யலேஶமுடைய பக்ஷிகள் பறந்துபோயினவும் அந்யபரமாயினவும் ஆயிற்றின; இதுக்கு ஹேது-சேதநங்களாகையோ?" என்று பார்த்து, அசேதநமானபாவையை யிரக்கிறாள். [பூவைகள் இத்யாதி]- பூவைப்பூப்போலே யிருக்கிற நிறத்தையுடையவன். வடிவில் ஸௌந்தர்யத்தை யிருக்கிறபடி. பிரிந்தாருடம்பிலே வைவர்ண்யம் குடிபுகுரும்படியான வடிவு. அகவாயில் தண்ணளியெல்லாம் தோற்றும்படியான கண்ணழகையுடையவன்; பிரிந்தாரைப் பாவைகளின் காலிலே விழவிடுங் கண்ணிறே. [யாவையும் யாவருமாய்நின்ற] - சேதநாசேதநங்களுக்கு ஆத்மாவாய் நின்றவன். "தத³நுப்ரவிஶ்ய ஸச்ச த்யச்சாப⁴வத்". ஸம்ப்ஶ்லேஷதசையில் ஏகவஸ்து என்னலாம்படி கலக்கவல்லவன். [மாயன்] - ஏகவஸ்து என்னலாம்படி கலக்கச்செய்தே தத்³தோ³ஷஸம்ப³ந்த⁴மில்லாத ஆஶ்சர்யபூதன்: கலந்து பிரிந்தவநந்தரம் "இத்தலையில் ஸ்பர்ஶகந்தமுமில்லை" என்று தோற்றும்படியிருக்குமவன். [என்னாழிப்பிரான்] - கையுந்திருவாழியுமான சேர்த்தியைக்காட்டி என்னைத்தோற்பித்த வுபகாரகன். * அழுக்குப்பதித்தவுடம்பிற் காட்டில் பாஞ்சுடருடம்புக்குண்டான வாசி சொல்லுகிறது. [மாவை யித்யாதி] - தன்னையநுபவிக்கைக்கு விரோதியைப் போக்குவானும் தானே யென்கிறது; கேசிவாயிலே அகப்பட்டார்தாம் போலே. [மதுசூதற்கு] - விரோதிநிரஸநம் காதாசித்கமன்று, ஸ்வபாவஸித்தமென்கை. விரோதிநிரஸநம் க்ருஷ்ணாவதாரந்தொடங்கியன்று, முதலே தொடங்கி வருகிறதென்கை. [என்மாற்றஞ்சொல்லி] - "தண்டுழாய்நமக்கன்றிநல்கான்" என்று ஆஶ்ரிதரோடு ஏகரஸனென்கிற பாசுரத்தைச் சொல்லி. பாவைகள்! வினையாட்டியேன் பாசறவு தீர்க்கவல்லிரோளோ? நம்தஶையைக்கண்டு வைத்து

பக்ஷிகள் பறந்துபோயிற்று? நம்தசையைக்கண்டு "என்னைப் விழுகிறதோ?" என்று ஸ்தப்தையாயிருந்தன பாவைகள் என்றிருந்தாள். [விளையாட்டியேன்] - இருவரும் கூடவிருந்து கொண்டாடக்கடவ உங்களைத் தூதுபோகவிடும்படியான பாபத்தைப் பண்ணினேன். [பாசறவு] - பசுமையறுகை, வைவர்ண்யமும் குடிபுகுருகை, பந்துக்களோட்டைப் பற்றறுதியைச் சொல்லவுமாம்.

ஈடு.—ஏழாம்பாட்டு. "பரமசேதநன் போகட்டுப்போனான்; சைதந்யலேசமுள்ளபக்ஷிகள், பறந்துபோவனவும் அந்யபரமாவனவு மாயிற்று; இதுக்குஹேது-சேதநங்களாகையோ?" என்றுபார்த்து, அசேதநமான பாவையையிரக்கிறாள். அசேதநமுங்கூட எழுந்திருந்து கார்யஞ்செய்யவேண்டும்படி காணும் இவள் அவஸ்த்தை.

[பூவைகள்போல்நிறத்தன்] - ஆண்பெண்ணும்படியான நிறம்படைத்தவன். "**பும்ஸாம் த்ருஷ்டிசித்தாபஹாரிணம்**" (பும்ஸாம்த்ருஷ்டிசித்தாபஹாரிணம்) என்னும்படியே, பேற்றுக்குப் பாவையின்காலிலே விழும்படியான வடிவுபடைத்தவன். பூவைப்பூப்போன்றவடிவை யுடையவன். [புண்டரீகங்கள்போலுங்கண்ணன்] - ஒருபூ ஒருபூப்பூத்தாற்போலேகாணும் வடிவும் கண்ணுமிருக்கிறபடி; காயாம்பூ தாமரை பூத்தாற்போலே யிராநின்றது. சேதநாசேதநவிபாகமறக் காற்கீழே விழும்படியான கண்படைத்தவன். [யாவையும்யாவருமாய்நின்றமாயன்] - சிலரோடு கலக்கும்போது அவர்கள் தாங்களாய்க் கலக்குமவன். சேதநாசேதநங்களுக்கு ஆத்மாவாய்நின்றவன், "**தத் அநுப்ரவிஶ்ய ஸச்ச த்யச்சாபவத்**" (ததநுப்ரவிஶ்யஸச்சத்யச்சாபவத்): ஸம்ஶ்லேஷதஶையில் "ஏகவஸ்து" என்னலாம்படி கலக்கவல்லவன். [மாயன்] - அவர்களாய்க் கலவாநிற்கச் செய்தே, தனக்கு அங்கோரு தோற்றற்றுப்போருமவன்; ஸர்வாந்தர்யாமியாயிருக்கச்செய்தே, "**அநஶ்நந்நந்யோ அபிசாகஶீதி**" (அநஶ்நந்நந்யோ அபிசாகஶீதி) என்று, இவற்றின் தோஷம் தன்பக்கல் தட்டாதபடியிருக்கை. ஜகதாகாரனாய்க்கொண்டு இவர்களோடு பிரித்து ப்ரதிபத்திபண்ணவொண்ணாதபடி நிற்கச்செய்தே, அசித்தினுடையபரிணாமமாதல்,

---

ஏழாம்பாட்டு.—பூவைகள் இத்யாதி. கீழெல்லாம் - சைதந்யமுள்ள பக்ஷிகளையிரந்தவள், இப்போது அசேதநத்தை யிரக்கிறதென்? என்ன - பரமசேதநன் இத்யாதி. அசேதநத்தை யிரந்தால் அதுகார்யஞ்செய்யமாட்டுமோ? என்ன, த்வேதா பரிஹரிக்கிறார் - அசேதநமுங்கூட இத்யாதியாலும், அப்ராதிஷேதமாநாந்தைக்கொண்டு இத்யாதி முடிவில் வாக்யத்தாலும்.

இப்போதுவடிவழகைச்சொல்லுகிறதுக்குபாவம் - ஆண்பெண்ணும்படியான இத்யாதி. அப்படிவடிவு ஆணைப்பெண்ணாக்குமோ? என்ன - பும்ஸாம் இத்யாதி. பாவாந்தரம் - பேற்றுக்கு இத்யாதி. ஶப்தார்த்தம் - பூவைப்பூ இத்யாதி. வடிவுக்கும் கண்ணுக்கும் புஷ்பத்தை ஸாம்யஞ்சொல்லுகையாலே ரஸோக்தி - ஒருபூ இத்யாதி. விவரணம் - காயாம்பூ இத்யாதி. இக்கண்ணழகைச் சொல்லுகிறதுக்குபாவம் - சேதநாசேதநவிபாகம் இத்யாதி. அதாவது - "**ஸர்வஸத்த்வமநோஹரஃ**" என்கிறபடியே, சேதநாசேதநவிபாகமற எல்லாம் தன்காற்கீழே விழும்படியான கண்படைத்தவனென்னுதல்; ஸத்த்வஶப்தம் - அசேதநங்களுக்கும் உபலக்ஷணம். அன்றிக்கே, சேதநாசேதநவிபாகமற எல்லார் காற்கீழிலும் நான் விழும்படியான கண்படைத்தவனென்னுதல். "ஆய்நின்ற" என்றதுக்குபாவம் - சிலரோடு இத்யாதி. ஶப்தார்த்தம் - சேதநாசேதநங்களுக்கு இத்யாதி. இதுக்கு ப்ரமாணம் - ததநு இத்யாதி. இப்போது "யாவையும்யாவருமாய்" என்றதுக்குபாவம் - ஸம்ஶ்லேஷ இத்யாதி. "மாயன்" என்றதுக்கர்த்தம் - ஸர்வாந்தர்யாமி இத்யாதி. விவரணம் - ஜகதாகாரனாய் இத்யாதி. பதப்ரயோகத்துக்கு ப்ரயோஜநம் - என்னேடே இத்யாதி. "ஆழிப்பிரான்" என்றதுக்

சித்தினுடைய சுகித்வ துஃகித்வங்களாதல் தட்டாதபடிநிற்கை. என்னோடே பரிமாறுமா போலேகிடீர் எல்லாரோடும் கலந்துநின்றே ஒட்டற்று இருக்கும்படி என்கைக்காக 'யாவையும்யாவருமாய் நின்றமாயன்' என்கிருள்; இல்லை பாகில் இப்போது இது தேட்டமன்றே இப்ரகரணத்துக்கு. * அழுக்குப்பதித்தவுடம்பிற்காட்டில் பரஞ்சுடருடம்புக்கு உண்டான வாசிசொல்லுகிறது [என்னுழிப்பிரான்] - தன்னுடைய அஸாதாரணமான விக்ரஹத்தை எனக்காக்கினவன். யாவையும் யாவருமாய் நின்றமாயனென்று - ஜகதாகாரதையைச் சொல்லிவைத்து, "என்னுழிப்பிரான்" என்கிருரிறே: அஸாதாரணமான வடிவுக்குத் தாம் ஈடுபட்டபடி. "நீராய்நிலனாய்" என்று வைத்து, "கூராராழிவெண்சங்கேந்திக்கொடியேன் பால் வாராய்" என்ருரிறே. "அவனுக்குப்புறம்பாயிருப்பதொன்றில்லை என்றநுஸந்திக்கைக்காக - ஜகச்சரீரன் என்னுங்காட்டில், அத்தோபாதியிது உத்தேஶ்யமாமோ? "பரஞ்சுடருடம்பாய்" என்றும், "அழுக்குப்பதித்தவுடம்பாய்" என்றும் ஒன்றை ஹேயப்ரத்யநீகமாகவும், ஒன்றை ஹேயமிஶ்ரமாகவும் சொல்லிற்றிறே. [மாவையித்யாதி] - இவ்வடிவழகை புஜிப்பிக்கைக்கு விரோதிநிரஸநம்பண்ணுகை இவனுக்குக் காதாசித்கமன்று கிடீர். [மதுசூதற்கு] - புழுக்குறித்தது எழுத்தாமாபோலன்றிக்கே விரோதிநிரஸநம் நித்யமாயிருக்கை. [என்மாற்றஞ்சொல்லி] - கன்மின்களென்றுஉங்களுக்குச்சொன்னத்தைச்சொல்லி. [பாவைகள்தீர்க்கிற்றிரே] - பரமசேதநன் போகட்டுப்போனான், சைதந்யலவமுடையதிவைபோகிறனவில்லை; இனி, நீங்கள் என் ஓுஃவத்தைப்போக்கவல்லிகோளோ? அப்ரதிஷேதமாத்ரத்தைக்கொண்டு இவற்றைக்காரியங்கொள்ளப் பார்க்கிருள். [வினையாட்டியேன்] - உங்களைக் கொண்டாடுகைதவிர்ந்து, கார்யங்கொள்ளும்படியான துஃகத்தை ப்ராப்தையானேன்; "ஶாமஶு:" (மாமுசஃ) என்றுசொன்னவன் விளைத்தசோகத்தை, அசேதநங்களைக்கொண்டு தீர்க்கவிருக்கிற மஹாபாபியானேன். பாசறவு - ஓுஃவம்.

கவதாரிகை - அழுக்குப்பதித்த இத்யாதி. "என்" என்றதுக்குபாவம் - தன்னுடைய இத்யாதி. "எனக்காக்கினவன்" என்கைக்கு இவள் அதிலே ப்ரவணையாயிருக்குமோ? என்ன - யாவையும் இத்யாதி. ஜகதாகாரதையைப்பற்றவும், அஸாதாரணவிக்ரஹம் அநுபாவ்யமென்கைக்கு ப்ரமாணம் - நீராய் இத்யாதி. அஸாதாரணவிக்ரஹத்தோபாதி ஜகதாகாரதை யுத்தேஶ்யமல்லவோ? என்ன - அவனுக்கு இத்யாதி. இது - ஜகதாகாரதை. "இதுஉத்தேஶ்யம், அது உத்தேஶ்யம்" என்கிறதுக்கு நியாமகமேதென்ன - பரஞ்சுடர் இத்யாதி. விரோதிநிரஸநகதநத்துக்குபாவம் - இவ்வடிவழகை இத்யாதி. விரோதிநிரஸநத்வயஞ்சொன்னத்தைப்பற்ற - காதாசித்கமன்று என்றது. "மதுசூதன்" என்று நிரூபித்ததுக்குபாவம் - புழுக்குறித்தது இத்யாதி. ஈஶ்வரனிருக்க, பக்ஷிகளிருக்க, எங்களைச்சொல்லுவானென்? என்ன - பரமசேதநன் இத்யாதிவாக்யத்ரயத்தாலே. அசேதநத்தையிரந்தால் அவை கார்யம் செய்யமாட்டுமோ? என்ன - அப்ரதிஷேதம் இத்யாதி. அர்த்தாந்தரம் - மாமுசஃஇத்யாதி. "பாவைகள்" என்றது - பாவைகாளென்று ஸம்போதநம். தீர்க்கிற்றிரே - தீர்க்கவல்லிகோளோவென்றபடி. வினையாட்டியேன் பாசறவை - பூவைகள்போலென்றுதொடங்கி, தீர்க்கிற்றிரேயென்றந்வயம். (எ)

எட்டாம் பாட்டு.

பாசறவெய்தியின்னே வினையேன் எனையூழிநைவேன்?
ஆசறுதூவிவெள்ளைக்குருகே! †அருள்செய்தொருநாள்
மாசறுநீலச்சுடர்முடி வானவர்கோனைக்கண்டு
ஏசறும்நும்மையல்லால் மறுநோக்கிலள் பேர்த்துமற்றே.

ஆ.—(பாசறவெய்தி) - நீங்களும் சொல்லவேணுமென்று சில குருகுகளை யபேக்ஷிக்க, அவைபோகாதிருந்தவாறே, "பிரிந்த வுத்தரக்ஷணத்திலே தூதப்ரேஷணம் பண்ணுமித்தனையோ? அவன் விளம்பித்தாலல்லவோ தூதப்ரேஷணம்பண்ணுவது!" என்று போகாதிருந்தனவாகக்கொண்டு, அவனையிழந்து இப்படியே வ்யஸநப்படுகிறது எத்தனையாயிரம் ப்ரஹ்மகல்ப முண்டு; ஆதலால், பரதுःகாஸஹிஷ்ணுதைக ஸ்வபாவரான நீங்கள் விமல நீலஜ்யோதிர்மய குந்தளஹாராலங்க்ருதனும் பரமஸௌரிபரிசரித சரண யுகளனுமிருந்த எம்பெருமானுக்கு,அநாத்ருதப்ரோக்தோபாலம்பையாம்படி உன்பக்கலிலே அபிநிவிஷ்டையானாள்; நீ, உபேக்ஷிக்கிலும் உன்னுடைய கடாக்ஷமல்லது வேறொரு துணையுண்டென்றிராள் என்று சொல்லவேணு மென்று குருகுகளை இரக்கிறாள்.

ஒ.—எட்டாம்பாட்டில், முன்னேநின்ற குருகைக் குறித்து, * அயர்வறுமம ரர்களைப்போலே உம்மாலல்லது செல்லாதாளொருத்தி உம்மைப்பெறாதே நோவுபடா நின்றாள் என்று சொல்லென்று அருளிச்செய்கிறாள்.

[பாசறவென்றுதொடங்கி] - பயலைமையை ப்ராபித்து இப்படியே முடியாத பாபத்தைப்பண்ணின நான் எத்தனைகாலம் ஊகைவப்படக்கடவேன்? பழிப்பற்ற சிறகையுடையையாய் என்னைப்போலே பயலைமையோடிராதே, அழகியவெளுத்த நிறத்தையுடையகுருகே! வெள்ளைக்குருகாவது - ஹ்ருதயநைர்மல்யத்தையுடையகுருகென்றுமாம். [அருள்செய்தொருநாள்] - என்பக்கலிலே ஒருநாள் க்ருபைபண்ணி, [மாசறுநீலமென்றுதொடங்கி] - பழிப்பற்ற நீலச்சுடரையுடைய மயிர்முடியையுடையனாயிருந்துள்ள * அயர்வறுமமரர்களதிபதியைக்கண்டு பிறர் ஏசும்ஊஷமைகடந்து தம்மாலல்லது வேறொருவரால் செல்லாத ப்ரக்ருதியாளள் என்றுசொல்லு.

ப.—அநந்தரம், ஸூரிஸேவ்யனான ஸர்வாதிகனைக்குறித்து, உம்மையொழிய வேறொரு பதார்த்தத்தில் கண்வைக்கிறிலளென்று சொல்லி யொருநாள் க்ருபை பண்ணி யருளவேணுமென்று ஒரு குருகை அபேக்ஷிக்கிறாள்.

ஆசு - மமதத்தில் குறை, அறு - அற்ற, தூவி - சிறகை யுடையையாய், வெள்ளை - அகவாயில் சுத்திக்கும் ப்ரகாசகமாம்படி வெளுத்தநிறத்தையுமுடையை யான, குருகே - குருகே! வினையேன் - விரஹத்துக்கு முடிவுகாணாத பாபத்தை யுடைய நான், பாசறவு எய்தி - நிறமழிந்து, இன்னே - இப்படியே, எனையூழி - அநேககல்பங்கள், நைவேன் - சிதிலையாகாநிற்பன்; (ஆனபின்பு), மாசு - அழுக்கு, அறு - அற்ற, நீலச் சுடர் - நீலச்சுடரையுடைத்தான, முடி - மயிர்முடியையுடையனாய், வானவர் - நித்யஸூரிகளுக்கு, கோனை - நிர்வாஹகனான ஸர்வாதிகனை, கண்டு - கண்டு, ஏசு - பழிப்பு,

---

† 'அருள்செய்யொருநாள்' என்பது உரையின் பாடம்.

அறும்-அற்ற, நும்மை - உம்மை, அல்லால் - ஒழிய, பேர்த்து - பின்னை, மற்று-வேறு, மறுநோக்கிலள் - மறித்துப் பார்ப்பதொன்று இல்லையாளுள்; என்று சொல்லி - என்று சொல்லி, ஒருநாள் - ஒருநாள், அருள்செய் - எனக்கு உபகரிக்கவேணும். "அருள் செய்து" என்று பாடமானபோது, என்றுசொல் என்று வாக்யசேஷமாகக்கடவது. ஏசறு மென்று - ஏச்சுக்கு விஷயமான அவஸ்த்தையைக் கடந்தாளென்றுமாம். ஏசு - குற்றம்.

இ.—எட்டாம்பாட்டில், முன்னேநின்ற குருகைக்குறித்து, நித்யஸூரிகளைப் போலே உம்மாலல்லது செல்லாத இவள் உம்மைப்பிரிந்து நோவுபடாநின்றாள் என்று சொல்லென்கிறாள்.

[பாசறவெய்தி] - வைவர்ண்யத்தை ப்ராபித்தென்னுதல், ஸுஹ்ருத்துக்கள்பக்கல் பற்றற்று என்னுதல். பாசறவு - பாசமறுகை. [இன்னே] - தன்னுடைமைக்குப்பாசுரமில்லாமையாலே தன்வடிவைக் காட்டுகிறாள். [வினையேன் இத்யாதி] - பிரிவுக்கு முடிவு காணவொண்ணாத பாபத்தைப்பண்ணின நான். [எனையூழிநைவேன்] - எத்தனைகாலம் நோவுப்படக்கடவேன்? முன்புபிரிந்தார், பத்துமாஸமாதல் பதிலாண்டாதலிறே பிரிந்தது. ஸம்ஶ்லேஷம்விஶ்லேஷத்தோடே வ்யாப்தமானவோபாதி, விஶ்லேஷமும் ஸம்ஶ்லேஷாந்தமாகாதபடியான பாபத்தைப் பண்ணினேன். [ஆசறுதூவி] - பழிப்பற்ற சிறகு. [வெள்ளைக்குருகே] - வடிவும்மநஸ்ஸும் நிர்மலமாகை. பராநர்த்தம் பொறுக்க மாட்டாதொழிகை - மநஸ்ஸுக்கு நைர்மல்யம்; "புறம்போலுள்ளுங்கரியான்" என்கிறவனுக்கு எதிர்த்தட்டாயிருக்கை. [ஒருநாள் அருள்செய்து] - ஒருநாள்க்ருபைபண்ணி. இவ்விஷயத்தில் கடகர்க்கு எல்லாம் செய்தாலும் ப்ரத்யுபகாரமாகாமையாலே, "க்ருபையாலேசெய்தார்கள்" என்றிருக்கவேணுமென்கை. [மாசறு இத்யாதி] - பழிப்பற்ற நீலச்சுடரையுடைய மயிர்முடியையுடையனாய், அத்தை நித்யஸூரிகளையநுபவிப்பித்துக் கொண்டிருக்கிறவனைக் கண்டு. ஒருநீர்ச்சாவி கிடக்கக் கடலிலே வர்ஷிக்குமாபோலே. [ஏசறும்] - க்லேசப்படாநின்றாள் என்னுதல்; பிறர்ஏசும்எல்லை கடந்தாள் என்னுதல். "நும்மையல்லால் மறுநோக்கிலள்பேர்த்து மற்று" என்று கீழ்ப்பாட்டோடே சேரக்கடவது. [நும்மையல்லால் - பேர்த்துமற்று - மறுநோக்கிலள்] - உம்மையொழியவேறு குளிரப்பார்ப்பாரில்லை: "ஸவீஹ்ஸ்வஸ்ஸ்வ" என்று குணகீர்த்தநம்பண்ணி ஹ்ரீக்கு மெல்லையுங் கழிந்தது.

ஈடு.—எட்டாம்பாட்டு. முன்பே நின்ற குருகைக்குறித்து, நித்யசூரிகளைப்போலே உம்மாலல்லது செல்லாதே, உம்மைப்பிரிந்து நோவுபடாநின்றாளென்று சொல் என்கிறாள்.

[பாசறஇத்யாதி] - "இன்னம் சிலகாலங்கழித்தால் அறிவிக்கிறோம்" என்னுமளவாயிருந்ததோ என்னுடைமை? [பாசறவெய்தி] - பாசென்று பசுமையாய், அத்தால் நினைக்கிறது நீர்மையாய், அதுஅறுகையாவது - வைவர்ண்யத்தோடே வ்யாப்தமாகை.

எட்டாம்பாட்டு - பாசறவெய்தி இத்யாதி. "வானவர்கோனை" இத்யாதிகளைக் கடாக்ஷித்தவதாரிகை - முன்பே இத்யாதி. நித்யசூரிகளைப்போலேயென்றது, செல்லாமைமாத்ரத்துக்கு த்ருஷ்டாந்தம்.

"எனையூழிநைவேன்" என்னுமளவுக்குபாவம் - இன்னம்சிலகாலம் இத்யாதி. வைவர்ண்யத்தை யடைந்திருக்கையாலே, "மெள்ளச்செய்கிறோம்" என்று ஆறியிருக்கப்போகாதென்றபடி. 'என்

[இன்னே] - 'எப்படி வைவர்ண்யத்தை யடைந்தது?' என்னில்,— என்னைக்கண்ட உங்களுக்குச் சொல்லவேண்டாவிறே. விஷயம் ஸாவதியாகிலிறே இது அளவுபட்டிருப்பது? இதுக்கு ஒருபாசுரமிட்டுச் சொல்லப்போகாது; உடம்பைக்காட்டுமேத்தனை. பாசுரமிட்டுச்சொல்லப் போகாமை, படியெடுத்துக்காட்டுகிறாள். [வினையேன்] - விஶ்லேஷமும் ஸம்ஶ்லேஷத்தோபாதியாகப் பெற்றிலேன்: அது காதாசித்கமாய், இது நித்யமாயிருக்கிறபடி. [வினையேன்] - கலக்கப் பெறுவிட்டால் மீண்டு கைவாங்க வொண்ணுதபடியான பாபத்தைப் பண்ணினேன். [எனையூழிநைவேன்] - மைதில்யத்தோடே யெத்தனை கல்பம் சென்றது? முன்புபிரிந்தார் பதினாலாண்டாதல், பத்துமாஸமாதல். [ஆசறுதூவி வெள்ளைக்குருகே]-பழிப்பற்ற சிறகை யுடைத்தாய், பரது꞉காஸஹிஷ்ணுதைக்குஉறுப்பான மநோநைர்மல்யத்தை யுடைத்தாயிருக்கிறபடி. [வெள்ளைக்குருகே] - அவன் பிரிகைக்குப் புறம்போலுள்ளும் கரியானுற்போலேயிறே நீங்களும் கூட்டுகைக்கு உள்ளும்புறம்பும் நிர்மலமாயிருக்கிறபடி. [அருள்செய்தொருநாள்] - ஒருபோது க்ருபைபண்ணி. இவ்வளவில் முகங்காட்டுகையாகிறஇதுக்குமேற்பட அருளில்லையிறே; வெறும் உங்கள் க்ருபையாலே செய்திகோ ளத்தனையிறே [மாசறுவித்யாதி] - பழிப்பற்று நெய்த்திருந்துள்ள மயிர்முடியை யுடையனுய், அம்மயிர்முடியை நித்யஸூரிகள்பேண இருக்கிறவனைக் கண்டு. ஒருநீர்ச்சாவி கிடக்கக் கடலிலே வர்ஷிக்கிறவனைக் கண்டு. [ஏசறும்] - க்லேஶப்படாநின்று ளென்னுதல், நாட்டார்ஏசும்படியிலே கடந்தாளென்னுதல். ஏசறுங்கோள் - வடிவைக் காட்டுங்கோ ளென்றுமாம். அதாகிறது-என்னுடைய வைவர்ண்யத்தை நீங்கள் உங்களுடம்பிலேயணிந்து காட்டுங்கோளென்றபடி. [நும்மையல்லால் மறுநோக்கிலள்] - உம்மையொழிய வேறு குளிர்ந்த விழி யில்லை. வ்ருத்தகீர்த்தநத்துக்கும் உம்மையொழிய வேறொருவரையுடைய

*னைக்கண்ட' இத்யாதிக்கு பாவம்- நானிருக்கிற ப்ரகாரத்தைக் கண்டறியுமித்தனை என்று. "ஏ என்றதுக்கு - வடிவைக்காட்டுகிறதாகக் கீழருளிச்செய்து, அர்த்தாந்தரம் - விஷயம் இத்யாதி படியெடுத்துக் காட்டுகிறாள் என்னுமளவும். அதாவது - பாசுரமிட்டுச் சொல்லப்போகா தென்றபடி. 'படியெடுத்துக்காட்டுகிறாள்' என்றது, ஸோக்தி. தேஹத்தைக் காட்டுகிறாளென்று ஸ்வபாவார்த்தம்; ஆபரணஜாலமென்று த்வநி. "வினையேன்" என்றதுக்கு அர்த்தத்வயம்; முந்தினது - விஶ்லேஷமும் இத்யாதி. அதாவது, ஸம்ஶ்லேஷம்விஶ்லேஷாந்தமானவோபாதி, விஶ்லேஷமும் ஸம்ஶ்லேஷாந்தமாகாதபடியான பாபத்தைப்பண்ணினே னென்றபடி. விவரணம் . அதுகாதாசித்கம் இத்யாதி. நித்யமாயிருக்கிறபடி யென்றது - நித்யமாயிருக்கும்படியான பாபத்தைப் பண்ணினேனென்றபடி. அர்த்தாந்தரம் - கலக்க இத்யாதி. ஶப்தார்த்தம் - மைதில்ய இத்யாதி. அநேககல்பம் ப்ரிவிலையாகாநின்றேனென்று ஶப்தார்த்தம். "ஆசறுதூவி, வெள்ளை" என்கிற பதத்வயத்தாலும் - பாஹ்யாந்தர சுத்தியைச்சொல்லுகிறது. ஸத்ருஷ்டாந்தமாக விவரணம் - அவன்பிரிகைக்கு இத்யாதி. ஶப்தார்த்தம் - ஒருபோது இத்யாதி. க்ருபைபண்ணுவது தயாளுக்களாகிலன்றோ? அவற்றின் தயாளுத்வ நியாமகமேதென்ன - இவ்வளவில் இத்யாதி. வெறும் உங்கள் க்ருபையாலேயன்றோ முகங்காட்டினது; ஆகையாலே, மேலுள்ளதும் க்ருபையாலே செய்யவேணுமென்று கருத்து. "வானவர்கோனை" என்றதுக்கு வெறுப்பிலே பாவம் - ஒருநீர்ச்சாவி இத்யாதி. "ஏசறும்" - து꞉கப்படாநின்றுளென்று முழுச்சொல்லு. ஏசறுங்கோளென்றால் - து꞉கப்படுங்கோளென்று காட்டுமதொழிய, வடிவைக்காட்டுங்கோளென்று சொல்லுமோ ? என்ன - அதாகிறது இத்யாதி. அதாவது - விரஹவைவர்ண்யத்துக்கு எல்லை வெளுப்பாகையாலே, உங்களுடம்பில் வெளுப்பைக்காட்டி, இப்படியிருக்கிறாளென்று சொல்லுங்கோளென்றபடி. * வெள்ளைக்குருகிறே. அணிந்து - ஏறிட்டு. நும்மையல்லால் மறுநோக்கிலள் - உம்முடைய கடாக்ஷமொழிய வேறொருவர்நோக்கை யுடையவ ளல்லளென்று ஶப்தார்த்தம்,

ளல்லள்; "ஸகீபிஸ்ஸஹமாஸ்வ" (ஸகீபிஸ்ஸஹமாஸ்வ) என்னும் நிலையுங் குலைந்தது. [நும்மையல்லால்] - "வாராநின்றேம்" என்று ஸ்ரீபரதாழ்வானைப்போலே ஆள் வரவிடத்தரியாது. [நும்மையல்லால்] - ஸ்வரூபகுணங்களை யநுஸந்தித்துதரிக்கும்அளவல்லள். [மறுநோக்கிலள்] - உம்மையொழிய பந்துக்கள் நோக்கும் நிலை கழிந்தது. இப்பாட்டுக்கு க்ரியை - கீழிற்பாட்டிலேயாதல், மேலிற்பாட்டிலேயாதல். தமிழர் "வினையெச்சமாய்க் கிடக்கிறது" என்று சொல்லுவார்கள். அதாவது, 'மறுநோக்கிலள்பேர்த்துமற்று' என்று சொல்லுங்கோள் என்கிற இத்தனையுமிட்டுச் சொல்லவேண்டுகை. (அ)

ஒன்பதாம் பாட்டு.

பேர்த்துமற்றோர்களைகண் வினையாட்டியேன் நானொன்றிலேன்
நீர்த்திரைமேலுலவி இரைதேரும்புதாவினங்காள்!
கார்த்திரள்மாமுகில்போல் கண்ணன்விண்ணவர்கோனைக்கண்டு
வார்த்தைகள்கொண்டருளியுரையீர் வைகல்வந்திருந்தே.

ஆ.—(பேர்த்து) - ஸஸ்யங்களுலராநிற்க மேகங்கள் கடலிலே வர்ஷிக்குமா போலே, தன்னுடைய கடாக்ஷமொழிய வேறொருகதி யின்றியே நான் தளராநிற்கத் தன்னுடைய ஸ்வரூப ரூபகுண விபூதிவிஷய ஸர்வகால ஸாக்ஷாத்காரஜநித நிரவதிகாநந்த மஹார்ணவ அந்தர்நிமக்நரான * அயர்வறுமமரர்களுக்கே தன்னை யநுபவிக்கக் கொடுக்குமித்தனையோ? என்று எம்பெருமானுக்கு விண்ணப்பஞ்செய்து, பின்னை அவனருளிச் செய்தருளின வார்த்தைகளைக்கேட்டு, "ப்ரஹ்மாஸநே வஸ்தித:" என்னும் பரக்ரியையாலேயிருந்து என் பக்கலிலே க்ருபையைப்பண்ணி எனக்கெப்போதும் அவற்றைச்சொல்லி என்னை தரிப்பிக்கவேணுமென்று சிலபுதாவினங்களை நோக்கிச் சொல்லுகிறாள்.

இதுக்கு நாலுவிதமாக பாவம் : முந்தினது - விருத்தகீர்த்தநத்துக்கும் இத்யாதி. தோழிமாரில்லையோ? என்ன - ஸகீபிர் இத்யாதி: "ஸகீபிஸ்ஸஹமாஸ்வ" என்கிறதுக்கு ஆகாரங் கண்டுகொள்வது. இரண்டாம்பாவம் - வாராநின்றேம் இத்யாதி. மூன்றாம்பாவம்-ஸ்வரூபகுணங்களை இத்யாதி. நாலாவது - உம்மையொழிய இத்யாதி. ஆக, "ஸகீபிஸ்ஸஹமாஸ்வ" என்னும் நிலை குலைந்ததென்றும், ஆள்வரவிடத் தரியாளென்றும், ஸ்வரூபகுணாநுஸந்தாநத்தால் தரியாளென்றும், பந்துக்களோடே கூடி காலக்ஷேபம்பண்ணி தரியாளென்றும் நாலுபாவம். இந்த நாலர்த்தத்துக்கும், "நும்மையல்லால்" என்றதுக்கு - உம்மை ப்ரத்யக்ஷமாக அநுபவித்தாலொழிய என்றுபொருள். கீழ் - குளகமாக அருளிச்செய்து, க்ரியை அத்யாஹார்யமென்று பரிஹாராந்தரம் - தமிழர் இத்யாதி. வினையெச்சம் - க்ரியாசங்கோசம். அதாவது - க்ரியை யத்யாஹார்யமென்றபடி. சொல்லுங்கோளென்றது - க்ரியை. 'பாசறவெய்தி' என்று தொடங்கி, 'கண்டு ஏசறுங்கோள்'; 'பேர்த்துமற்று' - அதுக்குமேலே, 'நும்மையல்லால் மறுநோக்கிலள்' என்று சொல்லி 'வினையாட்டியேன் பாசறவு தீர்க்கிற்றிரே' என்ற கீழிற்பாட்டோடே க்ரியை. மறுநோக்கிலளென்று சொல்லுங்கோளென்னுதல். 'புறம்போலுள்ளுங்கரியானை' என்றது நாய்ச்சியார்திருமொழி, "பொருத்தமுடையநம்பியை" இத்யாதி. புறவாய்போலே யகவாயும் கறுத்திருக்குமவனை இத்யர்த்தம். (அ)

ஓ.—ஒன்பதாம்பாட்டில், நீங்கள்சென்றால் அவன் வந்திலனேயாகிலும் அங்குத்தை வார்த்தையைக் கொண்டு வந்து நாள்தோறும் அத்தையே யிருந்து சொல்லி உஜ்ஜீவிப்பிக்கவேணுமென்று சில புதாவினங்களை இரக்கிறாள்.

[பேர்த்தென்று தொடங்கி] - அத்யந்தம் குணவானான எம்பெருமானாலே இகழப்பட்ட மஹா பாபியான நான் உங்களையொழிய வேறு சிலநிர்வாஹகரை உடையே னல்லேன். தரையிலே ஸஞ்சரிக்குமாபோலே நீர்த்திரைமேலே ஸஞ்சரித்து இரை தேட வல்லீகோளான புதாவினங்கள்! புதா - பெருநாரை. [கார்த்திரளென்று தொடங்கி] - கறுப்பெல்லாம் திரண்டாற்போலே யிருப்பதொரு மஹாமேகம்போலே யிருக்கிற நிறத்தையுடையனாய் அத்யந்த சீலவானாய் அழகும் குணங்களும் * அயர்வறு மமரர்களை ஸ்ருஜிக்கக்கொடுத்து அவர்களைப் பிரியமாட்டாமையாலே எனக்கெட்டாதிருக் கிறவனைக்கண்டு. [அருளி] - என்பக்கலிலே அநுக்ரஹத்தைப்பண்ணி.

ப.—அநந்தரம், அந்தபரத்வத்தோடே ஆஸ்ரித ஸுலபனான க்ருஷ்ணனைக் கண்டு வார்த்தை கேட்டுவந்து சொல்லவேணுமென்று சில பெருநாரைகளைப் பார்த்துச் சொல்லுகிறாள்.

நீர்-நீரின், திரை - திரை, (மேலிடாதபடி யவற்றையமுக்கி), மேல் - மேலே, உலவி - உலாவி, இரை - (உங்களுக்கு போக்யமான) ஆமிஷத்தை, தேரும் - ஆராயும், புதாவினங்காள் - பெருநாரையினங்காள்! வினையாட்டியேன் - (உதவப்ராப்தனானவன் உதவாதபடியான)பாபத்தையுடையேனான, நான் - நான், பேர்த்து - (உங்களையொழிய, மற்று - வேறு, ஓர் - அத்விதீயமாயிருப்பதொரு, களைகண் - ரக்ஷகவஸ்து, ஒன்று - ஒன்று, இலேன் - உடையேனல்லேன்; (ஆனபின்பு), கார் - கார்காலத்தில், திரள் - திரண்ட, மாமுகில்போல் - மஹா மேகங்கள்போலே(அபிரூபனாய்), கண்ணன்-அவதார முகத்தாலே ஆஸ்ரிதர்க்குஅத்யந்தஸுலபனாய்,விண்ணவர்-(அவ்வழகைப்)பரமபதவாசிகளு க்கநுபவிப்பிக்கும், கோனை - ஸர்வாதிகனை, கண்டு - கண்டு, வார்த்தைகள் - (அவனரு ளிச்செய்யும்) வார்த்தைகளை, கொண்டு - கொண்டு, அருளி - (என்பக்கலிலே) க்ருபை பண்ணி, வந்திருந்து - வந்திருந்து, வைகல் - (இதுதானே போதுபோக்காம்படி) நெடும் போது, உரையீர் - சொல்லவேணும். 'போதா' என்பாருமுளர்.

இ.—ஒன்பதாம் பாட்டில், சில புதாவினங்களைக்குறித்து, நீங்கள் சென்றால் அவன் வந்திலனாகிலும் அங்குத்தை வார்த்தையைக் கொண்டுவந்து நித்யமாக உஜ்ஜீவிப் பிக்கவேணுமென்கிறாள்.

[பேர்த்து இத்யாதி] - உங்களையொழிய வேறொரு நிர்வாஹகரை உடையே னல்லேன். வடகர்பக்கலிலும் அநந்யகதித்வமே ஆவிஷ்கரிக்கக்கடவது. [வினையாட்டி யேன் நான்] - ரக்ஷகனாய் குணாதிகனானவன் உபேக்ஷிக்கும்படி பாபத்தைப்பண்ணின நான். ஸாக்ஷாத் ரக்ஷகன் பொகட்டுப்போக, உங்கள்காலிலே விழும்படி பாபத்தைப் பண்ணினேன். [நீர்த்திரைமேலுலவி] - தரையிலே ஸஞ்சரிக்குமாபோலே நீர்த்திரை மேலே ஸஞ்சரிக்கவற்றாயிருக்கை. "நடுவே சடலுண்டு" என்றுஇருக்கவேண்டாவிறே உங்களுக்கு; ஆவரண ஜலம், விரஜை, இவை கண்டு இருக்க வேண்டாவிறே. [இரைதேரும்] - *உபவாஸக்ருஶரை ஜீவிப்பித்தன்றோ நீங்கள் ஜீவிப்பது? [புதா]-

பெருநாரை. [கார்த்திரள் மாமுகில்போல் கண்ணன்] - கறுப்பெல்லாந் திரண்டாற் போலேயிருக்கிற மஹா மேகம்போன்ற வடிவை யுடையவன். கார்காலத்தில் திரண்ட மஹாமேகமென்றுமாம். [மாமுகில்] - மாறாதே கொடுக்கவல்ல முகில். [கண்ணன்] - தன்னைப்பிறர்க்காக்கி வைக்குமவன். மத்ஸ்யத்துக்குத் தண்ணீர் வார்ப்பாரைப்போலே இவ்வழகையும் குணத்தையும் நித்யஸூரிகளை யநுபவிப்பித்திருக்கிறவனை. [கண்டு வார்த்தைகள்கொண்டு] - காணப்பெற்று, சொல்லும் வார்த்தைகள் கேட்கக்கடவி கோளிறே. "ஸாமகாயந்" என்று ஜலத்தோடே வ்யாப்தமான வார்த்தைகளைக் கொண்டு. [அருளி] - என்பக்கலிலே க்ருபைபண்ணி. [வந்திருந்து - வைகல் உரையீர்] - அங்குத்தை வர்த்தைகளைக்கேட்டு வந்திருந்து, நாள்தோறும் எனக்குச்சொல்லி உஜ்ஜீவிப்பிக்கவேணும்.

௯.—ஒன்பதாம்பாட்டு. சிலபுதாவினங்களைக் குறித்து, நீங்கள் சென்றால் அவன் வந்திலனாகிலும் அங்குத்தைவார்த்தையைக் கொண்டுவந்து என்னை நித்யமாக உஜ்ஜீவிப்பிக்கவேணு மென்கிறாள்.

[பேர்த்துமற்றோர்களைகண்வினையாட்டியேன் நானொன்றிலேன்] - தன்பரிகரங் களிலே யொன்றைக்கொண்டு போதுபோக்குகிறாள் என்னுமளவுங் குலைந்தது. வெறுமையை முன்னிடுமத்தனையிறே ததீயர்பக்கலிலும். உங்களையொழிய வேறொருரக்ஷகரை யுடையே னல்லேன். [மற்றோர்களைகண்] - பிராட்டிக்கு லங்கைக்குள்ளே ஒருத்ரிஜடையாகிலு முண்டாயிற்று; காட்டிலே விட்டுப்போந்த தனிமையிலே ஒருவால்மீகிபகவானாகிலு முண்டாயிற்று; பர்த்தாபோகட்டால் ஒருபிதாவாகிலுமுண்டாகவேணுமிறே. [வினையாட்டியேன்] - நாயகன்தானே ரக்ஷகனுமாயிருக்குமிறே; அப்படிப்பட்டவன் கைவிட்டுப்போம் படியான பாபத்தைப் பண்ணினேன். [நீர்த்திரைமேலுலவி] - ஆவரணஜலம், விரஜை இவையெல்லாம் கடந்தேறவற்றா யிருக்கை. [உலவி] - நிலத்திலே சஞ்சரிக்கிறாப்போலே நீரிலே ஸஞ்சரிக்கிறபடி. [இரைதேரும்] - இவற்றின் நடையோடொக்க இதுவுமொரு

ஒன்பதாம்பாட்டு.—பேர்த்து இத்யாதி. "வார்த்தைகள்கொண்டருளியுரையீர்" இத்யாதியைக்கடாக்ஷித்தவதாரிகை - சிலபுதாவினம் இத்யாதி. புதாவென்று - நாரையில் அவாந்தரபேதம்.

"பேர்த்துமற்று" என்றது - மீளவுமென்றபடி. "நானொன்றிலேன்" என்னுமளவும் அநுவாதமாய், அவனையொழிய ரக்ஷகமில்லையென்கிறார் - தன்பரிகரங்களிலே இத்யாதி. அதாவது - "ஸர்வ்விஹீநஸ்ஸர்வ்வஸ்ரோவ" என்னும்நிலை குலைந்ததென்றபடி. அன்றிக்கே, உங்களையொழிய ரக்ஷக ரில்லையென்று விவக்ஷித்து, பகவத்விஷயத்திலேயன்றோ ஆகிஞ்சந்யாநந்யகதித்வ புரஸ்காரம், ஆசார்யவிஷயத்திலும்வேணுமோ? என்ன - வெறுமையை இத்யாதி. வாக்யத்வயமும் ஆசார்ய விஷயமாதல். ஸப்தார்த்தம் - உங்களை இத்யாதி. மற்று களைகணிலேன் என்னாதே, "ஓர்" என்றதுக்குபாவம் - பிராட்டிக்கு இத்யாதிவாக்யத்ரயத்தாலே. பிதாவாகிலுமுண்டாகவேணுமிறேயென்றது - நளன்விட்ட தமயந்திக்கு பிதாவுண்டானமையைப்பற்ற. பிறரால்நலிவுபடுகிற இடங்களிலே நாயகன் ரக்ஷிக்கிறவாகாரமுமுண்டு; அத்தையருளிச்செய்கிறார் - நாயகன்தானே இத்யாதி. நாயகன் தானே ரக்ஷகனென்றது - "ஹராரௌஜஸ்ரோஸ" இத்யாதியைப்பற்ற. பரமபதத்திலே தூதுவிடுகிறா ளாகையாலே அருளிச்செய்கிறார் - ஆவரணஜலம் இத்யாதி. இவற்றின் நடையோபாதி இவை யிரைதேடுகிறதும் தன்கார்யத்துக்குஉடல் என்றுவிவக்ஷித்தருளிச்செய்கிறார்-இவற்றின்நடை இத்யாதி.

பௌஷ்கல்யமிறே இவளுக்கு. நான் உபவாஸக்ருமையா யிருக்க, உங்களுக்கு மிடற்றுக்குக்கீழிழியாதிறே; என்னையும் உங்களைப்போலே யாக்கினலன்றோ ஜீவித்ததாவது? [புதா]-பெருநாரை. [கார்த்திரள்மாமுகில்போல்கண்ணன்] - எல்லாவிடாயும் ஆறுங்கிடீர் அவ் வடிவைக்காணப்பெறில்! இவள்கண்ணுக்குக் கறுப்பாயிருக்கிறதிறே. கறுப்பெல்லாம் திரண்டாற்போலே யிருக்கிற மஹாமேகம்போன்ற வடிவையுடையவன்; கார்காலத்தில் திரண்ட மஹாமேகமென்றுமாம். [மாமுகில்] - மாறாதே கொடுக்கவல்ல முகில். [கண்ணன்] - அவ்வடிவுபோலும் அல்லகிடீர் அகவாயில் தண்ணளி யிருக்கும்படி! விண்ணவர்கோனைக்கண்டு] - விடாய்த்தாரிருக்க, மீனுக்குத் தண்ணீர் வார்த்திருக்கிறவனை. பிரிகைக்கு ஸம்பாவனையில்லாதார்க்குத் தன்னைக்கொடுத்துக்கொடு நிற்கிறவனைக் கண்டு [வார்த்தைகள் கொண்டு] - வந்திலனாகிலும், சில வார்த்தைகள் சொல்லக்கடவனிறே. காட்சிக்குமேலே வார்த்தையுங்கேட்க இறே நீங்கள் புகுகிறது. "பாவிநீயென்றொன்று சொல்லாய்" என்னுமவரிறே. இப்போதுஇவர்க்கு "மாட்டேன்" என்னும் வார்த்தையும் அமையும். வார்த்தைகேட்கைக்கும் முடியப்போய்த் திரியவோ? என்னில்: [வார்த்தைகள் கொண்டருளி - வந்திருந்து - வைகலும் - உரையீர்] - ஒருகால்போய் அவன் வார்த்தையைக்கேட்டு என்பக்கலிலே க்ருபையைப் பண்ணிவந்திருந்து, அத்தை எனக்கு எப்போதுஞ் சொல்லி என்னை உஜ்ஜீவிப்பியுங்கோள்! அன்றிக்கே, விண்ணவர்கோனை கண்ணனைக்கண்டு, வார்த்தைகள்கொண்டு - "ஶாஸநம்" (மாஸாசஃ) என்று ஹலத்தோடே வ்யாப்தமான வார்த்தைகளைக்கொண்டு, என்பக்கலிலே க்ருபையைப்பண்ணிவந்திருந்து வைகலுமுரையீர் என்றுமாம். (க)

பௌஷ்கல்யம் - குறைவறுதி. இரைதேடுகிறது தன்கார்யத்துக்குஉடலானபடியைக்காட்டுகிறாள் - நான் உபவாஸ இத்யாதி. நாங்களிப்போது இரைதேடவில்லையோ? என்ன-என்னையும் இத்யாதி. இப்போது வடிவைச்சொல்லுகிறதுக்குபாவம் - எல்லாவிடாயும் இத்யாதி. வடிவில்கறுப்புச்சொல்லுகிறதிலே ரஸோக்தி - இவள்கண்ணுக்கு இத்யாதி. கறுப்பாலே - குளிர்த்தியைச்சொல்லி, குளிர்ந்திருக்கிறதென்று ஸ்வபாவார்த்தம்; சாடுவுக்கு, அஸஹ்யமாயிருக்கிறதென்றபடி. ஸப்தார்த்தம் - கறுப்பெல்லாம் இத்யாதி. மேகத்துக்கு மஹத்தையேதென்ன - மாறாதே இத்யாதி. "மாமுகில்போல்" என்றது - வடிவாதல், ஔதார்யமாதல். இப்பக்ஷத்தில், "மா" என்று - ஶ்லாக்யதை. "கார்த்திரள்" இத்யாதியாலே - வடிவைச்சொன்னவநந்தரம், "கண்ணன்" என்கிறதுக்குபாவம் - அவ்வடிவு இத்யாதி. "விண்ணவர்கோன்" என்றதுக்குவெறுப்பாகபாவம் - விடாய்த்தார் இத்யாதி. விவரணம் பிரிகைக்கு இத்யாதி. ஸம்பாவனை - யோக்யதை. அவனைக்கொண்டென்னாதே "வார்த்தைகள்கொண்டு" என்கிறதுக்குபாவம் - வந்திலனாகிலும் இத்யாதி. "கண்டு - வார்த்தைகள்" என்றுகூட்டிபாவம் - காட்சிக்கு இத்யாதி. வருகிறேனென்றவார்த்தை யென்னாதே, வெறுமனே, "வார்த்தைகள்" என்கிறதென்? என்ன - பாவி நீ இத்யாதி. பலிதம் - இப்போது இத்யாதி. "வார்த்தைமாத்ரம் தாரகமாயிருக்கும்" என்கைக்கு - "கிஂ ஹஸீதா ஹநூமந் தத்தஃகுஶலவாக்யம்... ஸந்தேஶவாக்யஜீவிதே..." என்றத்தை ப்ரமாணமாகக் கண்டுகொள்வது. வதேந - வசீதாவசநேநேத்யர்த்தஃ. முடியப்போய்த்திரியவோவென்றது - இதுவே யாத்ரையாய்த்திரியவோ என்றபடி. "வார்த்தைகள்" என்றது - "வாரான், வரும்" என்கிற வார்த்தைகளாதல், ஹலவ்யாப்தமான வார்த்தைகளாதல். இப்போது இவர்க்குமாட்டேனென்னும் வார்த்தையுமென்றது - அவனைப் பிரிந்துமுடியும் தசையில், "அவர்பக்கலுள்ளதொன்று" என்று தன்ஸத்தை தரிக்கைக்காக "மாட்டேன்" என்னும்வார்த்தையு மமையு மென்றபடி. 'பேர்த்துமற்றோர்' தொடங்கி, 'வார்த்தைகள்கொண்டருளி - வந்திருந்து வைகலும் உரையீர்' இத்யந்வயஃ. (க)

பத்தாம் பாட்டு.

வந்திருந்துஉம்முடையமணிச்சேவலும்நீருமெல்லாம்
அந்தரமொன்றுமின்றி அலர்மேலசையுமன்னங்காள்!
என்திருமார்வற்கு என்னை இன்னவாறிவள்காண்மினென்று
மந்திரத்தோன்றுணர்த்தியுரையீர் மறுமாற்றங்களே.

ஆ.—(வந்திருந்து) - திருவோலக்கத்திலே எழுந்தருளியிருந்தஸமயத்தில் திருவுள்ளம் அந்யபரமாயிருக்கிறபோது சொல்லாதே, அவ்வோலக்கங்கிளம்பி திவ்யாந்தஃபுரத்திலே எழுந்தருளினால் அங்கே பிராட்டியுடைய திவ்யஸந்நிதியிலே திருவுள்ளத்திலே படும்படி என்திறம் விண்ணப்பஞ்செய்து, அவனருளிச்செய்தருளின மறுமாற்றங்கொண்டு என்னருகேவந்திருந்து சொல்லவேணுமென்று, அநவரத ஸம்ஶ்லேஷைகஸோஹமமான அன்னங்களைக்குறித்துச் சொல்லுகிறாள்.

ஒ.—பத்தாம்பாட்டில், தன்பாடேவந்து ஸாஹிதமாய்க்கொண்டு ஸஞ்சரிக்கிற ஹம்ஸமிதுநங்களைக்குறித்து, பிராட்டியும் தானுங்கூட ரஹஸ்யமாக அநந்யபரனாய் எழுந்தருளியிருந்தவிடத்திலே என்தசையை விண்ணப்பஞ்செய்து மறுமாற்றம் எனக்கு வந்து சொல்லவேணுமென்று அருளிச்செய்கிறாள்.

[வந்திருந்தென்று தொடங்கி] - உம்முடைய ஶ்லாக்யமான சேவலும் நீரும் ஸபரிகரமாகவந்து ஓர் இடர்இன்றிக்கே அவர்மேலே ஸம்ஹோமங்களாலே அசைந்து வருகிற அன்னங்காள்! [என்திருவென்று தொடங்கி] - என் ஸ்வாமிநியான பெரிய பிராட்டியாரைத் திருமார்விலே உடையவனானவனுக்கு இப்படி இவள் துர்தசையானாள் என்று.

ப.—அநந்தரம், பரத்வஸௌலப்ய ப்ரகாஶகமான ஶ்ரிய:பதித்வத்தையுடையவனுக்கு, ஏகாந்தத்திலே, இவள்படி இதுகாணும் என்றொரு வார்த்தைசொல்லி, அவன்சொன்ன மறுமாற்றங்களெல்லாம் எனக்குச் சொல்லவேணுமென்று அன்னங்களையர்த்திக்கிறாள்.

வந்து - (அபேக்ஷாநிரபேக்ஷமாக) வந்து, இருந்து - (அந்யபரதையின்றியே ஆபிமுக்யம்பண்ணி) இருந்து, உம்முடைய - உங்கள் கண்ணுக்கினிய, மணி - ஶ்லாக்யமான, சேவலும் - சேவல்களும், நீரும் - நீரும், எல்லாம் - மற்றுமுண்டான பந்துவர்க்கங்களுமெல்லாங்கூட, (ஸம்ஶ்லேஷரஸத்துக்கு), ஒன்றும் - ஒரு, அந்தரம் - இடையூறு, இன்றி - இன்றியே, அலர்மேல் - புஷ்பங்களின்மேலே, அசையும் - உலாவுகிற, அன்னங்காள் - அன்னங்காள்! எம் - என்போல்வாரான பெண்பிறந்தார்க்கு ஸ்வாமிநியான, திரு-லக்ஷ்மியை, மார்வற்கு - திருமார்பிலேயுடையவனுக்கு, என்னை - என்னை, இவள் - இவள், இன்னவாறு - இப்படி இவ்வண்ணம், ஆனாள் - ஆனாள், காண்மின் - காணும், என்று - என்று, மந்திரத்து - அவனும் (அவளுமான) ஏகாந்தஸ்தலத்திலே, ஒன்று - ஒருவார்த்தை, உணர்த்தி - அறிவித்து, மறுமாற்றங்கள் - (அவன் அருளிச்செய்த) மறுமாற்றங்களை, உரையீர் - சொல்லுங்கோள்,

இ.—பத்தாம்பாட்டில், சில ஹம்ஸமிதுநங்களைக்குறித்து, பிராட்டியும்தானு மான ஏகாந்தத்திலே என்தசையை விண்ணப்பஞ்செய்து மறுமாற்றம் வந்துசொல்ல வேணுமென்கிறாள்.

[வந்து] - அழையாதிருக்க நீங்களேவந்து, மஹாராஜரிருந்தவிடத்தே வந்து உபகரித்தவரைப்போலே யிருந்ததீ உங்கள் நீர்மை! [இருந்து] - என் ஆர்த்திக் கெல்லாம் உடன்கேடராயிருந்து. [உம்முடைய மணிச்சேவலும் நீரும்] - ஸ்லாக்ய மாய் ஹவ்யமான சேவலும், அப்படி இருக்கிற நீரும். பிரிந்து, தானும் உடம்புவெளுத் துப் பேடையையும் உடம்புவெளுக்கப்பண்ணும் சேவலைப்போலன்றிக்கே இருக்கை. [எல்லாம்] - "ஸவாஸநாஸவஸநாஸஹண:" என்கிறபடியே ஸபரிகரமாக. [அந்தர மொன்றுமின்றி] - ஸம்ஶ்லேஷத்துக்கு வர்யகமான பிரிவுமின்றிக்கே, பூவின்மேல், கலவி யால்வந்த ப்ரீதியோடே ஸஞ்சரிக்கிற அன்னங்காள்! மிதுநமாகில் பூவிலும் ஸஞ்சரிக் கலாமாகாதே. [என் திருமார்வற்கு] - என் ஸ்வாமிநியான பெரிய பிராட்டியாரைத் திருமார்விலே உடையவற்கு: அவளருகேயிருக்க, அடியில்லாதாரைப்போலே நோவுபடு கிறபடி கண்டிகோளே. [என்னை] - அச்சேர்த்தியிலே அடிமைசெய்ய ஆசைப்பட்டு இழந்திருக்கிறவென்னை. [இன்னவாறிவள் காண்மினென்று] - இப்படி தர்மதையாளுள் இவளென்று, "இவளுடைய வைவர்ண்யத்தைத் தங்களுடம்பிலே ஆவிஷ்கரித்துக் காட்டவல்லபோலே காணுமிவை" என்று சீயர் அருளிச்செய்வர். [மந்திரத்து] - உங்கள் வார்த்தை விலைசெல்லும்படி அவளும்அவனுமான ரஹஸ்யத்திலே: ப்ரேமாந்த ராய் "வயஸ்தாம்" என்கிறவர்கள் ஸந்நிதியொழியச் சொல்லுங்கோள்; பராக்குக்கு ஸம்பாவனையுள்ள ஓலக்கத்திலே சொல்லாதே கொள்ளுங்கோள். [ஒன்றுணர்த்தி]- மத்யமபதத்திற் சொன்னபடியே அநந்யார்ஹதையை விண்ணப்பஞ்செய்து. [உரை யீர் மறுமாற்றங்களை] - பூர்வாபராஸ்த்தைப்பார்த்து அவன் சொன்னவார்த்தைகளை யும், நம் தசையையும் ஸம்பந்தத்தையும் பற்ற அவள் சொல்லும் வார்த்தைகளையும் வந்து சொல்லுங்கோள்.

ஈடு.—பத்தாம்பாட்டு. சில ஹம்ஸமிதுநங்களைக்குறித்து, பிராட்டியுந்தானு மான ஏகாந்தத்திலே என்தசையை விண்ணப்பஞ்செய்து மறுமாற்றம்வந்துசொல்லவேணு மென்கிறாள்.

[வந்திருந்து] - இதென்ன ஆபத்ஸகத்வந்தான்! உங்களுடைய ஸௌஹார்த்தம் இருந்தபடியென்தான்! இளையபெருமாளை இடுவித்துவெதுப்பியழைப்பிக்கவேண்டாதிருக்கை. [வந்திருந்து] - மஹாராஜருடைய இடரைப் பெருமாள் வினவிக்கொண்டுசென்று தீர்த்தாற் போலே என்னார்த்திக்கெல்லாம் உடன்கேடராயிருந்து. [உம்முடைய மணிச்சேவலும்

பத்தாம்பாட்டு. —வந்திருந்து இத்யாதி. "மந்திரத்தொன்றுணர்த்தியுரையீர்" இத்யாதி களைக் கடாக்ஷித்தவதாரிகை- சிலஹம்ஸ இத்யாதி.

"வந்திருந்து" என்கிறவளுடைய ஹார்த்தபாவம் - இதென்ன இத்யாதி. விவரணம் - உங்களுடைய இத்யாதி. இத்தால் - இவள் அழையாதிருக்க ஆபத்திலேவந்து உதவுகையும், அதுக் கடியான ஸௌஹார்த்தமும் சொல்லுகிறதென்றபடி. இத்தால் வ்யாவ்ருத்தி - இளையபெருமாளை இத்யாதி வெதுப்பி - பயப்படுத்தி. தாங்களேவந்ததுக்கு த்ருஷ்டாந்தம் - மஹாராஜர் இத்யாதி.

நீருமெல்லாம்] - பரமபதத்தில் ஸ்த்ரீபுமான்களாயிருந்தாலும் அடிமைக்கு உறுப்பாயிருக்குமாபோலே, இவற்றினுடைய இந்தபேதமும் தனக்குக் கார்யத்துக்குஉடல் என்றிருக்கிறாள். [மணிச்சேவல்] - இதுவும் ஒரு சேவலேதான்! தன்னுடையமணிச்சேவல், கடக்கவிருந்து இவளை உடம்புவெளுப்பித்துத் தான் குறியழியாதேயிறே இருக்கிறது. [எல்லாம்] "ஸபுத்ரபௌத்ரஸ்ஸகண:" (ஸபுத்ரபௌத்ரஸ்ஸகண:) என்னுமாபோலே; பார்யாபுத்ராதிகளோடேகூடப் பிறர்காரியஞ்செய்யஒருப்பட்டிருப்பானைப்போலே. [அந்தரமொன்றுமின்றி]- என்னைப்போலே பிரிவோடேவ்யாப்தமான கலவியன்றிக்கே யிருக்கப் பெறுவதே ஸம்ஶ்லேஷவர்த்தகமான விஶ்லேஷமுமின்றிக்கே. [அலர்மேலசையு மன்னங்காள்]-மிதுநமாயிருப்பார்க்குப் பூவிலும் கால் வைக்கலாமாகாதே. பூவிலே கால்பொருந்தும்படியான செருக்கன்றோ உங்களது? குறைவற்றாரிருக்கும்படி யிதுவாகாதே. [என்திருமார்வற்கு]-எனக்குஅங்கு ஓரடியில்லாமை நான் மிறுக்குப்படுகிறேனே? "ஸீதாஸமக்ஷம்காகுத்ஸ்தம்" (ஸீதாஸமக்ஷம்காகுத்ஸ்தம்) என்று, சொன்னவார்த்தை விலைபோமவள் ஸந்நிதியிலே சொல்லுங்கோள்; நான் பற்றின வடைவே பற்றுங்கோளென்கிறாள். [என்னையின்னவாறிவள் காண்மினென்று]-பேச்சுக்குநிலமன்றுபோலே. [என்னை] - அச்சேர்த்தியிலே யடிமைசெய்ய ஆசைப்பட்ட என்னை. இப்படி துர்க்கதையானாள் இவளென்று "இவள் வைவர்ண்யத்தைத் தம்முடம்பிலே காட்டவும் வற்றாகாதே இவை" என்று சீயர் அருளிச்செய்வர். அன்றிக்கே, உம்முடைய தேவாரமோ! இவள் அந்தஃபுரபரிகர மன்றோ வென்னுங்கோள்.

நீரென்னாதே, "சேவலும்" என்றதுக்குபாவம் - பரமபதத்தில் இத்யாதி. "மணிச்சேவல்" என்று வர்ணித்ததுக்குபாவம் - இதுவும் இத்யாதி. இதுவுமொருசேவலேதானென்று இத்தை ஶ்லாகிக்கிறதென்? தனக்கு மணிச்சேவலில்லையோ? என்ன - தன்னுடைய இத்யாதி. மணிச்சேவல் - அழகியசேவல். "மணிச்சேவலும்நீரும்" என்று - ஸ்த்ரீபுமான்களைச்சொல்லுகையாலே, "எல்லாம்" என்கிறபதம் - புத்ரபௌத்ராதிபரமென்னுமத்தை ஸப்ரமாணமாக அருளிச்செய்கிறார் - ஸபுத்ர இத்யாதி. விவரணம் - பார்யாபுத்ராதிகள் இத்யாதி. "அந்தரம் - இன்றி" என்றதுக்குபாவம் - என்னைப்போலே இத்யாதி. அந்தரம் - விச்சேதம். "ஒன்றுமின்றி" என்றதுக்குபாவம் - ஸம்ஶ்லேஷ இத்யாதி. "உம்முடையமணிச்சேவல்" இத்யாதியையுங்கூட்டி, "அலர்மேல்" என்றதுக்குபாவம் - மிதுநமாய் இத்யாதி. "அசையும்" என்றதுக்குபாவம் - பூவிலே இத்யாதி. "அசையும்" - உலாவுகிற. "மிதுநமாய்" இத்யாதிவாக்யவிவரணம் - குறைவற்றார் இத்யாதி. "என்திரு" என்றதுக்குபாவம் - எனக்கங்கோரடி இத்யாதி. மிறுக்கு - க்லேஶம். "என்திருமார்வற்கு - உணர்த்தி" என்றதுக்குபாவம்-ஸீதாஸமக்ஷம் இத்யாதி. "வநவாஸக்ருதோத்ஸாஹ: ஸ்வர்ணமயத்யாக: । ஸீதாஸமக்ஷம்காகுத்ஸ்தமிதம்வசநமப்ரவீத்" இத்யாரண்யகாண்டே. [கஙி-க] "என்" என்றத்தைத் திருவோடேகூட்டி பாவாந்தரம் - நான்பற்றின இத்யாதி அதாவது - மலர்மகள்விரும்பு நமரும்பெறலடிகள்" என்றும், "நந்திருவுடையடிகள்" என்றும் நான் பற்றின வடைவே யென்னுதல்; "உம்முடையமணிச்சேவல்" என்று - நீங்கள் புருஷகாரமாகச் சேவலை நான்பற்றின அடைவே, நீங்களும் பிராட்டிபுருஷகாரமாக அவனைப்பற்றுங்கோளென்னுதல். இன்னவாறு இவள் காண்மின் - என்னைக்குறித்து நீங்கள் சொல்லுமிடத்தில், இவளுடையப்ரகாரம் இப்படியென்று ஸப்தார்த்தம். 'இன்னவாறு" என்கிறதென்? பேசலாகாதோ? என்ன - பேச்சுக்கு இத்யாதி. கேண்மினென்னாதே, "காண்மின்" என்றபதஸாமர்த்யத்தைப்பற்ற அர்த்தாந்தரம் - இவள்வைவர்ண்யத்தை இத்யாதி. அன்னம்|வெளுத்திருக்கையாலே, இப்படி வெளுத்தப்ரகாரத்தை யுடையவளென்றபடி. பெரிய பிராட்டியார் பரிகரத்வமாகிற ப்ரகாரத்தையுடையவளென்று மூன்றாமர்த்தம் - அன்றிக்கே உம்முடைய இத்யாதி. உம்முடைய தேவாரமோவென்றது - அர்ச்சக பாதந்த்ரமான க்ருஹார்ச்சைபோலே உமக்குபாரதந்த்ரமோவென்றபடி. தேவாரமென்

அர்ச்சை - அர்ச்சகபராதீநையிறே. [மந்திரத்தொன்றுணர்த்தி] - ஓலக்கத்திற் சொல்லாதே கொள்ளுங்கோள்; "வத்யதாம்" (வத்யதாம்) என்பாரிருக்கவுங்கூடும். அவள்சொல்லே ஜீவிக்குமிடத்தேசொல்லுங்கோள். [உரையீர்மறுமாற்றங்களே] - அவன்க்ரமப்ராப்திதோற்ற வார்த்தை சொல்லவும், அதுதானொண்ணாதென்று "நகஸ்சிந்நாபராத்யதி" (நகஸ் சிந்நாபராத்யதி) என்று த்வரிப்பித்துக்கொண்டு வருவார் முன்னே சொல்லுங்கோள். [மந்திரம்] - ப்ரணவம்: [ஒன்று] - அதில்மத்யம பதம்: அதிற்சொல்லுகிறபடியே அநந்யார்ஹதையை விண்ணப்பஞ்செய்து [உரையீர்மறுமாற்றங்களே] - பூர்வாபராதத்தைப்பார்த்து அவன்சொல்லும் வார்த்தைகளையும், ஸம்பந்தத்தையும் நம் தசையையும் பற்ற அவள் சொல்லும் வார்த்தைகளையும் கேட்டுவந்து சொல்லுங்கோளென்கிறாள். (க0)

பதினோராம் பாட்டு.

மாற்றங்களாய்ந்துகொண்டு மதுசூதபிரானடிமேல்
நாற்றங்கொள்பூம்பொழில்சூழ் குருகூர்ச்சடகோபன்சொன்ன
தோற்றங்களாயிரத்துள் இவையுமோருபத்தும்வல்லார்
ஊற்றின்கண் நுண்மணல்போல் உருகாநிற்பர்நீராயே.

ஆ.—(மாற்றங்கள்) - பொலிந்துநின்றபிரான் திருவடிகளிலே, நாற்றங்கொள் பூம்பொழில்சூழ் குருகூர்ச்சடகோபன், அஸங்கல்பபூர்வகமாக, தத்விஷயநிரதிசயாநுராக ப்ரேரிதனாய்க்கொண்டு அதிமதுரமாய் ம்ருதுவாயிருந்த சொற்களாலே சொன்ன ஆயிரத்துள் இத்திருவாய்மொழியில் ஆழ்வார்க்குச் சென்ற வ்யஸநத்தையநுஸந்தித்தார், ஆத்மதாரணக்ஷமரன்றியே ஊற்றின்கண் நுண்மணல்போல் நீராயுருகாநிற்ப ரென்கிறார்.

ஒ. நிகமத்தில், இப்பத்தில் ஆழ்வாருடைய ஆர்த்தியை அநுஸந்தித்தார் ஊற்றின்கண் நுண்மணல்போலுருகாநிற்பர்நீராய் என்கிறார். [மாற்றமென்றுதொடங்கி]- "உதப்ரேக்ஷணம் பண்ணுகையாலே எம்பெருமான் வரவு நிஸ்சிதம்" என்று தளிர்த்த திருநகரியையுடைய ஆழ்வார் ப்ரதிகூலநிரஸநஸ்வபாவனான எம்பெருமானுடைய திருவடிகளிலே நல்லசொற்களைத் தெரிந்துகொண்டு அருளிச்செய்த. [தோற்றங்களாயிரத்

திறது - க்ருஹார்ச்சையை. இவ்விடத்திலே விண்ணப்பஞ்செய்வார்:—கைவாளையில் தீர்த்தவெம்பெருமான் கதையைநினைப்பது. மந்திரத்து - ஏகாந்தத்திலே. "மந்திரத்து" என்றதுக்குபாவம் - ஓலக்கத்தில் இத்யாதி. "மந்திரம்" என்றதுக்கு - கீழ், ஓலக்கமன்றிக்கே ஏகாந்தவாசகமாகவருளிச்செய்து, போகதசையாக அர்த்தாந்தரம் - அவள்சொல்லே இத்யாதி. அதாவது - கேவலம் ஏகாந்தமானால், "ஸஹ்யம் ஜீவிதம் ஜஹ்யாம் ஸ்வாம் வா ஸீதே ஸலக்ஷ்மணாம்" என்று மறுக்கவுங்கூடும்; போகதசையானால், இவளர்த்தியாதிருக்க "ஸத்யம் ப்ரதிஜாநே" என்று தானே அர்த்திக்குமென்றபடி. 'உரையீர் மறுமாற்றங்களே' என்று பதோபாதாநம்பண்ணி, "உணர்த்தி" என்றதுக்கு அர்த்தமருளிச்செய்கிறார் - அவன்க்ரமப்ராப்தி இத்யாதி. மூன்றாமர்த்தம் - மந்திரம் ப்ரணவம் இத்யாதி. மத்யமபதம் - உகாரம். "மறுமாற்றங்கள்" என்கிறபஹுவசநத்துக்கர்த்தம் - பூர்வாபராதத்தை இத்யாதி. மறுமாற்றம் - ப்ரத்யுத்தரம். க்ரமேணாந்வய꞉. (க0)

றென்று மேலுக்கு] - நியிலினுடைய தோற்றம்போலேயிருக்கிற தோற்றத்தையுடைய ஆயிரந்திருவாய்மொழியிலும் இத்திருவாய்மொழி.

ப.—அநந்தரம், இத்திருவாய்மொழியை அப்யஸிக்கவல்லவர்கள் இதினர்த்தத்தில் ப்ரேமபாரவஶ்யத்தாலே த்ரவஸ்வபாவராகாநிற்பர்களென்று பலத்தை யருளிச்செய்கிறார்.

மாற்றங்கள் - விலக்ஷணமானஶப்தங்களை, ஆய்ந்துகொண்டு - ஆராய்ந்துகொண்டு, மதுசூதன் - ஜ்ஞாநஹேதுவான வேதங்களையபஹரித்த மதுவைநிரஸித்த, பிரான் - உபகாரகனுடைய, அடிமேல் - திருவடிகள் விஷயமாக, நாற்றங்கொள் - பரிமளோத்தரமான, பூ - பூவையுடைத்தான, பொழில் - பொழில்கள், சூழ் - சூழ்ந்த, குருகூர் - திருநகரிக்கு நிர்வாஹகராய், சடகோபன் - பாஹ்யகுத்ருஷ்டி நிரஸநசீலரான ஆழ்வார், சொன்ன - அருளிச்செய்ததாய், தோற்றங்கள் - பகவதாவிர்ப்பாவம் போலே வேதாவிர்ப்பாவரூபமான, ஆயிரத்துள் - ஆயிரந்திருவாய்மொழிக்குள்ளும், ஒரு - அத்விதீயமான, இவை - இவை, பத்தும் - பதத்தையும், வல்லார் - பாவவ்ருத்தியோடே அப்யஸிக்கவல்லவர்கள், ஊற்றின்கண் - ஊற்றினிடத்து, நுண் - நுண்ணிய, மணல்போல் - மணல் (நீர்வசத்திலேயொழுகுமா)போலே, நீராய் உருகாநிற்பர் - (பாவவ்ருத்தி பரவசராய்க்கொண்டு) ஆர்த்ரீபவியாநிற்பர்கள். இது கலித்துறை.

இ.—நிகமத்தில், இப்பத்தில் ஆழ்வாருடைய ஆர்த்தியை அநுஸந்தித்தார் ஶிதிலராவரென்கிறார். [மாற்றஙகளாய்ந்துகொண்டு] - நல்லசொற்களைத் தெரிந்துகொண்டு. இத்தசையிலும் வாசகஶப்தங்கள் விலக்ஷணமாயிருக்கிறபடி; "மஹாகூமப்ராககவோ மதஃ" என்கிறபடியே, விரோதிகளைப் போக்கித் தன்னையுபகரிக்குமவனையாயிற்றுக் கவி பாடிற்று. [நாற்றஙகொள் இத்யாதி] - ஊதப்ரேக்ஷணததாலே "வமருதப்பாது" என்று ஊர் ஸஞ்ஜாதபரிமளமானபடி. [தோற்றங்களாயிரம்] - நியிலினுடைய தோற்றம்போலே யிருக்கை. [தோற்றங்களாயிரம] - ஆவிர்பவித்தவாயிரம். [ஊற்றின்கண் இத்யாதி] - ஊற்றுவாயில் சிறுமணல் போலே நீராய் ஶிதிலராவர். நம் உபையவாய்விட்டு நாட்டையழித்தோமாகாதேயென்கிறார். இத்தை ஃபலமாகச் சொல்லிற்று, ஸம்ஶ்லேஷ்ப்பவணைக் கண்டு ஈடுபடுகை நாட்டார்க்கு ப்ராப்யமென்கைக்காக.

ஈடு.—நிகமத்தில், இத்திருவாய்மொழியில் ஆழ்வாருடைய ஆர்த்தியை அநுஸந்தித்தார் ஶிதிலராவ ரேன்கிறார்.

[மாற்றங்களாய்ந்துகோண்டு] - சுரமேறுவாரைப்போலே, பக்திபரவசராயிருப்பார்க்கு அடைவுபடப் பாசுரமிட்டுச் சோல்லப்போகாதிறே; இவ்வளவிலும் சோற்கள் நேர்பட்டபடி: நல்ல சோற்களைத் தேரிந்துகோண்டு. [மதுசூதப்பிரானடிமேல்]-விரோதிநிரஸநமே

நிகமம். மாற்றங்கள்இத்யாதி "உருகாநிற்பர் நீராய்" என்றத்தைப்பற்றஅவதாரிகை.

"மாற்றங்களாய்ந்துகொண்டு -" நல்லசொற்களையாராய்ந்துகொண்டென்று ஶப்தார்த்தம். இத்திருவாய்மொழியில் இவருடைய பக்திபாரவஶ்யத்தை யநுஸந்தித்துசங்கிக்கிறார் - சுரமேறுவாரை இத்யாதி. சுரம் - மலை. 'சொல்லப்போகாதிறே' என்றவநந்தரம், ஆயிருக்க "மாற்றங்களாய்ந்து" என்பானென் னென்ன என்று சங்கையைப்பூரிப்பது. பரிஹாரம் - இவ்வளவிலும் இத்யாதி. 'நேர்பட்டபடி' அவன்நினைவுமாறுமையாலே யென்றுகூட்டுவது. "மதுசூதன்" என்றுநிருபக

ஸ்வபாவமாகயுடையவன் திருவடிகளிலே. [நாற்றங்கொளி த்யாதி]-"ரஹஸ்யஸ்த்தலத்திலே ஆள் விடுகையினாலே வரவுதப்பாது" என்று இவர் தரித்தவாறே, சோலைகளும் நித்ய வஸந்தமானபடி. பரிமளோத்தரமான பூவையுடைத்தான பொழில்கள் சூழ்ந்த திருநகரி. [தோற்றங்களாயிரம்] - "மநஃபூர்வோவாகுத்தரஃ" (மநஃபூர்வோவாகுத்தரஃ) என்கிற அடைவால் சொன்னவையல்ல. இவர் கலங்கிச்சொல்லச்செய்தேயும், பகவதவதாரம்போலே ஆவிர்ப்பவித்தன. தோற்றம்-ஆவிர்ப்பாவம். மந்த்ரங்களை ருஷிகள் காணுமா போலே. "சொற்பணிசெய்ஆயிரம்" என்று, "ஆழ்வாருடையவாக்கிலேபுக்கு அங்கிட்டுப் பிறந்து நாம் சுத்தராயடிமைசெய்யவேணும்" என்று அச்சொற்கள்தாம் "என்னைக்கொள், என்னைக்கொள்" என்று வந்து அடிமைசெய்கிறபடி. அவைதிகர் வாக்கில்புக்க தோஷம் தீர்ந்தது இப்போதிறே சொற்களுக்கு. "போயபிழையும் புகுதருவானின்றனவும் தீயினிற்றூசாகும்" என்கிறபடியே, ஆழ்வார்வாக்கிலே பிறக்கையாலே முன்புள்ள தோஷமும் பின்புள்ள தோஷமும் தீர்ந்ததுகாணும் ஶப்தத்துக்கு. [ஊற்றின்கணி த்யாதி] - இவையப்யஸிக்கப் படாதன என்கிறார். அதாவது - என் ஆர்த்தத்வநியைக் காட்டி நாட்டையடைய அழித்தேனென்கிறார். இவர் க்லேசம் அவன் முகங்காட்டத்தீரும்; இப்பாசுரம் நித்யமாகையாலே, கேட்டார்பரிக்கமாட்டார்; ஊற்றிடத்திலுண்டான நுண்ணியமணல்போலே ஶிதிலாந்தஃகரணராய் நீராயுருகாநிற்பர். இதுக்கு ஃபலமாய்ச் சொல்லிற்றியிற்றேன்? என்னில்; பகவத்குணவித்தர் பாசுரங்கேட்டழிகையும் ப்ராப்யாந்தர்க்கதமாகையாலே இதுதானே ஃபலமென்கிறது. (கக)

பாகச்சொல்லுகையாலே- விரோதிநிரஸநமேஸ்வபாவம் என்கிறார். விஶ்லேஷதஶையிலே,* நாற்றங்கொள் பூம்பொழிலாகக்கூடுமோ? என்ன - ரஹஸ்யஸ்த்தலத்திலே இத்யாதி. "ஸ்வயமேவ தோற்றினது" என்கிறதுக்கு வ்யாவர்த்யம் - மநஃபூர்வ இத்யாதி. இப்படி சொன்னதினாலே பலித்தவர்த்தமேதென்ன -இவர் கலங்கி இத்யாதி. அன்றிக்கே, "தோற்றங்களாயிரம்" என்றதுக்கிரண்டர்த்தம்; முந்தினது -மநஃபூர்வ இத்யாதி. அதாவது -அஹமஹமிகையாய் வந்து தோற்றுகிறனவென்றபடி. இரண்டாவது-இவர் கலங்கி இத்யாதி. அதாவது - அவதரித்தனவென்றபடி ஆனால் "குருகூர்ச்சடகோபன் சொன்ன" என்றதுஞ்சேருமோ? என்ன - மந்த்ரங்களை இத்யாதி. "மநஃபூர்வ" இத்யாதி முந்தினவர்த்தவிவரணம் - சொற்பணிசெய் இத்யாதி. சொற்கள் ஆழ்வார்வாக்கிலே அஹமஹமிகையாய்ப் புக்கவித்தால் அவற்றுக்கேற்றமேதென்ன - அவைதிகர் இத்யாதி. இப்போது தோஷந்தீர்ந்தால் மேலுள்ளதோஷமோவென்ன - போயபிழையும் இத்யாதி. போயபிழை - பூர்வாகம்; புகுதருவானின்றன - உத்தராகம். தூசு - பஞ்சு. "ஊற்றுவாயிற் சிறுமணல்போலே நீராயுருகாநிற்பர்" என்கிறவனுடைய ஹார்த்தபாவம் - இவை இத்யாதிவாக்யத்வயம், "உருகாநிற்பர்" என்ற வர்த்தமாநார்த்தம் - இவர் க்லேசம் இத்யாதி வாக்யத்வயம். க்ரமேணாந்வயஃ. (கக)

த்ரவிடோபநிஷத்ஸங்கதி,—"ஸ்வேச்சாவதாரதஶயா நவஜந்மவத்த்வம் ஆஶ்ரிதைகஸுலபத்வமுதாரதாவா। ஸ்வேச்சாநிதியநவிக்ரஹவத்யஸ்ய ஸ்வாஸ்த்யாவதத்ரநிரத ஷஷ்டஃ॥"

த்ரவிடோபநிஷத்தாத்பர்யரத்நாவலி.—“ஸோகஸ்ஸு ஷ்ருக்ஸஸ்த்ரா யாயஸாஹநதயா ஜிஷ்ணுஸாரத்யயோகாத் ஸ்வஸ்ருஷ்டெ ஸர்வஸஹாவாப்தி ருதய தயா ஸ்வாஶ்ரிதேஷ்வக்ஷ்வாதாஸ் । காத்ர்யாஸாம்ராஜ்யயோகாதவதரணதஸாஸ்வஸ்வாமி ருத்தஸ்வ ஸ்வீயாயத்தஸ்வஸ்திதி இத்யயுக்தயா ஶௌரி ரார்த்தைஸ்வ ஸம்ஸாரி:॥”

திருவாய்மொழி நூற்றந்தாதி.
பொன்னுலகுபூமியெல்லாம்புள்ளினங்கட்கேவழங்கி
யென்னிடரைமாலுக்கியம்புமென - மன்னுதிரு
நாடுமுதற்றாதுநல்கிவிடுமாறனையே
நீடுலகீர்! போய்வணங்கும்நீர்.

ஆழ்வார் திருவடிகளேஶரணம், எம்பெருமானார் திருவடிகளே ஶரணம், ஜீயர் திருவடிகளே ஶரணம்.

ஒன்பதாந்திருவாய்மொழி—நீராய் - ப்ரவேஶங்கள்.

ஆ.—(நீராய்.) - இப்படி தூதப்ரேஷணம் பண்ணியும் எம்பெருமான் வரக் காணாமையாலே, அவனைத் தம்முடைய பெரியவார்த்தியோடேகூடத் திருநாட்டிலே கேட்கும்படி கூப்பிட்டு அழைக்கிறார்.

ஒ.—ஒன்பதாந் திருவாய்மொழியில், இப்படி தூதப்ரேஷணம் பண்ணின விடத்திலும் வாராதே, “ஊற்றின்கணுண்மணல்போ லுருகாநிற்பர்” என்னும் படியாலே ஸ்தாவரஜங்கமாத்மகமான ஜகத்தெல்லாம் தம்முடைய ஆர்த்தஶப்தத் தாலே உருகாநிற்கையாலே, தம்முடைய தஶையை அறிவிக்கவல்லாரில்லை யென்று கோலி இவர் பெருங்கூப்பீடாகக் கூப்பிடப்புக, தன்னுடைய ஜகதாகாரதையைக்காட்டி யருளி “இனி என்செய்யக் கூப்பிடுகிறீர்?” என்று எம்பெருமான் அருளிச்செய்ய, வைஶ்வரூப்யங்கண்ட அர்ஜுநன் “சதுர்புஜமாய் ப்ரஸந்நமான வடிவைக்காணவேணும்” என்று அர்த்தித்தாற்போலே, “ஜகதாகாரதையைக் காட்டினவற்றால் போராது, என்னுடைய விடாய்க்கீடாக ஶங்கசக்ராதிஹேதிபூஷிதமான உன்னுடைய அப்ராக்ருதமான திருவுடம்போடே தோற்றிடருளவேணும்என்று பெரிய வார்த்தியோடே ஸ்ரீவைகுண்ட நாதனுக்குக் கேட்கும்படி கூப்பிடுகிறார். என்னுடைய ஆர்த்தத்வநியாலே உன்னுடைய உபயவிபூதியும் விஶீர்ணமாகப் புகாநின்றது; எனக்காக வந்திலையேயாகிலும், உன்னுடைய விபூதி நிலைநிற்கும்படிவந்து தோற்றியருள வேணுமென்று மிகவும் ஆர்த்தமான மஹா த்வநியோடே கூப்பிடுகிறார் என்றுமாம்.

ப.—ஒன்பதாந்திருவாய்மொழியில், இப்படி வடகமுகத்தாலே ஸம்ஶ்லேஷிக்கப்பாரித்த இவருடைய ஆர்த்யதிஶயத்தைக்கண்டு ஈஶ்வரன் தன்னுடைய ஸர்வாத்மபாவத்தாலே ஸமாதாநம்பண்ணப்பார்க்க, அது இவர்க்கு த்ருஷ்டிவிஷயமல்லாமை யாலே, “அஸாதாரணமான விக்ரஹத்தோடே காணவேணும்” என்றுவிஶ்வரூபங்கண்ட அர்ஜுநனைப்போலே யாசைப்பட்டு அதுக்குஹேதுவான அநுஸாவ்யசிஹ்நயோகத்தை

யும், அழகைக்காட்டி அநந்யார்ஹமாக்கும் அதிஶயிதசக்தியையும், அகிலப்ரகாரரக்ஷணத்தையும், அதிப்ரபலவிரோதிநிவ்ருத்தியையும், பரத்வாத்யவஸ்தா பஞ்சகயோகத்தையும், அஶேஷஜநஸம்ஶ்லேஷத்தையும், அகிலவஸ்து வ்யாபகத்வத்தையும், விலக்ஷண விக்ரஹயோகத்தையும், விரோதிநியமநயோக்யதையையும், அதிஶயித வைலக்ஷண்யத்தையும் அநுஸந்தித்து, ஏவம்விஶிஷ்டனான நீ உன்வடிவை என்னுடைய கண்ணுக்கு இலக்காம்படி காட்டியருளவேணும் என்று அபிநிவேஶாதிசயத்தாலே அத்யந்தம் ஆர்த்தராய்க் கூப்பிடுகிறார். இந்த ப்ராப்யவிஷயத்தில் அபிநிவேஶக்ருதையானவார்த்தியிறே ஆஶ்ரயணோந்முகனான அதிகாரிக்கு விஶேஷணம்.

இ.—ஒன்பதாந் திருவாய்மொழியில், கீழ் தூதுவிடுகிறவற்றுக்கு அங்குப் போனால் சொல்லும் வார்த்தையாக இவள் சொன்ன பாசுரத்தால்வந்த ஆர்த்தநாதத்தாலே ஸ்தாவரஜங்கமாத்மகமான ஜகத்தெல்லாம் உருகாநிற்கையாலே தம்முடைய தசையை அறிவிக்கைக்கு க்ஷமரில்லையென்றுபார்த்துத் தம்முடைய ஆர்த்தத்வநியாலே அழைத்துக்கொள்வாராக நினைக்க, தன்னுடைய ஜகதாகாரதையைக் காட்டியருளி "நீர் என்செய்யக் கூப்பிடுகிறீர்?" என்று அருளிச்செய்ய, ஜகச்சரீரியாயிருக்கிற இந்த ஜ்ஞாநலாபத்தால் போராது; உன்னுடைய அஸாதாரண விக்ரஹத்தை எனக்குக் காட்டியருளவேணும் என்று வைஶ்வரூப்யத்தைக்கண்ட அர்ஜுநன் "சதுர்புஜமாய் ப்ரஸந்நமான வடிவைக் காணவேணும்" என்று அர்த்தித்தாற்போலே, விடாயெல்லாங்கெட, ஸஜாதீய ஸுக்ஷிஹ-ஆஷிதமான அப்ராக்ருதமான வடிவோடே தோற்றியருளவேணுமென்று பெரிய ஆர்த்தியோடே பரமபதத்திலிருப்பும் நிலைகுலைந்துவந்து முகங்காட்ட வேண்டும்படி கூப்பிடுகிறார். என்னுடைய ஆர்த்தத்வநியாலே உன்னுடைய உபயவிபூதியும் அழியப்புகாநின்றது; என்னுடைய ரக்ஷணத்துக்காக வந்திலையாகிலும் உன்னுடைய விபூதிரக்ஷணத்துக்காகவாகிலும் வரவேணுமென்று கூப்பிடுகிறார் என்றமாம்.

ஈடு.—"எங்குச்சென்றாகிலுங்கண்டு" என்றும், "வானவர்கோனைக்கண்டு" என்றும் தூதுபோகச்சொன்னார்; அவைபோகமாட்டாதபடி தம்முடைய ஆர்த்தத்வநியாலே யழிந்தார்; "மரங்களுமிரங்கும்" என்று அசேதநங்களிரங்காநின்றால், சிறிது சைதந்யமுடைய பக்ஷிகள் அழியக்கேட்கவேண்டாவிறே; "ஊற்றின்கண்நுண்மணல்போ லுருகாநிற்பர் நீராய்" என்றது - தூதரையொழியவன்றிறே. தம் பரிஸரத்தில் கால்நடைதந்து போவாரில்லையே. "அசேதநங்களுங்கூட அழிகிறவிடத்தில், பரமசேதநனானவனுக்குச் சொல்லவேணுமோ?" என்றுபார்த்து, தம் மிடற்றோசையையிட் டழைத்துக்கொள்ளப் பார்க்கிறார். தமக்குஆர்த்தத்வநி கிடக்க, வேறொருவர்போகவேண்டும்படியாயிருந்ததோ?

நீராய்நிலனுய்ப்ரவேஶ: வ்ருத்தாநுவாத பூர்வகமாக ஸங்கதி - எங்குச்சென்றாகிலும் இத்யாதிவாக்யத்வயத்தாலே. திர்யக்குக்கள் ஈடுபடக்கூடுமோ? என்ன - மரங்களும் இத்யாதி. "பக்ஷிசனொழியும்" என்கைக்குஸூசகமேதென்ன - ஊற்றின்கண் இத்யாதி. ஆகையாலே, 'தம்பரிசரத்தில்' என்றகூட்டுவது. ஆனால் இவர்செய்கிறதேதென்ன - அசேதநங்களும் இத்யாதி. வ்யாக்யாதாவின் ஈடுபாடு - தமக்கார்த்தத்வநி இத்யாதி. இவருடைய ஆர்த்தத்வநியின் உறைப்பை யருளிச்செய்கிறார் - கலங்கா இத்யாதி. கால்குலைந்து - இருப்புக்குலைந்து. கால்நடை தந்து போவாரில்லாமையாலே கூப்பிடுகிறாரென்றார் - கீழ்; கால்நடைதந்துபோவாருண்டானாலும் கூப்பீடே அமோகஸாதநமென்கிறார் - இனித்தான் இத்யாதி. * பக்ஷநோக்கறியாதேயிருக்கிறவன்

* கலங்காப்பெருநகரமான ஸ்ரீவைகுண்டத்திலும் தரிக்கவொண்ணாதபடி, கால்குலைந்து வரும்படி பெருமிடறு செய்துகூப்பிடுகிறார். இனித்தான் தூதுபோவார்க்கு, காலாலேயாதல் சிறகாலேயாதல்போகவேண்டுகையாலே தடையுண்டு; இவர்மிடற்றோசைக்குத் தடையில்லையிறே! இவர்படுகிறவ்யஸநத்துக்கு ஹேதுசொல்லப்போகாது, பிராட்டி சிறையிருந்ததுக்கு ஹேதுசொல்லப்போகாதாப்போலே. அவளிருப்பு பராநுக்ரஹத்தாலேயானாற்போலே இவருடைய வ்யஸநமும் பராநுக்ரஹத்துக்கு உடலாயிருக்கிறபடி. அவள்சிறையிருந்தபடியை ஸ்ரீவால்மீகிபகவானெழுதிவைத்து இன்றுநாடெல்லாம் வாழ்கிறாப்போலே, அன்று இவர்தாம்வ்யஸநப்பட்டாரேயாகிலும் இவர் அருளிச்செய்த ப்ரபந்தங்கள் லோகத்துக்குத் தண்ணீர்ப்பந்தலாயிற்றது. திருக்குழலோசையாலே திருவாய்ப்பாடியிற்பெண்களெல்லாம் பட்டத்தைத் தம்மிடற்றோசையாலே அவன்படும்படி பண்ணுகிறார்.

"வாரீர்! நீர்நம்மை யிருந்தவிடத்தில் இருக்கவொட்டாதே இங்ஙன்படுத்துகிறதேன்? நாம்உம்மைவிட்டுத் தூரப்போனோமோ? ஏதேனுமொன்றைப்பற்றினாலும் அது நம்மைப்பற்றிற்றென்று சொல்லலாம்படியிருக்கிற ஜகதாகாரதையைக்காட்டினோமே" என்று அவன் திருவுள்ளமாக; அதில் குறையென்? நீ ஜகச்சரீரனாய்நிற்கிற இந்தஜ்ஞாநமெனக்கில்லையோ? இந்தஜ்ஞாநந்தானேயிறே "அஸாதாரணாகாரத்தையும்காணவேணும்" என்னப்பண்ணுகிறது; எனக்குப்ராப்யமானது கிடக்க, அல்லாதவற்றைக் காட்டினால்அப்ரயோஜநமென்கிறார். அத்தையும் உன் ஐஶ்வர்யத்துக்குப்புறம்பல்லாமையாலே வேணுமாகில் ப்ரதிபத்திபண்ணுகிறேன்; அத்தால் வந்தது, உன்னதானவற்றை "என்னது" என்றிருக்கிற ப்ரமம்நிவ்ருத்தமாகிறது. அர்ஜுநனும் ஸ்ரீவிஶ்வரூபங் கண்டவநந்தரத்திலே "தேநைவ ரூபேண சதுர்புஜேந" (தேநைவரூபேணசதுர்ப்புஜேந)என்று அஸாதாரணமான வடிவை யெனக்குக் காட்டவேணும் என்றானிறே. என்னார்த்தத்வநி கேட்டிரங்கி வந்திலையாகிலும், உன்னுடைய விபூதியழியாமல் நோக்கவேணுமாகில், வா வென்கிறார் என்றுமாம். இவருடைய ஆர்த்தநாதந்தான் அவனுக்கு உபயவிபூதியிலும் குடியிருப்பரிதாய்க்காணும் இருக்கிறது.

---

*இவரையிப்படிக் கூப்பிடவிடுகைக்கு ஹேதுவேதென்ன - இவர்படுகிற இத்யாதிவாக்யத்வயம். கர்மம் ஹேதுவன்றோ? என்னில் - அவளிருப்பு இத்யாதி. அதாவது - பிராட்டி ஆஶ்ரிதார்த்தமாக லங்கையிலேயிருந்தாற்போலே, "இவரும் ஆஶ்ரிதார்த்தமாக துக்கப்பட்டாரேயாகிலும் சிலநாள் இவ்விபூதியிலேயிருந்தால் நாடாகத்திருந்தும்"என்றிட்டுவைத்தானாகையாலே "கர்மம்" என்னவொண்ணாதென்றபடி. விவரணம் - அவள்சிறையிருந்த இத்யாதி. ஸிம்ஹாவலோகநந்யாயேந, மிடற்றோசையாலே ஈடுபடக்கூடுமோ? என்ன ஸத்ருஷ்டாந்தமாக அருளிச்செய்கிறார் - திருக்குழலோசை இத்யாதி. இவ்வாக்யத்துக்கு - 'இவர்மிடற்றோசைக்குத்தடையில்லையிறே' என்றவாக்யத்தோடே ஸங்கதி; நடுவு -ப்ராஸங்கிகம். ஆனால், முதற்பாட்டிலே - ஜகதாகாரதையைச் சொல்லுவானென்? என்ன- வாரீர் இத்யாதி. ஜகதாகாரதையைக் காட்டினோமேயென்றது, கீழே, "யாவையும்யாவருமாய்" என்றத்தைப்பற்ற. ஆகையாலே, 'எனக்குப்ராப்யமானது' என்று கூட்டுவது. ஆனால், ஜகதாகாரதையும் உத்தேஶ்யமன்றோ? என்ன - அத்தையும் இத்யாதி. இந்தஜ்ஞாநந்தானே "அஸாதாரணாகாரத்தையுங் காணவேணும்" என்னப்பண்ணுகிறதென்றதுக்கு த்ருஷ்டாந்தம் - அர்ஜுநனும் இத்யாதி. கீழே - "கொடியேன்பால்வாராய்" என்னுமளவும்கடாக்ஷித்துஸங்கதியருளிச்செய்து, "மண்ணும் விண்ணும்மகிழ" என்றத்தைக்கடாக்ஷித்து ஸங்கத்யந்தரம் - என்னார்த்தத்வநி இத்யாதி. அவன்வாராவிட்டாலழியுமோ? என்ன - இவருடைய இத்யாதி. "கிரீடிநம் கதிநம் சக்ரஹஸ்தமிச்சாமி த்வாம் த்ரஷ்டுமஹம் ததைவ। தேநைவ ரூபேண சதுர்புஜேந ஸஹஸ்ரபாஹோ பவ விஶ்வமூர்த்தே" இதி கீதாஸ்வேசகமேர்.

முதற்பாட்டு.

நீராய்நிலனாய்த் தீயாய்க்காலாய்நெடுவானாய்
சீரார்சுடர்களிரண்டாய்ச் சிவனாய்அயனானாய்!
கூராராழிவெண்சங்கேந்திக் கொடியேன்பால்
வாராய்! ஒருநாள்மண்ணும்விண்ணும்மகிழவே.

ஆ.—ப்ரஹ்மாதிபிபீலிகாந்த ஸர்வஜந்து ஸத்பாவார்த்தமாக அவற்றுக்கு ஆத்மதயாவஸ்த்திதனாய், அவற்றுக்குப் பிபாஸாதிநிவ்ருத்தி தொடங்கி தமோநிரஸந பர்யந்தமான உபகாரத்தைப் பண்ணுகைக்காக, ஸலிலாத்யபர்யந்த பதார்த்தங்களுக்கும் ஆத்மபூதனாயிருந்த பரமகாருணிகனே! உன்னைக் காணப்பெறாதே கூப்பிடுகிற என்னுடைய ஆர்த்தஸ்வரத்தைக்கேட்டு, இவ்வண்டாந்தர்வர்த்திகளான ஆத்மாக்களும் திருநாட்டிலுள்ள திவ்யபுருஷர்களுமுடைய முடியக்கிடாய்ப்புகுகிறது; ஆதலால்,உன்னுடைய லீலோபகரணமும் போகோபகரணமும் மகிழும்படி கூராராழி வெண்சங்கேந்தின அழகோடே, உன்னுடைய விபூதியெல்லாம்துறந்து தளரும்படிகூப்பிடுகிற கொடியேன்பால் ஒரு நாளாகிலும் வாராய் என்று கூப்பிடுகிறார்.

ஒ.—முதற்பாட்டில், "ஜகதாகாரனாயிருக்கிறபடியைக் காட்டித் தந்தோமிறே" என்ன, அது போராது; அஸாதாரணமாயிருக்கிற வடிவைக் காணவேணுமென்கிறார்.

[நீராய் என்று தொடங்கி] - காரணமான பூதபஞ்சகங்களுக்கும் கார்யமான சந்த்ரஸூர்யாதிகளுக்கும் ஆத்மாவாய்க்கொண்டு அவற்றைஶரீரமாகக்கொண்டு நின்றருளினாய். [கூராராழி] - கூர்மை மிக்குஇருந்துள்ள திருவாழி. [கொடியேனென்று தொடங்கி]-ஜகதாகாரதா ப்ரதர்ஶநத்தால் த்ருப்தனாகாதே, "அஸாதாரணாகாரத்தைக் காணவேணும்" என்று அபிநிவேஶிக்கிற என்பக்கலிலே என்ஆர்த்தி தீர்த்தருள நினைத்ததில்லையேயாகிலும் உன்னுடைய உபயவிபூதியும் அழிந்து போகாமே நிலைநிற்கைக்காக வரவேணும்.

ப.—முதற்பாட்டில், அகிலஜகதாகாரனாய்நிற்கிற நீ உன்அஸாதாரண விக்ரஹத்தோடே வந்துமுகங்காட்டவேணுமென்கிறார்.

நீர் - "அப ஏவ ஸஸர்ஜாதௌ" என்றுசொல்லப்பட்ட ப்ராதம்யத்தையுடைய நீரும், ஆய் - , நிலன் - (அந்நீரின்காரியமான) ப்ருதிவியும், ஆய் - , தீ - (உபயகாரணமாய்(ஸாந்தோக்ய ஸித்தப்ராதம்யத்தை யுடைய) அக்நியும், ஆய் - , கால் - (தத்காரணமான) வாயுவும், ஆய் - , நெடு - (இந்தபூதசதுஷ்டய ப்ரதாநமாய்) மஹாவகாசமான, வான் - ஆகாசமுமாகிற ஸமஷ்டியை, ஆய் - ஸ்ருஷ்டித்தநுப்ரவேசித்து தத்ததாத்மகனாய், சீரார் - ("ஸூர்யாசந்த்ரமஸௌ தாதா யதாபூர்வமகல்பயத்" என்கிறபடியே) வ்யஷ்டிஸ்ருஷ்டிக்குப்ரதாநபூதராய், (உஷ்ணாநுஷ்ணப்ரகாசத்தாலே யுபகாரகரான)

இரண்டுசுடர்கள் - சந்த்ரஸூர்யர்களும், ஆய்-,(தத்தத்ஸம்ஹார ஸ்ருஷ்டிகளுக்குக்கடவ,) சிவன் - ருத்ரனும், ஆய் - , அயன் - ப்ரஹ்மாவும், ஆனாய் - ப்ரகாரமாம்படி தத்ததந்தராத்மாவானவனே ! (இந்தஸாதாரணாகாரத்தையொழிய),கூர் - (ஆஸ்ரிதவிரோதிநிரஸநத்தில்) கூர்மையை, ஆர் - உடைய, ஆழி - திருவாழியையும், வெண்- (ஆஸ்ரிதர்க்கநுபாவ்யமான) பரிசுத்தமான வர்ணத்தையுடைய, சங்கு - ஸ்ரீபாஞ்சஜந்யத்தையும், ஏந்தி -, ("ஒருவர்க்கொருவனுபகரிக்கும்படியே!" என்று), மண்ணும் - பூம்யுபலக்ஷிதமானலீலாவிபூதியோடு, விண்ணும்-பரமவ்யோமஸப்தவாச்யமானநித்யவிபூதியோடுவாசியற,மகிழ - உகக்கும்படி, கொடியேன்பால் - ("அஸாதாரணவேஷத்தைக்காட்டவேணும்" என்று) நிர்ப்பந்திக்கும்கொடுமையையுடைய என்பக்கலிலே, ஒருநாள்-ஒருநாளாகிலும், வாராய் - நடந்துவரவேணும்.

இ:— முதற்பாட்டில், "ஜகதாகாரனாயிருக்கிறபடியைக் காட்டித் தந்தோமிறே" என்ன; "அது போராது, அஸாதாரணமான வடிவைக் காட்டவேணும்" என்கிறார்.

[நீராய் இத்யாதி] - அண்டகாரணமான பூதபஞ்சகங்களையும் ஸ்ருஷ்டித்து, "ஸமேத்யாந்யோந்யஸம்யோகம்" என்கிறபடியே ஒன்றாகச்சேர்த்து, "ஹைமமபூதண்டம்" என்கிறபடியே அண்டத்தை ஸ்ருஷ்டித்து, ஸ்ருஷ்டமான அண்டத்துக்கு ப்ரகாஸகரான சந்த்ரஸூர்யர்களை ஸ்ருஷ்டித்து. [சீரார்சுடர்கள்] - ப்ரகாஸகராயும் போஷகராயுமிருக்கை. அண்டஸ்ருஷ்டாவாக ப்ரஹ்மாவையும் இவை அதிப்ரவ்ருத்தமானபோது அழிக்கைக்குருத்ரனையும்ஸ்ருஷ்டித்தான். "தத்ஸ்ருஷ்ட்வா ததேவாநுப்ராவிசத், ததநுப்ரவிஸ்ய, ஸச்சத்யச்சாபவத்" என்கிறபடியே, ஸாமாநாதிகரண்யம் அநுப்ரவேஸக்ருதம்; "நீராய் நிலனாய்" என்கிற அசித்பதார்த்தத்தோடு, "சிவனாய் அயனாய்" என்கிற ஈஸ்வராபிமாநிகளோடு வாசியற்றிருக்கிறதாயிற்று ஈஸ்வரபாரதந்த்ர்யம்; இப்படி ஜகதாகாரதையைக் காட்டித் தந்தோமே யென்ன, அதுபோராது; அஸாதாரண விக்ரஹத்தைக் காட்டவேணுமென்கிறார். [கூரார் இத்யாதி] - காட்டுமிடத்திலும் ஒப்பனையோடே காட்டவேணும். ப்ரதிபக்ஷத்தின்மேலே யேவச் சாணையிலிட்டாற்போலே கூர்மைமிக்கிருக்கிற திருவாழி. ஸ்ரீபாஞ்சஜந்யத்தில் வெளுப்போடு திருவாழியில் கூர்மையோடு வாசியற இவர்க்கு அழகுக்குஉறுப்பாயிருக்கிறதிறே. [கொடியேன் பால்] - ஜகதாகாரதையைக்காட்டின இத்தால் அத்ருப்தனாய் நிர்பந்திக்கும்படி பாபத்தைப்பண்ணின என்பக்கலிலே. செய்தபடி கண்டிருக்கக்கடவதாயிருக்க அத்யபிநிவேஸத்தைப் பண்ணுகையிறே பாபம். [வாராய்] - அஸாதாரணவிக்ரஹத்தைக் காட்டவேணும்; திவ்யாயுதங்களோடே காட்டவேணும்; நீயே வந்து காட்டவேணுமென்கிறார். [ஒரு நாள்] - நானுளனாகைக்காக. [மண்ணும் விண்ணும் மகிழவே] - என் ஸத்தையை நோக்குகைக்காக வந்திலையேயாகிலும், உன் விபூதியை நோக்குகைக்காக வரவேணும். மண் - லீலாவிபூதி, விண் - நித்யவிபூதி. "லீலாவிபூதியானது அழிவதாமன்றோ?" என்னில்,—ஏகரூபமான நித்யவிபூதியும் ஆர்த்தத்வநியாலே அழியக்கிடாய்ப்புகுகிறது. * மரங்களுமிரங்கா நிற்க, பரமசேதநர் என்படார்? [மகிழவே] - அழிகை தவிர்ந்து யரிக்கைக்காக.

ஈடு.—முதற்பாட்டு. "ஜகதாகாரனுயிருக்கிறபடியைக் காட்டித்தந்தோமிறே" என்ன, அது போராது; அஸாதாரணமான வடிவைக்காணவேணுமென்கிறார்.

[நீராய்நிலனாய் இத்யாதி] - "இதறியாமல் அவ்வருகே யாசைப்படுகிறார்" என்று கொள்ளவொண்ணாதபடி, தாம் அறிந்தமைதோற்ற விண்ணப்பஞ்செய்கிறார். [நீராய்] - நாராயணனாவது பண்டேயறிவ னென்கிறார். "நீர்தோறும் பரந்துளன்" என்றாரிறே கீழ். [நீராய்] - "அப ஏவ ஸஸர்ஜாதௌ" (அபஏவஸஸர்ஜாதௌ) என்கிறபடியே ஏற்கவே ஜலஸ்ருஷ்டியைப்பண்ணி அநந்தரம் ப்ருதிவ்யாதிகளையுண்டாக்கி, இவற்றைக் கொண்டு கார்யங்கொள்ளுமிடத்தில் ஒன்றிலொன்று அதிகமாக வேண்டியிருக்குமிறே; "ஸமேத்யாந்யோந்யஸம்யோகம் பரஸ்பரஸமாஶ்ரயா:" (ஸமேத்யாந்யோந்ய ஸம்யோகம் பரஸ்பரஸமாஶ்ரயா:) என்றிறே ஸ்ருஷ்டிக்ரமந்தான்; இவைதான் ஏகத்ரவ்ய முமன்றே; அநேகத்ரவ்யமாயிருக்கச்செய்தே ஏகத்ரவ்யமாக்கி ஏககார்யங்கொள்ளவேணு

முதற்பாட்டு.—நீராய் இத்யாதி. "நீராய்" இத்யாதி, "கூராராழிவெண்சங்கேந்திக்கொடியேன்பால்வாராய்" என்னுமளவும் கடாக்ஷித்தவதாரிகை - ஜகதாகாரனாய் இத்யாதி.

ஜகதாகாரதை அநுஸந்தேயமாகில், "யாவையும்யாவருமாய்நின்றமாயன்" என்றாற்போலே திரளச்சொல்லாமல், "நீராய்நிலனாய்" இத்யாதியாலே விஸ்தரிக்கிறதென்? என்ன - இதறியாமல் இத்யாதி. ஜலாந்தர்யாமித்வத்தையருளிச்செய்கிற இதுக்குபாவம் - நாராயணனாவது இத்யாதி. ஜலதத்த்வத்துக்குக்காரணமாய் அத்தை சரீரமாகவுடையனாயிருக்கும்இருப்பைப் பண்டேயறிவே னென்றபடி. "ஆபோ நாரா இதி ப்ரோக்தா:" இத்யாதி பூர்வார்த்தநிருக்தியைப்பற்ற - நாராயணனாவதுபண்டேயறிவன் என்றது. "ஜஹ்நு: நாராயணோ நர:" என்று, 'நரஸ்ஸிந்து:' என்றவிடத்தில், நரசப்தம் - ஈஶ்வரவாசி. அன்றிக்கே, "தாந்யஸ்யாயநம் பூர்வம்" என்ற உத்தரார்த்தத்தைக்கடாக்ஷித்தருளிச்செய்கிறாராதல். பண்டறிந்தமைக்கு ஸூசகமேதென்ன-நீர்தோறும் இத்யாதி. பஞ்சபூதங்களையும் சொல்லுகிறவிடத்தில், ப்ரதமம் ஜலதத்த்வத்தைச்சொல்லுகிறதுக்கு ப்ரமாணம்-அப ஏவஇத்யாதி. 'அப ஏவ ஸஸர்ஜாதௌ தாஸு வீர்யமவாஸ்ருஜத். தததண்டமபவத்தைமம் ஸஹஸ்ராம்ஶுஸமப்ரபம்' இதி மநுஸ்ம்ருதௌ. பூதபஞ்சகஸ்ருஷ்டி. கதநம் தத்கார்யமான அண்டஸ்ருஷ்டிக்கும் உபலக்ஷணமென்று விவக்ஷித்து, பஞ்சீகரணத்தாலல்லது அண்டஸ்ருஷ்டி கூடாமையாலே பஞ்சீகரணத்தைக்காட்டுகிறார்-இவற்றைக்கோண்டு இத்யாதி. இவற்றைக் கொண்டு - இந்த பூதபஞ்சகங்களைக்கொண்டு, கார்யங்கொள்ளுமிடத்தில் - அண்டரூபகார்யத்தைப் பண்ணுமிடத்தில்என்றபடி; 'ஒன்றில்ஒன்று அதிகமாக வேண்டியிருக்குமிறே'யென்றது- விபக்தார்த்தமான ஒன்றிற்காட்டில் அவிபக்தார்த்தமான ஒன்று ப்ரதானமாக வேண்டியிருக்குமிறே என்றபடி. 'ஒன்றி லொன்று அதிகமாக'என்னுமதுக்கு ப்ரமாணம் - ஸமேத்யஇத்யாதி. "நாநாவீர்யா: ப்ருதக்பூதாஸ்ததஸ்தே ஸம்ஹதிம் விநா । நாஶக்நுவந் ப்ரஜா: ஸ்ரஷ்டுமஸமாகம்ய க்ருத்ஸ்நஶ: । ஸமேத்யாந்யோந்யஸம்யோகம் பரஸ்பரஸமாஶ்ரயா: । மஹதாத்யா விஶேஷாந்தா ஹ்யண்டமுத்பாதயந்தி தே" இதி ப்ரதமேம்ஶே த்விதீயே. 'பரஸ்பரஸமாஶ்ரயா:' என்ற ஆஶ்ரயாஶ்ரயிபாவம் ந்யூநாதிகபாவநிபந்தநம் ஆதாராதேய பாவேந ஒன்றிலொன்று அதிகமாயிருக்குமென்றபடி. ஒன்றிலொன்று அதிகமாகை ஸ்ருஷ்டி க்ரமமாக வேண்டுவானென், ஸமப்ரதானமாகை ஸ்ருஷ்டிக்ரமமானாலோ?வென்ன, 'நாநாவீர்யா: ப்ருதக்பூதா:' என்கிற ஶ்லோகத்தைக்கடாக்ஷித்து அருளிச்செய்கிறார் - இவைதான் இத்யாதி. அநேகமானவற்றை ஏகத்ரவ்யமாக்கி

மிறே: அதுசெய்யும்போது, குலாலனானவன் மண்ணும்நீரும் சேதுகுங்கூட்டிச் சேரத் துகைத்து வடாதிகளாய்க்கொண்டு பரிணமிப்பிக்குமாபோலே, ஜலத்தையுண்டாக்கி, அது த்ரவீபூதமாயிருக்கையாலே அத்தோசேடினமானபதார்த்தத்தைக்கூட்டி, பின்னையும் நெகிழ்ந்திருக்கையாலே அத்தைச் சிறிதுவலிக்கைக்காக தேஜஃபதார்த்தத்தையுண்டாக்கி, அதுதான்மிகைத்துத் தீயுமளவானவாறே அத்தையாற்றுகைக்குக் காற்றையுண்டாக்கி, அது, தனக்கு ஸஞ்சரிக்கைக்காக அவகாசப்ரதாநம்பண்ணும் ஆகாசத்தையுண்டாக்கி. இவ்வளவும் ப்ரதமஸங்கல்பந்தன்னையே கொண்டு அண்டஸ்ருஷ்டியைப்பண்ணிநின்றது; இனி, பெரியதோருமாளிகையைச் சமைத்து இருள்உறைய விட்டுவைக்கவொண்ணாதிறே; அதுக்கு இரண்டுவிளக்கிட்டாற்போலேசந்த்ரசூர்யர்களையுண்டாக்கி. நீர்க்களிப்புஅறுகைக்கும் ஆப்யாயநத்துக்குமாக இருவரையுமுண்டாக்கினபடி. [சிவனாய் அயனானாய்] - அண்டாந்தர்வர்த்திகளாய்க்கொண்டுநின்று, ஒருவன் மனைந்துகொண்டுவர ஒருவன் அழித்துக்கொடுவரும்படி ப்ரஹ்மருத்ரர்களையுண்டாக்கி. ருத்ரனைமுற்படச் சொல்லுவானேன் ? என்னில், அப்யயபூர்விகையாயிறே ஸ்ருஷ்டியிருப்பது. "நீராய்நிலனாய்" என்றத்தோடொக்க. "சீரார் சுடர்களிரண்டாய்"-என்கையினாலே, "யஸ்யாத்மா ஶரீரம்-யஸ்ய ப்ருதிவீ ஶரீரம்" (யஸ்யாத்மாஶரீரம்-யஸ்யப்ருதிவீஶரீரம்) என்கிறபடியே, சேதநாசேதநங்களிரண்டும் அவனுக்கு ஶரீரவத் பரதந்த்ரமென்னுமிடஞ் சொல்லுகிறது. 'சீரார்சுடர்களிரண்டாய்' என்றும், 'சிவனாயயனானாய் என்றும்' ஸமாநாதிகரிக்கையாலே ஈஶிதவ்யங்களோடு ஈஶ்வராபிமாநிகளோடுவாசியற தத்பரதந்த்ரமென்னுமிடஞ் சொல்லிற்று; ஜகத்ஸ்ருஷ்டிபண்ணிற்று ஸ்வப்ராப்திக்காகவன்றோ? ஸ்வப்ராப்தியைப் பண்ணித்தந்தாயன்றோ நீ ஒருகாரியம் செய்தாயாவது? ஸ்ருஷ்டிக்குப்ரயோஜநமாவது - நித்யதுஃகியானவனை * அந்தமில்பேரின்பத்தே

காரியங்கொள்ள வேணுமதுக்கு த்ருஷ்டாந்தம் - அதுசெய்யும்போது இத்யாதி. பூதபஞ்சகங்களையும் சொல்லுகிறவிடத்திலே ஸ்ருஷ்டிக்ரமத்தாலேயாதல் அப்யயக்ரமத்தாலேயாதல் சொல்லாதே, 'நீராய் நிலனாய்' என்று தொடங்கிச்சொல்லுகிற அடைவுக்கு ப்ரயோஜநம் அருளிச்செய்கிறார் - அதுத்ரவீபூதமாய் இத்யாதி. சேதுகு - கூளம். அண்ட ஸ்ருஷ்டியைச் சொன்ன அநந்தரம், சந்த்ரஸூர்யர்களைச் சொல்லுகிறதற்கு ப்ரயோஜநம் அருளிச்செய்கிறார் - இனிப்பெரியதோரு இத்யாதி இருளுறைய - அந்தகாரம் வர்த்திக்க. அந்தகார நிவ்ருத்யர்த்தமாக சந்த்ரனாதல் ஸூர்யனாதல் போதாதோ வென்ன, இரண்டுபேரையும் சொன்னதுக்கு ஹேது அருளிச்செய்கிறார் - நீர்க்களிப்பு இத்யாதி. இது - 'சீர்' என்றதுக்கர்த்தம். ருத்ரனை இத்யாதிக்கு - ஸ்ரஷ்டாவைச் சொல்லாத ஸம்ஹர்த்தாவான ருத்ரனை முற்படச் சொல்லுவானென் ? என்னில் என்றபடி. 'நீராய் நிலனாய்' இத்யாதிக்கு அநந்தரம் சந்த்ரஸூர்யர்களைச் சொன்னதுக்கும், சந்த்ரஸூர்யர்களுக்கு அநந்தரம் ப்ரஹ்ம ருத்ரர்களைச் சொன்னதுக்கும் பாவம் - 'நீராய் நிலனாய்' என்று தொடங்கி தத்பரதந்த்ரமென்னும் இடஞ்சொல்லிற்றென்னுமளவும். ஈஶிதவ்யங்களென்றது - சந்த்ராதித்யர்களை. 'நீராய் நிலனாய்' இத்யாதிக்கு இரண்டு பாவம்; அதாவது - ஜகச்சரீரியாயிருக்கிற இருப்பைக்காட்டி மாத்ரம் போராது, அஸாதாரண விக்ரஹத்தையும் காட்டவேணுமென்னுதல்; ஸ்ருஷ்டிக்கு ப்ரயோஜநம் ஸ்வமுக்திஶ்யஅன்றோ ? அதைப் பெறவேண்டாவோ என்னுதல். முந்தின பாவத்தை - அவதாரிகையாலும், 'இது அறியாமல்' இத்யாதி வாக்யத்தாலும் அருளிச்செய்து, இரண்டாம்பாவத்தையருளிச்செய்கிறார் - ஜகத்ஸ்ருஷ்டி இத்யாதி. ப்ரயோஜநம்நீபெறவேண்டாவோ' என்னுமளவும் உத்தரோத்தர விவரணம். 'அதுகிடக்க' என்றது - என்னுடைய துஃகநிவ்ருத்திகிடக்கவென்றபடி. சக்ஷுர்விஷயமான மாத்ரத்தையன்றிக்கே ஸ்ருஷ்டி

கோடுபோய் வைக்கையன்றே. அதுகிடக்க, இத்தையுண்டாக்கினதுக்கு ப்ரயோஜநம் நீ பெறவேண்டாவோ? "நீராய்நிலனாய்த்தீயாய்க்காலாய் நெடுவானாய்ச் சீரார்சுடர்களிரண்டாய்ச் சிவனாயயனாய்"என்று - இவர்தமக்கு ஈச்வரவ்யாபாரம் அடங்கலும் மனையடைவே எண்ணுவாரைப்போலே அதிப்ரகாசமாயிருக்கிறபடி. [கூராராழிவெண்சங்கேந்தி]- ஸ்ரீபாஞ்சஜந்யத்தில் வெண்மையோபாதி திருவாழியில் கூர்மையும் இவர்க்குஆகர்ஷகமாயிருக்கிறபடி. [கூராராழி] - ப்ரதிபக்ஷத்தைத் துணிக்கத்துணிக்கச் சாணையிலேறிட்டாற்போலே கூர்மை மிக்கிருக்கிறபடி. அஸாதாரணவிக்ரஹத்துக்கு லக்ஷணமோதான் கையுந்திருவாழியுமாயிருக்கை! [கொடியேன்] - எனக்குஇங்ஙனேஒருநிர்ப்பந்தமுண்டாவதே! என் ஸ்வரூபத்துக்குவிருத்தங்கிடீர் நான்பண்ணுகிறது! ஸ்ரீபரதாழ்வானைப்போலே போகட்டவிடத்தே கிடக்கவல்ல ப்ரக்ருதியாகப்பெற்றிலேன்; இளையபெருமாளைப்போலே, "நில்" என்ன,'குருஷ்வ"(குருஷ்வ)என்றுநிர்ப்பந்திக்கும் ப்ரக்ருதியாவதே![வாராய்]-ஆசைப்பட்டாலும் நடக்கவல்லார் வருமித்தனையிறே; "வாராய்" என்னுங்காட்டில் வந்துகோடுதிரியப்போமோ? என்னில்: [ஒருநாள்] - (நானுளனாகைக்காக.) விடாயர் "ஒருகால் நாக்குநனைக்கத்துளிதண்ணீர்" என்னுமாபோலே. [மண்ணும் விண்ணும்மகிழவே] - எனக்காக வந்திலையாகிலும் உன்விபூதியழியாமைக்கு வா என்கிறார். "மாணவிச்சோலைபோலே ஆவதழிவதான இதுபோனால்என்செய்யவேணும்?" என்றிருக்கிறாயாகில், அவ்விபூதியும் அழியுங்கிடாய்; இதுஅழியவே அதுவும் அழிந்ததாமிறே; அதுவும்இருக்கச்செய்தேயன்றோ,இது அழிய "ஸைகாகீநரமேத" (ஸைகாகீநரமேத) என்றது. இனித்தான் ப்ரளயத்துக்கழியாதென்னுங்காட்டில், ஆர்த்திக்கும்அழியாதென்றதாகாதே! [மகிழவே] - அழிகைதவிர்ந்து தரிக்கைக்காக.

(க)

யாதிவ்யாபாரங்களையும் அருளிச்செய்கையாலே - இவருடைய ஜ்ஞாநவைசத்யத்தையநுஸந்தித்து, வ்யாக்யாதா ஈடுபடுகிறார் - நீராய் இத்யாதி. "வெண்சங்கு" என்றாற்போலே அழகுக்கு உடலான விசேஷணத்தைச்சொல்லாதே, கூர்மையைச்சொல்லுகிறதென்? என்ன - ஸ்ரீபாஞ்சஜந்யத்தில் இத்யாதி. "ஆர்" என்றதுக்கர்த்தம் - ப்ரதிபக்ஷத்தை இத்யாதி. அஸாதாரணவிக்ரஹத்தை யாசைப்படுகிறவர் "கூராராழிவெண்சங்கேந்தி" என்பானென்? என்ன - அஸாதாரண இத்யாதி. லக்ஷணமோதான்என்றது - லக்ஷணமாயிருக்குமென்றபடி "அஸாதாரணவிக்ரஹத்தைக்காட்டவேணும்" என்கிறவர், "கொடியேன்" என்று, சொல்லுகிறதுக்குபாவம் - எனக்குஇங்ஙனே இத்யாதிவாக்யத்வயம். ஸ்வரூபத்துக்கு - பாரதந்த்ர்யஸ்வரூபத்துக்கு. ஸத்ருஷ்டாந்தமாகவிவரணம் - ஸ்ரீபரதாழ்வானை இத்யாதி வாக்யத்வயத்தாலே. "வரவேணும்" என்று ஆசைப்படுகிறதென்? தாம் போகவொண்ணாதோ? என்ன - ஆசைப்பட்டாலும் இத்யாதி. ஒருநாளமையுமோ? என்ன - விடாயர் இத்யாதி. "மண்ணும் - மகிழ - வாராய்" என்றமாத்ரத்துக்குபாவம் - எனக்காக இத்யாதி. எனக்காக - என் ஸத்தையழியாமைக்காக. மாணவிச்சோலையாவது - மஹாநவமியில் அலங்காரம். நித்யவிபூதியழியக்கூடுமோ? என்ன - இதுஅழியவே இத்யாதி. இதுக்குநியாமகங்காட்டுகிறார் - அதுவும் இத்யாதி. பரிஹாராந்தரம் - இனித்தான் இத்யாதி. அவ்விபூதியழிகையாவது - அஸத்ஸமமாயிருக்கை. "மகிழ" என்றது - "வஷிஷ்ணவீஜம்ஸஹிதாஸஷ" என்றவிடத்திற்போலே,தரிக்கவென்றபடி. 'நீராய்' என்றுதொடங்கி, 'அயனாய், இதறிவன், இதுபோராது, கூராராழி வெண்சங்கேந்திக் கொடியேன்பால் - மண்ணும்விண்ணும்மகிழ - வாராய்' என்றந்வயம்.

(க)

இரண்டாம் பாட்டு.

மண்ணும்விண்ணும்மகிழக் குறளாய்வலங்காட்டி
மண்ணும்விண்ணுங்கொண்டமாய அம்மானே!
நண்ணியுனைநான்கண்டு உகந்துகூத்தாட
நண்ணியொருநாள் ஞாலத்தூடேநடவாயே.

ஆ.—(மண்ணும்.) ஸ்ரீவாமநனாய்வந்து பிறந்தருளி உன்னுடைய நிரவதிக ஸௌந்தர்யமாகிறபலத்தாலே மஹாபலியை ஜயித்து லோகங்களைக் கொண்டருளிற்று, இவ்வண்டாந்தர்வர்த்திகளான ஆத்மாக்களும், திருநாட்டிலுள்ள திவ்ய புருஷர்களும் ப்ரீதராகைக்கன்றோ? ஆதலால் அவர்களுடைய உஜ்ஜீவநார்த்தமாக, மோகாக்நிகர்ஶித மான என்னுடைய காத்ரங்களாலேஉன்னை ஸ்பர்ஶித்து உன்னழகையும் உன்நடையை யும் கண்ணாலே கண்டுஉகந்து அந்தப்ரீத்யதிஶயத்தாலே நான் கூத்தாடும்படி வந்தொரு நாள் ஞாலத்தூடே நடவாய் என்கிறார்.

ஓ.—இரண்டாம்பாட்டில், "நீர் சொன்னபடியே செய்யலாவது திருநாட் டிலேபோனால் காணும்" என்னில், ஸம்ஸாரத்திலே ஸ்ரீவாமநனாய் வந்துபிறந்தருளி உன்னுடைய அழகை எல்லார்க்கும் புஜிக்கக்கொடுத்தருளினாய் ஒருவனல்லையோ? ஆன பின்பு, அடியேனுடைய அபேக்ஷிதம் இங்கே செய்தருளவேணுமென்கிறார். [மண்ணு மென்று தொடங்கி] - அழகைக்கண்டு லோகங்களெல்லாம் உஜ்ஜீவிக்கும்படி வாமநனாய் அழகாகிற பலத்தைக்காட்டி ப்ருதிவ்யாதி ஸகல லோகங்களையும் அளந்துகொண்ட அத்யாஶ்சர்யபூதனே! [நண்ணியுனையென்று மேலுக்கு] - மாநஸாநுஸந்தாநமாத்ர மன்றிக்கே நான் உன்னைக் கிட்டிக் கண்டு அத்தாலே உகந்து கூத்தாடும்படி ஸம்ஸாரத் துள்ளே எனக்கு ப்ரத்யக்ஷமாக ஒருநாள் வந்து உலாவியருளவேணும்.

ப.—அநந்தரம், மஹாபலிக்கு உன்னழகைக் காட்டி அகிலலோகத்தையும் அநந்யார்ஹமாக்கிக்கொண்ட ஆஶ்சர்யசக்தியையுடைய நீ, நான் கண்டுஉகக்கும்படி இந்த விடத்திலே வரவேணு மென்கிறார்.

மண்ணும் - பூமியும், விண்ணும் - ஊர்த்த்வலோகமும், மகிழ - உகக்கும்படி யாக, குறளாய் - (பெரியவடிவைச் சிறுக்கின) வாமநனாய், (அர்த்தித்த அநந்தரம் கையிலே நீர்விழுந்தவாறே வளர்ந்து), வலம் - ஸர்வசக்தியோகத்தை, காட்டி - ப்ரகாசிப்பித்து, மண்ணும் - பூமியையும், விண்ணும் - ஊர்த்த்வலோகத்தையும், கொண்ட - அளந்து கொண்ட, மாயம் - ஆஶ்சர்யசேஷ்டிதத்தையுடைய, அம்மானே - ஸ்வாமியானவனே! உனை - (ப்ரயோஜநாந்தரபரர்க்கு ப்ரகாசிப்பித்த வடிவழகையுடைய) உன்னை, நான் - (கண்டல்லது நிற்கமாட்டாத சாபல்யத்தையுடைய) நான், நண்ணி - (அந்த வடிவழ கோடே) கிட்டி, கண்டு - (மாநஸஸாக்ஷாத்காரமின்றியே) கண்ணாலே கண்டு, உகந்து - ப்ரீதனாய், கூத்தாட - கூத்தாடும்படியாக, நண்ணி - (யஜ்ஞவாடத்திலே வந்தாற்போலே நீதானே) வந்து கிட்டி, (எனக்காகவும்), ஒருநாள்—, ஞாலத்தூடே - பூமியிலே, நடவாய் - நடந்துவரவேணும்.

இ.—இரண்டாம்பாட்டில், "நீர் சொல்லுகிறது ஒருதேச விசேஷத்திலே கொடுபோய்க் காட்டுமதுகாணும்" என்ன, "நீ இங்கே கொடுவந்து காட்டிற்றிலையோ?" என்கிறார்.

[மண்ணும் இத்யாதி] - ஹ்யம்யந்தரிக்ஷாதி ஸகல லோகங்களிலும், விசேஷஜ்ஞர் உகக்கவும், அவிசேஷஜ்ஞர் "ஸவிஷ்ணுஸீஜம் வ்ருத்திஸஜ்ஜஹஷ்டு" என்கிறபடியே செவ்விபெறவும். [குறளாய்] - நித்யஸூரிகள் அநுபவிக்கும் வடிவை ஸம்ஸாரிகள் கண்ணாலே அநுபவிக்கலாம்படி கோடியைக்காணியாக்கினபடி. பால் சென்றதனையும் ரஸிக்குமாபோலே போக்யதை மிக்கிருக்கிறபடி. "கூராராழி வெண்சங்கேந்தி" என்கிற வடிவிற்காட்டில் ஆகர்ஷகமாயிருக்கிறபடி. [வலங்காட்டி] - அம்புக்குச் செல்லாத விடமாகையாலே அழகாகிற பலத்தைக்காட்டி அழித்து. [மண்ணும் விண்ணுங் கொண்ட] - மஹாபலியாலே அபஹ்ருதமான த்ரைலோக்யத்தையும் இந்த்ரனுக்கு வாங்கிக்கொடுத்த. கொண்டவென்றது - இந்த்ரன்பேறு தன்பேறாய் இருக்கிறபடி. பிறந்தவன்றே ப்ரஹ்மசாரியாய், கொடுத்து வளர்ந்த கையைக்கொண்டு இரந்து, சிறுகாலைக் காட்டி அபஹரித்துப் பெரிய காலாலே அளந்துகொண்ட ஆஸ்சர்யங்கள். [அம்மானே] - இதெல்லாம் வேண்டிற்று உடையவனாகையிறே. [நண்ணி] - மாநஸாநுபவமாத்ரமன்றிக்கே கிட்டி. [உனை நான்] - கண்டல்லது நிற்கவொண்ணாத உன்னைக் காண்கையிலே சபலனான நான். ப்ரதிகூலனுக்குக் காட்டினவடிவு அநந்யப்ரயோஜநனுக்கு அரிதாவதே. [கண்டுகந்து கூத்தாட] - மஹாபலியைப்போலே கொடுக்கலாவதில்லை, இந்த்ரனைப் போலே கொள்ளவேண்டுவதில்லை; கண்ணாலே கண்டு ஹ்ருஷ்டனாய், ஹர்ஷத்துக்குப் போக்குவிட்டு ஆடும்படியாக. கொள்வதும் அழகே, அவன் கொடுப்பதும் அழகே. [நண்ணி] - நான் இருந்தவிடத்தே வந்துகிட்டி, மஹாபலிக்குக்காட்டினவோபாதி ஒருநாளமையும்; நானிருந்தஸம்ஸாரத்திலே மஹாபலி யஜ்ஞவாடத்திலே உலாவினாற்போலே உலாவவேணும்.

ஈடு.—இரண்டாம் பாட்டு. "வாராய் என்று நிர்ப்பந்தித்தல்ல காணும், நம்மைக் காண்பது! உம்மை ஒருதேசவிசேஷத்திலே யழைத்துக்காணும் காட்டுவது" என்ன, அவ்வடிவுதன்னையே இங்கே கோடுவந்து இதரஸஜாதீயமாக்கிக் காட்டிற்றிலையோவென்கிறார்.

[மண்ணும் விண்ணும் மகிழக்குறளாய்] - இவ்வளவில் ஸ்ரீவாமநனாய் வந்து தோற்றிற்றிலையாகில், உபயவிபூதியும் அழியுமாகாதே ஒருபாட்டம் மழைவிழுந்தால் பதார்த்தங்களடையச் செவ்விபெறுமாபோலே உகவாதாரும் மகிழும்படியன்றோ வந்து தோற்றிற்று.

இரண்டாம்பாட்டு.—மண்ணும் இத்யாதி. "ஞாலத்தூடேநடவாயே" என்ற பதத்தைக் கடாக்ஷித்து ஈஸ்வராபிப்ராயத்தையருளிச்செய்கிறார் - வாராயென்று இத்யாதி. "மண்ணும்விண்ணும் மகிழ" இத்யாதியைக்கடாக்ஷித்து அதுக்கு உத்தரம் அருளிச்செய்கிறார் - அவ்வடிவுதன்னை இத்யாதி.

"மண்ணும்விண்ணும் மகிழக்குறளாய்" என்றதுக்கு ஹார்த்தபாவம்-இவ்வளவில் இத்யாதி. இவ்வளவிலென்றது - மஹாபலி கையிலேயகப்பட்ட இவ்வளவிலே யென்றபடி. "மகிழ" என்றதுக்குபாவம் - ஒருபாட்டம் இத்யாதி. ஒருபாட்டம் - ஒருவெள்ளம்; ஒருபாறல். "ஸவிஷ்ணுஸீஜம் வ்ருத்திஸஜ்ஜஹஷ்டு" என்றத்தைக் கடாக்ஷித்து 'ஒருபாட்டம்மழை' யென்றது இத்தால்; "மகிழ"

[வலங்காட்டி] - ஔதார்யமென்றொரு குணலேசங் கிடக்கையாலே ராவணாதிகளைப் போலே அம்பாலே யழிக்கப்போகாதே; அழகாகிற பலத்தைக் காட்டி வாய்மாளப் பண்ணினபடி. சுக்ராதிகளுடைய நிரோதமுண்டாயிருக்கச் செய்தேயிறே யழகுக்குத் தோற்றுக் கொடுத்துக்கொண்டு நின்றபடி. [குறளாய்] - கோடியைக் காணியாக்கினாற்போலே முகந்துகொள்ளலாயிருக்கை. [மண்ணும்விண்ணுங்கொண்ட] - பூம்யந்தரிக்ஷாதிகளைக் காற்கீழே யிட்டுக்கொண்ட. இந்த்ரனுக்குக் கொடுத்தவென்னாதே, கொண்ட என்கிறது - அவன்ஆஸுரப்ரக்ருதியாகையாலே அவன்பக்கல் தானேகொண்டானாகக்கொண்டபடியும், ஆஶ்ரிதனை இந்த்ரனுடைய அவிபாகரஸத்தாலும். [மாயவம்மானே]-ஶ்ரிய:பதியானவன் அர்த்தியானபடியும், வடிவழகைக் காட்டி வாய்மாளப் பண்ணினபடியும், "கொள்வனான் மாவலி" என்றாற்போலே சில முக்தஜல்பிதங்களைப் பண்ணினபடியும், சிறுகாலைக் காட்டிப் பெரியகாலாலே யளந்தபடியுந் தொடக்கமான ஆஶ்சர்யங்களைச் சொல்லுகிறது. [அம்மானே] - "தேவாநாம் தாநவாநாஞ்ச ஸாமாந்யமதிதைவதம்" (தேவாநாம் தாநவாநாஞ்சஸாமாந்யமதிதைவதம்) என்கிற பொதுவான ஸ்வாமித்வமிறே அங்ஙன் செய்ய வேண்டிற்று? [நண்ணியுனை நான்கண்டுகந்து கூத்தாட] - இந்த்ராதிகளைப்போலேயெனக்கு ராஜ்யாபேக்ஷையில்லைகாண்! நீ பண்ணித்தந்த வெளிச்சிறப்பாலே த்ருப்தனாகிறிலேன். நானுன்னைக் கிட்டிக் கண்டு உகந்து கூத்தாடும்படி வரவேணும். வருகைக்குண்டான வ்யாபாரம் அவன் தலையது; வந்தால் உகக்கையிலே இவர்க்கந்வயம். [நான் கண்டுகந்து கூத்தாட] - மஹாபலியைப்போலேஒன்றுகொடுக்க இருக்கிறேனல்லேன்; இந்த்ரனைப் போலே ஒன்று கொள்ள இருக்கிறேனல்லேன்; 'எனக்கு' என்றுஇருப்பாரோடும், 'என்னது' என்றிருப்பாரோடுமோ நீ கொடுத்துக்கொண்டு பரிமாறுவது? உன்னையே கண்டுஉகப்பார்க்கு உன்னைக் காட்டலாகாதோ? "ஸம்ஹ்ருஷ்ட [illegible]

என்று - புரிக்கையைச்சொல்லுகிறது. "மகிழ" என்றதுக்கு ப்ரீதியாகஅர்த்தாந்தரம் - [illegible] இத்யாதி. ஏகார்த்தமாதல், வலங்காட்டுகிறதென்? ஹிம்ஸித்தாலோ? என்ன - ஔதார்யம் இத்யாதி. "வாய்மாளப்பண்ணி" என்கிறதென்? "கபடம்" என்றறியாதே கொடுத்தானென்றாலோ? என்ன - சுக்ராதிகள் இத்யாதி. "குறளாய்" என்று - வாமநத்வம் சொல்லாநிற்க, "அழகைக்காட்டினான்" என்னக்கூடாதேயென்ன - கோடியை இத்யாதி. முகந்துகொள்ளலாயிருக்கை - நிரம்பித் தநுபவிக்கலாயிருக்கை. மண்ணையும் விண்ணையும் மஹாபலிபக்கலிலே வாங்கிக்கொண்ட என்றர்த்தாந்தரம்விவக்ஷித்து, அப்போது, வாங்கிக்கொடுத்தவென்னாதே, "கொண்ட" என்றதுக்குஹேது த்வயம்- இந்த்ரனுக்கு இத்யாதி. 'அவிபாகரஸத்தாலும்' என்கிறவிடத்திலே-"[illegible] । [illegible]" என்கிறது அநுஸந்தேயம் "மாயன்" என்றதுக்குபாவம் - ஶ்ரிய:பதி இத்யாதி. அவனை நிரஸியாமல் அளந்தது ஸம்பந்தத்தாலே யென்கிறார் - தேவாநாம் இத்யாதி: ஜிதந்தாயாம். அங்ஙன் செய்யவேண்டிற்றென்றது - வலங்காட்டிவாங்கவேண்டிற்றென்றபடி. தாத்பர்யார்த்தம் - இந்த்ராதிகளைஇத்யாதி. ஆதிசப்தத்தாலே-மஹாபலியை நினைக்கிறது. 'ராஜ்யாபேக்ஷையில்லைகாண்'-பின்னையெதிலே யபேக்ஷையென்ன? உகந்துகூத்தாடுகையிலேயபேக்ஷையென்றபடி. "கண்டு" என்றதுக்கு பாவம் - நீ பண்ணித்தந்த இத்யாதி. "உகந்து" என்றதுக்குபாவம் - வருகைக்கு இத்யாதி. அதாவது - நீ வருகைக்கு ஸாதநாநுஷ்டாநம் பண்ணுமவனல்லேன், நீ வந்தத்தைக்கண்டுஉகக்கிறதிலே எனக்குஅந்வயமென்றபடி. "நான்" என்றதுக்குபாவம் - மஹாபலியை இத்யாதி. பங்க்யந்தரேண பாவம் - எனக்குஎன்று இத்யாதி. எனக்குஎன்றிருப்பான் - இந்த்ரன். என்னதுஎன்றிருப்பான் - மஹாபலி. அப்படியுகப்பரோ? என்ன-ஸம்ஹ்ருஷ்ட இத்யாதி. "ஸம்ஹ்ருஷ்ட [illegible]

தஸ்ஸ்வரமம்யநம்" (ஸம்ப்ரமைஸ் துஷ்யகோவிந்த ஏதந்ந:பரமம்தநம்) என்கிற இதிலேயிறே இவர்க்குஅந்வயம். [நண்ணி] - நானிருந்த விடத்தே நீ வந்துகிட்டி. [ஒரு நாள்] - பின்பொருநாள் அச்செயல் செய்யலாகாதோ? மண்ணும்விண்ணும் மகிழநடக்கலாவது அசுரன் முன்பேயோ? அநந்யப்ரயோஜநர்முன்பு நடக்கலாகாதோ? [ஞாலத்தூடே நடவாயே] - நடையழகில் வாசிகண்டு அதிலே ஈடுபடாதே, ஔதார்யங்கொண்டாடியிருக்கும் அவன்முன்னேயோ நடக்கலாவது? நடையழகில் உள்மானம் புறமானங்கண்டு அதுவேஜீவநமாயிருக்கிற என்முன்னே நடக்கலாகாதோ? (௨)

மூன்றும் பாட்டு.

ஞாலத்தூடேநடந்தும்நின்றும் கிடந்திருந்தும்
சாலப்பலநாள் உகந்தோறுயிர்கள்காப்பானே!
கோலத்திருமாமகளோடு உன்னைக்கூடாதே
சாலப்பலநாள் அடியேனின்னுந்தளர்வேனோ?

ஆ.—(ஞாலத்தூடே) - வாமநனும் சக்ரவர்த்தித் திருமகனும் ஸ்ரீவஸுதேவர் திருமகனும் மற்றும் அஸங்க்யேயங்களான திருவவதாரங்களைப்பண்ணி ஸகல மநுஜ நயந விஷயதாம்கதனாய், அசேஷமநோநயநஹாரி திவ்யசேஷ்டிதாநி குர்வாணனாய்க்கொண்டு ஸர்வாத்மாக்களையும் யுகந்தோறும்ரக்ஷித்தருளுகிற பரமகாருணிகனே! நீ பிராட்டியோடேகூட எழுந்தருளியிருக்கிற இருப்பையும், உன்னழகையும், உன்னுடைய திவ்யசேஷ்டிதங்களையும் நானொருத்தனும் ஸர்வகாலமும் காணப்பெறாதே தளருமித்தனையோ? என்கிறார்.

ஒ.—மூன்றாம்பாட்டில், "யாத்ருச்சிகமாக ஒருகால் அங்ஙனே அவதரித்தோமத்தனை" என்னவொண்ணாதே, யுகந்தோறும் ராமக்ருஷ்ணாதிரூபேண வந்து திருவவதாரம் பண்ணியருளினவிடங்களிலும் ஸஞ்சாராதிகளான மநோஹாரி சேஷ்டிதங்களைப்பண்ணி ஜகத்தை ரக்ஷிக்கை உனக்கு ஸ்வபாவமாயிருக்க, நான் உன்னைக் காணப்பெறாதே இன்னமும் நெடுநாள் நோவுபடக்கடவேனோ வென்கிறார். [கோலத்திருமாமகளோடு உன்னைக்கூடாதே] - பெரியபிராட்டியாரோடிருந்தருளுகிற உன்னைக்கண்டு அடிமை செய்யப்பெறாதே.

ஸ தஸ்ஸ்வரமம்யநம் । சந்த்யாவாவிஶேஷேண கஸ்வாபேஷயிதம்கக்ஷஸ்" இதிமஹாபாரதே ச்ருஷ்ணம்ப்ரதி விதுர:. அச்செயல் - முன்பொருநாள் அசுரனுடைய யஜ்ஞவாடத்திலே நடக்கையாகிற அச்செயலென்றபடி. விவரணம் - மண்ணும்விண்ணும் இத்யாதி. அவன்முன்னே நடந்தோம், உம்முடையமுன்னே நடந்திலோமென்று வெறுக்கிறதென்? அவனைக்காட்டிலும் உமக்கு வாசியேதென்ன:—அவன் சுஷ்கஹ்ருதயன், நான் ஆர்த்ரஹ்ருதயனென்கிறார் - நடையழகில் இத்யாதி வாக்யத்வயத்தாலே. உள்மானம் புறமானமென்றது - உள்ளிற்சிவப்பும் புறத்திற்கறுப்புமான பரபாக ரஸத்தையென்றபடி. க்ரமேணாந்வய:. (௨)

ப.—அநந்தரம், அகிலப்ரகாரத்தாலும் ஆச்ரிதஸம்ரக்ஷணார்த்தமான வ்யாபாரத்தையுடைய உன்னை, ஸஹதர்மசாரிணியான லக்ஷ்மியோடேகூட அநுபவியாதே இங்ஙனேயுள்ளதனையும் தளரக்கடவேனோ என்கிறார்.

உகந்தோறு - யுகந்தோறும், ஞாலத்தூடே - பூமியிலேயவதரித்து, நடந்தும்- "[illegible]" என்று நடந்தருளியும், நின்றும் - ("[illegible]" என்று வில்லைக் கோத்துப்பிடித்து) நின்றும், கிடந்தும் - ("[illegible]" என்று கடலுக்கெதிரே யொருகடல் கிடந்தாற்போலே) கண்வளர்ந்தருளியும், இருந்தும் - ("[illegible]") என்று பிராட்டியோடேகூட இனிதாக எழுந்தருளியிருந்தும், சாலப்பலநாள் - ("[illegible]" என்கிறபடியே) அநேக காலம், உயிர்கள் - ப்ராணிகளை, காப்பானே - ரக்ஷித்துக்கொண்டு போருமவனே! கோலம் - ("[illegible]") என்று நீ கொண்ட வடிவுக்கு ஈடானஆநுரூப்யத்தையுடையளாய்க் கொண்டு அவதரிக்கும், திருமாமகளோடு - லக்ஷ்மியோடே கூடியிருக்கிற, உன்னை-, கூடாதே - கிட்டியநுபவியாதே, (அநாதிகாலமிழந்தவோபாதி), சாலப்பலநாள் - மேலுள்ளகாலமெல்லாம், (உறவறியாதிருக்கையன்றிக்கே), அடியேன் - (உறவறிந்த) நான், (விஷயபரனாய் ருசியில்லாதிருக்கையன்றியே), இன்னும் - ருசிபிறந்தபின்பும், தளர்வேனோ-அநுபவாலாபத்தாலே ஈடுபடக்கடவேனோ?

இ.—மூன்றாம்பாட்டில், "அது சற்றுப்போதுகாட்டாது பெருநாபோலே செய்தோமத்தனை" என்ன; அது காதாசித்கம் என்னவொண்ணாதபடி யுகந்தோறும் ராமக்ருஷ்ணாதிரூபத்தாலே வந்து அவதரித்து ரக்ஷிக்கை உனக்கு ஸ்வபாவமாயிருக்க, நான் நோவுபடக்கடவேனோ? என்கிறார்.

[ஞாலத்தூடே. இத்யாதி] - "[illegible]" என்றும், "[illegible]" என்றும் சொல்லுகிறபடியே நடந்தும், "[illegible]" என்கிறபடியே நின்றும், "[illegible]" என்கிறபடியே கிடந்தும், "[illegible]" என்கிறபடியே ருஷிகள் ஆச்ரமங்களிலே யிருந்தும். [சாலப்பலநாள்] - ஒருநாள்செய்து போகையன்றிக்கே பதினோராயிரமாண்டும், நூறாண்டும். [உகந்தோறு] - "[illegible]" என்கிறபடியே. [உயிர்கள் காப்பானே] - சிறியார் பெரியார் என்னாதே ஸர்வரக்ஷகன் அல்லையோ? சிலர் கூப்பிட ஜகத்ரக்ஷணம்பண்ணுகை ரக்ஷகத்வத்துக்குக் குறைவன்றோ? என்னை ஒருவனையும் ஒழியவிட்டு உன்னுடைய ஸர்வரக்ஷகத்வத்தை இழக்கவிறே புகுகிறது. [கோலத்திரு இத்யாதி] - பிராட்டியோடேகூடவிருக்கிற வுன்னைக்கிட்டி அடிமைசெய்யப்பெறாதே, மாதா பிதாக்களைச் சேரக்காணுமாபோலே. ஒரு மிதுநமிறே ப்ராப்யம். மாதாபிதாக்களை அகன்று ஸ்தந்யப்ரஜைஜீவிக்கவற்றோ? இருவருஞ்சேர்ந்த சேர்த்தி பேற்றுக்குஉறுப்பாயன்றோ இருப்பது; "[illegible]" என்னக்கடவதிறே. [சாலப்பலநாள்] -

அநாதிகாலமிழந்த நான் அநந்தகாலமிழக்கவோ? முறையறியாத காலமிழந்தேனாகில், முறையறிந்த காலமு மிழக்கவோ? ருசிபிறவாத காலமிழந்தேனாகில், ருசிபிறந்தபின்பும் இழக்குமித்தனையோ?

ஈடு.—மூன்ரும்பாட்டு. ஜகதாகாரனுன வடிவுகாட்டினது எனக்குப்போராது; அஸாதாரணமான விக்ரஹத்தைக் கோடுவந்து காட்டவேணுமேன்ருர்; அது உமக்குக் காட்டுவது ஒருதேசவிசேஷத்தே கொடுபோய்க்காணு மென்ன, அதுதன்னை இங்கே கோண்டுவந்து இதரஸஜாதீயமாக்கிக் காட்டிற்றிலேயோ என்ருர். அதோருநாள் சற்றுப் போது காட்டாறு பெருகினுற்போலே செய்தோமேன்ன, "அது காதாசித்கம்" என்ன வோண்ணுதபடி யுகந்தோறும் ராமக்ருஷ்ணுத்யவதாரங்களைப்பண்ணி ரக்ஷிக்கை உனக்கு ஸ்வபாவமாயிருக்க, நான் நோவுபடக் கடவேனோ என்கிருர்.

[ஞாலத்தூடேநடந்தும்] - ஸதாதர்ஶநம்பண்ணுவார்முன்னே நடக்கக்கடவ நடையை, காதாசித்கமாகவந்தாலும்கடாக்ஷியாதார்முன்னே கிடீர் நடந்தது! அந்யர் முன்னே நடக்குமாபோலே. "**அக்ரதః ப்ரயயௌ ராம:**" (அக்ரதঃப்ரயயௌராம:) என்றும், "**அயதாஶரதிர்வீரோ ராமோநாம மஹாபல: | விஷ்ணுர்மாநுஷரூபேண சசாரவஸுதாதலே**" (அததாஶரதிர்வீரோ ராமோநாமமஹாபல: | விஷ்ணுர்மாநுஷரூபேணசசாரவஸுதாதலே) என்றும் சொல்லுகிறபடியே நடந்தும். வடதேசத்தின்ன்றும் போரப் பாடவல்லராயிருப்பா ரோருத்தர் "பெருமாளைத் திருவடிதொழ வேணும்" என்றுவர, ஆழ்வார்திருவரங்கப் பெருமாளரையர் ஒருதீர்த்தத்தின்அன்றுஇராத் திருமாலையைப்பாடிச்சமைந்து; பெருமாளை யோருமத்தகஜத்தைக் கைவசப்படுத்துமா போலே ஏத்திவசமாக்கிக் கணிசங்கோண்டு, "நாயந்தே! தேவரீர்திருவடிகளுக்குப் போர நல்லானேருவன் தேவரைத்திருவடிதொழ நேடுந்தூரமுண்டு வந்திருக்கிறது; இவனை யழைத்துக்கோண்டு ஸம்பாவனைபண்ணியருளவேணும்" என்ன, அவரைப் பெருமாள் அருளப்பாடிட்டு, திருப்புன்னைக்கீழினின்றும் அவர் நின்றவிடத்தே திருக்கைத்தலத்தேயெழுந்தருளி, விண்ணப்பஞ்செய்வார்களை யருளப்பாடிட்டு, "வாரிகோள்! நாம் இவன் வந்த தூரத்துக்கு

மூன்ரும்பாட்டு.—ஞாலத்தூடே இத்யாதி. கீழிற்பாட்டுக்களில் அவதாரிகைகளை நிகமித்துக்கொண்டு இப்பாட்டுக்கவதாரிகை இடுகிருர் - ஜகதாகாரனுன இத்யாதி. "உகந்தோறுயிர்கள் காப்பானே, அடியேனின்னும்தளர்வேனே" என்றத்தைக்கடாக்ஷித்து - யுகந்தோறும் இத்யாதி. "காப்பானே" என்றத்தைப்பற்ற - ஸ்வபாவமாயிருக்க என்றது.

"ஞாலத்தூடே" என்றதுக்குபாவம் - ஸதாதர்ஶநம் இத்யாதி. கடாக்ஷியாதார்முன்னே நடந்ததுக்குத்ருஷ்டாந்தம் - அந்யர் இத்யாதி. "நடந்தும்" என்றதுக்குபாவம் - அக்ரத இத்யாதி. "அக்ரத: ப்ரயயௌ ராம: ஸீதா மத்யே ஸுமத்யமா | ப்ருஷ்டதஸ்து தநுஷ்பாணிர் லக்ஷ்மணோ அநுஜகாம ஹ" இத்யாரண்யகாண்டே [கக-க] "அயதாஶரதிர்வீரோ ராமோநாம மஹாபல: | விஷ்ணுர்மாநுஷரூபேண சசாரவஸுதாதலே" இத்யாரண்ய பர்வணி பீமஸேநம்ப்ரதிஹநூமாந். ஆஶ்ரிதபுருஷகாரத்தைப் புரஸ்கரித்து "காணவேணும்" என்று அபேக்ஷித்தால் அவர்களுக்காக நடக்கக்கடவ அவன், ஒருவர் அபேக்ஷியாதிருக்கத் தானே வந்துநடந்தாலும் கடாக்ஷியாதார் முன்னேகிடீர் நடந்தது! என்று விவக்ஷித்து, அப்படியாஶ்ரிதர்க்காக நடக்குமோ? என்ன - வடதேசத்தில் இத்யாதி. தீர்த்தத்தினன்றுஇரா - தீர்த்தத்தினன்றுஇருந்து. சமைந்து - முடித்து. கணிசங்கொண்டு - சபதங்கொண்டு. "சொன்னபடி

எல்லாம்போருமோ செய்ததரம்?'' என்று திருவுள்ளமானுர்; அப்படியேயிறே நம்மிழவுகளும் திருவுள்ளத்தேபட்டு, அவையெல்லாம் ஆறும்படி முகம் தந்தருளும்படியும். [நின்றும்] - ''அவஷ்டப்ய சதிஷ்டந்தம் ததர்ஸ தநுரூர்ஜிதம் | ராமம் ராமாநுஜம் சைவ பர்த்துஸ் சைவாநுஜம் ஸபா'' (அவஷ்டப்யசதிஷ்டந்தம் ததர்ஸதநுரூர்ஜிதம் | ராமம்ராமாநுஜம்சைவபர்த்துஸ்சைவாநுஜம்ஸபா) - தன்பார்த்தாவைக் கொன்ற பெருமாளை ''தப்பச்செய்தீரே'' என்கையன்றிக்கே, இவரது குற்றமுண்டோ? தம்மையாஸ்ரயித்தவர்கள் விரோதிபோக்கத்தவிர்வர்களோ? இவனும் அநுகூலித்தானுகில் ரக்ஷியாரோ? தண்ணீர்க்குடிக்கக்கல்லின ஏரியிலே தலைகீழதாகவிழுந்து சாவாரைப்போலே தன்குற்றத்தாலே கெட்டானத்தனைகிடீ ரென்ருளிறே! இப்படி உகவாதாருடைய ஸ்த்ரீகளுக்கும் ஆகர்ஷகமாம்படியிறே கையும்வில்லுமாய்நிற்கும் நிலையிருப்பது! [கிடந்தும்]-''பாஹும் புஜகபோகாபம் உபதாயாரிஸூதந:'' (பாஹும்புஜகபோகாபமுபதாயாரிஸூதந:) - கடலையநுவர்த்தித்துக் கிடக்கிறகிடைதானே லங்கை குடிவாங்கவேண்டும்படியிருக்கை. ''அஞ்ஜலிம் ப்ராங்முக: க்ருத்வா ப்ரதிஸிஸ்யே மஹோததே:'' (அஞ்ஜலிம்ப்ராங்முக:க்ருத்வாப்ரதிஸிஸ்யேமஹோததே:) - ப்ரதிஸிஸ்யே என்கிறதாயிற்று. கடல் தன்னைப்போர அளவுஉடைத்தாக நினைத்திருக்குமாயிற்று, அதுக்காக ஒருகடல் ஒருகடலோடே ஸ்பர்த்தித்துக் கிடந்தாற்போலேயிருக்கை; † ''கருணையங்கடல் துயின்றனன் கருங்கடல் நோக்கி'' என்னும்படியிறே. [இருந்தும்]-''உபவிஷ்டம் ஸ்வலங்க்ருதம்'' (உபவிஷ்டம்ஸ்வலங்க்ருதம்) என்றும், ' உடஜே ராமமாஸீநம்'' (உடஜேராமமாஸீநம்) என்றும்

ப்ர.—[நின்றும்]—கிஷ்கிந்தாகாண்டே [கரு] ''அவஷ்டப்ய சதிஷ்டந்தம் ததர்ஸ தநுரூர்ஜிதம்। ராமம் ராமாநுஜம் சைவ பர்த்துஸ் சைவாநுஜம் ஸுபா॥ உரு॥''

[இருந்தும்] அயோத்யாகாண்டே [கக] அபிஷேகஸர்க்கே, ''தம் பர்ணஸாலாமாஸீநம் உபவிஷ்டம் ஸ்வலங்க்ருதம் । ததர்ஸ ... ॥ ... ॥ ... ॥ ... ॥ உடஜே ராமமாஸீநம் ... ॥ கo॥''

செய்கிரோம்'' என்று ப்ரதிஜ்ஞை பண்ணுவித்துக்கொண்டு என்றபடி. ப்ராஸங்கிகம் - அப்படியே இத்யாதி. ''நடந்தும்'' என்று பதச்சேதம். நிற்கிறநிலையாவது இன்னதென்றும், அதுதான ஆகர்ஷகமாயிருக்கும் என்னுமத்தையும் அருளிச்செய்கிறார்- அவஷ்டப்ய இத்யாதி. கிஷ்கிந்தாகாண்டே. ''சுபா'' என்றதுக்கு பாவம் - தன்பார்த்தாவை இத்யாதி. உக்தார்த்தத்துக்கு நிதர்ஸநம் - தண்ணீர் இத்யாதி. * மரதகமணித்தடமாகையாலே இவருக ஏரியிறே. ''கிடந்தும''என்றதுக்கு பாவம்-பாஹும் இத்யாதி. யுத்தகாண்டே. ''அரிஸூதந:'' என்றதுக்கு பாவம் - கடலை இத்யாதி. ''ப்ரதி'' என்றதுக்கு பாவம் - கடல்தன்னை இத்யாதி. ''ப்ரதி'' என்றது - ப்ரதிரிதி யென்றபடி. போரவளவுடைத்தாகவென்றது - ''மஹோததே:'' என்றத்தைப்பற்ற. இவர்கடலோ? என்ன, கம்பன்பாசுரம் - கருணைக்கடல் இத்யாதி. ''இருந்தும்'' என்றதுக்கு பாவம் - உபவிஷ்டம் இத்யாதி:— ''தம் பர்ணஸாலாமாஸீநம் உபவிஷ்டம் ஸ்வலங்க்ருதம் । ததர்ஸ ...'' இத்யயோத்யாகாண்டே அபிஷேகஸர்க்கே. சித்ரகூடே, ' உட

† கம்பராமாயணம், வருணனை வழிவேண்டுபடலம், 5. இப்பகுதி ''கருணைக்கடல் கருங்கடலைநோக்கிக் கிடந்தது'' என்று காணப்படுகிறது.

சொல்லுகிறபடியே யிருக்கை. “திருவயோத்யையிலிருக்கும் பேரோலக்கம்சிறியது” என்னும்படியிறே தனியிடத்தில் ஓலக்கமிருந்தபடி. அவ்வோலக்கத்தில் கிட்டும் தம்பிக்கும் கிட்டவொண்ணாதபடியிறே இவ்வோலக்கமிருந்தபடி; ‘‘அபித:பாவகோபமம்’’ (அபிதஃபாவகோபமம்)- நெருப்பு எரியாநின்றால் கிட்டப்போகாதாப்போலே அநபிபவநீயரா யிருந்தவிருப்பு. [சாலப்பலநாள்] - உன்னுடைய ரக்ஷணம் அநாதியன்றோ? அன்றிக்கே, நூறாண்டு, பதினோராயிரமாண்டென்றுமாம். [உகந்தோறு]-‘ஸம்பவாமி யுகே யுகே’ (ஸம்பவாமியுகேயுகே) என்னுமாபோலே. [உயிர்கள்] - ஒருதிருவடி, திருவநந்தாழ்வான், பிராட்டிக்காக அன்றுகிடீர், ஸர்வாத்மஸம்ரக்ஷணமன்றோ உன்னது! [காப்பானே] - இவர்களுக்குஅழித்துக்கொள்ளுகைபணியானாற்போலேயிறேயவனுக்கும் நோக்குகை பணியானபடி. நான் கைவாங்கினேன், இனிக் காவற்சோர்வுபடாமல் வேணுமாகில் நோக்கிக் கோள். ‘‘ராமலக்ஷ்மணகுப்தா ஸா ஸுக்ரீவேண ச வாஹிநீ’’ (ராமலக்ஷ்மண குப்தாஸாஸுக்ரீவேணசவாஹிநீ) - கடற்கரையிலே விட்டபோது பெருமாளை நோக்கு

ப்ர.— [காப்பானே] — யாசகாநாம், பஹூநாம் ஸம்ஸாரதாரணா
நத்வே, “யாத்ருஶம் தஸ்ய ராமஸ்ய ரூபம் ஸம்ஹநநாநி ச । வயிஷ்யதி வாரீம்
த்ரைலோக்யம் ஸ்திதோ யத்ர யச:॥ உஅ॥ ஸலக்ஷ்மணஸ்ஸஹாயத்ர ஸுக்ஷாரஸ்ஸர்வேஷு
ஷா: । லோகபாலோபமாஸ்ஸர்வே க்ருதாஸ்த்ராத்ருடவிக்ரமா:॥ உக॥ ராமோ ராஜா
ராஜ்யஶ்ரீமாந் லக்ஷ்மணஸ்ஸவிஹீஷண:। ஸுக்ரீவஸ்ஸஹ தேஜஸ்வி ஹநூமாந் ஸவிக்ரம:॥ ருo॥
ஸுதேஶகா: ஸர்வே ராஜ்யம் ஸம்ஸாரஸாகரம் ஸதாரணாஸ்து। உத்தாரணம் ஸங்க்ராமயிதும்
ஸர்வேஷ்விஷ்ணுவாநரா:॥ ருக॥ ராமலக்ஷ்மணகுப்தா ஸா ஸுக்ரீவேண ச வாஹிநீ ।
பபூவ துர்த்தர்ஷதரா ஸர்வைரபி ஸுராஸுரை:॥ ருஉ॥’’

ஜராஶாஸிநம் ஜடாஶாணமயாஸிணம்। க்ருஷ்ணாஜிநம்பரம் தம் து ஸ்ரீராமமவாஸமம்
இதம் ஸ்ரீராமாஸிநமபித:பாவகோபமம்’’ [ககூ-உரு]. ‘‘அபித:பாவகோபமம்’’ என்றத்தைக்கடாக்ஷித்துஹாவம் - திருவயோத்யையில் இத்யாதி அதுஎங்ஙனேயென்ன, விவரிக்கிறார் - அவ்வோலக்கத்தில் இத்யாதி. ஹ்ருதிக்ருதமான பதந்தன்னை யெடுத்தருளுகிறார் - அபித இத்யாதி. கல்பந்தோறும் செய்தருளும்படியைப் பற்றவாதல், ஓரோவவதாரங்களிலே நெடுங்காலம் எழுந்தருளும்படியைப் பற்றவாதல் - ‘‘சாலப்பலநாள்’’ என்கிறார் என்றர்த்தத்வயம் - உன்னுடைய இத்யாதி வாக்யத்வயத்தாலே. ‘‘பரித்ராணாய ஸாதூநாம்’’ இத்யாதி, ‘‘ஸம்பவாமி யுகே யுகே’’ இதி பகவத்கீதாஸு. ‘‘உயிர்கள்’’ என்றபஹுவசநத்துக்குஹாவம் - ஒருதிருவடி இத்யாதிவாக்யத்வயம். ‘‘காப்பானே’’ என்று நிரூபகமாகச் சொன்னதுக்குஹாவம்-இவர்களுக்கு இத்யாதி. அவனை ‘‘காப்பானே’’ என்கையாலே, தாம் கைவாங்கினமையை ஸித்தவத்கரித்தருளிச்செய்கிறாராதல்; ‘‘காப்பானே’’ என்கிற ஸம்போதநத்துக்குஹாவமாதல் - நான்கைவாங்கினேன் இத்யாதி. இவன் ஸ்வரக்ஷணத்தில் கைவாங்கினால் அவன்ரக்ஷிக்குமோ? என்ன; அதுக்கு உதாரணம் - ராமலக்ஷ்மண இத்யாதி. ‘‘ராமலக்ஷ்மணகுப்தா ஸா ஸுக்ரீவேண ச வாஹிநீ। பபூவ துர்த்தர்ஷதரா ஸர்வைரபி ஸுராஸுரை:’’ இதி யுத்தகாண்டே ஸமுத்ரதரணாநந்தரே. இதுக்கர்த்தம்- கடற்கரையிலே இத்யாதி. ஸுக்ரீவேணச ஸஹிதாவாஹிநீ - ராமலக்ஷ்மணகுப்தாஸதீ - ஸர்வைரபி ஸுராஸுரை: - துர்த்தர்ஷதரா பபூவேத்யந்வய:. ச ஶப்தத்தாலே - அநுக்தரான மைந்தாதிகளை

கைக்கு, தம்பியார், மஹாராஜர், மைந்தத்விவிதர்கள் உள்ளிட்ட முதலிகளெல்லோரும், லங்கையிலேகிட்ட, ஆகாசமெல்லாம் வேளிக்காவலடைத்து, நிதிநோக்குவாரைப்போலே பெருமாளை நோக்கிக்கொண்டுகிடக்க, இவர்கள் இத்தனைவரும் கண்சோர்ந்தவளவிலே, பெருமாள், தாம் கையும் வில்லுமாய்க்கொண்டு இவர்களுக்குப் புறம்பேநின்றுஉலாவினர் இறே. அவன் நோக்குகைக்கு இத்தலை கண்செம்பளிக்கும் அத்தனையிறே வேண்டுவது. நாம் அவனுக்கு ரக்ஷகராக நினைத்திருக்குமது ப்ரமமிறே: உணர்ந்து பார்த்தால் ரக்ஷகனாக வல்லான் அவனேயிறே. [கோலத்திருமாமகளோடுஉன்னைக்கூடாதே]-தாயும்தமப்பனுங்கூட விருக்கக் கிட்டப்பெறுதே ஸ்தநந்தயப்ரஜை நாக்குலொட்டிக்கிடந்து துடிக்குமாபோலேயிருக்கிறதுகாணும்! ‘அநந்யா’’ (அநந்யா) என்கிறபடியே அவனும் அவளுமான சேர்த்தியிறே இவர்க்கு ப்ராப்யம். [இன்னம்தளர்வேனோ - சாலப்பலநாள்] - முன்பு அநாதிகாலமிழந்த நான் இன்னம் அநந்தகாலமிழக்கவோ? [அடியேன்]-அதுகிடக்க, ‘‘உன்னாலேயிழந்தாய்’’ என்றுசொல்லிக் கைவிடலாமென்றிருக்கிறாயோ? [இன்னம்தளர்வேனோ] - ‘‘ஒருமிதுநம் எனக்கு ப்ராப்யம்’’ என்றுஅறிந்த பின்பும் தளருமத்தனையோ? ‘‘நீ ரக்ஷகன்’’ என்றறியாதொழிதல், ‘‘வேறுஎனக்கு ரக்ஷகமுண்டு’’ என்றிருத்தல், ‘‘நான்எனக்குரக்ஷகன்’’ என்றிருத்தல், ‘‘லக்ஷ்மீஸநாதமான வஸ்துப்ராப்யம்’’ என்றறியாதொழிதல், ‘‘எனக்கு நான்உரியேன்’’ என்றிருத்தல் செய்தேனோ இழக்கைக்கு. ருசிபிறந்தபின்பு இழக்கவோ? இப்பாட்டால்-அகாரார்த்தத்தை ஸக்ரமமாக வ்யாக்யாநம்பண்ணுகிறார். ‘‘அவ-ரக்ஷணே’’ (அவ-ரக்ஷணே)

---

*ஸமுச்சயிக்கிறது. கண்சோர்ந்தவளவிலே - கண்ணசைந்தவளவிலே. * லக்ஷ்மணசப்தார்த்தம்- ‘கையும் வில்லுமாய்க்கொண்டு’ என்றது ‘‘ராக்ஷஸ்ய ஜக்ஷிணோ வாஹு:’’ என்றதிறே. ‘கண்சோர்ந்தவாறே புலாவினர்’ என்கையாலே, இவன் ஸ்வயத்நத்தைக் கைவிடுகையே யவன் ரக்ஷிக்கைக்குகூடலென்கிறார் - அவன்நோக்குகைக்கு இத்யாதி. கண்செம்பளிக்கை - கண்மூடுகை. அதாவது - ஸ்வயத்நத்தில் நிவ்ருத்தனாகை. பரிவரானமஹாராஜரை ஸ்வயத்நபரர்கோடியிலே கூட்டலாமோ? என்ன - நாம்அவனுக்கு இத்யாதிவாக்யத்வயம். அதாவது - நாம் கூட்டினதல்ல, வஸ்துகத்யாபாயவலிக்குமென்றபடி: ப்ரமமிறே என்றது - பக்திபாரவஶ்யமடியாகவந்த ப்ராந்தியிறே என்றபடி. பிராட்டியுமவனும் ஸந்நிஹிதனாயிருக்கத் தளருகிறதுக்கு த்ருஷ்டாந்தம் - தாயும்தமப்பனும் இத்யாதி. உன்னைக்கூடவென்னாதே, ‘‘கோலத்திருமாமகளோடுன்னை’’ என்கிறதென்? என்ன- அநந்யா இத்யாதி. ‘‘இன்னும்’’ என்கிறதுக்கு, ‘‘சாலப்பலநாள்’’ என்றத்தைக்கடாக்ஷித்துபாவம் - முன்பு அநாதி இத்யாதி. ‘‘அடியேன்’’ என்றதுக்கர்த்தம் - அதுகிடக்க இத்யாதி. அதாவது - உன்ரக்ஷணத்திலே நீயந்வயியாதே இழந்தாயென்றுகருத்தாதல், ஶேஷத்வஜ்ஞாநமுண்டானபின்பு ‘‘ஸ்வதந்த்ரன்’’ என்று கைவிடப்போகாதென்றபடி யென்னுதல். அதுகிடக்க - நீ நோக்காமையாலே யிழந்தது கிடக்கவென்றபடி. ‘‘இன்னும்’’ என்றதுக்கு, ‘‘சாலப்பலநாள்’’ என்றத்தைக்கடாக்ஷித்து, கீழ் - பாவமருளிச்செய்து, ‘‘கோலத்திருமாமகள்’’ என்றத்தைக்கடாக்ஷித்து தாத்பர்யாந்தரம் - ஒருமிதுநம் இத்யாதி. கீழ்ப்பதங்களெல்லாவற்றையுங்கடாக்ஷித்து ‘‘தளர்வேனோ’’ என்றதுக்குபாவம் - நீ ரக்ஷகனென்று இத்யாதி. ‘‘காப்பானே’’ என்றதிலே - வேறுரக்ஷகரில்லாமையும் அர்த்தஸித்தம். ‘‘தளர்வேனோ’’ என்றத்தைப்பற்ற - நானெனக்கு இத்யாதி. ‘‘திருமாமகள்’’ என்றத்தைப்பற்ற - லக்ஷ்மீஸநாதம் இத்யாதி. ‘‘அடியேன்’’ என்றத்தைப்பற்ற - எனக்குநான்உரியேன் இத்யாதி. ‘‘இன்னம்’’ என்றதுக்கு மூன்றுமர்த்தம் - ருசிபிறந்த இத்யாதி. அகாரார்த்தப்ரகாஶகம் இப்பாட்டென்கிறார் - இப்பாட்டால் இத்யாதி. அகாரார்த்தத்தையென்றது - அகாரார்த்தமான ரக்ஷகத்வத்தை யென்றபடி. அகாரம் ரக்ஷகத்வவாசியாம் க்ரமமேதென்ன - அவ ரக்ஷணே இத்யாதி. ‘‘அகாரார்த்தத்தைஸக்ரம*

இறேயாது. ரக்ஷிக்குமிடத்தில், ஸர்வப்ரகாரமாக ரக்ஷிக்கவேணும்; அதுதான் ஸர்வகாலமும் ரக்ஷிக்கவேணும்; அப்படி ரக்ஷிக்குமிடத்தில் ஸர்வரக்ஷகனுகவேணும்; இப்படி வரையாதே ரக்ஷிக்குமிடத்தில், "[illegible]" (நகம்சிந்நாபராத்யதி) என்னுமவளும், "என்னடியாரதுசெய்யார்" என்னும் அவனுங்கூடவாயிற்று; ஆகையாலே, அகாரம் - மிதுநத்துக்குவாசகமாயிற்று. ஞாலத்தூடே இத்யாதியாலே - ஸர்வப்ரகாரரக்ஷகத்வஞ் சொல்லிற்று; சாலப்பலநாள் இத்யாதியாலே - ஸர்வகாலரக்ஷகத்வஞ் சொல்லிற்று; உயிர்கள் என்கையாலே - ஸர்வரக்ஷகத்வஞ் சொல்லிற்று; 'கோலத்திருமா மகளோடுன்னைக் கூட' என்கையாலே - ஸ்ரிய:பதியேப்ராப்யம் என்றது. அகாரவிவரணமான திருமந்த்ரார்த்தமுஞ் சொல்லுகிறது; 'கோலத்திருமாமகளோடுன்னை' என்கையாலே - ப்ரஹ்மஸ்வரூபஞ்சொல்லிற்று; 'அடியேன்' என்கையாலே - 'ப்ரத்யகாத்ம ஸ்வரூபஞ் சொல்லிற்று;' 'உயிர்கள்காப்பான்' என்கையாலே - உபாயஞ் சொல்லிற்று; 'உன்னைக்கூட' என்கையாலே - ஃபலஞ்சொல்லிற்று; 'உன்னைக்கூடாதே - தளர்வேனே' என்கையாலே - விரோதி சொல்லிற்று.

நான்காம் பாட்டு.

தளர்ந்தும்முறிந்துஞ் சகடவசுரர்உடல்வேறு
பிளந்துவீயத் திருக்காலாண்டபெருமானே!
கிளர்ந்துபிரமன்சிவன் இந்திரன்விண்ணவர்சூழ
விளங்கவொருநாள் காணவாராய்விண்மீதே.

ஆ.—(தளர்ந்தும்) - ஶகடாஸுர நிரஸநம் பண்ணினாற்போலே, உன்னைக் காண்கைக்கு விரோதியான என்பக்கலுள்ள பாபங்களை நிஶ்ஶேஷமாக நீயே நிரஸித்

மாக" என்றத்தை விவரிக்கிறார் - ரக்ஷிக்குமிடத்தில் இத்யாதி. "ரக்ஷிக்குமிடத்தில் ஸர்வப்ரகாரமாக" இத்யாதியை ஶப்தத்திலே ஏறிட்டுக்காட்டுகிறார் - ஞாலத்தூடே இத்யாதியாலே. 'ஶ்ரிய:பதியே ப்ராப்யமென்றது' என்றவிடத்திலே - அகாரம்ப்ராப்யப்ராபகவாசகமென்னுமதுக்கு ப்ரமாணத்வே, "[illegible]" என்றது அநுஸந்தேயம். உபாயபரமானபோது, (நகஶ்சிந்நாபராத்யதி) என்று புருஷகாரபூதையான "கோலத்திருமாமகளோடு - காப்பானே" என்று கீழேகூட்டுவது; உபேயபரமானபோது, "கோலத்திருமாமகளோடு - உன்னை" என்று பதக்ரமம்; ரக்ஷணவாசியான அகாரத்தினுடைய அர்த்தப்ரகாஶகம் திருமந்த்ரமென்று திருவுள்ளம்பற்றி - அகாரவிவரணமான திருமந்த்ரம் என்கிறார். திருமந்த்ரார்த்தம் சொல்லுகிறபடி யெப்படி? என்ன - கோலத்திருமாமகளோடு இத்யாதி. 'திருமந்த்ரார்த்தம்சொல்லுகிறது' என்று ப்ரதிஜ்ஞைபண்ணி, அர்த்தபஞ்சகத்தையும் யோஜிக்கிறது - திருமந்த்ரம் அர்த்தபஞ்சக ப்ரதிபாதகமாகையாலே. க்ரமேணாந்வய:. (௩)

தருளி மதுஜ்ஜீவநார்த்தமாக எழுந்தருளுகிறபடியைக்கண்டு ப்ரஹ்ருஷ்டரான சதுர்முக பசுபதி ப்ரப்ருதி ஸமஸ்த ஸுரகண பரிவ்ருதனாய், யுகபதுதித திநகரஶத ஸஹஸ்ர தேஜஸ் ஸத்ருஶமான உன்னுடைய திருமேனியில் தேஜஸ்ஸாலே ஸகலலோகங்களும் விளங்கும்படி, ஸ்ரீகஜேந்த்ராழ்வானுக்குவந்து தோற்றினாற்போலே ஒருநாள் காண வாராய் விண்மீதே! என்று கூப்பிடுகிறார்.

ஒ.—நாலாம்பாட்டில், ப்ரதிபந்தகங்கள் உண்டாகில் அவற்றை நீக்கியருளி என்னார்த்தி தீரும்படிவந்து தோற்றியருளவேணும் என்கிறார்.

[தளர்ந்தென்று தொடங்கி] - ஶகடாஸுரனுடைய ஶரீரம் கட்டுக்குலைந்தும் முறிந்தும் வேறாகப்பிளந்து ஸ்வரூபமுங் காணவொண்ணாதபடி மாய்ந்துபோம்படி திருவடியை ஆளுகையாலே ஜகத்துக்குடைய ஸ்வாமியானவனே! [கிளர்ந்து பிரமனென்று மேலுக்கு] - ஐஶ்வர்யங்களாலே அந்யபரரான ப்ரஹ்மாதி தேவர்களெல்லாம் பெரிய கிளர்த்தியோடே வந்துசூழ்ந்து ஜயஸ்துதிபண்ண ஆகாஶமெல்லாம் அழகுவெள்ளமிடும்படி ஒருநாள் இங்கேவந்து தோற்றியருளவேணும்.

ப.—அநந்தரம், ப்ரபலமான சகடாசுரனைநிரஸித்த நீ, வருகைக்கு விரோதியுண்டாகிலும் அத்தைப்போக்கி நான் காணும்படி வரவேணுமென்கிறார்.

சகடவசுரர் - சகடாசுரனுடைய, உடல் - உடலானது, தளர்ந்தும் - கோப்புக்குலைந்தும், முறிந்தும் - நடுவேமுறிந்தும், வேறு - வேறாம்படி, பிளந்து - பிளந்து, வீய - உருமாயும்படியாக, திருக்கால் - திருவடியை, ஆண்ட - காரியங்கொண்ட, பெருமானே - ஸ்வாமியானவனே! கிளர்ந்து - (தங்கள் ஈஶ்வராபிமாநத்தைப்போகட்டு ஸாத்விகராக)உத்யுக்தராய், பிரமன் - ப்ரஹ்மாவும், சிவன் - ருத்ரனும், இந்திரன் - இந்த்ரனும், விண்ணவர் - தேவர்களும், சூழ - சூழ்ந்துசேவிக்க, விளங்க - (அவர்களுக்கு நாயகனான) ஔஜ்ஜ்வல்யந்தோன்றும்படி, (ஸ்ரீகஜேந்த்ராழ்வானுக்கு வந்தாற்போலே), ஒருநாள் -, விண்மீது - ஆகாசத்தின்மேலே, காண - கண்ணுக்குத் தோற்றும்படி, வாராய் - வரவேணும்.

இ.—நாலாம்பாட்டில், "நாம் வரநினைத்தாலும் ப்ரபலப்ரதிபந்தகங்கள் உண்டே?" என்ன, ஶகடாஸுரனிலும் வலியதோ என்ப்ரதிபந்தகம்? என்கிறார்.

[தளர்ந்தும் இத்யாதி] - 'சகடவசுரருடல் - தளர்ந்தும் முறிந்தும்' - ஶகடாஸுரனுடைய ஶரீரம் கட்டுக்குலைந்தும், 'ஸந்தம் ஸந்தம்'' என்கிற க்ரமமன்றிக்கே ஒருகாலே முறிந்து: வேறும்படிபிளந்து உருமாய்ந்து போம்படி திருவடிகளை ஆண்டு ஶேஷியான உன்னைத்தந்தவனே. முலைவரவுதாழ்த்துத் திருவடிகளை நிமிர்க்கத் தூகளாய்ப்போயிற்று. பிள்ளைத்தனத்தாலே அவன் அகப்பட்டான். திருவடிகளின் அவதாநத்தாலே பிழைத்தவித்தனை. [கிளர்ந்து இத்யாதி] - ஈஶ்வராபிமானிகளான ப்ரஹ்மாதிகள் பெரிய கிளர்த்தியோடே ஜயஸ்துதிகளைப் பண்ணிக்கொண்டு சூழ்ந்து ஸேவிக்க. [விளங்க]- ஆகாஶாவகாஶமெல்லாம் அழகுவெள்ளமிட என்னுதல்; ஆதித்யஸகாஶத்தில் நக்ஷத்ராதிகள்போலே அவர்கள் ஒளி கீழ்ப்படவென்னுதல். [ஒருநாள்] - ஆனைக்கு வந்துதோற்றினாற்போலே ஒருநாள் வந்தருளவேணும்.

ஈடு.—நாலாம்பாட்டு. 'தளரக்கடவீரல்லீர்; உம்முடையதளர்த்தி பரிஹரிக்கக் கடவோமாகிலும் ப்ரதிபந்தகம் கனத்திராநின்றதுகாணும்' என்ன; 'ஓம், அப்படியே:சகடாசுரனிலுங்காட்டில் வலியதிறே என்னுடையவிரோதி?' என்கிறார். 'உன் கால்கண்டபோதே போகாதோ' என்கிறார். "அடிபடிற் செய்வதேன் ?" என்று * சும்மெனாதே கைவிட்டோடுமிறே.

[தளர்ந்தும்இத்யாதி] - சகடாசுரன் கட்டுக்குலையா, முறியா, உடல் வேறாகப் பிளந்துவீய; "விஸம்ஹிதஸந்தி பந்தம் ச்லதஸர்வாங்கஜீவிதம்" (சிந்நபிந்நசரீரம் ப்ரபக்நஸந்திபீடிதம்) என்கிறபடியே. பின்பு, துகளுங்காணவொண்ணாதபடியாகை. சகடாசுரநிரஸநம்பண்ணினானென்று திரளச்சொல்லவமைந்திருக்க, 'தளர்ந்தும்', 'முறிந்தும்' என்று தனித்தனியே சொல்லுகிறாரிறே, ப்ரதிபக்ஷநிரஸநமாகையாலே அவ்வோவவஸ்த்தைகள் தமக்குஇனிதாயிருக்கையாலே. [திருக்காலாண்ட] - அடியாரையாண்டால் ஆபத்துக்கு உதவுவர்களிறே. இவன் மௌக்த்யத்தாலே யொன்றுமறியாதே கிடக்க, திருவடிகள் கிடீர் நம்மை நோக்கிற்று! என்கிறார். 'ஸ்தந்யார்த்தீ ப்ரருரோதஹ' (ஸ்தந்யார்த்தீப்ரருரோதஹ) - என்கிறபடியே முலைவரவுதாழ்த்தவாறே அனந்தலிலே திருவடிகளை நிமிர்த்தான்; அவ்வளவிலே போடிபட்டவித்தனை: "உருளச்சகடமதுறக்கில் நிமிர்த்தீர்" என்று இவனும் அறிந்துசெய்தானல்லன். தன்னையுணர்ந்து பரிமாறும்போது திவ்யாயுதமும், அவையுதவாதபோது கையும், அதுவும்உதவாதபோது திருவடிகளுமாயிருக்கிறபடி. நம்முடைய ஆபத்துக்களுக்கே யன்றிக்கே, அவனுடைய ஆபத்துக்கும் திருவடி

நாலாம்பாட்டு.—தளர்ந்தும் இத்யாதி. "தளர்ந்தும்முறிந்தும்சகடவசுரர்" இத்யாதியைக் கடாக்ஷித்தவதாரிகை - தளரக்கடவீரல்லீர் இத்யாதி. 'ஓம், அப்படியே' இத்யாதிவாக்யத்துக்கு ஹாவம்-சகடாசுரனைநிரசித்தஉனக்கு என்ப்ரதிபந்தகத்தைப் போக்குகையில்அருமையுண்டோ? என்று. "திருக்காலாண்டபெருமான்" என்றத்தைக்கடாக்ஷித்து ரஸோக்தி - உன்கால்கண்ட இத்யாதிவாக்யத்வயம். கால் - காற்றும், திருவடிகளும். அடிபடில் - திருவடிகள்படில் என்று ஸ்வஹாவார்த்தம். சும்மெனாதே - மூச்சுவிடாதே.

குலையா - குலைந்து. முறியா - முறிந்து. இம்மூன்றுக்கும் ப்ரமாணம் - விஸம்ஹித †இத்யாதி. "வீய" என்றதுக்கர்த்தம் - பின்பு துகளும் இத்யாதி. திருக்காலாலேயழிக்கவென்னாதே, "திருக்காலையாண்ட" என்றதுக்கு ரஸோக்தி - அடியாரை இத்யாதி. ஈச்வரன்நிரவிக்க, திருவடிகள்நிரவித்ததென்கிறதென் ? என்ன - இவன்மௌக்த்யத்தாலே இத்யாதி. உக்தார்த்தத்துக்குப்ரமாணம் - ஸ்தந்யார்த்தி இத்யாதி. "சயாநஸ் சகடஸ்யாதஸ் யசோதாயாஸ் ஸுதோநிசி । ஸ்தந்யார்த்தீ ப்ரருரோதஹ । ததஸ்து பாதப்ரக்ஷேபாத் சகடம் பரிவர்த்திதம்" இதி பஞ்சமேம்சேஷஷ்டே. அனந்தலிலே திருவடிகளைநிமிர்த்ததுக்கு ப்ரமாணம் - உருளச்சகடம் இத்யாதி. திருமொழிபத்தாம்பத்து எட்டாந்திருமொழிமூன்றாம்பாட்டு—"கருளக்கொடி" இத்யாதி. சகடமது - சகடமானது, உருள-முறியும்படி, உறக்கில் - உறக்கத்திலே, நித்ராஸமயத்திலே, நிமிர்த்தீர் - திருவடிகளைநிமிர்த்தீரென்றபடி. திவ்யாயுதங்களிருக்கத் திருவடிகளாலேநிரவிக்கிறதென் ? என்ன - தன்னையுணர்ந்து இத்யாதி. கையுமென்றது - ‡"க்ருஷ்ண ஹஸ்தஹத" என்றத்தைப்பற்ற. திருவடிகளுதவுவது நம்முடையஆபத்துக்கன்றோ ? என்ன - நம்முடைய இத்யாதி "திருக்காலாண்ட" என்றதுக்கு ஹவிதமாதல். அவன் திருமேனிக்கு வந்த ஆபத்தைப்போக்குகையாலே அவனுடைய ஆபந்நிவ்ருத்திக்கு உறுப்பாகிறது; ஆச்ரிதவிரோதியைப்போக்

---

† [ஸ்ரீராமாயணம் யுத்தகாண்டம் 94, 22.] ‡ ஸ்ரீவிஷ்ணுபுராணம் 5, 16, 14.

களேகாணும் உதவுவது! திருமேனிதான் ஆஸ்ரிதார்த்தமாகையாலே, அவர்கள் விரோதி போகைக்கும் அதுதானே யுறுப்பாயிருக்கை. [பெருமானே] - அன்று ஸேஷியையுண்டாக்கினஉனக்குஇன்று ஸேஷவஸ்துவை உண்டாக்குகை பெரியபணியோ? அவன் ப்ரகாரியானால், ப்ரகாரமாயுண்டாமதிறே யிது. [கிளர்ந்துஇத்யாதி] - "கும்பிநேட்டமிட்டாடி" என்கிறபடியே அநந்யப்ரயோஜநரைப்போலே, அவஸராய்க்கொண்டு ப்ரஹ்மருத்ராதிகள், ப்ரதாநரோடுஅப்ரதாநரோடு வாசியறக் கிண்ணகம்சுழித்தாற்போலேசூழச் சூழப்பட்டு, இருட்டில் விளக்குப்போலே "தேஜஸாம் ராஶிமூர்ஜிதம்" (தேஜஸாம்ராஶிமூர்ஜிதம்) என்கிறபடியே தேஜஸ்ஸேவடிவான திருமேனியைக்கொண்டு, ஒருநாள் ஆனைக்குவந்து தோற்றினாற்போலே, ஆகாசமடங்கலும் இடமடைக்கும்படி வந்துதோற்றவேணுமென்கிறார். [விளங்க] - இவன் ஸந்நிதியில் ப்ரஹ்மாதிகள் தேஜஸ்ஸு "தமஸ்ஸு" என்னும்படி யிருக்கிறபடி. [ஒருநாள்] - "நூறுண்டு, பதினோராயிரமாண்டு" என்றுஅர்த்தித்தேனே! [காணவாராய்] - * நீணகர்நீளெரிவைத்தருளாயென்கிறேனே! [விண்மீதே] - இங்கே வந்தவதரிக்கச் சொல்லுகிறேனே! (ச)

ஐந்தாம் பாட்டு.

விண்மீதிருப்பாய்!மலைமேல்நிற்பாய்!கடற்சேர்ப்பாய்!
மண்மீதுழல்வாய்!இவற்றுள் எங்கும்மறைந்துறைவாய்!
எண்மீதியன்றபுறவண்டத்தாய்!எனதாவி
உள்மீதாடிஉருக்காட்டாதேயொளிப்பாயோ?

ஆ.—(விண்மீது.) - திருநாட்டிலும் திருமலையிலும் திருப்பாற்கடலிலும் மற்றும் பூமியிலுள்ள திருநகரிகளிலும், இவற்றிலும் அண்டாந்தர்வர்த்திகளான ஸ்தாவரஜங்கமாத்மக ஸர்வவஸ்துக்களிலும், அஸங்க்யேயமான அண்டாந்தரங்களிலுள்ளும், என்னுத்மாவினுள்ளும் எங்கும் ஆஸ்ரிதார்த்தமாக ஸந்நிஹிதனு யிருந்துவைத்து, எனக்கொருத்தனுக்கும் உன்திருவடிவைக் காட்டாதொளிக்கலாவோ பார்த்தருளிற்றென்கிறார்.

கினபடியெங்ஙனே? என்ன - திருமேனிதான் இத்யாதி. அதாவது - திருமேனி ஆஸ்ரித ஸ்வத்மாகையாலே, அர்த்தத்திருமேனிக்குவந்த ஆபத்தைப் போக்குகையே ஆஸ்ரிதர்ஆபத்தைப்போக்குகையென்றபடி.. "பெருமான்" என்றதுக்கு ஸ்வாரஸ்யம் - அன்றுஸேஷியை இத்யாதி. சகடாசுரனுடைய சரீரமானது கட்டுக்குலைந்து முறிந்துவேறும்படி பிளந்தருமாய்ந்துபோம்படி திருவடிகளையாண்டசேஷியானவனேயென்று ஸப்தார்த்தம். அப்படி பெரியபணியில்லையோ? என்ன - அவன்ப்ராகாரியானால் இத்யாதி. உத்தரார்த்தத்துக்குஸப்தார்த்தம்- கும்பிநேட்டமிட்டு இத்யாதி. இவனை - 'விளங்க" என்கையாலே- ப்ரஹ்மாதிகள் தேஜஸ்ஸு'தமஸ்ஸு'என்றுவலித்தம். கிளர்ந்து - ஸாதரோத்யுக்தராய். "ஸஹஸ்ர ஸூர்யஸங்காஶம் தேஜஸாம் ராஶிமூர்ஜிதம்" இதி ப்ரதமேம்ஸே நவமே. க்ரமேணைக வயுக். 'நீணகர் நீளெரிவைத்தருளாய்'-பெரியநகரமானலங்கையிலே யுண்டுவெளரும்படி அக்நியைப்ரக்ஷேபிக்கவேணுமென் றர்த்தித்தென்றபடி. திருவிருத்தம், தொண்ணூற்றிரண்டாம்பாட்டு - "பேணலம்" இத்யாதி.

(ரு)

ஒ.—அஞ்சாம்பாட்டில், ஸர்வத்ரஸந்நிஹிதனுய், ஹ்ருதயத்திலும் ஸ்பஷ்டதரமாக ப்ரகாசியாநின்று வைத்து, என் கண்ணுக்கு விஷயமாகாதொழிந்தால் நான் தரிக்கவல்லேனே? என்கிறூர்.

[விண்ணென்று தொடங்கி] - திருநாட்டிலே பேரோலக்கமாகவிருந்து திருநாட்டிலுள்ளாரும் ஸம்ஸாரத்திலுள்ளாரும் ஒக்கஅநுபவிக்கலாம்படி திருமலையிலே நின்றருளி திருப்பாற்கடலிலே ப்ரஹ்மாதிகளுக்கு ஸமாச்ரயணீயனுய் வந்து கண்வளர்வதுஞ்செய்து ஆச்ரிதார்த்தமாக ஸம்ஸாரத்தில் வந்து திருவவதாரம் பண்ணி உலாவியருளுமவனே! [இவற்றுளெங்கும் மறைந்துறைவாய்]-ஸகலபதார்த்தங்களினுள்ளும் அவற்றினுடைய ஹிதார்த்தமாகத் தெரியாதபடி ஆத்மதயா நிற்குமவனே! [எண்மீதியன்ற புறவண்டத்தாய்]-அஸங்க்யேயமான பாஹ்யாண்டங்களிலும் உள்ளவனே! [எனதாவியுள் மீதாடி]- என் உள்ளே மிகவும் பரகாசித்து வைத்தே.

ப.—அநந்தரம், பரத்வாத்யவஸ்தா பஞ்சகத்தாலும் ஆச்ரிதரையநுபவிப்பிக்கிற நீ, என்னெஞ்சிலே ப்ரகாசிப்பித்து உன்வடிவைக்காட்டாதே மறைக்கலாமோ? என்கிறூர்.

(நித்யாச்ரிதர்க்கநுபாவ்யனுய்க்கொண்டு), விண்மீது -(மேன்மைக்கெல்லையான) பரமபதத்திலே,இருப்பாய் - (ஸர்வஸ்மாத்பரனுய்க்கொண்டு) இருக்குமவனுய்,(தாழ்ந்தார்க்குமுகங்கொடுக்கைக்காக), மலைமேல்-(நீர்மைக்கெல்லைநிலமான) திருமலையிலே, நிற்பாய்-(அர்ச்சாரூபேண)நிற்குமவனுய், (ப்ரஹ்மாதிகளுக்காச்ரயணீயனுகைக்காக), கடல்-திருப்பாற்கடலிலே, சேர்ப்பாய் - (அநிருத்தரூபேண வ்யூஹித்துக்)கண்வளர்ந்தருளுமவனுய், (அளவிலிகளானுரை அழகாலே வசீகரிக்கைக்காக ராமக்ருஷ்ணுதிவிபவரூபேண), மண்மீது - பூமியிலே அவதரித்து, உழல்வாய் - (அங்குள்ளாரோடு ஸஜாதீயனுய்) ஸஞ்சரிக்குமவனுய், இவற்றுள் - இஜ்ஜகத்தில், எங்கும் - ஸமஸ்தபதார்த்தங்களிலும், மறைந்து - (அந்தராத்மபூதனுய்)இந்த்ரியகோசரனன்றியே, உறைவாய்-வர்த்திப்பானுய், எண் - ஸங்க்யைக்கு, மீது - மேலே, இயன்ற - போகக்கடவதான, புறம் - புறப்புண்டான, அண்டத்தாய் - அண்டங்களிலுமுளனுன நீ, எனது - என்னுடைய, ஆவியுள்-(ப்ராணுச்ரயமான) நெஞ்சுக்குள்ளே, மீதாடி - மிகவும் நடையாடிவிட்டு, உரு - வடிவை, காட்டாதே - கண்ணுக்கிலக்காக்காதே, ஒளிப்பாயோ - மறைக்கக்கடவையோ?

இ.—அஞ்சாம்பாட்டில், ஸர்வத்ரஸந்நிஹிதனுய் என் ஹ்ருதயத்திலும் ஸ்பஷ்டமாக ப்ரகாசியாநின்றுவைத்து, என் கண்ணுக்கு விஷயமாகாதொழிந்தால் நான் தளரேனே வென்கிறூர்.

[விண்மீது இத்யாதி] - பரமபதத்திலே நித்யஸூரிகளுக்கு அழகோலக்கங்கொடுத்துக் கொண்டிருக்கிறவனே! நித்யஸூரிகளுக்கும் ஸம்ஸாரிகளுக்கும் ஒக்க அநுபவிக்கலாம்படி திருமலையிலே நின்றருளினவனே! திருமலையில் நிலைபோலே ப்ரகாசிக்கிறதாயிற்று, இவர்க்கு பரமபதத்திலிருப்பு. பரமபதத்தில் மேன்மையுமறியாதே, திருமலையில் நீர்மையுமறியாதே இருக்கிற ப்ரஹ்மாதிகளுக்கு ஆச்ரயணீயனுகைக்கும்அநுபவிப்பிக்கைக்காகவும் திருப்பாற்கடலிலே சாய்ந்தருளினவனே! அத்தனையளவில்லாத ஸம்ஸாரிகளுக்காக ஸஜாதீயனுய்வந்து அவதரித்து மார்விலே அம்பேற்று ஸோகமோஹங்களை அநுபவித்து ரக்ஷிக்குமவனே! காண்கையும் அஸஹ்யமாயிருப்பார்க்கு முகந்தோற்றுதபடி

நின்று ஸகலபதார்த்தங்களினுடைய ஸத்தையைநோக்கினவனே! அஸங்க்யேயமானவாஹ்யாண்டங்களுக்கும் இப்படி ரக்ஷகனானவனே! என்னுடைய ஹ்ருதயத்தினுள்ளே மிகவும் ப்ரகாஶித்து என்னுதல், அந்தர்வஹிஸ்சவர்த்தித்து என்னுதல். [உருக்காட்டாதே - ஒளிப்பாயோ] - "ஹஸ்தாநாம்" என்கிற வடிவை எனக்குக் காட்டாதே மறையாநின்றால் ஜீவிப்பனோ?

ஈடு.—அஞ்சாம்பாட்டு. ஸர்வத்ர ஸந்நிஹிதனாய் என்ஹ்ருதயத்திலும் ஸ்பஷ்டமாக ப்ரகாசித்துவைத்து, என்கண்ணுக்கு விஷயமாகாதொழிந்தால் நான் தளரேனோ? என்கிறார்.

[விண்மீதிருப்பாய்] - ஸதாதர்ஶநம்பண்ணும்படியான பாகம்பிறந்தவர்களுக்குக் காட்சிகொடுத்திருக்கும்படி. இவர்க்கு இங்குத்தையிற்காட்டிலும் பரமபதத்திலிருப்புக் காணும் முற்படத் தோற்றுகிறது. [மலைமேல்நிற்பாய்] - நித்யஸூரிகளையும் நித்யஸம்ஸாரிகளையும் ஒருதுறையிலே நீருண்ணப்பண்ணுகிறவிடம். இங்குள்ளாரும்தன்னிலையில் வாசியறியும்படி ருசிஜநகனாய்நின்றபடி. *வேங்கடத்தாடு கூத்தனிறே. [கடற்சேர்ப்பாய்] - கால்நடைதந்துபோகவல்ல ப்ரஹ்மருத்ராதிகளுக்காகத் திருப்பாற்கடலிலே வந்துசாய்ந்தபடி. விண்மீதிருப்பாயென்று - இருப்பில்வீறுசொன்னார்; மலைமேல்நிற்பாயென்று - நிலையில்வாசிசொன்னார்; [கடற்சேர்ப்பாய்] - கிடையழகு திருப்பாற்கடலிலே பர்யவஸிதம். [மண்மீதுழல்வாய்] - அவ்வளவுபோகமாட்டாத ஸம்ஸாரிகளுக்காகஅவதரித்து, அவர்கள் கண்வட்டத்திலேதிரியுமவனே! [உழல்வாய்] - "தாம்பாலாப்புண்டாலும் அத்தழும்புதானிளகப் பாம்பால் ஆப்புண்டுபாடற்றாலும்' என்கிறபடியே அநுகூலராய்க்கட்டுவாரும் ப்ரதிகூலராய்க்கட்டுவோருமான ஸம்ஸாரமிறே. [இவற்றுளெங்கும்மறைந்துறைவாய்] - கண்ணாலே காணில் சிவிட்கென்னுமவர்களுக்கு, அவர்கள்காணவொண்ணாதபடி மறைந்துவர்த்திக்குமவனே! விஷயப்ரவணமான ப்ரஜை "தாய்முகத்திலேவிழியேன்"என்றால், தான்மறைய

அஞ்சாம்பாட்டு —விண்மீது இத்யாதி. "உருக்காட்டாதேயொளிப்பாயோ" என்னுமளவும் கடாக்ஷித்தவதாரிகை - ஸர்வத்ர இத்யாதி.

தாத்பர்யம்-ஸதாதர்ஶநம் இத்யாதி. இங்கே ஸந்நிஹிதமான அர்ச்சாவதாரத்தைத்தொடங்கியருளிச்செய்யாதே முற்பட "விண்மீதிருப்பாய்" என்கிறதென்? என்ன - இவர்க்கு இத்யாதி. "மலை" என்றதுக்குபாவம்-நித்யஸூரிகளையும் இத்யாதி. "நிற்பாய்" என்றதுக்குபாவம் - இங்குள்ளாரும் இத்யாதி. இந்நிலை ருசிஜநகமோ? என்ன - வேங்கடத்து இத்யாதி. திருமலையிலே நின்றருளினவனுக்கு திருவேங்கடமுடையான் நின்றருளினநிலை வல்லார் ஆடினாற்போலேயிருக்கையாலே - ஆடுகூத்தனுக்கென்கிறதென்றபடி. திருமொழி இரண்டாம்பத்து முதற்றிருமொழி - "கூடியாடி" இத்யாதி. "இருப்பாய், நிற்பாய், கடல்சேர்ப்பாய்" என்றதுக்குபாவம் - விண்மீதிருப்பாய் என்று இத்யாதி. விஹவரூபஸஞ்சாரத்தை - திரிவாயென்னாதே, "உழல்வாய்" என்று - து:கரூபஸஞ்சாரமாகச்சொல்லலாமோ? என்ன - தாம்பால் இத்யாதி. "வெண்ணெய்களவுகண்டான்" என்று யசோதை தாம்பாலே கட்டக் கட்டுண்டாலும், அத்தழும்புதான் அத்யாபாஸமென்னும்படி ப்ரதிகூலனான காளியனாலேகட்டுண்டு து:கப்பட்டாலுமென்று ஶப்தார்த்தம். பெரியதிருவந்தாதி பதினெட்டாம்பாட்டு. இளக - இரட்டிக்கும்படியாகவென்றமாம். பாடற்றாலும் - து:கப்பட்டாலும். ஆக, இத்தால் அநுகூலையான யசோதை, ப்ரதிகூலனானகாளியனாகிறஇருவராலும் இவனுக்குது:கமேயாகையாலே - "உழல்வாய்" என்றவிஶேஷிக்கிறதென்றபடி. "மறைந்து" என்றதுக்குவாஸனை- கண்ணாலேகாணில் இத்யாதி. சிவிட்கென்னும்-கோபிக்கும்; அசூயைப்படுமென்றமாம். "மறைந்துவர்த்திக்கையுபகாரம்" என்னுமத்தை லௌகிகத்ருஷ்டாந்தத்தாலேதர்ஶிப்பிக்கிறார் - விஷயப்ரவண

நின்று அவனுகந்தாரையிட்டு ரக்ஷிக்குந் தாயைப்போலே. அதாகிறது - சிசுபாலாதிகள் நறுகுமுறுகுஎன்றால், அவர்கள்கண்ணுக்குத்தோற்றுதபடி அந்தர்யாமியாய்நின்று நோக்கும் படி. [எண் மீதியன்ற புறவண்டத்தாய்] - எண்ணுக்குமேலேவர்த்திக்கிற மற்றுள்ளவண்டங்களிலும்இப்படி வர்த்திக்கிறவனே! "கோடிகோடிஶதாநிச" (கோடிகோடி சதாநிச) இறே. [எனதாவி யுள்மீதாடி] - என்ஹ்ருதயத்தினுள்ளே குறைவற ஸஞ்சரித்தேன்னுதல், என்னாத்மாவுக்குள்ளும் புறம்பும் ஸஞ்சரித்தேன்னுதல். [உருக்காட்டாதே யொளிப்பாயோ] - வடிவுகாணப்பெறாவிட்டால், மறந்துபிழைக்கவும்பெறாதொழிவதே. குணஜ்ஞாநத்தாலே தரிப்பார்க்கன்றோ வடிவுகாணாதொழிந்தாலும் தரிக்கலாவது? (ரு)

ஆறும் பாட்டு.

பாயோரடிவைத்து அதன்கீழ்ப்பரவைநிலமெல்லாம்
தாய் ஒரடியால் எல்லாவுலகுந்தடவந்த
மாயோன்! உன்னைக்காண்பான்வருந்தியெனைநாளும்
தீயோடுடன்சேர்மெழுகாய் உலகிற்றிரிவேனோ?

ஆ.—(பாயோரடிவைத்து) - என்னை யுன்திருவடிகளிலே சேர்க்கவேணுமென்று, லோகவிக்ரமணவ்யாஜத்தாலே, விலையில்லாததொரு ரத்நங்கெடுத்துத் தேடுவாரைப்போலே பெரிய வருத்தத்தோடே உன்திருவடியாலே என்னைத் தேடிக்கொண்டு திரிந்தஉன்னை நான் காணவேணுமென்று ஆசைப்பட்டு* "எங்குற்றாய் எம்பெருமான்!" என்று வருந்தித் தேடிக்காணப்பெறாதே, ஶோகாக்நியாலே தீயோடுடன்சேர்மெழுகு போலே ஈஹ்யமாநனாய் இவ்வுலகத்திலே நான் உள்ளதனையும் திரியுமத்தனையோ? என்கிறார்.

ஒ.— ஆறும்பாட்டில், "காண்கைக்கு இவர்தாம் அயோக்யர்" என்று உபேக்ஷித்தருளினானாகக்கொண்டு, யோக்யாயோக்யதைபாராதே லோகத்தையெல்லாம் அளந்துகொண்ட உன்னால் இழக்கப்படுவாருண்டோ? என்கிறார். [பாயோரடியென்று தொடங்கி] - ஓர் அடியைப் பரம்பவைத்து அவ்வடிக்கீழேயாம்படி கடலோடுகூடின நிலத்தையெல்லாம் அநாயாஸேந கடந்து மற்றையொருஅடியாலே எல்லாலோகங்களும்

மான் இத்யாதி. த்ருஷ்டாந்த விஸ்தாரத்தை தார்ஷ்டாந்திகத்திலே காட்டுகிறார் - அதாயாதி. நறுகுமுறுகு - பொறாமை; ஶப்தாநுகாரம். இப்படிவர்த்திக்கிறவனே - பரத்வாதிபஞ்சப்ரகாரனாய்க்கொண்டுவர்த்திக்கிறவனேயென்றபடி. அண்டங்கள் அநந்தங்களோ? என்ன, ப்ரமாணம் - கோடிகோடி இத்யாதி "அண்டாநாந்து ஸஹஸ்ராணாம் ஸஹஸ்ராண்யயுதாநிச। ஈத்ருஶாநாம் ததா தத்ர கோடிகோடிஶதாநிச" இதித் த்விதீயேம்ஶே. [எ-உ-எ] முந்தின வர்த்தத்துக்கு, "மீது" என்று - மிகுதியாய், குறைவறுதிலைச்சொல்லுகிறது; த்விதீயார்த்தத்துக்கு, "மீது" என்று - மேலாய், புறம்பென்றபடி. "ஆவியுள்மீதாடி" என்றதுக்குவாஸனை - மறந்து பிழைக்கவும் இத்யாதி. வடிவுகாணாவிட்டால் குணாநுஸந்தாநத்தாலே தரிக்கவொண்ணாதோ? என்ன, குணஜ்ஞாநத்தாலே இத்யாதி. இப்பாட்டில் - பரத்வாதிபஞ்சகத்தையுஞ் சொல்லுகிறது. (ரு)

உஜ்ஜீவிக்கும்படி தடவின ஆஸ்சர்யபூதனே! [உன்னையென்று தொடங்கி] - இப்படி ஸுலபனான உன்னைக் காணவேணுமென்று நெருப்பிலேபட்ட மெழுகுபோலே நோவுபட்டு முடியவும்பெறாதே திரிவேனோ?

ப.—அநந்தரம், போக்யாபோக்யவிபாகமில்லாதபடி அசேஷ ஸம்ஸ்லேஷ ஸ்வபாவனான உன்னைக்காணவேணுமென்று, அக்நிஸகாசத்தில் மெழுகுபோலே சிதில னாய்த் திரியக்கடவேனோ என்கிறார்.

ஓர்-ஒரு, அடி - திருவடியை, பாய் - பரப்பி, வைத்து - வைத்து, அதன்கீழ் - அதின் கீழேயாம்படி, பரவை - ஸமுத்ரையான, நிலமெல்லாம் - ஸகல பூமியையும், தாய் - தாவி, ஓர்-மற்றையொரு, அடியால் - திருவடியாலே, உலகு - ஊர்த்வலோகம், எல்லாம் - எல்லாவற்றையும், தடவந்த - மேலேதடாவின, மாயோன் - ஆஸ்சர்ய பூதனே! உன்னை - உன்னை, காண்பான் - காணவேணுமென்று, எனை நாளும் - எல்லாக் காலத்திலும், வருந்தி - க்லேசித்து, தீயோடு - தீயோடே, உடன்-கிட்ட, சேர்-சேர்ந்த, மெழுகாய் - மெழுகின் ஸ்வபாவத்தையுடையேனாய், உலகில் - நாட்டிலே, திரிவேனோ - (முடியவும்பெறாதே ஸ்த்திரமாயிருக்கவும்பெறாதே) அலமாக்கக்கடவேனோ? தடவருதல் - உள்ளேவளைத்துக்கொள்ளுதலுமாம்.

இ.—ஆறாம்பாட்டில், 'காண்கைக்குத் தாம்அயோக்யர்' என்று உபேக்ஷித் தானாக நினைத்து, போக்யாயோக்யதை பாராதே எல்லார்தலையிலும் திருவடிகளை வைத்த உன்னால் இழக்கப்படுவார் உண்டோ? என்கிறார்.

[பாயோரடிவைத்து] - ஓரடியை, பாய்வைத்து - பரம்பவைத்து, [அதன்கீழ் பரவை நிலமெல்லாந்தாய்] - அத்திருவடியின்கீழே கடல்சூழ்ந்த பூமியையெல்லாம் அளந்துகொண்டு. [ஓரடியால்] - மற்றை ஓரடியால். [எல்லாவுலகுந்தடவந்த] - ஸகல லோகங்களையும் ஸ்பர்சித்த; தடவந்த - தடவின. தென்றல்பட்டாற்போலே உஜ்ஜீவிக்கும்படி இருக்கை. [மாயன்] - ஆஸ்சர்யபூதனே! இதெல்லாம் தன்பேறாகச்செய்த வ்யாமோஹத்தை யுடையவனென்கை. [உன்னைக்காண்பான் வருந்தி] - என்னைக் கிட்டுகைக்கு வருந்தித்திரிந்த உன்னைக் காணவேணுமென்று நான் வருந்தி; அத்தலையித்தலையாய். [எனைநாளும்] - அநேககாலமும். ஒருநாள் என்னுசையை ஆவிஷ்கரித்து விட்டேனோ? [தீயோடுடன்சேர் மெழுகாய்] - அக்நிஸகாசத்தில் மெழுகுபோலே தூரவிருந்து அழியாதிருத்தல், அக்நியிலேபுக்கு நசித்தல்செய்யப்பெறாதே யிருக்கை. நசையின் ஸ்வபாவத்தாலும் விஷயஸ்வபாவத்தாலும் சைதில்யம் நித்யமாயிருக்கை. [உலகிற்றிரிவேனோ] - ஜீவிக்கவும்பெறாதே முடியவும்பெறாதே, யாதநாசரீரம்போலே குளிர்ந்த வழியில்லாத தேசத்தே எத்தனைநாள் தட்டித்திரியக்கடவேன்?

ஈடு.—ஆறாம்பாட்டு 'உம்முடைய அபேக்ஷிதம் செய்யக்கடவோம். அதில் ஒரு குறையில்லை; ஆனாலும், ப்ரயோஜநம் உம்மதானபின்பு நீரும் சிலயத்நம்பண்ண வேணுங்காணும்' என்ன; இந்தமர்யாதை என்றுதொடங்கிக்கட்டிற்று என்கிறார். அன்

ஆறாம்பாட்டு.—பாயோர் இத்யாதி இப்போது தாம் அவனைப்பெறாதே கூப்பிடுகிற இவர் "பாயோரடி" இத்யாதியாலே - திருவுலகளந்தருளின அபதானஞ் சொல்லுகிறதுக்கு அநுகுணமாக ஸங்கதி - உம்முடைய இத்யாதி:

றியே, காண்கைக்குத் தாம்அயோக்யர்என்று உபேக்ஷித்தாளுகினைத்து, யோக்யதாயோக்யதை பாராதே எல்லார்தலையிலும் திருவடிகளை வைத்த உன்னாலேயிழக்கப்படுவார் உண்டோ? என்கிறாராகவுமாம்.

[பாயோரடிவைத்து] - சேதநர்தலையிலே திருவடிகளைவைக்கிறபோது, அவர்கள் எவ்வளவு வருந்தினார்கள்? வஸிஷ்ட சண்டாள விபாகம்பாராதே வெறும்உன்க்ருபையாலே செய்தருளினாய் அத்தனையன்றோ! [பாயோரடிவைத்து]-ஓரடியைப் பாவிவைத்து. [அதன்கீழ்] - அத்திருவடியின்கீழே. [பரவைநிலமெல்லாம்தாய்] - கடல்சூழ்ந்தபூமிப்பரப்படங்கலும், தாவி - அளந்தென்றபடி. ஸங்கல்பத்தாலே செய்தானல்லனே, திருவடிகளைப் பரப்பிப் பின்பிறே யளந்துகொண்டது * பரக்கவைத்து அளந்துகொண்ட பற்பபாதனிறே! [ஓரடியாலெல்லாவுலகுந்தடவந்த] - மற்றைத்திருவடியாலே ப்ரஹ்ம லோகத்தளவும் சென்று ஸ்பர்மித்த. [எல்லாவுலகும்] - நடுவுள்ள லோகங்களெல்லாம். [தடவந்த] - தென்றல் உலாவினாற்போலே. [மாயோன்] - தன்னுடைமையைஸ்பர்மிக்கைக்குத் தான் வ்யாமோஹம்பண்ணுமவன். [உன்னைக்காண்பான் வருந்தி] - என்னளவில் வந்தவாறே என்னை இரப்பாளனாக்குகிறாயோ? அத்தலையித்தலையாயிற்றே? [எனைநாளும்] - அநேக காலம். * மயர்வறமதிநலமருளியபின்பு ப்ராப்தியளவும்செல்ல இடையிலுண்டான நாலு நாளும், * அவனெதிர்சூழல்புக்குத் திரிந்த நாளோபாதி பரப்பாய்த் தோற்றுகிறபடி. [தீயோடடன்சேர்மெழுகாய்] - அக்நியிலேப்ரவேசித்துக் கரிந்துபோகவும்பெறாதே, தூரவிருந்து அழியாதிருக்கவும்பெறாதே, உருகுவது வலிப்பதாகிறபடி. மாநஸாநுபவத்தாலே யுருகுவது வலிப்பது, பாஹ்யஸம்ஸ்லேஷம்பெறாமையாலே உருகுவது வலிப்பதாய்ச்செல்லுகிறபடி. நசைவலிக்கப்பண்ண, ஆசையுருகப்பண்ணச்செல்லுகிறபடி. [உலகில்திரிவேனோ] - ஒன்றில்ஜீவித்தல், ஒன்றில்முடிதல்செய்யப்பெறாதே, குளிர்ந்தவழியில்லாததேசத்திலே யாதநாஶரீரம்போலே நானொருவன் இங்ஙனேதிரிவதே! (௬)

"பாயோரடிவைத்து" என்றதுக்கு ஹார்த்தபாவம் - சேதநர் இத்யாதி. எவ்வளவுவருந்தினார்களென்றது - எந்த ஸாதநாநுஷ்டாநம்பண்ணி ப்ரயாசப்பட்டார்களென்றபடி. "எல்லாம்" என்றதுக்குபாவம்-வஸிஷ்ட இத்யாதி. பாவிவைத்து-பரப்பிவைத்து. பரவைநிலமெல்லாம்தாயென்றதே, "பரப்பிவைத்து" என்றுவிசேஷித்ததுக்குபாவம் - ஸங்கல்பத்தாலே இத்யாதி. அதாவது - பத்தும்பத்தாகச் செய்தானென்கைக்காக விசேஷிக்கிறதென்றபடி "பரப்பியளந்துகொண்டு" என்றதுக்கு ப்ரமாணம் – பரக்கவைத்து இத்யாதி. திருச்சந்தவிருத்தம் - "குரக்கினப்படை" இத்யாதி; ஸ்பஷ்டோர்த்தஃ. பற்பம் - பத்மம். தடவந்த - தடவின. தடவினஎன்கையாலே - ஸௌகுமார்யம் தோற்றுகிறது. நடுவுள்ளவென்றது - பூமிக்கும் அண்டகபாலத்துக்கும் நடுவுள்ளவென்றபடி- "தடவந்த" என்றதுக்குபாவம் - தென்றல் இத்யாதி. உத்தரார்த்தத்தில் தம்முடைய ஆர்த்தியைச் சொல்லுகிறதுக்குபாவம்-என்னளவில் இத்யாதிவாக்யத்வயம். அல்பகாலமன்றோ எழுந்தருளியிருந்தது. "எனைநாளும்" என்கிறதென்? என்ன - மயர்வற இத்யாதி. விஸ்லேஷ வ்யஸநபாலே பரப்பாய்த்தோற்றுகிறதென்றபடி. "உடன்" - ஸமீபம். தீயோடுசேரென்னாதே, "உடன்சேர்" என்றதுக்குபாவம் - அக்நியிலே இத்யாதி. "உருகுவது வலிப்பது" என்றத்தை விவரிக்கிறார் - மாநஸாநுபவத்தாலே இத்யாதி. அதாவது - ஒருகுணத்தை மாநஸமாக அநுபவித்தால் அது குணாந்தரத்திலே ஆசையைப் பிறப்பிக்கும்; அப்போதே அக்குணாநுபவம் பெறாமையாலே உருகுவது; அது லபித்தவாறே தரிப்பதென்றபடி. விக்ரஹபாஹ்ய ஸம்ஸ்லேஷம் பெறாமையாலுண்டான ஆசையாலேயுருகுவது. "ஒருகால்காணலாமோ" என்னும் நசையைவிளைத்து விக்ரஹவைலக்ஷண்யம் முடியவொட்டாமைபாலேவலிப்பதென்றபடி. விவரணம் - நசை இத்யாதி. நசையாவது - கிடைக்குமோ என்னுஞ்சாபலம். ஆசையாவது - அநுபவாலாபத்தில் தரியாமையைவிளைக்கும் அபிநிவேஶம். (௬)

ஏழாம் பாட்டு.

உலகில்திரியுங்கருமகதியாய் உலகமாய்
உலகுக்கேயோருயிருமானாய்! புறவண்டத்து
அலகில்பொலிந்த திசைபத்தாயஅருவேயோ
அலகில்பொலிந்த அறிவிலேனுக்கருளாயே.

ஆ.—(உலகில்திரியும்) - ஸ்வாமிமதபுருஷார்த்த ஸாதநத்வேந அநுஷ்டேய மாநமாயிருந்த யாகாதி ஸர்வக்ரியைகளும், அந்தக்ரியாநுஷ்டாநாநுகுணமான லோகமும், அந்தலோகத்திலே வர்த்தமாநராய் க்ரியாநுஷ்டாதாக்களான ஆத்மாக்களும், அண்டாத்பஹிர்வர்த்தமாநராய் கர்மஹ்ரஸங்குசித ஜ்ஞாநராய் அஸங்க்யேயராயிருந்த முக்தாத்மாக்களும், இதெல்லாம் உன் ஸங்கல்பாயத்தமன்றோ? ஆதலால், என்னாலொரு செயலில்லை; த்வத்ஸமாச்ரயணோபாய விஷயஜ்ஞாநமின்றியேயிருக்கிற எனக்கு உன்னுடைய நிரவதிகக்ருபையாலே உன்னைக்காட்டியருளாய்! என்கிறார்.

ஒ.—ஏழாம்பாட்டில், "நீரும் சிறிது யத்நம் பண்ணவேணுங்காணும்" என்று எம்பெருமான் அருளிச்செய்ய, எல்லாரையும் ரக்ஷிக்கக்கடவையாக ஸங்கல்பித்திருக்கிற உன்னுடைய ஸங்கல்பத்துக்கு நான்புறம்போ? என்கிறார் [உலகில் என்று தொடங்கி]- லோகத்துக்கு புருஷார்த்தாத்யுபாயமாய்க்கொண்டு லோகத்தில் பரிமாறுகிற புண்யபாபரூபக்ரியைகளுக்கும் விலக்ஷணரான கர்மாநுஷ்டாதாக்களுக்கும் நிர்வாஹகனானவனே! இருந்ததே குடியாக எல்லார்க்கும் ஆத்மதயாநின்று நிர்வஹிக்கிறவனே! [புறவண்டத்தென்று தொடங்கி] - ப்ரக்ருதி விநிர்முக்தமாய் எண்கடந்த தன்னுடைய ஜ்ஞாநப்ரபையாலே ஸர்வகதரான ஆத்மாக்களுக்கும் நிர்வாஹகனானவனே! உன்னையும் உன்னுடைய விபூதிபூதசேதநாசேதநங்களையும் பரிச்சேதிக்கினும் பரிச்சேதிக்கமுடியாத அறிவுகேட்டையுடைய எனக்கு க்ருபைபண்ணியருளவேணும். நீ ஸர்வநிர்வாஹகனாகையாலும் நான் அறிவுகேடனாகையாலும் நீயேயருளவேணுமென்று கருத்து.

ப.—அநந்தரம், கர்த்ருக்ரியாரூபமான லௌகிக ஸமஸ்தவஸ்துவுக்கும் அந்தராத்மபூதனான நீ, உன்னைப்ராபிக்க விரகுஅறியாதஎனக்கு க்ருபைபண்ணியருளவேணுமென்கிறார்.

உலகில் - லோகத்தில், திரியும் - வ்யாபரிக்கிற, கருமம் - கார்யரூபமான, கதி - உபாயங்களுக்கு, ஆய் - நிர்வாஹகனாய், உலகம் - அவ்வுபாயகர்த்தாக்களான லௌகிகாதிகாரிகளுக்கு, ஆய் - (அந்தராத்மதயாநின்று) ப்ரவர்த்தகனாய், (இப்படிப்ரவர்த்தகத்வமாத்ரமன்றியே), உலகுக்கு - ஸர்வலோகங்களுக்கும், ஓருயிரும் - ஏகாத்மாவாயும், ஆனாய் - நிற்பானாய், புறவண்டத்து - அண்டாத்பஹிர்வர்த்திகளாய், அலகில்பொலிந்த - அஸங்க்யேயஸ்வரூபராய், (ஜ்ஞாநதர்மத்தாலே), பத்து-பத்து, திசை-திக்கிலும், ஆய-வ்யாப்தரான, அருவே - முக்தாத்மாக்களை ப்ரகாரமாகவுடையவனே! அலகில்பொலிந்த - எண்ணிறந்த, அறிவிலேனுக்கு - அறிவுகேட்டையுடையேனாகையாலே உன்னைப்பெறவிரகறியாத எனக்கு, அருளாய் - (ஸாதநமும்நீயேயாய் பலமும்நீயேயாம்படி) க்ருபைபண்ணியருளவேணும். ஓவென்கிற அசை - ஆர்த்தியால்வந்த கூப்பீட்டைக் காட்டுகிறது.

இ.—ஏழாம்பாட்டில், "பேறு உம்மதமான பின்பு, நீரும் சிறிது யத்நம் பண்ணவேணுங்காணும்" என்ன, 'ஸர்வமும் த்வதீநமாயிருக்க, அதுக்குப்புறம்போ நான் என்கார்யம் செய்கைக்கு?" என்கிறார்.

[உலகில் இத்யாதி] - லோகத்தில் பரிமாறுகிற ஸாதநமான கர்மம் நீயிட்ட வழக்காய் [உலகமாய்] - அநுஷ்டாதாக்களும் நீயிட்ட வழக்காய். [உலகுக்கேயோரு யிருமானாய்] - ஒருஶரீரத்தை ஒருசேதநன் ஆத்மாவாய் அபிமாநிக்குமாபோலே, ஸகல பதார்த்தங்களுக்கும் ஏகாத்மாவானவனே! "அநந்தஃ விஷ்டஶாஸ்தா". ஸகலஜகத்துக்கு தானே கர்த்தாவும் கர்மமும் உபகரணங்களுமாயிருக்கை. [புறவண்டத்து]-அண்டப்புறத்து, அஸங்க்யேயராய் ஜ்ஞாநப்ரஜையாலே ஸர்வஜ்ஞரான முக்தாத்மாக்களுக்கு நிர்வாஹகனானவனே! [அலகில்பொலிந்த அறிவிலேனுக்கு] - சேதநர்க்குத் தொகையுண்டாகிலும் என்னறிவுகேட்டுக்கு எண்ணில்லை. [அருளாயே] - என்னளவு இதான பின்பு நீயே க்ருபைபண்ணி யருளுமித்தனையன்றோ? அறிவையுண்டாக்கி, அத்தைப் பக்வமாக்கி, அதின்ஃபலமான உன்னையும் தந்தருளவேணும்.

ஈடு.—ஏழாம்பாட்டு. "'உலகில்திரிவேனோ" என்கிற உறைப்பாலுண்டான ஸ்வாதந்த்ர்யம் உம்முடையதலையிலேகிடந்ததே!' என்ன, 'ஸாதநமும்ஸாதகரும் த்வததீநமான பின்பு, இவ்வாற்றாமை எனக்கு ஸ்வரூபமாயங்வயிக்குமித்தனையன்றோ?' என்கிறார். அன்றியே, 'பேறுஉம்மதானபின்பு நீரும் சிறிது யத்நம்பண்ணவேணுங்காணும்' என்ன, 'ஸர்வமும் த்வததீனமாயிருக்க, அதுக்குப்புறம்போ நான்என்கார்யம்செய்கைக்கு?' என்கிறாராகவுமாம்.

[உலகில்திரியும்கருமகதியாய்] - லோகத்தில்பரிமாறுகிற கர்மமாகிற ஸாதநமாய். உன்னையொழிய பலப்ரதாநம்பண்ணவல்லதோன்றுண்டோ? [உலகமாய்] - அநுஷ்டாதாக்களோதான் ஸ்வதந்த்ரராயிருக்கிறார்? † உலகமென்பதுஉயர்ந்தோர்மாட்டிறே; லோகத்திலுள்ளார்க்கு என்றும்வருமிறே. [உலகுக்கேயோருயிருமானாய்] - ஒருஶரீரத்தை ஒரு சேதநன் ஆத்மாவாய் அபிமாநித்திருக்குமாபோலே, ஸகலபதார்த்தங்களுக்கும் ஏகாத்மாவா

ஏழாம்பாட்டு.—உலகில் இத்யாதி. "உலகில்திரியும்" இத்யாதி முதலடியைக் கடாக்ஷித்தவதாரிகை - உலகில்திரிவேனோ இத்யாதி. உறைப்பாலுண்டான ஸ்வாதந்த்ர்யம் - ஆற்றாமையாலுண்டான பதற்றம். 'கிடந்ததே' - அதுஸாதநமாகாதோ? என்ன என்றபடி. ஸாதநமும் ஸாதகருமென்றது - "கருமகதியாயுலகமாய்" என்றத்தைப்பற்ற. கீழிற்பாட்டிலே ஸாதநாநுஷ்டாநம்பண்ணவேண்டாவோவென்ற ஶங்கையை யநப்யுபகம்யவாதத்தாலே பரிஹரித்தார்; இப்பாட்டில் - அப்யுபகம்யவாதத்தாலே ப்ரிஹரிக்கிறாரென்று விவக்ஷித்து, யோஜநாந்தரம் - அன்றியே பேறு இத்யாதி. 'ஸர்வமும் த்வததீநமாயிருக்க' இத்யாதிக்குக் கருத்து - உன்னுடைய க்ருபையைப்பார்த்தால் ஸாதநம் அநுஷ்டிக்க வேண்டுவதில்லை யென்றார் கீழ்; அப்படி யநுஷ்டிக்கவேண்டிற்றேயாகிலும், ஸாதநாநுஷ்டாதாக்களும் அநுஷ்டிக்கிறஸாதநமும் உன் அதீநமாகையாலே எனக்கொரு ஸ்வாதந்த்ர்யமில்லை; நான் அத்யந்தபாரதந்த்ரனானபின்பு ஸாதநம்அநுஷ்டிக்க ப்ராப்தியில்லையென்கிறாரென்று-ஹ்ருதயம் - உன்னை யொழிய இத்யாதி. "உலகமாய்" என்ற ஸாமாநாதிகரண்யத்துக்குபாவம் - அநுஷ்டாதாக்களோ இத்யாதி. 'உலகம்" என்றால் - அநுஷ்டாத்ருவாசகமாமோ? என்ன - உலகமென்பது இத்யாதி. உயர்ந்தோர்மாடு - சேதநவாசி. "ஜகத்ஃக்ருத்ஸ்நம்" இதிவத். ப்ரிஹாராந்தரம் - லோகத்தில் இத்யாதி.' கர்மமும்கர்த்தாவும் அவனுகைக்குநிபந்தநமேதென்ன; ஶரீரஶரீரிபாவமென்கிறார் - உலகுக்கேயோருயிருமானாய் என்று. அதாவது - ஸர்வாத்மாவாகையாலே ஸர்வமும் த்வததீநமாயிருக்குமென்ற

† திவாகரம், மக்கட்பெயர்த் தொகுதி.

னவனே! "அந்த:ப்ரவிஷ்டஶ்ஶாஸ்தா" (அந்த:ப்ரவிஷ்டஶ்ஶாஸ்தா).ஸலபூதனுனதானே, கர்த்தாவும் கர்மமும் உபகரணங்களுமா யிருக்கை. இரண்டும் உன்தலையிலேகிடந்தால், உன்னையொழியஎங்ஙனே நான் ஜீவிக்கும்படி? [புறவண்டத்து]-அண்டாத்பஹி: என்ற படி. [அலகில்பொலிந்ததிசைபத்தாய அருவேயோ] - அஸங்க்யேயராய், எம்பெருமான் ஸ்வரூபத்தாலே வ்யாபிக்குமாபோலே ஜ்ஞாநத்தாலே பத்துத்திக்கிலும் வ்யாபித்திருப்பா ராய் ரூபித்ரவ்யம்போலே கண்ணுக்குவிஷயமன்றிக்கே அரூபியாயிருக்கிற ஆத்மாக்களுக்கு நிர்வாஹகனுனவனே! முக்தரோதான் ஸ்வதந்த்ரராயிருக்கிறார்? அங்கும்பத்துத்திக்காயிருக் குமோ? என்னில்: இங்கேயிருந்துஅநுஸந்திக்கிறஇவர்க்குச் சொல்லத்தட்டில்லையே. அங் ஙனன்றிக்கே, முக்தர் லீலாவிபூத்யநுஸந்தாநம் பண்ணும்போதுஇங்குள்ளபடியே ப்ரதி பத்திபண்ணுவர்களிறே. [அலகில்பொலிந்தஅறிவிலேனுக்கு] - பகவத்ஸ்வரூப ரூபகுண விபூதிகளைப் பரிச்சேதிக்கிலும் தம் அறிவுகேடு பரிகணிக்கப் போகாதென்கிறார். * மயர்வற மதிநலமருளப்பெற்றவர் வார்த்தையிறே! [அருளாயே] - பரிகாரமுண்டானபின்பு அரு ளக்குறையென்? † "அநுத்தமம்பாத்ரமிதம்தயாயா:" (அநுத்தமம்பாத்ரமிதம்தயாயா:) என்னுமாபோலே.

(எ)

எட்டாம் பாட்டு.

அறிவிலேனுக் கருளாய் அறிவாருயிரானாய்!
வெறிகோள்சோதிமூர்த்தி! அடியேனெடுமாலே!
கிறிசெய்தென்னைப் புறத்திட்டுஇன்னங்கெடுப்பாயோ?
பிறிதொன்றறியாவடியேன் ஆவிதிகைக்கவே.

ஆ.- (அறிவிலேனுக்கு.) - என்னை யுள்ளபடி அறிவார்க்கன்றோ நான் என் னைக் காட்டிக்கொடுப்பது? என்னில், த்வதேகாத்மயாரணாகையாலே, அவர்களுக்கு உன்னைக் காட்டிக்கொடுக்கை ப்ராப்தம்; அறிவிலேனுக்குச் செய்தருளுகையன்றோ குணமாவது? ஆதலால், உன்னுடைய நிரதிஶய ஔஜ்ஜ்வல்ய ஸௌந்தர்ய ஸௌகுமார் யாதிஅபரிமிதோதாரகுணஸாகரமான உன்திருமேனியைக் கேவலம் உன்க்ருபையாலே

படி. "உலகுக்கேயோருயிருமானாய்" என்றதுக்கு ஹார்த்தஸ்வம் - இரண்டும் இத்யாதி. இரண்டு மென்றது - கர்மமும் கர்த்தாவும். உன்தலையிலேகிடந்தால் - த்வததீநமானால். உலகுக்கேயோருயி ராகையாலே யுலகமாயென்றபடி. "அலகிற்பொலிந்த" - எண்ணிக்கையிலேபூர்ணரான. அலகு - ஸங்க்யை. "திசைபத்தாய" - தர்மபூதஜ்ஞாநத்தாலேபத்துத்திக்கிலும் வ்யாப்தரான. "அருவேயோ"- ஆத்மாக்களைப்ரகாரமாகவுடையவனே! "புறவண்டத்து" - அண்டாத்பஹிர்வர்த்திகளாயென்றபடி. தார்த்தம். "புறவண்டத்து" இத்யாதியாலே - ப்ரக்ருதிபத்தசேதநரைச்சொல்லுகிறதென்னுதல், முக் தரைச்சொல்லுகிறதென்னுதல். இங்குள்ளபடியேயென்றது - இங்குள்ளார் அநுஸந்திக்கும்படியே யென்றபடி. ஸர்வஜ்ஞராயிருக்க, "அறிவிலேனுக்கு" என்கிறதென்? என்ன - மயர்வற இத்யாதி. அதாவது - ஸர்வஜ்ஞராகையாலே ஆகிஞ்சந்யம்தோற்றச்சொல்லுகிறாரென்றபடி. "அறிவிலேனுக் கருளாய்" என்றதுக்கு ஹார்த்தஸ்வம் - பரிகாரம் இத்யாதி. பரிகாரம்-ஆகிஞ்சந்யம். "ஆகிஞ்சந்யம், ப்ரபத்திபரிகரம்" என்றதுக்கு - ‡ "அக்ருதஸுக்ருதகஸ்ஸுதுஷ்க்ருதாத்மா:" இத்யாத்யநுஸந் தேயம். இதுக்கு ஸம்வாதம் - அநுத்தமம் இத்யாதி.

(எ)

† ஸ்தோத்ராத்நே. ‡ வரதராஜஸ்தவே - அஉ.

யெனக்குக் காட்டியருளவேணுமென்று அபேக்ஷிக்க; தது த்தரக்ஷணத்திலே செய்தருளக் காணாமையாலே அதிமாத்ர ஸீதராய், நெடுங்காலமெல்லாம் உன்னைக் காணப்பெறாதே விஸீர்ணனும்படி எனக்கு அரியனான நீ, "உன்திருவடிகளல்லது மற்றொரு ப்ராப்யமும் ப்ராபகமு மில்லை" என்றிருக்கிற இவ்வறிவுங்கூடக் கலங்கும்படி, உன்னைக்காட்டாதே என்னை வஞ்சித்து, ஶப்தாதிவிஷயங்களைக் காட்டி என்னை இன்னங் கெடுக்கவோ பார்த்தருளிற்று? என்கிறார்.

ஒ.—எட்டாம்பாட்டில், சடக்கெனத் தம் அபேக்ஷிதம் பெறாமையாலே, உன்னாலல்லது செல்லாதிருக்கிற என்னைக் கிறிசெய்தகற்றி அந்தரப்படுத்தவோ பார்த்தருளிற்று? அங்ஙனே செய்யாதே என்னை உன்க்ருபையாலே ரக்ஷித்தருளவேணும் என்கிறார். [அறிவிலேனுக்கருளாய்அறிவாருயிரானாய்] - அறிவிலேனுக்கு அருளுமிது வன்றோ உன் குணவத்தை? அறிவாரை உயிராகவுடையனாயிருக்கை உனக்கேற்றமோ? அறிவில்லையாகில்அருளக்கடவதோவென்னில்,—"அறிவில்லாதார்க்குஅருளுகையன்றோ அருளுகையாவது! அறிவுடையார்க்கு அருளுகை யேற்றமோ" என்றுஞ்சொல்லுவர். [வெறிகொள்சோதி மூர்த்தியடியேனெடுமாலே] - அதிபரிமள தேஜோரூபமான திருவடிவை யுடையையாய் வைத்து, அவ்வழகிலே யகப்பட்ட எனக்கு எட்டாதிருக்கிறவனே![கிறியென்று தொடங்கி] - உன்னாலல்லது மற்றொன்றால் செல்லாதிருக்கிற நான் ப்ரமிக்கும்படி ஏதேனுமொரு விரகுகளைப்பண்ணி இன்னமும் புறம்பே போகவிட்டு என்னைமுடிக்கவோ பார்த்தருளிற்று!

ப.—அநந்தரம், தேஜோமய விக்ரஹத்தையுடைய நீ அவ்வடிவை எனக்கு அநுபவிப்பியாதே, ஸாம்ஸாரிகவிஷயங்களிலே தள்ளி இன்னம் கெடுக்கத் தேடுகிறாயோ? என்கிறார்.

அறிவார் - அறிவுடையாரான விலக்ஷணர்க்கு, உயிர் - தாரகன், ஆனாய்-ஆய், (அவர்களை தரிப்பிக்குமபடியான), வெறிகொள் - ஸர்வகந்தமாய், சோதி-தேஜோமயமாயுள்ள, மூர்த்தி - திவ்யவிக்ரஹத்தையுடையனாய், அடியேன் - உனக்கே அநந்யார்ஹனாம்படி என்னைப்பண்ணி உன்பக்கலிலே சபலனாம்படிபண்ணின, நெடுமாலே-அதிஶயித வ்யாமோஹத்தை யுடையனானவனே! அறிவிலேனுக்கு - (அந்தவடிவை யநுபவிக்கைக்கு) விரகறியாத எனக்கு, அருளாய் - உன்க்ருபையாலே யநுபவிப்பித்தருளவேணும்; (அங்ஙனன்றியே), பிறிது - உன்னையொழிய, ஒன்று - கத்யந்தரம், அறியா-அறியாதே, அடியேன் - (நீயிட்டவழக்கான ஸ்வரூபத்தையுடையேனான) என்னுடைய, ஆவி - நெஞ்சு, திகைக்க - கலங்கும்படியாக, கிறி - விரகாலே, செய்து - ருசியைஜநிப்பித்து, (அதுக்கீடானஅநுபவம்தாராதே), என்னை - (வடிவழகில் வாசியறிந்த) என்னை, புறத்து - பாஹ்யவிஷயங்களிலே, இட்டு - அகப்படுத்தி,(அநாதிகாலமிழந்தது போராமல்), இன்னம் - (அபிநிவேஶம் பிறந்த) இன்றும், கெடுப்பாயோ - கெடுக்கத்தேடுகிறாயோ? வெறிகொள்சோதியென்று - கண்வெறியோடும்படி மிக்கதேஜஸ் என்றுமாம்.

இ.—எட்டாம்பாட்டில், "அருளாய்" என்றபோதே தம்அபேக்ஷிதம்பெறாமையாலே, இன்னம் என்னையகற்றி அந்தரப்படுத்தப் புகுகிறாயல்லையிறே? என்கிறார்.

[அறிவிலேனுக்கருளாய்] - உன்னைக்கிட்ட முதலில்லாத எனக்கு அருளாய், 'அறிவில்லையாகில் அருளக்கடவதோ?' என்ன, ஸர்வஜ்ஞரான நித்யஸூரிகளுக்கு க்ருபை

பண்ணவோ? தளர்ந்தவிடமன்றோ க்ருபைக்கு விஷயம்! * பொய்ந்நின்ற ஞானத்தை உடைய எனக்கு * ஞானப்பிரானான நீ க்ருபைபண்ணியருளாய். [அறிவாருயிரானாய்] - உன்னையுள்ளபடி யறிவார்க்கு தாரகனாகை உனக்கேற்றமோ? "பத்தாயி" என்கிற படியே, அறிவார்க்கு உயிராமவன் என்னுதல்; "ஜ்ஞாநீத்வாத்மைவ" என்கிறபடியே, அறிவாரை உயிராகவுடையவன் என்னுதல். [வெறிகொள் சோதிமூர்த்தி] - "அருளோம்" என்றாலும் விடவொண்ணாத வடிவையுடையவனே! அதிபரிமளிதமாய் தேஜோரூபமானவடிவு. "ஸர்வகந்த:", "தேஜஸாம்ராசிமூர்ஜிதம்." [அடியேன் நெடுமாலே] - சேர்ந்து குளிர்ந்த தண்ணீரை விடாயர்க்கு எட்டாதபடி வைப்பாரைப் போலே, அவ்வடிவிலேதோற்ற எனக்கு எட்டாதிருக்கிறவனே! என்பக்கல் வ்யாமோஹத்தைப் பண்ணினவனென்றுமாம். [கிறிசெய்தென்னை] - எனக்கு முன்புசெய்த தித்தனையும் விரகுஅடித்ததாம்இத்தனையிறே. அநந்யகதியாயிருக்கிறவென்னை ப்ரமிக்கும்படி ஒரு விரகுபண்ணி: அதாகிறது - பேறு உன்னதானபின்பு க்ருஷியும் உன்னதாக வேண்டாவோ என்கை. [புறத்திட்டு] - உனக்கு அசலாம்படி விஷயங்களிலே தள்ளி. [இன்னங்கெடுப்பாயோ] - அநாதிகாலமிழந்தது போராதோ? உன்சுவடறிந்த பின்பும் உனக்கு அசலாகவோ? "அறிவிலேன்" என்றாலும், "அருளாய்" என்றாலும் கெடுக்குமித்தனையோ? "வைஷயிகாஸ்நேஹ:" ("ப்ரணயஸ்ஸ்ருதி"): விஷயப்ராவண்யமென்றும், விநாசமென்றும் பர்யாயமிறே. [இன்னங்கெடுப்பாயோ] - பேறு அவனாலேயானால் இழவும் அவனாலே என்னலாமிறே; ஸ்தநந்தயப்ரஜை கிணற்றிலே விழுந்தால் "தாயார் தள்ளினாள்" என்னுமாபோலே. [பிறிதொன்றறியாவடியேன்] - அநந்யகதியாய் உன்னை பார்த்திருக்கிற நான். [ஆவிதிகைக்கவே] - நெஞ்சு கலங்கும்படியாக.

ஈடு. — எட்டாம்பாட்டு. "அருளாய்" என்ற வாயோடே வந்தருளக்கண்டிலர்: தன்பக்கல்நின்றும்பிரித்து என்னைக்கைவிடப் பார்த்தானாகாதே யென்கிறார்.

[அறிவிலேனுக்கருளாய்] - "நின்னருளேபுரிந்திருந்தேன்" என்னுமாபோலே உன்னருளொழிய வேறொன்றறியாத எனக்கு அருளவேணும். "அவ்வருளல்லனவருளுமல்ல" என்றிறே இவரிருப்பது. * வையகத்துப்பல்லாரருளும்பழுதிறே. (பொய்ந்நின்ற ஞானத்தையுடைய வெனக்கு * ஞானப்பிரானானநீ க்ருபைபண்ணியருளாய்.) [அறிவாருயிரானாய்] - அறிவார்க்கு உயிரானவனே! என்னுதல்; அறிவாரை உயிராகவுடையவனே! என்னுதல். "ஜ்ஞாநீத்வாத்மைவமேமதம்" (ஜ்ஞாநீத்வாத்மைவமேமதம்)

ப்ர.—[அறிவிலேனுக்குஇத்யாதி]—[அறிவாருயிரானாய்]—ஸ்ரீ கீதா ௭ [௭]

"உதாராஸ்ஸர்வ ஏவைதே ஜ்ஞாநீத்வாத்மைவ மே மதம்। ஆஸ்தித: ஸ ஹி யுக்தாத்மா மாமேவாநுத்தமாம் கதிம்॥ ௧௮॥"

எட்டாம்பாட்டு.—அறிவிலேனுக்கு இத்யாதி. "இன்னங்கெடுப்பாயோ" என்றதைக் கடாக்ஷித்தவதாரிகை - அருளாயென்று இத்யாதி.

அப்படி வேறொன்றறியாரோ? என்ன-அவ்வருளல்லன இத்யாதி. அந்த அருளையொழிய மற்றுண்டானவை அருளல்லவென்றபடி. 'நின்னருளேபுரிந்திருந்தேன்' - உன்னுடையக்ருபையையே யாதரித்திருந்தேனித்யர்த்தம். புரிந்து - ஆதரித்து. இதாருடைய அருள் ஸாதகமன்றோ? என்ன - வையகத்து இத்யாதி. ஜகத்திலுள்ளபலருடைய ப்ரஸாதமும்வ்யர்த்தமித்யர்த்தம். முதற்றிருவந்தாதி

என்கிறபடியே, ''[illegible]'' (த்விதீயம்மேந்தராத்மாநம்)என்கிறபடியே. [வெறிகோள்சோதிமூர்த்தி] - அருளாதொழிந்தாலும் விடவொண்ணாதவடிவழகு: ''[illegible]'' (ஸர்வகந்த:) என்னுமதிறே. பரிமளத்தை யுடைத்தாய், நிரவதிகமான தேஜஸ்ஸையுடைத்தான வடிவழகையுடையவனே! [அடியேன்நெடுமாலே] - எனக்கு இப்போது எட்டாதிருக்கிறவனே! என்னுதல்; வடிவழகைக் காட்டி எனக்கு வ்யாமோஹத்தை விளைத்தவனே! என்னுதல். [கிறிசெய்து] - நீஇப்போது உதவாமையாலே, முன்பு செய்தவையெல்லாம் விரகுஅடித்தாயென்று தோற்றுநின்றதுகிடாய்! [என்னைப்புறத்திட்டு] - பிராட்டியைஅசோகவநிகையிலே வைத்தாற்போலே, பகவத்குணங்கள் நடையாடாத ஸப்தாதிவிஷயங்கள் நடையாடுகிற ஸம்ஸாரத்திலேபோகட்டு. [இன்னங்கெடுப்பாயோ] - முன்புஇழந்ததுபோராதோ? ''ஸம்ஸாரம்த்யாஜ்யம்'' என்றும், ''பகவத்குணங்கள் நன்று'' என்றும் அறிந்தபின்பும் கெடுப்பாயோ? ''[illegible]''* (புத்திநாஸாத் ப்ரணஸ்யதி)இறே.[பிறிதோன்றுஇத்யாதி] - அநந்யகதியாய் அநந்யபரனுயிருக்கிற என்னை மநஸ்ஸு கலங்கும்படி கிறிசெய்து என்னைப்புறத்திட்டு இன்னங்கெடுப்பாயோ? (அ)

''முதலாவார்'' இத்யாதி. ''அறிவிலேனுக்கு'' என்றது - அநுவாதமன்று, பகவத்வ்யதிரிக்த விஷயாஜ்ஞதையைச்சொல்லுகிறது. த்விதீயார்த்தத்துக்கு ப்ரமாணத்வயம் - ஜ்ஞாநீது இத்யாதி. ''[illegible]'' இதி பகவத்கீதாஸு. ''[illegible]'' இத்யயோத்யாகாண்டே லக்ஷ்மணம்ப்ரதிராம:. (ஐ - ௩௩) 'அருளாய்' என்றவநந்தரம் வடிவழகைச்சொன்னதுக்கு பாவம் - அருளாதொழிந்தாலும் இத்யாதி. ''திருமேனிபரிமளயுக்தம்'' என்னுமதுக்குப்ரமாணம் - 'ஸர்வகந்த:' இத்யாதி. ஸப்தார்த்தம் - பரிமளத்தை இத்யாதி. ப்ரதமார்த்தத்துக்கு, ''மால்'' என்று - பெருமையாய், ''நெடு'' என்றும் - பெருமையாய், அறப்பெரியோனென்றபடி. த்விதீயார்த்தத்துக்கு, மிக்கவ்யாமோஹத்தையுடையவனென்றபடி. ''மால்'' என்று - வ்யாமோஹம் - வ்யாமோஹத்தை விளைத்த நம்மை ''கிறிசெய்து'' என்கிறதென்? என்ன - நீ இப்போது இத்யாதி. விரகுஅடித்தாயென்றது - எனக்கு ஸம்ஸாரத்திலும் பொருந்தாமே நீயும் முகங்காட்டாமே துடிக்கும்படி பண்ணப்பார்த்தாயென்றபடி. நடையாடாத - நடையாடாமேயென்றபடி. முன்பைப்பற்ற இன்றைக்கு விசேஷமேதென்ன - ஸம்ஸாரம் இத்யாதி. விஷயங்கள் நடையாடுகிற ஸம்ஸாரத்தேவைத்தால் கேடேதென்ன - புத்திநாஸாத் இத்யாதி. அதாவது - விஷயத்யாநத்வாரா நாஸபர்யவஸாயியாமென்றபடி. '[illegible]'' இத்யாரப்ய. ''[illegible]'' இதி கீதாஸு. (௬௩). ''பிறிதொன்றறியா, அடியேன்'' என்ற பதத்வயார்த்தம் - அநந்யகதியாய் அநந்யபரனாய் என்று. அநந்யபரத்வம் அநந்யப்ரயோஜநத்வம். அறிவாருயிரானாய்என்று தொடங்கி, நெடுமாலே, பிறிதொன்றறியாவடியேனுவிதிகைக்க கிறிசெய்துஎன்னைப்புறத்திட்டுஇன்னங்கெடுப்பாயோ? அறிவிலேனுக்கருளாய் இத்யந்வய:. (அ)

ஒன்பதாம் பாட்டு.

ஆவிதிகைக்க ஐவர்குமைக்குஞ்சிற்றின்பம்
பாவியேனைப் பலநீகாட்டிப்படுப்பாயோ?
தாவிவையங்கொண்ட தடந்தாமரைகட்கே
கூவிக்கொள்ளுங்காலம் இன்னங்குறுகாதோ?

ஆ.—(ஆவிதிகைக்க.) - ஶப்தாதி விஷயஸுகம் புருஷார்த்தமன்றோ? அத்தையநர்த்தரூபமாகச் சொல்லுவானென்? என்னில்;

ஜ்ஞாநஸங்கோசஹேதுவாய்து:கஸஹமாய்அத்யல்பமாய்அத்யந்தம்அஸ்திரமாயிருக்கையாலே வைஷயிகஸுகம்அபுருஷார்த்தமாகையாலே அந்தவிஷயங்களைக்காட்டி உன்னையிழப்பித்து என்னைத் தறைப்படுத்தாதே, லோகமெல்லாம் நிறையும்படி மலர்ந்த உன்திருவடிகளாகிற தாமரைத்தடாகத்திலே என்னைவாங்கியருளாயென்றுஅபேக்ஷிக்க, அப்போதே செய்தருளாமையாலே, "அக்காலம் வந்தால் செய்கிறோம்" என்றானாகக் கொண்டு, அக்காலம், இக்காலமெல்லாம் முடிந்தாலும் வரக்கடவதொன்றோ! என்று கூப்பிடுகிறார்.

ஓ.—ஒன்பதாம்பாட்டில், கிறிசெய்து முடிக்கையாவது - வைஷயிகஸுகங்களைக்காட்டி உன் திருவடிகளில் வாராதபடி பண்ணுகையென்கிறார்.

[ஆவியென்று தொடங்கி] - மநஸ்ஸு கலங்க ஐந்திந்த்ரியங்களும் நலியுஞ்செய்யும்படியான ஶப்தாதிவிஷயாநுபவமாகிற க்ஷுத்ரஸுகத்தைக் காட்டி அவற்றோடுபொருந்தாதபடியாய் அவற்றுக்குப்பாங்கானநிலத்திலேயிருக்கைக்குஈடானபாபத்தைப்பண்ணின என்னை இன்னம் முடிக்கப்பார்க்கிறாயோ? [தாவியென்றுதொடங்கி] - த்வதேகபாரகனாய்வைத்து உன்னைப்பெறாதே நான்முடியும் தஶையானாலும் அநாயாஸேந நீ எல்லார்க்கும்கொடுக்கும் நிரதிஶயபோக்யமான திருவடிகளிலே அழைத்தருளும் காலம் அணித்தாகாதோ?

ப.—அநந்தரம், உனக்குவிதேயமான விஷயேந்த்ரியங்கள் நடையாடுகிற தேசத்திலேவைத்து என்னைமுடிக்கத்தேடுகிறாயோ? உன்திருவடிகளிலே யழைத்துக் கொள்ளுங்காலம் அணித்தாகாதோ? என்கிறார்.

ஆவி-நெஞ்சு, திகைக்க - கலங்கும்படியாக, ஐவர்-ஐந்திந்த்ரியங்களும், குமைக்கும்-"தா, தா" என்றுபிடிக்கிற, சிறு-அல்பஸாரமான, இன்பம் - விஷயஸாரஸ்யத்தை, பல - பஹுமுகமாக, காட்டி - ப்ரகாசிப்பித்து, நீ - (இவற்றைக்கழிக்கவல்ல ஶக்தியையுடைய) நீ, பாவியேனை - (நிரதிஶயாநந்தயோக்யனுப் வைத்து நித்ய து:கதேசத்திலே வர்த்திக்கும்படி)பாபியான என்னை, படுப்பாயோ - முடிக்கநினைக்கிறாயோ? வையம் - பூமியை, தாவி - அநந்யார்ஹையாம்படியளந்து, கொண்ட - கொண்ட, தடம் - நிரதிஶய போக்யமான, தாமரைகட்கு - திருவடித்தாமரைகளிலே (நான்)அந்வயிக்கும்படி, கூவிக்கொள்ளும்-(என்னை)அழைத்துக்கொள்ளும், காலம் - காலம், இன்னம் - ("விஷயாந்தர ஶீர்ஷகம் விநாஶஹேது" என்னும் அவஸ்த்தைபிறந்த) அளவிலும், குறுகாதோ?—

இ.—ஒன்பதாம் பாட்டில், "புறத்திட்டு இன்னங்கெடுப்பாயோ?" என்ற இடத்தை விவரித்துக்கொண்டு, உன்திருவடிகளிலேயழைத்துக்கொள்ளும் காலம்இன்னங் கிட்டாதோ? என்கிறார்.

[ஆவிதிகைக்க] - நெஞ்சுகலங்கும்படி. [ஐவர் குமைக்கும்] - பஞ்சேந்த்ரியங்களும் விஷயங்களிலேமூட்டி நலியும்படியான. 'ஐவர்' என்று சேதநஸமாதியாலே சொல்லுகிறது, நலிவின் மிகுதியாலே. [சிற்றின்பம்] - பகவத்விஷயத்தை இழப்பிக்க வேண்டுவதுண்டாய் தன்பக்கல் அநுஹாவ்யமொன்றும் இன்றிக்கேயிருக்கும் க்ஷுத்ர ஸுகத்தை. [பாவியேனை]- அந்தமில் பேரின்பத்துக்குஇட்டுப்பிறந்துவைத்து ஶப்தாதிகள் நடையாடுகிற தேஶத்திலேயிருக்கும்படி பாபத்தைப்பண்ணின என்னை. "வீவிலின்பமிகவெல்லைநிகழ்ந்தனன்" என்றிவரிறே இங்ஙனே சொல்லுகிறார். [பல]-"பைதல்கைசு; நோய் முக்கைசு" என்று தம்மளவன்றியே அநேகமாயிருக்கை. [நீ காட்டிப்படுப்பாயோ]-ரக்ஷகனானநீ காட்டிமுடிக்கப்பார்க்கிறாயோ? ஶப்தாதிவிஷயங்களினுடைய தர்ஶநமாத்ரத்திலே முடியும்படியாயிற்று, இவர் ஐஹவத்குணங்களிலே நைந்தபடி. நாம் காணுமிடில் முடியும்படியான விஷயங்கள், இவர்க்குக் காணில் முடியும்படியாயிற்று. [தாவி இத்யாதி] - வரையாதே எல்லார்க்குங்கொடுக்கும் நிரதிஶயபோக்யமான திருவடிகளிலே யழைத்துக் கொள்ளுங்காலம் இன்னங் குறுகாதோ? விஷயாந்தரதர்ஶநமாத்ரத்திலே முடியும்படியானாலும் அணித்தாகாதோ? தாவிவையங்கொண்டவென்கிறது - உபாயாம்ஶம். தடந்தாமரைகளென்கிறது - உபேயாம்ஶம். 'கூவிக்கொள்ளுங்காலம்' என்று தாம் சென்று காண்கையன்றிக்கே தானே அழைத்துக்காட்டுகை முறையாகையாலே இட்டும் ப்ரகாரம் சொல்லுகிறது.

ஈடு.—ஒன்பதாம்பாட்டு. உம்மைஇங்குக்கெடுத்ததேன்? என்ன, 'கண்டகாட்சியிலே இழுத்துக்கொள்ளக் கடவதான விஷயங்கள் பரிமாறுகிறவிடத்தே வைத்தாயாகில், இனிக் கேடுக்கையென்று ஒன்றுண்டோ?என்கிறார். என்னைஇங்கேவைத்தபோதே, குழியைக்கல்லி மண்ணையிட்டுஅமுக்கப்பார்த்தாயன்றோ?' என்கிறார். "தாநஹம் த்விஷதஃ க்ரூராந் ஸம்ஸாரேஷு நராதமாந் । க்ஷிபாமி" (தாநஹம்த்விஷதஃக்ரூராந்ஸம்ஸாரேஷு நராதமாந் ! க்ஷிபாமி) என்னும்படியே.

[ஆவிதிகைக்க]-இந்த்ரியங்களுக்குக் கந்தமானமநஸ்ஸு கலங்க [ஐவர் குமைக்கும்] - சேதநஸமாதியாலே சோல்லுகிறது, நலிவின்மிகுதியாலே. ஒரு துர்ப்பலனைப்பற்றி ஐஞ்சுபேர் நலியுமாபோலே, "என்விஷயத்தைக்காட்டு" என்று தனித்தனியேநலிகிறபடி. இப்படி நலிந்தாலும் †ஆஸ்வாதமுண்டாகி லாமிறே. [சிற்றின்பம்] - முள்ளிப்பூவில்தேன்

ஒன்பதாம்பாட்டு —ஆவி இத்யாதி. "பலநீகாட்டிப்படுப்பாயோ" என்றத்தைப்பற்ற - உம்மைஇங்கு இத்யாதி. "பாவியேனை" என்றத்தைப்பற்ற - என்னைஇங்கே இத்யாதி. ஸம்ஸாரத்திலேவைக்கை நிக்ரஹகார்யமோ? என்ன - தாநஹம் இத்யாதி. பகவத்கீதாஸு. "க்ஷிபாமி ஜஸ்ரமஶுபாநாஸுரீஷ்வேவ யோநிஷு" என்று மேல்.

தாமொருவராயிருக்க ஐந்திந்த்ரியங்கள் நலிகிறதுக்கு த்ருஷ்டாந்தகதநபூர்வகமாக அவை குமைக்கும் ப்ரகாரத்தையும் அருளிச்செய்கிறார் - ஒருதுர்ப்பலனை இத்யாதி. "சிற்றின்பம்" என்றதுக்குஅவதாரிகை - இப்படிநலிந்தாலும் இத்யாதி. ஆஸ்வாதமில்லையோ? என்ன - முள்ளிப்பூவில் இத்யாதி. "அல்பாஸம்" என்றதுக்குப்ரமாணம் - அற்பசாரங்களிறே என்று. அல்பமாகிலுமுண்

† ஆஸ்வாதம் - சுவை.

போலே. * அற்பசாரங்களிறே. தேவரையகற்ற, வேண்டுவேதுண்டாய், அநுபவிக்கலாவது ஒன்றுஇன்றிக்கேயிருக்கை. [பாவியேனை] - அந்தமில்பேரின்பத்துக்கு இட்டுப்பிறந்த நான் சிற்றின்பத்திலே அந்வயிக்கும்படியாவதே. "வீவிலின்பமிகவெல்லைநிகழ்ந்தனன்" என்றவரிறே இங்ஙனேசொல்லுகிறார். [பல] - ஒன்றிலேகால்தாழப்பண்ணவல்லவிஷயமில்லையே. [நீகாட்டிப்படுப்பாயோ] - ரக்ஷகனானநீ காட்டி முடிக்கப்பார்க்கிறாயோ ? [காட்டிப்படுப்பாயோ] - நாட்டார் "காணுவிடிற்பிழையோம்" என்றிருக்கிறவிஷயம் இவர்க்குதர்சநமாத்ரத்திலே மோஹிக்கும்படியாயிருக்கிறதிறே. அசுணமாவென்று சிலபக்ஷிகளுண்டு; அவை பிடிகொடாதொன்றுக்கும்; அவைபிடிக்கநினைத்தார் முற்படப்பாடுவார்கள்; அதுகேட்டு நெஞ்சுநெகிழும்; அநந்தரம்பறையையடிப்பார்கள்; இதில்வன்மையாலே பட்டுக்கிடக்குமாம். அதுபோலே, இவர்பகவத்குணங்களிலே நைந்தபடி, இதரவிஷயதர்சநத்தாலே முடியும்படியானார். நெடுநாள்அநுபவித்துப்போந்தாலும், கடக்கவிருந்தவன்று "நாம்இன்னது அநுபவித்தோம்"என்றுஸ்மரிக்கைக்குஒன்றுஇன்றிக்கேயிருக்குமிறே; இங்ஙனேயிருக்கச்செய்தேயும் அவற்றில் ஸ்ரத்தைபண்ணுகிறது பாபாதிசயமிறே. [தாவியீத்யாதி] - அந்யபரோக்தியிலே ப்ராப்யநிஷ்கர்ஷம்பண்ணுகிறார். [தாவி வையங்கொண்ட] - நினைத்ததுதலைக்கட்டவல்லவனென்னும் சக்தியோகஞ் சொல்லுகிறது. பூமிப்பரப்படங்கலும் அநாயாஸேந அளந்துகொண்டபடி. [தடந்தாமரைகட்கே] - போக்யதையளவிறந்த திருவடிகளிலே. இத்தால் - ப்ராப்யஞ்சொல்லுகிறது. கூவிக்கொள்ளுங்காலம் என்கையாலே - ப்ராபகவேஷஞ் சொல்லுகிறது. இன்னம் குறுகாதோ என்கையாலே—ருசிவேஷஞ் சொல்லுகிறது. இதரவிஷயதர்சநம் முடியும்படியாய், உன்திருவடிகளில் போக்யதையறிந்து விடமாட்டாதவளவுபிறந்தபின்பு இன்னம்தாழ்க்குமத்தனையோ ? பிள்ளானுடைய அந்திமதசையிலே நஞ்சீயர் நோவறியப்புக்கிருக்க, "கூவிக்கொள்ளுங்காலமின்னங்குறுகாதோ ?" என்று பலகால்சொல்ல, இத்தைக்கேட்டுச்சீயர்அழ, "சீயரே! நீர் கிடந்தழுகிறதென் ? அங்குப்போய்ப் பெறப்புகுகிறபேறு இதிலும் தண்ணிது'என்று தோற்றியிருந்ததோ ?" என்று புணித்தான். (கூ)

டோ? என்ன - தேவரை இத்யாதி. அழுவா, "சாரங்கள்" என்றதுக்குஅர்த்தம் - தேவரை இத்யாதி. "அற்பம்" என்றதுக்குஅர்த்தம்-அநுபவிக்கலாவது இத்யாதி என்னுதல். "பாவியேன்" என்றதுக்கு பாவம்-அந்தமில் இத்யாதி. அந்தமில்பேரின்பத்துக்கிட்டுப்பிறந்து சிலநாள் அநுபவித்தாரோ? என்ன வீவிலின்பம் இத்யாதி. "பல" என்றதுக்கு பாவம் - ஒன்றிலே இத்யாதி. "படுப்பாயோ" - முடிப்பாயோவென்றபடி. "காட்டிப்படுப்பாயோ" என்கையாலே - தர்சநமாத்ரமே விநாசஹேதுவென்றத்தைப்நுஸந்தித்து, வ்யாக்யாதாவின் ஈடுபாடு - நாட்டார் இத்யாதி. இதரவிஷயங்களில் அங்வய மொழியதர்சநமாத்ரமே விநாசஹேதுவாமோ? என்ன - அசுணமா இத்யாதி. "சிற்றின்பம்" என்றத்தைக்கடாக்ஷித்து பாவம் - நெடுநாள் இத்யாதி. "பாவியேனை" என்றத்தைக்கடாக்ஷித்து இங்ஙனே இத்யாதி. ஆக, "பாவியேன்" என்றதுக்குஅர்த்தத்வயம்: அதாவது,-முந்தினது, கீழ் 'அந்தமில் பேரின்பத்துக்கு' இத்யாதிவாக்யம்; 'இங்ஙனேயிருக்கச்செய்தேயும்' இத்யாதிவாக்யம் - இரண்டாவது. அந்யபரோக்தியிலே - "கூவிக்கொள்ளுங்காலம்" இத்யாதியானகாலாவதியைக்கேட்டிறபாசுரத்தாலே, "தடந்தாமரைகட்கே" என்று திருவடிகளேப்ராப்யமென்று, நிஷ்கர்ஷம்பண்ணுகிறாரென்றபடி; இப்போது, திருவுலகளந்தருளின அபதாநத்தைச்சொல்லுகிறதுக்கு பாவம் - நினைத்தது இத்யாதி. தடம்-பெருமை. "இன்னம்" என்றதுக்குபாவம்-இதர இத்யாதி. இப்படிகூப்பிட்டபேருண்டோ? என்ன-பிள்ளானுடைய இத்யாதி. (கூ)

பத்தாம் பாட்டு.

குறுகாநீளா இறுதிகூடாஎனையூழி
சிறுகாபெருகா அளவிலின்பம்சேர்ந்தாலும்
மறுகாலின்றிமாயோன் ! உனக்கேயாளாகும்
சிறுகாலத்தையுறுமோ ? அந்தோ! தெரியிலே.

ஆ.—(குறுகா.) - வைஷயிகஸுகம் அல்பாஸ்த்திரத்வாதிதோஷ துஷ்டமாகையாலே உமக்கு அபேக்ஷிதமன்றாகில், ப்ராசுர்யஸ்த்திரத்வாதிஅநேககுணயுக்தமான கேவலாத்மாநுபவலக்ஷண ஸுகத்தை ப்ராப்யமாகக் கொள்ளலாகாதோவென்னில் ; - கேவலாத்மாநுபவஸுகம் ஸங்கோசரஹிதமாய் நித்யஸித்தமாய் நிரவதிகமாவது த்வத்கைங்கர்ய ஸுகம் க்ஷணிகமாய் அத்யல்பமாவது ஆகிலும், அந்த ஆத்மாநுபவ ஸுகம் ஒரு தட்டும் இந்தக் கைங்கர்ய ஸுகம் ஒருதட்டுமானால், இத்தைக் கைவிட்டு அத்தைப்பற்றுகை யுக்தமென்றிருப்பாரோ அறிவுடையார்? இப்பொருள் உபபாதநீயமோ? அந்த வைஷயிக ஸுகத்தினுடைய அல்பாஸ்த்திரத்வாதி தோஷகீர்த்தநம் பண்ணிற்று அநபேக்ஷிதத்வ ஹேதுவாக வன்று; ஸ்வரூபநிரூபணம்பண்ணின இத்தனை. வைஷயிகஸுகம் அநபேக்ஷிதமாகைக்கு ஹேது, த்வத்கைங்கர்ய வ்யதிரிக்தமாகை. ஆதலால், அந்த வைஷயிக ஸுகத்தையும் கைவல்ய ஸுகத்தையும் ஒழிய, த்வதநந்யார்ஹ சேஷத்வரூப ஸம்பத்தை எனக்குத் தந்தருளவேணுமென்று எம்பெருமானை ப்ரார்த்தித்து முடிக்கிறார்.

ஒ.—பத்தாம்பாட்டில், வைஷயிகஸுகத்தை "அல்பம், அஸ்திரம்" என்றிருந்தீராகில், அநந்தமாய் ஸ்திரமான கைவல்யபுருஷார்த்தத்தைப்பற்றினாலோவென்னில்; அத்தை உன் திருவடிகளில் கைங்கர்யமல்லாமையால் "வேண்டா" என்றேனத்தனை; அப்படியே கைவல்யமும் வேண்டேனென்கிறார் [குறுகாவென்று.] - இப்பாட்டுக்கு - ஸ்வரூபத்துக்கு காலத்ரயாபியாப்தாலேயாதல் ஸங்கோசவிகாஸங்களையுடைத்தன்றிக்கே அபரிச்சேத்யமாயிருக்கின்ற ஆத்மாநுபவஸுகம் கைவந்தாலும் அந்த ஸுகமானது பின்னையாக்கடைதன்றிக்கே ஒரு க்ஷணமாத்ரம் உன் திருவடிகளிலுண்டான கைங்கர்யஸுகத்தை ஒக்குமோ அநுஸந்திக்கும்பக்ஷத்தில்? அத்யந்த விஸத்ருசங்களோ, ஒக்குமோ என்றுசொல்லவேண்டின மூகிப்பாலே அந்தோ! என்கிறார்.

ப.—குறுக்கர், விலக்ஷணமான ஆத்மாநந்தாநுபவ லாபமும், அதிசயித வைலக்ஷண்யத்தையுடைய உனக்கு சேஷமாயிருக்கும் அல்பகாலத்துக்கு ஸத்ருசமோ? என்கிறார்.

குறுகாநீளா - ஸ்வரூபகதமான ஸங்கோசவிகாஸமின்றியே, இறுதிகூடா - முடிவும் இன்றிக்கே, (நித்யமாகையாலே), எனையூழி - ஸர்வகாலத்திலும், சிறுகாபெருகா - க்ஷயவ்ருத்திகளுமின்றியேயிருக்கிற, அளவில் - ஸ்வாபாவதபரிச்சேதராஹித்யமான, இன்பம் - ஆத்மாநந்தம், சேர்ந்தாலும் - பெற்றாலும், மாயோன் - அல்பகாலாநுபவமும் அதிசயித விலக்ஷணமாம்படியான ஆச்சர்யத்தையுடையவனே! தெரியில் - நிரூபித்துப்பார்க்கில், மறுகால் - பின்னையொருகாலும், இன்றி - இன்றியே, உனக்கே-,

ஆள் ஆகும் - அடியேனுகக்கொண்டு சேஷத்வரஸத்தை யநுபவிக்கும், சிறுகாலத்தை - அத்யல்பகாலத்தை, அந்தோ - ஐயோ! உறுமோ - ஒக்கவற்றே? அந்தோவென்று - ஒவ்வாதென்று சொல்லவேண்டுவதே! என்னும் விஷாதத்தைக் காட்டுகிறது.

இ.—பத்தாம்பாட்டில், வைஷயிகஸுகத்தை "அல்பம், அஸ்திரம்" என்றீராகில், அதிற்காட்டில் அதிகமாய் ஸ்திரமான கைவல்யத்தைப்பற்றினாலோ வென்னில்?- 'அல்பம் அஸ்திரமென்றது, ஸ்வரூபகதநம்பண்ணின இத்தனை. ப்ராப்தமான கைங்கர்யத்தைப்பற்ற இரண்டும் அப்ராப்தம்' என்கிறார்.

[குறுகா நீளா] - ஸ்வதஸ் ஸங்கோசவிகாஸங்களில்லை. [இறுதிகூடா] - முடிவின்றிக்கே. [எனையூழிச் சிறுகாபெருகா] - காலோபாதிகமான ஸங்கோசவிகாஸங்களுமின்றிக்கேயிருக்கை. [அளவிலின்பம் சேர்ந்தாலும்] - இப்படி ஐஸ்வர்யத்திற்காட்டில் அதிகமாய் நித்யமான ஆத்மாநுபவஸுகத்தைப் பெற்றாலும். [மறுகாலின்றி] - ஒருகால் லபித்தக்கால் மறித்தொருகாலின்றிக்கே. [மாயோன்] - அல்பகாலமானாலும் ஐஸ்வர்ய கைவல்யங்களைவிட்டுப் பற்றவேண்டும்படி ஆஸ்சர்யகுணயோகத்தை யுடையவனே! [உனக்கே யாளாகும் சிறுகாலத்தையுறுமோ] - உனக்கே யடிமைபாதுர் அல்பகாலத்தை ஒக்குமோ? "கைவல்யம் வேண்டா" என்கிறதும் அப்ராப்தியாலே: கைங்கர்யாபேக்ஷையும் ப்ராப்தியாலே. [அந்தோ] - கைங்கர்யத்துக்கும் இதரபுருஷார்த்தத்துக்கும்உண்டான நெடுவாசி உபதேசிக்கவேண்டுவதே! [தெரியில்] - ஆராயப்புகில்; ஆராயாதொழிந்தபோது அதுவும் புருஷார்த்தம் என்றிருக்கலாம்.

ஈடு.—பத்தாம்பாட்டு. "ஐஸ்வர்யாதிகள் அல்பாஸ்த்திரங்கள்" என்று "வேண்டா" என்கிறீராகில், அவ்வளவன்றிறே; அநந்தமுமாய் ஸ்திரமுமாயிருக்குமிறே ஆத்மாநுபவம்! அத்தை யநுபவித்தாலோ? என்ன, 'நீ சொன்னது உபபத்தியாகிற் செய்யலாயிற்று; "அவை அல்பம், அஸ்திரம்" என்றவிடம் - ஸ்வரூபகதநம் பண்ணினேனத்தனை: உன்னுடைய போக்யதையைச்சொல்லிற்றும் ஸ்வபாவமிருந்தபடி சொன்னேனத்தனை; "அது தீது" என்றுவிட்டும், "இது நன்று" என்றுபற்றுகிறேனுமல்லேன்; உன்னைப் பற்றிற்றும் நீயாகையாலே, அவற்றைவிட்டதும் நீயல்லாமையாலே' என்கிறார். வகுத்த விஷயத்திலே குண ஸௌந்தர்யாதிகளும் உண்டாகப்பெற்றே னித்தனை.

[குறுகாநீளா] - ஸ்வதஃ குறுகுகையும் நீளுகையுமின்றிக்கே யிருக்கை. [இறுதிகூடா] - நிரந்வயவிநாஶமின்றிக்கே யிருக்கை. [எனையூழியித்யாதி] - காலோபாதியால் வரும் ஸங்கோசவிகாஸங்களின்றிக்கேயிருக்கை. [அளவிலின்பஞ்சேர்ந்தாலும்] - இங்ஙனேயிருக்கையாலே முடிவின்றிக்கேயிருக்கிற ஆத்மாநுபவஸுகத்தைப்ராபித்தாலும். [மறுகாலின்றி] - பகவதநுபவமானதுஒருகால்அநுபவித்தால் மற்றைப்போதின்றிக்கேயிருப்பது. [மாயோன்] - மீண்டின்றிக்கேயொழிந்தாலும் விடவொண்ணாத கல்யாணகுண

பத்தாம்பாட்டு.—குறுகா இத்யாதி "உறுமோ"என்றத்தைக் கடாக்ஷித்தவதாரிகை - ஐஸ்வர்யாதிகள் இத்யாதி: அல்பாஸ்த்திரங்களென்றது - "சிற்றின்பம்" இத்யாதியைப்பற்ற. நீயாகையாலே - ப்ராப்தசேஷியாகையாலே யென்றபடி. நீயல்லாமையாலே - அப்ராப்தங்களாகையாலே யென்றபடி. இப்படிப்ராப்தாப்ராப்ததையே த்யாகஸ்வீகாரஹேதுவானால், "மாயோன்" என்று - ஸௌந்தர்யசீலாதிகளைச் சொல்லுவானென்? என்ன-வகுத்த இத்யாதி. "பலநீகாட்டிப்படுப்பாயோ" என்கையாலே - ஐஸ்வர்யாதிகள்வேண்டா என்றதுவிவக்ஷிதம். ஸ்வதஃஎன்கையாலே-ஸம்ஸாரதஶையில்

யோகஞ்சோல்லுகிறது. [உனக்கேயாளாகும் சிறுகாலத்தையுறுமோ] - "உன்திருவடிகளி லடிமையேபுருஷார்த்தம்" என்றிருக்குமது, மறித்தின்றியிலே யிருப்பது, அதுதான் க்ஷண காலமாவது ; இங்ஙனேயிருந்தாலும் அளவிலின்பஞ்சேருகை யுறுமோ ? இத்தைப்பார்க்க. [அந்தோ] - பர்வத பரமாணுகளுக்கு இருந்த வைஷம்யஞ் சோல்லும்படியாவதே ! [தெரியிலே] -தோற்றிற்றுச்சோல்லிற் செய்யலாவ தில்லை: ஆராய்ந்து சோல்லுமன்று இங்ஙனல்ல தில்லை. இவ்வர்த்தம் உபதேசகம்யம்ஆவதே!

(க௦)

பதினோராம் பாட்டு.

தெரிதல்நினைதல் எண்ணலாகாத்திருமாலுக்கு
உரியதொண்டர்தொண்டர் தொண்டன்சடகோபன்
தெரியச்சொன்னஓராயிரத்துளிப்பத்தும்
உரியதொண்டராக்கும் உலகமுண்டாற்கே.

ஆ.—(தெரிதல்.) - விபிபிவஸநகாதிகளுடைய ஸ்ரவணமநந நிதித்யாஸநங் களுக்குஅபூமியாய் ஸ்ரிய:பதியாயிருந்த எம்பெருமானுர்குரிய தொண்டர் தொண்டர் தொண்டன் சடகோபன்சொன்ன வாயிரத்துள், கண்ணுற்கண்டதிற்காட்டிலும் விசத மாம்படி சொன்ன இத்திருவாய்மொழியை வல்லார்களை, இத்திருவாய்மொழிதானே அவன் குணங்களுக்குத்தோற்று அடிமையாம்படி பண்ணுமென்கிருர்.

ஒ.—நிகமத்தில், இப்பத்துங்கற்றவர்கள் எம்பெருமானுக்கு அந்தரங்க கிங்கரராவரென்கிருர்.

[தெரிதலென்று தொடங்கி] - ஸ்ரவணமநநாதிகளாலே பரிச்சேதிக்க முடியாத ஸ்ரிய:பதிக்கு அஸாதாரணசேஷத்வ பர்யவஸாநபூமியான ஆழ்வார். [தெரியவென்று தொடங்கி] - கரதலாமலகம்போலே யெல்லார்க்கும் அறிந்துகொள்ளலாம்படி அருளிச் செய்த ஆயிரம் திருவாய்மொழியிலும் இத்திருவாய்மொழி.

பாலத்வயுவத்வாதிரூபாதிக ஏகநஸங்கோச விகாஸவ்யாவ்ருத்தி. "குறுகாதேனா" என்று - ஸாந்வய விநாசமில்லையென்கிறது: ஸாந்வயவிநாசமாவது - அவயவஸங்காதாத்மகமான சரீரத்தோடேயந்விதனு யிருக்கச்செய்தே பால்யாதிஅவஸ்தாகமான பூர்வகமான யௌவநாதி அவஸ்தாஹாக்த்வம். நிரந்வயவிநாச மாவது சரீரநாசம். இப்போது இரண்டுமும் இல்லாவிட்டாலும் காலாந்தரத்திலேதான் உண்டோ ? என்ன-எனையுள் இத்யாதி என்றஸங்கதி. இவ்விடத்திலே - "நஜாயதே ம்ரியதே வா கதாசித்" இத்யாத்யநுஸந்தேயம். காலோபாதியால் வரும் ஸங்கோசவிகாஸங்களின்றிக்கே யிருக்கையாவது - கல் பாதியிலேதோற்றிக் கல்பாந்தத்திலே விநாஶமாமாகார மின்றிக்கேயிருக்கை. இங்ஙனேயென்றது - கீழுக்த ப்ரகாரங்களை. "உனக்கேயாளாகும்" என்றத்தைப்பற்ற - 'பகவதநுபவமானது' என்கிறது. "மறுகாலின்றி" என்றதுக்கர்த்தம் - ஒருநால் இத்யாதி. "மற்றைப்போதின்றிக்கே யிருப்பது" என்றதின் விவரணம் - மறித்தின்றியிலேயிருப்பது என்று. "தெரியில்" - விசாரிக்கில். "சிறு காலம்" என்றதுக்கர்த்தம் - க்ஷணகாலமாவது என்று. "அந்தோ" என்றதுக்கு ஸாவாந்தரமாதல், "உறுமோ" என்றதுக்கு ஸாவமாதல் - இவ்வர்த்தம் இத்யாதி. 'மாயோன், உனக்கேயாளாகும் - மறுகாலின்றி - சிறுகாலத்தை - குறுகாதேனா' என்றுதொடங்கி, 'இன்பம் சேர்ந்தாலும் - தெரியில் - உறுமோ; அந்தோ!' என்றந்வயம். உறுமோ - ஒக்கவற்றே. சிறுகாலத்துக்கொப்பாகமாட்டுமோ ? என்றபடி.

(க௦)

ப.—அநந்தரம், இத்திருவாய்மொழிதன்னோடு அந்வயமுடையாரை ஸர்வ ரக்ஷகனுக்கு அநந்யார்ஹ ஶேஷபூதராக்குமென்று, ஃபலத்தையருளிச்செய்கிறார்.

தெரிதல் - (ஶ்ரவணத்தாலே) தெளிந்து, நினைதல் - (மநநத்தாலேப்ரதிஷ்டிதமாம்படி) நினைத்து, எண்ணல் - (நிதித்யாஸநத்தாலே த்ருவையான) ஸ்ம்ருதியைப் பண்ணினாலும், ஆகா - பரிச்சேதிக்கவொண்ணாத, திருமாலுக்கு - ஶ்ரிய:பதியானவனுக்கு, உரிய தொண்டர் - அநந்யார்ஹஶேஷபூதரானார்க்கு, தொண்டர் - ஶேஷபூதரானார்க்கு, தொண்டன் - ஶேஷபூதரான, சடகோபன் - ஆழ்வார், (ஶ்வத்வைலக்ஷண்யத்தையும் இதர வைலக்ஷண்யத்தையும்), தெரிய - விஶதமாக, சொன்ன - அருளிச்செய்த, ஓர் ஆயிரத்துள் இப்பத்தும் -, (அப்யஸித்தவர்களை), உலகமுண்டாற்கு - ஸர்வ ரக்ஷகனுக்கு, உரியதொண்டர்—அநந்யார்ஹஶேஷபூதர், ஆக்கும் -. இது - கலித்துறை.

இ.—நிகமத்தில், இப்பத்தும் கற்றவர்கள் ஸர்வேஶ்வரனுக்கு அந்தரங்க கிங்கரராவரென்கிறார்.

[தெரிதலித்யாதி] - ஶ்ரவணமநநநிதித்யாஸநங்களால் பரிச்சேதிக்கமுடியாத ஶ்ரிய:பதிக்கு. ஶ்ரிய:பதியை க்ஷுத்ரனால் பரிச்சேதிக்க முடியாதென்கை. [உரியஇத்யாதி] - ஶ்ரிய:பதிக்கு அஸாதாரணமான ஶேஷத்துக்கு பர்யவஸாநபூமியான ஆழ்வார். இவருடைய அஹம்புத்தியிருக்கிறபடி. * பயிலுஞ்சுடரொளிக்குப் பின்பு ததீயஶேஷத்வபர்யந்தமாயிற்று, இவருடைய அஹமர்த்தம் இருப்பது. இவ்வாழ்வாருடையவிறே - அநந்யார்ஹஶேஷத்வமாவது. [தெரியச்சொன்ன] - இதபுருஷார்த்தங்களில் அல்பாஸ்திரத்வாதிகளையும், ஶ்வத்விஷயத்தினுடைய வைலக்ஷண்யத்தையும் வ்யக்தமாகச் சொன்ன. [உலகமுண்டாற்கு - உரியதொண்டராக்கும்] - இத்திருவாய்மொழிதானே ஸர்வரக்ஷகனுக்கு அந்தரங்கபரிகர மாக்கும்.

ஈடு.—நிகமத்தில் - இப்பத்தும் கற்றவர்கள் ஸர்வேஶ்வரனுக்கு அந்தரங்க கிங்கரராவரேன்கிறார்.

[தெரிதலித்யாதி] - ஶ்ரவணமநநநிதித்யாஸநங்களாலே பரிச்சேதிக்க முடியாத ஶ்ரிய:பதிக்கு. †"நாயமாத்மாப்ரவசநேந" (நாயமாத்மாப்ரவசநேந) இத்யாதி - கேவலஶ்ரவணாதிகளுக்கு அவிஷயமாயிருக்கும்; அல்லாதபோதுஇவைதான் அநுபவமாய்நவியத்துமன்றே.

நிகமம்.—தெரிதல் இத்யாதி. "உரியதொண்டராக்கும் உலகமுண்டாற்கு" என்று அநுகடாக்ஷித்தவதாரிகை - இப்பத்தும் இத்யாதி.

ஸப்தார்த்தம். ஶ்ரவணமநந இத்யாதி. "தெரிதல்" என்று ஶ்ரவணம். "நினைதல்" என்று - மநநம். "எண்ணல்" என்று - நிதித்யாஸநம். ஶ்ரவணாத்யவிஷயத்வேப்ராமாணம் - நாயமு இத்யாதி. ஆனால், ‡"த்ரஷ்டவ்ய: ஶ்ரோதவ்ய:" இத்யாதிவாக்யத்தோடே விரோதியாதோ? என்ன - கேவல இத்யாதி. அதாவது §"த்ரஷ்டவ்யோ ... ஶ்ரோதவ்ய:" என்கிற அத்யந்த நிஷேதம் - ஹிரண்யோபயோகரஹிதகேவல பூமிவிஷயமானவோபாதி, "நாயமா" இத்யாதிவாக்யம் - ப்ரீதிரூபமன்றிக்கே ஶுஷ்கமான கேவலஶ்ரவணாதிகளுக்கு விஷயமன்றென்றுமிடத்தைச் சொல்லுகிறது; "த்ரஷ்டவ்ய:" இத்யாதிஶ்ருதி - ப்ரீதிரூபமான ஶ்ரவணாதிகளுக்கு விஷயமாயிருக்குமென்னுமிடத்தைச் சொல்லுகிறதென்றுகருத்து. கேவலஶப்தம் - ப்ரீதிரூபத்வாபாவத்யோதகம். கேவல ஶ்ரவணாதிகளன்றிக்கே ப்ரீதிரூபஶ்ரவணாதிகளானாலோ? என்ன - அல்லாதபோது இத்யாதி. அதாவது - கேவலஶ்ரவணாதிகளன்றிக்கே ப்ரீதிரூபமானபோது, ஸாக்ஷாத்காரஸமானாகாரமாய் ஸாக்ஷாத்ரூபமாயிருக்குமென்றபடி. ஶ்ரவணாத்யவிஷயத்வத்துக்கு ஶ்ரிய:பதித்வம் அடியோ? என்ன -

† க. உப. 1. 2. ‡ ப்ருஹ. உப - 4, 4. § யஜுர் காண. 5, ப்ர. உ., பஞ் - 36.

[திருமாலுக்கு]-இதுக்குஅடி ஸ்ரீயஃபதியாகை: அதிரேஸர்வாதிகவஸ்துவுக்கு அடையாளம். [திருமாலுக்குரியதொண்டர்தொண்டர் தொண்டன்சடகோபன்]-ஸ்ரீயஃபதியான ஸர்வேஶ்வரனுக்கு அநந்யார்ஹஶேஷபூதரான ஆழ்வார். ஸம்ஸாரஸ்வபாவாநுஸந்தாநம் பண்ணின கொடுமையாலும்,பகவத்விஷயத்திலே அவகாஹித்த கனத்தாலும், பெருவிடாயன் மடுவிலே விழுமாபோலே ஶேஷத்வத்தினுடைய எல்லையிலே விழுகிறார். இதுஇவருடையஅஹம்பத்தியிருக்கிறபடி. தேஹாத்மாபிமாநியானபோது தேஹத்திலே அஹம்புத்தியைப்பண்ணும்; "தேஹாத்வ்யதிரிக்தம்ஒன்றுண்டு" என்று அறிந்தபோது ஆத்மாவிலே அஹம்புத்தியைப் பண்ணும்; தன்னைபகவச்சேஷபூதனாக அநுஸந்தித்தபோது ப்ரகாரமாத்ரத்திலேநின்று ஐஶ்வர்யாதிகளைக்கொண்டுபோம், 'ஶேஷத்வமே புருஷார்த்தம்" என்றுஅறிந்தபோது தன்னை ததீயசேஷத்வபர்யந்தமாக அநுஸந்திக்கக்கடவன். * பயிலுஞ்சுடரொளிக்குப்பின்பு ததீயசேஷத்வபர்யந்தமாயாயிற்று, இவருடைய அஹமர்த்தம் இருப்பது. இவ்வளவுவருகையிறே - அநந்யார்ஹஶேஷத்வமாவது.[தெரியச்சொன்னஇத்யாதி] - பகவத்வைலக்ஷண்யத்தையும், ஸம்ஸாரத்தினுடைய தோஷத்தையும் விசதமாகச்சொன்ன பத்தும். [உரியதொண்டராக்கும் உலகமுண்டாற்கே] - ஸர்வரக்ஷகனான ஸர்வேஶ்வரனுக்கு அநந்யார்ஹஶேஷமாக்கும் இத்திருவாய்மொழி. [உரியதொண்டராக்கும்] - ஸம்ஸாரம் நன்றுமாய் பகவத்விஷயம் தீதானாலும் அத்தை விடமாட்டாதவர்கள். (கக)

அத்ரே இத்யாதி. இப்போது தமமை சரமாவதிஶேஷமாக அருளிச்செய்கைக்குக் கருததேதென்ன - ஸம்ஸார இத்யாதி. இத்தால்பலிதம் - "ஆத்மாவுக்கு ததீயசேஷத்வமே நிரூபகமென்று தோற்றுகிற தென்கிறார் - இது இவருடைய இத்யாதி. மற்றார் தேஹாதிகளிலே அஹம்புத்தியைப் பண்ணாநிற்க இவர்இப்படி ப்ரதிபத்திபண்ணுகைக்குஅடியேது? என்ன-தேஹாத்ம இத்யாதி நாலுவாக்யம். இப்படி ததீயசேஷத்வத்தையிட்டு நிரூபிக்கை மற்றதிருவாய்மொழிகளிற் காணேயேயென்ன - பயிலும் இத்யாதி. ஆனால் ஸர்வசேஷத்வப்ரதிபாதகப்ரமாணவிரோதம் வாராதோ? என்ன - இவ்வளவு இத்யாதி. 'உரிய" என்றதுக்கு அர்த்தம் - ஸம்ஸாரம் இத்யாதி. அதாவது குணக்ருததாஸ்யமன்றிக்கே ஸ்வரூபப்ரயுக்ததாஸ்யயுக்தராக்குமென்றபடி. "உரிய" என்றது - யோக்யமான என்றபடி. (கக)

த்ரமிடோபநிஷத்ஸங்கதி.— [illegible]

த்ரமிடோபநிஷத்தாத்பர்யரத்நாவலி. — [illegible]

திருவாய்மொழி நூற்றந்தாதி.
நீராகிக்கேட்டவர்கணெஞ்சழியுமாலுக்கு
ஏரார்வியப்பேவிருப்புரைதா - வாராத
காதலுடன்கூப்பிட்டகாரிமாறன்சொல்லை
ஓதிடவேயுய்யுமுலகு.

ஆழ்வார் திருவடிகளேசரணம், எம்பெருமானார் திருவடிகளே சரணம், ஜீயர்திருவடிகளேசரணம்.

பத்தாந்திருவாய்மொழி—உலகமுண்ட—ப்ரவேஶங்கள்.

ஆ—(உலகமுண்டபெருவாயா.) - இப்படி திருநாட்டிலே கேட்கும்படி கூப்பிட்டழைத்தும் அவனைக் காணப்பெறாமையாலே, "இனி இவனைக் காண்கைக்கு உபாயம் இவன்திருவடிகளை ஶரணம்புகுகை போக்கி மற்றொன்றுமில்லை" என்று பார்த்து, இவனுடைய காருண்ய வாத்ஸல்யாதி குணங்களைப் பற்றாசாகச் சொல்லிக்கொண்டு, பிராட்டி புருஷகாரமாக ஸர்வலோகஶரண்யனான திருவேங்கடமுடையான் திருவடிகளை ஶரணம் புகுகிறார்.

ஒ.—பத்தாந்திருவாய்மொழியில், இப்படி ஸ்ரீவைகுண்டநாதனுங்கேட்கும்படி பெரியவார்த்தியோடே கூப்பிடச்செய்தே ஸர்வரக்ஷகனானவன் தான்வந்து தோற்றியருளாவிட்டவாறே மிகவும் அவஸந்நரான ஆழ்வார், ஸ்ரீய:பதியாய் அயர்வறுமமரர்களதிபதியாய்வைத்துத் தன்னுடைய காருண்யவாத்ஸல்யாதி கல்யாண குணங்களாலே தேவமநுஷ்யாதி ஸஜாதீயனாய்வந்து திருவவதாரம்பண்ணி ஆஶ்ரிதருடைய விரோதி நிரஸநம்பண்ணி அவர்களை ரக்ஷிக்கக்கடவனாய், அதுக்கீடான பரிகரத்தையுடையனாய், ஆஶ்ரிதர்க்கு அணித்தாகத் திருமலையிலே நின்றருளுவதுஞ்செய்து, தேஶகாலாதிகார்யாதிகார்ய விஶேஷங்களை அபேக்ஷியாதே ரக்ஷகனாயிருந்துள்ள திருவேங்கடமுடையான் திருவடிகளிலே விழுந்து "ஸப்ராதுஶ்சரணௌ காடம்" என்னும்படியாலே இளையபெருமாள் பிராட்டிமுகமாகப் பெருமாளை ஶரணம்புக்காப்போலே தத்கைங்கர்யைகப்ரயோஜநராய்த் தம்முடைய ஆற்றாமையாலே அநந்யகதிகராய், பெரியபிராட்டியாரை புருஷகாரமாகக்கொண்டு ஶரணம் புகுகிறார்.

ப.—பத்தாந் திருவாய்மொழியில், கீழ் - தமக்குப் பிறந்த ப்ராவண்யாதிஶயத்தாலே புருஷார்த்த வைலக்ஷண்ய நிபந்தநமான ஆர்த்திபிறந்து கூப்பிட்டவர், "ஃபலஸித்திக்கு ஶரண்யனானவன் திருவடிகளையொழியவுபாயமில்லை" என்று அறுதியிட்டு, ஶரண்யத்வப்ரகாஶகமான அகில ஜகத்ரக்ஷணாகாரத்தையும், அஶேஷவிரோதி நிவர்த்தநத்தில் அத்யுஜ்ஜ்வல பரிகரயோகத்தையும், ரூபகுண ஸாரஸ்யத்தாலுண்டான உத்துங்காநுபாவ்யதையையும், ஜகத்விரோதிகளுக்குத் தீங்குவிளைக்கும் ஸ்ரீமத்தையையும், ஆஶ்ரிதரக்ஷணார்த்தமான அநாயாஸவ்யாபாரத்தையும், அதிஶயிதஜ்ஞாநர்க்கும் ஆராத்யனாம்படியையும், ஸர்வஸாதாரண ஸாரஸ்யாதிஶயத்தையும், ஸாவஶேஷரான ஸமாஶ்ரயமாநிகளுக்கும் ஸாதராஶ்ரயணீயனாம்படியையும், அதிஶயித போக்யமான அயல சோலையையும், ஆஶ்ரயணீயத்வாகாரத்தையும் அநுஸந்தித்து, இப்படி ஶரண்யனான திருவேங்கடமுடையான்விஷயமாக ஸக்ரம ஸமக்ர ஶரணாகதியைப்பண்ணித் தலைக்கட்டுகிறார்.

இ.—பத்தாந்திருவாய்மொழியில், இப்படி பெரிய வார்த்தியோடே பரமபதத்திலே கேட்கும்படி கூப்பிடச்செய்தேயும் ஸர்வரக்ஷகனானவன் வந்து முகங்காட்டாமையாலே மிகவும் அவஸந்நரானவர், ஸ்ரீய:பதியாய் நித்யஸூரிகளுக்குத் தன் குணங்களை அநுபவிக்கக் கொடுத்துக்கொண்டிருக்கிற பெருமையையுடையனாயிருக்கச் செய்தேயும் ஸம்ஸாரிகள் நோவுபடுகிறபடியைக்கண்டு காருண்யவாத்ஸல்யாதிகளே ஹேதுவாக இதர ஸஜாதீயனாய் இங்கேவந்து அவதரித்து "பரித்ராணாய ஸாதூநாம்" என்

கிறபடியே ரக்ஷித்து "இதுக்குப் பிற்பட்டார் இழக்கவொண்ணாது" என்று பார்த்துத் திருமலையிலே நித்யவாஸம்பண்ணி, தன் திருவடிகளை ஆச்ரயிப்பார்க்கு க்ஷேமகாலாயி கார்யங்களிசேஷங்களை அபேக்ஷியாதே ருசியே அடியாக ஆச்ரயிக்கலாம்படி நிற்கிற திருவேங்கடமுடையான் திருவடிகளிலே, "ஸஹ பத்ந்யா விசாலாக்ஷ்யா நாராயணமுபாகமத்" என்று இளையபெருமாள் பிராட்டிபுருஷகாரமாக சரணம்புக்காப்போலே, தம்மாற்றாமையாலே அலர்மேல்மங்கை முன்னைக் திருவேங்கடமுடையான் திருவடிகளிலே சரணம் புகுகிறார். சரண்யவிஷயத்தில் சரணாகதிக்கே வ்யாப்தியாகையாலே, ஒன்பது பாட்டாலும் - அவனுடைய சரண்யதையைச்சொல்லி, பத்தாம்பாட்டிலே சரணம்புக்கு முடிக்கிறார்.

ஈடு.—கீழில்திருவாய்மொழியில் - ப்ராப்யவேஷமிருக்கும்படி குறைவறச்சொன்னார்; இத்திருவாய்மொழியில் - ப்ராபகவேஷம்குறைவறச்சொல்லுகிறார்; கீழில் அதில் உபாயப்ரஸங்க முண்டேயாகிலும், ப்ராப்யப்ராதாந்ய மாகக் கடவது; இதில் உபேயப்ரஸங்கம் உண்டேயாகிலும், ப்ராபகப்ராதாந்யம். கீழில்திருவாய்மொழி திருமந்த்ரம்போலே: இத்திருவாய்மொழி சரமச்லோகம்போலே. இரண்டும் ஒன்றிலேயுண்டிறே என்னில்?—அது, சக்தி யோகத்தாலே வருமதிறே; அவஸ்த்தாந்தரங்களைப் பற்றிவரும் இரண்டும் இரண்டாயே யிருக்கக் கடவதிறே. பெரியஆர்த்தியோடே பரமபதத்திலே கேட்கும்படி கூப்பிடச்செய்தேயும் ஸர்வரக்ஷகனானவன் வந்து முகங்காட்டாமையாலே மிகவும் அவஸந்நரானவர், ஸ்ரியப்பதியாய் அவாப்தஸமஸ்தகாமனாய் உபயவிபூதியுக்தனாய் ஸமஸ்த கல்யாணகுணாத்மகனாய் "வைகுண்டே து பரே லோகே ஸ்ரியா ஸார்த்தம் ஜகத்பதி:। ஆஸ்தே விஷ்ணுரசிந்த்யாத்மா பக்தைர்பாகவதைஸ்ஸஹ" (வைகுண்டேது பரே லோகே ஸ்ரியாஸார்த்தம்ஜகத்பதி: ஆஸ்தேவிஷ்ணுரசிந்த்யாத்மா பக்தைர்ப்பாகவதைஸ்

உலகமுண்ட ப்ரவேசம். ஸங்கதியைஸங்கதி - கீழில்திருவாய்மொழியில் இத்யாதி. அதாவது, இத்திருவாய்மொழியிலே சரணம்புகுகிறாரென்று ஸங்கதி சொல்லுகையாலே, சரணாகதனான ஸாக்ஷாத்ருத்தனிற்காட்டில் எற்றம் - ப்ராப்யப்ராபகங்கள் இரண்டும் அவனேயென்னுமது என்று விவக்ஷித்து, ஈச்வரனுடைய ப்ராப்யப்ராபகத்வத்தை - கீழில்திருவாய்மொழியிலும் இத்திருவாய்மொழியிலும் அநுஸந்திக்கிறாரென்றபடி. ப்ராப்யவேஷம் குறைவறச்சொன்னாரென்றது-"கோலத்திருமாமகளோடுன்னை," "தடங்காமரைகட்கே" என்றதைப்பற்ற. "அகலகில்லேன்" இத்யாதியைப்பற்ற 'ப்ராபகவேஷம்' என்றது. கீழிற்றிருவாய்மொழியிலே,' காப்பானே" என்று - உபாயத்வமும், இத்திருவாய்மொழியில், "நாற்றோளமுதே" என்று - உபேயத்வமும் சொல்லிற்றில்லையோ? என்ன - கீழ் இத்யாதி. இரண்டும் உண்டானாலும் ஒன்றிலே ப்ராதாந்யமாயிருக்குமதுக்கு த்ருஷ்டாந்தம் - கீழ்திருவாய்மொழி இத்யாதி திருமந்த்ரமென்றது-ப்ராப்யப்ரதாநமான திருமந்த்ரமென்றபடி. சரமச்லோகமென்றது - ப்ராபகப்ரதாநமான சரமச்லோகமென்றபடி. 'இரண்டுமொன்றிலே' இத்யாதிக்குக் கருத்து - ப்ராப்யத்வப்ராபகத்வங்கள் இரண்டும் நித்யமாகையாலே, பால் மருந்தாமாபோலே, ப்ராப்யத்வதசையிலும் ப்ராபகத்வம் ஈச்வரனிடத்திலே யுண்டாயிருக்க, அது - ப்ராப்யபரம்; இது - ப்ராபகபரமென்று விபஜிக்கக்கூடுமோ? என்னிலென்று. 'அதுசக்தியோகத்தாலே' இத்யாதியாய்யத்துக்குக் கருத்து - ப்ராப்யமே ப்ராபகமாகவல்ல சக்தியோகத்தாலே இரண்டும் ஏக வஸ்துவிலே எப்போதும் உண்டானாலும், சேதநனுடைய வரணதசை ப்ராப்திதசையாகிற அவஸ்த்தாபேதத்தாலே ப்ராப்யத்வ ப்ராபகத்வங்களிரண்டும் க்ரமிகமாகையாலே இப்படி விபஜிக்கக் குறையில்லையென்ற. விஸ்தரஸங்கதி - பெரிய இத்யாதி. அதிகாரி நியதியாவது - தசரதவஸுதேவாத்யதிகாரி

ஸஹ) என்கிறபடியே - ஸ்ரீவைகுண்டத்திலே நித்யஸூரிகளுக்குக் காட்சிகொடுத்துக் கொண்டிருக்கக்கடவ ஸர்வேஶ்வரன், "பலரும் நம்மையிழக்க, நாம் கேடுங்கை நீட்டாக இருக்கவொண்ணாது" என்று பார்த்தருளி ராமக்ருஷ்ணாத்யவதாரங்களைப்பண்ணி ஸம காலத்திலுள்ளார்க்குத் தன் குணசேஷ்டிதங்களைக் காட்டி அநுபவிப்பித்தும், அக்காலத்திலும் பிற்பாடரான ஸம்ஸாரிகளுக்கும் இழக்கவேண்டாதபடி ருசிஜநகரையக்கொண்டு திருமலையிலே நாய்ச்சிமாருடனே கூடநின்றருளின படியைக்கண்டு; அதிகாரிநியதி, காலநியதி, அங்கநியதி என்றாற்போலே சொல்லுகிற நிர்ப்பந்தங்கள் ஒன்றுமின்றிக்கே ஆஶ்ரயிக்கலாம்படியிருக்கிற ஸௌஶீல்யத்தைக் கண்டு, திருவேங்கடமுடையான் திருவடிகளிலே, பெரியபிராட்டியார் முன்னிலையாகத் தம்முடைய அநந்யகதித்வத்தை விண்ணப்பஞ்செய்து ஶரணம்புக்குத் தம்முடைய அத்யவஸாயத்தை அறிவிக்கிறார். கீழேயும் பலவிடங்களிலே - ப்ரபத்தி பண்ணினார்; அவ்விடங்களிலே - "மார்பிபுக்கவிடத்தே நிருபகமர்மங்களும் புகக்கடவது" என்கிற ந்யாயத்தாலே, லக்ஷ்மீஸம்பந்தஞ் சொன்னார்; இங்கு அது தன்னையே வாய்விடுகிறார் கீழில் ப்ரபத்திகள் திருமந்த்ரம்போலே: இது த்வயம்போலே. திருமந்த்ரத்திலும் லக்ஷ்மீஸம்பந்தத்துக்கு வாசகமானமபதங்கள் உண்டாயிருக்கச்செய்தே, முக்தகண்டமாகச் சொல்லிற்று த்வயத்திலேயிறே; அதுபோலே இத்திருவாய்மொழி. "தாவதார்திஸ்ததா வாஞ்சா தாவந்மோஹஸ்ததாஸுகம்" (தாவதார்த்திஸ்ததா வாஞ்சா தாவந்மோஹஸ்ததாஸுகம்.) [தாவதார்த்தி:] (தாவதார்த்தி:) - "இழந்தது பெறவேணும்" என்னுமதுவும் அவ்வளவே. [ததாவாஞ்சா] (ததாவாஞ்சா) - அப்ராப்த விஷயத்தில் பண்ணும் சாபலமும் அவ்வளவே. [தாவந்மோஹ:] (தாவந்மோஹ:) - தேஹத்தையும் ஆத்மாவையும் ஏகீக்ருத்ய புத்தி பண்ணுகை [ததாஸுகம்] (ததா

ப்ர.—[உலகமுண்டப்ரவேஶ:] — ஸ்ரீவிஷ்ணுபுராணே ப்ரஹ்லாதோக்தம் பகவந்தம் ப்ரதி ஸ்ரீஶ்வராதய:, "ஸ்வாராத்ய ஶரணம் விஷ்ணோ[illegible] நிஜீக்ருதா: । வயம் வ்ருஷீ ஸவ்யாஜ ஸ்ரீபூஜ்யஸ்வத்ராயயாஸந: ॥ என்று [illegible] தாவதார்த்தி ததாவாஞ்சா தாவந்மோஹஸ்ததாஸுகம் । யாவந்நயாதி ஶரணம் த்வாமஶேஷாகநாஶநம் ॥"

நியதி. காலநியதியாவது - க்ருசாதிநியதி. அங்கநியதியாவது - [illegible] ப்ரபோசம் சரணம்புக்காரே, அதுக்கும் இதுக்கும் வாசியென்னென்ன [illegible] சாப்தமாகச்சொல்லுகை. உத்தரார்த்தத்துக்கு த்ருஷ்டாந்தம் - [illegible] த்வயவிவரணம் - திருமந்த்ரத்திலும் இத்யாதி. வாசக ஶப்தம் - [illegible] அர்த்தஸாமர்த்யத்தாலே ஜ்ஞாபகமான என்றபடி. 'வாசகமானசப்தங்கள் [illegible] பதங்களைக் கடாக்ஷித்து. ப்ரபத்திதான் மோக்ஷப்ராப்தமோ? என்ன; மோக்ஷ[illegible] ஸாதகம் என்னுமதுக்கு ப்ரமாணம் - தாவதார்த்தி: இத்யாதி. "தாவதார்த்திஸ்ததாவாஞ்சா தாவந்மோஹஸ்ததாஸுகம் । யாவந்நயாதி ஶரணம் த்வாமஶேஷாகநாஶநம்" [illegible] ஸ்ரீவிஷ்ணுபுராணே பகவந்தம்ப்ரதிப்ரஹ்மாதய:. "க்ருதேந்த்ராஞ்ஜலயஸ்ஸர்வே" [illegible] சதுஷ்டய விஷயம் - இப்படிலோகம். 'அவ்வளவே' என்றது - அவ்வளவு ஆஶ்ரயிக்குமளவே [illegible] படி. 'இழந்தது பெறவேணும்' இத்யாதியாலே - ஆர்த்தனைச்சொல்லுகிறது. அதாவது - ப்ரஷ்டைஶ்வர்ய காமனைச்சொல்லுகிற தென்றபடி. 'வாஞ்சா' என்று ஐஶ்வர்யகாமனுடைய வாஞ்சையைச்

ஶோகம்), "ஏஷஹ்யேவாநந்தயாதி" (ஏஷஹ்யேவாநந்தயாதி)-என்கிறதுக்கு விரோதமாய்வரும் ஸபகங்களும் அவ்வளவே. "யாவந்நயாதிஶரணம் த்வாமஶேஷாகநாஶநம்" (யாவந்நயாதிஶரணம் த்வாமஶேஷாகநாஶநம்)-ஐஶ்வர்யம் ஆத்மப்ராப்தி பகவத்ப்ராப்திவிரோதி இவையெல்லா முன்னைக் கிட்டுமளவேயிறே நிற்பதென்கிறது. இப்படியே தம்முடைய ஸகலவிரோதிகளும் போய்த் தம்முடைய ஸகலாபேக்ஷிதங்களும் கிடைக்கைக்கு ஒரு குறையில்லையென்று, ஸதா ஸந்நிஹிதனான திருவேங்கடமுடையான் திருவடிகளிலே சரணம் புகுகிறார். இனித் தான், சரணாகதி ஃபலப்ரதையாமிடத்தில் ஶரண்யன் பக்கலிலே பண்ணவும்வேணும்; தான் அதிகாரியாகவும் வேணும். வ்யதிரிக்த விஷயங்களிலே பண்ணுமிடத்தில் அதுதானே ஹாநஹேதுவாகக் காணாநின்றோமிறே. இங்ஙனேயிருக்கச்செய்தேயும் அவ்வோவிடங்களிலேயும் ஃபலிக்கிற இது, இவ்விஷயத்தில் ஃபலியாநின்றதென்னுமிடம் கிம்புநர்ந்யாயஸித்தம். இனித் தான் அதிகாரியாமிடத்தில், மெய்யே அநந்யகதியாகவும் வேணும்; ஶரணம்புகா, ஃபலித்ததில்லையென்று, "அஸமர்த்தம்விஜாநாதி" (அஸமர்த்தம்விஜாநாதி) என்பாராகாது. "மயர்வறமதிநலமருளினன்" என்று, அநந்தரத்திலே மடலெடுத்துக்கொண்டு புறப்படுவோர்வேணும். பண்ணின ப்ரபத்திக்கு

சொல்லுகையாலே, அர்த்தார்த்தியைச்சொல்லுகிறது. அப்ராப்தவிஷயத்திலென்றது, அபூர்வ ஐஶ்வர்யத்திலென்றபடி. மோஹமென்றது - ஆத்மப்ராப்திகாமனுக்கும் ஆத்மாநுபவவிரோதியான தேஹாத்மாபிமாநரூபமான அஜ்ஞாநம். ஸர்வேஶ்வரன் திருவடிகளை ஆஶ்ரயித்தால் அதுபோகையாலே, ஆஶ்ரயிக்குமளவே யவனுக்கு அந்தஅஜ்ஞாநமுள்ளது என்றபடி. இத்தால் - ஜிஜ்ஞாஸுவைச் சொல்லுகிறது. "ஶோகம்" என்றது - பகவத்ப்ராப்திகாமனுக்கு ஆத்மாநுபவைஶ்வர்யாநுபவ ஶோகங்கள் விரோதியாகையாலே. ஸர்வேஶ்வரனை யாஶ்ரயித்தால் அதுபோகையாலே, ஆஶ்ரயிக்குமளவே அந்தஶோக முள்ளதென்றபடி. இத்தால் - ஜ்ஞாநியைச்சொல்லுகிறது. விரோதமாய்வரும் ஶோகங்களுமென்றது - ஜ்ஞாநிக்கு பகவதநுபவகாமநாவிரோதிகளான ஐஶ்வர்யாத்மாநுபவ ஶோகங்களுமென்றபடி. இவ்விடத்திலும் அநுவர்த்தித்துக்கொண்டு "அஶேஷாகநாஶநம்" என்றதுக்கர்த்தம்-ஐஶ்வர்யம் இத்யாதி. "அதிபதி, வாஞ்சா" என்கிற இரண்டிலும் அதிகாரிபேதமுண்டாகிலும், ப்ரகரணத்தாலே யனுஸந்தி 'ஐஶ்வர்யம்' என்கிறார். 'விரோதி' என்ற பதத்தை - ஐஶ்வர்ய விரோதி ஆத்மப்ராப்தி விரோதி பகவத்ப்ராப்தி விரோதி என்றெல்லாவற்றிலும் அந்வயிப்பது. இத்திருவாய்மொழியிலே, "உலகமுண்டபெருவாயா" இத்யாதிகளாலே - ஶரண்யஸ்வரூபத்தையும், "குலதொல்லடியேன்" இத்யாதிகளாலே - அதிகாரிஸ்வரூபத்தையும் சொல்லி ஶரணம்புகுகிறது; ஶரணாகதிஃபலஸாத்யத்துக்கு இரண்டும் அபேக்ஷிதமாகையாலே என்கிறார் - இனித்தான் இத்யாதி. ஶரண்யபக்கலென்றது - குணவிஶிஷ்டனென்றபடி. குணாபாவவிஷயத்திலே பண்ணினதேல், ஃபலஸாத்யமன்றிக்கே அநர்த்தமே ஃபலமாமென்கிறார் - வ்யதிரிக்த இத்யாதி. ஹாநஹேதுத்வம் - "ஸோஹம் தேஶரணாபந்நஸ்த்ராணாஸ்யஶகுநேர்கதி" என்று ஶரணம்புக்க சக்ரவர்த்தி விஷயமாகச் சரணாகதியும் பக்கலிலே கண்டுகொள்வது. பகவத்வ்யதிரிக்தரான ஸிபி கபோதம் முதலானோர்பக்கலிலே ஃபலப்ரதைதாகவுங் காணாநின்றோமேயென்ன - இங்ஙனே இத்யாதி. அவ்வோவிடங்களிலே என்றது-ஸிபிகபோதாதிவிஷயங்களிலேயு மென்றபடி. "தான் அதிகாரியாகவும்வேணும்" என்றதனை யுபபாதிப்பதாக உபக்ரமிக்கிறார் - இனித்தான் அதிகாரியாமிடத்தில் இத்யாதி. அநந்யகதியல்லாதார்க்கு ஃபலப்ராப்தமாகாதென்னுமத்தை ப்ரமாணமுகத்தாலே தர்ஶிப்பிக்கிறார் - ஶரணம் புகா இத்யாதி. பின்னை யார் அதிகாரிகளாகவேணும்? என்ன, ஆழ்வார் போல்வார் ஆகவேணுமென்கிறார் - மயர்வற இத்யாதி. அதாவது - "அருளினன்" என்று - க்ருபையையே உபாயமாக அத்யவஸித்து, உடனே ஃபலியாவிட்டாலும் ஸ்வப்ரவ்ருத்தியிலே அந்வயிக்கையன்றிக்கே, "மடலெடுத்

ஷலந் தாழ்த்ததேன்று வேறேபோக்கடியுடையார்க்குக் காரியமாகாதிறே. ''ஸாகரம் ஶோஷயிஷ்யாமி பத்ப்யாம் யாந்து ப்லவங்கமா:'' (ஸாகரம்ஶோஷயிஷ்யாமி பத்ப்யாம் யாந்து ப்லவங்கமா:) என்று அவன் தாழ்த்ததுவே ஹேதுவாக, ஜலதத்த்வத்தை யழித்துப் போகட்டு மற்றைநாலையுங்கொண்டு கார்யங் கொள்ளுகிறேன் என்றாரிறே. [க்ஷமயாஹி ஸமாயுக்தம்] (க்ஷமயாஹிஸமாயுக்தம்) - '' 'ஒரு பெண்பெண்டாட்டி எனக்கு என் றத்தை ஸ்வீகரிக்கை யாவதேன்?' என்று ராஜ்யத்தைப் போகட்டுப் பொறுத்துப் போந்தார்; இங்கே வருணனை வழிவேண்டி அவன் முகங்காட்டிற்றிலன் என்று, சீறிக் காலைக் கையைக் கட்டாநின்றார்; இது இருந்தபடி யேன்?'' என்றாற்போலே யிருந்தார்கள் முதலிகள். (க்ஷமைக்குவிஷயமுண்டு, ஈத்ருஶஜநத்தில் க்ஷமை யொண்ணாதென்கிறார்.) ''இவன் வந்திலன்'' என்று நாம் சீறவொண்ணாதபடி, வாலி புறப்படுகிறபோது தாரைவந்து காற்

ப்ர—ஸலீலம் ... [illegible] ... ஸுக்ரீவ ... [illegible] ... ஸாகரம் ஶோஷயிஷ்யாமி பத்ப்யாம் யாந்து ப்லவங்கமா: ॥ உ உ ॥''

கிறேன்'' என்று அச்சமுறுத்தி அவனாலே கார்யங்கொள்ளுவாராகவேணு மென்றபடி. [illegible] ஸ்வரூபவிருத்த மானாலும், அவனைக்கொண்டே தம்முடைய கார்யத்தைத் தலைக்கட்டிக் கொள்ளுகை யாலே அநந்யகதித்வத்துக்கு பங்கமில்லை என்று திருவுள்ளம்பற்றி '[illegible]' வார் வேணும்' என்கிறார். ''ஸலீலம் விஜாநாதி'' என்பார் அதிகாரிகளாலும் [illegible] தென்ன - பண்ணின இத்யாதி. வேறே போக்கடி யுடையார் [illegible] ஸாகரம் இத்யாதி. ''க்ஷமயா ஹி ஸமாயுக்தம் மாமயம் மகராலய: । ஸலீலம் [illegible] ஶக்தி ... [illegible] ... ஸாகரம் ஶோஷயிஷ்யாமி பத்ப்யாம் யாந்து ப்லவங்கமா:'' இதி புத்த[illegible] ''[illegible]'' என்றதிலே நோக்காக அவதாரிகை - ஒருபெண்பெண்டாட்டி. இத்யாதி. [illegible] யம் - பரிபவித்தது இருவர்க்கும் ஒத்திருக்கச்செய்தே அவளிடத்திலே க்ஷமைபண்ணினதென்? இங்கு ''க்ஷமைபண்ணவேண்டோம்'' என்கிறதென்? அங்கு க்ஷமைபண்ணினாலும் இங்கும் க்ஷமைபண்ண வேண்டாவோ? என்று. காலைக் கையைக் கட்டுகையாவது - விற்காலைப் பிடிக்கையும், விரற்சரட்டைக் கட்டுகையு மென்றபடி. கால் - விற்கால். கை - விரற்சரடு. கையென்று - விரற்சரட்டைச்சொல்லு மோ? என்ன; ''கைபுடைகோதைகைக்கட்டியாகும்'' என்று நிகண்டு. அதாவது - கையென்றும், புடையென்றும், கோதையென்றும், கைக்கட்டிக்குப்பேர் என்றபடி. கைக்கட்டி - விரற்சரடு. சாடு வுக்கு, ஸ்புடம்: 'இருந்தார்கள் முதலிகள்' என்றவநந்தரம், முதலிகளுடைய சங்கைக்கு பரிஹாரம் அத்யாஹார்யம். அதாவது - கைகேயி ஸமுத்ரத்தைப்போலே அஸமர்த்தனாகநினைக்கவில்லை; அபலை யாகையாலே, ராஜ்யத்தை யாசைப்பட்டாள் இத்தனை; ஆகையாலே க்ஷமைபண்ணிவிட்டுவந்தோம்;

கட்டினவோபாதி, க்ஷமை வந்து நம்மைக் காற்கட்டாநின்ற தென்றார்:—"ரோஷ" (ரோஷ)- "ஸாப்தமத்தகுபிதாநாம் ஸ்வபாவஜ்ஞாநம் த்ருஷ்டம்" (ஸாப்தமத்தகுபிதாநாம் ஸ்வபாவ ஜ்ஞாநம் த்ருஷ்டம்) என்று, கோபம் விளைந்த வநந்தரம் ஜந்மத்தை யுணர்ந்தார். "பிறர்கை பார்த்திருக்கும் முடிப்பிறப்பன்று" என்றிருக்கிறதில்லை; நம்மை "ஐயர்மகன்" என்று அறிகிறதில்லை. † ("ஸாப்தேத்யாதி" (ஸாப்தேத்யாதி) - தந்தாம் ஸ்வஹாவத்தை மறைத்து வர்த்தித்தவர்கள், ஸ்வப்நாதிதசையிலே ஸ்வஸ்வஹாவாநுகுணம் ஹாஷிப்பார்களிறே; அப்படி யிவரும் க்ஷத்ரியத்வத்தை யுணர்ந்தார்.) "அபம்" (அபம்)- மஹோததி யென்கிற பெருமையை நினைத்திராநின்றது; தன்னைச் சிறங்கித்திருக்கிற நம்மை அறிகிறதில்லை. "மகராலயம்" (மகராலயம்)-ஒரு அயோத்யாதிபதி கோசலாதிபதிகளோடொக்கக் காணும் தன்னை நினைத்திருக்கிறது; தன்னை பின்படுகுட்டமாக அறிகிறதில்லை. "அஸமர்த்தம்விஜாநாதி" (அஸமர்த்தம்விஜாநாதி)-செவ்வைகெடப் பரிமாறினுரையும் ஒக்கவிட்டுக்கார்யங் கொள்ளவல்லோமென்று அறிகிறதில்லை. இவ்வளவில் செய்யவடுப்பதென்? என்னில் - "திக்க்ஷமாம்" (திக்க்ஷமாம்) இப்போது க்ஷமையைவேண்டோம். விநியோகமுள்ள விடத்தே யன்றோ கார்யங்கொள்வது? கோபத்தோபாதி, கார்யகாலத்தேயழைத்துக் காரியங்கொள்ளப் பார்த்தோம். அதுவென்? இக்ஷ்வாகுவம்ச்யரா யிருப்பார்க்கு க்ஷமை கொண்டு கார்யங்கொள்ளவேண்டாவோ? என்னில், "சத்ருஜநே" (சத்ருஜநே)-அக்தால் பெற்றதென்? அது இங்கு ஜீவிக்கிறதில்லை. இதுக்கு இங்குள்ளாருடைய ஸம்பந்தமே வெலியாநின்றதே. ஒன்பதுபாட்டாலும் ஸரண்யன்படி சொல்லி, பத்தாம் பாட்டிலே ஸரணம்புகுகிறார்.

இவன் [illegible] அளவித்த [illegible] க்ஷமைவேண்டோம் என்கிறாரென்று. [illegible] [illegible] என்று முன் [illegible] [illegible] அபிப்ராயத்தை [illegible] [illegible] இத்யாதி. இதுக்கு - ப்ரதம பதத்திலே [illegible]. [illegible] - "அஸமர்த்தம்விஜாநாதி" என்று - [illegible]. [illegible] ஜந்மத்தையுணர்ந்தவருடைய [illegible] இத்யாதி. 'பிறர்கைபார்த்திருக்கும்' இத்யாதிக்கு [illegible] [illegible] என்றதைக் கண்டுகொள்வது. [illegible] [illegible] இத்யாதி. [illegible] - [illegible] [illegible] [illegible] என்றதுக்கு [illegible] என்றது - [illegible] [illegible] இத்யாதி. "மகராலயம்" என்றதுக்கு [illegible] - [illegible] இத்யாதி. 'செவ்வைகெடப்பரிமாறினுரையும்' - அதிகியிலேகடந்தவர்களை யென்ற படி. [illegible] - [illegible] என்கிறபடியே ப்ரஹாரத்தாலே [illegible] படி. பின்னை எப்போதுவேணும்? என்ன - விநியோகம் இத்யாதி. [illegible] - [illegible] இத்யாதி. இங்குள்ளாருடைய என்றது - ஸமுத்ராஸ்த்த [illegible] [illegible] என்றபடி; [illegible] என்றுதல். பத்தாம்பாட்டிலே யன்றோ ஸரணம்புகுகிறது; ஒன்பதுபாட்டிலும் [illegible]? என்ன - ஒன்பதுபாட்டாலும் இத்யாதி. அதாவது - ஸரண்யன் பக்கலிலே ஸரணம்புகவேண்டுகையாலே, ஒன்பதுபாட்டாலும் - ஸரண்யன்படிசொல்லி, பத்தாம்பாட்டிலே - ஸரணம்புகுகிறாரென்றபடி.

† குண்டலிதம் க்வாசித்கம்.

முதற்பாட்டு.

உலகமுண்டபெருவாயா உலப்பில்கீர்த்தியம்மானே !
நிலவுஞ்சுடர்சூழொளிமூர்த்தி நெடியாய் அடியேனாருயிரே !
திலதமுலகுக்காய்நின்ற திருவேங்கடத்தெம்பெருமானே !
குலதொலடியேனுனபாதங் கூடுமாறு கூறாயே.

ஆ.— காருண்ய வாத்ஸல்யாதி அநவதிகாதிசய அஸங்க்யேய கல்யாணகுணனாகையாலும், ஸ்வதேஜஸா நிகில ஜகத்தையும் உத்பாஸிப்பியாநின்ற திவ்யரூபத்தை யுடையனாய் எனக்கு தாரகனாகையாலும், பரமவ்யோமநிலயனான நீ கரணபத விதூரவர்த்தியாகையன்றியே கரணவிஷயமாகைக்காக, ஸகலலோக திலகபூதமான திருமலையிலேபுகுந்து நின்றருளுகையாலும், நான் உனக்குக்குடியடியேனாகையாலும் உன்திருவடிகளிலே என்னைச் சேர்த்தருளவேணு மென்கிறார்.

ஒ.—முதற்பாட்டில், நீ போக்கி வேறொருமதியின்றிக்கே இருக்கிற என்னை, நீயே உன்திருவடிகளிலே சேரும்படி பண்ணியருளவேணும் என்கிறார்.

[உலகமென்று தொடங்கி] - ரக்ஷ்யத்தின் அளவன்றிக்கேயிருக்கும் பெரும்பாரிப்பை யுடையையாய் அமர்யாதமாயிருந்துள்ள ரக்ஷகத்வாதி குணப்ரபையாலே லோகத்தையடைய அடிமைகொள்வதுஞ்செய்து, நித்யமாய் விலக்ஷணதேஜோரூபமான திருவடிவை யுடையையுமாய், அபரிச்சேத்யமான ஸௌந்தர்யாதிகளை யுடையையுமாயிருந்துவைத்து லோகத்துக்கெல்லாம் திலகமான திருமலையிலே நின்றருளி என்னை யடிமை கொள்வதுஞ்செய்து எனக்கு தாரகனானவனே! [குலதொலடியேன்] - [illegible]யுக்தமாகப் பழையதாக அடிமையாயிருக்கிற நான்.

ப.—முதற்பாட்டில், அகில ஜகத்ரக்ஷகமான ஸ்வபாவவிசேஷங்களை யுடையையாய்க்கொண்டு திருமலையிலே ஸந்நிஹிதனான உன்னை ஸ்வதஸ்ஸித்த சேஷத்வ ஸ்வரூபனான நான் கிட்டும்ப்ரகாரம் அருளிச்செய்யவேணு மென்கிறார்.

(ப்ரளயாபத்திலே), உலகம்- லோகத்தை, உண்ட - அமுதுசெய்கிறவிடத்தில், பெரு - (ரக்ஷ்யத்தளவன்றியே) பெரும்பாரிப்பையுடைத்தான, வாயா - ரக்ஷணோபகரணமான திருப்பவளத்தையுடையனாய், (ரக்ஷணோபயுக்தமாய்), உலப்பு - முடிவு, இல்-இன்றியேயிருக்கும், கீர்த்தி - (ஜ்ஞாநசக்த்யாதி ஸமஸ்த கல்யாணகுண) ப்ரதையையுடையாய், அம்மானே - நிருபாதிகசேஷித்வ ஸ்வரூபத்தையு முடையனாய், (இந்த ரக்ஷணத்துக்கு அஸாதாரணமான பரிகரமாய்), நிலவும் சுடர் சூழ்- ஸ்வாபாவிக ஸௌந்தர்யலாவண்யாத்யகிலகுண ஔஜ்ஜ்வல்ய பூர்ணமாய், ஒளி - அப்ராக்ருததேஜோமயமான, மூர்த்தி - திவ்யவிக்ரஹத்தை யுடையனாய், நெடியாய் - (கீழ்ச்சொன்ன ஸ்வரூபரூபகுணசேஷ்டிதங்களுக்குப்) பரிச்சேதமில்லாத பெருமையையுடையனாய், (இப்படி பஞ்சப்ரகார விசிஷ்டனாய்க்கொண்டு), அடியேன் - (த்வததீநனான) எனக்கு, ஆருயிரே - பரிபூர்ணதாரணபூதனாய், (இப்படி முகந்தோற்றாமல் நின்று ரக்ஷிக்கும் அவனன்றியே), உலகுக்கு - ஸர்வலோகத்துக்கும், திலதம் - ஊர்த்வபுண்ட்ரரூபேண ஶிரஸாவாஹ்யமான திலகம், ஆய்- ஆய்க்கொண்டு, நின்ற - (ஸுஸ்திரமாய்) நின்ற, திருவேங்கடத்து - திருமலையிலே,

எம்-எனக்கு, பெருமானே - உன்னுடைய சேஷித்வத்தை ப்ரகாசிப்பித்து நின்றவனே! குலம் - குலக்ரமாகதமாம்படி, தொல்- பழைய, அடியேன் - (அடியேனான) நான், உன- (சேஷியாய் ரக்ஷகனாய் போக்யபூதனான)உன், பாதம்-திருவடிகளை, கூடும் - ப்ராபிக்கும், ஆறு - ப்ரகாரம், கூறாய் - அருளிச்செய்யவேணும்! ப்ரளயாபத்திலேயோ ரக்ஷிக்கலாவது! விரஹாபத்தில் ரக்ஷிக்கலாகாதோ? லோகமாக வீடுபடிலோ ரக்ஷிக்கலாவது!- அது ஒருவனுக்கு உண்டானால் ரக்ஷிக்கலாகாதோ? ஆர்த்தியை யறியாதாரையோ ரக்ஷிக்கலாவது! ஆர்த்தியறிந்து கூப்பிட்டாரை ரக்ஷிக்கலாகாதோ? அர்த்தித்வமில்லாதாரையோ ரக்ஷிக்கலாவது! ஆசைப்பட்டாரை ரக்ஷிக்கலாகாதோ? வயிற்றிலே வைத்தோ ரக்ஷிக்கலாவது! வடிவுகாட்டி ரக்ஷிக்கலாகாதோ? நீ அபிநிவேசித்தாரையோ ரக்ஷிக்கலாவது! உன்னை அபிநிவேசித்தாரை ரக்ஷிக்கலாகாதோ? வாயாலேயோ ரக்ஷிக்கலாவது! வார்த்தையாலே ரக்ஷிக்கலாகாதோ? அபர்யந்தகுணங்களை யழிய மாறியோ ரக்ஷிக்கலாவது! அவற்றை யநுஸந்திப்பித்து ரக்ஷிக்கலாகாதோ? உறவறியாத லோகத்தையோ ரக்ஷிக்கலாவது! உறவறிந்த விஷயத்தை ரக்ஷிக்கலாகாதோ? வடிவில் வாசியறியாதாரையோ ரக்ஷிக்கலாவது! வாசியறிந்தாரை ரக்ஷிக்கலாகாதோ? பெருமை யுணராதாரையோ ரக்ஷிக்கலாவது! பெருமை யுணர்ந்தாரை ரக்ஷிக்கலாகாதோ? வ்யதிரேகத்தில் தரிப்பாரையோ ரக்ஷிக்கலாவது! வ்யதிரேகத்தில் தரியாதாரை ரக்ஷிக்கலாகாதோ? ஸௌலப்யஜ்ஞாநமில்லாதாரையோ ரக்ஷிக்கலாவது! "ஸுலபன்" என்றறிந்தாரை ரக்ஷிக்கலாகாதோ? அந்யசேஷபூதரையோ ரக்ஷிக்கலாவது! அநந்யார்ஹசேஷபூதரை ரக்ஷிக்கலாகாதோ? அந்யகதிகளையோ ரக்ஷிக்கலாவது! அநந்யகதிகளை ரக்ஷிக்கலாகாதோ? ப்ரயோஜநாந்தரபரரையோ ரக்ஷிக்கலாவது! அநந்யப்ரயோஜநரை ரக்ஷிக்கலாகாதோ? பிரிய நினைப்பாரையோ ரக்ஷிக்கலாவது! கூட நினைப்பாரை ரக்ஷிக்கலாகாதோ? [illegible]யோ ரக்ஷிக்கலாவது! "[illegible]" என்று ரக்ஷிக்கலாகாதோ? என்று கருத்து.

௩.- முதற்பாட்டில், அநந்யகதியான நான் உன்னைவந்து கிட்டுவதொரு விரகு பார்க்கவேணுமென்கிறார்.

[உலகமுண்ட பெருவாயா] - ஜகத்தினளவன்றிக்கே யிருக்கும் பெரிய பாரிப்பையுடையவனே! உன்னுடைய பாரிப்புக்கும் என்னுடைய ஆர்த்திக்கும் என்ன சேர்த்தியுண்டு? நீ யறிந்த ஸம்பந்தமும் ஆபத்திலே முகமாக ரக்ஷிக்குமவனே! ஒரு லோகத்துக்காக ஆபத்துவரிலோ நோக்கலாவது! லோகத்துக்காக உண்டான ஆபத்து ஒருவனுக்கு உண்டானால் நோக்கலாகாதோ? ப்ரளயார்ணவத்திலேயோ நோக்குவது! ஸம்ஸாரார்ணவத்திலே அகப்பட்டாரை நோக்கலாகாதோ? அபேக்ஷியாதார்க்கோ உதவலாவது! அபேக்ஷித்தார்க்கு உதவலாகாதோ? ஸரீரவியோகத்துக்குவரும் ஆபத்தோ நோக்கலாவது! ஸத்தை அழியும் ஆபத்தில் நோக்கலாகாதோ? ஜலப்ரளயத்துக்கோ உதவலாவது! விரஹப்ரளயத்துக்கு உதவலாகாதோ? பிறரால்வரும் ஆபத்தோ நோக்கலாவது! உன்னால்வரும் ஆபத்து நோக்கலாகாதோ? [உலப்பில் கீர்த்தியம்மானே]- ஒன்றைச் சொன்னேனாக்கினையல்லது, வெறுமனேயாக நீ ரக்ஷித்துப் படைத்த குணப்ரதையாலே ஸர்வலோகத்துக்கும் ஸ்வாமியானவனே! இதுக்குமுன்பு, ஆர்ஜித்த புகழையுடைய ஐஸ்வர்யத்திலே உதவாமையாலே யிழக்கக்கடவாய் புகுகிறாய். † * பொழி

† திருநெடுந்தாண்டகம்—க0.

லேழுங் காவல்பூண்ட புகழையிறே யிழக்கப்புகுகிறது. ஸ்வரூபமொழிய குணத்துக் காயிற்று இவர் தோற்றது. [நிலவும் இத்யாதி] - கடலிலே தள்ளினாலும் விடவொண் ணாதவடிவழகு குணஹீநனானாலும் விடவொண்ணாத வடிவழகு. நித்யமாய் நிஷ்க்ருஷ்ட ஸத்த்வமாய் நிரவயிகதேஜோரூபமான விக்ரஹத்தையுடையவனே! [சுடர்சூழொளி மூர்த்தி] - உள்ளுமண்ணீடாய்ப் புறம்பு ஒளியூட்டி யிருக்கையன்றிக்கே, உள்வா யோடு புறவாயோடு வாசியற ஒளியேயா யிருக்கிறபடி. [நெடியாய்] - அபரிச்சேத்ய மான ஸௌந்தர்யாதிகளையுடையவனே! "யதோவாசோ நிவர்த்தந்தே" என்கிற ஆத்ம குணங்களுக்கு எல்லைகாணிலும், ரூபகுணங்களுக்கு எல்லையின்றிக்கே யிருக்கிறபடி. [அடியேனாருயிரே] - ஸ்வரூபத்தைப்பார்த்து வ்யதிரேகத்தில் தேறியிருக்கவொண்ணாத படி பண்ணினவனே! ஆத்மாவையொழிய கேவலஶரீரத்தை யரிப்பிக்கப்போமோ? [திலதம் இத்யாதி] - லோகத்துக்குத் திலதமான திருமலையிலே நின்றருளின உன் ஶேஷித்வத்தை எனக்குஅறிவித்து, உன்னாலல்லது செல்லாதபடியும் பண்ணினவனே! ஸந்நிதியில்லாமல்தா னிழக்கிறேனோ? [குலதொலடியேன்] - குலமாகப் பழைய அடிமை யாயிருக்கிற நான். இத்தால் - தம்முடைய யோக்யதை சொல்லுகிறாரல்லர்; அநந் யார்ஹத்வம் சொல்லுகிறார். அநந்யார்ஹமான குடியிலுள்ளாரைப் புறம்பு கைக்கொள் ளுவாரில்லையென்கை. [உன பாதங் கூடுமாறு] - உன் திருவடிகளைக் கிட்டி யடிமை செய்யும்படி; இவருடைய ஸாயுஜ்யமிருக்கிறபடி. [கூறாயே] - நம்மைப்பெறுவானென் றிரங்கி ‡ "மாஶுச:" என்று அருளவேணும். உனக்கு ஸூக்தி: எனக்கு ஸ்வ ரூபலாபம்.

ஈடு.—முதற்பாட்டு உன்னையொழிய வேறுகதியின்றிக்கேயிருக்கிற என்னை உன் திருவடிகளிலே சேரும்படிபண்ணி யருளவேணுமென்கிறார்.

[உலகமுண்ட பெருவாயா]-தேவர்திருவடிகளைக் கிட்டாதவன்று எனக்குஉண் டான தளர்த்தி பத்து ப்ரளயாபத்தோபாதி போராதோ? ரக்ஷ்யத்தினளவன்றிக்கே யிருக்கும் பாரிப்பையுடையவனே! உன்பாரிப்புக்கும் என்னார்த்திக்கும் எனனசேர்த்தியுண்டு? நீயறிந்த ஸம்பந்தமும் ஆபத்துமே கைம்முதலாக ரக்ஷிக்குமவனன்றோ! ஒரு விபூதிக்காக ஆபத்து வரிலோ நோக்கலாவது! விபூதிக்காகவுண்டான ஆபத்து எனக்குஒருவனுக்குமுண்டானால் நோக்கலாகாதோ? ப்ரளயார்ணவத்திலே யழுந்துவாரையோ நோக்கலாவது! ஸம்ஸாரார்ண வத்தில்அழுந்துவாரை நோக்கலாகாதோ? அபேக்ஷியாதாரையோ நோக்கலாவது! அபேக்ஷித்

முதற்பாட்டு.—உலகமுண்ட இத்யாதி. "குலதொலடியேன்" இத்யாதியைக் கடாக்ஷித்து அவ தாரிகை - உன்னையொழிய இத்யாதி.

ஜகத்துச்கு ப்ரளயாபத்துண்டானகையாலே ரக்ஷித்தாம்; உனக்கு ஆபத்தில்லையோ? என்ன - தேவர் திருவடிகளை இத்யாதி. "பெரு" என்றதுக்கு பாவம் - ரக்ஷ்யத்தின் இத்யாதி. "பெருமை" - பாரிப்பின் அதிஶயத்தைச்சொல்லுகிறது இப்பாரிப்டையிட்டு அவனைவம்மோதிக்கிறவருடைய ஹார்த்தபாவம் - உன்பாரிப்புக்கும் இத்யாதி. ரக்ஷிக்கும்போது ஒருகைம்முதல் வேண்டாமோ? என்ன - நீயறிந்த இத்யாதி. "உலகம்" என்றத்தைக் கடாக்ஷித்து, வைஜாத்யமம் தாமோனங்களாய்த் அன்றோ? என்ன - ஒருவிபூதிக்காக இத்யாதி. ஏகப்ரளயந்தானாலும், அத்தைப்பற்ற எனக்கு வாசியுண்டென்கிறார், 'ப்ரளயார்ணவத்திலே' இத்யாதிவாக்யத்வயத்தாலே. "உலகம்" என்ற அசேதந ஸமாதிக்குபாவம் - அபேக்ஷியாதாரையோ இத்யாதி. ரக்ஷணத்தை இதிசேஷ: ப்ரளயார்ணவத்

‡ பகவத்கீதை—கஅ—66.

தார்க்கு உதவலாகாதோ? சரீரத்துக்குவரும் ஆபத்தோ நோக்கலாவது! ஆத்மாவுக்குவரும் ஆபத்துநோக்கலாகாதோ? ஜலப்ரளயத்திலே அகப்படிலோ நோக்கலாவது! விரஹப்ரளயத்துக்கு உதவலாகாதோ? பிறரால்வரும் ஆபத்தோநோக்கலாவது! உன்னால்வருமாபத்து நோக்கலாகாதோ? "சரணம்புகாதாரைரக்ஷிக்கவேணும்" என்கிற நியதியுண்டோ! சரணம்புக்காரை ரக்ஷிக்கலாகாதோ? ரக்ஷித்துநீர்சரைந்து பின்னையும் "ஒன்றும்செய்யப் பெற்றிலோம்" என்றிருக்கக்கடவ உனக்கு என்னுடைய ரக்ஷணத்திலேயந்வயியாதே கைவாங்கியிருக்கைபோருமோ? ப்ரளயாபத்தைரக்ஷித்துப்பின்பும் "நாம் இவற்றுக்குச்செய்தது ஒன்றுண்டோ?" என்று உடன்கிடந்தாரை மடிதடவி, பின்னை "என்செய்தோமானோம்" என்றுதபிப்பாரைப்போலே இழவுபட்டிருப்பானொருவ னன்றோ நீ! [பெருவாயா] - ரக்ஷ்யத்தினளவல்லாத ரக்ஷகனுடைய பாரிப்பு இருக்கிறபடி. அவற்றின்பக்கலுண்டான ரக்ஷணத்தில் பாரிப்போபாதியும்போரும் தம்பக்கல் உபேக்ஷயென்றிருக்கிறார். [பெருவாயா]- த்ரௌபதி "சரணம்" என்ற உக்தியைத்தனையும் திருவுள்ளத்தே கிடந்து, ஸதஸ்ஸில் அவன் பரிபவித்த பரிபவத்தையும் பரிஹரித்து, துர்யோதநாதிகளையும் நிரஸித்து, தர்மபுத்ரன் தலையிலே முடியையும் வைத்து, இவள் குழலையும் முடிப்பித்துப் பின்பும் "ருணம் ப்ரவ்ருத்தமிவ மே" (ருணம்ப்ரவ்ருத்தமிவமே) என்று குறைவாளனாய், பரமபதத்துக்கு எழுந்தருளுகிறபோதும் "நாதிஸ்வஸ்தமநா:" (நாதிஸ்வஸ்தமநா) என்று திருவுள்ளத்தில் புண்ணோடேயிறே யெழுந்தருளிற்று. [உலப்பில்கீர்த்தியம்மானே] - இவனுக்கு ரக்ஷகத்வம் வந்தேறியாய்ப்போய், பழையதுகொண்டு விளைப்பிடுகிறேனல்லேன்; இப்படி லோகத்தை ரக்ஷித்து ஆர்ஜித்தபுகழுக்கு முடிவில்லையென்கிறது * பொழிலேழும் காவல் பூண்ட புக

தில் அழுந்தினார்க்கு வந்த ஆபத்து எது? சரணாகதியில் அழுந்தினவர்க்குவந்த ஆபத்து எது? என்ன, அருளிச்செய்கிறார் - சரீரத்துக்கு இத்யாதி. [illegible], இன்னம் ஒருவழியாலே [illegible] - [illegible] இத்யாதி. இத்தால்[illegible] [illegible] அருளிச்செய்கிறார் - பிறரால் இத்யாதி. "[illegible]" இத்யாதிவாக்யவிவரணம் - சரணம் இத்யாதி. [illegible] - *[illegible] "[illegible]" இத்யாதிவாக்யவி. [illegible] - ரக்ஷித்து நீர்சரைந்து இத்யாதி. ரக்ஷித்து நீர்சரைந்து பின்னையும் "ஒன்றும் செய்யப்பெற்றிலோம்" என்று இருக்கும்ப்ரகாரம் [illegible] - ப்ரளயாபத்தை இத்யாதி. மடிதடவி - [illegible]. "ரக்ஷித்துநீர்சரைந்து" இத்யாதியால் சொன்ன அர்த்தம் - "பெருவாயா" [illegible], [illegible] அதுக்கு அர்த்தம் - ரக்ஷ்யத்தினளவல்லாத இத்யாதி. இத்தால்[illegible] - அவற்றின்பக்கல் இத்யாதி. [illegible] "ஒன்றும்செய்யப்பெற்றிலோம்" என்றிருக்கு[illegible] அருளிச்செய்கிறார் - த்ரௌபதி இத்யாதி. [illegible] - 'பெருவாயா' என்று. [illegible] "ருணம் ப்ரவ்ருத்தமிவ மே [illegible]" இதி [illegible]. "நாதிஸ்வஸ்தமநா:" என்கிறதுக்கு ப்ரமாணத்திரட்டி [illegible]. ப்ரளயாபத்ஸகத்வ [illegible] "உலப்பில்கீர்த்தியம்மானே" என்கிற வாக்யத்துக்குதாத்பர்யம் இவனுக்கு ரக்ஷகத்வம் இத்யாதிவாக்யத்வயத்தாலே. இப்படிலோகத்தை ரக்ஷித்தென்றது - [illegible] என்றபடி. ரக்ஷணத்தால்வந்த புகழுக்கு ப்ரமாணம் - பொழிலேழும் இத்யாதி. திருநெடுந்தாண்டகத்தில் "பொன்னானாய்". 'பொழிலேழும் காவல்பூண்டபுகழானாய்' - ஸப்தலோகங்களையும் ரக்ஷிக்கையிலே பூண்டு அத்தால்வந்த புகழையுடையவனேயென்றபடி. ஸப்தார்த்தம் - இப்படிகளால் இத்யாதி. இப்படிகளாலென்றது - கீழ்ச்சொன்ன

ழிறே. இப்படிகளால் வந்த குணவத்தா ப்ரதை2யையுடைய ஸர்வேஶ்வரனே! "தஸ்ய நாம மஹத்3யஶ:" (தஸ்யநாமமஹத்யஶ:) என்றும், "யஶஸஶ்சைகபா4ஜநம்" (யஶஸஶ்சைகபாஜநம்) என்றும் உபதேஶகம்யமன்றிக்கே, "விதி3த:" (விதித:) என்று ஶத்ருகோஷ்ட்டியிலும் இப்படி ப்ரஸித்தமாயன்றோ உன் புகழிருப்பது! ஶாத4கத்தின் ஸந்நிதியிலே ஶாத்யமும் ஜீவிக்கும்படியன்றோ உன்னுடைய ஆஜ்ஞையிருப்பது! அவன் நினைத்தவன்று பாதகந்தானே பாத்யத்துக்குப் பாலூட்டிவளராநிற்குமிறே. [உலப்பில் கீர்த்தியம்மானே] - "கு3ணாநாமாகரோ மஹாந்" (குணாநாமாகரோமஹாந்) என்றும், "ததா2 கு3ணா ஹ்யநந்தஸ்ய" (ததாகுணாஹ்யநந்தஸ்ய) என்றும், "வர்ஷாயுதைர்யஸ்ய கு3ணா ந ஶக்யா:" (வர்ஷாயுதைர்யஸ்யகுணாநஶக்யா:) என்றும், "ப3ஹவோ ந்ருப கல்யாணகு3ணா: புத்ரஸ்ய ஸந்தி தே" (பஹவோந்ருப கல்யாணகுணா:புத்ரஸ்யஸந்திதே) என்றும் சொல்லுகிற குணங்களுக்கு முடிவின்றிக்கே யிருக்கை. இவற்றை எல்லைகாண நினைத்தால் கரைகண்டுமீளவொண்ணாது; மதிக்ஷயத்

ப்ர.—கிஷ்கிந்தா4காண்டே3 [௧௫] வாலிநம் ப்ரதி தாரா, "நிவாஸவ்ருக்ஷ: ஸாதூ4நாமாபந்நாநாம் பரா க3தி:। ஆர்தாநாம் ஸம்ஶ்ரயஶ்சைவ யஶஸஶ்சைகபா4ஜநம்॥௧௯॥ ஜ்ஞாநவிஜ்ஞாநஸம்பந்நோ நிதே3ஶே நிரத: பிது:। தா4தூநாமிவ ஶைலேந்த்3ரோ கு3ணாநாமாகரோ மஹாந்॥௨०॥

மஹாபா4ரதே கர்ணபர்வணி [அ०] கர்ண:, "வர்ஷாயுதைர்யஸ்ய கு3ணா ந ஶக்யா வக்தும் ஸமேதைரபி ஸர்வலோகை:। மஹாத்மந: ஶங்க2சக்ராஸிபாணே: விஷ்ணோர்ஜிஷ்ணோர்வஸுதே3வாத்மஜஸ்ய॥௫௬॥

அயோத்4யாகாண்டே3 [௨] "தே தமூசுர்மஹாத்மாநம் பௌரஜாநபதை3: ஸஹ। ப3ஹவோ ந்ருப கல்யாணகு3ணா: புத்ரஸ்ய ஸந்தி தே॥௨௬॥"

ஆபத்ஸகத்வாதிகளை. குணவத்தாப்ரதை2க்கு ப்ரமாணங்கள் - தஸ்யநாம இத்யாதி †"ந தஸ்ய ப்ரதிமா அஸ்தி யஸ்ய நாம மஹத்3யஶ:" "நிவாஸவ்ருக்ஷ: ஸாதூ4நாமாபந்நாநாம் பரா க3தி:। ஆர்தாநாம் ஸம்ஶ்ரயஶ்சைவ யஶஸஶ்சைகபா4ஜநம்" இதி வாலிநம்ப்ரதி தாரா. 'விதி3த: ஸ ஹி த4ர்மஜ்ஞ: ஶரணாக3தவத்ஸல:। தேந மைத்ரீ ப4வது தே யதி3 ஜீவிதுமிச்ச2ஸி' இதி ஸுந்தரகாண்டே ராவணம்ப்ரதி ஸீதா [21-20]. ரக்ஷகத்வத்தின் சரமாவதி - ஶாத4கத்தின் இத்யாதி. ஶாத4கமென்றது - பெரியதிருவடியை. ஶாத்யமென்றது - ஸுமுகனை. இப்படி கூடுமோ? என்ன - அவன் நினைத்த இத்யாதி. இவ்விடத்திலே - ‡"கீர்த்திஸ்த்ரூம் விஷ்டம்ப4ய்ய" இத்யாத்யநுஸந்தேயம். "கீர்த்தி" என்றதுக்கு குணவத்தாப்ரதை2யாகக் கீழருளிச்செய்து, "கீர்த்யா கஜிதகீர்த்தி:" என்று குணபரமாக அர்த்தாந்தரம் - குணநாம் இத்யாதி. "தா4தூநாமிவ ஶைலேந்த்3ரோ கு3ணாநாமாகரோ மஹாந்" இதி தாரா. "யதா2 ரத்நாநி ஜலதே4ரஸங்க்2யேயாநி புத்ரக। ததா2 கு3ணா ஹ்யநந்தஸ்ய அஸங்க்2யேயா மஹாத்மந:" இதி மாத்ஸ்யேபுராணே. 'வர்ஷாயுதைர்யஸ்ய கு3ணா ந ஶக்யா வக்தும் ஸமேதைரபி ஸர்வலோகை:" இதி கர்ணபர்வணி கர்ண:. [80, 56]. "ப3ஹவோ ந்ருப கல்யாணகு3ணா:" இத்யயோத்4யாகாண்டே. அப்படி முடிவின்றிக்கே யிருக்குமோ? என்ன - இவற்றை இத்யாதி. "உஷ:க்ஷயாணீவ தத்தே

† தைத்ரீயே, 2.

தாலே மீளுமத்தனே. (ஸ்வரூபமொழிய குணத்துக்காயிற்றுத் தோற்றது.) [நிலவும் சுடர் சூழொளிமூர்த்தி] - ரக்ஷகனன்றிக்கே வாதுகளுறுலும் விடவொண்ணுத வடிவழகிருக்கிற படி. [நிலவும்] - ஒருகர்மமடியாகவந்து, அது வற்ற வற்றுகிறதன்றே. [சுடர்சூழொளி மூர்த்தி] - உள்ளு மண்பற்றுய்ப் புறம்புஒளியூட்டியிருக்கையன்றிக்கே, "[illegible]" (தேஜஸாம்ராஶிமூர்ஜிதம்) என்கிறபடியே, தேஜ:பதார்த்தங்களைத் திரட்டிப்பிடித்தாற்போலே யிருக்கை. "உயர்வினையேதருமொண்சுடர்க்கற்றை" என்னக் கடவதிறே. ரஜஸ்தமஸ்ஸுக்களா லளாவனன்றிக்கே சுத்தஸத்த்வமயமாய் நிரவதிக தேஜோரூபமாய், நெய் திணுங்கினுற்போலே உள்ளும்புறம்பும் ஒக்க ஒளியேயாயிருக்கை. திருமேனிதன்னை "[illegible]" (பஞ்சஶக்திமயம்) என்றும் சொல்லாநின்றார்கள்; "[illegible]" (ஷாட்குண்யவிக்ரஹம்) என்றும் சொல்லா நின்றார்கள்; ஆராய்ந்து பார்த்தால், அர்த்தஸ்த்திதிதான் பஞ்சசக்திமய மென்றே யிருக்கும்; ஷாட்குண்ய விக்ரஹமென்கிறது - திருமேனிதான் குணங்களுக்குத் திரோதாயக மன்றிக்கே ப்ரகாஶகமா யிருக்கையாலே. "[illegible]" (ரூப வாந் ஸம்பந்ந: ஶ்ரீமாந் கந்தர்ப்ப இவமூர்த்திமாந்) என்றும், "[illegible]" (தாஸாமாவிரபூத்) என்றும் சொல்லுகிறபடியேயிறே யிருப்பது. [நெடியாய்] - கீழ்ச்சொன்ன குணங்களுக்கு எல்லையுண்டாகிலும், ஸௌந்தர்ய லாவண்யாதிகளுக்கு எல்லைகாண

ஶ்ரீராமாயணே. [ஸு-க-உ.] "[illegible]

[illegible]॥ உ॥"

[illegible]॥ [illegible]" என்றத் தைக் [illegible] '[illegible]மீளுமத்தனை' என்றது. [illegible]ரண்டுபதங்களாலும் - ரக்ஷகத்வ [illegible]; [illegible] அவ்வடிவழகு விடப்போகாதென்று [illegible] [illegible] - ரக்ஷகனன்றிக்கே இத்யாதி. 'நிலவும்'என்ற வர்த்தமானார்த் த[illegible] இத்யாதி. [illegible] - நித்யமாகவர்த்திக்கை. "சுடர், ஒளி" என்றதின்மிகைக்குஅர்த்தம்- [illegible] இத்யாதி. "[illegible]॥ [illegible] [illegible]" இதி [illegible] [67]- உத்தரார்த்தத் துக்கு [illegible] - [illegible] இத்யாதி. "உள்ளுமண்பற்று" இத்யாதி வாக்யவிவரணம் - [illegible] இத்யாதி. [illegible]ன்றிக்கே - [illegible]மின்றிக்கே. இது சுத்தஸத்த்வமயமா யிருக்கிறது [illegible] வென்று விவக்ஷித்து, "ஷாட்குண்யவிக்ரஹம்" என்று [illegible], "பஞ்சஶக்திமயம்" என்று சொல்லுகிறபடி யெங்ஙனே? என்கிற ஶங்கையைப் [illegible] - திருமேனிதன்னை இத்யாதி வாக்ய சதுஷ்டயத்தாலே. பஞ்சஶக்திமய ம[illegible] - [illegible]. [illegible] "சுடர், ஒளி" என்றதுக்கு - மிகையாக அருளிச் செய்து, ஸௌந்தர்யலாவண்யங்களென்றார்த்தாந்தரம் - ரூபவாந் இத்யாதி. "[illegible]" இதி ஸுந்தரகாண்டே [illegible] [34-30]. சுடர் - அவயவஸௌந்தர்யம். ஒளி - பேரழகு. "தாஸாமாவிர பூத்[illegible]" இத்யாதி ஸ்ரீபாகவதே. "ஒளிமூர்த்தி" என்றவநந்தரம், "நெடியாய்" என்கை யாலே - ஸௌந்தர்யாதிகளுக்கு எல்லைகாணவொண்ணுதவனென்று விவக்ஷித்து, "உலப்பில்கீர்த்தி யம்மான்" என்றத்தோடே [illegible] ஸங்கதியருளிச்செய்கிறார் - கீழ்ச்சொன்ன இத்யாதி. கீழ்ச்

வோண்ணுதபடியா யிருக்கை. †"ஊைாநு" (மஹாந்) என்கிறபடியே, தோட்ட தோட்ட துறைதோறும்தரைகாணவோண்ணுதிருக்கிறபடி.[அடியேனுருயிரே]-வடிவழகையுங்குணங்களையுங்காட்டி, என்னை வ்யதிரேகத்தில் ஜீவியாதபடி பண்ணினவனே! "திருவேங்கடத்தெம்பெருமானே"-என்றத்தோடோக்கஇத்தைக்கூட்டக்கடவது. [திலதமுலகுக்காய்நின்ற] -சில ஸ்த்ரீகளுக்குப் பூர்ணமானஆபரணம்போலேயாயிற்று பூமிக்குத் திருமலே. [திருவேங்கடத்தெம்பெருமானே - அடியேனுருயிரே] - திருமலையிலே நின்று என்னுடைய சேஷத்வ முறையை யறிவித்து, உன்னுலல்லது செல்லாதபடி பண்ணினவனே! இவ்வளவும் வர, அவன் ஸ்வரூபம் சொன்னுர்; மேல், தம் ஸ்வரூபஞ் சொல்லுகிருர்: [குலதொலடியேன்]-குலமாகப் பழையதான அடியேன். இத்தால், தமக்கு ஓர் ஆதிக்யஞ் சொல்லுகிருரல்லர்; தம்முடைய அநந்யகதித்வஞ் சொல்லுகிருர். ஒருவற்கேயாயிருப்பாரை வேறு சிலர் நோக்குவா ரில்லையிறே. [உனபாதம் கூடுமாறு கூறுயே]- ஸ்வரூபம்இதுவான பின்பு, ஸ்வரூபாநுரூபமான பேற்றைப் பெறும்படி பண்ணியருளாய். [அடியேனுனபாதம் கூடுமாறு] - சேஷபூதனுனவன் உன்னைக்கூட என்னுமது "உனபாதங்கூட" என்றிறே. [உனபாதம் கூடுமாறு] - இவருடைய ஸாயுஜ்யமிருக்கிறபடி. [கூறுயே] - ஒருசொல் உனக்கு: எனக்கு ஸ்வரூபலாபங் கிடாய்.அவன் ஒருவார்த்தை யருளிச்செய்ய, தளப்பம் தீருமிறே இவர்க்கு. "ஊாஶ:"(மாஶுச:) என்னவேணும். (க)

இரண்டாம் பாட்டு.

கூறுய்நீறுய்நிலனுகிக் கோடுவல்லசுரர்குலமெல்லாம்
சீறுளரியுந்திருநேமிவலவா! தெய்வக்கோமானே!
சேறுர்சுனைத்தாமரைசெந்தீமலரும் திருவேங்கடத்தானே!
ஆறுவன்பிலடியேன் உன்னடிசேர்வண்ணம்அருளாயே.

ஆ.—(கூறுய்.) - ப்ரதிவந்யகங்களான பாபங்கள் போனுலன்றே என்னேடு ஸம்ஶ்லேஷிக்கப் பெறலாவதென்னில், ஸமாஶ்ரிதரான தேவர்களுக்கு விரோதி

சொன்னவென்றது - "உலப்பில்கீர்த்தி" என்கிறவிடத்திற்சொன்ன என்றபடி. ஆனுல் ஆத்மகுணங்கள் பரிச்சிந்நங்களாயிற்ருே? என்ன - மஹாந் இத்யாதி. "குணநாம்" என்று - குணங்களையடையச் சொல்லி, "மஹாந்" என்கையாலே - 'தொட்டதொட்டதுறைதோறும்' என்கிருர். "உலப்பில்கீர்த்தி, ஒளிமூர்த்தி"என்ற பதங்களைக்கடாக்ஷித்து இப்பதத்துக்கு ஸாவம் - வடிவழகையும் இத்யாதி. "அடியேனுருயிரே" என்றத்தை மேலிற்பதத்தோடேகூட்டி யர்த்தாந்தரம் - திருவேங்கடத்தெம்பெருமானே இத்யாதி செல்லாதபடிபண்ணினவனே என்னுமளவால். "ஆருயிரே" என்றத்தை - கீழேகூட்டுதல், மேலேகூட்டுதல். இப்பதத்திலே - அநந்யகதித்வந்தோற்றுமோ? என்ன, ஒருவற்கே இத்யாதி. அடியேன் என்றத்தையுங்கூட்டி யருளிச்செய்கிருர்-ஸ்வரூபம்இது இத்யாதி. உன்னைக் கூடுமொறென்னுதே, "உனபாதங்கூடுமாறு" என்பானென்? என்ன - சேஷபூதன் இத்யாதி. பெறுமாறென்னுதே, "கூடுமாறு" என்றதுக்குஸாவம் - இவருடைய இத்யாதி. ஸாயுஜ்யம்-மோக்ஷம். வார்த்தாமாத்ரம்போருமோ? என்ன - அவன்ஒருவார்த்தை இத்யாதி. தளப்பம்-தளும்புதலும், அலைச்சலும். அந்தவார்த்தையேதென்ன - ஊாஶ: இத்யாதி. அதாவது - "ஊாஶ:" என்ருல், "ஸ்ரீஶொஷிஷ்யாமி" என்றிருக்கலாமென்றபடி. (க)

† ஸ்ரீராமா.கிஷ்கி. 15, 21.

களான அசுரவர்க்கங்களைத் திருவாழியைக்கொண்டு நிரஸித்தாற்போலே என்பக்கலுள்ள ப்ரதிபந்தகத்தையும் நிரஸித்து, ஸ்வப்ரபையாலே திருமலையெல்லாம் விளங்கும்படி அத்யுஜ்ஜ்வலமாய் அதிசீதளமாய் ஸம்ருஷ்டநாளமாய் உத்புல்லமாயிருந்த அருணாரவிந்தப்ருந்தங்களாலே யலங்க்ருதமான திருமலையிலே நின்றருளின உன்திருவடிகளை, உபர்யுபரிவர்த்தமாந பகவத்விஷயாநுராக மஹார்ணவாந்தர்நிமக்நனான அடியேன் சேரும்படி க்ருபைபண்ணியருளாய்! என்கிறார்.

ஒ.—இரண்டாம்பாட்டில், ப்ரதிபந்தகங்கள் உண்டென்னில்; அவற்றையும் நீயேபோக்கி என்னை உன்திருவடிகளிலே சேர்த்தருளவேணுமென்கிறார்.

[கூறுயென்று தொடங்கி] - அயர்வறுமமரர்களதிபதியா யிருந்துவைத்து ஆஸ்ரிதர்க்காகத் திருவவதாரம் பண்ணியருளி ந்ருஸம்ஸராய் வலிபராயிருந்துள்ள அஸுரர்களுடைய குலங்கள் எல்லாவற்றையும் சிந்நமாய் தூளியாய் நிஸ்ஸேஷமாம்படி சீறி இரைபெறுதே ஜ்வலியாநின்றுள்ள திருவாழியை வலவருகே தரித்தருளி அவ்வவதாரத்தில் உதவப்பெறுதார்க்கும் ஆஸ்ரயிக்கலாம்படி அருக்கசமான சுனைகளிலே அக்நி ஜ்வலிக்கிறாப்போலே தாமரை மலர்ந்து விடவொண்ணுதபடி நிரதிஸயபோக்யமான திருமலையிலேவந்து நின்றருளினவனே! [ஆறுவன்பில்என்றுதொடங்கி] - ஏதேனும்பெற்றாலும் பர்யாப்திபிறவாதபடியான ஸ்நேஹத்தையுடையனான நான் உன்திருவடிகளைப்பெறும்படி,

ப.—அநந்தரம், அஸேஷவிரோதி நிவர்த்தகமான ஆயுதஔஜ்ஜ்வல்யத்தையுடைய நீ, அத்யந்தாபிநிவிஷ்டனான நான் உன்திருவடிகளைச் சேரும்படி க்ருபைபண்ணவேணுமென்கிறார்.

கொடு - க்ரூரராய், வல் - ப்ரபலரான, அசுரர் - அசுரர்களுடைய, குலம் - திரள், எல்லாம் - எல்லாம், கூறு ஆய் - நாநாவாக சிந்நமாய், நீறு ஆய் - தூளியாய், நிலன் ஆகி - தரைப்பட்டிருக்கச்செய்தே, (பின்னையும்), சீறு - சீறி, எரியும் - ஜ்வலியாநிற்கிற, திரு - ஸ்ரீயையுடைய, நேமி - திருவாழியை, வலவா - அடக்கியாளவல்ல ஸர்வஸக்தியாய், (இப்படி ஆஸ்ரிதவிரோதிநிரஸநத்தாலே), தெய்வம் - நித்யஸூரிகளுக்கு, கோமானே - நிர்வாஹகனாய்க்கொண்டு, சேறு - (தாமரையினுடைய பங்கஜத்வத்துக்கு நிமித்தமான)சேற்றாலே, ஆர் - பூர்ணமான, சுனை - அருக்கயத்திலே, தாமரை - சிவந்த தாமரையானது, செம் - சிவந்த, தீ - தீப்போலேயிருக்கிற நிறத்தை யுடைத்தாய்க்கொண்டு, மலரும் - மலரும்படியாயிருக்கிற, திருவேங்கடத்தானே - திருமலையிலே வர்த்திக்கிறவனே! ஆறு - ஒருகாலும்அளவுபடாத, அன்பு - ப்ரேமத்தை, இல் - உடையேனாய், அடியேன் - ஸேஷபூதனான நான், (ஸ்வரூபாநுரூபமான), உன் - உன், அடி - திருவடிகளை, சேர்வண்ணம் - சேரும்படி, அருளாய் - க்ருபைபண்ணியருளவேணும். நேமி வலவனென்று - வலத்திலேயுடையவனென்னவுமாம். ஆகவென்று - எச்சந்திருத்திச் சொல்லவுமாம்.

இ.—இரண்டாம்பாட்டில், ப்ரதிபந்தகங்களுண்டேயென்ன, உன்கையிலே திருவாழியிருக்க இவ்வார்த்தை சொல்லலாமோ? என்கிறார்.

[கூறாய்நீறாய்நிலனாகி] - சிந்நமாய் தூளியாய் வெறுந்தரையாம்படி நிஸ்ஸேஷமாக்கி. ஆகியென்றது - ஆக்கியென்னுதல், ஆம்படியென்னுதல். [கொடுவல்லசுரர்] - ந்ருஸம்ஸராய் ஆத்தைத்தலைக்கட்டிக்கொடுக்கும் வலியையுடையரான தம்ஷ்ட்ர

க்ருதிகள். [குலமெல்லாம்] - ஜாதியாக நிஶ்ஶேஷமாக முடித்து. [சீறுமெரியுந்திருநேமிவலவா] - அவ்வளவில் பர்யவஸியாதே, இரைபெறாத பாம்புபோலே சீறி ஜ்வலியாநிற்கிற திருவாழியை வலவருகேயுடையவனே! [தெய்வக்கோமானே] - கையுந்திருவாழியுமான சேர்த்தியழகைக்காட்டி நித்யவிபூதியை நிர்வஹிக்குமவனே! "அருளார் திருச்சக்கரத்தால் அகல்விசும்புநிலனுமிருளார்வினைகெடச்செங்கோனடாவுதிர்." விரோதிகளை நிரஸித்து நோக்கும்இவ்விபூதியை: கையுந்திருவாழியுமாயிருக்கிற சேர்த்தியழகைக்காட்டிஅநுபவிப்பிக்கும்அவ்விபூதியை. உனக்குஅமைந்தாரில்லாமையோ நீ இதெல்லாம் செய்தது? நாம் இப்போது அஸந்நிஹிதரன்றோவென்னில்; திருமலையிலேவந்து ஸுலபனாய்நின்றிலையோ? [சேறார் இத்யாதி] - அறுக்கயமான சுனைகளிலே அக்நி ஜ்வலிக்கிறாப்போலே தாமரை பரப்புமாறப்பூக்கையாலே நிரதிஶயபோக்யமான திருமலையிலே நித்யவாஸம்பண்ணுகிறவனே! [ஆறாவன்பிலடியேன்] - சுனைகளறுக்கயமாகிறாப்போலேயாயிற்று இவர்க்கு அன்புமாறாதே இருக்கிறபடி. க்ரமப்ராப்திபற்றாதபடியான ப்ரேமமிறே. [உன்னடிசேர்வண்ணமருளாயே] - உன்திருவடிகளிலே சேர்ந்து அடிமை செய்யும்படி என்பக்கலிலே க்ருபைபண்ணியருளவேணும். நீ வந்து திருமலையிலே அவஸரப்ரதீக்ஷனாயிருக்க "உன்னைப்பெறவேணும்" என்னும் ருசி எனக்குஉண்டாயிருக்க, நான் கூப்பிடுகை மிகையன்றோ?

ஈடு.—இரண்டாம்பாட்டு. 'கூடக்கடவீர்: அதுக்குஒருகுறையில்லை; ஆனாலும், ப்ரதிபந்யகங்கள் கனத்திராநின்றதே' என்ன, 'உன்கையில் திருவாழியிருக்க, நீ இங்ஙனே சொல்லலாமோ?' என்கிறார்.

[கூறாய்இத்யாதி] - நீ * கைகழலாநேமியானாயிருக்கிறதுக்கும் என்ப்ரதிபந்யகம் கிடக்கைக்கும் என்ன சேர்த்தியுண்டு? அப்ரதிஹதமான ஶக்தியையுடைத்தான திவ்யாயுதங்களானவை இவனுடைய ஸகலபாபங்களையும் போக்கி உத்தரிப்பிக்கக் கடவதாயிருக்கும்: அவனாலே வருமவையும் பரிஹரிக்கவற்றாயிருக்கும். "ரக்ஷந்திஸகலாபத்ப்ய:" (ரக்ஷந்திஸகலாபத்ப்ய:) இறே: ஸகலஶப்தத்துக்குள்ளே இவனுமுண்டே. இனித்தான், பாபங்கள் "ஸம்ஸாரேஷு நராதமாந் | க்ஷிபாமி" (ஸம்ஸாரேஷு நராதமாந் | க்ஷிபாமி)என்கிறபடியே இவ்வன்பக்கல் தோஷங்கொண்ட அவன் நிக்ரஹத்தாலே வருமவையிறே; அங்ஙனேவருமவையும் பரிஹரிக்கக்கடவதாயிருக்கும் இவை. அது

இரண்டாம்பாட்டு.—கூறாய் இத்யாதி. "திருநேமிவலவா" என்றத்தைக் கடாக்ஷித்தவதாரிகை - கூடக்கடவீர் இத்யாதி.

"கூறாய் நீறாய்" என்று தொடங்கி, "திருநேமிவலவா" என்னுமளவுக்கு ஸம்பாவம் - நீகைகழலா இத்யாதி. நேமி - திருவாழி. திவ்யாயுதங்கள் விரோதியைப்போக்கி ரக்ஷிக்குமோ? என்ன, "சுவ்ராஹதாநி" என்கிற ஶ்லோகத்தை யுட்கொண்டு அருளிச்செய்கிறார் - அப்ரதிஹதமான இத்யாதி. பிறரால்வரும் ஆபத்தையேயன்றிக்கே, அவனால்வரும் ஆபத்தையும் போக்குமென்கிறார் - அவனாலே இத்யாதி. "அவனாலேவருமவற்றையும்" என்றதுக்கு ஶப்தமேதென்ன - ரக்ஷந்தீத்யாதி. "சுவ்ராஹதாநிக்ருஷ்ணஸ்ய சக்ராதீந்யாயுதாநிது | ரக்ஷந்திஸகலாபத்ப்யோ யேந விஷ்ணுருபாஸித:" இதி ஸ்ரீ விஷ்ணுதர்மே ஸப்ததிதமேத்யாயே. ஸர்வபூத ஸுஹ்ருத்தானவன் ஆபத்தைப் பண்ணலாமோ? என்ன - இனித்தான் பாபங்கள் இத்யாதி. இனித்தானென்றது-வார்த்தைப்பாடு. அவனால்வரும்ஆபத்தையும் இவை பரிஹரிக்கைக்கு அடியேதென்ன-அதுக்கு அடி இத்

க்கு அடி, அவன்அடியில்பண்ணின அநுக்ரஹத்தையேநினைத்திருக்கையாலே. இனித்தான், "இவற்றின் தோஷங்கண்டு நாம் ஔபாதிகமாகச் சீறினபோதும் நீங்கள் கைவிடாதே, நாம் அடியிற்பண்ணின ஸ்வாபாவிகமான நம்முடைய ப்ரஸாதத்தைப்பார்த்து நீங்கள் ரக்ஷியுங்கோள்" என்று அவன்பக்கலிலே பெற்றுடையராயிருப்பர்களிறே. * அருளார் திருச்சக்கரமிறே. பண்டே அவனைக் கைகண்டிருக்குமிறே. அவன் அருள்மறுத்தபோதும் இங்குத்தைஅருள் மாறாதேயிறே யிருப்பது. ஆகையாலே, அவன்ப்ரஸாதம் பெற்றவர்கள் திருவாழியில் கூர்மையையிறே தங்களுக்குத் தஞ்சமாக நினைத்திருப்பது. [கூறாய்நீறாய் நிலனாகி] - திருச்சரம்போலே "ஸிஹம்ஹிஹநு" (சிங்நம்பிங்நம்)என்கிற பரும்பணிக்கு விட்டுக்கோடாத திருவாழி. திருச்சரத்துக்கு ஒருகுணஸ்பர்ஶமுண்டேன்கிறார், இத்தைப் பற்ற. முற்பட, இருதுண்டமாக்கிப் பின்னைநீறாக்கிப் பின்னை அதுகாணவொண்ணாதபடி வெறுந்தறையாக்கும். [ஆகி] - ஆக்கியென்னுதல், ஆம்படியென்னுதல். [கோவேல்லசுரர்] - சீறுகைக்குஹேதுஇருக்கிறபடி.க்ரூரமான செயல்களைச் செய்யக்கடவராய், ஒருவரால் வெல்லவொண்ணாதபடி வலியையுடையரான அசுரர். [குலமேல்லாம்] - ஒருவன் செய்த தப்பே ஜாதியாக முடிக்கவேண்டும்படி யிருக்கையாலே, ஒருவரையும் தப்பாமல் கோலிமுடித்தபடி. அநுகூலரோடு ப்ரதிகூலரோடுவாசியற இவன் வளைவிலகப்படாதாரில்லை. "வளைவாய்த் திருச்சக்கரத் தெங்கள்வானவனார்" என்று - அவன் வளைவிலே யகப்பட்டுப் பின்பிறே மேல்போயிற்று. கூறாய்நீறாய் நிலனாகைக்குப்பண்ணின வ்யா

யாதி. பண்ணின அநுக்ரஹமென்றது - "க்ஷிதௌ விஶேஷிதாந்" இத்யாதிப்படியே அடியிலே சேதநரிடத்தில் பண்ணின ஸ்வாபாவிக க்ருபையென்றபடி. பரிஹாராந்தரம் - இனித்தான் இவற்றின் இத்யாதி. அதாவது - அடியிலே சொல்லிவைக்குமே, அத்தைக்கொண்டு ரக்ஷிப்பர்களென்றபடி. "நாம் சீறினபோதும் நீங்கள் கைவிடாதே ரக்ஷியுங்கோள்" என்றதுக்குப்ரமாணம் - "லக்ஷ்மீ: ... புருஷகாரரூபநிதிர்ப்புஷ்டாவதாரஸுஷ்டு ஹம் । ஶௌவிச்ஶதம் ஹ்ருதநாந்யாலக்ஷணம் ஹரிவேஸ:" என்றது. இதில் பிராட்டிக்கு புருஷகாரத்வஞ் சொன்னது - நித்யஸூரிகளுக்கும் உபலக்ஷணம். மமாபிச மதமென்கையாலே - அவன் முன்னே சொல்லிவைத்தது ஸித்தம். அவன் சீறினபோதும் ரக்ஷிக்கும்படி இவற்றுக்கு க்ருபை விஞ்சியிருக்குமோ? என்ன - அருளார் இத்யாதி. அருளால் பூர்ணமான திருவாழி இத்யர்த்த:. திருவிருத்தம். அவன் இவர்கள்பக்கல் பண்ணின அநுக்ரஹத்தை இவையறிந்தபடியென்? என்ன, சாடு-பண்டே இத்யாதி. "அருளார்" என்றதுக்குபாவம்- அவன்அருள் இத்யாதி. ஃபலிதம் - ஆகையாலே இத்யாதி. "கூறாய், நீறாய்" என்கிற பதத்வயத்தாலே - திருச்சரங்களைப்பற்ற இவற்றுக்கு வ்யாவ்ருத்தியுண்டென்கிறார் - திருச்சரம்போலே இத்யாதி. திருச்சரத்துக்குப் பரும்பணி வருகைக்குஅடியேதென்ன, ரஸோக்தி - திருச்சரத்துக்கு இத்யாதி. குணமென்று - நாணுக்கும், க்ருபாகுணத்துக்கும் பேர். திருவாழியைப்பற்ற க்ருபாகுணமுண்டாகையாலே ஸ்ரீசார்ங்கம் "ஸிஹம்ஹிஹநு" இத்யாதிப்படியே பர்யாயேண ஹிம்ஸித்ததென்றபடி. பரும்பணிக்கு விட்டுக்கொடாத ப்ரகாரத்தை விசதீகரிக்கிறார் - முற்பட இத்யாதி. இவர்கள் பலத்தையும் க்ரௌர்யத்தையும் அருளிச்செய்கைக்கு ப்ரயோஜநம் அருளிச்செய்கிறார் - சீறுகைக்கு இத்யாதி. குலமெல்லாம் நிரசிக்கைக்கு ஹேது அருளிச்செய்கிறார் - ஒருவன்செய்த இத்யாதி. "திரு" என்று அழகைச் சொல்லுகையாலே அநுகூலரும், "நேமி" என்கையாலே ப்ரதிகூலரும் அகப்படுவர்களென்கிறார் - அநுகூலரோடு இத்யாதி. அநுகூலர் திருவாழிக்கு அகப்படுவர்களோ? என்ன - வளைவாய் இத்யாதி. வளைந்தவாயுடைத்தான திருவாழியையுடைய எங்கள் ஸ்ரீவைகுண்டநாதருடைய இத்யர்த்த:. திருவிருத்தம் எழுபதாம்பாட்டு. 'மேல்போயிற்று', "வானவனார்முடிமேல்" என்று - மேலேபோய் ஈடுபட்டதென்றபடி. "சீறா" என்றது - சீறியென்றபடி. "எரியும்" என்கிறவர்த்தமா

பாரமேதென்னில்,—[சீறுவேரியும்] - இவை முடிந்துபோகச்செய்தேயும் கொண்ட குதை மாறாதே, இரைபெறாப்பாம்புபோலே ஜ்வலியாநிற்கும். [திருநேமிவலவா] - நீ வலவருகே திருவாழியைத் தரித்திருக்க, நான் க்லேஶத்தை தரித்திருப்பதே! [தேய்வக்கோமானே]- இப்படி ஆஶ்ரிதர்க்காகவந்து படுகிறவன் ஆளில்லாதவனல்லகிடீர்! * அயர்வறுமமரர்களதி பதிகிடீர். அங்குத் கையுந்திருவாழியுமான அழகையநுபவிப்பாரேயிறே யுள்ளது; இருதுண்ட மாகவிடுகைக்கு ஆளுள்ளது இங்கேயிறே. இரண்டுவிபூதியையும் ஆளுவது திருவாழி யாலே காணும்! ''அகல்விசும்பும்நிலனுமிருளார்வினைகெடச் செங்கோல்நடாவுதிர்'' என் கிறபடியே; அழகாலே அங்குள்ளாரையாளும்: கூர்மையாலே யிங்குள்ளாரையாளும். அங்குக் கூர்மை குமரிருக்கும்: இங்குஅழகு குமரிருக்கும். அங்குள்ளார்க்குக் கைமேலே ஜீவநமாயிருக்கும்: இங்குள்ளார்க்கு விரோதியைப்போக்கிப் பின்னையாயிற்று ஜீவநமிடுவது. அங்குள்ளார் அவன்கையே பார்த்திருக்கையாலே, இவர்களுக்குஅதில்லையே. என்? நாம்இப் போது அஸந்நிஹிதரன்றோ என்னில்; [சேறார்சுனையித்யாதி] - சேறுகளார்ந்திருந்துள்ள சுனைகளிலே தாமரைகளானவை செந்தீப்போலே மலராநிற்கும். எண்ணெயாலே எரியும் விளக்கொழிய, நீராலே எரியும் விளக்குக்கண்டு அநுபவிக்கக்காணும் இவர்ஆசைப்படு கிறது. நீரிலே நெருப்பெழுந்தாற்போலேயிறே யிருக்கிறது! [ஆறாஅன்பிலடியேன்] -இவர்க்கு நிரூபகம் இருக்கிறபடி. சுனைகளில் நீர் வற்றிலாயிற்று இவருடைய அன்புவற்றுவது. †மயர் வறமதிநலமருள அதுஅடியாக வந்த அன்பிறே. ஊற்றுடைத்தே. க்ரமப்ராப்திபற்றாத

ஞர்த்தம் - இவைமுடிந்து இத்யாதி. குதை - உத்யோகம். ''நீ கைகழலாநேமியானாய்'' இத்யாதியால் அடியிற்சொன்னவர்த்தம், ''திருநேமிவலவா'' என்றபதத்தைநோக்கிச் சொன்னேனென்னுமிடந் தோற்ற அருளிச்செய்கிறார் - நீவலவருகே இத்யாதி. இப்போது ''தெய்வக்கோமான்'' என்றதுக்கு ப்ரயோஜநம் - இப்படி இத்யாதி. திருநேமிவலவனான ஆகாரத்தை நித்யஸூரிகளை யநுபவிப்பிக்கு மவனே என்றர்த்தாந்தரம் விவக்ஷித்து, ஆனால் அங்கு விரோதியில்லையோ? என்ன - அங்குக்கையும் இத்யாதி. ஸூசிதம் - இரண்டுவிபூதியையும் இத்யாதி. இதுக்கு ப்ரமாணம் - அகல்விசும்பும் இத் யாதி. 'அருளார்திருச்சக்கரத்தால்' இத்யாதி. க்ருபையால்பரிபூர்ணனான திருவாழியாலே. 'அகல்விசும் பும்நிலனும்' - பரந்தஆகாசமும் பூமியும். 'இருளார்வினைகெடச்செங்கோல்நடாவுதிர்' - மோஹாந்தகார ஸஹசரிதமான விபரீதவ்ருத்தங்கள்போம்படி ஸங்கல்பரூபமான ஆஜ்ஞையை நடத்தாநிற்புதிர் இத் யர்த்தः ஆளும்ப்ரகாரத்தைக்காட்டுகிறார் - அழகாலே இத்யாதி. விவரணம் - அங்குக்கூர்மை இத் யாதி. ரஸோக்தி - அங்குள்ளார்க்கு இத்யாதி. இவ்விரண்டுக்கும் ஹேதுவேதென்ன - அங்குள்ளார் அவன் இத்யாதி. 'அவன்கை பார்த்திருக்கையாலே' என்றது-அவன் கையுந்திருவாழியுமான அழகைப் பார்த்திருக்கையாலே என்றபடி; தம்முடைய யத்நத்தைவிட்டு அவன்கை பார்த்திருக்கையாலே என் றும். ''சேறார்சுனைத்தாமரை செந்தீமலரும்'' என்கிறவருடைய பாவம் - எண்ணெயால் இத்யாதி. ''சுனைகளிலே தாமரை செந்தீமலரும்'' என்றதிலே ரஸோக்தி - நீரிலே இத்யாதி. அன்றிக்கே, நீராலேயெரியும் விளக்குமுண்டோ? என்ன - நீரிலேநெருப்பு இத்யாதி. ஆறாவன்பிலடியேன் - ஆறாதவன்பிலேயானவடியேன். அன்புடையவடியேனென்றபடி. இப்படி விசேஷிக்கிறதுக்குபாவம்- இவர்க்கு இத்யாதி. ''சேறார்சுனைத்தாமரை'' என்றஅநந்தரம் ''ஆறாவன்பில்'' என்றபதச்சேர்த்திக்கு பாவம் - சுனைகளில் இத்யாதி. அன்பு வற்றாமைக்கு ஹேதுவேதென்ன-மயர்வற இத்யாதி. ''சுனை'' என்கிறபதத்தோடே சேர்த்தியாகச்சொல்லுகைக்கு, சுனைவற்றாதோ? என்ன - ஊற்றுடைத்தே என்கிறார். ''ஆறாவன்பு'' என்றதுக்கு - நித்யமானவன்பு என்று கீழ் அருளிச்செய்து, ''மெய்யமர் காதல்'' என்கிறபடியே அவனை யநுபவித்தாலொழிய ஆறாதவன்பு என்று அர்த்தாந்தரம்-க்ரமப்ராப்தி

† 'மயர்வற மதிநலமருளினன் என்று அருளடியாக' என்று பாடாந்தரம்.

படியான ப்ரேமமிறே. [உன்னடிசேர்வண்ணமருளாயே] - உன்திருவடிகளிலே சேர்ந்து அடிமைசெய்யும்படி என்பக்கலிலே க்ருபைபண்ணி யருளவேணும். நீ திருமலையிலே நிற்கிற நிலைக்கு ப்ரயோஜநம்பெறப் பாராய்! என்அன்புக்கு இரையிடப் பாராய்!! (உ)

மூன்றும் பாட்டு.

வண்ணமருள்கொளணிமேகவண்ணா! மாயவம்மானே!
எண்ணம்புகுந்துதித்திக்கும்அமுதே! இமையோரதிபதியே!
தெண்ணலருவிமணிபொன்முத்தலைக்கும் திருவேங்கடத்தானே!
அண்ணலே! உன்னடிசேர †அடியேற்காவாவென்னாயே.

ஆ.—(வண்ணமருள்கொள்.) - நிர்ஹேதுகமாகச்செய்யக் கடவதோ? என்னில்; உன்னோடு ஸம்ஶ்லேஷிக்கைக்கு * அயர்வறுமமரர்கள் உளராயிருக்கச்செய்தே கேவலக்ருபையாலே நிரதிஶய ரமணீய நீலமேக ஸத்ருஶ ஆஶ்சர்யபூததிவ்யரூபவிசிஷ்டனாய்க்கொண்டு என்னெஞ்சுநிறையப் புகுந்து எனக்குஇனியையானாற் போலே, இன்னம் உன்க்ருபையாலே, ஸுப்ரஸந்ந ரமணீய ஸலிலஸரித்தரங்க பரம்பராநீதமான விமலருசிவிஷயமணிகநகமௌக்திக நிகரங்களாலே விராஜமாநமான திருமலையிலே நின்றருளின உன் திருவடிகளிலே, பிரானே! என்னைச் சேர்த்தருளவேணுமென்கிறார்.

ஒ.—மூன்றாம்பாட்டில், நீர் ஒருபத்தம்பண்ணாதிருக்க, நீர் சொல்லிற்றெல்லாம் செய்யமுடியுமோ? என்னில்; உனக்குவிலக்ஷணரான போக்தாக்களுண்டாயிருக்க முன்னம்என்னை விஷயீகரித்தாற்போலே, கேவலக்ருபையாலே மேலும் என் அபேக்ஷிதம் செய்யவேணும் என்கிறார்.

[வண்ணமென்று தொடங்கி] - நிறம்கண்டார் பிச்சேறும்படியான அழகிதான மேகம்போலேயிருக்கிற திருநிறத்தையுடையையாய் அத்யாஶ்சர்ய குணசேஷ்டிதங்களையுமுடையையாய் * அயர்வறுமமரர்களதிபதியாய் வைத்து தெளிந்து நிரதிஶய போக்யமான திருவருவிகள் மாணிக்கமும் பொன்னும் முத்துமாகக்கலந்து பார்ஶ்வங்களிலே எறட்டாநின்றுள்ள திருமலையிலே நின்றருளி என்னை அடிமைகொண்டருளுவதும் செய்து என்னுடைய ஹ்ருதயத்திலேபுகுந்து தித்திக்கிற நிரதிஶயபோக்யனே! [உன்னடிசேரவென்று தொடங்கி] - உன்னுடைய திருவடிகளைப் பெறும்படி அடியேனுக்கு க்ருபைபண்ணியருளவேணும்.

ப.—அநந்தரம், உன்னுடைய ரூபத்தாலும் குணத்தாலும் இனிமையாலும் ஸூரிகளுக்கு உத்துங்காநுபாவ்யனாயிருக்கிற நீ, அபேக்ஷாநிரபேக்ஷமாகத்திருமலையிலே ஆஶ்ரயணீயனாய் வந்தவோபாதி அடியோங்களுக்குஇரங்கி அருளவேணுமென்கிறார்.

இத்யாதி. ''திருவேங்கடத்தானே'' என்றத்தோடேகூட்டிஸாவம் - நீ திருமலையிலே இத்யாதி. ''ஆரு அன்பில்'' என்றத்தோடேகூட்டிஸாவம் - என்அன்புக்கு இத்யாதி. 'கொடுவல்லசுரர்குலமெல்லாம் - கூறாய் நீறாய் நிலனாம்படி சிறியெரியாநின்றுள்ள திருநேமி' என்று தொடங்கி, 'அருளாய்' என்றந்வயம். (உ)

---

† 'அடியோர்க்கு' என்றும் பாடம்.

வண்ணம் - நிறத்தில், மருள் - பிச்சு, கொள் - ஏறும்படியான, அணி - அழகை யுடைத்தாயுள்ள, மேகம் - மேகம்போன்ற, வண்ணா - வடிவையுடையனாய், மாயம் - ஆஶ்சர்யாவஹமான குணங்களால், அம்மானே - ஸர்வாதிகனாய், (புஜிக்கவொட்டாதபடி), எண்ணம் - நெஞ்சுக்குள்ளே, புகுந்து - புகுந்து, தித்திக்கும் - ரஸிக்கும், அமுதே - அம்ருதமாய், (இந்த விக்ரஹ குண ஸாரஸ்யங்களை), இமையோர் - நித்யஸூரிகளுக்கு அநுபவிப்பிக்கும், அதிபதியே - மேன்மையையுடையனாய், தெள் - தெளிந்து, நல் - ஶ்லாகநீயமான, அருவி - அருவிகள், மணி - மணியையும், பொன் - பொன்னையும், முத்து - முத்தையும், அலைக்கும் - அலைக்கும், திருவேங்கடத்தானே - திருமலையிலே ஸந்நிஹிதனாய், அண்ணலே - அஸாதாரண ஶேஷித்வத்தை ப்ரகாசிப்பித்துக்கொண்டு நிற்கிறவனே! உன் - உன்னுடைய, அடி - ப்ராப்தமான திருவடிகளை, சேர - சேரும் படி, அடியோர்க்கு - ஶேஷபூதரான எங்களுக்கு, ஆஆ - ஐயோ! ஐயோ! என்னாய் - என்று இரங்கியருளவேணும்; வண்ணமருளென்று - ஔதாரஸ்வபாவமென்றுமாம்.

இ.—மூன்றாம்பாட்டில், நீர் ஒரு யத்நம்பண்ணாதிருக்க இது கிட்டுமோ? என்ன, உனக்கு விலக்ஷணரான ஶ்ரோதாக்களுண்டாயிருக்கத் திருமலையிலேவந்து உன்னுடைய ரஸ்யதையையும் ஶரண்யதையையும் அறிவித்தது நான் என்ன யத்நம் பண்ணி? அப்படியே மேலும் செய்யவேணுமென்கிறார்.

[வண்ணமருள் கொளணி மேகவண்ணா]-நிறமானது கண்டார்நெஞ்சை யறிவு கெடுக்கும்படியான அழகிய மேகம்போலேயிருக்கிற திருநிறத்தை யுடையவனே! வண்ணமுண்டு - படி, ஸ்வபாவம்; அது அருள்கொண்டிருக்கும்; கொள்வார் அளவன்றிக்கே கொடுக்கும் ஸ்வபாவனாயிருக்கையென்றுமாம். [மாயவம்மானே] - ஆஶ்சர்ய மான குணசேஷ்டிதங்களையுடைய ஸர்வேஶ்வரனே! [எண்ணமித்யாதி] - உண்டால் ரஸிக்கையன்றிக்கே நினைக்க ரஸிக்கும் அம்ருதமானவனே! [இமையோரதிபதியே] - நித்யஸூரிகளுக்கு நிர்வாஹகனானவனே! தன் ஶ்ரோதாக்களை அநுபவிப்பாரில்லாமை வந்தாயோ? [தெண்ணல் இத்யாதி] - நித்யஸூரிகள் நித்யாநுபவம் பண்ணாநிற்கவிறே என்னை விஷயீகரிக்கத் திருமலையிலேவந்தது? தெளிந்து நன்றானவருவி மணியை யும் பொன்னையும் முத்தையும் கொழித்துக்கொண்டுவந்து எறட்டாநின்றுள்ள திரு மலையை வாஸஸ்தாநமாக வுடையவனே! [அண்ணலே] - திருமலையிலேவந்து உன் ஶேஷித்வத்தை யறிவித்தவனே! [உன்னடிசேர] - உன்திருவடிகளை நான் கிட்டும் படி. [அடியோர்க்கு] - அடியோமுக்கு; முறையறிந்த எங்களுக்கு. [ஆவாவென் றாயே] - ஐயோ! ஐயோ! என்று க்ருபைபண்ணி யருளவேணும். வடிவுஅது, குண சேஷ்டிதங்கள்அவை, ரஸ்யதை அது, மேன்மை அது ஸௌலப்யம்அது: இப்படிப்பட்ட உன்னோடு உண்டான முறையை அறிவித்தால் ஆறியிருக்கலாமோ?

ஈடு.—மூன்றாம்பாட்டு. "அருளாய்" என்றீர்; இங்ஙனே நினைத்தபோதாக அருளப்போமோ? என்ன: வ்யதிரிக்தவிஷயங்களில் போகாதபடியான ஜ்ஞாநலாபத்தைப் பண்ணித்தந்த உனக்கு, ப்ராப்திபண்ணித்தருகை பெரியபணியோ? என்கிறார். என்னால் வந்த குறையறுத்த உனக்கு, உன்னால் வரும் குறையறுக்கை பெரியபணியோ?

மூன்றாம்பாட்டு.—வண்ணம் இத்யாதி. "எண்ணம்புகுந்துதித்திக்கும் அமுது" என்றத் தைப்பற்ற அருளிச்செய்கிறார் - வ்யதிரிக்த இத்யாதி. ஜ்ஞாநலாபத்தைப் பண்ணித்தந்தவென்றது - "அண்ணலே" என்றத்தைப்பற்ற. விவரணம் - என்னால் இத்யாதி.

[வண்ணம் இத்யாதி] - வண்ணமானது - ப்ரகாரமானது, அருள்கொண்டிருப்பதாய், தர்சநீயமான மேகம்போன்ற வடிவையுடையவனே! அன்றிக்கே, வண்ணமானது - வடிவானது, கண்டார்நெஞ்சை இருளப்பண்ணக்கடவதாயிருக்கை என்றுமாம்; * மைப்படிமேனியிறே. அங்ஙனுமன்றிக்கே மேகத்தினுடைய அகவாய் கல்லென்னும்படியாயிற்றுத் திருமேனியிலுண்டான ப்ரஸாதாதிசயம் இருக்கிறபடி. [மாயவம்மானே] - வெறும் வடிவழகே யன்றிக்கே, ஆஸ்சர்யமான குணசேஷ்டிதங்களால் பெரியனானவனே! [எண்ணம்புகுந்துதித்திக்குமமுதே] - விலக்ஷண ஜந்மத்தே பிறந்து ஒருஸாதநாநுஷ்டாநம்பண்ணி அத்தாலே பெற்று புஜிக்கும்போது இனிதாகையன்றிக்கே, இன்னார்க்கு என்றன்றிக்கே மநோரதமாத்ரத்திலேதானே வந்துபுகுந்து போக்யமாகை. * உள்ளுந்தோறுந்தித்திக்கும் அமுதிறே! [இமையோரதிபதியே] - மஹாவ்ரதம்போலே இவ்வம்ருதமே ஜீவநமாக இருக்குமவர்கள். [தெண்ணலருவியித்யாதி] - தெளிந்து நன்றான அருவிகளானவை, விலக்ஷணமான மாணிக்கங்களையும் பொன்களையும் முத்துக்களையும் கொழித்து எறட்டுகிற திருமலையிலே நின்றருளுகிற ஸர்வேஸ்வரனே! [அண்ணலே] - திருமலையிலே வந்துநின்று எனக்கு உன் சேஷித்வத்தை உதறிப்படுத்தவனே! 'இமையோர் அதிபதியாயிருந்துவைத்து வண்ணமருள்கொளணிமேகவண்ணனாய் மாயவம்மானாய்த் தெண்ணலருவி மணிபொன் முத்தலைக்கும் திருவேங்கடத்தானாய் அண்ணலாய்க்கொண்டு - எண்ணம்புகுந்து தித்திக்குமமுதே' என்கிறார். [உன்னடிசேரவடியேற்காவாவென்னாயே] - கிட்டி நின்று முறையை யறிவித்த நீ, ப்ராப்தியையும் பண்ணித் தாராய்! உன்திருவடிகளை

முந்தினவர்த்தம்: "வண்ணம்" என்று - ஸ்வபாவமாய், கொள்கை - உடைத்தாகையாய், க்ருபையோடேகூடின, ஸ்வபாவத்தையுடைத்தாய் தர்சநீயமான மேகம்போன்ற வடிவையுடையவனே என்று. "அருள்கொள் - வண்ணம்" என்று - மேகத்துக்கு விசேஷணமாதல், க்ருபையோடேகூடின ஸ்வபாவத்தையுடையனென்று அவனுக்குவிசேஷணமாதல். த்விதீயார்த்தத்துக்கு, "வண்ணம்" என்று - வடிவாய், வடிவாலே, மருளை - ப்ராந்தியை, விளைக்கக்கடவதாய், தர்சநீயமான மேகம்போன்ற வடிவையுடையவனே! என்றபடி. "மருள்கொள்-வண்ணம்" என்று அந்வயிப்பது. இப்போதும், மேகத்துக்குவிசேஷணமாதல்; எம்பெருமானுக்கு விசேஷணமாதல். மருட்சியைக்கொள்ளுகையாவது - கொள்ளும்படி பண்ணுகை. இதுக்குப்ரமாணம் - மைப்படி இத்யாதி. கண்டார்நெஞ்சிலே மையல்படியும்படியான மேனி என்றபடி. அன்றிக்கே, கறுப்புமாத்ரத்துக்கு ப்ரமாணமாதல். த்ருதீயார்த்தத்துக்கு, க்ருபாஸ்வபாவத்தையுடைத்தாய் தர்சநீயமான மேகம்போன்றவடிவையுடையவனென்றபடி. இப்போது, "அருள்கொள் - வண்ணம்" என்றது - திருமேனிக்கு விசேஷணம். "அருள்கொள் - வண்ணம்" என்று - திருமேனியின் ப்ரஸாதாதிசயஞ்சொல்லுகையாலே, மேகத்தினகவாய் கல்லென்னும்படி இருக்குமென்றது விவக்ஷை. "எண்ணம்" என்று - மநோரதமாத்ரத்திலே என்றபடி. "எண்ணம்புகுந்து தித்திக்குமமுது" என்கையாலே - தேவர்கள் அம்ருதத்தில் வ்யாவ்ருத்தியருளிச்செய்கிறார் - விலக்ஷண இத்யாதி. இன்னாருடைய எண்ணத்திலேயென்று விசேஷியாதே ஸாமாந்யேந சொல்லுகையாலே அருளிச்செய்கிறார் - இன்னார்க்கு என்றன்றிக்கே இத்யாதி. அப்படி மநோரதமாத்ரத்திலே போக்யமாயிருக்குமோ? என்ன - உள்ளுந்தோறும் இத்யாதி நினைக்குந்தோறும் இத்யர்த்தः. "தித்திக்குமமுதே" என்றவநந்தரம் "இமையோரதிபதி" என்றதுக்கு பாவம் - மஹாவ்ரதம்போலே இத்யாதி. "நல்" என்கிறத்தை - மாணிக்யாதிகளோடுங்கூட்டி 'விலக்ஷணமான மாணிக்கங்களையும்' என்கிறார். "திருவேங்கடத்தானே - அண்ணலே" என்றதுக்கு தாத்பர்யாந்தரம் - திருமலையிலே இத்யாதி. உதறிப்படுத்தவனென்றது - நிஸ்ஸம்ஸயமாக்கினவன் என்றபடி; ஸ்த்திரீகரித்தவனென்றபடி. அவதாரிகையிலே அருளிச்செய்ததுக்குச்சேர அந்வயங்காட்டுகிறார் - இமையோரதிபதியாய் இத்யாதி. "அண்ணலே, உன்னடிசேர"

ப்ராபிக்கும்படி, அநந்யகதியான எனக்கு ஐயோ! ஐயோ! என்று உயையைப்பண்ணாய்! உன்னடி யன்றே ப்ராபகமுமாய் ப்ராப்யமுமாய் போக்யமுமான திருவடிகளைச் சேரும்படி க்ருபைபண்ணியருளாய்! (௫)

நான்காம் பாட்டு.

ஆவா! என்னாதுஉலகத்தையலைக்கும் அசுரர்வாணாள்மேல்
தீவாய்வாளிமழைபொழிந்தசிலையா! திருமாமகள்கேள்வா!
தேவா! சுரர்கள்முனிக்கணங்கள்விரும்பும் திருவேங்கடத்தானே!
பூவார்கழல்கள் அருவினையேன் பொருந்துமாறுபுணராயே.

ஆ.—(ஆவாஎன்னாது.) - நிர்க்ருணரான அஸுரராலே உபத்ருதமான லோகத்தினுடைய வ்யஸநம் பொறுக்கமாட்டாமை, அவ்வஸுரருடல் ஶாரக்நியாலே உக்ரமாம்படி அவர்கள்ப்ராணன்கள்மேலே ஶரவர்ஷத்தை வர்ஷித்து லோகத்தை நிருபத்ரவமாக்கினாற்போலே, நித்யஸித்தபுருஷர்களுக்கும் ஸ்ப்ருஹணீயமான திருமலையிலே பிராட்டியோடே கூடநின்றருளின உன்னுடைய நிரவதிகபோக்யமான திருவடிகளைச் சேருகைக்கு எனக்கென்னவே அபூர்வமாயிருப்பதொருபாயத்தைப் பரிகல்பித்து, அவ்வுபாயத்தாலே என்னைச்சேர்த்தருளி, அடியேனுடைய ஸமஸ்ததுக்கத்தையும் போக்கியருளவேணுமென்று ப்ரார்த்திக்கிறார்.

ஒ.—நாலாம்பாட்டில், பண்டு பரிக்லுப்தமான அவற்றில் ஒருபாயமும் என்பக்கலில்லை; எனக்கென்ன ஒருபாயம் கண்டு தந்தருளவேணுமென்கிறார். வரையாதே எல்லாருடைய ப்ரதிபந்தகங்களையும் போக்கி ரக்ஷிக்கும் ஸ்வபாவனானநீ, என்னை உன்திருவடிகளிலே சேரும்படி பார்த்தருளவேணுமென்கிறார் என்றுமாம்.

[ஆவா வென்றுதொடங்கி] - ஐயோ ஐயோ என்று உயைபண்ணாதே லோகத்தை நலியும் அஸுரருடைய ஆயுஸ்ஸிலே நெருப்பை உமிழ்கிறஶரவர்ஷத்தை வர்ஷிக்கும் ஸ்ரீஶார்ங்கத்தையுடையவனே! [திருமாமகள்கேள்வா] - விரோதிநிரஸநம் பண்ணிற்று, பிராட்டிக்கு இனிதாகைக்கு என்றுகருத்து. [தேவா] - அஸுரநிரஸநம் பண்ணுகையாலே வந்த வீரஸ்ரீயாலே விளங்காநின்றுள்ளவனே! [சுரரென்று தொடங்கி] - தங்களபிமதங்கள் கிடைக்குமிடமென்று தேவர்களும் ரிஷிகணங்களும் விரும்பும் திருமலையிலே நின்றருளினவனே! நிரதிஶயபோக்யமான உன் திருவடிகளை சுவட்டை யறிந்துவைத்தும் அநுபவிக்கப்பெறாதபடிக்கூடான பாபத்தைப் பண்ணின நானும் பெறும்படி பண்ணியருளவேணும்.

ப.—அநந்தரம், ஜகத்துக்கு விரோதிகளானாரை யழியச்செய்யும் ஸ்ரீமத்தையையுடைய நீ, உன் நிரதிஶயபோக்யமான திருவடிகளை நான் கிட்டும்படி பண்ணியருளவேணுமென்கிறார்.

உலகத்தை - லோகத்தை, ஆஆ - ஐயோ! ஐயோ!, என்னாது - என்றிரங்காதே, அலைக்கும் - நலிந்தலைக்குமவர்களான, அசுரர் - ஆசுரப்ரக்ருதிகளுடைய,

---

என்றதுக்குபாவம் - கிட்டிநின்று இத்யாதி. ஶப்தார்த்தம் - உன்திருவடிகளை இத்யாதி. 'உன்னடியன்றே' என்றதின் விவரணம் - ப்ராபகமுமாய் இத்யாதி. ப்ராப்யமுமாயென்றது - ப்ராப்தமுமாயென்றபடி.

(௩)

வாணுள்மேல் - ப்ராணன்விஷயமாக, தீவாய் - அக்நிமுகமான, வாளி - அம்புகளை, மழை - மழைபோலே, பொழிந்த - சொரிகிற, சிலையா - ஸ்ரீசார்ங்கத்தையுடையையாய், திருமாமகள் - அந்தவிரோதிநிரஸநத்தாலே ஹ்ருஷ்டையாய் வீரபத்நியாயுள்ள லக்ஷ்மிக்கு; கேள்வா - அநுரூபநாயகனாய், தேவா - அத்தாலே உஜ்ஜ்வலரூபனாய், (இந்த விரோதிநிரஸநம்பற்றாசாக), சுரர்கள் - தேவர்களும், முனி - ருஷிகளும், கணங்கள் - திரள்திரளாக, விரும்பும் - ஆதரிக்கும்படியான, திருவேங்கடத்தானே - திருமலையிலே வர்த்திக்கிறவனே! பூ - (அவர்களிட்ட) பூவாலே, ஆர் - நிறைந்த, கழல்கள் - திருவடிகளை, (அநுபவயோக்யனாய்வைத்து) அரு - இழக்கும்படி துஸ்தரமான, வினையேன் - பாபத்தையுடையேனான நான், பொருந்தும் - கிட்டும், ஆறு - ப்ரகாரம், புணராய்-கற்பித்தருளவேணும். புணர்த்தல்-கிட்டுவித்தலாய், சேர்த்துக்கொண்டருளவேணுமென்றுமாம்.

இ.- நாலாம்பாட்டில், முன்பு பரிக்லுப்தமான உபாயங்கள் என்பக்கலொன்றுமில்லை; நான் கிட்டுவதோருபாயம் வேறே தந்தருளவேணுமென்கிறார். வரையாதே எல்லா ப்ரதிபந்தகங்களையும்போக்கி ரக்ஷிக்கும் நீ, உன்திருவடிகளை நான்சேருமாறுபார்த்தருளவேணும் என்றுமாம். [ஆவாஎன்றாது]-ஐயோ! ஐயோ! என்று க்ருபைபண்ணாதே. ஈஸ்வரனுக்குக்ருபைக்கு வேண்டுவது, பாரதந்த்ர்யங்கண்டால் ஐயோ! என்கை; பாரதந்த்ர்யங்கள் ப்ரியமாயிருக்கை ஆஸுரலக்ஷணம். அப்படி ஐயோவென்னாதே. [உலகத்தையலைக்கும்] - ஒருத்தனை நலிந்தால் அலம்பிறவாமையாலே, விஜாதியாக அழிப்பார்கள். [அசுரர்வாணுள்மேல்] - அஸுரர்கள் உடம்பிலன்றிக்கே, அவர்கள் ஆயுஸ்ஸிலேயாயிற்று அம்பு தைப்பது. [தீவாய்வாளி] - "தீப்தபாவகஸங்காஶை:": புறப்படும்போது அம்பாய், எதிரிகள்மேலே படும்போது அக்நிஜ்வாலையாய்ஆயிற்று தைப்பது. [மழைபொழிந்த]- "ஶரவர்ஷம்வவர்ஷ ஹ" என்று அம்புகளாலே பாட்டம்பாட்டமாக வர்ஷிக்கை. இப்படி வர்ஷிக்கும் ஸ்ரீஶார்ங்கத்தை யுடையவனே! [திருமாமகள்கேள்வா] - "ஹர்த்தாரம்பரிஷஸ்வஜே" என்று அவளுகக்கைக்காகவாயிற்று செய்தது; "ந கஶ்சிந்நாபராத்யதி" என்னுமவளுங்கூடக் கூட்டுப்படும். [தேவா] - அப்போதை வீரஸ்ரீயால் வந்த ஒளியையுடையவனே! விரோதியைப்போக்கிப் பிராட்டி அங்கீகாரம்பெற்று நின்ற புகர் என்றுமாம். [சுரர்கள் இத்யாதி] - "நம்முடைய விரோதிகளைப்போக்கினவன் வர்த்திக்கிறதேசம்" என்று தேவர்களும் ருஷிகளும் தங்களபிமதம் கிடைக்குமென்று ஆதரிக்கிற திருமலை. பூவாலே பரிபூர்ணமான திருவடிகளென்னுதல், ஸுகுமாரமான திருவடிகளென்னுதல், திருவடிகளுக்கிட்டுப்பிறந்துவைத்து இழக்கும் பாபத்தைப்பண்ணினேன். ஸ்வரூபஜ்ஞாநத்தாலே, பத்துமாஸம் பிரிந்தார் பொருந்துமாப்போலே யிருக்கிறது இவர்க்கு. [புணராயே] - உன்னைக்கிட்டும்வழி கற்பிக்கவேணுமென்னுதல், நான் கிட்டும்படி பண்ணவேணுமென்னுதல்.

ஈடு.—நாலாம்பாட்டு. உன்னை ப்ராபிக்கைக்கு உறுப்பாக நீ கண்டுவைத்த ஸாதநங்கள் எனக்குஒன்றும் உடலாகிறனவில்லை; ஆனபின்பு, தேவரை நான்ப்ராபிக்கைக்கு எனக்கென்னத் தனியேஒருஸாதநங் கண்டுதரவேணு மென்கிறார்.

நாலாம்பாட்டு.—ஆவா இத்யாதி. "பொருந்துமாறுபுணராய்" என்றதிலே நோக்காக அவதாரிகை - உன்னை இத்யாதி. 'தனியேயொருஸாதநங்கண்டுதரவேணும்' என்றதுக்குக்கருத்து - நான் பண்ணினபாபத்துக்கு நீ ஸ்ருஷ்டித்தநாசங்கள்போராது, எனக்கென்ன ஒருநரகம் கல்பிக்கவேணுமென்றால்-கல்பிக்கவேணுமென்று ப்ரார்த்திக்கிறதன்றே, பரமதயாளுவாய் ஶக்திமானான நீ அத்தைப்

நம்பிள்ளை சீயரை ஒருநாள் "'பஞ்சமோபாயமென்றுகொண்டு ஒன்றுண்டு' என்று சொல்லாநின்றார்கள்; நாட்டிலேயும் அங்ஙனேயிருப்பதொன்று உண்டோ?" என்று கேட்டருள, "நான் அறிகிறிலேன்; இனி சதுர்த்தோபாயந்தான் பகவானேயாயிருக்க, வ்யோமாதீதஞ்சொல்லுவாரைப்போலே 'அவனுக்கும் அவ்வருகேயொன்றுண்டு' என்கையிறே, அது நான்கேட்டறியேன்" என்றருளிச்செய்தார். "ஆனால், 'ஆவா' என்கிற பாட்டுஅருளிச்செய்யும்போது, 'எனக்குத்தனியே ஒருஸாதநங்கண்டுதரவேணுமென்கிறார்' என்றுஅருளிச்செய்கையாயிருக்குமே" என்ன: "அதுவோ! அதுஉன்ப்ரதிபத்தியில் குற்றங்காண்: அதுக்குஇங்ஙனே காண் பொருள்-: நீயும்உளையாயிருக்க நான்இங்ஙனேயிழப்பதேயென்கிறார்காண்" என்றுஅருளிச்செய்தார். "ஸாஹம் கேஶக்ரஹம் ப்ராப்தா த்வயி ஜீவதி ப்ரபோ" (ஸாஹம்கேஶக்ரஹம்ப்ராப்தா-த்வயிஜீவத்யபிப்ரபோ)-நீயும்உளையாயிருக்க, என்மயிரைப்பிடித்துச் சிலர்நலியும்படி நான்பரிபூதையாவதே: உன்ஸத்தைக்கும்என்பரிபவத்துக்கும் என்னசேர்த்தியுண்டு? "ப்ரபோ" (ப்ரபோ) நீயும்என்னோடக்க ஸ்திரீயானுயாகில் நான்ஆறியிருக்கலாயிற்றே; நீ பரிவிசருஷனாயிருக்கச்செய்தே நான்நோவுபடுவதே! நஞ்சீயர் ஸ்ரீபாதத்திலே ஆஶ்ரயித்தானொருவன், "எம்பெருமானேஉபாயமாகில் ப்ரபத்திகொண்டு இங்குச்செய்கிறதுஒன்றுங் கண்டிலேன்" என்ன, செவியைப்புதைத்து, "நாதமுநிகள்தொடங்கிஇவ்வளவும்வர நம்ஆசார்யர்கள் பரமரஹஸ்யமாக உபதேசித்து ஓராண்வழியாய்க் கொண்டு போந்த இத்தை, இதின்சீர்மையறியாத உனக்கு மஹாபாபியேன் இத்தைவெளியிடுவதே!" என்று

போக்கவேணுமென்று கருத்தாமாப்போலே, ஸித்தோபாயமான நீயே ரக்ஷிக்கவேணுமென்று. ஒன்றும் உடலாகிறதில்லையென்கையாலே. கர்மஜ்ஞாநாதிகள்போலே ஸித்தோபாயமும் உடலன்றென்று தோற்றினாலும், ஸித்தோபாயமானநீயே அவிளம்பேந செய்யவேணுமென்று பதற்றஞ்சொல்லுகிறது.

இந்தப்ரஸங்கத்திலே, "சதுர்த்தோபாயமான ஈஶ்வரனையொழிய வேறு உபாயமில்லை" என்கைக்குஸம்வாதமாகஐதிஹ்யம்-நம்பிள்ளை இத்யாதி. வ்யோமாதீதஞ்சொல்லுவாரைப்போலேயென்றது, வ்யோமசப்தத்தாலே-"தத்ராபி தஹரம் ககநம்" என்கிறபடியே நாராயணனைச்சொல்லி, "தஸ்மிந்யதந்த:" என்கிறபடியே அவனுக்குஅந்தர்யாமி ருத்ரனென்றுசொல்லுவாரைப்போலேயென்றபடி. இப்படிசொல்லுகிறவர்கள் - பாசுபதர். "ஈஶ்வர வ்யதிரிக்தோபாயமில்லையென்றால், ஆசார்யாபிமாநத்தை- பஞ்சமோபாயமென்கிறத்தோடு விரோதியாதோ?" என்றுகேட்க; "வ்யூஹவாஸுதேவரோடே அந்தர்ப்பூதமாக்கி த்ரிவ்யூஹமென்கிறாப்போலே, ஆசார்யாபிமாநம் ஸ்வதந்த்ரோபாயமாகிலும் 'ஆசார்யனைப் பற்றுகை, காலைப்பிடித்துக் கார்யங்கொள்ளுமோபாதி' என்று ஸித்தோபாயாந்தர்ப்பூதமாகையாலே, ஆசார்யாபிமாநம் ஸித்தோபாயாநந்யமே, அஞ்சாம்உபாயமென்கிறது - கார்யகரத்வத்தின் அமோகத்வத்தைப்பற்ற என்றருளிச்செய்வர். ஆசார்யனுக்கு கடகத்வம் பிராட்டி ப்ரத்யாஸத்தியாலேயானாற்போலே, உபாயத்வமும் ஐகவத ப்ரத்யாஸத்தியாலேயிறே. ப்ரதிபத்தியில் குற்றங்காணென்றது- அதுக்கு தாத்பர்யம் அறியாய்காண் என்றபடி. "நீயும் உளையாயிருக்க நான்இங்ஙனேயிழப்பதே" என்று வெறுக்கிறாரித்தனைபோக்கி, வேறொரு உபாயங்கண்டு தரவேணுமென்று கேட்கிறாரன்று என்றபடி. அவளை யப்படி வெறுத்தபேர் உண்டோ? என்ன - ஸாஹம் இத்யாதி. "ஸாஹம் கேஶக்ரஹம் ப்ராப்தா பரிக்லிஷ்டா ஸபாம் கதா । பஶ்யதாம் பாண்டுபுத்ராணாம் த்வயி ஜீவதி ப்ரபோ" இதி மஹாபாரதே. "த்வயி ஜீவதி ஸதி-ஸாஹம் கேஶக்ரஹம் ப்ராப்தா" என்றந்வயித்து ஸாவம் - நீயும் இத்யாதி. விவரணம் - நீபரிவசருஷன் இத்யாதி. சதுர்த்தோபாயம் ஈஶ்வரனென்றார் - கீழ்; ஆனால் ப்ரபத்திகொண்டு கார்யமில்லையோ வென்கிற சங்கையை பரிஹரிக்கைக்காக ஐதிஹ்யம் - நஞ்சீயர் இத்யாதி. அவர் கேட்டதுக்கு

திருமுடியிலே அடித்துக்கொண்டு திருப்பள்ளியறையிலே புக்கருளினார். திவ்யமங்கள விக்ரஹமும் விக்ரஹகுணங்களும் திவ்யாத்மஸ்வரூபகுணங்களும் நித்யமுக்தர்க்கு ப்ராப்ய மானாற்போலே, முமுக்ஷுவாய் ப்ரபந்நனான இவ்வதிகாரிக்கு த்வயசரீரமே ப்ராப்யமா யிருக்குமிறே. [ஆவாஎன்னாது] - ஈச்வரனுக்கு ப்ரியஞ்செய்கையாகிறது - அவன் விபூதி யிலே க்ருபைபண்ணுகையிறே. நஞ்சீயர் "ஒருவனுக்குப்பராநர்த்தம் அஸஹ்யமாயிருந் தாகில், 'நமக்குபகவத்ஸம்பந்தமுண்டு' என்று அறுதியிடலாம்; 'அதுப்ராப்தம்' என்று இருந் தானாகில், 'நமக்கு பகவத்ஸம்பந்தமில்லை' என்று தனக்கே கைவாங்கவமையும்" என்றரு ளிச்செய்தார். பிறராகிறார்ஆரென்னில், ஸ்வவ்யதிரிக்தர். ஆனால் ப்ரதிகூலர்பக்கலிலும் க்ருபையைப்பண்ணவோ?' என்னில்; அப்படியேயன்றோ இவர்களுக்கு மதம். "துர்வா ஸனைகழிந்துஅநுகூலராகப்பெற்றிலோம்" என்று இருக்கவன்றோ அடுப்பது. அவன் "யதி வாராவணஸ்ஸ்வயம்" (யதிவாராவணஸ்ஸ்வயம்) என்றால், அவன்விபூதியிலுள்ள இவ னுக்குஇத்தனையும் வேண்டாவோ? ஆனால், "நண்ணாவசுரர்நலிவெய்த" என்கிறவிடத்தில் அது எங்ஙனே ஸங்கதமாகிறபடியென்னில்:—அதுக்கென்? நண்ணாமைநிலைநின்றவன்று வத் யனாகிறான். அக்நீஷோமீயஹிம்ஸையோபாதி அதுதானே ஹிதமாகக்கடவதிறே. இவனு டைய தண்ணியசரீரத்தைப்போக்கி நல்வழியேபோக்குகிறானிறே. [ஆவாஎன்னாது (உல கத்தையலைக்கும்)] - "ஐயோ, ஐயோ" என்னவேண்டியிருக்க, அதுக்குமேலே நலியாநிற் பார்கள். ஒருவனோடே வைரவம்பண்ணினானாகில், "அர்த்தகாமநிமித்தமாகவிறே இது வந்தது, இருவரும் சபலர்" என்றிறேயிருக்கலாவது; அங்ஙனன்றிக்கே, உலகத்தைஅலைப்பார்க ளாயிற்று. தம்மோடொக்க உண்டுடுத்துத் திரிகிற இதுவேஹேதுவாக நலியாநிற்பர்களா யிற்று. [அசுரர்] - அதுக்குஅடி அவர்கள்ஆசுரப்ரக்ருதிகளாகையாலே. [வாணாள்மேல்] - இவர்கள்வீரக்கோலத்தால் வந்தலைப்பனை குறியழியாதே யிருக்க, உயிரிலேநலிகை. அதா

பரிஹாரமேதென்ன - திவ்யமங்கள இத்யாதி. இத்தால் - உபாயம் ஸித்தமானாலும் ஸ்வீகாரம் வேண்டுகையாலே ப்ரதம தசையிலே யதிகாரிவிசேஷணமாய், உத்தரோத்தரதசையில் ப்ராப்யமா யிருக்குமென்றதாயிற்று. திருப்பள்ளியறையிலே புக்கதுக்குக் கருத்து - துக்கிதனானவன் ஆப்தபந்து ஸமீபத்திலே போமாபோலே போனாரென்றதல், இவனுக்கு நல்லபுத்தியை ப்ரார்த்திக்கைக்காக வாதல். திருப்பள்ளியறை - பெருமாளது. "ஆவாவென்னாது" என்றதென்? என்ன - ஈச்வரனுக்கு இத்யாதி. ஈச்வர ப்ரீத்யர்த்தமாகவன்றிக்கே, பகவத்ஸம்பந்தமுண்டாய்போதும் "ஆவா" என்ன வேணுமென்னுமத்தை ஆப்தஸம்வாதத்தாலே தாசிப்பிக்கிறார் - நஞ்சீயர் இத்யாதி. 'பராநர்த்தம்' என்கிறவிடத்தில், பரசப்தம்ஆரைச் சொல்லுகிறதென்ன - பிறராகிறார் இத்யாதி. ஆனால், ப்ராதிகூல் யம் வர்த்தியாதோ? என்ன - துர்வாஸனை இத்யாதி. ப்ரதிகூலனுக்கும் ஹிதசிந்தை பண்ணுகைக்கு ஹேது ஏதென்ன-அவன்யதிவா இத்யாதி. "விபீஷணோவா ஸுக்ரீவ யதிவாராவணஸ்ஸ்வயம்" இத்யாதி. இங்கே - "யதி ஹஸ்வாஸி ஸ்திரோபாவ:" என்றது அநுஸந்தேயம். நிலைநின்றாலும் ஹிம்ஸை த்யாஜ்யமன்றோ? என்ன - அக்நீஷோமீய இத்யாதி. அக்நீஷோமீயஹிம்ஸையில் "நவா உ வேதந்ம்ரியஸே" இத்யாதிப்படியே - அப்பசுவுக்கு ஸ்வர்க்கங்கொடுத்து ஹிதஞ்செய் தாற்போலே, இவனும் அவனுக்கு ஹிதஞ்செய்தானாவனென்றபடி. நரிஷ்யஸி-நக்ஷ்யஸி இத்யர்த்த:. ஹிதமாம்ப்ரகாரமேதென்ன - இவனுடைய இத்யாதி. மேலையுங் கூட்டிக்கொண்டு பாவம் - ஐயோ இத்யாதி. "உலகத்தை" என்றதுக்கு பாவம் - ஒருவனோடே இத்யாதி வாக்யத்வயம். அர்த்தகாமாதி நிமித்தமன்றாகில் நலிகைக்குஹேதுவேதென்ன-தன்னோடொக்க இத்யாதி. "வாணாள்மேல்" என்கிற துக்கு பாவம் - இவர்கள் இத்யாதிவாக்யத்வயத்தாலே. வாணாள் - ஆயுஸ்ஸு. "வாணாள்மேல்"

வது - இவர்கள்ஜீவநஹேதுவான காலத்தைநலிகை. [தீவாய்வாளி]- பெருமாள் தொடுத்து விடும்போதாயிற்று அம்பு என்றறியலாவது; படும்போது நெருப்புப் பட்டாற்போலேயிருக்கை. ஸ்ரீஶார்ங்கத்தில் நாணியைக்கழிந்தபோதே,காலாக்நி கவடுவிட்டாற்போலேளரிந்துகொண்டு செல்லாநிற்கும். குணஹீநமானலிருக்கும்படியிறே இது. "தீப்தபாவகஸங்காஶை:" (தீப்தபாவகஸங்காஶை:)-படும்போதிருக்கும்படி. "ஶிதை:" (ஶிதை:)-பட்டமைதெரியாதேதோளையுருவி அவ்வருகேவிழக்காணுமித்தனை."காஞ்சநபூஷணை:"(காஞ்சநபூஷணை:)இவற்றுக்குஆகாரத்வயமுண்டாயிருக்கிறபடி."சரங்களாண்டதண்டாமரைக்கண்ணனுக்கன்றி என்மனந்தாழ்ந்துநில்லாது"என்கிறபடியே அநுகூலர்க்குஅகப்படுகைக்கும்அது தானேயாயிருக்கிறபடி."நத்வாமிச்சாமி" (நத்வாம்ச்சாமி)இத்யாதி-இவ்வழகுக்குஇலக்காய் வாழ்ந்துபோகலாயிருக்க, எதிரிட்டுமுடிந்துபோக நான் இச்சிக்கிறிலேன். நீ எண்ணியிருக்கிறது நான்அறிகிறிலேனிறே. இருத்திப்பிடித்தவில்லும், தெரித்துப்பிடித்தபகழியுமாய்க்கொண்டு நிற்கும்போது அபிராமராயிறே யிருப்பது; அவ்வழகைக்கண்டுஅநுபவிக்கமாட்டாதே, தண்ணீர் குடிக்கச்சுல்லினஏரியிலே தலைகீழதாகவிழுந்து முடிவாரைப்போலே,*தயரதன்பெற்றமரதக மணித்தடத்தைஎதிரிட்டு முடிந்துபோக நான்காணமாட்டுகிறிலேன். [வாளிமழைபொழிந்த சிலையா]-"ஶரவர்ஷம்வவர்ஷஹ" (ஶரவர்ஷம்வவர்ஷஹ)என்கிறபடியே. பாட்டம் பாட்டமாக வர்ஷித்தபடி. [திருமாமகள்கேள்வா] - விரோதிகளைப் போக்கினதுகண்டுஉகந்தணைக்குமவளைச் சொல்லுகிறது. "பர்த்தாரம்பரிஷஸ்வஜே" (பர்த்தாரம்பரிஷஸ்வஜே) என்னுமவள்."தம்த்ருஷ்ட்வா"(தம்த்ருஷ்ட்வா)-வெறும்புறத்திலேஆலத்திவழிக்கவேண்டும்படி

என்கையாலே - ஶரீரம் உருவழியாதிருந்தமை தோற்றுகிறது. ஜீவநஹேதுவான காலத்தையென்றது - ஆயுஸ்ஸையென்றபடி. "தீவாய்" என்றதுக்கும், "வாளி" என்றதுக்கும்வாஸநை - பெருமாள் இத்யாதி. விவரணம் - ஸ்ரீஶார்ங்கத்தில் இத்யாதி. கவடுவிட்டாற்போலே - கிளைவிட்டாற்போலே. சாடு - குணஹீநம் இத்யாதி. "தீவாய்வாளி" என்றதுக்குப்ரமாணம் - தீப்த இத்யாதி. "தீப்தபாவகஸங்காஶை: ஶிதை: காஞ்சநபூஷணை:। நத்வாமிச்சாம்யஹம் த்ரஷ்டும் ராமேண நிஹதம் ஶரை:" இதி யுத்தகாண்டே ராவணம்ப்ரதி விபீஷண:. [கசு, உஉ] 'படும்போது' அநந்வயமாய் 'இருக்கும்படி' என்றுகூட்டுவது. ஶௌர்யத்தின் எல்லையை யருளிச்செய்கிறார் - பட்டமை இத்யாதி. ஆகாரத்வயமாவது - "ஶிதை:" என்கையாலே ஆயுதத்வமும், காஞ்சநபூஷணை: என்கையாலே போக்யத்வமும். போக்யத்வம் ஆர்ச்சென்ன - சரங்களாண்ட இத்யாதி. திருமொழி ஏழாம்பத்து மூன்றாந்திருமொழி நாலாம்பாட்டு, "சரங்களாண்ட" இத்யாதி. அம்புகளையுடைத்தான புண்டரீகாக்ஷனை ஸர்வேஶ்வரனுக்கல்லது வேறுசிலர் விஷயமாக என்னுடைய ஹ்ருதயத்தில் ருசி பிறவாதென்றபடி. தண்டாமரைக்கண்போலே சரங்களும் போக்யமென்றபடி. "நத்வாமிச்சாமி" என்றதுக்கு பாவம் - நீயெண்ணி இத்யாதி. நான்அறிகிலேனென்கையாலே - உன்னுடையநினைவு எனக்குத்தெரியாதென்றபடி. "ராமேண" என்றதுக்கர்த்தம் - இருத்தி இத்யாதி - பகழி-அம்பு, தெரித்து - அடுத்து. "ராமேண - ஶரைர்நிஹதம் - த்ரஷ்டும்நேச்சாமி" என்கையாலே பலித்த பாவம் - அவ்வழகை இத்யாதி. இவர் ஏரியோ? என்ன - தயரதன் இத்யாதி. "மழைபொழிந்த" என்றதுக்குவாஸநை - ஶரவர்ஷம் இத்யாதி. "ததோராமோ மஹாதேஜா ராவணாய நிஶாசராய வ்யஸ்ருஜத் । ஸ்ருஷ்ட்வா ராக்ஷஸம் ஸைந்யம் ஶரவர்ஷம் வவர்ஷ ஹ" இதியுத்தகாண்டே. (கஉ - கஅ) "வாளிமழைபொழிந்தசிலையா" என்றதுக்கு அநந்தரம் "திருமாமகள்" என்றதுக்குபாவம்-விரோதிகளைப்போக்கினது இத்யாதி. அப்படியணைத்

யான அழகையுடையவரை, எதிரிகளைவென்ற வீரக்கோலத்தோடே கண்டாள். "ஶத்ருஹந்தாரம்" (ஶத்ருஹந்தாரம்) - தந்திருமேனியிலே ஒருவாட்டம் வாராமே, அவர்களைக் குற்றுயிராக்கி விடுவதுஞ்செய்யாதே, துண்டித்துஅடுக்கினவரை. முன்பு திருவயோத்யையிலிருந்த நாள், "இவர் வேட்டைக்குப் போனவிடத்தே இன்னபடியும் இன்னபடியும் பொருதார்; இன்னபுலியைக்குத்தினர்" இன்னஸிம்ஹத்தைக் குத்தினர் என்றாற்போலே வந்யர்கள் சொல்லக்கேட்கு மத்தனையிறே; இங்குப் பூசலுக்குப்புகுகிறபோதேபிடித்து மேலுள்ளவ்யாபாரங்கள் அடங்கலுங் கண்டாள். "மஹர்ஷீணாம் ஸுகாவஹம்" (மஹர்ஷீணாம் ஸுகாவஹம்) - ருஷிகளுடைய விரோதிகளைப்போக்கி, அவர்களுக்குக் குடியிருப்புப்பண்ணிக் கொடுத்தவரை. தங்கள் தபோபலத்தாலே வெல்லலாயிருக்க, தங்கள்பரத்தைப் பெருமாள்தலையிலேபோகட்டு முறை யுணர்ந்து கொண்டிருக்குமவர்களுக்கு. "கர்ப்பபூதாஸ்தபோதநா:" [கர்ப்பபூதாஸ்தபோதநா:]-தந்தாம் கைம்முதலழிய மாறுதேயிருக்குமவர்கள். தபோதநராயிருக்கச்செய்தே கர்ப்பபூதராயிருப்பர்கள். தந்தாமுக்கென்ன இயற்றியுண்டாயிருக்கச்செய்தே கர்ப்பாவஸ்தையில் ஜநநியறிந்து ரக்ஷிக்குமத்தனையிறே; அப்படியே அவனேயறிந்து ரக்ஷிக்கஇருக்குமவர்கள். அநுகூலரக்ஷணமும் ப்ரதிகூலநிரஸநமும் இவளுக்குப்ரியமாகச்செய்யுமவையிறே "பபூவ" (பபூவ) - பதினலாயிரம்முருட்டு ராக்ஷஸரோடேதனியேநின்று பொருகிறஇத்தைக்கண்டுஅஞ்சி, "இதென்னாய் விளையுமோ?"என்றுஸத்தையழிந்துகிடந்தாள்; இப்போதுஉளளானள். "ஹ்ருஷ்டா பபூவ" (பூஸத்தாயாம்). "ஹ்ருஷ்டா" (ஹ்ருஷ்டா) - ஸத்தையுண்டானல் உண்டாமதுவும்

தானோ? என்ன - பர்த்தாரம் இத்யாதி. "தம் த்ருஷ்ட்வா ஶத்ருஹந்தாரம் மஹர்ஷீணாம் ஸுகாவஹம் । பபூவ ஹ்ருஷ்டா வைதேஹீ பர்த்தாரம் பரிஷஸ்வஜே" இத்யாரண்யகாண்டே. [உ௧]" தம்-ஶத்ருஹந்தாரம்-த்ருஷ்ட்வா" என்கிறபதங்களுக்கர்த்தம்-வெறும்புறத்திலே இத்யாதி. "தம்" என்ற ப்ரஸித்தியாலே - ஸ்வாபாவிகமான அழகைச் சொல்லுகிறது. "ஶத்ரு" என்கிறபதத்துக்கும், "ஹந்தாரம்" என்கிறபதத்துக்கும் வ்யாவ்ருத்திபூர்வகமாக பாவம் - தந்திருமேனியிலே இத்யாதி. "த்ருஷ்ட்வா" என்கிறதுக்கு பாவம் - முன்பு திருவயோத்யையில் இத்யாதிவாக்யத்வயத்தாலே. ருஷிகளுக்கு ஸுகாவஹரானது எவ்வழியாலே? என்ன - ருஷிகளுடைய இத்யாதி. "மஹர்ஷீணாம்" என்றதுக்கு பாவம் - தங்கள் இத்யாதி. அதாவது - "ஈஶ்வரோ ரக்ஷக:, வயம் ரக்ஷ்யா:" என்று, ஈஶ்வரனே ரக்ஷகன், நாம் ரக்ஷ்யர் என்கிறஜ்ஞாநத்தையுடையவர்களென்றபடி. அப்படி அவனிடத்திலே ந்யஸ்தபரரோ? என்ன - கர்ப்பபூதா இத்யாதி "நூநம் ஸம்பூர்ணதாம் யாதே ராஜநி ஜிதகோபாஜிதேந்த்ரியா: । ரக்ஷிதவ்யாஸ்த்வயா ஶஶ்வத் கர்ப்பபூதாஸ்தபோதநா:" இத்யாரண்யகாண்டே. இதுக்கர்த்தம்-தந்தாம் இத்யாதி. உக்தத்தை ஸப்தத்திலே ஏறிட்டுக்காட்டுகிறர் - தபோதநராய் இத்யாதி. விவரணம் - தந்தாமுக்கென்ன இத்யாதி. இயற்றி - யத்நம். இப்படிரக்ஷிக்கிறது ஆர்க்கு ப்ரியமாக? என்ன அநுகூலஇத்யாதி. "ஶத்ருஹந்தாரம் மஹர்ஷீணாம் ஸுகாவஹம்" என்கிறத்தைப் பற்ற, 'அநுகூலரக்ஷணமும் ப்ரதிகூலநிரஸநமுமென்றது'. "ஶத்ருஹந்தாரம் த்ருஷ்ட்வா - பபூவ" என்றுகூட்டி பாவம் - பதினலாயிரம் இத்யாதி. "பபூவ" என்றால் உளளாகையைக்காட்டுமோ? என்ன-பூஸத்தாயாம் என்று; "ஹ்ருஷ்டா" என்றத்தை ஹுகாரகர்ப்பமாக விவக்ஷித்தருளிச்செய்கிறர் - ஸத்தையுண்டானல் இத்யாதி. பபூவ, ஹ்ருஷ்டாசேத்யர்த்த:. ஶத்ருஹந்தாவாகக்கண்டு பரிஷ்வங்கிக்கைக்கு இவள் வீரவாசியறிகைக்கு

உண்டாயிற்று. ''வைதேஹீ'' (வைதேஹீ) - உபாத்யாயர்கள்பெண்பிள்ளைகளுக்குச் செவியேற்றாலே † ஓத்துப்போயிருக்குமாபோலே: வீரவாசியறியுங்குடியிலேபிறந்தவளிறே: ஒருவில்லுமுறித்த இதுக்கு உகந்துஎன்னைக்கொடுத்த எங்கள்ஐயர், பதினாலாயிரம்பேரைத் தனியேநின்று முடித்தஇத்தைக்கண்டால் என்படுகிறார்தான்! ''பர்த்தாரம்'' (பர்த்தாரம்) - முன்பு, இவர்ஸௌகுமார்யத்தைக்கையாலே ''குழைசரக்கு'' என்றும், ''ஐயர்நம்மை இவர்க்கு நீர்வார்த்துக்கொடுக்கையாலே நாம்இவர்க்கு சேஷம்'' என்றும் அணைத்தாளத்தனை; ''ஆண்பிள்ளை'' என்று அணைத்ததுஇப்போது: ''பரிஷஸ்வஜே'' (பரிஷஸ்வஜே) - ராவணஸமராய், அவன்மதித்த வீரத்தையுடையராயிருப்பார் பதினாலாயிரம் பேரும் விட்டஅம்புகளடங்கலும் இவர்மேலேபட்டு, கண்டவிடமெல்லாம் யுத்தவடுவாயிறே திருமேனிகிடக்கிறது; அவ்வோவிடங்கள்தோறும் திருமுலைத்தடத்தாலே வேதுகொண்டாள். [திருமாமகள்கேள்வா] - உனக்குஸமக்திவைகல்யம் உண்டாயிழக்கிறேனோ? புருஷகாரமில்லாமலிழக்கிறேனோ? [தேவா] - இவளணைத்தபின்பு திருமேனியிற்பிறந்த புகர். அன்றியே விரோதிகளைப்போக்குகையாலே வடிவிலேபிறந்த காந்தியைச்சொல்லவுமாம். (''நம்முடைய விரோதிகளைப் போக்கினவன் வர்த்திக்கிறதேசம்''என்று, தேவர்களும் ருஷிகளும் தங்களபிமதங் கிடைக்குமென்று ஆதரிக்கிற திருமலை): [சுரர்கள் இத்யாதி] - அநுகூலர்அடையத் திரண்டு படுகாடுகிடக்கும் தேசம். [பூவார்கழல்கள்] - பூவாலல்லது செல்லாததிருவடிகளென்னுதல். பூவோடொத்த திருவடிகள்என்னுதல். [அருவினையேன்] - அவன்ப்ரதிபந்தகங்கள் போக்கவல்லனாயிருப்பது, எனக்குஆசை கரைபுரண்டிருப்பது, திருவடிகள் நிரதிசயபோக்யமாயிருப்பது; இங்ஙனேயிருக்கச்செய்தே, கிட்டியநுபவிக்கப்பெறாத பாபத்தைப் பண்ணினேன்.[பொருந்துமாறுபுணராயே]-அசோகவநிகையிலேஇருந்த பிராட்டியோபாதிகாணும் தம்மைநினைத்திருக்கிறது; [புணராயே] - உன்னைக்கிட்டும்வழி கல்பிக்கவேணுமென்னுதல், நான் கிட்டும்படிபண்ணவேணுமென்னுதல். (௪)

ஹேதுவேதென்ன; - ''வைதேஹீ'' என்றதுக்குபாவம்-உபாத்யாயர் இத்யாதி. ''வைதேஹீ'', என்றதுக்கு தாத்பர்யாந்தரம் - ஒருவில்லு இத்யாதி. 'என்படுகிறார்தான்' என்று ஐயரை நினைத்தாளென்றுகூட்டுவது. ''ஸந்துஷ்டஹ்ருதயா'' என்றவநந்தரம் ''பர்த்தாரம்'' என்றதுக்குபாவம் - முன்புஇவர் இத்யாதி. குழைசரக்கு-ரக்ஷ்யவஸ்து. ''பரிஷஸ்வஜே'' என்றதுக்கு - பரிதஸ்ஸஸ்வஜே என்றுக்கி, எங்குங் கட்டிக்கொள்ளுகைக்கு ஹேதுவருளிச்செய்கிறார் - ராவணஸமராய் இத்யாதி. ''தீவாய்வாளிமழை பொழிந்தசிலையா, திருமாமகள்கேள்வா''என்ற பதத்வயப்ரயோகத்துக்கு ப்ரயோஜநம் - உனக்குஸமக்தி இத்யாதிவாக்யத்வயத்தாலே. ''தேவா'' என்கிறத்தை ''திருமாமகள் கேள்வா'' என்றத்தோடும், ''தீவாய்வாளிமழைபொழிந்த சிலையா'' என்றத்தோடுங்கூட்டி இரண்டு வகையாகபாவம் - இவளணைத்தபின்பு இத்யாதிவாக்யத்வயத்தாலே. படுகாடுகிடக்கும்தேசம் - ஈடுபட்டுக்கிடக்கும் தேசமென்றபடி. படுகாடு - வெட்டிவிழுந்தகாடு. ''ஆர்தல்'' - பொருந்துதலாய், புஷ்பங்களோடு கூடியிருக்கிற திருவடிகளென்னுதல். இரண்டாமர்த்தத்துக்கு நிர்வாஹம் - ஸாத்ருஸ்யாகாரேண பொருந்துகையென்று. கீழ்ப்பதங்களையுங்கடாக்ஷித்துபாவம் - அவன்ப்ரதிபந்தகங்கள் இத்யாதி. ''ஆறுவன்பிலடியேன்'' என்றத்தைப்பற்ற - எனக்காசை கரைபுரண்டிருப்பது என்றது: பெறமாறென்னாதே, ''பொருந்துமாறு'' என்கையாலே - முன்புகூடியிருந்து பிரிந்தவர்போலே யிருக்கிறாரென்கிறார் - அசோக இத்யாதி. ''ஆறு'' என்று - வழியாதல், ப்ரகாரமாதல். புணர்தல் - கற்பித்தல்.

(௪)

---

† ஓத்து - வேதம்,

ஐந்தாம் பாட்டு.

புணராநின்றமரமேழ் அன்றெய்தவொருவில்வலவாவோ!
புணரேய்நின்றமரமிரண்டின் நடுவேபோனமுதல்வாவோ!
திணரார்மேகமெனக்களிறுசேரும் திருவேங்கடத்தானே!
திணரார்சார்ங்கத்துஉனபாதம் சேர்வதடியேனெந்நாளே?

ஆ.—(புணரா) - இதுக்குமுன்பு க்லுப்தமன்றியே அபூர்வமாயிருப்பதொரு உபாயத்தைப் பரிகல்பிக்க முடியுமோவென்னில், ஒரு திருச்சரத்தினாலே மஹீயுரஸந்நிஹமான மராமரங்களேழையும் மஹீதரத்தையும் ரஸாதலத்தையும் உருவும்படியெய்த உனக்கு முடியாததுண்டோ? ஆதலால், அன்று உனக்கு ஒருதீங்குவிளையாதபடி மருதின் நடுவேபோய் என்னுடைய மஹாபயத்தைப்போக்கி என்னை உஜ்ஜீவிப்பித்தாற்போலே, ஸர்வபூதஶரண்யமான திருமலையிலே ப்ரணதஜநஶத்ருநிரஸந ஸமர்த்தமான ஸ்ரீஶார்ங்கப்ரப்ருதிஅஸங்க்யேயதிவ்யாயுதோபேதனாய்க்கொண்டு நின்றருளின உன் திருவடிகளிலே சேர்த்து என்னை உஜ்ஜீவிக்கப்பண்ணுவது எந்நாள்? என்கிறார்.

ஓ.—அஞ்சாம்பாட்டில், "உம்முடைய அபேக்ஷிதங்களெல்லாம் செய்கிறோம்" என்று எம்பெருமான் அருளிச்செய்ய, 'அது என்றுசெய்வது?' என்கிறார்.

[புணராவென்றுதொடங்கி] - நேரொக்கநில்லாதே திரண்டுநின்ற மராமரம் ஏழையும் எய்தவகவீரனானவனே! [புணரென்றுதொடங்கி] - நிர்விவரமாம்படிகூடிநின்ற யமளார்ஜுநங்களின் நடுவே உனக்குஒருநலிவின்றிக்கே போய் இஜ்ஜகத்தை யுண்டாக்கினவனே! [திணர்என்றுதொடங்கி] - செறிந்த மேவம் என்னலாம்படியான ஆனைகள் சேராநின்றுள்ள திருமலையிலேநின்றருளினவனே! மிகவும் வலியுடைத்தான ஸ்ரீ ஶார்ங்கத்தையுடைய உன்திருவடிகளை. கையிலே அவ்வில்லுண்டாயிருக்க, காலக்ஷேபம் பண்ணுவதேதென்றுகருத்து.

ப.—அநந்தரம், ஆஶ்ரிதரக்ஷணார்த்தமான அநாயாஸ வ்யாபாரத்தையுடைய உன்திருவடிகளைச் சேர்வது எந்நாள்? என்கிறார்.

(செவ்வைகண்டுஇலக்குக்குறிக்கவொண்ணாதபடி), புணராநின்ற - திரளாகநின்ற, மரம் - மராமரங்கள், ஏழ்-ஏழையும், அன்று - (மஹாராஜர் ஶங்காதிஶங்கை பண்ணின) அன்று, எய்த - (அவருக்கு விஶ்வாஸம் பிறக்கும்படியாக) எய்த, ஒருவில் வலவா - ஏகதநுர்த்தரனாய், புணர் - சேர்த்தி, ஏய் - பொருந்தும்படி, நின்ற - நின்ற, மரம் இரண்டின் - இரண்டு மரத்தின், நடுவே-நடுவே, போன - போய, முதல்வா - ஜகத்துக்குக் காரணபூதனானவனாய், திணர் - கதிப்பு, ஆர் - விஞ்சின, மேகம் - மேகங்கள், என - என்னலாம்படி, களிறு - யானைகள், சேரும் - சேர்ந்து வர்த்திக்கிற, திருவேங்கடத்தானே - திருமலையிலே ஸந்நிஹிதனானவனே! திணர் - (பிடித்தகை நிரம்பும்) பெருமையை, ஆர்-உடைத்தான, சார்ங்கம் - ஸ்ரீசார்ங்கத்தையுடையனான, உன-உன், பாதம்-திருவடிகளை, அடியேன் - (உன்வீரசரிதத்துக்குத்தோற்று அடிமைப்பட்ட) நான், சேர்வது - சேருவது, எந்நாள் - எந்நாள்? ஓ - ஓஓவென்று சேரப்பெறாத விஷாதாதிஶயத்தைக் காட்டுகிறது. [திணர் - கதிப்பாய், பெருமையைச் சொல்லுகிறது.

இ.—அஞ்சாம்பாட்டில், நீர் இங்ஙனே த்வரிக்கிறதென்? உம்முடைய அபேக்ஷிதம் செய்கிறோமென்ன, 'அது என்று?' என்கிறார்.

[புணராநின்ற] - புணர்ந்துநின்ற. அம்புக்கு நேரோடவொண்ணாதபடி திரண்டுநின்ற. [மரமேழ்அன்று எய்த] - ரக்ஷணத்தில் ஶங்கைபண்ணினவன்று ஏழையும் ஓரம்பாலேயழித்த. அதிஶங்கைபண்ண, மழுவேந்திக்கொடுத்து ரக்ஷித்தவன்கிடீர், ஆசைப்பட்டஎன்னை அநாதரிக்கிறான்! அதிஶங்கையைப்போக்கிப் பணிகொண்டவன் கிடீர் இரந்தஎன்னைப் பணிகொள்ளாதொழிகிறான். [ஒருவில்வலவா] - ஏகவீரனே! ஓ என்று - விஷாதாதிஶயஸூசகம். [புணரேய்நின்ற] - புணர்ந்துநின்ற. இரண்டுங் கூடி "ஒன்று" என்னலாம்படி பொருந்திநிற்க, அதிலே இடங்கண்டுபோய் உன்னைத்தப்புவித்து ஐகமத்யத்தையுண்டாக்கினவனே! [திணரார் இத்யாதி] - செறிந்த மேகமென்னலாம்படி ஆனைகள் திரள்திரளாக ஸஞ்சரிக்கும் திருமலை. ஆனையையும் மேகங்களையும் மலைக்குச்சிறப்பாகச் சொல்லக்கடவது. [திணரார்சார்ங்கம்] - மிக்க பலத்தையுடைய ஶார்ங்கம். சக்ரவர்த்தித்திருமகனையொழிய எடுக்கவொண்ணாத வில்லு. [உனபாதம் இத்யாதி] - கையிலே வில்லிருக்க விரோதியுண்டு என்னவொண்ணாது; உன்னைப் பெறும் நாளையாகிலும் சொல்லவேணும்.

ஈடு.—அஞ்சாம்பாட்டு. நீர் இங்ஙன் த்வரிக்கிறதென்? உம்முடைய அபேக்ஷிதஞ் செய்கிறோமிறே என்ன, அதுஎன்று? என்கிறார்.

[புணரா இத்யாதி]-க்ஷத்ரியர் விற்பிடிக்கிறது ஆர்த்தத்வநி கேளாமைக்கன்றோ? "க்ஷத்ரியைர்தார்யதே சாபோ நார்த்தஶப்தோ பவேதிதி." (க்ஷத்ரியைர் தார்யதேசாபம் நார்த்தஶப்தோபவேதிதி.) இலைக்குக்குறிக்கப் போகாதபடி திரண்டுநின்ற ஏழுமராமரங்களை முஷ்டியாலும் நிலையாலும் நேர்நிற்கப்பண்ணி எய்த ஏகவீரனே! [ஓ]-ஓ என்று விஷாதாதிஶய ஸூசகம். ரக்ஷணத்தில் அதிஶங்கை பண்ணினாரையும் விஶ்வஸிப்பித்துக் காரியங்கொள்ளும் நீ, ஆசைப்பட்ட எனக்கு உதவவாராதொழிவதே! "ஸுக்ரீவம் ஶங்கிதஶ்சாஸீத்" (ஸுக்ரீவஶ்ஶங்கிதஶ்சாஸீத் இத்யாதி) பெருமாளைக்

ப்ர.—[புணராநின்றமரமேழன்றெய்த] - ஆரண்யகாண்டே ஸர்கே ௰, "கிம் து வக்ஷ்யாம்யஹம் தேவி த்வயைவோக்தமிதம் வச: । க்ஷத்ரியைர்தார்யதே சாபோ நார்த்தஶப்தோ பவேதிதி ॥ ௩ ॥ தே சார்த்தா தண்டகாரண்யே முநய: ஸம்ஶிதவ்ரதா: । மாம் ஸீதே ஸ்வயமாகம்ய ஶரண்யா: ஶரணம் கதா: ॥ ௪ ॥"

அஞ்சாம்பாட்டு.—புணரா இத்யாதி. "எந்நாள்" என்றத்தைக் கடாக்ஷித்து அவதாரிகை - நீர்இங்ஙன் இத்யாதி.

"வில்வலவா" என்றதுக்கு பாவம் - க்ஷத்ரியர் இத்யாதி. உக்தார்த்தத்துக்கு ப்ரமாணம் - க்ஷத்ரியைரித்யாதி. ஆரண்யகாண்டே. "கிம் து வக்ஷ்யாம்யஹம் தேவி த்வயைவோக்தமிதம் வச:" இதி பூர்வார்த்தம். இலக்குக் குறிக்கப் போகாதபடி திரண்டு நிற்கையாவது - அம்புக்கு நேரோடவொண்ணாதபடி நெருங்கிநிற்கை. புணர்தல் - திரட்சி. இப்படிக்கொத்த மராமரங்களை எய்யும் ப்ரகாரமேதென்ன - முஷ்டியாலும் இத்யாதி. விஷாதஹேதுவை யருளிச்செய்கிறார் - ரக்ஷணத்தில் இத்யாதி. ரக்ஷணத்தில்அதிஶங்கைபண்ணினதுக்கு ப்ரமாணம்- ஸுக்ரீவ இத்யாதி. 'நீ'த்யம்" என்றதுக்குபாவம் -பெருமாளை இத்யாதி, "ரக்ஷணத்தில்" இத்யாதி வாக்யவிவரணம் - அந்தஶங்கா

கண்ட அன்றுதொடங்கி மராமரங்களைப் பிளக்க எய்யுந்தனையும், முடிய ஶங்கித்தேயிருந்தான். அந்தஶங்காநிராகரணத்தைப்பண்ணி ரக்ஷித்த நீ, நிஶ்ஶங்கமாகப் பற்றின என்னை ரக்ஷிக்கவேண்டாவோ? [புணரா இத்யாதி] - ஒருநிரையாய்ச் சேர்ந்துநின்ற மருதுகளை ஊடறுத்து, ஒன்றிலே வெளிகண்டு போவாரைப்போலே போய், ஜகத்துக்கு வேர்ப்பற்றான உன்னைத் தந்தவனே! ப்ரளயகாலத்திலன்று ஜகத்தையுண்டாக்கிற்று; இன்றாயிற்று. அற்றைக்கு இவன்தான்உண்டாகையாலே உண்டாக்கலாம்; இங்கு நிரந்வயவிநாசமிறே பிறக்கப்புக்கது. [முதல்வாவோ] - ஜகத்தையுண்டாக்கினவனே! ஜகத்துக்கு வேர்ப்பற்றான தன்னையிறே நோக்கித்தந்தது; "[illegible]" (ஸதேவ ஸோம்யேதமக்ரஆஸீத்) என்கிறபடியே. தான் உளனாகவே உண்டாமதிறே ஜகத்து. இப்படியிருக்கிற தன்னளவிலேவந்த ஆபத்தோ பரிஹரிக்கலாவது! [திணர் இத்யாதி]-திண்மை மிக்கிருந்துள்ள மேகமென்னும்படி ஆனைகளானவை சேராநின்றுள்ள திருமலையிலே நின்றருளினவனே! மேகங்களோடே ஸர்வதா ஸாம்யமுண்டாகையாலே, மேகங்களைக் கண்டபோது ஆனையென்னலாம்: ஆனைகளைக்கண்டபோது மேகம் என்னலாயிருக்கும். "மதயானைபோலெழுந்த மாமுகில்காள்" என்னக்கடவதிறே. ஸமாநதர்மத்தால் வந்த ஸம்ஶயம் த்விநிஷ்டமிறே! விஷயங்களால் வரும் அந்யதாஜ்ஞாநத்தைக்கழித்து, அத்தேசத்தே பிறக்கும் அந்யதாஜ்ஞாநத்தை யாகாதே இவர் கணிசிக்கிறது. அங்குள்ளதெல்லாம் போக்யமாய்த் தோற்றுகிறபடி. [திணரார்சார்ங்கத் துணபாதம்] - திண்மை மிக்கிருந்துள்ள ஸ்ரீ ஶார்ங்கத்தையுடைய உன்னுடைய திருவடிகளை. "[illegible]" (ஶரண்யம்ஶரணம்யாதா ராமம்தஶரதாத்மஜம்) என்கிறபடியே, ஶரண்யமான திருவடிகளை. சக்ரவர்த்திபிள்ளைகள் எடுக்குமத்தனைகாணும் வில்லு. [திணரார்சார்ங்

ப்ர.—[illegible]

இத்யாதி. "புணர்மேய" - 'நிரையாய்ச்சேர்ந்து' என்றபடி. "முதல்வ" என்றதுக்கர்த்தம் - ஜகத்துக்கு வேர்ப்பற்றான என்று. ஹேதும் - ப்ரளயகாலத்தில் இத்யாதி. அதெப்படி? என்ன - அற்றைக்கு இத்யாதி. நிரந்வயவிநாசம் - காரண பூதனான தான் நசிக்கையிருக்கை. ஜகத்தையுண்டாக்கினபடி யெப்படி? என்ன - ஜகத்துக்கு இத்யாதி. தன்னை நோக்கினால் ஜகத்துஉண்டாமோ? என்ன, அருளிச்செய்கிறார்-ஸதேவ இத்யாதி வாக்யத்வயத்தாலே. 'தன்னளவிலே வந்த ஆபத்தோ பரிஹரிக்கலாவது'-என்றபத்தால் பரிஹரிக்கவேண்டாதோ என்றபடி. ஆனைகளை மேகமென்று ப்ரமிக்கைக்கு அடியேதென்ன - மேகங்களோடே இத்யாதி. "மேகங்களைக்கண்டால் ஆனையென்னலா யிருக்கும்" என்றதுக்கு ப்ரமாணம் - மதயானை இத்யாதி. நாச்சியார் திருமொழி. ஸ்பஷ்டோர்த்தஃ. 'மேக மெனக்களிறுசேரும்" என்றொழிய, "மேகத்தைக்கண்டால் ஆனையென்னலாயிருக்கும்" என்றதுக்கு ஶப்தமில்லையேயென்ன - ஸமாநதர்மத்தால் இத்யாதி. அதஸ்மிம்ஸ்தத்புத்திரூபஅந்யதாஜ்ஞாநம் த்யாஜ்யமன்றோ? என்ன-விஷயங்களால் இத்யாதி. கணிசிக்கிறது - அபேக்ஷிக்கிறது. இது உத்தேஶ்யமாகைக்கு ஹேது அருளிச்செய்கிறார் - அங்குள்ளது இத்யாதி. "சார்ங்கத்துணபாதம்" என்று விசேஷித்ததுக்கு பாவம் - ஶரண்யம் இத்யாதி. வில்லுக்குத் திண்மையேதென்ன - சக்ரவர்த்தி

கம்] - தன்வளவிலே விரோதிகளைத் தப்பாமல் அகப்படுத்திக்கொள்ளுகை. [உனபாதம்]- அவ்வளவுக்கு அகப்படாதாரை முதலடியிலே யகப்படுத்திக்கொள்ளுமது. [சேர்வதடியே னெந்நாளே] - கையில் வில்லிருக்க இழக்கவேண்டா, விரோதியுண்டேன்று; இனி உன்னைப் பெறும் நாளையாகிலும் சொல்லவேணும். (ரு)

ஆறாம் பாட்டு.

எந்நாளேநாம்மண்ணளந்த இணைத்தாமரைகள்காண்பதற்கென்று
எந்நாளும்நின்றுஇமையோர்களேத்தி இறைஞ்சியினமினமாய்
மெய்ந்நாமனத்தால்வழிபாடுசெய்யும் திருவேங்கடத்தானே!
மெய்ந்நானெய்திஎந்நாள் உன்னடிக்கண்அடியேன்மேவுவதே?

ஆ —(எந்நாளே) - பரமவ்யோமத்திலிருக்கும் ஸர்வஸ்வாமிக்கு ஸர்வசேஷ வ்ருத்தியும் பண்ணுகையன்றோ எல்லார்க்கும் ப்ராப்யமென்னில், அங்குள்ள அயர்வறு மமரர்களும் திருவேங்கடமுடையான் திருவடிகளை 'என்றோ நாங்கள்காண்பது? என்று ஆசைப்பட்டு இங்கே இனமினமாகவந்து உன்னுடைய திருவடிகளிலேயன்றோ வாங்மநஃகாயங்களாலே ஸர்வகாலமும் ஸர்வசேஷவ்ருத்தியும் பண்ணுகிறது! அப்படி எனக்கும் இதுவே ப்ராப்யமாதலால், "திருமலையிலேசெல்லவேணும்" என்னத் தகாத நான் மெய்யாகத் திருமலையிலேவந்து உன்திருவடிகளிலே ஸர்வகாலமும் ஸர்வ கரணங்களாலும் ஸர்வசேஷ வ்ருத்தியும் பண்ணுவதுஎன்றோ? என்கிறார்.

ஒ.—ஆறும்பாட்டில், ஸ்ரீ வைகுண்டத்திலே எனக்கு அடிமைசெய்கை யன்றோ எல்லார்க்கும் ப்ராப்யமென்னில், அங்குள்ளாரும் ஆசைப்பட்டு வந்தன்றோ திருமலையிலே உனக்கு அடிமைசெய்கிறது? அப்படியே நானும் திருமலையிலே புஷ்கலமாக அடிமைசெய்யப் பெறுவதென்று? என்கிறார். அந்யபரரான தேவர்களும் வந்து ஆசைப்பட்டு அடிமைசெய்யும்படி ஸ்ப்ருஹணீயமான உன்திருவடிகளை மெய்யாக நான்பெறுவது என்று? என்றுமாம். [எந்நாளென்று தொடங்கி] - ஸர்வஸுலபமான திருவடிகளை நாம் என்றோ காணப்பெறுவது என்று பேராசையோடேவந்து அயர்வறுமமரர்கள் திரண்டு நின்று ஸ்தோத்ரப்பண்ணி அநந்யப்ரயோஜநமான மநஃப்ரப்ருத்யுபகரணங்களாலேஅடிமை செய்யும்படியான திருமலையிலே நின்றருளினவனே! [மெய்ந்நானெய்தி] - ஜ்ஞாநாநுஸந்தாநமாத்ரமன்றிக்கே ஸாக்ஷாத்கரித்து.

இத்யாதி. "திணரார்" - பாரம் மிக்கவென்றபடி. "திண்மை" என்று - பாரமாகக் கீழருளிச்செய்து, மிடுக்காகவர்த்தாந்தரம் - தன்வளவிலே இத்யாதி. அவ்வளவுக்குஅகப்படாதாரையென்றது-அநுகூலரை. விரோதியைப்போக்கவேணுமென்றே காலப்ரஸ்நம்பண்ணுகிறதென்? என்ன-கையில் இத்யாதி. இது-"எந்நாள்" என்றதுக்குஹாவம். ஸாண்யம்வரணமிதி' - "ராக்ஷஸெஷு யூத்ரா நாநாவாநராணாம்ஹோவஉ: । ஸாணஂஸாணம்யாதா ராஉஸாயாதஜ" இதியுத்தகாண்டே [கூச-கள].

(ரு)

ப.—அநந்தரம், அதிஶயிதஜ்ஞாநரான ஸூரிகளும் அடிமைசெய்யுந்திருமலையிலே உன்திருவடிகளைக்கிட்டி நான் அடிமைசெய்வதுஎந்நாள்? என்கிறார்.

(வரையாதே), மண் - பூம்யுபலக்ஷித ஸகலலோகத்தையும், அளந்த - அளந்து எல்லாரோடும் ஸம்ஶ்லேஷித்த ஶீலாதிஶயத்தையுடைய, தாமரைகள் - திருவடித் தாமரைகள், இணை - இரண்டையும், நாம் - (பரத்வைகாநுபவபரரான) நாம், காண்பதற்கு - காண்பதற்கு, எ-எந்த, நாளோம் - நாளையுடையோம், என்று - என்று, இமையோர்கள் - அஸ்கலிதஜ்ஞாநரான ஸூரிகள், எந்நாளும் - எல்லாக்காலத்திலும், நின்று - நின்று, ஏத்தி - இப்படி சொல்லிஸ்துதித்து, இறைஞ்சி - வணங்கி, இனமினமாய் - திரள்திரளாக, மெய்ந்நாமனத்தால் - ஶரீரவாங்மநஸ்ஸுக்களாலே, வழிபாடு - அடிமை, செய்யும் - செய்யும்படியான, திருவேங்கடத்தானே - திருமலையிலே ஸந்நிஹிதனானவனே! அடியேன் - அநந்யார்ஹனாய், நான் - (அதிநிவிஷ்டனான) நான், மெய் - ஸ்வப்நகல்பமான, (மாநஸாநுபவமன்றியே மெய்யேகண்டு), எய்தி - கிட்டி, உன் - உன், அடிக்கண் - திருவடிகளிலே, மேவுவது - பொருந்துவது, எந்நாள் - எந்நாள்? எந்நாளேமென்று - எந்நாளையுடையோமென்றபடி.

இ.—ஆறும்பாட்டில், "எந்நாள்" என்கிறதென்? ஒரு தேசவிசேஷத்திலே வ்யவஸ்திதமன்றோ? என்ன, அங்குள்ளாரும்வந்து அடிமைசெய்கிற திருமலையிலே என்னை அடிமைகொள்ளவேணுமென்கிறார்.

[எந்நாளே இத்யாதி] - நித்யஸூரிகள் பாசுரமிருக்கிறபடி: - 'பரமபதத்திலே மேன்மையை அநுஸந்தித்திருக்கிற நாம், ஸர்வஸுலபமான திருவடிகளைக்கிட்டுவது என்றோ?' என்று. இங்குள்ளார் அங்குப்போவது மேன்மையையநுபவிக்க; அங்குள்ளார் இங்குவருவது ஶீலகுணாநுபவம்பண்ண. விஷயமுண்டாகையாலே வ்யக்தமாக அநுபவிக்கலாவது இங்கே. ஸங்கோசமற்றவர்களுக்கும் "எந்நாள்" என்னும்படியிறே ஶீலகுணத்தில் ஏற்றம். [எந்நாளும் இத்யாதி] - காலமெல்லாம் நித்யஸூரிகள் நின்று ஸ்தோத்ரம்பண்ணியிறைஞ்சி. [இனமினமாய்] - கிண்ணகத்தில் இழிவாரைப்போலே திரள்திரளாக இழிந்து மெய்யாலும் நாவாலும் மநஸ்ஸாலும் வழிபடுவரென்னுதல்; மெய்யான நாவாலும் மநஸ்ஸாலுமென்னுதல், அநந்யப்ரயோஜநமான கரணங்களைக்கொண்டு ஆஶ்ரயிக்கும்படி திருமலையிலே ஸந்நிஹிதனானவனே! [மெய்ந்நானெய்தி] - மாநஸாநுபவமாத்ரமன்றிக்கே ஸாக்ஷாத்கரித்து என்றோ நான்உன்னைக்கிட்டுவது? எனக்கு ருசியுண்டாய், நீயும் ஸந்நிஹிதனாயிருக்க இழக்கவோ? "இப்பாட்டு - ப்ராஹ்மாதிகளைச் சொல்லுகிறது" என்பாருமுண்டு; மேலே - அவர்களைச்சொல்லுகையாலே, அது உசிதமன்று.

ஈடு.—ஆறும்பாட்டு. "எந்நாள்" என்றுஸந்தேஹிக்கிறதென்? அதொரு தேசவிசேஷத்திலே வ்யவஸ்த்திதமன்றோ? என்ன, அங்குள்ளாரும் இங்கேவந்தன்றோ உன்னைப்பெற்று அநுபவிக்கிற தென்கிறார். அங்ஙனன்றிக்கே, ப்ரயோஜநாந்தரபரரான அந்தர ஜாதிகளுங்கூட அநந்ய ப்ரயோஜநரைப்போலே வந்துஆஶ்ரயிக்க நிற்கிறவிடத்தே நான் இழந்துபோவதே என்கிறாராகவுமாம்.

ஆறும்பாட்டு.—எந்நாளே இத்யாதி. "இமையோர்கள்" என்றதின் அர்த்தத்வயாநுகுணமாக அவதாரிகாத்வயம் - எந்நாள்என்று இத்யாதி.

[எந்நாளே நாம் மண்ணளந்த இணைத்தாமரைகள் காண்பதற்கென்று] - "எந்நாள் யான்உன்னை இனிவந்து கூடுவனே" என்று இங்குள்ளார் அங்கே அடிமைசெய்ய ஆசைப்படுமாபோலேகாணும், அங்குள்ளாரும் இவனுடைய ஸௌலப்யத்தைக்கண்டு அநுபவிக்கவேணும் என்று ஆசைப்பட்டுவரும்படி. ஸர்வஸுலபமான திருவடிகளை நாம் காணப்பெறுவது என்றோ? பூமியையடங்கலும் அநாயாஸேந அளந்துகொள்ளக் கண்ட காட்சியிலே தலைமேலே எடுத்துவைத்துக் கொள்ளவேண்டும்படியான போக்யதையை யுடைய திருவடிகளை. [எந்நாளும்] - மற்றொருபோது வேறொன்றைப்பற்றிப் போகிறார்களன்றே. [இமையோர்கள்இத்யாதி] - நித்யஸூரிகள் காலமெல்லாம்நின்று ஸ்தோத்ரம்பண்ணிப் பின்னைத்திருவடிகளிலே விழுந்து, கிண்ணகத்தில்இழிவாரைப்போலே திரள்திரளாய். [மெய்ந்நாஇத்யாதி] - மநோவாக்காயங்களாலே ஆஶ்ரயியாநிற்பர்கள். அன்றியே, மெய்யானநாவாலும்மனத்தாலும் வழிபடுவர்களென்றுமாம். அதாகிறது - அநந்யப்ரயோஜநமான கரணங்களைக்கொண்டு ஆஶ்ரயியாநிற்பர்களென்றபடி. நித்யஸூரிகளானபோது, கைங்கர்யமாகிறது; ப்ரஹ்மாதிகளானபோது, உபாஸநமாகிறது. [மெய்ந்நானெய்திஇத்யாதி] - ஆவிஷ்காரத்தாலே மாநஸாநுபவத்தைப்பண்ணுவித்துப் பகட்டவொண்ணாது; நான் உன் திருவடிகளைப் பத்தும்பத்தாக வந்துகிட்டி, பின்னை விஶ்லேஷத்தோடே வ்யாப்தமாகாதபடி பொருந்தப்பெறுவதுஎன்றோ? என்கிறார். ஓரடிவிடில் ஸத்தையற்றிறே இவர்க்கு இருக்கிறது. (௬)

ஏழாம் பாட்டு.

அடியேன்மேவியமர்கின்றஅமுதே! இமையோரதிபதியே!
கொடியாவடுபுள்ளுடையானே! கோலக்கனிவாய்ப்பெருமானே!
செடியார்வினைகள்தீர்மருந்தே! திருவேங்கடத்தெம்பெருமானே!
நொடியார்பொழுதும்உனபாதம் காணநோலாதாற்றேனே.

பரமபதத்திலே அவன் திருவடிகளை எப்போதும் ஒக்க அநுபவியாநிற்கிற நித்யஸூரிகள், "எந்நாள் காண்பது" என்று ப்ரார்த்திக்கைக்கு அடியேதென்ன-எந்நாள் யானுன்னை இத்யாதி. "மண்ணளந்த" என்றதுக்குபாவம் - ஸர்வஸுலப இத்யாதி. "தாமரை" என்றதுக்குபாவம் பூமியையடங்கலும் இத்யாதி. எந்நாளும்நின்று - காலமெல்லாம்நின்று. "மெய்" என்று - ஶரீரமாதல், ஸத்யமாதல். முந்தின அர்த்தத்தைப்பற்ற - மநோவாக்காய இத்யாதி. த்விதீயார்த்தத்தைப்பற்ற - அன்றியே மெய்யான இத்யாதி. அதாகிறதென்றது - வாங்மநஸ்ஸுக்கள் மெய்யாகையாகிறதென்றபடி. வழிபடுகையாவதேதென்ன, அவ்தாரிகையிற்சொன்ன யோஜநாத்வயாநுகுணமாக அருளிச்செய்கிறார் - நித்யஸூரிகள் இத்யாதி வாக்யத்வயத்தாலே. வழிபாடுசெய்யும் - அடிமைசெய்யாநிற்கிற என்னுதல்; ஆஶ்ரயியாநிற்கிறவென்னுதல். "மெய்யாகவெய்தி" என்றதுக்கர்த்தம் - ஆவிஷ்காரத்தாலே இத்யாதிவாக்யத்வயமும். "மேவுவது" என்றதுக்கர்த்தம் - பின்னைவிஶ்லேஷத்தோடே இத்யாதி. "திருவடிகள்" என்றுவிசேஷிக்கிறதுக்குபாவம் - ஓரடிவிடில் இத்யாதி. அடிவிடில் என்றவிடத்திலே, அடியென்று - க்ஷணத்துக்கும், திருவடிக்கும்பேர். 'நாம் மண்ணளந்த இணைத்தாமரைகள்காண்பது - எந்நாளே - என்று - இமையோர்கள் - இனமினமாய் - எந்நாளும் நின்று - ஏத்தி யிறைஞ்சி - மெய்ந்நா' என்றுதொடங்கி, 'திருவேங்கடத்தானே! உன்னடிக்கண் அடியேன்-நான் மெய்யாக - எய்தி - மேவுவது - எந்நாள்' என்றந்வயம். காண்பதற்கு - காண்பதென்றபடி. இறைஞ்சி - வணங்கி, திருவடிகளிலே விழுந்தென்றபடி. (௬)

ஆ.—(அடியேன்மேவி.) - உபாயாநுஷ்டாநம் பண்ணினலன்றோ இந்த ப்ராப்யம் பெறலாவதென்னில் ; பரமவ்யோமநிலயரான பரமஸூரிகளாலேபரிவ்ருதனாய்க் கொண்டு, உனக்கு விஜயத்வஜமாய் ஆஶ்ரிதவிரோதிநிரஸநஸ்வபாவனான பெரியதிருவடி திருத்தோளிலே ஏறியருளி எனக்காகத் திருமலையிலே புகுந்தருளி என்பக்கலுள்ள ப்ரதிபந்தகத்தைப்போக்கி, என்னெஞ்சிலே வந்து புகுந்தருளி, உன் திருப்பவளத்தின் அழகாலே ப்ராக்ருதவிஷயப்ரவணனான என்னையுங்கூடத் தோற்பித்து அடிமையாக்கி, ஒரு க்ஷணமாத்ரவிச்சேதத்திலும் ஆத்மதாரணக்ஷமனன்றியே அவிச்சேதேந நான்உன்னையநுஸந்திக்கும்படி எனக்குப் பரமபோக்யமாயிருக்கையாலே, உன்னைக் காண்கைக்கோர் உபாயம்அநுஷ்டிக்கிலேனாகிலும் உன்னைக்காணாதொழியில் தரிக்கமாட்டேன் ; ஆதலால் உன்னைக்காட்டி யருளாய் ! என்கிறார்.

ஒ.—ஏழாம்பாட்டில், நான் நிஸ்ஸாதநனாயிருக்கச்செய்தே, உன்னுடைய போக்யதையையநுஸந்தித்து உன்னையொழிய ஒருக்ஷணமாத்ரமும் தரிக்கமாட்டுகிறிலேனென்கிறார். [அடியேன் என்று தொடங்கி] - அயர்வறுமமரர்களதிபதியாய் வைத்து என்னை அடிமைகொள்ளுகைக்காகத் திருமலையிலேவந்து நின்றருளி என்னுடைய ப்ரதிபந்தகங்களைப் போக்கி ப்ரதிபக்ஷநிரஸநசீலனான பெரிய திருவடியை த்வஜமாக உடையையான வேண்டற்பாட்டாலும் அழகாலும் என்னை அடிமைகொண்டு எனக்கு நிரதிஶயபோக்யனானவனே !

ப.—அநந்தரம், என்னோடு ஸூரிகளோடு வாசியற ஸர்வஸாதாரணமாக ரஸிப்பித்துக்கொண்ட உன்னை யநுபவிக்கைக்கு ஸாதநமநுஷ்டியாதிருக்க, அநுஷ்டித்து பலம் தாழ்ந்தாரைப்போலே க்ஷணகாலமும் பொறுக்கமாட்டுகிறிலேனென்கிறார்.

அடியேன் - (நிருபாதிக ஶேஷத்வத்தை ஸ்வரூபமாக வுடையேனான) நான், மேவி - கிட்டி, அமர்கின்ற - நிரந்தராநுபவம்பண்ணும்படியான, அமுதே - நித்ய போக்யபூதனாய், (இப்படி ஸூரிகளையு மநுபவிப்பித்து), இமையோர் - அவர்களுக்கு, அதிபதியே - நிர்வாஹகனாயிருக்கும் மேன்மையையுடையையாய், (இந்த போக்யதைக்கு ஸூசகமாம்படி), அடு - ஆஶ்ரிதவிரோதி நிரஸநசீலனான, புள் - பெரியதிருவடியை, கொடியா - கொடியாக, உடையானே - உடையையாய், கோலம் - இந்தபோக்யதாவர்த்தகமான ஸௌந்தர்யாதிகளை யுடைத்தாய், கனி - பக்வ பலம்போலே சிவந்த, வாய் - அதரசோபையையுடையனாய்க்கொண்டு, பெருமானே - இந்தபோக்யதைக்கு எல்லை காணவொண்ணாத பெருமையை யுடையனாய், (போகப்ரதிபந்தகமாய்), செடி - செடி போலே, ஆர் - செறிந்த, வினைகள் - பாபங்களை, தீர் - தீர்க்கைக்கு, மருந்தே - அப்ரதிஹதஔஷதமாய், திருவேங்கடத்து - திருமலையிலே ஸந்நிஹிதனாய், எம் - என்னை, பெருமானே - அடிமைகொண்ட ஸ்வாமியே ! உன - உன், பாதம் - திருவடிகளை, காண - காண்கைக்கு, நோலாது - நோற்றுவையாதே, (நோற்றார், பலம் தாழ்த்தப்படுங் கணக்கிலே), நொடி - நொடி, ஆர் - சேர்ந்த, பொழுதும் - க்ஷணமாத்ரமும், ஆற்றேன் - ஆற்றமாட்டுகிறிலேன்.

இ.—ஏழாம்பாட்டில், நான் நிஸ்ஸாதநனாயிருந்துவைத்து உன்போக்யதையாலே க்ஷணமாத்ரமும் தரிக்கமாட்டுகிறிலேன் என்கிறார். "இமையோரதிபதியாய் - கொடியாவடுபுள்ளுடையானாய் - செடியார் வினைகள் தீர்மருந்தாய் - திருவேங்கடத்தெம்

பெருமானும் - கோலக்கனிவாய்ப் பெருமானும் - அடியேன் மேவியமர்கின்றவமுதமானவனே! உனபாதம் காணநோலாதே - நொடியார்பொழுதும் - ஆற்றேன்' என்று அந்வயம். அயர்வறுமமரர்களதிபதியாய்வைத்து ப்ரதிபக்ஷத்தை முடிக்கும் பெரியதிருவடியை த்வஜமாகவுடையனாய், தூறுமண்டின ஸாம்ஸாரிக ஊரிதங்களைப்போக்கும் மருந்தாய், திருமலையிலே நித்யவாஸம்பண்ணி, உன்னுடைய ஸௌந்தர்யாதிகளாலே என்னை அநந்யார்ஹனாக்கி, ஸ்வரூபஜ்ஞாநமுடைய நான் அநந்யப்ரயோஜநமாக அநுபவிக்கிற அம்ருதமானவனே! தேஹத்தைப் பூண்கட்டும் அம்ருதத்தில் வாசிசொல்லுகிறார்: உன்திருவடிகளைக் கிட்டுகைக்கு ஸாதநாநுஷ்டாநம்பண்ணாதே, அநுஷ்டித்து ஃபலந்தாழ்த்தாரைப்போலே கூப்பிடாநின்றேன்.

எடு.—ஏழாம்பாட்டு. '''மெய்ந்நானெய்தி'' என்கிற இந்த ஜ்ஞாநலாபம் உமக்கு உண்டாயிற்றிறே; அது ஃபலத்தோடே வ்யாப்தமாயல்லது நில்லாதிறே; ஆனபின்பு அவ்வளவும் நீர்ஆறியிருந்தாலோ ?' என்ன; 'அத்தனை க்ரமப்ராப்தி பார்த்திருக்கப்போகிறதில்லை உன் போக்யதை' என்கிறார். உன்றனை யாறியிருக்க நான் மாட்டுகிறிலேன்.

[அடியேன்மேவியமர்கின்றவமுதே] – தேவஜாதிகளுடைய உப்புச்சாறுபோலன்று; ஒருதிரளாய் அநுபவிக்குமதன்று; அநந்ய ப்ரயோஜநரநுபவிக்கும் அம்ருதமாயிற்று! † (மேவியமர்-அநந்ய ப்ரயோஜநமா யத்விதீயமாயிருக்கை. மேவுகை - இதரத்யாகம். அமருகை - அர்ச்சாவதாரம்.) [இமையோரதிபதியே] - இது புஜிக்கைக்குக் கூட்டாவதொரு திரள் அங்கே உண்டாயிருக்கிறபடி. [கொடியாவடுபுள்ளுடையானே] - ப்ரதிபக்ஷநிரஸநத்தை ஸ்வபாவமாகவுடைய பெரியதிருவடியை த்வஜமாக வுடையவனே! [கோலக்கனிவாய்ப்பெருமானே] - அழகியதாய்க் கனிந்திருந்துள்ள திருவதரத்தின் சிவப்பைக் காட்டி என்னை யடிமைகொண்டவனே! வாய்க்கரையிலே தோற்றார்காணும். ஆஶ்ரிதரை இவ்வழகை யநுபவிப்பிக்கைக்குக் கொடிகட்டிக்கொண் டிருக்கிறபடி. [செடியார்வினைகள் தீர்மருந்தே] - செடி - பாபம்; பாபத்தோடே பொருந்தின அஸத்கர்மங்களாலுண்டான

ஏழாம்பாட்டு.—அடியேன் இத்யாதி. "நொடியார் பொழுதுமுனபாதங் காண நோலாதாற்றேன்" என்றத்தைப்பற்ற அவதாரிகை - மெய்ந்நான் இத்யாதி. "அமுதே" என்றத்தைப் பற்ற - உன்போக்யதை என்றது. நீ திருவேங்கடமுடையானாயிருக்கச்செய்தேயும் என்னையங்கீகரியாமல் ஆறியிருந்தாய் ; இப்படியிருந்த உன்னைப்போலே நான்ஆறியிருக்கமாட்டே னென்கிறார் - உன்றனை இத்யாதி.

"அமுத" என்றதுக்கு - ஆராவமுதென்றுவிவக்ஷித்துபாவம் - தேவஜாதி இத்யாதி. "அடியேன்" என்ற ஏகவசநத்துக்குபாவம் - ஒருதிரளாய் இத்யாதி. "அடியேன்" என்று - சேஷத்வஞ்சொன்னதுக்குபாவம் - அநந்யஇத்யாதி. ஒருதிரளாயநுபவிக்குமது அன்றென்றுசொல்லிவைத்து, "இமையோர்" என்று - பஹுவசநமாகச்சொன்னதுக்கு பாவமேதென்ன - இதுபுஜிக்கைக்கு இத்யாதி. அதாவது - இங்குள்ளார் ப்ரயோஜநாந்தரபரரானாற்போலே, அங்குள்ளார் அநந்யப்ரயோஜநர் என்று கருத்து. "அடுபுள்ளை - கொடியாக உடையவன்" என்று விவக்ஷித்தருளிச்செய்கிறார் - ப்ரதிபக்ஷ இத்யாதி. "கனிவாய்" என்றவநந்தரம் "பெருமான்" என்றதுக்கு ரஸோக்தியாகபாவம் - வாய்க்கரையிலே இத்யாதி. அதரத்திலேயென்று ஸ்வபாவார்த்தம்; மேலெழ என்று சாடு. பதச்சேர்த்திக்குபாவம் - ஆஶ்ரிதரை இத்யாதி. "ஆர் - செடி - வினை" என்றாய் - பூர்ணமான பாபத்தா

† குண்டலிக்ரந்தம் ஸ்வாசிக்கம். இவ்வாக்யத்தில் 'அத்விதீயமாய்' என்றவிடத்தில் 'நித்யமாய்' என்றும் காண்கிறது.

து:கத்தைப் போக்குகைக்கு மருந்தானவனே! அது புஜிப்பிக்கைக்கு விரோதிகளைப் போக்கும்படி. அன்றிக்கே, தூறுமண்டின கர்மங்களைப் போக்குகைக்கு மருந்தானவனே! அவ்வம்ருதந்தானே காணும் மருந்தாகிறது. "மருந்தும் பொருளு மமுதமுந்தானே," "மருந்தே நங்கள் போகமகிழ்ச்சிக்கு" என்றும், அவன்தன்னையொழிய வேறு மருந்துமில்லையே; மருத்துவனாய்நின்ற மாமணிவண்ணனிறே. [திருவேங்கடத்தெம்பெருமானே] - அவ்வம்ருதம், புஜிப்பார்க்கு மலைமேல் மருந்திறே. அவ்வம்ருதம், புஜிப்பார்க்குச் சாய்கரகம் போலே உயரத்திலே யணித்தாக நிற்கிறபடி. 'இமையோரதிபதியாய், கோடியாவபேருள்ளுடையானாய் - செடியார்வினைகள் தீர்மருந்தாய், திருவேங்கடத் தெம்பெருமானாய்-கோலக் கனிவாய்ப்பெருமானாய் - அடியேன்மேவி யமர்கின்றவமுதே!' என்கிறார். பட்டர், "நித்யத்திலே, 'அமுதுசெய்யப்பண்ணும்போது ஸ்தோத்ரத்தை விண்ணப்பஞ்செய்வது' என்று என்ன ஸ்தோத்ரத்தைவிண்ணப்பஞ்செய்வது?" என்ன, "'அடியேன் மேவியமர்கின்றவமுதே', 'பச்சைமாமலைபோல்மேனி' என்கிற பாட்டுக்கள்போலேயிருக்குமவற்றை விண்ணப்பஞ்செய்வது" என்றருளிச்செய்தார். [நொடியார்பொழுதும்] - நொடிநிறையுமளவும். [உனபாதங்காணநோலாதாற்றேனே]-உன்திருவடிகளைக் காண்கைக்கு ஒருஸாதநாநுஷ்டாநம் பண்ணாதிருக்க, க்ஷணகாலமும் ஆற்றமாட்டுகிறிலேன். ஸாதநத்தைக்கண்ணழிவற அநுஷ்டித்து ஃபலந்தாழ்ப்பாரைப்போலே படாநின்றேன். அதில்லாமையிறே இவர் இங்ஙனே கிடந்துபடுகிறது. தனியே ஒருஸாதநம் அநுஷ்டிக்குமவனுக்கு, "அது தலைக்கட்டினவாறே பெறுகிறோம்" என்றுதல், "அதிலே சிலவைகல்யம்பிறக்கப்பட்டிறே ஃபலந்தாழ்த்தது" என்றுதல் ஆறியிருக்கலாம்; அவனே ஸாதநமானஇவர்க்கு விளம்பித்தால் "அவன் க்ருபையும் ஏறிப்பாயாதபடியானேனே!" என்னும் ஹயமிறேயநுவர்த்திப்பது. (எ)

லுண்டான து:கமென்றுதல்; "செடி" என்று - பாபமாய், ஆர்தல் - உண்டானதாய், வினை என்று - து:கமாய், பாபத்தாலுண்டான து:கமென்றுதல் முந்தினவர்த்தம்; செடியென்று - தூறாய், ஆர்தல் - மிகுதியாய், வினையென்று - கர்மமாய், தூறு மண்டிக்கிடக்கிற கர்மமென்று இரண்டாமர்த்தம். "அமுதே" என்றத்தைக் கூட்டி ஸாவம் - அவ்வம்ருதந்தானே இத்யாதி. "அம்ருதந்தானே மருந்து" என்றதுக்கு ப்ராமாணம் - மருந்தும் இத்யாதி. ஸம்ஸாரவ்யாதியைப் போக்கும் ஔஷதமும், இஷ்டமான மோக்ஷத்தைத்தரும் பொருளும், ஸ்வத: இஷ்டமாய்ஹோக்யமான அம்ருதமும் அந்தத்திருவடிகளே யென்றபடி. மூன்றாந்திருவந்தாதி நாலாம்பாட்டு. 'மருந்தேநங்கள்' இத்யாதிக்கு - எங்களுடைய ஹோகத்தினுடைய வ்ருத்திக்கும் வர்த்தகமான மருந்தானவனே யித்யர்த்த:. மருந்துவனாய்நின்ற - மருந்துஅறியுமவனா யிருக்கிறவனேயென்றபடி. பெரியாழ்வார்திருமொழி, அஞ்சாம்பத்து, மூன்றாந்திருமொழி, ஆறாம்பாட்டு, "எருத்துக்கொடி" இத்யாதி. "மருந்தே" என்றத்தோடே "திருவேங்கடத்தெம்பெருமானே" என்றுகூட்டிஸாவம் - அவ்வம்ருதம் இத்யாதி. "அடியேன் மேவியமர்கின்றவமுதே" என்ற பதத்தோடே "திருவேங்கடத்தெம்பெருமானே" என்றத்தைச்சேர்த்து ஸாவம் - அவ்வம்ருதம்புஜிப்பார்க்கு இத்யாதி. சாய்கரகம் - தண்ணீர்ப்பந்தலில் தண்ணீர்வார்க்கிற கரகம். பரத்வத்தைச்சொல்லி, விரோதிநிரஸநத்துக்கு உறுப்பான பரிகாரத்தைச்சொல்லி, விரோதிநிரஸநத்தைச்சொல்லி, ஸௌலப்யத்தைச்சொல்லி, அழகைச்சொல்லி, ஹோக்யனாயிருக்கிறானென்றிப்படி ஒருக்ரமஞ்சொல்லுகைக்காக அந்வயிக்கிறார் - இமையோரதிபதியாய் இத்யாதி. ப்ராஸங்கிகம் - பட்டர் இத்யாதி. நித்யத்திலேயென்றது - உடையவர்நித்யத்திலேயென்றபடி. உனபாதங்காணநோலாதிருக்கச்செய்தேயும் ஹோக்யதையாலே நொடியார்பொழுதும் ஆற்றேனென்கிறார் - உன்திருவடிகளை இத்யாதி. விவரணம் - ஸாதநத்தை இத்யாதி. நோலாமையாலே விளம்பஹேதுவில்லை; ஆகையாலே, ஆற்றேனென்றர்த்தாந்தரம் - அதில்லாமையிறே இத்யாதி. கீழ்வாக்யத்தை ஸோபபத்திகமாக விவரிக்கிறார் - தனியே இத்யாதிவாக்யத்வயத்தாலே. (எ)

எட்டாம் பாட்டு.

நோலாதாற்றேன்உனபாதம்காணவென்றுநுண்ணுணர்வின்
நீலார்கண்டத்தம்மானும்நிறைநான்முகனுமிந்திரனும்
சேலேய்கண்ணார்பலர்சூழவிரும்புந்திருவேங்கடத்தானே !
மாலாய்மயக்கியடியேன்பால்வந்தாய்போலேவாராயே.

ஆ.—(நோலாதாற்றேன்) - உபாயசூந்யரா யிருந்துவைத்து ஆசைப்பட்டால் கிடைக்குமோ? என்னில்; அறிவுடையரான ஸர்வ சதுர்முகஇந்த்ராதிதேவர்களுங்கூட ஸபரிக்ரஹமாக வந்து, நாங்கள் உபாயசூந்யராகிலும் உன்னைக் காணுந்தொழியில் தரிக்கமாட்டோம் என்றாசைப்பட்டன்றோ உன்னைக்காணப்பெறுகிறது? ஆதலால், அடியேனும்உன்னை ஸர்வகாலமுங் காணும்படி வரவேணுமென்றபேக்ஷிக்க, அப்போதே யெழுந்தருளாவிட்டவாறே இப்படிச்செய்கை திருவுள்ளமன்றாகில், உன்னைக் காணப்பெறாத வ்யஸநத்தாலே பித்தேறி மயங்கியிருந்த அடியேன்பால் ஸ்ரீகஜேந்த்ராழ்வானுக்குவந்து தோற்றினாற்போலேயாகிலும் வந்து என்னை தரிப்பித்தருளாய்! என்கிறார்.

ஒ.—எட்டாம்பாட்டில், நோலாதுவைத்து "ஆற்றேன்" என்ன, பெறலாமோ? சிறிதுயத்நம் பண்ணவேண்டாவோவென்னில்; எத்தனையேனுமளவுடைய ப்ரஹ்மாதிகளும் ஸபரிகரமாகவந்து தங்களகிஞ்சநத்வத்தை ஆவிஷ்கரித்தன்றோ தங்கள் அபேக்ஷிதங்களைப்பெற்றுப்போவது? ஆனபின்பு, வந்து என்னுடைய ஆர்த்தியைத் தீர்த்தருளவேணும் என்கிறார்.

[நோலாதென்று தொடங்கி] - உன்னுடைய திருவடிகளைக் காண்கைக்கீடாக ஸாதநாநுஷ்டாநம் பண்ணாதேயிருந்துவைத்து ஒன்றும் தரிக்கமாட்டுகிறிலேன் என்று விலக்ஷணஜ்ஞாநனாய் ஜகத்ப்ரதாநனான நீலகண்டனும் அவனிலும் பூர்ணனான சதுர்முகனும் இந்த்ரனும். [சேலேயென்று தொடங்கி] - ஊயநீயமாம்படி தங்களுக்கு போக்ய பூதைகளான ஸ்த்ரீகளை முன்னிட்டுக்கொண்டு ஸமாஸ்ரயிக்கலாம்படி அவர்களுக்கு ஸுலபனாய்த் திருமலையிலேநின்றருளினவனே! கறுத்த நிறத்தோடே கண்டார் பிச்சேறும்படி ஸ்ரீவஸுதேவர்திருமகனாய்வந்து பிறந்தருளினாற்போலே என்னுடைய ஆர்த்தி தீர வரவேணும்.

ப.—அநந்தரம், ஸாவரோதரான ஈஸ்வராபிமாநிகளும் ஸாதராஸ்ரயணம் பண்ணும்படி ஸுலபனாய்நிற்கிற நீ, க்ருஷ்ணனாய் வந்தாற்போலே என்பக்கலிலே வரவேணுமென்கிறார்.

உன - உன், பாதம் - திருவடிகளை, காண - காண்கைக்கு, நோலாது - ஸாதநமநுஷ்டியாதே வைத்து, ஆற்றேன் - ஆற்றமாட்டுகிறிலேன், என்று - என்றுசொல்லி, நுண்ணுணர்வில் - ஸர்வஜ்ஞனைகயாலே ஸூக்ஷ்மார்த்ததர்ஸியாய், (விஷத்தாலே), நீல் - கருமை, ஆர் - ஆர்ந்திருக்கிற, கண்டம் - கண்டத்தை யுடையனாய், அம்மானும் - அத்தாலே ஜகத்ப்ரதாநனான ருத்ரனும், நிறை - தஜ்ஜநகனாய் ஸ்ரஷ்ட்ருத்வாதி அநுகுண ஜ்ஞாநாதிபூர்ணனான, நான்முகனும் - சதுர்முகனும், இந்திரனும் - த்ரைலோக்யைஸ்வர்யவிசிஷ்டனான இந்த்ரனும், சேல் ஏய் - முக்தமான சேல்போலேயிருக்கிற, கண்

ணார் - கண்ணையுடையரான, பலர் - உமா ஸரஸ்வதீ ப்ரப்ருதிகளான பலபெண்டு களும், சூழ - தங்கள் பரிஸரவர்த்திகளாக, விரும்பும் - ஸாதரமாக ஆஶ்ரயிக்கும், திருவேங்கடத்தானே - திருமலையிலே ஸந்நிஹிதனானவனே ! மால்ஆய் - கரியநிறத்தை புடையனாய்க்கொண்டு [க்ருஷ்ணனாய்], மயக்கி - குணசேஷ்டிதங்களாலே ஸர்வரையும் மயக்கி, வந்தாய்போலே - வந்தாற்போலே, அடியேன்பால் - உன்னையொழியச் செல் லாதபடி அநந்யார்ஹனான என்பக்கலிலே, வாராய் - வரவேணும் ! மாலாய் - க்ருஷ்ணனா யென்றபடி.

இ.—எட்டாம்பாட்டில், நோலாதவைத்து "ஆற்றேன்" என்ன, பெற லாமோவென்ன : அளவுடையாரான ப்ரஹ்மாதிகளும் ஆகிஞ்சந்யத்தை முன்னிட் டன்றோ தந்தாம் அபேக்ஷிதம்பெற்றது! என்கிறார்.

[உனபாதங்காண - நோலாதாற்றேன்]-உன்திருவடிகளைக் கிட்டுகைக்கு ஸாத நாநுஷ்டாநம்பண்ணாதேயிருந்து வைத்து, உன்தாளையொழிய ஆற்றமாட்டேனென்றா யிற்று, அவர்கள் தனித்தனியே சொல்லுவது. [நுண்ணுணர்வில்] - "ஸத்வாத் ஸஞ்ஜாயதே ஜ்ஞாநம்" என்று ஸத்வம்தலையெடுத்து தத்வஜ்ஞாநம் பிறந்தபோது அவர்களும் இப்படியாயிற்றுசொல்லுவது: -- "ஶரணம்த்வாம் ப்ரபந்நாயே த்யாநயோகவிவர்ஜிதா:". விஷத்தைக் கண்டத்திலேயடக்கின ஶக்தியையுடையனாய் அத்தாலே ஜகத்ப்ரதாநனாக அபிமாநித்திருக்கும் ருத்ரனும், அவனுக்கும் ஜநகனாய் அவனிலும் ஜ்ஞாநஶக்திகளால் பூர்ணனான சதுர்முகனும் த்ரைலோக்யநிர்வாஹகனான இந்த்ரனும். "ஸப்ரஹ்மகாஸ் ஸருத்ராஶ்ச" என்னக்கடவதிறே. [சேலேய்கண்ணார் பலர்சூழ] - "உமயாஸஹ ருத்ராணீ" என்கிறபடியே ஸ்த்ரீகள் கழுத்திலே கப்படத்தைக்கட்டி அவர்களை முன்னிட் டுக்கொண்டாயிற்று ஆஶ்ரயிப்பது. "ஸ்த்ரியோநந்தம் ப்ரபந்நாஸ்ஸ்யு:" என்று காளி யன் ஸ்த்ரீகளை முன்னிட்டு ஶரணம்புக்காற்போலேயும், மஹாராஜர் தாரையை முன் னிட்டாற்போலேயும். [திருவேங்கடத்தானே] - அவர்களுக்கு ஆஶ்ரயிக்கலாம்படி ஸுலபனாய் வர்த்திக்கிறவனே! [மாலாய்இத்யாதி] - கரியநிறத்தோடே இடையரும் இடைச்சிகளும் பிச்சேறவந்து பிறந்தாற்போலே, என்ஆர்த்தி தீரவரவேணும். மாலாய் - மயங்கியிருக்கிற அடியேன் என்றுமாம்.

ஈடு.—எட்டாம்பாட்டு. "உன்னைக் கிட்டுகைக்கு என்தலையில் ஒரு ஸாதநமில்லை" என்றுநின்றீர்; 'இதோருவார்த்தையோ ! ஸாதநம் அநுஷ்ட்டித்தார்க்கன்றி பலமுண்டோ ?' என்ன, 'தந்தாமுடைய அபிமதஸித்தி ஸாதநாநுஷ்ட்டாநத்தாலே என் றிருக்கும் ப்ரஹ்மாதிகளுக்கும், கிட்டினால் பாசுரமிதுவன்றோ ?' என்கிறார். தந்தாமுடைய ஆகிஞ்சந்யத்தை முன்னிடுமத்தனைபோக்கி, ஒன்றுஅநுஷ்ட்டித்துப் பெறலாம்படியோ நீ யிருக்கிறது ?

எட்டாம்பாட்டு.—நோலாதாற்றேன் இத்யாதி. "நோலாதாற்றேன்" இத்யாதியாலே தங்கள் வெறுமையை முன்னிடுகிற ப்ரஹ்மாதிகளுடைய பாசுரத்தையருளிச்செய்கிறதுக்கு அநு குணமாக அவதாரிகை - உன்னைக்கிட்டுகைக்கு இத்யாதி. பாசுரமிதுவன்றோ என்றது - தாமருளிச் செய்த "உனபாதங்காண - நோலாதாற்றேன்" என்றது. இத்தால் சொல்லிற்றாயிற்ற அர்த்தமேது ? என்ன அருளிச்செய்கிறார் - தந்தாமுடைய இத்யாதி விவரணமாதல்.

[நோலாதுஇத்யாதி]- உன்திருவடிகளைக் காண்கைக்கு ஸாதநாநுஷ்டாநம்பண்ணுதே யிருந்துவைத்து உன்னையொழிய ஆற்றமாட்டேன் என்றயிற்று, அவர்கள் தனித்தனியே சொல்லுவது. ஒரு பாண யுத்தத்திலே தோற்றுப் போக்கடியற்றவாறே இங்ஙனே வந்து விழுவர்கள். ரஜஸ்தமஸ்ஸுக்கள் தலையெடுத்தபோது “ஈஶ்வரோஹம்” (ஈஶ்வ ரோஹம்) என்றிருப்பர்கள்; முட்டினவாறே, “க்ருஷ்ண க்ருஷ்ண மஹாபாஹோ ஜாநே த்வாம் புருஷோத்தமம்” (க்ருஷ்ணக்ருஷ்ண மஹாபாஹோ ஜாநேத்வாம் புருஷோத்தமம்) என்று ஸ்தோத்ரம்பண்ணத் தொடங்குவர்கள்; ‘ஶரணம் த்வாமநுப்ராப்தாஸ்ஸமஸ்தா தேவதாகணா:” (ஶரணம்த்வாமநுப்ராப்தாஸ்ஸமஸ்தா தேவதா கணா:). விஷத்தைக்கண்டத்திலேதரித்தஶக்தியையுடையனாய் அத்தாலே ஜகத்ப்ரதாநனாக அபிமாநித்திருக்கும் ருத்ரனும், அவனுக்கும் ஜநகனாய் அவனிலும் ஜ்ஞாநஶக்திகளால் பூர்ணனான சதுர்முகனும், த்ரைலோக்ய நிர்வாஹகனான இந்த்ரனும்; ‘ஸப்ரஹ்மாஸஶிவ ஸேந்த்ரா:” (ஸப்ரஹ்மாஸஶிவஸ்ஸேந்த்ரா:). “இங்ஙனே யிருக்கச்செய்தேயும், அஹிர்புத்ந்ய ஸம்ஹிதையிலே இவர்களுடைய வாக்யங்களை ப்ரமாணமாகக்கொண்டு போராநின்றோமே யென்னில்; ஸத்த்வம் தலையெடுத்தபோது சொல்லுமவையெல்லாங் கொள்ளக்கடவோம். இவை கைக்கொண்டோமென்று, இவர்கள் தாங்கள் உத்தேஶ்ய ராகார்கள்; ‘காக்கைவாயிலும் கட்டுரைகொள்வர்’ என்றுண்டே’ என்று பட்டர் அருளிச்செய்வர். ஓராழ்வார், ‘பிதிருமனமிலேன்’ - பேதிக்கப்பட்ட நெஞ்சையுடையேனல்லேன்; ‘பிஞ்ஞகன் றன்னோடேதிர்வன்’ - ருத்ரனெனக்கு ஶத்ருவன்; ‘அவனெனக்கு நேரான்’- அவனுமெனக்கு ஶத்ருவனல்லன்; அது என்னென்னில்: ‘அதிருமித்யாதி’ - பகவத்விஷயத்திலே நெஞ்சை

நோலாதாற்றோம் என்றதே, “நோலாதாற்றேன்” என்கையாலே தனித்தனியே’ என்கிறது. “ஈஶ்வரோஹம்” என்றவர்கள் “நோலாதாற்றேன்” என்பர்களோ? என்ன - ஒரு பாண இத்யாதி. பாணயுத்தத்திலேயென்றது - பாணயுத்தாதிகளிலே யென்றபடி. யுத்தம்பண்ணுகிறதென்? அநந்தரம் சரணம்புகுகிறதென்? என்ன - ரஜஸ்தமஸ்ஸுக்கள் இத்யாதி. ப்ரஹ்மாதிகள் வெறுமையை முன்னிட்டதுக்கு ப்ரமாணம் - ஶரணம்த்வாம் இத்யாதி. ஸ்ரீவிஷ்ணுபுராணே, ‘க்ருஷ்ண க்ருஷ்ண மஹாபாஹோ ஜாநே த்வாம் புருஷோத்தமம் । பரேஶம் பரமாத்மாநமநாதிநிதநம் பரம்” இதி ருத்ர: [கூகூ - சக]. ஶ்ரீஹரிவம்ஶே ... “ஶரணம் த்வாமநுப்ராப்தாஸ்ஸமஸ்தா தேவதாகணா:” இதி ... ப்ருஹஸ்பதிப்ரமுகா தேவர்ஷய:. [க-கூ-கரு] ப்ரஹ்மருத்ரர்களோடே இந்த்ரனையும்சேர்த்ததபடித்திருக்குமோ? என்ன - ஸப்ரஹ்மா இத்யாதி. நாராயணநுவாகே. இப்படி தூர்யாநிகளாகில் இவர்கள் வாக்யங்கள் ப்ரமாணமாகக்கூடுமோ? என்றுஶங்கித்துப்பரிஹரிக்கிறார்-இங்ஙனே இத்யாதி இங்ஙனேயிருக்கச்செய்தேயுமென்றது-இப்படி அஹங்காரிகளாயிருக்கச்செய்தேயுமென்றபடி. வாக்யங்களாவன - “ஸஹஸ்ர ஶிரஸம் தேவம் விஶ்வாக்ஷம் விஶ்வஶம்பவம்” ... “பராயாநாராயண:” இத்யாதிகள். அவர்கள் வாக்யங்களை ப்ரமாணமாகக்கொண்டால் அவர்களை ப்ரதிபத்திபண்ணவேண்டாவோ? என்ன - இவை கைக்கொண்டோம் இத்யாதி. அநுத்தேஶ்யர் வார்த்தை கைக்கொள்ளலாமோ? என்ன - காக்கை இத்யாதி. காக்கையினுடைய பேச்சிலும் நற்சொற்கொள்ளுவர் என்றபடி. பெரியாழ்வார்திருமொழி, ‘‘வாக்குத்தூய்மை” இத்யாதி. “அவர்கள் அநுத்தேஶ்யர்” என்கைக்கு ஸம்வாதம் - ஓராழ்வார் இத்யாதி. நாலாந்திருவந்தாதி, எண்பத்துநாலாம் பாட்டு, “பிதிருமனமிலேன்” இத்யாதி. ‘பேதிக்கப்பட்டநெஞ்சையுடையேனல்லேன்’ என்றதுக்கு பாவம் - அவன் அஸந்நிதியிலே “அவனோடேயெதிர்வன்” என்றுசொல்லி, அவனைக்கண்டவாறே

வைத்து அநுபவிக்கையே யாத்ரையான எனக்கு, அந்யபரனானவன் ஒப்பாகப்போருமோ? 'குறைகொண்டு' - தன்வெறுமையைக் கைதொழுமோனமாகக்கொண்டு; 'நான்முகன் குண்டிகைநீர்பெய்து' - நினைவறத் திருவடி சென்றுகிட்டிற்று: உபகரணம் பெற்றிலன். தர்ம தேவதையானது த்ரவீபூதமாயிற்றது; அத்தைக்கொண்டு 'மறைகொண்டமந்திரத்தால் வாழ்த்தி' - வேதாந்தங்களில் பகவத் பரத்வ ப்ரதிபாதகமான மந்த்ரங்களைக்கொண்டு ஸ்தோத்ரம்பண்ணி; 'கறைகொண்டகண்டத்தான் சென்னிமேலேறக்கழுவினான்' - அவிநீதராய்த் திரியும்ப்ரஜைகள் தலையிலே ஸ்ரீபாததீர்த்தங்கொண்டு தெளிப்பாரைப்போலே. [நுண்ணுணர்வில்] - ஸத்த்வம் தலையெடுத்தபோது சொல்லுவதுஇதுவே.* ஸத்த்வாத்ஸஞ்ஜாயதே ஜ்ஞாநமிறே. [நீலார்கண்டத்தம்மானும்] - விஷத்தைக் கண்டத்திலேதரிக்கையாலே ஈஸ்வராபிமாநியான ருத்ரனும். [நிறைநான்முகனும்] - அவனுக்குங்கூட ஜநகனாய் ஸம்பூர்ணஜ்ஞாநனான ப்ரஹ்மாவும். [இந்திரனும்] - இவர்களோடொக்க ஸ்ருஷ்டி ஸம்ஹாரங்களில் ஓரந்வயமின்றிக்கே யிருக்கச்செய்தே, "ஸப்ரஹ்மகாஸ்ஸருத்ராஸ்ச ஸேந்த்ரா:" (ஸப்ரஹ்மகாஸ்ஸஸேந்த்ரா:) என்றுகொண்டு ஒக்கஎண்ணலாம்படியான இந்த்ரனும். [சேலேய்கண்ணாரித்யாதி] - தந்தாமுக்கு ஒருயார்த்தியுள்ளபோது ஸ்த்ரீகள் ஸந்நிதியில் ஓரெளிமைதோற்றவிராரகளிறே; ஆபத்துவந்தவாறே, மணுட்டிமார்கழுத்திலும் தங்கள்கழுத்திலும் கப்படங் கட்டிக்கொண்டு வந்து விழத் தொடங்குவர்கள். "உபயா ஸாயு

*பயப்பட்டு பேதிக்கும் மநஸ்ஸையுடையேனல்லேனென்றபடி. எதிர்வன் - ஒப்பன். ஸத்ருஸனென்றது - ஜ்ஞாந ஸாம்யத்தாலே. அதிருங்கழற்காலமன்னனையேகண்ணனையே - ஸப்தியாநிற்கிற வீரக்கழலையுடைய திருவடிகளையுடைய ராஜாவாயிருக்கிற க்ருஷ்ணனையே, நாளும் - ஸர்வகாலத்திலும், தொழக்காதல் - அநுபவிக்கைக்கீடான அபிநிவேஸத்தை, தொழில் பூண்டேன் — தொழிலாக - நித்யக்ருத்யமாக, ஏறிட்டுக்கொண்டேன்; ஆகையாலே, காதாசித்கமான ஐஸவத் ஜ்ஞாநத்தையுடைய ருத்ரனெனக்குநேரான்: அவனெனக்கு ஸத்ருஸனன்று. பிஞ்ஞகன் - ருத்ரன். 'பிதிருமனமிலேன் பிஞ்ஞகன்றன்னோடெதிர்வன், அதிரும்' என்று தொடங்கி, 'தொழக்காதல் - தொழில் - பூண்டேன்'; ஆகையாலே 'அவனெனக்கு நேரான்' என்றந்வயம். "நாளும்" என்றத்தைப்பற்ற 'அநுபவிக்கையே யாத்ரையானவெனக்கு' என்றது; 'ஒப்பாகப்போருமோ' என்றருளிச்செய்தாரென்று கூட்டுவது 'க்ருஷ்ணக்ருஷ்ணமஹாபாஹோ' என்றும், 'ஸரணம்த்வாமநுப்ராப்தா:' என்றும்' ருத்ரனும் இந்த்ராதி தேவதைகளும் வெறுமையைமுன்னிட்டு ஆஸ்ரயித்ததுக்கு ப்ரமாணங்காட்டி, ப்ரஹ்மா ஆகிஞ்சந்யத்தை முன்னிட்டு ஆஸ்ரயித்ததுக்கு ப்ரமாணம் - குறைகொண்டு இத்யாதி நான்முகன்திருவந்தாதிங் கைதொழுமோனம் - ஸஹாயம். த்ரவீபூதமாயிற்றது - ஜலமாய்க்கமண்டலுவிலேப்ரவேஸித்ததென்றபடி. குண்டிகை - கமண்டலம். "த்ரவீபூதஸ்ஸதா யஸ்ய பாதௌ ப்ரக்ஷாளயந்நிவ । ப்ரஹ்மண: ஸ்வேந தேஹேந ஸம்ஸாரஸ்யேவ ஸோ(அ)பவத் । க்ஷாலிதம் யஸ்ய ஸஞ்சாரம் பாதாநாம் ப்ரஜ்ஞயா" என்னக்கடவதிறே. நுண்ணுணர்வில் - ஸூக்ஷ்மஜ்ஞாநத்தையுடையபோதென்று ஸப்தார்த்தம் விவக்ஷித்து, தாத்பர்யார்த்தம் அருளுகிறார் - ஸத்த்வந்தலையெடுத்தபோது இத்யாதி. சொல்லுவதிதுவேயென்றது - "நோலாதாற்றேன்" என்றவார்த்தையை. "நுண்ணுணர்வு" என்றால்-ஜ்ஞாநத்தையன்றோசொல்லுவது: ஸத்த்வந்தலையெடுத்தபோதென்று காட்டுமோ? என்ன - ஸத்த்வாத் இத்யாதி. ஸத்த்வகார்யமான ஜ்ஞாந ஸப்தத்தாலே-ஸத்த்வத்தைச்சொல்லுகிறது லக்ஷணையாவென்றபடி. ஸ்ரோத்ருபுத்தி ஸமாதாநார்த்தமாக புநஸ்ஸப்தார்த்தம் - விஷத்தை இத்யாதி. இவர்கள், ஸ்த்ரீகளோடேவந்து ஆஸ்ரயிக்கைக்குப்ரயோஜநமேதென்ன - தந்தாமுக்கு இத்யாதி. அதாவது - "ஸ்த்ரீகளோடேவந்து ஆஸ்ரயித்தால் அவன் இரங்குவன்" என்றாஸ்ரயிக்கிறார்கள் என்ற

ஈப்ஸாந:'' (உமயாஸார்த்தமீப்ஸாந:) என்றும், ''பர்த்ருபிக்ஷாப்ரதீயதாம்'' (பர்த்ருபிக்ஷாப்ரதீயதாம்) என்றும், ''ஸமுத்ரஸ்ஸரிதாம்பதி:'' (ஸமுத்ரஸ்ஸரிதாம்பதி:) என்றும், ''ஸிம்கோபமூலம்'' (ஸிம்கோபமூலம்) என்றுஞ் சொல்லுகிறபடியே வந்து விழுவர்களிறே. [திருவேங்கடத்தானே] - அவர்களுக்கு ஆஶ்ரயிக்கலாம்படி ஸுலபனாய்வந்து நிற்கிறபடி. [மாலாய்மயக்கி] - ''மயங்கல் கூடலும் கலவியும்;'' ''மாலாய், நான் மயங்கும்படிக்கீடாக வரவேணுமென்கிறு ரென்னுதல்; அன்றிக்கே, மாலாம்படி மயக்கிக்கொண்டு வரவேணுமென்கிறார்'' என்றுஞ் சொல்லுவர்கள்; அவையன்று பொருள். மாலென்று - கறுப்பாய், அத்தால் நினைக்கிறது - க்ருஷ்ணனென்கையாய், க்ருஷ்ணனாய்க்கொண்டு உன்குணசேஷ்டிதங்களாலே அவ்வவதாரத்தில் உள்ளாரைப் பிச்சேற்றிக்கொண்டு வந்தாற்போலே எனக்காகவும் ஒருவரத்து வரவேணும்; ''மாலாய்ப்பிறந்த நம்பியை மாலேசெய்யும் மணாளனை'' என்றுஞ் சொல்லுகிறபடியே. (அ)

படி. ''ஸ்த்ரீகளைமுன்னிட்டு ஆஶ்ரயிக்கும்'' என்றதுக்கு ப்ரமாணங்கள் - உமயாஸார்த்தம் இத்யாதி. ''ஸக்தா ஸ்தம் ஜாயதே ஜ்ஞானம் ராஜஸோமேஸ்வராதயே । ப்ராஹ்மணாஸ்ஸமாதிஷ்டா ஹ்யேதே ஜ்ஞானமேவச'' இதி கீதாஸு. ''ஜ்ஞாம்ஸம் வ்யாம்க்ருத்வா விஷ்ணோஸ்ஸ்ரூக்ஷ்யர: । உமயா ஸார்த்தமீப்ஸாநோ ஹ்யாத்ரம் வக்த்ர மேஹத'' இதி ஹரிவம்ஶே.[1] ''ததஸ்ஸுரா ஜமக்ஸ்வாமிகு ப்ராஹஸ்வர்க்ஷத:। ப்ராணாம்ஸ்த்ருஜதிநாமேயம் பர்த்ருபிக்ஷா ப்ரதீயதாம்''இதி பஞ்சமேம்ஶே காளியபத்ந்ய:.[2] ''ஆஸ்யா ஸஹ தாநம்ஸமுத்ரஸ்ஸரிதாம்பதி:'' இதி ஸங்க்ஷேபே.[3] ''ஸிம்கோபமூலம் ஸ்நேஹ வ்யாத்ருகஸ்தேநஹம் ஸ்த்ரீஷ்வாக்ஷிமேஷு । க்ஷமாஸ்வவ்ருக்ஷம் வநோபகதஞ்ச ஹ்ருதீயத்ஷதநிவி ஷ்ஷ்ருக்ஷ:''

தாரா.[4] 'ஸமுத்ரஸ்ஸரிதாம்பதி:' என்றதும், 'ஸிம்கோபமூலம்' என்றதும், 'பர்த்ருபிக்ஷாப்ரதீயதாம்' என்றதும் - ஸமுத்ரராஜனும் மஹாராஜரும் காளியனும், இங்கு ப்ரஸ்தாவமின்றிக்கே யிருந்தாலும், ஸ்த்ரீகளைமுன்னிட்டு ஆஶ்ரயித்தார்களென்றமாத்ரத்துக்கு ப்ரமாணங்கள். கப்படம் - தைந்யஸூசக படவிசேஷம். ''மயக்கி'' என்றதுக்கர்த்தம் சொல்லுவதாகநிகண்டுஅருளிச்செய்கிறார் - மயங்கல் இத்யாதி. கூடலாவது - ப்ரணயரோஷந்தீர்ந்துகூடுகை. கலவியாவது - ஸம்ஶ்லேஷாந்தரஜாவியான ஸம்ஹோகம். இவ்விடத்தில், மயங்கலாவது - கூடல் மூந்திவர்த்தத்துக்கு: நீ, மாலாய் - வ்யாமுக்தனாய்க்கொண்டு, மயக்கி - மயங்கும்படி நான் ஸம்ஶ்லேஷிக்கும்படி வரவேணுமென்றபடி. நான் மயங்கும்படிக்கு ஈடாகவென்றது - நான் ஸம்ஶ்லேஷிக்கும்படிக்கு ஈடாகவென்றபடி. த்விதீயார்த்தத்துக்கு: நான், மாலாம்படி - வ்யாமுக்தனும்படி, மயக்கி - வ்யாமோஹத்தையுண்டாக்கிக்கொண்டு வரவேணுமென்றபடி. இந்த அர்த்தத்வயத்திலும், ''வந்தாய்போலே'' என்றது - சொற்பாடு. இவ்வர்த்தத்வயத்திலும், ''வந்தாய்போலே'' என்றதுக்கு ஸ்வாரஸ்யமில்லையென்று திருவுள்ளம்பற்றி - 'அவையன்றபொருள்' என்கிறார். அப்படி பிச்சேற்றிக்கொண்டு வந்தானோ? என்ன - மாலாய்ப்பிறந்த இத்யாதி. மாலாய்ப்பிறந்தநம்பியை - வ்யாமோஹந்தான் ஒருவடிவுகொண்டாற்போலே இருக்கிற குணபூர்ணனை. மாலேசெய்யும் மணாளனை - தன்வ்யாமோஹத்தைக்காட்டி இத்தலைக்கு வ்யாமோஹத்தை விளைக்குமவனை என்றபடி. நாய்ச்சியார்திருமொழி, பதினோலாந்திருமொழி, மூன்றாம்பாட்டு. 'நுண்ணுணர்வில்' என்றுதொடங்கி, 'இந்திரனும் - உனபாதங்காண - நோலாதாற்றேன்' என்று சொல்லி, 'சேலேய்கண்ணார் பலர்' என்றுதொடங்கி, 'மயக்கி - வந்தாய்போலே - அடியேன்பால் வாராய்' என்றந்வயம். மாலாய் . க்ருஷ்ணனாய் என்றபடி. வந்தாய்போலே-வந்தாற்போலேயென்றபடி.

---

1. 279அ - 15½ (ஶ்லோ) 2. 7 - 57. 3. 79½. 4. கிஷ் - 33- 40½.

ஒன்பதாம் பாட்டு.

வந்தாய்போலேவாராதாய்வாராதாய்போல்வருவானே
செந்தாமரைக்கட்செங்கனிவாய்நாற்றோளமுதேயெனதுயிரே
சிந்தாமணிகள்பகரல்லைப்பகல்செய்திருவேங்கடத்தானே
அந்தோவடியேனுனபாதமகலகில்லேன்இறையுமே.

ஆ.—(வந்தாய்போலே.) - ப்ரதிகூலர்க்குக்கண்டவாற்றாலே எளியாரைப் போலேயிருந்து அரியையாகையாலும் ஆஶ்ரிதர்க்குக் கண்டவாற்றால் அரியாரைப் போலேயிருந்து எளியையாயிருக்கையாலும், நீ என்னை த்வத்ஸௌந்தர்யைக தாரக போஷக போக்யனாக்குகையாலும், திநகரகிரண ஸந்நிபமான ஸ்வப்ரபைகளாலே ராத்ரியையும் பகலாக்காநின்ற ரத்நங்களாலே அலங்க்ருதமான திருமலையிலே எனக்காக நின்றருளுகையாலும், அடியேன் ஒருக்ஷணமும் உன்திருவடிகளை விஶ்லேஷிக்கமாட்டாமையாலும்உன்க்ருபையாலே அடியேனையுன்திருவடிகளிலே சேர்த்தருளவேணும்என்கிறார்.

ஒ.—ஒன்பதாம்பாட்டில், தாம்அபேக்ஷித்தபோதே காணப்பெறாமையாலே, இப்போதே யுன்னைக்காணுவிடில் ஒருக்ஷணமும் தரிக்கமாட்டேன் என்கிறார். [வந்தாயென்றுதொடங்கி]-அநாஶ்ரிதர்க்கு எளியாரைப்போலேயிருந்தே அறவரியையாய் ஆஶ்ரிதர்க்கு அரியாரைப்போலேயிருந்தே அறவெளியையுமாய் செந்தாமரைப்பூப்போலேயிருக்கிற அழகியதிருக்கண்களையும் சிவந்தகனிபோலேயிருக்கிற திருப்பவளத்தையும் நாலுதிருத் தோள்களையும் உடையையாய்க்கொண்டு எனக்கு நிரதிஶயபோக்யனாய் எனக்கு தாரகனானவனே! [சிந்தாமணிகளென்று தொடங்கி]-பெருவிலையனான மாணிக்கங்களினுடைய ஒளி ராத்ரியைப் பகலாக்காநின்றுள்ள திருமலையிலே நின்றருளினவனே! அத்யந்த தயநீயதஶாபந்நராய், நோவாலே அந்தோ! வென்கிறார்.

ப.—அநந்தரம், அதிஶயிதபோக்யமான அவயவஶோபையையுடையனான உன்திருவடிகளை க்ஷணமும் பிரியமாட்டேனென்கிறார்.

(அநாஶ்ரிதவிஷயத்தில்), வந்தாய்போலே - வந்து கைப்புகுந்தாற்போலே, வாராதாய் - கைவாராதிருக்குமவனாய், (ஆஶ்ரிதவிஷயத்தில்), வாராதாய்போல் - ஆகிஞ்சந்யத்தாலே "வருகைக்கு சங்கையில்லை" என்றுநினைத்திருக்கச்செய்தே, வருவானே - இஷ்டவிநியோகார்ஹமாம்படி கைவருமவனாய், செம் - சிவந்த, தாமரை - தாமரை போலே தர்ஶநீயமாய், ("ஜிதம்" என்னும்படிபண்ணும்), கண் - திருக்கண்களையும், செம் - சிவந்த, கனி - கனிபோலே போக்யமாய், வாய் - "ஶாகேநம் ஶரணம் வ்ரஜ" என்னும் திருப்பவளத்தையும், "ஸர்வதா ஸம் பரிஷஸ்வஜே" என்று ஆஶ்ரிதரையெடுத்தணைக்கும், நால் - நாலு, தோள் - திருத்தோள்களையுமுடையனாய், அமுதே - ஆஶ்ரிதர்க்கு நித்யபோக்யனாயிருக்கிறவிருப்பை, எனது - எனக்குப்ரகாஶிப்பித்து, உயிரே - தாரகனானவனாய், சிந்தா - நினைத்ததெல்லாம்கொடுக்கவற்றான, மணிகள் - மஹார்க்க ரத்நங்களினுடைய, பகர் - ஒளியானது, (ஸக்ருத் திவாவாம்படி), அல்லை - ராத்ரியை, பகல் - பகல், செய் - ஆக்குவதான, திருவேங்கடத்தானே - திருமலையிலே ஸந்நிஹித

ஞனவனே ! அந்தோ - ஐயோ! (நிரதிசயபோக்யமான), உன - உன், பாதம் - திருவடிகளை, அடியேன் - அநந்யரக்ஷயனும்படி அத்யந்தபரதந்த்ரனான நான், இறையும் - ஏகதேசமும், அகல - அகல, இல்லேன் - க்ஷமனுகிறிலேன். அந்தோவென்றது - ஆர்த்திக்கு மேலே யபேக்ஷிக்கவும் வேண்டுவதேயென்றுகருத்து. பகர் - ஒளி.

இ.—ஒன்பதாம்பாட்டில், தாம்அபேக்ஷித்தபோதே காணப்பெறுமையாலே, இப்போதே உன்னைக்காணுவிடில் தரிக்கமாட்டேனென்கிறார்.

[வந்தாய்இத்யாதி] - அநாஸ்ரிதர்க்குக் கைப்புகுந்தாற்போலேயிருந்தே அற அரியையாமவனே! ஆஸ்ரிதர்க்கு அரியைபோலேயிருந்தேகையாளாயிருக்குமவனே! அங்ஙனன்றியே, மநஸ்ஸிலே ஸந்நிஹிதனாய் பாஹ்யஸம்ஸ்லேஷத்துக்கு எட்டாதவனே! "பாஹ்யஸம்ஸ்லேஷத்துக்கு எட்டாதவன்" என்று நிராஸனுபிருந்தால் மறக்கவொண்ணுதபடி மநஸ்ஸைவிடாதவனே! [செந்தாமரையித்யாதி] - சிவந்த தாமரைப்பூப்போலேயிருக்கிற திருக்கண்களையும், சிவந்து கனிந்த திருவதரத்தையும், கல்பகதரு பணைத்தாற்போலே நாலுதோளையுமுடைய நிரதிசயபோக்யனே! வாத்ஸல்ய பிரகாசமான கண்ணும் முறுவலும், அணைக்கைக்கு நாலுதோள்களுமாயாயிற்று இவ்வம்ருதமிருப்பது. [எனதுயிரே] - புண்டரீகாக்ஷமாய் சதுர்புஜமாயாயிற்று இவர் ப்ராணனிருப்பது. [சிந்தாமணியித்யாதி] - பெருவிலையனான மணிகளுடையவொளி ராத்ரியைப் பகலாக்காநின்றுள்ள திருமலை. * ஸக்ருத் திவாவான தேசம். [அந்தோ] - ஆற்றாமையும் அபேக்ஷையும் எனக்கே பாரமாவதே. [அடியேன்] - ஸ்வரக்ஷணத்தில் ப்ராப்தியில்லாத பாரதந்த்ர்யத்தையுடைய நான். [உனபாதமகலகில்லேன் இறையுமே] - நிரதிசயபோக்யமான உன்திருவடிகளை க்ஷணகாலமும் அகல க்ஷமனுகிறிலேன்.

ஈடு.—ஒன்பதாம்பாட்டு. தாம் அபேக்ஷித்தபோதே காணப்பெறுமையாலே இப்போதே யுன்னைக் காணுவிடில் தரிக்கமாட்டேனென்கிறார்.

[வந்தாய்போலேவாராதாய்] - மாநஸாநுபவத்திலுண்டான கரைபுரட்சிதான் "பாஹ்யஸம்ஸ்லேஷமும் பெற்றோம்" என்றுகொண்டு த்ருப்திபிறக்கும்படியாய், அத்தை "மெய்" என்றுஅணைக்கக் கணிசித்தால் கைக்கெட்டாதபடியாயிருக்கை. [வாராதாய்போல் வருவானே] - "ஒருநாளும்கிட்டமாட்டோம் என்றிருக்கச் செய்தே கடுகக் கைப்புகுந்துகொடு நிற்குமென்கை. (அதாவது - "பாஹ்யஸம்ஸ்லேஷத்துக் கெட்டாதவன்" என்று நிராசனுயிருந்தால் மறக்கவோ) அன்றிக்கே, அநாஸ்ரிதவிஷயத்தில் "கைப்புகுந்தான்" என்று தோற்றியிருக்கச் செய்தே புறம்பாய், ஆஸ்ரிதர்க்கு 'இவன் கிட்டவரியன்' என்றிருக்கச் செய்தே உட்புகுந்திருக்கும்படியைச் சொல்லிற்றாகவுமாம். [செந்தாமரை யித்யாதி] - ஸகலதாபங்களும் ஆறும்படி குளிர்ந்த திருக்கண்களை யுடையவனுமாய், சிவந்து கனிந்திருந்துள்ள திருவதரத்தை யுடையனுமாய், கல்பகதரு பணைத்தாற்போலேயிருக்கிற

ஒன்பதாம்பாட்டு.—வந்தாய் இத்யாதி. "இறையும் - அகலகில்லேன்" என்றத்தைக்கடாக்ஷித்தவதாரிகை - தாம்அபேக்ஷித்த இத்யாதி.

"வந்தாய்போலே" என்கிறதுக்கும், "வாராதாய்" என்கிறதுக்கும் அர்த்தம் - மாநஸாநுபவத்தில் இத்யாதி. "வாராதாய்போலே" இத்யாதிக்கர்த்தம் - ஒருநாளும் இத்யாதி. ஒருநாளும் மாநஸமாகக்கிட்டமாட்டோமென்றிருக்கச்செய்தே, மாநஸமாகக்கடுகக் கைப்புகுந்துகொடுநிற்குமென்றபடி. கண்ணென்னுதே, "செந்தாமரை" என்றுவிசேஷித்ததுக்கு பாவம் - ஸகலதாபங்களும் இத்

நாலுதிருத்தோள்களையுமுடையனுமாய் போக்யனுமானவனே! [எனதுயிரே] - இவ்வடிவழகை என்னையநுபவிப்பித்து, வ்யதிரேகத்தில்நானுளனாகாதபடி பண்ணினவனே! [சிந்தாமணிஇத்யாதி] - விலக்ஷணமான ரத்நங்களினுடைய, பகருண்டு - ப்ரபை, அது அல்லைப் பகல் செய்யாநின்றதாயிற்று; திவாராத்ரவிபாகம் அறுத்துக்கொண்டிருக்கை. "மணிகளினொளியால் விடிபகலிரவென்றறிவரிதாய" என்னக்கடவதிறே. இத்தால்நினைக்கிறது, "நகாலஸ்தத்ர வை ப்ரபு:" (நகாலஸ்தத்ரவைப்ரபு:)என்கிற தேசத்தேபோய் அநுபவிக்கும் அநுபவத்தை இங்கேயநுபவிக்கக்காணும் நினைவு. [அந்தோ] - போக்யமும் குறைவற்று, அவன்தானும் ஸந்நிஹிதனாய், எனக்காசையும் மிகுத்திருக்க, கிட்டியநுபவிக்கப்பெறுதொழிவதே! என்கிறார். [அடியேனுனபாதம்அகலகில்லேனிறையுமே]-என் ஸ்வரூபத்தைப்பார்த்து என்தசையை புத்திபண்ணாய்; ஊர்ஜியாநிற்கச்செய்தே, அதுக்குவர்த்தகமாகக் கண்ணை மாறவைக்கிலும் பொறுக்கமாட்டேன். (௯)

பத்தாம் பாட்டு.

அகலகில்லேன்இறையுமென்று அலர்மேல்மங்கையுறைமார்பா!
நிகரில்புகழாய்! உலகம்மூன்றுடையாய்! என்னையாள்வானே!
நிகரிலமரர்முனிக்கணங்கள்விரும்புந்திருவேங்கடத்தானே!
புகலொன்றில்லாஅடியேன் உன்னடிக்கீழமர்ந்துபுகுந்தேனே.

ஆ.—(அகலகில்லேன்.) - அபாரகாருண்ய மஹோததியாய், உன்னுடைய குணங்களாலே அஸ்மத்ஸ்வாமியுமாய், திருநாட்டிலே த்வத்பரிசர்யைக போகராயும் த்வத்குணாநுபவைகபோகராயும் நிருபமராயிருந்த நித்யஸித்த புருஷர்களுக்குங்கூட ஸ்ப்ருஹணீயமான திருமலையிலே அநாலோசித விசேஷாசேஷ லோகசரண்யனாய்க்கொண்டு நின்றருளுவதுஞ்செய்த உன்திருவடிகளை, அநந்யசரணனான அடியேன் அநந்யப்ரயோஜநனாய்க்கொண்டு, பெரியபிராட்டியார் புருஷகாரமாக சரணம்புகுந்தேன்; இப்

யாதி. உமக்குஉயிரானபடி யெங்ஙனே? என்ன - இவ்வடிவழகை இத்யாதி: "சிந்தாமணி"-சிந்திதப்ரதமான மணியென்று சப்தார்த்தம். ஶ்லாக்யமான ரத்நமென்று தாத்பர்யார்த்தம்; அத்தையருளிச்செய்கிறார் - விலக்ஷண இத்யாதி. பகர் - தேஜஸ்ஸு. அல்லை-ராத்ரியை. அல்லு - ராத்ரி. அல்லைப்பகல் செய்கையாவதேதென்ன - திவாராத்ர இத்யாதி. உக்தத்துக்கு ப்ரமாணம் - மணிகளின் இத்யாதி. நாநாவான ரத்நங்களினொளியாலே விடிவு-பகல், இரவு - ராத்ரி, என்றறியவரிதானவென்றபடி. திருமொழி நாலாம்பத்து பத்தாந்திருமொழி எட்டாம்பாட்டு, "முடியுடை" இத்யாதி. "சிந்தாமணிகள் பகரல்லைப்பகல்செய்" என்று வர்ணித்ததுக்கு பாவமேதென்ன-இத்தால் இத்யாதி. "நாற்றோளமுதே, திருவேங்கடத்தானே" என்கிறபதங்களைக்கடாக்ஷித்துபாவம் - போக்யமும் இத்யாதி. எனக்காசையும் மிகுத்திருக்கவென்றது - "ஆருவன்பில்" என்றத்தைப்பற்ற. "அடியேன்" என்றுவைத்து, "உனபாதமகலகில்லேன்" என்றதுக்கு பாவம் - என்ஸ்வரூபத்தை இத்யாதி. என் ஸ்வரூபத்தைப்பார்த்தென்றது - என்னுடைய அநந்யகதித்வரூபஸ்வரூபத்தைப் பார்த்தென்றபடி. புத்திபண்ணாய் - க்ருபைபண்ணாயென்றபடி. "இறையும்" என்றதுக்கர்த்தம் - ஊர்ஜியாநிற்க இத்யாதி. ஊர்ஜியாநிற்கச்செய்தேயென்றது - ஸம்ஶ்லேஷியாநிற்கச்செய்தே என்றபடி. (௯)

போதே நிரஸ்தஸமஸ்த ப்ரதிபந்தகனாய் உன்திருவடிகளிலே ஸர்வகாலமும் ஸர்வவிதகைங்கர்யமும் அடியேன் பண்ணப்பெறவேணுமென்கிறார்.

ஒ.—பத்தாம்பாட்டில், தம்முடைய அபேக்ஷிதம் சடக்கெனப் பெறுகைக்காக, பெரிய பிராட்டியாரை புருஷகாரமாகக்கொண்டு திருவேங்கடமுடையானை ஶரணம் புகுகிறார்.

[அகலகில்லேன் என்றுதொடங்கி] - வெய்யிலிலேநின்று நிழலிலேயொதுங்கினார் சொல்லுமாபோலே க்ஷணமாத்ரமும் விஶ்லேஷிக்க க்ஷமையல்லேன் என்று நிரதிஶயபோக்யையான பெரிய பிராட்டியார் நிரந்தரவாஸம் பண்ணுகிற திருமார்வையுடையையாய், பிராட்டியோட்டைப் பழக்கத்தாலே ஆஶ்ரிதரைக்கைவிடாத ஒப்பில்லாத குணப்ரதையையுடையையாய், எல்லாரோடும் அவர்ஜநீயமான ஸம்பந்தத்தையும் உடையையாய், உன்னையறியாதேயிருக்கிறஎனக்கு குணங்களை யறிவித்து அத்தாலே என்னை நடத்துவதுஞ்செய்து திருநாட்டிலுள்ளாரும் விரும்பும் திருமலையிலே எனக்கு ஆஶ்ரயிக்கைக்கு எளிதாம்படிவந்து நின்றருளினவனே! [புகலொன்று தொடங்கி] - ஶாஸ்த்ரங்களில் சொல்லுகிறஉபாயம் ஒன்றுமில்லாத நான் அநந்யப்ரயோஜநனாய்க்கொண்டு உன்திருவடிகளை உபாயமாகப்பற்றினேன். புருஷார்த்தஸாதநமாக என் தலையிலுள்ளவற்றையெல்லாம் தவிர்ந்து என்தலைக்கும் திருவடிகளுக்கும் நடுவு விளக்குவாய் தெரியாதபடி செறிந்துபுகுந்தேன் என்றுமாம்.

ப.—அநந்தரம், ஆஶ்ரயணீயதைக்கு ஏகாந்தமான புருஷகாரயோகத்தையும் குணயோகத்தையுமுடையையாயிருக்கிற உன்திருவடிகளை அநந்யகதியாய்க்கொண்டு ஆஶ்ரயித்தேனென்று, ஸக்ரமமாக ஶரணாகதியைப் பண்ணுகிறார்.

(ப்ரஹ்ப்ரஹ்வான்களைப்போலே யிருக்கிற ஸ்வரூபஸம்பந்தத்தாலும், எதிர்த்தலையில் போக்யதாதிஶயத்தாலும்), இறையும் - க்ஷணமாத்ரமும், அகல - விஶ்லேஷிக்க, இல்லேன் - க்ஷமையல்லேன், என்று-, அலர்மேல் - பூவிற்பிறப்பாலுண்டான மார்த்தவபோக்யதைகளை யுடையளாய், மங்கை - மங்கைப்பருவத்தாலுண்டான வால்லப்யாதிஶயத்தையுடைய லக்ஷ்மியானவள், உறை-(தன் ஆபிஜாத்யமும் ஆத்மகுணமும் ஆநிரூப்யமுங்கிடக்க ஓர் அவயவ விசேஷத்திலே) நித்யவாஸம்பண்ணும்படியான போக்யதாதிஶயத்தையுடைய, மார்பா - திருமார்பையுடையையாய், (இவளோட்டைச் சேர்த்தி யடியாக உதிக்கக்கடவதாய்), நிகர்இல்-(ஆஶ்ரிததோஷாநபிஜ்ஞதையாலே குறைந்தாரங்களோடுசேர்க்க வொண்ணாதபடி) நிருபமமான, புகழாய் - நிரவதிகவாத்ஸல்யப்ரதையை யுடையையாய், (இதுக்குஹேதுவாயிருக்கிற), மூன்றுஉலகம் - ப்ரமாணப்ரஸித்தமாயுள்ள த்ரிவித சேதநாசேதநங்களையும், உடையாய் - ஸ்வமாகவுடைய ஸ்வாமித்வத்தை யுடையையாய், (அந்த மேன்மையே யன்றியே), என்னை - அத்யந்தஹேயனான வென்னையும், ஆள்வானே - அங்கீகரிக்கும் ஸௌஶீல்யாதிஶயத்தையுடையையாய், (அந்தஶீலத்தோடே யெல்லாருங்கண்டநுபவிக்கும்படி ஜ்ஞாநப்ரேமாதிகுணோத்கர்ஷத்துக்கு), நிகர் - ஒப்பு, இல் - இல்லாதபடியாயுள்ள, அமரர் - கைங்கர்யநிஷ்டரானஅமரரும், முனி-(குணாநுஸந்தாநபரராய்க்கொண்டு) மநநஶீலரான முனிவர்களுமான, கணங்கள் - திரள்களானவை, விரும்பும் - (வாத்ஸல்யாத்யநுபவாபிநிவேஶத்தாலே) அத்யந்தாதரம்பண்ணி வர்த்திக்கும், திருவேங்கடத்தானே - திருமலையிலே ஸந்நிஹிதனான

ஸௌலப்யபூர்த்தியையுடையவனே! (உன்னையொழிய), புகல் - உபாயாந்தரங்களான புகலும் ரக்ஷகாந்தரங்களான புகலும், ஒன்று - ஒன்றும், இல்லா - இல்லாதபடி அநந்யஶரணனை, அடியேன் - (பாரதந்த்ர்யத்தையுடைய) நான், உன் - (கீழுக்தமான புருஷகாரயோகத்தையும் குணயோகத்தையுமுடைய) உன்னுடைய, அடி - திருவடிகளின், கீழ்-கீழே, (ஶேஷவதந்தர்க்கதனாய்க்கொண்டு), அமர்ந்து - அநந்யப்ரயோஜநத்வ வ்யவஸாயவிஶிஷ்டனாய், புகுந்தேன் - ஆஶ்ரயித்துவிட்டேன். அகலகில்லேனென்கையாலே - ஸ்ரீஶப்தார்த்தமான ஶேஷாகரணத்தாலே வந்த நித்யாநபாயித்வத்தையும், அலர்மேல்மங்கையாலே - ஶேவ்யதைக்கு ஏகாந்தமான மார்த்தவாதியோகத்தையும், மங்கையென்கையாலே - ஶேவாகரணத்துக்கு அடியான வால்லப்யத்தையும், உறைமார்பனென்கையாலே - மதுப்ஆர்த்தமான நித்யயோகத்தையும், 'நிகரில் புகழாய்' என்று தொடங்கி, 'திருவேங்கடத்தானே' என்றது அறுதியாக - "ஶ்ரீதாஸீதாஸ்யா(?) நிவாஸ:" என்று நாராயணஶப்தார்த்தத்தைச்சொன்ன ஶ்ருதிக்ரமத்தாலே வாத்ஸல்யாதி குணசதுஷ்டயக்ரமத்தையும், புகலொன்றில்லாவென்கையாலே - அதிகாரி விஶேஷணமான ஆகிஞ்சந்யாநந்யகதித்வத்தையும், அடியேனென்று - க்ரியாபதத்தில் உத்தமனாலே ஆக்ஷிப்தமான அதிகாரி ஸ்வரூபத்தையும், உன்னென்று - ஸப்த்யந்த யோஜனையாகையாலே அத்யாஹார்யமான தவஶப்தார்த்தத்தையும், அடிக்கீழென்கையாலே - சரணஶப்தார்த்தத்தையும், அமர்ந்தென்கையாலே - க்ரியாபதத்தில் உபஸர்க்கார்த்தமாய் உபாயோபேய விஷயமான வ்யவஸாயத்தையும், புகுந்தேனென்று - க்ரியாரூபமான ஆஶ்ரயணத்தையும், புகுந்தேனென்கிற ஸமாப்தார்த்தநிர்த்தேஶத்தாலே - ஆஶ்ரயணத்துக்கு ஆவ்ருத்யபேக்ஷையில்லாத ஸக்ருத்கரணத்தையும் ப்ரகாஶிப்பித்ததாய்; இது பூர்ணஶரணாகதியாகையாலே, ஆஶ்ரயணார்த்தமான லக்ஷ்மீஸம்பந்தமும் குணயோகமும் ப்ராப்யாந்விதமாயிருக்கையாலும்; அடியேனென்கிற அதிகாரிஸ்வரூபத்திலே - அநந்யார்ஹத்வ அநந்யஶரணத்வங்களாகிற அநந்யபோக்யத்வமும் ஸூசிதமாகையாலே, அமர்ந்தென்று - ப்ரயோஜநாந்தரநிராஸம் ஸூசிதமாகையாலே நமஶ்ஶப்தார்த்தம் ஸித்திக்கையாலும்; புகுந்தேனென்கிற ஸதிவசநம் - ப்ராப்திக்கும் ஸூசகமாகவற்றுகையாலும்; ப்ரயோஜநமான உபாய வைபவவாக்யத்துக்குள்ளே வாக்யஶேஷமான உத்தரவாக்யார்த்தமும் அந்தர்க்கதமாயிற்றதாயிற்று. ஆகையாலே, இப்பாட்டு - வாக்யத்வயார்த்த ப்ரகாஶகமாகையாலே பூர்ணஶரணாகதியாகக் குறையில்லை. இப்படி, இப்பத்தாலே - கீழிற்பத்தில், உபாயதயா நிஷ்கர்ஷித்தவஸ்துவை ஸப்ரகாரமாக ஸ்வீகரித்தருளினாராயிற்று.

இ.—பத்தாம்பாட்டில், தம்அபேக்ஷிதம் சடக்கெனத் தலைக்கட்டுகைக்கு, பிராட்டி புருஷகாரமாகத் திருவேங்கடமுடையான் திருவடிகளிலே ஶரணம் புகுகிறார்.

[அகலகில்லேன் இத்யாதி] - ஈஶ்வரவிஶ்லேஷஹேது கர்மமாயிருக்க, தத்ஸ்பர்ஶமுமின்றிக்கே நித்யாநபாயிநியான இவள், "இறையுமகலகில்லேன்" என்பானென்? என்னில்; கர்மத்துக்கு அஞ்சினார் வார்த்தையேயாயிற்று, விஷய வைலக்ஷண்யத்திலே அவகாஹித்தார் வார்த்தையும்; ஹேதுஸஹமேயுள்ளது. அவன் விஷயத்தில் போக்யதாதிஶயத்தாலே விஶ்லேஷத்தை அதிஶங்கித்துச் சொல்லுகிறாள். எதிர்த்தலை இவ்வார்த்தை சொல்லும்படியான ஸௌகுமார்யத்தையும் பருவத்தையுமுடையவள், அவ்வலவைமறந்து நித்யவாஸம் பண்ணும்படியான மார்வு படைத்தவனே! ஒப்பில்லாத வாத்ஸல்யத்தையுடையனாய் த்ரிவிதாத்மவர்க்கத்துக்கும் ஸ்வாமியாய், விழுவ

ஞனென்னை இவ்வளவு புகுரநிறுத்தின ஶீலகுணத்தையுடையனாய், ஒப்பின்றிக்கே இருக்கிற கைங்கர்யநிஷ்டரும் மஹாஶீலருமான நித்யஸூரிகள் ஆதரித்து வர்த்திக்குந் திருமலையிலே வர்த்திக்கிற ஸௌலப்யத்தையுடையவனே! ஶாஸ்த்ரங்களில் சொல்லுகிற உபாயாந்தரங்களில் அந்வயமின்றிக்கே அநந்யார்ஹஶேஷபூதனான நான்; இத்தால் - அநந்யகதித்வமும் ஸ்வரூபஜ்ஞாநமும் ப்ரபத்திக்கு பரிகரமென்கிறது. [உன்னடிக்கீழ்] - விக்ரஹயோகஞ்சொல்லுகிறது. [அமர்ந்து] - செறிந்து, ஸஹகாரி வ்யவதாநமின்றிக்கேயொழிகை. [புகுந்தேனே] - போக்குவரவுண்டாய்அன்று. ஸமாதி - மதியாய், அத்யவஸாயத்தைச் சொல்லுகிறது.

ஈடு.—பத்தாம்பாட்டு. தம்முடைய அபேக்ஷிதம் சடக்கென ஸித்திக்கைக்காகப் பெரியபிராட்டியாரைப் புருஷகாரமாகக்கொண்டு திருவேங்கடமுடையான் திருவடிகளிலே ஶரணம்புகுகிறார். ஆக, ஒன்பதுபாட்டாலும் - ஶரண்யன்ஸ்வரூபத்தைச் சொன்னார். இதில் - தம்முடையஸ்வரூபத்தைச் சொல்லி ஶரணம்புகுகிறார். கீழே, 'அடியேன்' என்றும், 'அருவினையேன்' என்றும் தம்முடைய ஆகிஞ்சந்யத்தையும், ஶேஷத்வத்தையும், அவனுடைய ஶரண்யதைக்கு உறுப்பாகச்சொல்லிக் கொடுபோந்தார்; இங்கு, அதுதன்னையே பேற்றுக்கு உடலாகச்சொல்லி ஶரணம்புகுகிறார். இப்பாட்டுத்தன்னை - த்வயத்திற் பதங்களோடொக்க யோஜித்துத் தலைக்கட்டக்கடவது. அதில் அர்த்தப்ராப்தமான அஹமர்த்தத்தை - இங்கு, அடியேனென்கிறது.

பத்தாம்பாட்டு - அகலகில்லேன் இத்யாதி. "அலர்மேல் மங்கையுறைமார்பா" என்று பெரியபிராட்டியாரோட்டைச் சேர்த்தியைச்சொல்லி ஶரணம்புகுகிறதுக்கு ப்ரயோஜநம் - தம்முடையஅபேக்ஷிதம் இத்யாதி. இத்தால் - கீழ், "நோற்றநோன்பு" என்றுதொடங்கி நாலுதிருவாய்மொழிகளிலும் பண்ணின ப்ரபத்தியைக்காட்டில் இதிற்பண்ணின ப்ரபத்திக்கு வாசிசொல்லிற்றாயிற்று. இத்திருவாய்மொழிக்கு நிதாநப்பாட்டு இதுவென்று விவக்ஷித்து, கீழொன்பதுபாட்டிற் சொன்ன அர்த்தத்துக்குமிதுக்கும் வாசியருளிச்செய்கிறாராதல், உக்தங்கமநமாதல் - ஆகவொன்பது இத்யாதி வாக்யத்வயத்தாலே. புநருக்தியைப்பரிஹரிக்கிறார்-கீழேஅடியேன் இத்யாதி. "அருவினையேன்" என்றது - ஆகிஞ்சந்யம். ஶரண்யதைக்குஉறுப்பாக வென்றது - அஶரண்யஶரண்யதைக்கு உறுப்பாக என்றபடி. பேற்றுக்குஉடலாகவென்றது - பேற்றுக்கு உடலானஸ்வீகாரத்துக்கு உபயுக்தமாகவென்றபடி. 'அதுதன்னையே' என்றது - கீழுக்தமானவாகிஞ்சந்யஶேஷத்வங்களாகிற அதிகாரஸ்வரூபந்தன்னையே யென்றபடி. 'பேற்றுக்குடலாக' என்றதுக்கு, பேற்றுக்கு உடலான ப்ரபத்திக்கு உபயுக்தமாக என்றர்த்தம் சொல்லுகைக்கு நியாமகம்-"வெறுமையும் ஸ்வரூபமுமிரண்டும் ப்ரபத்திக்குப் பரிகரமிறே" என்று இரண்டாம்யோஜனையி லருளிச்செய்த வாக்யம். இப்பாட்டிற்சொல்லுகிற ப்ரபத்தியினுடைய சீர்மையை யருளிச்செய்கிறார் - இப்பாட்டுத்தன்னை இத்யாதி. "அலர்மேல்மங்கை" என்கையாலே - ஸ்ரீஶப்தார்த்தஞ்சொல்லிற்று; "அகலகில்லேன்" என்கையாலே - மதுப்பிலர்த்தஞ் சொல்லிற்று; "உறைமார்பா" என்கையாலே - நித்யயோகஞ்சொல்லிற்று; "நிகரில் புகழாய்" என்று தொடங்கி "திருவேங்கடத்தானே" என்கையாலே - நாராயணஶப்தார்த்தஞ்சொல்லிற்று; "புகலொன்றில்லாவடியேன்" என்கையாலே - உத்தமனால் ஆக்ஷிப்தனான அதிகாரியைச் சொல்லிற்று; "உன்னடிக்கீழ்" என்கையாலே சரணஶப்தார்த்தஞ் சொல்லிற்று; "அமர்ந்துபுகுந்தேனே" என்கையாலே - க்ரியாபதத்தில் அர்த்தஞ் சொல்லிற்று. ஶரணஶப்தம்:—"புகுந்தேன்" என்கிறக்ரியாபதத்துக்குள்ளே கோல்விழுக்காட்டாலேவரும். அந்தத்வயத்தைப்பற்ற வாசியருளிச்செய்கிறார் - அதில் இத்யாதி. அர்த்தப்ராப்தமான அஹமர்த்தமாவது - "ப்ரபத்யே" என்கிறபதத்திலுத்தமனாலே ஆக்ஷிப்தனான அதிகாரிஸ்வரூபமென்றபடி. "புகலொன்றில்லாவடியேன்" என்கிற ஆகிஞ்சந்யாநந்யகதித்வங்கள் த்வயத்தில் அநுக்தங்களாகிலும், லக்ஷணஶ்லோகத்திலே "ஸுஹ்ருதம் ஸர்வபூதாநாம் ஶரண்யம் ஶரணம் கதா:" என்றிருக்கையாலே த்வயத்திலும் விவக்ஷிதங்கள்.

[அகலகில்லேனிறையுமென்று]-இது, அகன்றிருந்து சொல்லுகிற பாசுரமுமன்று; நித்ய ஸம்ஶ்லேஷம் பண்ணாநிற்கச்செய்தேயாயிற்று "இறையுமகலகில்லேன், இறையுமகலகில்லேன்" என்று உரைப்பது நித்யாநுபவம் பண்ணுவார்க்கெல்லாம் பாசுரம்இதுவே. நாட்டாருடைய அகலகில்லேன் போலன்று, இவளுடைய அகலகில்லேன்; அது கர்மாதீநமாகவருவது: இது விஷயாதீநமாக விளையுமது. [அலர்மேல்மங்கை] - அவன்தன்னை "நஜீவேயம்க்ஷணமபி" (நஜீவேயம்க்ஷணமபி) என்னப் பண்ணவல்ல போக்யதையையும் பருவத்தையுமுடையவள். பரிமளந்தான் ஒரு வடிவுகொண்டாற்போலேயிருக்கை. [உறைமார்பா] - இத்தால் - நித்யயோகஞ்சொல்லுகிறது எனக்கு ஒரு காலம்பார்த்து ஶரணம்புகவேண்டும்படியாயோவிருக்கிறது? இத்தலையில் அபராதத்தையும் ஈஶ்வரஸ்வாதந்த்ர்யத்தையும் அநுஸந்தித்துப் பிற்காலிக்கவேண்டாதபடியா யிருக்கை. "ஒருநாள் பட்டர், பிள்ளையழகியமணவாளவரையர்க்கு த்வயமருளிச்செய்கைக்காக 'எல்லாரும்போங்கோள்' என்ன, நஞ்சீயரும் எழுந்திருந்துபோய், 'நம்மை 'இராய்' என்றருளிச்செய்திலர்' என்று வெறுத்திருக்க, அப்போதே 'சீயர் எங்குற்றார்?' என்று கேட்டருளித் தேடியழைத்துக் கூடவைத்துக்கொண்டிருந்து த்வயத்தை அருளிச்செய்யாநிற்கச்செய்தே, அப்போதுஅருளிச்செய்தவார்த்தை" என்று சீயர் அருளிச்செய்வர். 'இவ்வாத்மவஸ்து ஶேஷமாகில் அவன் ஶேஷியாகில் இங்குப் பிராட்டி ஸம்பந்தத்தால் செய்கிறதென்?" என்று கேட்க, "அதுஇருக்கிறபடிகேளீர்! ராவணனுக்கும் காகத்துக்கும் ஸம்பந்தமும் அநுஷ்டாநமுமொத்திருக்க, இனி ராவணன்ஶாபத்தாலே கிட்டமாட்டாதே யிருப்பதொன்றுண்டிறே; அங்ஙனன்றிக்கே, ஜநநிபக்கல் அபராதத்தில் கைதொடனாயிருக்கத் தலைகொண்டு தப்பினானிறே, அவள்ஸந்நிதி யுண்டாகையாலே. அவள் கடக்கவிருக்கையாலே ராவணன் தலையறுப்புண்டான்." போக்கற்றுச் செயல்மாண்டு நின்றநிலையவனுக்கும் ஒக்குமிறே; இங்ஙனேயிருக்கச்செய்தேயும் கார்யமாயிற்றதில்லையிறே, அவனுக்குப் பிராட்டி ஸந்நிதியில்லாமையாலே. இனித்தான், மாதாவும் பிதாவுமானால் பிதாவைப்போலன்றிறே, ப்ரஜைகள் விஷயத்தில் மாதாஇருக்கும்படி; இவன்செய்த குறைதான் காணக்கண்ணிட்டிருக்கையன்றிக்கே, பிதாவின்பக்கலிலும் மறைத்துக்காட்டுவா ளொருத்தியிறே. ஆகையிறே உத்தரார்த்தத்தில் - அவனோடொப்புச்சொல்லி, பூர்வார்த்தத்தில் - புருஷகாரமாகையாகிற நீர்மையில் ஏற்றஞ்

ப்ரஸக்தஸ்யஹ்ப்ரதிஷேத:: இவளுக்கு அகலுகைக்கு ப்ரஸக்தி யுண்டோ? என்ன - இது அகன்று இத்யாதி. 'பாசுரமும்'என்ற சஶப்தத்தாலே-யோக்யதையு மில்லையென்றபடி. இப்பாசுரம் இவளொருத்திக்குமோவுள்ளது? என்ன - நித்யாநுபவம் இத்யாதி. நித்யாநுபவம்பண்ணுவார்க்கெல்லாமென்றது - "நவாஹஊஷிராவய" என்றத்தைக்கடாக்ஷித்து. நாட்டார்க்கும் இப்பாசுரமுண்டே: அதில் இதுக்குவாசியேதென்ன - நாட்டாருடைய இத்யாதி. அதுக்கு ஹேதுஎது?என்ன-அது கர்மாதீநம் இத்யாதி. "அலர்மேல்மங்கை" என்கிறதுக்கு ஹார்த்தபாவம் - அவன்தன்னை இத்யாதி. பருவம் "நஜீவெயம்க்ஷணமபி" என்னப்பண்ணினதுக்கு - "நசேஹ" இத்யாதி "வயோஸ்யா..." என்கிறத்தை யருளிச்செய்வர். "அலர்மேல்" என்றதுக்கர்த்தம் - பரிமளந்தான் இத்யாதி. "உறை"என்கிற வர்த்தமாநார்த்தம் - இத்தால் இத்யாதி. நித்யயோகத்தால்பலிதம் - எனக்குஒருகாலம் இத்யாதி. காலம்பார்க்கைக்குஹேதுகதநபூர்வகமாக விவரணம் - இத்தலையில் இத்யாதி. "பிராட்டி புருஷகாரம்அவஶ்யம்வேணும்" என்கைக்குஐதிஹ்யம் - ஒருநாள் இத்யாதி. இவ்வாக்யத்தால் - த்வயத்தினுடைய, அஷ்டகர்ணமாகவுபதேசிக்க வேண்டும்படியான சீர்மைசொல்லிற்று. இனிமேல், இவள் ‡ துஸ்வாமித்வப்ராப்தி ஜீவியாமையாலே விநியோகங்

‡ இவ்விடத்திலே குறையும் ஜீயாரும்பத க்ரந்தத்தை கோஶாந்தரங்களிலேகாண்க.

சொல்லுகிறது. தோட்டாரைத்தோட்டு "நகஶ்சிந்நாபராத்யாதி" (நகஶ்சிந்நாபராத்யாதி) என்னக்கடவஇவள், "நம்மையோருகார்யத்திலே ஏவுவதுகாண்" என்று அவஸரப்ரதீக்ஷனாயிருக்குமவனைப் பெற்றால் விடாளிறே. தன்வார்த்தை கேளாதார்க்குங்கூட "மித்ரமௌபயிகம்கர்த்தும்" (மித்ரமௌபயிகம்கர்த்தும்) என்னக்கடவ இவள் தன்முகம்பார்த்து வார்த்தைகேட்குமவனைப் பெற்றால் விடாளிறே. "தாஸீநாம்ராவணஸ்யாஹம் மர்ஷயாமீஹதுர்ப்பலா" (தாஸீநாம்ராவணஸ்யாஹம் மர்ஷயாமீஹதுர்ப்பலா) என்றருளிறே. திருவடி, "ராக்ஷஸிகளை என்கையிலே காட்டித்தரவேணும்" என்ன, "பிறர் கண்குழிவு காணமாட்டாத துர்ப்பலைகாண்" என்றருளிறே. ராவணன் பட்டானாகில், பெருமாள் விஜயத்தோடேநின்றாராகில், திருவடிவந்து முன்னேநின்றானாகில், வேறொருதௌர்ப்பல்யமில்லையிறே; இனி தௌர்ப்பல்யமாவது-பிறர் நோவுகாணமாட்டாமையிறே. [நிகரில் இத்யாதி] - அதுக்குஅநந்தரபதத்தில் அர்த்தஞ்சொல்லுகிறது. * தாமரையாளாகிலும் சிதகுரைக்குமேல் "என்னடியாரதுசெய்யார்" என்னும் குணதிக்யஞ்சொல்லுகிறது. [உலகமூன்றுடையாய்] - தான் நிர்க்குணனென்னிலும் விடவொண்ணாத ப்ராப்திசொல்லுகிறது. [என்னையாள்வானே]- ப்ராப்தியைக்ரயஞ்செலுத்திக்கொடுக்கும்படி.மோக்ஷத்தளவும்செல்லநடத்திக்கொடுபோந்துநடுவுள்ளஅபேக்ஷிதப்ரதனாகையிறேஆளுகையாவது. [நிகரிலித்யாதி] - அப்பதத்தில் முடிகிற ஸௌலப்யஞ் சொல்லுகிறது. [புகலொன்றில்லாஅடியேன்] - ஆகிஞ்சந்யமும் ஸ்வரூபமும் ப்ரபத்திக்கு பரிகரமிறே. [உன்னடிக்கீழ்] - "சரணௌ" (சரணௌ) [அமர்ந்து] - நடுவோர் இடையீடுஇன்றிக்கேயிருக்கை. [புகுந்தேனே] - இவ்வத்யவஸாயமும் உபாயபாவத்தில் அந்வயியாமையாலும், உபகாரஸ்ம்ருதி ஸ்வரூப மாகையாலும், ஸ்வீகாரமும்சைதந்ய ப்ரயுக்தமாகையாலும்(இவையெல்லாம்)-அதிகாரிவிஶேஷணமாக்கிற்றிறே. (த்வயார்த்தவிவரண ப்ரதேசங்களிலே) இவையெல்லாம் பூர்வார்த்தத்தில் முடிகிற பதத்தோடே சேரக்கடவதிறே. [அகலகில்லேனித்யாதி] – இதில், உபாயபாவஞ் சொல்லச்செய்தே, உபேயவிஷயஸூசகமுமாயிருக்கிறது. அதாகிறபடி யெங்ஙனே?

கொண்டு ப்ராப்தியை ஸ்திரீகரித்தானென்றபடி. ஆளுகைக்கவதியேதென்ன - மோக்ஷத்தளவும் இத்யாதி. நடுவுள்ள அபேக்ஷிதப்ரதனாகையாவது - அத்வேஷாபிமுக்யாதிகளைவிளைக்கை. அப்பதத்தில்-நாராயணபதத்திலென்றபடி. முடிகிறஸௌலப்யமென்றது - "நிகரில் புகழாய்" இத்யாதியாற்சொன்ன வாத்ஸல்ய ஸ்வாமித்வஸௌஶீல்யங்களுக்கநந்தரம் "திருவேங்கடத்தானே" என்றுக்தமாகையாலே முடிகிறதென்றபடி. ஆகிஞ்சந்யத்தையும் ஸ்வரூபத்தையும் இங்கே எதுக்குச்சொல்லுகிறது? என்ன - ஆகிஞ்சந்யமும் இத்யாதி. ஸ்வரூபமாவது - ஶேஷஶேஷிபாவஜ்ஞாநகார்யமான அநந்யகதித்வம். இடையீடு - வ்யவதாநம். இடையீடின்றிக்கே என்றது - ஸ்வீகாரத்தில் உபாயபுத்தியின்றிக்கேயென்றபடி. இது உபாயமல்லவாகில் இதனதிலே யந்தர்ப்பவிக்குமென்ன: - "அவனேயுபாயம்" என்றநுஸந்திக்கிற இவனுக்கு உபகாரஸ்ம்ருதிபோலே யதிகாரிவிஶேஷணத்திலே யந்தர்ப்பவிக்குமென்கிறார் -இவ்வத்யவஸாயம் இத்யாதி. உபாயத்தில் உபகாரஸ்ம்ருதிவேணுமே, அது தானுபாயமானாலோ? என்ன - உபகாரஸ்ம்ருதி இத்யாதி. "புகலொன்றில்லாவடியேன்" என்றும், "அமர்ந்து" என்றுஞ்சொல்லுகிற இவைகளெல்லாம் வ்யாக்யேய த்வயத்திலில்லையேயென்ன - இவையெல்லாம் இத்யாதி. அதாவது - க்ரியாபதத்திலர்த்தாதந்தர்ப்பூதமென்றபடி. த்விதீயயோஜநா - மூந்திலயோஜனையில் ஸம்க்ஷிப்தமான அர்த்தங்களைவிசதீகரிக்கைக்காகவும், பின்னையும் சிலஅர்த்தவிசேஷங்களை அருளிச்செய்கைக்காகவுமின்னமும் ஒருயோஜநை அருளிச்செய்வதாகத் திருவுள்ளம்பற்றி, அதில்ப்ரதமம் இப்பாட்டில் - பூர்வவாக்யார்த்தம் முக்தகண்டமாகச்சொல்லாநிற்கச்செய்தே உத்தரவாக்யார்த்தத்துக்கு ஸூசகமாயுமிருக்கிறதென்று விசேஷார்த்தம் அருளிச்செய்கிறார் - இதிலுபாயபாவம் இத்யாதி. இதில்-

என்னில்: இருவருமான சேர்த்தியிலேயிறே இவன் அடிமைசெய்வது; அச்சேர்த்திதன்னையே யிறே இவன் உபாயமாகப் பற்றுகிறதும். இத்தால்சொல்லிற்றாகிறது, நித்யப்ராப்யத்வமிறே. நித்யாபூர்வவிஷயமிறே நித்யப்ராப்யமாகவல்லது. †(பிராட்டி நித்யஸம்ஶ்லிஷ்டையா யிருக்கச்செய்தேயும் "பிரியகூஷமையல்லேன்" என்னும்போது - அவ்விஷயம் நித்யப்ராப்யமாக வேணுமிறே: இனி, இருவருமான சேர்த்தி நித்யப்ராப்யமென்னுமிடஞ் சொல்லவேண்டா விறே)[அகலகில்லேனிறையுமென்று]-இதுஅகன்றிருந்துசொல்லுகிறவார்த்தையன்று. தனக்கு அகலுகைக்கு ஸம்பாவநையின்றிக்கே யிருக்கச்செய்தேயும், அங்குத்தை போக்யதையை அநுஸந்தித்து, க்ஷணகாலமும் நான் அகலுகைக்கு ஶக்தையாகிறிலே னென்னும். "அநந்யா" (அநந்யா) என்றும், "அநபாயிநீ" (அநபாயிநீ) என்றுஞ் சொல்லாநிற்கச் செய்தே சொல்லுகிறவார்த்தையிறே இது! க்ஷணகாலமும்பிரியகூஷமையல்லேனென்று· [அலர்மேல்மங்கை] - இங்ஙன் சொல்லுகிறவள்ஆரென்னில்,—தன்வடிவழகாலும் பருவத்தாலும் அவன்தனக்குங்கூட உத்தேஶ்யமாயிருக்கிறவள்; அவனை, "நஜீவேயம் க்ஷணமபி" (நஜீவேயம்க்ஷணமபி) என்னப்பண்ணுமவள். நாட்டாரகலகில்லேன்போலன்றிறே இவளுடைய அகலகில்லேன்; அது கர்மநிபந்தநமாகவரும் அகலுகையிறே; இவளுக்கு அதுஇல்லாமையாலும் அவன்தான் மேல்விழும் ஸ்வபாவனாகையாலும், அவனால் வரும் பிரிவுமில்லை, தன்னால்வரும் பிரிவுமில்லையானால், இவ்வுக்திக்கு ப்ரஸங்கமேன்? என்

இப்பாட்டில். உபேயமானவிஷயத்துக்கு ஸௌசகமுமாயிருக்கிற தென்றபடி. இருவருமான சேர்த்தியே உபேயமென்று கருத்து. அத்தை உபபத்தியாலே ஸாதிக்கைக்காக தத்விஷய ஶங்கையையநுவதிக்கிறார் - அநாகிறபடியெங்ஙனேயென்னில் என்று. இதுக்கு உபபத்தியை யருளிச்செய்கிறார் - இருவருமான இத்யாதி. "அகலகில்லேனிறையும்"என்கிற பதத்தால் பலிதமானதோர் அர்த்தவிசேஷத்தை யருளிச்செய்கிறார்-இந்நால் இத்யாதி. இந்நால்-பிராட்டி "அகலகில்லேனிறையும்" என்று வர்த்திக்கிற இத்தாலென்றபடி. "க்ஷணகாலமும் பிரியகூஷமையல்லேன்" என்கிறஇத்தால் நித்யப்ராப்யத்வந் தோற்றுகிறபடி யெங்ஙனே? என்ன-நித்யாபூர்வ இத்யாதி. நித்யாநுபவம்பண்ணாநிற்கச்செய்தே "இறையும் அகலகில்லேன்" என்கையாலே - இவ்விஷயம் நித்யாபூர்வமென்றுதோற்றுகிறது; நித்யாபூர்வமாகையாலே நித்யப்ராப்யமாகிறதென்றபடி. முந்தினயோஜநையில் - போக்யதாதிசயத்தாலே "இறையுமகலகில்லேன்" என்கிறாளென்று. ஏறநுதீக்ருதமானத்தை, இந்தயோஜநையிலே விசதமாக அருளிச்செய்கிறார்-இதுஅகன்றிருந்து இத்யாதிவாக்யத்வயத்தாலே. போக்யதையையநுஸந்தித்து "அகலகில்லேன்" என்கிறதுக்குநியாமகமேது? அகன்றிருந்துசொல்லுகிறவார்த்தைதானாமோ? என்ன-அநந்யா இத்யாதி. "ஶக்யா லோபயிதும் நாஹமைஶ்வர்யேண தநேந வா। அநந்யா ராகவேணாஹம் பாஸ்கரேண ப்ரபா யதா" இதி ஸுந்தரகாண்டே ஸீதா[உக-கரு]. "நித்யைவைஷா ஜகந்மாதா விஷ்ணோஃ ஶ்ரீரநபாயிநீ। யதா ஸர்வகதோ விஷ்ணுஸ் ததைவேயம் த்விஜோத்தம" இதி ஶ்ரீவிஷ்ணுபுராணே[க அ கஎ]. ஶப்தார்த்தம் - க்ஷணகாலமும் இத்யாதி. "அவன்தனக்குங்கூட வுத்தேஶ்யமாயிருக்கிறவள்" என்றத்தால்பலிதஹாவம்-அவனை இத்யாதி. "நஜீவேயம் க்ஷணமபி விநா தாமஸிதேக்ஷணாம்" இதிராமஃ. "அநந்யா" இத்யாதிவாக்யத்தாலே - அகன்றிருந்துசொல்லுகிறவார்த்தையன்றென்றத்தை உபபாதித்தாராய் நின்றார்கீழ்; இனி, "அகலுகைக்கு ஸம்பாவநையின்றிக்கே யிருக்கச்செய்தேயும்" என்றத்தையுபபாதிப்பதாகத் திருவுள்ளம்பற்றி, நாட்டாரில்இவளுக்குண்டான வ்யாவ்ருத்தியை யருளிச்செய்கிறார் - நாட்டாரகலகில்லேன் இத்யாதி. அதுக்குவாசியேதென்ன - அதுகர்ம இத்யாதி. இவளுக்கும் ஸ்வகர்மத்தாலேயாதல் பகவத்ஸ்வாதந்த்ர்யத்தாலே யாதல் பிரிவுண்டானாலோ? என்ன - இவளுக்கு இத்யாதி. அவனாகை

னில்: அவனுகையாலே வந்தது. நாட்டாருடைய ப்ரார்த்தனை கர்மமடியாகவருமது; இவ ளுடைய ப்ரார்த்தனை விஷயாதீநமாக விளையுமது. [உறைமார்பா] - ப்ரதமபதத்தில் மதுப் பால் சொல்லுகிற நித்யயோகத்தைச்சொல்லுகிறது; இதுவும் இங்ஙனே ஃபலிக்கக்கண்டோ மித்தனை. இச்சேர்த்திக்கு ப்ரயோஜநம் - அவனுடைய ஸ்வாதந்த்ர்யத்தையாதல், தன் னுடைய ஸம்ஸாரித்வத்தை யாதல் அநுஸந்தித்துக் கைவாங்கவேண்டாதபடியா யிருக்கை. அவன் ஸர்வஜ்ஞத்வத்தையும் தன்னுடைய ஸாபராதத்வத்தையும்அநுஸந்தித்து அஞ்சவேண் டாதபடியாயிருக்கை. அதாகிறது - இவனுடைய அபராதகாலம் பார்த்திருந்து ப்ரதிபத்தி பண்ணுகைக்கு அவனுக்குஅவஸரமில்லை: அவள்கூட இருக்கையாலே. பிராட்டிபக்கல் அப ராதம் காகத்துக்கும் ராவணனுக்கும் ஒத்திருக்கச்செய்தேயும், இவள் ஸந்நிதியாலே தலை பெற்றது காகம்; அத்தனை அபராதமின்றியிலேயிருக்க, ராவணன் தலையறுப்புண்டானிறே, இவள் ஸந்நிதியில்லாமையாலே. இத்தனையுண்டிறே இவள் ஸந்நிதிக்கும் அஸந்நிதிக்கும் வாசி. தமப்பன் பகையாக, மாத்ருஸந்நிதியிலே ப்ரஜையை யழியச்செய்யமாட்டாமையும் ஒன்றுண்டே. அவன் பண்ணின அபராதத்துக்கு ப்ரஹ்மாஸ்த்ரத்தைவிட்டு, அதுதொடர்ந்து கொண்டு திரிந்தவாறே புகலற்றுவிழ, இவளைநோக்கி, ப்ரஹ்மாஸ்த்ரத்துக்கு ஒருகண்ணழிவு சொல்லிவிட்டான் இத்தனையிறே. "தமேவஶரணங்கத:" (தமேவஶரணங்கத:) என் றதுவும், "நநமேயம்" (நமேயம்) என்றதுவும், இரண்டும் அப்ரயோஜகம். அதென்? என்னில், காகத்துக்கும் போகிறபோது அகவாயில் நினைவுஅதுவேயிறே. அங்ஙனன்றாகில்

யாலேயென்றது - அவன் நிரதிஶயபோக்யனுகையாலேயென்றபடி. விவரணம் - நாட்டாருடைய இத்யாதி. "அலர்மேல்மங்கை" என்று - ஸ்ரீஶப்தார்த்தஞ்சொல்லுகிறதென்று விவக்ஷித்து, "உறை மார்பா" என்கிறத்தால் எப்பதத்திலர்த்தஞ் சொல்லுகிறதென்ன - ப்ரதமபதத்தில் இத்யாதி. இந் நித்யயோக கதநத்துக்கு ஹாவம் - இதுவும் இத்யாதி. இதுவுமென்றது - காலம்பார்க்கவேண்டாதபடி புருஷகாரத்தினுடைய நித்யயோகமென்றபடி. புருஷகாரபூதையானவளோட்டைச் சேர்த்தி நம் முடைய கார்யஸித்திக்கு உடலானாற்போலே, இவளுடைய நித்யயோகமும் நம்முடைய கார்யஸித்திக் குடல கக்கண்டோமென்று - ச ஶப்தார்த்தம். இத்தை யுபபாதிக்கிறார் - இச்சேர்த்திக்கு இத்யாதி. விவரணம் - அவன் ஸர்வஜ்ஞத்வத்தையும் இத்யாதி. அவன் ஸர்வஜ்ஞத்வத்தை யநுஸந்தித்தால் அஞ்சவேண்டாவோ? என்ன - அதாகிறது இத்யாதி. இவள் புருஷகாரத்தின் அவஶ்யாபேக்ஷிதத் வத்தை அறிவிக்கைக்காக, இவள் ஸந்நிதிக்கும் அஸந்நிதிக்குமுள்ள வாசியை அருளிச்செய்கிறார் - பிராட்டிபக்கல் இத்யாதி. கீழ்ச்சொன்னவர்த்தத்தை விசதீகரிக்கிறார் - இத்தனையுண்டிறே இத் யாதியாலே. அநுஷ்டாநங்காட்டி யுபபத்தியுங்காட்டுகிறார் - தமப்பன் இத்யாதி. இவ்வாக்யம் முந்தினயோஜனையில், "இனித்தான்மாதாவும்" இத்யாதிவாக்யத்தாற்சொன்ன அர்த்தத்தை விசதீ கரிக்கிறது. இவள் ஸந்நிதியுண்டாயிருக்கச்செய்தேயும் காகத்துக்குக்கண் போயிற்றே? என்ன - அவன்பண்ணின இத்யாதி. சாடு - கண்ணழிவு என்றது. இவள் ஸந்நிதி அஸந்நிதிகளே ரக்ஷண த்வம்ஸஹேதுவாகவேணுமோ? காகம்ஶரணம்புகுருகையாலேரக்ஷித்தான்; ராவணன் "நநமேயம்" என்றிருக்கையாலே நிரஸித்தானென்றுலோ? என்ன - தமேவ இத்யாதி. "ஸ பித்ரா ச பரித்யக்தஸ் ஸுரைஶ்ச ஸமஹர்ஷிபி: । த்ரீந் லோகாந் ஸம்பரிக்ரம்ய தமேவ ஶரணம் கத:" இதி ஸுந்தரகாண்டே [௩௮-௩௩]. "த்விதா பஜ்யேயமப்யேவம் ந நமேயம் து கஸ்யசித் । ஏஷ மே ஸஹஜோ தோஷ: ஸ்வபாவோ துரதிக்ரம:" இதி யுத்தகாண்டே ராவண: [௩௬-௧௧]. நினைவுஅதுவேயென்றது - "நநமேயம்" என்றதேயென்றபடி. ஏதந்நியாமகமேதென்ன - அங்ஙனன் றாகில் இத்யாதி. "தத்ஸர்வாயஸம் ஹ்ருஷ்யேஸா ஸ்வேதனாஜ மாரஹ। கநாஸ்வதஸ்ஸூதாகா

"ஸ்வகுலாமயம்-ஜமா" (ஸ்வகுலமயம்-ஜகாம) என்று போகப்பாரானே; செயல்மாட்சியாலே விழுந்த இத்தனையிறே. இது ராவணனுக்கு முண்டாயிருக்கச்செய்தே கார்யமாயிற்றில்லையிறே, இவள் அஸந்நிதியாலே. கீழ்ச்சொன்ன அர்த்தம் இத்தனையும் - த்வயத்தில் முதற்பதத்தோடேயற்றது. மேல் 'நிகரில்' என்று தொடங்கி, 'திருவேங்கடத்தானே' என்னுமளவும்வர, அநந்தரபதத்தில் அர்த்தஞ்சொல்லுகிறது: [நிகரில்புகழாய்] - இப்படியிருக்கிறவள் தானே சிதகுரைக்குமன்றும் அவளுடனே மன்றுமே குணதிக்யவிஶேஷஞ் சொல்லுகிறது. அதாகிறது, "என்னடியார் அது செய்யார்" என்று என்னைப்பற்றினுர்க்கு அதில்லைகாண் என்கை. 'இல்லை, நான் இப்போது இன்னகுற்றஞ் செய்யக்கண்டேன்' என்று காட்டிக்கொடுத்தாலும், 'ஆனாலென்? தர்மாதர்மங்களும் பரலோகமுமில்லை யென்றுசெய்கிறுர்களோ? ப்ராமாதிகத்துக்கு நாமுளோம் என்றன்றே செய்கிறது' என்கை. இவளுடைய உத்கர்ஷத்துக்கு அடிசொல்லும்போது அவனைப்பற்றிச்சொல்லலாம்; அவனுடைய உத்கர்ஷத்துக்கு ஒன்றுதேடிச் சொல்லலாவதில்லை. இதுவோதான் அர்த்தஸ்வரூபமிருக்கும்படி! இத்தால் சொல்லிற்றாயிற்று-இவள் அவனுடைய ஸ்வாதந்த்ர்யத்தையநுஸந்தித்து "இவற்றின்பக்கல் என்னாய்விளைகிறதோ?' என்றிருக்கையும், அவன் இவளுடைய மார்த்தவத்தையும் மௌக்த்யத்தையும் அநுஸந்தித்து "இவற்றின்பக்கல் எவ்வளவாயிருக்கிறுளோ?" என்றிருக்கையும். ஆக, ஒருவரையொருவர் அதிஶங்கைபண்ணி நோக்கும் இருவர்நிழலையும் பற்றியிறே உபயவிபூதியுங் கிடக்கிறது. [உலகமூன்றுடையாய்] - தான் நிர்க்குணனென்றாலும் விடவொண்ணாத ப்ராப்தியைச் சொல்லுகிறது. "சிதகுரைக்குமேல்" என்றவிடத்தில்,

---

கொ ஜமாஸ்வகுலாமயம்" இதிஸுந்தரகாண்டே [௩௮-௩௨]. பிற்பாடானாலும்ஶரணம்புகுந்தானேயென்ன - செயல்மாட்சி இத்யாதி. இவ்வர்த்தங்களெல்லாம் த்வயத்தில் எந்தப்பதத்திலே சொல்லப்பட்டன என்ன - கீழ்ச்சொன்ன இத்யாதி. அநந்தரபதத்தில் - நாராயணபதத்தில். "நிகரில்புகழாய்" என்றதுக்குக்கீழிற்பதத்தோடே ஸங்கதியருளிச்செய்கிறுர் - இப்படியிருக்கிறவள் தானே இத்யாதி. "நக ஶ்சிந்நாபராத்யதி" என்று அவள்தானேயென்றபடி. "செய்தாரேல்நன்றுசெய்தார்" என்றதுக்கர்த்தம்-இல்லை, நான் இத்யாதி. "நிகரில்". என்ற விஶேஷணத்துக்குபாவம் - இவளுடைய இத்யாதி. "ஸ்வாதந்த்ர்யாம்ஶோ யதந்தவரிவர ... " என்றும், "தவஸ்வஶ்ருஸ்ரீ ஶாஸ்த்ரஶதிக ... நிவதிது" என்றும், இவனுடையவுத்கர்ஷத்துக்குஹேது பிராட்டியென்றும், இவளுடைய வுத்கர்ஷம் ஸ்வதஸ்ஸித்தமென்றும் சொல்லாநின்றதேயென்ன: அது - ப்ரணயித்வநிபந்தநம், இது - வாஸ்தவாகாரமென்கிறுர் - இதுவோதான் இத்யாதி என்னுதல். அன்றிக்கே, உக்தார்த்தத்தைக்கடாக்ஷித்தாதல், வக்ஷ்யமாணார்த்தத்தைக் கடாக்ஷித்தாதல் அருளிச்செய்கிறுர் - இதுவோதான் இத்யாதி ஆதல். அதாவது - பிராட்டி யுத்கர்ஷம் ஈஶ்வராதீநமாய், ஈஶ்வரோத்கர்ஷம் ஸ்வாதீநமாயிருக்கு மிதுவோதானென்னுதல்; பரஸ்பரம் அதிஶங்கைபண்ணி நோக்குமிதுவோதானென்னுதலென்றபடி. "அகலகில்லேன்" இத்யாதிபதத்வயங்களாலும் ஃபலித்தஅர்த்தவிஶேஷத்தை யருளிச்செய்கிறுர் - இத்தால் என்று தொடங்கி. இத்தால்-"அகலகில்லேன்" என்றுதொடங்கி "நிகரில்புகழாய்" என்றபதத்வயத்தாலும் என்றபடி. இவற்றின்பக்கல்- இந்தஜந்துக்கள்பக்கல் என்றபடி. கீழ்ச்சொன்ன குணயோகத்திற்காட்டில் ஸம்பந்தத்திலுண்டான உறைப்பையருளிச்செய்கிறுர் - தான் நிர்க்குணன் இத்யாதி. "விடவொண்ணாத" என்றத்தை த்ருடீகரிக்கிறுர் - சிதகுரைக்குமேல் இத்யாதி. ஸ்வரூபாநுரூபமான குணங்களாவன:—ஶடகத்வஸ்வரூபத்துக்குத் தகுதியான க்ருபாதிகுணங்கள். கூடாதவன்றிறே அவள் அதுசொல்லுவதென்றது. இவையில்லையாகிலன்றே அவள் இவற்றின்தோஷங்களைச் சொல்

அவளுக்கு ஸ்வரூபாநுரூபமான குணங்கள் கூடாதவன்றிறே அவள் அதுசொல்லுவது; அப்படியே இவனுக்கும் இக்குணங்களின்றிக்கே யிருந்தாலும் விடவொண்ணாதை குடற்றுடக்கைச்சொல்லுகிறது. அவன் "அல்லேன்" என்று கைவிடுமென்றுஞ் செங்கற்சீரை கட்டி வளைக்கலாம்படியிறே இஸ்ஸம்பந்தமிருப்பது; இனி இவன்தான் காதாசித்கமாக ப்ரணயம்பண்ணிப் பின்பு கைகழியப்போகப் பார்க்கிலும், காலிலே விலங்கைத்தைத்துக் காரியங்கொள்ளலாம்படியான உரிமை சொல்லுகிறது. [என்னையாள்வானே] - அடிமைதன்னை க்ரயஞ் செலுத்திக் கொடுக்கும்படி. "ஶேஷத்வஸாமாந்யத்தைப்பற்றச் சொல்லுகிறீராகில் அவ்வளவிறே யுமக்கும்" என்ன வொண்ணாதபடி, என்னை மயர்வறமதிநலமருளி இவ்வளவும் வர நிறுத்திப்போகடப்போமோ? [நிகரிலமரர்இத்யாதி] - அங்குள்ளாரும் விரும்பிவந்துஅடிமைசெய்கிறதும் இங்கேயிறே. "வைகுந்தத்தமரரும்முனிவரும்" என்றுஇரண்டுகோடியாயிறே யிருப்பது, குணநிஷ்டரும் கைங்கர்யநிஷ்டரும். [திருவேங்கடத்தானே] - அதுக்கு முடிந்தபொருள் ஸௌலப்யமென்னக்கடவதிறே; குணயோகமும், ஶேஷித்வமும், விசேஷகடாக்ஷமும், ஸௌலப்யமும், இவையித்தனையும் உண்டிறே இப்பதத்துக்கு. இவனுக்கு ஸகலாபேக்ஷித ஃபலப்ரதானைக்காக, அந்தராத்மதயா ஸ்த்திதிபண்ணுமென்றிறே நாராயணஶப்தத்திற் சொல்லுகிறது; அந்தஸௌலப்யம், இங்கு ஸதாஸந்நிதிபண்ணுகையாலே திருவேங்கடமுடையான் பக்கலிலே கிடக்குமிறே. இந்தஸௌலப்யம் உபாயமாகிறபடி எங்ஙனே? யென்னில்: "𑌮𑌾𑌮𑍇𑌕𑌂" (மாமேகம்) என்கிறவிடத்தில் - ஸாரத்யவேஷத்தையிறே

லுவதென்றபடி. அப்படியேயென்றது - "சிதகுரைக்குமேல்" என்று க்ருத்வாசிந்தைபண்ணிச் சொன்னாற்போலே என்றபடி. க்ருத்வாசிந்தைபண்ணுகையாவது - அஸம்பாவிதத்தை யாரோபித்து நினைக்கை. 'இக்குணங்கள்' என்கையாலே, "நிகரில்புகழாய்" என்று - வாத்ஸல்யமாத்ரமன்றிக்கே, குணஸமஷ்டிபரமென்றும் கருத்து. இஸ்ஸம்பந்தத்தைப்பார்த்தால் உபயராலும் விடவொண்ணாதென்கிறார் - அவன்அல்லேன் இத்யாதிவாக்யத்வயத்தாலே. செங்கற்சீரைகட்டி வளைக்கலாம்படியென்றது - "காவிவஸ்த்ரமுடுத்து பிக்ஷைபுகுகிறேன்" என்று வளைக்கலாம்படியென்றபடி. கீழ்ச் சொன்னஸம்பந்தத்தை யநுஷ்டாந பர்யந்தமாக நடத்தும்படி சொல்லுகிறதென்று, "என்னையாள்வானே" என்கிற பதத்துக்கவதாரிகை - அடிமைதன்னை இத்யாதி. க்ரயஞ்செலுத்திக்கொடுக்கையாவது - அநுஷ்டாந பர்யந்தமாக நடத்துகை. ஸம்பந்தத்தை யநுஷ்டாநபர்யந்தமாக நடத்துகிறமைசொல்லுகிறாராகில் - உலகமுன்றுடையுமாள்வானே யென்றுசொல்லவமைந்திருக்க, அதுசெய்யாதே, "என்னையாள்வானே" என்று தம்மையொருவரையும் ஆண்டமையை விசேஷிக்கிறதுக்கு ஹாவமருளிச்செய்கிறார் - ஶேஷத்வஸாமாந்யத்தை இத்யாதி. "'உலகமுன்றுடையாய்' என்றது - "ஸர்வஸ்வாமிநு" என்றாற்போலே; 'என்னையாள்வானே' என்றது - 'மமஸ்வாமிநு' என்றாற்போலே" என்றருளிச்செய்வர். ஆனால் பரமபதத்திலே வாருமென்ன - அங்குள்ளாரும் இத்யாதி. "அமரர்" என்னவமையாதோ? "முனிவர்" என்றுவிசேஷிக்கிறதென்? என்ன - வைகுந்தத்தமரரும் இத்யாதி. "திருவேங்கடத்தானே" என்றது - நாராயணபதத்திலர்த்தமானபடி யெப்படி? என்ன - அதுக்கு இத்யாதி. அதுக்கு - நாராயணபதத்துக்கு என்றபடி. "முடிந்தபொருள்" என்கைக்கு, முதலிற் பொருள்களேவையென்ன - குணயோகமும் இத்யாதி. குணயோகமென்றது - வாத்ஸல்யம். விசேஷகடாக்ஷம் என்று - ஸௌஶீல்யம். தத்புருஷனாலே - ஸ்வாமித்வமும், ஹூவ்ரீஹியாலே - வாத்ஸல்ய ஸௌஶீல்ய ஸௌலப்யங்களுஞ் சொல்லுகிறது. * நாராயணபதார்த்தம் - அந்தர்யாமியின் ஸௌலப்யமாயிருக்க, அர்ச்சாவதார ஸௌலப்யத்தை அருளிச்செய்வானென்? என்ன - இவனுக்கு இத்யாதி. ஸதாஸந்நிஹிதத்வாகாரம் இரண்டிடத்திலும் ஒத்திருக்கையாலே சொல்லுகிறதென்றபடி. இந்தஸௌலப்யம் ப்ரபத்திக்குஉபயோகியென்னுமிடத்தை தர்ஶிப்பிக்கைக்காக தத்விஷயஶங்கையையநுவதிக்கிறார் - இந்தஸௌலப்யம் இத்யாதி. உபாயமாகிறபடியென்றது - உபாயோபயோகியாகிறபடி என்றபடி.

காட்டுகிறது. இன்னமும் அவ்வளவன்றிறேயிங்கு: அதுக்கு முன்புமில்லை பின்புமில்லையிறே அந்த ஸௌலப்யந்தான்; நித்யஸந்நிதிபண்ணுகிறவிடமிறே இவ்விடம். அங்குத்தானும் "[illegible]" (மய்யாஸக்தமநா:பார்த்த) என்றுஒருதேவையிட்டிறே சொல்லிற்று; அதுவும் இல்லையிறே இங்கு. இனித் தம்படி சொல்லுகிறார். [புகலொன்றில்லாவடியேன்] - கீழே "அடியேன்" என்றும், "அருவினையேன்" என்றும் தம்முடைய ஶேஷத்வத்தையும், ஆகிஞ்சந்யத்தையும் உருவச்சொல்லிக் கொடுபோந்தார்; இனித்தான் வெறுமையும், ஸ்வரூபமும், இரண்டும் ப்ரபத்திக்குப் பரிகரமிறே; அத்தை இங்கேயும் ப்ரயோகிக்கிறார்; அது தன்னைச் சொல்லவேணுமிறே. இங்குச்சொல்லவேண்டுகிறதென்? என்னில்; அவனுக்கு உபாயபாவம் ஸ்வரூபமானவோபாதி இவனுக்கும் இப்ப்ரதிபத்திஸ்வரூபமாகையாலே. இவனுக்கு இதில்லாதவன்று ஸர்வமுக்திப்ரஸங்கமுமாமே. [அடியேன்] - அதில் அர்த்தப்ராப்தமான அஹம்ஶப்தத்தை இங்குவாசகஶப்தத்தாலே சொன்னதுவே வாசி. [உன்னடிக்கீழ்] - "[illegible]" (சரணௌ) என்றதுதன்னையே சொல்லுகிறது. "[illegible]" (ஸப்ராதுஶ்சரணௌ) என்றாற்போலே சொல்லக்கடவதிறே; [அமர்ந்து புகுந்தேனே] - "[illegible]" (முமுக்ஷுர்வை ஶரணமஹம்ப்ரபத்யே) என்னுமாபோலே. [அமர்ந்து] - அவனுக்கு ஒருஸஹகாரி வேண்டுதல், தன்தலையிலே யுபாயபாவங்கிடத்தல் செய்யிலிறே நடுவேயொரு வ்யவதாந விளம்

ஸௌலப்யம் ப்ரபத்யுபயோகியென்னுமிடத்துக்கு உதாஹரணம் - மாமேகம் இத்யாதி. ஸாரத்ய வேஷத்தைக்காட்டுகையாலே - ஸௌலப்யவிஶிஷ்டன் உபாயமாகவேணுமென்றபடி. ஸாரத்யவேஷத்தைப்பற்ற அர்ச்சாவதார ஸௌலப்யத்துக்கு இரண்டுவகையாக ஏற்றமருளிச்செய்கிறார் - இன்னமும் இத்யாதி அஞ்சுவாக்யத்தாலே, அதுக்கு-அக்காலத்துக்கு. தேவை - நிர்ப்பந்தம். "[illegible]" இதி கீதாஶாஸ்த்ரமே. (க)ழேயும், ஆகிஞ்சந்யாநந்யகதித்வங்களை யருளிச்செய்துவைத்து, மீளவும் அருளிச்செய்வானென்? என்ன - கீழேயடியேன் இத்யாதி. அதாவது - கீழ ஶரண்யதைக்கு உறுப்பாக அருளிச்செய்கிறார்; இங்கு ஸ்வீகாராங்கத்வேந அருளிச்செய்கிறாரென்றபடி. ஸ்வரூபமும் - அநந்யகதித்வமும். 'அது தன்னைச்சொல்லவேணுமிறே - அத்தையிங்கேயும் ப்ரயோகிக்கிறார்' என்று அந்வயிப்பது. சொல்லவேணுமிறேயென்றது - ப்ரபத்யங்கத்வேநவென்றபடி. 'இங்குச் சொல்லவேண்டுகிறதென்? என்னில்' என்றதுக்குக்கருத்து - ப்ரயாஜாத்யங்கக கர்மம்போலே, இவைஅங்கமானால் ப்ரபத்திக்கு ஸாபேக்ஷத்வம் வாராதோ? என்னிலென்று. இப்ப்ரதிபத்தி- ஆகிஞ்சந்யாநந்யகதித்வ ப்ரதிபத்தியென்றபடி. அவனுக்கு உபாயபாவம் ஸ்வரூபமானால் ப்ரபத்தி பண்ணவேண்டுவானென்? என்ன - இவனுக்குஅதில்லாத இத்யாதி. த்வயத்தில் "அடியேன்" என்றதுக்கு வாசகஶப்தமில்லையேயென்ன - அதில்அர்த்த இத்யாதி. அதில் - "[illegible]" என்கிற அதில். திருவடிகளையே பற்றவேணுமென்கிற நிர்ப்பந்தமுண்டோ? என்ன - ஸப்ராதுஃ இத்யாதி. "[illegible]" இத்யயோத்யாகாண்டே. ப்ரபத்தி பண்ணுகிறவிடத்தில் அஹம்ஶப்தத்தை ப்ரயோகித்தபேருண்டோ? என்ன - முமுக்ஷுர்வை இத்யாதி. ஶ்வேதாஶ்வதரே - "[illegible]" இத்யாதி. "அமர்ந்து" என்றதுக்கு - வ்யவதாந விளம்பமறப்பொருந்தி யென்றர்த்தம் விவக்ஷித்து, அவை இல்லாமைக்கு ஹேதுவேதென்ன - அவனுக்குஒரு இத்யாதி. அதாவது - ஸ்வீகாரத்தில் உபாயபுத்திநிவ்ருத்தமாகையாலே, நடுவே உபாயாந்தரவ்யவதாநமும் அவன் ஸஹகாரிநிரபேக்ஷனாகையாலே விளம்பமும் இல்லையென்றபடி. "புகுந்தேன்" என்றதுக்கு - அத்யவஸித்தேனென்று அர்த்தம் விவக்ஷித்து, அதுவென்? காயிகப்ரபத்தியைச் சொல்லிற்றாகாதோ? என்ன, அது ஒண்ணாதென்னுமிடத்தை

பங்களுக்கு ஹேதுவுள்ளது. [புகுந்தேனே] - போனஎல்லையளவுமிறே புகுருவதும்; முன்பும் அர்த்தத்திலிழவில்லையிறே. இவனுடைய விப்ரதிபத்தியேயிறே யுள்ளது; அதுபோமித்தனையிறே வேண்டுவது. அத்யவஸித்தேனென்கிறார்; இங்குத்தை வர்த்தமாநம் - ஸ்ம்ருதிஸந்ததிபோலன்றிறே; ருசிகார்யமாய் வருகையாலே ப்ராப்யத்தினுடைய ப்ராப்தியளவும் நிற்குமிறே. ஸகலஶாஸ்த்ரங்களிலும் வ்யாபரிப்பதொன்றாய், இஶ்ஶாஸ்த்ரங்களுக்கெல்லாம் அடியான வேதாந்தங்களுக்குக் கிழங்காய், நம்ஆசார்யர்களெல்லாரும் ஒக்க ஆதரித்துப்

அருளிச்செய்கிறார் - போனஎல்லை இத்யாதி. அதாவது - ஸர்வஶரீரியானவனை முன்பு பிரிந்து மீளவும் கூடுகை அஸம்பாவிதமாகையாலே, விபரீத ப்ரதிபத்திபோய் யதார்த்த ப்ரதிபத்தி ரூபாத்யவஸாயத்தைப் பண்ணினேன் என்றபடி. அர்த்தத்தில் இழவில்லையிறேயென்றது - ஈஶ்வரனோட்டை ஸம்பந்தமாகிற அர்த்தத்தில் இழவில்லையிறே யென்றபடி. இப்படியானபின்பு, மாநஸமான அத்யவஸாயத்தையே சொல்லுகிறதென்னுமத்தையே இசைவிக்கிறார் - இவனுடையவிப்ரதிபத்தி இத்யாதி வாக்யத்ரயத்தாலே. த்வயத்தில் வர்த்தமாந நிர்த்தேசமாயிருக்க, "புகுந்தேன்" என்று, பூதார்த்தமாக நிர்த்தேசிப்பானென்? என்ன, அது ஸௌசயபுத்தியாய்ச் சொல்லுகிற இத்தனை; உபாயத்துக்கு ஸக்ருத்தேயமையுமென்கிறார் - இங்குத்தை இத்யாதி. இங்குத்தை வர்த்தமாநம் - த்வயத்தில் வர்த்தமாநமென்றபடி. அதாவது - ஸ்ம்ருதிஸந்ததிபோலே ஸாதநத்வேநவன்றிக்கே, போக்யதையாலே வர்த்தமாநமாக நிர்த்தேசித்தது; இவர் "ஸக்ருதேவ ஹி ஶாஸ்த்ரார்த்த:" என்கையாலே, பூதார்த்தமாக நிர்த்தேசித்தாரென்றபடி. ஶாஸ்த்ரார்த்தமென்றது - ப்ரபத்தியை த்ருதீயயோஜநா இப்பாட்டிற்சொல்லுகிற ப்ரபத்தியிலே எல்லார்க்கும் ருசிபிறக்கைக்காக. இதின் வைபவத்தை யருளிச்செய்கிறார் - ஸகல இத்யாதியாலே. ஸகலஶாஸ்த்ரங்களிலும் வ்யாபரிப்பதொன்று யென்றது - 1"யோ ப்ரஹ்மாணம் விததாதி பூர்வம்" இத்யாரப்ய, "முமுக்ஷுர்வை ஶரணமஹம் ப்ரபத்யே" என்றும்; ஆத்மபுத்தி ப்ரஸாதமென்றது, எனக்கு "தானேயுபாயம்" என்கிற வ்யவஸாயரூபபுத்தி ஜநகனென்றபடி. 2தேவா வை ஸ்வர்க்காமா ஜீவாம்ஸ: | ஸ வை ந்த்ர: ப்ரபத்ய த| தஸ்மாத் ப்ரதிப்ரயந்து | தஸ்மாத்விதியம் ப்ரபத்யந்தம் ப்ரதிப்ரயந்தி" என்றும்; பத்நீ: என்றது - தேவதா பத்நிகளை. 3"ஸக்ருதேவ ப்ரபந்நாய தவாஸ்மீதி ச யாசதே" இதி ஸ்ம்ருதி: ; ந ப்ரத்யர்ப்பணீய: - நோபேக்ஷணீய: என்றர்த்தம். 4"ஸஹஸ்ரஶீர்ஷா புருஷ:", 5"ப்ரஹ்மணே த்வா மஹஸ ஓமித்யாத்மாநம் யுஞ்ஜீத," 6"நகர்மணா ந ப்ரஜயா தநேந த்யாகேநைகே அம்ருதத்வமாநஶு:," 7"தஸ்மாந்ந்யாஸமேஷாம் தபஸாமதிரிக்தமாஹு:," என்றும; 8"யாநி நியமஸாத்யாநி யோகதாநி தவாம்ஸி வை | தேஷாம் ந்யாஸ: தபஸாமதிரிக்தம் தபஶ்ஶ்ருதம்" என்றும்;
1"தேவா வை யஜ்ஞாத்ருத்ரமந்தராயந்| ஸ ருத்ர: ஆதித்யாந் ப்ராஸ்ருஜத| தே ஆதித்யேப்யோ ப்ராவர்த்தந்த | தாந்ப்ரதிப்ரயந்து | தஸ்மாத்விதியம் ப்ரபத்யந்தம் ப்ரதிப்ரயந்தி" என்றும்; விசேஷித்து கடவல்ல்யுபநிஷத்தான த்வயமுமான ஶ்ருதிகளும்; 2"ஸக்ருதேவ," 3"ஸர்வபாபேப்யோ," 4"ப்ரணாமப்ரவணா:," 5"ஶரணம் மஹாபாகே," 6"மமயே மேநம் ஶரணம் ஶரண்யம் ப்ரபத்யே" இதி மார்க்கண்டேயநோக்தேஶதி 7"ஸர்வ ஏவ தா ஸ்யந்தாம் பயஸ்சாரதர்ஷு | ஶரணம் ப்ராப்தா ஸத்வேஷு நஶ்ஶக்ஷ்ர ஜநார்த்தநம்," "ஸர்வேஷாம் நமஸ்ஶீக்ரம் ப்ரபத்ய ஸஜநார்த்தநம்| ஸுசேதநஸ்ஸஜ்ஜய

1. ஶ்வே. உப-6. 2. யஜுர்வே. காண். 6. 3. 4. யஜுர் அஷ். 3, ப்ர-7.
5. தைத். நாரா. 51. 6. ஷெ ஷெ, 10. 7. ஷெ. ஷெ. 50. 8. பாரத. ஆர. 189.
1. யஜுர். காண். 6. 2. ராமா. யுத். 18, 33-½. 3. பக்வ. 18, 66. 4. விஷ். பு. 1, 9, 65.
5. பார. 6. பார. ஆர. 189. 7. பார. உத்.

போருவதோர் அர்த்த விஶேஷத்தை, இப்பாட்டாலே அருளிச்செய்கிறார். ப்ரதமாசார்யருமாய், ''மயர்வறமதிநலமருளினன்'' என்கிறபடியே ஸகவத்ப்ரஸாதலப்த ஜ்ஞாநவைஸவருமான இவர் பரிக்ரஹிக்கையாலே வந்த ஏற்றமுமுண்டு. இவ்வுபாயந்தன்னைப் பரிக்ரஹித்து ப்ரயோஜநாந்தரத்தைக் கோள்வாரும், ஸாதநாந்தரத்தைப்பரிக்ரஹித்து இவனையே ப்ரயோஜநமாகப்பற்றுவாருமா யிருப்பர்கள் புறம்புள்ளார்; அங்ஙனன்றிக்கே, இவனையே ப்ராப்யமும் ப்ராபகமுமாக அத்யவஸித்திருக்கிற ஏற்றமுண்டு இவர்க்கு. ப்ராப்யம் இவனேயாகில் ப்ராபகாந்தரங்களை பரிக்ரஹித்தால் வரும் குற்றமேன்? என்னில், அவை ஸாத்யமுமாய்ப் பலவுமாய் துஶ்ஶகமுமாய் ஸ்வரூபத்துக்கு அநநுரூபமாயிருக்கும். இப்படியிருக்கும் ஸாதநாந்தரங்கள் பல. அவையேவை? என்னில், கர்மயோக ஜ்ஞாநயோக பக்தியோகங்கள். கர்மயோகமாவது - ஆத்மயாதாத்ம்ய ஜ்ஞாநபூர்வகமாக ஸ்வவர்ண ஸ்வாஶ்ரமோசிதமாய்

